JL
V2112M N410
N49 7.29
224168

JL
V2;11m N41D
N49
22468

REGD. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 2—1—49 | இதழ் 29

சர்க்காரின் தடையை மீறி "இரணியன்" நாடகத்தை நடித்துச் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்கு 25—12—48-ல் காஞ்சிபுரத்தில் வரவேற்பு விழா நடந்தபோது எடுத்தபடம்.

உட்கார்ந்திருப்பவர்கள், இடமிருந்து வலம்:—

சுப்பிரமணியம், கச்சபாலயம், பூங்காவனம், சம்பந்தன், சண்முகம், எத்திராஜ்.

நிற்பவர்கள், இடமிருந்து வலம்:—

கோபால், நாராயணசாமி, கிருஷ்ணமூர்த்தி, மார்க், இராசமன்னார், கணபதி.

சிறைச்சாலை என்ன செய்யும்?

16-ம் பக்கத் தொடர்ச்சி

அறிந்துகொள்ளும் வண்ணம் எங்கள் கூட்ட நிகழ்ச்சி வருவதில்லையானாலும், இருட்டடித்து விட்டபோதிலும், இரகசிய போலீசின் அறிக்கை, அமைச்சர்களை அலக்கழிக்கிறதே, அவர்கள் என்னசெய்வார்கள்? தூத்துக்குடியிலே 144; கோவில்பட்டியிலே தடையுத்தரவு—தருந்தவர்கள்மீது ஜாமீன் நடவடிக்கை; சாத்தூரில் கூட்டத்திற்கு அனுமதிகிடையாது; மதுரையில் 144, திருச்சியில் தடை, சென்னையில்தடை, சேலத்தில் தடை, வேலூரில்தடை; விழுப்புரத்தில் தடை! நாடெங்கும் நல்லநகரமெங்கும் தடை உத்தரவு! எங்கள் சின்னக் கட்சியை அடக்க இந்த அடக்குமுறை. தேவைப்படுகிறது ஆளவந்தார்களுக்கு! வெள்ளையர் ஆட்சியில்கூட இந்தவிபரீதத்தை நீங்கள் கண்டும் இருக்கமாட்டீர்கள்—கேட்டும்இருக்கமாட்டீர்கள்!

நல்ல வெளிச்சமில்லை என்று பிரகாசத்தை நீக்கிவிட்டு, இராமணசீடர், பௌனவிருதபாண்பினர், கிருத்திகை நோன்புக் கண்ணியர், கனம் மந்திரியாக வந்தார். கண்டபலன் என்ன? நாடெங்கும் 144 தடை உத்தரவினூடே, தர்மதேவதை நாலுகாலில் நடக்கிறது!

கும்பகோணத்திலே கூட்டத்திற்கு தடைஉத்தரவு. எங்கள் கழகத்தினர், அத்தடையை மீறுகின்றனர். மனிதாபிமான அரசாங்கமாக இருந்தால்செய்திருக்கவேண்டியதென்ன? மீறினவர்களைக் கைதியாக்கிச் சட்டப்படி தண்டிக்கவேண்டும். நாகரிகமான சர்க்காரிடத்தில் எதிர்பார்க்கக்கூடியதும் இதுதான். ஆனால், ஓமந்தூரார் செய்வதென்ன? மலபார் போலீசை விட்டுத்தடிகொண்டு தாக்கச்சொல்லுகிறார்.

தண்டவாளத்தைப் பெயர்த்தார்களா அந்தத்தொண்டர்கள்? கனவிலும் நினைத்தவர்கள் அல்லவே அந்தத்தீவினையை அவர்கள். தபாலாபீசுக்குத் தீ வைத்தார்களா? அவர்களுக்கு அதற்கான தெளிவு கிடையாதே! தந்திக்கம்பியை அறுத்தார்களா? அந்த அற்புதத்தைப் புரியும் ஆற்றல் அவர்களுக்குக்கிடையாதே! அதிகாரிகள் முகத்தில் அக்னித்திராவகத்தை ஊற்றத் தெரிந்தவர்களா?

அந்த அகிம்சா முறை, அவர்கள் கற்காத பாடமாயிற்றே! பின் அவர்கள் செய்த — செய்யும் குற்றம்தான் என்ன? தமிழ்வாழ்க!' என்று சொல்லும் 'பாவத்திற்கு' தரப்படும் தண்டனை, தடியடி!

வெள்ளையர் ஆட்சியில், பேச்சுரிமையைக்காக்கப் போராடியவீரகாங்கிரஸ் இளைஞர்களைக் கேட்கிறேன், இது தர்மந்தானா என்று? கஷ்ட நஷ்டப்பட்ட காங்கிரஸ் காளைகளைக் கேட்கிறேன், இது நம்மவர் ஆட்சிதானா என்று! நெஞ்சில் கைவைத்துக் கூறட்டும், இது நியாயந்தானாஎன்று! மும்முறை யோசித்து விட்டுக்கூறட்டும், இது நேர்மைதானா என்று!

இதற்குத்தானா திருப்பூர் குமரன் தன் இரத்தத்தால் தரையை நனைத்தது? இத்தகைய ஆட்சியைக்காண்பதற்குத்தானா, பாஞ்சால சிங்கம் லாலாலஜிபத்ராய் ஆவி துறந்தது? பகவத்சிங் தூக்கிலேறினது, இத்தகைய அலங்கோல வாழ்வை மக்களுக்கு வாங்கித் தருவதற்குத்தானா? இதற்குப் பெயர் சுயாட்சியா?

நாளையே புறப்படுங்கள்; கும்பகோணத்தில் சென்று பாருங்கள். எங்கள் தொண்டர்களின் குருதி தேகத்திலிருந்து பீறிட்டுவருவதைப் பாருங்கள்! தேகத்திலே தழும்பு தோன்றுவதைக்காணுங்கள்! தடியடி தாங்கமுடியாமல் தரையில்சோர்ந்து வீழ்ந்த பின்னரும், குறுந்தடியால் உபசரிப்பதை உணருங்கள்! பின்னர் வாருங்கள் ஒருமுடிவிற்கு. உங்கள் தியாகம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நினையுங்கள்!

அன்று, 144 தடையுத்தரவைமீறினால், மீறி கூட்டம் நடத்தினால்,மீறுகிறவர்களை அழைத்துச் சென்று அல்லது தூக்கி போலீஸ் வண்டியில் ஏற்றிச்சென்று, தண்டித்துச்சிறைக்கனுப்பினதையும் பார்த்திருக்கிறீர்கள். இன்று குடந்தையில் நடப்பதை, அத்துடன் ஒத்திட்டுப்பாருங்கள். பிறகு கூறுங்கள். இந்த ஆட்சிக்குச் சுயாட்சி என்ற பெயர் பொருந்துமா என்பதை!

கொடிமுடி கோகிலம், தினம் தவறாமல் 'சிறைச்சாலைஎன்ன செய்யும்?' என்று பாடினதைக்கேட்டு, விழிப்பும் வீரமும் ஏற்பட்டதாகக் கூறி, விடுதலைப் போரில் விறு விறுப்புக் கொண்டீர்களே, தேசியத் தோழர்களே! அதுதேசியச்செவிக்கு மட்டுமன்று; எங்கள் செவிக்கும் கூடத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்!

அதிமேதாவி என்று தம்மைத்தவறாகத்தீர்மானித்துக் கொண்டிருக்கிற ஓமந்தூரார், இலேசான தடியடிப் பிரயோகந்தான் செய்யப்படுகிறது என்று கூசாமல் கூறுகிறார். இரமணர் சீடராக இருந்து கற்றபாடப்போலும் இது! ஏகாதிபத்தியவாதிகளும் அன்று இதேபாணியில் தான் கூறினர்! அவர்கள் விட்டுப்போன அதே அதிகார பீடத்தில் உட்கார்ந்துகொண்டுதான், அவர்கள் மொழியிலேயே பேசிப் பயிற்சி பெறுகிறார். யாக்கை நிலையாமை என்று அவர் அறிந்திருக்கிற அளவிற்கு, அதிகாரத்தின் நிலையற்ற தன்மையை அறிந்திருப்பதாகத் தெரியவில்லை!

"மொழி காப்பதல்ல இவர்கள் நோக்கம்—பதவியைக் கைப்பற்வே இவர்கள் இவ்வாறு கிளர்ச்சி செய்கிறார்கள்." என்று எங்கள் கிளர்ச்சியைத் திரித்துக் கூறுகிறார்கள், வாய்மை தவறாத ஆளவந்தார்கள். இவர்கள் கூற்று உண்மையானதுதான் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், அதில் இவர்கள் கண்ட குறைதான் என்ன? மாற்றுக்

(7-ம் பக்கம் பார்க்க)

விற்பனைக்குத் தயார்!

காலண்டர்

1948-ம் வருடக் காலண்டர் நமது ஒப்பற்ற திராவிடத் தந்தை பெரியார், சி. என். அண்ணாத்துரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலியவர்கள் உருவமைந்த கண்கவரும் அழகிய தனித்தனி காலண்டர் பெரிய அளவில் உயரிய வழவழப்பான ஆர்ட் தாளில் வெளிவந்துள்ளது.

ஒன்றின் விலை 0—6—0

மாதிரிக்கு ஏழு அணா தபால் பில்லைகள் அனுப்புக

மொத்த வியாபாரத்திற்கும் விபரத்திற்கும் எழுதவும்

விபரங்கட்கு:—

திராவிடன் பதிப்பகம்

P.B. No. 18, வேலூர் N.A.,

படக் காட்சிகளில் பாமன்!

படக்காட்சிகளில் பாமன் வடிவெடுத்துப் பாடுவதும் ஆடுவதும் கூடாது. அவ்விதம் செய்வதைத் தடுக்கவேண்டும். அதற்கென ஒரு சட்டம் இயற்றவேண்டும். இது இன்றைய சர்க்காரின் ஏற்பாடுகளில் ஒன்றாக இருந்து வருவதாகத் தெரிகிறது. மாட்டுச் சாணத்தைச் சர்வவல்லமையுள்ள கடவுளாக வைத்து வணங்கும் ஒரு நாட்டில், மக்கள், கடவுள் வடிவம் கொண்டு நடிப்பதை அவ்வளவு பெரிய குற்றமாகக் கருதிவிட முடியாதென்றபோதிலும், மற்ற நாடுகளில் படக்காட்சிகளின் அமைப்பும் நோக்கமும் எதனை அடிப்படையாகக்கொண்டு இருக்கிறதென்பதையும், நம் நாட்டில் படக்காட்சிகளின் அமைப்பும் நோக்கமும் எதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்பதையும் ஒப்புநோக்கிப் பார்க்கும்போது, சர்க்காரின் இந்த ஏற்பாட்டை எவரும் குற்றம் என்று கருதிவிட முடியாது. அத்தி பூப்பதுபோல், சர்க்காரும் திடீரென்று ஒவ்வொரு நல்ல காரியங்களைச் செய்ய முற்பட்டுவிடுகின்றது. சர்க்கார், தனக்குமுன் நிற்கும் வானத்தை முட்டும் எதிர்ப்பைக்கூடப் பொருட்படுத்தாமல் சில நல்ல காரியங்களை — எதிர்பாராத விதத்தில் — எந்தக் காரணத்தைக் கொண்டோ செய்ய முற்பட்டுவிடுவது கண்டு களிக்கிறோம். சர்க்காரின் இந்தத்திட்டம் நடைமுறைக்கு வருமானால், இன்றைய நம்நாட்டுப் படவுலகில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படும் என்பது உறுதி. ஆனால், இந்த ஏற்பாடு, மதமெனும் குரங்கால் மாய்ந்தொழிக்கும் நிலை ஏற்பட்டால் அதனைச் சர்க்கார் சமாளித்து,எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் துணிவும், பக்கபலமும்அதற்கு இருக்கிறதா என்பது சந்தேகம் தான். ஏனென்றால், சர்க்காரின் இந்த ஏற்பாடு அறிக்கை வடிவில் வெளிவந்ததும், பாமனின் வார்சுப் பத்திரிகைகள் சில சர்க்காரின் இந்த ஏற்பாட்டைக் கண்டிக்கத்தொடங்கி விட்டன. சர்க்காரின் இந்த ஏற்பாட்டால் சினிமாத் தொழிலும், நாடகக்கலையும் பாய்ந்தொழியும் என்று மிகமிக மட்டரகமாக எழுதத் தொடங்கி விட்டன.

படக்காட்சிகளில் கடவுள் தோன்றினாலன்றிக் கலை வளராது என்ற, 'கலை' என்றால், அது 'கடவுள்' தான் என்பதாக எண்ணும் சில கருத்தில் உரமற்றவர்கள் கருதுகிறார்கள். கலை நாகரிகம் என்ற சிறந்த மக்கட்பண்புகள், 'நம்முடைய' மகேசுவரன்களுக்கு முற்றிலும் புறம்பானவை என்பதை நம்மவர் பலர் உணராததாலேயே படஉலகில் 'கடவுள் தோன்றாவிட்டால் கலை அழிந்துபடும் என்று அலறுகிறார்கள். கலை—நாகரிகம் ஆகிய உயர்ந்த மக்கட் பண்புகளுக்கும், மக்கட்பண்புக்கு மிகத் தொலைவில் இருக்கும் 'நமது' கடவுளரின் பண்புகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறியவேண்டுமானால், நம்முன் கொட்டிக்குவித்து வைக்கப் பட்டிருக்கும் புராண—இதிகாசங்களை ஒருமுறை புரட்டிப்பார்த்தால் விளங்கிவிடுமே! இராமனுடைய இராமாயணத்தையும், கிருட்டினனுடைய பாகவதத்தையும், சிவனுடைய திருவிளையாடற் புராணத்தையும் படமாகப் பிடித்துக் காட்டினால் தான் கலை வளரும் என்ற பரிதாப நிலையிலுள்ளவர்கள், 'நம்முடைய' கடவுளர்கள் தங்கள் கரைபுரண்டோடும் காமஇச்சையை நிறைவேற்றுவதற்காகப், பகுத்தறிவற்ற விலங்கினங்களும் மேற்கொள்ளாத இழிந்த முறைகளைக் கையாண்டார்கள் என்ற செய்திகள்தானே புராண—இதிகாசங்களில் முதலிடம் பெற்றுள்ளன என்பதை அறியவும், உணரவும் முடியாதவர்களன்றி, மற்ற எவரும் புராண—இதிகாசங்களைப் படம்பிடிக்க வேண்டுமென்று கூறவே மாட்டார்கள். சிவன் மோகினியைத் துரத்திச்சென்ற கதையும், சுப்பிரமணியர் வள்ளியை வட்டமிட்ட கதையும், கிருட்டினன் சத்தியபாமையிடம் சரசமாடிய கதையும், இந்திரன் அகலிகையை அணைந்த கதையும், பிரம்மா பார்வதியைப் பார்த்த கதையும், துரோபதை, ஐந்துபேர் கணவன்மாராக இருந்தும் ஆறாவது கணவன் தேவைப்படுகிறதென்று கூறிய கதையும், சீதை வால்மீகி ஆசிரமத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்ற கதையும், அக்கினிதேவன் இருடியர் எழுவரின் மனைவிகளை விரும்பிய கதையும், பார்ப்பனப் 'பெருமகன்' ஒருவன், பெற்ற தாயைப் புணர்ந்து—தந்தையைக் கொன்ற கதையும், காட்டுப் பன்றிகளுக்கு நாட்டு அமைச்சரின் மனைவியார்களை வாழ்க்கைத் துணைவியராக்கி அப்பன்றிகளையே நாட்டு அமைச்சர்களுமாக்கிய கதையும் இன்ன பிறவும்தானே புராண — இதிகாசங்களில் முதலிடம் பெற்று இன்றைய பட உலகுக்கு விருந்தளிப்பனவாக இருக்கின்றன! இக்கதைகளைப் படம்பிடித்துக் காட்டாவிட்டால், பாமர மக்களின் கடவுட் பற்றுக் குறைந்துவிடுமென்று சிலர் கூக்குரல் போட இப்பவே கிளம்பிவிட்டார்களே! கருவில் இருக்கும் சர்க்காரின் இந்தத் திட்டம் உருவாகிவிட்டால் உலகமே அழிந்துவிடுமென்று இவர்கள் உறுமிக் கிளம்பி இன்னும் அதிகமான உரத்த குரலில் பேசுவார்களே! சர்க்கார் இவ்வளவையும் தாண்டியன்றோ தங்கள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்! முடியுமா? செய்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

இனி, இப்போது சர்க்கார் கொண்டுவர இருக்கும் திட்டமானது, எந்த அடிப்படையில் கொண்டுவரப்படுகின்றது? அதனால் உண்டாகும் நன்மைகள் என்னென்ன? என்பனவற்றைப் பற்றியும் சிறிது ஆராய்வது இந்தத் திட்டத்தைக் கொண்டுவர இருக்கும் சர்க்காருக்குப் பயன்படும் என்று கருதுகிறோம். எனவே, இன்று படக் காட்சிகளில் பாமன் வடிவத்தில் தோன்றி நடிப்பதானது, பாமனுடைய மதிப்பையும் உயர்வையும் குறைப்பதாக இருக்கிறது; ஆகையால், இந்த நடிப்பு முறையையே இல்லாமல் செய்துவிட்டால், கடவுளின் கௌரவம் காப்பாற்றப்படும் என்ற அடிப்படையிலேயே சர்க்கார் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்றுவதோ அன்றிக் குறைப்பதோ நம்மால் முடியக்கூடிய காரியமா? என்பதை

முதலில் கடவுளன்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடவுள் தன்மையைப்பற்றி மதநூல்களில் கூறப்பட்டிருக்கும் விளக்கங்களை உணராதவர்கள்தான் அவருடைய கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்று கருதுவார்கள்!

மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு பொருள் கடவுள் என்ற பெயரோடு நின்று இவ்வுலகத்தை இயக்குகின்றதென்பது மதநூலார் கொள்கை. மதநூலார் இலக்கணப்படி, கடவுள் உண்டு என்று கூறுவதே அவர்கள் கொள்கைக்குத் தவறுண்டாக்குவதாகும். எப்படியென்றால், "ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீ என்றபின்னர் பேச இரண்டுண்டோ" என்பது மத நூற்றுணிபாகும். எனவே, உயிர்கள் அனைத்திற்கும் பொதுவாயும்—தந்தையாயும்—எல்லாமாயும்—எங்குமாயும்—உள்ள ஒரு பொருளை உண்டென்று கூறுவது போன்ற அறியாமையும் அதன் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும்—அதற்குச் சட்டமியற்றவேண்டுமென்ற நெட்டுயிர்ப்பும் வேடிக்கையாகவே இருக்கிறது. கடற் சிப்பியில் முத்து இருக்கிறதென்று ஒருவன் கூறுவது இயற்கைக்கு மாறுபட்டதாகாது. என்றாலும் அது பலருக்கு வியப்பைத் தருகின்றது. காரணம்: கடற் சிப்பியில் முத்து என்ற ஒரு மதிப்புடைப் பொருள் இருக்கிறதென்பதை அறியாதார் சிலர் இருக்கக்கூடும் என்பதால். கடற் சிப்பியில் முத்து இருக்கிறதென்பதை அதனை அறிந்தான் ஒருவன் கூறுவது வியத்தற்குரியதும் இயற்கைக்குமாறுபடாததுமாகும். ஆனால் 'நமது' கடவுள் அப்படிப்பட்டவரன்று; கடற்சிப்பி முத்துப்போல் ஒருகுறிப்பிட்ட இடத்தில் மறைந்து இருப்பவருமன்று. ஒரு இடத்தில் இருப்பதும், மற்றை இடங்களில் இல்லாததுமான ஒன்றைத்தான், அது இன்ன இடத்தில் இன்ன தன்மையோடு இருக்கிறதென்று, அறிந்தான் ஒருவன் அதனை அறியாதார்க்கு அறிவிக்கவேண்டும். அங்ஙனமன்றி, எல்லாமாய்—எங்குமாய்—அணுவுக்கணுவாய்—அகண்டமாய்—எதிலும் பிரிவற நிற்பதாகச் சொல்லப்படும் ஒன்றை, ஒருவன் உண்டென்று கூறும் அறியாமையை அளப்பதற்குக் கருவியே இல்லை. ஒருவனால் உண்டென்று சொல்லப்படும் ஒரு பொருள், யாதாமொரு கருவியாலோ—அறிவாலோ அளந்தறிந்து உணரக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். ஆனால், கடவுள், அளப்பரும் இயல்பினதாய்—மறைமுதல் சொல் ஈறாகவுள்ள எந்தக் குறைவிலா அளவினாலும் அளந்தறிய முடியாதென்று முழங்கிய பின், ஒருவன், அதனைக்கண்டறிந்து அளந்தவனாவானா? அதன்கௌரவத்தைக் காப்பாற்றத்தான்முயல்வானா? முடியுமா? அன்றி, அப்பொருள்ஒருவனால் அளந்தறியப்படுவதற்கு அது எங்காவது ஒரு இடத்தில் தனித்திருந்தாலன்றி முடியுமா?

ஒருவன், ஒரு பொருளை உண்டென்று கூறுவானாயின், அவன், அப்பொருளைக் கண்டிருத்தல் வேண்டுமன்றோ! எனவே ஒருவனால், காணப்பட்டு, மற்றவர்களால் காணப்படாத ஒன்றைக் 'கடவுள்' என்றழைப்பது மத நூலார் கொள்கைக்கே மாறுபட்டதாகும். எப்படியென்றால்,காணமுடியாதது எதுவோ அதுவே கடவுள் என்பதுமதநூலார் கொள்கை, எனவே, காணமுடியாதது எது எனஆராயுமிடத்து, எது இல்லாததோ அதுவேகாணமுடியாததுமாகும் என்றஉண்மைபெறப்படுகின்றது. அன்றியும், மக்களால்எளிதில் அறிந்துகொள்ள முடியாத கடற்சிப்பிமுத்துப்போலக்,கடவுளும் எங்காவது ஒருமறைவிடத்தில் தனியாக இருப்பதாகக் கொள்ளவும் மதநூற்கள் இடந்தருவதில்லையே! கடவுள் இல்லாத இடமே இல்லை என்பது தான் அந்நூற்களின் முடிந்த முடிபாகும். எனவே, கடவுளை அறிந்ததாகக் கூறுபவனும், கடவுளைக் காப்பாற்ற விட்டால் அதன் கௌரவம் குறைந்து விடுமென்று கருதும் 'நிறைமதி' யாளனும், மணற்சோற்றில் கல் ஆராய்பவனும் ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்களே யாவார்கள்.

இனி, மத நூல்கள் சிலவற்றில் கூறியுள்ளபடி, 'தேடினால் கிடைப்பர்' என்ற முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளை நம்பி, அவ்வழி சென்றோரெல்லாம், அத்துறையைக் கானல் சலிப்படைந்து, தங்கள் ஏமாந்த இயல்பினை இனிதியம்பியுள்ளனர். பட்டினத்தார், நாவுக்கரசர், புத்தர் முதலாயினோர் அவ்வழிபோய் மீண்ட பலருட் சிலராவர். ஈனுவாழைமரத்தின் மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்துப் பார்த்தால், உரிக்கப்பட்ட அம் மட்டைகளைத் தவிர, அதனுள்ளே வேறொன்றும் இல்லாமை புலப்படுவது போல், மத நூல்கள் கூறிய வழிகளிலே சென்றவர்கள், தாங்கள் கருதிப்போன 'கடவுள்'காணப்படாமையைக்கருத்தோடு திருத்தமாகக் கூறியுள்ளார்கள். எனவே, இல்லாதஒன்றைஉண்டென்னும் கொள்கைஎன்றைக்குத்தோன்றியதோ, அன்றிருந்தே அக்கூற்று மறுக்கப்பட்டும் வந்திருக்கிறது — வருகிறது. ஆனால், உண்மைக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு மதக் கொள்கைகளால் பிரித்துப் பிளவுபடுத்தப்பட்டிருப்பதால், பொய்யை பொய்யெனக் கொள்ளும் பேதைமையே பெருமை பெற்று வருகின்றது. இதனால், உண்மைகளை உருவாக்குவதற்குப் பெருமுயற்சியும், பேருழைப்பும், பெருந் துணிவும், இடுக்கண் வந்தால் ஏற்கும் இயல்பும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இஞ்ஞான்றை உலகம் இத்துறையில் ஓரளவு வெற்றி பெற்று வருவது கண்கூடு. காரணம்! மக்களிடையே மங்கிக்கிடந்த பகுத்தறிவெனும் பகலவன் தன் ஒளி அலைகளால், விரிந்த உலகின் சரிந்தகொள்கைகளை விழ்த்தும் ஆராய்ச்சித் துறையின் அணிகலமாக விளங்குவதால் என்க. இந்த ஆராய்ச்சியின் பயன், அரசியலாரைக்கூடப், படக்காட்சிகளில் பரமன் வடிவில் நடிப்பது கூடாது என்ற அளவுக்காவது சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டதென்றால், இன்றைய உலகம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

இதுமட்டுமல்ல, இன்றைய இந்திய யூனியனுக்குத்தலைவராக (பிரசிடெண்டாக) வருபவர், தம்முடைய கடமைகளைச் சரிவரச் செய்வேன் என்பதாக எடுத்துக்கொள்ளப்படும் விசுவாசப்பிரமாணம் கடவுள் பேரால் செய்யப்படவேண்டுமா அல்லது வேண்டாமா? என்றுவிவாதிக்குமளவுக்குக், கடவுள்பற்றிய கருத்தும் நம்பிக்கையும் முன்னர்க்காலம் போலன்றி மாறுதல் அடைந்து வருகின்றதென்பதும், பேரறிஞர்கள் செய்துவரும் இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு அரண் செய்வதாகவே இருப்பது கண்டு மகிழ்கிறோம்.

இனிப், படஉலகில் பரமன் தோன்றுவதால், அவருடைய கௌரவம் அதாவது மதிப்பும் உயர்வும் குறைந்துவருகிறதென்று கருதுபவர்

(13-ம்பக்கம் பார்க்க)

ஏன்—எப்படி—எதற்காக?

நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. நாம் நாட்டுக்கு நல்லதென்று நினைத்ததை எல்லாம் செய்வதற்குத் தடையாக இருந்த அந்நிய ஆங்கில ஏகாதிபத்யம் அகன்றுவிட்டது. நம்முடைய கனவுகள் எல்லாம் நினைவாகும் காலம் வந்து விட்டது. எனவே, நினைவாக மாறிய கனவுகளை எல்லாம் இனி நிலையான செயல் முறையில் கொண்டு நடைமுறையில் உலவ விடுவதுதான் நம்முன் எஞ்சி நிற்கும் பணி என்ற நல்லெண்ணம் ஏற்படுவதும், அவற்றிற்கான ஆக்க வேலைகளில் ஈடுபடுவதும், நீண்டகாலமாகப் பிறர் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்து அவதியுற்ற ஒரு நாட்டு மக்களுக்கு இயற்கையாகவே உண்டாகும் உரிமை உணர்ச்சியாகும். இதனைத் தவறென்று எவரும் கூறிவிட முடியாது.

ஆனால், பெற்ற சுதந்திரத்தைப் பிறர் நகைக்கும்படி நடத்திச் சென்றால், சுதந்திரம் பெற்றது இதற்குத்தானா? என்று பிறரல்ல—நாமும் எண்ணி வேதனைப்படாமல் இருக்க முடியுமா? "காங்கிரசின் ஜனநாயகத் தன்மையும், சகிப்புத் தன்மையும் எங்கே ஓடி ஒளிந்திருக்கின்றன என்று விளக்குக்கொண்டு தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது" என்று சுதந்திரம் பெறுவதில் பெரும் பங்கெடுத்துப் பணியாற்றியவர்களே கூறி வருந்தக் கூடிய முறையிலும் அளவிலும், நம்முடைய சுதந்திர ஆட்சியின் ஆரம்பமே அமையுமானால், இன்னும் போகப் போக நம்முடைய சுதந்திர ஆட்சி முறை நமக்கு என்னென்ன எதிர்பாராத பயங்கரமான ஆபத்துக்களை எல்லாம் உண்டாக்கி விடுமோ என்ற அச்சம் இயல்பாக உண்டாகாமல் இருக்கமுடியுமா?

நாட்டை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கே, அதன் ஆட்சிமுறை அலங்கோலமாகக் காட்சியளிக்கிறதென்றால், அதன் எதிர்க் கட்சிகளுக்கு இந்த ஆட்சி முறை எந்தவிதத்தில் காட்சியளிக்கும் என்பதனைக் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். நாம் சர்க்காரை ஏதாவது குறைகூறினால், இது எதிர்க்கட்சிக்காரர்களின் 'குறுகிய' மனப்பான்மையால் கூறப்படும் குற்றச்சாட்டென்று கருதும் சில கோணல் மதியினர், அவ்வப்போது காங்கிரஸ் சர்க்காரில் நடைபெறும் ஊழல்களை அதே காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கும் ஏடுகளே எடுத்துக்காட்டி அம்பலப்படுத்துகின்றன என்பதையும் அவ்வப்போது கவனித்து வருவார்களானால், நாம் கூறுவதில் உண்மை இருக்கிறது என்பதை உணர்வர்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் செய்யப்பட்ட — செய்யப்படுகின்ற காரியங்கள் பல, அவற்றைச் செய்பவர்களின் திறமைக் குறைவையே காட்டுகின்றன என்று சுதந்திர சர்க்காரை ஆதரிப்பதற்குத் தங்களுக்குத்தான் உரிமையும் பொறுப்பும் உண்டென்று சொல்லிக்கொள்ளும் பத்திரிகைகளே எழுதுகின்றனவே! எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.

சுதந்திரம் பெற்ற நம் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்பட வேண்டிய முறைகளைப் பற்றி 'நம்ம சர்க்கார்' ஒன்றும் தெரியாத முறையில் காரியங்கள் செய்யப்பட்டு-வருகிறதென்ற குற்றச்சாட்டை நாம் சுமத்தவில்லை—நாம்தான் எதிர்க் கட்சிக்காரராயிற்றே! சர்க்கார் கட்சியைச் சார்ந்த பத்திரிகை சுமத்துகிறது இந்தக் குற்றச்சாட்டை!

"பாடத்திட்டம் பற்றியும், போதனா முறைகள் பற்றியும், மொழிகள் பற்றியும் மாறுதல் செய்யவேண்டுமென்று விரும்பும் மந்திரிகள், சர்வ கலாசாலைகளின் முக்கியமான இலட்சியத்துக்குத் தமது பிரேரணைகளும் உத்தரவும் உதவியாகுமா, அல்லது முட்டுக்கட்டையாகுமா என்பதில் கவனம் செலுத்துவது அவசியம்"

என்று 'தினமணி' தனது 29-12-48 தலையங்கத்தில் எழுதியிருக்கிறது. இதன்பொருள் என்ன? மந்திரிகள் முன்பின் யோசனையின்றி எதெதையோ செய்துவிடுகிறார்கள்—அவை பயனற்றவை — நாட்டு நலனுக்கு உகந்தவையல்ல என்பது தானே மந்திரிகளைப்பற்றி அந்தப் பத்திரிகை இப்படி எழுதுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்க முடியும். இல்லையேல், "மந்திரிகள் இவற்றில் கவனம் செலுத்துவது அவசியம்" என்று ஏன் எழுதவேண்டும்? கவனம் செலுத்துவது அவசியம் என்று எழுதுவதென்றால், அவர்கள் (மந்திரிகள்) எதிலும் கவனம் செலுத்தாமலே காரியங்களைச் செய்துவருகின்றனர் என்றுதானே பொருள்! நம்முடைய மந்திரிகள் தாங்கள் செய்யும் காரியங்களை எல்லாம் தானதோன்றித்தனமாகவே செய்கிறார்கள் என்பதைப் பொது மக்களுக்கு விளக்கிக் காட்டும் முறையில்,

"சர்வகலாசாலைக்காரர்கள் எல்லாரும பழையமனப்பான்மையில் ஊறிப்போனவர்கள்; எந்த மாறுதலையும் அவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள்; அவர்களுடைய எதிர்ப்பைப் பொருட்படுத்தக்கூடாது என்று மந்திரிகள் கருதுவதுண்டு. இது சரியான மனப்பான்மையல்ல. ஏனென்றால், மந்திரிகள் கல்வி நிபுணர்கள் அல்ல; போதனாமுறையிலும்நிபுணர்கள் அல்ல. ஆகையால் இவர்கள் தமது கருத்தைச், சர்வகலாசாலைப் பிரமுகர்களிடம் தெரிவித்து அவர்களுடன் விவாதித்து அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய மாறுதல்களைப்பட்டுமதான் சர்க்காரின் அதிகாரத்தின்மூலம் அமுலுக்குக்கொண்டு வரவேண்டும்"

என்று 'தினமணி' மேலும் எழுதித் தன்னுடைய கருத்தை விளக்கி, அமைச்சர்களுக்கு அறிவுரைபுகட்டுகிறது. அமைச்சர்கள் கல்வி நிபுணர்களல்ல — போதனாமுறை நிபுணர்களல்ல என்ற குற்றச்சாட்டை அவர்கள்மீது சுமத்தி, அவர்கள் தாங்கள் செய்யும் காரியங்களை, அதிகாரத்தின் வாயிலாக நடைமுறைக்குக்கொண்டுவருவதற்கு முன், அந்தந்தத் துறையில் வல்லுநர்களாய் உள்ளவர்களைக் கலந்து அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய மாறுதல்களை மட்டும்தான் செய்யவேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறது.

"நம்ம சர்க்காரைப்"பற்றி நாம்

ஏதாவது குறைவாக எழுதினால் நம்மை ஏளனம் செய்யும் காங்கிரஸ் நண்பர்கள், 'தினமணி' எழுதுகிறதே, "மந்திரிகள் கல்வி நிபுணர்கள் அல்ல, போதனாமுறை நிபுணர்களும் அல்ல" என்று என்பதை எண்ணிப்பார்க்கவேண்டாமா என்று கேட்கிறோம். எதற்கெடுத்தாலும் சர்க்காரைக் குறைகூறுவதே இவர்களின் தொழில் என்று நம்மை நையாண்டி செய்யும் காங்கிரஸ் நண்பர்கள் ஏன் இப்போது வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்? வெட்கத்தைவிட்டு ஒப்புக்கொள்ள வேண்டாமா அமைச்சர்களின் அறிவில் பழுது ஏற்பட்டிருக்கிறது — அவர்களால் செய்யப்படுகின்ற காரியங்கள் எல்லாம் நாட்டு மக்களின் நலனுக்குத் தீமையை உண்டாக்குவனவாக இருக்கிறதென்று நாம் கூறும் உண்மைகளை?

டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள், "நாட்டின் சுதந்திர வரம்பின்றி வேலை செய்கிறது—'தரம்' குறைவாக இருக்கிறது—திறமைக்கு உகந்ததாய் இலலை—சர்வகலாசாலைப் படிப்பு எவ்வித நோக்கமும் இல்லாமல் தாட்படுகிறது—அடிப்படை உண்மை கவனிக்கப்படவில்லை—முன்னேற்றத்தைப் பாதிக்கிறது—வெற்றியை உறுதி செய்யக்கூடிய நிலைமைகள் தோற்றுவிக்கப்படவில்லை—அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்கின்றனர்"-என்ற இன்னபிற குற்றச்சாட்டுகளை அமைச்சர்கள் மீது சுமத்துகிறார். இதற்குத் 'தினமணி' நற்சாட்சிப் பத்திரம் வழங்குகிறது, 'டாக்டர் கூறுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது' என்று.

சுதந்திர சர்க்கார் செய்யும் எந்தக் காரியமும் திருப்திகரமாக இல்லையென்று அந்தந்தத் துறைகளில் உள்ளவர்களேயும் குறை கூறும் நிலைமையைத்தவிர, சுதந்திரம் கிடைத்தபின் நாம் அடைந்த பலனோ அல்லது அடையலாம் என்ற நம்பிக்கையை ஊட்டும் பலனுள்ள காரியங்களோ நடைபெறுகின்றன என்று சொல்வதற்கில்லாத முறையில் சர்க்கார்—நமது சர்க்கார் காரியங்களைச் செய்து வருகின்றது. மதுவிலக்கு போன்ற சில நன்மைகள்கூட மக்களால் மறந்து விடக்கூடிய அளவுக்குச் சர்க்கார் நடந்து வருவதைக் கண்டு யார்தான் அச்சப்படாமல் இருக்க முடியும்? யார்தான் சர்க்காரின் தவறான போக்குகளைக் கண்டிக்காமல் இருக்க முடியும்? நாம்தான் சின்னக் கட்சி—சர்க்காரின் அகராதிப்படி! நம்முடைய கண்டனங்கள் சர்க்காரின் செவிக்கும், கருத்துக்கும் எட்டாது என்று வைத்துக் கொண்டாலும், சர்க்கார் கட்சியே சர்க்காரை கண்டிக்க கிளம்பி விட்டதே! மறைமுகமாகப் பலரும், வெளிப்படையாகவே சிலரும் 'தங்கள்' சர்க்காரின் போக்கைக் கண்டிக்கவும், எச்சரிக்கை செய்யவும், மாகாண மந்திரி சபைகளில் அடிக்கடி மாற்றங்களை உண்டாக்கிப் புது மந்திரிகளைப் பீடங்களில் அமர்த்தவும் முற்பட்டுவிட்டார்களே! இவை எல்லாம் ஆளும் திறமை இவர்களுக்கு (இன்றைய சர்க்காருக்கு) இல்லை என்பதைத் தவிர, வேறு எதனைக் காட்டுகிறது? 'பட்டாபி, பூசி மெழுகிப் பேசுகிறார்!' 'பண்டிதர் வழவழ என்றுபேசுகிறார்!' 'பட்டேல் முதலாளிகள் பக்கம் பேசுகிறார்!' 'மாகாண அமைச்சர்களுக்கு மதி துலக்கமில்லை!' என்பன போன்ற கண்டனங்கள் காங்கிரஸ் முகாமிலிருந்தே கிளம்புகின்றனவே! ஏன்? எப்படி? எதற்காக? கூறவேண்டாம்; யோசியுங்கள் காங்கிரஸ் நண்பர்களே!

எவ்வளவு காலம் பிடிக்கும்?

அதிகாரம் பெற்றிருப்பவர்கள், அந்த அதிகாரத்தை மக்கள் விருப்பத்தின்மீது பெற்றிருக்கவில்லையானாலும், மக்களின் தேவைகளைத் தெரிந்து, அவர்களுக்கு வாழ்வளிப்பதற்கான வழித்துறைகளை, தாமதிக்காமல் செயலாற்ற முன்வருவார்களானால், மக்கள் ஆட்சி அமைப்பின் சாரத்தை நிறைவேற்றினவர்களாவார்கள். வேறு கட்சியினர் மக்களை வெறும் வார்த்தைகளினால் மயக்கினாலும், அதிகாரத்திலிருப்போர் தங்கள் அரும் செயல்களால் அளிக்கும் சுகவாழ்வை, மக்கள் மறந்து விடவோ, ஒத்துழைக்க மறுத்துவிடவோ மாட்டார்கள். மக்களின் வாழ்வில் முன்னேற்றமில்லாமல், நாளுக்கு நாள் சீர்குலைவு ஏற்பட்டு வேதனை பெருகிக்கொண்டு இருக்கும்பொழுது, ஏதேதோ கூறி எவர்கள் அதிகாரத்தில் அமர்ந்த பின்னரும், தங்கள் நிலையில் எந்த வித மாற்றமும் உருவாகாமல் இருப்பதைக் கண்ட ஏமாற்றமும், சொல்லிலே நம்பிக்கைவைத்து உரிமையை இழந்து விடுதலைக்கான வழி விளக்கமாகத் தெரியாததால் ஏற்படும் எரிச்சலும், சேர்ந்துவிடுமானால், படும் கஷ்டத்தைச் சித்தரிக்கும் வார்த்தைகள்—அதிகாரத்திலுள்ளோரின் தவறை சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டுகள் — தங்கள் திட்டத்தின் அருமை பெருமைகளை விளக்கிக் காட்டும் மோகனச் சொற்கள், மாற்றுக் கட்சியினரின் அணியில் மக்களைக் கொண்டு சேர்த்துவிடுவது உறுதி. இதுவே இயற்கையுமாகும்.

வாழ்த்துக் கூறிய மக்கள்—வரவேற்பளித்த மக்கள் — மாலை மரியாதை செய்த மக்கள்—'வராதே இங்கே' "திரும்பிப் போ" என்று முழக்கிக்கொண்டு, கருப்புக் கொடிகளை தாங்கி வெறுப்பை வெளியாக்குவார்களானால், அதிகாரத்திலிருப்போர்களுக்கு அமைதி அழிந்து, சாந்தம் தொலைந்து, ஆத்திரமும்—அதிகாரத்தின் வல்லமையைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையும் கிளர்ந்து எழும்பி, மக்களை அடக்க ஏவுகின்றனர் படையை. மக்கள் ஆதரவுபற்றி அந்தாதி பாடி வந்தவர்கள், மக்கள் எழுச்சியை அடக்க அடக்குமுறைகளுக்கு அருட்பாடும் நிலையைப் பெற்றுவிடுகின்றனர். அத்துடனும், அவர்கள் பெற்றுள்ள அதிகாரம் அவர்களை ஆட்டிப் படைப்பதை நிறுத்திவிடுவதில்லை. மேலும் அது வேலை செய்யத் துவங்கிவிடுகிறது. முன்னாள் எந்த மக்களைப்பற்றி உயர்வாகக் கொண்டிருந்தார்களோ, அதே மக்களைக் குறித்து இழிவாகப் பேசவும், அலட்சியப்படுத்திக் கூறவும், துணிவைக் கொடுக்கிறது அதிகாரம்.

அதிகாரத்திலிருப்போரின் நிலை இதுவானால், அறிவு படைத்தவர்கள் என்று சொல்லுபவர்களின் நிலை, இதனைக் காட்டிலும் மோசமானதாக இருக்கிறது. சொந்தத்தில் சுகவாழ்வு வாழ்ந்துகொண்டு, காலை படுக்கையிற் படுத்தபடியே 'பெட் காபி'யும், பல் விளக்கப் பசையும் பிரஷும், வாய் கொப்பளிக்க இளவெந்நீரும், முகம் துடைக்க 'பாத் டவலும்,' உயிர் சத்துக்களின் குறைவை நிறைவு செய்ய 'வாட்டர் பெரீஸ் காம்பவுண்டு'ம், அதற்குமேல் சத்தான காலை உணவும், ஓவல்டின் பானமும், பகல் உணவிற்கு முன்னர் 'பார்லி வாட்டரும்', பகல் உணவிற்கு வெண்ணெய் காய்ச்சின நெய்யும், பற்பலவிதமான 'வெஜிடபில்களும்', இடைவேளையையும் இரவையும் இதேமாதிரி கழித்துவிட்டு, வாழ்க்கைப் போராட்டத்தின் விதவிதமான வேதனைகள் தெரியாது, ஆத்மாவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி, ஊருக்கு உபதேசம் புரிவதை வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரத்திலிருப்போர்களைக் காட்டிலும், இவர்கள் மக்களுக்கு அதிகக் கேட்டினை, தங்கள் பிரசாரத்தின் மூலம் செய்துவிடுகிறார்கள். எந்தக் கல்வி நமது மாணவர்களை, மக்கள் பண்பு உடையவர்களாக மாற்றிற்றோ, அதே கல்வியைத் தங்கள் கருவியாகக்கொண்டு, மாணவர்களை மந்த மதியினராக மாற்றிவிட முயலுகின்றனர் — மாணவர்கள் எதிர்காலத்தை ஆக்கக் கூடிய இளைஞர்கள். கொடி ஏந்தவும் கூவவும் மட்டும் அவர்கள் கற்றிருக்கவில்லை. இன்பபுரிக்கு இட்டுச் செல்லும் பொறுப்பும், தகுதியும், திறமையும் கொண்டவர்கள் அவர்கள். அவர்கள் இரத்தத்தில், நஞ்சூட்டப்படுகிறது, இந்தக் கற்றறிந்தமேதைகளால். இவர்களின் பயக்க வார்த்தைகளில் மயங்கிவிட்டால், மக்கள் முன்னேற்றம் மரத்திற்கு மரம் தாவும் மாண்பு பெற்றுவிடும்!

இந்தத் தத்துவபோதகர்கள், எதிர்காலம் எப்படி இருந்தால் மக்கள் குலம் நல்வாழ்வு பெறும், போரும் பிணக்குமின்றிச் சாந்தி நிலவும், மக்கள் மக்களாக வாழ வகை பிறக்கும் என்னும் எந்தக் கோட்பாடும் இவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும், அதனைத் தகர்க்கவே துணிவு கொள்வர். சுயநலம்—வடிகட்டின சுயநலம். அவர்களை இந்தத் தவறான கொலைத் தொழிலை செய்யத் தூண்டுகிறது. ஒருவனைக் கொலை செய்துவிடுவது கூட அவ்வளவு குற்றமுடையது அன்று, அவனுடைய சிந்தனையைக் கொலைசெய்வது மிகப்பெரும் குற்றமுடையதாகும். எந்தச் சிந்தனை சக்தியால் மனிதன் உயர்ந்தவன் என்று கொள்ளப்படுகிறனோ, எது மனிதனின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக இருந்ததோ அதனையே தடுத்து விட்டால்,—வீழ்ச்சியுறச்செய்துவிட்டால் மனிதன் மனிதப் பண்போடு இருப்பது எவ்வாறு கூடுமோ, நாம் அறியோம்.

காலை 'பெட் காபி' தன் கையே பட்டுத் தரையில் சாய்ந்துவிட்டால், காலை உணவிலே எட்டுக்கால் பூச்சி இருக்கக்கண்டால், பகல் உணவில் உப்பு அதிகரித்துப் போயிருந்தால், மோட்டாரில் முன்காலை வைத்தவுடன் படிக்கட்டு முறிந்து விழுந்தால் அந்த நேரத்திலும் ஆத்மாவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள நெருக்கத்தை அளந்து பார்க்கவா இந்த ஆத்மவாதிகளுக்கு விருப்பம் இருக்கும். சமையல்காரனும் சாபரும் அன்றே சங்கடத்துக்குள்ளாகி இருப்பர் இந்த உபதேசிகளால். ஆத்ம பரிசோதனை அஸ்தமித்து அன்றே போயிருக்கும்!

மண்வெட்டியும், மரவெட்டியும் இத்தகையவர்களிடம் கொடுத்து, அரைக்காணி நிலத்தை கொத்திபார்க்கட்டும்—ஏரத் தண்டைப் பிளந்து பார்க்கட்டும் என்று எவராவது கட்டளை இட்டால், அப்பொழுது தெரியும் வாழ்க்கைப் போராட்டத்தின் பயங்கர வேதனை. இந்த மாற்றம் ஏற்படாத வரையில், வேதாந்த போதனை அவர்களுக்கு வாழ்வளிக்கும் வேட்டை நிலமாகத்தான் இருக்கும்.

(12-ம் பக்கம் பார்க்க)

சிறைச்சாலை என்ன செய்யும்?

2-ம் பக்கத் தொடர்ச்சி

கட்சியினர், தங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற, அதிகாரத்தைப் பெற, அதற்கான முயற்சியை மேற்கொள்வது, மக்களாட்சிக் கோட்பாட்டுக்கு முரண்பட்டதா? அதிகாரத்திலென்றும் இருந்துத் தீரவேண்டிய கட்சி காங்கிரஸ் கட்சிதான் என்று பாத்தியதைக் கொண்டாடுவது ஜனநாயக முறைதானா? அதிகாரத்திலுள்ள கட்சி வரம்பு கடந்து நடந்துகொள்வதைத் தடுக்கவும், திருந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும், தக்கதோர் எதிர்க்கட்சி அமைவது, மக்களாட்சிமுறைக்கு ஒவ்வாததா? எதிர்க் கட்சியே இருக்கக்கூடாது என்று பேசும் இவர்களின் இருதயம் களங்கமற்றது என்று எவ்வாறு நம்ப முடியும்? இவர்கள் வகிக்கும் பதவி என்ன, இவர்களுடைய பிதிரார்ஜிதமா? எவரையும் கிட்டே நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ள, இவர்களுக்கு என்ன அது பரம்பரைச் சொத்தா? பாசிசப் போக்கு உதவாது! விழிப்படைந்த மக்களிடம், இவர்களுடைய ஜனநாயக வேஷம் கலைந்து விடுவது முக்காலும் உறுதி. அடக்குமுறை, போலீஸ் தடியடி, முதலியன, இவர்கள் விரைந்து செல்லும் அழிவுப்பாதையை, அணையிட்டுத் தடுத்துவிடாது! இந்த அறிவுரை, ஆளவந்தார்களால் புரிந்துகொள்ள முடியாது. இந்த அளவிற்கு அதிகார போதைத் தலைக்கேறி விட்டிருக்கிறது. போகும்பேய் சும்மா போகாது என்பதுபோல், தடியடி தர்பாரும் நடத்திவிட்டுப் போகிறது! நன்றாக நடத்தட்டும்—மேலும் தீவிரமாக நடத்தட்டும்!

கருத்து மோதுதல் நமக்குள் ஏற்படலாம். வளர்ச்சிக்கு அறிகுறி அது. நாம் மக்கள்—வன்விலங்குகள் அல்ல. இது நாடு — காடு அல்ல. நாட்டு முறைதான் தேவை—காட்டு ஆட்சி அல்ல காட்டுமுறையைக் கையாண்டால், அதற்குப் பெயர் ஜனநாயகமாகாது. பாசிசமுறை அது.

மற்ற ஊர்களைப்போல், நமது ஊரிலும் 144 தடையுத்தரவைப் போட்டு, மக்களின் பேச்சுரிமையைக் கொலை செய்து, பற்பல சங்கடங்களை விளைவிக்காமல், ஆழ்ந்த அறிவோடு போலீஸ் அதிகாரிகள் நடந்துகொண்டது, புகழ்ச்சிக்குரியது என்பதோடு மட்டுமல்லாமல், மற்ற ஊர்ப்போலீஸ் அதிகாரிகளுக்கும், இது, நல்லதோர் படிப்பினையாகவும் அமைந்திருக்கிறது. மாகாண அமைச்சர்கள்கூட இதிலிருந்து மதி பெற வேண்டியது முக்கியமாகும்." என்பதாகப் பேசி முடித்தார்.

இந்த வரவேற்பு விழாவில் கலந்து கொள்ளவும், நாடகத்திற்குத் தடைவிதித்த சர்க்காரின் போக்கை மக்களுக்கு உணர்த்தவும், செங்கற்பட்டிலிருந்து தோழர் எம். சின்னையா அவர்கள் தலைமையில் இருநூறுபேர் அணிவகுத்துக் கால் நடையாகக் காஞ்சிபுரம் வந்தது இவ்விழாவினை மேலும் சிறப்புறச் செய்தது. காஞ்சிபுரம் திராவிடர் கழகச் சார்பில் மேற்படி விழாவில் கலந்துகொண்ட செங்கற்பட்டுத் தோழர்களுக்கு நன்றி கூறப்பட்டது.

திராவிட நாடு
காஞ்சிபுரம்] 2—1—49 [ஞாயிறு

ஆதித்தன் கனவு

படமல்ல—பாடம்.

—*—

"தாலமுத்து! நடராஜா! நடராஜா! தாலமுத்து!" இந்த ஒலி உள்ளத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வெளியே கிளம்பிற்று—உடலிலிருந்து பீறிட்டுக்கொண்டு வரும் இரத்தத்தின் பொருள் விளங்கிற்று, போலீசுக்கும், பொதுமக்களுக்கும், ஆனால் இருசாராரில் பலருக்கும், அந்த ஒலியின் பொருள் விளங்கவில்லை.

அவர்கள், எதிர்பார்த்த ஒலி "ஐயோ! அப்பா! அடடா! ஐயயோ!" என்பன. வேறு சிலர் எதிர்பார்த்தது, "பாவிகளே! பாதகர்களே!" என்ற சொற்கள். ஆனால், குடந்தையில், பட்டப்பகலில் நடுவீதியில் நிற்கவைத்துத் தடியால் தாக்கப்பட்ட தோழர்களோ, ஐயோ என்றும் அழவில்லை, பாவி என்றும் தூற்றவில்லை, தாலமுத்து! நடராஜா! என்று கூறினர்-இரு காளைகளின் பெயர் கூறி நின்றனர்—காளைகளின் பெயர் மட்டுமா அவை, இலட்சியச் சொற்கள் — முன்னம், ஆச்சாரியார் ஆட்சியின்போது தாய் மொழியைக் காக்க ஆவியை அர்ப்பணித்த அருந்திறல் வீரர்களின் பெயர், வெறும் பெயரா, ஆற்றலூட்டும் சொற்கள்! தியாகப் பாதைக்கு வழிகாட்டிகள்! அடிபட்டபோது; அலறி அழ வேண்டியவர்கள், இந்நாட்டிலேவழக்கமாக, இதுபோன்ற சமயங்களிலே கிளம்பும் முழக்கம்போல, போலீஸ் அட்டூழியம் ஒழிக, என்று ஆர்ப்பரித்திருக்க வேண்டியவர்கள், கேட்பவரின் நெஞ்சைப் பிளக்கும் ஓர் வசீகரச் சக்தி படைத்த குரலில், தாலமுத்து! நடராஜா! என்று கூறினர்—கூறினரா—அல்ல—அழைத்தனர்—அழைப்புகூட அல்ல—கவனப்படுத்தினர்.

தடியால் தாக்குகிறீர்கள், தமிழ் காக்கும் எம்மை! தகாத செயல் புரிகின்றீர்கள், தருக்கரின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு. ஆனால், தாக்குதலால் தகர்ந்துபோவோம் என்று எண்ணுதீர், நாங்கள் அறிவோம், நீவிர் அறிய அதனைக் கூறுகிறோம், முன்னம் நடைபெற்ற மொழிப் போராட்டத்தின்போது இரு இளைஞர்கள் தமது இன்னுயிரையே ஈந்தனர்-அவர் தம் பெயர், தாலமுத்து—நடராஜன், என்பதாகும். அந்த வீரர்கள், எந்த அணிவகுப்பில் இருந்தனரோ, அதில் உள்ளவர்கள் நாங்கள், அவர்கள், எந்த அளவுக்குக் கஷ்ட நஷ்டம் ஏற்கும் உள்ள உரம் கொண்டிருந்தனரோ, அந்த அளவுக்கு உள்ள உரம் கொண்டவர்கள் நாங்கள்—எனவே, அடியுங்கள் ஆளவந்தார்களின் தூதுவர்களே! சாகடியுங்கள்-என்று கூறினர்-கேட்போரின் கல்மனமும் கரையும் விதத்தில்.

தமிழகம், எதிர்பாராத சம்பவம் குடந்தைப் போராட்டம்-நடத்திப் பார்த்துத் தெளிவுபெறும் வரையில் நம்மிலேயே பலருக்கு, நம்பிக்கை ஏற்படவில்லை — எனினும் போர் நடைபெற்றது, நமது நண்பர்கள் தமது, உள்ள உரத்தை, நாட்டுக்கு நன்கு விளக்கிவிட்டனர். வீம்பு பேசிய மாற்றுக் கட்சித் தோழர்களும், ஆச்சரியப் படும் விதத்திலே, நடந்துகொண்டனர்.

திராவிடர் கழகமா!—பேசுவர்—போரிடுவரோ? அடக்குமுறையைத் தாங்க அவர்களால் முடியுமோ? தடையை மீறும் துணிவு உண்டோ? தாக்குதலைத் தாங்கும் திறமை உண்டோ? அவர்கள், 'சர்க்கார் தாசர்கள்' — போர்க்குணம் கொண்டவர்களல்ல!-என்றுதான், காங்கிரசிலுள்ள இளைஞர்கள், திராவிடர் கழகத்தாரைப் பற்றிக் கருதிவந்தனர்-அதற்கேற்றபடி கேலியும் பேசினர்.

நாட்டு விடுதலைப் போரின்போது நாங்கள் பட்ட தடியடி, இவர்களால் படமுடியுமா?-என்று அறைகூவும் விதத்திலே பேசினர்!

அநியாயச் சட்டங்களை மீறி, அடக்குமுறைகளை எதிர்த்து முறியடிக்கும் ஆற்றல் இவர்களுக்கு ஏது? இவர்கள், 'இராஜ பக்தி' பாடுபவர்கள்! ' சட்டபூஜைக்காரர்கள்!! உரிமைப் போர் புரியும் பண்பும் பயிற்சியும் அற்றவர்கள். உதவாக்கரைகள்!'-என்று கண்டித்துப் பேசினர்.

நாம், சட்டமும் சமாதானமும் நிலைநாட்டப்பட வேண்டும், கிளர்ச்சிகளின் காரணமாக அவை குலைக்கப்படக்கூடாது, அமைதி அழிந்துபடக்கூடாது, வரம்பு கட்டிப் பணிபுரியவேண்டும், என்று நல்லுரை கூறியபோதெல்லாம், பார்! பார்! சிறைக்கு அஞ்சும் பேர்வழிகளை! அடக்குமுறைக்கு அஞ்சும் ஆற்றலற்றவர்களை! — என்று ஏளனம் செய்தனர்.

பொறுப்புணர்ச்சி காரணமாக நாம், சட்டத்திடம் மதிப்புக்காட்டுகிறோம், பொதுமக்களை வீண் கஷ்டத்துக்கு ஆளாக்கக்கூடாது என்ற காரணத்துக்காக, நாம் அமைதியை ஆதரிக்கிறோம், என்று அறிந்துகொள்ள அவகாசமும் அறிவுத் தெளிவும் அற்றவர்கள், நம்மை நையாண்டி செய்தனர்-படுத்துறங்கும் புலியை, வேலியில் உள்ள ஓணான், கேலியாகப் பார்ப்பது போல!

உரிமைக்காகப், போரிடும்பண்பு, நம்மிடம் கிடையாது என்று கருதியவர்களெல்லாம், குடந்தைப் போராட்டத்தின் மூலம், ஓரளவு தெளிவு பெற்றுவிட்டனர்-உணர்ச்சியற்றவர்களல்ல, அடக்கு முறை கண்டு அஞ்சி ஓடுபவரல்ல, பயந்து விலகுபவருமல்ல, மார்பைக் காட்டுபவர்கள், மறத் தமிழர் நாம், என்பதைக் குடந்தை காட்டிற்று - ஒரு நாள், இரு நாளல்ல, ஒரு வார காலத்துக்கு மேலாக!

குடந்தையிலே, விசித்திரமான ஓர் காரணம் காட்டி, 144 வீசினர்—இந்தியை எதிர்த்தும் பேசலாகாது, ஆதரித்துப் பேசக்கூடாது, ஏனெனில், இருசாராரின் பேச்சும் நடைபெற்றுக் 'கொண்டிருந்தால், கலவரம் ஏற்படுமாம்!

கலவரம் ஏற்பட்டால் தடுக்க, போலீஸ் இருக்கிறது, பேச்சாளர்கள், தூண்டும் முறையிலோ பலாத்

கார முறையிலோ, பேசினால் அவர்கள்மீது வழக்குத் தொடர வழிவகை இருக்கிறது. எனினும், இந்த நியாயமான பாதையை மறந்து, 144 போட்டனர்.

144! நாட்டிலே, அனைவருக்கும் இந்தச் செக்ஷன், மிகமிகநன்றாகத் தெரியும், இதனைக் கண்டித்துப் பேசிடாத காங்கிரஸ் தலைவர் இருக்கவே முடியாது.

வாய்ப்பூட்டுச் சட்டம் என்றனர் இதனை—இன்னும் ஓர் வாய் வல்லுனர், இதனை, நாக்கறுப்புச் சட்டம் என்றார், ஏகாதிபத்யம் இந்தச் சட்டத்தின் மூலம், தேசியவாதிகளின் நாக்கையும், பொதுமக்களின் செவியையும் அறுத்துவிடுகிறது, என்று ஆர்ப்பரித்தார் இன்னொருவர்.

144! மிக மிக அதிகமான அளவிலே மீறப்பட்டு மீறப்பட்டு மதிப்பிழந்த முறை! இதனை மீறாத பெருந்தலைவர் இல்லை! பெரிய நகரமெங்கும், இது மீறப்பட்டிருக்கிறது.

144! இதனைக் கண்டித்துப் பேசாத கண்ணியர்கள் இல்லை! பொதுமக்கள், இதனை எள்ளி நகையாடினர், பல ஆண்டுகளாக!

பாரய்யா வீராதி வீரனை! அவனிடம் போலீஸ் இருக்கிறது, இராணுவம் இருக்கிறது, தடியிருக்கிறது துப்பாக்கி—ரவை இருக்கிறது, அலிபுரம் இருக்கிறது அந்தமான் இருக்கிறது, இவ்வளவு இருந்தும், இந்தப் பிரிட்டிஷ் சிங்கம், நமது, தேசபக்தரின் பேச்சைக் கேட்டால், கிடுகிடுவென்று நடுங்குகிறது. இடிகேட்ட நாகமாகிறது—பேசாதே! பேசாதே!—என்று பீதிகொண்டு தடைபோடுகிறது—என்று கேலி பேசினர், இந்த 144-வது செக்ஷனைப் பற்றி.

என் நாட்டில், என் மக்களுக்கு, என் மனதில்பட்டதை எடுத்துச் சொல்லுவதைத் தடுக்கும் வல்லமை, யாருக்கும் இல்லை—பிரிட்டிஷ் சிங்கமானாலும்சரி, வெள்ளைக்காடியானாலும்சரி, என் பேச்சுரிமையைத் தடுக்கமுடியாது. பேச்சுரிமை பிறப்புரிமை! நாமார்க்கும் குடியல்லோம்—நமனை அஞ்சோம் என்றார் நாயனார்—நாமா, இந்தச் சிமை ஓநாய்களுக்கு அஞ்சுவோம்—144-க்கு அடங்குவோம், என்று வீரம் சொட்டச் சொட்டப் பேசினர், பல ஊர்களில்.

சுதந்திரம் கிடைத்தால், இந்த நாக்கறுப்புத்திட்டம் இராதுஎன்று வாக்களித்தனர். பேச்சுரிமை அனைவருக்கும் உண்டு என்றனர். அந்தக் குணாளர்கள்தான் ஆட்சி செய்கிறார்கள், நமக்கோ,

தூத்துக்குடி
கோயில்பட்டி
மதுரை
திருவாரூர்
திருக்கோயிலூர்
நன்னிலம்
கொடவாசல்
பேரளம்
விழுப்புரம்
வேலூர்
கும்பகோணம்
கல்லக்குறிச்சி

இங்கெல்லாம் 144!!

பட்டிகண்டு, வெட்கப்பட வேண்டாமா, பரங்கி இதைச் செய்தபோது, பாதாளத்திலிருந்து பதங்களைப் பெயர்த்தெடுத்து அண்டம் சென்று முட்ட விடுவது போல, ஆர்ப்பரித்துப் பேசிய, அருமைக் காங்கிரஸ் நண்பர்கள்.

இவ்வளவுக்கும், இலட்சம் பேர் கூடும் மாநாடாக இருந்தால்கூட, இந்துவிலோ ஒருவரி இராது, மற்றவைகளிலேயும் இருட்டடிப்புதான் இருக்கும்—அது இல்லாத போது, 'கயிறுதிரித்தல்! இருக்கும். அவ்வளவு கட்டுப்பாடாக, நமது கழகப் பிரசாரத்தைப் பொது மக்களின் கண்களுக்குத்தெரியவிடாதபடி தடுக்கும், சாதனங்கள், உள்ளன, காங்கிரசிடம். ரேடியோ இருக்கிறது! M. L. A-க்கள் உள்ளனர்! தியாகிகள் உள்ளனர்! நாட்டிலே, காங்கிரஸ் தவிர வேறு ஒரு கட்சியே கிடையாது, என்று மக்கள் நம்பும் விதமாகப் பிரசாரம் செய்ய!

எனினும், திராவிடர்கழகக் கூட்டத்துக்கு 144, இவ்வளவு நகர்களில்—பட்டி, வளர்ந்தபடி இருக்கிறது!! ஏன் இந்தப் பீதி ஏற்பட்டது? கலக்கம் வரக் காரணம் என்ன? இருட்டடிப்பைப் பிய்த்துத் தள்ளிவிட்டு, திராவிடர் கழகக் கோட்பாடுகள் எங்கும் பரவியபடி உள்ளன.

அளவரிசியைக் காணும் போது, ஆடைக்கடையைப் பார்க்கும் போது, பல்லாங்குழி போலுள்ள பாதையிலே செல்லும் போது, பாலமற்ற ஆறுகளை, பாதையற்ற கிராமங்களை, பள்ளிகளற்ற இடங்களை, பள்ளிகளில் வாழ்வின் சுவை காண முடியாத ஆசிரியர்களைக் காணும்போது, முதலாளியின் முடுக்கு, மிராசுதாரனின் வாழ்வு, ஆலையில் வேகும் பாட்டாளியின் பரிதாபம், உழவனின் அல்லல், ஆகியவைகளைப் பார்க்கும்போது, சட்டசபையிலே சாய்ந்தபடி தூங்கும் சற்குணர்களையும், விழித்தெழுந்ததும் வேக வேகமாகச் சென்று, பெர்மிட்டுக்குப் பெருந்தவம் இருக்கும் போக்கையும் பார்க்கும் போது—சுருங்கக் கூறினால், இன்றைய ஆட்சியாளர்களின் போக்கின் விளைவுகளான அல்லல்களை, அலங்கோலங்களைக் காணும் போதெல்லாம், காண்பவர் மனக்கண்முன், ஒரு வெண்தாடிக்கிழவர் நிற்கிறார், அவர்களின் செவியிலே, திராவிடர்கழகப் பேச்சுக்குடைந்து கொண்டு செல்கிறது!

திராவிடர்கழகக் கூட்டமென்றால், திரண்டுவிடுகின்றனர்—மாநாடுகள், திருவிழாக்களாகின்றன! திகைப்பு உண்டாகிறது, ஆளவந்தார்களுக்கு!

எங்கிருந்து கிளம்பிற்று இந்தச் சக்தி? எப்படித் திரட்டமுடிந்தது, பிரசாரசாதன பலமற்ற இவர்களால்! எவ்வளவோ எதிர்ப்புகள் உள்ளனவே, எங்ஙனம், அவ்வளவையும் மீறி, இவர்கள், மக்களின் நெஞ்சிலே, தங்கள் கொள்கைக்கு இடம் பெற்றுவிட முடிந்தது? எண்ணினர், ஏக்கத்துடன்! எதிர்ப்பிரசாரம் செய்தும் பார்த்தனர் புது ஊக்கத்துடன், பயன் ஏதும் காணாததால், பழயமுறையே சிறந்தது என்று எண்ணினர், வீசினர் 144! எங்கும் 144!! அங்கே, இங்கே எங்கெங்கே திராவிடர்கழகக் கூட்டம் நடைபெறுகின்றன என்று பார்த்துப் பார்த்து வீசுகின்றனர், நாக்கறுப்புச் சட்டத்தை!

சிறையில் தள்ளுவோம்!—என்று மிரட்டிப் பார்த்தனர் — சென்ற ஆண்டு வரையில் அவர்கள் சிந்து அதுதான்.

ஓராண்டு முடிவதற்குள், புதுத் தெளிவு பெற்றனர், சிறைக்கஞ்சாதாரே திராவிடர்கழகம்—சீமான்

களும் சிங்கார புருஷர்களும் சேல மாகிவிட்டனர், இப்போது உள்ளவர்களோ, இலட்சிய வெற்றிக்காக, எந்த விலையும் கொடுக்கக் கூடியவர்கள்---இவர்களைச் சிறையிலிடுவது என்றால், திறந்தகதவை மூடவும் நேரமிராது, கட்டியபடி இருக்க வேண்டும் புதுப்புதுச் சிறைகளை--சிறைச்சாலைகள் திராவிடர்கழக அறச்சாலைகளாகிவிடும், என்பதைக் கண்டனர்---ஒற்றர்கள் தந்த 'சேதி' அவர்களுக்குப் புதியதோர்பீதியை உண்டாக்கி விட்டது. மீண்டும் யோசிக்கலாயினர்! சிறை,போதாது சிறைப்படுத்திப் பயன்காண முடியாது, சிங்கார வாழ்வினர் என்று எண்ணினோம் இவர்களை, இவர்களோ நாட்டைக்காக்க வீட்டைத் துறந்துவிட்ட வீரர்களாகிவிட்டனர்! இவர்களை அடக்க, வேறுவழி காணவேண்டும், என்று எண்ணினர்--பழைய அடக்குமுறை, அசட்டுச் சிரிப்புடன், ஆளவந்தார்களின் முன்புவந்து நின்றது--"அடியேனை ஏவுக!" என்றது --- சென்றுவா! வெற்றியுடன் திரும்பிவா---என்று ஆசிகூறி அனுப்பினர், அது, குடந்தையிலே, ஆதித்த உருவில் வந்து நின்றது--- ஆற்றலைக்காட்டி, ஓய்ந்தது.

குடந்தையில் நாம் துவக்கிய உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும், பொறுப்பை, ஏற்றுக் கொண்டவர்--சர்க்கார் தரப்பில்--போலீஸ் உதவி சூப்பரின்டு, தோழர் **ஆதித்தன்** அவர்கள்! கருவி--விசையல்ல! எனினும் அவர் பெயர்மிகமிகப் பிரபல்யமடைந்துவிட்டது. மறைந்து கிடந்த சக்தியைத் திரட்டிக் கொண்டு கிளம்பினர், மகத்தான பொறுப்புணர்ச்சியுடன் — அவர் அறிவார் ஆனால் ஆட்சியாளர்களிடம் கூறமுடியாது அவரால்-அவர் நன்கு அறிவார், சர்க்கார், தேர்ந்தெடுத்திருக்கும், இரண்டாவது கருவியான, அடக்குமுறை, எந்த அளவுக்குப் பயன் தரும், என்ற சூட்சமத்தை!

தடையைமீறிக் குடந்தையில், தாறுமாறான முறையிலே, காரியங்களைச்செய்ய முயல்வர் திராவிட கழகத்தார் — உடனே நாம், கலவரம் ஏற்பட்டுவிட்டது, அமைதி அழிகிறது, பலாத்காரம்தலைதூக்குகிறது, என்று கூறிவிட்டு, இருதயத்தை ஒரு இரண்டு நாளைக்கு 'சும்மா கிட' என்று கூறி அடக்கிவிட்டு, இலட்சிய வாதிகளை அடக்குமுறைக்கு ஆளாக்கினால், காட்டுக் கூச்சல் அதிகமாகும், கழகச்செயல்கள் கட்டுக்குமீறிச் செல்லும்,பிறகு சுலபத்திலே, அடக்கி விடலாம் என்று எண்ணினர் — பலாத்கார முறை தலைவிரித்தாடிய கிளர்ச்சிகளைமட்டுமே கண்டு பழக்கப்பட்ட, அந்தப்போலீஸ் அதிகாரி; இதைத்தான் நாம், **ஆதித்தன் கனவு** என்கிறோம்.

உரிமைப் போர் துவக்கப்படுவதற்கு முன்னாள் இரவு, ஆதித்தன் கனவு காணாதிருந் திருக்கமுடியாது

பெருந்திரளைக் காண்கிறார்! மூலைக்கு மூலை அவர்கள் ஓடக்காண்கிறார்! காட்டுக்கூச்சலைக் கேட்கிறார்! போலீஸ் ஒழிக, என்று தூற்றுவது கேட்கிறது! போலீஸ் விரட்டுகிறது பொதுமக்களை! பொதுமக்கள்கலைய மறுக்கிறார்கள்! வேட்டை ஆடுகின்றனர் போலீசார்! விர் விர் என்று கற்கள் பறக்கின்றன போலிசை நோக்கி! அதிகாரிகள்மீது வீழ்கின்றன! புன்னகை தவழ்கிறது அவர் முகத்தில்! ஐந்தே நிமிஷம் அவகாசம் தருகிறோம், கலைந்து போகாவிட்டால் துப்பாக்கிப் பிரயோகம் என்கிறார். கலையவில்லை, மக்கள்! துப்பாக்கி பேசுகிறது! பிணங்கள் கீழே!! மெடல்கள் மார்பிலே!! — இப்படி ஓர் கனவு.

மறுதினமோ,அவர்கண்டகாட்சி, வேறு! அறப்போரின் முழு இலட்சணப்படி நடக்கிறது கிளர்ச்சி.

இந்தி ஒழிக! — தமிழ் வாழ்க! என்று முழக்கமிட்டவண்ணம்செல்கின்றனர் பத்துத் தொண்டர்கள்-ஆர்ப்பரிப்பு இன்றி, அமைதியாக. போலீஸ் தடுக்கிறது-நிற்கிறார்கள். தடை உண்டு அறிவீரா, என்று கேட்கின்றனர், அறிந்தே வந்தோம் என்கின்றனர் — அடிப்போம் என்கின்றனர், உங்கள் இஷ்டம் என்கின்றனர் — அடிக்கின்றனர் தடிகொண்டு, தாலமுத்து, நடராஜா, என்று அழைக்கின்றனர் —அதிகாரிகள் திகைக்கின்றனர்!

எதிர்பார்த்தது நடக்கவில்லையே அமளியை எதிர்பார்த்தோம் இவர்கள் அறப்போரன்றோ நடத்துகின்றனர், கட்டுக்குலையும், பிறகு சுட்டுத்தள்ளலாம் என்று எதிர்பார்த்தோம், இவர்களோ, அமைதியை இழக்க மறுக்கிறார்கள், ஈதென்ன விந்தை என்று எண்ணித் திகைத்தனர்.

உண்மையிலேயே, பொது மக்களையும், கிளர்ச்சியில் ஈடுபடும் தோழர்களையும், எவ்வளவு அதிகமாகவும், விரைவிலும், ஆத்திரமூட்டமுடியுமோ அவ்வளவையும் துவக்கத்திலேயே செய்துவிட்டனர், அதிகாரிகள்.

முன்னிரவே, பெரியாரைக்கைது செய்தனர் — குடந்தைத் தலைவர்கள் நீலமேகம், பொன்னுசாமி, முத்துதனபால், S. K. சாமி ஆகியயோரைச் சிறையில் தள்ளினர் — நகரெங்கும் போலீஸ் மயமாக்கிக் காட்டினர்—ஆத்திர மூட்டக்கூடிய இவ்வளவு சம்பவங்கள் நேரிட்டுவிட்டதால், மறுதினம், அமைதி இராது, கட்டுப்பாடு இராது,அறப்போருக்குப்பதில் மிருகத்தனம் தோன்றிவிடும், தோன்றினால், தீர்த்துக்கட்டிவிடலாம், என்று கனவு கண்டனர்.

ஆனால் நமது அருமைத்தோழர்களின் அமைதி, அவர்களைத் திகைக்கச் செய்துவிட்டது—அறப்போர் வீரர்கள் காட்டிய உயர் பண்பு கண்டு உளம் பூரிக்கிறோம்-புதியதோர் நம்பிக்கை கொள்கிறோம் — அணிவகுப்பிலே, இனிப், பீதி கிளப்ப, கலாம் விளைவிக்கமுடியாது என்பதை அந்தச் சிலர்கள் நன்கு விளக்கிவிட்டனர்,செயலால். ஒருகடுமையான பார்வை உண்டா? சுடுசொல், ஒன்று கூறினரா? ஆர்ப்பரிப்பு உண்டா? இல்லை! இல்லை! அதிகாரிகள் நன்கு அறிவர் இதனை. பல ஆயிரக்கணக்கான மக்கள் — இடையே இப்பதின்மர் — இவர்களைச்சூழ்ந்து போலீஸ் — அவர்களிடமெல்லாம் தடி — எனினும் ஒருசிறு ஆத்திர அறிகுறியும் எழவில்லை! கேள்விகளுக்குப், பணிவான, ஆனால் உறுதி குலையாத பதிலளித்தனர்! மிரட்டல்களின்போது புன்சிரிப்பைக் காட்டினர்! அடித்தபோது இரத்தத்தைச் சொட்டவிட்டனர்! நாம் பெருமைப்படுகிறோம், நமது வீரர்கள் காட்டிய பொறுமை உணர்ச்சியை, பொறுப்புணர்ச்சியைக் கண்டு!

இத்தகு, போராட்டங்கள் பல நடாத்திப் பழக்கப்பட்டவர்களல்ல நாம்! தடியடி பெற்றனர் நமது தோழர்கள்—கலங்கினர் இல்லை, கதறினர் இல்லை, காட்டுப்போக்குக்கொள்ளவில்லை, கடமைக்குக் கிடைக்கும் பரிசு, உரிமைக்காகக் கொட்டும் குருதி என்று எண்ணினர் —. ஏறுகள் வாழ்க! இலட்சிய வீரர்கள் நீடூழி வாழ்க!!

வீதியிலே வீழ்ந்தனர் — அடிபட்டு! ஆஸ்பத்திரியிலே கிடந்தனர், பலமான அடிபட்டு, ஊருக்கு வெளியே இருபது மைல் தொலைவிலே, கொண்டுபோய்விட்டனர், நாதியற்றவர்கள் போல்! இவ்வளவுக்கும், ஒரு சிறு சீற்றக்குறி காட்டினரில்லை. அமைதி நிலவிய வண்ணம் இருந்தது! அறம் ஆட்சி செய்தது! விலா முறிந்தால் என்ன, அடிப்பவர் யாராக இருந்தால்தான் என்ன, விடுதலைப் போரிலே இவை நடைபெறத்தானே வேண்டும்—என்று எண்ணிக், கடமையைச் செய்தனர், நம் காளைகள்!

அமைதி குலையாதது கண்ட அதிகாரிகள், பொதுமக்களைக் கண்டபடி தாக்கித் துரத்தினால், பீதிகொண்ட மக்கள், பாதிமதியுடன் ஏதேனும் சிறு செயல் புரிவர், பிறகு நமது வேலை எளிதிலே முடியும் என்று எண்ணினர் — பொதுமக்களுக்குத் தடியடி! ஓடினர் ஓடினர், இங்கும் அங்கும்! ஓடும்போது வீழ்ந்தனர் சிலர்—வீழ்ந்தவர் மீது வீழ்ந்தனர் சிலர்! பாதை ஓரத்தில் பதுங்கினர்—சிறு சந்துகளில் நுழைந்தனர். கடையை மூடினர் சிலர்—காய்க்கறிக் கூடையைக் கவிழ்ந்துக் கொண்டனர் சிலர், ஓடும்போது, பொதுமக்களின் மனதிலே, தோன்றிய எண்ணங்கள் யாவை? தடியடி தர்பார் நடக்கிறது, தர்மராஜ்யத்தில்! வேட்டையாடுகிறார்கள் பொதுமக்களை, ஒட்டுவேட்டை முடிந்துவிட்டதால்! அடக்கு முறையை அவிழ்த்துவிட்டனர், ஆங்கிலரைக் கண்டித்தவர்கள்!—என்று எண்ணுதவர் இருக்க முடியுமா? பேயாட்டம்—வெறியாட்டம்—வீணாட்டம்—ஆர்ப்பாட்டம்—என்று,பலப்பல கூறினர், பதைத்தனர் — சிலர், அடிபடும் தொண்டர்களைக் கண்டு கண்ணீரும் சொரிந்தனர். எனினும் அமைதி குலையவில்லை. நமது கழகத் தோழர்கள், பொதுமக்களைப் பணிவுடன் வேண்டிக்கொண்டனர், அமைதியை நிலைநாட்டினர்.

"பாழாய்ப்போன பொதுமக்களும்" இவ்விதம் இருக்கின்றனரே, என்ன செய்வது, என்ற ஏக்கம் மிகுந்துவிட்டது அதிகாரிகளுக்கு. மீண்டும் யோசித்தனர்—மற்றோர் முறை தோன்றிற்று.

திராவிடர் கழகத்தார், மிகவும் ரோஷ உணர்ச்சிக்காரர்கள்—பேச்சில் வல்லவர்கள் — அவர்கள் எவ்வளவு கஷ்டத்தையும் தாங்கிக் கொள்வர், ஆனால் ஒரு சிறு இழிசொல் கேட்கவும் இசையார், அவர்களின் இயல்பு அதுதானே, எனவே அவர்களை இழிமொழி கூறி ஏசுவோம், ஏசிடின் அவர்கள் எதிர்த்துப் பேசுவர், பேசிடின் நமக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும், என்று எண்ணினர்—திட்டப்படி செய்தும் பார்த்தனர். அறப்போர் வீரர்களை ஆபாச மொழிகளால் தூற்றினர்! வீரர்களை வெறியர்கள் என்றனர்! தாய்மொழி காத்திடுபவர்களை தடியா, மடையா என்றனர்! கடமையைச் செய்து நின்றவர்களைக் கழுதைகளா என்று கடிந்துரைத்தனர்! மாலைகளைப் பிய்த்து எறிந்தனர்—சட்டைகளைப் பறித்தனர்—ஆனால் நமது தோழர்களோ, ஆங்கிலப் பெருங்கவி ஒருவர் கூறியதுபோல **"எதையுந் தாங்க இந்த இதயம் உண்டு"**என்று, இருந்தனர்.

தூற்றினோம், துடித்தெழவில்லை! தாக்கினோம், தாறுமாறான நிலைபெறவில்லை! துரத்துகிறோம்அடித்து, பீதிகொள்ளவில்லை! ஓயவில்லை—கலங்கவில்லை—இரத்தம் சிந்துகின்றனர்-எத்தனை நாளைக்கு நாம் இந்த முறையைக் கொள்ள முடியும்—எத்தனை நாளைக்குத்தான், இதயத்தை இரும்பு நிலையில் வைத்திருக்க முடியும், எத்தனை நாளைக்குத்தான் கண்ணீரை மறைக்க முடியும், ஒரு சுடுசொல் பேசக்கூடாதா இந்தப் பயல்கள், ஒரு கெடுமதியாளனாவது கிளம்பிக் கலாம் விளைவிக்கக் கூடாதா, பிறகு நெஞ்சிலே பாரமின்றி, நமது காரியத்தைச் செய்து முடிக்கலாமே! இப்போதோ, அந்த இளைஞர்களின் பார்வை, நமது இதயத்தை துளைக்கும் ஈட்டியாகிறதே, அவர்கள் காட்டும் அமைதி நமது உறுதியைக் குலைக்கிறதே, அவர்களின் தியாக உணர்ச்சி, நமக்குத் திகைப்பை உண்டாக்கிவிடுகிறதே, எப்படி, இந்தக் கஷ்டமான நிலையிலிருந்து விடுபடுவது, என்று விசாரத்திலாழ்ந்தனர், வீராவேசமாகக்கிளம்பிய அதிகாரிகள். நாளுக்குநாள் நகர் பேசுகிறது, அதிகமாக, அதிகமாக—நாடு கவனிக்கிறது—கட்டுப்பாடு மிகுந்த அறப்போரின் மாண்பு பற்றி. இவ்வளவுக்கும், முன்னின்றுநடத்த வேண்டிய முக்கியமான தலைவர்கள் சிறையில்! என் செய்வர்! இனி எம்மால் இயலாது, என்றுகூறிவிட்டனர்-சர்க்காரிடமா? அல்ல!-கூறமுடியாதல்லவா!!-பொதுமக்களிடமா? ஆமாம்! எப்போது? பேச்சின் மூலம் அல்ல, செயலின் மூலம். தடியடி தர்பாரை நிறுத்திக்கொண்டனர்!! அந்தமுறை பலன் தரவில்லை, இயக்க வேகத்தைக் குறைக்கவில்லை, என்பதை உணர்ந்தனர்— தடியடி தர்பாரைக் கைவிட்டனர். உரிமைப்போர் வழக்கப்படி நடந்து வந்தது, ஆனால், தடியடி தர்பார்நின்றுவிட்டது! தயாளர்களாகிவிட்டனர்!! ஏன்? நமது தோழர்கள், காட்டிய வீரமும் அமைதியும், அவ்வளவு மேலான முறையிலே அமைந்திருந்தது. ஒரு நாள்-இரண்டு நாள்—மூன்று நான்கு நாட்கள், உரிமைப் போர் நடந்து கொண்டே இருக்கிறது, 'உக்கிரசேனர்கள்' சாந்தமூர்த்திகளாகிவிட்டனர், தடியடி, இல்லை-சொல்லடியும் இல்லை! புயலை எதிர்த்துச் சென்றனர்-புயல் ஓய்ந்தது—ஓயுமட்டும் சளைக்காது சென்றனர், நமது தோழர்கள்!!

144!!-மீறுவோர் தண்டிக்கப்படுவர்-அதுதான் சட்டம்!-தண்டனையில், வழக்கமான தண்டனை, சிறை! விசித்திர சித்தர்களின் ஆட்சியிலே, ஜெயிலிலே இடமில்லை, எனவே, 144 வது சட்டத்தை மீறினவர்களுக்குச் சிறைத் தண்டனை இல்லை! அதற்குப் பதில், வேறு கொடுமையான தண்டனை தந்து வந்தனர் தடியடி-பிறகு, அதனையும் கைவிட்டனர்! 144 அமுலில் இருக்கிறது, ஆனால் உரிமைப் போர் வீரர்கள் ஒவ்வோர் நாளும் மீறுகின்றனர்-எனினும், சட்டம் சக்திபிழந்து கிடப்பது போல, அவர்களுக்கு தண்டனை இல்லை!

என்னய்யா செய்கிறது 144?-மக்கள் கேட்கின்றனர்.

அதோ மீறுகிறார்களே-தெரியவில்லையா?-என்றும் மக்கள் கேட்கின்றனர்.

144 ஐ மீறும் உரிமைப் போர் வீரர்களையும் மக்கள் காண்கின்றனர் அவர்களை ஏதும் செய்யாமல், சட்டத்தின் காவலர்கள் நிற்கவும் காண்கின்றனர். என்ன எண்ணுவர்! 144 தோற்றுவிட்டது! மீறப்படுகிறது! எனினும் மீறுவோர் மீது, எவ்வித

நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் அதிகாரிகள் உள்ளனர்-துவக்க முதல் இவ்விதம் இருந்தனரா? இல்லை-அவசர அவசரமாக வேலை செய்துபார்த்தனர்-சிலரைச் சிறைப்படுத்தினர்-அதோ தோழியர் மணி சிறையில்-நண்பர் நடராசன் காவலில்-இந்த முறையைப் பிறகு கைவிட்டனர்-இப்போது எதும் செய்யாதுள்ளனர், ஏனெனில், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்க, சிறையும் தடியடியும், இருமுறைகள் இரண்டும் கையாண்டு பார்த்துத் தோற்றுவிட்டனர்-வேறு ஓர் முறையும் இல்லை, ஆகவே 144வது செக்ஷன், தங்கள் கண் முன்பாகவே மீறப்படுவதைக் கண்டும், வாளாவிருக்கின்றனர்! இதுதானே, பொது மக்கள் தரும் தீர்ப்பாக இருக்க முடியும்! வேறென்ன பொருள் கூற முடியும், வீராவேசத்தை அடக்கிக் கொண்டது கண்டு! திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டி, இந்தப் புதியநிலை கண்டு மகிழ்ச்சியடைந்து, அடக்குமுறை ஈட்டியின் கூர் மழுங்கும் அளவுக்கு அறப்போர் நடத்தி வெற்றி கண்டவீரர்களைப் பாராட்டி 30ந் தேதிவரை உரிமைப் போர் நடாத்தி,முடித்துக் கொள்வதென்று தீர்மானித்தது.

குடந்தைப் போராட்டம் நமது கழகத்துக்கு, உள்ள தாங்கும் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டு. அமைதிக்கும் கட்டுபாட்டுக்கும் உள்ள உண்மையான பலத்தை அறிவிக்கும் மகத்தான பாடம். திராவிடர்கழகம் எத்தகைய அணிவகுப்பு என்பதை ஆளவந்தார்களுக்குத் தெரிவிக்கும் சம்பவம்,குடந்தைப்போராட்டம்ஓர் பயிற்சிக்கூடம்! நமது வீரர்களுக்கு நிலாச்சோறு அளவுதான் இது, என்றபோதிலும், நாம், கொண்டுள்ள உள்ள உறுதியை ஆளவந்தவர்களுக்கு அறிவிக்கும் அற்புத நிகழ்ச்சி. கருத்துள்ளோர் காணட்டும், இதனுள் புதைந்துள்ள பாடத்தை. 'ஆளவந்தார்களின் அடக்குமுறைத் திட்டம் அறப்போரை அழித்துவிடாது என்பதையும், 'ஆதித்தன் கனவு' பலிக்காது போனது போலவே, ஆளவந்தார்கள் தயாரிக்கும் எந்தப் புதுவித அடக்குமுறையும் வெற்றி தராது என்பதையும், காட்டும் மகத்தான பாடசாலையாயிற்று குடந்தை! வாழ்க, உரிமைப் போர்வீரர்கள்! வளர்க அவர்தம் தொகை! வீழ்க அடக்குமுறை! வெல்க திராவிடம்! ✲

7-ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களின் உதவி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, மிகமிக அவசியமாகத்தேவைப்படுகிறது. தொந்தரவு செய்யும் குழந்தைகளை, தாலாட்டுப் பாடி, தூங்கச் செய்யும் தாய்போல, இந்தத் தத்துவ போதகர்கள், தங்கள் தத்துவ போதனையால், மக்களை சொற்களுக்கு மயங்க வைத்து, சுக வாழ்வு தேடும் பணியில் மந்த நிலையை ஏற்படுத்துகிறார்கள். இதன் பயனாக, தங்கள் தேவைகளைத் தெரிந்து கொள்ள முடியாமலும், தெரிந்துகொண்டாலும் அவைகளின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்ள முடியாமலும், புரிந்து கொண்டாலும் அவைகளைப் பெறுவதற்கான மார்க்கத்தை அறிந்து கொள்வதற்கு முடியாமலும், அறிந்துகொண்டாலும் அதனைக் கடைப்பிடித்து வெற்றிகொள்ளமுடியாமலும், வெற்றி கொண்டாலும் அதன் விளைவாக ஏற்படும் வாழ்வு முடிந்தது என்று சொல்வதற்கில்லையே என்ற கவலையாலும், 'எப்படியோ இருப்போம்-எனை ஆளும் ஈசன் செயல் இது' என்ற முடிந்த ஞானிகளாக, ஆரம்பத்திலேயே, தங்கள் இழிந்த நிலைக்கு இலக்கணம் கற்பித்துக்கொண்டு ஆறுதல் பெற்று விடுகிறார்கள். பெரும் பெரும் தத்துவ போதகர்கள் மட்டும் புரிந்து கொண்டதாகப் பேசப்படும் வேதாந்த பொருளை, சிகாகோ நகரில் சாமி விவேகாநந்தர் ஆற்றிய விரிவுரையின் சாரத்தை, அரந்தாங்கி செல்லும் புகைவண்டியில், காலணாவிற்குக் கையேந்திநிற்கும் சொறியனும் அல்லவோ, கேட்போர் மனதில் மயக்கம் தோன்ற, கவினுறத்தில் காட்டி விடுகிறான். மாயாவாதத்தின் மதிப்பு—வேதாந்தத்தின் விலை—காலணாவிற்குள்ளாகவன்றோ அடங்கிவிடுகிறது, அந்தச் சொறியனிடத்தில்! அங்கு புகைவண்டியில் போகும் பலருக்கும், சில நிமிஷமாவது, சொறியன், ஞானாசிரியனாகவன்றோ இருக்கிறான். இத்தகு 'மெய்ஞான'த்தைத் தெரிந்து கொள்ளக் கல்லூரி எதற்கு? அதற்காக ஆயிரக்கணக்கில் பணத்தைப் பாழ்செய்வதுதானெதற்கு? காலணா செலவில் அன்றோ, கட்டைக் கடைத்தேறும் மார்க்கத்தைக்காட்டுகிறான் சொறியன்! கார் தேவை இல்லை—கவர்ச்சிமிக்க ஆடை அணி பலவும் தேவை இல்லை — மாதா மாதம் பைநிறைய பணமும் தேவை இல்லை இவ்வளவு ஆடம்பரத்திலிருப்போர், உண்மை வேதாந்திகளாக வேண்டுமானால், சொறியனுக்கு பாதபூஜை செய்து பலகாலம் அவன் சீடர்களாக மாறி, அவன் காட்டும் பாதையைக் கேட்டுக் கேட்டுப் பழகினால்தான், இவர்கள் ஆடம்பரத்தில் கொஞ்சமாவது குறைய வழி பிறக்கும். (தொடரும்)

சி. என். ஏ. எழுதிய
"வாழ்க்கைப் புயல்"
விலை: 0—12—0
டிம்மி அளவில் 56 பக்கங்கள் கொண்டது
கிடைக்கும் இடம்:—
பரிமளம் பதிப்பகம்
54, வரகுவாசல் தெரு
காஞ்சிபுரம்.

உதவி நிதி நாடகம்
"சந்திர மோகன்"
பெரியார் முன்னிலையில்
23—1—49-ல் ஈரோடில்
ஸ்டார் டாக்கீசில்
நடைபெறும்
இதில் வசூலாகும் தொகை பட்டக்காரர் உயர்நிலைப்பள்ளிக்கூடமும் அர்ச்சனன் உணவு விடுதியும் அமைப்பதற்கு அளிக்கப்படும்.

படக்காட்சிகளில் பரமன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கள், தங்களால் செய்யப்படும் சீர்திருத்தங்களுக்குத் தடையாகவும், ஆராய்ந்து பார்க்கவேண்டியனவாகவும் உள்ளபல அடிப்படைக்காரணங்களையும்நன்கு எண்ணிப்பார்க்கவேண்டும். அதாவது,விருப்புவெறுப்பும்—நினைப்பு மறப்பும் அற்றதாகப்பேசப்படும் ஒரு கடவுள், விருப்பு வெறுப்பும்—நினைப்பு மறப்பும் உள்ள மக்களை (உலகை) எப்படிப் படைத்தார்? ஏன் படைத்தார்? குற்றமற்றகுணகுன்றாக உள்ள கடவுள், குற்ற புரியும் உயிர்களை எப்படிப்படைத்தது? குற்றம் புரியும் உயிர்களை ஒறுக்கும் கடவுள், அக்குற்றங்களையும், அவற்றைச்செய்வோரையும் ஏன் படைத்தார்? நல்லதையே விரும்புங்கடவுள் தீயதை ஏன் படைத்தார்? நோயையும் அது தீர்வதற்குரிய மருந்தையும் உண்டாக்கிய கடவுள், அந்நோய் தீர்வதற்குத் தன்னையே வணங்கவேண்டுமென்று சொன்னால், அத்தகைய கடவுளையும் அதன் கௌரவத்தையும் காப்பாற்றித்தான் ஆகவேண்டுமா? கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒருவன், தன்னை உண்டாக்கியவர் கடவுள்தான் என்பதை அறியமுடியவில்லை என்றால், அது அவனுடைய குற்றமா? அன்றி அந்தக் கடவுளுடைய குற்றமா? தன்னை அறியமுடியாத அறிவைக்கொடுத்து, ஒருவனை அந்தக் கடவுள் படைப்பதும், பின்னர், அவன், தன்னை அறிந்து வழிபடவில்லை என்ற குற்றத்தை அவன் மீது சுமத்தி அவனைத் தண்டிப்பதும் அந்தக்கடவுளின் அருள் கலந்த செயலா? மக்களுக்கு அறிவைக் கொடுப்பது கடவுள் என்றால், அறிவில்லாமல் செய்வதும் அந்தக் கடவுள்தானே! அங்ஙனமாயின், ஒருவன்தன் அறியாமையால் செய்யும் குற்றம் அந்தக்கடவுளைத்தானே சாரும்! உலகில், ஒருவன் செய்யும் குற்றத்திற்குத் தகுந்த தண்டனை உலகிலேயே கிடைக்கும்போது, அதற்கென வேறு ஒரு உலகம் 'நரகம்' என்ற பெயரோடு தனியாக இருப்பதாகச் சொல்லப்படுவதன் பொருள் என்ன? கடவுள் செயலால் செய்யப்படும் ஒரு குற்றத்தை உலகில்உள்ள ஒருவன் தண்டித்தால், அது கடவுள் ஆணையை மீறியதாகாதா? இன்ப துன்பங்கள் ஆகிய இரண்டையும் நுகர்வது இவ்வுலகத்தில் என்றால், இன்பதுன்ப நுகர்ச்சிக்கான மேல்-கீழ் உலகங்கள் உண்டென உளறுவானேன்? சிற்றின்பமும் சிறுதுன்பமும் நுகர்வதற்கு இவ்வுலகமும், பேரின்பமும் பெருந்துன்பமும் நுகர்வதற்கு அவ்வுலகங்களும் என்றால், சிற்றின்பங்களையும் சிறுதுன்பங்களையும் நுகர்வதற்கு இரு வேறு தனித்தனி உலகங்கள் இருக்கும் இருத்தல் வேண்டுமன்றோ! இன்பம் நுகர்வோரும், துன்பம் நுகர்வோரும் இவ்வுலகத்தில் ஒருங்கிருக்கும் போது, பேரின்பப் பெருந்துன்பங்களை நுகர்வதற்கு அங்கும் ஒரு உலகம் இருந்தால் போதாதா? நரக உலகம்—மோட்ச உலகம் என்ற இரண்டு உலகம் அங்கு இருப்பானேன்? இங்கு மட்டும் ஒன்று இருப்பானேன்?

இனிப், பேரின்பம் அழிவற்றதும், சிற்றின்பம் அழிவுடையதென்றும் கூறுவதன் பொருள் என்ன? இன்பமோ அன்றித் துன்பமோ, இரண்டில் ஒன்று பெரிது மற்றது சிறிதென்று கூற முடியுமா? ஒருவனால் நுகரப்படும் இன்ப துன்பங்கள் இன்னொருவனுக்குப் பெரிது சிறிதாகக் காணப்பட்டபோதிலும், அவற்றை நுகர்பவனுக்கு அவை இன்ப துன்பங்களாகவேதான் தோன்றும்! இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கொள்ள முடியுமேயன்றி, அவற்றுள் பெரிது சிறிதென்ற வேறுபாடு காணமுடியாதே! பாலுக்குச் சர்க்கரையும், பழங்கஞ்சிக்கு உப்பும் இல்லையென்று கவலைப்படும் இருவகைப்பட்டார்க்கும் ஏற்படும் துன்பம், அவ்விருவர் நிலைக்கும் ஏற்ப ஒன்றாகத்தானே இருக்கும்! எனவே, சிற்றின்பபேரின்பங்களும், அவற்றை நுகர்வதற்கான வெவ்வேறு தனி உலகங்களும் இருப்பதாகக் கூறுவது பொய்யாகத்தானே இருக்க முடியும்!

இனி, நல்லது செய்பவனுக்கு இன்ப உலகமும் தீயது செய்பவனுக்குத் துன்ப உலகமும்ஒரே கடவுளால் கொடுக்க முடியுமா? அப்படிக் கொடுப்பது தான் கடவுள் இயல்பென்றால், அத்தகைய கடவுள் நல்லவரா? கெட்டவரா? எல்லாரும்நல்லவர்களாகவே இருக்கவேண்டுமென்று விரும்பும் கடவுள், கெட்டவர்களையும், அவர்கள் எதிரே கெட்டசெய்கைகளையும் ஏன் படைத்தார்? கன்னக்கோலைப் படைத்த கடவுளை முழுத்திருடன் என்று கூறுவது குற்றமா? கடவுள் நல்லவர் என்றால், அவர் கையில், சூலம்—வேல்—வாள்—சக்கரம் முதலான கொலைக் கருவிகள் இருப்பானேன்? இவற்றையும் இன்ன பிறவற்றையும், படக்காட்சிகளில் கடவுளரின் வடிவங்களைக் காட்டி நடிப்பதால், அவருடைய கௌரவத்திற்குக் குறைவு ஏற்படுகிறது என்று எண்ணுபவர்கள் சிந்தித்துப் பார்ப்பதோடு, கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று கொண்டாலும் அல்லது இல்லையென்று கூறினாலும், அப்படிப்பட்ட ஒன்று நமக்கு (உலகுக்கு)த் தேவைதானா? அப்படித் தேவைப்பட்டாலும் இன்று நம்முன் காட்டப்படும் கடவுளால் உண்டான — உண்டாகும் நன்மைகள் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லிக்கொள்ளும் சென்னை சர்க்கார், தாங்கள் காப்பாற்ற நினைக்கும் கடவுள் யார்? எந்தக் கடவுளின் கௌரவத்தைக் காப்பாற்ற எண்ணுகிறார்கள்? இயேசுவைப் போலவோ அல்லது அல்லாவைப் போலவோ ஒரே கடவுள் நமக்கிருக்கிறதா? நம்முடைய கடவுளர் ஒருவரல்ல, பலராயிற்றே! 28—12—48-ல் மத்திய சட்டசபையில்கூட இதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறதே! இந்துக்களின் கடவுள் ஒன்றல்ல, மூன்று இருப்பதாக டாக்டர் அம்பேத்கார் மத்திய சட்டசபையில், இந்திய யூனியன் தலைவர் (President) விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்வது பற்றிப் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறாரே!

"கடவுள் என்ற சொல் பல மதத்தினருக்குப் பலவிதமாகப் பொருள்படுகின்றது. இந்து மதப்படி 'கடவுள்' என்ற சொல்லுக்கு ஒரு மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியைக் குறிக்கிறது. விஷ்ணு, சிவன், பிரம்மா என்ற பல பெயர்கள் மூலம்தான் 'கடவுள்' என்ற சொல்லுக்கு அவர்கள் வடிவம் கற்பிக்கிறார்கள். இப்படிப் பல பெயர்கள் இருப்பதால்தான் 'கடவுள்' என்ற சொல்லை இத்தீர்மானத்தில் சேர்க்கவில்லை."

என்று டாக்டர் அம்பேத்கார் கூறியிருக்கிறாரே! நம்முடைய கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர் என்பதே இன்னும் முடிவு செய்யப்

படாத இந்த நிலையில் — ‘கடவுள்’ என்ற சொல்லே நம்முடைய மதக் கோட்பாட்டின்படி நாம் கையாள்வதற்கு முடியாமல் இருக்கும் இந்த இரங்கத்தக்க நிலையில், நாம் எந்தக் ‘கடவுளி’ன் கௌரவத்தைக் காப்பாற்றுவது என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இனி, இப்போது, படக்காட்சிகளில் தோன்றும் சிவன்—திருமால் ஆகியவர்களின் கடவுள் தன்மை குறித்தெழுந்த போர் அவ்விருவருக்குமிடையே இன்னும் தீர்ந்தபாடில்லை. சிவன், திருமால் ஆகிய இருவரின் உயர்வு தாழ்வுக்காக நிகழ்ந்த போரைக் குறிக்கும் நூல்கள் பல நம்முன் உள்ளன. இந்நூல்களைப் பார்த்தால், மக்கள் தம் மனத்தாற்கூட நினைக்க விரும்பாத பல அருவருப்பான முறைகளை அக்கடவுளர் கையாண்டுள்ளனர் என்ற உண்மை விளங்கும். இவ்விரு கடவுளருள்ளும் எவர் உயர்ந்தவர் என்ற போரைக் குறிப்பதும், இவ்விருவரில் எவர் பெரியவர் என்ற முடியாத முடிவைக் குறிப்பதுமான நூல்களே இன்றைய சைவ—வைணவர்களின் வழிபாட்டு நூல்களாகவும், முடிந்த முடிவைக் கூறும் சித்தாந்தங்களாகவும் விளங்குகின்றன. இந்நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் அறிவுக்குப் புறம்பான — அருவருப்பான நிகழ்ச்சிகளைத்தான் படக் காட்சியின் வாயிலாக நடித்துக் காட்டத் தவறினால், நாட்டில் சினிமாத் தொழிலும், நாடகக் கலையும் மாய்ந்தொழியும் என்று இப்பவே சர்க்காரை மிரட்டக் கிளம்பிவிட்டன சில பத்திரிகைகள்.

சர்க்காரோ, கடவுளரின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டுமானால், படக்காட்சிகளில் கடவுள் வடிவம் எடுப்பதைத் தடுக்கவேண்டுமென்று கூறுகிறது. வேறு சிலரோ, படக் காட்சிகளில் கடவுள் வடிவம் எடுத்து நடிக்கப்படாவிட்டால், பாமர மக்கள் நாடகத்திலும், படக் காட்சியிலும் தெய்வீக வரலாறுகளைக் கண்டு களிக்க முடியாமல் ஏமாந்துவிடுவார்கள் என்று கூறுகின்றனர்.

நாம், சர்க்காரின் இந்த ஏற்பாட்டை அப்படியே வரவேற்க முடியாதபடி, சர்க்கார் இதற்குக் கொண்டிருக்கும் அடிப்படைக் காரணம் தடை செய்வதாய் இருந்தபோதிலும், பட உலகில் இதனால் ஒரு மாறுதல் ஏற்பட வழிகோல முடியும் என்ற நம்பிக்கை நமக்கிருப்பதால், சர்க்காரின் இந்தச் சிக்கலான - தெளிவற்ற ஏற்பாட்டை வரவேற்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். பாதை திறக்கப்பட்டு விட்டால், அதன் நடுவே உள்ள கற்களையும் முட்களையும் அகற்றுவது அவ்வளவு கடினமல்ல என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. எனவே சர்க்கார் இப்போது செய்துள்ள ஏற்பாடு கல் முள் நிறைந்ததாக இருந்தாலும், நம்முடைய அடிப்படை நோக்கம் அந்த ஏற்பாட்டில் இலைமறை காயாக இருப்பதால், அதனை எதிர்ப்போரைக் கண்டு சர்க்கார் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டு விடக் கூடாதென்பதே நமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்,

“பரமசிவன் அருள்புரிய
வந்து வந்து போவார்”

என்று கூறி நம் நாட்டுப் படக் காட்சிகளின் இழிநிலையை விளக்கியதற்கேற்பச், சர்க்கார் இந்த அளவுக்காவது சீர்திருத்தம் செய்ய முற்பட்டதே என்று மகிழ்கிறோம். ஆனால்,

சளக்கர் பலர் நிரம்பிய இந்நாட்டில்
சர்க்கார் கொண்டுவரும் இத்
திட்டம்
விளக்கமுற வெற்றி பெறுமோ
வெம்பிப் போமோ
வெம்பாது வெற்றிபெறினு
மதனைக்
கோளக்கருதுமத மாயைக் குரங்கு
கவர்ந்திடுமோ
கவராது நடைமுறைக்கு
வரினுமதனைத்
துளக்கமற மக்கள் நுகர்வரோ
மண்டைக்கர்வம்
பிடிக்குமோ எதுநேருமோ
ஏதுமறிந்திலமே!

சிறைச்சாலை என்ன செய்யும்?

—✲—

25-12-48-ல் காஞ்சிபுரத்தில், “இரணியன் அல்லது இணையற்ற வீரன்” நாடகத்தைச் சர்க்காரின் தடையை மீறி நடித்துச் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்குச் சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் தலைமையில் வரவேற்பு விழா நடைபெற்றது. திராவிடர் கழகச் செயலாளர் தோழர் பெருமாள் வரவேற்பிதழை வாசித்தளித்தார். அதுசமயம் தோழர் அண்ணாதுரை நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

“தோழர்களே,

இங்கு, மேடை மீது வீற்றிருக்கும் தோழர்கள், மூன்று நாட்களுக்கு முன்தான் வேலூர் சிறையிலிருந்து விடுதலையாகி வந்துள்ளார்கள். இவர்கள் செய்த குற்றமென்ன? இவர்களை ஏன் அரசாங்கம் சிறைக்கனுப்பிற்று? இவர்கள், அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தார்களா? பேச்சுரிமை, தங்கள் பிறப்புரிமை என்று பேசினார்கள்! கருத்துக்கு இருட்டடிப்பு அடாது என்று கூறினார்கள்! கலைக்குத் தடை விதிப்பது தகாது என்று சொன்னார்கள்! கழிகளைக் கரத்தில் பிடித்துக்கொண்டா தங்கள் கொள்கையை வெளியிட்டனர்? பலர் அறியாமலும் பேசவில்லையே! விளக்கொளியில், வெட்ட வெளியில், பலர் முன்னிலையில், முகத்திலே சாயம் பூசிக்கொண்டு, உள்ளத்திலே உறைந்துகொண்டிருந்த கோட்பாடுகளை, வெளிக்கு எடுத்துக் காட்டினர். தர்மவான்கள் ஆட்சியில் இதற்கு இடமில்லாமல் போய்விட்டது! தடுத்தாட்கொண்டனர்! சிறையிலடைத்தனர், சீரற்ற ஆட்சியாளர்! திரும்பியும் விடுதலையாகி நம்முன்னர் வந்துள்ளார்கள் நண்பர்கள்! அவர்களை நான் வரவேற்கிறேன்—வாழ்த்துகிறேன் —உங்கள் சார்பாக!

எனது நண்பர்களின் தொழில் கூத்தாடுவதன்று. இவர்களைச் சிறையில் அடைத்த துரைத்தனத்தாரும் கூத்தாடுவதைத் தொழிலாக மேற்கொண்டிருப்பவர்கள் அன்று! இரு வெவ்வேறு கூத்தாடும் குழுவினருக்கு வேண்டுமானால் போர் மூளுவதும், ஒருசாரார் மற்றொருசாராரை அடக்கி ஒழிக்கப் பார்ப்பதும் முறையாக இருக்கலாம்! இதனைத் தொழிலிலே ஏற்படும் கழுத்தறுப்புப் போட்டி என்றும் நினைத்துப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், கூத்தைத் தொழிலாகக் கொண்டிருக்

காத இருசாராருக்கும் பகை ஏற்பட்டுவிட்டிருக்கிறது! அதுதான் இதில் விசித்திரம்!

இரணியன் கதையை அந்தக் காலத்தில், எவனோ ஒருவன், எதற்காகவோ எழுதினான். அந்தக் கதாசிரியனும் இரணியனைக் கண்டவன் அல்ல. பிரகலாதனையும் அவன் பார்த்ததில்லை. லீலாவதியிடமும் பழகினதில்லை. நரசிம்மத்தையும் தரிசித்ததில்லை. என்னமோ கதை எழுதினான்; அது மக்களில் பலருக்குப் பிடித்திருக்கவே, அதனை நாடகமாகக் கூத்தாடினார்கள், நடித்தனர். ஊர் ஊராக நடித்தனர். பஜனைக் கூடங்களாகப் பார்த்து நடித்தனர். இன்றும் நடித்து வருகின்றனர். ஆனால் எண்ணிக்கை குறைந்திருக்கிறது இன்று.

புரட்சிக் கவிஞர் கற்பனையில், வேறொரு இரணியன் உருவானான். அந்த இரணியனை, நாடக உருவில் உலவவிட்டார் வெளியில். கடந்த பதினைந்து ஆண்டுகளாக, சில இடங்களில், அன்று இருந்த மந்திரிகள் முன்னிலையில், நமது தோழர்கள், கவிஞர் கண்ட இரணியனை, நாடக மேடைக்குக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறார்கள். இன்று இங்குள்ள இரணியன், இரமணரிஷியின் சீடரால் குற்றவாளியாக்கப்பட்டது போல், அன்று, அந்த மந்திரிகளால் செய்யப்படவில்லை. அவர்கள் இருக்கட்டும். ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும் கவிஞரின் இரணியன் சிலபல மேடைகளில் தோன்றிக் கொண்டுதான் இருந்தான். ஆச்சாரியார், இரமணாஸ்ரமத்துத் தூதர்போல் அல்லாமல், இரணியனுக்கு இடைஞ்சல் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டார். இவ்வளவு காலத்திற்குப் பின்னர், இவர்களுக்கு, இந்த ஆளவந்தார்களுக்கு, இரணியன் மீது கோபம் பிறந்து விட்டது. தடுத்து விட்டனர் நாடகம் ஆடக் கூடாது என்று! தகுதியற்ற தடையை மீறினர் இந்தத் தோழர்கள். அதற்காகச் சிறைசென்று திரும்பி வந்துள்ளனர்.

தடை விதித்த துரைத்தனத்தார், எங்கள் இரணியன் கதையிலே கண்ட குறை என்ன? களங்கமென்ன? இதுவரை எடுத்துக் காட்டினரா? கேட்டோம். பத்திரிகை வாயிலாகக் கேட்டோம் — பொது மக்களைச் சாட்சியாகக்கொண்டு பல மேடைகளில் நின்று கேட்டோம். பேசாப் பதுமைகளாக இருந்து விட்டது அரசாங்கம்! அறிவு மந்தம் மட்டும் அல்ல; செவியும் செவிடாக இருக்கிறது இதற்கு!

எங்கள் இரணியன் நாடகத்தை, இதுவரை எந்த அமைச்சராவது, பார்த்திருப்பாரா? ஏட்டிலாவது படித்திருப்பாரா! “இந்தப் பகுதி குறையுடையது; இது இயற்கைக்குப் பொருத்தமற்றது” என்று எடுத்துக் காட்டி, அதனை நீக்கி விடுங்கள் என்றாவது கூறி இருப்பார்களா? இந்த நல்ல காரியத்தையா அவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது?

நாங்கள் ஏதாவது பழைய இரணியன் நாடகத்தை ஆடக்கூடாது என்று கூறுகிறோமா? அதனை எவராவது ஆடினால், அங்கு சென்று நாங்கள் குழப்பம் விளைவிக்கிறோமா? நாங்கள் ஒரு மூலையில் எங்கள் இரணியனை நடித்தால், பழைய இரணிய விலாசத்தை ஏற்கனவே ஆடி வந்தவர்கள் மற்றோர் மூலையில் ஆடுவதுதானே முறையாகும்! அதற்கு ஆள் பஞ்சம் ஏற்பட்டு இருக்குமானால், இன்றுள்ள அமைச்சர்கள் —அவர்களைத் தாங்கிக்கொண்டிருக்கும் சட்டசபை அங்கத்தினர்கள்— ஊர் ஊராகத் தெருத் தெருவாக— முகத்திலே சாயம் பூசிக்கொண்டு, நன்றாக ஆடட்டுமே, யார் தடுக்கப் போகிறார்கள்! அப்பொழுது வேண்டுமானால், நாங்கள் போட்டிக்கு வராமல் இருந்துவிடுகிறோம்!

இந்த அமைச்சர்களுக்குப் பழைய இரணியன், ஏதாவது அடுத்த வீட்டுக்காரனா? நெருங்கின உறவா? பின் எதற்கு, இவர்களுக்கு, அவனிடத்தில் இவ்வளவு பற்றும் பாசமும்? அவனிடத்தில் இவர்களுக்கு அன்பு இருப்பதாக இருந்தபோதிலும், எங்களைப் பகைத்துக்கொள்ள வேண்டிய அவசியந்தான் என்ன? அந்த இரணியனைத் தடுக்காதிருக்கும்பொழுது, எங்கள் இரணியனை மட்டும் தடுக்கவேண்டிய அவசியந்தான் என்னவோ? சென்ற காலத்தில், வெள்ளையனை விரட்ட விடுதலைப் போர் நடந்த நேரத்தில், காலஞ்சென்ற திருச்சி விஸ்வநாததாஸ், நாடகமேடையில் “கொக்கு பறக்குதடி பாப்பா—வெள்ளை கொக்கு—” என்று பாடுவார்.

அவர், நாடகத்தையே வாழ்க்கைச் சாதனமாகக் கொண்டிருந்தவர். அன்று இருந்த வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு, அந்தப்பாட்டைக் கேட்பதென்றாலே, தாங்கிக் கொள்ள முடியாத வேதனையாக இருந்தது. பாட்டைப் பாடக்கூடாதென்று தடைசெய்தது. மீறினார் விஸ்வநாததாஸ், சிறையில் தள்ளப்பட்டார். தீவிர தேசபக்தர் என்ற பட்டியிலும் சேர்க்கப்பட்டார். பாடக்கூடாது என்று தடை செய்த சர்க்காரை, தாக்கிப் பேசினர் தீப்பொறி பறக்க. பேச்சுரிமையைப் பறிப்பது அடுக்குமா? என்று அடித்தொண்டையால் அலறினர். கண்டனக் கூட்டங்கள் பல போட்டனர். சைத்தான் சர்க்கார் என்று கண்டித்தனர். இவ்வளவும் பேச்சுரிமையைக் காக்க எடுத்துக் கொண்ட சிறந்த நடவடிக்கைகள்! ஆனால் இன்று?

அதே தேசபக்தர்களால் நடத்தப் பெறும், தர்ம அரசிலே, பேச்சுரிமை கொலை செய்யப்படுகிறது! மக்கள் — உணர்ச்சியுள்ளவர்கள் — வெறும் மரக்கட்டைகள் அன்று! மண் பதுமைகளுமன்று! பேச்சுரிமை—ஒவ்வொருவருக்கும்—எவர் ஆட்சியிலும் — என்றும் இருந்து தீரவேண்டிய அடிப்படையான உரிமைகளில் ஒன்றாகும். அதனை மறக்கிறார் ஓமந்தூரார், அதிகாரம் அவரிடத்தில் எப்படியோ அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்னும் காரணத்தால்!

நாடக விஷயந்தான்—கலைத்துறைதான்—இந்த இலட்சணம் என்றால்—இந்தத் தர்மாத்மாக்கள் ஆட்சி வேறு எந்த வகையில்தான் சிறந்ததாக இருக்கிறது? எந்தக் கட்சியினரை, ஏதாவது காரணம் கூறி, சிறையில் அடைக்காமல் இருக்கிறார்கள்? கம்யூனிஸ்டுகளை விட்டுவிட்டார்களா? ‘கம்யூனிஸ்டுகள் அஹிம்சையில் நம்பிக்கையில்லாதவர்கள். பலாத்காரத்தின் மூலம் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்கிறார்கள்’ என்று கூறி, சந்துபொந்துகளிலெல்லாம் தேடிப்பார்த்து, அகப்பட்டவர்களை எல்லாம் அடைத்தாகிவிட்டது சிறையில். “சோஷலிஸ்டுகளா, அவர்கள் பதவிப்பித்துக்கொண்டு, வேலையில்லாத வேலையில் வேலை நிறுத்த அழிவு வேலையில் ஈடுபட்டு, பதவியைக் கைப்பற்றப் பிரயத்தனப் படுகிறார்கள்” என்று கூறிக்கொண்டு, அவர்களில் சிலரையும் சிறைச்சாலையில் தள்ளியாகிவிட்டது. மேலும் சிலரைத் தள்ள முயற்சிக்கப்படுகிறது. இது கூட ஆச்சரியமல்ல! சொந்தக் கட்சியினரையே,

விடுதலைப் போராட்ட காலத்தில் ஒன்றுபட்டுக்கூட்டாக ஒத்துழைத்த வரையே, இன்றும் காங்கிரஸ் முத்திரையை விடாமல் சுமந்துகொண்டு இருப்பவரையே, மாயவரம் தோழர் நாராயணசாமியையே, சிறைச்சாலையில் தள்ளின பெருமை—அதுவும் விசாரணை இல்லாமலே அடைத்து வைத்திருந்த அற்புதம் ஆப்ரிக்கப் பாலைவனத்தில் கூட காணமுடியாத ஆச்சரிய சம்பவமாகும்!

தோழர் நாராயணசாமி செய்த குற்றந்தான் என்ன? கம்யூனிஸ்டுகள் போன்று அழிவு வேலையிலா ஈடுபட்டார்? கம்யூனிஸ்டுகள் என்ற நாற்றமே அவருக்குப் பிடிக்காதே! அவர் செய்ததெல்லாம், வெளியில் சொன்னதெல்லாம், மிராஸ்தாரர்கள் கிசான்களை (உழவர்களை) நடத்தும் முறை கேவலமானதாக இருக்கிறது, உழவர்களையும் தங்கள் போன்ற மக்கள் என்று மதித்து நடந்துகொள்ளவேண்டும் மிராஸ்தாரர்கள் என்று உழவர்களுக்காகக் கொஞ்சம் மனிதாபிமானத்தோடு பரிந்து பேசினதுதான். இந்தப் பேச்சு—சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர் பேச்சாக இருந்தபோதிலும்—ஓங்கார சொரூபியான ஓமந்தூராருக்குக் கோபத்தை மூட்டிவிட்டது! தோழர் நாராயணசாமிக்கு, சிறை, வாழ்விடமாக்கப்பட்டது!

'நம்மவர் ஆட்சி' என்று சொல்லிக் கொள்ளக் கூட வெட்கமாக இருக்கிறதே! ஏதாவது ஒரு தொழில்—பலருக்கு வேலைகொடுக்கும் நிலையில்—புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா, இந்த மூன்று ஆண்டுகளில்? விரல் மடக்கட்டும், விஷயம் தெரிந்தவர்கள், பார்ப்போம். கங்கையும் யமுனையும், துங்கபத்திரையும், கோதாவரியும் கிருஷ்ணையும், காவிரியும் கொள்ளிடமும், பெண்ணையும் தாம்பரபரணியும் பாயும் நாடு இந்தப்பரந்த இந்தியா, என்று சொல்லுகிறோமே! 'அன்னை முப்பதுகோடி முகமுடையாள்' என்று பாடுகிறோமே! இங்கு பஞ்சமும் பட்டினியும் மக்களைப் பிடித்து வாட்டுகிறதே! இதற்குப் பரிகாரம் தேடாமல், தரிசு நிலங்களை என்றும் போல் விட்டுவிட்டு, வெளிநாட்டில் உணவுதேடத் தூதுவர்களை அனுப்புகிறீர்களே, வெட்கமில்லையா? அதுவும் எவரை அனுப்புகிறீர்கள்? முன்னாள், மூர்த்தியின் தேர்தலின் போது, 'தாலியறுத்த முதலியாருக்கா ஓட்டு' என்று பழி சுமத்தித் தோற்கடித்த அதே இராமசாமியை அல்லவா, அமெரிக்கா அனுப்புகிறீர்கள்?

எங்களுக்குத் தடை விதிக்கும் அரசாங்கம், இன்று எவர் எவரைக் கூட்டாளிகளாகக் கொண்டிருக்கிறது தெரியுமா? பண்டிதர் மந்திரி சபையில் சட்ட மந்திரியாக இருக்கிறாரே டாக்டர் அம்பேத்கார், அவர் என்ன காங்கிரஸ்காரரா? அன்றும்—ஏன்—இன்றும் காங்கிரஸை எதிர்த்துக்கொண்டு இருப்பவர்தானே! சிலநாட்களுக்குமுன்புகூட பம்பாயில், தாழ்த்தப்பட்டோர் என்பவர்களின் கூட்டத்தில் பேசுகின்றபொழுது, "காங்கிரசில் சேராதீர்கள்—அதனை நம்பாதீர்கள்—அது கடலிலே சென்றுகொண்டிருக்கிற கப்பல்தான் — ஆனால் அமிழ்ந்துகொண்டே இருக்கிறகப்பல்" என்று கூச்சம் துளியுமின்றிக் கூறினாரே? இன்னும் மந்திரியாகத்தானே இருக்கிறார்? ரோஷம் பிறக்கவில்லையே இவர்களுக்கு!

கிதிகந்திரியாக இருந்து விலகிய சண்முகம் யார்? அவர் ஓர் முதலாளி அல்லவா? அவர் இடத்திற்கு வந்திருக்கிற ஜான்மத்தாய், விடுதலை போராட்டத்தில் எந்தக் கட்டத்தில் கலந்து கொண்டவர்? தொழில் மந்திரி முகர்ஜி யார்? இந்து மகா சபையின் தலைவராக இருந்தவரல்லவா? அத்துடன் காங்கிரசையும் எதிர்த்துக்கொண்டு இருந்தவர் ஆயிற்றே! இவ்வளவும் எதனைக் காட்டுகிறது? காங்கிரசிலே உள்ள அறிவுப்பஞ்சத்தையும் ஆள்பஞ்சத்தையும் அல்லவா அம்பலப்படுத்துகிறது? அடிக்கட்டுமே தந்தி, இவர்களை எல்லாம் விலக்கச்சொல்லி! இவர்கள் ஏன் தேசபக்தர்கள் கண்களில் இன்னும் படவில்லை? எப்படித்தான் சகித்துக்கொண்டிருக்கிறார்களோ இவ்வளவையும்!

"பர்மிட்டுக்குப் பல்லிளிக்காதே; லைசன்சுக்கு நாக்கைச் சுழற்றாதே; பதவிக்குப் பறக்காதே; ஒழுக்கமாக நடந்துகொள்" இவ்வாறு கன்னியாகுமரிமுதல் ஜெயப்பூர் காங்கிரஸ் வரையில் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே! எச்சரிக்கை தீர்மானரூபத்தில் வருகிறதே! சாதாரண பேர்வழிகளுக்கா இந்தத் தாக்கீது? இல்லையே! தியாகிகளுக்கன்றோ இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது? இதன் உட்பொருள் என்ன? சாவித்திரியைப் பார்த்துச் சத்தியவான் 'அண்டைவீட்டுக் காரரோடு பேசாதே, பக்கத்துவீட்டுக்காரரைப் பார்க்காதே" என்று கூறினால் சாவித்திரியின் போக்கிலே கோளாறு இருக்கிறது என்று அர்த்தம்? சாவித்திரியின் ஒழுக்கத்திலே ஓட்டை கண்டிருக்கிறது என்பது தானே பொருள்?

நாங்கள் சின்னக்கட்சி என்றுபேசுகிறார்கள் அமைச்சர்கள். நாங்களும் மறுக்கவில்லை இதனை. ஆனால் அமைச்சர்கள் போதாது. அவர்களின் இந்தக்கூற்றைப் பொய்யாக்கி விடுகிறதே. சின்னக்கட்சிக்காரர்களாகிய நாங்கள் பேசுவது மக்களுக்குப் பிடிக்காமல் போனால், மக்களே எங்களை ஒதுக்கித்தள்ளிவிடுவார்கள் என்று உறுதியோடு ஆட்சியாளர்கள் இருந்துவிட்டிருக்கலாமே? ஆட்சியாளர்கள் அப்படி இருக்கவில்லையே! பத்திரிகைகளில், மக்கள்,

(2-ம் பக்கம் பார்க்க)



—விற்பனையாளர்கள் தேவை—

சிறந்த முறையில் உயர்ந்த சிவபுரிபுகையிலையிலும் தயாரித்த காரம், மணம், குணம் பொருந்தியஎங்கள் ராஜாஸ் பரிமளபுகையிலை, பஸ்பம், துண்டு புகையிலையும், வாசனைப் பரிமளப்பாக்குத்தூளையும் வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பவர் ராஜா & ஸன்ஸ்

19. வரகுவாசல் தெரு, சின்னகாஞ்சிபுரம். S.I.Ry

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.

REGD. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 30—1—49 | இதழ் 31

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 12 FEB 1949 MADRAS

1-49.

அபத்தக் கூச்சல்

—❀—

"மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் மனத்திலும் மதியாத துறவி என்பதற்கறிகுறியாகச் சாமியார் என்ற பட்டஞ் சூட்டிக்கொண்டிருக்கும் ஒருவர் மண்ணும் பொன்னும் மடாதிபதிகள் ஆதிக்கத்தில்தான் இருக்க வேண்டுமென்பதற்காக ஜீவாத்மாவை விட்டுப்போவதாகச் சொல்லுகிறார் என்றால், அவர் இஷ்டப்படி செய்யட்டும் ....இப்பொழுதிருக்கும் மடாதிபதிகள், பண்டாரசந்நதிகளின் நிர்வாகத்தில் ஊழல்களும் ஊதாரித்தனங்களும்தான் இருக்கின்றனவே ஒழிய மகத்துவமிருப்பதாக எந்த யோக்கியரும் கூறமுடியாது. வருஷந்தோறும் அநேக ஹிந்துக்கள் இன்னும் மதம்மாறிப்போய்க்கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளால் அதையெல்லாம் தடுத்து இந்த மதத்தைப் பலப்படுத்த முடியவில்லை என்றால், மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்துவிடுவதால் மட்டும் ஹிந்து மதத்திற்கு எந்த கஷ்டமும் வந்துவிடப் போவதில்லை. ஆகையால். மடாதிபதிகள் அதிகாரம் குறைவது மதத்திற்கே ஆபத்து என்பது அபத்தக் கூச்சல்."

தினசரி
(25—1—49)

அறிக்கை-எதற்கு? யாருக்கு?

16-ம் பக்கத் தொடர்ச்சி

அதிகாரத்தில் இருப்போர் ஒரு பக்கம் இருக்க, இவர்களை ஆட்டிப் படைக்கும் அந்தஸ்துப் பெற்றுள்ள காங்கிரஸ் கமிட்டித் தலைவர், வேறு கட்சியினர் நாடாளுவது போலவும், நாட்டிலுள்ள குறைகளை அவர்களுக்கு அறிக்கைமூலம் அறிவித்துப் பரிகாரம் தேடும் நிலைதான் தனக்கு இருப்பது போலவும், உழவர்கள் நிலையை எடுத்துக் கூறுவது, உண்மையில் உழவர்களுக்குப் பரிகாரம் கிடைக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்யப்படும் காரியந்தானா? பிரதமராக எவரை நியமிக்கலாம், எவரை மந்திரியாக ஆக்கலாம், மந்திரியாக இருப்பவரை எப்படித் தொலைக்கலாம், என்றெல்லாம், உறங்கும் நேரத்திலும் உள்ளத்தில் கள்ளச் சிந்தையோடு, திட்டமிட்டுக் கொண்டு இருப்பதே தனது முக்கிய பணியாகக் கொண்டிருக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜர், அறிக்கை நீட்டுகிறார் உழவர்கள் நிலை குறித்து!

சர்க்கார் ஏற்படுத்திய பஞ்சாயத்தின் தீர்ப்புப்படி கூலி கொடுக்க மிராஸ்தாரர்கள் மறுக்கிறார்களென்றும், மிராசுதாரருக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை உடைக்க மிராஸ்தாரர்கள் பலமுறைகளை எடுப்பதாகவும், இரண்டு மாதமாகப் பிரதமர் தஞ்சையில் தங்கி இருந்தும் உருவான பலன் கிட்டவில்லை என்றும், இதனால் சர்க்கார் மதிப்புக்குக் கேடு விளையுமென்றும், சர்க்காரும் இதனை முன் யோசனையுடனோ, ஒருதீர்மானத்துடனோ நடத்திக் கொள்வதாகத் தெரியவில்லை என்றும் காமராஜர் பிரலாபிக்கிறார்.

காமராஜர் யார்? பிரதமர் யார்? இருவருக்கும் உள்ள தொடர்பு என்ன? இருவரும் ஒரே கட்சியினர்தானா? வெவ்வேறு கட்சியினரா? காமராஜர் கூறினால், பிரதமர், கட்டி நடந்து கொள்வாரா? காமராஜருக்குத்தான் உழவர்களிடம் அதிக அக்கறை, பிரதமருக்கு அவர்களிடம் அதிகக் கோபம் என்று பொருள் கொள்வதா? மிராஸ்தாரரென்றாலே காமராஜருக்கு வேம்பு பிரதமருக்கு அவர்கள் கரும்பு என்று தீர்மானிப்பதா? அறிக்கை போடுகிற அந்தஸ்துதான் காமராஜருக்கு இருப்பதா? அல்லது மேலும் உண்டா அதிகாரம் அவருக்கு?

உழவருக்கு நலம் தேடுவதுதான் காமராஜரின் அந்தரங்க நோக்கமானால், பிரதமரைச்சுட்டிப்பேசக் காரணமென்ன? உழவர்களின் துன்பத்தைத் துடைக்க இதுவரை காமராஜரோ, அவர் தயவால் ஆளவந்தாரான பிரதமரோ முன்வந்து இருக்கிறார்களா? சட்டசபைக் கட்சித் தலைவர் தேர்தல் நெருங்க நெருங்கக் காமராஜருக்குப் பாட்டாளிகள்மீது கருணை அதிகரிக்கிறது போலும்!

காமராஜர் கருதுவது போல, காமராஜரை நாடு தெரிந்து கொள்ளாமல இல்லை. அரசியல், காமராஜர் போன்றோர் கை வரிசைக் காட்டும் அளவிறகும், ஓ ந்தூரார் போன்றோர் ஊராளும் தகுதிபெறும் அளவிற்கும், குருடனுக்குக் குருடன் வழி காட்டுவது என்பார்களே அது போன்ற, பொருத்தமற்றோரின் புகலிடமாகப் போய்விட்டிருக்கிறது. இது ஜனநாயகமல்ல, முதல்தர பதவி வேட்டை! அறிக்கை—எதற்கு? யாருக்கு? என்பதை, நமக்கல்ல, தன் நெஞ்சுக்கே சமாதானம் கூறிக் கொள்ளட்டும் காமராஜர்.

✲

4-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்கலாம்? ஆம், இன்றைக்கும் புழுப்பூச்சு, நத்தை, தவளை, ஓணான் பல்லி, பறவை, மிருகாதிகள் பலவும் யாதொருகருவிகளுமின்றி, வாழ்கின்றன. அவைகளைபோல் வாழவேண்டுமென்று கருதுவோர் இன்றே தற்காலக் கருவிகளைத் தவிர்த்துவிட்டு வாழ ஆரம்பிக்கலாம். ஆனால் மற்ற உலகம் ஒப்புமோ வென்பதுதான் சந்தேகம்!! ஆதலால் யந்திரத்தினால் நூற்பதாலும் நெய்வதாலும் மில் நூல்துணி கேடென்றும், ராட்டினால் துணியே மேலென்றும் கருதுகிறவர்கள் இதனை யோசிக்க வேண்டுகிறோம்.

ஆனால் இவ்வளவு யந்திர அனுகூலங்களும், சவகாசமும் ஏற்பட்டிருந்தும் ஏன் உலகில் துக்கமும், துன்பமும் வறுமையும், பிணியும் சண்டையும், போரும் வழக்கும், வில்லங்கங்களும் அதிகரித்துவருகின்றன என்று கேட்கலாம். அதற்குக் காரணம் பொருளாதாரச் சுரண்டல்முறை; அதற்கு மாற்று மருந்து தான் சமதர்மம்.

✲

15-ம் பக்கத் தொடர்ச்சி

சன், கே. கண்ணப்பன், கலைச்செல்வன், ஜி. மாரியப்பன், ஏ. ஜி. சம்பத் குமார், டி. சிவஞானம், பாப்பம்மாள், சி. எஸ். திராவிடமணி, வி. லாரன்ஸ், ஆர். ஜி. ஆர். வேந்தன், எஸ். கோவிந்தசாமி, வி. பேட்ரிக், எல். தேவசகாயம், எம். வேலுசாமி, கே. பி. சந்திரன்.

இரண்டு வாரம்

9—9—48-ந் தேதி மறியல் செய்யப் புறப்பட்ட தோழர்களையும், மறியல் செய்துவிட்டுப் பாசறைக்குத் திரும்பிய தோழர்களையும் போலீசார் கைது செய்து, உத்தரவின்றி ஊர்வலம் நடத்தியதாகக் குற்றஞ் சாட்டி, ஒரு வாரம் சிறை வாழ்வை வாங்கித் தந்தனர். அந்தத் தோழர்கள், இவர்கள்தான்!—

பி. எல். ஆவேசமுத்து, கே. சி. செல்லப்பழம், எம். கோவிந்தசாமி, எ. மாரியப்பன், எம். சங்கிலி, சி. வி. ராஜன், எல். எம். மாரியப்பன், கே. முத்தையா, ஜி. கோதண்டம், எ. இராமசாமி, எம். பி. சகாதேவன், ஆர். டேவிட், வி. பாலன், ஆர். எல். ரெங்கராஜ், சி. ஏ. விஸ்வநாதன், கே. எம். வேணு

இரண்டு வாரம்

10—9-48-ல், இந்தியை எதிர்த்த தொண்டர்கள் 11 பேரைக் கைது செய்து, வழக்கமான குற்றத்தைக் காட்டி வழக்கமான காவல் தண்டனையை வாங்கித் தந்தனர். அந்தத் தோழர்கள் இவர்கள்தான். கே. காளிதாஸ், பி. சேமன், பி. ரங்கபாஷ்யம், ஏ. சுப்ரமணியம், வி. நடேசன், எம். வேதாசலம், எல். ரங்கராஜ், சி. கேசவலு, எம். சித்திரை, பி.கே. முத்துகிருஷ்ணன், ஜி. வேணுகோபால்.

(5-ம் பக்கம் பார்க்க)

முகவரி மாற்றம்

தோழர் நெடுஞ்செழியன் தம் இருப்பிடத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றிக் கொண்டுள்ளார்.

5 D லயிட்ஹால், 7 வது தெரு, குளோடு, கோடம்பாக்கம்,
சென்னை.

✫ இயந்திர உலக முன்னேற்றம் ✫

[சிங்காரவேலு]

வறுமையை ஒழிப்பதற்கு யந்திரத்தால் முடியுமா, அல்லது கை ராட்டினத்தால் முடியுமா? என்ற சங்கையைக் குறித்துக் கிளம்பிய பிரச்சினை, தற்போது இந்தியாவில் முக்கியமாகக் கருதப்படுகிறதை நாம் அறிவோம். இப்பிரச்சினையின் ஒரு பிரசாரமே இன்று நம் நாட்டில் கதர் பிரசாரமாகவும் இருந்துவருகிறது. இந்தப்பிரச்சினை முதல் முதல் காந்தியாரால் எழுந்ததல்ல. அவருக்கு முன்னரே மேல்நாட்டுத் துறவி டால்ஸ்டாய் என்ற பெரியார், யந்திரங்கள் மனித நன்மைக்கு உதவாதென வாதித்து வந்திருக்கிறார். இவர் கூட்டத்தைச் சேர்ந்த சிலரும், இந்த வாதத்தைப் பகிரங்கப்படுத்தி வந்திருக்கின்றனர். அவர்களில் காந்தியார் ஒருவர். நமது காந்தியார், கைராட்டினத்தைக் கொண்டு, உலக துக்கத்தைப் போக்கலாமென அபிப்பிராயங் கொண்டிருந்தார் என்றும் பொதுவாக யந்திரங்களால் தற்கால வறுமையும் துன்பமும் உண்டாகியிருப்பதாக அவர் அபிப்பிராயம் போலும்! ஆனால் அவர் பிற்போக்கை அனுசரித்து வந்ததால் உலக பொருளாதார காரணங்களை உணராமலே இந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார். நமது காந்தியாருக்கு ராமராஜ்யமும்பாண்டவ ராஜ்யமும் சிறந்ததாகத் தோன்றியதால் இவ்வித பிற்போக்கான அபிப்பிராயம் அவர் கொண்டிருந்தது ஆச்சரியமல்ல! டால்ஸ்டாய்க்கும் தற்கால நாகரிகம் பிடிக்காது. அதனாலேயே அவர் பெரியார் எனக் கருதப்பட்டார். அவரும் பண்டைக் கால வாழ்வே சிறந்ததாகப் பல நூல்களில் வரைந்துள்ளார். எல்லாச் சம்பத்துகளையும் விட்டு விட்டு துறவி வேஷம் பூண்டவர்கள் எந்த அபிப்பிராயமும் கொள்ளலாம். அவரைப் பின்பற்றிய காந்தியாரும் இந்த மனப்பான்மையில் இருந்துகொண்டு புராதன வாழ்வே உயர்ந்தது என்று எண்ணியதும் ஆச்சரியமல்ல. யார் யார் முற்காலத்து நடையுடை பாவனைகளை ஆதரித்து வாதிக்கின்றனரோ அவர்கள் யாவரும் தற்கால நாகரீக வாழ்வைக் கண்டிக்காமல் இருக்கமாட்டார்கள். இந்தப் பிற்போக்கு மனப்பான்மையின் தோற்றமே தற்கால யந்திரங்களின்மேல் இவர்கள் வைத்துள்ள கடூரமான வெறுப்பு என அறிக.

மிருகத்தனமான காலமெது?

எந்த யந்திரமும் இல்லாத காலம் மிருகத்தனமான காலமாகும். உயிர்களில் மனிதன் ஒருவன்தான் உலகில் முதல் முதலில் யந்திரங்களைக் கண்டுபிடித்து தன் உபயோகத்திற்கு அவைகளைக் கையாண்டு வந்தவன். மனிதன் ஆதியில்உலகில் அவதரித்த போது அவனுக்கு எந்த ஆயுதமும் இருந்திருக்காது. பூர்வகால மனித வாழ்வைப் படித்தவர்கள்(Anthiopologists) மனிதன் மிருக சந்ததியாரை விட்டுப் பிரிந்த காலையில் வாலில்லாக் குரங்குகளைப் போலவே நிராயுதபாணியாய் இருந்திருக்க வேண்டுமென்று எண்ணுகின்றார்கள். ஆயுதமில்லாமல் அவன் இருந்திருப்பானேயாகில் மரத்திலிருந்து தரையில் இறங்கி வந்ததும் அந்தக் கால துஷ்ட மிருகங்களாகிய புலி சிங்கம் இன்னும் பலகொடிய மிருகங்களால் நாசமாகப்போய் இருக்கவேண்டும். ஆனால் அவன் சற்றுநிமிர்ந்து நடக்க ஆரம்பிக்கவும் கைகளும் கால்களும் மரத்தைத் தாவுதலை விட்டு ஆயுதங்களைக் கையாடவும், ஓடவும் தனக்கு இடங்கொடுத்தது. அவன் ஆதியில் கையாண்டு வந்த ஆயுதங்கள் படிப்படியாய்ப் பூமியில் புதைந்து கிடந்தவைகளை உலக கண்காட்சி சாலைகளில் எடுத்து வைத்திருப்பதினால் காணலாம். எலும்புக் கூர்முனைகள், எலும்பு வாள், கூரான கற்கள் இவைகளே அவன் ஆதி ஆயுதங்களாகும் இந்த அற்ப ஆயுதங்களால் ஆதி மனிதன் மிருக பயத்தினின்று மீண்டு மிருகங்களையும் எதிர்த்துக் கொல்லத் துணிவு பெற்றான். ஆதலின் ஆதி ஆயுதங்கள்தான் ஆதி மனித வாழ்வுக்கு இன்றியமையாதனவாக இருந்தன.

இதன் பிறகு அநேக நூற்றாண்டுகள் சென்று அம்பையும் வில்லையுங் கண்டுபிடித்தான், எலும்புகளைக் கூறுக்கி வில்லில் எய்தான். அதன் பிறகே கற்களைக் கூராக்கி எய்தான். அதன் பிறகு இரும்புத் துண்டுகளைக் கூராக்கினான் இவைகளுடன் கலப்பையையும் கண்டுபிடித்தான். உழுது பயிர் செய்யச் சக்தி பெற்றான். கலப்பையால் திடீரென ஒரு பெருத்த சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். கைகளால் புரண்டி இரண்டொரு அடி நிலத்தை விதைப்பது போய், இரண்டொரு காணியை (ஏக்கர்) நிலங்களை உழுது பயிரிட ஆரம்பித்தான். இது முதல, ஆதி மனிதனுக்கு நினைக்கவும் யோசிக்கவும் சாவகாசங் கிடைக்கப்பெற்றன. வீடுகளைக் கட்டவும் மரங்களை வெட்டவும் கற்களை உடைக்கவும், உளி, கத்தி, வாள் முதலிய ஆயுதங்களை உண்டாக்கிக் கொண்டான். வீட்டைப் பெருக்கவும் முறம், துடைப்பம் முதலியகருவிகளைக்கண்டுபிடித்தான். நிலங்களைச் சுத்திசெய்ய வரப்புப்போட மண்வெட்டியைக்கண்டுபிடித்தான். குளத்தில் தண்ணீர் எடுக்கவும் சமையல் செய்யவும் மட்பாண்டங்கள் கற்பாண்டங்களையும் கண்டு பிடித்தான். இவைகளோடு நெருப்பின் உபயோகத்தையும் தெரிந்து கொண்டவனாய், கல் அடுப்புகளையும்வெளிச்சங் கொடுக்கதீவட்டிகளையும், வீடுகளில் அகல் தீவட்டிகளையும் கண்டுபிடிக்க முயன்றான். நிர்வாணமாக வந்த மனிதன மிருகத்தோல்களையே ஆதியில் தன் உபயோகத்திற்குப் பதம் செய்து போர்த்திக்கொள்ள சக்தி பெற்றான். தோல்களின் மயிரைக் கொண்டு எலும்பு ஊசிகளால் மயிரைப் பின்ன ஆரம்பித்தான். பஞ்சணம் பட்டு இவைகளைக் கதாராலும் ராட்டினத்தாலும் நூற்கவும் நெய்யவும் ஆரம்பித்தான். இவ்விதமாக ஆதிமனிதன் சிற்சில ஆயுதங்களைக் கண்டுபிடித்த பிறகே தனது வாழ்வையும் உயிரையும் காப்பாற்றிக் கொண்டு வந்ததோடு, ஆடவும் பாடவும் வேதாந்தம்பேசவும்; கடவுள்களாகிய ஈசன், பிரான், பாமேன் முதலியோரை கற்பிக்கவும் சாவகாசம் பெற்றான் என அறிக.

ஆதி முதாதைகளுக்கு இந்த ஆயுதங்கள் இல்லாமற் போனால்?

நமது ஆதி முதாதைகளுக்குஇந்த ஆயுதங்களும் யந்திரங்களும் இல்லாமற்போனால், ஆயுதங்கள் வேண்டாமென்று சொல்லக் காந்தியார் எங்கு

★ பொங்கல் விருந்து ★

தமிழனின் தனிவிழா பொங்கல். மூடநம்பிக்கை துளியும் கலவாதது. ஓராண்டு உழைப்பின் விளைவைக் கண்டு பூரிப்படைந்து, அதனால் தான் பெற்ற இன்பத்தைப் பலரும் பெறவேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு, உழவன், தன் உற்றார் உறவினரோடு, உண்டுகளித்து, புத்தாடை உடுத்தி, உழவுக்குப் பெரிதும் துணைபுரிந்த கால்நடைகளுக்கும் திருநாள்கொண்டாடி, மகிழ்ந்து இன்பத்தில் திளைக்கும் இணையற்ற பெருநாள் பொங்கலாகும். இத்தகு விழாவைத் தமிழருக்குத் தந்தவர் காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்களாகும். தமிழன் ஒருவன் மட்டும் தரணியில் இருக்கும் நிலை ஏற்படினும், அவன் உள்ளம், அத்தமிழ் மூதறிஞரை மறந்துவாழாது என்பது முக்காலும் உண்மையாகும்.

அம்மறத்தமிழர், உயிரோடு இருந்தகாலை, சென்னையில் எங்கோ ஓர் மூலையில், அவர்கிளைத்த தமிழர் விழா, இன்று தமிழர் தரணியில், நகரெங்கும், நலவழி ஓரெங்கும், பட்டி தொட்டிகளனைத்திலும் பொதுவாகத் தமிழர்களாலும், குறிப்பாக நமது கழகத்தவராலும், வெகு சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழர் திருநாளுக்குத் தனிச் சிறப்பைக் கொடுத்து தமிழர் உவந்து ஏற்றுக் கொள்ளும் முறையில், பொங்கல் நாளுக்குப் புதுச் செல்வாக்கை தேடித்தந்த பெருமை முழுதும் நமது தலைவர் பெரியார் அவர்களையே சார்ந்ததாகும் என்பது மிகையாகாது.

பெரியதோர் நிலப்பரப்பு, நூற்றுக் கணக்கான மக்களை உள்ளடக்கக் கூடிய அழகிய பந்தல், பகலைப் பொய்யாக்கும் பிரகாசமான மின்சார விளக்குகள், மக்களை ஒன்றுதிரட்டுவதற்கு ஏதுவான விளம்பரங்கள், இவ்வளவு வசதியுடன் இவ்வாண்டும் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது காஞ்சிபுரத்தை அடுத்துள்ள திருவத்திபுரத்தில்.

19—1—49

தோழர் சி. வே. சுப்பராயன் தலைமையில் இவ்வாண்டு பொங்கல் விழாத் துவங்கப்பட்டது. பெரியார் இராமசாமி அறிவுரை புகன்றார். தமிழர்க்கு இழிவையும், ஆரியருக்கு உயர்வையும் கொடுக்கும் தீபாவளி பண்டிகையின் உட்பொருளை நன்கு விளக்கிக்காட்டி, தமிழர்கள் தீபாவளி கொண்டாடுவது ஆரியர் புகுத்திய அடிமைவாழ்வைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்வதாகும் என்று எடுத்துக்கூறி, தமிழருக்குக் கேடுபயக்கும் அந்நியபண்டிகையைக் கைவிட்டுவிடவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். பொங்கல் தமிழ்நாட்டிலன்றி, இப்பரந்த இந்தியாவில் வேறெங்கும் கொண்டாடப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

உடல் உழைப்பைக்கேவலமானது என்று கண்டித்து ஒதுக்கி, பிச்சை புகுவதே பெருந்தொழில் என்று பேசப்படும் நூல்களை வேத நூல்களாகக் கொண்டுள்ள ஆரியர், எவ்வாறு உழவர் பெருநாளைக் கொண்டாடுவார் என்று கேட்டார். யாகயோகாதிகளை நம்பி வாழ்வதாகக் கூறும் ஆரியர் எவ்வாறு உழவுக் கருவியான ஏரையும், பயிர் விளைவிக்கும் பாரையும், பயிர்த் தொழிலின் சீரையும் புகழ்ந்துபேசி, அதற்கானவிழாக் கொண்டாடுவர் என்றும் இடித்துக்கூறினார்.

ஓமகுண்டத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டு ஆடு மாடுகளை அதிலபோட்டுப் பொசுக்கி, அவர்கள் கடவுளர்களான தேவருக்கும் மூவருக்கும் உணவளிப்பதாக ஊரை ஏமாற்றி, வாழ்வகை செய்துகொண்ட ஆரியர், எங்ஙனம் உழைப்பால் உருவான பலனைக் கண்டு மகிழவும், அதுவெளிப்பட விழா கொண்டாடவேண்டுமென்ற விருப்பமும் கொள்ளுவர் என்று கேட்டார்.

ஆரியர் பண்டிகை அனைத்தும் தமிழர்களை அடிமையாக்கவும், ஆரியருக்குப் பெருமை தேடவும், ஆரியர்களால் மிக்க சூழ்ச்சியாகச் செய்து கொண்ட ஏற்பாடு என்பதை, பாமரரும் புரிந்துகொள்ளும் முறையில் ஆரியப்பண்டிகை ஒவ்வொன்றையும், தக்க மேற்கோள்களுடன், கண்டித்துக் கூறினார் பெரியார்.

ஆரியருக்கு அரண் செய்யும் முறையில், ஆரியர்களால் எழுதி வைத்துக்கொள்ளப்பட்ட வடமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள், அறிந்தும் அறியாமலும்தமிழில் இயற்றிய, தமிழருக்குத் தீமைக்குக் கேடுசெய்த-செய்துவரும், பொய் மலிந்தபுராண இதிகாச நூற்களை, அவைகளின் தீஞ்சுவைக் கவியிலே கருத்தை இழக்காது, அந்நிய ஏடுகளைத் தீயிட்டுச் சாம்பலாக்க முன்வருவதே, தன்மானமுள்ள தமிழர்களின் உடனடிவேலை என்று கேட்டுக்கொண்டார்.

அறிவுக்குப் பொருத்தமற்ற, ஆரியர் கோட்பாடு, கருத்தழிக்கும் கடவுள் வழிபாடு, உரிமையை உருக்குலைக்கும் ஆரிய நீதிச்சுவடிகள், அவர்கள்தம் ஆபாசம்மலிந்த புராண இதிகாசக் குப்பைகள், முதலியனவற்றைத் தமிழர்கள் மனத்தினாலும் தீண்டுதல்கூடாது என்று கேட்டுக் கொண்டார்.

ஆரிய கலாச்சாரத்தைக் கண்டு அருவருப்புகொண்டு, தமிழரின்உயர்ந்த ஒழுக்கத்தை, தமிழருக்கென்று மட்டுமில்லாமல், மக்கள் அனைவருக்குமே பொதுமறையாக இருக்க வேண்டுமென்ற பெருநோக்கோடு, மக்களுக்குள் பேதா பேதம் பார்க்காமல, அனைவரும் சமம் என்றசமத்துவ நோக்கோடு, விபரீத முறையில் முளைத்த ஆரியக் கடவுளர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு, ஏகதெய்வக்கொள்கையை எடுத்துக்காட்டி, அறிவுக்கு முதலிடந்தந்து, மனிதனை மனிதனாக மதித்து எழுதிய திருக்குறளை-வள்ளுவர் வகுத்த வழியை மீண்டும் தமிழர்கள் மேறகொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார் பெரியார். பொங்கல்விழாவைச் சிறப்பித்துப் பலப் பல கூறிவிட்டு, அனைவரும் இவ்விழாவை மேற்கொள்ளவேண்டியதின் அவசியத்தை எடுத்துக்காட்டிவிட்டு பெரியார் தமது உரையை முடித்துக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் முதல்நாள் விழா முடிவுற்றது.

20—1—49

காஞ்சிகலியாணசுந்தரம் தலைமையில் இரண்டாம் நாள் விழா நடை

பெற்றது. முன்னுரையாக "தோழர்களே! சென்ற ஆண்டு நாம் இதே விழாவைக் கொண்டாடிய காலத்திற்கும் இன்று விழாக் கொண்டாடும் காலத்திற்கும் உள்ள ஓராண்டு இடைக்காலத்தில், பொதுவாக நாட்டில் நிகழ்ந்த பல சம்பவங்களையும், குறிப்பாக உழவர் உலகில் நேர்ந்த சம்பவங்களையும், நாம் கருதிப் பார்க்க வேண்டும். நாட்டுக்கு விடுதலை கிடைத்து இன்று ஒன்றரை ஆண்டுக்கு அதிகமாகிவிட்டது. இதன் விளைவாக நாட்டுமக்களின் நிலை எந்தவகையில் மாற்றமுற்றிருக்கிறது? வீடில்லாதோருக்கு வீடும், நிலமற்றோருக்கு நிலமும், வேலையில்லாதோருக்கு வேலையும், தொழில் அற்றோருக்குத் தொழிலும் இன்று கிடைத்திருக்கிறதா என்று நாம் யோசித்துப்பார்க்க வேண்டும். நடப்புக்காவது அவ்வாறு கூறுவதற்கில்லை. இன்று அந்தப்பேறு வாய்க்கவில்லையானாலும், விரைவில் அது கிட்டும் என்று நம்பிக்கை கொள்ளும் தன்மையிலும், நமது ஆளவந்தார்களின் செயல் அமைந்திருக்கவில்லை. அதிகாரத்திலே இருக்கும் அவர்கள் முகங்களில் மகிழ்ச்சி பொங்கத்தான் செய்கிறது. ஆனால் மக்கள் முகத்தில் என்றும்போல் சோகம் கப்பிக்கொண்டுதான் இன்றும் இருக்கிறது. ஏன் இந்த நிலை நாட்டில் நீடித்து இருக்கிறது? விடுதலை சிலருக்கு சுபிட்சத்தையும் பலருக்குப் பலகாலமாக நிலைத்து வந்த இல்லாமையையும் கொடுக்கும் சாதனமாக இன்றும் இருக்கிறது. ஏன்?

உழவன் விழா இது என்று தலைநிமிர்ந்து கூறிக்கொள்ளுகிறோம். தமிழர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கவேண்டிய இப்புனிதநாளில், தமிழர்களின் இல்லங்களில் வறுமை குடிபுகுந்து இருக்கிறது என்று சொல்வது மிகைபடக் கூறிய கூற்றாகுமா? ஏன் இந்த நிலை இருக்கிறது? இங்கு கழனி கரம்பாகவும், நீர் நிலையங்கள் வெடித்துக்கிடக்கும் பள்ளத்தாக்காகவும், காட்டாறு கட்டுப்பாடு இன்றிக் கடலோடு கலந்துகொண்டும், கவலையின் உருவாக ஆற்றலுள்ளோர் அலைந்துகொண்டும், அதிகாரத்திலிருப்போர் கிடைத்த அதிகாரத்தைச் சுவைத்துக் கொண்டும் இருக்கின்ற ஆபத்தான நிலை—ஆபத்தான தன்மை நீங்கினாலன்றி, பொங்கல் விழா மகிழ்ச்சிக்குரிய நாளாக எவ்வாறு அமையும் தமிழர்களுக்கு?

'உற்பத்தி பெருகவேண்டும்' என்று ஊராளுவோர் உரைக்காத நாள் கிடையாது. பயிரிடுவதற்குத் தகுதியான நிலங்கள், பண்ணையார்களின் சொந்தக் காட்சியாக இருக்கும் பொழுது, நிலமற்ற—உழவுக் கருவியற்ற—அதற்கான முதலிட முடியாத நிலையிலுள்ள, ஆனால் ஆற்றல் மிக உள்ள — மக்களால் உற்பத்தியைப் பெருக்க எவ்வாறு முடியும்? சிலரிடமே குவிந்து கிடக்கும் நிலங்களை உழவர்களுக்கு—நிலத்தையே நம்பி வாழும் நல்லவர்களுக்குச் சொந்தமாக்கவேண்டும். அதுவும்போதாது. சத்துள்ள வித்து—நல்ல உரம்—நவீன உழு கருவி-கொழுத்த காளைமாடு-இவ்வளவும் உழவர்களுக்குக் கொடுத்தால், உணவுப் பொருளுக்கு வெளிநாட்டாரின் வாயற்படியைக் காத்து நிற்கவேண்டிய கேவலம், நமது நாடாளுவோருக்கு இருக்காது. இல்லையானால், பரந்த பூமி பல்கோடி மக்களைக் கொண்டது-பல அவதார அற்புதங்களைப் பெற்றது-அவனிக்கெல்லாம் ஆத்மார்த்த போதனை புரிந்தது—என்று ஏட்டிலே எழுதி-ஏமாந்தவர்களை நம்பசெய்து எத்தர்களுக்கு வாழ்வளித்து-வறுமைப் படுகுழியிலே மக்களைத்தள்ளி, பழம்பெருமைப் பேச்சால் அதனை மறைத்து, அதிகாரம் செலுத்தச் சூழ்ச்சி செய்யும் ஆட்சியாளர்கள் தான் இவர்களும் என்று பழித்துப் பேசுவர் பாராளுவோரை பலரும்—பிற நாட்டாரும் கூட.

நம்மவர் ஆட்சியிலே நமக்குக் கிடைத்தது நல்வாழ்வு அன்று. முன்பிருந்ததைக் காட்டிலும் மோசமான நிலையை நமக்குத் தந்திருக்கிறார்கள் நாடாளவந்தவர்கள். பேரூர் சிற்றூர்களை இணைக்கும் நல்ல பாதைகள் இல்லை. படிக்கப் போதுமான பள்ளிகளுக்கு ஏற்பாடு இல்லை. தொழிலாளர் துயரம் துடைக்கப்படுவதற்கு பதில், அவர்கள் ஏக்கம் பெருகப் படுகிறது. ஏதேதோ திட்டங்கள் ஏட்டிலே தினம் தினம் தீட்டப்படுகிறது. நிறைவேற்றினரா, இதுவரை ஒன்றும் இல்லை. ஆனால் நூறில மட்டும் ஆளவந்தார்கள் வெகு ஊக்கத்தோடு உழைத்து வருகிறார்கள். மக்களின் உரிமை வேட்கையை உருக்குலைக்க, முடிந்த வரையில் முயற்சிக்கிறார்கள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறிப் பெற்று வருகிறார்கள். இதுவே இன்று நாட்டின் நிலை. இந்நிலையில் பொங்கல்விழா எங்ஙனம், தமிழர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடிய திருவிழாவாக இருக்க முடியும்?" என்று பேசி முடித்தார்.

பின்னர் C. N. அண்ணாதுரை பின்வருமாறு பேசினார்:—

"தோழர்களே! பொங்கல் விழா தமிழர் கண்ட பெருவிழாவாகும். இது அறுவடைவிழா. உழவனின் ஓராண்டு உழைப்பு உருவாகத் தெரியும் விழா. தனது உழைப்பால் குவிந்து கிடக்கும் செந்நெல்லைப் பார்க்கின்ற பொழுது, தன்னையும் அறியாமல் தனது தோள்கள் பூரிப்பதை உழவன் காண்கின்றான். தனது உள்ளத்தில் இதுவரை என்றுமில்லாத ஒரு இன்ப உணர்ச்சி தேங்கிக் கிடப்பதை உணருகின்றான். அந்த இன்ப வெள்ளம் முகத்தில் பாய்ந்து, கவர்ச்சியுள்ள புதுமுகமாகக் காட்சி அளிப்பதை, அவனது மனைவி மக்கள் காண்கின்றனர். மகிழ்கின்றனர். தனது உழைப்புக்கு உறுதுணையாக இருந்து, தனது உழைப்பை வெறு சாதாரண உழைப்பாக ஆக்கிவிட்ட மாட்டின்பாலும் அன்பு காட்டுகிறான் உழவன். மாட்டுக்கு விழாக் கொண்டாடுகிறான் நன்றி மறவாத நல்லவன். தான்பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற்றார்களோ இல்லையோ என்னும் ஐயத்தைப் போக்கிக்கொள்ளத் தனது நண்பர்களை—தனக்கு அறிமுகமானவர்களை—அவர்கள் மனைகளுக்கே சென்று கண்டு, அவர்களும் தன்போன்றே இன்பக்கேணியில நீந்தி விளையாடுவதைப் பார்த்து, அவ்வின்பத்திலும் பங்கு கொள்ளுகிறான். இதுவே பொங்கல் விழாவில் மறைந்து கிடக்கும் பொருள்—நாம் பெறும் படிப்பினை.

இன்று நாட்டிலே, அனைவர் மனைகளிலும் இந்த இன்பநிலை இருக்கிறதா? இருக்கமுடியுமா? ஏன் இல்லாமல் போய்விட்டது? என்று நாம் சிறிது ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இப்பொங்கல் விழ வின்போது மிராசுதார் மனையிலே இருக்கும் மகிழ்ச்சி, அவரது பண்ணையாள் பாவாடையின் வீட்டில் இருக்க முடியாது தான். சோம்பல் காட்டாது—சோர்வு தட்டாது—பயிர் விளைக்கப் பாடுபட்டவன்தான் பாவாடை! உழைத்து உழைத்து மேனி கருத்து இருப்பதும் உண்மை தான். இருந்தாலும் உழைக்கத்தான் அவனுக்கு உரிமை உண்டு. உழைப்பின் பயனை அனுபவிக்கவிடாமல்,

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 30—1—49 [காஞ்சி

ஏன் இந்த அச்சம்?

இவ்வாண்டு முடிவிற்குள் புதிய அரசியல் அமைப்பு உருவாகிவிடும். அடுத்த ஆண்டுத் துவக்கத்தில தேர்தல் வைத்துக்கொள்வதும் உறுதியாகிவிட்டது. இத்துணைக்கண்டத்தில் மக்களாட்சிக் கோட்பாடு நன்கு வேரூன்றவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது. மக்களாட்சி முறை மலர்ந்ததே மேல்நாட்டில். இங்கிலாந்து தவிர்த்த மற்ற ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சிமுறை இன்னும் வளம்பெறவில்லை. மனிதனைப் பிறவியினால் பேதப்படுத்தி, உயர்வு தாழ்வு கற்பித்து, கடவுள் கட்டளை இதுவென்று சாதித்து, கண்ணன்காட்டிய வழியை அதற்குச் சாட்சிக்கிழுத்து, இதுபோன்ற மனிதனை மிருகத்திலும் கேவலமாக நடத்திப் பழகிவந்த நாட்டில், ஜனநாயக முறையை நினைத்ததும் நிறைவேற்றிவிடக்கூடிய நிலை உண்டாகிவிடாது. நல்லதோர் ஜனநாயக முறையை நாட்டில் நிறுவ வேண்டுமானால், அதற்கான அறிவை மக்களிடம் பரப்பும் பணியில், மக்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளோர் அனைவரும் அரும்பாடுபட்டாகவேண்டும்.

மக்களாட்சி முறைக்கு, தேவைகளைத் தெரிந்துள்ளவர்களாகவும், வேஷத்தைக் கண்டு மயங்காதவர்களாகவும், கல்வி அறிவு வாய்க்கப் பெற்றவர்களாகவும், மக்கள் இருக்க வேண்டியது, முதல் தேவையாகும். இந்த ஆரம்பத் தேவை நமது மக்களிடம மிகமிகக் குறைவு. காங்கிரசார் நாடாளும்நிலை பெற்றதும், மக்களுக்கிருந்த மதநம்பிக்கையை, கோலத்தைக் கண்டு காமுறும் அவதார பக்தியை, தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டது தான் முக்கிய காரணமாகும்.

விடுதலைப் போராட்டம் நிகழ்ந்த காலையில், விடுதலை வீரர்களின் வேஷத்தையும் கோஷத்தையும் கண்டும் கேட்டும், மக்கள் அன்பு செலுத்தினர்—ஆதரவு காட்டினர் அவர்களுக்கு. காங்கிரஸ்காரர்களின் ஆளும் திறமையைத் தெரிந்தோ, அறிவாற்றலை அறிந்தோ, வாக்குறுதியை நிறைவேற்றும் வாய்மையாளர்கள் என்பதை அனுபவத்தால் உணர்ந்தோ, மக்கள் தம்வாக்குகளை, அவர்களுக்கு அளித்து, தங்களுக்குச் சொந்தமான ஆளும் அதிகாரத்தை, அவர்களிடம் ஒப்படைக்கவில்லை.

காங்கிரஸ் தலைவர்கள், வெள்ளையர்களை எதிர்க்கும், பஜனைமடங்கண்டனர். இதற்கு முன்னால் திருமால் கூடம்—தேவார மடம்—முதலிய இடங்களில்தாளமும்கையுமாய்க்கூடி இருந்தோர் தேசிய பஜனை மண்டபத்திற்குள் குடிபுகுந்தனர். நாட்டின் பிடி வெள்ளையன் கையில் சிக்கியதால் நாட்டுக்கு விளைந்த கேடுகள் எவை என்று அறிந்துகொண்டு, அதனை நீக்கப் போரிடவேண்டுமென்று துணிவுகொண்டு, திரண்டதல்ல தேசியப்படை. எனவே வெள்ளையனை விரட்டினது கொள்ளையுக்கு இடம் தருவதற்கா என்ற நினைப்பும், மாறி மாறித் தோன்றினாலும், மக்கள் உள்ளத்தில் நீடித்து நிலைத்திருப்பது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது.

புதிய மடத்திற்கு ஆள் சேர்ப்பது எளிதான காரியமன்று. வெறும் மேளதாளச் சத்தத்தினாலேயே மக்கள் கவனத்தை ஈர்த்துவிட முடியாது. வெண்பொங்கலிலே கொஞ்சம் வெண்ணெய் காய்ச்சின நெய்யைக் கூடுதலாகச் சேர்க்கவேண்டும். பக்தர்கள் அப்பொழுதுதான், பழைய மடத்தைச் சிறிது காலம் மறந்து, புதியமடத்தைஒருகணநேரமாவது திரும்பிப்பார்ப்பார்கள்.

வெள்ளையன் வெளியேறினால், வறுமை தொலையும், வயிறார உணவு கிடைக்கும், பசிபோக்கப் பலவும் செய்வோர், என்றெல்லாம், அதிகாரமில்லாத நேரத்தில், ஆள் திரட்டுவதற்கு ஆசைவார்த்தைகள் பலப்பல பகர்ந்தனர் இன்று கனமாகி உள்ளோர்—அன்று தேசிய மடத்துக்குத் தம்பிரான்களாய் இருந்தோர். வெள்ளையன் வெளியேறினான். பதவியில் பகட்டாக அமர்ந்துள்ளார்கள். மக்களுக்குக் கூறிய இன்பவாழ்வு தரப்படவில்லை. ஏதேதோ கூறுகிறார்கள் தங்கள் இயலாமையை வெளிக்காட்ட முடியாத நிலையில், ஏமாற்றம் அடைந்துள்ளனர் மக்கள். எரிச்சலும் கொண்டுள்ளார்கள். எதிர்த்துப் பேசவும்-ஏசவும் கிளம்பியிருக்கிறது. குரலிலேகொஞ்சம் கம்பீரம் தோன்ற, அச்சத்தை மறந்து, அடக்குமுறைகளுக்கு அஞ்சாது. அதட்டிக்கேட்கிறார்கள் ஆளவந்தவர்களை மக்கள். அச்சம் பிறக்கிறது ஆளவந்தார்களுக்கும்—அவர்களை அரியாசனத்தில் அமர்த்தி இருக்கும் காமராஜர்போன்ற 'ஆற்றல்' மிக்கோருக்கும்.

அன்று பரிவு காட்டிய மக்கள் இன்று பழித்துப் பேசுகிறார்களே என்று பதைக்கிறார். அன்று வரவேற்பளித்த மக்கள் இன்று வசைபாடுகிறார்களே என்று கவல்கிறார். அன்று மலர் தூவிய மக்கள் இன்று சுடுசொல் வீசும் நிலைபெற்றுவிட்டனரே என்று சோகிக்கிறார். எவர் மூட்டிய கலகம் இது என்று, எவர் எவர்மீதோ பாய்கிறார். அதேநேரத்தில் அதிகாரம்இருக்கிறது, அடக்கி ஒடுக்கப் படையை ஏவுவோம் என்று பயமுறுத்துகிறார். தேர்தல் வருகிறதே, வெற்றி பெறுவோமா வீழ்ச்சியுறுவோமா என்றும் அங்கலாய்க்கிறார். இதனைஎண்ணும்போதே அச்சம் அதிகரிக்கிறது முன்னிலும் அதிகமாக. திராவிடர் கழகத்தை வலியச் சண்டைக்கிழுக்கிறார். அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசைதவிர நமக்கு வேறு குறிக்கோள் கிடையாது என்ற இந்த விவேகி நம்மீது பழியும் சுமத்துகிறார். ஏதோ ஆளும் அதிகாரம் இவருக்குத்தான் பரம்பரைப் பாத்தியம் என்று நினைத்துக் கொண்டு.

சேலம் தீர்மானத்தை நாம் இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை. தேர்தலில் தலையிடுவது எங்கள் முக்கிய கொள்கை அல்லவென்று எவ்வளவோமுறை நமது தலைவர் கூறியுள்ளார். நாமும் பலமுறை சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் முறையில் ஐயத்திற்கிடமில்லாமல், அதிகாரம் பெறுவதுமட்டும் நமதுலட்சியமன்று என்று எழுதியுள்ளோம். இவ்வளவாயும், ஏனோ இந்த அன்பர் புத்தி பெறவில்லை? பழையபோக்கிலேயே பேசிவருகிறார்—அச்சம் கொள்கிறார்.

நமது லட்சியம், அவருக்குஒரோர் சமயம் அச்சத்தைக் கொடுத்தாலும் அவர் கட்டளை இட்ட வழி ஏவல் செய்ய அதிகாரம்இருக்கிறகாரணத்தால், நம்மை அலட்சியப்படுத்திப் பேச அவரால் முடிகிறது. நமது குறிக்கோளின் முழு உருவத்தையும் அவரால் புரிந்துகொள்ளமுடியாது.

இதற்கு, மேலும் கொஞ்சம் அறிவும் ஆற்றலும் தேவை. காமராஜரேகூட முயற்சி எடுத்துக்கொண்டால் சாத்தியமாகக்கூடும். ஆனால், அவருக்குள்ள அந்தஸ்து, அந்த வழியில் முயல்வதைத் தடுத்து நிற்கிறது. அவர் பெற்றுள்ள அந்தஸ்து நமது கிளர்ச்சியின் விளைவு என்பதை மறந்து, தனது தியாகத்திற்கும் திறமைக்கும் கிடைத்தபரிசு என்றவீண் நம்பிக்கைகொண்டிருக்கிறார்.

தேர்தல் நெருங்க நெருங்க, அவர் இன்று கொண்டுள்ள அச்சமும் இன்னும் மேலும் மேலும் பலமடங்கு வளர்ச்சியுறும். அதுகாலை அவர் பேசும் பேச்சிலும்—மதிகுறைந்து—மமதைமிகும். மனிதப்பண்பை அவர் மறந்துபோனாலும் நாம் ஆச்சரியப்படமாட்டோம் —ஆத்திரம் கொள்ளவும்மாட்டோம். அதுஒன்றுதான் அவரிடத்திலிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடியது என்பதால்!

காங்கிரஸ், இன்று எவரின் திருக்கூட்டமாக இருக்கிறது? பலன் கருதாப்பணி புரிவோர் அதில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? தியாகத்தீயில் குதிக்கத்தயாராக இருப்பவர்களின் தொகை எவ்வளவு? காந்தியாரின் நிர்மாணத் திட்டத்தில் இன்றும் நம்பிக்கைகொண்டு தொண்டாற்றுவோர் எண்ணிக்கை எவ்வளவு? இராட்டையும் தக்ளியும் சுமந்து சேவை செய்யும் சிலர்களின் கணக்கென்ன? இவைகளைக் கேட்காமல் இருப்பதே அன்றோ, இன்று தேர்ந்த தேசபக்தியாகக்கொள்ளப்படுகிறது.

அதிகாரத்துக்கு அலைவோர்—அமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவோர்—அது கிடைக்காது ஏமாற்றத்தால் அழுக்காறுகொண்டு அலைவோர்—உத்தியோகஸ்தர்களை உருட்டிமிரட்டி உதவி பெறுவோர்—லஞ்சத்திலலஜ்ஜையின்றித்தேகத்தை வளர்க்கும் தியாகிகள்—பர்மிட்டுக்கு பல்லிளித்துக்கொண்டு காலங்கழிப்போர்—லைசென்சுக்கு நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு நாடாளுவோரை மிரட்டித்திரிவோர்—காண்டிராக்ட் வாங்கித்தருவதாக ஆசைவார்த்தை கூறி நாணயமற்ற முறையில் காசுக்காக வாழ்வோர்— பணம் தேடிகள்—சதிபுரிவோர் — ஒழுக்கமிழந்தோர்—பொய்யை மெய்யாகக் கொண்டு பிழைப்போர்— ஆக இன்னும் இதுபோன்ற பலர் திரண்டுள்ள சேவாஸ்ரமமாகவன்றோ, இன்று காங்கிரஸ்காட்சிஅளித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வளவும் நாம் இட்டுக்கட்டிக்கூறும் இல்லாதவைகளல்லவே.

'லஞ்சமும் ஊழலும் நிறைந்து இருக்கும் ஸ்தாபனங்களை எல்லாம் கலைத்துவிடுவதானால் முதன் முதல் கலைக்கப்பட வேண்டியவை எமது மத்திய மாகாண அரசாங்கமாகத்தான் இருக்கும். அங்கே பதவிகளில் வீற்றிருக்கும் மந்திரிகள் பிறரிடம் பெட்டிச்சாவியைக் கொடுத்துவிட்டு வெளியேற வேண்டியதுதான்.'

இவ்வாறு கோவை காங்கிரஸ் ஏடு, காலச்சக்கரம் எழுதுகிறது.

'அதிகாரம், அரசியலை ஊழல் மயமாக்கி விடுகிறது என்ற பழமொழி பிரபல்யமாக இருந்து வருகிறது. அதிகாரத்துடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்ட உடனேயே நம்மையும ஒழுக்கம் கெடச் செய்துவிட்டதென்பதை மறுக்க முடியாது. சீரிய ஒழுக்கம் என்ற உயர்ந்த பீடத்தில் தாங்கள் இருந்து வருவதாக இனிக் காங்கிரஸ்காரர்கள் கூறிக்கொள்ளவே முடியாது. ஒழுக்கம் பற்றிய தீர்மானம், காங்கிரஸ் தலைவர்களிலேயே மிகப் பெரிய தலைவராக விளங்கும் பண்டித நேரு உள்பட எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் எச்சரிக்கையாகும். இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானதாகும்!'

ஜெயப்பூர் மாநாட்டில், ஒழுக்கத்தீர்மானத்தின்போது, விலகப்போகும் காங்கிரஸ் செயலாளர் சங்கரராவ் தேவ், இவ்வாறு இடித்து இடித்துக் கூறினர்.

முன்னொரு நாள் வேலூர் சிறையில், தமது ஒழுக்கத்தின் உயர்வை நிலைநிறுத்திக்கொண்ட ஒழுக்க சீலர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பட்டாபி சீதாராமையா, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்துபோய் உள்ள மாசுகளைத் துடைத்துப்புனிதத்தைத் தோற்றுவிப்பதற்காக, 17—1—49-ல் அறிக்கை ஒன்று அனுப்பி உள்ளார்.

"லஞ்சம், திருட்டு வியாபாரம் பற்றி ஏராளப் புகார்கள் இருக்கின்றன ....காரே. (காங்கிரஸ்காரர்கள்) யாராவது சம்பந்திக்கப்படாதவரா யிருந்தால்தான் அவர்களுடைய முயற்சிகள் வெற்றி அடையும். இந்த இரண்டு ஊழல்கள் இருக்கிறது என்று சொல்லுகிறவர்களே, பவுண்டன் பேனா முதற்கொண்டு மோட்டார்கள்வரை லஞ்சம், திருட்டு மார்க்கெட் முதலியவற்றில் ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள்."

லஞ்சம்—கள்ளமார்க்கெட் செய்து வருகிறவர்களே, அதுபற்றிப்புகார் அதிகமாகக் கூறுகிறார்கள் என்கிறார் பட்டாபி.

அமைச்சர்களை அண்டி மிரட்டி, உற்றார் உறவினர்களுக்கு வேலை தேடுவதோடு மட்டுமல்லாமல், போலீஸ் அதிகாரிகளை மிரட்டுவதும், கிரிமினல் வழக்குகளில் குறுக்கிட்டு நீதியையும் நேர்மையையும் குலைக்கும் திருப்பணியிலும் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று பட்டாபியின் அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

'சிவில் அல்லது கிரிமினல் கோர்ட்டுகளில் வழக்குகள் சம்பந்தமாகப்போலீஸ், நீதிபதிகள், நிர்வாகஸ்தர்கள் போன்ற அதிகாரிகளிடம் சிபார்சுகளுக்குப் போகக்கூடாது.'

காங்கிரசார் ஆட்சியில், வேலை கிடைக்காமல் போனாலும், வேறு வசதிகள் பெறமுடியாமல் போனாலும், தொல்லைகள் பல நீக்கப்படாமல் இருந்தாலும், சமநீதியாவது கிடைக்கிறது என்ற நம்பிக்கையாவது பொதுமக்களுக்கு இருப்பது சிறப்புடையதாகும். அந்த நம்பிக்கையையும் நாசம் செய்வதில் முனைந்திருக்கிறார்கள் தேசபக்தர்கள். நீதியையும் நேர்மையையும்கூடத் தியாகம்செய்துவிடலாமென்று துணிவுகொண்டு விட்டார்கள் போலும் தியாகிகள்!

காங்கிரஸ் இன்று அடைந்துள்ள கேவல நிலையையும், அதில் சேர்ந்திருப்போர்களின் போக்கினையும் பட்டாபியின் அறிக்கை விளக்கமாக்கி இருக்கிறது. அது, இதோ.

'போராட்ட சமயத்தில் ஒரே ஐக்யமாக இருந்த காங்கிரஸ், சுதந்திரத்துக்குப் பின் எந்த விஷயத்துக்கும் போட்டி ஏற்பட்டு, இரு கட்சியினரும் மந்திரிகளையும் உத்தியோகஸ்தர்களையும் கண்டு தங்களுக்குப் பிடிக்காத விபரீதமான சிபார்சுகளைச் செய்கின்றனர். சாதாரண விஷயமான

சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் வாங்குவதுபோன்றவை முதற்கொண்டு எல்லா விஷயங்களிலும் மந்திரிகளுக்குள்ளும் நிர்வாகஸ்தர்களுக்குள்ளும் பிளவு உண்டாகும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரி விஷயங்களில் தலையிடாமல் இருந்தால் ஒற்றுமையையும் புனிதத் தன்மையையும் நிலைநாட்ட உதவியவர்களாவார்கள்'

அமைச்சர்களும்—அவர்கள் ஆட்சியிலுள்ள நிர்வாகஸ்தர்களுக்கும் பிளவை உண்டாக்கிவிடுகிறார்கள், சொந்த லாபத்திற்காகக் காங்கிரஸ் தியாகிகளின் மனவளத்தையும் செயல் வண்ணத்தையும் பாருங்கள். பின்னர் கூறுங்கள், நிர்வாகம் ஏன் நிலைகுலைந்து போகாது என்பதை! காந்தியாரின் பெயர் கூறி; விடுதலை பேச்சுப் பேசி, நாடாள வந்தவர்களின் சொந்தக் கட்சியிலே, நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் சகுமாரர்கள் பெருகியுள்ளனர். நாடு சீரழிகிறது, மக்கள் வேதனைவளருகிறது. காங்கிரசாரின் சொந்தப் பண வேட்டைக் காடாகிறது நாடு. அனைவருக்கும் என்று சொல்லப்பட்ட சுயராஜ்யம், சொந்தக் கட்சியினரின் சுகராஜ்யமாக மாறிவிட்டு இருக்கிறது.

ஊழல்மலிந்த ஸ்தாபனமாக—லஞ்சம் பெருத்த நிறுவனமாக—கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் நிரம்பியுள்ள சந்தையாக—காங்கிரஸ் மாறியுள்ளதைக் காமராஜர் காண்கிறார். இச்சூழ்நிலையில் அடுத்த தேர்தல் வருவது அவருக்கு அச்சத்தை ஊட்டுவதாக இருக்கிறது. அலறுகிறார் —அச்சப்படுகிறார்.

'அடுத்ததேர்தலில், காங்கிரஸ், காந்தி, பழையதியாகம் — முதலியவைகளின் பெயர் கூறிப்பொது மக்களை ஓட்டுகேட்க முடியாது'

காமராஜர், இவ்வாறு கோவையில் கூறி இருக்கிறார். காங்கிரஸ் பெயர் கூறினதில் மயங்கிமக்கள் மஞ்சள்பெட்டியை நிரப்பினர். கண்டபலன், பஞ்சம், நாற்றமெடுக்கும் அளவரிசி, புழுத்த சோளம், வண்டு இறங்கிய கோதுமை! காந்தியாரின் பெயரில் காதல் கொண்டு, வாக்களித்தனர் மக்கள். கைமேல் கிடைத்த பலன், கள்ளமார்க்கெட்டில், காங்கிரஸ்காரர்களே காவலாளிகளாக அமர்ந்து இருப்பது தான். தியாகத்தை நம்பி, ஓட்டுப் போட்டனர் மக்கள். தியாகிகள் வெறும் பணந்தேடிகளாக அலைந்துதிரிவதைப் பரிதாபத்தோடு பார்க்கின்றனர். எனவே காமராஜர், மக்களை மயக்க, பழைய முறையை உதறித் தள்ளிவிட்டு, புதியமுறையைக் கையாள முனைகிறார்.

எந்த முறையை இனிக்காமராஜர் கைக்கொண்டபோதிலும், காவியுடையிலும காமிகள் உலவக்கூடும் என்பதையும், கமண்டலத்திலும் கள்ளிருக்கும் என்பதையும், தொழுத கையுள்ளும் கூர்வேல் இருக்கும் என்பதையும், மக்கள் தங்களின் அனுபவத்தின் மூலம் நன்கு புரிந்து கொண்டு உள்ளனர். ஆள்மாற்றமோ, உடைமாற்றமோ, இனியும் மக்களை ஏமாற்ற உதவாது. மக்களின் மனநிலையை நன்கு தெரிந்து கொண்ட காமராஜர், தேர்தல் என்ற உடனே பீதிகொள்வதும், பிறர் கட்சியினர் மீது பழி சுமத்துவதும், எவரும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும். காமராஜருக்கு இதைத்தவிர வேறு முக்கியமான வேலைதான் என்ன இருக்கிறது? இது ஒன்றைத் தவிர, வேறு எந்தப் பணியைத்தான் அவரால் மேற்கொள்ள முடியும்? தெரிந்ததை, தம்மால் முடிந்ததைத் தயக்கம் காட்டாமல் செய்துவருகிறார். காங்கிரஸ் தேர்தலில் தோல்வி பெறுவது உறுதி என்பதற்கு உதவியாகத் தனது கூடா ஒழுக்கத்தினாலேயே, மக்களின் அன்பையும் ஆதரவையும், அது இழந்துவிட்டது என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுவதிலிருந்து நன்கு புலனாகின்றது. காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே தோன்றியுள்ள மாச்சரியம், காங்கிரசிற்கு அடுத்த தேர்தலில் தோல்வியைத் தேடித்தரப் போகிறது. நம்மால் அல்ல அந்த நிலை ஏற்படப் போகிறது.

நமது நோக்கமெல்லாம், எவர் ஆண்டாலும், எப்படி ஆண்டாலும், மக்களுக்குச் சுகவாழ்வு கிட்டுமா என்று பார்த்துக்கொள்வதுதான். திராவிடர் கழகத்தை சம்மந்தா சம்மந்தமில்லாமல் திரித்துக்கூறி, தாக்கித் திரிவதைக் காட்டிலும், காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்க முயற்சி எடுத்துக்கொண்டாலாவது, அரசியல் மரணம் காமராஜரை இன்னும் சில காலத்திற்காவது அண்டாமல் இருக்க இடமேற்படும்.

காங்கிரஸ்காரர்கள் சிறை செல்லப்பழகிக்கொண்ட அளவுக்கு நிர்வாகத்தை நடத்தப் பழகிக்கொள்ளவில்லை என்பதைக் காங்கிரஸ் தலைவர் பட்டாபி அவர்களே ஒப்புக்கொள்கிறார். ஆனால் திராவிடர் கழகத்தார் இதற்கு மாறுபட்டவர்கள் என்பதை அவரும் அவருடையசகாக்களும் உணராதது ஆச்சரியமல்ல. திராவிடர் கழகத்தாருக்கு நாட்டின் நிர்வாகம்தான் முக்கியமேயன்றிச் சிறைசெல்வது அவ்வளவு முக்கியமல்ல. எதிர்க் கட்சியினரின் நிர்வாகக் கோளாறுகளை அம்பலப்படுத்துகிறார்கள் திராவிடர் கழகத்தார் என்பதற்காகவே காங்கிரஸ் சர்க்கார் நம்மவர் சிலரைச் சிறையிலடைக்காவது தாமது ஊழல்களை மறைக்கலாம் என்ற போக்கில் நடந்துகொள்கின்றனர். இதை நமது அன்பர் காமராஜர் நன்கு உணர்ந்ததாலேயே தாம் செல்லுமிடங்களில் எல்லாம் திராவிடர்கழகத்தாரை மக்களுக்கு நினைவூட்டி, அவர்கள் நிர்வாகத்தில் மிகவும் திறமைவாய்ந்தவர்கள் என்ற உண்மையை சொல்லாமல் சொல்லி, அவர்கள் பதவிக்கு வந்துவிட்டால் நாங்கள் இன்னும் ஒருதலைமுறைக்கு அரசியலை எட்டிப் பார்க்கவும் முடியாது போய்விடும், எனவே எங்களைக் காப்பாற்றுங்கள்—எங்கள் பதவிக்குப் பங்கம் வாராதபடி பார்த்துக் கொள்ளுங்கள், என்று பரிதாபங் கலந்த குரலில்பொதுமக்களை வேண்டிக் கேட்டுக்கொள்வதோடு, தங்கள் குட்டுவெளிப்படாதிருப்பதற்காகத், திராவிடர்கழகத்தார் 'துவேஷப் பிரசாரம்' செய்கின்றனர், அவர்களை நம்பாதீர்கள், என்ற திரையால் மறைத்துப் பேசுகிறார் காமராஜர். பேசட்டும். ஆனால் ஒன்றைமட்டும் காமராஜர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். திராவிடர் கழகத்தாருக்குப் பதவிபெறும்வேட்கை சிறிதளவும் இல்லை என்பதை மீண்டும் ஒருமுறை நினைவூட்டுவதோடு, பதவி, சிறை சென்றதற்காகக் கொடுக்கப்படும் பரிசு என்ற கேவல நிலைமாறி, நாட்டு மக்களின் நலன் குறித்துச் செய்யப்படும் நிர்வாகத் திறமைக்கு அளிக்கப்படும் ஓர் உயர்ந்த நிலை என்பதை மக்கள் தங்கள் அனுபவத்தின் வாயிலாக நிரூபித்துக் காட்டும் காலம் தொலைவில் இல்லை என்பதையும் உணரவேண்டுகிறோம்.

✲

பரம்பரை வழக்கு, அவனைத் தடுத்து நிற்கிறது. அவன் உழைப்புக்கும்—அதன் பலனுக்கும்—இடையில் மலைப்பாம்புபோல் பண்ணையார் நிற்கிறார். நாட்டுச் சட்டம் இதற்கு நல்லாசி கூறிக்கொண்டு இருக்கிறது, எனவே பாவாடையின் பண் குடிசையிலே, உழைத்து இளைத்தவன் ஒதுக்கு இடமதிலே, மகிழ்ச்சி மறைந்து, மனக் கலக்கம் மிகுந்து சோகம் கப்பிக்கொண்டு இருக்கிறது. விழாநாளிலும், அவன் வேதனைக் கடலில் மூழ்கி, கரை சேற வழிவகை தெரியாது, கண்களைக் கசக்கி, காலங்கழித்து வருகிறான். நாம் அவனது துன்பத்தைத் துடைத்து, இப்பொங்கல் விழாவை அவனுடைய சொந்த விழாவாக்கும் நற்பணியில் ஈடுபட வேண்டும் இனியாவது.

இத்தகைய விழாக்களால், கிராமத்து மக்களுடன் நகரத்து மக்கள் கலந்து உறவாட நல்லதோர் வாய்ப்பினைத் தேடித் தரலாம். நாம், கிராமத்து மக்கள் என்ற உடனே, அவர்கள் அமெரிக்கா அறிவரோ, ஆகாய விமானம் ஏறுவரோ, மின்சார சக்தியைத் தெரிவரோ, ரேடியோவின் ஆற்றலை உணர்வரோ, என்று கொஞ்சம் தாழ்வாக, அவர்களை மதிப்பிட்டுக் கொள்ளுகிறோம். ஆனால், அவர்கள், நம்மை அணுகி, சீரகசம்பாவிற்கும் சம்பாவிற்கும் உள்ள வேற்றுமை தெரியுமோ, கார் எத்தனை காலத்துப் பயிர்? களர் நிலத்தில் கரும்பு பயிராகுமா? ஏரியிலே உள்ள தண்ணீர் எவ்வளவு காலத்துக்குப்பாயும்? பரம்படிப்பது எதற்கு? நாற்று நடுவது எப்படி? விதை தூவத் தெரியுமோ? என்று கேட்டுவிட்டால், அனைத்தும் நாம் அறிவோம் என்று ஆணவம் கொண்டிருக்கும் நமது முகத்தில், எது தோற்றமளிக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது நல்ல காலம்—அவர்களுக்கு—கிராமத்தவர்களுக்கு—இன்னும் அந்தத் துணிவு பிறக்கவில்லை—அந்த எண்ணம் பிறந்துவிட்டிருந்த போதிலும்!

உணவு முக்கியமானது — நாம் அனைவரும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. ஜீவாதாரமான இதைபற்றி நாம் அறிந்திருப்பதோ பூஜ்யம். வேறு, பேசுகிறோம் பலப் பல. இத்தகைய விழாக்களினால், இத்துறையில் நமக்குள்ள குறைபாட்டினை, கிராமத்து மக்களுடன் நெருங்கிப் பழகுவதால், களைந்து கொள்ள ஏதுவாகும். மாட்டுச் செல்வம் நாட்டுச் செல்வமாகும். மேல்நாடுகளில் ஒரு பசு பத்துப் படிக்கும் அதிகமாக பால் கொடுக்கின்றது. அங்கு பசு தெய்வமாகக் கொண்டாடப்படுவதில்லை. இங்கு பசு நமக்குத் தெய்வம். கும்பிடுகிறோம், கொண்டாடுகிறோம். அது தரும் பாலோ ஒரு குழந்தைக்கும் போதுமானதாக இருப்பதில்லை. இந்தப் பக்கத்து மக்களிடம் நல்ல பசுக்களை வளர்ப்பவர்களுக்கு அடுத்த ஆண்டு ஒரு ஐம்பது ரூபாய் பரிசு தருவதாக இன்றே அறிவித்துவிடல் வேண்டும். அடுத்த ஆண்டு பாருங்கள் இந்த வட்டாரத்தில், பசு வைத்திருக்கும் கிராமத்து மக்கள் எவ்வளவு கண்ணும் கருத்துமாகப் பசுக்களைக் காப்பாற்றுகிறார்கள் என்று. இதுபோலவே, விரைவாக அறுவடை செய்கிறவர்களுக்குப் பரிசு, நிலத்தை நன்றாக உழுபவர்களுக்குப் பரிசு, இன்னும் இது போன்ற பல வகைகளிலும் பரிசு வழங்க நமது தோழர்கள் முனைந்தால், அடுத்த ஆண்டிற்குள்ளாக இப்பகுதியில், பலவிதத் துறைகளிலும் கிராமத்து மக்கள் முன்னேற்றம் பெற மார்க்கம் பிறக்கும்.

நாம் இங்கு விழா கொண்டாடுகிறோம். ஆனால் இங்கு வேலைகிடைக்காமல், வாழ வேறுவகை தெரியாமல், வெளிநாடு சென்றுள்ள தமிழர்கள் நிலை இன்று எவ்வாறு இருக்கிறது? இந்த நாளில் நாம் கொள்ள முயற்சிக்கும் சிறு இன்பமும், வெளிநாடுகளில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எண்ணினால், துன்பத்தால் மூழ்கிவிடுகிறது. தென்னாப்பிரிக்கா டர்பன் நகரில், அங்குள்ள ஆப்ரிக்கர்கள், நமது தமிழர்களை, தீயிலிட்டு வேடிக்கைப்பார்க்கின்றனர். சித்திரவதை செய்கின்றனர். சொத்துக்களைச் சூறையாடுகின்றனர். அழவும்சக்தியற்று அலறுகிறார்கள். இக்கொடுஞ்செயலுக்கு எவர் காரணம்—எவர்மீது பழி சுமத்துவது என்பதில் காட்டப்படும் அக்கரை, அங்கு சென்றுள்ள தமிழர்களை தாய் நாட்டிற்கு வாருங்கள் என்று அழைப்பதில் இருக்கக் காணோம். இன்று அவர்கள் கூலிகள் அல்ல. அரசியல் விடுதலை பெற்றுள்ள இந்தியத் துணைக்கண்டத்தின் பிரஜைகள் அவர்கள். புதிய நிலை—புதிய தொல்லைகளையும் தோற்றுவிக்கிறது. சிங்களத்திலே தமிழர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். மலாயாவிலும் நமதுதமிழர்கள் நிலை இதுதான். பர்மாவிலும் வேறு அல்ல. அவர்களை — நமது தமிழர்களை, மீண்டும் தாய்நாடு ஏற்றுக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு நாம் அனுப்புவோம் அன்பழைப்பு. இதனை, முன்னிருந்து செய்யவேண்டிய பொறுப்பு ஆளவந்தார்களுடையது. அவர்கள், இதுவிஷயத்தில் கவலைக்குறைவாக இதுவரை இருந்துவிட்டார்கள். இனியும் இவ்வாறே இருப்பார்களானால், இறுதியாக எச்சரித்துவிட்டு வெளிநாடுகளில் வேதனைபட்டுக் கொண்டிருக்கும் தமிழர்கள் அனைவரும் தாய்நாடு வந்துசேரும்வரை நாம் பணி புரிவோம். இதுவே நமது எதிர்காலப் பணியாக இருக்கட்டும் இதுவே, எனது பொங்கல் செய்தி" என்று பேசிமுடித்தார்.

21—1—49

புலவர் கோவிந்தன், தலைமை தாங்கி, முன்னுரையாக முக்கிய சொற்பொழிவாளரின் தொண்டினை சிறப்பித்துச் சில கூறினார்.

தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதன் பேசினார்.

"நாம் இந்த அறுவடை விழாவை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழையே கற்று, தமிழிலேயே பேசிப்பழகி, தமிழ்ப்பண்பு பெற வேண்டுமென்ற உறுதியினை நாம் மேற்கொள்ளவேண்டும். எல்லாத் துறைகளிலும் ஆரிய ஆதிக்கம் இன்று தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கிறது. தமிழர்களுக்கு ஆகாத இந்த ஆரியம் அழிக்கப்பட்டே ஆகவேண்டும். சுதந்திரத் தமிழ்நாடு காண ஒவ்வொரு தமிழனும் முனையவேண்டும். முதலில் தான் தமிழன் என்ற உணர்வும், இரண்டாவதாகத்திராவிடன் என்ற நினைப்பும், மூன்றாவதாக இந்தியன் என்ற எண்ணமும், நான்காவதாக ஆரியன் என்ற கோட்பாடும் தமிழன் உள்ளத்தில் இடம் பெறவேண்டும். அன்றுதான் தமிழன் தன்மானமுள்ள தமிழனாக ஆகமுடியும்.

தமிழ் இசை இயக்கம் தோற்றுவித்தகாலை, தமிழிலே இசையிடையாது என்று தவறாகத் தருக்கித்தனர் சிலர். தோல் கருவி துளைக் கருவி—நரம்புக்கருவி என மூன்று வகையாகப் பிரித்து நமது முன்னோர்கள், இசை இன்பம் நுகர்ந்து வந்தனர் என்பதனை, தனித்தமிழ்

இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழுக்குச் சிறப்பெழுத்தாகக் கூறப்படும் 'ழகரம்' மூன்று இன இசைக் கருவிகளிலும் சென்று தங்கி இருப்பது குறிப்பிடத் தக்கது. அதாவது, யாழ், மழு, குழல் எனும் மூன்று வகைக் கருவிகளிலும் ழகரம் இடம்பெற்றிருப்பது, தமிழர்க்குத் தனி இசை உண்டென்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்—மொழி எனும் இருசொற்களிலும் ழகரம் இடம்பெற்றிருப்பதும் சிந்திக்கத்தக்கது.

நமது சிறந்த தமிழ்மொழியை வடமொழி கெடுத்து வெவ்வேறு மொழியாக்கிற்று, எஞ்சிய தமிழை ஆங்கிலம் சிதைத்தது. இதுவும் போதாதென்று இன்று இந்தி நுழைக்கப்படுகிறது, இருக்கும் தமிழையும் சீரழிக்க. இந்தப் பேராபத்திலிருந்து தமிழைக் காப்பாற்ற, தமிழர் தவறுவாராயின் எதிர்காலத்தில் தமிழ்ப் பண்புகெட்டு, தமிழ் என்ற மொழியும் தரைமட்டமாகி விடும். தமிழர்கள் ஒன்று திரண்டு தமிழைக் காக்க நல்லதோர் வலிமையுடைய முன்னணி அமைக்கவேண்டும். இதுவே நான் தமிழர்களை வேண்டிக்கொள்வது!" என்று பேசினார்.

தலைவர் முடிவுரையில் 'திராவிட நாடு' கேட்பதற்கும், அதற்காகக் கூறப்படும் காரணங்களுக்கும் 'தமிழ்நாடு' கேட்கப் படுவதற்கும், அதற்காகக் காட்டப்படும் காரணங்களுக்கும், அடிப்படையில் எந்தவித வேற்றுமையும் கிடையாது என்றும், மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்குத் தான், இந்த இரு பிரச்னைகளுக்கும் முரண்பாடு இருப்பதாகத் தெரியுமென்றும் குறிப்பிட்டுவிட்டு, மனமிருந்தால், இருசாராரும் ஒரே முன்னணி அமைத்து, ஆரியத்தை எதிர்க்க இடமேற்படுமென்றும் கூறி முடித்தார்.

23—1—49

சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில 'விடுதலை' ஆசிரியர் எஸ். குருசாமி அவர்கள்,

"நம் இயக்கத் தோழர்கள் பேசுவதுபோல நடக்கவும்பழகிக்கொள்ள வேண்டும். நாம் அம்மாதிரி நடக்காவிட்டால், பிற கட்சியினர் கேலி செய்வார்கள் என்பது மட்டுமல்லாமல், நமக்கும் அவர்களுக்கும் அடிப்படை வேற்றுமை இருக்கிறது என்று நாம் கூறுவதற்கும் அர்த்தமில்லாமல் போய்விடும்.

நாம், பெண்களுக்குச் சமத்துவம் வழங்கவேண்டும். அவர்களை, நமது அடிமைகள் என்று கொள்ளுதல் குற்றமாகும். பெண்களும் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் ஊக்கம் குன்றக்கூடாது. அன்றுதான் நாடு சீராகும்" என்று விரிவாகப் பேசியபின்னர், தலைவர் முடிவுரையுடன் பொங்கல் விழா இனிது முடிவுற்றது.

5-ம் பக்கத் தொடர்ச்சி

15 நாள் சிறை

15—9—48-ல், தூத்துக்குடியில் அடையாள மறியலில் கைது செய்யப்பட்டு 15 நாள் காவல் தண்டனை பெற்ற தோழர்களின் விவரம் வருமாறு:—

தோழர்கள்: கெ. வி. கெ. சாமி, மு. சண்முகவேல், பி. ஞானயுதம், எஸ். திரவியம், பி நடராசன, ஆர். எஸ். சுப்பிரமணியம், ஆர். அருணாசலம், பி.ஞானக்கண், பு. அந்தோணி முத்து, வ. பொன்னுசாமி, க. பொன்னுசாமி, ஆ. தேவசகாயம், ப. மருதப்பன், கு. மாரியப்பன், ச.சி. குருசாமி, ஆ. செல்லையா, குழந்தை வேலு, பா. மசானமுத்து, மு. பாலையா, பொ. தங்கசாமி, எஸ். கே. பி. முத்து. சு. பச்சைபெருமாள், வே. பாண்டியன், கெ. எஸ். கோபால்ராஜ், வி. சேகரன், மு. பால்பாண்டி, கெ. தாளமுத்து, து. இரத்தினம், ஆ. வேலாயுதம், பி. பால், ஆர். ரத்தினம, து. தங்கராஜன், ரா. அருணாசலம், ஆர்.எஸ். மணி, எஸ். வி. காசிராசன், பி. கிருஷ்ணன், டி. சிதம்பரம், ம. ஆறுமுகம், செ. வேல்சாமி, மு. அத்திசாமி, வி. பெருமாள், ஆர். முனுசாமி, அ. காசி, ஆர். காசியப்பன, எம். ரத்தினம், தனுஷ்கோடி, மா. தங்கவேல், பெ. மூக்கன், ம. காளிமுத்து, எஸ். துரைசிங், எஸ். முனியப்பன், த. செல்லையா, பி. கெ. சௌந்தர், ஆ. பழனிசாமி, பி. முத்துமாலை, நா. அருணாசலம், பொ. அருணாசலம், எஸ். எஸ். வாசன், வ. ஆத்திமுத்து, ஜோ. செல்லப்பாண்டி, சா. காளிமுத்து, ஈ. நல்லதம்பி, வ. பொன்னுசாமி, வ. திரவியம், பி. அருணாசலம், வ. குருசாமி, அ. பொன்னையா, ஆர். பெருமாள், த. பாலையா, ஜெ. டபுள்யு. செல்வராஜ், செ. குமாரசாமி, சி. நயினார், பெ. பொன்னையா, க. நடராசன், கே. சாமிநாதன், ப. ஜயம்பெருமாள், க. அருணாசலம், எஸ். துரைசாமி, எம். காசி, எஸ். ரத்தினசாமி, பி. தங்கராஜ், அ. இளையபெருமாள், எம். ஜெயராஜ், எம். காசி, ஆ. நாராயணன், வி. பொன்னுசாமி, எஸ். தங்கப்பன், யு. ரத்தினம், கே. துரைசாமி, எஸ். சாமுவேல், ஆ. ராமகிருஷ்ணன், மு. ஆதி இத்துடன் பாண்டு வாத்தியம் முழக்கி, சென்ற மூன்று தோழர்களும காவலில் சேர்த்து வைககப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர். (தொடரும்)

ஈரோட்டில் உதவி நாடகம்

மறைந்த பழைய கோட்டைப் பட்டக்காரர் அவர்கள் பெயரால் காங்கயத்தில் கட்டப்படும் பள்ளிக்கூடத்திற்கும், அங்கு அமைக்கப் படும் 'அர்ச்சுனன உணவு விடுதி'க்கும் உதவி நிதியாக 23—1—49-ல் ஈரோட்டில் ஸ்டார் டாக்கீசில் 'சந்திரமோகன' என்ற நாடகத்தை அண்ணாத்துரையும் தோழர்களும் நடித்தனர். பெரியார் நாடகத்துக்குத் தலைமை வகித்தார். நாடகத்தின் மூலம் வசூலான தொகை ரூபா 7000—0—0 மும் பெரியார் அவர்களால் அளிக்கப்பட்ட நன்கொடை ரூபா 500—0—0 ம் மேற்படி பள்ளிக்கூட உதவி நிதிக் கமிட்டித் தலைவர் தோழர் V. C. சுப்பய்யா அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. தோழர் N E. பாலகுருவின் நன்றிகூறலுடன் நாடகம் இனிது முடிந்தது.

வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு

4—2—49 காலை எட்டுமணியளவில் சென்னை செலக்ட் டாக்கீசில் தோழர் , எம் ஏ. கிருட்டினசாமிக்கும், தோழர் வ. தணிகாசலம் அவர்கள் புதல்வி சரசுவதிக்கும் தோழர் அண்ணாத்துரை தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அன்பர்கள் வருக.

4—2—49 மாலையில் பிரசிடென்சிக் கல்லூரியில் அண்ணாத்துரை பேசுவார்.

ஆளவந்தார்களுக்கு அர்ப்பணம்

மக்கள் ஆட்சி என்பது, அதிகாரத்தில் உள்ளவர்களின் அடக்குமுறைகளின்பலத்தால்அமைவதன்று விதவிதமான அடக்கு முறைகளின் துணைகொண்டு நடந்துவரும் ஆட்சி, நாட்டுமக்களின் விருப்பத்திற்கேற்ப அமைந்ததோர் நல்லாட்சி அமைப்பும் ஆகாது. மக்களின்குரல், ஆட்சி மன்றங்களில் அமர்ந்திருப்போரின் செயல்களில் பிரதிபலித்தல் முறையாகும். தேர்தல் காலங்களிலே, கொடுத்த சிலபல வாக்குறுதிகளை, மக்கள் நம்பி—தீமைதொலைந்து நலம் பல ஏற்படும் என்று எதிர்பார்த்து, அன்போடு தங்கள் வாக்குகளை, நமது ஆளவந்தார்களுக்கு அளித்தனர். நம்மவர், ஆட்சி அமைத்தால் புதுவாழ்வுபூத்து, நாட்டில் உள்ள பல கேடுகளும் துடைக்கப்பட்டு, பொன்னுலகமாக நமது நாடு ஆக்கப்படும் என்று அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயர் ஏற்பாடான, சட்டப்புத்தகங்களில் உள்ள, பற்பல விதமான அடக்குமுறைக் கட்டங்கள் அறவே அகற்றப்பட்டு, ஆளும் அதிகாரம் பெற்றிராத பொழுது பரிவாகப்பேசப்பட்ட அன்புமுறை, ஆட்சிப்பீடத்திலிருந்துகிளம்பும் கட்டளைகளில், கலந்திருக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். அடக்குமுறைகளின் அவலட்சண சொரூபம், அன்று, ஆளவந்தார்களின் சொற்களில் மறைந்து இருந்தது என்பதை மக்கள் அறியார். அகிம்சை—சத்தியம் என்ற இரு உயர்ந்த பண்புகளின் இருப்பிடம் நமது ஆளவந்தார்கள் என்று, எண்ணத் தொலையாத மக்கள் நம்பிக் கொண்டு, நாட்டின் உரிமையை, அவர்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர். ஆனால், இன்று நாம் மட்டும்அல்ல, நல்லாட்சியில் நாட்டமுடைய நல்லறிஞர்கள் பலரும், ஆளவந்தார்களின் போக்கிலே, இன்று எதனைக்காண்கின்றனர்?

சத்தியம்—ஆளவந்தார்களின் செயலில் ஒருதுளியும் இடம்பெறவில்லாததோடு, சொற்களை விட்டும் தொலைந்து நீண்டநாள் ஆகிவிட்டது என்ற முடிவிற்கே வரவேண்டியதாக இருக்கிறது! அகிம்சை-ஆட்சிக்கலை எனும் திரையிட்டு, தினம் தினம் சித்திரவதை செய்யப்படுகிறது! உண்மையான சத்யாக்கிரகிக்கு இருக்கவேண்டிய பண்புகளில் சிறப்பானது என்று கூறப்பட்டு வந்த சகிப்புத்தன்மை, ஜனநாயகக் கோட்பாட்டிற்கு இன்றியமையாது இருக்க வேண்டிய அந்த உயர்ந்த பண்பாடு, ஆளவந்தார்களாக உள்ள இவ்வாத்மார்த்தவாதிகளிடம், எள்ளளவது செயலில் இடம் பெற்றிருந்ததுண்டா என்று சாதாரணமானவர்களும், ஐயம் கொள்ளுகின்ற அளவிற்கு, ஆளவந்தார்கள் நடந்துவருகின்றார்கள்! அன்பு,—பிறருக்கு போதிப்பதற்குத்தக்கதோர் பொருளாக இருக்கிறதேயன்றி, நித்திய வாழ்க்கையில் மேற்கொள்வதற்கு ஏற்றதான் குறிக்கோளாகக் கொள்ளவில்லை, மன்றமேறியுள்ளோர்! அதிகாரம்—அதனைக் காட்டிக்கொள்ளவும், காப்பாற்றிக் கொள்ளவும், தேவைப்படும் .மக்கள்அன்பு ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டு, ஆங்கிலேயர் வகுத்துவிட்டுப் போன அடக்குமுறைச் சட்டங்களை, ஆளவந்தார்களாவதற்கு முன் தங்களாலேயே கண்டிக்கப்பட்ட அவைகளை, அவைகளின் கொடுமைகளுக்கு ஆளானதன் விளைவாகவே மன்றமேறும் மாண்பு தங்களுக்குக்கிடைத்தது எனும் அனுபவ உண்மையையும் மறந்து, தேடித்தேடி, ஆங்கிலேயர்கள் மக்கள்மீது வீச அஞ்சிய அடக்குமுறைகளை, நமது ஆளவந்தார்கள், ஆட்சிக்கு அரண் செய்யும் அருமையான சாதனங்களாகக் கொண்டுள்ளனர். வேறு எக்கட்சியினரும் — எந்நாட்டிலும் — இதுவரை பெறமுடியாத அளவிற்கு, சொந்தத்தில் பாட்டு பெறமுடியாப் பிணைப் பெற்றும், அது கரும் போதனையைச் சொந்தத்தில் நனகு பயின்றும், அடக்குமுறைகளுக்குத் தூபமிடும் கோணல் மதியினை, நமது ஆளவந்தார்கள் பெற்றுவிட்டு இருப்பது, இன்று நாம் காணும் விசித்திரமாகும்!

அடக்குமுறைகளை வீசிய ஏகாதிபத்தியத்தைக் கண்டித்து ஏற்றம் பெற்றுள்ள இவர்கள், ஏகாதிபத்தியத்தை வீழ்ச்சியுறச் செய்தது தாங்கள் அடக்குமுறைகளுக்கு ஆளானதுதான் காரணமென்று பெருமையாகப் பேசிக்கொள்ளும் இவர்கள், ஏகாதிபத்தியத்தையே சீர்குலைத்து விட்ட அடக்குமுறைகளை ஏவலுக்கு அழைப்பது, எதுபற்றியோ, நாம் அறியோம்.

நமது ஆளவந்தார்களின் செயலால் நாட்டு மக்களுக்கு நாசம் சம்பவிக்கும் என்று நாம் மனமார நம்புகிறோம். அதற்கான விளக்கங்களை, சிறிதளவு விவேகம் உள்ளவரும் புரிந்துகொள்ளும் முறையில், பொதுக்கூட்டங்கள் மூலமும், மாநாடுகள் மூலமும், பத்திரிகை வாயிலாகவும், எவரும் மறுத்துக் கூறாத நிலையில், கூறி வருகிறோம் விளக்கிக் கூறினோம் — ஆளவந்தார்கள் கோளாக் காரர்களாக இருப்பது, முன்னாள் முதற்கொண்டா, புதிதாக ஏற்பட்டதா, என்று சந்தேகம் ஏற்படும் அளவிற்கு, நமது வாதங்களை அலட்சியப்படுத்தினர். கேலியும்கிண்டலும் செய்த பின்னர் நமது குரல், மக்களின் மனைகளிலும் மனங்களிலும் நுழைந்தன. இதன் பலனாக, ஆளவந்தார்கள்மீது மக்கள் கொண்டிருந்த மயக்கம் சிறிது சிறிதாகத் தெளிய ஆரம்பித்தது. அதே நேரத்தில், மக்களிடம் தோன்றியுள்ள புதிய நிலை, ஆளவந்தார்களின் உள்ளத்தில் அச்சத்தை ஊட்டியது. மெள்ள மெள்ள, அது, வளர்ந்தது. அடக்குமுறைகளின் துணைகொண்டுதான், அந்த அச்சத்தைப் போக்கிக் கொள்ள — மறைத்துக்கொள்ள — மனச்சாந்தி பெற — முடியுமென்ற முடிவிற்கு வந்துவிட்டனர். நமது கூட்டங்களுக்குத் தடைவிதிப்பதன் மூலம், மக்கள் செவிகளில் நமது குரல் புகமுடியாமல் செய்துவிடலாம் என்று தீர்மானித்துக் கொண்டனர். நாடெங்கும் 144, அதன் விளைவாயிற்று. மக்களிடம், தடையை மீற வேண்டுமென்ற முனைப்பு உருவாயிற்று. தடிகொண்டு தாக்குவது— மக்களின் குருதி மண்ணைச் சேறாக்கும் வரையில தடிக்குப் பணி தருவது, தரும வழி என்று தீர்மானித்து விட்டனர் ஆட்சியாளர். குடந்தை, அதிகார ஆணவத்தின் இருப்பிடமானதைக் கண்டோம்.

நாம் நமது உள்ளத்தைத் திறந்து பேசியபோது, நாம் அலட்சியம்செய்யப்பட்டோம் ஆளவந்தார்களால். நமது கோரிக்கையின் நியாயத்தைத் தெரிந்துகொண்டு மக்கள் தொகை பெருகவும், அதனால் நமது முகாம் விரிவாகவும் கண்ட ஆளவந்தார்கள் உண்மையைத் திரித்துக்கூறி, நமது

கோரிக்கையைக் குலைத்துவிடும் 'நற்பணியில்' ஈடுபட்டனர். மேலும் நமது அணி பெருத்தது—வன்மையுடையதாகவும் மாறியது. ஆளவந்தார்களின் கருத்திலே மறைந்து கிடந்த கடுவிஷம் அடக்குமுறை உருவிலே நாட்டில் நடமாடியது. இதற்குப் பின்னரும் நமது அணி சீர்குலையாமல் மேலும் மேலும் வளர்ந்துவருவதைக் கண்டனர்—சிறையிலே தள்ளினர் பலரை. ஆனாலும், நாட்டுமக்களுக்குக் கூறிவந்தனர், சிறையில் நமது தோழர்களைத் தள்ளவில்லை என்று! பிரசார பீரங்கி, தங்கள் கைகளில் பெரிதும் சிக்கி இருக்கின்றன என்ற எண்ணம்தான், மனமறிந்து பொய் கூறும் துணிவினை ஆளவந்தார்களுக்குக் கொடுத்தது. சத்தியம், வெட்கத்தால் தலை குனிகிறது. தனது முன்னாள் அர்ச்சகர்களின் புதிய போக்குக் கண்டு!

இதோ சிறைசென்றவர்களின் தொகை. சத்தியக் காப்பாளர்களின் அன்பினால், நாட்டுமக்களுக்குக் கிடைத்துள்ள நல்வாழ்வு. நாணயம் இருக்கிறதா நாடாளுவோர் உரையிலே என்பதை, நமக்கல்ல—நாடாளுவோரின் நலனெண்ணத்திற்குக் கூறட்டும் — நேர்மைத் திறமுடையோர் — நெஞ்சில உரமுடையோர். இது முடியவில்லையானால், ஆளவந்தார்களின் வாய்மையின் தரத்தையாவது தெரிந்துகொள்ளட்டும், அதுவே நமக்குப் பெரிதும் திருப்தி தரக்கூடியது.

* * *

10—8—48-ல் திருச்சியில் நடைபெற்ற இந்தி ஆதிரிப்புக்கூட்டத்தில் கேள்வித்தாள் கொடுத்ததற்காகத் தோழர் இராஜம்பிள்ளை கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

2 நாள் சிறைவாசம்

10—11—48ல் தர்மபுரியில் கல்வி மந்திரியாருக்குக் கருப்புக்கொடி காட்டினதற்காக 11 தோழர்கள்,

இராஜலிங்கம், இராஜாமணி, கோவிந்தராஜு, குட்டியப்பன், டி. கே. முத்துக்கிருஷ்ணன், அப்பாவு, பழனியப்பன், இராஜன், தியாகராஜன், முனியப்பன், ஆகியவர்களுக்கு 2 நாள் சிறைவாசம் தரப்பட்டது.

2 மாத தண்டனை

குடந்தைப் போரில் தடையை மீறியதாக கி. பி. கோ. 188-வது செக்ஷன்கீழ் குற்றஞ் சுமத்தப்பட்டு தோழியர் மணி அம்மையாருக்கும் தோழர் N. V. நடராஜனுக்கும், இரண்டு மாதம் சிறை தண்டனை அளிக்கப்பட்டது. முறையே வேலூர் சிறைக்கும், திருச்சி சிறைக்கும் அனுப்பப்பட்டனர்.

3 மாத தண்டனை

குறிஞ்சிப்பாடியில், அடக்குமுறை நாள் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்ட தோழர்கள்,

கே. டி. பி. பழனியப்பன், கலாமணி, க. நாராயணசாமி, பொ. இராசாராம், கா. குப்பன், பொ. தங்கராஜ், ப. பரமசிவம், இரா. சாம்பசிவம், பொ. கோவிந்தராஜன், ப. கோவிந்தன், மு. சக்ரபாணி, க. நாராயணசாமி, என். கிருஷ்ணன், ஆகிய 13 தோழர்கள் மீது, தடையுத்தரவைமீறியதாக வழக்குத் தொடரப்பட்டு, முன்கூறிய மூன்று செக்ஷன்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு, மொத்தத்தில் 3 மாத வெறுங்காவல் தண்டனை தரப்பட்டு, திருச்சி சிறைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

6 மாதம் தண்டனை

1—1—49-ல் நடைபெற்ற அடக்குமுறைக் கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்ட பண்ணுருட்டி தோழர்கள்; –

நா. நடேசன், நா. இராசவேல், வே. இராமானுசன், ப. மாணிக்கவேல், பா. சானகிராமன், குட்டியப்பன், வெ. சந்தானம், ஆகிய எழுவர் மீதும், 144 தடையுத்தரவை மீறினதாகக் குற்றஞ் சுமத்தி, இ. பி. கோ. 143, 145, 188, ஆகிய பிரிவுகளின் கீழ், ஒவ்வொன்றுக்கு 6 மாதம் வெறுங்காவல் தண்டனையும், அதனை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டனர். திருச்சி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒருவாரம் சிறை

23—8—48-ல் கவர்னர் ஜெனரலுக்கு ஸ்டேடியம் மைதானத்தில் கருப்புக்கொடி காட்டினதற்காக 59 தோழர்கள் கைதாகி, ஒருவாரம் சிறைத்தண்டனைபெற்றனர்:—

கோ. பெருமாள் (தொண்டைமண்டல உயர்நிலைப்பள்ளி) எஸ். விஜயன் (எழும்பூர்) பி. வி. ரோஸ் (கார்ப்பரேஷன் உயர்நிலைப்பள்ளி) எம். முனுசாமி (சூளைசெங்குமேடு) கே. ரகுபதி (திருவல்லிக்கேணி) ம. தி. ஜனகிராமன் (மண்ணிவாக்கம்) எம். ஆறுமுகம் (மயிலாப்பூர்) கிருஷ்ணசாமி: து. சகதீசன், மு. பாலசுப்ரமணியம் (பிமண்ணன் பேட்டை) டி. எட்வர்ட்ஸ், சி. ஆர். கண்ணன்: (வண்ணாரப்பேட்டை) என். ராஜகோபால், (கண்டையார் பேட்டை) சி. எஸ். திராவிடமணி ஏழுமலை (மீனாட்சியம்மன்பேட்டை) சி. நாராயணசாமி, (சிந்தாதிரிப் பேட்டை) பி. பாலசுப்பிரமணியம், (சுந்தரபுரம்) கே. செல்வராஜ் (ராயபுரம்) ரங்கபாஷ்யம், (சிவராஜபுரம்) எம். துலுக்காணம், (ராசிபுரம்) ஏ. கோவிந்தசாமி, (அயனாவரம்) தமிழன்பன் சாது (ஆறுமுகனேரி) ஏ. என். சாமி, (ஜாமபஜார்) முத்து, எம். முனுசாமி. ஆர். மதியழகன், பி. சுப்பிரமணியம், (எழும்பூர்) ஆர். கே. ஜார்ஜ், சி. ஜெயராமன், எஸ் எ. விஜயகம், சண்முகம், (அலெக்சாண்டர் நகர்) ராதாகிருஷ்ணன், (புலியூர்) பி. துரை, (மூலக்கொத்தளம்) எஸ். எம். முருகன் (சீனிவாசநகர்) எம். ஏ. முருகேசன் பி. வி. கோவிந்தசாமி, கே. இளங்கோவன், (அரும்பாக்கம்) எஸ். சி. ஆனந்தம், (பார்க்டவுன்) பி. சேமன், (கிரேநகர்) எஸ். பத்மநாபன், (பெரியமெட்) ஆர். நாராயணசாமி, (எழும்பூர்) ஜெகநாதன், (ஸ்டான்லி நகர்) துரைசாமி, இராமசாமி, கே. டி. ஜெயராமன், (ராயப்பேட்டை) ம. பொ. கண்ணன், எஸ். வி. சீனு, வி. பட்டு, (கொச்சிக்குப்பம்) ஆர். பஞ்சநாதன், ஆர். கோபால், வி. சண்முகம், ஆர். பாண்டுரங்கன், (கொத்தவால்சாவடி) சி. ஜோசப், (எருக்கமாநகர்) மு. இன்பக்கடல், (கீழ்ப்பாக்கம்) எஸ். பத்மநாபன், (பெரியமெட்) ஜி. சம்பத்குமார், எம். பாலசுந்தரம்.

6 நாள் சிறை வாழ்வு

22—8—48-ல் சென்னையில் பெரியார் இல்லத்தில் நடைபெற்ற நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திற்குச் சென்றிருந்த, உறுப்பினர்கள் பார்வையாளர்கள் ஆகிய 93 தோழர்களையும் கைது செய்து, 6 நாள் சிறையில் வைக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டனர்.

பெரியார், வேதாசலம், சி. டி. டி. அரசு, என். வி. நடராஜன், மணியம்மையார், நீலமேகம், அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், மணி

மொழியார், ராமச்சந்திரன், சி. கணேசன், சேலம் ஜகதீசன், கே. ஜே. குப்புசாமி, அழகிரிசாமி, நீடாமங்கலம் ஆறுமுகம், டாக்டர் தர்மாம்பாள், ராமாமிர்தம்மாள், சேலம் சித்தையன், பெத்தாம்பாளையம் பழனிசாமி, சி. வி. எம். அண்ணாமலை, மதியழகன், மோகனராசு (வேலூர்) தங்கராஜ், செழியன், கே வி. கே. சாமி, வி. குருசாமி, திருநாவுக்கரசு, எ. பி. சனார்த்தனம், கோவிந்தசாமி, முனுசாமி (விருத்தாசலம்) மொய்தீன், பராங்குசம், இ. வி. ஏ. வள்ளிமுத்து, சோ. சு. அருணாசலம், ஆளவந்தார், ஆயிடாமினிக், அய்யாசாமி, ராஜமாணிக்கம். பி. வி. பத்மநாபன். எஸ். குருசாமி, பி. டி. தனபால், ஆர் நடேசன், புலவர் மாணிக்கம், புலவர் கோவிந்தன் டி. பி. முருகேசன் (தஞ்) பி. தங்கவேலு (தஞ்) பொன்னுசாமி (தஞ்) குருநாதன் எஸ். ராஜகோபால் (தஞ்) சின்னத்துரை (கோ) எம். ரெத்தினம் (தூத்து) எஸ். நடராசன் (தூத்து) தங்கப்பழம் (தூத்து) சோ. கோ. முருகையன் (செ) கண்ணம்மாள். சீதாபதி, பி. முருகேசன் (புலியூர்) கே. பாலையா (புலியூர்) எஸ். மயில்வாகனம், இரா. ராஜகோபால், சீதாராமன், சங்கரய்யா, வி சித்தையன், ஜே. கே. வேலாசாமி, பி. எஸ். கிருஷ்ணன், எம். பி. நடராஜன், பி. மாணிக்கம், பி. கே. என். சக்ரவர்த்தி, பி ஜீ. ஏழுமலை, ஆர். ஷண்முகம், எஸ். வெங்கட்ராஜ், எ. முத்துக்குமாரசாமி, ராஜு (தாதா) முத்துக்குமாரசாமி (பெத்து) ஆர். வெங்கட்ராமன் (நாட்ரா) சி. கோவிந்தராஜன் (வாணி) பிரமன் (நாட்) கே. சுப்பையா (வண்) பி. கே. ராமமூர்த்தி சுப்பிரமணி (சென்) வி. தாண்டவன், பி. ஜி. சம்பந்தம் (பொறை) தியாகராஜன் (பொறை) ஏ. எஸ். ஷண்முகம் (திருப்பூர்) டி. கே. கோவிந்தசாமி, என். கே. கணபதி (காஞ்சி) ஜி. என். சாமி (தாராசுரம்) ஜி. பி. சோமசுந்தரம். வானமாமலை (திருச்சி)

6 வாரம் சிறை

1—1—49-ல், அடக்குமுறை எதிர்ப்பு வெற்றித்தின ஊர்வலம் நடந்தபொழுது திருவாரூரில் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்தத் தோழர் சிங்கம் அவர்களை, இரண்டு சட்டங்களின் கீழ் தனித்தனியாக 6 வாரம் தண்டித்து, தண்டனையை ஒரே காலத்தில் அனுபவிக்கவேண்டுமென்று, நீதிபதி கட்டளை பிறப்பித்தார். திருச்சி சிறைக்குத் தோழர் சிங்கம் அனுப்பப்பட்டார்.

மணிக்கணக்குச் சிறைவாசம்

22—8—48-ல், அமைச்சர் சந்திரமௌலி திண்டுக்கல் சென்றபொழுது, தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் முறையில், கருப்புக்கொடி பிடித்து காலையிலும் மாலையிலும் ஊர்வலம் வந்த 19 தோழர்களையும் போலீசார் கைது செய்து, காவலில் வைத்திருந்து, இரவு 10-மணிக்கு விடுதலை செய்துவிட்டனர்.

காலையில் கைது ஆக்கப்பட்டவர்கள்:— பி. சமதர்மன், ர. வில்வநாதன், வெ. ராஜு, ஜி. குருசாமி, எம். எம். தங்கராஜு, எஸ். பெரியசாமி, எஸ். கந்தசாமி, அ. பெரியசாமி, எம். எம். கந்தசாமி.

மாலையில்:— சி. எஸ். சிவசூரியன், எஸ். பொன்னுசாமி, ஈ. குருசாமி, அ. சுப்பையா, நா. மு. மௌலானா, ச. சின்னத்துரை, எஸ். ஜான், ஜேவியர், வெ. வெள்ளசசாமி, சண்முகம்.

ஒருவாரம்

26—8—48-ல், சென்னையில் மறியல் முடிந்தவுடன் எஸ். அச்சுதன், ஏ. சுப்பிரமணியன் ஆகிய இரு தோழர்களையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்தனர். நான்கு நாள் சென்றபின், விசாரிக்கப்பட்டு, ஒருவாரம் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

2 வாரம் சிறை

சென்னையில் 7—9—49-ல் புதிய கவர்னர் பவநகர் மகாராஜா பவனி வந்த காலை கருப்புக்கொடி காட்டிய 15 கழகத்தோழர்கள் கைது செய்யப்பட்டு இரண்டுவாரக் கடுங்காவல் தண்டனை தரப்பட்டது, தோழர்கள் விவரம்:— திராவிடமணி, (அமிஞ்சிக்கரை திராவிடர்கழகம்) நந்தகோபால், கபாலி, முனிசாமி, ராஜாராம் குழந்தை சொக்கலிங்கம், பாலகிருஷ்ணன், (துலுக்காணம்,) எ. எம். சுவாமி, (திருவல்லிக்கேணி திராவிட இளைஞர் கழகம்) சிறுத்தொண்டன், லோகநாதன், (காசிபுரம்) அபூபக்கர் மகமத்யீனு, பாண்டுரங்கன், (கொத்தவால்சாவடி) எட்வர்ட், (தலையாரித்தெரு, திராவிட இளைஞர் கழகம்.)

நடு நிசியில் சிறை—நண்பகலில் விடுதலை

சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா பதவியேற்ற தினமான 7-9-48-முன்னாள் இரவு, சென்னை போலீசார் கழக முக்கிய தோழர்களைக் கைது செய்து போலீஸ் காவலில் வைத்திருந்து மறுநாள் பகல் ஒருமணிக்கு விடுதலை செய்துவிட்டனர். இதோ, அந்தத் தோழர்கள்—C. D. T. அரசு, என். சுப்பிரமணியன், எம். அநந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன், எஸ். நடராசன், கே. கண்ணப்பன், கே. கலைச்செல்வன், ஜி. மாரியப்பன் (இவர்கள் மறியல் தொண்டர்கள்) எம். கே. தங்கவேலு, நாகரத்தினம், டி. கோவிந்தன், சி. தங்கராஜ், க. ஆரியசங்கரன், அவர்தந்தை எ. கனகராஜி, N. V. நடராசன், என். எம். சுப்பிரமணியன், வி. டி. பெரியசாமி, சி. வி. ராஜன்.

ஒருவார சிறைவாசம்

இந்தி எதிர்ப்பு மறியல் தொண்டர்களாகவும், கண்காணிப்பாளர்களாகவும் ஆட்சியாளர்களின் போக்கை எதிர்த்து வந்த தோழர்களைப்போலீசார் கைது செய்து, அனுமதி இன்றி ஊர்வலம் நடத்தினதாகக் குற்றஞ் சுமத்தி, ஒரு வாரம் சிறைத் தண்டனையை வாங்கித்தந்தனர். புன்முறுவலோடு சிறை புகுந்த தோழர்கள் விவரம் வருமாறு:— காஞ்சி மணிமொழியார், டி. எஸ். வி, ராஜன், எம் கோவிந்தன், பிரகலாதன், துரைராஜ், சின்னசாமி, செல்வம், துரைசிங்கம், மதுரை, வேணுகோபால், முனிசாமி, சந்தானம், சந்திரசேகரன், கோதண்டன், கன்னியப்பன் ஆகியோர்.

ஒருவாரம்

8—9—48-ந் தேதி மூன்று குழுவினராக அமைந்து மறியல் செய்த தொண்டர்கள் 23 பேர்களும், உத்திரவின்றி ஊர்வலம் நடத்தினதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு, ஒரு வாரம் காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். இதோ, அவர்கள்:— சி. டி. டி. அரசு, கண்ணபிரான், சம்பந்தம், துரைக்கண்ணம்மாள், என். சுப்பிரமணியம், எம். அநந்தப்பன், டி. டி. பாண்டியன், என். கிருஷ்ணன், எஸ். நடரா

(2-ம் பக்கம் பார்க்க)

அறிக்கை-எதற்கு? யாருக்கு?

☆

உழவு—முக்கியம். இங்கு, அது மூலத்தொழில். நாளுக்கு நாள் உழவன் குடும்பம் பெரிதாயிற்று. உழவர்கள் பெருத்தனர். கொடும் வறுமையும் அத்துடன் பெருகிற்று. தேவைக்கதிகமான உழவர்கள், வேலைதேடித் திரிந்தனர். சொந்தத்தில் நிலமில்லை. காம்புகளைச் செந்நெல் விளையும் வயலாக மாற்றும் ஆற்றலும் ஆர்வமும் உழவர்களுக்கு உண்டு. இருந்தும் என்ன பயன்? உழவனின் வேலையின்மை—வறுமை—பண்ணையாரின் பயிர்ச் செலவை மேலும் மேலும் குறைக்க உதவுகிற பொழுது, புதிய கள்ளிக் காடுகளை கழனியாக மாற்ற முனைவரா? உழவு மாட்டின் விலை—அவைகளுக்கு தினம் வைக்கப்படும் தீனியின் செலவு—ஒரு உழவன் உயிர் வாழ்வதற்குக்கொடுக்கப்படுவதைக் காட்டிலும கூடுதலாகவன்றோ இருக்கிறது. எனவே உழவர்கள் தொகை கூடுதலாவதும், அவர்கள் வேலை கிடைக்காமல் வேதனைப்படுவதும், பண்ணையாருக்கு, ஒரு வரப்பிரசாதமாகவே தோன்றியது. இதன் பயனாக, உற்பத்தியைப் பெருக்கவும், உழவுக்குத் தகுதியுடையதாக வேறு பூமிகளைத் திருத்தவும், ஆர்வம் தோன்ற வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது.

உழவனும் கைகால்களைத் தவிர—சொந்தத்தில் வேறு ஒரு சாதனமும் இல்லாத காரணத்தால், கடல் கடந்தவர்கள் போக மீதமுள்ளவர்கள், நிலத்திலே புழுப்போல் நெளிந்து, நிலையில் எவ்வித மாற்றமும் பெறுமல், பண்ணையாரின் மனமகிழ்ச்சியே தாங்கள் உயிரோடு இருப்பதற்கு ஏற்ற உரிய மார்க்கம் என்று கொண்டு, தலைமுறை தலைமுறையாக நகம் முளைத்த காலமுதலாய், நிலந்திருத்தி, நாற்று நட்டு, நீர்பாய்ச்சி, நெல்லறுத்து, பண்ணையாருக்கு படையல் போட்டு பரவசப்படுத்தி, உயிர் வாழ்ந்து வரலாயினர், இதுநாள்வரை.

சூது அறியார். சுடுசொல் பேசத் தெரியார். எது தேவை—எப்படிப் பெறுவது—எதுவும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கவில்லை இதுவரையில். எத்தனை நாளைக்குத்தான்—எவ்வளவு காலத்திற்குத்தான் ஒரே நிலையில் இழிந்த மிருகத்திலும் கீழான நிலையில் காலங் கழித்து வருவர், அந்த வெள்ளை மனத்தினர்?

பெற்ற தாய்தந்தையர்களைப் பிரிந்தபோதும், பிறந்த தாய்நாட்டைத் துறந்தபோதும், உற்றார் உறவினரைத் துரும்பென மதித்து உதறித்தள்ளிச் சென்றபோதும், தங்கள் கதிகண்டு—நீரை ஆறாய்ப் பெருக்கும் தங்கள் கண்களைக்கண்டு—கருத்திலே தெளிவேற்படாது, வெளிநாடு செல்ல வழிகூட்டி அனுப்பிய ஊராளுவோர் உண்மையைத் தெரிந்தபோதும், உழவர்கள் தங்கள் உரிமைகளைத் தெரிந்தும் இருக்கவில்லை; அதனைப்பெறவேண்டிய உறுதி கொள்ளவுமில்லை. இருந்தாலும், என்றுமா ஒரே இருள் சூழ்ந்திருக்கும்? விடிவெள்ளி தோன்றாமல் போய்விடுமா? இருள் விலகிற்று. அறிவொளி பரவிற்று. உரிமைகளை ஓரளவிற்குத் தெரிந்துகொண்டதோடு, அவைகளைப் பெறத்தங்களுக்குள்ள ஆற்றலையும் அறிந்துகொள்ளலாயினர். தூங்கி இருந்த எரிமலை, புகையை வெளிக்குக் காட்ட ஆரம்பித்தது. கனல் கக்கவில்லை. புகையைக் கண்டே, பண்ணையார்கள் கண்களைக் கசக்குகிறார்கள். கடுங்கோபங்கொண்டு, பாராளுவோரின் படைபலங்கொண்டு, பார்திருத்தி, பற்பல தானியங்களைத் தம் உழைப்பால் உருவாக்கிய உழவர்களை உருக்குலைக்க, உருவான—ஆனால் தகாத—காரியங்களைச் செய்துவருகிறார்கள்.

உழவர்களின் கேவல நிலையையும், பண்ணையார்கள் அவர்களை நடத்தும் கொடுமையையும் சில நாளைக்கு முன், விவசாய சீர்திருத்தக் கமிட்டியின் தலைவர் டாக்டர் குமரப்பா, குறை கூறினதற்கு, எடுத்துக் காட்டினதற்கு, பலருக்கு அறியச் செய்ததற்கு, மிட்டாவும், மிராசும், பத்திரிகைகளிலே போர்தொடுத்துவிட்டார்கள். 'ஹிந்து' பத்திரிகையிலே, சாஸ்திரியும் சர்மாவும், ஆச்சாரியும், ஐயங்காரும், 'குமரப்பாவே! பிடி சாபம்' என்னும் போக்கிலே, ஆசிரியருக்கு அன்புக் கடிதங்கள் எழுதிவிட்டார்கள். முதலியாரும் மூப்பனாரும், அந்தப்பட்டியிலே இருந்ததை நாம் மறைக்கத் தேவை இல்லை.

டாக்டர் குமரப்பா, கிசான் சங்கத்தின் அங்கத்தினர் அல்ல. மாஸ்கோ மணம், அவருக்குப்பிடித்தமான நறுமணமன்று. இருந்தாலும், இடித்துக்கூறினார் மிராஸ்தாரர்களின் கோணல் போக்கை. படம் பிடித்துக் காட்டினார், பாட்டாளியின் பரிதாப நிலையை. பேசலாம்; அறிக்கை வெளியிடலாம்; புத்தகமும் எழுதலாம், டாக்டர் குமரப்பாவால் அவ்வளவுதான் முடியும். நினைத்ததை நிறைவேற்ற அவரால் முடியாது. நிலங்களை உழவர்களுக்கு உரிமையாக்க, அதற்கான—ஆசை அவருக்கிருந்தாலும்—அதிகாரம், அவருக்குக் கிடையாது. அதிகாரமுடையவர்களை ஆட்டிப்படைக்கும், அதட்டிக் கேட்கும், அந்தஸ்தும் அவரிடம் இல்லை.

ஒரே உத்தரவில், உட்கார்ந்த இடத்திலிருந்தே, உழவர்களுக்கு உரிமைகள் அனைத்தையும் உரிமையாக்கும் உரிமை கொண்டிருப்பவர்கள், அறிக்கை வெளியிட்டுக் கொண்டு இருப்பதென்றால், அவர்கள் நடத்தையில் சந்தேகம் தோன்றுவது நியாயமாகத்தானே இருக்க முடியும்? உள்ளமும் உதடும் வெவ்வேறாக இருக்கிறது அவர்களுக்கு என்று எவராவது முணுமுணுத்தால், 'பேசாதே' என்று தடைவிதித்து, மீறிப்பேசினால் தடியடிப் பயிற்சி நடத்தி, ஒருவர் இருவரை சிறையில் தள்ளி, நாட்டில் உள்ள துன்பத்தைத் துடைத்துவிட்டதாகத் திருப்தி அடைந்து, அதிகாரம் தேடித்தந்த அந்தஸ்தை அனுபவித்துக் கொண்டு, உல்லாசபுரியில் ஒய்யாரமாகக் காலம் கழித்துக்கொண்டிருக்கும் வேளையில், ஒருகணமாவது, தன்நெஞ்சே தனது கரவைத் தன் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்திக் கொடுமைப் படுத்துமே என்ற உண்மையையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள். எவ்வளவு நெஞ்சழுத்தம் இவர்களுக்கு?

2-ம் பக்கம் பார்க்க

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.

REGD. M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 6—2—49 | இதழ் 32

செக்கோஸ்லோவேகியா

☆ ☆

[சி. என். அண்ணாதுரை]

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலே, செக்கோ நாடு மிக உன்னதமான நிலைமையில் இருந்துவந்தது. அந்த நாட்டிலே வாழ்ந்து வந்த செக் ஜாதியினர் ரோஜமுள்ளவர். நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிகுதியும் கொண்டவர்கள். தங்களுடையதேசிய உரிமைகளை இழக்க ஒரு சிறிதும் ஒப்பாதவர். அவர்களுடைய போராடும் திறத்தையும், கொள்கைக்காக விட்டுக் கொடுக்காது கிளர்ச்சி செய்யும் மனப்பான்மையையும் வளர்த்த தலைவர்கள் பலர். அவர்களிலே மிக முக்கியமானவர் ஜான்ஹஸ் என்பாராவார். ஜான்ஹஸ் என்பவர் மத சீர்திருத்தவாதி. கத்தோலிக்க குருமார்களின் கொதிப்பையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், போப்பாண்டவரின் விரோதத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாது, மதத்துறையிலே, சீர்திருத்தப்போர் தொடுத்தவர். அந்தக் காலத்தில், கிறிஸ்துமத சீர்திருத்தத்தைத் துவக்கிய, பிராடஸ்டாண்டு பிரிவை, உற்பத்தி செய்த, மார்ட்டின் லூதர் எனும் சீர்திருத்தவாதியைப்போன்றவர் ஜான்ஹஸ். மார்ட்டின் லூதர், எப்படி மக்களின் மனதைக்கவர்ந்தாரோ அதைப் போன்றே ஜான்ஹஸ் மக்களின் அன்பைப் பெற்றார். அவர் வெறும், மத சீர்திருத்தக்காரர் மட்டுமல்ல. நாட்டுப் பற்று அவர் உள்ளத்தில் ததும்பிற்று. மொழிப் பற்றும் அப்படியே. மேலும் அவர் ஒரு ஜனநாயக வாதி. மத சீர்திருத்தம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, ஜனநாயகத்தில் ஆர்வம் இவ்வளவும் ஒருங்கு அமையப்பெற்ற ஜான்ஹஸ், ஐரோப்பிய அமைதிக்கே ஒரு வெடிகுண்டு போலக் காணப்பட்டார். 'தர்பார்' ஆட்சிக்காரர், எங்கு பொதுமக்கள், ஜான் ஹஸ் பேச்சைக் கேட்டுக்கொண்டு, ஜனநாயக ஆட்சி நிறுவவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுவார்களோவென அஞ்சினர்.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற பேச்சின் சக்தி செக்கோ மக்களை, எதற்குமஞ்சாப்போர் வீரர்களாக்கிவிட்டது. ஜான்ஹஸ் செய்து வந்த சண்டமாருதப் பிரசாரம் உருவான பலனைத்தர ஆரம்பித்தது. உடனே, எதிரிகள் தங்கள் படைகளைத் திரட்டினர். போப்பாண்டவருக்குச் சேதி எட்டிற்று. ஜெர்மன் அதிகாரிகளும், ஆஸ்ட்ரிய நாட்டுச் சீமான்களும், கத்தோலிக்க குருமார்களும், ஒன்று கூடி, ஜான்ஹஸை ஒழிக்கத் தீர்மானித்தனர். இதன் பயனாக, இருதரப்பினரும் கைகலக்கவேண்டி வந்தது. ஜான்ஹஸின் சீடர்கள் எதற்கும் தயாராகவே இருந்தனர். போப்பாண்டவர், அந்தக்காலத்தில் விற்றுவந்த 'பாவ மன்னிப்புச்சீட்டு'களைப்பற்றி ஜான்ஹஸ் இயக்கத்தார் மக்களிடம் கூறிப் பெருத்த எதிர்ப்பை உண்டு பண்ணினர். இளைஞர்கள் 'பாப மன்னிப்புச்சீட்டு' விற்றுவந்ததாகர்களைத் தொல்லைப் படுத்தியும், சீட்டுகளைப் பிடுங்கிக் கொளுத்துவதுமாகவும் இருந்தனர். போப்பின் பிரதிநிதிகள் பாடு வெகு திண்டாட்டமாகிவிட்டது. "ஏதேது ஆபத்துவளருகிறது. இதை ஆரம்பத்திலேயே ஒழிக்க வேண்டும்" என எண்ணி 'பாவ மன்னிப்புச் சீட்டு' விற்றவரைத் தடுத்த மூன்று இளைஞர்களைப் பிடித்துப் பலரறியக் கொன்றனர். அந்த மூன்று இளைஞர்களின் கோர முடிவு செக் மக்களின் இரத்தத்தைக் கொதிக்க வைத்தது. சிங்கமெனச் சீறினர் செக் மக்கள். கொடுமைகளைக் களைந்தே தீருவோம் என முழக்கினர். எதற்கும் அஞ்சோம் என எழுந்தனர். அடக்குமுறை அதிகரித்தது. கூடவே கிளர்ச்சியும் பலப்பட்டது. அதிகாரிகள் அட்டகாசம் செய்தனர். கிளர்ச்சிக்காரர் ஆர்ப்பாட்டம் செய்தனர். கொல்லப்பட்ட மூன்று இளைஞர்மணிகளைப் புதைக்கக் கிறிஸ்தவ ஆலயத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இந்த ஊர்வலத்தைப் பிராக் நகர மாணவர்களே நடத்தலாயினர்.

போப்பாண்டவர் கோபங்கொண்டார். தனது ஏவலரைத் துன்புறுத்தியமுவா, கொல்லப்பட்டது நியாயமென்பது அவரது எண்ணம். உயிர் அவ்வளவு பெரிதல்ல, அதிகாரமே பெரிது என்பது அவரது எண்ணம் போலும்!

உடனே அவர் ஜான்ஹஸ்ஸை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டார். மூவரையும் புதைக்க ஏற்பாடாகி இருந்த ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கும்படி "தாக்கீது" அனுப்பினர். போப்பின் உத்தரவை, கூடி முனைகொண்டு நிறை

வேற்று, ஜெர்மன் படைபோன்று வந்தது. ஆனால், ஜான்ஹஸின் ஆட்கள், ஜெர்மனியரை ஓட ஓட அடித்துத் துரத்தினர்.

பார்த்தனர் எதிரிகள்! வாலை நறுக்கிப் பயனில்லை, தலையை அறுப்போம் என முடிவு செய்தனர். பாபம்! கிளர்ச்சியின் ஜீவசக்தியை அவர்கள் உணரவில்லை. அதிகார வர்க்கம் என்றும் இந்தத்தவறையே செய்கிறது. கிளர்ச்சி என்றால், "எடுதண்டத்தை" என்பதே அதிகாரவர்க்கத்தின் மந்திரமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அந்த மந்திரம் ஒரு போதும் பயனளிப்பதேயில்லை.

ஜான்ஹஸ், இருக்கும்வரை, இயக்கம் இருக்கும்—கிளர்ச்சி நடக்கும், தங்கள் ஆதிக்கம் கெடும் என எண்ணிய எதிரிகள் சூதாக அவரை வரவழைத்து 1415 ஆண்டு, அவரை நாஸ்திகா—மதவிரோதி என்று குற்றம் சாட்டி, கொளுத்திக் கொன்றனர்.

ஆம்! சீர்திருத்தம் பேசிய– ஜனநாயக ஆட்சிவேண்டுமெனக்கிளர்ச்சி செய்த, ஜான்ஹஸ் கொளுத்தப்பட்டார். அந்தத்தீ என்ன செய்தது! செக்நாட்டின் நிரந்தர ஜோதியாக மாறிவிட்டது.

கட்டி வைத்துக்கொளுத்தப்பட்ட ஜான்ஹஸ் செக் நாட்டின் நிரந்தர ஜோதியாக மாறிவிட்டார். அதிகாரத்திமிர்கொண்டவர்கள் இனி நிம்மதியாக வாழலாம் என மனப்பால் குடித்தனர். இனி யார் இருக்கிறார்கள் செக் மக்களைத் தட்டிக்கொடுத்துக் கிளப்பிவிட என்று எண்ணினார்கள். ஜான்ஹஸ் போன்ற தலைவருக்கே இந்தக்கதி ஏற்பட்டதென்றால், சாதாரண மக்களாகிய நாம் அதிகார வர்க்கத்தை எதிர்த்தால் ஒருநொடியில் நசுக்கிப் பொசுக்கப்படுவோம் என்று மக்கள் அச்சத்தால் பிடிக்கப்படுவர் என்பது அதிகாரிகளின் பிதுக்கொள்ளி எண்ணம். அச்சமே தைரியத்தையும், எது வரினும் வருக என்று எதிர்த்திடும் குணத்தையும்கொடுக்குமென்பதை அவர் அறியார்.

அஞ்சி அஞ்சி, வாழுபவரே, கடைசியில், இனி நாம் அஞ்சவேண்டுவதே வேறொன்றுமில்லை, என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர். அது காலை அவர்களுக்கு, என்றுமில்லாத யாருக்குமில்லாத தீரம் வருவதுண்டு.

உலக சரித்திரமே இதற்குச் சான்று; மக்கள் எழுச்சியின் பரமமும் இதுவே. பெரிய பெரிய ராணுவ பலம் படைத்த சர்க்கார் முறியடிக்கப்பட்டதன் இரகசியமும் இதுவே. பிரஞ்சுப்புரட்சி, ரஷியப் புரட்சி, யாரால் செய்யப்பட்டது? போர் வீரர்களாலா? வீரதீர பராக்கிரமவான்கள் என்று பெயர் வாங்கியவர்களாலா? அல்ல! அல்ல! சாதாரண மக்களால்! போரில் பழக்கமே இல்லாத மக்களால்! ஆயுதங்களை முதன் முதலாக எடுத்த மக்களால்!

அன்று புரட்சி செய்து, மாடமாளிகைகளைத் தூளாக்கி மன்னரையும் அவரது பரிவாரத்தையும் சின்னாபின்னப்படுத்தி, சிறைக் கோட்டத்தைத் தகர்த்தெறிந்து, முடி அரசை ஒரு நொடியில் கவிழ்த்த, பிரஞ்சு மக்கள், அந்தப் புரட்சி வருவதற்கு முன்பு அதிகாரியைக் கண்டால், அரசரின் வேவுகாரரைக்கண்டால், பணக்காரரைப் பார்த்தால், பயந்து, பதுங்கி, ஒதுங்கி, வாழ்ந்து வந்தவர்களே. எதைக்கண்டாலும் அச்சம்! யாரைக்கண்டாலும் அச்சம்! என்ன நேரிடுமோ என்ற அச்சம்!

அவ்வளவு அச்சமும், இனி வேறு வழியில்லை, எதுவரினும் வருக என்ற எண்ணம் உதித்த உடனே, கதிரோன் ஒளி முன்கரையும் கட்டிப்டனியெனக்கரைந்தருகிப் போயிற்று! கோழைகளும் வீரராயினர், கொற்றவனே கோழையானான்!

ஜார் மன்னனைக் கண்டால் குப்புற விழுவர் ரஷியமக்கள்! அவன் பெயரைக் கேட்டால் கலங்குவர்! அதிகாரிகள் குரல் கேட்டால் கதறுவர்! ஆமைபோல் பதுங்குவர்! ஆடு போல் பந்தை மந்தையாக அதிகாரிகள் அழைத்துச்செல்லும் வழிசெல்வர். அச்சம்! அச்சம்! அவர் தம் வாழ்வு பூராவும் அச்சமே குடிகொண்டிருந்தது. அப்படிப்பட்ட ரஷியர்கள்தான், உலகம் கண்டுதிடுக்கிடும் விதத்திலே பொதுவுடைமைப் புரட்சியைச் செய்தனர். அதிகாரியின் நிழலைக்கண்டாலும் நடுக்குற்ற அம்மக்கள், புரட்சி நடத்திய காலத்தில் இரத்த வெள்ளத்தில், நீந்தினர். எங்கிருந்து வந்தது இந்தத் தீரம்! எங்கு போயிற்று அச்சம்! அச்சத்தின் முடிவைத்தாண்டி விட்டனர் அம்மக்கள்! ஆகவே தீரர்களாயினர்!

செக்மக்கள் மட்டும் இந்த உலக இயல்புக்கு மாறுபட்டவரா? ஜான்ஹஸ் இறந்தது, முதலில் அச்சத்தைக்கொடுத்ததென்றாலும், பிறகு தீரத்தையே தந்தது.

கண்களிரண்டிருந்த ஜான்ஹஸ் இறந்துபட்டான்! ஆனால் கண்கள் இரண்டுமில்லாத ஒருபெட்டையன் கிளம்பினான், செக் மக்களைத்தலைமை தாங்கிப் போர்நடத்த. குருட்டுத்தலைவன் அவன்; ஆனால் அவன் உண்டாக்கிய கொந்தளிப்புச் சொல்லுந்தரத்ததன்று.

ஜிஜ்க்கா என்பது அவனுடைய பெயர்! அந்தக்காலத்தில் கிளம்பிய போர்த்தலைவர்களுள் ஜிஜ்காவே முதன்மையானவன் என்ற பேரைப் பெற்றான். அவன் எந்தப் போர்க்கூடத்தில் பழகி, இந்நிலை பெற்றான்! "அவசியம்" என்ற போர்க்கூடத்திலேயே அவன் உழன்றான். யாரைக் கொண்டு படைதிரட்டினான்? பாட்டாளி மக்கள்! உழவர்கள்! இவர்களே அவனுக்குக் கிடைத்தனர்! அவர்களின் ஆயுதங்கள் யாவை? வெடிகுண்டா? விஷப்புகையா? பீரங்கியா? துப்பாக்கியா?

அல்ல! அல்ல!! உழவர்களிடம் ஏது இந்த ஆயுதங்கள்! கட்டை, மட்டை, அரிவாள், சம்மட்டி, கோடரி, கொம்பு, இவைகளே அவர்களிடமிருந்த ஆயுதங்கள். இந்தப் படையை திருத்தியமைத்தார் ஜிஜ்கா! இது மிகத் தீரமானபடையாக அவருடைய தலைமையில் மாறிவிட்டது. எங்கும் இந்தப் போர் வீரரின் முழக்கமே கேட்கலாயிற்று. இவர்களைக் கண்டால் எதிரிகள் ஓடலாயினர் புறமுதுகிட்டு. ஓடவே, எதிரிகளுக்குக் குதிரைகள் உதவின. ஐரோப்பிய நாட்டரசர்கள் ஆச்சரியப்பட்டனர். இந்தக் குருட்டுக் கண்ணனின் சேனை அவர்களைக் கலங்க வைத்தது.

ஜெர்மன் நாட்டுச் சிற்றரசர்கள் சீறி எழுந்தனர். எனினும் ஜிஜ்கா முன்னம் சுருண்டு விழுந்தனர். டேனிஷ்நாட்டுப்படைத்தலைவர்களும், ஆங்கில நாட்டவரும் ஜிஜ்காவின் சூறாவளிச் சேனை முன் தலைகாட்ட முடியவில்லை.

ஜெர்மனியின் தெற்குப் பாகம் பூராவும், இவர்களின் முழக்கமே ஒலித்தது. அந்தப் பிரதேச மன்னர்கள், ஜிஜ்காவிற்குப் பயந்து தத்தமது நகரங்களில், கோட்டை கொத்தளங்களை எழுப்பினர்.

ஜிஜ்கா, ஜான்ஹஸைக் கொன்ற கூட்டத்தினருக்குக் குலை நடுக்கம் ஏற்படும்படி செய்துவிட்டான். புயல் ஓய்ந்து விட்டது என்று எண்ணியிருந்தவர்களெல்லாம், "இதோ அந்தப் புயலைவிட இது கடுமையாக இருக்கிறதே" என்று எண்ணலாயினர்.

ஜான்ஹஸ் பேசினான், அவனைக் கொன்றோம்! அவனுக்குப் பின் தோன்றிய, இந்த வீரன் ஜிஜ்கா, பேசவில்லை. ஆனால் வாள் கொண்டு வீசுகிறானே, என்றெண்ணி வாடினர் எதிரிகள். அந்தக்காலத்தில் எதிரிகள் அடைந்த வாட்டத்தை நோக்கும்போது ஜிஜ்கா விரும்பியிருந்தால் ஐரோப்பாவிலே தனது ஆதிக்கத்தைக்கூட ஓரளவு நிலைநாட்டி இருந்திருக்க முடியுமெனத் தோன்றுகிறது. எதிரிகளுக்குப் பங்கம் விளைவித்த செக் மக்கள் கோழைகளல்ல என்பதைக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் ஜிஜ்காவுக்கு இருந்ததே தவிர, நாடு பிடிக்க வேண்டும், அதனை நாம் ஆளவேண்டும் என்ற எண்ணமில்லை. ஆகவேதான் ஜிஜ்காவின் படைகள் புயற்காற்றென நாலு பக்கங்களிலும் சென்று போர்புரிந்தனவே ஒழிய எந்த நாட்டையும் பிடித்து ஆளவில்லை.

வீரருக்கும் ஒரு முடிவுண்டன்றோ? வீரரின் வீரம் மறையாமுன்னர் வீரரே மண்ணினின்று மறைந்து விடுகின்றனர். கீர்த்தியுடன் வாழ்ந்து வந்த ஜிஜ்கா திடீரெனப் பிளேக்கினால் இறந்துவிட்டான். செக் மக்களின் தலைவன் மறைந்தான்! படைகளை வெற்றிக் கோட்டம் அழைத்துச் செல்லும் வீரன் மாண்டான். செக் மக்கள் மனம் உடைந்தனர். எதிரிகள் "பிழைத்தோம்" என மூச்சு விட்டனர்.

ஆனால், ஜான்ஹஸ் விடுத்தசொல்லம்புகளும், ஜிஜ்கா விடுத்த போர்ப் பொறிகளும், மறைந்துபோகவில்லை. செக் மக்களுக்கு அடுத்தொரு தலைவன் தோன்றியிருந்தால், அந்த நாட்டுச் சரித்திரமே வேறுவிதமாக மாறி இருக்கும். மாற்றார்கள் மனம் குளிர, செக் நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் உண்டாயிற்று. செக்நாட்டுச்செல்வவான்கள், சதிசெய்பலாயினர். பாமர மக்களை அடக்கி ஒழிக்கலாயினர். இதனால் ஒற்றுமை மாண்டது. ஒற்றுமை போகவே, செக்நாடு நிலைகலங்கி நின்றது. ஜெர்மானியர் தலைதூக்கலாயினர். பழையவிரோதிகளின் சலசலப்புப் பலப்பட்டது. நாதியற்ற கூட்டமாயினர் செக்மக்கள். 1520ல ஆஸ்டிரிய நாட்டு ஆப்ஸ்பர்க் பரம்பரையினர், செக் நாட்டு மன்னராயினர். செக் நாட்டவருக்கு, இன்னல் மேல் இன்னல் வந்தது. வீரம் பேசிய செக் மக்கள் விரட்டப்பட்டனர்! தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர். ஜான்ஹஸ்செக்மொழியில் மொழி பெயர்த்த பைபிள், கொளுத்தப் பட்டது. செக் செல்வவான்களும் அழிக்கப்பட்டனர். செக் மொழியைப் பேசலாகாது எனக் கடும் சட்டம் ஏற்பட்டது, நாடு போயிற்று! மொழி போயிற்று! செல்வம் அழிந்தது! சீர் குலைந்தது! சுதந்திரம் பறிபோகவே, சுகம் பாய்ந்தது! செக் மக்கள் அடிமைகளாயினர். ஆஸ்ட்டிரிய நாட்டினர், ஆதிக்கம் வளர்ந்தது. அது முதல் மூன்று நூற்றாண்டுகள் வரையில் செக்கோநாடு, வலுவிழந்து, பொலிவிழந்து, செத்த வாழ்வு வாழ்ந்து வந்தது.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

சன்யாசி.-"உனக்குத் தெரியாத விஜயம் உன்னுடைய மனதின் நோக்கம் எனக்குத்தெரியும்."

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் இதயம் துடித்தது. பிறகு என் காதில் விழாதபடி இருவரும் ஏதோ குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள். இருவரும் போய் விட்டார்கள், இருவரையும் இது வரையில் நான் பார்க்கவே இல்லை. இவ்விருவரையும் பற்றி ஊரெங்கும் என்னென்னமோ பேசிக் கொள்கிறார்கள்.

*

வள்ளுவன் வகுத்த விவசாய விஞ்ஞானம்

(ம. சங்கரலிங்கம்)

இன்றைய இருபதாம் நூற்றாண்டில் உணவுப் பிரச்னை, உலகில் வாழ்பவரை மட்டுமன்று, உலகாள்பவர்களையும் ஒருங்கே பிடித்தாட்டுகின்ற அரியதோர் உயரிய பிரச்னையாக மாறி விட்டது. மன்னர்களும், மந்திரிகளும், கோடீஸ்வரர்களும், கோவில் நிர்வாகிகளும், பாமரர்களும், பாட்டாளிகளும் கருத்துவேற்றுமையின்றி, 'கழனியில் கருமம் செய், பயிரிடுவதே பாரில் சிறந்தது, உழவுத் தொழிலே உயரியதொழில்' என உறுதிப் படுத்துகின்றனர் இன்று, இந்நிலையில்,

"பொன்னுடைய போதுறை
தேவருஞ்செய்
எந்நாடு மிதற்கிணையில்லை
யெனும்
தென்னாடு புவிக்கணியுந்திலக
நன்னாடது நற்றமிழ் நாடதுவே"

என்று தண்டமிழ்ப் புலவர் வர்ணிக்கும் பெருமை வாய்ந்த நம் தமிழ் நாட்டிலே, பண்டை நாளில் பயிரிடும் தொழிலின் நிலையென்னவென இவண் ஆராய்வோம்.

இவைக்குரிய ஆதாரங்கள் பண்டை இலக்கியங்களில் பரக்கக் காணலாமாயினும், உழவன் உயரிய நிலையை உருவகப்படுத்தாது—உவமைப்படுத்தாது உண்மை நிலையை உள்ளவாறு உள்ளங்கைநெல்லிக்கனியெனத் தந்துள்ளான் வள்ளுவன். இன்று எடின்பரோ, ஜெர்மனி, அமெரிக்கா போன்ற இடங்களில் ஆராய்ச்சி வல்லுநர்கள், ஆராய்ச்சியின் பயனாலும், விஞ்ஞானத்தின் உதவியாலும் நடைபெற்ற ஆய்வு (Experiment) களின் அறிவாலும், அறிவிக்கப்பட்ட நுண்ணிய கருத்துக்களைவிடச் சிறந்த உண்மைகளையும், உழவின் உட்பொருளையும் தெள்ளத்தெளியக் காணலாம் பொய்யில் புலவனின் பொருளுரையில்.

மேல் நாட்டறிஞர்கள் உழவுத் தொழிலில், சிறிய முயற்சியால் பெரும் பயனைக்கொடுக்கும் புதிய முறையொன்று கண்டுள்ளனர். அது உரமில்லாமலே உயர்ந்த மகசூலைப் பெறக்கூடியதாயிருக்கின்றது. உரமிடாமல் உழவர்கள் உயர்ந்த மகசூலை எவ்வாறு அடைய இயலுமென ஐயுறலாம்; ஐயுறவது அறிவுடைமையாயினும் ஆராய்ச்சியாலும் ஆய்வுகளாலும் தெளிவுற்றது காண்க.

"பயிர்கட்கு வேண்டிய உணவுப் பொருள்களெல்லாம் எரு, சாம்பல் முதலிய பொருள்களில் தான் அமைந்திருக்கின்றன. இவைகளிலே இருக்கின்ற 'நைட்ரஜன்' 'பாஸ்பரஸ்' 'பொட்டாஷ்' முதலிய உரங்கள் சூரியனிடத்துள்ள வெப்பத்தில் இயல்பாக அமைந்து கிடக்கின்றது.

(5-ம் பக்கம் பார்க்க)

படித்துறையின் கதை

—❀—

[பட்டுக்கோட்டை சௌரிராசன்]

காவிரி ஆற்றில் ஓரிடத்தில் ஓர் அழகிய படித்துறை இருக்கிறது. வெகுநாளாக நான் அவ்விடத்திற்குப் போய்க்கொண்டிருந்தேன். பலநாள், படித்துறையும் நானும் சினேகிதர்களானோம். ஒரு மாலையில் படித்துறை கீழ்க்கண்ட கதையை எனக்குச் சொல்லிற்று:—

நண்பனே! புரட்டாசி மாதத்தில் ஒருநாள் ஆற்றில் தண்ணீர் நிறைய வந்துகொண்டிருந்தது. என்னுடைய பலபடிகள் தண்ணீரில் முழுகிவிட்டன. கரையிலுள்ள மரங்களில் கட்டப் படிட்டிருந்த சிறு படகுகளெல்லாம் வெள்ளத்தில் ஆடி அசைந்து மிதந்து கொண்டிருந்தன. மேற்குக் கோடியில் அடங்கிக்கொண்டிருந்த சூரியனுடைய அழகான பொன் கிரணங்கள் துள்ளி ஓடிக்கொண்டிருக்கும் சின்னஞ்சிறிய அலைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தன. பெரிய மரங்களில் பறவைகள் கூட்டம் கூட்டமாய்ப் பாட்டுப் பாடிக் குலாவிக் கொண்டிருந்தன.

சன்யாசி ஒருவன் குளிக்க வந்தான். பெண்களெல்லாம் ஜலமெடுத்துப் போக வந்தார்கள். விஜயம் வரும் நேரம் வந்துவிட்டதென நான் மகிழ்ந்தேன். ஆனால் அன்று அவள் வரவில்லை. சுந்தரமும் அம்புஜமும் வந்தார்கள். அவர்கள் விஜயத்தைப் புக்ககத்திற்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்களென்று வருத்தப்பட்டார்கள். அந்தோ! விஜயத்தை எங்கேயோ அனுப்பிவிட்டார்களே என்று நான் கண்ணீர் விட்டேன்.

ஆற்றில் வெள்ளம் வடிந்துவிட்டது. அநேக நாட்கள் கடந்துவிட்டமையால் விஜயம் என்னுடைய ஞாபகத்திலிருந்து மறைந்து விட்டாள்.

தோழனே! செத்து இறந்தகாலமாகிய சமாதிக்குள் அடக்கம் செய்யப்பட்ட சம்பவங்களை எண்ணிப் பார்க்கும் பொழுது புண்ணிலே கோல் புகுவது போலத் துயரம் புகுந்து என்னைக் கலக்குகிறது. காலப்போக்கில் எவ்வளவு பெரிய மாறுதல் உண்டாகிறது! இங்கு வந்துகொண்டிருந்த பெண்களெல்லாம் தனித்தனி பிரிந்து மறைந்து விட்டார்கள். சிலர் கலியாணம் செய்துகொண்டு புருஷன் வீட்டுக்குப் போய்விட்டார்கள். சிலர் இறந்துவிட்டார்கள். சிலருக்கு என்ன நேர்ந்ததென்பதே எனக்குத் தெரியாது. பிறகு ஒருவருஷம் சென்றது.

ஒரு நாள் விஜயத்தின் குரலைக் கேட்டு நான் திடுக்கிட்டேன். அவளுடைய கழுத்தில் ஒன்றையும் காணோம். கைகளெல்லாம் மொட்டையாயிருந்தன. கால்களில் நகைகளே இல்லை—விஜயம் விதவையாகிவிட்டாள். அவளுடைய கொழுநன் வெகு தூரத்திலுள்ள ஓர் ஊரில் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தான். தனது கணவனை விஜயம் இரண்டொரு தடவைதான் பார்த்திருக்கிறாள். தந்திச் செய்தியே அவளுடைய கணவன் இறந்துவிட்டான் என்று சொல்லிற்று. பாபம்! பதினைந்து வயதுப் பெண்ணாகிய விஜயம் என்ன செய்வாள்? அவளுடைய நகைகளெல்லாம் கழற்றப் பட்டன. அழகிய தலைமயிரும் அலங்கோலப் படுத்தப்பட்டது. அவளுக்கு முன்பிருந்த அலங்காரங்களெல்லாம் சிதைக்கப்பட்டன. கணவன் செய்துபோட்டிருந்த நகைகளையும் பட்டாடைகளையும் அவளுடைய பெற்றோர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். ஆனால் அவளுடைய இயற்கை அழகைப் பறித்துக் கொள்ள ஒருவராலும் முடியவில்லை.

விஜயம், நாளாக நாளாக இளமையிலும் அழகிலும் வளர்ந்து வந்தாள்! இதை ஒருவரும் கவனிக்கவில்லை. ஏனெனில் வெள்ளைப்புடவை, துக்கரமான அவளுடைய முகம், அடிமைப் படுத்தப்பட்ட அவளுடைய நடை உடை பாவனைகள் இவைகள் அவளுடைய அழகைக் கொடுமையாய் மூடிவிட்டன.

சில சமயங்களில் அவள் தனியே என்னுடைய மடிமேல் வந்து உட்கார்ந்து கொண்டு பொல்லாத தனது வல்வினையை எண்ணி எண்ணித் தேம்பித் தேம்பி அழுவாள். வழக்கம் போல் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் ஆழத்தில் மர நிழல்கள், அவள் ஒளிந்துக்கொண்டிருப்பதைப் போல் தென்படும். சந்திரனின் நிலவு பால்போல் தழைத்திடும். பூக்களின் வாசனை காற்றில் மிதந்துவரும். துக்கத்தை அறியாத பறவைகள் பாடிக்கொண்டிருக்கும். இவைகளெல்லாம் விஜயத்தின் மனதிற்கு எவ்விதமிருந்தன. சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருளெல்லாம் அவளுக்குப் பொல்லாத துக்கத்தையே ஞாபகமூட்டின. அவளுடைய பரிதாபகரமான முகத்தைக் கண்டு இரக்கம் காட்ட ஒருவரேனும் அவளுடைய பக்கத்தில் இல்லை. ஆனால் அவளுடைய அழுகுரல் ஆண்டவனின் காதுகளுக்கு எட்டிவிட்டது.

பக்கத்திலுள்ள சிவன் கோவிலுக்கு ஒருநாள் உயரமான—சிவந்த அழகிய மேனியையுடைய பால்ய சன்யாசி ஒருவன் வந்தான். சன்யாசி வந்த செய்தி ஊரில் பரவியது. ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக யோகியைத் தரிசிக்க வந்தார்கள். கொஞ்ச நாளில் சன்யாசியைத் தரிசனம் செய்யவரும் கூட்டம் அதிகமாகிவிட்டது. குழந்தைகள் முதல் விருத்தாப்பியர்கள் வரையில் சன்யாசியைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பணங்களையும் பலவித பழங்களையும் பார்க்க வருபவர்கள் சன்யாசியின் காலடியில் கொட்டினார்கள். இளம் பெண்களெல்லாம் பிள்ளைவரம் பெற வந்து காத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் மந்திர விஷயங்களைப் பற்றிச் சன்யாசியிடம் கலந்துபேசினார்கள், பலர் வியாதி தீர அவனிடம் வந்தார்கள். இவ்விதம் இரண்டொரு மாதம் சென்றது.

சன்யாசி என்னுடைய படியில் உட்கார்ந்து கொண்டு ஜெபம் செய்து கொண்டிருந்தான். இரவு நேரமாகையால் சன்யாசியின் பக்கத்தில் ஒருவருமில்லை. சந்திரன் ஆகாயத்தில் ஏறிவந்தான். சந்திரிகையில் ஆற்றின் தோற்றமும், சன்யாசியின் தோற்றமும் சுற்றியுள்ள மரங்களும் கண்ணைக் கவர்ந்தன. காலடியின் சப்தம் கேட்டுச் சன்யாசி திரும்பிப் பார்த்தான். விஜயம் சன்யாசியை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

விஜயம் தலைகுனிந்து கொண்டே "என்னை இவ்விடம் வரச் சொன்னீர்களே!"

(3-ம் பக்கம் பார்க்க)

வள்ளுவன் வகுத்த

3-ம் பக்கத் தொடர்ச்சி

அந்த 'நைட்ரஜன்' முதலிய உரச் சத்துக்களை பிராணவாயுவானது எடுத்துப் பூமிக்கு வேண்டிய அளவு கொடுக்கின்றது. பூமி எவ்வளவுக் கெவ்வளவு நன்றாகக் காய்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு உரசத்துக்கள் பூமிக்குக் கிடைக்கின்றன. இது ஆய்வுகள் பல ஆற்றி அறிவுகண்ட ஆராய்ச்சியாளர்கள் அறிந்திட்டுக் கூறும் உறுதிமொழி – பகுத்தறிவு பெற்ற விஞ்ஞானிகள் வகுத்தறிந்து விவசாயிகளுக்கு விடுத்த விண்ணப்பம், இன்றைய நாளிலே.

ஆனால், இவ்வுண்மைகளையெல்லாம் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் நாட்டு விவசாயிகட்கு. ஏன், உலக விவசாயிகட்கும் சேர்த்தே—மிக அழகாய், குறட்பாவில், இரண்டே அடிகளில், ஏழே சீர்களில் எழிலுற எடுத்தியம்பியுள்ளான் தெய்வப் புலவன் திருவள்ளுவன்.

"தொடிப் புழுதி கஃசா
உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்"

என்கிறார். அதாவது, ஒருநிலத்தினை உழுபவன் ஒரு பலம் மண் (புழுதி) கால பலம் ஆகும்வரை அதனைக் காயவிடுவானாயின அந்நிலம் ஒரு பிடி எருக்கூட இல்லாமல் மிகுதியாய் விளையும் என்பதே.

உழவுத்தொழிலை வள்ளுவர் ஐந்து பிரிவாகப் பிரித்துள்ளார். ஆனால், இன்றைய மேல்நாட்டு விவசாய விஞ்ஞானிகள் வள்ளுவர் வரையறுத்த ஐந்து பகுதிகளுடன் கூடுதலாக ஒரு பகுதியையும் சேர்த்துள்ளனர். அது, வித்துக்களை நல்ல முறையில் சேகரிப்பதுவே. இனி வள்ளுவன் வகுத்த ஐவகைப் பிரிவினையைக் காண்போம்.

"ஏரினும் நன்றால் எரு விடுதல்;
கட்டபின்
நீரினும் நன்று; அதன் காப்பு"

பயிர்த்தொழில் நிலத்தை மென்மேலும் உழுதல் நல்லதாயினும் உரம் வைத்தல் உழுதலினும் நல்லது. உரம் சிறப்புடையதாயினும் களை பிடுங்குதல் உரம் வைத்தலினும் நல்லது. களையெடுத்தல் நல்லதாயினும் முறையாய் நீர் பாய்ச்சுதல் களையெடுத்தலினும் நன்று. ஏற்ற முறையில் நீர்ப்பாய்ச்சுதல் நல்லதாயினும் அப்பயிரைக் காத்தல் அதனினும் நன்று. எனவே, உழுதல் உரம் வைத்தல், களைபறித்தல், நீர்ப் பாய்ச்சுதல் காத்தல் என்கின்ற 5-பிரிவுகளும் உழவுத் தொழிலாளர்களுக்குத் தேவையெனத் தெரிவிக்கின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவனார். இவ்வைந்துவகை பிரிவுகளுடன் "வித்துக்களை நல்ல முறையில் சேகரிப்பது" எனும் ஒரு பிரிவைச் சேர்த்துள்ளனர் இன்றைய வல்லுநர்கள் —(தமிழரசு)

செலவு!

காஷ்மீரில் நடைபெற்ற போர் காரணமாக இராணுவச் செலவுக்கு இந்திய யூனியன் சர்க்கார் 16,00,000—0—0 ரூபாயும், ஒரு பாலம் கட்டுவதற்கு மட்டும் 1,59,82,000-0-0 ரூபாயும் செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சர்தார்பட்டேல் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் கூறினர்.

வரவு!

சர்க்கார் இரயில்வே மூலம் 1947—48-ல் கிடைத்த வருமானம் முதல் வகுப்பு:— 2,28,27,000-0-0. ரூபாய் என்றும் இரண்டாவது வகுப்பு:— 5,62,11,000—0—0 ரூபாய் என்றும், மூன்றாவதுவகுப்பு 53,28,64.000—0—0 ரூபாய் என்றும் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் இரயில் மந்திரி தோழர் சந்தானம் தெரிவித்தார்.

விபத்து!

1948 ஜுன் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடையில் இரயில்வேயில் இருபத்தொரு விபத்துக்கள் ஏற்பட்டன என்றும், அவற்றில் பதினொரு பிரயாணிகள் வண்டிகளும், பத்து சாமான்கள் ஏற்றிச் செல்லும் வண்டிகளுமென்றும், இந்த விபத்துக்களால் 67 பேர் கொல்லப் பட்டனர் என்றும், 254 பேர் காயமடைந்தனர் என்றும் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் தோழர் என். ஜி. அய்யங்கார் குறிப்பிட்டார்.

தற்கொலை!

திருமங்கலத்தைச் சார்ந்த கே. வெள்ளக்குளக் கிராமவாசியான தோழர் கே. முத்துக்கருப்பப் பிள்ளை என்பவர் 13—1—48-ல் தனது மூன்று வயதுப் புதல்வனையும் எட்டு மாதப் புதல்வியையும் கிணற்றில் தள்ளிக் கொன்றதோடு தானும் தற்கொலை செய்து கொண்டார். காரணம்: வறுமையும் அதனால் ஏற்பட்ட மனக்கசப்பும் தானும்.

உணவு நிலைமை!

சென்னை மாகாணத்துக்கு உணவுப் பொருள் பற்றாக் குறையாக இருப்பதால், இவ்வருஷத்துக்கு மட்டும் பன்னிரண்டு அல்லது பதிநான்கு இலட்சம் டன் உணவுப் பொருள்கள் வாங்க உத்தேசித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

டிம்மி அளவில் 56-பக்கங்கள் கொண்டது

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்
54. வரகுவாசல் தெரு
காஞ்சிபுரம்.

குறிப்பு:- ஒரு புத்தகம் வேண்டுவோர் பதின்மூன்றணா முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். விற்பனையாளர்கள் 25% கழிவு நீக்கித் தபாற் செலவுத் தொகையும் சேர்த்து முன்பணம் அனுப்பினால் தேவையான புத்தகங்கள் அனுப்பப்படும். "சிந்தனை விருந்து" என்ற நூல் கைவசம் கிடையாது.

திராவிட நாடு

ஞாயிறு] 6—2—49 [காஞ்சி

அவர் காட்டிய வழி!

✲

தன்னலங்கருதாது பொதுத் தொண்டு புரிந்ததன் காரணமாக உலக உத்தமர் என்ற உயரிய நிலையைப் பெற்ற காந்தியார் மறைந்து ஓர் ஆண்டு நிறைந்து, அவருடைய நினைவின் அறிகுறியாக நாடெங்கும், ஏன், உலகமெங்குமே அவருடைய உழைப்புக்கும் தியாகத்திற்கும் நன்றி செலுத்தும் முறையில் அனைவரும் அவருக்கு வணக்கமும் மரியாதையும் செலுத்தினர். காந்தியார் மறைந்தாலும் அவர் வகுத்த கொள்கைகளும் திட்டங்களும் நம்முன் இருக்கின்றன என்றும், அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதே நம்முடைய நீங்காக் கடமையாக இருத்தல் வேண்டும் என்றும், அப்போது தான் நாம் அவரை உண்மையாகவே மதித்து அவர் விருப்பப்படி நடக்கிறோம் என்பதாகப் பொருள் கொள்ள முடியுமென்றும் பேசினர். அவருடைய நினைவுநாட் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு தலைவரும் இதனை நன்கு வலியுறுத்திப் பேசியுள்ளனர்.

ஒவ்வொருவரும் தத்தம் மனப்போக்கிற் கேற்றபடி அவருடைய ஒப்பற்ற சேவையைப் பாராட்டி, அவர் காட்டியவழி நடக்கவேண்டுமென்பதை விளக்கிப் பேசினர்.

சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

அகிம்சையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

வெறுப்பவரையும் நேசிக்க வேண்டும்.

பொய்க்குப்பதில் மெய்யேபேச வேண்டும்.

கதர்நூல் நூற்கவேண்டும்.

எளிய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

என்றெல்லாம் அவருடைய கருத்துக்களையும் கொள்கைகளையும்விளக்கிப் பேசினர். நமது மாகாண முதலமைச்சர் அவரை ஒரு அவதார புருஷர் என்று புகழ்ந்து பேசினார். ஆனால் இந்தவிதமான புகழ்மாலையைக் காந்தியார் ஒருபோதும் விரும்பியவரல்ல என்பதை நமது முதலமைச்சர் மறந்து, மற்றவர்களைவிடத்தாம் காந்தியாரிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காக ஒருவேளை இவ்விதம் பேசியிருக்கலாம். என்றாலும், அவர் காட்டிய வழி நடப்பவர்கள், அவருடைய வழியை விட்டுதவறி நடக்கக்கூடாது என்பதே நமது கருத்தும், மற்றும் அவரைப் பின்பற்றி அவர்வழி நடப்பவர்களின் கருத்துமாகும். ஏனென்றால், காந்தியார், தமமை அளவு கடந்து புகழ்வதை எப்போதுமே விரும்பியதில்லை.

"என்னிடத்தில் சிறப்பான தெய்வத்தன்மை என்பது ஒன்றும் இல்லை. நான் தீர்க்கதரிசி அல்ல. நான் உண்மையைத்தேடி அலைகிற ஓர் தொண்டனேயாவன்."

என்று காந்தியார் தம்மைப்பற்றிப் பலதடவை கூறியுள்ளார். எனவே, காந்தியார் விரும்பாத ஒன்றை அவர் மீது சுமத்தி, அதனால் அவருடைய புகழை உயர்த்துவதாக நினைப்பது, அவர் காட்டியவழி நடக்கிறோம் என்று கூறுவதற்கு முற்றிலும் புறம்பான தற்புகழ்ச்சியாகும். காந்தியார் உலகில் ஓர் சிறந்த அறிவாளி. அரசியலில் அற்புதமான புரட்சியைச் செய்தவர். ஆயுதமின்றியே ஆயுதபலம் படைத்த ஆங்கிலேயரை விரட்டியடித்தவர். அவருடைய இடத்துக்கு இனிஒருவர் வர முடியாது என்ற இன்னபிற புகழ்ச்சொற்களையே, அவரில்லாத காலத்தில் அவருக்குக் காட்டும் மரியாதைச் சொற்களாகக் கொள்ளவேண்டும். அங்ஙனமன்றி அவரை ஒரு அவதார புருஷராக்கிக் காட்டுவதை அறிவுடைய உலகம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது — விரும்பாது. இதுவரை, அவதாரபுருஷர்கள் என்று கருதப்பட்டவர்கள் எவரும் உலகுக்குத் தேவையான — அறிவுள்ள எந்தக்காரியத்தையும் செய்ததேயில்லை. அவதார புருஷமகிமை எல்லாம் பூஜைஅறைக்குப் பயன்பட்டதேயொழிய, புத்துலக அமைப்புக்குப் பயன்படவே இல்லை. மூடநம்பிக்கைக்கு வழிகோலியதேயன்றி முற்போக்குக்கு வழிகோலவில்லை. ஒழுக்கக்கேட்டிற்கு வழிகாட்டிற்றேயன்றி ஒழுக்கத்தின் உயர்வுக்கு அது பயன்படவில்லை. பொய்யை மெய்யாக்க உதவிற்றேயன்றி, வாய்மைக்கு வழிகோலவில்லை. சுருங்கச் சொல்லவேண்டுமானால், உலகவாழ்க்கைக்குப் பயன்படாதது எதுவோ, அதுவே அவதார புருஷர்களால் செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், காந்தியாரின் ஒவ்வொரு செயலும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகவே இருந்தன. அப்படிப்பட்ட ஒரு உத்தமரை ஆமை வாரக அவதாரப் பட்டியில் சேர்த்துப் பேசுவது அறிவுடைமையாகாது—அவர் காட்டிய வழி நடப்பதாகவும் ஆகாது.

காந்தியார் காட்டிய வழிகளில் நடப்பதாக அவருடைய நினைவுநாட் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரைத்தவர்கள், அவருடைய உள்ளத்தில் உறுதிகொண்டிருந்த ஒரு முக்கியமான திட்டத்தைக் கடைப்பிடித்து நடப்பார்களானால், அதுவே அவருக்குக் காட்டும் அன்பும் மரியாதையும் கடமையுமாகும். என்ன அந்தத் திட்டம்?

"பிறரைச் சுரண்டிச் செல்வம் சேர்க்கும் பணக்காரன் பிறர் வீட்டில் புகுந்து திருடுபவனை விட எந்தவிதத்திலும் குறைந்த குற்றத்தைச் செய்தவனல்ல. இதில் ஒரே ஒரு வித்யாசம்—பணக்காரன் கௌரவமான போர்வையில், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறான். ஒருவனுடைய நியாயமான தேவைக்குமேல் செல்வத்தைக் குவித்து வைப்பது திருட்டேயாகும்."

என்பது காந்தியாரின் கொள்கைகளில் ஒன்றாகும். அவருடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றி வைப்போம் என்று அவர் காட்டிய வழி நடப்பதாக அவருடைய நினைவு நாளில் உறுதி கூறிய எந்தத் தலைவரும் கூறக்காணோம். ஏன்? ஒருவேளை இது அவர்களுக்கு அவ்வளவு முக்கியமானதாக — உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகத் தோன்றவில்லைப் போலும்! அல்லது பண்டிதநேரு அவர்கள் காந்தியார் நினைவுநாளில்,

"மகாத்மா காந்தி காட்டிய வழியை நாம் கடைப்பிடிப்பதா? அல்லது மற்றொரு வழியைக் கடைப்பிடிப்பதா? மகாத்மா காந்தி காட்டிய வழியை நாம் எவ்வளவுதூரம் பின்பற்ற முடியும் என்பதையும், இன்றைய சூழ்நிலையில் அந்தவழியை மாற்ற வேண்டியது அவசியந்தானா என்பதையும் நாம் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு முக்கியமான விஷயமாகும்."

என்று கூறியபடி, காந்தியார் காட்டிய வழி நடப்பதில் தடையாக இருக்கும் பலவற்றுள் ஒன்றாக நாம் மேலே குறிப்பிட்ட விஷயமும் சேர்க்கப்பட்டு, அது, பண்டிதநேரு அவர்களால் கண்டுபிடிக்கப்பட வேண்டிய பிரச்னையாக இருப்பதால் தான், இதைப்பற்றி அவர் நினைவு நாளில் யாரும் பேசவில்லைப் போலும்!

இத்துணைக் கண்டத்தின் முதல்வராக விளங்கும் பண்டிதநேரு அவர்கள், காந்தியார் காட்டிய வழி நடப்பதா அல்லது வேறு வழியைக் கண்டுபிடிப்பதா என்ற ஐயப்பாட்டினைக் காந்தியாரின் நினைவு நாளில் வெளியிட்டிருக்கிறார். ஆனால், அதே போது, பலர், காந்தியார் காட்டிய வழி நடப்பதே முறை என்று சூளுரைத்துள்ளனர். இந்த இரண்டில் எது நடைமுறைக்கு வருமென்பது இனிப் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயமாகும். என்ற போதிலும், நாம் எதிர்பாராத ஒரு பெரிய காரியத்தை நமக்குத் தம்முடைய பெருமுயற்சியால் சாதித்துத் தந்த காந்தியாரின் திட்டங்களில் முக்கியமானவற்றையாவது கடைப்பிடித்து, அவற்றை வெற்றிபெறச் செய்து நடைமுறையில் கொண்டு வருவதுதான், நாம் அவர் காட்டிய வழி நடக்கிறோம் என்பதற்கும், நாம் அவருடைய அரிய சேவையை மறக்கவில்லை என்பதற்கும் அறிகுறியாகும்—நன்றி செலுத்தும் முறையாகும். அங்ஙனமன்றி, அவருடைய திட்டங்களையும் கொள்கைகளையும் காற்றில் பறக்கவிட்டு, அவரை அஞ்சலி செய்வதோ — அவதார புருஷராக்குவதோ அறிவுடைமையாகாது.

காந்தியார் பல திட்டங்களை நம்முன் வைத்துவிட்டுச் சென்றுள்ளார். அவைகளில் முக்கியமானது நாம் மேலே குறிப்பிட்டிருப்பது. அவருடைய திட்டங்களில் இன்னொன்று:—

"கருத்து வேற்றுமை அல்லது மாறுபாடுகள் இருப்பதற்காகப் பகைமை உணர்ச்சி ஏற்படக் கூடாது."

என்பதாகும். இதனை, அவர் பெற்றுத் தந்த சுயராச்சியத்தை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டும் இதனையும் தனிக் கண்டுபிடிக்க வேண்டிய பிரச்னைகளில் ஒன்றாகக் கருதிவிடக்கூடாது. ஒருவருடைய கருத்து இன்னொருவருடைய கருத்துக்கு மாறுபடுகிறதென்ற காரணத்துக்காக அவரை வதைபுரியும் கொடுமையை ஆளவந்தார்கள் கடைப்பிடிக்கக்கூடாதென்பதே காந்தியாரின் வாசகத்தில் அடங்கியிருக்கும் உண்மையாகும். இதனை, ஆளவந்தார்கள் காந்தியார் மறைந்தவுடனேயே மறந்துவிட்டனர். எங்கே கருத்து மாறுபாடு தோன்றினாலும், அங்கே ஆளவந்தார்கள் படையெடுத்து அடக்கி விடுவதையே தங்கள் ஆளும் உரிமையாக்கிக் கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, 'இராவண காவியம்' என்ற ஒரு நூலை எழுதுவதனவாயிலாக அதன் ஆசிரியர், இராமாயணத்தைப் பற்றிய தம்முடைய கருத்தை வெளியிட்டார். இது, காந்தியார் வழி நடக்கும் ஆளவந்தார்களுக்குப் பிடிக்கவில்லை. உடனே அந்த நூலைத் தடை செய்து பறிமுதல் செய்துவிட்டனர். கருத்து மாறுபடுகிறது என்பதற்காக எவரையும் பகைத்துக்கொள்ளக் கூடாதென்று காந்தியார் கூறிய உபதேசம் காற்றில் பறக்கவிடப்பட்டது. ஆனால், காந்தியாரை அவதார புருஷரென்றும், அவர் காட்டியவழி நடப்பதே நம்முடைய கடமையென்றும் கூறுவதில் மட்டும் நமது மாகாண அமைச்சர்களிடம் மற்றவர்கள் பிச்சை வாங்கவேண்டிய அளவுக்கு மேலே போய்விடுகின்றனர்! இதுதான் 'அவர் காட்டியவழி' நடப்பதாகச் சொல்லிக் கொள்வதற்கு நற்சாட்சிப்பத்திரமா என்று ஆளவந்தார்களைக் கேட்கிறோம்.

கருத்து வேறுபாடு காரணமாக ஒருவரோடொருவர் பகைமை கொள்ளக் கூடாதென்பதை மேலும் வலியுறுத்தும் முறையில்,

"கருத்து மாறுபாடு இல்லாமல் இருந்த இரண்டு தனி மனிதர்கள் உலகில் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது"

என்று காந்தியார் கூறியுள்ளார். எனவே ஒருவருடைய கருத்து இன்னொருவருடைய கருத்தோடு மாறுபடுகிறதே என்ற காரணத்துக்காக, அடக்கி ஆளும் அதிகாரம் தங்கள் கையில் இருக்கிறது—எதை வேண்டுமானாலும் செய்யலாம்—யார் கேட்பது—என்ற போக்கில் ஆளும் முறையை ஆக்கிக்கொள்வது அறிவுடைமையா? அல்லது அவர் காட்டிய வழி நடக்கும் நெறியா? என்று கேட்கிறோம். கருத்து வேறுபாடுகளைக் காரண காரியங்களைக் காட்டி விவாதித்து ஒரு முடிவுக்கு வர முடியாதவர்களன்றி, மற்றெவரும் கருத்து மாற்றங்களைக் கண்டு கலங்கித் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று சட்டத்தின் துணையை நாட மாட்டார்கள். ஒருவர் தம்முடைய கருத்தை—ஆராய்ச்சியால் கண்ட உண்மையை வெளியிடுகிறார் என்பதற்காக அவருடைய கருத்துக்குக் கதவடைப்புச் செய்வது, நாசிசம், பாசிசம், எதேச்சாதிகாரம் என்று சொல்லப்படும் கொடுங்கோலாட்சியின் கீழ்ப்பட்ட நாடுகளில் கூடக் காண்பதரிதாகும். ஆனால் இங்கு—அன்பு, ஒற்றுமை, சத்தியம், அகிம்சை என்ற உயர்ந்த பண்புகளோடு நாட்டை ஆள்வதாகச் சொல்லிக்கொள்ளும் 'நல்லவர்கள்' தாராளமாகவும் தங்கு தடையின்றியும் அந்தக் காரியத்தைக் காந்தியார் கூறிச் சென்ற கருத்துக்களின் நிழலில் நின்றுகொண்டே செய்கிறார்கள்.

•

காந்தியாரின் நினைவு நாளின் போது இந்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், காந்தியார் மறைந்த ஓராண்டுக்குள் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் சந்தர்ப்பம் காந்தியாருக்குக்கிடைத்தால், "இந்தக் கொடுமைகளைக் காணவா சுயராச்சியத்தைப் பெற்றது? இவர்களை விட அவர்கள் எவ்வளவோ மேல்" என்று எண்ணி வருந்தாமல் இருக்க முடியாது.

காந்தியார், தம்முடைய கொள்கைகளும் திட்டங்களும் எங்கே கைவிடப்பட்டுவிடுமோ என்று அஞ்சியதாலேயே அவர் தம்முடைய நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்துச் சென்றுள்ளார்.

"என் நண்பர்கள் என்போர் எனக்குக் கொடுக்கும் உயர்ந்த சிறப்பு, அவர்கள் வாழ்க்கையில், நான் கடைப்பிடித்த கொள்கைகளை நிறைவேற்ற முயலுதலே யாகும்."

என்று கூறியுள்ளார். ஆனால் அவருடைய நண்பர்கள் என்று தங்களைக் கருதிக்கொள்பவர்கள் என்ன செய்கிறார்கள்? அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி நடக்கிறார்களா? இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். காந்தியாரின் நினைவுநாளில் மிக மிக முக்கியமாகவும் முதன்மையாகவும் நினைத்து—வருந்தி—இனியும் அவ்விதம் ஏற்படாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டிய ஒன்றைப்பற்றியாவது யாராவது நினைத்தார்களா? நினைத்தாலே நெஞ்சு பதறும் அச்செய்தியை, அவதார புருஷராக்கும் அளவுக்குத் தங்கள் 'அறிவை' விசாலப்படுத்திக் கொண்டவர்கள் சிறிதளவாவது சிந்தித்து அதற்காக வருந்தப்பட்டதாகவோ இனியும் அவ்விதமான கோர நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெறாதிருப்பதற்கான வழிவகைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகவோ எவரும் எண்ணியதாகக்கூடத் தெரியவில்லையே!

ஆனால், தோழர் இராசேந்திரபிரசாத அவர்கள்மட்டும், காந்தியாரின் நினைவு குறித்து, 'அரிஜன்' பத்திரிகையில், "ஏற்று அனுஷ்டிக்கவேண்டியது" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் ஒரு குறிப்பை வெளியிட்டிருக்கிறார், அதாவது:—

"கடைசியில் ஒரு இந்துவின் கைதான் அவருடைய உடலில் குண்டுகளைப் பாய்ச்சியது. இன்னும் அந்த இந்து, தான் செய்தது சரியென்று தத்துவம் பேசுகிறான்"

என்று வேதனையுடன் எழுதியிருக்கிறார். இந்த வாசகத்தில் காணப்படும் ஒவ்வொரு சொல்லும் படிப்பவர் கேட்பவர்களின் உள்ளத்தையும் உடலையும் உலுக்குவதாகவே இருக்கிறது. உலக ஒற்றுமைக்காகப் பாடுபட்ட ஒரு உத்தமரைக் கொன்றவன் யார் என்ற கேள்வியைக் கேட்டு, அதற்குப் பதில் கூறுவது போன்றதே

"கடைசியில் ஒரு இந்துவின் கைதான் அவருடைய உடலில் குண்டுகளைப் பாய்ச்சியது"

என்று டாக்டர் இராஜேந்திர பிரசாத் கூறுவது. கூறி, மேலும் கேட்கிறார், இதற்கென்ன பரிகாரம் தேடினீர்கள் என்று.

"இன்னும் அந்த இந்து, தான் செய்தது, சரியென்று தத்துவம் பேசுகிறான்"

என்று எழுதுவதன் வாயிலாக, நாட்டுமக்கள் அனைவரையும் நோக்கிக் கேட்பதுபோல் இவ்வாசகத்தை அமைத்திருக்கிறார். கேட்பதோடு மட்டும் அவர் நிற்கவில்லை.

"இந்தக் குற்றம் மகாபாதகமானதென்றும், மிகமிகத் துக்ககரமானதென்றும் உணர்வதை உலகம் விரைவில் அறியப்போகிறது"

என்றும்கூறியுள்ளார். இவ்வாசகத்திலுள்ள, "உணர்வதை உலகம் விரைவில் அறியப் போகிறது" என்பதன் பொருள் என்ன? உணர்வது யார்? இதற்கு விடை இந்த வாசகத்தின் கடைசியிலேயே உள்ளது. "உலகம் விரைவில் அறியப் போகிறது" என்பதுதான் அதற்கு விடையாகும். காந்தியாரின் படுகொலை பாதகமானது என்பதை இந்நாட்டிலுள்ளவர்கள் இன்னும் உணரவில்லை என்றும், இனிமேல்தான் உணர்வார்கள் என்றும், அப்போது உலகம் அதனை அறியும் என்றும் டாக்டர் இராசேந்திர பிரசாத் கூறுகிறார். இந்தக்கொடுமையை இந்நாட்டிலுள்ளவர்கள் இன்னும் உணரவில்லையே என்று வேதனையுடன் கூறுகிறார். உணர்ந்திருந்தால் — அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், அல்லது எடுக்கப்பட வேண்டுமென்ற சைகையாவது ஆளவந்தார்களால் காட்டப்பட்டிருந்தால் அந்தக்கட்டுரை இந்தவிதமான வாசகங்களோடு அமைந்திருக்காது—அதன் தலைப்பும் "ஏற்று அனுஷ்டிக்க வேண்டியது" என்று அமைக்கப்பட்டிருக்காது.

எனவே, அவர்காட்டிய வழியில் நாட்டை ஆள்வதாகச் சொல்லிக்கொள்ளும் தலைவர்கள் இன்னுமொருமுறை இராசேந்திர பிரசாத் எழுதிய கட்டுரையைக் கருத்தோடு படித்து, அதன்படி, தங்கள் ஆட்சிமுறைகளை மாற்றிக்கொள்வார்களா அல்லது இனியும் இந்தவிதமான கொலை பாதகங்களை நாட்டில் நடைபெறுவதற்கான வழிவகைகளை உண்டாக்கும் முறையில் தங்கள் ஆட்சி முறையை அமைத்துக் கொள்வார்களா என்பது பொறுத்திருந்து பார்க்கக்கூடிய ஒன்றல்ல—உடனடியாக மேற்கொள்ள வேண்டிய மிக மிக முக்கியமும் அவசியமுமான ஒன்றாகும் என்பதனை நாம் ஆளவந்தார்களுக்கு ஞாபகப்படுத்துவதோடு, காந்தியார் காட்டிய அன்புவழியில் இனியாவது நடக்கமுயலவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம். ஏனென்றால், அன்புக்கு, உண்டாக்கும் ஆற்றல் உண்டென்றும், பகைமைக்கு அழிக்கும் ஆற்றலே உண்டென்றும் அவர் போதித்திருக்கிறார்.

காந்தியாரின் கொள்கைகளில் சில நமக்கு, ஏன், அவருடையநெருங்கிய நண்பர்களுக்கே கூட உடன்பாடில்லாதனவாக இருந்து வந்திருக்கிறது. என்றபோதிலும், அவருடையஒழுக்கத்தையும் உயர்ந்த பண்புகளையும் எவருமே குறை கூறியது கிடையாது. எனவேதான் அவர் உலக உத்தமர் என எல்லோராலுமே போற்றப்படுகிறார். எனவே, அன்பையும், உண்மையையும், பிறருக்குத் தன்னாலான உதவி செய்யும் சிறந்த பண்பையும் பெற்று, பகைமை, பொறாமை ஆகிய தீய முறைகளைக் கைவிட்டு, மக்களையும் நாட்டையும் பாதுகாத்துக் கொள்வதுதான், அவர் காட்டிய வழி நடப்பதற்கும், ஆட்சிமுறை அலங்கோலமாகாமல் இருப்பதற்கும், அறிகுறியாகும். உலகம் வெறுக்கும் கொடுமையான கொலைபாதகங்களைச்செய்வோருக்கு இனி நாட்டில் புகலிடம் இல்லையென்பதை 'அவர் காட்டிய வழி' நாட்டை ஆள்பவர்கள் நடைமுறையில் செய்து காட்டவேண்டுமென்பதே நமது விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

✲

வறுமையே காரணம்!

திருமங்கலத்தை அடுத்த சாத்தங்குடியிலிருந்த ஆயம்மாள் என்ற 21 வயதுப்பெண் தனது 30 நாளைய பெண்குழந்தையுடன் 13—1—49ல் கிணற்றில் விழுந்து மாண்டுவிட்டாள் என்றும், இதற்குக் காரணம் தாங்கமுடியாத வறுமையும் நோய் தீர்க்கப் பண வசதியும் இல்லாததுதானும்!

"எங்கள் மடாதிபதி"

'வெண்ணிறப்பட்டுடுத்திச்—
சந்தனம் மேனியெலாம் பூசிக்
கண்கவர் பூஷணங்கள்—
அணிந்து கட்டில் அறைநோக்கிப்
பெண்கள் பலபேர்கள்—
குலவிப் பின்வர முன்நடந்தார்!"

யார்? மடாதிபதி! சைவ சமயத்தைத் தழைக்கச்செய்து அதன் மூலம் மக்களிடை சமரச சன்மார்க்கம் நிலவச் செய்வதற்கென அந்நாள் மன்னர்கள் அளித்த 'மான்யங்களை, ஆண்டு அனுபவிக்கும் மடாதிபதிகள்!!

பெண்கள் பின்வர, முன்நடந்த மடாதிபதி, எங்கு சென்றார்? என் செய்தார்?

"பட்டு மெத்தைதனிலே—மணமே
பரவும் பூக்களின் மேல்
தட்டினிற்பக்ஷணங்கள்—அருந்திச்
சைவத்தை ஆரம்பித்தார்;"

இவ்வளவு சோபிதமாக சைவம் ஆரம்பிக்கப்பட்டவுடன் "கட்டிக் கரும்பினங்கள் — சகிதம் கண்கள் உறங்கி விட்டார்" மேலும் சில நடந்தன, மடாதிபதியின் கனவில்.

மடாதிபதியின் வாழ்க்கை இருக்கும்விதம் இதுவெனக்காட்டவே, கவி பாரதிதாசன் இக்கற்பனைக் கவிதையை எழுதினார். ஆனால் அதில் கனவும் பிறவும் கற்பனையாக இருக்கலாம், ஆனால் மடாதிபதிகளின் வாழ்க்கை சித்தரிக்கப்பட்டிருக்கிறதைக் கற்பனை என்று எவரும் துணிந்து கூறார்!

தென்னாட்டில் "திவ்யக்ஷேத்திரங்கள்"! என்பவைகளைப்போன்ற "மகிமைகள்" கற்பிக்கப்பட்டுப்பலப் பல மடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முன்னாள் மன்னர்கள் மடங்களுக்கெனக் கிராமம் கிராமமாக மான்ய மளித்தனர். ஆயிரமாயிரம் வேலிகளும் அதைச் சூழ்ந்த அழகிய கிராமங்களும் இன்றும் பல பெரிய மடங்களுக்குச் சொத்தாக உள்ளன. மடத்தில் மடாதிபதி இருக்கிறார் நாட்டுக்கொரு அரசன் இருத்தல் போன்று. ஆனால் மடாதிபதிகளின் மாண்பு கவி கூறியபடி இருந்ததால் தான் மடாதிபதிகளைக் குறித்து கதைகளில் கண்டித்து எழுதப்பட்டு நாடகங்களின்மூலம் காட்டப்பட்டு, படக்காட்சிகள் மூலமும் பரப்பப்பட்டது.

மடாதிபதிகளைப் பற்றி மக்கள் கருத்து

தென்னாட்டிலுள்ளோரும், கடல் கடந்து வாழும் தமிழரும், சுவாமிகாள்! யோகாப்பியாசத்திற்கு எழுந்தருளலாமே!! என்று ஒரு மடாதிபதி மற்றொரு மடாதிபதிக்குக் கூறியதாகச் சந்திரகாந்த எனும் படக்காட்சியில் காட்டப்படும் காட்சியை, மறந்திருக்க முடியாது. அப்படம் காட்டப்பட்ட காலையில் ஊரெங்கும், தெருவெங்கும், வீடெங்கும் இதே பேச்சுதான்! சுவாமிகாள்!! என்ற சத்தம், சிரிப்பு, கேலி, கண்டனம் இவ்வளவும் நடந்தது.

சைவம் தழைக்க, தமிழ்வளர, தமிழ்வாழ, வழிகோலவும், வகை தேடவும், பணியாற்றவும் நிறுவப்பட்ட மடங்களின் அதிபர்களைப் பற்றி, மக்கள் எவ்வளவு—எங்ஙனம் கருத்துக் கொண்டுள்ளார்கள் என்பது அந்தப் படத்துக்குக்கிடைத்த "அமோகமான" வரவேற்பிலிருந்தே நன்கு விளங்கிற்று.

மக்கள் எங்ஙனம் மடாதிபதிகளைக் கண்டு வருகின்றனர் இன்றையதினம்.

அரண்மனை போன்ற மடம், அதைச் சுற்றிலும் பூந்தோட்டம், சிற்றாறு போன்ற கால்வாய், அங்கு செவ்விளநீர் மரமும் செவ்வாழைக் கன்றும், அலரியும் ரோஜாவும் அலங்கரிக்கும் தோட்டம், அங்கு ஆயாசமின்றி உலவும் உருவங்கள், மேனி சிவப்பு, அதிலே ஒரு பளபளப்பு, உடை காவி, அதிலே ஒரு மினுமினுப்பு, மாலை உத்திராக்கம் அதற்கு பொன்மேல்மூடி, நெற்றியில் நீறு, அதிலே பரியளத்துக்குப் பூச்சு, தங்கத் தாம்பாளத்தில் ராஜபோக உணவு, வெள்ளிக் கோப்பையில் வெந்நீர், பளிங்குக் கிண்ணத்தில் பனிநீர், ஜவ்வாதும், புனுகும் சிமிழில், ஜாதிக்காய் ஜாதிபத்திரி மற்றொன்றில், குளோப்புல்லஸ்கரும் உள்ள நொது மண்டபம், அதற்கு அடுத்து அந்தப்புரமெனத்தக்க அலங்காரப் படுக்கை அறை, அங்கு நிலைக்கண்ணாடி, நேரே கண்கவரும் கட்டில், அதன் மீது பட்டுமெத்தை, அதன் மீது பரிமள முல்லை, திவ்யமான திண்டு தலையணை, அதன் மீது சொகுசாகச் சாய்ந்து சுந்தரமிக்க தம்பிரான் சைவத்தின் பிரதிநிதியாக விளங்குகிறார். மக்கள் காண்பது இது! ஆனால் இதனையா விரும்புவர் மக்கள்? இக்காட்சிக்கா முன்னாள் மன்னர்கள் மக்களின் பொருளை மடத்துக்குத் தந்தனர், மக்களில் சிலரை மடாதிபதியாக்கினர்? இல்லை! இல்லை! மற்றையோர் வாழ்க்கையில் உழன்று வருவதால் சன்மார்க்கத் தொண்டாற்ற — தமிழ்த் தொண்டாற்ற வசதியும் நேரமும் கிடைக்காது வாடுகின்றனர். அக்குறை நீக்கி மக்கள் தொண்டுக்கெனவே சிலர் இருத்தல் நன்று என்ற நன்னோக்குடன் மடங்களை நிறுவினர், அதிபர்களை ஆளவிடுத்தனர்! அந்தோ விபரீதமே! மடாதிபதிகள் மடத்தை ஆள்வதைக் காண்கின்றோம். மக்களிடை ஆள்வதில்லை, மக்களிடை வருவதுமில்லை. இந்நிலை சிற்றரசர் போல், சீமான் போல், முதலாளிபோல் மடாதிபதிகள் வந்துவிட்டனர் எனில், மக்கள் எங்ஙனம் ஆதரிப்பர், எங்ஙனம் பொறுப்பர்!

கால நிலைமை எங்ஙனமுள்ளது?

நடக்கும் காலம் என்ன? "எலும்பைப் பெண்ணுருவாக்கும்" காலமா, ஏடு எதிர்நோக்கிச்செல்லும் காலமா, நரி பரியாகும் நேரமா? இல்லை! ஆராய்ச்சிக்காலம். அறிவேவழிகாட்டியாக அமைந்துள்ள காலம், கோலாட்சியை மாற்றிக் குடியாட்சி அமைக்கும் காலம், முதலாளித்துவத்தை நீக்கிச்சமதர்மத்தை அமைக்கும் காலம், புத்தம் புது கருத்துகள் பூத்திடும் நேரம், புரட்சிக்காலம்!!

இந்தக் காலத்தில் மடாதிபதிகள், இந்நிலையில் இருப்பரெனில், மக்கள் மனதில் அவர்பால் மதிப்பும் அன்பும் ஒழுகுமென்று கூற முடியும். அங்ஙனம் கூறல் உண்மையை

மறைப்பதாகும். பட்டணப் பிரவேசத்திற்காகப் பல்லக்கில் பரிமளகந்த மணிந்து, இரவைப் பகலாக்கும் விதத்தில் எண்ணற்ற விளக்குகள் புடை சூழ மக்கள் முன்பு பவனி வரும் "தம்பிரான்கள்" எங்ஙனம் மக்களால் போற்றப்பட முடியும்.

தம்பிரானின் தங்க மேனியைக் கண்டு தமது உடலில் உள்ள ஒடிச்சலையும் மக்கள் காண்பரேல் சைவத்தின் மாண்பு தம்பிரானுக்குச் சென்றதேயன்றி நமக்குக் காணேமே என்று ஏங்காமலிரார். சைவத்தைப் பரப்ப வந்தவர் தங்கப் பல்லக்கில் முத்து வடமும், பவள மோதிரமும் தங்கத் தோடுகளும், வெண்பட்டாடையும் உடுத்திப்பவனிவர, உழைத்த, உழுத, அறுத்த, பிளந்த கைகளும் அலுத்த கால்களும், ஒட்டிய வயிறும் படைத்த மக்கள் கண்டு உளத்தில் என்ன எண்ணுவர். சைவத்தின் சிறப்பே சிறப்பு என்று களிப்பரா!

"தோடுடைய செவியன்—விடை ஏறி" தம்பிரான்களை இங்ஙனம் நடக்கும்படி "அருள் பாலிக்க" நமக்குக்காடுபோல் வீடும், எலும்புக் கூடுபோல் குடும்பத்தினரும் இருக்கத்தான் அருளினார் போலும்! என்னே இவரின் நீதி! என்று ஏன் எண்ணமாட்டார்கள். ஆயிரம் தொழிலாளரைப் பஞ்சாலையில் வேலைக்கு அமர்த்தி முதலாளி, ஆறு நாளைக்கொரு முறை வேலை நிறுத்தப் புயலில சிக்கும் இந்தக் காலத்தில் மடாதிபதிகள் வாழ்க்கையை ஒரு, உல்லாச ஊஞ்சலாக்கிக் கொண்டு, சைவத்தைச் சாய்வதற்கு சோபாவாகக் கொண்டு "மந்திரமாவது நீறு—வானவர் மேலது நீறு" என்ற பாடலுக்கு மக்கள் செவி சாய்க்க வேண்டுமென விரும்பினால் அது நடக்கிற காரியமா?

மடங்களைப்பற்றி நமது கருத்து

மடங்கள் சன்மார்க்கசாலைகளாக, தமிழன்மன்றமாக, தமிழர்நல்வாழ்க்கைக்குப்பயிற்சிக்கூடமாக இருத்தல் வேண்டும் என்பதும், மடத்துச் சொத்துப் பூராவும் இத்தகைய பணிக்கே பயன்பட வேண்டுமேயன்றி, கையில் அணிந்துள்ள வைர மோதிரத்தின் வெளிச்சம் பச்சை மோதிரத்தின் ஒளியை அடக்க முயன்று தோற்க, அதுகண்டு காதுகளிலே தொங்கும் தங்கக்குண்டலம் தக தகவெனச் சிரிக்க, தம்பிரான்கள் காட்சியளிப்பதற்குப் பயன்படக்கூடாது என்ற கருத்துடையோம் நாம். நமது கருத்து காலத்தின் கண்ணாடி என்பதை யாரும் மறுக்கார்.

தமிழ் மன்னர்கள் அன்று மடாதிபதிகள் மூலம் மக்களின் அறிவும் தன்மையும் வளரவேண்டும் என்றெண்ணியே பெரும் பெரும் சொத்தை ஒப்படைத்தனர். இதனைக் கொண்டு மடாதிபதிகள் மக்களிடை உலவித், தொண்டாற்றிவந்திருப்பின் தமிழ்நாடு எத்தனையோ விதத்தில் முன்னேறியிருந்திருக்கும்.

சிலமடங்களில் வித்வான்கள் பாடங்கற்பதும் தத்துவார்த்தம் பயில்வதும் கவி கற்பதும் நாம் அறிவோம். பண்பாடியும் பதிகம்கோர்த்தும் தேவார திருவாசகம் ஓதியும் திருவிளையாடற் புராணத்தின் உட்கருத்துக்களை உணர்ந்தும் "தீவண்ணனும் எமது சிவனார்" என்று திருத்தாண்டகம் பாடியும் பிரணவத்தின் கருத்து கற்றும் வரும் பண்டிதர்களுக்கு மடங்கள் இடம் அளித்தன என்பதையும் நாம் அறிவோம். பரிசுகள் வழங்கும் மடங்களையும் நாம் அறிவோம். ஆனால், இவைகள்போதா; இவைகள்தான் முறை என்றும் நாம் எண்ணேம்.

மடங்களில் பயின்றோர், மாசற்ற தமிழ் கற்றிருப்பர். ஆனால் அவர்களின் புலமைபழைமையை மீண்டும் மக்களிடையே பரப்பப் பயன்பட்டதேயன்றிக் காலத்துக்கேற்ற பணியாற்றத்துண்டவில்லை. "தில்லை நடராஜனின் திருத்தாண்டவத்துக்கு" மற்றொரு தத்துவார்த்தம் கூறவும், உமையொருபாகனின்உருவ அமைப்புக்கு உவமை கூறவும் உதவிற்றேயன்றி, உலகுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள உருமாற்றம், உளமாற்றம், ஆகியவற்றை விளக்க உதவவில்லை.

முன்பொருசமயம் தோழர் பாரதிதாசன், ஆற்றிய சொற்பொழிவில் இக்கருத்தை ரசம்படக் கூறியுள்ளார்.

"முன்னிருந்தோர் மதங்களைப்பற்றியே பாடிப் பாடி உயர்ந்த பக்தி நிலைக்கு வந்துவிட்டார்கள். மற்றவைகளைப்பற்றி அவர்கள்பாடக்கூட நினைத்ததில்லை. முதல்நூல், வழிநூல், சார்புநூல், இந்த மூன்றையும் தவிர வேறு வகையில் ஏதாவதுசெய்தால் அந்தக்காலத்தில் ராஜாக்களிடமிருந்த கவிப்பெரு மக்கள் காதையோ, மூக்கையோ, அறுத்துவிட உத்தரவிட்டு விடுவார்கள். 50 வருடங்களுக்கு முன்னால் கடவுளுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள சம்பந்தத்தைப் பற்றிப் பாடாத வேறு நூல்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? கடவுளையே பாடவேண்டிய கஷ்டத்திலிருந்து விடுபட விரும்பிய சிலர் கடவுளை நாயகனாக வைத்துக் கவியியற்ற ஆரம்பித்தார்கள். கடவுளைப் பற்றிப் பாடினால் தான் நல்லவன்! இல்லாவிட்டால் கவிஞன் அல்ல."

மடாதிபதிகள் கடமை

அவர் கூறிய முறையிலேயே, நம் நாட்டுக் கவிகள், தேய்ந்த பாதையிலேயே நமது உருளும் வண்டியைச்செலுத்தினர். காரணம், அது வசதியாக இருந்தது. அதுவும் கிடைத்தது. மடாதிபதிகளில் சிலர் இதனை ஆதரித்தனர். இதன் பயனாகத்தான் "தமிழ்ப்புத்தகசாலையில் ஒன்றை எடுத்தால்" அங்கிங்கெனாதபடி என்று தான் ஆரம்பிக்கும். அந்தப் பழைமை நெளியும். புதுமை எனில் புருவத்தை நெளித்துக் கொண்டு புலவர்கள் போய் விடுவர். "முந்தி இருந்தது பழைய பதிப்பு இப்பொழுதிருப்பது புதிய பாக்கட் சைஸ் பதிப்பு. இவ்வளவு தான் வித்தியாசம்."

உலகத்தில் வேறு கருத்துகள் இல்லையா! உண்டு! எண்ணற்ற புதுப் புதுக்கருத்துகள் உண்டு. மறைந்து கிடக்கும் மாண்புகள் எவ்வளவோ உள. அவைகளை வெளிக்குக் கொண்டுவருதலும் புதுக் கருத்துரைகளைப் பரப்புதலுமே மடாதிபதிகள் செய்யவேண்டிய கடமை.

புராண இதிகாசங்களின் மூலம் மக்களிடம் வளர்க்கப்பட்டுள்ள மூடநம்பிக்கை, குருட்டுக்கொள்கை, இருட்டு எண்ணம், கூன் மனப்பான்மை ஓட்டப்பட மடாதிபதிகள் புலமையும் புதுமையும் பூத்த பொன்மொழியாளரை ஆதரித்துச் சிறுசிறு புத்தகங்கள் வெளியிட்டுப் பரப்ப வேண்டும், சீரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கவேண்டும். அறிவுக்கதிரும் ஆராய்ச்சிக்கதிரும் யாங்கணும் பரவச் செய்தல் வேண்டும். ஜாதி மத பேதமெனும் பித்துப் பிள்ளை விளையாட்டை அடக்கவேண்டும். அன்பும் அமைதியும் பரவச்

செய்தல் வேண்டும். அண்ணாந்து விண்ணைப் பார்த்து அழும் மனப்பான்மை ஒழியவும், உழைப்பில், உலகில் நம்பிக்கை பிறக்கவும் செய்தல் வேண்டும். இவைகளே காலத்தின் தன்மைக்கேற்றன. இவைகளை விடுத்து, மீண்டும் 'பித்தா பிறைசூடி' என்ற பாடலையே பரப்பிக்கொண்டு போவோமேயானால் பித்தம் தெளிய மருந்தே கிடைக்காமற் போய்விடும்.

இன்று மக்கள் ஆரியத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர். சைவர்கள் தமிழை, தமிழ் வாழ்வைப் போற்றுபவர் என்று பெருமையுடன் கூறிக் கொள்வதைக் கேட்டுள்ளோம். அவர்கள் ஆரியத்தை அகற்ற என் செய்தனர்? என் செய்ய எண்ணுகின்றனர்? மீண்டும் அந்த "மண் சுமந்த படலத்துக்கு" மதிப்புரை எழுதிக்கொண்டிருக்கத்தான் போகிறார்களா? மடாதிபதிகள் இதனைத் தான் "புலவர் பணி" எனக் கொள்ளப் போகின்றனரா என்று கேட்கிறோம்.

ஒன்று கூறுகிறோம்

மடாதிபதிகளுக்கு ஒன்று கூற விரும்புகிறோம். மக்களின் கண்கள் திறந்திருக்கும் இந்தவேளையில் நீவிர் அவர் தம் மனம் உம்பால் அன்பினால் இழுக்கப்படும் விதத்தில் நடத்தலே முறையாகும். ஜெமீன்தார் ஒழிப்பு மசோதா, கடன்ஒழிப்பு மசோதா, பால்ய விவாக ஒழிப்பு மசோதா எனச் சட்டங்கள் வரும் காலத்தில் மட ஒழிப்பு மசோதாவரவே வராதென யாரால் உறுதி கூற முடியும்? மடாதிபதிகள் மக்களின் அதிபர்களாகி, பணியாற்றினால்தான் தப்ப முடியும். இன்றேல் சவி கற்பனையில் கூறிய படி, 'மடத்தின் ஆஸ்தியெல்லாம்—பொதுவில் மக்களுக்காக்கிவிட்டேன்" எனச் சட்டம் கூறும்! (கவிதையில் சிவனார் கூறினார் என்றுளது)

"எப்படி நான் பிரிவேன்—அடடா இனபப் பொருளையெல்லாம்" என்று தம்பிரான் துள்ளி விழுந்தழுதாலும் மக்கள் "ஒப்பி உழைத்ததில்லை — சிறிதும் உடல் அசைந்ததில்லை" என்று கூறுவர்!

பல மடாதிபதிகள் பலப்பலஇலட்சங்கள் தந்து அத்தொகை வெறும் புராணிகர்களுக்குப் போய்ச் சேராமல் புதுமைக்கு உழைப்போர்பால் சேர்ந்து புதுமைபரவி, புன்மைநீங்கி, நாடு ஓங்க, நலம் ஓங்க, தமிழ் தழைக்க உதவும்படி செய்தல் வேண்டும். தமிழ்கெட இந்நிறுமைந்த போது தமிழ் நாட்டில் கொந்தளிப்பும் போரும் நேரிட்ட காலையில் தமிழ்த்தம்பிரான்கள் ஆரியஆட்சிக்கு எதிராக மூச்சு விட்டால் மூக்கறுபடும் எனப் பயந்து மூலையில்கிடந்தனர். தமிழர் இதனை மறந்தாரில்லை. கொதித்தனர். அது முற்றுமுன்னம் முனைந்து நின்று மடாதிபதிகள் முத்தமிழ்வளர்த்துத்தமிழ்நாட்டைத் தமிழருக்காக்கும் பணியில் ஈடுபட வேண்டும். அதைச் செய்யின் "எங்கள் மடாதிபதி" என்று மக்கள் அன்புடன் கூறி இன்புறுவர், இல்லையேல் "சைவத்தை நித்த நித்தம் முயன்று புவியில் நீளப் பரப்பியது போதும், இனி மடம் மக்களுக்கு ஆகட்டும்" எனக்கூற, மக்கள் முன் வருவர். காலம் துணை செய்யும். சட்டம் "சரி" என்னும்!!

பண்டைக்கால மன்னர்களும், பொன்படைத்த பிறசிலரும், அன்றிருந்த மடாதிபதிகளிடமோ அல்லது தேவையை உத்தேசித்து அதற்கென உண்டாக்கப்பட்ட மடாதிபதிகளிடமோ தங்களுடைய சொத்துக் களில் ஒருபகுதியை எடுத்து அவர்களிடம் ஒப்படைத்தனர். இவ்வாறு ஒப்படைத்ததற்குக் காரணம், சமய வளர்ச்சி, மொழிவளர்ச்சிநடைபெறுவதற்கு என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்த மடாதிபதிகளால்சமயமும், மொழியும், வளர்ச்சியடைந்திருக்கிறதா என்றால், இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. இந்த முடிவை நாம் கூறினால், நம்மை நாத்திகப்பட்டியில் சேர்த்து, 'இவர்கள் இப்படிக்கூறாமல், வேறு எப்படித்தான் கூறுவார்கள்" என்று மிக எளிதாக நம்மீது குற்றம் சாட்ட, ஆத்திகர்கள் என்று தம்மை விளம்பரப்படுத்திக்கொண்டுள்ள சிலர் தயாராய் இருப்பர் என்பதை நாம் அறிவோம். ஆனால் மடாதிபதிகள் மீது இந்தக்குற்றச்சாட்டைச் சுமத்துபவர் நாமல்ல. நாம் எந்த காரியத்தைச் செய்தாலும், அது, நாத்திகமாகவும், மதத்துவேஷமாகவும், வகுப்புவாதமாகவும், பிறர்மீது வேண்டுமென்றே சுமத்தப்படும் பழியாகவும்தானே கருத்தழிந்தோரால் கருதப்படுகின்றது.

எனவேதான், இந்தக் "குற்றம்" நம்மீதுசுமத்தப்படுவதற்கு முன்னர், "இதிலும் இவர்கள்தான் தலையிடுகிறார்கள்" என்ற பழி நம்மீது சாட்டப்படுவதற்கு முன்னர், வேறொரு திசையில் இருந்து இந்தக் குற்றச் சாட்டுக் கிளம்பி இருக்கிறது. நாம் செய்யவேண்டிய பணி, நம்மை நாத்திகர் என்று சதா தூற்றிக்கொண்டிருக்கும் திசையில் இருந்து கிளம்பி வேலை செய்வது கண்டு களிப்படைகிறோம்—நம்முடைய பிரசாரம், நாம் எதிர்பாராத திசைகளிலும் புகுந்து, நம்முடைய பணியில் பங்கெடுக்கும் பண்புபெற்ற நிலைகண்டு பூரிப்படைகிறோம் — நாம், நாட்டுமக்களுக்கு நல்லதென்று செய்யும் ஒவ்வொரு காரியங்களும் நம்மை நிந்திப்பவர்களாலேயே வரவேற்கப்படுவது கண்டு மகிழ்கிறோம்.

> "வருஷந்தோறும் அநேக இந்துக்கள் இன்னும் மதம் மாறிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். மடாதிபதிகளால் அதையெல்லாம் தடுத்து மதத்தைப் பலப்படுத்த முடியவில்லை"

இந்துமதத்தின் வளர்ச்சிக்காக அரசர்களாலும், பெருஞ் செல்வர்களாலும் மடங்களுக்குச் சொத்துக்கள் கொடுக்கப்பட்டன என்று கூறப்படுவதையும், மேலே உள்ள வாசகத்தையும் ஒப்பு நோக்கிப் பார்க்கவேண்டுகிறோம். இந்த வாசகத்தைக் கூறியவர் யார்? 'மதத்துவேஷிகள்' என்ற பழிச்சொல்லுக்குக் காரணமின்றி ஆளாகி இருக்கும் நாமா இதைக்கூறினோம்? இல்லை, இல்லை. நம்மை மதத்துவேஷிகள் என்று மனமறிந்த பொய் கூறும் ஏடுகளில் ஒன்றுதான் இந்த உண்மையை வெளியிட்டிருக்கிறது. 25—1—49-ல் வெளிவந்த 'தினசரி' என்ற ஏட்டில்—அதிலும் பொதுமக்களின் கருத்தை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்படும் தலையங்கத்தில்தான் இவ்வாசகம் இடம் பெற்றுள்ளது.

எனவே, 'தினசரி'யை மதத்துவேஷம் செய்யும் ஏடென்றோ, நாத்திகத்தைப் பரப்பும் பத்திரிகையென்றோ யாராவது கூறமுடியுமா? ஆனால், அந்தஏடுகூறுகிறது, மடாதிபதிகளால் மதம் பாதுகாக்கப்படவில்லை—அழிக்கப்படுகிறது என்று. இதை நாம் கூறியிருந்தால், இதற்குள், 'நாம் மடாதிபதிகளின் விரோதிகள்' என்று விளம்பரம் படுத்தப்பட்டுப், பலரின் கண்டனத்துக்கு, ஏன்? மடாதிபதிகளின் போக்கை இப்போது கண்டிக்கும் 'தினசரி'

யின் வசைமாரிக்குக்கூட ஆளாகி இருப்போம்.

மடாதிபதிகளின் போக்கைக்கண்டிக்க முன்வந்த 'தினசரி' இந்த அளவோடு நிற்கவில்லை,

"இந்த மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்துவிடுவதால் மதத்திற்கு எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை"

என்று மேலும் கூறி மடாதிபதிகளின் போக்கைக் கண்டித்திருக்கிறது. மடாதிபதிகளின் அதிகாரம் குறைந்துவிடுவதால், அதாவது இப்போது மடாதிபதிகள் மேற்பார்வையில் உள்ள கோயிற் சொத்துக்களைச் சர்க்கார் எடுத்துப் பரிபாலனஞ் செய்வதால் எந்த நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை என்று 'தினசரி' கூறுவதிலிருந்து பெறப்படும் உண்மை என்ன? இனியும் இந்த மடாதிபதிகள் ஆதிக்கத்தில் இந்தப் பொதுச் சொத்துக்கள் இருந்தால் நஷ்டம் தான் ஏற்படும் என்பதும், அவற்றைச் சர்க்காரே எடுத்து நடத்தினால் இலாபம் ஏற்படும் என்பதும் தானே 'தினசரி'யின் வாசகத்தில் அடங்கி இருக்கும் உண்மை. இதற்குத் 'தினசரி' கூறும் காரணம் எவராலும் மறுக்கமுடியாததாகும்:—

"இப்பொழுதிருக்கும் மடாதிபதிகள், பண்டாரச் சந்நிதிகளின் நிர்வாகத்தில் ஊழல்களும் ஊதாரித்தனங்களும் தான் இருக்கின்றனவே ஒழிய மகத்துவம் இருப்பதாக எந்த யோக்கியரும் கூற முடியாது"

என்று எழுதியிருக்கிறது. நாம் இக் கட்டுரையில் மடாதிபதிகளின் கோலாகல வாழ்க்கையைப் பற்றி ஆங்காங்கு விவரித்துக் கூறிய கருத்துக்களை எல்லாம் திரட்டிக் கூறுவது போல, இரண்டே சொற்களில் அடக்கிவிட்டது. ஊழல், ஊதாரித்தனம் என்ற இரு சொற்களும் மடாதிபதிகளின் மகத்துவங்களை அரண்செய்யும் நற்சாட்சிப்பத்திரங்கள் தானு என்பதனை அன்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். மடாதிபதிகள் என்றாலே மனங்குழைந்து மண்டியிட்டு வணங்கவேண்டிய 'மகத்துவமான' நிலைமாறி, அவர்களிடம் ஊழல்கள் நிறைந்துவிட்டன என்றும், ஊதாரித்தனங்கள் மிகுந்து மலிந்துவிட்டன என்றும் வெளிப்படையாகவே கூறுமளவுக்கு அவர்களின் அந்தரங்க அலங்கார வாழ்வுகள் அம்பலமாகி விட்டன என்பதையும் இனியும் மறைத்து வைக்கவோ மறுத்துக் கூறவோ முடியுமா என்று கேட்கிறோம்.

இந்த நிலையில் தோழர் T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் போன்றவர்கள் மடாதிபதிகள் பக்கம் நின்று அவர்களுக்காக வாதாடும் நிலைமை விசித்திரமாகவே இருக்கிறது. இப்போது மடாதிபதிகளின் நிர்வாகத்தில் உள்ள சொத்துக்களைச் சர்க்கார் நிர்வாகத்தில் கொண்டுவந்து விடுவது என்ற மசோதாவை எதிர்ப்பவர்கள், சர்க்கார், அத்திப் பூப்பது போல் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முற்பட்டால், அதை எதிர்த்து நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்களே என்பதை யார் தான் மறுக்க முடியும்? இவர்களுடைய எதிர்ப்பில் ஏதாவது உண்மையும் நியாயமும் இருக்குமானல், ஒரு பொதுமன்றங் கூட்டித் தங்களுடைய எதிர்ப்புக்கு உள்ள காரணத்தைக் கூறி வெற்றிபெற முடியுமா என்பதை வேண்டுமானல் பரீட்சித்துப் பார்க்கட்டும். இதற்கு நாம் மட்டுமல்ல, நாட்டு நலனில் நல்லெண்ணம் கொண்டுள்ள வேறுபலர் கூடத்தயாராக முன்வருவர். இன்று நாடு அந்த அளவுக்கு விழிப்படைந்து விட்டது.

'தினசரி' கூறுவதுபோல், "மண்ணையும், பொன்னையும், பெண்ணையும் மனத்திலும் மதியாத துறவி என்பதற்கு அறிகுறியாகச் சாமியார் என்ற பட்டஞ் சூட்டிக் கொண்டிருக்கும் ஒருவர் மண்ணும் பொன்னும் மடாதிபதிகளின் ஆதிக்கத்தில் தான் இருக்கவேண்டும் என்பதற்காக உயிரை விடப்போவதாகச் சொல்லுகிறார்" என்றால், அவருடைய எண்ணத்தில் என்னென்ன சிந்தனைகள் தோன்றி அலைமோதி அலைகழித்திருக்கும்—எத்தனை பண்டார சந்நிதிகள் அவர் மனககண் முன் தோன்றி,

"எங்களை உய்விக்கவந்த உத்தமரே! உம்முடைய உண்ணுநோன்பினால் எங்கள் கண்ணன கனிரச வாழ்க்கை காப்பாற்றப் படட்டும்!

அதற்கென எங்களிடம் இருக்கும் சொத்துக்கள் எங்களிடமே இருக்கும்படி சர்க்கார் மனம் மாறட்டும்!

சாகும்வரை — சர்க்கார் இந்த மசோதாவைக் கைவிடும்வரை. உம்முடைய உண்ணு நோன்பை விடப்போவதில்லை என்பதில் விடாப் பிடியாய் இரும்! உண்ணுமுலையம்மை பாகன் உம்மைக் கைவிடமாட்டார்! உம்முடைய உறக்க நேரத்தில், எம்முடைய புராணுதிகளில் கூறியுள்ள பிரகாரமாகத்தானே மாறுவேடத்தில் வந்து 'ஞானப்பால்' ஊட்டி உம் முடைய உயிரைக் காப்பாற்றுவார்!

இதனை யார் மறைந்து நின்று பார்த்து வெளியே கூறினாலும், அதனை மறைக்க நம்முடைய பக்தர்கள் தயாராக உள்ளனர்!

அஞ்சுவது யாதுமில்லை, அஞ்ச வருவதுமில்லை, அன்பரே! அரன் உம்மையும் காப்பாற்றுவார்! எம்மையும் வாழவைப்பார்! அஞ்சேல்! அஞ்சேல்!!"

என்று கூறுவது போன்ற காட்சிகள் அவர் மனக்கண்முன் தோன்றித் தோன்றி அவருக்கு உற்சாகத்தைக் கொடுத்த போதிலும், இன்று நாட்டிலுள்ள பெரும்பாலோர் வறுமையால் வாடி வதங்கிக் கிடப்பதையும், அதே போது, சமயத்தின் பேரால் பண்டாரச் சந்நிதிகள், நிழலிலேயே இருந்துகொண்டு—வியர்க்காமல்—குனியாமல்-வெட்டாமல்-கொத்தாமல்-பாடுபடாமல் — பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டு — பல்லக்குச் சவாரி செய்து பவனி வருவதையும் இனி நாடு பொறுத்துக் கொண்டிராது என்பது மட்டும் உறுதி.

வேலூர் திராவிடர் கழகப் பொதுக் கூட்டம்

13—2—49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு கோட்டை வெளியில் நடைபெறும்.

அதுசமயம்
சி. என். அண்ணாத்துரை
அவர்கள்
சொற்பொழிவாற்றுவார்கள்
அனைவரும் வருக, ஒலிபெருக்கி உண்டு.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD. M 4642.

திராவிடநாடு

OFFICE ... 12.8.49 MADRAS

விலை அணு 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 13-2-49 | இதழ் 33

பிரசாரம் வீண்போகவில்லை.

கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் நடைபெற்று வரும் ஊழல்களை விளக்கியும், அவை ஒழிக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தியும், அப்போது தான் நாம் செம்மை நெறியில் நின்று வாழ முடியும் என்பதைத் தெளிவு படுத்தியும நாபக்டந்த இருபதாண்டுகளுக்கு மேலாகவே பிரசாரம் செய்து வருகிறோம். நமமுடைய இந்தப் பிரசாரத்தைத் தவருகப் பொருள்படுத்தி, நாம் தப்பான வழியில் செல்கிறோம் என்றும், நன்மைக்குப் பதில் தீமையே உண்டாக்கப்படுகிறதென்றும், கடவுளை நிந்திக்கும் 'கயவர்கள்' என்றும், மதத்தை மங்க வைக்கும் மாபாதகம் செய்யப்படுகிறதென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் பார்ப்பனரைப் பகைத்து, அவர்களை நம்முடைய எதிரிகளாகக் கொள்வதற்கே இந்தப் பிரசாரம் நடைபெறுகிறதென்றும், இன்னும் பல குற்றச்சாட்டுகள் நம்மீது சுமத்தப்பட்டன. இவை மட்டுமல்ல, 'இவர்கள் நாதிகக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்—விதண்டா வாதிகள்-வீண் வம்புக்கு நிற்பவர்கள்' என்றெல்லாம் பழிக்கப் பட்டோம். இன்னும் இந்தப் பழி சுமத்து படலம் முடிவுபெறவில்லை, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

இதற்குக் காரணம், உண்மைக்கும் உலகுக்கும் உள்ள — இருக்க வேண்டிய இன்றியமையாத தொடர்பை, இன்றைய 'நமது' மதக்கோட்பாடுகளும், கடவுள் தன்மையையும் சிதைத்துவிட்டதேயாகும். கடவுளைப் பற்றியும், மதத்தைப் பற்றியும நமக்குப் போதித்தவர்கள், உண்மையை மறைப்பதன் வாயிலாகத் தங்களுடைய போதனைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான நலம் பயக்கக் கூடியனவாக இருத்தல் வேண்டுமென்ற பரந்த நோக்கத்தைக் கொள்ளவில்லை. மதம் என்றால்—கடவுள் என்றால், மக்கள்மனதில ஒரு தவிர்க்க முடியாத அச்ச உணர்ச்சி ஏற்பட்டதே யன்றி, அன்பு நிலை ஏற்படவில்லை — ஏற்படுத்தவில்லை. இவர்களால் ஊட்டப்பட்ட இந்த அச்சம் நிலைபெறுவதற்கு மக்களிடம் அறியாமையும், ஆராயாமையும் அவசியம் அமைதல் வேண்டுமென்பதில் மதபோதகர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். மதத்தைப் பற்றியும், கடவுளைப பற்றியும் மக்கள் கருத்து வேறுபாடு கொள்வதோ, அவைபற்றி ஆராய்வதோ கூடாது—'பாவம்' என்று ஆண்டவன் பேரால் ஆணையிட்டு, ஆகமங்களையும் பிற மதநூல்களையும எழுதிவைத்துவிட்டனர். அதோடு, "கடவுளின் பிரதிநிதிகள் இவர்கள் தான்—இவர்கள் சொற்படி நடப்பதே முறை" என்பதாகவும் கூறி அதற்கென ஒரு கூட்டத்தாரைத் தனியாக ஒதுக்கி— உயர்ந்த நிலையில் வைத்தும விட்டனர். அவர்களுக்கும் நமக்கும் இயல்பாக இருக்கவேண்டிய அண்ணன் தம்பி போன்ற முறைமாறி— அன்புடன் அளவளாவும் பண்பு மாறி—அச்சத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட அடிமை உணர்ச்சி மேலிட்டு — அவர்களைக் கண்டவுடனே மேலாடையை இடுப்பில் சேர்த்துக், கைகட்டி, வாய்பொத்தி, அவர்களை 'ஸ்வாமி' என்றழைக்கவும், அவர்கள் தமகள் வலதுகையில் 'நெருப்பு' இருப்பதாகவும், இடது கையைச் சிறிது தூக்கி நம்மை ஆசி வதிக்கவும், நாம், நம்மை 'அடியேன்' 'தாசன்' என்ற சொற்களால் இறக்கி, அவர்களுடைய பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கவுமான ஏற்பாட்டையும், நமமுடைய உழைப்பின் பெரும்பகுதி அவர்களுடைய வாழ்க்கையை வளம் படுத்துவதற்கே பயன் படுத்தப் படவேண்டுமென்ற கோட்பாட்டையும் கடவுளின் பேரால் செய்து வைத்துவிட்டனர். கடவுளின் பெயர் கூறி எழுதப்பட்ட மதநூல்கள் அதில் வரும் நாம் மேலே எடுத்துக் காட்டிய உண்மைகள் இல்லையென்று எவராவது கூற முடியுமா?

இந்த நிலையில், இவ்வொரு கூட்டம், தங்களும் கடவுளின் பிரதிநிதிகள் என்றும், மதபாதுகாப்பாளர்கள் என்றும் கூறிக் கொண்டு கிளம்பிற்று. இந்தக் கூட்டம் நாது சேர—சோழ—பாண்டியர்களால் உண்டாக்கப்பட்டதாகும். என்றாலும், இவர்கள், தாங்கள் சேர — சோழ — பாண்டியர்களால் உண்டாக்கப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவதோடு, தாங்கள் நேரே திருக்கயிலாயத்தில் இருந்து வந்ததாகவும், தங்களுடைய பாரம்பரை திருக்கயிலாய பாரம்பரையே யொழிய, மக்கட்

பரம்பரையைச் சார்ந்ததல்லவென்றும் கூறிக்கொள்வதில் ஒரு தனி மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டவர்கள். யார் இவர்கள்?

"கோயில்களில் உள்ள சாமிகளைப் பட்டினி போட்டுத் தங்கள் சொகுசான வாழ்க்கைக்குக் கோயிற் சொத்துக்களைப் பகிரங்கமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ள பண்டார சந்நிதிகள்"

என்று டாக்டர் இராசன் அவர்கள் குறிப்பிடும் நமது தமிழ் நாட்டு மடாதிபதிகள்தான் இவர்கள். சந்தேகமா உங்களுக்கு? இதோ இன்னொரு உதாரணம்!

"இந்த ஸ்தாபனங்கள், உலக சுகங்களில் ஆசையில்லாத, கல்வியிலும் அறிவிலும் பெரியவர்களாய் இருந்த துறவிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் துறவிகளின் மேற்பார்வையில் சிலகாலம் காரியங்கள் செவ்வனே நடந்துவந்தன........இப்படியாக நடந்தேறிவந்த இப்பணி, நாளடைவில் இந்த ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களுக்கு நேர்மாறான விளைவுகளுக்கு இலக்காகிவிட்டது. இந்த ஸ்தாபனங்களின் தர்மகர்த்தாக்கள் மக்களின் நலனைச் சிறிது சிறிதாக மறந்து, தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், ஆசாபாசங்களுக்கு அடிமைகளாகிப், பொதுப் பணத்தால் தங்கள் சுகம் பேணி, ஒழுக்கங் கெட்ட முறையில் நடக்கத் தொடங்கினார்கள்."

என்று 'நமது மடாதிபதிகளை'ப் பற்றி நமது முதலமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் 6—2—49ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசும்போது குறிப்பிட்டார். இந்த மடாதிபதிகள் பொறுப்பில் ஏராளமான பொதுநலச் சொத்துக்கள் உள்ளன. இந்தச் சொத்துக்கள் எதற்காக உள்ளனவோ, அதற்கு அவை பயன்படவில்லையென்றும், பண்டாரச் சந்நிதிகள் தங்களுடைய சொந்தச் சுகபோக வாழ்க்கைக்கே அந்தச் சொத்துக்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும், எனவே, அவற்றைச் சர்க்கார் பொறுப்பேற்று ஒழுங்காக நடத்தவேண்டுமென்றும், சர்க்கார் இப்போது ஓர் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் தீர்மானம் வெற்றி பெற்றுச் சட்டமாக்கப்பட வேண்டுமென்பது பெரும்பான்மை சட்டசபை உறுப்பினர்களுடையவும் பொதுமக்களுடையவும் விருப்பமாகும். ஆனால், இதற்கு நாம் மேலே குறிப்பிட்டுள்ள, 'கடவுளின் பிரதிநிதிகள்' மட்டும் எதிர்ப்பாக இருக்கிறார்கள்; இவர்களோடு, இவர்களுடைய தயவலன்றி வேறு நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியாத சிலரும் சேர்ந்து கொண்டு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறார்கள். இதற்காக ஒரு சாமியார்—முன்னாள் கே. வி. கணபதி அய்யர் — அங்கச்சியம்மாள் என்ற பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் தமது ஆசைநாயகியாக வைத்திருந்தவர்—ஒரு சமயம் அப்பெண் பெற்றோர்களால் அழைத்துச் செல்லப்பட்டதற்காகக் காவிரியாற்றில் விழுந்து தற்கொலைசெய்துகொள்ள முயன்று, கதர்த் தோழர்களால் காப்பாற்றப்பட்டவர்—பின்னர் அப்பெண்ணைத் தாமே துரத்திவிட்டுத் துறவியானவர்—இந்நாள் ஸ்ரீ-ஸ்ரீ சதானந்த சரஸ்வதி-ஸ்வாமிஜி என்று அழைக்கப்படுபவர் — இந்தப் பண்டாரச் சந்நிதிகளின் சரச சல்லாப வாழ்க்கை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக உண்ணாநோன்பிருக்கிறாராம்.

"நான் பெற்ற பேறு பெறுக
இவ்வையமெல்லாம்"

என்ற முதுமொழிப்படி இந்தச் சாமியார் அங்கச்சியம்மாளிடம் பெற்ற இன்பத்தைத் தம்முடைய சகாக்களான பண்டாரச் சந்நிதிகளும் சதா சர்வ காலமும் பெற்றுக் கொண்டிருக்கட்டும் என்ற பெருங் கருணையோடு உண்ணா நோன்பிருக்கிறார் போலும்! இந்தப் பண்டாரச் சந்நிதிகளின் கோலாகல வாழ்வையும், இவர்கள் நாட்டுக்குச் செய்யும் நயவஞ்சகத்தையும் விளக்கி பிரபோத சந்திரோதயப் பாடல்கள் என்ற தலைப்பில் பல பாடல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் இங்கு வெளியிடுகிறோம்:—

'இரவெலாம் காமக்
கணிகையர் முயக்கில் இன்ப
முற்று இயற்பகலெலாம்,

நூரவாய் அணிவெண்
ணீற்று உருத்திராக்கக்
கோலமார்ச்சாலமாம்
குழைவும்,

பரவு பாவனையும் தேவதா
அர்ச்சனை தாம்பண்ணல் போல்
உருப் பல பரப்பி,

விரவு மாமணி தொட்டு
ஆட்டலும் பார்க்கின் மிகக்
கொடிதிவர் வஞ்ச வேடம்."

என்ற பாடல், இன்றைய பண்டாரச் சந்நிதிகளின்—திருக் கயிலாய பரம்பரையினரின் பகல் வேடத்தைப் பளிங்கென எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இப்படிப்பட்டவர்களின் இன்ப வாழ்க்கைக்கு இடையூறு நேரிடாதபடி பாதுகாத்துக் கொள்வதையே முன்னாள் கே. வி. கணபதி அய்யர் தம்முடைய கடமையாகக் கொண்டு உண்ணாநோன்பிருக்கிறார். இவருடைய இந்த உண்ணாநோன்பைப்பற்றிக் குறிப்பிடும்போது நமது முதலமைச்சர்,

"இந்த நல்லகாரியத்துக்கு எதிராக ஒருவர் உண்ணாவிரதம் கூட இருக்கிறார்........சத்தியத்திற்காகவும், பெரிய இலட்சியங்களுக்காகவும், மக்களின் நன்மைக்காகவும் செய்யவேண்டிய காரியங்களை இப்படியா உபயோகிப்பது?

என்று கேட்கிறார் சத்தியம், இலட்சியம், நன்மை எதுவும் இந்தச் சாமியாரின் உண்ணா நோன்பில் இல்லையென்றும்,

"பொதுப் பணத்தால், தங்கள் சுகம் பேணி, ஒழுக்கங் கெட்ட முறையில் நடப்பதற்கே"

இவ்வுண்ணா நோன்பு பயன்படுமென்றும் முதலமைச்சர் கூறுகிறார். கூறுவதோடு மட்டும் அவர் நிற்கவில்லை.

"ஏதாவது சீர்திருத்தம் செய்ய நினைத்தோமானால், மதத்துக்கும் கடவுளுக்கும் துரோகி என்று என்னை நிந்திக்க முற்பட்டு விடுகிறார்கள்"

என்று வேதனைப்படுகிறார். நமது முதலமைச்சர் மத விரோதியா? கடவுள் இல்லை என்னும் நாத்திகரா? இல்லவே இல்லை. அவர் ஒரு பழுத்த வைதிகர், கடவுள்—மதம் ஆகியவை காப்பாற்றப்படவேண்டுமென்பதில் அவருக்கிருக்கும் பிடிவாதமும் நம்பிக்கையும் வேறெவருக்கும் இல்லையென்று கூடச் சொல்லலாம். மந்திரிப்பதவியில் இருந்து கவனிக்க வேண்டிய வேலைகளைப் பார்க்கிலும், மவுன விரதம் இருந்து பதத்தைக் காப்பாற்றுவதையே மிகமிக முக்கிய

மான பணியாகக் கொண்டவர். அப்படிப்பட்டவரே மதத்தின் பேரால் ஊழல்களும், ஒழுக்கக் கேடுகளும் நடைபெறுகின்றன வென்றும், அவற்றைச் சீர்திருத்த வேண்டுமென்றும் கூறுகிறார் என்றால், உண்மையாகவே மதவிரோதிகள் என்று சிலரால்கருதப்படுபவர்கள் மதத்தைச் சீர்படுத்துவது முடியாத காரியமென்றும், காலநிலைக்கும் இயற்கைப் பண்பாட்டிற்கும் ஏற்ப மதத்தை—மக்களுக்கு—அவர்களின் நல்வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையில்மாற்றியமைக்கவேண்டுமென்றும் கூறுவதில் ஏதாவது குற்றம் இருக்கிறதென்று எந்த யோக்கியராவது கூற முடியுமா?

மதத்தைக் கண்டிப்பவர்கள்—கடவுளை நிந்திப்பவர்கள் என்ற பட்டியில் சேர்த்து, நம்மை நாத்திகர்கள் என்று கருதுபவர்கள், நம்முடைய உண்மையான-மறுக்கமுடியாத நோக்கம் எது என்பதையே அறிய முடியாத அறிவுச் சூன்யர்கள் என்று நாம் அவர்கள்பால் பொறுமையோ பகைமையோ கொள்ளாமல், நம்முடைய பணியை நானிலம் ஏற்றுக் கொள்ளும் வரை தளராது—சலியாது செய்து வருவதென்ற முடிவோடு செய்து வருகிறோம். நம்முடைய பணி பழுதற்றது பகைமை உணர்ச்சியோடு செய்யப்படுவதல்ல. பார்ப்பன துவேஷத்தால் கிளம்பியதல்ல—கடவுளிடம் நம்பிக்கை இல்லாததால் உண்டானதல்ல — விதண்டாவாதமல்ல — வீண்வம்புமல்ல என்பன போன்றவைகளை இப்போது உணரவும், அந்த உணர்ச்சிமேலிட்டால் தங்களுடைய கருத்துக்களைக் கள்ளங் கபடின்றி வெளிப்படையாகவே கூறவும் முன்வந்திருப்பது கண்டு களிக்கிறோம்.

"விக்கிரக வழிபாடும் கோயில்களும் இந்து மதத்தின் அத்யாவசியமான அம்சங்களா என்பது பற்றியே படித்த வகுப்பினரிடையே புது மனப்பான்மை இருந்துவருகிறது"

என்று 'தினமணி' தனது தலையங்கத்தில் 5-2-49-ல் எழுதியிருக்கிறது.

மதத்தின் பேரால் கோயில்களும், அந்தக் கோயில்களில் விக்கிரகங்களை வைத்து வழிபடுவதும், அதற்காகக் கோடிக்கணக்கான பொருளைக் குவித்து வைத்திருப்பதும் முறைதானா என்று கேட்பதையே நாம் மத கண்டனம் செய்வதாகவும், கடவுள் நிந்தனை புரிவதாகவும் பலர் கருதினார்கள் — நம்மைக் கண்டித்தார்கள். ஆனால் இப்போது, படித்த வகுப்பினரே கோயில்களும் விக்கிரக வழிபாடும் அவசியமா என்று நினைக்கும் அளவுக்கு வந்துவிட்டார்கள் என்று 'தினமணி'யே எழுதுகிறதென்றால், நம்முடைய பிரசாரம் தவறான வழியில் செய்யப்படுகிறதென்றோ, அல்லது எந்த விதமான பகைமை—பொறாமை—குரோதம் கொண்டோ செய்யப்படுகிறதென்றோ யாராவது படித்தவர்கள் — அறிவாளிகள் கூற முடியுமா? கோயிலும் விக்கிரக வழிபாடும் இல்லாமலேயே மக்கள் வாழ முடியும் என்று நாம் கூறினோம். அப்போதெல்லாம் நாம் நாத்திகர் என்று அழைக்கப் பட்டோம், ஆனால் இப்போது,

"இந்து மதத்தில் பூரண நம்பிக்கையுள்ள ஒருவன், விக்கிரக ஆராதனையில்லாதவனாக இருக்க முடியும்"

என்று 'தினமணி' நம்மைவிட ஒருபடி மேலேயே சென்று எழுதி இருக்கிறது. விக்கிரக ஆராதனைதான் வீணான பொருள் அழிவுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது, ஆகையால், விக்கிரக வழிபாடும், அதைசெய்வதற்கு ஒரு இடமும் (கோயிலும்) அதற்காக அளவற்ற பொன்னும் பொருளும் செலவு செய்யப்படாத ஒரு மதம், அது, எந்தப் பெயரோடு இருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை என்பதே நம்முடைய பிரசாரத்தின் சுருக்கமாகும். விளக்கத்திற்காகப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டியிருப்போம். அவை விதண்டா வாதமாகப் பலருக்குத் தோன்றியிருக்கலாம். பாலில்லாத காரணத்தால் தங்கள் பச்சிளங் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் பதைக்கும் மக்களை இலட்சக் கணக்காக உள்ள ஒரு நாட்டில், பரமன் பேரைச் சொல்லிக்கொண்டு, கல்லிலும், செம்பிலும், கட்டையிலும், குடக் கணக்கில் பாலைக்கொட்டிக் கொண்டாடுவது முறையா என்று கேட்டிருப்போம். கட்டத் துணியே இல்லாத நாட்டில், பட்டுப் பீதாம்பரங்களைப் பல ரகங்களில் வைத்துக் கொண்டு வேளைக்கொன்றாகப் பரமனுக்கு அணிந்து மகிழ்வது அறமா என்று கேட்டிருப்போம். அரை வயிற்றுக் கஞ்சிக்கே அலைந்து திரியும் ஒரு நாட்டில் பரமனுக்குச் சர்க்கரைப் பொங்கலும் அக்கார அடிசிலும் அவசியமா என்று கேட்டிருப்போம். கொள்ளையடிப்பது போன்று கோடிக்கணக்கான பொருளைக் குவித்து வைத்திருப்பவர்கள், தங்கள் கள்ளச் சிந்தையை மறைக்க வெள்ளித்தேரும் தங்கப் பல்லக்கும் செய்து சாமிக்குத் தருவது முறையா என்று கண்டித்திருப்போம். இவையும் இவை போன்ற இன்னும் பல தேவையும் அவசியமுமற்ற செயல்கள் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் நடைபெறுவது முறையா என்று கேட்டிருப்போம். ஆனால் இன்று,

"இளநீரைக்குழந்தைகளுக்குக் கொடுக்காமல், சாமி தலையில் ஊற்றி வீணாக்குவதா என்று நினைப்பவரும் கோயில் மேற்பார்வையாளராக வந்து விட முடியும்."

என்று 'தினமணி' மேலும் எழுதுகிறது. காலம் மாறி வருவதையும், அதற்கேற்பக் கருத்துக்களும் மாறுபடும் என்பதையும் நன்குணர்ந்தே தான் 'தினமணி' இவ்விதம் எழுதுகிறது. விளையாட்டுக்காகவோ அல்லது வேண்டுமென்று கிண்டல் செய்வதற்காகவோ இவ்விதம் எழுதப்படுகிறது என்று எவரும் நினைத்துவிட முடியாது. அடிப்படையிலேயே அசைவு கொடுத்துவிட்டதென்பதன் படப்பிடிப்புத்தான் இவை என்பதை நாம் நன்கறிவோம்.

"மந்திரிப் பதவியில் வருபவர்கள் கூட எல்லாரும் ஸ்ரீ ரெட்டியாரைப் போலவோ, டாக்டர் இராசனைப் போலவோ விக்ரக ஆராதனையில் நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயமில்லை"

என்றுஎழுதுவதன் வாயிலாக, எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது 'தினமணி'. இனி வரப்போகும் காலம், விக்கிரக வழிபாட்டையோ, அதற்காக வீண் செலவு செய்யப்படுவதையோ ஒப்புக் கொள்ளாது—விரும்பாது என்பதைத் 'தினமணி' உணருகிறது. இந்த உணர்ச்சி 'தினமணி'க்கு மட்டும் ஏற்பட்டதென்று நினைத்துவிட வேண்டாம், கோயில்கள்—மடங்கள்—அக்ரகாரங்கள்—அரண்மனைகள்—ஆசிரமங்கள் ஆகியபலவேறு முகாம்களிலும் இதே உணர்ச்சி ஏற்பட்டு

விட்டதென்பதுதான் இதன் முழு உண்மையாகும். ஒரு பத்திரிகையின் தலையங்கம் என்றால், அது, அந்தப் பத்திரிகையை நடத்துபவரின் சொந்தக் கருத்து மட்டுமல்ல—நாட்டிலுள்ள பலரின் கருத்தே ஒரு பத்திரிகையின் தலையங்கமாக உருவெடுப்பதாகும். எனவேதான், நாட்டின் எதிர்காலம், மதம், கடவுள், விக்ரக வழிபாடு ஆகியவைபற்றி இதுவரை இருந்து வந்ததுபோல்இருக்காதென்றும், இவற்றில்புரட்சிகரமான மாறுதல் ஏற்படப் போவதை இனி யாரும் எந்தக்காரணத்தைக் கொண்டும் தடுத்துவிட முடியாதென்றும் கூறுகின்றோம். நாம் பலகாலமாகவே கூறிவந்த பிரச்னைகளில்முக்கியமான ஒன்று, இப்போது, நம்முடைய திட்டங்களை எதிர்த்து வந்தவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டு, அது சட்டமாக்கப்படும் நிலை ஏற்பட்டது கண்டு மகிழ்கிறோம்.

நாம் எதெதை நாட்டுக்குத் தீங்கு பயக்கும் காரியங்கள் என்று கூறி வந்தோமோ, அவையெல்லாம் ஒவ்வொன்றாக இப்போது, சரியானது—நியாயமானது—உடனடியாகக் களையப்படவேண்டிய தீங்குதான் என்ற அளவுக்கு எதிர்முகாமிலிருந்தே அபிப்பிராயங்கள் எழுந்தான் போகின்றன என்ற நம்பிக்கை நமக்கிருந்துவந்த போதிலும், இவ்வளவு விரைவாகவும், சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப்பற்றிக் காரசாரமாகவும் பேசப்படும் என்று நாம் எதிர்பார்க்கவே இல்லை. ஏதாவதொன்றில் சீர்திருத்தம் செய்யவேண்டும் அல்லது மாற்றியமைக்கப்படவேண்டுமென்று நாம் சொன்னபோதெல்லாம், நம்மீது சீறிவிழுந்த அன்பர்கள் பலர், இப்போது, தவறான ஏற்பாடுகளை எல்லாம் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இந்துமத அறப்பாது காப்புச் சொத்துக்கள் எல்லாம் சர்க்கார் நிர்வாகத்தில் வரவேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய தோழர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள்,

> "இந்தச் சீர்திருத்தத்தை ஆட்சேபிப்பது பதினேழாம் நூற்றாண்டுப் பேச்சாகத்தானிருக்கும்"

என்று 7—2—49-ல் சட்டசபையில் பேசியிருக்கிறார். சீர்திருத்தம் என்ற சொல்லைக் கேட்டாலே, அது, நாட்டுக்கு நாசத்தை உண்டாக்கும் 'நயவஞ்சகர்களின்' கூச்சல் என்று கூறியவர்களே, இன்று, சீர்திருத்தத்திற்கு எதிராகப் பேசுபவர்களைப் பார்த்து ஏளனம் செய்து "இவர்கள் எல்லாம் பதினேழாம் நூற்றாண்டில் வாழவேண்டிய அப்பிராணிகள்" என்று கேலிசெய்யும் அளவுக்குக், சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமை இன்று நாட்டில் வேரூன்றி விட்டது. இதுமட்டுமல்ல, மதத்திற்கும் கடவுளுக்கும் தர்மம் செய்பவர்கள் எல்லாம், நாட்டுநிலையை உணராதவர்கள் என்றும், தாங்கள் செய்யும் கொடுமைகளை மறைக்கவே இப்படிப்பட்ட தர்மங்களைச்செய்கிறார்கள் என்றும் நாம் கூறியபோதெல்லாம், நாம் நாத்திகப் பட்டியில் சேர்த்துப் பேசப்பட்டோம். ஆனால், இன்று, "இதுபற்றி நீங்கள் கூறியது போதாது; இன்னும் கடுமையாகவும் விளக்கமாகவும் கூற வேண்டு" மென்பது பலரால் உணரவும், ஒப்புக்கொள்ளவுமான நிலை ஏற்பட்டுவிட்டது.

> "தற்காலத்தில் வேறு செயல்களால் மக்களின் மதிப்பைப் பெற முடியாதவர்களும், தாங்கள் செய்யும் மற்றப் பாப காரியங்களை மறைப்பதற்கும், மற்றும் விளம்பரத்திற்காகவுமே தர்மம் செய்கிறார்கள்."

என்று நமது மாகாண முதலமைச்சரே கூறுகிறார். கோயிலுக்கும், மதத்துக்கும், கடவுளுக்கும் தர்மம் செய்பவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்?

1. வேறு வகையில் மதிப்பைப் பெற முடியாதவர்கள்!
2. தாங்கள் செய்யும் பாப காரியங்களை மறைப்பவர்கள்!
3. விளம்பரப் பிரியர்கள்!

இப்படிப்பட்டவர்கள்தான் இன்று தர்மம் செய்பவர்களாக உள்ளனர் என்று முதலமைச்சர் தைரியமாகவும், வெட்டவெளிச்சமாகவும் கூறுகிறார் என்றால், அதில் உண்மையில்லையென்றோ, அல்லது அவர் நாத்திகராய்விட்டார் என்றோ, அல்லது பெரியார் இராமசாமியின் கொள்கைகளையும் திட்டங்களையும் மறைமுகமாக ஆதரிக்கிறார் என்றோ எவராவது கூறமுடியுமா? நாட்டில் இப்போது மதத்தின் பேரால் நடைபெறும் கொடுமைகளும் அக்ரமங்களும் சகிக்க முடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டன என்பதைத்தானே முதலமைச்சரின் இந்தப் பேச்சு படம் பிடித்துக் காட்டுகின்றது.

இனி, எதெது தவறானவையோ அவையெல்லாம் சீர்திருத்தியும் மாற்றியும் அமைக்கப்பட வேண்டுமென்று கூறிவரும் நம்மை 'வகுப்பு வாதிகள்' என்று பலர் வாய் கூசாது கூறிவந்தனர். ஆனால், இப்போது உண்மையான வகுப்பு வாதிகள் யார் என்பது இந்தத் தீர்மானத்தின் மூலம் வெளிப்பட்டு விட்டது.

> "இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் இப்போது வகுப்பு வாதத்தை உண்டுபண்ணுகிறார்கள் என்று நான் எச்சரிக்கை செய்கிறேன்."

என்று தோழர் சுவாமிநாதன் அவர்கள் சட்டசபையில் பேசியிருக்கிறார். சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கூறுபவர்களல்ல, சீர்திருத்தம் செய்யப்படுவதை எதிர்ப்பவர்களே உண்மையான வகுப்புவாதிகள், என்பதைத் தோழர் சுவாமிநாதன் அவர்கள் தெளிவாக விளக்கிவிட்டார். இனியாவது, சமுதாய சீர்திருத்தப் பணியையே குறிக்கோளாகக் கொண்டு அதற்காகவே அல்லும் பகலும் பாடுபடும் நம்மைப்பார்த்து, 'இவர்கள் வகுப்பு வாதிகள்' என்று வரட்டுக் கூச்சல் போட்டு, உண்மையான உழைப்புக்கு ஊறு தேடாமல் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

எனவே, சட்டசபை உறுப்பினர் தோழர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கூறுவதுபோல்

> "மதத்தின் பேரால் நடக்கும் அட்டூழியங்களை எதிர்க்க வேண்டியது எல்லோருடைய பொறுப்புமாகும்"

என்பதற் கேற்ப, இத்தீர்மானத்தை எதிர்ப்பவர்களின் சபலச் சண்டைக்கு இடமளியாமல் இத் தீர்மானம் சட்ட பூர்வமாக நிறைவேற்றப்படுமென்றும், இதனால் மதத்தின் பேரால் மடாதிபதிகளும் பிறரும் செய்து வரும் ஆபாசங்களும், அறிவுக்குப் புறம்பான அட்டூழியங்களும் ஒழிக்கப்படுமென்றும் நம்புகிறோம்.

திராவிட நாடு

ஞாயிறு] 13—2—49 [காஞ்சி

தர்மசங்கடம்!

✻

நாஸ்திகன்! நெற்றியிலே நீறு இருந்தால் மட்டும் போதுமா? நெஞ்சிலே வஞ்சகம் இருக்கிறது! மடாலயங்களை ஒழிக்க அல்ல, அவைகளிலே உள்ள மாசு துடைக்கவே, மசோதா கொண்டு வருகிறாராம்! இவர், யார், பூர்வ பெருமை வாய்ந்தனவும், நமது மத பாதுகாப்புக்கு ஜீவனாகவும் உள்ள, மடாலயங்களைப் பற்றிக் குறை கூற! எவ்வளவு துணிவு இருக்கவேண்டும் இவ்விதம் பேச! இந்த இலட்சணத்தில், விரதமாம், பூஜையாம், ரமணரிஷியிடம் பக்தியாம்! வெறும் பசப்பு! இந்து மதத்தை நாசமாக்கும் மசோதாவைக் கொண்டு வருகிறார், தன்னை இந்து என்றும், பக்திமான் என்றும் கூறிக்கொள்கிறார். சுயமரியாதைக்காரன் இதையேதானே கூறுகிறான்—மடம், கோயில், ஆகிய இடங்களிலே, தர்மம் தலைகாட்டுவதில்லை, வீணுக்கு அவைகள் உள்ளன, என்று பேசுகிறான். அவனைக் கண்டிக்கிறோம்—இந்த ஆசாமியும் சேர்ந்து கண்டிக்கிறார்—பெரிய ஆஸ்திகர்போல! இப்போது, இவரே பேசுகிறார்—பேசுகிறாரா!—ஏசுகிறார், மடாலயங்கள் பாபிகளின் பதுங்குமிடங்களாகிவிட்டன என்று. இந்த அழகுக்கு, இவர் தம்மை, பழமையில பற்றுக் கொண்டவர், பக்தசிகாமணி என்றும் கூறிக்கொள்கிறார். பக்தர்கள், காணிக்கை தருவர், மானியம் விடுவர், மடாலயங்களுக்கு — இந்தப் பக்தரோ, அந்த நாட்களிலே, வைதிகப் பற்றுள்ள ராஜாதி ராஜாக்கள், மடாலயங்களுக்கு அளித்த மானியங்களைப் பறிக்கப் பார்க்கிறார். இதற்காகவா, இவர் வந்தார் அரசாள; இவரை நம்பினோம் நம்து ரட்சகர் என்று! செச்சே! இப்படியும் ஒரு காலம் பிறக்கவேண்டுமா? ஈசா! சிவகாமி நேசா! உன் விசுவாசியின் போக்கா இப்படி இருப்பது. தேவார திருவாசகம் படித்துக்கொண்டு, திருவாய்மொழியும் பாடிக்கொண்டு, தில்லை நடேசனையும் திருமலை அப்பனையும் துதித்துக்கொண்டு, வடமொழி மேன்மையையும் வைதிகக் கோட்பாடுகளையும் பாராட்டிக் கொண்டிருக்கும், ஓமந்தூரார், மடாலயங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா கொண்டுவருகிறார்—கேட்டால், மதம் க்ஷீணிக்கக்கூடாது, ஆஸ்திகம் அழியக்கூடாது என்ற நல்லெண்ணத்தினாலேயே இதைக் கொண்டு வருகிறேன் — நாட்டின் நிலையையும், காலத்தின் நிலையையும் கவனித்துப் பாருங்கள் என்று நமக்குப் புத்தி கூறுகிறார்—மிரட்டவே செய்கிறார். இவர் இவ்வளவு பேசினால், இவருக்கு ஆதரவு காட்டும், இன்னார்கள், பேசுவதைக் கேட்கவா வேண்டும். சேலம் சுப்ரமணியம் சீறுகிறார் — கோசலராம் கொதிக்கிறார்—கன்னியப்பன் கண்டிக்கிறார் — தேவநாயகய்யா தாக்குகிறார்— மதத்தின் பேரால் நடக்கும் அக்ரமம் தெரியுமாம் அவர்களுக்கு! நெருப்பைக் கக்குகிறார்கள்! கேட்டால், நாங்கள் சூனாமானாக்களல்ல—இதோ பார், கதர்ச் சட்டை, கருப்புச் சட்டையல்ல, என்று கூறுகிறார்கள். இந்த மசோதாவை, கருப்புச் சட்டைக்காரர் கொண்டு வந்தால், நமக்குத் தொல்லை இல்லையே — கடவுள் நம்பிக்கையற்ற கயவர் கூட்டம், ஆஸ்திகத்தை அழிக்கிறது—மதத்துக்கு ஆபத்து என்று ஒரு கூச்சல் கிளப்பினால் போதும் — மசோதாவை மடியச் செய்துவிடலாம். இந்த ஓமந்தூரார், அவ்விதம் இல்லையே—வேதம், உபநிஷத், பகவதகீதை, என்றெல்லாம் பேசுகிறார், தனக்கு மத பக்தி உண்டு என்பதற்காக மாதத்துக்கொருமுறை மௌனவிரதமிருக்கிறார், விபூதி பூசப்பட்ட நெற்றியுடன் காட்சியளிக்கிறார். அவரைப் பார்த்தால், நடையுடை பாவனையைக் கவனித்தால், யாரும் அவரை, சாது, பக்திமான், என்று கூறுவர். அவரால்லவா நமக்கு ஆபத்து தேடுகிறார், ஆஸ்திகத்தின் பெயரைக் கூறிக்கொண்டே! நாம் ஒரே அடியாக அவரை நாஸ்திகர் என்று கண்டித்துப் பேச முடியவில்லையே! தர்மசங்கடமாக அல்லவா இருக்கிறது!

* * *

மடாலய மசோதாவை எதிர்க்கும் வைத்தியநாதய்யர் கோஷ்டி, இவ்விதம் எண்ணியும் பேசியும் வருகிறது.

* * *

எவ்வளவு படித்துப் பட்டம் பெற்று இருந்தாலும், தேசசேவை, பொதுஜன சேவை என்று என்ன தான் பேசுபவராக இருந்தாலும், மேனாட்டுப் படிப்பும் வாதாடும் தொழிலும் பெற்று இருந்தாலும், பார்ப்பன ஜாதி என்றால், உடனே, வைதிகப் பித்தும், மதத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தும் நோக்கமும் சமயம் பார்த்துத் தலைதூக்கி விடுகிறதே! பிரபலமான வக்கீல்! தேசத்தொண்டு செய்யப் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தவர். எல்லோரும் ஓர்குலம் என்று சமரசம் பேசியவர்—அப்படிப்பட்ட, வைத்தியநாத ஐயர், சாதாரணக் குளத்தங்கரை ஐயர்மார்களின் போக்கிலே, கிளம்புகிறாரே, மசோதாவை, எதிர்க்க. மதத்தைக் காப்பாற்றுகிறாராம்! இவருக்குத்தானா அந்த உரிமையும் திறமையும்! ஏராளமான சொத்துக்களைக் கெடுத்து, சுகபோகத்திலே, புரளும்படி, சிலரை வைத்திருக்கும் மடாலய முறைதான், மதமாம்! இவர் கற்றறிந்த நூற்களெல்லாம் இந்த அளவுதானா இவருக்கு நல்லறிவைக் கொடுத்திருக்கின்றன! எவ்வளவு அவசியமான சீர்திருத்தம் செய்ய முற்பட்டாலும், மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கூக்குரலைக் கிளப்பி, முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவர், இந்த வைதீகர்கள், என்று சுயமரியாதைக்காரன் சொல்வதில், தப்பு இல்லையே! அவன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்! எனக்கு இல்லாத கடவுள் நம்பிக்கையும், மதபக்தியுமா, இவர்களுக்கு! மதத்தின் மாசு போக்கவேண்டும், சுயமரியாதைக்காரர்கள் கண்டிக்கும் அளவுக்கு, மதஸ்தாபனங்களிலே கேடுகள் மூண்டு விட்டன, இப்போதே அவைகளைக் களையாவிட்டால், புராதன மதமே அழிந்துவிடும் என்ற நன்னோக்கம் கொண்டு, இந்த மசோதாவைக் கொண்டுவரும் என்னையே, என் ஜெபதபம், நேமநிஷ்டை, விரதம் வைராக்யம், பக்திவிசுவாசம், ஆகியவற்றை அறிந்திருந்தும், என்னையே நாஸ்திகனாகக் கூறத் துணிகிறார்கள் இவர்கள்! நல்லது செய்ய முற்பட்டால், இந்தப் பட்டம் பெற்றாக வேண்டும் போலிருக்கிறதே! இவர்களிடம் நான் இதமாகப் பேசுகிறேன்—ஏசவில்லை—மதத்தின் சார்பிலே நின்று பேசுகிறேன், மத நம்பிக்கையற்றவனாக இல்லை—இந்நிலை

யில் இவர்கள் என்னை நிந்திக்கிறார்கள். செச்சே! இவர்களை, அந்தச் சுயமரியாதைக்காரர்களின் ஆட்சியிலே விட்டுவிட்டால்தான் சரிப்படும். அவர்கள்தான் சரி, இவர்களுக்கு. அவர்கள் சூடு கொடுத்தால்தான் இவர்களுக்கு நிலைமை புரியும். அவர்கள், நூப்படியா, என்னைப்போல, உப்புச்சப்பற்ற முறையிலே, மசோதா கொண்டுவருவார்கள். மடாலயங்களுக்குள்ளே புகுந்து, கணக்கெடுத்து, கணக்கு வேலை முடிந்ததும், அந்தச் சொத்தை அந்தந்த வட்டாரத்து மக்களின் உடைமையாக அல்லவா மாற்றுவார்கள்! சர்க்கார், நிர்வாகம் செய்து, நிலைமையைச் சீராக்கட்டும் என்று மட்டுமே நான் கூறுகிறேன்—இவர்கள் கொக்கரிக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள், நிர்வாகம் மட்டுமா கேட்டார்கள்? எதற்காக இவ்வளவு சொத்து ஒரு இடத்திலே முடங்கிக் கிடக்கிறது, என்று, ஆணிவேரை அல்லவா கல்லி எடுப்பார்கள்! ஆமாம். அவர்கள் முறைதான் சரி. இவர்களிடம் இதோபதேசம் பேசும் என்னை இந்தப்பாடுபடுத்துகிறார்களே, அவர்களிடம் ஆட்சிபோகட்டும், அப்போது பெட்டிப் பாம்பாகி விடுகிறார்கள் பார்! மதம் போச்சாம், மதம்! மடம் இருந்தால்தான் மதம் இருக்குமோ! என்ன பேதைமை! இவர்கள் போக்கைப் பார்க்கும்போது, பேசாமல் சுயமரியாதைக்காரரே ஆட்சிக்கு வரட்டும், என்று இருந்துவிடலாமா என்று கூடத் தோன்றுகிறது. இந்த எதிர்ப்புக் கூச்சலிடுபவர்கள் வேறு கட்சியாக இருந்தால், காரசாரமாகக் கண்டித்துப் பேசி, தேசத்துரோகிகள், மடாதிபதிகளிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டவர்கள் என்று வெளுத்துவாங்கலாம். எதிர்க்கும் பேர்வழிகளோ, கதர் கட்டிக் கொண்டு, காங்கிரசில் தங்கிக் கொண்டு, என் கட்சி என்று கூறிக் கொண்டும் இருக்கிறார்கள். தர்ம சங்கடமாக அல்லவா இருக்கிறது!

* * *

நிலைமை தர்ம சங்கடமாக இருப்பதாகவே கருதியும் பேசியும் வருகிறார், முதலமைச்சர் ஓமந்தூரார். அவருடைய துணைவர்களின் உள்ளமும் இதே நிலையில் இருக்கிறது.

* * *

இதென்ன தொல்லையாகிவிட்டது! ரெட்டியார் சொல்வது நியாயமாக இருக்கிறது! காங்கிரஸ் கட்சிதான் அவரும். ஐயர், கோபமாகப் பேசுகிறார்—ரெட்டியாரைக் குறை கூறி, ஐயர் சொல்கிறார், ரெட்டியார் செய்கை, நாஸ்திகம் என்று. ரெட்டியார் சொல்கிறார் நான் செய்யும் காரியம்தான் ஆஸ்திகம்—இதைச் செய்யாவிட்டால்தான், நாஸ்திகம் பரவும் என்கிறார். இருவரும் நம்ம கட்சி—காங்கிரஸ் கட்சி.

காங்கிரஸ், கட்சியின் கொள்கைதான் இது, என்று ரெட்டியார் சொல்கிறார்.

காங்கிரஸ் கட்சிக் கொள்கைக்கு இது விரோதமான செயல் என்று ஐயர் சொல்கிறார்.

நாம், யார் சொல்வதை நம்பித் தொலைப்பது?

மசோதாவை ஆதரித்துப் பிரசாரம் செய்ய முற்பட்டாலோ, இன்று மதம் சீர்கெட்டு இருக்கும் நிலை, அதன் காரணம், மடாலயங்களின் நிலைமை அவைகளால் சமுதாயம் பயன்பெறாத தன்மை ஆகியவைகளை எடுத்துக் கூறவேண்டும்—ஏறத்தாழ சுயமரியாதைப் பிரசாரமாகிவிடுகிறது—இதே பிரசாரம் புரியும் சுயமரியாதைக்காரர்களை நாம் கண்டித்து வந்தோம்—இன்னமும் அவர்களை ஏனோ 'பகைவர்கள்' பட்டியலில் வைத்தே பேசுகிறோம். யாரார் மசோதாவை எதிர்ப்பவர்கள் என்று பார்த்தாலோ, பெரும்பாலும் பார்ப்பனராகவே உள்ளனர். இதை எடுத்துக் கூற வேண்டிநேரிடும், பேச முனைந்தால். இதைச் சொன்னாலோ, பார்ப்பனத் துவேஷி, வகுப்புவாதி, என்று கூறி விடுவர், நம்மை. நாம் அவ்விதம் மக்களைப் பழக்கிவிட்டோம்! என்னசெய்வது! தர்மசங்கடமாக இருக்கிறது.

மசோதாவை எதிர்த்துப் பேசுவது என்றாலோ, நமது கட்சியினரில், யாராரை, தலைவர்கள், தியாகிகள், விவேகிகள், வீரர்கள், என்று பாராட்டி வந்தோமோ, அவர்களை எல்லாம், மதத்துரோகிகள், சுயமரியாதைக் காரர்கள், நாஸ்திகர்கள், என்று கண்டித்துப் பேசவேண்டும். எப்படி அது முடியும்? நாடு எப்படி ஏற்கும்? மனச்சாட்சியும் இதற்கு இடந்தராதே! மந்திரி டாக்டர் ராஜன் எனும் ஒரே ஒரு பார்ப்பனப் பிரமுகர்மட்டும் தான் மசோதாவை ஆதரிக்கிறார்—அவர் மந்திரி, எனவே கடமைப்பட்டவர். மற்ற பார்ப்பனத்தலைவர்கள் எல்லாம், பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாம் எதிர்க்கின்றனவே, இதைப் பார்க்கும் போது, காங்கிரசிலேயே, பார்ப்பனர்—அல்லாதார் எனும் இருகட்சிகள் தானாகத் தோன்றி விடுகிறதே, நாம் எதிலே இருப்பது! தர்மசங்கடமாக இருக்கிறதே!

* * *

காங்கிரஸ் கட்சியிலே, சீர்திருத்த நோக்கமுடையவர்கள், இது போலப் பேசிச்சங்கடப் படுகின்றனர்

* * *

கொடி கொடுத்தோம் — நன்கொடை கொடுத்தோம்—செங்கோல் கொடுத்தோம் சிவப்பிரசாதம் கொடுத்தோம்—நிதிதந்தோம்—காந்தியார் நினைவுக்குக் கூட்டம் நடத்தினோம்—எல்லாம் செய்தோம், எனினும், ஈசா! எம்மை இவ்வளவும் பெற்றுக்கொண்டவர்கள், கணக்கு எடு! என்று கேட்கின்றனரே.

நாட்டை ஆளும்கட்சி காங்கிரஸ்—இதன் நேசம் கிடைத்துவிட்டால், நமது ஆதிக்கம் கெடாது என்று எண்ணி, அந்தத் துரைத்தனத்தைத் தூபதீப நைவேத்தியமிட்டு வரவேற்றோம்—பாராட்டினோம்—புகழ்பாடினோம். இவ்வளவும் செய்தானபிறகு, மடாலயங்களைச் சர்க்காரின் நிர்வாகத்துக்குத் தரவேண்டும் என்று சட்டம் கொண்டுவருகின்றனரே, இரக்கமின்றி!

மதத்தின் மாண்பு கெடாதிருக்க வேண்டுமானால்; ஆஸ்திகம் அழியாதிருக்க வேண்டுமானால், நாஸ்திக நாற்றம் நாட்டிலே கிளம்பாதிருக்க வேண்டுமானால், காங்கிரஸ் கட்சிதான் நாடாளவேண்டும் என்று நாவாரக்கூறினோம். இப்போது நமது 'அடிமடி'யில் கைவைக்கிறதே அதே கட்சி! இப்போது, அதனைக் கண்டித்தால், 'மகாஜனங்கள்' நமது வார்த்தையை ஏற்கமாட்டார்களே! நாமே அல்லவா, நமது பக்தகோடிகளுக்கும் பாமரருக்கும் காங்கிரஸ் கட்சியின் சிலாக்கியத்தைப் பற்றி, உபதேசம் செய்தோம், இப்போது நாமே அந்தக்கட்சியைத்

தூற்றினால், யார் ஏற்றுக் கொள்வர்! தர்மசங்கடமாக இருக்கிறதே!!

* * *

காங்கிரசாட்சியின்மூலம், தங்களுக்கு ஒரு குறையும் நேரிடாது, அந்தக்கட்சி, காலப்போக்கையும் மீறி நிற்கும் சக்திக்கேடயத்தைத் தங்களுக்கு அளிக்கும் என்று நம்பியிருந்த மடாதிபதிகள், இதுபோல எண்ணி ஏக்கமடைகிறார்கள். தர்மசங்கடமாக இருக்கிறதே என்று தத்தளிக்கிறார்கள்.

* * *

மசோதாவின் நோக்கம், ஒன்றும் புரட்சிகரமானதல்ல—அதன் அமைப்பும், புரட்சித் திட்டமல்ல. ஏதோ ஓர் வகை ஆரம்ப முயற்சி! பழைய முறையில் பழுதுபார்த்து, இன்னும் சிலகாலத்துக்கு நிலை நிறுத்த முடியுமா, என்ற ஆசையின் விளைவு! இதற்கே, இவ்வளவு எதிர்ப்புக் கிளப்பிவிட்டது, 'இந்து' 'சுதேசமித்ரன்' மூலம்! உண்மையாகவே சமதர்ம மணம் கொண்ட சட்டமானால், சட்ட சபையிலே, டேச்சோடு இராது போலிருக்கிறது! இந்த 'ரப்பர் பாம்பு'க்கே இவ்வளவு அமளி நடக்கிறது! ஒழியட்டும், கட்சி காங்கிரஸ் என்ற பேரிலும், அதிலேயே, இரு பிரிவுகள் இருப்பது, நன்றாக நாட்டுக்குத் தெரிகிறது—அதிலே, பெருவாரியானவர்கள், சீர்திருத்தப் பாதையினர்—மிகச் சிலரே, பழைய பசலிகள், எனவே மசோதா வெற்றி பெறும்—பெற்று, என்ன பலன்? இனாம்தார் விஷயமாக இங்கு, மெஜாரிடி பலம் இருந்தும், இதே வைத்தியநாத ஐயர் கோஷ்டி, டில்லி தேவதையிடம் வரம் பெற்று, வெற்றி பெற்றதல்லவா? அதுபோலவே, மடாதிபதிகள் விஷயமாகவும் டில்லி சென்று, வைத்தியநாதர்கள், தங்கள் சிறுபான்மைக் கட்சிக்கு வெற்றி தேடிக்கொள்ள முடியுமே! அவ்விதம் நேரிட்டுவிட்டால், என்ன செய்வது என்று நாம் கேட்டாலோ, ரெட்டியாருக்கும் அவர் போன்ற நல்லவர்களுக்கும் கூட மூக்குச் சிவக்கிறது—டில்லி என்றும் சென்னை என்றும், பிரித்துப் பேசாதே, என்று நம்மை ஏசுகிறார்கள். டில்லிக்கு இன்றுள்ள அதிகாரம் அவ்விதம் இருக்கிறது ரெட்டியாரே! நியாயமான, சத்தியத்துக்கு உகந்ததான முயற்சிகளைக் கூட, முறியடித்துவிட முடியும், டில்லியின் தயவைப் பெற்றவர்களால். இங்குள்ள வைதீகர்கள் இந்த டில்லி தயவைப் பெற்றுவிடுவார்கள் — ஆகவேதான், நாங்கள் சொல்லுகிறோம், ஆட்சி மூலம், கோரிய பலனை அடையவேண்டுமானால், சென்னை மாகாணத்துக்கு உண்மையான அதிகாரம் வேண்டும் என்கிறோம். டில்லியாவது இதிலே தலையிடுவதாவது—சென்னை சர்க்கார் சும்மா இருக்காது—என்றெல்லாம் கூறுகிறார்கள் காங்கிரசிலுள்ள சீர்திருத்தப்பிரிவினர். தலையிட்டால் என்ன செய்வீர் — என்னவழி— என்று கேட்டாலோ, தலையைச் சொறிகிறார்கள். வழி இருக்கிறது நண்பர்களே! திராவிடநாடு திராவிடருக்கே என்பதுதான், அது, என்று நாம் சொன்னாலோ, சீறி, செச்சே! நாட்டைப் பிளக்கிறாயா, வடநாடு தென்னாடு பேதமா, என்று வசைமாரி பொழிகிறார்கள். சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள் — சிக்குப் போக வழி சொன்னாலோ, நம்மீதே சீறுகிறார்கள் — தர்மசங்கடமாக இருக்கிறது.

* * *

சட்ட சபையிலே, இந்துமத பரிபாலன போர்டிடம் இருக்கும் நிர்வாகத்தை ஒழித்துவிட்டு, மடாலயங்களைச் சர்க்காரே நிர்வகிக்க வேண்டும், என்ற, சாதாரண மசோதா, கிளப்பிவிட்டிருக்கும் சஞ்சலத்தையும் எதிர்ப்பையும், சிக்கலையும் சினத்தையும், கண்டு, நாம் இதுபோல எண்ணுகிறோம்.

இவ்வளவு 'தர்ம சங்கடமான' நிலை ஏற்படுகிறது, மடாலய ஒழிப்பு அல்ல, மடாலயக் கண்காணிப்புக்குச் சர்க்கார் ஒரு திட்டம் வகுக்கும்போது. மகாராஜாக்கள், ராஜாக்கள், நவாபுகள், காட்டின இடத்தில் கையொப்பமிடக் கண்டனர் மக்கள். ஜெமீன்தாரர்கள், கொடுத்ததைக் கொடுங்கள் என்று கேட்டுப் பெற்றுக் கொள்ள, பந்தயம் போட்டுக் கொண்டு ஓடிவந்ததைக் கண்டனர் மக்கள். ஜுனகாத் நவாபு ஓடியதையும், நிஜாமின் சரணாகதியையும், புதுக்கோட்டையின் கதியையும் மக்கள் கண்டனர். மாவீரன் சிவாஜி கண்ட சாம்ராஜ்யத்தின் கடைசி சின்னமாக இருந்த, கோலாப்பூர் சமஸ்தான மன்னராட்சி, இந்தக் கிழமை முடிவுற்று, மராட்டிய அரச வம்சம் என்பதே பழங்கதையாகி விடுவதைப் பார்க்கிறோம். இவ்வளவும் முடிந்தது—முயற்சி குறைவு—எதிர்ப்பு ஏளனத்துக்குரிய அளவுதான் இருந்திடக் கண்டோம்.

மன்னரும் சீமான்களும், கிளப்ப முடியாத புயலை, ஜடாமுடிதாரிகளின் சார்பிலே, கிளப்ப முடிகிறது!! மன்னரும் ஜெமீன்தாரரும் கூடாது என்று கூறின உடனே, மக்கள் ஆம் என்றனர், அதுதான் ஜனநாயகம் என்றனர், ஏன் இந்த உழைப்பறிஞர்கள் உல்லாச புருஷர்களாக இருக்கவேண்டும் என்று கேட்டனர்! மடாதிபதிகள் ஒழிக்கப்படவில்லை—அவர்களிடம் உள்ள சொத்து, பொதுவுடைமையாக்கப் படவில்லை—மக்களாட்சிக் காலமான இக்காலிலு, மதத்தின் பெயர் கூறி மக்களை அடக்கும் முறை கூடாது என்று கூறவில்லை—நிர்வாகத்தைச் சர்க்கார், மேற்கொள்வது என்ற சாமான்யமான முயற்சிதான் நடைபெறுகிறது, ஆனால், மக்களின் மனம் மருட்சி அடையும் விதமாகவும், நிலைமை இருக்கிறது! வாளுக்கும், இரும்புப் பெட்டிக்கும் இல்லாத வலிவு, எதிர்ப்புச் சக்தி, புல்லுக்கு இருக்கிறது—நம் நாட்டினில்—வானில் விமானமும், வீடுகளில் ரேடியோக்களும் உள்ள காலத்தில்—வரம் தரும் காலம் அல்ல—வச்சிராயுதம் வீசும் காலமல்ல—!

இந்த சூட்சமத்தைத்தான், பல

தெரியுமா?

சென்னை மாகாணத்தில்,
25,000 தர்மஸ்தாபனங்களும்
27,000 கோயில்களும்
3000 மடங்களும்
இருக்கின்றன.

நாட்களாக நாம் எடுத்துக்கூறிவந்தோம்—பழைமை ஆதிக்கம் செலுத்துகிறது — வைதீகம் ஆட்சி செய்கிறது—அதன் சர்வாதிபத்யம், மற்ற ஏகாதிபத்யங்களை எல்லாம் விடப் பலம் பொருந்தியது—அதைத் தாக்கித் தகர்த்தாலொழிய, தன்னாட்சி பெற்றாலும், மக்களாட்சி, நல்லாட்சி ஏற்படாது என்று.

புல்லுக்கு என்ன இவ்வளவு பேச்சு! — என்றனர்! சட்டசபையிலே, சண்டமாருதத்தைக் கிளப்புகிறது, அந்தப்பழைய, பயங்கர ஆயுதம், அரசு பலவற்றை அழித்த ஆயுதம்! இந்தச்சட்ட சபையின், வெற்றி தோல்வியுடன், இருந்துவிடாது — டில்லி நோக்கிச் செல்லும் — ஆம்! அதன் சக்தியின்முன்பு, தடியடியால் தழும்பேறிய காங்கிரஸ் வீரரின் சக்தியும், திக்குமுக்காட வேண்டி வருகிறது! இந்த உண்மையைக் காங்கிரஸ் நண்பர்கள் உணருகிறார்கள்—உளம் நொந்து பேசுகிறார்கள்—தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டோமே என்று சஞ்சலப்படுகிறார்கள். தர்ம சங்கடம் ஒழிய வழி இல்லாமற் போகவில்லை. நமது கூட்டுறவுதான், அந்தவழி. நாம் பிரிந்திருக்கக் காரணம் இல்லை— சமுதாயத்துக்கு அதனால் இலாபம் இல்லை! இடுக்கித்தாக்குதல், நல்லதுதான் ஓரளவுக்கு — உள்ளிருந்து புல்லர்களைத் தாக்கும் காங்கிரஸ் படையும், வெளியே இருந்து தாக்கும் திராவிடர் கழகப் படையும் உள்ளன. ஆனால், சில குறிப்பிட்ட சமயங்களிலே தவிர, இந்தநிலை நமக்குப் புரியாமல் போவதால், சூதுக்காரர் வெற்றி பெற்று விடுகிறார்கள் — நாம் ஒருவரை ஒருவரே தாக்கிக்கொள்ளுகிறோம்—ஒருவரை ஒருவர் இழிவதும் பழித்தும் பேசிக்கொள்வதின்மூலம்! இருபடைகளின் பலமும் சிதறும்— இருவருக்கும் மூலநோக்கமாக உள்ள நல்லாட்சிக்குக் குந்தகம் விளையும்.

மடாலயங்களின் கண்காணிப்பு சம்பந்தமாகவே, இவ்வளவு சங்கடம் என்றால், மடஒழிப்புக்கு—மட ஆலயங்களை மட்டுமல்ல நாம் குறிப்பிடுவது, பன்னெடுங்காலமாக அடிமைத்தனத்தில் உழன்றதால், மடமை மிகுந்துவிட்ட மக்களின் மன மாசு முழுவதையுமே குறிப்பிடுகிறோம் — அந்தமகத்தான பணிபுரியக்கிளம்பும் போது, எவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். பிரிந்திருக்கிறோம் — ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு வாழ்கிறோம்—எனினும், எமது தலைவர், நீறு பூசா நாத்திகர் — உமது தலைவர், நமது முதலமைச்சர். நீறு பூசிய நாத்திகர், என்றுதான் நிந்திக்கப்படுகின்றனர்! இந்தச் சூட்சமத்தைத் தெரிந்துகொள்ள, இந்தச் சம்பவம் உதவினால் போதும். உதவும். நம்புகிறோம்.



"இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தை நடித்துச் சிறைபுகுந்து திரும்பிய தோழர்களுக்குக் காஞ்சிபுரத்தில் 25—12—48-ல் நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகச் செங்கற்பட்டிலிருந்து தோழர் M. சின்னையா அவர்கள் தலைமையில் கால் நடையாக வந்த தோழர்களை இப்படத்தில் காணலாம்.

சென்றவாரத் தொடர்ச்சி

செக்கோஸ்லோவேகியா

2

[அண்ணாத்துரை]

ஜான்ஹஸ், புரட்சிக்காரன்! வேதநிந்தகன்! மார்க்க கட்டளையை மீறிய மாபாவி! சம்பிரதாய வைரி! சனாதன கிருஸ்தவ மார்க்கத்தைக் குலைத்து, மதத் தலைவரின் சட்டதிட்டங்களைச் சின்னாபின்னமாக்கி, விவரமறியாத, விளக்கமறியாத மக்களிடம் விதண்டாவாதம் பேசிப், பாபப்படுகுழியிலே அவர்களைத் தள்ளும் தூர்த்தன்! — என்றே பலரும் பழி சுமத்தினர். ஜான்ஹஸ் மீது விரோதம் கொண்டோர் இது போலக் கூறினர். அவருடைய அறவுரையைக் கேட்டு அகமகிழ்ந்த ஆதரவாளர்கள், ஜான்ஹஸ், மார்க்கத்தின் மாசுதுடைக்கும் மகா பண்டிதன், புண்யமார்க்கத்திலே புகுந்துவிட்ட கேடுகளைக் களைந்தெறியும் கர்மவீரன், தூய்மைக்காகப் போரிடும் மாவீரன், கிருஸ்தவ மார்க்கத்தை, அறிவுக்குப் பொருத்தமான அறநெறியாக்கி, மதப் போர்வைக்குள் புகுந்து கொண்டு, மக்களின் மந்தமதியைப் பயன்படுத்திக்கொண்டு, மதோன்மத்தர்களாக வாழும் எத்தர்களின் பிடியிலிருந்து ஏசுவின் விசுவாச மார்க்கத்தை மீட்ட பெரியோன், என்று பாராட்டினர்.

கண்டித்தவர்கள், பாராட்டினவர்கள் ஆகிய இருசாராருக்கும், மார்க்கத் துறையிலே பணிபுரிந்த ஜான்ஹஸ் மட்டுமே தெரிந்தது—ஆனால் அவர், ஆற்றிய அரும்பணி, மார்க்கத் துறையுடன் நின்றுவிடவில்லை. தாயகத்திலே, தனிப்பண்பும், தன்மானமும் தழைக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, அவர் மக்களின் வாழ்வுடன் தொடர்பு கொண்ட எல்லாத்துறைகளிலும் பணியாற்றினார் — அந்தப் பெரும் பணியின், ஒரு பிரிவு, ஒரு பகுதி தான், அவர் மார்க்கத்துறையிலே கிளப்பிய புயல்! அந்தப் புயலின் வேகமும் கடுமையும் கண்டவர்கள், ஜான்ஹஸ், அந்த ஒரு காரியத்தை மட்டுமே செய்தவர், என்று எண்ணினர். அவரைக் கொளுத்திய கொடியவர்களும், அவருடைய அணிவகுப்பிலே நின்ற ஆதரவாளர்களும், ஜான்ஹஸ், ஆற்றிய பணியின் முழு உருவைக் காணவில்லை.

ஜான்ஹஸ், செக்நாட்டின் மக்களின், வாழ்வே, போலிமயமாக இருக்கக் கண்டார். சூதும் சூழ்ச்சியும், சகல மூலைகளிலும் நின்று, தன் நாட்டு மக்களைத் தாக்கக் கண்டார். அரசியல், சமூக இயல், மத இயல், கலைத்துறை, எனும் எத்திக்குநோக்கினாலும், செக்நாட்டு மக்களை, செக்கிழுக்கும் மாடுகளாக்கும் நிலையே இருக்கக் கண்டார். ஜெர்மானி மூலம் ஆதிக்கம் செலுத்தினர், அன்னியர். துப்பாக்கிகொண்டும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர்! ஏடுகளைக் கொண்டும் அன்னியர் ஆதிக்கம் செலுத்தினர். படைவீரர், பாதிரிமார்கள், புலவர்கள்—எனும் மூவகைச் சேனைகளும் சேர்ந்தே செக்நாட்டைச் சிதைத்திடக் கண்டார். வழிபாட்டு முறையிலே, அறிவுக்குப் பொருந்தாத பல கேடுகள் புகுந்துவிட்டதை மட்டுமல்ல, செக்கோ நாட்டு மக்களின் வாழ்க்கை முழுவதிலுமே, நஞ்சு கலக்கப்பட்டிருப்பதைக் கண்டு கலங்கினார்.

நாட்டு வரலாறோ, அஞ்சா நெஞ்சர்களைப் படைவீரர்களாகக் கொண்டு, வெற்றி பல கண்டு, வீர வேந்தர்கள் பலர், வாழ்ந்துவந்தனர், ஓர் காலத்தில், என்பதைக் காட்டிற்று. ஆனால் நாட்டின் வீதிகளிலோ, ஜெர்மானியர்கள், ஆணவத்துடன், ராணுவ உடையுடனே, உலவியும், உரத்த குரலில் பேசியும் இருந்திடக் கண்டார்! ஏடு, தன் தாய்நாட்டின் பழம் சிறப்பைக் காட்டி, என்ன பயன்! நாடு சீர்குலைந்து கிடந்தது.

தாயகத்தின் தனிச் சிறப்பு, தீட்டப்பட்டிருந்த, ஏடுகளைப் படிக்கும் போதும், கல்லூரியிலே, பேராசிரியராக இருந்ததால், பழம் வரலாறு பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறும்போதும், ஜான்ஹஸ், பூரிப்படைவார்—ஆனால், தன் நாட்கவிலே, நாடு இருந்த நிலையைக் காணும்போதோ, கண்கசியும்! பெயரே, மாறிவிட்டது! செக்கோநாடு! தாயகம்; தனிச் சிறப்புடன் இருந்த காலத்தில், தனிப் பெயரே இருந்தது — போகீமியா என்று அழைக்கப்பட்ட நாடு, அன்னியரின் வேட்டைக்காடு ஆவதற்கு முன்பு, தனிப்பண்புடன் விளங்கிற்று, என்பற்கு, ஆதாரங்கள் ஏராளமாகக் கிடைத்தன, ஜான்ஹஸ், பேராசிரியராக இருந்தகாலை. —ஏறத்தாழ, நம் நாட்களிலே, நாம், திராவிடநாடு எனும் தனிப்பெயருடன், தனிப்பண்புடன், தனிஅரசு செலுத்திய காலம் ஒன்று இருந்தது என்பதை, இன்று உணருகிறோமே, அதே நிலை!

போகீமியா! தாயகம்! அடிமைத் தளைகள் இல்லாத நிலை! வீரர் வாழ்ந்த காலம்! சீரழிவு ஏற்படாத வேளை! ஐரோப்பிய உபகண்டத்திலே, அந்தப் போகீமியாவுக்குத் தனியான ஓர் மதிப்பு இருந்தது! தனிஅரசு தழைத்திருந்தது! அந்தப் போகீமியா, வரலாற்று ஏடுகளிலே புதைந்து கிடந்தது—கண்ணெதிரே கிடந்ததோ, நலிவுற்ற, நிலைகுலைந்த நாடு—செக்கோநாடு! — ஏறத்தாழ, இன்றைய திராவிடத்தின் நிலையே தான்.

ஏடுகளிலே காணப்பட்ட தாயகத்தின் எழிலை, ஜான்ஹஸ், எடுத்துச் சொன்னபோது, யார் நம்பினர்? யார் மதிப்பளித்தனர்? பிதற்றல், என்றனர் சிலர்! வீண்பேச்சு என்றனர் பலர்! ஆமாம், அதனாலென்ன, என்று அலட்சியமாகப் பேசினர் பலர், அவர்கொண்ட ஆர்வம், மற்றவர்களுக்கும் ஏற்படச் செய்வது எளிதான காரியமல்ல. புதைபொருளைக் கண்டெடுக்கும் ஆராய்ச்சியாளர்கள், எங்ஙனம், ஒரு பாண்டத்தின் துண்டு, பழங்கருவியின் சிறுபகுதி, தகடுகளிலே, கீறல்போல் காணப்படும் வரிவடிவம் ஆகியவற்றினைக்கொண்டு, 'அன்றோர் நாள்' இங்ஙனம் இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார்களோ, அது போலத்தானே நெடுங்காலமாக நிலை

குலைந்து போன ஒரு நாட்டின், பழம் பெருமையைக் கண்டறிய முடியும். ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளைப் பாமரர், உடனடியாக நம்புவரோ! நம்பும் அளவுக்குப் பாமரருக்கு மனவளம் இருக்கமுடியாதல்லவா? அதுபோலத்தான், பொஹிமியாவின் பூர்வீகத்தை, நாடு உருமாறி, பெயர்மாறி, நிலைமாறி நலிந்து போயிருந்தபோது, யார் எடுத்துக் கூறினாலும், கலபத்திலே நம்பவோ, ஆர்வம் காட்டவோ, அந்த உன்னத நிலையை ஏன் மீண்டும் பெறலாகாது என்று எண்ணம் கொள்ளவோ எப்படிப் பாமரரால் முடியும்? பாமரர் மட்டுமென்ன! படித்தவரென்போர்களிலே, மிகப் பெரும்பாலோர் கூடத்தான்! பிணத்தைவைத்துக் கொண்டு மாரடிக்கும் பித்தன், என்பர்! பழங்கதையைக்கிளறி, புதிய விரோதத்தை வளர்க்கிறான் வம்பன், என்பர்! நமது நாட்களிலே, நாம் நிந்திக்கப்படுகிறோமல்லவா, திராவிடநாடு ஆரிய வேட்டைக்காடாகா முன்னம், வாழ்ந்த வகையை எடுத்துக்கூறும்போது! அதே நிலைதான், அந்நாளில், தன் நாட்டிலே, ஜான் ஹஸ், கண்டது. ஒரு நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் மறந்து போன, மதிப்புத்தர மறுக்கும் உண்மையை, நிலைநாட்டுவது, செங்குத்தான மலைமீது ஏறுவது போன்ற சிரமமான, காரியம் மட்டுமல்ல, செங்குத்தான மலைமீது, வழவழப்பான மிதியடி போட்டுக்கொண்டு, சிறு தூறல் பெய்து கொண்டிருக்கும் வேளையில், ஏறுவது போன்ற, ஆபத்தான வேலையாகும்.

கண்டுபிடித்துவிட்டானய்யா, யாருக்கும் தெரியாத மகாரகசியத்தை!—என்று ஏளனம் செய்வோர் ஒருபுறம்! சகலகலாவல்லவன், வேறுயாருக்கும் புலப்படாதிருந்த சரித்திர உண்மையைக்கண்டுபிடித்துவிட்டானப்பா, என்று, கேலிசெய்வர்! மூளைக்குழப்பம், மனப்பிராந்தி!—என்று பேசுவர். வேறுவேலை இல்லை, சுடுகாட்டிலே சென்று, எலும்புகளைத் தோண்டி எடுத்து வந்து, விற்கப் பார்க்கிறான், விசித்திர வியாபாரி, என்பர் — வேறு பலப் பல கூறுவர்! எதுவரையில்? சொல்லுபவருக்குச் சலிப்பும் கோபமும் ஏற்படாமல், எதிர்ப்பையும் ஏளனத்தையும் பொருட்படுத்தாமல், அறிவைப் பரப்பும் பணியில் இடைவிடாது ஈடுபட்டு, மக்களின் அலட்சியப் போக்குக்கு, அதிர்ச்சி ஏற்படும்படி செய்து, உண்மை அவர்கள் உள்ளத்திலே, புகுவதற்கு வழி செய்யும் வரையில், கண்டவர்களும் கண்டனச் சொற்களை வீசியபடிதான் இருப்பர்—ஏமாளிகளை ஏவிவிட்டபடிதான் இருப்பர்—எதிர்ப்பைக் காட்டியவண்ணமே இருப்பர்—விரோதம் எனும் விஷத்தைக் கக்கியபடிதான் இருப்பர்! உண்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிக ஆழமாகப் புதைக்கப்பட்டுப் போயிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, பாடு அதிகம் படவேண்டும், மக்கள் மன்றத்துக்கு, உண்மையைக் கொண்டுவந்து காட்ட. பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்து, கபடரால் மறைக்கப்பட்டுப் போன உண்மையை, கயவரின் மொழி கேட்டுக் கேட்டுக் கருத்துத் தெளிவை இழந்துபோன மக்களிடம், கூறுவது, என்றால், சுலபமான காரியமா! உள்ள உரம் எவ்வளவு வேண்டும்? தன்னல மறுப்பு எவ்வளவு வேண்டும்! ஜான்ஹஸ், இந்த மகத்தான காரியத்தைச் சாதித்தார்! தாயகத்தின் பெருமையை, மக்களின் மனதிலே, மீண்டும் குடியேறச் செய்தார்! மணி, மாசு படிந்திருக்கிறது—என்று மக்கள் உணரும்படி செய்தார்! தனி அரசும் தனிப் பண்பும் பெற்றிருந்த தாயகம், ஏன் தாழ்நிலை பெற்றது, தளை பல கொண்டது என்பது பற்றிச் சிந்தித்தபோது ஒரு பெரும் உண்மை அவர்களுக்குக் கிடைத்தது. தாயகம் தாழ்நிலை அடைந்ததற்கு முக்கியமான காரணம், மூல காரணம், களத்திலே ஏற்பட்ட தோல்வி அல்ல—வீரம் குன்றியதால் அல்ல—என்று அறிந்தனர்! தாயகம் தாழ்நிலை அடைந்ததற்குக் காரணம். தாய்மொழி அழிக்கப்பட்டதுதான் — என்பதை உணர்ந்தனர். மொழியை இழந்தோம், வாழ்க்கை வழியை இழந்தோம் என்று உணர்ந்தனர்.

பொஹிமியா நாட்டு மன்னர்களும், கொலு மண்டபக் கோமான்களும், தாயகத்தின் வீழ்ச்சிக்குத் தங்களையும் அறியாமலேயே, காரணமாக இருந்தனர்.

பொஹிமியா, வளமுள்ள, வீரக் கோட்டமாக விளங்கியபோது, அந்த வாழ்வும் வளமும் வீரமும் வெற்றியும், மக்களின் மனநிலையிலேயிருந்து பூத்திடுவன, என்பதை அறியாமல், தமது களிப்பும் கேளிக்கையும், மட்டுமே, முக்கியமெனக் கருதிய, முடிதாங்கிகள், தாய் மொழி அழிக்கப்படுவதைக் கண்டும் காணாதாராக இருந்தனர். மொழி அழிந்தது, நாடும் அழிந்தது.

பொஹிமிய அரச குடும்பத்தினர், ஜெர்மன் இளவரசிகளை மணம் செய்து கொள்ளலாயினர்—காதல், நாட்டு எல்லையைக் கடந்தது!! ஜெர்மன் இளவரசிகளின் எழில், பொஹிமியா நாட்டு அரண்மனைகளிலே, பிரகாசித்தது. பூரித்தனர் பிரபுக்கள்! எனவே, அவர்களும், ஜெர்மன் நாட்டுச்சீமாட்டிகளைத் தேடிப் பெற்றனர். சின்னாட்களிலே பேட்டுக் குடியினருக்கு, நாகரிக சின்னமாகிவிட்டது, ஜெர்மன் நாட்டு நாரீமணிகளை மணம் செய்து கொள்ளும் முறை! இந்தக் களிப்பும், மதிப்பும், கட்டுக்கு அடங்கியதாக இருக்க வேண்டுமே, என்பதிலே, பொஹிமீயச் சீமான்கள் அக்கறை செலுத்தவில்லை. புள்ளிமான் துள்ளி விளையாடுவதைக் காணக் காணக் களிப்புதான்! அதற்கேற்ற அழகிய தோட்டம் அமைத்து, மான் ஓடி ஆடக் கண்டால், ஆனந்தமாகத்தான் இருக்கும். ஆனால் மான் ஆடுவதைக் காண்பதை மட்டுமே மனதிலே கொண்டு, மற்றதை மறந்து, தன் சிறு மதலையை, மான் தன் கொம்பினால் குத்திக் குடலை வெளியே கொண்டுவருவதையுமா கண்டு சகிக்க முடியும்! பொஹிமீயச்சீமான்கள், அதையும் சகித்துக் கொண்டனர்!! ஜெர்மன் நாட்டு உல்லாசிகளின், கீதமும் நடனமும், கேளிக்கையும், மாளிகைகளிலே புதுவிருந்தாக அமைந்தது—பூரித்தனர் பூமான்கள் ஆனால் அந்த அழகிகள், அழிக்கும் கருவிகளையும் உடன் கொண்டு வந்தனர்—அதனை அறியவில்லை, சீமான்கள்.

மணப்பெண்கள், தமது அழகை மட்டுமல்ல, பரிவாரமும் கொண்டு வந்தனர், தம்முடன். மாளிகையிலே, ஜெர்மன் மாது புகுவாள், பொஹிமீயச் சீமானின் மனைவியாக. அவளுடன் தோழிகள், பணியாட்கள், நண்பர்கள், இசைவாணன், நாட்டிய ஆசிரியன், கதை கூறுவோன், ஓவியம் தீட்டுவோன், எனும்பல்வேறு வகையிலே, பலப்பல ஜெர்மனியர் நுழைவர்! ஒவ்வொரு மாளிகையும் இது போலாயிற்று. பொஹிமீயச் சீமான்களை மணம் செய்துகொண்ட ஜெர்மன் சீமாட்டிகள், தாம் குடிபுகுந்த இடத்திலே, 'ஜெர்மன் மணம்'

கமழவேண்டும் என்றனர்—வேறோர் நாட்டில், வேறோர் இனத்தவர் உள்ள இடத்திலே, குடிபுகுந்தது விளங்கும்படி, சகலமும் பொஹிமீய மயமாக இருந்துவிட்டால், உல்லாசிகளின் உள்ளம் உருகிவிடும்—எனவே பொஹிமீய மாளிகைகளிலே, சகலமும் ஜெர்மன் மயமாக்கிக் கொண்டனர்.

பொஹிமீயச் சீமான், தன் மாளிகையிலே, ஜெர்மன் சீமாட்டியை மட்டுமல்ல, ஜெர்மன் பாட்டு, ஜெர்மன் சித்திரம், ஜெர்மன் சமயல், ஜெர்மன் ஆசிரியர்என்றமுறையிலே, ஜெர்மன் வாடை வீசிடக்கண்டான்.

ஜெர்மன் மாதரசி, தன்னுடன் வந்து குடியேறியவர்களுடன், உரையாடுவாள், ஜெர்மன் மொழியில்—அவளை மணம் செய்துகொண்ட பொஹிமீயச் சீமான் புன்னகையுடன் அவளை நோக்குவான், அவள் ஜெர்மன் மொழியின் அவசியத்தைக் கூறினாள் முதலில்—அளவளாவ வேண்டாமா காதலர்கள், அதற்கு—ஆம் என்றான் பொஹிமீயச் சீமான்—ஜெர்மன் மொழி படிக்கும் மாணவனானான்! மொழியை மட்டுமா! ஜெர்மன் வாழ்க்கை வழியையே கற்றுக் கொண்டான்! ஜெர்மன் மூலாம் பூசிக்கொண்டான், அதிலே ஓர் இன்பம், பெருமை கண்டான்.

நாடு முழுவதுமா மாளிகைகள் இருக்கும்! மாளிகைகளிலே மட்டுந்தானே, இந்நிலை ஏற்பட முடியும்! பொஹிமீய நாட்டு சாமான்யர்கள், ஜெர்மன் மூலாம் பெறமுடியுமா! அவசியமும் இல்லை—செலவும் அதிகம்!! ஆகவே சில காலத்துக்குள், பொஹிமீயாவிலே இருவேறு வாழ்க்கை வழிகள் — சூழ்நிலைகள் அமைந்துவிட்டன — மேட்டுக் குடியினர், ஜெர்மன் மூலாம் பூசிக் கொண்டனர் — சாதாரண மக்கள், பொஹிமியப் பண்புடன் இருந்தனர்—வேறு வேறாகத் தெரியலாயிற்று பேதம் — பேதத்தை முதலில் கவனிக்கவில்லை—பிறகு கவனிக்கவும் அதுபற்றிப் பேசவுமாயினர். என்னென்ன நடைபெற்றிருக்கக்கூடும் அந்நாட்களில், பொஹிமிய மாளிகையிலே, என்பதைச் சிரமமின்றி யூகித்தறிய முடியும். அரசமன்றத்திலிருந்து திரும்புகிறான் பொஹிமியச் சீமான்! அவனைத்தன் புன்னகையால் வரவேற்கிறாள் ஜெர்மன் மாது. பிறகு, விழுந்து விழுந்து சிரிக்கிறாள்—சிரித்துவிட்டு, காரணம் கேட்ட கணவனிடம கூறுகிறாள், "நாதா! இன்றுதான் நான் உங்கள் நாட்டு நாட்டியத்தைப் பார்த்தேன்—அசல் குரங்கு குதிப்பதுபோலவே இருந்தது" என்று கூறுகிறாள். சீமானிடம் வேறு யாரும் அவ்விதம் கூற முடியாது — கூறினால் கோபங்கொண்டு, "உங்கள் நாட்டு நாட்டியம் ஒழுங்கானதோ! எருமை சேற்றிலே இறங்கியதுபோலிருக்கிறது" என்று கண்டித்திருப்பான். ஆனால், கூறுபவள், தன்கோமளம்! அவளுடைய மொழியிலேயும் விழியிலேயும் அவன் ஆனந்தத்தைக் காண்கிறான்—ஆமடி! தங்கம்! அதுகளின் ஆட்டம் அப்படித்தான்—குரங்காட்டம் தான!—என்று கூறுகிறான், அவளை அணைத்தபடி! எங்கள் நாட்டியம் எப்படி? என்று கேட்கிறாள் எழிலரசி, முதல்தரமானது! என்று கூறுகிறான், காதலால் ஏவலனானோன் — "நாதா! எங்கள் நாட்டு நாட்டியத்தை ஏன் தாங்கள் கற்றுக்கொள்ளலாகாது" என்று கொஞ்சுகிறாள்—அவன் ஆடக் கற்றுக்கொடுக்கிறாள். பொஹிமிய மாளிகையிலே, ஜெர்மன் கீதம், ஜெர்மன் நாட்டியம்! பொஹிமியக் குடியானவன் இக்காட்சியைக்கண்டுவிட்டு, மெல்லியகுரலில் கூறிக்கொள்கிறான் "ஆட்டிப்படைக்கிறாளே!" என்று. நாளாகவாக, ஜெர்மனி பொஹிமியாவை, ஆட்டிப் படைக்கலாயிற்று—ஜெர்மன் மொழிதான் உயர்ந்தது—அதைப் பேசுவதுதான் நாகரிகம்—அம்மொழி பேசுவோர்தான் மதிப்புக்குரியவர்கள்— ஜெர்மன்கலைதான் சிறந்தது, அதனை அறியாதாரும் அறியாதாரே! — பொஹிமியாவிலே, இப்படிக்கருத்துப் பரவிவிட்டது! தாய்மொழி, தாயகத்தின் பழைய முறைகள் யாவும் பரிகசிக்கப்பட்டன—அவை, பாமரரின் போக்கு என்று எள்ளிநகையாடப் பட்டன. இப்படியும் நடைபெற்றிருக்க முடியுமா என்று எண்ணுவர் எவரும்! பொஹிமியாவில்மட்டுமல்ல, தாய்மொழியைத் தாழ்நிலைக்குக்கொண்டுவரவிடும் எங்கும் ஏற்படும், இந்த இழிநிலை! ஜெர்மன் மொழிதான், படித்தவர், பண்புடையோர், பேசும் மொழி, என்று பொஹிமியாவிலே, கருத்துப் பரவிற்று. சோறு போடு! சாறு கொண்டுவா! தண்ணீர் கொடு! —இது, இன்றும் தாழ்ந்த தமிழகத்திலே, நாகரிகமறியாதார் பேச்சு என்றுதானே, சாதம் போடு—ரசம் கொண்டுவா—ஜலம் கொடு—என்று கேட்கும், ரசிகர்கள் கூறுகின்றனர்!

(தொடரும்)

D-பக்கத் தொடர்ச்சி

என்று தோன்றியதால் இதை எழுதலானேன்."

இவ்வறிக்கை, சிதம்பரனாரின் குடும்பம் இன்று என்ன நிலையில் இருக்கிறதென்பதை விளக்கியும், அதற்காவன செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தியும் வெளியிடப்பட்டதாகும். சிதம்பரனாரின் பெயரால் கப்பலோட்டும் நிலையைப் பெற்ற இந்தச் சமயத்தில், அதற்காகவே தம்முடைய வாழ்க்கையை வறுமையின் இருப்பிடமாக்கிக் கொண்டவரின் குடும்பத்தைப்பற்றி எண்ணவும், அதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டை—உதவியைச் செய்யவும் பொதுமக்களும் அரசாங்கமும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஒப்பற்ற சேவை புரிந்த சிதம்பரனாருக்கு நாடு காட்டவேண்டிய நன்றியறிதலையும், செய்யவேண்டிய கடமையும் இதுவரை மறந்திருந்தது போல் இனியும் இருக்கக்கூடாதென்பதையும் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, செய்ந்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலைநாட்டவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், அவருடைய குடும்பம் மனவேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும் இப்போதாவது தமிழ் மக்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டுமென்பதே எமது வேண்டுகோளும் விருப்பமுமாகும்.

✲

தீர்ப்பளிக்கப்பட்டது.

காந்தியடிகளைக் கொன்ற காதகன் நாதுராம் விநாயக கோட்சேக்கும், நாராயண ஆப்தேக்கும் 10—2—49-ல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்த மற்றும் ஐவருக்கு ஆயுள் தண்டனையும், இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட தோழர் விநாயக தாமோதர சவர்க்காருக்கு விடுதலையும் நீதிபதி ஆத்ம சரண் அவர்களால் தீர்ப்பளிக்கப் பட்டது.

☆ வீரர் சிதம்பரனார் ☆

—❀—

மறைந்த மாவீரர் வ. உ. சி. அவர்களையும், அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது. பேரும், புகழும் பெற்றுச் சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேசபக்தியும் பயன்பட வேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி, உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல்வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமென்ற பொதுநல நோக்குடன்—பேரையும், புகழையும் விரும்பாமல்—ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர்.

வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்படவேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத் தான் முதலில் கைப்பற்றவேண்டுமென்ற ஒருசிறந்த திட்டத்தை முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும். 1906-ல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட "சுதேசிக் கப்பல் கம்பேனி" இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும். என்றாலும் அவருடைய திட்டம் வெற்றி பெறமுடியாதபடி அரசாங்கம் அவரை நாட்டைவிட்டே துரத்திவிட்டது—தீவாந்திரத் தண்டனை கொடுக்கப்பட்டது. கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழன், கடல் நடுவே கப்பல் போல் மிதந்துகொண்டு இருக்கும் ஒரு தீவில் சிறைவைக்கப்பட்டார்.

ஆறாண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார் சிறையினின்றும் வெளியே வந்தபோது, வறுமையென்னும் கொடிய பகைவனே அவரை வரவேற்றான். வறுமை அவரை ஆட்டிப் படைத்தது. அன்றாட வாழ்க்கையை நடத்துவது கூட முடியாது போயிற்று. அவரை ஆதரித்த 'அன்பர்கள்' எல்லோரும் கைவிட்டு விட்டனர். நாட்டின் விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார், கடைசியாக வறுமையோடு போராடி அதில் வெற்றிபெற முடியாமல் 1936-ல் உயிர் நீத்தார்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் அன்று நினைத்துப் பாடுபட்டாரோ, அந்தக் காரியம் இன்று வெற்றி பெற்றுவிட்டது. 43 ஆண்டுகளுக்கு முன் ஓட்ட வேண்டுமென்று அவர் நினைத்த கப்பல் இன்று ஓடுகிறது. இது அவருடைய கனவை நினைவாக்கும் ஒருநற்செய்தியாகும்—தமிழ் மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த ஒரு பெருமையாகும். பண்டைகாலத்தில் கப்பலோட்டிப் புகழ்பெற்ற தமிழர்களின் சிறந்த பண்பை, 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது.

வீரர் சிதம்பரனாரின் கனவை நினைவாக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சி ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டாகும் இந்தச் சமயத்தில், சிதம்பரனார் பெயரால் கடலில் கப்பல் ஓடுகிறது—ஆனால் அவருடைய குடும்பமாகிய கப்பல் கரை காண முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறதென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சிதம்பரனாரின் துணைவியார் குடியிருப்பதற்குக்கூட வீடின்றித் துயரக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறார். இது மிக மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும் என்பதை நாம் வலியுறுத்துவதோடு, இது பற்றி 'லோகோபகாரி' ஆசிரியர் தோழர் ப. சு. நெல்லையப்பர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளையும் இங்கு வெளியிடுகிறோம்:—

"தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பலின் முதல் யாத்திரை, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் கனம் பொருந்திய ராஜாஜி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய விஷயமாகும். தமிழ் மக்கள் இதுபற்றி மகிழ்ச்சியடையவேண்டும். சிதம்பரனார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கி நடத்தியபொழுது அவருடன் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற என் போன்றவர்களுக்கு இந்த நிகழ்ச்சி மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகும்.

காலஞ்சென்ற சிதம்பரனார் பரதேசிக் கப்பல் கம்பெனியுடன் போராடி, சுதேசிக் கப்பற் கம்பெனியைத் தொடங்கினார். அது காரணமாக எண்ணிறந்த இன்னல்களை அடைந்து, சிறைவாசமும் செய்தார். அவர் கனவு நனவாவது பற்றி அவர் ஆன்மா இன்று சாந்தி பெறும். அவரது சுதேசிக் கப்பல் முயற்சிக்கு அன்னாளில் இடையூறு விளைத்த பரதேசிக் கப்பல் கம்பெனி இன்று தூத்துக்குடியை விட்டு மறைந்து விட்டதும், அதற்குப் பதில் ஒரு சுதேசிக் கப்பல் கம்பெனி தோன்றியிருப்பதும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளாகும்.

சிதம்பரனார் போரால் ஒரு கப்பல் ஓடுவது போதாது, அவர் போரால் நூற்றுக் கணக்கான வர்த்தகக் கப்பல்களும், பிரயாணிக் கப்பல்களும் நமது நெடுங்கடல்களில் ஓட வேண்டும்.

மேலும் சிதம்பரனார் நினைவைப் போற்றுமாறு அவர் பேரால் கப்பல் விடும் நமது நாட்டார் அவர் குடும்பத்தைப் போதிய அளவு கவனியாதிருப்பது அறமில்லை. அவரது மனைவி மக்கள் வாழ்ந்திருப்பதற்கு அவர்களுக்கென்று ஒரு வீடு கூட இல்லை. இன்னும் முற்றுப் பெறுமலிருக்கிற சிதம்பரனார் நிதியிலிருந்து அவர் மனைவியாருக்கு மாதம் முப்பது ரூபாய் கொடுத்து வருவதே நாட்டு மக்கள் அவர் குடும்பத்தாரிடம் காட்டும் நன்றியாக இருக்கிறது. சிதம்பரனார் நிதியிலிருந்து அவர் குடும்பத்தாருக்குத் தாராளமாக உதவி செய்ய வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

சிதம்பரனாரின் மூத்த புதல்வர் வ. உ. சி. ஆறுமுகம் சென்ற சுமார் இருபதாண்டுகளாக அரசாங்க சேவையில் இருந்துவருகிறார். இரண்டாவது புதல்வர் வ. உ. சி. சுப்பிரமணியம் சென்ற மூன்று ஆண்டுகளாகத் தினமணி பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேவை செய்து வருகிறார். கடைசிப் புதல்வர் வ. உ. சி. வாலீசுரன் ராமநாதபுரம் ஜில்லாவில் அரசாங்க ஊழியம் செய்து வருகிறார். இவர்களில் ஒருவரும் அதிக வருவாயுள்ள பெரிய உத்தியோகங்களில் இல்லை. எனவே தேச முழுமையும் சிதம்பரனாரைப் பற்றிச் சிந்திக்கின்ற இந்நாளில் அவரது குடும்ப நிலைமையைப்பற்றி நினைவூட்ட வேண்டியது எனது கடமை.

(C-பக்கம் பார்க்க)

☆ எழுச்சியுற்ற ஆசியா! ☆

—✲—

இரு சுதந்திர அரசுகள்

இந்தியாவும்—பாக்கிஸ்தானும் அரசியல் விடுதலைபெற்று விட்டன. விலங்கு அறுந்தது, ஒருவருக்கொருவர் போரிடுவதற்கல்ல என்னும் விவேகம் இருநாட்டை ஆளுவோரிடமும் காணோம். பகையைப்பெருக்குவதற்குள்ள பேச்சும், படைப்பெருக்கமும் முதலிடம்பெற்றிருக்கிறது. முன் அறிவிப்பில்லாமலே, காஷ்மீரை போர்க்களமாக்கிக்கொண்டன இரு அரசுகளும். பதினொரு மாதங்களுக்குப் பின்னராவது நல்லறிவு பிறந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். தினம் ஒன்றுக்கு இந்திய அரசுக்கு மட்டும் இருபத்தைந்து லட்சம் செலவாகிக்கொண்டிருந்தது.

ஏட்டிலே இன்பபுரி தெரிகிறது; நாட்டிலே நாசநிலை இருக்கிறது. நாட்டாளுவோர் நாவிலே மக்கள் இருக்கிறார்கள்; உள்ளத்திலே முதலாளிகள் குடிகொண்டி இருக்கிறார்கள். முன்னாள் கூறினதை வெறும் சொல்லென்று மதித்துவிட்டு, இதுவரை கூறாத கோணல் பாதையில் நாட்டை இட்டுச் செல்லுகிறார்கள். இன்று இவர்கள் பேசும் பேச்சு முன்னிலும் கவர்ச்சி உடையதாக இருந்தாலும், கனிவுடையதாக இருந்தாலும், எவ்வாறு நாம் நம்பிக்கை கொள்வது முடியுமோ?

அதிகாரத்தால் ஒற்றுமையை அமைத்துவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு உருவாக்கப்படும் ஒற்றுமை, சோதனைக்கு உள்ளாகும் வேளையில் மணல்மேடு சரிவதுபோல் சரிந்துவிடுமே என்ற நினைப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பதினாறு திங்களில், நூறு கோடி ரூபாயை, மக்களிடமிருந்து, நாகரீக முறையில் தட்டிப் பறித்துக் கொண்டுள்ளார்கள் இந்திய முதலாளிகள் என்று பண்டிதரே ஆத்திரத்தோடு கூறுகிறார். கூறுகிறார் என்றால், தனது ஆட்சியின் திறமையின்மைக்கு, பிரதமரே அளிக்கும் நற்சாட்சிப் பத்திரம் என்பதே அதன் பொருளாகும். முதலாளிகள் கொழுக்கின்றனர். தொழிலாளர்கள் தவிக்கின்றனர். நடுத்தர வாழ்வினர் தத்தளிக்கின்றனர். விடுதலை வீரர்களின் ஆட்சி இந்த நிலையில் இருக்கிறது. இரண்டு நாட்டிலும் இந்நிலைதான். மக்கள் ஏமாற்றம் பெற்றுள்ளனர்.

வல்லரசுகளில் ஒன்றென மதிக்கப்பட்ட சீனா, பொதுவுடைமை நாடாக முழுதும் மாறுவதற்கு இன்னும் சில நாளே இருக்கிறது. முதலாளித்வமான முதலாளித்வ நாடல்ல சீனா. முதிர்ந்து விடும் நிலையையும் அங்கு முதலாளித்வம் பெற்றிருக்கவில்லை. பெரிய விவசாய நாடு. நிலப்பரப்பும் பெரிது. மக்கள் தொகையும் கூடுதல். நமது நாட்டிலுள்ள வாழ்க்கைத் தரத்திலும், அங்கு வாழ்க்கைத்தரம் மோசம். வேலையற்றோர் தொகையும் ஏராளம். ஏழு ஆண்டுகளாக ஜப்பான் படையெடுப்பினால் சீரழிந்து கிடக்கிறது. உள்நாட்டுக் குழப்பத்தாலும் சீர்குலைவு அதிகம். பொதுவுடைமை ரீதியில், சீனாவைத் திருத்தி அமைப்பதற்கு இன்னும் சில ஆண்டுகள் செல்லும், என்று கூறுவது மிகையாகாது. சீனாவிலே தோன்றியுள்ள சிகப்பு, அதனைச் சுற்றியுள்ள நாடுகளில் நடைபெறும் முன்னேற்ற இயக்கங்களை உற்சாகப்படுத்தி, மக்களுக்கு விடுதலையைத் தேடித்தரப் பெரிதும் உதவி புரியும். இந்நிலையில், சீனாவை ஆட்டிப்படைத்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் நாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, சென்ற போரில் சிதறிக் கிடக்கும் ஜப்பானை போர்த்தெழிலைச் செப்பனிட முற்படுவது நிச்சயம். இதனை எண்ணுகிற பொழுது ஆசியாவின் எதிர்காலம் மிகமிகப் பயங்கரம் நிரம்பியதாகவே காட்சி அளிக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முன் யோசனையோடு நடந்து கொண்டதைக் கண்டிருந்தும், ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களுக்கு, பழைய சுரண்டல் மோகம் இன்னும் விட்டுவிடவில்லை. பிரான்சும், டச்சும், சுரண்டல் பணியில் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தோனேஷியாவில், டச்சு ஏகாதிபத்தியம், முன்னாள் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மறந்து, இந்தோனேஷ்ய குடியரசைக் குலைக்கவும், அதன் தலைவர்களைப் பிறர் அறியா இடத்தில் பாதுகாப்பில் வைக்கவும், ஆயுதம் தாங்காத சாதாரண மக்கள்மீது குண்டு வீசிக் கொடுமை செய்வதுமான காரியத்தில் முனைந்திருக்கிறது. இந்தோனேஷியாவில் பாத்யதை கொண்டாட டச்சு ஏகாதிபத்யத்திற்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஜப்பான் படையெடுப்பின்போது, இரண்டொருநாளில் இந்தோனேஷியாவை விட்டு விட்டு, தப்பினால் போதுமென்று ஓடிவிட்ட உளுத்துப் போன ஏகாதிபத்தியமாகும் அது. இந்தோனேஷ்யா விடுதலை பெற்றதும், டச்சு ஏகாதிபத்தியத்தின் இராணுவபலத்தால் அல்ல. அமெரிக்க — ஆங்கிலேய இராணுவந்தான், அந்த நாட்டை ஜப்பான் பிடியிலிருந்து விடுவித்தது. எனவே, இந்தோனேஷ்யாவின் அரசியல் விடுதலையைக் கண்ணியப்படுத்தி, நல்லதோர் சுயாட்சி அமைத்து, அந்த நாட்டுக்கு நலம்பல தேடவேண்டிய பொறுப்பிலுள்ள நாடுகள் இங்கிலாந்தும்— அமெரிக்காவும் ஆகும். ஆனால், இத்துறையில் இருநாடுகளும் நேர்மையைத் துறந்துவிட்டிருக்கின்றன. டச்சு ஏகாதிபத்தியத்திற்குச் சலுகைக்காட்டி வருகின்றன. ஐக்கியநாடுசபையில், இந்தோனேஷ்ய விவகாரமாக, இருநாடுகளும் காட்டிவரும் மனோபாவம், டச்சு ஏகாதிபத்தியத்திற்கு ஆக்கம் தருவதாக இருக்கிறதே அன்றி, பரிந்து நடந்துகொள்ள வேண்டிய பரிபக்குவத்தை காட்டுவதாக இல்லை.

ஏற்கெனவேதான் ஆசியநாடுகளில் பல, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பிடிகளில் சிக்கி, சுயேச்சையாக நடந்துகொள்ளும் ஆற்றல் அற்றுக்கிடந்தன. இந்தப் போருக்குப் பின்னர்தான் அந்த அடிமை நிலை தொலைந்து புதியநிலை பிறந்திருக்கிறது. அரசியல் பிடிதளர்ந்த பின்னரும், அடிமைச் சங்கிலி

அறுந்து விழுந்த பின்னரும். மனதில் பட்டதை வெளியில் கூறாமல், முடியுமானால் சமாதான முறையிலேயே பொருளாதார தடுப்பு முறைகளை மேற்கொள்ளாமலும் இருக்குமா? டச்சு ஏகாதிபத்தியம் இந்தோநேஷ்யாவில் நடந்துகொள்ளும் வெறியாட்டத்தைக் கண்டு ஆசிய நாடுகள் ஆவேசம் கொண்டு எழுந்தன. டில்லியில் சென்ற திங்கள் இறுதியில் இந்திய பிரதமர் பண்டித ஜவஹரின் தலைமையில் ஒன்று திரண்டன. டச்சு ஏகாதிபத்தியத்திற்கு முடிந்த் எச்சரிக்கையும் விடுத்துள்ளன. எச்சரிக்கையை மதித்து நடக்க டச்சு முன்வரவில்லையானால், வெள்ளையர்கள் மீது—அவர்கள் எந்த நாட்டினர் ஆயினும்—ஆசியர்கள் சொந்த அனுபவத்தால் பெற்றுள்ள அவநம்பிக்கை பெறுவதற்கு இடமேற்படுமே யன்றி, நம்பிக்கையும் நல்லுறவும் வளருவதற்கு இடமேற்படாது.

ஐக்கிய நாட்டுச் சபையின் முக்கியத்துவத்தைக் குறைக்கவோ, அதற்குப் போட்டியாக ஆசியாவிற்கு என்று ஒரு புதிய ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கவோ, டில்லி மாநாடு கூடவில்லை என்று இந்திய பிரதமர் விளக்கியுள்ளார். வெள்ளையர்கள் போக்கிலே நாணயமில்லாததால், முன்னாள் ஆசியர்கள்மீது அவர்கள் கொண்டிருந்த அகம்பாவம் இன்னும் முழுதும் மாறாததால், ஆசிய சுதந்திர எழுச்சியின் ஒருகூறாக இருக்கும் இந்தோநேஷ்யாவின் விவகாரத்தில், அமெரிக்காவும் — இங்கிலாந்தும் நேர்வழியைக் கைக்கொள்ளத் தயங்குகின்றன என்று ஆசியமக்கள் உண்மையாகக் கருதுகிறார்கள். இதன் விளைவுதான் ஆசிய மாநாடு. மேலும் விபரீதம் நேராமுன்னர் இங்கிலாந்தும் அமெரிக்காவும் தக்க முறையில் நடந்துகொள்ளவேண்டும். அதாவது, டச்சு ஏகாதிபத்தியத்தின் அடங்காப்பிடாரித்தனத்தை அடக்கி, இந்தோநேஷ்ய குடியரசை நிலைபெறச் செய்து ஆசியமக்களின் அன்பையும் ஆதரவையும் பெறவேண்டும், வெள்ளை அரசுகள். அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு, இந்தோநேஷ்யா ஒரு உரைகல். அணுகுண்டும், அதனைச் சுமந்து சென்று வீசும் விமானமும், அதனை இயக்க ஆற்றல்மிக்கோரும், வெள்ளை அரசுகளிடம் ஏராளமாக உண்டு என்பதை அனைவரும் அறிவர். மக்களைக்கொல்ல அவைகள் தேவைப்படலாம். ஆனால், மக்களின் பற்றுதலையும் பாசத்தையும் கொல்லும் சக்தி அவைகளுக்குக் கிடையாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சிகப்பாகும் சீனாவையும் பார்த்துப் புத்தியோடு நடந்து கொள்ள வேண்டும் ஏகாதிபத்திய அரசுகள்!

நேபாளம்

சர்வசாதாரணமாக வெற்றி பெற முடியாத, இயற்கை அமைப்புடன், சுதந்திர நாடாக விளங்கி வருகிறது நேபாளம். இந்தியாவிற்கு ஆபத்தை உண்டாக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. அரசன், கொடுங்கோலின் சின்னமாக இன்றும் இருந்து வருகிறான். பொறுப்பாட்சிக் கிளர்ச்சி இன்று அங்கு நடந்துகொண்டு இருக்கிறது. அதனை மதிக்காது மன்னன், மக்களைக் கொல்லப் படையை ஏவுகிறான்.

பிரிட்டனின் ஆதிக்கம் அங்கு இருப்பதாகத் தெரிகிறது. சோவியத்தைக் காட்டியே, நேபாளத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கின்றனர் ஆங்கிலேயர். வரவிருக்கும் ஆபத்தின் அறிகுறி இது. முளையிலேயே கிள்ளி எறியவேண்டியது முக்கியம்.

மலாயா

பிரிட்டிஷ் பிடி இன்னும் தளர்ந்துவிடவில்லை அங்கு. உள்நாட்டில் தொழில் அற்ற தமிழர்களும், சீனர்களும் அங்கு ஏராளமாகத் தொழில் தேடிச் சென்றுள்ளனர். இரப்பரும், டின்னும் அங்கு முக்கியத் தொழில்கள். பிரிட்டிஷ் முதல் போட்டு இருக்கிறது. தொழிலாளர்கள் விழிப்படைந்திருக்கிறார்கள். சிதறிக் கிடக்கவில்லை. கட்டுப்பாடாக ஸ்தாபன ரீதியில் அமைந்திருக்கிறார்கள். தொழிலாளர்களின் வருவாய் வரவரக் குறைந்துகொண்டு வருகிறது. எனவே தொழிலாளர்களின் துன்பமும் பெருகிக்கொண்டு வருகிறது. கிளர்ச்சி வலுக்கிறது. பொதுவுடைமைப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு, பசித்தவரைப் போக்கித் தள்ளும் பெரும்பணியில் பிரிட்டிஷ் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை அதிகரிக்க அதிகரிக்க, மக்களின் விடுதலைக் கிளர்ச்சியும் வலுவடைந்தவண்ணம் இருக்கிறது. விடுதலை, விரும்பினதற்காகக் கிடைத்துவிடக்கூடிய நிலையில்லை என்பதை மெய்ப்பிக்கிறது மலாயா.

பர்மா

சுதந்திரம் கிடைத்த சில நாளைக்கெல்லாம், பதவிப்பித்தம் தலைக்கேறிய சிலரால, அமைச்சர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். உள்நாட்டுக் குழப்பம் தணிந்தபாடில்லை. போலீசும் இராணுவமுங்கூட கட்சிப் பிரதிக் கட்சியாகப் பிரிந்து கலகம் விளைவிக்கின்றன. தனிநாடு கேட்கும் சமூகத்தினரும் தம் கோரிக்கையை வற்புறுத்துகின்றனர். வெண்கொடி — செங்கொடி கம்யூனிஸ்டுகள் என்ற விசித்திரத்தையும் அங்கு பார்க்கலாம். நாடெங்கும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நெல் வயல்கள் பயிரற்ற பாழடைந்த நிலங்களாக விடப்பட்டிருக்கின்றன. மக்களாட்சிப் பயிர் முளைப்பதற்குத் தகுதி உடைய நிலமாக, பர்மாவைப் பண்படுத்துவதற்கும் பக்குவமாக வளர்ப்பதற்கும் பல காலம் பிடிக்குமெனவே தெரிகிறது. நல்லாட்சி அமைப்பதற்கு ஆசை மட்டும போதாது, அதற்கான அனுபவமும் அறிவும் ஆற்றலும் அடிப்படைத் தேவைகள் என்பதையே பர்மா போதிக்கிறது.

ஆசியாவில் உண்டாகும் கிளர்ச்சிக்கெல்லாம் சோவியத் இரஷ்யாதான் மூல காரணம் என்று மேதைப் பிரகஸ்பதிகளும் இல்லாமல் இல்லை. பணம் கொடுத்தும், வேறு பல முறைகளைக் கையாண்டும், அமைந்துள்ள அரசை அழித்துவிட வேண்டுமென்று தூண்டிவிடுவது இரஷ்யாதான் என்று ஆதிக்கக்காரர்களும் பேசுகிறார்கள். பசி, பஞ்சம், கல்வியின்மை, வேலையின்மை, பிணி போன்ற வசதிக் குறைவுகளால், வேறு முறையைத் தேட மக்கள் முயற்சி தேடுவது இயற்கையேயாகும். பொதுவுடைமையே அதற்கான மருந்தாகத் தெரியுமானால் மக்கள் அதனைத் தேடவும், பலரைப் பலியிட்டேனும் பெறவும், பரபரப்புக் காட்டுவதிலே, பிறர் தூண்டுதல் இருக்கவேண்டிய அவசியமில்லையே. நிலைமையை நேர்செய்ய

விரும்பாத ஆதிக்கக்காரர்கள், மக்கள் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவும், அதற்கான அடக்குமுறைகளை வெகு இலகுவாக மேற்கொள்வதற்காகவும், கிளப்பிவிடப்படும் பூச்சாண்டியே அது. பசியைத் தணிக்க வழிசெய்வதில்தான் கம்யூனிசப் பரவலைத் தடுக்கும் முறை இருக்கிறதே யன்றி, புதிய புதிய போர்க் கருவிகளுக்கு அந்தச் சக்தி இல்லை என்பதை என்றுதான் ஆதிக்கக்காரர்கள் அறியப் போகிறார்களோ?

சிலோன்

சிறிய தீவிற்குச் சுதந்திரம் கிடைத்தது, அதன் பார்வையிலே புதியபோக்கும், பேச்சிலே கம்பீரமும் நர்த்தனம் புரிகின்றன. பெரிய நாடானாலும், அதட்டிப் பேசும் அளவிற்கு ஆற்றல் பெற்றிருக்கிறது. அச்சத்தை அகற்றிவிட்டது, சொந்த வீட்டை வெளியாரின் குறுக்கீடின்றி நேர் செய்வதில் முனைந்திருக்கிறது. சிலர் அதனைக் கண்டு முணுமுணுப்பதும், வேறு சிலர் சீறுவதும், சொந்த இலாபத்துக்கேயன்றி சிலோனுக்குச் சுகந்தேடித் தருவதற்காக அல்லவே அல்ல. சுதந்திரச் சிலோனில இன்று அதிகமாக அவதிக்குள்ளாகி இருப்போர், நமது தமிழர்கள்தான். தாய்நாடு, பிறரின் வேட்டைக்காடாக இருப்பதால், அவர்களை வரவேற்கும் நிலையில் இல்லை. திராவிடம் தனியானாலன்றி, கடல் கடந்த தமிழர்களுக்கும் சரி, உள்நாட்டு மக்களுக்கும் சரி, வேண்டியதைத் தேடித் தரும் ஆற்றல் ஏற்படப்போவதில்லை.

✲

அங்கே அப்படி! இங்கே இப்படி!

✲

மேல்நாடுகள் பலவற்றில், மழை பெய்வதற்காக மனித அறிவு பயன்படுத்தப்பட்டு, விஞ்ஞானக் கருவிகள் மூலம், வேண்டும் போது மழையை வருவிக்கவும், வேண்டாத போது நிறுத்தவும், எவ்வளவு மழை தேவையோ அந்த அளவுடன் மழை பெய்வதை நிறுத்திக் கொள்ளவுமான முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இங்கே, மழைபெய்வதற்காக மகேஸ்வரன் ஆலயங்களில் பூஜையும் பிரார்த்தனையும் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இந்துமத தர்ம பரிபாலன போர்ட்டாரால் 7—2—49-ல் வெளியிடப்பட்ட ஒரு சுற்றறிக்கையில்,

"கடவுள் கிருபையால் மழை பெய்யும் வரையில் பூஜை நடைபெறவேண்டும்"

என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். மழைபெய்யாமல் போனதற்குக் காரணம், கடவுளின் கோபம்தான்—ஆகையால் அவருக்கு விசேஷ பூஜைகள் செய்தால் அவருடைய கோபந்தணிந்து மழையைப் பொழிய வைப்பார் என்பது மதபரிபாலனரின் கருத்தாகத் தெரிகிறது. அப்படியானால், கடவுளுக்குக் கோபம் உண்டானதற்கும், அது காரணமாக அவர் மழை பெய்வதைத் தடுததற்கும் உள்ள காரணம் என்னவாய் இருக்கலாம் என்பதை நமது மதபரிபாலகர்கள் ஏன் சிந்தித்துப்பார்க்கவில்லை?

அங்கே, மழைபெய்வதற்கு மனித அறிவு பயனபடுத்தப்படுகிறது. இங்கே, மழைபெய்வதற்கு மகேஸ்வரனுடைய கிருபை தேவைப்படுகிறது! அங்கே அப்படி! இங்கே இப்படி!

✲

தானாக இயங்கும் அச்சுப்பொறிகள்

தரத்திற்கும் திறமைக்கும் உலகப் புகழ் பெற்றுள்ள பிரிட்டிஷ் ஸ்தாபனமொன்று புதவித அச்சிடும் இயந்திரங்களைத் தயாரித்து வருகின்றது. மிக வேகமாக, தானாக இயங்கும் சிலிண்டர் பிரஸ் ஒன்று வரும் மேமாதம் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் கைத்தொழில் காட்சியில் காட்டப்படவிருக்கிறது. இதைத் தவிர அச்சுக்கூடங்களுக்கான பலவித நூதன சாதனங்களும் காட்சியில் இடம் பெறுமென அறிவிக்கப்படுகிறது. இயந்திரத்தின்மூலம் அராபிய மொழியில் அச்சுக் கோர்ப்பதற்கான ஒரு முறையும் தத்ரூபமாகக் காட்டப்படும். இம்முறை, கைகளால் அச்சுக் கோர்ப்பதைவிட மிகச் சிக்கனமானது. இவைகளைத் தவிர பத்திரிகைகளில் படங்கள் அச்சிடுவது சம்பந்தமாகவும் புது இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. போட்டோவிலிருந்து பிளாக்கு தயார்செய்து அச்சிடுவதற்குப் பதிலாக நேராகவே படத்தின் "நெகட்டிவை" உபயோகிக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

ஒன்றல்ல, பல!

ஐக்கிய மாகாணத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் ஐநூறு பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று புகார் செய்யப்பட்டதன் பேரில், நூறு காங்கிரஸ்காரர்கள் ஒழுங்குதவறி நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, அவர்களுக்கு ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டுவரை காங்கிரசில் இருக்கக்கூடாதென்று தீர்ப்பளிக்கப்பட்டது. காந்தி நிதிக் கணக்கில் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகவும், இன்னும் பல ஒழுங்கீனங்களைச் செய்ததாகவும் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

✲

சொற்ப காப்பிகளே உள்ளன!
சி. என். ஏ. எழுதிய
'வாழ்க்கைப் புயல்'
விலை 0—12—0.
பதின்மூன்றணா அனுப்பினால் தபால்மூலம் அனுப்பப்படும்.
*
எதிர்பாருங்கள்!
சி. என். ஏ. எழுதிய
"கம்பரசம்"
(2-ம் பாகம்)
கைவல்யம் அவர்கள் எழுதிய
"இராம இராச்சியம்"
விபரங்களுக்கு:—
பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95 Thirukkachinambi Street. Kancheepuram.

REGD. M 4642.

திராவிடநாடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 ... 1949
MADRAS

விலை அணா 2 ஆண்டொன்றுக்கு ரூ 7 இலங்கை 15 சதம் மலாயாநாடு 12 காசு
மலர் 7 | 20-2-49 | இதழ் 34

சென்றவாரத் தொடர்ச்சி

செக்கோஸ்லோவேகியா

3

[அண்ணாத்துரை]

பூந்தோட்டம் காண எண்ணம் கொண்டு, வெறும் பொட்டலில், மலர்களை நித்த நித்தம் கொண்டு வந்து கொட்டி அக் காட்சியைக் கண்டு மகிழ்வது, பயனுடைய செயலாகுமா! அது போலவே, மணம் தரும் பல்வகைத் தோட்டத்தை உடையவன், அங்கு அல்லியும் வேண்டும் என்று எண்ணி, அல்லி பூத்திடுவதற்கு ஏற்ற முறையிலே, தோட்டத்தைத் திருத்திட முற்பட்டு, அத் திருத்தம், ஏற்கனவே உள்ள பல்வகை அழிக்கும் விதமாவது கண்டும் கவலைபடாமல், அல்லி கிடைத்திடும்— அகமகிழ்ந்திடலாம் என்று மட்டுமே கருதினால், அவனைக் கருத்தில் தெளிவுடையோனாகக் கொள்ள முடியுமா! மொழி மக்களின் வாழ்க்கையிலே பூத்திடுவது — வாழ்க்கை வளம் பெறவும் உதவுவது. அத்தகைய மொழி, வளமற்ற நிலையில் இருப்பின், அம் மொழியை வளமாக, வளமுற்ற வேறு மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக் கொள்வதும், அதன்மூலம், தமது மொழிக்குப் புதிய பொலிவும் வலிவும் தேடுவதும் அவசியம் தான்— ஆனால் அதற்கு ஓர் அளவும் உண்டு அல்லவா? மொழி, வளமாக இருக்கும் போது, வாழ்க்கையை வளமாக்குவதற்கு வேண்டிய அளவு, அம் மொழிக்கு உரமும் திறமும் இருக்கும்போது, வேறு பல மொழிகளும் உலவுகின்றன, [illegible] கொண்டாடுகின்றன, உறவுகொள்கின்றன, என்ற காரணத்துக்காக, அம் மொழிகளிலே உள்ள சொற்களை எடுத்து, உள்ள மொழியிலே கலந்து தமது மொழியை உருமாறச் செய்வது, கருத்தற்ற செயல் மட்டுமல்ல, கேடுதரும் செயலுமாகும். இந்தக் கேட்டினைச் செய்வதுடன் மட்டுமின்றி, இது ஏதோ ஓர் திருத்தொண்டு என்றும் பேசுவோர் உள்ளனர் நமது திருநாட்டில். பல்வேறு மொழிகளும் கலந்து விளையாடும் மேடையாக வேண்டுமாம் தமிழ்! அதற்காகவே, வடமொழிச் சொற்களை, வரைவற்று உபசரிக்கவேண்டுமாம்! அதிதிகளுக்கு ஆடிப்பாடத் தாரும், தமிழருக்குச் சிலோனை, பர்மா, தேயிலைக்காடும் தந்தவரும் நீதி போலவே தான் இதுவும்!! இந்தக் கேட்டினை நாட்டுமொழிக்குச் செய்திடும் சிலர்கள், உலக வரலாற்றிலே, மொழியை இழுக்கப்படுத்தல், இகழ்ந்ததால், அழிய விட்டதால், நாடு பல சீர்கேடு அடைந்ததைப் படித்து உணரலாம்.

ஜான்ஹஸ் காலத்துக்கு முன்பு, செக்கோ நாட்டிலே, இத்தகைய சிலர்கள் ஏராளமாக இருந்தனர். எனவே அவர்கள், தாய் மொழி, தோட்டக்காரனிடமும் வண்டியோட்டியிடமும் அடைக்கலம் புகும் அளவுக்கு, ஜெர்மன் மொழி, மாளிகைகளிலும் [illegible] கொலுவிருக்கும் [illegible] யதைக் கண்டு கலங்கவில்லை— மாறாக மகிழ்ந்தனர். தொட்டிலிலே, தாதியின் குழந்தை தூங்க, வீட்டு விளக்கு, வீதியிலே விழும் நிலை! எனினும், 'சீமான்கள்' இன்று இங்கு சில சீலர்கள் பேசுவது போலவே தான் பேசினர்—மொழி பல நுழைவது நலந்தானே!—என்று. முதலில் இவ்விதம், பிறகு, செக்நாட்டுச் சீமான்களின் செருக்கு. ஜெர்மன் மொழிதான் இசைபோல் இனித்தது—தாய் மொழி, அவ்வளவு இனிப்பாக இல்லை! பிறகு ஜெர்மன் மொழி பேசத் தெரிந்தவன் என்றால் தான் பெருமை—தாய் மொழி மட்டுமே தெரியும் என்றால், இழிவு— என்ற கேடான நிலை பிறந்தது. மொழி அழிய வழி ஏற்பட்டது, பிறகு நாடு அழிந்தது— அன்னியரிடம் சிக்கிற்று. ஜெர்மனியர், வெளியார், என்ற [illegible] [illegible] நாட்டுக்குப் புதிய [illegible] மூலம் புதிய பண்பாட்டையும் கற்றுக்கொடுத்த கன்னியர்கள் என்று கருதப்பட்டனர். அன்னியருக்கு இதைவிட உயர்ந்த நிலை வேறு என்ன இருக்க முடியும்! ஆணவம் அவர்களுக்கு ஏற்படாமலிருக்க முடியுமா? ஆதிக்கம் வளராமலிருக்குமா! வளர்ந்தது! செக்கோ நாட்டு மக்களைச் சிரிக்கும் அளவுக்கு ஜெர்மன் ஆதிக்கம் ஓங்கலாயிற்று. [illegible] முறைகளும்,

பெரியதோர் மாற்றம் — மக்களின் மனப்பான்மையில், தோற்றத்திலே! உடையில், உணவில், ஊர்ப் பெயர்களில், எல்லாவற்றிலும், மாறுதல் ஏற்பட்டுவிட்டது. செக் நாட்டு மொழி வழி அமைந்த ஊர்ப் பெயர்கள், கேவலமாகக் கருதப்பட்டன. இப்போது, தமிழகத்தில் சோற்றுக்கடை—என்று சொன்னால் அதனை பட்டிக்காட்டானின் பக்குவமற்ற பேச்சாகத்தானே கருதுகிறார்கள், ஓட்டலுக்கும்—கபேக்கும்—லாட்ஜுக்கும் போகிறவர்கள்! அதே போல! முதுகுன்றத்துக்குப் போக முடியாதே இப்போது—விருத்தாசலத்துக்குத்தானே போகத் தெரியும் நமது மக்களுக்கு! மறைமலை, வேதாசலம் என்று மாறினதுதானே, நமது வளர்ச்சி என்று பேசுகின்றனர், சிலர்கள்! திருமறைக்காடு, என்பது தாம் வாழும் வேதாரண்யம் என்ற சர்தார் வேதரத்தினத்துக்கே தெரியாதே! இதேபோல, அங்கு, மொழியை இழக்கலாயினர், செக் மக்கள்.

தம்பி! என்ன புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறாய்?—என்று கேட்டால், என்ன பதில் கிடைக்கும் தமிழ்நாட்டில், இன்று கலித்தொகை என்று? பரிபாடல் என்று? ஐங்குறுநூறு என்று? அகம் என்று புறம் என்று? அல்ல—அல்ல! அல்லி அரசாணி மாலையாக இருக்கும், பழமை விரும்பியாக இருந்தால், அல்லது அலிபாபா கதையாக இருக்கும் புதுமை விரும்பியாக இருந்தால்! செக்கோ நாட்டுக்கும் அன்று இதே நிலை ஏற்பட்டது. அந்த மக்களுக்கு, ஜெர்மன் நாட்டுச் சிறப்பு, வரலாறு, அந்நாட்டு வீரர் பெருமை, கவிதைச் சிறப்பு, தெரிந்திருந்த அளவுக்கு, தாய்நாட்டைப் பற்றித் தெரியாது. குலோத்துங்கன், கரிகாலன், வில்லவன் கோதை. இங்கு எவ்வளவு மக்களுக்குத் தெரியும்! அதுபோலத்தான்! சீரழிவு ஏற்பட்ட நிலை.

நாடு கேடுற்றதன் காரணம், மொழியை வேண்டுமென்றே கெடவிட்டதுதான் என்பதை உணரச் செய்து, மீண்டும் தாய் மொழிப் பற்று வளரும் வகை கண்டார், ஜான் ஹஸ். நாட்டுக்கு உண்மையான விடுதலை கிடைக்க வேண்டுமானால், மொழிக்கு விடுதலைவேண்டும் என்ற அடிப்படை உண்மையை உணர்ந்து உரைத்தார். தாய் மொழி தனிச் சிறப்புடன் இருக்க, அதனைத் தலைமுறை தலைமுறையாக நம்மவர் போற்றி வளர்த்துப் பயன் பெற்றிருக்க, எதற்காக வெளிநாட்டவரின் மொழி இங்கு அரசாள வேண்டும்—ஏன் அந்த மொழிக்கு புலவரும் புவியாள்வோரும் அடி பணிய வேண்டும் — நமது முன்னோர்கள் முழு வாழ்வு வாழ்ந்தனரே தாய் மொழியின் துணை கொண்டு—நாம் ஏன் அதனைப் புறக்கணித்துவிட்டு, புதிய மொழியிடம் சிக்கிச் சீரழிய வேண்டும்? நமது நாட்டிலே, தாய் மொழி போற்றி வளர்க்கப்பட்ட போது, நாடு இருந்த நன்னிலையுடன், இன்றையச் சீரழிவை ஒப்பிட்டுப் பாருங்கள். அன்று, என்ன செயலைச் செய்து முடிக்காமலிருந்தனர் —தாய் மொழி அவர்களை எவ்வகையிலே தவிக்கவிட்டது — இன்று, அன்னிய மொழியின் அடி வருடியதால், என்ன பயனை, பெருமையைக் கண்டுவிட்டோம்! செக் நாட்டு மக்களே! செக் மொழியில் பேசுங்கள்—எழுதுங்கள்! பாடல்கள் செக்மொழியிலே இருக்கவேண்டும்! பணி மனைகளிலே, செக்மொழியிலேயே பெயர்களைப் பொறித்திடுங்கள்! செக் மொழியிலேயே, ஊர்ப் பெயர்கள் இருக்கவேண்டும்! அவசியமற்ற அன்னிய மொழிகளை, சொற்களை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டை, அகற்றுங்கள்—என்று, மொழி முனையிலே தான், உரிமைப்போரின் முதற் கட்டத்தைத் துவக்கினர். வெற்றி விரைவிலே கிடைத்தது. தமிழில் பேசு! தமிழில் எழுது! தமிழ் இசை வேண்டும்! தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்!—என்று நாம் துவக்கியது போலவே, அங்கு! இங்கு, இன்று ஓரளவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது—அங்கு அன்று, இதைவிடப் பெரிய அளவிலே, வெற்றி கிடைத்தது. இங்கு, நாராயணசாமி நெடுஞ்செழியனாகி, சீனுவாசன் செழியனாகி, சோமசுந்தரம் மதியழகனாகி, மாணிக்கவாசகம், மணிமொழியாராகி, கலியாணசுந்தரம் மணவழகனாகி, ராஜாமணி அரசியல் மணியாகி, இமயவரம்பன், எழிலரசன், இளஞ்சேரன், கூத்தரசன், நெடுமாறன், என்று தமிழ் தழைத்திடும் புதுநிலை காண்கிறோம்—களிப்புடன். இது, செக்கோ நாட்டிலே, அந்நாளில், மிக மிக அதிகமான அளவு வெற்றியுடன் நடைபெற்றது.

"அக்ராசனாதிபதி அவர்களே! மகா ஜனங்களே! இன்று அடியேன் இராமானுஜ தாசன், உபன்யாசம் செய்ய உத்தேசித்திருக்கும் விஷயம் என்னவென்றால், ஹரிஹரப் பிரம்மாதியர்களும், நந்த நாரத மகரிஷியைச் சகல சமயங்களிலும் நாடிவந்தனரோ அப்பேர்க்கொத்த நாரதப் பிரம்மத்தின் லீலா விநோதங்களைப் பற்றியாகும்"—என்று யாராவது பேசக் கேட்டால், இப்போது தமிழகம் கைகொட்டிச் சிரிக்கும் நிலை பிறந்துவருகிறது. ஊர்ப்பெயர்கள் மட்டுமல்ல; திருத்தலங்களிலே உள்ள 'சாமிகளின்' பெயர்களும் கூட, தமிழ்ப் பெயர்களாக்கப் பட்டு வரும் நிலையைக் காண்கிறோம். கூட்டங்களில் தலைவர், வீற்றிருக்கிறார், அக்ராசனர்கள், மிக மிகச் சொற்பம்! சொற்பொழிவுகள் — சொற்பெருக்கு —பேருரை, இவைகள், தமிழகத்திலே, கேட்கின்றன. உபன்யாசம்— பிரசங்கம் குறைந்துவிட்டன! விவாக சுப முகூர்த்தம் மிக மிகக்குறைந்த அளவாகி, திருமணம், வாழ்க்கைத்துணை ஒப்பந்தம், ஆகியவைகள் பரவியுள்ள நாட்களில் நாம் வாழ்கிறோம். தர்மயுத்தம் அல்ல, அறப்போர்! சேனாதிபதி கரியப்பா, அல்ல, தளபதி கரியப்பா! காந்தியார் ஜென்ம நட்சத்திரம் அல்ல, பிறந்தநாள்!—இப்படி, தமிழாக்கம் எங்கும் நடைபெறக் காண்கிறோம்—களிக்கிறோம். இடையே சில 'ரசிகர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள், தேடித் தேடிக் கண்டுபிடித்து, அன்னிய மொழியைப் புகுத்துபவர்கள்—எனினும், நாடு நாடுவது, தாய் மொழியை என்பது நன்கு விளங்கிவிட்டது.

செக்கோ நாட்டிலேயும், இதே போலத்தான், மொழிப் பற்றினை முன்னணி கொண்டுவந்து நிறுத்திப் பணி புரிந்து வெற்றி பெற்றனர். செக் நாட்டவர், ஜெர்மன் மொழியிலே பேசிடக் கேட்டால், கேலி பேசலாயினர்! பணி மனைகளிலே, ஜெர்மன் மொழியிலே, பெயர் பொறித்திருந்தால், கேலி செய்து, தாய் மொழியில் பெயர் சூட்டுங்கள், தீட்டுங்கள், என்று கூறுவர், இந்த விழிப்பும் எழுச்சியும், செக் நாட்டிலே ஏற்பட்டு, ஜெர்மன் மொழியிடம் இருந்த மோகத்தையும் பயத்தையும் ஓட்டலாயிற்று. இங்கும் நாம், முனிசிபாலிடிகளை நகராட்சிகளாக்க வேண்டும், கமிஷனர்களை ஆணையாளர்களாக்க வேண்டும், ஆபீசுகளை அலுவலகங்களாக்க வேண்டும், அப்பீஸ் கபே, மாடர்ன் லாட்ஜ், பெரின ஓட்டல், மவுண்ட் ரோட், மகாலட்சுமி பவன், ராயல் ரெஸ்டாரெண்டு, என்பவைகளை எல்லாம் தமிழாக்க வேண்டும். செக்கோ நாட்டவர், இந்தத் துறையிலே, வெற்றி பெற்றனர், ஜான் ஹஸ் துவக்கிய பணியின் பயனாக. வீறுகொண்டெழுந்த ஜிஸ்காவின் படையினர், இந்தத் துறையிலே, மிக அதிகமாக வெற்றி பெற்றனர். இறைவனின் வீரர்கள் என்ற பெயருடன் விளங்கிய, ஜிஸ்காவின் தோழர்கள், மிகத் தீவிரமாகப் பணி புரிந்து, செக் மொழியை வளமுள்ளதாக்கினர். புதிய புதிய கவிதைகள் இயற்றினர்! கல்லூரிகள் புதிது புதிதாக, எங்கும் செக்மொழிக்கே உயர்வு! அம்மட்டுமா! இந்த எழுச்சி, உச்சநிலை அடைந்து, 1500ம் ஆண்டு, பில்சென் என்ற நகரில், செக்மொழி பேசாதவர்களுக்கு, ஊர்வாசி என்ற உரிமை தர முடியாது என்ற தனிச் சட்டமே இயற்றினர்! இந்த எழுச்சியைக் கண்ட பிறகுதான், இனி, செக்நாட்டு மக்களை அடக்கி ஆளமுடியாது என்று ஜெர்மனியர் உணர்ந்தனர். தாய் மொழியைச் சிதைத்துவிட்டோம், எனவே தாய்நாடு என்ற எண்ணமே அழிந்துபோயிருக்கும், நமது ஆதிக்கம் இனிக் குன்றாது என்று எண்ணியிருந்தனர் எத்தர்கள். மீண்டும் தாய்மொழி தலைதூக்கவே, இனி நமது ஆதிக்கம் நிலைக்காது என்பதை அறிந்து கொண்டனர். செக்கோ நாட்டிலே எத்திக்கு நோக்கினாலும் தாய்மொழி பணியாற்றிடக் கண்டனர். செக்மொழி பேசுவோரே பெரும்பான்மையினர், அவர்களிடையே உலவி ஜெர்மன் மொழிபேசுவோர் தாங்கள் அன்னியர் என்பது விளக்கமாகி விட்டது. இரண்டறக் கலந்துவிட்டது நமது பண்பாடு, செக்கோ நாட்டின் தனிப் பண்பு இருக்குமிடம் தெரியாமல் மங்கி மடிந்துவிட்டது, என்று மனப்பால் குடித்தனர்—ஆனால் தாய் மொழிப்பற்றுத் தலைநிமிர்ந்து நின்றிடக் கண்டனர், இனி நமது ஆட்சி நிலைக்காது என்பதை அறிந்தனர்—அஞ்சலாயினர். இதே நிலையில்தான், ஜிஸ்காவின் வீரப்படையும் தாக்கலாயிற்று! விழிப்புற்ற மக்கள், வீறு கொண்ட மக்கள், நடத்திய தாக்குதல், ஜெர்மன் ஏகாதிபத்ய வெறியர்களை விரட்ட மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் உள்ளவர்கள் வியந்துபோற்றக்கூடிய விதமாக வெற்றி தந்தது. ஜிஸ்கா, குருடன் தான்—ஆனால் அவன் பக்கம் திரண்டெழுந்த மக்கள், புத்தொளி வீசிடும் கண்ணினர்—தாய்மொழி காத்திடும் வீரர்கள்! எனவேதான், வெற்றிமேல் வெற்றி கிடைத்தது, அந்த வீரப்படையினருக்கு—விடுதலை கிடைத்தது தாயகத்துக்கு

(தொடரும்)

மத ஏகாதிபத்யத்தின்மீது தாக்குதல்

காங்கிரஸ்காரர் விடும் கணைகள்

மதத்தின் பேரால் நடைபெறும் ஊழல்களை மக்களுக்கு எடுத்துக் கூறினோம்—மதவிரோதிகள் என்று கண்டிக்கப்பட்டோம்.

கடவுள் பேரால் நடக்கும் கபட நாடகங்களை விளக்கினோம்—நாத்திகர் என்று நிந்திக்கப்பட்டோம்.

கோயில்களில் நடைபெறும் கொடுமைகளைக் கூறினோம்—வாயில் வந்தபடி எல்லாம் திட்டப்பட்டோம்.

மடாலயங்களில் மதோன்மத்த வாழ்வு நடத்தும் பண்டார சந்நிதிகளின் லீலா விநோதங்களை விளக்கினோம்—விதண்டா வாதம் செய்வதாக வீண்பழி சுமத்தப்பட்டோம்.

புரோகிதர்களின் புரட்டைப் பொதுமக்களுக்குப் புரிய வைத்தோம்—பார்ப்பன விரோதி என்று பலரும் பகைக்கக் கண்டோம்.

கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக்கிடக்கும் பெருந்தொகைப் பொருளை எடுத்துக் கல்விக்குச் செலவிடச் சொன்னோம் — கயவர் என்று கண்டிக்கப்பட்டோம்.

அரைவயிறு கஞ்சிக்குக் கூட வழியற்ற நாட்டில் ஆண்டவனுக்கு ஆறுகாலப் பூஜை ஏன் என்று கேட்டோம்—அவதூறு நிந்திக்கப்பட்டோம்.

கள்ளத்தனமாகக் கொள்ளை இலாபம் பெறுவோர் வெள்ளித் தேரும், தங்கப்பல்லக்கும் செய்து தயாபரனுக்குத் தருகிறார்களே, முறையா என்று கேட்டோம்—வீண் வம்புக்கு வருபவர்கள் என்று வெறுக்கப்பட்டோம்.

காவியும், கமண்டலமும், வெண்ணீறும், துளசியும், வேதாந்தப் பேச்சும் வெளிவேஷம் என்று விளக்கினோம்—எள்ளி நகையாடி ஏசப்பட்டோம்.

பகலிலே சாமியாகவும் இரவிலே காமியாகவும் மாறுவேடங் கொள்ளும் மடாதிபதிகளை மக்களுக்குக் காட்டினோம்—வம்பர் என்று கண்டிக்கப்பட்டோம்.

இவையும் இவைபோன்ற இன்னும் பல கொடுமைகளும் மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும், மக்களின் பொதுப்பணத்தைக் கொண்டே நடைபெறுகின்றன— இவற்றை எல்லாம் தடுத்து, நாட்டுக்கு நலம் பெருக, மக்களுக்கு நல்வாழ்வும் ஏற்படக்கூடிய முறையில் அறநிலையங்களும் அவற்றிலுள்ள அளவு கடந்த பொருளும் பயன்பட வேண்டும் — பயன்படுத்தப்பட வேண்டும் என்று நாம் சொன்னபோதெல்லாம், யாரார் நம்மை நாத்திகர் என்றும், நயவஞ்சகர் என்றும் நாடறியத் திட்டினார்களோ, அவர்களே —நமது அருமை நண்பர்களே— காங்கிரஸ்காரர்களே இன்று நாம் சென்றதற்கு ஒருபடி மேலேயே சென்று, நாம் கண்டித்தவைகளையும், நம்முடைய கண்டனத்துக்கு அகப்படாதவைகளையும் கண்டுபிடித்து நாட்டுக்கு அறிவிக்கிறார்கள்—மத ஏகாதிபத்யத்தின்மீது தாக்குதல் நடத்துகிறார்கள் — கணைபூட்டி மத அணையைத் தகர்க்கிறார்கள்—மக்கள் நல்வாழ்வுக்கு மதம் துணைபுரியவில்லை என்று மரத்தடியில் அல்ல

மன்றம்—சட்டமன்றம் ஏறிச் சாடுகிறார்கள்—சமூகக்காரர்களால் கட்டிவைக்கப்பட்ட சமயக் கோட்டைகள் தவிடுபொடியாகுமளவுக்குச் சாடுகிறார்கள். 'கோயிலை இடிப்பேன்! சாமியை ஒழிப்பேன்' என்று சட்டமன்றம் ஏறிப்பேசும் அளவுக்கு, நம்முடைய முகதரிசனமே கூடாதென்று கருதியவர்களாலேயே காரணம் காட்டவும், கண்டிக்கவும் ஆன நிலை ஏற்பட்டது கண்டு களிப்புடைகிறோம்.

கோயில்கள்—மடங்கள் முதலியவற்றில் குறுக்கிட்டுக் குறைகூறக் கூடாதென்றும், குறை கூறிய நம்மைக் குறைமதியினர் என்றும் கூறியவர்களே இன்று அவற்றின் மீது குற்றஞ்சாட்டி அவை திருத்தியமைக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். அவர்களால் சாட்டப்படும் குற்றச்சாட்டுகளில் சிலவற்றை உங்கள் பார்வைக்குத் தருகிறோம், இதோ படித்துப் பாருங்கள்:—

“மத, பொருளாதார, அரசியல் நிலைகளில் எதாயினும் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொழுதெல்லாம் 'மதத்துக்கு ஆபத்து' என்று கூச்சல் எழுப்புவது என்கிற துர்பாக்கிய நிலை இந்நாட்டில் ஏற்படுவது வழக்கமாகி விட்டது.

சாரதா சட்டம், தேவதாசி ஒழிப்பு மசோதா, ஆலய நுழைவு மசோதா ஆகியவைகள் கொணரப்பட்ட பொழுதும் மதத்தின் பெயராலேயே எதிர்ப்புக் கிளப்பப்பட்டது. இருந்தாலும் இந்தக் கூச்சல்களையெல்லாம் நாம் பொருட்படுத்தாமலே தாண்டி வந்துள்ளோம். உலகம் முன்னேறிக் கொண்டுள்ளது. அதோடு நாமும் முன்னேறவேண்டும். எனவே மதம் என்ற பெயரால் நமது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் தங்கள் சொந்த மதத்துக்கே தீங்கு செய்கிறார்கள்.

கடவுள், மதம் என்ற பெயரால் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட தர்ம சொத்துக்களை அநாவசியமான முறையில் துஷ்பிரயோகம் செய்து வருபவர்களும், கொண்டுவரப்படும் இம்மசோதாவால் தங்கள் சுரண்டலுக்கு முடிவு கட்டப்பட்டு விடுமே என்று கருதுபவர்களுமான சமுதாயத்திலுள்ள ஒரு சிறு கூட்டத்தினரை இம்மசோதா பாதிக்கத்தான் செய்யும். அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

நில கிஸ்தியையோ அல்லது போர்டாருக்கு செலுத்த வேண்டிய தொகையையோ செலுத்தாதபடி பலர் இருக்கின்றனர். இதன் நோக்கம் கோயில் நிலம் ஏலத்துக்கு வந்தால் அதைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணமே யாகும்.

விசாகப்பட்டினம் முதல் திருநெல்வேலி வரை ஒரு சில நூறு ரூபாய்களிலிருந்து பல லட்சங்கள் வரை தர்ம சொத்து நிதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது குறித்து 65 'கேஸ்களுக்கு' மேலடங்கிய ஒரு பட்டியலென்னிடம் இருக்கிறது. இம்மசோதாவை எதிர்ப்பவர்களை அந்தப் பட்டியலை ஒரு முறை பார்க்குமாறு நான் அழைக்கிறேன். அது உண்மையை வெட்ட வெளிச்சமாக ஆக்கும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள வேதாரண்ய ஈஸ்வரர் கோயிலுக்கு 45 கிராமங்களில் 16 000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவ்வளவு இருந்தும் அதன் ஆண்டு வருமானம் ரூ 75 000 என்றே காட்டப்படுகிறது.

தென் கன்னடத்திலுள்ள ஒரு மடம் ஒரு லக்ஷ ரூபாய்க்கு மேல் 'புரோ நோட்டுகள்' மூலம் கடன் வாங்கியிருக்கிறது. இந்துமத அறநிலை போர்டார் அனுமதியில்லாமலிருந்தும் இவ்வளவு கடன் வாங்கப்பட்டுள்ளது. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட கோயில் ஒன்றின் எல்லாத் தர்ம சொத்துக்களும் ஒரு ஜாகீர்தாருடைய எஸ்டேட்டுக்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. மேலக் கோதாவரியில் கோயில் நிலங்கள் விற்கப் பட்டிருக்கின்றன. ரூ. 30,000-க்கு மேல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

தஞ்சையிலுள்ள ஸ்வர்க்கபுரம் மடத்தில் ரூ. 15,000-க்கு மேற்பட்ட பணமும் 23 ஏகர் நிலமும் கையாளப்பட்டும் விற்கப்பட்டும் இருக்கிறது.

திருச்செங்கோடு, வேதாரண்யம் ஆகிய இடங்களில் நகைகள் காணமற் போனது யாவரும் அறிந்ததாகும்

உடுப்பி பூஜா மடத்தில் அதற்குச் சொந்தமான 'நகைகள்' மடத்து ஏஜண்டுகளால் அதிகார பூர்வமின்றி அடகு வைக்கப்பட்டிருக்கின்றன.

காந்தியாரை விட இந்து மதத்தில் பற்றுள்ளவர் யார் தாம் உளர்! அவரே கூட நமது கோயில்கள் பற்றிக் கூறுகையில் கள்வர் குகைகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

பூஜைகளை நடத்துவதற்கான உரிமையை அறியாமை நிரம்பிய படிப்பு வாசனையறியாத அர்ச்சகர்கள் 'போகம்' செய்ய இனி விடப்பட முடியாது. இம்மசோதாவின் 35வது பிரிவில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது. பரம்பரையாக வேலை பார்த்து வந்த அர்ச்சகர்கள் இடம் காலியானால் அதற்குத் தகுதியுள்ள அர்ச்சகர்களை நியமனம் செய்ய இடம் உண்டு

ஏற்கனவே அவர்கள் ஈடுபட்டுள்ள உலக (லௌகீக) விவகாரங்களிலிருந்து மடாதிபதிகளை விடுவிக்கவும் இதன் மூலம் முயற்சிக்கப்படுகிறது.”

—ஓ. பி. இராமசாமி,
(முதலமைச்சர்)

“மத தர்ம ஸ்தாபனங்களின் பரிபாலனத்தில் ஊழல்கள் இருந்தால் அவைகளை அப்படியே விட்டு விடவேண்டும் என்றும் சர்க்கார் தலையிடக் கூடாது என்றும் வாதாடுகிறார்கள். ஊழல்கள் இருப்பதாகச் சர்க்காருக்கு நிச்சயமாகத் தெரியவந்திருக்கிறது. அவைகளைச் சீர்திருத்துவது சர்க்காரின் கடமை என்று நாங்கள் சொன்னோம், எக்காரணத்தாலும் இதில் சர்க்கார் தலையிடக் கூடாது என்று நினைக்கிறவர்களை எப்படி நாங்கள் திருப்தி செய்யமுடியும்?”

—டாக்டர் இராஜன்

“சிதம்பரத்திற்குத் தெற்கிலுள்ள மடாதிபதிகளைப் பற்றி அதிகம் கூறாமலிருப்பதே நல்லது. மதத்தின் பெயரால எல்லாவித (அநியாய) செயல்களும் நடந்துவருகின்றன.

இந்த மடாதிபதிகளில் பலர் அறநிலைச் சொத்துக்களில் கள்ள மார்க்கெட் வியாபாரம் நடத்துவதாலும், மற்றும் இவர்கள் பற்பல தவறுகள் நடத்திப் பொதுப்பணத்தை வீண் விரயம் செய்து வருவதாலும், இந்த மதத்திற்கே மனக்கேடான செயல

(9-ம் பக்கம் பார்க்க)

காலவேகம்

12-ம் பக்கத் தொடர்ச்சி

புண்ய புருஷரும் ராஜரிஷியுமான ஜனகரின் ஆட்சியின்போது, மக்களை மடியச் செய்யும், கேடுகள் ஏற்படுவதே தவறல்லவா? கோல்கெடின் தானே குடிமக்களுக்குக் கேடுசூழும் என்று நமது புண்ய ஏடுகள் புகலுகின்றன. ஜனகரோ, ராஜரிஷி—தர்மவான—அவர் ஆட்சியின் போது, வெள்ளத்தால் விபத்தோ, கொடு நோயால் கேடோ, தீயினால் ஆபத்தோ, பஞ்சத்தினால் பயமோ, ஏற்படக் கூடாதல்லவா? சாமான்யர்களின் ஆட்சியின்போது, அல்லது அக்ரமக்காரரின் ஆட்சியின்போது வேண்டுமானால், இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படக்கூடும். மிதிலையை ஆண்டுவந்தவர் ஞானி—ராஜரிஷி—சீதாதேவியாரையே திருமகளாகப்பெற்ற திவ்விய புருஷன்—அப்படிப்பட்டவரின் ஆட்சியின் போது, நகரை நாசமாக்கும் நெருப்புப் படையெடுப்பது முறையல்லவே! ராஜரிஷி ஆட்சியின்போதும், மக்கள் பெருவிபத்திலே சிக்கத்தான் வேண்டிவந்தது, என்றால், அவர்கள், சாமான்ய மன்னனுக்கும் சற்குணவானுக்கும், என்ன வித்யாசத்தைக் காணமுடியும்! சாமான்யர்கள் அரசாண்டால் மக்களுக்கு, இயற்கையின் கோலாகலத்தால் ஏதேனும் கேடுகள் நேரிட்டால் அவைகளை நீக்கும் ஆற்றல் அவர்களுக்கு இராதாகையால், மக்கள் அவதிப்படுவர்—ஆனால் நற்குணவான்கள், நாதன் அருளைப் பெற்றவர்கள், ஞானிகள் அரசாண்டாலோ, அவ்விதமான கேடு நேரிடாது, மக்கள் மிகவும் சுகப்பட்டு வாழ்வர், அந்த நாட்டிலே, அகாலமரணமோ, தரித்திரமோ தலைகாட்டாது, என்று கூறுகிறார்கள், இதே புண்யஏடுகளைத் தீட்டுபவர். ஆனால் அவர்களே, ஜனகனைப்புகழ, மிதிலை தீப்பற்றிய சம்பவத்தை எடுத்துக்காட்டுகிறார்கள் — ஏன், புண்யபுருஷன் ஆட்சியிலே, பாபியின் ஆட்சியிலே மட்டுமே ஏற்படக்கூடிய கேடு சூழ்ந்தது, என்பது பற்றிய கவலையற்று. காரணம் என்ன இதற்கு? புண்ய ஏடுகளைத் தீட்டினவர்களிடம், ஒரு பழக்கமிருந்திருந்தது — ஏதேனும் ஒரு தத்துவத்தைப் பலப்படுத்திக்காட்ட வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துவிட்டால், அந்த ஒரே நோக்கத்திலேயே ஈடுபடுவர் மும்முரமாக, அதற்காகக் கதைகள் கட்டுவர், ஆனால் அதேகதை, தாமே வலியுறுத்திவரும் வேறு தத்துவங்களைத் தகர்க்கக் கூடியதாக, கேவலப்படுத்தக்கூடியதாக அமைகிறதே என்பதுபற்றிய கவலையற்று. மான்விழிகொண்ட மங்கையின் ஓவியத்தைத் தீட்டமுனைந்தவன், நாம் இதிலே, விளக்கமாகவும் பிறர்கண்டு ஆச்சரியப்படும் விதமாகவும் தீட்டிக்காட்டவேண்டியது, கண்களைத் தானே என்று எண்ணி, ஓவியத்திலே, வாய், காது, மூக்கு, நெற்றி, ஆகிய உறுப்புகளைத் தீட்டும்போது கவலையற்று, பொருத்தமாக இருக்கிறதா என்று யோசிக்காமலேயே, ஏனோ தானோவென்று தீட்டிவிட்டு, கண்களை மட்டும், தன் கருத்தின்படியும், கலையழகு மிளிரும்படியும் தீட்டிக்காட்டினால், எப்படியிருக்கும் அந்த ஓவியம்! நமது புண்யகதைகள், இவ்விதமான ஓவியங்கள்! அவைகளைத் தீட்டினோர், கண்ணழகுகாட்ட மற்ற உறுப்புகளைக் கலையுணர்வுமற்றுத் தீட்டிடும் ஓவியன் போன்றோர். ஆகவேதான், முரண்பாடுகள் மலிந்து காணப்படுகின்றன.

ஜனகரை, ராஜரிஷி என்று காட்டக்கருதினர் — மக்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக, கருதியதும், ஒரு வேதாந்தியின் உள்ளம் எவ்விதம் இருக்கவேண்டும், என்பதுபற்றிச் சிந்தித்து, வேதாந்தி என்பவன், தன்னைச்சுற்றிலும் ஆபத்துச் சூழ்ந்திருப்பினும், அவதி நிறைந்திருப்பினும், கவலைகொள்ளான்—அவன் உள்ளம் சுகதுக்கம் இரண்டுக்கும் கட்டுப்படாது, என்று கண்டறிந்து, அவ்விதமான உள்ளம் ஜனகருக்கு இருந்தது என்றவிதமாகக் கதை தீட்டுவதே சரி என்று கருதினர். ஆமாம், வேதாந்தி அவர், என்பதை விளக்க இக்கதை உதவும், ஆனால் அதேபோது, ஒரு அரசனுக்கு இருக்கவேண்டுமென்று நீதி நூற்கள் குறிக்கும் குணம், உத்தம அரசுக்குரிய உள்ளம், அன்புமயமாக இருக்கும், பிறர் கஷ்டம் காணச் சகியான், தொண்டு செய்வதையே கடமை என்று கொள்வான், என்று பலப்பல எடுத்துக் காட்டுகின்றனவே! ஜனகர் வேதாந்தி என்பதை விளக்குவதற்காக நாம் கூறும் சம்பவம், இந்த நீதி நூற்களின் பாடங்களை எல்லாம் பரிகசிக்கின்றனவே—அவரை வேதாந்தியாகக் காட்ட வேண்டுமென்ற ஆர்வத்தால், அவரை வேந்தர் நிலையிலிருந்தும், கடமையுணர்ந்த மனிதரின் நிலையிலிருந்தே கூடக் கீழே தள்ளிவிடுகிறோமே, என்பது பற்றிக் கவலைப்படவே இல்லை. யார், இதனைக் கேட்கப் போகிறார்கள், என்ற ஒருவகை அசட்டுத் தைரியம்—அப்படி எவனாவது துணிந்துகேட்டால், அவனை முடியுமானால் சபிப்பது, இல்லையானால் வைவது, என்ற எண்ணம். மக்கள் கடைசிவரையிலே, ஏமாளிகளாகவேயா இருந்துவிடுவர்—தெளிவு பிறக்காமலா போகும்; பிறக்கும் போது, இவ்விதமான கதைகளை எடுத்து வைத்துக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, இப்படிக் கூறலாமா, இது பொருத்தமா, இது நீதியா, இது ஒழுங்கா, என்றெல்லாம் கேட்க ஆரம்பிக்கிறார்கள்—இப்போதுள்ள காலம் இத்தகையது. உரைகல்லாகி விட்டது உள்ளம்!!

சரித்திர பாடத்திலே, நீரோவைப் பற்றிப்படித்துவிட்டு, கொடுங்கோலன், மக்கள் மாள்வது பற்றிக் கவலையற்று இருந்த மாமிசப் பிண்டம், இவனுக்குச் சமயம் கிடைத்தது பார்த்தாயா, வீணை வாசிக்க, என்றெல்லாம் கண்டித்துப் பேசும், மகன், இருக்கும் வீட்டிலே, தகப்பனார், மிதிலா நகரம் தீப்பிடித்துக் கொண்டபோதும், ராஜரிஷி ஜனகர், பதறாமல், குழப்பமடையாமல், வேதாந்த விசாரணையிலேயே ஈடுபட்டிருந்தார், என்று புராணம் படித்தால், சரிதம் படிக்கும் மகன், என்ன எண்ணுவான்—தகப்பனாரைப் பற்றி, அவர் படிக்கும் பழைய ஏடுபற்றி, அதிலே புகழப்பட்டிருக்கும் ராஜரிஷியைப் பற்றி, மகன் மூலம் நீரோவின் கொடுங்கோன்மையையும், கணவன் மூலம் ஜனகரின் வேதாந்த உள்ள மேன்மையையும், கேட்கும், மாதின் மனம், என்ன கதியாகும்! அத்தகைய குடும்பத்தின் நிலையில், இன்று நாடு இருக்கிறது! புராணத்தின் மூலம் மக்களுக்குப் புகுத்தப்படும் எண்ணங்கள், நீதிகள், முறைகள், திட்டங்கள், எல்லாம், புத்தறிவின் மூலம் மக்கள் பெறுவனவற்றுக்கு முற்றிலும் முரணாக அமைகின்றன—மனதிலே போராட்டம் மூண்டுவிடுகிறது. சிலரால், இந்தப் போரின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை—அவர்கள் கிலி கொள்ளுகிறார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 20—2—49 [காஞ்சி

வேல் பாய்ந்த வேழம்!

✲

அவன் வீசிய வேல், பாய்ந்தது, வேழத்தின மார்பகத்தருகே! வலி! என்னும் அரற்றுத்தாங்கும் சக்தியும் உண்டல்லவா? துதிக்கையால் வேலைபற்றி இழுத்து எறிந்தது, வெளியே — இரத்தம் பீறிட்டுக் கொண்டே வந்தது — அதேபோது, ஐயோ! என்ற அலறலுடன், வேல் வீசிய வீரன் ஓடிவருகிறான், யானையிருக்கும் பக்கம்—வேங்கை போன்று அவனைத் துரத்துவதால். வேழம், துதிக்கையால் அவனைத் தூக்கித் தன் முதுகிலே வைத்துக் கொண்டே, காட்டுக்குள்ளே சென்று விட்டது—வேங்கை பின்தொடர முடியா வண்ணம்! வேழத்தின்மீது வேல் பாய்ச்சிய வீரன், வேங்கையிடம் இரையாகாதபடி காப்பாற்றப் பட்டான். அவன் வீசிய வேலால் வெளிப்பட்ட இரத்தக்கறைபடிந்த, யானையினாலே!

இது, எந்தக்காட்டிலே கண்ட காட்சி? என்று கேட்டுவிடாதீர்கள். நாம் கூறுவது காட்டுக்கதையல்ல, நாட்டு நிலை!!

* * *

காங்கிரஸ் சர்க்கார், எதைச் செய்ய முன்வந்தாலும், ஏதேனும் காரணம் காட்டி எதிர்க்கும், குதர்க்கவாதிகள்— காங்கிரசின்மீது தீராதபகை இவர்களுக்கு, எனவே சமயம் கிடைத்தபோதெல்லாம், விரோதம் என்ற விஷத்தைக்கக்குகிறார்கள்—காங்கிரசுக்குத் தொல்லை தருவதே இவர்கள்வேலை — அதே வேலையாகத் திரிகிறார்கள். எவ்வளவு நல்ல காரியம் செய்ய முனைந்தாலும், குறுக்கிட்டுத் தடைசெய்வதே இவர்களின் சுபாவம்.

நம்மைப்பற்றிக் காங்கிரஸ் தலைவர்கள், பேசுவது, இவ்விதம்—ஏசுவது, மேடைகளிலே, இதுபோல.

காங்கிரஸ் சர்க்கார், மதுவிலக்குச்சட்டம் நிறைவேற்றினர், நாம் ஆதரித்தோம்.

காங்கிரஸ் சர்க்கார், ஜெமீன் ஒழிப்புச்சட்டம் கொண்டு வந்தனர், நாம் ஆதரித்தோம்.

காங்கிரஸ் சர்க்காரின் தலைமைப் பீடத்தினர், ஹைதராபாத்தை அடக்கப் படையை அனுப்பினர்— நாம் ஆதரித்தோம்.

நாட்டுக்கு நன்மைபயக்கக்கூடிய, எந்தக் காரியத்தைக் காங்கிரஸ் சர்க்கார் செய்ய முன்வந்தபோதும், நாம் ஆதரித்தே வந்திருக்கிறோம்.

எனினும், காங்கிரசிலே உள்ள சில கனவான்கள், நாம் அவர்கள் செய்யும் எந்தக்காரியத்தையும், எதிர்க்கிறவர்கள், கண்டிக்கிறவர்கள், என்றே பேசுகின்றனர்.

காங்கிரஸ் சர்க்கார், தொழிலாளர் பிரச்னையிலே, காட்டும் முடுக்கையும், கொள்ளும் போக்கையும், வீசும் அடக்குமுறையையும் நாம் கண்டிக்கிறோம் — எதிர்க்கிறோம்— நீதியிலும் நேர்மையிலும், மக்களின் நல்வாழ்விலும் நமக்குக் கவலை இருக்கிற காரணத்தால்.

காங்கிரஸ் சர்க்கார், உணவு, உடைப்பிரச்னைகளைக் கவனிக்கும் முறையையும், அதனால் ஏற்படும் சிக்கல்களையும் சிரமதையும், கண்டிக்கிறோம், மக்களின் அன்றாட வாழ்வு, அரைவயிற்றுக் கஞ்சிக்கே அலாய்ப்பறக்கும் விதமாகிறதே என்ற கவலையால்.

யாரையும், எப்போது வேண்டுமானாலும், காரணம் ஏதும் காட்டாமலேயே, வழக்கு மன்றத்துக்குக் கொண்டுவராமலேயே, சிறையிலே தள்ளக்கூடிய விதமாக அமைக்கப் பட்டிருக்கும், பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தை நிச்சயமாகக் கண்டிக்கிறோம், மக்களாட்சியின் மாண்பை மாய்க்கிறது அந்தச் சட்டம் என்ற காரணத்தால்.

எதிர்க்கட்சி எதுவுமே தலைதூக்க முடியாதபடி, அடக்குமுறையும் தடை உத்தரவும் போடுவதைப் பலமாகக் கண்டிக்கிறோம், உரிமை பறிக்கப்பட்டு, மக்கள் அடிமைகளாக்கப் படுகிறார்கள், இது ஆளும் முறையல்ல, ஹமீக்கிடத ஹிட்லர், முசோலினி போன்றோரின் முறை, என்ற காரணத்தால்.

எதற்கு எடுத்தாலும் டில்லிக்குக் காவடிதூக்கும் போக்கைக் கண்டிக்கிறோம், மாகாண சுயாட்சி கேலிக் கூத்தாக்கப்படுகிறதே என்ற காரணத்தால்.

இந்திப் பிணிப்பதைக் கண்டிக்கிறோம், இனியதமிழ் கெடும், தமிழர் வாழ்விலே ஆரியநஞ்சு கலக்கப்படும், என்ற காரணத்தால்.

மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான, மதுவிலக்கு, ஜெமீன்ஒழிப்பு, உள்நாட்டுப் பாதுகாப்புப் போன்ற பிரச்னைகளிலே, நாம், காங்கிரஸ் சர்க்காரின் திட்டத்தையும் முறையையும் ஆதரித்து வந்திருக்கிறோம்— அதே, மக்களின் நல்வாழ்வுக்குக் கேடு செய்யக்கூடிய காரியங்களைக் காங்கிரஸ் சர்க்கார், எக்காரணம் கூறியோ, செய்ய முனையும்போது, எதிர்த்து வந்திருக்கிறோம்.

நல்லறிவும், நாட்டுமக்களிடம் அக்கறையும் கொண்ட எந்தக் கட்சி செய்யாது, இதுபோல! இதைவிடக் கண்ணியமான முறையிலும் கருத்துத் தெளிவுள்ள விதத்திலும், எந்தக் கட்சியாவது, நடந்து கொள்ள முடியுமா என்று கேட்கிறோம்.

இந்தக்கண்ணியத்துக்கு நமக்குக் கிடைத்த பரிசு என்ன? நூற்றுக் கணக்கானவர்களுக்குச்சிறைவாசம்! பலருக்குத் தடியடி!! பத்திரிகைக்கு ஜாமீன்! புத்தகங்களுக்குத் தடை! நாடகங்களுக்குத் தடை! பொதுக் கூட்டங்களுக்குத் தடை! கட்சித் தோழர்கள்மீது வழக்கு! கட்சிப் பற்றுகொண்ட மாணவர்களுக்குத் தண்டனை!! இவ்வளவும், நமக்கு!! இவ்வளவும், இடைவிடாமல், அவதூறு பிரசாரம், தொடர்ந்து!

காங்கிரஸ் சர்க்கார் அமைக்கப் பட்டதிலிருந்து இதுவரையில்நாட்டு மக்களின் நன்மைக்கு உகந்த, எந்தக் காரியத்தைச் செய்யும்போது, நாம் எதிர்த்தோம் என்று கூறட்டுமே, தூற்றும் நண்பர்கள்.

காட்கள்பலவாகிவிட வில்லை, நமது தோழர்களுக்கு, அடிவிழுந்து, குடந்தையில்—அகம்பிர உருவம், அஹிம்சைப்போதகர், காந்தியாரின் பெயர் கூறி, ஆளவந்தவர்கள் தந்த தடியடி! அந்த இரத்தக்கறைகூட இன்னு போகவில்லை — தழும்பு மாறவில்லை—எனினும்—அதே நிலையிலேயுங்கூட, நாம், அறநிலைப்பாதுகாப்பு விஷயமாகக் காங்கிரஸ்சர்க்கார் ஒரு சட்டம் தீட்ட முன்வந்து, முப்புரி

யின் மமதையினால் எப்புரியிலும் ஆதிக்கம் செலுத்தமுடியும் என்று எண்ணும் எத்தர் சிலர், இதன் பொருட்டுக் காங்கிரஸ் சர்க்காரைக் கண்டிக்கவும், எதிர்க்கவும் துணிந்த போது, இரத்தக்கறையைக் கூடப் பிறகு கழுவிக்கொள்ளலாம், இப்போது நாம முதலில் செய்யவேண்டியது, காங்கிரஸ் சர்க்காரை ஆதரிப்பதுதான், என்று பெருங்குணம் கொண்டு, ஓமந்தூராரின் பக்கம் திரண்டு நின்றோம்!

கண்ணியத்துக்கும், கொள்கைப் பற்றுக்கும், இதைவிடச் சிறந்தஎடுத்துக்காட்டு ஏதேனும் உண்டா, என்று கேட்கிறோம்.

பண்புடையோரின் செயல் எங்ஙனம் இருக்கும் என்பதை, இதிலிருந்தேனும், காமராஜர்கள் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

காங்கிரஸ் சர்க்காரின் திட்டம், நமது கட்சியைக் கருவறுக்கும் அளவுக்கு அடக்குமுறை வீசும் கட்சியின் திட்டம் என்ற காரணத்துக்காக, அந்தக் கட்சி கொண்டுவரும் மடாலய சம்பந்தமான மசோதாவை நாம் ஆதரிக்காமலோ, அக்கறை செலுத்தாமலோ, இருந்துவிடவில்லை கட்சிமாச்சரியங்களைவிட, கொள்கைமேலானது, என்றஉள்ளத் தினாலாகையால், நாம், இச்சமயத்தில், காங்கிரஸ் சர்க்காரின் போக்கை ஆதரிப்பதே முறைஎன்று தீர்மானித்தோம்.

இதேபோது, சொந்தக் கட்சியினர், கூடிக்குலவுபவர், கொடிகட்டி வாழ்பவர்கள், எவ்வளவு கோணற் சேட்டைகளைச் செய்து வருகின்றனர், என்பதைக் கவனித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

கட்சிமாச்சரியம், அடக்குமுறையினால் தாக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள கோபம், இவைகளை எல்லாம் மறந்து, மடாலயங்களின்போக்கைக் கட்டுப்படுத்தும் துவக்கமாக உள்ள மசோதா மக்களின் நன்மைக்கு ஏற்றது, எனவே அதனை ஆதரித்தாக வேண்டும், என்று நாம் துடித்தெழ, அதே சமயம், வைத்தியநாத ஐயர்கள், கட்சிப் பற்று, கட்சிக் கட்டுப்பாடு, முதலியவற்றைத் துச்சமென்று தூக்கி எறிந்துவிட்டு, மத விஷயத்திலே தலையிட அனுமதித்துவிட்டால், பிறகு, நம்மவரின் ஆதிக்கமே அஸ்தமித்துவிடுமே என்று அஞ்சி, காங்கிரசைவிட, இனப்பாதுகாப்பே முக்கியம் என்று எண்ணி, ஓமந்தூராரின் திட்டத்தை முறியடிக்கக் கிளம்பியுள்ளதையும் — இந்த இரு காட்சிகளையும், ஒப்பிட்டுப் பார்த்து, பாடம் பெற வேண்டுகிறோம், நம்மைப் பகைத்துக்கொள்வதே, பாரத மாதாவுக்குப் பிரியமான சேவை என்று எண்ணும் நண்பர்கள்! நமது கழகம், வேல் பாய்ந்த வேழம் போலிருக்கிறது; ஓமந்தூரார், வேல் வீசிய வீரர் — வேங்கை துரத்துகிறது அவரை, வஞ்சகம், சனாதனம், வர்ணாஸ்ரமம், அவரைத் தூக்குகிறது; வேழம் அவருக்குத் துணை நிற்கிறது!

✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த மனப் போராட்டம், என்ன கேடுகளைச் செய்துவிடுமோ, என்று சிலர், தன்னலக்காரர்கள்—பழமை நீடித்து இருந்தால் தான் தங்களுக்குப் பெருமை, பிழைப்பு, என்று எண்ணிக்கொண்டுள்ள ஏமாளிகள், அவர்கள், புத்தறிவு புகாதபடி மக்களைப் பழமையிலேயே ஆழ்த்தி வைக்கப் பல வழிகளாலும் முனைபவர். புத்தறிவு பரப்புபவரை, தூற்றுவதன் மூலம், தங்கள் தோல்வியையும் அயர்த்தையும் காட்டிக் கொள்பவர்கள். ஆனால் சமுதாயத்திலே உள்ள பெரும்பாலான மக்களின் உள்ளத்திலே, இந்தப் போர், நடந்தவண்ணம் இருக்கிறது — போரும் கடுமையானதாகவே இருக்கிறது—வெற்றியோ, ஒவ்வோர் கட்டத்தின் போதும், புத்தறிவுக்குத்தான் கிடைத்து வருகிறது—பழமை மடிகிறது—அதன் பக்கம் இருந்துகொண்டு சில பிணந்தூக்கிகள் பெருங்குரல் கொண்டு கூவினாலும், பிணம் பிணம்தான் — உயிர் பெறாது!! புராண மூலம், மக்கள் இனி, தமது வாழ்க்கைக்கு, முறைகளை, நீதிகளைத் தேடமாட்டார்கள்— முடியாது—கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியார், புராணம் படித்தவர்—சில மடிசஞ்சிகளுக்குத் தெரிந்திருக்கும் வேத உண்மைகளைவிடச் சற்று அதிகமாகவே அறிந்தவர் — அவருக்கும், ராஜரிஷியின் கதை தெரியும்— தெரிந்தகாரணத்தால், அவர் டில்லிப் பட்டணம் எக்காரணம் பற்றியோ தீப்பிடித்துக் கொண்டால், தான் ஒரு தலைசிறந்த வேதாந்தி என்பதைக் காட்டிக்கொள்வதற்காக, மாளிகையிலே கவலைப்படாமலிருந்துகொண்டு, சாந்தி பர்வம் படித்துக்கொண்டு இருப்பாரா? இருந்தால், அவரை மானிலம் போற்றுமா? ஆட்சிப் பொறுப்பை மறந்தவர் என்றல்லவா தூற்றும்! ஆயிரம் மடிசஞ்சிகள் கூடிக்கொண்டு 'ஆச்சார்ய ஸ்வாமிகளின் போக்கைக் கண்டு தயாராக எண்ணுதீர்கள். அவர் சுகிபுக ஜனகர்—ராஜரிஷி — ஆதிகாலத்தில் மிதிலை தீப்பிடித்துக் கொண்ட போது ஜனக மகாராஜா எப்படி, எல்லாம் அவன் செயல் என்றெண்ணி இருந்துவிட்டாரோ, அதுபோல இருக்கிறார்—இது அவருடைய உத்தம குணத்துக்கு ஓர் உன்னதமான சான்று—அவருடைய வேதாந்த மனப்பான்மையை விளக்கும் சம்பவம்—என்று கூவினாலும், யாராவது, அந்தக் கூச்சலைப் பொருட்படுத்துவார்களா! என்ன ஆணவமய்யா இதுகளுக்கு! ஊர் நெருப்புப் பிடித்துக்கொண்டது, ஊராளும் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர், மாளிகையில் இருந்துவிட்டார், மக்கள் துயர் நீக்க முன்வராமல், இதற்கு ஒரு காரணம் கூறுகிறார்கள். நம்மை ஏமாளிகள் என்று எண்ணிக்கொண்டு" என்று மக்கள் கொதிப்புடன் கூறுவர். சந்தேகம் கொள்வோர், செய்து பார்க்கட்டும், பழைய ஏடுகளிலே கூறப்பட்ட முறைப்படியான நீதி சிலவற்றை நிலைநாட்டுமக்காரியத்தை!! சட்டமே குறுக்கிடும், பலவற்றிலே, மற்றவற்றிலே, மக்களின் கோபம் குறுக்கிடும். எனவேதான், காலத்திற்கு ஒவ்வாததும், கலைக்கு உதவாததும், கருத்துக் குழப்பத்தை மூட்டக்கூடியதுமான, புராணக்கதைகளை, புண்யகதைகள் என்று கூறி, இன்னமும் மக்களிடையே அவைகளுக்குச்செல்வாக்குத் தேடப் பார்க்கும் சிறுமதியை விட்டொழியுங்கள் என்று கூறுகிறோம். சிறிப்பயன் இல்லை— சிறுமதிகொண்டு பேசிப் பயன் இல்லை — பழமை மடியத்தான் செய்யும்.

வேதாந்தியின் உள்ளம் இவ்விதம் இருக்கவேண்டும் என்பதை விளக்க, பெரு விபத்து நேரிட்ட போதும், அரசன, தன் மக்களின் துயர் நீக்கும் பணியைச் செய்யாது, ஞானமார்க்கத்தில ஈடுபட்டிருந்தான், என்று கூறும், புண்ய ஏடுகளே, அன்பு, இரக்கம், எனும் பண்புகளின் பெருமையினை விளக்க, வேறு பல கூறி உள்ளன. இராவணனை,

இந்த இரக்கம் எனும் பண்பு இல்லாததாலேயே அழிக்கவேண்டி நேரிட்டது என்று கம்பர் கூறுகிறார். இரக்கம் எனும் ஒரு பொருளிலா அரக்கன் என்று குற்றம் சாட்டுகிறார். இதனைக் கருத்துடன் படித்துணருபவர்கள், இரக்கத்தின் அவசியத்தையும், அந்தப் பண்பு இல்லாதவன் அரக்கனாகிறான், என்பதையும் அறிந்துகொள்கிறார்கள், என நாம் வைத்துக்கொள்வோம். அவர்கள் பிறகு ஓர்சமயம், ஜனகரின் கதையை, மிதிலை தீபிடித்து எரிந்தபோதும், அவர் வேதாந்தம் படித்த சம்பவத்தைப் படிக்க நேரிட்டால், என்ன எண்ணுவர்! அவர்கள் மனதிலே, கம்பர் பதியவைக்கிறார், பாடல் மூலம், இரக்கம் எனும் ஒரு பொருளிலாதார அரக்கர் என்று—அவர்களிடம் ஜனகரின் கதையும் கூறப்படுகிறது—இரண்டு தகவல்களையும் பெற்றால், இரக்கம் இந்த ஜனகருக்குத் துளியும் இருந்ததாகத் தெரியவில்லையே—இரக்கத்தை மறந்தோர் அரக்கர் என்று கம்பர் கூறுகிறாரே, அவ்விதம் பார்க்கும்போது, ஜனகரும் அரக்கர்தானே—ஏன் அவரை, ராஜரிஷி என்று புகழ்கிறார்கள், என்று, கேட்பார்களா, மாட்டார்களா? கேட்கும்போது கோபாவேசத்தான்செய்யும், பழைமை விரும்பிகளுக்கு! வீட்டுக்குடையோன் விழித்துக்கொள்வது கண்டு, கள்ளன் கூடத்தான் கோபிக்கிறான்—சமயம் கிடைத்தால் கல்லைத் தூக்கிக்கூடப் போடுகிறான் வீட்டுக்குடையவன் தலைமீது! அதனாலே, அவனுடைய கோபத்தைக் கிளறக்கூடாதென்று, சட்டம் சும்மா இருந்துவிடுமா! அதுபோல, புத்தறிவும், இந்தப் பழைமை விரும்பிகள் பதறுகிறார்கள், பகைக்கிறார்கள் பழி பல கூறுகிறார்கள், என்பதற்கஞ்சி, தன் பணியினைச் செய்யாமலிருக்குமா! இரக்கம், சிறந்த பண்பு—அதனைக் கொள்ளாதவர் அரக்கர்! இராவணனிடம் இரக்கம் இல்லை—ஏதோ ஒரு காரணத்தால்! ஜனகரிடமும் இரக்கம் இல்லை—இன்னோர் காரணத்தால்—இரக்கமற்ற இராவணன் அரக்கன் என்று கண்டிக்கப்படுகிறான்—இரக்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளாதிருந்த ஜனகன் ராஜரிஷி என்று போற்றப்படுகிறான்—இது எந்த வகையான நியாயம், என்று, கேட்காமலிருப்பார்களோ? மகாபாபி ஜனக மகரிஷியைக் கூடக் கேவலமாகப் பேசுகிறானே—இவன் நாக்கு அழுகாதோ, என்று அழுதால் கிளப்பி என்ன பயன்? விளக்கம் கேட்கும் காலம் இது—பொருத்தமற்றவைகளை நீக்கும் காலம்—பழைய கதைகளை நம்பி வாழ்க்கையை நடத்த முடியாத காலம்—இந்தக் காலத்திலே கபடரோ, கபவரோ, கருத்துத் தெளிவற்றவரோ, ஏதேனும் ஒருவிஷயத்திலே கருத்தைச் செலுத்தி மற்றதை மறந்தவரோ, யாராக இருப்பினும், அவர்கள் அன்று தீட்டிய கதைகளைச் சுமந்துகொண்டு, காலவீரனுடன் போரிடக் கிளம்புவது, பயனற்ற காரியம். கால் வீக்கம் கொண்டவன் தனக்கு யானைப் பலம் இருக்கும் என்று நம்பினால், சரியாகுமா! நான் புராணம் படித்தவன், சாஸ்திரம் அறிந்தவன், சாமம் தெரியும் யஜுர் தெரியும், சாணக்கிய பரம்பரை, என்று இவைபோன்ற பெருமைகளைக் கூறிக்கொண்டு, போரிட முன்வருபவர், யானைக்கால் வியாதி கொண்டவன், தனக்கு யானையின் பலம் உண்டு என்று எண்ணும் ஏமாளிக்குச் சமமாவான். காலமறிந்து, நிலையறிந்து நடந்து கொள்ளத் தெரியாத கபந்தங்களைப் பற்றிக் கவலைப்படத்தேவையில்லை. புத்தறிவு வெல்கிறது — பழைமை மடிகிறது.

அண்ணாமலை நகர் மாணவர் வழக்கு
பெரியார் வேண்டுகோள்

—*—

1947—ம் ஆண்டு அக்டோபர் 6-ந் தேதியில் சிதம்பரம் அண்ணாமலை நகர் கல்லூரி மாணவர்கள் ஒரு விழா கொண்டாடிய சமயத்தில் அக் கல்லூரியில் உள்ள காங்கிரஸ் உணர்ச்சி உள்ள மாணவர்கள் சிலர் திராவிடர் கழகக் கொடியைப் பலவந்தமாக இறக்க முயற்சித்ததன் பொருட்டு ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக போலீசார் இருதரப்பு மாணவர்கள் மீதும் அதாவது கழக உணர்ச்சி மாணவர்கள் 5-பேர்கள் மீதும், காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள் 12 பேர் மீதும் வழக்குத் தொடுத்தார்கள்.

இவ்வழக்கு சுமார் 2, 3 மாதகாலம் நடந்து சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் காங்கிரஸ் உணர்ச்சி மாணவர்கள்மீது குற்றம் ஏற்படுவதைக் கண்ட சிதம்பரம் காங்கிரஸ் தோழர்கள் மந்திரியிடம் சொன்னதில் மந்திரியார் அந்த 12 மாணவர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி போலீசுக்குக் கட்டளையிட போலீசார் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

அதுபோலவே கழக உணர்ச்சி உள்ள மாணவர்கள் 5 பேர்கள் கல்வி மந்திரியாரைக் கேட்டதில் மந்திரியார் வாபஸ் வாங்க மறுத்துவிட்டதோடு மாணவர் கழகத் தலைவர் தோழர் மதியழகன் பரீட்சைக்கு உட்காரக் கூடாது என்றும் தடைவிதித்து தடுத்தும் விட்டார், அதன் பிறகு மேற்கண்ட வழக்கை சிதம்பரம், பரங்கிப்பேட்டை ஆகிய ஊர் மாஜிஸ்ட்ரேட் கச்சேரிகளில் ஒரு ஆண்டாக நடக்கும்படி ஏற்பட்டு சுமார் 30 வாய்தாக்களுக்குமேல் ஒத்திப்போட்டு இழுக்கடித்து, வழக்குக்கு ஆகரூ.2000-க்கு மேல் செலவும் ஏற்பட்டு கடைசியாக திராவிட கழகத் தலைவருக்கு 6 மாதம் கடின காவல் தண்டனையும் மாணவர்களுக்கு மொத்தம் ரூ. 500 வரை அபராதமும் விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த வழக்கு சம்பந்தமான தீர்ப்பு நியாயமான தீர்ப்பு அல்ல என்று மாணவர்களும் வக்கீல்களும் கருதுவதாலும் அத்தீர்ப்பு மாணவர்களின் பின் வாழ்வைப் பாதிப்பதாலும் தீர்ப்பின் மீது அப்பீல் செய்யவேண்டி இருக்கிறது.

மாணவர்கள் இவ்வழக்குக்கு ஆக சொந்தக் கைப்பொறுப்பில் இதுவரை 2000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து இருக்கிறார்கள். ஆனதால் தற்காலம் அவர்களது நிலைமை அப்பீல் வகையில் செலவுக்குக் கண்டிப்பாய் பொதுமக்கள் ஆதரவு தேடவேண்டியதாக இருந்துவருகிறது. எனவே அப்பீலுக்குப் பொதுஜனங்கள் அருள்கூர்ந்து பொருளுதவி செய்ய வேண்டியது மிகுதியும் தேவையான காரியம் என்று கருதுவதால் பொதுமக்கள் தங்களாலான உதவி செய்ய வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்.

ஈ. வெ. இராமசாமி

நன்கொடை :

ஈ. வெ. இராமசாமி 100—0—0

மத ஏகாதிபத்யத்தின்மீது

4-ம் பக்கத் தொடர்ச்சி

களை இவர்கள் செய்து வருவதாலும் இவர்கள் தண்டிக்கப்படப் போகிறார்கள், ஒழுங்காக நடப்பவர்களுக்குப் பயம் இல்லை.''

(டி. எஸ். பட்டாபிராமன் M L. A.)

''ஒருசில தனிப்பட்ட கூட்டத்தின் சுகபோக வாழ்வுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்பதற்காக இம்மசோதாவை எதிர்க்கிறார்கள். மதத்தின் பேரால் மக்களைப் பகுத்தறிவிற்குப் புறம்பான காரியங்களைச் செய்யத் தூண்டப்படுகிறதே தவிர மனிதன் மனிதனாகப் பாவிக்கப்படவில்லை. மனிதனிலே பல உயர்வு தாழ்வு கற்பிக்கப்படுகிறது. இவையெல்லாம் போக்கடிக்கப்படவேண்டும்.

உலக உத்தமராகிய காந்தியாரையே சுட்டுக் கொன்ற பார்ப்பன கோட்சே இனமா மக்களுக்கு நன்மை செய்யப்போகிறது? ஒருககாலும் செய்யாது''

(வேலுசாமி M. L. A.)

''கல்வியற்ற மக்கள் பலர் கையெழுத்திடத் தெரியாமல் கஷ்டப்படும் பொழுது அவர்கள் துயரைப்போக்கக்கல்வி அறிவைப் பெருக்க முயலாது சங்கத்தில் தவுபேடவேண்டுமென்றால் கண்மான முடையவன் சும்மா இருக்கமுடியுமா?

மதத்தின் பேராலும் சாதியின் பேராலும் சுரண்டி வாழ்ந்தது சச்சரவுகளைக் கிளப்பி வாழ்ந்ததும் போதும். இனித்தேவை இல்லை.''

பாலகிருட்டினன், M L. A.

''ஆதியில் மனிதன் மிருகத்தனமாக ஒழுக்கந்தவறி இருந்த காலத்தில் ஓரளவுக்கு நாகரிகமும் ஒழுக்கமும் கற்பிக்கப்பட்டு அதை வளர்க்க வேண்டும் என்பதற்கு உதவி புரியவே மதமும் மடங்களும் உண்டாக்கப்பட்டன. இம்மடங்கள்மூலம் மக்களுக்கு அறிவும் கல்வியும் போதிக்க வேண்டும் என்பதற்காகவே பலலட்ச ரூபாய்களும் பல ஆயிரம் ஏகர் நிலங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன. உதாரணமாக நாடார் வகுப்பினராகிய எங்கள் பணமே பத்துலட்ச ரூபாய்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இன்று மடங்கள் மடமையை வளர்க்க, மங்கையர்களைக் கற்பழிக்க, கொலை பாதகம் புரிய உபயோகப்படுத்தப்படுகிறது. இக்குற்றங்களை மறைப்பதற்காக ஓரிரண்டு கல்லூரி ஏற்படுத்தப்பட்டன. அதுவும் இப்பொழுதிருக்கும் இடம்தெரியாமல் போய்விட்டன.

இது, வக்காலத்து வாங்கும் வக்கீல் வைத்தினாத அய்யருக்கு ஏன் தெரியவில்லை.

நாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதும், இச்சட்டம் கொண்டு வருவதும் கட்சிக்கட்டுப்பாட்டிற்கே விரோதம் எனக்கூறும் வைத்தினாத அய்யர், ஜமீன் ஒழிப்பு மசோதாவின்பேரில கூக்குரலிட்டு அலறித்துடித்து அவதூறு பேசியது கட்சிக்கட்டுப்பாட்டுக்கு விரோதமானதல்லவா?

எக்கட்சிக்காரர் எதைச்சொன்னாலும், அதில் உள்ள உருப்படியான கருத்தை நிறைவேற்ற வேண்டியதே அரசியலார் கடமை. வக்கீலாகுந்து ஒருதலைப்பட்சமே பேசத்தெரியுமே தவிர, இருகட்சியின் நியாயத்தையும் புகுந்து பார்க்கத் தெரியாது.

பத்திரிகைகளும் வைத்தியநாதய்யர் கும்பல்களுக்கே ஆதரவு கொடுக்கிறதே தவிர, மற்ற உண்மைக் கருத்துக்களைக் கூறுபவர்களுக்கு ஆதரவு தருவதில்லை

ஆகவே இனி நாங்களும் பார்ப்பனர் கொண்டுவரும் சட்டத்தை உடைத்துத் தகர்க்கவே தீர்மானித்துள்ளோம்

நமது பிரதமர் ரமண மகரிஷியின் வழிநடப்பவரென்றும், கிருத்திகை விரதம் பூண்டு வருபவரென்றும், அவருக்கு மதத்தில் எவ்வளவு பற்று இருக்கிறதென்றும் தெரிந்திருந்தும் அப்படிப்பட்டவர் கொண்டுவந்த மசோதாவை எப்படி ஆட்சேபிப்பது? மடாதிபதிகள் செய்து வரும் லீலைகள் எம்மட்டும் சென்றிருக்கின்றன என்பதும் நமக்குத் தெரியும். மதத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் இந்த மதஸ்தாபனத்தார் என்ன செய்திருக்கிறார்களென்று பார்த்தால் ஒன்றுமில்லை. பலர் பிறாதத்திற்குச் செல்வதைத்தான் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

மடாதிபதிகளின் அட்டூழியங்களால் கோ. கொள்ளிப்பட்டதிருக்கு இக்கனியை, சதானி என்ற பெயரால் சிலர் அதை ஆதரிக்க வருவது சிறிதும் பொருத்தமாகாது. ஒவ்வொரு சட்டத்திற்கும் சிறிது எதிர்ப்பு இருக்கத் தான் செய்யும். அதற்காக இம்மாதிரியான நல்லசட்டத்திற்கு எதிர்ப்பாக ஒருவர் உண்ணாவிரதம் இருக்கிறாரென்று நாம் எப்படிக் கொள்கையை விட்டுக் கொடுக்க முடியும்? எனவே இனியும் தாமதியாமல் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும்.''

(கே. டி. கோசல்ராம் M L A)

''மடாதிபதிகளின் லீலைகளை ''சந்திரகாந்தா'' என்னும் சினிமாப் படத்தில் பார்த்த மக்கள் கொதிப்படைந்து மடாதிபதிகளை யொழித்து விட வேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கின்றனர். இந்த மசோதா ஒரு புரட்சிகரமானது. இது சம்பந்தமான பொதுஜனஅபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஒன்று செய்யலாம். நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். ஸ்ரீ எஸ். என். வரதாச்சாரி ஆட்சேபிக்கிறார். இருவரும் சட்டசபை அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிடுவது. இந்த மசோதாவை ஆதாரமாகக் கொண்டு இருவரும் போட்டியிடுவது. அதிலும் திருவல்லிக்கேணி தொகுதியிலேயே போட்டியிடலாம். யார் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் என்று பார்த்து விடலாம்.

மடாதிபதிகளின் அட்டூழியங்கள் பல. பிரதமர் இராமசாமி காலத்தில் கொண்டு வரப்படும் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய வைத்யநாதய்யர் முன்னாள் ராஜாஜி பிரதமராக இருந்த காலத்தில் கொண்டுவரப்பட்டிருந்தால் என்ன செய்திருப்பார்?''

—எம். கன்னியப்பன் M L A

''பொதுமக்களுக்கு எந்த விதத்திலும் உபயோகமில்லாத இந்த மடாதிபதிகளை இப்படியே விட்டுக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை.''

—பி. கந்தசாமி M L. A.

''இன்றைய தினத்தில் மடங்கள் என்ன ஸ்திதியில் இருக்கின்றன என்று பார்த்து அவற்றைத் திருத்த முன் வருவதற்கு நமக்கு உரிமையுண்டு. வருமானத்தில் பெருந்தொகையை போகங்களுக்காகச் செலவு செய்துவிட்டு ஒரு சிறு தொகையை ஆங்காங்கு தேவாரப்

பள்ளிக்கூடங்களை அமைக்கச் செலவு செய்து மக்களை ஏய்ப்பதைத் தவிர வேறு என்ன நடக்கிறது? மடங்களில் பட்டத்திற்காகவும் பணத்திற்காகவும் எத்தனை கொலைகள் நடந்திருக்கின்றனவென்பது யார் அறியாதது. அப்படியிருக்க இந்த மசோதா கொண்டு வருவது தவறானதென்று எப்படிச் சொல்ல முடியும்—தவறான வழியில் போகிறவர்களைத் தண்டித்துத் திருத்த வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா? மடாதிபதிகளில் நல்லவர்களும் சிலர் இருப்பதால் எல்லா மடங்களையும் இந்த மசோதாவில் சேர்ப்பது சரியல்லவென்று கூறப்படுகிறது. ஒரு மடத்தில் இன்று இருப்பவர் நல்லவராக இருக்கலாம். நேற்று இருந்தவர் நல்லவராக இருந்திருக்கலாம். நாளை வருவர் நல்லவராக வரலாம். எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்தால் இந்தச் சீர்திருத்தம் மிகவும் அவசியமென்றுதான் ஏற்படும். இம்மாதிரி மதசம்பந்தமான, கடவுள் சம்பந்தமான விஷயங்களில் தலையிடுபவர்கள் கெட்டுப்போவார்களென்று நண்பர் ஒருவர் சொன்னார். மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடக்கும் அட்டூழியங்களை மூடிவைத்து அவைகளுக்கு ஆதாரவாகப் பேசுகிறவர்கள் கெட்டுப்போகமாட்டார்களா என்று அவரைக்கேட்க விரும்புகிறேன்.

'விடுதலை,' 'புரட்சி,' 'கிளர்ச்சி' போன்ற சில பத்திரிகைகள் தான் இந்த மசோதாவை ஆதரிக்கின்றனவென்று சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அதற்கென்ன செய்யலாம்? மசோதாவை ஆதரிக்க மனமில்லாதவர்களிடத்தில் மற்றப் பத்திரிகைகள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏன் "தினசரி" பத்திரிகை இதை ஆதரிக்கவில்லையா? அது ஒரு உயர்தர பத்திரிகையல்லவா?

இன்னுமொரு விஷயம் கூற விரும்புகிறேன். நான் சிறையிலிருக்கும்பொழுது சிறையில் ஒரு முஸ்லிமோ அல்லது ஒரு கிறிஸ்தவரோ இறந்துவிட்டால் அவர்களுடைய மதஸ்தாபனங்களிலிருந்து ஆட்கள் வந்து அந்தப் பிரேத அடக்கத்துக்குவேண்டிய ஏற்பாடு செய்வார்கள். ஹிந்து ஒருவன் இறந்தால் அவன் அனாதைதான், அப்படிப்பட்ட வகையில் இந்த மடங்களும், மடாதிபதிகளும் என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்களென்று கேட்கிறேன். இந்த நிலைமையை நேரிலகாணபவர்களுக்கு மதம் மாற எண்ணம் ஏற்படுமானால் அவர்களைக் குறைகூறமுடியுமா?

மதசம்பந்தமான விஷயங்களில் தலையிட்டால் இனிச் சட்டசபையில் காங்கிரசுக்கு இடங்கிடையாதென்றும், காங்கிரஸ் அழிந்துவிடுமென்றும் கூறப்பட்டது. காங்கிரஸ் நன்கு வேரூன்றிவிட்டது. இனி அதற்கு அழிவென்பதே கிடையாது. இம்மாதிரி எல்லாம் சொல்லிக் கொண்டு இனிக் காலங்கடத்த முடியாது.

சர்க்கார் இலாக்காக்களில் லஞ்ச ஊழல்கள் இருக்கின்றனவென்றும், எனவே இந்த மசோதாவின் மூலம் திறம்பட நிர்வாகம் நடத்த முடியாதென்றும் சில அங்கத்தினர்கள் பேசினார்கள். மதம், தர்மஸ்தாபனங்களில் மட்டும் இப்பொழுது என்ன வாழுகிறது. எடுத்ததற்கெல்லாம் கைக்கூலி கொடுத்து ஆட்கள் கொண்டு வரப்படுகின்றனர் எல்லாவற்றிற்கும் மேலாக, சிதம்பரம் ஆலயத்தில் ஒரு ரூபாய் தீக்ஷதருக்குக் கொடுத்தால்தான் சிதம்பர இரகசியத்தைக் காணமுடியும் அந்த வெட்டவெளியைக் காண்பிக்க ரூபாய் வாங்குவது லஞ்சமில்லையா? யாரோ ஒரு சம்பளக்காரன் 4 அணா வாங்கிவிட்டால் அது லஞ்சமாகிவிடுகிறது, கோவிலில் தீக்ஷதர் ரூபாய் வாங்குவது தெய்வப் பிரீதியாய்ப் போய் விடுகிறது. இந்த விஷயங்களை எல்லாம் மனச்சாட்சியுடன் நன்கு கவனிப்போமானால், மததர்மஸ்தானங்களைச் சீர்திருத்தவேண்டியது எவ்வளவு அவசியமென்றும், ஆகவேஇந்த மசோதா எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததென்றும் தெரியவரும். எனவே எல்லா அங்கத்தினர்களும் இதுவரை அதை ஆட்சேபித்தவர்கள் உட்பட இந்த மசோதாவை ஆதரித்துச் சமுகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(தேவநாகய்யா, M. L. A.)

"காங்கிரஸ் அங்கத்தினர்கள் பொதுஜன அபிப்பிராயத்துக்கு மாறாக எந்த விஷயத்தையும் செய்ய மாட்டார்களென்ற நம்பிக்கை எல்லாருக்கும் உண்டு. அதை ஒரு காரணமாகக்கொண்டு மசோதாவை ஒத்திப்போட நினைப்பது சரியல்ல. மற்ற மதங்களில் இத்தனை ஊழல்கள் இல்லை எனவே இந்துமதத்திற்கு இந்தச் சீர்திருத்தம் மிகவும் அவசியம்.

இந்த மசோதாவை ஆட்சேபித்து கோட்டை முன் ஒருசுவாமி உண்ணாவிரதமிருக்கிறார். தண்ணீர் கூடச் சாப்பிடாமல் 13 நாட்களுக்கு மேல் அவர் உயிருடன் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் உண்மை ஆண்டவனுக்குத்தான் தெரியும், அது உண்மையாக இருக்குமானால் அங்கத்தினர் எல்லோருடைய மனதையும் ஒரே நாளில் மாற்றக் கூடிய சக்தி அவருக்கு இருக்க வேண்டும். இனிக் கொள்ளையிட்டவரைக் கைது செய்யக்கூடாதென்று ஒருவர் உண்ணாவிரதம் இருப்பார். இப்படி உண்ணாவிரதம் இருப்பவர்களுக்குப் பயந்தால் எவ்வித நன்மையும் செய்ய முடியாது. எனவே இந்த மசோதாவை உடனே நிறைவேற்றவேண்டியது அவசியம்"

-தோழியர் லட்சுமிபாரதி M L A.

"மடாதிபதிகள் செய்யும் அட்டூழியங்கள் சகிக்க முடியாதவை. காவி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு சுவாமி என்று சொல்லிப் பொது மக்களை ஏமாற்றுகின்றனர்.

இம்மாதிரியான சாமிகளுக்காகப் பரிந்துபேசுவது எவ்வளவு பாதகமான செய்கை என்பதை அங்கத்தினர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். கடவுள் பெயரால் இவர்கள் செய்வதெல்லாம் பெருமோசமான செயல்களாகும். எனக்கு மட்டும் அதிகாரமிருந்தால் ஆலயங்கள மடங்கள் இல்லாமலே செய்துவிடுவேன்.

கடவுளை நான் ஏன் அவமதிக்கிறேன், நானே கடவுள், ஒவ்வொருவரும் கடவுள்தான், உண்மையே கடவுள், சத்தியமே கடவுள், இந்த உண்மையை மறந்து போலிச் சாமியார்கள் அறியாது............

நாட்டில் மதத்தின் பேராலும் கடவுள் பேராலும் நடக்கும் ஊழல்களை ஒடுக்கச்செய்வதற்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட ஊழல்களை ஒழிக்கக் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தமசோதா ஒரு நல்ல சமூக சீர்திருத்த ஆயுதமாக விளங்குகிறது.

கோட்டைக்கு எதிரே ஒருசாமியார் உண்ணாவிரதமிருக்கிறார், இந்த மசோதாவை எதிர்த்து அவர் விரத

(12-ம் பக்கம் பார்க்க)

★ முட்டுக்கட்டை போடாதே ★

[சாமி]

வாழ்த்துகிறோம், அறநிலையங்களில் மலிந்துகிடக்கும் மாசு துடைக்க நெஞ்சுத்துணிவுடன் முன் வந்த சென்னைமாகாண அரசினரை! பல்லாண்டு கூறுகிறோம், சுயநலச் சூறாவளியில் சிக்கிச்சிதறடிக்கப்படாதிருக்கும் பொருட்டு!! அக்கினி பூத் தாற்போல் நம் ஆட்சியாளர் செய்யும் அருஞ் செயல்களைக் கத்திக் கொண்டு களையப்பார்க்கும் சூரண்டல் கூழுவின் கொள்கைக்குவளைந்து கொடுத்துவிடாதபடி!!

அறநிலையங்கள் தோன்றக் காரணம் என்ன? ஆட்சிப்பளுவைத்தாங்கியிருந்த தமிழ் மன்னரும், பொருள் மிகுந்திருந்த பெருஞ்செல்வரும் சன்மார்க்கத்தில மக்களைக் கொண்டு செலுத்த ஓய்விலலாமையால் அவ் வறத்தொழிலை முற்றத்துறந்த முனிவரிடம் ஈந்து, பொன்னும் மணியும் கொடுத்துதவினர் நன்மார்க்கம் செழிக்க, தமிழ்தழைக்க, கலை வளர்க்க.

ஆனால், இன்று நாம் காண்பதென்ன? வெறும் கபடநாடகம்—கள்ளக்கூத்து — பெருமக்களின் உயர்ந்த குறிக்கோள் அதறடிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். தநலம் என்னும் அடிப்படையில்சோம்பேறிச்சுவர்கள் எழுந்தன. தங்குவதற்குத் தம்பிரான்கள், தூண்கள்—உலுத்தர் உண்டு உறங்கும் மண்டபம் கட்டப்பட்டது. சன்மார்க்கம் நெருங்கவொ நடுங்கும் துன்மார்க்க சாலை. அமிழ்தினுமினிய தமிழ் என்றால் உமிழ் என்றுரைக்கும் "உயர் ஞானிகளுக்கு" உறைவிடம். கலைக் குகொலைக்களம். தான் தோன்றித்தனம் தலைவிரிகோலமாகத் திருத் தாண்டவம் புரியும் நாடக அரங்கு.

நெல்விளைய வித்திட்ட நிலத்தில் களை முளைத்திருப்பதைக்கண்டு கண் கலங்கி, உழவன் அதைக்களைய முன் வந்துள்ளான். காவற்காரன் கடமையைச் செய்யத் தவறியதோடு, களை முளைப்பதற்கும் காரணமானான். ஆகவே அவனை அகற்றிவிட்டுக்காவல் தொழிலை உழவனே மேற்கொள்ள முனைந்து நிற்கின்றான். சன்மார்க்க வேலி அமைத்து, அன்பு நீர்பாய்ச்சி அறப்பயிர் விளைவிக்க ஆர்வங்கொண்டுள்ளான்.

இதைக்கண்டு, அகமகிழ்ந்து ஆதரவளிப்பதைவிடுத்து அலறி ஓலமிடுகிறது ஒரு சிறுகும்பல். உரிமை பறிபோகிறதாம். இந்து மதத்திற்கு அழிவு தேடும் சட்டமாம். இனம் ஒழிப்புமுறையிலும், அறநிலையப்பாதுகாப்புப் பிரச்சினையிலும் கட்சி ஒருமை மனப்பான்மையையும் காற்றில் தூற்றிவிட்டு, மனச்சாட்சியின் வேதனை தாங்காது வெடித்துப் பூச்சாண்டிகாட்டிவருகிறது. ஐமீனுக்கு ஒரு நீதி செல்லும்; இனாமுக்கு அதுவே செல்லாதென்று சொல்லும் இரட்டைநாக்கு.ஒருகுலத்துக்கொரு நீதி—தம்பிரான்களுக்குத் தரகு — தமிழன் தாழ்ந்து தரைமட்டமாக்கப் படவேண்டும்! ஆரியரின் அடிவருடும் இருடிகள் அரியாசனத் திருக்க வேண்டும்! சிங்கக்குகையில நரியின் விளையாட்டு. தந்திரமும் மந்திரமும் அதிககாலம் ஆட்சி செய்ய முடியாது. விரைந்தோடும் காலம் விரைவில் வருகிறது.

செல்வம் கொழித்த செந்தமிழ் நாடுதான். மூதேவி வந்தவுடன் சீதேவி சென்று ஒரு இடத்தில் முடங்கிவிட்டாள் செயலற்று. இன்று வறுமையால் வாடுகிறது நாடு. வற்றிய நெற்றியுடனும் ஒட்டிய வயிறுடனும் காட்சிதரும் எலும்புக்கூடுகள் உலவுகின்றன ஊரெங்கும். பாசம் பிடித்துப் பயனற்றுக்கிடக்கும் பணத்தை எடுத்து, உணவு விடுதிகளை அமைத்து, இவர்களுக்கு உரிய வேலை கொடுத்து உணவளித்தால் கடவுள் வெகுண்டு வேறெங்கும் சென்று விடுவாரோ? தொழுநோயால் வருந்தும் தொண்டர்கள் கூட்டம் நகரங்கள் எங்கும் கண்கொள்ளாக் காட்சி. பிறக்குத்தவாதுகளையும் பொருளை எடுத்து மருத்துவ நிலயங்கள் ஏற்படுத்தி இவர்களுக்குச் சேவை செய்தால் "மெய்மைக் கவனியாமல் எங்கே சென்றுபடா பக்தா" என்று ஏசுவாரா இறைவன்? சன்மார்க்கத்தை வளர்க்கும் நன்னூல்களை விலை கொடுத்து வாங்க இயலாத மக்களுக்கு இலவசமாக அச்சிட்டு வழங்கினால் சந்தடியில்லாத இடத்தில் சிந்தையில் சிவனார் தோன்றிச் சிக்கனமாயிருவென்று ஞானப்பால் ஊட்டுவாரோ? இப்படியெல்லாம் செய்வாராயின் அப்படிப்பட்ட கடவுள் எமக்கு வேண்டாம். சீட்டுக் கொடுத்துவிடுவோம் சீக்கிரத்தில். மானிடக் குலத்தின் மாபெரும் தந்தை, விருப்புவெறுப்பற்ற, உருவமற்ற ஆதி முதற்பகவன்தான் எங்கள் தெய்வம். இடைச் செருகல்களையும், புரட்டு உருட்டுகளையும் ஏற்கமாட்டோம். விரட்டியடிப்போம்.

"இரந்து முயிர் வாழ்தல்
வேண்டிற் பரந்து கெடுக
இவ்வுலகியற்றியான்"

என்று பறைபறைந்த வள்ளுவர், நாட்டின் தற்போதைய வறிய நிலையைக் கண்டு அறநிலையப் பாதுகாப்பை அரசினர்க்களிப்பதை உரிமை பறிபோகும் காரியம் என்றுரைப்பாரா? "தனி யொருவனுக் குணவிலை யெனில், ஜகத்தினை யழித்திடுவோம்" என்று கூறுரைத்த பாரதியார், இப்பரிதாப நிலையைக் கண்டு, இருட்டில் குவிந்து எதுவும் செய்யச் சக்தியற்றிருக்கும் பணம் வறியோரின் துயர் களைய, பிறகலைச் செல்வங்களைக் கொண்டுவர, எட்டுத் திக்கும் சென்று தமிழ் மணம் கமழச் செய்யப் பயன்படக் கூடாதென்று கூறுவாரா? வாருங்கள் அறமன்றம் ஒன்று அமைப்போம். வள்ளுவரும் பாரதியும் எங்கள் சார்பில் வாதாடுவார்கள். உங்கள் குலவிளக்குகளை நீங்காத நித்திரையினின்றும் நீக்கி உங்கள் வறட்டு வேதாந்ததத்தை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லக் கொண்டு வாருங்கள். நாட்டுப் பணியில் உயிர் நீத்த வீர வழக்கறிஞர் சிதம்பரனார் தீர்ப்பளிப்பார்.

வருமுன் காப்பாளர்களாயிருந்தால் தம்பிரான்கள், சென்றதை மறந்து இவ்வறச் செயல்களை மேற்கொள்ள முன் வரட்டும். அப்பொழுது தான் "எங்கள் தம்பிரான்" என்று தமிழர் உங்களைக் கண்டு உவந்து கூறும் நன்னாள்வரும். தலை தப்பியதென்று நீங்களும் நிமிர்ந்து நடமாடலாம். பிழைக்கும் வழி பிறிதில்லை. கவலையற்றிருப்பீர்களானால் "சவ மிகாள் யோகாப்பியாசம் செய்ய எழுந்தருளவிலையோ" என்ற புகழ் உங்களை விட்டு ஒருக்காலும் நீங்காது. நீ முன்னர் வைத்த வைக்கோல் நிலைமைதான் உங்கள் கதியுமாகிவிடும்.

நீங்கள் செய்யத் தவறினால்,

(அடுத்த பக்கம் பார்க்க)

காலவேகம்!

—❀—

ரோம் நகரம் தீப்பற்றிக்கொண்டு எரிந்தபோது, நீரோ மன்னன் வீணை வாசித்துக் கொண்டிருந்தான். நீரோ மன்னனின் கொடுங்கோன்மையை விளக்க, மனிதத் தன்மையற்ற தன்மைநிலையை விளக்க கூறுவர் இதனை.

நீரோமன்னன் மனம், இரும்போ, கல்லோ, தலைநகரம் தீ பிடித்துக் கொண்டபோது, மக்கள் மடிவரே என்பது பற்றிய கவலையுமற்று, நிம்மதியாக வீணை வாசித்துக் கொண்டிருந்தானே என்று கூறுவர்—கண்டிப்பர்.

• • •

மிதிலா நகரம் தீப்பிடித்துக் கொண்டு எரிந்தது ஒரு சமயம். ஜனக மகாராஜா, அதுபோது, அரண்மனையில், வேதாந்தம் படித்துக் கொண்டிருந்தார்.

ஜனக மகாராஜாவின், மனோதிடத்தை, உலகப் பற்றை ஒழித்த தன்மையை, ஞானத்தை, விளக்கக் கூறுவர், இந்தக் கதையை.

ஊரே தீப்பிடித்துக் கொண்டது—உயிருக்கும் உடைமைக்கும் பெருஞ் சேதம். எனினும் அந்த ராஜரிஷி, மனம் குழம்பாமல், உலகை மறந்து, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தார். அவருடைய உள்ளம் அவ்வளவு உரமானது! அவருடைய ஞானம் அவ்வளவு உறுதியானது. நாற்புறமும் நெருப்புச் சூழ்ந்துகொண்டிருந்தபோதும் அவர் துளியும் கலங்காமல், இந்த மாயாப் பிரபஞ்சத்தைப் பற்றிய கவலையற்று, நித்தியமானதும், நிர்மலனை அறிய உதவுவதும், இம்மைக்கு ஏற்றதுமான, வேதாந்த விசாரணையில் ஈடுபட்டிருந்தார்!—என்று, ஜனகரின் செயலை, வியந்தும் புகழ்ந்தும் கூறுவர், இங்கு.

• * *

நீரோ, கொடுங்கோலன்!
ஜனகன், ராஜரிஷி!

ரோம் பெருநெருப்பில் சிக்கியபோது நீரோ வீணை வாசித்து, மக்களின் கண்டனத்தையும் சரித்திரத்தில் இழிவிடத்தையும் பெற்றான்.

மிதிலை தீ பிடித் தெரிந்தபோது ஜனகன், வேதாந்தம் படித்தது, நம் நாட்டுப் பக்தகோடிகளால் பாராட்டுதலையும், புண்ய ஏட்டிலே புகழிடத்தையும் பெற்றான்.

சம்பவம், ஒரே விதமானதுதான்—ஆனால், சரித்திரம், நீரோவைக் கொடுங்கோலர் பட்டியிலே சேர்க்கிறது—புராணம், ஜனகரை, ரிஷிகள் பட்டியிலே சேர்க்கிறது. இத்தகைய விசித்திரங்கள் பலப் பல, நமது நாட்டு மக்கள் மனதிலே, புராண மூலம், ஏற்றிவைக்கப்பட்டுள்ளன. நாம், நீரோ மன்னனை நல்லவன் என்று கூறவோ, அவனது வீணை வாசிப்பு வியக்கத்தக்க செயல் என்று பாராட்டவோ, முனையவில்லை—சரிதம் அவனுக்குத் தந்துள்ள இடம், அவன் செயலுக்கும் குணத்துக்கும் ஏற்றதுதான். ஆனால், ஜனகருக்கு ஏன், நமது புண்ய ஏடு, புகழிடம் தரவேண்டும்—அவரை ஏன் மகரிஷியாக்க வேண்டும்—நகரம் நெருப்பில் சிக்கியபோது கவலைப்படாமலிருந்த சம்பவத்தை, அவருடைய புகழ் பரப்பும் சம்பவமாக்குவது எந்த வகையான நியாயம் என்றுதான் யோசிக்கிறோம்.

சரிதம் தரும் தீர்ப்புக்கும் புண்ணிய ஏடு தரும தீர்ப்புக்கும், ஏன் இவ்வளவு பெரிய, நேர்மாறு இருக்கிறது என்று கேட்கிறோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

10 பக்கத் தொடர்ச்சி

மிருக்கிறார். அவர் விரதமிருப்பது அல்லோலகல்லோலப்படுகிறது. அவருக்குச் சற்றுத் தூரத்தில் மற்றொரு மெம்பர் பல ஆயிரம் ரூபாய் தமக்கு வரவேண்டியது கிடைக்கவில்லை என்று உண்ணாவிரதமிருக்கிறார். அவரை என்னவென்று கேட்பாரைக் காணோம்."

—காமேஸ்வரராவ், M. L. A.

இவ்விதமாக, கோயில்களையும், மடங்களையும், அவற்றின் பாதுகாப்பாளர்களையும், அங்கு நடக்கும் ஊழல்களையும் சர்க்கார் முன்னிலையில்—சர்க்காரை நடத்துபவர்களே விளக்கிப் பேசவும், அவை ஒழிக்கப்படவேண்டும்—சட்டமியற்ற வேண்டும் என்று உறுதிகொள்ளவும், மத ஊழல்களை விளக்கிய நம்மீது கணை பூட்டிய காங்கிரஸ் நண்பர்களே முன்வந்தது கண்டு அவர்களைப் பாராட்டுகிறோம்.

[முன்பக்கத் தொடர்ச்சி]

அதை மக்களே செய்ய முற்படுவார்கள். சட்டம் இப்பொழுது ஆமை வேகத்தில் ஊர்ந்து வந்தாலும் இத்திட்டம் மக்களால் முயல் வேகத்தில் நடைமுறையாக்கப்படும் வருங்காலத்தில். காலம் வழி விடும். கருத்து ஒற்றுமை துணை செய்யும்.

மக்களின் மனக்கொதிப்பிற்கு முன்னால் ஒரு சிறு கும்பலின் இனக்கதறல் என்ன செய்யும்? புரட்சிக் கனலில் அகப்பட்ட துரும்பு, புகைந்து சாம்பலாவது திண்ணம். அசைக்க முடியாத கற்பாறை என்று கருதி வாளாவிருந்தால் உளி கொண்டு உடைத்தெறியத் தயாராகிறான் புத்துலகச் சிற்பி. சேர்ந்து செயலாற்றத் திறனற்றோரே! முட்டுக்கட்டை போடாதீர் முற்போக்குச் சக்திக்கு!

தலைவர்களின் படங்கள்

பெரியார், அண்ணாத்துரை, கவிஞர் பாரதிதாசன் உருவமைந்த கண்கவரும் அழகிய படங்கள் (1949-வருடக்காலண்டரில் வெளிவந்த படங்கள்) தனித்தனியே வெளிவந்துள்ளன.

ஒன்றின் விலை 0—5—0

வியாபாரிகட்கு தக்க கழிவு தரப்படும்

திராவிடன் பதிப்பகம் P. B 18. வேலூர் N. A.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.

REGD. M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 27-2-49 | இதழ் 35

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAR 1949
MADRAS

★ சனாதனச்சர்ச்சில்கள் ★

"இலங்கையிலும் மதச்சார்பற்ற சர்க்காரே நடந்துவருகிறது. ஆயினும், அந்தச் சர்க்கார் மதங்களுக்கெனச் சட்டம் இயற்றவில்லையா? இலங்கையில் எத்தனையோ பௌத்த ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளில், கண்டி, அநுராஜபுரம், பொலன்னருவை, களனி ஆகிய இடங்களிலுள்ள பௌத்த ஆலயங்களில் எத்தனையோ கோடி ரூபாய்க்குமேல் மதிப்பிடக்கூடிய நவரத்ன ஆபரணக் குவியல்களும், ஏராளமான சொத்துக்களும் இருக்கின்றன. அவைகளைப் பரிபாலிக்க சர்க்கார், பௌத்த மதபரிபாலனச் சட்டம் என்று ஒரு சட்டத்தைத் தயாரித்து அமுல் நடத்துகிறார்கள். இதனால் பழைய பெருச்சாளிகள் உள்ளே நுழைய முடியாமல் நிர்வாகமும் எதிர்பார்த்தபடி வெகு சிறப்பாக நடந்து வருகிறது. எனினும் இந்தச்சட்டத்தை இதுவரை எவரும் எதிர்க்கக்காணோம். அதற்குப்பதிலாக இலங்கை இந்துக்கள் இதேபோல 'இந்துமத பரிபாலன சட்டம்' என்று ஒரு சட்டத்தை சர்க்கார் தயாரித்து உடனே அமுல் நடத்தவேண்டுமென்று கடந்த 1948-ம் வருஷம் இலங்கையில் சைவ சமாஜ மகாநாட்டில் ஏகோபித்துத் தீர்மானித்திருக்கிறார்கள்.

* * *

லோகோபகாரி எனும் இதழ் இத்தகவலைத் தருகிறது. இலங்கையில் பௌத்தர்களுக்கு அந்நாட்டுச்சர்க்கார், தங்கள் தேவாலயங்களை நிர்வாகம் செய்ய முன்வந்திருப்பது, அக்ரமம் என்றோ அதனால் மதம் ஒழிந்து போகும் என்றோ எண்ணம் எழவில்லை. மதத்திலே மக்களுக்குள்ள மட்டற்ற பற்றினைப் பயன்படுத்திக் கொண்டு, வேஷதாரிகளும் சுரண்டிப்பிழைப்போரும் சுகபோகவாழ்வு நடத்துகிறார்கள் — முடிகிறது — இந்த அநீதியைத் தடைப்பதே, மக்களிடமும் மதத்திடமும் உண்மையான பற்றுகொண்டவர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்பதை அங்கு மக்கள் உணர்ந்துகொண்டனர். அங்கு எதிர்ப்பு இல்லை — காரணம் அங்கு, 'கோயிற் பூனைகளைக்' காப்பாற்றிக் கொழுக்கச்செய்ய இந்துவும் மித்திரனும், இல்லை! எல்லா நாடுகளிலேயும் மத ஏகாதிபத்யம் உண்டு — ஆனால் இதிலே பிழைப்பையும் உயர்வையும் பிணைத்துக்கொண்டுள்ள ஒரு குலம் கிடையாது. நமது நாட்டில்மட்டுந்தான் அப்படி ஒரு குலம் இருக்கிறது. அந்தக்குலத்துக்கு, மக்களை மடைமையில் ஆழ்த்திவைக்கும் திறனும் சாதனமும் இருக்கிறது — எனவேதான், எதிர்ப்புக்காட்டமுடிகிறது. கந்தலாடையும் நடுக்கும் குரலும், ஓட்டைப்பாண்டமும்கொண்ட பஞ்சையை, விரட்டி அடிக்கும் விட்டுக்காரர், அழுக்கேறாத காவி உடையும், அழகிய வெண்ணீறும், காதிலும் கழுத்திலும் உருத்திராட்சமும் கையிலே பிக்ஷா பாத்திரமும் கொண்டு, உரத்தகுரலில், சதாசிவத்தை முதலில் கூப்பிட்டுவிட்டு, பிறகு, "இந்தக் கட்டைக்கு ஏதேனும்பிச்சை" என்று 'அம்மணியை' அழைக்கும் ஆர்ப்பாட்டப் பண்டாரத்தை, சற்று மரியாதையுடன் தானே "போய்வா, சாமி" என்று கூறுகிறார். கோயிற்பூனைகள் இங்கு கொண்டுள்ள கோலம் மக்களை மயக்கக்கூடியவிதமானது. எனவேதான், இலங்கையிலே எளிதிலே நிறைவேற்ற முடிந்ததை இங்கு நிறைவேற்றுவதற்கு, கஷ்டப்பட வேண்டி வருகிறது.

• • •

"பல்லவ மன்னனுக்கு சேனாபதியாக இருந்த பரஞ்சோதி என்பவர் வாதாபியிலிருந்து கணபதி விக்ரகத்தைக் கொணர்ந்து தம் சொந்த ஊரான திருச்செங்காட்டங் குடியில் நிறுவியிருக்கிறார்"

இந்தத்திங்கள் துவக்கத்திலே, தினசரிமடல் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

விநாயகர், பிள்ளையார், என்றுபல பெயர்களால் அழைக்கப்பட்டுப் பூஜிக்கப்படும், கணபதி தமிழ்நாட்டுக்குரிய தெய்வமல்ல, பழந்தமிழர்கள் அவ்விதமான ஒருகடவுளை, வணங்கினதில்லை, மிக மிகப் பிற்காலத்திலே வடநாட்டிலிருந்து இங்கு வந்து புகுந்த வழக்கம் இது, என்று நாம் கூறினபோது, கணபதியைக் குறை கூறுகிறான் கயவன்! பிள்ளையாரைப் பிழைபடப் பேசுகிறான் பாபி! விநாயகரைத் திட்டுகிறான் விதண்டாவாதி! என்று நிந்தித்தவர்கள் எவ்வளவு பேர். பெரிய

ஆராய்ச்சி நடத்திவிட்டானும் ஆராய்ச்சி, யுகயுகமாக இருந்து வரும் கணபதியை, தமிழ்நாட்டுக்குரிய தெய்வமல்ல என்றுகூறுகிறான் அறிவிலி! என்று ஆத்திரத்துடன், பேசினர் பலர்.

இப்போது என்ன சொல்வார்களோ, தெரியவில்லை, தினசரி வெளியிடும் ஆராய்ச்சியைக் கண்டு!

வாதாபியிலிருந்து கணபதியைக் கொண்டு வந்தார் பரஞ்சோதி என்று தினசரி தெரிவிக்கிறது. வாதாபி என்பது சாளுக்கிய ராஜ்யத்தின் தலைநகரம் — இப்போதைய பம்பாய் மாகாணத்திலிருப்பது. வடநாட்டுச் சரக்கு, விநாயகர், என்பதை இனியும் மறுத்துக்கூறுவரா, நம்மை பதியிலிகள் என்று பேசிய மகாபண்டிதர்கள்.

* * *

வருணஜெபம் செய்தால் மழை வரும் என்று நம்புவது ஏமாளித்தனம், என்று நாம் கூறினால் வைதிகர்களின் முகம், சுளிக்கிறது, மனம் குமுறுகிறது. ஆலயங்களிலே ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன, என்று சொன்னால் அவர்களின் கோபம் கட்டுக்கடங்கா நிலையாகிறது. நம்மைப் பிய்த்து எறிந்துவிடுவதுபோல் கிளம்புகிறார்கள்! — ஆலயங்களிலே உள்ள பூசாரிகள் ஆஷாடபூதிகள் என்று நாம் கூறிவிட்டாலோ, அரகரா சிவா சிவா! அடபாவிப்பயலே நாக்கு அழுகும்டா! என்று ஆத்திரமாகப் பேசுகிறார்கள்.

வருண ஜெபம் செய்வது ஏமாளித்தனம்—ஆலயங்களிலே ஊழல்கள் உள்ளன—அங்குள்ள பூசாரிகள் ஆஷாடபூதிகள்—எனும் இம்மூன்று உண்மைகளையும், நாம் மட்டுமல்ல, இந்துஸ்தான் எனும் இதழ் ஒப்புக்கொண்டது சென்றகிழமை: இதோ, அதன் வாசகம்!!

"நாட்டிலே விளைச்சல் இல்லை—விளைச்சலை அதிகரிக்க, நீர்ப்பாசன வசதிகளை சீர்திருத்தத் திட்டமான முயற்சி எதுவும் காணோம். ஆனால் ஊழல் நிறைந்த ஆலயங்களில், ஆஷாட பூதிகளான பூசாரிகளைக் கொண்டு வருணஜெபம் செய்யச் சொல்கிறார் பிரதமர்."

இவ்விதம் கேலிசெய்கிறது, இந்துஸ்தான். இந்தச் சொல் மாலை நமக்குக் கிடைக்கும்போது, நாம் ஏன், கருத்தறியாக்கயவர் தரும் கல்மாரியையோ, வகையறியா வக்கிரங்கள் தரும் வசைமாரியையோ, பொருட்படுத்தப் போகிறோம்! நாம் எடுத்துக்காட்டுகிறோம் உண்மையை, முதலில், துணிவுடன்—எதிர்ப்பைத் தான் காண்கிறோம், ஏசுகிறார்கள், இகழ்கிறார்கள்—ஆனால், அடிமேல் அடி அடித்தால் அம்மி நகரத்தான் செய்யும்—ஏசினோரே, பிறகு, வருகிறார்கள் வழிக்கு! அவர்கள் வழிக்கு வருவதுகூடக் கிடக்கட்டும், வேறு முகாம்களிலிருந்துகொண்டு முரசு கொட்டுவோரும், சிற்சில சமயங்களிலே, நாம் கூறும் கருத்துகளை ஆதரிக்கிறார்கள் — அவசியம் பிறக்கிறது. வருணஜெபம் செய்வது ஏமாளித்தனம்! ஆலயங்களில் ஊழல்கள் நிறைந்துள்ளன—பூசாரிகள் ஆஷாடபூதிகளாயுள்ளனர், என்பவைகளை நாராயண ஐயங்காரை ஆசிரியராகக் கொண்ட இந்துஸ்தான் நாட்டுக்குக் கூறும்போது, நமக்கு, நாட்டுவளப்பமறியாத கிணற்றுத்தவளைகளின் கூச்சலைக் கேட்டு, கோபமா வரும்!! கிடைக்கவேண்டிய இடங்களிலிருந்து ஆதரவும் ஆமோதிப்பும் கிடைத்து வருகிறது, என்ற மகிழ்ச்சியும், அதனால் நம்பிக்கையுமே பிறக்கிறது.

* * *

முற்போக்கான திட்டம், மக்களின் மாண்பை உயர்த்தும் முயற்சி, எதைச்செய்யமுற்பட்டாலும், பார்ப்பனரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்புவதையே நாம் பார்க்கிறோம். அதனை நாம் எடுத்துக்கூறும்போது, கோபமாகத்தான் இருக்கும்—நம்மை நாசமாக்கவேண்டும் என்று ஆத்திரமாகத்தான் இருக்கும். கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு, பொறுமையுடன் இருந்து பார்த்தால், உண்மை விளங்கும். கோயில்களிலே பொட்டுக்கட்டுவது எனும் மடமை ஒழியவேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது—எதிர்த்தவர் காலஞ்சென்ற சத்யமூர்த்தி ஐயர்! பாலியவிவாகத்தைத் தடை செய்யும் சாரதா சட்டம் வந்தபோது, எதிர்த்தவரும் அவரேதான். பானகல் அரசர்காலத்திலே இந்துமத பரிபாலன சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் அவர் எதிர்த்தார்! இப்போது மடாலய நிர்வாக மசோதாவை எதிர்ப்பவர், வைத்தியநாதஐயர்! இவைகளைப்பொய் என்று கூறிவிட முடியாது. இந்துவும், மித்திரனும், இந்தச் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றின்போதும் பிற்போக்குக் கட்சியையே ஆதரித்து வந்தன—அவை இரண்டும் பார்ப்பனப் பிரமுகர்களால் நடத்தப்பட்டு வரும் பத்திரிகைகள். இவ்வளவு தெளிவாக உண்மை இருப்பதால் தான் நாம், கூறுகிறோம், முற்போக்கான திட்டத்தை முப்புரியினர் எதிர்த்து வருவதே, குலதர்மமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று. கோபித்து என்ன பயன்! கொக்கரித்து என்ன இலாபம்! சதி அல்லது உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தபோது கூடத்தான்; மதமே நாசமாகிவிடும், இந்து சமுதாயமே அழிந்துவிடும் என்று பேசினர்! அது அவர்களின் பல்லவி! பொருளற்றது!! நாளாகவாக, நல்லறிவு நாட்டிலே பரவப்பரவ, பகுத்தறிவு மேலோங்கும் நிலையிலே, இந்தப் பொருளற்ற பல்லவியை, இன்று கவனித்துப் பதில்கூறிக் கொண்டிருக்கும்அளவுக்குக்கூட, அவசியம் இராது. ஒரு ஊரிலுள்ள மாட்டு ஜட்காவண்டிக்காரர்களைக் கூட்டி அவர்களிடம் கெஞ்சிக்கூத்தாடி, சமாதானம் செய்து, சம்மதம் பெற்ற பிறகா, மோட்டார் பஸ்கள் ஓட்ட முற்படுகிறார்கள்!! காலம் மாறிக்கொண்டே வருகிறது, அதைத்தடுக்கும் திறன் யாருக்கும் கிடையாது! யூகமிருந்தவர்கள் இதை அறிவர்! பட்டரகங்கள் தங்கள் துயரத்தையும் தோல்வியையும் வெளியே காட்டிக்கொள்ளும் வகையில 'கன்னாபின்னா' வில் இறங்கும். கடைசிக்கட்டம் என்றுதான், அந்தநிலைக்குப் பொருள்!!

மதம் நாசமாகும், இந்நாட்டின் மாண்பு மங்கிப் போகும், சமுதாயத்திலே சீர்குலைவு உண்டாகும், சர்வநாசம் சம்பவிக்கும் என்று சாக்குக் கூறிக்கொண்டே, முற்போக்கை விரும்புபவர்களைக் கண்டபடி கண்டித்துப் பேசியும், பாமரர்கள் மனதிலே பீதி உண்டாக்கி அவர்களைக் கிளப்பிவிட்டும், வைதீகர்கள் காணும் பலன் என்ன! சரி, சரி, இவ்வளவு பெரிய ஞானஸ்தர்கள், சத்திய ஜ்வாலை போலக்கோபத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்களே, அவர்களுடைய சாபத்துக்கு ஆளாகக் கூடாதே என்று எண்ணி, எந்தச் சீர்திருத்தச் சட்டமாவது, தடைப்படுத்தப்பட்டு விட்டதா! சாரதா சட்டம் சாஸ்திர விரோதம், பாலிய

விவாகமே, பண்டைப் பெருமையை நிலைநாட்டக் கூடியது, பாரத வர்ஷத்திலே அனாதி காலந்தொட்டு இருந்துவரும் ஆசாரம், ஆகவே, அதனைக் குலைக்கக் கூடாது என்று இருந்துவிட்டார்களா! இல்லை! வைதீக வறட்டு வாதத்தைக் கண்டு அஞ்சி, எந்தக் காரியமும் நின்றுவிடவில்லை. பெண்களுக்குச் சம உரிமை கிடைக்க, சட்டம்! திருமண முறையிலே, உண்மையிலேயே திருவும் மணமும் இருக்கக் கூடிய விதமான திருத்தம்! பெண்களுக்குச் சொத்துரிமை! விவாக விடுதலைக்கு வழி! இவ்வளவும், வைதீகர்களின் கண் முன்பாகவே, பிறர் காது செவிடுபட அவர்கள் கடுங்கூச்சலிடுவது பற்றித் துளியும் சட்டை செய்யாத முறையிலே, சட்டங்களாகிக் கொண்டு வருகின்றன. சகலதுறைகளிலும், வெற்றி, சீர்திருத்த நோக்கமுடையவர்கள் சார்பாகவே கிடைத்து வருகிறது. எதெதை, இந்துமதத்தின் அடிப்படைத் தத்துவங்கள், ஆணிவேர்கள், இகபரசுகம் தரும் சாதனங்கள், என்று வைதீகர்கள் பேசிக்கொண்டு வந்தனரோ, அவைகளெல்லாம், காலச் சம்மட்டியின் தாக்குதலால், நொறுங்கித் தூள் தூளாகின்றன! இவ்வகையிலே, நாம் விரும்பும் சீர்திருத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, தோல்வித் தோடாவை அணிந்து கொண்டுள்ள அசகாயச் சூரர்கள் கிளப்பும் அர்த்தமற்ற அசட்டு அவுட்டுகளைக் கண்டு நாம் கவலைப்படவேண்டிய அவசியமென்ன இருக்கிறது! காலப்போக்கை அறிந்தவர்கள், மதத்திலே உள்ள மாசுகளைத் துடைத்துவிட்டு, மக்கள் மனதிலே பதிந்துள்ள புத்துலகக் கருத்துக்களுக்கு ஏற்றவிதத்தில், இந்துமதத்தைத் திருத்தி அமைத்தாகவேண்டும், என்று முனைந்து பணிபுரிகின்றனர். கோயில் கதவுகள் திறக்கப்பட்டதற்குக் காரணம் மக்களின் அறிவுக்கண்கள் திறக்கப்பட்டுவிட்ட உண்மையைத் தெரிந்துகொண்டதால்தான்! ஜாதிபேதம் குலபேதம், கூடாது என்று பேசுபவர் அதிகமே தவிர, ஜாதிகுல தர்மம் நீடிக்கத்தான் வேண்டும் என்று வாதாடுபவர்களின் தொகையல்ல!! பர்ணசாலைகளிலே வகுக்கப்பட்ட திட்டங்களை வைத்துக்கொண்டு, பாராளும் மன்றங்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்திலேயும் ஆதிக்கம் செலுத்தலாம் என்று எண்ணுவது அணுகுண்டைத் தடுக்க அம்புவிட்டுப்பார்க்கும் அதிமேதாவியின் செயலுக்குச் சமமாகும்! ஆனால், பஜனை மடங்களிலே இருக்க வேண்டிய சில 'பரப்பிரம்மங்கள்', தேசிய முலாம் பூசிக்கொண்டு பாராளும் மன்றத்திலே புகுந்துகொண்டிருப்பதால், சலசலப்புச் செய்ய முடிகிறது. பல ஜாதிகளாக, இந்து மக்கள் பிரிந்து அதன் காரணமாகப் பிளவு பட்டு, பகைத்துக்கொண்டு வாழ்வதை பரமனின் திட்டம், பாப புண்யத்தினால் ஏற்படும் பலாபலன்களின்படி அமைந்த திட்டம், என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் போய் விட்டது—எப்படியோ ஏற்பட்டுவிட்டது, நம்முடைய நாட்களிலே அதனால் விளையும் நாசம் நன்றாகத் தெரிந்து விட்டது. எனவே, அதனை மாற்றிவிடத்தான் வேண்டும் என்பதை மதிபடைத்தவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டனர். முறை என்ன இந்த மாற்றத்துக்கு என்பதிலே கருத்து வேற்றுமை உண்டு - மூலத்தில் அல்ல—ஆனால் உலகமறியாத சில உதவாக்கரைகள், தங்கள் வார்த்தைக்கு இந்தக் காலத்திலும் ஏதோ மதிப்பு உண்டு என்று நம்பிக்கொண்டு இருக்கின்றன! கிளி கொஞ்சிடும் சோலையிலே, நடுநிசி வேளையிலே, ஆந்தை அலறுகிறதல்லவா — அதுவும் பாபம், தனது ஆலறலைக் கேட்டு உலகு உவகையுடன் இருப்பதாகவே எண்ணிக் கொள்கிறது! தன் குரலையும் கோணற் சேட்டைகளையும் கண்டு, உலகு மகிழ்கிறது, என்ற மனப்பான்மை மந்திக்கே இருக்கும்போது, மக்களிலே சிலருக்கு இருப்பதிலே என்ன ஆச்சரியம்! மலர்ச் செடி அருகே புழு நெளிவதில்லையா! மயில் ஆடக் கண்டு, வான் கோழி கூச்சமின்றி ஆடவில்லையா, அதுபோலவே, உலகு அறிவொளி கண்டு, புதுப் பாதையைத் தேடிக்கொண்டு செல்லும் நிலைகண்டும், சில கபந்தங்கள், தமது பழைய போக்கிலே பிரேமை கொண்டுள்ளன! ஞானசாகரம், தங்கள் மனம் என்று எண்ணிக்கொண்டு, பேசிப்பார்க்கின்றன — மதிப்பார் இல்லை—தங்கள் எதிர்ப்புக் கண்டு, சீர்திருத்தப் படை சிதறுண்டு போகும் என்று எண்ணிக்கொண்டு, தூற்றல் பாணத்தைத் தாராளமாகத் தொடுத்துப் பார்க்கின்றன—பலன் இல்லை — மரமாகப் போ! மரமாகிப் போ! கல்லாகு! கண்ணிழந்து போ!—என்று சாபம் கொடுக்கக் கூடியகாலமல்ல இது. எனவே சாபம் கொடுப்பதற்குப் பதிலாக, மடையா! மரமே! கல்லே! கபோதி! என்று பலப் பல வசைமொழிகளை வீசிப் பார்க்கின்றன, சீர்திருத்தம் கோருவோர்மீது. வசைமாரி கண்டு, சீர்திருத்த வாதிகள் வருத்தப்படப் போவதில்லை. ஏனெனில், முதலிலே எடுத்துக் காட்டியுள்ளபடி, சீர்திருத்தவாதியின் நோக்கங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறிக்கொண்டே வருகின்றன, எதிர்பாராத இடங்களிலிருந்துகூட ஆதரவுகள் கிடைத்திடக் காண்கிறான். சட்டசபைகளிலே, காங்கிரஸ் கமிட்டிகளிலே, மந்திரி சபைகளிலே, மதிவாணரின் மன்றங்களிலே, எங்கும், சீர்திருத்த ஆர்வம் இருந்திடக் காண்கிறான்—களிப்படைகிறான். கோயில்களிலே காணப்படும் கொடுமைகளை எண்ணி எண்ணி ஏக்கமுற்ற சீர்திருத்தவாதியின் மனம், மகிழத்தக்க முறையிலே இன்று திருத்தங்கள் செய்ய முற்பட்டுள்ளனர், ஆட்சியாளர்கள்! மாதர்களை இழிவுசெய்யும் மடமை, மக்களில் ஒரு பகுதியினரைத் தீண்டாதார் ஆக்கிவைத்த கொடுமை, மாய்ந்திடக் காண்கிறான், மனமிக மகிழ்கிறான்! களஞ்சியத்திலே புகுந்துகொண்டு, தானியத்தைக் களவாடித் தின்று கொழுத்து வந்த எலி, பொறியிலே சிக்கிவிட்ட பிறகு, இரும்புக் கம்பிகளை, தானியத்தைக் கொறித்துத்தள்ளுவதுபோல செய்துவிட முடியாது, என்று தெரியாமல், உயிர் பிழைக்க வேண்டுமே என்பதால், கூண்டுக்குள் இருந்தவண்ணம், குதிப்பதும் கம்பியைக் கடிப்பதும், பலகையைக் கீறுவதும், பலவித முயற்சிகள் செய்வதையும் பார்க்கிறோமல்லவா! அது போன்ற காட்சி, இந்த 'போக்கிடமற்றவர்கள்' போடும் கூக்குரலும், ஆடும் கூத்தும்! வெற்றி பெற்று வரும் சீர்திருத்தவாதிகளுக்கு, பொழுது போக்குக்கான, கண் காட்சி—இலவசமாகத் தரப்படுகிறது!!

தேசிய முலாம் கிடைத்துவிட்டதைச் சாதகமாக்கிக் கொண்டுதான், சில வைதிகர்களால், வறட்டு வாதம் செய்ய முடிகிறது.

இந்து—மித்திரன் போன்ற இதழ்கள், இவர்களைத் தூக்கிவைத்து எழுதுவதையும், பணம் பிடுங்கிகளைப் பரமாத்மாக்கள் என்றும், சமூகச் சனியன்களைச் சுவாமிகள்

என்றும், ஏமாற்று வித்தைகளைப் புண்ய காரியம் என்றும், எழுதிக் காட்டுவதைக் கண்டு, சிலருக்கு, உண்மையாகவே, மேதைகள் யாரோ, மடாலய நிர்வாக மசோதாவை எதிர்க்கிறார்கள் அவர்களுடன் கூடிக்கொண்டு குலவினால், புகழ் கிடைக்கும், 'பல தானமும்' கிடைக்கக்கூடும் என்று ஏமாளித்தனமாக எண்ணிக்கொண்டு, தங்கள் பழைய பசலிப் பேச்சைப் பொது மக்கள் முன்னாலேயே பேசவும் துணிந்துவிட்டனர். அவர்கள்பட்ட பாடு என்ன! மாயவரத்தில் பிப்ரவரி 16-ந் தேதி மக்களை மன்னார்சாமிகள் என்று எண்ணிக்கொண்டு, சில மகானுபாவர்கள், மடிசஞ்சி இராக ஆலாபனை செய்து பார்த்தனர்—கற்கள் பறந்தனவாம்—செருப்புகளாம்—'ச்சீ' கோஷங்களாம்!! முட்டைகளும் கூடத்தானாம்! மூலை முடுக்கிலே இருந்துகொண்டு யாரோ சிலர் செய்த சேட்டையா! அல்ல! பொதுமக்களின் ஆத்திரத்தின் விளைவு! கூட்டத்திலே தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன், ஊர்வலமாகச் சென்றதாம் பெருங்கூட்டம், மடத்தைத் தாங்கும் பேர்வழிகளைக் கண்டித்து முழக்கமிட்டுக்கொண்டே!

இந்தவிதமான மாறுதலைக் கண்டு, பொதுமக்கள் சீர்திருத்த ஆர்வம் பெற்றிருப்பது கண்டு, பழைய ஏடுகளைக் காட்டிக் காட்டி நாட்டை ஏய்த்துவந்த காலம்போய்விடுகிறதே என்ற பயம் பிறப்பதும், அதன் காரணமாக மன்னார்சாமிகளும், மடிசஞ்சிகளிலே மட்ட ரகங்களும் மாரடித்தழுவதும், சகஜந்தான்! என்ன இருந்தாலும் பாபம், இருக்காதா, ஏக்கம்! மனு மாந்தாதா காலத்திலிருந்து அனுபவித்து வந்த ஆதிக்கம் ஒழிகிறது என்றால், ஏக்கம் பிறக்கத்தான் செய்யும்! இவ்வ காலத்திலே பெற்ற சாம்ராஜ்யத்தை இழக்கவேண்டி வருகிறதே என்று சர்ச்சில் ஓலமிட்டது போல, இங்குள்ள சனாதனச் சர்ச்சில்களும் ஓலமிடுகிறார்கள்! அவர்களின் மன ஆறுதலுக்காகத்தான், பாபம்!!

✲

கோயிலை

14-ம் பக்கத் தொடர்ச்சி

...டிக்கு முரணான நிகழ்ச்சிகள், ஆகியவைகளைக் கொண்ட ஏடுகளை, புண்ய நூற்கள் என்றுகொண்டாடி, அவைகளிலே உள்ளவைகளைத் திருத்தி அமைத்துக்கொள்ளவும் திறனற்று இருந்தால், பலன் இல்லை—விளைவுகள் கேடானவைகளாகத்தான் இருக்கும்.

பக்தியுடன் பரமனை — பார்வதி நாயகனையாயினும் சரி, பாற்கடலிற் துயில்வோனாயினும்சரி, துதித்தால், அன்பால் அபிஷேகித்தால், அறநெறி நின்று ஆராதித்தால், அதுவே, அவன் அருளைப் பெறப் போதுமானதாகும், என்ற அரிய கருத்தையும் ஒருபுறம் கூறிக்கொண்டு, பக்தி மேலிட்டால், பௌத்த புனிதாலயத்தைக் கொள்ளையிட்டார் திருமங்கை ஆழ்வார், அவர் திருவடிகளே சரணம், என்றும், கதைகளைக் கூறி, ஒருசேர, மக்கள் மனதிலே, ஏன், இந்த இருவகை, முரண்பட்ட கருத்துகளையும் போட்டுக் குழப்ப வேண்டும் என்று கேட்கிறோம். கடவுள் சம்பந்தமாகவும், மதசம்பந்தமாகவும், ஏராளமான புராணங்கள் குவிந்து கிடப்பதால், ஏற்படும், மனக்குழப்பம், உண்மையிலேயே, மக்களின் மனதிலே மதத்தைப்பற்றிய தெளிவோ, கடவுளைப்பற்றிய கருத்தோ பதிவதற்கு இயலாதபடி செய்துவிடுகின்றன. புராணங்கள் ஏற்படுத்தும் 'பல கேடுகளிலே, மிக முக்கியமானது இது.

பௌத்தாலயத்தைக் கொள்ளையிட்டாலும் தவறில்லை, திருவரங்கத்துடையாருக்குத் திருப்பணி செய்தாக வேண்டும் என்ற விதமான பக்தி, திருமங்கை ஆழ்வாருக்கு—பூசலார் நாயனாருக்கோ, ஈசனுக்குக் கோயில் கட்டப் பொருள் இல்லை—பிறரைக் கேட்கவும் இல்லை—எங்கு பொருள் இருக்கிறது என்று தேடித் திருமங்கையார் வேலை செய்யவுமில்லை—மனதாலேயே, கோயிலைக் கட்டினார், மழுவேந்தியும் அதிலே குடி புகுந்தார், என்ற விதமான பக்திக்கதை இருக்கிறது — இரண்டும் ஒரே எடை-மதிப்பு-ஏற்றம் புனிதத் தன்மை! இரண்டு கதைகளையும், புண்ய கதைகள் எனப் போற்ற வேண்டும், மக்கள். என்ன கதியாவது அவர்கள் கருத்து! எதைக் கொள்வது, எதைத் தள்ளுவது! ஏன் இந்த விண்தொல்லை அவர்களுக்கு? விளக்கமாகவும், நடைமுறைக்கு ஏற்றதாகவும், பிறருக்குத் தீங்கோ, மனவேதனையோ மூட்டாததுமான, முறையைக் கூறிவிடக் கூடாதா—மக்களும் தெளிவு பெறுவர்—மார்க்கமும் மாண்பு பெறுமே! நல்வாக்குக் கொடுக்கும் குடுகுடுப்பைக்காரன் பலவித வர்ணமும் வகையும் கொண்ட, பல துண்டுத் துணிகளை ஒட்டித் தைத்து, அணிந்து கொண்டுள்ள சட்டை போலாகிவிட்டது, மார்க்கத்தைப் பற்றி மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள, புராணக்கருத்துரை! எதைப் பின்பற்றுவது என்பதறியாமல் திகைக்கிறார்கள்! ஏன், இந்தக் குழப்பநிலை!!

இதெல்லாம் இடக்கட்டும், திருமங்கை ஆழ்வார், புத்தாலயத்தை இடித்தார் என்று கூறுகிறாயே, அது உண்மைதானா, என்று சற்றுக் கோபத்துடன் கேட்கத் தோன்றும்.

"சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகக் கருதப்படும் வைஷ்ணவ அடியாரான திருமங்கை மன்னர், நாகப்பட்டினத்திலிருந்த புத்தர் ஆலயங்களை இடித்து அவ்விடத்தில் கிடைத்த தங்க விக்ரஹத்தை உருக்கி, அதைக்கொண்டு திருவரங்கத்து எம்பெருமானுக்குச் சேவை செய்தார் என்று வைஷ்ணவ சரித்திரங்கள் கூறுகின்றன"

இது 'பாபியேன்' சொல்வதல்ல; தினசரிமடல் 21—2—49ல் இதழில் உள்ள கட்டுரையில் காணப்படுவது.

இவ்விதமான பக்தி நியாயமா, தேவையா, நடைமுறைக்கு உகந்ததா என்று கேட்கிறோம். சோமநாதபுரம் கோயிலை இடித்த கஜனிமீது நாம் கோபம் கொள்கிறோம், இன்றும் சரிதத்திலே அதனைப்படிக்கும்போது பதைக்கிறோம்.

திருமங்கை, வைணவர்களுக்கு ஆழ்வார், சந்தேகம் இல்லை. ஆனால் பௌத்தர்கள், திருமங்கை ஆழ்வாரைப் பற்றி, என்ன எண்ணுவார்கள், என்று கேட்கிறோம்.

திருவரங்கம் சென்று தரிசிக்கும்போதும், பாசுரம் படிக்கும்போதும், திருமங்கை ஆழ்வாரின் பக்தியின் பெருமையை உணர்ந்து, பாராட்டுவர் வைணவர்கள்.

(அடுத்த பக்கம் பார்க்க)

சென்றவாரத் தொடர்ச்சி

செக்கோஸ்லோவேகியா

4

[அண்ணாதுரை]

தாய்மொழிக்கு ஏற்பட்ட தாழ்நிலையைப் போக்கி, மொழிப்பற்றின் மூலம் நாட்டுப்பற்று பெற்று, தாயகத்தைத் துருக்கரின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, மீண்டும் நாட்டுக்கு நல்லநிலை ஏற்படச் செய்தனர், செக்கோ நாட்டு விடுதலை வீரர்கள்.

ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தை உருக்குலைக்க, அவர்களின் வாழ்க்கை முறையைக் கெடுக்க, அவர்களின் மொழியைச் சிதைத்தால் போதும் என்று ஆதிக்கக்காரர்கள் எண்ணி திட்டமிட்டு வேலை செய்து வெற்றி கண்டனர். அந்தச் சூட்சமத்தை அறிந்து கொண்ட ஜான்ஹஸ் போன்றோர், தாய்மொழியை அரியாசனத்திருக்கச் செய்வதன் மூலம் தாயகத்தை விடுவிக்க முடியும் என்று திட்டமிட்டு வேலை செய்து வெற்றி பெற்றனர்.

மொழி அழிந்தது, வாழ்வும் குலைந்தது—மொழி தழைத்தது வாழ்வும் வளம் பெற்றது.

மொழி முனையிலேயே போராட்டம்! மொழி மூலமே வெற்றி தோல்வி, வாழ்வு தாழ்வு, தன்னாட்சி, வீழ்ச்சி என்று அமைந்த அற்புதமான வரலாறு, செக்கோ நாட்டினுடையது. வீறுகொண்டெழுந்து விடுதலை பெற்ற செக்மக்களின் வெற்றியின் காரணத்தை அறிந்துகொண்டவர் சகநிலையினர், மீண்டும் ஓர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர், செக்கோ நாட்டைச்சிதைக்க. அந்தச் சந்தர்ப்பமும் கிடைத்தது.

ஜான்ஹஸ், நாட்டுக்குப் புதிய நிலையை உண்டாக்கியவர்—எல்லாத் துறைகளிலும், அவருடைய முயற்சியினால் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட்டிருந்தோம். இதிலே அவருடைய உயிருக்கு உலை வைத்தது, மார்க்கத்துறையிலே அவர் மூட்டிய புரட்சி. கத்தோலிக்க பாதிரிமார்களின் போக்கை, ஆதிக்கத்தை, அவர் கண்டித்தார் அந்த மதக் குருமார்கள், கத்தோலிக்கர்கள் மட்டுமல்ல, ஜெர்மானியருமாவர்! எனவே ஜான்ஹஸ், அவர்களை எதிர்த்தபோது, அவர் ஒரே சமயத்தில், ஒரே தாக்குதலின் மூலம், இரு எதிரிகளை, இரு கேடுகளை ஒழிக்கும் ஒப்பற்ற காரியத்தைச் சாதித்தார்.

பாருங்கள்! மதகுருமார்களே! ஜெர்மன் ஆதிக்கக்காரர்களே! அவர்களின் பழைய நெறியும் வாழ்க்கையை, ஆதிக்க வெறியைக் கவனியுங்கள். அவர்கள் உங்களை ஆட்டிப் படைக்க ஏன் அனுமதிக்கிறீர்கள்! உங்கள் ஆத்மாவை அவர்களிடம் ஒப்படைக்கிறீர்களே—ஆண்டவனுக்கே சகிக்காதே இது—என்று ஜான்ஹஸ் பேசியபோது, மக்கள், மதக் குருமார்களின் மமதையையும் அதேபோது, ஜெர்மானிய ஆதிக்க வெறியையும், வெறுக்கவும், எதிர்க்கவும் முனைந்தனர். ஜெர்மன் ஆதிக்கமும் ஒழிந்தது — மதத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்திய கொடுமையும் ஒழிந்தது. அந்த நாட்களிலே, ஜான்ஹஸ் கூட்டத்தார் நடத்திய பிரசாரம் ஏறத்தாழ, இன்று சுயமரியாதைக் கட்சியினராகிய நாம் நடத்தும், பிரசாரம் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும்.

நாம் "ஆரிய ஆதிக்கம் ஒழிய வேண்டும்! பார்ப்பன ஆதிக்கம் ஒழிய வேண்டும்." என்று பேசும்போது, அயலாரின் ஆதிக்கத்தை ஒழிக்கும் வேலையையும் மதத்துறைக் கருவியாக்கக் கொண்டு மக்களை அடக்கும் கொடுமையையும் எதிர்க்கிறோம் என்பதானே பொருள்.

பார்ப்பனர்கள் இன்று பிறவிக் குருமார்களாகி, புரோகித வகுப்பாராகி இருப்பதுபோலன்றி, வேறோர் வகுப்பார், இதே நிலையிலிருந்து கொண்டு, இதே காரியம் செய்து வந்தால், நாம் எதிர்க்காமல் இருந்து விடுவோமா? ஒருக்காலும் இல்லை! பார்ப்பன வகுப்பினர், புரோகித வகுப்பினராக இருந்துகொண்டு ஆதிக்கம் செலுத்துவதால், புரோகித ஆட்சிமுறை பொதுமக்களைச் சுரண்டும் முறையானதால், அந்த முறையை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம், பார்ப்பன ஆதிக்

(11-ம் பக்கம் பார்க்க)

[முன்பக்கத் தொடர்ச்சி]

நாகப்பட்டினம் சென்று, தங்கள் ஆலயம் இருந்து இடிக்கப்பட்டுப் போனதை எண்ணும்போது, பௌத்தர்கள் மனநிலை எப்படி இருக்கும். திருவரங்கத்தாருக்குத் திருமங்கை செய்த திருப்பணி, புத்தர் கோயிலைகளை இடித்து தங்கத்தாலான புத்த விக்ரகத்தை உருக்கி எடுத்ததால்தான்—என்பதை அவர்கள் அறியும்போது, நம்மைப்பற்றி என்ன எண்ணுவர்?

இந்நிலைக்கும், புத்தமார்க்கம் அன்னிய நாட்டுடையதா! அல்ல! ஆத்தீகத்தை அழிப்பதா? அல்ல! பாரதவர்ஷத்தின் மார்க்கம்! இன்று நாம் போற்றிப் பொறித்திருக்கும் சக்கரச் சின்னத்தைக்கொண்ட அசோகனால் ஆதரிக்கப்பட்ட மார்க்கம். அரசாணையை அந்தஸ்தை, அழகு மனைவியை அருமைக் குழந்தையை விட்டுப்பிரிந்து, அடவிகளில் அலைந்து, அறநெறியைக் கண்டறிந்து அவனி உய்யக் கூறிய உத்தமன் நீட்டிய திருநெறி. அத்தகைய புத்த மார்க்கத்தவரின் ஆலயம், பகை காரணமாக அல்ல படையெடுப்பினால் அல்ல, பௌத்தர்கள், வைணவத்தை அழிக்க முனைந்தனர் என்ற காரணம் ஏதேனும் இருந்ததால் அல்ல, திருவரங்கத்தாருக்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் திருமங்கை ஆழ்வாருக்கு இருந்ததால், இடிக்கப்பட்டது — தங்க விக்ரகம் உருக்கப்பட்டது, இத்தகைய பக்திக்கு, இக்காலம் இடமில்லை—ஏற்பார் இல்லை—இக்கலியில். இவ்விதமானதும் நிந்தைக்கிடமானதுமான பக்தி முறைகளை வலியுறுத்தும் பழங்கதைகள், ஏன், புண்ய ஏடுகள் என்று கேட்கிறோம். தவறா?

○

இரும்பு மனிதர் தரும் கரும்புச்சாறு!

★

கரேன்ஸ்தான்.

பர்மாவில், சர்க்கார் படைகளைத் தோற்கடித்துவரும் நிலையில், கரேன் வகுப்பாரின் கோரிக்கையான, கரேன்ஸ்தான் எனும் தனிநாட்டை அவர்கள் அமைத்துக் கொள்வதை ஏற்றுக்கொள்வதாக, சர்க்கார் கமிஷன் கூறியிருக்கிறது.

பர்மாவில் உள்ள கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, இங்கு குழப்ப நிலையை உண்டாக்க, இந்நாட்டு கம்யூனிஸ்டுகள் சதித் திட்டம் தயாரித்திருந்தனர் என்றும், இந்தத் தகவலைச் சர்க்கார் கண்டறிந்து முளையிலேயே கிள்ளிவிட்டதாகவும், புது டில்லியிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

பர்மாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு சீனாவிலுள்ள கம்யூனிஸ்டுகளின் தொடர்பும் உதவியும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மலேயாவிலே, பல பகுதிகளிலே கம்யூனிஸ்டு முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், பலாத்காரம் தலைவிரித்தாடுவதாகவும் கூறப்படுகிறது.

சயாமில், கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் புகுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன என்றும், கருவிலேயே இந்த முயற்சி அழிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவிலே, விடுதலைப் போர்ப் படையிலேயே பிளவு ஏற்பட்டுவிட வேண்டிய முறையிலே, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு ஓங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது.

திபெத்—நேபாளம்—ஆப்கனிஸ்தான்—போன்ற எல்லை நாடுகளிலே, கம்யூனிஸ்டுகள், முகாம்கள் அமைத்துக்கொள்ள முயற்சிகள் நடைபெறுவதாக, விஷய மோப்பம் பிடிப்பவர்கள், திடுக்கிடும் தகவல்களை வெளியிடுகிறார்கள்.

ஹைதராபாத் சமஸ்தானத்திலே சில பகுதிகளிலே, கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம், காங்கிரஸ்காரரின் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய விதமாக வளர்ந்துவிட்டதாகக் கூறப்பட்டு, கம்யூனிஸ்டுகளை 'வேட்டை'யாடிப் பிடிக்க, போலீஸ், ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஹைதராபாத்தில் தங்கள் ஆதிக்கத்தில் சிக்கியுள்ள இடங்களிலே, கம்யூனிஸ்டுகள் இதுவரை 250 காங்கிரஸ்காரர்களைக் கொலை செய்ததாக சர்தார் படேல் கூறுகிறார்.

சயாமில் கம்யூனிஸ்டு! பர்மாவில் கம்யூனிஸ்டு! ஹைதராபாத்தில் கம்யூனிஸ்டு!—இங்கு, அங்கு, எங்கு பார்ப்பினும் கம்யூனிஸ்டுகளின் கரம் வலுத்து வருவதாகக் கூறப்படுகிறது—அந்தக் கரம், இரத்தக் கறை படிந்திருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது—இந்த ஆபத்தை அறிந்து ஆவன செய்ய, என்று ஆட்சியாளர்கள் கூறியபடி உள்ளனர்—எச்சரித்த வண்ணம் உள்ளனர்.

ஹைதராபாத்திலே, விமான மூலம், துண்டுப் பிரசுரங்கள் வீசப்படுகின்றன பொதுமக்களுக்கு, கம்யூனிஸ்டுகளால் ஏற்படக்கூடிய பேராபத்தை விளக்கி. உயிர் போகும்! உடைமை போகும்! உரிமை போகும்! குடும்ப நாசமாகும்! சட்டம் சரியும்! சாந்தி குலையும்! இரத்தம் ஓடும்!—என்று மக்களுக்குக் கூறப்படுகிறது. தலைவர்களின் பேச்செல்லாம், கம்யூனிஸ்டு அபாயத்தைத் தடுக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியதாகவே இருந்திடக் காண்கிறோம். பலாத்காரம், குழப்பம், உள்நாட்டுப்போர், போட்டி சர்க்கார், ஆகிய முறைகள் நிச்சயமாக, ஒரு நாட்டை, அதிலும் விடுதலையைப் பெற்று அதிக காலமாகாத இந்தியா போன்றதோர் பெரிய தேசத்தை, நாசமாக்கிவிடும், என்பதை எந்த நல்லறிவாளரும் மறுக்கமுடியாது. சீனாவின் சீரழிவும், பர்மாவின் குழப்பநிலையும், ஒரு நாட்டுக்கு வேதனையையும் வீழ்ச்சியையும் தரக்கூடிய ஆபத்துகள் என்பதில் ஐயமில்லை. எனவே, பலாத்காரமும், உள்நாட்டுக் குழப்பமும், இங்கு தலைகாட்ட முடியாத வண்ணம், தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது, எந்த பொறுப்புள்ள சர்க்காருக்கும் இன்றியமையாத கடமைதான். எனவே, பலாத்காரத்தினால் ஏற்படக்கூடிய கொடுமைகளையும், நாட்டிலே குழப்ப நிலை மூண்டுவிட்டால், மக்களுக்கு உண்டாகக்கூடிய வேதனைகளையும், எடுத்துக்காட்ட வேண்டியதும், மக்கள், விவரமறியாமல், அவ்விதமான அழிவுப் பாதையில் சென்றுவிடாதபடி பார்த்துக் கொள்வதும் ஆட்சியாளர்களின் பொறுப்புதான்—ஆனால், கம்யூனிஸ்டுகள் குழப்பநிலை உண்டாக்கினால் ஏற்படக்கூடிய 'பயங்கரங்களை'க் கூறுவதே போதும், கம்யூனிஸ்டு செல்வாக்கைக் கருவறுக்க என்று கருதினால், சர்க்காரின் போக்கு, பைத்தியக்காரத்தனமாகத்தான் இருக்கும்.

கம்யூனிஸ்டுகளால் விளையக்கூடிய ஆபத்துகளைப் பன்னிப் பன்னிப் பேசுவதிலே, உலகிலே முதற் பரிசு, சர்ச்சிலுக்கு! இரண்டாவது இடம் அமெரிக்கத் தலைவர்களுக்குக் கிடைத்து வருகிறது. அவர்கள் பேசுகிற முறையிலேயே, இங்கும், 'பயங்கர விளைவுகள் ஏற்படும்—நாசம் நர்த்தனமாடும்—இரத்தம் ஆறாக ஓடும்' என்று பேசுவது, ஏகாதிபத்ய பல்லவியைக் குருவிடம் கற்றுப் பாடும் சீடரின் கீதம் போல ஆகிவிடக்கூடாது என்று ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

கம்யூனிஸ்டுகளால் நாசம் விளையும் என்பதையே பிரமாதப்படுத்திப் பேசினால், பயனில்லை—அவர்களை வேட்டையாடிக் கூண்டிலே தள்ளிவிடுவதால் மட்டும் பயன் கிடைக்காது—பொதுவுடைமை ஆட்சியைவிட இராமராஜ்யம் சிலாக்கியமானது என்று தத்துவ விளக்கம் கூறினால் மட்டும் பயன் ஏற்பட்டுவிடாது—கம்யூனிஸ்டுகள் எந்தக் காரணங்களால் செல்வாக்குப் பெறுகிறார்கள், அவர்களின் செல்வாக்கு வளருவதற்கு என்ன காரணம், என்பதைக் கண்டறிந்து ஆவன செய்வதே, அறிவும் திறனும் கலந்த செயலாகும்.

திப்பிடித்தெரியும் நகரம், திக்கு பலவற்றுக்கும் திகைத்து ஓடும் மக்கள், காய்ந்துபோன வயல்கள், அங்கு பிணங்கள், அவைகளைக் கொத்தித் தின்னும் வல்லூறுகள், எனும் இத்தகைய பயங்கரக்காட்சிகள் ஏற்பட்டுவிடும் கம்யூனிஸ்டுகளின் திட்டமான குழப்பம் நேரிட்டால், என்று கூறுவதுதான், பலன் தரக்கூடிய பிரசாரம் என்று ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். மிக மிகத் தவறான போக்கு இது.

எப்போதோ எவராலோ நேரிடக்கூடிய ஆபத்துக்களைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறீரே, பிரமுகர்களே! வருங்கால விபத்துகள் கிடக்கட்டும், இப்போது என்ன வாழுகிறது இங்கே! உணவு இல்லை—உடை இல்லை—வீடு இல்லை, வாசல் இல்லை—வேலையில்லை வாழ்க்கையில் துளியும் வளமில்லை—வதைகிறோம்—இது கண்முன் இருந்து கலக்கும் காட்சியாக இருக்கிறது—நாங்கள் இந்தப் பாடுபடும்போது, நிஜாமும் அவருடைய நவரத்னங்களும், மகாராஜாக்களும் அவர்களின் தர்பார் மந்தகாசங்களும், முதலாளிகளும் அவர்களின் பணமூட்டைகளும், இருக்கவும் தான் காண்கிறோம்—எங்கள் மனம் குளிரும் என்றா எண்ணுகிறீர்கள் இதைக் கண்டு! வீணாக எம்மை மிரட்டாதீர், எப்போதோ ஏதேதோ ஆபத்து வரும் என்று கூறி, இப்போதுள்ள நிலையை நாங்கள் இனியும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று வாதாடுவது முறையல்ல—புலி உறுமுகிற சத்தம் கேட்கிறதா—அதைக் கவனி—அதன் கோரப்பற்களை எண்ணிப்பார்—என்று கூறி புலியிடமிருந்து தப்பவேண்டுமானால், என்னை விரட்டும் வேலையைச் செய்து கொண்டிராதே என்று ஓராய் உபதேசம் செய்வது முறையாகுமா! ஆட்சியாளர்களே! எமது கண்முன் தெரியும், வாழ்வை வதைக்கும் கொடுமைகளைக் கவனியுங்கள்—வறுமை எனும் ஓநாயை ஓட்டுங்கள், அதனை உலவவிடும் சுரண்டல் காட்டை அழியுங்கள்!—என்று எழுந்து பேசமுடியாது—ஆனால் எண்ணுகிறார்கள்.

அந்த எண்ணம் தான் கம்யூனிஸ்டுகளின் சக்தி வளரும் காரணம். அந்தக் காரணம், பொதுஜன பாதுகாப்புச் சட்டம், புலன் விசாரிக்கும் போலீஸ், குறி தவறாது சுடும் இராணுவம், இவைகளுக்கு மேலான வேகமும் திறனும் கொண்டது.

எனவே ஆட்சியாளர்கள், வருங்கால விபத்துகளை, மதவாதிகள், நரகலோக வர்ணனையைக் கூறுவது போலக் கூறிக்கொண்டே இருந்துவிட்டால் போதும் என்று இருந்துவிடாமல், கண்முன் தெரிவதும், கம்யூனிஸ்டுகள் எடுத்துக் காட்டுவதும், மக்களின் மனதிலே உறங்கிக் கொண்டிருக்கும் மிருகத்தைக் கிளப்பிவிடக் கூடியதுமான, கொடுமையும் மடமையும் நிரம்பிய நிலைமைகளை மாற்றத் துணிவுடன் முயற்சிக்கவேண்டும்.

ஸ்தாபனபலம், பிரசாரபலம், ஆட்சிபலம், இவைகளே போதும், கம்யூனிஸ்டுகளை ஒழித்துக்கட்ட என்று எண்ணுவது, ஏகாதிபத்ய முறை. நமது நாட்டுத் தலைவர்கள் அம்முறையைக் கையாளாமல், உடனடியாகத் திட்டமிட்டு, பணிபுரியக் கிளம்பவேண்டும், பெரும்பான்மையினரின் வாழ்க்கையிலே உள்ள வேதனைகளைப் போக்க. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு வளர்ந்தால், பலாத்காரம் தலைவிரித்தாடும், இரத்தம் ஓடும், ஆகவே பொதுமக்களே! கம்யூனிஸ்டுகளை வேட்டையாடுங்கள்!—என்று பிரசாரம் செய்வதைவிட, இந்திய துணைக்கண்டத்திலே உள்ள ராஜாக்கள், ஜெமீன்தாரர்கள், முதலாளிகள், சுரண்டல் யந்திரக் காவலர்கள் ஆகியோருக்குக் கூறவேண்டும், கம்யூனிஸ்டுகளின் கரம் வலுத்தால், உன் மகுடமும் இராது, ஆலை அரசும் இராது, பெட்டி மிட்டா மிராசு இராது, பெட்டி பேழையில் தூங்கும் தங்கப் பாளங்கள் இராது, ஆகவே இருக்கும் முறையை மாற்று! சுரண்டலை நிறுத்து!—என்று இடித்துரைக்க வேண்டும்—வருங்கால ஆபத்தை எடுத்துக்காட்டி, இன்று ஆட்சியாளர்களைத் திகைக்கச் செய்யும் 'சுகவாசிகளை' வழிக்குக் கொண்டுவர வேண்டும்! பயங்கர நிலைமையினால் புரட்சியினால், ரஷியச் சீமான்கள் உயிர் தப்பினால்போதும் என்று ஐரோப்பாவில் பல பாகங்களுக்கும் ஓடிய 'சேதி'யைக் கூறி—வேண்டாமா, நேருவையும் படேலையும், நில்! நமது கேள்விக்குப் பதில் சொல்! என்று கேட்குமளவுக்குத் துணிவு கொண்டுவிட்ட, சுரண்டல் போக்கி வருக்கு!

இந்த முறையைக் கையாளாமல், ஆடக்கறக்கவேண்டிய மாட்டை அடித்தும், அடித்துக் கறக்கவேண்டிய மாட்டின் முன் ஆடியும் வருகின்றனர் தலைவர்கள்.

அவர்களின் இடிமுழக்கம்—தீப்பொறிப்பேச்சு—கட்டளை—தாக்கீது—யாவும் பட்டாளிகளின் கூட்டத்திலே—பொதுமக்களிடம்!

இன்சொல்—விளக்கவுரை—கோரிக்கை—வினயம்—வேண்டுகோள்—யாவும், மேட்டுக்குடியினர், காட்டுராஜாக்கள் முன்னிலையில்!

இதுவா, கம்யூனிசத்தைத் தடுக்கும் முறை!!

எவ்வளவு துணிவும் புது நம்பிக்கையும் இருந்தால், தொழிலதிபர்கள், வெளிப்படையாகக் கூறுவர், இலாபமே எமது நோக்கம்—இதனைக் குறைக்கும் முறையைச் சர்க்கார் கொண்டால், நாங்கள் பணம் போட்டுத் தொழில் நடத்தமாட்டோம்—என்று!

உபசாரத்துக்குக்கூட அவர்கள், கூற மறுக்கிறார்களே இப்போது, நாங்கள் நாட்டு மக்களுக்காக உழைக்கிறோம் என்று.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம்—நேற்று சர்தார் முன்னிலையில் பேசியது போலவே—தொழிலதிபர்கள், துணிவுடன் பேசுகிறார்கள்.

1. சர்க்காரே, தொழில்களை எடுத்து நடத்தப் போவதாகப் பேசக்கூடாது.

2. வரி, குறைக்கவேண்டும்.

3. தொழிலாளரை அடக்க வேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு
ஞாயிறு] 27—2—49 [காஞ்சி

முகாம் அமைக்கிறார்கள்!

✻

"இம் மாகாணத்தில் பிராமணர்கள் மீது பிறவகுப்பாருக்குக் கெட்ட எண்ணம் ஏற்படும்படிச் செய்யப்பட்டு வருகிறது. இதை அலட்சியமாக விட்டு விடக்கூடாது. முளையிலேயே கிள்ளி விட வேண்டும்"

சேலம் 'பிராமண' மாநாட்டினர் இவ்விதம் பேசியும் தீர்மானித்தும் இருக்கிறார்கள்.

ஏகாதிபத்ய தாசராக இருந்து, பதவிகளில் புரண்டு பழுத்த கிழவராக இருக்கும் விஜயராகவாச்சாரியார் தலைமைதாங்கினார், இந்தத் தர்ப்பாசூரர் மாநாட்டுக்கு! தென்னாட்டிலே பெரிய முதலாளியாகி உள்ள மோட்டார் சுந்தரம் ஐயங்கார், திறந்துவைத்தார் இந்தத் திருப்பிரம்மங்களின் மாநாட்டை.

'பிராமண மாநாடு', பிரம்மணீயத்தை எப்படி வளர்ப்பது, என்பதற்காக என்றால், பதவி காரணமாகவும், பணம் தேடுவது காரணமாகவும், படிப்படியாகப் 'பிராமண தர்மத்தை' இழந்துபோக வேண்டிய நிலைபெற்று விட்டவர்கள், கூடிக் கலந்து பேசிப் பயன் என்ன?

'பிராமணன்' என்னவிதமாக இருக்கவேண்டும் — அவனுடைய வாழ்க்கைமுறை எப்படி இருக்க வேண்டும், என்று அவர்கள் போற்றிப் புகழ்ந்துவரும் ஏடுகளிலே குறிப்பிட்டுள்ள இலட்சணங்களை இழந்தவர்களும், அந்த இலட்சணங்களின்படி இந்நாட்களில் வாழமுடியாது என்பதை அறிந்துகொண்டவர்களும், மாநாடு கூடி, "பிராமணியத்தை"ப் பாதுகாக்க முற்படுவது, மொட்டைத் தாதர்கள் கூடிக்கொண்டு, கூந்தலின் நேர்த்தியைப் பற்றிப் பேசி வழிவகுப்பது போன்றது தான்!

பிராமண தர்மத்தின்படி நடந்துகொள்ளாமல், ஆசாரத்தை அறியாமல், வாழ்ந்துவரும், தமது இனத்தவரை, அவர்களிலே ஆச்சார அனுஷ்டானம் அறிந்தவர்கள், அவைகளிலே அக்கறை கொண்டவர்கள், மீண்டும் அந்த ஆச்சாரம் துலங்கவேண்டும் என்பதிலே ஆவலுள்ளவர்கள், யாரார் எவ்வெவ் வகையில், என்ன காரணங்களால், பிராமணனுக்குரிய தர்மத்தினின்றும் வழுகிவிட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய விசாரணை நடத்தி, திருத்தம் கூறியோ, கண்டித்தோ அவர்களை, 'பிராமண தர்ம மார்க்கத்துக்குத் திருப்பி அழைத்துச் செல்லும திருப்பணியிலே ஈடுபட்டால், நமக்கு ஆட்சேபனை இல்லை — வேடிக்கையாக இருக்கும் 'பிராமண தர்மத்தை' இழந்த பிராமணர்களின் பட்டியலை நாம் கூட, மாநாட்டினரின் உபயோகத்துக்காகக், தரமுடியும்—அவர்கள் திடுக்கிடும் வகையான தகவல்களை, ஆதாரங்களைக் காட்டமுடியும். மாநாடு பிறகு நடைபெறுமா என்பதே சந்தேகம் ஆகிவிடும், ஏனெனில், 'பிராமண தர்மம்' என்று அவர்களின் ஏடுகளிலே குறிப்பிட்டுள்ள முறையிலே வாழ்ந்துவரும் 'பிராமணர்' நாற்றில் ஒருவர்கூடக் கிடையாது.

நமது பெண்கள் பரதநாட்டியம் ஆடுவது கூடாது—என்று ஆக்கத்துடன் பேசவேண்டிய நிலைக்கு வந்துவிட்ட இந்நாளிலா, 'பிராமண தர்மம்' பாதுகாக்கப்பட முடியும்!

உண்மையான 'பிராமண தர்மம்' எப்படிப்பட்டது என்பதைப் பற்றி விவாதிக்காமலே, வாதத்துக்காக ஒப்புக்கொண்டு, நிச்சயமாகவே, 'பிராமண தர்மத்தை'க் காப்பாற்றும் நோக்கம் கொண்டிருந்தால், இப்போது கூட்டியது போன்ற மாநாடுதானா, அதற்கான வழி? மாநாட்டை முன்னின்று நடத்துபவர்கள் தானா, அந்தத் 'தர்மத்தை'க் காப்பாற்றக் கூடியவர்கள், என்று கேட்கிறோம். எப்படிப்பட்ட பழைமை மனப்போக்கினரும், இன்று அறிவர், பிராமணர்கள் பிராமணருக்கு உரிய தர்மத்தின்படி நடக்கவில்லை—நடந்துகொள்ள முடிவதில்லை, என்பதை.

சற்றுத் தெளிவுள்ளவர்கள் அந்த நாட்களிலே, 'பிராமணனுக்கு'க் குறித்துள்ள தர்மம், மட்டுமல்ல, எந்தக் குலத்துக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள தர்மமும், இக்காலத்திலே நடைமுறைக்கு, ஏற்றதல்ல என்பதை அறிவர்.

தெளிவு இன்னும் சற்று அதிகமாகப் பெற்றவர்கள், குலதர்மத்தை அனுசரிக்க முடியாது என்பதை மட்டுமல்ல, 'குலதர்மம்' வகுக்கப்பட்ட காலம், சமுதாயத்தின் குழந்தைப்பருவ ஏற்பாடு—சமுதாயம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியிலே, அந்தத் தர்மங்கள் வெறும் கேலிக் கூத்துத்தான் என்பதை அறிவர்.

மேலும் கொஞ்சம் பகுத்தறிவு பெற்றவர்கள், இந்தக் குலதர்மம்—ஜாதி -ஆச்சாரம்—எனும் ஏற்பாடுகளே, சூதானவை, சுரண்டல் முறை, ஒரு குலத்தின் உயர்வுக்காக வகுக்கப்பட்ட சூழ்ச்சித் திட்டம் என்பதை அறிவர்.

சற்று மான உணர்ச்சி உள்ளவர்கள், இந்த முறையை முறியடிப்பதை, வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்வர்.

நிலைமை இப்படியிருக்க, பிராமணர்கள் மாநாடு கூட்டுகிறார்கள், பதவியில் புரண்ட ஒரு கிழவரையும் பணப்பெட்டிகளின் மீது படுத்துறங்கும் மற்றோர் பிரமுகரையும் அழைத்து வைத்துக்கொண்டு. 'பிராமண மாநாடு' நடத்துகிறார்கள் என்றால், உண்மையில், பிராமண தர்மத்தைக் காப்பாற்றவோ, ஆச்சாரத்தை நிலைநாட்டவோ, அல்ல! ஆனால் ஏன், கூடினார்கள்? அவர்களுக்கு, உண்மையாகவே, பழைய கால பிராமணராக, கோலத்தில் கோட்பாட்டில், வாழ்க்கையில், இருக்கும் நோக்கமா, என்றால், நிச்சயமாக நோக்கம் அது அல்ல— அவர்களின் நோக்கம், ஆச்சாரத்தைப் பற்றியதல்ல, ஆதிக்கத்தைப் பற்றியது!

சமுதாயம் மாறிவிட்டது — மக்களின் மனப்போக்கு மாறிக்கொண்டே இருக்கிறது — இவர்களும் கூடத்தான்! — இந்த மாறுதலின் காரணமாக, முன்பு இந்த ஜாதியாரால், எளிதிலேபெறமுடிந்த ஆதிக்கம் இன்று பெறமுடியவில்லை—அதனால்தான், மாநாடு கூட்டுகிறார்கள்—படிசஞ்சியின் மகத்துவத்தை மாநிலத்துக்கு அறிவிக்க அல்ல—மயிலை திருவல்லிக்கேணிக்கே அறிவிக்க முடியாது—ஆதிக்கம் அழிந்துபடுவதைத் தடுக்கும் முயற்சிக்காக மாநாடு கூட்டுகிறார்கள்.

'சேலம் பிராமண மாநாடு' ஆதிக்கம் செலுத்திவந்த ஒரு கூட்டம், நாட்டிலே ஏற்பட்டுவரும் புதிய போக்கின் காரணமாகத் தமது ஆதிக்கம் குறைவது கண்டு, கூடி அழுவதற்கு, ஆத்திரத்தைக் கொட்டிக்கொள்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டதே யொழிய, உண்மையிலேயே, 'பிராமண தர்மம்' என்று ஏடுகளிலே குறிப்பிடப்பட்டுள்ள முறை பாழாகிறதே என்பதனால், மனம் பதறிக் கூட்டப்பட்ட மாநாடு அல்ல!

'பிராமண மாநாட்டுக்கு' 'பிராமண தர்மம்' தெரிந்த நிபுணர்களல்ல, முன்னணி நிறுத்தப்பட்டவர்கள்—சர்க்காரிலே செல்வாக்கு உள்ள ஒரு, சர்!—ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டால், அதற்கான செலவுக்குப் பணம் தரக்கூடிய ஒரு முதலாளி!— வேதம் ஓதித் தேர்ச்சி பெற்றவரோ, உபநிஷத்தின் உட்பொருளை அறிந்தவரோ, அல்ல, மாநாட்டுக்கு, முன்னணி நின்றவர்கள்.

ஒரு சமயம், தங்கள் அச்சத்தைப் போக்கிக்கொள்ள, ஆறுதல் பெற, அந்தச் 'சர்'ரையும் ஒரு சீமானையும் கொண்டுவந்து நிறுத்தி அழகுபார்த்தனரோ என்னமோ, நாமறியோம்.

ஒருசமயம் அச்சமூட்டுகிறார்களோ, எமது ஆதிக்கத்தைக் குலைக்கிட முயற்சிக்கும் பேர்வழிகளே! ஜாக்ரதை! இதோ பாருங்கள், எம்மிடம் உள்ள குலமணிகளை, சர். விஜயராகவாச்சாரியார் — சீமான் சுந்தரம் ஐயங்கார்! — இவர்களைக் கொண்டு, உங்களை என்னென்ன பாடுபடுத்துகிறோம் பாரீர், என்று மிரட்டுகிறார்கள் போலும்.

காலம் உணராதவர்களாக இருப்பின் அவர்கள் அவ்விதம் எண்ணிக்கொள்ளவுங்கூடும். ஆனால் இது சர்கள், சீமான்கள், ஆகியோரின் சீற்றத்தைக்கண்டு சிர்திருத்தவாதி பயப்படும் காலமல்ல.

ஒருவகையிலே, பார்க்கும்போது "பிராமணர்கள்" தங்கள் ஆதிக்கத்தைப் புதுப்பித்துக்கொள்ள, ஒரு தனிமுயற்சி எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதே, நமக்குக்கிடைத்து வரும் வெற்றியின் அறிகுறி என்று கூறுவோம்.

பிரம்பஞான சங்கம்—சநாதனசமாஜம்—மகாஜனசங்கம்—தேசியக் காங்கிரஸ்—என்ற பல்வேறு பேர்வைகளும் பயனற்றுப்போய், பச்சையாகவே, 'பிராமண மாநாடு' நடத்த வேண்டிய நிலைக்கு, வந்திருப்பதே, நமது வெற்றிகளில் ஒன்று என்றே நாம் கருதுகிறோம்.

அதிலும் தங்கள் ஆதிக்கத்தைப் புதுப்பிக்க, இவர்கள் என்ன செய்கிறார்கள் யாகம் செய்து பூதத்தைக் கிளப்பி ஏவுற காரியமா? சாபம் கொடுத்து, சர்வநாசத்தை ஏவும் காரியமா? அலல! அல்ல! அந்தக் காலம் மலையேறிவிட்டது! சர்ரையும் சீமானையும் ஏவிப் பார்க்கிறார்கள்!—அதுவும் சர்களும்சீமான்களும் தம்அனுபவகாலம் கருகவிட்ட பிறகு! 'மகாமேதாவிகள்' என்று கூறுவர் இந்த 'பிராமணர்களை'!தவறு—மிகமிகத்தவறு — குதிரை பறிபோனபிறகு கொட்டிலைப் பூட்டும் மந்தமதியினைவிட, மட்டரகமான மனப்போக்கு ஏற்பட்டுவிட்டது—வீழ்ச்சியின் அறிகுறி.

என்ன செய்துவிடுவார் சர்.விஜயராகவா! சர்க்காரிடம் தமக்குள்ள செல்வாக்கின் காரணமாக, வகுப்புவாரி நீதியை ரத்துசெய்யச் செல்வார். இவ்வளவுதானே செய்வார்? இதுவும் முடிகிறதா — காங்கிரஸ் திராவிடர்கள் சும்மா இருந்துவிடுவார்களா என்பது வேறு பிரச்னை—முடிகிறது, என்றேவைத்துக்கொண்டாலும், அதன்விளைவு என்னாகும்? தீர்மானம் நிறைவேற்றினார்களே மாநாட்டில் பிராமண ஜாதியார்மீது மற்ற வகுப்பாருக்கு விரோத உணர்ச்சி ஊட்டப்படுகிறது என்று, அந்தவிரோத உணர்ச்சியை ஊட்டிக்கொண்டிருக்க வேண்டியதில்லை எவருக்கும்! தானாகத்தழைக்கும்! தடுக்க முடியாத அளவு தழைக்கும்!!

இப்போதாவது, வகுப்புவாரியாக உத்தியோகம் தரும் முறையும் கல்வி வசதி ஏற்படுத்தித்தரும் முறையும் இருப்பதால், மற்றவகுப்பார்களிலேயும், கல்வி பெறவும், உத்தியோகம் பெறவும் குறிப்பிட்டத்தக்க அளவுக்கு முடிகிறகாரணத்தால, எங்கு பார்த்தாலும் 'பிராமண ஆதிக்கம்' என்ற பேச்சுக்கு இருந்துவந்த பயங்கரச் சக்தி ஓரளவுககுக் குறைந்திருக்கிறது. எல்லாவகுப்பாரிலும்தானே, படிக்கிறார்கள், என்று பேசமுடிகிறது-சாந்தி உண்டாக்கச் சௌகரியம் ஏற்படுகிறது. சர்ரையும் சக்கரச் சீமானையும் துணைகொண்டு, வகுப்புவாரிப்பிரதிநிதித்வ முறையை ரத்து செய்துவிட்டால், பிறகு, அணைக்க முடியாத 'ஜ்வாலை' கிளம்பப் போகிறது! இந்தக் கேட்டினைத்தான், தேடித்தேடி அழைக்கிறார்கள். தாராளமாகச் செய்யட்டும். நாம் தடுக்கப் போவதில்லை!

சேலம் மாநாட்டின் மூலம், அவர்கள் ஏதாவது வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப்படுவதானால், நாம் முதலில் குறிப்பிட்டபடி, பழைய முறையை, குலதர்மத்தைக் காப்பாற்றும் காரியத்திலே வெற்றிபெற முடியாது — உத்யோகத்தைப் பறித்துக்கொண்டு, அதன் மூலம் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக, கம்யூனல் ஜி. ஓ. வை, ரத்துசெய்ய வைப்பது, என்ற வெற்றியைப் பெறலாம். நேருசர்க்காரின் துணைகொண்டு இந்த வெற்றியைப் பெறமுடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள், அந்த 'வெற்றி'யே, தங்களுக்கு வீழ்ச்சியைத் தரப்போகிறது என்பதை; பாபம், உணரவில்லை! எதையோ, முளையிலேயே கிள்ளி விடவேண்டும்' என்றுபேசினார்களே, அதற்காக, அவர்கள் கையாள நினைக்கும் காரியம், எங்கெங்கிருந்தெல்லாமோ அவர்களை எதிர்க்கும் சக்தியைக் கிளப்பிவிடும் விளைவைத்தான் உண்டாக்கப் போகிறது. வேணுமானால் செய்தே பார்த்துவிடட்டும்.

உண்மையாகவே, நாம் இம்முறை, அவர்களின் மாநாடு, உருவான, ஓர் காரியமாற்றும் என்று நம்பினோம்—நம்பும் விதமாக, சேலம் பிராமண சேவாசங்கச் செயலாளர் நடந்து கொண்டார்.

இந்தப் பேதஉணர்ச்சியும், எதிர்ப்புப் பேச்சும், இனியும்இருக்கத்தான் வேண்டுமா, ஏதேனும் ஓர் சமரசத்துக்கு வர இயலாதா, தீர்க்கப்படவே முடியாத சிக்கல்களா உள்ளன, என்று நாம், உண்மையாகவே சிந்திக்கும் ஓர் சூழ்நிலை உண்டாயிற்று, ஒரு சிறு சம்பவத்தின் காரணமாக.

ஒரு திங்களுக்கு முன்பாக, நமது தலைவர் பெரியார் ராமசாமிக்கு, சேலம் பிராமண சேவாசங்கத் தலைவர், பாலசுப்பிரமணிய ஐயர் என்பவர் ஓர் கடிதம் அனுப்பி இருந்தார்.

நம் நாட்டிலே மேலோங்கி வரும் பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியைப் பற்றிய தமது கருத்தைத் தெரி

வித்ததுடன், பெரியாரின் பெருந் தொண்டினைப் பாராட்டி, அவருடைய சீர்திருத்த நோக்கத்தைப் புகழ்ந்து, அவருடைய தலைமையின் கீழிருந்து பணி புரியும் வாய்ப்புக் கிடைக்குமானால் அதனைப் பெரிய தோர் பாக்கியமாகக் கருதுவதாகக் குறிப்பிட்டு விட்டு, பிராமண சேவா சங்கச் செயலாளர், சமரசமாகப் போவதற்கு வழி காணவும் சிக்கல்கள் இருப்பின் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதற்கும், பெரியாருடன் நேரில் கலந்துபேச விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சிறு சம்பவம், நமக்கு ஓர் நம்பிக்கையை ஊட்டிற்று.

குடந்தையில் நடைபெற்ற கூட்டத்திலே, பெரியார் அவர்களும் இக்கடிதத்தைக் குறிப்பிட்டு, சமரசமாகப் போவதிலே தமக்கு எப்போதுமே ஆட்சேபனை இருந்ததில்லை என்று பேசினார்.

இப்படிக் கடிதம் எழுதியவர், மாநாடு கூட்டி, அதிலே மீண்டும், வகுப்புவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்று, தீர்மானம் நிறைவேற்றினால், இதைவிடக் கொடுமையான காரியம், என்ன? மாநாடுதான் கூட்டினாரே, அதிலே, தமது 'கடிதத்தைப்' பற்றிப் பேசி, பெரியாரைச் சந்தித்துப் பேச, ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ஒரு சிறு கமிட்டி அமைத்திருந்தால், எவ்வளவு நல்லறிவு படைத்த காரியமாக இருந்திருக்கும்.

இதைச் செய்ய மறந்தார், சர்க்காரையும் மொரார்ஜியும் காட்டி, சல்லடம் கட்டிப் பார்க்கிறார்.

சேலம் பிராமண மாநாடு, அந்த வகுப்பாருக்கு, இன்னமும், ஆதிக்க நோக்கம் இருப்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான் பயன்பட்டதே ஒழிய, பிற வகுப்பாருக்கு உள்ள கெட்ட எண்ணத்தைப் போக்கப் பயன்படவில்லை—பயன்படாது! மூன்றாம் அமைக்கிறார்கள் முப்புரியினர்—என்றுதான் மக்களை எண்ணச் செய்யும் அவர்களின் மாநாடு.

●

இரும்புமனிதர்

7-ம் பக்கத் தொடர்ச்சி

அனிவாகக் கூறுகிறார்கள்! இவைகளைச் செய்யாவிட்டால், 'வேலை நிறுத்தம் செய்வோம்' என்று மிரட்டுகிறார்கள். பணம் போடமாட்டார்களாம் தொழிலில்! தொழிலகளிலே அக்கறை எடுக்கமாட்டாராம்! இலை இருக்காதாம்! பண்டங்கள் உற்பத்தியாகாதாம்! பட்டவர்த்தனமாகப் பேசுகிறார்கள்! படேல், அவர்களிடம் என்ன பேசி இருக்கவேண்டும்?—என்ன பேசினார், சென்னையில்?

சர்க்கார், தொழில்களைத்தானே எடுத்து நடத்தாது — பயப்படாதீர்கள்—என்னை நம்புங்கள்—என்று கூறினார். கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைக் கருவறுக்க இந்தப் பேச்சும் போக்கும் உதவுமா? தனியார் வசம் பிரசாரப் பிரங்கிக்கு மற்றோர் குண்டு கிடைத்தது என்று தானே மகிழ்வர், கம்யூனிஸ்டுகள்!

தொழில்களை நீங்களே நடத்துங்கள்—சர்க்கார் உங்கள் ராஜ்யத்திலே நுழையாது — இப்படியா, உறுதிமொழி தருவது, உலக அறிவாளிகளால் கண்டிக்கப்படும், சுரண்டல் முறையினருக்கு!

உறுதிமொழி அளித்ததோடு இல்லை—காரணமும் காட்டிப்பேசி இருக்கிறார் சர்தார்.

அகழி உடைந்து விட்டது—கோட்டை கலகலத்து கிடக்கிறது—படையிலே கலகம்—பட்டத்து இளவரசனுக்குப் படுகாயம் — ஆகவே, படையெடுத்து விடாதே, எமது ராஜ்யத்தின் மீது, என்று ஓலமிடும் அரசர் உண்டோ?

சர்தார் கூறுகிறார், தொழிலரசர்கள் கூட்டத்தில், "சர்க்கார், தொழில்களை எல்லாம் சர்க்கார் உடைமைகளாக்கிவிடும் என்று பயப்பட வேண்டாம். சர்க்காரால முடியாது. அதற்கான திறமையும் ஆள் வசதியும் சர்க்காரிடம் கிடையாது. நிர்வாகம் நடத்தவே, போதுமான திறமைசாலிகள், அனுபவசாலிகள் இல்லை—இந்நிலையிலே தொழில்களை எடுத்து எப்படி எங்களால் நிர்வாகம் செய்யமுடியும்! ஆகவே அச்சம் வேண்டாம்!—இம் முறையில் பேசுகிறார். இரும்பு மனிதர் என்று புகழப்படும் சர்தார் தருகிறார் இந்தக் கரும்புச்சாறு, தொழிலரசர்களுக்கு, —கம்யூனிஸ்டு மீதும், காங்கிரஸ் ஊழியர்கள் மீதும், பாட்டாளிகள் மீதும் இரும்பு, விழுகிறது, தொழிலரசர்களுக்கோ, கரும்புச்சாறு கிடைக்கிறது.

சர்ச்சில், கனல் கக்கும் முறையிலே முன்பு பேசியிருக்கிறார், சுயராஜ்யம் கேட்கிறீர்களே! ஆளத்தெரியுமா உங்களுக்கு—ஆளும் திறமை உண்டா—நிர்வாகம் நடத்திப் பழக்கமாகவில்லையே — படைபலம் இல்லையே—பகை நாடு பாய்ந்தால் தடுத்துக்கொள்ள சக்தியும் சாதனமும் இல்லையே—ஆகவே நீங்கள் சுயராஜ்யத்துக்கு இலாயக்கற்றவர்கள்—ஆகவே உங்கள் நன்மைக்காகவே, நாசத்திலிருந்து உங்களைத் தப்புவிக்கச் செய்யவே, பிரிட்டிஷார் ஆட்சி செய்கிறார்கள், என்று.

என்ன விதமான பதிலளித்தோம் அதற்கு! வீரம், தீரம், கெம்பீரம், தொனித்ததே அந்தப்பதிலில். ஆளவும் முடிகிறதே. ஆசியாவின் பிரச்னைகளைக் கூட அல்லவா கவனித்து ஆவன செய்யமுடியும் என்று இன்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு பெரிய துணைக் கண்டத்தின் நிர்வாகப் பொறுப்பை, ஏற்று நடத்தும் அறிவும் ஆற்றலும் நமக்குக் கிடையாது என்று ஆணவமாகப் பேசிய சர்ச்சிலுக்குச் சாட்டை தருவதிலே சர்தாராக இருந்த படேல் தொழிலரசர்களிடம், நிர்வாக நிபுணர்கள் எம்மிடம் இல்லை—திறமை இல்லை—ஆகவே துரைத்தனத்தார் தொழில்களை எடுத்து நடத்தாது, என்று பேசுவது! ஏன் பேச வேண்டும்? பேசக்கேட்டபோது, தொழிலரசர்கள் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டியும், கரம் கொட்டியும், களிப்பும் கர்வமும் கூட அல்லவா கொண்டிருப்பர். தொழிலரசர்கள், முன்பெல்லாம், பயந்து பயந்து பேசுவர், சர்க்காரே தொழில்களை எடுத்து நடத்துவது சரியானமுறை அல்ல தொழில்களை நிர்வகிக்கக்கூடிய வசதியும் திறமையும், சர்க்காரிடம் இருக்காது" என்று — உடனே, பதில் கிடைக்கும் அவர்களுக்கு சவுக்கடி போல! இப்போது அவர்கள் அல்லவே, சர்தாரே கூறுகிறார்-எம்மால் நிர்வாகம் செய்யமுடியாது—திறமையும் வசதியும் இல்லை, என்று. இந்த முறையிலே பேசுவதும், இவ்விதமான போக்கும், நிச்சயமாக, பொது மக்களிலே தீவிர நோக்கமுடையவர்களுக்கு கொஞ்சநஞ்சம் இருந்துவரும், நம்பிக்கையும் நாசமாக்கவே உதவும்.

இரும்பு, தம்மீது விழும் என்று பயந்துகொண்டிருந்த தொழிலரசர்கள், இப்போது, இறுமாப்படையாமல் இருப்பரோ!

விடுதலைப் போராட்டத்தின்

போது நமது நிபாசமும் உழைப்பும் பயன்பட்டது; நமது கஷ்டமறிந்தவர்கள் ஆட்சிப்பீடம் ஏறிவிட்டனர், நாம் சுரண்டப்படும் விதத்தையும், நமது உழைப்பால் கொழுப்போரின் ஆதிக்கத்தையும் அவர்கள் நன்கு அறிவார்கள், எனவே நமக்குஇழைக்கப்படும் கொடுமையைப் போக்க இலாபவேட்டைக்காடாக இன்றுள்ள தொழில்களை எல்லாம் சர்க்கார் உடைமையாக்கி, சகதிக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி எனும் திட்டத்தைநடைமுறைக்குக் கொண்டுவருவார்கள் என்று நம்பிய பாட்டாளிகளின் மனம், இன்றைய ஆட்சியாளரின் போக்கைக் கண்டு பதறுது!

* * *

தொழிலாளர்கள், சிப்பந்திகள் ஆகியோரின் துயரத்தை நீக்க இந்திய சர்க்காருக்கு விருப்பம் இல்லை. என்பதும், அவர்களால் முடியவில்லை என்பதும் சென்ற சில மாதங்களாகத் தெரியவருகிறது. தொழிலாளர்கள தங்களுடையநிலைமையைச் சீர்திருத்திக்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை முறியடிப்பது என்று இந்திய சர்க்கார் உறுதி கொண்டுவிட்டனர். அவர்களுடைய அடக்குமுறை பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற அடக்குமுறையைபோன்றதல்ல. ஆனால் ஹிட்லர் கையாண்ட அடக்குமுறைகளைப்போன்றதாகும்.

இந்தியத் தொழிலாளர்களை முழுக்க முழுக்க அடிமைத் தொழிலாளர்களாக மாற்றிவிடுவதற்கான சட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பணப் பெருக்கத்தை ஒழிப்பதற்காக வெகுசமீபத்தில் சர்க்கார் தயாரித்த கொள்கையானது முதலாளிகளுக்கு பெருவாரியான சலுகைகளை அளிக்கிறது. இது முதலாளி வாக்கத்துக்குக் கிடைத்த பரிசு!

* * *

குழப்பம் விளைவித்து, பலாத்காரத்தைத் தூண்டிவிடும் கம்யூனிஸ்டு பேச்சல்ல, மேலே பொறித்திருப்பது — கம்யூனிஸ்டுகளை ஒழிக்க வேண்டும் என்று கூறும் ஜெயபிரகாஷ் நாராயணன் பேச்சது! சர்க்காருக்கு விளைகச் சங்கடம் விளைவிக்கக்கூடாது, பொதுமக்களுக்கு தொல்லை தரக்கூடாது, உணவுப் பிரச்னை உள்ளத்தைவாட்டும் இந்தச் சமயத்தில், ரயில்வேவேலை நிறுத்தம் செய்வது அடுக்காது, என்ற பொறுப்புணர்ச்சியுடன், நடந்துகொண்டு, வேலை நிறுத்தம் வேண்டாம் என்று கூறியுள்ள, ஜெயப்பிரகாஷ் நாராயணனே, இன்றைய ஆட்சியாளர்கள் தொழிலாளருக்குத்தரும் தொல்லையையும், முதலாளிவர்க்கத்துக்குத் தரும் பரிசையும் எடுத்துக்காட்டி, வருத்தப்படாதிருக்க முடியவில்லை! ஆட்சியாளர்களின் போக்கைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள கம்யூனிஸ்டுக்கு இந்தப்போக்குதான இடமளிக்கிறது. இலாபம் குறையக்கூடாது! இலாப நோக்கத்தைக் குறைக்கக் கூடாது! எந்தச் சமயத்திலே சர்க்கார், தொழிற்சாலையை எடுத்துக்கொண்டு விடுமோ என்ற பயமும் சந்தேகமும் இருக்கும் நிலை கூடாது. அத்தகைய சந்தேகத்தைப் போக்க சர்க்கார், திட்டமாக உறுதிகூற வேண்டும். இலாபத்திலே பெரும்பகுதியை வரியாகக் கொண்டுவிடக் கூடாது! இவ்வளவும் கேட்கிறார்கள் தொழிலரசர்கள்—கிடைக்காவிட்டால, பணப் பெட்டியைப் பூட்டிவிடுவார்களாம், தொழில் செய்யமாட்டார்களாம்! இப்படிப் பேசுபவரின் இறுமாப்பை முறியடிக்கப் பயன்படுத்தப்படவேண்டிய சக்தியை, வறுமையால் தாக்கப்பட்டு நொந்துகிடக்கும் உழைப்பாளியின்மீது உபயோகிப்பது, கம்யூனிஸ்டுகளின்செல்வாக்கு பரவாதிருக்கச் செய்யும் திட்டம்!

✲

செக்கோஸ்லோவேகியா

5-ம் பக்கத் தொடர்ச்சி

கம் ஒழிக என்ற குறிச் சொல்லைக் கூறுகிறோம். இதே நிலையில் பண்டார வகுப்பார் இருந்தால், பண்டார ஆதிக்கம் ஒழிக என்று இருக்கும் நமது போர்முழக்கம்—பார்சிகள் இதே காரியத்தைச் செய்ய முற்பட்டால், பார்ப்பன ஆதிக்கம் ஒழிக என்று கூறுவதற்குப் பதிலாக பார்சி ஆதிக்கம் ஒழிக! என்று முழக்கமிட்டிருப்போம்.

பகை, ஒரு வகுப்பாரிடம், தவேஷம் ஒரு ஜாதியாரிடம் என்பதா இதன் பொருள்! எப்படியோ, ஒரு ஜாதியார், ஒரு வகுப்பார், மக்குப் பிடிக்காததும், நல்லறிவாளர்களால் கண்டிக்கப்படுவதும், மக்களின் அறிவையும் பொருளையும் நாசமாக்குவதுமான, புரோகித ஆட்சியை நடத்திக் கொடுக்கும் நிலையில் உள்ளனர்—எனவேதான், நாம் அந்தப் புரோகித ஆதிக்கத்தை எதிர்க்கும்போது, அந்த எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்புப்போல, பார்ப்பனத் துவேஷம் போலத் தெரிகிறது.

ஏழைகளை, அதிக வட்டி வாங்கிக் கொடுமை செய்யும் முறையை எதிர்க்கும்போது, யார், அந்த முறையை அதிகமாக முன்னின்று நடத்துகிறார்களோ, அவர்களைத் தானே குறிப்பிட்டுப் பேசத் தோன்றும். மார்வாடி ஆதிக்கம் ஒழிக! காபூலி ஆதிக்கம் ஒழிக!—என்றுதானே முழக்கம் எழும். இதனை காபூலி மீதும், மார்வாரி மீதும் துவேஷத்தைக் கிளப்புவதிலே நாம் ஏதோ சுவை காண்கிறோம் என்று பொருள்! காபூலி காபூலிலும், மார்வாரி மார்வாரிலும் இருந்துகொண்டிருக்கும் நிலையிலே, நாம், ஏதாவது எதிர்த்திருக்கிறோமா! அவர்கள் இங்கு புகுந்து—புகுந்ததுடன் நில்லாமல்,—நமது மக்களின் வாழ்வை நாசமாக்கும், அநியாய வட்டித் தொழிலை நடத்துவது கண்டுதான், அந்த முறையை எதிர்க்கும் பணியில் ஈடுபட நேரிடுகிறது.

இந்த விளக்கம் தரவோ, பெறவோ, ஏற்ற சூழ்நிலை அமையாத காரணத்தால், நாம் இன்று பார்ப்பனத் துவேஷி என்று கூறப்படுகிறோமே, அதேபோலத்தான், ஜான் ஹஸ் கூட்டத்தார்மீது பழியும் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது.

சமயம் பார்த்துக்கொண்டிருந்தவர் ஜெர்மானியர், செக்கோ மக்களைச் சிதைக்க.

(தொடரும்)

நாடகம்

—✲—

6—3—49-ல் தோழர் C. P. இராசமாணிக்கம் எழுதிய "சூழ்ச்சிப் புயல்" என்ற நாடகம் காஞ்சிபுரத்தில், டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மட மான்மியம்!

[மடாலயங்களிலே உள்ள நிலையை விளக்கும் கற்பனைச் சித்திரம்.

மடாலயங்களின் அதிபர்களிலே, சிலர், ஒழுக்கக் குறைவாகத்தான் இருக்கிறார்கள்—என்பதை, மடாலய நிர்வாகமசோதாவை எதிர்க்கும் மகானுபாவர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அவ்வித மட அதிபர்களிலே ஒருவர் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை விளக்கும், கருத்தோவியம் இது.]

1

இடம்:- கொலுமண்டபம்.
இருப்போர்:- மடாலய அதிபர்
அதிபரின் தரகர்
செல்வவான்.

மடாலய அதிபர்:- எவனொருவன் இந்திரியங்களெனும், துட்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாளமிட்டு அடக்கி, நன்னெறியெனும் பாதையிலே செலுத்துகிறானோ அவனே அரனடி எனும் திருத்தலத்தை அடைவான். இடையே இச்சை எனும் நச்சுக்கொடி கிடக்கும். பச்சென்று இருக்கிறதே என்றெண்ணினாலோ, சிக்கினோரைச் சீரழிக்கும். அதனைக்கடக்க வேண்டும். அதற்கு நிராசை எனும் சாட்டைகொண்டு குதிரையைத் தட்ட வேண்டும். மெய்யன்பனே! பரமன் அருள் பெற்றவர்களெல்லாம் இங்ஙனம் செய்தே முக்தி பெற்றனர்.

செல்வ:- ஆஹா! தன்யனானேன்! குருநாதா! உணர்ந்தேன்,

அதிபர்:- சைவநெறி அறிந்த சீலனே! பொன்னார் மேனியனைப் போற்று — போக போகாதிகளிலே இலயிக்கும் சுபாவத்தை மாற்று—பார், பிறகு, பாரிலே இன்பம்! பரமபதத்திலே எல்லையில்லா ஆனந்தம் தோன்றும்.

தரகர்:- சந்நிதானத்திடம், நமது பிள்ளைவாளுக்கு விசேஷ சிரத்தை. மடத்துக்கு ஏதேதோசெய்யவேண்டுமென்று நெடுநாட்களாக அவருக்கு அவா.

அதிபர்:- அம்பலவாணா! அவன் அருள் பெற்றவருக்கே அவ்வெண்ணம் உதயமாகும். மலட்டுமாடுமதுரமான பால் தருமா? நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், இவரைப்பற்றி,

செல்வ:- தங்கள் சித்தம் என்பாக்கியம். ஸ்வாமி! என் சொத்தென்று ஒன்று உண்டா? எல்லாம் அவன் அருளால் வந்தது — அவனுக்கே சொந்தம்!

அதிபர்:- மெச்சினோம் உமதுபக்தியை! உன் இஷ்டம்போல் ஏதேனும் கைங்கரியம், செய்.

தரகர்:- சந்நிதானம் உத்தரவு தந்தால், வசந்தமண்டபத்தைப்புதுப்பித்துக்கட்ட, பிள்ளையவாளுக்கு இஷ்டம்.

அதிபர்:- அதிலென்ன கஷ்டம்! செய்யட்டும்.

* * *

2

இடம்:- மடம் தாழ்வாரம்.
இருப்போர்:- தரகரும் தனவந்தரும்

தர:- பிள்ளையவாள்! நீர் ரொம்பவும் கொடுத்துவைத்தவர். இன்று சந்நிதானம் செய்த உபதேசம், அடா, அடா, அடா, அருமை, அருமை!

தனவ:- நால்வரின் பாடல்கள் அவர் நாவிலே, நர்த்தனமாடுகின்றனவே!

தர:- இன்று, தரிசனமும் விசேஷம். அலங்காரத்தைக் கண்டீரோ?

தனவ:- சொல்ல வேண்டுமா? சிவப்பழமாகத்தான் இருந்தார். சென்று வருகிறேன்.

* * *

3

இடம்:- தனி அறை.
இருப்போர்:- மடஅதிபர்
தரகர்.

அதிபர்:- காயா, பழமா?

தரகர்:- காயும் பழுக்குமே, இக்காவியின் கைபட்டால்!

அதி:- பழம், எவ்விடத்தது?

தர:- தோட்டம் அருகாமையில் தான்! ஆனால் வேலியும் காவலும் உண்டு!

அதி:- வேலியும் காவலும்! எவருக்குமா?

தர:- சந்நிதானத்துக்குத் தடை உண்டா? வசந்த மண்டபத்திலே, கனிகாணஏற்பாடாகி விட்டது. கட்டளைபெற்றுத்தான் எதிர்பார்த்து நிற்கிறோம். கனி, தங்கநிறம்! குயிலோ—அறியும் அருமை தங்கட்கே உண்டு.

அதி:- அம்மையப்பன் அருள் கலந்ததோ?

தர:- அம்மையப்பன் மருள்கிளம்பிற்று—கொஞ்சம் பொருள் செலவு செய்து மருளைப் போக்கிவிட்டோம். கனி, கையில்.

அதி:- அரியும் சிவனும் ஒன்று!

தர:- லாவண்யவதி!

அதி:- உனக்கா தெரியாது!

தர:- வஞ்சிக்கொடி!

அதி:- நஞ்சோ ராதே!

தர:- நஞ்சத்தால் அடிபட்ட தலைவே! பக்குவமாகப்பறித்து வந்திருக்கும் பாரிஜாதம்.

அதி:- பெயர்?

தர:- வில்லயோகினி, என்று விட்டார் பெயர் சூட்டவில்லை—நாங்கள் சூட்டலாம்-பொருத்தமாக இருக்கும் — அவர்களிட்ட பெயர் அம்சா.

அதி:- அம்சா! அழகான பெயர்! வசந்த மண்டபத்திலே சகல ஏற்பாடுகளும் செய்துவிடு. ரசபானங்கள் குறைவின்றி இருக்கட்டும். அம்சா! என்ன லாவண்யமான நாமதேயம்! என்னதான் அலங்காரம் செய்து கொண்டு சென்றபோதிலும், இந்தச் சடையும் முடியும் தனியனுக வன்றோ இருக்கும், வீட்டுறை தொட்டுறை போல! கன்னியின் கண்ணும் கருத்தும் கலங்குமோ, கச்சிஏகம்பா!

தர:- இரவுவந்து காண்கிறேன்

அதி:- நல்லது! சென்றாயா! செலவுக்கு?

தர:- பெற்றுக் கொண்டேன்.

அதி:- சிக்கனம் வேண்டாம்; சற்று தாராளமாகவே சொல்—புதிய பாத்திரம்!

* * *

4

இடம்:- வசந்தமண்டபம்.

இருப்போர்:— அதிபர்
அம்சா.

அதி:- வர்ணனையிலே வல்லது விசேஷமாகத்தான் இருக்கிறது. சொர்ணபிம்பமே! உட்கார் இப்படி! நெடுநேரம் நின்றால் உன் மலரடி கசங்கிவிடும்.

அம்சா:- இந்தக்கண்களைவிடவா?

அதி:- கண்களுக்கென்ன......?

அம்:- தாங்கள், எப்போது வருவீர் வருவீர் என்று பார்த்துப் பார்த்துக்கிடந்து கண் பூத்துப்போய்விட்டது.

அதி:- பார்த்தபின் என்வேஷம்?

அம்:-சிவலோக நாதனைக் காண்பதுபோலிருக்கிறது.

அதி:- சிங்காரி! உன்னைக்காண காலைமுதல் நான் தவித்துக்கிடந்தேன். மடத்திலேயோ பண்ணுர்சாமிகள் வருவதும் போவதும் ஓயவில்லை என்மனமோ அங்கு தங்கவில்லை.... ....மோகனங்கி!..............

அம்:- சுந்தரரூபா!

அதி:- என் கணமே!

அம்:- கண்ணின் மணியே!

அதி:- கனியே!

அம்:- இதோ தங்களுக்கென்று கனிரசம், தங்கக்கோப்பையிலே கொண்டுவந்திருக்கிறேன். தயவு செய்து, பருகுங்கள்.

அதி:- உன் பவளவாயைவிடவா அந்தக்கோப்பை விசேஷமானது! உன் இதழ் சுவைப்பதைவிடவா, அந்தக் கனிரசம் இன்பந்தரு ....

அம்:- பாட்டு, ஏதாகிலும் பாடட்டுமோ?

அதி:- இசைகூடத் தெரியுமோ? எங்கே சிட்சை?

அம்:- பண்ணையூர் பார்த்தசாரதி ஐயங்காரிடம் ஐந்துவருஷம் பாடம் அடியாளுக்கு.

அதி:- ஓஹோ! பண்ணையூர் ஐயங்காரா? அவரிடம் பாடம் கேட்டபதா, என்றோர் பெண் உண்டே; தெரியுமா?

அம்: ஆமாம், ஒல்லியாக, சிகப்பாக இருப்பாள்.

அதி: நல்ல இலட்சணம்!

அம்:- முகத்திலே களை இருக்காதே.

அதி:- உன்முகமாகுமா அவளுக்கிருப்பது! நான் கண்ட பதுமைகளிலே, நீயே முதல்தரமானவள்!

அம்:- எல்லாம் விடியுமட்டும்பேசுவீர். பிறகோ.........

அதி:- என்ன செய்வது! காலை பூராவும் சைவத்தைச் சுமந்து தீர வேண்டியிருக்கிறது.

✲

15-ம் பக்கத் தொடர்ச்சி

பிறரிடம் பொருள் பெற்றோ, திருப்பணி செய்வது முறை.

தீய முறையிலே பொருள் ஈட்டி நடத்தும் திருவிழாவைக் காணும் போது, நாம் என்ன எண்ணுகிறோம், இன்று!

கருப்புச் சந்தையிலே காசு பெற்றதை மறைக்க, வெளிச்சம் அதிகமாகப் போடுகிறான் வேலாயுதம்!— என்று பேசுகிறோமல்லவா?

திருப்பணி முக்கியம் என்று கூறுவர்—சரி—ஆனால் அதனைச் செய்வதற்குத் திருநெறியும் வேண்டாமோ என்று கேட்கிறோம்.

புத்தராலயத்திலே புகுந்து பொருள் எடுத்துத்தானா, பூலோக வைகுந்த நாதனுக்குத் திருப்பணி செய்ய வேண்டும்? புத்தராலயத்திலே உள்ள புனிதத் தன்மையையோ, புத்த மார்க்கத்தையோ, வைணவ ஆழ்வார், மதிக்கவேண்டியதில்லை—ஆனால், கொள்ளை அடித்தல் தவறு, தீது, பாபகாரியம் என்ற நீதியையாவது கவனிக்கக்கூடாதா! ஏ! பாபஸ்வரூபமே! பக்தியில் ஈடுபட்ட ஆழ்வாருக்கு, களவு, கொள்ளை, என்பன போன்றவைகளைப் பற்றிய சாமான்ய கருத்துகளைக் கவனிக்க முடியுமோ! அவருடைய மனமெல்லாம் எம்பெருமானுக்கு எப்படிச் சேவை செய்வது என்ற ஒரே நோக்கத்திலே இலயித்திருந்தது—அந்தப் பக்தியின் மேம்பாட்டை நீ, என்ன அறிவாய்!— என்று கோபத்துடன் கேட்கும் திருநாமதாரிகள் உள்ளனர், அறிவோம்—ஆனால், கொள்ளையடித்துப் புண்யம் தேடுவதும், பிறர் பணம் பதறப் பதறக், காரியம் செய்து, அதன் மூலமாகவே கடவுள் அருளைத் தேடுவதும் முறையா, எப்படிப்பட்ட பக்தருக்கும் என்று கேட்கிறோம்.

திருமங்கைஆழ்வார், திருவரங்கத்தாருக்குத் திருப்பணி செய்யவேண்டிய அவசியத்தை அறிந்தனர், அனைவருக்கும், அறிவித்துப் பொருள் திரட்டி இருக்கலாம். பூபதிகளிடம் சென்று பொருள் திரட்டலாம்—மற்றோர் மார்க்கத்தாரின் மகிமை ஸ்தலத்தைத்தானா கொள்ளையிட வேண்டும்.

திருப்பணி செய்யும் நோக்கத்துடன், கொள்ளை அடித்தால், பாபமில்லை, அதே நோக்கத்துடன்; வேறு மார்க்கத்தவரின் புனித ஸ்தலத்தை நாசமாக்கினால் பாபமில்லை, என்று காட்டுவதுதானே, திருமங்கை ஆழ்வார் புரிந்த இந்தச் செயலின் பொருள். இந்தக் கருத்து ஏற்படும் விதத்திலே, நமது புண்ய கதைகள் இருக்கலாமா? சட்டம் இப்போது இதனை அனுமதிக்காது — ஆனால் திருமங்கை ஆழ்வாரின் போக்கிலே, இந்தப் பருவத்தை, இன்றைய பகுத்தறிவுக் கண்கொண்டு கவனிக்க மறுத்து, பழைய பக்தர் சுபாவத்தை மட்டுமே பார்த்து பாகவதசிரோமணிகள் அவர் புகழ் பாடிடக் கேட்டுப் பூரித்து, யாரேனும் நாமும், ஏதோ, நமது சக்தியானுசாரம், செய்யலாமா, என்று ஆசைப்பட்டால், சமூகம் என்ன கதியாவது? இதனால்தான், பழைய கதைகளைக் கொண்டு, அவைகளிலே காணப்படும் நியாயங்களை, நடவடிக்கைகளை முறைகளைக் கொண்டு; இன்றைய நாட்களிலே, பக்தர்கள் உட்பட யாரும், நடந்துகொள்ள முடியாது, எனவே, வீணாக, அந்தக் கதைகளை மனதிலே சுமந்துகொண்டிருக்க வேண்டாம், இன்று தேவைப்படும் நீதிகளுக்கு ஏற்ற கருத்துக் கிடைக்கும் வகையிலே, மனப்பான்மையைத் திருத்தி அமையுங்கள், என்று வலியுறுத்துகிறோம்.

மார்க்கப் பூசல்களின் போது, நடைபெற்ற நாச வேலைகள்—மதப் பற்றுக் காரணமாக நடைபெற்ற அசாதாரணச் சம்பவங்கள், அறிவுக்குப் பொருந்தாத நடவடிக்கைகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

கோயிலை இடித்த பக்தர்!

★

பக்தர்கள், பதறி, அழுகிறார்கள் ஓர் ஊரில்.

வேறோர் ஊரில், பக்தர்கள், பரமானந்த மடைகிறார்கள்.

நாத்திகன் எவனோ நாச காரியம் செய்துவிட்டானே, என்று நெஞ்சு நெக்குருகப் பேசிக்கொண்டிருக்கின்றனர், ஓர் ஊரில், பக்தர்கள்.

வேறோர் இடத்திலே, இந்த ஆத்திகச் சிகாமணியின் அரிய சேவையின் பெருமையைக் கூற ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாது, என்று வியந்து பேசுகிறார்கள் பக்தர்கள்.

இடியுண்ட கோயிலைக் கண்டு இப்படியும் அக்ரமம் நடைபெறலாமா, என்று அழும் பக்தர்கள் ஓர் ஊரில்.

புதிய கோயில் திருப்பணியைக் கண்டு பூரிப்படையும் பக்தகோடிகள் வேறோர் ஊரில்.

உன் பெருமையை, மகிமையை, புனிதத்தன்மையை, அறியாது, இந்தப் பழிச்செயலை, பாபச்செயலைச் செய்யத் துணிவு பிறந்ததே! தூயவனே! மக்கள் துயர்கண்டு, அவர்கள் உய்யும் வழி கண்டறிந்துரைத்த உத்தமனே! சத்திய மறியினைச் சாற்றிய நித்ய ஜோதியே! உன் ஆலயத்தை இடித்தழிக்க, மனமடுத்து, துணிவு பிறந்ததே! என்ன மனம் இது! எவ்வளவு தீய செயல்! பாபகாரியம்! என்று கண்டனம் ஓர் ஊரில்.

உன் பெருமையை, மகிமையை உணர்ந்த உத்தமன், இந்தப் புண்ய காரியத்தை, திருப்பணியைச் செய்ய முற்பட்டதற்கு, நாங்கள், எவ்வளவு பாராட்டினாலும் போதாதே! மூலவனே! மூவரில் முதல்வனே! மூடாத்மாக்கள் அறியார் உன மூர்த்திகர விசேஷங்களை! ஞானியான அவர் அறிவார்—எனவேதான், உமக்குத் திருத்தொண்டு புரிய முன்வந்தார்! அவர் திருவடிகளைப் போற்றுகிறோம். அவர் திருப்பாதத்தை வணங்குகிறோம், என்று வாழ்த்தினர், பக்தர்கள், வேறோர் ஊரில்.

* * *

பாபகாரியம்! புண்ய காரியம்!
தீயசெயல்! திருத்தொண்டு!
நாசவேலை! நல்லவேலை!
நாத்தீகன்! நமது குருநாதன்!

இவையாவும், ஒருவருக்கே, கிடைத்த வரிசைகள்!

ஒரு ஊரில், அவர் தூற்றப்பட்டார்.

வேறோர் ஊரில் அவர் துதிக்கப்பட்டார்.

ஒரு ஊரில் அவர் கோயிலை இடித்தார—களவாடினார்.

வேறோர் ஊரில் அவர் கோயில் கட்டினார் — திருப்பணி செய்தார்.

அவர் நாத்திகன் ஆகவேதான் நாதனின் ஆலயத்தை நாசமாக்கினர் என்று கண்டித்தனர். நாகப்பட்டினத்தில்.

அவர் ஆஸ்திகர் ஆகவேதான் அவர் ஆலயத்திருப்பணியை அரும்பாடுபட்டுச் செய்து முடித்தார், என்று அவரைப் பாராட்டினர், திருவரங்கத்தில்.

அவரைக் கண்டித்தவர்கள், கடவுள் நெறி மறந்தவர்களல்ல.

அவரைப் புகழ்ந்தவர்களும், கடவுளின் அன்பர்களேதான்!

பக்தர்களிலே, ஒரு சாரார் மகிழ்விக்க, மற்றோர் சாரார் மனம் வேகும்படிச் செய்ய நேரிட்டது.

ஓரிடத்தில் தேவாலயத் திருப்பணி செய்வதற்காக, இன்னோர் இடத்திலே தேவாலயத்தை இடித்தார், பொருளைக் கொள்ளையடித்தார்.

நாகப்பட்டினத்திலே, இருந்த புத்தர் கோயிலை நாசமாக்கி, அங்கிருந்து கொள்ளை அடித்துக் கொண்டு போன பொருள்களைக் கொண்டு, திருவரங்கத்தில், விஷ்ணுவுக்குத் திருப்பணி செய்தார், திருமங்கை ஆழ்வார்!

அவருடைய பகவத் சேவை, அவருக்கு ஆழ்வார் பட்டத்தைத் தந்தது. பக்தியினால் அவர் முக்தி பெற்றது மட்டுமல்ல, இன்றும், வைணவர்களின், தொழுகைக்கு ஏற்றவராகக் கோயில்களில் இருக்கிறார்.

அவர், நாசம் செய்த கோயிலிலே இருந்த புத்தர், கடவுளின் விரோதியல்ல — மதமற்றவரல்ல — புனித மார்க்கத்தைத் துவக்கியவர்—பூபதிகள் பலரைச் சீடராகக் கொண்டவர்—அந்த ஆலயத்தைத்தான் திருமங்கை ஆழ்வார், நாசமாக்கினார்—திருவரங்கத்துள்ளானின் திரு அருளைப் பெற!

நாகப் பட்டினத்தில் புத்தராலயத்தை இடித்துத் தள்ளிய விஷயத்தைமட்டும் நீக்கி விட்டு, அல்லது மறைத்துவிட்டு, திருமங்கை ஆழ்வார், திருவரங்கத்தாருக்குச் செய்த திருப்பணியை மட்டும் கவனித்தால் ஆழ்வாரின் அரிய சேவையைப் பாராட்ட வைணவர்கள் மார்தட்டிக் கொண்டு முன்வர, உரிமை தாராளமாக உண்டு.

தான் வணங்கும் தெய்வத்துக்குத் தன்னாலான — தன சக்திக்கு மீறிய தொண்டு செய்யும் போது, அப்படிப்பட்டவரை, போற்ற, துதிக்க, அந்த மார்க்கத்தவர் முன்வருவது முறை—நியாயம்.

ஆனால் திருமங்கை ஆழ்வாரின் திருத்தொண்டு நியாயமானது, பெருமைக்குரியது என்று, அவர், அதே திருத்தொண்டினைச் செய்ய, புத்தராலயத்தைக் கொள்ளையடித்த விஷயத்தை மறவாமலிருக்கும் நிலையில், யார், கூறமுடியும்—கூறுபவர்களை, யார், நேர்மையாளர், என்று சொல்ல முடியும்.

ஆலயம் கட்டுவது, திருப்பணி புரிவது ஆகியவைகள் பக்தி மார்க்கத்துக்குச் சேவை என்றால், அந்தப் பணியினைச் செய்ய, பாடுபட்டுப் பிழைத்து, பணம் சேகரித்துச் செய்தல் போற்றுதலுக்கு உரியதா — வேறோர் மார்க்கத்தாரின் புனித ஸ்தலத்திலே புகுந்து களவாடி, திருப்பணி செய்வது போற்றுதலுக்கு உரியதா, என்பதை, பக்தி, கடவுள் நெறி, புனிதத் தன்மை, என்றால், அவை வைணவர்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியந்தானே பௌத்தர்களுக்கும், என்ற நியாயத்தை மறவாதிருக்கும் மாண்புள்ளவர்களைக் கேட்கிறோம்.

தன் பொருளைக் கொண்டோ,

(14-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைப் புயல்.

சமுதாயச் சீரழிவின் காரணவிளக்கம் காட்டும்
சிறு கதைகளின் தொகுப்பு!

உள்ளம் ஊழலாகக் காரணம் என்ன என்பதைக்
கண்டறிய உதவும் ஏடு.

[C. N. அண்ணாதுரை தீட்டியது.]

குற்றவாளிகளைத் தண்டித்தால் மட்டும் போதாது, சமுதாயத்தின் நோயைப் போக்க மருந்திடவேண்டும் என்ற புத்தறிவு புகட்டும் புதிய நூல்.

சூதாடி
கள்ளன்
கொலைகாரன்
கைதி
விபசாரி

ஆறுல்

இவர்கள்
அனைவரும்
மனிதர்களே!

ஏன்
அவர்கள் குற்றவாளிகளாயினர்?

பிறவி வேறு!
மானிடர்தான்!
என்னினும்
அவர்கள் கெட்டவராயினர்!!
ஏன்?

வாழ்க்கைப் புயல்

இவைகளுக்கு விளக்கம் தருகிறது. ஒவ்வொருவரிடமும்
இருக்கவேண்டிய நூல்.

டிம்மி சைஸ் 56 பக்கங்கள் கொண்டது.
அழகிய இருவண்ண அட்டையுடன் உள்ளது.

விலை 0-12-0

பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M 4642.

திராவிட நாடு

OFFICE OF THE REGISTRAR OF B... 5-MAY 1949 MADRAS

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 3-4-49 | இதழ் 40

இவர்களுக்கு அவர்கள் மேல்!

"எங்கே போய்விட்டார்கள் இந்தச் சைவர்கள்? ஒன்றுமே தெரியவில்லையே!" என்ற கவலை இப்போது சிலருக்கு உண்டாகிவிட்டது. இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தியமைக்க முன்வந்திருக்கும் சென்னை சர்க்கார், கோயில்களில் தேவார—பிரபந்தங்களைப் பாடுவதற்கான ஏற்பாடுகள் எதனையும் செய்யவில்லையே என்று கவலைப்படுகிறார்கள். வேதாத்தியயனத்துக்கும், அதனை ஓதும் அத்யாபகருக்கும் கோயில்கள் இடமாவதுபோல, தேவாரங்களை ஓதுபவர்களுக்கும் இடம் கிடைக்கும்படி சர்க்கார் ஏதுவுஞ் செய்யவில்லையே என்று கேட்புகிறார்கள். வேத பாராயணத்துக்காக விடப்பட்டிருக்கும் சொத்துக்களைவிடத் தேவார பாராயணத்துக்காக விடப்பட்டிருக்கும் சொத்துக்களே மிகுதியாக உள்ளன என்று ஏக்கத்தோடு எடுத்துக் காட்டுகின்றனர். வேத பாராயணம் செய்யும் பிராமணர்கள் கோயில்களில் அர்ச்சகர்களாக ஏற்படுவதற்கு முன்பிருந்தே ஓதுவார்கள் கோயில்களில் அர்ச்சகர்களாக இருந்து இசைப்பாக்களால் இறைவனை வழிபட்டிருக்கிறார்கள் என்று இரக்கப்பட பாடுகிறார்கள். வேதத்தைப் பாடிய மகரிஷிகளுக்கு இல்லாத சிறப்பு, தேவார—பிரபந்தங்களைப் பாடிய நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உண்டே என்று உள்ளம் நொந்து கூறுகிறார்கள். கடவுளோடு கடவுளாராகச் சேர்ந்து, அபிஷேக ஆராதனை பெற்று வரும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய தேவார—பிரபந்தங்களுக்காக ஒரு காசும் செலவிடாமல் இருப்பது முறையுமன்று—நேர்மையுமன்று என்று சஞ்சலத்துடன் சர்க்காரைக் கண்டிக்கிறார்கள்.

இவ்வளவு கண்டனங்களையும் யார் வெளியிட்டார்களோ, அவர்களே, இப்போது சென்னை சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவை முழுமனதுடன் ஆதரித்து வரவேற்கிறார்கள்.

"இந்த மசோதாவை எதிர்ப்பது இந்து அற நிலையங்களுக்குச் சாதகமாகாது. நாட்டின் தற்கால நிலைமையையும், இந்து அற நிலயங்களின் நிலைமையையும் நேர்மையாகச் சீர்தூக்கிப் பார்க்கும் எவரும் இத்திருத்த மசோதாவை வரவேற்பாரேயொழிய ஒருகாலும் எதிர்க்க நினையார்."

"இந்து அற நிலயங்களுக்கு ஆண்டுதோறும் மூன்றரைக்கோடி ரூபாய் வருவாய் வருகிறது."

"இது நம் நாட்டுச் சுதேச சமஸ்தானங்களின் வருவாயை விட அதிகம்."

"இவ்வளவு பெருந்தொகை ஆண்டுதோறும் செலவாகியும், நம் நாட்டில் சமய உணர்வோ, சமய ஒழுக்கமோ சிறிதளவும் முன்னேறவில்லை."

"இதற்கு மாறாகச் சமயத்தில் நம்பிக்கையில்லாமையும், சமய நிலயங்களின்மேல் அருவருப்புமே நாட்டில் பெருகியுள்ளன."

"மேலும் இத்தொகையில் பெருவாரியான பகுதி குறிப்பிடத்தக்க ஒரு சிலரின் நலத்துக்கே செலவாகி இருக்கிறதென்பதையும் பொதுமக்கள் நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள்."

என்று கூறுவதன் வாயிலாக இம்மசோதாவை அனைவரும் பாராட்டி வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள்.

எனவே, இம்மசோதாவை ஆதரிக்கும் இவர்கள், இம்மசோதாவில் சர்க்கார் செய்திருக்கும் திருத்தங்களோடு இன்னும் ஒரு திருத்தம் சேர்க்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அதாவது, இப்போது சர்க்கார் இம்மசோதாவுக்கு ஒன்பது வகையான செலவினங்களை வகுத்திருக்கிறதென்றும், அவற்றோடு பத்தாவது செலவினமாகத், தேவார—பிரபந்தங்களை ஓதுவதும், ஓதுபவர்களைப் பயிற்சி செய்வதும் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

இவர்களால் கூறப்படும் இத்திருத்தம், இன்றைய நிலையில், இம்மசோதாவில் இன்றியமையாது சேர்க்கப்படத்தான் வேண்டுமா என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையென்றே தெரிகிறது. என்றோ ஒரு நாள், ஒரு சித்தர்,

"தாவாரம் இல்லை, ... நான் ... கிறோம், ... கல் ... சிலர்

தேவாரம் எதுக்கடி குதம்பாய்"

என்று பாடினார். ஆனால், இன்று கண்கூடாய்க் காண்கிறோம், கணக் கற்ற மக்கள், ஓதுவார்கள் உட்படப் பல ஆயிரவர், பரமனைப் பாடிய ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்ள, ஒரு தெருத்திண்ணைகூடக் கிடைக் காமல் அவதிப்படும் நிலையை! இது மட்டுமல்ல, பண்ணோடு பதிகம் பாடிப் பரமனை மகிழ்விக்க வேண்டு மென்று விரும்புபவர்கள் கண் முன்னே, கணக்கற்றமக்கள், உண்ண உணவின்றி ஊசலாடிக்கொண்டு இருக்கிறார்கள்! பஞ்சத்தைப் போக் கப் பரமனைப் பாடிப் படிக்காசு பெற்ற தேவாரம் என்னவோ இன் னும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பஞ்சம், பரமன் ஆலயங் களுக்குக்கூடப் பங்கீடு முறையில் உணவு அளிக்கவேண்டுமென்ற அள வுக்கு வளர்ந்துவிட்டதே!

"என்னைப் பாடினால், உன் பசி யைப் போக்கப் படிக்காசு தருவேன்" என்று கூறிப் பக்தர்களைப் பாட வைக்கும் 'பரந்த நோக்கமும்— நிறைந்த கருணையும்' உள்ள ஒரு கடவுள் தான் நமக்குத் தேவையா— நாட்டில் ஏற்படும் பஞ்சமும் பிணி யும் நீங்கவேண்டுமானால் தன்னைப் பாடவேண்டுமென்று கூறும் ஒரு வடிகட்டிய சுயநலக் கடவுள்தான் நமக்குத் தேவையா அல்லது அனைத் துயிர் ஒன்றென்றெண்ணி அவை தம்மின் பசியைப் போக்குவதற்கு மூலகாரணமாகவுள்ள மழையைத் தாமாகவே பெய்ய வைக்கும் ஒரு தன்னலமற்ற தண்ணளிக் கடவுள் தான் நமக்குத் தேவையா என்பன வற்றை, இயற்கைவழி செல்லும் பகுத்தறிவாளர்கள் எண்ணிப் பார்க்கவேண்டிய இன்றியமையாமை இல்லாவிட்டாலும், மகேசுவரனரு ளாலேயே மழை பெய்கிறது என்று மனப்பால் குடித்துக்கொண்டிருக் கும் 'மதிவாணர்கள்' எண்ணிப் பார்க்க வேண்டாமா? குதம்பைச் சித்தர் காலமுதற்கொண்டு குப்புச் சாமி ஓதுவார் காலம் வரை, தேவா ரம், மக்களின் வாழ்க்கையில் எந்தத் துறைக்காவது ஏதாவது பயன் பட்டிருக்கிறதா என்பதனையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

[illegible]மஸ்கிருத மொழியிலுள்ள [illegible]ளைப் பாராயணம் செய்யும் [illegible]க்குப் பணம் செலவிடும் போது, தமிழ் மொழியிலுள்ள தேவார — பிரபந்தங்களைப் பாடும் தமிழர்களுக்கு ஏன் பணம் செலவு செய்யக் கூடாதென்று, பங்கு கேட் பதைத் தவிர, இவர்களுடைய இந்த விண்ணப்பத்தால் நாட்டு மக்களுக்கு ஏதாவது நன்மையுண்டாகுமா? வேதமோதிகள், வேதமோதுவதற் காகக் கொடுக்கப்படும் பணத்தை வைத்துக்கொண்டு விலாப்புடைக் கத் தின்றுவிட்டு, வேறுவேலையின்றி, வெட்டி வேதாந்தம் பேசிக்கொண்டு இருப்பது போல், தேவாரமோதி களும், அதற்காகக் கிடைக்கும் பணத்தை வைத்து வயிற்றை நிரப் பிக் கொண்டு, வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்று திண்ணையில் இருந்துகொண்டு பண் ணிசைத்துப் பாட உதவுமேயன்றி, இதற்காக ஓதுக்கப்படும் பணம் வேறு எந்த உருப்படியான காரியத் துக்காவது பயன் படுமா என்றுகேட் டால், கேட்பவர்களை நாட்டுக்குக் கேடுண்டாக்கும் நாத்திகர்கள் என்று ஏன் நாவாரப் பொய் கூற வேண்டும்?

இந்த மசோதாவில், தேவாரம் பாடுவதற்கும் பணம் ஓதுக்கவேண்டு மென்று விரும்புவர்களுடைய நோக் கம், ஒருவேளை, பணச் செலவில் பதிகம் பாடப்பெற்றால்தான் பரமன் மகிழ்வார் என்றும், பணச்செலவின் றிப் பதிகம் பாடப்பட்டால் பரமன் பகைத்துக் கொள்வார் என்றும் கருதி இவ்விண்ணப்பத்தை விடுத் திருக்கிறார்களோ என்ற சந்தேகம் நமக்கு உண்டாகிறது. பணச் செல வில் ஒருவர் பதிகம் பாட, பரமன் அதனைப் பரம திருப்தியுடன் ஏற்று எல்லோருக்கும் பலனளிப்பார் என்ற முறை பாதகமானது—இலஞ்சம் கொடுத்து இலாபம் அடைவது போன்றது — கடவுள் தன்மைக்கே மாறுபட்டது என்று கூறும் பகுத் தறிவாளனை ஏன் பரம விரோதி யாகக் கொள்ளவேண்டும்?

ஆண்டு ஒன்றுக்கு மூன்றரைக் கோடி ரூபா வீதம் கோயில்களுக் குச் செலவிட்டும், நம்நாட்டில் சமய உணர்வோ, சமய ஒழுக்கமோ சிறி தளவும் வளரவில்லை என்பதை ஒப் புக் கொள்ளும் சைவ அன்பர்கள், ஒரு சிறு தொகை தேவாரம் பாடுவ தற்காக ஓதுக்கிவிட்டால் சமய உணர்வும், சமயஒழுக்கமும் வளரும் என்று எப்படிக் கருதுகிறார்களோ? தெரியவில்லை. கோயில் விதிப்படி, தேவாரம் பாடுவதற்கு ஆகமங்களும் ஸ்மிருதிகளும் அனுமதி தரவில்லை யென்றபோதிலும், தேவார திருவாச கங்கள் பண்டாரப் பாடல்கள் என்று பார்ப்பனரால் ஓதுக்கப்பட்ட போதி லும், நம்முடைய ஓதுவார்கள் அவற்றை ஆலயங்களில் பாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். இங் ஙனம் பாடுவதற்குப் பயிற்சி அளிக் கும் பள்ளிக்கூடங்களாகப் பற்பல தேவாரப் பாடசாலைகளும் ஆங்காங் குள்ளன. என்றாலும், இதனால்கூடச் சமய உணர்வும், சமய ஒழுக்கமும் மக்களிடையே உண்டாகவில்லை. இப் பொழுது ஆலயங்களில் பாடப்படும் தேவார—பிரபந்தங்களும் பணச் செலவில்தான் பாடப்படுகின்றன. கோயிற் பொதுப்பணம் அதற்குச் செலவிடப்படவில்லை என்ற போதி லும் தனிப்பட்டவர்கள்—தேவாரப் பிரியர்கள் சிலர் அதற்காகப் பணம் செலவிடத்தான் செய்கிறார்கள். என் றாலும் சமய உணர்வும், சமய ஒழுக் கமும் ஏற்படவில்லை.

சமய உணர்வும், சமய ஒழுக்க மும் தேவார—பிரபந்தங்களில் கூறப் பட்டிருந்தால், அவற்றைப் பாடக் கேட்கும் மக்களுக்குச் சமய உணர் வும், சமய ஒழுக்கமும் உண்டாகியே தீரும். கோயிற் பணத்தைத் தேவா ரம் பாடுவதற்குச் செலவிடாததால், மக்கள் அத்தேவாரத்தில் கூறப் படும் ஒழுக்கநெறிகளைக் கடைப் பிடித்து ஒழுகமுடியாதென்று முறையிட்டுக்கொண்டனரா?

கோயில்களில் தேவாரம் பாடக் கூடாதென்ற ஏற்பாடு இன்றுநேற்று ஏற்பட்டதல்லவே! நெடுங்காலமாக இந்த ஏற்பாடு இருந்து வருகிறது. ஒரு நாட்டின் தாய்மொழி, வளமும் சிறப்பும் அடையவேண்டும் என்ற முறையில், தமிழ்நாட்டுக் கோயில்க ளில் சமஸ்கிருத வேதபாராயணம் நடைபெறுவதைக் கண்டித்து, அங் கெல்லாம் தமிழ் மொழியில் ஏன் பாராயணம் செய்யப்படுவதில்லை என்று பகுத்தறிவாளர்களாகிய நாம் கூடப் பலகாலமாகக் கேட்டுவருகி றோம். ஆனால், சைவமெய்யன்பர்கள் இதுபற்றி இதுவரை எந்த நடவடிக் கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

சைவ அன்பர்களால் கொண்டா டப்படும் தேவார—திருவாசகங்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

பார்ப்பனியம்—சில குறிப்புகள்

ஆர்நர் மைல்ஸ் என்ற ஆங்கில ஆசிரியர் தாம் எழுதிய "லாண்ட் ஆப் தி லிங்கம்" (Land of the Lingham) என்ற நூலில், பார்ப்பனர்என்ற தலைப்பில் எழுதப்பட்டிருக்கும் தம்முடைய அனுபவக்குறிப்புகள் பல வற்றுள் சில இங்கு தரப்படுகிறது. யாரும் பார்ப்பனருக்கு விரோதிகளல்ல, பார்ப்பனியத்துக்கே விரோதிகள் என்பதை இக்கட்டுரையைப் படிப்பவர் கள் நன்குணர முடியும் என்பதற்காகவே இதனை இங்கு வெளியிடுகிறோம்.

முதுகெலும்பின்றி, பார்ப்பனரின் அடிபணிந்து, அவர்களின் அடிமைக ளாக மக்கள் தயாராக இருந்ததா லேயே, அசோக சாம்ராஜ்யம் அழிந் தது. அந்தக் காலத்து (பார்ப்பன ரல்லாத) "சூத்திர" மன்னன், தனது ஆதிக்கத்தை அதிவேகமாகச் செலுத்தினான். புத்த மதத்தைத் தன் ராஜ்யத்தில், புகுத்தினான். அவனுக்குப் பிறகு குழப்பம் ஏற்பட லாயிற்று. அந்தப் புத்த மன்னன என்று சாவானோ என்று சதா காத் துக்கொண்டிருந்த பார்ப்பனர்கள், அவனுடைய மரணத்திற்குப் பிறகு தங்கள் சூழ்ச்சியாலேயே ஒரு மாறு தல் ஏற்படச் செய்தனர். சமஸ் [illegible]ஈ, சேனாதிபதிக்கு ஒரு பார்ப்ப னத்தி மனைவியானாள். அதன் பய னைச் சூழ்ச்சிக்காரப் புரோகிதக் கூட்டத்தினர், சேனாதிபதியைத் தம் பக்கம் சுலபத்தில் திருப்பிக்கொள்ள முடிந்தது. அரசனுடைய வார்சு தாரர், கொல்லப்பட்டார். யார் கொன்றார்கள் என்பதுகூடத் தெரிய முடியாமலே கொல்லப்பட்டனர். அரசனது வார்சுகள் கொல்லப்பட்ட உடன் சேனாதிபதியின் மகன் (பார்ப் பன மனைவிக்குப் பிறந்தவன்) பட்ட மடைந்தான். முதுகெலும்பற்ற (குடிகள்) அப்போதைய மக்கள் யாரோ வேறு பரம்பரைக்காரன் அரசாள்வதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் பார்ப்பனியத் திற்கு அடிமையானார்கள்.

சேனாதிபதியின் மகனான அக்கினி மித்திரர் ஆட்சியிலே, புத்த மத இலக்கியங்கள், இந்து மத இலக்கி யங்களாக உரு மாற்றப்பட்டு, இந்து மதக் கிரந்தங்களுடன் சேர்க்கப் பட்டன. எதனையும் எடுத்து விழுங்கி ஜீரணமாக்கிக் கொள்வது இந்து மதத்தின் சக்தி! பிறப்பினால் ஜாதி உண்டென்பதும் அதற்குப் பூர்வ கர்மமே காரணம் என்பது மான தத்துவம் நிலை நிறுத்தப் பட்டது.

தற்குறிகளே தாசர்களாயினர்

திபெத்நாட்டில்ஒருகூட்டம்பார்ப் பனர்கள் மகாத்மாக்களாகி இரக சியமத சங்கங்களை ஏற்படுத்தினார் கள், அதன்மூலம் (அடுத்த) மேல் உலகவாழ்விற்காக மக்களுக்கு "இன்ஷ்யூர்" செய்யும் ஏகபோக உரி மையைப் பெற்றனர். குருட்டுப் பழக்கம், மாயாஜாலங்கள்மூலம், மக் களை அவர்கள், அன்றும், இன்றும், அஞ்ஞானத்தில் அழுத்திவைத்துள் ளனர். தற்குறிகளான மக்களிடை புரோகிதர் அன்றும் இன்றும்ஆதிக் கத்தைப்புகுத்தி ஆட்சி செலுத்து வதைப்பற்றி ஆச்சரியப்படுவதற் கில்லை. ஆனால் நீண்ட அங்கிதரித்து மேல் நாடுகளுக்கும்சென்று அங்கும் அளக்கும் இந்த ஏமாற்று வித்தை யில் சொக்கிவிடும், மேனாட்டுப்பேர் வழிகளை என்னென்போம். அவர் களைப்பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டியதுதான்!

மேல்நாட்டிலுள்ள "கீழ்நாட்டு மாந்தரீகக் கோஷ்டி"யினரின் ஆஷாட பூதி குணத்தையும் மிருதுவானகுர லையும் கண்டு, மயங்கிக் காசுபணம் கொடுத்து ஆதரிக்கும் அங்கத்தி னர்கள், இந்தியா சென்று தங்கள் பணம் எப்படி "ஏழைகளுக்குப்" பயன்படுகிறது என்பதைப்பார்ப்பது நல்லது. மிருதுவான குரல்படைத்த அந்தப் பிச்சைக்காரர்கள் பார்ப்ப னர்களே. இவர்கள் ஏழைகளைக்கால் தூசுக்குச்சமானமாகவே கருதுகிறார் கள். "ஏழை போனஜென்மத்தில் அவன் செய்த பாபத்தின் காரண மாகத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பான்! அல்லது கர்ம ஏணியின் கடைசிப் படியிலிருந்து மேலேறிக்கொண்டிருப்பான்! போன ஜென்மத்தில் அவன் ஏதாவதொரு மிருகமாக இருந்திருப்பான்! இந்தத் தடவைதான் மானிடஜென்மம் பெற் றிருப்பான்"! என்று கருதப்பட்டவர் கள் பார்ப்பனருடன் சரிசமமாக, மூச்சுவிட முடியுமா? கடவுளும் அவரின் பிரதிநிதிகளான பூலோகத் திலுள்ள புரோகிதர்களும் அனுமதி தர மறுக்கும் காரணத்தால் நோய் தீர்த்துக்கொள்ள, வைத்யசாலைக்கு வர மறுக்கும் மக்களிடம், மேனாட் டான் என்ன போதனையைச் செய்ய முடியும்! புரோகிதக் கொடுமை, சட்டதிட்டங்களினின்றும் ஏழைகள் மீள மார்க்கமில்லை.

"பிராமணு, மமதேவதா"

புரோகிதர்களுக்கும், உயர் ஜாதிப் பார்ப்பனருக்கும், "தானம்" அளிப் பதை ஒரு இந்து மிகவும் முக்கிய மானதாகக் கருதுகிறான். ஒருவன் எவ்வளவு பெரிய 'பாவம்' செய் திருந்த போதிலும், அதற்கேற்ற அளவு 'தானம்' அளித்துவிட்டால் அந்தப் பாவம் துடைக்கப்பட்டு விடும் என்பது அவன் நம்பிக்கை. உதயப்பூரில்அந்தக்காலத்தில் அடித் ததைப்போல், இன்று கொள்ளை அடிக்கப் பார்ப்பனரால்முடிவதில்லை. அந்தக் காலத்தில் அரசனை ஒரு தட்டில் வைத்து மற்றொரு தட்டில் தங்கம் போட்டு சரி எடை நிறுத்து, தானம் தருவார்கள்! மகாராஜா எவ் வளவுக் கெவ்வளவு எடை அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு பார்ப்பனர் பாடு கொண்டாட்டந்தான்! ஏனெ னில் அரசர் நிறைக்கு நிறை போடப் படும் தங்கம்வெள்ளியை, புரோகித ருக்கும் பார்ப்பனருக்குந் தானே பங்கு போட்டுத் தரப்படும்!

பிளேக்கும் — புரோகிதனும்

நான் மைசூரில் இருந்தபோது என் தோட்டக்காரன் குழந்தைக்குச் சீதபேதி கண்டது. ஆகவே குழந் தையைச் சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தேன். இதனை ஒரு புரோகிதன் கேள்விப்பட்டதும், கிருஸ்தவ ஆஸ்பத்திரியை விட்டுக் குழந்தையை அழைத்துக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று "தேவி" வற்புறுத்துவதாகத் தோட்டக்கார னுக்குச் சொல்லிவிட்டார். நான் [illegible]க்கிறேன், [illegible]கிறோம், [illegible] தவறிச் சில் [illegible]

தடுக்க முயன்றேன், சாயவில்லை. குழந்தையை வீட்டிற்கே அழைத்துப் போய்விட்டார்கள். குழந்தை ஆஸ்பத்திரியிலிருக்கையில் 'பிளேக்' அவர்கள் வீட்டுப் பக்கம் பரவி இருந்தது. ஏற்கெனவே இளைத்துப் போயிருந்த குழந்தைக்கு, சடுதியில் 'பிளேக்' கண்டது. இரண்டு தினங்களில் இறந்துவிட்டது. இருபது நாள் "சாவுத் தீட்டு"க்குப் பிறகு, தோட்டக்காரன் திரும்பிவந்தான். அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, பிளேக் பரவியிருந்த அவன் வீட்டிற்கே நான் அனுப்பி விட்டேன். 'தேவி' குறுக்கிடாதிருந்து, அவனும் குழந்தையை ஆஸ்பத்திரியிலேயே விட்டுவைத்திருந்தால், அவன் குடும்பத்துடன், என் வீட்டுக் கொட்டகையில் தங்க வேண்டுமென நான் வற்புறுத்தியிருப்பேன். 'தேவி'யின் சக்தி பெற்ற பார்ப்பனப் புரோகிதனுடைய மிரட்டலுடன் நான் போட்டியிட முடியுமா! "நீசன்" கையால் (ஆஸ்பத்திரியில்) மருந்து சாப்பிடுவதைவிட, துர்நாற்றமடிக்கும் ஒரு கோயிலில் பலி கொடுப்பது அல்லது 'விளக்கு' வைப்பது போன்றவைகளே மேலென்பது தோட்டக்காரன் எண்ணம்.

பார்ப்பனப்பிக்ஷுவின் அகம்பாவம்

ஒரு நாள் காலை, என் வேலையாள், யாரோ ஒரு உயர்ஜாதிப் பார்ப்பனப் பிச்சைக்காரன் என்னைப் பார்க்க விரும்புவதாகச்சொன்னான். பிச்சைக்காரன் தனக்கு என்ன தேவை என்பதை, வேலைக்காரன் மூலம் சொல்லி அனுப்பவும் மறுத்தான். இப்படிப்பட்ட ஆசாமி, யார் எனப் பார்க்க நான், கீழே இறங்கிவந்தேன். அழகிய கரை போட்ட வேஷ்டி கட்டிக்கொண்டு, சால்வையை மேலே போர்த்துக்கொண்டு, இருந்த அந்தப் பார்ப்பனன் தன்கைகளைப் பின்புறம் கட்டியவண்ணம் நிமிர்ந்து நின்று சற்று அகம்பாவத்துடன், பார்த்துத் தலையைச் சிறிது ஆட்டினான். அது மற்றவர்களைக் கீழானவர்களென மதிக்கும் ஆணவம் கொண்ட பார்ப்பனப் பார்வை என்பது எனக்கு நன்றாய் விளங்கிற்று. அவன் வந்த காரியம் தான் இரண்டாம்தாரம் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகவும், அதற்காகப் பணம் தேவை என்று என்னைக் கேட்க வந்ததாகும். இதைப் பார்த்தவுடன் நான் அவனுக்கு உதவி செய்வதைப் பெரிய பேறு எனக் கருதுபவன் நானல்ல என்பதைக் காட்டிவிட்டேன். மேலும், பணம் தேவையானால், அதை ஏதாவது ஒரு வேலை செய்து பெறவேண்டுமெனக் கூறாமல் இருக்கவும் முடியவில்லை. ஆதலால் எதிரில் கிடந்த விறகுக் கட்டையை வெட்டும்படி ஜாடை காட்டினேன். அவன் அகம்பாவமாக உறுமிக்கொண்டு, பின்புறம் கட்டிய கைகளை எடுக்காது, நிமிர்ந்தவண்ணம் சென்றான்; பார்ப்பனன் கேட்டதைக் கொடுக்க மறுத்துவிட்டதால், மேல் உலகப் பேறு எனக்கு வரவிருந்ததை இழந்துவிட்டேன்!

மந்திரம்! அந்தப் பாச்சா என்னிடம் பலிக்காது.

நான் பெங்களூரில் இருந்தபோது, பிரபல இந்து சமுகத்தைச் சேர்ந்த, மூன்று பார்ப்பனர்கள் என் வீட்டிற்கு வந்தனர். கடவுள் தன்மையைப் பற்றியும், பிரபஞ்ச மாயையைப் பற்றியும், அவர்கள் எனக்குக் கூறினார்கள். தன் மனதிற்குகந்த விதத்திலே, உலகைத் திருத்தி அமைக்கவே, சிவபிரான் தக்சமயம், உலகை அழித்து வருவதாக அவர்கள் கூறினார்கள். போகும்போது அவர்களில் ஒருவன், என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தான். "பவதி பிக்ஷாந்தேகி" கடிதந்தான் அது! அவனுக்குப் பணந்தேவை. என்னிடம் பணம் இருந்தால், கொடுக்க வேண்டும்! கொடுக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாதெனவும், ஆனால் அதற்கேற்றதை 'சேவை' மூலம் சரிப்படுத்துவதாகும், அந்தக் கடிதத்தில்குறிப்பிட்டிருந்தது. அது என்ன சேவை என்பதை என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஏனெனில் நான்பணத்தைக்கொடுக்கவில்லை! என் கல்மனத்தைப்போக்க, அந்தப்பார்ப்பனன், மாந்திரீகத்தை உபயோகித்தான். அவன் உச்சாடனம் செய்யும் மந்திரம் வெகு எளிதாக வேலைசெய்யும் என்ற நம்பிக்கை அவனுக்கு அபாரமாக இருந்தது. ஆகவே அவன் அடிக்கடி வீட்டிற்கு வந்து, நான் ஏதாவது கெட்டகனவு கண்டேனா என்று கேட்டபடி இருந்தான். யாராவது என் தொண்டையைப் பிடித்து அறுப்பதுபோல் கனவு கண்டேனா? நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது பின்னால் யாரோ நின்றுகொண்டு கத்தியால் குத்துவதுபோலக் கனவுகண்டேனா? என்றெல்லாம் கேட்டான். எனக்கு இந்த 'தெகிடுத்தத்தம்' ஏற்கனவே தெரியும்! ஆதலால் நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள மகாசக்தி வாய்ந்த "மாந்திரீக தாயத்து" ஒன்று வைத்திருப்பதாகவும், யாரேனும் எனக்குக் கெடுதல் செய்ய எண்ணினால், அவர்கள் செத்து விடுவார்களென்றும் கூறினேன்.

பட்டைநாமமும் சுகாதாரமும்!

இந்துக்கள், தங்கள் பழக்க வழக்கங்களைப்பற்றி விட்டுக்கொடுக்காது பேசுவார்கள். ஒரு பார்ப்பனர், ஒரு சமயம் என்னிடம் நெற்றியில் அணியும் "நாமம்" சுகாதார விதிக்காக ஏற்பட்டதென வாதாடினார். உடம்பிலிருந்து வெளிவரும் 'வியர்வையை' அது தன்னிடம் இழுத்து உலரச் செய்கிறது என்றும், நெற்றிவியர்வை, ஒழுகி, கண்களில் விழாதபடி தடுக்கிறது என்றும் கூறினார்.

வேதகால வேதியர் மாமிசம் உண்டனர்

மாமிசம் சாப்பிடுபவர்களை, பார்ப்பனர் கடுமையாகக் கண்டித்தபோதிலும், அவர்களில் சில வகுப்பினர் மாமிசம்சாப்பிடுகின்றனர். மனுதர்ம சாஸ்திரத்திலே, பார்ப்பனர் சாப்பிடக்கூடிய மிருகம், பறவை, மீன் வகையராக்களின் ஜாபிதா தரப்பட்டிருக்கிறது. வடநாட்டுப் பார்ப்பனர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். தென்னாட்டு வைதிகப் பார்ப்பனர் அவர்களை ஒதுக்கித்தள்ளி விடுகின்றனர். வேதகாலத்தில் பார்ப்பனர் எல்லா வகையான மாமிசமும் சாப்பிட்டனர். நாய்க்கறியைக் கூடத் தள்ளினதில்லை! பழைய ஏடுகளைப்பார்த்தால் அவர்கள் மிருகங்களைச் சித்திரவதை செய்து கொன்றனர் என்பது தெரிய வரும். இதற்குக் குயவர்கள் உதவியாக இருந்தனர். ஆடு ஒரு அறைக்குள் கட்டிவைக்கப்பட்டிருக்கும். ஒருவன் அது திமிறிக்கொண்டு ஓடாதிருக்க அதன் கால்களைப் பலமாக அழுத்திப்பிடித்துக்கொள்வான். ஒருவன் அதனுடைய "விரையை"ப் பிடித்துப் பலமாக அழுத்த, அது சில நிமிடங்கள் பாதையால் துடி துடித்து, இறக்

கும். அதன் வாயைத் திறந்து கொஞ்சம் உப்பை உள்ளே திணிப்பார்கள். உடனே செத்த ஆட்டை தெர்ழுவத்திற்கு எடுத்துச் சென்று பார்ப்பனர் கத்திகொண்டும், கைகளாலும் அதன் தோலை உரித்து எடுப்பார்கள். பிறகு மாமிசத்தைத் துண்டித்துப் பானையில் தண்ணீருடன் வேகவைத்து, வேறு "மசாலா" எதுவுமின்றி, மாமிசத்தைப் புசிப்பர்.

ஜாதிக் கொடுமை

செருமார் எனப்படும் தாழ்ந்த வகுப்பினர், பார்ப்பன ஊர், குளம், கோயில் பக்கமே போகக்கூடாது. ஊருக்குள் அவன் வந்துவிட்டால் ஊருக்கே பிராயச்சித்தம் செய்தாக வேண்டும். காலில் சாணித்தண்ணீர் ஊற்றி, தலையில் பாலை ஊற்றி, தீட்டுப்பட்டவனுக்கு, தீட்டுப் போக்கப்படும். சில சமயங்களில் அவன் "பஞ்சகவ்யம்" (மாட்டு சாணிமூத்திரம்) பருகவேண்டும்.

பார்ப்பனன் தீட்டாகாதிருக்க வேண்டி, செருமார்கள், பார்ப்பனருக்கு, 30 அல்லது 90 அடி தொலைவில் ஒதுங்கி நின்று விடவேண்டும். ஜில்லாவிற்கு ஜில்லா இது வித்தியாசப்படும். புலையர்கள் 90 அடி தூரத்தில் தான் வரலாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

இவர்களுக்கு அவர்கள் மேல்

12-ம் பக்கத் தொடர்ச்சி

தாவை இரண்டு திருத்தங்களோடு ஆதரிக்க வேண்டுமென்று 2-3-49-ல் தீர்மானித்துள்ளார்கள். திருநெல்வேலிச் சுப்பய்யாபிள்ளையின் போக்குக் கும்பகோணத்துப் பழனியப்ப முதலியாருக்குப் பிடிக்கவில்லை. அவர் ஆதரிக்கிறார்—இவர் எதிர்க்கிறார். இரண்டு பகுதியினரும் பழுத்த சைவர்கள். ஆனால் முகாம் வேறு வேறு. இம்மசோதாவை ஆதரிக்கும் திருநெல்வேலியாரிடம் சிறிது சீர்திருத்தப் போக்கு நிலவுவதைக் காண்கிறோம். இம்மசோதாவை எதிர்க்கும் கும்பகோணத்தாரிடம், குருபீடம் கும்பகோணத்தில் இருப்பதால், குருபீடத்துக்குப் பயந்துகொண்டு அதனை எதிர்க்கும் போக்கைக் காண்கிறோம். ஆகையால், இவர்களுக்கு அவர்கள் மேல் என்றே கருதுகிறோம். இதில் கும்பகோணம் வெற்றியடையுமா அல்லது திருநெல்வேலி வெற்றியடையுமா என்பது, சர்க்கார் இம்மசோதாவுக்குச் செய்யும் முடிவைப் பொறுத்திருக்கிறது.

நம்முடைய கருத்து, இப்போது சர்க்கார் செய்யும் முயற்சி வெற்றிபெறவேண்டும் என்பதேயென்றபோதிலும், கடவுளுக்காகக் காசு எதுவும் செலவிடக்கூடாதென்ற நோக்கமுடையவர்கள். கடவுளுக்காகக் காசுசெலவிடும் ஏற்பாடுகளைச் செய்துவைப்பதால் தான், அந்த ஏற்பாடுகளை மேற்பார்வை பார்க்க வருபவர்கள், அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு கோலாகல விளையாட்டுக்களில் இறங்க நேரிடுகிறது என்று நாம் நிச்சயமாகக் கூறுகிறோம். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளதாகச் சொல்லப்படும் கடவுளை ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மடக்கி வைத்துக்கொண்டு கோயில்களும் மடங்களும் கட்டி — குருக்களையும் மடாதிபதிகளையும் ஏற்படுத்திப் பணத்தைப் பாழாக்கக்கூடாதென்று கூறுகின்றோம். கடவுளுக்காகக் காசைச்செலவிடாதே—காசைக்கண்டு கடவுள் ஏமாந்துவிடமாட்டார்—அப்படி ஏமாறுபவராய் இருந்தால் அவர் கடவுளாகமாட்டார் என்று கூறுகின்றோம். கடவுள்பற்றியவிளக்கங்களை நாம் கூறினால், அவை பலருக்கு யாது காரணத்தாலோ நாத்திகமாகத் தோன்றுகிறது. ஆனால் அனைவருடைய ஆதரவுக்கும் அன்புக்கும் இலக்காக விளங்கிய வங்கக் கவி தாகூர் அவர்கள் கடவுளைப் பற்றிக்கூறிய சில கருத்துகளை இங்கு தருகிறோம். அதன்பின்னராவது நம்மை நிந்திக்கும் அன்பர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்தட்டும்.

"கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர்."

"நம்முடைய உலக விவகாரங்களுக்குப் பயன்படாதவர்"

"பொருளையோ போகத்தையோ பெறும் முயற்சியில் கூட்டாளியாக இருக்கத்தக்கவரல்ல."

"அரசியலிலோ, செல்வந் திரட்டுவதிலோ, போர்த்தொழிலிலோ, பிறவற்றிலோ நம்மால் பயன்படுத்தக் கூடியவர் அல்ல"

"அவர் இவை அனைத்தையும் அறவே கடந்தவர்"

"எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை ஓரிடத்தில் தேடவேண்டியதில்லை."

"அம்முயற்சியே தவறு"

"எங்கும் எழில்பெற விளங்கும் இறைவனைக் குறிப்பிட்ட ஓரிடத்தில் இருப்பதாக மனத்தால் நினைப்பதும் தவறு"

"அவ்விதம் செய்வது ஆண்டவனையே அவமதித்தலேயாகும்"

"அவர் நம்மிடம் அகப்படக்கூடியவரல்ல"

"கடவுளைப் பெறுதல் நமது நோக்கமாக இருத்தல் கூடாது"

என்ற பல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். இக்கருத்துக்களையே தான் நாமும் கூறிவருகிறோம். ஆனால், நாம் நாத்திகப் பட்டியில் சேர்க்கப்படுகிறோம். விந்தைகளில் ஒன்று என்று கூறுவதைத் தவிர இதற்கு வேறென்ன கூறமுடியும்?

கல்லிலும் செம்பிலும் கடவுள் இருக்கமாட்டார்—கோயிலிலும் குளத்திலும் கடவுள் குடியிருக்க மாட்டார்—நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்த வேண்டாம் என்று கூறியவர்களை, இவ்வுலகத்துச் சம்பந்தமற்ற சித்தர்கள்—துறவிகள், எனவே அவர்களுடைய உபதேசம் இவ்வுலகில் வாழும் நமக்குப் பயன்படாது என்று பக்குவம் கூறும் பக்தர்கள், கவிதாகூர் போன்றவர்களை ஒரு சித்தர் என்றோ, துறவியென்றோ, இவ்வுலகத்தைக் கடந்து நின்று வேறு உலகில் சஞ்சாரம் செய்தவரென்றோ கூற முடியுமா? சித்தர்களும் துறவிகளும் சொன்னவற்றையே தாகூரும் சொன்னார்—நாமும் சொல்லுகிறோம். சித்தர்களும் துறவிகளும் வணங்கப்படுகின்றனர்—தாகூர் வாழ்த்தப்படுகிறார்—நாம் வையப்படுகிறோம்! ஆனால், அதற்காக வருத்தப்படவில்லை. கடவுள் கோயிலில் இருப்பதாக நினைத்துக்கொண்டு அங்கே போகாதே என்று நாம் கூறினால், நம்மை நாத்திகப் பிரசாரம் செய்வதாகக் குற்றஞ் சாட்டிக் கூண்டில் அடைக்கச் சொல்லும் குறைமதியினர், இனிமேலாவது கவி தாகூர் போன்றவர்கள் கூறும் கருத்தையும் நாம் கூறும் கருத்தையும் ஒப்புநோக்கிப் பார்த்து உண்மையை உணரும் நிறைமதியைப் பெறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

திராவிட நாடு

ஞாயிறு] 3—4—49 [காஞ்சி

அந்தோ அழகர்சாமி

சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பியக்கத்தின் தனிப் பெரும் தளபதி! பார்ப்பனியத்தின் பகிரங்கப் பகைவன்! மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கும் முன்னணித் தலைவன்! வைதிகத்தின் வைரி! வர்ணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற் செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! தந்நலம் மறந்து தன் நாட்டுக்குப் பணியாற்றிய பண்புடையோன்! அறிவுப் பாதையில், அங்கும் இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறிவாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்! கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க் கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனாதனமா? அதில் சாய்ந்துவிடாதே! சதியா? அதனைச் சாகடி! மதமா? அதனை மங்கவை! மாசுகளைத் துடை! மன்மதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதையைப் பெறு! சுயமரியாதையைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ முற்படு! இதுவே உன்னுடைய குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று, எங்குசென்றாலும் எக்காளமிட்டு, மூலை முடுக்கெல்லாம் முரசொலி கிளப்பித், தன்மான இயக்கத்தின் முன்னணித் தலைவனாக விளங்கி, அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்த அழகர்சாமியே! நீயா மறைந்தாய்? நின்னை மக்கள் மறந்த போதிலும் நீ அவர்களை மறவாமல் அரும்பணியாற்றி வந்தனையே! கைம்மாறு கருதாது கடமையைச் செய்த கர்மவீரனே, நீயா மறைந்தாய்? என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதை நடைமுறையில் செய்து காட்டிய செம்மலே, நீயா மறைந்தாய்? எதிர்ப்பையே விருந்தாகக்கொண்டு, எண்ணற்ற மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்த எந்தலே, நீயா மறைந்தாய்? பகுத்தறிவுப் பாசறையின் படைத்தலைவனே, நீயா மறைந்தாய்? தாயைப் பிரிந்த சேயைப்போல் தவித்து நின்ற தமிழ்மக்களின் தன்மானத்தைக் காக்கவந்த தளபதியே, நீயா மறைந்தாய்? அந்தோ! அழகர்சாமி, நீயோ மறைந்தாய்! நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் செய்தி! மறக்க முடியாத சம்பவம்!! மனதைக் குழப்பும் நிகழ்ச்சி!!!

தோழர் அழகர்சாமி அவர்கள், சிலகாலமாகவே நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலேயே இருந்துவந்தார் என்றபோதிலும், இவ்வளவு திடீரென்று அவர் நம்மை விட்டுப் பிரிந்து, நம்மை எல்லாம் மீளாத் துயரத்துக்கு ஆளாக்குவார் என்று எதிர்பார்க்கவே இல்லை. அவருக்குஏற்பட்ட நோய், நாளுக்குநாள் குறைந்து வருவதாகவே செய்திகளே கிடைத்து



நமக்கு ஆறுதல் அளித்து, அழகர்சாமி மீண்டும் நம்மிடையே வந்து தொண்டாற்றுவார் என்ற நம்பிக்கையையே தந்தன. ஆனால், அந்த நம்பிக்கை ஏக்கத்தையே பரிசாகத் தந்துவிட்டது. 28—3—49-ல் தோழர் அழகர்சாமி இயற்கை எய்திவிட்டார் என்ற திடுக்கிடும் செய்தி கிடைத்ததும் திகைத்துப் போனோம்.

திசை தவறிய கப்பலிலுள்ள மக்கள், கரைகாண முடியாது தவிக்கும் சமயத்தில், கப்பலின் பாய்மரமும் ஒடிந்துவிழக் கண்டால் எவ்வளவுபதைப்பரோ, அதைவிடப்பன்மடங்கு அதிகமான பதைப்பு, தன்மானத் திசைக்குவழிகாட்டியாகவிளங்கிய அழகர்சாமி என்னும் பகுத்தறிவுக் கப்பல், நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்திவிட்டது என்ற நெஞ்சு திடுக்கிடும் செய்தியைக் கேள்விப்பட்டபோது ஏற்பட்டுத் தமிழ் மக்களை எல்லாம் தத்தளிக்கச் செய்துவிட்டது.

தளராத உள்ளத்தோடு தமிழ் நாட்டுக்கு ஓயாது பணியாற்றி வந்த ஒரு உண்மையான உழைப்பாளி, அந்த உழைப்பின் பயனாகப் பெற்ற பரிசு உயிரைக் குடிக்கும் நோயாகவா அந்தோ, அமையவேண்டும்!

கருத்தழிந்து கிடந்த மக்களின் கண்களைத் திறக்கக், கத்திக்கத்திக் கருத்துக் குவியலைக் கக்கியவருக்குக் காசநோயா பரிசாகக் கிடைக்க வேண்டும்!

காசநோயைத்தீர்க்கக் காலாகாலத்தில் காசு கிடைக்கவில்லையே என்ற கவலை, மேலும் அவருடைய நோய் வளர்வதற்கு வித்திட்டது போல் ஆகிவிட்டதே என்பதை நினைக்கும் போது, ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதைப் பொதுவாக எல்லாரும் குறிப்பாகச் சுயமரியாதை இயக்கமும் எண்ணிப்பார்த்து வருந்தாமல் இருக்க முடியாது.

தோழர் அழகர்சாமி அவர்கள் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலேயே இருக்கும் நிலைமை ஏற்பட்டபின், சென்னைச் சுயமரியாதைச் சங்கத்தார் ஒரு தொகையும், வேறு சிற்சில ஊர்களிலிருந்து சிறுசிறு தொகையும் உதவி செய்யப்பட்டது. அது, அவருடைய கடைசி காலத்தில் சிறிது ஆறுதலை அளித்ததென்றபோதிலும், அவரை நம்பி வாழ்ந்த அவருடைய குடும்பம் இனி எப்படி வாழ்க்கையை நடத்தும் என்பதையாவது, அவருடைய ஒப்பற்ற சேவையால் உருவான பலனைக் கண்ட அனைவரும் எண்ணிப் பார்த்து ஆவன செய்யவேண்டுமென்பதே எமது மனப்பூர்வமான விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

மறைந்த மாவீரரின் மனைவியும், மூன்று புதல்விகளும், இரண்டு புதல்வர்களும், வயது முதிர்ந்த தாயாரும் தமிழ்நாட்டின் — தன்மான இயக்கத்தின் உதவியையே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

தங்கள் குடும்பத்தலைவன் மறைந்ததால் ஏற்பட்டுள்ள குமுறுதலோடு வறுமையும் சேர்ந்து அவர்களை வாட்டி வதைத்து மேலும் கொடுமைப் படுத்தாது பார்த்துக்கொள்ள வேண்டும். இதுவே நாம் அவருக்கு

ஆற்ற மறந்த கடமைக்குக் கழுவாயாகும்.

அவரது பிரிவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும், மற்றும் தன்மான இயக்கத் தோழர்களுக்கும் நமது கட்டுக் கடங்காத ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்து, ஆறுதல் கூறுகின்றோம்.

ஆம்! அழகர்சாமி போய்விட்டார்! அவர் பெயர்—அவர் புகழ்—அவர் சேவை அனைத்தும் நம் அனைவர் உள்ளத்திலும் குடிகொண்டு விட்டன. இனி அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்து வெற்றிகண்டு, வீர அழகர்சாமியின் புகழை நிலைநிறுத்துவோமாக!

புதிய முதல்வர்.

சென்னைச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் 31-3-49-ல் நடைபெற்றது. முன்னாள் முதல்வர் தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் தலைவர் தேர்தல் போட்டியில் கலந்து கொள்வதில்லை என்று விலகவே, தோழர் குமாரசாமி இராசா அவர்களும் டாக்டர் சுப்பராயன் அவர்களும் போட்டியிட்டதில், தோழர் குமாரசாமி இராசா அவர்களே கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சென்னை மாகாண முதல்வர் என்ற முறையில், இனி, அவர் புது மந்திரி சபையை ஏற்படுத்துவார் என்று தெரிகிறது. இதற்காக 2-4-49-ல் அவர் தோழர் காமராசர் அவர்களுடன் டில்லி சென்று, அவர்கள் கட்டளைப்படி அமைச்சர் குழுவை அமைப்பாராம். இப்பொழுதிருக்கும் அமைச்சர்களை மாற்றிப் புது ஆட்களை அமைச்சர்களாக்கக் கூடாதென்று சிலரும், மந்திரிசபை முழுவதையுமே மாற்றியமைத்தாக வேண்டுமென்று சிலரும் கருதுகிறார்கள். இவ்விரு சாராரின் கருத்துக்களில் எது வெற்றிபெறும் என்பது மேலிடத்துத் தாக்கீதைப் பொறுத்ததாகும். மேலிடம் என்று ஒன்று இருக்கும்வரையில், இங்குள்ளவர்களின் எண்ணங்களை இவர்கள் தங்கள் விருப்பத்தின்படி எப்படிச் செய்யமுடியும்?

சென்னை மாகாணத்துக்கு யார் முதல்வராய் வந்தபோதிலும், "பிடி" வடநாட்டுத் தலைவர்களிடம் இருக்கும் வரையில், சென்னை மாகாணம் குறிப்பாகப் பொருளாதாரத் துறையிலும் பொதுவாக மற்றத் துறைகளிலும் முன்னேற்றமடைய முடியாதென்பதே நமது கருத்தாகும்,

பார்ப்பனியம்—சில குறிப்புகள்

5-ம் பக்கத் தொடர்ச்சி

கோரகர்கள் எனப்பட்ட வகுப்பினர் சமீப காலத்திற்கு முன்பு வரையிலே, ஒரு பாண்டத்தைத் கயிறு கொண்டு கழுத்தில் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு தான் வழி நடக்கவேண்டுமென்றிருந்தது. துப்பவேண்டுமானால், அந்தப்பாண்டத்திலே, துப்பவேண்டும். ஏனெனில், ரோடிலே துப்பிவிட்டால், அவ்வழிவரும் பார்ப்பனருக்குத் தீட்டு ஏற்படும்! தெற்கே சில இடங்களில், பாதையில் ஒரு இலை காணப்படும். அதன் மீது ஒரு கல் இருக்கும். அவ்வழியே போகிற பார்ப்பனருக்கு, தாழ்ந்த வகுப்பினன், எவ்வளவு தொலைவு ஒதுங்கி இருக்கவேண்டுமோ, அவ்வண்ணமே இருக்கிறான் என்பதைக் காட்டும் குறியாகும் அது! சில சமயங்களில் அவன் வயலில் இடுப்பளவு சேற்றில் நின்றுகொண்டிருக்கக் காணலாம். இலையை அடையாளம் வைக்காத பட்சத்தில், தான் தொலைவாக இருப்பதை உரத்தகுரலாற் கூவித் தெரிவிப்பான்.

நானே, கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள கடையில், சிகரெட் வாங்குவதுண்டு. கடைக்கார பார்ப்பனப் பையன், சிகரெட்டையும்மீதிப்பணத்தையும் ஒரு மரத்தட்டில் வைத்து ஒருமுழ நீளத்திலிருந்து கொண்டு தான், எனக்குத் தருவான்.

தற்செயலாக ஒரு பார்ப்பனன், ஒரு தீண்டாதவன் இருக்குமிடத்தின் பக்கம் போகநேரிட்டு விட்டால் தனது "பூணூலை" மாற்றிக்கொண்டு, பஞ்ச கவ்யம் சாப்பிட்டு, பரிசுத்தமாக வேண்டும். கன்று போட்டவுடனே, அந்தப் பசுவைத் தீண்டிவிட்டால், தீட்டு வந்துவிடும்! அதைப் போக்கிக்கொள்ள உபவாசம் இருக்கவேண்டும்.

வகுப்பு மாறிய விந்தை

"செம்போட்டி என்ற வகுப்பினர், தீண்டப்படாத வகுப்பினராக இருந்து, ஒரு ஆனந்தமான சம்பவங் காரணமாகத் தீண்டப்படும்வகுப்பினராக மாறினர். மலையாள நாட்டில் தாலிபரம்பா தேவாலயம் கட்டி முடிந்ததும், அதனைப் பரிசுத்தப் படுத்த அபாரமான பணச் செலவு ஏற்பட்டது. ஆயிரம் பார்ப்பனர் இதற்காக அமர்த்தப்பட்டனர். சடங்குகள் முடியும் தருவாயில் இருக்கும்போது, ஸ்ரீ கோவிலில் செப்பனிட்டுவிட்டு, அப்போது தான், ஒரு செம்போட்டி, வரக்கண்டனர். பார்ப்பனர் திடுக்கிட்டனர். முதலிலிருந்து பிராயச்சித்தச் சடங்கை திரும்பச் செய்யவேண்டும். சடங்கின் செலவோ அபாரம். ஆனால் அது முடியாத காரியம். எனவே, அன்றுமுதல் சமுதாயத்துறையிலே செம்போட்டிகளின் நிலைமை உயர்ந்தது. அவர்கள் இப்போது தீண்டக்கூடாதவர்களல்ல!

பார்ப்பனத்திக்கும் 'சூத்திர'னுக்கும் பிறந்தோர் சண்டாள வகுப்பினர் எனப்படுவார். அவர்கள் தான் எல்லா ஜாதிகளுக்கும்கீழானவர்கள். ஆனால் சூத்திரப் பெண்ணுக்கும் பார்ப்பனனுக்கும் பிறந்தால், அந்த வகுப்பு கீழ் ஜாதிகள் ஜாபதாவில் முதல் இடம் பெறும்! பார்ப்பனர் உயர்வின் போக்கு அப்படியிருந்தது.

கொள்ளைக் கூட்டம்

"கீழ் ஜாதி" மக்களைப் பார்ப்பனன், கேவலமாக மதித்ததோடன்றி அவர்களைக் கொள்ளையும் அடித்துமன்றோ வந்தான். கலியாணம், சாவு, பிரசவம், எதுநேரிடினும் இந்த வகுப்பார், பார்பனனுக்குப் பணந்தரவேண்டும். கீழ்ஜாதிக்காரன் ஏதேனும் பாபம் செய்துவிட்டால், அது நீங்க, பார்ப்பனன் கூறுவது போல் பார்ப்பனருக்கு அன்னதானமளிக்க வேண்டும். தன் குடும்பம் பட்டினியால் வாடியபோதிலும், பார்ப்பன உத்சவாதிகளுக்கு இவன் பணந்தரவேண்டும்.

கோழைகள்

வியாபாரம், பார்ப்பனருக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அது சற்று மட்டமான தொழிலாகக் கருதுவார்கள். ஆகவே ஏதேனும் ஒரு வேலையைத்தான் தேடுவார்கள். ராணுவத்திற்கும் அவர்கள் வேலைக்குச் செல்வதுண்டு. ஆனால் தைரியமற்றவர்களுக்குக் கிடையாதுக்கிறோம், கோழை மனப்பான்கிறோம், நல் ... தவறிச் சிலர்

அவர்கள், போர்த் தொழிலுக்கு லாயக்குள்ளவர்களல்ல. யுத்தத்தில் அவர்கள் "ஒற்றர்" வேலைக்கு மிகத் தகுதியானவர்கள். தங்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் செய்துவிட்டு யாராவது ஏமாற்றிவிட்டால், அவன் அடுத்த ஜென்மத்தில் கழுகாகப் பிறந்து பிணத்தைப் பிடுங்கித் தின்பான், என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அந்தக்கால தர்பார்

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு, பார்ப்பனருக்கு வரியே கிடையா! சுதேச சமஸ்தானங்களில் அவர்கள் எந்தக் குற்றத்தை வேணடுமானாலும் செய்யலாம். சாதாரண தண்டனை உண்டே தவிர, தூக்குத் தண்டனை என்பது அவர்களுக்குக் கிடையாது. ஆரியமன்னர்கள், பார்ப்பனருக்குத் தூக்குத்தண்டனை தரமாட்டார்கள்.

கும்பகோண சம்பவம்

பார்ப்பனத்தி, கோர்ட்டில் சாட்சியம் கொடுக்க வரலாமா, என்ற பிரச்னை, ஒருசமயம், கும்பகோண சம்பவமொன்றில் கிளம்பிற்று. கதிர்வேலு என்ற பெருங் கொள்ளைக்காரன் ஒரு வீட்டில் புகுந்து 10,000 ரூபாய் பெறுமானமுள்ள சாமானைக் கொள்ளை அடித்தான். பிறகு அவன் சுட்டுக் கொல்லப்பட்டான். கொள்ளை அடிக்கப்பட்ட வீடு ஒரு பார்ப்பன விதவையுடையது. புருஷன் இறந்து ஒரு வருஷம் ஆவதற்குள், தான்வெளியே வரக்கூடாதெனவும், ஆகவே கோர்ட்டில் சாட்சி கூற முடியாதென்றும், அவள் கூறிவிட்டாள். பகிரங்கக் கோர்ட்டுக்கு வராவிட்ட போதிலும், மாஜிஸ்டிரேட்டின் அறைக்கு வந்து சாட்சி கூறும்படி சொல்லப்பட்டது. அதுவும் பலிக்கவில்லை. கடைசியில், மாஜிஸ்ட்ரேட், அவள் வீட்டிற்குச் சென்று சாட்சியம் விசாரித்து வந்தார்.

ஜாதிக்கொடுமை—கோர சம்பவம்

1932ம் ஆண்டு, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பட்டுக்கோட்டையில் நடந்த ஒரு சம்பவம் ஜாதி ஆணவத்தால் நேரிட்ட கோரத்தை விளக்கிற்று. பெருமழை! ஆகவே தாலுகா [illegible] முற்றத்தில் அனேகர் [illegible]ன்றனர். அதிலே மூன்று [illegible] திராவிடர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. நீட்டுப்பட்டு விடுமென்று உயர்ஜாதிக்காரர், அந்த ஆதித்திராவிடரை முற்றத்தை விட்டுவிலக்கி, ஒருபுளியமரத்தடியில் தங்கும்படி விரட்டிவிட்டனர். மரத்தடியில் அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, மரத்தின் மீது இடி விழுந்தது. ஒருவன் அங்கேயே மாண்டான். இருவருக்குக் காயம். அவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பார்ப்பனத் திமிர்: மற்றொரு சம்பவம்.

1932—ல் அலகாபாத்தில் பார்ப்பன அட்டூழியம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. ஒரு பார்ப்பனன், வண்ணாத்தி வீட்டிற்குச் சென்று அழுக்குத் துணிகளை எடுத்துப் போகும்படி, அவளை அழைத்தான். வீட்டில் வேலை இருப்பதால், அன்று மாலை வந்து அழுக்கு எடுத்துக் கொண்டு போவதாக அவள் கூற, பார்ப்பனன் அவளை உதைத்தான். அவள் கூக்குரலைக் கேட்டு வேறு இருபெண்கள் அங்கு ஓடிவந்து அவனைத் தடுத்தனர். அவர்களுக்கும் உதை விழுந்தது. ஒருத்திக்கு அடிவயிற்றில் உதை பலமாக விழவே, அவள் இறந்துவிட்டாள். இதற்காக வழக்குத் தொடரப்பட்டு, பார்ப்பனன் தண்டிக்கப்பட்டான். ஆனால் அவன்மேல் கோர்ட்டுக்கு மனுச் செய்துகொண்டான். அவனுடைய திமிரைக்கண்டு வெகுண்ட அலகாபாத் கோர்ட் ஜட்ஜ் "ரஷ்ய ஜார்" அல்ல என்பதை அவன் உணரட்டும் என்று அவனுக்குத் தக்க பாடம் வரும்படி, சரியான தண்டனை அளித்தார்.

சுயநலப் புலிகள்

சமஸ்தான உத்தியோகங்களையோ, சர்க்கார் உத்தியோகங்களையோ பெற வேண்டுமானால், அதற்காக, பார்ப்பனர், பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பணிவதாகப் பாசாங்கு செய்வர். மகமதிய அரசர்களில் பலர், பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். அப்போது தீட்டு ஒன்றும் ஏற்படுவதில்லை. தனக்கு உத்தியோகம் உயரவோ, தன் உற்றார் உறவினருக்கு வேலைகள் கிடைக்கவோ பார்ப்பனர், முகஸ்துதி செய்து மற்றையோரைக் கொண்டாடத் தயாராக இருப்பர். பணம் பறிக்கும் வழி முறைகளைத் தயார் செய்வதிலே, வரி வசூலிக்கும் அதிகாரிக்கும் தெரியாத அளவு, பார்ப்பனருக்குத் தெரியும்.

பணிவசூல், கணக்கு வேலைமுதலிய வேலைகளைப் பார்ப்பனன் செய்வான். சிறப்பாக குமாஸ்தா (கிளார்க்) வேலையிலே, அவர்கள் நிபுணர்கள். பார்ப்பனரை வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ள ஐரோப்பியர், சர்வ ஜாக்ரதையாக இருக்கவேண்டும்: ஏனெனில், பார்ப்பனன் எந்தக் குற்றத்தைச் செய்திருந்தபோதிலும், மற்ற வகுப்பினர் அந்தக் குற்றத்தை வெளியே சொல்லத் துணியவே மாட்டார்கள். ஆங்கிலக்கல்வி கற்று, பெரிய உத்தியோகங்களிலேயுள்ள பார்ப்பனர் தங்கள் ஜாதி ஆசாரத்திலும், வழுவியவர்களாகவே, மேலுக்குக் கருதப்படுவார்கள். அந்தரங்கத்திலே அவர்கள் பார்ப்பனராகவே இருப்பார்கள்.

இந்துமதக் கொடுமை ஒழிய வேண்டும்.

அரசியலை மட்டும் கவனித்துக் கொள்ளுங்கள். மதத்தைத் தொட வேண்டாம், என்கிறார்களே, இவர்களுக்குத் தம் நாட்டின் நிலை தெரியவில்லை என எண்ணுகிறேன். சரித்திரம் இல்லாதது இந்தியா. கி. மு. 500-ல், டாரயஸ் பஞ்சாபில் பிரவேசித்ததும், வடநாட்டில் சில காலம் கிரேக்க ஆதிக்கத்தை அலெக்சாண்டர் ஏற்படுத்தியும் பிரமாதமான பலனைத் தரவில்லை. சந்திரகுப்த பரம்பரையின் ஆட்சியிலிருந்துதான், சரித்திரமென்ற யோக்கியதைக்கு லாயக்கான விஷயங்கள் இந்தியாவிலே நடந்தன. விக்ரக வணக்கம், மூடப் பழக்க வழக்கங்களே சரித்திரமாக இருந்து வந்தன.

இன்று நிலவிவரும், மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிந்தால்தான், அரசியலின் மூலம் ஏதேனும் முன்னேற்றம் அடைய முடியும்.

நாகரிக இலட்சியங்களைப் பாழாக்கிக்கொண்டு, கோடிக் கணக்கான மக்களின் உடலையும் மனதையும் விஷமூட்டிப் பாழாக்கி, நாட்டில் சர்ப்பமென நகர்ந்துகொண்டிருக்கும் இந்து மதக் கொடுமை உள்ள வரையில், இந்தியா ஒரு அடிகூட முன்னேற முடியாது.

★ அழகர்சாமியின் வீரவுரை ★

"நான் இளைஞர்களை நம் இயக்கத்தில் ஈடுபடுத்தும் கருத்துடையோன். சுயமரியாதை இயக்கத்தை பூர்ணமாகத் தழுவுகிறேன். இவ்வியக்கம் எல்லாமனிதர்களும் சமம் என்னும் கொள்கையைக்கொண்டு மக்களுக்குப் பொருளாதார சமூக விஷயங்களில் சமத்துவம் எவ்வாற்றாலும் எய்தல் வேண்டும் என்னும் கருத்தை உறுதியாய்க் கொண்டது.

பலர் நம்மைப், பணக்காரர்களை நாம் எதிர்த்தல் பயனற்றதாகுமென்கிறார்கள்.

இது கோழைத்தனமாகும். உண்மைக்கே போராடுவோம். உண்மையே ஜெயிக்கும். வீரர்களாகிய இளைஞர்களுடைய ஊக்கத்தைஎந்தப் பலத்தாலும் எந்தக் காலத்திலும் எதிர்க்கமுடியாது. இந்த இயக்கத்தைச் சிலரே துவக்கினர். ஆனால் இப்பொழுது இவ்வியக்கத்தில் பல பெரியோர்களும், அளவற்ற மக்களும் சேர்ந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தை இனி அசைத்தல் இயலாது.

பெரிய பணக்காரர்களைத் தழுவும் சோற்றாலடித்த பிண்டங்கள் பலர் இருக்கின்றனர். அப்பதர்கள் அப்பணக்காரர்கள் மக்களுடைய பொது நன்மையைப் புறக்கணிக்க உதவிசெய்து வருகின்றனர். ஆயினும் அவர்களால் என்ன செய்யமுடியும்? ரஷியதேசத்து அரசனைப்பற்றியும், அவனது அவகேடான முடிவைப்பற்றியும் அறிந்திருப்பீர்கள். நம் தேசத்து இளைஞர்களும் மற்றத் தேசத்தார்களைக் காட்டிலும் ஆண்மையில், மாண்பில் குறைந்தவர்களல்ல, உண்மையின் பொருட்டு வெற்றியடையும் உறுதியுள்ள வீரர்களாய் நாம் சென்றுகொண்டிருக்கிறோம். எவ்விடையூறு எதிர்ப்படினும் அஞ்சமாட்டோம்.

என்னைப் பற்றித் தோழர்கள், அடிக்கடி கொள்கை மாறுவது என்ற பழக்கம் என்னை எட்டிப் பார்க்கவில்லை என்கின்றனர். உண்மைதான். இதற்கிடையில் எனக்கு ஒரு ஐயம். அதாவது கொள்கை மாறுவது எதற்கு? என்பதுதான்.

வெல்லத்தைவிட்டு வேம்பைச் சுவைப்பதா. அமுதத்தை விட்டு நஞ்சைக் குடிப்பதா? இம்மாதிரி செய்வோர் பைத்தியக்கார முட்டாள்களல்லவா? அப்படிப்பட்டவர்கள்தான் சு. ம. இயக்கத்தைவிட்டுப் பிறகொள்கைக்கு மாறுவார்கள்.

ஆனால் நான் அப்படிப்பட்டவனல்லன். எனவே என் அகராதியில் "மாற்றம்" என்பதும் இல்லை. நான் அவ்வாறு மாறின பல தோழர்களின் உள்ளங்களை நன்கு அலசிப் பார்த்திருக்கிறேன்.

பரிதாபம்! அவர்ளெல்லாம் ஒவ்வொரு தன்னலத்தைக் கருதி மாறியும் பயனடையாமல் தவிக்கின்றனர் என்பதை உணர்ந்துதான் இங்ஙனம் கூறுகிறேன்.

அவர்கள் இன்று புதிய பக்தர்களாக விளங்குகின்றனர்.

ஆனால், அவர்களெல்லாம், "அன்று பிரிந்தோம், இன்று கூடினோம், இனி, என்றும் இக்கொள்கையிலேயே இருப்போம்" என்று கூறிக்கொண்டு நம்மோடு வரக்கூடிய நாள் தூரத்திலில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகிறேன்.

மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரட்டீஸ் என்ற ஒரு அறிஞரைப் பற்றிக் கேட்டோம். ஆனால் கண்டோமில்லை; இவ்விந்தியாவிலேயே அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை.

எனினும் இத்தமிழ் நாட்டில் இன்று அரும் பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீசைக் கண்டோம்; தாடியோடு கண்டோம். அவர்தான் நம் ஈ. வெ. இராமசாமிப் பெரியார்.

அவரால் காணப்பட்ட நமது இயக்கமும் அவ்வியக்கத்தின் அழுத்தமான கொள்கைகளும்தான் நான் மாற்றமடையாததற்கும், இம்மேடையில் ஏறுவதற்கும், இன்றைய அழகர்சாமி தன் மதிப்போடு விளங்குவதற்கும் முதற்காரணம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வியக்கத் தொண்டாற்றிவரும் தமிழர்கட்கு இன்று நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது.

பழைய மௌடீகங்களைக் கைவிடுங்கள். பழைமை பழைமை என்று சொல்லும் பழக்கத்தை வேரறுத்து, மௌடீகத் தன்மைகளை விட்டொழித்து, பழம் பெரும் மக்களின் வீர வாழ்க்கையைக் கைக்கொள்ளுங்கள். இவற்றைச் செய்து முடிக்கும் வரையில் நெருக்கடி இருந்துதான் தீரும்.

மற்றவர்களைப்போல் நம்மிடத்தில் ஜீயர்களில்லை; நம்மிடத்தில் மடாதிபதிகளில்லை; நம்மிடத்தில்ஒரு பஜாஜ் இல்லை; நம்மிடத்தில் ஒரு பிர்லா இல்லை; நம்மிடத்தில் பணக்காரக் கும்பல்கள் இல்லை; எல்லோரும் ஏழைகள்.

வேறுகட்சிகளில் பட்டம் பதவிகளுக்குத்தன் முடிச்சுத்தவிர பிறர் முடிச்சவிழ்க்கத் தெரியாத சில தமிழர்கள் இருக்கலாம். அவர்களைப் பற்றிநான்ஒன்றும்கூறவிரும்பவில்லை.

இந்நாட்டில் பாண்டியன் ஆண்டென்ன? விஜயரங்க சொக்கநாத நாயக்கன் ஆண்டென்ன? வேறு நீர் வளம், நிலவளம் கொழித்துப் புலவர் வாய்கிழிய வருணித்துப்பாடிய பேரரசர்கள் ஆண்டுதான் என்ன பயன்?

நாங்கள்தான் இந்த நாட்டுத் தலைவர்கள், தமிழ்நாடே எங்களுடையது என்று பித்தலாட்டம்செய்து,இந்தப் பிராமணியம் தமிழர்களை அடிமையாக்கி வைத்திருப்பது தவிர வேறு என்ன பயனைக்கண்டோம்.

இதை வெளிப்படுத்திய நம் இயக்கத்தில் வரவர அறிஞர்கள் பலர் சேர்ந்தனர். அவர்களுள்ளும் பலருடைய நிலைமை இன்று தடுமாற்றமாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் பார்ப்பனியத் தொல்லைதான். எந்தத்தொல்லைக்கும் அசையா உள்ளத்துடன் உழைக்கும் தோழர்கள் சிலரேயாவார்.

இன்னும் எத்தனையோ மக்கள் படிக்கின்றனர், எழுதுகின்றனர், ஆனால் நடப்பதில்லை. சிந்திக்கிறோம், நன்கு நினைத்துப் பார்க்கிறோம், நல்லறிவு வருவதில்லை; தவறிச் சிலர்

நடைமுறையில் காட்டமுற்பட்டால் வஞ்சகப் பிராமணியம் குறுக்கிடுகிறது.

இந்தப் பிராமணியம் இந்நாட்டில் வருவதன்முன் இங்கே வகுப்புச் சண்டை உண்டா? மதச்சண்டை உண்டா? பூணூல் உண்டா? நயவஞ்சகமுண்டா? ஒருகுலத்துக்கொருநீதியும், தருப்பையும் பஞ்சாங்கங்களும் உண்டா? அவற்றின் கொடுமைகள் உண்டா? என்றுதான் கேட்கிறேன்.

இந்தச்சூழ்ச்சிகள் தமிழன் மனதில் வேரூன்றி வெளிக்கிளம்புவானுல், அவனுல் சாதிக்க முடியாததில்லை என்பதை உறுதியுடன் கூறுகிறேன்."

மறைந்த மாவீரருக்கு! இறுதி மரியாதை

சிலகாலமாகவே நோய்வாய்ப்பட்டுத்தஞ்சையில் சிகிச்சைபெற்றுவந்த தன்மதிப்பியக்கத் தளபதி தோழர் K. V. அழகர்சாமி அவர்கள் (28—3—49-ல்) தம்முடைய ஐம்பத்திரண்டாவது வயதில் இயற்கைஎய்திவிட்டார் என்ற செய்தி உடனே தஞ்சாவூர் மாவட்ட முழுவதும் பரவி விட்டது. இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி எட்டியதும் பட்டுக்கோட்டை, குப்பகோணம், பாபநாசம், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சி, பொன்மலை முதலான ஊர்களிலிருந்தும் இயக்கத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் வந்து தஞ்சையில் கூடிவிட்டனர். கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களும் தோழர் எம். ஆர். இராதா அவர்களும் மற்றும் பலரும் உடனே தஞ்சாவூர் சென்று, தோழர்கள் ஏ. வி. பதி, இரா. இராசகோபால், எஸ். எஸ். மணி, எஸ். பஞ்சாபிகேசன், பட்டுக்கோட்டை டேவிஸ், சாமிநாதன், நடராசன், ஆகியவர்களுடன் உதவியாக இருந்து, கல்லறைவரை சென்று இறுதி மரியாதையைச் செலுத்தினர். பிரேத ஊர்வலம், பல ஆயிரவர் புடைசூழ, பல முக்கியமான தெருக்களின் வழியாக மௌனமாகச் சென்றது. தோழர் கே. கே. நீலமேகம், எம். ஆர். ராதா, நாகை காளியப்பன், எஸ். எஸ். மணி, பிரான்சிஸ், பொன்மலை பராங்குசம், டி. கே. சீனுவாசன், இளங்கோ, ரங்கராசு, வழக்கறிஞர் வேணுகோபால், நீடாமங்கலம் ஆறுமுகம் முதலியோர் மறைந்த மாவீரனின் தொண்டைப் புகழ்ந்து பேசினர்.

* * *

பட்டுக்கோட்டைவாசிகள் அழகர்சாமியின் மறைவு கேட்டதும் திடுக்கிட்டுப் போயினர். அவருடைய மறைவுக்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில், நகரவாசிகள் கடைகளை மூடித் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

சென்னையில் இருந்தும், மற்றும் பல முக்கியமான ஊர்களிலிருந்தும் அனுதாபத் தந்திகள், அவரது குடும்பத்தாருக்கு அனுப்பப்பட்டன.

மாதத்துக்கொரு மனைவி!

—

ருமேனியா தேசத்தில், பிறனொருவன் செய்த குற்றத்திற்காகப் பேலாகிஸ் என்பவன் சென்மத் தீர்ப்பு அனுபவித்தான். இவன் இவ்வாறு சிறைப்பட்டது, தான் ஹங்கேரி தேசத்தில் புரிந்த கொலைகளின் பொருட்டு மரண தண்டனை அடையாமல் இருப்பதற்காகவே.

இவனைப்பலபெண்கள் காதலித்தனர். மாதம் ஒரு புதியமாது இவன் வீட்டுச் சாரள வழியாய்த் தோன்றுவாள்.

ஆனுல் இவனை ஒருவரும் சந்தேகிக்கவே இல்லை. ஓர் தினம் தன் வீட்டையே விற்றுவிட்டு பேலாகிஸ் மறைந்துவிட்டான். இதன் பிறகே இவனை மக்கள் சந்தேகிக்கத் தொடங்கினர்.

இவ்வீட்டை வாங்கினவர் ஓர் பணக்காரர். வீட்டைச் செப்பனிட முயன்ருர். அப்போது அடிப்படையில் 13 இரும்புப் பெட்டிகள் நன்ருகப் பூட்டியபடியே இருந்தன. வீடு வாங்கினவர் அல்லாவுதீன் குகையில் நுழைந்தவர் போல், பணப்பெட்டிகளைக்கண்டு பிரமித்து, இனித் தன் செல்வத்தை இவ்வுலகோர் மதிப்பிடவும் கூடுமோ என்று மகிழ்ச்சிப் பெருக்கடைந்தார். என்ருலும், உடனே இது போலீசாருக்கு எட்டிவிட்டது. புதையல்கள் எல்லாம் அரசாங்கத்தை யன்ருே சேரவேண்டும்! போலீசார் பத்திரமாகப்பெட்டிகளை எடுத்துச் சென்று போலீஸ் ஸ்டேஷனில் பெரும் அதிகாரிகளின் டையில் உடைத்துப் பார்த்தனர். அந்தோ ஒவ்வொன்றிலும் ஒரு பிணம்! பிணங்கள் சில அழுகிக் கிடந்தன; சில எலும்புகளாய் இருந்தன. சில ஊதிப் போய் இருந்தன. போலீசார் இக்காட்சியைக் கண்டு மூர்ச்சையாயினர். 13 பிணங்கள் எல்லாப் பிணங்களும் பெண்களின் பிணங்கள்.

உடனே பேலாகிஸ் என்பவனைத் தேட ஆரம்பித்தனர். பேலாகிஸின் உருவப்படம் அடையாளங்கள் எல்லாம் மேனுடு முழுவதும் அனுப்பப் பெற்றன. எங்கு பார்த்தாலும் இதே கூக்குரல். பேலாகிஸ் பேலாகிஸ், பேலாகிஸ் என்ற பேச்சு. பேலாகிஸ் என்பவன் பிரஞ்சு வெளிநாட்டுஇராணுவப்படையில்சேர்ந்து, முறை சுரத்தால் உயிர் துறந்தான் என்று ஓர் வதந்தி பிறந்தது. இதன் பிறகு பேலாகிஸையும் போலீசார் தேடுவதை நிறுத்தினர்.

பின்னர் ஓர்நாள் ருமேனியா தேசத்தில் உள்ள அராத் சிறைச்சாலையில் உள்ள ஒருவன் பெயர் பிரான்சு விம்மர் அல்லவென்று தெரியவந்தது. பிரான்சு விம்மர் என்பவன் ஒரு பெயர்போன கள்வர் கூட்டத்துத் தலைவன். பிரான்சு விம்மர் பிடிபட்டு விட்டதாகவும் அவன் அராத் சிறையில் இருப்பதாகவும் கருதப்பட்டு வந்தது. ஆனுல், இப்பொழுது அராத் சிறையில வசிப்பவன் பிரான்சு விம்மர் அல்லவென்றும், அவன் பேலாகிஸ் தான் என்றும், பேலாகிஸ் தன்னைத் தூக்கில் இடாதபடி பிரான்சு விம்மர் என்று தன்னைக் கூறிக்கொண்டு வேற்றுத் தேசத்தில் சிறைவாசம் செய்கிருன் என்றும் தெரியவந்தது. இவனை ஹங்கேரி தேசத்தார் கொலைக் குற்றத்திற்குத் தண்டிக்கக் கருதி ருமேனியாவிலிருந்து தம் தேசத்துக்கு அனுப்பிவிடும்படி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

13 மனைவிகளைக் கொன்று அப்பிணங்களை 13 இரும்புப் பெட்டிகளில வைத்துப் பூட்டி, அப்பெட்டிகளைத் தன் வீட்டின் அஸ்திவாரத்திற்கு அடியில் புதைத்துவிட்டு, வீட்டையும் விற்று, வேற்றூர் ஓடி, அங்கும் தன்னுயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு வேறு நாமத்துடன் சிறைவாசம் புகுந்திருந்த பேலாகிஸ், இருபது ஆண்டுகள் வரையில் மேனுட்டுப் போலீஸ் படைகளை எல்லாம் ஏமாற்றிக் கடைசியில் அகப்பட்டுக்கொண்டான்.

இவர்களுக்கு அவர்கள் மேல்

2-ம் பக்கத் தொடர்ச்சி

எல்லாம், சிவனருளைப்பெற்ற சைவ சமய ஆசிரியர்களால், சிவனைப் போற்றியும், புகழ்ந்தும், வியந்தும், பாடப்பெற்ற பாடல்கள் என்று சொல்லப்பட்ட போதிலும், இந்தப் பாடல்கள் எல்லாம் பண்டாரப் பாட்டுகள் என்றும், அவற்றைக் கோயில்களில் நடைபெறும் பூசை—விழாக் காலங்களில் பாடக்கூடாதென்றும் பார்ப்பனர் ஏற்படுத்தியுள்ள ஏற்பாடு இன்றுந் தமிழ் நாட்டிலுள்ள எல்லாச்சிவன்கோயில்களிலும் நடைமுறையில் இருந்துவருவதோடு, வடமொழி மந்திரங்களைக் கொண்டே சிவனுடைய வழிபாட்டுக் காரியங்கள் எல்லாம் நடைபெற்றும் வருகின்றன. உண்மையாகவே, சிவன், தமிழருடைய கடவுளும்—தமிழ் மொழியில் விருப்பமும் உடையவராய் இருந்தால், தம்முடைய அருளினலே—தாமே அடியெடுத்துக் கொடுத்து—தம்மையே புகழ்ந்து பாடப்பெற்ற தேவார—திருவாசகங்களைத் தம்முடைய முன்னிலையில் பாடக்கூடாதென்ற ஆரியக்கொள்கையின் அடிவயிற்றில் நெருப்பிட்டு—வடமொழி மந்திரங்களின் மண்டையில் அடித்துத், தமிழ் மக்களைக் கொண்டே, தமிழ் மொழியிலேயே தம்முடைய காரியங்கள் எல்லாம் நடைபெறும்படி செய்திருக்கவேண்டுமென்றும்; இவ்வாறு செய்திருந்தால், 'எங்கள் சிவன்—எங்கள் சைவம்' என்று ஏமாந்து பேசித் திரியும் சில சைவத் தமிழ்ப் பெரியார்களின் மானமாவது ஒருவாறு காப்பாற்றப்படுமென்றும் நாம் பலகாலமாகவே கூறி வருகிருேம்.

இந்தச் சைவர்களுக்கு உண்மையாகவே தமிழ்மொழியிடத்துப் பற்றும், அது சிறப்படையவேண்டுமென்பதில் விருப்பமும் இருக்குமானுல், வடமொழியைத் தேனெனப் பருகித்—தமிழ்மொழியை நஞ்செனக் கருதித்—தமிழ் மக்களைச் சூத்திரக்களாக்கி மகிழும் ஒருகடவுளை இவர்கள் தங்கள் கடவுள் என்று ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும் கூறிவருகிருேம். இவர்கள் தமிழ் மொழிக்குச் சிறப்புக் கொடுத்து, அதனை வளர்க்க முற்படாததைப் பற்றிக் கூட நாம் அவ்வளவு கவலைப் படவில்லை. ஆனுல், தமிழ் நாட்டுக் கோயில்களில் வடமொழி மந்திரங்கள் கூறப்படுவதைத் தாராளமாக வரவேற்கிருர்களே என்பதை நினைக்கும்போதுதான், இவர்களின் போக்கில் நமக்குச் சந்தேகம் ஏற்படுகிறது.

தேவாரம்பாடுவதற்குப் பணம் ஒதுக்க வில்லையே என்று விம்மி அழுது, "எங்கேபோய் விட்டார்கள் இந்தச் சைவர்கள்" என்று கேட்கும் இவர்களை, "தேவாரங்களைப் பண்டாரப் பாடல்கள் என்று கூறிக் கோயிலுக்கு வெளியே எடுத்து வீசியபோது இந்தச்சைவர்கள் எங்கே போயிருந்தார்கள்?" என்று நாம் கேட்கிருேம்.

இப்போது சென்னை சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவில் ஒன்பது வகையான செலவினங்கள் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் வடமொழி வேத பாராயணச் செலவினமும் ஒன்று. தேவாரத்துக்காகப் பணம் செலவிடவேண்டுமென்று கூறுஞ் சைவர்கள், தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழி வேதபாராயணம் நடைபெறுவதற்குச் சர்க்கார் பணம் செலவிடலாமா என்று கேட்டு கண்டிக்காதது மட்டுமல்ல இதிலுள்ள வேடிக்கை, அந்தச்செலவினத்தை இவர்கள் மனமார வரவேற்கிருர்கள் என்பதுதான் வேதனைகலந்த வேடிக்கையாகும். சர்க்கார் இப்போது ஏற்படுத்தியிருக்கும் செலவினங்களை வரவேற்க முன்வந்த இந்தச் சைவர்கள்,

"ஒவ்வொரு செலவினமும் மிகவும் சிறப்பானது"

என்று நற்சாட்சிப் பத்திரம் அளித்திருக்கிருர்கள். அதேபோது, தேவாரத்துக்கும் ஒரு தொகை ஒதுக்க வேண்டுமென்று கெஞ்சுகிருர்கள். இப்படிப்பட்டவர்களைக் கொள்ளையடிப்பதில் பங்கு கேட்பவர்கள் என்று கூறினுல் அதுஎப்படிக் குற்றமாகும்?

ஆரியமதங்களாலும், ஆரியமொழியாலும் தமிழர்க்கும் தமிழ்மொழிக்கும் ஏற்பட்ட கொடுமைகளையும் கெடுதல்களையும் அறிந்திருந்தும் இன்னும் இவர்களுக்கு அறிவும்—தன்மதிப்பும்—தமிழன் என்ற உணர்ச்சியும் உண்டாகவில்லையே என்றுதான் நாம் வருந்துகிருேம், இவர்களுக்குப் பகுத்தறிவென்னும் விளக்கமும்—தன்மானமென்னும் உணர்ச்சியும் ஏற்பட்டுத் தாங்கள் தமிழ் மக்கள் என்பதை நினைவில் வைத்துக் காரியங்களை நடத்த முன்வரவில்லையே என்றுதான் நாம் கவலைப்படுகிருேம். மற்றப்படி நாம் கடவுளையோ அன்றி அவரை வழிபடுபவர்களையோ காரணமின்றிக் கடிந்துரைக்கும் கயவர்களல்ல.

நமக்கு இருக்கவேண்டிய கடவுள், எப்படி-எந்த முறையில் இருந்தால் நல்லது என்பதை விளக்குபவர்களே நாம். அந்த விளக்கம் இன்று நடைமுறையில் உள்ள கடவுளுக்கும், அவரைவழிபடும் முறைகளுக்கும் மாறுபட்டதாகத் தோன்றலாம். அதனுல் நாம் கடவுளை நிந்திக்கும் கயவர்களாகிவிட முடியுமா? நடந்து செல்லும் பாதையில் கிடக்கும் கல்லையும் முள்ளையும் அகற்றுபவனையும், அகற்றச் சொல்லுபவனையும் பார்த்து, "இவன் பாதையே கூடாது" என்று கூறும் பாவியென்ருு அழைப்பது? நாம், கடவுள்—மதம் ஆகியவற்றிற்கு இப்போது வகுத்திருக்கும் ஏற்பாடுகளும் சட்ட திட்டங்களும் மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்றவையாக இல்லையென்றும், அவை திருத்தியும் மாற்றியும் அமைக்கப்பட வேண்டுமென்றும் தான் கூறுகின்ருேம். இதனை இப்போது சர்க்கார் சிறுகச் சிறுகச் செய்துகொண்டும்வருகிறது. நம்மை நாத்திகர் என்று நிந்திக்கும் நண்பர்கள், நாம் கூறும் கருத்துக்களையும், சர்க்காரால் செய்யப்பட்டுவரும் சீர்திருத்தங்களையும் ஒப்புநோக்கிப் பார்க்கும் ஒய்வைப் பெறவேண்டும். அப்போதுதான் நம்மை நாத்திகர் என்று பேசியது நாத்துடிப்பால் ஏற்பட்ட விளைவு என்பதை உணர முடியும்.

கோயில்களுக்கும் மடங்களுக்கும் என ஏற்படுத்தப்பட்ட பெருந் தொகைப் பணத்தை வைத்துக் கொண்டு, நம் நாட்டிலுள்ள பண்டாரச்சந்நிதிகள் செய்துவரும்கொடுமைகளையும் அட்டூழியங்களையும்நாம்பல காலமாகவே கண்டித்தும், அவை ஒழிக்கப் படவேண்டுமென்றும் கூறி வந்தோம். அப்போதெல்லாம் நாம் நிந்திக்கப்பட்டோம். ஆனுல், இன்று அவை எல்லாம் சட்டத்தின் வாயிலாகச் சரிப்படுத்தப் படவேண்டிய நல்ல காரியங்களாகவும், அவ்விதம் செய்வோர் நல்லவர்களாகவும் கருதப் படும் அளவுக்கு நிலைமை மாறி

விட்டது. இந்தநிலைமை யாருடைய உழைப்பால் ஏற்பட்டதென்பதை நம்மை நிந்திக்கும் அன்பர்கள், நம்மையும் நம்முடைய கட்சியையும் வேண்டுமானால் மறந்து, நம்முடைய உழைப்பை மட்டும் உள்ளத்தில் கொண்டுபார்க்கவேண்டுகிறோம்.

மடாலயங்களில் பல காலமாக மறைமுகமாக நடைபெற்று வந்த அந்தரங்க அட்டூழியங்கள் பல இன்று பத்திரிகை உலகில் இடம் பெறும் அளவுக்கு வளர்ந்தது யாருடைய உழைப்பால் ஏற்பட்ட விளைவு என்பதனையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

தருமபுர மடத்துத் தம்பிரான், மடத்தில் சமையல் வேலை செய்து வந்த ஆறுமுகம் என்பவரின் மனைவி வைரத்தம்மாள் என்பவரைத் தகாத செய்கை செய்நார் என்றும், அதற்கு உடந்தையாக நாலுபேர் இருந்தனர் என்றும், பண்டாரச் சந்நிதி உட்பட ஐவர்மீது, 342, 497, 366, 379 ஆகிய சேக்ஷன்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதென்றும் ஒரு செய்தி 29—3—49-ல் வெளிவந்த "தினசரி" இதழில் காணப்படுகிறது.

சென்னை சர்க்கார்,மடாலயங்களில் நடைபெறும் அட்டூழியங்களை விளக்கி, அவை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கருதி, இந்து மதப் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா கொண்டு வருவதற்கு முன், இப்படிப்பட்ட அந்தரங்க அற்புத லீலைகள் பல பண்டாரச் சந்நிதிகளால் செய்யப்பட்டன. என்றபோதிலும், அவை யெல்லாம் அம்பலத்துக்கு வந்ததில்லை. எத்தனையோ வைரத்தம்மாள்மார் இத்தகாத செய்கைக்கு ஆளாகி இருப்பார்களோ யார் கண்டார்கள். கோயிற் பணம், கோதை நல்லாரோடு பண்டாரச் சந்நிதிகள் புரியும் லீலைகளை எல்லாம் மறைத்துவைக்கப் பயன்பட்டது. ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. பொதுப் பணத்தைச் சொந்தப் பணமாக மதித்து மடாதிபதிகள் ஆடிவந்த ஆட்டங்கள் எல்லாம் அம்பலத்துக்கு வரக்கூடிய அளவு வளர்ந்துவிட்டன. பண்டாரச் சந்நிதிகளின் பகல் வேடங்களை யெல்லாம் பாமரரும் உணர்ந்துகொள்ளும் முறையில், பத்திரிகைகள், பயமும் பாரபட்சமுமின்றித் தைரியமாகவே இப்படிப்பட்ட அந்தரங்க அற்புத லீலைகளை யெல்லாம் அம்பலப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலையில், பரமசிவன் ஆண் யானை வடிவம் எடுத்தும், பார்வதி பெண்யானை வடிவம் எடுத்தும் சேர்ந்ததால் பிள்ளையார் உண்டானார் என்று புகழ்ந்து பாடும் தேவாரத்தைப் பாடுவதற்குப் பொதுப் பணத்தில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டுமென்று இன்றும் கூடச் சைவர்கள் பாடுபடுகிறார்கள் என்றால், இதைவிட வேடிக்கையும் வேதனையும் வேறொன்று இருக்க முடியுமா? பரமசிவனுடைய லீலா விநோதங்கள் உருமாற்றத்துடன் வெளிப்படையாகச் செய்யப்பட்டன. பண்டாரச் சந்நிதிகளின் லீலாவிநோதங்கள் உருமாற்றமின்றி மறைவாகச் செய்யப்படுகின்றன. கயிலை வாழ் கடவுளுக்கும், கயிலாய பரம்பரையினரான பண்டாரச் சந்நிதிகளுக்கும் இதுதான் வித்தியாசம். அங்கே, பிடி (பெண் யானை) அதன் உருவைப் பார்வதியும், கரி (ஆண் யானை) அதன் வடிவைப் பரமசிவனும் எடுத்துத் தங்கள் இச்சையை நிறைவேற்றினர், இங்கே, பண்டாரச் சந்நிதிகள் வேடத்தைக் கலைக்காமல், பொதுப்பணத்தைவேலியாக அமைத்து அதன் மறைவில் மன்மத லீலைகள் புரிகின்றனர். இவ்விரு சாராருக்கும் தேவார — பிரபந்தங்கள் பாதுகாப்பளிக்கின்றன. மக்களிடையே பக்தி என்னும் வலையை வீசிப்பாடுபட்டுத் தேடிய பொருளைப் பறிப்பதற்கு இத்தேவார—பிரபந்தங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இனியும் இந்த வேலை தொடர்ந்து நடைபெறவேண்டுமென்று விரும்பும் சைவ மெய்யன்பர்கள், பிடிய தன் உரு உமை கொள்ள, சிவன் மிகு கரியது வடிவெடுத்துப் பிள்ளையாரைப் பெற்ற கதையை உலகுக்கு உணர்த்தவும், நாயன்மார்கள் தேவாரத்தின் வாயிலாகத் திருமால், இந்திரன், பிரம்மா முதலானவர்களையும், சமண—புத்தர்களையும் திட்டியது போதாதென்று ஓதுவார்களும் தேவாரத்தைப் பாடுவதன் வாயிலாகத் திட்டியும் ஏசியும் வருவதற்கும் பொதுப் பணத்தில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்கிறார்கள். இதனால் சமய ஒழுக்கமும் சமய உணர்வும் வளரும் என்று வாய் கூசாது கூறுகிறார்கள். இது ஒருபுறமிருக்கட்டும்.

சென்னை சர்க்கார் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இத்திருத்த மசோதாவை இன்னும் சிலதிருத்தங்களோடு இங்குள்ள சைவர்கள் எல்லோருமே ஆதரிக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை, திருநெல்வேலியில் உள்ள சைவர்கள் இந்த மசோதாவை இரண்டொரு திருத்தங்களோடு ஆதரிக்கிறார்கள். ஆனால் தஞ்சாவூர்ச் சைவர்கள் இந்த மசோதாவைத் தங்கள் முழுப் பலத்தோடு எதிர்க்கிறார்கள்.

"இப்பொழுது வந்திருக்கும் மசோதா நம் தர்மத்தை அழித்துவிடும் என்பது நிச்சயம்"

"எந்த விதத்திலும் இதனால் நன்மை ஏற்படப்போவதில்லை"

"இந்துக்கள் யாவரும் ஒருமுகமாய் இதை எதிர்க்கவேண்டும்"

"நம்முடைய ஒப்புயர்வற்ற தர்மங்களை எல்லாம் நாமே இழிவுபடுத்த முற்படுகிறோம்."

"இந்தச்சட்டம்இந்துமதத்தை அழித்துவிடும்"

"நாம் இதை அனுமதிக்கக் கூடாது"

"இந்த மசோதாவைத் தீவிரமாக எதிர்க்கவேண்டும்"

"அதுவும் காலாகாலத்தில் செய்யவேண்டும்"

என்பதாக 25—3—49-ல் கும்பகோணத்தில் கூடிய தஞ்சைமாவட்டச் சைவர்கள் தீர்மானித்துள்ளார்கள். ஆனால், தென்னிந்தியா முழுவதுக்குமே சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பரப்பும் திருநெல்வேலி மாவட்டச் சைவர்கள், இக்கட்டுரையின் முதற்பகுதியில் குறிப்பிட்டுள்ள வாசகங்களைக்கூறி இம்மசோ

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.

REGD M 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 10-4-49 | இதழ் 41

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-MAY 1949
MADRAS

புலமைக்குப் பொருள் புளுகுவதுதானா?

ஒருவர் புலவர், மற்றவர் புலமையற்றவர்; என்றபோதிலும் இருவரும் நண்பர்களாகவே இருந்தனர். புலவர், தம்முடைய புலமையினால் தம்முடைய நண்பரைத் திகைக்க வைப்பது வழக்கம். எப்ப பார்த்தாலும் ஏதாவதொன்றைக் கூறித் தம்முடைய நண்பரைத்திணறடித்துவிடுவார். தாம் இவ்விதம் செய்வதை ஒரு பெருமை என்றே புலவர் எண்ணிக்கொள்வார். 'இப்படிப்பட்டவர்களும் உலகில் உயிரோடு உலவுகின்றனரே' என்றுகூட அந்தப் புலவர் எண்ணித் தம்முடைய புலமை கண்டு புளகாங்கிதமடைவதுண்டு. புலவர் இவ்வாறெல்லாம் தம்மைக் கிண்டல் செய்வதை அந்த நண்பர் தவறாகக் கொள்ளாமல், தம்மிடமுள்ள பற்றுதல் காரணமாக நகைச்சுவையாகப் பேசி அளவளாவுகிறார் என்றே முதலில் எண்ணியிருந்தார். ஆனால், இது நீடிக்கவில்லை. புலவர் தம்முடைய புலமைக்குத் தாமே முற்றுப்புள்ளி இடுகிறோமே என்பதையும் மறந்து, வர வரத் தமது வாயாட்டத்தை அதிகப்படுத்திக் கொண்டேவந்தார். இதை நண்பரால் சமாளிக்க முடியவில்லை. "இந்தப் புலவர் எனக்கு நண்பராய் இருந்தும்—என்னிடம் புலமை இல்லை என்பதைத் தெரிந்திருந்தும்—ஏன் என்னிடம் தம்முடைய புலமையைக் காட்டுகிறார்" என்று எண்ணினார். "எட்டுச் சுரைக்காய்ப் புலவரான இவர், எனக்கு இயற்கையாக இருக்கக்கூடிய அறிவுகூட இல்லையென்று கருதி என்னிடம் ஏதேதோ பேசி எக்களிப்படைகிறாரே, ஏன்?" என்றும் எண்ணினார். "இவரோ என்னுடைய நெடுநாள் நண்பர். இவரைப் பகைத்துக் கொள்ளவும் என்னுடைய பகுத்தறிவு இடம் தரவில்லையே" என்றும் கவலைப்பட்டார். எப்படியாவது இவருடைய இறுமாப்பை அடக்கவேண்டுமென்று உறுதிகொண்டார். சிலகாலம் அந்த நண்பர் இந்தப் புலவரின் கண்களில் படாமலேயே இருந்துவந்தார்.

ஒரு நாள், திடீரென்று இந்தப் புலவர் அந்த நண்பரைக் காண நேர்ந்தது. அப்போது புலவர் தம்முடைய நண்பரின் நலனை உசாவும் முறையில், அவருடைய வாழ்க்கை வளமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்பி, "நண்பரே, உமக்கு என்ன கிடைக்கிறது?" என்று தம்முடைய புலமை கலந்த கேள்வியால் கேட்டாராம். இதனைக் கேட்ட அவருடைய நண்பர் உடனே,

"எனக்குமாசம்பத்துக் கிடைத்து வருகிறது."

என்று விடை அளித்தாராம். இதைக் கேட்ட புலவர், "மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபாதான் கிடைக்கிறதா? இதை வைத்துக் கொண்டு நீர் எப்படி வாழ்க்கையை நடத்துகிறீர்" என்று கேட்டாராம். இதைக் கேட்டதும் அந்த நண்பர் குலுங்கக் குலுங்க நகைத்துவிட்டு, "புலவரே! உம்முடைய புலமை எல்லாம் இவ்வளவுதானா? நான் சொன்ன வாசகத்திலுள்ள பொருள் என்ன என்பதைக்கூட உம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லையே! உம்முடைய புலமை எல்லாம் எங்கே போய்விட்டன?" என்று கேட்டாராம். புலவருக்கு ஒன்றுமே புலனாகவில்லை. தம்முன் நிற்பவர் தம்முடைய பழைய நண்பர்தானா என்ற ஐயம்கூட அவருக்குண்டாகி விட்டதாம். ஒருமுறைக்கு இருமுறை அவரை நன்றாக உற்றுப் பார்த்து, அவர் தம்முடைய பழைய நண்பரே தான் என்ற முடிவுக்கு வந்து, "என்ன, நண்பரே! நீர் புகன்றதொன்றும் புரியவில்லையே!" என்றாராம். அதற்கு அந்த நண்பர், "நீரோ எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தவர்; நானோ எதும் அறியாதவன்; அப்படியிருந்தும் என்னைக் கேலி செய்யும் முறையில், நான் கூறிய வாசகத்துக்குப் பொருள் கொண்டு, என்னைக் கேவலம் மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபா பெற்று வாழ்பவன் என்று இழிவாகப் பேசுவது முறையா" என்று மேலும் கேட்கவே, புலவர்பாடு திண்டாட்டமாகி விட்டது. "நான் என்னுடைய நண்பரிடம், உம்முடைய வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய வருவாய் கிடைத்து வருகிறதா என்றுதானே கேட்டேன்; அவர் அதற்கு, எனக்கு மாசம்பத்துக் கிடைத்து வருகிறது என்று சொன்னார். மாசம் ஒன்றுக்குப் பத்து ரூபா எப்படிப் போதும் என்று கேட்டால், இவ்வளவுதானா உம்முடைய புலமை என்று கிண்டல் செய்கிறார். 'மாசம் பத்துக் கிடைக்கிறது' என்ற வாசகத்துக்கு வேறு பொருள் இருப்பதாகவும்

தெரியவில்லையே! நாமோ புலவர்! அவரோ சாதாரண பேர்வழி! எத்தனையோ தடவை நான் அவரை என்னுடைய புலமையினால் மடக்கியிருக்கிறேனே! இப்போது அவர் நம்மை நாவசைக்க முடியாதபடி செய்துவிட்டாரே!" என்ற ஏக்கமும் கலக்கமும் புலவருக்கு ஏற்பட்டு, என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த நிலையில், தம்முடைய புலமை அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, நண்பரை நோக்கி, "நீர் கூறிய வாசகத்தின் உண்மையான பொருள்தான் என்ன?" என்று வெட்கத்துடன் கேட்டார். அதற்கு அந்த நண்பர், "எனக்குக் கிடைப்பது மாசம் பத்தல்ல, மா-சம்பத்து, அதாவது மா—பெரிய, சம்பத்து—செல்வம் கிடைக்கிறது" என்று விளக்கம்கூறினாராம். இதைக் கேட்ட புலவர் வெட்கித் தலை குனிந்து போய்விட்டாராம். நுண்ணிய அறிவு வெறும் புலமையினால் மட்டும் ஏற்பட்டுவிடாது, பகுத்தறிவும் அதற்கு வேண்டும் என்ற பண்பை அந்தப் புலவர் அதன் பின்னர்தான் உணர்ந்தாராம்.

இந்த நிலையில்தான் இன்று நம் தமிழ்நாட்டுப் புலவர் பலர் இருக்கின்றனர். புலமையும் பகுத்தறிவும் ஒன்று சேரக்கூடாதென்னும் போக்கினர் இவர்கள்.

ஏதாவதொன்றுக்குஒரு பொருள்தான் இருக்கும். இன்னொன்றுக்கு இரண்டு பொருள்களும் அதற்கு மேலும் இருக்கும். எடுத்துக் காட்டாக "வேலை" என்ற தமிழ்ச் சொல் பொதுவாகவே "தொழில்" என்ற பொருளைத்தான் தரும். அதற்கு இன்னொரு பொருளும் உண்டென்று புலவர் பெருமக்கள் புகல்வர். அதாவது "கடல்" என்ற சொல்லுக்கு "வேலை" என்ற சொல்லும் பொருந்தும் என்பர். எப்படியென்றால், கடலானது அலையடித்தலாகிய வேலையை ஓயாது செய்துகொண்டிருப்பதால், அதற்கு "வேலை" என்ற பெயரும் ஏற்பட்டதென்று விளம்புவர். இவ்வாறு சிற்சில தமிழ்ச் சொற்களுக்கு இயற்கையாகவே ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறு பொருள் ஏற்படுவது ஒரு சொல்லுக்கு மட்டுமல்ல, ஒரு சொற்றொடருக்கே கூடப் பலபொருள்கள் ஏற்படுவதுண்டு. மாசம்பத்து,மா-சம்பத்தாகவும், பொன்னாடு, பொன் ஆடாகவும் புலவர் பெருமக்களால் பொருள் கொள்ளப்பட்டுப் 'புகழ்' பெறும் வழக்கம் நம் நாட்டைத் தவிர வேறெங்கும் அவ்வளவாகக் கிடையாது. எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

இரண்டு புலவர்கள் ஓர் நாள் இரவில் வழி நடந்து சென்றார்கள். பனிக் காலமாக இருந்ததால், பனியின் கொடுமையை விளக்கப்புகுந்த ஒரு புலவர் மற்றப் புலவரை நோக்கி,

"பனிக்காலம் தீது"

என்றார். அதனைக் கேட்ட அந்தப் புலவர்,

"பனிக்காலம் நன்று"

என்றார். இதனால், இரு புலவர்கட்கிடையே பெருஞ் சண்டை மூண்டுவிட்டது. பனிக்காலத்தைத் தீதென்று கூறியவர், அதனை நல்லதென்று கூறிய புலவரை நோக்கி, "நீ எப்படிப் பனிக்காலத்தை நல்லதென்று கூறலாம்" என்று கேட்க, அதற்கவர், "நானும் அதனைத் தீதென்றுதான் கூறுகிறேன்" என்று கூற, "இல்லை, நீ கூறுவதில் பனிக்காலம் தீதென்று எப்படிப் பொருள் ஏற்படுகிறது" என்று கேட்க, அதற்கவர், தாம் கூறிய 'பனிக் காலம் நல்லது' என்ற சொற்றொடரை மறுபடியும் கூறி அதற்கு விளக்கமுரைத்தாராம். அதாவது "பனிக்காலம் நல்லது" என்ற நான் கூறிய சொற்றொடரைப் பிரித்தால், "பனிக்காலம்" என்றசொற்றொடர் பனிக்கு-ஆலம் என்று இரு சொற்களாகிப், பனியைப் பார்க்கிலும் 'ஆலம்' அதாவது நஞ்சு நல்லது என்ற பொருளைத் தந்து, பனிக்காலம் தீதென்று நீர் கூறியதையே மேலும் நன்றாக வலியுறுத்தி, நஞ்சைவிடப் பனி தீதென்று விரிவுரை கூறி விளக்கம் உரைத்தாராம். ஒரு சொற்றொடருக்கு இரண்டு பொருள்கள் ஏற்படுவது போலவே, நாம் மேலே எடுத்துக் காட்டியது போலவே, இரண்டு சொற்றொடர்களுக்கு ஒரே பொருள் ஏற்படுவதும் உண்டு. இவையெல்லாம், தமிழ் மொழியின் ஒப்புயர்வற்ற தனிப் பெருஞ் சிறப்பைக் காட்டுவனவாகும். ஆனால், இவற்றையெல்லாம், நம்முடைய தமிழ்ப் புலவர்கள், தங்களுடைய புலமைக்கு அரண் தேடுவதில் பயன்படுத்தி இவற்றிற்குள்ள உண்மையான மதிப்பையே கெடுத்துவிடுகின்றனர். படிப்பறியா மக்கள் இவர்களின் புலமைப் பித்தலாட்டங்களை அறிந்துகொள்ள முடிவதில்லை. புலவர்கள் தங்கள் பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ள எதை வேண்டுமானாலும் எப்படியும் கூறலாம்; 'நாம் புலவர்கள், நாம் கூறுவதைத்தானே அந்தப் 'புல்லர்கள்' நம்பியாகவேண்டும்' என்ற ஆணவத்துடன், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆளைப் பார்த்து அறிவை விற்கின்றனர். அகப்பட்ட வரையில் இலாபம் என்பதைத் தவிர, இவர்களிடம் உண்மையான குறிக்கோள் எதுவும் இருப்பதில்லை.

ஓரே புலவர் சுயமரியாதைச் சங்கத்திலும் பேசுவார்—சைவ மெய்யன்பர்கள் கூட்டத்திலும் பேசுவார். பேசும் பொருளும் ஒன்றாகவே இருக்கும். ஆனால், கருத்தில் கனத்த மாறுபாடுகள் காணப்படும். சுப்பிரமணியக் கடவுளைப் பற்றிச் சைவ மெய்யன்பர்கள் கூட்டத்தில் பேசும் போது, கந்தபுராணமே அவருக்கு ஆதாரமாக நிற்கும். அக்னிப் பொறிகள் ஆறுமுகக் கடவுளாகி, வள்ளியை வனத்தில் மணந்து, தெய்வயானையைத் தேவலோகத்தில் மணந்து, சூரபதுமனை மாய்த்து, பழத்துக்காகப் பறந்து பழனியில் தங்கிப், பின் சம்பந்தராகப் பிறந்து சமணர்களைக் கழுவேற்றிச் சைவத்தைக் காத்த செய்தி வரையில் ஒன்று விடாமல் ஒப்பித்துப் பாலும் பரிசும் பெறுவார்.

ஆனால், அதே புலவர் சுயமரியாதைச் சங்கத்தில் பேசும்போது அவருக்குப் பகுத்தறிவே ஆதாரமாக நிற்கும். சுப்பிரமணியரைப் பற்றிப் புராணங்களில் கூறப்படும் கதைகளை எல்லாம் கட்டுக் கதைகளாக்கி, அவருக்கு ஒரு தனி விளக்கம் கொடுப்பார். அதாவது, சுப்பிரமணியன் என்றோ முருகன் என்றோ ஒரு கடவுள் எங்கும் கிடையாது-பண்டைக்காலத் தமிழ் மக்கள் பகலவனையே கடவுளாக வைத்து வழிபட்டனர் — ஏன் பகலவனை (சூரியனைக்)கடவுளாக வைத்து வழிபட்டனர் என்றால், "அக்காலத்தமிழ் மக்கள், பகலவன் உலகுக்கு ஒளியை வழங்கும் பெருஞ்செயலை மேற்கொண்டிருப்பவனாதலால், அவனுக்கு நல்ல மதிப்பைக் கொடுத்துப்

(11-ம் பக்கம் பார்க்க)

விதியா? :: வீணரின் சதியா?

(வீ. சம்பந்தன்)

அன்றுமாலை ஆறுமணி இருக்கும், கலங்கிய கண்களுடன், கவலை தோய்ந்த முகத்துடன் கட்டிலில் சாய்ந்திருந்தேன். பக்கத்தறையில் எனது கணவர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார். டாக்டரோ, இன்னும் நம்பிக்கையை இழக்காதவர் போல் இஞ்செக்ஷன் செய்துகொண்டிருந்தார். சுற்றத்தார்கள் சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருந்தனர். எல்லோர் முகத்திலும் பிரேதக்களை நிலவியது. அழுதுகொண்டிருந்தால் சரியாய்ப் போய்விடுமா? எழுந்திரு கோவிலுக்குப் போய்வாலாம், என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தேன். எதிரே எனது மாமியார் நின்று கொண்டிருந்தாள். அன்று மூன்றாவது நாள் சனீஸ்வரனுக்கு எண்ணெய் போட்டு, அர்ச்சனை பண்ணிக் கொண்டுவந்து. எனக்கு இவற்றிலெல்லாம் துளிகூடநம்பிக்கையில்லை. என் செய்வது? இதை வெளிப்படையாகச் சொன்னால் என்ன நினைப்பார்கள்? கணவன் சாகக்கிடக்கிறான்! கவலையில்லாமல் நடந்துகொள்கிறாள் என்று தூற்றமாட்டார்களா? ஆகவே தான் வெட்ககரமான இந்த வேதனையை, துக்ககரமான அந்த வேதனையோடு தாங்கிக்கொண்டு நடைப்பிணம் போல் இரண்டு நாளாய் சென்று வந்தேன். சனீஸ்வரனை நானும் பார்த்ததில்லை. நீங்களும் பார்த்திருக்கமாட்டீர்கள். ஆனால் எனக்கென்னமோ என் மாமியாரே சனியனாகத்தோன்றினாள். எதையோ சொல்லவந்த நான் ஆத்திரத்தில் எங்கேயோ சென்றுவிட்டேனே, மன்னிக்கவும். அன்றும் அழாக்குறையாகக் கோவிலுக்குக் கிளம்பினேன், கோவில் வேலையை முடித்துக் கொண்டு வெளியே வரும்போது "கணவன் வீட்டிலே உயிருக்கு மன்றாடுகிறான். இவள் இங்கு சனீஸ்வரனிடம் உயிர்ப் பிச்சை வாங்குகிறாள் போலிருக்கிறது. நவீன சாவித்திரியோ என்று சிலர் நகைத்தது என்காதில் விழுந்தது. அதைத் தொடர்ந்து, காலிகளெல்லாம் கோயிலில் வந்து கூடிவிட்டன என்று என் மாமியாரின் முணுமுணுப்பும் கேட்டது. வேகமாக வீடுசெல்ல ஆரம்பித்தோம். சகுனங்களெல்லாம் நன்றாய்த்தானிருக்கு, பயமில்லை என்று ஆறுதல் கூறினாள். எனக்குத் துளிகூட நம்பிக்கையில்லை. வீட்டின் வாயற்படியில் காலெடுத்து வைத்தேன். ஓரே கூக்குரல். தொடர்ந்து ஐயோ!ஐயோ! என்ற அலறல். வாயற்படியில் கால் வைத்தது அனல்மேல் கால்வைத்தது போலிருந்தது! அலறித்துடித்துக் கொண்டு அவர் பக்கத்தில் போய் வீழ்ந்தேன். அங்கு கண்ட அந்தக் கோரக்காட்சி அவ்வளவுதான்! அழுதேன், அலறினேன். அப்புறம் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. மறுபடி பிரக்ஞை பெற்றெழும்போது என் பக்கத்தில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. மறுநாள் பிரேதம் எடுத்துச் செல்லப்பட்டது. அன்றைய கதை அலங்கோலமாக முடிந்தது.

* * *

தஞ்சை மாவட்டத்திலேயே எனது தந்தை ஒரு பிரபல சோதிடர். ஏன், தமிழ் நாட்டிலே நன்கு பிரக்யாதி பெற்றிருப்பவர். தினம் ஐம்பதுக்குக்குறையாதவர்கள் வெளியூர்களிலிருந்து கார்களிலும், வண்டிகளிலும் கால்நடையாகவும் வந்து சேருவார்கள். "உங்களுக்குத்தான் தெரியுமே, நான் ஜீவனத்துக்காகத் தொழில் செய்பவனல்ல வென்று. என் சோதிடம் பொய்யானால் இத்தொழிலுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, வெளியே கிளம்பிவிடுகிறேன்" என்று சவால் விடுவார். அவரது சோதிடங்களில் எத்தனை பொய்த்ததோ, எத்தனை நடந்ததோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர் இன்னும் தொழிலுக்கு மட்டும் முழுக்குப் போடவில்லை. அவருடைய ஓரே மகள்தான் நான். சிறு வயதிலிருந்தே என்னை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். செல்லமாகக் கவலையற்று வளர்ந்ததனாலோ, என்னவோ வயதுக்கு மீறிய வளர்ச்சியுடையவளாகவே காணப்பட்டேன். அதன் காரணமாக ஒன்பதாம் வகுப்புப் படிக்கையிலேயே பள்ளிக்குச் செல்லவேண்டியதை நிறுத்த வேண்டியதாகிவிட்டது. எனக்கோ எஸ். எஸ். எல். ஸி. வரையிலும் படிக்கவேண்டுமென்ற ஆசை. ஆனாலும் நான் பெண்தானே! எனக்கு உரிமை ஏது? சுதந்தரமேது? பெண்கள் என்றாலே, ஆண்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டிய பிறவிகளாகத்தானே கருதப் படுகின்றனர். அதுமட்டுமல்ல, பாழாய்ப்போன இந்த இந்து மதத்திடம் எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏனென்று கேட்கிறீர்களா? எதிர்த்த வீட்டுப்பெண், அவள் என்னுடைய வகுப்பு மாணவியுங்கூட, ஒரு கிறிஸ்தவப் பெண். இன்னும் சொல்லப் போனால் என்னை விட இரண்டு வயது மூத்தவள். அவள் படித்துக்கொண்டுதானிருக்கிறாள். அதுமட்டுமல்ல, தொடர்ந்து கல்லூரி வரையிலும் படிக்கப்போகிறாளாம். அப்படியிருக்க இப்பாழும் சமுதாயத்தில் மட்டும், பெண் பருவமடைந்தவுடன் சிறையிலே தள்ளிச் சித்திரவதை செய்கிறார்களே,

"எட்டையும பெண்கள் தொடுவது தீமை
யென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ—மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

என்று பாரதியார் பாடிச் சென்று பலவருடங்களாகியும் பாழாய்ப் போன இந்து சமுதாயம் அப்படியே தானிருக்கிறது. இப்படியாகச் சிறை வாழ்விலே நாட்கள் பறந்தன, மாதங்கள் ஓடின. வருடங்கள் இரண்டு மெதுவாக நகர்ந்தன.

அப்போது அடிக்கடி எனது தாய்க்கும், தந்தைக்குமிடையே, எனது மணப்பேச்சு நடந்துகொண்டிருந்தது. இப்பேச்சு வளர வளரச் சிறையிலே கிடைத்த சிறிது நிம்மதியும் சிதற ஆரம்பித்தது. இப்போதாவது கூண்டிலடைபட்ட கிளியாகவாவது இருக்கிறோம். ஆனால் கூண்டைத் திறந்துவிட்டு மணம் என்ற பெயரால் பூனையிடம் ஒப்படைத்தால் என்னாவது? ஆகவே அமைதியாகச் சென்றுகொண்டிருந்த என் வாழ்க்கைப் படகிலே, அச்ச அலைகள் வந்து மோத, மோத, அமைதி குலைந்து கவலை குடிகொள்ள ஆரம்பித்தது. இருந்தாலும் திருமணம்

என்றால், உடனேயாவா நல்ல மணமகன் கிடைத்துவிடுகிறார். அப்பாவுக்குப் பிரியமாயிருந்தால், அம்மாவுக்குப் பிடித்தமிருக்காது, அம்மா விரும்பியவரை அப்பா ஆட்சேபிப்பார். இப்படியாக ஒத்திவைப்பு நாடகம் சிறிது நாளைக்காவது நடக்குமே! திருமணப் பேச்சு ஆரம்பித்த உடனேயே எங்கே அவ்வளவு சீக்கிரமாக முடியப்போகிறது என்ற அசட்டுத் தைரியமும் இலேசாக இருந்தது. ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் இந்த ஒத்திவைப்பு நாடகம் அதிகநாள் நீடிக்கவில்லை.

ஒரு நாள் காலை, ஒன்பது மணி இருக்கும். காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு கூடத்துப் பக்கம் வந்தேன். 'நம் மங்களத்தை இப்படி வரச் சொல்', என்று என் தந்தை தாய்க்குக் கட்டளையிடுவது என் காதில் விழுந்தது. உடனே எனது தாயும், "நீங்கள் கூப்பிடுவதற்கு முன்னேயே அவளே வந்து கொண்டிருக்கிறாள்" என்று சொன்னாள். தந்தை கூடத்தின் ஓரத்திலே அவருக்கு வழக்கமாயுள்ள ஆசனத்திலே அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே ஒரு கத்தை சாதகங்கள் கிடந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் போய் நின்ற நான் "கூப்பிட்டீர்களா அப்பா" என்றேன். ஆமாம் மங்களம், உன்கல்யாண விஷயமாய்த்தான் அம்மா என்றார். எனக்குச் சற்று வெட்கமாகவுமிருந்தது. திருமணத்தைப் பற்றி நான் அவரிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்பது முதலில் தெரியவில்லை. இருந்தாலும் இதுதானே நமக்குக் கிடைத்த சந்தர்ப்பம். இந்நேரத்தில் தானே நமது குறிக்கோளைச் சொல்லி அடைய முடியும். இப்போது வெட்கப்பட்டால் நாளை வேதனைப்பட வேண்டுமே, என்றெல்லாம் நினைத்து மெதுவாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டேன். என் மௌனத்தைக் கண்ட அவர், அடுத்த மாதம் பத்தாந் தேதி, நாள் நிச்சயமாகி விட்டது என்றார். உடனே தானாகவே என் கண்கள் காலண்டரை நோக்கின. தேதி இருபது ஆயிற்று. இன்னும் இருபது நாட்களேதான் இருக்கின்றன. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒருவாறு நிலைமையைச் சமாளித்துக் கொண்டு, எனக்கு என்னப்பா, இப்போ கல்யாணத்துக்கு, அவசரம், மெதுவாய்ப் பார்த்துக் கொள்ளலாமே என்றேன், மெதுவான குரலிலே.

"அட, அசடே, நீ என்ன இன்னும் பாப்பாவா? வயதாகவில்லையா உனக்கு?" என்றார் அவர்.

"என்னப்பா அப்படி வயதாகி விட்டது. பதினைந்துதானே ஆகிறது. அதற்குள் என்ன அவசரம்" என்றேன் நான்.

"நன்றாய்ச் சொன்னாயே, ஊரார் என்ன சொல்வார்கள் வயது வந்த பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு இன்னும் ஒரு ஏற்பாடும் செய்யாமலிருக்கிறானே, பார்த்தாயா என்று இப்பவே சிலர் பேசுவது என் காதில் விழுகிறதே" என்றார்.

"ஊராரின் உளறலுக்காக என் வாழ்வைப் பாழாக்குவதா, அப்பா?".

"வாழ்வைப் பாழாக்குவதா?—அட பைத்தியமே. வாழ்வைப் பாழாக்கத்தான் கல்யாணம் செய்து வைக்கிறார்களா?"

"இவ்வளவு இளமையிலேயே குடும்பச் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா?"

"உன்னையொத்த வயதுள்ள பெண்கள் எத்தனையோ பேர் கல்யாணஞ் செய்துகொண்டிருப்பது உனக்குத் தெரியாதா?"

"சரி, எனக்குக் கணவராக வரப்போகிறவரை நானே தேர்ந்தெடுத்துக்கொள்ளவாவது உரிமை அளியுங்கள்."

"நீயே தேர்ந்தெடுக்கப்போகிறாயா? அப்படியானால் நான் பார்த்திருக்கிறவன் உனக்குப் பிடிக்காதோ. நன்றாய்ச் சொன்னாய். உங்கம்மா என்னைத் தேர்ந்தெடுத்துத்தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாளா என்ன?"

"அதெல்லாம் அந்தக் காலம். இப்போதான் எல்லாம் தலை கீழ்ப்பாடமாய்ப் போச்சே," என்றாள் என் தாயார் குறுக்கிட்டு.

"சரி, உனக்குப் பிடித்தமானவனைத்தான் சொல்லேன் பார்ப்போம்." என்றார் என் தந்தை.

"ஆம்," ஓரே யடியாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, அவர் பெயரைச் சொல்லிவிட்டேன்"

"என்ன? இன்பமணியா?" எனப் பித்துப் பிடித்தவர்போல் உரக்கக் கூவினர் இருவரும்.

"அவன் என்ன சாதி? நாம் என்ன சாதி? அவனைப் போய்......" என்று பல்லைக் கடித்தார் தந்தை.

"அது மட்டுமா, அவன் பெரிய நாஸ்திகனல்லவோ! எல்லோரும்சமம் என்று பேசுகிற கூட்டத்தைச் சேர்ந்தவனாச்சே! அந்தப் பயலை........" என்று ஆத்திரத்தில் கத்தினாள் தாய்.

"சாதி, சாதி என்கிறீர்களே. நீங்கள் காங்கிரஸ்காரர்கள் தானே அப்பா. சாதி வேற்றுமை பாராட்டக்கூடாதென்று எத்தனை தடவை நீங்களே சொல்லியிருக்கிறீர்களே. நம்ம பாரதியார், சாதிகள் இல்லையடி பாப்பா, என்றும், வேதியராயினு மொன்றே அன்றி வேறு குலத்தினராயினு மொன்றே என்றும் பாடியிருக்கிறாரே."

"பாரதியார் பாடிவிட்டால் அதுதான் வேதவாக்கோ. கர்மம்! கர்மம்!! நீ எனக்கு மகளாக வந்து சேர்ந்திருக்கிறாயே."

"அப்பா?"

"அப்பா என்று கூப்பிடுகிறாயா? அட கர்மமே! உன் வாயாலா அப்பா என்கிறாய்" என்று சீறி விழுந்தார்.

"மனதுக்குப்பிடித்தவரை மணக்க எனக்கு உரிமையில்லையா?"

"ஆஹா? பேஷாய் உரிமை உண்டு. ரோடிலே, போறவன், வர்ரவன் எல்லாருந்தான் மனசுக்குப் பிடிச்சிருக்கும். செய்து கொள்ளலாமே!"

"நான் உங்கள் மகள் என்பதையும் மறந்து கேவலமாகப் பேசுகிறீர்களே."

"நான் உன் தகப்பன் என்பதையும் மறந்து அந்தப் பயலைத்தான் மணப்பேன் என்றாயே, அது கேவலமாயில்லையா? உன்மீது குற்றமில்லை. உன்னிடம் இதைச் சொல்ல வந்தேனே. சரி, சரி, உன்னிஷ்டத்துக்கு இங்கு எதுவும் நடக்கா"தென்றெழுந்தார். அழுதேன், கெஞ்சினேன், காலைப் பிடித்துக் கொண்டு கதறினேன். பலனில்லை.

எனது காதலர் இன்பமணி! ஆம். அவருடைய புற அழகிற்காக அவரைக் காதலிக்கவில்லை. அவருடைய அக அழகிற்கே அவருக்கு நான்

அடிமையானேன். அப்படியென்றால் புற அழகிலும் அவர் குறைந்தவரில்லை. ஆம், உடலழகைவிட, உள்ள அழகே, எனை மிகவும் கவர்ந்தது. நேர்மையான குணம், நிர்த்தாட்சண்ணியமான செயல், ஏழை வாழவேண்டுமென்ற எண்ணம். சமுதாயப் பொருளாதாரத் துறையிலே சமத்துவம் காணவேண்டுமென்ற துடிப்பு. அனைவரிடமும் அன்பொழுகப் பேசும் பண்பு. இவைகளெல்லாம் என் உள்ளத்தைக்கொள்ளைகொண்டு விட்டன. ஆனால் அவரை அடைய வொட்டாமல் தடுத்தது இச்சாதி வேற்றுமைச் சனியன். ஆகவே அவருக்கு என் நிலையைத் தெரிவித்தேன். அதற்கு அவர் எழுதிய பதில் "பழுத்த வைதிகரும், புராணப் புளுகருமாகிய உனது தந்தை நிலை தெரிந்திருந்தும் நீ என்னைக் காதலித்தது தவறுதானே. அன்றே நான் உனக்குச் சொல்லவில்லையா, அவர் ஒருபோதும் நான் உன்னை மணக்கச் சம்மதியாரென்று. இது எதிர்பார்த்த விஷயந்தான் எனக்கு. உனக்கு இது திடீர் ஏமாற்றமாயிருக்கலாம்" என்று தெரிவித்தார்.

* * *

குறிப்பிட்ட நாளில் எனக்குத் திருமணம் நடந்தேறியது. நான் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் இன்பமணி எனது மணத்திற்கு வரவில்லை. ஆம், அவர் வராததும் ஒரு வகையில் நல்லதே.

"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்." சமுதாயத்திலே வற்புறுத்தித்தானே பெண்களை கட்டிக்கொடுக்கின்றனர். எனது கணவரோ ஒரே கருப்பு. முகமுழுதும் அம்மை வார்த்த வடுக்கள். பார்வைக்குச் சிறிது விகாரமாகக் கூட இருப்பார். போயும், போயும், நம் மங்களத்திற்கு இப்படிப்பட்ட மன்மதனை எங்குதான் தேடிப் பிடித்தீர்களோ என்று என் தோழிகளில் சிலர் என்னைக்கேட்டதற்கு, அவனுக்கென்னடி குறைச்சல்; அவனுக்கிருக்கும் ஆஸ்தி ஒன்றே போதுமே. இரண்டு பேருக்கும் சாதகம் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது தெரியுமோ, இதைப்போல ஜோடியைப்பார்த்ததே இல்லை என்று என் வீட்டுக்காரர் ரொம்பப் பெருமையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்" என்றாள் என் தாய்.

அன்று — ஆம் முதல் நாளிரவு அவரைப்பற்றி அறிந்து கொண்டேன். பிஞ்சிலே பழுத்து வெதும்பிக்கொண்டிருக்கிறவரென்று. என் உள்ளத்திலே அவருக்கு எள்ளளவும் இடமில்லை. உடலைத்தான் அவரால் தீண்டமுடிந்தது. நாளடைவிலே தான், அவர் க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறாரென்ற திடுக்கிடும் செய்தியை அறிந்துகொண்டேன். என்மனம் மிகவும் வேதனைப்பட்டது. அதுமட்டுமல்ல, அடிக்கடி என்னிடம் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார். இப்படி மிருகத்தனமாக நடந்துகொள்வது எனக்கு வெறுப்பையும் கோபத்தையும் உண்டுபண்ணவே அடிக்கடி எங்கட்குள் சச்சரவு ஏற்படலாயிற்று. இது போன்ற சமயங்களில் என் மாமியாரும் வந்துவிடுவாள், "என்னடியம்மா? அவன்தான் சீக்காளிப்பிள்ளையாயிட்டான் என்று அலட்சியம்மா? அவன் மனசு கோணுமே நடந்துக்கொள்ளப் படாதா உன்னைக் கட்டினதிலிருந்து அவன் என்னடி சுகத்தைக் கண்டான்" என்று அங்கலாய்க்க ஆரம்பித்துவிடுவாள். இத்தனை வேதனையையும் தாங்கிக்கொண்டு, இயந்திரம்போன்றுகாலத்தைக் கழித்துக் கொண்டு வந்தேன். மணமாகி இந்த ஒருவருடத்திற்குள்ளே நோய் ரொம்ப ரொம்ப முற்றிவிட்டது. பார்க்காத வைத்தியரில்லை. போகாத ஆஸ்பத்திரியில்லை. இத்தொல்லை போதாதென்று மாமியையும் மற்ற வைதிகங்களையும் திருப்திப்படுத்த வேண்டிச்செல்லாத ஸ்தலயாத்திரை இல்லை, இவற்றாலெல்லாம் நோய் குறையவில்லை. நாளுக்குநாள் முற்றிக்கொண்டுவந்து படுக்கையிலே கிடத்திவிட்டது. ஓயாத, ஒழியாத இருமல். உடம்பு இளைத்து உருகிவிட்டது. பாலும். பழமும் தான் ஆகாரம். சிலசமயங்களில் இருமக்கூடச் சக்தியற்றுத் திணறும் கண்றாவிக்காட்சி. இவற்றையெல்லாம் இந்த இளம்வயதில் என்னால் தாங்க வேண்டிய வேதனை. இந்நிலையில் அவர் உயிரோடிருந்துதான் என்ன பயன்? சரியாக மணமாகிப் பதின்மூன்றுமாதங்கட்குள் அவர் இறந்துவிட்டார்.

* * *

நான் நடத்திய குடும்ப வாழ்வு ஒருவருடம். அந்த ஒரு வருடமும் எப்படிப்பட்டதென்பதையும் சொல்லிவிட்டேன். ஆஸ்தி நிறைய இருக்கிறது, ஆனந்தமாய் வாழலாம் என்றார் அப்பா. ஆனந்தமென்பது என்வாழ்வில் அணுவளவும் இல்லை. சரியான ஜோடி. சாதகம் மிகப் பொருத்தம் என்றார் தந்தை. ஒரு வருடத்தில் கணவனை இழந்துவிட்டேன். மங்களம் என்ற என்பெயருக்கேற்றாற்போல் மங்களகரமான வாழ்வு என்றார் தந்தை. அமங்கலமாகப் போய்விட்டது என் வாழ்வு. இப்போது நான் ஓர் விதவை. எதிரே என்னைக் காணும் சிலர் முகத்தைச் சுளிப்பதும், முணுமுணுப்பதும் தெரிகிறது. போயும், போயும், இந்தத் தரித்திரம் எதிரே வருகிறதே, போற காரியம் உருப்படுமோ, என்னவோ, என்று பேசுவதும் கேட்காமலில்லை. இந்த இளம் வயதிலே (நல்) உடை இழந்தவள், உல்லாச வாழ்விழந்தவள், உருக்குலைந்து போனவள் நான். மஞ்சள், குங்குமம், மலர் கூடாது எனச் சொல்கிறதுமடைச் சமுதாயம். மனைவியை இழந்த புருடர்கள் மட்டும் இப்படி ஒதுக்கப்படுவதில்லையே. "தாதரென்ற நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்ற பாரதியின் கொள்கை என்று இந்நாட்டிலே நிலைப் போகிறது?

என்னைப் பார்த்துவிட்டு, அழுதகுறையாக, "என்ன பண்ணுவது நீ கொடுத்து வைத்தது அவ்வளவு தாண்டி" என்கிறாள் தாய். ம்ம்...... அவரவர் தலைவிதி அனுபவித்துத் தான் ஆகவேண்டும் எனப் பெருமூச்சுடன் பேசுகிறார் தந்தை. கர்மவினைப்படிதானே காரியம் நடக்கும். கண்ணீர் விட்டு என்ன பயன்? என்று ஊரார் உளறுகிறார்கள்.

விதியா என்னை சதி செய்தது? விதி என்று ஒன்று ஏது? வீணரின் சதியல்லவா வேதனை நான் படுகிறேன். காதலுக்கு முட்டுக்கட்டை போட்டது விதியா? சாதி வேற்றுமை கற்பித்தது விதியா? பணத்திற்கு என் பாசத்தை பலியிட்டது விதியா? சோதிடத்தை நம்பி என் அக வாழ்வைக் கெடுத்தது விதியா? விபரமறியாப் பருவத்திலேயே விதவையாக்கியது விதியா? வேடிக்கையாய்ப் பொழுது போக்க

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 10—4—49 [காஞ்சி

அவர்காட்டிய வழியில்!

ஓமந்தூரார் மந்திரிசபைமறைந்து, இராஜபாளையத்தார் மந்திரி சபை மலர்ந்துள்ளது. இந்த மாற்றத்தைக் காணக்கண்ணிலும்,கருத்திலும்கடும் விஷம் ஏந்தி, காங்கிரஸ் தோட்டத்திலே பலர் சுற்றிவந்தனர்—பலநாள் சுற்றிவந்தனர்! மாற்றத்திற்குப் பல வழிகளிலும் பாடுபட்டனர்.மாற்றம் அவர்களுக்குமகிழ்ச்சியையூட்டி-நிற்கிறதா என்றால், இல்லை! மாறாக மருட்சியையே கொடுத்துள்ளது!

பிரதமர் பீடம் காலியானதும், அதில் பூக்கும் புதுமலர் தங்களுக்குக்களிப்பூட்டும் வகையில் புது மணத்தைக் கமழச்செய்யும் என்று எண்ணினர்போலும்! ஆனால் பூத்தபுதுமலர் பழையமணத்தையே வீசக்கண்டு ஓலமிட்டு நிற்கின்றனர். காங்கிரஸ் தோட்டத்தின் வேலிக்கு அப்பால் நின்றுகொண்டு காட்சியைக்காணும் நமக்கு மலர் பூத்தது தெரிகிறது. அதைச்சுற்றி நின்று ஓலமிடுவோரின் ஒலியும் கேட்கிறது.

தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா தற்பொழுது அமைத்திருக்கும் மந்திரிசபையில் இருவர் தவிர்த்து ஏனையோர் முன்பிருந்தவர்களாகவே இடம் பெற்றுள்ளனர். எதிர்பார்த்த மாற்றம் மந்திரி சபையில் ஏற்படாததுகண்டு, இது"புதுப்பிக்கப்பட்ட பழையமந்திரி சபையே" என்று மாற்றங்காண விரும்பியபத்திரிகைகள் பலவும் ஓலமிடுகின்றன.

அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் மருட்சியை, உறுதிப்படுத்தும் வகையில், புதிய பிரதமரின் வானொலிப் பேச்சும் அமைந்திருக்கிறது.

"கட்சித் தலைவரிலோ அல்லது மந்திரி சபையில் இரண்டொரு அங்கத்தினரிலோ மாறுதல்ஏற்பட்டு விட்டதால், இதற்கு முன் இருந்த சர்க்காரின் கொள்கைகளுக்கும், எங்கள் கொள்கைக்கும் மாறுதல் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை."

என்று பிரதமர் பதவியேற்ற அன்று இரவு பேசிய வானொலிப் பேச்சில் தோழர் குமாரசாமி ராஜ குறிப்பிட்டுள்ளார். ஓமந்தூரார் போட்டு வைத்த பாதையை ராஜபாளையத்தார் வேறு திக்கிற்குத் திருப்பமாட்டார் என்று எண்ணுவதற்கு மேற்குறித்துள்ள பேச்சு இடமளிப்பதாக அமைந்துள்ளது. அப்படி உண்மையாகவே அமையுமானால் காங்கிரஸ் வேலிக்குஅப்பால் நிற்கும் நமக்கும், நாட்டின் பெருங்குடி மக்களுக்கும், முழுவதுமில்லாவிட்டாலும்ஓரளவுக்காவது மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாக அது கொள்ளப்படும்.

ஓமந்தூராரிடத்திலே நேர்மை, நாணயம், உண்மையுணர்வு ஆகிய மணங்கள் கமழக் கண்டோம். மாற்றுக் கட்சியினர்க்கு மதிப்பளித்தல், அன்னவரின் கொள்கைகள் நாட்டில் நடமாட இடமளித்தல், எண்ண—எழுத—எடுத்துக் கூற உரிமை வழங்குதல்,பொதுவுரிமையைப் பறிக்காதிருத்தல் போன்ற மணங்கள் இராமசாமியார் ஆட்சியிலேயே கமழாதிருக்கும்போது குமாரசாமியார் ஆட்சியில் கமழுமா என்பது ஐயப்பாட்டின்பாற் பட்டதாகவே இருக்கின்றது!

நெஞ்சிலே கடுந் தீயை ஏந்தி ஓமந்தூரார் ஆட்சிக்கு உலை வைக்க எண்ணியவர்கள், அந்தச் செயலை மேற்கொள்ளக் கொண்ட காரணங்கள் இரண்டு ஆகும். ஒன்று வகுப்புவாரி பிரதிநிதித்வக் கொள்கைக்கு ஆதரவளிக்க முனைந்தது. இரண்டாவது இந்துமத அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைத். திருத்த முற்பட்டது. இத்தகைய வன்னெஞ்சினரின் கருத்துக்கு ஆதரவளிக்க, சுயநலக் காரணங்கள் பலவற்றால் தாக்குண்டவர்கள் ஓடியாடினர். அதன் விளைவாக ஓமந்தூரார் பிரதமர் பீடத்தினின்றும் இறக்கப்பட்டார்.

சுயநலவேட்டைக்காரர்களுக்கு வெற்றியா தோல்வியா என்பது குமாரசாமியார் செல்ல இருக்கும் வழியைப் பொறுத்திருக்கிறது. வீழ்ந்துபட்ட பெருங்குடி மக்களுக்குச் சமசந்தர்ப்பங்கள் அளித்து, ஒத்த உயர்நிலைக்கு அனைவரையும் கொண்டுவருவதற்கு ஏற்ற சாதனமாக இருந்துவரும் ஒரு பெருங் கொள்கையான வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைத் தொடர்ந்து கையாண்டுவருதலினாலும், பொதுமக்களின்பேரால் கோயில்களிலும்,மடங்களிலும், அறநிலையங்களிலும் வீணர்க்குமட்டுமே பயன்படுமளவில் முடங்கிக்கிடக்கும் பெரும்பொருளை பொதுமக்களின் நலனுக்குப் பயன்படும்வகையில் ஓரளவுக்குத் திருப்ப முயற்சி செய்யும் அறநிலையப்பாதுகாப்புத் திருத்த மசோதாவைச்சட்டமாக்கிக் காட்டியதன்மூலமும் தான் ,தோழர் குமாரசாமிராஜா ஓமாந்தூரார் இராமசாமியின் ஆட்சியைப்பின்புற்றிக் கொள்கையைத் தொடர்ந்து ஈடேற்றி வைத்ததாகக் கொள்ளமுடியும், கொள்ளவேண்டும்.

ஓமந்தூரார் நின்ற இடத்தில் இப்பொழுது தோழர் குமாரசாமி ராஜா ஏற்றப்பட்டிருக்கிறாரதலால், பொதுமக்கள் இனி நடக்கும் ஆட்சி முறையை இதுவரையில் நடந்து வந்த முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள் என்பதுஉறுதி. ஓமந்தூரார் தனிப்பட்டவர்களின் முகதாட்சண்யங்களுக்குக் கட்டுப்படாமல், தனக்குச் சரி எனப் பட்டதிலே கண்ணுங் கருத்துமாகஇருந்து, தொண்டாற்றி நிர்வாகத்திலே ஒருவித பிடிவாத முறையைக் காட்டி வந்துள்ளார். கள்ள மார்க்கட்காரர்களையும், லஞ்சம் வாங்குவோரையும் தயை தாட்சண்யமின்றித்தண்டிக்கமுற்பட்டார் என்ற எண்ணம் பொதுமக்களின் உள்ளத்திலே ஊசலாடி அவரது ஆட்சிக்கு நல்லபெயரை வாங்கித் தந்துள்ளது. காங்கிரஸில் செல்வாக்குப் படைத்தோரும், பெரும் பதவி வகிப்போரும், காங்கிரசின் மூலம் சட்டமன்றம் புகுந்தோரும் அன்றாட அரசாங்க நிர்வாகத்தில் தலையிடும்போது ஓரளவுக்கு அம்மாதிரியான முயற்சிகளுக்கு எதிராக இருந்து குறைமதியினரின் போக்குக்குத் தடையாக இருந்திருக்கிறார். நாணயமானவர் — லஞ்சம் வாங்காதவர் — நேர்மைக்கு மதிப்பு கொடுப்பவர்—பதவி மோகங்கொள்ளாதவர்—சில்லரைகளின் கெடுமொழி கேளாதவர் என்ற இத்தகைய பண்புகள் தாம் ஓமந்தூராரைப் பதவியில் இருத்தி வைக்கவேண்டும் என்ற உணர்வைப் பொதுமக்களிடத்திலே எழச் செய்தன. நாட்டின் நாலா பாகங்களிலிலும், எல்லாத் துறைகளிலும் ஊழல்கள் மலிந்து காணப்படும் இதுபோன்றநாட்களில் ஓமந்தூராரின் தலைமை நாட்டின் நிர்வாகத் துறையில் இருப்பது

நலம் என்றுகாங்கிரசின் போக்குக்கு வேறுபட்ட நோக்கங்கொண்ட வேறு பல இயக்கத்தினருங்கூட கருதி வரலாயினர். இப்படிப்பட்ட சூழ்நிலை வளர்ந்து வந்த நிலையில்தான், ஓமந்தூரார் பதவியைவிட்டு விலகியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையை மனதில் கொண்டு, தோழர் குமாரசாமி ராஜா ஆட்சிப்பீடத்தில் அமருவாரானால், அவருடையஆட்சி, பொதுமக்களால் வரவேற்கத் தக்கதாக அமையும். கள்ளச் சிந்தையரும், கொள்ளை இலாபக்காரரும், சுயநலங் கொண்டோரும், சூழ்ச்சி பல செய்வோரும், லஞ்ச மோப்பம் பிடித்தோரும், பொதுநலத்தில் நஞ்சு கலப்போரும் ஆகிய பண்பினரைப் பதவியிலேற்றப் பணி புரிவோரும், பக்கம் நின்று பராக்கு கூறுவோரும் குமாரசாமியாரைச் சுற்றி வல்லூறென வட்டமிடத் தொடங்குவார்கள். அத்தகைய வல்லூறுகளுக்கு இடமளிக்காமல் நிற்பாரேயானால், பதவி பறிபோனாலும், பண்பாவது காப்பாற்றப்படும்.

குமாரசாமியார் ஓமந்தூரார் காட்டிய நேரியவழியில் செல்லுகிறாரா அல்லது வைத்தியநாதஅய்யர் காட்டும் வளைந்தவழியில் செல்லுகிறாரா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

யாராய் இருந்தால் என்ன?

"மதம் என்ற பெயரில் அக்ரமங்கள் நடப்பதாகச் சர்க்காருக்குப் பல புகார்கள் கிடைத்திருக்கின்றன. எனவே, இந்தத் தீமையை ஒழித்து, மக்களைப் பாதுகாப்பது புனித கடமையாகும். பயத்தாலோ அல்லது தண்டனையைக் கருதியோ மக்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்க முடியாமல் இருக்கின்றனர்.

யார் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் சரி, மதம் என்ற பெயரில் கொடுமைகள் புரிவதைச் சுதந்தர இந்தியா ஒரு போதும் சகித்துக் கொண்டிருக்காது."

பி. ஜீ. கேர்
பம்பாய் பிரதமர்
6—4—49

விதியா?

5-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிய வேளையிலே வேதனைப் படச் செய்வது விதியா? நோயாளி என்று அறிந்தும், சாதகம் பொருத்தமாயிருக்கிறது என்று கூறி என் வாழ்வைச் சரியச் செய்தது விதியா? அல்ல — அல்ல — இவையெல்லாம் வீணர் கூட்டத்தின் சதி. இனி என் வாழ்வு என்னாவது? "மூதேவி, நீ வந்து புகுந்து என் மகனை விழுங்கி விட்டாயே" என்று திட்டி என்னைத் தாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டாள் என் மாமியார். பெண்ணுக்குத்தான் இந்த நாட்டிலே சொத்துரிமையில்லையே. மறுமணம் செய்து கொள்ள முடியுமா? கலப்பு மணமே கூடாதென்றவரா மறுமணம் செய்ய ஒப்புவார். மறுமணம் என்றால், கற்புப் போய்விடுமென்று கதறும் கயவர் கூட்டம்.

"கற்பு நிலையென்று சொல்ல
வந்தா ரிரு,
கட்சிக்கு மஃது பொதுவில்
வைப்போம்."

என்றார் பாரதியார்.

ஆகவே ஆண்கள் பலதார மணஞ் செய்யும்பொழுது பெண்கள் மட்டும் ஏன் செய்து கொள்ளக்கூடாது? ஆணுக் கொரு நீதி, பெண்ணுக் கொரு நீதியா? எனக் கேட்டால், இது நாஸ்திகக் கூட்டமல்லவா எனச் சாற்றுகிறது, சமநீதி வழங்காத சதிகாரச் சமுதாயம்.

தலைவிதி, தலைவிதியென்று கூறித் தன்னம்பிக்கையும், தைரியமும்மற்றுத் தாழ்ந்த நிலை யடைந்த தமிழகமே? விதி என்று கூறி மதியிழந்து விதவைகளைப் பெருக்கும் வீணர் சமுதாயமே! விதியை நம்பி மதியை யிழந்து மக்களை மாக்களாக்கும் மூடச் சமுதாயமே? தலைவிதி என்ற பெயரால் தமிழ் நாட்டுப் பெண்களின்வாழ்வைத் தவிடுபொடியாக்கும் தற்குறிச் சமூகமே? நீ கூறு, என் எதிர்கால வாழ்வு எப்படியாவதென்று. இப்பதினைந்தாம் வயதிலேயே உலக சுகங்களை யிழந்து ஒதுக்கப்பட்டு ஆயுள் முழுதும், அவலவாழ்வு வாழத்தான் வேண்டுமா? விதவைகட்கு இந்நாட்டிலே விமோசனமே இல்லையா?

சென்னையில்!

சென்னை மாகாணத்தில் மழை இல்லையென்ற காரணத்திற்காக, மழையைப் பொழிவிக்க வேண்டி கோயில்கள் தோறும் விசேஷப் பிரார்த்தனைகள் செய்யவேண்டும் என்று சென்னை அரசாங்கம், இந்து மத அறநிலையப்பாதுகாப்பு போர்டின் மூலம் உத்தரவிட்டிருக்கிறது. இதுமட்டுமன்றி சென்னை கேசவ பெருமாள் கோயிலில் மழைக்காக ஸ்ரீராமயக்ஞம் நடைபெறுகிறது என்றும் இதன் பயனாக அதிக மழை பெய்து பஞ்ச நிலை நிவர்த்தியாகும் எனப் பக்தகோடிகள் நம்புகின்றனர் என்றும் "தினமணி" செய்தி ஒன்று கூறுகிறது. இதற்காக 103 வைதீகர்கள் ராமாயணம்,மகாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் பிரபந்தம் ஆகிய வேதங்களை ஓதிவருகின்றனராம். ராம பஜனையும் சேர்ந்தாற்போல் நடைபெறுகிறதாம். நாள் பூராவும் ஹோமம் எழுப்பப்பட்டுப் பாராயணம் நடத்தப்படுகிறதாம். மாலையில் பஜனைகளும், உபன்யாசங்களும் உண்டாம். இரவு கோயில் கதவுகள் மூடப்படும் வரை காலையிலிருந்து தொடர்ந்து அர்ச்சனையும் நடைபெறுகிறதாம். சீதா கல்யாண தினத்திற்காக 108 தங்கத் தாலிகளும், பாதுகா பட்டாபிஷேக தினத்திற்கு 103 தங்கச் செருப்புகளும் தயாரித்து வைக்கப்பட்டிருக்கின்றனவாம்; இது இங்கே!

பம்பாயில்!

மந்திர தாயத்துக்களை விற்பனை செய்யும்பொருட்டு, "நோய்கள் குணமாகும்; சகலத்திலும் வெற்றிபெறலாம்; விரும்பியதையடையலாம்" என்றெல்லாம் வெளியிடப்படும் விளம்பரங்கள், பொதுமக்களை ஏமாற்றுவனவாகும் எனக் கருதி அவற்றைத் தடைசெய்வது குறித்து பம்பாய் சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருவதாக, உள்நாட்டு மந்திரி தோழர் மொரார்ஜி தேசாய் 6—4—49 ம் நாளன்று, பம்பாய் சட்டசபையில் கேள்வி ஒன்றிக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

அறிவியக்கமும் நல்லொழுக்கமும்

—✻—

பரிணாம வாதக் கொள்கையினால் பிரபஞ்ச உற்பத்தியைப்பற்றிய எண்ணற்ற தப்பெண்ணங்கள் ஒழிந்துவிட்டன. பிரபஞ்ச உற்பத்திக்கும் தெய்வீகத்துக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையென்பதும் தெளிவாகிவிட்டது. பிரபஞ்ச உற்பத்தி வரலாற்றையும் மனிதவர்க்க சரிதத்தையும் உள்ளபடி யறிய வசதியும் வாய்த்துவிட்டது. அம்மட்டோ? மத அனுஷ்டான முறைகளின் காரணங்களை அறியவும், மக்கள் பின்பற்றவேண்டிய லக்ஷ்யத்தை நிர்ணயம் செய்யவுங் கூடப் பரிமணவாதம் உதவி புரிகிறது.

நல்லொழுக்கத்துக்கு கடவுள் வாக்கும் தெய்வீகமான மனச்சாட்சியுமே ஆதாரமென்று வைதீகர் நம்புகிறார்கள்.

ஆனால் நல்லொழுக்கத்துக்கும் தெய்வீகத்துக்கும் 'எத்தகைய சம்பந்தமும் இல்லை. தம் சுய அனுபவங்களின் பயனாகவே மக்கள் ஒழுக்கத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்றும், காலதேச வர்த்தமானத்துக்கு அநுகுணமாகப் பரிணமமடைந்த உணர்ச்சியே மனச்சாட்சி என்றும், அதற்கும் தெய்வீகத்துக்கும் தொடர்பில்லை யென்றும் இப்பொழுது சந்தேகத்துக்கு இடமின்றி ருசுபடுத்தப்பட்டு விட்டது.

தற்காலப் புதுக்கோட்பாட்டின்படி, மனித சமூகங்களின் பல திறப்பட்ட அநுபவங்களின் பயனே நல்லொழுக்க விதிகளாகப் பரிணமித்திருக்கின்றன.

பிராணிகளுக்குள்ளும் சில ஒழுக்க உணர்ச்சிகள் இருந்து வருகின்றன. விசுவாசம், தைரியம், பரஸ்பர உதவி, பெற்றோர் அன்பு, ஆண் பெண் கூட்டுறவில் நேர்மை, ஆத்மதியாகம் முதலிய மேலான ஒழுக்கங்கள் பிராணி வர்க்கத்திலும் காணப்படுகின்றன. இவ்வொழுக்கங்களில் சிலவோ அல்லது பலவோ பொருந்தியிருப்பதினாலே ஜீவிதப் போராட்டத்தில் பிராணிகள் வெற்றி பெற்று நிலவி வருகின்றன.

மனித சமூகத்திலும் பிராணி வர்க்கத்திலும் சில ஒழுக்கத் திட்டங்கள் இருந்து வருவதினாலேயே பொது க்ஷேமம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

எனவே பொதுநலத்துக்கு அநுகூலமான ஒழுக்கங்களை விருத்தி செய்துகொள்ள ஒவ்வொரு பிராணியும் முயலுகிறது. பொதுநலத்துக்கு ஊறு செய்யும் செயல்களெல்லாம் தனி நபர்களுக்கும் சமூகத்துக்கும் தீமையையே உண்டுபண்ணுகின்றன.

மனித சமூகமும் பிராணி வர்க்கமும் விருத்தியடைந்திருப்பதற்கு காரண காரணம், காரிய கோட்பாடே ஆதாரமாகும்.

பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமூகம், பல சமூகங்கள் கொண்டது ஒரு குடும்பம். எனவே மக்களுக்குள் தொடர்பு விருத்தியடைய அடைய ஒழுக்கத்திட்டங்களும் பெருகுகின்றன. சமூகங்களின் அந்தந்தக்கால நிலைமைக்கு ஏற்றபடி ஒழுக்கங்களும் உருவாகின்றன. அநுபவம் முதிர முதிர மக்கள் ஒழுக்கத்தில் விருத்தியடைந்ததற்குச் சரித்திரத்திலே ஏராளமான சான்றுகள் இருந்து வருகின்றன. தனிநபர்களுக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் தேசத்துக்கும் நலனளிக்கக் கூடிய ஒழுக்கங்களை மக்களே தம் அனுபவ முதிர்ச்சியினால் வகுத்துக் கொண்டனர். அவ்வக்காலத்துக்கு ஏற்றபடி ஒழுக்கங்களைத் திருத்தியும் மாற்றியும் அமைத்துக் கொண்டனர்.

ஸ்பென்சர் போன்ற அறிஞர்கள் விளக்கிக் கூறியிருப்பது போல, தமது சுற்றுச் சார்புகளுக்குப் பொருத்தமாக நடந்து மக்கள் நெடுநாளாகச் செய்துவந்த முயற்சியே சமூக சதாசார அபிவிர்த்திக்குக் காரணமாகும். ஒவ்வொரு மனிதனும் பூரண வளர்ச்சியடையவும் தனது ஆற்றலையும் உணர்ச்சிகளையும் மனித சக்தியையும் பயன்படுத்தவும் சதா முயன்று கொண்டிருக்கிறான். அதைப்போலவே பிறரும் முயற்சி செய்வதினால் ஒவ்வொரு தனி மனிதன் முயற்சிக்கும் சிறிது தடை ஏற்படுகிறது.

பிறருக்கு இடையூறு ஏற்படாமல் நமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வதே நல்லொழுக்கத்துக்கும் பொதுநலத்துக்கும் அடிப்படையாகும்.

பரிணமக் கொள்கைப்படி ஒழுக்க உணர்ச்சி தோன்றியிருப்பதை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் நமது தற்கால நல்லொழுக்க விதிகளின் மூல காரணங்களை அறிந்துகொள்ளலாம்; நன்மை தீமைகளை உணரும் மனச்சாட்சியின் தன்மையையும் உணர்ந்துகொள்ளலாம்.

பரிணம வாதத்தை முன் நிறுத்திப்பார்த்தால் நல்லொழுக்கத்துக்கு தெய்வீகத்தை ஆதாரமாகக் கொள்வதைவிட மக்களின் சுயமுயற்சியை ஆதாரமாகக்கொள்வதே மேலெனவும் விளங்கா நிற்கும்.

தனி நபரின் க்ஷேமத்துக்கும் சமூகத்தின் க்ஷேமத்துக்கும் அதிகமாக உதவிபுரியக்கூடியவைகள் எல்லாம் நல்லொழுக்கத்தின் பாற்படக்கூடியவைகளேயாகும். மற்றவர்கள் உரிமைகளுக்குப்பாதகமேற்படாமல் ஒருவன் தன்சக்தி முழுமையையும் பிரயோகம் செய்தால் எப்பொழுதுமே அவனுக்குப் பேரின்பம் அநுபவிக்க முடியும்.

நல்லொழுக்கங்களுக்குத் தெய்வீகத்தை ஆதாரமாகக் கொள்வதைவிட இயற்கையை ஆதாரமாகக் கொண்டால் பிரத்தியட்ச பலன் கிடைப்பது நிச்சயம்.

ஒழுக்க விஷயங்களிலும் காரண காரியக் கோட்பாட்டுக்கு இடமிருக்கிறது. கர்மத்துக்குத்தக்கபடி பலன் ஏற்பட்டே தீரும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் பலதிறப்பட்ட செயல்களுக்குக் காரணமாக இருக்கிறது. நற்செயல்களுக்குப் பரிசளிக்க ஒரு சுவர்க்கத்தையும், தீச்செயல்களுக்கு தண்டனையளிக்க ஒரு நரகத்தையும் நாம் சிருஷ்டிக்கத் தேவையே இல்லை. சுவர்க்க நரகங்கள் இம்மண்ணுலகத்திலேயே இருக்கின்றன.

சமூக க்ஷேமத்தை முன்னிட்டும் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் பொருட்டும், சமூகம், குற்றம் செய்தவர்களுக்கு தண்டனையளிக்கிறது. ஆனால் நற்செயல்களுக்கு நல்லபலன் ஏற்படுவதையும், தீச்செயல்களுக்கு தீயபலன் ஏற்படுவதையும் எவராலும் தடுக்கமுடியாது. தினைவிதைத்தவன் தினை அறுப்பதும் வினை

விதைத்தவன் வினை அறுப்பதும் கடவுள் கட்டளையாலல்ல; இயற்கை விதிப்படியேயாகும். பிரார்த்தனைகளினாலோ, பச்சாதாபப் படுவதினாலோ, பாபமன்னிப்பினாலோ பாபங்களைப்போக்க முடியாது. தீச்செயல்களுக்குப் பரிகாரமாக நற்செயல்கள் செய்தால் ஒருகால் நாம் செய்த குற்றங்களுக்குப் பரிகாரம் ஏற்படலாம்.

கர்மத்துக்குத் தக்கபலன்என்பது கண்டிப்பான இயற்கை விதி. அதை எவராலும்மாற்றமுடியாது. இயற்கை விதி கண்டிப்பானதென்பதை உணரும்போதுதான் நாம் நல்லொழுக்கமுடையவர்களாயிருக்கவேண்டியது இன்றியமையாதது என்பது புலப்படும்.

பாப மன்னிப்பளிக்க ஒரு கடவுளில்லையானால் பாபிகளான மக்களுக்கு ஆறுதல் எப்படிக் கிடைக்கும் எனக்கிறிஸ்தவர்கள் கேட்கக்கூடும். பாப மன்னிப்புப் பெறலாமென்ற நம்பிக்கை பாபிகளுக்கு ஆறுதலளிக்கக் கூடியதாயிருக்கிறதென்றும் அவர்கள் சொல்லலாம்.

ஆனால் இந்தச் சந்தேகங்களுக்கு வெகு சுலபமாகப் பதிலளித்து விடலாம். அறிவியக்கம் மக்களுக்கு தாட்சண்யம் காட்டுவதுமில்லை; மக்களைக் கொடுமைப்படுத்துவதுமில்லை; நியாயமே வழங்குகிறது. தீச்செயலினால் தீமையே விளையுமென்று கூறும் அறிவியக்கம், நற்செயலினால் நலம் விளையுமென்றும் கூறுகிறது: தீச்செயல்களினால் ஏற்படும் பலன்களை எந்தக் கடவுளாலும் மன்னிக்க முடியாதென்று கூறும் அறிவியக்கம் தீச்செயல்களினால் ஏற்பட்ட பலன்களை நற்செயல்களினால் பரிகரித்துவிடலாமென்றும்வற்புறுத்துகிறது. எனவே தீமை செய்வதைத் தடுப்பதுடன் நன்மை செய்யவும் அறிவியக்கம் தூண்டுகிறது.

கடவுளை வணங்கிப் பாப மன்னிப்புப் பெறலாம் என்றநம்பிக்கையினால் ஏற்படும் தீமைகளையும் இங்கே விளக்கிவிடுகிறோம்.

நமது பாவங்களை மன்னிக்க ஒரு கடவுள் இருப்பதாக ஏற்பட்டுவிட்டால் புண்ணியம் செய்ய ஒரு தூண்டுதல் இல்லாதாகிவிடும். பாப மன்னிப்பளிக்கும் கத்தோலிக்கப் பாதிரிமார் நல்லொழுக்க விஷயங்களை மக்கள் அலக்ஷயம் செய்யும்படி தூண்டுகிறார்கள். பாபமன்னிப்பு ஒருபுரட்டாகும். பாபமன்னிப்புப் பெறலாம் என்று நம்புகிறவனுக்கு ஒழுக்கம் அதிகமாயிருக்குமா? நன்மையினாலேயே தீமையை ஒழிக்க முடியுமென்று நம்புகிறவனுக்கு அதிக ஒழுக்க உணர்ச்சியிருக்குமா?

“மனிதன் வீழ்ச்சி அடைந்தவன், பாவி” என்ற பழைய நம்பிக்கையை பரிணம வாதம் வெட்டிவீழ்த்திவிட்டது.

மிருக நிலையிலிருந்த மனிதன் தற்கால உன்னத நிலையை அடைந்திருப்பதை உணர்ந்தவர்கள் மேலும் உயர்ச்சியடையவே விரும்புகிறார்கள். மனிதன் இப்பொழுதும் முன்னேறிச் சென்றுகொண்டே இருக்கிறான். அவன் மேலும் எவ்வளவு உயரிய நிலையை அடையப் போகிறானோ! யாரால் அதை அளவிட்டறிய முடியும்?

✻

காதலின் தன்மை!

(கவி தாகூர்)

பெண்ணுக்கு இடப்பட்டிருக்கும் வேலை முற்றிலும் மனிதனுக்குப் பதிலாக இருந்து செய்யக்கூடிய வொன்றன்று மனிதனது உலக வாழ்க்கையில் அவள் உறுதியாய்க்கூடவிருந்து ஒத்துழைக்க வேண்டியவளே; ஆனால் இவ்வாறு ஒத்துழைத்தல் என்பது அவனைவே பாவித்து நடத்தலன்று என்பதை அவள் மனதிற்கொள்ளவேண்டும்.

பெண்ணென்பாளும் ஆடவனின் மற்றொரு பிரதியேயென விதிக்கப்பட்டிருப்பின், அவன் என்னசெயலை இயற்றவேண்டுமோ அதையே அவளும் வாழ்க்கையில் இயற்றி வரவேண்டுமென விதிக்கப்பட்டிருப்பின், நம் வாழ்வு விரைவிலேயே கசப்புற்றுவிடும். சுவையற்ற சக்கை போன்ற அத்தகைய ஒரு நீண்ட பயணில் வாழ்வை மக்கட் குழாம் ஒருநாளும் பொறுத்திராது.

பொருளுலகம் இவ்வாறாக, அறிவுலகத்திலோ பெண்ணென்பாளுக்குரிய வேலை ஆடவனது அறிவினாற்றலால் வெளிப்பட்டுந்தன்மையத்தற்குரியவாறு அவனது சாதகி நிலை[illegible]யில் உன்னின்று உணர்த்தலேயாகும். அவனுடைய சிந்தையும் உணர்வும் அறிவும் இயங்கவேண்டுங்காலத்தெல்லாம் அவள் அவனுக்கு முக்கிய தூண்டுகோலாகின்றாள். இவ்வாறு இவள் பின்னின்று முன்னூக்கி வருவதினாலேயே அவள் புரியுமுதவியின் பெருமை நன்கு புலப்படாது மறைந்து நிற்கிறது.

அவளைவிட அவனுக்கு காலமும் சுயேச்சையும் இன்றியமையாதுரியதாகும்; அஃதேபோல் அவனைவிட அவளுக்கு மனோ வொருமையும் மனோ வெழுச்சியும் இன்றியமையாதுரியதாகும். காதலினாலும் அன்பினாலுமே பெண்மை உறுபயன் கொள்கிறது.

நிறைவு மிகுதி காரணமாக வரம்பினுட்படா ஒரு பொருளை அடைய அவன் முக்கியமாக ஆர்வங்கொள்பவனாகிறான். ஆனால் இவ்வாறு அகன்று செல்லுதலில்லாது அவள் தன் பக்குவ நிலையையடைவதற்கு மனோவொருமை என்ற ஒன்றுபட்ட மனத்தையே கைக்கொள்[illegible]கைத்தேவி உண்மையில் அவனை ஒருவாறு புறக்கணித்துத் தன்னுடைய முழுக் கவனத்தையும் அவள் மீது தான் செலுத்துகிறாள் என்பது உண்மை.

புத்தர் காட்டும் வழி

ஆகவே, இயற்கைத் தேவி தன் மாட்டுச் செய்த வஞ்சனைக்காக அவன் அவளை மதியாது ஒதுங்கிப் போவது ஒரு வழியில் முறையேயாகும். உதாரணமாக, வரம்பினுட்படாப்பரம்பொருளை யறியவேண்டித் தன் மனைவியாகிய கோபா என்பவளையுந் துறக்குமாறு புத்தரைத் தூண்டிய ஒரு உணர்ச்சி மனிதனுக்கே உண்மையாயுரியதாகும். ஏனெனில் அவ்வாறே நேர்ந்தவிடத்துப் புத்தரைத் தூண்டிய ஒரு உணர்ச்சி மனிதனுக்கே உண்மையாய் உரியதாகும். நேர்ந்தவிடத்துப் புத்தரைத் துறந்துவிடக் கோபா உரியவளாகாள், அவள் பெண்ணாதலின்.

இது கிடக்க, உண்மையாக ஆடவனைப் போன்ற ஆண்மையுற்ற மகளிருமிருக்கக் காண்கிறோம். ஆண்மையிருந்தும் பெண்மையைப் பெரிதும் அவாவும் ஆடவர்களையும் காண்கின்றோம். இவ்விருதிறத்தாரும் ஆடவ[illegible]

கூறக் கூடாதவர்களென்றே நான் கொள்வேன். ஏன் அவர்கள் தத்தம் பிறவிக்குரிய உண்மைப் பண்பைத் தெரிவிப்பவர்களாகார்.

மனிதனுக்குக் காதல் என்பது வேண்டாததொன்றாகாது. அதனால்தான் நான் புத்தர் கோபாவைக் காதலித்திருந்தாலும் இல்லாவிட்டாலும் இரண்டும் ஒன்றே என்று சொல்லுவதை ஆதரிப்பதில்லை. புத்தர்பக்குவ நிலையை யடைவதற்குக் காதல்வேண்டியதுதான். ஆனால் அதுவே எல்லாமாய் ஆகாமல் அது அவருக்கு ஒரு பெரிய உதவியாகவமைந்ததென்றே கொள்ளுதல் வேண்டும். காதலென்ற மனோவெழுச்சி மகளிர்க்கு முதுகெலும்பென அமைந்தவொன்றாகுமெனவே கூறலாம். ஆடவர்க்கோ அவர்களது வாழ்க்கைச் செலவில் அது ஒரு பெரிய விளக்கனயதே யாகும்.

உயர் நிலையிலிருந்த ஒரு மணமுடிந்த பெண் கணவனைவிட்டு மற்றொருவனோடு சென்றதாகக் கேள்விப்பட்டேன். அவள் அதனால் தன் அழிவையே தேடிக்கொண்டவளாகிறாள், ஒரு சிலர் அவள் வேறு விதமாய் நடந்துகொண்டிருக்க முடியாதென்று வற்புறுத்திக் கூறினர். அவர்கள் கூற்று உண்மையாகக் காதலிக்கும் ஒருவனையடைய ஒரு பெண் மற்றெல்லாவற்றையும் துறக்கத் தாமதிக்கக் கூடாதென்றும், உண்மைக் காதலடையும் ஒரு அவாவிற்கு அவளுடைய மற்றெவ்வகைத்தாய உணர்ச்சிகளும் அடிப்படுத்தப்படல் இருக்க வேண்டுமென்பதுமே யாகும்.

ஒரு சிலரோ இவ்வாறு கூறுதல் மிகையாகும் என்று சொல்கிறார்கள். மனிதனைவிடப் பெண் ஏன் தன் நலந்துறக்க உரியவளாயிருக்கின்றாள் என்பதற்குக் காரணம் நான் கூறி! "அவனைவிட அவளுக்கே காதலின்றியமையாததாகும்" என்பதிலேயடங்கியிருக்கிறதென்றே நம்புகிறேன். ஒரு பெண் உண்மைக் காதல் கொண்டால் அக்காதல் தானும் தன்னுடைய பெரு அகத்திலும் வன்மையிலும் மிக மூர்க்கமானதாய் மாறிவிடுகிறது. அதனால் தன்னுடைய காதலனை யடைவதற்காக வேண்டி எக்காரியமும் செய்யப் பின்வாங்காதவளாகின்றாள்.

அப்படியின்றி மனிதனுடைய காதல் தன் பெருக்கத்தினால் அவனு[illegible] தடுக்கக்கூடிய நிலைமையிலிருக்குமானால், அவன் தான் அவ்வாறு துறக்க முன் வந்ததற்கேற்ற நற்பயனை யடையவில்லையென்று விரைவிலேயே உணர்ந்துகொள்வான். அப்படி உணரவில்லையாயின் அவன் நாம் முற்கூறிய பெண்மையாகவும் ஆடவனேயாவான். தனக்குரிய கடமைகளையும், ஒரு தனிக்காதல் காரணமாகத் துறந்துவிட்டதைக் குறித்து வருந்தாதிருப்பானேல் அவனுடைய இயற்கை ஆண்தன்மையைவிட பெண்தன்மையயே மிகைப்படக் கொண்டிருக்கிறதென்றே கொள்வேன்.

மனிதனை முதன்மையாகப் பரம்பொருளை நாடுவோன் அல்லது அடைய முயல்வோனென்று நான் கொள்வேனேயன்றி வேறுவிதமாகக் கொள்ளேன். அப்பரம்பொருள் தானும் கடவுளேயாயினுமாகுக; அல்லது வீடேயாயினுமாகுக; அல்லது அந்தந்தக்கருத்துக்கிசைந்த எதுவாயினுமாகுக; எனவே இவ்விழைவின் செலவைத் தடைப்படுத்தக் கூடியதும் அறியமுடியாத ஒன்றை அறிய முயலும் அவாவை யறுக்கக்கூடியதுமான எவ்வுணர்ச்சியும். அது, எவ்வளவு மேன்மையுடையதாயிருப்பினும் அவனுக்கு நிறைவை யளித்ததாகாது. காதல் ஒருபெரிய அனுபவ உணர்ச்சியாயிருக்கலாம். சுடர்விடுமொளியெனத் திகழலாம் — அது தானும் எப்பொழுதெனில் நாம்மேற் கூறியவாறு தடை செய்யாதிருக்குங் காலே.

தன்னலங் துறந்த காதல்

காதலென்றவொன்று குறித்து மற்றெல்லாவற்றையுந் துறந்துவிட்ட காரணத்தாலேயே பல அறிவின் மிக்க பெரியோர் புகழுடம்பு பெறாது புகையுடம்பு பெற்று நிற்கின்றனர்; காதலே எல்லாமாகும் என்பது அவர் கொள்கை. அது மகளிர் மாட்டுச்சரியான தொன்றாயினும் அது மனிதனுக்கொப்ப முடிந்த தொன்றாகாது. பெண்ணைப்போல காதலென்றவொன்றற்காக, வாழ்க்கையில் தான் செய்ய வேண்டிய வேலைகளையும் பெறக்கருதிய நோக்கங்களையும் ஒரு ஆடவன் துறந்துவிட முடியாது.

சமூகத்தினால் இயற்கைமீறிய காதலுக்காக தண்டனையடைவது போல் மனிதன் எல்லாவற்றையுந் துறந்துவிடுவானேல் [illegible]கால், அவனிடத்தில் உண்மையான காதலைக் கொண்டபெண் தான் அக்காதலுக்காக அவனை மட்டும் பெறும்விலை நாளாவட்டத்தில் அவனாற்றலுக்கு மீறியதாகிவிடும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்குக் காரணங்கேட்கின் அவன் பெண்ணல்ல. ஆடவன் என்றவொன்றுதான்.

ஆகவே காதலின் உண்மையுணர்ச்சியைப் பெற்று அது நம்முட் கலந்து பிரிவதாய் நிற்றல் வேண்டின் அதற்குரிய வேதனையாகிய விலையை நிலைத்து நிற்கும் ஆழ்ந்த இன்ப வேதனையாகிய விலையைக் கொடுத்துத் தானாகவேண்டும்.

இவ்விலை கொடுக்க நாம் முற்படாவிடின் காதலென்ற அது சொல்லளவாலே, ஒரு சித்திரத்தைப் போன்றோ சொல்லணியைப் போன்றோ நின்று விடுகிறது. அது நம்முள்ளிரண்டறக் கலந்த ஒரு பெரும் பேறாக மாறுதலில்லை. விலையொன்று மின்றிவறிதே கொடுக்கப்படும் ஒவ்வொன்றையும் நாம் உண்மைப் பொருளுணர்ந்து பெற முடியாது. அத்தகைய வொன்றைப் பெறுதற்குரிய பக்குவ நிலையை யடைந்து, அதைப்பெறுவதற்கு, உழைத்து அதற்காக நம் உயிரையுங் கொடுக்கவல்ல ஓர் மனப்பான்மையை யடைதல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் பெறும் பேறு நம்முள் உண்மையாகவும், பூரணமாகவும் கலந்து நிற்றற்குரியதாகும்.

✻

பசிக் கொடுமை!

பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த கே. பி. குப்புச்சாமி என்பவர், வேலை கிடைக்காத காரணத்தால் மூன்று நாட்கள் பட்டினி கிடக்க நேரிட்டதன் விளைவாக, 7–4–49-ல் ரயில் தண்டவாளத்தில் படுத்துத் தற்கொலை செய்ய முயன்றபோது அகப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறார்.

———

அறிவிப்பு

கும்பகோணத்தில் "திராவிட நாடு" விற்பனையாளராக இருப்பவர்,

தோழர் S. சொக்கநாதன்
45, மூர்த்திசெட்டித் தெரு,

வாசகர்கள் இவரிடம் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

புலமைக்குப் பொருள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

போற்றிவந்தனர், என்ற போதிலும் அப்போற்றுதல் இஞ்ஞான்று பேசப்படும் கடவுள்வழிபாட்டைக் குறித்ததாய் இருந்ததில்லை. பகலவனைப் போற்றுவதற்கு இயற்கையான பல காரணங்கள் இருந்தன. பகலவனைக் குறித்துப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதால், கண்களில் உள்ள நச்சுக்கிருமிகள் பகலவன் ஒளியில் நசித்துக் கண்களுக்கு ஒளி மிகுதியாகின்றது. இவ்வாறு செய்வதால் உடல் நலமும் ஆயுள் நீடிப்பும் பேணப்படுகின்றன. இந்த முறையை இஞ்ஞான்றை மேல்நாட்டவர் பலர் கையாண்டு அதனால் உடல் உரமும் நோயின்மையும், ஆயுள் நீடிப்பும் பெற்று வாழ்கின்றனர். அதோடு நெல் முதலான உணவுப்பொருள்கள் நன்றாக விளைவதற்கும் பகலவனே துணையாகவும் காரணமாகவும் நிற்கின்றான். மழை பகலவனின்ஒளியின்றிப் பெய்யமுடியாதென்பதை இன்று விஞ்ஞானமுறையில் மழையைப்பெய்ய வைக்கும் ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர்" என்று தொடங்கி, "அப்படிப்பட்ட பகலவனுக்கு ஒரு வடிவத்தைக் கற்பிக்க எண்ணிய அக்காலத் தமிழறிஞர்கள், அங்ஙனம் கற்பித்தார்கள். அதாவது, பகலவன் விடியற்காலையில் கடலினின்றும் கிளம்பி வருவது போல் தெரிவதால், கடலை அவனுக்கு ஊர்தி (வாகனம்) ஆக்கினர். பகலவனுடைய ஒளி கடலில் படுவதால், அதன் வடிவம் பலநிறங்களையுடைய மயிலுக்கு ஒப்பானதாகத் தோன்றவே, பகலவனுடைய ஊர்தி மயில் என்று கூறப்பட்டது. இனி, பகலவனுக்குச் சேவற்கொடி எப்படி ஏற்பட்டதென்றால், பகலவன் முதன் முதலில் நம்மால் பார்க்கப்படுவது விடியற்காலமாதலால், பகலவன் தோன்றிவிட்டான், எல்லாரும்விழித்தெழுங்கள் என்று கூறுவதுபோல் சேவல் கூவுவதால், சேவலைப் பகலவனின் கொடியாகக்கொண்டனர்" என்றும் இன்னும் பல காரணங்களைக் காட்டியும் பகலவன் முருகக்கடவுளான கதையைப் பகுத்தறிவாளர்களும் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளும் முறையில் கூறி அவர்களுடைய பாராட்டுதலையும் பெறுவர். இவ்வாறு அங்கொன்றும் இங்கொன்றுமாக என்பேச வேண்டும் என்று எவரேனும் கேட்டுவிட்டாலோ, "எல்லாம் இந்தவயிற்றுப் பிழைப்புக்காகத்தான்" என்றுகூறித் தங்கள் வறுமையை முன்கொண்டு வந்துநிறுத்தி மன்னிப்புக்கேட்பது போல் பாசாங்கு செய்வர். எல்லோருக்கும் 'நல்லபிள்ளையாக' நடந்து கொள்ள வேண்டுமென்ற போக்கிலுள்ள இவர்கள் ஏன் நேரான வழியில் செல்லாமல் சேற்றில்ஒருகாலும் ஆற்றில் ஒருகாலுமாக நடந்துகொள்கிறார்கள் என்ற கவலைதான் இவர்கள் பேரில் நமக்கு உண்டாகிறது.

ஆனால், நம்முடைய தமிழ்ப் புலவர்களில் ஒரு சாரார் இருக்கிறார்கள், அவர்கள் அறிவுலகிற்கே நஞ்சூட்டுபவர்கள்! ஆணவத்தின் முழு வடிவத்தையும் அவர்களிடம்தான் காணமுடியும். தங்களைமிஞ்சிய அறிவாளிகள் எவரும் எங்கும் இல்லையென்ற இறுமாப்போடு கூடியவர்கள்! தாங்கள் கூறுவது எதுவாயினும் அதனைத் தட்டிக்கூறித் தவறு கண்டுபிடிக்கும் தகுதி தரணியில்எவருக்குங்கிடையாதென்ற தான்தோன்றிகள்! ஏதாவதொன்றைத் தாம் ஆராய்ந்தால், அந்த ஆராய்ச்சியே முடிந்த முடிபென்று மூளையின்றி உளறுபவர்! மற்றவர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகளை ஒப்புக்கொள்ள மறுக்கும் மமதையினர்! அதுமட்டுமல்ல, மற்றவர்கள் கூறும் உண்மைகளைக்கேலி செய்யும் கெடுமதியினர்! இப்படிப்பட்டவர்களின் தொகை தான் நம் நாட்டில் மிகுதியென்று கூடச் சொல்லலாம்.

நம்முடைய தமிழ்ப் புலவர்களில் ஒருவர், ஒருபாட்டுக்குப் பொருள் கூற முற்பட்டு, இதற்குமுன் அப்பாட்டுக்குப் பொருள் கூறியவர்களையெல்லாம் முட்டாள்கள் என்றும், தாம் ஒருவர்மட்டுமே புலமையின் எல்லையைக் கண்டவர் என்றும் பொருள் கொள்ளும் முறையில்பேசியிருக்கிறார். இவரால் எடுத்துக் கொள்ளப்பட்ட பாடல்,

> "தாவாரமில்லை தனக்கொரு
> வீட்டில்லை, தேவாரம்ஏதுக்கடி
> -குதம்பா, தேவாரம் ஏதுக்கடி"

என்பதாகும். இந்தப் பாடலுக்கு இப்புலவர் கண்டுபிடித்த பொருள் தான் உண்மைப்பொருள் என்பதை விளக்கமுற்பட்ட இவர், மற்றவர்கள் இப்பாடலுக்குக் கூறிய பொருள்கள் எல்லாம் பொருத்தமற்றவை—பொருளற்றவை என்று கிண்டலும் செய்கிறார்.

"தாவாரமும் வீடும்தான் இதில் கூறப்பட்டனவா? ஆம் என்பார் சிலர், தாவாரமும் வீடும் இல்லாத பரதேசிக்குத் தேவாரம் எதற்கு என்பதுதான் இதன் பொருள்என்று கேலிகூடச் செய்வார்கள். ஏன்? அதுதான் உண்மைப்பொருள்என்று கூட அவர்கள் சொல்வார்கள்" என்பதாக இப்புலவர் பெருமகனார், மற்றப் புலவர்களைக் கேலி செய்து தாம் அப்பாடலுக்குக் கண்டுபிடித்த "உண்மைப்பொருளை' உரைக்கிறார். இதோ, அப்பொருள்!

'தாவாரம்' என்று அந்தப் பாடலில் வரும் சொல்லை இந்தப் புலவர், 'தா' என்றும் 'வாரம்' என்றும் இரு சொற்களாகப் பிரித்து, 'தா' என்றால் 'வருத்தம்' என்று பொருள் என்பதாகவும், 'வாரம்' என்றால் 'பங்கு' என்று பொருள் என்பதாகவும் கூறி, "பிறர் பெறும் துன்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு, அத்துன்பத்தை நீக்க வகையில்லாதவர்களுக்கு மோட்சம் கிடைக்காதாகையால், அப்படிப்பட்டவர்கள் தேவாரம் படிப்பதால் பயன் இல்லை" என்று அந்தப் பாடலுக்கு இந்தப் புலவர் புதுப் பொருள் விரிக்கிறார். தம்முடைய இந்தப் புதுப் புளுகுப் பொருள் விளக்கத்திற்குத் தொல்காப்பியரை வேறு துணைக் கழைக்கிறார். 'தாவாரம்' என்ற சொல்லை இரண்டாகப் பிரித்ததை எவரேனும் பிழையென்று கூறிவிட்டால் என்ன செய்வதென்றஞ்சிய இந்தப் புலவர், "தாவே வலியும் வருத்தமுமாகும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைத் துணைக் கழைத்துத் தம்முடைய வாதத்தை நிலைநாட்ட முயல்கிறார்—மோட்ச லோக வாழ்வுக்கு வழி திறந்து காட்டுகிறார். 'தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை' என்ற சொற்றொடரில் வரும் "வீடில்லை" என்ற சொல்லுக்கு, 'மோட்சமில்லை' என்று பொருள் கூறுகிறார் இந்தப் புலவர்—தம்முடைய குறை மதியை வெளியிடுகிறார் கூச்சமின்றி!

இந்தப் பாடல் யாரால் பாடப்பட்டது? எப்போது பாடப்பட்டது? எதற்காகப் பாடப்பட்டது? எந்த நிலையில் பாடப்பட்டது? என்பனவற்றை உணராமலேயே ஏதேதோ உளறிக் கொட்டுகிறார். குதம்பைச் சித்தர் என்ற பெயரோடு விளங்கிய ஒரு துறவியால் இப்பாடல் பாடப்பட்டது. உலகில் நடைபெறும்

அட்டூழியங்களைக் கண்டு, உளம் நொந்து உலக வாழ்வை வெறுத்து நாடோடிகளாய்த் திரிந்து நாட்டுக்கு நல்லுரை பல வழங்கிய பலருள் குதம்பைச் சித்தரும் ஒருவர். உலக வாழ்வில் இருந்துகொண்டே உலக மக்களுக்கு நல்லுபதேசம் செய்தால், அதனை அவர்கள், ஏதோ தன்னலத்திற்காகச் செய்யப்படும் 'சூழ்ச்சி என்று கருதி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றெண்ணிய பலர், தந்நலம் துறந்து தரணி சுற்றி நாட்டுக்கு நலம் பல செய்ய முயன்றனர். அவர்களில் இப்பாடலைப் பாடிய குதம்பைச் சித்தரும் ஒருவர். நாயன்மார்களால் பாடப்பெற்ற தேவாரத்தை என் பாடவில்லை என்று அவருடைய மனம் கேட்டகேள்விக்கு விடையாக அவருடைய பகுத்தறிவினின்றும் எழுந்த பாடலே இது, "தேவாரம் பாடினால் மோட்சம் கிடைக்குமென்று கூறுகிறாயே, தேவாரத்தைப் பாடித் திரிந்ததால் தங்கியிருப்பதற்குத் தெருத் திண்ணைக் கூடக் கிடைக்கவில்லையே! இதோ தெருத் தெருவாய் அலைகின்றேனே! இன்னுமா தேவாரத்தைப் பாடும்படி சொல்கிறாய்" என்று குதம்பைச் சித்தர் தம்முடைய மனதோடு நிகழ்த்திய போராட்டத்தின் விளக்கமும், தேவாரத்தைப் பாடினால் மோட்சம் கிடைக்கும் என்பது முழுப் பொய்யாகும் என்ற தெளிவுமே இப்பாடலால் வெளிப்படுகின்றது. இதனை அறிய முடியாத இந்தப் புலவர், தேவாரத்துக்கு உயர்வு தேட முற்பட்டுத் தொல்காப்பியரைத் துணைக்கழைத்துத் தொல்லைப் படுவதைப் பார்க்க நமக்கே பரிதாபமாக இருக்கிறது! நாலும் ஆறும் பத்தென்பதை அறிய நன்னூல் படிக்கவேண்டுமென்று கூறுபவருக்கும், 'தாவாரம்' என்ற சொல்லை இரண்டாகப் பிரித்து அதற்கு ஏதோ பொருள் கூறித் தேவாரத்துக்கு உயர்வு கொடுக்கத் தொல்காப்பியரைத் துணைக்கழைக்கும் இந்தப் புலவருக்கும் யாதாயினும் வேறுபாடு காணமுடியுமா?

தேவாரம் பாடக் கூடியவர்கள், பிறர் பெறும் துன்பத்தைப் பங்கிட்டுக்கொண்டு, அத்துன்பத்தை நீக்குபவர்களாய் 'இருத்தல் வேண்டும் என்று கூறும் இப்புலவர், தேவாரத்தைப் பாடிய நாயன்மார்கள், சமணர்களைக் கழுவில் ஏற்றியும், புத்தர்களை மண்டையில் அடித்தும் கொன்றனரே! இவைதான் பிறர் துன்பத்தில் பங்கு கொள்ளும் முறையா என்பதை ஏன் எண்ணிப் பார்க்க மறந்தாரோ!

தேவாரம், எதனை அடிப்படையாகக்கொண்டு பாடப்பட்டதென்பதைக் கூட இந்தப் புலவர் உணர்ந்து கொள்ள முடியாத நிலையில் நின்றுகொண்டு, ஓதுபவர்கள் பிறர்படும் துன்பத்தில் பங்கு கொள்ளக்கூடியவர்களாய் இருக்கவேண்டுமென்று கூறுகிறாரே என்பதை எண்ணும் போது, அப்படிப்பட்டவர் குதம்பைச் சித்தர் பாடலுக்குப் பொருள் காணத் தொல்காப்பியரைத் தேடிச் சென்றதில் வியப்பொன்றுமில்லை. தேவார — பிரபந்தங்களைப் பற்றிப் புகழ்ந்தும் வியந்தும் பேசவேண்டும், அதேபோது தொல்காப்பியத்திலும் இரண்டொரு சூத்திரங்கள் தெரிந்திருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும், இல்லையேல தம்மை ஒரு புலவர் என்று பிறர் மதிக்கமாட்டார்கள் என்றநிலையில் உள்ளவர்களன்றி மற்றெந்தப் புலவரும், தங்கள் புலமைக்கு அரண் செய்யும் பகுத்தறிவை விட்டுக் குறுக்குவழி சென்று தங்கள் குறைமதியைக் காட்டிக்கொள்ளவே மாட்டார்கள்.

தேவாரம் பாடப்பட்டதன் நோக்கமே, பிறரைத் துன்புறுத்துவது தான் என்பதனைத் தேவாரத்தை நடுநிலையுடன் படிக்கும் எவரும் எளிதில் உணர்ந்து கொள்வர். தேவாரத்தைப் படிக்கும்போது ஒரு வைணவன் பக்கத்தில் நிற்கமாட்டான் — ஒரு சமணன் நிற்கமாட்டான் — ஒரு புத்தன் நிற்கமாட்டான் — இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், சமரச சன்மார்க்கம் பேசும் ஒரு சைவன்கூட அதன் பக்கத்தில் நிற்கமாட்டான். அந்த அளவுக்கு வசைமொழிகளை வாரி வாரி இறைத்திருக்கிறார்கள் தேவாரத்தைப்பாடிய திருஞான சம்பந்தரும் பிற நாயன்மாரும்! தெருச் சண்டைக்கு நிற்பவன் வாயில்கூட வராத வசைமொழிகள் பல தேவாரம் பாடிய நாயன்மார்கள் வாயினின்றும் வந்திருக்கின்றனவே!

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பேசப்படும் இக்காலத்தில், பல கடவுளரை உண்டாக்கி, அவர்களுள்ளும் சிவனே பெரியவன்—மற்றவர் சிறியவர் என்று பேசும் சைவ விளம்பரப் பாடல்களான தேவாரத்தை ஏன் தெருத் தெருவாய் கொண்டு சென்று விற்கவேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

இலக்கண அரிச்சுவடி கூடத்தேவைப்படாமல் பொருள்களை மிகவும் எளிதாக விளங்கக்கூடிய முறையில் அமைந்த குதம்பைச் சித்தர் போன்றவர்களால் பாடப்பட்டபாடல்களுக்குத் தொல்காப்பியத்தைத் துணைக்கழைத்த இந்தத் துண்டுப் புலவரின் அடுக்குத்தனத்தை என்னென்பது!

குதம்பைச் சித்தர் போன்றவர்கள், தேவாரம் போன்ற பஜனைப் பாடல்களைப் பாடுவதால் மக்களுக்குப் பக்தியை உண்டாக்கும் பணியிலா ஈடுபட்டிருந்தனர் என்பதைக் கூட உணர முடியாதவர்கள், தங்களிடம் புலமை இருப்பதாகத் தண்டோராப் போட்டுத் திரிவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. இதைவிட வேடிக்கை, அப்படிப்பட்டவர்களின் பாடல்களுக்குப் பதவுரையும் விளக்கஉரையும் கூறமுற்படுவது! இல்லாத ஒன்றுக்கு இருப்பதாக ஏதோ ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தி, வலிந்து பொருள் காட்டுவதன் வாயிலாக, இவர்கள், புலமைக்குப் பொருள் புளுகுவதுதான் என்ற இழிநிலையை ஏன் உண்டாக்கவேண்டும்? இந்தநிலை மாறி, உண்மையை உள்ளபடியே ஒப்புக்கொண்டு, அதனை உலகுக்கு உரைக்க நம்முடைய தமிழ்ப் புலவர்கள் முன்வரவேண்டுமென்ற நோக்கம் நமக்கு உண்மையாகஇருப்பதாலேயே, தவறு நம்முடைய நண்பர்களால் செய்யப்பட்ட போதிலும், அவர்கள் மேலும் தொடர்ந்து அத்தகைய தவறுகளைச் செய்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இழிவை உண்டாக்காதிருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனேயே இவற்றை எழுதுகிறோம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M. 4642.

திராவிடநாடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-MAY 1949
MADRAS

விலை அணா 2 ஆண்டுசந்தா ரு 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 17-4-49 | இதழ் 42

★ வெள்ளி ரதம் ★

கைலாயத்தில் ஓர் உரையாடல்

— கீரதர் —

உமாதேவியார்:— பிராணபதே! என்ன இது! வாட்டமுற்றவர் போலக் காணப்படுகிறீரே! மலர்ந்த முகத்துடன், பெருமிதத்துடன், வெற்றிக்களையுடன், காட்சி அளிக்க வேண்டிய சமயத்தில், சோகமுற்ற கோலம் கொள்வானேன்?

ஏகாம்பரேஸ்வரர்:— பார்வதி! பேசாமல் போய்ப்படு. பிராணனை வாங்காதே. போதும் எனக்குள்ள வேதனை!

உமா:— இதென்ன விந்தை! என்றையத் தினம் நாம் ப்ரம திருப்தியுடன், பூரிப்புடன், இருக்கவேண்டுமோ, அந்நாளாகப் பார்த்தா, இந்தக் கோபமும் சோகமும் கொள்வது? என்மனம் துள்ளிவிளையாடுகிறது! பாமாலையின் விசேஷத்தைப் புகழ்வதா? பூமாலையின்மணத்தினைப் புகழ்வதா? பக்தகோடிகளின் தோத்திரத்தை எண்ணிப் புகழ்வதா? இரவைப் பகலாக்கும் விதமான அலங்கார விளக்கொளியின் விசேஷத்தைப் புகழ்வதா? எதை விடுவது, எதை மறக்கமுடியும்! அவ்வளவு அபூர்வமான அகமகிழ்ச்சியைப் பெற்ற நாம், அருள் பொழிய வேண்டியது முறையாயிருக்க, நீர், அழுதுவிடுவீர் போலிருக்கிறதே! காரணம் என்ன இந்தக் கலக்கத்துக்கு! ஒருவேளை, அலுப்போ, பிராணபதே!

ஏகாம்:— என் கலக்கத்துக்குக் காரணம் தெரியாமல் திகைக்கிறாய், தேவீ! நானோ, உன் மனம் என்னமோ, துள்ளி விளையாடுகிறது என்று கூறினாயே, அந்தக்களிப்புக்கு என்ன காரணம் என்று அறியாமல், திகைக்கிறேன். பேதைப் பெண்ணே! சிந்தித்தால் சித்தம் குழம்பும் சம்பவம் நடந்திருக்க, நீ, சிறுகுழந்தை போல, ஆடிப்பாடி அகமகிழ்கிறாய். வரவர, இமயவன் மகளே! நீ, சிந்தனைத் திறத்தையே இழந்துகொண்டு வருகிறாய். நாம், இழிவு செய்யப்படுகிறோம், கேலிக்கு ஆளாக்கப்படுகிறோம், வீணரின் விளையாட்டுக் கருவிகளாக்கப்பட்டிருக்கிறோம், இந்த விபரீதத்தைப் பற்றித் துளியாவது, எண்ணிப்பார்த்தால், விசாரத்தில் ஆழ்ந்து போவாய்.

உமா:— நாதா! என்ன வார்த்தை பேசுகிறீர்கள். பொருள் விளங்கவில்லையே! பித்தா என்று பக்தர்கள் உம்மை அழைப்பது, நிந்தாஸ்துதி என்பீர்களே, அல்ல, அல்ல, நிஜமான வார்த்தையே அது. சித்தம் தடுமாறிப் பிதற்றுகிறீரே! நம்மையா, கேலி செய்தார்கள்! நம்மையா இழிவு செய்தனர்! யார் அத்தகைய 'சண்டாளர்கள்'? நேற்று நமக்கு நடைபெற்ற ராஜோபசாரத்தைக் காணாத கயவர்களா அவர்கள்! இலட்சோபி லட்சம் மக்கள் புடை சூழ, நவரத்னங்கள் விண்ணிலிருந்து பொழிவது போல, வாண வேடிக்கையும், நந்தியின் முகம் வெட்கத்தால் சிவந்துவிடச் செய்யும் அளவுக்கு, வெடி வேட்டும், உடனிருக்க, பக்தகோடிகள், வாழ்த்த, அழகிய, அலங்கார மிக்க, வெள்ளி ரதத்திலே, நாம் வீற்றிருந்து, வீதிவலம் வந்த காட்சி இன்னமும், அடியாரின் மனக்கண்ணில் தோன்றிய வண்ணம் இருக்கிறதே! முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சியம்பதியிலே, பல இலட்ச ரூபாய் செலவிலே, நமக்காக வெள்ளிரதம் செய்து, விழாக் கொண்டாடினரே, பக்தர்கள், இரவு பகலாகிவிட்டதே, ஊர் இந்திரலோகம் போலக் காட்சி கொண்டதே, எங்கும் எவரும், வெள்ளிரத உற்சவத்தின் விசேஷத்தைப் பற்றித்தானே வியந்து பேசினர்! அவ்விதம், நம்மைப் பக்தர்கள், பெருமைப்படுத்திக் கொண்டாடி, தோத்தரித்திருக்க, நீர், ஏன் விசாரப்படவேண்டும்? நாத்திகப் புயல் அடிக்கிறதோ என்று நாம் எண்ணிக்கொண்டிருந்தோம் ஏக்கத்துடன்! பூஜா உணர்ச்சி புகைந்து போய்விட்டதோ என்று சந்தேகப் பட்டோம். காஞ்சி க்ஷேத்ரவாசிகள் நமது சந்தேகத்தைப் போக்கி, அழகான வெள்ளிரதத்தைக் காணிக்கையாக்கினரே, நமக்கு...

ஏகா:— பார்வதி! உன் பூரிப்புக்கு எது காரணமாக இருக்கிறதோ, அதுவே, என் விசாரத்துக்குக் காரணமாக இருக்கிறது. எந்த வெள்ளித் தேர் வைபவத்தைக் கண்டு உன் மனம் துள்ளி விளையாடுகிறதோ, அதே வைபவந்தான் எனக்கு வாட்டத்தைக் கொடுத்திருக்கிறது.

உமா:- விளங்கவில்லையே, நாதா!

ஏகா:- விளங்காது உனக்கு, நான் விளக்கினாலொழிய! பார்வதி! வெள்ளிரத உற்சவம் கொண்டாடினார்களே, அது நமக்குப் பெருமை என்று எண்ணிக்கொண்டாய்?

உமா:- இல்லையா, நாதா! அத்தனை இலட்சம் செலவு செய்தது, நம்மைப் பெருமைப்படுத்துவது என்று தானே பொருள்!

ஏகா:- இங்குதான், நான் சிந்திக்கிறேன்—சித்தம் சோர்கிறேன்—நீ சிந்திக்காமலிருக்கிறாய்; ஆகவே மகிழ்ச்சி பெறுகிறாய்! சிந்தனை வேண்டும் சிவகாமி! நாமாவது சிந்திக்காவிட்டால், பிரபஞ்சம் என்ன கதியாவது! இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்தார்களல்லவா...?

உமா:- ஆமாம்—பல்வேறு ஊர்களிலிருந்து — மோட்டாரிலும் ரயிலிலும்......

ஏகா:- ஊரே திரண்டு விட்டதல்லவா?

உமா:- ஆமாம்-ஆடவரும் பெண்டிரும்—குழந்தைகளும் வயோதிகரும்—பாமரரும் படித்தவர்களும், பட்டிக்காடுகளும் பட்டண வாசிகளும், சகலரும் திரண்டுவந்தனர்.....

ஏகா:- வந்தனரல்லவா......!

உமா:- வந்தனர் — வந்தனர்— பன்னிப்பன்னிக் கேட்கிறீரே இதனை.........

ஏகா:- காரணமின்றி அல்ல நான் கேட்பது. இலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் வந்தனர்—எதற்கு...?

உமா - விளையாடுகிறீரா! எதற்கு! இது ஒரு கேள்வியா? எதற்கு வந்தனர் என்றால், வெள்ளித்தேர் பார்க்க!

ஏகா: இன்னொரு முறை கூறு! கோபியாமல் சொல், கோமளமே எதற்கு வந்தனர் அவ்வளவு மக்களும்........?

உமா:- வெள்ளித்தேர் பார்க்க!

ஏகா:- சரியாகச் சொன்னாய் பார்வதி! உண்மையை உரைத்தாய்! வெள்ளித்தேர் பார்க்க வந்தனர், லட்சக்கணக்கான மக்கள்—உன்னையும் என்னையும் பார்க்க அல்ல—நம்மைத் தரிசிக்க அல்ல-நமக்குப் பூஜை செய்ய வரவில்லை-நமக்குப் பெருமை தர வரவில்லை—வெள்ளித்தேர்பார்க்கவே வந்தனர்! பார்வதி! வெட்கமும் துக்கமுமின்றிக் கூறுகிறாயே, வெள்ளித்தேர் பார்க்கவந்தனர் என்று! நம்மைப் பார்க்கவரவில்லை!! இலட்சக் கணக்கான மக்களைப் பக்தகோடிகளை, நீ, விவரித்தபடி, பலரகமான மக்களை, திரட்டிக் கொண்டு வரும் மகிமை, சக்தி, நமக்கு இல்லை! கேவலம், வெள்ளித்தேர் கொண்டுவந்து சேர்த்தது இவ்வளவு பெருந்திரளான மக்களை! கைலைவாசி, திரிபுராந்தகன், கபாலி, பிறை சூடி, என்றெல்லாம் எனக்குச் சிறப்புப் பெயர்கள் பல உள! தோடுடைய செவியன்! தூவெண்மதி சூடி! காடுடைய சுடலைப்பொடி பூசி! என்றெல்லாம் கவிதா வடிவிலே, பல பட்டங்கள் உள்ளன எனக்கு. உனக்கும், உயர்வளிக்கும் பட்டங்கள் பல! எனினும், பிராணநாயகி! நமது பெருமை, மகிமை, போது மானதாக இல்லை, அவ்வளவு பக்தகோடிகளைத் திரட்டிக் கொண்டுவர! நம்மைப் பற்றி, நால்வர் பாடியுள்ள பாசுரங்கள், புராணிகர்கள் இழைத்துள்ள கதைகள், போதுமானவைகளாக இல்லை, பக்த கோடிகளைக் கூட்டிவர! வெள்ளித்தேர், தேவைப்படுகிறது! வேதனையாக இல்லையா! வேலவன் தாயே! நீயே, கூறினாய், மக்கள் எதற்காகக் கூடினர், என்பதை! வெள்ளித்தேர் பார்க்கவந்தனர்—நம்மைத் தரிசிக்க அல்ல!

உமா:- நாதா! எனக்கும் இப்போதுதான் ஓரளவுக்கு விளங்குகிறது.........

ஏகா:- உமா! நீயும், அன்று மக்களைப் போலவே, பொழுது போக்கிவிட்டாய் — கொட்டு முழக்கு கேட்டு மெய்மறந்து போனாய்— வாணவேடிக்கையைக்கண்டு வாய் பிளந்து நின்றாய்—சிந்திக்கவில்லை— பக்த கோடிகள் பேசிக்கொண்டதையும், கேட்கவில்லை. கேட்டிருந்தால், நான் அடக்கிக்கொண்டதைப் போல, உன்னால் ஆத்திரத்தையும் அழுகையையும் அடக்கிக்கொண்டிருந்திருக்க முடியாது.

உமா:- என்ன பேசினார்கள் பிராணபதே!

ஏகா:- என்ன பேசினார்களா! எல்லாம் பேசினார்கள் — நம்மைப்பற்றி மட்டுந்தான், ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்தபோதெல்லாம், அந்த ஜனங்கள், வெள்ளித்தேர் எந்தத் தெருவில் இருக்கிறது—இந்த வீதிக்கு வெள்ளித்தேர் வர, எவ்வளவு நேரம் பிடிக்கும்—வெள்ளித்தேர், எத்தனைமணிக்குக் கிளம்பிற்று —எத்தனை மணிக்குக் கோயில் போய்ச் சேரும்—என்று, வெள்ளித்தேர், வெவள்ளித்தேர் என்று ஓயாமல் பேசினரே யொழிய, நம்மைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. வெள்ளித்தேருக்குத்தான், சகல மரியாதையும்! சகலருடைய பார்வையும் வெள்ளித் தேரின் மீதுதான்— இறைவன் வீற்றிருக்கிறானே தேவியுடன், என்று எண்ணினரோ? இல்லை! இறைவனைப் பற்றி அறவே மறந்தனர். வெள்ளித்தேர், எவ்வளவு செலவு செய்து கட்டினார்கள்? எவ்வளவு வசூலாயிற்று! யார் வசூலித்தார்கள்? எங்கெங்கு சென்று வசூலித்தனர்? என்று கேள்விச் சரங்கள் பூட்டுவோரும், "சொல்லுகிறார்கள் நாலு இலட்சம் என்று— யார் கண்டார்கள்—" என்று ஒரு சந்தேகப்பேர்வழி கூற, சளைக்காத சைவ மெய்யன்பர், சரியான கணக்கு —சத்யமான கணக்கு என்று வாதாட, சமரசப் பிரியர், செலவு கிடக்கட்டும், கணக்குச் சரியா தவறா என்பது கூடக் கிடக்கட்டும், வேலைப்பாடு நேர்த்தியாக இருக்கிறது என்று பேச—இப்படி, பேச்செல்லாம் வெள்ளித் தேர் பற்றியதாக இருந்ததே யொழிய, நமது மகிமையைப் பற்றி எதும் பேசவே இல்லை. உமா! வெள்ளித் தேர், நம்மை மறைத்தேவிட்டது! வெள்ளித்தேர் உற்சவ வைபவத்தில், மக்கள் இலயித்துப்போய், நம்மைத் தொழவும் மறந்து போயினர். ஆஹா! தேரின் அழகைப் பார், பள பளப்பைப் பார், அலங்காரத்தைப் பார், என்று இப்படித், தேரைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனரே யன்றி, உன் அருளொழுகும் கண்களைப் பற்றியோ, என் ஜடாமுடி பற்றியோ, கையிலுள்ள மழு, சிரத்திலுள்ள கங்கா, மார்பில் புரளும் நாகமாலை, எனும் இவைபற்றிப் பேசுவாரே காணோம்! வேதனை பிறவாமல் இருக்குமா!

உமா:— உண்மைதான், நாதா! தாங்கள் கூறியது கேட்டு, நானும் உள்ளம் வாடுகிறேன்.

ஏகா:— தேடித் தேடிப் பார்த்தேன், நம்மை நாடி வந்தவர் ஒரு பத்துப் பேராவது கிடைக்கமாட்டார்களா, என்று. நீறு பூசிகள் கூட,

வேறு சிந்தனையில் ஈடுபட்டு, என்னை மறந்து போயினர்.

உமா:— மன்னிக்க வேண்டும், நான், இவ்வளவு ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்தவில்லை.

ஏகா:— பார், பார்வதி! ஒரு வேடிக்கையை. பக்த கோடிகள், நம்மைப் பற்றிப் பேச மறந்து, அந்தத் தேரைப் பற்றிப் பெருமை பல பேசியதுடன், அதை முன்னின்று அமைத்தவரின் குணம், பணம், ஆகியவை பற்றியும் பேசினர்! பக்தி என்ற பதத்துக்குரிய இலட்சணத்தைத் துளியும் அன்று நான் காணவில்லை.

உமா:— இருந்தாலும், இறைவன் பொருட்டு இவ்வளவு சிரத்தை காட்டினார்களே, என்பதை எண்ணும்போது. மகிழ்ச்சி பிறக்கவில்லையா?

ஏகா:— இதென்ன கேள்வி பார்வதி! நம்மைத் தரிசித்து அருள் பெற, தோத்தரித்து முக்தி கோர, மிக மிகச் சிறு கூட்டமே வரக் காண்கிறோம் வழக்கமாக! ஒவ்வொரு நாளும் ஆலயம் வருகிறவர்களின் தொகையை நீ அறியாயா? அவ்வளவு பேரும், தூய்மையான நோக்கத்துடனே வருபவர்கள் அல்ல! அதுவும் உனக்குத் தெரியும். நமது தரிசனத்துக்கு மிகச் சிறு கூட்டம் —ஆனால் வெள்ளித் தேர் — தங்க ரிஷபம்—பொன் பல்லக்கு—என்று இப்படி ஏதாவது காட்சி காட்டினால், ஊர் திரண்டு விடுகிறது. இதன் பொருள் என்ன? உண்மையாகக் கூறுகிறேன் உமா! அன்று அவ்வளவு பெருங்கூட்டத்தைப் பார்க்கும்போது, எனக்குக் கோபந்தான்! இறைவனின் பெருமையை உணராத மக்களே! நித்தமும் நான் வீற்றிருக்கும் கோயிலுக்கு, இவ்வளவு 'அக்கரையுடன்', நீங்கள் வருவதில்லையே! இன்று மட்டும் குவிந்து விட்டீர்களே! என்னைவிட, உங்களுக்கு, வெள்ளித் தேர் மீது அமோகமான ஆசை என்று தெரிகிறதே! என்னிடம் உள்ளன்பு இருக்குமானால், உண்மையான பக்திமான்களாக நீங்கள் இருந்தால், இன்று வருவது போலத் தானே, ஒவ்வோர் நாளும்—உள்ளூர்க்காரர் வரையிலாவது — பெருவாரியாக வரவேண்டும்? வருவது கிடையாதே! இன்று வந்துவிட்டீர்களே!! — என்று அந்த மக்களைப் பார்த்துக் கேட்கலாமா என்றுகூட எண்ணம் பிறந்தது.

உமா:— கேட்டிருக்கலாம்......

ஏகா:— கேட்டிருந்தால் கூட அந்த ஜனங்களின் செவியில் விழுந்திருக்காது. அவர்கள்தான், அவ்வளவு, ஆனந்த அமளியில் ஈடுபட்டுக் கிடந்தனரே! ஆறுமுகத்தைப் பார், அருணாசலத்தைக் கூப்பிடு, புவனா மாதிரி இருக்கிறது, பொன்னியின் தங்கை போகிறாள் — பாண்டியாக் மோட்டார், பர்மாஷெல் கம்பெனி, சரிகை கலந்த வெண்பட்டு, சர். தேசிகாச்சாரி வீட்டு மனுஷாள், S. O. C. கம்பெனி, இன்கம் டாக்ஸ் ஆபிசர், என்று இப்படித் தான், பல விஷயங்களைப் பற்றி இரைச்சலிட்டுக்கொண்டிருந்தார்களே தவிர, என்னைப்பற்றியோ, உன்னைப்பற்றியோ ஒரு சொல்லும்சொல்லக்காணோமே! வெள்ளித்தேராம், வெள்ளித்தேர்! வேதனையைத் தந்தது! நமது பெருமையையே குறைத்துவிட்டது. உண்மையாகச் சொல்கிறேன் உமா! இதே வெள்ளித் தேரில், விநாயகரோ விஷ்ணுவோ, நாரதரோ, நந்தியோ, பூதகணமோ, சித்ராபுத்ரனோ, ஊர்வசியோ, எவனாவது தவசியோ, ஏசுவோ, புத்தரோ, எந்தமூர்த்தியை அமர்த்தியிருந்தாலும், இதே கூட்டம் கூடிவிட்டிருக்கும்! கூட்டம், தேருக்கு — தேவனுக்கு அல்ல! இதை அறிந்தபோது தான் நான் ஆத்திரமடைந்தேன். மேலும், உமா! நீயே சொல்லு, நமது பெருமையும் மகிமையும் என்னகாரணத்தினாலோ, ஜனங்களை வசீகரிக்கவில்லை என்பதற்காகத்தானே, இப்படி வெள்ளித்தேர் போன்ற வைபவங்களை ஏற்பாடு செய்கிறார்கள்! இது நமக்குப் பெருமை தருவதா! நம்மைக் கேலி செய்வதல்லவா இது? பார்த்தாயா பரமனே! பக்தர்கள், அத்தி பூத்ததுபோலாகிவிட்டனரே, ஆலயம் வருவோரின் தொகையே குறைந்துவிட்டதே என்று கூறினீரே, இதோபாரும் கும்பல் சேர்க்கும் வித்தையை, ஒரு தேர் செய்தோம் வெள்ளியில், இலட்சம் மக்களைக்கொண்டுவந்தோம் உம் எதிரில்! எப்படி எங்கள் சமர்த்து! — என்று நம்மிடம் கூறி, முன்வரிசைக்காரர்கள் நம்மைக் கேலிசெய்வதுபோலவே தோன்றிற்று. பத்தே பத்துபேர் வந்தாலும் போதும் பக்தியுடன், நம்மைத் தரிசிக்க! அதுதான் நமக்குப் பெருமை — பூரிப்பு! இப்படி ஊரே திரண்டுவந்து என்னபயன்? வெள்ளித்தேருக்குத்தானே, பெருமை! நமக்கா? தேராகச் செய்த அவ்வளவு வெள்ளியையும், தேள் உருச் செய்து தெருவில் கொண்டுவந்தால் கூடத் தான் பெருங்கூட்டம் கூடிவிடும். நமக்குப்பதில், வேறு தேவன் இருந்தாலும், மக்கள், வித்யாசம் பாராட்டப்போவதில்லை. ஆகவே தான் எனக்கு ஆத்திரமாகிவிட்டது.

உமா:- இவ்வளவு விளக்கமாகச் சொன்னபிறகுதான், எனக்கும் வெட்கமும் துக்கமும் பிறக்கிறது. நம்மைப் பெருமைப்படுத்தவே இல்லை அந்த நடிப்புப் பக்தர்கள்.

ஏகா:- விழாநடத்தியவர்கள், நம்மை, எவ்வளவு கேலிக்குரிய நிலையில் கொண்டுவந்து வைத்தனர்தெரியுமோ? ஊருருக்கும், விளம்பரத்தாள் அனுப்பி வைத்தனர், விசேஷத்தைத் தெரிவிக்க — கூட்டம் சேர்க்க! அதிலே, பூசணைக்காய் அளவிலே, வெள்ளிரத உற்சவம் என்ற வாசகம்—உருத்திராட்ச அளவுகூட இராது, நமதுபெயர்! என்னபொருள் இதற்கு? ஏகாம்பரேஸ்வரரைக்காண வாருங்கள்! ஈசனின் அருளை நாடுங்கள்! பக்தி செலுத்துங்கள்!—என்று கூறினால் கூட்டம் வராது, வெள்ளிரதம் பார்க்க வாருங்கள் என்று கூப்பிட்டால்தான், கும்பல் சேரும், என்று தீர்மானித்துவிட்டனர். நம்மைப் பெருமைப்படுத்துவதா, அந்தத் திருக்கூட்டத்தின் நோக்கம்?

உமா:- நிச்சயமாக இல்லை-நம்மை நையாண்டியே செய்தனர் நாதா!

ஏகா:- யார் கேட்டார்கள் இவர்களைவெள்ளித்தேர் வேண்டுமென்று!

உமா:- மிதமிஞ்சிய பணம்!

ஏகா:- அதுவும் இல்லையே! அதே ஊரில், மூன்று ஆண்டுகளாக, ஒரு "காலேஜ்" கட்டுவதற்கு, இந்தக்கன தனவான்களால் முடியவில்லை — முகாரிபாடினார்கள் — கூடிக் கூடிப் பேசினார்கள், பெட்டியைத் திறக்கவே இல்லை — இதற்குமட்டும் கொட்டிக் கொடுத்தனர். ஒரு வாசகசாலை உண்டா அந்த ஊரில்! ஒரு விளையாட்டு மைதானம் உண்டா! ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு பராமரிப்புச் சாலை உண்டா! ஒரு நகரப் பொ மண்டபம் உண்டா? நல்- ... ரோடு உண்டா? சாக்கடை

துண்டா! எதுவும் இல்லை! எதைச் செய்யவும் பணம் கிடைப்பதில்லை. இதற்குமட்டும் கிடைத்தது இலட்சக்கணக்கில். இந்தத்தேர், நம்மை மறைத்து நமது மகிமையைக் குறைத்து உண்மைப் பக்தியைச் சிதைத்தது. வெறும் பொழுது போக்குக்கு, வீண் களியாட்டத்துக்கு, பலவகையான நடமாட்டத்துக்கு, வம்பளப்புக்குப் பயன்பட்ட இந்தத்தேர், பல இலட்ச ரூபாய்களை விழுங்கிவிட்டு, பயன் என்ன தருகிறது! வருஷத்தில் ஒரு நாள்! இதற்கு இவ்வளவு பணம் விரயமாவதா? இந்தத் தொகையைக்கொண்டு, உமா நெசவுத் தொழிற்சாலையோ, சிவா சாயத் தொழிற்சாலையோ, ஏகாம்பரர் காலேஜோ, அமைத்திருந்தால், ஒவ்வொரு நாளும் பயன்தருமே—ஏழை எளியவர் பிழைப்பரே, அறிவுக்கதிர் பரவுமே - செய்தனரா?

உமா:- செய்யவில்லையே!

ஏகா:- வேலையில்லாமல் வேதனைப் படுபவர்கள், படிக்கவழியின்றி வாட்டமடைகிறவர்கள், தங்க இடமின்றி திண்டாடுகிறவர்கள், அதே ஊரில், வருஷத்திற்கு ஒருதினம் நாம் சவாரி செய்வதற்காக, இவ்வளவு பெருஞ் செலவில் வெள்ளித் தேர் அமைத்திருப்பதை எண்ணிடும் போது, உமா! அவர்கள் மனம் என்ன பாடுபடும்! என்னென்ன பேசுவர்! இவ்வளவுக்கும் இடம் வைத்து, நம்மை இடர்ப்படச் செய்கிறார்கள், பக்தி என்ற தத்துவத்தையே புரிந்து கொள்ளும் பண்பும் அற்ற, பணந்தேடிகள்!!

உமா:- விசித்திர சித்தர்களாக உள்ளனரே நாதா! இவர்கள். ஒரு இலட்சரூபாய் திரட்டி, காலேஜ் அமைக்க முன்வராத, முன்வரிசைச் சீமான்கள், பல இலட்சத்தை வெள்ளித்தேர் ஆக்க மட்டும், ஏன் சம்மதித்தார்கள்......

ஏகா:- ஏன்! என்னை ஏய்க்கலாம் என்ற எண்ணம். கல்லூரி அமைத்தால், பலர் படித்துவிடுவார்களே! படித்தால், அவர்கள் நிலை உயருமே! அதை எப்படிக் கண்டு சகிக்க முடியும் அவர்களால்! வெடியாகவும் ரதமாகவும் பணம் பாழானல், பரவாயில்லை, என்று எண்ணுகிறார்கள். பிறரை வாழவைக்கவோ, நிலையை உயர்த்தவோ, அறிவைப் பரப்பவோ முன்வரமாட்டார்கள் — அச்சம்— அசூயை — அவநம்பிக்கை — மக்களின் வறுமைப்பிணி குறைந்து விட்டால், அறியாமை நீங்கிவிட்டால் பிறகு, தங்களுடன் சமமாகி விடுவரே என்ற சந்தேகம், சஞ்சலம்.

உமா:- மக்களிடம் அன்பு இல்லை அவர்களுக்கு?

ஏகா:- இருந்தால், மக்களுக்கு இதம் தரும் காரியத்துக்குப் பணம் இல்லையென்றுகூறிவிட்டுத், தேருக்குத் தருவார்களா, தேவி!

உமா:- நாதா! என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லையே...

ஏகா:- தேவி! நமது மனோ வேதனையும், நாட்டுஏழைமக்களின் மனோ வேதனையும் வீண்போகாது.

உமா:— நான் இப்போதே, இந்த வீண் காரியத்தை முன் நின்று நடத்தியவர் சொப்பனத்தில் தோன்றி புத்தி புகட்டப் போகிறேன்.

ஏகா:- வீண்வேலை, பார்வதி! வீண்வேலை! அந்த ஆசாமி ஏற்கனவே சொப்பனம் கண்டபடி தான் இருக்கிறார்! அவருடைய சொப்பனத்திலே, புண்யம் குவிவதும், பவுன்களாக மாறுவதும், புதுப் புது வியாபாரம் கிடைப்பதும், புண்ய மூர்த்தி என்று தந்திரக்காரர் புகழ்வதுமான, பல காட்சிகள் தோன்றியபடி இருக்கின்றன!

உமா:- புண்யம் வேண்டுமாம், புண்யம்! சொப்பனம் நான் காண வேண்டும்! யார், ஏழையின் துயரைத் தீர்க்க முன்வராமல், நடமாடும் தெய்வத்தை வழிபடாமல், இருக்கின்றனரோ, அவர்களை, நாம் நமது அருளைப் பெறும் அருகதையற்றவர் என்று ஒதுக்கித் தள்ளிவிடுவோம், என்பதை அவர்கள் அறியாரோ!

ஏகா:- அறிவர் சிற்சில சமயங்களில் மட்டும்—உமா! நாம் கேட்டால் போதாது, மக்கள் கேட்க வேண்டும்! வேதனையுள்ள நிலையில் நாங்களிருக்க, வெள்ளித் தேர் உற்சவமா, அடுக்குமா, நியாயமா, ஆண்டவன் இதை ஏற்றுக் கொள்கிறாரா, என்று கேட்கவேண்டும், ஏழைகள்......

உமா:- கேட்பார்களா, நாதா!

ஏகா:- நிச்சயமாகக் கேட்கப் போகிறார்கள். மக்களுக்கு அதற்குத் தேவையான நெஞ்சு உரம் அளிப்பதற்காகவே, நாம், நமது திருக்கூட்டத்தை அனுப்பிவைத்திருக்கிறோம்.

உமா:- நமது திருக்கூட்டமா? யார்?

ஏகா:- நீறு பூசாதவர்கள்; ஆனால் நேர்மையாளர்கள், உருத்திராட்சம் அணியார்; ஆனால் உள்ளம் தூய்மையானது, பாசுரம் பாடார்; ஆனால் பாசாங்குக் காரரல்ல......

உமா:— யார் நாதா அவர்கள்?

ஏகா:- அறிவு பரப்பும் திருக்கூட்டம்...

உமா:- அதற்கெனப் பெயர் உண்டோ, இல்லையோ?

ஏகா:- உண்டு, உமா! உண்டு! அந்தத் திருக்கூட்டத்தாரின் பெயர் தான் தன்மான இயக்கத்தினர், என்பது.

நமது 'குருமார்கள்,

15-ம் பக்கத் தொடர்ச்சி

ராயும், எல்லோரையும் சமத்துவமாய் நேசிப்பவராயும், நல்லது கெட்டது தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிற மானிடர்களுக்கு உகந்த கல்வியும் அதன் பயனாக அறிவையும், அதன் பிரயோஜனமாக ஞானத்தையும் சத்தியத்தையும் போதிப்பவரா யிருப்பவரே நமது குரு. எக்குலத்தவராயிருந்தாலும் அவரே தெய்வம்.

போலிக்குருமார்வந்து உங்கள் அப்பன், பாட்டன் கொடுத்துவந்தபடி தலைவரி கேட்டால், அந்தக் காலம் வேறு இந்தக் காலம் வேறு, அவர்கள் கட்டை வண்டியில் போனார்கள்; நாங்கள் ஆகாயக் கப்பலில் போகிறோம்; அவர்கள் சக்கி முக்கி தட்டினார்கள்; நாங்கள் மின்சார வில்லையை அழுத்துகிறோம். அவர்களுக்குப் பக்கத்தூர் சமாச்சாரம் தெரியாது; நாங்கள் உட்கார்ந்த இடத்தில் ஒரு நிமிடத்தில் அமெரிக்காக்காரரோடு பேசுகிறோம்; அவ்விடத்திய சமாச்சாரம் தெரிகிறோம்; உங்களுடைய சமாச்சாரமும் அறிவோம் என்று சொல்லி அனுப்பி விட வேண்டியதுதான்.

நான் கண்ட அழகர்சாமி

[எஸ். வி. லிங்கம்]

தோழர் அழகர்சாமி இன்று நம்மிடம் இல்லை. சென்ற திங்கள் அவரைக் கடைசியாகத் தாம்பரம் மருத்துவ விடுதியில் கண்டேன். முதன் முதல் நான் கண்ட அழகர்சாமியாக அன்று தோன்றவில்லை. இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்து, உழைத்து உருக்குலைந்தவராகவே அவருடைய உடல் நிலை தோற்றமளித்தது. "வா! லிங்கம்" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றார். முடியவில்லை. தலையைப்பிடித்துத் தூக்கி முதுகுப் பக்கமாகக் கையால் அணைத்து நிமிர்த்தி உட்காரவைத்தேன். எனக்கு முன்பே அங்கு சென்றுஉட்கார்ந்திருந்த தோழர்கள் அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், தேவராசன், கணேசன், இளம்வழுதிமுதலியவர்களிடம் மெல்லப் பேச ஆரம்பித்தார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐவரும் கண் கலங்கினர். அன்றிரவே பட்டுக்கோட்டை செல்வதாகச் சொன்னார் அழகரி. தேவராசன் அவர்களும் அண்ணாத்துரையும் ஆஸ்பத்திரி டாக்டரைத் தனியாகக் கண்டு, ஸ்பெஷல் வார்டில்வைத்து,' உடம்பைக் கவனிக்கமுடியுமா? என்ன செலவானாலும்கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், டாக்டர், தனக்கு நம்பிக்கை இல்லையென்றும், அதனால்தான் ஊருக்குப் போகும்படி சொன்னதாகவும் தெரிவித்தார். நாங்கள் சென்ற காரிலேயே புறப்பட்டோம். சென்னைக்கு வரும் வழியில் பெரியார் அவர்களைச் சந்தித்தோம் — நடந்ததைச் சொன்னோம்.

* * *

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பட்டுக்கோட்டைக்கு ஒரு மாநாடு சம்பந்தமாகப் போயிருந்தேன். கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும்போது, சில மாணவர்கள் கேள்வித்தாள்கள் கொடுத்தார்கள். பதில் கூறினேன். கேள்வித்தாள் கொடுத்ததற்குக் காரண மானவர்களைக் காண விரும்பினேன். அவர்களில் முதன்மையானவர்தான் அழகர்சாமி அவர்கள். இன்றைய இயக்க வளர்ச்சிக்குக் காரணமான ஊழியர்கள், தொண்டர்கள் என்பவர்களில் முதல் எண்ணிக்கையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள், காலஞ்சென்ற மாயவரம் நடராசனும், நாகை மணியும் ஆவார்கள். இரண்டு நாட்கள் பட்டுக்கோட்டையில் இருந்து மாநாடு சம்பந்தமாக நாங்கள் சென்ற வேலையை முடித்துக்கொண்டு, புறப்பட்டோம். அழகர்சாமியும் எங்களுடன் வந்தார். அப்பொழுது எங்கள் சுற்றுப்பிரயாணம் மாயவரம் மாநாட்டுக்காகப் பிரதிநிதிகளை வரும்படி செய்வதிலும், பணவசூலிலும் இருந்ததால், திருவாரூர், தஞ்சாவூர், கும்பகோணம் முதலானஊர்களுக்கும்எங்களுடன் அழகர்சாமியையும்அழைத்துச் சென்றோம். பகல் முழுவதும் மாயவரம் நடராசன் அவர்களுடன் வைக்கம் வீரர்கொள்கையைப் பற்றி அழகர்சாமி விவாதிப்பார். இவ்விதமாக ஏழெட்டு நாட்கள் கழிந்த பின்னர், நாகபட்டினம் சென்றோம். புகைவண்டி நிலையத்துக்கு எதிரில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. அந்தச் சமயம் ரயில்வே தொழிற்சாலை திருச்சிக்கு மாற்றப்படவில்லை. அன்று நடைபெற்ற கூட்டத்துக்கு மாயவரம் நடராசன் தலைமை வகித்தார். பத்து நாட்களாக எங்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டே, ஆனால், எங்கள் கொள்கையிலும் வேலைத்திட்டத்திலும் சந்தேகத்துடன் விவாதம் செய்து கொண்டே வந்த அழகர்சாமி அவர்கள், அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசினார்

இலக்கிய சம்பந்தமாகத்தான் பேசப் போவதாகச் சொன்னார். தொல்காப்பியத்திலிருந்தும், சிலப்பதிகாரத்திலிருந்தும் ஏதேதோ மேற்கோள்கள் காட்டித் தனது பிரசங்கத்தைச் செய்துகொண்டு வந்தார். "காலைக் கதிரவனையே 'கந்தழி' என்பது, அது பல நிறங்களுடன் தோற்றமளிப்பதால், அத்தோற்றம் மயில்போல் தெரிகிறது, அதனைத், தமிழன் 'முருகு'—'முருகன்' என்றழைத்து, அதன் அழகுக்காக அதனை வணங்குகிறான்" என்றார். உடனே கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து, "அப்படியானால் பிள்ளையார் கிடையாது—முருகனும் இல்லையென்று சொல்லுகிறீர்களா" என்றார். கேள்வி கேட்டவர் தொழிலாளர்களிடம் செல்வாக்குள்ளவர். எனவே அவருடைய கேள்வி கூட்டத்தில் சிறு பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அடுத்த நிமிடமே அழகர்சாமி சொன்னார், "தோழனே! நான் சொல்லி வந்தது வேறு, நீ என்னைக் கேட்பது வேறு; இருந்தாலும் சொல்லுகிறேன்; பிள்ளையாரும் இல்லை, புடலங்காயும் இல்லை, உட்கார்" என்று சொன்னார். அழகர்சாமி கூட்டங்களில் பேசிய முதற் பிரசங்கமும் அதுதான்.

நாகையில் தொடங்கிய பிரசங்கத்தை இறுதியாக ஈரோடு மாநாட்டில், மனமுருகும்படி செய்த கடைசிப் பிரசங்கத்துடன் முடித்தார். இரண்டு கூட்டங்களிலும் நாகை காளியப்பன் இருந்தார்.

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நமது கட்சியில் சேர்ந்த காலம், நமக்கென்று ஒரு இயக்கப் பெயரைச் சொல்லிக்கொள்ளாமல் இருந்த காலம். அன்று பிராமணரல்லாதார் இயக்கம் என்றே சொல்லிக்கொண்டு வந்தோம். அவர் நம்முடன் வேலை செய்துவந்தார் என்ற போதிலும், அந்தப் பெயர் அவருக்குப் பிடிக்காமலே இருந்தது. மதுரை, மாயவரம் மாநாடுகளுக்குப் பின், கோயமுத்தூரில் ஜஸ்டிஸ் மாநாடு கூடியது. மாயவரம் நடராசன் அவர்களுக்குப் பெரியார் ஈரோட்டிலிருந்து தந்தி கொடுத்திருந்தார். அதன்படி நாங்கள் மூவரும் கோயமுத்தூர் சென்று மாநாட்டு வேலையைக் கவனித்தோம். ஜில்லா மாநாட்டை மாகாண ஸ்பெஷல் மாநாடாக ஆக்கவேண்டுமென்று தோழர் அழகர்சாமி விரும்பினார். அந்தக் காலத்தில் மாநாடுகள் கூட்டுவதற்குக் கட்சித் தலைவர்களிடம் அனுமதி பெறுவது மிகவும் கஷ்டமான காரியம். இதற்காக மாநாடு சம்பந்தமாக ஆதரித்தும்;

எதிர்த்தும் பல கட்டுரைகளைத் தோழர் அழகர்சாமி தயாரிப்பார். வெவ்வேறு பெயர்களுடன் "ஜஸ்டிஸ்" பத்திரிகையிலும், 'மெயில்' பத்திரிகையிலும் இக்கட்டுரைகள் வெளிவரும்படி செய்வேன்.

சென்னையிலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து கோவை வரவேற்புக் கழகத்தாருக்கு வரும் தனிப்பட்ட கடிதங்களில்; கோவையிலுள்ள மாறுபட்ட எண்ணமுடையோர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கும்.

காங்கிரஸ் பிரவேசத்தைப் பற்றியும், கதரை ஆதரிப்பது பற்றியும் மாநாட்டில் தீர்மானிக்க வேண்டியிருப்பதால், ஸ்பெஷல் மாகாண மாநாடாகக் கூட்டுவதே சரி என்பதைச் சகலரும் ஒப்புக்கொள்ளும்படி செய்த பெருமை தோழர் அழகர்சாமி அவர்களையே சாரும்.

மாநாடு கூடியது. பிரஸ்தாப விஷயமாக, விஷயாலோசனைக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற்றது. மிகவும் காரசாரமாக விவாதம் நடந்தது. கோவை ஆர். கே. சண்முகம் அவர்கள் எழுந்து, அந்தத் தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார். காங்கிரஸ் பிரவேசம் கூடாதென்பது பெரியாரின் கருத்து. ஆதலால் தோழர் அழகர்சாமியும் பெரியார் பக்கம்தான் என்று சொல்லவேண்டியதில்லை.

தோழர் சண்முகம் அவர்கள் காங்கிரஸ் பிரவேசத்தை ஆதரித்தார், அவர் பேச்சு, அக்கூட்டத்திலிருந்தவர்களின் மனதைக் கலைத்து, அவர் பேச்சுக்கு ஆதரவு தரக்கூடிய பாதையில் போய்க்கொண்டிருந்தது. அப்போது, அவர் பிரசங்கத்தை எதிர்த்துப் பேசக்கூடியவர்கள் இடையிலேயே கிடையாது என்றும் சொல்லலாம். சண்முகம் அவர்களின் பிரசங்கத்துக்கு மக்களின் ஆதரவும் கைதட்டலும் அதிகரித்தது. அவ்வாறு அழகாகவும், காரணங்களைக் காட்டியும் பேசப் பேச நமது அழகர்சாமி அவர்களுக்குக் கோபம் வளர்ந்துகொண்டே வந்தது. சண்முகம் அவர்கள் தம்முடைய பிரசங்கத்தில், மக்கள் கூட்டுறவைப் பெறுவதற்குக் காங்கிரஸ் கட்சி இன்னின்ன மாதிரி எல்லாம் செய்கிறது, நாமும் அக்கட்சியைப்போல் மக்கள் நட்பைப் பெறுவதற்கு இவைகளைச் செய்ய வேண்டும். இவைகளைச் செய்ய மறுத்தால், நீங்கள் அரசியலில் இருப்பதை விட்டுவிட்டு மடத்துப் பண்டாரச் சந்நிதிகளாகத்தான் இருக்கவேண்டும் என்றார். மக்கள் நீண்ட கரகோஷம் செய்தார்கள். உடனே அழகர்சாமி அவர்கள் எழுந்து நின்றார். 'ஐயா' என்றார். "சந்தர்ப்பத்துக்குத் தக்க முறைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்கிறீர்களே! அதைச் சரிஎன்றே ஒப்புக்கொள்வோம். அதுவேதான் வழி என்றால், சந்தர்ப்ப வாதியாக இருந்து பெறும் புகழ் பெற்ற மயிலைச் சீனுவாசய்யங்காரின் இன்றைய நிலை என்ன" என்று கேட்டார். உடனே பொதுமக்கள் நீண்ட கரகோஷம் செய்தார்கள். இவ்விதம் தோழர் சண்முகம் அவர்கள் போன்றாரின் பிரசங்கத்தை எதிர்த்துப் பேசும் தைரியமும் திறமையும் அவருக்கு அன்றே ஏற்பட்டு விட்டது.

* * *

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், பிரசங்கியென்றால் பெரியார் ஒருவர்தான். காலஞ்சென்ற மா. ரா. குமாரசாமி அவர்கள் அடுத்த பிரசங்கியார். அது பெரும்பாலும், அருட்பாவை அப்படியே 'குடி அரசு'ப் பத்திரிகை ஆதரிப்பதாக எடுத்துக்காட்டுவதாக இருக்கும். இயக்க வளர்ச்சிக்காக இயக்கத் தலைவர் பெரியாரால் பேசப்படும் பேச்சுக்களிலும் எழுதப்படும் எழுத்துக்களிலும் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் வார்த்தை "சுயமரியாதை" என்பதாகும். மூன்றுஆண்டுகள் இயக்கம் எங்கும் பலமாக வேலை செய்தது. ஆனால், இயக்கத்துக்குப் பெயர் இல்லை. புதுப்பெயர் என்று எடுத்துக்கொண்டால், பட்டுக்கோட்டையில்தான் முதன்முதல் "சுயமரியாதைச் சங்கம்" என்ற பெயரை அவ்வூர்த்தோழர்கள் உண்டாக்கினார்கள். அதன்பின்னர், திருநெல்வேலியில் தோழர் கே. சுப்ரமணியம் அவர்கள் சுயமரியாதைக்கூட்டம் (மாநாடு) கூட்டினார். அதன்பின்னர்தான், சுயமரியாதைச் சங்கம் என்றும், சுயமரியாதைக்கட்சி, மாநாடு என்றும் ஓங்கி வளரத் தொடங்கியது.

* * *

பிரமணிய தத்துவங்களைக் கண்டிப்பதும், பிரமணியத்தை ஒழிப்பதுமே சுயமரியாதை இயக்கத்தின் வேலை என்று ஏற்பட்ட மூன்று ஆண்டுகள் வரையிலும், மதசம்பந்தமான கண்டனப் பிரசாரங்களுடன், அரசியலைப் பற்றியும் அவ்வப்போதுள்ள அரசியல் நிகழ்ச்சிகளையும் சேர்த்துப் பிரசங்கம் செய்தவர் நமது கட்சியில் முதன் முதல் அழகர்சாமியேயாகும்.

• • •

தென்னிந்திய ரயில்வே ஓர்க்ஷாப் நாகையிலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்ட ஓராண்டுக்குப்பின், ரயில்வே வேலை நிறுத்தம் நடைபெற்றது. இன்று உள்ளதைப்போல் தொழிலாளர்களாக இல்லாதாரே தொழிற்கட்சித்தலைவர்களாக இருக்கும் பழக்கம் அன்று இல்லை. முக்கியமான தொழிலாளர்களே தொழிற் கட்சியை நடத்தியகாலம் அது. ரயில்வே வேலைநிறுத்தப்போராட்டகாலத்தில், பெரும் பங்கெடுத்துக்கொண்டு, நமது இயக்கத்துக்கும், தொழிலாளர்களுக்கும் ஓர் பிணைப்பை உண்டாக்க வேண்டுமென்று முயன்ற நண்பர்களில் நண்பர் அழகர்சாமி அவர்கள் முதன்மையானவர். அடுத்தவர் திருமலைச் சாமியாவார்.

• • •

ரஷ்ய நாட்டில் பொதுவுடைமைச் சர்க்கார் உண்டாவதற்கு முன்னமேயே, இந்தியாவில், அகில இந்திய பொதுவுடைமை மாநாட்டைக் கான்பூரில் கூட்டினார்கள். பொதுவுடைமையின் பேரால் முதலில் கைதியாக்கப்பட்டவர்கள் மௌலானா ஆசாத் மோகினியும், தோழர் எம். சிங்காரவேலரவர்களுமாவார்கள். ரயில்வே போராட்ட காலத்தில், தோழர் சிங்காரவேலரின் கூட்டுறவு கிடைத்தது. பெரியாரைப் பற்றிச் சிங்காரவேலருக்கு அவநம்பிக்கையும் தப்பெண்ணமும் இருந்து வந்தது. ஆனால், நம்மைப் பற்றிச் சிங்காரவேலர் நன்றாக உணர்ந்தபின் நம்முடன் சேர்ந்துகொண்டார். இப்பெருமையும் தோழர் அழகர்சாமியுடையதேயாகும். அக்காலத்தில் அமெரிக்காவில் பொது உடைமைக்காரர்களான தோழர்கள் ஜாக்கோ, வான்சிட்டி என்ற இரண்டு தலைவர்களை எலக்ட்ரிக் நாற்காலியில் உட்காரவைத்து அமெரிக்காவில் கொன்றார்கள். அதைக் கண்டிக்கச் சென்னையில், ஓர் கூட்டத்துக்குச் சிங்காரவேலர் ஏற்பாடு செய்திருந்தார். டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள் தலைமை வகிப்பார் என்றும், சிங்காரவேலர் பேசுவார் என்றும் பிரசுரங்கள் வெளியிடப் பட்டிருந்தன.

உடல் நலமில்லாததால் டாக்டர் வரதராஜுலு வரவில்லை. மூர்மார்க்கெட்டில் பெரிய கூட்டம். ஏராளமான போலீஸ் பாராவும் இருந்தது. தோழர் சிங்காரவேலர் மட்டுமே வந்திருந்தார். பொதுக்கூட்டத்தில் போலீஸ் தடபுடல் காட்டுவதைப் பார்ப்பது அப்போது ஆரம்ப காலமாதலால், கூட்டம் மேடையை விட்டுத் தொலைவாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதில் நானும் அழகர்சாமியும் இருந்தோம். தோழர் அழகர்சாமி உடனே மேடைக்குச் சென்றார். நானும் கூடப்போனேன். எங்கள் வழக்கப்படி, என்னைப் பேசும்படி கூறினார். நான், சிங்காரவேலர் அவர்களால் கூட்டப் பெற்ற அக்கூட்டத்தைப் பற்றிச் சில கூறினேன். பின்னர், தோழர் அழகர்சாமி அவர்கள், சொற்பொழிவாற்றத் தொடங்கினார். பொதுமக்கள் மெள்ள மெள்ள மேடையருகில் வந்து உட்கார்ந்தார்கள். அழகர்சாமி பேசும் போது, "ஓர் செம்படத் தொழிலாளியும், ஓர் சக்கிலித்தொழிலாளியும் அமெரிக்காவில் கொலை செய்யப்பட்டார்கள். அதைக் கண்டிக்க நாம் இங்கு கூடியிருக்கிறோம். நமது செம்படத் தொழிலாளியான தோழர் சிங்காரவேலர் அவர்கள் தூக்கிலிடப்படும் காலம்கூட வரலாம், அப்படி ஏற்பட்டால் அதுவே நாட்டின் விடுதலை நாள்" என்பதாகப் பேசினார். அதன் பின், தலைவர் சிங்காரவேலர் பேசினார். அன்றுமுதல் தான் நமது கட்சிக்கும் சிங்காரவேலருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஓரிரு ஆண்டுக்குப்பின்னர் சுயமரியாதை இயக்கத்தையும், அதன் தலைவர் பெரியாரையும் பற்றி நன்கு பாராட்டிப் பேசியும் எழுதியும் வந்தார். இயக்க வளர்ச்சிக்கு முக்கியமானவராகச் சிங்காரவேலர் இருந்ததுடன் இயக்கம் என்றால் படித்தவரும் பாமரரும் ஒப்புக்கொள்ளும் முறையில் இயக்க

(12-ம் பக்கம் பார்க்க)

பழையன கழிதல்

16-ம் பக்கத் தொடர்ச்சி

அன்புப் பணியாக ஒருவர் மற்றவரை இழுப்பதையோ, சுமப்பதையோ பற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனால் அது தொழிலாகவும், சாதி முறையாகவும், கடமையாகவும் மாறி மனிதனை அலங்கோலப்படுத்துவதையே நாம் வெறுக்கிறோம்.

சீமான் வீட்டுச் சிறு குழந்தைகளை வண்டியிலிட்டு வளர்ப்புத் தாதியர் தள்ளிச் செல்லுகின்றனர். இதை மன்னித்துவிடலாம். ஆஸ்பத்திரிகளிலே நோயாளிகளைத் தள்ளவும், தூக்கவும் ஆட்களுண்டு. அது இன்றியமையாத சேவை.

கிராமங்களில் ஒரு காலத்தில் கலியாண ஊர்வலங்கள் மனிதர்களால் சுமக்கப்படும் மொட்டைப் பல்லக்குகளில் வருவதுண்டு. அவையும் இன்று அபூர்வமாகி நான்கு சக்கர வண்டிப் பல்லக்குகள் வந்து விட்டன. நவீன மோட்டார் வண்டிகளும் போட்டி போடுகின்றன.

பிணத்தைப் பாடையின் மீதோ, பல்லக்கின்மீதோ போட்டு மனிதர்கள் தூக்கிச் செல்வதுண்டு. இதுவும் தற்போது காந்தி, ஜின்னா, சரோஜினி முதலியோரின் சவச் சடங்குகளின்போது மாற்றப்பட்டு மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் சென்னைக்கு வந்து சென்ற சர்தார் படேல் ராஜாஜி மாளிகையின் படிக்கட்டுகளின்மீது ஏறிச் செல்ல முடியாதவாறு பலவீனமாயிருந்தார். அப்பொழுது அன்பர்கள் முற்கால வழக்கப்படி அவரைப் பல்லக்குமீது சுமந்து செல்ல ஏற்பாடு செய்யவில்லை. அவர் ஏறி வந்த ஜீப் வண்டியை அப்படியே படிக்கட்டுகளின்மீது ஏற்றிச் செல்ல வழி செய்தார்கள்.

காலம் மாறுகிறது. மக்கள் மனப்பான்மையும் வேகமாக மாறுகிறது. பழைய வழக்கங்கள் பையப் பைய விடை பெற்றுக்கொள்கின்றன. பண்டைய சின்னங்கள் மாயமாய் மறைகின்றன. ஆனால் பழைய பல்லக்கு மட்டும் சிரஞ்சீவியாயிருப்பானேன்?

மதத்தின் பேரால், ஆதிபத்தியத்தின் பேரால், ஆண்டவன் பேரால் ஆதி காலத்து அநாகரிகச் சின்னங்களாகிய அவை இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. புண்ணியமும் புனிதத் தன்மையும் அவற்றுக்கு ஏற்றப்பட்டுள்ளன. மதிப்பும், மரியாதையும் செலுத்தப்பட்டு வருகின்றன.

மன்னர்களும், மடாதிபதிகளும் 1949 மாடல் புதூரக மோட்டார்களிலே பயணம் செய்தபோதிலும், வெட்கமின்றி பல்லக்குகளையும் பயன்படுத்தி வருகின்றனர் பாரம்பரியத்தை நிலை நாட்டுவதற்காக. என்ன விந்தை!

தந்தி மூலமும், ஆகாய மூலமும், தபால் அனுப்பத் தெரிந்துகொண்ட பின்னரும் நாரை விடு தூது அனுப்புவாருண்டா? மின்சார விளக்குகள் வந்த பின்னரும் சக்கிமுக்கிக் கற்களைத் தேடுவாருண்டா? மாடமாளிகைக் காலத்திலே மரப்பொந்தை நாடுவாருண்டா? விமான யுகத்திலே பல்லக்கின்மீது ஏறலாமா? இது வேதனை தரும் விளையாட்டுத்தனம் அல்லவா? என்று நாம் கூறினால் உடனே பக்தகோடிகள், ரிக்ஷா ஒழியட்டும் என்று கூறுவோர் சிலர் கூடப், பதை பதைப்பார்கள். மெய்யன்பர்கள் மெய் விதிர்ப்பார்கள். மடங்களிலும், அரண்மனைகளிலும் கோவில்களிலும் கனகதண்டிகள் கட்டாயம் இருந்தே தீரவேண்டும். அவை புனிதமானவை, புண்ணியத்தின் பயன் என்று வாதிடுவார்கள்.

ரிக்ஷா ஒழிப்பு வாதிகள் இதைப் பற்றி நன்கு சிந்திக்கவேண்டும். ரிக்ஷாக்காரரின் கைவேதனையைக் காண்பவர்கள், பல்லக்குச் சுமப்பவனின் தோள் வேதனையையும் உணர வேண்டும். ரிக்ஷாவிலே இழிவைக் காண்பவர்கள் பல்லக்குகளிலே அடிமைத்தனத்தைக் காணவேண்டும்.

பகுத்தறிவுள்ளவர்கள் இன்று ரிக்ஷாவில் ஏறக் கூசுகின்றனர். ஆனால் பல்லக்கில் பவனி வருகிறவர்கள் கொஞ்சங்கூட வெட்கமின்றி, ஆடம்பர, அணிகலன்களுடன் பெருமிதமாகக் காட்சியளிக்கின்றனர்.

கை ரிக்ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷாக்களும், மோட்டார் ரிக்ஷாக்களும் வந்துவிட்டன. அது போல் மன்னர்களும், மடாதிபதிகளும் பவனிவர மோட்டார்கள் இருக்கின்றன.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல; கால வகையினாலே"

என்று கூறும் நூல் வழக்குப்படி வேண்டாதவற்றை விலக்குவதே அறிவுடைமையாகும். ✲

திராவிட நாடு

ஞாயிறு] 17—4—49 [காஞ்சி

வல்லூறுகளுக்கு அழைப்பு

✲

யார் இந்த வெள்ளையர்? தொலை தூரத்திலிருந்து இங்கு வரக்காரணம் என்ன?

இவர்களா! பாபம், பிழைப்புக்காக இங்கு வந்திருக்கிறார்கள். வியாபாரிகள்.

நம் நாட்டிலே இவர்கள் தங்கி இருந்து வியாபாரம் செய்ய, தொழில் நடத்த, அனுமதி கிடைக்குமா?

அனுமதி தரவேண்டும் என்று, கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காகத்தான், ராஜசபைக்குச் செல்கிறார்கள். மண்டியிட்டு வணங்கி, மன்னனிடம் முறையிட்டு, அனுமதி பெற்றன பிறகு, வியாபாரம் செய்து, பிழைத்துக் கொள்வார்கள்.

* * *

1601-ம் ஆண்டுக்குப்பிறகு பரங்கியர், இங்கு புகுந்து, வியாபாரம் செய்யும் அனுமதியைப்பெற, கெஞ்சிக் கிடந்தநிலை, மேலே தீட்டப்பட்டிருப்பது.

* * *

யார் இந்தக் கருநிறத்தார்—அதிகக் கருப்பாகவும் காணோம்! பழுப்பு நிறத்தவர்களாக உள்ளனர்! எதற்காக இங்கு வந்துள்ளனர்?

இவர்கள் இந்திய நாட்டுத் தலைவர்கள்! தங்கள் நாட்டிலே, வந்திருந்து தொழில் நடத்தும்படி, நம்மைக் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறார்கள்.

அவர்கள் நாட்டிலே, நாம்சென்று, தொழில் நடத்துவதா? ஏன்? அவர்களால் முடியவில்லையா, தொழில் நடத்த?

போதுமான பணமும், தேவையான திறமையும் இல்லை.

ஓஹோ! அதனால் தான் நம்மை நாடி வந்துள்ளனரோ?

ஆமாம், பாபம்! ரொம்பவும், வேண்டிக்கொள்கிறார்கள். நமக்கு அங்கு சகல வசதியும் உரிமையும் தருவதாகக் கூறுகிறார்கள்.

* * *

1949-ம் ஆண்டிலே, அமெரிக்கா போன்ற நாடுகளிலே உள்ளவர்கள் பேசிக்கொள்வதும் தீட்டப்பட்டிருக்கிறது.

* * *

மண்டியிட்டு அனுமதி கேட்ட காலம், பதினேழாம் நூற்றாண்டு!

மனுச்செய்து கொண்டு, மனமகிழ்ச்சி யூட்டி, அவர்களை, அழைத்து வருவது, இருபதாம் நூற்றாண்டில்!

உள்ளே புக முடியுமோ என்று அஞ்சிக்கிடந்த அன்னியருக்கு இப்போது உபசாரம் பலமாக நடக்கிறது, உள்ளே, வரச்சொல்லி.

* * *

அன்னியரின் நுழைவு, அக்ரமமானது, ஆதிக்கத்துக்கு வழிகோலுவது, அதிலேயும், வியாபார, தொழில், சம்பந்தமாக அன்னியர், நுழைவது, மக்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியது—வியாபாரியாக உள்ளே நுழைய முதலில் இடம் கிடைத்து விட்டால், பிறகு அவர்கள், ஆதிக்கக்காரராகி, நமது அரசு கூடக் கெடும்படி செய்துவிடுவர், என்று அஞ்சிய, அந்நாள் மன்னர்கள், உள்ளே நுழைய விரும்பிய ஆங்கிலருக்குப் பல நிபந்தனைகளை விதித்தனர்-இன்னின்ன கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று முறைவகுத்தனர்.

எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு, அடக்கமாகவே, வியாபாரத்தைத் துவக்கினர், வெள்ளையர்.

இரண்டோர் நூற்றாண்டுகளுக்குள், பண்டகசாலைக்குப் பக்கத்திலே பாசறைகள், கணக்கெழுதுவோருக்குத் துணையாகக் குண்டு வீசிகள், என்ற நிலை பிறந்து விட்டது.

கோட்டைகள் கட்டிக் கொண்டனர் — செயின்ட் ஜார்ஜ் கோட்டை போல!

எந்த ராஜசபையில் மண்டியிட்டு நின்று, அனுமதி கோரினரோ, அதே ராஜசபைகளிலே, பேரம் பேசவும், பிறகு, படைஎடுக்கவும், துணிந்தனர்.

வியாபாரியாக வந்தனர் உள்ளே—பணிவுடன்—அனுமதியின் பேரில்—பிறகோ, வேந்தராயினர்—அடக்கலாயினர் இந்நாட்டை.

இந்தக் கேட்டினைக் களைந்து நாட்டை மீட்டிட, எண்ணற்ற இளைஞர்கள், தியாகத் தீயிலே குதித்தனர்—நாடு, சுயாட்சி பெற்றது! ஆனால்.........!

தனிப்பட்ட முதலாளிகள் பெருந்தொழிற்சாலைகளை வைத்து நடத்தி இலாபவேட்டையில் ஈடுபடும், போக்கே, பொருளாதாரச் சுரண்டல் முறை என்றும், இந்தக்கேடு நீக்கப்பட்டாலொழிய, ஏழைக்கு வாழ்வும் நாட்டுக்கு வளமும் கிடைக்காது என்றும், மேடை அதிரத் தலைவர்கள் முழக்கமிட்டனர்.

இலாப உணர்ச்சியை ஒழித்து, சேவா உணர்ச்சியைப் புகுத்தி முதலாளித்துவமுறையின், நச்சுக்கொள்கையை, தூய்மைப்படுத்த வேண்டும்—அப்போது தான், சமுகம் சுகப்படும், நாடு புதுவாழ்வு பெறும், என்று உத்தமர் காந்தியார் உரைத்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெருங்கொள்ளைக் கூட்டத்தின் தலைவன்! அவன், உள்நாட்டு உழைப்புறிஞ்சிகளைத் தன்னுடன், கூட்டாளியாக—பங்காளியாக ஆக்கிக் கொண்டான். ஏழை, இந்தக் கூட்டுக்கம்பெனியால் கொள்ளையடிக்கப்பட்டுத்தேய்கிறான், என்று கர்ஜனை செய்தனர், தலைவர்கள். உள்நாட்டு முதலாளிகளின் இலாபவேட்டையும், ஏகாதிபத்யத்தின் சுரண்டல் திட்டமும், இரண்டும் ஒழிக்கப்படுவதுடன், வெளிநாட்டார் இங்கு, பணம் போட்டுத் தொழில் நடத்தி, அதன்மூலம் இலாபம் அடைவதுடன், நாட்டின் ஜீவநாடிகளைக் கைப்பற்றி, ஆதிக்கம் செலுத்தி, நம்நாட்டை ஆட்டிப் படைக்கும் கொடுமை அடியோடு ஒழிக்கப்படவேண்டும், அன்னிய நாட்டுமூலதனம், இங்கே புகுந்து, ஆதிக்கம் பெறுவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது, என்று வீராவேசமாகத் தலைவர்கள் பேசிவந்தனர். ஆனால், இப்போது, என்ன நடை பெற்றுக்கொண்டு வருகிறது?

தொழில்களைச் சர்க்கார் உடை

மையாக்குவது, என்ற திட்டம்நிறைவேற்றப்படவில்லை.

இந்தத்திட்டத்தை முதலாளிமார்கள் பலமாகக் கண்டித்துள்ளனர்.

அவர்கள் கண்டித்தது ஆச்சரியமூட்டக்கூடியதல்ல, நேரு, பட்டேல் போன்ற தலைவர்களே, இப்போது அந்தத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர்.

பெருந்தொழிற்சாலைகள், எப்போதும்போலவே, முதலாளிகளிடமே உள்ளன.

புதிய தொழிற்சாலைகளையும் அமைக்கும்படி, அந்தமுதலாளிகளை முதலாளித்துவ முறையை ஒழித்தே தீருவோம் என்று முழக்கமிட்ட, தலைவர்களே வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

இலாபவேட்டையைக் கண்டித்த அதே தலைவர்கள், முதலாளிகள், இலாபநோக்கம் இல்லையேல்,தொழில் ஆர்வம் பிறக்காது என்று பச்சையாகக்கூறிவிட்டதுகேட்டு,கோபமோ பயமோ கொள்ளாமல், உபதேசம் கேட்டு உண்மையை அறிந்து கொண்ட உத்தமச்சீடன், குருவின் முன் கைகட்டி நிற்பதுபோல, முதலாளிகள் முன்நின்று, இலாப நோக்கத்தைவிட்டு விடும்படி கூறவில்லை- அந்த நோக்கத்தைக் கண்டிப்பதை விட்டுவிட்டோம் — தொழில்களை நடத்துங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறார்கள்.

சர்க்காரின் தலையீடும் இல்லை — இலாப வேட்டைக்குத் தடையும் கிடையாது என்ற இரண்டு வரம் கிடைத்திருக்கிறது, 'சபிக்கப்பட்டு வந்த' முதலாளிகளுக்கு!

இதுமட்டுமா? வெளிநாட்டாரின், "முதல்" இங்கு முகாம் அமைந்துக் கொண்டு, ஆதிக்கம் செலுத்துவது கூடாது என்று முழக்கமிட்ட அதே தலைவர்கள், வெளிநாட்டு "முதல்" வேண்டும், ஏராளமாகவேண்டும், தங்கு தடையின்றி, உள்ளே வரலாம், உன்று உபசாரமொழி பேசுகின்றனர்.

புதியபுதியதொழில்களைத்துவக்க, ஏராளமான 'பணம்' முதலாகப் போட முன்வரும்படி, வெளிநாட்டாரைக், குறிப்பாக, அமெரிக்காவை நேருவே, கேட்டுக்கொள்கிறார்.

போட்ட 'முதல்' கெட்டுவிடாது! துவக்கப்படும் தொழிலை, துரைத்தனம், கைப்பற்றிக்கொண்டுவிடாது! கிடைக்கும் இலாபத்துக்குக் குந்தகம் ஏற்படாது! இலாபத்தை உங்கள், நாட்டுக்குக்கொண்டு போவதற்கு ஒருதடையும் ஏற்படாது! வருக! வருக! என்று நேருவே வருந்தி வருந்தி அழைக்கிறார்.

வல்லூறுகளை அழைக்கிறார், கிளி கொஞ்சும் சோலைக்கு—விருந்துக்கு!

கையிலே 'கவண்' இல்லை! வலை' ஏதும் இல்லை! தினை உண்டு! தீங்கனிகள் பலஉண்டு, தத்தைகள் உண்டு! —என்று விவரிக்கிறார்.

புதிய ஆட்சியின்போக்கு எங்ஙனமிருக்குமோ, சமதர்மத்திட்டத்தைச் சதாபேசிக்கொண்டிருந்தவர்களல்லவா இப்போது சர்க்காரை நடத்துகிறார்கள் — ஏழை பங்காளர்களல்லவா இப்போது ஆளவந்தார்களாகியுள்ளனர், இவர்கள் முதலாளித்வ முறையைக் கருவறுத்துவிடுவதாகச் 'சபதம்' செய்தவர்களாயிற்றே, அன்னிய நாட்டுப் பொருளாதாரப் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து, நல்வாழ்வு, தரப்போகிறோம் என்று மக்களிடம் வாக்குக் கொடுத்தவர்களாயிற்றே, இவர்களைநம்பி, நாம் எப்படி 'இந்தியாவில்' பணம் போட்டுத் தொழில் நடத்துவது, இலாபமோ, நிரந்தர நிலையோ, ஏது, என்று பயந்தனர், ஆங்கிலோ—அமெரிக்க முதலாளிகள். இன்றோ, அவர்களை அழைக்கின்றனர், தலைவர்கள்!!இலாபம்உண்டு, வாரீர்! தயங்காமல்வாரீர்! தடை ஏதும் இராது வாரீர்!-என்று.

கண்ணே வருக! கனிரசமே வருக! —என்று பிள்ளைத்தமிழ் பாடும்,தலைவர்களாகிவிட்டனர், "ஒழித்தே தீருவோம்" என்று முழக்கமிட்டுவந்த, அதே தலைவர்கள்.

வல்லூறுகள் வரப்போகின்றன, விருந்துண்ண! விசேஷ அழைப்பின் பேரில்!!

சர்க்காரின் திட்டம் தெளிவாக்கப்பட்டுவிட்டது, எனவே இனிச் சந்தேகமோ அச்சமோ கொள்ளாமல், தாராளமாகவந்து. 'தர்பார்' செய்யலாம், என்று தைரியம் கூறுகிறார், சர். விஸ்வேஸ்வரர், டாலர் சீமான்களுக்கு!

பதினேழாம் நூற்றாண்டு:— அன்னிய ஆதிக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், படுகொலைகளும், பயங்கரச் சண்டைகளும் நடத்தியாக வேண்டிய நிலை இருந்த காலம்.

இருபதாம் நூற்றாண்டு:— அன்னிய ஆதிக்கம், மிக மிக நாசுக்கான முறையிலே, தந்திரமாக, பிறர் அறியாவண்ணம், புகுத்தி விடுவதற்கான, வழி முறை வளர்ந்துவிட்ட காலம்.

ஆளைப் பிடித்து மிருகத்தனமான முறையிலே அடித்துக் கொன்று போடும் காட்டு மிராண்டி முறை மாறி, ஒரு சிறு ஊசியில் விஷத்தைத் தோய்த்துவைத்து அதனால் அவனும் அறியாவண்ணம் குத்தி ஆளைச் சாகடிக்கும், சாகசக் கொடுமை வளர்ந்திருப்பது போலவே, இன்று ஒருநாடு மற்றோர் நாட்டின்மீது ஆதிக்கத்தைப் புகுத்துவதற்கு, மிக மிக இலகுவான முறைகளைக் கற்றுக்கொண்டுள்ளன, வல்லரசுகள்.

மூலதனம் போடுதல்—தொழில் அபிவிருத்தி செய்தல் — நிபுணர்களைத் தருவது—என்பன போன்ற முறைகளின் மூலம், வல்லரசுகள், இன்று பெரும்படைகளால் சாதிக்க முடியாத காரியத்தை எல்லாம், எளிதாகச் சாதித்துக் கொள்கின்றன.

உருட்டும் கண்! மிரட்டும் சொல்! —ஒரு காலத்திலே, ஆதிக்கக் கருவிகள்.

இன்று, அன்புப் பார்வை, உபசார மொழி, ஆதிக்கக் கருவிகளாகி விட்டன.

இத்தகைய சூழ்நிலையின்போது, 'அன்னிய மூலதனத்தை, இங்கு, வரவழைப்பது, ஆதிக்கக்காரரை, நாமாக வலிய வலிய வரவழைக்கும், விபரீதமான காரியமாகும்.

அன்னியர்கள், இங்கு பல ஆயிரம் கோடி பவுன்களையோ, டாலர்களையோ, கொண்டுவந்து, புதிய தொழிற்சாலைகளை அமைத்துக் கொண்டு, இலாபவேட்டை ஆடத் தொடங்கினால், அந்த 'ருசி' அவர்களை, மீண்டும் ஓர் புதிய ஏகாதிபத்யத்தை — தந்திரமான ஏகாதிபத்யத்தை அமைக்கும் படியே தூண்டும். அந்தச் சமயத்திலே, நம் நாடு, அவர்களின் பிடியிலிருந்து, விடுபடுவதும், கஷ்டமாகிவிடும்.

அமெரிக்கா, ஒரு கரத்தில் பணக்குண்டும், மற்றோர் கரத்தில் அணு

குண்டும் வைத்துக்கொண்டு, அகில உலகிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்பும் திட்டத்துடன் வேலை செய்து வருகிறது.

இதனைத் தகர்க்கச் சம்மட்டி ஏந்தி நிற்கிறது சோவியத் நாடு.

உலகு, இரு முகாம்களாகி விடுமோ, என்ற எண்ணம், பலருடைய மனதைக் குடையும் காலம் இது.

இந்தச் சமயத்திலே, வெளிநாட்டு மூலதனத்தை, வேண்டி வேண்டி அழைப்பதும், பழைய கொள்கைகளை, முன்னாள் முழக்கங்களைமறந்துவிட்டு, வெளி நாட்டாருக்குத் திருப்தியும் தைரியமும் ஏற்படும் அளவிலும் முறையிலும், உபசாரம் பேசுவதும், சலுகைகள் காட்டுவதும், வசதிகள் செய்து தருவதும், நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுக்கும், துரோகக் காரியமாகும்.

இலாப மோப்பம் பிடித்துக் கொண்டு, பணம் - படைத்தவர்கள், தாமாக வருவதும், வருகிறவர்களின், கொடிவழிப் பட்டியைக் கண்டறிந்து அவர்களுக்கு நாம் நிபந்தனைகள் விதிப்பதும், முறையாயிருக்க, இங்கு தலைவர்கள், முதலாளிகளைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து, கெஞ்சிக் கூத்தாடி நின்று, அவர்களுக்கு என்ன வசதி தேவை, என்ன உரிமை தேவை என்று வினயமாக விசாரித்து, அவர்கள் கேட்பதற்கெல்லாம் இணங்கும் போக்குக் கொண்டுள்ளனர் தலைவர்கள். இது கேவலமானது மட்டுமல்ல, கேடு தருவது. பாமரன் மொழியிலே கூறுவதானால், நாட்டை அமெரிக்காக்காரனிடம் அடகுவைத்துக் கடன் வாங்குகிறார்கள் என்று கூறவேண்டும். ஏன், தலைவர்கள், இந்தத் தீய பாதையில் செல்கிறார்கள்? நாட்டை மீட்டிடும் நற்பணி புரிந்த வீர இளைஞர்கள், ஏன், இதனை அனுமதிக்கிறார்கள்?

வல்லூறுகளுக்கு விருந்து! விருந்துக்கு அழைப்பு!! வாய் திறவாமல் இருக்கின்றனர் மக்கள்—வர இருக்கும் விபத்தை அறியாமல்!

8-க்கும்—16-க்கும்!

-✲-

"செல்வாக்குக் குறைந்துவிட்டது என்று செப்பிடுவோரே, செங்கற்பட்டை நோக்குவீரே! பலம் சரிந்துவிட்டது, பண்பு குன்றிவிட்டது, ஆதரவு அற்றுவிட்டது என்று வாய்வலிக்கக் கூவிடுவோரைக் கண்டு செங்கற்பட்டு சிரிக்கிறதே, பாரீர்! காந்தீய நெறியில், சத்தியம் வழிகாட்ட, அகிம்சைக் கோல் ஊன்றி, முன்னேறும் காங்கிரசை, எதிர்த்து நிற்போர், இவ்வாழி சூழ் அவனியில் எவர்தான் இருக்கமுடியும்! குன்றாச் சிறப்பும், குமிழ் சிரிப்புங் கொண்டு காங்கிரஸ் வெற்றிவலம் வருவதைச் செங்கற்பட்டு மாவட்டத்திலே காணீர்! செங்கற்பட்டு மாவட்ட மேல்சபைத் தொகுதியின் உபதேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி! மீண்டுமோர் வெற்றி! வெற்றிக்குமேல் வெற்றி!" என்று வெற்றிக் கீதம் பாடி வீதிவலம் வரும் சூழ்நிலை காங்கிரஸ்காரர்களிடத்தே இன்று ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்திருப்பது உண்மைதான்; வெற்றி மணமுங் கமழத்தான் செய்கிறது, புண்ணுக்குமேல் பூசப்பட்ட புனுகு போல!

செங்கற்பட்டுத் தொகுதியில், மேல்சபை உபதேர்தலில், காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட டாக்டர் சீனிவாசன் வெற்றி பெற்றார்! 'மகத்தான' காங்கிரசின் சார்பாக வெற்றி பெற்றார்! சாதாரணமாக — சுயேச்சையாக நின்று போட்டியிட்ட தோழர் பாலகிருஷ்ணனை எதிர்த்து வெற்றி பெற்றார்! "மகத்தான" காங்கிரசின் போரால் அபரிமிதமான வோட்டுக்களைப் பெற்று, இல்லை! எண்ணி எட்டே ஓட்டுக்களை அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார்! எட்டுத் திக்கும் புகழ்பரப்பி நிற்கும் காங்கிரஸுக்கு, அதிகமாகக் கிடைத்த ஓட்டுக்கள் எட்டு!

உடலிலே ஏற்பட்டுள்ள புண்ணினின்றும் வீசும் துர்நாற்றத்தைச் சற்றே தடுத்துவைக்கப் புனுகு தடவுவதுபோல, காங்கிரஸ் உடலிலே ஏற்பட்டிருக்கும் ஊழல் புண்ணை மறைக்க இவ்வெற்றிப் புனுகு சிறிது பயன்படக் கூடும்.

இவ்வெற்றியைக் கொண்டு காங்கிரசின் புண்ணை மறைக்கக் காங்கிரஸ்காரர்கள் முயலுவார்கள்; ஆனால் புண் உடலிலே புரையோடும் அளவுக்கு வளர்ந்திருப்பதைக் காணப் பொதுமக்கள் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள்.

இத் தேர்தலில் ஏற்பட்டுள்ள தோல்வி, வெட்கப்பட்டோ, துக்கப்பட்டோ, ஏங்கி நிற்கவேண்டிய 'மகத்தான'தோர் தோல்வி அல்ல. புன்சிரிப்பும், பெருமிதமுங் கொண்டு ஏற்று நிற்கக்கூடிய அப்பழுக்கற்ற தோல்வியே யாகும். 'மகத்தான' காங்கிரஸ்! அதை எதிர்த்து ஒற்றை ஆள்! கொட்டக் கொட்டக் குறையாப் பணபலம், படைபலம், பிரச்சாரபலம், 'ராஷ்டிரபதியின்' பவனி, மந்திரிமார்களின் பார்வை, அதிகாரத்தின் சலுகை, ஆளவந்தார்களின் அணைப்பு இவையனைத்தையுங் கொண்டு நின்ற காங்கிரசை, சமபலங் கொண்ட மற்றோர் கட்சியா எதிர்த்து நின்றது? இல்லை! ஒரு சுயேச்சை, கட்சி ஆதரவு அற்றவர்! வேழத்தின் முன் வெள்ளாடு நிற்பது போன்ற போட்டி! வேழம் வெற்றி பெறுவதில் ஆச்சரியமில்லை!

புண்ணில் பூசியுள்ள வெற்றிப் புனுகு வாசனையை வீசுகிறது. என்றாலும், கபட நெஞ்சினோரும், கள்ளச் சிந்தையரும், கொள்ளை இலாபக்காரரும், கொடுஞ்செயல் புரிவோரும், பதவிவேட்டை ஆடுவோரும், பங்கு பெற முயலுவோரும், அடுத்துக் கெடுப்போரும், ஆணவக்காரரும் புண்ணில் மொய்க்கும் ஈக்களெனக் கொத்திக் கிளறி, ஊழல், உடலில புரையோடும் அளவுக்குச் செய்துவருகிறார்கள் என்பது நாட்டு மக்களின் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஊழற் புரையோட்டத்தால் காங்கிரசின் பலம் சரிந்து காணப்படுகிறது. இது இந்தத் தேர்தல் மூலம் புலனாக்கப்பட்டுள்ளது. 'சர்வ வல்லமை' படைத்த காங்கிரசுக்குக் கிடைத்த ஓட்டுகளோ 297; பக்கபலமின்றி எதிர்த்து நின்ற ஒருவருக்குக் கிடைத்தவை 289. இடையிலே வேறுபாடு

(12-ம் பக்கம் பார்க்க)

✯ மக்கள் பெருக்கம் ✯

—✲—

உலக மன்றத்தின் முன் நிற்கும் பிரச்னைகள் பலவற்றிலே, மக்கள் பெருக்கம் பற்றியதும் ஒன்றாகும். இது, இன்றைய நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தவொரு பிரச்னையாக வளர்ந்துவிட்டது.

மனிதனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை உண்டாக்கித் தரும் வகையோ, வழியோ காணமுடியாமல் ஒவ்வொரு நாடும் அல்லலுற்று உழல்கின்றன. இவ்வித் தப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கென்று ஏற்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மன்றத்தினாலும் ஏதும் செய்ய இயலவில்லை.

மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் வெப்பம் மிகுந்த கீழை நாடுகளில் மக்களின் எண்ணிக்கை மிகவாக வளர்ந்துள்ளது. அதுவும் இந்தியத் துணைக்கண்டத்தில் அது வரையறையின்றிப் பெருகிக் காணப்படுகிறது.

பாக்கிஸ்தான், இந்தியா இரண்டும் சேர்ந்த இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் எண்ணிக்கை நாற்பது அல்லது நாற்பத்திரண்டு கோடிக்கு மேல் இருக்கும் என்று கணக்கிடுகிறார்கள். திட்டவட்டமாக எவ்வளவு என்று அறிந்துகொள்ள இயலவில்லை. அடுத்துவரும் எண்ணிக்கை எடுப்பின் (சென்ஸ்) போதுதான் சரிவர அறியக் கூடும்.

வளங்கொழிக்கும், பழம் பெருமை படைத்த இந்தியத்துணைக் கண்டம், தன்னிடம் வளர்ந்து தவழ்ந்து கிடக்கும் மக்களைக் காப்பாற்றுவதற்கு வழியற்றுக் கலங்கி நிற்கிறது. இன்றியமையாத தேவைகளுள் ஒன்றான உறையுள் அற்று எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் ஊர் சுற்றிகளாக, மரத்தடியையும், இடிந்துவிழுந்து கிடக்கும் குட்டிச் சுவரையும், பாழ் மண்டபங்களையும் தேடியலையும் இடந்தேடிகளாக இருந்துவருகின்றனர். தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கூட உதவி செய்ய மறுக்கும் வெறும் கந்தலாடைகளை அணிந்து வீதிவலம் வருவோரும் கோடிக் கணக்கில் இருக்கின்றனர். இந்தத் தேவைகளும் அற்ற நிலையிலுங்கூட மனிதன் உயிர்வாழ முடியும். ஆனால் மற்றொரு தேவையிருக்கிறதே, முக்கியமான தேவை—முதன்மையான தேவை—உணவு. அது கிடைக்காமல் அல்லற்படும் எண்ணற்றோரையும் இந்நாடு கொண்டிருக்கிறது. பசிக்கொடுமையால் இறந்துபடுவோரின் எண்ணிக்கையும், நாள்தோறும் வளர்ந்து கொண்டே போகிறது.

விலங்கு, பறவை இனங்களிடத்தே கூட ஏற்படாத உயிரின் இன்றியமையாத தேவை பற்றிய பிரச்னைகள், மனித சமுதாயத்திடத்தே இருக்கக் காண்கிறோம். ஏன் இந்த நிலை என்று கேட்டால், போதுமான அளவுக்குமேல் மக்கள் தொகை பெருகிவிட்டது, ஆகவே அதைக் குறைக்க வழி தேடுவதே, பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான சிறந்த முறை என்கின்றனர்.

இறப்பவரின் எண்ணிக்கையை விடப் பிறப்பவர்களின்எண்ணிக்கை மேலோங்கி வளர்ந்து வருகிறபடியால், 'கர்ப்பத் தடை' முறையைக் கையாளுவதைத் தவிர, வேறு வழியில்லை பிரச்னையைத் தீர்க்க என்று செப்புகின்றனர். கொள்கையைப் பொறுத்த வரையில் கர்ப்பத்தடை முறையை அறிவுடையோர் யாரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. அந்த முறையைக் கையாள முயன்றாலும், திட்டம் எளிதில் முடிவதில்லை; அரசாங்கத்தைப் பொறுத்தோ, சட்டங்களைப் பொறுத்தோ, மக்களின் கூட்டுறவைப் பொறுத்தோ, ஓரிருவருடைய முயற்சியைப் பொறுத்தோ நிறைவேறக்கூடியதல்ல; ஒவ்வொரு தனிப்பட்டவரின் அறிவுடம்பட்ட முயற்சியைப் பொறுத்தது. இது நாளடைவில் தான் வளரக் கூடுமே யல்லாது திடும் என்று கைகூடக் கூடியதன்று. நிறைவேற நீண்டகாலம் பிடிக்கும். ஆகையால் அது உடனடிப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்குரிய, மருந்தாகக் கொள்ளக்கூடியதாகாது.

இந்த முடக்க நிலைகளை மனித வர்க்கமே அவ்வப்போது, வெவ்வேறு உருவில் நின்று உண்டாக்கி வந்தன, இன்றும் உண்டாக்கி வருகின்றன.

மனித வர்க்கத்தின் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல் எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஒருவருக்கோ, சிலருக்கோ, அல்லது ஒரு பகுதியினருக்கோ, ஒரு நாட்டுக்கோ அல்லது ஒன்று சேர்ந்த சில நாடுகளுக்கோ பயன்படும் வகையில் முடக்கப் பட்டுவிட்டன. இந்த முடக்கப்பட்ட நிலைகளெல்லாம் விடுவிக்கப்பட்டால், இல்லை என்றசொல் உண்டியைப்பற்றியோ, உடையைப் பற்றியோ, உறையுளைப்பற்றியோ எழவழியில்லை.

இல்லாமைக்கு இரையாகி நிற்கும் ஏழையர்கள் மிகுந்தநாடு பொதுவுடைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இருக்கும் நாடுகள் இல்லாத நாடுகளின் போக்கைக் கண்டு கிலி கொண்டு, தம்நிலையைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணுகின்றன. எண்ணியதன் முடிவாகப் பொதுவுடைமைக் கொள்கைகளை அழித்துவிட்டால்தான் தாம் வாழ முடியும் என்று கருதுகின்றன. பொதுவுடைமைக் கொள்கைகளை ஒழிக்க முற்பட்டுள்ள வளமுள்ள நாடுகள் பலவும், பொதுவுடைமை தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் ஏழ்மையையும், வறுமையையும் தொலைக்க முற்படுமேயானால், உலகின் கொந்தளிப்புக் குறையும். கொந்தளிப்புக் குறைந்தால் முடக்கப்பட்ட சக்திகள் பலவும் விடுபட்டால், தேவைகள் நிறைவேற வழியேற்படும். தேவைகள் நிறைவேற்றப்படும் போது மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் ஏற்படாது. அப்பொழுதுவேறு பல காரணங்களுக்காகக் கர்ப்பத்தடை முறை வலியுறுத்தப்பட்டாலும், உணவு இல்லை என்ற காரணத்திற்காக மக்கள் பெருக்கத்தைத் தடுக்கும் வழியாக அது கொள்ளப்பட மாட்டாது. ✲

முகவரி மாற்றம்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அஞ்சல் வரைவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு வரைவார்களாக.

இரா. நெடுஞ்செழியன்
C/o "திராவிட நாடு"
95, திருக்கச்சி நம்பித் தெரு,
காஞ்சிபுரம்.

8-க்கும் 16க்கும்

11-ம் பக்கத் தொடர்ச்சி

உணர்த்தி நிற்பது 8! இதுதான் காங்கிரசின் சரிவைத் தெளிவாக்கிக் காட்டும் 'மீட்டர்'!

காங்கிரசை எதிர்த்து நின்று தேர்தலில் போட்டி போடும் அளவுக்கு, அமைப்பு முறை முதலியவற்றிலே, சரிசமமாக வளர்ந்து நிற்கும் எதிர்க்கட்சி, இந்தியாவின் பிற மாகாணங்கள் எங்கணும் இல்லை என்றே கூறலாம். சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், எதிர்க் கட்சி உருவாக முடியும் என்றாலும், அத்தகையதொரு நிலை ஏற்படாமலேயே காங்கிரஸ் தனியாட்சி நடத்திவரும் வாய்ப்புள்ள காட்சியாகவே இருந்து வருகிறது. திராவிடர் கழகம், அரசியலில், தேர்தலின் மூலம் நேரடியாகக் கொள்ளக் கூடிய பங்கைக் கொள்ளாமல், அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் ஆகியவைபற்றிய அறிவுணர்வை, நாட்டுப் பொதுமக்களிடம் ஏற்படுத்திவரும் சீரிய பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே அது தேர்தலில் எவ்வகைத் தொடர்பும் கொள்ளக் கூடாத—கொள்ள முடியாத இயக்கமாக இப்பொழுது இருந்து வருகிறது. எதிர்க்கும் கட்சி இல்லாதிருந்தும் காங்கிரசின் பலத்திலே பலமான சரிவு காணப்படுகிறது. சரிந்தது போக எஞ்சி நிற்பதாகத் தென்படுவது எட்டே ஓட்டுக்கள்! ஆகவேதான் தோல்வி வெட்கப்பட வேண்டிய தோல்வியும் அல்ல; துக்கப் படவேண்டிய தோல்வியும் அல்ல! காங்கிரஸ் கோட்டையில் ஏற்பட்ட சரிவை—சரிவின் எண்ணிக்கையை நோக்கிப் பெருமிதங் கொள்ளவேண்டிய தோல்வி!

இங்கு மட்டுந்தான் இந்த நிலைமை என்று எண்ணிவிடவேண்டாம். காங்கிரஸ் கோட்டைக்குள்ளும் குமுறல் தோன்றிவிட்டது. குமுறல் பலவழிகளிலே வெடிக்கின்றன. அந்த வெடிப்புகள் மூலமும் கோட்டை சரிந்துதான் காணப்படுகிறது. இன்றைய மந்திரிசபையே 16 ஓட்டுக்களின் மீதுதான் கட்டப்பட்டிருக்கிறது. மந்திரிசபை அமைக்கும் தகுதி பெறும், கட்சித் தலைவர் 'தேர்தலில் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா 105 ஓட்டுக்கள் பெற்றார். எதிர்த்து நின்ற டாக்டர் சுப்பராயன் பெற்ற ஓட்டுக்கள் 89. வெற்றியின் அறிகுறியாக இடையிலே நின்றவை 16 ஓட்டுக்களேயாகும். தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜாவுக்குக் கிடைத்ததும் மகத்தான வெற்றியல்ல. எதிர்ப்புச் சக்திகளுக்குக் காவு கொடுத்தவை போக எஞ்சி நின்றவை 16 தான்!

ஏகபோக மிராசு பாத்யதை கொண்டாடி வரும் காங்கிரசுக்கு எதிர்ப்புச் சக்திகள் துண்டு துண்டாக ஆங்காங்கு உருவாகி வருகின்றன என்ற பாடத்தை இந்தத் தேர்தல்கள் நன்கு கற்பித்துள்ளன. நாட்டிற்கு நல்லபணி புரிய, முற்போக்குச் சக்திகள் பலவும் ஒன்று திரண்டு, முன்னேற்றப் பாதையில் முனைந்து நின்று, நாட்டாட்சியை ஏற்றுக்கொள்ளத் துணிவு கொள்ளுமாயின்; காங்கிரசின் காட்டுராஜா வேட்டைப்பலம் நசித்துவிடும் என்பது மட்டும் உறுதி. மமதை மீது நின்று ஆணவஆட்சிபுரிந்த சாம்ராஜ்யங்கள் பலவும் இறுதியில் சரிந்துதான் போயின என்பதை வரலாற்று ஏட்டுச் சுவடிகள் என்றும் பகர்ந்து நிற்கின்றன. சிறிதளவு பிளவு—ஊழல் ஏற்பட்ட சாம்ராஜ்யங்களே சரிந்துவிட்டன என்றால், பழைமைக்குப் பயந்து, வைதிகத்திற்கு வளைந்து, சனாதனத்திற்குச் சாய்ந்து, முதலாளித்துவத்திற்கு முதுகு கொடுத்து, பணக்காரர்களுக்குப் பாராக்குக் கூறி, பதவி வேட்டைக் காரர்களுக்குப் பல்லக்குத் தூக்கி, ஏழைகளின் கண்ணீரைச் சொரிய விட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் நிலை குலைந்துபோக வழியேற்படாமற் போகாது; ஏற்பட்டே தீரும். இது சரிதங்கூறும் பாடம்.

எனவேதான் வெற்றி இங்கு 8-க்கும், அங்கு 16-க்கும் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறோம். வெற்றி மாபெரும் வெற்றியல்ல; சாமான்யமானது; மிகச் சாதாரணமானது; ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லாதது! இதில் அதிசயிக்க வேண்டியது எதிர்ப்புச் சக்தியின் அளவு—அதனால் காங்கிரசின் உள்ளும் புறமும் ஏற்பட்ட சரிவு! அவ்வளவுதான்!

நான் கண்ட அழகர்சாமி

7-ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சியில் பங்கெடுத்துப் பணியாற்றும் பெருமையைச் சிங்காரவேலருக்கு உண்டாக்கி வந்தவர்களில் அழகர்சாமி அவர்களே முதன்மையானவர் என்பது மறுக்க முடியாததாகும்.

*　　*　　*

"குடிஅரசு" பத்திரிகை தொடங்கி ஐந்தாறு ஆண்டுகள் வரையில், சென்னையிலிருந்து கன்னியா குமரி வரையில் கூட்டங்கள் நடைபெறும். அவை அத்தனையிலும் தோழர் அழகர்சாமியின் பெயர் இருக்கும். முதலிரண்டு ஆண்டுகளில், தஞ்சாவூர், செட்டிநாடு, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலேயே, நமது பிரசாரம் மிகப் பலமாக நடைபெற்றது. அக்காலம், எதிர்க்கட்சித் தலைவர் காலஞ்சென்ற எஸ். சீனுவாசய்யங்கார் அவர்கள் காலமாகும். காலஞ்சென்ற கிருஷ்ணசாமிப் பாவலர் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத் தலைவர், "தேசபந்து" என்று ஓர் பத்திரிகை. அது அப்படியே பெரியாரைக் கண்டிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. விருதுநகரில் நமது பிரசாரம் அடிக்கடி நடைபெற்றதாலும், நாடார் சமுகத்தில் பிரபல தலைவர்கள் பலர் நம்மைப் பெரிதும் ஆதரித்ததாலும், விருதுநகரில் நமது இயக்கத்தின் வலுவை அடக்கப்பாவலர் எண்ணினார். பெரியார் இராமசாமி அவர்களைப்போல் கொடும்பாவிகட்டி, நகரில் அதை இழுத்துப், பின்னர் தீயிட்டார்கள். இச்செய்தி காங்கிரஸ் ஏடுகளில் பெரியதாக வெளிவந்தது. உடனே விருதுநகருக்குத் தோழர் அழகர்சாமி வந்தார். தஞ்சாவூரிலேயே விருதுநகர்க் கூட்டத்துக்கு நோட்டீஸ் அடித்துக்கொண்டுபுறப்பட்டார். விருதுநகரில் தைரியமுள்ள இளைஞர்கள் வாயிலாக அப்பிரசுரம்வெளியிடப்பட்டது. அன்று மாலை விருதுநகரில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. தோழர் அழகர்சாமி வீரவுரை நிகழ்த்தினார். அந்தக்கூட்டமே பின்பு விருதுநகருக்கும் நமக்கும் பிரிக்க முடியாத பிணைப்பை உண்டாக்கிவிட்டது.

(தோழர் அழகர்சாமிபற்றிய பல குறிப்புகள் இன்னும் உள்ளன. தொடர்ந்து எழுதுவேன்.)

நமது "குருமார்கள்"

[க. வா. வெங்கடாசலம்]

நமது தேசத்தில் சகோதரத்துவம் சமத்துவம் இவைகள் நிலவாமலிருப்பதற்கும், அடிக்கடி பூசல்கள் உண்டாவதற்கும் மூல காரணமாயிருப்பது, ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்றும், மற்றவன் தாழ்ந்தவன் என்றும் நினைப்பதேயாகும். இது பெரும்பாலும் மனுதர்ம நூலினை ஆதாரமாகக்கொண்டு வருணாசிரமத்தை அவலம்பிக்கின்ற வைதீகர்களாலேயே ஏற்படுகிறது என்பதில் தடையில்லை. நமது தென்னாட்டைப் பொறுத்தமட்டிலும் பிராமணர்கள் தான் இதற்குக் காரணம் என்று பொதுவாகச் சொல்லப் படுகிறது. அது வாஸ்தவமாயிருந்தாலும் வைதிகர்கள் தான் இக்கொடுமையை அதிகப்படுத்துகிறார்களென்பதில் தடையில்லை. ஆகவே புரோகிதக் கூட்டம் ஆச்சாரியக் கூட்டங்களைத் தொலைத்தாலன்றித் தேசம் ஒற்றுமைப்பட்டு வாழ முடியாது. படித்த பிராமணர்களை அவ்வளவு மோசமாய்ச் சொல்வதற்கில்லை. இவர்கள் தங்களுக்குள்ள ஆஸ்திகளை எல்லாம் செலவு செய்து படித்துவிட்டுத் தங்கள் புத்திக் கூர்மைக்குத் தகுந்தபடி ஏதோ உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டு மேல் ஜாதியென்றும் கீழ் ஜாதியென்றும் பாராமல் எல்லாருக்கும் ஊழியம் செய்துவந்து பென்ஷன் வாங்கும் வரையாவது உயர்ந்தவன் என்ற மமதையை விட்டிருப்பதாக நடிக்கிறார்கள். ஆனால் நமக்கு இழிவைத் தரக் கூடியதாயிருப்பது வைதிகக் கொடுமைதான்.

குருவென்பவன் யார்?

குருவென்பவனுக்குப் பொருள் என்ன என்று யோசிப்போம். நமக்கு அறிவைப் போதித்து இகத்திற்கும் பரத்திற்கும் நல்லொழுக்கத்தையும் ஆத்மார்த்தத்தையும் அடையும்படி செய்பவரே குரு ஆவார். முன் காலத்திய சரித்திரங்களைப் பார்த்தாலும் வசிஸ்டர், பிரகஸ்பதி, சுக்கிரர், வியாசர் என்போர்கள் அப்படித்தான் செய்துவந்து குரு ஸ்தானம் பெற்றதாகத் தெரிகிறது. இப்போதும் கிறிஸ்துவ மதாச்சாரியார்களாகிய போப் முதலியவர்களும் மகம்மதிய குருமார்களும் நபிகள் நாயகமும், பைபில், குர்ஆன் முதலிய தம் வேதங்களை எல்லாச் சிஷ்யர்களுக்கும் போதித்து எல்லோரும் படிக்கும்படி செய்து தங்கள் சிஷ்யர்களை நல்வழிப்படுத்தி வருகின்றார்கள். வேறு மதஸ்தர்களும் தாராளமாகப் படிக்கும்படி வசதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் இன்னார் தான் படிக்கவேண்டும், இன்னார் படிக்கக்கூடாதென்ற பாகுபாடில்லை.

நமது குருமார்களோ

வேதத்தைப் படித்தால் நாக்கை அறு, பார்த்தால் கண்ணைக் குத்து, கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி விடு. நினைத்தால் நெஞ்சைப்பிளந்து விடு. தொட்டால் கையை வெட்டு, என்று சட்டம் செய்திருக்கிறார்கள். நாம் இந்தக் குருமார்களை நம்பிக் கடைத்தேறுவதெப்படி? பிராமணக் 'குரு' சாப்பிடுவதை பிராமணரல்லாத சிஷ்யன் பார்த்தால் சாப்பாடு பூராவும் விஷமாய்ப் போகிறதென்கின்றார்கள். ஒரு செம்பு தண்ணீர் கொடுத்தால் கிணற்றுத் தண்ணீர் பூராவும் தீட்டாய்ப் போகிறதென்கிறார்கள். சாப்பிடும்போது பேசினால் காசிக்குப் போய்ப் பாவந் தொலைக்க வேணுமென்கிறார்கள். இவ்வளவு ஆகாசத்திலிருக்கிற குருவுக்கும் அவ்வளவு பாதாளத்திலிருக்கிற சிஷ்யனுக்கும் என்ன விதமான பற்றுதலும் சம்மந்தமும் இருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். இம்மாதிரி நிலையில் உள்ள குருமார்களால் நமக்குஎன்ன நன்மை ஏற்படும் என்பதைக் கவனிக்க வேண்டாமா? தொழில் பாகுபாட்டால் பல்வேறு ஜாதியாய்ப் பிரிந்தவர்களுக்கு அநேக உட்பிரிவுகளாகக் குலம், கோத்திரம் அனந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பல்வேறு ஜாதிகளுக்கும், குலங்களுக்கும் தனித்தனியாகக் குலகுருஎன்று ஒவ்வொருவர் ஏற்பட்டு வருஷம் வருஷம் தென்னாப்ரிக்காவில் இந்தியர்களிடம் 'தலைவரி' வசூல்செய்வது போல் தலைக்கட்டுவரி இந்தக் குருமார்கள் வசூல் செய்கிறார்கள். நாம் —எதற்காக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை கவனிக்கிறீர்களா? நம்ம பாட்டன் பூட்டன் தகப்பன் கொடுத்தார்கள்—அதைப் பின்பற்ற வேண்டுமென்கிறார்களே தவிர, இதில் ஏதாவது பாத்தியமோ அர்த்தமோ உண்டா?

குல குரு

சாதாரணமாகப் பாமர மக்களை ஏமாற்றும் கூட்டத்தில் குரு பீடங்கள்தான் தலைமையாயிருக்கிறது. எப்படியென்றால் புரோகிதனாவது உள்ளூரிலிருந்துகொண்டு பஞ்சாங்கம்சொல்லி, மாவிலை தர்ப்பைகொண்டு வந்து கொடுத்து ஏதோ குருட்டு மந்திரங்களைச் சொல்லிப் பணம் வாங்குகிறான். கோவில் அர்ச்சகனோ சுவாமி முன்னால் நின்றுகொண்டு மணி அடித்துக்கொண்டு ஏதோ தவளை போல் கத்தி மந்திரம் சொல்லி கூலி வாங்குகிறான். ஒரு விதத்தில் இவர்கள் நமது வேலைக்காரனென்றாவது சொல்லிவிடலாம். ஆனால் குல குருமார்களோவென்றால் முழு மோசக்காரர்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. முதலாவது இக்கூட்டத்தில் படித்தவர்கள் ஒருவர் இருவர் தான். மற்றவர்கள் தற்குறிகள். சாப்பாட்டுராமன்கள். சாப்பிடுவதைத் தவிர வேறு எந்த விஷயமும் தெரியாதவர்கள். அதாவது இவர்களுக்குப்பணம்வசூல்செய்கிற வேலையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. எந்தச் சிஷ்யனையாவது உங்கள் சாமியார் எப்படி யென்றால் 5, 6 வண்டிமாடு 10, 15 ஆட்கள் என்பதுதான் குருவின் மகத்துவம். தவிர, குரு பரம்பரையிலும் சுத்தமாய்ப் படிப்புவாராத களிமண் மூளையுடையவர்களைத்தான் அநேகமாய்க் குருவாக்கப் படுகிறது.

படிப்பு வேண்டாம்; ஆள் தடிப்பாய் இருந்தால் போதும்.

ஏனென்றால் இவருக்கு வேறு வேலையில்லை. பணம் கணக்கு விடாமல் அதாவது போன வருஷம் பங்குனியில் கல்யாணமானவனிடம் நடப்பு வருஷம் வைகாசி மாதம் காணிக்கை வாங்கும்போது இரண்டு வருஷக் கணக்குப்போட்டு வாங்க வேண்டியவர்களாவார்கள். ஏனைய

2 மாதம் தானே ஆச்சு என்றால் மாதம் இரண்டானாலும் வருடம் இரண்டாவது ஆய்விட்டதென்று கலகம் செய்துவாங்குவார்கள். இதற்குப் படிப்புவேண்டுவதில்லை. ஆள் மட்டும் தடிப்பாயிருந்தால் போதும். இவர்களுக்கும் நாம் வருடம் தவறாமல் தலைக்கட்டுவரிகொடுத்துச், சாமியார் கோபித்தால் குடி நசித்துப் போகும் என்று நினைத்து ஒழிக்காமல் கொடுத்து அவர்களது காலைக் கழுவின தண்ணீரைக் குடித்து மீதி உள்ளதை தலையில் தடவிக்கொள்ளுகிறோம். இதற்கு ஆதாரம் என்னவென்றுகேட்டால்இராமனுக்கு வசிஷ்டர், இந்திரனுக்குப் பிரகஸ்பதி இருந்ததையும், குருவை மதிக்காததால் தேவேந்திரனுக்குப் பிரம்மஹத்தி வந்ததென்றும் புராணங்களை விரித்துக் காட்டுகிறார்கள். நாமோ அந்தக் குருவின் யோக்கியதையும், இந்தக்குருவின் யோக்கியதையும் ஒன்று தானுக்கும்! நமக்கும் அப்படிக் கெடுதிவந்து விடுமாக்கும் என்று பயந்து அந்தப் புராணத்திற்கும் இந்தக் குருபீடங்களுக்கும் சந்ததியாக மீளாது அடிமையாகிக் கொண்டு வருகிறோம்.

பெண் வேட்டை

சில குருமார்களுக்கு மனித வேட்டைகூட உண்டு. இதை எழுதுவது மிக வெட்கக்கேடான காரியம். ஆனால் மூடவழக்கங்களை யொழிக்க வேண்டிய நிமித்தம் எழுதாமலிருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. குருமார்களின் சிஷ்யர்களில் பல பாலிய விதவைகள் உண்டு. அவர்களுக்குச் சில மைனர் வார்சுகளோ அல்லது வார்சுகள் இல்லாமலோ பலபேர்களிருக்கிறார்கள். குல குருக்களாகிய தடிச்சாமியார்கள் வந்துவிட்டால் இவ்வூரை விட்டுப் பல ஆண்டுகள் போவதில்லை. இந்த விதவையின் தோட்டம், பூமிகளில் விளைகிற சகல வரும்படிகளும் சுவாமி பூஜைக்கும் சன்னிதானத்தின் செலவுகளுக்குமேயாகும். சுருங்கக் கூறுமிடத்து உடல் பொருள் ஆவி மூன்றும் குருவுக்கே சொந்தமாகி விடுமாம். மற்றவர்களோவென்றால் அம்மாளுடைய தெய்வ பக்தியையும் தெய்வ சிந்தனையையும் குருபக்தியையும் புகழ்கிறார்களேயொழிய அதிலுள்ள படிற்றொழுக்கங்களை ஆராய்வதில்லை. சில சமயங்களில் சாமிகள் கூடவே அம்மையாரும் போய்விட்டுச் சில மாதங்கட்குப்பின் வருவதுமுண்டாம். அப்போதும் அம்மையாரின் மேலான குணத்தையே அதாவது குரு பக்தியையே போற்றுவதுண்டாம்.

இம்மாதிரியான மூட வழக்கங்கள் நமது தேசத்தில் இருக்கும்வரை நமக்கு விடுதலையேது? கன்னிமேயோ அவர்களைக் குறைகூற உரிமையேது! இதுதானா குரு பக்தி? கொடுமை! கொடுமை!!

நமது நாட்டில் சங்கராச்சாரியார் என்றவர்களைத்தான் நாம்இப்போது ஜெகத்குரு அல்லது லோககுருவென்கிறோம். லோககுருவென்றால் சர்வ கண்டங்களிலுள்ள சர்வ மதஸ்தர்களுக்கும் குருவாயிருக்க வேண்டும். ஆனால் இப்போது அப்படியில்லை, பலகண்டங்களில் ஒன்றாயுள்ள ஆசியாக்கண்டத்தில், பலமதஸ்தர்களில் ஒன்றாகிய இந்துக்களில், பல ஜாதிகளில் ஒன்றாகிய பிராமண ஜாதியில் பல உட்பிரிவுகளிலுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்களுக்குத்தான் குருவாயிருக்கிறார். பெயருக்கும் நிலைமைக்கும் பார்த்தால், சமுத்திரத்தில் ஒரு துளியை ஒப்பிடலாம். இப்படிச்சுமார்இருநூறுகோடிஜனத்தொகையுள்ள உலகத்தில் சில ஆயிரக்கணக்குள்ள ஸ்மார்த்த பிராமணரின் குருவுக்கு ஜெகத்குரு என்று எப்படிப் பெயர் வந்ததென்பதை யோசிக்கும்போது முருகக் கடவுள் ஔவைப் பிராட்டியிடம் பெரிது கேட்கும்போது, பிராட்டி பெரிது புவனம் பெரிது என்று ஆரம்பித்து உமையவள் இறைவருள்ளத் தடக்கம், இறைவர் தொண்டருள்ளடக்கம், ஆகவே தொண்டர்தம்பெருமை பெரிது என்று ஒரு நீண்ட கதை சொல்லியபடி, இந்த நாட்டில் அரசியல் சமுகவியல் முதலிய எல்லா இயல்களுக்கும் ஸ்மார்த்தப் பிராமணர்களைமுன்னணியில்நிற்பதால் அவர்களுக்குள் உலகம் அடங்குகிறதென்று எண்ணிய அவர்களுக்குக் குருவாகிய சங்கராச்சாரியார் லோககுருவென்று தீர்மானித்திருக்கலாம்.

என்ன மடைமை

அல்லது அவருக்குத் தினப்படி நூற்றுக்கணக்கான ரூபாய்கள் வேண்டியிருக்கிறது. இதைச் சிஷ்யர்களாகியசிறுதொகையினர்கொடுத்துவரமுடியாமல் அவர்களின் படிப்பு, உத்தியோகம் பதவி இவைகளின் செல்வாக்கிலிருந்து பலசுயநலங்களை எதிர்பார்த்து நிற்கும் பணக்காரர்களையும், மடாதிபதிகளையும், ஜெமீந்தார்களையும்,சிற்றரசர்களையும்ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காக ஏற்பட்ட சூழ்ச்சியாயிருக்கலாம். இன்றைக்கும் நாம் தினப்படி பார்த்துவருகிறதென்ன? மகாசந்நிதானம்வருவதாக உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள் பிரபுக்களிடம் போகவேண்டியதுதான் பாக்கி. ரூபாய்கள் கேட்டுப் பெற்றுவிடுகின்றனர். சுவாமிகளை மேளவாத்யம், ஆனை,குதிரை, சகிதம் அழைத்தாச்சுது. சரி 'சுவாமிக்கு பூஜாகாலம் போஜனகாலமாச்சுது. நீங்கள்போய்ச் சாயங்காலம் வரலாமென்று பிரபுக்களைக் கல்த்தாக் கொடுத்தாய்விட்டது. இவ்வளவுக்குத்தான் நமக்கு லோககுரு சொந்தர். என்ன மடைமை!

ஒரு சம்பவம்

நானும் சில நண்பர்களும் திருக்குற்றாலம் அருவி ஸ்நானத்திற்குப் போயிருந்தபோது பாபநாசம் போய் ஸ்நானம் செய்து வரலாமென்று போயிருந்தோம். அப்போது ஸ்ரீ சங்கராச்சாரியார் அவ்விடம் விஜயம் செய்திருந்தார். சுமார் 3-மாதம் போல் அங்கேயே இருந்தார். அவர் இருந்த இடம் கோவிலுக்குத் தென்புறம் உள்ள மண்டபம். வடபுறம் மண்டபங்களில் வண்டி, யானை, குதிரை, மாடு, இவைகள். கோவில் முன்மண்டபங்களில் வெகுதூரத்திலிருந்து பிள்ளை குட்டிகள் சகிதம் வந்திருந்த சிஷ்யர்களாகிய பிராமணர்கள். கோவில் மண்டபங்களில் தான் பகலிலும், இரவிலும் படுக்கை. அங்கு குழந்தைகள் மலபாதை ஜலபாதை, பெரியவர்கள் வெற்றிலை பாக்குஎச்சில்,பொடிபோட்டுச்சிந்திய எச்சில், இவைகள் இல்லாத இடமில்லை. சுவாமி கோவிலுக்குச் சுமார் 20 அடிக்குள் குளிக்கும் துறை. இதன்மத்தியில் தென்வடலாக ஒரு பாதை. இந்த இடத்திலும் கோவிலுக்குச்சுற்றுப்பக்கங்களிலும் பெரியவர்கள் மலபாதை, ஜலபாதைசெய்து கால் வைப்பதற்கிடமில்லாமல்செய்துவிட்டார்கள். நாங்கள் பாபநாசம் போய்ப் பாவம் சம்பாதிக்காமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அதைவிட்டு 2-மைல் தெற்கேமேலேயுள்ள கல்யாணத் தீர்த்தத்திற்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டு உடனே குற்றாலத்துக்குப் போய்விட்டோம். இதைப்பற்றி 'குடி அரசில்'கூட மகாசன்னிதானத்துக்கு

திருக்கக்கூசுகோவிலுக்கு உட்புறமே கட்டியிருப்பதாக ஒரு நிருபர் எழுதியிருந்தது வாசகருக்கு ஞாபகமிருக்கலாம்.

இதுதானா நல்லவழி காட்டுகிறது

ஒரு பையனுக்கு ஹரிஓம் நன்றாக என்று நெடுங்கணக்கு அரிச்சுவடி சொல்லிக்கொடுத்தவரை ஆயுள் உள்ளளவும் வித்யாகுருவென்று மதித்து நடந்துவருகிறோம். நமக்கு பிறவி நோயைத்தீர்த்து நல்வழிக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்கிற ஞானகுரு எப்படியிருக்கவேண்டும்? ஒருசமயம் சங்கராச் சாரியாரவர்களுக்கு கடவுள் இல்லையென்றோ அல்லது கடவுளைவிடத் தான் மேம்பட்டவரென்றோ எண்ணமிருக்கலாம். ஆனால், கோவிலில்தான் கடவுள் இருக்கிறாரென்று நினைத்துக் கொண்டிருக்கிற தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை மேலேகொண்டு வருபவர்கள் தாங்கள் முதலாவது தெய்வ பக்தி, ஆசாரபக்தி, குருபக்தி, இருப்பதாகக் காட்டவேண்டாமா? மேலே கண்ட இவர்கள் நடத்தையால் எவனாவது கோவிலென்றும், கடவுளென்றும், எண்ண இடமிருக்கிறதா? இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை யாராவது கண்டித்தால் நாஸ்திகன், பிராமணத்துவேஷி, குருத்துரோகியென்றும் சொன்னால் யாராவது ஒப்புக்கொள்ளுவார்களா? மற்றொரு விஷயம் சங்கராச்சாரியார் அவர்களுடன் வந்திருந்த பல பிராமணரல்லாத ஆட்கள் பசியுடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து "உங்களுக்குச் சாப்பாடு சுவாமிகள் அடுகையிலா" என்று கேட்டோம். அவர்கள் சொன்னதாவது :—

இந்தக் கொடுமையை யாருடன் சொல்வது?

தங்களுக்கு அரிசி பருப்புக் கொடுத்துவிடுவதாயும்,அதைத்தங்களுக்கு ஒழிந்த வேளையில் சமைத்துச் சாப்பிடுவதாயும் இந்தச் சாமியின் அடுகைச் சாப்பாடு தாங்கள் பார்த்ததேயில்லை யென்றும் பிராமணர்களுக்குப் போட்ட மிச்சம் இருந்தால் அதைக் குதிரை, யானை மாடுகளுக்கு வைப்பதே தவிர, பிராமணரல்லாதாருக்குக் கொடுக்கிறதில்லை யென்றும், அப்படிக் கொடுப்பது பாவமென்று சொல்கிறார்களென்றும் சொன்னார்கள். இதைக் கேட்ட மாத்திரத்தில் எங்களுக்கு எப்படி வயிறு பற்றி எரிந்தது என்பது இதில் எழுதக்கூடியதல்ல. இக்கொடுமையை யாருடன் சொல்லுகிறது? 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்று சொல்லப்படும் முதுமொழிக்கு விரோதமாக வாரிக்கொடுத்த பிரபுக்களிடமா? அல்லது கொஞ்சமும் சுயமதிப்பில்லாதவர்களும் நல்வழியில் செலவிடத் தெரியாதவர்களுமாகியவர்களுக்கு ஏராளமாகத் திரவியத்தைக் கொடுத்த கடவுளிடமா சொல்வது!

ஆடம்பரம் எதற்கு?

மகாராஜாக்களுக்கும் சக்ரவர்த்திகளுக்கும்தான் ரத, கஜ, துரக, பதாதிகள் எனப்பட்ட சதுர்வித படைகள் இருப்பதாகப் பார்த்திருக்கிறோம். அது அவர்களுக்கு அவசியமுமாகும். முற்றுந்துறந்த சன்யாசிகளுக்கு இவைகள் எதற்காக? மகாராஜாவாக எல்லாப் போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்த ஜனகர் விஸ்வாமித்திரர்கூடச் சன்னியாசம் வாங்கும்போது யாவுந் துறந்திருக்க, சன்யாசி ஆச்சிரமம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ராஜபோகங்கள் எதற்காக? ஒரு சில இந்து மதஸ்தர்களைப் பயப்படுத்த வருஷம் லக்ஷம் ரூபாய் செலவில் படைகள் வேணுமென்றால், எத்தனையோ ஜனங்களைப் பயப்படுத்திக் கொண்டு எவ்வளவோ வல்லரசுகளை எதிர்த்து நின்ற பிரிட்டிஷார் வருஷம் அறுபது கோடி ராணுவச் செலவு செய்தது அதிகமென்று சொல்வதற்கில்லையே!

நமக்குச் சுயமரியாதை வேண்டாமா?

என்று யாராவது கேட்டால், வேண்டும் என்றுதான் சொல்வோம். அதற்கு நாம் முதலாவது புரோகித வைதிகக் கொடுமையை ஒழிக்க வேண்டும். நம்முடைய ஜோலிக்கு இன்னொருவரைத் தேடக்கூடாது. இங்கிருந்து காசிக்குப் போய் திதி கொடுத்தும் நூறு பேருக்குப் பூரி தானம் கொடுத்தும், கயாவில் விஷ்ணு பாதத்தில் பிண்டம் போட்டும் பிதுர்க்கள் மோக்ஷமடையவில்லையென்று நினைத்துக் கயாவாளிகள் என்ற இருகூட்டம் பஞ்சாப் உருமாலைக் கட்டிக்கொண்டு கெய்சர் சக்ரவர்த்திபோல் மீசையும் தாடியும் வைத்துக்கொண்டு நெற்றியில் ஒரு ரூபாய் அகலம் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு குடிகாரனின் கண்ணைப்போல் சிவந்த பார்வையுடையவர்கள், தங்களுடைய தாசி வீடு கூட ஒரு சிறிய அரண்மனை போல் கட்டிவைத்துச் சுகித்து வருகிறவர்கள், பல்லக்கில் வந்து வடவால விருக்ஷத்தில் பிண்டம் போட்டு அவர்கள் பீடி குடித்துக்கொண்டிருக்கும் வாயால் பிதுர்க்கள் மோட்சம் அடைந்தார்கள் என்று சொன்னாலல்லாமல் மோட்சமில்லையென்று நினைத்து, வக்கீலிடம் பீசு பேசுவது போல 50 ரூபாய்க்குக் குறையாமல் நூற்றுக்கணக்காகக் கொட்டிக் காலைப்பிடிக்கிற மூடவழக்கம் ஒழிய வேண்டும். நம்ம பிதுர்க்களுக்குப் புரோகிதர் வயிறு மூலமாய் தபாலில் அனுப்புகிற திதி, கோதானம், பூதானம் அழியவேண்டும்; கோவிலிலிருக்கும் கல் சாமிக்கும், நமக்கும் மத்தியில் அத்து ஏற்படுத்தி, நீ இங்கே வரப்படாது, பிரசாதம் கையில் வாங்கப்படாது, விழுந்து கும்பிடப்படாது என்று இழிவுபடுத்தி, இதுதான் சாமி, இவர்தான் பூசை செய்பவர், இவர்தான் மொழி பெயர்ப்பவர், அவர் செய்கிற அர்ச்சனைதான் சாமிக்குப் பிரீதி, நம் பொங்கல் பழம் தான் சாமிக்கு ஆதாரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற அறியாமை நீங்கவேண்டும். இந்தத் தீர்த்தத்தில் குளித்தால் பிரமலோகம் என்று சொல்லிக்கொண்டு நாற்றத்தண்ணீரில் விழுந்து நோய் சம்பாதிக்கிற மூடத்தன்மை போகவேண்டும். வயிரமாலைக்கும் முத்துமாலைக்கும் ஆனை குதிரை மாடுகளுக்கும் ஒரு நேரமெல்லாம் காதடைத்துப் போகும்படியாக சேகண்டி, துத்தாரி வாத்தியங்களுக்குப் பயந்து ரூபாய் பவுன் அர்ச்சனை செய்கிற அடிமைப் புத்தி தொலைய வேண்டும். சாமியார் பெயர் வெகு நீளமாயிருப்பதாலேயே எல்லாம் தெரிந்த பெரிய சாமியார் என்று நினைக்கிற அர்த்தமற்ற எண்ணம் தொலையவேண்டும்.

உண்மையான குரு யார்?

நமக்கு உண்மையான குருமார்கள் எப்படியிருக்கவேண்டும் எல்லாரிடமும் பட்சமாயும், அன்பாயும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவராயும் காமக் குரோதங்களிலிருந்து விடுபட்டவராயும், சத்ய சீலராயும் ஆடம்பரமற்றவராயும், ஜீவன்களிடத்தில் அன்பு உடையவ

(4-ம் பக்கம் பார்க்க)

பழையன கழிதல்!

[பாரதி—சுப்பையா]

"மாநிலத்திலே மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் சரி நிகர் சமானம். யாரும் யாருக்கும் அடிமையில்லை, இருக்கமுடியாது, இருக்கவும் கூடாது என்றகொள்கை மேலோங்கி வரும் இந்த நாகரிக நாட்களிலே இத்தகைய அநீதி இடம் பெறலாமா?"

"ஐயோ, அந்தக் காட்சியை நினைத்தால் கூட நெஞ்சு பொறுக்குதில்லையே! பார்த்தால் பரிதாபமாயிருக்கிறதே! இதைத் தடுப்பாரில்லையா?"

"கீழே கொதிக்கின்ற தார், மேலே காய்கின்ற ஞாயிறு, வண்டியின் மேல் ஒரு மனிதன். அவனை இழுத்துக் கொண்டு ஓடுகிறான் மற்றொரு மனிதன். இந்தக் கண்றாவிக் காட்சியைச் சகிக்கமுடிய வில்லையே"

என்று பல நண்பர்கள், அறிஞர்கள் இன்று ரிக்ஷா வண்டி மீது ஆத்திரப்படுவதை நாள்தோறும் பத்திரிகையில் காண்கிறோம். மத்திய அரசாங்க மந்திரி, திருமதி ராஜ குமாரி அமிர்த கௌரி அம்மையாரும் ரிக்ஷாவை ஒழிக்கவேண்டுமென்று மாகாண சர்க்கார்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. தன்மான இயக்கத்தாராகிய நாம் இம்முயற்சியைத் தயங்காமல் வரவேற்கிறோம். ரிக்ஷா ஒழிய வேண்டும்; ஒழித்தேயாக வேண்டும் என்று, கிளர்ச்சியாளர்களோடு நாமும் சேர்ந்து கூறுகிறோம்.

ஆனால், ஒரு ஐயம் தோன்றுகிறது. ரிக்ஷாவை ஒழிக்க வேண்டுமென்பவர்கள் மனிதனின் "கடினவேலை"யைக் கண்டு இரங்குகின்றனரா? அன்றி ரிக்ஷா இழுக்கும் 'தொழிலைக்' கண்டிக்கின்றனரா? அல்லது மனிதன் மீது மனிதன் சவாரி செய்யும் மானங்கெட்ட முறையை வெறுக்கின்றனரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஏனெனில் ரிக்ஷாவை ஒழிக்க விரும்பும் அவர்கள் ரிக்ஷா வண்டியைப் போலவே மனிதன் மீது மனிதன் சவாரி செய்யப் பயன்படும் மற்ற வண்டிகளைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை.

இந்து மத அற நிலையங்களிலே மடாதிபதிகள் தங்கப் பல்லக்குகளிலே பயணம் செய்கின்றனர். அவற்றைச் சுமந்து செல்வோர் மனிதர்கள் தான்.

ஜமீன்தார், சமஸ்தான மன்னர் ஆகியவர்களின் அரண்மனைகளிலே சிவிகைகள் உள்ளன. பிறந்த நாள் விழாபோன்ற விசேட தினங்களில் ஜமீன்தார்கள் அவற்றில் ஏறிப் பவனி வருகின்றனர். பாரம் தாங்குவோர் மனிதர்களே.

கோவில்களிலே கடவுள் உருவங்களைத் தூக்கிச்செல்லக் கனக தண்டிகள், வாகனங்கள் உள்ளன. அவற்றின் மீது பூசாரிகள் ஏறிக்கொள்ள, அவற்றைச் சுமந்து ஊர்வலம் வருவோர் மனிதர்களே.

மனிதனை மனிதன் இழுப்பதும், மனிதன் மீது மனிதன் சவாரி செய்வதும் தவறு என்றால் இவையும் கண்டிக்கப்பட, ஒழிக்கப்படவேண்டியவை அல்லவா?

ஆதி நாட்களிலே தோன்றிய மனிதன் வேலைப் பளுவைக் குறைக்க விரும்பிப் பலவழிகளில் முயன்றான். முதலில் சக்கரமில்லாத வண்டி செய்து மனிதர்களைக் கொண்டு சுமக்கச் செய்தான். பின்பு சக்கரமுள்ள வண்டிகள் செய்து மிருகங்களைக் கொண்டு இழுக்கச்செய்தான். இங்ஙனம் படிப்படியாக முன்னேறிய தன் பயனாக மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பதில் இன்று மக்களைச் சுமந்து செல்ல இயந்திர வண்டிகள் செய்யப்பட்டு விட்டன. ஆயினும் பழையபல்லக்குகள் ஒழிந்தபாடில்லை. பஞ்சாங்கங்கள் ஒழியவில்லையே, பல்லக்குகள் எப்படி ஒழியும்? அத்துடன் இன்றைய நாகரிகத்தின் நச்சுப் பயனாகிய ரிக்ஷாவும் சேர்ந்து கொண்டது.

அநாகரீக காலத்திலே ஆக்கப்பட்ட கருவி பல்லக்கு. நாகரிக நாட்களிலே செய்யப்பட்டுள்ள வண்டி ரிக்ஷா. ஆலயங்களிலும் அரண்மனைகளிலும் மட்டுமேகாணப்படுகின்றது பல்லக்கு. அன்றாடம் ஒவ்வொரு நகரத்தின் மூலை முடுக்குகளிலும் நடமாடுகின்றது ரிக்ஷா.

ஆனால் இரண்டும் மனிதன்மீது மனிதன் ஏறிச் சவாரி செய்யவே பயன்படுகின்றன. ஒன்று ஆதி காலத்து ஆடம்பரத்தின் சின்னம். மற்றது இக்காலத்து அநாகரிகத்தின் முத்திரை. அது அடிமைத்தனத்தின் அறிகுறி. இது வறுமையின் அடையாளம். அது சுமக்கப்படுவது. இது இழுக்கப்படுவது. இரண்டும் மனிதனுக்கு வேதனை அளிப்பன. மனித உள்ளத்தை உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக்குவன. அடிமையும் வறுமையும் ஒழிய வேண்டுமானால் இவையிரண்டும் ஒழிந்தேயாகவேண்டும் என்பதில் ஐயமில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

மணம் மறுக்கும் பெண்களுக்கு வரி!

✻

திருமணம் செய்து கொள்ளாமல் திருமணத்தை மறுக்கும் பெண்களுக்கு வரி விதிப்பதற்கான மசோதா ஒன்று, அலாஸ்கா நாட்டில், மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மசோதாவைக் கொண்டு வந்துள்ளவர் வில்லியம் ஈகன் என்பவர். அலாஸ்காவில் மொத்தம் 40000 ஆண்களும், 20000 பெண்களும் இருக்கிறார்கள். மசோதாவைக் கொண்டு வந்தவர், பெண்களைவிட ஆண்கள் இரட்டிப்பு மடங்கு இருக்கும்போது பெண்கள் மணஞ் செய்து கொள்ளாமல் சந்நியாசினிகளாக வாழ முற்படுவது பரிகசிக்கத் தக்கதாகும் என்றும், அந்த நிலையை ஏற்படுத்துகிறவர்களுக்கு வரி விதிக்க வேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார். மண வாழ்க்கையை விரும்பாமல் தனிப்பட்ட வாழ்க்கையை நடத்த விரும்பும் பெண்கள் ஆண்டு ஒன்றுக்கு 12பவுன்கள் 10ஷில்லிங்குகள் வரியாகச் செலுத்தவேண்டும் என்று மசோதா கூறுகிறது.

✻

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.

REGD M. 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 24–4–49 | இதழ் 43

OFFICE OF THE REGISTRAR OF ...
5-MAY 1949.
MADRAS

★ நான் கண்ட அழகர்சாமி ★

[எஸ். வி. லிங்கம்]

பட்டுக்கோட்டையில் இருந்து காலஞ்சென்ற தோழர் வேணுகோபால் அவர்கள் அழகர்சாமியின் சிறிய தந்தையார் ஆவார். அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து பணியாற்றியவர். ஆறு ஆண்டுகளாகத் தஞ்சை ஜில்லாபோர்ட், அய்யங்கார் ஆட்சியிலிருந்ததை வீழ்ச்சியுறச் செய்து, சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களைத் தலைவராக்கிய பெருமை இவருடையதாகும். இவருக்கு அழகர்சாமி அவர்களிடம் அளவு கடந்த பற்றுதல். அழகர்சாமியைக் கட்சியின் முக்கியஸ்தராக்கப் பல நாட்கள் பாடுபட்டு வந்தார். அவருடைய முயற்சியில் வெற்றிகண்டார். காலஞ்சென்ற இராசகோபால் அவர்கள், தண்டபாணி அவர்கள், திருஞானசம்பந்தம் அவர்கள் ஆகியோர் அக்காலத்துப் பட்டுக்கோட்டை ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள். இவர்கள் அத்தனை பேருக்கும் அழகர்சாமி சுயமரியாதைப் பிரசாரம் செய்து வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி. அப்போது எங்கள் பிரசாரத்துக்குத் துணையாக இருந்து பிரயாணச் செலவு முதலிய வசதிகளைச் செய்துதந்தவர் தோழர் வேணுகோபாலர்தான். பலதடவைகளில் அவர் நூற்றுக்கணக்காகப்பணம் தந்திருக்கிறார். ஏனென்றால் பட்டுக்கோட்டையில் ஒருஅச்சகம் வாங்கிப், பத்திரிகை நடத்தவேண்டுமென்று நாங்கள்பேசிமுடிவுசெய்திருந்தோம். இதற்காகப் பலதடவை பணம் வாங்கி வந்தோமே தவிர, அச்சகம் வாங்கவில்லை. பத்திரிகையில் எங்கள் சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகள் அடிக்கடி வரும். அதைப் படித்துப் பார்த்து மகிழ்ச்சியடைவார். அச்சகத்துக்காக வாங்கப்பட்ட பணத்தை வைத்துக்கொண்டு, ஒரு பத்திரிகையால் நடத்திக் காட்டமுடியாத அளவுக்கு இயக்கப் பிரசாரத்தை எங்கள் சுற்றுப் பிரயாணத்தின் மூலம் செய்து வந்ததைக் கண்ட தோழர் வேணுகோபாலர் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

* * *

ஜில்லா போர்ட் தலைவர் பன்னீர்ச் செல்வம் அவர்கள் 1927-ம் ஆண்டிலிருந்து சுயமரியாதைக் கொள்கைகளைப் பெரிதும் ஆதரித்து வந்தார். பட்டுக்கோட்டையில் தோழர் மாரிமுத்து என்ற ஆதித் திராவிட உபாத்தியாயர் தாலுகா போர்ட் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். இவர் எங்கள் கூட்டங்களுக்கு வருவார். தோழர் நாடிமுத்து அவர்கள் அப்போதுதான் பல இலட்சம் பெறுமான சொத்துக்குச் சொந்தக்காரராகி தாலுகா போர்ட் தலைவராக வந்தார். அதுவரை தாலுகா போர்டில் ஆதித்திராவிடரே கிடையாது. தாலுகா போர்டின் முதல் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், தா. போ. உறுப்பினர்களில் பிரபுக்களாக உள்ள பலர், தோழர் நாடிமுத்து அவர்களைக் கலந்து பேசினார்கள். ஒரு பறையன் நமக்குச் சமமாகத் தாலுகா போர்டில் உட்காருவதா என்று கேட்டார்கள். அதெப்படி உட்கார முடியுமென்று இரும்புப் பெட்டிகள் முடிவுகட்டி விட்டன. இதைக் கண்டித்துப் பல கூட்டங்களை நாங்கள் நடத்தினோம். அழகர்சாமிதான் இதற்குத் தலைவர். ஜில்லாவின் மிகப் பெரிய மனிதர்கள் என்று கருதப்பட்டவர்களைத் தைரியமாக எதிர்த்ததால், அழகர்சாமி அனைவராலும் அறியக்கூடியநிலையை அடைந்துவிட்டார். நாலைந்து முறை தாலுகா போர்ட் கூட்டம் நடைபெற்றது. ஒவ்வொரு கூட்டமும் கதவு சாத்தப்பட்டோ அல்லது வேறு இடங்களிலோதான் நடந்தது. ஆனால், வெளியே கண்டனக் கூட்டங்கள் பலமாக நடந்தவண்ணம் இருந்தன. எங்கள் கூட்டங்களுக்கு 144 போடுவார்கள். தோழர் நாடிமுத்து அவர்களின் செல்வாக்குக் குறையவேண்டுமென்பதற்காக ஜில்லாவெங்கும் பல கூட்டங்கள் போடுவோம். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவோம். இக்காலத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்கள் முதல் மந்திரியாக இருந்தார். தோழர் நாடிமுத்து அவர்கள் சென்னைக்குப் போகிறார் என்று தெரிந்தால், நானும் அழகர்சாமியும் அதேவண்டியில் சென்னை செல்வோம். அவர் தம்முடைய செல்வாக்கைப் பயன்படுத்தித் தோழர் மாரிமுத்து அவர்களைத் தாலுகாபோர்டிலிருந்து விலக்கமுயன்றார். நாங்களும் மந்திரியைக்கண்டு எங்களின் நியாயமான போராட்ட உரிமையைக் கூறுவோம்.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது, தோழர் அழகர்சாமி, நம்மு

டைய போராட்ட முறையை வேறு விதமாக மாற்றவேண்டுமென்று கூறினார். உடனே ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து, தோழர் மாரிமுத்து வராத தாலுகா போர்ட் கூட்டம் செல்லாதென்றும், தோழர் நாடிமுத்து அவர்கள்மீது நம்பிக்கையில்லை என்றும், அவர்மீது ஏன் நன்னடத்தை ஜாமீன் வாங்கக்கூடாதென்றும் கேட்டோம். இது எவ்வளவு பெரியதப்பு என்று எங்களுக்கு அக்காலத்தில் தெரியாது. இந்தப் போராட்ட காலத்தில் தோழர் நாடிமுத்து அவர்கள் என்னை அடிக்கடி கூப்பிடுவார். நான் அவர் சொல்வதையெல்லாம் கேட்டபின்னர், ஏதாவது சமாதானம் செய்து வைப்பதாகச் சொல்வேன். எதிரிடம் போய் இவ்விதம் எல்லாம் பேசுவது கூடாதென்று அழகர்சாமி கண்டிப்பார். முடிவாக, முதலமைச்சர், தோழர் நாடிமுத்து அவர்களின் செயலைக் கண்டித்து, மாரிமுத்து அவர்கள் வராது நடத்தப்பட்ட தாலுகா போர்ட் கூட்டத் தீர்மானங்கள் செல்லுபடியாகாதென்றும், தோழர் மாரிமுத்து அவர்களைக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் தடைசெய்யும் தாலுகா போர்டை ஏன் கலைக்கக் கூடாதென்பதற்குச் சரியான காரணம் சொல்லும்படியும் முதலமைச்சர் கேட்டிருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், நியாயமாக ஆதித்திராவிடர் விஷயத்தில் முதல் மந்திரிக்கு அனுதாபம் இருந்ததும், தோழர் நாடிமுத்து அவர்களைப் பற்றி அழகர்சாமி செய்த கிளர்ச்சி வெற்றியடைந்ததும் தான். போர்டைக் கலைத்தால் பன்னீர்செல்வம் பயப்படுவார் என்று அழகர்சாமி மந்திரியிடம் சொல்லியிருந்தார். இதை வெகுநாள் கழித்துத்தான் எங்களிடம் அவர் சொன்னார். அன்றைய டாக்டர் சுப்பராயன் மந்திரிக்கட்சி, பெரியார் இராமசாமியை ஆதரித்து வந்தது. அதே சமயத்தில், பெரியாரின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான சர். பன்னீர்செல்வத்தை மந்திரி சபை எதிர்த்தது. இந்த நிலையில் அவரவர் மனோநிலையை உணர்ந்து தனது கட்சியைப் பலப்படுத்திக் கொள்வதில் டாக்டர் சுப்பராயன் சமர்த்தாக இருந்தார்.

தோழர் நாடிமுத்து அவர்களை எதிர்த்து, தோழர் மாரிமுத்து அவர்கள் தாலுகா போர்ட் கூட்டங்களுக்கு வரக்கூடிய நிலைமையை உண்டாக்கும் வரையில்தான் மாரிமுத்துவுக்கும் அழகர்சாமிக்கும் நட்பு இருந்தது பின்னர், தோழர் மாரிமுத்து என்ற ஆதித்திராவிட நண்பர், காங்கிரஸ் நாடிமுத்து நண்பராகி இன்று சட்டசபை உறுப்பினராகவும் இருக்கிறார்.

* * *

திருநெல்வேலியில் முதல் ஜில்லா சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. பெரியார், திருச்சி விசுவநாதன் ஆகியோர் வந்திருந்தனர். அப்போது டாக்டர் வரதராஜுலுவின் "தமிழ்நாடு" நம்மைத் தீவிரமாகத் தாக்கி எழுதும், "தமிழ்நாடு" பத்திரிகையைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நான் கொண்டு வந்தேன். அழகர்சாமி அதை ஆமோதித்துப் பேசினார். அன்று அதன் அனுதாபியாக இருந்த தோழர் T. சொக்கலிங்கம் "தமிழ்நாடு" பத்திரிகைக்காகப் பரிந்து பேசினார், என்றபோதிலும் எங்கள் தீர்மானம் நிறைவேறியது. அன்று நல்ல பிரசங்கிகளில் ஒருவரான தோழர் விசுவநாதன் அவர்கள் கழுத்தில் ஓர் ஜெபமாலை போட்டிருந்தார். அது அழகர்சாமிக்குக் கோபமாக இருந்தது. "இந்த மாலையை என்னிடம் கொடு" என்றார் — கொடுத்தார். தோழர் அழகர்சாமி அந்த மாலையைப் போட்டுக்கொள்ள ஆசைப்படுகிறார் போலும் என்று தோழர் விசுவநாதன் நினைத்தார். ஆனால், அழகர்சாமி செய்ததென்ன? மாநாடு முடிந்து எல்லோரும் புறப்பட்டுப் புகைவண்டியில வரும்போது அந்தமாலையைப் பிய்த்துத் துண்டு துண்டாக்கி வழிநெடுகப் போட்டுக் கொண்டு வந்தார். இது தோழர் விசுவநாதனுக்கு அப்போது கோபமாக இருந்தது. ஆனால், அதற்குப் பின் அவர் என்றுமே மாலையை அணிந்ததில்லை.

* * *

இரயில்வே வேலை நிறுத்தம் 1928-ல் நடைபெற்றது. இதற்குப் பலமாதங்கள் முன்பிருந்தே இரயில்வே தொழிலாளர்களின் துயர்பற்றி நாங்கள் பிரசாரம் செய்துவந்தோம்.

காங்கிரஸ் எஸ். சீனுவாச அய்யங்கார் கூட்டம் என்று எங்கு இருந்தாலும் அங்கு நாங்களும் இருப்போம். நாகைமணியும், காளியப்பனும் எங்களுக்கு முன்பே அங்கு நாற்பது ஐம்பது பேருடன் இருப்பார்கள். காங்கிரஸ் கூட்டம் நடக்கும். சிறிது நேரமானதும் முக்கியமான பிரசங்கியார் பேசிக்கொண்டிருக்கும்போது, எங்களில் யாராவது ஒருவர் சந்தேகம் கேட்போம். உடனே பல மூலைகளிலிருந்தும் "எங்கள் சந்தேகத்துக்குப் பதில் கூறிய பின் பேசவேண்டும்" என்று கேட்கப்படும். இந்த எதிர்பாராத நிலை கண்டு, கூட்டத்தைக் கூட்டியவர்கள், எங்களுக்குக் கூட்டத்தில் நல்ல ஆதரவு இருப்பதாக எண்ணிக்கொண்டு கூட்டத்தைக் கலைத்து விடுவார்கள். அல்லது கூட்டம் கலைக்கப்படும் நிலைமை உண்டாக்கப்பட்டுக் கலைந்து விடும். இச்செய்திகளைப் பத்திரிகைகளில் படிப்பவர்களுக்குக் கோபத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கும்.

1927, 28 ஆகிய வருடங்கள் ஓர் குழப்பமான காலம். மாகாண காங்கிரஸ் கட்சி வேறு கையிலிருந்து எஸ். சீனுவாசய்யங்கார் கைக்கு வந்த காலம். ஆங்காங்கே உள்ள காங்கிரஸ் நண்பர்களுக்கிடையே இரு கட்சிகள் இருக்கும். அந்தக் காலத்தில சீனுவாசய்யங்கார் என்றால் பணமூட்டை என்று பொருள். அதாவது, இன்று பணம் திரட்டுவதே வேலையாகக்கொண்டவர்களைப் பணமூட்டை என்கிறார்கள். அன்று, பணமூட்டை என்பதற்குப்பொருள், தன் கைப்பணத்தைச் செலவு செய்து செல்வாக்குப் பெறுவது என்று இருந்தது. இந்த முறையைப் பின்பற்றித்தான் சீனுவாசய்யங்கார் அவர்கள் காங்கிரஸ் தலைவரானார். அந்தக் காலத்தில் ஐயங்கார் ஆள் என்றால், பணம் வாங்கிக்கொண்டு கூலிக்கு மாரடிக்கிறான் என்று அர்த்தமாகும். ஆதலால், அந்தந்த ஊர்களிலுமுள்ள காங்கிரஸ் பலவீனத்தை நாங்கள் பயன்படுத்திக் கொண்டோம். ஐயங்கார், பாவலர் கூட்டம் எங்கு நடந்தாலும், நாகைமணியும், காளியப்பனும், அந்தந்த ஊருக்குத் தக்கபடி, போதுமான ஆட்களுடன் நாகை ஓர்க்ஷாப்பிலிருந்து புறப்பட்டு வந்துவிடுவார்கள். பெரும்பாலும் எங்களுக்கும்

இவர்களுக்கும் தொடர்பே இருக்காது. இவ்வளவு பேர் கோயமுத்தூர், வேலூர், விழுப்புரம், மதுரை, தூத்துக்குடி முதலிய ஊர்களுக்குப் போய்வர, பணம் கிடையாது. டிக்கட் வாங்குவதில்லை. அதாவது, இவர்கள் இரயில்வே யூனியன் பிரசாரத்துக்காக வருகிறார்கள் என்று இரயில்வே கம்பெனி நினைத்துக்கொள்ளவேண்டியது. இரயில்வே வேலை நிறுத்தத்தைத் தொடங்கியதிலிருந்து, தோழர் அழகர்சாமியின் கவனம் முழுவதும் நமது கூட்டங்கள் போடுவதிலும், அவர்கள் கூட்டங்களைக் கலைப்பதிலுமே இருந்தது. சில சமயம் பெரியார் காதுக்கும் இது எட்டிவிடும். ஒரு சமயமாவது இது உண்மையென்று நாங்கள் ஒப்புக்கொண்டதே கிடையாது இத்தகைய சம்பவங்கள் பல பிற்காலத்தில் பெரியவர்களாலெல்லாம் போற்றிப் புகழப்பட்டது. ஆனால், ஒவ்வொரு நெருக்கடியான சமயங்களிலும், தோழர் அழகர்சாமி தனது உயிரைப் பணயம் வைத்தே சந்தேகத்தை நிவர்த்திக்க முயல்வார். கூட்டங்களை நடத்துவதில் அழகர்சாமி அழகானமுறைகளைக் கையாள்வார். மன்னார்குடியில் ஓர் கூட்டம். அதில் அழகர்சாமியின் பிரசங்கம். கூட்டத்தில் காற்பாகத்தினர் கேள்வியும் கல்லும் வீசுகிறார்கள். இப்படி முக்கால்மணி நேரம் நடந்தது. நிலைமையை உணர்ந்துகொண்டு அழகர்சாமி, பேசிக்கொண்டே வந்து திடீரென்று நிறுத்தினார் கீழே இறங்கி, அங்கு கிடந்த நாலைந்து கற்களை எடுத்துக்கொண்டு மேடை மீது ஏறினார். கற்களை மேஜை மீது வைத்தார். இவைகளைக், கலகம் செய்து கல் வீசியவர்கள் கவனித்து, என்ன செய்யப் போகிறார் என்று பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அழகர்சாமி மேலும் பேசினார். "தோழர்களே! இந்த ஊருக்கு நான் புதியவன். இவ்வூர் வழக்கம் எனக்குத் தெரியாது. பெரிய வைஷ்ணவஸ்தலமாக இது இருந்தும், வைஷ்ணவ வகுப்புக்காரனை எனக்கு இவ்வூர்ப் பழக்கம் தெரியாமல் போனது தப்புத்தான். இனி நான் பேசுகிறேன். நீங்களும் கல் போட்டுக் கொண்டே என் பிரசங்கத்தைக் கேளுங்கள். நானும் உங்கள் மீது கல்லை வீசிக்கொண்டே பிரசங்கமும் செய்கிறேன்" என்றார். உடனே எல்லோரும் கைதட்டிச் சிரித்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேலும் நீண்டநேரம் பேசினார். பொதுமக்களும் அமைதியாக இருந்து—பகைமையை மறந்து பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

* * *

சென்னையில் கார்ப்பரேஷன் தேர்தல் நடந்தது. நாங்களும் பிரசங்கத்துக்காகச் சென்றிருந்தோம். அதிகாரத்தில் இருந்தஜஸ்டிஸ் தலைவர்களுக்குள்ளேயே ஒற்றுமை கிடையாது. ஆனால், பிளவுபட்டு இருந்த தலைவர்கள், தங்கள் தங்கள் பக்கம் பேசவேண்டுமென்று தனித் தனியாக வந்துஎங்களை அழைப்பார்கள். எல்லா கூட்டங்களுக்கும் செல்வோம். கூட்டம் அமைதியாக நடக்கும். எங்களைப் பேசச் சொன்ன ஐக்கிய கட்சித் தலைவர்களில் பெரும்பாலாருக்குக் கூட்டம் குழப்பமில்லாது நடப்பது ஆச்சரியமாக இருக்கும். அதைவிட ஆச்சரியம், அழகர்சாமி பேசுகிறாரே! மக்கள் மகிழ்ச்சியடைகிறார்களே! அவர் பேசும் சுயமரியாதையையேமக்கள் ஆதரிக்கிறார்களே! நாமும் சுயமரியாதைக்காரர் தானா என்பதை நினைத்த தலைவர் கிடையாது என்பதுதான். இந்தச் சமயத்தில்தான் எங்களுக்குத் துணையாகத்தோழர் அ. பொன்னம்பலனார் வந்து சேர்ந்தார். அவருக்குத் தெரிந்த ஓர் நாடார் ஓட்டலில்தான் எங்களுக்குச் சாப்பாடு. எங்கள் வாசம் பெரும்பாலும் ஆதித்திராவிடர்கள் வசிக்கும் பகுதியில்தான் இருக்கும். அன்று, எங்கள் நண்பர்களாக—அதாவது பெரியார் கொள்கையை ஆதரித்தவர்கள் அன்றிருந்து இன்றுவரை நம்முடன்தான் இருக்கிறார்கள். அதற்கிடையில் பலர் வந்தார்கள்—பலர் போனார்கள்.

சென்னையில் கூட்டம் போட்டுப் பல நாட்களாய்விட்டன என்றால், உடனே அழகர்சாமி சென்னைக்குப் போவார். கூட்டங்கள் ஏற்பாடு செய்து பேசுவார். இப்படி இரண்டாண்டுகள் வேலை செய்தார். இதன் பின்னர்தான் சென்னையில் நமது இயக்கம் நல்முறையில் வேலை செய்யத்தொடங்கியது.

(தொடரும்)

ஆரிய-திராவிட

15-ம் பக்கத் தொடர்ச்சி

தெரியாது. இந்தியாவில் ஆரியர்களையும் திராவிடர்களையும் தவிர, இதர இனத்தினரும் இருந்திருக்கலாம். இந்தியாவிலுள்ள சில இனத்தவர்கள் அவர்களுடைய சந்ததியாராகவும் இருக்கலாம்"

என்று மேலும்கூறி விளக்கம் உரைத்திருக்கிறார். பாவம், 'தினமணி' நிருபர், மிகவும் பாடுபட்டு மொகஞ்சதாரோ நாகரிகத்தை ஆரிய நாகரிகமாக்கப் பெரிதும் முயன்று பார்த்திருக்கிறார். ஆனால் முடியவில்லை. தோழர் வீலர்மோண்ட் அவர்கள், தாம் ஒரு சரித்திர ஆசிரியனல்லவென்று கூறிய போதிலும், பொதுவாகத் தெரிந்து கொள்ளக்கூடிய உண்மையை மறைக்காமல் கூறி விட்டார். அதாவது, மொகஞ்சதாரோ நாகரிகத்தை யாராவது திராவிட நாகரிக மல்லவென்று கூற முயன்றாலும், அது ஒருபோதும் ஆரியநாகரிகமாக இருக்க முடியாதென்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். இந்தியாவில் ஆரியரையும் திராவிடரையும் தவிர வேறு இனத்தினரும் இருந்திருக்கலாம் என்றும், அங்கு காணப்படும் நாகரிகம் அந்த இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்றும் தோழர் வீலர்மோண்ட் கூறியதைத் 'தினமணி' நிருபர் புரிந்து கொண்டிருப்பார் என்றே நம்புகிறோம். எப்படியென்றால், மொகஞ்சதாரோ நாகரிகத்தை ஏன் திராவிட நாகரிகம் என்று சொல்லவேண்டும்? ஆரிய நாகரிகம் என்று ஏன் அதைக் கூறக் கூடாது? என்ற கேள்வி எழுந்ததாலேயே, அவர், அதனை ஆரிய நாகரிகம் என்று கொள்வது தம் போன்ற ஆராய்ச்சியாளருக்கு நேர்மையாகாதென்பதை விளக்கிக் காட்டவே, திராவிடருக்கும் ஆரியருக்கும் புறம்பான இனத்தவரும் இங்கு இருந்திருக்கலாம்—மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிட நாகரிகம் அல்லவென்று கூறினால், அது ஆரியநாகரிகமாக ஆகிவிடாது—இருவருக்கும் புறம்பான ஒரு இனத்தவரின் நாகரிகமாகத்தான் அதைக் கொள்ளமுடியும் என்று விளக்கி விட்டார்.

இதனாலும் நம்முடைய எண்ணம்

(5-ம் பக்கம் பார்க்க)

படக்காட்சிப் பக்குவம் பெற!

[இரா. நெடுஞ்செழியன்]

இந்தியப் பாராளும் மன்றம், திரைப்படக் காட்சிகள் பற்றிய மசோதா ஒன்றை அண்மையில் நிறைவேற்றியுள்ளது. பேசும் படங்களை, இளையவர் பார்க்கத் தகுந்தவை இவையென்றும், முதியவர் காணத் தகுந்தவை இவையென்றும் பிரித்துக் காட்டுவதே மசோதாவின் நோக்கமாகும், என்று, மசோதாவைக் கொண்டுவந்த இந்திய விளம்பர இலாக்கா மந்திரி தோழர் ஆர். ஆர். திவாகர் விளக்குகிறார்.

மசோதா, திரைப்படங்களை இரண்டுவிதமாகப் பிரிக்கிறது. ஒன்று 'ஏ' பிரிவு, மற்றொன்று 'பி' பிரிவு. 'ஏ' பிரிவில் அத்தாட்சி பெறும் படங்கள் முதியவர்களுக்கு மட்டுமே காட்டப்படும். 'பி' பிரிவில் அத்தாட்சி பெறும் படங்கள் தடையேதும் இன்றி, இளையவர் முதியவர் இரு வகையினரும் பார்க்கத் தகுந்தவைகளாக ஆக்கப் பெறும்.

இளையவர் முதியவர் என்ற பாகுபாட்டை எப்படிக் கணிப்பது என்பதையும் மந்திரியார் கூறியுள்ளார். யாரொருவர் பதினெட்டு வயது முற்றுப் பெற்றவராகக் கருதப் படுகிறாரோ அவர் முதியவர் என்றும், பதினெட்டு வயது நிரம்பாமல் குறைந்து காணப்படுபவர் இளையவர் என்றும் விளக்கந் தந்துள்ளார்.

மசோதாவைக் கொண்டு வருவதற்கான அவசியத்தையும் அவர் உணர்த்தாமலில்லை; உணர்த்துகிறார். படங்களிலே எவை பயங்கரமானதாகவும், காமஉணர்ச்சி பயப்பதாகவும், பெருங்குற்றங்களைக் காண்பிப்பதாகவும் உள்ளனவோ அவற்றையெல்லாம் முதியோர் மட்டுமே பார்க்கத் தகுதியுடையன என்று ஒதுக்கவும், இவைபோன்ற நிகழ்ச்சிகளைக் கொள்ளாதனவற்றை இளையவர்களுக்கும் முதியவர்களுக்கும் பார்க்கத் தகுந்தன என்று தணிக்கவும் தணிக்கையாளர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டே மசோதா வற்புறுத்தப் படுவதாக அவர் கூறுகிறார்.

இத்தகைய வொரு மசோதா அவசியந்தானா? இந்த மசோதாவால் எண்ணும் பலன் கிட்டுமா? பலன் கிட்டும் வகையில் மசோதாவின் கொள்கையை நிறைவேற்றி வைக்க முடியுமா? எண்ணும் பலனைப்பெற இதுதான் சிறந்த வழியா? வேறு வழிகள் கிடையாதா?' என்பனவற்றைப் பற்றி பொதுமக்கள் சிந்திக்க வேண்டியதவசியமாகும், இந்த மசோதா பொது மக்கள் யாவரையும் பற்றி நிற்கும் முக்கியமானதொரு பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால்.

பேசும் படங்கள் மக்களின் உள்ளத்தை மாற்றும் அளவுக்கு ஆற்றல் வாய்ந்தனவாகும் என்பதை எவரும் மறுக்க இயலாது. அவைகளைப் பார்ப்பதன் மூலம் மக்களின் மனம் அவற்றின் போக்கிற்கு இழுத்துச் செல்லப்படுகிறது என்பதும் கண்கூடு. மக்களின் வாழ்வை வளம் படுத்தும் நல்ல கருத்துக்களும், தீய வழிக்கு இழுத்துச் செல்லும் தீய கருத்துக்களும் படங்களின் மூலம் மக்களின் உள்ளத்திலே தூவப்படுகின்றன என்பதும் உண்மை. திரைப்படம் நல்லவை, தீயவை ஆகிய இரண்டினையும் தாங்கி நிற்கும் ஒருசாதனமே தவிர, அவற்றை உண்டாக்கும் கருவியல்ல. நாம் பார்த்து நல்லவற்றையே, வாழ்வுக்குத் தேவையானவற்றையே, முற்போக்கு வழியில் ஊக்குவிப்பனவற்றையே, நல்லின்பம் பயப்பனவற்றையே, குற்றமற்ற நகைச்சுவை கொடுப்பனவற்றையே காட்டும்படி பேசும் படத்திற்குக் கட்டளையிட்டால், அந்த ஏவலை அது ஏற்று நடத்தியே தீரும். இழிந்த காம உணர்ச்சிகளையும், பயங்கரக் காட்சிகளையும், கருத்தற்ற மூடச் செயல்களையும், தீயபல எண்ணங்களையும் சேர்த்துக் குழைத்துப் பேசும் படம் மூலம் மக்கள் உள்ளத்தில் ஏற்ற நினைத்தாலும், அவற்றையெல்லாம் தாங்கி நிற்கவும் பேசும் படம் தயங்காது. நாட்டுக்கும் குறிப்பாக இளையவர்க்கும் நன்மை பயக்காப் படங்கள் இருக்கின்றன என்றால் அத்தகைய படங்களை நடமாட விடாமற் செய்வது முறையா? அல்லது நடமாட விட்டு விட்டு அவற்றைப் பார்க்கக் கூடாது என்று தடை செய்வது முறையா? பின்னைய முறையைக் கையாள இந்திய சர்க்கார் முனைந்திருப்பது கேலிக் கூத்தாகவே இருக்கிறது.

இந்த மசோதாவினால் காணவிரும்பும் பலனை எளிதில் அடைந்துவிட முடியாது. ஆகவேதான் இதற்கு இப்பொழுது அவசியமில்லை என்பதை இந்தியப் பாராளு மன்றத்திலேயே தோழர்கள் மகா பீர்தியாகி, எம். சத்திய நாராயணா, ரங்கா ஆகியோர் எடுத்து மொழிந்திருக்கிறார்கள். இவையனைத்தும் மந்திரியார் செவியில் விழுந்ததாகவோ, உள்ளத்தில் உறைத்ததாகவோ காணப்படவில்லை.

பதினெட்டு வயதுக் குட்பட்டவர்கள் பார்க்கத்தக்கன அல்ல என்று சில படங்களைத் தடைப்படுத்தி வைப்பதனால் வரும் பல சங்கடமான நிலைமைகளையும் அங்கத்தினர்களில் சிலர் விதந்தோதி யுள்ளனர்.

பதினெட்டு வயதுக்குள்ளானவர்கள் பார்க்கக்கூடாது என்றுசொல்லி, படங்களை மட்டும் கொட்டகைகளில் ஓட விட்டு விட்டு, எந்த அளவுகோலைக் கொண்டு மக்களின்வயதைப் பிரித்து உள்ளே விடுவார்கள்? 16- அல்லது 17-வயதானவர்கள், தங்களுக்கு வயது 18-நிறைந்து விட்டது என்று தங்கள் தோற்றத்தையே வைத்துக்கொண்டு வாதிடுவார்களேயானால், அவர்களை எந்த அளவுகோலால் நிர்மாணித்து வெளியே இருக்கும்படி செய்யமுடியும்? அதனால் ஏற்படும் சங்கடமான நிலையை மசோதா கவனிக்கவில்லை! கவனிக்க மறுக்கிறது.

18-வயதுக்குட்பட்ட சிறுவர்களையும்,சிறுமிகளையும் வீட்டில் விட்டு விட்டுஎப்படித்தாய் தந்தையர் படக்காட்சிகாணச் செல்லமுடியும்? குழந்தைகளின்கூட்டுறவைவிட்டுத்தனியே போய்ப் படம் பார்க்கத் தாய்தந்தையர்க்கு மனம் வருமா? சிறுவர்களை இருக்கச் சொன்னால் வீட்டிலேயேதான் இருப்பார்களா? திருட்டுத்தனமாகவாவது உள்ளே நுழைந்து படம் பார்க்கத் துடிக்கமாட்டார்களா? அதற்காகத் தங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்து

(14-ம் பக்கம் பார்க்க)

9-ம் பக்கத் தொடர்ச்சி

கழியால் தாக்கியோ, கலவரம் செய்தோ, குழப்பம் விளைவித்தோ திராவிடர் கழகக் கூட்டங்களைக் கலைக்கவேண்டிய பணி தங்களுடைய இன்றியமையாக் கடமை என்றுதானே காங்கிரஸ் 'ஊழியர்கள்' கருதுவார்கள்; இதுவரையிலும் கருதி வருகிறார்கள். இதன்படி நடந்த நடவடிக்கையிலே ஒன்றுதானே, தோழர். எம். ஆர். ராதாவின் நாடகம் விழுப்புரத்திலே கலைக்கப்பட்டதாகும். தோழர் எம்.ஆர். ராதா சீர்திருத்த நாடகங்களைச் செம்மையுற நடத்திக்காட்டுகிறார் என்பதும், அவற்றின்மூலம் தூவப்படும் கருத்துக்கள் மக்கள் உள்ளத்திலே ஆழப் பதிந்து விடுகின்றன என்பதும், அக்கருத்துக்களை அகற்றத் தாங்கள் எவ்வளவு பாடுபட்ட போதிலும் இயலாமலிருக்கிறது என்பதுந்தானே, காங்கிரஸ்காரர்களுக்குக் கலவரம் செய்து குழப்பம் உண்டாக்குகிற அளவுக்குப் பொறாமையுணர்ச்சியை உண்டுபண்ணி யிருக்கின்றன.

இத்தகு முறைகளால் திராவிடர் கழகத்தின் வளர்ச்சியைக்குறைத்து விடலாம் என்றோ, அதன் கொள்கைகள் உள்ளந்தோறும் வேரூன்றுவதைத் தடுத்துவிட முடியும் என்றோ, அதன் வலிவைச் சிதைத்துவிட முடியும் என்றோ அரசாங்கம் அல்லது அதன் சார்புடைய காங்கிரஸ்காரர்கள் எண்ணுவார்களேயானால், அந்த எண்ணம் மணற்கோட்டையாகச் சரிந்துவிடும் என்பதைக் காலம் நிச்சயங் காட்டிவிடும். திராவிடர் கழகக் கருத்துக்கள் பக்களுள்ளத்தில் ஆழப் பதிந்து விடுகிறது என்பதுகுறித்து காங்கிரஸ் அச்சங் கொள்கிறது என்றால், இத்தகைய தடுப்புவேலைகள் தானா அதன் 'மகத்தான' பலத்திற்கு அறிகுறி! காங்கிரசிடத்தில் பண பலம் இருக்கிறது, படை பலம் இருக்கிறது, பத்திரிகை பலம் ஏராளமாக இருக்கிறது, அரசாங்க அணைப்பு அமோகமாகஇருக்கிறது, இவை மட்டுமல்லாமல் தோழர் காமராஜ் சூறாவளி வேகத்தில் நாடு முழுதும் சுழன்று வருகிறார், மந்திரிமார்கள் பவனி ஆங்காங்கு ஓயாமல் இருந்துகொண்டே இருக்கிறது, இவை தவிர காட்சிக்காக வடநாட்டுத் தலைவர்கள் அவ்வப்போது 'ஊர்வலம்' கொண்டு வரப்படுகின்றனர், இவையெல்லாம் இருந்தும், இவைகளில் ஒன்றேனும் சரிவரப் பெறாமல் இயங்கும் திராவிடர் கழகத்தைக்கண்டு காங்கிரஸ் அஞ்சுவானேன். கொள்கையின் வலிவைச் சமாளித்து நிற்க முடியவில்லை யென்றால், அதற்காக வேறு சாதனங்களைக் கொண்டு கழகத்தை அழித்துவிடக் காங்கிரஸ்முயலுமேயானால், அது ஒருநாளும் வெற்றி பெறப் போவதில்லை என்பதை மட்டும் உறுதியாகக் கூறுகிறோம்.

திராவிடர் கழகத்தின் வலிவு வளர்ந்து வருகிறது என்பதை அரசாங்கம் உணரட்டும். தடுக்கத் தடுக்க அதன் வளர்ச்சி விரிகிறது எனபதையும் அது அறியட்டும். திராவிடர் கழகம் வெறும் பிரச்சாரக்கூட்டந்தானே, அதனை அடக்கி ஒடுக்கிவிட்டு, ஆட்சிப் பீடத்தில் என்றென்றும் அமர்ந்திருக்கலாம் என்றுமட்டும் காங்கிரஸ் எண்ண வேண்டாம். வலிவு பெருகி, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால்தான் நாட்டிற்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றி வைக்க முடியும் என்ற கருத்து, திராவிடர் கழகத்தாரின் ஒரு பகுதியினரிடத்தே வளர்ந்து வருகிறது என்பதையும் அரசியலார் அறிந்திருக்கட்டும். மக்களே கூப்பிட்டு உட்காரவைக்கும் காலமும், கடமையையுணர்ந்து அதனைக் கழகம் ஏற்றுக் கொள்ளவேண்டிய காலமும் வரத்தான் போகின்றது. அதற்காகப் போடப்படும் புடமே, சர்க்கார் விதிக்கும் தடைகள்! எடுக்கும் தங்கமே சமாளித்து நின்று வீறுகொண்டெழும் இளைஞர்கள்! எனவேதான் உடுமலை கற்பிக்கும் பாடத்தை வரவேற்கிறோம்!

ஆரிய திராவிட

3-ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவேறாமல் போகவே, 'தினமணி' நிருபர் மூன்றாவது கேள்வியாக,

"வால்மீகி இராமாயணத்தில் கண்டுள்ள அகத்தியருக்கும் தமிழுக்கும் தானே தொடர்பு இருக்கிறது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?"

என்று கேட்டிருக்கிறார். இராமாயண கால... அகத்தியரைத் தமிழுக்குத் தொடர்புள்ளவராக்கி விட்டால், இராமாயணத்துக்கு உயர்வும் சிறப்பும்தானாகவே உண்டாகிவிடும்என்று கருதியே இவ்விதம் கேட்டிருக்கிறார் என்று நம்புகிறோம். ஆனால் தோழர் லூயி டுமாண்ட் அவர்கள்,

"வால்மீகி இராமாயணத்தில் கண்டுள்ள அகத்தியருக்கும் தமிழுக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாக நான் கருதவில்லை"

என்று கூறிவிட்டார். என்றபோதிலும் நிருபர் அவரை அதோடுவிட்டதாகத் தெரியவில்லை. இங்குள்ள ஆராய்ச்சியாளர் எல்லாரும், வால்மீகி இராமாயணத்தில் காணப்படும் அகத்தியருக்கும் தமிழுக்கும்தான் தொடர்பு உண்டு என்று கூறும்போது நீர் மட்டும் எப்படி அதனை மறுத்துக் கூறலாம் என்று மீண்டும் மீண்டும் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனாலேதான் அவர்,

"இதற்கு ஆதாரவுகிடைக்கிறதா என்று அறிவதற்குத் தொல்காப்பியத்தின் மூலத்தைப் பார்க்க விரும்புகிறேன்"

என்று பதில் கூறியிருக்கிறார். தமிழ் மொழியைப் பற்றியும், அதன் வரலாற்றைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கு, இன்று நமக்குக் கிடைக்கக் கூடிய பழைமையான நூல் தொல்காப்பியம் ஒன்றுதான். எனவேதான், தொல்காப்பியத்தைப் பார்த்துக் கூறுகிறேன் என்று கூறியிருக்கிறார். தொல்காப்பியம் என்றால் இன்று வெளியாகி நடைமுறையில் இருக்கும் பல பதிப்புக்களைப் பார்ப்பதால் உண்மை காணமுடியாதென்றும், தொல்காப்பியத்தின் மூலத்தைப் பார்த்துத்தான் இதைப் பற்றிய எனது முடிவைக் கூறவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

(அடுத்த இதழில் முடியும்)

★ அலை ஓசைமட்டும் போதாது ★

வெளிநாட்டு 'மூலதனம்' எனும் கழுகு இங்கு வட்டமிடுவது, புதியதோர் ஆபத்து, புதிய ஏகாதிபத்யத்துக்கு வழி கோலுவதாக முடியும், அன்னிய ஆதிக்கம் புதிய முறையிலே ஏற்படும், இத்தகைய பேராபத்தை, வலியச் சென்று பெறும் முறையிலே, நேருவும், நடந்துகொள்கிறாரே — வல்லூறுகளுக்கு அழைப்பு அனுப்புகிறார்களே, என்று, மனம் நொந்து, நாம், நிலைமையை விளக்கிக் காட்டினோம்.

வெளிநாட்டு மூலதனம் இங்கு ஏன் புக அனுமதிக்கப்படுகிறது? முதலாளித்வ முறைக்குச் சர்க்கார் பணிகிறது என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டுத்தானே? என்று கேட்டோம்.

நாட்டுப் பற்றும், வல்லரசுகளின் போக்கை உணரும் பக்குவமும், பொருளாதாரப் பிடியின் பயங்கரச் சக்தியை அறிந்துகொள்ளும் திறனும் உள்ள எவரும், வெளிநாட்டு மூலதனத்தைப் புகவிடுவதைச் சரியான காரியம் என்று கூறமாட்டார்கள்.

பல கோடி பவுன்களையோ டாலர்களையோ, இங்கு கொண்டுவந்து கொட்டி, புதிய தொழிலகளைத் துவக்கி, 'பரோபகாரம்' செய்யும் பண்பு கொண்டவர்களல்ல, எந்த நாட்டு முதலாளியும். தொலைதூரத்திலிருந்து இங்கு வந்து பணம் போடுவதானால், தன் சொந்த நாட்டிலே கிடைக்கக்கூடிய இலாபத்தையும் ஆதிக்கத்தையும் விட அதிகமாகக் கிடைப்பதாக இருந்தால்தானே, இசைவார்கள்! இதை விளங்கிக்கொள்ள நுண்ணறிவு கூட வேண்டாமே, சாமான்யமான அறிவே போதும்.

பல நூறு கோடி டாலர்களை இங்கு கொண்டுவந்து கொட்டித் தொழில்களைத் துவக்கும் நிலையை, அமெரிக்கா பெற்றால், அவர்கள் இங்கிருந்து இலாபம் காண முடியும் என்பது மட்டுமல்ல, இவ்வளவு தொகையும், பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, அதற்கான சூழ்நிலையும் ஆட்சி முறையும் வேண்டும் என்று வற்புறுத்தவும், உலகச் சூழ்நிலையில், அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்கு ஏற்றபடி, தமது கருத்துக்கு ஒத்த முறையில் இந்திய துணைக்கண்டம் நடந்துகொள்ள வேண்டும் என்று நிபந்தனைகள் விதிப்பதுமான போக்கிலேதானே நடந்துகொள்வார்கள். பணத்தைக் கொட்டிவிட்டு, பலனை நீங்கள் அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட, அவர்கள் என்ன, பித்தர்களா! பணம் போடுகிறோம் தொழிலில், ஏதோ, 'தர்ம நியாயமான' வட்டியும் இலாபமும் மட்டும் கொடுத்தால் போதும், வேறு ஆதிக்க ஆசை எமக்குக் கிடையாது, என்று கூற, அவர்கள் என்ன, ஏமாளிகளா! நிச்சயமாக, 'போட்ட முதல்' எவ்வளவு அதிகமாக இலாபம் தருமோ அவ்வளவும் 'உறிஞ்சவும்' இலாபத்துடன் கூட, முதல் கெடாமல் இருக்கும் நிலையை உண்டாக்குவதிலே அதிகாரப் பொறுப்பும் பெறத்தான் விரும்புவர்— அதற்கு இந்திய சர்க்கார் இணங்கத்தான் வேண்டிவரும். கடன் வாங்கிக் கட்டிய மாடிவீட்டிலே, மந்தமாருதம் வீசும் அந்திப் போதிலே, உலவினாலும், உண்மை நிலையை உணருபவனுக்குத் தணல் காற்று வீசுவது போலத்தானே இருக்கும்! கடன் கொடுத்தவனின் போக்கு மாறினால், தன் நிலை தாழ்ந்துவிடும், தடுமாறிவிடும் என்ற பயம், மாடிவீட்டுக்காரனின் மனதைப் பிய்த்துத் தின்றுவிடுமே. ஒரு பெரிய நாட்டிலே, பிரமிக்கத்தக்க அளவு தொகையுள்ள பணத்தை அன்னிய நாட்டு முதலாளிகள் கொண்டுவந்து போட்டுத் தொழில் துவக்குவது என்றால், பொறுப்புணர்ச்சியுள்ள, யாருக்குத்தான், கவலையும் அச்சமும் தோன்றாமலிருக்க முடியும்!

வெளிநாட்டு முதலாளிகளின் வேட்டைக்காடாக ஆகிவிடும்படி இந்நாட்டைச் செய்துவிடும் விபரீத காரியம் இது, என்று நாம் எச்சரிக்கிறோம்—பொது மக்களை, குறிப்பாகக் காங்கிரசிலே உள்ள இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறோம்—"தலைவர்களைத் தவறான வழியிலே செல்லவிடாதீர்கள்! நாட்டை அடகுவைக்கும் நாசகாரியம் நடைபெற அனுமதிக்காதீர்கள். வல்லூறுகளை இங்கு வட்டமிட அழைக்காதீர்கள்" என்று கேட்டுக்கொள்கிறோம்.

வெளிநாட்டு மூலதனம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கும், வெளிநாட்டவர், மூலதனம் போட்டாலும் ஆதிக்கம் பெற முடியாதபடி செய்யப்படும் என்றும், பசப்புகின்றனர் சிலர். விஷயம் விளங்காமல், இவ்விதம் பசப்பியிருந்தால், நாம் பரிதாபப்படுகிறோம் அவர்களிடம்—விஷயம் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே, மக்களின் மனதிலே எதையாவது போட்டு நிரப்பி, தவறான எண்ணத்தை உண்டாக்க வேண்டுமென்பதற்காகப் பசப்பியிருப்பின், அவர்களைச் 'சமூகத் துரோகிகள்' என்று குற்றம் சாட்டத் தயங்கோம்.

வெளிநாட்டு மூலதனம் இங்கு புகுவது நியாயம் என்று வாதாட, ஒரு விசித்திரமான காரணத்தைக் காட்டுகிறது, வேடிக்கை பேசும் 'கல்கி.'

இந்நாட்டு முதலாளிகளுக்குத் தைரியம் உண்டாக்கக் கூடிய விதமாகவும், உணர்ச்சி ஊட்டக்கூடிய முறையிலும், பயத்தைப் போக்கக் கூடிய வகையிலும், இந்திய சர்க்கார் தமது திட்டத்தையும், கொள்கையையும் விளக்கியும் கூட, இந்திய முதலாளிகளின் மனம் மாறவில்லை— அவர்கள் தம்மிடம் உள்ள மூலதனத்தை, பதுக்கிவைத்துவிட்டார்கள். இலாபத்தைக் கட்டுப்படுத்தவில்லை, வருமான வரியிலே மாறுதல் செய்கிறோம், தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்கிவிடமாட்டோம், அஞ்சவேண்டாம், என்றெல்லாம், கூறியும்கூட, முதலாளிகள், புதிய தொழில்களைத் துவக்க முன்வரவில்லை—பணம் போட மறுக்கிறார்கள். எனவேதான் 'நமது தலைவர்கள்' வெளிநாட்டு மூலதனத்தைத் தேடவேண்டி வருகிறது, நாட வேண்டி ஏற்படுகிறது, என்று 'கல்கி' வாதாடுகிறது.

படித்தும்—சிந்திக்காமலிருக்கும்

வரை — ஒப்புக்கொள்ளக்கூடியவிதமான, காரணம் காட்டி எழுதுவதில் கைதேர்ந்ததல்லவா, 'கல்கி'—எனவேதான், இவ்விதம் எழுதிற்று.

"வெளிநாட்டு மூலதனம் கேடுதான் செய்யும்; ஆனால் என்ன செய்வது? இங்கே உள்ள முதலாளிகள், பணமூட்டையைப் பாதாளக்கிடங்குகளில் போட்டு மூடிவிட்டார்கள், புதிய தொழிலுக்குப் பணம், மூலதனம் இல்லை. வேறே என்ன செய்வது? வெளிநாட்டு மூலதனத்தை நாடித்தானே ஆகவேண்டும்"—என்று ஊரார் உரையாடவேண்டுமென்பது, "கல்கி"யின் கருத்து. நிலைமையை மறைத்து, தலைவர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என்பதை மக்கள் அறியவிடாதபடி தடுத்து, ஆளவந்தார்களின் செல்வாக்கைக் காப்பாற்றுவதாகக் கருதுகிறது 'கல்கி' — இந்தத் திருப்பணிக்காக, நாட்டின் எதிர்காலத்தை நாசமாக்கும் செயலுக்குக் கூசாமல் உடந்தையாக இருக்கிறது.

தீராத தலைவலியைத் தீர்த்துவிடும், திருப்பதிபிராண்டு தைலவியாபாரி, திருவரங்கம்பிள்ளை, ஏராளமான, வி. பி. பார்சல்களை அனுப்பிய அனுப்பினால் ஏற்பட்ட தலைவலியைப் போக்கிக்கொள்ள, அமிர்தாஞ்சனம் விலைக்கு வாங்கிவரும்படி, கடைப்பையனை அனுப்பும் கதைபோலிருக்கிறது நிலைமை.

இந்திய முதலாளிகள், மூலதனம் போட மறுக்கிறார்கள் — பயத்தால்—சந்தேகத்தால்—போதுமான பாதுகாப்பும், தேவையான இலாபமும் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற சந்தேகத்தாலும், எந்தச் சமயத்திலே, சர்க்கார் குறுக்கிட்டு, தொழில்களை, பொது உடைமையாக்கி விடுமோ என்ற அச்சத்தாலும்.

நாட்டுப்பற்றோ, தொழில் முன்னேற்றத்திலே அக்கரையோ, பொதுமக்களின் வாழ்வுக்கு வசதிதரும் பொருள்களை உற்பத்தி செய்யும் 'சேவா உணர்ச்சியோ' துளியாவது இருக்குமானால், இந்தச் சந்தேகமும் பயமும், அந்தக் கூட்டத்தாருக்கு ஏற்பட்டே இருக்காது.

பன்னிப் பன்னிப் பல தலைவர்கள் பேசும், அன்பு, சீலம், தொண்டு எனும் பண்புகளை, அவர்கள் துளியும் கவனிக்கவில்லை, உபதேசங்கள் பயன்படவில்லை. புலியிடம் செய்த ஜீவாட்சக பிரசாரம் போலாயிற்று!

ஆட்சியாளர்கள், உபதேசம் போதவில்லை என்பதை உணர்ந்து, உறுதிமொழிதந்து பார்த்தனர், உருக்கமான வேண்டுகோள், விளக்கமான அறிக்கைகள், பணிவன்புள்ள பேச்சு, இவை மூலம், முதலாளிகளின், இலாபவெறியைக் குறைக்கவும், அச்சத்தையும் சந்தேகத்தையும் போக்கவும், முயன்றனர். அபேதவாதப் பண்டிதரே, அவர்களுக்கு உபசாரமொழி பேசினார். சர்தார் படேல் அவர்களிடம் சல்லாபித்தார்! மத்தாய் அவர்களை மகிழ்விக்கக் கூடியவிதமாக 'பட்ஜட்' தயாரித்துக் காட்டினார். என்ன செய்தும், பணமூட்டைகள் பாதாளச் சிறையைவிட்டு வெளிவரவில்லை.

இதனாலேதான், வெளிநாட்டு மூலதனம் தேடவேண்டி நேரிடுகிறது என்று வாதாடுகிறது 'கல்கி'—சாமர்த்தியமான வாதம் என்றநினைப்பில்.

உள்நாட்டு முதலாளிகளைத் திருப்திப்படுத்தி வழிக்குக் கொண்டுவர முடியவில்லை, இந்த ஆட்சியாளர்களால். இந்தத் தோல்வியை ஒப்புக்கொண்டு, இதையே கூறிக்கொண்டு, வெளிநாட்டு முதலாளிகளிடம் மூலதனம் கேட்டால், அவர்கள், கைகொட்டித் தானே சிரிப்பார்கள்! "என்னய்யா வேடிக்கை! உங்கள் நாட்டு முதலாளிகளுக்கே, மூலதனத்தைப் போட்டுத் தொழில் நடத்தலாம் என்ற எண்ணம் பிறக்கவில்லை, நீங்கள் ஏதேதோ கூறியும் அவர்கள் இணங்கவில்லை, இந்நிலையில், அவர்களைச் சரிக்கட்ட முடியாத நீங்கள், உங்கள் பேச்சினால், எங்களை மயக்கியோ, மகிழ்வித்தோ, ஆசையைக் கிளறியோ, 'மூலதனம்' பெற முடியும் என்று எண்ணுகிறீர்களே, இதென்ன பித்தம்—என்று கேட்கமாட்டார்களா! கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், கோபுரம் ஏறி, நட்சத்திரத்தைப் பிடிப்பதாகக் கூறுவது போலிருக்கிறதே!

ஏன் முடியவில்லை, இந்நாட்டு முதலாளிகளைச் சரிப்படுத்த? சர்க்காரின் பிரச்சாரபலம், ராணுவ போலீஸ்பலம் முழுவதும், ஏழைத் தொழிலாளியை அடக்கவா? அவன் சார்பாகப் பணிபுரிவோரை வேட்டையாடவும் தானா பயன்படவேண்டும்? அந்த 'சக்தி' முதலாளிகளின் மீது உராய்ந்திருந்தால் கூடப் போதுமே, பணமூட்டைகள் வெளியே கிளம்பியிருக்குமே, மளமளவென்று? செய்தனரா? செய்யும்படி, ஆட்சிப்பீடத்தில் காங்கிரசாரை அமர்த்திய வீர இளைஞர்கள் கேட்டனரா? கேட்பாரா? இனியாகிலும்? இந்நாட்டு முதலாளிகள், பொது மக்களின் சர்க்கார், காந்தியாரின் சீடர்களால் அமைக்கப்பட்ட சர்க்கார், கேட்டும் கெஞ்சியும், ஏன், பிடிவாதத்தை விட மறுக்கின்றனர்? அவர்களை, நல்வழிக்குக் கொண்டுவர, ஏன், சர்க்கார் முயற்சிக்கவில்லை—ஏன் வெற்றிகிட்டவில்லை? உள்நாட்டிலே வெற்றிபெற முடியவில்லை என்று கூறிவிட்டு, வெளிநாட்டிலே, பணம் கேட்டால், கிடைக்குமா? தோல்வித் தோடா அணிந்துகொண்டு வீரக்கோட்டம் புகும் தீரன் உண்டா? இதுபோலெல்லாம் மக்கள் எண்ணிடக் கூடுமே என்று யோசியாமலேயே 'கல்கி', வெளிநாட்டு மூலதனம் தேடுவதற்குக் காரணம், உள்நாட்டிலே மூலதனம் கிடைக்காதது தான்—உள்நாட்டிலே மூலதனம் கிடைக்காததற்குக் காரணம், முதலாளிமார்களின் முரட்டுப் பிடிவாதந்தான், என்று தீட்டுகிறது!

உள்நாட்டு முதலாளிகளை அடக்கவோ மடக்கவோ, ஆற்றல் இல்லை, சர்க்காருக்கு.

இதையும் கூறிவிட்டு அதே மூச்சில், வெளிநாட்டு மூலதனம் புகுந்தால், அதன்மூலம் அன்னியர் ஆதிக்கம் தேடிக்கொள்வார்கள் என்று அஞ்சவேண்டியதில்லை, ஏனெனில், 'நமது தேசத்தை ஆளும் தலைவர்களுக்கு' மூலதனம் போடுவதன் மூலம் ஆதிக்கம் பெறலாம் என்ற எண்ணம் கொண்டால், அன்னியரை அடக்கும் அறிவும் ஆற்றலும் உண்டு, என்று எழுதுகிறது, 'கல்கி.'

ஆஹா! என்னதெளிவு! எவ்வளவு தீட்சணியம்!—என்று கூறவேண்டி இருக்கிறது, இந்தப் போக்கைப் பார்க்கும் போது.

அறிவும் ஆற்றலும் உண்டாம்—வெளிநாட்டு முதலாளிகள் இங்கு

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 24—4—49 [காஞ்சி

தூக்குமேடை அழைக்கிறது!

தாய் நாட்டினின்றும் பிரிந்து, கடல் கடந்து, மலேயா சென்று, தன் வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேலை யொன்றிலமர்ந்து, பிறகு தன் உடனுறையும் பாட்டாளித் தோழர்களின் பரிதாபக் கண்ணீரைத் துடைக்கும் அரும்பணியில் ஈடுபட்டுச், சென்ற சில ஆண்டுகளாகச் செயலாற்றி வந்த தமிழன் ஒருவன் இன்று மலேயா நாட்டின் தூக்குமேடையின் அருகே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறான்!

கட்டிளங் காளை. வயது 24. காடு, மேடுகளெல்லாம் அலைந்து திரிந்து உழைப்போருலகுக்கு உழைத்து வந்த தீரன். வெள்ளை முதலாளிகளின் வெறிபிடித்த செயல்களுக்கு ஆட்பட்டுச் சிக்குண்டு சீரழிந்த தொழிலாளரின் நலன்களுக்காகப் பாடுபட்ட வீரன். இத்தகைய தமிழன் ஒருவனை, மலேயா நாட்டுச் சட்டம் தூக்குமேடைக்குஅழைத்து வந்துள்ளது!

சட்டம், நீதிவழியாக அல்ல—நேர்மை வழியாக அல்ல, கோணலான குறுக்கு வழியாகத் தூக்குமேடை அருகே அந்தத் தமிழனை அழைத்துக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது!

என்ன குற்றம் செய்தான்? நாட்டைக் காட்டிக்கொடுத்தானா, இல்லை! ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டானா, இல்லை! கொள்ளை, கொலை, சதி செய்தானா, இல்லை! பின் என்னதான் செய்தான்? ஒரு ரிவால்வாரும், ஆறு வெடிமருந்துகளும் வைத்திருந்தான். அவ்வளவுதான்!

அதற்கா தூக்கு தண்டனை? ஆம்! அதற்கேதான்!

யார் அவர்? பெயர், ஏ. கணபதி. பிறப்பிடம் தஞ்சைமாவட்டப்பட்டுக்கோட்டைத் தாலுகாவைச் சேர்ந்த தம்பிக்கோட்டை. மலேயா தொழிற் சங்கத்தில் சேர்ந்து தொண்டாற்றி வந்தவர்.

மலேயாவில் நடைபெறும் கலவரத்தின் எதிரொலியாக, ரிவால்வார் வைத்திருப்போர் தூக்குத் தண்டனைக் குற்றத்திற்குள்ளாவார்கள் என்று மலேயா அரசாங்கம் வெளியிட்ட அவசரப் பிரகடனத்தையொட்டியே, தோழர் கணபதியும் ரிவால்வார் வைத்திருந்தார் என்ற குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். தான் குற்றமற்றவன் என்றும், அவசரப் பிரகடனத்தின்படி, தன்னிடமுள்ள ரிவால்வாரையும் ஆறு வெடிமருந்துகளையும், அரசாங்கத்தாரிடத்தில் ஒப்படைக்கும் பொருட்டுத் தான்கிளம்பி வரும் வழியில், போலீஸாரால் பிடிக்கப்பட்டு, ரிவால்வாரும் கைப்பற்றப்பட்டு வழக்குத் தொடரப்பட்டவன் என்றும், ஆகவே, தான் நிரபராதி என்றும் கோலாலம்பூர் பெடரல் வழக்கு மன்றத்தில் மனுச் செய்துகொண்டார் தோழர் கணபதி. அங்கு மனு மறுக்கப்பட்டுத் தூக்குதண்டனை உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

ரிவால்வார் வைத்திருந்தான் என்ற ஒரே குற்றத்திற்காக ஒருவன் தூக்குமேடைக்கு அனுப்பப்படுகிறானென்றால், அப்பொழுதுதான் நாட்டில் நீதி விரட்டப்படுகிறது, நேர்மை புறக்கணிக்கப்படுகிறது என்கிறோம். மலேயா நாட்டுச் சட்டம் அந்த ஒரு குற்றத்தைத்தான் தோழர் கணபதி மேல் காட்டுகிறது.

தோழர் கணபதி பரம்பரைக் கொலைக் கொள்ளைச் சதிக்காரரா? ஆதாரம் எதுவும் காட்டப்படவில்லை! ரிவால்வரை வைத்துக்கொண்டு யாரையேனும், வெள்ளையரைப், பல சந்தர்ப்பங்கள் இருந்தபோதும் மிரட்டினாரா? அப்படியொன்றும் செய்தி வரவில்லை! ரிவால்வரை அவரிடமிருந்து பறித்தபோதும், பறித்தவரை அதனைக்கொண்டு சுட முயற்சித்தாரா? அதுவும் இல்லை! என்றாலும் அவரைத் தூக்குமேடை கூவி அழைக்கிறது!

தூக்குமேடை ஏற நிற்கும் தமிழனைக் கீழே இறக்க இப்பொழுது வழியேதும் இல்லாமற் போகவில்லை. இரக்கம் என்னும் ஒரு பொருள் சிலாங்கூர் சுல்தானிடம் இருக்குமேயானால், தோழர் கணபதியை அனைத்துக் கொள்ள இருக்கும் ஒருபெரும் ஆபத்தினின்றும் தப்பி வாழச் செய்ய முடியும்.

எனவே குற்றமற்ற அந்தத் தமிழனை—தன்னைத் தொத்திக்கொண்டிருந்த ஒரு சிறு குற்றத்தையும் கழுவிவிடச் சென்றுகொண்டிருந்த உண்மையாளனை, நீதி, நேர்மை, இரக்கம், கண்ணியம் ஆகிய எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுச் சட்டம் தூக்குமேடைக்கு இழுத்துச் சென்றுள்ளது. சட்டத்தால இழுத்துச் செல்லப்பட்டுள்ள அந்த இளைஞனை மீட்சியுறச்செய்யத், தன்கருணையைத் தூதனுப்பும்படியாகச் சிலாங்கூர் சுல்தானை தமிழகம் கேட்டுக்கொண்டுள்ளது. மலேயா வாழ் மக்களும் கேட்டுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழர்களின் — திராவிடர்களின் கோரிக்கையை நிராகரித்து, இரக்கங் காட்டத் தவறி, ஒரு தமிழனின் வாழ்வு மலேயாவின் தூக்குமேடையில் சிதைக்கப்பட்டால், அதனால் ஏற்படும் பெரும்புண், பழிக்குப் பழி வாங்க அஞ்சாப் பழம் புண்ணாக மாறி, என்றென்றும் தமிழர்கள் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருக்கும் என்பதை மட்டும் மலேயா அரசாங்கம் உணரவேண்டும். உணர்ந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும். நடந்துகொள்ளும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

நிரபராதி ஒருவனைத் தூக்கிலிட்டுத் தன்கோலைக் கறைப்படுத்திக் கொண்டது மலேயா அரசாங்கம் என்றவாறு வருங்கால வரலாற்றில் எழுதப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பும் மலேயாவையே சார்ந்ததாகும்.

ஒரு கர்சிராஜன்—ராஜகோபாலன் ஆகியோரை அன்றொரு நாள் தூக்குமேடை கூவியழைத்தது. நல்லறிவாளர்கள் முயற்சியால் அவ்விருவரும் காப்பாற்றப்பட்டு வாழ்வளிக்கப்பட்டனர். அஃதேபோல் தோழர் கணபதியும், சுல்தானின் கருணையின் காரணமாகவாவது காப்பாற்றப்பட்டு, தன் தாயகம் சேர்ந்து நம்மையெல்லாம் மகிழ்விப்பார் என்று வழிமேல் விழிவைத்து நிற்கிறோம்.

* * *

அலை ஓசைமட்டும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆதிக்கம்தேட முனைந்தால், அவர்களை அடக்கவும் மடக்கவும், ஆடு தூரத்தக்கண்டு அஞ்சி ஓடும் ஆற்றலழகன், புலியைப் பூனையாக்கும் ஆற்றலரசனவானாம்! எவ்வளவு வேடிக்கையான வாதம் புரிகிறது பாருங்கள், கல்கி! பொதுமக்களின் சிந்தனைத் திறத்தைப்பற்றி அவ்வளவு அலட்சியம் இருக்கிறது அந்த ஏட்டுக்கு. நாலுவரிக்கு முன்னால் தானே நாமே தீட்டினோம், எவ்வளவு முயன்றும் இந்தியநாட்டுத் தலைவர்களால், இந்திய முதலாளிகளைச்சரிப்படுத்த முடியவில்லை என்று—நாமே உடனே தீட்டுகிறோமே, வெளிநாட்டு முதலாளிகளின் ஆதிக்க ஆசையை மட்டந்தட்டும் அறிவும் ஆற்றலும் எமது தலைவர்களுக்கு உண்டு என்று — முடமானவன், பாபம், ஆகவேதான் நடக்க முடியவில்லை என்று கூறிவிட்டு, முடவன் முத்துச்சாமியை ஓட்டப்பந்தயத்துக்கு அனுப்பி, முதல் பரிசு பெறச் செய்வோம் என்றும் சொன்னால், முத்துச்சாமியின்காலைப்பற்றி அல்ல, நமது 'தலையைப்பற்றியே' சந்தேகிப் பார்களே, என்று துளியும் எண்ணிடாத ஏமாளிபோல, "கல்கி" எழுதலாமா?

அறிவும் ஆற்றலும், அன்னிய முதலாளிகளின் கொட்டத்தை அடக்குமளவுக்கு இருப்பது உண்மையானால், அந்த அறிவாற்றல் ஏன், இங்கு பயன்படவில்லை? மக்கள் இப்படி யோசிப்பார்களே—நமது வாதம் கேவலம் வக்கரபுத்தியின் விளைவு என்று ஏற்படுமே என்பதுபற்றி யோசிக்காமலேயே, தங்கள் கட்சியினர் ஆளுகின்ற காரணத்தால், அவர்கள் செய்வது கேடு சூழ்ந்ததாக இருப்பினும்எதாவது 'சப்பைக் கட்டு' போட்டு ஆதரித்தாக வேண்டும் என்று 'கல்கி' எண்ணுகிறது போலும்! கட்சிப்பற்று தேவைதான்—ஆனால் நாட்டைக் கெடுக்கும் நாசகாரியத்துக்கு உடந்தையாக இருக்க வேண்டுமா, அதன் பொருட்டு?

இந்திய நாட்டு முதலாளிகளைச் சரிக்கட்டமுடியாத நிலையிலே, உள்ளவர்கள், அன்னிய முதலாளிகள், ஆதிக்கம் பெறத்திட்டமிடும்போது, எப்படித்தடுக்க முடியும்? அவ்வளவு ஆற்றல் இருந்தால், இந்நாட்டு முதலாளிகள் இந்த அளவுக்குக் கொக்கரிக்கவேமாட்டார்களே!

பொதுமக்களை, எதையாவது சொல்லி, சமாதானப்படுத்திவிட வேண்டும், மனக்கொதிப்பை மாற்றவேண்டும், என்று எண்ணும் "கல்கி" அறிவுத்துறைக்கு நாட்டுக்கும் நிச்சயமாகத் தீங்கு இழைக்கிறது.

நாம், எதிர்க்கட்சியினர், எனவே, நமது கண்டனம், கட்சிமாச்சரியத்தின் விளைவு, என்று விவரமறியாதரால, கருதப்படக்கூடும். 'கல்கி'போ, ஆளும் கட்சியின் ஆதரவு பெற்றது —நெஞ்சிலே உரமும் நேர்மைத்திறமும் இருக்குமானால், கண்டித்திருக்க வேண்டும், தன்கட்சித் தலைவர்களின் தவறான போக்கை—நாடுஉருப்படும்—நல்லாட்சி மலரும்-மக்கள் வாழ்வர். இதை மறந்து "சொத்தை சோடை"யான வாதங்களைப்புரிந்து அன்னியநாட்டு முதல் இங்கு வருவது, கேடு செய்யாது என்று பொதுமக்களை எண்ணும்படிச் செய்கிறது "கல்கி." மக்களாட்சிக் காலத்திலே, இத்தகைய "மனப்போக்கு" மாபெரும் துரோகமான காரியம் என்பதை 'கல்கி' உணரவேண்டுகிறோம்.

செல்லாக்காசுகொடுத்து ஏமாற்றுபவன்மட்டுமல்ல, அந்தக் காசைவாங்கித்தட்டிப்பார்த்து, "பரவாயில்லையே! சத்தம் நன்றாகத்தான் இருக்கிறது! செல்லும் காசுதான்!" என்று கடைக்காரருக்குத் தந்திரமாக கூறுபவனும்கூடத்தான், குற்றவாளி என்று அறநெறி அறிந்தோர் கூறுவர்.

தங்கள் ஆட்சியின்போது, அற்புதமான முன்னேற்றம் நடைபெற்றதாகவும், புதுப்புதுத் திட்டங்கள் தீட்டப்பட்டதாகவும், காட்டிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஆளும்கட்சிக்கு ஏற்படுவது இயற்கை. ஆனால் அதற்காக, எதிர்காலத்தைக் கெடுக்கக்கூடாது, இந்நாட்டை, வல்லரசுகள் நடத்தும் அரசியல் சொக்கட்டான்காயாக்ஆக்குவதும்கூடாது! இதனைத் தைரியமாக எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு "கல்கி" போன்ற ஏடுகளுக்கு இருக்க வேண்டும். நாம், அத்தகைய "மேதைகளின்" ஏடுகளிலே, வெறும் 'அலை ஓசையை' மட்டுமல்ல, அறிவுத் தெளிவை, எதிர்பார்க்கிறோம். சட்சிக்கு ஒருகம்பட்டமாகமட்டும்இருப்பதுகூடாது, மக்கள் முரசாகவேண்டும். மாறவேண்டும்.

*

உடுமலை சிரிக்கும் மட்டும்

12-ம் பக்கத் தொடர்ச்சி

தடைப்படுத்தி வைப்பதில் ஓரளவுக்கு நியாயமிருக்கமுடியும். வேங்கைக்குச் சினம் ஏற்படாதபடி சிறு நரியின் நடப்பைத் தடுத்து வைப்பதில் அர்த்தமிருக்க முடியும்! ஆனால் சிறுநரிக்குச் சினம் ஏற்படக்கூடாது என்பதற்காக வேங்கையின் போக்கைக் கட்டுப்படுத்துவாருண்டோ? அப்படி யாரேனும் செய்ய முயலுவாராயின் அவரைப் பைத்தியக்காரர் என்று தானேஎள்ளிநகையாடும்இவ்வையம்! அதுபோல, ஒரு சிறு கூட்டம் வற்புறுத்துகிறது என்பதற்காகப், பொதுமக்களிடம் நம்பிக்கைப் பெற்ற ஒரு பெருங் கழகத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்து வைப்பது, யார்தான் பாதுகாப்பின் இலக்கணம் என்று கூறத் துணிவர்.

ஆட்சியின்கோல் எப்படி வேண்டுமானாலும் சாயலாம் என்ற கருத்துக்கு வக்கமளிப்பது போல் அமைந்திருக்கிறது, அதேஉடுமலைப் பேட்டையில் பேசிய மந்திரியாரின் பேச்சு. பெரியார் வருவதற்கு முதல் நாள் உடுமலைக்கு வந்த மந்திரி தோழர் கே. சந்திரமௌலி, தாலுகா காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசும்போது,

"நமக்கு இன்னல் விளைவிக்கும் முறையிலேயே அவர்கள் நடவடிக்கை இருந்து வருவதால், கிராமங்களிலும், நகரங்களிலும் அவ்வியக்கத்தைப் பரவவிடாமற் தடுக்கக் காங்கிரஸ் ஊழியர்கள் பாடுபட வேண்டும்."

என்று கூறியுள்ளார். நாட்டுமக்களுக்கு நடுநிலைமையாக இருந்து செயலாற்ற வேண்டிய பொறுப்பு வாய்ந்த மந்திரியாரே இப்படித் தூண்டிவிடுவாரேயானால், பின் நாட்டில் என்னதான் நிகழாது. "பரவவிடாமற் தடுக்கக் காங்கிரஸ் ஊழியர்கள் பாடுபட வேண்டும்." என்று சொல்லுவதால், கல்லடித்தோ,

(5-ம் பக்கம் பார்க்க)

★ அந்தக் கூச்சல்! ★

—✻—

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கிராமவாசிகள்,—வரிசைவரிசையாக, வந்தனர்.

பலப்பல கிராமங்களிலிருந்தும் புறப்பட்டு வந்தனர்— காய்ந்த வயிறினர், வறண்ட தலையினர், பஞ்சடைந்த கண்ணினர்.

பலப்பல மைல்களைக் கடந்து, நடந்துவந்து சேர்ந்தனர் தலைநகருக்கு.

கொடிகளுடன், கோஷத்துடன். அறுவடையான கதிர்களுடன், கந்தல் ஆடையுடன், பல கிராமங்களைக் கடந்து, பசியையும் பஞ்சத்தையும் போக்கி, பாடுபடும் தங்களைக் காப்பாற்றவேண்டும், ஆளவந்தார்கள் என்று, கேட்டுக் கொள்ள வந்தனர்.

புனிதயாத்திரைக்குப் புறப்படுவது போலக்கிளம்பினர்—பழைய காலத்திலே, பயிர்பச்சையைக்காட்டு மிருகங்கள் அழித்து விட்டன என்பதைக்கூறி, மன்னனிடம் உதவிகேட்க வரும் மக்கள்போல, மக்களாட்சி நடைபெறும் இந்நாட்களிலே, தலைநகர் நோக்கிக்கிளம்பினர், தரித்திரத் தேள் கொட்டியதால் துடித்த மக்கள்.

அந்தக்காட்சியை நாம் மனக்கண் முன் நிறுத்திப்பார்த்தாலே உருக்கமானதாகத் தெரியும்.

கிளம்புவோமா?
எங்கே?
தலைநகருக்கு!
ஏன்?
முதலமைச்சரைப் பார்க்க.
பார்த்தால் பயன்?
பார்த்துக்கூறுவோம் நமது பரிதாபகரமான நிலைமையை?
சொன்னால் பரிகாரம் கிடைக்குமா?
நாம்தானே இந்தச் சர்க்காரை அமைத்தோம். நமது பேச்சைக் கேட்க மறுப்பரோ?
என்னமோ! எதற்கும் போய்ப் பார்ப்போம்.

இவ்விதம் பேசிக்கொண்டு, பட்டிதொட்டிகளிலிருந்தெல்லாம் கிளம்பி, நடந்து, சென்று தலைநகரை — லட்சுமணபுரியை — அடைந்தனர், பத்தாயிரம் உழவர்கள், ஏப்ரல் 20-ந் தேதி.

ஐக்யமாகாணத்திலே, நடைபெற்ற இந்த 'உழவர் ஊர்வலக்காட்சி' காங்கிரசாட்சி, மக்களை எத்தகைய வாழ்க்கையிலே வைத்திருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

ஏழை பங்காளர்களல்லவா, ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் — தேனும் பாலும் ஓடும் என்ற நல்வாக்குக் கொடுத்துவிட்டு — வந்தவர்களல்லவா அவர்கள் ஆட்சியிலே, கிராமமும் நகரமும் செழிப்புற்று, மக்கள் வாழ்க்கை வளம்பெற்றல்லவா இருக்கவேண்டும்! ஆனால் ஆட்சிப்போக்கு, பட்டினிப் பட்டாளத்தைத் திரட்டுவதாக இருக்கிறது என்பதைத்தான் லட்சுமணபுரிக்குச் சென்ற உழவர் ஊர்வலம் எடுத்துக் காட்டுகிறது.

சென்ற தேர்தலின்போது, இதே பட்டிதொட்டிகளிலெல்லாம், ஏழை மக்கள், உற்சாகமாக ஊர்வலம் சென்றனர், மஞ்சள் பெட்டியை நிரப்ப! விழாக்கள் நடத்தினர் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதும். இப்போது, வேதனையைத் தெரிவித்துக் கொள்ள, பட்டினிக் கொடுமையிலிருந்து மீள்வதற்குப் பரிகாரம் கேட்க, ஊர்வலம் வந்தனர்.

நல்ல வேளையாக, உழவர்கள், சோஷியலிஸ்டுக் கொடிகளை ஏந்திச் சென்றனர்— அதனால்தான் தப்பிப் பிழைத்தனர். சம்மட்டி அரிவாள் கொடியாக இருந்தால், பீரங்கி முழங்கியிருக்கும்!! ஊர்வலம் என்றேகூட அதற்குச் சர்க்கார் பெயரிட்டிருக்கமாட்டார்கள்-படையெடுப்பு என்றே கூறிவிட்டிருப்பார்கள்.

ஐக்ய மாகாணத்திலே நடைபெற்ற அதேவிதமான ஊர்வலம் இங்கு நாம் நடத்தினாலும் சர்க்கார் ஊர்வலம் என்று கூறமாட்டார்கள் —அக்ரகார அழிப்புப்படை என்றோ, நாத்திகக் கூட்டம் என்றோ, பட்சப் படையெடுப்பு என்றோ கூறி— துப்பாக்கியை ஏவி இருப்பர். நாடகமே அல்லவா நமது சர்க்காருக்கு, 'பயமூட்டி' யாகிவிட்டது! போடு தடை! என்றுகூறுகிறார்கள்.

போராபத்து அந்த ஊர்வலத்தினருக்கு ஏற்படாததற்குக் காரணம், அவர்கள் சிவப்புச் சட்டையுமல்ல, கருப்புச் சட்டையுமல்ல — செல்லப்பிள்ளை ஜெயப்பிரகாசின் கட்சியினர்.

கட்சி எதுவாக இருப்பினும், குமுறும் நெஞ்சினர் அந்த உழவர்கள்—ஆட்சியின் கோளாறின் விளைவு, அவர்களின் வேதனை. அந்தவேதனையைக்கூறிப் பரிகாரம் தேடவே, வந்தனர். வந்தவர்கள், கண்டது என்ன?

லட்சுமணபுரியிலே, சர்க்கார் அலுவலகத்தைச் சுற்றிலும் பன்னிரண்டு அடி உயரமுள்ள சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தனவாம்-இந்தப் பட்டினிப்பட்டாளம் உள்ளே புகாதபடி தடுக்க! மக்களாட்சி!!

உழவர்கள், மரத்தடியிலும் வீதியிலும், வேறுகட்டிட ஓரங்களிலும், தங்கினர்.

சர்க்கார் அலுவலகத்தை இந்தப் படை தாக்கிவிடாதபடி பாதுகாக்க, பெரும் போலீஸ்படை.

புதிதாக இதற்கென எழுப்பப்பட்ட சுவர்கள்! 12 அடி உயரமுள்ள சுவர்கள்! இந்தப்பாதுகாப்புடன், போலீசும் கூட! மக்களிடம், அவ்வளவு நம்பிக்கை, மக்களாட்சி நடத்தும் மகானுபாவர்களுக்கு!!

புலி, கரடி, சிறுத்தை, ஓநாய்களுக்குப் பயந்து அரண்மனைக்குள்ளே ஓடி ஒளித்துக்கொண்ட ராஜ குடும்பம் போல—புரட்சிப் படை நெருங்கிவிட்டசெய்திகேட்டு, அரண்மனையைக் கோட்டையோக்கிக் கொண்டு உள்ளே ஓடி ஒளிந்த கொடுங்கோலன் போல, ஐக்யமாகாண சர்க்கார், பட்டினிக் கொடுமையை எடுத்துக்கூறவந்த பாட்டாளிகளைக் கண்டு பயந்து, மதில்களை எழுப்பிக்கொண்டது! அவ்வளவு மருட்சி, மக்களிடம்! அத்தனை பீதி ஏற்பட்டுவிட்டது, மக்களிடம்! எந்தச் சமயத்தில் எது நேருமோ என்ற பயம் பிடித்தாட்டு

கிறது! மமதை மடிந்துவிட்டது, மருட்சி பிறந்துவிட்டது!!

சுவர்களுக்குப் பின்னாலே, சர்க்கார்!

சர்க்கார் மாளிகையைச் சுற்றி நிற்கிறது பதினாயிரம்பேர்கொண்ட பாட்டாளிக் கூட்டம்.

ஆராள்வோர், உள்ளே மருட்சியுள்ளத்துடன், வெளியே, எம்மைப் பாரீர்! எமது குறையைக் கேளீர்!! என்று மக்கள் கூட்டம். ஊராள்வோருக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையே, தாவிக்குதிக்கவும் முடியாத அளவு உயரமுள்ள சுவர்கள்-பன்னிரெண்டுஅடிஉயரமுள்ள சுவர்கள்! இது பொதுமக்கள் சர்க்காரின் இலட்சணம்!!

ஒருமணி நேரத்துக்கு மேலாகவே, கடும்வெயிலில் நின்று கிடந்தனர் மக்கள் - உள்ளே முதலமைச்சரும் பிறரும், ஒழியட்டும் இந்தக் கூட்டம் என்று காத்துக்கொண்டிருந்தனர் போலும். ஒருமணி நேரமாகியும், மக்கள் போவதாகத் தெரியவில்லை. முதலமைச்சரைக் கண்டு, வந்த 'சேதி'யைக் கூறாமல் திரும்புவதில்லை, என்ற முடிவு, உழவர்கள் கொண்டனர். ஒருமணி நேரமாகியும் போகவில்லை கூட்டம், ஆனால், பொறுமையை இழந்து, ஆத்திரத்தில், கேடான காரியமும் செய்யவில்லை, எனவே அவர்களைப் பார்த்துப் பேசிவிடுவதே நல்லது என்று எண்ணி முதலமைச்சர், பண்டிதர் பந்து கூட்டத்தை நோக்கி வந்தார். மக்கள் தமது குறைகளைக் கூறினர்—அவர். ஏதேதோ சமாதானம் கூறினார்—அவர்கள் திருப்தி பெறவில்லை. உடனே அவருக்குக் கோபம் தாளவில்லை! "யார் உங்களை இவ்வளவு தொலைவு வரச்சொன்னது?"

"உங்கள் ஊர்களிலே உள்ள உதயோகஸ்தர்களிடமோ, காங்கிரஸ் ஊழியர்களிடமோ, சொன்னால், உங்கள் குறைகளை அவர்களே தீர்த்துவைப்பார்களே!"—என்று கர்ஜனை செய்தார்.

மக்கள் மருளவில்லை—"நாங்கள் எங்கள் குறைகளைச் சொன்னால், கேட்க ஆள் இல்லை, கிராமங்களிலே!" என்று பதிலளித்தனர்.

"தெரியும் எனக்கு! உங்களை யாரோ வேண்டுமென்றே இங்கு இழுத்துவந்து நிறுத்தி, கூச்சலிட வைத்திருக்கிறார்கள்" என்று கண்டிக்கலானார் முதலமைச்சர் பந்து.

கூச்சல்! பொதுமக்கள் — பாட்டாளிகள்—தங்கள் குறையைக்கூறினால் அதற்குப் பெயர், கூச்சல்! அதுவும், யாரோ, கூச்சலிடும்படி கற்றுக் கொடுத்திருக்கிறார்களாம்!!

இதே மக்கள், வெள்ளையராட்சியின் போது, ஊர்வலம் வந்தபோது, அதற்குப் பெயர், பவனி, எழுச்சி குறையைக் கூறியபோது, அதற்குப் பெயர், பொதுஜன வாக்கு — மக்கள் முழக்கம் — 'சத்ய ஜ்வாலை'—இப்படி எல்லாம் கூறினர். இவ்விதமெல்லாம் கூறிய கூட்டத்தைச் சேர்ந்த பண்டித பந்துவின் ஆட்சியின் அலங்கோலத்தால் அவதிக்கு ஆளாகி, அதே மக்கள், அபயமளிக்கும்படி, அமைதியுடன் வந்து கேட்கும்போது, மக்களாட்சி நடத்தும் அந்த மகானுபாவர், கூறுகிறார், அவர்கள் கூச்சலிடுகிறார்கள், என்று!

பொதுமக்களின் குரல், முன்பு, கீதமாக இருந்தது, காங்கிரஸ் தலைவர்களின் செவிக்கு — இப்போது, கூச்சலாகி விட்டது, பொதுமக்களின் பேச்சு!!

வெள்ளை அதிகாரவர்க்கம், இதே 'பாஷையில்' தான்பேசிற்று. பொது மக்களை, காலிகள், கலகக்காரர்கள் என்று பெயரிட்டனர் — பொது மக்களின் குரலை, கூச்சல், என்றனர். அந்த வெள்ளை அதிகாரவர்க்கத்தின் போக்கிலேயே, நடந்து கொண்டு வருகின்றனர், மஞ்சள் பெட்டியினர். எனவேதான், அதே 'பாஷை' பேசி, மக்கள் குறையைக் கூறிக்கொள்ள வரும்போது, கூச்சலிடுகிறது கும்பல் என்று கேலியும் கண்டனமும் கலந்த குரலில் பேசுகின்றனர்.

விழா முடிந்துவிட்டது; வேதனை அதிகரித்துவிட்டது.

வேண்டுகோள், நிராகரிக்கப்படும் காலம்; பொதுமக்களின் குரல், கூச்சலாகக் கருதப்படும் காலம், பிறந்துவிட்டது.

மெள்ள மெள்ள, ஆனால் தவறாமல், நிலைமையை மக்கள் உணர்ந்து கொண்டு வருகின்றனர். 'கூச்சல்' நிச்சயமாக, அதிகரித்துக் கொண்டுதான் போகும்! பன்னிரண்டு அடி உயரம் போதுமானதாக இராது, மேலும் உயரமான மதில்களும் தேவைப்படக்கூடிய காலம் வரக் கூடும். ஆட்சிப் போக்கு அவ்விதம் இருக்கிறது! பண்டாரம், பணம் சேர்ந்தான பிறகு, 'சன்னிதானம்' ஆகிவிடுவதுபோல, ஊழியர்களாக இருந்தவர்கள், 'கனம்'களாகி விட்டனர், இப்போது அவர்களுக்கு, பொதுமக்களின் குரல், 'கூச்சலாக' இருக்கிறது!

ஆனால், வரலாறு படித்தால், இந்தக் 'கூச்சல்' சாமான்யமான சக்தி வாய்ந்ததல்ல, என்பது விளங்கும்.

இதுகள் ஏன் இப்படிக் கூவுகின்றன!—என்று தான், சாய்வதற்கு முன்பு, ஒவ்வொரு கொடுங்கோலனும், ஆணவத்துடன் கேட்டான், என்று வரலாற்றுச் சுவடியில் குறிப்பு இருக்கிறது. வரலாற்றில் இடம் பெற்றுள்ள 'கூச்சல்'—இப்போதுதான், துவக்கமாகி வருகிறது!

✻

சந்தாதார்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்களின் தேதி முடியும் காலம் சந்தா விலாசத்துக்குக் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து, மேற்கொண்டு சந்தாத் தொகையை அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறினால் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா.

மானேஜர்.

இன்பம் காண

"புத்திசாலியான மனிதன் தன்னைச் சார்ந்து நிற்கும் பொருள்களிலேயே இன்பத்தைக்காண முயல்வான். மனித உணர்ச்சி மூலமாக அல்லாமல் வேறு எந்த வகையாலும் இது சாத்தியமல்ல."

—டேவிட் ஹ்யூம்

உடுமலை கற்பிக்கும் பாடம்

—*—

காங்கிரஸ் கொலு வீற்றிருக்கும் சென்னை மாகாணத்தில், 144 ஜுர நோய், நாடு நகரங்கள், பட்டி தொட்டிகள் தோறும் தொத்து நோய் போல் பரவிவரக் காண்கிறோம். இது அன்றாட நிகழ்ச்சியாகவும் ஆகிவிட்டது. இந்த ஜுர நோய் உடுமலைப்பேட்டை நகரைச் சற்றுக் கடுமையாகவே தாக்கியிருக்கிறது இப்பொழுது.

16—4—49 சனிக்கிழமையன்று உடுமலைப்பேட்டையில் 144 பிரிவை மீறினார் என்ற குற்றத்திற்காகப் பெரியார் இராமசாமியும், மற்றும் மூவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் என்றும், பிறகு, விரும்பும் போது அழைப்பு அனுப்பி அழைத்துக்கொள்ளலாம் என்று, அவர்களின் சொந்தப் பொறுப்பின் மீது கொண்ட நம்பிக்கையின் பேரில் நள்ளிரவில் விடுவிக்கப்பட்டனர் என்றும் செய்திகள் நம்மை எட்டியக் கண்டோம். இது, உடுமலை மக்களுக்கும், மற்றும் மாகாணத்திலுள்ள பலலோர்க்கும் திடுக்கிடச் செய்யும் செய்தியாகவும், திகைப்பைத் தரும் சம்பவமாகவும் இருந்துவருகிறது.

பெரியார் அவர்கள் கோவை மாவட்டத்தின் பல பாகங்களைச் சுற்றிக்கொண்டு, நகரசபை வரவேற்பு, பொதுக்கூட்டம் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொருட்டு, உடுமலைப்பேட்டைக்கு 16—4—49-ம் நாள் வந்திருக்கிறார். வந்ததும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று 144 தடையுத்தரவை அவரிடம் கொடுத்துள்ளார்கள் போலீஸ் அதிகாரிகள். பொதுக்கூட்டத்திற்கு மட்டுமே தடை; நகரசபை வரவேற்பு விழாவிற்கு எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லை.

செல்வாக்குப் பெற்று வளர்ந்துள்ள ஒரு கழகத்தின் மாபெருந் தலைவர் வரும்போது, பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களடங்கிய நகரசபை, நகர மக்களின் சார்பாக வரவேற்பளித்திருக்கிறது; பெருமைப் படுத்தியிருக்கிறது; பாராட்டியிருக்கிறது; அவருடைய அறிவுரைகளை விரும்பிக் கேட்டிருக்கிறது. பெரியாருக்கு வரவேற்பளித்துப் பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிற உடுமலைப்பேட்டை, அவர் பொதுக்கூட்டத்தில் பேசக்கூடாது என்று சொல்லிக் கைது செய்து சிறுமையையும் வரவழைத்துக் கொண்டிருக்கிறது. உடுமலையில், பெரியாரை, மக்களின் பிரதிநிதிகள் வரவேற்றிருக்கின்றனர்; ஆட்சிப் பீடத்தின் பிரதிநிதிகள் தடுத்திருக்கின்றனர். என்னே விந்தை!

உடுமலையில் பொதுக்கூட்டம் நடைபெறக்கூடாது என்று தடுப்பதற்கு அதிகார வர்க்கத்தினர் கூறியிருக்கும் காரணம்: கலவரம், குழப்பம், இரத்தக்களரி ஆகியவை ஏற்படும் என்பதாகும். யாரோ ஒரு சிலர், எண்ணிக்கையில் அடங்காத மிகச் சிலர் வற்புறுத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக, அதிகார வர்க்கம் இணங்கி கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது. கதர்ப்போர்வையில் ஒளிந்து நின்று எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் இன்றைய ஆட்சி ஆதரிக்கும் என்பதற்கு, இது ஒரு எடுத்துக்காட்டாகும் திராவிடர் கழகத்தின் தடைபடா வளர்ச்சியின் வேகத்தைக் கண்டு, வெம்பி, வேதனையடைந்து, மனங்கருகி, உள்ளம் நொந்த மட்டரகங்கள் சிலரின் தூண்டுதலின் பேரில், அசைந்து கொடுப்போரால் இத்தடையுத்தரவு விதிக்கப்பட்டது என்று தெரியவருகிறது.

உடுமலைப்பேட்டைக்குப் பெரியார் அவர்கள் வருவது ஏறக்குறையப் பதினைந்து நாட்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து துரிதமாக நடைபெற்று வந்தன என்பது எல்லோர்க்கும் தெரிந்ததேயாகும். இருந்தும் 15—4—49-ம் நாள் தான் திராவிடர் கழகக் கூட்டம் எதாவும், உடுமலை நகரில், ஒரு மாத காலத்திற்கு நடைபெறக் கூடாது என்று முன்னெச்சரிக்கை எதுவுமின்றி, திடும் என்று அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர். இதற்குப் பொருள் என்ன? சட்டம் எங்கள் கையிலிருக்கிறது, அதை எப்படி வேண்டுமானாலும் பிரயோகிக்க எங்களுக்கு உரிமையிருக்கிறது என்பதைத் தவிர, அது நீதிக்கோ, நேர்மைக்கோ, பொதுநலப் பண்புக்கோ கட்டுப்படவேண்டிய அவசியமில்லை என்பதை இது தெளிவுறுத்தி நிற்கவில்லையா?

கோவை மாவட்டத்தின் பல பேரூர்களிலும், சிற்றூர்களிலும் பெரியார் அவர்கள் சொற்பொழிவாற்றியிருக்க, அங்கெல்லாம் சிறிதளவு கூடக் கலவரமோ, குழப்பமோ எதுவும் ஏற்படா வகையில் அமைதியானமுறையில் கூட்டங்கள் பலவும் நடந்திருக்க, கூட்டங்கள் நடந்த பிறகுங்கூட அங்கெலலாம் நல்ல சூழ்நிலைகளை நிலவி வருகின்றன என்பதும் தெரிந்திருக்க, உடுமலைப்பேட்டையில் மட்டும் கலவரம், குழப்பம் வரும் என்று எதிர்பார்ப்பானேன்? இதற்கு முன்பு பெரியார் அவர்கள் உடுமலைக்கு வந்தபோது கலவரம் நடந்ததாக எந்தக் குறிப்பாவது ஆட்சியாளரால் காண்பிக்கத்தான் முடியுமா? அல்லது இதற்கு முன்பு நடந்த திராவிடர் கழகக் கூட்டம் எதில் தானுகட்டும் குழப்பம், அமைதியின்மை நடைபெற்றது என்று யார்தான் கூற முடியும்? அப்படியே காலிகளின் முயற்சியால், சிறு குழப்பம் தோன்றுவதாகவே வைத்துக்கொண்டாலும், அதனை அடக்குவதற்கு உடுமலைப் போலீசாருக்கு ஆற்றல் இல்லையா? பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தான் போலீஸ் போன்ற பாதுகாப்புப் படைகளை தவிர, பொதுமக்களின் எந்த நிகழ்ச்சியையும் எப்பொழுதும் தடுத்துவைப்பதற்காகப் பாதுகாப்புப் படைகளை எந்த நாகரிகமுள்ள நாட்டிலும் கொண்டிருக்கமாட்டார்களே! ஒரு சிறு கூட்டம் செய்யும் சிலசெயல்கள், ஒருபெருங் கூட்டத்தின் எதிர்ப்புக்கு ஆளாகி, அதனால் கலவரமோ, குழப்பமோ நடைபெறக்கூடும் என்ற அச்சம் தோன்றுமேயானால், அப்பொழுது வேண்டுமென்றால், அந்தச் சிறு கூட்டத்தின் நடவடிக்கைகளைத்

(9-ம் பக்கம் பார்க்க)

ஆரிய—திராவிட இரத்தக் கலப்பு!

'மனித இன நூல்' வல்லுனர்களில் ஒருவரான தோழர் லூயி மோண்ட் என்பவர் பிரான்சிலிருந்து இப்பொழுது இங்கு வந்துள்ளார். இவருக்குத் தமிழ் மொழியிலும் சமஸ்கிருதத்திலும் நல்ல புலமை உண்டு.

"இந்தியாவின் பெருமைக்கு எந்தக் கலாச்சாரம் எவ்வளவு உதவியிருந்த போதிலும், முதற் பங்கு திராவிடர்களுடைய கலாச்சாரத்திற்கே சேரவேண்டும்"

என்று, சென்னைக்கு வந்தவுடன் தம்மைப் பேட்டிகண்ட நிருபரிடம் கூறினார். அதோடு இங்குள்ள பல ஜாதிகளைப் பற்றியும், சிறப்பாக ஆதித்திராவிடர்களைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்காகவே இங்கு வந்திருப்பதாகவும் கூறியுள்ளார். தோழர் லூயிமோண்ட், இந்நாட்டுக் கலாச்சாரங்களில் எது முதன்மை வாய்ந்தது என்பதைப் பற்றியும், தாம் இங்கு வந்திருப்பதன் நோக்கத்தைப் பற்றியும் இங்கு வந்தவுடனேயே கூறிவிட்டார். இனிமேல் அவர் இங்கிருந்துகொண்டு செய்யப் போகும் ஆராய்ச்சியால் என்னென்ன உண்மைகளைக் கண்டறிந்து கூறுவார் என்பதனையே பொதுவாக எல்லோரும் எதிர்ப்பார்ப்பர் — எதிர்பார்க்கவேண்டும் — அதுதானே முறையுங்கூட. ஆனால், இங்குள்ள சிலருக்குத் தோழர் லூயிமோண்ட் கூறியது பிடிக்கவில்லையோ என்னவோ, மேலும் மேலும் அவரைப் பேட்டிகண்டு எதெதையோ கேட்டுத் தங்கள் கொள்கைக்கு ஆதரவு கிடைக்கக் கூடிய முறையில் எதாவது கூறமாட்டாரா என்ற அங்கலாய்ப்போடு பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

14—4—49-ல் "குளோப்" நிருபருக்கு அளித்த பேட்டியில், "திராவிடர் கலாச்சாரமே சிறந்த"தென்று தோழர் லூயிமோண்ட் கூறினார். இவ்வாறு கூறி நாலுநாட்கள் கூட ஆகவில்லை, ஆரிய கலாச்சாரமே அகில உலகுக்கும் அடிப்படையாக உள்ளதென்று மனப்பால் குடித்துக்கொண்டு இருக்கும் 'மமதேவதா' வழிவந்தோர் உடனே 'தினமணி, நிருபர் ஒருவரை லூயிமோண்ட் அவர்களிடம் அனுப்பிப் பல கேள்விகளைக் கேட்கும்படி செய்தனரோ என்று பொருள் கொள்ளும் முறையில், 18—4—49-ல் "தினமணி" நிருபர் ஒருவர் அவரைப் பேட்டிகண்டு பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்.

1. இந்நாட்டிலுள்ளமொழிகளைப் பொறுத்தது. இதற்குத் தோழர் லூயிமோண்ட் கூறிய விடை,

"மொழிகளைப் பொறுத்த வரையில், இந்தோ ஆரிய மொழிகளைத் தனித் தனியாக அடையாளம் கண்டுபிடித்து விடலாம். ஆனால், தமிழ், தனித் தன்மை வாய்ந்த பூர்வீகத் திராவிட மொழி. இதன் சகோதர மொழிகளாகிய கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றில் தற் சமயம் சமஸ்கிருதம் தான் அதிகம் இருக்கிறது. பிறமக்களுடன் தமிழருக்கு இருந்த நீண்ட காலத் தொடர்பின் விளைவாகத் தமிழிலும் அந்நிய சொற்கள் நிரம்ப இருக்கின்றன. இது ஒரு நல்ல அறிகுறி. இந்தச் சொற்களைத் தமிழிலேயே வைத்துக் கொள்வது அவசியம் என்பது என் கருத்து"

என்று கூறியிருக்கிறார். 'தினமணி' நிருபர் மொழிகளைப்பற்றி எந்த எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு கேட்டாரோ, அந்த எண்ணம் நிறைவேறவில்லை. மாறாகத், தமிழ்மொழியின் உயர்வைப் பற்றியும், அதன் தனித்தியங்கும் சிறப்பைப் பற்றியுமே அவர் பேசியிருக்கிறார். தமிழினின்றும் பிரிந்துபோன கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகள் தனித்து நின்று இயங்க முடியாமல், சமஸ்கிருதத்தைக் கடன் வாங்கி வாழும் நிலை ஏற்பட்டதென்றும், ஆனால், தமிழ் மொழிக்கு அந்த நிலை ஏற்படவேண்டிய அவசியமில்லை யென்றும் பேசியிருக்கிறார். தமிழ் மக்கள், பிற மக்களுடன் தொடர்பு வைத்துக்கொண்ட காரணத்தால், தமிழிலும் பிறமொழிச் சொற்கள் வந்து கலந்துவிட்டன என்ற போதிலும், "இந்தச் சொற்களைத் தமிழிலேயே வைத்துக்கொள்வது அவசியம்" என்றும் கூறியிருக்கிறார். இதன் பொருள் என்ன? தமிழ், பிற மொழிகளைப் போல் கடன் வாங்கி வாழவேண்டிய நிலையில் இல்லாத ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த மொழி என்பதுதானே. எந்தச் சொல்லையும் தமிழில் ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் தமிழ்மொழிக்கு உண்டு, ஆகையால், தமிழ், பிற மொழிகளில் இருந்து கடன் வாங்கி வாழவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தோழர் லூயிமோண்ட் தெளிவாக விளக்கியிருக்கிறார். தமிழ் மக்கள், பிற மொழி மக்களோடு தொடர்பு கொண்டதன் விளைவாகத், தமிழிலும் அந்நிய சொற்கள் கலந்துவிட்டன என்று கூறிய லூயிமோண்ட் அவர்கள், அதனை ஒரு நல்ல அறிகுறி என்றும் குறிப்பிடுகிறார். என்ன இதன் பொருள்? தமிழ் மக்கள் பிறமக்களோடு பகைத்துக்கொள்ளாமல் நட்புரிமை பாராட்டுவதில், சிறந்தவர்கள் என்பதற்கு இதனை ஒரு எடுத்துக்காட்டாகக் கையாண்ட தோழர் லூயிமோண்ட் அவர்கள், இது ஒரு நல்ல அறிகுறி என்று குறிப்பிடுகிறார், ஆனல் தமிழ் மொழியின் தனித்தியங்கும் ஆற்றலை நன்குணர்ந்த அவர், உடனே கூறுகிறார், தமிழ்மக்கள் தங்கள் மொழியில் சேர்த்துப் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களை நீக்கி, அந்தச் சொற்களைத் தமிழ்மொழியிலேயே வைத்துக் கொள்வது அவசியம் என்று. ஏனென்றால், தமிழ்மொழி எந்தப் பொருளுக்கும், அது இதுவரையில்லாத புதுப் பொருளாயினும் சரி, அதற்கு ஏற்ற பெயரை உண்டாக்கிக் கொள்ளும் திறமையை இயற்கையாகவே பெற்றுள்ளது என்பதை, நன்குணர்ந்ததாலேயே, பிறமொழிச் சொற்களின் கலப்பு இல்லாமலேயே தமிழ் தனித்தியங்க முடியும் என்று "தினமணி" நிருபர் மூலம், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதில் வெட்கப்படக்கூடாது என்று மொழிவளம் அறியா

(15-ம் பக்கம் பார்க்க)

படக்காட்சிப் பக்குவம் பெற

4-ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்துவிட முயற்சி செய்ய மாட்டார்களா? அதன் காரணமாக ஒவ்வொரு படக் கொட்டகை முன்னும் ஆயிரக்கணக்கில் கூடி, தம் ஒன்று சேர்ந்த வலிவைக்கொண்டு உள்ளே வீறிட்டு நுழையத் துணியமாட்டார்களா? அந்த முயற்சியைத் தடுக்கப் பெற்றோர்களால் தான் முடியுமா? அல்லது கொட்டகைக் காரர்களால் தான் இயலுமா? அல்லது போலீஸ் காரர்களால் தான் சமாளிக்க ஒல்லுமா? அல்லது ராணுவத்தால்தான் முடியுமா? இப்படிப்பட்ட தடுப்பு முயற்சிகள் செய்தாலும், குழப்பமும்; கலவரமும் அவற்றின் காரணமாகத் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகை விடுதலும், துப்பாக்கிக் குண்டு வீசுதல் ஆகிய இவை நடைபெற வழியேற்படுமே யொழிய அமைதி நிலவக் காரணம் உண்டாகுமா?

இந்த மசோதாவால் ஏற்படும் மற்றொரு சங்கடத்தைத் தோழர் சத்திய நாராயணா அழகான கேள்வி மூலம் விளக்கியுள்ளார். ஒரு கணவன் 20 வயதுடையவனாக இருந்து, மனைவி 15 வயதுடையவளாக இருப்பாளேயானால் சினிமா சொந்தக்காரர் மனைவியை வெளியே தள்ளி விடுவாரா? என்று கேட்டுள்ளார். மசோதாப்படி கணவன் மட்டும் படம் பார்ப்பதற்கு உரிமை வாய்ந்தவனேயல்லாது மனைவி பார்ப்பதற்குத் தகுதியுடையவளல்லள். இது தம்பதிகளின் வாழ்வில் இன்பகரமான நிகழ்ச்சியாக இருக்கத்தான் முடியுமா? அல்லது கொள்ளத்தான் முடியுமா?

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் மட்டும் தாயாரோடு படக்காட்சிக்குச் சென்று வர அனுமதியளிக்கலாம் என்று தோழர் பி. என். முனவல்லி கொண்டுவந்த திருத்தம் மட்டும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தாலும், சிறிய குழந்தைகள் தாயாரோடு செல்ல, 4-அல்லது 5-வயதுக் குழந்தைகள் எப்படி அழாமலோ அல்லது கலவரம் செய்யாமலோ இருக்கும் என்று எதிர்பார்க்க முடியும்!

இந்த மசோதா கூறும் சட்டம் வெற்றிகரமாக நிறைவேற முடியாமல் இடைமடுத்து நிற்கும் சங்கடங்களை மீண்டும் ஆராய்ந்து வரைய வேண்டியது இந்திய அரசாங்கத்தின் கடமையாகும், அரசாங்கம் அமைதியான சூழ்நிலையைவிரும்புமேயானால். இதனால் ஏற்படும் சங்கடங்கள்:—

18 வயதுக்கு ஓரிருவயது குறைந்தவர்களை, குறைந்தவர்கள் என்று பிரித்துக்காட்ட இயலாது.

18 வயதுக்குக் குறைந்தவர்களை விட்டுவிட்டு பெற்றோர்கள் தனியே காட்சிகாணச் செல்லமுடியாது.

குழந்தைகள் அமைதியான நிலைமையிலேயே இருப்பார்கள் என்று எண்ண முடியாது.

இளையவர்கள் திருட்டுத்தனமாக கொட்டகைக்குள் நுழைய ஆரம்பித்தால் தடுக்கமுடியாது.

தடுத்தால் அமைதி நிலவாது.

அமைதி நிலவாவிட்டால் குழப்பம் ஏற்படும்.

குழப்பம் ஏற்பட்டால் பலாத்காரச் செயல்கள் கொட்டகையையொட்டி நிகழும்.

போலீஸ் படையும், ராணுவ வீரர்களும் எப்பொழுதும் ஒவ்வொரு கொட்டகைக்கும் வைக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

குறைந்த வயதுள்ள மனைவியை வயது நிறைந்த கணவன் விட்டுப் பிரிந்து செல்லவேண்டி நேரிடும்.

ஆகியவையாகும்.

இவ்வளவு சங்கடங்களைக் கொடுக்கும் சட்டமே அவசியமா என்பதை உணரவேண்டும்.

பதினெட்டு வயதுக் குட்பட்டவர்கள் பார்க்கக்கூடாத ஒன்றை— அறியக்கூடாத ஒன்றை—தீயவை பயப்பதைப்—பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் தாம் எப்படிப் பார்க்க அனுமதிக்கலாம்? இளையவர்களுக்குக் கூடாத பொதுப் பண்பு முதியவர்க்கு மாத்திரம் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? சமுதாயத்திற்கே தேவையானவற்றை மட்டுமே, படங்கள் மூலம் காட்டவேண்டும் என்றால், ஏன் அவற்றை இளையவர் முதியவர் என்ற பாகுபாடு விதிக்காமல், காட்டும்படி செய்யக்கூடாது? காம உணர்ச்சி பயப்பனவற்றையும், கெடுதி பயக்கும் கொடுஞ் செயல்களைக் காட்டுவனவற்றையும் ஏன் முதியவர்கள் மட்டும் பார்க்க அனுமதி தரவேண்டும்? வாழ்வு வளமாகவும், அறிவு வளரவும், முற்போக்கு அடையவும், நல்ல முறையில் பொழுது போக்கவும் ஆன முறையில் படங்களைக் காட்ட முற்படுவது தான் அறிவுடைமையாகுமே தவிர, துடிக்கும் மனவளம் படைத்த இளையவரைப் பிரித்து வைத்து, தடை ஏற்படுத்திப் படங் காட்ட முற்பட்டால் ஒரு நாளும் அத்திட்டம் வெற்றியடைய முடியாது.

இந்த மசோதாவைக் கொண்டு வந்து சட்டமியற்றுவதினாலேயே, இளையவரின் போக்கைத் தடுத்து விட முடியும் என்று அரசாங்கம் எண்ணுமேயானால், அது பரிகசிக்கத் தக்கதொரு திட்டமென்றே உலகம் கருதும். தோழர் தியாகி குறிப்பிடும் போது "இந்த மசோதா மிகவும் பரிகசிக்கத் தக்கதாகும்" என்று இடித்துக் கூறியுள்ளார்.

இளையவரின் கவனத்தை இம்முறையால் ஒருக்காலும் திருப்ப இயலாது. உள்ளபடியே இளைஞரின் உள்ளம், பண்படும் வகையான படங்களைக் காணும்படி செய்ய வேண்டுமென்றால், சட்டத்தைக் கொண்டல்ல, விவேகத்தைக் கொண்டு திட்டம் தீட்ட அரசாங்கம் முற்படவேண்டும். கல்வி சம்பந்தமான அரிய கருத்துக்களைக் கொடுப்பனவும், உலக அதிசயங்களைக் கொண்டுவந்து நிறுத்துவனவும், உலக நில அமைப்புகளைத் தெளிவாக்குவனவும்; உலக மக்களின் பல்வேறு நல்வாழ்க்கை இயல்புகளை விளக்குவனவும், வரலாற்று நிகழ்ச்சிகளை அப்படியே உணர்த்துவனவும், வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல பல குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டனவும், பொழுது போக்குக்காக நல்ல முறையில் அமைந்தனவும், உயர்ந்த சிறந்த நடனங்களைச் சித்தரிப்பனவும், இனிய இசையைப் பயப்பனவும் ஆன பல பண்புகள் நிறைந்த படங்களை மாணவர்களும், இளையவரும் இலவசமாக, உற்சாகத்தோடு பார்க்கும் படியான வசதிகள் செய்து தரப்படின் அவர்களில் பெரும்பாலோரின் எண்ணமும், நேரமும் அவ்வழியில் திரும்பி நிற்கும். நாட்டுப் பொதுமக்கள் பார்க்கும் பொது

வான படங்களைப் பார்பதினின்றும் அவர்களின் மனம் மறந்து, வேறு வழியில், அதாவது பள்ளிகளிலும் மற்றவிடங்களிலும் காட்டப்படும் படங்களின் மேல் பற்றுக்கொண்டு நிற்க வழியேற்படும். இளையவரின் கவனத்தை, அவர்கள் அறியாமலேயும் அவர்களுக்கு அறிவிக்காமலேயும் வேறுபக்கத்தில் இழுத்து நிறுத்த வேண்டும். பார்க்கக்கூடாது என்று மக்கள் சமுதாயத்திலே ஒரு பிரிவினர் பிரித்துவைக்கப்பட்டால், அப்பிரிவினர் மறைத்து வைக்கப்பட்ட அந்தப் பொருளைக் காணவே அல்லும் பகலும் துடித்துக்கொண்டிருப்பார்கள் என்பது நிகழக்கூடிய தொன்றாகும்.

இம்மசோதாவினால் பல சங்கட நிலைமைகள் ஏற்படுகின்றனவே என்று அங்கத்தினர்கள் எடுத்து விளக்கியதற்குப் பதில்கூற முகந்தான், மந்திரி தோழர் திவாகர் வீட்டில் சிறுவர்களுக்குத் தெரியாமல் பெற்றோர்கள் சில சந்தர்ப்பங்களை ஒதுக்கி வைத்துக்கொண்டிருப்பதை போன்ற நிலையைத், திரைப்படங்களைப் பொறுத்தும் கொண்டு வருவதாகக் கூறியுள்ளார். வீட்டில பெற்றோர்களால் மறைவான சில செயல்களும், நிகழ்ச்சிகளும் செய்யப்படுகின்றன என்றால், அத்தகைய செயல்களும், நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன என்ற உணர்வே இளையவர்களுக்கு ஏற்படா வண்ணம் செய்யப்படுகின்றனவேயன்றி, நிகழ்ச்சிகள் நடைபெறுவதைச் சிறுவர்களுக்கு அறிவித்துவிட்டு அவற்றைச் சிறுவர்கள் பார்க்கக் கூடாது என்று எந்தப் பெற்றோர்களும் தடைவிதிக்கமாட்டார்கள். இளையவர்க்குத் தெரியாமலேயே நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுவதுபோல், இளையவர்கள் அறியாமலேயே அவர்கள் கவனத்தை வேறு பக்கத்தில் திருப்பிவிட்டு, பொதுப் படங்களை பார்க்க முடியாத நிலையை உண்டாக்கவேண்டும்.

மாகாண அரசாங்கங்களும், சினிமா தொழிற்சாலையினரும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்ற காரணத்தைக் காட்டி மசோதாவை நிறைவேற்ற மந்திரியார் முயலுகின்றாரேயல்லாமல், பகுத்தறிவைக் காட்டி, அவசியத்தை காட்டி மசோதாவைக் கொண்டுவர முயலுகின்றாரில்லை!

ஆகவே எவ்வகையிலும் வெற்றி பெற முடியாத இந்த மசோதாவைச் சட்டமாக்கும்முயற்சியைக்கைவிட்டு, குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கம், பிற்போக்குக் கருத்து, இழிசெயல், ஆகியவைகளைக் களைந்து வாழ்விற்கு வளத்தையும் சீரிய இன்பத்தையும் பயக்கும் நல்ல படங்களை வெளிக் கொணர்ந்து நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய, அறிவுடம்பட்ட அரசாங்கம் முயலவேண்டும்.

ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டுமே தவிர, நிலைமைக்குப் பலியாகிவிடக் கூடாது. நிலைமைக்குப் பலியாகும்தன்மையைத்தான் திரைப் படக்காட்சித் திருத்தச் சட்ட மசோதாவைக்கொண்டு வருவதன் மூலம் இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. புதிய சூழ்நிலையை உண்டாக்கும் பெரும்பணியில் அரசாங்கம் ஈடுபடவில்லை; ஆனால் இருக்கும் சூழ்நிலைக்குப் பலியாகித் தவிக்கிறது!

மக்களுக்கேற்ற முறையிலே படங்கள் தோன்றவேண்டுமேயல்லாது, படங்களுக்கேற்றபடி மக்கள் பிரித்து வைக்கப்படக்கூடாது. மக்களுக்காகவே படங்கள், படங்களுக்காக மக்களல்ல! மக்களின் வாழ்வு பக்குவம் பெறவேண்டுமானால் படக்காட்சிகள் பக்குவம் பெறவேண்டும். படக்காட்சிப் பக்குவம் பெறவேண்டுமானால், கண்—காது—கருத்து ஆகிய இவற்றிற்குக் காலத்திற்கேற்ற முற்போக்கு வழியில் இன்பம் பயக்கும் படங்களைக் கொண்டுவர முற்படவேண்டும்; அன்றிப், படங்களை அவரவர் விருப்பம் போல் வெளிக்கொண்டு வந்துவிட்டு அவற்றிற்கேற்றப்போல் மக்களைப் பிரித்துக் கொண்டுவந்து நிறுத்துவது அறிவுடைமையாகாது; அவசியமுமாகாது; அபத்தமாக முடியும்!

●

ஆரிய-திராவிட

13-ம் பக்கத் தொடர்ச்சி

கூறுவோர் அனைவருக்கும் கூறுகிறார். அண்மையில் திருவாரூரில் கூடிய தமிழ்த்திருநாள் கூட்டத்தில் பேசியவர்கள் கூடத் தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களைச் சேர்த்தால் தான் தமிழ்வளர்ச்சியடையுமென்று வாய் கூசாது கூறியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்குத் தோழர் ஹூயிடுமோண்ட் நல்லசூடு கொடுத்தது, காலமறிந்து செய்த கைம்மாறு கருதாத பணியென்று களிப்படைகிறோம்.

மொழிகளைப்பற்றிக் கேட்டோம். அதற்குத், தமிழ் மொழிதான் மற்றெல்லா மொழிகளையும்விடச் சிறந்ததென்று கூறிவிட்டார், நாம் எது இந்நாட்டின் பூர்வீகமொழி என்று கேட்டோம். அதற்கவர், தமிழ்தான் தனித்தன்மைவாய்ந்தபூர்வீகமொழி என்றும் கூறிவிட்டார். இனி எந்தக் கேள்வியை எழுப்பி நம்முடைய உயர்வுக்கும் சிறப்புக்கும் ஆதரவு தேடலாம், என்றெண்ணிய "தினமணி" நிருபர், மொகஞ்சதாரோ நாகரிகத்தை இங்குள்ள திராவிடர்கள் தங்கள் நாகரிகம் என்று கூறுகிறார்களே! இதைத்தோழர் ஹூயிடுமோண்ட் ஒருவேளை மறுத்துக்கூறுவார் என்று கருதி, இரண்டாவது கேள்வியாக, மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிட நாகரிகமா என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவர்;

> "மனித இனங்களைப் பற்றிய சாத்திரம்தான் எனக்குத் தெரியும். நான் சரித்திர ஆசிரியனல்ல."

என்று விடையளித்து விட்டார். மொகஞ்சதாரோ நாகரிகம், அங்கு கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருள்களிலிருந்து, அது திராவிட நாகரிகம்தான் என்பதாக சர். ஜான் மார்ஷல் என்பவர் பலஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார். அதுகுறித்துப்பல நூல்களும் வெளிவந்துவிட்டன. இப்போது அதுகுறித்த ஐயம் "தினமணி" நிருபருக்கு ஏன் உண்டாயிற்றென்பது தெரியவில்லை. ஹூயிடுமோண்டு, மொகஞ்சதாரோநாகரிகம்பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்று கூறியபின்னரும், அந்த நிருபர் அவரைச் சும்மாவிட்டதாகத் தெரியவில்லை. மேலும் மேலும்ஏதோ கேள்விகளைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனாலேயே அவர்,

> "சரித்திரத்திற்கு முந்திய காலத்தில் விந்திய மலைக்கு வடக்கே திராவிடர்கள் இருந்தார்களா இல்லையா என்பதும், மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிட நாகரிகம் தானா என்பதும் எனக்குத்

(3-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M: 4642

திராவிடநாடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

மே நாள்

ப. வாணன்.

மே நாள்! தொழிலாளரின் திருநாள்! உழைப்பாளிகளின் மங்கள விழா நாள்! கோழி கூவும் பொழுது கழனியிலிறங்கிக் கோட்டான் கூவும் போது வீடு திரும்பும் உழவனுக்கும், இயந்திரத்தோடு இயந்திரமாய், உழைத்து உருக்குலைந்து போன பாட்டாளிக்கும், "இன்பபுரி தொலைவிலில்லை" என்ற நம்பிக்கையை அளிக்கும் நன்னாள்! ஏழ்மையோடு எண்ணற்ற காலமாக வாழ்ந்து வரும், பஞ்சை, பராரிகளுக்கும், அவனி முழுதும் அல்லற்படும் அத்தனை கோடி மக்களுக்கும் விடுதலை வேட்கையை ஊட்டும் பொன்னாள்! இயற்கை—வகுத்திருக்கும் ஆறு, காடு, கடல் எந்தவிதமான எல்லைகளையும் தாண்டி எங்கெங்கெல்லாம் மக்கட் கூட்டம் வாழ்கின்றதோ அங்கெல்லாம் தொழிலாளர் விடுதலை பற்றிப் பேசப்படும் விடுதலை நாள், இந்த மே நாள்!

இன்று மாஸ்கோவில் வாழும் மக்களனைவர்க்கும் விடுமுறை. உழைப்பவனுக்கே கூலி, உழுபவனுக்கே நிலம் என்ற உரிமையை ஊரெல்லாம் பறைசாற்றி வெற்றிக் களிப்புடன் பூரிப்பு விழா நடத்திக்கொண்டிருப்பர் மாஸ்கோவாசிகள். உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம், மே தினத்தின் பெருமையை அறிந்த ஒவ்வொரு தொழிலாளியும், இன்று ஒரு வினாடியாவது உழைப்பவனின் அவதியைப் பற்றியும், 'அந்த உழைப்பை உறிஞ்சிவாழும் அதிகாரவர்க்கத்தைப் பற்றியும், எண்ணாமலிருக்கமாட்டான். இந்தப் பாலைவன வாழ்க்கையிலிருந்து என்றேனும் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வருங்காலத்தை நோக்கியிருப்பான். உலர்ந்து போன அவன் உதடுகள், "வாழ வழி பிறக்க வேண்டும், அதற்கு இந்த உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரை போராடுவேன்" என்று கூறியிருக்கும். மனித வர்க்கத்தை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க, ஒவ்வொரு பாட்டாளியும் சூளுரை கூறும் நன்னாள் தான் இம் மே நாள்!

இன்றோடு அறுபது ஆண்டுகள் முடிவடைகின்றன, 1889-ல் பாரீசில் கூடிய சர்வ தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ் செய்த தீர்மானம்தான், மே முதல் தேதியைத் தொழிலாளர் தினமாக மாற்றியது. அதற்குப் பிறகு ஆறு பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த அறுபது ஆண்டுகளில் உலகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் எண்ணற்றவை. அன்று தொழிலாளியிருந்த நிலைமைக்கும், இன்று அவனிருக்கும் நிலைமைக்கும் அதிகமான அளவுக்கு வித்தியாசம் இருக்கிறது. கடந்த காலங்களில் அவனுக்கேற்பட்ட இன்ப துன்பங்களையும், இடர்ப்பாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் சரியாகக் கூர்ந்து நோக்கினாலன்றி, வருங்காலத்தில் தொழிலாளர் நிலை எப்படியிருக்குமென்று நம்மால் திட்டவட்டமாகக் கூற முடியாது.

சென்றகாலத்தை நோக்கும் பொழுது, இரண்டு உலகப் போர்களும் நம் கவனத்தைவிட்டுத் தப்ப முடியாது. 1914—18-ல் நடந்த முதல் பெரும்போர், வளர்ந்து வந்த உலகத் தொழிலாளர் ஸ்தாபனங்களை அடியோடு அழித்தது.

போர்க்காலங்களில் இருந்ததைவிடப் போருக்குப் பிறகு, உழைப்பாளிக்கு வறுமை அதிகரித்தது. நாடெங்கும் பஞ்சம், பசி, பிணி தலைவிரித்தாடின. ஆனால் போரின் பிந்திய காலச்சூழ் நிலையைச் சரவரப் பயன்படுத்திக் கொண்டவர்கள் ரஷ்யத் தொழிலாளிகள் மட்டும்தான். 1918-ல் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு, தங்கள் நாட்டிலே தொழிலாளரசை நிறுவினார்கள். தாங்கள் செய்தது போலவே மற்ற நாடுகளிலும் செய்வார்கள் என்று எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தளவுக்கு மற்ற நாடுகள் உயரவில்லை. ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட தொழிலாளர்கள் அந்தச் சமயத்தில் வேறெந்த நாட்டிலுமில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர் நலன் குறித்து, இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று அதிகாரவர்க்கம் வாய்ப்பந்தல் போட்டதே தவிர, செயலளவில் எதையும் உருவாகச் செய்ததாகக் கூற முடியாது. பிரிட்டனைப் போன்ற ஒன்றிரண்டு நாடுகள், மேலெழுந்த வாரியாக ஓரிரு சீர் திருத்தங்கள் செய்தன என்றபோதிலும், அவைகள் முழுதும் தேசிய மனப்பான்மை கொண்டவைகளே. இந்தியா, பர்மா முதலிய குடியேற்ற நாடுகளில் கஞ்சிக்கும், கட்டிக் கொள்ளத் துணிக்கும் மக்களைப் பாதவிக்க விட்டுவிட்டுத் தன் நாட்டிலே மட்டும் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டது. இதைச் சர்வ தேசிய ரீதியில் போற்றமுடியாது. உலகப் பெரும் போருக்குப் பிறகு சீரான முறையில் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்குத் திட்டமிட்டு வேலை செய்துவந்த தேசம் சோவியத் யூனியன் ஒன்றுதான்.

* * *

மற்றெந்த மே நாள்களையும்விட இவ்வாண்டு மே நாள் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது. இன்று உலகத்திலே ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளியும், மே நாள் கொண்டாடும்போதும் அதன் முக்கியம் உணர்ந்து கொண்டாடுகிறான். இன்றையதினம் அவனுக்கு 'தொழிலரசு' என்றால் என்னவென்று தெரியும். தொழிலாளிகளின் அடிப்படை உரிமைகள் எவை என்பதும் அவனுக்கு நன்றாகத் தெரியும். 'உழைப்பவனுக்குக் கூலி, உழுபவனுக்கு நிலம்' என்று மேடைமீது நின்று கூவுகிறான். 'தேவைக்கேற்ற உணவு; உழைப்புக்கேற்ற கூலி' என்ற எண்ணத்தில் முன்னேறுகிறான். அவனுக்கு வேண்டியவை உண்ண உணவும், உடுக்க உடையும் சுரண்டப்படாத இன்ப வாழ்வும். இவைகளை எப்பாடு பட்டேனும் அடைவது என்று அவன் சூள்

(15-ம் பக்கம் பார்க்க)

10 JUN 1949 MADRAS

இலாபம் இல்லாதார் தந்த 5 கோடி!

—☆—

இலாபமில்லை! எனவே தான், தொழிலிலே ஆர்வமில்லை.

கூலி உயர்ந்துகொண்டே போகிறது, தொழிலாளரின் கிளர்ச்சிகளும் ஓய்வதாகக் காணோம். அவர்களின் திருப்தியைப் பெறக்கூடிய விதமாகக் கூலி கொடுத்து, முற்போக்காளர்களின் யோசனைகளுக்குத் தக்கபடி தொழிலாளர்களுக்கு, வசதிகள் செய்து கொடுத்து, வருமான வரியையும் கொட்டித் தந்து, மிச்சம் என்ன இருக்கிறது என்று பார்த்தால்; பாடுபட்டதும், திட்டம் தீட்டியதும்தான் மிஞ்சுகிறது. இலாபம் இல்லை, தொழிலில், எனவே, தொழில் நடத்த ஊக்கம், உற்சாகம் ஏற்படுவதில்லை.

மாடோ, மலடு! மதுரமான பால், தேவை என்றால், எங்கிருந்து தருவது! மாடே, வேண்டாம், மகராஜனாக, நீயே கொண்டு போ, இந்தக் 'கோணைக் கொம்பனை.'

சந்தேகமிருந்தால், எங்கள் புள்ளி விவரத்தைப் பார்! மூலப் பொருள்களின் விலை, விஷம்போல் ஏறிவிட்டது. தொழிலாளர் கூலியோ உயர்ந்துவிட்டது. வரியோ, சொல்ல முடியாதபடி ஏறிவிட்டது. இலாபம் எப்படிக் கிடைக்கும்! சர்க்கார் தாராளமாக, தொழில்களை எடுத்து நடத்தட்டும், எங்களுக்குச் சேர வேண்டிய பணம் கொடுத்துவிட்டு. இலாபம், கருகிவிட்டது; ஆர்வம் அழிந்துவிட்டது!—

இது, முதலாளிகளின் முகாரி—சர்க்கார் சற்றுக் கண்டிப்பாகப் பேசும்போதும் சரி, தொழிலாளி தன் துயரத்தைக் காட்டிப்பரிகாரம் கேட்கும்போதும் சரி—இலாபம் இல்லை, இலாபம் இல்லை, என்றே, அழுகுரலில் பேசுகிறார்கள்—அதற்கான, கணக்குகளைக் கூடக் காட்டுகிறார்கள்.

விலைவாசி ஏறிவிட்டதால், ஏழை புழுப்போலத் துடிக்கிறானய்யா, அவனுக்குத் தரும் கூலி போதவில்லை, சற்று அதிகமாகக் கொடு - உன் யந்திரம்கூட அதற்குத் தேவையான 'தீனி' போட்டு, வசதிசெய்யாவிட்டால் வேலைசெய்யாதே சரியாக, ஏழை உயிருக்கு ஊசலாடும்படியான நிலையில் வைத்துவிட்டு, வேலை வாங்குகிறாயே, சரியா, முறையா, என்று யாராவது துணிந்து கேட்டுவிட்டாலோ, "ஏழை அழுகிறான், என்ன செய்வது? இலாபம் இல்லையே தொழிலில், எப்படிக் கூலியை உயர்த்த முடியும்," என்று கூறிக் கைவிரித்து விடுகின்றனர், இந்தக் கண்ணியர்கள்.

உண்மை என்ன? இலாபமே இல்லையா? பண மூட்டைகளுக்குப் பக்கத்தில் இருந்துகொண்டே, பஞ்சப் பாட்டுப் படிக்கிறார்களா, அல்லது உண்மையிலேயே, தொழிலிலே இலாபமே கிடைப்பதில்லையா, என்று சிந்திக்கத் தொடங்கினால், திகைப்பு உண்டாகும் – நம்மைப் போன்ற சாமான்யர்களுக்கு.

ஆனால், உலகம் அறிந்த நேருவே, திகைத்துவிடக்கூடிய 'சம்பவத்தை' இலாபமில்லை என்று முகாரி பாடும் முதலாளிமார்கள், நடத்திக்காட்டினர்.

நேரு, இதுவரை பார்த்திராத அளவு தொகை குறிக்கப்பட்டிருந்த 'செக்' ஒன்றை, அவரிடம் தந்தனர், இலாபமே பெறாத, பரோபகாரிகள்! அவருக்காக அல்ல, காந்தியார் நினைவு நிதிக்காக! ரூபாய் 5 கோடி!! ஆமாம், இலாபமே கிடையாது, இந்த 'நன்கொடை' தந்த நல்லவர்களுக்கு!!

வரியாகவோ, நன்கொடையாகவோ, இவ்வளவு பெரும்தொகை பொதுநிதிக்கு, அவர்களிடமிருந்து வந்ததுபற்றி, மகிழ்கிறோம். ஆனால், ஐந்துகோடி ரூபாய் நன்கொடையை, 'அனாயாசமாக'க் கொடுக்கும் நிலையிலுள்ள இவர்கள், தொழிலிலே இலாபமே கிடைப்பதில்லை, என்று கூசாது பேசினரே—இலாபமே இல்லை என்றால், ஏது இவ்வளவு பெரியதொகை! கதை கூறுவார்களே, அலாவுதீன் தீபம், அதுவா! இல்லையானால், காந்தி நிதியின் அவசியத்தை உணர்ந்து, தங்கள் மூலதனத்திலேயே ஒரு பகுதியைக் கொடுத்தனரா! எப்படித் தரமுடிந்தது, ஐந்து கோடி ரூபாய் நன்கொடை? எப்படி மனம் வந்தது, கருணை பிறந்தது என்று கேட்கவில்லை. கருணை அல்ல, அதற்குக் காரணம்—தங்கள் 'சக்தி' இதுவென்று சர்க்காருக்கு அவர்கள் 'ஜாடை' காட்டுகிறார்கள் என்பது தான் உண்மை. எதுவாயினும் சரி, ஏழைத் தொழிலாளிக்குக் கூலியை உயர்த்த முடியாது, இலாபம் கிடைப்பதில்லை என்று கூறியவர்கள், இவ்வளவு பெரிய தொகையை எப்படித் தர முடிந்தது?

நன்கொடையைப் பெற்றுக் கொண்டு, நன்றி செலுத்திய தலைவர்கள், இதைக் கேட்டிருக்கலாமே!

இது, இந்த ஆண்டு, அல்லது இதற்கு முந்தின ஆண்டு கிடைத்த இலாபம் அல்ல-பல ஆண்டுகளுக்கு முன்பு, கிடைத்த இலாபத்தை நாங்கள் மிச்சம் பிடித்து வைத்திருந்தோம், அதிலிருந்து, இந்தத் தொகையைத் தருகிறோம், என்று அவர்கள் சாக்குக் கூறினால்கூட, தலைவர்கள் கேட்கலாமே, இலாபத்திலே சேர்ந்த தொகைதானே இது—இலாபமே இல்லை என்று கூறினீர்களே, ஐயன்மீர்! இவ்வாண்டு இல்லை என்றே வைத்துக்கொண்டாலும் முன்னாலே குவித்து வைத்திருக்கும் இலாபக் குவியலிலே இருந்து ஒரு சிறு தொகையைச் செலவிட்டுத் தொழிலாளியின் துயரைக் குறைக்கலாம் என்ற எண்ணம் ஏன்படவில்லை. தொழிலாளியின் உழைப்பின் மிச்சம் தானே, அந்த இலாபக்குவியல்! உன் 'சமர்த்தும்' அவனுடைய வெள்ளை உள்ளமும் சேர்ந்துதானே, இலாபக் குவியலாக மாறிற்று—அதிலே ஒரு பகுதியை அந்தப் பாட்டாளிக்குச் செலவிடச் சொன்னால், முகாரி பாடுவீரே, இதோ இப்போது, எங்கள் முகமும் அகமும் மலரவேண்டும் என்று. ஐந்து கோடி தருகிறீர்களே, ஏனய்யா பொய்பேசினீர் கூசாது!—

(14-ம் பக்கம் பார்க்க)

★ செவ்வாழை ★

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்துவந்தான். இருட்டுகிற நேரம், வீடு திரும்பினலும் கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக்கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டு இருக்கிறதா என்று கவனித்துவிட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்துவந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன்கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம்-அவனுடையமுதல்பையன்—காட்டியதைவிட அதிகமான அன்பும் அக்கரையும் காட்டுகிறாரே, என்று ஆச்சரியம், சற்றுப் பொறுமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடுகீடு வந்து வாழையை மிதிச்சுவிடப் போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான, கன்று—ஆமாம், செவ்வாழைன்னு சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும்—ரொம்ப ருசி—பழத்தைக் கண்ணுலே பார்த்தாக்கூடப் போதும், பசியாறிப் போகும்." என்று குப்பியிடம், பெருமையாகப் பேசுவான், செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள்—அதுமட்டுமா—பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிட மெல்லாம், இதே பெருமையைத் தான் பேசிக்கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப்பற்றிப்பேசிக்கொள்ள முடியும்—அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப்பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்தபயல், கரியன், செவ்வாழை குலை தள்ளியதும், ஒரு சிப்புப்பழம் எனக்குத்தான் — என்று சொல்லுவான்.

"ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயாடா — நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்—வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்"—என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக்கொண்டே, "உனக்கு ஒரு சிப்புன்னு, எனக்கு இரண்டு தெரியுமா?—அம்மாவைக் கேட்டு ஒரு சிப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சிப்பு—" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன், முத்து, "சிப்புக்கணக்குப்போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதிங்க—ஆமா—பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க" என்று சொல்லுவான்—வெறும் வேடிக்கைக்காக அல்ல — திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத்தின்றே தீர்த்துவிடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப்பிள்ளையாக வளர்ந்துவந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும், சகித்துக்கொள்வான் — செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப் படுத்துவான்! துஷ்டத்தனம்செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத் தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள்,செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள், ஆப்பில் திராட்சை, தின்ன முடிகிறது—கரியனும் முத்துவும், எப்படி, விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படி செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் 'பழமும் பட்சணமும்' வாங்கித்தரக் கூடிய 'பணம்' எப்படிச்சேர முடியும்? கூலிநெல், பாதிவயிற்றை நிரப்பவே உதவும் — குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும்பகுதி வயலிலே செலவாகிறது—அதன் பலனில் மிகப் பெரும்பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான், அவன், சொந்தமாக—மொத்தமாக, பலன் பெறுவதற்கு, உதவக் கூடிய, உழைப்பு! இதிலே, பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்கவேண்டிய நேரத்திலே, பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்துவரும், செவ்வாழை! இதன் முழுப்பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும்அவன்மனதிலே,தெளிவாகத் தோன்றிய கருத்துகள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும்—செவ்வாழையைப் பார்க்கும் போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது, கள்ளங் கபடமின்றி. செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைக

(13-ம் பக்கம் பார்க்க)

★ சண்டை வருமா? ★

இரா. செழியன்

இந்தக்கேள்வி இன்று எல்லோராலும் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு அரசியல் நிபுணர்கள் ஆவேசத்துடன் பேசுகின்றனர், நிதிமந்திரிகள் இராணுவச் செலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கின்றனர். மேடைகள் அதிருகின்றன, ரேடியோக்கள் அலறுகின்றன. இந்தக்கேள்வியைப் பத்திரிக்கைகள் கொட்டையெழுத்தில் தீட்டுகின்றன, கேள்விக்குறியுடன். கள்ளமார்க்கட் முதலாளிகள் கேட்கின்றனர், சந்தோஷத்துடன். வேலையற்றோர் கேட்கின்றனர், சந்தேகத்துடன். சமாதானப் பிரியர்கள் கேட்கின்றனர், ஆச்சரியத்துடன். வாலிபர் கேட்கின்றனர் கோபத்துடன். வயோதிகர்கள், கேட்கின்றனர் ஆத்திரத்துடன். தாய்மார்கள் கேட்கின்றனர் சோகத்துடன். உலகமே கேட்கிறது வேதனையுடன், 'சண்டை வருமா?' என்று.

உலகை நெரித்த பெரும்போர் முடிந்து நான்கு ஆண்டுகள் தானுகின்றன. அதற்குள் மறுசண்டையைப்பற்றிப் பேச்சு எழுந்து விட்டது. நாடு நகரங்கள் புதுப்பிக்கப் படவேண்டிய நேரத்தில், தொழிற்சாலைகளும், போக்கு வரத்துகளும் மீண்டும் துவக்கப்படுவதற்குப் பதிலாக, போர் வீரர்களின் உடலிலும், பொதுமக்களின் உள்ளத்திலும் பாய்ச்சப்பட்ட புண்கள் ஆற்றப்படு முன், மறுசண்டை என்ற அறிவிப்பு வருகிறது. சண்டைக்காலத்தில் சொல்லொணுத் துன்பத்தை அனுபவித்த மக்கள், "சமாதானம், சமாதானம்" என வேண்டிக்கொண்டனர். ஒரே நம்பிக்கை, ஒரே ஆறுதல். 'சண்டை முடிந்ததும், சமாதான வாழ்வு திரும்பவும் வரும்' என நினைத்தனர். உலகப் பெரும்போர் முடிவடைந்தது, துயர் நீங்கியது என மக்கள் உவந்தனர். ஆனால் சண்டை முடிவடைந்ததும், சமாதானம் வரவில்லை. உடன் படிக்கைகளும், கடன் பத்திரங்களும், எழுதப்பட்டன, சமாதானம் எழுதப் படவில்லை. எல்லைக்கோடுகள் குறிக்கப்பட்டன, சமாதானம் இருக்குமிடம் தெரியவில்லை. சண்டை முடிந்ததும் தான், சண்டையின் கொடுமைகள் அதிகரித்தன. சண்டைக்குப்பின் சமாதானமல்ல, பஞ்சம், பசி, தொற்றுநோய், வறுமை, வேலையின்மை முதலியன ஒன்றின் பின் ஒன்ருகப் புற்றீசல் போல வந்தன. சண்டை முடிவடைந்தும் அமைதி நிலவவில்லை.

இந்த நிலையில் ஐரோப்பா மறுபடியும் போர்க்களம் ஆகுமோ என்ற அச்சம் நிலவுகிறது. ஒரு புறத்தில் ருஷியாவும், அதனைச் சார்ந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், மறுபக்கத்தில் அமெரிக்காவும் அதன் பாதுகாப்பில் பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும், இரண்டு முகாம்களும் ஒன்றையொன்று முறைத்துப்பார்க்கின்றன. மீண்டும் உலகச் சண்டை, அதற்கான ஆயத்தம் என்று அமெரிக்கா வெளிப்படையாகவே பேசுகிறது. அமெரிக்க உள்நாட்டில் சண்டைப் பிரசாரம் பயமூட்டும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. அங்கு நடைபெறுகிற சண்டைப் பிரசாரத்தைப் பற்றி ஒரு நூலில் மிக அழகாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு விமானத்தில் வந்திறங்கிய ஒருவர், அமெரிக்காவிலுள்ள செய்தித்தாளை வாங்கிப் படித்தால் திடுக்கிடுவார். விமானத்தில் கழித்த சிலமணி நேரங்களில் உலகப் போர் மூண்டுவிட்டதாக அவர் நம்பவேண்டியிருக்கும்;" அவ்வளவு தீவிரமாகப் பத்திரிகைகள் சண்டையைத் தூவுகின்றன. அமெரிக்கப் பத்திரிகைகள்—ஒன்று இரண்டல்ல, 1300 பத்திரிகைகளுக்கு மேல்—நாள்தோறும் காலையில் ரஷ்யாமீது போர்ப் பிரகடனம் செய்த வண்ணம் இருக்கின்றன. குருமாரின் காலைப் பிரார்த்தனைப் பேச்சில், ஆலையரசர்களின் மாலை விருந்துப் பேச்சில், ரேடியோ விமர்சனங்களில், புதுப் புத்தகங்களில் சினிமாப் படங்களில் மறு சண்டையைப்பற்றி பேசப்படுகின்றன. "சண்டை வருமா?" என்பதல்ல, "மறு சண்டை வந்துவிட்டது" என்றே பேசுகின்றனர். ஒரே கொந்தளிப்பு, சண்டையை வரவேற்கும் வைபவத்தில்!

அமெரிக்காவின் திட்டங்கள் போருக்குத் தயாராகின்றன. மற்ற நாடுகளுடன் நடத்தும் உடன்படிக்கைகளில் இராணுவ அமைப்பும் உதவியுமே முதலிடம் பெறுகின்றன. அட்லாண்டிக் கடலையும் தாண்டி, மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் அமெரிக்கா உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. ட்ருமன், மார்ஷல் திட்டங்களின் விளைவாக வந்தது அட்லான்டிக் உடன்படிக்கை. இது ரஷ்யாவுக்கு எதிராக எழுதப்பட்டுள்ள போர்த் திட்டமேயாகும். இந்தத்திட்டங்களும்பேச்சுகளும் ஒரேமுடிவைத்தான் தருகின்றன—உலகச் சண்டை!

உலகச்சண்டை! அதனால் உலகுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள் இவர்களுக்குத் தெரியாதனவல்ல. 1914—18-ல் நடந்த உலகப்போரில் ஒரு கோடிபேர் களத்தில் மாண்டனர். படுகாயமடைந்தோர் தொகை இரண்டுகோடி. பஞ்சம், பசி, பிணிகளால் இறந்தோர் தொகை நூற்று முப்பது இலட்சமாகும். இவ்வளவு பலிகளைக்கொடுத்து, இரத்த ஆறுகளைப்பெருக்கியபின் தான், வார்சேல்ஸ் ஒப்பந்தம் எழுதப்பட்டது. 1945-ல் முடிந்த இரண்டாவது உலகப்போரில் முதல் உலகச் சண்டையை விளையாட்டு அளவாக ஆக்கி

விட்டது. இரண்டாவது உலகப் போரில் களத்தில் மாண்டோர் தொகைமட்டும்மூன்றுகோடியாகும். இவற்றைத்தவிர, கைகால் இழந்தோர், பசி, பிணியால் இறந்தோர், கைதிகளாகி மறைந்தோர், காட்டு வாழ்க்கையில் தவித்தோர் தொகை எண்ணிலடங்காதது. அழிந்து போன நகரங்கள், தீக்கு இரையாக்கப்பட்ட நாடுகள், இடிக்கப்பட்ட அணைகள், தகர்க்கப்பட்ட தொழிற்சாலைகள் பலப்பல. ஐரோப்பாவின் மண், போர்க்கருவிகளால் புரட்டப்பட்டது; மக்களின் இரத்தம்வெள்ளமெனப்பாய்ச்சப்பட்டது.

முப்பது ஆண்டுகளுக்கு இரண்டு பெரும் போர்கள் உலகை நாசமாக்கி விட்டன. அதற்குப் பின்னும் மூன்றுவது உலகப்போர் குறிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுக்க மற்றொரு உலகப்போர் அவசியம் என அமெரிக்கா பயமுறுத்துகிறது. அமெரிக்காவின் போக்கு, சண்டைக்கு அடிகோலுவதாகும் என்று ரஷ்யா குற்றஞ் சாட்டுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளிடை உலக மக்கள் கேட்கின்றனர் “சண்டை வருமா?” என்று. முதலாவது இரண்டாவது உலகப்போர்கள் ஆரம்பிப்பதற்குக் காரணமாயிருந்த நெருக்கடி நிலை இன்றைக்கும் உண்டாயிருக்கிறது. அந்த நெருக்கடி தீர்க்கப்படாவிட்டால், போர் மூளுவது உறுதி. முதலிரண்டு உலகப் போர்கள் ஏன் உண்டாயின? என்பதின் காரணங்களைக்கொண்டு, மூன்றுவது உலகப்போர் மூளுமா என்பதைக் கவனிக்கலாம். சண்டைக்கான காரணங்கள், அதில் ஈடுபடுகிற வல்லரசுகளின் வரலாற்றில் இருக்கின்றன.

• • •

இயந்திரங்களின் மூலம் சாமான்களைச் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டபொழுது, ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் புது முறையில் போட்டியிட்டன. ஐரோப்பாஎங்கும் ஆலைகள் கட்டப்பட்டன. இயந்திர சாதனங்களில் புது முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு, உற்பத்தி பெருகியது. முன்பு பத்துப் பேர் பத்து நாட்களில் கையால் செய்ததை விட, நன்றாக மலிவாக ஒரு இயந்திரம் ஒரே நாளில் செய்து முடித்தது. அதாவது உற்பத்திச் சாமான்கள் ஒரு இயந்திரத்தால் நூறுமடங்கு அதிகரித்தன. இவைகளை விற்பதால் முதலாளிக்கு அபரிமிதமான லாபம் கிடைத்தது. ஆனால் திடீரென்று இந்த அமோகமான உற்பத்திக்குத் தடங்கல் ஏற்பட்டது. தொழிற்சாலையில் உற்பத்தியான பொருள்கள் அனைத்தும் விற்பனையாகவில்லை. ஏழைகளாலும், சொற்பக் கூலி வாங்கிய தொழிலாளிகளாலும், இந்தச் சாமான்களை வாங்கப் பணமில்லை. பணமிருந்தவர்களால்தான் இந்தச் சாமான்களை வாங்க முடியும், ஆனால் ஓரளவுக்கு மேல் அவர்களுக்குத் தேவையில்லை. தேவையுள்ளவர்களிடம்பணமில்லை, பணமுள்ளவர்களுக்குத் தேவையில்லை! இந்த நெருக்கடி நிலை உண்டானது. ஒரு ஆண்டில்

> **கோல்— சிலுவை —பேனா**
>
> “மன்னன் கையில் செங்கோல் இருக்கிறது; அவன் கையசைத்தால் போர்வீரர் என்னைப் பழி வாங்க வருவார்கள். மதகுருவின் கையில் சிலுவை இருக்கிறது; அவன் முன் மண்டியிட்டுக் கிடக்கும் மக்களை என் மீது ஏவுவான். எனினும், நான் இருவரையும் எதிர்க்கிறேன். அதைவிடப் பலமான பேனா இதோ என் கையில் இருக்கிறது”
>
> —வால்டையர்

உற்பத்தியாகும் சாமான்களை விற்க இரண்டு மூன்று ஆண்டுகளாயின. உற்பத்தியை மட்டுப்படுத்துவதனால் மற்றச் சங்கடங்கள் உண்டாயின. போட்ட முதலுக்கான லாபம் வராதது, வேலையில்லாததால் மக்களுடைய வருவாய் குறைவது, சாமான்களை வாங்கும் சக்தியும் குறைந்துவிடுவது ஆகிய நிலைமைகள் தோன்றின. உற்பத்தியைஎவ்வாறுபெருக்குவது என ஆராய்ந்து, உற்பத்தியைப் பல மடங்கு அதிகரித்த நேரத்தில், யார் வாங்குவது? என்ற பயங்கரக் கேள்வி எழுந்தது.

முதலாளித்துவ திட்டத்தில் இன்றளவும் விடுவிக்க முடியாத சிக்கல்கள் இந்தக் கட்டத்தில் உண்டாயின. யார் வாங்குவது என்பதற்குத் தக்க பதில் கொடுக்க முடியவில்லை. ஐரோப்பிய நாடுகளைத் திணற அடித்தது. ஆலை முதலாளிகள் யோசித்தனர், நெருக்கடியை எவ்வாறு சமாளிப்பதென்று. கடைசியில் ஒரு வழி கண்டுபிடித்தனர்.

“உள்நாட்டில் சரக்குகள் விற்பனையாகாவிட்டால், வெளிநாட்டில் விற்பனை செய்யலாம்.” இந்த அற்புதமான யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐரோப்பாவுக்குள் ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு அதிகப் பொருள்களை பரிமாற முடியாது, ஏனென்றால் ஒவ்வொரு நாட்டிலும் அளவுக்கு மீறிய சாமான்கள் உற்பத்தியாயின. இந்தச் சாமான்களை விற்க ஐரோப்பாவுக்கு வெளியில் இடம் — மார்க்கட் தேடவேண்டியிருந்தது. ஆப்பிரிக்காவின் கடற்கரையோர நாடுகள், இந்தியா, தென்கிழக்கு ஆசியா, கிழக்கிந்தியத் தீவுகள் நல்ல இடங்களாகத் தெரிந்தன. ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக்கொண்டு, ஐரோப்பிய கம்பெனிகள், இந்த நாடுகளுடன் வியாபாரம் செய்யத் தொடங்கின. இந்த வியாபாரமே, பின் ஏகாதிபத்யங்களாக மாறின.

வெளிநாடுகளில் மார்க்கட் தேடும் வேலையில் ஐரோப்பிய நாடுகளிடை சண்டை, சச்சரவுகள் உண்டாயின. ஒவ்வொன்றும் தனக்கென்று தனியாகப் பிரதேசங்களை ஒதுக்கிக் கொண்டன. வியாபார முறையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று.

முதலில் இயந்திரங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களை விற்றனர். பின் போட்டியும், லாப நோக்கமும் அதிகரித்த நிலையில் சாமான்களைச் செய்யும் இயந்திரங்களைத் தயாரித்து, மார்க்கட்டுக்கு அனுப்பினர். இந்த இரண்டாவது வியாபாரத்தில் ஒரு புதிய முறை வளர்ந்தது. சென்னை மாகாணத்தில் மதுரைக்குப் பக்கத்தில் பருத்தி விளைகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். லங்காஷயரிலிருந்து துணி வியாபாரம் செய்யும் கம்பெனி, துணி செய்யும் மில் யந்திரங்களையும் தயாரித்து விற்க முன் வருகிறது. அந்த இயந்திரங்களின் விலை பத்து லட்சம். அவ்வளவு பணம் யார் கையிலிருக்கிறது (அந்தக் காலத்தில்)? மதுரைக்கம்பெனியால் அந்த இயந்திரங்களை வாங்க முடியவில்லை. லங்காஷயர் கம்பெனி

யார் தளர்ந்து விடவில்லை. மதுரைக் கம்பெனிக்குப் பத்துலட்சம் ரூபாய் கடன் கொடுக்க முன்வருகிறார்கள், தங்களுடைய இயந்திரங்களை வாங்கும்படி!

இவ்வாறு ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குள் மூலதனத்தை அனுப்புவதற்கு, மூலதனத்தின் ஏற்றுமதி என்று குறிப்பிடுவார்கள்.

இந்தக் கட்டத்துக்குப்பின், காலனிப் பிரதேசங்களில் தங்களுடைய இயந்திரங்களை விற்பனையாகவோ, கடனாகவோ கொடுப்பதற்குப் பதிலாக, தங்களுடைய இயந்திரங்களைக் கொண்டுபோய்ச் சொந்தத் தொழிற்சாலைகளை அமைத்து விடுவது.

எனவே காலனிகளுடன் நடத்திய வியாபார முறை நான்கு கட்டங்களில் வளர்ந்தது (1) சாமான்களை மட்டும் விற்றது (2) உர்பத்தி செய்யும் இயந்திரங்களை விற்றது (3) மூலதனத்தைஏற்றுமதி செய்தது (பணத்தைக் கடனாகவோ, பங்காகவோ, தவணையாகவோ அனுப்பியது) (4) தங்களுடைய தொழிற் சாலைகளை அமைத்து மார்க்கட்டிலேயே உர்பத்தி செய்வது.

இவ்வளவும் “யார் வாங்குவது?” என்ற கேள்விக்குப் பதில், சிக்கல் தீர்ந்துவிட்டதாக முதலாளிகள் நினைத்தனர்; சிக்கல் தீரவில்லை, வளர்ந்தது. இந்த வளர்ச்சி வியாபாரத் துறையில் மட்டும் நடைபெறவில்லை. அரசியலில் பலமான மாறுதலைச் செய்தது. வியாபாரத்திற்கு ஒவ்வொரு ஐரோப்பிய நாடும், கடைசியில் ஏகாதிபத்திய நாடாக ஆனது. மார்க்கட் பிரதேசங்கள் அடிமை நாடுகளாயின.

முதலில் உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களை மட்டும் விற்கும் பொழுது ஒவ்வொரு நாட்டுக்கும் போட்டி இருந்ததே தவிர, அயல் நாட்டைப் பிடிக்க வேண்டுமென்ற ஆசையோ, அவசியமோ கிடையாது, பின் இயந்திரங்களை விற்ற பொழுதும், மூலதனத்தை அனுப்பிய பொழுதும், தொழிற்சாலைகளை அமைத்த பொழுதும் வியாபாரத்துக்கு அதிகம் பாதுகாப்புவேண்டியிருந்தது. அயல் நாட்டில் அரசியல் ஆதரவு வேண்டும், சட்டதிட்டங்கள், வரிவசூல் சாதகமாயிருக்க வேண்டும், அயல்நாட்டுப் படையெடுப்புகளிலிருந்து தொழிற்சாலைகளையும், சுரங்கங்களையும் காப்பாற்றப் படைபலம் வேண்டும். இவ்வளவு வசதிகளையும் செய்து கொள்ள வியாபாரக் கம்பனி சென்ற இடங்களிலெல்லாம், படை வரிசைகள் சென்றன. படைகள் அதிகரித்தன. சந்தைக்கடைகள், சாம்ராஜ்யங்களாயின.

இங்கிலாந்து, பிரான்ஸ், டச்சு, போர்ச்சுகல், ஜெர்மனி முதலியன போட்டியிட்டு நாடுகளைப் பிடித்தன. ஒவ்வொரு சாம்ராஜ்யமும் வளர்ந்தது. ஆப்பிரிக்காக் கண்டம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டது, இந்தியா, தென்கிழக்கு ஆசியா கிழக்கிந்தியத் தீவுகள், தென்அமெரிக்கா, ஒவ்வொன்றின் மீதும் பல்வேறு வண்ணங்கள் தீட்டப்பட்டன. உலகத்தின் பரந்த இடங்களனைத்தும் வல்லரசுகளால் பங்குபோடப்பட்டன. வல்லரசுகளின் ஆசை, அந்த நாட்டு முதலாளிகளின் லாப வேட்கை அதிகரித்ததைப் போல் பூமியின் பரப்பு அதிகரிக்கவில்லை. சாம்ராஜ்யங்களின் எல்லைக்கோடுகள் தொட்டுக்கொண்டு நின்றன. போதுமான இடம் (மார்க்கட்) இல்லையென்ற புகார், இலாபத்தில் ஏற்றத்தாழ்வுகள், எல்லைத்தகராறுகள், கடைசியில் தொட்டுக்கொண்டிருந்த ஏகாதிபத்தியங்கள் மோதிக்கொண்டன. 1914-ல் உலகச்சண்டை ஆரம்பமாயிற்று. நூறு இலட்சம் போர்வீரர்கள் மாண்டனர். மார்க்கட் பிடிக்கும் ஆசை, அயல்நாடுகளை அடக்கவேண்டுமென்ற வெறி பாசிசத்தில் வளர்ந்து கால்நூற்றாண்டுக்குள்ளாக மற்றொரு மோதுதல் நிகழ்ந்து, இதில் மூன்று கோடி பிணங்கள் போர்க்களத்தில் விழுந்தன.

> **தோணி ஓட்டம் மேவுமோ?**
>
> ஊரிலேனும் நாட்டிலேனும்
> உலகிலேனும் எண்ணினால்
>
> நீர் நிறைந்த கடலையொக்கும்
> நேர் உழைப்ப வர்தொகை!
>
> நீர் பிரிந்த ஓடையொக்கும்
> நிறைமுதல்கொள் வேர்தொகை
>
> நூறலொன்று மோதுமயின்
> தோணிஓட்டம் மேவுமோ?
>
> —பாரதிதாசன்.

ஆரம்பத்தில் இருந்த கேள்வி “யார் வாங்குவது?” இன்னும் தீர்க்கப்படவில்லை. அந்தக்கேள்வி அயல் நாடுகளில் சந்தைக்கடைகளை உண்டாக்கியது, சாம்ராஜ்யங்களை அமைத்தது, உலகச்சண்டைகளை உண்டாக்கியது.

சந்தைக்கடைகள் கைமாறின, சாம்ராஜ்யங்கள் தளர்ந்தன, சண்டைகள் நிகழ்ந்தன, ஆனால் கேள்வி அப்படியே இருக்கிறது.

“யார் வாங்குவது?” முதலாளித்துவத்தின் பலவீனத்தைச் சுட்டிக் காட்டுகிறது, அதுதான் மறுபடியும் அமெரிக்காவை மற்றொரு உலகச் சண்டைக்குத் தூண்டுகிறது.

சண்டைக் காலத்தில் அமெரிக்காவின் உற்பத்தி பெருகியது. சண்டைக் கருவிகள் ஏராளமாகச் செய்யப்பட்டன. போர்க்களத்திலிருந்து அமெரிக்கா வெகுதூரத்தில் இருந்ததால், அதன் தொழில் பாதிக்கப்படவில்லை. இலாபமும் ஏராளமாக வந்தது. புள்ளி விவரங்களுடன் கூறவேண்டுமானால் அமெரிக்காவின் வருமானம் 1938—ல் 6,400 கோடி டாலராக இருந்தது. இது 1944-ல் 16,000 கோடியாக வளர்ந்தது. உற்பத்தி இரண்டரை மடங்கு அதிகரித்தது. ஆனால் அமெரிக்க முதலாளிகளுக்குக் கிடைத்த இலாபமோ ஐந்துமடங்காக ஏறியது. ஏறக்தாழ 500 கோடி டாலர் இலாபத்திலிருந்து, சண்டைக் காலத்தில் 2500 கோடி டாலராக உயர்ந்தது. இந்த 2000 கோடி டாலரும், இலாபத்துக்குமேல் இலாபம். இவ்வளவு இலாபமும் சண்டைக்காலத்தில் போர்க்கருவிகள் உற்பத்தி செய்வதிலும், பிறநாடுகளுக்கு அவைகளைக் கொடுத்ததிலும் கிடைத்தவை. அதை இழந்துவிட, அதற்கு மனம்

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] மலர் 7 1—5—49 இதழ் 44 [காஞ்சி

மகிழ்ச்சி மலரட்டும்

இன்று மே முதல் நாள்! மேதினி எங்கும் கொண்டாடப்பெறும் மே விழா நாள்! அலாஸ்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலுள்ள பற்பல நாடுகளின் மூலை முடுக்குகளிலெல்லாம், மேநாள் முழக்கம் இன்று ஒலிக்கப் பெறும். பாடுபட்டு உழைத்துப் பலன் காணாது தவித்திடும் பாட்டாளியின் குரல் எங்கணும் எக்காளமிட்டு நிற்கும்!

மாஸ்கோ நகரில் இன்று மணங் கமழும். மக்கள் மகிழ்ச்சியிலே திளைத்திருப்பர். ஆட்சித் தலைவரும், படைத் தலைவர்களும் பாராட்டுரை கூறி நிற்பர். குதூகலம், அங்கே கொள்ளை கொண்டு ஆடிப்பாடி அழகு நடனம் புரியும்.

நியூயார்க் கடற்கரையிலே, தேம்ஸ் நதி தீரத்திலே, பாரிஸ் பூங்காவிலே, பெர்லின் கோட்டை வெளியிலே, யாங்ஸ்டிக்யாங் ஆற்றங்கரையோரத்திலே, இந்தோனேஷ்ய சதுக்கத்திலே, பர்மாக் களத்திலே, திராவிடத்தின் தீம்பொழிற் றிடல்களிலே தொழிலாளர்கள் ஒன்றுகூடி இதய ஒலியை எக்களித்துக் கொண்டிருப்பர். அவர்கள் இதயத்தினின்றும் வெளிக் கிளம்பும் ஒலி பெரும்பாலும் இன்ப கீதமாக இருக்காது, வேதனையின் குரலாகத்தானிருக்கும். குமுறும் அவர்களது உள்ளம், "காண்பதெலாம் தொழிலாளி செய்தான் அவன், காணத்தகுந்தது வறுமையாம்—அவன், பூணத் தகுந்ததும் பொறுமையாம்." என்ற சொற்களைத்தான் கொட்டிக் கொண்டிருக்கும். 'உழைப்பவர்க்கே உரிமை யெல்லாம்' என்ற முழக்கம் காற்றில் மிதந்து செல்லும் பேரொலியாக இருக்கும்.

பல்வேறு பேதங்களின் காரணமாக ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. பணப் பட்டாளத்திற்கும், பட்டினிப் பட்டாளத்திற்கும் மூண்ட மோதுதல் இன்னும் நிற்கவில்லை. போராட்டங்கள் பல கட்டங்களைத் தாண்டிக்கொண்டு வந்திருக்கின்றன; இன்னும் தாண்டவேண்டிய கட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன. பாட்டாளிகள், போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால, வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே மே நாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்றவேண்டிய செயல்கள் குறித்து எண்ணி, செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் மே நாள் பயன்படுகிறது.

அதிகார மண்டபத்தில், பணமூட்டைகளின் மீது அமர்ந்துகொண்டு, உழைக்கும் கூட்டத்தினரை சொக்கட்டான் காய்களை நகர்த்துவதுபோல், அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றது முதலாளி வர்க்கம்.

அமெரிக்கா அணுகுண்டையும், பணக்குண்டையும் கையிலேந்தி உலகை வளைக்க எண்ணியிருக்கிறது—அட்லாண்டிக் நாடுகள் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு களம் புகக் காத்திருக்கின்றன—டச்சு வல்லரசு இந்தோனேஷியாவில் தன் வல்லூறுப் பிடியைத் தளர்த்திக்கொள்ள மறுக்கிறது—இந்தோசீனாவை விட்டுப் பிரெஞ்சுப் பேராசை அகலுவதாக இல்லை—மலேயாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இறுதிப் பிடிப்பை அடக்குமுறைகளால் உறுதியாக்கிக்கொள்ள முயலுகிறது—தென் ஆப்ரிக்காவில் வெள்ளை நிறம் தன் நிறத்திமிரைக் கழுவிக்கொள்ளமாட்டேன் என்கிறது. இவ்வாறு முதலாளித்துவ வல்லரசுகளின் வலை பல வகைகளில் வீசப்பட்டிருக்கின்றது. வலையின் சிக்கல்களிலே சிக்கிச் சீரழிகின்றது உழைப்போர் உலகம். சிக்கலை அறுத்துக்கொண்டு வெளிக்கிளம்ப அது பாடுபடுகிறது. தொழிலாளிகளின் வீறிட்டெழும் முயற்சியில் வெற்றிகூடாமலுமில்லை. சீனாவின் பெரும் பாகம் சிவப்பேறிவிட்டது. தென்கிழக்குப் பகுதி நாடுகளில் தொழிலுலகம் விழித்துக்கொண்டு போராட்ட நடவடிக்கைகளில் இறங்கிவிட்டன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சிவப்புக்கறை படிந்துவிட்டது. இந்திய துணைக்கண்டத்தில் எரிமலை உருவாகிக் குமுறிக்கொண்டிருக்கிறது, இன்னும் வெடிக்கவில்லை, வெடிப்பதற்கான சூழ்நிலையை உண்டாக்கும் முறையில் ஆளவந்தாரின் போக்கு அமைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

திராவிடத்தைப் பொறுத்தவரையில் உழைப்பாளிக் கூட்டம் ஒன்றுசேர முடியாதபடி சிதறுண்டு கிடக்கிறது. உருவாகக்கூடிய வகையில் அமைத்திருக்கும் ஆலைத்தொழிலாளரின் எண்ணிக்கை இங்கே மிக மிகக் குறைவு. குறைவுக்குக் காரணம், யந்திரத் தொழில் வளர்ச்சியுறாமலிருப்பதேயாகும். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் உழவர்களும், பல்வேறுசிறுசிறு, தனித்தனி தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும், எண்ணிக்கையில் ஏராளமானவர்களே என்றாலும், அவரெல்லோரும் ஒருருவாகத் திரண்டு நிற்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வு முறைகளும், அறியாமையுமே அந்நிலையில் அவர்களை இறுத்திவைத்திருக்கின்றன. ஆகவேதான் திராவிடத்தைப் பொறுத்தமட்டில்—குறிப்பாகத் தமிழ் நாட்டில், உழைப்பாளிகள் ஒன்றுகூடத் தடையாயிருக்கும் உயர்வு தாழ்வு முறைகளை அகற்றும் முயற்சியிலும், அறியாமையைப் போக்கி அறிவைக் கொளுத்தும் முயற்சியிலும் திராவிடர் கழகம் ஈடுபட்டு வருகிறது. "சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதி" என்ற முறையை, மனித சமுதாய வாழ்க்கைக்கேற்ற நிரந்தரத் திட்டமாக்க எடுத்துக்கொள்ளும்முயற்சி, எளிதில் முடிவதாக அமைய வேண்டும். பொருளாதாரத் துறையில் அந்தக் குறிக்கோளை நோக்கித்தான் திராவிடர் கழகம் பணியாற்றி வருகிறது. அந்தக் குறிக்கோளை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் ஒப்பற்ற நாளாகவே இந்த மே நாள் திராவிடர் கழகத்தினர்க்குப் பயன்படுகிறது.

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட, போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்ற பெரு முழக்கம் உலகத் தொழிலாளர்களின் உள்ளங்களிலிருந்து இன்று வெளிக் கிளம்பட்டும்! அதனால் ஏற்படும் மகிழ்ச்சி எங்கும் மலரட்டும்! அந்த மலரினின்றும் வீசும் இன்ப மணம் எங்குங் கமழட்டும்!

சண்டை வருமா?

7-ம் பக்கத் தொடர்ச்சி

வருமா? சண்டைக்கு முன்பிருந்த நிலைக்குத் திரும்புவதென்றால் இலாபம் குறைந்துவிடுகிறது. எனவே இலாபத்தைநிலைநிறுத்தச் சண்டைக் காலத்து உற்பத்தி நீடிக்கப்படுகிறது. மறுசண்டைக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது.

சோவியத் அமைப்புக்கும், அமெரிக்க முதலாளித் தத்துவத்துக்கும் சண்டை மூளுவது நிச்சயம் என்று கூறப்படுகிறது. இரண்டில் யார் அதைத் தூண்டுகிறார்கள் என்று கவனிக்கவேண்டும். யாருக்கு அவசியம்? யாருக்குப் பலன்?

மார்க்கட் பிடிக்க வேண்டுமென்ற ஆசை ரஷ்யாவுக்குக் கிடையாது, அவசிய மில்லாத காரணத்தால்.

அமெரிக்காவுக்குத் தன்னுடைய லாபத்தைக் காப்பாற்றிக்கொள்ள, அயல்நாட்டில் மார்க்கட்டுகள் தேவைப்படுகின்றன.

யார் வாங்குவது? என்ற கேள்வி ரஷ்யாவில் கிடையாது. அங்கு பொருள்கள் மக்களின் தேவைக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன, லாபத்திற்காக அல்ல.

யார் வாங்குவது? என்ற பிரச்சினை அமெரிக்காவில் இருக்கிறது. பொருள்கள் இலாபத்திற்காகத் தயாரிக்கப்படுகின்றன. தேவையுள்ளவர்களிடம் பணமில்லை, பணமுள்ளவர்களுக்கு அதிகம் தேவையில்லை. எனவே வெளிநாடுகளைத் தேடவேண்டியிருக்கிறது. அதனால் போட்டியும், சண்டையும் ஏற்படுகின்றன.

கடந்த இரு சண்டைகளிலும் அமெரிக்கா நேரடியாகத் தாக்கப்படவில்லை; எனவே மீண்டும் உலகச் சண்டையில் ஈடுபடத் தயாராக இருக்கிறது. சண்டை வந்தாலும் அமெரிக்காவுக்குள் நுழையாது, ஐரோப்பாதான் அமர்க்களமாகும் என நினைக்கிறார்கள். ஆனால் சண்டையின் விலை என்ன என்பது ரஷ்யாவுக்குத் தெரியும். எனவே சண்டையைத் தவிர்க்க அது விரும்புகிறது.

ட்ருமன் கொள்கையைக் கண்டித்து கிளாட் பெப்பர் என்ற அமெரிக்கப் பிரதிநிதி செனட்சபையில் ரஷ்யாவின் நிலையை நன்றாகக் குறிப்பிட்டார். "அணுகுண்டுகள் இல்லை, நல்ல துறைமுக வசதிகள் கிடையாது; சண்டைக்குப்பின் தன்னுடன் உதவி ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள நேச நாடுகளே மறுத்தன. தன்னுடைய அரசியல் அமைப்பு முதலாளிகளும், கள்ள மார்க்கட்காரர்களும், ஏகாதிபத்திய வாதிகளும் நிரம்பிய நாடுகளுக்குப் பிடிக்காது என்பதும் தெரியும். இந்த நிலையில் ரஷ்யா பல பயங்கர எதிர்ப்புகளிடை நிற்கிறது. ரஷ்யா சண்டையைவிரும்பவில்லை. சண்டை என்றால் என்ன என்று அதற்குத் தெரியும். வளமை மிக்க பிரதேசங்கள் தீக்கு இரையாக்கப்பட்டு நாடெங்கும் பரவிய அழிவிலிருந்து, பாசிசப் போர் வெறியைத் தடுக்க, போர்க்களத்தில் விழுந்த ஒன்றரைக் கோடி பிணங்களிலிருந்து (அமெரிக்காவின் நஷ்டத்தைவிட இது ஐம்பது பங்கு அதிகமானது) படுகாயமடைந்த இரண்டரைக் கோடி போர்வீரர்களிடமிருந்து, எதிரி நுழைவின் போது நாடோடி வாழ்வினராக அலைந்து திரிந்த எண்ணற்ற வயோதிகர், தாய்மார், குழந்தைகள் இவர்களிடமிருந்து, ரஷ்யாவுக்குக்கிடைத்த சண்டையின் வெறுப்பு உண்மையானது." இவ்வாறு அமெரிக்கப் பிரதிநிதி ஒருவரே ரஷ்யாவின் சமாதான விருப்பத்தை ஒப்புக்கொள்ளுகிறார். இருந்தாலும் அங்கு முதலாளிகளின் குரலே வலுத்து வருகிறது. அமெரிக்க அரசாங்கம் மறு சண்டையைத் துவக்குவதில் மும்முரமாயிருக்கிறது.

சண்டை வருமா? இந்தக் கேள்வி லாபநோக்கம், இருக்கும் வரை இருந்துதான் தீரும். முதலாளிகளுக்கு அரசாங்கத்தில் பலமான பிடிப்பு இருக்கும் வரை—அரசாங்கம் எதுவாயிருந்தாலும் சரி தேசிய சர்க்காராயிருந்தாலும் சரி, பாசிச சர்க்காராயிருந்தாலும் சரி சண்டைகள் மூளுவதற்கு இடமிருக்கின்றன. லாப நோக்கம் — "யார் வாங்குவார்கள்?" என்ற கேள்வியிலிருந்து உலகம் விடுவிக்கப்படாத வரை, "சண்டை வருமா?" என்ற கேள்வியும், சண்டையால் ஏற்படுகிற நாசமும் தடுக்கப்படமுடியாதனவாகும்.

இலாப நோக்கம் ஒழிந்தால்' தேவைக்குச் சாமான்கள் என்ற நிலை ஏற்படும். அப்பொழுது யார் வாங்குவது என்ற கேள்வி போய், எது தேவை? என்று மக்களின் நலத்துக்காக உற்பத்திமுறை வேலை செய்யும். அப்பொழுது மார்க்கட் பிடிக்கும் அவசியமும் கிடையாது, மாபெரும் சண்டைகள் உண்டாவதற்கு வழியும் ஏற்படாது.

*

15-ம் பக்கத் தொடர்ச்சி

'தொழிற் சங்கம்' என்ற பதத்தையே தனக்கு எதிரி என்று தீர்மானித்து விட்டது அரசாங்கம். பல ஆண்டுகளாகத் தொழிற் சங்கத்திற்கென்று தங்கள் வாழ்நாளைச் செலவிட்டுவரும் தலைவர்கள்பலர் இருக்க, அவர்களைவிட்டு, பேர், ஊர் தெரியாத பேர்வழிகளை யெல்லாம், அவர்கள் இந்திய தேசியத் தொழிற்சங்கத் காங்கிரசை சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, சர்வ தேசிய தொழிற்சங்ககூட்டங்களுக்குப்பிரதிநிதிகளாக அனுப்பியது அரசாங்கம். தொழிலாளர்களின் உண்மைத் தலைவர்கள் பலர் சிறைக் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இதைவிட இன்னும் விசித்திரமான காரியங்களையும் செய்கிறது அரசாங்கம். ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளிகளுக்கு மருத்துவ வசதி, வேலைநேரக் குறைவு, குறைந்த பட்ச சம்பள விகிதம், விடுமுறை நாட்களின் எண்ணிக்கை இவைகளைப்பற்றிச் சட்டங்கள் இயற்றிக் கொண்டிருக்கும் சமயத்தில் 'வேலைநிறுத்தம்' என்பதையே சட்ட விரோதமாக்க மசோதா தயார் செய்தனர். இந்த மசோதவை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணமே பாசிசத்தின் பிறப்பிடமாகும். தொழிலாளிகளின் ஒரே ஆயுதமாகிய 'வேலை நிறுத்தத்தையும்' சட்ட விரோதமாக்கி ஆண்டான் அடிமை என்ற சமுதாய நிலையை சாஸ்வதமாக்க நினைக்கிறது இந்திய முதலாளி வர்க்கம்.

நாளுக்குநாள் உலகத்தின் வர்க்கப் பிரிவினை தெளிவாகிக் கொண்டே வருகிறது. ஆளும் கூட்டம் ஒரு பக்கமும், ஆளப்படும்கூட்டம் வேறு பக்

(12-ம் பக்கம் பார்க்க)

உழைப்பாளிக்கே :: :: :: :: உலகம் உரியது

"உலகப்பனே! உள்ளபடியே நீ ஓர் ஏழைதானா?" இது, வாழ வகையற்றுக் கிடக்கும் பாட்டாளிகளின் கண்ணீரைக் கண்டு, அந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகுவதற்கு, இல்லாமையும், போதாமையுமே அடிப்படைக் காரணங்கள் என்பதையுணர்ந்து, உடனே உலகப்பனைத் திரும்பிப் பார்த்து, உயர்வுள்ளங் கொண்டோர் கேட்கும் கேள்வியாக இருந்து வருகிறது.

"என்னிடத்திலே பொன், வெள்ளி, இரும்பு போன்ற உலோகங்கள் ஏராளமாகப் புதைந்து கிடக்கின்றன; அவற்றில் ஒரு பகுதி பொன், வெள்ளி நாணயங்களெனப் பெயர் பெற்று, மாளிகைகளிலேயும், கோயில்களிலும், பாங்குகளிலும் சென்று குவிந்து கிடக்கின்றன. விளை பொருள்களை விளைவிக்கத் தாராளமான நீர் வளங்களையும், நிலவளங்களையுங் கொண்டிருக்கிறேன்; அவற்றில் விளையும் தானியங்கள் அம்பாரமாக ஆங்காங்கு அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. பருத்தி விளையுங் காடுகள் என்னிடத்தில் அமோகமாக ஆங்காங்கு இருக்கின்றன; அவற்றில் பயிரிடும் பருத்தி ஆடைகளாக நெய்யப்பட்டுக் கிடங்குகளிலே பொதி பொதியாகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் எழுப்புவதற்கான கற்களையும், மரங்களையும் எங்கணும அடர்த்தியாகக் கொண்டிருக்கிறேன்; அவைகளெல்லாம் எடுத்துப் பயன் படுத்துமளவுக்குப் பரந்து கிடக்கின்றன. இவையெல்லாங் கொண்டிருக்கும் நான் ஏழையா? என்று விடையிறுத்துநிற்பது போல் காட்சியளிக்கிறான் உலகப்பன்!"

உலக மக்களுக்குப் போதுமான அளவுக்கு உணவும், உடையும், உறையுளும் உண்டாக்கப்படுகின்றன - உண்டாக்க முடியும் என்றே பேரறிஞர்கள் பலரும் இயம்புகின்றனர். நமது பார்வைக்கே இதன் உண்மை நன்கு புலனாகிறது. இந்த நிலையை அரசுகளுங் கூட ஒத்துக் கொள்ளுகின்றன. அப்படியிருந்தும் இல்லாமையாலும், போதாமையாலும் உலக மக்கள் பண்டு தொட்டு இன்று வரை வாடி வதங்கியே வருகின்றனர். பொருளாதாரப் பேரறிஞர்கள் உலகம் வருந்துவது இல்லாமையாலல்ல, அதிகம் இருப்பதாலேயே வருந்துகின்றது என்று கூறுகின்றனர். இந்த 'அதிகம்' யாருக்குப் பயன்படுகின்றது? யாருக்கும் பயன்படாமலேயே பாழ்படுத்தப்படுகிறது! மக்களின் உழைப்பால் உண்டான இந்த 'அதிகம்' மக்கள் வயிற்றுக்கு உதவாமல், உலக ஆடம்பரங்களுக்கான வகைகளில் செலவழிக்கப்பட்டுவருவதால், பண்டுதொட்டு உலகம் ஆளாகும் துயரத்திற்கு, இந்தப் பயன்படாச் செலவு முதற்காரணமாக இருந்துவருகிறது.

இந்த 'அதிகம்' கோயில்களுக்கும் குளங்களுக்கும், மண்டபங்களுக்கும், மடங்களுக்கும் செலவு செய்யப்பட்டு மூடப் பக்தியை வளர்க்கப் பயன்பட்டு வருகிறது. மனிதனின் வீண் பெருமைக்கு வழிவகையாக இருக்கும் நவரத்தினங்களுக்கும், நகைகளுக்கும் பயன்பட்டு வருகிறது. கல்லுக்கும், செம்புக்கும் செய்யும் அபிஷேக ஆராதனை, நைவேத்திய, நிவேதனங்களால் விளையும் மூடநம்பிக்கையை வளர்க்க உதவுகின்றது. மனிதனை மனிதன் கொல்லும் ஆயுதங்களுக்குச் செலவிடப்படுகிறது. வீண் ஆடம்பரத்தை வளர்க்கும் வசதிகளுக்குச் செலவிடப்படுகிறது. இந்த மிகுதி தானத்திலும், தருமத்திலும் செலவிடப்பட்டு, மக்களைச் சோம்பேறியாக்கும் சத்திரங்களும், சாவடிகளும், அன்னதான மடங்களும், சொர்ணதான சமாஜங்களும், புரோகிதர்களும் மதத்தரகர்களும் மடாதிபதிகளும் உருவாகின்றனர். சிற்றரசர்களும் ஜமீன்தாரர்களும் மிராசுதாரர்களும், சுரோத்தியகாரர்களும், கடனுக்கு வட்டிவாங்கும் சோம்பேறிகளும், யாதொரு உழைப்புமின்றிச் சோம்பித்திரியும் கனதனவான்களும் நாட்டிலே நடமாடுவது இந்த மிகுதியாலன்றோ! வாழ்வின் இன்றியமையாத தேவைக்கும் மிகுதியான சம்பளத்தைப் பெறும் கவர்னர் ஜெனரல்களும், கவர்னர்களும், நீதிபதிகளும், கலெக்டர்களும், இன்னும் இவர்கள் போன்றாரும் தங்களுக்கு மட்டுமல்லாமல், தங்கள் வழியில் பிறக்கும் பலதலைமுறையினரும் வேலையின்றிப் பிழைத்து வாழச் சேமிக்கப்படும் செல்வம் யாவும் இந்த மிகுதியாலன்றோ! இந்த மிகுதியின் ஆதாரத்தையும், அதன் பாழ்பட்ட செலவழிப்பையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

பண்டைக் கால முதல், செல்வம் உண்டாகும் வழிகளையும், அப்படி உண்டாகும் செல்வங்களுக்கு யார் உண்மையாக உரியவர்களென்பதையும், எவ்விதமாக உலகச் செல்வத்திற்கு யாதொரு உரிமையும் இல்லாதவர்கள் உரிமையாளராக வரமுடிந்ததென்பதையும், உலகச் செல்வங்கள் அனைத்தும் அனைவருடைய வாழ்விற்கும் பயன்படும் வகையில் பகிர்ந்து கொடுக்கப்படாமல், சிலரே தம் விருப்பப்படி செலவழித்து வந்ததையும் ஆராய்ந்துணராத குற்றத்தால், மதங்கள் காட்டும் வழிகளும், நீதிநெறி மார்க்கங்களும், தத்துவ ஞானங்களும், அரசுகளின் ஏற்பாடுகளும், உலகம் படும் துன்பத்தை நீக்க முடியாமற் போயின.

உலகில் காணப்படும் செல்வங்களனைத்தும் மனித உழைப்பாலேயே உண்டானவையாகும். மனிதனின் உழைப்புக் கலக்கப்பட்ட பிறகே பொருள்களெல்லாம் செல்வங்களாகின்றன. நிலத்தில் விளைவிக்கும் விளைபொருளும், சுரங்கத்தில் தோண்டி எடுக்கப்படும் உலோகமும், மலையைக் கல்லி எடுக்கும் மணிகளும், கடலில் குளித்தெடுக்கும் முத்தும், எல்லாம் உழைப்பின் பயனே. நிலமிருக்கலாம், நீரிருக்கலாம். இவையாவும் அந்த நிலையிலேயே செல்வங்களாகமாட்டா. பூமியிலே புதைந்து

> "சட்டத்தைப் பணக்காரன் செய்கிறான். சட்டம் ஏழைகளை ஆளுகிறது"
>
> —கோல்ட்ஸ்மித்.

கிடக்கும் கோடானுகோடி விலை மதிப்புள்ள தாதுக்கள் செல்வமாகா. அவைகளைத் தோண்டி எடுத்துவந்து மனிதனுடைய உழைப்பால் பக்குவப்படுத்தப்பட்ட பின்னர்தான், அவைகள் செல்வமாகின்றன. காடுகளில் ஏராளமாக மரங்களிருக்கலாம். அவையெல்லாம் செல்வமாகா. அவைகள் மனிதனால் வெட்டப்பட்டு, கப்பலோ, கைவண்டியோ, வீடுகளோ, வாகனங்களோ, படங்களோ, பொம்மைகளோ, மாட்டுக்கொட்டிலோ, பகேஸ்வரன்ரதமோ, செய்யப்படுமேயாகில், அப்பொழுதுதான் அவைகள் செல்வமாகும். இரும்பு மண்ணோடு கலந்து காணப்படும் ஒருவித உலோகம். இந்த இரும்பு மண்ணை வெட்டி எடுத்து, ஆணியாயினும், அச்சாயினும், தண்டவாளங்களாயினும் செய்யப்பட்ட பிறகே செல்வமாகும். மண்ணெண்ணெய் அல்லது நிலக்கரி இவை மண்ணில் புதைந்து கிடக்கின்றவரையில செல்வமல்ல. இந்த எண்ணெய்ச்சுரங்கங்களிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும், மனிதன் உள்நுழைந்து, மண்ணெண்ணெய் நிலக்கரி, ஆகியவற்றை வெளியே கொண்டுவந்த பிறகே செல்வமாகின்றன. இவ்விதமாக எந்த இயற்கைப் பொருளாக இருந்தபோதிலும், உழைப்பவனுடைய கைபட்டமாத்திரத்தில் அவைகள் செல்வமாக மதிக்கப்படுகின்றன. நிலமுமிருக்கலாம், நீரு மிருக்கலாம், கால மழையும் பெய்து வரலாம், ஆனால் உழவன் உழுது, நீர் பாய்ச்சிக், காலத்தில் விதைத்துக், களை யெடுத்துப், பாதுகாத்து வந்தால்தான், விளைந்த கதிர்கள் செல்வமாகும். உலகில் விளைந்த எவ்வித விளை பொருளாயினும், செய்த எவ்வித செய்பொருளாயினும், விளைந்த பிறகும், செய்த பிறகுமே செல்வங்களென மதிக்கப்படும். விளைவிப்பதற்கு முன்னாலும், செய்விப்பதற்கு முன்னாலும், உலகிலுள்ள எல்லா இயற்கைப் பொருள்களும் யாருக்கும் சொந்தமில்லை. மனிதனின் உழைப்பை அவைகள் அணைத்துக் கொள்ளும் போதுதான், அவைகள் செல்வங்களாக மாறுகின்றன.

உலக இயற்கைப் பொருள்களைத் தாங்கள் கைப்பற்றிக் கொண்டதாகக் கருதி, சிலர், அரண் அமைத்தோ, எல்லை வகுத்தோ, வேலி போட்டோ, பட்டா செய்தோ வைத்துக் கொள்ளலாம். சொந்தக்காரர் என்றும் பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் அவ்வியற்கைப் பொருள்களை ஒரு தம்படிக்குக்கூட வாங்கமாட்டார்கள். உழைப்பவன் உழுது பயிரிட்ட பிறகும், சுரங்கத்தில் புகுந்து உலோகத்தை வெளிப்படுத்திய பிறகும், மரங்களை வெட்டிக் கப்பலாகவும், வீடாகவும் அமைக்கப்பட்ட பிறகுமே அவைகளுக்கு விலையும் மதிப்பும் ஏற்படுகின்றன. எல்லாவித விளை பொருள்களுக்கும், எல்லாவித செய்பொருள்களுக்கும், மனிதனின் கைபட்ட பிறகே, அவைகளுக்கு விலை மதிப்பு ஏற்படுகின்றது. உண்மையில் எல்லாப் பொருள்களினுடையவும் விலை மதிப்பு மனித உழைப்பால் ஏற்படுகின்றது. மனிதனின் வாழ்க்கை வசதிக்குத் தேவையான வகையில் செய்யப்பட்டும், விற்கப்பட்டும் வரும் சொத்துக்கள் யாவும், மனிதன் உழைப்பால் உண்டாகின்றன. ஆதலின் நாம் எந்தப் பொருளைப் பயன்படுத்தி வந்தபோதிலும், மனிதனுடைய உழைப்பைத்தான் பயன்படுத்தி வருகிறோம் என்பதாகும். பொருளின் விலைமதிப்பும், மனித உழைப்பும் ஒன்று. நாம் பொருள்களை விலை கொடுத்து வாங்கும்போது, உண்மையில் மனித உழைப்பைத்தான் வாங்குகின்றோம் என்று அர்த்தம். மனித உழைப்பே விலையாகும். ஆகவேதான் மனித உழைப்பை விலை என்கிறார் அறிஞர் காரல் மார்க்ஸ்.

இந்த விலை உண்மையில் யாரைச் சேரவேண்டும்? உழைப்பாளிகளையல்லவா! ஆனால் உழைப்பால் உண்டான விலை முழுமையும், உழைப்பாளிக்கு உதவாமற் போன குற்றத்தால், உலகில் உழைப்போர் வறுமைக்கும், இல்லாமைக்கும் ஆளாகி நிற்கின்றனர்.

அரசர்களும், அமைச்சர்களும், வணிகர்களும், புரோகிதர்களும், நிலச் சொந்தக்காரர்களும், பணக்காரர்களும் தோன்றுவதற்கு முன், ஒரு காலத்தில், நிலம், நீர், காடு, மலை, வெட்டவெளி, இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய யாவும் பொதுவாக இருந்தன. பறவைகள், ஆடுமாடுகள் போன்ற விலங்குகள், கோழி, மீன்கள், ஆகிய இனங்கள் முதலியன உணவுப் பொருள்களாக வேட்டையாடப்பட்டு, அவனவனுக்குக் கிடைத்த உணவை அவனவன் பயன்படுத்திவந்தான். மக்கட் சமுதாயம் பெருகவும், அரசர்களும், புரோகிதர்களும், மதவாதிகளும், மந்திரக்காரர்களும், தந்திரக்காரர்களும் தோன்றி, உழைப்பாளிகளை மூட நம்பிக்கை, குருட்டுப் பழக்கங்களிலாழ்த்தி, அந்தந்தக் கிராமத் தலைவனை கடவுளாக் கொண்டு, அயல் கிராமங்களையும், அயல் நாட்டு ஆடு மாடுகளையும், அயல் நாட்டு மக்களையும், போரில் வென்று அடிமைகளாக்கி, நாடென்றும், நகரமென்றும் உண்டாக்கிக் கொண்ட பிறகே, அரசன் சொத்தென்றும், அமைச்சன் சொத்தென்றும், வணிகன் சொத்தென்றும் வேற்றுமைப்பட்டு, அவனவன் சொத்தென்ற தனிஉடைமை உலகில் உருவாயிற்று. இந்தக் காலத்தில் நிலமும், நீரும் பொதுவாகவே கருதப்பட்டு யாவராலும் நுகரப்பட்டு வந்தன. மதக்கோட்பாடுகள் வலுக்க,

> ## நெஞ்சு பொறுக்குதில்லையே
>
> "நெஞ்சு பொறுக்குதில்லையே — இதை
> நினைந்து நினைந்திடினும் வெறுக்குதில்லையே
> கஞ்சி குடிப்பதற் கிலார் — அதன்
> காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
> பஞ்சமோ பஞ்சமென்றே — நிதம்
> பரிதவித்தே உயிர் துடி துடித்து
> துஞ்சி மடிகின்றாரே — இவர்
> துயர்களைத் தீர்க்க வோர் வழியில்லையே!"
>
> —பாரதியார்.

வலுக்க, அரசனின் ஆதிக்கம் வலுக்க வலுக்க அயல் நாடுகள் கைப்பற்றப்பட்டன. தோற்ற நாட்டாரை வென்ற நாட்டினர் அடிமைகளாக்கினர். வெற்றியடைந்த நாட்டின் படைவீரர்கள், தோல்வியுற்ற நாடுகளையும், அடிமைகளையும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு, தங்கள் தங்கள் பங்கிற்கு வந்த நிலங்களை, அந்த அடிமைகளைக் கொண்டு பயிரிட்டு, அதன் விளைவை அவரவர்கள் சொந்தமாகக் கவர்ந்துகொண்டு முழுப்பயனையும் தாமே நுகர்ந்து வரலாயினர். இவ்விதமாகத்தான் நிலத்திலும், நீரிலும், ஆடுமாடுகளிலும், ஆதியில் தனி உடமை ஏற்பட்டது. இத்தகைய காரணங்களைக் கொண்டுதான், புர்தான் என்ற பேரறிஞர், 'சொத்து என்பது கொள்ளையடிக்கப்பட்டதாகும்'என்றார். இந்தக் கொள்ளைச் சொத்திலிருந்துதான், எல்லாத் தனிச் சொத்துக்களும் பிறந்தன என அறியவேண்டும்.

இந்த ஆதி அடிமைத் தொழிலாளிகளிலிருந்துதான், தற்காலத் தொழிலாளிகள் உதித்தனர். அடிமைகளுக்குஅந்தக்காலத்தில் உழுது பயிரிடவும், ஆடு மாடுகளை மேய்க்கவும், மீன்களைப் பிடிக்கவும், மரங்களை வெட்டவும் கொடுத்து வந்த சொற்ப உணவே, தற்காலத் தொழிலாளர்கள் பெறும் கூலியாகும்.

கால நிகழ்ச்சியில் பெரும், பெரும் நகரங்கள் தோன்றலாயின. வாணிபம் வலுத்தது. ஏற்றுமதி இறக்குமதிகள் பெருகின. போக்குவரத்து விரிவடைந்தது. உலகம் இவைகளையெல்லாம்பெற்றபின், நாகரிகம் பெற்றதாயிற்று.

பழம் பெருங்காலத்தில் உண்டாக்கப்பட்ட பொருள்கள் மிகச் சிலவே. பிறகு நாகரிகம் வளர, வளர வசதிகளும், தேவைகளும் பெருகின; பொருள்களும் அதற்கேற்றாற்போல் பலகோடி பல்லாயிரங்களாகப் பெருகின. ஆதிகாலத்தில் மக்கட் கூட்டம் குறைந்திருந்தபடியாலும், செய்யப்படும் பொருள்களும் மிகச் சொற்பமாகவே யிருந்தபடியாலும், பண்டமாற்று என்ற முறை வழங்கி வந்தது. பொருள்கள் கோடிக் கணக்கில் பெருகி வளர்ந்து நின்ற நிலையில், பண்டம் மாற்றுதல் முடியாமற் போய்விட்டது. ஆதலின், பொருள்கள் பகிர்ந்துகொள்ளப்படவேண்டியிருந்ததால்அந்தப்பொருள்களுக்கு விலைமதிப்பு ஏற்பட்டது. ஒரு பொருளை உருவாக்க ஆகும் நேரத்தை அளவாகக் கொண்டும், தொழிலின் திறமையைக் கொண்டும் அந்தந்தப் பொருள்களுக்கு விலையேற்பட்டது. இதுதான் நமக்கு வேண்டிய பொருள்களுக்கு நாம் கொடுத்து வாங்கும் விலையாகும். இந்த விலை, தொழிலாளர்களின் அந்தப் பொருளைச் செய்து முடிக்கப் பிடித்த நேரத்திற்கும், செய்து முடித்த திறமைக்கும் ஏற்பட்ட பரிசாகும். இதைத்தான் (சர்ப்பிளஸ் வால்யூ) அதாவது மேலும் உண்டாக்கப்படும் விலை மதிப்பு என்பார்கள். அதாவது நிலம், நீர் மற்றும் பல சொத்துக்களுக்கு நாம் கொடுத்து வரும் விலை என அறிக.

இப்படியாக, இயற்கைப் பொருள்களை ஆதியில் கொள்ளையிட்டுக் கொண்ட காரணமாக, தற்காலச் சொந்தக்காரர்களென்றும் உடையவர்களென்றும், உரிமையாளரென்றும் தாங்களே தங்களை உண்டாக்கிக் கொண்டனர். இந்த நிலங்களையும், நீர்களையும், மற்றும் பலவிதப் பொருள்களையும் விரும்பி உண்டாக்கியவர்கள் நாளடைவில் கூலித் தொழிலாளர்களென்றும், வேலைக்காரர்களென்றும், பண்ணையாட்கள் என்றும், அழைக்கப்படலாயினர். ஆதி அடிமைகளுக்கு, அவர்களால் செப்பனிடப்படும் பொருள்களுக்கு அந்த முதலாளிகள் விரும்பிக் கொடுத்த கூலியே அவர்கள் வேலைக்குச் சன்மானமாக ஏற்பட்டது.

இவ்வாறு பொருள்களின் உண்மையான உரிமையாளர்கள் உழைப்பாளிகளாக இருக்க, அவர்களின் உரிமை, கைத்திறனும் வாய்திறனுங் கொண்டவர்களால், பன்னெடுங்காலமாகக் கொத்திக்கொண்டு ஏப்பமிடப்பட்டு வந்திருக்கிறது. இன்று உழுத்தர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கும் உலகு, அதற்கு உரியவர்களான உழைப்பாளிகளுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமானால், உழைப்பாளிகள் ஒன்று திரண்டு எழுந்து யாவரையும் சக்திக்கேற்றபடி உழைக்கும் உழைப்பாளர்களாக்கி, யாவரும் தேவைக்கேற்ற வசதிகளைப் பெறும்படியாக நாட்டின் நிலையையும், உலகின் நிலையையுங் கொண்டுவரப் பாடுபட வேண்டும். அப்பொழுது உழைப்போர்க்கே உலகம் உரியது என்றாகிவிடும்!

> "எனக்கு வேண்டியது சுதந்திரம், அதைக் கோடு. சுவர்க்கமே எனது சிறையாக அமைந்தாலும், அதன் உயர்ந்த சுவர்களைத் தாண்டிக் குதிக்கவே விரும்புவேன்."
>
> —ஜான். டிரைடன்.

9-ம் பக்கத் தொடர்ச்சி

கழும் ஒன்று சேருகிறது. உழைப்பவனுக்கு ஊதியமும் உழுபவனுக்கு நிலமும் கிடைக்கும் வரை வர்க்கப் போராட்டம் நடந்தே தீரும். ஒரு நூற்றாண்டுக்கு முன் மார்க்ஸ் கூறியபடி போராட்டங்கள் பல நடந்தாலும் கடைசியில் வெற்றி பாட்டாளிக்குத் தான் என்பது நிச்சயம். ஆகவே தோல்வியைக் கண்டு பயப்படாமல், ஸ்தாபன ரீதியாக திட்டம் வகுத்துப் போராடவேண்டியது தான் தொழிலாளர் கடமை. அவர்களுக்கு வெற்றி நிச்சயம் ஏற்படும். அந்த நம்பிக்கையை இவ்வாண்டு மேநாள் கொடுக்கட்டும்.

இந்தச்சமயத்தில் முதலாளிகளுக்கும் எச்சரிக்கிறோம். வெள்ளம் வருகிறது, எரிமலை வெடிக்கிறது, குறுக்கே நிற்காதீர்கள். என்று. உங்களுக்கு என்று எங்கள் கவி கூறியதை ஞாபகப்படுத்துகின்றோம். கேளுங்கள்.

"செப்புதல் கேட்பீர்! இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்
பலர் ஆதலின்,

சுப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக மதித்திட
வேண்டாம்!

இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைத்திட உங்களின்
சொத்தை

ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம்

கொதிப்பேறு முன்பே
(ஒப்படைப்பீரே)"

செவ்வாழை

4-ம் பக்கத் தொடர்ச்சி

ளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டுவிட்டது.

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?"—கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

"இரண்டுமாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று—செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை, பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார் தமது மருமகப்பெண் முத்து விஜயாவின், பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைர மாலையைக் கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்கமாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின், வைரமாலையை விட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின்குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும், ஓங்கி வளரலாயிற்று. "எப்போது பழமாகும்?"—என்று கேட்பாள் பெண். எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது, என்று கேட்பான், பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்து பிள்ளைகளுக்குத் தரவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப்போகிறோம்—இடையே தரகர் இல்லை—முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக்கொள்ளும், முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது—அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே நமக்கு, என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும்—அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்!!

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத்தீர்மானித்தான்—பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது—பழம் தர வேண்டும் என்றுசொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, 'அச்சாரம்' கொடுத்தனர், பல குழந்தைகள் கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப்போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப் பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம் கூட இராது—ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனைஅவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது—எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது—இது போல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்—பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்துவிஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று, தோன்றாமலிருக்குமா? இரண்டு சீப்பு வாழைப்பழம்—என்றார் பண்ணையார்.

"ஏனுங்க பழம்—கடையிலே நல்ல பழமே இல்லை—பச்சை நாடாத் தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?—வேறே நல்ல பழம் எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க—அதைக் கொண்டுகிட்டு வரலாம்" என்றான். சரி, என்றார் பண்ணையார்!

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்து விட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக்குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை, இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு, வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது, குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாகஇருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று — நாக்குக் குழறிற்று -- வார்த்தைகள் குபு குபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக்கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்கு பிறந்தநாள் பூஜை—என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை—அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை — இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல்—எனும் எதைத்தான் சொல்ல முடியும்! கேட்பவர். பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக்குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால், முடியாது என்று சொல்லிவிட

(16-ம் பக்கம் பார்க்க)

இலாபம் இல்லாதார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

என்று இடித்துப் பேசியிருந்தால், இனியும் தங்கள் இறுமாப்பும், இரட்டை வாழ்வுப் போக்கும் நடைபெறாது என்பதை உணர்ந்து, முதலாளிகள் திருந்தியிருக்கக்கூடும். ஆனால் தலைவர்கள், நன்றி கூறினர்—நமது கூட்டுறவு பலப்படவேண்டும் என்று உபசாரம் பேசினர்—இவ்வளவு பெரும் தொகை தந்த பெரியவர்களின் பெருங்குணத்தைப் பாராட்டிப் பேசினர்.

உணவுக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு மாறாக அதிகம் விருந்தாளிகள் கூடியிருந்தது கண்டு, விருந்தில் கலந்துகொள்ள மறுத்து, கவர்னர் ஆனே வெளி ஏறினார் என்றோர் செய்தி கண்டோம் சின்னாட்களுக்கு முன்பு; இதுசரியானபாடம் கற்பித்திருக்கும், மேட்டுக்குடியினருக்கு! இதுபோல ஏழைக்கு இதம் செய்யப் பணம் இல்லை என்று கூறி, எந்தத் தொழிலாளர்களின் வியர்வையைக் கொண்டு, இந்தப் பணந்தேடிகள் இலாபம் பெற்றனவோ, அந்தத் தொழிலாளிக்குக் கூலி சிறிகளவு உயர்த்தவும் முடியாது என்று கூறிய, கடின சித்தர்களின், 'நன்கொடை'யைப் பெற மறுத்து, அந்தக் கூட்டத்திலிருந்து, நேருவும் படேலும் வெளி ஏறி இருந்தால், நிச்சயமாக, பயத்தாலும் வெட்கத்தாலும், அந்தப் பணந்தேடிகள் நடைப்பிணங்களாகி இருப்பர்—நாடு மட்டுமா, உலகமே சிரித்திருக்கும்.

உதவாது உலுத்தரின் பணம்! என்று ஒரு வார்த்தை கூறிவிட்டு, ஆனே, வேறோர் சம்பவத்தின்போது தைரியமாகச் செய்தது போல, இவர்கள் செய்திருந்தால், பணந்தேடிகள், பதுங்க இடந்தேடிக் கொள்ளவேண்டிய நிலைமை பிறந்திருக்கும்.

சாதாரண மனித சுபாவம்—(உயர் பண்பு அல்ல)—படைத்தவர்கள், எந்தத் தொழிலிலும், வகையிலும், பணம் திரட்டினாலும், முதலில், தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள அதனைச் செலவிட்டு, பிறகு, அந்த வாழ்க்கைத்தரம், குறைந்தது இரண்டு மூன்று தலைமுறைக்காவது குறையாது இருக்கவேண்டும் என்பதற்கான, 'சொத்துச் சேகரிப்பு'த் திட்டத்துக்குச் செலவிட்டு, பிறகு களிப்பு, கேளிக்கைக்குச் செலவிட்டு, பிறகு, மேல் உலகில் இடம் பெற, மதக் காரியத்துக்குச் செலவிட்டு, இவ்வளவும் தீர்ந்த பிறகே, பொது நலனுக்கான நன்கொடை தர, இசைவார். இதுதான் 'அந்த உலகின்,' நடைமுறைத் திட்டம்.

பொதுநலத்துக்கான நன்கொடை தருவதற்கு முன்பு, இவ்வளவு ஆசைகளும் தீர்க்கப்பட்டாகவேண்டும் - அந்தச் செலவுகள் நடந்தும் மிதமிஞ்சிப் பணம் இருந்தால், நன்கொடை தருவர்.

இந்தத் திட்டத்தின்படி, எவ்வளவு கோடி ரூபாய் இலாபம் கிடைத்திருந்தால், இவர்கள் ஐந்து கோடியை நன்கொடையாகத் தந்திருக்க முடியும் என்பதை யூகித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

அரண்மனை போன்ற வீடு, அரசிளங் குமரிகள் உலவும் நந்தவனம் போன்ற தோட்டம், புத்தாண்டுமாடல்மோட்டார், என்னும் வாழ்க்கை மெருகுகள் பெறச் செலவு செய்தது போக, மிச்சமாகி இருப்பதில் ஒரு சிறு பகுதி, இந்த ஐந்து கோடி!

இவ்வளவு இலாபம் பெற்றவர்கள், 'பஞ்சை' வேஷம் போட்டுக்கொண்டு, பாட்டாளியை, ஏமாற்ற, இலாபம் இல்லை, என்று கூசாது பொய் கூறினர். துரைத்தனத்தாரையும் திகைக்க வைத்தனர், இலாபம் இல்லை என்ற புள்ளி விவரம் காட்டி! அவர்களே புன்னகையுடன், ஐந்து கோடி ரூபாய் நிதியைத் தருகின்றனர்!!—இதைப் பெற்றுக்கொண்ட 'தலைவர்கள்' பூரித்துப் போயினர்—யோசித்துப் பார்க்கும்போது, ஆத்திரமல்லவா பொங்கி இருக்கும் அவர்களுக்கு.

ஐந்துகோடி ரூபாயைக் கொடுக்கும் போது, முதலாளிகளின் முகத்திலே, எத்தகைய குறும்புப் பார்வை இருந்திருக்க வேண்டும்! அதைப் பெற்றுக்கொண்ட தலைவர்களின் முகபாவம், எப்படி இருந்திருக்கும்! மனக் காமிராவால், படம் பிடித்துப் பாருங்கள்!

என்ன பொருள் இந்த நன்கொடைக்கு? நாட்டை ஆளும் தலைவர்களே! மக்களின் நம்பிக்கையைப் பெற்ற மாணிக்கங்களே! நீங்களும் ஓயாது பேசி, அறிக்கை மேல் அறிக்கைவிட்டு, கமிட்டிகள் அமைத்து, உருக்கமான விளம்பரங்கள் வெளியிட்டு, நாடு சுற்றிப்பார்த்தீர்கள்! எவ்வளவு நன்கொடை பெற முடிந்தது உங்களால்! இதோ பார்த்தீர்களா, எங்களிடம் உள்ள பணபலத்தை—ஐந்து கோடி, ஐயா, ஐந்துகோடி!—என்று கூறி, இந்தப் பலத்தை எதிர்த்து நிற்க முடியுமா உங்களால், எண்ணிப்பாருங்கள், என்று கேலி பேசுவது, என்றே பொருள், இந்த நன்கொடைக்கு! பணத்தால் அடித்துக் காட்டுகிறார்கள், தலைவர்களை!!

அறிவிப்பு.

1—5—49 முதல் காஞ்சிபுரத்திற்கு "திராவிட நாடு" இதழ் விற்பனையாளராக வே. சம்பந்தனை நியமித்துள்ளோம். எனவே, கீழ்க்கண்ட முகவரியில் தங்களைச் சந்தாதாராகப் பதிவு செய்துகொண்டு இதழைப் பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர்,
"திராவிட நாடு"

முகவரி: வே. சம்பந்தன், மாடர்ன் புக் ஸ்டால், 105, இராசவீதி, பெரிய காஞ்சிபுரம்.

சந்தாதார்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்களின் தேதி முடியும் காலம் சந்தா விலாசத்துக்குக் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து, மேற்கொண்டு சந்தாத் தொகையை அனுப்பவேண்டும். அப்படி அனுப்பத் தவறினால் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

மானேஜர்

சொற்பொழிவு.

8—5—49 மாலை 5 மணிக்கு, சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் மறைமலை அடிகளார் "சங்க காலத் தமிழகம்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்துவார். கட்டணம் எட்டணு

மே நாள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

எடுத்துக் கொள்ளத் துடிக்கிறான். இந்த முயற்சியில் யாரும் அவனைத் தடைசெய்ய முடியாதபடி முன்னேற்றத்திலே நாட்டங்கொண்டு செல்கிறான்.

இந்த மே நாளில் நம் கவனத்திற்கு வருவது, அண்டை அயல் நாடுகளில் நடக்கும் வர்க்கப் போராட்டங்கள் தாம். புரட்சியில் ஏற்பட்ட புதுமையை அப்படியே தங்கள் சொந்த நலத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு, முடிசூடாமல், மன்னன் செய்யும் அத்தனை ஆர்ப்பாட்டங்களையும் செய்துகொண்டு, மக்களை மறந்து மந்தகாச வாழ்வு நடத்தும் சியாங்கேய்ஷேக்குகள் சீனாவில் துரத்தியடிக்கப்படுகிறார்கள். எத்தனை நாளைக்குத்தான் சீனத் தொழிலாளி பொறுத்துக் கொண்டிருப்பான். அதிகாரத்திலமர்ந்துகொண்டு அமெரிக்க நாட்டிற்கு உலாவப் போவதும், ஐரோப்பிய நாட்டில் விருந்து சாப்பிடுவதும், சொந்த நாட்டை மறப்பதும் ஆகிய சுகபோக வாழ்வு நடததினர் சியாங். குமுறும் தொழிலாளியின் உள்ளந்தான் எரிமலையாயிற்றே! இன்று அங்குஅதுவெடித்துவிட்டது! பாட்டாளி வர்க்கம் முன்னேறுகிறது. சீனாவில் ஏற்பட்ட கொந்தளிப்புப் புயல் அண்டையிலுள்ள தாழ்த்தப்பட்ட நாடுகள்மீதும் வீசியுள்ளது. எந்த விலை கொடுத்தாவது ஆளும் வர்க்கத்தை அழித்து விடுவது என்ற தீர்மானத்துடன் தொழிலாளிகள் முன்னேறுகின்றனர். அதை நடைமுறையில் காட்டும் நிகழ்ச்சிகள் தாம் பர்மா, மலேயா, இந்தோனேஷியா, தாய்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற பல நாடுகளிலும் நிகழும் போராட்டங்களாகும். மனிதனின் அடிப்படை உரிமையையும், ஆளும் முறை கம்யூனிசமா, குடியரசா என்றும் விவாதித்து வரும் இந்த நாளில், கையகலமுள்ள டச்சுஏகாதிபத்தியம், இந்தோனேஷியாவை விட்டுத் தன் பிடியை தளர்த்திக்கொள்ளமறுக்கிறது. தாய்லந்தை விட பிரான்சு தயங்குகிறது. மலேயாவை அடக்கியாண்டு மற்றக் காலனிகளைத் தந்திரத்தால் தன் வசத்தில் கொண்டு வரத் திட்டம்போடுகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். இன்னும் பற்பல விதமான முறையில் சரிந்து போகும் முதலாளி வர்க்கம் தன் வாழ்வை நீட்டிக் கொள்ளப் பார்க்கிறது. மிதவாதிகளும், சீர்திருத்தக்காரர்களும் தொழிலாளிகளுக்கு ஓரிரு நன்மைகளைச் செய்துவிட்டு, ஆண்டான் அடிமைப் போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப் பார்க்கின்றனர்.

சென்ற ஆண்டு மே தினத்திலிருந்து இன்றுவரைநம் நாட்டில் ஏற்பட்ட சம்பவங்களைப்பற்றி நாம் கண்மூடி மௌனியாக இருக்க முடியாது.

பெரியதொழில் எதையும் தேசியமயமாக்கப் போவதில்லை. இதைப் பிரதம மந்திரி நேரு ஆயிரந்தடவைகளுக்குமேல் கூறியிருப்பார். அதோடு மாத்திரமில்லை. "பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தது போலவே, எங்களுடனும் ஒத்துழைக்க வேண்டும் இந்திய முதலாளிகள். அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தருகிறோம். இ[illegible]திரமில்லை. அந்நிய நாட்டு முதலாளிகளும் இந்த நாட்டில் வந்து வியாபாரம் செய்யலாம். அதற்கு வேண்டிய வசதிகளும் செய்துதருகிறோம்" இப்படியும் இன்னும் பலவும் பேசிக்கொண்டே போகிறார் நாட்டின் பிரதமராக இருப்பவர்.

மக்கள் எதைப்பற்றிப்பேசினாலும் "இப்பொழுதுதான் சுதந்திரம் வந்தது, அதைக் காப்பாற்றவேண்டும்" என்று பொதுமக்களைச் சுதந்திரத்தின் பெருமையைக் கூறிச் சொக்கவைக்கிறார்கள். "நாங்கள் காந்தியவாதிகள். ஏழைகளை வாழவைக்கவே ஆட்சி செய்கிறோம், குடிசைத் தொழிலை வளர்ப்பவர்கள்" என்றெல்லாம் தத்துவம் பேசிவிட்டு டாடாவின் ப்ளேனில் பறந்து, பிர்லாவினுடன் கை குலுக்கி, வால்சந்த் ஹீராசந்துடன் அளவளாவி, டில்லி மாளிகையில் கஸ்தூரிபாய் லல்லுபாயுடன் விருந்துண்டு 'ஏழை பங்காளர்களாக' விளங்குகிறார்கள் ஆளவந்தார்கள்! இவைகளைப்பற்றி கேட்டால் 144. பேசினால் சிறைவாசம். போராட்டம் நடத்தினால் தூக்குத்தண்டனை!

சென்ற மேதினம் கொண்டாடியதிலிருந்து இன்றுவரை இந்தியத் துணைகண்டத்தின் தொழிலாளர்கள் வாழ்வில் அநேக சம்பவங்கள்நடந்துவிட்டன. சம்பளக்குறைவை எதிர்த்துப் போராட ஆரம்பித்த ரயில்வே தொழிலாளர்கள் ஆரம்பத்திலேயே நசுக்கப்பட்டனர். வேலை நிறுத்தம் ஆரம்பிக்கு முன்பே தபால் தந்தி தொழிலாளர்கள் கலைக்கப்பட்டார்கள். நாட்டில் உண்டான ஒவ்வொரு தொழிற் போராட்டங்களையும் தேசியம், சுதந்திரம், பிரச்சாரம் முதலிய பல கருவிகளைக்கொண்டு நசுக்கித் தள்ளி விட்டது முதலாளி வர்க்கம். பம்பாயில் ஆரம்பிக்கவிருந்த கப்பல் தொழிலாளிகள் போராட்டம் துவக்கத்திலேயே கிள்ளியெறியப்பட்டது. கல்கத்தாவில் நடந்த மத்தியவகுப்பைச் சேர்ந்த குமாஸ்தாக்களின் வேலைநிறுத்தம் காற்றில பறக்க விடப்பட்டது. நம் கண்கூடாகச் சென்னையிலேயே பார்த்தோமே கூலி உயர்வை நோக்கி வேலை நிறுத்தம் செய்த பஸ் தொழிலாளிகள் பலர் வேலை இழந்ததுதான் மிச்சமானதை! வேலை நிறுத்தத்தைச்—சாமர்த்தியமாகசமாளித்ததாக எக்காளமிட்டது ஓமந்தூரார் மந்திரிசபை. ஆனால் வேலையைவிட்டுத் தள்ளப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும், ஒரு வெடிக்கும் எரிமலை என்பதை மறந்துவிட வேண்டாம். வேலைநிறுத்தங்களையும் போராட்டங்களையும் சமாளித்துவிட்ட காரணத்தாலேயே தாங்கள் ஏதோ பெரிய வெற்றியை அடைந்துவிட்டதாக எண்ணுகிறது அரசாங்கம். உலையில் காய்ச்சப் பெற்று உருக்காக மாறிப்போன உலோகம் பலங்குன்றி விடாது. அதுபோலத் தோல்வியில் ஏற்பட்ட வடுக்கள் ஒவ்வொன்றும், தொழிலாளிக்கு ஒரு புதிய சக்தியைக் கொடுக்கும். மறுதடவை அவன் போரிடும்போது இன்னும் பலத்தோடுதான் போரிடுவான். (9-ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

கரியன், பெருமையாகப் பாடையைக்காட்டிச் சொன்னான், "எங்க வீட்டுச் செவ்வாழைடா," என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழை. குலையை பண்ணைவீட்டுக்குக் கொடுத்துவிட்டோம்—மரத்தை வெட்டி 'பாடை'யிலேகட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாபம்! சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர்உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை.

செவ்வாழை

13-ம் பக்கத் தொடர்ச்சி

டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம் ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்த்துக்கு, இது ஒரு பிரமாதமா!—என்று ஊர் ஏசுகிறதுபோல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன்—மாடு மிதித்து விடாதபடி பாதுகாத்தேன்—செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம்சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே, நாக்கில் நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்போது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை, கடையிலே காசுபோட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! —என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா, என்றுகோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக் கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரேநின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான், 'அப்பா, குலையை வெட்டப் போறாரு — செவ்வாழைக்குலை— என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின, செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையைவெட்டினான்—உள்ளே கொண்டுவந்தான்—அரிவாளைக் கீழேபோட்டான் — குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப்பார்க்கலாம், என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக்குலை,நம்மஆண்டைக்குவேணுமாம்—கொண்டு போறேன்— அழாதிங்க — இன்னும் ஒருமாசத்திலே, பக்கத்துக் கன்னு மரமாகிக் குலை தள்ளும், அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்துவிடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டைவிட்டுக்கிளம்பினான், குழந்தையின் அழுகுரல்,மனதைப்பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம்விழுந்த இடம்போலாயிற்று, இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவுபிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான், அவன் கண்களிலே, குபு குபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று.

மே நாள்

1889-ல் பாரிசில் கூடிய இரண்டாவது அகில உலகத் தொழிலாளர் காங்கிரஸில்தான், 'மே நாள்' பற்றிய தீர்மானம் நிறைவேறியது. அதன் படி, மே முதல் நாள், தொழிலாளரின் உரிமையைப் பாதுகாக்கப், பாட்டாளி மக்களை ஒன்று சேர்க்கும் நாளாக மாறியது. அதன் பிறகு ஒவ்வொரு 'மே நாளும்' முதலாளிகளின் அடக்குமுறைக்கு ஆளாகிய தொழிலாளர்களின் ரத்தக் கண்ணீரைத்தான் கண்டு கொண்டிருக்கிறது. உழைப்பாளிகளுக்கு உறுதி தரும் ஒரே நாள்தான் 'மே நாள்'! வாழ்க அவர்தம் உறுதி!

துடைத்துக்கொண்டு, படுத்துப் புரண்டான்—அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து, என்ன பலன்...........! அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல — ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்கமுடியும்! ஆனால் செங்கோடனுக்கு...........? அந்த ஒரு குலையைக்காண அவன் எவ்வளவு பாடுபட்டான் — எத்தனை இரவு அதைப்பற்றி இன்பமான கனவுகள் —எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்தனை! எல்லாம் ஒருகொடியில்அழிந்தன!!

நாலுநாட்களுக்குப்பிறகு, வெள்ளித்தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப்பழத்தை வைத்துக்கொண்டு, அன்னநடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலுநாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஓரேபிடிவாதம் செய்தான், ஒருபழம் வேண்டுமென்று. குப்பி, பழங்கலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள், பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான், கரியன்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத்தொங்கிக்கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணைவீட்டிலே இருந்து நாலு சீப்பு, முதலிலேயே தீர்த்துவிட்டான் — அவன்விற்றான் கடைக்காரனுக்கு— அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒருஅணாடா, பயலே— காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ —போடா —" என்று விரட்டினான்,கடைக்காரன். கரியன் அறிவானா பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்!எத்தனையோநாள், அந்தச் சிறுவன், தண்ணீர்பாய்ச்சினான், பழம்கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான்,

வறுத்தகடலையை வாங்கிக்கொரித்துக்கொண்டே. செங்கோடன், கொல்லைப்புறத்திலிருந்து வெளியே வந்தான்—வாழைமரத் துண்டுடன்.

"எம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப்போயிட்டா- அந்தப்பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச்சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக்குழந்தைகளும் பின்பக்கம்.

(15-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95. Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M. 4642.

திராவிடநாடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 JUN 1949 MADRAS

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 8—5—49 | இதழ் 45

★ துணிவு கொண்டேன்! ★

மு. சென்னியப்பன்

அன்றொருநாள் அந்தி மணிஐந் திருக்கும்.
  ஆறடுத்த மணல்வெளியில் நானமர்ந் திருந்தேன்.
குன்றடுத்த கோடிக்காலும், பள்ளர் வாழும்
  குடிசைகளும், என்முன்னே அழகாய்த் தோன்ற;

கோடிக்காலில் இலைகிள்ளும் ஏழை மக்கள்,
  கோவைபடத் தம்கருத்தை இசையின் மூலம்
கடினமிலாத் தெம்மாங்கில் காற்றில் தூவிக்
  கணப்பொழுதில் எனைஅவர்தங் கருத்தில் சேர்த்தார்.

"ஏழையெலாம் இந்நாட்டில் இன்றே போல
  இனிமேலும் இருந்திட்டால் துன்பம் மல்கும்
பேழையிலே கருத்தூன்றிப் பணந்திரட்டும்
  பெருஞ்செல்வர் ஆதிக்கம் பெருத்துப் போகும்"

என அவர்கள் இசைபாடி இலைகள் கிள்ள,
  என்னையும் நான் அறியாமல் கருத்தாழ்ந்தேன்
மனம் போன போக்காகப் போனால் கொஞ்சம்
  மனவமைதி பெறுமென்றே வழியே நடந்தேன்.

வரும்வழியில் நான்கண்ட மற்றோர் காட்சி
  மனம்விட்டுச் சொன்னாலும் வெட்கம் வெட்கம்
பெரும்பாரந் தூக்கிநடந் திடுப்பு நோக
  பிணியுற்றான் ஓர் உழவன் உணவுமின்றி.

எலும்பெல்லாம் மேல்தோலைத் தூக்கிக்கொண்டு
  இப்படியும் மனிதனுடல் இருக்குமென்று
பலதரமிப் பாரோர்க்குச் சொல்லல் போலப்
  பலிப்பொருளாய்க் காணுகின்றான் உழைப்பின் மேதை.

உழைத்தவனால் உண்டாக்கப் பெற்ற செந்நெல்
  உழையாத ஒருவனுக்கு முறையாற் சேரும்
பழைமையெலாம் நான் கேட்டும் நேரிற் பார்த்தும்
  பழைமைமுறை ஓட்டிவிடத் துணிவு கொண்டேன்!

★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—3

எஸ். வி. லிங்கம்

முதல்தடவை சட்டசபைத்தேர்தலுக்கு நின்ற தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் நமது கட்சியின் ஆதரவால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது முறை சட்டசபைத் தேர்தல் வந்தது. சண்முகம் அவர்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் போட்டிகள் இருந்தன. தேர்தல் நடப்பதற்குப் பலநாட்களுக்கு முன்னரே, நான், டில்லிச் சட்டசபைத் தலைவராக இருந்த சண்முகம் அவர்களுக்கு, காங்கிரஸ்காரரின் சூழ்ச்சிகளைப் பற்றியும், நமது கட்சியில் சண்முகம் அவர்களுக்கு விரோதமாக உள்ளவர்களைப் பற்றியும் கடிதம் எழுதினேன். இந்தச் சமயங்களில் எல்லாம் அழகர்சாமி என்னை எளனம் செய்வார். தேர்தலுக்கு இரண்டு மாசத்துக்கு முன்பு அடையாறுக்குப் போயிருந்தோம். செட்டிநாட்டில் பிரசாரம் செய்வது பற்றியும், தேர்தல் பற்றியும் மறைந்த ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம் பேசினோம். அவர் எங்களை ஊட்டிக்கு வரும்படிசொன்னார். அடுத்த மாசத்தில் நாங்கள் ஊட்டிக்குச் சென்றோம். அப்போதுதான் சண்முகம் அவர்கள் டில்லியிலிருந்து கோவைக்கு வந்திருந்தார். சண்முகம் அவர்களைப் பார்ப்பதற்கு அழகர்சாமி விரும்பவில்லை. நான் மட்டும் போய்ப் பார்த்துப் பேசினேன். அதன் பின்னர் நாங்கள் இருவரும் ஊட்டிக்குச் சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தோம். அந்தச் சமயம் தோழர் T. V. சுப்பிரமணியம் அவர்கள் அங்கிருந்தார். நாங்கள் சட்டசபைத் தேர்தல் சம்பந்தமாகப் பிரசாரம் செய்யவேண்டிய முறைகளைப்பற்றிக் கேட்டுக்கொண்டு புறப்பட்டோம். தேர்தல் செலவுக்காக, பேங்கில பணம்வாங்கும் "கடுதாசி" எங்களிடம் கொடுக்கப்பட்டது. அதை அங்கேயே பணமாக்கிக் கொண்டு புறப்பட்டோம். எப்போதுமே, நூறுரூபா நோட்டுக்களாக இருப்பதை அழகர்சாமியிடம் கொடுப்பேன்; சில்லரைநோட்டுக்கள் எவ்வளவிருந்தாலும் நானே வைத்துக்கொள்வேன். நாங்கள் ஊட்டியிலிருந்து கோயமுத்தூருக்கு வந்து, தோழர் எம். எம். சங்கரலிங்கம் அவர்கள் வீட்டில் தங்கினோம். தோழர் அழகர்சாமி, "ஊட்டி சென்று வந்தோமே, சண்முகம் அவர்களின் தேர்தல்பற்றி என்ன நினைக்கிறாய்" என்று என்னிடம் கேட்டார். "சண்முகம் அவர்களைக் குமாரராஜா ஆதரிக்கிறார். அவருடைய தொகுதியில் அதிக ஓட்டுகள் உள்ளன. கோவையும் செட்டிநாடும் சரியாக ஓட்போட்டால் சண்முகம் வெற்றிபெற்றுவிடுவார்" என்று நான் சொன்னேன். அதற்கு, "முட்டாளே! அடையாறு, சண்முகம் பக்கம் திரும்பும் என்று எண்ணுகிறாயா" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "அடையாற்றார் உன்னைக் கேட்ட கேள்விகளிலிருந்து, அவர் சண்முகம் அவர்கள் பக்கம் இல்லை என்பது தெரிகிறது" என்று அழகர்சாமி சொன்னார். இதனால் எங்கள் இரண்டு பேருக்குமிடையே பெருத்த உரையாடல் நடந்தது. கடைசியாக, நடந்த நிகழ்ச்சிகள், கேள்விப்பட்ட செய்திகள் எல்லாவற்றையும் ஒன்றாக்கிப் பார்த்ததில், தேர்தலில் சண்முகத்தை அடையாறு கைவிடப்போகிறது என்றே தெரிந்தது. அதன் பின்னர், கோவையிலுள்ள கட்சித் தோழர்கள் சிலருடன் சண்முகம் அவர்கள் வீட்டுக்குச் சென்றோம். தேர்தல் சம்பந்தமாகப் பேசினோம். தோழர் சண்முகம் அவர்கள் எங்களிடம், ஓட்டர் பட்டியல் (லிஸ்ட்) இரண்டு செட்டுகளைக் கொடுத்து, தேர்தலில் அந்தந்த இடங்களுக்குத் தக்க நபர்களை நியமித்திருப்பதாகவும், அங்கெல்லாம் எங்களால் முடிந்ததைச் செய்யும்படியும், வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற முடிவோடு இருக்கும் அபேட்சகர்போல் எங்களிடம் பேசினார். அந்தச்சமயத்தில், தோழர் அழகர்சாமி, சண்முகம் அவர்களைப்பார்த்து, "தேர்தலுக்கு நீங்கள் கூறிய யோசனைகள் எல்லாம் சரிதான்; ஆனால், செட்டிநாட்டுக்கும் உங்களுக்கும் ஏதாவது அபிப்பிராயபேதம் உண்டா" என்று கேட்டார். சண்முகம் அவர்கள் கேலியாகச் சிரித்துவிட்டு, "வேடிக்கையான கேள்வி அழகர்சாமி!" என்றார். அழகர்சாமிக்குக் கோபம் வந்தது—அதாவது இவ்வளவு ஏமாந்தவராக நமது தலைவர் இருக்கிறாரே என்ற காரணத்தால். பின்னர் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டுபேரும் பேசிக்கொண்டார்கள். தோழர்பழனிச்சாமி அவர்கள் இடையிடையே குறுக்கிட்டு அழகர்சாமியின் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் முறையில் தெலுங்கில் பேசினார். முடிவாக, சண்முகம் அவர்கள், செட்டிநாட்டு ராஜா தன்னைத்தான் ஆதரிக்கிறார் என்றும், அதோடு சாமி வெங்கிடாசலம் அவர்கள் தேர்தலுக்கு நிற்கப் போவதை மீண்டும் புனராலோசனை செய்யப்போகிறார் என்றும், தேர்தல் பெரும்பாலும் நடக்காதென்று தாம் எண்ணுவதாகவும் சண்முகம் அவர்கள் கூறினார். இவை எல்லாம் எங்களுடைய சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகக் கூறப்பட்டதேயன்றி, உண்மையிலேயே அவருக்கே சந்தேகமாகத்தான் இருந்திருக்கும்.

சண்முகம் அவர்கள் தம்முடைய காரியதரிசியைக் கூப்பிட்டு, பிரைவேட்பயிலைக்கொண்டுவரச்சொல்லி,

அதில், நான்கு நாட்களுக்கு முன் சாமி வெங்கிடாசலம் அவர்கள் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துப் படித்துக்காட்டினார். அதில், தான் செட்டிநாட்டாரைச் சந்தித்ததாகவும், செட்டிநாட்டு ஓட்டுக்கிடைக்காவிட்டால், தான் தேர்தலில் தலையிடுவதா இல்லையா என்பதைப் புனராலோசனை செய்து வருவதாகவும் விரைவில் சந்தித்துப்பேசுவதாகவும் எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்து முடித்ததும் அழகர்சாமி தவிர, மற்ற அனைவரும்சிரித்தோம். ஏனென்றால் போட்டி அபேட்சகரே இப்படிக்கடிதம் எழுதியிருக்கும் போது சண்முகம் அவர்கள் ஏன் பயப்படவேண்டும் என்று! சிறிது நேரம் சென்று, நிதானமாக அழகர்சாமி, "இக்கடிதத்தை இந்தமாதிரி எழுதும்படி செட்டிநாட்டு ராசாவே சாமி வெங்கிடாசலம்அவர்களுக்குச் சொல்லி அதன்படி எழுதப்பட்டதாக ஏன் இருக்கக்கூடாது" என்று கூறினார். ஆனால்,அதைச் சண்முகம் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

தேர்தல் வந்தது. எங்கள் இரண்டுபேருடன் இன்னும் நாலைந்து சந்தேகப் பேர்வழிகளும் சேர்ந்தார்கள். சட்டசபைத் தேர்தலுக்காகச் சென்னைக்கு வரும்படி கட்சிக் காரியாலயத்திலிருந்து எங்களுக்குக் கடிதம் வந்தது. நாங்கள் வேலை செய்வது ஆற்காட்டு இராமசாமி அவர்களுக்கு. ஜாகை, சாப்பாடு, கார் யாவும் அடையாற்றில்தான். அக்காலத்தில் குமாரராஜாவின் காரியதரிசியாகத் தோழர் டி. வி. சுப்பிரமணியம் இருந்தார். தமிழில் எழுதுவதிலும் பேசுவதிலும் கெட்டிக்காரர் -அவருக்கு சண்முகம் அவர்களிடம் பற்றுதல் உண்டு. அவ்வப்போது தேர்தல்சம்பந்தமாகஅழகர்சாமியும் சுப்பிரமணியமும் ஆங்கிலத்தில் பேசிக் கொள்வார்கள். பெரியாருக்கும், சண்முகம் அவர்களுக்கும் இது சம்பந்தமாகத் தக்கவர்களைக் கொண்டு எச்சரிக்கை செய்துவந்தார்கள். இதில் தோழர் எஸ். குருசாமி அவர்களுக்கும் பங்குண்டு. அவர்கள் நிலைமையில் அவ்வளவுதான் செய்யமுடியும். முடிவாக,ஆற்காட்டு இராமசாமி அவர்களும் சண்முகம் அவர்களும் தோற்றார்கள்.

ஜஸ்டிஸ்கட்சித் தேர்தல் சம்பந்தமாக மூன்று மாசம் சென்னையில் இருந்தோம். சாப்பாடு, பிரயாணச் செலவு முதலான வகையில் ரூபா ஐந்நூறுக்கு மேல் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. மறைந்த பண்டித முத்துச்சாமி அவர்களைத் தன்னுடைய முயற்சியால் ஆற்காட்டு இராமசாமி அவர்களுக்காக வேலை செய்யும்படி அழகர்சாமி ஏற்பாடு செய்தார். அதற்குமுன் அவர் நல்ல சம்பளம் பெற்றுவந்தார்.

நிலைமை இப்படியிருக்க, தேர்தலில் தோற்ற இருவரின் கையாட்கள் ஈரோட்டுப்பெரியார் தலையிட்டதால்தான் தோல்வி எற்பட்டதென்றும், இன்னும் பலவிதமாகவும் பேசி வந்தார்கள்.

ஒரு நாள் காலையில், மவுண்ட் ரோட்டில் போய்க்கொண்டிருந்தோம். தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் வந்த கார் எங்கள் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. எங்களையும் காரில் ஏற்றிக்கொண்டு தம்முடைய வீட்டுக்குப் போனார். தேர்தல் சம்பந்தமாகப் பேசினார். சாப்பாடு முடிந்ததும் தேர்தல் சம்பந்தமாகப் பட்ட கடன் தொல்லைகளை அழகர்சாமி சுப்பிரமணியத்திடம் சொன்னார். "என்னுடைய கஷ்டத்தைச் சொல்ல யார் இருக்கிறார்கள்" என்று சுப்பிரமணியம் கூறிவிட்டு, நூறு பத்து ரூபா நோட்டுக்களை அழகர்சாமியிடம் கொடுத்து, காரையும் கொடுத்து, "நீ கொடுக்கவேண்டிய கடன் முழுவதையும் தீர்த்துவிட்டு ஊருக்குப் போய்ச் சேர்" என்று கூறினார். பண்டித முத்துசாமி அவர்களுக்கும் ஏதாவது பணம் கொடுப்பதாகச் சொன்னார். அன்று நாங்கள் ஊருக்குப் புறப்படவில்லை.

* * *

மூன்று நாட்கள் கழித்து அடையாறுக்கு அழைக்கப்பட்டோம், தேர்தலில் தோற்றுப்போன இருவரும் குமாரராஜாவிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். மாலையில் நாங்கள் நால்வரும் இராஜா சர் அவர்களைக் கண்டு பேசினோம். பொப்லி அவர்களுக்குச் செட்டிநாட்டாரிடம் கோபமென்றும், சண்முகம், இராமசாமி ஆகியவர்களின் தோல்விக்குச் செட்டிநாட்டார்தான் காரணம் என்று பொய் சொல்லித் தங்கள்மீது பொதுமக்கள் கோபம் கொள்ளும்படி செய்யப் பார்க்கிறார்கள் என்றும் பேசப்பட்டன. ஆளுக்குக் கொஞ்சமாக நாங்கள் இருவரும் ஆமாம் என்றோம். அதன் பின்னர் தோழர் சுப்பிரமணியம் வீட்டுக்கு வந்து, இரவு முழுதும் பேசிக்கொண்டிருந்தோம். அதாவது, பொப்லி ராஜா, அடையாறு ராஜா மீது பாய்கிறார்; இதற்கு ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும், பெரியாரும் ஆமாம் போடுவார்கள்; இவ்விதமான அக்ரமங்கள் இனியும் நடைபெறப் போகின்றன. இப்படிப்பட்ட பொய்ப் பிரசாரங்கள் வளரவிடாமலும், செட்டிநாட்டார்மீது பொப்லி தூவும் தூசுகளைச் சுத்தப்படுத்தும் பொறுப்பும் தங்கள்மீது வீழ்ந்துவிட்டதாகத் தோழர் சுப்பிரமணியம் அழகர்சாமியிடம் அன்றிரவு முழுதும் பேசிக்கொண்டிருந்தார்.

அழகர்சாமி சுப்பிரமணியத்தை நோக்கி, "தோழனே! உனது கருத்துக்கு உட்படுகிறேன்; உன்னை ஆதரிக்கிறேன்; ஆனால் நீ நினைக்கிற நினைப்பின்படி நடக்காதே! இன்றோ நாளையோ பெரியார் தலைமையில் பொப்லியின் படை புறப்படும். இதை எதிர்க்க அடையாறுக்கு சக்தி உண்டு. இதில் எங்களைப் பலியிட நீ எண்ணுகிறாயே! இது நியாயமா?" என்று கேட்டார். அதற்குத் தோழர் சுப்பிரமணியம், "அழகர்சாமி! உன்னுடைய நிலையை நான் உணராமல் இல்லை; நீயோ, லிங்கமோ பெரியாருக்கு விரோதமாக வரமுடியாது. இதை நான் நன்குணர்வேன்; நீங்கள் இருவரும் அவர்களுடன் சேராதீர்கள்; என்னுடன் இருங்கள்" என்றார். யோசித்துப் பதில் சொல்லுவதாக அழகர்சாமி சொன்னார். இவற்றையெல்லாம் அப்போது தோழமையாக இருந்த பன்னீர்ச்செல்வம் அவர்களிடம் அழகர்சாமி சொன்னார். பன்னீர்ச் செல்வம் அவர்கள் பெரியார் பக்கம் இருப்பதால் நம்முடைய கட்சிக்குப் பலம் அதிகம் உண்டாகும் என்ற நம்பிக்கை அழகர்சாமிக்கு உண்டு. எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், அழகர்சாமி தன்னுடைய கொள்கைகளை யாருடைய தயவு தாட்சண்ணியத்துக்காகவும் விட்டுக் கொடுக்காமல் பணியாற்றி வந்தார்.

(தொடரும்)

ஆரிய-திராவிட இரத்தக் கலப்பு!

(24—4—49—தொடர்ச்சி)

"தினமணி" நிருபர், தம்முடைய எண்ணம் கைகூடி வராமற் போகவே, இராமாயணத்தையாவது உண்மையான சரித்திரம் என்று தோழர் ஹுயிடுமோண்ட் வாயினுல் சொல்லும்படி செய்துவிடலாம் என்று கருதி,

"கன்னியா குமரிக்குத் தெற்கே நிலம் இருந்ததாகவும், பின்னர் அதைக் கடல் கொண்டதாகவும், அங்கிருந்து வெளியேறிவந்த மக்கள் தான் மதுரையையும் பாண்டிய நாட்டையும் உண்டாக்கினர் என்றும், இராமாயண காலத்தில் திருச்சிராப்பள்ளிவரை பெருங்காடாக இருந்ததென்றும், இராவண இராச்சியம் இங்கு இருந்ததாகவும், இராவணன் படையில் படைத் தலைவனுக இருந்த திரிகிரஸ் என்பவனின் பெயரினுல் தான் திருச்சிராப்பள்ளிக்குத் திரிசிரபுரம்என்றபெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. இது பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன"

என்று கேட்டிருக்கிருர்.

இராமாயணத்துக்கு உயர்வும், நிலைபேறும் உண்டாக்க முயன்ற 'தினமணி' நிருபர், இராவணனுடைய படைத் தலைவனுக்கு உயர்வு கற்பிப்பதன் வாயிலாகவாவது தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றி மகிழலாம் என்று கருதித், திரிசிரபுரம், திரிகிரஸ் என்ற இராவணனின் படைத் தலைவன் பெயரின் நினைவாக ஏற்படுத்தப்பட்டதென்று கூறினுல், அது ஒருவேளை ஒப்புக்கொள்ளப்படும் என்றும், அப்போது இராமாயணம் உண்மையான சரித்திரம் என்பது நிலைநாட்டப்பட்டு விடும் என்றும் கருதி இவ்விதம் கேட்டிருக்கிருர் என்று தெரிகிறது.

இராம—இராவணப் போர் உண்மையா அல்லது பொய்யா என்பது பற்றி நாம் ஆராயவில்லை. ஆனுல், இராம — இராவணப் போர் நடந்திருந்தால், இராமன், இராவணனிடம் நடந்துகொண்ட முறை சரியல்ல—நீதிக்கும் நெறிக்கும் புறம்பானதென்பதே நம்முடைய கருத்தும் முடிவுமாகும்.

திரிகிரஸ் என்பவன் பெயரால், திரிசிரபுரம் என்ற பெயர் ஏற்பட்டதா? அல்லது வேறு காரணத்தால் அந்தப் பெயர் ஏற்பட்டதா? திரிகிரஸ் என்பவன் பெயரால்தான் அப்பெயர் ஏற்பட்டதென்ருல், அது எப்படிப் பொருத்தமுடையதாகும் என்பனபற்றித் தனியான ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவேண்டும். எனவே அது குறித்த முடிவு ஒன்றும் இப்பொழுது கூற நாம் விரும்பவில்லை.

எனவே, இராமாயணத்தை உண்மையான சரித்திரம் என்று தோழர் ஹுயி டுமோண்ட் அவர்களைக் கூறும்படி செய்யலாம் என்று 'தினமணி' நிருபர் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை என்பதையே இங்கு எடுத்துக்காட்டுகிரேும். அந்த நிருபர் கேட்ட கேள்விக்குத் தோழர் ஹுயிடுமோண்ட் அவர்கள்,

"மனித சாதி உற்பத்தியாவதற்குக் கூறப்படும் "ஆதம்—ஈவ்" என்ற கதை எப்படிக் கற்பனையோ அப்படியே இராமாயணமும் கற்பனை என்றுதான் நான் கருதுகிறேன். இப்பிரச்சினை பற்றிய மேற்கத்திய நிபுணர்களின் கருத்துக்களுக்கும், தமிழ் நிபுணர்களின் கருத்துக்களுக்குமிடையே பெரிதும் வேறுபாடு இருக்கிறது. சரித்திரத்தின் தொடக்கம் என்று கூறப்படுவனவற்றில் பல விஷயங்கள் கற்பனை"

என்று பதில் கூறியிருக்கிருர். இராமன் நடத்திய அரசியல் முறையைப் பின்பற்றி, இராம இராச்சியம் என்ற பெயரோடு அரசாங்கத்தை நடாத்தி வரும் இந்நாளில், இராமராச்சியத்துக்கு அடிப்படையாக இருக்கும் இராமாயணத்தையே கற்பனை என்று கூறினுல் எப்படியிருக்கும் இராம இராச்சியப் பிரியர்களுக்கு! ஏன் இந்த ஹுயி இப்போது இங்கு வந்தார் என்றுகூட எண்ணத் தோன்றும். என்ன செய்வது? அவரோ ஒரு ஆராய்ச்சியாளர். திராவிடர் கழகத்தார் யாராவது இவ்விதம்கூறியிருந்தால், "திராவிடர் கழகத்தாரின் தெகிடுதத்தம்" என்று தலைப்புக் கொடுத்துக் கண்டிக்கலாம். கருத்தோடு கண்டிக்க முடியாவிட்டாலும், எதை எப்படிச் சொன்னுலும் கண்ணை மூடிக்கொண்டு நம்பும் மக்கள் இருக்கிருர்கள் என்ற தைரியத்தால், எதையாவது உளறிக் கொட்டலாம். ஆனுல், இராமாயணத்தைக் கற்பனை என்று கூறியவர் இராம இராச்சிய அன்பர்களாலும் பாராட்டி வரவேற்கக் கூடிய ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர். எனவே தான் 'தினமணி' நிருபர் தம்முடைய கேள்வியைவேறு பக்கமாகத்திருப்பி அதன் வாயிலாகவாவது திருப்தி அடையலாம் என்று கருதித்,

"திராவிட நாகரிகம் என்பதாக ஒன்று உண்டா?"

என்று கேட்டிருக்கிருர். அதற்கு அவர்,

"தமிழர் நாகரிகம் கி. பி. முதல் நூற்றுண்டில் உச்சநிலையை அடைந்திருந்தது என்று கூறலாம். இதைத் திராவிட நாகரிகம் என்று கூறமுடியாது. இதைத் 'தமிழர் நாகரிகம்' என்பது தான் பொருந்தும். வங்காளிகளேயும், நேபாளிகளையும் மங்கோலியர் வம்சம் என்று கருதுவது போல் தென்னிந்தியரைத் திராவிடரின் வம்சம் என்று கருதலாம்"

என்பதாகப் பதில் கூறியிருக்கிருர். நாமும் இதனைத்தான் கூறி வருகிரேும். தமிழ் மக்கள் கி. பி. முதல் நூற்றுண்டுக்கு மிக முற்பட்ட

(13-ம் பக்கம் பார்க்க)

10 JUN 1949 MADRAS

வளம் இருக்கிறது—வகை இல்லை

திராவிடம் நீர்வளம், நிலவளத்தை மட்டும் தன் இயற்கைச்சொத்தாகக் கொண்டிருக்கவில்லை. பல்வேறு வகைப் பொன்வளத்தையும் தன்னுள்ளே ஏராளமான அளவுக்குப் பதுக்கிக் கொண்டிருக்கிறது. மண் வளத்தையும், பொன் வளத்தையும், புனல் வளத்தையும் கொண்டிருந்தாலும், போதுமான அளவுக்கு மக்களின் மன வளம் உருவாகாத காரணத்தால், செல்வங் கொழிக்க வேண்டிய திராவிடத்தில், வறுமை இன்னும் தாண்டவமாடிக் கொண்டு வருகிறது.

ஆங்காங்கு ஓடியும், தேங்கியும், சுரந்தும் காணப்படும் நீர்ப் பெருக்கத்தைக் கொண்டு, மண்ணைப் பண்படுத்தி, விளை நிலமாக்கி, விளைச்சலை உண்டாக்கிவரும் ஒரு விவசாய நாடாகவே திராவிடம் இருந்து வருகிறது. அதுவும் பண்டைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முறைகளால்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறதே யல்லாமல், புதிய முறைகளைக் கையாண்டு நேரத்தைக் குறைப்பதும், உழைப்பைக் குறைப்பதும், பயனை மிகுவிப்பதும், விளைபொருள்களை ஒன்று, பத்து, நூறு மடங்காகப் பெருக்குவதுமான வழிகளில் இன்னும் முன்னேற்றம் அடையப் பெறவில்லை.

திராவிடம் ஒரு சாதாரண விவசாய நாடாக இருந்து வருகிறதே யல்லாமல், தொழிற்றுறையில் வளர்ந்து நிற்கும் தொழில் நாடாக வளரவில்லை. தொழிற்றுறையில் வளர்வதற்கான வசதிகள் இல்லை என்பது அல்ல அந்த நிலைக்குக் காரணம், மக்களினுடையவும், அரசாங்கத்தினுடையவும் முயற்சியின்மையே முக்கிய காரணமாகும்.

இங்கு செய்பொருள்களை உண்டாக்குவதற்கான ஏராள மூலப்பொருள்கள் பூமிக்கடியில் முடங்கிக் கிடக்கின்றன. கோலார் தங்க வயலிலும், அதனைச் சுற்றி எண்பது மைல் சுற்றளவுக்குள்ளும் தங்கம் புதைபொருளாக இருந்துவருகிறது. சேலம் மாவட்டத்திலும், பல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தூர் என்றவிடத்திலும், வேறு பல இடங்களிலும் திட்டுத் திட்டாக இரும்புக் கனிகள் இருக்கின்றன. இன்னும் வெட்டியெடுத்த பாடில்லை. கடலூரிலிருந்து விருத்தாசலம் வரையிலுமுள்ள இடைவெளி நிலத்தினடியில் 50 கோடி டன் அளவுக்கு மேலாக நிலக்கரி குவிந்து கிடக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த வையம்பட்டிக் கிராமத்திலும், திருவாங்கூரை யொட்டி விளங்கும் தாடகை மலை யருகிலும், அணு ஆராய்ச்சிக்குப் பயன்பட்டு வரும் உலோகமான யுரேனியம் ஏராளமாகப் பதுங்கிக் கிடக்கிறது. எத்தனையோ லட்சக் கணக்கான டன்கள் அளவுக்குப் பாஸ்பேட் என்ற பாஸ்பரஸ் கலந்த பொருள் திருச்சி மாவட்டத்தில் வெட்டியெடுக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செந்தூர், நாங்குனேரி தாலுகாக்களில் சுண்ணும்புக் கற்கள் 90,00,000 டன்களுக்குமேல் உறைந்து கிடப்பதாக 1946—47-ல் செய்த ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மைக்கா என்ற தாதுப் பொருள் உலகிலேயே இந்திய துணைக் கண்டத்தில்தான் மிகவாகக் கிடைக்கிறது; அதுவும் திராவிடத்தின் பகுதிகளில்தான் ஏராளமாகக் கிடைக்கின்றது. கந்தகப் பொருள்களும் மிகவாக ஆங்காங்கு புதைபட்டுக் கிடக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வல்லம் என்ற பகுதியில் கண்ணுடிப் பாறைகள் நிலத்திற்கடியில் உறங்குகின்றன. மேட்டுப்பாளையத்தில் கிடைக்கும் மண், கண்ணுடி செய்வதற்குப் பயன்படுவதாகக் கண்டு அங்கு கண்ணுடித் தொழிற்சாலையொன்றும் அண்மையில் நிறுவியுள்ளார்கள். அம்மாதிரி கண்ணுடி செய்வதற்கான மண் நம் கண்ணில் அகப்படாமல் ஆங்காங்கு இருக்கத் தான் செய்கிறது. திருச்சியைச் சேர்ந்த டால்மியாபுரம், கோவையைச் சேர்ந்த மதுக்கரை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி ஆகிய விடங்களில் கிடைக்கும் மண் சிமெண்ட் செய்வதற்குப் பயன்படுவதாகக் கண்டறிந்து அங்கெல்லாம் சிறிய அளவில் ஆலைகள் தோற்றுவித்துள்ளார்கள். சேலம் மாவட்டத்தில் பீங்கான் போன்றவொருவித மண் பாறை பாறையாக பூமிக்குள் பதுங்கியும், வெளியே சிறிதளவு தோன்றி நின்றும் காட்சியளிக்கின்றன. நல்ல பருத்தியை விளைப்பதற்கான காடுகள் கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றன. அந்தப் பருத்தி முழுவதையும் பயன்படுத்துவதற்கான ஆலைகள் சரியானபடி இன்னும் உருவாகவில்லை. உலகம் முழுவதும் வாணிகம் நடத்துவதற்கேற்ற துறைமுகங்களையும், அந்தத் துறைமுகங்களிலே நிறுத்துவதற்கான மரக்கலங்களைக் கட்டுவதற்கு ஏற்ற மரங்கள் அடர்ந்த காடுகளையும் திராவிடம் கொண்டிருக்கிறது. கடல் நீரிலிருந்து பெட்ரோல் போன்றவொரு எண்ணெயைப் பிரித்தெடுக்கக் குறைந்த செலவில் இயலும் என்ற நிலை ஏற்பட்டால், அந்த 'வாட்ரோலியம்' என்ற எண்ணெயைப் பெறுவதற்கான முறையில் மூன்றுபுறம் பரந்து, விரிந்து செல்லும் கடல்களும் இங்கே இருக்கின்றன. தொழிற்சாலைகளை இயக்குவதற்கு இன்றியமையாததாகத் தேவைப்படும் மின்சாரத்தை அதிகமான அளவுக்குப் பெருக்கிக்கொள்வதற்குச் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியும், பைக்காராவும், மேட்டூர் அணையும், பாபநாசம் நீர்வீழ்ச்சியும் இருந்து வருகின்றன.

இவ்வளவு வளங்கள் கொழித்துக் கொண்டிருந்தாங்கூட, இங்கே,

தொழில்கள் வளர்ச்சியுறவில்லை. ஏன்?

இந்தக் கேள்விக்கு விடை, திராவிடம் வடநாட்டின் ஆதிக்கத்தின் கீழும், அதிகாரத்தின் கீழும் அகப்பட்டுக் கொண்டிருக்கிற வரையிலே எளிதிலே கிடைக்கப் பெறாது. வடநாட்டோடு திராவிடம் இணைந்திருக்கும் வரையில் திராவிட நாட்டின் இயற்கைவளங்கள் மூலப்பொருள்களாக முடங்கியே தாம் கிடக்கும். அந்த மூலப் பொருள்கள் செய்பொருள்களாக மாறி, நாட்டிலே நடமாடுவதை வடநாட்டு முதலாளித்துவம் என்றும் ஏற்றுக் கொள்வதில்லை; அந்த முதலாளித்துவத்திற்கு அணைப்பாக இருக்கும் இந்திய அரசாங்கமும் விரும்புவதில்லை.

எப்படியோ தொழில் வளத்தைப் பெருக்கிக் கொண்டுவிட்ட வடநாடு, இந்திய துணைக்கண்டம் முழுவதையும் தன்னுடைய ஒரே சந்தைக் கூடமாகவே கண்காணித்துவர எண்ணுகிறது. தனக்குப் போட்டியாகத் துணைக் கண்டத்தின் எந்தப் பகுதியிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவிடாதபடி பாதுகாத்து, அப்படி ஏதாவது ஒன்றிரண்டு தனக்குப் போட்டியாகக் கிளம்புகின்றன என்று அறிந்துவிட்டால், அதற்கான தடைகளை விதித்துப் போட்டித் தொழிற்சாலைகள் ஏற்படாவண்ணம் தடுத்துவிட முனைகிறது. வடநாட்டுத் தொழிலரசர்களின் ஆலோசனையின் பேரில் நடந்துவரும் இந்திய அரசாங்கமும், அவர்களுக்குச் சாதகமாக நின்று என்றும் தொண்டாற்றி வரத் தயங்குவதில்லை. ஆகவேதான் தென்னாட்டில் — திராவிடத்தில் தொழில் வளர்ச்சியைக் காண இந்திய அரசாங்கம் அவ்வளவாக அக்கறை எடுத்துக்கொள்வதில்லை.

பெரும் தொழிற்சாலைகளைத் துவக்குவது என்றால் பெரும் பணக்காரர்களாலும், அரசாங்கத்தாலுந்தான் முடியுமே தவிர, பிறர் எவராலும் இயலாது. சிறிது சிறிதாக இந்திய அரசாங்கத்தின் காப்புப்பெற்று, ஓரளவுக்கு வளர்ந்து நிற்கின்றன வடநாட்டுத் தொழிற்சாலைகள். அதனால் பணம்படைத்த முதலாளிகள் அங்கே தோன்றிவிட்டனர். எவ்வளவு பெருந்தொகையையும் புரட்டவும், போடவும், எடுக்கவுமான அளவுக்கு வசதி பெற்று அவர்கள் உயர்ந்தோங்கி நிற்கிறார்கள். இந்த நிலையில், தொழில வளர்ச்சியில் பிந்திவிட்ட தென்னாடு—திராவிடம் தன்னுடைய இயற்கைச் செல்வங்களைக் கொண்டு தொழிற்கூடங்களை நிறுவ முயன்றால், அவற்றை முளையிலேயே கிள்ளிவிடத் தக்க அளவுக்குப் பண பலமும், செல்வாக்குப் பலமும், ஆதிக்கபலமும், தொழிற்பலமும் வடநாட்டு முதலாளிகள் கொண்டிருக்கின்றனர். போட்டி பணப்பான்மையால் அவர்கள் தங்கள் பலங்களைப் பிரயோகிக்கும்போது, அவற்றைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது. அவர்களைத் தென்னாட்டில புகவிடாதபடி தடுக்க மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரமில்லை; அதே நிலையில அவர்கள் திராவிடம் உள்ளிட்ட இந்திய துணைக்கண்டம்முழுவதும் சுற்றிவர இந்திய அரசாங்கம் அனுமதிக்கிறது. இந்திய அரசாங்கமே தென்னாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க இயலாதா என்றால இயலும். ஆனால் இந்திய அரசாங்கம் வடநாட்டுத் தொழில் முதலாளிகளின் ஆலோசனையின் பேரிலேயே எதையும் செய்யத் துணிவதால், அதன் கண்ணோட்டம் எப்பொழுதும் வடநாட்டின் மீது படிந்திருக்கிறதேயொழிய, தென்னாட்டின் மீது விழுவதில்லை.

இப்படியாகத், தென்னாட்டில் தொழில் வளர்ச்சி பெறாமல் தடுக்கவும், ஒரு சிறிது தலைதூக்கினால் அதோடு போட்டியிட்டு அழிக்கவும் வடநாட்டு முதலாளித்துவத்தால் முடிகிறது. எடுத்துக்காட்டாக 1938—39-ல் நாகையில், அப்பொழுது சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த தோழர் சி. இராசகோபாலாச்சாரியாரால் இரும்புத் தொழிற்சாலை ஒன்று சிறிய அளவில் திறந்துவைக்கப்பட்டது. அதுவேலை செய்யத்தொடங்கிய சில நாட்களுக்குள், வடநாட்டில் இரும்பு மன்னனாக விளங்கும் டாடா இந்தத் தொழிற்சாலையை நசுக்கிவிட எண்ணிப் போட்டியிட ஆரம்பித்தார். ஆண்டு ஒன்றுக்குக் கோடிக் கணக்கான ரூபாய்களை லாபமாகப் பெறும் டாடா கம்பெனி எங்கே! சில லட்ச ரூபாயில் துவக்கப்பட்ட நாகைத் தொழிற்சாலை எங்கே! யானைக்கும் எறும்புக்கும் போன்றதொரு போட்டி! டாடா தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புச் சாமான்கள் நாகைத் தொழிற்சாலையில் செய்யப்பட்ட இரும்புச் சாமான்களின் விலைக்கு மிகவும் குறைவுபட விற்பனை செய்யப்பட்டன. இளம் பருவத்தில் இருக்கும் நாகைத் தொழிற்சாலையால் இதை எப்படிச் சமாளித்து நிற்க முடியும்! போட்டியினைச் சமாளிக்க முடியாத நாகைத் தொழிற்சாலையினர் சென்னை முதலமைச்சரிடம் சென்று முறையிட்டுப் பார்த்தனர். அதற்கு, சென்னை முதலமைச்சர் தோழர் சி, இராசகோபாலாச்சாரியார், டாடா கம்பெனியாரின் விற்பனையுரிமையை சென்னை மாகாணத்தில் தடுத்துவைக்க மாகாண அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், போட்டியினால் ஏற்படும் சங்கடமான நிலைமையைப் போக்கிக்கொள்ளத்,தான் வேண்டுமானால ஒரு யோசனை கூறமுடியும் என்றும் கூறி, டாடா கம்பெனியார்க்கே நாகைத் தொழிற்சாலையை விற்றுவிடும்படியாக ஆலோசனை பகர்ந்தாராம். அவ்வளவுதான் மாகாண முதலமைச்சரால் கூற முடிந்தது. திராவிடத்தின் தொழில் வளர்ச்சியைக் காப்பாற்றிக்கொடுக்க திராவிடத்தில் நிலவிவரும் அரசாங்கத்தால் இன்றுள்ள முறையில் முடியாது. திராவிடம் வடநாட்டின் வேட்டைக் காடாக, இருந்துதான் வரும். அதற்குச் சாதகமாக இந்திய அரசாங்கம் இருந்துதான் தீரும் என்ற நிலை, திராவிடம் வடநாட்டோடு இணைந்திருக்கிற காரணத்தில் ஏற்படுகின்ற இன்றியமையாத விளைவாகும் என்பது நன்கு தெரியக்கிடக்கின்றது.

சென்னை மாகாணத்தில்சிலஇடங்களில் இரும்புத் தாதுப் பொருள்கள் கிடைத்தாலும், பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தூரில் கிடைக்கும் தாது தரம் உயர்ந்ததாகும் என்று அமெரிக்க நிபுணர்கள் அண்மையில் ஆராய்ந்து கூறியுள்ளார்கள். சென்னை மாகாணத்தில் 'இரும்பு — எஃகுத்தொழிற்சாலை யொன்று தோற்றுவித்தற்கு ஏற்றபடி, சாந்தூரிலும்சேலத்திலும் இரும்புத்தாதுகள் கிடைக்கின்றன என்ற உண்மை இன்று வெளியாகியுள்ளது. இரும்புத் தொழிற்சாலையொன்று சென்னை மாநிலத்தில்

துவக்குவதுபற்றி சென்னை சட்டசபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு விடையிறுக்கும் முறையில், தொழில் வளர்ச்சி மந்திரி, "நிலத்தை அகழ்ந்துகாணும் நில அளவையாளர்கள் அரசாங்கத்திடம் கொடுத்துள்ள அறிக்கையின்படி, இந்த மாகாணத்தில் உயர்தரமான இரும்புத்தாதுகள் கிடைக்கப் பெறுவதாலும், தொழிற்சாலைக்குத் தேவையான அளவு சுண்ணாம்புக்கற்களும், தண்ணீரும் இரும்புக் கனிகளின் அருகே கிடைக்க வசதிகள் இருப்பதாலும், சென்னையில் ஒரு இரும்புத்தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணத்தை அரசாங்கம் கொண்டிருந்தது" என்ற கருத்துப் படக்கூறியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல், சென்னையில் சிறந்த தொழில் நிபுணராகக் கருதிப் போற்றப்படுபவரும், மைசூர் திவானாக இருந்த காலத்தில் பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை உருவாவதற்குப் பெரிதும் துணையாக இருந்தவருமான சர். எம். விசுவேசுவரய்யா அவர்கள், பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்சாரத்தின் உதவிகொண்டு சென்னை மாகாணத்தில் சிறந்த ஒருஇரும்புத்—எஃகுத் தொழிற்சாலை நிறுவ முடியும் என்பதை விதந்தோதியுள்ளார். கடலூர்-விருத்தாசலம் இவற்றின் இடைவெளி நிலத்தில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி போதுமான அளவுக்குக்கிடைக்க ஆரம்பித்துவிட்டால், அதன் உதவி கொண்டும் தொழிற்சாலையை இயக்குவிக்கமுடியும். இவ்வளவு வசதிகள் இங்கு வாய்க்கப் பெற்றிருந்தும், இவ்வசதிகளைக்கொண்டு தொழிற்சாலையொன்று நிறுவமுடியும் என்று நிபுணர்கள் எடுத்துக் கூறியிருந்தும், இந்திய மத்திய அரசாங்கம் ஐக்கிய மாகாணத்திலும், ஒரிசாவிலும் இரண்டு இரும்புத் தொழிற்சாலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கிறது. எவ்வளவு வசதிகளிருந்தபோதிலும் தென்னாட்டைப் புறக்கணிக்கவே மத்தியஅரசாங்கம் விரும்புகிறது. அது வடநாட்டு முதலாளிகளின் தூண்டுதலின்பேரில் எழுந்த எண்ணமாக இருக்கக்கூடுமோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. தோழர் எம். ஏ. சலாம் அவர்கள் இதைஐயுறவை அடிப்படையாகக் கொண்டதால்தான்போலும், சென்னையைப் புறக்கணிப்பதற்கு முதலாளிகளுக்குள் சதி ஏதும் நடந்திருக்கக் கூடுமோ என்று சென்னை சட்டசபையில் கேள்வியொன்றும் கேட்டுள்ளார். திராவிடம், வரியாகப் பெரும் பொருளை மத்திய அரசாங்கத்திற்கு அளித்து வருகிறது, என்றாலும் அரசாங்கச் செலவில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகள் வடநாட்டிலேயே நிறுவப்படுகின்றன. வளமிருந்தும்—வசதியிருந்தும் வகையில்லாத காரணத்தால — வகை புறக்கணிக்கப்படுகிற காரணத்தால் தொழில் வளர்ச்சியின்றித் திராவிடம் தாழ்ந்துபோகிறது என்பது தெற்றென விளங்குகிறது.

தொழில் வளர்ச்சியில் பிற்போக்கிலேயே நிற்கும் திராவிடம், வளர்ச்சி பெறவேண்டுமாயின் தொழிற்பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும். அதாவது வேறு நாட்டுச் செய்பொருள்கள், திராவிடத்தில் வளரும் தொழில்களைச் சிதைக்கும்படி இறக்குமதி செய்யப்படாமல் தடுக்கப்பட வேண்டும். அப்படித் தடுத்து உள்நாட்டுத் தொழில்களை வளர்க்கக்கூடிய முழு அதிகாரமும், திராவிடத்தின் கையிலிருந்தால்தான் அது முடியும். இன்றைய நிலையில் அந்த அதிகாரம் இந்திய அரசாங்கத்தின் கையிலிருப்பதால் திராவிடம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிவதில்லை. திராவிடம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், வடநாட்டின் தொடர்பினின்றும் விடுபட்டுத் தனித்துநின்று ஆட்சி செய்ய முற்பட்டால்தான் முடியும்.

இங்கேயே உற்பத்தியாகக் கூடிய பொருள்களோடு, போட்டிபோடும் வெளிநாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்யாமல் தடுக்கவும், இங்கேயே உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் விலைக்கு எவ்விதத்திலும் குறைந்திருக்காதபடிக்கு வெளிநாட்டுச்சாமான்களுக்கு வரிவிதித்து உள்நாட்டுத் தொழிலைக் காப்பாற்றிக்கொடுக்கவும், உள்நாட்டில் உற்பத்தியாகும் அபரிமிதமான சாமான்களைத் தம் இச்சைப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கவும் ஆன காப்புப்போர்டு திராவிடத்திற்கென அமைந்தால்தான், இவற்றையெல்லாம் சாதிக்கமுடியும். வளங்கொழிக்கும் திராவிடத்தைச் செல்வங்கொழிக்கும் திராவிடமாகச் செய்ய முடியும்.

சென்னை மாகாணத்தில் இரும்புத்தொழிற்சாலையை நிறுவவேண்டுமானால், கவனிக்கப்படவேண்டியவைகளாகக் கூறும்போது, அடக்கவிலை, வெளியுலக ஆலை அரசர்களின் போட்டி, குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய மின்சாரம் இவைகளை ஆராய்ந்தறிய வேண்டியஅவசியமாகிறது என்று கூறியுள்ளார் சென்னை மந்திரியார். வெளியுலக ஆலை அரசர்களின் போட்டியால் மாகாணத்தின் தொழில் வளர்ச்சி நசித்துவிடக் கூடும் என்ற பயம் மந்திரியாருக்கே ஏற்பட்டிருக்கிறது. அந்தப்பயம் மந்திரியார் உள்ளத்திலிருந்து மட்டுமல்லாமல், மற்றையோர் உள்ளத்தினின்றும் அகலவேண்டுமானால், அதற்குத் திராவிடம் தனியே பிரிவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்திய துணைக்கண்டத்தை ஒரே மார்க்கட்டாகக் கொண்டு, அதில் குறிப்பிட்ட ஒரு சாமானை உற்பத்தியாக்கவோ, விற்பனை செய்யவோ ஒரு தனிப்பட்ட முதலாளி உரிமை பெற்றுவிடுவதால் அந்த ஒருவனோடு போட்டிபோட எவராலும் முடியாத அளவுக்கு அந்த முதலாளி பெரும் முதலாளியாகிவிடுகிறான். வேறு நாடுகளிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்திற்குள் நுழையும் சரக்குகளுக்கும் அந்த ஒருவன் வைத்ததேதான் விலையாகவும் இருந்துவருகிறது. இந்த நிலை போகவேண்டுமானால் இந்திய அரசாங்கமே முழுப்பொறுப்பையும் எடுத்தாகவேண்டும். அது எடுத்துக் கொள்ளப்போவதாகத் தெரியவில்லை; எதிர்பார்ப்பதற்குமில்லை. பொருளாதார ரீதியில் இந்தியா பல்வேறு வர்க்கவட்டாரங்களாகப் பிரிந்து நின்றால், இந்த ஒரே முதலாளித்துவக் கொடுமை நிலவ வழியேற்படாது. திராவிடத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இருந்தக்கொடுமையைத் தொலைக்க வழியிருக்கிறது.

இங்கே வளம் இருக்கிறது— ஆனால் வகையில்லை! வகைபெறுவதற்கான ஒரே மருந்து 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்பதேயாகும்.

✱

திராவிட நாடு

ஞாயிறு] 8—5—49 [காஞ்சி

உருவான செயல்!

பதவியாசை, பட்டத்தாசை எதுவுமின்றி, காந்திய நெறியில் நின்று, 'எம் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று பறைசாற்றி வரும் காங்கிரஸ் தலைவர்கள், பதவி பெறும் விளையாட்டிலீடுபட்டு, சென்னை மந்திரி சபையைச் சென்ற சில நாட்களாக வேட்டைக்காடாக்கி வருகின்றனர் என்பதை, அவர்களைச் சார்ந்த செய்தித்தாள்கள் கூறும்விபரத்திலிருந்தும் நன்கு அறிகிறோம்.

காந்தீய நெறியில் நிற்கும் 'கண்ணியவான்கள்', சென்னைச் சட்டசபைக் கட்சியில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றனர்! உட்பிரிவுகளின் தலைவர்களுக்குள்ளே, மந்திரிப் பதவிகளைப் பங்கிட்டுக் கொள்வதிலே, பேரம்! இந்தப்பேரத்தை நடத்திவைக்கத் தமிழ் நாட்டுக் காங்கிரசின் 'ஏகச் சக்ராதிபதி' தோழர் காமராஜ்! 'தூது நீ சொல்லிவாராயோ' என்று, கோஷ்டித் தலைவர்கள் தோழர் காமராஜரைத் தூதனுப்பி வருகிறார்கள். இந்த அரும்பணியை ஏற்று நடத்தியும் வருகிறார் தோழர் காமராஜர். இவர்களெல்லாம் தான் பதவியிலே ஆசை அற்றவர்களாம்! நாட்டு நலனுக்காகவேதான் பாடுபடுகிறார்களாம்!

மந்திரி பதவிகளைக் கோஷ்டிகளுக்கிடையே பங்கிட்டுக் கொடுக்கப் பேரம் செய்யும் பணியினை ஏற்றுக்கொண்டுள்ள 'காந்தீய பக்தர்' காமராஜர், தான், பதவியேதும் பெறாது—பெறவேண்டும் என்பதற்காகக் குறுக்குவழி எதையும் நாடாமல்—வெளியேயிருந்துகொண்டு, நேர்வழியில் சென்று கொண்டிருக்கும் திராவிடர் கழகத்தைப், பதவி பெறப் பாடுபடும் கட்சி என்னும் கருத்துப்பட, மட்டரகச் சொற்களால் திராவிடர் கழகத்தைத் தூற்றி வருகிறார். காங்கிரஸ் பதவி வேட்டை ஆடுகிறதா, திராவிடர் கழகம் பதவி வேட்டை ஆடுகிறதா என்பது பற்றி இப்போது மந்திரி சபையில் நடக்கும் நடவடிக்கைகளைக் கொண்டு நாடு தீர்ப்பளிக்கட்டும்!

பதவியைக் கைப்பற்றுவதற்காகவே திராவிடர் கழகம் காங்கிரஸ் மீது இல்லாததையும் பொல்லாததையும் கூறி, மக்களிடையே துவேஷ உணர்ச்சியை உண்டாக்கி வருகிறதென்று, மந்திரிகள் முதல் மந்திரிகளை உண்டாக்கி ஆட்டிப் படைக்கும் காமராஜர்கள் வரை எல்லோருமே கூறிவருகின்றனர். காங்கிரஸ்காரர்களிடமுள்ள பதவிகளைப் பறிக்க வேண்டுமென்ற பகைமை உள்ளமோ, அல்லது பதவியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்ற பாபப்போ திராவிடர் கழகத்தாருக்குக்கிடையாது. ஆனால், பதவி, தன்னைக் கைப்பற்றியவர்களால் பாதுகாத்துப் பயன்படுத்தப் படவில்லை என்ற நிலை பிறக்கும்போது, அதனைத் திராவிடர் கழகம் ஏற்க ஒருபோதும் தயங்காது. மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள எந்தக் கட்சியும், பதவி வகிப்பதன் மூலம் மக்களுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியங்களைச் செய்யாமல், பதவியைப் பவனிக்கும் படாடோபத்திற்கும் பயன்படுத்தாது. இன்று காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவி, நாம் மேலே எடுத்துக் காட்டிய இரண்டு வழிகளுக்குமே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பொதுமக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். இந்த உணர்ச்சி, திராவிடர் கழகக் கூட்டங்களின் மூலம் பிரதிபலிக்கின்றது. பதவியிலுள்ள காங்கிரஸ், பொதுமக்களின் நலன்களைப் புறக்கணித்து விட்டது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுப் போன்றதே, திராவிடர் கழகக் கூட்டங்களில் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடித் தங்களின் ஆதரவைக் காட்டுவது.

இது பதவியிலிருக்கும் காங்கிரஸ் தோழர்களுக்குப் பீதியை உண்டாக்கிவிடுகிறது. சாதாரணபொதுக் கூட்டம் கூட ஒரு மாநாடு போல் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொண்டதாக இருக்கிறதே! ஆளும் வாய்ப்பைப் பெற்ற ஒரு கட்சிக்கு, இவ்வளவு ஆதரவு நாட்டில் இருக்குமானால், ஆளும் உரிமை ஒருவேளை எங்கே பறிபோய் விடுமோ என்ற பயம், காங்கிரஸ் தோழர்களுக்கு ஏற்பட்டு விட்டது. எனவேதான், செல்லும் திசையெல்லாம் திராவிடர் கழகத்தை ஒரு மூச்சுத் திட்டித் தீர்வது என்ற முடிவைக் காங்கிரஸ் தலைவர்கள் கொண்டுள்ளனர்.

ஆளும் உரிமையோடு அதிகாரத்தில் இருக்கும் ஒரு கட்சி, இன்னொரு கட்சியைப் பற்றிக் குறை கூறினால், அதனைப் பொதுமக்கள் நம்பித் தம் வழி நிற்பர் என்ற நம்பிக்கை, ஜனநாயக முறைக்கே நேர்மாறானதென்பதை, உணரும் அரசியலறிவு இல்லாத காரணத்தால், எதிர்க் கட்சிகளை ஏளனமாகப் பேசுகிறார்கள்.

மக்களின் ஆதரவைப் பெற்று, மன்பதையை ஆளும் இவர்கள், மக்களின் ஆதரவைப் பெறாத கட்சியென்றும், சிறுபான்மைக் கட்சியென்றும் கருதும் ஒரு கட்சியைப் பற்றி என் பயப்பட வேண்டும் என்று பொது மக்கள் நினைக்க மாட்டார்களா என்ற நினைப்புக்கூட இவர்களுக்கு ஏற்படுவதில்லை. பூனையைக் கண்டு புலி பயப்பட்டால், புலியால் பூனையை வெல்லமுடியாத நிலை ஏற்பட்டு விட்டதென்றுதானே பொருள் கொள்ள வேண்டும். புலிக்கு உண்மையிலேயே பலம் குன்றி விட்டதென்று வைத்துக் கொண்டாலும், அதன் தோற்றம் ஒன்றே பூனைக்குத் திகிலைக் கொடுத்துவிடுமே! ஆனால், இங்கு பூனை, புலியின் வடிவத்தைக் கண்டும் கூடப் பயப்படவில்லை. ஆனால் புலி பயப்படுகிறது பூனையைக் கண்டு! காரணம்; தன்னுடைய பலம் குன்றிவிட்டதென்பதைப் புலி உணர்ந்துவிட்டது.

இந்த நிலை இன்று பதவியிலிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. தங்களுடைய பலம் அதாவது செல்வாக்குக் குறைந்துவிட்டதென்பதையும், பொதுமக்கள் தங்கள் மீது வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், தங்களுடைய பலவீனத்தை மறைக்க, மாற்று மருந்தாகத், திராவிடர் கழகத்தைத் திட்டும் முறையைக் கையாளுகிறார்கள். இந்த மாற்று மருந்து, காங்கிரசுக்கு இன்னும் இருந்துவரும் சிறிதளவு செல்

வாக்கையும் இழந்துவிடச் செய்யுமேயன்றி, அவர்களுடைய நினைப்பின்படி செல்வாக்கு வளர்ந்துவிடாதென்பதை அவர்கள் உணரும்நாள் வெகு தொலைவில் இல்லை. அந்த அளவுக்கு அவர்களைப் பதவிமோகம் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. பதவி வேட்டை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சி, பாமர மக்களின் குறைகளை உணர்ந்து பணியாற்றும் பண்பைப் பெறும் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

ஒரே கட்சியென்றும், ஒரே கொள்கையென்றும் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சிக்குள் பல பிரிவுகள் (கோஷ்டிகள்) ஒன்றையொன்று மோதிக்கொள்ளும் அளவுக்குத் தோன்றி வளர்ந்துவிட்டன. இந்தப் பிரிவுகள், எதனால் உண்டாயின? கட்சிக் கட்டுப்பாட்டில், ஏற்பட்ட கோளாறினாலா? இல்லை. கொள்கை மாறுபாட்டாலா? அதுவும் இல்லை. பதவி! பதவி!! பதவி!!! இது ஒன்றேதான் இதற்குக் காரணம். பிரகாசத்தைச் சேர்த்துக்கொண்டால் மந்திரி சபை நிலைக்குமா? சுப்பராயனைச் சேர்த்துச் கொண்டால் நிலைக்குமா? என்ற பெரும் பீதி இன்றைய மந்திரி சபையைப் பிடித்தாட்டியபடி இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள யார் யாரை மந்திரிகளாக்குவது? எந்தக் கோஷ்டியில் சேர்வது? என்ற கவலையில் ஆழ்ந்துக் கிடக்கின்றனரேயன்றி, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய உருவான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற கவலையைக் கொள்ளக் காணோம். மனைவியிடம் கோபம் கொண்ட கணவன், வீட்டிலுள்ள சட்டிகளை உடைத்துத் தன் கோபத்தைத் தீர்த்துக்கொள்வது போல், காங்கிரஸ் தோழர்கள் பதவி மோகத்தால் ஏற்படுத்திக்கொண்ட கோஷ்டிகளோடு காட்டவேண்டிய கோபத்தைத், திராவிடர் கழகத்தார் மீது காட்டித் தணித்துக்கொள்ளப் பார்க்கின்றனர். ஓமந்தூரார் மந்திரி சபை விலகி, இராசபாளையத்தார் மந்திரி சபை வந்ததும், அதனை உருவாக்குவதில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையின் எதிரொலியே, இப்போது சில நாட்களாகத் திராவிடர் கழகத்தைத் திட்டுவதாக அமைந்திருக்கிறது. மந்திரிகளும், மந்திரிகளை ஆக்குவோரும் இப்பொழுது எங்கு சென்றாலும், எதைப்பற்றிப் பேசினாலும் திராவிடர் கழகத்தார் மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்துவிட்டுத் தானே மறுவேலை பார்க்கிறார்கள். இந்தப் போக்கு, அவர்களுக்கு அழிவைத் தருமா? அல்லது ஆக்கத்தைத் தருமா? என்பதை அவர்கள் இப்போதுள்ள பதவி மோகத்தில் உணர முடியாவிட்டாலும், உலகியல் நடவடிக்கைகள் நாளாவட்டத்தில் அவர்களுக்கு உணர்த்தியே தீரும். அப்போது அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து வருந்துவதோடு, திராவிடர் கழகத்தார்மீது சாட்டிய குற்றச்சாட்டுகள் எல்லாம் அவசர புத்தியால் அறியாது அள்ளித் தெளிக்கப்பட்ட அவதூறுகள் என்பதையும் உணர்வர்.

காங்கிரஸ் மந்திரிசபையின் போக்குக்கண்டு, காங்கிரஸ் ஏடுகளும், காங்கிரஸ் தலைவர்களுமே எள்ளி நகையாடுகின்றனர்—சிரிக்கின்றனர்—கண்டித்துச் சினம் கொள்கின்றனர் — வழி கற்பித்துச் சீறுகின்றனர். இவற்றையெல்லாம் மக்கள் அறியாமலில்லை. ஆனால் இவற்றையெல்லாம் மக்கள் மறக்கும்படி செய்யவேண்டித், திராவிடர் கழகத்தின் மேல் பொய்க்கூற்றுக்களைப் புனைந்துகூறி, மக்களிடம் தூற்றுதல் பிரசாரத்தைத் துவக்கியுள்ளார்கள் இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் எனப்படுவோர். இத்தகைய முறையில் நாட்டிற்கு 'நற்பணி' யாற்றிடுவோர் தாம் பதவிகளைப் பங்கு போடுவதிலே இன்று முனைந்துள்ளார்கள்!!

மந்திரிப்பதவிகளை வகிப்பதற்கு போதுமான திறமையும், அறிவும், ஆற்றலும் படைத்தவரையே பொறுக்கி எடுக்கும் பண்பை நாகரிகமுடைய நாடுகள் பலவும் கொண்டிருக்கக் காணுகிறோம். ஆனால் இங்கு, ஆளவந்தார்கள், நாட்டை மறந்து, மக்களை மறந்து, நாட்டிலுள்ள நிலைமையை மறந்து, ஆட்களைப்பொறுக்கிக் கொண்டு, அவர்களின் எண்ணிக்கைக் கேற்றபடி பதவிகளைப், பொறுக்கிக் கொள்ளும் விசித்திரப் போக்கு நிலவி வருகிறது. இது ஒருவெட்ககரமான செயலாகப், பிறரைப் பழி தூற்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை போலும்!

தோழர் டி. பிரகாசம் சட்டசபையிலுள்ள பிரிவுகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்றபடி, விகிதாசார முறைப்படி, பதவிகள் பங்கிட்டுக்கொடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், அதற்குப்பிரதமர் தோழர் குமாரசாமிராஜா இணங்கிவரவில்லை என்றும், ஆகவே சமரசம் ஏதும் ஏற்படாத காரணத்தால், மந்திரிசபையின் எண்ணிக்கையை விரிவடையச் செய்யும் முயற்சி, தற்காலிகமாகநிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கூத்து நடந்துமுடிந்தபிறகு, முதலமைச்சர் தோழர் குமாரசாமிராஜா உண்மைக் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

> "கிராமங்களில் இருக்கும் மக்கள் எத்தனை மந்திரிகள் இருக்கின்றனர் என்று கவலைப்படுவதில்லை. அரசியல் வாதிகள் தான் கவலைப்படுகின்றனர். மக்கள்,சர்க்கார் நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும் என்றும், நல்லமந்திரிகள் வேண்டும் என்றும்,உணவுப் பொருள்கள் முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்கவேண்டும் என்றும்தான் கவலைப்படுகின்றனர்"

என்று கூறியுள்ளார்.

இந்த உண்மைக்கருத்து, ஆரம்பத்திலேயே பிரதமர் உள்ளத்தில் ஏற்பட்டிருக்குமேயானால், இவ்வளவு சங்கடம் நிறைந்த, பரிகசிக்கத்தக்க நிலைமைகள் உண்டாகியிருக்கா.

"மந்திரிசபையை விரிவாக்கப்போகிறீர்களா?" என்று நிருபர்கள் கேட்டகேள்விக்கு விடையிறுத்தப் பிரதமர் தோழர் ராஜா,

> "நான் இப்பொழுது மந்திரி சபையை விரிவாக்கப்போவதில்லை. அவசரப்பட்டு ஏதாவது செய்வதாக எண்ணம் இல்லை. நிர்வாக வேலை நடந்துவருகிறது. இந்த விஷயங்களையெல்லாம் கொஞ்சக் காலத்திற்கு மறந்து, உருப்படியான வேலையைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்"

என்று குறிப்பிட்டுள்ளார். "உருப்படியான வேலையைப் பார்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்" என்று கூறும் பிரதமர், இதுவரையில் பதவிப் பங்கீடுபற்றி நடந்துவந்த சர்ச்சைகளையெல்லாம் உருப்படியற்

விஞ்ஞானக் குறிப்புகள்

மனித ஊழி

உலகில் மனிதன் தோன்றி சுமார் மூன்றுகோடி ஆண்டுகள்தாம் இருக்கலாம். ஆனால் உலகம் தோன்றி, சற்றேறக்குறைய முந்நூறு கோடி ஆண்டுகள் ஆவதாக நிலநூலறிஞர்கள் கூறுகின்றனர். ஆகையால் மனிதன் தோன்றுவதற்கு முன் உள்ள 297-கோடி ஆண்டுகளில், அனேக கோடி ஆண்டுகள் உலகில் உயிரினமாவது, செடி, கொடி, மர இனமாவது, இல்லாமல் இருந்திருக்கவேண்டும். அப்படிச்செடியினந் தோன்றிப் பல கோடி ஆண்டுகள் கழித்தே உயிரினம் தோன்றியிருக்கவேண்டும். உயிரினந்தோன்றியபின் உள்ள காலத்தை முதுகெலும்பில்லா உயிர்களின் ஊழி, ஊரும் உயிர்களின் ஊழி, பறவையினத்தின் ஊழி, முலைப்பால் ஊட்டும் உயிர்களின் ஊழி, என்று அவ்வவ் காலங்களில் சிறப்பாய் உள்ளதுசிறந்து (பரிணமித்து)நின்ற உயிர்களைக் கொண்டு பிரித்தனர். உள்ளது சிறத்தல் என்னும் கொள்கையின்படி ஒரு வகை உயிர் வேறு உயிராக மாறுவதற்குப் பலகோடி ஆண்டுகள் செல்லவேண்டும். மற்றெல்லா உயிரினங்களையும் விடச் சிறப்புள்ளவன் மனிதன் ஆகையால், இக்காலததை 'மனித ஊழி' என்று அழைக்கிறார்கள்.

* * *

பழங்காலத்து மனிதன்

ஆதிகாலத்தில், மனிதன், இப்போதுள்ள அவன் பரம்பரையினரைப் போல, அவ்வளவு நாகரிகமுள்ள உயிரினத்தைச் சேர்ந்தவனல்ல. அவன் விலங்கினின்றும் அதிக வேறுபாடு காணமுடியாத காட்டுமிராண்டியாகத்தான் இருந்தான். புல்லாய்ப், புழுவாய், ஊர்வனவாய்ப், பறப்பனவாய், விலங்காய், விலங்குகளில் குரங்காய், பின் குரங்கிலிருந்து ஆதி மனிதன் தோன்றினான் என்பது டார்வின் என்ற அறிவியலறிஞனின் ஆராய்ச்சி. இந்த முடிவை மற்ற அறிவியலறிஞர்களும் ஒப்புக்கொண்டனர். ஆகவே வால் குரங்கிலிருந்து வாலில்லாக் குரங்காகிப் பின் மனிதனாகிய நமது முன்னோர்கள், முதலில் மனிதத் தோற்றம் பெற்று உலகில் காட்சியளித்தது மூன்றுகோடி ஆண்டுகளுக்கு முன்னால். அதிலிருந்து மாறி மாறி தற்போதுள்ள நாகரிக நிலைக்கு வந்திருக்கும் மனிதன், இன்னும் மூன்றுகோடி ஆண்டுகளுக்குப், பின்னால், இப்போதிருப்பதைவிட, மிக மேன்மை பொருந்தியவனாகவும், அளவிறந்த மூளைத்திறமையுடையவனாகவும் இருப்பானென்று ஊகிக்கப்படுகிறது. நாளுக்கு நாள் மனிதன் தன்னுடைய அறிவிலும், ஆற்றலிலும், தோற்றத்திலுங்கூட வளர்ச்சியடைந்து மேன்மைக்கு வருகிறான் என்பதே உயிரினநூலும் (Biology) மனிதஇனநூலும் (Anthropology) தெரிவிக்கும் உண்மையாகும்.

*

உலகின் வயது

வெப்பக் காற்றுயிருந்து, உருகிய பிழம்பாகியபின் குளிர்ந்து இறுகிக் கெட்டியான, ஆதிகாலத்தில் ஏற்பட்ட உருக்குப் பாறைகளின் வயதை அளந்தறிந்து, அதன்மூலம் உலகவயது சொல்லப்படுகிறது. இதுவரை நிலநூலறிஞர்களால் ஆராய்ந்தறியப்பட்ட பாறைகளில் மிகவும் பழமையான பாறைகளின் வயது சற்றேறக்குறைய 150 கோடி ஆண்டுகள் என்று தெரிகிறது. ஆனால் உலகம் தோன்றிய காலம் 300-கோடி ஆண்டுகள் இருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டு வந்தது. ஆதிகாலத்திய உருக்குப் பாறைகள் எல்லாம் பூமியின் அடியில் ஆழ்த்தப்பட்டுப் புதைந்து கிடப்பதால், மிகவும் பழைமையைத் தெரிவிக்கும் அப்பாறைகள், நில நூல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக்குக் கிடைக்காமலிருப்பதே, உலகின் வயதைத் திட்டப்படுத்துவதற்குத் தடையாக இருந்தது.

உலகின் பல பாகங்களிலிருந்து தேடிக் கொண்டுவரப்பட்ட சுமார் 30 வானக்கற்களை ஆராய்ச்சி செய்து, அவைகளின் வயது சுமார் 300 கோடி ஆண்டுகள் இருக்கலாம் என்று கண்டறிந்ததாகவும், இந்த வானக்கற்கள் எல்லாம் உடைந்துபோன ஒரு கோளின் (கிரகம்) சிதைவுகள் என்பதனால், அந்தக் கோளின் வயது மேற்படி வானக் கற்களின் வயதேயாகும் என்பதாகவும், உலகமும் மற்றக் கோள்களும் ஒரே காலத்தில் ஏற்பட்டதாக அனுமானிக்கப்படுவதால், நமது உலகின் வயதும் மேற்படி வானக்கற்களின் வயதுக்குச் சற்றேறக்குறையச் சரியாய் இருக்கவேண்டுமென்றும் விஞ்ஞானப்போசிரியர் எவ். ஏ. பன்னத் போன்றவர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். இவைகளிலிருந்து உலகின் வயது சற்றேறக்குறைய 300 கோடி ஆண்டுகள் என்று ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம்.

*

> சமுதாயம் என்ற சங்கிலித் தொடர்பில், ஒரு மணியாக நீ சேர், அல்லது இலட்சியமற்ற புழுதியாகச் சுழல்.
>
> — கவி: இக்பால்.

றவை என்றுகருதுகிறார்எனஎண்ண இடமிருக்கிறது. அது சரியானால், அதே எண்ணத்திலதான், நாமும் கூறினோம், உருப்படியற்ற செயலில் காங்கிரஸ் இறங்கிவருகிறது, உருப்படியான காரியங்களைச் செய்ய, அது தன்கையில் கிடைத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று.

பதவிப்பங்கீடு பெறுவதுபோன்ற உருப்படியற்ற செயல் பலவற்றிலே ஈடுபட்டுவரும் காங்கிரஸ்காரர்கள், பிரதமர் தோழர் குமாரசாமிராஜா எண்ணுவதுபோல், இனியாயினும் உருப்படியான செயல்கள் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம். கருத்து வேறுபாடுடையவர்களைத் தூற்றித்துவேஷிப்பதுதான் உருப்படியான செயலாகும் என்று கருதினாலும் தாராளமாகச் செய்யட்டும்!

பதவிப் பங்கீட்டிலே அக்கரை செலுத்திவரும் காங்கிரஸ் தோழர்கள், நாட்டுமக்களுக்கு நலத்தைப் பங்கிட்டுக்கொடுப்பதிலே அக்கரை காட்ட முயலுவார்களேயானால்,அது நாட்டுக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது; உருப்படியான செயலென்றும் போற்றப்படும்!

—*—

சொந்தநாட்டில் :: :: அகதிகள்

—*—

தம் சொந்த நாட்டில் வாழ வழி கிடைக்காததால், வேறுநாடுசென்று கூலி வேலை செய்தாலாவது வாழ்க்கைக்கேற்ற அளவுக்கு ஊதியம் பெறலாம் என்று நம்பி, பர்மாவில் குடியேறிய (பெரும்பாலும் திராவிடத்தைச் சேர்ந்த) பாட்டாளிகள், இன்று அலறிக்கொண்டு அகதிகளாக ஓடிவருகின்றனர். தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தாய்நாடு நோக்கி ஓடிவருகின்றனர். ஆயிரக் கணக்கில் ஓடிவருகின்றனர்!

அரும்பாடுபட்டு உழைத்தால், கட்டிப் பொன்னைக் கையிலேந்தித் தாயகம் திரும்பலாம் என்று கருதிச் சென்றவர்கள, அழுத கண்ணீர்—அலங்கோலமான கந்தலுடை—கவலை தோய்ந்த முகம்—வற்றிய வயிறு – வாடிய தோற்றம் ஆகிய இவைகளைச் சொத்தாகக் கொண்டு, தமிழகத்தின் கரை சேர்ந்துள்ளனர். எதும் அற்ற அகதிகளாகச் சென்னை துறைமுகத்தில் வந்து சேர்ந்துள்ளார்கள்!

மே முதல்நாளன்று, 1240 பேர்கள் அகதிகளாய்ச் சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கியுள்ளார்கள். அவர்களில ஆடவர் 620 பேர், பெண்கள் 380, குழந்தைகள் 240. இவர்களையன்றித் தெலுங்குப் பகுதியைச் சென்றடைய, விசாகைத் துறைமுகத்தில் இறங்கச் சென்றோர் நூற்றுக் கணக்கினர். இதற்கு முன்பு, ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள், இதே நிலையில் வந்திறங்கியுள்ளனர். அகதிகளாக ஓடிவருவோரின் எண்ணிக்கை, மேலும் மேலும் வளரக்கூடும் என்ற மாதிரியில், நிலைமையும் வளர்ந்துகொண்டு வருகிறது.

இவர்களெல்லோரும் அடித்துத் துரத்தப்படுகிறார்களா என்றால், இல்லை. அப்படி நடந்திருந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, சொந்த நாட்டையும், சொந்த நாட்டு மக்களையும், உடைமையையும் காப்பாற்ற எண்ணும் தாய் நாட்டுப் பற்றுடையோரின்செயல்அது என்று இருந்துவிடலாம். கலங்கி நிற்கும் அவர்களைப் பார்த்து, ஓடிவந்ததற்குக் காரணம் என்ன என்று வினவியபோது, அங்குள்ள நெருக்கடியான சண்டை சச்சரவு நிலைமையின் காரணமாக, வேலையேதும் கிடைக்காமல் வாளா கிடக்கவேண்டியிருப்பதாலேயே, யாவரும் தாயகம் திரும்பிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகப் பதிலிறுத்தார்களாம். வேலையற்றோரின் பட்டாளம் மீண்டும் தாயகம் சேர்ந்துள்ளது!

இவர்களில் பெரும்பாலோர் தஞ்சை, இராமனாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். வேலையும், உண்ண உணவும் அற்ற நிலையில,இராமனாதபுரத்தைச் சேர்ந்த பட்டினிப் பட்டாளங்கள் மாகாணத்தின் பல்வேறு பாகங்களில் குடியேறி வரும் காட்சியைக் காண்கிறோம். இந்த நிலையில், புதிய பட்டினிப்பட்டாளங்களையும்இறக்குமதி செய்து கொண்டிருக்கும் திராவிடத்தின் வருங்கால நிலை என்னவாகும் என்பதை உணரவேண்டும்.

அவர்களெல்லோரும் இங்கு வரக்கூடாதவர்களா என்றால், இல்லை, வரக்கூடியவர்கள்—வரவேண்டியவர்கள்—வர உரிமை படைத்தவர்கள். எனவே தான் வந்துவிட்டார்கள். அவர்கள்வருகை, இங்கு நிலவும்நிலைமையைப் பொறுத்து ஏக்கந் தருவதொன்றாக விளங்கிய போதிலும், அவ்வேக்கத்தின் காரணமாக நம் விழிகளிலே வழியும் கண்ணீரைச் சற்றுத் துடைத்துவிட்டுப் பார்த்தால், வடநாட்டுஅகதிகள் ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் இங்கு அண்டி வாழும் நிலை தெரியும். வடநாட்டில் அகதிகள் அலறித் துடித்து இடம் பெயர்ந்து திண்டாடி நின்ற காலையில், சென்னை மாகாணம், பதினாயிரவரை ஏற்றுக்கொள்ள சம்மதமொழி கொடுத்தது. அதன்படி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வடநாட்டு அகதிகள் அரசாங்கப் பாதுகாப்பில் இருந்து வருகின்றனர். இப்பொழுது இங்கே நம் நாட்டு அகதிகள் குவிகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினரை ஏற்றுக் காப்பாற்ற வடநாட்டினர் ஒப்புவரா? அல்லது வடநாட்டு அகதிகளை அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்பிவிட்டு, நம் நாடு வந்து சேர்ந்திருக்கும் சொந்த அகதிகளை ஆதரிக்க சென்னை அரசாங்கந்தான் முற்படுமா? அல்லது அவர்களுக்குக் கொடுத்துவரும் அதே சலுகையை இவர்களுக்கும் கொடுக்க ஒப்புமா? கேட்டால், வடநாட்டுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தென்னாட்டு அரசாங்கம், கையைத்தான் விரிக்கும்; வாய் ஊமையாகத்தானிருக்கும்!

இந்திய நிலபாகத்தினின்றும் வெளி நாடுகளுக்குக் கூலிகளாகச் செல்லும் மக்கள், எந்தப் பகுதியிலிருந்து மிகவாகச் செல்லுகின்றனர் என்று பார்த்தால், திராவிடப் பகுதியிலிருந்துதான் செல்லுகிறார்கள் என்பது விளங்கும். அப்படிப்பட்ட திராவிடப் பாட்டாளி மக்கள், கூலி வேலை செய்துகூடப் பிழைக்க முடியாதபடி, சில இடங்களில் அரசாங்கத்தாலும், சில இடங்களில நிலைமையாலும் துரத்தியடிக்கப்படுகிறார்கள். ஆனால் இங்கு—வளம பொங்கும் திராவிடத்தில், வடநாட்டு மார்வாடி, குஜராத்தி, மூலதானி, பனியா, பட்டாணி ஆகியோர் அண்டிப் பிழைத்தும், சுரண்டியும் முதலாளிகளாய்வாழ்ந்து வருகிறார்கள்.சொந்தநாட்டவர்கள்வெளிநாடுகளில் துரத்தியடிக்கப் படுகிறார்கள்; அதே வேளையில் வெளிநாட்டவர் இங்கு சுரண்டி உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள். இந்த உல்லாச வாழ்வுச் சீமான்களை, அவர்கள் சொந்த நாட்டிற்குப் போகும்படி துரத்தியடிக்கும் திருப்பணியினைத், திராவிடம் மேற்கொள்ள முயலுமேயானால், நம் நாட்டவர் இங்கு அகதிகளாக மீண்டும் வருகிறார்களே என்று கவலை கொள்ளத் தேவையிருக்காது; ஏங்க வேண்டிய அவசியமில்லை; பிறகு கண்களில் வழியும் நீர் அழுகை நீராக இராது, களிப்பால் துள்ளி விழும் மகிழ்ச்சிக் கண்ணீராகத் தான் இருக்கும்!

பர்மாவிலிருந்து அகதிகள் வருகின்றனர்; ஏக்கம் ஏற்படுகிறது! ஏக்கம் அவர்களை வாழவைக்கும் வழியாகாது. இங்குள்ள வடநாட்டினரை அவர் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் முயற்சியை மேற்கொண்டால், நம்மவரில் அகதிகளாக வருவோர் வாழ வழி கிடைத்துவிடும். *

சோதனையில் வெற்றி

அண்ணாமலைநகர் வழக்கில்பிணைப் புண்டு, சென்ற ஓராண்டு காலத்திற்கு மேலாக, அல்லல் பல ஏற்று, நீதிக்காக வாதாடி நின்ற திராவிட கழகமாணவர்களும்,தில்லைதிராவிடக் கழகத் தலைவரும் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளார்கள். வழக்கில் விடுதலைபெற்று, வாகைசூடி வெளியேறிய தோழர்களை, நாம் வெற்றி வாழ்த்துக்கள் கூறி வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

அண்ணாமலை நகரில், காங்கிரஸ்—திராவிடர்கழக மாணவர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு, நாளடைவில் பூசலாகமாறி, பூசல் போராடும் கட்டத்திற்கு வந்தது. திராவிட மாணவர்கழக வளர்ச்சியைக்கண்டு பொறுமை கொண்ட காங்கிரஸ் மாணவர்கழகம், வலிய வம்புக்கு வரவே, பூசலும், போராட்டமும் ஏற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. திராவிட மாணவர் கழகத்தார், வலிய வம்புக்குச் செல்லவேண்டிய அவசிய மில்லாதவர்கள்; காரணம், அவர்கள் கண்டு பொறுமைப் படத்தக்க எதுவும் காங்கிரஸ் மாணவர்களிடத்தில் இருப்பதாகக்கருதுவதில்லை. ஆனால் வலிய வந்த சண்டையைச் சமாளித்து நிற்கவேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆனார்கள். அதன் விளைவாக, இருதரப்பாரிடையேயும் ஏற்பட்ட அடிதடியால், குருதி கசியும் காயங்கள், இருசாராரிடையேயும் ஏற்பட்டன.

இந்தக் கலகத்தைக் குற்றமுடைய தொன்றாகும் என்று எடுத்துக் கொண்டால், அப்படிச் சாட்டப்படும் குற்றம் இருசாராரையுந்தான் சாரும். அதன்படிதான் இரு தரப்பு மாணவர்களும் வழக்கில் ஈடுபடுத்தப்பட்டு, கீழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். ஒரே சட்டப்பிரிவின் கீழ்தான் காங்கிரஸ் மாணவர்களும், திராவிடர்கழக மாணவர்களும் வழக்குத் தொடுக்கப்பட்டார்கள். ஆனால் நீதியின் கோல் ஒருபக்கம் சாய்ந்தது! காங்கிரஸ் மாணவர்கள் வழக்கினின்றும் விடுதலை செய்யப்பட்டார்கள்! ஆட்சிப் பீடத்திலுள்ளோர் அவர்களைச் சேர்ந்தோர்கள் என்ற காரணத்தால்! நீதி ஒரு 'கண்ணை' மூடிக்கொள்வானேன் என்று நாம்கேட்டோம்,பதிலில்லை!

அ. நகர் திராவிடக்கழக மாணவர்களான தோழர்கள் மதியழகன், கோவிந்தன், கண்ணையன், திருநாவுக்கரசு, திருஞானம் ஆகியோரும், தில்லை திராவிடர்கழகத் தலைவரான தோழர் கிருட்டிணசாமி அவர்களும் வழக்கின் காரணமாகப் பலநாட்கள் அலைக்கழிக்கப்பட்டார்கள், நீதிமன்றத்திற்கு வரும்படி. படிப்பு ஓர் பக்கம், பணக்கடினம் மற்றோர் பக்கம், இவற்றினிடையே மாணவர்கள் அல்லலுற்றார்கள். அரசாங்கம் இரக்கங்காட்ட மறுத்தது. கீழ்நீதி மன்றம் குற்றமுடையவர்களெனத் தீர்ப்பளித்து, மாணவர்களுக்கு அபராதமும், தில்லை திராவிடர்கழகத் தலைவருக்கு, ஆறுமாத கடுங்காவல் தண்டனையும் விதித்தது. நீதிக்காக இறுதிவரையில் வழக்காடித்தீருவது என்று, அவர்கள் உறுதி பூண்டு மேல் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்களுக்கு நல்ல தீர்ப்புக் கிடைத்துவிட்டது! அவர்கள் குற்றமற்றவர்களே என்று மாஜிஸ்ட்ரேட் கூறிவிட்டார்! தங்கள் மேல் வாரி வீசியிருந்த அல்லல்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு விடுதலை பெற்று வீறுடன் அவர்கள் வெளியே வந்துவிட்டனர்!

மேல்நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதி மன்றத்திலோ நல்ல தீர்ப்பு கிடைக்காவிட்டாலுங்கூட நாம் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டோம், இன்றைய ஆட்சியாளரின் சட்டத்தின் போக்கு, ஓரே வழி 'ஒற்றைக் கண்ணோடு' நிலவுகிறது என்ற காரணத்தால்.

இவையெல்லாம் திடாவிடர்கழகத்தினர் பயிற்சி பெறத்தக்கசோதனைக் கூடம். கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தபோதும், "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற இன்ப கீதந்தான் அவர்கள் இதய நாடிகளிலிருந்து எழும்பிக்கொண்டிருந்தது. சோதனையில் வெற்றிபெற்று மீண்ட அவர்களை வாழ்த்துகிறோம்.

கோலில் கறை படிந்தது!

—✲—

இறுதியாக அந்த இளைஞனைத் தூக்கிலிட்டுவிட்டார்கள், மலேயா அதிகார ஆணவம் படைத்தோர். ஒரு ரிவால்வாரும் ஆறு தோட்டாக்களும் வைத்திருந்தார் என்ற ஒரே குற்றத்திற்காக, மலேயாவில் வாழ இடந்தேடிச் சென்ற தோழர் எஸ். ஆர். கணபதி தூக்கிலிடப்பட்டுவிட்டார்.

ஒரு தமிழனை — தூக்கிடவேண்டிய அளவுக்குக் குற்றம் புரியாத ஒருவனை — சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டி, கடமையை நினைந்து வழி நடந்துகொண்டிருந்த அவனை, குற்றவாளியாகத் தூக்குமேடையில் கொண்டுபோய் நிறுத்தி, தூக்குக் கயிறு அவ்விளைஞனைக் கட்டித்தழுவும்படி செய்துவிட்டார்கள் அதிகாரவெறியர்கள்.

குற்றமேதும் செய்ய நினையாத அந்தப்பாட்டாளித் தோழனுக்குக் கருணை காட்டும்படி, செலாங்கூர் சுல்தானை நாம் வேண்டினோம் — பலர் வேண்டினார்கள்—தமிழகம் வேண்டிற்று—இந்திய அரசாங்கம் வேண்டிற்று. எனினும் மலேயா நாட்டுத் தூக்குமேடையில் ஒரு தமிழனின் உயிர் சிதைக்கப்பட்டுவிட்டது!

குற்றம் நினையாத தமிழன் தூக்குமேடையில் பிணமாக்கப்பட்டான் என்றவுடனேயே, மலேயா கோலில் கறை படிந்துவிட்டது என்பதைமட்டும் அதிகாரவெறியர்கள் மறந்துவிடவேண்டாம். கறை படிந்துகாணப்படும்அந்தக் கோலைக் காணும்போதெல்லாம், மலேயா வாழ் தமிழர்களும், தாயகத்தமிழர்களும் நெஞ்சு கொதிப்பேறி நிற்பர் என்பதுமட்டும் திண்ணம். அதன் விளைவு என்ன என்பதைக் காலங்காட்டத்தவறாது!

ஆரிய திராவிட

4-ம் பக்கத் தொடர்ச்சி

காலத்திலிருந்தே நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள். என்றும், அப்போது 'தமிழர் நாகரிகம்' என்றே சொல்லப்பட்டு வந்ததென்றும், பின்னர் தமிழ் மக்களிலிருந்து ஒரு சாரார், தெலுங்கு பேசுவோராயும், கன்னடம் பேசுவோராயும், மலையாளம் பேசுவோராயும், பிரிந்து போயினரென்றும், அப்படி அவர்கள் மொழியை வேறாகக்கொண்டிருந்த போதிலும், அடிப்படைத் தமிழர் நாகரிகத்தில் சிறிதும் வேறுபடாமல் இருந்துவருகின்றனர் என்றும், அதனாலேயே 'தமிழர் நாகரிகம்' என்று தமிழர்களை மட்டும் பிரித்துக் கூறாமல், தமிழ் மக்களினின்றும் பிரிந்துபோன பகுதியினரையும் சேர்த்து—அவர்களும் தங்களுடைய பழைய நாகரிகத்தை விடாமல் நடந்துவருவதால், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் அனைவருக்கும் பொதுவாகத் 'திராவிடநாகரிகம்'என்று இப்போது கூறிவருகிறோம். இதனையே தோழர் ஹாயி டுமாண்டும் விளக்கியிருக்கிறார். திராவிட நாகரிகம் தென்னிந்தியர் அனைவருக்கும் பொதுவானது என்று கூறியிருக்கிறார். இதிலும் மன அமைதியைப் பெறமுடியாத நிருபர், கடைசி முறையாக ஒரு கேள்வியைக் கேட்டுவிடுவது என்று துணிந்து கேட்டிருக்கிறார். அந்தக் கேள்விக்குக் கிடைத்த பதில்தான் அவருக்கு ஓரளவு திருப்தியைக் கொடுத்திருக்கும் என்று நம்புகிறோம்.

> "தென்னிந்தியாவில் உள்ள ஒரு தனி நபரையோ, ஒரு கோஷ்டியையோ ஆரியரா? திராவிடரா? என்று நிர்ணயிக்க முடியுமா?"

என்பதுதான் அந்த நிருபருடைய கடைசிக் கேள்வியாகும். இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவதென்றால் வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. அனுபவ அறிவு இதற்கு நிறைய வேண்டும். 'ஆரியர்—திராவிடர் கலப்பு'ப் பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள் பலவற்றில் ஆரியரும் திராவிடரும் பெரும்பாலும் கலந்துவிட்டனர் என்ற முடிவையே கூறியுள்ளனர். இக்கூற்று உண்மையானால், இன்று ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்று பிரித்துப்பேசக் காரணமே இல்லை. ஆரியமும் தமிழும் இன்னும் வெவ்வேறாக இருப்பது போலவே, ஆரியரும் திராவிடரும் வெவ்வேறாகவே இருக்கின்றனர். உடை, நடை எல்லாவற்றிலுமே ஆரியர் வேறு திராவிடர் வேறு என்று மிக எளிதாகக் கண்டுகொள்ளக்கூடிய அளவு இரு இனத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. ஆனால், ஒன்றுமட்டும் உண்மை. ஆரியரும் திராவிடரும் ஒருங்குவாழ்கின்றனர். அதாவது ஒருஇடத்தில் வாழ்கின்றனர்-ஒருதெருவில் வாழ்கின்றனர்—இன்னும் சொல்லப்போனால், ஒரு வீட்டில் கூட வாழ்கின்றனர் என்று கூடச் சொல்லலாம். என்ற போதிலும், ஆரியர்கள் ஆரியர்களாகவும், திராவிடர்கள் திராவிடர்களாகவுமே வாழ்கின்றனர். இந்த இரு இனத்துக்குமிடையே எந்த விதமான உடலுறவும் கிடையாது (சந்தர்ப்ப உடலுறவைத் தவிர)—நட்புறவு மட்டும் ஏகதேசம் உண்டு. இந்த நட்புறவும் இரத்தத் தொடர்பு கொள்ளாத முறையில்தான் இருந்து வருகிறது. டாக்டர் சுப்பராயன் அவர்களும் அன்பர் இராசகோபாலாச்சாரியாரும் போன்ற இரண்டொருவர், இரு இனங்களுக்குமிடையே இரத்தத் தொடர்பை இப்போது உண்டாக்கிக் கொண்ட போதிலும், இந்த இரத்தத் தொடர்பை இரு இனத்தாருமே வரவேற்கவும் இல்லை — இப்படிப்பட்ட இரத்தத் தொடர்பு அவசியம் என்ற போதிலும், சரியென்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. இத்தொடர்பு ஆரியர்-திராவிடரின் இரத்தக்கலப்பு ஏற்படுவது தவறாகுமென்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகக் கூறுவதற்கே இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் நெடுநாட்களுக்கு முன்னரே ஒன்றாகக்கலந்து விட்டது என்று கூற எந்த ஆதாரமும் கிடையாது.

* *

"எனக்குத் தெரிந்தவரையில், தங்களை ஆரியர் அல்லது திராவிடர் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய கலப்பற்ற இரத்தம் உள்ள இனம் ஒன்று இல்லை" ... என்று கூறியிருக்கிறார்.

ஆரிய இரத்தம் திராவிட இரத்தத்தோடு கலந்துவிட்டதா அல்லது திராவிட இரத்தம் ஆரிய இரத்தத்தோடு கலந்துவிட்டதா என்பதல்ல இங்கு இப்போதுள்ள பிரச்னை. இரு இனத்தின் இரத்தமும் ஒன்றாகக் கலந்து எல்லோரும் ஒரே இனம் என்ற முறையில் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நடந்து காட்டவேண்டுமென்பதை எந்தப் பகுத்தறிவுடையவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், ஒரு இனம், தங்களை உயர்ந்தவர்கள் என்றும், தங்கள் நாகரிகமே சிறந்ததென்றும், தங்கள் மொழியே சிறப்புடையதென்றும் கூறிக்கொண்டு, மற்ற இன மக்களையும் அவர்களின் மொழி கலாச்சாரம் ஆகியவற்றையும் இழிவாகப் பேசும் போக்கையே நாம் கண்டிக்கிறோம் — வெறுக்கிறோம். 'ஆரியராவது • திராவிடராவது—ஒன்றும் இல்லை—எல்லாரும் ஒன்றாகக் கலந்துவிட்டனர்' என்று யார் வாய் வேதாந்தம் பேசுகிறார்களோ, அவர்களே, இன்றும் தங்களை ஆரியர்கள் என்றும், தங்கள் மொழியான சமஸ்கிருதமே கோயில்களிலும் பிற இடங்களிலும் முதலிடம் பெறவேண்டுமென்றும் கூறிவருவதோடு, திராவிடர்களையும் திராவிட மொழிகளையும் இழிவாகவும் பேசி வருகின்றனர். ஆரியர்களில் படித்தவர் படியாதவர் யாராயிருந்தாலும் தங்களுடைய வேதம் நான்கென்றும், அவை இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்றும் கூறுகின்றனரேயன்றி, திருக்குறளையோ, சிலப்பதிகாரத்தையோ, ஏனையதமிழ் இலக்கியங்களையோ தங்களுடைய நூல்களாக ஒப்புக்கொள்வதே கிடையாது. திருக்குறள் முதலான தனித் தமிழ் நூல்களைக் கூடச் சமஸ்கிருதத்தின் மொழி பெயர்ப்புத்தான் என்று கூறி, 'ஒன்றேயாயினும்தனித் தமிழ் நூலுண்டோ' என்று இகழ்ந்து பேசுவதைத்தான் காண்கிறோமேயன்றித், தமிழுக்கோ,தமிழ் நூல்களுக்கோ அவர்கள் சிறப்புக் கொடுப்பதும் இல்லை — அவற்றை மதிப்பதுமில்லை.

இரு இனங்களுக்குமிடையே இத்துணை வேறுபாடுகளைக் கற்பித்து வைத்துக்கொண்டு, அவற்றை நடைமுறையிலும் செய்து காட்டிக்

கொண்டு, "ஆரியர் வேறு-திராவிடர் வேறு என்று கூறுவது வெறும் பொய்க்கூச்சல்" என்று புலம்புவதில் யாதாயினும் பொருள் இருக்க முடியுமா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பகுத்தறிவாளர்களாகிய நாம் ஒரு இனம் இன்னொரு இனத்தோடு கலந்து வாழ்வதைக் குற்றமாகக் கருதுபவர்களல்ல. டாக்டர் சுப்பராயன் அவர்கள் கலப்பு மணம் செய்துகொண்டார்என்றால், அதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். டாக்டர் சுப்பராயன் அவர்கள் மேல்நாடுகளுக்குச் சென்று, கல்வியறிவோடு, உலக அனுபவ அறிவையும் பெற்ற காரணத்தால், கலப்பு மணம் செய்துகொள்வது சாதாரண விஷயம் என்று கருதி அவ்விதம் செய்துகொண்டார் என்றே நாம் கருதுகிறோம். இத்தகைய கலப்பு மணம் பகுத்தறிவாளருக்கு மகிழ்ச்சியையும், வைதிகர்களுக்கு மருட்சியையும் தருகிறது. இதற்குக் காரணம் என்ன? இரு இனங்களுடையவும் சமுதாய அடிப்படை அமைப்பு முறைதானே இதற்குக் காரணம்! அந்த அளவுக்கு இரண்டு இனங்களும் பிரிந்து இருக்கிறதென்பதைத்தானே பகுத்தறிவாளர்களின் மகிழ்ச்சியும், வைதிகர்களின் மருட்சியும் எடுத்துக் காட்டுகின்றன!

மேல்நாடுகளில், ஒரு பிரெஞ்சுக்காரன், ஒருஆங்கிலப் பெண்ணையோ, அல்லது ஒரு ஆங்கிலேயன் ஒரு பிரஞ்சுப் பெண்ணையோ மணந்து கொண்டால், அங்கு, அது ஒரு சாதாரண விஷயமாகவே கொள்ளப்படுகிறது. ஆனால், இங்கு, அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஆச்சரியத்தையும் மருட்சியையும் கொடுக்கிறது. அங்கு அப்படியும் இங்கு இப்படியும் ஏன் இருக்கிறது என்பதனையும், எதனால் இந்த நிலை ஏற்படுகிறது என்பதனையும் தோழர் லூயிடுமோண்ட் போன்றோர் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

டாக்டர் சுப்பராயன் அவர்களின் கலப்பு மணமுறை, பச்சைநிற மயில்களில் ஒரு வெள்ளை நிற மயில் காணப்படுவது போலவும், பழுப்பும் வெண்மையும் கலந்து காணப்படும் புலிகளில் ஒரு கரும்புலி காணப்படுவது போலவுமான ஒரு நிகழ்ச்சியே யன்றி இதில் வேறொன்றுமில்லை. மயில்களில் ஒன்று வெள்ளை நிறமாக இருப்பதாலேயே எல்லா மயில்களையும் வெள்ளைநிறமென்று கூறிவிட முடியுமா? புலிகளில் ஒன்று கறுப்பு நிறமாய் இருப்பதாலேயே புலிகள் எல்லாமே கறுப்பு நிறம்தான் என்று கூறிவிட முடியுமா? அதுபோலவே டாக்டர் சுப்பராயன் போன்ற சிலர் கலப்புமணம் செய்துகொண்டதாலேயே இங்குள்ள அனைவரும் இரத்தக்கலப்புக் கொண்டுவிட்டனர் என்று கூறிவிடமுடியுமா? எனவேதான் இத்தகைய நிகழ்ச்சிகளை உதாரணமாக வைத்துக்கொண்டு, ஆரியருக்கும் திராவிடருக்கும் இரத்தக்கலப்பு ஏற்பட்டுவிட்டதென்று கூறிவிட முடியாதென்கிறோம். ஆனால் இரத்தக் கலப்பு ஏற்படுவதைத் தவறு என்று நாம் கருதுபவர்களல்ல.

இந்தக் கேள்விக்கு விடை கூறிய தோழர் லூயிடுமோண்ட் அவர்கள்,

> "எனக்குத் தெரிந்தவரையில், தங்களை ஆரியர் அல்லது திராவிடர் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய கலப்பற்ற இரத்தம் உள்ள இனம் ஒன்று இல்லை"

என்று கூறியிருக்கிறார். அவர் கூறுகிறபடி, அவர் தெரிந்த அளவில், அவரால் படிக்கப்பட்ட நூல்களில், ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் ஒன்றாகக்கலந்து விட்டதென்று காணப்படுவதாலேயே, அவர் அதை முற்றிலும் நம்பாமல் எனக்குத் தெரிந்தவரையில் என்று சந்தேகத்துடனேயே கூறியிருக்கிறார். ஆனால், இந்தச் சந்தேகமும் அவருக்கு விரைவில் நீங்கிவிடும் என்று நம்புகிறோம். எப்படியென்றால், தோழர் லூயிடுமோண்ட் அவர்கள், இங்கு ஓராண்டு தங்கியிருந்து, தமிழ் நாட்டுக் கிராமம் ஒன்றில் மக்களின் இன்றைய வாழ்க்கை முறையை ஆராயப் போகிறாராம். இந்த ஆராய்ச்சியின் பயனாக அவர் பல உண்மைகளை அறிந்துகொள்ள வழி ஏற்படுமென்றும் நம்புகிறோம்.

ஐரோப்பாவில் உள்ள மக்கள் பெரும்பாலும் மதம், கலை, நாகரிகம் முதலியவற்றில் ஒன்றாக இருந்தபோதிலும், அங்குள்ள யூதர்கள் என்ற ஒரு இனத்தாரை மட்டும் தங்களுக்குப் புறம்பானவர்களாக மதித்து, அவர்களை விலக்கிவைத்திருக்கும் சம்பவம் ஒருவேளை தோழர் லூயிடுமோண்டுக்கு மறந்துபோயிருந்தாலும், தமிழ் நாட்டுக் கிராம வாழ்க்கையில் அவர் செய்ய இருக்கும் ஆராய்ச்சி, அதனை அவருடைய நினைவுக்குக் கொண்டு வராமற் போகாது. அப்போது ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் இங்கு எந்த அளவுக்குக் கலந்துவிட்டிருக்கிறதென்ற உண்மையும் அவருக்குப் புலப்படும். ஒரு இனம் இன்னொரு இனத்தோடு இரத்தக் கலப்புக் கொண்டு விட்டது என்று வைத்துக்கொண்டாலும், (அப்படி ஏற்படுவது தவறல்ல) அந்த இரு இனங்களும் மொழி, கலை, நாகரிகம், நடை, உடை, உணவு, ஆகிய எல்லாத் துறைகளிலும் ஒன்றுக்கொன்று தொடர்புகொள்ள முடியாத நிலையிலேயே இன்னும் இருந்து வருகின்றன என்ற உண்மையையும் அவர் நடத்த இருக்கும் கிராமவாழ்க்கை ஆராய்ச்சி கண்ணாடிபோல் எடுத்துக்காட்டும் என்றும் நம்புகிறோம்.

தோழர் லூயிடுமோண்ட் அவர்கள் ஓர் ஆராய்ச்சியாளர். மனித இன நூல் ஆராய்ச்சி நிபுணர். அப்படிப்பட்ட ஒருவரால், இங்குள்ள ஆரியர்களும் திராவிடர்களும் இரத்தக் கலப்பால் ஒன்றாய்விட்டனர் என்று

ஏழை—பணக்காரரின் வியாபாரம்!

"அரசு, அமைதியாக, நிரந்தரமானதாக நிலைபெற வேண்டுமானால், மிதமிஞ்சிய செல்வமும், மிதமிஞ்சிய ஏழ்மையும் இருத்தலாகாது. அதாவது பணக்காரனும் இருக்கக் கூடாது, ஏழையும் இருக்கக் கூடாது. ஏனெனில் இருவரும் பொதுமக்கள் நன்மைக்கு மாறுபட்டவர்கள். பணக்காரர்கள் கொடுங்கோலர்கள்; ஏழைகள் அந்தக் கொடுங்கோலர்களுக்கு நண்பர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டு வகையினர்க்கும் இடையில்தான், பொதுமக்கள் சுதந்திரம் ஏலம் போடப்படுகிறது. ஒரு சாரார், அதாவது பணக்காரர்கள் அதனை வாங்குகிறார்கள்; இன்னொரு சாரார் அதாவது ஏழைகள் அதனை விற்கிறார்கள்."

—ரூசோ.

கூறப்படும்போது, இவ்விரு இனங்களுக்குமிடையே எல்லாத்துறைகளிலும் பெருத்த வேறுபாடுகள் இருப்பதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை உணரமுடியாது என்று நாம் கருதவில்லை. பிரஞ்சு நாட்டுக்காரராகிய லூயிடுமோண்ட் தன்னை ஒரு பிரஞ்சுக்காரன் என்றே சொல்லிக்கொள்கிறார். கலை நாகரிகம் ஆகியவற்றில் தம்மையொத்த ஆங்கிலேயனையோ, ஜெர்மானியனையோ நம்மவன் என்று சொல்லிக்கொள்ளமாட்டார். காரணம், தன்னுடைய நாடு, தன்னுடைய இனம் என்ற உரிமையும்பற்றுதலும்அவருக்குஇருப்பதேயாகும். ஆனால்,இங்குள்ள ஆரியர்களுடையவும் திராவிடர்களுடையவும் நிலை அப்படியல்லவே! இவர்களுடைய மொழி, கலை, நாகரிகம் முதலான அனைத்துமே ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டனவாகும். இந்த உண்மையையும் தோழர் லூயிடுமோண்ட் தாம் செய்ய இருக்கும் ஆராய்ச்சியால் அறிந்துகொள்ளமுடியும் என்றுநம்புகிறோம். என்றாலும் அவருக்கு ஒரு யோசனைகூறவிரும்புகிறோம். அதாவது, அவர் தம்முடைய ஆராய்ச்சிக்காகத்தேர்ந்தெடுக்கும் கிராமத்தை, ஆரியர்களும் திராவிடர்களும் ஒருங்கு கலந்துவாழும் கிராமமாகப் பார்த்து, அங்கிருந்து தம்முடைய ஆராய்ச்சியை நடத்துவாரானால், அப்போது, அவருக்கு, ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் உள்ள வேற்றுமைகள் இன்னின்னவென்பதும், அவ்வேற்றுமைகள் எதனால்—எப்படி உண்டாயின என்பதும்தெரிந்துகொள்ளமுடியும்.

* * *

தோழர் லூயிடுமோண்ட் அவர்களைப் பேட்டிகண்ட "தினமணி" நிருபரின் செய்திகளை அந்தப் பத்திரிகை தலைப்புக்கொடுத்து வெளியிட்டிருக்கும்முறை அறிவுடையவர்களால் வெறுக்கக்கூடிய மாதிரியில் அமைந்திருக்கிறது. லூயிடுமோண்ட் பலமுக்கியமான உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். அவற்றிற்கெல்லாம் முக்யத்துவம் கொடுத்து நடுநிலை திறம்பாது உண்மையை வெளியிட அந்தப்பத்திரிகைக்கு மனம்வரவில்லை. மிகச்சாதாரணமான—முக்கியத்துவம் அற்ற ஒன்றைப் பிரமாதப்படுத்தித் தலைப்புக் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. லூயிடுமோண்ட்,

> "தமிழ்மொழி ஒன்றுதான் பூர்விகமொழி"

என்றும்,

> "திராவிடர் கலாச்சாரமே முதன்மை வாய்ந்தது"

என்றும்,

> "தமிழில் பிறமொழிச் சொற்களைச்சேர்ப்பது அவசியமில்லை"

என்றும்,

> "வால்மீக இராமாயணகாலத்து அகத்தியருக்கும் தமிழுக்கும் தொடர்பில்லை"

என்றும்,

> "இராமாயணம், ஆதம் ஈவ் கதைபோன்ற கற்பனைக்கதை"

என்றும் கூறியிருக்கிறார். இவற்றில் ஒன்றுக்குக்கூட முதன்மை கொடுத்து அச்செய்தியைப் பிரசுரிக்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகை நினைக்கவேயில்லை. இப்படிச் செய்யவேண்டுமென்றுகூட நாம் கூறவில்லை. பொதுவாக, லூயிடுமோண்ட் கூறிய கருத்துக்களைத் தொகுத்து,

> "ஆரியர் — திராவிடர் பற்றி லூயிடுமோண்ட் கருத்து அல்லது விளக்கம்"

என்று தலைப்புக்கொடுத்துவெளியிட்டிருக்கலாம். அங்ஙனமன்றி, ஆரியரும் திராவிடரும் இரத்தக்கலப்புக் கொண்டவர்களே என்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளியிட்டிருக்கும் முறை ஒன்றே போதுமே, ஆரியர் திராவிடர் என்ற வேற்றுமையை விளக்கி, இரு இனங்களுக்குமிடையே உள்ள பிணைக்க முடியாத பிளவை எடுத்துக்காட்ட! லூயிடுமோண்ட் போன்ற ஆராய்ச்சியாளர் இந்த உண்மையைக்கூட கண்டுகொள்ள மாட்டார்கள்என்ற கருத்தழிவு இங்குள்ள சிலருக்கு இருக்குமானால், அதற்கு நாம் என்ன செய்யமுடியும்!

நம்முடைய நாட்டில் நெடுங்காலமாகவே ஒருபழக்கம் இருந்து வருகிறது. அதாவது, நம்முடைய சொந்த விஷயங்களைக்கூட வெளியாரிடமிருந்து கேட்டுத்தெரிந்துகொள்வது என்பது. வெளியார் கூறினால்தான்,அதுஉண்மையென்றும், ஆதாரபூர்வமாக ஒப்புக்கொள்ளக்கூடியதென்றும் கருதும் பழக்கம் நம்மவர்களிடையே குடி கொண்டுவிட்டது. இது எவ்வளவு தவறென்பதை இவர்கள் உணர்வதேயில்லை. "நேற்று எங்கள் வீட்டில் என்ன சமைக்கப்பட்டது" என்று அடுத்த வீட்டுக்காரனை ஒருவன் கேட்டால், அதற்கவன், "கத்தரிக்காயாக இருக்கலாம் அல்லது புடலங்காயாகஇருக்கலாம்" என்று தன்வீட்டுச் சமையலை மனதில் வைத்துக்கொண்டு கூறுவது போல், வெளிநாட்டாரும் தங்களுடைய ஏகதேச அனுபவத்தையும் அறிவையும் வைத்துக்கொண்டு பதில் கூறிவிடுகின்றனர். அவற்றில் சில உண்மையாகவும் சில உண்மையற்றதாகவும் இருக்கும். இவ்விதம் அவர்கள் கூறுவதிலிருந்து, அவர்கள்வேண்டுமென்றே ஒன்றை உண்மையென்றும் இன்னொன்றைப் பொய் என்றும்கூறுவதாகப்பொருள் கொண்டுவிடக்கூடாது. அவர்களுக்கு அந்தப்பழக்கம் பெரும்பா

மதத்திற்கு மாறான செயல்!

சில ஆண்டுகளுக்கு முன்பு பூனா நகரசபைத் தலைவர் தெருக்கூட்டுகிற முறையில் ஒரு புதிய சீர்திருத்தம் கொண்டுவந்தாராம். அதாவது, தெருக்கூட்டுகிறவர்கள் குனிந்துகொண்டே கூட்டவேண்டியதான ஒரு குட்டையான விளக்குமாற்றால் கூட்டிக் கொண்டிருந்ததற்கு பதிலாக நின்றுகொண்டே கூட்டும்படியான மாதிரியில் நீளமான காம்புள்ள, ஒரு நெட்டை விளக்குமாற்றைக் கொடுத்து அதனால் கூட்டும்படி கூறினாராம். அத்தெருக்கூட்டிகள் அந்த நெட்டை விளக்குமாற்றை எடுத்துக் கொள்ளமாட்டோமென்று சொல்லிவிட்டார்களாம். அதற்கு அந்தச் சேர்மன் காரணங்கேட்டபோது, நெட்டை விளக்குமாற்றால் கூட்டும் வழக்கம் தங்களுக்குக் கிடையாதென்றும், இன்று புதிதாய் மாற்றமுடியாது என்றும் சொல்லியதோடு, கட்டாயப்படுத்தினால் அது தங்கள் மதத்திற்கு மாறான செயலாதலால், வேலையையாவது விட்டுவிடுவோமே யொழிய நெட்டை விளக்குமாற்றைத் தொடமாட்டோம் என்று சொல்லிவிட்டார்களாம்.

லும் கிடையாது. நம்மவரில் சிலரைப் போல், அவர்கள் தங்களை "எல்லாம் தெரிந்த மேதாவிகள்" என்று காட்டிக்கொள்வதும் இல்லை. இப்போது இங்கு வந்திருக்கும் தோழர் லூயி டுமோண்ட்கூடத் தாம் ஒருமனிதஇனநூல் ஆராய்ச்சியாளனேயன்றிச், சரித்திர ஆராய்ச்சி நிபுணரல்ல என்று உண்மையைக் கூறியிருக்கிறார். என்றபோதிலும் இங்குள்ளசில "மேதாவிகள்" அவரிடமிருந்து சரித்திர சம்பந்தமான உண்மைகளை அறிந்துகொள்ள அரும்பாடுபடுகின்றனர். சரித்திர ஆராய்ச்சியில் அனுபவம் இல்லாத தோழர் லூயி அவர்களிடம் மொகஞ்சதாரோ நாகரிகத்தைப்பற்றியும், திராவிட நாகரிகத்தைப்பற்றியும் கேள்விகள் கேட்டு, அவரை அவதிப்படுத்தியிருக்கிறார் "தினமணி" நிருபர்.

தம்முடைய நாட்டைப் பற்றிய உண்மைகளைத் தம்முடைய நாட்டிலுள்ள அறிவாளிகளிடமிருந்தே தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறை, எதையும் வெளியாரிடமிருந்து தெரிந்துகொள்வதுதான் சரி என்ற பழக்கத்தால் ஏற்பட்ட தவறென்றுவைத்துக்கொண்டாலும், ஒருவர், ஒருகுறிப்பிட்ட விஷயத்தைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று கூறிய பின்னரும், அதுபற்றி அவரை வற்புறுத்திக் கேட்பது போன்ற கெடுமதி வேறொன்றும் இல்லையென்றே கூறலாம்.

'தினமணி' நிருபர் திராவிட நாகரிகம் பற்றிக் கேட்ட கேள்விக்குத் தோழர் லூயிடுமோண்ட் கூறிய பதிலில் ஏகதேசம் உண்மையிருந்தாலும், அத்துறையில் அவர் சரியானபடி ஆராய்ச்சி செய்யாததால், அவருக்குத் தெரிந்தவரையில் உண்மையை மறைக்காமலே கூறியிருக்கிறார். ஆனால், திராவிட நாகரிகத்தைப் பற்றி நம் நாட்டு அறிஞர்களில் ஒருவரான தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள், தோழர் லூயிடுமோண்ட் திராவிட நாகரிகத்தைப்பற்றித் 'தினமணி' நிருபரிடம் கூறிய அதே நாளில், அதாவது 18—4—49-ல் திருச்சியில், எழுத்தாளர் கடமை என்ற தலைப்பில் பேசிய பொழுது,

"ஆரிய நாகரிகத்திற்கு முன் திராவிட நாகரிகம் இந்நாடு முழுதிலும் மட்டுமன்றி, மொசப்பட்டோமியா, ஈரான் போன்ற நாடுகள் வரை பரவியிருந்தது"

என்று கூறித், திராவிட நாகரிகத்தின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கியிருக்கிறார். இது, தோழர் லூயி அவர்கள் கூறிய 'தமிழர் நாகரிகம்' என்பதற்கு ஓர் மறுப்புப் போல் காணப்பட்டாலும், இருவர் கூறியதிலும் உண்மை இருக்கிறது. அதாவது, தோழர் டுமோண்ட் கூறியது, சரியான சரித்திர ஆராய்ச்சி செய்யாததால் ஏற்பட்ட சிக்கல் என்பதும், தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் கூறியது, சரித்திர ஆராய்ச்சியைச் சரியாகச் செய்துகூறிய தெளிவான விளக்கம் என்பதும் தெரியக் கிடக்கின்றன. எனவே, நம்முடைய விஷயங்களை, நம்மில் தெரிந்தவர்களிடம் கேட்டால் தான் உண்மையை முறையாகத் தெரிந்துகொள்ள முடியுமென்று கூறுகின்றோம்.

திராவிட நாகரிகமே மிகவும் பழைமையானது என்பதை மேலும் வலியுறுத்த விரும்பிய தோழர் சண்முகம் அவர்கள்,

"அரசியல் நிலை காரணமாகத் 'திராவிட' என்ற சொல் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம், அதற்காகப் பழைமையான வரலாற்றை அறியாமல் கண்ணை மூடிக்கொள்ள முடியாது"

என்று கூறித் திராவிட நாகரிகத்தின் தொன்மையையும் சிறப்பையும், அது குறித்து ஐயப்படுவோருக்கும், அருவருப்புக் கொள்வோருக்கும் தெளிவுண்டாகும் முறையில் விளக்கியிருக்கிறார். தோழர் சண்முகம் அவர்களின் இந்த ஆராய்ச்சி, 'தினமணி' நிருபர் போன்ற சந்தேகப் பேர்வழிகளுக்குத் தெளிவையும், தோழர் லூயிடுமோண்ட் போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கு விளக்கத்தையும் தருவதற்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

எடுத்துச் சொல்வோர் இல்லை.

"பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாலில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி, இன்னும் அதிகமாகவேகூட வருமான வரி கொடுக்கிறதாகவும் அடிக்கடி நினைவுபடுத்துகிறார்கள். ஆனால், ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்துவிட வேண்டியதாயிருப்பதுடன், தாங்கள் சுதந்திரமாக இருந்தால் எவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்குமோ அதனினும் இரண்டொரு மடங்கு நாள்தோறும் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கிறதே என்பதை எடுத்துச்சொல்வோர் யாருமில்லை."

— பர்னட்ஷா.

*

மறைவு.

காஞ்சிபுரம் தோழர் ம. த. சாமிநாதன் அவர்கள் சிறிது காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்திவிட்டார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். மறைந்த தோழர் சாமிநாதன் அவர்கள், பொது நலத் தொண்டில் பெரிதும் பங்குகொண்டவர். காஞ்சிபுரம் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருமுறை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நலம் பல புரிந்திருக்கிறார். விரோதிகளையும் நட்பினராக்கிக் கொள்ளும் ஒரு சிறந்த பண்பு இவரிடம் உண்டு. அனைவருக்கும் கட்டாயக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்பது இவருடைய கொள்கைகளில் ஒன்றாக இருந்தது.

மொழிப்பற்றும், இனப்பற்றும் பொதுநல மனப்பான்மையும் கொண்ட ஒரு பெரியாரைக் காஞ்சிபுரம் இழந்துவிட்டது.

இவருடைய பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆறுதல் மொழி உரித்தாகுக.

*

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram,

REGD M. 4642.

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 15—5—49 | இதழ் 46

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

நான் கண்ட அழகர்சாமி

தொடர்ச்சி—4

எஸ். வி. லிங்கம்

தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் ஆரம்பித்தது. முதலில் பெரியார் வேலை நிறுத்தம் கூடாதென்று கூறிவந்தார். அதன் வெற்றியில் அவருக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், பெரும்பான்மையான இளைஞர்கள் அதில் கலந்துகொண்டதால், பெரியாரும் கலந்துகொண்டார். ரயில்வே யூனியனிலுள்ள தலைவர்கள், வேலை நிறுத்தத்தைக் கவனிப்பதற்காகப் பல பகுதிகளில் நியமிக்கப்பட்டார்கள். அதைப் போலவே பொதுமக்களிடம் தொடர்புள்ளவர்களும் நியமிக்கப்பட்டார்கள். போத்தனூரிலிருந்து மங்களூர் வரையில் வேலை நிறுத்த மேற்பார்வையாளராக அழகர்சாமி வேலை செய்துவந்தார். வேலை நிறுத்தம் தொடங்கியதும், தொழிலாளர் தலைவருள் ஒருவரான மோ. சுவர்ணா என்பவரும், அழகர்சாமியும், இன்னும் இரண்டொரு வரும் ரயில்வேயில் வேலை செய்யும் காங்மன் (Gongmen)களைப் பற்றிக் கவனிக்கவும், அந்தத் தொகுதி லேபர் கமிட்டிகள் சரியாக வேலை செய்கின்றனவா என்பதைக் கவனிக்கவும், பணம் பட்டுவாடா செய்யவும் காரில் புறப்பட்டார்கள். திருச்சியிலிருந்து சென்னை போத்தனூர் முதலான இடங்களுக்குப் போய்ப் பார்த்தார்கள். இச்சுற்றுப்பிரயாணம் வேலை நிறுத்தத்திற்கு மிக முக்கியமானதாக இருந்தது.

போலீசார், இவர்களின் சுற்றுப் பிரயாணத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, ஆங்காங்குள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தந்தி கொடுத்திருந்தார்கள். இதைத் தெரிந்துகொண்ட அழகர்சாமியும், சுவர்ணாவும் தங்கள் சுற்றுப் பிரயாணத்தைப் போலீசார் கண்டுகொள்ள முடியாதபடி அமைத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு ஜில்லாவுக்குள் நுழையும்போதும், அந்த ஜில்லா எல்லையிலேயே மோட்டார்காரின் நம்பரை மாற்றிவிடுவார்கள். இவ்விதம் மூன்று நாட்களில் ஒன்பது ஜில்லாக்களுக்குப் போய் வேலை செய்தார்கள்.

இப்போது என்னவோ "அண்டர் கிரவுண்ட்", ஆகஸ்ட் 'புரட்சி' என்கிறார்களே! இருபது ஆண்டுகளுக்கு முன்னரே 'அண்டர் கிரவுண்ட்' வேலை பல, அவசியமான போதெல்லாம் மறைந்த அழகர்சாமி அவர்களால் செய்யப்பட்டன.

* * *

வேலை நிறுத்தகாலத்தில், போத்தனூர்த் தொழிலாளர்களை ரயில்வே யூனியன் கலைத்துவிட்டது. அதைத் தடுப்பதற்காக நாகைத் தோழர் ஆறுமுகம் அவர்களிடமிருந்து நோட்டு மூட்டை ஒன்றை வாங்கிக் கொண்டுபோய் அழகர்சாமியிடம் கொடுத்தேன். அது, அங்கிருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இரண்டுநாள் அரிசி வாங்குவதற்குக்கூடப் போதவில்லை. ஒரு வாரம் வரை தொழிலாளர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அன்று கோவையில் பெரிய அரிசி வியாபாரியாக இருந்தவர், தோழர் ஆர். கே. எஸ். அவர்களின் மைத்துனராவார். அழகர்சாமி அவரிடம் சென்று முதல் தடவையாக இருபது மூட்டை அரிசி வாங்கி வந்தார். காலஞ் சென்ற தோழர் அருணாசலம் அவர்கள் கோவையில் பெரிய பணக்காரராய் இருந்தபோது பொதுமக்களின் தொடர்புங்கொண்டவராக இருந்தார். தொழிலாளர்களுக்காக அரிசி வாங்கிய வகையில் அறுநூற்றெழுபது ரூபாய் பாக்கி இருந்தது. இத்தொகைக்கு அழகர்சாமியிடமிருந்து ஒரு பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டார்கள். பத்திரத்தில் அழகர்சாமி கையெழுத்

திட்ட மறுநாளே வேலை நிறுத்தம் நிறுத்தப்பட்டு விட்டது. அழகர்சாமி ஊருக்குப் போய்விட்டார். அழகர்சாமி எழுதிக்கொடுத்த பத்திரத்தைத் தோழர் அருணாசலம் அவர்கள் வாங்கிக்கொண்டு அறுநூற்றெழுபது ரூபாயையும் கொடுத்துவிட்டார். ஆனால், அருணாசலம் என்னைப் பார்க்கும்போதெல்லாம் அந்தப் பணத்தைக் கேட்பார். ரயில்வே யூனியன் ஆபீசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாக நான் பதில் சொல்வேன். இது நடந்து பல மாதங்களுக்குப் பின் நானும் அழகர்சாமியும் கோவையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்துக்குப் போயிருந்தோம். பணம் கேட்பார் என்று அச்சப்பட்டுக்கொண்டே தோழர் அருணாசலம் அவர்களை நாங்கள் பார்க்க விரும்பவில்லை. கூட்டம் முடிந்ததும், தோழர் அருணாசலம் அவர்கள் அங்குவந்து எங்களைத் தம்முடைய காரில் அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார். இரவு உணவுக்குப் பின்னர், தோழர் அருணாசலம் அவர்கள் அழகர்சாமியைப் பார்த்து, "கடன் கொடுக்க வேண்டுமென்பதற்காக நீ கோயமுத்தூருக்கு வராமல் இருக்கலாமா?" என்று கேட்டுவிட்டு, "நீ போன இரண்டு நாட்களில் அந்தக் கடனை நான் கொடுத்துவிட்டேன்" என்று கூறிச் சிரித்தார். அழகர்சாமியின் பேச்சில் காதல் கொண்ட யோக்கியமான பணக்காரர் மூன்று நான்கு பேரில் தோழர் அருணாசலமும் ஒருவர்.

* * *

பெரியார் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த சமயத்தில், சென்னையில் சுயமரியாதை மாநாடு ஒன்று நடந்தது. இந்த மாநாட்டைத் தோழர் குருசாமி முன்னின்று நடத்தினார். முதல் நாள் சுயமரியாதை மாநாடும், மறுநாள் பெண்கள் மாநாடும் நடைபெற்றன. பெண்கள் மாநாட்டுக்கு இந்திராணி அம்மாள் தலைமை வகித்தார்கள். அந்தச் சமயத்தில், கல்கத்தாவில், மாஜிஸ்ட்ரேட் ஒருவரை ஒரு கலாசாலை மாணவி சுட்டுவிட்டாள் என்ற செய்தி வந்தது. இச்சம்பவத்தைக் கண்டித்துப் பெண்கள் மாநாட்டில் ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்து இரண்டு பிரசங்கங்கள் நடந்து ஓட் எடுக்கப்போகும் சமயத்தில், தோழர் சிங்காரவேலர் அத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். தீர்மானத்தை ஆதரித்த அதே மாநாட்டினர் சிங்காரவேலரின் பிரசங்கத்தைக் கேட்டுப் பரவசமடைந்து கைதட்டித், தங்கள் தீர்மானத்தைக் கைவிடும் நிலைக்கு வந்துவிட்டார்கள். ஓட் எடுத்தால் நிச்சயம் மாநாட்டுத் தீர்மானம் தோற்றுவிடும். இப்படிப்பட்ட சங்கடமான நிலைமைகள் மாநாடுகளில் ஏற்படுவதுண்டு.

தோழர் அழகர்சாமி எழுந்து, "சிங்காரவேலர் சொன்னதை நான் அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், மாநாட்டைக் கூட்டிய நம் மீது சில பொறுப்புகள் இருக்கின்றன. தலைவர் ஊரில் இல்லாத காலத்தில் ஏதாவது பொறுப்பற்ற முறையில் நடப்பதை என்போன்றவர்கள் எதிர்க்காமல் இருக்க முடியாது" என்று மாநாட்டுத் தலைவரிடம் கூறிவிட்டுச், சிங்காரவேலரின் பிரசங்கத்தை எதிர்த்துப் பேச எழுந்தார். அழகர்சாமி இறக்கும் சமயத்தில் அவருடைய முகத்தை எவ்வளவு பரிதாபத்துடன் பார்த்தேனோ, அவ்வளவு பரிதாபத்துடன் பார்த்தேன். "பயப்படாதே லிங்கம்!" என்று கூறுவதுபோல் என்னைப் பார்த்து சைகை காட்டிவிட்டுப் பேசத் தொடங்கினார். தனது சொற்பொழிவை எதிர்த்துப் பேசப் போகும் இளந்தலைவரின் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி இருந்தார் சிங்காரவேலர்.

"இது பெண்கள் மாநாடு. இம்மாநாட்டில் பெண்ணல்லாத சிங்காரவேலர் பேசியது எப்படித் தவறோ, அதைவிட நான் பேசுவது பெரிய தவறு. 'தினம் தெருவில், காரில் அகப்பட்டு மடியும் தவளைகள் போல், பீச் ரோட்டில் மாலை நேரத்தில் பல செம்படவக் குழந்தைகள், உல்லாசச் சவாரி செய்யும் கார்களில் அகப்பட்டு மடிவதைக் கேட்பாரில்லை—வங்காளத்தில் ஒரு பெண் ஒரு உயர்தர அதிகாரியைச் சுட்டதைக் கண்டிக்கக் கிளம்பிவிட்டீர்களே! உங்களுக்கு வெட்கமில்லையா?' என்று தலைவர் சிங்காரவேலர் கேட்கிறார், என்று இப்படியே தோழர் சிங்காரவேலரை ஆதரித்தும் எதிர்த்தும் பேசித் தோழர் சிங்காரவேலரின் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடாதென்று பேசி முடித்தார். மாநாட்டினர் கொண்டுவந்த தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அன்றிரவு சிங்காரவேலர் வீட்டுக்குச் சென்று சமாதானம் கூறினோம். சிங்காரவேலர் அழகர்சாமியைப் பார்த்து, "நீ பேசிய கருத்து முரண்பாடானது. சொன்ன உதாரணங்கள் தப்பு. எனது பேச்சை எதிர்த்து இதுவரை எவருமே பேசியதில்லை. நீ பேசியது எனக்குப் பிடிக்கவில்லை என்ற போதிலும், தலைவர் இல்லாத காலத்தில், கட்சிப் பொறுப்பை எண்ணி, எனது கருத்தை முழுதும் கண்டிக்காமலும், உனது எண்ணத்தை நிறைவேற்றும் முறையிலும் நீ கையாண்ட முறைகளைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கூறினார். இம்மாநாட்டுக்குப் பின்னர்தான், சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியும் அதன் கொள்கைகளைப் பற்றியும் சிங்காரவேலர் "குடிஅரசு" பத்திரிகையில் எழுதத் தொடங்கினார்.

* * *

காலஞ்சென்ற பனகால் அரசரிடம் தோழர் அழகர்சாமி அடிக்கடி பேசுவதுண்டு. தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் கலந்து பேசுவார். அக்காலக் காங்கிரஸ் நிகழ்ச்சிகளைச் சுயமரியாதைக் கண்களோடு அழகர்சாமி பனகாலரசரிடம் பேசுவார். பனகால் மகிழ்வார். அக்காலத்தில் பனகால் அரசரோடு சமத்துவமாக உட்கார்ந்து பேசுபவர் பெரியார் ஒருவர்தான். அடுத்தபடியாக அழகர்சாமிதான் அவ்விதம் பேசுபவர். இது அக்காலத்து ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். காரணம்: அழகர்சாமி ஒரு சாதாரண ஆள்—பணம், பதவி, படாடோபம் எதுவும் அவரிடம் இல்லாமல் இருக்கும்போதே, அவர் பனகாலிடம் சரிசமமாக உட்கார்ந்து பேசுகிறாரே என்பதுதான். இடிந்து போனதாக இருந்த ஜஸ்டிஸ் காரியாலயத்தின் மாடிமீது பனகால் இருக்கிறார் என்று தெரிந்தால், அவரைப் பார்க்கப் போகிறவர்கள்

(அடுத்த பக்கம் பார்க்க)

★ அச்சியற்றுதல் ★

மக்களின் சிந்தனைக் களத்திலிருந்து பிறந்து உருவான கண்டுபிடிப்புகள் எண்ணற்றன; வியப்புணர்ச்சியினாலும், அறியும் அவாவுணர்ச்சியினாலும் உந்தப்பட்ட மனிதன், ஆராய்ந்தறிந்த ஆராய்ச்சி முடிவுகளும் எண்ணற்றன; இவையெல்லாவற்றையும் மொத்தமான அளவில் கணித்துப் பார்க்கும்போது, மனித சமுதாயத்திற்கு மிக்க பயனுள்ளதாகவும், நிரம்ப மகிழ்ச்சியைத் தருவதாகவும், திருப்தியை அளிக்கக்கூடியதாகவும் விளங்கும் கண்டுபிடிப்பு அச்சியற்றுதலாகும். அச்சியற்றுங்கலையின் தோற்றமும், அது வளர்ந்து வந்துள்ள மாதிரியும் மிக்க வியப்பைத் தருவனவாக அமைந்திருக்கின்றன.

நாகரிகம் என்பது, மனித சமுதாயத்தின் உணரும்ஆற்றல் பெருகுவதிலும், அறிவு பரவுவதிலுந்தான் கட்டப்பட்டு வளர்ந்து வருகிறது. உலகில் வாழ்வதற்கான வகையில், மனித சமுதாயம் இன்று கொண்டிருக்கும் முறைகளும், திட்டங்களும், வாழ்ந்து மறைந்துபோன விஞ்ஞானிகளும், தத்துவாசிரியர்களும், பேராசிரியர்களும், புலவர்களும் அவ்வக் காலங்களில், ஏட்டிலோ அல்லது வேறு எந்தச் சாதனத்திலோ தம் எண்ணங்களையும், கருத்துக்களையும் பதியவைத்து வந்ததனால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

எண்ணத்தையும், கருத்தையும் பதிய வைத்துக்கொள்ளும் முறை அடியோடு அற்றுப்போய் விடுகிறது என்று வைத்துக்கொண்டால், மனித சமுதாயத்தின் கட்டுக்கோப்புச் சிதறிப் போகும்; வாழ்வு பயனற்றதாகிவிடும்; பின் இருண்ட சூழ்நிலை ஏற்படும். வாழ்ந்து மறைந்து போனவர்கள் வருங்காலத்தவர்க்கென்று, பதியவைத்துவிட்டுப் போன காரணத்தால்தான், குழந்தைகளின் கையிலே பலகை வண்ணப் பதுமைகளும் — பலகைகளும் தவழுகின்றன; பள்ளி மாணவர்கள் பாடப் புத்தகங்களையும் படப்புத்தகங்களையும் ஏந்திச் செல்கின்றனர்; தொழிற்பயிற்சி பெறுவோர் ஆயுதங்களைக் கொள்கின்றனர்; வழிப்போக்கன், வாணிகம் புரிவோன், கவின் கலைஞன், வேலை செய்வோன், அடக்கி ஆள்பவன் ஆகியோர் தத்தம் வழிகளை வகுத்துக் கொள்கின்றனர்.

"அவசியம், கண்டுபிடிப்பிற்கு முதற் காரணமாகும்" என்று கூறுவர். ஒவ்வொன்றும் எப்படி வேலைசெய்கிறது? அதனால் ஏற்படும் பயன் என்ன? என்ற கேள்விகள் திரும்பத்திரும்பக் கேட்கப்பட்டு வருகின்றன. அதன் விடையாகப்பல கண்டுபிடிப்புகள் பிறந்தவண்ணமிருக்கின்றன.

மனிதன், ஆதிகாலத்தில், தான் கொண்ட எண்ணத்தையும் கருத்தையும் வாயினால் உணர்த்தி வந்தான். தான் இல்லாதபோது மற்றவர்கள் தன்னுடைய கருத்தை அறிந்து கொள்ளவேண்டி, ஜாடைமாடைகளால், பொருள்களைக் கொண்டு உணர்த்தி வந்தான். பிறகு சித்திரம் போட்டுக் காட்டினான். நாளடைவில், எழுத்துமூலம் உணர்த்த ஆரம்பித்தான். அந்த எழுத்துக்களைக் கல்லிலும், பலகைகளிலும், காய்ந்த இலைகளிலும் பதியவைத்துக் காட்டினான். அந்த எழுத்துக்கள் ஒரே பதிப்பாக ஒரே இடத்திலில்லாமல், பல பதிப்புகளாகப் பலரிடமும் பரவிநிற்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஒவ்வொரு எழுத்தையும் மரக்கட்டையில் செதுக்கி அவற்றை மையில் தோய்த்தெடுத்துத், தனித்தனியாக, வேறோர் பரப்பில், மையழுந்தும்படி பதியவைத்தான்.

மக்கள், நாளடைவில், மரப்பலகையில், கூர்மையான ஆணிகொண்டு, எழுத்துக்களையும், படங்களையும் தோண்டி, மெழுகு அல்லது களிமண் ஏதாவதொன்றைச் செதுக்கப்பட்ட பரப்பின்மீது தடவி, அதைப் பாளமாக எடுத்து, மைதோய்த்துக் காகிதத்தில் அழுத்திவந்தனர்.

சீனாவில், ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன்பே, மரப்பலகையில் எழுத்துக்களையும், படங்களையும் மாறுபடச்செதுக்கி, அதன்மீது பலநிற மைகளைத்தடவி, அதன்மீது காகிதத்தைவைத்துக் கையினால் அழுந்தத் தடவி, அச்சுப் பதியப் பெற்ற காகிதத்தைப்பெற்று வந்தனர். இந்த முறையினால், பல அச்சுப் பிரதிகளையும் அந்நாட்டு மக்க

(அடுத்த பக்கத்தில்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

படிக்கட்டில் சத்தம் உண்டாகாதபடி மெதுவாக நடந்து போவார்கள். இதனால், கட்சியில் ஒரு பயங்கரமான தலைவர் இருந்தாரா என்று எண்ணிவிடாதீர்கள். அவ்வளவு மதிப்புக்குரிய தலைவர் இருந்தார் என்று பொருள். அப்படிப்பட்ட ஒரு சிறந்த தலைவரைப் பின்பற்றி அவருடைய திறமையால் பல நல்ல காரியங்களைச் சாதித்துவிடலாம் என்றுஎண்ணியவர்கள் இன்றுபோல் அன்று அதிகமாக இல்லை யென்பதையே இத்தகைய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுவனவாகும்.

* * *

1927-ம் ஆண்டில் திருச்சி "சிவாஜி" காரியாலயத்தில், மாகாண சுயமரியாதை மாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார். ஒருநாள் மாலை வரவேற்புக் கழகக் கூட்டம் நடந்தது. அப்பொழுதுதான் நமது அரும் பெரும் தலைவர் பனகாலரசர் இறந்த செய்தி கிடைத்தது. மாநாட்டுக் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு அழகர்சாமி சென்னைக்குப் புறப்பட்டுவிட்டார். (தொடரும்)

முன்பக்கத் தொடர்ச்சி

ளால் பெறமுடிந்தது. காகிதம் செய்யும் முறையும், அச்சியற்றும் முறையும் சீனாவில்தான் முதல் முதல் ஏற்பட்டன.

காகிதம் செய்யும் முறை, போர், அழிவு, போக்குவரத்துத்தடை ஆகிய பல்வேறு காரணங்களால் உலகத்தவர்க்குத் தெரியாமல் மறக்கடிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான், காகிதம் செய்யும் முறை, ஐரோப்பாவில் முதல்முதலாகப் புதிப்பிக்கப்பட்டது. கி. பி. பதினைன்காம் நூற்றாண்டு தன்னுடைய முடிவை எட்டிப் பார்க்கும்போது, 'ஒரு மனிதன் ஒரு ஆண்டில் எழுதித் தள்ளக்கூடிய பக்கங்களை, ஒரேநாளில் அச்சியற்றுதலால் அடைந்துவிட முடியும், என்ற அதிசயத்தைப் பின்னால் கண்டுபிடித்த 'அந்த ஒருவன்' ஐரோப்பாவில் தோன்றினான். யார் 'அந்த ஒருவன்?' அவன் தான் கட்டன்பர்க் (Gutenberg) என்ற, ஜெர்மனியில் பிறந்த சாதாரண தொழிலாளி. அவன்தான் இற்றைக் காலத்தில் வளர்ந்து நிற்கும் அச்சுப் பொறிக்குத் தந்தையென்று அழைக்கப்படத் தக்கவன். அப்படித்தான் அகில உலகமும் அவனை அழைக்கிறது.

எழுத்துக்கள் மாத்துண்டுகளில் தனித்தனியாகப் பொறித்தெடுக்கப்பட்டு, அச்சியற்றும்போது, அவைகளைக் கொண்டு தனித்தனியாகப் பலதடவை காகிதத்தில் பதியவைக்க வேண்டியிருக்கும் முறையைக் கட்டன்பர்க் கூர்ந்து கவனித்தான். அதாவது 'க' என்ற எழுத்தை எடுத்துக்கொண்டால், அவ்வெழுத்தை ஒரு சிறிய மரத்துண்டில் செதுக்கிவைத்துக்கொண்டு, ஒரு சொற்றொடரில் எங்கெங்கு 'க' என்ற எழுத்து வருகின்றதோ, அங்கெல்லாம், அந்த 'க' என்ற ஒரே அச்செழுத்தைக் கொண்டு பதியவைக்கவேண்டிருந்தது என்பதாகும். ஒரு அச்செழுத்தை வைத்துக்கொண்டு, அந்த ஒன்றைக்கொண்டே பல தடவைகள் பதியவைப்பதைவிட, ஒரே மாதிரியான பல அச்செழுத்துக்களை வைத்துக்கொண்டு, ஏன் ஒரேதடவையாக எல்லாவற்றையும் சேர்த்துப்பதிய வைக்கக்கூடாது என்று எண்ணினான் கட்டன்பர்க். அவன் உலோகத்தொழிலிலும் ஓரளவுக்குப் பயிற்சி பெற்றிருந்தபடியால், ஒரே எழுத்தைப் பத்து, நூறு, ஆயிரம், அச்செழுத்துக்களாக ஈயத்தை உருக்கி வார்த்தெடுத்துக் கொள்ளலாமே என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. அப்படி வார்த்தெடுக்கப்பட்ட எழுத்துக்களை, விரும்புவதுபோல், ஒன்றுசேர்த்துக் கோர்வைப்பட அடுக்கிவைத்து, அதன்மேல் மைதடவி, காகிதத்தை வைத்து அழுத்திஎடுப்பதன்மூலம், அச்சிட்ட பிரதிகளைப் பெறமுடியும் என்று எண்ணி, முயன்று முடிவில் அவன் வெற்றியும் பெற்றான்.

எளிதில் உருகும் உலோகத்தைக் கொண்டு, அச்செழுத்துக்களை உருவாக்கும், அதாவது அச்சுவார்க்கும் பொறியை கி. பி. 1425-ம் ஆண்டு வாக்கில் கண்டுபிடித்தான்.

பார்த்தெழுதுவோராலும், மரப்பலகையிலும், மாத் துண்டுகளிலும் செதுக்குவோராலும் உற்பத்திசெய்யப்பட்ட ஒரு சில பக்கங்களை, ஆயிரக்கணக்கான பிரதிகளாக ஆக்கித்தந்தது கட்டன்பர்க் கண்டுபிடித்த அச்சியற்றும் முறை.

அச்சு வார்க்கும் பொறி இப்பொழுது எவ்வளவோ உயர்ந்த நிலைக்கு வளர்ந்துவிட்டபோதிலும், அதன் அடிப்படைஅமைப்பு, இன்றைக்கும், கட்டன்பர்க் கண்டுபிடித்த அடிப்படையையே கொண்டதாகும். இற்றைக்காலத்திலும், அச்சுக்களைக் கோர்க்கும் அடிப்படையும், கட்டன்பர்க் கண்டுபிடித்த அமைப்பின் அடிப்படையையேதான் ஒத்திருக்கிறது.

கிழிந்த துணிகளிலிருந்து காகிதம் செய்யும் முறையை ரைன் நதிப்பள்ளத்தாக்கிலுள்ளவர்கள் கண்டுபிடித்து, அதன்மூலம் காகிதங்களை அந்தக்காலத்தில் உற்பத்தியாக்கி வந்தார்கள். அங்கு உற்பத்தியாக்கப்பட்ட காகிதங்கள், கட்டன்பர்க் அச்சுப்பொறி கண்டுபிடித்ததற்குப் பிறகு பெரிதும் பயன்பட்டன. கட்டன்பர்க்கின் கண்டுபிடிப்புக்கு முன்னால், மரக்கட்டைகளில் பூவேலைப்பாடுகளைச் செதுக்கி, அவற்றில் மைதடவி, அவற்றின்மூலம் துணிகளில் பூவேலைப்பாடுகள் விழும்படி செய்து வந்தனர்.

அச்செழுத்துக்களைக் கோர்த்தானபிறகு, சொற்கள், வரிகள், ஒதுக்கிடங்கள் இவற்றிற்கிடையே, எழுத்துருவற்ற உலோகத் துண்டுகளைப் போட்டு அடைத்து, பக்கத்தை உருவாக்கினர். அதை ஒரு மரத்தட்டில் அப்படியே அடக்கிவைத்து, பிறகு அச்சழுத்தும் பொறியில் ஏற்றினர். பொறியின் மேல்பாகத்தில், கவிழ்ந்த கிண்ணம் வடிவில் அமைந்த மொத்தையான இரும்பு, அடுக்கப்பட்ட அச்செழுத்துக்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு நேராகமேலே, மரையொன்றோடுபொருத்தப்பட்டு, மேலே தூக்கவும், கீழே இறக்கவுமான நிலைமையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த மொத்தையான இரும்பு செம்மறியாட்டுத் தோலால் போர்த்தப்பட்டிருந்தது. எழுத்துக்களின்மீது மையைத் தடவி, அதன்மேல் காகிதத்தை வைத்தனர். மேலேயுள்ள மரையை, மொத்தை இரும்பு கீழே இறங்கி காகிதத்தோடு சேர்ந்து நின்று அச்சுக்களை அழுத்தும்படி முறுக்கினர். பிறகு மொத்தை இரும்பை, மேலே தூக்கிவிட்டு, அச்செழுத்துக்கள் பதிந்த காகிதத்தை வெளியே எடுத்துக்கொண்டனர். இம்மாதிரியான முறையில், தேவையான பிரதிகளைப் பெற்றுவந்தனர். இதுதான், அச்சுப்பொறியில் அச்சடித்தலின் ஆரம்பமாகும்.

இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் (William Caxton) என்பவர் 1474-ம் ஆண்டு முதல் அச்சுப்பொறியை நிறுவனம் செய்து, ஆங்கில மொழியில் முதல் நூலை அச்சடித்தார். அதற்குப் பிறகு நாடுகள்தோறும் அச்சுப்பொறிகள் பரவ ஆரம்பித்தன. எண்ணத்திலும், ஏட்டிலும், கல்வெட்டுக்களிலும் உள்ள கருத்துக்களெல்லாம் நூல் வடிவமாக வெளிவந்து மலைபோல் குவியத் தொடங்கின.

1435-ம் ஆண்டில் சாதாரண அளவில்தோன்றிய அச்சுப்பொறி இன்று மணி ஒன்றுக்கு 20000 பிரதிகளை அச்சடித்து வெளியே தள்ளுகிறது. அச்சடித்துத்தள்ளும் ஆற்றலும் ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே வருகிறது.

நூல்களை அச்சியற்றும் பழக்கம் ஏற்பட்டபிறகுதான், அறிவு எங்கும் எளிதில்பரவ வசதி ஏற்பட்டது

10 JUN 1949
MADRAS

கல்வியறிவு நாடுதோறும்பெருகிற்று. உலகம் முற்போக்கில் மிகவிரைவாக உருண்டோடுகிறது. இவ்வளவுக்கும் காரணம் ஆரம்ப காலத்தில் அச்செழுத்துக்கள் உருவாக்கியவர்களும், அச்சுப்பொறிகள் உண்டாக்கியவர்களுமேயாவார்கள்.

சாதாரணமான ஒரு கட்டன்பர்க் கண்டுபிடித்த கண்டுப்பிடிப்பால் இன்று உலகமே அறிவொளி பெற்றுத்திகழ்கின்றது. கண்டு பிடித்தவனின் பெயரை அறியாமலும், அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இல்லாமலுமே எண்ணற்றவர்கள் அவன் கண்டுப்பிடிப்பின் பலனை நுகர்ந்து வருகிறார்கள்.

அவன் செய்த நன்மையில் ஆயிரத்தில்—பதினாயிரத்தில் ஒருபங்கு நன்மையையாவது, கடவுளின் அருளோ, — வரப்பிரசாதமோ — அவதாரமோ — இந்த வாக்கே — இந்த நாட்டில் புரிந்திருக்குமா? அல்லது ஆண்டவனின் அருளைப்பெற்றதாகக் கூறும் அடியார்களால் தான் உண்டாகியிருக்குமா? உலக முன்னேற்றத்திற்கு வித்திடுவோர் மதவாதிகள் அல்ல, விஞ்ஞானிகளேயாவர்!

அதற்கான ஓர் எடுத்துக்காட்டுதான் கட்டன்பார்க்கின் கண்டுபிடிப்பு!

பெண்ணினம் பேசுகிறது!

16-ம் பக்கத் தொடர்ச்சி

லைக்கார ஆட்சியைத்தான் விரும்புகிறான்" என்று பாராளும் மன்றத்திலேயே பேசினர். அந்தப் பேச்சை மதித்தோமா? மதிப்பரா, நாட்டுவிடுதலையில் நாட்டம் கொண்டவர்கள்!

இன்று, வெள்ளைக்காரனின் வாதத்தை வைதீகப் போக்கினர், கூறுகின்றனர், பெண்களே இத்தகு சீர்திருத்தங்களை விரும்பவில்லை என்று—எப்படி இந்த வாதத்தை மதிக்க முடியும்? சனாதனச் சர்ச்சில்களின் பேச்சை, எப்படி மதிக்க முடியும்? ஏன் மதிக்கவேண்டும்!

ஆனால் அவர்கள், சும்மா இருக்கின்றனரா! — இருப்பரா! கிடைக்கிற சந்தர்ப்பத்தை எல்லாம், தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளத் துடிக்கின்றனர்.

சனாதனச்சர்ச்சில்களின் போக்கையும் பேச்சையும், அறிவின் விளைவு என்று சிலராவது கருதும்படியான முறையிலே, பனை ஓலைக்குப் பதில் காகிதத்தை உபயோகிக்கும் பழைமை பரப்பி 'இந்து' எழுதுகிறது.

அவசரம் கூடாதாம்! பெண்களின் விடுதலை என்ற ஆர்வத்தினால், புதிய புதிய சட்டங்களை இயற்றுவது அவ்வளவு நல்லதல்லவாம்! சமுகத்தின்கட்டுக்கோப்புக்குலைந்துவிடுமாம்! சனாதனக் கோட்பாடு சாமான்யமல்லவாம்!!

இவ்விதமெல்லாம் 'இந்து' எழுதுகிறது.

பெண்களின் துயரைத் துடைக்க எடுக்கப்படும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடவும், முறித்திடவும் மும்முரமாக வேலை செய்கிறது முப்புரி முரசு!

இந்தச் சனாதனச் சதியில், சாதுவும், சமரசநோக்கமுடையவருமான, பாபு ராஜேந்திர பிரசாதும் வீழநேரிட்டதைக் காண மிக மிக வருந்துகிறோம்.

விவாக விடுதலை உரிமை தந்துவிட்டால், குடும்பம் என்ற கட்டுப்பாடே இருக்காதாம்! விபரீதமான விளைவுகள் ஏற்படுமாம்! என்ன விபரீதமோ நாமறியோம். மனைவியைச் சூதாட்டத்திலே பந்தயப் பொருளாக வைத்து ஆடியவர்களும், கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டவர்களும், தொழுநோய் பிடித்திருந்த நிலையிலே, தூக்கிக்கொண்டு போ கூத்தி வீட்டுக்கு என்று கூறியவர்களும், 'இந்து' புகழ்ந்து பேசும், குடும்பக்கட்டுப்பாடு-பழைய தர்மம்-புராதன சமுதாய அமைப்பு-எனும் பூணாரம் பூண்டிருந்த புண்ய புருஷர்கள்தான்!!

எதை எதையோ கூறி, பாபுவின் மனதிலே, குழப்பத்தை மூட்டி விட்டனர்—அவர், சென்னையிலே பேசுகையில், பெண்களின் விடுதலைச்சாசனம் எனத்தகும் சட்டத்தை இப்போது நிறைவேற்றக்கூடாது—ஒத்திப்போடவேண்டும், என்று பேசிவிட்டார். போனதம், இந்தப் பழையபசலிகளுக்கு! பாபுராஜேந்திர பிரசாத் கூடக் கூறிவிட்டார், அவர் அறிவுரையைக் கேண்மினோ! என்று சிந்து பாடுகின்றன.

பாபுராஜேந்திர பிரசாத தமது பேச்சிலே, பெண்களே இந்தச் சீர்திருத்தத்தை விரும்பவில்லை, என்று கூறினாராம்—கூறினாலென்ன!— —அவர் கூறியது போலவே, பெண்ணினம் விரும்பவில்லை என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம், அதனால் தான் என்ன! அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாக இருக்கிறதா, பெண்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த உதவுகிறதா என்று கவனித்து, ஆமெனில், அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது தானே அறிவுடைமை.

நீக்ரோக்களுக்கு விடுதலை தேடித்தர ஆபிரகாம்லிங்கன் பாடுபட்டபோது, அதே நீக்ரோக்கள் எதிர்த்தனர்! இந்தவேதனைதரும் விசித்திரத்துக்காக வேண்டி லிங்கன், தமது முயற்சியை விட்டுவிட்டாரா! இங்கும், சில பெண்கள் இருக்கலாம், விடுதலை வேட்கையற்று — அவர்களின் அறிவை அந்த அளவுக்கு ஆணுலகம் குருடாக்கி வைத்திருக்கிறது. அதனால், அவர்களை, அவதி நிரம்பிய வாழ்க்கையிலே வதைய விடவேண்டியதுதானா?

பாபுராஜேந்திபிரசாதைக் கொண்டு பழமையைப் பேசவைத்து விட்டோம், என்று பூரிப்படையும், பழையபசலிகளுக்கு, நாட்டின் உண்மை உள்ளத்தைக் காட்டும் பெரும்பொறுப்பு, இளைஞர்களுக்கு— —குறிப்பாகக் காங்கிரசிலே உள்ள இளைஞர்களுக்கு இருக்கிறது. காங்கிரசிலே, மதிப்பும்செல்வாக்கும் உள்ள இடத்தை வகிக்கும் பாபுவின், இந்தக் கருத்தைக் கருவியாகக்கொண்டு 'சிலகாலமாவது குளிர் காயலாம்' என்று வைதீகப் போக்கினர், எண்ணுகின்றனர்— அவர்களுடைய சூது தெரிந்து, இப்போதே, நாடு, தெளிவாகவும் திட்டமாகவும் தெரிவித்துவிடவேண்டும், பெண்களின் விடுதலையைப் பழைமைப் பித்தர்கள் தடுத்திடவிடமாட்டோம் என்று! ஏழை அழுதகண்ணீர் மட்டுமல்ல, ஏந்திழையார் சிந்திடும் கண்ணீரும், நமது சமுதாயத்தை நாசமாக்கும் நச்சு நீராக மாறும்!

மதக் கல்வியும் மாணவர்களும்

★ ★ ★

மதம் பற்றிய செய்திகளில், ஐயங்கள் ஏற்பட்டு, அவைகளை ஆராய்ந்து தெரிந்துகொள்ள அவாவுறும் குழந்தைகளின் விருப்பமானது, அடக்கப்பட்டுப், தடுக்கப்பட்டும், அடியோடு ஒழிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. குழந்தைகள் யாவருமே, பெரும்பாலும், கண்மூடித்தனமாகவும், முன்பின் சிந்தனையில்லாமலும், பல செயல்களையும் செய்வதற்குப் பழக்கப்படுத்தப் பட்டிருக்கின்றனர். மதத் தொடர்புள்ள செய்கைகளின் உண்மையான கருத்துக்களை, அக்குழந்தைகளுக்கு விளங்கவைப்பதே கிடையாது. அநேகமாகப் பயிற்றுவிப்பவர்களுக்கும் அவைகள் பற்றி எதுந் தெரியாது.

எடுத்துக்காட்டாக, பிரார்த்தனைகள் என்பவைகளை எடுத்துக்கொண்டால், இந்தப் பிரார்த்தனைகளும், ஜபங்களும் தங்களுடைய தாய்மொழியிலிருந்த போதிலுங்கூட, இந்தியாவிலும் சரி, அல்லது உலகில் வேறெந்தப் பகுதியிலுஞ் சரி, இவைகள் பெரும்பாலும் தாய்மொழிகளிலில்லை. அவைகளின் வாசகப்போக்கு — அதாவது நடைப்போக்குகள், எளிதில் அறிந்துகொள்ள முடியாத விதத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை மனப்பாடம்செய்து சொல்லும்படியாக நாம் குழந்தைகளுக்குக் கட்டளையிட்டால, அவ்விபரீதச் சொற்களின் பொருளை அறிந்துகொள்ள முடியாத குழந்தைகள் யாவரும், தங்கள் மனப்போக்கின்படி, தங்களுக்குத் தோன்றிய ஏதாவது ஒரு பொருளை அவைகளுக்கு ஏற்படுத்தி வைத்துக்கொண்டோ, அல்லது பொருளில் கவலையில்லாமலோதான் அவைகளை மனப்பாடஞ் செய்தபடியே ஒப்பிக்கிறார்கள். இதனால் குழந்தைகளின் மனதில் எதிர்பார்த்திருந்ததற்கு நேர் மாறுபாடான மனப்பான்மை உண்டாவதைத்தான் காணலாம்.

மதத்தினால்தான் மக்களின் உள்ளம் தூய்மை பெறும் என்பதாக, எவ்வளவுதான் விரித்து, விரித்து, அழகாகச் சொல்லப்பட்ட போதிலுங்கூட, மதமானதுபொதுவாகவே, போதுமான அறிவும், உணர்வும் இல்லாமல், ஆண்களையும், பெண்களையும்கண்மூடித்தனமாகஅவரவர்களுடைய சமுகப் பழக்க வழக்கங்களுக்கும், ஆச்சாரங்களுக்கும் அடிமையாகி நடந்து தீரவேண்டியதான ஒரு நெருக்கடியான நிலைமையைஉண்டாக்கியே தீருகின்றது. ஆகையினால் மதக்கட்டளைப்படி, ஒரு குழந்தை நடக்கவேண்டும் என்று கருதி, அதற்கு மதக்கற்பனைகளைக் கற்பித்தோமானால், அது இம்மாதிரியான குருட்டுப்பழக்க வழக்கங்களும்,மூடநம்பிக்கையான ஆசாரங்களுக்கும் கட்டுப்பட்டுத்தான் தீரும். இதன் பயனாக, அக்குழந்தை தனது பிற்காலவாழ்வில் எது முக்கியம்? எது முதன்மையானது? எச்சமயங்களில் எது கூடாது? என்பதைக்கூடஅறிய முடியாமல் போய்விடுகிறது. மேலும் மற்றுஞ்சில பொழுதில்தங்களுடைய மதக்கட்டுப்பாட்டின்படி அவர்கள் நடந்துகொள்ள ஆரம்பிக்கும்போது அச்செய்கையானது மற்றவர்களுக்கு எந்தவிதமான கெடுதியைவிளைவித்த போதிலும்கூட, அது இவர்கள் மனதுக்கு நன்மையாகவே காணப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் மாலை நேரங்களில் நடைபெறக்கூடிய ஒருசாப்பாட்டு விருந்துக்கோ அல்லது சிற்றுண்டிக்கோ, ஒருவன் சடங்குகளைவிட்டு வந்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வெட்கப்படுவான்.

அதுபோலவே, இந்நாட்டில் கிராமங்களில் வாழும் ஓர் இந்துவானவன் தன்னுடைய தகப்பனர் இறந்துவிட்டால், தன்னுடையமீசையை உடனே சிரைத்துவிட வேண்டுமென்றும், அப்படிச் சிரைக்காவிட்டால் அது, ஒருபெரிய பாவமெனவுங் கருதப்பட்டு வந்தது; இன்றுங்கருதப்பட்டு வருகிறது ஓரளவுக்கு. ஆனால் ஒரு மகன் தன்னுடைய தந்தையுடன் நாள்தோறும் சண்டைகளும், சச்சரவுகளும் செய்துகொண்டும், அவருக்கு வேண்டியவசதி செய்யாமலும், தகப்பனருடைய வாழ்நாள் முழுவதும், அவர் எப்பொழும் துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும்படியாகச் செய்துவந்தவனாகவும் இருந்தபோதிலுங்கூட, அக்கொடுமைகளெல்லாம் அவ்வளவாகப் பொருட்படுத்தப்படுவதில்லை; ஆனல் தகப்பன் இறந்தவுடன் மகன் தன் மீசையைச் சிரைக்காதிருந்ததே பெரியதப்பிதமாகவும், பாவமாகவும் பொதுமக்களால் கருதப்பட்டு வந்தன. இத்தகைய நிகழ்ச்சிகளால் சூழப்பட்டு, இவைகளுக்கு இடையில் பிறந்து வளரும்படியான ஒரு குழந்தையானது இம்மாதிரியான கொள்கைகளையும், எண்ணங்களையுந் தாம் இயல்பாக ஏற்றுக்கொள்ளுமே தவிர, அறிவு பெறுவது என்பது கடினமாகிவிடும். ஆகையால் குழந்தைகளின் அறிவு விரிவுப்படுவதற்கான துறைகளில், அவைகளைப் பயிற்றுவிப்பதற்கான வழிகளில், நடத்திக்கொண்டு செல்லத் தூண்டுகோலாயிருக்கும்படியான முறைகளிலேயே அவர்கள் பழக்கப்படவேண்டும்.

மதத்தைப்பற்றிய கல்வியும், அறிவும், மாணவர்களுக்கு அவசியம் போதிக்கப்பட்டுத்தான் தீரவேண்டுமெனப் பிடிவாதம் செய்யும் மதப்பிரசாரகர்கள் — மதப் பக்திகாரர்களெல்லாம் ஒருசமயம் தங்கள் பிடிவாதங்களில் வெற்றிபெற்று விடுவார்களேயானால், அவர்கள், அநாகரிகமானதும், மூடநம்பிக்கையுள்ளதுமான கொள்கைகளிலிருந்து மக்கள் விடுதலையடைந்து சுயமரியாதை பெற வேண்டும் என நினைத்துப் போராடிக்கொண்டிவரும் சீர்திருத்தக்காரர்களின் முயற்சிக்கு, முட்டுக்கட்டை போட்டதில் வெற்றிபெற்றவர்கள் என்று மகிழ முடியுமேயொழிய, மற்றப்படி அவர்களால் மனிதசமூகத்திற்கு எவ்வித நன்மை

யும் ஏற்படப் போவதில்லை என்பது திண்ணம்.

எல்லாமதங்களிலும் கூறப்படும் முதன்மையான தத்துவம் என்னவென்றால், அவைகள் ஒவ்வொன்றும் எல்லாச்செய்திகளையும் பற்றியும் ஆராய்ந்தெடுத்த தூய்மையான உண்மைகளையே தாம் கூறுவதாகவும், அவ்வுண்மைகள் தங்களுக்கு மட்டுமே சொந்தமென்பதாகவும் வாதமிடுவதேயாகும். இவ்வாறு சில கோட்பாடுகளைத் தங்களுடையமதத்துக்குத்தான் சொந்தமெனப் போராடும் தன்மையானது, மற்ற மதங்களின்மீது வெறுப்பை வளர்ப்பதற்கு ஓர் அறிகுறியாகவும், தூண்டுகோலாகவுமிருந்துகொண்டு வருகின்றது. இதனல் குழந்தைகள், தங்களுடைய சமூக சம்பந்தமான கட்டுதிட்டங்களுக்குட்படாத ஏனைய மதத்தவர்களைக் கேவலமாகவும், இழிவாகவும் நினைக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

இந்நாட்டில், குழந்தைகள் பெரும்பாலும் தங்கள் சொந்தச்சாதி மக்களுடன் மாத்திரம் தான் நட்புறவு வைத்துக் கொள்வதால், ஏனைய சாதியினரின் மீது தப்பெண்ணங்கள் கொண்டு, அவர்களை வெறுப்பதற்குரிய சாதனங்கள் ஏற்படுவதற்கு, மிக்க வசதியாயிருக்கின்றன. இம்மாதிரியான தப்பெண்ணங்களால் ஏற்படக்கூடிய அருவருப்பையும், வெறுப்பையும் நாம் மதத்திற்குட்பட்ட ஒழுக்க முறைகளெனக் கூறி, அக்குழந்தைகளின் மனதில் பதியும்படி செய்வோமேயானல், அப்பொழுது இத்தப்பெண்ணங்களும், வெறுப்புணர்வும் அவர்களுடைய மனதில் இன்னும் பதின்மடங்கு அழுத்தந்திருத்தமாகப் பதிக்கப்பட்டு நிலை பெறுகின்றன.

மதத்தின் பேரால் மக்களுக்குப் பொதுவாகப் போதிக்கப்பட்டுவரும் செய்திகளில், அவர்கள் பொது வாழ்க்கையில் யாதொரு பயனும் அடைய முடியவில்லையெனக் கூறப்படுவது முற்றும் உண்மையேயாகும். ஏனெனில், இம்மாதிரி வளர்க்கப்பட்ட குழந்தைகள், வளர்ந்து பெரியவர்களாகி, பொது வாழ்விலீடுபடும்போது, தங்களுடைய மத சம்பந்தமான உண்மைகளைத் தங்களைப்போல் மற்றவர்களும் நம்பி, அவைகளைப் பின்பற்றுத போதிலுங்கூட, மரியாதையும், நாணயமும், ஒழுக்கமுள்ள ஆடவர்களும் பெண்களும், உலகத்திலிருப்பதை அவர்கள் கண்டு அறிந்துகொள்ளுகின்றார்கள். என்றாலும், அறியாமையின் பயனாக அவர்களையுமறியாமல் அவர்களுடைய மனதில் பதியவைக்கப்பட்டிருந்த கருத்துக்களின் பலாபலன்கள், அவர்களுடைய உள்ளத்தைவிட்டு அகலாமல் அங்கேயேதான் இருந்துவருகின்றன. ஆகையால் மக்களைப் பரந்த நோக்கத்துடன் சமமாகக் கருதுவதற்கு, மத சம்பந்தமான கல்வியானது இவர்களுக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாயிருந்து வருகிறது என்றேற்படுகின்றது.

மதக்கோட்டின்படி ஒரு சக்கிலியைத் தீண்டினால், அதனால், தான் தீட்டுப்பட்டு விடுவதாகவும், அத்தீட்டை நீக்கவேண்டுமானால், கண்டிப்பாய்த் தலைமுழுகித்தான் நீக்கவேண்டுமெனவும், 'உயர்ந்த சாதி' குழந்தைக்கு இளமையிலேயே கற்றுக்கொடுத்துவிட்டோமேயானல் அக்குழந்தையானது, தன்னுடைய பிற்கால வாழ்க்கையில், ஒரு சக்கிலியும் தன்னைப்போலுள்ள மனித இனந்தானெனக் கருதுவதற்கு, அதற்கு அளவற்ற மனவுறுதியும், மனவலிமையும் இல்லாமலே போய் விடுகின்றன அக்குழந்தையானது ஒரு சமயம் தன்னுடைய பேரறிவினுதவியால், தீண்டாதாரும்தன்னைப்போலவே மனிதர்கள்தாம் எனக் கருதி, அவர்களையும் மக்களென நினைக்கக்கூடிய நிலைமை யேற்பட்ட போதிலுங்கூட, அக்குழந்தையானது இளமையாயிருக்கும்போது, அதனுடைய உள்ளத்தில் ஆழமாகவும் அழுத்தந்திருத்தமாகவும் பதியவைக்கப்பட்ட கருத்துக்களால் தன்னையுமறியாமல்ஒரோவழி பாதிக்கப்படவுங் கூடும்.

இந்துக்களாக இருப்போர், தாங்கள் முன்பிறப்பில் ஏதோ புண்ணியம் செய்து இப்பிறப்பில் இந்துவாகப் பிறந்திருப்பதாகவும், ஆகையால் இதர மதக்காரர்களை விடத் தாங்களே உயர்ந்தவர்களென நினைக்கவும்படியான எண்ணங் கொண்டவர்களாக இருக்கக் காண்கிறோம். ஆகவேதான், இவர்கள் அன்னியர்களைக் கண்டால் மிகக் கேவலமாக நினைப்பவர்களாக இருக்கிறார்கள்.

கல்வித் துறையில் இத்தகு மதசம்பந்தமான கல்வியைப் புகுத்திவிடுவார்களேயானால், மாணவர்களுக்குப் பரந்த நோக்கமும், விரிந்த அறிவும், பிறர்க்குதவும் எண்ணமும் தோன்றுவதற்கு இடமேற்படாது என்று கருதியே, கல்வித்துறையில் மதசம்பந்தமான கல்வியைப் புகுத்தக்கூடாதென, அறிஞர்கள் பலர் உறுதியாக எதிர்த்துப் போராடிக்கொண்டு வருகிறார்கள்.

மத சம்பந்தமான பழக்கவழக்கங்களை, ஒவ்வொருவரும் கண்டிப்பாகக் கடைப்பிடித்துத்தான் தீரவேண்டுமெனக் கூறப்படுவது, பொதுவாகவே மாணவர்களால், ஒருவித சுமையாகக் கருதப்பட்டு வருவதுடன், சில சமயங்களில் விளையாட்டாகவும், இழிவாகவும், பரிகாசமாகவுங்கூட கருதப்பட்டு வருகின்றது. மேலும் பள்ளி நிலயங்களைப் பார்ப்பதற்காகப் பார்வையாளர்கள் சுற்றி அழைத்துக்கொண்டு செல்லப்படும் பொழுது, பயபக்தியை உண்டாக்கக்கூடிய யாதொன்றையும் அங்கே அவர்கள் காணுவதுங் கிடையாது. வழிபாடு அல்லது ஜபம் செய்யும் மண்டபம் அவர்களுக்குக் காட்டப்படலாம். ஆனல், அவ்வித வந்தனை வழிபாடுகளில் கலந்து கொள்ளும்படியான மாணவர்களின் முகங்களை உற்று நோக்கினல், அவர்களின் முகங்களில் குறிப்பிடத்தக்கதான யாதொரு கம்பீரமான தோற்றத்தையுங் காண்பது அரிதாகும்.

மதசம்பந்தமான சடங்குகள் யாவும், நாளாவட்டத்தில் நடைமுறைவாழ்வின் பேரில் பார்க்கும்போது, யாதொரு விதமான அறிவையோ அல்லது ஒழுக்கத்தையோ புகட்டியிருப்பதாகத் தென்படவேயில்லை.

மதசம்பந்தமான பள்ளிகளில்பயிற்றுவிக்கப்படும் மாணவர்கள், இதர மதத்தைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிப் பழகுவதில்லை. இவ்வித நிலைமை ஏற்படுவதால், மக்களனைவரையும் சமமாக எண்ணி நடக்க வேண்டுமென்கிற பரந்த ஒற்றுமை நோக்கமானது, அப்பள்ளி நிலயங்களில் அழிக்கப்படுகின்றது. மாணவர்கள், பள்ளிக்கூடத்தில் ஒன்றாகச் சேர்ந்து ஒரேவித ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்டு, அவர்களா

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 15—5—49 [காஞ்சி

அதுதான் நல்லது

—✲—

சென்ற ஆண்டில், சென்னை அரசியலார், நடுத்தரப்பள்ளி வகுப்புகளுக்கு, மொழிப்பயிற்சிபற்றிவகுத்த கல்வித் திட்டம், நடைமுறைக்கு ஒத்துவராதது—நலம் பயக்காதது—நாட்டின் தேவையை யுணர்ந்து செய்யப்படுவதாகாது என்று கல்வி நிபுணர்கள் அறிவுறுத்தினர்கள். ஆட்சிப் பீடத்தில் ஏறினோர் அப்பொழுது உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை; தேவையற்ற திட்டத்தைத் தள்ளிடுக என்று நாம் கேட்டுக்கொண்ட வேண்டுகோளைப் புறக்கணித்துப், பயனளிக்கும் புதிய திட்டம் என்று மீறிக்கொண்டுவந்து புகுத்தினர்.

ஓராண்டாயிற்று. கல்வித்திட்டம் கோரிய பலனைக் கொடுக்காதது கண்டு, சிந்தித்து, ஓரளவுக்குத் தெளிவடைந்து, புதியதொரு திட்டத்தைக் கொணர இன்று முனைந்துள்ளனர் சென்னை ஆளவந்தார்கள். திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு அமைச்சர் குழாம் முன்வந்தது கண்டு மகிழ்கிறோம். திருத்தியமைக்கப்படப் போகும் மொழிப்பயிற்சி முறை எப்படிப்பட்டது என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய தொன்றாகும்.

புதிய கல்வித்திட்டத்தை ஆய்ந்து பார்த்து வகுப்பதற்கென்று, சென்னை மந்திரிக்குழு, உட்குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அந்த உட்குழுவில் நான்கு மந்திரிகள் இடம் பெறுகின்றனர், மொழிவாரிப் பிரதேசத்திற்கு ஒவ்வொருவராக. உட்குழு, ஜூன் திங்கள் 3-ம் நாளுக்குள், மந்திரிசபையிடம், தாங்கள் தயாரித்த புதியகல்வித்திட்ட நகலைக் கொடுத்துவிடவேண்டும் என்று ஏற்பாடாகியிருக்கிறது. அந்தக்குழு,

ஜூன் திங்களிலிருந்து, ஆங்கில மொழிப் பயிற்சியை முதல் பாரத்திலிருந்தே தொடங்கிவிடலாம் என்பது பற்றியும்,

இந்தியை எந்த வகுப்பில் போதிக்கத்தொடங்குவது, முதல் பாரத்திலிருந்தேதொடங்குவதா? அல்லது முன்வகுப்புகளிலேயே துவக்குவதா? அல்லது மேல் வகுப்புக்குத் தள்ளிப்போடுவதா? என்பதுபற்றியும்,

மற்றும் பல பிரச்சனைகளைப்பற்றியும், ஆராய்ந்தறிந்துஒருமுடிவுக்கு வரும் என்று மந்திரிசபை அறிவித்துள்ளது.

இப்பொழுதுள்ள பாடத்திட்டப்படி, ஆங்கிலமொழிப்பயிற்சி இரண்டாம் பாரத்திலிருந்து தொடங்கப்படுகிறது. ஆங்கிலப் பயிற்சியின் நடைமுறை அவசியத்தை உணர்ந்தும், அதன் அறிவு மாணவர்கள் உள்ளத்தில் சற்று ஆழப்பதிய வேண்டியிருக்கும் அவசியத்தை யுணர்ந்தும், அதை முதல் பாரத்திலிருந்தே சொல்லிக்கொடுக்கத் தொடங்கிவிடவேண்டும் என்று இன்று மந்திரிசபை அறிவிக்கிறது. ஆட்சிப்பிடத்தில் அமர்ந்திருப்போர், வெள்ளையனை விரட்டும் பணியில் ஈடுபட்டு நாட்டின் நாலாபாகங்களிலும் சுற்றிவந்தபொழுது, தாங்கள் ஆளும் மன்றம் புகுந்தவுடன் ஆங்கிலத்தை அடியோடு ஒழித்துக்கட்டுவோம், அந்த இடத்தில் இந்தி அணங்கை ஏற்றிவைப்போம் என்று கூறிவந்தனர். விரட்டப்பட வேண்டியவன் ஆங்கிலேயனேயொழிய, ஆங்கிலமொழியல்ல என்று கூறி, ஆங்கிலத்தின் அவசியததை அப்பொழுதும் நாம் வலியுறுத்தி வந்தோம். உணர்ச்சியின்வேகம் அவர்களை ஆட்டிப்படைத்து வந்ததால், நாம் கூறிவந்த கருத்தின் உண்மை அப்பொழுது அவர்களுக்கு விளங்கவில்லை. ஆகவே நம்கூற்றுக்கண்டு கொதித்தெழுந்தனர். ஆட்சிப்பீடம் ஏறியபிறகு, தெளிந்த நிலையில், அதன் அவசியம் புலப்படுகிறது, அதில் பயிற்சிபெற வேண்டிய இன்றியமையாமையை உணர்த்துகின்றனர்.

உலகியல் அறிவு பெறவும், அகில உலகத் தொடர்பு கொள்ளவும், விஞ்ஞான அறிவு பெறவும் ஆங்கிலம் நமக்கு அவசியம் வேண்டும், இந்த மூன்றையும் பெற்றுத் தரும் ஆற்றல் தாய் மொழிக்கு இல்லையாதலால், தாய்மொழி அறிவோடு ஆங்கிலத்தின் துணையையும் வேண்டுவது அவசியமாகும் என்றும் வலியுறுத்தினோம். ஆளவந்தார்களாக ஆனபிறகு தான், உலகியல்அறிவு—அகிலஉலகத்தொடர்பு—விஞ்ஞான அறிவு ஆகியவற்றிற்கு ஆங்கில அறிவு வேண்டும் என்பதைத் தெரிந்து, அதற்கு உரியதொரு இடங்கொடுக்க வேண்டும் என்பதைஅனைத்திந்தியஆட்சித் தலைவர்கள் அனைவரும், செல்லுமிடத்தில் எல்லாம் கூறியும், ஏட்டில் எழுதியும், திட்டத்தில் தீட்டியும் வருகின்றனர். சென்னை மாகாணம் ஆங்கிலத்திற்கு ஏற்றவொரு இடம் தர எண்ணித் திட்டம் தீட்ட முனைந்திருப்பது வரவேற்கத் தக்கதேயாகும்.

அடுத்து, இந்தி மொழிப் பயிற்சியை எவ்வகுப்பிலிருந்து, எப்படித் தொடங்கு என்பது பற்றியும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உட்குழு ஆராயும் எனத் தெரிகிறது. இது பற்றிச் சென்ற ஆண்டில் தீட்டிய திட்டம் தேவையற்ற திட்டம்—நடைமுறைக்குக் கொண்டுவர ஒவ்வாத திட்டம் – எவ்வகையிலும் பயன்படாத் திட்டம் என்று அன்றுமுதல் நாம் சுட்டிக்காட்டி வருகிறோம்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில், — அதாவது திராவிடத்தைப் பொறுத்தவரையில், அடிப்படை அறிவு—சூழ்நிலை அறிவு ஆகியவற்றைத் தரத், தாய் மொழிகளாகிய தமிழும், தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் இருக்கின்றன, ஆனால் அவற்றால் இப்பொழுது பெறமுடியாத உலகியல் அறிவு — அகில உலகத் தொடர்பு—விஞ்ஞான அறிவு ஆகியவற்றைத் தர ஆங்கிலம் இருக்கிறது, ஆகவே தாய் மொழி, ஆங்கிலம் ஆகிய இரண்டையும் வைத்துக் கொண்டு நம் வாழ்வைச் செம்மையுற நடத்தமுடியும் என்பதைப் பல தடவைகளில் எடுத்துக் காட்டி வந்துள்ளோம். நிலைமையை இப்படி அமைத்துக்கொண்டால் வேறு எந்த மொழியையும் கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் ஏற்படாது என்றும், விருப்பப்பட்டவர்கள், தத்தம் விருப்பத்திற்கேற்ப, எத்தனை பிறமொழிகளை வேண்டுமானாலும், தங்கள் ஓய்வு காலங்களில், தனிப்பட்ட முறையில் கற்றுக்கொள்ளலாம் என்றும் நாம் விளக்கி வந்துள்ளோம். அத்தகைய நிலையை உன்னிப் பார்க்கும்போது தான் எவ்வகையிலும் நமக்குப் பயன்படாத—நேரத்தையும், பொருளையும் வீணாகக் கொள்ளை கொள்ளும் இந்தி நம் நாட்டிற்குத் தேவையில்லை என்பதை, ஆயிரமாயிரம் காரணங்களைக் காட்டி, எடுத்தறிவுறுத்தி வந்துள்ளோம்.

தனிப்பட்டவர்கள், தங்கள் விருப்பத்தை யொட்டி, தங்கள் நலனைக் கருதி இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவாவுறுவார்களேயானால், பள்ளியைவிட்டு வெளியேறிய பிறகு இந்தி மொழியினைப் பயின்று கொள்ளட்டும், அதற்கான வசதிகளை வேண்டுமானால் அரசாங்கம் செய்து தரட்டும், அந்த ஒரு மொழிக்கு மட்டுமல்லாமல் எத்தனை மொழிகளுக்கு வேண்டுமானாலும் அத்தகைய வசதிகளைச் செய்து தரட்டும் என்று கூறுகிறோம். ஆனால் இந்தியை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ இளம் மாணவர்களின் உள்ளத்தில் கட்டாயமாக ஏற்ற நினைப்பது, தவறான செயலாகும் என்று அரசாங்கத்தின் போக்கை சென்ற ஆண்டுமுதல், ஏன், 1937-ல் இருந்தே கூறிவருகிறோம்.

தாய் மொழியோடும், ஆங்கிலத்தோடு இந்தியையும் நுழைக்க வேண்டாம் — விருப்ப பாடம் என்று சொல்லி மறைமுகமாகப் புகுத்தும் கட்டாய பாடம் வேண்டாம் என்று சொன்னோம். மூன்று மொழிகளைக் கட்டாயமாக இளைஞர்களின் தலையில் சுமத்துவது கொடிது, கொடிது என்று காரணங்கள் பல கூறினோம். இந்தி இல்லாமலே நம் வாழ்வு செம்மைப்பட முடியும் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டினோம். இவ்வளவு காரணங்களையும் புறக்கணித்து, கேளாச் செவியினராயிருந்து, முதல் பாரத்திலே இந்தியைப் புகுத்தினர் ஆளவந்தார்கள். அந்தத் திட்டம் ஆட்டங் கொடுத்துவிட்டதை, இந்த ஓராண்டுக் காலம் அவர்களுக்கு நன்கு அறிவுறுத்திவிட்டது. ஆகவேதான் திட்டத்தை மாற்ற முனைந்துள்ளனர் மந்திரிசபையினர். மகிழ்கிறோம்

இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தியிருக்கிறது அரசாங்கம் என்று நாம் சொல்லியபொழுது, இந்தி இஷ்ட பாடமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறதே யொழிய, அதில் கட்டாயம் எதுவும் இல்லை என்றனர் அமைச்சர்கள்; இல்லை என்று அழுத்தந் திருத்தமாகப் பேசினார் அவினாசியார்; இல்லை என்றே எழுதின ஏடுகளெல்லாம்; தாய் மொழி — ஆங்கிலம்—இந்தி இந்த மூன்று மொழிப்பயிற்சியே இதுவரையில் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது என்பதும், இனி எப்படி இருக்கவேண்டும் என்று இந்த மூன்று மொழிகள் பற்றியே இப்பொழுது பேசப்பட்டு வருகின்றது என்பதும் ஆளவந்தார்களின் எண்ணமும், அவர்கள் வழிசெல்வோரின் எண்ணமும் எந்த மொழிகளில் உள்ளபடியே தோய்ந்து கிடந்தன என்பது விளங்கும். விருப்ப மொழிகள் என்று பெயரளவில் கொடுக்கப்பட்டிருந்த பட்டியலிலிருந்து, இந்தி மொழி ஒன்றையே எடுத்துப் பேசி, மற்றவைகளைப் பற்றிச்சிறிதும் கவலைப்படாமல், சிறு குறிப்புக்கூட இல்லாமல் அவைகளைப் புறக்கணித்துப் பேசியிருப்பதிலிருந்தே, இதுவரையில் இந்திக்கு உண்மையாகக் கொடுக்கப்பட்டுவந்த இடம் இன்னதென்பது விளங்கும். நாட்டு மக்களின் கண்ணைத் துடைக்கவே உருது, பாரசிகம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பிற இந்திய மொழிபோன்றவிருப்ப மொழிகளின் பட்டியலை வழங்கியிருந்தார்கள் என்பதும், உண்மையாக இந்தியைத் தான் மறைமுகமாகக் கட்டாயப்படுத்தினார்கள் என்பதும் இப்பொழுது விளங்கிவிட்டது.

இந்தியைச் சிறுவர்கள் தலைமீது கட்டாயப்படுத்துவது கொடுமை என்று, நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் நாம் எடுத்துக் கூறிய போது, நம்மை ஏசி, இடித்துக் கூறி, வசைமாரி பொழிந்து, இந்தியை முதல் பாரத்திலிருந்தே வைக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்த காங்கிரசைச் சார்ந்த ஏடுகள் இப்பொழுது கூறுவதைக் கண்டு மகிழ்கிறோம். மே 11-ம் நாள் தலையங்கத்தில் 'தினசரி' தீட்டுவதைக் காணுங்கள்.

> "முதல் பாரத்திலிருந்தே ஆங்கிலத்தைப் போதிப்பது என்று இப்பொழுது சர்க்கார் முடிவு செய்து விட்டதால், முதல் பாரம் படிக்கும் சிறுவர்கள் இரண்டு மொழிகளைப் படிக்கவேண்டியதாகிறது. ஆகையால் அதே சமயத்தில் இந்தியையும் முதல் பாரத்தில் படிப்பதென்றால், அது சிறுவர்களுக்குரோம்பக்கஷ்டமானது. அவ்வளவு அதி பால்யத்தில் இத்தனை பாஷைகளைப் படிக்கும் சிரமத்தை சிறுவர்களுக்கு உண்டாக்குவது விவேகமேயல்ல."

என்பதாகும்.

அதாவது இந்தியை முதல் பாரத்தில் மூன்றாவது மொழியாக்குவது, சிறுவர்களுக்கு ரோம்ப கஷ்டம் — அதி பால்யத்தில் பல பாஷைகளைப் படிப்பது சிரமம் — சிறுவர்களுக்கு அச்சிரமத்தை உண்டாக்குவது விவேகம் அல்ல என்பது 'தினசரி'யின் கருத்து. இதையே நாம் முன்பு கூறினபோது ஒப்புக்கொள்ளவில்லை. இப்பொழுது சிறிதளவாவது சிந்திக்கிறதுகண்டு களிக்கிறோம்.

'தினசரி' இந்திமொழி இனி எப்படிப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்னும்பற்றிக் கூறும்போது,

> "4-வது பாரத்திலிருந்து ஹிந்திப் படிப்பை ஆரம்பிப்பதுதான் சரி. அப்படிச் செய்தால்தான், சிறுவர்கள் கஷ்டமின்றி இந்த மூன்று பாஷைகளையும் படிப்பது சுலபமாகும்......4-வது பாரத்திலிருந்து ஹிந்தி போதனையை ஆரம்பிப்பது என்ற முடிவுக்கே சர்க்கார் வரும் என்று நம்புகிறோம்"

என்று கூறுகிறது. அப்படி இந்தி நான்காவது பாரத்தில் துவக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்பதை மேலிடத்தாரின் நெருக்கடியை நோக்கி மந்திரிசபை ஏற்றுக்கொள்ள நேர்ந்தால், அதை விருப்ப பாடமாக வைத்தால்தான் நாட்டுப் பெருங்குடி மக்கள் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்வார்கள் என்னலாம். அன்றி, மீறி அங்கும் கட்டாயப்படுத்த முயலுமேயானால் வருவதை அமைச்சர் குழு சமாதான முறையில் அல்லாமல் வேறு வகையில் சமாளித்துத்தான் தீரவேண்டியிருக்கும்!

மே திங்கள் 11ம் நாள் 'தினமணி' எழுதியுள்ள துணைத் தலையங்கத்தில் இந்திமொழிப் பயிற்சி பற்றி ஒருபடி மேலேறியே நம் வழியின் அருகில் வந்து நிற்கிறார் அதன் ஆசிரியர்.

முதல் பாரத்தில் இந்தி மொழியைக் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை, இந்தி எழுத்துக்களையும், ஒலிக்குறிப்புகளை மட்டும் கற்பித்தால் போதுமானது, பள்ளியை விட்டு வெளியேறிய பிறகு முதிர்ந்த வயதிலும் இந்தியைக் கற்றுக் கொள்ள இயலும் என்று கூறுகிறது "தினமணி." அது கூறுவதைக் கேளுங்கள்,

> "ஆங்கில எழுத்தும் இந்தி எழுத்தும் தெரிந்திருந்தால் நலமாக இருக்கும். பாஷை தெரியாவிட்டால் பரவாயில்லை. பிற்காலத்தில் அவன் ஏதேனும், பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டால், அதற்கு உதவியாக இருக்கும்பொருட்டு, எழுத்து வரிசையையும், ஒலியையும் மட்டும் இளம் வயதிலேயே சொல்லிக்கொடுத்துவிடுவது நலம். வயது முதிர்ந்தபிறகு புதிதாக ஒரு மொழியைப் பயில்வது அவ்வளவு கஷ்டமல்ல."

வயது முதிர்ந்த பிறகு புதிதாக ஒரு மொழியைத் தேவையைக் கருதி பயில்வது கஷ்டமல்ல என்ற கருத்தில்தான், இந்திமொழியைப் பள்ளியில் புகுத்த வேண்டாம், வெளியிலேயே வேண்டுவோர்க்கு உதவும் வகையில் அரசாங்கம் வைக்கட்டும் என்று கூறினோம்.

எழுத்து வரிசையையும், எழுத்தையும் மட்டும் கற்றுக்கொடுக்கிற முறையானாலும், தேவையற்ற இந்தியைப் பொறுத்த வரையில், அதையும் விருப்ப பாடமாகத்தான் வைக்க வேண்டுமென்று கூறுகிறோம். தேவையற்ற மொழிக்குக் கட்டாயம் வேண்டாம்.

எனவே தாய்மொழியறிவும், உலகப்பொதுமொழியான ஆங்கில அறிவும் மக்கள் முழுதுணரவேண்டி, அரசியலார், உழைப்பையும் பொருளையும் நல்குவார்களேயானால் அதுவே நாட்டிற்கும், மக்களுக்குஞ் செய்யும் பெருந் தொண்டாகும்.

இன்ன பல காரணங்களைக் காட்டித்தான், இந்தி எவ்வகையிலும் இந்நாட்டிற்குத் தேவையில்லை என்பதை யுணர்த்தி, அரசியலார் இந்தித் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கூறினோம். பொதுக் கூட்டங்களின் மூலமாகவும், ஏடுகளின் வாயிலாகவும் எடுத்துக் காண்பித்தோம். பிரச்சினை நல்ல முறையில் தீரவேண்டும் என்று கருதி, இதில் கட்சி மாச்சரியங்களால் மோதுதல் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதி, திராவிடர் கழகத்தின் சார்பிலே அமைதியான எதிர்ப்பு முன்னணியை நிறுவுதல் வேண்டாம் எனக் கருதி, முதலில், சகல கட்சிக்காரர்களின் ஆதரவில் மாநாடு கூட்டி அரசியலார்க்குக் கருத்தை விளக்கினோம். அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் ஆசிரியர் மறைமலை யடிகள். திறப்பு விழாச் சொற்பொழிவாற்றியவர் திரு. வி. கல்யாண சுந்தரனார். வரவேற்புரை வழங்கியவர் தோழர் நாரண துரைக்கண்ணன், பெரியார், மா. பொ. சி. மற்றும் பல கட்சிப் பற்றில்லாத அறிஞர்களும் மாநாட்டில் கலந்துகொண்டனர். இதுமட்டுமன்றி மாகாண மாணவர்கள் மாநாடு மூலமாகவும், மாகாணப் புலவர்கள் மாநாடு முலமாகவும், இந்தித் திட்டத்தை மாற்ற வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. பிறகு திராவிடர் கழகம் பலாத்காரமற்ற அமைதியான அறப்போராட்ட முறையை வகுத்துத் தன் நல்லெண்ண நோக்கத்தை ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்து வந்தது.

இவ்வளவும் நடைபெறுவதற்கு, திராவிடர் கழகம் தன்னாலான ஒத்துழைப்பை நல்குவதற்கு அடிப்படைக் காரணம், பிரச்சினை மோதுதல் ஏதுமின்றி சுமூகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதேயாகும். இதை அறிந்து கொள்ளமாட்டாத மந்திரிமார்களும், அவரைப் பின்பற்றும் மற்றையோரும் திராவிடர் கழகத்தினரை, உண்மைக் காரணம் எதுங் காட்ட முடியாமல், பதவியைப் பிடிக்க ஆசைப்படுகிறார்களென்றும், காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்த்துவிடத்திட்டம்போடுகிறார்களென்றும், காங்கிரஸ் செய்யும் எதையும் எதிர்ப்பதே இவர்கள் வேலை என்றும் வீண்பழி சுமத்தித் தூற்றி வந்தனர்; கேலி செய்து வந்தனர்; குற்றங் கூறித் தூவேஷித்துவந்தனர். இப்பொழுது, தலைமை ஆசிரியர்கள் மாநாட்டில் தீர்மானித்த தீர்மானப்படி கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க மந்திரிசபையினர் முன்வந்திருக்கின்றனர். அந்தப் போக்குக் கண்டு நாம் மகிழ்கிறோம். நல்ல மக்களின் நல்ல யோசனையை அடிக்கடி கேட்டு அதன்படி அரசாங்கம் நடக்கவேண்டும் என்பதுதான் நமது அவா. அதுதான் நல்லது.

★

பண்டிதர் மறைவு.

சென்னை பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் தோழர் பண்டிதர் திருஞான சம்பந்தம் அவர்கள் 4—5—49ம் நாள் இரவு, இயற்கை எய்தினார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம்.

பண்டிதர் திருஞான சம்பந்தம் சுயமரியாதை இயக்கத்தின் பழம் பெருந்தொண்டர்களில் ஒருவர். சுயமரியாதை இயக்கத்தின் துவக்க நாள் முதற்கொண்டு அதன் கொள்கைகளுக்காக அஞ்சாது நின்று பாடுபட்டுவந்த பண்பினர். பட்டுக்கோட்டையில் முதல் மாகாணச் சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்த தீரர். பள்ளியில் தமிழாசிரியார் பதவியை வைத்துக்கொண்டு சுயமரியாதைக் கொள்கைகளை மக்களிடையே பரப்பி, பலரைத் திருந்தச் செய்வதிலே முக்கிய பங்கு பூண்டவர். ஜஸ்டிஸ் கட்சிக்கு அவர் ஆற்றியுள்ள தொண்டும் அளவிட்டுரைப்பதற்கு ரியதன்று. தோழர் ஏ. டி. பன்னீர்ச்செல்வம் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் தலைவராக இருந்தகாலை, அவருக்குப் பக்கத் துணையாக நின்று பெருஞ்செயலாற்றியவர். பட்டுக்கோட்டைக்குப்பிறகு, சென்னைப்பச்சையப்பன் உயர் நிலைப் பள்ளியில் சென்ற பல ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தார். நெஞ்சுறுதியும், கலங்கா உள்ளமும் படைத்தவர், அவர் இப்பொழுது மறைந்துவிட்டார்.

அவர் பிரிவை எண்ணி வருந்தும் உற்றார்! உறவினர், நண்பர், தோழர்கள் அனைவர்க்கும் எம் ஆறுதல் மொழி உரித்தாகுக!

★

பெற்றோர்களுக்குப் பர்னாட்ஷா சொல்

"என்னைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது; நல்ல மக்களை விடக் கெட்ட மக்களே அதிக உண்மையைக் கூறுவார்கள் என்பதாக நான் நம்புகிறேன். நல்லமக்கள், தாங்கள் செய்தாற்றிய வேலைகளைப் பற்றி வெளியிடுவதை விரும்பமாட்டார்கள். தீயவர்கள் எப்பொழும் தாங்கள் சாதித்துவிட்ட செயல்களைப் பற்றி வானமளாவப் புகழ்ந்து பேசுவர்.

நான் ஒருபெரிய மனிதன் என்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்; இவ்விதமே பிரிட்டனின் வானொலி நிலையத்தாரும் நினைக்கின்றார்கள். தாடி வளர்த்த மனிதர்களைப் போன்று நானும் ஒரு மனிதன்தான். எனினும் உங்களுக்கும் எனக்குமுள்ள வேறுபாட்டைக்கண்டறிய நீங்கள் பெரிதும் விரும்புகின்றீர்கள். என்னுடைய பண்புகளில் புதுமை எதுவும் இல்லை. நான் நாடகங்கள் எழுதக் கூடும்; நீங்கள் நாடகம் எழுதமுடியாது. இதுதான் வேறுபாடு. ஆனால் நான் எதையும் எழுதமுடியும். இல்லையெனில்; நான் பெரும்பாலும் ஒருகொடியவனாகவே விளங்கியிருப்பேன், இப்பொழுது நான் வசதியானவாழ்வைக்கொண்டிருக்கிறேன். ஆனால் நான் அதிக பெருமைக்கு அல்லது மரியாதைக்குத் தகுதியுடையவன் என்பதாகப் பல்வேறு இதழ்களும் விளம்பரப் படுத்துகின்றன. இதழ்கள் (பத்திரிகைகள்) கூறுவதையெல்லாம் நம்பவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளால்பெரும்பொறுப்பு ஏற்படுவதாகச் சிந்தனை இல்லாதவர்களே பேசுவார்கள். குழந்தைகள் தாங்களே சம்பாதித்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் வரையில், அவர்கள் பெருஞ் செலவையே பெற்றோர்களுக்குத் தருகின்றனர். அவர்களை வளர்ப்பதற்குப் பெற்றோர்கள் ஒன்றுஞ் செலவிடக் கூடாது. பிள்ளைகளின் நடவடிக்கைகளுக்கும், அவர்கள் பண்புடைமைகளுக்கும், எதிர்கால வாழ்க்கைக்கும் பெற்றோர்களே அடிப்படைக் காரணமாவார்கள் எனக் கூறுவது, வம்புப் பேச்சாகும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாம் கொடுத்துதவாத பண்புகளுடன் பிள்ளைகள் பிறந்துவிடுகின்றன. அவர்களின் இயற்கையோடமைந்த பண்புகளை நாம் மாற்றுவதெப்படி? காட்டு மிராண்டிகளின் பண்புகளும் பிள்ளைகளுக்குச் சில சமயங்களில் அமைவதுண்டு.

குழந்தைக்கு இயற்கையாக அமைந்த பண்பு நன்றாயிருந்தாலும், தீதாயிருந்தாலும் பெற்றோர்கள் அக்குழந்தைக்குப் பொறுப்பாளிகளல்ல. ஆனால், அக்குழந்தை மிகக் கொடிய பண்புடையதாயிருந்தால், குடும்பத்தை அக்குழந்தையின் தொல்லைகளினின்றும் பாதுகாப்பதில் பெற்றோர்கள் மிக்க கவனமாயிருக்கவேண்டும். குழந்தையிடம் கொடிய பண்பு எதுவுமில்லையெனில் அதன் விருப்பப்படி விட்டுவிடுவதே பெற்றோர்களுக்கு நலமாகும். உலகில் மக்கள் நிரம்பவேண்டும். ஆனால் பிள்ளைகளுக்குச் செலவிடத் தகுந்தவாறு பெற்றோர்களுக்குச் சம்பளங் கொடுக்கப்படுகின்றதா என்பதைக் கவனிக்கவேண்டியது அரசாங்கத்தைச் சார்ந்த கடமையாகும்.

எனது பெற்றோர்கள் என்னைப்

(அடுத்த பக்கம் பார்க்க)

தூக்குமேடையில் :: மற்றுமொரு தமிழன்

மலேயா ஆணவ அதிகார வெறிக்குத், தோழர் கணபதி 'காவு' கொடுக்கப்பட்டார் என்ற துக்கச் செய்தி கேட்டுத், தாயகத் தமிழகம் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது. அந்த உள்ளத் துடிப்பு அடங்குவதற்குள் மற்றுமொரு கொடியதுயரச் செய்தி காதில்விழுந்துள்ளது. அதாவது, சாம்பசிவன் என்றமற்றொருதமிழன் மலேயா நாட்டுத் தூக்குமேடையருகே கொண்டுபோய் நிறுத்தப்பட்டுள்ளான். அதிகாரவெறி மீண்டுமொரு தமிழனின் உயிரைக் குடிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது!

மலேயா அவசரச் சட்டத்தின்படி, தோழர் சாம்பசிவன் கைது செய்யப்பட்டு, ஒரு ரிவால்வரும் வெடிமருந்துகளும் வைத்திருந்தார் என்ற குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

மலேயர்களால் தாக்கப்பட்டுக் காயங்களடைந்து வீழ்ந்துகிடந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவ விடுதியிலிருந்து, உடல் நலமுற்றவுடன், அவர் மீது அவசரச் சட்டத்தின்படி வழக்குத் தொடரப்பட்டு முதல் விசாரணையில் அவர் குற்றமற்றவரெனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிபதி மறுவிசாரணைக்கு உத்திரவுஇட, மறுவிசாரணையிலதான் அவருக்குத் தூக்குத் தண்டனை. அது நிறைவேற்றப்படுவதற்காக அவர் இப்பொழுது தூக்குமேடை அருகே நிறுத்தப்பட்டிருக்கிறார்.

இந்திய அரசாங்கம் மலேயா அரசாங்கத்திடம் நீதி கேட்டு நிற்கிறது— நீதி புறக்கணிக்கப்படப் போகிறதா அல்லது வழங்கப்படப் போகிறதா என்பதை அறியத் தேம்பி நிற்கும் திராவிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது! கணபதியின் இறப்பால் குமுறி, வீரசேனன் படுகொலையால் கொதிப்பேறி இருக்கும் உள்ளங்கள் மேலும் மேலும் கொதித்தெழத் துவங்கியுள்ளன. வேகம் விபரீதத்தில் கொண்டுபோய் விடுமா அல்லது விடாதா என்பது மலேயா அரசாங்கத்தின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது. மற்றுமொரு தமிழனின் உயிரைக் குடித்து, கோலை மேலும் கறையாக்கிக் கொள்ளவேண்டாம் என்று மலேயா அரசாங்கத்திற்கு எச்சரிக்கிறோம்!

(முன்பக்கத் தொடர்ச்சி)

பற்றிப் பெரும் பொறுப்பு எதையும் வகிக்கவில்லை. என்னைப் பெற்றெடுத்ததற்காக அவர்கள் என்னைக் காப்பாற்ற வேண்டியதாயிருந்தது. சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பண்பைக் கவனிப்பதில் தனிக் கவலை எடுத்துக்கொள்கின்றனர். ஆனால், அவர்கள் தங்களின் நல்லதீய பண்புகளைப் பற்றிச் சற்றேனும் சிந்திப்பதில்லை. எனது தாய் நல்லொழுக்கத்தைப் பற்றியோ அல்லது வேதத்தைப் பற்றியோ என்னிடம் ஒன்றேனும் கூறியிருக்கமாட்டாள். இவ்வகையில் எனது தந்தையார் சிறிது முயற்சி எடுத்துக் கொண்டார். அவர் சுருட்டுப் புகைப்பது போன்று, நான் ஒரு குழாயை வாயில் வைத்துக்கொண்டு பாவனை செய்தேன். அப்பொழுது ஒவ்வொரு நாளும், சுருட்டுப் புகைக்கக் கூடாது என்பதாக எனது தந்தையார் என்னிடம் கூறிவந்தார். என் தகப்பனாரின் வேண்டுகோள் என் உள்ளத்தில் நன்கு பதிந்தது. இதனால் நாளிதுவரையிலும் நான் சுருட்டுப் புகைத்ததில்லை; முகத்தில் மயிர்களைந்து கொண்டதில்லை; மது அருந்தியதில்லை. எனது தகப்பனார் என்னிடம் அடிக்கடி கூறியதென்ன? "நான் வாழ்க்கையில் தோல்வி கண்டவன். விரும்பத்தகாத பண்புகள் என்னிடம் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, என்னைப் பின்பற்றி நடக்கவேண்டாம். எனது வாழ்க்கை உனக்கு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்." என்பதாக இடித்துரைத்தார். ஆகையால் நான் பெற்றோர்களுக்கு ஒரு சொல்கூற விரும்புகிறேன். உங்கள் இயற்கைப் பண்பை மறைக்கவேண்டாம். அப்படிச் செய்வீர்களாயின் உங்கள் குழந்தைகளெல்லாம் பர்னட்ஷாக்களாகத் திகழ வழியேற்படுவது உண்மை. இது என் அறிவுரை."

●

மதக்கல்வியும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

லேயே பொதுவாக நடத்தப்பட்டு வருவதாலும், விளையாட்டிடங்களிலும் சங்கங்களிலும் கூடிப்பழகிவருவதாலுமே, என்றும் நீடித்திருக்கக் கூடிய நட்புமுறை மாணவர்களிடையே ஏற்படக்கூடும். அப்படி ஏற்படும் நட்பு, கைம்மாறு எதுவும் கருதாமலேற்படக்கூடிய நட்பாகும் என்பதை யாவரும் அறிவர். ஆனால், இந்தியாவில் பல்வேறு மதங்களை ஆதாரமாகக் கொண்ட கல்வி நிலையங்கள், பல்வேறு வகுப்புகளையும் சார்ந்த இளைஞர்களுக்குள் ஏற்படக் கூடிய நட்பு, ஒற்றுமை, தொடர்பு ஆகிய எல்லா வாய்ப்புகளையும் நாசமாக்கிக்கொண்டே வருகின்றன.

கல்வித்துறையில் உலக சம்பந்தமான கல்வியும், அறிவுந்தான் மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும் என்னும் இன்றியமையாமையைக் குறித்து, நாம் அழுத்தந்திருத்தமாகக் கூறிவருகிறோம். ஆயினும் மாணவர்களின் அறிவு பலவழிகளிலும் விரிந்து நிற்கக்கூடிய செய்திகளும் கல்வியுடன் சேர்த்து அவர்களுக்குப் போதிக்கப்பட்டாகவேண்டும். குறிப்பாக, விஞ்ஞானம் பாடத்திட்ட வரிசையில் முதன்மையானதாக இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால்மட்டுந்தான் மாணவர்களுடைய நியாயத்தின் வழிபட்ட மனஆற்றல் வளர்ச்சி பெற்று, இயற்கைக்காட்சிகள் நிரம்பிய இவ்வுலகில், எல்லாப்பக்கங்களிலும் நீதியும், அமைதியும் குடிகொண்டு உலாவுவதைக் கண்டறிந்துகொள்ள வசதியுண்டாகும். வானநூல், உயிர்நூல், மனித இனநூல்போன்ற விஞ்ஞானத் துறைகள்பற்றிய அறிவும், ஆராய்ச்சியுந்தான் மூடப்பழக்கவழக்கங்களால் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்த்தெறியக்கூடிய வல்லமைவாய்ந்தவைகளாகும். இயற்கையின் சட்டதிட்டங்களையும், பண்புகளையும் ஆதியிலிருந்தோர் அறிந்துகொள்ளாதிருந்த காரணத்தினால்தான், அவ்வித மூடநம்பிக்கைகள் அவர்களுக்கேற்பட்டன.

நாம் எப்படியிருந்தால் இரட்சிக்கப்படுவோம், என்னசெய்துகொண்டு வந்தால் முக்தியடைவோம், எப்படி நடந்துகொண்டுவந்தால் பரமபதம் அடைவோம் என்பனபற்றி போதிக்கும்படியான கல்வி அறிவானது, எவ்வளவுதான் பெருமைவாய்ந்ததாகக் கூறப்பட்டு வந்தபோதிலும் சரியே, அதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமலும், அவ்வறிவை மாணவர்களுக்குப்போதியாமலும் இருந்துவர வேண்டும். வளர்க்கும் மதக்கல்வி எந்த முறையிலும் புகுத்தப்படக் கூடாது என்பதே அறிஞர்களின் கருத்தாகும்.

★

ஆங்கிலமே பொதுமொழியாதற் குரித்து

"இவ்விந்திய தேயத்தின் மட்டுமேயன்றி இவ்வுலகம் எங்கணும் அழுந்திப் பயிலவும், பேசவும், வழங்கவும் பட்டுவரும் ஆங்கிலமொழியொன்றே, உலக முழுமைக்கும் பொது மொழியாய்ப் பரவிவருவதால், அதுதன்னையே நம் மக்கள் அனைவரும் பொதுமொழியாய்க் கைக்கொண்டு பயிலுதலும், வழங்குதலுமே அவர்கட்கு எல்லா வகையானநலங்களையுந் தருவனவாகும். முதலில் உலகியல் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள் கடைக்கூட்டுதற்கு எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும், அத்தொழில் நுட்பங்களை நன்கறிந்து செய்தற்குதவி செய்யும் பல்லாயிரக்கணக்கான தொழிலறிவு நூல்கள் ஆங்கிலமொழியிலன்றி வேறெதிலேனும் இருக்கின்றனவா? பல்வகைக் கைத்தொழில்களைப் புரியுங்கால் அவற்றிற்கு வேண்டும் பல்வகைப் பண்டங்களைப் பல நாடுகளிலிருந்து வருவித்தற்கும், அவற்றால் தாஞ்செய்துமுடித்த பண்டங்களைப்பல நாடுகளிலும் உய்த்து விலைசெய்து ஊதியம் பெறுதற்கும், ஆங்கில மொழியேயன்றி வேறெதுந் துணை செய்யுமோ? செய்யாது. இன்னும் உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கிலமொழியின் உதவி கொண்டே நன்கு நடைபெறுதலை அறிந்துவைத்தும், அதனைப் பொதுமொழியாக வழங்காமல், விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்படாத இந்தியைப் பொதுமொழியாக்க முயல்வோர் நம்மனோர்க்கு உண்மையில் உதவி செய்பவர் ஆவரோ? கூர்ந்து பார்மின்கள்!"

—மறைமலையடிகள்.

பெண்ணினம் பேசுகிறது

சிறையில் தள்ளுங்கள் — நான் அங்கு இருக்கிறேன் — கடுஞ்சிறையில் வதைபடுவது இந்தக் கிழவனுக்கு வாழ்க்கைப்படுவதைவிட, எவ்வளவோ மேலானது!

பெண் பேசினாள் — வழக்கு மன்றமேறி—ஆண்மையுடன்— அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றவர் நாம் என்று எண்ணிக் கிடக்கும் ஆடவர் கூட்டம் அச்சமும் ஆச்சரியமும் கொள்ளும் விதமாக ஆரணங்கு பேசினாள் — தள்ளுங்கள் சிறையிலே, தள்ளவேண்டாம் பொருந்தாத் திருமணம் என்ற படுகுழியிலே!—என்று பேசினாள்.

அவள் இளமங்கை! ஐம்பதாண்டுக் கிழவனுக்கு அவளை மணம் செய்விக்க, ஏற்பாடு நடந்தது— நாட்டிலில்லாத வழக்கமா — நமது புண்ய ஏடுகளிலே இல்லாத சம்பவமா! என்றஎண்ணம் அவர்களுக்கு; எனவேதான், இளமங்கையைக் கிழவனுக்குத் தாரமாக்கத் துணிந்தனர்- எத்தனையோ முறை நடந்த காட்சி தானே இது—துடியிடை துவளும் அவளுக்கு—அவன் உடலிலேயோ முதுமை நெளியும், எனினும் மணவறையில் இருவரும் இருப்பர்— எதிரே 'அக்னி' தேவன் இருப்பான், ஐயர் இருப்பார் மந்திரம் ஜெபித்தபடி, உற்றார் பெற்றோர் இருப்பர் உருட்டும் விழிகளுடன், ஊர்ப் பெரியவர் இருப்பர், ஊமைகளாய், தாலிக்கயிறு இருக்கும், மேளம் இருக்கும் — அவள் அவனுக்கு மனைவியாவாள் — பட்டுப் போகும் மரத்துக்கு பச்சைத்தளிரை ஒட்டவைப்பர்! பெண் அழுவாள், ஏதும் பேச முடியாமல் — கிழவன் களிப்பான், பெற்றோரும் மற்றோர் வெற்றி என்று! முதுமையை அவள் விரும்பாள் என்பதற்காக, அவள் விரும்பும் மோகரா மாலையும், தங்க வளையலும், தலைக்குக் கல்லிழைத்த நாகமும், தந்திருப்பான், பணம் படைத்த கிழவன்! பெற்றோர், பெண்ணின் கணவன் கிழவன், எனினும் அவன் பூட்டிய நகைகள் தங்கம், என்று பேசி மகிழ்வர்!

இதே போலத்தான் இந்தத் திருமணமும் என்று எண்ணினர்— பெண்குலம் விழிப்படைந்துவிட்டது என்பது அறியாத, அப்பேதையர்.

பெண் பேசினாள்—பெண் குலத்தின் மனதை அறிவிக்கும் குரல் கேட்டது — முரசு ஒலித்தது, புதுமை முரசு!

இந்தக் கிழவனைக் கலியாணம் செய்து கொள்வதைவிட, சிறையில் இருப்பதுமேல் என்று நான் எண்ணுகிறேன், என்று கூறினாள்.

திகைத்தனர், பிரமுகர்கள்! தீப்பட்டவர்போல் துடித்திருப்பர், பழைமையில் நெளியும் பண்பினர்! அவள் உண்மையைக் கூறிவிட்டாள்— உள்ள உரத்துடன் — சிறைமேல், இந்தக்கொடிய வாழ்க்கையைவிட!!

எவ்வளவு துணிவு!—என்று ஆர்ப்பரித்திருப்பர், ஆதிக்கம் தேடும் ஆடவர்கள். பெண்குலத்தில், ஓரளவு தெளிவு பெற்றவர்களும், புன்னகை புரிந்திருப்பர், பேசினாள் பெண்ணொருத்தி, வீரத்துடன்— என்று மகிழ்ந்துரைத்திருப்பர்.

கலியாணம் நிறுத்தப்பட்டுவிட்டதாம்.

சின்னாட்களுக்கு முன்பு பத்திரிகைகளிலே, இந்தச் செய்தி வெளிவந்ததை நண்பர்கள் பார்த்திருப்பர்.

புத்துலகப் பெண்ணின் போக்கைப் பாராட்டுகிறோம்.

ஆனால் சிறும் சிறுத்தையை எதிர்த்திடும் போராற்றல் எல்லோருக்கும் ஏற்படமுடியுமா! சிறு மதியாளரின் சீற்றத்தைக்கண்டு அஞ்சி, வயோதிகனுக்கும், பிணியாளனுக்கும், பித்தனுக்கும், பெருங்குடியனுக்கும், பெண் குலத்தைக் கொடுமைக்காளாக்கும் போக்கினனுக்கும் வாழ்க்கைப்பட்டு, வதைந்து வருபவர்—வாழா வெட்டிகளாகி இகழப்படுபவர், வாழ்வின் வழியைத்தவறி இழிநிலை பெற்றவர், எத்தனை பேர்! அனைவராலும் முடியுமா, அந்தப் பெண்போல, சிறையிலே தள்ளுங்கள்! என்று பேச! சிந்துவர், கண்ணீர்—நொந்து கொள்வர் விதியை!!

ஆண்களின் சாகசப் பேச்சைக் கேட்டு மனதைப் பறி கொடுத்திடும் போக்கிலிருந்தே மாற முடியாது திண்டாடும் திருமதிகளைத்தானே ஏராளமாகப் பார்க்கிறோம்.

திருமதிகள் என்பது-பழைமைப் பிடியினின்றும் ஓரளவு நீங்கிய நிலையினரை! பழைமையின் பிடியிலே சிக்கியுள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்கள், எப்படித், தப்பித்துக் கொள்ள முடியும், பொருந்தாத் திருமணத்திலிருந்து — விரும்பாதவனை மணம் செய்துகொண்டு வேதனைப் படுவதிலிருந்து.

சிறையில் வேண்டுமானால் தள்ளுங்கள், என்று எல்லாப் பெண்களுமா, பேச முடியும்? மொழி குளறுமே—விழியல்லவா பேசும்— விளங்காத மொழியாயிற்றே அது விபரீதபுரியினருக்கு!

பெண்களின், மனதிடத்தை மட்டுமே பொறுத்துத்தான், இந்த விபத்துத் தவிர்க்கப்பட முடியும் என்ற நிலை இருக்குமானால், பத்தாயிரத்திலே ஒரு பெண் கூட, படுகுழியிலிருந்து தப்புமா என்பது சந்தேகம். பகுத்தறிவாளர்கள் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை, பெண் குலத்துக்கு இப்பேராபத்து வாராதபடியான சமுகத்தை அமைக்க உதவ வேண்டும்.

எப்பக்கமிருந்து எத்தகைய துஷ்ட மிருகம் எந்தச் சமயத்தில் வருமோ, தெரியாது, உயிர் தப்ப வேண்டுமானால், ஓங்கி அடித்து அதனைக் கொல்லவோ, விரட்டவோ, துணிவும் ஆற்றலும் இருக்க வேண்டும் நாட்டினருக்கு, என்று கூறிடும் துரைத்தனத்தார் இருப்பது, அர

சுக்கு அழகாகுமா! காட்டு மிருகங்கள் நாட்டிலேபுகமுடியாதபடி, காவலும் நிலைமையும் முன்னதாக அமைத்துத் தருவதன்றோ அரசின் இலட்சணம்! அதுபோலவே, பெண் குலத்தைக் கெடுத்திடும் முறைகளை நாட்டிலே உலவவிட்டு, பெண்ணுக்குத் துணிவு இருந்தால் தப்பிப் பிழைக்கலாம், இல்லையேல், வந்ததை அனுபவிக்கவேண்டியதுதான் என்று பேசுவது, பேதைமை அல்லவா — பேதைமை மட்டுமா, பெருஞ் சூதுமாகும்.

* * *

மாலை மதியம் மேலே! மந்தமாருதம், சுற்றிலும் வீசுகிறது—மலர் மணம் கமழுகிறது! காதலரின் கண்களிலே கீதம்! அவர்கள், இன்பபுரியின் வாயிலில், சென்றுகொண்டுள்ளனர். புன்னகை! முற்றுப்பெறாத வாக்கியங்கள்! மோகனப் பார்வை! உள்ளம் களிப்புக்கடலாகிறது! எதிர்பார்த்த விருந்து இதுதான், இதைப் பெற எத்தனை பகல் ஏங்கிக் கிடந்தேன்—எத்தனை இரவுகள் தூக்கமின்றித் துக்கித்துக் கிடந்தேன். எத்துணை தொல்லைகளை, துயரங்களை, ஆபத்துகளை, தடைகளைத் தாண்டி இந்தப் பூந்தோட்டம் புகுந்தேன்—இன்றன்றோ பிறவியின் பயனை அடைந்தேன்—இஃதன்றோ, வாழ்க்கையில்பெறவேண்டிய வெற்றி; இனியன்றோ இகத்திலேயே பரம் காணப்போகிறேன்—என் இன்பமே! செல்வமே! தேனே! தென்றலே! தேயாத திங்களே! வாடாத மலரே! என்றெல்லாம், அவன் பேசுகிறான்-பேசுகிறாள்!—பாடுகிறாள்!!

அவள் அவ்வளவு பேசவில்லை—ஆனால் அந்தப் பார்வை, அதைவிட அதிகமாகப் பேசுகிறது—புன்னகை, புதியதோர் அகராதியாகிறது.

இருவரும் இன்புற்று, உலகிலே இணையற்ற நிலைபெற்றோம் என்று எண்ணி உலவுகின்றனர். காதலில் வெற்றி பெற்றனர். அவர்கள் கண்ணெதிரே எதிர்கால வாழ்க்கை, அழகுடன் தெரிகிறது. இளவேனிற் காலம் அது.

இலையுதிர் காலம் வருகிறது—அதுமட்டுமல்ல, வாழ்க்கைச் சிக்கல் கிளப்பிவிடும் பெருங் காற்று, வீசுகிறது. அதே காதலர், 'தம்பதிகளான' பிறகு, இந்தப்பெருங்காற்றிலே சிக்கி விடுகின்றனர்—பிறகோ!

சனியனே! தொல்லை தருவதேதானா வேலை! ஏன் இப்படிச் சிக்கிக்கொண்டேனோ தெரியவில்லை! காவி கட்டிக்கொண்டு காசி, ராமேஸ்வரம் போனால், போகிற கதிக்காவது நல்லது—என்றெல்லாம் அவன் பேசுகிறான். ஆம்!—அவனேதான், அன்று கூந்தலைக் கோதினவன், நெற்றி வியர்வையைத் துடைத்தவன்–நீயன்றி வேறோர் நீள்விழியாளைக் கண்ணாலும் பாரேன் என்று கூறினவன்—காதலன்—கணவனானான், குடும்பம் எனும் கலத்தை, வாழ்க்கைக் கடலிலே செலுத்தினான்—அவன் சுகபுரிக்குச் செலுத்தினான் கலத்தை, ஆனால் சூறாவளி, கலத்தை இடர்புரிக்கேதள்ளிற்று—எனவே, அன்புமொழி பேசினவன், ஆத்திரமொழி பேசி, அவளை அழவைக்கிறான். பாபம்! அந்தக் கண்ணீருக்குத்தான் எவ்வளவு தீய குணம், அவளுடைய கண்ணாடிக் கன்னத்தைக் கன்றாவிக் காட்சியாக்கி விட்டது.

கூடத்திலே கோபம்—சமயற் கட்டிலே சோகம்—கிணற்றடி சென்றால் கண்ணீர்—கிள்ளைமொழிக்குழந்தைகளைக் கண்டால், நெஞ்சக் குமுறல்—இந்நிலை பெறுகிறாள்—வாழ்க்கை இன்பத்தை எதிர் பார்த்து ஏமாந்த பெண்.

இந்நிலையிலே, அன்பே! இன்பமே எனும் விளிகள் இருக்குமோ! நாயே! பேயே! நாசகாலி! நயவஞ்சகி!—எனும் தூற்றல் பாணங்களே, அவள்காதைத் துளைக்கின்றன.

அன்று அவர்களைக் காதலர்களாகக் கண்டவர்கள், இந்நிலை பெற்றபோது கண்டால், என்னென்ன எண்ணுவர், ஏதேது பேசுவர்!

காதலின் மாண்புக்கு, எடுத்துக் காட்டாக விளங்கினவர்கள்—வையகத்திலே வானகத்தைப் பெறமுடியும் என்று பலருக்கும் கூறியவர்கள், இவர்களா இன்று இங்ஙனம் இருப்பது!

சோலையிலும் சாலையிலும் ஆடிப்பாடி அகமகிழ்ந்திருந்தவர்கள், இதுபோது, சண்டை சச்சரவு செய்துகொண்டுள்ளனரே—கூக்குரலும் கோவெனக் கதறலும் கேட்கிறதே-குடும்பமாகத் தெரியக் காணோமே, சிறு காடுபோலாகிவிட்டதே—ஏனோ இந்நிலை பெற்றனர்? என்று, எண்ணிடுவர், பேசிடுவர் பலரும்.

உள்ளத்திலுள்ளதை எடுத்துக் கூறிடின், ஊர் பழிக்கும், உற்றார் உறவினர் தூற்றுவர், என்று அஞ்சி, பெண் ஏதும் கூறாள்!—ஆனால் நம்பிக்கை பிறக்குமளவுக்கு நட்பும், துயர் கேட்டுத் துடைக்கும் தூய உள்ளமும் கொண்டதோழி ஒருத்தி கிடைத்தால், மெள்ள மெள்ளக் கூறுவாள், பூந்தோட்டம் பாலைவனமான விபரீதத்தை—விருந்துக்கு அழைத்துச் சென்றவரால் விபத்து நேரிட்டதை— எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக வாழ்க்கை அமைந்ததை—கண்ணீர் சிந்திய காரணத்தை.

அன்பு குறையாது என்று ஆயிரம் தடவை சத்தியம் செய்தாரடி அம்மா! எலும்பும் தோலுமாக நான் இன்று ஆனதற்குக் காரணம், அவர் என்னைத் துன்புறுத்தியதுதான்.

மாடிவீடு என்றார் தன் மனையை;—மாட்டுக் கொட்டகை என்பது குடிவந்தபிறகே தெரிந்தது! வயல் உண்டு வளமானது என்றார், வந்து பார்க்கிறேன் வெட்டவெளிதான், அதுவும் வேற்றவரிடம் கடனுக்குச் சிக்கி இருக்கிறது! படிகறக்கும் பசு என்றார்! எருமையடி, அதுவும் மலடு! ஊர்க் காவல் வேலை என்றார், ஊர் சுற்றிவருகிறார், வேலையல்ல! பொன் உண்டு, மணியுண்டு; பூசுதற்குச் சந்தனம் உண்டு என்றார்—எல்லாம் ஆற்றோரப் பாதையிலே அழகு தரும் பேச்சாக முடிந்தது. வேலை வெட்டியிலான், சேலை கட்டியவளைக் கண்டால் சிந்தையை இழந்திடும் சிறு மதியான், கோல் கொண்டு குடும்பத்தை நடத்துவதே மேலான முறை எனும் குணம் கொண்டான்; இவனுக்கு வாழ்க்கைப் பட்டேன், இக்கதி அடைந்திட்டேன்—என்று கூறுவாள், அழுகுரலில்.

குடும்பத்திலே, அதிலும், நமது நாட்டிலே, திருமண முறையிலே தெளிவும் திருவும் கலந்திடாத நிலையிலுள்ள நமது நாட்களிலே, இத்தகு இடர்ப்பாடுகள் அதிகம்.

'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு விளக்கு ஏற்றிவைப்பது'தானே ஆன்றோர் மொழியும் வழியும்! அதன் பலனை, அழுகுரல், அடிதடி, உருவிலே காண்கிறோம், எண்ணற்ற

குடும்பங்களிலே. பெண் குலத்துக்கு, பக்குவமும் பண்பும் தரும் படிப்பு அதிகம் தரப்படாததால், கண்ணீரைத் துடைக்கக் கந்தன்முன் வருவான், (கந்தன், கடவுளின் பெயர்) காளி துணை செய்வாள், கார்த்திகை விரதம் பலிக்கும், ஆடி போய் ஆவணிக்குள், அவருடைய கிரஹம் நல்லது செய்யும், என்று ஏதேதோ நம்பிக்கைகளை வருவித்துக்கொண்டு, தொட்டிலை ஆட்டிக் கொண்டு, வாழ்க்கைச் சுமையைத் தாங்கிக் கொள்கிறார்கள்.

காதல் விளையாட்டில் ஈடுபடும் போதே, உண்மை நிலைமை என்ன, வாழ்க்கையில் ஈடுபடும்போது எந்த வகைச் சுற்றுச் சார்பு இருக்கும், எத்தகைய இடையூறுகள் ஏற்படக் கூடும் என்று, விளக்கமாக்கப்பட்டிருந்தால், காதலர், தம்பதிகளான பிறகு, சோலையில உலவியது குடும்ப வாழ்க்கையாக மாறிய பிறகு, இதயத்தை வாட்டும், நிலைமை இராது.

கல்லும் முள்ளும் நிரம்பியதுதான் — கடினமான பாதைதான், கஷ்டம் பல உண்டுதான், இவையாவும் எதிர்பார்த்தவைதான், என்று மன ஆறுதல், இவைகளைச் சமாளித்தாக வேண்டும் என்ற துணிவும், இவைகளைப் பொருட்படுத்தலாகாது என்ற மனப் போக்கும், கஷ்டத்தைத் தாங்கும் சக்தியும், அந்தக் குடும்பத்தினருக்கு ஏற்படும். ஆனால் 'காதலர்' நிலையிலே, கண்டபடி புளுகிவிட்டு, காரிகை கிடைத்த பிறகு, கடிமணமான பிறகு, வீடு, காடு போலிருக்குமானால், வேதனை அதிகரிக்கத்தானே செய்யும். திருமணமோ ஆகிவிட்டது, எனவே ஏக்கமோ துக்கமோ, விபத்தோ கஷ்டமோ, எதுவரினும் ஏற்றுக் கொண்டுதானே ஆகவேண்டும், இவள் இதற்காக அழலாமா, அழுது தொலைக்கட்டும், என்னைக் கேட்கலாமா? கேட்பதையும் இந்தக் குரலிலா கேட்பது, என்று கணவன் கடிந்துரைத்தால், புண்ணின்மீது சுடுநீர் ஊற்றுவதாகத்தானே தோன்றும்! இத்துடனும் நிற்பதில்லை, "எடி, குடிகேடி! என்னால் இடர்ப்பாடு வந்ததென்றால், ஓட்டம் பெருநடையாய் ஓடு, உன் தாய் வீடு!—என்று தூற்றித் துரத்துவான்—பிறகு வேறோர் தோகையைப் பிடித்தும் வருவான்!!

காதலர் நிலையிலே வாழ்க்கையைத் துவக்கிப், பிறகு, குடும்பத்தை உலைக்கூடமாக்கிக் கொள்பவர்களின் நிலையே இதுபோலவெனில், நம் நாட்டு, முறைப்படி நடக்கும் வைதீகத் திருமணத்தின் விளைவு எவ்வளவு அதிகமான வேதனை தரும், என்பதை அதிகம் விளக்கத் தேவையேயில்லை.

சோலையிலே ஆடி அறியார், ஜோதிடர் கைப்பாவையாகி, வாழ்க்கையிலே பிணைக்கப்படுகின்றனர். தரகர் பேச்சின் திறமையினால் தம்பதிகளாகின்றனர். பொருத்தம் பார்த்திடுவர், பூ, வைத்து; அகல் விளக்கு வைத்து; குருவி கூறிடும் இவர்கள் வாழ்க்கை இன்பமயம் என்று; இல்லையேல் குருக்கள் கூறிடுவார் கோவிந்தன், பிள்ளை பெயர், சாவித்திரி பெண்ணின் பெயர், ஐந்து எழுத்து இரண்டுக்கும் அருமையான பொருத்தம் உண்டு என்று ஐயர் சொல்லிவிட்டார், பல்லியும் நல்வாக்குக்கூறிற்று, வேறு எதனையும் வீணாக யோசிக்கலாகாது, வேளை இது நல்லது, நாள் பார் நல்லதாக, என்று பெற்றோர் சார்பிலே பெரியவர்கள் கூறிடுவர்—கொட்டு மேளம் உண்டு — குலப் பெண்டிர் 'ஆலம்' உண்டு—குங்குமம் மஞ்சள் உண்டு—குனிந்த தலை நிமிராத குணவதிக்கும் குருட்டறிவுக் கூனனுக்கும் திருமணம் நடந்திடும். இத்தகைய கலியாணத்தின் பலனாக அமையும் குடும்பத்திலே, எவ்வளவு கொடுமைகள் நிகழும்—எவ்வளவு காண்கிறோம், வாழ்க்கையில்.

"எப்படித்தான் இவன் இவளை மணம்செய்துகொண்டான்?" என்று கேட்டிடின், "என்னப்பா விந்தையான கேள்வி கேட்டாய். அவள் அவனுக்கு வாழ்க்கைப்பட வென்று அன்று அவன் எழுதியது தப்புமோ!" என்று பதிலுரைப்பர்.

அவள் தங்கம், இவன் கருமை—அவள் அழகி, இவன் குரூபி—அவள் செல்வி, இவன் வறியன்—அவளுக்கு இவன் ஏற்றவனாகானே, என்று காரணம் பல காட்டிப் பேசினாலோ, யாரார்க்கு யாரார் என்று இருக்கிறதோ யாரறிவார்! என்று கூறிடுவர், கூசாமல்.

அடிப்பான் வெறியன்—அழுவாள் வெகுளி — அலைவான் குடியனாய், புலம்புவாள் பத்தினி! இவர் வாழ்க்கை இதுபோல வேதனை நிரம்பியதாய் இருக்கிறதே என்று பேசுவர்—பேச்சின் முடிவிலே, அவள் எழுத்து அவ்விதமாய் அமைந்ததுகாண் அம்மானை, என்றுதான் இருக்கும்.

கருத்தற்ற முறையிலே பொருத்தமற்ற விதத்திலே, நடைபெற்ற திருமணங்கள், பெண் குலத்தைக் கருக வைத்திருக்கிறது. கண்ணீர்பெருக்கி, கைகூப்பித் தொழுவர், கண்ட கோயிலிலெல்லாம்! கிணறுகளிலே வீழ்வர்! கயிறு தேடுவர், உயிரைப் போக்கிக்கொள்ள நஞ்சுண்டு இறப்பர்! நெருப்பை இட்டுக் கொள்வர்! இந்தக் கொடுமைகள் மட்டுமா, விபசாரப் படுகுழியிலேயுங் கூட வீழ்கின்றனர்!

இந்த விபரீதங்களைக் கண்டு கண்டு, கலக்கமுற்று, பெண்ணினத்தை இந்தப் பேராபத்தினின்றும் காப்பாற்ற, எண்ணினவர்கள், அவர்களின் அல்லலைத் துடைக்க அறிவுலகத்தின் போக்கை அறிந்து, சில பல யோசனைகளைக் கூறினர்.

(அடுத்த பக்கம் பார்க்க)

நடிகருக்குப் பாராட்டு

—*—

"வேலைக்காரி"யில் திறம்பட நடித்து மக்கள் மனதைக் கவர்ந்த நடிகமணி K. R. இராமசாமியைப் பாராட்டுவதற்கு K. R. R. பாராட்டுக் கமிட்டி சார்பில் வடசென்னை ராபின்சன் பார்க் மைதானத்தில் 22—5—49ந் தேதி ஞாயிறு மாலை 5-மணியளவில் ஷை கமிட்டித் தலைவர் தோழர் P. இராமசாமி தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். பல சங்கங்களின் சார்பில் பாராட்டு மடலும் கமிட்டி சார்பில் ஒரு வெள்ளி ஷீல்டும் நடிகமணி அவர்களுக்கு அளிக்கப்படும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், இரெ. இளம்வழுதி ஆகியோர் பாராட்டிப் பேசுவார்கள்.

அன்பர்கள் அனைவரும் வருக!

V. T. பெரியசாமி,
T. V. சுந்தரமூர்த்தி
செயலாளர்கள்.

அவைகள், பலகாலமாகப் பேசப்பட்டு, விளக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, வைதிகப் போக்கினரின் எதிர்ப்புரைகளுக்குத் தக்க பதிலுரைகள் தரப்பட்டு, பிறகே, சட்டம் செய்வதற்கான நிலையும், அதற்கான உருவும் பெற்றன. அதன்படி, பெண்களின் விடுதலைக்குத் தேவையானவைகளென்று, பாலிய விவாகத்தைத் தடைசெய்யும் சாரதா சட்டம் பிறந்தது. சாய்ந்தது சனதனம்—வீழ்ந்தது நம் மதம்!—என்று வீறிட்டெழுந்து கூவினர் வைதிகர்—சட்டம் இவர்தம் சந்தடியைச் சட்டைசெய்யவில்லை. சாரதா சட்டம், பெண்ணினத்தின் கண்ணீரை, ஓரளவு துடைக்கப் பயன்பட்டது. கையில் கனிகொடுத்து, காக்கை குருவி காட்டி, கழுத்திலே தாலிகட்டிய, கொடுமையான காட்சிகள் ஒழிந்தன! மலர் செருகக் கொண்டையும், மைதீட்டும் பருவமும், மையல் ஊட்டும் பக்குவமும் வந்தபிறகு, 'மகளே! நீஅறியாய்! உன்னை மாலையிட்ட மணவாளன் மாரடைப்பால் மாண்டுவிட்டான்! கோலமயிலே அழாதே! கொடும் விதி அவ்விதம் செய்தது! மலரை வீசிவிடு, மாதாவை பஜித்திடு! பக்தவிஜயம் படி! பர்த்தாவின் பாதம் சேர்வாய்!!'—என்று பாட்டிமார் கூறக்கேட்டு — அப்போதுதான், தானேர் அமங்கலை என்ற செய்தியைக் கேட்டு, செந்தேள் கூட்டம் சேர்ந்து இதயத்தைக் கொட்டினது போலப் பேதைப்பெண், பெற்றோரின் மூடமதியால் விதவையாக்கப் பட்டவள், வேதனைப்படும், விபரீதம் ஓரளவுக்குக் குறைந்தது. ஆனால் இவை போதுமானவைகளாகவில்லை, பெண்ணினத்தின் பெருந்துயரைப் போக்க. எனவே, அவர்களின் வாழ்வைச், செம்மைப்படுத்த, இருதார மணத்தைத் தடைசெய்வது, விவாக விடுதலைக்கு வழிசெய்வது, சொத்துரிமை, என்பன போன்ற அடிப்படை உரிமைகளைத் தர, மத்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும், முன்வரலாயின.

பெண்குலத்தின் துயரை அவர்களே அறியும்படியும், ஆடவர்களும் அறிந்து அனுதாபம் காட்டும்படியும், இந்திய பூபாகத்திலே, பிரம்ம சமாஜம் போன்ற சில இயக்கங்கள், வேறிடத்திலே ஓரளவு பணிபுரிந்தன என்ற போதிலும், தென்னாட்டைப் பொறுத்தமட்டில், இந்தப் பிரச்னையை, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பொது மக்களிடம் விளக்கிப்பேசி, சீர்திருத்தத்துக்கு ஆதரவு திரட்டியவர்கள், சுயமரியாதைக்காரர் தவிர, வேறு யாருமில்லை. தனிப்பட்டவர்கள், சிலபலர் இருக்கலாம், பெண்களின் விடுதலை பற்றிப் பேசினவர்கள் — தத்தம் குடும்பத்திலே வழங்கினவர்கள். ஆனால் வைதிகர்கள் வசைமாரிபொழிவதைப் பொருட்படுத்தாமல், சனதனிகள் சபிப்பரே என்பது பற்றிச் சட்டைசெய்யாமல், கயவரின் தாக்குதல், கசடரின் தூற்றுதல், பாமரரின் பீதி, அரசியல் விரோதிகளின் அங்கலாய்ப்பு எனும் எதனையும் பொருட்படுத்தாது, பெண்ணினம் விடுதலை பெறவேண்டும், அவர்களைக்கண்ணே! கரும்பே! கனிரசமே! என்று கவிபாடிப் புகழ்ந்துவிட்டால் போதாது, சாவித்திரி, சீதா, அகல்யா, அன்சூயா, என்று ஆசீர்வதித்துப் பயனில்லை, அவர்களை ஆடவரின் இரையாக்கும் அநீதியைத் தொலைக்க வேண்டும், அதற்காக அவர்களுக்கு, விவாகவிடுதலை உரிமையும், சொத்துரிமையும் தந்தாகவேண்டும், என்று துணிந்து கூறிவந்தவர்கள், தூற்றலுக்கு ஆளான சுயமரியாதைக்காரர்கள் தான்.

அவர்களின் அகமகிழும்படியும், அறிவுலகம் பூரிக்கும்படியும், ஆரணங்குகள், இனித்தங்கள் குலம் கொடுமையினின்றும் மீளும் என்ற புதுநம்பிக்கை பெறும்படியும், விவாகவிடுதலை, சொத்துரிமை, எனும் திட்டம்கொண்ட, சட்டம், தீட்டப்பட்டது. அடிமைத்தளை அகன்ற நிலையை நாடுபெற்ற நேரத்தில், பெண்களின் மீது பூட்டப்பட்டுக்கிடக்கும் தளைகளையும் நீக்குவது, மிகப் பொருத்தம் என்று பலரும் கூறினர். ஆனால், வைதிகப் போக்கினர், வழக்கம் போல் எதிர்க்கலாயினர்—அவர்கள் காட்டிய காரணங்களோ, புளித்துப் போனவைகளே!!

புராதனக் கோட்பாடு போய்விடுமாம்!! புதுமை மோகத்தின் விளைவாம்!! மதத்தைக்கெடுத்துவிடுமாம்! தர்மம் நசித்துவிடுமாம்!

கோயிலைத் திறக்கச்சொன்னபோது கொக்கரித்த குணாளர்கள், இதே தானே கூறினர்! அவர்களேதான், இதற்கும் ஆர்ப்பரித்தனர்—இன்னும் ஓயவில்லை ஆர்ப்பரிப்பு! ஆகமத்தை வீசுகின்றனர் — ஆதி தருமத்தைச் சாட்சிக்கு அழைக்கின்றனர்—இவை போதாவென்று, இன்னோர் விசித்திரக்காரணமும் கூறுகின்றனர்—பெண்களே இதை விரும்பவில்லையாம்!!

பெண்கள், விடுதலையை விரும்பவில்லையாம்!! குடும்பத்திலே, கொந்தளிப்பைத்தான் விரும்புவர்போலும்!! அலையும் மனம்கொண்ட ஆடவனுக்கு வாழ்க்கைப்பட்டு, ஏனென்று கேட்கவும் துணிவற்று, துணிந்து கேட்டால், அடியும் உதையும்பட்டு, அழுதுகொண்டிருக்கும் அவதி நிறைந்த வாழ்க்கையைத்தான் விரும்புகின்றனர் போலும்! என்ன காரணம் காட்டுகின்றனரோ, இந்தக் கண்ணியர்கள், பெண்குலம், விடுதலையை விரும்பவில்லை என்பதற்கு! எப்படித் தெரிந்துகொண்டனரோ தெரியவில்லை.

எடுத்துக்கூறுவதற்கு முன்னால்,—விளக்கிக்காட்டாததற்கு முன்னால்,—பட்டிதொட்டிகளில் உள்ள பாமரன் விரும்புவதாகக் கூறினரா, சுயராச்சியத்தை! நம்பினரா சொன்னபோது? சுயராஜ்யம் கிடைக்கும் என்று கூறினரா?

நாட்டு விடுதலைப்படையை அமைத்து, பல ஆண்டுகள் விளக்கஉரை கூறியானபிறகுதான் ஓரளவுக்கு, பாமரன் புரிந்துகொள்ள முடிந்தது, விடுதலையின் மாண்புபற்றி, பாமரனின் மனம் தெளியவில்லை என்பதற்காக,விடுதலைப்போர் துவக்காமலிருந்தனரோ?

வெள்ளைக்காரன், கடைசி வினாடிவரையிலே கூறிக்கொண்டிருந்தான், "அரசியல் ஆதிக்க நோக்கம் கொண்டவர்கள்தான் சுயராஜ்யம் வேண்டும் என்று பேசுகிறார்களேயொழிய, இந்தியக் குடிமகன் வெள்

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram,

OFFICE ... BOOKS
10 JUN 1949
MADRAS

REGD M. 4642.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 22—5—49 | இதழ் 47

★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—5

எஸ். வி. லிங்கம்

பெரியார் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த சமயத்தில், ஆதித்திராவிடர்களின் தனித்தொகுதி முறை குறித்துக் காந்தியடிகள் இங்கே உண்ணாவிரதமிருந்தார். இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே, சென்னையிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ஆதித்திராவிடர் நிலைபற்றிச் சுயமரியாதை இயக்கத்தினரின் பிரசாரம் பலமாக இருந்தது. சென்னையில் காங்கிரஸ் கட்சியின் சட்டமறுப்புப் போரும் உச்சநிலையில் இருந்தது. ஆதித்திராவிடர்களைத் தங்கள் பக்கம் இழுப்பதில் காங்கிரஸ்காரர்கள் பல முறைகளைக் கையாண்டு பாடுபட்டார்கள். பணபலத்தின் போராட்டம் வளர்ந்து வந்தது. சூளையில் மூன்று நாலு தடவையும், பிராட்வே முதலான இடங்களிலும் நடைபெற்ற ஆதித்திராவிட ஊர்வலங்கள், பொதுமக்களின் பேரால் (கலகக்காரர்களால்) தாக்கப்பட்டன. இதை அப்போதைய சர்க்காரும் பார்த்து மவுனம் சாதித்தது. தோழர் பொன்னம்பலம் தலைமையில் அழகர்சாமி ஓர் பெரிய கூட்டத்தை ஏற்பாடுசெய்து அதைக்கண்டித்தார். சர்க்காரும்,காங்கிரஸ்காரரும்தங்கள் பலத்தைப் பரிசோதனை செய்யும் முயற்சியில், அவர்கள், ஏழை எளியவர்களான ஆதித்திராவிடர்களைத் தாக்குவது மிகவும் கொடுமையான காரியம் என்று அழகர்சாமி எச்சரித்தார். இந்த நிலைமை மேலும் நீடிக்குமானால், என்றேனும் ஓர் நாள் ஆதித்திராவிடர்கள் விழித்து, தங்களை மிருகங்களென எண்ணிக் கொண்டு தாக்கும் 'கனவான்கள்' யார் என்பதை அறிய நேரிடும் என்றும் எச்சரிக்கை செய்தார்.

காலஞ்சென்ற புரொபசர் லட்சுமநரசு, தர்மலிங்கம், இரட்டைமலை சீனுவாசன், மணியர் போன்றூர், இதுபற்றிப் பிரசாரம் செய்தார்கள். ஒரு மாதத்துக்குள் சர்க்காரும் காங்கிரசும் திகைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாக ஆதித்திராவிடர்கள் கேள்விமுறையின்றித் தாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியும் — செயலும் மறைந்துவிட்டன. ஆனால், மாகாண தலைநகரான சென்னையில், கதர்ச் சட்டையோ — காந்திக் குல்லாயோ அணிந்தவர்கள் பயமின்றி நடமாட முடியாமல் போயிற்று. அனியாயமாக அடிபடும் ஆதித்திராவி ர்களின் நிலையைக் கூட வெ..... மனமற்றிருந்த 'இந்து,' 'சுதேசமித்திரன்,' 'தமிழ்நாடு,' 'சுயராஜ்யா' முதலிய காங்கிரஸ் தினசரி ஏடுகள், ஒருவருக்கொருவர் இருக்கும் அபிப்பிராய பேதத்திற்காக ஒருவரை ஒருவர் அடிப்பது தவறு என்றும் நல்லமுறையில் சமாதானம் செய்துகொள்வது சிறந்ததென்றும், தலையங்கமும் உப தலையங்கமும் எழுதின. அதன் பின்னர் நிலைமை சாதாரணமாயிற்று.இந்தச்சமயத்தில்தான் காந்தியடிகள் பூனாவில் உண்ணாவிரதமிருந்தார்.பூனாவிற்குத்தோழர் சிவராஜும் போய்வந்தார். சென்னை எழும்பூர் ஏரி மைதானத்தில் தோழர் எம். சி. ராஜா தலைமையில் ஆதித்திராவிடர்கள் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது ஆதித்திராவிட மக்கள் ஆயிரக்கணக்கில் கூடினர். கருத்து வேறுபட்டிருந்த சகல ஆதித்திராவிடத் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். தனித்தொகுதி முறைபற்றிய தங்கள் கருத்தை ஓர் தீர்மானம் மூலம் சர்க்காருக்கு அனுப்பினர்கள். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அழகர்சாமியே முன்னின்று வேலைசெய்தார்.

* * *

தெ. இ. ந. உ. சங்கத் தலைவராக இருந்த காலஞ்சென்ற முனிசாமி அவர்களை நீக்கி, இராஜா பொப்பிலியைத் தலைவராகக் கொண்டு வர வேண்டுமென்பது சிலருடைய எண்ணமாக இருந்தது. ஜஸ்டிஸ் மகாநாட்டைத் தஞ்சையில் கூட்ட முடிவு செய்திருந்தார்கள். மகாநாடு நடந்தது. தெலுங்கு நாட்டிலிருந்து மட்டும் நாலைந்தாயிரம் பிரதிநிதிகள் இரண்டு கட்சிக்காகவும் வந்திருந்தார்கள். மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவர் பன்னீர்செல்வமாகும். பெரியார் இல்லாத காலத்தில் நல்ல பிரசங்கியாக இருந்தவர் அழகர்சாமி ஒருவர்தான். T. V. சுப்பிரமணியம் பொப்பிலியின் நண்பர். எனவே, அவர் அழகர்சாமியின் கூட்டுறவை விரும்பினார்.

தலைவர், பொப்பிலியா முனிசாமியா என்பது பிரச்னையாயிருந்தது. இருவரும் தெலுங்கு நாட்டார். அழகர்சாமி பொப்பிலியையே ஆதரித்தார். முனிசாமி காங்கிரஸ்காரர் என்பதற்காக எதிர்ப்பதாக அழகர்சாமி சொன்னார். மாநாடு தொடங்கியதும் இரண்டு கட்சித் தெலுங்கர்களும் மாநாட்டு மேடையில் முற்றுகையிட்டார்கள். "பொப்பிலி ஒத்து" என்பதே அவர்களின் கோஷமாகும். மாலை 3-மணிவரை அடிதடி—சண்டை - ஒரே குழப்பம்! இந்தச் செய்திகளையெல்லாம் காங்கிரஸ் பத்திரிகைகள் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு பெரிதாக்கிப் பிரசுரித்தன. குழப்பம் நடந்துகொண்டிருக்கையில் அழகர்சாமி மேடையில தோன்றி, இந்திராணி பாலசுப்பிரமணிம் அவர்களை தெலுங்கில் பேசும்படி கேட்டுக்கொண்டார். அம்மையார், "நாங்கள் பொப்பிலி கட்சியுமல்ல; முனிசாமி கட்சியுமல்ல. கட்சிக்கு ஓர் தலைவரைச் சமாதான முறையில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். மாநாடு இரவு ஒத்திவைக்கப்பட்டு மறுதினம் கூடும். பிரதிநிதிகள் வீண்விவாதமின்றி, மறுதினம் மாநாட்டுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்பதாகத் தெலுங்கில் பேசினார்கள். அன்று இரவுதான் மாநாட்டார் பொப்பிலி வெற்றிபெறவேண்டிய வேலைகளைச் செய்தார்கள். காலஞ்சென்ற திருச்சி இரத்தினவேலு அவர்கள் தலைமையில், திருச்சியிருந்து ஏராளமான பிரதிநிதிகள் தருவிக்கப்பட்டு, மறுநாள் மாநாடு நடந்தது. பொப்பிலி தலைவராக்கப்பட்டார். ஐரோப்பாப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கொழும்பில் வந்திருந்த பெரியார் இச்செய்தியைக் கேள்விப்பட்டதும், பெரிதும் வருத்தப்பட்டார். அதாவது: பொப்பிலியின் பண மகிமையால் அழகர்சாமி சு. ம. பலத்தை துர்வினியோகப் படுத்தினார் என்று யாரோ சொன்னதை கேள்விப்பட்டு, அதைக் காரணமாக வைத்துக்கொண்டே பெரியார் வருத்தப்பட்டிருக்கக்கூடும். ஆனால், பின்பு பொப்பிலி ஆட்சியில்தான் எதிர்பாராததையெல்லாம், பொப்பிலியே செய்யும்படி பெரியார் செய்து விட்டார்.

* * *

தனவணிகர் நாட்டில், அந்தக் காலத்தில் அடிக்கடி சுயமரியாதைப் பிரச்சாரம் நடைபெறும். ஒரு தடவை சுயமரியாதை மாநாடே அங்கு நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தோழர் சண்முகம் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டிருந்தார். சொக்கையா என்ற தனவந்தர் காரைக்குடி முனிசிபல் சேர்மனாய் இருந்தார். காரைக்குடியில் மாநாடு நடைபெறுவது அவருக்குப் பிடிக்கவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்பு செட்டிநாட்டில் "வல்லம்பர்கள்" என்ற முக்குலத்தோர்தான் தைரியசாலிகள். செட்டியார்களுக்குப் பணப்பெருக்கம் முரட்டுத்தனமாக இருந்தகாலம். அவர்களுடைய ஆதரவில் வீட்டுக்குப் பத்து வல்லம்பர் குடும்பத்தார் இருந்து வந்தார்கள். செட்டியார்களின் வியாபாரம், வீடு, தோட்டம் ஆகிய வேலைகளை எல்லாம் வல்லம்பர்களே பெரிதும் கவனிப்பார்கள், சில சமயங்களில் செட்டியார் இருவருக்குள் சண்டைவந்தால, வல்லம்பர்கள் குடும்பத்தில் முப்பது, நாற்பது பேர் என்று இரண்டு கட்சியாகப் பிரிந்து சண்டையிட்டுக்கொண்டு கோர்ட்வரை செல்வார்கள். கோர்ட் செலவு முழுதும் செட்டியார்களுடையதாகவே இருக்கும். இந்நாட்களில் வல்லம்பர்களில் படித்த இளைஞர்கள் பலர் தோன்ற ஆரம்பித்தார்கள். பெரும்பான்மையான செட்டியார்கள் வைதிகத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்.

இன்று சென்னை சௌகார்ப்பேட்டையில் எத்தனை மார்வாடி வீடுகள் உண்டோ, அதைவிட மூன்று மடங்கு ஐயர்மார் வீடுகள் வடநாட்டார் வீட்டிற்குப் பின்பக்கமோ அல்லது பக்கத்து ஸ்டோர்களிலோ இருப்பதைக் காணலாம். அதாவது, இரும்புப்பெட்டி இல்லாத மார்வாடி இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இரண்டு ஐயர்களாவது இல்லாத ஒரு மார்வாடி வீட்டைக்கூடக் காணமுடியாது. இது போன்ற நிலைதான் அன்று செட்டியார் நாட்டிலும் இருந்தது.

செட்டியார்கள் சுயமரியாதை மாநாட்டை எதிர்ப்பதில் ஒன்றுபட்டிருந்தார்கள். என்றாலும், செட்டியார்களில் இளைஞர்களாக இருந்தவர்கள் பெரும்பாலும் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்தார்கள். வெகு வேகமாகச் சீர்திருத்த மணங்கள் அங்கு நடைபெற்றன. தனவணிகப் பிரமுகர் திலகங்கள், தனித்தனியாக, அவரவர்களின் செல்வாக்குக்கு உட்பட்ட வல்லம்பர் தனவான்களிடம் சு. ம.க் காரர்களுக்கு இடந்தரக்கூடாதென்றும், எதிர்க்க வேண்டுமென்றும், அடிதடி ஆனாலும்கூடத் தாங்கள் பார்த்துக்கொள்வதாகவும் சொல்வார்கள். இந்த நெருக்கடியான நிலையில் மூன்று மாதத்திற்குக் குறையாமல் அந்தப் பகுதியில் சுயமரியாதைப் பிரசாரம் நடைபெற்றது. ஒரு தடவையாவது நாங்கள் அடிபட்டதுமில்லை, எங்கள் பொதுக்கூட்டம் கலைக்கப்பட்டதுமில்லை. "குமரன்" ஆபீசிலிருந்து, முருகப்பா, பிச்சையப்பா, சுப்பிரமணியம், பொன்னம்பலனார், அழகர்சாமி யாவரும் காரில் சென்றார்கள். முருகப்பா வீட்டிற்குப் போக வேண்டுமானால், ஒரு ஏரிக்கரையைத் தாண்டிச் செல்லவேண்டும். கார் போகும்பொழுது கற்கள் மள மளவென்று வீசப்பட்டன. உடனே காரை நிறுத்தி, கல் வீசியவர்களைப் பார்த்துவிட்டு, முருகப்பாவீட்டிற்குப் பத்திரமாகச் சென்றோம்.

தனவணிக இளைஞர்கள் அப்போது எங்களை ஆதரித்தார்கள்; பெரியவர்கள் வல்லம்பர்களைத் தூண்டிவிட்டு வம்புக்கிழுத்தார்கள். என்றாலும், எங்கள் முயற்சி வெற்றியடைந்து வருவதற்கும், பிரபுக்களின் முயற்சி தோல்வியடைவதற்

கும் காரணம், நாங்கள் தங்குமிடமும், சோறுசாப்பிடுமிடமும் பெரிதும் வல்லம்பர் கனவான்களின் குடிசைகளாகவே இருந்ததுதான். அடிக்கடி அந்தச் சமூக நாட்டாண்மைக்காரரிடம் சென்று பேசுவோம். செட்டியார்கள் எங்களை எதிர்ப்பதற்குரிய காரணங்களை அவர்களிடம் கூறும்போது எங்கள் வார்த்தைகள் அவர்களுக்கு இரக்கத்தையும் அன்பையும் உண்டாக்கக்கூடியனவாக இருக்கும். இவ்விதம் இராப்பகலாக, பொன்னம்பலம், அழகர்சாமி, சுப்பையா ஆகியவர்கள் வல்லம்ப சமூக நாட்டாண்மைக்காரர்களையே சிநேகிதம் பிடித்துவிட்டதால், தனவணிகப்பிரபு சிகரங்கள் புழுவாகத் துடித்தார்கள். இக்காலத்தில் வல்லம்பர்களில் இலட்சாதிபதியான உடையப்பா அவர்களும், பாகனேரி சாமிநாதன் M. L. A. அவர்களும் எங்கள் கூட்டங்களுக்கு பார்வையாளர்களாக வந்து, எங்களிடம் அவர்களுக்குள்ள அனுதாபத்தைக் காண்பிப்பதுண்டு.

சியாங்கே — ஷேக்கால் உத்தரவு இடப்பட்ட சீனப்பட்டாளங்கள், சீனக்கம்யூனிஸ்டுப் படைகளுடன் போரிடாமல் அவர்களுடன் சேர்ந்து நண்பர்களாகி விடுவதைக் கண்டு, சியாங்கே—ஷேக் பயந்து ஓடியதைப் போலவே, அன்று தனவணிகப் பிரபுக்களும் மனமுடைந்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உதவியைப் பெற்று எங்களை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

கடைசியாக, தனியாகப் போடப்பட்ட பந்தலில் மாநாடு சிறப்பாக நடந்தது. சண்முகம் அவர்கள் தலைமை வகித்து மாநாட்டை சிறப்பாக நடத்திக் கொடுத்தார், மாநாட்டில் நமது கட்சிக்காக ஓர் தமிழ்த் தினசரி நடத்த வேண்டுமென்று ஓர் தீர்மானத்தை அழகர்சாமிகொண்டு வந்தார். மாநாடு முடிந்தது. மறுநாள் சுயமரியாதை ஊழியர்களில் முக்கியஸ்தர்கள் தவிர, மற்ற அனைவரும் அவரவர்கள் ஊருக்குப்போய் விட்டார்கள். அதற்கு மறுநாள் பெரியாரும், நாகம்மையாரும் ஈரோடு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரண்டு நாட்களாக ஊழியர்களுக்குள் ஓர் பரபரப்பு; இவற்றையெல்லாம் பெரியார் கவனித்து வந்தார். அக்காலம் சுயமரியாதை இளைஞர்களுக்குப் பொதுவாழ்க்கை புதிது. கட்சியில் சிலர் நடப்பது, அவ்விதம் நடப்பதைக் கவனிக்க வேண்டியதை மௌனம் சாதிப்பது, இதெல்லாம் ஒரு புதிராக இருந்தது. ஒன்றுமில்லாமலேகூட, சிலர், அவரவர் மனப்போக்கின்படி பேசி எண்ணி வந்தார்கள். இவைகளெல்லாம் பெரியாருக்குத் தெரியும். ஆனால், நமது கட்சியின் மதிப்பு, அதன் வளர்ச்சியில் தனது திட்டங்கள் ஆகியவற்றை நன்குணர்ந்ததினால், பெரியார் மௌனமாகவே இருந்தார். பெரியார் தங்கியிருந்த வீட்டிற்கு எதிர்வீட்டில், சு. ம. ஊழியர்கள் யாவரும் ஒன்றுகூடினார்கள். எவ்வித சந்தடியுமின்றி அந்தவீட்டுத்தெருக்கதவு சாத்தப்பட்டே இருந்தது. சிவகாமி அம்மையார், பெரியார் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று நாகம்மையார் அவர்களை ஊழியர்கள்கூட்டத்திற்கு அழைத்து வந்தார். இந்த இரகசியக் கூட்டத்திற்கு அழகர்சாமியும், நடராசனுமே காரணமாயிருந்தார்கள். பெரியாரின் படைகள், பெரியாருக்குத் தெரியாமல், பெரியார் இருந்த வீட்டிற்கு எதிர் வீட்டில் பெரியார் மனைவியாரின் முன்னிலையில் கூடினார்கள். இக்கூட்டத்தைப் பார்த்ததும் நாகம்மையாருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதோடு, எதற்காகத் தனியாகக் கூடி தன்னை அழைத்து வந்திருக்கிறார்கள் என்ற சந்தேகமும் இருந்தது. அங்கு கூடியிருந்த சுமார் நாற்பைம்பது பேரில், முப்பது நாற்பது பேர் பெண்கள். இவர்களில் நாகம்மையாருக்குத் தெரியாதவர்கள் யாருமே இல்லை. எல்லோருமே ஏறக்குறைய நூறு தடவைக்கு மேல் ஈரோடுக்குச் சென்றவர்களாகும். தோழர் எஸ். இராமநாதன் எழுந்து, "தலைவர் பெரியாரிடமும், மற்றும் சிலரிடமும் உள்ள கருத்து வேறுபாட்டின் காரணமாக இங்கு கூடியிருக்கிறோம். மற்றும் இங்குள்ளவர்களும், உங்கள் உங்களுடைய எண்ணங்களைக் கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். உடனே தோழர் அழகரசாமி எழுந்து, "நமது இயக்க ஊழியர்களின் கூட்டம் இது. பெரியார் செய்கை பற்றி உண்மைப் பொருள் தெரியாதவர்களும், அவர் செயலில் கருத்து வேற்றுமையும், மனக்கசப்பும் கொண்டவர்களும் இங்கு கூடியிருக்கிறார்கள். என்றபோதிலும் அவரைத் தவிர வேறு தலைவரை மனதில் விளையாட்டிற்குக் கூட நினைக்காத கூட்டம் இது. எனவே இருக்கும் நிலையை எடுத்துப் பேசி, ஓர் நல்ல முடிவிற்கு வருவோம்" என்று கேட்டுக்கொண்டார். பொதுசேவைக்குப் புதிதாகவந்த அத்தனை வீரர்களும், தங்கள் மனத்திடை புகைந்ததையெல்லாம் பேசித்தீர்த்தார்கள். கூட்டம் பகல் இரண்டு மணிக்குமுடிந்தது. யாவரும் சாப்பாட்டிற்குச் சென்றோம். பெரியாரும் எங்களுடன் உட்கார்ந்து தான் சாப்பிட்டார். பகல் மூன்று மணிக்குப் பெரியாரும் நாகம்மையாரும் ஊருக்குப் புறப்பட்டார்கள். நாங்கள் யாவரும் புகைவண்டி நிலையம் வரை சென்று அவர்களை வழியனுப்பினோம். வழக்கப்படி நாலைந்து பேர் அவர்களோடு ஈரோட்டுக்குச் செல்வதுண்டு. அன்று யாரும் செல்லவில்லை. பெரியாரும் நாகம்மையாரும் ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். பின்னர் பெரியாரும் நாகம்மையாரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில்லையென்று கேள்விப்பட்டோம். இதற்குக் காரணம் என்னவென்று கேள்விப்பட்டதில், பெரியார் அன்று காரைக்குடியில் நடந்த விவரத்தைப்பற்றி நாகம்மையாரிடம் கேட்டதாகவும், அதைச் சொல்ல மறுத்ததால் இருவரும் பேசவில்லையென்றும் சொன்னார்கள். இப்படி மூன்று நான்கு மாதம்; ஒரு உயிர் இரண்டு உடம்பு என்று பேசிக்கொள்கிறார்களே! இது ஒப்புக்காகப் பேசிக்கொள்வதாகும். ஆனால், உண்மையில் ஒரே உயிராயிருந்த இரண்டு உடம்புகள் மூன்று மாத காலம் பேசிக்கொள்ளாமல்—ஆனால் அன்றாட வழக்கங்கள் யாவும் குளிப்பு, சாப்பாடு அனைத்துமே ஒழுங்காகநடந்துவந்தன. தனது கணவரைப்பற்றி மூன்று நான்கு ஆண்டுகளாக, தனது பிள்ளைகளைவிடப் பெரிதாக மதித்துப் பழகிய ஊழியர்கள் பேசிக்கொண்ட கண்டன மொழிகளை, தானே தனது கணவரிடம் சொன்னால், தன் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் பெரிய பிளவு ஏற்படும் என்ற பயமே, அன்று நாகம்மையாரை ஐபாவுடன் பேசமால் இருக்கும்படிச் செய்தது.

(தொடரும்)

கர்ஜனை புரியும் "கனம்"கள்

அமைச்சர்கள் உரத்தகுரலிலே பேசுகிறார்கள்-ஊரூருக்கும் சென்று—ஓயாமல்! கோபம், பயம், 'பிடிசாபம்' என்று மிரட்டும் போக்கு, இவை, ததும்பி வழிகின்றன அவர்களின் சொற்பொழிவுகளிலே.

அமைச்சர்களின் அதிகாரக் குரலுக்குப் பக்கமேளமாக, தூற்றல் பிரசாரத்துக்குத் 'தோடா' பரிசு பெற்ற, முரசுகள் பல உள்ளன. போகிற இடமெல்லாம், வீராவேசப் பேச்சுத்தான்!

ஒழித்துக்கட்டிவிடுவோம்-உருத்தெரியாமல் செய்துவிடுவோம்—என்னமோ, பாபம், என்று விட்டுவைக்கிறோம், என்று பேசாத பெருங்குணவான் இல்லை, அமைச்சர் குழுவிலே!

* * *

யார் மறுக்கிறார்கள், இவர்களுக்கு 'ஆற்றல்,' இருப்பதை, யாருக்குத்தான் இராது இந்த 'ஆற்றல்' அமைச்சரானால்! அதிகாரம் தரப்பட்டிருக்கிறது இவர்களிடம் — இவர்கள் உத்தரவிடலாம் போலீசுக்கு — அது போதுமானதாகத் தெரியாவிட்டால் பட்டாளத்தை அனுப்பலாம், சிறைக்கதவைத் திறக்கும் அதிகாரம் இருக்கிறது — பணத்தை அள்ளிவீசி, எதிர்ப்பிரசாரம் நடத்த வசதி இருக்கிறது; பதவியில் இருக்கிற காரணத்தால், இவர்கள் சில புதுச்சக்திகளைப் பெற்றுள்ளனர் என்பதை நாம் மறுத்ததில்லையே! ஏனோ, பாவம், இதைக் கூறிக்கொண்டே இருக்கிறார்கள்!! இவர்களுக்கு இன்றுள்ள ஆற்றலும் நமக்குத் தெரியும், அந்த ஆற்றல், பயன்படுத்தப் பயன்படுத்தப் பழுதுபடும், விரைவிலே பயனற்றுப் போகும் என்பது, அவர்களுக்குத் தெரிந்திருப்பதைவிட நமக்குச் சற்றுத் தெளிவாகத் தெரியும்! இதை ஏன், அமைச்சர்கள், தங்கள் அருமையான நேரத்தைச் செலவிட்டு, அதைவிட அருமையான மக்களின் பணத்தைப் பாழாக்கி, ஊராருக்குக் கூறிக்கொண்டே சுற்றவேண்டும்? ஒழித்துக்கட்டும் ஆற்றல் நிச்சயமாக இருக்கிறது — இருக்கிறதா இல்லையா என்பதா விவாதத்துக்குரிய விஷயம் இப்போது—யாரை அமைச்சராக்கினாலும் இந்த ஆற்றல் இருக்கத்தான் செய்யும் — நாட்டைப் பிடித்தாட்டிய வெள்ளைக்காரனுக்கு இருந்தது இந்த ஆற்றல், பக்தவத்சலங்களைச் சிறையிலே போடுவது முதற்கொண்டு பகத்சிங்கைத் தூக்கிலே போடுகிற வரையிலே இருந்தது—அந்த ஆற்றலைக் காட்டினார்கள், கூசாமல், குமுறாமல்; ஆனால் என்ன ஆனார்கள்? இலேசான பக்தவத்சலத்தைக் கனமாகக் கண்டார்கள்! அடக்கு முறையின் விசித்திரமான சக்தியே அதுதானே! வீசட்டுமே இதை, வீராப்புப்பேசும், அமைச்சர்கள் தாராளமாக—ஏன் அதைப்பற்றி, பன்னிப்பன்னிப்பேசுகிறார்கள்—யார் மெச்சிக்கொள்ள—யாரைத்திருப்திப்படுத்த — யாரை மிரட்ட!

இந்த மூன்றாண்டுகளாக, அமைச்சர்கள் என்ன, நம்மை உச்சிமோந்து முத்தமிட்டு உறவுகொண்டாடியா வந்தார்கள், இப்போதுதான் ஏதோ உக்கிரசேனர்கள் ஆகிவிட்டது போலப் பேசிவருகிறார்களே, பாபம்! எவ்வளவு அடக்குமுறைகள் உண்டோ அவ்வளவும் செய்துகொண்டுதானே வந்திருக்கிறார்கள்! எவ்வளவு தொல்லைகள், ஆபத்துகள் ஏற்படமுடியுமோ அவ்வளவையும் தாங்கிக் கொண்டுதானே வந்திருக்கிறோம். விளையாட்டுக் குழந்தையை மிரட்டுவது போல, என்ன செய்வோம் தெரியுமா—என்று பேசுவது எதற்கு என்று கேட்கிறோம்.

ஜனநாயகக் கோட்பாட்டை மதிக்கும் போக்கை மறந்து, குரோத மனப்பான்மை கொண்டவர்கள் என்னென்ன செய்யமுடியுமோ அவ்வளவு இடையூறுகளையும் செய்தவண்ணம் இருக்கும் இந்தக் 'கனம்கள்' கண்களை உருட்டியபடி இருப்பது ஏன்? அது ஒன்றுதான், பேசுவதற்கு இருக்கிறது, என்ற நிலைமையா? அடுத்த தேர்தலுக்காக இப்போதே சல்லடம் கட்டும் போக்கா? தங்களுக்குள்ள ஆற்றலைத் தாங்களே கவனப்படுத்திக்கொண்டு களிக்கிறார்களா!

நாடகத்திலே வருகிற ராஜாக்களுக்குக்கூடப் பாராக்குக்காரன் உண்டு; நமது மந்திரிகள், தங்களுக்குத் தாங்களே அல்லவா பாராக்கு கூறிக் கொள்கிறார்கள்! தன்கையே தனக்குதவி என்றாகிவிட்டது போலும் அவர்கள் நிலைமை.

அடக்கிவிடுவோம், அடக்கிவிடுவோம் என்று ஆர்ப்பரிக்கும்அமைச்சர்கள் என்ன குற்றத்தைக் காட்டுகிறார்கள் நம்மீது.

திராவிடர்கழகத்தார் நாட்டிலே பேசிக்கொண்டே இருக்கிறார்கள், இந்தச் சர்க்காரைக் குறைகூறி-இது ஒரு குற்றச்சாட்டு.

சொல்ல வெட்கப்படுவார்கள், வேறு நாடுகளிலே, அமைச்சர்கள். அங்கெல்லாம் அமைச்சர்கள் செய்கிற காரியங்கள், எதிர்க்கட்சியினர் கூடக் குற்றம் குறை கண்டுபிடிக்க முடியாத அளவு பொதுமக்களின் நன்மைக்கு உகந்ததாக இருக்கின்றன! இங்கு அமைச்சர்கள் செய்கிற

(13-ம் பக்கம் பார்க்க)

கர்ஜனை புரியும்

16-ம் பக்கத் தொடர்ச்சி

ஏதாவது செய்தாக வேண்டுமே! காங்கிரஸ் மந்திரிமார்களைக் குறை கூறவே அஞ்சுவர், பலர், அதிலும் இலஞ்ச இலாவணக் குற்றம் சுமத்தப் பலருக்குப் பிரியமே வராது,—துணிவும் ஏற்படாது. நாட்டுக்கு இன்னமும் நல்ல பிள்ளைகளாக — செல்லப் பிள்ளைகளாக இருக்கும் நிலை, காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களைக் குறித்து இவ்வளவு பலமான குற்றச்சாட்டு வெளிவருவதென்றால், சாமான்யமா? அதிலும், வெளிவந்தது, குறைகூறும் ஏடுகளில் அல்ல—எதிர்க்கட்சி ஏடுகளில் அல்ல—'இந்து'வில்!

'இந்து'வுக்கு, இந்தச் செய்தியை, யாரோ, வழிப்போக்கரோ, வம்புதும்பு செய்பவரோ, ஆதார அதிகாரம் பெறாதவரோ, அனுப்பியிருப்பரா—அப்படிப்பட்டவர் அனுப்பியதாக இருந்தால் 'இந்து' கண்ணெடுத்தாவது பார்த்திருக்குமா!

'இந்து'வில்வெளிவந்ததிலிருந்தே, அந்தச்செய்தி, எதிர்க்கட்சியினரோ, பொறுப்பற்றவர்களோ, அனுப்பியதல்ல, என்பது விளக்கமாகிறது.

'இந்து'விலேயே இந்தச் செய்தி வருகிறதென்றால்—வேறு யாராவது குற்றம் குறை கூறினாலும் சல்லடம் கட்டிக்கொண்டு சண்டைக்குக் கிளம்பும் 'இந்து'விலேயே இந்தச் செய்தி வெளிவருகிறதென்றால், சாமான்யமா?

'இந்து'வுக்காவது, பாபுவின் பேச்சா இது—காங்கிரஸ் மந்திரிமார்கள் மீதா இந்தக் குற்றச்சாட்டுக் கூறப்படுவது—என்ற துடிதுடிப்போ, சந்தேகமோ ஏற்பட்டிருந்தால், வெளியிட்டிருக்குமா செய்தியை!

துளியாவது, சந்தேகம் இருந்தாலும், உடனே, பாபுவுக்கு, ட்ராங் டெலிபோன் செய்து, இப்படி ஒரு செய்தி கிடைத்திருக்கிறதே, உண்மைதானா என்று, கேட்டு, விளக்கம் பெற, வசதி இல்லையா? செய்ததா? செய்யவேண்டுமென்ற எண்ணம் கொள்ளாமல், செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறது? 'இந்து'வும், இது சகஜந்தான் என்ற அளவிலேயே இருந்திருக்கிறது, என்பதுதானே.

மந்திரிமார்கள் வட்டாரத்திலும் அரசியல் அதிகாரிகளிடமும் இலஞ்ச இலாவணம் ஏராளமாக இருக்கிறது என்று பாபு ராஜேந்திர பிரசாத் கூறியதாக, மே 15-ந் தேதி 'இந்து'வில் வெளிவந்த செய்தி, செந்தேள் போலாகிப் பலரைக் கொட்டியிருக்கிறது. ஓடி இருக்கிறார்கள், போலும் பாபுவிடம். "என்னய்யா இது, இருக்கிற தொல்லை போதாதென்று, நீர் ஓர் தொல்லையை உண்டாக்குகிறீர். இப்படியா, நிருபர்களிடம் கூறுவது" என்று கேட்டிருக்கிறார்கள் போலும், மே 19-ந் தேதிய இதழில், பாபுவின் மறுப்புக் குறிப்பொன்று அதே 'இந்து'வில் வெளிவருகிறது!

அதிலும், என்ன கூறுகிறார் பாபு! எங்கள் மந்திரிமார்கள் மாசுமருவற்றவர்கள்; அவர்கள் இலஞ்சம் இருக்கும் திக்கும் நோக்காத திருமேனிகள், அவர்களைக் குறை கூறுவது மகா பாபம்—என்றா! இல்லை — இல்லை —நான் அப்படிச் சொல்லவில்லையே! நிருபர் என்னைப்பல கேள்விகள் கேட்டார், அவைகளுக்கெல்லாம் பதில் கூறினேன். அவர் கேட்ட கேள்விகளிலே ஒன்று, இந்த இலஞ்ச இலாவணத்தைப் பற்றியது. சென்ற சிலமாதங்களாகவே, நான் செல்லுமிடமெங்கும், மந்திரிமார்களைப் பற்றி இது போலக் கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன. அங்கெல்லாம், என்ன பதிலைக் கூறிவந்தேனோ, அதே முறையிலேதான் நிருபரின் கேள்விக்கும் பதில் கூறினேன்—அதாவது பிறரைக் குற்றம் குறைகூறி என்ன பயன்! ஒவ்வொருவரும் ஒழுக்கமாக நடந்துகொள்ளவேண்டும் — அப்போதுதான் இலஞ்ச லாவணம் ஒழியும், என்று சொன்னேன். இலஞ்ச இலாவணம் இருக்கிறதென்றால், நாம் அனைவருமேதான் குறைகூறப்படவேண்டியவர்கள் — ஒழுக்கம் வளரவேண்டும், அப்போதுதான் இந்தக்கேடு ஒழியும், என்று சொன்னேன். நிருபர்வெளியிட்ட விதமான வார்த்தைகளை நான் கூறவில்லை—என்று பாபு தெரிவிக்கிறார். ஓரளவுக்கு மன ஆறுதல் ஏற்பட்டிருக்கக்கூடும், ஆளவந்தார்களுக்கு, பாபுவின் மறுப்புரை கண்டு--ஆனால் அந்த ஆறுதல், அவர் அறிக்கையை மேலேழுந்தவாரியாகப் பார்த்தால் மட்டுமே ஏற்படும்—கூர்ந்து கவனித்தால், உண்மை துலங்கிவிடும்.

இலஞ்ச இலாவணமே கிடையாது—என்று பாபுராஜேந்திர பிரசாத் கூறவில்லை.

மந்திரிமார்கள் ஒழுக்க சீலர்கள், அப்பு அழுக்கற்றவர்கள் என்றும் கூறவில்லை.

மந்திரிமார்கள் மீது யாரோ வேண்டுமென்றே, அபாண்டமாகப் பழிசுமத்துகிறார்கள் என்றும் கூறவில்லை.

உலகிலே, பெரியவர்கள், சர்வசாதாரணமாகக் கூறுவார்களே, உபதேசம், அந்த முறையிலே, பேசுகிறார், இலஞ்ச இலாவணம் இருக்கிறதென்றால், அதற்கு எல்லோரும் தானே பொறுப்பாளிகள்—உலகம் அவ்வளவு கெட்டுப்போய்விட்டது--ஒழுக்கம் குன்றிவிட்டது — என்று பேசுகிறார்.

இலஞ்சம், வாங்குவது மட்டுமல்ல, கொடுப்பதும்தானே குற்றம் — வாங்குவது கொடுப்பது, மட்டுமல்ல, உடந்தையாக இருப்பது, தெரிந்தும் வெளியே தெரிவிக்காமலிருப்பது, எல்லாமுமே குற்றந்தானே — அந்த முறையிலே எல்லோருமே குற்றவாளிகள்தானே, என்று வாதம் புரிகிறார், பாபுராஜேந்திரபிரசாத்.

மந்திரிமார்களின் அப்பழுக்கற்ற தன்மையை அல்ல, அவர் கூறுவது, மற்றவர்கள் மட்டும் என்ன, மகா யோக்கியர்களா, பொதுவாகவே ஒழுக்கம் குன்றிவிட்டது, என்று குறைப்படுகிறார்.

இது எந்த விதத்திலே, மந்திரிமார்களின் மாண்பை உயர்த்துவதாகுமோ, நாமறியோம்.

இலஞ்ச இலாவணம் நடைபெறுவதாக, வதந்தி பலமாகி விட்டது—நாட்டுமக்களால் பேசப்படுகிறது, என்பது, பாபுவின் அறிக்கையின் மூலமே, விளக்கமாகத் தெரிகிறது.

அவரே கூறுகிறார், "போகுமிடமெல்லாம், இந்த இலஞ்ச இலாவணம் பற்றிய கேள்வி கிளம்பியவண்ணம் இருக்கிறது"—என்று.

என்ன இதன் பொருள்? அவ்வளவு சிரிப்பாய்ச் சிரிக்கிறது, சிலர்களின் நடவடிக்கை.

போகுமிடமெல்லாம், பாபுராஜேந்

திரபிரசாத் போன்ற பெருந்தலைவர்களிடம், இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள், மக்கள்.

போதாதா இது, இவர்களின் இலட்சணத்தை விளக்க!

பாபுவையும் நாம் கேட்கிறோம், உலகம் கெட்டுவிட்டது, எல்லோருக்கும் பாபத்தில் பங்கு இருக்கிறது, ஒழுக்கம் குன்றிவிட்டது, என்ற பொது போதனை புரிவது, இருக்கட்டும், ஒழுக்கத்துக்கு இருப்பிடம் என்றும், தூய்மையின் பிறப்பிடம் என்றும், தியாக ஊற்றென்றும், மக்கள் நலன் தவிர வேறொன்று அறியாப் பராபரங்களென்றும் போற்றப்பட்டவர்கள் ஆளவந்த பிறகு, இலஞ்சஇலாவணக் குற்றம், ஏன் இருக்கிறது? இருக்கலாமா? புகார் வரலாமா?

முன் கோவலன்–பின் கோவலன் என்று நாடகமாடுவார்கள் — நமது மாகாணத்திலேயோ, மந்திரி சபை அமைப்பு, நாடகத்திலே, மூன்று கோவலன்–இதற்குள் நாடகம் முடியவில்லை, இன்னும்! பெருமைக்குரியது தானு? பேசாமல் தான் இருக்க வேண்டுமா, இந்தக் காட்சியைக் கண்டு. பொதுமக்களுக்கு இந்த விஷயமாக, சிந்திக்கவும் பேசவும், உரிமையே கூடாதா?

மந்திரி சபைகள் மாறலாம் — அரசியலிலே அது நேரிடக்கூடாததல்ல, ஆனுல் நமது மாகாணத்திலே நேரிடுவது போலவா!

கொள்கை — வேலைத்திட்டம் — இவைகளில் கருத்து வேற்றுமை ஏற்பட்டா, மந்திரிசபை மாறுகிறது!

யாராருக்கு எந்தெந்தச் சமயத்தில், வலிவும் வாய்ப்பும், கிடைக்கிறதோ, அவர்கள் அமைச்சர்களாக வேண்டியது! அவர்களை அமைச்சர்களாக்கி வைக்க வேண்டியது! ஸ்பெஷல் டிராமா கண்ட்ராக்டர், ஒரு ஊரிலே, கராரக கனவேக கானகலாதர சுந்தரபாகவதரை ராஜபார்ட்டாக்கி நாடகம் நடத்துவதும், அதிலே கஷ்டமோ நஷ்டமோ ஏற்பட்டால், உடனே, நவரச நாடக திலக ஓரடி நாராயண பாகவதரைக் கொண்டு நாடகம் நடத்துவதுமாக இருப்பதுபோல, மந்திரி சபைகளை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்,— இந்த இலட்சணத்துக்கு, கோபம் வேறு—மிரட்டல் வேறு—!!

நாடு முழுவதும் சிரிப்பாகச் சிரிக்கிறது! நாலுபேர் கூடினதும், முதல் பேச்சு இதுவாகவே இருக்கிறது, நற்பண்புள்ளவர்கள், நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருக்கிறது என்று கூறி ஆயாசப் படுகிறார்கள் — இந்த அலங்கோலத்துக்கிடையே, ஒரு ஆணவ ஆர்ப்பரிப்பு, நமது கழகத்தைப் பற்றி.

கேலி செய்யாதவர்கள் உண்டா, இவர்களை—எத்தனை 'சிச்சி சிந்துகள்', எவ்வளவு கேலிப் படங்கள் இவர்களின் நிலையைப் பற்றி—நமது கழகப் பத்திரிகைகளிலே அல்ல— இவர்கள் ஆராதிக்கும் காங்கிரசிலே ஆராதனை செய்யும் ஏடுகளிலே.

இதோ 'கல்கி'—பிரித்துப் பார்த்ததும், என்ன காண்கிறோம்—காங்கிரஸ் ஆளவந்தார்கள் பெருமைப் படக்கூடிய சித்திரங்களா! இல்லையே! கேலி செய்யும் படங்கள்.



மண்டை ஏன் அவ்வளவு பெரிதாக இருக்கிறது என்று யோசிக்கிறீர்களா? மாபெருந் தலைவருக்கு மண்டைக் கர்வமாம்! — விளக்கமாகவே கல்கி தீட்டுகிறது, காங்கிரஸ் தொண்டரால் தலைமைப் பதவிக்கு வந்த மாபெரும் தலைவர், மண்டைக் கர்வம் கொண்டு மானத்தைப் பார்க்கிறார்.

மண்டைக் கர்வம்!—இதைப்படம் போட்டுக் காட்டிப் பரிகாசம் செய்கிறது 'கல்கி'—மாபெருந் தலைவர்களுக்கு, சாந்தமும் புன்னகையுந் தான் தவழுகிறது; நாம் இவ்வளவு ஆணவத்தோடு அல்ல, இவர்களை இணைத்து அணைத்துக்கொண்டு போகும் போக்கிலே, நியாயம்தானே நீர் சொல்லும் என்கிற பாணியிலே, பேசுகிறோம், உடனே, மாபெருந் தலைவர்களுக்கு, காரமான கோபம் வந்துவிடுகிறது, காட்டுகிறோம் எமதுபலத்தைஎன்று கர்ஜனைபுரியத் தொடங்குகிறார்கள்! எப்படி இருக்கிறது பாருங்கள் இவர்கள்சுபாவம்.

சட்டாம்பிள்ளை தலையிலே குட்டும் போது, சகித்துக்கொண்டிருக்கும் மாணவன், வகுப்புக்கு வெளியே, வந்ததும், 'நோஞ்சலான' பிள்ளையிடம், வம்புக்கு நிற்கிறானே, அதே போக்கல்லவா இது!

நோஞ்சலான பிள்ளை — என்றால் உண்மையிலேயே என்றல்ல பொருள் —நோஞ்சலாக இருப்பது போலக் காணப்படும் பிள்ளைகள்.

'கல்கி'யின் இந்தக் கேலிச் சித்திரம், கலாரசனையை ஊட்டுகிறது—

நமது பிரசாரமோ, இந்தப் பிரமுகர்களுக்கு, தீயாகச் சுடுகிறதாம்!

மாபெருந் தலைவருக்கு மண்டைக் கர்வம் பிடித்திருக்கிறது, என்று படம் போட்டுக் கேலி செய்யும், உரிமை இருக்கிறது கல்கிக்கு— அதைக் கண்டு கோபப்படாத பெருந்தன்மை இருக்கிறது, மாபெருந்தலைவர்களுக்கு—ஆனால், நாம், என்றாலோ, அவர்களுடைய வீரதீர பராக்கிரமம் வீறிட்டெழுந்து விடுகிறது—விட்டேனு பார் என்று கர்ஜிக்கிறார்கள்.

'கல்கி'—சட்டசபை அங்கத்தினர்களையும், விட்டுவிடவில்லை. இதோ பாருங்கள், சட்டசபை அங்கத்தினரை!—எதிரே நிற்கும வாக்காளரையும் பாருங்கள்!

வாக்காளர் தயவினால் சட்டசபை அங்கத்தினராக வந்த எம். எல். ஏ., பிரபு, அந்த வாக்காளரைத் துச்சமாக மதிக்கிறார்–என்று தீட்டுகிறது 'கல்கி.'

இதை யெல்லாம் கண்டு கனம்களுக்குச் சினம் பிறப்பதில்லை—கலை — ஓவியங்களை வளர்க்கிறது என்ற உற்சாகம் பெருக்கெடுத்து ஓடுகிறது—நம் 'பிரசாரம்' என்றால் உடனே, போடு 144–என்று கூறும், தர்பார் நடக்கிறது. இந்தப் போக்குக்கு, என்ன பெயர்? அகராதியின் உதவி போதவில்லை — நிச்சயமாகத் தான்.

காங்கிரசின் பேரால் சட்டசபைக்குள் நுழைந்திருப்பவர்களைப் பற்றி, 'கல்கி', என்ன கருத்து கொண்டிருக்கிறது – மதிப்புத் தருகிறதா அவர்களுக்கு, என்பதை விளக்கும் முறையிலே, மே முதல் தேதி ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது—நம்மீது சீறும் வீரர்கள், ஒருமுறை பார்க்கட்டும், யோசிக்கட்டும்—

எம். எல். ஏ., யாக உள்ளவர், பொதுமக்களின் நன்மைக்காகப்பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு, ஏய்க்கிறார், என்று, படம் தீட்டிப் பரிகாசம் செய்கிறது கல்கி.

"அசெம்பிளிக்கு நான் உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பிறகு நான் ஸ்ரீ டி. பிரகாசத்தைப் பிரதம மந்திரிப் பதவியில் அமர்த்தியதும், பிறகு அவரைப் பதவியிலிருந்து வெளி ஏற்றியதும், அந்த ஸ்தானத்தில் ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியாரை உட்காரச் செய்ததும், அந்த ரெட்டியாரைப் பலமுறை தேடிச்சென்று பேட்டிகாண முயன்று பலிக்காமற் போனதும், பிறகு என் மூளை வேலை செய்ய ஆரம்பித்ததும், அதன் பலனாக ஸ்ரீ ஓமந்தூரார் தாமாகவே பதவியை விட்டுப் போகும்படி நேர்ந்ததும், அந்தப் பதவியில் ஸ்ரீ குமாரசாமி ராஜாவைப் பலவந்தப்படுத்தி உட்கார வைத்ததும், இவ்வளவுக்கும் பிறகு இராப்பகலாகத் தூக்கமின்றி ஏங்கியதும், எல்லாம் உங்களுடைய நன்மைக்குத்தான், ஆகையால் பொதுஜனஸ்வாமி! உங்களுடைய நன்மைக்காக எனக்கு ஒரு டெபுடி மந்திரிப் பதவியோ, பார்லிமெண்டரி காரியதரிசி பதவியோ கொடுக்கும்படி சிபார்சு செய்யுங்கள்!"

இப்படிக் கேட்கிறாராம் எம். எல். ஏ. !!

இவ்விதம் கேலி செய்கிறது கல்கி! எந்த எம். எல். ஏ. க்குக் கோபம் பிறக்கிறது!—பிறந்துதான் என்ன பலன்?—கல்கி, இந்தக் கோபத்தைக் கண்டு பயப்படவேண்டிய நிலையில் இல்லையே! கவர்னர் ஜெனரல் வேறு, கல்கி வேறா!! கனம்களும் கனம்களாகக் கூடிய எம் எல். ஏ. க்களும், கல்கி குட்டும் போது, வலித்தால் கூட, வாய்விட்டு அழ முடியுமா?

கேலியும் கண்டனமும் சரமாரியாக, பல திக்குகளிலிருந்தும் தாக்கியபடி உள்ளன—தலைமேலே டேவின் பலாயுதம் தயாராக இருக்கிறது–மந்திரி சபைத் தகராறுகளைக் கண்டு, மேலிடம், 93 வது செக்ஷனைப் பிரயோகித்து, அமைச்சர்களை அவிஞசியாக்கிவிடக் கூடிய பேராபத்து இருந்தபடி இருக்கிறது, இவ்வளவுக்கும் இடையே, கர்ஜனை செய்கிறார்கள் இந்தக் கனம்கள், இவர்களின் அரசியல் வேட்டையிலே, போட்டிக்கு நின்றோ, பங்கு கேட்டோ, தொல்லை தராமல், நாட்டு மக்களுக்கு நல்லறிவூட்டப் பாடுபடும், நமது கழகத்தின் மீது.

உரத்த குரலால் உண்மையை மறைத்துவிட முடியாது. உருட்டும் விழி, உரிமை முழக்கத்தை அடக்கி விடாது.—என்பதைக் கர்ஜனை புரியும் கனம்கள் உணரவேண்டுகிறோம்.

திராவிட நாடு

ஞாயிறு] 22—5—49 [காஞ்சி

எங்கள் குடும்பம்

ஐக்கிய நாடுகள்சபை, ஏற்பட்டு விட்டது; இனிப்போருக்கோ, அந்தப் போருக்குக் காரணமாக உள்ள, வல்லரசுகளின் போட்டிக்கோ அவசியமில்லை—சாந்திதழைக்கும், சமாதானம் நிலவும், சமரசம் ஏற்படும், என்று அறிவிக்கப்பட்டது, மக்களின் அகமகிழ்ச்சிக்காக. போர் ஏற்படாமலிருக்க இந்தச்சபை பயன்படுமா! மகிழ்ச்சி, என்றனர் மக்கள்.

இந்தியா, இந்தச்சபையிலே அங்கம் வகிக்கிறது, எனவே உலகச் சமாதான முயற்சியிலேயே, தனக்குரிய பங்கினைச் செய்ய, வாய்ப்புப் பெற்றிருக்கிறது.

காஷ்மீர் சம்பந்தமாக, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பகை மூண்டது; ஐக்கியநாடுகள் சபையிலேதான் இதுபற்றிப் பேசப்பட்டு, சமரச ஏற்பாடு ஒன்று காணப்பட்டு, அதை நிறைவேற்றுவதற்கான காரியங்கள் இதுபோது நடைபெற்றுக் கொண்டுவருகின்றன.

உலக அரங்கிலே, இந்தியாதனக்குரிய இடம் பெறவும், உலகைப் பாதிக்கக்கூடிய பிரச்னைகள் கிளம்பும்போது, தன் கருத்தைக்கூறி, அதன் மூலம், சமாதானத்துக்கு உழைக்கவும், வாய்ப்பு, ஐக்கியநாடுகள் சபையிலே இடம்பெற்றிருக்கிற காரணத்தால் இந்தியாவுக்குக் கிடைக்கிறது.

தென்ஆப்பிரிக்கப் பிரச்னைபற்றிக் கூட, கூடிக்கலந்து பேசும்படி, ஐக்கிய நாடுகள்சபை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது — இந்தியா, பாகிஸ்தான், தென்ஆப்பிரிக்கா ஆகிய மூன்றுநாடுகளும், இத்தகைய மாநாடுகூட்ட ஐ. நா. சபை, கேட்டுக்கொண்டிருக்கிறது.

எனவே, உலகவிவகாரத்தைக் கவனித்துக் கருத்துடன் பணியாற்றவும், உலகிலுள்ள எந்த நாடாவது தன்னைப்பாதிக்கும் செயல்புரிந்தால், மன்றத்திலே எடுத்துரைத்து, மாச்சரியம் முற்றுதவகை காணவும், வழி இருக்கிறது. இதுமட்டுமல்லாமல், ஐக்கிய நாடுகள்சபை அமைத்துள்ள பல்வேறு குழுக்கள் மூலம், கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், உணவு, முதலிய பொதுப் பிரச்னைகளில், ஆக்கமும் ஊக்கமும் உதவியும் பெறுவதற்கும், வகை இருக்கிறது. அதேபோது, எந்த ஒரு தனி நாட்டுடனும், அல்லது சில நாடுகள் சேர்ந்து அமைத்திடும் சிலந்திக் கூட்டிலேயும், தொடர்பு கொள்ளாமல், தனிஉரிமையும், தன்னிச்சையும், அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளுக்கு ஏற்றவண்ணம் கருத்தும் கொண்டு, காரியமாற்றும், உரிமையும் நிலையும் இந்தியாவுக்கு இருக்கிறது.

எனினும்ஐக்கியநாடுகள்சபையிலே, அங்கம் வகிப்பதுடன், போதும் என்ற திருப்திகொள்ளாமல், வேறு பல உறவுகளும் தேவை, என்று இந்தியாவை இன்று ஆள்பவர்கள் எண்ணுகிறார்கள்—அந்த எண்ணத்துக்கேற்பச் சில காரியங்களும் செய்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் சபையினிடம் முழுநம்பிக்கையும், உலகசமாதானத்துக்கும், உறவுக்கும், அந்தச்சபை தகுந்த கருவிதான் என்ற எண்ணமும், இருக்குமானால், ஏன், இந்தியா வேறு உறவுகளையும், வேறு சில தொடர்புகளையும், தேடவேண்டும், நாடவேண்டும்?

காமன்வெல்த்திலே, இந்தியா சேர்ந்திருப்பது பற்றி யோசிக்கும் போது, முதலிலே, அரசியல் கருத்துள்ள எவரும், எண்ணிப்பார்க்க வேண்டியது இதுதான்—மாடி வீட்டிலே குடிஏறியபிறகு, மற்றோர் ஓட்டு வீட்டையும் வாடகைக்கு வாங்கிக்கொள்வதேன் — உலக நாடுகள் பலவும் கூடிடும் உயர்தர மன்றமான ஐக்கிய நாடுகள் சபையிலே, அங்கம் வகித்திருக்கும்போது, வேறு தொடர்புகள் தேடுவது ஏன்?

இந்தியா விடுதலை பெற்றிருப்பதுடன் விழிப்புணர்ச்சியும் பெற்றிருக்கிறது; எனவே, எந்த வல்லரசுக்கும், எடுபிடியாக இராது; எத்தகைய சாகசச் சிறையிலும் சிக்கிக் கொள்ளாது; எந்தப் பிரச்னையையும், உலக சமாதானம் எனும் உரைகல்லில் தீட்டிப்பார்த்தே முடிவு கூறும், என்றெல்லாம், பேசப்படுகிறது. மகிழ்ச்சியூட்டும் பேச்சு! ஏன், இந்த மாண்புடன், ஐக்கியநாடுகள் சபையிலே வீற்றிருப்பது போதும், சபையே தவறிநடப்பதாயினும், சபையை எந்த வல்லரசாவது தவறானவழியிலே திருப்பினாலும், நமது திறமையாலும்நேர்மையாலும், சபையைச்சரிப்படுத்துவோம், என்ற நம்பிக்கையுடன்; ஏன், இந்தியா இருக்கக்கூடாது? வேறு தொடர்புகள் ஏன் தேவைப்படுகின்றன?

உலகமறியாத உளறுதே!-என்று கூறும் உயர் குணத்தோர் சிலர்உளர்—அவர்களும், உலகத்துக்கே பொதுவானமன்றம் என்று புகழப்படும் சபை இருக்க, ஏன், வேறு சபைகளைத் தேடுவது, என்பதற்குத் தக்க காரணங்களைக்கூறும், திறன் படைத்தவர்களாக இல்லை.

இந்தியா தனித்திருக்க முடியாது, என்கிறார்கள் — ஒப்புக்கொள்ள வேண்டியதத்துவம் — அதற்காகத்தான், உலகிலே, பண்புள்ள நாடுகளெல்லாம் கூடியுள்ள ஐ. நா. சபையிலே இந்தியா சேர்ந்திருப்பது, பெருமையும் பயனும் தருவது, என்கிறோம். அதற்கு அப்பால், போக வேண்டிய அவசியமென்ன?

ஐக்கிய நாடுகள் சபையை, உலக சமாதானத்துக்கான கருவி எனக் கூறிய, வல்லரசுகள், தத்தமக்கு என, வேறு சில கருவிகளைத் தேடிக் கொள்ளலாயின. அதே முறையிலேயே—அதே சுழலில் சிக்கியே—ஐக்கிய நாடுகள்சபையைவரவேற்றுப் பாராட்டிய இந்தியாவும், இது போதாது, வேறுதொடர்பும் தேவை என்று, கருதத் தொடங்கிற்று.

இந்த எண்ணம் இந்தியாவுக்கு ஏற்பட்டதனாலேயே, இந்தியாவின் நிலையும் பாதிக்கப்படுகிறது.

உலகசமாதானத்துக்குரிய அமைப்பு என, ஐ. நா. சபையைத் துவக்கியபிறகு, அமெரிக்காவும், பிரிட்டனும், வேறு வழிகளிலும், முறைகளிலும், உலக சமாதானத்துக்கு என்று கூறிக்கொண்டே, வேறுபல அமைப்புகளைத் துவக்கலாயின.

ஐ. நா. சபையை உலகுக்கு, சமாதானக் கருவி என்று அறிமுகப்படுத்திய வல்லரசுகள், அதே உலக சமாதானத்துக்கு என்று கூறி, அட்லாண்டிக் ஒப்பந்தம், பசிபிக் பாதுகாப்பு, ஐரோப்பிய கவுன்சில், மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டுறவு, என்று, பலப்பல, உருவங்கள் கொண்ட அமைப்புகளை, ஏற்படுத்திய வண்ணம் இருந்தன.

10 JUN 1949

அமெரிக்கா, தன் அண்டை அயல் நாடுகளையும், பசிபிக்கடலிலே உள்ள தீவுகளையும், கொண்ட ஒரு ராஜதந்திரவளையத்தை அமைத்தது.

அட்லாண்டிக் ஒப்பந்தம் என்ற மற்றோர் அமைப்பு, ஏற்பட்டது—அமெரிக்க, பிரிட்டிஷ் முயற்சியினால்.

அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் பயனாக, அமெரிக்காவுடன் இழைய வேண்டியநிலை, பிரிட்டனுக்கு ஏற்பட்டது.

மார்ஷல் திட்டம் எனும் அமெரிக்க பணஉதவித்திட்டத்தின்மூலம், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கும், அமெரிக்க பிரிட்டிஷ் தொடர்பு ஏற்படுத்தப் பட்டது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குள்ளும் ஒரு கூட்டுறவும், பொது வேலைத் திட்டமும் கொண்ட ஓர் அமைப்பு, ஐரோப்பிய கவுன்சில், என்பது—இது சர்ச்சிலின் ஆசிர்வாதத்துடன் துவக்கப்படும், மற்றோர் வளையம்.

பசிபிக் ஒப்பந்தம், அட்லாண்டிக் ஒப்பந்தம், ஐரோப்பிய கவுன்சில், எனும், இந்த அமைப்புகள், தனித் தனிவளையங்கள், என்ற போதிலும், இவை ஒன்றோடொன்று, கோர்க்கப்பட்டு, சிறு சங்கிலித் தொடராக்கப்பட்டிருக்கிறது—இந்த டாலர் சங்கிலிக்கு, மற்றோர் வளயந்தான், காமன்வெல்த்.

ஐ. நா. சபையைப் போலன்றி, அட்லாண்டிக், பசிபிக், ஐரோப்பிய கவுன்சில் எனும் அமைப்புகளிலே இந்தியாவுக்கோ, ஐரோப்பியரல்லாதார் நாடுகளுக்கோ, இடம் தரப்படவில்லை; காமன்வெல்த் வளையத்திலே, இந்தியா, பாகிஸ்தான், சிலோன், எனும் நாடுகளுக்கு இடம் தரப்பட்டிருக்கிறது; இந்த வளயத்தை, நாம் முன்னாலே குறிப்பிட்ட, டாலர் சங்கிலியுடன் கோர்த்துமிருக்கிறார்கள்.

காமன்வெல்த்தின் கர்த்தா பிரிட்டன்; பிரிட்டன், அமெரிக்காவுடன், அட்லாண்டிக்ஒப்பந்தத்தால் இணைக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பிரிட்டன், ஒரு கரத்தால், ஐரோப்பிய நாடுகளையும், மற்றோர் கரத்தால், காமன்வெல்த் நாடுகளையும், பற்றிக் கொண்டு, வாஷிங்டன் நோக்கி நிற்கிறது.

ஆங்கில கலாச்சாரத்தைக் கொண்ட நாடுகள் ஒன்றாக, கூட்டாகப் பணிபுரிந்தால்தான் உலக சமாதானம், ஏற்படும் என்று கீதம் பாடித்தான், அமெரிக்க ஆங்கிலேய கூட்டுறவை, சர்ச்சில் ஏற்படுத்தினர்.

> **பெரியார் — ஆச்சாரியார் சந்திப்பு**
>
> —✲—
>
> **29—5—42-ல்**
>
> ஈரோட்டில் பெரியார் மாளிகையில் மாலை 3-மணியிலிருந்து 6-மணி வரை பெரியாரும்—ஆச்சாரியாரும் சந்தித்துப் பேசினர்.
>
> ✲
>
> **5—5—46-ல்**
>
> தியாகராய நகர் திராவிடர் மாநாட்டையொட்டி நடைபெற்ற கருஞ்சட்டையினர் ஊர்வலத்தின் போது, ஆச்சாரியார் வீட்டிருந்து வெளியே வந்து நின்று பெரியாரைக் கண்டார். இருவரும் வணக்கத்தின் மூலம் ஐந்துநிமிட அளவளாவிக் கொண்டனர்.
>
> ✲
>
> **14—5—49-ல்**
>
> திருவண்ணாமலையில் ஆச்சாரியாரின் தனி சலூன் வண்டியில் காலை 6-46 மணி முதல் 7-17 மணிவரை பெரியாரும்—ஆச்சாரியாரும் சந்தித்து அளவளாவினர்.

இந்தப் பிரிட்டிஷ் பல்லவி ஐரோப்பிய நாடுகளைக்கொண்ட அமைப்பை ஏற்படுத்தும்போது, வேறாக மாறுகிறது; ஐரோப்பியநாகரீகம் தழைக்க வேண்டும்; ஏசுவின் விசுவாசிகள் ஒன்றாக வேண்டும், என்று பிரிட்டன் அங்கே பாடுகிறது.

காமன்வெல்த்மேடைக்கோ, வேறு பிரிட்டிஷ் கீதம் இருக்கிறது; ஆங்கில கலாச்சாரம், ஐரோப்பிய, கிருஸ்தவ நாகரீகம் என்ற பாட்டு இங்கு பயன்படாது. ஆகையால், இங்கு, 'குடும்ப கீதம்' பாடப்படுகிறது; காமன்வெல்த்தில், பலகாலமாகத் தொடர்பு கொண்ட, தொடர்பின் காரணமாக நேசம்கொண்ட நாடுகள் யாவும், ஒரு குடும்பமாக, பொதுநலனைக் காக்க, ஒரு மன்றம் அமைப்போம், என்று பிரிட்டன் பாடுகிறது; இந்தியாவுக்கு இந்தக் கீதம், இனிப்பூட்டுகிறது.

உலகம் ஒன்று, எனவே ஐ. நா. வைப் போற்றுவோம்; ஆங்கிலகலாச்சாரம் நம்மது, எனவே நாம் ஒன்று கூடுவோம்; ஐரோப்பிய நாகரீகம் நம்மது, எனவே அதிலேயும் ஒன்று கூடுவோம்; காமன்வெல்த் நமது குடும்பம், ஆகவே அங்கும் நாம் கூடுவோம்; என்று பிரிட்டன், பலவித பல்லவிகள் பாடுகிறது—எல்லாம், ஆதிக்க ராகம், 'ஆதி' தாளம் கொண்டதுதான்.

காமன்வெல்த் எனும் வளையம், பிரிட்டன் மூலம், அட்லாண்டிக் வளையத்துடன் சேர்க்கப்பட்டு, அமெரிக்கா தயாரிக்கும், டாலர் சங்கிலியுடன் கோர்க்கப்படுகிறது. இந்த உண்மையை மறைப்பதில் பயனில்லை.

காமன்வெல்த் வளையம் ஏற்பட்டது குறித்து, சர்ச்சில் மகிழ்வதற்குக் காரணம் இதுதான்—இந்திய ராஜதந்திரத்தைப் பாராட்டி, அமெரிக்க, பிரிட்டிஷ் ஏடுகள், எழுதுவதன் காரணமும் இதுதான்.

தனித்து நிற்கக்கூடிய, ராஜதந்திர சாகசச் சுழலில் சிக்கவேண்டிய அவசியமற்ற, இந்தியாவை, காமன்வெல்த்திலே சேர்த்ததன் மூலம், அமெரிக்க ஆதிக்கச் சங்கிலியில் பிணைத்தாகிவிட்டது, என்ற அகமகிழ்ச்சி, சர்ச்சிலுக்கு.

சர்ச்சிலின் மகிழ்ச்சி ஒன்றே போதும், காமன்வெல்த் சூட்சமத்தை விளக்க.

பழைய,பெரியகுடும்பமாம், இந்தக் காமன்வெல்த்!

இதிலே, உள்ள இந்தியாவை, இதிலே அங்கம் வகிக்கும் ஆஸ்திரேலியா, நிறவெறி காரணமாக, மதிப்பதில்லை. இதிலே உள்ள ஆப்பிரிக்கா அக்ரமச் செயலிலேயே ஈடுபடுகிறது நிறவெறி காரணமாக.

இதிலே உள்ள சிலோன், பயம் காரணமாக இந்தியாவை இழிவு செய்கிறது. எனினும், எல்லோரும் ஒரே குடும்பமாம்!

குடும்பத்திலே உள்ள இந்தக் கோளாறை, காமன்வெல்த் அல்ல, ஐ. நா. சபை விசாரித்து, தென்னாப் பிரிக்க பிரச்னை சம்பந்தப்பட்ட மட்டிலே, யோசனையும் கூறியிருக்கிறது.

குடும்ப விவாகாரத்தை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது; பாட்டோ, "எங்கள் குடும்பம் பெரிசு, இதிலே பலது பழசு, ஆனாலும் சிலது புதுசு" என்று கீதம் பாடுகிறார்கள்; குதூகலிக்கிறார்கள்.

காமன்வெல்த் குடும்பத்தில் உறவைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலம், இந்தியா தன்னுடைய சுயேச்சையையோ அல்லது சுதந்தர உரிமையையோ இம்மி அளவும் இழந்துவிடவில்லை என்று, உறவை வற்புறுத்தும் பிரதமர் நேரு கூறுகிறார். உறவு கொள்ளும்முறையிலே இந்தநிலைமை விளக்கப்படுகிறது! ஆனால், செயலாற்றும் நெறியில் இறங்கும்போது இந்த நிலைமை நீடிக்குமா? சூழ்நிலை— சந்தேகத்துக்குத்தான் இடமளிக்கிறது.

•

தன் இச்சைப்படி—சுதந்திர உரிமைப்படி நடக்கக்கூடிய இந்தியா, காமன்வெல்த்தோடு இணைந்து நிற்க வேண்டிய அளவுக்கு அவசியம் என்ன ஏற்பட்டுள்ளது? காமன்வெல்த் நாடுகளிடையே ராஜீய பொருளாதார, ராணுவத் துறைகளில், ஏதாவது இரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா என்றால், அப்படி எதுவும் இல்லை என்றும், இந்தியாவின் சுயேச்சை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய உடன்பாடு எதுவும் கிடையாது என்றும், டில்லி வானொலியின்மூலம் பேசும்போது, பண்டிதநேரு குறிப்பிட்டுள்ளார். காமன்வெல்த் என்பது அரசாங்கம் போன்ற அமைப்பு அல்லவென்றும், பிரிட்டிஷ் மன்னருக்கு எந்தவிதமான அலுவலும் கிடையாதென்றும் காமன்வெல்த்துக்கும் அலுவல்களுக்கான ஸ்தாபனம் எதுவும் கிடையாதென்றும், அரசியல் நிர்ணய சபையில் விளக்கந் தரும்போது அவரே கூறுகிறார். பின்எந்தவிதத்தில் உறவு அவசியமாகிறது என்றால், "காமன்வெல்த் நாடுகளுடன் பாஸ்பர சலுகைகளை நாம் உண்டாக்கிக்கொள்ளலாம். இதனால் நமக்கும் நன்மை, அவர்களுக்கும் நன்மை, உலகத்துக்கும் நன்மை" என்று செப்புகிறார்.

ஸ்தாபனம் இல்லாத—எந்தஅலுவலையும் ஏற்றுக்கொள்ளாத — எந்த ஒரு உடன்பாட்டாலும் தன்னுள் சேர்ந்திருக்கும் யாரையும் கட்டுப்படுத்தாத காமன்வெல்த்தால் 'நமக்கும், உலகத்துக்கும்' எப்படி நன்மை ஏற்படமுடியும் என்பதைப் பண்டிதர் விளக்கிக்காட்டவில்லை. ஐ. நா. சங்கத்தில் அங்கம் பெற்றிருக்கும் இந்தியா அதிலிருந்து கொண்டு அடையமுடியாத, எந்தச் சலுகையையும், நன்மையையும் காமன்வெல்த் உறவால் அடைய எண்ணுகிறது என்பதற்கும் விளக்கந் தரவில்லை. ஐ. நா. வால் பெறமுடியாத எதை, காமன்வெல்த் உறவால் பெற எண்ணுகிறது இந்தியா? அதைத்தான் காமன்வெல்த்தால் எப்படிப் பெற எண்ணுகிறது? விளக்கமில்லை!

காமன்வெல்த் உறவால் பாஸ்பர சலுகைகள் ஏற்படமுடியும் என்று கூறப்படுகிறது. அந்தவகையில்தான் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் அப்படி எதுவும் இல்லை என்று நேருவே கூறிவிட்டார். தொழில் வளர்ச்சியில் முன்னேறியுள்ள பிரிட்டன், தொழில்வளர்ச்சியில் மிக மிகப் பிற்போக்கான நிலைமையில் இருந்துவரும் இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்குப், பொருளுதவியோ, யந்திர உதவியோ செய்ய முன்வருமா என்றால் அதற்கு இந்த உறவு எவ்வகையிலும்பயன்படாது. ஏனென்றால்இந்தியாவுக்கே பிரிட்டன்கடன்கொடுக்க வேண்டியிருக்கிறது. அதையே கொடுக்கமுடியாமல் பிரிட்டனின் பொருளாதார நிலை சீர் குலைந்திருக்கிறது. பிரிட்டன் தன்னிலையைச்சீர்படுத்திக்கொள்ள அமெரிக்காவை எதிர்பார்த்திருக்கிறது.இந்தியாவோ அமெரிக்காவிடம் உதவிகிடைக்குமா என்று இதம் பேசி உறவு கொண்டாட நாவசைத்துக்கொண்டிருக்கிறது. இதுதான்சமயம்என்று அமெரிக்கா தன் டாலர் சங்கிலியில் இந்தியாவையும் ஒரு சுருணையாக மாட்டிவிட எத்தனித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்தியாவின் பொருளாதார நிலை பிரிட்டனைத் தலைமையாகக்கொண்ட காமன்வெல்த் உறவால் எவ்வகையிலும் வளர்வதற்கு வழியில்லை. எனவே, புதிய உறவால் பொருளாதாரச் சலுகை பெறுவதென்பது முயற்கொம்பே!

காமன்வெல்த் நாடுகளிடையே பொதுப்பிரஜா உரிமையாவது நிலவ வழியுண்டா? இல்லை! காமன்வெல்த் நாடுகளிடையே இன்று இருந்துவரும் நிறவெறியையும், காலனி ஆதிக்க வெறியையும்போக்க ஐ. நா. சபையிடந்தான் முறையிட்டுக் கொள்ள வேண்டுமாம்; அதற்குக் காமன்வெல்த் எவ்வகையிலும் பயன்படாதாம்; அதைக் காமன்வெல்த்துக்குள் கட்டுப்படுத்தி காமன்வெல்த்தை ஒருநீதிசபையாக ஆக்குவது ஆபத்தோடுமட்டுமல்லாமல், இந்தியாவின் சுயேச்சையையேபாதிக்குமாம்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் வாழக்கூடாதென்று விரட்டியடிக்கப்படுகிறார்கள்; அந்நாடு காமன்வெல்த்தில் ஒரு அங்கம் வகிக்கிறது.

மலேயாவில் கணபதிபோன்ற நிரபராதிகளான தமிழர்கள் தூக்கிலிடப்படுகிறார்கள்; இன்னும் பலர் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டவண்ணமிருக்கிறார்கள். மலேயாவில் வெள்ளை தோட்ட முதலாளிகளின் கொடூர ஆட்சி நடைபெறுகிறது என்று 'இந்து'வே தலையங்கம்தீட்டியுள்ளது. "நாணயமான முறையில் ஊதியம் பெற்று வாழ்வு நடத்தவேண்டுமென்று, மலேயா சென்றுள்ள ஏராளமான ஏழைத் தொழிலாளர்கள் இன்று மிகவும் கொடுமையானதோர் நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான இந்தியத்தொழிலாளர்கள்சென்றசிலமாதங்களாகக்கொடிய துன்பத்தில் உழன்று வருகிறார்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது செய்திகள்மூலம். ஏறத்தாழ ஏதும் அறிவிக்கப்படவில்லையானாலுங்கூட, …………மலேயாவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளுக்கு எதுகாரணமாக இருந்தபோதிலும், இந்தநிகழ்ச்சிகள் மேலும் மேலும் வளர்வதைப் பொறுத்து, இந்திய அரசாங்கத்திற்கோ, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கோ அக்கறை ஏதும் இல்லை என்று கூறமுடியாது" என்பதாக 'இந்துவே' தீட்டுகிறது. அந்த அளவுக்குக் காலனி ஆட்சி பிரிட்டனால்

நடத்தப்படுகின்றது. அந்த பிரிட்டனும் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கிறது.

குறைந்த அளவு மக்களே குடியேறியுள்ள ஆஸ்திரேலியாவில்வெள்ளையர்மட்டுமேதான் குடியேறலாம். கருப்பர் எவரும் குடிபேறக்கூடாது, என்று ஆஸ்திரேலியா அரசாங்கம் நிறவெறியைக் கக்கி வருகிறது. மக்கள் தொகை மிகவாக விளங்கும் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியாவில் மக்கள் சென்றுகுடியேற ஆஸ்திரேலியா அனுமதிக்கிறதா? அனுமதிக்குமா? இல்லை! அதுவும் காமன்வெல்த்தில் இடம் பெற்று விளங்குகிறது!

இவ்வாறு நிறவெறியோ, ஆதிக்க வெறியோ, காமன்வெல்த் நாடுகளில் எள்ளளவும் ஏற்படாமல், பொதுப் பிரஜா உரிமையை அதாவது காமன்வெல்த் நாடுகளில் யாரும், எங்கும் சென்று,தன்னிச்சைப்படிவாழ்வதற்கான உரிமையை, காமன்வெல்த் வழங்குகிறதா என்றால் அதுவும் இல்லை. காமன்வெல்த் உறவால் பொதுப் பிரஜா உரிமை என்ற சலுகை பெறுவதற்கும் வழியில்லை!

காமன்வெல்தில் அங்கம் பெறுகிறோம் என்ற காரணத்திற்காக, பிரிட்டன் தன் ஏகாதிபத்ய மனப்பான்மையை அகற்றிவிட்டதா? அகற்றிவிடத்தான்வழியிருக்கிறதா? பிரிட்டன் ஜனநாயகம் பேசுகிறது; அதே சமயத்தில் ஆட்சித் தலைவராக அரசரை ஏற்றுக்கொண்டுள்ளது; பிரபுக்கள் சபை — மக்கள் சபை இரு வேறு பாகுபாடுகளைக் கொண்டிருக்கிறது. மலேயா போன்ற காலனிகளில் தன் ஆதிபத்திய வெறியை நீக்கிக்கொள்ள இன்னமும் மறுத்து வருகிறது. பிரிட்டனோடு வேறுவகையில் தொடர்பு கொண்டிருக்கும், பிரான்ஸ்கூட, தன்னாட்டில் மன்னர்களின் மணிமுடிகளைத் தகர்த்தெறிந்து, குடியரசாட்சியை நிலைநாட்டி, ஜனநாயகம் பேசிவந்த போதிலும், தன்னுடைய காலனி ஆட்சியை எவ்வகையிலேனும் காப்பாற்றிக் கொள்ளவே நினைத்து, இந்தோசீனாவில், குடியாட்சி கோரும் மக்களின் கிளர்ச்சிக்கு மாறுபாடாக, பாவே டுவாய் என்ற மன்னனை ஆட்சித் தலைவனாக நியமிக்க அக்கறை எடுத்துள்ளது. பிரிட்டனோடு வேறோர் கூட்டு வளையத்தில் இணைந்து நிற்கும் டச்சும் தன் ஏகாதிபத்யப் பிடியை கிழக்கிந்திய தீவுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள இணங்காமலே இருந்து வருகிறது.

இவ்வாறு ஏகாதிபத்ய ஆட்சி மனப்பான்மை கொண்ட நாடுகளோடு அதே தன்மையில் கை கோர்த்து நிற்கும் பிரிட்டனோடு குடியரசுஇந்தியா உறவு கொண்டாடி நிற்பதனால் ஏற்படும் பலன் தான் என்ன? பிரிட்டனின் ஏகாதிபத்திய மனப்பான்மையைத் துடைக்கவும் காமன்வெல்த் உறவு பயன்படாது!

காமன்வெல்தில் அங்கம் பெறும் நாடுகளிலே, மிகப் பெரிய நாடு— பெரும்பாலான மக்களின் பிரதிநித்துவம் கொண்ட நாடு இந்தியாவேயாகும். உறவு முறையில் கூடும் கூட்டமைப்பில் தலைமை வகிக்கக் கூடிய தகுதி—தனி வளையத்தை ஏற்படுத்திக்கொள்ளும் வசதி இந்தியாவுக்கு இருந்தும், அமெரிக்காவின் டாலர் சங்கிலியோடு, பிரிட்டன் இணைத்துவைக்க விரும்பும் காமன்வெல்த் வளையத்தில், இந்தியா ஒரு சுருணையாக நிற்கச் சம்மதித்துத் தானே ஓடி ஒட்டிக்கொள்வானேன்? அப்படி ஒட்டிக் கொள்வதனால் ஏற்படும் உருவான பலன்தான் யாது? எதுமில்லை!

தொழில் வளர்ச்சிக்கு உதவாத —பொருளுதவி புரியாத—பொதுவுரிமை வழங்காத—ஏகாதிபத்திய உணர்வை விட்டுக்கொடுக்க மனமில்லாத—தலைமை தாங்கும் பங்கைத் தாராத காமன்வெல்தில் அங்கம் பெறுவதால், ஐ. நா. வில் இருந்து சாதிப்பதைவிட அதிகம் என்ன சாதித்துவிட முடியும் என்று இந்தியா எண்ணுகிறது!

எப்படியோ, உலகம் இரண்டு முகாம்களாகப பிரிந்து வருகிறது. ஒரு பக்கத்தில் அமெரிக்கா, பண குண்டுகளால் நாடுகளை விரட்டியடித்துத் தன் வளையத்துக்குள் சிக்க வைக்கிறது. மற்றொரு பக்கத்தில், ரஷ்யா தன் முகாமில் பல நாடுகளை வந்து இணையும்படி செய்து வருகிறது. இந்த இரண்டு முகாம்களுக்கு மிடையே ஏற்படும் மோதுதலில், சிக்கிக்கொள்ளும் எண்ணமில்லை என்று கூறிவரும் இந்தியா தனித்து நிற்பதுதானே சாலச் சிறந்த செயலாகும்!

சென்ற போர்க் காலத்தில் ஸ்பெயின், அயர்லாந்து போன்ற நாடுகள், எப்பக்கத்திலும் சேராமல், நடுநிலைமை வகித்த காரணத்தால், போரின் நேரடித் தாக்குதல் எதுவுமின்றித் தம் நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ள அவைகளால் முடிந்தது. அதுபோலவே, எதிர்காலத்தில், ரஷ்ய—அமெரிக்கா மோதுதல் ஏற்பட்டால், அதில் வீணே சிக்கிச் சிரழியாமல் இந்தியா இருக்கவேண்டுமானால், இப்பொழுது அது தனித்து, சுதந்திரமாக, சுயேச்சையாக நின்று செயலாற்ற முயன்றால்தான் இயலும். அதுவன்றி, பலன் ஏதும் கிட்டாத காமன்வெல்தில் வேதனையை விலைக்கு வாங்கிக்கொள்ளும் முறையில் சென்று இந்தியா இணைந்து கொள்வது — உறவை நாடி நிற்பது, விளக்கொளி கண்டு மகிழ்ந்து, மயங்கி அதில் வீழும் விட்டில்பூச்சிக்கு ஒப்பாக முடியும்.

இந்திய அரசியல் நிர்ணய சபையில் இந்தியாவின் உறவு கொண்டாடும் போக்கைக் கண்டித்துப் பேசுகையில், தோழர் சாக்ஸேனா "காமன் வெல்தில் சேருவதன் மூலம், ரஷ்யாவையும், சீனாவின் மூன்றிலொரு பகுதியையும், பாக்கி உலகத்தில் மூன்றிலொரு பகுதியையும் இந்தியா பகையாக்கிக் கொள்கிறது. ரஷ்யாவுக்கு மாறுபாடாக இருப்பதாக நம்மைப் பிரகடனப்படுத்திக் கொள்வது விவேகமான போக்கல்ல" என்று எடுத்தியம்பியுள்ளார். எனவேதான் வீணான எதிர்ப்பைத் தவறான முறையில் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்கிறோம்.

'எங்கள் குடும்பம் பெரிது' என்ற பல்லவியைப் பாடி, அதன் பண்ணிலே மெய்மறந்திருக்கநேரிட்டால், பின்னால் பீரங்கி வருவதும் தெரியாமற் போகக்கூடும்; அதன் பெருஞ் சப்தம், பண் கேட்டுக் கொண்டிருக்கும் காதுகளைக் குடைந்து சென்று, வேறு எவ்வகைப் பண்ணையும் கேட்கமுடியாமல் செய்துவிடவுங் கூடும். எனவே, காமன்வெல்த்தில், சிக்கல்கள், சீர்குலைவுகள் பல இருப்பதைத் தெரிந்தும், தெரியாதது போல், அதனிடம் இந்தியா இணைந்துவிடக் கூடாதென்பதே நமது கருத்தாகும்.

✱

எது உண்மை?

“விலங்கு நிலையிலிருந்து, காலப் போக்கில் பரிணமித்துச் சிறந்த மனிதன், தன் முன்னோர்களைவிட அறிவிலும், ஆற்றலிலும் வளர்ச்சியடைந்திருக்கிறான், இன்னும் வளர்ச்சியடைந்து வருகிறான்” என்று கூறுகிறது விஞ்ஞானம்.

“ஆதியில் தேவர்களாயிருந்து நாளடைவில் அறிவிலும், ஆற்றலிலும் குறைந்து, தற்போது மனித நிலைக்கு வந்திருக்கும் மனிதர், இன்னும் கீழான நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றனர்” என்று கூறுகிறது புராணஞானம்.

* * *

“நூறு ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் துக்கம், அநீதி, நோய் முதலிய கொடுமைகளிலிருந்தும் பெரும் பகுதி விடுதலை பெற்று, எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டும் இன்பபுரியாக இலங்கக்கூடும்” என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

“இனி வருங்காலத்தில், அதாவது கலி முற்றமுற்றக் காலம் மிகவும் கெட்டு, உலகில் பசியும், பஞ்சமும், கொலையும், கொள்ளையும் அதிகரித்து, மனிதனை மனிதன் அழிக்க இந்த யுகம் முடிவெய்தும்” என்று சாற்றுகின்றனர் புராணஞானிகள்.

* * *

“இந்த உலகத்தை இன்பமயமாகச் செய்து, எல்லோரும் இன்ப வாழ்க்கை நடத்தலாம்” என்கின்றனர் விஞ்ஞானிகள்.

“இந்தப் பிரபஞ்சம் மாயத்தோற்றம், உலகம் துக்கம் நிறைந்தது, இதில் தோன்றுவதே மாபெரும் பாவம்” என்கிறார்கள் புராணஞானிகள்.

* * *

“விஞ்ஞானம் கற்பிக்கும் நாகரீகப் பாதையே முன்னேற்றத்திற்கான நல்ல வழி. அப்பாதையில் சென்று நமது துக்கத்தையும் குறைகளையும் போக்கிக்கொள்வோம்” என்று கூறுகிறார்கள் சுயமரியாதைக்காரர்கள்.

“நமது புராண இதிகாசங்கள் காட்டியுள்ள பாதையிற் சென்று, ஆதிகால நிலைமையை மீண்டும் அடைவதே இன்பம்” என்று வாதிக்கின்றனர் புராண மரியாதைக்காரர்கள்.

பகுத்தறிவுகொண்டு சிந்தியுங்கள்!

★

ஆடிக்காற்றிலே அம்மி!

சென்னை முன்னாள் மந்திரி தோழர் கூர்மையா, விசாகபட்டினத்தில் நடைபெற்ற ஆதி ஆந்திரா சங்கத்தின் ஆண்டுவிழாவில் பேசும்போது, தாழ்த்தப்பட்ட தோழர்களை அதாவது ‘ஹரிஜனங்களை’ காங்கிரஸ் புறக்கணித்துவிட்டது என்னும் கருத்துப்பட பேசியுள்ளார்.

அவருடைய சொற்களை நோக்கும்போது, அவருடைய கண்களில் கண்ணீர் மல்கியிருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அவருடைய நிலை மிக மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. அந்த அளவுக்கு ‘மகத்தான’ காங்கிரஸ் ‘ஹரிஜன்’ முன்னாள் மந்திரியாரைக் கொண்டுவந்து வைத்துள்ளது. அவருடைய சொற்களை அவருடைய வாயினாலே கேளுங்கள். “நான் மூன்று ஆண்டுகளாக மந்திரியாக இருந்தபோது, காங்கிரஸ் கமிட்டிகள் ஒன்றுகூட எனக்கு உபசாரப் பத்திரம் அளிக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் ஹிந்து மந்திரிகளுக்கு எண்ணற்ற உபசாரப் பத்திரங்கள் அளிக்கப்பட்டன. அடுத்த தேர்தல்களில் ஹரிஜனங்கள் போட்டியிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட தொகுதிகளுக்கு மட்டுமின்றி பொதுத்தொகுதிகளுக்கும் போட்டியிட வேண்டும். காங்கிரஸ் ஸ்தாபனத்தைக் கைப்பற்றவேண்டும்” என்பதாகும்.

தாழ்த்தப்பட்ட தோழர்களுக்குக் காங்கிரஸ் எத்தனை அளவு மதிப்பு வைத்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. மந்திரியார் பாடே இவ்வளவு திண்டாட்டமானால் மற்றத் தோழர்கள் பாடு என்ன நிலையை அடையும்? ஆடிக்காற்றிலே அம்மியே பறக்கும்போது இலவம் பஞ்சின் கதி என்ன என்று கேட்பதற்கொப்பாகத்தானே இருக்கும் மற்ற சாதாரண தாழ்த்தப்பட்டோரின் நிலை!

★

ஸ்ரீரங்க ‘மகிமை!’

“சென்னை மாகாணத்தில் திருவரங்கத்திலுள்ள பெரிய வைணவக் கோயிலைப் பார்த்தேன். இக்கோயிலில் ஸ்ரீரங்கநாதரின் வழிபாடு நடக்கிறது. இராமானுஜ ஆச்சாரியாரின் வசிஷ்டாத்வைத முறைப்படி இங்கே கடவுள் வழிபாடு நடக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் என்னைமன்னிக்கவேண்டும். நான் அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் கண்ணுற்று மிகவும் வெறுப்படைந்தேன். நீண்டநேரம் வரை ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிவிட்டேன். அந்தக் கோயிலில் மனிதத் தன்மைக்கேற்ற நிகழ்ச்சி எதுவும் நடப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அவ்விடத்தில் நடக்கும் ஒழுக்கக்கேடுகள் மனிதன் பொறுத்துக் கொள்ளக் கூடியதல்ல. பொட்டுகளையும், பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியையுடைய, பெரிய பெரிய ஆங்கிலங்கற்ற பண்டிதர்களுடைய உரையாடல்களைக் கேட்டதிலிருந்து, வெறும் ஏடுகளை வாசித்தலால் மட்டும் மனிதனுக்கு அறிவு ஏற்பட்டுவிடாது என்று முடிவு செய்துகொண்டேன். நான் ஏதோவொரு மதத்தைப் பிரசாரம் செய்பவனல்ல, நான் எல்லா மதங்களினாலும் துக்கமடைந்து மதக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டவன். ஆனால் எது மனிதனுக்கு நன்மை பயக்குமென்றும், எது நன்மை பயக்காதென்றும் தெரிவதற்குப் போதிய அறிவும், ஆற்றலும் என்னிடமிருக்கின்றன. சென்னை மாகாணத்திலுள்ள கோயில்களினுடைய வழிபாடு முதலிய நடைமுறைப் பழக்கங்கள் நம்மைச் சமூக வீழ்ச்சிக்கே கூட்டிச் செல்கின்றன என்பது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது.”

—லாலா லஜபதிராய்

கர்ஜனை புரியும் ‘கனம்’கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

காரியம், அவ்விதமா இருக்கிறது, அப்பு அழுக்கற்று, வளைவு ஒடிசலற்று! நெஞ்சிலே கைவைத்துக் கூறுவரா!

வீணான பழிசுமத்தித் திராவிடர் கழகத்தார் பேசினால், சட்டம் இருக்கிறது, வழக்குமன்றம் இருக்கிறதே —அமைச்சர்கள் ஏன், இதைமறந்தனர்.

மந்திரிமார்களைத் தனிப்பட்ட முறையிலே தூற்றினாலும், வழக்குத் தொடுக்க வழி இருக்கிறது, துரைத்தனத்தின்மீது அபாண்டம் சுமத்தினாலும் வழக்குத் தொடுக்க வழி இருக்கிறது! இதுவரையில்திராவிடர் கழகத்தவரின் சொற்பொழிவுகளிலே, இப்படிவழக்குத்தொடரக் கூடிய விதமாக இருந்ததா! இருந்திருந்தால், தாராளமாகச் செய்திருக்கலாமே!!

* * *

ஆட்சியில் இருப்பவர்கள் காங்கிராசாராம், அவர்கள் சுதந்திரப் போர் நடத்தியவர்களாம், எனவே அவர்களை யாரும் குறைகூறக் கூடாதாம்! எப்படி, இவர்கள் வாதம்? பத்து வருஷ காலம் பத்தினியாக இருந்தவளாயிற்றே, இப்போது ஏதோநடந்துவிட்டது என்பதற்காக, என்னைக் கண்டிப்பதா, தண்டிப்பதா என்று வழுக்கி விழுந்தவள், வாயாட ஆரம்பித்தால், எப்படி இருக்கும், அந்த வாதம். அந்த ரகமான வாதமாக இருக்கிறது, இந்த மந்திரிமார்கள், மார் தட்டிக்கொண்டு, நாங்கள் மகாத்மாவின் தலைமையிலே நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்திலே கலந்து வேலை செய்த வெற்றி வீரர்கள், கபர்தார், எங்களையா, கண்டிப்பது! என்று பேசும்போக்கு. அன்று போராட்டத்திலே இவர்கள், கேடயந் தாங்கினவர்களோ, கத்திதீட்டினவர்களோ, கால்வகைப் படையிலே எதிலே சேர்ந்து என்னென்ன ஆற்றல் காட்டிய ஆண்மையாளர்களோ, என்பதுகூட அல்ல இப்போது நாம் ஆராய்வது—அன்று போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக, இவர்கள் தங்கள் கரத்திலே சிக்கிய அதிகாரத்தைக் கொண்டு என்னென்ன சீரழிவுகள் செய்தாலும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டுமா? வரிமேல் வரிகளை அடுக்கிக்கொண்டே இருந்தாலும், அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட வண்ணம் இருந்தாலும், அவசரக் கோலத்தை அள்ளித் தெளிப்பதுபோலப் பல காரியங்களைச் செய்தாலும், இவர்கள் செய்யும் காரியங்களினால், நாடு நலிந்தாலும், தொழில் நாசமானாலும், பாட்டாளி பதைத்தாலும், பொது மக்களின் நலன் நசுக்கப்பட்டாலும், என்ன கேடு நேரிட்டாலும்; யாரும், ஏன் என்று கேட்கக்கூடாது, ஐயோ என்று அழவும் கூடாது, ஆகுமா? என்று கெஞ்சிக் கேட்கவும் கூடாது, ஏனெனில் இவர்கள், அன்றோர் நாள் அம்பெய்தி அசுர வெள்ளையனை அழித்திட்ட அசகாய சூரர்களாம்! இதுவா நியாயம்? நியாய அனியாயம்கூட ஒருபுறம் இருக்கட்டும், இதுவா, ரோஷ உணர்ச்சியுள்ளவர்கள், கையாள வேண்டிய வாதம்! போரிலே மட்டும் புலிகள் என்று எண்ணாதீர் எம்மை, ஆட்சியிலேயும் ஆற்றல் உண்டு, எமது ஆட்சியின் விளைவுகளைக் காணீர், என்று கூறி, எமது ஆட்சியிலே, ஏதேனும் குறைகள் இருப்பின், தைரியமாக எடுத்துக் கூறட்டும், யாராக இருப்பினும், தவறான திட்டம், கேடு பயக்கும் சட்டம், மக்களை வாட்டும் வரித் திட்டம், இன்னின்னவை என்று எடுத்துக் காட்டிட எவருக்குத் துணிவிருப்பினும் வரட்டும், மக்கள் மன்றம் ஏறிக் கூறட்டும், நாங்கள் நாட்டைப் பிடித்தாட்டிய ஏகாதிபத்தியவாதிகள்போல, ‘இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்’ என்று ஆர்ப்பரித்து, பேச்சுரிமையைப் பறிக்கும் பேயர்கள் அல்ல, உண்மையை ஊருக்குரைத்து விட்டால் ஆட்சிப்பீடம் ஆட்டம் கொடுத்துவிடுமே என்று எண்ணித் துடிதுடித்து அடக்குமுறையை ஏவி, ‘பேசத் துணிபவர்களை’த் தீர்த்துக் கட்டும் தீயர்களல்ல, நாங்கள் காந்தீயர்கள், எனவே, எவரும், என்ன நேரிடுமோ என்று அஞ்சாமல், எமது ஆட்சியிலே குறைகள் இருப்பதாகக் கண்டால், எடுத்துக் கூறலாம், நாங்கள் அதனை வரவேற்கிறோம், என்றல்லவா கூறவேண்டும்! வேண்டுமென்றே, குரோத புத்தியுடனேயே, ஏதேனும் குறைகூறு விட்டால் தூக்கம் வராது என்ற போக்குடனேயே, எதிர்க் கட்சியினர், ஏதேதோ எடுத்துப் பேசுகிறார்கள் மக்களிடம், என்றே வைத்துக்கொள்வோம்,—இந்த ஆண்மையாளர்கள்,— ஒரு நொடியிலே, உண்மையை விளக்கிக் காட்டி, எதிர்க் கட்சியினரின் வாதங்களைத் தவிடு பொடியாக்கி, ஏளனத்தை ஏவி, எதிர்ப்பை முறித்திடலாமே! இதைத்தானே செய்வார்கள், எவரும் — அறிவாற்றலில் நம்பிக்கை உள்ளவர்கள்! ஏன், இந்த முறையைக் கையாளாமல், நாங்கள் சுயராஜ்யம் வாங்கித் தந்தவர்கள், ஆகவே எம்மைக் குறைகூறக் கூடாது, யாரும், என்று வாதாடுவது. பத்துப் பயில்வான்களை, குத்துக்கு ஒருவனாகக் கீழே வீழ்த்திய, ‘படே வஸ்தாதாக’ இருப்பினும், அவன், இசை அரங்கம் ஏறி ஏதோ இரைச்சலிட்டுவிட்டு, இது காம்போதி, என்று கூறினால், ‘படே வஸ்தாது’ என்கிற காரணத்துக்காக, “ஆமாம், ஆமாம் இதுதான் காம்போதி, சித்தூராரும் பிறரும் கூட இனி இவரிடமே பாடம் கேட்பது நல்லது” என்றா கூறுவர், இசை அறிந்தவர்கள்! அதுபோல, கண்ணுக்குப் பளிச்செனத் தெரிகிறது, இவர்களின் ஆட்சியின் விளைவுகள், கண்கலங்கி நிற்கிறார்கள் பொது மக்கள் அந்த வேதனையால், இந்த நிலையை எடுத்துக் காட்டி, ஏனய்யா இப்படித் தவறுகளைச் செய்கிறீர்கள் என்று கேட்டால், மீசையை முறுக்கிக்கொண்டு, ஓசையைக் கிளப்பிவிட்டு, ஆஹா! யாரிடம் இம்மாதிரி பேசுகிறாய்? நாங்கள் சுயராஜ்யம் பெற்றுத் தந்தவர்கள், தெரியுமா!—என்று ஆர்ப்பரிப்பதா! மந்திரிமார்களையும் அவர்களைத் தாங்கிக்கொண்டு வாழும் தாண்டவமூர்த்திகளையும், பராக்குப் பாடும் பர்மிட் தேடிகளையும், கைகட்டி நிற்கும் காண்ராக்ட் தேடிகளையும், கேட்கிறோம், எத்தனைக்காலத்துக்குத்தான், இந்த ஒரு காரணத்தைக்காட்டிக்கொண்டு வாழ்வது என்று திட்டமிட்டுவிட்டீர்கள்! ஒரு கணக்காவது தெரிந்தால், நொந்து கிடக்கும் பொதுமக்களுக்கு, ஓரளவு மன ஆறுதல் ஏற்படக்கூடும் என்பதற்காகக் கேட்கிறோம்! புலியை ஊரைவிட்டுத் துரத்திய வீரன், “போராபத்தினின்றும் உங்களை மீட்ட நமக்கு, ஒவ்வோர்நாளும், ஒருமணங்கு ‘நரமாமிசமும்’ பத்துக்

குடம், மனித இரத்தமும், படைத்தாகவேண்டும்" என்றுகேட்பானு— கதையிலே கூடக் காணேம்—கேட்பான் போலல்லவா இருக்கிறது, நமது நாட்டுக் 'கனம்களின்' புத்திசாலித்தனம், அப்படிப்பட்ட வீரனுக்கு இருந்தால்!

* * *

வெள்ளைக்காரப்புலியை வேட்டையாடித்துரத்திய வீரர்கள் என்கிற வாதத்துடன், வேருென்றும் கூட்டிக்கொள்கிருர்கள். நாம், அதாவது, திராவிடர் கழகத்தாராகியநாம், அந்தப்போரின்போது, இவர்களைஎதிர்த்தவர்களாம்! ஏன், எதிர்த்தோம், எப்படி எதிர்த்தோம், என்கிற பழங்கதை கிடக்கட்டும்—இவர்கள் கூறுகிறபடி, வெள்ளைக்காரனை இவர்கள் எதிர்த்தபோது, இவர்களுடன்சேராதிருந்தோம் என்று வைத்துக்கொண்டே பேசுவோம், அதனுலே, இவர்கள் எது செய்தாலும், ஏன் என்று கேட்கிற உரிமையே, நமக்குக் கிடையாதா! நம்மிடம் வரி வசூலிக்காமலிருக்கிருர்களா? நாம் இவர்களுடைய ஆட்சியின்கீழ் இல்லாமல், எங்காவது சிங்களம், சாவகம், சென்றுவிட்டோமா! இங்குதானே வாழ்கிறேம்—வரி செலுத்துகிறேம்—இவர்கள் ஆட்சியினுல் விளையும் சுகதுக்கங்கள் நம்மைப்பாதிக்காமலுள்ளனவா! எப்படி, நாம், குறைகண்ட இடத்து எடுத்துக் கூருமலிருக்கமுடியும் — ஏன் கூருமலிருக்க வேண்டும்? நாடாள இவர்கள் வந்ததும், நமது நாக்குகளை எல்லாம் அறுத்தெடுத்துக் காணிக்கையாகப் பெற்றுக்கொண்டார்களா? இவர்கள் ஆட்சித்திட்டம்தான் என்ன? எமது இஷ்டப்படிதான் ஆளுவோம், மாள்கிருர்களே மக்கள் என்றுகூட எவனும் கேட்கக்கூடாது, கேட்பவனின் மாறுகை மாறுகால் வாங்கி,மலைபுச்சியிலிருந்து உருட்டிவிடுவோம்,என்று கொக்கரிக்கும் கொடுங்கோலர்கள் காலமா இது! அந்தக்காலத்திலே கூட, ஆமைகளாகச் சிலபலநாள் இருந்த மக்கள், புரட்சி செய்து வீழ்த்தியிருக்கிருர்களே, கொடுங்கோலர்களை! குடிஅரசுக் கோட்பாடுள்ள இக்காலத்திலா, இவர்கள் இவ்விதம், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது!

சுதந்திரப் போராட்டத்தின்போது இவர்களுடன் சேர்ந்திராதவர்களை, துச்சமென்று கருதுகிருர்களா, உண்மையில்? தங்கள் ஆட்சிப் போக்கின் விளைவுகளை, யாராவது பொதுமக்களிடம் விளக்கிக் கூறிக்கொண்டிருந்தால், 'கணக்குக்கேட்க' ஆரம்பிப்பர் மக்கள் என்ற பயத்திஞல், ஆளவந்தார்கள், பீடிக்கப்பட்டிருப்பதனுல், எந்தச் சாக்குக் கூறியாவது, உண்மையை எடுத்துரைப்பவரை, நாட்டிலே நடமாடாதபடி செய்துவிடவேண்டும் என்று எண்ணுகிருர்கள். அவர்களுக்குக்கிடைக்கும் சாக்குகளிலே ஒன்று, சுயராஜ்யத்தை வாங்கித்தாராதவர்கள்,எமது ஆட்சியைக் குறைகூறுவதா என்று பேசுவது, உண்மை நிலைமையோ வேறு! சுயராஜ்யத்துக்காக இவர்கள் நடத்திய போரிலே கலவாத, அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத, ஏற்றுக்கொள்ளாததுடன் எதிர்த்துப் பேசிய பலருடைய, கூட்டுறவும் ஒத்துழைப்பும், தோழமையும், இப்போது காங்கிரஸ் கட்சிக்கும், காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கும் இன்று, ஏராளமாக இருக்கிறது — இந்தப் புதிய உறவு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டும் வருகிறது, சுயராஜ்யப் போரிலே கலவாதிருந்தகாரணத்துக்காக, இவர்களின் ஆட்சிமுறையிலே உள்ள கோளாறுகளை எடுத்துக் கூறவும் உரிமை இல்லை என்று நம்மை மிரட்டும் இந்த உக்கிரசேனர்கள், காங்கிரசிலே அன்றும் சேராமலிருந்த, இன்றும் சேராமலிருக்கிற, எவ்வளவோ, 'கனவான்களை' எப்படிச்சேர்த்துக்கொண்டார்கள் — 'பத்தினித்தனம்' கெட்டுவிட, ஏன்அனுமதித்தார்கள். இவர்களின் அதிகாரபீடத்தின் 'மூலஸ்தானம்'இருக்கிறதே, டில்லி, அங்கு, துரைத்தனம் நடத்துபவர்கள் அனைவருமா, உப்புச்சத்தியாக்கிரகம் செய்தவர்கள்? சர். கோபாலசாமிஐயங்கார்,எத்தனை தடவை தடியடிபட்டவர்? தடியடி தர்பார் நடத்தியவர், காஷ்மீர் திவாஞக இருந்தபோது!! இப்போது அவருக்கு, ஆட்சிப் பீடத்திலே இடம் கிடைத்ததே! எப்படி? ஏன்? அவர் மட்டுந்தானு? இருந்துவிட்டு வந்துள்ள, சர். சண்முகம், கோவைக்குக் காந்தியார் வந்தபோது, அவருக்கு அளித்த உபசாரப் பத்திரத்திலேயே, காந்தியாரின் சத்யாக்கிரகத்திட்டத்தைக் கண்டித்து எழுதி, படித்தவர்! பிறகும், பலமுறை காந்தியாரின் திட்டங்களையும் காங்கிரசின் போக்கையும் எதிர்த்தவர். இப்போதும், அவர், 'தக்ளி' சுற்றிக்கொண்டில்லை — வசந்தா மில்லைத்தான் நடத்திக்கொண்டு இருக்கிருர்! அவரிடம் கொடுத்து வைத்தார்களே, பொக்கிஷத்தை!! இப்போது அதற்குக்காவலராக அமர்ந்திருக்கும், மத்தாய், மகாத்மாவின் சீடரா, பர்தோலி சர்தாருக்கோ, அல்லது வேதாரண்யத்துச் சர்தாருக்கோ, சீடரா? எப்படி இருக்க முடிகிறது, அவரால்! சுயராஜ்யப் போரின்போது நாம் இவர்களுடன் இல்லை என்ற ஒரு காரணத்துக்காக, நமக்கு, இவர்களின் ஆட்சியிலுள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறவே உரிமை கிடையாது என்று பேசுகிருர்களே, உத்தமர்கள், இவர்கள், எப்படி, மத்தாயை அனுமதிக்கிருர்கள்? சிக்கிய இயக்க முன்னணி நின்று பணிபுரிந்து, அதன் காரணமாகக் காங்கிரசுடன் எதிர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலும் இருந்த பலதேவ் சிங்கிடம், பட்டாளங்களை ஒப்படைத்துவிட்டு, நேற்றுவரை இந்துமகாசபையிலிருந்த முகர்ஜியிடம், தொழில் துறையை ஒப்படைத்துவிட்டு இங்கு, இவர்களின் ஆட்சியிலே உள்ள தவறுகளை எடுத்துக்காட்டும் போது, மட்டும், நம்மை, "ஓஹோ! இவர்கள் முன்பு, சுயராஜ்யப் போர் முகாமில் இல்லாதவர்கள், எனவே இவர்கள் பேசிடப்பொறுத்திடோம்" என்று கொக்கரிப்பதா? நேர்மை தானு இது! சட்டம் டாக்டர் அம்பேத்காரிடம், பட்டாளம் பலதேவ் சிங்கிடம், தொழில் முகர்ஜிடம், பொக்கிஷம் மத்தாயிடம் — இவர்களெல்லாம் யார்? நாகபுரி கொடி சத்யாகிரகம், நீலன்சிலை சத்தியாக்கிரகம், வரிகொடா இயக்கம், கள்ளுக்கடை மறியல், அன்னியத்துணி கொளுத்துதல், ஆகஸ்டுப் புரட்சி, என்பவைகளிலே ஈடுபட்டவர்களா? ஆட்சி திறமையாக இருக்க வேண்டும், வெளிநாடுகளிலே உள்ளவர்கள், இந்திய நிர்வாகம், திறமையும் அனுபவமும் உள்ளவர்களிடம் இருக்கிறதேதவிர, கிளர்ச்சியிலேயே, காலமுழுவதும் செலவிட்டவர்களிடம் இல்லை, என்று தெரிந்து, அதன் பயஞக நம்பிக்கை பிறக்கவேண்டும், என்பதற்காகத் தானே, அவர்களை எல்லாம் சேர்த்துக்கொண்டார்கள்?

அவர்களுக்கு "ஞானஸ்நானம்" செய்வித்துச் சேர்த்துக்கொண்டோம், என்று கூடக் கூறித்திருப்திகொள்வதற்கில்லையே. அந்தக் 'கனவான்கள்' இப்போதும் காங்கிரசல்லவே!! அவர்களை அனுமதிக்கும், அன்பர்கள், கள்ளுக்கடை மறியலில் குடும்பத்துடன் சிறை சென்று, வைக்கத்தில் தீண்டாமை ஒழிப்புப் போருக்காகச் சிறை சென்று, ராஜத்துவேஷமாக எழுதினுர் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டுச் சிறை சென்று, கதர் சுமந்து விற்று, காங்கிரசை வளர்த்து, தமிழ்நாடு காங்கிரசுக்குத் தலைமை தாங்கி நடத்தி வந்து, பிறகு, அந்த 'சக்தி' எந்தெந்தக் கருவி கிடைப்பினும், தமது ஆதிக்கத்துக்குப் பயன் படுத்தும் போக்கினரான, பார்ப்பனருக்குப் பயன் படுவதுகண்டு, மனம்வெதும்பி விலகி, சமவுரிமைப்போர் தொடுத்து நடத்திவரும் பெரியாரும் அவர்தம் படையினரும் மட்டும், பேசவும் கூடாது, இவர்களின் ஆட்சிப்போக்கிலே உள்ள கோளாறுகளைப் பற்றி, என்று நெஞ்சிலே நீதி நியாயமற்றுப் பேசுவதா? நேர்மையாளர்கள், அமைச்சர்களின் வாதத்தை ஏற்றுக்கொள்ளுகிருர்களா, என்று கேட்கிறேம்?

தைரியமிருந்தால், யார் எத்தகைய 'குற்றச்சாட்டுகளை'க் கூறிஞலும், மக்கள் மன்றமேறி, தமது மாசுமருவற்ற தன்மையை நிலைக்கச் செய்ய முடியும் என்று கூறுவர்?

அமைச்சர்களுக்கோ அச்சம்! ஏனெனில், நாம் மக்களிடம் எடுத்துக் கூறும் உண்மைகளை அவர்களால், மறுக்கமுடியாது! மக்கள், வேக வேகமாக உணர ஆரம்பித்துவிட்டனர், ஆட்சியின் தவறுகளை. எனவேதான், அமைச்சர்கள், நமது பிரசாரத்தைக் கண்டு பீதிகொள்கிருர்கள். அச்சம் அவர்களை எதை எதையோ, பேச வைக்கிறது. ஆஞல் நாடு சிரிக்கிறது, இவர்கள் காட்டும், காரணங்களைக் கேட்டு.

இவ்வளவு எக்காளமிட்டுவரும் 'கனம்களின்' போக்குப்பற்றி, காங்கிரசுக்குள்ளாகவேயாவது, திருப்தி இருக்கிறதா என்று பார்த்தால், நித்த நித்தம் கண்டனமும் கேலியும் வெளிவந்தபடியே உள்ளன. ஆசை வெட்கமறியாது என்பார்கள். அதன் காரணமாகத்தான் ஆட்சியாளர்கள், தங்கள் சொந்தக் கட்சியினரின் 'சூடுகளை'யும் தாங்கிக்கொள்ளுகிருர்கள். வெளியே சொன்ஞல் வெட்கக்கேடு, என்று எண்ணிப்பல நாட்களாகப் பொறுத்துப் பார்த்துப் பார்த்து, கடைசியில், இனிப் பொறுக்கமுடியாது என்ற நிலைக்கு வந்தவர்கள், இன்று, ஆட்சியாளர்களைப் பலவகையிலே கண்டித்துப் பேசியும் எழுதியும், கேலிச்சித்திரங்கள் தீட்டியும் வருகிருர்கள்.

உலகிலேயே, வேறு எந்த ஆட்சிக் குழுவும், எந்தக்கட்சியிலிருந்து குழு அமைக்கப்பட்டதோ, அதே கட்சியினரால், இன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கண்டிக்கப் படுகின்ற அளவிலும் முறையிலும் கண்டிக்கப்பட்டதே இல்லை.

அட்லியின் போக்கைச் சர்ச்சில் கண்டிப்பது, எதிர்பார்க்கக்கூடியது, ஆஞல் அட்லியின் போக்கை அவரை முதலமைச்சராக்கிய, தொழிற் கட்சியே கண்டிக்கிறது என்ருல், எளனத்துக் குரியதல்லவா!

காங்கிரசாட்சியை, எந்தப் பெருந்தலைவர், இதுவரை குறைகூருமலிருந்து வந்திருக்கிருர்? அந்தக் கண்டனக் கலம்பகத்தை எடுத்துக் கூறிவந்தாலே போதுமே, திராவிட கழகம் — தனியாகத் தேடிக்கண்டு பிடிக்கக்கூட வேண்டியதில்லையே.

பெருந்தலைவர்கள் ஒரு புறத்திலே கண்டிக்கிருர்சள்—ஊழியர்கள் மற்ருேர் புறத்திலே, உள்ளம் வெதும்பிக் கண்டிக்கிருர்கள் — ஒருவருக்கொருவர் ஓயாமல், உபதேசம் செய்து கொள்கிருர்கள்.

ஒரு இடத்திலே தலைவர்கள், தொண்டர்களுக்குத் தியாகத் தத்துவத்தை விளக்குவதும், மற்ருேர் இடத்திலே, தொண்டர்கள், தலைவர்கள் பதவி மோகத்துக்கு ஆளாகி, பாழாகி வருவதைக் கண்டிப்பதும், இன்னும் சில இடத்திலே, உன்ஞலே நான் கெட்டேன்—என்ஞலே நீ கெட்டாய், என்று தவறு செய்த தெருத் திண்ணைப்பள்ளி மாணவர்கள், கூறிக்கொண்டு அழுவது போலவுமல்லவா, நடந்துவருகின்றன!

தியாகத்துக்கு விலை கேட்காதே! எல்லோரும் அமைச்சராக முடியாது! எனவே அதிகாரத்தில் ஆசை வைக்காதே!—என்று, பெருந் தலைவர்கள், கூறுகிருர்கள், மக்கள் நலனைக் கவனிக்க மறுக்கும் போக்கிலே காரியமாற்றும், இந்த ஆட்சியைக் காணத்தாஞ, இவ்வளவு பாடுபட்டோம் என்று மனம் குமுறும் தொண்டர்களைப் பார்த்து.

இந்த இலட்சணத்தில் இருக்கிறது குடும்பம்—கூக்குரல்வெளியே கேட்க ஒட்டாதபடி தடுக்க, அக்கம் பக்கத்தார் காதிலே விழாமலிருக்க, ஒவ்வோர் மாகாணத்துக்கும், 'வீரகானம்' பாட ஒரு காமராஜர் தேவைப்படுகிருர் — இவர்களுக்குத் தானய்யா,மூக்குச்சிவந்துவிடுகிறது, நாம், ஏதேனும் 'குறை' கூறிஞல்— உடனே, "நாம்" யார் என்பதற்கான ஒரு நிந்தனை நாமாவளியைத் தயாரித்துக்கொண்டு, கிளம்பிவிடுகிருர்கள், கர்ஜனைபுரிய.

நம்மை நிந்திக்கும் இந்த நற்குணவான்களைப் பற்றி, நாடறியக் கண்டித்துள்ளவர்களின் பெயர் பட்டியலைக் கண்டாலே, வெட்கம், மனதைப் பிய்த்திருக்க வேண்டும்.

கொண்டா வெங்கடபய்யா, கிருபளானி, பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், போன்றவர்கள், ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளைகளல்ல, என்னை வீட்டிலேயே வந்து கைது செய்துவிடுங்கள் — என்று போலீஸ் அதிகாரியைக் கெஞ்சி, வீரத்தியாகி ஆனவர்களல்ல. அவர்களின் கண்டனம், இலேசான அளவிலேயோ, மறந்துவிடக்கூடியமுறையிலேயோ, இருக்கவில்லை.

பாபு புருஷோத்தம தாஸ், 'சிறு குழந்தைபோல்' அழுதுகொண்டே, இன்றைக் காங்கிரசின் நிலைபற்றிப் பேசிஞர், என்று தேசிய ஏடுகளே, தீட்டிக்காட்டின, நாட்டு மக்களுக்கு.

இந்த நிலையிலே இவர்களின் நடவடிக்கை இருக்கும் போது, அரசியல் வேட்டையை நோக்கமாகக் கொள்ளாமல், அறிவுததுறையிலே புரட்சியை உண்டாக்கும் அடிப்படை வேலையிலேயே நாட்டம் கொண்டு பணிபுரியும் திராவிடர் கழகம், அரசியலிலே நடைபெறும், நடவடிக்கைகளிலே, கேடானவைகளைக் கண்டித்தால், 'கனம்'களுக்குக் கோபம் கொந்தளிக்கிறது.

இதே நேரத்தில், அமைச்சர்களிலே சிலர் மீது, முன்ஞள் முதலமைச்சர் பிரகாசம், குற்றப்

பத்திரிகை தாக்கல் செய்வதும், அவருடைய ஆட்சியின்போது இருந்த அலங்கோலங்களைப் பற்றிய குற்றப் பத்திரிகையை இன்றுள்ளவர்கள் படிப்பதும், இரு குற்றப்பத்திரங்களையும் பற்றி மேலிடம் விசாரணை செய்ய முனைவதுமான நிலை இருந்து வருகிறது.

"வழக்குமன்றமேறியும் கூறத் தயார்" என்று கூறுகிறார், பிரகாசம்.

விசாரணை நடத்தினால், இவர் ஆட்சிக்காலத்து நடவடிக்கைகள் பலப்பல, அம்பலத்துக்கு வரும் என்கின்றனர், இன்றைய ஆட்சியாளரின் ஆதரவாளர்கள்.

யார் கூற்று உண்மையாக இருப்பினும், காங்கிரஸ் ஆட்சியாளரின் போக்கும் தன்மையும், நேர்மையற்றதாக இருந்திருக்கிறது என்பதை மறைப்பதற்கில்லை. மாகாணம் இப்படிப்பட்ட 'மகானுபாவர்களின்' ஆட்சியிலே இருந்திருக்கிறது—இருந்துவருகிறது — எனினும், யாரும் இவர்கள் போக்கைக் கண்டிக்க கூடாதாம்!

"அமைச்சர்களிடமும் துரைத்தன அதிகாரிகளிடமும் இலஞ்ச இலாவணம் ஏராளமான அளவிலே இருக்கிறது என்பதை நான் கூற முடியும். நிர்வாகத் திறமையும் ஓரளவுக்குக் குறைந்துதான் போய்விட்டது"

எப்படி இருக்கிறது இந்தக் குற்றச் சாட்டு—!

"I can say that there is Corruption on a large scale among ministers and Government officials There has also been a certain amount of deterioration in efficiency."

இது குற்றச்சாட்டு—பகிரங்கமான குற்றச்சாட்டு—இதைக் கேட்டுச் சகித்துக்கொள்ளும், சிலர்கள்தான், பொதுவாக ஆட்சிமுறையைப் பற்றி விளக்கம் கூறி, கண்டிக்க வேண்டியனவற்றை மட்டுமே கண்டிக்கும், திராவிடர் கழகத்தினர் மீது தீ மொழி வீசுகின்றனர்.

இதோ வெளிப்படையாக, தைரியமாக, இந்த அமைச்சர்களைப்பற்றி அச்சமோ கவலையோ அற்று, இவர்களின் கோபவேச நடவடிக்கையும் வீராவேசப் பேச்சும் தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது, என்ற துணிவுடன், தூயவர் ஒருவர் கூறுகிறார்-Corruption on a large scale–என்று! எங்கோ கொஞ்சம், கண்டும் காணாததுமாக அல்ல, on a large scale, பெருவாரியான அளவிலே இருக்கிறது, இலஞ்ச இலாவணம், என்று கூறுகிறார்.

சீறிடும்வீரர்கள், என்னசொல்லுகிறார்கள் இதற்கு? இதைப் பொது மக்கள் எங்கே ஊன்றிக் கவனிக்கப் போகிறார்கள், கவனித்தாலும், அவர்களுக்குள்ள எவ்வளவோ தொல்லைகளிலே, இதை எத்தனை நாளைக்கு மறவாமல் இருக்கப் போகிறார்கள், மறவாமலிருப்பினும், நம்மை எப்படிக் கேட்கமுடியும், என்ற தைரியம் தானே ஆளவந்தார்களுக்கு!

இலஞ்ச இலாவணம் ஏராளமான அளவிலே இருக்கிறது, அமைச்சர்களிடம்!—என்று கூறியதைக் கேட்டுக்கோபமோவெட்கமோ, வரவில்லை, நாம் ஏதேனும் கூறமுற்பட்டால் சல்லடம் கட்டிக்கொண்டு கிளம்பும் கனம்களுக்கும், அந்தக் கனம்களைத் தாங்குபவர்களுக்கும்.

இந்தக் குற்றச்சாட்டு, எப்போது வெளியிடப்பட்டது? யாரால்? எவரிடம்? என்பதை அறிய அவாவிருக்கும் பலருக்கு.

குடிஅரசு — விடுதலையில்,— கறுப்பு, சிகப்பு சட்டையினர் தீட்டிய கட்டுரையிலிருந்து எடுத்ததல்ல: 'இந்து' மேமாதம் 15-ந் தேதி இதழில், முதல்பக்கத்தில், ஐந்தாவது காலத்திலே, அழகுற அச்சிட்டு வெளிவந்திருப்பது, குற்றச்சாட்டு.

கூறினவர், பாபுராஜேந்திர பிரசாத்—அரசியல் நிர்ணய சபையின் தலைவர்—அண்ணல் காந்தியாரின் அறநெறி நிற்கும் பண்பினர்—அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவர்—அவர் கூறுகிறார், பத்திரிகை நிருபரிடம், அமைச்சர்களிடமும் அரசாங்க அலுவல்பார்ப்போரிடமும் அதிகமான அளவு இலஞ்ச இலாவணம் தாண்டவமாடுகிறது, என்று. இதைக்கேட்டு வாய்பொத்திக்கிடக்கும் வீரர்கள், நாம் இத்தகு குற்றச்சாட்டுகளை அல்ல, அரசியலில் நிகழும் நடவடிக்கைகளைப் பற்றிய நமது கருத்துரைகளை வெளியிட்டால், கர்ஜனை புரிவதா! நியாயமா?

பதவிமோகம் அவர்களை ஆட்டி வைக்கிறது, பாபம், அவர்கள் நல்லவர்கள்தான், புது மோகத்தால் கொஞ்சம் கெட்டு விட்டார்கள், நாளாகவாகத் திருந்துவார்கள், என்று, பாபு ராஜேந்திரபிரசாத், தைரியம்கூடத் தரவில்லை!

நாட்டு மக்களெல்லாம் ஒழுக்கமுள்ளவர்களானால் தான் இத்தகைய ஊழல்களெல்லாம் ஒழியும், என்று நன்னெறிபாடுகிறார்.—அதாவது, இந்த அமைச்சர்கள், கண்டிக்கப் பட்டாலும், வெளிப்படுத்தப் பட்டாலும் கூடத் திருந்தமாட்டார்கள், என்று அவர் நம்புகிறார்—எனவேதான் உபதேச அளவிலே நின்று விடுகிறார்.

காங்கிரசிலே உயர் நிலையில் உள்ளவர், இங்ஙனம், வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார்.

நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டில், மந்திரிமார்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வளவுக்கும் பிறகும், இவர்களுக்கு, நாம் பேசுவதும் எழுதுவதும், கோபத்தை, ரோஷத்தை, ஆத்திரத்தைக் கிளப்பிவிடுகிறது, ஆஹா! விட்டேனா பார்!—என்று மிரட்டுகிறார்கள். 'இந்து' இதழ் உலகில் பல இடங்களுக்குச் செல்லும் நிலைபெற்றது—அதிலே, இருக்கிறது பாபுராஜேந்திர பிரசாதின் பகிரங்கக் குற்றச்சாட்டு; பல்வேறு நாட்டுப் பாராளுமன்றங்களிலும், இது படிக்கப்படும்—உலகப் புகழ் பெறுகிறார்கள் 'கனம்கள்'—இதை மறந்து, நம் மீது பாய்கிறார்கள், ஒழித்துவிடுவோம் என்று கூவுகிறார்கள்.

நம்மைத்தானே! — தாராளமாகச் செய்யட்டும் — ஆனால் இவர்களின் நற்பெயர் ஒழிகிறதே பாபுராஜேந்திர பிரசாத் போன்றாரின் குற்றச்சாட்டுகளால்—அதற்கு என்ன செய்யப் போகிறார்கள்!

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

REGD. M. 4642.

சந்தா விபரம் — 1 ஆண்டு ரூ 7, ½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம் விலை இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 29–5–49 | இதழ் 48

"இரமண விஜயம்"

[இரா. நெடுஞ்செழியன்]

"குடிக்கவும் நீரற் றிருக்கும் — ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல்,
கோடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததி னாலே
— தம்பி!
வசம்கெட்டுப் போனது நமது
நன்னாடு"

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாட்டுப் பெருங்குடி மக்களைப் பார்த்து அறிவுரை பகன்றார். ஆனால், இந்நாட்டில் அறிவை அடகு வைப்போர் இன்னும் ஏராளமாக இருந்து வருகின்ற காரணத்தால், மாடுகள் வழக்கத்தால் செக்கைச் சுற்றி வருவது போன்று, வழக்கத்தால் செய்யப்படும் மூடச் செயல்கள் பலவும், இன்னும், இங்கு நடைபெற்றவண்ணம் இருந்து வருகின்றன.

அண்மையில், திருவண்ணாமலையில் பாதாள லிங்கக் கோயில் திறப்பு விழாச் செய்யப்பெற்றதை அனைவரும் அறிவர். அதன் திறப்பு விழாவாற்றும் 'அரும்பணியை'ச் செய்து முடிக்க, அனைத்திந்திய ஆட்சியின் அரியணை மீதேறி, எட்டுத் திக்கும் எட்டக் கோலோச்சிவரும் கோமான், 'சக்ரவர்த்தி' ராஜகோபாலாச்சாரி

லுள்ள மற்ற நாட்டிலுள்ள ஆட்சித் தலைவர்களுக்கு, உலக மாநாட்டில் கலந்து கொள்ளல், அணு ஆராய்ச்சி சாலையைத் துவக்கி வைத்தல், பல்கலைக் கழகங்களைத் திறந்து வைத்தல், பெருந் தொழிற்சாலைகளைத் தோற்றுவித்தல், வெற்றி விழாக்களிலே கலந்துகொள்ளல் போன்ற நற்பெருஞ் செயல்களிலே ஈடுபடுவதும், மற்ற வேளைகளிலே ஆட்சி அலுவல்களைக் கவனிப்பதும் ஆன செயல்களைத் தவிர, வேறு செயல்களிலே சிந்தனை செலுத்தவும் நேரமிருப்பதில்லை. இந்திய கவர்னர் ஜெனரலுக்கோ எனின், ஹனுமான் கோயிலில் விசேஷப் பிரார்த்தனை நடத்துதல், விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட கப்பலை நீரில் மிதக்க விடத் தேங்காயை உடைத்தல், அடையாற்றுத் தோட்டத்திலே மாஞ்செடி நட்டு நீர் வார்த்தல், இரமணர் 'தவம்' புரிந்த இடத்தில் கட்டியுள்ள கோயிலைத் திறத்தல் போன்ற வேலைகள் ஏற்பட்டுவிடுகின்றன! வேறு அவசிய அரசியல் வேலை எதும் இல்லை என்பது காரணமோ அல்லது அவைகளைவிட இவைகள் முக்கியமானவை என்று கருதுவது காரணமோ; ஏதோ ஒன்று! அறியோம் 'பராபரமே'!

பாதாள லிங்கக் கோயிலில் இரம

அதற்கு மகத்துவம் ஏற்பட்டுவிட்டதாம். அந்த மகத்துவத்தை நிலைநாட்டும் திருப்பணியேஇப்பொழுது நடைபெற்ற கோயில் திறப்பு விழாவாம்!

யார் இந்த ரமணர்? யாரோ வெங்கட்டராமன் என்ற பார்ப்பனச் சிறுவனும். வீட்டிலுள்ளோரிடம்வெறுப்புக் கொண்டு வெளியேறினானும். வெறுப்பு கோவணாண்டியாக ஆக்கிற்றாம். கோவணாண்டி, பாதாளலிங்கக் கோயிலில் குந்தினாராம். தவம் புரியத் தொடங்கினாராம். பக்தியின் 'சிறப்பை' மெச்சி ஆடவரும் பெண்டிரும் திரண்டார்களாம். விதவையரும் வாழ்க்கையில்விரக்திகொண்டு வந்து சேர்ந்தனராம். 'யோகம்' பலமாக நடைபெறத் தொடங்கிற்றாம். பக்தகோடிகளால் காணிக்கைகள் பலவும் செலுத்தப்பட்டதாம். பொன்னும் பொருளும்குவிந்ததாம். பின் ஆச்சிரமம்அரண்மனையாயிற்று. இராமன் இரமணரானார்!

அண்ணன் வெங்கட்டராமன் மடங் கட்டி வாழ்வதைக் கேள்விப்பட்ட தம்பி, மடத்தின் அலுவல்களைக் கவனிக்க, மடத்திற்குச் சர்வாதிகாரியாக வந்தாராம். அண்ணன், மடத்துச் சொத்துக்களை எல்லாம், தம்பியின்மீது கொண்

அறுபடாமலிருக்க வேண்டி, தம்பியின் பெயருக்கு எழுதிவைத்தாராம். மக்கள் தன்னைப்பற்றி சந்தேகப்படக்கூடாதென்று, தம்பி தன்னை சுவாமி நிரஞ்ஞானந்தா என்று யாவரும் அழைக்கும்படி செய்தாராம். பிராமணோத்தமர்களுக்குச் சாப்பாடும், மற்றும் பல காரியங்களும் யாதொரு குறைவுமின்றி அன்றுடம் நிறைவேறி வருகிறதாம். இது தான் 'இரமண விஜயம்'!

இப்படிப்பட்ட 'இரமண விஜயத்' தின்மகிமையெல்லாம், இரமணரோடு பலகாலம் உடன் உறைந்து, அவருக்குப் பிரதமசிடராக இருந்து, பல ஆண்டுகள் பணியாற்றி, அவர் உள்ளெண்ணம், நடவடிக்கை எல்லாம் அறிந்து, வெளியேறியுள்ள பெருமாள் சாமியார் என்பவர் வெளியிட்டுள்ள சிறு நூல்களின் வாயிலாக நன்கு அறியக் கிடக்கின்றன. இந்தப் பெருமாள் சாமியார் இன்னும் இறந்துவிடவில்லை, அதே திருவண்ணாமலையில்தான், தனிமடத்தில் வாழ்ந்து வருகிறார்.

இந்தஇரமண'ரிஷி'யால், நாட்டுக்கு இதுவரையில் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா? இல்லை! அப்படி ஏற்பட்டிருக்கிறது, என்று எந்த சாதனையைக் காட்டியாவது, யாராலும் நிரூபிக்கத்தான் முடிகிறதா? அதுவும் இல்லை! இரமணருக்கு முன் இருந்த 'உலகம்', இரமணரின் கலப்பால் எந்தவிதத்திலாவது மாறி முன்னேறி யிருக்கிறதா? அதுவும் இல்லை! ரிஷிகளல்லாத சாதாரண அரசியல் தலைவர்களாலும், அறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும், வீரர்களாலும் இந்த நாட்டில் சாதிக்க முடிந்தவற்றில், ஒரு பகுதி சேவையையாவது, மனித சமுதாயத்துக்குஇரமணரால்ஆற்றமுடிந்ததா? குண்டூசி கண்டு பிடித்த விஞ்ஞானியால் உலகிற்கு ஏற்பட்டுள்ள நன்மையில் ஆயிரத்திலொரு பங்கு நன்மையையாவது இரமணர் ஆற்றியிருப்பாரா? இப்படியெல்லாம் கேட்டால், இப்படிக் கேட்பதே 'கடவுளின் லீலை' என்கிறார் ஆச்சாரியார்!

இப்பேர்ப்பட்ட 'சர்வ வல்லமை படைத்த ரிஷிகளை'க் கண்டுதான் புரட்சிக் கவிஞர் கேட்கிறார்,

"கடவுள் துவக்கிக் கொடுத்த
—பல
கவிதைகள், பதிகங்கள் செப்
பிய பேர்கள்,
கடவுள் புவிக்கவதாரம்,—
அந்தக்
கடவுளின் தொண்டர்கள்,
லோக குருக்கள்
கடவுள் நிகர் தம்பிரான்கள்—
ஜீயர்,
கழுகொத்த பூசுரர், பரமாத்து
மாக்கள்
கடவுள் அனுப்பிய தூதர்—
வேறு
கழுதைகளினாலும்சுகங்கண்ட
துண்டோ?"

என்று விடை கூறுவோர் இல்லை! ஆனால் அவற்றிற்குச் சார்பாக விவேகமற்ற செயலகள் புரியும் வீணர்கள் இருக்கிறார்கள்!

சாதாரண மக்களைக் காட்டிலும் மீறிய வல்லமை படைத்த இந்த 'முனிவரால்', தன்னையாவது நோய், கொடி, மூப்பு, ஆகியவற்றிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடிகிறதா? சாதாரண மக்கள், நாடும் சாதனங்களைத்தான், 'சர்வேஸ்வரனின் கடாட்சம்' பெற்று விளங்கும் சத்ஞானஜரும் தேடுகிறார். இரமணரின் தம்பியாரிடம், 'ரிஷி'யின் உடல்நிலை பற்றி ஆச்சாரியார் வினவினாராம். அதற்கு அவர், "மஹரிஷிக்கு இப்பொழுது வலது கை சிறிது சரியாக இல்லை. டாக்டர்கள் இந்த நோய் சிக்கிரத்தில் குணமடைந்து விடுமென்று உறுதி கூறியுள்ளார்கள்" என்று கூறினாராம். தனக்கு நோய் வராமல் தடுக்கவும் ரிஷியின் 'மகத்துவம்' பயன்படவில்லை; வந்த நோயைப் போக்கிக் கொள்ளவும் அந்த 'மகத்துவத்தால்' முடியவில்லை! ஆங்கில வைத்தியம் கற்றுத்தேர்ந்த டாக்டர்களின் உதவியைத்தான் அந்த 'மகாத்மா' நாடுகிறது!

மனிதன் வேண்டி நிற்கும் அன்றாட இன்றியமையாத தேவைகளில், ஏதேனும் ஒன்றை, 'மஹரிஷியால்' புறக்கணிக்க முடிந்ததா? அல்லது மனித சக்திக்கு மீறிய செயல் ஏதேனும் அவரால் ஆற்றத்தான் முடிந்ததா? முடியுமா? திருவண்ணாமலையில் அவர் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தில் அவர் ஆற்றியுள்ளதாக, அறிவற்ற மக்களிடையே பரப்பப்பட்டுவரும் அதிசயங்களெல்லாம், எந்த அளவுக்குப் பொய்யாகப் புனைந்துரைக்கப்பட்டனவாகும் என்பதை, அவரோடு பல்லாண்டு பழகிய பெருமாள் சாமியார் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார். ஆச்சிரமத்தில் நடைபெறும் இழிசெயல்கள் எந்த அளவுக்கு மிக்கோங்கி நிற்கின்றன என்பதையும் பெருமாள் சாமியார் தெள்ளத் தெளியப்புட்டு விளக்கியுள்ளார். சாமியார்களின் குட்டுகள் சாமியாருக்குத் தானே தெரியும்!

முற்றுந்துறந்த முனிவருக்குப் பொன் ஏன்? பொருளேன்? மடமேன்? மாளிகைகள் ஏன்? பட்டமேன்? பரிவாரமேன்? மணிமண்டபங்கள் ஏன்? மங்கையர் கூட்டம் ஏன்? சொத்து ஏன்? சுகமேன்? மண் ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்க நோக்கும் பண்புடையவராகவல்லவோ அவரிருக்கவேண்டும்! வையகத்தைப் பாயாகவும், வானகத்தைக் கூறையாகவும் அல்லவோ அவர் பாவிக்கவேண்டும்! கையைத் தலைக்கணைத்துப் படுப்பதே சுகந் தேடும் பண்பாகும் என்று யாரோ பெண்கள் சுட்டிக்காட்டியபொழுது, அந்தச் சுகத்தையும் அப்பொழுதிருந்து இழந்துவிடச் சம்மதித்தாராமே பட்டினத்தார்; அதுபோல, இக சுகத்தை இழந்தவராக வல்லவோ இருந்திருக்கவேண்டும் முற்றுந் துறந்தவராகக் கருதப்படும் 'முனிபுங்கவர்'! அல்லது சாதாரண துறவிகளுக்கு, விதிக்கப்பட்டிருக்கும் விதிகளான 'பசித்தால் புசி; வியர்த்தால் குளி' என்ற கோட்பாட்டோடாவது நின்றாரா? அப்படியும் சாதாரணமாக இவரைப் பொறுத்து எண்ணிவிடக் கூடாது, இவரோசாதாரணத் துறவு நிலைகளையும் தாண்டி, சர்வேஸ்வரனின் வரப்பிர்சாதம் பெற்றுநிற்கும் 'சர்வஞானி' யாவார்! இப்படிப்பட்டவரைச் சூழ்ந்துதான் இக சுகங்கள் தாண்டவமாடுகின்றன!

எதையும் சாதிக்காத—புதிய தத்துவம் எதையும் எடுத்துக் கூறாத—யாருக்கும் பயன்படாத—உணவை உண்டு உடலைப் பெருக்கும், சாதாரண மனிதனுக்கும் தனக்கும் ஆற்றலில் வேறுபாடு காட்டாத ஒரு கோவணாண்டி! அந்தக் கோவணாண்டியின் மகத்துவத்தைக் காட்டும் கோயிலாம் பாதாள லிங்கம்! அதற்குத் திறப்பு விழாவாம்! அதை ஆற்றிவைக்க கவர்னர் ஜெனரலாம்! என்னே கூத்து! அறிவுலகம் அந்த அளவுக்குப் பழிக்கப்படுகிறது, உதவாக்கரைப் பழைமைக் கொள்கைப் பற்றுக்கோடர்களால்!

கவர்னர் ஜெனரல்! பின்னே கவர்னர்! அவர் பின்னே மகாராணியார்! படைவரிசைகள்! பரிவாரங்கள்! பக்தகோடிகள்! மந்திரிகள்! தந்திரிகள்! எடுபிடிகள்! எல்லாவற்றையும் பற்றிப் பாராக்குக் கூற, எடுதாங்கிககள்! இவையெல்லாம் எதற்கு? யாரோ வீட்டை வெறுத்த' ஒருவன் குந்தித் 'தவம்' கிடந்த இடத்தைச் சிறப்பிக்க! எவ்வளவு அவசியமான—அவசரமான — அற்புத நிகழ்ச்சி பாருங்கள்!

பாசம் அறுத்த 'முனிபுங்கவருக்குப்' பக்தகோடிகள் காட்டும் மரியாதை இந்த அளவோடு நின்றுவிடக் கூடாதாம். "அவர் பிறந்த, கல்வி பயின்ற, தபஸ் செய்த, தற்சமயமிருக்கும் இடங்களையெல்லாம், புனித ஸ்தலங்களாக்கிவிட வேண்டுமாம்." இப்படிக் கூறுபவர் யார்? பெரோஸா தலையார்கான் என்ற பெருமாட்டியார்! அவ்வளவு அன்பு இரமணரின் 'மகத்துவத்' தின்பால்! அவர் விருப்பப்படி வேறுபல விழாக்கள் கொண்டாடப்பட்டாலும், நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, காரணம் 'ஜீர்ணோத்தாரணம்' செய்வதற்கு ஓமந்தூரார்கள் இருக்கிறார்கள்; அவைகளைத் திறப்பு விழாவாற்றிவைக்க ஆச்சாரியார்கள் இருக்கிறார்கள்!

அன்பர் ஆச்சாரியார் கோயிலை மட்டும் திறந்துவைக்கவில்லை; வாய் திறந்தும் சில சொல்லியிருக்கிறார். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் அடையவேண்டிய தொன்றை அவர் வற்புறுத்தியுள்ளார். அனைவர்க்கும் நுண்ணறிவு வேண்டும் என்பதை உணர்கிறார்; நாமும் ஓரளவுக்கு அங்கு கூடியிருந்தோர் அனைவர்க்கும் அது ஏற்படவேண்டும் என்று தான் எண்ணுகிறோம். "நமக்கு நுண்ணறிவைக் கொடுக்கும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்வதில் எல்லோரும் ஒன்றுபடுவோமாக" என்று அவர் அறிவுரை பகர்ந்துள்ளார். அங்கிருந்த பக்தகோடிகள் அனைவர்க்கும் நுண்ணறிவு வேண்டியது அவசியந்தான்; மேலிழுந்தவாரியான அறிவைக் கொண்டிருக்கும் காரணத்தால் தான், மூடபக்தியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை, நாம் அடிக்கடி உணர்த்தி வருகிறோம். ஆச்சாரியார் எண்ணுகிறார், வேண்டப்படும் நுண்ணறிவு, பிரார்த்தனையால் கிடைத்துவிடும் என்று. பிரார்த்தனை மூலமே நுண்ணறிவைப் பெற்றுவிட முடியுமென்றால், நுண்ணறிவு பெறுவதற்கென்று உலகெங்கும் ஏற்படுத்தியிருக்கும் கல்வி நிலையங்களும், கலைக் கழகங்களும், ஆராய்ச்சி சாலைகளும், அறிவகங்களும் தேவையில்லாமலே போயிருக்கும்! பிரார்த்தனை பண்ணிப் பண்ணிப் பார்த்தும் நுண்ணறிவு கிடைக்காத காரணத்தால் தான், உலக அரசாங்கங்களெல்லாம் அறிவுக் கூடங்களை நிறுவி இருக்கின்றன. நுண்ணறிவு பெற உலகியலை அறிய முற்படுவதுதான் முறையேயன்றி, பிரார்த்தனை பண்ணுவதில் பயனேதும் கிட்டாது என்பதை அறிந்துகொண்ட காரணத்தினால்தான், சுயமரியாதைகாரர்கள் நுண்ணறிவு கொண்டோர்களாக விளங்குகிறார்கள்; மேலும் மேலும் நுண்ணறிவு வளரவேண்டி, உலகியலை அறியும் முறையையே சிறந்த முறையாகக் கைக்கொண்டுள்ளார்கள்.

திருவண்ணாமலையில் கூடியிருந்த பக்தகோடிகளுக்கு, என்னவோ, நுண்ணறிவு வேண்டியது அவசியந்தான்! ஆனால் அந்த நுண்ணறிவு ஆச்சாரியார் கூறும் பிரார்த்தனையால் கிடைக்காது என்பதை அவர்கள் இப்பொழுது அறிவார்களா, பாபம்! ஆச்சாரியாரே அறிவுறுத்துகிறபடி, சுயமரியாதைக்காரர்களிடம் அன்பு செலுத்தி அவர்களுடன் பழகும் போதுதான் அறிவார்கள்! பிரார்த்தனையால் வாய்வலிக்குமே தவிர, காரியம் ஏதும் நிறைவேறாது—நிறைவேறியது கிடையாது. இது ஆச்சாரியாருக்குத் தெரியாதா என்றால், தெரிந்திருக்கும், என்றாலும் மூடப் பழைமையை விட்டுவிடக் கூடாது என்ற கருத்திலே, ஏதோவொரு காரணம் பற்றி அவர் கொண்டுவிட்ட உறுதியான நம்பிக்கையின் பேரில்தான் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார். வேண்டுமென்றே, வற்புறுத்தித் தீரவேண்டும் என்று, ஒருவர் 'ஏதோ நலங்' கருதித் துணிந்துவிட்டால், அவரைத் தடுத்து, அப்படிச் சொல்லவேண்டாம் என்று கூறி வெற்றிபெற முடியுமா? அறிவு ஒப்புக்கொள்ளாவிட்டாலும், சூழ்நிலைஅவசியம் தூண்டும்போது, கொண்ட கருத்து கோணலானாலும் கூறித்தானே தீருவர்! அந்தப் போக்கை ஒட்டியதாக இருந்தாலும் இருக்கலாம், ஆச்சாரியார் பிரார்த்தனை செய்து நுண்ணறிவு பெற வேண்டும் என்று சொல்லும் கருத்தும். ஆனால் நுண்ணறிவுபெறுவதற்கு வழி எது என்று தேடி அவர்கள் நம்மைச் சந்திக்கும்போது, "உலகியலைப் பலவகையிலும் பகுத்தறிவுக் கண் கொண்டு பார்!" என்று சொல்லித் தரமட்டும் நாம் தவறமாட்டோம்.

மேலும் ஆச்சாரியார் சுயமரியாதைஇயக்கத்தைப்பற்றி, இரமணர் 'தவம்' புரிந்த இடத்தில் குறிப்பிட்டுள்ளார் சுயமரியாதை இயக்கத்தின் பண்பை வெளிப்படையாகப் புகழ்ந்து கூற ஆச்சாரியாருக்குக் கட்சி மாச்சரியம் தடை செய்கிறது போலும்! அப்படி இருப்பதும் இயற்கை தானே! ஆகவேதான் போலும், சுயமரியாதைக்காரர்களின் பண்பை மறைமுகமாக வெளிப்படுத்துகிறார். சுயமரியாதைக்காரர்கள் வைதீகர்களோடு பழகும்போது அன்பான முறையிலே பழகுகிறார்கள்; ஆனால் வைதீகர்கள் சுயமரியாதைக்காரர்களைக் கண்டாலே வெறுப்புக் கொள்கிறார்கள்; நேரிடையாக நிற்க வெட்கப்பட்டு மறைமுகமாகச் செல்ல எண்ணுகிறார்கள்; சுயமரியாதைக்காரர்களின் கூட்டங்களைப் பலாத்கார முறையில் கலைக்க நினைக்கிறார்கள்; சுயமரியாதைக்காரர்களை மூர்க்கத்தனமாகத் தாக்க திட்டமிடுகிறார்கள். இந்தநிலைமையை ஆச்சாரியார் உணர்கிறார் போலும்! சுயமரியாதைக்காரர்கள் அன்புடன் பழகினாலும், வைதீகர்கள் துவேஷங் கொண்டே வாழ்கிறார்கள்! இது ஆச்சாரியார் உள்ளத்தை உறுத்துகிறது. ஆகவே தான், வைதீகர்களுக்கு இதமான சொற்களால் புத்திகற்பிக்கவேண்டி, "சுயமரியாதை இயக்கத்தைக் 'கடவுளின் லீலை'களிலே ஒன்றாக நாம் கருதவேண்டும். இந்த மக்களிடம் நீங்கள் அன்பு செலுத்துவதையே நான்விரும்புகிறேன்" என்று கூறுகிறார். துவேஷம் காட்டுவதை

விட்டுவிடுங்கள், அன்பு செலுத்துவதையே கைக்கொள்ளுங்கள் என்னும் கருத்துப்படப் பக்த கோடிகளுக்கு அறிவுறுத்துகிறார்! சுயமரியாதை இயக்கம் 'கடவுளின் லீலை'களிலே ஒன்று; இது வைதீக உள்ளங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆச்சாரியாரின் கூற்று! ஆகவே சுயமரியாதை இயக்கத்தைப் பழிப்பது—தூற்றுவது-பொய் புனைந்து புறங்கூறுவது — குற்றஞ் சொல்லுவது-குறைகண்டதாகப் புளுகுவது போன்ற செயல்களைப் பக்த கோடிகளும், வைதீகர்களும், ஆண்டவன் அடியார்களும், ரிஷீஸ்வரர்களும் மேற்கொள்வது, 'கடவுளின் லீலை'யையே பழிப்பதாகும். சுயமரியாதை இயக்கத்தைத் தூற்றுவது 'கடவுளை'யே தூற்றுவதாகும் என்பதை, ஆச்சாரியாரின் அடிப்பொடி ஆழ்வார்கள், இனியேனும் உணர்வார்களா?

ஆச்சாரியாரின் கூற்றுப்படி பார்த்தால், சுயமரியாதை இயக்கம், 'கடவுள்' இதுவரையில் புரிந்த 'லீலை'களில், கடைசியாகப் புரிந்துகொண்டிருக்கும் 'லீலை'யாகும். இதற்குப் பிறகும் 'லீலை' செய்வாரா கடவுள் என்பது, இப்பொழுதுபுரியும் 'லீலை' எந்த அளவுப் பயனைக்கொடுக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டுதான் வேறோர் 'லீலை' புரிய முற்படுவார் என்று தோன்றுகிறது! ஆகவே 'கடவுளின் லீலை'யாகிய சுயமரியாதை இயக்கத்தைப் போற்றிப் புகழ்ந்து, காப்பாற்றி, வளர்க்கவேண்டிய பொறுப்பு, ஆச்சாரியாரின் தொண்டரடியாரெல்லாரையும் சார்ந்ததாகும் என்பதை, ஆச்சாரியாரின் திருவண்ணாமலைச் சொற்பொழிவு இனி வலியுறுத்தி நிற்பதாகட்டும்!

ஆச்சாரியாரின் இந்தக்கூற்றுக்களையெல்லாம் நாம் நம்புகிறோமா என்று கேட்பர். நாம் நம்பவில்லை! நிச்சயமாக நம்பவில்லை! அவர் கூற்றுக்களை நம்பும் பக்த கோடிகளுக்கே, மீண்டும் காணிக்கைகளாகத் தரத்தான் விரும்புகிறோம்!

ஆச்சாரியார் மேலும் பேசும்போது, "அன்பின்மூலம் அவர்களுடைய (சுயமரியாதைக்காரர்களுடைய) நம்பிக்கையின்மையைப் போக்கிவிடலாம்" என்றும் அறிவுறுத்தியுள்ளார். சுயமரியாதைக்காரர்கள் மூடக்கொள்கைகளின் மீது குருட்டு நம்பிக்கை கொள்வதில்லை. மூடக்கொள்கைகளிடத்து நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்; அதுகுறித்து நம்பிக்கையின்மை அவர்களிடத்துக் குடிகொண்டிருக்கிறது. புராணமரியாதைக்காரர்களாகிய வைதீகர்கள் குருட்டுத்தனமாக எதையும் நம்பிவிடவேண்டும் என்ற கட்டாயத்தால், மூடக்கொள்கைகள் அனைத்திடத்தும் நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மூடநம்பிக்கையாளர்களாக இருக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள், (மூட) நம்பிக்கையுள்ளவர்களோடு அன்போடு பழகி, அறிவுகொளுத்துவதன்காரணமாக, (மூட) நம்பிக்கையின்மையாளராக, நாளடைவில் மாறிவிடுகிறார்கள் வைதீகர்கள். இந்தப்போக்கை ஆச்சாரியார் கவனிக்கிறார்! எனவேதான் வைதிகர்களைப் பார்த்து, சுயமரியாதைக்காரர்களோடு அவர்கள் பழக முற்பட்டால், அன்பின்மூலம் (மூட) நம்பிக்கையையூட்டி வைதிகத்தைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும்என்று கருதுகிறார்போலும் ஆச்சாரியார்! சுயமரியாதையும்—வைதீகமும் அன்பின்காரணமாக ஒன்றையொன்று அணுகநேர்ந்தால், (மூட) நம்பிக்கையின்மைதான் ஏற்படும் என்பதை, ஆச்சாரியார் இப்பொழுது உணர மறுத்தாலும், வருங்காலம் அவருக்குப்பாடங்கற்பிக்கத் தவறாது. ஆகவேதான் வைதீகர்கள், சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் மூலம் அணுக முற்படுவார்களேயானால், அது வரவேற்கத் தக்கதென்று சொல்லி மகிழ்கிறோம்; அக்கருத்தை வைதீகர்களுக்குக் கொடுக்கும் ஆச்சாரியாரைப் பாராட்டுகிறோம்!

ஆச்சாரியார் தொடர்ந்து பேசும்போது குறிப்பிடுகிறார், "அவர்களிடம் (சுயமரியாதைக்காரர்களிடம்) இப்பொழுதிருக்கும் மனக்கசப்பும் துவேஷமும் மறைந்துவிடும்" என்று. உண்மைதான். சுயமரியாதைக்காரர்கள், ஆண்டவன் பெயராலும், மதத்தின் பேராலும் மக்களின் அறிவும், ஆற்றலும், நேரமும், நினைப்பும், உழைப்பும், பொருளும் பாழ்படுவதைக் கண்டு மனக் கசப்புக் கொண்டுள்ளார்கள். இத்தகுப் பாழ்படும் செயல்களுக்கு வைதீகர்கள் உடந்தையாக இருப்பது கண்டு மனம் வெதும்புகிறார்கள். வைதீகர்கள் உள்ளபடியே சுயமரியாதைக்காரர்களோடு அன்பாகப் பழக முற்படுவார்களேயானால், அந்த வைதீகர்கள் திருந்தி நல்லறிவு பெற வழியேற்படும்; அப்பொழுது பாழ்படுத்தும் செயல் எதுவும் நிகழ இடமேற்படாது. அறிவு—ஆற்றல்-நேரம்—நினைப்பு — உழைப்பு — பொருள் ஆகிய இவை பாழ்படும் நிலை மறைந்தால், சுயமரியாதைக்காரர்களின் மனக் கசப்பும் தானே மறைந்துவிடும் என்பது உறுதி.

சுயமரியாதைக்காரர்கள் பொறுமை—வஞ்சம்-சூழ்ச்சி-சூது—வாது—கொடுமை-கொலை ஆகியவற்றை என்றும் துவேஷிக்கும் பண்புடையவர்கள். இவைகளெல்லாம் பெரும்பாலும் வைதீகக் கருத்துக்களின் பெயராலேயே நடைபெறுகின்றன. வைதீகர்கள் சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் மூலம் கூடும்போது, மூடத்தனம் நிரம்பிய வைதீகக் கருத்துக்கள் அவர்களை விட்டு அகல வழி ஏற்படுகிறது. கொடுமைகள் பின் மறைந்துவிடும். கொடிய நிகழ்ச்சிகள் மறைந்துவிடுமானால், அவற்றின்மீது சுயமரியாதைக்காரர்கள் கொண்டிருக்கும் துவேஷமும் மறைந்துவிடும். எனவேதான், சுயமரியாதைக்காரர்களிடத்துக் காணப்படும் மனக் கசப்பும், துவேஷமும் மறைய வேண்டுமானால், வைதீகக் கோமான்கள் சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் அடிப்படையில் பழகவேண்டும் என்கிறோம். இதுபற்றி ஆச்சாரியார் கூறியுள்ள கருத்தையும் வரவேற்கிறோம்!

'கடவுள்' என்ற சொல்லின்மீது கட்டப்பட்டிருக்கும் மண் கோட்டையைச் சரியாமல் காப்பாற்றவும், ஆச்சாரியார், திருவண்ணாமலையில் பாடுபட்டுள்ளார். "பிரமாண்டமான ஆலமரம் ஒரு சிறியவிதையிலிருந்து உண்டாகிறது. நாம் இதைப் பார்க்க முடிகிறதினால் நம்புகிறோம். ஆனால் ஒருவர் இதைப் பார்க்காவிட்டாலுங் கூட, இந்த உண்மையான விஷயத்தைச் சந்தேகிக்க முடியாது. ஆகையால் பிரபஞ்சம் முழுவதையும் சிருஷ்டி செய்துள்ள சக்தியையும் நாம் சந்தேகிக்க முடியாது." இந்த வாதத்தைக் காட்டி கடவுட் கொள்கையை நிலை நாட்டப் பார்க்கிறார் ஆச்சாரியார்.

(14-ம் பக்கம் பார்க்க)

10 JUN 1949 MADRAS

நான் கண்ட அழகர்சாமி

தொடர்ச்சி—6

எஸ். வி. லிங்கம்

ஜஸ்டிஸ் கட்சியின் முதல் கூட்டுறவு பெரியார் இராமசாமிக்குக் கிடைத்ததும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் 'திராவிடன்' பத்திரிகையைப் பெரியார் மேற்பார்வையில் நடத்தும்படி விடவேண்டுமென்று, ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பன்னீர்செல்வம் அவர்களே காரணமாக இருந்தார். பன்னீர்செல்வத்திடம், ஒரு தமிழ்த் தினசரி செல்வாக்குள்ளதாக இருக்கவேண்டுமென்று, அடிக்கடி வற்புறுத்தி வந்தவர் அழகர்சாமியேயாகும். 'திராவிடன்' ஆபீஸ் பொறுப்பை மிகக் கஷ்டத்துடன் ஏற்றுக்கொண்டு, ஈரோட்டிலுள்ள குடியரசு ஆபீசையும் மாற்றிக்கொண்டு, சென்னைக்குக் கொண்டு வந்து, இரண்டு பத்திரிகைகளின் பொறுப்பையும் பெரியாரே ஏற்று நடத்திவந்தார். தமிழ் மக்களிடம் தப்புப் பிரசாரம் செய்யப்பட்டு வந்த 'திராவிடன்' பத்திரிகை மீதிருந்த கெட்டபெயரை மாற்றி, தமிழ் மக்களிடையே செல்வாக்குடன் 'திராவிடன்' உலாவும்படி செய்தார். பெரியாரின் உழைப்பு 'திராவிடன்' வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. நெல்லூர் ஜஸ்டிஸ் மாநாட்டுக்குப் பின்னர், 'திராவிடன்' கூட்டுறவைப் பெரியார் விட்டுவிட எண்ணினார். இதற்குக் காரணம், அப்போதிருந்த கட்சித்தலைவர்களில் பலர், மிக மோசமான நிலைமையில் இருந்ததேயாகும். இப்படியிருக்கும்போது, ஆபீஸ் வரவுசெலவு நிர்வாகம் முழுவதும், பெரியாரால் நியமிக்கப்பட்ட சென்னை ஜஸ்டிஸ் கட்சி நண்பர்களிடமிருந்தது! இவர்களைப்பற்றிப் பெரியாருக்கு நல்ல எண்ணமுண்டு. ஆனால், இவர்களெல்லாரும் சுயநலக்காரர்களென்பது அழகர்சாமியின் எண்ணம். என்று இருந்தாலும், இவர்கள் ஒரு நாள், பெரியாருக்குத் தீங்கையே செய்வார்கள் என்பது அழகர்சாமியினுடையவும், அவர்தம் அக்காலத் தோழர்களுடையவும் முடிவாகும். இந்த சமயத்தில் ஒரு வேடிக்கை நடந்தது.

அதாவது, ஒரு ஆள் 'திராவிடன்' ஆபீசிலுள்ள முக்கியமான கணக்குப் புத்தகங்களையெல்லாம் யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு போய், நண்பர் கண்ணப்பருக்கு வேண்டிய ஒருவருடைய வீட்டில் ஒளித்துவைத்துவிட்டார். பெரியாரோ, ஈரோட்டுக்கு ஆபீசை மாற்றிக்கொண்டார். இந்த நிலையில், குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ கம்பெனியார், பெரியார் தங்களுக்கு பதினெண்ணாயிரம் ரூபாய் தரவேண்டுமென்று வழக்குத் தொடுத்தார்கள். அந்த சமயத்தில், ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி, பெரியார் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திற்குச் சென்றுவிட்டார். தோழர்கள் அழகர்சாமி, குருசாமி, நடராசன், காளியப்பன் முதலான நண்பர்கள், நமது கட்சி வக்கீலைக் கண்டு, பெரியார்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கைப்பற்றி விசாரித்தார்கள். வழக்கு விவரங்களைக் கேட்ட வக்கீல், "திராவிடன்" பத்திரிகையின் வரவு செலவை, நாம் நடத்திவந்திருக்கிறோம். நடத்திய காலத்திலிருந்த, நமது கணக்குப் புத்தகங்கள், இப்போது நமக்கு வேண்டும். கணக்குப் புத்தகங்களோ இல்லை என்கிறீர்கள். இல்லையென்பதோடு, அக்கணக்குப் புத்தகங்களெல்லாம், எதிரிகளிடம் இருக்கிறதென்றும் சொல்லுகிறீர்கள். இந்த நிலையில், "நான் என்ன செய்வது" என்று வருத்தப்பட்டார். அழகர்சாமி வக்கீலை நோக்கி, "ஐயா, அந்தப் புத்தகங்கள் எதிரிகளிடமிருப்பதென்னவோ உண்மை. ஆனால், அவை நம்மிடம் இருந்தால் நாம் இந்த வழக்கில் வெற்றி பெற்றுவிட முடியுமா?" என்று கேட்டார். வக்கீல் மகிழ்ச்சியோடு "முடியும்" என்றார். இரண்டு நாட்களுக்குள், பெரியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரின் வீட்டிலிருந்தே, பட்டப்பகலிலேயே அந்தக் கணக்குப் புத்தகங்கள் திருட்டுப் போய்விட்டன. அழகர்சாமி கொடுத்த தைரியத்தின்பேரில்தான் நான் அப்புத்தகங்களைத் 'திருடினேன்.' பிறகு அப்புத்தகங்களை வக்கீலிடம் கொடுத்தோம். வக்கீல் அவற்றை மகிழ்ச்சியோடு பெற்று, அவற்றில் தனக்கு வேண்டிய முக்கியமான குறிப்புகளை எடுத்துக்கொண்டு, "இவற்றைப் பத்திரமாக வையுங்கள்" என்று எங்களிடம் கொடுத்தார். அன்று, சென்னையில் எங்களுக்குள்ள பெரிய இடத்து ஆதரவு எப்படியிருந்ததென்றால், அந்தக்கணக்குப் புத்தகங்களை நம்பிக்கையாக வைத்திருப்பதற்கு இடமில்லாமலிருந்தது. சிறது நாட்கள் V. P. மணியர் வீட்டிலும், பின்னர் குருசாமி வீட்டிலும் அவற்றை வைத்திருந்தோம்.

தனது தலைவர் இல்லாத காலத்தில், அவரைப் பாதிக்கக்கூடிய வழக்கில், தலைவரின் இலாபத்திற்காக—அதாவது கட்சியின் இலாபத்திற்காக, தனது தோழர்களிடம் 'திருடவும்' அழகர்சாமி பின்வாங்கவில்லை. பின்னர், வழக்கு நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்டு வந்தது. கடைசியாகப் பெரியார் ஊர் திரும்பிய பின்பு, வழக்கு விசாரிக்கப்பட்டது. பெரியார் பதினெண்ணாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று, குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ் கம்பெனி

யாரால் தொடரப்பட்ட அந்த வழக்கை, ஜஸ்டிஸ் ஸ்டோன் என்பவர் தள்ளிவிட்டார்.

*   *   *

பெரியார் ஐரோப்பா சென்றிருந்த காலத்தில், ஜஸ்டிஸ் கட்சி ஆபீஸ் அலுவல்கள், தோழர் கண்ணப்பர் மேற்பார்வையில் நடந்து வந்தன. பின்னர், கண்ணப்பர் விலகியதால், குமாரசாமிநாயுடுவே 'திராவிடன்' பத்திரிகையை நடத்திவந்தார். அதன் நிர்வாக ஆசிரியராக காலஞ்சென்ற வக்கீல் ஆறுமுகம் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அவரேதான் பெரியார்மீது தொடரப்பட்டிருந்த வழக்குக்கும் வக்கீலாக நியமிக்கப்பட்டிருந்தார். வழக்கு நடந்துகொண்டிருந்தது. பெரியார் சார்பில் வழக்கு சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்பதற்காக, அழகர்சாமி, நடராசன் முதலானோர் சென்னைக்கு வருவார்கள். அவர்கள் தங்குமிடம் எது தெரியுமா? வக்கீல், ஆறுமுகம் அவர்களின் தலைமையிலுள்ள அதே 'திராவிடன்' ஆபீஸ் தான்!

தொண்டர்களுக்கும் தலைவருக்குமுள்ள பொறுப்பு எவ்வளவு, எப்படிப்பட்டது என்பது வக்கீல் ஆறுமுகத்திற்குத் தெரியாது. ஒவ்வொரு சமயம், ஆறுமுகம் அழகர்சாமியை நோக்கி, "உங்கள் நாய்க்கர் நாயுடு பணத்தையே எப்பம் விட்டுவிட்டாரே; பாபம் நீங்கள் நம்முடைய ஜில்லா (தஞ்சை) ஆட்கள் வழக்கு நடக்கும்போதெல்லாம் சென்னைக்கு வருகிறீர்களே! இரயிலுக்குச் செலவாகும் பணத்தையாவது நாயக்கர் உங்களுக்குக் கொடுப்பார் என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட்பார். உடனே அழகர்சாமி, "ஓய் ஆறுமுகம், இதெல்லாம் உனக்கு எதற்காக? நாய்க்கர் நாயுடுவுக்குப் பணம் கொடுக்காமல் ஏமாற்றுவதும், அல்லது நீங்கள் பொய் வழக்குத் தொடுத்திருப்பதும் கோர்ட்டில் தெரிந்துவிடப் போகிறது. ஆனால் உங்கள் நாயுடுவுக்கு இந்தப் பணமெல்லாம் ஏது? ஜஸ்டிஸ்கட்சி அதிகாரத்திலிருப்பதால் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் பாடப் புத்தகங்களை ஏற்படுத்தி, அவற்றை விற்று, இலட்ச இலட்சமாக சம்பாதித்த பணந்தானய்யா இது! இதைப்பற்றி உனக்கும் எனக்கும் என்ன கவலை?" என்று கேட்பார். இவ்விதமாக, எதிரியையும் கூட்டாளியாக்கித், தான்சரியென்று நினைத்ததைச் சாதித்துக் கொள்ளும் திறன் அழகர்சாமிக்கு உண்டு.

வழக்கு நடந்துகொண்டிருந்த போது, "குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் கம்பெனியார், நான் ரூபாய் பதினெண்ணாயிரம்கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, நான் "திராவிடன்" பத்திரிகைக்குப் பேப்பர் (நியூஸ் பிரிண்ட்) வாங்கியதாகச் சொல்கிறார்களே, இதற்கு அவர்களுடைய கணக்குப் புத்தகத்தில் என்பேரில் பற்று எழுதப்பட்டிருக்கிறதா? கம்பெனிக்கும் எனக்கும் "குடியரசு" சம்பந்தமாகப்பற்றுவரவு உண்டு. இதில் நான் கொடுக்கவேண்டியதாகப்பாக்கிகூட இருக்கக்கூடும். அதைக்கேட்காமல், திடீரென்று பதினெண்ணாயிரம் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. நான் இது சம்பந்தமாக இவர்களுக்கு ஆர்டர் செய்ததுண்டா? இரசிதாவது இருக்கிறதா?" என்று வழக்குமன்றத்தில் பெரியார் அவர்கள் கேட்டார்.

'குடியரசு' பத்திரிகை சம்பந்தமாகக்கம்பெனிக் கணக்குப்புத்தகத்தில் பற்று வரவு இருக்கிறது. ஆனால் "திராவிடன்" சம்பந்தமாக ஒரு பேரேடோ, கணக்குப் புத்தகத்தில் ஒரு வரியோ, எழுத்தோ இல்லை. எனவேதான், வழக்கைநீதிபதிதள்ளிவிட்டார். வழக்கில் வக்கீல் ஆறுமுகத்தின் வாதம் தோற்றுவிடவே, நாயுடு கம்பெனியாரால் ஆறுமுகம் விலக்கப்பட்டு, 'திராவிடன்' ஆபிஸ் பொறுப்பு T. V. சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. "திராவிடன்" ஆபீஸ் முதலாளிகள் மாறி மாறி வந்தார்களே தவிர, 'திராவிடன்' சாவிமட்டும் எப்போதும் அழகர்சாமி இடமே இருக்கும்.

தனது தலைவரிடமிருந்து கைமாறிப்போன ஆபிசை, மீண்டும்தலைவரிடமே கொண்டுவரவேண்டுமென்பதுதான் அழகர்சாமியின்விருப்பம்

*   *   *

ஒருசமயம் சங்கராச்சாரியார் சென்னைக்கு வந்திருந்தார். சிலநாட்களாக அவருக்குச் சூளைமேட்டை ஜமீன்தார் பிச்சையிட்டார். ஒவ்வொருநாளும் மூவாயிரம் பேர்களுக்குமேல் சாப்பிடுவார்கள். அந்த சமயத்தில் சுயமரியாதைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அதில்அழகர்சாமி, பொன்னம்பலம், குருசாமி, ஆகியோர் பேசினார்கள். குருசாமி சூளைமேட்டையாரைக் கண்டித்தார். "நம்முடைய பணம் அய்யருக்கு ஏன்போகவேண்டும்" என்று கேட்டார். அக்காலத்தில் சென்னையில் ஓர் தினசரிப்பத்திரிகை நடந்து வந்தது. நம்மிடமிருந்துபோன ஒரு நண்பர்தான் அதை நடத்தினார். அதில் குருசாமியைக் காரசாரமாகத் திட்டியிருந்தது. குருசாமியின் மாமனார் சுப்பிரமணியம் அந்தப் பத்திரிகையை என்னிடம் காட்டினார். அதை எடுத்துக்கொண்டு தங்கசாலையிலிருந்த பண்டிட் S. S. ஆனந்தம் மருத்துவ விடுதியில், சிகிச்சைக்காகத் தங்கியிருந்த அழகர்சாமியிடம் கொண்டுபோய்க் காட்டினேன். உடனே, அந்தப் பத்திரிகாசிரியர் அழகர்சாமி இருக்குமிடத்திற்கு அழைக்கப்பட்டார். பொன்னம்பலமும் வந்திருந்தார். ஆசிரியரை அழகர்சாமி நோக்கி, "நீ எங்களை இன்னும்கேவலமாகத்திட்டு, கவலைஇல்லை. ஆனால், பத்திரிகைகளில் விஷமத்தனமாகவும், கேவலமாகவும் எழுதுவதால் பாதிக்கக்கூடிய நிலைமையில் எங்கள் சுயமரியாதைக் கட்சியோ, நாங்களோ இல்லை. ஆனால்,குருசாமியைப்பற்றி நன்கு தெரிந்த நீ அவரைத்திட்டி எழுதலாமா" என்று கேட்டார். இதன்பயனாகக்கைகலப்பு ஏற்பட்டது. ஆசிரியர் உடனே போலீஸ் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். நான்தான் முதல் எதிரி. அழகர்சாமியும் பொன்னம்பலமும் அடுத்த எதிரிகள். வழக்கு பலநாட்கள் நடந்தது. ஆற்காட்டு இராமசாமி அவர்களின் தமயனார் துரைசாமி அவர்கள்தான் இந்த வழக்கை விசாரித்தார். பணவிஷயத்தில் மிகக்கருமிகளான தலைவர்கள் மூன்று நான்கு பேர்களில் ஒருவரான சிங்காரவேலு, அழகர்சாமியைக்கூப்பிட்டு தைரியம் சொல்வார். பின்னர், எங்கள் நிலையைக் கண்டு அனுதாபப்பட்டு, "வக்கீல் வைத்து வழக்கை நடத்துங்கள்" என்று சொன்னார். அழகர்சாமி, "சரிதான் வழக்குக்கு வருவதற்கே இரயில் செலவுக்குப் பணம் ஏது" என்று

(9 ம் பக்கம் பார்க்க)

★ குறி பார்த்தல் ★

உலகில் இருந்து வரும் மூட நம்பிக்கைகளில் சிலவற்றை, மெஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து பார்த்தால், அவை இரண்டு காரணங்களால் உண்டாகியிருக்க வேண்டுமென அறியப்படும். வெறும் பழக்கச் சொற்களைக் கொண்டே பல மூட நம்பிக்கைகள் நிலைத்து வருகின்றன என்பது ஒன்று. இரண்டாவது ஏகதேச சந்தர்ப்பங்களிலிருந்து மூட நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும் என்பதாகும்.

சில மூட நம்பிக்கைகளுக்கு நமது ஆசையே (Our Wish) காரணமாக இருக்கலாம் எனத் தெரிகிறது. இந்தக் காரணம் ஒன்றே, பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள அன்பிற்கு ஆதாரமென அறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே நிகழ்ச்சிகள் நமக்குச் சாதகமாகவே அமையவேண்டும் என்ற மனப்பான்மை பெரும்பாலோர்க்கு உண்டு. இந்த மனப்பான்மையாலேயே சோதிடத்தின் மேலும், ஜாதகத்திலும், குறிபார்த்தலிலும், கைரேகை பார்த்தலிலேயும், மை போட்டுப் பார்ப்பதிலேயும் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. துன்பப்படாமலே நமக்குச் செல்வங் கிட்டாதா? நாம் முயற்சி செய்யாமலேயே நம்மை விட்டுப்பிரிந்தவர்கள் திரும்பி வரமாட்டார்களா? உழைப்பின்றிச் சொத்தும், செல்வமும், புகழும் வாராதா? என்ற நோக்கங்கள் மக்கள் மனதில் அடுத்தடுத்து எழுவதால், ஆரூடம் என்ன சொல்லுகின்றது? குறி சொல்லுபவன் என்ன ஆதாரமளிக்கிறான்? கைரேகை என்ன குறிக்கின்றது? என்று அறிய அவாக்கொண்டு இந்த வஞ்சச் சொற்களின் மேல் நம்பிக்கை வைக்கிறார்கள்.

குறி பார்ப்பதில் பாமர மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்து வருகிறது. அன்றாட வாழ்க்கையில் மக்களுக்குப் பல குறைபாடுகள் நேரிடுகின்றன. இந்தக் குறைபாடுகளை எவ்வகையிலேனும் நீக்கிக் கொள்ளவேண்டும் என்ற அவா மேன்மேலும் உண்டாவது இயற்கை தானே. இந்த அவாவால் குறி பார்ப்பது மெய்யோ பொய்யோ, மக்கள் எதிர்பார்க்கும் விருப்பப்படி நிறைவேறும் என்று குறி சொல்லுப்வன் சொல்லுகிறபடியால், அவன் செயலின் மேல் நம்பிக்கை ஏற்படுகிறது. அப்படிக் குறி சொல்லுவார் யார் என்று பார்ப்போம்.

குறிமேடையில் குறி சொல்லுகிறவர்களில் பலர் நரம்பு நோயால் (Nervous Disorder) பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எளிதில் சினம்—மகிழ்ச்சி அடைவார்கள் (Easily Excited). இவர்களுடைய ஆடம்பரங்கள் பாமர மக்களின் மனதை உருகச் செய்துவிடுகின்றன. உடுக்கை, சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறிகேட்க வந்திருப்போரை ஒருவித மயக்கத்திற்குள்ளாக்கக் கூடியனவாக இருக்கின்றன. குறிசொல்லும் இடங்களில்,மதுரைவீரன்படம், காய்கள்பின்தொடரக்குதிரைசவாரிசெய்வதாகவரையப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும். குறி சொல்பவனும் பகல்வேடத்திற்குரியதிருநீறு, குங்குமம் முதலியவற்றை உடல் முழுதும் பூசிக்கொண்டு, கழுத்தில் பொன் உருத்திராக்கம், கைகளில் பொன் தோடா, இடுப்பில் பட்டாடை முதலியவற்றை அணிந்துகொண்டு, உடுக்கை சிலம்புடன், தன் "இஷ்டதேவதை"யைத் தன் வயப்படுத்த முயலுவான். இந்த வேடங்களைக் கண்டோர் மயங்கி விடுகின்றார்கள். இவர்கள் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும் சிலம்பையும் உரத்துத் தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசம் வருவதாக நடிப்பான். இந்த ஆவேசத்திற்கு வேண்டிய குடிவகையை அருந்துவதோடு, புட்டியிலும் சாராயம் மதுரைவீரனுக்காகப் படையல் போட்டிருக்கும் (இப்பொழுது வெளிப்படையாக மதுவருந்த முடியாததால் ஆவேசத்தை வரவழைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது) வேலை ஒன்றுமில்லாதவீணர்கள் அந்தக் குறிமேடைகளில் சென்று பக்திமான்களைப் போல் நடிப்பார்கள். இந்தச் சூதை அறியாத பெண்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பார்கள். இவைகளை, ஏதோ அலட்சியமாகக் கேட்டு, அதற்கு ஏதோ ஓர் பரிகாரத்தைத் தெரிவிப்பான். இந்தப் பித்தலாட்டங்களுக்கு ஏமாந்து, கையிலிருக்கும்பணத்தையோ, நகையையோ காணிக்கையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாகப் பெண்கள் மதிமோசம் போவார்கள்.

முக்கியமாகப் பெண்கள், பிள்ளைவரம் பெற, குறிமேடைகளுக்குப் போவதைப் பார்க்கலாம், அல்லது தனக்கும் தன் கணவனுக்கும் உள்ளமனமாறுபாடுகளைக்குறித்துக் குறி கேட்கப் போவதுமுண்டு. இந்த இரண்டையும் குறி சொல்லுபவன் எப்படித் தீர்ப்பானோ என்று ஆராய்ந்தறிவதே கிடையாது. இதைப் போன்ற மூட நம்பிக்கையைக் காண்பதரிது!

பிள்ளை பிறப்பதற்கு ஆண், பெண் இருவர் உடல் நிலை ஏற்ற பருவத்தில் இருத்தல் வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்—பெண்களுடைய உடல் பக்குவப்பட்டிருப்பதால், பிள்ளைகளைப் பெற்றெடுக்க அவர்களுக்குத் தடையொன்றும் இருப்பதில்லை. ஆனால், ஒரோர் வழி ஏதோ ஒருவர், இருவர்க்கு உடல் ஏற்ற பக்குவம் பெறாமலிருக்கும், அதனால் கருத் தரிக்க முடியாமற் போகும். இதனையும் தீர்த்துக்கொள்ள மருந்துகளும், சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஆண்-பெண் சிற்சில சிகிச்சையால் கரு உருவாக்கும் தன்மையைப் பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்குப் பண்படுவதில்லை. மலட்டு ஆண் – பெண்களைப் போல (Sterile man and woman), மலட்டு

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 29—5—49 [காஞ்சி

செங்கொடி நிழலிலே சீனா

✲

பழம் பெருமை வாய்ந்தது—ஆசியாவிலே பெரியது—அகில உலகிலே நான்காவது என்று பெயர் பெறுவது—வாணிக வளத்தைக் கொழிப்பது—பல பண்டம் பகர்ந்து வீசுவது—அறுபது இலட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்டது—உற்பத்தித் தொழில்களைப் பெருக்குவது—தொழில் புரியும் மக்களை 345 சதுர மைல் அளவிற்குப் பரப்பிக்கொண்டிருப்பது—கீழை நாடுகளின் நடுநாயகத் துறைமுகமாக விளங்குவது, என்றெல்லாம் போற்றப்பட்டுப் புகழ் மணங்களை அள்ளி வீசிவரும் ஷாங்கை நகர், செங்கொடி யேந்திய வீரர்களின் அணைப்பிலே சாய்ந்துவிட்டது!

சீனக் கம்யூனிஸ்டுகளின் கையிலே சீனாவின் தலைநகர் வீழ்ந்துவிட்டது!

ஷாங்கை நகரின் சுற்றுப்புறங்கள் பிணக்காடாகி, நகரை நோக்கிப் பிணவாடை வீசிக்கொண்டிருக்கும்போது, நகர், கம்யூனிஸ்டுகளின் கரங்களிலே தாவி ஏறிக்கொண்டுவிட்டது!

வெடிகுண்டுகள் வானைப் பிளக்க—வெற்றிச் சங்குகள் ஊத—வீரமுழக்கங்கள் கிளம்ப—மக்கட் கூட்டம் நெருங்கிப் பின் தொடர—பச்சை நிறந்தோய்ந்த காக்கியுடையணிந்த வீரர்கள், செங்கொடி ஏந்தி, ஷாங்கை நகருக்குள் நுழைந்தனர்! ஷாங்கையை இதுவரையில் கட்டியாண்ட அரசாங்க அதிகாரிகளனைவரும், இரவோடிரவாக, வெளியுலகம் ஏக எண்ணி, விமானம் ஏறி வானில் சிட்டெனப் பறந்தனர்!

அடிக்கு அடி போரிட்டு முன்னேறிச் சென்ற கம்யூனிஸ்டுகள், அமைதியாகவே ஷாங்கை நகரைக் கைப்பற்றியுள்ளனர். முற்றுகை தகர்த்தெறியப்பட்டு மாற்றான் படைகள் ஒரு நகருக்குள் நுழையும்போது, அந்நகர மக்கள் பொதுவாகப் பீதியுற்றுப் பெருங்கலக்கமடைவதுண்டு. ஆனால் ஷாங்கையைப் பொறுத்தவரையில், கைப்பற்றுதல் அமைதியான முறையிலும், ஒழுங்கான முறையிலும் கம்யூனிஸ்டுகளால் கடைப்பிடிக்கப்பட்டதால், மக்களிடையே பீதிஏற்படுவதற்குப் பதிலாக மகிழ்ச்சிதான் தாண்டவமாடுகிறது.

ஷாங்கை நகரில் கம்யூனிஸ்டுப் படைகள் நுழையும்போது, இரண்டாண்டுகளுக்கு முன் கம்யூனிஸ்டுகளிடம் தூது சென்றுவந்த டாக்டர் லூ யென் என்ற அரசியல் அறிஞர், அறுபது இலட்சம் மக்களையும் அமைதியாக இருக்கும்படியும், வழக்கம் போல் தங்கள் அலுவல்களைக் கவனிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருப்பதோடு, தொழில் செய்வோர் யாதொரு அழிவு வேலையிலும் இறங்காதபடிக்கும், வேலைகளிலே கருத்தூன்றும்படிக்கும் வேண்டிக்கொண்டிருக்கிறார். அரசாங்கத்தின் மாடங்களும், கூடங்களும் வெண்கொடி காட்டி அமைதியை வரவேற்றிருக்கின்றன. மக்கள் வாயிலண்டைகளில் நின்று மாறுபாட்டை வரவேற்றிருக்கின்றனர். மாணவர்கள் ஊர்வலம் சென்று வெற்றிக் கீதம் பாடியுள்ளார்கள்.

தலைநகர் வீழ்ந்துவிட்டது! இனி வீழாமலிருக்கும் சீனாவின் தென்பகுதியும் விரைவில் வீழ்ந்துவிடும் என்பது உறுதியாகிவிட்டது! வடக்கே இருந்து படிந்துவரும் செந்நிறம் இனித் தெற்கேயும் பரவி, சீனா முழுவதும் சிவப்பேறி நிற்கும் என்பது உறுதி! அப்படிச் சிவப்பேறி நிற்கும் காட்சி, உலக வல்லரசுகளை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தும் என்பதோடு, 'டாலர் சங்கிலி'யையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

சீன அரசாங்கத் தலைவராக இருந்த—இப்பொழுது மறைமுகமாக இருக்கும் சியாங்கே ஷேக்கும், அவரது குயோமின்டாங்கும் மக்களை மதிக்கவில்லை; மறக்கத் தொடங்கினர். மதிக்காத தலைவரையும் கட்சியையும், மக்களும் மறக்கத் தொடங்கினார்கள். எனவேதான் அரசாங்கப் படைகள் கரைய ஆரம்பித்தன, அதே வேளையில் கம்யூனிஸ்டுப் படைகள் பெருகத் தொடங்கின. அரசாங்கத் துருப்புகளுக்கென அமெரிக்கா கொடுத்த ஆயுதங்களெல்லாம், எதிர்த்துவந்த கம்யூனிஸ்டுகளிடம் நாளடைவில் போய்ச் சேரும்படியான அதிசய நிகழ்ச்சி அங்கே நடைபெறலாயிற்று. மக்களை மதிக்கத் தவறினர்; மக்களோ மாற்றானிடம் போய்ச் சேர்ந்தனர்; ஆணவ ஆட்சி புரிந்தோர் இன்று மண்ணைக் கவ்வினர்!

சென்ற சில வாரங்களுக்கு முன், முற்றுகையைச் சமாளித்து நின்ற படைத்தலைவர் ஒருவர், ஷாங்கையை 'இரண்டாவது ஸ்டாலின் கிராடா'க ஆக்கப் போகிறோம் என்று வீர முழக்கமிட்டார். ஸ்டாலின் கிராடில், அன்று ஹிட்லரின் படைகளை எதிர்த்துத் தெருவுக்குத் தெரு, வீட்டிற்கு வீடு மக்கள் போரிட்டனர். அந்த ஸ்டாலின் கிராட் போராட்டம், உலகப் பெரும் போரின் திருப்பு மையமாக அமைந்தது. வீறுகொண்ட ரஷ்யர்கள் நாஜிகள்மேல் பாய்ந்து பெர்லின் வரையில் அவர்களைப் பின்னடையச் செய்து அங்கே முறியடித்தனர். அந்த நிலையா ஷாங்கை நகரிலும் நிலவிற்று? என்றால் இல்லை. அதற்கு மாறாக ஷாங்கையைப் பொறுத்த வரையில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படைவீரர்கள், வந்த கம்யூனிஸ்டுகளை வரவேற்றுள்ளனர். தெருக்களில் ஏற்படுத்தி வைத்திருந்த முட்டுக்கட்டைகளை யெல்லாம் எடுத்துவிட்டனர்; சுவர்களில் கம்யூனிஸ்டுகளுக்கு மாறுபாடாக எழுதி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையெல்லாம் அகற்றியிருக்கின்றனர். சீன அரசாங்கம் வெறும் வாய்ப்பசப்பு மூலம் வெற்றிபெற எண்ணியிருக்கிறதே யொழிய, எதிர்ப்புச் சக்தி கொண்டு நகரை மீட்கும் எண்ணம் அவர்களுக்குப் பல நாட்களுக்கு முன்பே அற்றுவிட்டதெனத் தெரியவருகிறது.

மோ சி—டாங் தலைமையின் கீழ் கம்யூனிஸ்டுகள் திரண்டு நிற்கின்றனர். மோ சி—டாங் இப்பொழுது வெற்றிக் களி கொண்டாடினாலும், அவருக்கு எதிர்நிற்கும் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. இதுவரையில் இருந்துவந்த ஆற்றலின்மையையும், ஊழல்களையும் போக்கடித்துத் திறமையுள்ள சமநெறி ஆட்சியை நிறுவவேண்டிய பெரும்

பொறுப்பு அவரைச் சார்ந்ததாயிருக்கிறது.

சுரண்டலற்ற நல்ல சுயஆட்சியை நிறுவி, சமூக—பொருளாதார—அரசியல் துறைகளில், சீனாவை உலக அரங்கில் உயர்ந்தவொரு நிலைக்குக் கொண்டுவர, வெற்றிகொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் பாடுபடுவர் என்று கருதுகிறோம்.

சீனா இனி மாஸ்கோவுக்கு அடிமையாகிவிடும் என்று சிலர் ஐயங்கொள்ளுகிறார்கள்.

சீனா மாஸ்கோவுக்கு அடிமையாகி விடுகிறதா, அல்லது அன்பனாக வாழ்கிறதா என்பது, மோ சி—டாங் நடத்திக்காட்டும் ஆட்சியின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. நாமும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

செங்கொடி நிழலிலே ஷாங்கை! சீனாவின் பரப்பிலே சிவப்பு! சிவப்பு ஏற ஏற மக்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சி மலரட்டும்!

✲

> "சுதந்திரம் சமத்துவம் என்பனவற்றைப் பற்றிய பொய்யுரைகளை விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. அவைகள் உங்களிடத்திலில்லை."
>
> —பர்னாட்ஷா.

நான்கண்ட அழகர்சாமி

6-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டார். சிங்காரவேலர், "ஓர் நல்ல வக்கீலை வைத்து நடத்துங்கள்" என்று சொல்லி. ரூபாய் இருபத்தைந்துக்கு ஓர் செக் கொடுத்தார். அதோடு, பாரிஸ்டர் T. குழந்தை அவர்களுக்கு ஓர் சிபார்சுக்கடிதமும் கொடுத்து, எங்கள் வழக்கை நடத்தும்படி செய்தார். பாரிஸ்டர் குழந்தை அவர்கள் முதல் வாய்தாவுக்குக் கோர்ட்டுக்குவந்தார். அதற்குப் பின்னரும் நாலைந்து வாய்தாக்கள் நடந்தன. ஒவ்வொரு வாய்தாவின்போதும் சிங்காரவேலர் வீட்டுக்குப்போவோம். அவர் என்பெயருக்கு இருபத்தைந்து ரூபாய்க்குச் செக் கொடுப்பார். அதை மைலாப்பூர் பாங்கில் மாற்றுவோம். ஆனால், வழக்குக்காக வக்கீலைக் கூப்பிடுவதுமில்லை, பணம் கொடுப்பதுமில்லை, கடைசியாக, வல்லத்தரசு, T. M. பார்த்தசாரதி ஆகியவர்களின் தலையீட்டால், எங்கள் எதிரியும் நாங்களும் சமாதானம் ஆய்விட்டோம். இதற்காகப் பார்த்தசாரதி வீட்டில் ஓர் சிற்றுண்டி விருந்துகூடநடந்தது

இக்காலத்தில், அழகர்சாமியின் எண்ணம் எப்படியிருந்ததென்றால், இரண்டுமாதத்திற்கு ஒருமுறை சென்னைக்கு வழக்கு சம்பந்தமாக வருவதால், சென்னையில்சிலபொதுக் கூட்டங்கள் நடத்த முடிகிறது என்பதில் அவருக்கொருமகிழ்ச்சி. எந்தச் சந்தர்ப்பத்திலும், எவ்விதமான நெருக்கடி ஏற்பட்ட காலங்களிலும், அழகர்சாமி தனது கொள்கைக்காகப் பிரசாரம் செய்வதற்கு இடம் கிடைக்கிறதா என்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பார். தோழர் அழகர்சாமி அவர்களைப்பற்றித்தப்பான செய்திகள் பல ஈரோட்டுக்குப்போகும். ஆனால், நாளடைவில் அவையெல்லாம் சுயமரியாதை இயக்கத்துக்குச் சாதகமாகவே முடியும். கொள்கைப் பிரசாரம் ஒன்றையே குறிக்கோளாக அழகர்சாமி எண்ணுவாரேயன்றி, தன்னைப்பற்றி யார் என்ன சொல்லுகிறார்கள், என்ற பயமோ கவலையோ கொண்டது கிடையாது. (தொடரும்)

இங்கே!

திருமலை—திருப்பதி கோயில்களின் மத ஆலோசனைக் குழுவின் தலைவரான டி. கே. துரைசாமி (அய்யங்கார்) 'திருமேனி', திருமலை—திருப்பதி கோயில்களுக்குப் பக்தகோடிகள் காணிக்கையாகச் செலுத்தும் பொருளைப் பாழ்பட்ட மண்டபங்களையும், கோபுரங்களையும் புதுப்பிக்கச் செலவிட வேண்டுமேயொழிய, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் போன்ற நிலையங்களுக்குச் செலவிடக்கூடாது என்று, 'இந்து' இதழில் ஆசிரியருக்கு எழுதிய முடங்கலில் தீட்டியுள்ளார். திருமலைக் குன்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் விசயநகர மன்னர்களால் கட்டப்பட்ட கோபுரம் சில ஆண்டுகளுக்கு முன் கீழே வீழ்ந்துவிட்டதாம். அதனைப் புதுப்பிக்க வேண்டுமாம்! குரங்குகள் வாழ அல்லாமல் மக்கள் வாழவா பயன்படப் போகிறது? இல்லை! திருமலைக் குன்றின் உச்சியிலிருக்கும் போடிகோபுரம் பழுது செய்யப்படவேண்டியதோடு, அதுமொட்டையாக இருப்பதால் அதன்மேல் கோபுர வடிவில் கட்டிடம் எழுப்பப்படவேண்டுமாம்! அது அவசியமாம்! ஆனால் பள்ளிக்கூடத்திற்கு அந்தப் பொருளைச் செலவழிக்கக் கூடாதாம்! திருப்பதியின் பெரிய கோபுரம் அவசரமாகப் பழுது பார்க்கப்பட வேண்டுமாம்! கோவிந்தராச சாமியின் சிறிய கோபுரமும், திருமலை நம்பியின் கோயிலும் கூடச் சீர் செய்யப்பட வேண்டுமாம்! ஆனால் அதற்குச் செலவழிக்கும் பொருளைக் கல்லூரிக்குச் செலவழிக்கக் கூடாதாம்!

அங்கே!

அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ நகரில், 440 மாடிகள் அமைந்த மாபெரும் மாளிகையைக் கட்டுவதற்கான திட்டம் ஒன்று, நகர அதிகாரிகளிடம் சிற்பி ஒருவரால் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். அந்தக் கட்டிடத்தில் 300 வீடுகளும், 20 மாதா கோயில்களும், 50 பொழுதுபோக்குக் கூடங்களும் 10 வைத்தியசாலைகளும், 1000 கடைகளும், 80000 கார்கள் நிறுத்தி வைக்கப்படுவதற்கான இடவசதிகளும் அமைக்கப்பட்டிருக்குமாம். மாளிகையைக் கட்டிமுடிக்க 175 கோடி பவுன் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மனிதன் இறந்து புதைகுழிக்கு எடுத்துச் செல்லப்படும்போதுதான், மாளிகையைவிட்டு வெளிவரவேண்டிய அவசியம் ஏற்படும் என்றும், மற்றவகையில் அது ஒரு பெரிய நகரமாகவேதான் காட்சியளிக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் பணத்தைப் பயன்படுத்தச் சிற்பிகள் இருக்கிறார்கள்; இங்கே பணத்தைப் பாழாக்கத் 'திருமேனிகள்' இருக்கிறார்கள்!

> "மனிதன் சுதந்தரத்தோடு பிறக்கிறான். ஆனால் அவன் எங்கும் அடிமைத்தளைகளில் பிணைப்புண்டு கிடக்கிறதைக் காண்கிறோம்"
>
> —ரூசோ.

குறி பார்த்தல்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆடும், மாடும் புழுப் பூச்சிகளும், செடிகளும், மரங்களும் உலகில் ஒரே வழி நின்று நிலவுகின்றன. விளையாத நிலங்களும் சில இருக்கின்றன. இவைகளை, அதாவது, செடி, கொடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை உற்பத்தி செய்ய (Remoduce) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஆடவர் பெண்டிரை மட்டும் கருக்கொள்ளச் செய்யமுடியும் என்றால், யார் நம்புவார்கள்? இதை முட்டாள்கள்தான் நம்பக்கூடும்! கருக்கொள்ளுவதற்கிருக்கும் தடையை நீக்க டாக்டர்களுக்குத் தெரியுமே யல்லாது மோசக்காரர்களாகிய (Mounte-banks and Charlatans) குறி சொல்லுகின்றவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. மதுரை வீரன் படத்தாலும், உடுக்கை சிலம்பத்தாலும், தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின், எவ்வளவோ எளிதாகக் கோடானுகோடி சதுப்பு நிலங்களை விளை நிலமாக்கலாமே! பதர் நெற்களை கதிர்விடச் செய்யலாமே!

சில சமயங்களில் குறி கேட்கப் போனவர்களுடைய கோரிக்கைகளைக், குறி சொல்லுகிறவன், அவர்கள் அவனிடம்சொல்லாமலே அவன் தெரிந்துகொண்டவன்போல் தெரிவிக்கிறான். இதை மாயாவாதத்தில் (Sipritualisim) எண்ணத்தைத் தெரியப்படுத்தாமலே தெரிந்து சொல்லுவதென்று (Thouht Reeding) கூறுவர். இதனை மறைவான ஞானமெனவும் (Occultion) கூறுவர். இந்தத் தந்திரத்தைத்தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் (Evidence For the Super-natural) என்ற சிறு நூலை வாங்கிப் படிக்கலாம். இந்தக் குறி சொல்லுவதில் சில மோசங்கள் நடக்கின்றன. சில இடங்களில், இரகசிய ஆட்களைக்கொண்டு விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொண்ட பிறகு குறிசொல்லுகிறார்கள். சாதாரணமாகக் குடுகுடுப்பைக்காரர்கள் இந்த மோசத்தைச் செய்கிறார்கள். மக்களில் சிலர் தங்களுடைய குறைகள் உதடு அசைவதாலும், கைவிரல்கள் ஆடுவதாலும், மெதுவாகத் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதாலும், தங்கள் முகப் பார்வையாலும் தெரியும்படி செய்கின்றார்கள். கூர்மையான பார்வையுடையோனாகிய குறி சொல்லுவோன், இந்த அசைவுகளைக் கொண்டே அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்துகொள்ளுகிறான். குறி சொல்லுகிறவன் கேட்கும் கேள்விகளுக்குக் கொடுக்கும் விடைகளாலேயும் தங்களுக்குத் தெரியாமலே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டுவிடுகின்றார்கள். இத்தகைய தந்திரங்களால் குறி சொல்லுகிறவன் தன்னைப் பிறர் நம்பும்படி செய்கின்றான். இந்தச் சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிக்காரன் சொல்லுவதெல்லாம், மதுரைவீரன் அருளாலென்றும், தெய்வீகத் தன்மையாலென்றும் மதிமயங்கி மூடநம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குறி மேடைகளில் எத்தனையோ பேர் தங்கள் பொருளை இழந்தார்கள்! மதியை இழந்தார்கள்! மானத்தை இழந்தார்கள்! இவர்களுக்குக் கணக்கேயில்லை!

கை பார்த்துக் குறி சொல்லும் வித்தை (Palmistry) என்று ஒன்றுளது. கை ரேகைகளைப் பார்த்துக் குறவர்கள் (Nomads) சாதாரணமாகக் கிராமங்களில் குறி சொல்லுவதுண்டு. குடுகுடுப்பைக்காரனும் இவ்வித குறிகளைச் சொல்லுகிறான். பண்டாரவேடம் போட்டுக்கொண்டு, ஓலைச்சுவடி யொன்றைக் கையிலேந்தி, கையைப் பார்த்துக் குறி சொல்லும் வேடக்காரர்களை நகர்களிலும், நாட்டுப்புறங்களிலும் பார்க்கலாம். சென்னை மூர்மார்க்கட்டுக்கு அருகாமையில் பலர் ஆரூடம் அதாவது ஓர்விதக் குறி சொல்லிப் பிழைக்கிறார்கள். கையைப் பார்க்கிறான், ஓலைச் சுவடியையோ அல்லது காகிதச் சுவடியையோ திருப்புகிறான். உடனே உனது காரியம் கைகூடும் என்கிறான். உனது மகன் திரும்பி வருவான் என்கிறான். உனது கணவனுக்கு வேலை கிடைக்கும் என்கிறான். இவ்வாறு அந்த நிகழ்ச்சிகளைத், தான் தெரிந்து சொல்லுவதுபோல நடித்துப் பாமர மக்களிடம் பணம் பறிக்கிறான். இந்த ஏழை சொல்லும் குறிக்கும், 'இந்து' போன்ற செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தும் சோதிடருக்கும் ஒன்றும் வேறுபாடில்லை. ஒரே மாறுபாடு உண்டு. ஒருவன் காலணாவுக்குக் குறியோ, சோதிடமோ, ஆரூடமோ சொல்லுகின்றான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15 வரை பெறுகின்றான். இரண்டும் ஏமாற்றுத்தான்.

குறி பார்ப்பது என்பதெல்லாம் வெறும் மனமயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கைதான் (Simple Belief) வேண்டும். உலகில் கோடானுகோடி மக்கள் காலை முதல் இரவு வரை உழைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்தி உயிர் பிழைத்து வருகிறார்கள். ஆனால் சிலர் வேலையொன்றும் செய்யாமல் சோம்பல் கொண்டு அறிவையும் வளரச் செய்யாமல், பகுத்தறிவையுங் கொன்று சிற்சில மோசச் சொற்களைக் கேட்டு ஓர்வித ஆறுதலை அடைகின்றார்கள். சோதிடம், ஆரூடம், குறி முதலிய வித்தைகள் சோம்பேறிகள் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட சாதனங்களென அறிக. மெஞ்ஞான முறையால் இனி நடக்கும் நிகழ்ச்சிகளை அறிவதுபோல், இந்தக் குறிகளாலும், சோதிடத்தாலும், கைக்குறிகளாலும் ஒன்றும் தெரிந்துகொள்ள வகை இல்லை. சோம்பேறிகள் மனத்திருப்திக்காக (Mental Satisfaction) உண்டாக்கிக் கொண்ட வித்தைகளேயொழிய, பொதுமக்களின் பொது நன்மைக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல் வேண்டும்.

கையிலுள்ள கோடுகளைப்பார்த்துச் சோதிடம் சொல்லுவது உலகம் முழுமையும் பரவியுள்ள ஒரு வித்தையாகும். அது வெறும் பழக்கமேயல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப்போல், நமது ஆதிகாலத்துப் பங்காளிகளாகிய வாலில்லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரபங்காளிகளாகிய வாலுடைய குரங்குகளுக்கும் கையில் கோடுகள் இருக்கின்றன. காட்டு மனிதக்குரங்குகளின் கையிலிருக்கும் கோடுகள், ஆதிகாலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்துத் தாண்டுங்காலையிலுண்டான தோல்மடிப்புகள். அந்த இனத்திலிருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரையாகத் தோன்றுகின்றன. நமது கைக்கோடுகள் காட்டுக் குரங்குகளின் இனப்பரம்பரையாக வந்தவை. பலகோடி ஆண்டுகளாக

நமது மூதாதைகள் மரங்களில் வாழ்ந்தகாலத்தில் தாவுவதற்குத் தங்கள் கைகளைப் பயன்படுத்தி வந்தனர். கைகள் மடியுண்ட இடங்களில் வரிவரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் வழிவழித் தலைமுறையாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங்கைகளில் உண்டாகியிருக்கும் கோடுகளுக்குக் காரணமாகும். மரத்தில் தாண்டியதால் மடிந்த இடங்களைக் கொண்டு நமது நடத்தைகளை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கின்றோம்? இரண்டுவரி ஐந்தாம் விரலுக்குக் கீழ் இருந்தால் அவனுக்கு இரண்டு மனைவிகளாம்! ஆனால் ஒரு வரியுடைய பலருக்குப் பல மனைவிமார்கள் இருப்பதைக் காணலாம்!! ஆதலின் இந்தவரிகளைக் கொண்டு நமது நடவடிக்கைகளைக் குறிப்பது வெறும் உத்தேசமாகும். (Pure guess) இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக்கொண்டு மோசம் போகின்றவர்கள் எத்தனையோ பேர். உள்ளங்கையில் மட்டுமல்லாமல், விரல்கள் மடியும் இடங்களிலும் கோடுகளைக் காணலாம். இந்தக் கோடுகள் விரல்கள் மடியுண்டபடியால், விரல்மடிப்புகளிலெல்லாம் தோன்றியுள்ளன. இதுபோலவேதான் மற்றக்கைவரிகளும் தோன்றியுள்ளன. ஆனால் விரல் படிப்புகளைக்கொண்டு நமதுநடவடிக்கைகளைக் குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக் கூறலாம். அந்த விரல் மடிப்புகள் பயன்படவில்லை எனின் மற்றக் கைமடிப்புகள் மட்டும் பெருமைபெற்றது எவ்விதம்? எவனோ ஒருவன் ஒருகாலத்தில் கைக்கோடுகளைப் பார்த்துக் குறி சொல்லியிருப்பான். இதை உண்மையென நம்பி பழக்கமுறையால் கையைப்பார்த்துக் குறி சொல்லும் பழக்கம் வந்திருக்கவேண்டும். எந்த மூடனும் இந்தப் பழக்கத்தைக் கையாளலாம். ஆனால் இந்த மூட நம்பிக்கையில் பற்றுள்ளவர்களைப் பற்றித்தான் நாம் வருந்துகின்றோம்.

விளக்குவைத்துப் பார்த்தல் எனும் ஓர் மூடப்பழக்கம், பாமரமக்கள் வீடுகளில் வழங்கி வருகின்றது. ஒரு பூசாரி தன்முன் ஒருவிளக்கை ஏற்றி, அந்த எரியும்சுடரை அந்த அம்மன் இந்த அம்மன் என்று வர்ணித்து, இதைச்சொல்லம்மா, அதைச்சொல்லம்மா வென எரியும் சுடரோடு பேசுவதைப் போல் நடித்து, சுடர் அசையாமலிருந்தால் 'அம்மா உத்தரவு அளிக்கவில்லை' என்றும், அசைந்தால் 'அம்மா உத்தரவு கொடுத்தாள்' என்றும் பொருள் படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றும் விதம் ஒன்றுண்டு. கிராமங்களில் ஏழைகள் நோய்ப்பட்டால் இம்மாதிரியான மூடப்பழக்கங்களைக்கொண்டுநிவர்த்திக்கப் பார்க்கின்றார்கள். இதனுடைய ஆபாசத்தைச் சற்று விளக்கிப் பார்க்கவேண்டும். கோடானுகோடி தீபங்களை நாம் காண்கிறோம். அசையாத தீபங்களையும் இன்றைக்காலத்தில் பார்க்கின்றோம். அதாவது மின்சாரவிளக்குகள். இந்தத் தீபச்சுடர்கள் காற்றிலும் அசைவதில்லை, சாதாரணவிளக்குகள் காற்றில்லாமல்போமாகில் அசைவற்று எரியும்; காற்று வீசியதும் சுடர்கள் அசைவதைப் பார்க்கலாம். இந்தச்சுடர்களெல்லாம் உயிரற்றவை; நமது சொல்லுக்கு அடங்காதவை; நமது சொல்லையும் கேட்கமுடியாதவை. நமது காலில் மிதிபடும் கல்லுக்கும் விளக்கில் எரியும் தீச்சுடருக்கும் மேற்கண்ட செய்திகளில் மாறுபாடு எதுவும் கிடையாது. அப்படியிருக்க, எவ்விதம் சுடர்களுடன் பேசக்கூடுமோ அது நமக்கு விளங்கவில்லை. பைத்தியம் பிடித்தவர்கள்தான் சுடருடனும், சுவருடனும், செடி, மரங்களுடனும் பேசுவார்கள். இதை ஆராயாமல் விளக்கு வைத்துப் பார்த்து அதனுடன்பேசுவதென்றால் என்ன மூடத்தனம் என்றெண்ணிப் பார்க்கவேண்டாமா? பூசாரிதான் அவன் வாழ்வுக்காக மோசம் செய்கிறான் என்றால், ஏழைமக்கள் அவன் பித்தலாட்டத்திற்குஏமாந்து,அவன் பிதற்றுவதைக்கேட்டு அவனை நம்புவதென்றால், என்ன மதிமோசம்!

தீச்சுடர்களைக் காற்றில்லாத அறைகளில் எரியவைத்து நமக்கு வேண்டியபடி தீபச்சுடரை அசைய வைக்கலாம். காற்றில்லாத கூடத்து அறையில் விளக்கை ஏற்றி அதன் அருகே உட்கார்ந்து கொண்டு காற்றை மெதுவாக வாயின்மூலமாக இழுத்தால் சுடர் அசைவற்று நிற்கும். அது நமது விருப்பப்படி அசையவேண்டுமானால், கையை ஆட்டினாலும், நமது உடலை ஆட்டினாலும் அல்லதுமெதுவாகஊதினாலும் தீபச்சுடர் அசையும். இவ்விதம் யாரும் செய்து காட்டலாம். இவ்விதமாக யாரும் செய்து காட்டும்போது எந்த அம்மனும், மாரியாத்தாளும்,மதுரை வீரனும் தீபச்சுடரில் புகுந்துகொண்டதாக எண்ணுவதில்லையே. ஆனால் பூசாரி அதேமாதிரி அசைய வைத்தால் அந்த அசைவு கடவுளால்உண்டானதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனமல்லாமல்வேறென்ன? காற்றில்லாமலிருந்தால் சுடர்அசைவற்று எரிகிறது, காற்றுப்பட்டால் அசைகிறது. ஆதலின் அசைவுக்கும், அசையாத்தன்மைக்கும் காற்றே காரணம். இதற்கு எந்த அம்மன் தயவும் வேண்டுவதில்லையே! இந்தப் பித்தலாட்டங்களைச் செய்யும்பூசாரிகளையும், அவர்கள் சொல்வதைக் கேட்கும் பாமரமக்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது காற்றடிக்கும் அறைகளில் சாளரங்களுக்கு எதிரிலாகிலும், வாசல்களிலாகிலும், தெருக்களிலாகிலும், குத்துவிளக்கைஏற்றிவைத்துஅதன் சுடரை அசைவற்று நிற்கும்படிசெய்யுங்கள்பார்ப்போம்.எவ்வளவுநீங்கள் உரத்து அம்மனை வர்ணித்தாலும் அந்த அம்மன் சுடரில் நுழையவே மாட்டாள்! இந்தத் தந்திரத்தை அறிந்த பூசாரி கூடத்து மூலையிலும் காற்றில்லா அறையிலுமே சுடரை எரியவைக்கப் பார்ப்பான். இதுதான் பூசாரி செய்துவரும் தந்திரம். எனவேதான் குறி பார்த்தல் என்பது எந்தப்பயனையும் அளிக்காத மூடநம்பிக்கைகொண்ட செயலாகும் என்று அறிவுறுத்துகிறோம். ✻

பிரபஞ்சம் சிந்திய மை!

"இப் பிரபஞ்சமானது சிந்திய மை போல இருக்கிறதேயொழிய, ஒரு பேனாவால் எழுதப்பட்ட எழுத்துக்களைப் போல் காணப்படவில்லை என்று விஞ்ஞானிகள் விதந்தோதுகின்றனர். அதாவது, பிரபஞ்சத்தை, ஒரு அறிவு கட்டுப்படுத்தி, முன்னெச்சரிக்கையாக நடத்திக்கொண்டு போவதாகத் தெரியவில்லை என்பதோடு, அணுக்களின் கூட்டுமுறையால், பெரும் பெரும் கோளங்கள் தோன்றி, யாதொரு கட்டுப்பாடுமின்றி, அநேக பெரும் கோள்கள் ஒன்றோடொன்றுமோதி அழிந்துவிடுவதும், தானாக அணுக்கள் ஒன்றுசேர்வதும் ஒரு கர்த்தா இல்லாததைக் காட்டுகின்றது!"

—பகுத்தறிவு

சிந்திடும் கருத்துக்கள்

"சுதந்திரம் பெற்றபிறகு, காங்கிரஸ் ஊழியர்கள் அவர்களுக்குரிய சாதாரண கடமைகளைச் செய்வதிலிருந்து தவறினர். அதிகாரத்தில் பங்குபெறவேண்டுமென்ற பேராசை அவர்களுக்கு உண்டாகியுள்ளது. சுயநலத்திற்கும், பேராசைக்கும் இடங்கொடுத்து வளர்ப்பதன் மூலம் காங்கிரசை வலிவிழக்கச் செய்யக்கூடாது என்று நான் காங்கிரஸ் ஊழியர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்களிடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டது. புது அமைப்பு முறை அமுலுக்குக் கொண்டுவரும்போது இவ்வாறு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ்காரர்கள் யோக்கியமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ளவேண்டும்."

—பட்டாபி சீத்தாராமையா
17—5—49.

* * *

"மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் மாகாண மந்திரிசபைகளும் தங்கள் கடமைகளைச் செய்வதில் தவறிவிட்டன. சில விஷயங்களில், தங்கள் அலுவல்களை மந்திரிகள் எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனரோ, அம்மாதிரி தங்கள் கடமைகளை மந்திரிகள் நடத்திச் செல்லவில்லை. மற்றும் சில விஷயங்களில் சாதாரண காங்கிரஸ் வாதிகள் சரியானபடி நடந்துகொள்ளத் தவறிவிட்டனர்."

—ராஜேந்திர பிரசாத்,
22—5—49.

* * *

"மந்திரிகள் யாவரும், அவர்கள் மீது கூறப்படும் குற்றச் சாட்டுக்களை நன்கு உணர்ந்தே யிருக்கின்றனர். ஆனால் மந்திரிகளிடம் ஊழல்களிருப்பதாகவும், தங்கள் உறவினர்க்கும், வேண்டியவர்களுக்கும் இவர்கள் சலுகை காட்டுகிறார்கள் என்பதாகவும கூறப்படுவது சில சமயங்களில் மிகைபடுத்திக் கூறப்படுகிறது. சிலர் குறை கூறுவதுபோல் ஊழலும், மற்றத் தீங்குகளும் அவ்வளவு ஒன்றும் நிறைந்து கிடக்கவில்லை. இம்மாதிரி லஞ்சமும், ஊழலும் காணப்படுவதற்குக் காரணம், போர்க் காலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டுப்பாடு போன்ற நிர்வாக முறைகளேயாகும். பிரிட்டனைத் தவிர, உலகில், வேறெந்த நாட்டிலும் இதை அறவே ஒழிக்க முடியவில்லை."

—பண்டித நேரு. 22—5—49

* * *

"லஞ்சஊழல்கள்பற்றிக்காங்கிரஸ் வாதிகள் தங்களிடம் கொண்டுவரும் புகார்களைப்பற்றி ஆட்சியிலிருப்போர் சரியானபடி கவனம் செலுத்துவதில்லை என்று உறுதியாகக் கூறுவேன். சர்க்கார்,கஷ்டங்கள் ஏற்படும் போதெல்லாம் காந்திஜீயின் உபதேசங்களை எடுத்துக்கூறுகின்றனரேயன்றி, எந்த விஷயங்களிலும் அவற்றைப் பின்பற்றுவதில்லை. காந்திஜி தன் தவறுகளை ஒப்புக்கொண்டார். அதுபோலச்சர்க்காரும் காந்திஜியின் உபதேசங்களைப் பின்பற்றினால் தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்."

—ஆசார்ய கிருபளானி 22-5-49.

* * *

"நமது நாடு இப்பொழுது ஒருவித விடுதலையைப் பெற்றிருக்கிறது. அவ்விடுதலை விரைவில் முழுமை எய்தல் வேண்டுமென்று எவரும் விரும்புவர். முழு விடுதலையை நல்கும் ஆற்றல் சமதர்மத்துக்கே உண்டு. அந்தத் தர்மத்துக்குப் பண்பட்ட நிலம் தென்னாடு என்பது எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மை. சமதர்ம விதை முதல் முதல் தென்னாட்டில் விதைக்கப்படின், பெருநலம் விளையும். அந்நலம் வடநாட்டை வயப்படுத்தித் தன்வண்ணமாக்கும் என்பது எனது நம்பிக்கை. இதனால் இந்தியாவில் சமதர்மம்/இன்பத்தேன் பிலிற்றும் நிலை ஏற்படலாம். இந்திய அரசாங்கம் தென்னாட்டிற்கு ஒரு வாய்ப்பை அளித்துப் பார்க்க எண்ணுமா? எண்ணின், இந்தியா விரைவில் முழு விடுதலை அடையும்."

—திரு. வி. க. 18—5—49.

* * *

"தற்பொழுது நடைபெற்றுவரும் நகரசபை ஆட்சி சுய ஆட்சி அல்ல. வரி ஆட்சிதான் தற்பொழுது நடக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் சுயஆட்சி நடக்கிறது என்றால் மக்களிடமிருந்து வரியே வசூலிக்கக் கூடாது. வரி வசூல் செய்யாமலே நகர சபைகளை நடத்த வழி இருக்கிறது. அதாவது நகரிலுள்ள சினிமாக் கொட்டகைகள், காபி ஹோட்டல்கள், கடைகள், பஸ் சர்வீஸ்கள் முதலிய மற்றத்தொழில்களையும் நகர சபையினரே எடுத்து நடத்தினால், தற்பொழுது வியாபாரிகளுக்குக் கிடைத்துவரும் வருமானம் நகரசபைக்குக் கிடைத்துவிடும். அவ்வருமானத்தை வைத்துக்கொண்டு இன்னும் சிறப்பாகவே நகரசபைகளை நடத்தலாம்."

—பெரியார் ஈ. வெ. ரா.
24—5—49

* * *

"சீக்கிய மதத்தில் தீண்டாமையே கிடையாது. அவர்களுக்குள் வேறுபாடும் பாராட்டப்படுவதில்லை. இந்து சமூகத்தில் தீண்டாமை போன்ற சில கொடிய பழக்கவழக்கங்கள் எவ்விதம் புகுந்ததோ அதேபோல் முற்போக்கான சீக்கிய மதத்திலும் நாளாவட்டத்தில் ஓரளவு சில கெட்ட பழக்கங்கள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன."

—சர்தார் பட்டேல்
25—5—49.

சந்தாதாரர்களுக்கு

"திராவிடநாடு" சந்தாதார்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுதவேண்டும். சந்தாஎண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்.

ஏக்கம் தீர மருந்து.

தீட்டும் திட்டங்களை நிறைவேற்ற, மாகாண அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை. வரியாக வரும் வருமானத்தின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திடம் சென்று சேர்கிறது. மத்திய அரசாங்கத்தின்தயவை எதிர்பார்த்து, மாகாண அரசாங்கம் வாழவேண்டியிருக்கிறது. ஆகவே, மாகாணத்திற்கென்று ஒதுக்கும் தொகையின் விகிதத்தைச் சற்று அதிகமாக்கிக் கொடுத்தால்தான், எண்ணும் செயல்களை ஈடேற்றிவைக்க முடியும்.

என்னும் கருத்துப்பட சென்னை நிதி மந்திரி தோழர் பி. கோபால் ரெட்டியார், அண்மையிலும், அதற்கு முன்பு பலதடவைகளிலும் பேசியுள்ளார். சட்டமன்றத்தில், வரவு — செலவுத் திட்டத்தை வகுத்து, அவையோர் முன்வைத்து, அதுபற்றிச்சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் இக்கருத்தை அவர்வலியுறுத்தியிருக்கிறார்.

இதனால், சென்னை மாகாணத்திலிருந்து கிடைக்கும் வரியின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திற்குப் போய்விடுகிறது என்பதும், அதனிடம் கெஞ்சிக்கேட்டு, அது கொடுக்க இசையும் பொருளைப்பெற்று, அதனைக்கொண்டுதான், மாகாண அரசாங்கம் தன்னுடைய திட்டங்களை ஆற்றிவைக்கவேண்டிய அவசியத்திலிருக்கிறது என்பதும், இற்றைப் பொழுது, மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கத்திற்குக் கொடுத்துவரும் தொகை, போதுமான அளவினதாக இல்லை என்பதும், மந்திரியாரின் கூற்றுக்களிலிருந்து தெரியவருகின்றன. மாகாண வரியின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திடம் சேரும்படியான நிலைமையையும், அப்படிச்சேர்ந்தபோருளிலிருந்து பங்குபெற, கெஞ்சிக் கேட்டு நிற்கும்படியான நிலைமையையும்மாகாணம்ஏன் அனுமதிக்கவேண்டும்? பெரும் பொருளைச் சேர்த்துக் கொடுப்பானேன், பின் கெஞ்சிக் கேட்டு நிற்பானேன்? வரவு—செலவு செய்யும் அதிகாரம், அதாவது ஆட்சிமுறை, சென்னைமாகாணத்திடம் அதாவது திராவிடத்திடம் அமைந்திருக்குமேயானால், மேற்கூறிய கேவலநிலை இங்கு ஏற்பட்டிருக்காது. நாட்டின் நிதிமந்திரியார் வடக்கு நோக்கி 'தவங்கிடந்து, அங்கலாய்த்து', புலம்பிநிற்கவேண்டிய அவசியமுமேற்பட்டிருக்காது.

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தக்கூடிய — வளர்க்கக்கூடிய அமைப்புகளெல்லாம், இன்றைய நிலையில், மத்திய அரசாங்கத்தின் ஆளுகையின்கீழ் விடப்பட்டிருக்கின்றன. வளரக்கூடிய—வளர்க்கக்கூடிய வரிகளானவை மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி — இறக்குமதி வரி, சுங்க வரி, சுரங்க வரி, ரயில்வே போன்ற போக்குவரத்துச் சாதனவரி, தபால் தந்தி வரி, பெருந்தொழிற்சாலை வரி போன்ற பல்வேறு வரிகள், மத்திய அரசாங்கத்திற்குச் சென்று குவிகின்றன. இந்த அமைப்புகளெல்லாம் வளர வளர வரிவிதிப்பின்அளவும் வளரும்; அதனால்வருமானமும் அதிகரிக்கும். ஆனால், மாகாண அரசாங்கங்கள் வசூலிப்பதற்கென்று விடப்பட்டவரிகளில் முக்கியமானது நிலவரி. இது வளரக்கூடிய அல்லது வளர்க்கக்கூடிய வரியல்ல; குறிப்பிட்ட அளவில் நிரந்தரமாக வந்துகொண்டிருக்கக்கூடிய வரியாகும். சிலகாலங்களில், பருவ மழையின்றி விளைச்சல் குன்றிவிடுமேயானால், நிலவரியின்மூலம் கிடைக்கும் வருமானமும் குறைந்துபோக நேரிடும். இதுவன்றி, அதிக அளவு வருமானம் பயக்காத விற்பனைவரி போன்ற சில்லறைவரிகள் தாம் மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாக இருக்கின்றன. குறைந்த வருமானம் தரக்கூடிய வரிகளையே மாகாணம்கொண்டிருப்பதால், தன்தேவை முழுவதையும், தன்விருப்பம்போல் நிறைவேற்றிக்கொள்ள இயலாததாக இருந்து வருகிறது மாகாண அரசாங்கம். சென்னை மாகாணம் அதாவது திராவிடம், தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமானால், தன்னிடத்திலே கிடைக்கும் வருமானம் தன்னைவிட்டுச் சிதறிப் போகாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அந்நிலை ஏற்படவேண்டுமாயின், திராவிடம் மத்திய அரசாங்கத்தோடு கொண்டிருக்கும் தொடர்பை அறுத்துக்கொண்டு, தனித்து நின்று ஆட்சி செய்யமுற்பட்டால்தான் இயலும். இந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டுதான், திராவிடர் கழகத்தினர் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற பிரிவினை முழக்கத்தை முழங்கி வருகின்றனர். நிதிமந்திரி தோழர் கோபால்ரெட்டியார், தற்பொழுது, நிலைமையை உணர்கிறார் என்று தெரிகிறது; ஆனால் நிலையைச் சீர்படுத்துவதற்காகக் கொள்ளக்கூடிய நெறியை இன்னும் அவர் உணரவில்லை! உணர இப்பொழுது மறுக்கிறார்!

குறிப்பாக, சென்னை மாகாணத்தின் அதாவது வளம் மிகுந்த திராவிடத்தின், பொருளாதார நிலை உயரவேண்டுமானால், இங்கு பல்வேறு தொழில் வளங்கள் பெருகவேண்டுமென்று அடிக்கடி எடுத்தியம்பி வருகின்றோம். திராவிடம் வடநாட்டோடு இணைந்திருக்கும் காரணத்தால், இங்கு தொழில் வளம் பெருகவொட்டாமற் செய்வதற்கு மத்திய அரசாங்கத்தால் இயலுவதாகிறது. சேலத்திலும், ஆந்திராவைச் சேர்ந்த சாந்தூரிலும் இரும்புச் சத்துக்கள் கிடைக்கும், இங்கு மின்சார உதவியால் எஃகு—இரும்புத்தொழிற்சாலைகள் தோற்றுவிக்கமுடியும் என்று அறிஞர்கள் கூறியபிறகுங்கூட, ஒரிசா மாகாணத்திலேயே இரும்புத் தொழிற்சாலைகளை நிறுவ, மத்திய அரசாங்கம் முனைந்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டு அமெரிக்கக் கம்பெனிகளின் நிபுணர்களும், ஒரு ஆங்கிலக் கம்பெனியின் நிபுணர்களும், சிறிது சிறிது குறைந்த செலவில் ஒரிஸாவில் இரும்பு உற்பத்திச் செய்ய முடியும் என்று கூறிய காரணத்திற்

காக, ஆரம்பிக்க எண்ணும் தொழிற்சாலைகளை வடநாட்டின் கண்ணேயே ஆரம்பிக்கப்போவதாகத்தெரிகிறது. நிலைமை அப்படியானல், தென்னாட்டுப் புதைச்சத்துக்கள் என்னுவது? ஏன் புறக்கணிக்கப்படவேண்டும்? தென்னாடு வடநாட்டோடு இணைந்திருக்கிற காரணத்தினுலல்லவா, தென்னாடு, தான் பெறவேண்டிய வாய்ப்புகளை யெல்லாம் இழந்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!

தென்னாடு—திராவிடம் பிரிந்தால், இங்கு நம் விருப்பப்படி தொழிற்சாலைகளை நிறுவமுடியும்; தேவையான சாமான்களை உற்பத்தியாக்க முடியும்; அவைகளை ஏற்ற விலை வைத்துவிற்க முடியும்; நம்விருப்பப்படி வெளிநாடுகளுக்கு, அவைகளின் தேவைக்கேற்றபடி அனுப்பிவைக்க முடியும்; பிற நாட்டுத் தொழில்கள் உள்நாட்டுத் தொழில்களைப் பாதிக்காமல் தடுக்கமுடியும்; வேலையற்ற எண்ணற்ற மக்களுக்கு வேலைதேடித் தர்முடியும்; நாட்டின் வருமானத்தைப் பெருக்க முடியும்; ஆட்சியைச் செவ்வனே நடத்த முடியும்; அப்பொழுது மத்திய அரசாங்கம் என்ற ஒன்றை எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவசியம் மாகாண அரசாங்கத்திற்கு ஏற்படாது!

வரியால் வரும் வருமானம் கிடைக்கவில்லையே என்று மாகாணம் எங்கும் ஏக்கத்தைத் தீர்க்கும் ஒரே மருந்து, திராவிட நாட்டுப் பிரிவினையேயாகும். எனவேதான், நிலைமையையுணரும் நிதிமந்திரியாரைச் சீர்திருந்தும் நெறியையும் உணர்ந்து கொள்ளச் சொல்லுகிறோம்!

●

"இரமண விஜயம்"

4-ம் பக்கத் தொடர்ச்சி

'விதையிலிருந்து ஆலமரம்வளருகிறது; அதுபோல, ஏதோ ஒருவித சக்தியிலிருந்து பிரபஞ்சம் வளர்ந்துள்ளது' என்று கூறப்படுமேயானல் இதைச் சந்தேகிப்பவர் யாரும் இல்லை. 'வெறும் சூன்யத்திலிருந்து பிரபஞ்சம் உண்டாகியிருக்க முடியாது' என்று ஆச்சாரியார் வலியுறுத்தும் கருத்தையும் யாரும் சந்தேகிக்கவில்லை!

விதை ஆலமரமாகவளர்கிறது என்பதையாரும் சந்தேகிக்கவில்லை; ஆனல் விதை ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆணிவேரையும், அடிமரத்தையும், கிளையையும் இலையையும், பூவையும், காயையும் கனியையும் தன் கண்காணிப்பில் வைத்துக்கொண்டு வளர்க்கிறது என்று யாரேனும் கூற முற்படுவாரேல் அவர் கூற்றைத்தான் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. விதைதான் மரமாய், கிளையாய், இலையாய், பூவாய்க், காயாய்க், கனியாய் வளர்கிறது என்பதில் சங்கேப்படவில்லை; விதை தனியே யிருந்துகொண்டு ஒல்வொன்றையும் தன் இச்சைப்படி உண்டாக்குகிறது என்று கூறுவார்களேயானல், யாரும் சந்தேகிக்கத்தான் செய்வர். 'விதை நினைத்தால் மரத்தையும், கனியையும் உற்பத்தியாக்கி, இலையையும் பூவையும் உற்பத்தியாக்காமல் இருக்கமுடியும்' என்று யாரும் சொல்லமுடியாது. விதை தனியே இருந்துகொண்டு ஒவ்வொன்றையும் தானே நேரிடையாக உண்டாக்கவில்லை என்கிறோம்; விதையேஒவ்வொன்ருகவளர்ந்துநிற்கிறது என்கிறோம்.

அதுபோல, ஏதோ ஒருவித சக்தி, அது ஒன்றோ பலவோ, பிரபஞ்சமாய் வளர்ந்திருக்கிறதே யொழிய, அதுதனியே இருந்துகொண்டு தன் இச்சைப்படி ஒவ்வொன்றையும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கவில்லை. சக்தியே பிரபஞ்சமாக வளர்ந்திருக்கிறது என்ற கூற்றை யாரும் சந்தேகிக்கவில்லை; ஆனல் சக்தி தனியே இருந்துகொண்டு பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சிருஷ்டி செய்து கொண்டிருக்கிறது என்ற கூற்றை நாம் சந்தேகிக்கிடுரும்; அறிஞர்கள் எல்லோரும் சந்தேகிக்கிருர்கள்.

ஆச்சாரியார் கூறும் வாதத்திலுள்ள உபமானமும், உபமேயமும் ஒன்றிற்கொன்று பொருந்தவில்லை. ஆலவிதையை உபமானமாக உணர்த்தி, அதிலிருந்து மூல சக்தியாகிய உபமேயத்தை உணரவைக்கிருர். ஆலமரத்தை உபமர்னமாக உணர்த்தி, அதிலிருந்து பிரபஞ்சமாகிய உபமேயத்தை உணரவைக்க எண்ணுகிருர். விதையிலிருந்து மரம் உண்டாகிறது என்று சொல்லி, அதுபோல மூலசக்தியுலிந்து பிரபஞ்சம் உண்டாகிறது என்று சொலியிருக்க வேண்டும். ஆனல் ஆச்சாரியார் அப்படிச் சொல்லாமல், விதையிலிருந்து மரம் உண்டாகிறதுஎன்ற உபமானத்தைக் காட்டி, இதுபோல, என்று சொல்லி, 'சக்தி' பிரபஞ்சத்தின் ஒவ்வொன்றையும் சிருஷ்டிக்கிறது என்கிருர். ஆகவேதான் ஆச்சாரியார் காட்டும் உபமேயம் பொருந்தவில்லை — இயற்கையுமல்ல— சந்தேகத்திற்கு இடமளிப்பது — குருட்டு நம்பிக்கையின் பாற்பட்டது என்கிறோம்.

ஏதோ 'சக்தி' தானே பிரபஞ்சமாய் வளர்ந்து நிற்கிறதென்ருல், சந்தேகப்படுவாரில்லை— அதைப்பற்றிக் கவலைப்படுவாரும் இருக்கவேண்டிய அவசியமில்லை.

எல்லாவற்றையும் தனித் தனியே உண்டாக்க — தனித் தனியே கவனிக்க—தனித் தனியே பாதுகாத்த தனித்தழிக்க ஒன்று இருக்கிறது என்றும், அதைப்பற்றி சந்தேகப்படக்கூடாது என்றும் ஆச்சாரியார் கூறுவாரேயானல் — ஒவ்வொன்றையும் உண்டாக்க ஒருகர்த்தா இருக்க வேண்டும், அந்தக் கர்த்தாதான் 'கடவுள்' என்று கூறமுற்படுவாரேயானல், அந்தக் கடவுளை உண்டாக்கிய கர்த்தா யார் என்று சுயமரியாதைக்காரன் கேட்க முற்படுகிருன். ஆச்சாரியார் ஆர அமர யோசித்துப் பதில் கூறட்டும்! அவருடைய குரு இரமணர் தானுகட்டும் சிந்தித்துப் பதில் தெரிவிக்கட்டும்!

இவ்வளவையும் தெளிவாக அறிந்துள்ள காரணத்தால் தான், 'இரமண விஜயத்தால்' மனிதசமூதாயாத்திற்குத் தினையளவு நன்மையாவது உண்டா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படியாக — ஆச்சாரியாரை அல்ல—இரமணரையுங் கூட அல்ல — பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்—சிறப்பாகப் பக்த கோடிகளைக் கேட்கிறோம்!

●

விளம்பரம்

எங்களிடம் "திராவிட நாடு" பத்திரிகையும், C. N. A. எழுதிய நூல்களும், பெரியார், அண்ணதுரை, கவிஞர் படங்களும் எப்போதும் கிடைக்கும். அன்பர்கள் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன்.

ஆழ்வார் நியூஸ் மார்ட்,
பாளையங்கோட்டை.

படிப்பகம்

பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி

ஆசிரியர்:- பாரதிதர்சன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால், ஏறத்தாழ இருபது ஆண்டுகாலமாகப் பல்வேறு ஏடுகளிலும் எழுதப்பட்டுச், சிதறுண்டு கிடக்கும் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். இதற்கு முன்பு வெளியிடப்பட்டுள்ள 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் பல அருங் கவிதைகள் இடம்பெற்றன; அந்நூலில் வரப்பெருமல், ஆனல் அவை போன்று சிறந்தனவாய் மிளிர்ந்து, எஞ்சி நிற்கும் கவிதைகள் பல இந்நூலின்கண்ணே இடம் பெறுகின்றன. கவிதைகள், சிறுகாப்பியம்—வாழ்க்கை—தமிழன்—பாரதி—திராவிடநாடு—காதல்— பன்மணித்திரள்—இயற்கை என்ற தலைப்புகளின் கீழே குவிக்கப்பட்டிருக்கின்றன. புரட்சிக் கவிஞரின் பாடல்கள் தெவிட்டாத் தேன் துளிகள் என்பதை நாடு நன்கறியும். அத்தகையத் துளிகளின் கூட்டுதான் இந்நூல்.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

விலை ரூ. 1—4—0

* * *

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி

ஆசிரியர்:- காஞ்சி. கல்யாணசுந்தரம்

இது ஒரு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு நூல். மறைந்த மாவீரர் கே. வி. அழகர்சாமி அவர்களோடு நெருங்கிப் பழகிய காலத்தில் தாம் கண்டவற்றுள், சில குறிப்புக்களை இச்சிறுநூலின்வாயிலாகச் செம்மையுறச் செப்புகிருர் ஆசிரியர். அழகர்சாமி அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்ற ஒரு சிலரிலே, இந்நூலின் ஆசிரியரும் ஒருவரான படியால், பல அரிய உண்மைக் கருத்துக்களைக் கண்டறிய இந்நூல் சிறந்த வகையில் பயன்படுவதாகும். இந்நூல் எளிமையும், தெளிவுங் கொண்ட நடையில் இயற்றப்பட்டுள்ளது.

பெறும் இடம்:— அறிவுப்பண்ணை 6, மங்கம்மாள் தெரு, மிண்ட் போஸ்ட், சென்னை 1.
விலை அணு 8,

* * *

புரட்சி இலக்கியம்

ஆசிரியர்:- சாமி பழனியப்பன்.

இது ஒரு சிறு கட்டுரை நூல். இலக்கியத் துறையிலே இன்றுள்ள நிலை மாற்றியமைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை, ஆசிரியர் இந்நூலின் வாயிலாகத் தெளிவாக்கிக் காட்டுகிருர்.

பெறும் இடம்:— எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி மாவட்டம். விலை அணு 3

* * *

தமிழச்சியின் கத்தி

ஆசிரியர்:- பாரதிதாசன்

இந்நூல் ஒரு கவிதைக் காப்பியம். வடநாட்டவரின் இழிதகு பண்புகளை எடுத்துக்காட்டித், தமிழர்தம் மாண்புறு பண்புகளை விளக்கிக் காட்டும் வகையில் மறச்செயல் புரியும் வீரமகள் ஒருத்தி, இந்நூலின் மூலமாகக் கவிஞரால் அறிமுகப் படுத்தப்படுகிருள். அந்த வீரநங்கை கவிஞரின் கற்பனை உள்ளத்தில் உதித்தெழுந்தவள்தான், எனினும், சரிதந் தழுவிய மாதிரியில் அருமையாக உருவாக்கப் பெற்றிருக்கிருள். தேனில் துவைத்தெடுத்த செந்தமிழ்ச் சொற்கள்; விறுவிறுப்பைத் தரும் நடை; அழகிய புதுப்புது உவமைகள்; எழில் ததும்பும் கற்பனைகள்; ஒளி உமிழும் உயர்ந்த கருத்துக்கள் ஆகிய இவை, இந்நூலின்கண் புதைந்து கிடக்கும் செல்வங்களாகத் திகழ்கின்றன. 'பாண்டியன் பரிசு' போன்று சிறந்து விளங்கும் செந்தமிழ்க் காப்பியமாகும் இந்நூல்.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.
விலை ரூ. 1—0—0

* * *

அபேத வாதம்

ஆசிரியர் :-
ச. இராசகோபாலாச்சாரியார்.

இது ஒரு கருத்து விளக்க நூல். அபேதவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கிக் காட்டி, அவற்றினுல் ஏற்படும் விளைவுகளைத் தமக்கே உரிய போக்கில் விளக்கிக் காட்டுகிருர் அன்பர் ஆச்சாரியார். இறுதியில் அபேதவாதக் கொள்கை உலகெங்கும் வெற்றி பெறும் என்பதையும் உணர்த்துகிருர்.

பெறும் இடம்:— சக்திகாரியாலயம், ராயப்பேட்டை, சென்னை.
விலை ரூ. 1—0—0

* * *

காந்தியும் வள்ளுவரும்

ஆசிரியர்:- ராய. சோ.

வள்ளுவர் சொல்லியவற்றோடு காந்தியாரின் செயல்கள் எவ்வெவ் வகையில் ஒட்டியிருக்கின்றன என்பது இந்நூலால் உணர்த்தப்படுகிறது. திருக்குறளுள் நாற்றுஇருபத்தைந்துபாக்களை எடுத்துக் காந்தியத்தோடுஇணைத்துமேல்இரண்டுவரிகள் பாடி, குறள் வெண்பாவை நேரிசை வெண்பாவாக்கி, விளக்கந் தந்துள்ளார் ஆசிரியர்.

பெறும் இடம்:— பாரதி பிக்லர் பாலெஸ், காரைக்குடி.
விலை ரூ. 1—8—0

* * *

மதிந்தலைவர் பெரியார்

ஆசிரியர் : 'தோழன்'

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமியைப் பழி தூற்று

வதே தம் பணி என்று கருதி வரும் ஒருவரால், வெளியிடப்பட்டுள்ள 'மடத் தலைவர் பெரியார்' என்ற சிறு ஏட்டிற்கு மறுப்பு கூறுமுகத்தான், எழுந்ததே இச்சிறு நூலாகும். மாற்றான் வெட்கித் தலை குனியும் வண்ணம், இதன் ஆசிரியர் தம் கருத்தை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

பெறும் இடம்:— அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, மிண்ட் போஸ்ட், சென்னை 1. விலை அணா 4.

* * *

சேர தாண்டவம்

ஆசிரியர்: பாரதிதாசன்.

இது ஒரு உரைநடைக் காப்பியம். சங்க இலக்கியங்களில் புகழ்ந்துரைக்கப்படும், ஆடற் கலையில் வல்ல ஆட்டனத்தி என்பானைக், காப்பியத் தலைவனாகக் கொண்டு எழுந்தது இக்காப்பியம். சங்கச் செய்யுட்களில் காணும் சரிதந் தழுவி, இக்கற்பனைக் காவியம் செல்லுகிறது. ஆட்டனத்தி —ஆதிமந்தி காதலுள்ளங்கள் கவிஞரால் அழகுற விதந்தோதப் படுகின்றன. அழகிய - இனிய - எளிய - சிறந்த — செந்தமிழ்ச் சொற்களாலான இவ்வுரைநடைக்காப்பியம் சிந்தைக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

பெறும் இடம்:- பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.
விலை ரூ. 1—4—0.

* * *

பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்.

ஆசிரியர்:— எஸ். சதாசிவம்.

பெரியார் — கவிஞர் — அண்ணா ஆகிய மூவரையும் பற்றிய சிறு குறிப்புகள் இந்நூலின்கண் கூறப்படுகின்றன. இம்மூவரையும் தமிழ் நாட்டவர்களின் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தவே இந்நூலைத் தாம் எழுதியுள்ளதாக ஆசிரியர் விளம்புகிறார். அழகிய நடையில் இந்நூல் அமைந்துள்ளது.

பெறும் இடம்:— இன்ப வாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம்; கோயமுத்தூர். விலை அணா 8.

சிரிக்கும் வையம்

ஆசிரியர்: சாமி பழனியப்பன்.

இது ஒரு சிறு கவிதை நூல். வேண்டாத இந்தியைப் புகுத்தித், தாய் மொழியைச் சிதைக்க முனையும் விபரீதப் போக்கினரின் சதித் திட்டத்தை, உடைத்தெறியும் ஆற்றலை இளைஞர் உலகம்பெறவேண்டும் என்ற கருத்தோடு, இந்நூல் உணர்ச்சியின் பெருக்காய், ஆசிரியர் உள்ளத்தினின்றும் வழிந்தோடி வந்துள்ளது.

பெறும் இடம்:- சுடரொளி நிலையம், பொ. புதுப்பட்டி, புதுக்கோட்டை. விலை அணா 4.

* * *

படித்த பெண்கள்

ஆசிரியர்:— பாரதிதாசன்.

இது ஒரு உரைநடை நாடகநூல். பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழவேண்டும் என்பது இந்நூலால் வலியுறுத்தப்படுகின்றது. "படித்த பெண்கள் இந்நாட்டிற்கு இன்றியமையாதவர்கள், பெண்கள் அனைவரும் படிக்கவேண்டும், அவர்கள் ஆண்களொடு சரிநிகரானவர்கள் —என்பனவற்றை விளக்க இதை எழுதினேன். நன்றாய் விளக்க வேண்டும் என்று இதை நாடகமாக அமைத்தேன்" என்று புரட்சிக் கவிஞர் கூறுகிறார். கவிஞரின் உரைநடை தனியழகு பெற்றது என்பது தான் யாவரும் அறிந்ததாயிற்றே!

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி. விலை ரூ. 1—4—0.

'இந்தியாவின் மொழிப் பிரச்சினை'

ஆசிரியர்:- கா. அப்பாத்துரை, எம். ஏ; எல். டி.

இது ஆங்கிலத்தில் இயற்றப்பட்டுள்ள ஒரு அரிய ஆராய்ச்சி நூல். பொது மொழி — தேசிய மொழி— பிரதேச மொழி — தாய் மொழி முதலிய பல்வேறு பிரச்சினைகளையும் நடுநிலை நின்று, இந்தியாவிலுள்ள மொழிகளைக் குறித்து ஆராய்ந்துள்ளார். ஆசிரியர் தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகளில் தேர்ச்சி பெ[illegible]ட்டம் பெற்றிருப்பதோடு, ஏனைய மொழிகள் சிலவற்றையும் அறிந்திருப்பவராவார். பேராசிரியர் மறைமலையடிகளார் இந்நூலுக்கு அழகிய ஆராய்ச்சி வாய்ந்த அணிந்துரை நல்கியுள்ளார்.

பெறும் இடம்:— தமிழ் இந்தியா பப்ளிகேஷன்ஸ், அருணாசல ஆசாரித் தெரு, சென்னை 5. விலை ரூ. 2—8—0.

* * *

காமராஜர்

ஆசிரியர்:- ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

பெறும் இடம்:- தீச்சுடர் நிலையம், சிறுகனூர், திருவானைக்காவல் வழி, திருச்சி மாவட்டம். விலை அணா, 5.

* *

பெரியார் பொன்மொழிகள்

தொகுத்தவர்:- "குமுதம்"

பெறும் இடம்:- திராவிடன் பதிப்பகம், P. B. 18, வேலூர் (வ. ஆ.) விலை அணா, 3.

* * *

வஞ்சகப் பெரியார்!

ஆசிரியர்:- பி. வி. லிங்கம்

பெறும் இடம்:- அழகிரிசாமி நூல் நிலையம், திருவாரூர். விலை அணா 3.

* * *

ஒழியட்டுமே? கருஞ்சட்டை!

ஆசிரியர்:- கோவல்கிழார்

பெறும் இடம்:- சிலப்பதிகார மன்றம், கள்ளக்குறிச்சி. விலை அணா, 4.

* * *

அழுகை

ஆசிரியர்:- ல. சேதுராமன்

பெறும் இடம்:- சேது பதிப்பகம், கரூர். விலை அணா, 10.

* * *

கல்லறை

ஆசிரியர்:- மெய்கண்டான்

பெறும் இடம்:- வாழ்க்கை மாளிகைப் பதிப்பகம், சென்னை. விலை ரூ. 1—2—0

—*—

Edited Printed & Published [illegible] Annadurai M. A. at "Dravidanadu" Press,

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 12—6—49 | இதழ் 50

நான் கண்ட அழகர்சாமி

OFFICE OF THE ... UL 1949

தொடர்ச்சி—8

எஸ். வி. லிங்கம்

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில், "தமிழன்பர்கள் மாநாடு" என்று ஓர் மாநாடு நடைபெற்றது. இது, 'இந்து', 'சுதேசமித்ரன்' சீனுவாசன்களாலும், வெங்கட்டராம சாத்திரிகளாலும் நடத்தப்பட்டது. இதன் மூலபுருடராகக் 'கல்கி' ஆசிரியர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி விளங்கினார்.

பள்ளிக்கூடங்களிலுள்ள பாடபுத்தகங்களைச் சிபார்சு செய்யும் குழுவினரைப் பெரியசாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் தங்கள் பக்கம் திருப்பிய பின்பு, பள்ளிக்கூடப் புத்தகங்களை விற்கும் கம்பெனிகளையும் தாமே நடத்த வேண்டுமென்று அவர்கள் எண்ணினார்கள்.

புத்தகங்களை வெளியிட்டு விற்பனை செய்யும் கம்பெனிகளில், தங்கள் ஆதிக்கத்தை வளர்ப்பதற்காகவே இம்மாநாடு கூட்டப்படுகிறதென்று அழகர்சாமி எண்ணினார். இதுபற்றி நமது கட்சி எந்தவிதமான தீர்மானத்துக்கும் வராவிட்டாலும், இப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம், கட்சி செய்யவேண்டிய சில முக்கியமான காரியங்களை எல்லாம் கட்சித் தோழர்களே செய்து முடிப்பது அக்கால வழக்கம்.

இந்த மாநாட்டு முயற்சியில் கவர்னர் பெயரும், சில இராசாக்கள் பெயர்களும் அடிபட்டதுடன், தமிழ்க் 'கலர்' வேறு சேர்க்கப்பட்டிருந்ததால், மிகவும் தடபுடலாக இருந்தது. இதனைத் தொடக்கியவர்கள் யாவரும் காரியங்களைப் புத்திசாலித்தனமாகவே நடத்தினார்கள். மாநாட்டுக்குக் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் எல்லாம், முன்னதாகவே கொண்டுவரப்படவேண்டுமென்றும், ஆலோசனைக்குரிய தீர்மானங்கள் யாவும் அச்சிட்டு, நகல் காப்பிகள் முன்னதாகவே வெளியிடப்படுமென்றும்சொன்னார்கள்.

மாநாட்டுப் பெயர் 'தமிழன்பர்' என்றிருப்பதாலும், தலைவர் திறப்பாளராக மந்திரி குமாரசாமி அவர்களும், இராசா அண்ணாமலைச்செட்டியார் அவர்களும் இருப்பதாலும் தமிழ்வளர்ச்சி ஒழுங்காக இருக்கும் என்பதே அவர்களுடைய எண்ணம். இது அழகர்சாமிக்குக் கோபத்தையே உண்டாக்கிற்று.

அழகர்சாமி சென்னைக்குச் சென்று, நண்பர்கள், விரோதிகள் ஆகிய அனைவரையும்கண்டு, இந்த மாநாட்டை நடத்தவே விடக்கூடாதென்று விவாதம் செய்தார். கட்சியில் பொதுவான அபிப்பிராயபேதமும், சொந்தக்கருத்து மாறுபாடும் கொண்டு விலகியிருந்த எல்லாத் தமிழர்களையும் அழகர்சாமி ஒன்று சேரும்படி செய்தார். இதனைக் கண்டு மயிலாப்பூர் கலங்கிற்று. இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்குச் செலவுக்குப் பணம் வேண்டுமல்லவா! அன்று, இன்று போல் சற்றுத் தாராளமாகப் பணநடமாட்டம் ஊரிலேயே இல்லாத காலமாகும். ஆதலால் அதற்காகக் கைமுதல் உண்டாக்கிக் கொண்டார்.

"நாத்திகமாநாடு" ஒன்று சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி வசூல்செய்யப்பட்ட பணம், "தமிழன்பர் மாநாடு" எதிர்ப்பு வேலைக்குச் செலவுசெய்யப்பட்டு வந்தது.

'தமிழன்பர் மாநாட்டு'வரவேற்புக் குழுவினர் பேருக்கு அனுப்பவேண்டிய தீர்மானங்களைத் தயாரித்து, பதிவுத் தபாலில் அனுப்பிப், பற்றுச்சீட்டு வாங்கிவைத்துக்கொள்ளும் பொறுப்பைத் தோழர் குருசாமி அவர்கள் ஏற்றுக்கொண்டார். மாநாட்டுக்கு டிக்கெட் வாங்கிக்

கொள்ள முடியாதவர்களுக்குத் தனியாகப் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பையும், பண வசதியுள்ளவர்களுக்கும் டிக்கெட் வாங்கிக்கொடுக்கும் பொறுப்பையும் தோழர் பொன்னம்பலனார் ஏற்றுக்கொண்டார். இந்தப் 'போர் முறைகள்' யாவும் பெரிதும் "தமிழரசு" மாசிலாமணியார் வீட்டிலேயே செய்யப்பட்டன. இவைகளைக்கேள்விப்பட்ட மயிலாப்பூர்கள் கோபப்பட்டன. சுயமரியாதைக்காரர்களை அடக்குவதற்கெனப் பிரத்தியேகப் போலீஸ் ஏற்பாட்டுடன் மாநாடு தொடக்கப்பட்டது.

மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளில் மூன்றுபங்கு அவர்களும், ஒருபங்கு நாங்களுமாக இருந்தோம். மாநாட்டில் சுயமரியாதைக்காரர்கள்முட்டை வீசப் போகிறார்கள்—கலகம் செய்யப் போகிறார்கள் என்று அவர்கள் போலீசுக்குத் தெரிவித்திருந்தார்கள். அன்பர் மாநாட்டு முக்கியஸ்தர்கள் மேடைக்கு வந்தார்கள். மேடையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் எல்லாம் 'வரவேற்புப் பிரதிநிதிகள் மட்டும்' என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது. நம்மைச் சார்ந்த வரவேற்புப் பிரதிநிதிகள் யாவரும் அந்த நாற்காலிகளில் உட்கார்ந்து விட்டனர். மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் ஆகிய இருவருக்கும்இரண்டு சோபாக்களும், அதைச் சுற்றி ஆறு சோபாக்களும் போடப்பட்டிருந்தன. நமது வரவேற்புப் பிரதிநிதிகள் சிலருக்கு வேறு இடம் இல்லாததால் அந்த ஆறு சோபாக்களிலும் ஆறுபேர் உட்கார்ந்துகொண்டார்கள். தோழர்கள் வெங்கட்டராம சாத்திரி, சீனுவாச சாத்திரி, 'சுதேசமித்ரன்' சீனுவாசன், சத்தியமூர்த்தி, அப்புச் சாத்திரி ஆகியவர்களுக்காக அந்தச் சோபாக்கள் போடப்பட்டிருந்தனவாம். அந்தச் சோபாக்களில் டி. வி. சுப்பிரமணியம், பார்த்தசாரதி நடேசன், ஜீவானந்தம், என். தண்டபாணி ஆகியவர்கள் உட்கார்ந்துகொண்டார்கள். நமது கட்சி வரவேற்புப் பிரதிநிதிகளில் எஸ். இராமநாதன், தாவுத்ஷா, மாசிலாமணி, அழகர்சாமி ஆகியவர்கள், உட்கார்வதற்கு நாற்காலிகள் இல்லாத காரணத்தால்நின்றுகொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஆனால், புகை எப்படி மூளுகிறதென்பதை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

முதலில் எதிர்பார்த்தபடி கலகம் இல்லாததாலும், உட்கார இடமில்லாது போனதைப் பெரிது படுத்தி வம்பு வளர்க்க அவர்கள் விரும்பாததாலும், உட்கார்ந்து இருப்பவர்களும் அதற்குப் பயந்த ஆட்களாக இல்லாததாலும் மாநாட்டு ஆரம்ப விழாத் தொடங்கியது. செட்டி நாட்டரசர் தமது திறப்பு விழாவை மங்களகரமாகச் செய்து முடித்தார். அடுத்தபடியாக மாநாட்டுத் தலைவர் மந்திரி குமாரசாமி அவர்கள் பெயரை வெங்கட்ராம சாத்திரியார் முன் மொழிந்தார். சீனுவாச சாத்திரி, சத்தியமூர்த்தி முதலியவர்கள் வழிமொழிந்தார்கள். உடனே சுப்பிரமணியம் எழுந்து, மாநாட்டுத் தலைவர் பெயரைத் தாம் ஆட்சேபிப்பதாகவும், மாநாட்டுப் பிரதிநிதிகள் விரும்பும் வேறோர் தலைவரை இப்போது தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றும், ஆகவே குமாரசாமி அவர்கள் பெயரைத் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் கூறினார். உடனே பார்த்தசாரதி எழுந்து, சுப்பிரமணியம் கொண்டுவந்த தீர்மானத்தைத் தாம் ஆதரிப்பதாகவும், பிரதிநிதிகள் விரும்பும் வேறோர் தலைவரை இனித்தேர்ந்தெடுப்பதே முறையென்றும் சொன்னார். பின்னர் சத்தியமூர்த்தி எழுந்து சிறிது நேரம் பேசியதும், சீனுவாச சாத்திரியார் எழுந்து, மாநாட்டுத் தலைவர் தேர்வை எதிர்ப்பது சரியல்லவென்றும், இது எங்கும் நடக்காத புதுவழக்கமென்றும், தான் உலகம் முழுவதும் சுற்றியவர் என்றும், இப்படிச் செய்வது பார்லிமெண்டரி முறைக்கு முரணானதென்றும் பேசினார். இதற்கடுத்தபடியாக இராமநாதன், தாவுத்ஷா ஆகிய நம் ஆதரவாளர்கள் பேசியதும், சுப்பிரமணியம் எழுந்து, மாநாட்டுத் தலைவர் பெயரையே பிரதிநிதிகள் கூடிய மாநாடும் ஒப்புக்கொள்ள மறுப்பது பார்லிமெண்டரி முறைக்கு விரோதம் என்று வேறு யாராவது சொன்னாலும், சாத்திரிகள் இவ்விதம் சொல்வதைக்கண்டு தாம் வருந்துவதாகவும், மாநாட்டின் பெயரைப் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ளாமல், புதுத்தலைவரை, டில்லி, பாம்பே, கல்கத்தா முதலிய இடங்களில் கூடிய இன்னின்ன மாநாடுகள் மாற்றியிருக்கின்றனவென்றும், அ. இ. கிருத்தவர் மாநாடு சென்னையில்கூடித் தலைவரை மாற்றி இருக்கிறதென்றும், அதாவது, மாநாடு கூடுவதற்குமுன், தலைவர் மீது பிரதிநிதிகளுக்குச் சந்தேகம் தோன்றினால் அந்தத்தலைவரைமாற்றுவதைத்தவிர, வேறுவழியில்லையென்றும், எனவே, அப்படியே மாற்றிப் புதுத் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமெனவும்கூறி, இப்போது இங்கு தலைவராய்இருப்பவரைத்தாங்கள் எதிர்ப்பதாகவும், வேண்டுமானால் 'ஓட்' எடுத்துப் பார்க்கலாம் என்றும் பேசினார்.

மாநாட்டில் அவர்கள் பேசும்போது எந்தவிதமான குதுகலமும் இல்லாமல் இருப்பதையும், நமது தோழர்கள் பேசும்போது ஏற்படும் கைதட்டலையும், குதூகலத்தையும் கண்ட தலைவர்கள், 'ஓட்' எடுக்கப் பயந்துகொண்டு, செட்டி நாட்டரசரும், குமாரசாமி அவர்களும் எங்கள் கட்சிக்காரர்களைத் தனியாக அழைத்துப் பேசினார்கள். மாநாட்டு வரவேற்புக் குழுவினர், தங்கள் தீர்மானங்களை, அச்சிட்ட புத்தகத்தில் சேர்க்கவில்லை யென்றும், தீர்மானங்கள். அனுப்பியதற்குப் பற்றுச்சீட்டு இருக்கிறதென்றும், தமிழன்பர் என்ற பேரால், தமிழ் மக்களை இவர்கள் ஏமாற்றுவதற்கு உடந்தையாக இருக்க முடியாதென்றும், இதற்குத் தலைவர் உடந்தையாக இருப்பதாலேயே எதிர்ப்பதாகவும் நமது தோழர்கள் சொன்னார்கள். பின்னர் சாத்திரிகளோடு கலந்து பேசிச், சட்டப்படி குற்றம் அவர்கள் மீதுதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இனி, மேற்கொண்டு செய்யவேண்டியதென்ன என்று பேசப்பட்டபொழுது, விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும் தீர்மானங்கள் மாநாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், கமிட்டியில் பாதிப் பேர் நமது கட்சியைச் சேர்ந்தவர்கள் இருப்பதற்கு இசையவேண்டுமென்றும் அழகர்சாமி கேட்டுக்கொண்டார். இது ஒப்புக்கொள்ளப்பட்டதும், மாநாடு மீண்டும் தொடங்கியது.

சோபாக்களில் இடம் பிடித்து வைத்திருந்த நமது தோழர்கள், முதலில் உட்காரத் திட்டமிட்

டிருந்த பெரிய மனிதர்களுக்கு இடம் கொடுத்து உட்காரச்சொல்லி இடமளித்ததும், நமது தலைவர்கள், குமாரசாமி அவர்கள் பெயரைத் தலைமைப் பதவிக்குப் பிரேரேபணை செய்ய, அவர்களின் ஆட்கள் ஆமோதிக்கத், தலைவர் தம்முடைய இடத்தில் உட்கார்ந்தார். மேடையில் வீற்றிருந்த சோபா முகங்கள் சிரித்த முகங்களாக மாறிப் பகல் உணவுக்குக் கலைந்து சென்றன.

மாலையில் இரண்டு கட்சித் தலைவர்களும் கூடித் தீர்மானங்களின் பேரில் விவாதம் நடத்தி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

தமிழ் எழுத்துக்களை 'விடுதலை'யில் கையாளப்பட்டு வரும் முறையில் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்பது போன்ற முக்கியதீர்மானங்களுக்குப் பின், 'தெய்வம்' பற்றிய ஓர் தீர்மானம் வந்தது. இதை அவர்கள் எதிர்த்தார்கள். கடைசியாகத் தலைவர் 'ஓட்' எடுக்க எண்ணினார். உடனே அழகர்சாமி ஒரு சீட்டு எழுதிச் சுப்பிரமணியத்தின் மூலம் தலைவருக்கு அனுப்பினார். தலைவர் சிரித்துக்கொண்டே, 'ஓட்' எடுக்காமல், தான் தலைவர் என்ற முறையில் அந்தத் தீர்மானத்தைத் தள்ளிவிடுவதாக, அதாவது மயிலாப்பூருக்குச் சாதகமாகச் செய்துவிட்டார். இது அவர்கள் எல்லாருக்கும் அளவுகடந்த மகிழ்ச்சி, அதாவது 'ப்ரம்மானந்த'மாக இருந்தது. ஆனால் ஏன் இப்படி நடந்ததென்ற இரகசியம் அவர்களில் எவருக்குமே தெரியாது. தெரிந்திருந்தால் வேறு விதமாக இருந்திருக்கும்.

மாநாட்டில் பலர் பேசினார்கள். வெங்கட்டராம சாத்திரியார் எழுந்து, "நண்பர்களே! மாநாடு இனிது முடிந்தது. இந்தப் பெருமை யாவும் சுயமரியாதைக்காரர்களையே சாரும். உங்களில் பலருக்கு, ஈரோடு, திரு. இராமசாமி நாயக்கரும் நானும், நெருங்கிய சினேகிதர்கள் என்பது தெரியாது. உங்களைப்பற்றிச் சொன்னவர்கள் தப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகக் கோபித்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் யாவரும் "பூல்ஸ்" "ரோக்ஸ்" என்றே எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது. இந்த இரண்டுநாள் நடவடிக்கைகளில், உங்கள் ஒவ்வொருவரின் பேச்சையும். விவாதமுறையையும் நான் கவனித்தேன், 'பூல்சு'ம், 'ரோக்சு'ம், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்தால் மாநாடு இவ்வளவு சிறப்பாக நடந்திருக்கமுடியாது. தப்பெண்ணங்களைமறந்து, இனிமாநாட்டுத்தீர்மானங்களை நிறைவேற்றிவைப்பதில் ஒன்றுபடுவோம்" என்பதாக மிகவும் பெருந்தன்மையாகப் பேசினார்.

இந்த வெற்றியில் அழகர்சாமி, குருசாமி, குஞ்சிதம் அம்மையார், ஜீவானந்தம், ஆகியோருக்கு மிகவும் மகிழ்ச்சி. இந்த நிலையில் 'கல்கி' ஆசிரியர் எழுந்தார். பாவம், அவருடைய அடிப்படைத்திட்டம் மிகவும் சாமார்த்தியமாகத் தகர்க்கப்பட்டதால், "மாநாடு முடிந்துவிட்டது. இனி யாரையும் கேட்காமலேயே நான் பேசலாம். மாநாட்டுப் போக்குத்தான் சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லையே! பின்ஏன்இங்கு வந்தார்கள்? இவர்களை யார் பாக்கு வைத்து அழைத்தார்கள்? தேச விடுதலைக்காகப் போராடும் காலத்தில் வெள்ளைக்காரரின் தாசர்களாக இருந்துகொண்டிருக்கும் இவர்கள் ...." என்று என்னென்னவோ கூறி நம்மைத்தாக்கிப் பேசினார். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த என்னை என் கழுத்தைப்பிடித்துத் தூக்கி, ஒலிபெருக்கியின்முன் நிறுத்தினார் ஒருவர். யார் என்று திரும்பிப்பார்த்தேன். அழகர்சாமிதான் அவ்விதம் செய்தவர். அவர் என்னைப் பேசும்படி சொன்னார். எனக்குப் பயமாக இருந்தது. என்ற போதிலும்தைரியமாக,

"தோழர்களே! இந்த மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்ட சீனுவாச சாத்திரி, வெங்கட்டராம சாத்திரி, ஆகியவர்களுக்கு வரவேற்புக் கழகத்

(7-ம் பக்கம் பார்க்க)

ஒரு காலிநாற்காலி

14-ம் பக்கத் தொடர்ச்சி

சுந்தரம் வெளியே வந்தார். சூடாமணி மேடையில் தோன்றவேண்டிய நேரம் வந்தது, சுந்தரம்பிள்ளையை விட்டு நகரமுடியாமல் சூடாமணி நின்றுகொண்டிருந்தாள். தன் கைகளை விடுவித்துக்கொண்டு அவளை மேடைக்குள் தள்ளிவிட்டார் சுந்தரம். சூடாமணி மேடையில் தோன்றியதும் மக்கள் கைகொட்டி ஆரவாரித்தார்கள். சுந்தரமும் கைகளை எடுத்தார். பின்னால் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர்கள் கைகளைப் பற்றிக்கொண்டனர்.

நாடகசபை வெற்றிகரமாக நடைபெறுகிறது. வாடாத மலராக் மங்காத மணியாகச் சூடாமணி திகழ்கிறாள். அவளுடைய நடிப்பைக்காண மக்கள் குவிந்த வண்ணமிருக்கின்றனர். நாடக ஆரம்பம்வரை கூச்சலும் சந்தடியும் இருக்கும். நாடக மணி அடித்ததும் எலலாம் அடங்கிவிடும். "நாடகம் ஆரம்பிக்கப்போகிறது" என்று மகிழ்வார்கள்.

தூரத்தில் சிறைச்சாலையில் இரவு மணி அடிக்கும். கைதிகளெல்லாம் தங்கள் அறைகளில் சேர்ந்து உட்கார்ந்திருப்பார்கள். கைதி சுந்தரம் மட்டும் இந்நேரம் நாடக ஆரம்ப மணி அடித்திருக்கும், சூடா வேடமணிந்து கொண்டிருப்பாள், நாடகம் நடைபெறும்" என்றுசிறைக் கம்பிகளைக் கைகளால் பற்றிக்கொண்டு நீலவானையும் அதில் விளங்கிடும் ஒளிநட்சத்திரங்களையும் பார்த்தபடி மகிழ்வார்.

நாடகம் பார்ப்பதற்குக் கொட்டகையில் எவ்வளவுதான் கூட்டம் நிறைந்தபோதும், "பெரியமனிதர், வேண்டியவர், அவசியம் ஒரு இடம் கொடுத்தாகவேண்டும்" என்றுதட்ட முடியாத சந்தர்ப்பங்கள் வந்தாலும் இரண்டாவது வரிசையிலிருந்த முதல் நாற்காலியில் யாருமே உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. அதில் "ரிசர்வ்டு" என்ற அட்டை தொங்குகிறது. சூடாமணி மேடைக்குள் அடியெடுத்து வைக்குமுன் ஒரு கணம் தாமதிப்பாள். அவள்கண்கள் இரண்டாவதுவரிசைக்குச்செல்லும். அங்குள்ள காலி நாற்காலியைக் காண்பாள். அந்தக்காலி இடம்அவள் கண்களில் சோகத்தைக் கிளறும். பெருமூச்சை அடக்கிக்கொண்டு மேடையினுள் நுழைவாள். கூடியிருந்த மக்கள் பெருத்த ஆரவாரத்துடன் வரவேற்பார்கள். ஆரவாரத்தால்நிரம்பியிருந்த மற்றெல்லா இடங்களைக் காட்டிலும் அமைதியுடன் காத்திருக்கும் அந்த ஒரு காலி நாற்காலிதான் அவளுடைய கவனத்தையும் மதிப்பையும் அதிகம் கவர்ந்திருந்தது.

ஒரு காலி நாற்காலி

சிறு கதை

இரா. செழியன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காலையில் எழுந்ததும் சுந்தரம்பிள்ளை, "சூடா, பாடத்தை எடுத்துக்கொண்டுவா," என்று கூப்பிடுவார். "இதோ! வந்துவிட்டேன் அப்பா," என்று சூடாமணி ஓடிவருவாள். பாடம் நடக்கும். நடிப்புச் சொல்லித் தருவதில் சுந்தரம்பிள்ளை கெட்டிக்காரராயிருந்தார். "தட தடவென்று கொட்டியளந்துவிடாதே. வர வரக் குரல் உயர்ந்து, இந்த இடத்தில் சற்று ஓய்வு கொடுத்து மீண்டும் பேச்சைத் தொடங்கவேண்டும்."

"சரியில்லை, சூடா, யாருடனாவது பேசிக்கொண்டிருந்தால் எடுத்தவுடனேயா கோபித்துக்கொள்கிறாய். புன்னகையுடன் ஆரம்பித்து, அலட்சியத்தைக் காட்டியபின் பேச்சு முடியும்போதுதான், கோபக்குரல் வரவேண்டும். அதற்காக ஏன் இவ்வளவு கூச்சல் போடுகிறாய்? நிறுத்து—மெதுவாகப்பேசு!" இப்படி ஒவ்வொரு பேச்சையும் சுந்தரம் திருத்திக் காட்டினார்.

"உரக்கப்பேசாவிட்டால், நாடகம் பார்க்க வருபவர்களுக்கு எப்படிக் கேட்கும்."

சுந்தரம் சிரித்தார். "நாடகம் பார்க்க வருபவர்களுக்காக உன் நடிப்பு மாறக்கூடாது. உன் நடிப்பு அவர்களை இழுக்கவேண்டும். அவர்கள் கேட்கவேண்டுமென்பதற்காக நீ உரத்துப் பேசாதே. நீ உதட்டளவில் தாழ்ந்து பேசுகிற சொற்களைக் கூட அவர்கள் கூர்ந்து கேட்கவேண்டும்."

புதுஆடைகளும் அணிகளும் செய்யப்பட்டு, சில சீன்களும், புதிதாக எழுதப்பட்டன. நாடகம்ஆரம்பிக்க இரண்டுவாரத்துக்குமுன் வண்ணச்சுவரொட்டிகள் நகரெங்கும் மிளிர்ந்தன.

நாடகத்தேதி நெருங்க நெருங்கச் சூடாமணிக்குப் பயம் அதிகரித்தது. அவளுக்குத்தூக்கமே வருவதில்லை. இரவு வெகு நேரம்வரை பாடத்தைப்படித்துக்கொண்டிருப்பாள். சுந்தரம்பிள்ளை காலையில் எழுப்பும் பொழுது, கண்களைக் கசக்கியவண்ணம் பாடத்தில் ஒருபகுதியை ஒப்பிப்பாள்.

நாடகத்துக்கு ஒரு வாரந்தான் இருந்தது. ஒத்திகை ஆரம்பமாயிற்று. முதல்நாள் ஒத்திகையில் சூடாமணிக்கு அதிகத்தடங்கல் ஏற்பட்டது. கதாநாயகனும், மற்ற முக்கிய வேடந் தாங்குபவர்களும், நன்றாகத்தேர்ச்சி பெற்றவர்கள். எவ்விதகஷ்டமுமின்றித் தங்கள் பாகங்களைமுடித்தார்கள். அவர்களுடைய அலட்சியத்தைப் பார்த்தாலே, அவர்களுடன் தன்னால் நடிக்கமுடியுமா என்று சூடாமணிக்குச் சந்தேகம் வந்தது. ஒத்திகை முடியும்போது கதாநாயகன் வேஷம் போடும் நடிகன், பக்கத்திலிருப்பவனிடம் சொன்னான், "சுந்தரம்பிள்ளை கஷ்டப்படுகிறார். ஆனால் கழுதை குதிரையாகுமா என்பது சந்தேகம்தான்" என்று. இதைக்கேட்ட சூடாமணி பல்லைக்கடித்துக்கொண்டாள்.

நாடக ஆரம்பத்துக்கு எல்லா ஏற்பாடுகளையும் சுந்தரம்பிள்ளை செய்தார். நாடகத்தேதியன்று வெளிவந்த எல்லாப்பத்திரிக்கைகளும் பெரிய விளம்பரங்களைத் தாங்கி வந்தன. ஆரம்பவிழாவிற்கு நகரமேயர் தலைமைவகிக்க ஒப்புக்கொண்டார். பத்திரிக்கைகாரர்களும், பிரபல நடிகர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

நாடகம் ஆரம்பமாயிற்று. சூடாமணி, வேடமணிந்து தயாராக இருந்தாள். அவளுடைய முகத்தில் இடப்பட்டிருந்த பவுடர் வியர்வையால் இரண்டு மூன்று தடவை கலைந்துவிட்டது. பாடமே மறந்துவிடும் போலிருந்தது. முன் அடைப்பிலிருந்த சிறு இடுக்கின்வழியாகக் கொட்டகைக்குள் பார்த்தாள். ஏராளமான கூட்டம். முதல்வரிசையில் தலைவரும், அவருக்குப் பக்கத்தில் படமுதலாளி மூத்து, டைரக்டர் பஞ்சுவும் உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்தில் வைரமாலைகள் ஒளிவிடப்பிரபல சினிமாநட்சத்திரங்கள் — கமலகுமாரி, காந்தாமணி, கலாவதி, மகாதேவன், கீர்த்தி, முதலியவர்கள் இருந்தனர். கடைசியில் கதாசிரியர் கந்தப்பன் வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். முதல் வரிசையிலிருந்த நட்சத்திரமாலையைக் கண்டதும் சூடாமணிக்கு நடுக்கம் வந்தது. நடிகைகள் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். தலைமை வகித்தவர் வயதானவர், தலைப்பாகை அணிந்திருந்தார் — மேடையில் நடக்கும் நாடகத்தைவிட பக்கத்தில் நடக்கும் பேச்சை ரசித்துக்கொண்டிருந்தார். சூடாமணியின் பார்வை இரண்டாவது வரிசைக்கு வந்தது. இரண்டாவது வரிசையில் முதல் நாற்காலியில் சுந்தரம் பிள்ளை உட்கார்ந்திருந்தார்.

ஐந்தாவது சீன் முடிந்தது; ஆறாவது சீன் ஆரம்பமாயிற்று கதாநாயகன் அபாரமாகப்பாடிக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பன் தரும் நகைச்சுவையைக் கேட்டு, மக்கள் கைதட்டியவண்ணம் இருந்தனர். அடுத்த சீனில் சூடாமணியின் பாகம் ஆரம்பமாகிறது. கையைப் பிசைந்துகொண்டு சூடாமணி நின்றாள். முதுகில் விழுந்த தட்டுதல் அவள் உடலையே குலுக்கிவிட்டது. "என்ன சூடா!" என்று சிரித்தார் சுந்தரம். அவருடன் பேசுவதற்குக் கூட அவளால் முடியவில்லை. "எல்லாம் வீண், வியர்த்தம்" என்று தோன்றியது. அவளுடைய நிலையைக் கண்டதும் சுந்தரம் வேறொன்றும் சொல்லாமல் தன்னிடத்துக்குப் போய்விட்டார்.

ஏழாவது சீன். சூடாமணி தோன்றவேண்டிய நேரம் வந்தது. மேடையின் ஓரத்தில் நின்று ஒரு கணம் தாமதித்தாள். அவளுடைய கண்கள் இரண்டாவது வரிசையில்

(13-ம் பக்கம் பார்க்க)

கோட்டை சரிகிறது!

இந்துமத அறநிலையப் பாதுகாப்புத் திருத்தச் சட்ட மசோதா, இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் ஆய்வுரையில் இருந்துவருகிறது. சென்னை சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்குழு, மசோதா பற்றிய கருத்துக்களைப் பொதுமக்களிடம் அறியவேண்டி, பல்வேறு தரத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து திரட்டி வருகிறது,

வைதிகம், இந்தச்சமயத்தில் தன் பிரதிநிதிகளை அனுப்பித், தன் எண்ணத்தை அக்குழுவினரிடம் எடுத்துரைக்கத் தவறவில்லை. புரோகிதத்தின் பரம்பரையில் வந்தோர் பலரும், இதுதான் சமயம் என்று, வலிய முன்சென்று, மசோதாவைக் கைநழுவ விட்டுவிடும்படியாக வற்புறுத்துகின்றனர். அவர்களிலே பலர் படித்த மேதாவிகள்; உலகை அறிந்தவர்கள்; நாட்டின் நிலைமையை நன்கு தெரிந்தவர்கள் தாம் என்றாலும், வழிவழிப் பழக்கத்தால் தம் வகுப்புக்குக் கிடைத்துவந்த உரிமைகளும், நலன்களும் இந்த மசோதாவால் அழிந்துபடக்கூடாது, என்ற இன உணர்வின் அடிப்படையில் தோன்றிய எண்ணம், மசோதாவை நடைமுறையில் கொண்டு வந்துவிடாதபடி செய்யத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது. மசோதாவைச் சட்டமாக்குவது, இந்து மதத்திற்கே கேடு சூழ்வதாம்; மத விவகாரங்களில் தலையிடும் ஒரு பெரும்பழி அரசாங்கத்தை வந்து சார்கிறதாம்; மடாதிபதிகளின் அருமை பெருமைகளெல்லாம் பாதிக்கப்பட்டு விடுமாம்; வைதிக ஆகம கருமங்கள் நிறைவேற்றப்படாமல் உலகம் துன்பத்தில் கிடந்துழல வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டு விடுமாம்; இவ்வளவையும் கூறி மசோதாவை எதிர்க்கின்றனர் வைதிகபுரியினர்.

மடாதிபதிகள் தம் இரும்புப் பெட்டிகளைத் திறந்து, அதிலிருந்து பணங்களை உருண்டோடவிட்டு, மசோதாவைத் தடுக்க முயற்சித்து வருகின்றனர். மடாதிபதிகளுக்காக வாதாடி நிற்க, பலர் விலைபேசப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் முன் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

ஓமந்தூரார் மந்திரி சபையால் கொண்டுவரப்பட்ட மசோதா, இராசபாளையத்தார் மந்திரி சபையால் கைநழுவவிட்டு விடப்படுமோ என்ற ஐயம் பொதுமக்களிடம் உலவி வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் முன், வைதிகத்தின் பிரதிநிதிகள் தத்தம் எண்ணங்களை எடுத்துவைக்கும் போது, மசோதாவை உயிரற்றதாக ஆக்கிவிடுவார்களோ என்றும் எண்ணவேண்டி வந்தது. ஆனால் மசோதாவைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்த மந்திரி தோழர் டி. எஸ். எஸ். ராஜன், உதகையில் நடைபெற்ற ஒரு வரவேற்புக் கூட்டத்தில் பேசும்போது,

> "இங்கும் அங்கும் எதிர்ப்புகள் இருந்தபோதிலும், கோவில்களையும், மடங்களையும் சீர்திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதைச் செய்வது சர்க்கார் கடமை. எதிர்ப்புகளால் சர்க்கார் பின்னடைய மாட்டார்கள்"

என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றினைக் காணும்போது, மசோதா வெற்றிபெறக் கூடும் என்று எண்ணுவதற்கு இடமேற்படுகிறது.

திராவிடர் கழகத்தாரைப் பொறுத்தவரையில், இம்மசோதா முற்றும் முடிந்தவொரு சீர்திருத்தம் என்றுகொள்ளப்படவில்லை. தாம் அடைய எண்ணியிருக்கும் இலட்சிய பாதையில், இது ஒரு முன்னேற்றப் படியாக அமைகிறது என்ற அளவில் தான் அகமகிழ்கிறார்கள்.

கோவில்கள், மடங்கள், சத்திரஞ்சாவடிகள் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்பைத்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மசோதாவின் மூலம் முனைகிறதேயல்லாமல், அவற்றில் இருந்துவரும் பழைமைப் பழக்க வழக்கங்களை மாற்றவோ — திருத்தவோ — எடுத்துவிடவோ அரசாங்கம் முற்படவில்லை. இது இன்றைய அரசியலாருக்கு வேண்டுமானால் முற்றும் முடிந்த சீர்திருத்தமாகப் படலாமேயொழிய, திராவிடர் கழகத்தார்க்கு இது ஒரு பகுதிச் சீர்திருத்தமாகத் தான் படுகிறது. இந்த அளவுக்காவது இப்பொழுது அரசாங்கம் வந்துள்ளதே என்பது கண்டு மகிழ்ச்சி கொள்கிறது; இந்த அளவுக்கு ஆதரவும் நல்குகிறது.

திராவிடர் கழகத்தாரைப் பொறுத்தமட்டில், கோயில்கள், மடங்கள், சத்தரஞ்சாவடிகள் ஆகியவற்றில் செய்ய எண்ணும் சீர்திருத்தம் இந்த அளவோடு நிற்கவில்லை, மேலும் விரிந்து கிடக்கிறது. அரசாங்கத்தார் இம்மசோதாவின் மூலமே சீர்திருத்தத்திற்கு முற்றுப்புள்ளி (புல்ஸ்டாப்) வைத்துவிடலாம் என்று எண்ணக்கூடும்; ஆனால், திராவிடர் கழகத்தார் மேலும் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம் ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணத்தால் இப்பொழுது கால்புள்ளி (கமா) வைக்கிறார்கள். இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள மசோதா, மேலும் மேலும் வளரக்கூடிய மசோதா—வளர்க்கக் கூடிய மசோதா என்ற முடிவின்பேரில் தான், இந்த அளவுக்குத் தன் ஆதரவைக் கொடுக்கத் திராவிடர் கழகம் பாடுபட்டு வருகிறது.

மசோதாவை எதிர்ப்போர், அரசாங்கம் மதத்தில் தலையிட நினைக்கிறது, அது கூடாது என்று வாதிட்டு நிற்கின்றனர். மசோதாவைக் கொண்டு வருபவர்கள், கோவில்—மடங்கள் ஆகியவற்றின் சொத்துக்களின் நிர்வாகத்திலே ஊழல்கள் மலிந்துவிட்டன, ஆகவே

ஊழல்களைப் போக்கி நிர்வாகத்தைச் செம்மையுறச் செய்யவேண்டிய கடமை அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்கிறது என்று தெளிவுபடுத்துகிறார்கள்.

மசோதாவின் அடிப்படை நோக்கத்தை மறைக்க எண்ணி, எப்படிக் கூறினால் பாமர மக்கள் மயங்கித் தம் சார்பாக வருவார்கள் என்பதை அறிந்து, படித்த வைதிகப் பிரதிநிதிகள், மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று கூக்குரலிடுகின்றனர். 'மக்களின் பிறவிக்குக் காரணமாக இருக்கும் மண்ணாசை—பொருளாசை—பெண்ணாசை ஆகிய ஆசைகளை விடும்படி சொல்லி, அவர்களைப் பிறவிப்பெருங்கடல் நீந்தச் செய்து, பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருக்கச் செய்வதே, மதத்தின் முக்கிய நோக்கமாகும்' என்றும், 'மக்களுக்கும் ஆண்டவனுக்கும் இருக்கும் தொடர்பினை விளக்கிக் காட்டி, அவர்களைத் தெளிவடையச் செய்யவே மதம் தோன்றியிருக்கிறது' என்றும் சொல்லிவருகிறார்கள். ஒவ்வொரு மதமும் 'ஆண்டவனை அடையும் வழியைத்' தனக்கேயுரிய தனிமுறைகளால் விளக்கி வருகின்றது. ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதக் கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. இதனால் கருத்துக்கும் மதத்திற்கும் தொடர்பிருக்கிறது என்பது உணரப்படுகிறது. உலகச் சொத்துக்களைப்பற்றி மதம் கவலைப்படக்கூடாது; சொத்துக்கும் மதத்திற்கும் தொடர்பில்லை. சொத்துக்களைப் பற்றிக் கவலைப்படத்தான் அரசாங்கங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த முறைப்படி வைத்துப் பார்த்தால் அரசாங்கம் மதத்தில் தலையிட்டிருக்கிறதா அல்லது மதம் அரசாங்கத்தில் தலையிட்டிருக்கிறதா என்பது எளிதில் விளங்கிவிடும்.

சென்னை அரசாங்கம் மதத்திற்குச் சொந்தமான கருத்துக்களில் தலையிட்டிருக்கிறதா என்றால், இல்லை! ஆண்டவனை இப்படித்தான் வழிபடவேண்டும் என்றோ, அல்லது இந்து மதத்தினர் இன்னின்ன குறிகளைத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது இந்து மதத்தினர் இன்னின்ன சமய நூல்களைத்தான் படிக்கவேண்டுமென்றோ, அல்லது இன்னின்ன முறைகளில்தான் மதச் சடங்குகளைப் புரியவேண்டும் என்றோ அரசாங்கம் எதுவும் வற்புறுத்துவதாகத் தெரியவில்லை. கும்பிட வேண்டிய ஆண்டவன் அல்லா என்றோ, ஜெகோவா என்றோ, சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரமன் என்றோ, அனுமான் என்றோ வற்புறுத்தியிருந்தாலோ, அல்லது, வழிபடவேண்டிய வழி காட்டிகள் நபி என்றோ, ஏசு என்றோ, நாயனார்கள் என்றோ, ஆழ்வார்கள் என்றோ, புத்தர் என்றோ, மகாவீரர் என்றோ சொல்லியிருந்தாலோ, அல்லது, கொள்ளவேண்டிய வேதம் குரான் என்றோ, பைபிள் என்றோ, சித்தாந்தம் என்றோ, வைணவம் என்றோ, வேதாந்தம் என்றோ கூறியிருந்தாலோ அரசாங்கம் மதத்தில் தலையிடுகிறது என்று சொல்ல ஏதுவாக இருந்திருக்கும். அப்படி ஒன்றையும் சென்னை அரசாங்கம் வற்புறுத்தவில்லை. தான் ஆட்சி செய்யவேண்டிய சொத்து இந்து மதத்திடம் சிக்கிச் சீரழிவதைக் கண்டு, அதன் நிர்வாகப் பொறுப்பை இவ்வளவு நாட்கள் கழித்து ஏற்றுக்கொள்ளத்தான் அரசாங்கம் எண்ணியிருக்கிறது. உள்ளபடியே மதச் சொத்துக்களையெல்லாம் பிடுங்கிக் கொள்ளக்கூட அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது; காரணம் மதத்திற்குச் சொத்திருக்க முடியாது, சொத்தின் மேல் அது ஆசை வைக்கக்கூடாது, வைத்தாலும் பொருந்தாது. ஆனால் அந்த அளவுக்குக்கூட சென்னை அரசாங்கம் இன்று துணியவில்லை; மதச் சொத்துக்களின் நிர்வாகப் பொறுப்பை மட்டுந்தான் ஏற்றுக்கொள்ள விரும்பியுள்ளது.

வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிப் பார்த்தால், மதந்தான் அரசாங்கத்தில் தலையிட்டுத் தனக்குச் சொத்துக்களை உரிமையாக்கிக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும். ஒரு காலத்தில் ஆண்டவர்களெல்லாம், மரத்தடிகளிலும், மரப்பொந்துகளிலும், குகைகளிலும், குளத்தங்கரைகளிலும் கல்லுருவங்களாக வீற்றிருந்தார்கள். அப்பொழுதெல்லாம், அவர்களுக்குச் சொத்திருந்ததில்லை; எனவே சொத்தை நிர்வகிக்கும் எந்தவிதமான பொறுப்பும் ஆண்டவனைக் காப்பாற்றி வந்த மதத்திற்கு ஏற்படவில்லை. பிற்காலத்தில் தோன்றிய பல்லவ, சாளுக்கிய, விஜயநகர, சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தனியாட்சி முறைகளால்தான் கோவில்களுக்கும், மடங்களுக்கும், சத்திரங்களுக்கும் சொத்துக்கள் சேர்ந்தன. மகேந்திரவர்மப் பல்லவன், நரசிம்மப் பல்லவன், ராஜராஜசோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன்; சுந்தர பாண்டியன், குலசேகர ஆழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், கிருஷ்ண தேவராயர் ஆகியோர், பொதுமக்கள் வரியாகவும், பிறவாகவும் செலுத்திய பணத்தை, ஆட்சி அதிகாரம் முழுதும் தம் கையிலிருப்பதால், எதிர்த்துக் கேட்போர் எவரும் இல்லை, எவரும் இருக்க முடியாது என்று கருதி, தத்தம் விருப்பப்படி, தாம் தாம் விரும்பிய ஆண்டவர்களுக்கு வாரியிறைத்தனர். வைணவனாக இருந்தவன் பெருமாள் கோயில்கள் கட்டினான்; சைவனாக இருந்தவன் சிவன் கோயில்கள் கட்டினான்; சிலர் இரண்டுவிதக் கோயில்களும் கட்டினார்கள். அரசாங்கத்தின் பணத்தை எடுத்துக்கோபுரங்கள் கட்டினார்கள்; கோயில்களுக்கு மான்யங்கள் விட்டார்கள்; தங்க வெள்ளி வாகனங்கள் செய்துவைத்தார்கள்; பொன், மணி அணிகலங்கள் அணிவித்தார்கள்; திருவிழாக்கள் நடத்தினார்கள்; ஆடம்பரங்கள் பல செய்தார்கள்; அவ்வளவுக்கும் சொத்துக்கள் எழுதிவைத்தனர். அதுபோலவே ஏழைகளிடத்தும், வறியோர்களிடத்தும் கொள்ளையடித்துப் பெரும்பொருள் சேர்த்து வைத்திருந்த பெருநிலக் கிழார்களும், பணக்காரர்களும் கோவில்களுக்கும், மடங்களுக்கும், சத்திரங்களுக்கும் மான்யங்கள் விட்டனர். இப்படியாக, மண்ணாசையையும், பொன்னாசையையும் துறக்கச் சொல்லும் மதங்கள், மன்னர்களை மயங்கவைத்து, அரசாங்கத்தின் சொத்துக்களைத் தமதாக்கிக் கொண்டன. மேலும் மதம் அரசாங்கத்தின் அமைப்பு முறையையே தனக்குச் சலுகை காட்டி வரும்படியாகப் பன்னெடு நாட்களாகவே செய்து வந்திருக்கின்றது. ஆகவே, அரசாங்கம் மதத்தில் தலையிட்டதை விட, மதம் அரசாங்கத்தில் தலையிட்டதுதான் அளவுக்கு மீறியதாக இருந்து வந்திருப்பதை வரலாறு எடுத்துக் காட்டுகிறது. இன்றைய நிலையில் அரசாங்கம் மதத்தில் தலையிடுகிறதா என்றால், இல்லை;

அதற்காக மதங்களை எல்லாம் அரசாங்கம் கவனிக்க மறுக்கிறதா என்றால், அதுவும் இல்லை! மதங்களின் நலனை எண்ணி அவைகளை அணைத்துப் பாதுகாக்கவே விரும்பி நிற்கிறது. ஆனால் மதம் மட்டும் இன்னும் தன் ஆதிக்கத்தை அரசாங்கத்தில் நிலைநாட்டித்தான் வருகிறது. மதத்தில் அரசாங்கம் நாட்டிவந்த சிறிது ஆதிக்கமும் அடியோடு மறைந்துவிட்டது; ஆனால் அரசாங்கத்தில் நாட்டிவந்த ஆதிக்கத்தைச் சிறிதுகூடத் தளர்த்திக்கொள்ள மதம் இன்னும் இசையவில்லை!

அப்படியானால் இன்றைய அரசாங்கம் பகுத்தறிவின் வழி செல்லும் மதச் சார்பற்ற அரசாங்கமா? அதுவும் இல்லை! இன்றைய அரசாங்கம், மதச் சார்பற்றது என்று சொல்லி, எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்ளும் அரசாங்கம் — ஆனால் எந்த மதத்தின் கருத்திலும் கைவைக்க எண்ணாத அரசாங்கம்.

மதத்தின் சொத்துக்களில் தலையிட அரசாங்கத்திற்கு ஏது உரிமை, என்று கடாவி நிற்கின்றனர், வஞ்சக வைத்தியனாத அய்யர்களும், வைதிக வரதாச்சாரிகளும். மதம், தன் சொத்துக்களை, வானத்தினின்றும் தன் வல்லமையால் பொன்னைச் சொரிந்தா சேர்த்துக் கொண்டது? வரலாறு அப்படிக் கூறவில்லையே! மதத்திற்கு யார் சொத்துக்களை உரிமையாக்கினார்கள்? யதேச்சாதிகார மன்னர்கள் அல்லவா! மக்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது அரசாங்கச் சொத்துக்கள் மதத்திற்கு உரிமையாக்கப்பட்டன. இப்பொழுது மக்கள் விழித்துக் கொண்டார்கள்! எனவே அரசாங்கத்தின் உரிமையை மீண்டும் மதத்திற்கு விடப்பட்ட சொத்துக்களின் மீது நிலை நாட்ட முயலுகின்றனர். இதில் என்ன தவறு? வரதாச்சாரிகளும், வைத்தியனாத அய்யர்களும் துடிக்கிறார்கள் மசோதாவைக் கண்டு என்றால், அதன் உட்கிடக்கை என்ன என்று கருதுகிறீர்கள்? தம் இன நலம் எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது, அது காப்பாற்றப்படவேண்டும் என்பதுதானே!

சென்னை சட்ட சபையில் வைத்தியனாத அய்யரே முன்பு குறிப்பிட்டுள்ளபடி, சென்னை மாகாணத்தின் மூன்றில் ஒரு பகுதிச் சொத்துக்கள் கோவில் மடங்களிலே முடக்கப்பட்டிருக்கின்றன, நாட்டின் மூன்றிலொருபாகச் சொத்து வீணர்களின் கைகளிலே விளையாட்டுக் கருவிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பக்தர்களின் 'திருவிளையாடல்கள்' யாதொரு குறையுமின்றி நடைபெற வேண்டுமென வாதாட வந்துவிட்டார் வைத்தியனாத அய்யர்! அவருக்குப் பக்க மேளம் கொட்டி வருகின்றனர் அண்ணாமலைகளும், சகஜாநந்தங்களும்!

ஓமந்தூரார், சட்ட சபையில் கொடுத்த கணக்குப்படி, இந்த நாட்டில், பணம் வரவு செலவு வைத்திருக்கக் கூடிய கோயில்களின் எண்ணிக்கை மட்டும் 27000. சோம்பேறிகளுக்குச் சோறுபோட்டு வளர்க்கும் சத்திரஞ் சாவடிகளின் தொகை 25000. உண்டு, உப்பி, தின்ற சோறு செரிப்பதற்குத் தொந்தியில் சந்தனந் தடவி, வெண்சாமரம் சாத்தி, ஒழிந்தவேளைகளில் அருக்கு மங்கையரின் மலரடி தடவி, அவர் கருத்தறிந்த பின் அரசியலை தடவி, இகத்திற்கும் பரத்திற்கும் உள்ள தொடர்பைக் காணும் நெறியில், எஞ்ஞான்றும் சிந்தையைச் செலவிட்டு வரும் மடாதிபதிகள் வாழும் மடங்களின் அளவு 3000. இதில் பெரிய மடங்களாக உள்ளவை மட்டும் 164. இவை எல்லாவற்றிலிருந்து மட்டும் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம் ரூபாய் பத்து கோடிக்கு மேல். இந்த பத்துகோடி ரூபாயும் தின்று கொழுக்கும் சோம்பேறிக் கூட்டத்தினர்க்குச் செலவழிக்கப்படுகின்றதேயல்லாமல், உழைக்கும் பொதுமக்களுக்குக் கிஞ்சிற்றும் பயன் படுவதில்லையே! மதத்திடத்தே இவ்வளவு சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டதால், நாட்டின் பொதுநிலையுயர ஏதாவது வழி பிறந்ததா?

'விருப்பு வெறுப்பற்ற விமலனாக' இருக்கும் ஆண்டவனுக்கு சொத்து தேவையில்லை, 'எல்லாம் அவன் படைப்பிலுள்ளவை' என்னும் கருத்தால்! அவன் எதையும் விரும்புவதில்லை, 'எதையும் ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் அவன்பாலுள்ளது' என்ற தன்மையால்! அவன் எதையும் மனிதனிடம் கேட்பதில்லை, அவனுக்கு 'எதுவும் அவசியமில்லாத' காரணத்தால்! இந்தக் காரணங்களால்தான் போலும் 'ஆண்டவன்' தன்னிடத்தே விடப்பட்டிருக்கும் சொத்துக்களின் பேரில் நிகழும் கொள்ளையையும், மோசடியையும் கவனிப்பதேயில்லை! 'ஆண்டவன்' கவனிக்க மறந்த சொத்துக்களை, அரசாங்கந்தானே கவனிக்க முன்வரவேண்டும்! இதன் உண்மை பழுத்த வைதிகர்களுக்குப் புலப்படாமற் போவானேன்? ஒருகால் 'பக்தி மயக்கம்' அவர்களை அந்த அளவுக்கு ஆட்கொண்டிருக்கிறது போலும்!

88 அறநிலையங்களில் நடைபெற்ற மோசடிகளை, ஓமந்தூரார் அன்று சட்ட சபையில் விளங்க வைத்தார், அரசாங்கத்தின் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்து போன மோசடிகள் எவ்வளவோ! கண்ணுக்கு அகப்பட்டு நழுவிப் போன மோசடிகள் எவ்வளவோ! இன்னும் மறைவாக நடந்துகொண்டி-

(9-ம் பக்கம் பார்க்க)

அழகர்சாமி

3-ம் பக்கத் தொடர்ச்சி

தின்சார்பாக நன்றி" என்றேன். போவதக்கு எழுந்த அவர்கள் உட்காரத்தொடங்கினார்கள். "சீனுவாசனும், 'கல்கி'யும் பெரும் கஷ்டப்பட்டு இந்த மாநாட்டை நடத்தியதற்கு நன்றி" என்றேன். மிச்சம் மீதி நின்றுகொண்டிருந்தமக்களும் அவர்களும் உட்கார்ந்தார்கள். "வெங்கட்டராமசாத்திரியார் இராமசாமியைப்புகழ்ந்தார்—கல்கியார் இகழ்ந்தார்—இது அவரவர்கள் இஷ்டம்! இதில் நான் தலையிடவில்லை. சர்க்கார் தாசனை இராமசாமி இன்று பத்து மணிக்குச், சட்டத்தில் எல்லாம் பெரியசட்டமான 124—A யின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைக்குப் போயிருக்கிறார்" என்றேன். (கைதான செய்தி அப்பொழுது தான் கிடைத்தது) பின்னர் அழகர்சாமிக்குப் பயந்தே கல்கியின் கண்டனத்துக்குப் பதில் சொன்னேன். மாநாடு முடிந்தது.

எதிரிகளால் கூட்டப்படும் மாநாடாயினும் நமது புத்திபலத்தால் நமக்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம் என்ற இந்த முறையை நமது இளைஞர்களுக்குக் காட்டியவர் அழகர்சாமியே யாகும்.

(தொடரும்)

திராவிட நாடு

ஞாயிறு] 12—6—49 [காஞ்சி

'அடக்குமுறைக் காணிக்கை!'

*

ரூ 3000! 'அடக்குமுறைக் காணிக்கை'யாகச் செலுத்தவேண்டும்! அடிப்படை உரிமைகளை 'வழங்க' ஆவலுற்று நிற்கும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும்! அதுவும் 25—6—49ம் நாளுக்குள் சேலுத்த வேண்டும்! இது "திராவிட நாட்"டிற்குச் சென்னை அரசியலார், 'பக்திப் பரவச மேலீட்டால்' பிறப்பித்திருக்கும் கட்டளை!

"திராவிட நாடு", யாரையும் அனுவசியமாக அலட்சியப்படுத்தாமல், ஆனால் அதே நிலையில் யாருக்கும் அடிமையாகாமல், யாரையும் தூற்றுமல், ஆனால் அதேபோது எந்த உண்மைக்கருத்தையும் எடுத்துரைக்கத் தவறுமல், யாருடைய எதிர்ப்பையும் வரவழைத்துக் கொள்ளாமல், ஆனால் அதே சமயம் யாருடைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல், யாருடைய மனமும் நோகவேண்டும் என்பதற்காக எதையும் சொல்லாமல், ஆனால் அதே காலத்தில் நாடு திருந்தவேண்டும் என்ற நாட்டத்தை மறந்துவிடாமல், யாரையும் துவேஷிக்க வேண்டும் என்ற நோக்கமில்லாமல், ஆனால் அதே பொழுது வரலாற்று நிகழ்ச்சிகளை மக்கள் முன் வைக்கத் தயங்காமல், மாற்றூர் யாரைப்பற்றியும் பொறுமையுள்ளங் கொள்ளாமல், ஆனால் அதே நிலையில் கழகத்தின் வளர்ச்சிகண்டு பொறுமையுற்று, உள்ளங் கருகி, உடல்வெந்து, புன்செயல்கள் செய்யப் புறப்படும் புல்லறிவாளர்களின் அறியாமைகண்டு, புன்சிரிப்புக் கொண்டு, பரிதாபப்படுவதல்லால் வேறேதும் நினையாமல், நேர்மை வழியினின்றும் நெறி பிறழாமல், சென்ற ஏழு ஆண்டு காலமாகத் தொண்டாற்றி வருகிறது; இனியும் தொண்டாற்றி வரும்.

திராவிடர் கழகமும், அதற்கு உறுதுணையாக இருந்துவரும் பத்திரிகைகளும், அவற்றிற்கு இருக்கும் ஆற்றல் சிறிதளவே யாயினும், அவை ஆற்றியிருக்கும்—ஆற்றிவரும் தொண்டும், பகலவன் ஒளிபோல் பரவிப் பயனளித்து வருவன கண்டு, சனாதனிகளும்—வர்ணாச்சிரமிகளும்—வைதிகர்களும் — சுயநலக்காரர்களும் — அரசியல பிற்போக்காளர்களும் மிரண்டு, நெறி பிறழாக் கழகத்தையும், அதனைச் சார்ந்த இதழ்களையும், குறிப்பாக "திராவிட நாடு," "விடுதலை" ஆகிய இரண்டினையும் ஒழித்துக்கட்டி விடுவது எனக் கங்கணங் கட்டிக் கொண்டு, அவரவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளின் மூலம், தங்கள் தங்கள் பாணங்களை, வெவ்வேறு மூலை முடுக்குகளில் நின்றுகொண்டு வீசத் தலைப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட செயல்களிலே ஒன்றுதான், இப்பொழுது "திராவிட நாட்"டின்மீது எவப்பட்டிருக்கும் ரூ. 3000—ஜாமீன் பாணம்!

"திராவிட நாடு," அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் பற்றிய கருத்துக்களைக் காரண காரியங்களோடு விளக்கிக் காட்டி, நாட்டு மக்களுக்கு அறிவு கொளுத்தும் அரிய பணியினைச் செய்து வருவதால், முற்போக்கு உள்ளம் படைத்த இளைஞர் உலகம் அவற்றை யெல்லாம் கேட்டு—அறிந்து—சிந்தித்துத்—தெளிவடைந்து, திராவிடர் கழகப் பாசறைகளில் வீரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டு வருகிறார்கள்.

இளைஞர்களுக்கு அறிவுறுத்தித் தெளிவுண்டாக்கும் நற்பணியினை மேற்கொண்ட காரணத்திற்காகத்தான், பொறுமையுற்று எழும்பிய கிரேக்க அரசாங்கம் சாக்ரடீஸ"க்கு நஞ்சு ஊட்டிக் கொன்றது.

எண்ண—எழுத—எடுத்துக்கூற உரிமையளிப்போம் என்று இங்கு வாய்ப்பறை சாற்றிவந்த அதே வாய்தான், இப்பொழுது "திராவிட நாட்"டிடம் 'அடக்குமுறைக் காணிக்கை'கேட்கிறது. "திராவிடநாட்"டின் பேனா,தான் உருவாக்கும் ஒவ்வொரு சொல்லையும் தட்டிப் பார்த்து, பயனுடைய சொற்களா என்று ஆராய்ந்து, பிறிதோர் வெல்லுஞ் சொல் அதற்கில்லை என்பதைத் தெரிந்து, அளவறிந்து பயன்படுத்தி வருகிறது. ஆகையால்தான் பொறுமை யுள்ளங்கொண்ட புன்மதியினர் பேனாவோடு பேனாவை நேர்நிறுத்திப் பார்க்க முடியாமல், அரசாங்கத்தின் அதிகாரத்தை அண்டித் தஞ்சமடைந்து நிற்கின்றனர். அரசாங்கம் பேனா முனை கொண்டல்ல, அதிகாரத் துப்பாக்கியின் உதவிகொண்டு, பேனா முனையை அல்ல, பேனா பிடித்தவர்களையே சுடப் பார்க்கின்றது.

சென்ற ஏப்ரல் திங்களில் "திராவிடநாட்டி"ல் எழுதிய கட்டுரைகளின் மீது குற்றச்சாட்டு! கட்டுரைகள் வந்தது 1948 ஏப்ரலில்! அதற்காக அடக்குமுறைப்பாணத்தை வீசுவது 1949 ஜூனில்! இதிலிருந்து விளங்கும், உள்ளபடியே கட்டுரைகளின் காரணமாக அடக்குமுறை வீசப்பட்டிருக்கிறதா அல்லது "திராவிட நாட்"டை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக அடக்குமுறை வீசப்பட்டிருக்கிறதா என்பது. கட்டுரைகளைப் படித்துப் பார்ப்போர்க்கு இன்னும் தெளிவாக விளங்கும் எவ்வளவு தெளிவான மனப்பான்மையில் சாதாரணமான உண்மைக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது.

இந்த 'அடக்குமுறைக் காணிக்கை' ஒரு சோதனை! "திராவிடநாட்"டின் மீது மட்டும் பரீட்சிக்கப்படும் சோதனையல்ல, திராவிடர் கழகத்தின் மீது—திராவிட நாட்டின் மீது பரீட்சிக்கப்படும் சோதனையாகும்! திராவிடப் பெருங்குடி மக்கள் தங்களின் ஆதரவு "திராவிட நாடு"க்கு என்றும் உண்டு என்பதை, அரசியலார்க்கு எடுத்துக்காட்ட, இந்நெருக்கடியைத் தீர்த்து, மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கும் ஊக்கமளித்து, 'எதையும் தாங்க இந்த இதயம்' உண்டு என்று வெற்றிமுழக்கமிட்டு வீறிட்டுக் கிளம்ப வேண்டுகிறோம்!

*

வேண்டுகோள்.

—*—

அன்புடையீர்!

வணக்கம். சென்ற ஏழு ஆண்டுகளாகத் திராவிடப் பெருங்குடி மக்களின் நலன் கருதி நடத்தப்பட்டு வரும் "திராவிட நாடு" இதழின் மீது, சென்னை அரசியலார் தம் அடக்குமுறைப் பாணத்தை இப்போது ஏவியுள்ளார்கள்.

25—6—49-ம் நாளுக்குள், ரூ 3000—ஜாமீன் தொகை கட்டித் தீரவேண்டும் எனக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

"திராவிட நாடு", திராவிட மக்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது என்பதை அறிவிக்கவும், திராவிட மக்களின் ஆதரவு அதற்கு உண்டு என்பதைக் காட்டவும், இவ்வாய்ப்பை ஏற்றுத், தங்களாலான நன்கொடையை, இந்நெருக்கடி தீரும் வகையில், அளித்தருளக் கோருகிறேன்.

காஞ்சிபுரம், அன்பன்,
9—6—49 **அண்ணாதுரை.**

நன்கொடை தந்துதவிய அன்பர்கள்:—

வாலாஜாபாத்,	W. K. தேவராசன்	100—0—0
காஞ்சிபுரம்.	V. புட்டாசாமி	100—0—0
"	அ. க. தங்கவேலர்	100—0—0
"	N. K. கணபதி	100—0—0
"	N. K, அரங்கநாதன்	100—0—0
"	A, பாலகிருஷ்ணனார்	100—0—0
"	K. S. முனுசாமி	50—0—0
	ஆக ரூபாய்	650—0—0

குறிப்பு:— மேலும் நன்கொடையை விரைவில் எதிர்பார்க்கிறேன். வணக்கம்.

கோட்டை சரிகிறது!

7-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கும் மோசடிகள் எவ்வளவோ! கண்ணுக்கு அகப்பட்டகணக்குப்படி பார்த்தாலும், 88 அறநிலையங்களில் ரூ. 200 லிருந்து ரூ. 2,00,000 வரையில் மோசடிகள் நடந்திருக்க, அதை ஆண்டவர்கள் பார்த்துக்கொண்டுதானே இதுவரையில்இருந்தார்கள், அரசாங்கம் தலையிட்டதன் பேரில்தானேஒழுங்கு ஓரளவுக்குஏற்பட முடிந்தது. மக்களின் சார்புடையது என்று கருதப்படும் அரசாங்கம் கோவில்மடங்களின் சொத்து நிர்வாகத்தை ஏற்று நடத்தக்கூடாதென்று, மசோதாவை எதிர்ப்போர் வாதிடுகிறார்களென்றால், தனிப்பட்ட, சோம்பேறிகளான, எதேச்சாதிகாரம் கொண்ட, மடாதிபதிகள்—மதகுருக்கள்மார்—புரோகிதர்கள்—மடபக்தர்கள் ஆகியவர்களின் நிர்வாகத்தின் கீழ் அதிக மோசடிகளும், கொள்ளைகளும் நடைபெறவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள், அல்லது அந்த நிலைக்குத் தங்களையறியாமல் நிர்வாகத்தைக் கொண்டு போய் விடுகிறார்கள் என்பதுதானே பொருள். இத்தகைய சூழ்ச்சிச் செயல்களுக்குப் பகுத்தறிவு படைத்த பொது மக்கள் இடங் கொடுக்கலாமா எனபதை ஓர்ந்து பாருங்கள்.

மதச் சொத்துக்களிலே மோசடி நடைபெறுகிறது, ஆகவே அவற்றைக் கைப்பற்றிப் பொதுமக்களுக்கு நலம் பயக்கும் நல்ல செயல்களுக்கு, அரசாங்கம் செலவிடவேண்டும் என்ற கருத்தைச், சுயமரியாதை இயக்கம் சில ஆண்டுகளுக்கு முன் அறிவுறுத்தியபோது,மகவாதிகளும் காங்கிரஸ்காரர்களும் எதிர்த்தனர்; சிலவிடங்களிலே சுயமரியாதைக்காரர்களைத் தாக்கவும் செய்தனர். இன்று அதே முறையைக் காங்கிரஸ்காரர்கள் கையாளுவது கண்டு மகிழ்கிறார்கள்.

இந்துமத அறநிலையப் பாதுகாப்புத்திருத்தச்சட்ட மசோதாவைச் சட்டமாக்கி, அமுலுக்குக் கொண்டு வராமல் தடைசெய்யவேண்டி, பரம்பரை வைதிகபுரியினர் எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். வைதிகக்கோட்டையைப் பின்புறமாகப் பகுத்தறிவுப்பீரங்கிகள் தாக்கி தகர்த்துக் கொண்டு வருகின்றன. வைதிகர்கள் வேதஆகமம் என்னும் ஈட்டிகள் கொண்டு முன் பக்கத்தில் எதிர்த்துப் பார்க்கின்றனர். போரின் காலம் வேண்டுமானால் சிறிது நீடிக்கலாமே தவிர, என்னவோ அழிவுமட்டும் பின்பக்கமாக, அவர்கள் அறியாமலேயே, அவர்களை அணைத்துக்கொண்டு விடும் என்பது மட்டும் உறுதி. வைதிகக் கோட்டையின் வாயிலோடு இணைக்கப் பட்டிருந்த வழிகள் ஒவ்வொன்ருக மூடப்பட்டு வருகின்றன. அந்த முயற்சியிலே ஒன்றுதான் இந்த அறநிலையப்பாதுகாப்புத் திருத்தச் சட்ட மசோதாவாகும். அந்தச் செயலைச்சென்னை அரசாங்கம் செய்ய முன்வந்தது கண்டு பகுத்தறிவியக்கம் அந்த அளவுக்கு அவர்களுக்குப் பாராட்டுக்கூறி வரவேற்கிறது. பகுத்தறிவுப் பீரங்கி வெடிக்க வெடிக்க வைதிகக் கோட்டை சரிந்து வருகிறது என்பது நன்ருகப் புலப்படுகிறது! *

வகுப்புக்கு ஏற்ற நீதி

அரசாங்க அலுவல்களில் ஆட்களை அமர்த்தும்போதும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போதும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையைக் கையாளுவதென்று சென்னை அரசாங்கம் உறுதிபூண்டு வருகிறது. அரசாங்கம் கையாண்டிருக்கும் இந்த உறுதியைக் கண்டிக்க, வகுப்புவாத நச்சுநீரை, ஓய்வு ஒழிவில்லாமல்மறைமுகமாகப்பொழிந்து கொண்டிருக்கும் சில பத்திரிகைகளும், பிறரும் சிறிப்பாய்ந்த வண்ணம் இருக்கின்றனர். வகுப்பு நலன்கள் எவ்வகையிலும் குறைந்துவிடாமல் பாதுகாத்துத், தம்முடைய இனத்திற்குச் சேவை செய்வதிலே அல்லும் பகலும் அயராதுமுனைந்து நின்று பாடுபட்டுவரும் பத்திரிகைகளிலே, தலைசிறந்து விளங்கும் 'இந்து'வும், 'சுதேசமித்திர'னும் இப்பொழுது சினம் மேலிட்டுத் தலைதுள்ளிக்குதிக்கின்றன.

நம்நாட்டின் அமைப்பில் சாதிப்பிரிவுகள் தோன்றி, உயர்ந்த சாதிக்காரகளெனப் பெயர் பெற்ற ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் வாழ்க்கைவசதிகளனைத்தும் பெறும்படியான நிலைமையும், இடைத்தர சாதிக்காரர்கள் பிற்போக்கு வகுப்பினர்கள் எனக்கருதப்பட்டு வாழ்க்கை வசதிகளிலே பல மறுக்கப்படும்படியான நிலைமையும், தீண்டப்படாத சாதியினர் என்று சிலர், தாழ்த்தப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு, வாழ்க்கை வசதிகள் அனைத்தும் மறுக்கப்படும்படியான நிலைமையும் பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலவிவரும்படியானமுறை ஏற்பட்டுவிட்டது.

சாதியின்காரணமாக ஒருகூட்டம் உல்லாச வாழ்வு வாழவும், சாதியின் காரணமாகவே மற்றொரு கூட்டம் அடிமைவேலை செய்து உழலவும் ஆனநிலைமையை அறிந்த நீதிக்கட்சி, சாதியின் காரணமாக வீழ்த்தப்பட்டவர்களை உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டுமாயின், அந்தச் சாதியின் காரணத்தைக் காட்டித்தான் உயர்நிலைக்கு ஏற்ற முடியும் என்ற பேருண்மையைத் தெளிந்துகொண்டு, தான் ஆட்சிப்பீடம் அமரும்போது, வகுப்புகளுக்கு நீதி வழங்கும் வகுப்புவாரிப் பிரதிநித்வ முறையை அமுலுக்குக்கொண்டுவந்தது.

எல்லா வகுப்பினரையும், ஏற்றத்தாழ்வின்றி, ஒரேநிலைக்குக்கொண்டுவர, வீழ்ந்துகிடக்கும் சமுதாயத்திற்கு, அவையவை வீழ்ந்துகிடக்கும் அளவுக்கு ஏற்ப நீதி வழங்கவேண்டும்—சலுகை காட்டவேண்டும்—கைகொடுக்கவேண்டும்— இடமளிக்கவேண்டும் என்று கருதியே வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் துறைகளிலெல்லாம், வகுப்புவாரி முறையைக் கொண்டுவரத் திட்டம் தீட்டியது நீதிக்கட்சி. தன் ஆற்றலுக்கு ஏற்ற அளவுக்கு அந்தத்திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரவும் பாடுபட்டது.

வகுப்புவாரி முறையைக் கல்லூரிகளிலும், அரசாங்க அலுவல்களிலும், நீதிக்கட்சி புகுத்திய பிறகுதான், பிற்போக்கு வகுப்பினர் ஓரளவுக்குக் கல்விபெறவும், சமுதாயத்தில் ஓரளவுக்குச் சமநிலை பெற்று மதிப்படையவும் வழி ஏற்பட்டது. இந்த முறையை அமுலுக்குக் கொண்டுவந்தபோது, அதன் உட்கிடக்கையை அறியமாட்டாத காங்கிரஸ்காரர்கள் நீதிக்கட்சியை வகுப்புவாதக்கட்சி என்று தூற்றினர்; கேலிசெய்தனர்; வசைமாரி பொழிந்தனர். உயர்சாதிவகுப்பினர் காங்கிரஸ்காரர்களின் இந்தப்போக்குக்கண்டு அகங்குளிர்ந்தனர்; புளகாங்கிதம் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்தினர்.

பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்கள், இன்று, ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு, வகுப்புவாரி முறையின் உண்மையையும், அவசியத்தையும், முக்கியத்வத்தையும் உணருகிறார்கள். சூழ்நிலை அந்த நிலைமைக்கு அவர்களைக் கொண்டுவந்து வைத்துள்ளது. வகுப்புவாரி முறை இருந்து தீரவேண்டியதன் அவசியத்தை மந்திரிகள் கோபால் ரெட்டியும், பக்தவத்சலமும் அண்மையில் வற்புறுத்தியதை நன்கு அறியலாம். நீதிகட்சியின் இந்தக் கொள்கையைக் காரசாரமாக, மட்டரகச் சொற்களால்கூட, திட்டித்தூற்றி வந்த 'தினசரி'யார் இன்றுள்ள நிலைமையைத்தெரிந்து வகுப்புவாரிமுறைக்கு வாதாடிநிற்கிறார். காங்கிரஸ் காரர்களின் உள்ளம் இந்த அளவுக்குப் பண்பட்டது கண்டு நாம் மகிழ்கிறோம்.

வகுப்புவாரி முறையை அரசாங்கம் கையாள வேண்டியதன் இன்றியமையாமையையும், சிலகாலம் வரையில் அரசாங்க ஏடுகளில்சாதிப் பெயர் குறிக்க வேண்டியதன் அவசியத்தையும் குறித்துச் சென்னை அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் குறிப்பிடுவதைக் காணுங்கள்.

"வகுப்பு வேற்றுமைகளை ஒழிப்பது என்பது, சமுதாயம் மேற்கொள்ளவேண்டியதொரு சீர்திருத்தமாகும். சமுதாயத்தில் வளரும் எண்ணங்களின் முற்போக்குக்கு ஏற்றபடி, அரசாங்கம் இவ்விஷயங்களில் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை படிப்படியாகக்கொள்ளக்கூடியதாகத்தானிருக்கும். அரசாங்கம் மட்டும் தன் ரிகார்டுகளில் சாதிப்பெயரைக் குறிக்காமல் விட்டுவிடுமேயானால், ஆனால், அதே சமயத்தில் வெளியுலகில் சாதிப்பெயரைக் குறிப்பிடும் பழக்கம் இருந்துவருமேயானால், அது ஒழுங்கற்ற முறைகளிலும், ஆட்சி முறைச் சங்கடங்களிலும் கொண்டுபோம்விடும்."

என்று கூறியுள்ளார்.

சமுதாயத்தில் மக்கள் சமநிலை அடையவேண்டுமானால், வகுப்புகளுக்குச் சமசந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். சமசந்தர்ப்பங்கள் ஏற்பட, வகுப்புகளுக்கு ஏற்ற நீதி கொடுக்கப்பட வேண்டும். ஏற்ற நீதி கொடுக்க ஒவ்வொரு சாதியின் நிலைமையை அரசாங்கம் உய்த்துணர வேண்டியிருக்கிறது. ஆகவேதான் வகுப்புகளைப் பிரித்துக் காண வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று அரசாங்க அதிகாரி கூறும் காரணத்தை நாம் போற்றுகிறோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

கதிரவன் கறைகள்

பண்டைக்காலந் தொடங்கிப் பொதுவாக எல்லா நாடுகளிலும், வானநூல் பற்றிய அறிவு சிறந்து வளர்ந்து வந்திருக்கிறது. மனிதன் காட்டுமிராண்டியாகத் திரிந்த காலத்தில், தன்முன் எதிர்ப்படும் பொருள்களின் தன்மையை அறிந்துகொள்ளும் அடிப்படை முயற்சியில் ஈடுபட்டபோது, வானத்தைக் கண்டு அதில் ஏற்படும் மாற்றங்களை அறியத் தொடங்கினான். வானில் ஏற்படும் மாற்றங்கள் ஒருவரையறைக்குட்பட்டு மீண்டும் மீண்டும் தோன்றப் பார்த்து, அவற்றின் மூலம் காலத்தைக் கணக்கிட்டுக்கொள்ளக் கற்றுக்கொண்டான். இளவேனிற் காலம், முதுவேனிற்காலம், குளிர் காலம், கூதிர்காலம், முன்பனிக் காலம், பின்பனிக்காலம் ஆகிய பருவ நிலைகளை முன் கூட்டியே அறிந்து கொள்ளவும், அவ்வக் காலநிலைகளுக்கேற்பத் தன் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொள்ளவும் வானநூலறிவு மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்பட்டது. மனிதனுக்கு அறிவு வளரத் தொடங்கிய ஒவ்வொரு நாட்டிலும், வானநூலறிவும் உடன் வளரத்தொடங்கிற்று என்னலாம்.

இற்றை நாட்களில் இருப்பன போன்ற நுண்ணிய பொறிகள் அக்காலங்களில் இல்லையாதலால், மக்கள் தம் கண்ணுக்குப் புலனாகும் அறிவைக் கொண்டே வானத்தின் உண்மைகளை அறியவேண்டியவர்களாக இருந்தார்கள். மேலும் இக்காலத்திய ஆராய்ச்சி முறைகளும் அவர்களால் அறிய முடியாதிருந்த காலம் அது. ஆகவேதான் வான நூலறிவு படிப்படியாக வளரவேண்டியதாயிருந்தது. ஆனால் தொலைநோக்கு ஆடி (தூர திருஷ்டிக் கண்ணாடி) கண்டுபிடிக்கப்பட்ட பின், வானநூல் முன்னையிலும் பன்மடங்கு வளர்ந்து முன்னேற்றமடையத் தொடங்கிற்று.

தொலைநோக்கு ஆடி, வான நூலறிஞன் கையில் அகப்பட்டவுடன், அதனைக்கொண்டு கண்ணுக்குத்தெரியாத எத்துணையோ உடுக்களையும் (நட்சத்திரங்கள்), கோள்களையும் (கிரகங்கள்), கோள்களைச் சுற்றி வட்டமிடும் துணைக்கோள்களையும், கதிரவனிடத்திலுள்ள கறைகளையும், சனிக்கோளைச் சுற்றியிருக்கும்வட்டத்தையும் அறிந்தார்கள்.

ஞாயிற்று மண்டலத்துக்கு நடுநாயமாக விளங்கும் கதிரவன், உலகிலிருந்து 9 கோடியே 29 லட்சம் மைல் தொலைவில் இருக்கிறது. அது ஒரு தன்னொளி உமிழ்ந்து நிற்கும் நெருப்புப் பிழம்பாகும். அதாவது பிறிதொன்றின் துணையின்றித் தானே தன்ஒளியால் விளங்கி நிற்பதாகும். இஞ்ஞாயிறுகோளத்தின் நடுப்பாகத்தை ஒளிக்கோளம் எனவும், இதற்கு வெளியிலிருப்பதை வர்ணகோளமெனவும், இவ்விரண்டிற்கும் வெளிப்புறத்திலிருப்பதைப் பரிவேடம் எனவும், கதிரவனிலிருந்து வெளியே பரப்பும்ஒளிவெப்ப அலைகளைக் கதிர்கள் எனவும் வகுப்பார்கள் விஞ்ஞானிகள்.

சந்திரனை நாம் பார்க்கும்போது அதில் மறுக்களைக் காண்கிறோம். அம்மறுக்களை மனிதனென்றும், நண்டென்றும், கழுதையென்றும், ஔவையார் கிழவி என்றும், மான் என்றும், தங்கள் தங்கள் போக்கில் பெயரிட்டழைப்பார்கள். ஆனால் தொலைநோக்கு ஆடிகொண்டு பார்த்தால், அது ஒரு எரிமலைக் கூட்டமாகத் தென்படும். அந்த எரிமலைக் கூட்டத்தைத்தான் தம் மனம்போன போக்கில் அழைக்கத் தலைப்பட்டனர் உண்மையறியா மக்கள்.

கதிரவனை நாம் வெற்றுக் கண்ணால் பார்க்கும்பொழுது, அது சந்திரனைப் போலன்றிக், களங்கமற்றதாகத் தோற்றுகிறது. ஆனால் புகையூட்டிய தொலைநோக்கு ஆடிமூலம்பார்த்தால், ஞாயிறு கோளத்தில் சில பாகங்களில் சிறு சிறு கறைகளைக் காணலாம். இக்கறைகளைத் தற்கால வான நூல் வளர்ச்சியின் தந்தை எனக் கருதப்படும் கலீலியோ, தாம் புதிதாக இயற்றிய தொலை நோக்கு ஆடியின் மூலம் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடித்தார். இவைகள் கதிரவனின்நடுப்பாகமான ஒளிக் கோளத்திற்றோன்றி மறைகின்றன. ஒளிக்கோளமானது அதிக வெப்பமடைந்த காற்றுச்

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

எந்தச் சாதிப் பெயர்களின் காரணமாகச் சமுதாயத்தில் பலர் வீழ்ச்சியுற்றார்களோ அதே சாதிப் பெயரின் காரணமாக அவர்களுக்கு மீட்சி தரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். இந்நாட்டில், சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் சமதரை ஆகும் வரை, வகுப்புவாரி முறை அரசாங்கத்தால் கையாளப்பட்டே தீரவேண்டும்.

சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வு மனப்பான்மைகளைப்போக்கி, சமுதாயத்தைச் சீர்திருத்தும் பெரும்பணியைத்திராவிடர் கழகம் செய்துவருகிறது, அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு. திராவிடர் கழகம் சமுதாயம் முழுவதையும் சீர்திருத்தி வெற்றிக் கொடியை நாட்டும்போது, அரசாங்கம் வகுப்புவாரி முறையைக் கையாளவேண்டிய அவசியம் ஏற்படாது. வகுப்புக்களுக்கு ஏற்ற நீதி கிடைத்து, சமுதாயம் உயர்நிலையடையத் திராவிடர் கழகத்தின் தொண்டும், அரசாங்கத்தின் அணைப்பும் நாட்டிற்குத் தேவைப்படுகின்றன. எனவேதான், நாட்டிலுள்ள சாதிப்பாகுபாடுகள் அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவரும் சமுதாயத்துறையில் (பொருளாதாரத் துறையில் அல்ல) 'ஒன்றே குலம்' என்ற நிலை ஏற்படும் வரையில், இந்த வகுப்புவாரி முறை—அதாவது வகுப்புக்கு ஏற்ற நீதி வழங்கப்படவேண்டுமென்ற ஏற்பாடு இருந்தே தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

*

முன்பக்கத் தொடர்ச்சி

செறிந்திருக்கும் வளையமாகும். இக்கறைகள் ஞாயிற்றுப் பிழம்பின் உட்பாகத்திலுள்ள அளவுக்கு மிஞ்சிய வெப்பத்தால் உண்டாக்கப்பட்ட காற்றுக்கள் மிகவேகமாக வெளியே வரும்போது, ஒளிக் கோளத்திலுண்டாக்கப்பட்ட கிண்ணம் போன்ற துளைகளாகும். இவைகளிற் சில 1,00,000 மைல் குறுக்களவுள்ளனவாயும், மாதக் கணக்கில் தோற்றமளித்துக் கொண்டிருப்பனவாயும் இருக்கும்.

1840 ஆண்டு தோன்றிய கறைகள் 18 மாதங்களாகத் தோற்றமளித்தனவாம். 1905ம் ஆண்டில் காணப்பட்ட கறையில் நாம் வாழும் உலகைப்போல் 40 உலகங்களை அடுத்தடுத்துப் பக்கத்தில் வைத்தாலும், அவ்வுலகங்கள் கறையின் மறு ஓரத்தை முட்டாமலிருந்திருக்கும் என்று அறுதியிட்டப்படுகிறது. இத்தகைய பெரிய கறைகள், கதிரவன் முகில்களால் மறைக்கப்படும் நேரத்தில், அல்லது புகையூட்டிய கண்ணுடியைக் கொண்டு பார்க்கும்போது இலகுவிற் புலப்படும்.

இக்கறைகள், அதாவது புள்ளிகள் சில ஆண்டுகளில் அதிகமாகவும், சில ஆண்டுகளில் குறைவாகவும் தோற்றுகின்றன. இவ்விதமான தோற்றங்கட்கு, ஓர் கால வரையறை உண்டாவென்பதையறியும் பொருட்டு, ஸக்குவாபீ என்னும் ஜெர்மன் நாட்டு விஞ்ஞானி நெடுங்காலமாக ஆராய்ச்சி செய்தார். 1852ம் ஆண்டில் இக்கறைகள் 11 ஆண்டுகட்கு ஒருமுறையே அதிகமாகத் தோற்றுகின்றன என்பதை நன்கு ஆராய்ந்து முடிவு செய்தார். இவரது விடாமுயற்சிக்கும், ஊக்கத்திற்குமாக இவருக்கு அரசாங்க வானநூற் சங்கத்தாரால் தங்கப் பதக்கம் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இக்கறைகள் கதிரவனின் நிரட்சரேகையில் அல்லது துருவங்களில் தோற்றுவது மிகஅரிதாகும். கதிரவனுடைய நிரட்சரேகைக்கு இரு பக்கத்திலும் 35 பாகை வரையில் தோற்றி, 15 பாகை வரையும் அதிகரித்து, பின் 4 அல்லது 5 பாகை வரையிற் குறைந்துவிடும். இக்கறைகளை நாம் நாள்தோறும் பார்த்து வருவோமாகில், அவைகள் நாளுக்கு நாள் ஞாயிற்றுப் பிழம்பின் ஓரத்தை நோக்கிச் செல்வதாகத் தோற்றும். இவ்வாறு தோற்றுவதற்குக் காரணம் ஞாயிறு தனக்குத்தானே சுழலுவதேயாகும்.

இக்கறைகள் அதிக தொலைவிலிருப்பதால், நமது கண்களுக்குச் சிறியனவாகத்தோற்றினாலும், அதிகமாகத் தோற்றுங் காலங்களில் உலகில் பலவித நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன வென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிந்தார்கள். கறைகளின் உட்பாகங்களில் ஏராளமான மின்சார ஆற்றலிருப்பதால், அவைகள் காந்த ஊசிகளையும், காந்தமூட்டப்பட்ட பொறிகளையும், அதிகம் ஆட்டிவைக்கின்றன வென்பதையும், வானொலிக் கம்பிகள் தடுக்கப்படுகின்றன வென்பதையும் லிக் வேதசாலையின் அதிபர் ஹேல் என்பவர் கண்டுபிடித்தார். இது மாத்திரமன்றி வடதுருவத்தில் வியப்படையத்தக்க பல நிற வெளிச்சங்கள் தோற்றுவதற்கும், உலகிலேற்படும் தட்ப வெப்ப நிலை மாறுதல்களுக்கும் இக்கறைகளே காரணமென்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிந்து தெளிவுபடுத்தியுள்ளனர்.

குறுக்கே வெட்டப்பட்ட ஒரு மரத்தில், மத்தியிலிருந்து பல வட்டங்கள் ஒன்றையொன்று சூழ்ந்திருத்தலைப் பார்க்கலாம். ஒவ்வொரு வட்டமும் மரத்தின் ஒவ்வொரு ஆண்டு வளர்ச்சியைத் தெரிவிக்கும். இவ்வட்டங்கள் ஓரேவித அகலமின்றி யிருத்தலையும் காணலாம். வெப்பக் காலங்களில் மரங்கள் சிறு வளர்ச்சி யுடையதாகவும், மழைக் காலத்தில் அதிக வளர்ச்சி யுடையதாகவும் இருப்பதையே இவ்வட்டங்கள் தெரிவிக்கின்றன. கதிரவன் கறைகள் மிகவாகத் தோற்றும் ஒவ்வொரு 11-ம் ஆண்டிலும், வழக்கமாகப் பெய்வதைக் காட்டிலும் அதிக மழை பெய்வதால், மரவளர்ச்சியைக் காட்டும் வட்டங்களில் ஒவ்வொரு 11-ம் வட்டமும் வழக்கத்திலும் பெரிதாக வளர்ந்திருத்தலைக் கண்டு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

இவை மாத்திரமேயன்றி, பேதி, அம்மை முதலிய தொத்து நோய்களும், விலங்கு நோய்களும், பூகம்பங்களும் உண்டாவதற்கும், பட்சிகளின் சிறகுகளில் சில வர்ணங்கள் மாறுதலடைவதற்கும் இக்கறைகளும் காரணமாக விருக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்தறிகின்றனர்.

அண்மையில் அதாவது சென்ற வாரத்தில் ஞாயிற்றினிடத்துத் தோற்றியிருக்கும் கறையின் காரணமாக, நம் நாட்டில், வானொலிக் கம்பிகள் தடுக்கப்பட்டு, ஒலி பரப்பில் கோளாறுகள் ஏற்பட்டதை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. வான நூலறிஞர்களின் கண்ணோட்டம், கதிரவன் கறைகள் பற்றிய மேலும் பல உண்மைகளை அறியும் பொருட்டு, ஓயாமல்,ஆழ்ந்தாராய்ந்த வண்ணமிருக்கின்றது. ஆனால், இங்கு, இன்னும், பஞ்சாங்கத்தைக் கையில் வைத்துக்கொண்டு, கதிரவனுடைய தேருக்கு ஒற்றைச் சக்கரம் இருப்பதாகவும், அதனை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்வதாகவும் சொல்லி, மக்களின் அறிவை மங்க வைக்கும் வைதிகப் பழக்கம் இருக்கத்தான் செய்கிறது! வான் வெளியில் முகில் கூட்டங்களைப் பிளந்து கொண்டு செல்லும் வானவூர்தி (ஏரோப்பிளேன்) யில் பிரயாணம் செய்யும் நம்மவர் சிலர், இடியைக் கேட்டு, அஞ்சி, அது தம்மீது விழாதிருப்பதன் பொருட்டு, 'அர்ச்சுனா, அர்ச்சுனா' என்று அலறித் துடித்துக் கூறும் வழக்கம் இன்னும் இங்கு மாறவில்லை. அந்த அளவுக்கு அஞ்ஞான இருள் இங்கு சூழ்ந்து கொண்டு இருக்கிறது. சூரிய கிரகணம் எதனால் உண்டாகிறதென்பதை விஞ்ஞான முறையில் மாணவர்களுக்குப் போதிக்கும் கல்லூரி ஆசிரியர், சூரிய கிரகணத்தன்று, 'சமுத்ர ஸ்நானம்' செய்யும் பழக்கத்தைக் கைவிட அஞ்சுகிறார் என்றால், அஞ்ஞானம் இங்கு எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறதென்பது விளங்கும்! ✲

சென்னையில்

C. N. அண்ணாத்துரை

K. R. இராமசாமி

நடிக்கும்

"சந்திர மோகன்"

நாடகத்தை

அடுத்தவாரம் எதிர்பாருங்கள்!

இடம், தேதி விரைவில்

அறிவிக்கப்படும்

ஒரு காலிநாற்காலி

4-ம் பக்கத் தொடர்ச்சி

தேடின. உள்ளே வரும்படி கண்ணை அசைத்தார் சுந்தரம் பிள்ளை. சூடாமணி மேடையில் நுழைந்தாள்.

மேடையில்எரிந்த பிரகாசவிளக்குகள், அருகிலிருந்த வாத்தியக்காரர்கள், முதல் வரிசையிலிருந்த நடிக நட்சத்திரங்கள், பின்னால் பரவியிருந்த கூட்டம் எல்லாம் சிறிது நேரத்தில் மங்கி மறைந்துவிட்டன. மேடையில் நடிக்கிறோம் என்பதும் மறைந்து, நாடகத்தில் கலந்துவிட்டாள் சூடாமணி.

ஒவ்வொன்றாகத் திரைகள் அவிழ்ந்து, சுருண்டு, மாறின. கதை வேகமாக ஓடியது. மக்கள் கண்முன் மற்றவர்கள் மறைந்துவிட்டனர். சூடாமணியின் தோற்றமே முன் நின்றது. அவளுடைய வருகையை ஆவலுடன்எதிர்பார்த்தனர், மேடையிலிருந்து போகும்பொழுது அவளையே பின்பற்றினர். கண்களனைத்தும் அவள் பார்க்கும் திக்கையே பார்த்தன. அவளுடைய கைவளையல் அசைவது கூடக் காதில் விழுந்தது. அவள் பேசியவை புதிய சொற்களல்ல, ஒவ்வொருவரும் அடிக்கடி கேட்டிருப்பதுதான். ஆனால் அவற்றை அவள் சொல்வதில் புதுமையிருந்தது. மகிழ்ச்சியும், மனநெகிழ்ச்சியும், சோகமும், கோபமும் அவற்றில் கலந்துவந்தன. கடைசிக் கட்டத்தில், அலைந்து வாழ்க்கையில் மனமுடைந்த அந்தப்பெண் இறக்குந் தருவாயில் "நானோர் ஏழைப் பெண், வாழ்விலே ஒரு தோல்வி, எனினும் வாழ்ந்துவிட்டேன்" என்று தன் பேச்சும் கடைசி மூச்சும் தடுமாறச் சொன்னபொழுது கூட்டத்தில் அசைவில்லை, மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒவ்வொருவரும் கேட்டனர். இறக்கும் சொற்களில் தான் எவ்வளவு கனிவு, வலிமை! அமைதியான நீர்த்தளத்தில் வீசப்பட்ட கற்களைப்போல, இருதயங்களில் மோதிக் கண்களில் அலைகளைப் புரளச்செய்தது. சுந்தரம் பிள்ளைக்குப் பக்கத்திலிருந்தவர் கைக்குட்டையை வாயில் வைத்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். கன்னங்களில் நீர் வழிந்தோடியது. பக்கத்திலிருப்பவர் கவனித்ததைக் கண்டு வெட்கமடைந்தவராய் அதைத் துடைத்த வண்ணம் "எனக்கு ஒரு மகள் இருந்தாள், இரண்டு வருஷத்துக்குமுன் இறந்துவிட்டாள்" என்று சமாதானம் சொன்னார்.

நாடகம் முடிந்ததும் தலைவர் மேடையில் வந்து அமர்ந்தார். அங்கு வந்திருந்த பிரபல சினிமா நடிகர்களையும் பார்க்கவேண்டுமென்று மக்கள் கூச்சல் போட்டதால், அவர்களும் மேடைக்கு அழைத்துவரப் பட்டனர். தலைவருக்கும் மற்றவர்களுக்கும் மாலையணிந்துவந்த மானேஜர், நடிகைகளுக்கு மாலை போடுவதற்குச் சூடாமணியைக் கூப்பிட்டார். இன்னும் வேஷங்கூட கலைக்காமல், அவள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். "பரவாயில்லை, சீக்கிரம்போ" என்று மலர்மாலைகளைக் கொடுத்தார். பிரபல நடிகைகளுக்கு மாலையணிவிக்கும் பெருமை தனக்குக்கிடைத்ததைப்பற்றி சூடாமணி களிப்படைந்தாள். உவகையுடன், மிகப் பணிவுடன் கமலகுமாரி, காந்தாமணி, சுந்தரி, கலாவதி முதலியவர்களுக்கு மாலைகளை அணிந்தாள். நடிகைகள் ஒவ்வொருவரும் மாலைகளை ஏற்றுக்கொள்ளும் பொழுது மக்கள் கைதட்டினார்கள். கடைசியில் தன் வேலை முடிந்ததும், போவதற்குத் திரும்பினாள் சூடாமணி. அதுவரை மற்றவர்களின்மீது இருந்த கவனம், இன்னும் வேடத்தைக்கலைக்காத சூடாமணி பக்கம் திரும்பியது. இவள்தான் சற்றுமுன் நடித்தவள்! பெருத்த ஆரவாரம் கிளம்பியது, நீடித்தது, பின் அலைபோல ஓய்ந்து; திரண்டு, அதிகரித்தது. மலர்மாலைகளை அணிந்த சினிமா நடிகைகள்—நடிப்பின் அரசபரம்பரையினர் பின்னால் உட்கார்ந்திருந்தனர், சலிப்புடன். பொறுமையுடன் முன்னால் வெறுங்கையுடன், ஏழையுடையில் நின்ற சூடாமணி திகைத்துவிட்டாள். சந்தேகமில்லை. நீண்ட ஆரவாரம் அவளை நோக்கித்தான் அடித்தது. நாடகநேரத்தில் தங்கள் கைதட்டுதலையும், ஆரவாரத்தையும் மக்கள் மறந்திருந்தனர், அவளுடைய நடிப்பில் மயங்கியிருந்ததால். இப்பொழுது அதை வெளிப்படுத்தும் நேரம் வந்தது. முழு நாடகத்தின் போதும் அடக்கிவைத்திருந்த ஆரவாரத்தையும் ஒருங்கே கொட்டினர். பிரபல நட்சத்திரங்கள் கோபத்துடன் மேடையிலிருந்து இறங்கிப்போவதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை. சுந்தரம்பிள்ளை வெற்றிப் புன்னகையுடன் அவர்களைப் பார்த்தார். இவ்வளவு அமளியிலும் கதையாசிரியர் கந்தப்பன் தன்னிடத்தில் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்.

முதல் நாள் நாடகத்தைப் பற்றிய விமரிசனங்கள் காலைப் பத்திரிகைகளில் இருந்தன. விளம்பரங்களில் நாடகப் பெயருக்கு முன் சூடாமணியின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. சினிமாவில் அவளுடன் சில்லரை பாகங்களில் நடித்தவர்கள் காண வந்தார்கள், தயக்கத்துடன். சுந்தரம் பிள்ளையுடன் பேசிக்கொண்டிருந்த இரண்டு படமுதலாளிகள்—சூடாமணி நம் படத்தில் இதற்கு முன் நடித்திருக்கிறதே என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டனர். மாலை மூன்று மணிக்கெல்லாம் டிக்கட்டுகள் தீர்ந்துவிட்டன. அந்தக் கம்பெனியின் சரித்திரத்திலேயே அதிசய சம்பவமாக "டிக்கட் இல்லை" என்ற போர்டு எழுதப்பட்டு வாயலில் வைக்கப்பட்டிருந்தது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன் ஓரே கூச்சலும், சந்தடியும் இருந்தன. "இவ்வளவு கலவரமிருந்தால் நாடகம் எப்படி நடத்தமுடியும்" என்றாள் சூடாமணி. சுந்தரம் சிரித்தார். நாடகம் ஆரம்பித்ததும் அடங்கிவிடும். கொட்டகைக்குள்ளிருப்பவர்கள் நாடகம் ஆரம்பிக்கவில்லையே என்று ஆத்திரப்படுகின்றனர். வெளியிலிருப்பவர்களுக்கு டிக்கட்கிடைக்கவில்லையே என்று கோபம். இரண்டு பேருக்கும் நாடகம் பார்க்கவேண்டுமென்ற ஆசைதான். அதிலும் புதிய நட்சத்திரம் காட்சியளிக்கிறதென்றால்..............."

"போங்க, அப்பா! உங்களுக்கு இன்றைக்கு முழுவதும்கேலிதான்!"

"என்னவோ மேடையில் நட்சத்திரமானதும் கீழே இருட்டில் உட்கார்ந்திருப்பவர்களை மறந்து விடாதே".

நாடகத்தின் முதல் மணி அடித்தது. "நம் இடத்தை யாராவது பிடித்துக்கொள்ளப் போகிறார்கள்." என்று சுந்தரப்பிள்ளை எழுந்தார். வேடமணிந்துகொள்ள சூடாமணி உள்ளே போனாள். போகும்பொழுது

வேடமணிந்துகொண்டிருந்த மற்றவர்கள் தன்னை உற்றுப் பார்ப்பதை அவள் உணராமலில்லை.

சூடாமணி கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டிருந்தாள். முதலில் பாடிய கோரஸ்பாட்டு வாயில் முணுமுணுத்தது, அப்பொழுது சுந்தரம்பிள்ளை உள்ளே நுழைந்தார், இரண்டு போலீஸ்காரர்கள் பின்தொடர.

"கலவரம் ஏதாவது நிகழ்கிறதா?"

"ஒன்றுமில்லை, என்னை அழைத்துப்போக" என்றார் சுந்தரம்பிள்ளை.

"உங்களையா, ஏனப்பா?" என்று அருகில் ஓடிவந்தாள்.

"சற்று நேரம் வெளியில் இருங்கள். நான் ஓடிவிடமாட்டேன்," என்று போலீஸ்காரர்களை அனுப்பிவிட்டு சுந்தரம்பிள்ளை நடந்ததைச் சொன்னார். "முதலாளி கணக்கிலிருந்து பணத்தை எடுத்துச் செலவு செய்தேன். மோசடிக் குற்றத்திற்காகப் போலீசை அனுப்பிவிட்டார்."

"அப்படி இருக்காது, எவ்வளவு பணம்?"

"பதினாயிரம்ரூபாய்க்குமேல். இந்த நாடகத்துக்காகச் செலவழிந்தது. எடுத்தது மோசடிதான். பணத்தைத் திரும்பவும் போட்டுவிடலாமென்றிருந்தேன், கமலகுமாரி முதலியவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள். பணம் கூட இப்பொழுது தேவையில்லை. என்னை எப்படியாவது அவமானப் படுத்தி, நாடகத்தைச் சீர்குலைக்க வேண்டுமென்பதுதான் அவளுடைய முயற்சி. ஏனென்றால் நேற்று வேண்டுமென்றே அவள் அவமானப்படுத்தப்பட்டதாக நினைக்கிறாள்."

"ஐயோ இந்த நாடகத்துக்காக—எனக்காக நீங்கள் ஏன் ஆபத்தில் சிக்கிக்கொண்டீர்கள்? மோசடி, போலீஸ், அவமானம் அப்பா! உங்கள் வார்த்தை என் மனத்தைச் சுட்டு எரிக்கிறதே!" என்று சூடாமணி தேம்பியழுதாள்.

"சூடா, வீணாகக் கண்ணீரைச் சிந்தாதே. நடிகர்களின் கண்ணீருக்கு நாட்டில் மதிப்புக் கிடையாது. அதையும் நடிப்பு என்றுதான் சொல்வார்கள். அந்தக் கண்ணீரின் ஏழ்மையும் வேதனையும் எனக்குத் தெரியும், நானும் நடிகனாயிருந்ததால். மதுரை பாலமதுர கான சபையில் ஒரு பிரபல நடிகனின் அபார நடிப்பு உன் வாழ்வையே ஆட்டிவிட்டது என்று சொன்னாயே, அந்த துர்ப்பாக்கிய நடிகன் வேறு யாருமில்லை, நான்தான். ஆச்சரியமடையாதே. நம்முடைய புகழையும், நடிப்பையும் கண்டு ஆச்சரியமடைகிறவர்களுக்கு நாம் படுகிற அவதிகள் தெரியாது. அப்பொழுது நான்—என் பெயர் சுந்தரநாதன், பெயருக்கேற்ற சுந்தரமான தோற்றம் இருந்தது. நாடக மேடைத் திலகமாகத் திகழ்ந்தேன். அந்த ஒளியின் வெம்மையே என்னைக் கருக்கிவிட்டது. ஓயாத உழைப்பும் வசதியற்ற வாழ்வும் என்னை உருக்குலைத்துவிட்டன. சுந்தரமான மேனியை இழந்தேன், ஒளி வீசும் கண்கள் மங்கின, குரலில் தவழ்ந்த இனிமை கரைந்தது. அம்மை நோய்வாய்ப்பட்டு முகத்தில் தழும்புகள் தங்கின. பத்து ஆண்டு வாழ்வில் இருபது வயது முதுமை என் உடலில் ஏறியது. ஆனால் அதற்காக நான் வருந்தவில்லை. மற்றவர்கள் நூறாண்டு வாழ்வதைப் பத்து ஆண்டுகளில் கழித்துவிட்டேன். அன்றைக்கு உன் கதையைக் கேட்டதும்தான் நாடகம்—நடிப்பு என்ற வெறியில் எவ்வளவு பலி கொடுக்கிறோம் என்பது தெரிந்தது. பெற்றோரின் அன்பு, உற்றார் உறவினரின் ஆதரவு, நம்முடைய இளமை, எழில், வசதியான வாழ்வு, அமைதியான இல்லம் இவ்வளவையும் ஈடு கொடுத்த பிறகுதான் நாடகத்தில் நிற்க முடிகிறது. இவ்வளவு துன்பங்களை ஏற்ற பின் நமக்குக் கிடைப்பது தியாகி என்ற பட்டமா? சே! கூத்தாடி என்ற இழிசொல்! நம்முடைய மங்கிய வாழ்வினால் நாடகம் ஒளி வீசுகிறது, வளர்கிறது நம் கண்ணீரால், உலவுகிறது நம் பெருமூச்சினால். சுந்தரநாதன் உயர்தர நடிகன்—அது மறைந்தது. இன்று வரை சுந்தரம் யோக்கியமானவன், நாணயமுள்ளவன் என்ற பெயர் இருந்தது. அந்த நாணயத்தையும் இன்று அழித்துவிட்டேன். அவ்வளவுதான் என்னால் முடிந்தது."

சூடாவின்முகம் சிவந்துவிட்டது. கண்கள் நீரை உகுத்தவண்ணமிருந்தன. முகத்தை அழித்துக்கொண்டு, தலைமயிரை அவிழ்த்தாள் சூடாமணி.

"சூடா, வேஷத்தை ஏன் கலைக்கிறாய்?"

சூடாமணியால் பேசக்கூட முடியவில்லை. "நீங்கள் போன பிறகு நாடகம், நடிப்பு, வேஷம் எல்லாம் எதற்காக? உலகமே திரண்டு வந்தாலும் நான் இனி நடிக்கப் போவதில்லை. ஒரு நாள் நடித்ததற்குக் கிடைத்த பலன் போதும்."

"சூடா, நீ அவ்வாறு செய்தால் என்னைச் சிறைக்கு அனுப்புபவர்களுக்கு முழு வெற்றி கிடைத்துவிடுகிறது. நான் எடுத்த பணம் பெரிதல்ல. இப்பொழுதுள்ள ஸ்டுடியோ முதலாளிதான் என்னுடைய நாடகக் கம்பெனியின் சொந்தக்காரராயிருந்தவர். என்னுடைய நாடகங்களில் இதைப்போல் பத்துப் பங்கு பணம் சம்பாதித்திருப்பார். இப்பொழுது மற்றவர்களின் தூண்டுதலின் பேரில் அவ்வாறு செய்திருக்கிறார். என்னை அகற்றுவதனால் நாடகத்துக்கும் உன்னுடைய நடிப்புக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் பார்க்கிறார்கள். நான் சிறைக்குப் போனாலும் நாடகம் நின்றுவிடக் கூடாது."

"அப்பா, நீங்கள் சிறையில் வாடும்பொழுது நான் இங்கு எப்படி உல்லாசமாக இருக்க முடியும்?"

"சிறைக்குச் சென்றால் என்ன? ஐந்துவருடத் தண்டனை, பின்வந்துவிடுவேன். ஆனால் நான் சென்றதும் நாடகம் நடைபெறவில்லை, சூடா நடிக்கவில்லை, என் முயற்சிகளனைத்தும் சீரழிந்தன என்ற செய்தியைக் கேள்விப்பட்டால்அதைவிடப்பெரிய தண்டனை எனக்கு வேறெதுவும் கிடையாது. பணத்தாலும் பொறாமையாலும்தண்டிக்கப்படுகிறஎனக்கு நீ ஆதரவாயிருப்பாயா? அல்லது பொறாமைக்காரர்களுக்குவெற்றியளிப்பாயா?"

* * *

ஆறாவது சீன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. "சூடா! அழாதே இங்கேவா!" என்று கண்களைத் துடைத்தார்.

ஏழாவது சீன் ஆரம்பமாயிற்று. சூடாமணியை அணைத்துக்கொண்டு

(3-ம் பக்கம் பார்க்க)

அசுர குணம் வளரட்டும்

இப்போது சென்னை மாகாணத்தில் இருப்பவர்கள் எல்லோரும், சட்டப்படி அசுரர்களாகிவிட்டனர். அதாவது, சென்னை அரசாங்கம் இம்மாகாணத்தில் மது விலக்கை நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டது. எனவே இங்குள்ள அனைவரும் அசுரர்களாகிவிட்டனர். அதனால் இப்போது நாட்டில் அசுரகுணம் தோன்றிவருகிறது. மாகாணத்தில் மதுவிலக்கு ஏற்படுவதற்கு முன் பலர் சுர குணம் படைத்தவர்களாக இருந்தார்கள். அதாவது மது உண்ணும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். இப்போது சட்டப்படி யாருமே மது உண்ணக்கூடாதென்ற நிலை பிறந்துவிட்டது. எனவேதான் எல்லோரும் அசுரர்களாகிவிட்டனர் என்றும், அதனால் அசுரகுணம் தோன்றி வருகிறதென்றும் கூறுகின்றோம்.

மதுவை ஒரு அரக்கன் என்றும், அதனை அருந்துபவர்களை அசுரர்கள் — அரக்கர்கள் — இராட்சதர்கள் என்றும் கூறுவதைவிட்டு, மது உண்ணாதவர்களையே அசுரர்கள் என்று கூறப்படுவதைக் கண்டு அன்பர்கள் ஆச்சரியப்படலாம். ஆனால், உண்மையில், மது அருந்தாதவர்கள் தான் அசுரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. சொற்களுக்குப் பொருளை விளக்கும் அகராதியில் இந்தஉண்மை கூறப்பட்டிருக்கிறது. அதாவது, 'சுரர்' என்ற சொல்லுக்கு மது உண்பவர்கள் என்ற பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பிரமனுடைய கட்டளையின்படி மதுவருந்திய அனைவரும் சுரர் என்று அழைக்கப்பட்டனர் என்பதாக அந்த அகராதியிலேயே விளக்கமும் தரப்பட்டிருக்கிறது. எனவே, மது உண்பார் அனைவரும் சுரர் என்றழைக்கப்பட்டால், மதுவருந்தார் அனைவரும் சுரர்களுக்குப் புறம்பான அல்லது அவர்களின் விரோதிகளான அசுரர்கள் என்றுதானே அழைக்கப்படுவர். அசுரர் என்ற சொல்லுக்கும் அந்த அகராதியில் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதாவது அசுரர் என்றால் சுரருக்கு விரோதிகள், அதாவது மது உண்பவர்களுக்கு விரோதிகள் என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது. எனவேதான், நம்முடைய மாகாணத்திலுள்ள அனைவரும் இப்போது அசுரர்களாகிவிட்டனர், அதாவது சட்டப்படி மதுவுண்ணாதவர்களாகி விட்டனர் என்று கூறினோம். மதுவருந்தாத நிலை ஏற்பட்ட காரணத்தால் அவர்களுக்கு அசுர குணம் தோன்றத் தொடங்கிவிட்டதென்றும் குறிப்பிட்டோம்.

சென்னை அரசாங்கம் சட்ட வாயிலாகமதுவிலக்குச் செய்தபோதிலும், இன்னுஞ் சிலர் திருட்டுத்தனமாக மதுவருந்தும் மதிகெட்ட செயலைத் தொடர்ந்து செய்வதையும், அதற்காகத் தண்டிக்கப்படுவதையும் காண்கின்றோம். அரசாங்கம் இன்னும் தக்க நடவடிக்கைகள் எடுத்து இந்த மதுவருந்தும் மதியீனச் செயலை அறவே ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும். அதாவது, அரசாங்கத்தின் கண்களுக்கு அகப்படாமல் ஆங்காங்கு மறைந்து கிடந்து மதுவருந்தும் சுரர்களை எல்லாம் அசுரராகும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

3-6-49-ல் சிதம்பரத்தில் நடைபெற்ற சேக்கிழாரின் மூன்றாவது ஆண்டுவிழாவில் கலந்து சொற்பொழிவாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ரிஜிஸ்ட்ராராகஇருக்கும் தோழர் சச்சிதானந்தம் அவர்கள்,

> "நாட்டில் தற்சமயம் புராணங்கள் பொய் என்று கூறும் புரட்சியும், அசுர குணங்களும் தோன்றி வருகின்றன"

என்று பேசியுள்ளார். சென்னை அரசாங்கம் செய்துள்ள மதுவிலக்கானது, உண்மையிலேயே நாட்டிலுள்ள அனைவருக்கும் மதுவுண்ணாமையாகிய அசுரகுணம் ஏற்படவேண்டுமென்பதுதான். ஆனால், தோழர் சச்சிதானந்தம் அவர்கள், மக்களுக்கு அசுரகுணம், அதாவது மதுவருந்தாத நல்லகுணம் ஏற்படுவதைத் தடுக்கவேண்டுமென்று கூறுகிறார். அசுர குணம் நாட்டில் தோன்றி வருவதால்,

> "சமயம் பாழ்பட்டு வருகின்றது"

என்றும் கூறுகிறார். மதுவருந்தும் பழக்கத்தை மேற்கொண்ட சுரர்கள், தங்கள் மதியீனத்தால் மக்களுக்குப் பயன்படாத மதத்தையும் அதற்குரிய கோட்பாடுகளையும் உண்டாக்கி வைத்தது மாபெருந் தவறு என்பதை, மதுவருந்தும் கொடிய பழக்கத்தைவிட்டு மதிபெற்ற மக்கள் உணர்ந்து, மதக்கோட்பாடுகளை மக்களுக்குப் புகுத்தும் புராணங்களைப் பொய்யென்றும், அவை ஒழிக்கப்படவேண்டுமென்றும், கூறுகின்றனர்—தோழர் சச்சிதானந்தம் போன்றாரின் கூற்றுப்படி புராண ஒழிப்புப் புரட்சி செய்கின்றனர். இது எப்படித் தவறாகும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

சென்னை அரசாங்கம் எவ்வளவோ பாடுபட்டுப், பல கோடி ரூபாய் வருவாயையும் இழந்து, நாட்டுக்குச் செய்யவேண்டிய நல்ல காரியம் இது என்பதை உணர்ந்து, மதுவிலக்கைக் கொண்டுவருவதன் வாயிலாக மக்கள் அனைவரையும் நல்லவர்களாக் அதாவது அசுரர்களாக ஆக்கவேண்டுமென்ற ஓர் சிறந்த காரியத்தைச் செய்திருக்கும் போது, அதனைத் தவறென்று மக்கள் கருதும் முறையில் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் போன்றார், மக்களை மீண்டும் சுரர்களாக்கும், அதாவது மதுவருந்துபவர்களாக்கி அவர்களின் மதியை இழக்கச் செய்யும் போக்கில் பிரசாரம் செய்துவருவது உண்மையிலேயே வருந்தத் தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்!

புராணங்களுக்கு ஆக்கமும் ஆதர

வும் தேடுவதற்கு வழி, மக்கள் அனைவரும் சுரர்களாக இருக்கவேண்டியதுதான் என்றால், சென்னை அரசாங்கத்தார் செய்துள்ள மதுவிலக்கைத் தோழர் சச்சிதானந்தம் போன்றோர் மறைமுகமாகக் கண்டிக்கிறார்கள் என்ற ஐயப்பாடு யாருக்குத்தான் உண்டாகாமல் இருக்க முடியும்!

உலகியல் அறிவைப்பெற்று, முன்னேற்றப் பாதையில் சென்று, நாட்டுக்கு நலம் புரியவேண்டிய மாணவர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் அளவுக்குத் தம்முடைய நிலையை உயர்த்திக்கொண்ட தோழர் சச்சிதானந்தம் அவர்கள், 'சுரர்' 'அசுரர்' என்ற சொற்களுக்குரிய பொருளை அறிந்துகொள்ளும் ஆற்றலைப்பெற்றவராக இல்லையென்பதற்காக நாம் அவர்பால் வருத்தப்படாவிட்டாலும், ஆரம்பப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு விளங்காத சொற்களை அகராதியில் பார்த்து அவற்றின் பொருள்களைத் தெரிந்துகொள்ளும் சாதாரண அறிவைக்கூடப் பெறாதவராகக் காணப்படுகிறாரே என்பதற்காக அவர்பால் இரக்கமும் வருத்தமும் கொள்ள வேண்டியே இருக்கிறது. தமிழ் அகராதியையோ அல்லது சொற்களுக்கு விளக்கங்கூறும் 'அபிதானசிந்தாமணி' என்ற புத்தகத்தையோ பார்த்தால், 'சுரர்' என்பதற்கு மது உண்பவர்கள் என்றும், 'அசுரர்' என்பதற்கு மது உண்பவர்களுக்கு விரோதிகள் என்றும் பொருள் தரப்பட்டிருப்பது தெளிவாகத்தெரியும்.

அன்பர் சச்சிதானந்தம் அவர்கள் இப்போது, புராணங்களை எதிர்ப்பவர்களுக்கு அசுரப்பட்டத்தை அளிக்கிறார் என்றால், அதற்குக் காரணம், புராண இதிகாசங்களில் அசுரர் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தவறான விளக்கத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் இவ்விதம் கூறுகிறார் போலும்! ஒரு சொல்லுக்குரிய பொருள் இன்னதென்பதை அறிந்து கொள்வதற்கு அதற்கென இருக்கும் அகராதியல்ல—புராண இதிகாசங்கள்தான் ஆதாரம் என்று அவர் கருதுவாரானால், புராண இதிகாசாதிகளில் கூறப்பட்டிருக்கும் அசுர குணத்தை விளக்கவும் நாம் தயாராய் இருக்கிறோம். ஆனால், அசுர குணம் எது? சுரகுணம் எது? என்பது முதலில் உணரப்பட வேண்டும். புராணக்கூற்றின்படி சுரராகவும், அகராதியின்படி அசுரராகவும் கருதப்படும் ஆழ்வார்கள் நாயன்மார்கள் பலர், மதுவிலக்கு ஏற்படாத காலத்தில் நடத்திய திருவிளையாடல்கள் பல நமக்குத் தெரியும். தான் பெற்ற குழந்தையைப் பாண்டம் செய்வதற்காகப் பிசைந்த மண்ணோடு சேர்த்து பிசைந்து கொன்ற கோராகும்பர் கதையும், தன்னுடைய மனைவியைப் பிறன் ஒருவனோடு அனுப்பிய இயற்பகையின் கதையும், இன்னும் இது போன்ற பல அறிவுக்கும் இயற்கைக்கும் புறம்பான கதைகள் பல புராணங்களில் இருப்பது நமக்குத் தெரியும்.

இப்படிப்பட்ட ஆபாச புராணங்களை ஒழிக்க முற்படுபவர்களை அசுர குணம் படைத்தவர்கள் என்று அன்பர் சச்சிதானந்தம் போன்றோர் கூறுகின்றனர் என்றால், அவரைச் சுரர் பட்டியில் சேர்த்து, அவர் கூறுவதை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம், நாம் உண்மையாகவே மதுவருந்தி, மதியை இழந்து மன்பதைக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்ய முயலாத அசுரர்கள் என்ற காரணத்தால்.

எனவேதான், நாட்டில் அசுர குணம் வளரவேண்டும்—சுர குணம் மறையவேண்டும்—சுர குணத்தால் ஏற்பட்ட மது மயக்கத்தோடு, மத மயக்கமும் சேர்ந்து மன்பதையைப் பாழாக்கும் நிலை மாறவேண்டும் என்று கூறுகின்றோம்.

நம்முடைய நாட்டில் புராணங்கள் ஏற்படுத்திய இயற்பகைகளும், கோராகும்பர்களும், கோட்புலிகளும், செருத்துணைகளும் இவர் போன்ற பிறரும் வேறு நாடுகளிலும் ஏற்படவேண்டுமென்பதற்காக, இப்படிப்பட்ட புராணங்கள் எல்லாம் வேறு பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்று தோழர் சச்சிதானந்தம் அவர்கள், இங்குள்ள செல்வர்களையும் அறிஞர்களையும் கேட்டுக்கொள்கிறார் என்றால், அவருடைய அறிவு எந்த அளவுக்கு 'வளர்ச்சி' அடைந்திருக்கிறதென்பதை இன்றைய விழிப்படைந்த உலகம் உணர்வதற்கு ஓர் நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பது நன்கு புலனாகின்றது. மூக்கை அறுத்தவன், நாக்கைத் துண்டித்தவன், பெற்றபிள்ளையைக் கொன்றவன், பச்சிளங் குழந்தையை ஆகாயத்தில் வீசியெறிந்து அது கீழே வரும்போது இரு துண்டாக வெட்டி வீழ்த்தியவன், தந்தையின் காலை வெட்டியவன், மனைவியைக் கொன்றவன், கண்ணை இடந்து கல்லுக்கு அப்பியவன், திருடியவன், சூதாடியவன், பெற்ற பிள்ளையைக் கொன்று கறிசமைத்தவன், கையைச் சந்தனக் கட்டையென்று நினைத்துக் கொண்டு கல்லில் தேய்த்தவன், மனைவியின் தாலியை விற்று மகேசுர பூசை செய்தவன், தாயைப்புணர்ந்து தந்தையைக் கொன்றவன் என்ற இன்ன பிற 'பேரறிவாளர்'களின் சரித்திரங்களைக் கூறும் புராணங்களைத்தான் பலமொழிகளில் மொழி பெயர்த்து உலகெங்கும் பரப்ப வேண்டுமென்று தோழர் சச்சிதானந்தம் உபதேசம் செய்கிறார்—சுர குணம் நாடெங்கும் பரவவேண்டுமென்று விரும்புகிறார் — அசுர குணம் அழிய வேண்டுமென்று ஆசைப்படுகிறார். ஆனால், நாம் அசுர குணம் வளரவேண்டும்—சுர குணம் மறைய வேண்டுமென்று கூறுகின்றோம். எது வேண்டும்? மதுவருந்தி மதியை இழக்கும் சுர குணமா? அல்லது மதுவருந்தாது மதியை வளர்த்து மன்பதைக்கு நன்மை செய்யும் அசுர குணமா? கூறுங்கள்!

உயர்நிலைப் பள்ளித் தோற்றம்

காஞ்சிபுரம் தாலுக்காவைச் சேர்ந்த பெருநகர் கிராமத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி, 20—6—49-ம் நாள் முதல் தொடங்கப் பெறுகிறது. பெருநகருக்கு அடுத்துள்ள கிராமங்களில் வாழும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க இஃதோர் நல்வாய்ப்பு. பயன் படுத்திக் கொள்வார்களாக!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M. 4642.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 19-6-49 | இதழ் 51

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 7 JUL 1949 MADRAS

இழிவு அகற்றுவீர்!

[புதுவைச் சிவம்]

காலையிலே கண்விழித்த மந்தி யொன்று
கண் துடைத்து வானத்தைப் பார்த்த
வண்ணம்

சோலையிலோர் நெடுமரத்தின் மீதிருக்கத்,
தோட்டத்துக் காவலாள் அதனைப்
பார்த்தே,

'நீலநிற வானத்தில் நிகழ்வ தென்ன,
நெடுநேரம் பார்க்கின்றாய் அசையாமல் நீ?
மாலையிலே தோன்றாத காட்சி யாவும்
மலர்ந்த இந்தக் காலையினில் இருப்ப
துண்டோ?'

எனக்கேட்டான். அக்குரங்கு பார்வை தன்னை
இப்படியும் அப்படியும் திருப்பி டாமல்,
'கனியழகு பெற்றவரே புகழ்ச்சி கொள்வர்;
நானிலத்தார் அவர்தமையே மதிக்கின்
றார்கள்.

எனக்கந்த அழகில்லை, அதனால் மக்கள்
இகழ்கின்றார் அக்குறையைப் போக்க
வேண்டி,

மனத்தினிலே உண்டான ஆர்வத் தாலே
வானத்தை நோக்குகின்றேன், எனச்
சொல்லிற்று.

'வானத்தைப் பார்ப்பதனால் அழகு மிக்க
வளர்ந்திடுமோ?' எனக்கேட்டான்
தோட்டக் காரன்.

'சினத்து மகனே நீ! உனக்கிச் சேதி
தெரியாதோ சிறிதேனும்? திங்கள்,
செவ்வாய்

ஆன இரு கிழமைகளில் காலை நேரம்
அகல் வானில் கருடதரிசனமே செய்தால்,
மானிலத்தார் வியக்கின்ற அழகு நாளும்
வளர்ந்திடுமே!' என்ற தந்த வானரந்தான்.

இதைக்கேட்ட தோட்டத்துக் காவற்காரன்
இடி முழக்கம் போன்றதொரு
சிரிப்புச் செய்தே,

'மதிமிக்க குரங்காரே உனக்கே இந்த
மந்திரத்தை யார்கற்றுக் கொடுத்தார்?'
என்றான்.

விதி நம்பி வாழ்கின்ற தமிழ் நாடு
வீரர் சொன்ன மந்திரந்தான்!
அயலான் போல

இதையறியா திருக்கின்றாய் நீதான் என்றால்,
எனக்கிது பேராச்சரியம்!' எனச்
சொல் லிற்று.

'விந்தையிதை யானறியேன்; என்றன்
நாட்டார்

விளம்பியதா இக்கருத்து? வேண்டுமென்றே
நிந்தையுரை கூறுகின்றாய்; எங்கள் மீது
நினக்கென்ன பகை?' என்றான்.
'ஐயோ, பாவம்!

மொந்தைமுகம் வாய்ந்தான்—உன்
எஜமான் பெற்ற

மூத்தமகள், பஞ்சாங்கம் பார்த்துப்
பார்த்தே

இந்தவிதம் செய்கின்றாள், அதோபார்!
அன்னாள்

எழில் பெற்றால், என் முகமுந்
திருந்திடாதோ?'

இது கேட்டான்; எசமானின் மகளின்
போக்கும்

இசைத் தமிழர் வழக்கம்தாய்க்
கொண்ட போக்கும்

மதியற்ற ஒரு குரங்கால் இகழப் பட்ட
வருத்தத்தால் மனதினிலே கோபம் மூளக்,
கதிகலங்க அடித்ததனில் உயிரைப் போக்கக்
கையிலொரு தடியெடுத்தான். குரங்
கறிந்தே,

'புதியஉளம் பெற்றிடுவாய்; பஞ்சாங்கத்தைப்
போற்று மட்டும் இழிவகலா'
தென்றோடிற்றே!

காமராஜரின் தேர்தல்

14-ம் பக்கத் தொடர்ச்சி

வர் போல், முன்னுக்குப் பின் முரணைக் குழப்பிக் குழப்பிக் கூறியிருப்பதைக் காணும்போது காமராஜருக்கும் அவர் சகாக்களுக்கும் தேர்தல் சுரம் சற்று வேகமாகத் தாக்கியிருப்பது புலனாகிறது.

“உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம் வளர்ந்து வரும் சமயத்தில், நாட்டை மேலும் துண்டாட வேண்டுமென்று திராவிட கழகத்தார் இங்கு பிரசாரம் செய்து வருகிறார்கள். நாடு பிரிக்கப்பட்டதால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும்” எனக் காமராஜர் ‘கர்ஜிக்கிறார்’!

ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளைக் கொண்ட இந்தியதுணைக்கண்டத்தை ஒரே நாடாக்கித் துப்பாக்கி முனையில் ஆண்டுவந்தார்கள் ஆங்கிலேயர்கள். அந்த ஏகாதிபத்ய அமைப்பை அழித்துவிட்டு, அந்தந்த நாட்டுக்குரிய இனமக்கள் தனியரசுகள் ஏற்படுத்திக்கொள்வதே சிறந்த முறை என்று செப்பினால் அதற்கு, நாட்டைத்துண்டாடுவதா? பாரதமாதாவை வெட்டுவதா? மகாபாபமாச்சே என்றெல்லாம் முன்னர்,காங்கிரஸ்காரர்கள் கூறிவந்தனர். இப்போது பாகிஸ்தான் பிரிந்ததற்குப் பிறகு, தனியரசு கோரும்மக்கட்குப் பாகிஸ்தான் பிரிந்ததனால் ஏற்பட்ட விபரீதங்களை யெடுத்துச் சொல்லிக் குழப்பி வருகிறார்கள். நாட்டைத் துண்டாடுவதுகூடாது எனக்கூறுகிறார். துண்டாடுவது என்ற சொல்லைத் துணையாகக்கொண்டு எத்தனை நாட்களுக்குப்பிரிவினைக்கிளர்ச்சியை அடக்கிவிடமுடியும் என்று காமராஜர் எண்ணுகிறாரோ, அறியோம்! நாம் ஒரு கண்டத்தை அதனதன் இன கலாச்சாரப்படி பொருளாதார முறை சீர்படும் வகையில் சிறு சிறு நாடுகளாகத் துண்டாடச் சொல்லுகிறோமே யொழிய, நாட்டையல்ல. துண்டாடுவது, துண்டாடுவது என்று காமராஜர் கூறுகிறாரே, துண்டாடித் தனியாக எடுத்துக்கொண்டுபோய்விடுவதற்கு நாடு ஒரு கத்திரிக்காயா என்ன?

இயற்கை வளங்கள் எல்லாம்பெற்றும், திராவிடம் இன்று இழிநிலையிலிருக்கிறது, காரணம், திராவிடத்தின் நலனைப்பற்றிய நாட்டமில்லாத வடவர் ஆட்சியின்கீழ் திராவிடம் சிக்குண்டிருப்பதால்தான். ஆகவேதான் திராவிடம் தனியாட்சி பெற வேண்டும் என்று கூறுகிறோம். உலக முழுவதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம், திராவிடம் தனியாட்சி பெறுவதனால் எந்த வகையிலாவது தடைபட்டுப் போய்விடுமா என்று ‘எல்லாம் அறிந்த’ தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜரைக் கேட்கிறோம். உலகமுழுதும் ஒன்றுபடவேண்டுமென்றுதான் திராவிடர் கழகமும் கருதுகிறது. அதாவது ஒருநாடு, மற்றொரு நாட்டைச்சுரண்டாமல் அடிமைப்படுத்தாமல்,ஆக்கிரமிப்புக்கு அடிகோலாமல் உலக முழுதிலுமுள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று நல்லெண்ணம், ஒற்றுமை, சம நோக்கத்துடன் வாழவேண்டுமென்றுதான் திராவிடர்கழகம் கூறுகிறது. ஆனால் அதற்காக உலக முழுவதிலுமுள்ள சிலபல நாடுகள் ஒரே ஆட்சியின் கீழ் இருக்கவேண்டுமா? அப்படி ஒரே ஆட்சியிலிருந்தால் ஒன்றுபட்டு விடுமென்று காமராஜர் கருதுகிறாரா? ஹிட்லர் கூடத்தான் உலக முழுவதும் ஒன்றாக்கித் தன் ஆட்சியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணிப் போரை ஆரம்பித்தார். ஏன், இப்போது டாலர் அமெரிக்காவும் உலக முழுதும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வரத்தான் திட்டமிடுகிறது. காமராஜர், இதுபோன்ற நிலையிலே தான் உலகம் ஒன்றுபட வேண்டுமென்று கருதுகிறாரா? விடுதலைப் போராட்ட காலத்திலே, வெள்ளையர்கள், நாங்களும் உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்று தான், ஒவ்வொரு நாடாக எங்கள் ஆதிக்கத்தைப் பரப்பி வருகிறோம், ஆகவே இப்போது நீங்கள் சுயராஜ்யம் கேட்டு, இந்தியாவை எங்கள் ஆதிக்கத்தினின்றும் துண்டாடிவிடாதீர்கள், என்று கூறியிருந்தால், காமராஜரும், அவரது சாகாக்களும் சரி என்று ஒப்புக்கொண்டிருப்பார்களா?

“நாடு பிரிக்கப்பட்டதால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும்” எனக் கூறுகிறார். நாம் இந்த இடத்தில் ஒன்றுகூற விரும்புகிறோம். பாகிஸ்தான் பிரிவினை உணர்ச்சி மதவெறியாக மாறும் அளவிற்கு பிரிவினையைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததுதான் ஏற்பட்ட கஷ்டங்களுக்குக் காரணம். திராவிடர் கழகம் அந்த அடிப்படையில் நாடு பிரியவேண்டுமென்று கூறவில்லை. காமராஜர் சரித்திரம் படித்திருப்பாரென்றே நாம்கருதுகிறோம். மறந்திருந்தால் மீண்டும் புரட்டிப் பார்க்கட்டும். சமூகம் — பொருளாதாரம்—அரசியல் ஆகிய விவகாரங்களிலே வடநாடும்—தென்னாடும் வேறு பிரிந்திருப்பதை என்றும் காணலாம். இங்கு பிரிவினை கேட்பதற்கு மதம் அல்ல அடிப்படை; அறிவேதான் அடிப்படையாக விளங்குகிறது. ஆகவே, எல்லைத் தகராறுகளாலேற்படும்தொல்லையோ, அல்லது மற்றப் பிரதேசத்தாருடன் சண்டையோ, ஏதும் ஏற்படவழியில்லை என்பதைக் காமராஜருக்குக் கழகம் அடிக்கடி அறிவுறுத்தி வந்தும், அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை!

திராவிடம் தனியாகப் பிரிந்தால், வடநாட்டுக்கு வேறு ‘மார்க்கெட்’ கிடைக்காதே, சுரண்டலுக்கும், ஆதிக்கத்திற்கும் ஆபத்து வந்துவிடுமே, தங்கள் கொள்ளை கோலாகல வாழ்வுக்குக் குழிதோண்டப்படுமே, என்ற எண்ணத்தில் வடநாட்டுத் தலைவர்கள் தான் பிரிவினையை எதிர்க்கின்றனரென்றால், திராவிடத்தைச் சேர்ந்த காமராஜர்கள் ஏன் அவர்கட்கு வக்காலத்து வாங்க வேண்டும்?

(5-ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

உருவச் சிலை. ஒவ்வொரு ஆண்டும் ஒன்றுகூடிப் போற்றுகிறார்கள் அந்த உன்னத உயிர்த் தியாகியை. ஆம்! அந்நாட்டின் அறிவுக்கு அடிப்படையான பேச்சு, எழுத்து உரிமைகளுக்கு விதைபோட்ட வீரனைக் கொண்டாடாமல் என்ன செய்வார்கள் விடுதலைஆர்வங்கொண்ட மக்கள்!

அழியாப் புகழ் பெற்ற டோலட் உயிர்விடும் சமயம், கடைசியாகத் தனது நாட்டிற்கு விடுத்த மனம் உருகும் மெய் மொழிகள் இரண்டு. அவை,

“எனக்காக நான் ஏதும் வருந்தவில்லை. ஆனால் விஷயங்களை விளக்கமாக அறிய அறிவு பெறாது அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் எனது இன்ப மக்களுக்காகவே என் நெஞ்சம் துடிக்கிறது.” ✻

மூடநம்பிக்கை

ஒருகாலம் இருந்தது, மூடப் பழக்க வழக்கங்கள் உலகெங்கும் தம் ஆதிக்கத்தைச் செலுத்திய காலம். விஞ்ஞான அறிவு விரிவடைவதற்குமுன், உலகம் முழுவதுமே அஞ்ஞான அறிவால் மூடநம்பிக்கைகள் பலவற்றை உலவவிட்டு உண்மையை உணர முடியாமல் ஊசலாடிக்கொண்டுதான் இருந்தன. மக்களின் முயற்சியால் அறிவுவளர்ச்சியடைந்து,விஞ்ஞானத்தெளிவு படிப்படியாக உண்டாகத் தொடங்கவே, மேல்நாடுகளிலெல்லாம் இந்த மூடநம்பிக்கையும் படிப்படியாகக் குறையத் தொடங்கி விட்டது. ஆனால் இங்கே, ‘நமது புண்யபூமியில்’ மட்டும் இந்த மூடநம்பிக்கை எந்த விஞ்ஞானத்தைக்கண்டும் அஞ்சாமல்நிலைபெற்று நிற்கக் காண்கிறோம்! அதற்குக் காரணம் என்ன? மூடநம்பிக்கையைக் கண்டு விஞ்ஞானம் அஞ்சுகிறதா? இல்லை. நம் நாட்டிலுள்ள ‘மூதறிவாளர்கள்’ சிலர் மூடநம்பிக்கையை ஒரு கரத்திலும், விஞ்ஞானத்தை ஒரு கரத்திலும் தாங்கிக்கொண்டு, புராணக் கூற்றுப்படி (நாம் நம்புவதில்லை) திரிசங்கு சுவர்க்கமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலைபார்க்கும் ஒருவர், தாம் சரியாக ஒன்பது மணிக்கு அலுவலகம் போகவேண்டுமென்பதற்காகக், கையில் விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட ஒரு கடிகாரத்தைக் கட்டிவைத்துக் கொள்வார். அதே சமயத்தில் ஒன்பது மணிக்கு இராகுலாலம்—இயமகண்டம் பார்ப்பதற்காகப் பஞ்சாங்கமும் ஒன்று வைத்துக்கொள்வார். கடிகாரத்திலும் மணி ஒன்பதாகி, இராகுகாலம்—இயமகண்டமும் இல்லாமல், ஆபீசர் புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். புறப்பட்டவுடனே எதிரே ஒற்றைப்பார்ப்பானோ, இரட்டைச் சூத்திரனோ, எண்ணெய்க் குடமோ வந்தாலோ அல்லது பூனையோ பாம்போ குறுக்காகவோ வலமாகவோ போனாலோ, போதும், அவ்வளவுதான், ஆபீசர் திரும்பி விடுவார் வீட்டுக்கு. பிறகு சிறிது நேரம் பொறுத்துத்தான் ஆபீசுக்குப்போவார். ஏன் இவ்வளவு நேரம் பொறுத்து வந்தீர் என்று கேட்பதற்கு ஆள் இல்லை ஆபீசில்! அவரேதான் அவரைக் கேட்கவேண்டும்!

அதே ஆபீசில், அவருக்குக் கீழ் வேலைசெய்யும் ஒருவர் யாது காரணத்தாலோ சிறிது நேரம் பொறுத்து வந்துவிட்டாலோ, “என்னப்பா! எப்ப பார்த்தாலும் இப்படி லேட்டாக வந்துகொண்டிருக்கிறாய், இப்படிவந்தா இனி இங்கே உனக்குச் சரிப்படாது” என்று கண்டிப்பாகப் பேசுவார். அதற்கு அந்தத் தொழிலாளி, “ஐயா, நான் சரியான நேரத்துக்குத்தான் புறப்பட்டேன் ஆனால் புறப்பட்டு இரண்டடி எடுத்துவைப்பதற்குள் ஒரு பூனை குறுக்கே போச்சுது சார், அதனாலே ......” என்று முடிப்பதற்குள் ஆபீசர், “பூனை குறுக்கே போச்சு, அதனாலே ஆபீசுக்கு வர நேரமாய் விட்டது என்று சொன்னால் யாராவது ஒத்துக்கொள்வார்களா? இன்றைக்குத்தான் பூனை குறுக்கே போச்சு. நேற்றுக்கூட நீர் லேட்டாகத்தானே வந்தீர்; அதற்கென்ன காரணம்?” “நேற்று ஒன்பது—பத்தரை ‘இராகு காலம், அதனாலேதான் லேட்டு.” இதனைக் கேட்ட அந்த ஆபீசர், அந்தத் தொழிலாளியை நோக்கி, “இப்படிப்பட்ட காரணங்களுக்காக ஆபீசுக்கு வருவதில் நீர் தாமதம் செய்வதால், உம்முடைய கணக்கைத் தீர்த்துக்கொண்டு இந்த ஆபீசிலிருந்து விலகிவிடும்” என்று கட்டளை பிறப்பிக்கிறார். ஆனால் அந்த ஆபீசர் மட்டும் அதே ஆபிசில், ஆண்டவன் அமைத்த மூடநம்பிக்கையின் அணைப்பிலும், அறிவாளி அமைத்த விஞ்ஞானத்தின் அணைப்பிலும் இருந்துகொண்டு அலுவல் பார்த்த வண்ணம்தான் இருக்கிறார். இவை படித்தவர்களிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள் பலவற்றுள் சில. இதுபோலவே படிப்பற்ற பாமர மக்களிடமும் பலவிதமான மூடநம்பிக்கைகள் குடிகொண்டுள்ளன. அவற்றுள்ளும் சிலவற்றை இங்கு விளக்கிக் காட்டுவோம்.

நமது நாட்டில் கரும்பு விற்கும் இடங்களில் கரும்பு உடைக்கும் பந்தயம் ஒன்று நடந்துவருவதைக் காணலாம். அதாவது ஒருவன் நூறுகரும்பைத் தன் கைமேல் வைத்து அடித்து உடைத்து விடுகிறான் என்பது. ஆனால் நம்மைப் போன்றவர்களோ ஒரு கரும்பைக் கூட உடைக்கப் பயப்படுகிறார்கள். இந்த நம்முடைய பயமானது நூறு கரும்பை உடைப்பவனுக்குத் தெய்வீகத் தன்மையை உண்டாக்கி விடுகிறது. ஆனால், இது தெய்வீகமா என்பதை நாம் தீர யோசித்துப் பார்ப்பதில்லை. அவன் அவ்விதம் உடைத்து உடைத்துப் பழக்கப்பட்டவன் என்பதையும் எண்ணிப்பார்ப்பதில்லை. நீங்களும் நாங்களும் அந்தப் பழக்கத்தை மேற்கொண்டால் நூறல்ல, இருநூறு கரும்பைக்கூட உடைத்தெறியலாமே என்ற தைரியத்தையும் கொள்வதில்லை.

பிச்சையெடுக்கும் சிறு குழந்தைகள் தங்களுடைய வயிற்றைப் படீர் படீர் எனத் தங்கள் கையால் அறைந்து கொள்கின்றன. அவ்விதம் நம்முடைய குழந்தைகள்செய்துகொண்டால் சுருண்டு கீழேவிழுந்துவிடும். பிச்சையெடுக்கும் குழந்தைகள் இவ்விதம் அறைந்துகொள்வதால் அவர்களிடம் தெய்வீகம்இருக்கிறது என்று பொருளா? தெய்வீகம் அவர்களுக்கிருந்தால், அவர்கள்ஏன் வயிற்றில் அறைந்து பிச்சைவாங்க வேண்டும்? பழக்கத்தின் காரணமாகவே இவ்விதமெல்லாம் செய்யப்படுகின்றனவென்பதை உணரமாட்டாத கருத்துமையர்கள் மிகுதியாக இருக்கும்வரையில் இவையெல்லாம் தெய்வீகமாகத்தான் கருதப்படும் போலும்! தேங்காயைத் தலையில்

தட்டி உடைக்கிற பழக்கத்தைக் கூடத் தெய்வீகம் என்றுதான் இங்கே சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குத் தெளிவற்ற தன்மை இங்கு வளர்ந்திருக்கிறது.

நவீன ஞானப்படி இத்தியாதி மூடநம்பிக்கைகளை விசாரித்து விளக்கியுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் பலவுள. அவைகளில் முக்கியமானவை "Taylors Anthropology" என்றும் "Frazors Golden Bough" என்றும் இரண்டு சிறந்த நூல்கள் உள. அவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதவேண்டிய அவசியத்தை நமது சுயமரியாதைக்காரர்கள் அறிந்து நடக்கவேண்டும். பாமர மக்கள் மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டுமாயின் அம்மூட நம்பிக்கைகளின் ஆதாரத்தைவிசாரித்து அறிதல் வேண்டும். அவ்வித விசாரணைக்கு மேற்போந்த நூல்கள் இன்றியமையாதவையாகும். இத்தியாதி நவீன ஞானத்தைப் பாமர மக்களுக்குப் புகட்ட எத்தனிக்கையில் புராணங்களையும், கேவல நாடகங்களையும், எடுத்து அச்சிடுவதால் பயன் என்ன? மெஞ்ஞான முறைப்படி சிற்சில மூடப்பழக்கங்களை ஈங்கு எடுத்துரைப்போம்.

நமது தமிழ் நாட்டில் மிகுதியாகப் பாமர மக்களிடத்து ஒரு மூடப்பழக்கம் அனுதினமும் பார்க்கின்றோம். அது யாதெனில் இறந்தவர்களைச் சுடலைக்குக் கொண்டு போகும்போது அதிக சத்தத்தோடு கொண்டுபோகும் பழக்கம். இதனுடைய ஆதாரத்தைக் கண்டுகொள்ளாமல் இது பெரும் பழக்கமாகத் தென்னாட்டில் நடந்தேறி வருகிறது. இது விசேஷமாகத் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறும் வகுப்பாரிடம் பெரிதும் காணலாம். உயர் குலத்தோர் என்று கூறும் பிராமண வைசியர்களில் சாவு மேளத்தைக் கேட்பதரிது. ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாகரிக நாடுகளில் சேனைத் தலைவர்களுக்குத் தவிர மற்றவர்கள் சாவுக்கு மேளம் அடிப்பதில்லை. ஆனால் இந்தப் பழக்கம் காட்டுமிராண்டிகளிடம் (Savage Tribes) அதிமாகக் காணலாம். இந்தப் பழக்கத்தின் காரணத்தை அறிய வேண்டுமானால் காட்டுமிராண்டிகள் எண்ணியுள்ள எண்ணத்தை விசாரித்தால் தெரியவரும். அவர்களுக்குள் இறந்தவனைப்பற்றி இரண்டு மூடநம்பிக்கைகள் உண்டு. அவை யாவன:— அவர்களில் இறந்த மனிதனுடையஉயிர், ஆவி, (Spirit, Soul) உடலைவிட்டு நீங்கியதும் அருகாமையிலுள்ள செடியிலோ, விருட்சத்திலோ, ஜலத்திலோ ஒளிந்து நிற்குமாம்! அந்த 'ஆன்மா' உயிருடன் இருப்பவர்களைத் தொந்தரவுசெய்யுமாம்!! ஆதலின் அதனைச் சத்தமிட்டும், இரைச்சலிட்டும், கூச்சல்போட்டும், வாத்தியங்களால் பேரொலியை உண்டாக்கி அந்தஆன்மாவைப் பயப்படச் செய்து ஓடச்செய்வதற்கு ஏற்பட்டதப்பட்டை, பேரி, சங்குமுதலிய வாத்தியங்கள் முழங்கச் செய்யும் பழக்கத்தின் காரணமாகும். இரைச்சல் அதிகமிட, அதிகமிட இறந்தவனுடைய 'ஆன்மா' அதிக விரைவாக ஓடிவிடுமாம்! இந்தக் காட்டுமிராண்டி மூடப் பழக்கத்தை நமது தமிழ் மக்களும் அனுசரித்து வருகின்றார்கள். நமது நாடுகளில் சாவு மேளங்களின் காரணம் ஆதிகாலக் காட்டுமிராண்டிகளாக இருந்துவந்த நமது மூதாதைகளின் உத்தேசங்களென அறியவும். சாவு மேளங்களுக்கு ஆதாரம் காட்டுமிராண்டிப்பழக்கமாகஇருக்க, இதற்கு தற்காலம் வேறுவித அர்த்தங்களும், வியாக்கியானங்களும் கொடுக்கின்றார்கள். அரசர் இறந்தாலும், சேனைத் தலைவர் இறந்தாலும் சாவு மேளம் அதிகமாக உபயோகிக்கின்றார்கள். நமது நாட்டில் எளியவன் இறந்தால் ஒன்றிரண்டு சங்குடன் போகின்றது. அரசர்கள், தனவந்தர்கள் இறந்தால் ஊரிலுள்ள வாத்தியங்கள் எல்லாம் முழங்கும்! ஏன்? எளியவனுடைய 'ஆன்மா'வோ பலத்த சத்தத்தால்தான் ஓட்ட முடியுமாம்!! இந்த எண்ணங்கள் தான் சாவு மேளங்களுக்கு அடிப்படையாக உள்ளன. இறந்தவனை வாத்தியக் கோஷ்டியாலும் மரியாதை செய்வதென்பது பிறகு கொடுத்து வரும் வியாக்யானமென அறிக. எதார்த்தமோ செத்தவன் 'உயிர்' திரும்பவும் வரவொட்டாமல் செய்வதற்கு ஏற்பட்ட மேள வாத்தியங்களென அறிக. காட்டுமிராண்டிப் பழக்கங்களில் சிலவற்றை இன்னும் உயர்மக்கள் என்று கூறும் பிராமணர்களிடமும் காணலாம். பிராமணர்களிடம் ஒரு துர்ப்பழக்கம் இருந்துவருகின்றது. அதாவது இறந்தவனைச் சாதாரண வாசல் வழியாகக் கொண்டுபோகாமல் சுவரில் துவாரம் செய்து, சவத்தை அவ்வழியாக எடுத்துக்கொண்டு போன பிறகு அந்தத் துவாரத்தை அடைத்துவிடுவார்கள். இதுவும் காட்டுமிராண்டிப் பழக்கங்களில் ஒன்று. இந்தப் பழக்கத்திற்கு காட்டுமிராண்டிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், பழைய வழியாகப் போனவன் இறந்தால் அவன் "ஆன்மா" அந்த வழியே திரும்ப வந்து விடுமாம்! புதிய துவாரத்தின் வழியை எடுத்துவிட்டு, அந்தத் துவாரத்தை அடைத்துவிட்டால், அந்த "ஆன்மா"வுக்குப் புது வழி தெரியாமையால் அது அந்தப் புது வழியில் நுழையாமல் தடுத்துவிடப்படுமாம்? செத்தவன் ஆன்மாவை ஏமாறச் செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று. இன்னும் பல மூடச் சூழ்ச்சிகளைக் கொண்டு "ஆன்மாவை" மயங்கச்செய்து விடுகின்றார்கள். இறந்தவனை வீட்டை விட்டுச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகையில் சாணிச்சட்டியை உடைக்கின்றார்கள். இதுவும் காட்டு மிராண்டிகளின் மூடப் பழக்கத்தை அனுசரித்து நடப்பதாகும். காட்டுமிராண்டிகளுக்குள் ஒரு கற்பனையுண்டு. அதாவது, பேய், பிசாசுகள் தண்ணீரைத் தாண்டாவாம்! தண்ணீரிலும், சாணித் தண்ணீர் விசேஷம். சவத்தின் பின் ஊற்றினால் அதன் ஆன்மா, தெளித்த தண்ணீரைத் தாண்டாவென்று எண்ணி இந்தப் பழக்கம் நாளைக்கும் நம்மவர் செய்து வருகின்றனர். கொள்ளிவைத்தவர்கள் சுடுகாட்டை விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது கடலிலாகிலும், குளத்திலாகிலும், ஆற்றிலாகிலும் நீரில் காலை நனைக்க வேண்டுமென்ற பழக்கம் இதனால் ஏற்பட்டதென அறியவும். இவர்கள் காலடி தண்ணீரில் மறைந்துபோகுமாதலால் செத்தவன் "ஆன்மா"வும் காலடிவைத்த பின் தொடர்வதற்கில்லையாம்! திருடர்களும் தங்கள் காலடிகளைத் தண்ணீரில் இறங்கி மறைத்து விடுவதைப் போன்றதென அறிக. திருடர்களைப் பின்தொடர்ந்த நாய்கள், அங்குவந்து மயங்குவதைப் போல், "ஆன்மா"வும் மயங்கிவிடுமாம்! கொள்ளிவைத்தவர்கள், எரியும் சவத்தைத் திருப்பிப்பார்க்கக்

(13-ம் பக்கம் பார்க்க)

காமராஜர் தேர்தல் கீதம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும், கூறுகையில், "நமக்கு உணவுமட்டும் இருந்தால்போதுமா? சுதந்தரம் இல்லாமல் நாம் சந்தோஷமாக இருக்கமுடியாது" என்கிறார், நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இன்றைய ஆட்சியிலே, நமக்கு அதாவது எதிர்கட்சிக்காரர்கட்குக் கூட அல்ல, பாமர ஏழை மக்கட்குக் கூட அல்ல, காங்கிரஸ்காரர்கட்கே, அதுவும் காமராஜர் போன்ற தலைவர்கட்கே சுதந்தரம் இருக்கிறதா? இருக்கிறதென்று அவர்தான் கூறமுடியுமா? கூறுவாரா? மாகாண மந்திரிசபைத் தகராறு முதல், உணவு, உடைப் பிரச்சினைவரை எதுவாயிருந்தாலும் மத்திய சர்க்காரிடம் காவடி தூக்க வேண்டிய நிலையிலே தானிருக்கிறார் இன்றும் காமராஜர். ஒரு சிறிய திட்டமாயிருந்தாலும், அதற்கு மாகாண சட்டசபையில் பெருவாரியான ஆதரவிருந்தாலுங்கூட, அது டில்லி முத்திரையைப் பெற்றால்தானே சட்டமாக முடிகிறது. ஆகவே, இந்த இழிநிலையைப் போக்கிக்கொள்ள வேண்டாமா? காமராஜர் பேச்சுப்படியே, காமராஜர், சுதந்தரமாகவும், மகிழ்ச்சியாகவும், வாழவேண்டுமானால், அதற்கும் வடவர் ஆட்சி நீங்கிய திராவிடத் தனியாட்சி ஏற்படவேண்டிய அவசியம் உண்டாகிறது என்பதனைக் காமராஜர் உணரவேண்டும். உணர்ந்தால் காமராஜர் ஆசை நிறைவேறும்.

"குழப்ப வேலைகளிலீடுபடுவதை விட்டு, தேர்தலில் நின்று அவர்கள் ஜெயிக்கட்டும். பொதுமக்கள் ஆதரவு கிடைத்தால் கோயில்களை இடிக்கட்டும். ஹிந்திப் புத்தகங்களைக் கொளுத்தட்டும்" எனப்பேசியிருக்கிறார்.

இன்று நாட்டிலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறவர்கள் காங்கிரஸ்காரர்களா? அல்லது திராவிடர் கழகத்தார்களா என்பது பொதுமக்கட்கு நன்கு தெரியும். ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால், குழப்பத்தை உண்டுபண்ணியவர்கள், கட்டிடங்களை (புத்தகங்களோடு) கொளுத்தியவர்கள், தண்டவாளத்தைப் பெயர்த்தவர்கள், தந்திக்கம்பிகளை [illegible] காங்கிரஸ் [illegible] மல்லவா? 1942-ல் ஆகஸ்டுப்'புரட்சி' செய்து தான் ஆனந்த சுதந்தரம் பெற்றோமென்று அடிக்கடி காமராஜர் கூறிவருகிறாரே. அதற்குள்ளாக மறந்துவிட்டாரா? தன்னிலை மறந்து தடுமாறுகிறாரா தமிழ்நாட்டுக் காங்கிரசின் தனிப்பெருந் தலைவர்? கோயிலை இடிப்பது எங்கள் திட்டம் என்று திராவிடர் கழகம் என்றாவது கூறியிருக்கிறதா? இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுக் கட்டிய கோயில்களை இடித்துவிடுவதால், பொதுவாக நஷ்டமே ஒழிய லாபமே அல்ல என்பதைத், தண்டவாளத்தைப் பெயர்த்துத், தந்திகம்பிகளை அறுத்து, மக்களுக்கு நஷ்டத்தையும், கஷ்டத்தையுமளித்த காங்கிரஸ்காரர்களைவிடக், கழகத்தார் நன்குணர்ந்திருக்கின்றனர். நாட்டிலே அறியாமையும், பஞ்சமும் வேலையில்லாத்திண்டாட்டமும், தாண்டவமாடிக்கொண்டிருக்கும் நேரத்திலே, பள்ளிக்கூடங்களையோ, தொழிற்சாலைகளையோ கட்டி அறியாமையையும், வறுமையையும் போக்குவதைவிடுத்து, கோயில் கட்டிக் கும்பாஷேகம், செய்யக்கோடிக்கணக்கில் வாரி இறைப்பானேன்? கோயில்களை விபசாரவிடுதியாக ஆக்குவானேன்? கள்ளர்களின் குகையாக அமைப்பானேன்? ஆகவேபாழடைந்திருக்கும் பலபெரிய கோயில்களில் தொழிற்சாலைகளையும், கல்விச்சாலைகளையும், அமைத்துக்கொள்ளலாம், அதுமட்டுமல்ல, இன்னும் இருக்க இடமின்றி ஏங்கித் தவிக்கும் எண்ணற்ற ஏழைமக்கட்கு இல்லங்கள் அமைத்துத் தரலாம் என்றுதான் கழகம் கூறுகிறதேயொழிய, காமராஜர் அறியாது கூறுவதுபோன்று, இடிக்க வேண்டுமென்றல்ல, என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"பொதுமக்கள் ஆதரவிருந்தால் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தட்டும்" எனக்கூறுகிறார்.

வெள்ளை ஆட்சியிலே, மில் துணி பகிஷ்காரத்துக்காக, சுதேசித்துணிகளைக்கொளுத்திய வீரர்களல்லவா காமராஜர் கூட்டத்தார்!. இதனை மறந்துவிட்டாரா காமராஜர்? அச்செய்கை அன்றும், ஏன் இன்றும், தேசபக்தியாகக் கருதப்படுகிறதே! அப்படியிருக்க, தமிழர்கள்மீது கட்டாயமாகத் திணிக்கப்படும் அன்னிய [illegible] ஒருசில இடங்களில், மாணவர்கள் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தினார்களென்றால், அதிலென்ன தவறு? அந்நியத்துணி பகிஷ்காரத்துக்காக அதைக்கொளுத்துவது தேசபக்தியாகப் போற்றப்படும்போது, அந்நிய மொழிப்பகிஷ்காரத்துக்காக அப்புத்தகங்களை அதுவும் சில மாணவர்கள் கொளுத்தினால் அதுமட்டும் தூற்றப்படுவானேன்? அழுகிப்போனதை அப்புறப்படுத்தித்தானே ஆகவேண்டும். உளுத்துப்போனதை உதறித் தள்ளித்தானே ஆகவேண்டும். அழகானபழமாச்சே என்பதற்காக அழுகலைத்தின்னக் காமராஜர்ஒப்புவாரா? அதேபோன்று புராணக்குப்பைகளையும், தமிழர் பண்பாட்டிற்கு முரணான பழங்குப்பை நூல்களையும், தமிழர்களைத் தாழ்வுபடுத்தும் நூல்களையும், கொளுத்துவதால்சுயநலமிகளுக்கல்லது வேறு யாருக்கு என்ன நஷ்டம்? இப்பழங்குப்பைகளாலல்லவா திராவிடம் இன்று படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைத்துக்கொழுத்துவதால்என்ன கெடுதி? காமராஜர் கூறியபடியே, பொதுமக்கள் ஆதரவுடன், அப்புராணக்குப்பைகளைக்கொளுத்தக்கூடிய நாளும் வரத்தான் போகிறது. அந்நாளும் அண்மையில்தானிருக்கிறது என்பதனை அவர்கள் அறியட்டும்.

"இன்றைய நாட்டிற்குத் தேவை அமைதிதான். ஆகவே அமைதியைப் பாதுகாக்கப் பாடுபடும் காங்கிரசை ஆதரியுங்கள்" எனக் கூறியிருக்கிறார்.

நாட்டிற்கு அமைதி தேவைதான் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் எப்படிப்பட்ட அமைதி தேவை? எப்படி அமைதி நிலவும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? புண்ணின் வேதனை தாங்காமல் புலம்பும் குழந்தையிடம், பூச்சாண்டி காட்டி அழாதே என்றால் அழாமலிருக்குமா? அப்படியே அழாமலிருந்தாலுஞ் சிறிதுநேரம் தானே. மறுபடியும் வலி ஆரம்பிக்கும்போது அழத்தானே செய்யும். புண்ணுக்கு மருந்திட்டுச் சிகிச்சை செய்தால்தானே, குழந்தை நிரந்தரமாய் அழாமலிருக்கும். அதே போன்று, நாட்டிலே சமுதாய பொருளாதாரத் துறைகளில், எண்ணிப் பார்க்க முடியாத ஏற்றத் [illegible]

அரசாங்க அறைகூவலுக்கு :: :: அன்பர்கள் தரும் பதில்

11—6—49

திராவிடநாடு ஆசிரியர் C. N. A. அவர்களுக்கு,

இன்று காலை 'திராவிடநாடு' பத்திரிகை ஜாமீன் ரூ. 3000. கோரப்பட்டது கண்டு திடுக்கிடவில்லை. ஏனெனில் ஆட்சிமன்றம் ஏறிய ஆட்சியாளர்கள் எந்த ஜனநாயகத்தின் சார்பாக நின்று குரலெடுத்துப் பேசினார்களோ அந்தஜனநாயகத்தை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தவுடன் கொன்று சவமாக்கிவிட்டார்கள். அதற்குப் பதிலாக உலகத்தின்முன் கொல்லப்பட்டுப் புதை குழியில் தள்ளப்பட்ட பாஸிஸ்ட்பிணத்தைத்தோண்டிஎடுத்துக் கட்சிபீடத்தின் அலங்காரப் பதுமையாகக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப்பிணத்தின், முடை நாற்றத்தின் கடுமையான எதிரொலியின் ஒரு பகுதி இது. இதற்கெல்லாம் இந்திய ஜனநாயகம் சாய்ந்து விடாது. தடியாலும், வெடிகுண்டுகளாலும் தடை உத்தரவு, ஜாமீன்களினாலும் ஒடிந்து, விழக்கூடியது எது என்பதை உலக வரலாறு தெளிவாக அறிவித்திருக்கிறது. ஆட்சிமன்றம் அதிகாரபோதையால் மறந்திருக்கலாம். காலத்தின் கடுமையான படிப்பினையை அரசாங்கம் உணரத் தவறுது. 'திராவிடநாடு' இடதுசாரிக்கொள்கைகளை உரத்த குரலெடுத்து பேசும் ஜனநாயகத்தின்குரல். புரையோடிப் போன சமுதாயத்தின் புண்ணை ரணசிகிச்சை செய்யும் ரணவைத்தியம். மதங்களின் கொடுமைகளால் பிணநடை போடும் மனிதனை, மனிதத்தன்மை இதுதான் என உணர்த்தும் அறிவுச்சுடர். உங்கள்மீது தாக்கப்படும் தாக்குதல்களைத்தாங்கத் தமிழ்மக்கள் தோள் கொடுத்து உதவுகிறார்கள். உங்களிடம் கோரப்பட்ட ஜாமீன் தொகைக்கு என்சிறு உதவி ரூ. 3-0-0 அனுப்பியிருக்கிறேன். மணியார்டர் நர் 4643. உலகத்தின் செம்பாதி சிலப்புடையில்காட்சியளிக்கிறது. தவிர, எந்தத்திசையிலிருந்து உலகம்ஒளிபெறுகிறதோ, அந்தத்திசை இரத்தமயமாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிரணங்கள்தான் இந்திய ஆட்சியாளர்களின் எதிர்காலத்தை கனவிலும், நினைவிலும் சூன்யமாக்குகின்றன. வீழ்ச்சியுறப் போகின்றவனின் வெறிச்செயல்கள் ஆரம்பமாகிவிட்டன.

இப்படிக்கு,

ரா. ரா. ராமமூர்த்தி,

மதுரை.

வாழ்க ஜனநாயகம்!

வாழ்க பேச்சுரிமை எழுத்துரிமை!!

வாழ்க சுதந்திரம்!! வாழ்க வையகம்!!!

✻

13—6—49

ஐயா!

தமிழர், குறைந்த கோரிக்கையையே வற்புறுத்தி பலாத்காரச் செயல்கள் எதற்கும் தூண்டாத அறிவுத் துறைத் தமிழர் இதழாம் நம் 'திராவிடநாடு' மீது பிணையம் கோரி, அரசியலார் தாக்கியதன்மீது தாங்கள் விடுத்த நன்கொடை வேண்டுகோளை முன்னிட்டு இச் சிறுதொகை ரூ. 20. அனுப்பியுள்ளேன். நாட்டு நலத்துக்காகச் சலியாது பாடுபடும் தாங்களும் திராவிடநாடும் நீடூழி வாழ்க. வாழ்க, தமிழ், தமிழர்.

இப்படிக்கு,

அலமேலு.

✻

15—6—49

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். "திராவிடநாடு" இதழுக்கு இன்றைய ஆளவந்தார்கள் கோரியுள்ள ரூ. 3000 ஜாமீன் கண்டு திடுக்கிட்டேன், உள்ளபடியே குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கைகொண்ட யாரும் அரசாங்கத்தின் அவசரப் போக்கை, எதேச்சாதிகாரத்தை, அடக்கு முறைக் கொடுமையைக் கண்டிக்காமலிருக்க முடியாது. கண்டிப்பது மட்டுமல்ல, சொல் வேறு செயல் வேறாக உள்ள அந்தச் சுயராஜ்யக் கட்சியார் நடத்தையைக் கண்டு கவலையுறாமலிருக்கவும் முடியாது.

பேச்சுரிமை, எழுத்துரிமை, மனிதன் பிறப்புரிமை என்று அடித்தொண்டையிலிருந்து கூவியும், மேஜை அதிரக் கர்ஜித்தும், பத்திரிகைகளில் பத்தி பத்தியாக எழுதியும், வெள்ளைய ஏகாதிபத்தியத்தின் பாசிசப் போக்கைக் கண்டித்தவர்கள், ஆட்சிப்பீடமேறியதும், ஆங்கிலேயனே நாணும் படியாக அடக்குமுறைப்பாணங்களை அடிக்கடி அவிழ்த்துவிடும் காட்சிகளை நாம்காணும் போது, இந்த எதேச்சாதிகாரம் எந்த அளவிற்குச்செல்லுமோ என்பதை எண்ணும்போது, நல்லாட்சி மலர வேண்டும், நாடு செழிக்கவேண்டும், வாழ்க்கை வளமாகவேண்டும், என்று விரும்புகின்ற நமக்குக் கவலை தவிர வேறு என்ன இருக்கமுடியும்?

திராவிட வாலிபர்களில் குறிப்பாக மாணவர்களில் "திராவிடநாடு" இதழால், எவ்வளவு பயன் பெறுகிறார்கள் என்பது நாடறிந்த செய்தியாகும். அறிவு செறிந்த கட்டுரைகள், ஆணித்திறமான அரசியல் அபிப்பிராயங்கள், கருத்தோவியங்கள், காவியவர்ணனைகள், சிந்திக்கத் தூண்டும்சிறுகதைகள், வாழ்க்கைவரலாறுகள், மொழிப் போராட்ட சம்பவங்கள்—ஆகிய இன்னபிற கருத்துக்

(11-ம் பக்கம் பார்க்க)

மவுண்ட்ரோட் ✶ பெருமானுக்கு அர்ச்சனைகள்!

அறிவையும், செய்கையையும் விற்பது!

அதிக வருமானம் அடைவது!

விளம்பரம் பல போடுவது!

கொள்ளை லாபம் அடிப்பது!

மாதம், மூன்று லட்சம் ரூபா விளம்பரத்தில் மட்டும் பெறுவது!

மக்களின் ஆதரவு என்றும் உண்டு என்று கனவு காண்பது!

விளம்பர வரி கொடுக்க மறுப்பது!

வற்புறுத்திக் கேட்டால் மிரட்டுவது!

சர்க்காரை என்றுமே ஆதரித்து வராதது!

சர்க்காரைக் கவிழ்க்க ஆசைப்படுவது!

சர்க்கார் கவிழ்ந்தால் ஆனந்தப்படுவது!

இந்த அர்ச்சனைகள் இப்பொழுது வழங்கப்பட்டுள்ளன. யாரால் யாருக்கு வழங்கப்பட்டுள்ளன? அறிய ஆவல் பிறக்கத்தானே செய்கிறது!

யாருக்கு இந்த அர்ச்சனைகள்? மீண்டுங் கேட்கத் தூண்டுகிறது, அல்லவா! திராவிடர் கழகத்துக்கு இருக்குமோ? அதற்கு, மாதம் மூன்று லட்ச ரூபாய் விளம்பரத்தின் மூலம் வரும்படி எது! யாதேனும் கள்ளமார்க்கட் கொள்ளைக்காரர் ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட்டதாகுமோ? அத்தகைய ஸ்தாபனம்தான் வரி கொடுக்க மறுக்காதே! ஏதேனும் தொழிலாளர் கூட்டத்திற்கு 'அன்புடன்' அளித்த அர்ச்சனைகளோ? சர்க்காரை மிரட்டுவதால் தனக்கு எதும் பலன் கிடைக்காது என்பதைத்தான் அது நன்கு அறிந்திருக்கிறதே! பின் எதற்கு அளிக்கப்பட்ட அர்ச்சனைகள் இவை? பொறுங்கள், கூறிவிடுகிறேன். திருமாலின் சங்கு நடுவிடத்தும், யானையும், காமதேனுவும் இருபுறத்தும் அமைய, குறி தரித்துக் கொண்டு, நாள்தோறும், ஊர்தோறும், நாட்டில் வலம் வந்து கொண்டிருக்கும்; மாடி வீடுடையான்—மஞ்சள் சுவர்தானுடையான்—வழியிரண்டுடையான்—வண்ணக் கோலநலமுடையான்—நாறுங் கூவங் கரையகத்தான்—கூறிடும் விருந்து மாளிகை எதிருடையான்—ஊதும் சங்கு உள்ளுடையான் — சுற்றும் சக்கரப் பொறிகளுடையான்—மவுண்ட் ரோடு வாழ் பெம்மானாகிய 'இந்து'வுக்கு வழங்கப்படும் அர்ச்சனைகளே மேலே குறிக்கப்பட்டவை!

யார் இந்த அர்ச்சனைகளை வழங்குபவர்? கருப்புச் சட்டையினரா? இல்லை! செஞ்சட்டையினரா? இல்லை! இவர்களுக் கெல்லாம், பெம்மானை வழிபடும் 'பெரு வழக்கம்' இருந்ததில்லையே! கதருடை அணிந்து நாட்டைக் காத்துவரும் சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களே. இவ்வர்ச்சனைகளை வாரியிறைத்திருக்கும் 'பக்தகோடி'யாவார்! நெல்லையம்பதியிலே நின்று, மவுண்ட்ரோடிலுள்ள 'இந்துப்' பெம்மானையும், அப்பெம்மானைச் சார்ந்து மவுண்ட்ரோடிலேயே வதிந்து வரும் சில உப பெருமாள்களையும் சேர்த்து 'அர்ச்சனை' புரிந்துள்ளார் பிரதமர் குமாரசாமி ராஜா.

பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களின்மீது, பத்துச் சத விகிதம் வரிவிதிக்கப் போவதாகச் சென்னை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பேரில், சென்னை மவுண்ட்ரோடிலுள்ள 'இந்து'ப் பத்திரிகை அலுவலகத்தில், பத்திரிகை முதலாளிகள் பலரும் கூடி, மந்திரிகள்—சட்டசபை அங்கத்தினர்கள் முதலியவர்களுடைய சொற்பொழிவுகளை, விளம்பர வரி விதிப்புக்கு எதிர் நடவடிக்கையாகத் தாங்கள் இனிப் பிரசுரிக்கப் போவதில்லை என்று அரசாங்கத்தை மிரட்டும் முறையில் அவர்கள் செய்த தீர்மானத்தை யாவரும் அறிவார்கள். அந்த மிரட்டல் தீர்மானத்திற்குவிடையிறுக்கும் முறையில்தான் நெல்லைப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது, பிரதமர் தோழர் ராஜா சற்று நெஞ்சுத் துணிவுடன் சில மொழிந்துள்ளார்.

பல்வேறு தொழில்களையும் முதலாளிகள் பலரும் கைப்பற்றிக் கொண்டு, அவ்வத் தொழிற்றுறைகளில் ஏகபோக வல்லரசாட்சி நடத்திக், கொள்ளை லாபத்தை எப்படியிட்டு வருவது போலவே, இங்கு பத்திரிகைத்தொழில்களைச் ஒரு சிறு கூட்டத்தார் கைப்பற்றிக் கொண்டு, நாளடைவில் பெரும் முதலாளிகளாகி, இன்று தனியாட்சி நடத்திக் கொண்டு, குறையாக் கொள்ளை லாபத்தை விளம்பரங்களின் மூலம் கொட்டிக்கொண்டு வருகின்றனர். மற்றைய துறைகளிலுள்ள பெரும் முதலாளிகளுக்கு வரி விதித்து அரசாங்கத்தின் பற்றுக்குறையை நிறைவேற்றிக்கொள்ள முயலுவது போலவே, பத்திரிகை முதலாளிகளுக்கும் வரி விதிக்கச் சென்னை அரசாங்கம் முனைந்திருப்பது போற்றுதற்குரிய தொன்றாகும். காரணம் இதுவரையில் வரிகொடாமலே தப்பித்து வாழும் முதலாளியினம் அது.

உணர்ச்சி வயப்பட்டு, நாட்டின் மக்களுள்ளத்தில் எழுச்சி யூட்ட வேண்டிக் கிளம்பியிருக்கும் பல சிறிய பத்திரிகைகள் விளம்பரங்களுக்காகத் தம் வாழ்வை நடத்துவதில்லை; என்றாலும் தானாகக் கிடைக்கும் சில விளம்பரங்களையாவது

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 19—6—49 [காஞ்சி

கல்கத்தா கற்பிக்கும் பாடம்

✲

மேற்கு வங்க சட்டசபைக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தென் கல்கத்தா தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியுற்றது; எதிர்க்கட்சி வென்றது!

காங்கிரஸுக்கும்—சமதர்மக் குடியரசுக் கட்சிக்கும் போட்டி—பலமான போட்டி—நாட்டு மக்களின் கவனமெல்லாவற்றையும் ஈர்த்து நின்ற போட்டி—பலாத்காரம் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு முற்றி நின்ற போட்டி! காங்கிரஸ் கவிழ்ந்தது; சமதர்மக் குடியரசுக் கட்சி மீண்டது!

காங்கிரஸின் சார்பாகத் தோழர் சுரேஷ்சந்திரதாஸ்—குடியரசுக் கட்சியின் சார்பாகத் தோழர் சரத் சந்திர போஸ்! தாஸுக்குக் கிடைத்த வாக்குறுதிச் சீட்டுக்கள் 5780; போஸுக்குக் கிடைத்தவை 19030. போஸ் 13250 சீட்டுக்கள் அதிகம் பெற்றார்; எனவே வென்றார்!

காங்கிரஸின் செல்வாக்கு எந்த அளவுக்குக் கரைந்து வருகிறது என்பதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அண்மையில் பம்பாயில் நடைபெற்ற, தேர்தலிலும், நாடாளும் கட்சியான காங்கிரஸின் சார்பாக நின்ற உறுப்பினர் தோற்றார்; அவரை எதிர்த்து நின்ற சோஷியலிஸ்ட் கட்சித் தோழர் வென்றார். அந்த முடிவே காங்கிரஸ் கோட்டைக்கு நல்லதொரு அதிர்ச்சியைக் கொடுத்தது.

கல்கத்தா முடிவு காங்கிரஸ் கோட்டையின் மீது விழுந்த பேரிடியெனக் காங்கிரஸ் கனதனவான்களுக்குக் காணப்படும் என்பதில் ஐயமில்லை. என்னவோ, காங்கிரஸின் கோட்டை கரைகிறது என்பது மட்டும் திட்டவட்டமாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் நடைபெற்ற சாதாரண இடைக்கால உபதேர்தல் என்ற அளவில் நிறுத்தப்படவில்லை. அகில இந்திய பிரச்சினையாக அது ஆக்கப்பட்டுக் காங்கிரஸ்காரர்களால் ஆர்ப்பரிக்கப்பட்டது. காங்கிரசின் சார்பாக நின்ற தோழர் தாஸுக்கு வங்க அரசாங்கத்தின் அணைப்பு—அகில இந்திய அரசாங்கத்தின் ஆறுதல்—பண்டித நேருவின் அறிக்கை—சர்தார் படேலின் உறுதிமொழி—பட்டாபி சீத்தாராமய்யாவின் பக்கத்துணை—காளா வெங்கட்ராவின் தூண்டுதல்—திருமதி சுசேதா கிருபளானியின் பவனி—திருமதி ரேணுகாராயின் பார்வை—எழுதுகோல் வீரர்களின் ஒத்துழைப்பு ஆகிய இவையெல்லாம் களம் ஏந்திச் செல்லும் ஆயுதங்களாகப் பயன்பட்டன. போஸின் செல்வாக்கை அழிக்கவும், தாஸின் செல்வாக்குக்கு அதாவது காங்கிரஸின் செல்வாக்குக்கு ஆதரவு தரவுமே இவ்வாயுதங்களெல்லாம் கிளப்பி விடப்பட்டன. என்றாலும் போஸ் வெற்றிபெற்றார்!—காங்கிரஸுக்குக் கிடைத்த உதவித் தளவாடங்கள் எதும் கிடைக்கப்பெறாமலே வெற்றி பெற்றார்! இது எதனைக் காட்டுகிறது? காங்கிரஸ் கரையும் தன்மையை அல்லவா!

விடுதலைப் போராட்டத்தை நடத்திய 'வீராப்பை' வைத்துக் கொண்டே என்றென்றும், தன்னிச்சைப்படியே வெற்றிப்பாதையில் போய்க் கொண்டிருக்க முடியும் என்று காங்கிரஸ் எண்ணுகிறது போலும்! அன்று காங்கிரஸ் தலைவர்களை வரவேற்று, வாழ்த்துக் கூறி, வணங்கி நின்ற அதே வங்க மக்கள் இன்று "காறி உமிழ்"வானேன். ஒரு காலத்தில் அன்பினால் வரவேற்கப்பட்ட திருமதி சுசேதா கிருபளானியின் மீது "காறி உமிழவும்"—"சேற்றை வாரியிறைக்கவும்"—"காலால் உதைக்க முற்படவும்—" "பெண்களைக் கொலைசெய்த மந்திரி சபைக்கு உதவி செய்யாதே", "வங்கத்தை விட்டு வெளியேறு," "நவகாளிக்குத் திருப்பிப் போ" என்ற ஒலிகளை முழங்கவும் பொதுமக்கள் முற்பட்டார்களென்றால் காங்கிரசின் செல்வாக்கு எந்த அளவுக்குக் கரைந்தோடிப் போகிறது என்பது புலப்படவில்லையா?

கல்கத்தா தேர்தல் காங்கிரஸ்காரர்களுக்கு நல்லதொரு பாடம்! நாட்டுக்கு நல்லவை செய்வதன் மூலமே மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியுமே யல்லாது, விடுதலைப் போராட்டத்தால் அடைந்த பலத்தைக் கொண்டு மேலும் மேலும் வீராப்புப் பேசி வீண்காலம் கழிப்பதால் ஒன்றும் முடியாது. இன்றைய காங்கிரசின் போக்கு இனியும் தொடர்ந்தால் பலம் குறையும், 'விடுதலை வீராப்பு'ப் பயன் தராது என்பதை ஆளவந்தார்களுக்குக் கல்கத்தா தேர்தல் உணர்த்திவிட்டது. கல்கத்தா தேர்தல் கற்பிக்கும் பாடத்தால் காங்கிரஸ் இனியேனும் தன் நிலையை உணருமா?

கடமை உணர்ச்சி கண்டு மகிழ்கிறோம்

●

"விடுதலை"க்கு ரூ. 10,000-0-0 ஜாமீனும், "திராவிடநாடு"க்கு ரூ. 3000-0-0 ஜாமீனும் கட்டியாக வேண்டும்என்று சென்னை அரசாங்கம் அடக்குமுறைப் பாணத்தை ஏவியிருப்பதுகண்டு, கழகத்தவரல்லாத வேறுசிலரும் தங்கள் கடமையுணர்ச்சியை உணர்ந்து, நேர்மை வழி நின்று, அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்க முன்வந்தது குறித்து நாம் மகிழ்கிறோம். அவர்களைப் பாராட்டுகிறோம்.

"சண்டே அப்சர்வர்" ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் சர்க்காரின் போக்கைக் கண்டிப்பதோடு, அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மாநாட்டுத் தலைவர் தோழர் சி. ஆர் சீனிவாசன் சர்க்காரிடம் இப்பிரச்சினையை எழுப்பி நியாயம் கேட்கவேண்டும் என்றும், நகரப் பத்திரிகைகளனைத்தினுடையவும் ஆசிரியர்கள் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்து, இவ் விஷயத்தைப்பற்றி ஆலோசித்துத் தக்க முடிவு செய்யவேண்டும் என்றும் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார்.

"தினசரி" ஆசிரியர், 14-6-49-ம் நாள் "ஜாமீன் கொடுமீடி" என்ற தலையங்கத்தின்கீழ், சர்க்காரின்

போக்கைக் கண்டித்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். "சுயராஜ்ய சர்க்காருக்கும் அந்நிய சர்க்காருக்கும் உள்ள வித்தியாசத்தை யார் முதலில் உணரவேண்டுமோ அவர்கள் இன்னும் உணராமலிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது ....தமிழ் நாட்டின் பத்திரிகை உலக சரித்திரத்திலேயே இதுவரை எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு அதிகமான ஜாமீன் தொகை கேட்டதில்லை. சரித்திரமேகண்டிராத இந்தச் சாதனையைத்தான் இப்பொழுது நம் சுயராஜ்ய சர்க்கார் சாதித்திருக்கிறார்கள்...........சர்க்காரோ தலைபோகிற அவசரத்தில் ரூ. 10000 கொண்டா என்று கழுத்தில் துண்டைப்போட்டு இழுத்திருக்கிறார்கள். இந்தக் கெடுபிடியில் பொறுப்புணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை......தங்கள் அதிகாரம் எதுவேண்டுமானாலும் செய்யுமென்ற எண்ணம்தான் இதில் தெரிகிறது ......இம்மாதிரியான ஞான சூன்யங்கள் (சில பிரகஸ்பதிகள்) உழப்பி அடிப்பதுதான் காங்கிரசுக்கும், சுயராஜ்ய சர்க்காருக்கும் கெட்ட பெயரை வாங்கித்தருகிறது.......... எனவே பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அகில இந்திய பத்திரிகாசிரிய மகாநாடும், சங்கங்களும், பெடரேஷன்களும் இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். இந்த உத்தரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்" என்று "தினசரி" ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"எங்கள் நாடு" ஆசிரியரும் 14-6-49-ல் சர்க்காரின் போக்குப் பற்றிக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருப்பது கண்டு பாராட்டுகிறோம்.

✲

மவுண்ரோட்

7-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றுக் கொண்டால்தான், மக்களுக்கு எளிய முறையில் பணியாற்ற முடியும் என்ற நிலையிலுள்ளவைகளாகவே அவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு விளம்பர வரி விதிக்கப்படுமாயின், பத்திரிகையின் வாழ்வே பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படக்கூடும். அந்த நிலையிலுள்ளவர்கள், வரி விதிக்க முற்படும் அரசாங்கத்தின் போக்குக் கண்டு வருந்தச் செய்வார்கள் என்பதும் உண்மை.

> "சிறிய பத்திரிகைகளின் கஷ்டங்களை நான் உணர்ந்துகொள்ள முடியும். அவைகளுக்கு உதவியளிக்க நான் விரும்புகிறேன்."

என்று பிரதமர் ராஜா கூறுவதைக் காணும்போது, மேற்கூறிய உண்மையை உணர்ந்து, சிறிய பத்திரிகைகளுக்கு அதாவது குறைந்த அளவு விளம்பர விகித வருமானம் பெறும் பத்திரிகைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமோ என்று எண்ண இடமேற்படுகிறது. அப்படி ஏற்பட்டால்தான் நீதி புரிந்ததாகும்; சட்டமும் முழுமனதுடன் நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக விளங்கும்.

பத்திரிகை உலகில் கொள்ளை இலாபமடித்துவரும், முதலாளிகள் 'ஏதேச்சாதிகார தர்பார்' நடத்திவர இதுவரையில் வசதி ஏற்பட்டிருந்ததால், நாட்டுமக்களுக்கு விதிக்கப்படும் வரிகளைப் பொறுத்து, பொதுமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவலையேயில்லாமல் அரசாங்கத்தின் வரி விதிப்புகளை ஆதரித்தனர். இராசகோபாலாச்சாரியார் அன்றுவிதித்த விற்பனை வரிக்கு ஆதரவு தந்தனர்; எதிர்த்துப் பேசாமல் இருந்தனர்; எதிர்த்துப் பேசியவர்களையும் — பேசிய பத்திரிகைகளையும் கேலி செய்தனர். அதே விற்பனை வரி வளர்ந்து இன்று தங்கள் மடியில் கையை வைக்க வரும்போது சீறிக் குதிக்கின்றனர். இந்தப் பத்திரிகை முதலாளிகளெல்லாம் வரிகொடுக்கத் தாளாதவர்களா? மாதம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் கொள்ளையிடுகின்றனர் விளம்பர விகிதத்தின் மூலம். அந்தக் கொள்ளையில் ஒரு பகுதியை வரவு செலவுத் துண்டுவிழும் அரசாங்கத்திற்குக் கொடுத்தால் என்ன? கொடுத்தால் என்ன குடிமூழ்கிப் போய்விடும்? சிறிது ஆடம்பரமும்—சிறிது அகம்பாவமும் இதனால் குறையலாமே தவிர, இவர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டிருக்கும் நலன்கள், எவ்வகையில் குறைந்துவிடும்? தங்களுடைய முதலாளித்வப் போக்கிற்குச் சிறிதளவும் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கூக்குரலிட்டுக் கொக்கரிக்கின்றன, 'இந்து'வும், 'சுதேசமித்திரனு'ம், அவையன்ன பிறவும்.

> "சிலபத்திரிகைகள் ஏராளமாக இலாபம் சம்பாதிக்கின்றன. ஒரு பத்திரிகை மட்டும், விளம்பரங்கள் மூலம், மாதம் ரூ 3 இலட்சம் சம்பாதிக்கிறது. அதன் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. எந்தப் பத்திரிகையை நான் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் சுலபமாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்தப் பத்திரிகையின் ஆட்சேபம்தான் பிரமாதமாக இருந்தது"

என்று பிரதமர், 9—6—49ம் நாள் நெல்லையில் நடைபெற்ற அந்தப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். மேலே அவர் குறிப்பிட்டுள்ளது, 'இந்து'ப் பத்திரிகையைத்தான் மறைமுகமாகக் குறிக்கின்றன என்பதை அனைவரும் எளிதில் அறிந்துகொள்ளலாகும்.

காங்கிரஸை இதுவரையிலும் ஆதரித்து வரும் பத்திரிகைகளாயிற்றே என்பதையும் கருதாமல், அவைகள் இப்பொழுதுமேற்கொண்டிருக்கும் பிற்போக்குத் தன்மை கண்டு வெகுண்டெழுந்த பிரதமர் ராஜா அவர்கள், சற்றுக் காரசாரமான சொற்களால் அப்பத்திரிகைகளின் உண்மையான நோக்கத்தை வெளியிட்டுவிட்டார். "அறிவையும், செய்கையையும் விற்று ஏராளமாக இலாபம் சம்பாதித்துள்ள பத்திரிகைகள், இந்த வரி விதிப்பை எதிர்ப்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்று இடித்துரைக்கிறார். "இப்பத்திரிகைகள் இவ்வளவு இலாபம் சம்பாதிப்பது எப்படி நியாயமாகும்" என்று கேட்கிறார், இதுவரையில் ஏற்படாத துணிவுடன், "விளம்பரங்கள் மீது வரி விதிப்பது தங்களைப் பாதிக்கும் என்றால், அவர்கள் கூறுவதை நான் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று சவாலும் விட்டிருக்கிறார். மவுண்ட்ரோடு 'பெம்மான்கள்' இந்தச்சவாலை எற்றுத் தம் நிலைகளை விளக்குவதுதானே. ஏன் இன்னமும் மௌனம் சாதிக்கின்றன.

பத்திரிகை உலகில் காட்டாட்சி நடத்திவந்த இந்தச்சிறு முதலாளிக் கூட்டம், அரசாங்கத்தை அடிக்கடி

மிரட்டித் தங்கள் காரியத்தைச் சாதித்து வந்திருக்கின்றன. இனியும் சாதித்து வரும் என்றாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. பத்திரிகை முதலாளிகளின் சுட்டுவிரலசைவிற்கு அரசாங்கமும் கூட அடிக்கடி அசைவு கொடுத்துக்கொண்டு, அதன் போக்குப்படிச் செயலாற்றி வந்திருக்கிறது. இந்தப் பத்திரிகை முதலாளிகள் தங்கள் கொள்கைக்கு மாறுபட்டு விளங்கும் எத்தனையோ சிறிய பத்திரிகைகளை, அரசாங்கத்தின் உதவிகொண்டு தலை எடுக்கவொட்டாமல் செய்திருக்கின்றன; அழித்தொழித்திருக்கின்றன; சிதைத்துச் சீரழித்து வந்திருக்கின்றன; இன்னும் எத்தனையோ சீரிய நல்ல பத்திரிகைகளையெல்லாம் அழித்தொழிக்கும்படியாக அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறிவருகின்றன. தம் இன நலன்களுக்கு உலைவைக்கக் கூடிய சிறந்த காவியங்களையும், கதைகளையும், கட்டுரைக் கோவைகளையும், நாடகங்களையும் பறிமுதல் செய்துவிடும்படி அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து வந்திருக்கின்றன. இவ்வளவு கேடுகளையும் புரிந்து, விளம்பரங்களையெல்லாம் தமக்கே கிடைக்கும்படியாகச்செய்து கொண்டு, அவற்றினால் வரும் கொள்ளை இலாபத்தை முழுவதும் ஏப்பமிட்டுக்கொண்டு வருகின்றன. அப்படி ஏப்பமிடும் பொருளிலே ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடு என்றால், 'இந்து'வுக்கும், 'சுதேசமித்திரனு'க்கும் வயிறு பற்றிக்கொண்டு எரிகிறது. ஏழைகளின் தலைமீது விற்பனைவரி விதிக்கும் போதெல்லாம் ஆதரித்து இருந்துவிட்டு, இப்பொழுது அந்த வரி தம்மீது பாயவரும்போது, அரசாங்கத்தின் மீது சிறத்தலைப்படுகின்றன.

பத்திரிகையின் சீறுதல்களுக்குப் பல சமயங்களிலே, அரசாங்கம் படிந்து கொடுத்துவந்துள்ளது. அதனை நினைவில் வைத்துக்கொண்டு இப்பொழுதும் சீறுகின்றன; மிரட்டிப் பார்க்கின்றன. பத்திரிகை முதலாளிகளின் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில், நிதிமந்திரி, கோபால் ரெட்டியார், பத்திரிகைகளுக்குச் சலுகை காட்ட நாங்கள் தயங்க மாட்டோம் என்றும், பத்திரிகைகள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாதென்றும் அஞ்சிப் பணிந்துதான் கேட்டு கொண்டுள்ளார். பிரதமர் குமாரசாமி ராஜாவும் தமக்குப் படிந்துவிடுவார் என்றே, பத்திரிகை முதலாளிக்கூட்டம் எண்ணியிருந்திருக்கிறது. ஆனால் பிரதமர், வழக்கத்திற்கு மாறாக, பத்திரிகைகளின் மிரட்டலுக்குப் பயப்படாமல், பாராட்டத்தக்க வகையில், பத்திரிகை முதலாளிக் கூட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் முதலியோருடைய பிரசங்கங்களை, விளம்பரவரி விதிப்புக்கு எதிர் நடவடிக்கையாக அவர்கள் பிரசுரிப்பதில்லையென்றால், நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பது சர்க்காருக்குத் தெரியும். முதலாவதாக, எல்லாச் செய்திகளையும் ரேடியோ மூலம் வெளியிட முடியுமாதலால்பொது மக்கள் செய்தியின்றித் தவிக்க மாட்டார்கள். இரண்டாவதாகப் பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்கும்பொதுமக்கள்,மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்களின் பிரசங்கங்கள் பிரசுரமாகாத பத்திரிகைகளை வாங்காமலிருந்து விடுவார்கள். பிரசுரிக்காத பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கும் படி பொதுமக்களை வேண்டிக்கொள்ள நான் கொஞ்சமும் தயங்கமாட்டேன். இம்மாதிரி மனப்போக்கைத் தாங்கள் ஆதரிக்க முடியாதென்று பொதுமக்கள் இப்பொழுதே கூறவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இது அவர்களுக்கு நல்ல படிப்பினையாகவும் இருக்கும்"

என்று பிரதமர் பத்திரிகை முதலாளிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதோடு, பொதுமக்களுக்கு வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

சிறிய பத்திரிகைகளுக்குச்சலுகை காட்டி, விளம்பரக் கொள்ளையடிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பர வரி விதிக்கச் சென்னை அரசாங்கம் முற்படுமேயானால் பொதுமக்களின் ஆதரவு, அந்த அளவுக்கு. அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் எடுத்த இந்த அவசியமான செயலில் சிறிது தளர்ச்சி ஏற்படுமேயானால், அப்பொழுது பொதுமக்கள் பரிகசிக்கத்தான் செய்வர். பொதுமக்களின் ஆதரவு இந்த வகையில் உறுதியாக உண்டு என்பதைப் பிரதமர் ராஜா உணர்ந்துகொள்ளவேண்டும். பொது மக்கள் இந்த வரியை ஆதரிக்காவிட்டால், தாம் ராஜினாமா செய்யக்கூடத் தயார் என்று சூளுரை கூறியதிலிருந்து, பொதுமக்களின் ஆதரவு இதற்கு இருக்கிறது என்பதை அவர் உணர்ந்துகொண்டார் என்றே தெரிகிறது.

கொள்ளை லாபமடிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரவரி விதிப்பது முறைதான் என்று வாதாடுகிறோமேயல்லாது, அரசாங்கம் ஏற்படுத்தும் எல்லாவரிகளும் சரியானதே என்று இங்குநாம் வாதாடவில்லை.

வரவு — செலவுத்திட்டத்தில் துண்டுவிழுவதை விளம்பரவரிமூலம் ஓரளவுக்கு நிறைவு படுத்திக்கொள்வதை நாடு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. மற்றவரிகளைத் தனித்தனியாக ஆராய்ந்து சரியானதென்றால் ஏற்றுக்கொள்ளவும், அநீதியுடையதானால் அதனைக் கண்டிக்கவும் முற்படவேண்டும். அந்த முறைப்படி இந்த விளம்பரவரி ஏற்றுக் கொள்ளக்கூடியவொன்றேயாகும்.

'மவுண்ட்ரோடு பெருமானுக்கு' பிரதமர் ராஜா வழங்கியிருக்கும் 'அர்ச்சனைகளை', நாடு அறிந்து இனியேனும் உண்மைநிலை தெரிந்து, நல்ல பாடத்தை அப் 'பெருமானுக்கு'க் கற்பிக்குமாக!

முதலாண்டு
நிறைவு இதழ்!
எரிமலை
By
A. K. வேலன்.
25-6-49-ல் வெளிவருகிறது.
விலை அணா 2.
செந்தமிழ்ப் பாசறை,
கரந்தை — தஞ்சை.

6-ம் பக்கத் தொடர்ச்சி

கோர்வைகளை "திராவிடநாடு" இதழைத்தவிர வேறு எந்த இதழ் தீந்தமிழில் தருகிறது?

அந்த அளவிற்கு வாலிபர்களுக்கும் மாணவர்களுக்கும் அரிய சாதனமாயுள்ள "திராவிடநாடு" அரசாங்கத்தார் கண்ணுக்குப் பிடிக்கவில்லைப் போலும்! எனவேதான் 'எடு ரூ. 3000. என்றனர். இந்தக் கொடிய அடக்குமுறை, அதனை வீசிய அரசாங்கம் பாசிசப் பாதையில் விரைவில் நடந்து செல்கிறது. அதன் விளைவே ரூ. 3000. வாலிபர்கள், மாணவர்கள் என் எல்லோருமே, மக்களுக்காக அயராது உழைக்கும் "திராவிட நாடு" இதழுக்கு அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள இந்த ஆபத்து நேரத்தில் தோள் கொடுத்து உதவுவார்கள் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

என்னாலான சிறு தொகை ரூ 5. எனது அன்புக் காணிக்கையாக அனுப்புகிறேன். ஆட்சியாளர் வீசிய இந்தப் பாணத்திலிருந்து "திராவிட நாடு" மீண்டு, இன்பத் திராவிடம் காண மேலும் மேலும் வெற்றி பெற்று உழைக்குமாக. வெல்க திராவிடம்!

அன்பன்
இரெ. இளம்வழுதி,
குறிஞ்சிப்பாடி.

✻

T. SHUNMUGAM,
EX-PRESIDENT
Chingleput Dist, Board.

TIRUVOTTIYOOR,
MADRAS.
15—6—49

அன்புமிக்க அண்ணா, அவர்களுக்கு வணக்கம்.

இத்துடன் செக் ரூ. 100. அனுப்பியுள்ளேன். தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

உடனே கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யவும். கொஞ்சமும் தாமதிக்கக் கூடாது.

T. சண்முகம்.

வெற்றி நமதே.

✻

நன்கொடை தந்துதவிய அன்பர்கள்

சென்றவார வரவு	650—0—0
கே. கரியபெருமாள், கும்பகோணம்	1—0—0
குமரன் & கோ, காஞ்சிபுரம்	50—0—0
ஆர். ஆர். இராமமூர்த்தி, மதுரை	3—0—0
வி. சவுரிராசன், தஞ்சாவூர்	5—0—0
பி. எஸ். கே. சன்ஸ் பணியாட்கள், காஞ்சி	21—0—0
மே. க. கோ. பொதுக்கூட்ட வசூல்	11—2—7
,, ப. பஞ்சாபகேசன்	1—0—0
,, என். ஒ. பொன்னுசாமி	1—0—0
வி. கந்தசாமி, கலிகட்	2—0—0
என். இராமசாமி & அங்கப்பன், கருவனூர்	1—0—0
வி. சு. காமாட்சி, நாகல் நகர்	1—0—0
அ. ல. முத்தய்யா, திருவையாறு	1—0—0
எ. சி. நாயுடு, கும்பகோணம்	1—0—0
கே. இராமநாதன், சேலம்	3—0—0
S. S. N. புருஷோத்தமன், கொமாரபாளயம்	10—0—0
எஸ். டி. சிதம்பரம், கோயமுத்தூர்	2—0—0
எம். சுவாமியப்பன் ,,	10—0—0
வி. கன்னய்யா, ஆரணி	5—0—0
பி. சுந்தரம், மதுரை	5—0—0
ர. து. சுகுணன், பெங்களூர்	5—0—0
எஸ். கே. சம்பந்தம், குறிஞ்சிப்பாடி	100—0—0
எஸ். இரேஜேஸ்வரி அம்மையார், சென்னை	10—0—0
எம். நமசிவாயம், சென்னை	10—0—0
எம். எஸ். எம். மொய்தீன், சென்னை	10—0—0
திராவிடப் பண்ணை, திருச்சி	111—0—0
எஸ். வி. இலிங்கம், திருச்சி	10—0—0
எல். மயிலானந்தன், திருச்சி	2—0—0
கு. ச. த. சங்கர சதாசிவம், குளத்தூர்	3—0—0
கே. மாரியப்பன், நீலகிரி	1—0—0
டி. பி. சிங்காரம், நீலகிரி	1—0—0
எஸ். அப்பாவு, ஈரோடு	5—0—0
பி. பாலசுந்தரம், கோயமுத்தூர்	2—0—0
கே. கே. நீலமேகம், கும்பகோணம்	25—0—0
கு. மாணிக்கம், பூந்தோட்டம்.	2—0—0
வி. சி. மணிவண்ணன், வேலூர்.	4—0—0
கருணை எம். ஜமால், திருவாரூர்.	5—0—0
அ. அலமேலு அம்மையார், சென்னை.	20—0—0
து. ம. வானமாமலை, திருச்சி.	3—0—0
ஆர். சோமசுந்தரம், நன்னிலம்.	1—0—0
இரா. கஜேந்திரன், விழுப்புரம்.	5—0—0
எ. பழனியப்பன், விழுப்புரம்.	5—0—0
நகைசுவைஅரசர் என்.எஸ்.கே. சென்னை.	251—0—0
பி. ஸ்டாலின், சென்னை.	100—0—0
இராம. சின்னய்யா, திருமயம்.	100—0—0
வி. டி. பெரியசாமி, சென்னை.	25—0—0
பி. பழனிச்சாமி, பெத்தாம்பாளயம்.	50—0—0
எஸ். எம். சாமி, சாலவாக்கம்.	1—0—0
இரெ. இளம்வழுதி, குறிஞ்சிப்பாடி.	5—0—0
கே. ஜெம்புலிங்கம், திருசிராப்பள்ளி.	1—0—0
தி. பா. சீனுவாசன், சேலம்.	1—2—0
எஸ். எ. இராசமாணிக்கம், கோயமுத்தூர்.	2—0—0
வி. சி. வேலாயுதம், பெங்களூர்.	1—0—0
டி. என். கோவிந்தராசன், திருசிராப்பள்ளி.	1—0—0
ஆர். திருஞானசம்பந்தம், மாயவரம்.	1—0—0
ஆர். அப்துல் மஜீத், நீடூர்,	5—0—0
வி. ஜெயராமன், திருவெண்காடு.	1—0—0
எம். ஆர். செல்லப்பா, மேலப்பாலூர்.	2—0—0
டி. சண்முகம், திருவொற்றியூர்.	100—0—0
பி. ஆர். பொன்னுசாமி, கும்பகோணம்.	50—0—0
திராவிடன் பதிப்பகம், வேலூர் N. A.	10—0—0
எம். எஸ். கன்னியப்பன், காஞ்சிபுரம்	10—0—0
எஸ். சிவப்பிரகாசம் ,,	2—0—0
வி. ஆர். முத்தியாலு ,,	5—0—0
எல். கே. மூர்த்தி ,,	2—0—0
ஈ. கே. மூர்த்தி ,,	2—0—0

வி. பரமசிவம்	”	2—0—0
எம். நாகராசன்	”	2—0—0
சி. என். இராமசந்திரன்	”	2—0—0
ஆர். பாலசுப்பிரமணியம்	”	2—0—0
தர்மாபாய்-கோயில்பிள்ளை, தேவகோட்டை		15—0—0
என். ஆர். சேகர், கோட்டக்குப்பம்.		2—0—0
பி. பி. செல்லையா, புதியம்புதூர்.		1—0—0
எஸ். பெருமாள், புதுச்சேரி.		25—0—0
ஆர். முனுசாமி, மயிலாப்பூர்.		2—0—0
எஸ். எம். இராமநாதன், சிறுகுடி.		25—0 0
எஸ். ஜனார்த்தனம், கரியமாணிக்கம்.		5—0—0
பி. வி. மாயன், பாம்பே.		2—0—0
எம். கே. கோவிந்தராசபாகவதர், திருச்சி		20—0—0
கே. சங்கரன், சிரங்கம்.		3—8—0
திராவிடர் கழகம், வேலூர். N. A.		25—0—0
பி. எ. பொன்னுரங்கம், வேலூர்.		2—0—0
ஜுபிட்டர் பிக்ஸர்ஸ், கோயமுத்தூர்.		500 - 0—0
நேஷனல் பிக்ஸர்ஸ், வேலூர்.		500—0—0
க. த. சு. மணி, காஞ்சிபுரம்.		5—0—0
வெ. சம்பந்தன்,	”	5—0—0
சி. இராசாபாதர்,	”	3—0—0
	ஆக மொத்தம்	3000—12—7

எனது நன்றி

—✻—

அரசியலார், "திராவிட நாடு" இதழின் மீது தங்கள் அடக்குமுறைப் பாணத்தை ஏவ, ரூபாய் மூவாயிரம் ஜாமீன் கட்டுமாறு கட்டளை பிறப்பித்ததை, இது "திரா விட நாடு" இதழின் மீது மட்டும் ஏவப்பட்ட பாணமல்ல, திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவர் மீதுமே ஏவப் பட்ட பாணம் என்பதை எடுத்துக்காட்டும் முறையில், அரசாங்கத்தின் அடக்குமுறைக் காணிக்கையாக. அவர் களால் கோரப்பட்ட ரூபா 3000 - 0 - 0 யும் அன்பர்கள் தந்துதவியுள்ளார்கள்.

ஜாமீன் தொகை கட்ட ரூபாய் மூவாயிரம் தேவை யென்று வேண்டுகோள்விட்ட ஒருவாரத்துக்குள்ளாகவே குறிப்பிட்ட தொகை சேர்ந்துவிட்டது.

அரசியலாரின் அறைகூவலை ஏற்று, அன்புடன் உதவி செய்து ஆதரித்த அனைவருக்கும் எனது நன்றி யறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஜாமீன் கட்டுவதற்காகக் குறிப்பிடப்பட்ட தொகை கிடைத்துவிட்டபடியால், இனி, அன்பர்கள் இதற்காகப் பணம் அனுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்வ துடன் மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

காமராஜர் கீதம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

அமைதி தேவை, அமைதி தேவை என்றால் எங்கிருந்து அமைதி உண்டாகும், என்பதனைக் காமராஜர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியே அமைதி ஏற்பட்டால்கூட அதுவுந் தற்காலிகமானதாகவே இருக்குமே யொழிய, நிரந்தரமானதாக இருக்குமா? நாட்டிலே உள்ள வறுமையும், அறியாமையும், குறைகளும், ஊழல்களும், அப்படியே தானிருக்குமெங்களாட்சியில், அதையும் சகித்துக்கொண்டு அமைதியாகத்தானிருக்க வேண்டுமென்று காமராஜர் கருதுகிறாரா?

கடைசியாகக் "காங்கிரசை ஆதரியுங்கள்' என்று காமராஜர் கூறியதிலிருந்தே இது தேர்தல் கீதமென்பது எல்லோருக்கும் எளிதில் புரிந்துவிடும். இந்த ஒரு வார்த்தையோடு அவர் நின்றிருப்பாரானால் நாம் கவலைப்படப் போவதில்லை. ஆனால், "குழப்பத்தை உண்டாக்குகிறார்கள்" என்று கூறுகிறாரே. திராவிடர் கழகம் நாட்டிலே ஏதாவது இதுவரை குழப்பத்தையோ, ஒரு சிறு கலகத்தையோ ஏற்படுத்தியது என்று காமராஜர் தானுகட்டும் மெய்ப்பிப்பாரா? அல்லது பொது மக்கட்குத் தானுகட்டும் திராவிடர் கழகத்தால் இதுவரை ஏதாவதொரு நஷ்டமோ, கஷ்டமோ, ஏற்பட்டது என்று நிரூபிப்பாரா? "தேர்தலில் நின்று ஜெயிக்கட்டும், திராவிடர் கழகம், பதவிக்குவந்து பன்னிரண்டு அவுன்ஸ், அரிசி கொடுக்கட்டும், கோயிலை இடிக்கட்டும், புத்தகத்தைக் கொளுத்தட்டும்," என்று காமராஜரின் (ச)வால் நீளவேண்டிய தேவையில்லை; பொய்க் குறை கூற வேண்டிய அவசியமுமில்லை! திராவிடர் கழகம் இன்றையவரையில் தேர்தலில் கலந்து கொள்ளுவதில்லையென்று முடிவு செய்திருக்கிறது; தேர்தல் முறை இன்று பணத்திற்கும், அதிகாரத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால். இதை அறியாதவர்போல், புலியைப் பூனை போருக்கு அழைப்பது போன்று, கழகத்தைப் பார்த்துக் காமராஜர் சிறிப்பார்க்கிறார்.

மூடநம்பிக்கை

4-ம் பக்கத் தொடர்ச்சி

கூடாதென்ற பழக்கமும் இந்த ஆன்ம சித்தாந்தத்திலிருந்து ஏற்பட்டதாகும். கொள்ளிவைத்தவர்கள் முகம், செத்தவனுடைய ஆன்மாவுக்குத் தெரியுமாதலால், வீட்டுக்கு அவர்கள் திரும்பும் காலை அவர்கள் எரியும் பிணத்தைத் திரும்பிப் பார்க்கும் பட்சத்தில், வேகும் பிணத்தருகே அலைந்து கொண்டிருக்கும் அதன் "ஆன்மப் பேய்" (The soul Hovering near the burning corpse) அவர்களுடன் தொத்திக்கொண்டு, வீட்டுக்கு வரும் என்ற கற்பித பயத்தால் நேர்ந்த பழக்கமென அறிக.

வீட்டுக்கு அருகே வந்தபோதும், வீட்டில் நுழைவதற்கு முன்னும், கால்களைக் கழுவிக்கொண்டு உள் நுழைய வேண்டுமென்ற பழக்கமும், இந்தஆன்மசித்தாந்தத்தைத் தழுவி நிற்கின்றதென்று அறியவும். எப்படியெனில், பேய், பிசாசுகள், தண்ணீரைத் தாண்டாவாம்! இதே காரணத்தை ஒட்டியே தற்காலப் பிராமணர்கள், தாங்கள் சாப்பிடுங் காலை, இலையைச் சுற்றி ஜலம் தெளித்துக் கொண்டு, சாப்பிடுவதுமுண்டு. ஜலத்தைத் தாண்டிக்கொண்டு பேய், பூதங்கள், உண்ணும் உணவை உண்ணுவாம்!!

விடியற் காலங்களில் சாணித் தண்ணீரை வீட்டுக்கு எதிரில் தெளிப்பதும் இதே காரணத்தினால் என அறிக. பாதி இராத்திரி முதல் கதவு சாத்தப்பட்டு நுழைய வழியில்லாமல் வெளியில் இருந்த பேய்; பிசாசுகள்; கதவைத் திறந்தவுடன் உள்நுழையாதிருக்கச் சாணித் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் உண்டாயிருக்கவேண்டும். சாப்பிடும்போது, விளக்கு அவிந்துவிட்டால், உண்ணும் உணவை எடுத்துவிட்டு, நீபமிட்ட பிறகு தண்ணீரைத் தெளித்தும் தனது தலைமேல் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் திரும்ப உண்ணுவது சில இடங்களில் பார்க்கலாம். இதுவும், இந்தப் பேய் கற்பிதத்தால் பழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும். இருட்டில்தான் பேய் பிசாசுகள் உணவை உண்ணுமாம்! விளக்கு அவிந்தவுடன் பேய் பிசாசுகளால் உண்ணும் உணவு தீட்டுப் பட்டு விட்டபடியால் மறுபடியும் அந்த உணவைத் தீண்டத் தகாதென்பதும், விளக்கு ஏற்றியவுடன், பேய் பிசாசுகள் ஓடி விடுமாகையால், அப்போது புதிய உணவை உண்ணலாமென்பதும் ஓர் குயுக்தி என எண்ணவேண்டி யிருக்கிறது.

இவ்வித மூடப் பழக்கங்களெல்லாம், மனிதன் இறந்தபிறகு அவன் "ஆன்மா" வெளியில் உலாவுகின்றது எனற கற்பிதத்தால் வந்தவை. மனிதனுக்குள் ஓர் "ஆன்மா" இருந்து வருகிறது. அந்த "ஆன்மா" பெருவிரல் பருமனுள்ளது. தேகம் மரித்த பின்பு, அந்த "ஆன்மா" செத்தவன் வீட்டுப் பக்கங்களிலும், அடுத்த செடிகளிலும், சுடுகாடுகளிலும் தங்கியிருக்கும். இந்த ஆன்மாக்கள்தான், "பேய்" "பிசாசு"களாக மனிதசஞ்சாரமில்லாத இடங்களில் உலாவிக்கொண்டிருக்கும். இருளிலோ, அல்லது "உருமவேளை"யிலோ (மத்தியானம்) "ஒண்டி சண்டியாக" (தனிமையாக) யாதாமொருவன் தனித்த இடங்களில் போவானேயாகில், அவனை இந்தப் பேய், பிசாசு, அண்ணமார், தம்பிமார், கன்னிமார், முனீஸ்வரன் முதலிய "பூதப் பேய் பிசாசுகள், இவனை அறைந்து" நோயால் பாதைப்படும்படி செய்து விடுகின்றனவாம். இந்த நம்பிக்கைதான் உலக முழுமையும் நிறைந்து வருகிறது. பேய்களுக்கும், பிசாசுகளுக்கும், முனிவீரன்களுக்கும், காற்று கருப்பன்களுக்கும், இந்த "ஆன்ம" கற்பிதமே, காரணமாகும். ஆன்மா ஒன்றுண்டென்ற நம்பிக்கை கற்பிதமென்று நமது பாமர மக்கள், உணர்வார்களேயாகில், இந்தக் கற்பிதப் பேய் பிசாசுகள் உலகை விட்டுப் பறந்தோடிப் போமென அறிக.

இந்தப் பேய் பிசாசு நம்பிக்கையால் உலகில் அநந்த கொடுமைகள் நடந்து வருகின்றன. ஒரு காலத்தில் சூன்யம் வைத்தல் (Nicromancy or Black Magic) என்ற பொய் வதந்தியை நம்பி, அநேகர் கொல்லப்பட்டார்கள். அந்த "சூன்யத்தை"ப் போக்க, தலைச்சன் குழந்தைகளை (First Born) காவு கொடுத்தார்கள்!!! இக்கொடிய பாதகத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான கிழவிகளை "மந்திரக்காரி" என்றும் சூன்யக்காரி என்றும் வதைத்துக் கொன்றார்கள். ஆயிரம் வருஷங்களாக ஐரோப்பா தேசத்தில் (Witch craft) என்று வழங்கிவந்த சூன்யம் என்ற பழக்க வார்த்தையால் கொல்லப்பட்ட (Wizards, Witches) சூன்யக்காரர்கள், சூனியக்காரிகளுக்குக் கணக்கு வழக்கேயில்லை!! இம்மகா பாதகத்திற்கு அடிமையாக இருந்தது "ஆன்மா" என்ற ஓர் கற்பிதச் சொல்லென அறிக. இந்தக்கற்பிதச் சொல்லுக்கே நரக மோட்சங்களும், நிர்வாண சமாதிகளும், திதி, திவசங்களும், கோயில்களும், குளங்களும் மசூதிகளும், மாதாகோயில்களும், திருவிழாக்களும், தீர்த்தங்களும், பெரிய புராணங்களும், கந்தபுராணங்களும், வேதங்களும், வேதாந்தங்களும் தோன்றியுள்ளன. இந்தச் சொல் ஒன்றைமாத்திரம், கற்பிதமென அறிந்தமாத்திரத்தில் எல்லாப் பேய், பிசாசுகளும், இருளன், வீரன் காட்டேரிகளும், சிவன், விஷ்ணு, பிரமாக்களும் 33 கோடி தேவர்களும், 48000 ரிஷிகளும், இவைகளுக்குக் கட்டியுள்ள கோயில், மசூதிகளும், விகாரங்களும், (Viharas) புத்தர் கோயில்களும், சிவன்கோயில்களும் பறந்தோடிப்போமென அறிக. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், இந்தக் கற்பித வார்த்தையை அறியாத குழந்தைகளுக்கும், மனிதர்களுக்கும் "கடவுள்" என்ற கற்பிதச் சொல்லே தெரியாது! பேய் பிசாசுகளும் தெரியாது. இந்தச் சொல்லை கற்பிதச்சொல்லென அறிந்த விஞ்ஞானிகள், 'கடவுளும்" கற்பிதச் சொல்லென்றே தீர்மானித்து வருகின்றனர். மனிதருக்குள் சொற்கள் பரிணமித்து (Evolve) வருங்காலையில் "ஆன்மா" 'உயிர்' "பிராணன்" என்ற சொற்கள் முதல் தோன்றின. அந்த சொற்களிலிருந்து, 'பேரான்மா" "பேருயிர்" என்ற சொற்கள் பெறப்பட்டன. இந்தச் சொற்களை கடவுளென்ற பதத்திற்குச் சாட்டி, "மனிதன்" சிற்றுயிர் என்றும் 'கடவுள்' பேருயிரென்றும் வழங்கிவந்தனர். இதுதான் கடவுளென்ற பதத்தின் பரிணமம். (Evolution) ஆதிமனிதனுக்கு "ஆன்மாவும்" தெரியாது. 'கடவுளும்' தெரியாது. பேச ஆரம்பித்த பிறகே, இந்தச்சொற்கள் கற்பிக்கப்பட்டன.

✻

காமராஜரின் தேர்தல் கீதம்!

சின்னாட்களாகவே, மட்டரகக் காங்கிரஸ்காரர்கள், எங்கு சென்றாலும், எதுபற்றிப் பேசினாலும் எதிர்க் கட்சிக்காரர்களைக், குறிப்பாகத் திராவிடர் கழகத்தைத் தாக்கிப் பேசிக் கொண்டு வருகின்றனரென்றாலுங் கூட, காங்கிரஸின் பொறுப்பு வாய்ந்த தலைவர் காமராஜர் அவர்களுங்கூட, 'மஞ்சள் காமாலைக்கண்ணேக்கு'டன் திராவிடர்கழகத்தைச் சற்று அதிகமாக திட்டி வருகிறார். இதனால் அவருக்கு. என்ன பெருமை ஏற்படுமோ நாமறியோம். அவர்களின் பிரச்சாரத்திட்டம் அது தான் போலும்! சமீபத்தில் தேர்தல் வருகிறதல்லவா? அதற்காகத்தான் காங்கிரஸ்காரர்கள் இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திலீடுபட்டிருக்கின்றனர் போலும்! காங்கிரஸ் காரர்கள், குறிப்பாகக் காமராஜர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்வதைத் திராவிடர் கழகம் தடுக்கவரவில்லை. தாராளமாகச் செய்யட்டும். தரணியை ஆள வேண்டுமென்ற "தாராள மனப்பான்மை" கொண்டவர்களல்லவா, அவர்கள்! தடியடிதர்பார் துணையும், தனவேந்தர்களின் தயவுமிருக்கிறது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு. இருந்தும் அவர் திராவிடர் கழகத்தைத் தூற்றுவானேன்? அதற்கும் காரணம் இல்லாமலில்லை.

காங்கிரஸ், இன்று தேய்பிறையிலிருக்கிறது. கழகம் வளர்பிறையிலிருக்கிறது. அதாவது நாளுக்கு நாள் காங்கிரஸ் கரைந்துகொண்டு வருகிறது; கழகமோ, மக்களிடையே மதிப்புப்பெற்று மலர்ந்து மாபெரும் வளர்ச்சியடைந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையிலே, பதவிப்பிரியர்களாகிய காங்கிரஸ்காரர்களை எதிர்த்துப் பகுத்தறிவாளர்களாகிய கழகத்தார் என்றாவது ஓர்நாள் தேர்தலில் நின்றால் தாம் படுதோல்வி அடைய நேரிடும் என்பதைக் காமராஜரும் அவர் கூட்டத்தாரும் நன்குணர்ந்திருக்கின்றனர். ஆகவேதான் வளர்ந்து வரும் மாபெரும் எதிர்ப்புச்சக்தியை முன்கூட்டியே அழித்துவிட்டு, ஏகபோக ஆட்சி செலுத்த எண்ணமிட்டிருக்கிறார்கள் ஏகாதிபத்திய 'வாரிசுகள்'. இந்த உள்ளெண்ணத்தைக் கொண்டு கழகத்தைப்பற்றிய தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்பி, கழகத்தைக்கரைத்துவிடலாமென்று, கனவு காண்கிறார்கள் காமராஜர் திருக்கூட்டத்தார்.

காங்கிரஸ்காரர்கள் போன்று, திராவிடர் கழகத்தார், எந்தப் பிரச்சினையையும், திட்டமின்றித் தீர்க்காலோசனையின்றிக் குழப்புகிறவர்களல்ல. திராவிடர் கழகத்தின் திட்டங்களையும், கொள்கைகளையும் சாதாரண மட்டரகக் காங்கிரஸ்காரர்கள்தான், சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை ஒருவாறு

வீ. சம்பந்தன்

ஒப்புக்கொண்டாலும், மந்திரி சபையையே மாற்றியமைக்கக் கூடிய மதியூகி, மகத்தான சக்தி வாய்ந்த 'மாபெருந் தலைவர்' காமராஜர் கூட உணராமலிருப்பார் என்று நாம் எண்ணுவதற்கில்லை. பொது மக்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து, போட்டிக் கட்சிகளைப் பொசுக்கிவிடலாமென்ற எண்ணத்திலேதான் காமராஜர் இப்படித் தாறுமாறாகக் கூறுகிறார் என்பதை ஆராயத் தேவையில்லை. திராவிடர் கழகம் தேர்தலில் கலந்துகொள்ளப் போவதில்லையென்பதை அடிக்கடி தலைவர் பெரியார் அவர்கள் கூறி வந்தும், தோழர் காமராஜர் எதையும் அறியாதவர் போலக் கழகத்திடம், தேர்தலில் நின்றுபார் என்று சவால் விடுக்க வரிந்து கட்டிக்கொண்டு வருகிறார். இது வீரமுமல்ல விவேகத்தின் பாற்பட்டதுமல்ல.

தோழர் காமராஜர் கழகத்துக்கு விடுத்திருக்கும் சவால் இதோ:—

"உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம் வளர்ந்து வரும் சமயத்தில், நாட்டை மேலும் துண்டாட வேண்டுமென்று திராவிடர் கழகத்தார் இங்கு பிரச்சாரம்செய்து வருகின்றார்கள். குழப்பவேலைகளிலீடுபடுவதை விட்டு, தேர்தலில் நின்று, அவர்கள் ஜெயிக்கட்டும். பொதுமக்கள் ஆதரவு கிடைத்தால், கோயில்களை இடிக்கட்டும். ஹிந்தி புத்தகங்களையெல்லாம் எரிக்கட்டும். அதைவிட்டு, விட்டு துவேஷப்பிரச்சாரத்தைச்செய்து கொண்டிருப்பது நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் நோக்கத்துடன்தான். நாடு பிரிக்கப்பட்டதால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும், ஜாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும், வர்க்கபேதத்தின் பெயராலும் குழப்பத்தை உண்டாக்க முயல்வோருக்கு இடந்தராதீர்கள். இன்று நாட்டுக்குத் தேவை அமைதிதான். ஆகையால் அமைதியைப் பாதுகாக்கப் பாடுபடும் காங்கிரசை ஆதரியுங்கள்."

என்று 5—6—49-ல் குடியாத்தத்தில் காமராஜர் பேசியிருக்கிறார், அல்ல தேர்தல் கீதம் பாடியிருக்கிறார். இரண்டாண்டுக் காலத்தில் தாங்கள் நாட்டுக்குச் செய்த நன்மைகளைப் (?) பற்றியோ, அல்லது இனி செய்யப்போகும் நன்மைகளைப் (?) பற்றியோகூறித்தங்களை (காங்கிரசை) ஆதரியுங்கள் எனக் காமராஜர் கேட்டிருக்கலாம். அதுதான் முறை, நியாயமுங்கூட. அதைவிடுத்துத்திராவிடர் கழகத்தைக்குறைகூறித் தேர்தலில் நின்றுபார் என்று வெற்றுச் சவால் விடுத்துச் சல்லடம் கட்டத் தேவையில்லை. கழகக் கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாத

(2-ம் பக்கம் பார்க்க)

உரிமைக்குப் ... வீரன்

எடியன் டோலட்

அயர்ந்து கிடக்கும் ஒரு நாட்டை, தங்கள் வலிமையை மறந்து கிடக்கும் ஒரு நாட்டு மக்களை, அந்நாட்டின் சாரமற்ற மக்கட்சமூகத்தைத் தட்டி எழுப்புவன உயிருள்ள பேச்சு; வீரமுள்ள வார்த்தைகள்; உள்ளம் உருகி, உணர்ச்சி மிகுந்து பேசும் உண்மை வீரனின், மக்கள் மனதை மருட்சி கொள்ளும் சொற்பொழிவு. இது சுதந்திரத்தின் முதல் படி. அடுத்துள்ளது, அத்தகைய வீரனின் ஆழ்ந்த கருத்துக்களை அடுக்கிக் காட்டும் எழுத்துரிமை. அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கும் தன் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பப் பேச்சு— எழுத்துச் சுதந்தரங்களைக் கோருகிறான், அந்நாட்டின் விடுதலை வீரன். பேச்சு மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தனது விடுதலை வேட்கையை வெளியிட விரும்புகிறான், வேறொருவரின் அடிமையை அகற்ற விரும்பும் அறிவு வீரன். ஆனால் அவை இரண்டும் ஆளும் வர்க்கத்தாரால் பூட்டிடப்படுமானால் அதையும் மீறுகிறான். மீறியதினால் ஏற்படும் ஆளுவோரின் மிருகத்தண்டனையையும், மிக மகிழ்ச்சியுடன் வரவேற்பான் வைரமனம் கொண்ட சுதந்தர வீரன்.

இத்தகைய வீரர்கள் எத்தனையோ பேர் இருந்து மடிந்தார்கள். இந்நில உலகில் அவர்களில் தலையாய் நின்றோன், இன்றும் பிரான்ஸ்நாட்டு மக்களின் மனதில் மறைந்திருக்கும் வீரன் தான் 'எடியன் டோலட்' என்பான். உயிரை வேண்டுமானாலும் விட்டு விடும் தன்மையன். எடுத்தகாரியத்தை முடிப்பான் வேண்டி, செயலில் அவ்வளவு பிடிவாதம் கொண்டவன். 15, 16-ம் நூற்றாண்டுகளில் தான் மேல் நாடுகளில் கல்விபரவ ஆரம்பித்தது என்பதை எவரும் அறிவார்கள். அத்தகைய புதிய ஒளி பரவி வந்த சமயமும் இந்த வீரன் வாழ்ந்த காலமும் ஒன்றுபட்டிருந்தன. பிரான்ஸ்நாட்டில்மக்கள் புத்தகங்களைப் புரட்டிப் படிக்கப்புறப்பட்டார்கள். அதே சமயத்தில் தான் கிறிஸ்துவ மத புரட்சியை அல்ல சீர்திருத்த உணர்ச்சியை ஊட்ட அரும்பாடு பட்டார் மார்ட்டின் லூதர்.

இந்தகைய சந்தர்ப்பத்தில் பிறந்தான் பிரான்ஸ்நாட்டில் டோலட்— எழுத்துரிமைப் போர்வீரன். அவ்வுரிமைக்கே வருந்தி உழைத்தான். வாழ்வைப் பலியிட்டான், அவ்வுரிமைப் போராட்டப் பொற்பீடத்திலே.

இவனுடைய தாய் தந்தையர் யார் என்பதையோ பிறந்த ஊர் நாள் என்ன என்பதையோ அறிய முடியவில்லை. எப்படியோ சிறு வயதில் லத்தீன் மொழியைக் கற்பதில் கவலை கொண்டான். சமய நூல்களை ஆராய்வதிலும் மிக்க ஆர்வங் காட்டித் தான் வந்துள்ளான். 17-வது வயதில் மதுவா என்னுமிடத்திலுள்ள இத்தாலிய சர்வகலாசாலையில் சேர்ந்து பயின்றான். இங்கு 4 ஆண்டுகள்தான் பயின்றான். ஆனால் அவனுடைய அறிவுமிளிர்ச்சி அவனை உயர்த்திவிட்டது உத்தியோகப் படிப்புக்கு. முதலில் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாகக் கிரேக்கநாட்டிற்குச்சென்ற லிமோகஸ் பாதிரியாரின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமனம் பெற்றுப் புறப்பட்டான். அந்தச் சமயம் அவனுடைய வயதோ 21. அங்கு சென்று அறிவைப் பெருக்க ஆர்வங்கொண்டான். பண்டிதர் ஒருவரின் பிரசங்கத்தைத் தொடர்ந்து கேட்டான், அறிவைப் பெருக்கிக் கொண்டான்.

அதோடு நின்றுவிடவில்லை அவ்வீரன். சட்டப்படிப்பில் தேற வேண்டுமென்ற எண்ணம்எழுந்தது. டொலவுச் என்ற லண்டன் நகரின் சிறந்த இடத்தில் இருந்து ... கருத்துக்கொண்டான். சொந்த ஊரை அடைந்தான். சேர்ந்தான் சட்ட கலாசாலையில். உடனே ஆரம்பித்தன இவனது எதிர்பாராத் தொல்லைகள். அந்தக் கலாசாலையில் ஏராளமான மாணவர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் வந்து பயின்றார்கள். ஒவ்வொரு நாட்டு மாணவர்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள்.. அவரவர்கள் அவர்கள் நாட்டுக் கொடிகளை வணங்கி, அவரவர்களின் மத குரு தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள். இந்தப் பயித்தியம் பலம் கொண்டது. அதிக ஆடம்பரத்துடன் ஆர்ப்பரிக்க ஆரம்பித்தார்கள் அந்த விழா நாட்களில். மிகவும் தொல்லையாக இருந்தது ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு மேலுள்ள அரசாங்க அதிகார வர்க்கத்திற்கும். உடனே ஆரம்பித்தது அரசாங்கம், தனது அடக்குமுறையை வீச. மேற்படி விழாக்கள் சம்பந்தமான கூட்டங்கள் கூடக் கூடாதென்று உத்தரவிட்டது. அதுபற்றிய பிரசுரங்கள் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பார்த்தனர் மாணவர்கள். ஒன்று திரண்டனர், உத்தரவை மீற உறுதியும் செய்தனர். இந்தக் கிளர்ச்சியை உச்சியிலிருந்து நடத்த ஒப்புக்கொண்டான் நமது டோலட். கேட்க வேண்டுமா, அன்றைய எதேச்சாதிகார அரசாங்கத்தின் எடுபிடிகள் இவனை எழுதிக் கொண்டார்கள், அரசாங்கத்திற்கு ஆழமான விரோதி என்று.

இன்றுள்ள ஜனநாயகக்காரர்களின் சரியற்ற காரியங்களைக் கண்டவர்கள், அன்றைய ஏகபோக அதிகாரம் ஓச்சிவந்த இனத்தவரின் இத்தகைய செயலைக் கண்டு சிறிதும் சினங் கொள்ளார். இதற்குத் துணையாக எதிர்பாராத சம்பவம் ஒன்று

ஏற்பட்டது. ஒருநாள் தெருவில் சென்றுகொண்டிருந்த சமயம் யாரோ ...டைத் தாக்கினார்கள். எதா... காப்பாற்றிக்கொள்ளக் கருதிக் கொண்ட டோலட், எதிரியை இடித்தான். எக்கச்சக்கமான இடியால் இறந்துபட்டான் எதிரிகளில் ஏவிலர் வன். ஏடீப் பிடித்து இரும்புக் கம்பிக் கொட்டடியில் இட்டுவிட்டார்கள். ஏன் என்று எதிர் வழக்காடவில்லை யாரும் அவனுக்காக. மூன்று நாள் கழித்து விரட்டி விட்டார்கள் வரக்கூடாது இந்நாட்டிற்கினி என்று. இது போதும் என்று ஏகினான் பாரிசுக்கு, எங்கிருந்தால் என்ன என்ற எண்ணத்துடன். நேராக முதலாவது பிரான்ஸிஸிடம் சென்றான். அவர்தான் அந்தச் சமயம் அந்நாட்டின் அதிபதியாய் அக்ராசனம் அமர்ந்திருந்தார். அடைக்கலம் புகுந்தான் அவரிடம். தான் செய்த தவறைத் தள்ளிவிட வேண்டினான். அவருக்கே அர்ப்பணமாக அளித்தான் அதுவரை ஆராய்ந்து எழுதி முடித்திருந்த லத்தீன் மொழி பற்றிய இரண்டு பாக நூற்களை.

அந்த எழுத்துப் பிரதிகளை அச்சிட்டுக் கொடுக்க ஆள் அகப்படுமா? என்று அலைந்தான். அதே ஆவலுடன் ரியான்ஸ் நகரைச் சேர்ந்தான். ஏன்? அந்த இடந்தான் அன்று சிறப்புற்றிருந்தது. புத்தக வெளியீட்டிலும், விற்பனையிலும் முதலிடத்தைப் பெற்றிருந்தது. அந்த இடத்தை அடைந்தவுடன் கிளெமண்ட்மாரெட் என்பார் தோழனாகத் தோன்றினார் டோலட்டுக்கு. கிளெமண்ட் மாரெட் அன்று பிரான்ஸ் நாட்டின் பெரியகருவியாக இருந்தார் என்றால், எப்படி ஏற்பட்டது இருவருக்கும் தோழமை என எண்ணவேண்டுமா? அதோடு அல்லாது அவரும் அரசாங்கத்தின் அரிய விரோதிதான். ஏன் மதவிரோதமான குற்றம் செய்ததற்காக இத்தாலிநாட்டில் இருந்துவந்தார். ஆனால் எத்தனை நாட்களுக்கு இன்னொருவர் நாட்டில் இருந்துவாழ முடியும்! அதுவும் நாட்டு மக்களின் நன்மையில் ஆர்வங்கொண்டவர்களுக்கு எப்படி முடியும்! ஆழ்ந்து யோசித்தார். பிரான்ஸிஸ் மன்னனிடம் பிழைபொ... என்ற கருத்தைக் கொண்டார் கடுகிவந்தார் காணதிருந்த தாய்நாட்டிற்கு, இருவரும் சேர்ந்து எழுதினார்கள் பிரான்ஸிஸ் பெருமானுக்குப் புத்தகங்கள் வெளியிட அனுமதி கோரி. மன்னனும் ... முந்திய குற்றங்களுக்கு வகை செய்யக்கேட்டான். டோலட்டுக்குமட்டும் பத்துவருடங்களுக்குப் புத்தகங்கள் வெளியிட லைசென்ஸ் கொடுத்தான். அதுவும் இத்தாலி, கிரீக், லத்தீன், பிரான்ஸ் இந்த நான்கு மொழிகளிலும் வெளியிடலாம் வேண்டிய புத்தகங்கள் என்று. 'ஆனால்' என்ற அசட்டுமொழி அரசாங்க உத்தரவுகளில் இல்லாதிருப்பது இன்றுகூட மிக அருமை. ஆகவே டோலட்டின் உத்தரவில் 'ஆனால் அச்சிடுவதற்கு முன்னால் அவன் தன்னுடைய எழுத்துப்பிரதிகளை பாரிஸ், பிரான்ஸ் என்ற இடங்களில் இருந்த இன்னின்னாருக்குக் காட்டவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது.

மன்னரின் மனதறிந்த மாரெட் தனது மதவிரோத செயல்களுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். டோலட் தோற்றுவித்தார் ஒரு அச்சிடும் அரங்கத்தை. அது ஆரம்பித்த சிறுகாலத்திற்குள் சிறந்த செல்வாக்கை அடைந்தது. ஆனால், தன்னலமற்ற தக்கோரிடம் தங்கி இருப்பதில்லை தரணியில் எந்த இலாபந்தரும் ஸ்தாபனமும். அதுவும் இரண்டுபேரிடம் எப்படி நிலைத்திருக்கும் நீண்டநாட்களுக்கு. இந்த இருவரும் வேகமான இரத்தத் துடிப்பைப்பெற்றவர்கள். எதையும் எண்ணி எண்ணிப்பார்த்து இருந்து இருந்து யோசித்து, இதைச் செய்தால் இன்னது வருமே என்பதையும் எண்ணாது எடுத்ததை முடிக்கும் காரியவாதிகள். பயம் என்ற பதத்தையே பரிகசிப்பவர்கள். இரும்பைவிட இறுகிய நெஞ்சுரங்கொண்டவர்கள். இத்தகையவர்கள் எண்ணியதையெல்லாம் எழுதப் பேனா பிடித்தால் சுதந்தரம் முன்பே கிடைத்திருக்கும்.

டோலட் எழுதிய லத்தீன்மொழி பற்றிய நூல் பல பதிப்புகளாகப் பறந்தன. பரந்த உலக மக்களிடையே 'புதிய சங்கல்பம்' என்... நூல் ...ஆயிரக் கணக்கில் பதிப்பிக்கப்பட்டன. பணம்கொடுத்துவாங்கி மக்கள் படித்தார்கள். இந்த வெற்றி எதிரிகளின் கண்களைக் கருக்கியது. எதிரிகள் யார் தெரியுமோ? அவர்கள்தான் மதவாதிகள். இந்த மதவாதிகள்தான் மக்கள் சமூகத்தின் மாசற்ற விரோதிகள் என்பதற்கு எத்தனையோ சான்றுகளில் இதுவும் ஒன்று. 1542-ம் ஆண்டு அடைத்தார்கள் கொட்டடியில் மதவிரோதமான புத்தகங்களை டோலட் வெளியிட்டார் என்பதற்காக. நலிவுற்றான் சிறையிலும் வெளியிலுமாக. உயிருடன் இருந்தால் ஆபத்து என்று எண்ணிற்று இறுமாப்புக் கொண்ட மதகுருக் கூட்டம். இறுதியாக டோலட்டின் உடலை இருகூறுக்கக் கட்டளை இட்டது. எழுதி வெளியிட்ட எல்லாப் புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்கவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அன்று அந்நாடுகளில் அரசனைவிட அதிக அதிகாரம் வகித்திருந்தது அந்த மதமனம் கொண்ட மக்கள் கூட்டம் என்பதை மலையுச்சியிலிருந்து காட்டுகிறது உலக சரித்திரம். ஆகவே டோலட்டின் இந்தத் துணையற்ற துயரம் தந்த வழக்குத்தெரியவேதெரியாது பிரான்சிஸ் மன்னனுக்கு. கடவுளைக் காட்டிக் காசைப் பிடுங்கி, மக்களைக் காட்டுமிராண்டிகளாகக் கண்காணித்து வந்த அந்தக் கல்மனக் கயவர் கூட்டம், நமது டோல்ட்டின் கழுத்தைக் கத்தரித்தது மாபர்ட் என்ற இடத்தில். ஒரு டோலட்டின் உயிர் பறிக்கப்பட்டால் உண்டாவார்கள் ஆயிரக் கணக்கில் உண்மை வீரர்கள் என்பதை உணரமுடியுமா ஓய்யார மதவாதிகளுக்கு! மதவிரோத குற்றத்திற்காக மடியும் டோலட்டுக்கு மக்கள் சிலை கட்டி, மனத்தால், வாயால் வாழ்த்துவார்கள் பின்வரும் காலத்தில், என்பதை எப்படி அறிய முடியும் அந்தக் கூட்டத்தால்! இன்று அவ்வீரன் பலியிடப்பட்ட அந்த இடத்திலேயே எழுந்து நிற்கிறது டோலட்டின்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.

412
3-49

REGD M. 4642.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 3-7-49 | இதழ் 1

OFFICE OF THE REGISTRAR OF BOO...
11 AUG 1949
MADRAS

நல்லாட்சி வேண்டும்

புதுவைச் சிவம்

நாடு நலன்பெற வேண்டும்—இங்கே
நல்லன யாவும் தோன்றிட வேண்டும்,
கேடு களைந்திட வேண்டும்—பொல்லாக்
கீழ்மை யடிமை விலகிடவேண்டும்
பாடு பலன்பெற வேண்டும்—இங்கு
பாட்டாளி மேட்டாளி என்னும்பல் பேதம்
ஓடி மறைந்திட வேண்டும்—இந்த
உண்மை நிலைபெற நல்லாட்சி வேண்டும்.

ஆட்டுவித்தா லாடும் பொம்மை—போன்றார்
ஆட்சியி லேநன்மை துளிர்ப்பது முண்டோ?
வீட்டுத் தலைவனாயுள்ளோன்—தனது
வீட்டிற்க் கயலாரை எஜமானாய்க் கொண்டே
கேட்டெதையும் செய்வானாயின்—அதில்
கேடுகெட்ட நிலை அன்றிமற் றுண்டோ?
மேட்டிமை வாழ்வறி யாதார்—ஆட்சி
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் விளைத்திடல் உண்மை.

மானம் புரந்திட்ட நாட்டில்—அந்த
மானம் பறிபோகும் நிலைமையே கண்டோம்.
ஈனஞ் சகிப்பவர் கண்டோம்—அதுவே
இலட்சியம் என்றுமே கூறுவோர் கண்டோம்.
ஊனமிகு வாழ்வைப் போற்றி—அன்னார்
உயரிய தமிழ்ப் பண்பை வீழ்த்திடு கின்றார்.
கானகந் தன்னிலு மில்லை—எதற்கும்
காவடி தூக்கிடும் சீர்கெட்ட ஆட்சி!

உலகில் உயர்ந்த நிலப் பகுதி

இலடாக்

வளைந்து வளைந்து செல்லும் மலை வரிசைகள்! நிமிர்ந்து நின்றும், படுத்துக் கிடந்தும் காட்சியளிக்கும் குன்றங்கள்! மேகமண்டலத்தைத் தழுவி நிற்கும் முகடுகள்! பதுங்கிக் கிடக்கும் பள்ளங்கள்! நாணிக்கோணி இருக்கும் ஓடைகள்! சலசலத்துக் கொண்டு இழிந்தோடும் சிற்றருவிகள்! பளிங்கினைப் பரிகசித்து நிற்கும் நீர் நிலைகள்! பச்சைப் படாம் விரித்தாலன்ன பசும்புற்றரைகள்! கண் கவர் குளிர்மை உமிழ்ந்து நிற்கும் பயிர்பச்சைகள்! ஆங்காங்கு பாவிக் கிடக்கும் கட்டாந்தரைகள்! அவைகளிடையே வளர்ந்து நிற்கும் சிறுசிறு மரங்கள்! பருவக்காலங்களில் கடும் குளிர் — வெப்பங்களை வாரியிறைத்துக் கொண்டிருக்கும் கருங்கற் பாறைகள்! பார்க்கும் இடமெங்கும் ஓரே வெட்டவெளியாய்க் காட்சியளித்து நிற்கும் பொதுத் தோற்றம்! இத்தகைய தன்மைகளோடு கூடிய நாட்டைத்தான் 'இலடாக்' என்று அழைக்கிறார்கள்.

இலடாக், சிந்துநதி சுரந்தெழும் தலைப்பகுதியில் உயர்ந்தோங்கிக் கிடக்கின்றது. உலகிலேயே மிக உயர்ந்த நிலப்பகுதிகளில் இலடாக் ஒன்றாகும். கடல் மட்டத்திலிருந்து 12,000 அடி முதல் 15,000 அடி வரையில் உயர்ந்து காணப்படும் இதன் உச்சிநிலைப் பரப்புகளில் மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதன் கண் தோற்றமளிக்கும் மலை முகடுகள் 17,000 அடி முதல் 25,000 அடிவரையில் உயரமுள்ளவைகளாக இருக்கின்றன. இது 30,000 சதுரமைல் அளவுக்குப் பரந்து கிடக்கிறது. கட்டாந்தரைகளும், கற்பாறைகளும் ஆங்காங்கு நிறைந்திருப்பதால், காஷ்மீரத்தில் காணக்கூடிய பசுமையை இங்கு காண முடியாது.

இலடாக்கை 'சின்ன திபேத்' என்றும் அழைப்பார்கள். இலடாக் காஷ்மீருக்குக் கிழக்கே, இமயத்துக்கும் குவென் லென் மலைத்தொடருக்கும் இடையில், பால்ஜிஸ்தானுக்கும் திபெத்துக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. இதன் கீழ்ப்பகுதி ரூப்ஷூ என்பது; தென்பகுதி ஸான்ஸ்கார்; வடபகுதி நுப்ரா; இதன் வளமான மேல்பகுதி கார்கில், மத்திய இலடாக், காரக்கோரம் மலைகளுக்குத் தெற்கிலுள்ள பீடபூமி ஆகியவை வரையில் விரிந்து கிடக்கிறது.

இலடாக்மக்கள் பொதுவாக உழவர்கள்தான். ஆனால் அதிக வளப்பமில்லாத நிலப்பகுதியாகையால் மிகப் பலரும் பயிரிட்டு வாழ வசதியில்லை. பெரும்பாலோரின் பிழைப்பு மேச்சல் தொழிலில்தான் சார்ந்து கிடக்கிறது. நீண்ட மயிரடர்ந்த வெள்ளாடு—செம்மறியாடுகளை மேய்த்து வருவதுதான் இவர்களின் வாழ்க்கைத் தொழில். இடையர் வாழ்வை மேற்கொண்டுள்ள இவர்கள் பட்டிநாய்களைத் துணைக்கழைத்துக் கொண்டும் ஆங்காங்கு தங்கித் தங்கி இடந்தோறும் சுற்றித் திரிவார்கள். ஆண்டுக்கொரு முறை இவர்கள், சந்தைகூடும் இடத்திற்கு வந்து, தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிச் செல்வார்கள். தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் பிரபுக்களைக்கண்டு செல்வதற்கும், இவர்கள் அந்தச் சிற்றூருக்கு வருவார்கள். பால், தேயிலை, வால்கோதுமை மாவு முதலியவைகள்தான் இவர்களின் முக்கியமான ஆகாரமாகும். இவர்கள் உடலுறுதி படைத்தவர்களாகவும், விடுதலை வேட்கை கொண்டோர்களாகவும் திகழ்ந்து வருகிறார்கள். விருந்தோம்பும் பண்பு இவர்களிடத்தில் சிறந்து காணப்படுகிறது. மலைநாட்டுப் பண்பிற் கேற்பச் சிலவேளைகளில் முரடர்கள் போலும் நடந்து கொள்கிறார்கள்.

உழவுத் தொழிலுக்கு ஷோ என்னும் எருது பயன்படுத்தப்படுகிறது. நீண்ட மயிருள்ள யாக் என்னும் காட்டு எருதும், பசுவும் கலப்பதன் மூலம் இந்த ஷோ வர்க்கம் பெருகி வருகிறது. வால்கோதுமை, பட்டாணி, காரெள், அவரை முதலியவை இலடாக்கில் விளையும் முக்கிய விளைபொருள்களாகும். 14,000 அடி உயரத்தில் 'கிரிம்' என்னும் ஒருவகை வால்கோதுமை ஏராளமாகப் பயிராகிறது. இதிலிருந்துதான் அங்குள்ள மக்கள் வழக்கமாக அருந்துகிற "செங்" என்னும் மதுவகை தயாரிக்கப்படுகிறது. 9,000 அடி உயரத்திற்குக் கீழேயுள்ள வெப்பம் பொருந்திய நிலங்களில் ஆப்பிள், ஆப்ரிக்காட் பழவகைகள் பயிராகின்றன.

இலடாக்கில் விளைச்சல் எல்லாம் கால்வாய்ப் பாய்ச்சல் மூலம்தான் நடைபெறுகின்றன. உழவுத் தொழிலை ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடித்தான் நடத்துகிறார்கள். விதைப்புக் காலத்திலும் பிள்ளை குட்டிகள் உள்படக் குடும்பம் முழுவதுமே வயலுக்குச் சென்றுவிடும். கடினமான வேலைகளையெல்லாம் ஆண்கள் கவனிப்பார்கள். அவர்களுக்குக் களைப்புத் தெரியாதபடி பெண்கள் ஆடிப்பாடி அவர்களை மகிழ்விப்பார்கள். மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பியதும் பெண்கள் நெருப்பு மூட்டிச் சோறு உண்டாக்குவார்கள். ஆண்கள் ஒன்றுகூடி மதுவருந்தி மகிழ்வார்கள்.

காட்டு விலங்குகளை வேட்டையாட விரும்புவோர்க்கு இலடாக்கில் எவ்வளவோ வசதிகளிருக்கின்றன.

(14-ம் பக்கம் பார்க்க)

3

அவன் குற்றவாளியா?

புலவர் கோவிந்தன்

கண்ணில் கண்ட எந்தப் பொருளையும், கையால்தொட்டு வாயால் சுவைப்பது, குழந்தையின் இயற்கை. குழந்தைக்கு எட்டும் அளவில், தொடத்தகாதத பொருளை — உண்ணத்தகாத உணவை வைப்பது பெற்றோர் தவறு. வைத்துவிட்டு "விளக்கைத் தொடாதே சுடும்" "அந்தக் காயை உண்ணாதே கசக்கும்" என்று கூறுவது அறியாமை. விளக்கைத்தொட்டுச் சூடுபெற்ற குழந்தை துன்பம் தாங்காது அழும்பொழுதும் — தின்னத்தகாத காயைத் தின்றுவிட்டுத்திகைக்கும்பொழுதும் —"சொன்னேனே கேட்டாயா? இப்பொழுது துன்பப்படு" என்று வேடிக்கை பேசுவது விபரீதபுத்தி. இது குழந்தைகளுக்கு மட்டும் அல்ல; அனைவர்க்கும் பொது விதி.

அங்கே போகாதே; அதைப் பார்க்காதே; தொடாதே அதனை; உண்ணாதே அப்பொருளை; என்று தடைவிதிக்க விதிக்க அங்கே போகவேண்டும், அதைப் பார்க்கவேண்டும், அதைத் தொடவேண்டும், அதை உண்ணவேண்டும் என்ற எண்ணம் மக்கள் அனைவர்க்கும் இயல்பாக எழும். ஏன் நாம் அங்கே செல்லக்கூடாது? சென்றால் என்ன நேரிடும்? என்ன இருக்கும் அங்கே? அதை நாம் ஏன் பார்க்கக்கூடாது? பார்ப்பதன் விளைவு என்ன ஆகும்? ஏன் அதைத் தொடக்கூடாது? தொட்டால் என்ன செய்யும்? நாம் ஏன் அதை உண்ணக்கூடாது? உண்டால் இனிக்குமா? கசக்குமா? பார்க்கலாமே, என்ற ஐயமும் துணிவும் எவர்க்கும் தோன்றாமல் போகாது. இது உலக இயல்பு.

குழந்தைக்கு உடல் நலம் சரி இல்லை. மருந்து கொடுத்த மருத்துவர், குழந்தைக்கு இன்னின்ன உணவு ஆகாது என்று தடை விதிக்கின்றார். குழந்தையின் உடல்நிலை சரிப்படும் வரையில், வீட்டில் உள்ளார் அனைவருமே அவ்வுணவை விரும்பக்கூடாது. அதுதான் முறை. அவ்வாறின்றி ஆகாத உணவை ஆக்கிவைத்துக்கொண்டு, குழந்தையின் எதிரிலியே அவற்றை உண்ணவும் தொடங்கி, குழந்தை அந்த உணவை விரும்பினால், "உனக்கு உடல் சரி இல்லை; உனக்கு ஆகாது" என்று கூற முற்படுவது பைத்தியக்காரத்தனம் ஆகும்.

போகாத புது இடத்திற்குப் போக, காணாத காட்சிகளைக்காண, பெறாத பொருளைப்பெற விரும்புவது மனித இயற்கை. அதற்குத் தடைவிதிப்பதால் அந்த ஆர்வம் குறைவதோ, குன்றுவதோ இல்லை; மாறாக ஓடுகிறது. ஓடுகின்ற நீர் ஓடிக்கொண்டே இருந்தால் அதன் ஓட்டமும் ஒரு நிலை உடையதாகும். இடையே தடை விதித்தால், தடையை உடைத்துக்கொண்டு ஓடும்போது முன்னிலும் விரைந்தே ஓடும். இது உலகிலே காணப்படும் இயல்பான காட்சி.

புதுப்புதுப் பொருளைக் காணவேண்டும், அவற்றைப் பெறவேண்டும், அவற்றின் பயனை அனுபவிக்க வேண்டும் என்ற வேட்கை மக்கள் அனைவர்க்கும் பொது. ஆசை அற்றவன் மனிதனே அல்ல, மரக்கட்டை; மனிதனுடைய சேவை மகத்தானது. ஆசை இல்லையேல், இன்று உலகம் வளர்ந்து இராது. ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவன் தன் அறிவைத் துணைக்கு அழைத்தான். அறிவின் மிகுதியால் ஆராய்ச்சி பிறந்தது. அதன் பயனாய், கந்த மூலாதிகளைத் தின்று கழித்த காட்டுமிராண்டிக் காலம்போய், அறுசுவை உணவை, அருமையாய்ச் சமைத்து உண்ணும் அறிவுக்காலம் உண்டாகி இருக்கிறது. அறிவின் பயனாய் ஏற்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே மனித சமுதாயம் அல்லும் பகலும் துடியாத் துடித்துக் கொண்டிருக்கிறது.

மாங்காய் பறிக்கச் செல்லுகின்றனர் மாணவர் மூவர்! மரம் எளிதில் ஏற முடியாத அளவு பருத்தும் உயர்ந்தும் உள்ளது. ஒருவர் ஒருவராக ஏறத்திட்டமிடுகின்றனர், ஒருவன் ஏற, இருவர் கீழேநின்று, கையாலும், தோளாலும், படி அமைத்துக் கொடுத்து உதவுகின்றனர். உயர ஏறிக்கொண்டமாணவன், தான் மட்டிலும் காயைப்பறித்து உண்ணத் தொடங்கிவிடுகிறான். கீழே இருப்பவரைக் கவனிப்பதாகவே இல்லை. இவர்கள் கேட்க, பிஞ்சையும், அழுகலையும் பறித்து வீசினால் இவர்கள் பொறுப்பரா? பொறுமை கடலினும் பெரிது என்று பேசினால் கேட்பரா? அவனை என்ன கேட்பது, நாமே ஏறிப்பறித்துக் கொள்ளலாமே என்று முயற்சிக்கின்றனர். ஆனால் மேலிருக்கும் அவனோ இவர்கள் ஏறி வாராதவாறு தடைசெய்து கொண்டே இருக்க, அதனைக்காணும், கீழே இருப்பவர்க்குக் கோபம் வரத்தானே செய்யும்! கோபம் கட்டுப்பாட்டிற்கு அஞ்சாது. சினம் சேர்ந்தாரைக் கொல்லும். இது நியதி. கோபப்படாதே என்று கூறினால் கேட்பாரா? கூறுவதுதான் சரியா? கையில் கிடைத்த கல்லையும் மண்ணையும் வாரி மேலிருப்பவன் மீது வீசாமல் இருப்பார்களா? இருக்க அவர்களால் இயலாது. சூழ்நிலை அந்த நிலைமைக்கு அவர்களைக்கொண்டு போய்நிறுத்துகிறது. அவர்கள் என்னமோ நல்லவர்கள்தான்; ஆனால் நிலைமை அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டுகிறது.

பொய்பேசாதே, களவாடாதே, கொள்ளை இடாதே, கொலை செய்யாதே—செய்வது குற்றம், குற்றத்திற்கு ஏற்ற தண்டனை உண்டு, என்று கூறுகிறது சமுகம். குற்றம் நிகழக்கூடிய அளவில் சமூகத்தை அமைத்துவிட்டு, அவை நிகழக்கூடாது என்று கூறுகின்றது உலகம்—விந்தையிலும் விந்தை—இந்

பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்தார்

பெயருக்கு முற்றிலும் உரியார், இவர் போன்றார் வேறு யாரும் இல்லையென்று இறும்பூதெய்தி வந்தோம், இறுமாந்திருந்தோம்.

அவர் நமக்கு மற்றவர் சொல்லாததையெல்லாம் சொன்னார்; மற்றவர் யாரும் விளக்காததை விளக்கினார். நம்மை நாம் உணரவும், நமது மானத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார்.

அரசியலைப்பற்றியல்ல அவர் பேசிவந்தது, வாழ்க்கையைப்பற்றி, வாழ்க்கைச் சிக்கலை நீக்குவதுபற்றி, வாழ்விலே புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான வழிகளைப்பற்றி எடுத்துரைத்து வந்தார்.

தபோதனர்களும், அருள் பெற்றவர்களும், கூறியதாகச் சொல்லப்படும் கோட்பாடுகள் நமது வாழ்க்கையை, மனிதத்தன்மைக்கு மாறானதாக்கி விட்டன, என்பதை எடுத்துக் காட்டி, அந்தக் கட்டளைகளை மீறுங்கள், வாழ்க்கைக்குப் புதிய, ஆனால் புனிதமான இலட்சியத்தை அமைத்துக் கொள்ளுங்கள் என்று வீர உரையாற்றி வந்தார்.

வாழ்க்கைப் பிரச்னையிலே அவர் மிகச் சிறப்பாகவும், மிகத் தெளிவாகவும், எடுத்துப் பேசிவந்த பகுதி திருமணத்தைப்பற்றியது.

திருமண முறையிலேயுள்ள மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண்களைக் கருவிகளாக்கும் கயமைத்தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியது போல வேறு எந்தத் தலைவரும் உரையாற்றியதில்லை.

உரையுடனா நின்றது; இல்லை. ஊரே மாறிற்று. நமது உள்ளமே மாறிற்று. ரிஷிகள் வகுத்துவைத்து விட்டுப்போன திட்டங்களே மாறின; மகிழ்ந்தோம், பெருமை கொண்டோம்; ஆணவம் கொண்டோம்.

பொருந்தாத் திருமணத்தை அவர் கண்டித்தது கேட்டு, கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகலித்தனர்.

காமப்பித்துக் கொண்டலையும் ஆண்கள் வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச், சொத்து சுகம் கிடைக்கும் என்று ஆசைகாட்டியோ, வேறு எந்தக் காரணம் காட்டியோ திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கரையுடைய வாலிபர்கள் அந்தத் திருமணம் நடைபெற இடந்தரலாமா என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே முழக்கமிட்டார்—நமக்கெல்லாம் புதுமுறுக்கேற்றினார்.

பிள்ளையில்லையென்ற காரணத்துக்காக சொத்துக்கு வாரிசில்லை என்ற காரணத்துக்காக, மனைவியைத் தேடும் கொடுமையை ஆயிரமாயிரம் மேடைகளிலே கண்டித்தார்.

பொருந்தாத் திருமணம் நாட்டுக்குப் பெரியதோர் சாபத்தீடு என்று முழக்கமிட்டார்.

அந்தக்காலத்துத் தசரதன் முதற்கொண்டு இந்தக்காலத்து "தங்கபஸ்பம்" தேடும் கிழவர் வரையிலே எள்ளி நகையாடினார்.

தன்மான இயக்கம் தழைத்திருக்கும் இடத்திலே "பொருந்தாத் திருமணம்" யார் வீட்டிலாவது, எந்தக் காரணத்தாலாவது நடைபெற இருந்தால், போலீஸ் பந்தோபஸ்துத் தேடக்கூடிய அளவுக்கு நாட்டு மக்களின் உணர்ச்சி வேகம் உருவெடுத்தது.

ஏற்கெனவே பொருந்தாத் திருமணம் செய்து கொண்டவர்கள்கூட, வெட்கத்தால்-வேதனையால் தாக்கப்பட்டனர்.

"என்போன்ற வயதானவர்கள், கல்யாணம் செய்து கொள்ள எண்ணக்கூடாது—எப்படியாவது, அப்படி ஒரு எண்ணம்வந்து தொலைந்தால், தம்பு அறுந்ததாக, (அதாவது விதவையாக) ஒரு நாற்பது ஐம்பது வயதானதாக, ஒரு கிழத்தைப் பார்த்துக் கலியாணம் செய்து தொலைக்கட்டுமே—பச்சைக் கொடிபோல ஒரு பெண்ணை, வாழ்வின் சுகத்தை அறிய வேண்டிய வயதும், பக்குவமும் கொண்ட பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா—காரணம் ஆயிரம் காட்டட்டுமே, காட்டினாலும் எந்த மானமுள்ளவன், அந்தக் கலியாணத்தைச் சரியென்று கூறுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?" என்று அவர் பேசிய பேச்சுக் கேட்காத ஊரில்லை.

இப்படிப்பட்ட அறிவுரை புகட்டியவர், தமது 72-ம் வயதில் 26- வயதுள்ள பெண்ணை, பதிவுத் திருமணம் செய்து கொள்கிறார் என்றால், கண்ணீரைக் காணிக்கையாகத் தருவது தவிர வேறென்ன நிலைமை இருக்கும்!

"எப்பா! திராவிடர்கழகம்! உங்கள் தலைவருக்குத் திருமணமாமே!!" என்று கேட்கும் கேள்வி கூரம்பு போல நெஞ்சில் பாய்ந்து தொலைக்கிறதே.

சீர்திருத்த இயக்கம் இது—இதோ பாரய்யா, "சீர்திருத்தம், 72-க்கும் 26-க்கும் திருமணம்" என்று கேலிபேசுகிறார்களே — கேட்டதும் நெஞ்சு வெடிக்கிறதே.

"கையிலே தடி மணமகனுக்கு! கருப்பு உடை மணமகளுக்கு!"—என்று பரிகாசம் பேசுகிறார்களே.

"ஊருக்குத்தானய்யா உபதேசம்!" என்று இடித்துரைக்கிறார்களே.

"எனக்கென்ன, வயதோ 70-க்கு மேலாகிறது, ஒரு காலை வீட்டிலும் இன்னொரு காலைச் சுடுகாட்டிலும் வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் செத்தால் அழ ஆள் இல்லை, நான் அழுகிறபடி சாவதற்கும் ஆள் இல்லை," என்றெல்லாம் பேசின பெரியார் கலியாணம் செய்து கொள்கிறாரய்யா!"—என்று கடைவீதி பேசிக் கைகொட்டிச் சிரிக்கிறதே!

"ஊரிலே நடைபெறும் அக்ரமத்தைக் கண்டிக்கும் அசகாயச் சூரர்களே! சமுதாய இழிவுகளை ஓட்டும் வீராதி வீரர்களே! பெண் விடுதலைக்குப் பெரும்போர் தொடுக்கும் பெரியவர்களே! பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்த கண்ணியர்களே, இதோ உங்கள் தலைவர், துறவிக்கோலத்தில், தள்ளாடும் பருவத்தில், இளம் பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறாரே,

காரணம் ஆயிரம் காட்டினாலும்!

உங்கள் கொள்கையின் கதி என்ன, எங்கே உங்கள் பிரச்சார யோக்கியதை என்ன சொல்லுங்கள் நீங்கள் இதற்கு, எப்படி இந்த அவமானத்தை, அநீதியை, அருவருக்கத்தக்க ஆபாசத்தை சகித்துக்கொள்கிறீர்கள்?" என்று சவுக்கடி கொடுப்பது போலப் பேசுகிறார்களே—இனியும் பேசப்போகிறார்களே—என்ன செய்வோம்—என்ன சமாதானம் கூறுவோம்—எப்படி மனப் புண்ணை மாற்றமுடியும்—எப்படி மானத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்று எண்ணினர்—எண்ணினதும் தாயோ, தகப்பனோ, மனைவியோ, மகவோ, அண்ணன் தம்பியோ, உடன் பிறந்தவர்களோ இறந்தால் ஏற்படக்கூடிய துக்கத்தை விட அதிகமான அளவிலே துக்கம் பீறிட்டுக் கிளம்பிக் குமுறினர்—கதறிக்கொண்டேயிருக்கிறோம் – கண்ணீருக்கிடையேதான், இக்கட்டுரையும் தீட்டப்படுகிறது.

பொருந்தாத் மணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம் இந்தக்காலத்திலும், எதிரியின் எந்த வீச்சும், சர்க்கார் எந்தநடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச், செய்ததில்லை.

பல நெருக்கடிகளைப் பார்த்திருக்கிறோம் — பல ஆபத்துகளைப் பார்த்திருக்கிறோம்—இந்தப்பேரிடியை நம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை — முடியாது—முடியாது—நிச்சயமாக முடியாது.

முகத்திலே கரி பூசிவிட்டார். மூக்கறுத்துவிட்டார்! மூலையில் உட்கார்ந்து அழுகிறோம்—சேதி தெரிந்தது முதல்.

வெட்கப்படுகிறோம் ஊரைக் காண!

வேதனைப்படுகிறோம் தனிமையில்!

ஒருவர் கண்ணீரை, மற்றவர் துடைக்க முயலுகிறோம்—துடிக்கிறோம் — நெஞ்சத்தில் துயரத்தேள் கொட்டியதால்.

பொருந்தாத் திருமணம் புரிந்துகொள்ளத் துணிபவர்களை, எவ்வளவு காரமாகக் கண்டித்திருக்கிறோம்—எவ்வளவு ஆவேசமாய் கண்டித்தோம்.

இப்போது, எவ்வளவு தாராளமாக நம்மையும் நமது உணர்ச்சிகளையும், நிலைமையையும், இயக்கத்தையும் எவ்வளவு அலட்சியமாக் கருதி, நமதுதலைவர், 72-ம் வயதிலே திருமணம் செய்துகொள்வதாக அறிவிக்கிறார். நம்மை நடைப்பிணமாக்குவதாகத் தெரிவிக்கிறார்—நாட்டு மக்களின் நகைப்புக்கு இடமாக்கி வெட்கித்தலைகுனிந்து போங்கள், எனக்கென்ன என்று தெரிவித்துவிட்டார்.

அந்தோ! எவ்வளவு கொடிய தாக்குதல்! எத்தனை அவமானம் தரும் சம்பவம்! இதற்கோ இவ்வளவு எழுச்சி பெற்றோம்! இந்தப் பழியையும் இழிவையும் ஏற்றுக்கொள்ளவா, இவ்வளவு வளர்ந்தோம்.

என்னே நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்! எதுதான் நமக்கு எதிர்காலம்! எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெரும் வேதனை! கண்களிலே நீர்! கைகால்களிலே நடுக்கம்! இதுநாம்! இதற்கோ இந்த வளர்ச்சி!

எம்மை ஆளாக்கிவிட்ட தலைவரே! இந்தக் கதிக்கு எம்மை ஆளாக்கவா இவ்வளவு உழைப்பும் பயன்பட வேண்டும்? உலகின்முன் தலைகாட்ட முடியாத நிலைமையில் எம்மைச் செய்யும் அளவுக்கு நாங்கள் தங்களுக்கு இழைத்த குற்றம் என்ன? நீங்கள் காட்டிய வழி நடந்தோமே, அதற்கா இந்தப் பரிசு?

புயலை எதிர்த்துச் செல்லுங்கள் என்று தாங்கள் கட்டளையிட்டபோதெல்லாம், சரி என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டினோமே, அதற்குப் பரிசு இது தானா?

முத்தமிடவந்த குழந்தையின் மூக்கைக்கடித்தெறியும் தாயை நாங்கள் [illegible] நாங்கள் செய்த தவறுதான் என்ன இந்தத்தகாத காரியத்தைத் தாங்கள் செய்து, எங்கள் தன்மானத்தை அறுத்தெறிவது ஏன்?

என்ன குற்றம் இழைத்தோம்?

ஏன், என்றும் அழியாத அவமானத்தைத் தேடித்தருகிறீர்.

எப்படித்தாங்குவோம் இந்த அழிவை!

எத்தனை [illegible] தாலும், சமர்த்தாக விளக்கம் உரைத்தலும், 72 — 26 — இதை மறுக்கமுடியாதே! இது பொருந்தாத் திருமணம் என்பதை மறைக்கமுடியாதே

இதைச் சீர்திருத்தச்செம்மலாகிய தாங்கள்செய்வதென்பது காலத்தாலும் துடைக்க முடியாத கறை என்பதை மறுக்கமுடியாதே ஏன் இதைச் செய்கிறீர், எம்மை ஏளனத்துக்கு ஆளாகவிடுகிறீர்!

கண்ணீரைத் துடைத்தபடி நின்று, ஆயிரமாயிரம் இளைஞர்கள் கேட்கும் கேள்விகள் இவை!

இருதயத்துடிப்பு! ஒருநாள் பழகியவர்கூட உளம் உருகிவிடும், பேச்சு—இதையும் ஏற்க மறுக்கிறார் எமது தலைவர்!

இந்தப் பொருந்தாத் திருமணம் நடைபெறக்கூடுமென்று, நாம், யாரும், கனவிலும் எண்ணியதில்லை. பெரியாரின் கோலம், வயது, பேச்சு, வாழ்க்கையிலே அவருக்குப்பற்று அற்றதுபோலிருந்து காட்டியதன்மை ஆகியவை நம்மை, அவருடைய மனதிலும் ஒரு "மாது" புகமுடியும் என்று எண்ணச் செய்யவில்லை. அதிலும் எப்படிப்பட்ட மாது?

பெரியாரின் உயிரைப் பாதுகாக்க, உடலைப் பாதுகாக்க, தக்கவிதமான உணவு, மருந்து தருதல், பிரயாண காலத்தில் வசதி செய்து தருவதுபோன்ற காரியத்தைக் கவனிப்பது, என்கிற முறையில், இயக்கத்தில் ஐந்தாறு வருஷத்துக்கு முன்பு, வந்தவர்கள் மணியம்மையார்.

ஊர், வேலூர்! தகப்பனார் கனகசபை முதலியார்! அவரும் இயக்கப் பற்றுடையார்! அவர் இறந்துபட்

முகத்திலே கரி பூசிவிட்டார்

டார்—மணியம்மையாரின் படிப்பும் நின்றது—பெரியாரின் தொண்டுக்காகப் புறப்பட்டார்.

பெரியாருக்கு, மகனோ, மகளோ இல்லை—மணி அம்மையாரின் ஆரம்பகாலத் தோண்டு போன்ற தொண்டு புரிய! ஆனால் அண்ணன் உண்டு, அவர்களுக்கு திருமகள் இருவர், புத்திரர்கள் மூவர்—தமக்கை உண்டு—அவர்களுக்குக் குமாரிகள் மூவர், குமாரர்கள் இருவர்—அனைவரும், வேறூரிலிருந்து வேற்றுக் குடும்பத்துப் பெண்வந்து சேருமுன்பு, பெரியாருக்குப் பணிவிடை செய்வதிலோ, இயக்கப் பணி புரிவதிலோ ஈடுபடாமலிருந்தவர்கள் அல்ல

சில மாநாடுகளில் தேழியர்கள் காந்தி B.A., மிராண்டா B.A., என்னும் இருவரும் கலந்துகொண்டது உண்டு. அவர்கள், பெரியார் குடும்பத்தினர்தான்.

இவர்கள் மட்டுமல்ல, பெரியாரின் உடற்பாதுகாப்புக்கான பணிபுரிய, நான் நீயென்று போட்டியிட்டுக் கொண்டு வர நூற்றுக் கணக்கிலே தூய உள்ளம் படைத்தவர்கள் உண்டு.

அவர்கள் யாரும் தேவைப்படவில்லை; மணியம்மை [illegible]பட்டது!

புயல் நுழைகிறது என்று கருதியவன் நான்.

புல்லன் என்று தூற்றப்பட்டேன், அதனால்.

அந்த [illegible] கொண்டு [illegible]ண்டு, திராவிடர்கள் முதலிலே கொண்டிருந்த அருவருப்பையும் இழந்தனர்.

அப்பா! அப்பா! என்று அந்த அம்மை மனம் குளிர, வாய் குளிர, கேட்டோர் காது குளிரக் கூறவும், அம்மா—அம்மா, என்றுகேட்டோர் பெருமையும் பூரிப்பும் அடையும் விதமாக, பெரியார் அந்த அம்மையாரை அழைக்கவும், இக்காட்சியைக் கண்டு, பெரியாரின் வளர்ப்புப் பெண் இந்த மணியம்மை எனப் பல்லாயிரவர் எண்ணி மகிழவுமான நிலை இருந்தது.

அந்த வளர்ப்புப் பெண்தான், இன்று பெரியாரின் மனைவியாக இருக்கிறார்கள்—பதிவுத் திருமணமாம்!!

இந்த நிலையை யார்தான் எந்தக் காரணங்கொண்டுதான், சாதாரணமானதென்று சொல்ல முடியும்.

நூற்றுக்கணக்கான மாநாடுகளிலே நமது வீட்டுத் தாய்மார்கள் தமது கரம் பற்றி நின்ற குழந்தைகளுக்குப் பெரியாரைப் பெருமையுடன் காட்டி "இதோ, தாத்தா பார்—வணக்கஞ் சொல்லு" என்று கூறினர்—கேட்டோம்—களித்தோம்!

பக்கத்திலே பணிவிடை செய்து நின்ற மணியம்மையைக் காட்டி, "தாத்தா பெண்ணு," என்று கூறினர்.

அந்தத் தாத்தாவுக்குக் கலியாணம், பணிவிடை செய்து வந்த பாவையுடன்!

சரியா? முறையா? என்று உலகம் கேட்கிறது.

பெரியாருக்கு, இயக்கத்திலேயும், சொந்த முறையிலும் வேண்டியவர்கள், நண்பர்கள், என்பவர்கள் சிலர் பலர் உண்டு.

என்னிடத்திலே பெரியார் இன்ன விஷயமாகக் கலந்து பேசினார்—என்னை இன்ன காரியம் செய்யச் சொன்னார் என்று களிப்புடன் கூறிக்கொள்பவர்கள் ஒவ்வொரு ஊரிலும் சில பலர் உண்டு.

சென்னையிலே இதுபோல பலர் உண்டு. (எனக்கும் அந்த வாய்ப்பு இருந்ததுண்டு, இடையிலே அறுந்தும் போயிற்று.—C. N. A)

இவ்வளவு பேர் இருந்தும், இந்தத் திருமண விஷயமாக, பெரியார் இவர்களில் யாரிடமும் பேசியதில்லை—யோசனை கேட்டதில்லை, ஜாடையும் காட்டியதில்லை.

மோட்டாருக்குப் பெட்ரோல் வாங்கித் தருவது—ஆபீசுக்கு பேப்பர் வாங்கு, நிதிக்குப் பணம் பெற்றுத் தருவது போன்ற அலுவலுக்கு மட்டுமேதான் அவர்கள் தேவைப்பட்டார்.

இன்ன ஊரில், இன்னஇடத்தில் மாநாடு கூட்டு—அதற்கான ஏற்பாடு செய் என்று கூறிட மட்டுமே அவர்கள் தேவைப்பட்டனர். இந்தத் திருமண விஷயமாக, பெரியார், படிப்பட்ட நண்பர்கள் யாரிடமும் பேசியதில்லை.

எனக்குத் தெரியாது! என்னிடம் சொன்னதில்லையே! என்று ஒவ்வொருவரும் திகைப்புடன் கூறுகின்றனர்.

"தங்களிடம் பெரியாருக்கு பெருமதிப்பு உண்டே, ஒரு சமயம் உங்களிடம் சொன்னாரா, விருந்து சாப்பிட்ட அன்று வந்தாரே சொன்னாரா" என்று முன்னாள் அமைச்சர் [illegible]முதலியாரைக் கேட்டுப் பார்த்தோம்—"தொடே ஜாடையாகக்கூட சொல்லவில்லையே" என்று [illegible] அவர் கூறினார்.

"அரசு! உனக்கு தெரியுமாமே!" என்று கேட்டால் "ஐயோ நான் நீயேனே, என்னை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு பெரியார் தனியாகச் சென்று தான் ரிஜிஸ்ட்ராரிடம் பேசிக் கொண்டிருந்தார்" என்று கூறுகிறார், பெரியாரின் பணிவிடைப் படை வரிசையில் முக்கியஸ்தராகிய C. D. T. அரசு.

"அவருடன் நேற்றுவரையில் சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தீரே, உமக்குத் தெரியுமா இதுபற்றி?" என்று கேட்டால் "தெரியாதே" என்று கூறித் தேம்புகிறார் தோழர் N. V. நடராசன்.

அண்ணன் மகனும் விடுதலைக்கு மானேஜருமான E. V. K. சம்பத், இதை அறியார்.

விடுதலை ஆசிரியர் தோழர் குருசாமிக்குத் தெரியாது—பொருளாளர் [illegible]சாமிக்குத் தெரியாது—இவர்கள் யாரும் அறியார்கள். யாரிடமும் இதுபற்றிப் பேசினதில்லை—ஜாடைமாடையாகக்கூடப் பேசியதில்லை.

ஆனால் இதுபற்றிக் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியிடம் திருவண்ணாமலையில் கலந்து பேசியிருக்

REGD M. 4642.

திராவிடநாடு

9

3—7—49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 AUG 1949
MADRAS

தனி வெளியீடு

விலை
ஒரு அணா

வெட்கப்படுகிறோம்—வேதனைப்படுகிறோம்

இல்லை

விரட்டப்படுகிறோம்

சென்ற ஆண்டு நாம் நமது தலைவர் பெரியாரின் 71-வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினோம்.

இந்த ஆண்டு அவர் திருமண வைபவத்தைக் காணும்படி நம்மை அழைக்கிறார்—இல்லை—அறிவிக்கிறார்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகப் பெரியாருடைய உடலைக் கவனித்துக் கொள்ளும் திருத்தொண்டிலே தன்னை ஒப்படைத்துப் பணியாற்றி வந்தார் திருமதி மணி அம்மையார்.

அந்தத் திருமதிக்கு வயது 26.

அவர்கள்தான் பெரியாருக்கு மனைவியாகும் தொண்டில் இப்போது ஈடுபட நேரிட்டிருக்கிறது.

சென்னையில் இவர்கள் பதிவுத் திருமண மனு, பதிவு நிலையத்தில் கடந்த ஒருவார காலமாக ஒட்டி வைக்கப்பட்டிருக்கிறது. பலர் பார்த்துத் திகைப்படைந்துள்ளனர்.

பெரியாருக்கு வயது 72.

மணியம்மைக்கு வயது 26. இவர்களின் பதிவுத் திருமணம் நடைபெற இருக்கிறது.

"என்னிடம் அன்பும், எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும் சற்றுப் புரட்சியாகவும் திடுக்கிடக் கூடியதாகவும், இயக்கமே அழிந்துவிடுமோ என்று பயப்படக் கூடியதாகவும், எனக்கு ஒரு கேட்ட பேரும், இழிவும், ஏற்படக்கூடிய பெரிய தவறாகவுங் கூடக் காணப்படுவதாகத் தெரிகிறது" என்று பெரியாரே 28—6—49 விடுதலையில் வெளியிட்ட அறிக்கையிலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

கோபம், கொதிப்பு இவைமட்டுமே இதனால் ஏற்படும் என்று அவர் குறிப்பு காட்டுகிறார். ஆனால் இவை மட்டுமல்ல இந்தச் சேதியாலே ஏற்பட்ட விளைவு—கண்ணீர்! தூய்மையுள்ளம் கொண்ட ஆயிரமாயிரம் இயக்கத் தோழர்கள் கண்ணீர் சொரிந்த வண்ணம் உள்ளனர்.

இந்தக் கண்ணீரை அவர் எதிர்பார்த்திருப்பாரா? அல்லது மதிக்கப் போகிறாரா என்பது ஒருபுறமிருக்க, எதற்கும் கலங்கா உள்ளம் படைத்த இளைஞர்கள் இந்தச் சேதி கேட்டுக் கண்ணீர் வடிப்பதுபோல வேறு எப்போதும் நடைபெற்றதில்லை — உலக சம்பவங்களிலேயே இதற்கு இணையானதாக வேறு ஒன்றைக் காட்டவும் முடியாது.

தலை நிமிர்ந்து தன்மானத் தூதர்களாய், விடுதலை வீரர்களாய், ஏறு நடை நடந்து செல்லும் எண்ணற்ற இளைஞர்கள் இன்று உடைந்த உள்ளத்தைச் சுமந்து கொண்டு, வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பின்னும் கால்களுடன், பிசையும் கரங்களுடன், யார் பார்த்து என்னவிதமான பரிகாசம் செய்கிறார்களோ என்ற அச்சத்துடன் நடமாடும் நிலையைக் காணும் போது கல் நெஞ்சமும் கரைந்துவிடும்.

திருமணம் சொந்த விஷயம், வயோதிகப் பருவத்திலே திருமணம் செய்வதுகூடச் சொந்த விஷயந்தான். அதிலும் தனிப்பட்ட ஒருவர், அல்லது வெறும் அரசியல் கட்சித் தலைவராயுள்ள ஒருவர் திருமணம் செய்து கொள்வது, வயோதிகத்திலே செய்து கொண்டாலும் கூடக் கேட்டுத் திடுக்கிடவோ, கேலியாகப் பேசவோ கோபமடைய மட்டுமேதான் தோன்றுமே ஒழியக், கண்ணீர் கிளம்பாது. இன்று கண்ணீர்பெருக்கெடுத்து ஓடுகிறது, பெரியாரின் திருமணச் சேதி கேட்டு.

நாம் அவரை ஒரு அரசியல் கட்சித் தலைவராக மட்டும் கொண்டிருக்கவில்லை. இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அவரைத் தங்கள் குடும்பத் தலைவர் என, வாழ்க்கைக்கு வழிகாட்டியென ஏற்றுக்கொண்டு எந்த இயக்கத்தவரும், எந்தத் தலைவரிடமும் காட்டாத அளவு மரியாதை உணர்ச்சியை, அன்பைக் காட்டி வந்திருக்கிறோம்.

நமது கண்களுக்கு அவர் நமது மானத்தை மீட்டுத் தரும் மகானாக, நம்மைப் பன்னெடும் காலமாகக் கொடுமைப் படுத்திவரும் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் போர் புரியும் மாவீரராகக் காட்சிதந்து வந்திருக்கிறார்.

அவர் கண்ணோட்டம் நமக்குக் களிப்பூட்டி வந்தது.

அவர் சொல் நமக்குச் சட்டமாக இருந்துவந்திருக்கிறது.

அவர் வகுக்கும் பாதை நமக்கு விடுதலை வழியாக தெரிந்திருக்கிறது.

அவரை நாம் பின்பற்றி வந்தது ஏறத்தாழ "பக்தர்கள் அவதார புருஷர்களை"ப் பின்பற்றி வந்தது போலவேதான்.

இதற்குக் காரணம், நாம் மற்ற எந்தத் தலைவரையும்விட இவரிடம் தனிப்பட்ட தன்மை, பண்பு, இருக்கிறது என்று உளமார எண்ணியதால்தான்.

வயது ஏற ஏற வாழ்க்கையைப் பற்றி, குடும்பத்தைப்பற்றி, சொந்தச் சுகத்தைப்பற்றிக் கவலைப்படாமல் துறவிபோல இரவு பகலென்று பாராமல், அலைந்து திரிந்து அரும்பாடுபட்டு, நாம் வாழ, அவர் வாட்டத்தையும் பாடுகளையும் தாங்கிக் கொள்கிறார் என்று தெரிந்ததால், நாம், அவர், பெரியார், எனும் பண்புப் பெயருக்கு முற்றிலும் உரியார், இவர் போன்றார் வேறு யாரும் இல்லையென்று இறும்பூதெய்தி வந்தோம், இறுமாந்திருந்தோம்.

பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்தார்

அவர் நமக்கு மற்றவர் சொல்லாததையெல்லாம் சொன்னார்; மற்றவர் யாரும் விளக்காததை விளக்கினார். நம்மை நாம் உணரவும், நமது மானத்தை நாம் காப்பாற்றிக்கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார்.

அரசியலைப்பற்றியல்ல அவர் பேசிவந்தது, வாழ்க்கையைப்பற்றி, வாழ்க்கைச் சிக்கலை நீக்குவதுபற்றி, வாழ்விலே புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான வழிகளைப்பற்றி எடுத்துரைத்து வந்தார்.

தபோதனர்களும், அருள் பெற்றவர்களும், கூறியதாகச் சொல்லப்படும் கோட்பாடுகள் நமது வாழ்க்கையை, மனிதத்தன்மைக்கு மாறானதாக்கி விட்டன, என்பதை எடுத்துக் காட்டி, அந்தக் கட்டளைகளை மீறுங்கள், வாழ்க்கைக்குப் புதிய, ஆனால் புனிதமான இலட்சியத்தை அமைத்துக் கொள்ளுங்கள் என்று வீர உரையாற்றி வந்தார்.

வாழ்க்கைப் பிரச்னையிலே அவர் மிகச் சிறப்பாகவும், மிகத் தெளிவாகவும், எடுத்துப் பேசிவந்த பகுதி திருமணத்தைப்பற்றியது.

திருமண முறையிலேயுள்ள மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண்களைக் கருவிகளாக்கும் சுயமைத்தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியது போல வேறு எந்தத் தலைவரும் உரையாற்றியதில்லை.

உரையுடனா நின்றது; இல்லை. ஊரே மாறிற்று. நமது உள்ளமே மாறிற்று. ரிஷிகள் வகுத்துவைத்துவிட்டுப்போன திட்டங்களே மாறின; மகிழ்ந்தோம், பெருமை கொண்டோம்; ஆணவம் கொண்டோம்.

பொருந்தாத் திருமணத்தை அவர் கண்டித்தது கேட்டு, கிழவர்கள் கலங்கினர்; குமரிகள் குதூகலித்தனர்.

காமப்பித்துக் கொண்டலையும் ஆண்கள் வயோதிகப் பருவத்திலே வாலிபப் பெண்ணைச், சொத்து சுகம் கிடைக்கும் என்று ஆசைகாட்டியோ, வேறு எந்தக் காரணம் காட்டியோ திருமணத்துக்குச் சம்மதிக்கச் செய்தால், மானரோஷத்தில் அக்கரையுடைய வாலிபர்கள் அந்தத் திருமணம் நடைபெற இடந்தரலாமா என்று ஆயிரமாயிரம் மேடைகளிலே முழக்கமிட்டார்—நமக்கெல்லாம் புதுமுறுக்கேற்றினார்.

பிள்ளையில்லையென்ற காரணத்துக்காக சொத்துக்கு வாரிசயில்லை என்ற காரணத்துக்காக, மனைவியைத் தேடும் கொடுமையை ஆயிரமாயிரம் மேடைகளிலே கண்டித்தார்.

பொருந்தாத் திருமணம் நாட்டுக்குப் பெரியதோர் சாபத்தீடு என்று முழக்கமிட்டார்.

அந்தக்காலத்துத் தசரதன் முதற்கொண்டு இந்தக்காலத்து "தங்கபஸ்பம்" தேடும் கிழவர் வரையிலே எள்ளி நகையாடினார்.

தன்மான இயக்கம் தழைத்திருக்கும் இடத்திலே "பொருந்தாத் திருமணம்" யார் வீட்டிலாவது, எந்தக் காரணத்தாலாவது நடைபெற இருந்தால், போலீஸ் பந்தோபஸ்துத் தேடக்கூடிய அளவுக்கு நாட்டு மக்களின் உணர்ச்சி வேகம் உருவெடுத்தது.

ஏற்கனவே பொருந்தாத் திருமணம் செய்து கொண்டவர்கள்கூட, வெட்கத்தால்—வேதனையால் தாக்கப்பட்டனர்.

"என்போன்ற வயதானவர்கள், கல்யாணம் செய்து கொள்ள எண்ணக்கூடாது—எப்படியாவது, அப்படி ஒரு எண்ணம்வந்து தொலைந்தால், தப்பு அறுந்ததாக, (அதாவது விதவையாக) ஒரு நாற்பது ஐம்பது வயதானதாக, ஒரு கிழத்தைப் பார்த்துக் கலியாணம் செய்து தொலைக்கட்டுமே—பச்சைக் கொடிபோல ஒரு பெண்ணை, வாழ்வின் சுகத்தை அறிய வேண்டிய வயதும், பக்குவமும் கொண்ட பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதா—காரணம் ஆயிரம் காட்டட்டுமே, காட்டினாலும் எந்த மானமுள்ளவன், அந்தக் கலியாணத்தைச் சரியென்று கூறுவான்? யாருக்குச் சம்மதம் வரும்?" என்று அவர் பேசிய பேச்சைக் கேட்காத ஊரில்லை.

இப்படிப்பட்ட அறிவுரை புகட்டியவர், தமது 72-ம் வயதில் 26- வயதுள்ள பெண்ணை, பதிவுத் திருமணம் செய்து கொள்கிறார் என்றால், கண்ணீரைக் காணிக்கையாகத் தருவது தவிர வேறென்ன நிலைமை இருக்கும்!

"ஏம்பா! திராவிடர்கழகம்! உங்கள் தலைவருக்குத் திருமணமாமே!!" என்று கேட்கும் கேள்வி கூரம்பு போல நெஞ்சில் பாய்ந்து தொலைக்கிறதே.

சீர்திருத்த இயக்கம் இது—இதோ பாரய்யா, "சீர்திருத்தம், 72-க்கும் 26-க்கும் திருமணம்" என்று கேலிபேசுகிறார்களே — கேட்டதும் நெஞ்சு வெடிக்கிறதே.

"கையிலே தடி மணமகனுக்கு! கருப்பு உடை மணமகளுக்கு!"—என்று பரிகாசம் பேசுகிறார்களே.

"ஊருக்குத்தானய்யா உபதேசம்!" என்று இடித்துரைக்கிறார்களே.

"எனக்கென்ன, வயதோ 70-க்கு மேலாகிறது, ஒரு காலை வீட்டிலும் இன்னொரு காலைச் சுடுகாட்டிலும் வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் செத்தால் அழ ஆள் இல்லை, நான் அழுகிறபடி சாவதற்கும் ஆள் இல்லை," என்றெல்லாம் பேசின பெரியார் கலியாணம் செய்து கொள்கிறாரய்யா!"—என்று கடைவீதி பேசிக் கைகொட்டி சிரிக்கிறதே!

"ஊரிலே நடைபெறும் அக்ரமத்தைக் கண்டிக்கும் அசகாயச் சூரர்களே! சமுதாய இழிவுகளை ஓட்டும் வீராதி வீரர்களே! பெண் விடுதலைக்குப் பெரும்போர் தொடுக்கும் பெரியவர்களே! பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்த கண்ணியர்களே, இதோ உங்கள் தலைவர், துறவிக்கோலத்தில், தள்ளாடும் பருவத்தில், இளம் பெண்ணைத் திருமணம் செய்துகொள்கிறாரே,

காரணம் ஆயிரம் காட்டினுலும்!

உங்கள் கொள்கையின் கதி என்ன, எங்கே உங்கள் பிரச்சார யோக்கியதை; என்ன சொல்லுகிறீர்கள் இதற்கு, எப்படி இந்த அக்ரமத்தை, அநீதியை, அருவருக்கத்தக்க ஆபாசத்தைச் சகித்துக்கொள்கிறீர்கள்?" என்று சவுக்கடி கொடுக்கிறது போலப் பேசுகிறுர்களே—இனியும் பேசப்போகிறுர்களே—என்ன செய்வோம்—என்ன சமாதானம் கூறுவோம்—எப்படி மனப்புண்ணை மாற்றமுடியும்—எப்படி மானத்தைக் காப்பாற்றிக் கொள்வது என்று எண்ணினர்—எண்ணினதும் தாயோ, தகப்பனே, மனைவியோ, மகவோ, அண்ணன் தம்பியோ, உடன் பிறந்தவர்களோ இறந்தால் ஏற்படக்கூடிய துக்கத்தை விட அதிகமான அளவிலே துக்கம் பீறிட்டுக் கிளம்பிக் கதறுகின்றனர்—கதறிக்கொண்டேயிருக்கிறேம்—கண்ணீருக்கிடையேதான், இக்கட்டுரையும் தீட்டப்படுகிறது.

பொருந்தாத். திருமணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம்! எந்தக்காலத்திலும், எதிரியின் எந்த வீச்சும், சர்க்காரின் எந்தநடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச், செய்ததில்லை.

பல நெருக்கடிகளைப் பார்த்திருக்கிறேம் — பல ஆபத்துகளைப் பார்த்திருக்கிறேம்—இந்தப்பேரிடியை நம்மால் தாங்கிக்கொள்ள முடியவில்லை — முடியாது—முடியாது—நிச்சயமாக முடியாது.

முகத்திலே கரி பூசிவிட்டார். மூக்கறுத்துவிட்டார்! மூலையில் உட்கார்ந்து கதறுகிறேம்—சேதி தெரிந்தது முதல்.

வெட்கப்படுகிறேம் அயலாரைக் காண!

வேதனைப்படுகிறேம் தனிமையில்!

ஒருவர் கண்ணீரை, மற்றவர் துடைக்க முயலுகிறேம்—துடிக்கிறேம் — நெஞ்சத்தில் துயரத்தேள் கொட்டியதால்.

பொருந்தாத் திருமணம் புரிந்துகொள்ளத் துணிபவர்களை, எவ்வளவு காரசாரமாகக் கண்டித்திருக்கிறேம்—எவ்வளவு ஆவேசமாகக் கண்டித்தோம்.

இப்போது, எவ்வளவு சாதாரணமாக நம்மையும் நமது உணர்ச்சிகளையும், கொள்கையையும், இயக்கத்தையும் எவ்வளவு அலட்சியமாகக் கருதி, நமதுதலைவர், 72-ம் வயதிலே திருமணம் செய்துகொள்வதாக அறிவிக்கிறுர். நம்மை நடைப்பிணமாக்குவதாகத் தெரிவிக்கிறுர்—நாட்டு மக்களின் நகைப்புக்கு இடமாக்கி வெட்கித்தலைகுனிந்து போங்கள், எனக்கென்ன என்று தெரிவித்துவிட்டார்.

அந்தோ! எவ்வளவு பெரிய தாக்குதல்! எத்தனை அவமானம் தரும் காரியம்! இதற்கோ இவ்வளவு எழுச்சி பெற்றேம்! இந்தப் பழியையும் இழிவையும் ஏற்றுக்கொள்ளவா, இந்த அளவு வளர்ந்தோம்.

என்னே நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்! என்னதான் நமக்கு எதிர்காலம்! எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெரும் வேதனை! கண்களிலே நீர்! கைகால்களிலே நடுக்கம்! இதுநாம்! இதற்கோ இந்த வளர்ச்சி!

எம்மை ஆளாக்கிவிட்ட தலைவரே! இந்தக் கதிக்கு எம்மை ஆளாக்கவா இவ்வளவு உழைப்பும் பயன்படவேண்டும்? உலகின்முன் தலைகாட்ட முடியாத நிலைமையில் எம்மைச் செய்யும் அளவுக்கு நாங்கள் தங்களுக்கு இழைத்த குற்றம் என்ன? நீங்கள் காட்டிய வழி நடந்தோமே, அதற்கா இந்தப் பரிசு?

புயலை எதிர்த்துச் செல்லுங்கள் என்று தாங்கள் கட்டளையிட்டபோதெல்லாம், சரி என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டினுேமே, அதற்குப் பரிசு இதுதானு?

முத்தமிடவந்த குழந்தையின் மூக்கைக்கடித்தெறியும் தாயை நாங்கள் கண்டதில்லை, தந்தையே! நாங்கள் செய்த தவறுதான் என்ன, இந்தத்தகாத காரியத்தைத் தாங்கள் செய்து, எங்கள் தன்மானத்தை அறுத்தெறிவது ஏன்?

என்ன குற்றம் இழைத்தோம்?

ஏன், என்றும் அழியாத அவமானத்தைத் தேடித் தருகிறீர்.

எப்படித்தாங்குவோம் இந்த அழிவை!

எத்தனை ஆயிரம் காரணம் காட்டினுலும், சமர்த்தான விளக்கம் உரைத்தாலும், 72 — 26 — இதை மறுக்கமுடியாதே! இது பொருந்தாத் திருமணம் என்பதை மறைக்கமுடியாதே!

இதைச் சீர்திருத்தச்செம்மலாகிய தாங்கள்செய்வதென்பது காலத்தாலும் துடைக்க முடியாத கரை என்பதை மறுக்கமுடியாதே! ஏன் இதைச் செய்கிறீர், எம்மை ஏளனத்துக்கு ஆளாகவிடுகிறீர்!

கண்ணீரைத் துடைத்தபடி நின்று, ஆயிரமாயிரம் இளைஞர்கள் கேட்கும் கேள்விகள் இவை!

இருதயத்துடிப்பு! ஒருநாள் பழகியவர்கூட உளம் உருகிவிடும், பேச்சு—இதையும் ஏற்க மறுக்கிறுர் எமது தலைவர்!

இந்தப் பொருந்தாத் திருமணம் நடைபெறக்கூடுமென்று, நாம், யாரும், கனவிலும் எண்ணியதில்லை. பெரியாரின் கோலம், வயது, பேச்சு, வாழ்க்கையிலே அவருக்குப்பற்று அற்றதுபோலிருந்து காட்டியதன்மை ஆகியவை நம்மை, அவருடைய மனதிலும் ஒரு "மாது" புகமுடியும் என்று எண்ணச் செய்யவில்லை. அதிலும் எப்படிப்பட்ட மாது?

பெரியாரின் உயிரைப் பாதுகாக்க, உடலைப் பாதுகாக்க, தக்கவிதமான உணவு, மருந்துதருதல், பிரயாணகாலத்தில் வசதி செய்து தருவதுபோன்ற காரியத்தைக் கவனிப்பது, என்கிற முறையில், இயக்கத்தில் ஐந்தாறு வருஷத்துக்கு முன்பு, வந்தவர்கள் மணியம்மையார்.

ஊர், வேலூர்! தகப்பனுர் கனகசபை முதலியார்! அவரும் இயக்கப் பற்றுடையார்! அவர் இறந்துபட்டார்—மணியம்மையாரின் படிப்பும் நின்றது—பெரியாரின் தொண்டுக்காகப் புறப்பட்டார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 11 JUL 1949 MADRAS

முகத்திலே கரி பூசிவிட்டார்

பெரியாருக்கு, மகனே, மகளோ இல்லை—மணியம்மையாரின் ஆரம்பகாலத் தொண்டு போன்ற தொண்டு புரிய! ஆனல் அண்ணன் உண்டு, அவர்களுக்கு திருமகள் இருவர், புத்திரர்கள் மூவர்—தமக்கை உண்டு—அவர்களுக்குக் குமாரிகள் மூவர், குமாரர்கள் இருவர்—அனைவரும், வேலூரிலிருந்து வேற்றுக் குடும்பத்துப் பெண்வந்து சேருமுன்பு, பெரியாருக்குப் பணிவிடை செய்வதிலோ, இயக்கப் பணி புரிவதிலோ ஈடுபடாமலிருந்தவர்கள் அல்ல.

சில மாநாடுகளில் தோழியர்கள் காந்தி B. A., மிராண்டா B.A., என்னும் இருவரும் கலந்துகொண்டது உண்டு. அவர்கள், பெரியார் குடும்பத்தினர்தான்.

இவர்கள் மட்டுமல்ல, பெரியாரின் உடற்பாதுகாப்புக்கான பணிபுரிய, நான் நீயென்று போட்டியிட்டுக் கொண்டு வர நூற்றுக் கணக்கிலே தூய உள்ளம் படைத்தவர்கள் உண்டு.

அவர்கள் யாரும் தேவைப்படவில்லை; மணியம்மை வர நேரிட்டது!

புயல் நுழைகிறது என்று கருதியவன் நான்.

புல்லன் என்று தூற்றப்பட்டேன், அதனுல்.

அந்த அம்மையாரின் அருந்தொண்டு கண்டு, திராவிடர்கள் முதலிலே கொண்டிருந்த அருவருப்பையும் இழந்தனர்.

அப்பா! அப்பா! என்று அந்த அம்மை மனம் குளிர, வாய் குளிர, கேட்போர் காது குளிரக் கூறவும், அம்மா—அம்மா, என்றுகேட்போர் பெருமையும் பூரிப்பும் அடையும் விதமாக, பெரியார் அந்த அம்மையாரை அழைக்கவும், இக்காட்சியைக் கண்டு, பெரியாரின் வளர்ப்புப் பெண் இந்த மணியம்மை எனப் பல்லாயிரவர் எண்ணி மகிழவுமான நிலை இருந்தது.

அந்த வளர்ப்புப் பெண்தான், இன்று பெரியாரின் மனைவியாக இருக்கிறுர்கள்—பதிவுத் திருமணமாம்!!

இந்த நிலையை யார்தான் எந்தக் காரணங்கொண்டுதான், சாதாரணமானதென்று சொல்ல முடியும்.

நூற்றுக்கணக்கான மாநாடுகளிலே, நமது வீட்டுத் தாய்மார்கள் தமது கரம் பற்றி நின்ற குழந்தைகளுக்குப் பெரியாரைப் பெருமையுடன் காட்டி "இதோ, தாத்தா பார்— வணக்கஞ் சொல்லு" என்று கூறினர்—கேட்டோம்—களித்தோம்!

பக்கத்திலே பணிவிடை செய்து நின்ற மணியம்மையைக் காட்டி, "தாத்தா பெண்ணு," என்று கூறினர்.

அந்தத் தாத்தாவுக்குக் கலியாணம், பணிவிடை செய்து வந்த பாவையுடன்!

சரியா? முறையா? என்று உலகம் கேட்கிறது.

பெரியாருக்கு, இயக்கத்திலேயும், சொந்த முறையிலேயும் வேண்டியவர்கள், நண்பர்கள், என்பவர்கள் சிலபலர் உண்டு.

என்னிடத்திலே பெரியார் இன்ன விஷயமாகக் கலந்து பேசினுர்—என்னை இன்ன காரியம் செய்யச் சொன்னுர் என்று களிப்புடன் கூறிக்கொள்பவர்கள் ஒவ்வொரு ஊரிலும் சில பலர் உண்டு.

சென்னையிலே இதுபோன்று பலர் உண்டு. (எனக்கும் அந்த வாய்ப்பு இருந்ததுண்டு, இடையிலே அறுந்தும் போயிற்று.—C. N. A.)

இவ்வளவு பேர் இருந்தும், இந்தத் திருமண விஷயமாக, பெரியார் இவர்களில் யாரிடமும் பேசியதில்லை—யோசனை கேட்டதில்லை—ஜாடையும் காட்டியதில்லை.

மோட்டாருக்குப் பெட்ரோல் வாங்கித் தருவது—ஆபீசுக்கு பேப்பர் வாங்குவது, நிதிக்குப் பணம் பெற்றுத் தருவது போன்ற அலுவலுக்கு மட்டுமேதான் அவர்கள் தேவைப்பட்டார்கள்.

இன்ன ஊரில், இன்ன இடத்தில் மாநாடு கூட்டு—அதற்கான ஏற்பாடு செய், என்று கூறிட மட்டுமே அவர்கள் தேவைப்பட்டார்கள். இந்தத் திருமண விஷயமாக, பெரியார், இப்படிப்பட்ட நண்பர்கள் யாரிடமும் பேசியதில்லை.

எனக்குத் தெரியாதே! என்னிடம் சொன்னதில்லையே! என்று ஒவ்வொருவரும் திகைப்புடன் கூறுகின்றனர்.

"தங்களிடம் பெரியாருக்கு பெருமதிப்பு உண்டே, ஒரு சமயம் உங்களிடம் சொன்னுரா, விருந்து சாப்பிட அன்று வந்திருந்தாரே சொன்னுரா" என்று முன்னுள் அமைச்சர், முத்தய்யமுதலியாரைக் கேட்டுப் பார்த்தோம்—"தெரியாதே! ஜாடையாகக்கூட சொல்லவில்லையே" என்று அழுகுரலில் அவர் கூறினுர்.

"அரசு! உனக்குத் தெரியுமாமே!" என்று கேட்டால் "ஐயோ நான் அறியேனே, என்னை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, பெரியார் தனியாகச் சென்றுதான் ரிஜிஸ்ட்ராரிடம் பேசிக் கொண்டிருந்தார்" என்று கூறுகிறுர், பெரியாரின் பணிவிடைப் படைவரிசையில் முக்கியஸ்தராகிய C. D. T. அரசு.

"அவருடன் நேற்றுவரையில் சுற்றுப் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தீரே, உமக்குத் தெரியுமா இதுபற்றி?" என்று கேட்டால் "தெரியாதே" என்று கூறித் தேம்புகிறுர் தோழர் N. V. நடராசன்.

அண்ணன் மகனும், விடுதலைக்கு மானேஜருமான E. V. K. சம்பத், இதை அறியார்.

விடுதலை ஆசிரியர் தோழர் குருசாமிக்குத் தெரியாது—பொருளாளர் கோவிந்தசாமிக்குத் தெரியாது—இவர்கள் யாரும் அறியார்கள். யாரிடமும் இதுபற்றிப் பேசினதில்லை—ஜாடைமாடையாகக்கூடப் பேசியதில்லை.

ஆனல் இதுபற்றிக் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலாச்சாரியிடம் திருவண்ணுமலையில் கலந்து பேசியிருக்

வளர்ப்புப் பெண்தான்—மனைவி?

கிறார், நமது தலைவர், தமது அறிக்கையிலே இதை அவரே கூறுகிறார். உங்கள் யாரிடமும் நான் பேசாத, பேசவேண்டிய அவசியமில்லாத விஷயத்தை, அவரிடம் பேசினேன் என்று கூறுகிறார்.

அவர் பாக்கியசாலி! உண்மையிலேயே உழைத்து உருக்குலைந்து போய் இவர் தவிர வேறு ஒரு தலைவரே கிடையாது என்று மனமார நம்பி, செக்குமாடென உழைத்துவரும் நாம் பெறவில்லை அந்த பாக்கியத்தை! அன்பர் ஆச்சாரியார் பெற்றார்!

(கோவை மாநாட்டிலே கேட்டேன், என்ன பேச்சு உமக்குள் என்று; கேட்டது தவறு என்றனர் பலர். C. N. A.)

ஆச்சாரியாருடன் கலந்து பேசிய பிறகும், இயக்கத் தோழர்களில் யாரிடமும் இதுபற்றி மூச்சுவிடாமல், மிக மிக ரகசியமாக, இந்தத் திருமண ஏற்பாட்டினுக்கான காரியத்தைத் துவக்கினார். எப்படியோ உண்மை தலைகாட்டிற்று; உளம் கொதித்த தோழர் N. V. நடராசன் பெரியாருக்குக் கடிதம் தீட்டினார், கண்ணீர் மல்கிய நிலையில்.

கடிதம் அலட்சியப்படுத்தப்பட்டது. சென்னையை விட்டு ஈரோடு போவதாகக் கூறிவிட்டு ஏற்காடு சென்று தங்கினார், பெரியார், மணியம்மை சகிதம்.

இங்கு சேதி தெரிந்தவர்கள் துடித்தனர், அழுதனர், தூது செல்வதென்று முடிவு செய்தனர்—முதற் தூதுக்கோஷ்டி கிளம்பிற்று.

விடுதலை ஆசிரியர் குருசாமி, கடலூர் தோழர் குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, தோழர் N. V. நடராசன், குடந்தைத் தோழர் K.K. நீலமேகம் ஆகியோர் சென்றனர்.

திராவிட கழகத்தாரின் திகைப்பை, பொதுமக்களின் கேலியுரையைக் கூறினர், கெஞ்சினர். பெரியார் இவர்களிடம் விளக்கம்—சமாதானம் கூறினார், தடுமாற்றத்துடன் அல்ல, உறுதியுடன்.

தான் செய்யும் காரியம் தவறுடையதோ என்று சந்தேகம் இருக்கும் விதமாக அல்ல; நீங்கள் யார் என்று கேட்கும்விதமாகவே பேசினார்.

மற்றோர் தூதுகோஷ்டி கிளம்பிற்று. 'தமிழ் நாடு' ஆசிரியர் பார்த்தசாரதி, 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், சென்னைத் திராவிடர் கழக அமைப்பாளர் கண்ணபிரான், இந்தி எதிர்ப்பு போர்படைத் தலைவர்களில் ஒருவரான சி. வி. ராஜன்.

அவர்களிடமும் பெரியார் தாம் தமது முடிவை மாற்றப் போவதில்லை யென்றும் நாலு நாள் கூவிய பிறகு மக்கள் தாமாக அடங்கிவிடுவார்களென்றும் கூறி பதிலனுப்பினர்.

இதற்கிடையில் பல கடிதங்களும் அவருக்கு அனுப்பப்பட்டன. இவ்வளவும் திருமண ஏற்பாட்டைத் தடுக்க உதவவில்லை.

கூட்டாகக்கருத்தைத்தெரிவித்தலேமுறையென்று எண்ணி, பெரியார் இல்லத்திலேயே 27—6—49-ல் சென்னை ஜில்லா திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்றது. அதன் விவரம் :—

* * *

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அவசரக் கூட்டம்

வருத்தமும் கண்டனமும்—

சென்னை, ஜூன் 28—

சென்னை மாவட்டத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6-30 மணிக்கு, மவுண்ட்ரோட் மீரான் சாயபு தெரு 1-வது (பெரியார்) இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட இயக்கப் பிரமுகர்களும், நிர்வாக உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. தங்கராஜ் (மாவட்டத் தலைவர்) ஆர். டி. அரசு, எ. கே. சாமி, சி. ஆர். சின்னப்பன், கே. பக்தவத்சலம், பா. குருசாமி, பி. எஸ். ராமலிங்கம், சே. தேவசகாயம், இ. வி. ராஜன், மா. இளஞ்செழியன் (பி. ஏ. ஆனர்ஸ்), சத்யவாணி முத்து, சி. வி. ராஜன், எ. சுப்ரமண்யம், ஆ. கபாலமூர்த்தி, கா. சொக்கலிங்கம், பா. கோவிந்தராசன், எம். எஸ். மணி, எம். சண்முகம், எஸ். எஸ். ராகவலு, ஆர். கோவிந்தசாமி, எ. ஜெயராஜ், வி. கன்னையா, மா. சம்பந்தன், கா. சிதம்பரம், வி. நெடுமாறன், கோ. செங்குட்டுவன், டி. எம். பார்த்தசாரதி, எம். ரகுநாதன், புலவர் செல்வராஜ், சி. கே. நாதன், முத்துகிருஷ்ணன், கா. சம்பந்தன், க. அவின், ர. இலக்குமணன், ஏ. ஸி. பாலசுந்தரன், பி. ஏ. எல். டி., த. பால்சுப்ரமண்யன், சே. ஆரோக்யதாசன், சு. நடராசன், பி. துரைசாமி, டி. எ. சித்தார்த்தன், வல்லை. துரைராசன், ஆர். கே. முனுசாமி, அ. சங்கரய்யா, எம். ராஜி, வி. கே. சுப்பராயலு, சீனி. வெங்கடசாமி, ஏ. சாமிநாதன், வி. எஸ். வாசன், மா. பிரான்சிங், மாசிலாமணி, சிவஞானம், சொ. கொ. முத்துக்குமாரசாமி, சி. டி. டி. அரசு, டாக்டர் கணேசன், பாவலர் அப்துல் காதர், வி. டி. பெரியசாமி, கே. கோவிந்தசாமி (செயலாளர்), கே. எம். கண்ணபிரான் (அமைப்பாளர்), என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார் (தந்தி மூலம்) ஆகியோர்.

கமிட்டி கூட்டத் துவக்கத்தில் தலைவர் தோழர் சி. தங்கராஜ், செயலாளர் கே. கோவிந்தசாமி ஆகியோர் பெரியார், கே. எ. மணி ஆகியோரின் பொருந்தாத் திருமணத்தையும் அதனால் இயக்கத்திற்கு ஏற்படும் பெருங்கேட்டினையும் விளக்கிக் கூறினர். தொடர்ந்து தோழர்கள் சி. டி. டி. அரசு, கே. எம். கண்ணபிரான், டி. எம். பார்த்தசாரதி, மா. இளஞ்செழியன், பாவலர் அப்துல் காதர், என். வி. நடராசன் ஆகியோர் நகரில் இதுபற்றி ஏற்பட்டுள்ள நிலையையும், பெரியார் அவர்களிடத்தில் நேரில் பேசியது பற்றியும் எடுத்துக் கூறினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்

நீங்கள் யார் என்று கேட்கிறார்!

களுக்கு வணக்கமுடன் விண்ணப்பித்துக் கொள்வது, தாங்கள் தங்கள் 72-வது வயதில் 26-வயதான தோழியர் கே. எ. மணி அவர்களை பதிவுத் திருமணம் செய்து கொள்ளப்போவதாக, ரிஜிட்ரார் ஆபீசிலும், பத்திரிகைகளிலும், வெளிவந்துள்ளதைக் கண்டு இக்கமிட்டி வருத்தத்துடன், இவ்வேற்பாடு எல்லா வகையிலும் இயக்கத்திற்கு இழுக்கு நேரிடுமாதலால், இதை உடனே ரத்து செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்வதுடன் ரிஜிட்ராருக்கு கொடுத்துள்ள விண்ணப்பத்தை உடனே வாபஸ் பெறுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

2. தாங்கள் தங்களது திருமண முயற்சியை வாபஸ் பெற்றுவிட்டதாக உடனே பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட வேண்டுகிறோம். அப்படி வாபஸ் பெறவில்லை யென்றால், பொதுக் கூட்ட மூலம் மேலால் கண்டிக்க வேண்டியிருக்கு மென்பதை வருத்தத்துடன் இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

3. மேற்படி ஏற்பாட்டை வாபஸ் பெறுமாறு சென்னை மாவட்ட திராவிடர் கழகம் செய்திருப்பது போன்று ஒவ்வொருமாவட்ட நிர்வாகக்கமிட்டியினரும், முக்கியஸ்தர்களும் உடனே தீர்மானம் நிறைவேற்றித் தலைவர் பெரியார் அவர்களுக்கு அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறது.

(ஒப்பம்) கே. கோவிந்தசாமி

பொதுச் செயலாளர்,

நெ. 5, காளப்ப ஆச்சாரி தெரு, பி. டி. மதராஸ்.

* * *

இவைகளுக்குப் பிறகு நம்மையெல்லாம் திடுக்கிடச் செய்து, தேம்பச் செய்து, ஊராரின் கேலியைக் கிளப்பிவிட்ட திருமண ஏற்பாட்டுக்கு பெரியார் ஓர் அறிக்கைமூலம்விளக்கம்அளித்தார்-அந்த விளக்கம்இப்போது நடைபெற இருக்கும் திருமணம் என்பது இத்துடன் முடிந்துவிடும் செயல் அல்ல—பின்னால் வரவிருக்கும் பேராபத்துக்கு, பெரியதோர் இழிவுக்கு, முன்னறிவிப்பு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மணி அம்மை, பெரியாருக்கு மனைவிமட்டுமல்ல—இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி பெறப் போகிறார்.

புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்களாம்!

பெரியாரே! இப்படி ஒரு அநியாயமான, கொள்கைக்கு முரணான: நாகரிக மக்கள் நகைக்கத் தக்க, பொருந்தாத் திருமணம் செய்து கொள்கிறீரே," இது சரியா என்று கேட்கிறோம்,

"போடா போ! நான் திருமணம் மட்டுமா செய்து கொள்கிறேன், இயக்கத்தையே மணியம்மையிடம் தான் ஒப்படைக்கிறேன். அப்படி ஒப்படைப்பதற்காகவே தான் திருமணம் செய்து கொள்கிறேன்" என்று கூறுகிறார் அறிக்கையில்.

'ஐயோ, என் புருஷனை ஏன் கொல்லுகிறாய்' என்று பதைத்துக் கேட்கும் பாவையைப் பார்த்து, அவனைக் கொல்வது காரணமற்று என்று எண்ணுகிறாய், உன்னைப் பெண்டாளவே அந்தக் காரியம் செய்கிறேன்' என்று துணிந்து கூறுவதுபோல இயக்கத்தையும், இயக்க சொத்தையும், இயக்க நடப்பையும் எனக்குப் பிறகு நடத்திச் செல்லும் பொறுப்பை, வாய்ப்பை மணியம்மைக்குத் தருவதற்காகவே "அதை" எப்படியாவது சட்ட பூர்வமாக என் "வாரசு" ஆக்கிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டேன் என்று தெரிவிக்கிறார்.

நடைபெறப் போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல, புதிய மகுடாபிஷேகமும்.

ஒருதவறு இன்னொருதவறுக்குக்காரணமாகக் காட்டப்படுகிறது. பொருந்தாத் திருமணத்தால் ஏற்படும் இழிவையும், பழியையும் நாம் தாங்கிக்கொள்வதுமட்டுமல்ல, இந்தத்தகாத முறையினால்"தலைவி"ஆகப்போகும் மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றவும் தயாராகவேண்டும்!

"நான் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டிலேயிருந்து இயக்கத்தில் இருக்கிறேன்"

"நான் குடி அரசு ஆரம்பகாலத்திலிருந்து இயக்கப்பணி புரிகிறேன்"

"எங்கள் ஊரிலேயே நான் ஒருவன் இருந்து கொண்டு ஊர்ப்பகையையே சமாளித்திருக்கிறேன்"

"இதோபார் இந்தத் தழும்பு, இன்னஊர்க்கலகத்திலே எனக்கு ஏற்பட்டது"

"நான் வாரத்தில் ஆறுநாள் பிரசாரம் செய்பவன்"

"நான் எதிர்கட்சிப் பத்திரிகைகளுக்கு எதிர்ப்பு எழுதுவதில் நிபுணன்"

என்று பல பாத்தியதைப் பேச்சு பேசுபவர்கள் இயக்கத்தில் உண்டு. அதிககாலமாகப் பணியாற்றியவர்கள் உண்டு.

திறமையாகப் பணி புரிந்தவர்கள் உண்டு.

குடும்பத்தைப் பகைத்துக்கொண்டு பணி புரிந்தவர்கள் உண்டு.

சொத்தை, சுகத்தை இழந்தவர்கள் உண்டு!

கண்ணையும் காதையும் இழந்தவர்கள் உண்டு.

இவர்கள் யாரும் வாரசாக முடியவில்லை. இவர்களில் யாருக்கும் இயக்கத்தை நடத்திச்செல்லும்வாய்ப்புக்கிடைக்கவில்லை. மணியம்மைக்குக் கிடைத்திருக்கிறது.

எந்த முறையில்? பெரியாரின் துணைவியாகும் முறையில்!

என்ன தகுதியால்?

பெரியார் தமது அறிக்கையில் கூறுகிறார், "நான் 5, 6, வருஷகாலமாகப் பழகி, நம்பிக்கை கொண்டதும், என்நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறதுமான மணியம்மையை" என்று.

இதுதான் பொருந்தாத் திருமணத்துக்கும் அதன் மூலம் பொறுக்கமுடியாத புதிய பட்டாபிஷேக ஏற்பாட்டுக்கும் காரணமாம்!

அவர் அம்மையுடன் 5, 6, வருஷம் பழகினாராம். அந்தப் பழக்கம் அம்மைக்குள்ள அபாரமான அறிவாற்றலை அவருக்கு விளக்கிவிட்டிருக்கிறது. ஒரு பெரிய

புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்

இயக்கத்தையே ஒப்படைக்கும் அளவுக்கு நம்பிக்கை பெரியாருக்கு ஏற்பட்டுவிட்டது.

அம்மையும் ஆச்சாரியார் போலவே உண்மையில் பாக்கியசாலிதான்.

இல்லையானால் பெரியார், "என் ஆயுள்வரையும், கூடுமான அளவு என் ஆயுளுக்குப்பின்னும், ஒழுங்காக இயக்கத்தை நடத்தும் தகுதி, இந்த மணியம்மைக்கு உண்டு என்று கூறுவாரா?"

"பத்தாவதுவரை படித்துமிருக்கிறது" என்று இரண்டாவது நாநுகோஷ்டியிடம் பெரியார், கூறினாராம்.

அவர் நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும், இயக்கம் இருபது முப்பது பேர்கொண்ட அளவாகயிருந்த காலம் முதற் கொண்டு பாடுபட்டு வந்த, எதிரிகளிடம் அடி உதை பட்டு வந்த யாருக்கும் கிடையாதது, இந்த அம்மைக்கு உண்டு. இந்தச் சூட்சமம் நமது தலைவர் அம்மையுடன் பழகிய 5, 6, வருட காலத்திலே கண்டறிந்தது.

கொள்கையை மறந்து, பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டாவது அந்த அம்மையை நமக்குத் "தலைவி" ஆக்குகிறார். இயக்கத்துக்கு வார்சாக வேண்டுமாம்!!

ஹைதராபாத் நிஜாமுக்கு இருக்கவேண்டியகவலை, ஆதீன கர்த்தாக்களுக்கு ஏற்பட வேண்டிய கவலை, பகுத்தறிவியக்கத் தலைவருக்கு ஏன் ஏற்படுகிறதோ தெரியவில்லை!

வார்சுமுறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? எந்தக் காலத்து முறை?

ஒரு இயக்கத்துக்கு "வார்சு" ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கு ஏற்றதுதானா? அல்லது நடைமுறையிலே வெற்றி தரக்கூடியதுதானா?

திராவிடர்கழகம், அதற்கெனஉள்ளதாகக் கூறப்படும் சொத்து என்பது, இன்னொருவருக்கு வார்சு முறைப்படி தரப்பட வேண்டியகாட்டுராஜாங்கம்தானா?

இதற்காகத்தானா வெள்ளிக்குண்டுகளை வீசுங்கள், வேலை நடப்பதைப் பாருங்கள் என்று "விடுதலை" முழக்கமிட்டது!

இயக்கத்திலே, இன்று தலைவராக இருப்பவருக்கு, இயக்கத்திலுள்ள யாராவது துரோகி, கேடு செய்பவன் என்று தோன்றினால், நிரூபிக்க முடியுமானால், அப்படிப்பட்டவர்களை விரட்டிவிட்டு, இயக்கத்தை உண்மையான இயக்கப் பற்றும், செல்வாக்கும் உள்ளவர்கள் தனக்குப் பிறகு நடத்திச் செல்வதற்கு இடமளித்து விடுவது முறையேயொழிய, என் வார்சிடம் ஒப்படைக்கிறேன் என்று பரம்பரை பாத்தியதை பேசுவதா? அதற்காகப் புதியபரம்பரையைத் தேடுவதா?

19-ந்தேதி தலைவர் வெளியிட்ட விளக்கத்தில், அவர் ஏற்பாடு எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதென்பதைக் காட்டியிருக்கிறார்.

"எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்றும் அதிக கவலை கொண்டிருக்கிறேன்" என்று விளக்கத்தில் கூறுகிறார்.

இவர் ஏற்படுத்தும் "வார்சு" எதற்கு என்பது இதன் மூலம் விளக்கப்படுகிறது— இந்த "வார்சு" ஆகும் தகுதி மணியம்மைக்குத்தான் இருக்கிறது. அந்த அம்மையை "வார்சு" ஆக்குவதற்கு மற்றெந்த ஏற்பாட்டையும் விட அம்மையை மனைவியாக்கிக் கொள்ளும் முறைதான் தலைவருக்குச் சரி என்று படுகிறது.

இதை கேட்டுக் கொள்—இல்லையானால் உன்னைஒழித்துவிடுவேன் என்ற முறையில் அறிக்கை வருகிறது. மேலும் பல வெளிவரக் கூடும்.

"இயக்கத்திலே உள்ள எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு, என் நம்பிக்கைக்கு உரியவர்களாக யாரும் தென்படவில்லை. இயக்கத்தை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும், வேறுயாருக்கும் இருப்பதாக நான் எண்ணவில்லை."

என்ற இந்தக் கருத்துக்களைப் பெரியார் இதற்கு முன்பும், பல தடவை கூறியிருக்கிறார் என்ற போதிலும், "ஏதோ இவர்மேல் உள்ள கோபத்தால் கூறுகிறார்—அவரை மிரட்டக் கூறுகிறார் — கோபத்தால் பேசுகிறார்" என்றே இயக்கத் தோழர்கள் எண்ணி வந்தனர். இப்போது தெளிவுபடுத்திவிட்டார்.

"எனக்கு உங்கள் யாரிடமும் நம்பிக்கைக் கிடையாது; அதுமட்டுமல்ல, எனக்கு மணியம்மை ஒருவரிடந்தான் நம்பிக்கை இருக்கிறது. எனவே நான் அவர்களை என் "வார்சு" ஆக்குகிறேன் என் மனைவியாகப் பதிவுசெய்வதன்மூலம்" என்று திட்டமாகக் கூறுகிறார்.

பெரியார் தமக்குள்ள பிரசாரத் திறமையினால், இதை, கட்சியை நிரந்தரமாக்க, துரோகிகளை முறியடிக்க, திருமணம் என்ற பேரால் பெரியார் புகுத்தும் புரட்சிகரமான திட்டம்" என்று கூட இனி விளக்க ஆரம்பிப்பார்.

ஆனால் நாம் யோசிக்க வேண்டியவர்களாகிறோம்; தலைவருடைய நம்பிக்கைக்கே பாத்திரமாக முடியாத நாம் அவருடைய தலைமையின் கீழ்ப் பணியாற்றி என்ன பயன் என்று.

நம்மை நம்பாதவரை, நாம் எப்படி நம்புவது? ஏன் நம்பவேண்டும்?

நம்மை நம்பமுடியாது என்று கூறும் தலைவர், மணியம்மையிடம், இவருக்கு நம்பிக்கையிருக்கிற ஒரே காரணத்துக்காக மணியம்மையைத் தலைவியாகக் கொள்ளும் அளவுக்கு எப்படி நம்பமுடியும்? ஏன் நம்ப வேண்டும்?

அம்மை விஷயமாக இதுவரை நாம் கொண்டிருந்த நம்பிக்கையே இப்போது நாசமாகிவிட்டதே.

நாம் இதுவரை அம்மையை திராவிடத்தந்தைக்கு உபசாரம் செய்து வந்த மகள் என்று நம்பிவந்தோம்— அல்ல, மகள் என்று சட்டப்படி கூறமுடியாது, மனைவியென்று கூறவேண்டும் என்று பதிவுத்திருமணம் தெரிவிக்கிறதே, இந்நிலையில் பெரியாரின் அறிக்கை, பொருந்தாத் திருமணத்தைக் கேட்டு அழுதுகொண்டிருப்பவர்களுக்கு மேலும் ஒரு வேதனையைத் தந்தது

நம்மை நம்பாதவரை நாம் எப்படி நம்புவது?

நம்மை, உன்னிடம் நம்பிக்கை யற்றவருடன் இராதே, அவருடைய தலைமையிலே பணியாற்றாதே, ஓடு, ஓடு என்றுதானே கூறுகிறது.

பொருந்தாத் திருமணம் என்று கேள்வியுற்றதும், வெட்கப்பட்டோம்—அதற்குப் பெரியார் தந்த அறிக்கை நமக்கு வேதனையை ஊட்டியது.

இதோ விரட்டப்படுகிறோம், நாம் கட்டிய கோட்டையிலிருந்து, நாம் பாடுபட்ட களத்திலிருந்து தந்தை மக்களை விரட்டியடிக்கிறார், புதிய வார்சு தேடிக் கொண்டு.

திக்கற்றவர்களாகி, திகைப்புண்டவர்களாகி, பாடுபட்டதின் பலனைப் பறிகொடுத்து விட்டு, குடிபுகுந்த குமரி கோலோச்ச முற்படுவது கண்டு, குமுறி, குன்றி, கோவெனக்கதறிக்கொண்டு, நமது வீட்டைவிட்டு வெளியேறுகிறோம்.

உள்ளேயிருந்து கொண்டு, அவர் உத்தரவிடுகிறார், "இந்த அம்மை என் மனைவி, உங்களுக்குத் தலைவி, இருக்க இஷ்டமா இல்லையா" என்று கேட்கிறார்.

இந்த அறிக்கையைக் கண்டபிறகு கூடிய கட்சித் தோழர்கள் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

* * *

பெரியார் விளக்கம்

திருப்தி யளிக்கவில்லை.

சென்னை மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாக உறுப்பினரில் பலரும், இயக்க முக்கியஸ்தர்களுமான கீழ்க்கண்டவர்கள் 28—6—49 இரவு 8-30 மணிக்குக் கூடி, பெரியார் அவர்கள் தமது திருமண சம்பந்தமாய் 28-6—49 தேதி விடுதலையில வெளியிட்டுள்ள அறிக்கை எவ்வகையிலும் திருப்தியளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டதுடன், இதுபற்றிமேலால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பாகஇருந்து ஆவன செய்வதென்றும் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தங்களது எண்ணத்தையும் உறுதியையும் தெரிவித்தனர்.

மேலும் இந்தி எதிர்ப்பு விஷயமாகத்தலைவர் அவர்கள் தீவிரநடவடிக்கை எடுக்க முக்கியஸ்தர்கள் கூட்டமோ அல்லது கமிட்டிக்கூட்டமோ நடத்தினாலும், அது சமயத்திலும் தமது திருமண விஷயமாயும் இயக்க விஷயமாயும் கொண்டுள்ள ஏற்பாட்டை ரத்து செய்யாதவரை ஒத்துழைக்க முடியாதென்பதையும் தெரிவித்து விடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற் கலந்து கையொப்பமிட்டவர்கள்

C. D. T. அரசு, காஞ்சி மணிமொழியார், மா. இளஞ்செழியன், A. S. வேணு, R. S. மணி, C. தங்கராசு, ச. பாலசுந்தரம், வி. சங்கரநாராயணன், பா. கோவிந்தராசன், M. R. பாண்டியன், P. V. முத்துசாமி S. P. T. திராவிடமணி, K. கோவிந்தசாமி, சே. தேவசகாயம், R. பாண்டியன், வே. தா. பெரியசாமி, R. அங்கமுத்து, எ. ஜெயராமன், S. கன்னியப்பன், M. தருமன், மூ. மதுரை, C. V. ராசன், பெருமாள், R. சுப்பராயலு, கி. பக்தவச்சலம், எ. எஸ். ராமன், கா. சொக்கலிங்கம், K. கண்ணபிரான், சொ. அ. அ. பால்ராஜி, A. சங்கரன், C. கணேசன், K. சுந்தரமூர்த்தி, N. V. நடராசன், ம. சு. முத்து.

* * *

நாங்கள், இந்தத்திருமணம்பொருந்தாத்திருமணம், இதனைச்செய்துகொள்வதன் மூலமும், இதன்மூலம்கட்சிக்காக, அவர் செய்ய எண்ணும் புதிய ஏற்பாடும், எங்களுக்கு அவரிடமுள்ள நம்பிக்கையை இழக்கும்படி செய்வதால், அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரையில் அதிலிருந்து பணியாற்றவோ, அதன் பேராலும் வாலிப உள்ளங்களைத் தடவிக் கொடுக்கும் விதமாகவும், நேரடிநடவடிக்கை என்ற முறையில் இந்தி எதிர்ப்பு, மார்வாடிகடை மறியல், 144 மீறல் என்றெல்லாம் திட்டம் வகுத்தாலும், அவைகளில் பங்குகொள்ள முடியாது என்பதையும், கழகத்தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் திருமணம் எங்களை இழிவுபடுத்துகிறது. எங்கள் கொள்கையைப் பழிக்கிறது. இயக்கத்துக்குத் துடைக்க முடியாத பழியைத் தருகிறது.

இது திருமணம் அல்ல, திருமணம் என்ற பேரால் ஒரு ஏற்பாடுதான் என்று பெரியார் சாக்குக் கூறுவது எங்கள் பகுத்தறிவைக் கேலி செய்வதாகவே நாங்கள் கருதுகிறோம்.

கட்சிக்காக அவர் செய்யப் போவதாக கூறும் ஏற்பாடு, ஜனநாயகத்துக்கும் எங்கள் தன்மானத்துக்கும் சாவு மணி அடிப்பதாகும் என்று எண்ணுகிறோம்.

எனவே, இந்த ஏற்பாடுகளை அவர் கைவிடாத முன்பு, அவருடைய தலைமையின் கீழுள்ள கழகத்திலே பணியாற்றுவதில்லை என்று தெரிவிக்கிறோம்.

இயக்கத் தோழர்கள் சிந்தித்து, தத்தமது, கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறோம்.

அவருடைய தலைமையை நீக்கும் முயற்சியில் ஈடுபடவோ, வேறுவகையான பணி புரியவோ முன் வருவதற்கு முன்பு, முதலில் பெரியாரின் இந்தஏற்பாட்டைக் கண்டிக்கும் அறிகுறியாக விலகி நிற்கிறோம் என்பதை முதலில் அறிவித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதற்குச் சம்மதிப்பவர்கள் "திராவிட நாடு" இதழுக்கு எழுதியனுப்புங்கள்.

ஆயிரக் கணக்கானவர்கள் இந்த ஏற்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள் என்பதை அறிவியுங்கள்.

கொள்கைக்கு முரணாக நடந்தால் தலைவரையும் பின்பற்றமாட்டோம் என்று உலகுக்குத் தெரிவித்து உங்கள் தன்மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

எதிரிகளின் ஏளனத்துக்குப் பதில் கூறும் முறையிலே, தெரிவித்து விடுங்கள். தலைவர் இந்தத்தகாத ஏற்பாட்டைக் கை விடாவிட்டால், நாங்கள் அவருடைய தலைமையை ஏற்க மாட்டோம் என்பதைத் தெரிவித்து விட்டோம் என்பதைக் காட்டுங்கள்.

எது செய்தாலும் ஜீரணமாகிவிடும் என்ற எண்ணத்தைப் போக்குங்கள்.

இயக்கம் நமது உழைப்பு—தலைவர் சொத்தல்ல

உண்மைத் தன்மான இயக்கத்தவர் என்பதை உங்களுடைய கண்டனம் மூலம் உலகுக்குத் தெரிவியுங்கள்.

கண்டனத்துக்குப் பிறகும் தலைவர் பிடிவாதமாகவேயிருந்துவிட்டால் என்னசெய்வதென்று கவலைப்படாதீர்கள்.

ஒரு ஐந்து லட்ச ரூபாயும், சில வருஷ உழைப்பும், இடையே வந்த அம்மைக்குப் போய்ச் சேரும்.

அது பெரிய நஷ்டமல்ல—நமது மானம் நிலைக்கும்—இதை விட உருவான முறையிலே நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்ல முடியும்.

இயக்கம் நமது உழைப்பு—தலைவரின் சொத்து அல்ல—அவர் இயக்கம் என்று கருதி மணியம்மையிடம் தருவதாகச் சொல்லுவது இயக்கத்தின் கழிவுப்பொருளிலே ஒன்று.

இயக்கம், நமது வியர்வையிலும், கண்ணீரிலும், உழைப்பிலும் இருக்கிறது. அது எங்கும் போய் விடாது.

இந்த அக்ரமத்துக்கு நாம் பங்காளிகளல்ல என்பதை உலகுக்குக் காட்டிவிட்டுப், பறிபோனது போக, மிச்சமிருப்பதை வைத்துக்கொண்டு, உழைத்தது போக மிச்ச மீதியிருக்கும் வலிவைக் கொண்டு நாம் தன்மான இயக்கத்தைக் கட்டிக் காட்ட முடியும்.

திராவிடத் தோழர்களே, தடுமாற்றத்திற்கு இடமளிக்காதீர்கள்! தலைவருக்குத் தெரிவியுங்கள். உங்கள் ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம், கண்டிக்கிறோம், கண்டன அறிகுறியாக, இதோ உம்முடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திவைக்கிறோம்—விலகி நிற்கிறோம் என்று தெரிவித்து விடுங்கள்.

நமது கண்ணீரும், கண்டனமும், விலகி நிற்கிறோம் என்ற உறுதியும் அவருடைய உள்ளத்தை மாற்றினால்; இந்த அநீதியான ஏற்பாட்டை அவர் கைவிட்டால், நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடைய மலரடிக்கீழ் நின்று மீண்டும் பணிபுரிவோம்.

இல்லையேல், அவர், மணியம்மை, ஐந்து லட்ச ரூபாய், இவ்வார்சு தான் ஒருபுறம்.

நாம், நமது தூய உள்ளம், உழைப்புத் திறம் இவை மற்றொருபுறம். இதிலே கடுகளவும் சந்தேகம் வேண்டாம்.

நமது வாழ்நாளிலேயே பெரியதோர் சோதனை இது. இதிலே நாம் காட்டும் தூய்மை, உறுதியைப் பொறுத்துத்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

சிந்தியுங்கள்—சோர்ந்துவிட வேண்டாம்—தீர்மானியுங்கள்—அவசரம் வேண்டாம்—அஞ்சேல்—வெற்றி நமதே.

அன்புள்ள

சி. என். அண்ணாதுரை.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, (கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் மாகாண நிர்வாக உறுப்பினர்.)
ஈ. வெ. கி. சம்பத், (மாகாண நிர்வாக உறுப்பினர்.)
என். வி. நடராசன், (மாகாண நிர்வாக உறுப்பினர், ஆசிரியர், "திராவிடன்")
எ. வி. பி. ஆசைத்தம்பி, (மாகாண நிர்வாக உறுப்பினர், ஆசிரியர் தனிஅரசு.)
எஸ். ஆர். சுப்ரமண்யம், (மாகாண நிர்வாக உறுப்பினர்)
சி. தங்கராஜ், (சென்னை மாவட்ட தி. க. தலைவர் மாகாண நிர்வாக உறுப்பினர்)
கே. கோவிந்தசாமி, (செயலாளர் சென்னை திராவிடர் கழகம், & மாகாண நிர்வாக உறுப்பினர்)
சி. டி. டி. அரசு, (மாகாண நிர்வாக உறுப்பினர்)
காஞ்சி மணிமொழியார், (பொருளாளர் சென்னை தி. க- ஆசிரியர் "போர் வாள்")
கே. எம். கண்ணபிரான், (அமைப்பாளர் சென்னை திராவிடர் கழகம்)
இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., (ஆசிரியர் "மன்றம்")
கே அன்பழகன், எம். ஏ., (ஆசிரியர் 'புது வாழ்வு')
டி. சண்முகம்,— (சென்னை மாகாண சுயமரியாதை இயக்க நிர்வாகத் தலைவர்)
பூ. கணேசன், (பி. ஏ. ஆனர்ஸ், துணை ஆசிரியர் 'விடுதலை' சென்னை)
மா. இளஞ்செழியன், பி. ஏ., (ஆனர்ஸ்) (துணை ஆசிரியர் "போர் வாள்")
எஸ். தவமணிராசன், (திராவிட மாணவ கழக அமைப்பாளர்)
புலவர் செல்வராஜ், (தலைவர் சென்னை சு. ம. சங்கம், ஆசிரியர் "கதிரவன்")
டி. எம். பார்த்தசாரதி, (ஆசிரியர் 'தமிழ் நாடு' வில்லிவாக்கம் தி. க. தலைவர்)
எம். எஸ். முத்து, (செயலாளர் சென்னை, சு. ம. சங்கம்)
சத்தியவாணிமுத்து: (சு. ம. இயக்கம் நிர்வாக உறுப்பினர்.)
டாக்டர். கீ. கணேசன்: (துணைத்தலைவர் பெத்துநாய்க்கன்பேட்டைத் திராவிடர் கழகம்.)
வி. டி. பெரியசாமி: (துணைத்தலைவர் சென்னை, சு. ம. சங்கம்)
வி. முனுசாமி: (சென்னை, நகராண்மைக்கழக உறுப்பினர்.)
சி. வி. ராஜன், (இந்தி எதிர்ப்புப் போராட்ட கண் காணிப்பாளர்.)
எ. சங்கரய்யா,
பி. ராமசாமி,
வி. கே. சுப்பராயலு, } (சென்னைத் திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள்.)
கே. சிவஞானம், (சென்னை சுயமரியாதை சங்க நிர்வாக உறுப்பினர்.)
வி. கண்ணன்,— (செயலாளர், சென்னை நகர திராவிட மாணவர் கழகம்.)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.

வளர்ப்புப் பெண்தான்—மனைவி?

கிறார், நமது தலைவர், தமது அறிக்கையிலே இதை அவரே கூறுகிறார். உங்கள் யாரிடமும் நான் பேசாத, பேசவேண்டிய அவசியமில்லாத விஷயத்தை, அவரிடம் பேசினேன் என்று கூறுகிறார்.

அவர் பாக்கியசாலி! உண்மையிலேயே உழைத்து உருக்குலைந்து போய் இவர் தவிர வேறு ஒரு தலைவரே கிடையாது என்று மனமார நம்பி, செக்குமாடென உழைத்துவரும் நாம் பெறவில்லை அந்த பாக்கியத்தை! அன்பர் ஆச்சாரியார் பெற்றார்!

(கோவை மாநாட்டிலே கேட்டேன், என்ன பேச்சு உமக்குள் என்று; கேட்டது தவறு என்றனர் பலர். C. N. A.)

ஆச்சாரியாருடன் கலந்து பேசிய பிறகும், இயக்கத் தோழர்களில் யாரிடமும் இதுபற்றி மூச்சுவிடாமல், மிக மிக ரகசியமாக, இந்தத் திருமண ஏற்பாட்டிலுக்கான காரியத்தைத் துவக்கினார். எப்படியோ உண்மை தலைகாட்டிற்று; உளம் கொதித்த தோழர் N. V. நடராசன் பெரியாருக்குக் கடிதம் தீட்டினார், கண்ணீர் மல்கிய நிலையில்.

கடிதம் அலட்சியப்படுத்தப்பட்டது. சென்னையை விட்டு ஈரோடு போவதாகக் கூறிவிட்டு ஏற்காடு சென்று தங்கினார், பெரியார், மணியம்மை சகிதம்.

இங்கு சேதி தெரிந்தவர்கள் துடித்தனர், அழுதனர், தூது செல்வதென்று முடிவு செய்தனர்—முதற் தூதுக்கோஷ்டி கிளம்பிற்று.

விடுதலை ஆசிரியர் குருசாமி, கடலூர் தோழர் குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, தோழர் N. V. நடராசன், குடந்தைத் தோழர் K.K. நீலமேகம் ஆகியோர் சென்றனர்.

திராவிட கழகத்தாரின் திகைப்பை, பொதுமக்களின் கேலியுரையைக் கூறினர், கெஞ்சினர். பெரியார் இவர்களிடம் விளக்கம்—சமாதானம் கூறினார், தடுமாற்றத்துடன் அல்ல, உறுதியுடன்.

தான் செய்யும் காரியம் தவறுடையதோ என்று சந்தேகம் இருக்கும் விதமாக அல்ல; நீங்கள் யார் என்று கேட்கும்விதமாகவே பேசினார்.

மற்றோர் தூதுகோஷ்டி கிளம்பிற்று. 'தமிழ் நாடு' ஆசிரியர் பார்த்தசாரதி, 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், சென்னைத் திராவிடர் கழக அமைப்பாளர் கண்ணபிரான், இந்தி எதிர்ப்பு போர்படைத் தலைவர்களில் ஒருவரான சி. வி. ராஜன்.

அவர்களிடமும் பெரியார் தாம் தமது முடிவை மாற்றப் போவதில்லை யென்றும் நாலு நாள் கூவிய பிறகு மக்கள் தானாக அடங்கிவிடுவார்களென்றும் கூறியனுப்பினார்.

இதற்கிடையில் பல கடிதங்களும் அவருக்கு அனுப்பப்பட்டன. இவ்வளவும் திருமண ஏற்பாட்டைத் தடுக்க உதவவில்லை.

கூட்டாகக்கருத்தைத்தெரிவித்தலேமுறையென்று எண்ணி, பெரியார் இல்லத்திலேயே 27—6—49-ல் சென்னை ஜில்லா திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்றது. அதன் விவரம்:—

* * *

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அவசரக் கூட்டம்

வருத்தமும் கண்டனமும்—

சென்னை, ஜூன் 28—

சென்னை மாவட்டத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று நேற்று மாலை 6-30 மணிக்கு, மவுண்ட்ரோட் மீரான் சாயபு தெரு 1-வது (பெரியார்) இல்லத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமை வகித்தார். கீழ்க்கண்ட இயக்கப் பிரமுகர்களும், நிர்வாக உறுப்பினர்களும் வந்திருந்தனர்.

தோழர்கள் சி. தங்கராஜ் (மாவட்டத் தலைவர்) ஆர். டி. அரசு, எ. கே. சாமி, சி. ஆர். சின்னப்பன், கே. பக்தவத்சலம், பா. குருசாமி, பி. எஸ். ராமலிங்கம், சே. தேவசகாயம், இ. வி. ராஜன், மா. இளஞ்செழியன் (பி. ஏ. ஆனர்ஸ்), சத்யவாணி முத்து, சி. வி. ராஜன், எ. சுப்ரமண்யம், ஆ. கபாலமூர்த்தி, கா. சொக்கலிங்கம், பா. கோவிந்தராசன், எம். எஸ். மணி, எம். சண்முகம், எஸ். எஸ். ராகவலு, ஆர். கோவிந்தசாமி, எ. ஜெயராஜ், வி. கன்னையா, மா. சம்பந்தன், கா. சிதம்பரம், வி. நெடுமாறன், கோ. செங்குட்டுவன், டி. எம். பார்த்தசாரதி, எம். ரகுநாதன், புலவர் செல்வராஜ், சி. கே. நாதன், முத்துகிருஷ்ணன், கா. சம்பந்தன், க. அவின், ர. இலக்குமணன், ஏ. வி. பாலசுந்தரன், பி. ஏ. எல். டி., த. பாலசுப்ரமண்யன், சே. ஆரோக்ய தாசன், சு. நடராசன், பி. துரைசாமி, டி. எ. சித்தார்த்தன், வல்லி. துரைராசன், ஆர். கே. முனுசாமி, அ. சங்கரய்யா, எம். ராஜி, வி. கே. சுப்பராயலு, சினி. வெங்கடசாமி, எ. சாமிநாதன், வி. எஸ். வாசன், மா. பிரான்சிங், மாசிலாமணி, சிவஞானம், சொ. கொ. முத்துக்குமாரசாமி, சி. டி. டி. அரசு, டாக்டர் கணேசன், பாவலர் அப்துல் காதர், வி. டி. பெரியசாமி, கே. கோவிந்தசாமி (செயலாளர்), கே. எம். கண்ணபிரான் (அமைப்பாளர்), என். வி. நடராசன், காஞ்சி மணிமொழியார் (தந்தி மூலம்) ஆகியோர்.

கமிட்டி கூட்டத் துவக்கத்தில் தலைவர் தோழர் சி. தங்கராஜ், செயலாளர் கே. கோவிந்தசாமி ஆகியோர் பெரியார், கே. எ. மணி ஆகியோரின் பொருந்தாத் திருமணத்தையும் அதனால் இயக்கத்திற்கு ஏற்படும் பெருங்கேட்டினையும் விளக்கிக் கூறினர். தொடர்ந்து தோழர்கள் சி. டி. டி. அரசு, கே. எம். கண்ணபிரான், டி. எம். பார்த்தசாரதி, மா. இளஞ்செழியன், பாவலர் அப்துல் காதர், என். வி. நடராசன் ஆகியோர் நகரில் இதுபற்றி ஏற்பட்டுள்ள நிலையையும், பெரியார் அவர்களிடத்தில் நேரில் பேசியது பற்றியும் எடுத்துக் கூறினர். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்

நீங்கள் யார் என்று கேட்கிறார்!

களுக்கு வணக்கமுடன் விண்ணப்பித்துக் கொள்வது, தாங்கள் தங்கள் 72-வது வயதில் 26-வயதான தோழியர் கே. எ. மணி அவர்களை பதிவுத் திருமணம் செய்து கொள்ளப்போவதாக, ரிஜிட்ரார் ஆபீசிலும், பத்திரிகைகளிலும், வெளிவந்துள்ளதைக் கண்டு இக்கமிட்டி வருத்தத்துடன், இவ்வேற்பாடு எல்லா வகையிலும் இயக்கத்திற்கு இழுக்கு நேரிடுமாதலால், இதை உடனே ரத்து செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்வதுடன் ரிஜிட்ராருக்கு கொடுத்துள்ள விண்ணப்பத்தை உடனே வாபஸ் பெறுமாறு இக்கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

2. தாங்கள் தங்களது திருமண முயற்சியை வாபஸ் பெற்றுவிட்டதாக உடனே பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட வேண்டுகிறோம். அப்படி வாபஸ் பெறவில்லை யென்றால், பொதுக் கூட்ட மூலம் மேலால் கண்டிக்க வேண்டியிருக்கு மென்பதை வருத்தத்துடன் இக்கமிட்டி தெரிவித்துக் கொள்கிறது.

3. மேற்படி ஏற்பாட்டை வாபஸ் பெறுமாறு சென்னை மாவட்ட திராவிடர் கழகம் செய்திருப்பது போன்று ஒவ்வொருமாவட்ட நிர்வாகக்கமிட்டியினரும், முக்கியஸ்தர்களும் உடனே தீர்மானம் நிறைவேற்றித் தலைவர் பெரியார் அவர்களுக்கு அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறது.

(ஒப்பம்) கே. கோவிந்தசாமி

பொதுச் செயலாளர்,

நெ. 5, காளப்ப ஆச்சாரி தெரு, பி. டி. மதராஸ்.

* * *

இவைகளுக்குப் பிறகு நம்மையெல்லாம் திடுக்கிடச் செய்து, தேம்பச் செய்து, ஊராரின் கேலியைக் கிளப்பிவிட்ட திருமண ஏற்பாட்டுக்கு பெரியார் ஓர் அறிக்கைமூலம்விளக்கம்அளித்தார்-அந்த விளக்கம்இப்போது நடைபெற இருக்கும் திருமணம் என்பது இத்துடன் முடிந்துவிடும் செயல் அல்ல—பின்னால் வரவிருக்கும் போராபத்துக்கு, பெரியதோர் இழிவுக்கு, முன்னறிவிப்பு என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

மணி அம்மை, பெரியாருக்கு மனைவிமட்டுமல்ல— இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் தகுதி பெறப் போகிறார்.

புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்களாம்!

பெரியாரே! இப்படி ஒரு அநியாயமான, கொள்கைக்கு முரணான: நாகரிக மக்கள் நகைக்கத் தக்க, பொருந்தாத் திருமணம் செய்து கொள்கிறீரே," இது சரியா என்று கேட்கிறோம்,

"போடா போ! நான் திருமணம் மட்டுமா செய்து கொள்கிறேன், இயக்கத்தையே மணியம்மையிடம் தான் ஒப்படைக்கிறேன். அப்படி ஒப்படைப்பதற்காகவே தான் திருமணம் செய்து கொள்கிறேன்" என்று கூறுகிறார் அறிக்கையில்.

'ஐயோ, என் புருஷனை என் கொல்லுகிறாய்' என்று பதைத்துக் கேட்கும் பாவையைப் பார்த்து, அவனைக் கொல்வது காரணமற்று என்று எண்ணுகிறாய், உன்னைப் பெண்டாளவே அந்தக் காரியம் செய்கிறேன்' என்று துணிந்து கூறுவதுபோல இயக்கத்தையும், இயக்க சொத்தையும், இயக்க நடப்பையும் எனக்குப் பிறகு நடத்திச் செல்லும் பொறுப்பை, வாய்ப்பை மணியம்மைக்குத் தருவதற்காகவே "அதை" எப்படியாவது சட்ட பூர்வமாக என் "வார்சு" ஆக்கிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டேன் என்று தெரிவிக்கிறார்.

நடைபெறப் போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல, புதிய மகுடாபிஷேகமும்.

ஒருதவறு இன்னொருதவறுக்குக்காரணமாகக் காட்டப்படுகிறது. பொருந்தாத் திருமணத்தால் ஏற்படும் இழிவையும், பழியையும் நாம் தாங்கிக்கொள்வதுமட்டுமல்ல, இந்தத்தகாத முறையினால்"தலைவி"ஆகப்போகும் மணியம்மையின் கீழிருந்து நாம் எதிர்காலத்தில் பணியாற்றவும் தயாராகவேண்டும்!

"நான் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டிலேயிருந்து இயக்கத்தில் இருக்கிறேன்"

"நான் குடி அரசு ஆரம்பகாலத்திலிருந்து இயக்கப்பணி புரிகிறேன்"

"எங்கள் ஊரிலேயே நான் ஒருவன் இருந்து கொண்டு ஊர்ப்பகையையே சமாளித்திருக்கிறேன்"

"இதோபார் இந்தத் தழும்பு, இன்னஊர்க்கலகத்திலே எனக்கு ஏற்பட்டது"

"நான் வாரத்தில் ஆறுநாள் பிரசாரம் செய்பவன்"

"நான் எதிர்கட்சிப் பத்திரிகைகளுக்கு எதிர்ப்பு எழுதுவதில் நிபுணன்"

என்று பல பாத்தியதைப் பேச்சு பேசுபவர்கள் இயக்கத்தில் உண்டு. அதிககாலமாகப் பணியாற்றியவர்கள் உண்டு.

திறமையாகப் பணி புரிந்தவர்கள் உண்டு.

குடும்பத்தைப் பகைத்துக்கொண்டு பணி புரிந்தவர்கள் உண்டு.

சொத்தை, சுகத்தை இழந்தவர்கள் உண்டு!

கண்ணையும் கரத்தையும் இழந்தவர்கள் உண்டு.

இவர்கள் யாரும் வார்சாக முடியவில்லை. இவர்களில் யாருக்கும் இயக்கத்தை நடத்திச்செல்லும்வாய்ப்புக்கிடைக்கவில்லை. மணியம்மைக்குக் கிடைத்திருக்கிறது.

எந்த முறையில்? பெரியாரின் துணைவியாகும் முறையில!

என்ன தகுதியால்?

பெரியார் தமது அறிக்கையில் கூறுகிறார், "நான் 5, 6, வருஷகாலமாகப் பழகி, நம்பிக்கை கொண்டதும், என்நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும் கொண்டு நடந்து வந்திருக்கிறதுமான மணியம்மையை" என்று.

இதுதான் பொருந்தாத் திருமணத்துக்கும் அதன் மூலம் பொறுக்கமுடியாத புதிய பட்டாபிஷேக ஏற்பாட்டுக்கும் காரணமாம்!

அவர் அம்மையுடன் 5, 6, வருஷம் பழகினாராம். அந்தப் பழக்கம் அம்மைக்குள்ள அபாரமான அறிவாற்றலை அவருக்கு விளக்கிவிட்டிருக்கிறது. ஒரு பெரிய

புதிய அனிபெசண்ட் புறப்படுகிறார்

இயக்கத்தையே ஒப்படைக்கும் அளவுக்கு நம்பிக்கை பெரியாருக்கு ஏற்பட்டுவிட்டது.

அம்மையும் ஆச்சாரியார் போலவே உண்மையில் பாக்கியசாலிதான்.

இல்லையானால் பெரியார், "என் ஆயுள்வரையும், கூடுமான அளவு என் ஆயுளுக்குப்பின்னும், ஒழுங்காக இயக்கத்தை நடத்தும் தகுதி, இந்த மணியம்மைக்கு உண்டு என்று கூறுவாரா?"

"பத்தாவதுவரை படித்துமிருக்கிறது" என்று இரண்டாவது தூதுகோஷ்டியிடம் பெரியார், கூறினாராம்.

அவர் நலத்திலும், இயக்க நலத்திலும், உண்மையான பற்றும், கவலையும், இயக்கம் இருபது முப்பது பேர்கொண்ட அளவாகயிருந்த காலம் முதற் கொண்டு பாடுபட்டு வந்த, எதிரிகளிடம் அடி உதை பட்டு வந்த யாருக்கும் கிடையாதது, இந்த அம்மைக்கு உண்டு. இந்தச் சூட்சமம் நமது தலைவர் அம்மையுடன் பழகிய 5, 6, வருட காலத்திலே கண்டறிந்தது.

கொள்கையை மறந்து, பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டாவது அந்த அம்மையை நமக்குத் "தலைவி" ஆக்குகிறார். இயக்கத்துக்கு வார்சாக வேண்டுமாம்!!

ஹைதராபாத் நிஜாமுக்கு இருக்கவேண்டியகவலை, ஆதீன கர்த்தாக்களுக்கு ஏற்பட வேண்டிய கவலை, பகுத்தறிவியக்கத் தலைவருக்கு என் ஏற்படுகிறதோ தெரியவில்லை!

வார்சுமுறை எதற்கு? யார் செய்யும் ஏற்பாடு? எந்தக் காலத்து முறை?

ஒரு இயக்கத்துக்கு "வார்சு" ஏற்படுத்துவது என்பது ஜனநாயக முறைக்கு ஏற்றதுதானா? அல்லது நடைமுறையிலே வெற்றி தரக்கூடியதுதானா?

திராவிடர்கழகம், அதற்கெனஉள்ளதாகக் கூறப்படும் சொத்து என்பது, இன்னொருவருக்கு வார்சுமுறைப்படி தரப்பட வேண்டியகாட்டுராஜாங்கம்தானா?

இதற்காகத்தானா வெள்ளிக்குண்டுகளை வீசுங்கள், வேலை நடப்பதைப் பாருங்கள் என்று "விடுதலை" முழக்கமிட்டது!

இயக்கத்திலே, இன்று தலைவராக இருப்பவருக்கு, இயக்கத்திலுள்ள யாராவது துரோகி, கேடு செய்பவன் என்று தோன்றினால், நிரூபிக்க முடியுமானால், அப்படிப்பட்டவர்களை விரட்டிவிட்டு, இயக்கத்தை உண்மையான இயக்கப் பற்றும், செல்வாக்கும் உள்ளவர்கள் தனக்குப் பிறகு நடத்திச் செல்வதற்கு இடமளித்து விடுவது முறையேயொழிய, என் வார்சிடம் ஒப்படைக்கிறேன் என்று பரம்பரை பாத்தியதை பேசுவதா? அதற்காகப் புதிய பரம்பரையைத் தேடுவதா?

19-ந்தேதி தலைவர் வெளியிட்ட விளக்கத்தில், அவர் ஏற்பாடு எவ்வளவு ஆழ்ந்த கருத்துடையதென்பதைக் காட்டியிருக்கிறார்.

"எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் ஏற்பாடு செய்துவிட்டுப் போகவேண்டும் என்றும் அதிக கவலை கொண்டிருக்கிறேன்" என்று விளக்கத்தில் கூறுகிறார்.

இவர் ஏற்படுத்தும் "வார்சு" எதற்கு என்பது இதன் மூலம் விளக்கப்படுகிறது— இந்த "வார்சு" ஆகும் தகுதி மணியம்மைக்குத்தான் இருக்கிறது. அந்த அம்மையை "வார்சு" ஆக்குவதற்கு மற்றெந்த ஏற்பாட்டையும் விட அம்மையை மனைவியாக்கிக் கொள்ளும் முறைதான் தலைவருக்குச் சரி என்று படுகிறது.

இதை கேட்டுக் கொள்—இல்லையானால் உன்னை ஒழித்துவிடுவேன் என்ற முறையில அறிக்கை வருகிறது. மேலும் பல வெளிவரக் கூடும்.

"இயக்கத்திலே உள்ள எவரிடமும் எனக்கு நம்பிக்கையில்லை. எனக்கு, என் நம்பிக்கைக்கு உரியவர்களாக யாரும் தென்படவில்லை. இயக்கத்தை நடத்திச் செல்லும் தகுதியும் திறமையும், வேறுயாருக்கும் இருப்பதாக நான் எண்ணவில்லை."

என்ற இந்தக் கருத்துக்களைப் பெரியார் இதற்கு முன்பும், பல தடவை கூறியிருக்கிறார் என்ற போதிலும், "ஏதோ இவர்மேல் உள்ள கோபத்தால் கூறுகிறார்—அவரை மிரட்டக் கூறுகிறார் — கோபத்தால் பேசுகிறார்" என்றே இயக்கத் தோழர்கள் எண்ணி வந்தனர். இப்போது தெளிவுபடுத்திவிட்டார்.

"எனக்கு உங்கள் யாரிடமும் நம்பிக்கைக் கிடையாது; அதுமட்டுமல்ல, எனக்கு மணியம்மை ஒருவரிடந்தான் நம்பிக்கை இருக்கிறது. எனவே நான் அவர்களை என் "வார்சு" ஆக்குகிறேன் என் மனைவியாகப் பதிவுசெய்வதன்மூலம்" என்று திட்டமாகக் கூறுகிறார்.

பெரியார் தமக்குள்ள பிரசாரத் திறமையினால், இதை, கட்சியை நிரந்தரமாக்க, துரோகிகளை முறியடிக்க, திருமணம் என்ற பேரால் பெரியார் புகுத்தும் புரட்சிகரமான திட்டம்" என்று கூட இனி விளக்க ஆரம்பிப்பார்.

ஆனால் நாம் யோசிக்க வேண்டியவர்களாகிறோம்; தலைவருடைய நம்பிக்கைக்கே பாத்திரமாக முடியாத நாம் அவருடைய தலைமையின் கீழ்ப் பணியாற்றி என்ன பயன் என்று.

நம்மை நம்பாதவரை, நாம் எப்படி நம்புவது? ஏன் நம்பவேண்டும்?

நம்மை நம்பமுடியாது என்று கூறும் தலைவர், மணியம்மையிடம், இவருக்கு நம்பிக்கையிருக்கிற ஒரே காரணத்துக்காக மணியம்மையைத் தலைவியாகக் கொள்ளும் அளவுக்கு எப்படி நம்பமுடியும்? ஏன் நம்பவேண்டும்?

அம்மை விஷயமாக இதுவரை நாம் கொண்டிருந்த நம்பிக்கையே இப்போது நாசமாகிவிட்டதே.

நாம் இதுவரை அம்மையை திராவிடத்தந்தைக்கு உபசாரம் செய்து வந்த மகள் என்று நம்பிவந்தோம்— அல்ல, மகள் என்று சட்டப்படி கூறமுடியாது, மனைவியென்று கூறவேண்டும் என்று பதிவுத்திருமணம் தெரிவிக்கிறதே, இந்நிலையில பெரியாரின் அறிக்கை, பொருந்தாத் திருமணத்தைக் கேட்டு அழுதுகொண்டிருப்பவர்களுக்கு மேலும் ஒரு வேதனையைத் தந்தது

நம்மை நம்பாதவரை நாம் எப்படி நம்புவது?

நம்மை, உன்னிடம் நம்பிக்கை யற்றவருடன் இராதே, அவருடைய தலைமையிலே பணியாற்றாதே, ஓடு, ஓடு என்றுதானே கூறுகிறது.

பொருந்தாத் திருமணம் என்று கேள்வியுற்றதும், வெட்கப்பட்டோம்—அதற்குப் பெரியார் தந்த அறிக்கை நமக்கு வேதனையை ஊட்டியது.

இதோ விரட்டப்படுகிறோம், நாம் கட்டிய கோட்டையிலிருந்து, நாம் பாடுபட்ட களத்திலிருந்து தந்தை மக்களை விரட்டியடிக்கிறார், புதிய வார்சு தேடிக் கொண்டு.

திக்கற்றவர்களாகி, திகைப்புண்டவர்களாகி, பாடு பட்டதின் பலனைப் பறிகொடுத்து விட்டு, குடிபுகுந்த குமரி கோலோச்ச முற்படுவது கண்டு, குமுறி, குன்றி, கோவெனக்கதறிக்கொண்டு, நமது வீட்டைவிட்டு வெளியேறுகிறோம்.

உள்ளேயிருந்து கொண்டு, அவர் உத்தரவிடுகிறார், "இந்த அம்மை என் மனைவி, உங்களுக்குத் தலைவி, இருக்க இஷ்டமா இல்லையா" என்று கேட்கிறார்.

இந்த அறிக்கையைக் கண்டபிறகு கூடிய கட்சித் தோழர்கள் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

* * *

பெரியார் விளக்கம்

திருப்தி யளிக்கவில்லை.

சென்னை மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை மாவட்ட திராவிடர் கழக நிர்வாக உறுப்பினரில் பலரும், இயக்க முக்கியஸ்தர்களுமான கீழ்க் கண்டவர்கள் 28—6—49 இரவு 8-30 மணிக்குக் கூடி, பெரியார் அவர்கள் தமது திருமண சம்பந்தமாய் 28 6—49 தேதி விடுதலையில் வெளியிட்டுள்ள அறிக்கை எவ்வகையிலும் திருப்தியளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டதுடன், இதுபற்றிமேலால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பாகஇருந்து ஆவன செய்வதென்றும் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தங்களது எண்ணத்தையும் உறுதியையும் தெரிவித்தனர்.

மேலும் இந்தி எதிர்ப்பு விஷயமாகத்தலைவர் அவர்கள் தீவிரநடவடிக்கை எடுக்க முக்கியஸ்தர்கள் கூட்டமோ அல்லது கமிட்டிக்கூட்டமோ நடத்தினாலும், அது சமயத்திலும் தமது திருமண விஷயமாயும் இயக்க விஷயமாயும் கொண்டுள்ள ஏற்பாட்டை ரத்து செய்யாதவரை ஒத்துழைக்க முடியாதென்பதையும் தெரிவித்து விடவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற் கலந்து கையொப்பமிட்டவர்கள்

C. D. T. அரசு, காஞ்சி மணிமொழியார், மா. இளஞ்செழியன், A. S. வேணு, R. S. மணி, C. தங்கராசு, ச. பாலசுந்தரம், வி. சங்கரநாராயணன், பா. கோவிந்தராசன், M. R. பாண்டியன், P. V. முத்துசாமி S. P. T. திராவிடமணி, K. கோவிந்தசாமி, சே. தேவசகாயம், R. பாண்டியன், வே. தா. பெரியசாமி, R. அங்கமுத்து, எ. ஜெயராமன், S. கன்னியப்பன், M. தருமன், மு. மதுரை, C. V. ராசன், பெருமாள், R. சுப்பராயலு, கி. பக்தவச்சலம், எ. எஸ். ராமன், கா. சொக்கலிங்கம், K. கண்ணபிரான், சொ. அ. அ. பால்ராஜி, A. சங்கரன், C. கணேசன், K. சுந்தரமூர்த்தி, N. V. நடராசன், ம. சு. முத்து.

* * *

நாங்கள், இந்தத்திருமணம்பொருந்தாத்திருமணம், இதனைச்செய்துகொள்வதன் மூலமும், இதன்மூலம்கட்சிக்காக, அவர் செய்ய எண்ணும் புதிய ஏற்பாடும், எங்களுக்கு அவரிடமுள்ள நம்பிக்கையை இழக்கும்படி செய்வதால், அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரையில் அதிலிருந்து பணியாற்றவோ, அதன் பேராலும் வாலிப உள்ளங்களைத் தடவிக் கொடுக்கும் விதமாகவும், நேரடிநடவடிக்கை என்ற முறையில் இந்தி எதிர்ப்பு, மார்வாடிகடை மறியல், 144 மீறல் என்றெல்லாம் திட்டம் வகுத்தாலும், அவைகளில் பங்குகொள்ள முடியாது என்பதையும், கழகத்தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் திருமணம் எங்களை இழிவுபடுத்துகிறது. எங்கள் கொள்கையைப் பழிக்கிறது. இயக்கத்துக்குத் துடைக்க முடியாத பழியைத் தருகிறது.

இது திருமணம் அல்ல, திருமணம் என்ற பேரால் ஒரு ஏற்பாடுதான் என்று பெரியார் சாக்குக் கூறுவது எங்கள் பகுத்தறிவைக் கேலி செய்வதாகவே நாங்கள் கருதுகிறோம்.

கட்சிக்காக அவர் செய்யப் போவதாக கூறும் ஏற்பாடு, ஜனநாயகத்துக்கும் எங்கள் தன்மானத்துக்கும் சாவு மணி அடிப்பதாகும் என்று எண்ணுகிறோம்.

எனவே, இந்த ஏற்பாடுகளை அவர் கைவிடாத முன்பு, அவருடைய தலைமையின் கீழுள்ள கழகத்திலே பணியாற்றுவதில்லை என்று தெரிவிக்கிறோம்.

இயக்கத் தோழர்கள் சிந்தித்து, தத்தமது, கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறோம்.

அவருடைய தலைமையை நீக்கும் முயற்சியில் ஈடுபடவோ, வேறுவகையான பணி புரியவோ முன் வருவதற்கு முன்பு, முதலில் பெரியாரின் இந்தஏற்பாட்டைக் கண்டிக்கும் அறிகுறியாக விலகி நிற்கிறோம் என்பதை முதலில் அறிவித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதற்குச் சம்மதிப்பவர்கள் "திராவிட நாடு" இதழுக்கு எழுதியனுப்புங்கள்.

ஆயிரக் கணக்கானவர்கள் இந்த ஏற்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள் என்பதை, அறிவியுங்கள்.

கொள்கைக்கு முரணாக நடந்தால் தலைவரையும் பின்பற்றமாட்டோம் என்று உலகுக்குத் தெரிவித்து உங்கள் தன்மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

எதிரிகளின் எளனத்துக்குப் பதில் கூறும் முறையிலே, தெரிவித்து விடுங்கள். தலைவர் இந்தத்தகாத ஏற்பாட்டைக் கை விடாவிட்டால், நாங்கள் அவருடைய தலைமையை ஏற்க மாட்டோம் என்பதைத் தெரிவித்து விட்டோம் என்பதைக் காட்டுங்கள்.

எது செய்தாலும் ஜீரணமாகிவிடும் என்ற எண்ணத்தைப் போக்குங்கள்.

இயக்கம் நமது உழைப்பு—தலைவர் சொத்தல்ல

உண்மைத் தன்மான இயக்கத்தவர் என்பதை உங்களுடைய கண்டனம் மூலம் உலகுக்குத் தெரிவியுங்கள்.

கண்டனத்துக்குப் பிறகும் தலைவர் பிடிவாதமாகவேயிருந்துவிட்டால் என்னசெய்வதென்று கவலைப் படாதீர்கள்.

ஒரு ஐந்து லட்ச ரூபாயும், சில வருஷ உழைப்பும், இடையே வந்த அம்மைக்குப் போய்ச் சேரும்.

அது பெரிய நஷ்டமல்ல—நமது மானம் நிலைக்கும்—இதை விட உருவான முறையிலே நம்மால் இயக்கத்தை நடத்திச் செல்ல முடியும்.

இயக்கம் நமது உழைப்பு—தலைவரின் சொத்து அல்ல—அவர் இயக்கம் என்று கருதி மணியம்மையிடம் தருவதாகச் சொல்லுவது இயக்கத்தின் கழிவுப்பொருளிலே ஒன்று.

இயக்கம், நமது வியர்வையிலும், கண்ணீரிலும், உழைப்பிலும் இருக்கிறது. அது எங்கும் போய் விடாது.

இந்த அக்ரமத்துக்கு நாம் பங்காளிகளல்ல என்பதை உலகுக்குக் காட்டிவிட்டுப், பறிபோனது போக, மிச்சமிருப்பதை வைத்துக்கொண்டு, உழைத்தது போக மிச்ச மீதியிருக்கும் வலிவைக் கொண்டு நாம் தன்மான இயக்கத்தைக் கட்டிக் காட்ட முடியும்.

திராவிடத் தோழர்களே, தடுமாற்றத்திற்கு இடமளிக்காதீர்கள்! தலைவருக்குத் தெரிவியுங்கள். உங்கள் ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம், கண்டிக்கிறோம், கண்டன அறிகுறியாக, இதோ உம்முடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திவைக்கிறோம்—விலகி நிற்கிறோம் என்று தெரிவித்து விடுங்கள்.

நமது கண்ணீரும், கண்டனமும், விலகி நிற்கிறோம் என்ற உறுதியும் அவருடைய உள்ளத்தை மாற்றினால், இந்த அநீதியான ஏற்பாட்டை அவர் கைவிட்டால், நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவருடைய மலரடிக்கீழ் நின்று மீண்டும் பணிபுரிவோம்.

இல்லையேல், அவர், மணியம்மை, ஐந்து லட்ச ரூபாய், இவ்வார்சு தான் ஒருபுறம்.

நாம், நமது தூய உள்ளம், உழைப்புத் திறம் இவை மற்றொருபுறம். இதிலே கடுகளவும் சந்தேகம் வேண்டாம்.

நமது வாழ்நாளிலேயே பெரியதோர் சோதனை இது. இதிலே நாம் காட்டும் தூய்மை, உறுதியைப் பொறுத்துத்தான் நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

சிந்தியுங்கள்—சோர்ந்துவிட வேண்டாம்—தீர்மானியுங்கள்—அவசரம் வேண்டாம்—அஞ்சேல்—வெற்றி நமதே.

அன்புள்ள

சி. என். அண்ணாதுரை.

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, (கோவை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் மாகாண நிர்வாக உறுப்பினர்.)

ஈ. வெ. கி. சம்பத், (மாகாண நிர்வாக உறுப்பினர்.)

என். வி. நடராசன், (மாகாண நிர்வாக உறுப்பினர், ஆசிரியர், "திராவிடன்")

எ. வி. பி. ஆசைத்தம்பி, (மாகாண நிர்வாக உறுப்பினர், ஆசிரியர் தனிஅரசு.)

எஸ். ஆர். சுப்ரமண்யம், (மாகாண நிர்வாக உறுப்பினர்)

சி. தங்கராஜ், (சென்னை மாவட்ட தி. க. தலைவர் மாகாண நிர்வாக உறுப்பினர்)

கே. கோவிந்தசாமி, (செயலாளர் சென்னை திராவிடர் கழகம், & மாகாண நிர்வாக உறுப்பினர்)

சி. டி. டி. அரசு, (மாகாண நிர்வாக உறுப்பினர்)

காஞ்சி மணிமொழியார், (பொருளாளர் சென்னை தி. க- ஆசிரியர் "போர் வாள்")

கே. எம். கண்ணபிரான், (அமைப்பாளர் சென்னை திராவிடர் கழகம்)

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., (ஆசிரியர் "மன்றம்")

கே அன்பழகன், எம். ஏ., (ஆசிரியர் 'புது வாழ்வு')

டி. சண்முகம்,— (சென்னை மாகாண சுயமரியாதை இயக்க நிர்வாகத் தலைவர்)

பூ. கணேசன், (பி. ஏ. ஆனர்ஸ், துணை ஆசிரியர் 'விடுதலை'. சென்னை)

மா. இளஞ்செழியன், பி. ஏ., (ஆனர்ஸ்) (துணை ஆசிரியர் "போர் வாள்")

எஸ். தவமணிராசன், (திராவிட மாணவ கழக அமைப்பாளர்)

புலவர் செல்வராஜ், (தலைவர் சென்னை சு. ம. சங்கம், ஆசிரியர் "கதிரவன்")

டி. எம். பார்த்தசாரதி, (ஆசிரியர் 'தமிழ் நாடு' வில்லிவாக்கம் தி. க. தலைவர்)

எம். எஸ். முத்து, (செயலாளர் சென்னை, சு. ம. சங்கம்)

சத்தியவாணிமுத்து: (சு. ம. இயக்கம் நிர்வாக உறுப்பினர்.)

டாக்டர். கி. கணேசன்: (துணைத்தலைவர் பெத்துநாய்க்கன்பேட்டைத் திராவிடர் கழகம்.)

வி. டி. பெரியசாமி: (துணைத்தலைவர் சென்னை, சு. ம. சங்கம்)

வி. முனுசாமி: (சென்னை, நகராண்மைக்கழக உறுப்பினர்.)

சி. வி. ராஜன், (இந்தி எதிர்ப்புப் போராட்டக் கண் காணிப்பாளர்.)

எ. சங்கரய்யா,
பி. ராமசாமி,
வி. கே. சுப்பராயலு, } (சென்னைத் திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள்.)

கே. சிவஞானம், (சென்னை சுயமரியாதை சங்க நிர்வாக உறுப்பினர்.)

வி. கண்ணன்,— (செயலாளர், சென்னை நகர திராவிட மாணவர் கழகம்.)

நான்கண்ட அழகர்சாமி

13-ம் பக்கத் தொடர்ச்சி

தலைமை தாங்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால், மாநாடே நடக்கக் கூடாதென்பதே தனது முடிவென்றும் கூறி, மறுநாள் சென்னைக்குப் புறப்பட்டார். அங்கு சில முக்கியமானவர்களைக் கண்டு பேசினர். சிலருடைய சூழ்ச்சியால் பெரியாரே அப்படி ஒரு கடிதத்தை எழுதும்படி செய்யப்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டார்.

"காஸ்மாப் பாலிட்டன்" கிளப்பில் தங்கியிருந்த தோழர் சாமியப்பா அவர்களையும் கண்டு பேசினர். அதன் பின்னர், சில நண்பர்களைக் கொண்டு இராமச்சந்திரருக்குக் கடிதங்கள் எழுதும்படி செய்தார். இக்கடிதங்களை இராமச்சந்திரர் பார்த்ததும், உடனே பெரியாருக்கு ஒருகடிதம் எழுதி, அதில், தான் மாநாட்டுக்கு வருவதாகவும், ஆனல், மாநாட்டுக்குத் தலைமை தாங்க முடியாதென்றும் குறிப்பிட்டிருந்தார். அதன்பின்னர்தான், பெரியாரே மாநாட்டின் தலைவர் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனல், தோழர் சாமியப்பாவுக்கு இது தெரியாது. "சேர்ந்துவாழும் விரோதிகள்" சிலரின் சூழ்ச்சியெல்லாம், அழகர்சாமியின் ஆர்வத்தாலும், முன்யோசனையினலும், முறியடிக்கப்பட்டன. ஆனல், இச்சூழ்ச்சிக்குக்காரணமாயிருந்த பெரியமனிதர்கள் எவரிடமும் அழகர்சாமி தனது விரோதத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் பட்டம், பணம் ஆகியவற்றில்தான் பெரிய மனிதர்களே தவிர, அழகர்சாமியிடம் தங்கள் எண்ணங்களை வெளிப்படையாகக்கூறத்தைரியமற்றவர்கள்.

தோழர் இராமச்சந்திரரைத் தலைவராக ஆக்கும்படி சாமியப்பாவிடம் சென்னைத் தலைவர்கள் முதலில் சொன்னதைக் கண்டு, தோழர் சாமியப்பா எந்தவிதமான சந்தேகமும் தனக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றல், எந்தத் தப்புஎண்ணத்தின்மீது இந்தப்படையெடுப்பு நடைபெறுகிறதென்பது தோழர் சாமியப்பாவுக்குத் தெரியாது. திருவாரூரில், சென்னைப் பெரிய மனிதர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் கனவான் இருந்தார். (அவர் பெயர் இன்று நமக்குத் தேவை இல்லை) அவர் ஒரு சிறந்த நிபுணர். தான் நினைப்பதை எல்லாம் சாதிக்கும் ஆற்றல் கொண்டவர். இவர் திருவாரூரில், தோழர்கள் இராமானுஜம், சாமியப்பா ஆகியவர்களுக்கு நண்பர். இதைப் போலவே, இந்த இருவரின் எதிரியான வடபாதிமங்கலம் தியாகராஜன் அவர்களுக்கும் நண்பர். சாமியப்பா கட்சியும் தியாகராஜன் கட்சியும் தம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகயிருப்பதால், தாம் எண்ணியதைச் செய்து முடித்து விடலாமென்பதில் அந்த நிபுணர் சிறிதும் சந்தேகப்படவில்லை. அந்த நிபுணருக்கு நமது அழகர்சாமியைப் பற்றியும் நன்கு தெரியும். அதனல்தான் அந்த நெருக்கடியான கட்டத்தில் அந்த நிபுணர் தோற்கவும், அழகர்சாமி வெற்றி பெறவுமான நிலைமை உண்டாயிற்று.

பெரியாருக்கு விரோதமாக நடக்கும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைப் பற்றிப் பெரியாரிடம் சொல்லுவதற்கு அழகர்சாமி எண்ணவில்லை. ஏனென்றல், அதுவரையில் இந்தச் சதிகாரர்கள் பெரியாரிடம்மரியாதையுடனும், நட்புடனும் இருக்கும் போது, தான் போய்ச் சொல்லுவது, நம்பமுடியாத செய்கையாகும் என்பதுடன், இதனல் எதிரிகள் விழித்துக் கொள்வார்களென்பதும் அழகர்சாமியின் எண்ணம். இந்த முதல் போராட்டத்தில் சென்னைப் பெரிய மனிதர்களும் திருவாரூர் நிபுணரும் தோல்வியடைந்தார்கள். இதனல் அவர்களுக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. மாநாட்டில், தீர்மானங்கள் மீது விவாதத்தை உண்டாக்கி, அதனல் ஓர் குழப்பத்தை மகாநாட்டில் ஏற்படுத்திவிட வேண்டுமென்பது அவர்களுடையஎண்ணம்.

மகாநாட்டிற்குப் பெரியாரைத் தலைமை வகிக்க விடாமல், இராமச்சந்திரரைத் தலைமை வகிக்கும்படி செய்து, திராவிட நாட்டுப் பிரிவினைத் தீர்மானத்தின்போது, அதை எதிர்த்துப் பேசித் தோற்கடிக்கச் செய்து, மகாநாட்டைத் தங்களுடையதாகச் செய்ய வேண்டுமென்பது சென்னைத் தலைவர்களின் யோசனை. ஆனல் இதற்குப் போட்ட முதல்திட்டம் படுதோல்வியானதும், மீண்டும் சென்னையில் புனராலோசனை செய்தார்கள். தங்களுக்கு இருந்த பலம் இன்னும் இருக்கிறதென்று சென்னைத் தலைவர்களின் படைத் தலைவர்கள் சொன்னர்கள். பெரியாருடையபலத்தைக்குறைக்கப் பெரியாரின் ஆட்களிலேயே சிலரைப் பிடித்து, மோதும்படி விடவேண்டுமென்பதும், இப்படிச் செய்வது தங்கள் எண்ணத்திற்குச் சாதகமாக இருக்குமென்பதும் அந்தப் படைத் தலைவர்களின் எண்ணமாகும். திருவாரூர் நிபுணர் இதற்கு ஓர் திட்டம் வகுத்தார். அதாவது ஒருதோழரை என்னிடம் அனுப்பிவைத்தார். அந்தத் தோழர்; தாம் தியாகராஜன் அவர்களிடமிருந்து வருவதாகவும், என்னை வடபாதி மங்கலத்தார் பார்க்க விரும்புவதாகவும் சொன்னர். எனக்குக்கொஞ்சம் பயம்தான். ஏனென்றல், வடபாதி மங்கலத்தாருக்கு என்மீது கோபமிருந்தது. அது பழைய சண்டை. முத்தையா அவர்களின் தேர்தலில் எனக்கும் வடபாதி மங்கலத்திற்கும் உண்டான சண்டை அது. அந்தப் பழைய கோபத்தைத் தீர்க்க எண்ணுகிருரோ என்று முதலில் நினைத்தேன். என்னிடம் வந்த நண்பர், அழகர்சாமிதான் என்னைத் தங்களிடம் அனுப்பிவைத்தார் என்றர். பின்பு நான் விஷயம் என்னவென்பதைப் புரிந்துகொண்டு, வந்த விபரம் என்னவென்று விசாரித்தேன். அந்த நண்பர் எல்லாவற்றையும் சொன்னர். பின்னர் எழும்பூர் ரயில் வேஸ்டேஷனிலுள்ள ரெஸ்டாரண்ட்டில் தங்கியிருந்த பெரிய மனிதரிடம் என்னை அழைத்துச் சென்றர். நான் அவரிடம், அவர்களுடைய கட்சியின் நோக்கத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, பின்பு இன்னின்னவை செய்ய வேண்டுமென்றும் சொன்னேன். உடனே அந்தப் பெரியமனிதர் தம்முடைய பெட்டியைத்திறந்து 1000 ரூபாய்களை எடுத்து என்னிடம் கொடுத்து, வேண்டியதைச் செய்யும்படியும், மீதி 1000 ரூபாயையும், மறுநாள் கொடுப்பதாகவும் சொன்னர். நான் அக்கனவானை நோக்கி "உங்களுக்கு நம்பிக்கையான ஓர் ஆளை என்னுடன் அனுப்புங்கள்" என்றும் கேட்டேன். அவர் ஓர் ஐயரை என்னுடன் அனுப்பிவைத்தார்.

(தொடரும்)

என். வி. என். அறிக்கை

—※—

திராவிடர் இயக்கத் தலைவர் பெரியார் அவர்கள், தமது சொந்த விஷயமாயும், இயக்க விஷயமாயும், ஓர் ஏற்பாட்டைச் செய்யப்போவதாகச், சில காலமாகச் சொல்லிவந்துள்ளது, இயக்கத் தோழர்கள் அறிந்ததேயாகும். அதிலும் குறிப்பாகக் கோவை மாநாட்டிலே இதைப்பற்றி வலியுறுத்திக் கூறினர்.

ஆனல் அந்த ஏற்பாடு என்ன என்பதை 18-6-49-ல் நான் முக்கிய நண்பர் மூலம் கேள்வியுற்றுத் திடுக்கிட்டேன். அதேபோன்று கேள்வியுற்ற ஒவ்வொரு தோழரும் திடுக்கிட்டு வருந்தினர். அன்றிரவே நான் பெரியார் அவர்களுக்கு இதைப்பற்றித் தனித்துக் கடிதம் எழுதினேன். அடுத்துத் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். குருசாமி, வேலூர் திருநாவுக்கரசு, கடலூர் குருசாமி ஆகியோருடன் நானும்ஏற்காட்டுக்குச்சென்று, பெரியார் அவர்களிடம்,அவரதுஏற்பாட்டினல், ஏற்படும் தீமைகளைஎடுத்துக் கூறினேம். அவ்வளவையும் கேட்டு மீண்டும் யோசித்து ஆவன செய்வதாகக் கூறினர். நாங்கள் அதில் நம்பிக்கை கொண்டு திரும்பினேம்.

இந்நிலையில் 28-6-49 "விடுதலை"யில் பெரியார் அவர்கள் தமது திருமண விஷயமாயும், கட்சி வாரிசு விஷயமாகவும் வெளியிட்டுள்ள அறிக்கையானது, இயக்கமும் கொள்கையும் தன்னேடு அறவே அழிந்துபடட்டும் என்பதையே விளக்கிக் காட்டியுள்ளது. அவ்வறிக்கையைக் காணும் திராவிட இயக்கத் தோழர்களும், தாய்மார்களுமல்லாது, இயக்க ஆதரவாளர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிருக்கிறது.

முதலாவதாகப் பெரியார் அவர்கள் தோழியர் கே. எ. மணியைத் திருமணம் செய்துகொள்வதென்பது, இயக்கக் கொள்கைக்கு அறவே மாறுபட்டதானதோடு, அவர் அதற்காகக் கூறப்படும் காரணங்கள் அனைவரையும் ஏமாற்றப் பார்ப்பதாகவே இருக்கிறது. இயக்கம் இன்று அடைந்துள்ள வளர்ச்சியின் நிலையில் இத்திருமண ஏற்பாடானது மனிதத் தன்மையைப் பழிப்பதாக இருக்கிறது என்பதை நான் மேலும் விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

இரண்டாவதாக, பெரியாருக்குப்பின் இயக்கத்துக்கு வாரிசு ஆக இருக்க எவருக்கும் அருகதையோ, யோக்கியதையோ இல்லையாம், எனவே அவரது உடல் நலன் விஷயத்தில் அக்கறை கொண்டு பணியாற்றிவரும் தோழியர் கே. எ. மணி ஒருவரே வாரிசுக்கு லாயக்குடையவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறர். இக்கூற்று மிகமிக நன்றிகெட்டதானதென்பதோடல்லாமல் ஜனநாயகத் தன்மைக்கு மீறியதாகவுமிருக்கிறது.

சாதாரணமாக ஒரு கடையில் பணியாற்றும் குமாஸ்தா கூடத் தனது முதலாளி சிறிது நன்றி கெட்டதனமாய் மனிதத் தன்மையை மறந்து பேசினல் மனம் பொறுக்கமுடியாமல்,கடையிலிருந்து வெளியேறுவான் என்றல், திராவிடரின் உயிர் நாடியான முக்கிய பிரச்னைகளுக்காக உண்மைத் தொண்டாற்றித் தங்களது வாழ்வையே பாழாக்கிக்கொண்டுள்ள இயக்கத் தோழர்களுக்குப் பெரியாரின் அறிக்கை எவ்வளவு வேதனையை யளிக்கும் என்பதை நான் கூறவேண்டியதில்லை.

இயக்கத்தில் எவர் மீதும் நல்லெண்ணமோ, நம்பிக்கையோ இல்லாத ஒரு தலைவரின் தலைமையின் கீழ் அதுவும் வெளிப்படையாக அறிக்கை வெளியிட்ட பின்னர் மேலும் தொண்டாற்றுவதைப் போன்ற இழிதன்மை வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

அதுமட்டுமல்லாமல் தமது திருமண விஷயமாய், கட்சி ஏற்பாடு விஷயமாய் இயக்கத்தில் ஒருவரையும் கலக்காமல், நிர்வாகத் தலைவரான தோழர் டி. பி. வேதாசலம் அவர்களுக்கும் தெரிவிக்காமல், சொந்த விஷயம் என்றபோதல் கவர்னர் ஜெனரலிடம் பேசியிருப்பதானது இயக்கத்துக்கும், கொள்கைக்கும் அதற்காக உழைக்கும் இயக்கத் தோழர்களுக்கும் செய்த பெரும் துரோகமாகும்.

தவறு செய்துள்ள தலைவர் திருந்திக்கொள்ள வழிவகை தேடுவதை விடுத்து இயக்கத்தில் ஈடுபட்டுழைக்கும் அனைவரையும் நாணயக்குறைவாய் ஜனநாயக விதிக்கு மாருய்த் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதானது, இனி அவரது தலைமையில், கட்சியில் பணியாற்ற முடியாததாகிவிட்டது.

என்னைப் பொறுத்தவரை நான் எனது பொதுவாழ்வில் கொள்கையையே பிரதானமாகக் கொண்டு பணியாற்றி வந்துள்ளேன். இது காரணம் பற்றியே 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலிருந்தும் பெத்துநாய்க்கன்பேட்டை காங்கிரஸ் செயலாளர் பதவியையும் ராஜிநாமாச் செய்தேன். அன்றும் சரி, இன்றைக்குங்கூடப்பொதுவாழ்வில் சொந்த லாபத்தைக்கருதி உழைத்ததாகப் பெரியார் அவர்களே கூற முடியாது. அதேபோன்று என்னை விட இன்னும் பல தொல்லைகளுக்காளாகி உழைத்து வரும் இயக்கத் தோழர்கள் பெரியாரின் அறிக்கையைக் கண்டு மனம் நொந்து குமுற வேண்டியிருக்கிறது.

எனவே, பெரியார் தமது ஏற்பாடுகளை வாபஸ் பெற்றலன்றி நான் இயக்கத்தில் கலந்து பணியாற்றுவதென்பது சூத்திரப்பட்டத்தை விட கேவலமானதாகுமென்று எண்ணுகிறேன்.

ஆக, இந்நிலையில் என்னைப்போன்ற இயக்கத்திலிருந்து விலகி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கேற்பவே நான் இயக்கத்திலிருந்து விலகி நிற்கிறேன் என்பதை இயக்கத் தோழர்களுக்கும் பிரமுகர்களுக்கும் தெரிவித்துக்கொள்வதுடன், எக்காரணங்கொண்டாவது பெரியார் தமது ஏற்பாட்டைரத்து செய்துவிடுவாரேயானல் மீண்டும் எப்போதும் போலப் பணியாற்றுவேன் என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்மைத் தொண்டுக்கு இன்றில்லாவிடினும், இறுதியில் வெற்றி உண்டு என்பதை இயக்கத் தோழர்கள் மனதில் வைத்து ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அன்புள்ள

என். வி. நடராசன்.

திராவிட நாடு

ஞாயிறு] 3—7—49 [காஞ்சி

எட்டாம் ஆண்டு

"திராவிடநாடு" ஏழு ஆண்டுகளைத் தாண்டி வந்து, இன்றுமுதல் எட்டாவது ஆண்டினைத் தழுவுகிறது. தழுவுவதிலே ஒருவித மகிழ்ச்சியை அது கொள்ளுகிறது. அம் மகிழ்ச்சியை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் காணிக்கையாக வைக்கக் கடமைப்பட்டுள்ளது.

எட்டாம் ஆண்டு! ஆடிப்பாடித் துள்ளி விளையாடும் இளமைப்பருவம்! களங்கமற்ற உள்ளமும், உறுதியினைத் தழுவும் உரமும் கொண்டு எழில் பெற்று விளங்கும் காலம்! கள்ளங்கவடமற்று விளையாடும் இளைஞனைக், காணும் கவட்டு நெஞ்சங் கொண்ட வயதுவந்த நொண்டி, தான் விளையாட முடியாமலிருக்கும்போது அவ்விளைஞன் மட்டும் விளையாடுவதா என்று பொறாமையுள்ளங்கொண்டு, கல்லெடுத்தெறிந்து இளைஞனின் காலில் படுகாயமுண்டாக்க நினைப்பது என்பது, சாதாரணமாக நடைமுறைப் பழக்கத்தில் சில இழிகுணம் படைத்தோரிடத்து இருக்கக் காண்கிறோம். அதுபோல "திராவிடநாட்"டின் வளர்ச்சிகண்டு பொறாமை கொண்ட காங்கிரஸ் அரசாங்கம் அடக்குமுறை ஜாமீன் குண்டை எறிந்து, "திராவிடநாட்"டிற்குப் படுகாயமுண்டுபண்ண எண்ணி முயன்று வருகிறது. அடிபடும் இளைஞன் காயத்தைத் தேற்றிக்கொண்டு நடமாடுவதுபோல், "திராவிடநாடும்" தன்மேல் உதிர்க்கப்படும் அடக்குமுறைக் குண்டுகளை உதறித்தள்ளிக்கொண்டு தன் இலட்சியப் பாதையில் சளைக்காமல் செல்லவே விரும்புகிறது.

"திராவிடநாடு" சென்ற ஏழாண்டுக்காலமாக மலர்மெத்தை விரிக்கப்பட்ட நடைபாதையில் நடந்து வரவில்லை. கல்லும் முள்ளும், கடும் புதரும், கொடும் விலங்கும் அதன் வழிநடைப் பாதையிலே குறுக்கிட்டுத்தான் வந்திருக்கின்றன. இன்வாழ்வுப் புரியினைச் சென்று சேர்வதையே நோக்கமாகக் கொண்டதால், எதிர்ப்படும் இன்னல்களையெல்லாம் துச்சமாக நினைத்து முன்னேறி வருகின்றது. துவக்கப்பட்ட பயணத்தின் இடையில், அன்பர்கள் ஆதரவு என்னும் குளிர் மலர் ஓடைகள் தென்பட்டுக்கொண்டே இருப்பதால், எதிர்த்துத் தாக்கிடும் இன்னல்களை மறந்து களிப்புடன் இளைப்பாற இடமேற்படுகிறது.

"திராவிட நாடு" தன்னைப் பின்தொடர்பவர்கள் எளிதில் வந்து சேர, நடந்து செல்லும் வழியைச் செப்பனிட்டுக் கொண்டே வந்திருக்கிறது; இனியும் செப்பனிட்டுக் கொண்டே செல்லும். வழியில் காணப்படும் சனாதனச் சருக்கல்களைப் போக்கியும், வருணாச்சிரம வளைவுகளை நிமிர்த்தியும், மூடப் பழக்க வழக்கம் என்னும் முட்புதர்களை அழித்தும், குருட்டு நம்பிக்கை என்னும் கொடுங்கள்ளிகளை வெட்டியும், பழமைப் படுகுழிகளைத் தூர்த்தும், அவற்றிலே நெளியும் புராணப் பாம்புகளையும், இதிகாசக் கொடுந்தேள்களையும் கொன்றும், வஞ்சக நரிகளை வளைத்தும், சீறிடும் செந்நாய்களை விரட்டியும், ஊளையிடும் ஓநாய்களை அலட்சியப்படுத்தி அப்புறப்படுத்தியும் தொண்டு செய்து வருகிறது. சமுதாயத்திலே பல கோணல் வளையங்கள் இருந்தால்தான், அவற்றின்மீது தாவித் தாவி தம் இன்பவாழ்வை நடத்த முடியும் என்று கருதி, இன்றைய சமுதாயத்தில் உலவி வரும் கோணல் சேட்டைக்காரர்களுக்கு "திராவிட நாடு" சென்ற ஏழு ஆண்டுகாலமாக ஒரு வைரியாகவே காணப்பட்டு வருகிறது. "திராவிட நாடு" வைரியாக இருக்க விரும்பவில்லை; ஆனால் "திராவிட நாட்"டை அவர்கள் வைரியாக எண்ணுகிறார்கள்.

தான்கொண்ட இலட்சியம் ஈடேற "திராவிடநாடு" அன்றுபோல் இன்றும் பாடுபடுகிறது; இன்றுபோல் என்றும் பாடுபடும். வியாபார விளம்பரச் சலுகைகள் பெறுமல் — எதிர்பார்க்காமல்தான் கடமையை நிறைவேற்றி வருகிறது. இது சீமான்களின் புன்முறுவலை எதிர்பார்த்து ஏங்கி நிற்காமல், தொழிலாளர்களின் துயரைத் துடைப்பது, பாட்டாளியின் பரிதாபத்தைப்போக்குவது, அல்லலுற்றவர்களுக்கு ஆறுதல் கூறுவது, ஏழைகளுக்கு இதஞ் சொல்லுவது, அறியாதாருக்கு அறிவுறுத்துவது, உணராதார்க்கு உணர்த்துவது, கொடுமைப் புரிவோரைக் கண்டிப்பது, குற்றஞ் செய்வோரை இடித்துரைப்பது, குறையுடையோரைச் சுட்டிக்காட்டுவது, நல்லதாற்றியோரின் நலம் பாராட்டுவதுபோன்ற அரிய தொண்டினையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இதுகாறும் பாடுபட்டு வருகிறது; இனியும் பாடுபட்டு வரும்.

ஏஜண்டுத் தோழர்கள் பெரும்பாலும் இயக்கத் தொண்டர்கள்தான். அவர்களெல்லோரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள்தான் என்றாலும், அவர்களில் சிலர் நடந்துகொள்ளும் முறைதவறிய போக்கின் காரணமாக, அவர்களிடத்திலேயே விட்டுவைக்கும்படியான அவசியத்தில் அகப்பட்டுக்கொண்ட தொகையின் அளவு சில ஆயிரங்களைக் கடந்து நிற்கிறது. சந்தா அன்பர்கள் கொடுக்கவேண்டிய தொகையும் ஆயிரக்கணக்கை எட்டியிருக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே தான் வேறு வருமான வழிகள் எதையும் நிலையாகக் கொள்ளாத "திராவிட நாடு" வளர்ந்தும்— வளர்ந்து வரவேண்டிய அவசியத்திலும் இருந்துவருகிறது. ஏஜண்டுத் தோழர்கள் ஒரு பத்திரிகைக்குக் கடைக்கால் போன்றவர்கள். அவர்கள் வளமாக நின்றால்தான் பத்திரிகை உறுதியுடன் நிற்க வழியேற்படும். ஏஜண்டுகள் தம் கடமையை இனிது செய்துமுடிக்கப் பொதுமக்கள் ஏற்றபடி ஆதரவினைத் தரவேண்டுகிறோம்.

"திராவிட நாடு" எட்டாம் ஆண்டை எட்டிப் பிடித்திருக்கும் இந்நாளில், எம் மனமார்ந்த மகிழ்ச்சியையும், நன்றியையும் ஏஜண்டுத் தோழர்களுக்கும், சந்தா அன்பர்களுக்கும், கட்டுரை வழங்கினோர்க்கும், கவிதைகள் வரைந்தோர்க்கும், கதைகள் தீட்டினோர்க்கும், நன்கொடை கொடுத்தோர்க்கும் தெரிவித்துக்கொள்ளும் முறையில் இவ்விதழை அன்பின் காணிக்கையாக வைக்கிறோம். அன்பர்களின் வற்றா ஆதரவை என்றென்றும் விரும்பி நிற்கிறது "திராவிட நாடு".

✲

நான் கண்ட அழகர்சாமி

தொடர்ச்சி—10

எஸ். வி. லிங்கம்

ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டைத் திருவாரூரில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டதும், அழகர்சாமி மாநாட்டுக்கு வேண்டிய காரியங்களைக் கவனித்து வந்தார். தோழர்கள் சாமியப்பா அவர்கள் இராமாநுஜம் அவர்கள் ஆகிய இருவரும் மாநாட்டை நடத்தும் பொறுப்பைப் பெரியாரிடமிருந்து ஏற்றுக்கொண்டார்கள். மாநாட்டில், திராவிட நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்பது பெரியாருடைய எண்ணமாகும். மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இருவரும், பெரியாருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்ததைப் போலவே, பெரியார் செல்லும் வழி தங்களுக்குப் பிடிக்கவில்லை, எனவே, அதனைத் திருத்தவேண்டுமென்ற எண்ணங்கொண்ட, பெரியாருடன் 'சேர்ந்து வாழும்' விரோதிகளின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்களாக இருந்தார்கள். இந்தத் தர்ம சங்கடமான நிலையை அழகர்சாமி மாநாட்டின் ஆரம்ப காலத்தில் எதிர்பார்க்கவில்லை.

மாநாட்டின் வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் இரண்டு மூன்று முறை கூடிக், கடைசியாக நான்காவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில்தான் வரவேற்புத் தலைவர், மாநாட்டுத் தலைவர் தேர்ந்தெடுப்பதும், மாநாட்டுத் தேதி, குறிப்பிடுவதும் முடிவாக வேண்டியிருந்தன. இந்த நான்காவது கூட்டம் நடைபெறுவதற்கு முதல்நாள், பெரியாருக்கு வரவேற்புக் குழுவினர் பற்றி ஏதோ ஓர் சந்தேகம் உண்டாகி இருக்கவேண்டுமோ என்னவோ தெரியவில்லை, ஈரோட்டிலிருந்து ஒரு தந்தி தோழர் இராமானுஜம் அவர்கள் மேல்பார்த்து எனக்குக் கொடுப்பது என்று பெரியார் அனுப்பி இருந்தார். இந்தத் தந்தி என்னிடமோ அல்லது அழகர்சாமியிடமோ கொடுக்கப்படவில்லை. அந்தத் தந்தியில், என்னை ஈரோட்டுக்கு வரும்படி அறிவிக்கப்பட்டிருந்தது என்பது பின்னர்தான் தெரிந்தது.

நான்காவது வரவேற்புக் கழகக் கூட்டம் தோழர் இராமானுஜம் அவர்கள் வீட்டில் நடைபெற்றது. ஜில்லாத் தலைவர்கள் நூறுபேருக்கு மேல் வந்திருந்தார்கள். கூட்டத்திற்குத் தோழர் சாமியப்பா அவர்கள் தலைமை வகித்தார். மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கும், அதற்கு வேண்டிய பண வசூலுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாநாடு நடத்தவேண்டிய இடத்தையும், மாநாட்டுக்கு வருபவர்களுக்குச் சமயல் செய்வதற்கு விருதாநகரில் இருந்து ஆட்கள் வரவேண்டுமென்பது பற்றியும் அழகர்சாமி கூறினார். அது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக்கு உபதலைவர்களாக ஏழெட்டுக் கனவான்களின் பெயர்களை அழகர்சாமி சொன்னார். அவர் குறிப்பிட்ட பெயர்களைத் தோழர் சாமியப்பா அவர்களும் மற்றவர்களும் ஒப்புக்கொண்டார்கள். கடைசியாக பி. இராமசந்திரரின் பெயரை அழகர்சாமி குறிப்பிட்டார். தோழர் சாமியப்பா அவர்கள் அந்தப் பெயரை வரவேற்புக் கமிட்டியில்சேர்க்கவேண்டாமென்று சொன்னார். மீண்டும் அழகர்சாமி அவருடைய பெயரும் அதில் இடம் பெறவேண்டுமென்ற அவசியத்தை விளக்கிக் கூறி வற்புறுத்தினார். தோழர் சாமியப்பா அழகர்சாமியைத் தனியாக அழைத்து இராமசந்திரரின் பெயரை மாநாட்டுத் தலைவர் பெயராகப் போடவேண்டுமென்றும், அதனால்தான் உபதலைவர்கள் பட்டியில் அவருடைய பெயரைச் சேர்க்கவேண்டாமென்று சொன்னதாகவும் கூறினார். இது அழகர்சாமியைத் திடுக்கிடும்படி செய்தது. ஆத்திரம், கோபம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, மாநாட்டுத் தலைவராகப் பெரியாரின் பெயரைத்தான் போடவேண்டுமென்றும், இராமசந்திரரின் பெயரைப் போட்டால் வீண் விபரீதங்கள் ஏற்படுமென்றும் சொன்னார். மீண்டும் தோழர் சாமியப்பா அழகர்சாமியை நோக்கி, "இராமச்சந்திரரையே மாநாட்டுத் தலைவராக ஆக்கவேண்டுமென்று பெரியாரே எழுதியிருக்கும்போது, நீ, பெரியாரே தலைவராக இருக்கவேண்டுமென்று கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது" என்று கேட்டார். அதன் பின்னர் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் முடிந்தது; இராமச்சந்திரரே மாநாட்டுத் தலைவர் என்பதாக அறிவிக்கப்பட்டது.

மறுநாள் தோழர் அழகர்சாமி திருவாரூரிலுள்ள தன் நண்பர்களுடன் இது சம்பந்தமாகக் கலந்துபேசினார். மாநாட்டின் வரவேற்புக்கமிட்டியில் சென்னையிலுள்ள சிலருடைய சூழ்ச்சி இடம் பெற்று வேலை செய்கிறதென்றும், ஒரு வாரத்துக்கு முன்பு, தான் பெரியாரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்ததாகவும், அந்த முடிவுக்கு மாறாக இப்போது பெரியார் எப்படிக்கடிதம் எழுதியிருக்கமுடியும்என்றும் யோசித்தார். அதன் பின்னர், எது எப்படியானாலும், இனிப் பெரியாரையோ, தோழர் சாமியப்பா அவர்களையோ இது சம்பந்தமாகத் தான் எதும் கேட்கப்போவதில்லை என்றும், மாநாட்டுக்குப் பெரியாரே

(10 -ம் பக்கம் பார்க்க)

இலடாக்

2-ம் பக்கத் தொடர்ச்சி

மார்க்கார், ஐபெக்ஸ் முதலிய வரையாடுகளும், செந்நாய், பனிப்புலி, காட்டுக்கிடா, திபேத்திய மான், மரை, கலை முதலியவைகளும் அங்குள்ள காடுகளிலும், புதர்களிலும் பெருவாரியாக உள்ளன.

கனிப்பொருள் வளமும் இலடாக்கில் ஏராளமாகப் புதையுண்டு கிடக்கிறது. தங்கம், செம்பு, மணிவகைகள் முதலியவை அங்கே காணப்படுகின்றன. இலடாக், தான் கொண்டிருக்கும் வளப்பத்தின் மூலம் பல துறைகளிலும் வளர்ச்சியடைய வாய்ப்புக்கள் இருப்பினும், இதுவரையில் வளர்ச்சியடைவதற்கான வழியை அதனால் கண்டுகொள்ள முடியவில்லை. இனிமேல் வளர்ச்சிப்பாதையில் முனைந்து செல்ல முற்பட்டால் தான் பயனுண்டு.

பூகோள அமைப்பில் இலடாக் பகுதியானது பல இடங்களுக்கும் மைய பாகமாக இருந்துவருகிறது. பண்டுதொட்டு, ஆசியாவின் வெவ்வேறிடங்களிலிருந்து சென்று வந்து கொண்டிருக்கும் வாணிபக் கூட்டங்களின் வழிப்போக்கில் இது முக்கிய நடுவிடமாக அமைந்து வரலாற்றுச் சிறப்புடன் வாழ்ந்து வருகிறது. திபேத்திலிருந்து மேற்கு ஆசியாவிற்கும், மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கும் வருவதற்கான முக்கிய பாதைகள் இலடாக் வழியாகத்தான் செல்லுகின்றன. 11,000 அடி உயரத்தில் அமைந்திருக்கும் இதன் தலைநகரான லே காரக்கோரம் கணவாய் வழியாக கிழக்குத் துருக்கிஸ்தானிக்கும், கிழக்கில் திபேத்துக்கும் சீனாவுக்குச் செல்லும் வழிகளின் இடையில் நடுவிடத்தில் இருக்கிறது. லே நகரிலுள்ள சத்திரஞ் சாவடிகளில், அன்றுபோல் இன்றும், பல நாட்டு வணிகர்களும் கூடித் தங்கள் பண்டங்களை பரிமாறிப் பண்டம்மாற்றுச் செய்துகொள்கின்றனர். சிங்கியாங் பகுதியிலிருந்து யார்க்கண்டியரும், கூலூ காஷ்மீர் ஆகிய இடங்களிலிருந்து இந்தியரும், பூரிகிலிருந்து முகம்மதியரும் வாணிபத்தை முன்னிட்டு இங்கே சந்திக்கின்றனர். போக்குவரத்துச்சாதனங்களும், வாழ்க்கை வசதிகளும் நன்கு அமைந்திராத அந்நாட்களில், இந்தியத் துணைக்கண்டத்தின் கலையும், கலாச்சாரமும் எப்படி இந்த வழிகள் மூலமாக வாணிகத்தைத் தொடர்பிக்கொண்டு, மத்திய ஆசியாவுக்கும், தொலைவிலுள்ள சீனாவுக்கும் சென்றிருக்கின்றது என்பதை ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம். இலடாக் மூலமாகத் தான்பிற்காலப் பௌத்தமும், அதன் கலைமரபும் காஷ்மீரத்திலிருந்து திபேத்துக்குச் சென்று, பலதரப்பட்ட, ஆனால் ஒருமைப் பாங்குடைய பல்வேறு கலாச்சாரப் பிரிவுகள் இணைந்து ஒன்றுபடுவதற்கு வழி செய்தன. மத்திய ஆசியாவில் கோட்டான், லாப்நார் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ள பாறைச் செதுக்குச் சிற்பங்கள் இதை நிலைநாட்டும்.

பூகோள முறையில் மட்டுமன்றி, பாதுகாப்புப்படை, அரசியல் ஆகிய முறைகளிலும் இலடாக் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. அங்கு ஆணும், பெண்ணும் பாகுபாடின்றிச் சேர்ந்தே வாணிகம் செய்கிறார்கள். ஆண்கள் பெரிய வாணிகத்தை மேற்கொண்டு நெடுந்தொலைவு சென்று வருகின்றனர். இலடாக்கில் உப்பு ஏராளமாகக் கிடைக்கிறது. அங்குள்ள உப்புநீர் ஏரிகள்தான் இதற்கு ஆதாரம். கம்பளிதான் இலடாக்கின் முதன்மையான விற்பனைப் பொருள். இலடாக் கம்பெனி உலகெங்கும் கிடைக்கும் மிருதுவான கம்பளி வகைகளில் ஒன்றாகும். செம்மறியாடு வெள்ளாடுகளின் மிருதுவான மயிரிலிருந்து இது தயாராகிறது. மிகப் புகழ்பெற்ற காஷ்மீர் சால்வைகள் இதைக் கொண்டுதான் தயாராகின்றன.

இலடாக் உப்பையும், கம்பளி, வெங்காரம், சாறெடுத்த பழங்கள் முதலியவற்றையும் ஏற்றுமதிசெய்துவிட்டு, தேயிலை, புகையிலை, தானியங்கள், சர்க்கரை, தீப்பெட்டி, மட்டக்குதிரை, முதலியவைகளை, ஸ்கார்டு, கார்கில், யார்க்கண்ட், இந்தியா, காஷ்மீர் முதலிய இடங்களிலிருந்து இறக்குமதி செய்துகொள்கிறது. மேலும் இலடாக்கியர் வாழ்க்கையில் மதச் சார்பு அதிகமாயிருப்பதால், வழிபாட்டு உருவங்கள், சாதனங்கள் முதலியவையும் ஏராளமாக அங்கே விற்பனையாகின்றன.

இலடாக்கியர் நெடுங்காலமாக அமைதியான மகிழ்ச்சியோடு கூடிய வாழ்க்கையை நடத்திவந்தவர்களாவார்கள். அண்மையில் இலடாக்கின் சுற்றுவட்டங்களில் நிகழ்ந்த சில முக்கிய நிகழ்ச்சிகளால் அவர்களது வாழ்க்கையில் ஒருவித கலக்கமும், திகைப்பும் ஏற்பட்டுள்ளன. காஷ்மீரைப் பாகிஸ்தான் படையெடுத்தது அவர்களுக்கு முதன் முதலாகப் பேரதிர்ச்சியை உண்டு பண்ணியது. இலடாக்கியர் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தேசியப் படையொன்றைத் திரட்டியுள்ளார்கள். அங்குள்ளவர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாதலால், அவர்களாலேயேதான் தேசியப் படை திரட்டி உருவாக்கப்பட்டது என்று சொல்லலாம்.

இத்தகைய பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட இலடாக் தன்னுடைய சுதந்திர உணர்ச்சியை எவ்விதத்திலும் பாதுகாத்துக்கொண்டு நல்வாழ்வு நடத்த இற்றைப் பொழுது பாடுபட்டு வருகிறது. அதற்கு இந்திய அரசாங்கம் தன்னாலான ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறது. அது போற்றுவதற்குரியதொரு பண்புதான். அதுபோலத் திராவிடமும் தன் சுதந்திர உணர்ச்சியைக் காப்பாற்றிக் கொண்டு தனியாட்சிநடத்த விரும்பினால், இந்திய அரசாங்கம் தன் ஆதரவைக் கொடுக்க முன்வருமா? கொடுக்க முன்வரும் வகையில், இலடாக், இந்திய அரசாங்கத்திற்குத் தன்னிலை காட்டி அறிவுறுத்தி நிற்பதாகட்டும்!

நீதி வழங்கவில்லை

"டோஜோவுக்கும், அவரது சகாக்களுக்கும் மரண தண்டனை விதித்த ஸர்வதேச ராணுவக் கோர்ட்டார் ராஜீய ஆதிக்கத்தின் உபகரணமாக நடந்துகொண்டனரே ஒழிய, நீதி வழங்கவில்லை" என்ற அபிப்பிராயத்தை யு. எஸ். சுப்ரீம் கோர்ட் நீதிபதி டக்ளஸ் வெளியிட்டார்.

சர்வதேச ராணுவக் கோர்ட் தீர்ப்புகளின் மீது அப்பீலை விசாரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்றாலும், இப்பொழுது பிரபலமாகிவரும் ஷி விசாரணை முறையைப் பற்றிய தம் கருத்தை எடுத்துரைக்காமலிருக்க இயலாதென்று அவர் கூறினர்.

படிப்பகம்

மேடைத்தமிழ்

ஆசிரியர்: டி. எம். தெய்வசிகாமணி அவர்கள் எப். ஆர். எஸ். ஏ., (லண்டன்)

மேடைத் தமிழ்! தமிழுலகிலே இதுகாறும் நடமாடாத நூல். பல நாட்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய நூல்—பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நூல். தமிழறிஞர்களின் உள்ளங்களிலே கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த வேணவாவினைத் தணித்து, மகிழ்ச்சியினை மலரவைக்கும் பெற்றிவாய்ந்த இந்த அரியபெரிய நூலை, உருவாக்கித்தரும் சீரிய பணியினை மேற்கொண்டு கடமையை ஆற்றித்தந்த அன்பர் டி. எம். தெய்வசிகாமணி அவர்களைத் தமிழுலகம் பாராட்டாமலிருக்க இயலாது. இந்நூலுக்குச் சிறந்த தமிழறிஞரான திரு. வி. க. அவர்கள் தம் அழகிய—தெளிந்த—உயிரோட்டமுள்ள—செந்தமிழ் நடையால் அணிந்துரையொன்று வழங்கியுள்ளார்கள். மேடைமீது ஏறி நிற்கும் தமிழனும்—ஏறிநிற்க விரும்பும் தமிழனும் கைக்கொள்ள வேண்டிய முறைகளையும், கேட்கும் மக்களைத் தன்பால் பிணிக்கும் வழிகளையும், கேட்காத மக்களும் விரும்பிக்கேட்க வேண்டும் கேட்கவேண்டும் என்னும் ஆவலால் உந்தப்பட்டுத் தன் மேடையருகே வந்துமொய்க்கும்படியாகச்செய்யும் வகைகளையும் இந்நூலாசிரியர் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார். சுருங்கக்கூறின் தமிழ் மேடைப்பேச்சின் இலக்கணம் முழுவதையும் வரையறுத்துக் கூறிவிட்டார் என்றே கூறவேண்டும். இன்பத்தேன்பிலிற்றும் செந்தமிழ்ச் சொற்கள், களிநடனம் புரிந்து, எழில் நடை போட்டு, இறுமாந்து செல்கின்றன. தமிழ்ச் சொல்லேருழவர் பலரின் தீந்தமிழ்ச் சொற்பொழிவுகளை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, பேச்சுத்திறமைகளை ஆங்காங்குபுலப்படுத்திச் செல்கிறார். யாரும், மேடை ஏறி, சொன்மாரி பொழிந்து, நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்று, வெற்றி கொண்டு, வீறுபெற்று எழுந்து, தோலாமொழி நாவலர்களாகத் தாமும் திகழவேண்டும் என்றதோர் உள்ள நெகிழ்ச்சியைக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பெறும் இடம்: 29-A, திருவேங்கடமுதலித்தெரு, பார்க்டவுன் போஸ்ட், சென்னை. விலை ரூ. 10.

வள்ளுவர் கோள்கையும் வடவர் கோள்கையும்

ஆசிரியர்: இறையனார்.

இது ஒரு அரிய ஆராய்ச்சி நூல். வடக்கிலிருந்து வந்தவர்களாகிய ஆரியர்களின் நூல்களில் கூறப்படும் அறிவுக்குப் பொருந்தாத கொள்கைகளுக்குத், தமிழ்ப் பெருமக்களின் பண்பட்ட மரபுவழிவந்த வள்ளுவருடைய அறிவியற்கொள்கைகள், முற்றும் மாறானவை என்பதை வடநூல்களிலிருந்தும் சான்றுகள் எடுத்துக் காட்டித்தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர் இறையனார். வள்ளுவர் யார்? வடவர் யார்? என்பவற்றின் விளக்கங்களும் இதன்கண் தெளிந்த நடையில் விளக்கப்படுகின்றன.

பெறும் இடம்: தமிழகம், இலிங்காயத்தார் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி. விலை ரூ 1.

* * *

நூருவலி

ஆசிரியர்: ஏ. கே. வேலன்.

இதுஒரு உரைநடை நாடகம். சமுதாயத்தில் காணப்படும் பல நிகழ்ச்சிகளைக் கோர்வைப்பட ஒன்கப்பிணைத்து, மனித வாழ்வின் ஒரு பகுதியை நாடக உறுப்புகளின் மூலம் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார்நண்பர் ஏ.கே.வேலன். சமுதாயத்தில் நடைபெறவேண்டிய சீர்திருத்தத்தை உறுப்புகளின் மூலம் பேசவைக்கிறார். அவைகளின் பேச்சுமூலம் நம்மைச் சிந்திக்கவைக்கிறார்.

பெறும் இடம்: செந்தமிழ்ப் பாசறை, கரந்தை, தஞ்சாவூர். விலை ரூ. 1.

* * *

கனவில் கண்ட கவி

ஆசிரியர்: விவேகி.

இது ஒரு சிறுகவிதைக்காப்பியம். படுக்கையில் படுத்துறங்கும் கவிஞன் ஒருவன், கனவுலகில் நடமாடுகிறான். கனவுலகில் காணப்படும் ஒரு கவி பலபுரட்சிச் செயல்களைப்புரிகிறான். ஒன்றுபட்ட திராவிடத்தைக் காணுவதே அவன் இலட்சியமாக இருந்து வருகிறது. கனவில்வரும் கவி இறுதியில் வெற்றி பெறுகிறான். விழாக் கொண்டாடப் படுகிறது. கனவு கண்ட கவியும் விழித்தெழுகிறான்.

பெறும் இடம்: திராவிட கலாநிலையம், 55, முக்தாருன்னிஸா பேகம்தெரு, மவுண்ட்ரோடு, சென்னை. விலை அணா 10.

அனாதைகள்

ஆசிரியர் : என். இ. பாலகுரு

சமுதாயத்தைச் சித்தரித்துக் காட்டும் சிறுகதை. இக்கதையின் மூலம், சமுதாயத்தில் நடமாடும் பல அனாதைகளை நமக்கு அறிமுகப் படுத்தி, நம்மைச்சிந்திக்க வைக்கிறார் இதன் ஆசிரியர்.

பெறும் இடம்:-ஔவையார் பதிப்பகம், ஈரோடு. விலை அணா 8

* * *

திருக்குறள் ஆராய்ச்சி

ஆசிரியர் : இறையனார்

இது திருக்குறளைப் பற்றியதொரு சிறந்த ஆராய்ச்சி நூல். திருக்குறளைப்பற்றிப் பல வகையான கருத்துக்களும், கொள்கை விளம்பரங்களும், குழப்பங்களும் மிகுந்துள்ளமையால், திருக்குறளைப் பற்றிய உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற உள்ளக்கிளர்ச்சியை உணர்ச்சியின் எழுச்சியைப் பொது மக்களிடம் உண்டாக்கும் நோக்குடனேயே இந்நூல் ஆசிரியரால் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. திருக்குறளைப் பற்றிப் பொதுவாக அறிந்துகொள்ளப் பயன்படும் நூல்.

பெறும் இடம்:- தமிழகம், லிங்காயத்தார் தெரு, உறையூர், திருச்சிராப்பள்ளி. விலை ரூ 1—8—0

ஐக்கிய திராவிடம்

ஆசிரியர் : விவேகி

சிதறுண்டு கிடக்கும் திராவிடப் பகுதிகளெல்லாம், ஒன்று திரண்டு, ஐக்கிய திராவிடமாக அமைந்து, வடநாட்டின் பிணைப்பிலிருந்து விடுபட்டுத் தனியாட்சி நடத்தும் தன்மையனவாக உருவாகவேண்டும் என்று இதன்கண் வலியுறுத்தப்படுகிறது. யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பெற்றிருக்கிறது.

பெறும் இடம்:- திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு,மவுண்ட்ரோடு, சென்னை-2 விலை அணா 12.

* * *

கொதிக்கும் இரத்தம்

ஆசிரியர் : அ. வெ. ரமணி

இது ஒரு கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் பல்வேறு தலைப்புக்களில் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு, 'கொதிக்கும் இரத்தம்' என்ற நூற்பெயரின் கிழ் அமைக்கப்படுகின்றன.

பெறும்இடம் :இயற்கைவெளியீடு, திருநாகேஸ்வரம், கும்பகோணம். விலை அணா 8

* * *

நாம் யார் ?

ஆசிரியர் : "விவேகி"

நாம் யார்? என்ற கேள்வியினைக் கேட்டு, நாம் திராவிடர்கள், நம்நாடு திராவிடநாடு என்ற கருத்தினைப் பதிலாக விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர்.

பெறும் இடம் : திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு, மவுண்ட்ரோடு, சென்னை விலை அணா 8

* * *

இராம இராச்சியம்

ஆசிரியர் : கைவல்யம்

பகுத்தறிவுப் பேரறிஞர் கைவல்யம் அவர்கள், தேசியத் தோழர்களும், வைதிகர்களும் பாராட்டிப் புகழ்ந்துவரும் இராம இராச்சியம் எப்படிப்பட்ட பிற்போக்குத் தன்மைகள் வாய்ந்தது என்பதை அழகுற அலசிக் காட்டுகிறார். வைதிக புரியினர்க்கு இந்நூல் ஒரு பேரிடியென விளங்கும் என்பதில் ஐயமில்லை. மற்றையோர்க்குத் தெளிவினைப்பயக்கும்ஆராய்ச்சி நூலாகும் இது.

பெறும் இடம்: அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, ஏழுகிணறு, சென்னை—1 விலை அணா 10

* * *

பொன் மொழிகள்

தொகுத்தது :

திராவிடமணிப் பதிப்பகம்

பெரியார் அவர்கள் அவ்வப்போது கூறிவரும் கருத்துக்கள் பொறுக்கிஎடுக்கப்பட்ட சில 'பொன் மொழிகள்' என்றதலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. மேலட்டை பொன்னிறங் கொண்டு மிளிர்கின்றது.

பெறும் இடம்: திராவிடமணி பதிப்பகம், தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி. விலை அணா 14

* *

மூலபலம் முறிகிறது

ஆசிரியர் : சி. என். ஏ. (புதிய நூல்)

பெறும் இடம்: அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, ஏழுகிணறு, சென்னை—1 விலை அணா 8

* * *

மாணவர் திருக்குறள் மணிகள்

பெறும் இடம்: தமிழ் இல்லம், கோம்பை, மதுரை மாவட்டம்.

* * *

அழகர்சாமியின் படம்

பெறும் முகவரி: ஏ. எஸ். வேணு, டெய்லர், 32, தாத்தாமுத்தியப்பன் தெரு, சென்னை—1.

* * *

அமுதவல்லி

ஆசிரியர் : என். இ. பாலகுரு

இது ஒரு சிறுகதை. சமூக சோக சித்திரத்தின் படப்பிடிப்பு.

பெறும் இடம் : அர்ச்சுனன் நிலையம், ஈரோடு. விலை அணா 2

—✲—

அவன் குற்றவாளியா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறை உலகம் கூறும். உலகம் அறியாது, அரசாங்கமும் ஆற்றல் படைத்தோர் வழிதான் நடக்கும், நடக்கும் வழி அநீதியாக இருந்தாலும் என்பதை. அவன் உள்ளபடியே குற்றவாளியா? நல்ல தீர்ப்புக் கூற நீதி இன்னமும் நடுங்கிக் கொண்டுதானிருக்கிறது.

இதைப்போல எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம். நம் சமுதாய வாழ்வு சேறும், மலமும் செறிந்த சீரழிந்த இடம்; அழிக்க வேண்டிய அழுகல் பொருள்கள் ஆழ்ந்து கிடக்கும் அகழ்; புழுவும், பூச்சியும் புரளும் பாழ் நிலம். அதிலிருந்து கொலை, களவு, கொள்ளை, பொய், போன்ற குற்றக் கிருமிகள் உற்பத்தியாகிக்கொண்டுதான் இருக்கின்றன. பொய் பேசாதே, மெய் பேசு என்பன போன்ற விதிவிலக்குச் சட்டங்களால் அவற்றை ஒழிக்க முடியாது. சேற்றையும் மலத்தையும் அழித்து, புதிய சமுதாயத்திற்கான வழியைக் காண அறிஞர்கள் முயலவேண்டும். முயல்வார்களா அவர்கள்? இது உருவாகிக்கொண்டிருக்கும் புதிய உலகம் கேட்கும் கேள்வி!

✲

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram,

413
3-7-49 REGD M. 4642.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ " 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 10—7—49 | இதழ் 2

OFFICE OF THE REGISTRAR ... 11 AUG 1949 MADRAS

தாத்தா கட்ட இருந்த தாலி!

[தலைப்பைக் கண்டவுடனே, இது, பெரியாரின் திருமணம் பற்றி எழுதப்பட்ட கட்டுரையோ என்று எண்ணி விடாதீர்கள். இது, 1940-ல் 'விடுதலை'யில் C. N. A. எழுதிய ஒரு தலையங்கம். படித்துப் பாருங்கள்.]

"தொந்தி சரிய மயிரே வெளிர நிறை தந்தமனைய உடலே" படைத்த 72-வயதான ஒரு பார்ப்பனக் கிழவர் "துள்ளுமத வேட்கைக் கணையாலே" தாக்கப்பட்டுக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்.

வயது 72! ஏற்கெனவே மணமாகி, பெண்டை பிணமாகக் கண்டவர், பிள்ளைகுட்டியும் பேரன் பேத்தியும் பெற்றவர், இந்தப் பார்ப்பனக் கிழவர். ஆயினுமென்ன? இருண்ட இந்தியாவில், எத்தனை முறை வேண்டுமானாலுந்தான் ஆண் மகன் கலியாணம்செய்துகொள்ளலாமே! பெண்தானே, பருவ மங்கையாயினும், பட்டாடை உடுத்திக்கொண்டு பள்ளாங்குழி ஆடி விளையாடும் சின்னஞ்சிறு சிறுமியாயினும், மணமாகி, பின்னர் கணவன் பிணமானால் விதவையாகிவிடவேண்டும். இளமை இருக்கலாம், ஆனால் இன்ப வாழ்வுக்கு அவள் அனுமதிபெற அந்தக் கூட்டம் அனுமதிப்பதில்லை. அவளது விழி, உலகில் உள்ள வனப்பான வாழ்க்கைச் சித்திரங்கள் மீது பாயலாம். ஆனால் என்னபயன்? விம்மி விம்மி, வாழலாம் விதவைக்கோலத்துடன். இல்லையேல் விபசாரியாகலாம். மறுமணத்துக்கு மார்க்கம் மலர், அவியகாக இல்லை. கல்லும்மண்ணும் முள்ளும், குருட்டுக் கொள்கையினரின் முரட்டுப் போக்கும், சாத்திரமெனும் சேறும் நிரம்பியதாகவன்றோ இருக்கிறது. அவள் பதினெட்டு ஆண்டுள்ள பாவையாக இருக்கலாம், மலர்ந்த மலராக இருக்கலாம். வாடை சுற்றுப்பக்கம் எங்கும் வீசலாம். அவளது தகப்பனார் தனது மூன்றாம் மனைவியுடன் கொஞ்சிக் குலாவும் காட்சி அவளது கண்களில் படலாம். ஆனால் பூவிழந்த பூவை புத்தி

திருச்சி,
4—7—49.

ஐயா,

10—7—49-ல் காலை 10-மணிக்கு திருச்சி டவுன் தென்னூர் என் தோட்டத்தில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களைக் கூடிப் பேச அழைக்கிறேன். எல்லோரும் தவறாது வர வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள்:—கட்சி நிலை குறித்து ஆலோசிக்க.

தி. பொ. வேதாசலம்.

கெட்டவர்களின் போக்கிரித் தனமான பொறியாகிய வைதிகத்தால் வாட்டப்பட்டு, நீல்நிற வானத்திலே நின்றுலவும் நிலவைக்கண்டும், பாதி இராத்திரி வேளையிலேபலப்பல எண்ணியும், பாழானவாழ்வு வாழ வேண்டும். இல்லையேல் தொட்டிலில் கிடத்திச் சீராட்டிப் பாலூட்டி வளர்க்கவேண்டிய குழந்தையை, பாழும் கிணற்றில், கழுத்தை நெரித்து வீசவேண்டும்! பேதைப் பெண், ஏன் இவ்வளவு துடுக்கு? இவ்வளவு பதைப்பா? என்று "பெரிய பெரிய" மனிதர்களெல்லாம் கேட்பர் கோபத்துடன். எனவே பசித்த பாவை, பஞ்சத்தில் அடிபட்டு நசித்துவிடுவாள்.

ஆண் மகனுக்கென்ன; எத்தனை முறைவேண்டுமாயினும் மணம் செய்து கொள்ளலாம். காசநோய் இருக்கலாம். ஆனால் இதற்காக வேண்டி மணம் செய்து கொள்ளாதிருப்பானா? ஊரார், உனக்குக் காசம் இருக்கிறது, மணம் ஏன்? என்று கேட்பர்! இல்லை! காச நோயால் கஷ்டப்படும் இவனுக்குக் காலமறிந்து கனிவுடன் 'மருந்துதர' ஒரு மங்கை நல்லாள் தேவை என்று தான் கூறுவர். சட்டம் குறுக்கே நிற்காது. சமுதாயம் ஏனென்று கேட்காது, கொட்டு முழக்குடன் மங்கல ஒலியுடன் மணம் நடக்கும். மூன்றாம் முறையாயினுஞ் சரி, ஐந்தாம் ஆறாம் முறையாயினுஞ் சரி. ஆண் மகனுக்கு அந்த உரிமை உண்டு! அக்ரமம்! என்று கூறுவர் அறிவாளிகள். ஆம்! அக்கிரமந்தான், ஆனால் கேட்பவர் யார்?

கேட்டனர் ஒரு ஊரில்! கேட்டது மட்டுமல்ல, குறுக்கே நின்று இத்தகைய கூடா மணத்தைத் தடுத்தும் விட்டனர். தடுத்ததோடுநிற்கவில்லை, மணமகளை அதே நேரத்தில் தக்க மணமகனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். அத்தகைய சீரிய செயல் புரிந்த சிலர்களை நாம் பாராட்டுகிறோம்.

கல்கத்தா அருகேயுள்ள மைமன் சிங் என்ற ஊரில், 72 வயதுள்ள பார்ப்பனக் கிழவனொருவன் இள மங்கை யொருத்தியை மணம்செய்து கொள்ள ஏற்பாடு செய்தான்.

பொன்அவிர்மேனியளைக்கிழவன், தன் பிண உடல் காட்டி எங்ஙனம் மணத்துக்குச் சம்மதிக்கச் செய்ய முடியும்! வாலிபம் இல்லை அவனுக்கு. ஆனால் பணம் இருக்கிறது. பெண்ணின் பெற்றோர் பணத்தைக் கண்டனர். கிழவனின் பெண்டாகப் போயினும், கை நிறையப் பொருள் இருக்குமல்லவா! மணத்துக்கு ஒப்பினர். சகல ஏற்பாடுகளும் நடைபெற்றன.

அந்த ஊரில் இந்தக் கிழவரின் கூடாத் திருமணத்தைத் தடுக்க வேண்டிப் பலரும் சென்று பலப்பல கூறினர்—கிழவர் கேட்டாரில்லை. திருமண நாள் குறித்துவிட்டார். மணப்பந்தல் அமைத்துவிட்டார் மங்கள ஸ்நானம் செய்தார். பட்டுடுத்திப் பணிபூண்டு, பரிமளம் பூசிப், பார்ப்பனக் கிழவர் பரிதாபத்துக்குரிய பாவையைமணமுடித்துக் கொள்ளப் பக்குவமானார்!

மைமன் சிங் ஊர்வாசிகள் கண்டனர். இந்த அக்ரமத்தை எப்படியேனும் தடுத்தே தீரவேண்டும் என உறுதி கொண்டனர். மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா! எனவே ஊரில் உறுதி கொண்டவர்கள் உள்ளே நுழைந்தனர். மணக் கோலத்திலிருந்த பெண்ணைத் தூக்கிச் சென்றனர்.

இந்தத் திவ்யமான திடுக்கிடும் செயல் புரிந்ததில் முஸ்லிம்களும் இந்துக்களும் ஒன்றுபட்டே உழைத்தனர்.

கிழவர் கலியாண மண்டபம் வந்தார். காலி இடத்தைத்தான் கண்டார். கடுகடுத்தார். முகம் சுளித்தார். கா, கூவெனக் கூவினார்.

இடையே அந்த இளமங்கையைத் தக்கவனொருவனுக்கு ஊராரேமணஞ் செய்து வைத்தனர்.

கண்டார் கிழவர் காரியம் மிஞ்சிவிட்டதை. காரிகை போனால்போகட்டும், கைக்கு ஏதேனும் பொருளாவது வரட்டும் என்று கருதி, தனக்கு நேரிட்ட அவமானத்துக்கு, நஷ்ட ஈடாகப், பணம் கேட்டார்.

இந்தக் கூடாமணத்தைத் தடுத்த குணசீலர்கள், தமக்குள்ளாகவே பணமும் வசூலித்து, பார்ப்பனக் கிழவனிடம்தந்தனர். பின்னர் வேறு பணம் வசூலித்து விருந்தும் நடத்தினர்.

பாராட்டுகிறோம்

பெண்ணாசைப் பித்துகொண்டு அலைந்த அந்தப் பார்ப்பனக்கிழவன் பணப் பேராசை தீர்ந்ததும் போதுமென்று இருந்துவிட்டான். பாவை தக்கவனொருவனை மணந்தாள். "தாத்தா" கட்ட இருந்த தாலியைத் தவிர்த்த, அந்தமைமன்சிங் வாசிகளை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால் மைமன்சிங்கில் தடுக்கப்பட்டது போன்ற மணங்கள் எத்தனை எத்தனையோ தடுக்கப்படாமல் நடந்தேறித்தான் வருகின்றன! தடுப்பாரில்லையே!! அறிவு வளரவில்லையே!

ஏன் இத்தகையகூடாமணங்களைக் கண்காணித்துத் தடுக்கச் சர்க்கார் முன்வரக் கூடாது என்று கேட்கிறோம். எத்தனை முறை ஊரில் உறுதி கொண்டவர்களால் தடுக்க முடியும்? இத்தகைய மணங்கள் நடக்கவொட்டாமல், நாகரிக சர்க்கார் மாதர் வாழ்வு கெடும் விதத்தில் நடைபெறும் இத்தகைய மூடத்தனத்தை தடுக்க, ஏதாவது வழி செய்யவேண்டும். ஊருக்கு ஊர் பிரபலஸ்தர்கள் பகுத்தறிவாளர்கள் கொண்ட கமிட்டிகளை சர்க்கார் நிறுவி, இவ்விதமான கூடா மணங்கள் நடைபெறவொட்டாது அக்கமிட்டிகளுக்கு அதிகாரம் அளிக்கலாம். குடித்துக் கெடுவதை, சூதாடிக் கெடுவதை, விபசாரம் செய்து கெடுவதை, தடுக்க சர்க்கார் சட்டம் செய்து சமுதாயக் கோளாறுகளை நீக்குவதுபோலவே இவ்விதமான மணவினைகள் மூலம் மங்கையர் வாழ்வு மிதித்துத் துவைக்கப்படுவதையும் தடுக்கச் சட்டமியற்ற வேண்டும்.

துருக்கியில் கலியாணம் நடப்பதென்றால் மணமகனும் மணமகளும் நோய் ஏதுமின்றி இருக்கின்றனர் என முதலில் டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிச் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும்!

இந்தூர் சமஸ்தானத்தில் வயதில் அதிக வித்தியாசமுள்ள ஆண் மணந்துகொள்ளக் கூடாது என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. சில சமஸ்தானங்களில் இத்தகைய சட்டமும் இருக்கிறது.

பம்பாய் மாகாண சட்ட சபையில் எம். எல். ஏ., அம்மையாரொருவர், 45 வயதுக்கு மேற்பட்ட ஆடவன் 18 வயதுக்குக் குறைவான பாவையை மணப்பதைத் தடுக்க சட்டம் இயற்ற வேண்டுமென்றும், சிந்து மாகாண சட்டசபையில் பேராசிரியர்

★ மடல் விடு தூது ★

இனிக் கவலை வேண்டாம்!

கோவை
3—7—49

அன்புள்ள தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு!

கோவையில் தங்கள்பால் பேரன்பும் மதிப்பும் பற்றும் வைத்தும், கழகப் பணியில் யாருடைய ஆதரவையும் எதிர்பாராது, தங்கள் தங்கள் வசதிக்கும் சக்திக்கும் அதிகப்பட்ட அளவில், யார் பேரிலும் விருப்பு வெறுப்பின்றி கடமையை உணர்ந்து ஈடுபட்டுத் தொண்டாற்றி வந்த, அடியில் கையொப்பம் இட்டிருக்கும் நாங்கள், மனம் நொந்தும் வருத்தத்தோடும் எழுதிக் கொள்வது:—

சிறிது காலமாகவே தங்களுக்குப் பின் இயக்க நடப்புக்கும் பொருள்களுக்கும் ஒரு சரியான பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டியதைப் பற்றிப் பிரஸ்தாபித்துவருகிறீர்கள். சமீபத்தில் தாங்கள் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களைப் பேட்டி கண்டது முதல், இந்த விஷயம் பிரபலப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஏற்பாட்டின் விபரத்தை மக்கள் பொதுவாகவே அறிய ஆசைப்பட்டதின் பேரில், தாங்கள் பல சொற்பொழிவுகளின் இடையிலும், "விடுதலை"யில் சில கட்டுரைகள் மூலமாகவும் விளக்கம் கொடுத்து வருகிறீர்கள். இந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னும், இடையிலும், பல சந்தர்ப்பங்களில் இயக்கத்தினரில் பலரை அவசியமற்ற வகையில் குறை கூறவும் வெறுக்கவும் செய்துவந்திருக்கிறீர்கள். இது பொதுவில் இயக்கத்திலுள்ள அனைவரையும் வருத்தப்படச் செய்து வருகிறது.

குறிப்பாகத், தாங்கள், கோவை மாநாட்டில் தங்களுக்குப் பின்னர் இயக்கத்தை நடத்த நம்பிக்கை உள்ள ஆள் ஒருவரும் இயக்கத்தில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று கூறியது மிகவும் வருந்தக் கூடியதாகும்.

பின்னர் இதனால் ஏற்பட்ட விளைவைச் சமாளிப்பதற்காக, 19—6—'49-ல் ஓர் விளக்கம் "விடுதலை"யில் பிரசுரித்திருக்கிறீர்கள். அந்த விளக்கம் யாரையும் திருப்தி படுத்தக் கூடியதல்லஎன்பதைத் தாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள் என்பது தாங்கள் விளக்கத்தில் கையாண்டிருக்கும் சொற்களாலேயே டலனுகிறது. மேலும் தாங்கள் 28—6—'49-ல் "விடுதலை"யில் பிரசுரித்திருக்கும் விளக்கத்தின் தொடர்ச்சிக்கு அனுசரணையாகவும், முன்கூட்டியே தங்கள் அபிப்பிராயத்திற்கு ஆதாரவாகவும் "விடுதலை"யில் சுயநலம் என்ற கட்டுரையும்; பண்டார சன்னதிகளைப் பற்றி ஓர் அறிவுறுத்தலும் தங்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஓர் உள் எண்ணத்தின்பேரில் கோர்வையாகச் செய்து வரப்பட்ட காரியம் என்பது தற்போது நன்கு விளங்குகிறது.

தாங்கள் உண்மையாகவே பாமர மக்களின் மனப்பான்மையை (Mass-psycholgy) நன்கு அறிந்தவர் என்று கூறுகிறீர்கள். ஆனால் தங்களுடைய தற்போதய செயலும் முடிவும் தாங்கள் பாமர மக்களையோ அல்லது பகுத்தறிவுள்ள மக்களையோ நன்கு தர்கால நிலையில் அறிந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் தாங்கள் இதுகாறும் ஏதேச்சதிகாரமாய்ச்செய்துவந்தகாரியங்களை இயக்கத்தவர்களும் பொது மக்களும் பெருந்தன்மையால்சகித்துவர்ததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதை முழுதும் நம்பியிருக்கிறீர்கள் என்பதாகவே முடிவு கட்ட இடமேற்படுகிறது.

தங்கள் விளக்க அறிக்கைகளை நாங்கள் மிகுந்த கவலையோடும் பொறுப்போடும் சிந்தித்துப் பார்த்தோம். அந்த விளக்கத்தில் சூசனையாகக் கூறப்பட்ட சில வார்த்தைகளுக்கும்,சென்னையிலிருந்துதகுந்த விளக்கம்கிடைக்கப்பெற்றோம். இது எங்களை மிகவும் வருத்தத்திற்குள்ளாக்கியதோடு திடுக்கிடவும் செய்துவிட்டது. பகுத்தறிவு வளர்ச்சிக்கும் மக்களின் சிந்தனைசக்தி அபிவிருத்திக்கும் பாடுபட்ட தாங்கள் தங்களுடைய பெருந் தவறை மறைப்பதற்காகத் தங்களுடைய அடாத காரியத்திற்கு மக்களையும் இயக்கத்தையும் உட்படுத்த முனைந்தது கண்டு நாங்கள் ஆறுத்துயர் அடைவதோடு, தங்கள் தற்போதய பரிதாபகரமான நிலைக்குப், பெரிதும் இரங்குகிறோம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

கன்ஷயாம், பெண்ணின் வயதுக்கு மேல் 20 வயது அதிகமாக உள்ள ஆடவன் பெண்ணை மணக்கக் கூடாது என்றும் பேசி சட்டங்கள் இயற்ற முற்பட்டனர்.

இத்தகைய சட்டத்தின் அவசியத்தைத்தான் மைமன் சிங் மணவினை எடுத்துக்காட்டுகிறது.

சர்க்கார் கவனிப்பார்களா? சர்க்கார் கவனிக்கும்படி சமூகம் கேட்குமா?

[குறிப்பு:- இப்படிப்பட்ட கருத்துக்களையே, தனது குறிக்கோளாகக்கொண்டு வெளிவரும் "விடுதலை"யில், இப்போது, பெரியார், தாம் செய்துகொள்ளும் 72—26—திருமணத்தைத் துணிந்து வெளியிட்டால், எப்படி நாம் ஒப்புக்கொள்ள முடியும்? இயக்கத் தோழர்களே சிந்தியுங்கள்.] ✻

ஐக்கிய திராவிடம்

ஆசிரியர் : விவேகி

சிதறுண்டு கிடக்கும் திராவிடப் பகுதிகளெல்லாம், ஒன்று திரண்டு, ஐக்கிய திராவிடமாக அமைந்து, வடநாட்டின் பிணைப்பிலிருந்து விடுபட்டுத் தனியாட்சி நடத்தும் தன்மையனவாக உருவாகவேண்டும் என்று இதன்கண் வலியுறுத்தப் படுகிறது. யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பெற்றிருக்கிறது.

பெறும் இடம்:- திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு, மவுண்ட்ரோடு, சென்னை-2 விலை அணு 12.

* * *

கொதிக்கும் இரத்தம்

ஆசிரியர் : அ. வெ. ரமணி

இது ஒரு கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் பல்வேறு தலைப்புக்களில் எழுதிய கவிதைகள் தொகுக்கப்பட்டு, 'கொதிக்கும் இரத்தம்' என்ற நூற்பெயரின் கீழ் அமைக்கப்படுகின்றன.

பெறும்இடம்: இயற்கைவெளியீடு, திருநாகேஸ்வரம், கும்பகோணம். விலை அணு 8

* * *

நாம் யார் ?

ஆசிரியர் : "விவேகி"

நாம் யார்? என்ற கேள்வியினைக் கேட்டு, நாம் திராவிடர்கள், நம்நாடு திராவிடநாடு என்ற கருத்தினைப் பதிலாக விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர்.

பெறும் இடம் : திராவிட கலா நிலையம், 55, முக்தாருனிசா பேகம் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை விலை அணு 8

* * *

கிராம இராச்சியம்

ஆசிரியர் : கைவல்யம்

பகுத்தறிவுப் பேரறிஞர் கைவல்யம் அவர்கள், தேசியத் தோழர்களும், வைதிகர்களும் பாராட்டிப் புகழ்ந்துவரும் இராம இராச்சியம் எப்படிப்பட்ட பிற்போக்குத் தன்மைகள் வாய்ந்தது என்பதை அழகுற அலசிக் காட்டுகிறார். வைதிக புரியினர்க்கு இந்நூல் ஒரு பேரிடியென விளங்கும் என்பதில் ஐயமில்லை. மற்றையோர்க்குத் தெளிவினைப்பயக்கும்ஆராய்ச்சி நூலாகும் இது.

பெறும் இடம்: அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, ஏழுகிணறு, சென்னை—1 விலை அணு 10

* * *

பொன் மொழிகள்

தொகுத்தது:

திராவிடமணிப் பதிப்பகம்

பெரியார் அவர்கள் அவ்வப் போது கூறிவரும் கருத்துக்கள் பொறுக்கிஎடுக்கப்பட்ட சில 'பொன் மொழிகள்' என்றதலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. மேலட்டை பொன்னிறங் கொண்டு மிளிர்கின்றது.

பெறும் இடம்: திராவிடமணி பதிப்பகம், தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி. விலை அணு 14

* *

மூலபலம் முறிகிறது

ஆசிரியர் : சி. என். ஏ. (புதிய நூல்)

பெறும் இடம்: அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, ஏழுகிணறு, சென்னை—1 விலை அணு 8

* * *

மாணவர் திருக்குறள் மணிகள்

பெறும் இடம்: தமிழ் இல்லம், கோம்பை, மதுரை மாவட்டம்.

* * *

அழகர்சாமியின் படம்

பெறும் முகவரி: ஏ. எஸ். வேணு, டெய்லர், 32, தாத்தாமுத்தியப்பன் தெரு, சென்னை—1.

* * *

அமுதவல்லி

ஆசிரியர் : என். இ. பாலகுரு

இது ஒரு சிறுகதை. சமூக சோக சித்திரத்தின் படப்பிடிப்பு.

பெறும் இடம் : அர்ச்சுனன் நிலையம், ஈரோடு. விலை அணு 2

—*—

அவன் குற்றவாளியா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறை உலகம் கூறும். உலகம் அறியாது, அரசாங்கமும் ஆற்றல் படைத்தோர் வழிதான் நடக்கும், நடக்கும் வழி அநீதியாக இருந்தாலும் என்பதை. அவன் உள்ளபடியே குற்றவாளியா? நல்ல தீர்ப்புக் கூற நீதி இன்னமும் நடுங்கிக் கொண்டுதானிருக்கிறது.

இதைப்போல எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம். நம சமுதாய வாழ்வு சேறும், மலமும் செறிந்த சீரழிந்த இடம்; அழிக்க வேண்டிய அழுகல் பொருள்கள் ஆழ்ந்து கிடக்கும் அகழ்; புழுவும், பூச்சியும் புரளும் பாழ் நிலம். அதிலிருந்து கொலை, களவு, கொள்ளை, பொய், போன்ற குற்றக் கிருமிகள் உற்பத்தியாகிக்கொண்டுதான் இருக்கின்றன. பொய் பேசாதே, மெய் பேசு என்பன போன்ற விதிவிலக்குச் சட்டங்களால் அவற்றை ஒழிக்க முடியாது. சேற்றையும் மலத்தையும் அழித்து, புதிய சமுதாயத்திற்கான வழியைக் காண அறிஞர்கள் முயலவேண்டும். முயல்வார்களா அவர்கள்? இது உருவாகிக்கொண்டிருக்கும் புதிய உலகம் கேட்கும் கேள்வி!

*

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதார்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.

413
3-7-49

REGD M. 4642.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 10—7—49 | இதழ் 2

OFFICE OF THE REGISTRAR ... 11 AUG 1949 MADRAS

*

தாத்தா கட்ட இருந்த தாலி!

*

[தலைப்பைக் கண்டவுடனே, இது, பெரியாரின் திருமணம் பற்றி எழுதப்பட்ட கட்டுரையோ என்று எண்ணி விடாதீர்கள். இது, 1940-ல் 'விடுதலை'யில் C. N. A. எழுதிய ஒரு தலையங்கம். படித்துப் பாருங்கள்.]

"தொந்தி சரிய மயிரே வெளிர நிறை தந்தமனைய உடலே" படைத்த 72-வயதான ஒரு பார்ப்பனக் கிழவர் "துள்ளுமத வேட்கைக் கணையாலே" தாக்கப்பட்டுக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டார்.

வயது 72! ஏற்கெனவே மணமாகி, பெண்டை பிணமாகக் கண்டவர், பிள்ளைகுட்டியும் பேரன் பேத்தியும் பெற்றவர், இந்தப் பார்ப்பனக் கிழவர். ஆயினுமென்ன? இருண்டஇந்தியாவில், எத்தனை முறை வேண்டுமானாலுந் தான் ஆண் மகன் கலியாணம்செய்து கொள்ளலாமே! பெண்தானே, பருவ மங்கையாயினும், பட்டாடை உடுத்திக்கொண்டு பள்ளாங்குழி ஆடி விளையாடும் சின்னஞ்சிறு சிறுமியாயினும், மணமாகி, பின்னர் கணவன் பிணமானால் விதவையாகிவிடவேண்டும். இளமை இருக்கலாம், ஆனால் இன்ப வாழ்வுக்கு அவள் அநுமதிபெற அந்தக் கூட்டம் அநுமதிப்பதில்லை. அவளது விழி, உலகில் உள்ள வனப்பான வாழ்க்கைச் சித்திரங்கள் மீது பாயலாம். ஆனால் என்னபயன்? விம்மி விம்மி, வாழலாம் விதவைக்கோலத்துடன். இல்லையேல் விபசாரியாகலாம். மறுமணத்துக்கு மார்க்கம் மலர், ஆவியதாக இல்லை. கல்லும்மண்ணும் முள்ளும், குருட்டுக் கொள்கையினரின் முரட்டுப் போக்கும், சாத்திரமெனும் சேறும் நிரம்பியதாகவன்றோ இருக்கிறது. அவள் பதினெட்டு ஆண்டுள்ள பாவையாக இருக்கலாம், மலர்ந்த மலராக இருக்கலாம். வாடை சுற்றுப்பக்கம் எங்கும் வீசலாம். அவளது தகப்பனார் தனது மூன்றும் மனைவியுடன் கொஞ்சிக் குலாவும் காட்சி அவளது கண்களில் படலாம். ஆனால் பூவிழந்த பூவை பூத்தி

திருச்சி,
4—7—49.

ஐயா,

10—7—49-உ காலை 10-மணிக்கு திருச்சி டவுன் தென்னூர் என் தோட்டத்தில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களைக் கூடிப் பேச அழைக்கிறேன். எல்லோரும் தவருது வர வேண்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள்:—கட்சி நிலை குறித்து ஆலோசிக்க.

தி. பொ. வேதாசலம்.

கெட்டவர்களின் போக்கிரித்தனமான பொறியாகிய வைதிகத்தால் வாட்டப்பட்டு, நீல்நிற வானத்திலே நின்றுலவும் நிலவைக்கண்டும், பாதி இராத்திரி வேளையிலேபலப்பல எண்ணியும், பாழானவாழ்வு வாழ வேண்டும். இல்லையேல் தொட்டிலில் கிடத்திச் சீராட்டிப் பாலூட்டி வளர்க்கவேண்டிய குழந்தையை, பாழும் கிணற்றில், கழுத்தை நெரித்து வீசவேண்டும்! பேதைப் பெண், ஏன் இவ்வளவு துடுக்கு? இவ்வளவு பதைப்பா? என்று "பெரிய பெரிய" மனிதர்களெல்லாம் கேட்பர் கோபத்துடன். எனவே பசித்த பாவை, பஞ்சத்தில் அடிபட்டு நசித்துவிடுவாள்.

ஆண் மகனுக்கென்ன; எத்தனை முறைவேண்டுமாயினும் மணம் செய்து கொள்ளலாம். காசநோய் இருக்கலாம். ஆனால் இதற்காக வேண்டி மணம் செய்து கொள்ளாதிருப்பானா? ஊரார், உனக்குக் காசம் இருக்கிறது, மணம் ஏன்? என்று கேட்பர்! இல்லை! காசநோயால் கஷ்டப்படும் இவனுக்குக் காலமறிந்து கனிவுடன் 'மருந்துதர' ஒரு மங்கை நல்லாள் தேவை என்று தான் கூறுவர். சட்டம் குறுக்கே நிற்காது. சமுதாயம் ஏனென்று கேட்காது, கொட்டு முழக்குடன் மங்கல ஒலியுடன் மணம் நடக்கும். மூன்றும் முறையாயினுஞ் சரி, ஐந்தாம் ஆறும் முறையாயினுஞ் சரி. ஆண் மகனுக்கு அந்த உரிமை உண்டு! அக்ரமம்! என்று கூறுவர் அறிவாளிகள். ஆம்! அக்கிரமந்தான், ஆனால் கேட்பவர் யார்?

கேட்டனர் ஒரு ஊரில்! கேட்டது மட்டுமல்ல, குறுக்கே நின்று இத்தகைய கூடா மணத்தைத் தடுத்தும் விட்டனர். தடுத்ததோடுநிற்கவில்லை, மணமகளை அதே நேரத்தில் தக்க மணமகனுக்கு மணமுடித்துக் கொடுத்தனர். அத்தகைய சீரிய செயல் புரிந்த சிலர்களை நாம் பாராட்டுகிறோம்.

கல்கத்தா அருகேயுள்ள மைமன் சிங் என்ற ஊரில், 72 வயதுள்ள பார்ப்பனக் கிழவனொருவன் இளமங்கை யொருத்தியை மணம்செய்து கொள்ள ஏற்பாடு செய்தான்.

பொன்அவிர்மேனியளைக் கிழவன், தன் பிண உடல் காட்டி எங்ஙனம் மணத்துக்குச் சம்மதிக்கச் செய்ய முடியும்! வாலிபம் இல்லை அவனுக்கு. ஆனால் பணம் இருக்கிறது. பெண்ணின் பெற்றோர் பணத்தைக் கண்டனர். கிழவனின் பெண்டாகப் போயினும், கை நிறையப் பொருள் இருக்குமல்லவா! மணத்துக்கு ஒப்பினர். சகல ஏற்பாடுகளும் நடைபெற்றன.

அந்த ஊரில் இந்தக் கிழவரின் கூடாத் திருமணத்தைத் தடுக்க வேண்டிப் பலரும் சென்று பலப்பல கூறினர்—கிழவர் கேட்டாரில்லை. திருமண நாள் குறித்துவிட்டார். மணப்பந்தல் அமைத்துவிட்டார் மங்கள ஸ்நானம் செய்தார். பட்டுடுத்திப் பணிபூண்டு, பரிமளம் பூசிப், பார்ப்பனக் கிழவர் பரிதாபத்துக்குரிய பாவையைமணமுடித்துக் கொள்ளப் பக்குவமானார்!

மைமன் சிங் ஊர்வாசிகள் கண்டனர். இந்த அக்ரமத்தை எப்படியேனும் தடுத்தே தீரவேண்டும் என உறுதி கொண்டனர். மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா! எனவே ஊரில் உறுதி கொண்டவர்கள் உள்ளே நுழைந்தனர். மணக்கோலத்திலிருந்த பெண்ணைத் தூக்கிச் சென்றனர்.

இந்தத் திவ்யமான திடுக்கிடும் செயல் புரிந்ததில் முஸ்லிம்களும் இந்துக்களும் ஒன்றுபட்டே உழைத்தனர்.

கிழவர் கலியாண மண்டபம் வந்தார். காலி இடத்தைத்தான் கண்டார். கடுகடுத்தார். முகம் சுளித்தார். கா, கூவெனக் கூவினார்.

இடையே அந்த இளமங்கையைத் தக்கவனொருவனுக்கு ஊராரேமணஞ் செய்து வைத்தனர்.

கண்டார் கிழவர் காரியம் மிஞ்சிவிட்டதை. காரிகைபோனால்போகட்டும், கைக்கு ஏதேனும் பொருளாவது வரட்டும் என்று கருதி, தனக்கு நேரிட்ட அவமானத்துக்கு, நஷ்டஈடாகப், பணம் கேட்டார்.

இந்தக் கூடாமணத்தைத் தடுத்த குணசீலர்கள், தமக்குள்ளாகவே பணமும் வசூலித்து, பார்ப்பனக் கிழவனிடம்தந்தனர். பின்னர் வேறு பணம் வசூலித்து விருந்தும் நடத்தினர்.

பாராட்டுகிறோம்

பெண்ணைப் பித்துகொண்டு அலைந்த அந்தப் பார்ப்பனக்கிழவன் பணப் பேராசை தீர்ந்ததும் போதுமென்று இருந்துவிட்டான். பாவை தக்கவனொருவனை மணந்தாள். "தாத்தா" கட்ட இருந்த தாலியைத் தவிர்த்த, அந்தமைமன்சிங் வாசிகளை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால் மைமன்சிங்கில் தடுக்கப்பட்டது போன்ற மணங்கள் எத்தனை எத்தனையோ தடுக்கப்படாமல் நடந்தேறித்தான் வருகின்றன! தடுப்பாரில்லையே!! அறிவு வளரவில்லையே!

ஏன் இத்தகையகூடாமணங்களைக் கண்காணித்துத் தடுக்கச் சர்க்கார் முன்வரக் கூடாது என்று கேட்கிறோம். எத்தனை முறை ஊரில் உறுதி கொண்டவர்களால் தடுக்க முடியும்? இத்தகைய மணங்கள் நடக்கவொட்டாமல், நாகரிக சர்க்கார் மாதர் வாழ்வு கெடும் விதத்தில் நடைபெறும் இத்தகைய மூடத்தனத்தை தடுக்க, ஏதாவது வழி செய்யவேண்டும். ஊருக்கு ஊர் பிரபலஸ்தர்கள் பகுத்தறிவாளர்கள் கொண்ட கமிட்டிகளை சர்க்கார் நிறுவி, இவ்விதமான கூடா மணங்கள் நடைபெறவொட்டாது அக்கமிட்டிகளுக்கு அதிகாரம் அளிக்கலாம். குடித்துக் கெடுவதை, சூதாடிக் கெடுவதை, விபசாரம் செய்து கெடுவதை, தடுக்க சர்க்கார் சட்டம் செய்து சமுதாயக் கோளாறுகளை நீக்குவதுபோலவே இவ்விதமான மணவினைகள் மூலம் மங்கையர் வாழ்வு மிதித்துத் துவைக்கப்படுவதையும் தடுக்கச் சட்டமியற்ற வேண்டும்.

துருக்கியில் கலியாணம் நடப்பதென்றால் மணமகனும் மணமகளும் நோய் ஏதுமின்றி இருக்கின்றனர் என முதலில் டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கிச் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும்!

இந்தூர் சமஸ்தானத்தில் வயதில் அதிக வித்தியாசமுள்ள ஆண் மணந்துகொள்ளக் கூடாது என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. சில சமஸ்தானங்களில் இத்தகைய சட்டமும் இருக்கிறது.

பம்பாய் மாகாண சட்ட சபையில் எம். எல். ஏ., அம்மையாரொருவர், 45 வயதுக்கு மேற்பட்ட ஆடவன் 18 வயதுக்குக் குறைவான பாவையை மணப்பதைத் தடுக்க சட்டம் இயற்ற வேண்டுமென்றும், சிந்து மாகாண சட்டசபையில் போராசிரியர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கன்ஷயாம், பெண்ணின் வயதுக்கு மேல் 20 வயது அதிகமாக உள்ள ஆடவன் பெண்ணை மணக்கக் கூடாது என்றும் பேசி சட்டங்கள் இயற்ற முற்பட்டனர்.

இத்தகைய சட்டத்தின் அவசியத்தைத்தான் மைமன் சிங் மணவினை எடுத்துக்காட்டுகிறது.

சர்க்கார் கவனிப்பார்களா? சர்க்கார் கவனிக்கும்படி சமுகம் கேட்குமா?

[குறிப்பு:- இப்படிப்பட்ட கருத்துக்களையே, தனது குறிக்கோளாகக்கொண்டு வெளிவரும் "விடுதலை"யில், இப்போது, பெரியார், தாம் செய்துகொள்ளும் 72—26—திருமணத்தைத் துணிந்து வெளியிட்டால், எப்படி நாம் ஒப்புக்கொள்ள முடியும்? இயக்கத் தோழர்களே சிந்தியுங்கள்.]

★ மடல் விடு தூது ★

இனிக் கவலை வேண்டாம்!

கோவை
3—7—49

அன்புள்ள தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு!

கோவையில் தங்கள்பால் பேரன்பும் மதிப்பும் பற்றும் வைத்தும், கழகப் பணியில் யாருடைய ஆதரவையும் எதிர்பாராது, தங்கள் தங்கள் வசதிக்கும் சகதிக்கும் அதிகப்பட்ட அளவில், யார் பேரிலும் விருப்பு வெறுப்பின்றி கடமையை உணர்ந்து ஈடுபட்டுத் தொண்டாற்றி வந்த, அடியில் கையொப்பம் இட்டிருக்கும் நாங்கள், மனம் நொந்தும் வருத்தத்தோடும் எழுதிக் கொள்வது:—

சிறிது காலமாகவே தங்களுக்குப் பின் இயக்க நடப்புக்கும் பொருள்களுக்கும் ஒரு சரியான பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டியதைப் பற்றிப் பிரஸ்தாபித்துவருகிறீர்கள். சமீபத்தில் தாங்கள் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களைப் பேட்டி கண்டது முதல், இந்த விஷயம் பிரபலப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஏற்பாட்டின் விபரத்தை மக்கள் பொதுவாகவே அறிய ஆசைப்பட்டதின் பேரில், தாங்கள் பல சொற்பொழிவுகளின் இடையிலும், "விடுதலை"யில் சில கட்டுரைகள் மூலமாகவும் விளக்கம் கொடுத்து வருகிறீர்கள். இந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னும், இடையிலும், பல சந்தர்ப்பங்களில் இயக்கத்தினரில் பலரை அவசியமற்ற வகையில் குறை கூறவும் வெறுக்கவும் செய்துவந்திருக்கிறீர்கள். இது பொதுவில் இயக்கத்திலுள்ள அனைவரையும் வருத்தப்படச் செய்து வருகிறது.

குறிப்பாகத், தாங்கள், கோவை மாநாட்டில் தங்களுக்குப் பின்னர் இயக்கத்தை நடத்த நம்பிக்கை உள்ள ஆள் ஒருவரும் இயக்கத்தில் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று கூறியது மிகவும் வருந்தக் கூடியதாகும்.

பின்னர் இதனால் ஏற்பட்ட விளைவைச் சமாளிப்பதற்காக, 19—6—'49-ல் ஓர் விளக்கம் "விடுதலை"யில் பிரசுரித்திருக்கிறீர்கள். அந்த விளக்கம் யாரையும் திருப்திபடுத்தக் கூடியதல்லஎன்பதைத்தாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள் என்பது தாங்கள் விளக்கத்தில் கையாண்டிருக்கும் சொற்களாலேயே டலனாகிறது. மேலும் தாங்கள் 28—6—'49-ல் "விடுதலை"யில் பிரசுரித்திருக்கும் விளக்கத்தின் தொடர்ச்சிக்கு அனுசரணையாகவும், முன்கூட்டியே தங்கள் அபிப்பிராயத்திற்கு ஆதாரவாகவும் "விடுதலை"யில் சுயநலம் என்ற கட்டுரையும்; பண்டார சன்னதிகளைப் பற்றி ஓர் அறிவுறுத்தலும் தங்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஓர் உள் எண்ணத்தின்பேரில் கோர்வையாகச் செய்து வரப்பட்ட காரியம் என்பது தற்போது நன்கு விளங்குகிறது.

தாங்கள் உண்மையாகவே பாமர மக்களின் மனப்பான்மையை (Mass-psycholgy) நன்கு அறிந்தவர் என்று கூறுகிறீர்கள். ஆனால் தங்களுடைய தற்போதய செயலும் முடிவும் தாங்கள் பாமர மக்களையோ அல்லது பகுத்தறிவுள்ள மக்களையோ நன்கு தற்கால நிலையில் அறிந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் தாங்கள் இதுகாறும் ஏதேச்சதிகாரமாய்ச்செய்துவந்தகாரியங்களை இயக்கத்தவர்களும் பொது மக்களும் பெருந்தன்மையால்சகித்துவந்ததைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அதை முழுதும் நம்பியிருக்கிறீர்கள் என்பதாகவே முடிவு கட்ட இடமேற்படுகிறது.

தங்கள் விளக்க அறிக்கைகளை நாங்கள் மிகுந்த கவலையோடும் பொறுப்போடும் சிந்தித்துப் பார்த்தோம். அந்த விளக்கத்தில் சூசனையாகக் கூறப்பட்ட சில வார்த்தைகளுக்கும், சென்னையிலிருந்துதகுந்த விளக்கம்கிடைக்கப்பெற்றோம். இது எங்களை மிகவும் வருத்தத்திற்குள்ளாக்கியதோடு திடுக்கிடவும் செய்துவிட்டது. பகுத்தறிவு வளர்ச்சிக்கும் மக்களின் சிந்தனைசக்தி அபிவிருத்திக்கும் பாடுபட்ட தாங்கள் தங்களுடைய பெருந் தவறைமறைப்பதற்காகத் தங்களுடைய அடாத காரியத்திற்கு மக்களையும் இயக்கத்தையும் உட்படுத்த முனைந்தது கண்டு நாங்கள் ஆறுத்துயர் அடைவதோடு, தங்கள் தற்போதய பரிதாபகரமான நிலைக்குப், பெரிதும் இரங்குகிறோம்.

இயக்கத்திற்குத் தங்களுக்குப்பின் வார்சு ஏற்படுத்துவது

இது அவசியமும் அவசரமும் இல்லாத காரியம் என்பது பொதுவான அபிப்பிராயம். தவிர இது தங்கள் காரியமும் அல்ல. இயக்கத்தவர்கள் தங்களுக்காகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டிய காரியம் என்பது தங்களுக்குத் தெரியாததும் அல்ல. இருந்தும் இது விஷயமாகத் தாங்கள் கவலைப்பட்டதும் கவலை எடுத்துக்கொண்டதும் பகுத்தறிவிற்கும், ஜனநாயகத்தத்துவத்திற்கும் முரணானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே இந்தக்காரியத்தில் அது விஷயமாக மக்கள் மனது புண்படும்படி இயக்கத்தில் நம்பிக்கையானஒருஆள் கிடைக்கவில்லை என்று கூறிவந்தது, இது காறும் தாங்கள் இயக்கத்தவர்களின் பெருந்தன்மையைப், பயன்படுத்திக்கொண்டுவந்த தைரியத்தினலேயே என்பது எங்கள் முடிவான அபிப்பிராயம்.

நம்பிக்கையான ஆளுக்காகத் தாங்கள் இதுகாறும் எடுத்துக்கொண்ட முயற்சிகள், காரியத்தில் என்ன என்பது தங்கள் விளக்கத்தில் ஊடுருவிப் பாய்ந்து பார்த்தும் கிடைக்கவில்லை. வேறு கட்சிகளில் முன்னுக்குவந்த சாதாரண ஆட்களுக்குக் கிடைத்த—கிடைத்துவரும் வசதிகளில், தங்களுக்குப்பின் பணியாற்ற ஆள் தேவை என்ற கவலையிலும், பொறுப்பிலும் யாருக்கேனும் சிறிதளவு வசதியேனும் இயக்கத்தின் சார்பில்செய்துகொடுத்துப்பரிட்சை பார்த்திருக்கிறீர்களா? கிடைக்கவில்லை என்ற முடிவிற்குவர.

இது கட்சியின் நலத்திலும், மக்களின் சுயமரியாதையிலும்கவலையுள்ளவர்கள்பிரயோகிக்கக்கூடியவார்த்தையல்ல என்பது எங்கள் அபிப்பிராயம். இயக்கத்தில் தங்களுக்குப் பின்னர் இயக்கத்தைப் பொறுப்போடும்நாணயமாகவும்,நேர்மையாகவும் காலத்திற்கேற்ற முறையிலும், திறமையாக எல்லாவகை மக்களுடைய ஆதரவையும் பெறச்செய்யவும்,இயக்கத்தின்கொள்கைகளை இன்னும் பரவவேண்டிய இடங்களில் கொண்டு சென்றுபரப்பவும், ஆதரவு பெறவும்செயலாற்றும் திறமையும் நல்லறிவும் ஆற்றலும் படைத்த பல அறிஞர்கள் எல்லா வகைப் பொருத்தங்களோடும் இருந்து வருகிறார்கள். அது தங்கள் கண்களுக்கும், மனதுக்கும் தென்படாதது இயக்கத்தவரின்குற்றமல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுவாகவே இரண்டு ஆண்டுகளாக நமது இயக்கத்தில் இரண்டு குழுக்கள் பணியாற்றி வருகின்றன என்பது எங்களைப்போன்ற எல்லா நடுநிலைமையாளர்களும் நன்கு உணர்ந்திருப்பதோடு, தாங்களும் நன்கு அறிவீர்கள். இந்தக் குழுக்களில் தங்கள் விருப்பத்திற்கு கட்டுப்பட்டுத் தங்களையே பெரிதும் ஆதரித்துவருவதாகத் தாங்கள் தவறாகக் கணக்கிட்டு நம்பியிருப்பது ஒன்று, மற்றொன்று தங்களால்வெறுக்கப்பட்டவர்களாகத் தாங்கள் கருதியிருப்பதும் தனித்து நின்று தங்கள் முயற்சிகளுக்கு கேடு நினையாவண்ணம்பெருந்தன்மையோடுபணியாற்றி வருபவர்களைக் கொண்டதுமாகும். ஆக இவ்விரு குழுவினரும், தங்களைப் பூர்ணமாக ஆதரிப்பவர்களல்ல என்பதையும், முதற் குழுவினர் முறைப்படி தங்களுக்கு மரியாதை செலுத்துபவர்களேயன்றி, மற்றக் குழுவிற்கு எதிரிகள் அல்லர் என்பதையும், தாங்கள் ஏதேச் சாதிகாரமான எக்காரியத்தையும் முறை தவறி ஏற்றுக்கொள்பவர் அல்லர் என்பதையும் இன்றுவது உணருங்கள். தங்கள் விளக்கத்தில் தங்களுக்குப் பொதுவாழ்வில் கிடைத்த வெற்றிகளுக்கு, தங்களுக்கு எதிரிகளும், கேடுநினைத்தவர்களும்,ஏமாற்றியதாகக் கருதிக்கொண்டு நடந்தவர்களும், நடக்கிறவர்களாலுமே தான் என்று கூறியிருக்கிறீர்கள். இது முக்காலும் உண்மை. ஆனால், முக்கியமான ஒன்றும் அத்துடன் சேர்க்கப்படவேண்டியதாகும். அதாவது தங்களுக்குகேடுநினைத்தவர்களுடையவும்,ஏமாற்றியவர்களுடையவும், ஏமாற்றியதாகக் கருதிக்கொண்டிருப்பவர்களுடையவும்; ஆனபெருந்தன்மையும் பொறுப்புணர்ச்சியும், கட்சியின்பால் பற்றுதலுமேயாகும்.

இயற்கையாகவே இயக்கத்தின் எதிர்க்கட்சியினர்களின் தவறான நடத்தைகளினுல் இயக்கம் அடைந்திருக்கவேண்டிய உன்னத நிலையில் பாதியளவில்கூட இல்லை என்பதைத் தாங்கள் நன்கு உணரவேண்டும்.

இதற்குக் காரணங்கள் நாங்கள் அறிந்த பலவற்றுள் தங்களின் சிந்தனைக்குச் சில, அடியில் கண்டபடி.

(1) சாதாரண மனிதர்களுக்கு உள்ள சில வேண்டப்படாத குணங்கள் தங்களை ஆட்சி புரிகின்றன.

(2) தம்மில் ஒருவர் எவ்வளவு ஒழுங்கானவராகவும் நாணயமானவராகவும் தங்களுக்கு அடங்கி நடப்பவராகவும் இருந்தபோதிலும்,அவர் முன்னுக்கு வருவார் என்பதைத் தாங்கள் அறிந்த அளவில், அத்தகைய முன்னேற்றத்தைத் தாங்கள் விரும்புவதும் இல்லை, சகிப்பதும் இல்லை.

(3) அதோடு இயற்கையாகவே முன்னுக்கு வர வசதியுள்ளவர்களையும், தங்களை எவ்வகையிலும் பாதிக்காமலேயே ஆதரவு பெறுபவர்களையும் தலைதூக்கவிடாமல் செயலாற்றுவது. (இதில் தாங்கள் பல இடங்களில் வெற்றியும் சில இடங்களில் தோல்வியும் அடைந்திருக்கிறீர்கள்.)

(4) முறைப்படி தங்களுக்குக் கிடைத்துவரும் ஆதரவைக் கொண்டே, பூரண ஆதரவு தங்களுக்கே இருப்பதாக எண்ணிவரும் தவறான கருத்தும், இயக்கத்தவரின் சரியான நிலையை அறிந்துகொள்ளாததும், அறிந்துகொள்ளக் கவலை எடுத்துக் கொள்ளாததும்.

(5) இயக்கத்தில் இருவகையான குழுக்கள் ஏற்படவும் அத்தகைய குழுக்கள் நிலையாய் இருக்கவும் வேலை செய்துவரும் சில சக்திகள் தங்களைக் கட்டுப்படுத்தி ஆட்டிவருவது. அச்சக்திகளில்ஒன்றுதங்கள்பரிபூர்ண நம்பிக்கைக்குப் பாத்தியதையாகித் தங்களுக்கு வார்சாகவும், தங்கள் முதிர்ந்த வயதில் இளமனைவியாகவும், தங்களுக்குப் பின் தங்கள் உடைமைகளுக்குப் பாதுகாப்பாகத் தங்களால் ஏற்படுத்தப்படும்குழுவில் ஒரு நபராகவும் இயக்கத்தை முன்நின்று நடத்தும் பொறுப்பில் தங்களால் நியமிக்கப்படுபவராகவும், தங்களால் மணியம்மை என்று அழைக்கப்படும் மணி என்னும் ஓர் **பெண்.**

(6) இந்த மணி என்னும் பெண்ணின் கூட்டுறவால் தங்கள் சிறந்த சிந்தனைசக்தியும் சுயமரியாதை உணர்ச்சியும் காலப்போக்கில் மழுங்கி வந்திருப்பது.

(13-ம் பக்கம் பார்க்க)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 11 JUL 50

16-ம் பக்கத் தொடர்ச்சி

திசை மாறிவிட்டது!

சென்னை, 2—7—49.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், சென்னை.

அன்புள்ள ஐயா,

அரங்கண்ணல் வணக்கம். இயக்க வளர்ச்சியே வாழ்க்கையின் இலட்சியம் எனக்கொண்ட நான், முழுநேரத் தொண்டனகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, மற்றச் சொந்த நலன்களை ஒருபுறமொதுக்கி, நேற்றுவரை 'விடுதலை'யின் துணை ஆசிரியப் பொறுப்பிலிருந்து தொண்டு புரிந்தேன். கட்சிக்காக, வாழ்க்கையின் இன்பப் பாதையிலிருந்து தங்களைத் திருப்பிக்கொண்ட இளைஞர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் என்றுமே கட்சிக்காகப் பணி புரிவதில் ஆர்வமும், ஆசையும் உடையவன் நான்.

ஆனுல் எந்தக் கொள்கை என் போன்ற இளைஞர்களைக் கட்சிக்குள் ஈர்த்ததோ, அதற்கு மாறுகத், தலைவராகிய தங்கள் போக்கு மாறிவிட்டது. திசைமாறிவிட்டது! 'தக்க வயதும் பொருத்தமுமே திருமணத்தின் இலட்சணமாக இருக்கவேண்டும்' என்று முழக்கிவந்த தலைவராகிய தாங்கள், அதற்கு முரண்பாடாக ஒரு இளம்பெண்ணை, தள்ளாத வயதில் மணம் செய்து கொள்ளப் போவதாகப் பிரகடனப்படுத்தியுள்ளீர்கள். அதோடு அந்த அம்மணியாரையே கட்சியின் வார்சாக—அடுத்தத்தலைவராக நியமனம் செய்யப் போவதாகவும வெளியிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறீர்கள். இதற்கான காரணங்களை விளக்குகையில், 'நம்பிக்கையுடைய' (தங்களுக்கு) ஆள் யாருமே இல்லை என்பதாக வெளியிட்டுள்ளீர்கள். என்போன்ற இளைஞர்கள் கட்சி மீதும், தங்கள் மீதும் அளவிட முடியாத நம்பிக்கை — பக்தி என்று கூடச் சொல்லலாம் — கொண்டவர்கள். இந்த நம்பிக்கை தான் எங்கள் வாழ்வுப்பாதையில் எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையெல்லாம் புன்சிரிப்புடன் வரவேற்கும் ஊக்கத்தையூட்டியதாகும்! தங்கள் அருகிலேயே இருந்து, நேரிய முறையில் தொண்டு புரிந்தும் தங்களால் 'நம்பிக்கையில்லாதவர்' என்றே அழைக்கப்பட்டுவிட்டோம். இவ்வளவு கடமைப் பொறுப்புடன் பணியாற்றியும், கட்சித் தலைவரே எங்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லையென்றால்......? உண்மையான கொள்கை வெறியுடன் சேவை புரியும் நான் விம்முவதைத் தவிர வேறு வழியில்லை!

இந்நிலை'யில், ஜனநாயத்துக்கு முரண்பாடான போக்கும், கொள்கைக்குப் பாதகம் விளைவிக்கும் செயலும் தங்களைத் 'தழுவிவிட்ட' இந்நேரத்தில் தங்கள் மீதும் தங்கள் தலைமையின் மீதும் எனக்கு இந்நாள் வரை இருந்துவந்த நம்பிக்கை சரிகிறது! உண்மைப் பொறுப்புடன் தொண்டு புரிந்தும் எங்கள் மீது தங்கட்கு நம்பிக்கையில்லை; ஆனுல் தங்கள் போக்கும், செயலும் கட்சிக்கு நன்மை பயக்குமா என்றுபார்த்தால், எனக்கு அத்தகைய நம்பிக்கை ஏற்படவில்லை!

எனவே, சந்தேகம் சமர் புரியும் இந்நேரத்தில் தங்களிடமிருந்து விலகிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. இந்நாள் வரை தொண்டு புரியும் வாய்ப்பு 'விடுதலை'யில் இருந்தமைக்குமகிழ்கிறேன். நெருக்கடியான நேரத்தில், கொள்கை மீதுள்ள ஆர்வமும் ஆசையுமே என்னை இம்முடிவுக்கு வரச் செய்தது. சுயமரியாதைக் கொள்கைகளை வளர்ப்பதில், அவைகளுக்காக வாழ்வதில் ஈடுபடுவதே எனது லட்சியமாகும். தங்கள் மீது ஏற்பட்ட நம்பிக்கையின்மையால் தங்களிடமிருந்தும், தங்கள் பார்வையிலுள்ள 'விடுதலை' அலுவலகத்திலிருந்தும் நான் விலகிக்கொண்டாலும், இயக்கத்தின் கொள்கைகளுக்காக நான் என்றும் பணி புரிவேன். அதுதான் என் வாழ்க்கையின் இலட்சியம்!

தங்களிடம் நேரில் தெரிவித்தபடி இதுவே நான் 'விடுதலை' அலுவலகத்திலிருந்து விலகுவதற்கு அளிக்கும் கடிதம்.

வாழ்க சுயமரியாதை இயக்கம்!
வளர்க அதன் கொள்கைகள்!!

அன்பன்,
இராம. அரங்கண்ணல்

* * *

பயங்கரக் கேலிக்கூத்து

குறிஞ்சிப்பாடி, 4—7—49.

5—7—49ந் தேதிய "திராவிட நாடு" இதழில் "பெரியாரின் பொருந்தாப் போக்கு" பற்றி வந்த அறிக்கை கண்டு துக்கமும் திகிலும் அடைந்தேன். ஆனுலும், மாபெருந் தலைவரின் இந்தக் கலியாண குணம் இவ்வளவு விரைவில் விபரீத உருக்கொள்ளுமென்று எண்ணவில்லை. எண்ணவும்முடியுமா? இருந்தாலும், என்ருகிலும் ஒருநாள் வெளிவர வேண்டிய "பயங்கரக் கேலிக்கூத்து" வந்தது பற்றித் திராவிடர் கழக லட்சியத்திலும், கொள்கை கோட்பாட்டிலும் நம்பிக்கை கொண்ட நாம், அஞ்சி ஆயாசப்படாமல், மேலால் ஆகவேண்டிய காரியங்களில் ஈடுபட வேண்டியதுதான் முறை. தலைவர், தொண்டர்களைத் தூசியாக எண்ணியும் — எழுதியும் — பேசியும்— கொள்கை தவறிவிட்டதால் அவருடைய தலைமையை நீக்கி, கட்சியை லட்சிய கோட்டைக்கு நடத்திச் செல்லவேண்டிய பொறுப்பு நிர்வாகக் கமிட்டியினுடையது.

ஆகவே, பெரியாரின் தகாத தவறான, தாறுமாறான போக்கை எதிர்க்கிறேன். என்றும் தங்கள் நேர்பாதையில் நான்.

வெல்க தங்கள் முயற்சி!
வெல்க திராவிடம்!

அன்புள்ள,
இரே. இளம்வழுதி.

• • •

மன்றல் இதழ்

—✲—

15—7—49 வெள்ளிக்கிழமை 9-மணிக்கு, A. M பாலகிருட்டிணனுக்கும், சகுந்தாம்பாளுக்கும், சின்ன காஞ்சிபுரம் அட்டபுஜம் வடக்கு மாடவீதி 13-ம் நெம்பர் இல்லத்தில் வாலாஜாபாத் தோழர் W. K. தேவராசன் அவர்கள் தலைமையில், வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அவ்வமயம் C. N. அண்ணாத்துரை எம். ஏ., அவர்கள் 'வாழ்வின்பம்' பற்றிச் சொற்பொழிவாற்றுவார். அன்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

✲

எனது வேண்டுகோள்

கோவை மாவட்டத் திராவிட கழகத் தோழர்களுக்கு, பெத்நாம் பாளையம் பழனிச்சாமி விடுக்கும் வேண்டுகோள் :—

கழகத்தின் நடைமுறையில், பெரியார் இப்போது எடுத்துக்கொண்டிருக்கும் திருமண வார்சு முறையில் ஒரு குழப்பநிலை ஏற்பட்டிருக்கிறது என்பது நீங்களனைவரும் அறிந்ததே. நான் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கத்திலிருந்தே அதன்பால் பற்றுகொண்டும், கடந்த பத்து ஆண்டுகளாக இயக்கத்தில் நேரிடையாக ஈடுபட்டுத் தொண்டாற்றியும் வருகிறேன். பழையகோட்டை உயர்திரு அர்ச்சுனன் அவர்கள் இயக்கத்தில் தீவிரமான பங்கெடுத்துக்கொண்டு இயக்க வேலைகளில் ஈடுபட்டிருந்ததற்கு நான்தான் காரணகர்த்தனாக இருந்தேன் என்று பெரியாராலேயே பலமுறை பாராட்டப்பட்டிருக்கிறேன். அண்மையில் ஈரோட்டில் நடந்த மாகாண திராவிடர் கழகத் தனி மாநாட்டிலும், கோவையில் நடந்த ஜில்லா மாநாட்டிலும் பெரியாருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனென்கிற முறையில் பெரியாரின் ஆணைப்படி மேற்படி மாநாடுகளில் வரவேற்புக்கழகத் தலைவனாக இருந்து பணியாற்றியிருக்கிறேன். இன்னும் இயக்கக் கொள்கைகளில் அசையாத நம்பிக்கையுடன்தான் தொண்டாற்றி வருகிறேன். ஆயினும் பெரியார் இப்போது மேற்கொண்டிருக்கும்செயல் நிச்சயமாக இயக்கத்துக்கு கேடு விளைவிக்கும் என்று நம்புகிறேன்— என்னுடைய இந்த எண்ணத்தைச் சென்றவாரம் திராவிடநாட்டில் இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கையில் நான் கையொப்பமிட்டதிலிருந்தே நீங்கள் அறியலாம்—ஆகவே பெரியாரின் இவ்வடாத செய்கையை விரும்பாத தோழர்கள் உடனே தயவுசெய்து திராவிட நாடு பத்திரிகைக்கும், மற்ற பத்திரிகைகளுக்கும் எழுதியனுப்புமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்
பெத்தாம்பாளையம்,
பழனிச்சாமி.

* * *

திராவிட மறுமலர்ச்சிக் கழகம் காஞ்சிபுரம்

1—7—49-ம் தேதி இரவு 9-மணிக்குக் கழக நிர்வாக உறுப்பினர் அவசரக்கூட்டம் கழக அமைப்பாளர் பொ. ரா. இராசகோபால் அவர்கள் தலைமையில் கூடிக் கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி, பெரியார் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறது.

1. திராவிடர் கழகத் தலைவர்பெரியார் அவர்கள் திருமண முடிவை, ஆதரிக்காததுடன், உடனடியாக ரத்து செய்யும்படி கமிட்டி முழு மனதுடன் தீர்மானிக்கிறது.

2. 28-6-49-ல் சென்னையில் கூடிய சென்னை மாவட்ட நிர்வாகக் கமிட்டியின் முடிவையும், அறிக்கையையும் ஆதரிப்பதோடு, பெரியார் அவர்கள் திருமண முடிவை வாபஸ் வாங்குப்படியும், அதற்கு இணங்காது போனல், அவர்கள் தலைமையில் துவக்கப்படும் கழக சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைக்க முடியாது விலகி நிற்கக் கமிட்டி தீர்மானிக்கிறது.

நிர்வாக உறுப்பினர், (ஒப்பம்)
M. P. T. மூர்த்தி, M. பச்சையப்பன், M. துரைசாமி. A, ராசகோபால் P. கண்ணுபிரம், சி. சபாபதி.

பொ. ரா. இராசகோபால்,
தலைவர்,
G. S. மணி, செயலாளர்.

வாய்ப்புக்கிழுக்கிறுர்

அண்ணாமலைநகர்,
5—7—49.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் உத்தேசித்திருக்கும் திருமணம் சம்பந்தமாயும், அதனல் கட்சிக்கு அவர் செய்யப்போகும் ஏற்பாடு சம்பந்தமாயும் தங்கள் கருத்தை விளக்கி "திராவிடநாடு" இதழில் வெளியிட்டுள்ள அறிக்கையைப் படித்தேன். தங்கள் கருத்துக்களையும் யோசனையையும் முழு மனதுடன் வரவேற்கிறேன். தலைவரின் முடிவு நாம் கொண்டிருக்கிற ஜனநாயகக் கொள்கை, சமுதாயக் கோட்பாடு இவைகளைக் காற்றில் பறக்க விட்டுக் கூட்டுத் தோழர்களின் சுயமரியாதையை வம்புக்கிழுப்பதாயும் அமைந்துள்ளது. எனவே, தங்கள் முடிவே ஏற்றது, தலைவரின் தகாத திட்டத்தைக் கண்டிப்பதன் அறிகுறியாய்க் கழகப் பணியிலிருந்து விலகி நிற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களின் முடிவை கொள்கைப் பற்றுள்ள அத்தனை பேரும், குறிப்பாக எல்லா திராவிட மாணவர்களும் வரவேற்றுப் பின்பற்றியே தீருவார்கள்.

அன்புள்ள,
மதியழகன்
(திராவிட மாணவர் கழகத் தலைவர்)

* * *

"திராவிடநாடு" வழக்கு நிதிக்கு
நாடகம்
கோவை, எடிசனில், 11—7—49 திங்கள்
மாலை 6. 30-க்கு
தோழர்: இரா. நெடுஞ்செழியன் M. A.
அவர்கள் தலைமையில்
நடிப்புப் புலவர், கே. ஆர். இராமசாமி,
நடிக்கும்
"ஓர் இரவு"
நடைபெறும்
(C. N. அண்ணாத்துரை எழுதியது)
அன்றைய வசூல் முழுவதும் "திராவிடநாடு" வழக்குநிதிக்குக் கொடுக்கப்படும்.

காஞ்சிபுரம் நகர திராவிடர் கழகம்

5—7—49 மாலை 7 மணிக்குக் காஞ்சிபுரம் திராவிட மறுமலர்ச்சிக் கழகத்தில் தோழர் மு இரத்தினம் அவர்கள் தலைமையில் நகர திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டம் கூடிக் கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. சென்னை மாவட்ட திராவிடர் கழகம் 28-6—49ல் செய்த தீர்மானத்தை ஆதரிப்பதுடன் பெரியார் அவர்களுக்கு வணக்கமுடன் விண்ணப்பித்துக்கொள்வது, 26 வயதான தோழியர் கே. ஏ. மணியைப் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக ரிஜிஸ்தார் ஆபீசிலும், பத்திரிகைகளிலும் வந்துள்ளதைக் கண்டு இக்கமிட்டி வருந்துவதுடன், இவ்வேற்பாட்டால் எவ்வகையிலும் இயக்கத்திற்கு இழுக்கு நேரிடுமாதலால் இதை உடனே ரத்து செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்வதுடன், ரிஜிஸ்தாருக்குக் கொடுத்துள்ள நோட்டீசையும் உடனே வாபஸ் பெறுமாறு இக்கூட்டம் பெரியார் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

2. தாங்கள், தங்களது திருமண முயற்சியை வாபஸ் பெற்றுவிட்டதாக உடனே பத்திரிகைகளுக்கு அறிக்கைவெளியிட வேண்டுகிறோம். அப்படி வாபஸ்பெறவில்லை என்றால், பொதுக்கூட்டம் மூலம் மேலால் கண்டிக்க நேரிடும் என்பதை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

இது தோழர் இராசரத்தினம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டுத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

கையொப்பமிட்டவர்கள்:—
மு. இரத்தினம்—தலைவர்; சி.வி.எம். அண்ணாமலை; ஈழத்தடிகள், சே. கோ. பெருமாள். கா. ம. இராகவன், ஜி. எஸ். மணி, ச குப்புசாமி, சு. த. ச. மணி, காஞ்சி. கலியாணசுந்தரன், ஈ. குமாரசாமி, கோ. சண்முகம், ஈ. எத்திராசன், ஆ. நடேசன் சி. இராசரத்தினம், பி. சின்னசாமி, எஸ். அருணாசலம், என். எஸ். மணி என். வேலப்பன், ஏ. எம். மணிக்கம், பி. கண்ணுபிரம், சி. நடராசன், கே. கோவிந்தன், கே. நன்னய்யா, கே. சுப்ரமணியன், கே. கோபால் அன்னியப்பன்.

* * *

பயங்கர முடிவு

திருவாரூர்
3—7—49

பெரியார் அவர்கள் தம்முடைய பயங்கரமான முடிவை மாற்றிக் கொண்டு, இயக்கத் தோழர்களை அவமானப்படுத்தும் முறையில், வெளியிட்டுள்ள அறிக்கைகளையும் வாபஸ் பெருவிடில், இயக்கநலத்தில் நாட்டங் கொண்டவன் என்ற முறையில், பொதுமக்கள் முன்னே நடமாட வேண்டியவன் என்ற முறையில், பெரியாருடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திவிட்டு, விலகி நிற்கிறேன் என்பதை, நெஞ்சம் பதறி நிற்கும் தோழர்கட்கு அறிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள
மு கருணாநிதி

அந்த முடிவுதான்!

திருச்சி, 3—7—49

சென்னை மாவட்ட திராவிடர் கழகக்கமிட்டி செய்த தீர்மானத்தையொட்டி, தலைவர் பெரியார் தம் திருமண ஏற்பாட்டைக் கைவிடாத வரையில், அவரோடு ஒத்துழையாதிருக்க முடிவு செய்திருக்கிறேன்.

டி. கே. சீனிவாசன்.

* * *

ஒவ்வாதது

திருவண்ணாமலை, 4—7—49

தங்கள் அறிக்கையைப் படித்தேன். தங்கள் முயற்சியில் நானும் தொண்டாற்ற உறுதிகொண்டுள்ளேன்.

கண்ணீரையும், செந்நீரையும் காணிக்கையாக ஏற்று வளர்ந்த இயக்கத்தைத், 'தனக்குத் திருமணமும், நம் கழகத்திற்கு வார்சும்' என்று கூறிப், பாழாக்க முற்பட்டுள்ள பெரியார் அவர்களின் செய்கை ஒவ்வாதது! ஒப்பாதது!! ஒவ்வாதது!!! 'இதை நான் கண்டிக்கின்றேன்.'

தொண்டன்
ப. உ. சண்முகம்.

எனக்குத் தகுதியில்லையா?

மாயவரம்,
5—7—49.

பெரியார் அறிக்கையைக் கண்டேன். திடுக்கிட்டேன். பெரியாருக்கு, "கட்சி தோன்றியது முதல் இன்று வரையில் உதவியோ, பதவியோ விரும்பாது தாங்கள் இட்ட கட்டளைப்படி தேவதாசி விவாகம், விதவா விவாகம், கலப்பு விவாகம், விவாக ரத்து, இன்னும் பல ஆரம்பத்தில் சொன்னீர்கள், நான் அவற்றை நடத்திக் காட்டியவளல்லவா? கட்சியை நடத்த எனக்குத் தகுதியில்லையா? என்மீது நம்பிக்கை இல்லாமைக்குக் காரணம் கூறுங்கள். ஒப்புக்கொண்டு சமாதானம் அடைகிறேன். கோவை மாநாட்டில் பூரிப்போடு பேசினேன். பெண்ணின் இழிவைப் போக்கிப் பெருமையளித்த பெரியார் என்றேனே? இனி பொருந்தாத் திருமணம் பற்றி பேச முடியுமா?......" என்று 30—6—49ல் கடிதம் வரைந்தேன். இதுவரையில் பதில் இல்லாமையால், பெரியாரின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென்று பொது மக்களுக்கும், எனக்குக் கடிதம் வரைந்த நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கு என்றும் பணிபுரிவேன்.

மூவலூர். ஆ. இராமாமிர்தம்மையார்,
(தி. க. ம. நி. க. உறுப்பினர்.)

கண்டனக் கணைகள்

12-ம் பக்கத் தொடர்ச்சி

எம். ஆர். பி. – செயலாளர், தி. வா. கழகம், பட்டுக்கோட்டை
த. மாணிக்கம்—தி. க. குணியமுத்தூர், கோவை
குளித்தலை கழகத் தோழர்கள்:– கு. ரா. ராசா, தி. வீ. முத்துக்கிருஷ்ணன், ரா. சுப்பிரமணியன், மு. ஜெம்புலிங்கனார், ரா. குழந்தைவேல், மா. சுந்தரமூர்த்தி, நா. சந்தானகிருஷ்ணன், சு. மணி, முத்துச்சாமி, அ. நாராயணசாமி, டி. எஸ்.எஸ். மணி, முத்துசாமி,
எஸ். பி. ராயப்பன்—தி. க. சூலூர்
தில்லை வில்லாளன்—'தென் துருவம்', சிதம்பரம்
புதுப்பாக்கம் கழகத்தோழர்கள்:—க.சுந்தரம், க.மாணிக்கம், ஹெச். சோமசுந்தரம், எஸ். எஸ். மணி, கிருட்டிணன்
தி. பாலசுப்பிரமணியம், எஸ். எஸ். மணி — தி. க. சென்னிமலை
ஏ. நாகப்பன்—தி. க. மேல்புவனகிரி
என். ஜி. கண்ணப்பன்—மாங்காடு
இர இளவரி—சொற்பொழிவாளர், தி க, பட்டுக்கோட்டை
து கருப்பையா– சமுத்திரம்
சு. ரா. கந்தசாமி– திருநெல்வேலி சந்திப்பு
எம். ஆர். ஆர்தர் வில்லியம்– செயலாளர் தி. க. இலுப்பையூரணி
பு. ரா. சண்முகம்—தி. க. புதியம்புத்தூர்
வண்டிப்பாளையம் கழகத் தோழர்கள்:—ப. அண்ணமலை, ஏ. எம். தாண்டவம், வே. தண்டபாணி, ப. அருணசலம், மூ. வேலாயுதம், அ. முனியன், எஸ். என். தண்டபாணி, அ. பழனி, ச. விநாயகம், அ. மாணிக்கம், ச. சிவப்பிரகாசம், ஆ. செந்தில் நாயகம்
ஏ. ஆர். ராஜன்– உறையூர்
இரா. சுப்பையா–செயலானர், பெரியார், பகுத்தறிவு தி. க. புதுக்கோட்டை
சே. தேவசகாயம்—செயலாளர், தி. க, ஏழு கிணறு சென்னை.
ஆர். ரத்தினம்—செயலாளர், எ. டி. பி. ஞா. வாசு., தூத்துக்குடி
மா. சீனிவாசன்– மதுரை
அருணசலம் ”
ஏ. குமரவேல்–செயலாளர், தி. க., பாலமேடு,
சிவ. பொன்னம்பல சோதி—தி. க. மதுரை
ச. சிவசங்கு—செயலாளர், தி. க. ஏரல்.
எஸ். வி. அற்புதசாமி—தி. க. சூலூர்
ப. வெங்கடேசன்—தி. க. விழுப்புரம்
எம். தனுஷ்கோடி—பாலமேடு
ஜி. என். ராசாமணி—நிலக்கோட்டை
டி. பி. அழகமுத்து—தி. க. துறையூர்
எம். வரதராசன்—யாழ்ப்பாணம்
து. அ. மாணிக்கம்—செயலாளர் தி. க. துத்திக்குளம்
தே. ஆரோக்கியசாமி—தி. க. விழுப்புரம்
எம். ஜெகதீசன்—தி. மா. க. மதுரை

கொண்டாலம்பட்டி கழகத் தோழர்கள்:— கே. எம். கோவிந்தராசன், ஜி. கிருஷ்ணமூர்த்தி, கே. எஸ். இராமசந்திரன், கே. எஸ். அமிர்தலிங்கம், ப. வரதராசன், பழனிசாமி, ஏ. அண்ணமலை, ஏ. வரதராஜு, ஜி.வெங்கட்டராஜு, அ. ரங்கசாமி, பெ. முத்து, ஆர். இராமசாமி, செல்லப்பன், எம். இராமன், டி. கே. பழனிசாமி, பி. சங்கரன், வீராசாமி, பி. வி. நடராஜன், கே. பழனிசாமி, எஸ் இராமலிங்கம், து அங்கப்பன், வீ அருணசலம், சு திருமலை.
எஸ். ஆர். நடராஜன்--தி. க., மணமேடு
எம். பி. தங்கராஜு-- ” ”
அரக்கோணம் கழகத் தோழர்கள்:-மணி, ஜெயவேலு, வே. க. பாலகிருட்ணன், ரத்தினம், க. குப்புசாமி பி எம் டி அந்தோணிதாசன், நாகராசி, நாராயணசாமி, கண்ணபிரான், இராதகிருட்டிணன், வடிவேல், தங்கராஜ், சண்முகம், ராமசாமி
எம் பி வடிவேலு–முன்னாள் செயலாளர், வ ஆ மா தி க, முல்லை
எம் சின்னையா:– தலைவர், தி க செங்கற்பட்டு
பி வி சீனிவாசன்:--தி க செங்கற்பட்டு

கண்டனம்தெரிவித்துள்ள கழகங்கள்:- நகர தி. கழகம் கடம்பூர், ந. தி. கழகம் பல்லடம், ந. க. கோயமுத்தூர், கிளைக்கழகம் செவ்வாய்ப்பேட்டை சேலம், தி.மா. கழகம் பெரியகுளம், ந தி க தாராபுரம், தமிழ்க்கலை இளைஞர்க் கழகம் காஞ்சிபுரம், கீழசந்தைப்பேட்டை திராவிடர் கழகம் மதுரை, நகர தி க மதுரை, நகர தி க திருப்பூர், ந திராவிடர் கழகம் பவானி, தி கழகம் களம்பூர், தி கழகம் சின்னாளப்பட்டி, தி கழகம் இருகூர், டாக்டர் சி நடேசன் மன்றம் சென்னை, திராவிடர் கழகம் நாகமநாயக்கன்பட்டி, வடகோவை தி க கோவை, தி க வில்லிவாக்கம், தி க கடலூர், பகுத்தறிவுச் கழகம் கடலூர், தி மா கழகம் கடலூர், திராவிட இளைஞர் கழகம் கடலூர், தி க செவ்வாய்ப்பேட்டை, ந தி க தேனி, தி மா க திருப்பத்தூர் (வ ஆ) தி. க- கோயம்பேடு, தி க திருமால்பூர், தி இளைஞர் கழகம் உறந்தை, தி க பொள்ளாச்சி, 7-வது வட்ட தி க சென்னை, வள்ளுவர் படிப்பகம் முகவை, தி க காடையம்பட்டி, தி க போராவூரணி, தி க நாரணமங்கலம் தி இளம்பேச்சாளர் சிவகங்கை, தி க கள்ளக்குரிச்சி, பகுத்தறிவுக் கழகம் முத்தியாலுப்பேட்டை, தி க ஒட்டங்காடு, தி க குறிஞ்சிப்பாடி, தி க புலியகுளம், தி க புதுக்கோட்டை, தி க செகுடந்தாளி, ந தி க திருத்துறைப்பூண்டி, தி வாலிபர் கழகம் திருவரங்கம், தி க ஆம்பூர், ந தி க உடுமலைப்பேட்டை, தி க திருச்சம்பள்ளி, ந தி க குளித்தலை, தி க இலுப்பையூரணி, தி க வண்டிப்பாளையம், பெரியார் பகுத்தறிவு தி க புதுக்கோட்டை, எ டி பன்னீர்ச் செல்வம் ஞாபகார்த்த வாலிபச் சங்கம் தூத்துக்குடி, தி க சிறுதொண்டைநல்லூர், தி க ஏரல், தி க வாளவல்லான், ந தி க ஈரோடு, தி க மணமேடு, ந திராவிடர் கழகம் தூத்துக்குடி, தி க ஆரணி

குறிப்பு:—பெரியாரின் போக்கைக் கண்டித்து—விலகிநிற்பதாக இன்னும் பல ஆயிரம் தோழர்கள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்கள். பத்திரிகையில் இடமில்லாததால், அவர்கள் பெயர் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும் ✲

திராவிட நாடு
ஞாயிறு] 10—7—49 [காஞ்சி

"வார்சு"க்குப் புது விளக்கம்!

✲

ஒட்டகத்துக்கு ஒரு சுபாவம் உண்டு என்று சொல்வார்கள். அதன் மீது பாரத்தை மேலும் மேலும் போட்டால், பளு தாங்கமாட்டாமல், ஒட்டகம் முரண்டிக்கொண்டு படுத்துவிடுமாம்! உடனே, சூட்சம புத்தியுள்ள ஒட்டகக்காரன், கடைசியாக, ஒட்டகத்தின் மீது ஏற்றிய சாமானை எடுத்துவிடுவானும்— எடுத்தானதும், ஒட்டகம், சரி, சரி, நம்மீது போட்ட பாரத்தைக் கீழே இறக்கிவிட்டார்கள், நாம் வெற்றி பெற்றுவிட்டோம், என்று எண்ணிக்கொண்டு, எழுந்து நிற்குமாம், பிரயாணத்துக்குத் தயாராக! இந்த ஒட்டகத்தின் சுபாவத்தை ஒரு சில சமயத்திலே, நல்லவர்களிடமும் காணலாம்.

யாராவது, நல்லவர்களுக்கு மனவேதனை ஏற்படும்படியான தொல்லைகள், ஏற்பட்டால், தாங்கமுடியாத நிலை உண்டாகும்—உண்டாகும்போது, இனிப், பொறுக்கமுடியாது என்று கூறுவர், ஆனால், ஒட்டகத்தின் சுபாவ சூட்சமம் தெரிந்தவர்கள், கொடுத்த தொல்லைகளிலே, ஏதாவதொன்றை நீக்குவர்—நீக்குவதன் மூலம், நல்லவரின் மனதிலே, சஞ்சலம் குறைந்து, சந்தோஷம் மலர்ந்து, சொன்னவண்ணம் கேட்கும் நிலை பெறுவதுமுண்டு!

பெரியார், நம்மை, ஒட்டகச் சுபாவம் கொண்டவர்கள் என்றே தீர்மானித்திருக்கிறார்—அதே சூட்சமத்தையும் கையாண்டு பார்க்கிறார்.

நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று தெரிவித்து, நம்மைத் திடுக்கிடச் செய்தார்—மனதுக்கு ஒரு சஞ்சல மூட்டை!

திருமணம் செய்துகொள்ளப் போவது, மணி அம்மையை என்று விளக்கலானார், மேலும் திடுக்கிட்டுப் போனோம்—மனதுக்கு மற்றோர் பாரம்!

அந்தத் திருமண ஏற்பாட்டின் மூலம், கட்சியின் எதிர்காலத்துக்கான திட்டம் தயாராகிறது, என்றார், திகைப்பு மேலும் மூண்டது—மனதுக்கு மற்றோர் சுமை!

மணி அம்மையை எனக்கு வார்சு ஆக்குகிறேன்—இயக்கத்துக்கும் வார்சு ஆக்குகிறேன் என்றார், நாம் பதறினோம்—மனதுக்கு மற்றோர் பெருஞ்சுமை!

ஏன், அவர்களை வார்சு ஆக்குகிறேன் என்றால், கட்சியில், எனக்கு வேறு யாரிடமும் நம்பிக்கை இல்லை என்றார், நமக்கு நெஞ்சு வெடித்திடும் நிலை ஏற்பட்டது—மனதின் மீது தாங்க முடியாத பாரம் ஏறிவிட்டது.

ஒட்டகம் படுத்துக்கொண்டது, பாரம் அதிகம் என்று.

நாம் கண்டிக்கலானோம் கண்ணீர் வடித்தபடி, உம்முடன் இருந்து பணியாற்ற முடியாது, உலகோரின் கேலிக்கும் பழிக்கும் எம்மை இலக்காக்கிவிட்டீர் என்றோம்.

ஒட்டகம் படுத்துவிட்டதே, பயணம் நடக்க வேண்டுமே என்று எண்ணிய தந்திரக்காரன், ஒட்டகத்தின் மீது ஏற்றிய மூட்டைகளில் ஒன்றை எடுத்துவிடுகிறான்—

பெரியாரும் இதே முறையில், நமது உள்ளத்தின் மீது வீசிய, பாரங்களில், ஏதேனும் ஒன்றையாவது எடுத்துவிட்டு, ஒட்டகம் எழுந்திருக்கிறதா பார்ப்போம், என்று எண்ணி, அந்தப்படிக்கே, செய்தும் பார்க்கிறார், பாவனையாக.

நிருபர்களின் திருக்கலியாண குணத்தைக் கண்டித்து எழுதும் சாக்கோடு சாக்காக, "கழகத்துக்கு மணி அம்மையை வார்சாக ஏற்படுத்துவதாக நான் எப்போது சொன்னேன்?" என்று கேட்கிறார்.

மறந்துவிட்டேன்! அவர் கேட்கவில்லை! 'விடுதலை' தலையங்கம் கூறுகிறது!!

ஈ. வே. ரா. எங்கும் திராவிட கழகத்துக்கு வார்சு நியமிப்பதாகக் குறிப்பிடவே இல்லை—என்று விடுதலை 5—7—49-ல் தீட்டுகிறது.

இப்படிக் கூறிவிட்டால், ஒட்டகம், எழுந்துவிடும் என்று எண்ணுகிறார்!

மனதை வாட்டி வதைத்து, மாற்றார் கண்டு ஆறுதல் மொழி கூறவேண்டிய நிலைக்கு நம்மைக்கொண்டு வந்து வைத்துவிட்டார், இந்தக் கலியாணப் பேச்சைத் துவக்கி!

பொருந்தாத் திருமணம்!
திருமணத்துக்கு ஒரு விளக்கம்!
விளக்கத்திலே ஒரு விபரீதம்!
விபரீதமான வார்சு முறை!
விசித்திரமான வாதம்!
கட்சி முழுவதுக்கும் கசைஅடி!

என்று இப்படி, பலப்பல பாரங்களைத் தாங்கித் தத்தளிக்கச் செய்துவிட்டு, இப்போது, கட்சிக்கு மணி அம்மையை வார்சு ஆக்குவதாகக் குறிப்பிடவே இல்லை, என்று கூறிப்பார்க்கிறார் —'விடுதலை' மூலம்.

வார்சு—வார்சு—என்ற பேச்சு, கிளம்பிய நாள் முதற்கொண்டே, பெரியார், ஒரே அடியாகவும் தைரியமாகவும், புரியக்கூடிய விதமாகவும், தக்க காரணத்தோடும், இந்த வார்சு நியமனத்தைப் பற்றிப் பேச முடியாமல், தயங்கித் தயங்கியே பேசிக்கொண்டு வந்திருக்கிறார்

ஏனெனில், அவர் அறிவார், தாம் கொண்டுள்ள திருமண ஏற்பாடும் அதன் தொடர்பான ஏற்பாடுகளும், பகுத்தறிவுள்ள யாரும், தன்மானத்தில் பற்றுக்கொண்ட எவரும், சரியானதென ஒப்புக்கொள்ளவே முடியாதன, என்பதை.

ஆகவேதான், இந்த விஷயமாக, கொஞ்சம் கொஞ்சமாக, வாழைப்பழத்துக்குள் திணித்துக்கசப்பு மருந்து தருவதுபோலப் பேசிவந்திருக்கிறார்!

எதுவும் கொடுக்கிற விதமறிந்து கொடுத்தால் ஜீரணமாகிவிடும் என்று எண்ணினார்.

ஆனால், இம்முறை நாம், அவருடைய ஏற்பாட்டை உட்கொள்ள மறுத்துவிட்டோம்.

கோபம் தான் அவருக்கு—நமக்கும் வருத்தம் தான்—எனினும் அவர் கோபத்தை மறைத்துக் கொண்டு, 'விடுதலை' மூலம், ஒரு சிறு சாகசம் செய்து பார்க்கிறார், கட்சிக்கு மணி அம்மையை வார்சு ஆக்குவதாகக் கூறவே இல்லை என்று.

இது உண்மைதானா! 1—6—49 'விடுதலை'யில், பெரியாரின் கோவை மாநாட்டுச் சொற்பொழிவு வெளிவந்திருக்கிறது—பாருங்கள் ஒரு முறை—'விடுதலை' 5—7—49-ல வெளிவந்திருக்கும் கருத்துச் சரியா, தவறு, என்பது விளங்கும்!

5—7—49-ல் விடுதலை எழுதுகிறது, "ஈ. வே. ரா. எங்கும் திராவிட கழகத்துக்கு வார்சு நியமிப்பதாகக் குறிப்பிடவே இல்லை—என்றுதானே தீட்டுகிறது.

அதே 'விடுதலை' 1—6—49 இதழைப்பாருங்கள்.

"எனக்குப் பின் கட்சிக்கும் என் சொந்தத்திற்கும் அடுத்த வார்சு ஏற்படுத்த வேண்டும். இதை விரைவில் செய்யப்போகிறேன்" — என்று பெரியார், கோவை மாநாட்டிலே பேசியிருக்கிறார். அவருக்கு வார்சு மட்டும் அல்ல கட்சிக்கும் வார்சு! என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இவ்வளவு தெளிவாக, கட்சிக்கு வார்சு நியமிக்கப் போவதாகப் பெரியார், பகிரங்கமாக, மாநாட்டிலே பேசியிருக்கிறார், இதை விடுதலையே வெளியிட்டிருக்கிறது, இருந்தும் அதே விடுதலை, கழகத்தோழர்களின் எதிர்ப்புணர்ச்சி கண்டு அஞ்சி, இந்தச்சமயம் ஏதாவது சாகசம் பேசினால தான் நல்லது என்று எண்ணி, 5—7—49-ல் கழகத்துக்கு வார்சு ஏற்படுத்துவதாக எப்போதும் குறிப்பிட்டதே இல்லை, என்று பச்சைப் புளுகு தீட்டுகிறது.

திராவிடர்கழகத் தோழர்களே, பெரியார், எந்தக் காலத்திலோ தீட்டப்பட்ட புராணங்களிலே உள்ள பொருத்தமற்ற தன்மைகளை எல்லாம் கூர்ந்து கண்டு பிடிக்கும் அறிவுத்திறன் உள்ளவர்களாக்கிவைத்திருக்கிறார், அதே அறிவு, விடுதலையில் வெளிவரும் விஷயமாகவும் பயன்படும் என்பதை என் மறந்தாரோ, தெரியவில்லை.

எனக்கு வார்சு தேடுகிறேனே யொழிய—என் சொத்துக்கு வார்சு தேடுகிறேனே யொழிய, இயக்கத்துக்கு வார்சு தேடவில்லை மணி அம்மையை நியமிக்கவுமில்லை, அதெல்லாம், எதிரிகள் சூட்சி—என்றுபெரியார் நிருபர்களிடம் கூறினாராம்.

பெரியாருக்கு அவருடைய கோவை மாநாட்டுச் சொற்பொழிவைக் கவனப்படுத்துகிறோம்—

"எனக்குப்பின் கட்சிக்கும் என் சொந்தத்திற்கும் அடுத்த வார்சு ஏற்படுத்தவேண்டும். அதை விரைவில் செய்யப்போகிறேன்." என்றுபேசியவர், பெரியார் தான்!

அந்தப்பேச்சுக்கு அரண்தேடும்விதமாக விடுதலையில் பெரியார், விளக்கம் எழுதினார் 19—6—49-ல்

சொந்தச் சொத்துக்குமட்டும்தான் வார்சுதேடுவதாக இப்போது கூறி, இயக்கத்துக்கு வார்சு தேடவில்லை என்று சாகசம் செய்கிறாரே, இவர் கையொப்பமிட்டு, 19—6—49-ல் எழுதுகிறார்,

"இயக்க விஷயத்தில் எனக்கு இதுவரை அலைந்ததுபோல் அலைய உடல்நலம் இடம் கொடுக்கவில்லை, என்னைப்போல் பொறுப்பு எடுத்துக்கொள்ளத்தக்க ஆள் யார் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் கிடைக்கவில்லை. ஆதலால் எனக்கு வார்சாக ஒருவரை ஏற்படுத்தி, அவர்மூலம் ஏற்பாடுசெய்துவிட்டுப் போகவேண்டும் என்ற அதிக கவலைகொண்டு இருக்கிறேன். இதுபற்றி சி. ஆர். அவர்களிடம் பேசினேன்."

இயக்க வேலைக்காக வார்சு ஏற்பாடு, என்பதற்கு இதைவிடத் தெளிவான உரை வேறு என்னவேண்டும்?

இந்த உரை, பெரியார் தீட்டிய கட்டுரை—கட்டுரைக்குத் தலைப்பு, 'விளக்கம்.'

இந்த விளக்கத்தையும் மறைக்க முயலுவது, ஒட்டகச்சுபாவம் தெரிந்தவரின் சாகசம் தவிர வேறென்ன!

அதே விளக்கத்திலே, இவர் தேடும் வார்சு, எதற்காக என்பதை மேலும் தெளிவாக்குகிறார்.

"நம்பிக்கையான ஒருவர் எனக்குக்கிடைக்கவில்லை, என்றால் அதற்கு யாரும்கோபித்துக்கொள்ளக்கூடாது. நம் இயக்கத்துக்குத் தொண்டாற்ற, பொறுப்பேற்க, முழுநேரத் தோழர்கள், தங்களை முழுவதும் ஒப்படைப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? யார் இருந்தார்கள்?" என்று எழுதியிருக்கிறார்.

இயக்கத்துக்குத்தொண்டாற்ற மட்டுமேல்ல,பொறுப்பு ஏற்க!

பொறுப்பு ஏற்பது என்றால், தலைமை வகிப்பது என்பது தவிர,வேறென்ன பொருள்?

இந்தப் பொறுப்பேற்கும் ஆள், ஒருவர்கூட இல்லை, இருந்ததில்லை—மணி அம்மையாருக்கு அந்த மாண்பு இருக்கக் கண்டார், மகிழ்ந்தார், மாலைசூட்டி மனையாட்டியாக்கிக் கொண்டாரிலும், அம்மையை, இயக்கப் பொறுப்பேற்கக் கேட்டுக்கொள்கிறார்!

இவ்வளவுமட்டுந்தானா, இந்த விளக்கத்துக்குபலம் தேட, 28—6—49-ல் வெளியிட்ட அறிக்கையிலே,

"என்னைப்பற்றியும், இயக்கத்தைப்பற்றியும்,இயக்க நடப்பைப்பற்றியும் எனக்குப் பின்னும் ஒரு அளவுக்காவது இயக்கம் நடைபெற வேண்டும் என்பதுபற்றியும், மிகக்கவலையுடனும் பற்றுடனும் சிந்தித்து நடக்கவேண்டியவனாகிறேன்"—என்று பெரியார் தீட்டுகிறார்.

சொந்தச் சொத்துக்குவார்சு என்றல்ல அவர் தீட்டியது, இயக்கம்—இயக்கநடப்பு—இயக்க எதிர்காலம்—இவைபற்றிய சிந்தனையாம்!!

இயக்க சம்பந்தமான ஏற்பாடல்ல என்று இன்று மழுப்பிப் பேச 'விடுதலை' மூலம் முற்படுகிறாரே, பெரியார், அவரே, அறிக்கையில்,

"எதிரிகள் என்ன சோல்லுவார்கள் என்பதை எல்லாம் சிந்திக்க ஆரம்பித்தேனேயானால், இயக்கப் பாதுகாப்புக் காரியம் அடியோடு கெட்டுவிடும்" என்று தீட்டியிருக்கிறார்.

சொந்தச் சொத்துக்கு வார்சு என்றால், இதிலே இயக்கப்பாதுகாப்பு என்ற வாசகம் வருவானேன்!

உண்மை என்னவென்றால், பெரியார், திருவண்ணாமலைச் சந்திப்பு, கோவை மாநாடு, விளக்கம், அறிக்கை, எனும் இந்தச் சமயங்களிலே எல்லாம், மெள்ள மெள்ள மணி அம்மையாருக்கு மகுடாபிஷேகம் செய்யப்போகிறேன் என்று கூறி, இயக்கத்தைத் தயார் செய்தார்—இயக்கம் தடை விதிக்கிறது இந்தத் தகாத ஏற்பாட்டுக்கு! எனவே, தயக்கம், ஏற்படுகிறது.

இவ்வளவு வெளிப்படையாகச்சொல்லி வந்ததை, இவ்வளவு விரைவிலே, இலலை—இல்லை—என்று பெரியாரே மறுக்க வேண்டிய நிலையைக் கழகத் தோழர்கள் உண்டாக்கிவிட்டனர், தமது கண்டன மாரி மூலம்.

இனி, எதிர்ப்புணர்ச்சி கண்டஞ்சி, பெரியார், மணி அம்மையைக் கட்சிக்கு வார்சு ஆக்கவில்லை—அந்த எண்ணம் கொண்டதே இல்லை, என்று கூறுவதை, சரி என்றே வைத்துக்கொள்வோம், அந்தப்படிக்கே அவர், நடந்து கொள்கிறார் என்றே வைத்துக்கொள்வோம், கழகத்தோழர்களின் மனவேதனையும், இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ள இழிவும், பழியும், நீங்கிவிடும் என்று கூறமுடியுமா!

ஒருபோதும் இல்லை!

பொருந்தாத் திருமணம்— பேசிவந்த கொள்கைக்கு நேர்மாறான திருமணம் — பூவையரை புழுக்களென மதிக்கும் ஆடவர் மட்டுமே செய்யத் துணியும் திருமணம், செய்துகொள்கிறார், சீர்திருத்த இயக்கத்தின், புரட்சி இயக்கத்தின் தலைவர் என்றால், எப்படி நாம் அதற்கு உடந்தையாக இருக்க முடியும்? உள்ளம் எப்படி இடம் தரும்? உலகம் எப்படி இதை ஏற்கும்? இந்தத் திருமணத்தை அனுமதித்துவிட்டுப், பிறகு நாம், உரத்த குரலிலே ஊரூரும் சென்று, சீர்திருத்தம் பேசினால், யார் மதிப்பார்கள்? யார் ஏற்பார்கள்?

"ஊருக்கு உபதேசிகளே! உங்கள் தலைவர் 72ம் வயதிலே திருமணம் செய்து கொண்டார், இதைக் கண்டிக்க வக்கில்லை, வகையில்லை, வீரமில்லை, நேர்மையில்லை, வாயாட வந்துவிட்டீர்களோ, சீர்திருத்தம் பற்றி," என்று பேசுவரே, ஏசுவரே!

எப்படி மக்களின் முகத்தைக் காண்பது? அவர்களின் கண்கள், கேள்விக் குறிகளாகிவிடுமே! அவர்களின் கேலி, நமது இயக்கத்தைக் கல்லறைக்கு அனுப்புமே! இயக்கத்துக்கு மணி அம்மையை வார்சு ஆக்கவில்லை என்று கூறிவிட்டால் மட்டும் போதாதே—இழிவும் பழியும் இதனால் துடைக்கப்பட்டுவிடாதே!

உங்களை நான் நம்பவே இல்லை—யாரையும்—நீங்கள் யாரும் இயக்கத்தை நடத்திச் செல்லக் கூடியவர்கள் அல்ல.—என்று கூறியிருக்கிறாரே, அந்த பேச்சினால் ஏற்பட்ட மனப்புண் மாறுமா! எப்படி மாற முடியும்?

இயக்கத்தின் தலைவரே நம்மை நம்புவதில்லை என்ற 'விலாசம்' ஒட்டிக்கொண்டு உலகிலே நடமாடி, என்ன காரியத்தைச் சாதிக்க முடியும்.?

"இதுகளை பெரியாரே நம்புவதில்லை—இதுகளின் பேச்சை நாம் எப்படி நம்ப முடியும்" என்று எவரும் கூறுவரே! அந்த இழிவை எப்படித் துடைப்பது?

இவைகளை எண்ணிப் பார்த்து, உண்மையாகவே, இயக்க வளர்ச்சி, எதிர்காலம், இயக்கத் தோழர்களின் உணர்ச்சி இவைகளை மதிப்பதாக இருந்தால், பெரியார் தமது திருமண ஏற்பாட்டை அடியோடு விட்டு விடவேண்டும்—இயக்கத்துக்கு எதிர்காலத்துக்கான எந்த ஏற்பாடு செய்வதற்கும் தாமே துணியக்கூடாது—அந்த எண்ணத்தையும் அவர் விட்டுவிட வேண்டும்.

இயக்கத் தோழர்களை, மரக்கட்டைகளாகவோ, ஆடும் பாவைகளாகவோ எண்ணிக்கொண்டு, எனக்கு இயக்கத்தில் யாரிடமும் நம்பிக்கைஇல்லை என்று பேசிவந்திருப்பதை வாபஸ் வாங்க வேண்டும்.

அப்போதுதான் நாம் அவருடைய தலைமையை ஏற்க முடியும்.

அந்த அளவுக்கு நிலைமையை அவரே உண்டாக்கி விட்டார்.

அன்பன்,

அண்ணாத்துரை.

என் ஆதரவு என்றும் உண்டு

பாண்டியராஜபுரம்,
6—7—49.

அன்புமிக்க நண்பர் அண்ணாத்துரை அவர்களுக்கு சவுந்தரபாண்டியன் வணக்கம். நலம். தோழர் ஈ. வே. ரா. அவர்களின் பதிவுமணம் நாட்டில் சுயமரியாதைக்காரனால் ஒப்புக்கொள்ள முடியாது. பகுத்தறிவுடன் வாழவும், பிரசாரம் செய்யவும், முற்படுபவர்கள் கட்டாயம் அவர் செய்கைக்கு முடிவு கட்டித்தான் ஆக வேண்டும். நான் ஏறக்குறைய ஐந்தாண்டுகளாக அவருடைய செயல்களில் நம்பிக்கையற்றவனாக இருந்தது உங்களுக்கு எல்லாம் தெரியும். நான் புத்திகூற முன் வந்தால், அதைத் தைரியமாகஏற்றுக்கொள்ள அவரைப் பின்பற்றி வந்த உங்களுக்கு முடியுமா, என்பது,தங்கள் அறிக்கையிலிருந்துதெரிகிறது. "அவரை,ஒருஸ்பெஷல் கான்பரன்ஸ் கூட்டி அதன் அபிப்பிராயப்படி செய்யுங்கள்." அந்த முடிவு செய்கிற கூட்டத்தைப் பிரதிநிதித்துவம் உள்ளதாகச் செய்யுங்கள். அவசரமாகக் கூட்டங் கூடி முடிவு கட்டாதீர்கள். எனது ஆதரவு என்றென்றும் இருப்பது போலவேயிருக்கும். ஆனால் என்னைக் கட்சித் தலைவன் என்றெல்லாம் இருக்கக் கேட்டுவிடாதீர்கள். நிச்சயம் மறுத்து விடுவேன்.

தங்கள்,

W. P. A. சவுந்தரபாண்டியன்.

காஞ்சிபுரம் 2—7—49

அன்புடைய அண்ணா அவர்களுக்கு; வணக்கம்.

நமது தலைவர் பெரியாரின் தகாத இந்தத் திருமண ஏற்பாட்டைக் கண்டிக்கும் முறையிலும், பணிவுடன் வேண்டிக்கொள்கிற முறையிலேயும், தாங்கள் தீட்டியுள்ள கருத்தினை "திராவிடநாடு" இதழில் பார்த்தேன். அக்கருத்தை என் உளமார ஆதரிப்பதோடு, இனி நடைபெற இருக்கிற செயல்களுக்கு, நான் கட்டுப்படுகிறேன். எதிர்ப்பு, வேண்டுதல், ஆகிய முன்னணியில் என்பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

வணக்கம்

சி. வி. எம். அண்ணாமலை

(மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.)

★ கண்டனக் கணைகள் ★

தலைவர் பெரியார், தோழியர் மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்துகொள்வதன்மூலம், அவர் தமக்கும், இயக்கத்திற்கும் "வாரசு" ஆக்கிக்கொள்ள எண்ணும் முயற்சியை முழுமனதோடு வெறுப்பதாகவும், அது சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுக்கும், ஜனநாயக முறைக்கும், எதிர்கால வாழ்வுக்கும் கேடு சூழ்வதாக இருக்கும் காரணத்தால், தலைவரின் போக்கைக் கண்டிப்பதாகவும், நிலைமை சீர்பட்டுத் தெளிவு ஏற்படும் வரையில் கழகப் பணிகளிலிருந்து தாம் விலகி நிற்பதாகவும் கூறி, பலர், 'கண்டனக் கணைகளை'க் கழகத் தலைமை குறித்து எவியுள்ளார்கள். அவர்கள்:—

இரா. ராஜகோபால்—தி. க. தஞ்சை.
இரா. துரைராசன்—தி. க. சொற்பொழிவாளர், விழுப்புரம்.
பி. வி. முத்துசாமி—வடசென்னை.
ஜி. என். இராசு—அமைப்பாளர், கோ. மா. தி. க., கோபி.
ஜி. ஏ. வெங்கடாசலம்—செயலாளர், தி. க., கோபி.
ஏ. சி. ராமன்—தலைவர், தா. தி. க., கோபி.

சக்தி நாடக சபை உறுப்பினர்கள், திண்டுக்கல்:— பூ. வேலாயுதன், வி. சி. கணேசன், எஸ். ஏ. கண்ணன், எஸ். பி. பொன்னம்பலம், டி. எம். சாமிநாதன், கே. எம். தம்பிராசன், என். ஆர். இராமலிங்கம், பி. ஏ. தங்கராசன், ஏ. எஸ். நாராயணசாமி, ஜி. மணி, சு. திருவாழிமார்பன், எஸ். என். நாராயணசாமி, எஸ். பஞ்சாபிகேசன், ஏ. வீரப்பன், கே. சின்னதுரை, எம். கே. சுகுமாறன், ஏ. எஸ். சின்னய்யா, கே. ஜி. பேரின்பம், சுப. வடிவேல், உ. தங்கவேலு, டி. எஸ். நடராசன், டி. நடராசன், கறுப்பையா.

ச. சொக்கலிங்கம்—தி. க., திருப்பத்தூர்.
பெ. கோபால்—தி. க., மதுரை.
பி. எம். பொன்னுசாமி—செயலாளர், தி. க., பல்லடம்.
கே. பழனியப்பன் — " " "
தில்லைக் கலைமணி—தி. மா. க., 'அண்ணாமலை நகர்.
மா. சண்முகம்—சூளை, சென்னை.
எஸ். ஏ. ராசமாணிக்கம்—செயலாளர், கோ. மா. தி. க. 2-வது மாநாடு, கோவை.
க. அ. சி. கந்தசாமி—குகை, சேலம்.
மா. சுப்பிரமணியம்—செவ்வைநகர், சேலம்.
கோ. செ. சின்னப்பன்—பெருந்துறை, கோவை.
வெ. சாமராசு—செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
சி. கந்தசாமி— " "
ப. சுந்தரம்—மதுரை.
பி. நஞ்சப்பா—தி. க., காவேரிப்பட்டணம்.
க. பழனிவேலு—"எரிமலை" ஏஜண்டு, மதுரை.
ஜி. கோபாலன்—பெரியகுளம்.
எம். சீதாபதி—பெண்ணாடம்.
சி. கோவிந்தராசன்—கரூர்.

எஸ். நல்லசாமி— "
நா. மு. இராமராசு—பெரியகுளம்.
மதிவாணன்—சென்னை.
எஸ். ஏ. தங்கவேலு—அரிசிப்பாளையம், சேலம்.
என். வேணுகோபால்—தி. வாலிபர்கழகம், பொன்மலை.
வி. சௌரிராஜுலு—தி. மா. கழகம், பொன்மலை.
கே. பாலகிருஷ்ணன்— " "
நா. முத்து கிருட்டிணன்—தி. கழகம், பொன்மலை.
அ. துரைராஜ்—இலட்சுமிபுரம், மதுரை.
வி. க. சாமி—யானைக்கவுனி, சென்னை.
டி. பாலசுப்பிரமணியம்—தி. கழகம், சென்னிமலை.
எஸ். எஸ். மணி— " "

தூய அன்பு நிலையம், திருவானைக்காவல்:—எம். எஸ். முத்து, ரா. சோமசுந்தரம் மு. சொ. மணி, வெ. நா. ரெங்கராசன், ப. தங்கராசன், ப. கருப்பண்ணன், நீ. சுப்பிரமணியம், கோ. விசுவநாதன்.

ந. ந. பழனிச்சாமி—தலைவர், தி. க., நல்ல கவுண்டன் பாளையம், கோபி.
நாஞ்சிலரசு—தி. க. திருப்பூர்.
சு. சண்முகம்—சென்ட்ரல் பாலிடெக்னிக், சென்னை.

தாராபுரம் கழகத் தோழர்கள் :— எம். முத்துசாமி, என். வேலாயுதன், டி. பி. ராஜாராம், எஸ். பழனிச்சாமி, அ. சலாம், கோ. நா. ராமசாமி, பி. சுந்தரம், கோ. நாசு, அ. அகம்மது இப்ராஹிம், ம. துரையன், டி. வி. கே. அலிசாஹிப், க. சங்கரன், ஏ. கோபால், கே. பானு, கு. கறுப்புசாமி, சு. ம. பு. உத்தமன், சி. கோ. அரசன், இரா. நல்லியப்பன், பி. சுந்தரராயன், கண்ணன், க. மாரியப்பன், எஸ். ஆர். தியாகராசன், சு. ஆறுமுகம்.

சேவியர்—தி. க., திருப்பூர்.
எஸ். ரங்கராஜு— " "
கே. எஸ். ராஜமாண்—செயலாளர், ந. தி. க., மதுரை.
ம. ச. ப. கிருட்டிணன்—ஜி. டி. சென்னை.

அந்தியூர் தோழர்கள் :— ஜ. எம். அமீர்பாஷா, நாகரத்தினம், டி. எம். முகம்மது இப்ராஹிம்.

கு. அங்கப்பன்—ப. தா. தி. கழகம், மாதப்பூர்.
கடத்தூர் ரா. அருணாசலம்—தி. க. ஒடசல்பட்டி.

திருப்பூர் கழகத் தோழர்கள் :— க. சுப்பிரமணியம், தி. நடராசன், கு. முத்துராசன், கே. எஸ். அப்துல்காதர், வி. பொன்னு, ஏ. கோபால கிருட்டிணன், என். நாகராசன், என். பால்ராஜ்.

கே. எம். முத்துகுமாரசாமி—தலைவர், தி.க., வளவனூர்.

பல்லடம் தாலுக்கா புத்தரசல் தோழர்கள் :— பெ. ரங்கசாமி, க. நடராசன், ப. நல்லசாமி, அ. ஆறுமுகம்.

என். ரங்கசாமி—தி. க., பவானி.

களம்பூர் தோழர்கள் :—தெ. கொ. தங்கவேல், ஏ. கணேசன், கே. பி. கண்ணன், ச. மொ. அண்ணாமலை, கே. பி. துரைசாமி, எஸ். பச்சியப்பன், ஜி. வரதன், கே. அர்ச்சுனன், ஏ. கோவிந்தசாமி, வி. எஸ். சின்னக்கண்ணு.

திரு. துரைசாமி—தி. க., தூத்துக்குடி.
சு. மன்னர் மன்னன்—பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.
இராச. பெரியசாமி—தி. க., புதுச்சேரி.
கே. கே. பாலன்—இந்தி எதிர்ப்புத் தொண்டன், குடந்தை.
கே. ஏ. ஷாகுல் ஹமீது—மேலக்காவேரி, குடந்தை.
கே. ரங்கசாமி—தி. க., சென்னை.
இரா. சீனிவாசன்—முன்னாள் செயலாளர், தி. மா. க. திருத்துறைப்பூண்டி.
அ. கிருட்டிணன்—தி. க., கோவை.
சா. துரைசாமி— " "
மா. தங்கவேலர்—"குடியரசு" எழுத்தாளர், திண்டுக்கல்.

சின்னாளப்பட்டித் தோழர்கள் :— கே. டி. ராசன், கே. துரை, ஏ. சி. கண்ணு, வி. தவமணிராசன், எஸ். காமாட்சி, உ. வெள்ளைச்சாமி, ஏ. பழனிச்சாமி, பி. வேல்சாமி, மா. சுப்பையன், சொ. வெங்கடாசலம், பி. அரிராம், ஏ. சுப்பிரமணியம், ஏ. முத்துலக்கன், வ. க. குணசீலன், பி. கணேசன், எஸ். கே. சுப்பையா, ப. க. சந்திரசேகரன், பி. எஸ். ரத்தினம்.

மதுரைத் தோழர்கள் :— கு. ரத்தினம், துரை. சம்பந்தன், அ. பிரான்சிஸ், ஜே. சேவியர், வி. நரசிம்மய்யர், எல். பாகுனன்.

இரா. செல்லத்துரை—செயலாளர், தி. மா. க. திருத்துறைப்பூண்டி.
சே. உலகநாதன்—தலைவர், தி. மா. க. திருத்துறைப் பூண்டி.
எல். ஜி. கணேசன்—சினிமா நடிகர், லால்குடி.
ஏ. எல். சி. சஞ்சீவி—செயலாளர், ந. தி. க., அரக்கோணம்.
பா. தாமோதரன்—தி. க., சென்னை.
ந. காசிராஜன்—உறுப்பினர், செ. ஜி. தி. க., சென்னை.
அ. சுப்பிரமணியம்—முன்னாள் " " "

ஆலந்தூர் தோழர்கள் :— கோ. நாராயணசாமி, மு. சின்னப்பன், என். மீனாட்சியம்மா.

து. கணேசன்—சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

திருச்சி தென் இந்திய இரயில்வே பொதுப்பணி மனைத் தோழர்கள் :— தி. அ. திருஞான சம்பந்தன், இரா. சண்முகம், ந. சண்முகராசு, சி. சண்முகம், நா. கதிரைவேலன்.

பொன். கு. கோதண்டபாணி—முன்னாள் செயலாளர், மயிலை தி. க., சென்னை.
என். ராமசாமி—தலைவர், தி. க., சீர்காழி.
மு. பழனிசாமி—தலைவர், தி. க., நாகமநாயக்கன்பட்டி.
கோவிந்தராசன்—தி. க. செல்வபுரம், கோவை.
க. வணங்காமுடி— " " "
எம். கனகரத்தினம்—செயலாளர், வடகோவை தி. க., கோவை.

கருவலூர் தோழர்கள் :— கே. எம். அங்கப்பன், கே. என். ராமசாமி, ந. கோவிந்தன், கே. எஸ். வெங்கடாசலம், எஸ். கிருஷ்ணசாமி.

இரா. சகந்நாதன்—கே. ஆர். எம். எஸ். தணிக்கையாளர், சேலம்.
பா. சுப்பிரமணியம்—தி. க. பள்ளியபாளையம்.
சி. ஓபுளிசாமி—ஓ. சேடர் பாளையம், சேலம்.
எம். சாமிநாதன்—தி. க. சோலார்பேட்டை.
ஓ. பார்த்தசாரதி— " "
சி. பஞ்சாட்சரம்—தலைவர், தி. க., மதுராந்தகம்.
வி. வெ. பாபு—தி. க., வில்லிவாக்கம்.
க. தேசிங்கு— " "
எம். கே. ஏ. ரஹ்மான் பாஷா—தி. க., அரகண்டநல்லூர்.
பி. ரத்தினசாமி—செயலாளர், தி. க., ராசபாளையம்.
டி. கே. கோவிந்தராசன்—தி. க., தஞ்சாவூர்.

கடலூர் தோழர்கள் :— எம். முனுசாமி, ந. கோவிந்தராசன், ஆர். குருநாதன், எஸ். தட்சணாமூர்த்தி, எம். சக்ரபாணி, ஆர். வில்லவன் கோதை, எம். பத்மநாபன், ஏ. சுப்பிரமணியம், பி. எம். சுப்புராமன், ச. குப்புசாமி, கே. சீனுவாசன், ஆர். சகாதேவன், சி எம் கிருஷ்ணமூர்த்தி, பெ அ இளங்கோ, கோ சாமிநாதன், கி கோவிந்தராசன், டி பாலசுப்பிரமணியம், சி ராமலிங்கம்

கே கே கோவிந்தராசன்—தி க, குடந்தை
ப உ தியாகராஜன்—தி க, திருவண்ணாமலை
எஸ் என் ஜெகன்னாதன் – செயலாளர், தி க, திருவொற்றியூர்
கே வி கோபால் – உதவித் தலைவர், தி க, செவ்வாய்ப்பேட்டை, சேலம்
ப ந தனகோபால் – கோட்டகிரி, நீலகிரி

தேனி தோழர்கள் :- அ சின்னசாமி, கே பி பி எம் நாராயணசாமி, தெ செ பெரியமுத்து, அ தேவராசன், கா சிவகாமிநாதன் முதலிய மொத்தம் எழுபத்தேழு பேர்கள் கையொப்பமிட்டுள்ளனர்

க நா ராசன் – தி க, கருமாச்சிபாளையம்
டி கே கோவிந்தசாமி – அமைப்பாளர், தி மா க, திருப்பத்தூர் (வ ஆ)
மு பெ முத்துகருப்பன் - தி க, தாத்தையங்கார் பேட்டை
எம் எஸ் என் இராசன் - " "
கே எம் குபேந்திரன் – " "
சி. சீனிவாசன் – அட்வர்டைசிங் கன்ஸல் டண்ட், கோவை
ஜே பி நயினார் – கடலூர்

கோயம்பேடு தோழர்கள் :- மு ஜானகிராமன், சி கே பென்ஜமென், கி அரிராமன், இன்பவாணன், மு கலைமணி, பி பாலுசாமி, சம்பந்தன், மு முருகேசன், க கணேசன், கி வாசுதேவன், பி எஸ் மணி, கே கண்ணப்பன்.

பு. து. ஜனார்த்தனம்—கன்டோன்மெண்டு, பெங்களூர்.
மு. வ. அய்யாகண்ணு—தி. க. அன்பர், சென்னை.
என். வி. நடராசன்—தி. க., நெடும்பலம்.
பி. ஜே. எஸ். மணியன்—தி. க. அன்பர், கடலூர்,
ரவீந்திரன்—தி. க. பங்களூர்.

என். பழனிசாமி—தி. க. திருப்பூர்.

புத்தராசன்—தி. க. துறையூர்.

ம. சி. இளஞ்செழியன்—தி. மா. க. திருச்சி.

நா. அ. விசுவநாதன்—தி. க. பெத்துநாய்க்கன் பேட்டை, சென்னை.

த. இளங்கோ—தி. க. சைதாப்பேட்டை, சென்னை.

கே. ஆர். புருஷோத்தமன்—தி. க. அன்பர், கோவை.

ஏ. எஸ். துரைசாமி—தி. க. சென்னை.

எஸ். பி. மீனாட்சி அம்மாள்—ஆசிரியை "கோவை முரசு" கோவை.

எஸ். ஏ. மாணிக்கம்–செயலாளர், ப. தா. தி. க., கோவை.

டி. ஜி. கணபதி—தி. க., திருச்செங்கோடு.

ஆர். நாராயணசாமி | ருக்மணி நாராயணசாமி | தி. க. செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

வ. சங்கரநாராயணன்—பொருளாளர், தி. க. நுங்கம்பாக்கம், சென்னை.

டி. ஏ. சுப்பையா—தி. க., தூத்துக்குடி.

இரா. சு. தங்கப்பழம்—ஆசிரியர், "கிளர்ச்சி", தூத்துக்குடி.

ப. கு. இராமசாமி—தி. க., பெரியகுளம்.

என். கே. பி. வேல்—செயலாளர், இ. எ. கமிட்டி, திருச்செங்கோடு.

புலவர். கோவிந்தன், மா. ந. இராசமாணிக்கம், தி, க, திருவந்திபுரம்.

ஜேம்ஸ்—தி. க. மேலச்சண்முகபுரம், தூத்துக்குடி.

ந. இராமச்சந்திரபாண்டியன்—தி. க. விருதுநகர்.

டி. செல்வநாதன்—தி. க. திருச்சி.

சு. கு. தாண்டவன்—சுண்டக்காமுத்தூர், கோவை.

எஸ். முத்து- அமைப்பாளர், தி. க. மதுரை.

உ. வெ. எழில்மாறன் பி. ஏ.- தி. க. சென்னை.

ஜி. ராமசாமி–தி. க. ஆம்பள்ளி.

திருப்பத்தூர் தி. மா. கழகத் தோழர்கள்:-சி. எம். எஸ். பானு, ஆர். எஸ். மணி, எல். நடேசன், ஏ. மணிவாசகன், டி. பி. தங்கவேலு, பி வி. பக்தவத்சலம், டி. பாலசுப்பிரமணியம், சி. கே. சின்னசாமி, ஆர்- பி- சாரதி, பரமசிவம்- டி- வி- பாலசுப்பிரமணியம், பி- ராம்தாஸ், எம்- எம்- ரத்தினம், எம்- ஏ- அருணகிரி-

திருமால்பூர் கழகத் தோழர்கள்:—கோ- சு- அந்தாரி, கி- மு- சண்முகம், மு. கணேசன், த- சுந்தரமூர்த்தி, கு- கோ- நாராயணன், ச- வடிவேல்- கு- மணிகண்டான், ச- குமாரசாமி, சி- "- ஆடியபாதம், ஜி- அந்தாரி, எம்- ஜயராமன், பொ- ஆ- சுப்பிரமணியம், டி- ஆர்- குப்புசாமி, டி- கே- மாயகிருட்டிணன், வே- ம- முனியன், கே- கந்தசாமி, ஏ- பி- கோபாலசாமி, ச ம பஞ்சராமன், பி கே குப்பாத்தை, கே வி மணிகண்டன், எம் கே சுப்பராயன், செ எ முத்துத்தாண்டவனூர்

எஸ் வி வி ராமன்—நடுநிலைப்பள்ளி, புகழூர்.

சிவகங்கைத்தோழர்கள்:-கே.ராஜசேகரன் (வழக்கறிஞர்) தலைவர் தி. க., இராமசுப்பிரமணியம் (வழக்கறிஞர்) தலைவர் சி. தா. தி.க., இரா. தியாகராசன், மீ. ஆறுமுகம், சு. செ. சிவராமன், செ. ராஜகோபாலன், ஆ. வேலுச்சாமி, இரா. செண்பகம்.

எம். பி. ஆறுமுகம்—பொருளாளர், தி. க. சிறுகையூர்

லெ. சிவலிங்கம்—தி. மா. க. பொன்னமராவதி

சுப்பிரமணியம்—தி. க. வேப்பேரி, சென்னை.

ஆரணி தி. க. தோழர்கள்:—பு. ந. இராமகிருட்டிணன், சி. ஜெயராமன், ஆ. சி. ராதாகிருட்டிணன்.

சி. ராமலிங்கம்—செயலாளா, தி. தா. தி. க. மணலூர்பேட்டை.

ஏ. சோமசுந்தரம்—தி. ம. க. புதுக்கோட்டை

டி. சோமசுந்தரம்—தி. க. அருப்புக்கோட்டை

ஏ. சக்ரபாணி—தி. மா. க. சென்னை

து. மா. பெரியசாமி—செயலாளர், தி க துறையூர்

உ. சான்பாச்சா—தி. க. பொள்ளாச்சி

பி. பி. கே. முகம்மது இப்ராஹிம், வ. குருசாமி, ஏ. எம். ஷரீப் மா. திராவிடமணி, தி. க. மதுரை.

க செல்லையா—தி க தூத்துக்குடி

ஆ திருவானந்தம்—திராவிடர் பாடசாலை, நுங்கம்பாக்கம், சென்னை

எஸ் நாகமாணிக்கம்—தி க கோவை

க ஞானசம்பந்தன்—தி க வந்தவாசி

பி என் இராமாநுசம்—தி க, பொள்ளாச்சி

சி ஏ கணேசன்—தி க, தல்லாகுளம், மதுரை

எஸ் வி கிருட்டிணசாமி—தி க, பவானி

சத்தியமங்கலம் கழகத் தோழர்கள்:—என் ஜி கண்ணப்பன், என் ஹெச் சையத் அமீர், என் ஹெச் சையத்பசிர் அஹமத்

தா செ செல்லப்பன்—தி க, நாமக்கல்

மா ரெ செல்லப்பா—தி க, மேலப்பழுவூர்

டி எஸ் சுவாமிநாதன்—தி க, லால்பேட்டை

என் துரைராஜன், ஜி பரமசிவம், ராமதேவ், கே சுப்பையா தி க, பொன்மலை

பழ. மீனாட்சி சுந்தரம்—தி. க. சிதம்பரம்.

சே. முத்துராம்—திருவள்ளுவர் கழகம், முகவை.

பட்டுக்கோட்டை திராவிடர் கழகத் தோழர்கள்:—கே. ரங்கசாமி, பி. எஸ். காசிநாதன், டி. ரங்கசாமி சி. பிச்சை, பி. எஸ். சுப்பிரமண்யம்.

அ. ச. பானு—தலைவர், தி. க. பொள்ளாச்சி.

எஸ். ஷேக்முகமது தி, க. ஆர். எஸ். புரம் கோவை.

இ. கோவிந்தன்–ஆர்டிஸ்ட், ஆள்வார்பேட்டைசென்னை.

தி. பொ. போகேந்திரன்-தி. க. பேஸின்பிரிட்ஜ்சென்னை

ஏ. எஸ். அப்துல்காதர்—தி. க. சென்னை.

பருத்தித்துறை கழகத்தோழர்கள்:—கந்தமுருகேசன், க. ரகுநாதன், பொ. பூவிலிங்கம், க. பசுபதி, நா. பூபாலன், ஆ. இராசன், க. இராசையா, வே. சோமசுந்தரம், பி. எஸ் வி., வே. சின்னத்துரை, ஆ. மயில்வாகனன், மு. நடராசன், சி. பாலசுப்பிரமணியம், ப. கிட்டன்,க. பொன்னையா, சி. இ.கரிதசாமி, சி. சுப்பிரமணயர், வ.நாகலிங்கர், ந.நாகேந்திரம், ச. சின்னத்துரை, ச. சிவப்பிரகாசம், மு. வேலாயுதம், சி. குமாரசாமி, க. ஆழ்வார், பொ. மதிபால சிங்கம், மு. கண்தப்பு, ந. கண்தப்பு, சி. வைத்திலிங்கம், ப. இரத்தினசிங்கம், க. கதிரைவேல், க. நல்லதம்பி, சி. கந்தசாமி, ந. இராசரத்னம், வே. தணிகாசலம், கோ. மகாலிங்கம், சி. சிற்றம்பலம், பொ. கணபதி, பொ. செல்லத்துரை,

எம். ஜி. சுப்பிரமணியம், சி. எம். பொன்னுத்துரை, சி. தர்மகுலசிங்கம், க. பொன்னம்பலம்,

காடைப்பட்டிக் கழகத் தோழர்கள்:-ஏ. சுப்பிரமணியம், பி. கே. பாலசுப்பிரமணியம், பி. ஆறுமுகம், என், ராமனுதன், எம். எல். அப்புசாமி, என். எம். ராஜா, பி. க, வேலாயுதம்.

வி. வி. எஸ். பாண்டியன்—தி. மா. க. செ. கல்லூரி, விருதுநகர்.

ஆ. சண்முகம் – தி. க. சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

எம். கே. ராமசாமி—தி. க. மணக்கால்.

ந. செயபாலன்—தி. க. பாபநாசம்

இராம. சுப்பையா – உறுப்பினர், ம. தி. க. கமிட்டி, காரைக்குடி.

பேராவூரணி கழகத் தோழர்கள்:— கே. அடைக்கலம், என். கோதண்டபாணி, சி. சூர்யமூர்த்தி, தி. அருணாசலம், ரெ. வேலுசாமி, கு. மாணிக்கம், வி. விநாயகமூர்த்தி, தி. ராமசாமி, கே. கணேசன், வி. கோவிந்தன், ரெ. வேலுக்கண்ணு, ந. பக்கிரிசாமி, ந.வேலு, எஸ்.சௌந்திரராசன், எஸ்.துரைராஜு, வி. எம்.வேலு, கே.சோமன், பெ.கு.சேது, ஏ. சுப்பையன்.

நாரணமங்கலம் கழகத் தோழர்கள்:— சா. சுப்பிரமணியம், திருமதி தைலம்மை சுப்பிரமணியம்,எம்.செண்பகராசு, திருமதி செண்பகராசு, ஆ. தேவதாஸ், மு. பஞ்சமுத்து, செ, தங்கவேலு, ஐயாக்கண்ணு, கெ. வெங்கடாசலம், கு. சின்னத்தம்பி, எ.மந்தராசலம், பெ. ராமசாமி.

எஸ். கலிங்கன்—செயலாளர், கைத்தறி நெசவாளர் சங்கம், நடுவிற்பட்டி.

ஏ. மகாராசன், ப. சுப்பையா—தி. க. தூத்துக்குடி.

மதுரை கழகத் தோழர்கள்:- சொ. முனியாண்டி, சு. குருசாமி, ச. மாடசாமி, சி. காளியப்பன், பி. கடற்கரை, வி. ஆ. பொன்னுச்சாமி, தெ. ரா. சச்சிதானந்தம், எஸ். டி. சீனிவாசன், எஸ்.சௌந்திரபாண்டியன், இ. சந்திவீரன், ந. க. சாமி, மி. தாமஸ், கி. அருணாசலம், ஏ. சௌந்திரபாண்டியன்.

எம். எஸ். வேலு - தி. க. பள்ளப்பட்டி.

அல்லாபுரம் கிராம கழகத் தோழர்கள் – காசிநாதன், வே. கி. மார்கபந்து, வேணுகோபாலன், நரசிம்மன், செல்லம்மாள், சரசுவதி, குப்புலக்ஷிமி, விமலா தேவி, சுசீலா, தனம்மாள், வீ. ஆர். சுந்தரம், வே. சி. ஆறுமுகம், மு. இராமசாமி.

வீ. அழகையன்—தி. மா. க., செ. புதூர்.

இ. குமாரசாமி | கே. சாரதாம்பாள் | தி. க., சென்னை.

வெளிப்பட்டணம் மாணவத் தோழர்கள்:—மு. நடராசன், வா. முத்தையா,சுப்பிரமணியம், சீனிமுத்து, நமசிவாயம், வேல்சாமி, அப்பாவு, அப்பாள்.

இரா. தாண்டவன்—தலைவர், தி. க., இடப்பாடி.

கள்ளக்குரிச்சி கழகத் தோழர்கள்:—கோவல்கிழார், தி. வாசு, ஆசையா, சுப்பையா, துரை, இலக்குவன், டி. கோதண்டம், டி. பொன்னுசாமி, சீனு.

ஆர். முத்துக்கிருட்டிணன்—தி. க., சாக்கோட்டை

எம். அய்யாசாமி—தலைவர், ந. தி. க., மதுரை.

பொத்தனூர் கழகத் தோழர்கள்:—டி. கே. ராசு, கே. எம். உத்தண்டன், ஆர். சின்னத்தம்பி, பி. சே. அருணாசலம், க. பெருமாள், தா. வில்லாயுதம், கே. நடேசன், பி. வி. கந்தசாமி, பழனிமலை வீரப்பன்

ப. நீலமேகன்—தி. க., வாலாஜாபாத்.

கு. ப. குழந்தைக் கருப்பன்—செயலாளர், தி.க. குமாரபாளையம்.

பி. ஆர். கோவிந்தசாமி—தி. க., கும்பகோணம்.

கா. தி. ரங்கநாதன்—தி. க. அன்பர், காரமடை.

ஈரோடு தி. கழகத்தோழர்கள்:—எஸ். ஆர். சந்தானம், நா. சுப்பண்ணு, ஆர். லூர்துசாமி, எஸ். எஸ். ராஜன், கா. ஜாக்கிரியா, நா. ரங்கராஜன், ஆர். பெருமாள், ஈ. ஏ. மதார்சா, ஏ. எஸ். அல்லாவுதீன், ஆர். பி. எஸ். மணி, அ. கோவிந்தராசன், கே. குமாரசாமி, ஈ. ஆர். சந்திரன், சுப. மீ. சுந்தரம், எம். பெருமாள், இரா. குணநாதன், ஏ. ரகுபதி, பு. நாராயணன், ஆர். டி, முத்து, பி. எஸ், முகம்மது அன்சாரி, என். இ. பாலகுரு, எஸ். அப்பாவு.

இ. மு. உலகராசன்-செயலாளர், பகுத்தறிவுக் கழகம், முத்தியாலுப்பேட்டை, சென்னை.

பா. சா. இராமலிங்கம்–தி. க., பொன்மலை.

மலர்நாதன்-செயலாளர், கலைமன்றம், தஞ்சை.

ம. கருப்பையா | க. சிங்காரம் | தி. க., குரும்பலூர்.

கே. ராமலிங்கம்–தலைவர், இ. எ. கமிட்டி, பழனி.

ஒட்டங்காடு தி. கழகத் தோழர்கள்:-ஏ. பஞ்சநாதம், வி. எம். வேலு, ஜி. துரைராசு. பி. சுப்பையா, ஏ. அழகன், ஆர். வீரமுத்து, பி. நாகமுத்து, கே. நடராசன், எம். ரங்கராசு.

டி. சி. கே. ராஜேந்திரன்–தி. க., விருதுநகர்.

கே. பாப்பையன்-செயலாளர், நா. தா. தி. க., நாகப்பட்டினம்!

க. நாராயணசாமி-செயலாளர், தி. க., குறிஞ்சிப்பாடி.

எம். விசுவநாதம்-முன்னாள்செயலாளர், தி.க., வேப்பங்குரிச்சி.

எம். ஜெயராமன்- தி. க., வேப்பங்குறிச்சி.

து. நா. ராமசாமி- தி. க., துறையூர்.

என். பி. ராமசாமி–தி- க- நச்சலூர்.

பி. ராஜு–தி. க , திண்டுக்கல்.

அ தேவராசன் | நாசன் | அ கா சு மணியம் | தி க மேட்டுப்பாளையம்.

புலியகுளம் தி கழகத்தோழர்கள்:- எம். ராஜகோபால் இரா. மருதாசலம், த ம மூர்த்தி, இ சுந்தரம், ப கருப்பசாமி, அ பழனிசாமி, ர சுந்தரமூர்த்தி க ஆறுமுகம், எம் கிருட்டிணன், ரா நச்சிமுத்து, எஸ் நாராயணசாமி, கி வி வரதாராசன், அ கருப்பசாமி, மா கருப்பசாமி, எம் நல்லதம்பி, சி. ரத்தினசாமி, கே மருதாசலம், ஆர் எம் சம்பத்குமார், பி ஏம் ராமசாமி, மருதாசலம், சி வேலு

மயில், மா கருப்பசாமி, மா பேச்சிமுத்து, ரா முத்துகுமார், ரா கதிர்வேலு, ஏ குப்புசாமி, தா கிருட்டிணன், எம் மாரிமுத்து, ஏ ஆறுமுகம், எம் ஆறுமுகம், கே வெங்கடாசலம், ஆர் ஆறுமுகம்.

கே கந்தசாமி—தி க ஈரோடு

ஆர் துரைசாமி
கே தங்கராஜு — தி க காங்கேயம்
டி பாலகுருநாதன்

புதுக்கோட்டை தி கழகத் தோழர்கள்:—அரு பெரியண்ணன், ச கு சங்கரலிங்கம், ச துரைராஜ், வை சு கிருட்டிணன், கா ஞானமுத்து, கு அய்யாமணி, சிவா சுப்பையா, வீ தமிழ்ச்சேரன், நா முத்து, நா சதாசிவம், பாப்புஜான், ந இராசகோபால், ம கந்தையா, இரா கிருஷ்ணதாஸ், கா ஆறுமுகம், சி ராமசாமி, சோ வ நல்லையா, தி ந பாலகிருட்டிணன், ம சுப்பையா, பு வே ஜான், முருகு சுப்பிரமணியம், இராம. கலியாண சுந்தரம், க நடேசன், ரா கணபதி, சு முத்துவேல்

எம். கே. கே. முருகநாதன்— தி. க. அன்பர், கோவை.

எஸ் எஸ் மாரிமுத்து—செயலாளர், திக செகுடந்தாளி

அ ப செழியன்—தி க அருப்புக்கோட்டை.

இராசபாளையம் கழகத் தோழர்கள்— கே சந்திரன், பி ரத்தினசாமி, த இ மு சரவணச்சாமி, ஏ. அழகப்பன், அ சுப்பையா, பண்டரிநாதன், அ சி முத்தையா, சி. அருணாசலம், ஏ பா சேர்மக்கனி, மா. சு. அய்யா, எஸ் அப்பாத்துரை, க கார்மேகம், இரா பொ பாலையா, த சுப்பிரமணியம், ச மாடப்பன், சு தவமலை, எஸ் லட்சுமி, அ ராமகிருஷ்ணன், பொ பெத்தையா, த கனக சபாபதி, வ ப சின்னப்பன், பொ பொன்னையா, கா திராவிடமணி, ப அச்சுதக்கனி, சு கந்தையா, க முத்தையா, ப வாரியப்பன், கா ச பழனிச்சாமி, ஆ நாகரத்தினம், ரா ராமசுந்திரம், அ பண்டரிநாதன், ச கு பால்சாமி, அ சீனியப்பன், எஸ் அழகபாண்டியன், எம் கருப்பையா, காளிமுத்து, ஜி ஷண்முகம், ஆர் கிருஷ்ணன், பு மனையப்பன், அ பாலையா, எஸ் நடராசன், சி காளியப்பன், ஆர் ஜி வி லிங்கம், ரா பெருமாள், எஸ் சுருளி, சு நடராசன், கடற்கரை, அயோத்தி, எம் நாதமணி, ஏ தனசங்கரன், எல் எஸ் நடராசன், ஆ கனகரத்தினம் மா துரைசாமி, ஆ தியாகராசன், வீ முத்துமாயாண்டி, ரா. தங்கராசா, டி. ஆர். அப்பன், ப. மாரியப்பன், மா. வீ. பொன்னுசாமி, வீ. நாராயணன், பி. செல்லப்பா, கு. பொன்னையா, ஆர். சுந்தரேசன், ஆர். துளசிமணி, எம். முத்துச்சாமி, மா. முத்தையா, எஸ் பச்சைமலை, மு. மாடசாமி, ஏ. எஸ். பாலகிருட்டினன், பி. பெருமாள், சி. திருவள்ளுவன், மு. இராமகிருஷ்ணன், ச. கு. இராமசாமி, டி. தெய்வக்கனி, ச. பொன்னுச்சாமி, அ. காளியப்பன், பொ, கணபதி, சோ. ரா சு, ஏ. ஆறுமுகம், அ. ராமையா. ஏ வி பாண்டியன்,

என். எஸ். சண்முகவடிவேல்—தி. வா. க. கரந்தை

ஏ. கே. வேலன் —ஆசிரியர், "எரிமலை" தஞ்சை

வே. சி. விசுவநாதன், வே. பா. ரத்தனகண்ணன்,

வே. சி. ஏகாம்பரம்—தி. க. கோமளீஸ்வரன் பேட்டை, சென்னை.

தமிழர் நாடக சபையோர்—காத்தையங்கார் பேட்டை, திருச்சி.

திருத்துறைப்பூண்டி கழகத் தோழர்கள்:—ஹாஜாபீர், வ சுப்பிரமணியன், அ ரத்தினம், மு குலாம் காதர், த சதாசிவம், இரா சிவாஜி என் காதர்சுல்தான் கோ ரகுநாதன், பராங்குசம், முகம்மது அனீப், சு மணியன், இரா சீனிவாசன், வி கண்ணையன், வ ராஜமாணிக்கம், இரா தங்கராசன், ந சே தட்சிணாமூர்த்தி, ஆர் தியாகராசன், வைரக்கண்ணு, கோவிந்தராஜலு, சிங்காரு, இரா செல்லத்துரை, ஆர் நடராசன், கு சேகர் சைன்

திருவரங்கம் திராவிட வாலிபக் கழகத் தோழர்கள்:—த இராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, நா நடராசன், சி. வீராசாமி, த. அரங்கசாமி, ப. ஜெகதீசன், ம. ராமசாமி, த. வடமலை, த. பாலதண்டாயுதபாணி, பால. கந்தசாமி, த. நடராசன், ஆர். ராதாகிருஷ்ணன், மா. கோவிந்தராசு, கு. ஆ.பெரியசாமி, க. இராசவேலு தெ. பழனிசாமி, ச. பழனியாண்டி

ரா. நாராயணசாமி, என். ரெங்கநாயகி—தி. க. அன்பர்கள், காரைக்குடி

சொ. ப. கோபாலகிருஷ்ணன்-தலைவர். அறிவுவளர்ச்சி மன்றம், திருச்சி

வயி. சங்கரன்—தலைவர், தி. மா. க. காரைக்கால்

ஜ. வெ. கோவிந்தன்—செயலாளன், தி. க. ஆம்பூர்

திருச்சேறை கழகத் தோழர்கள்:-என். கோவிந்தசாமி, எழில்நிலவன், என். ருத்திராபதி, சிவகாமி, நாராயணசாமி, வீ. சங்கரன்

உடுமலை கழகத் தோழர்கள்:—தி. வெங்கடாசலம், ஏ. நாராயணன், இரா தங்கவேலு, எம் ஏ பக்கர், டி மாணிக்கம், லெ மாரியப்பன், சு ராமசாமி, ஏ கிருஷ்ணசாமி, எஸ் ரஜாக், எம் அப்துல் அமீத், கே செல்வமுத்து, பி வேலுச்சாமி, ஆறுமுகம், ந அப்துல்அமீத் ல பழனிச்சாமி, எம் பாலசுப்பிரமணியம், பெ ஆறுமுகம்,மு மாணிக்கம், கே பாலசுப்பிரமணியம், கல்யாணராஜன்,என் நடராசன், எம் சுப்பிரமணியன், என் மாரிமுத்து, விருத்தாச்சலம், இரகுராமன், எஸ் வெங்கடாசலம், ரு மீனாட்சிசுந்தரம்

ஏ சின்னசாமி - தி க, ஜமீன் ஆலமரத்துப்பட்டி, திருச்சி

எஸ் பி ஆர் டி பழனிச்சாமி - தி க, தூத்துக்குடி

வீ ஏ அங்கமுத்து - தி க, திருத்தணி

பொ வ ராதா - அமைப்பாளன், இ எ குழு, பொள்ளாச்சி

எம் பி கிருஷ்ணன் - செயலாளர், ஹோட்டல் தொழிலாளர் சங்கம், ஈரோடு

ஏ சுந்தரம் - தி க, சேலம்

ஏ. கிருஷ்ண பிள்ளை - தி. க, திருவனந்தபுரம்.

கா நா கோவிந்தராசன் - தலைவர், சீர்திருத்தச் சங்கம், காட்டுப்புத்தூர்.

கே சுப்பிரமணியன் - தலைவர், தி க, போளூர்

எஸ் பழனியப்பன் - தி க, அம்மாபேட்டை, சேலம்

கே வி டி சீனிவாசன் - நிர்வாகி, 'திராவிடப் பாசறை,' சென்னை

கே ஜி ராதாமணாளன் - துணையாசிரியர், "புதுவாழ்வு", சென்னை

க இராமலிங்கம் - செயலாளர், தி க, திருச்சம்பள்ளி

(8-ம் பக்கம் பாக்க்க)

இனிக்கவலை வேண்டாம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

தாங்கள் பொதுவாழ்வில் நல்ல கொள்கைகளோடு ஓர் இயக்கத்தை வளர்ப்பதும், பிறகு தாங்களே அதைப் பலவீனப்படுத்துவதும் வழக்கமாக இருந்து வருகிறது. அதே வழக்கப்படியும் தங்களுக்குப் பின்னால், இத்திராவிடர் கழகம் என்னும் இயக்கம் நல்ல நிலையிலும், முறையிலும் வளர்ச்சியடையக் கூடிய காரியங்களில், பணியாற்றக் கூடிய ஆற்றலும், திறமையும் நுண்ணறிவும் உள்ளவர்களும், தங்கள் சக்தியையும் அடக்கு முறையையும் கடந்து முன்னுக்குவர இருப்பதாலும், அதைத் தங்களுடைய எத்தகைய சக்திகளாலும், முயற்சிகளாலும், தடைபடுத்த முடியாது என்பதைத் தாங்கள் சரியானபடி உணர்ந்திருப்பதினாலும், தங்களிடம் உள்ள அழுக்காறு என்னும் 'பேய்' இயக்கத்தையும் தங்களையும் தங்கள் வாழ்நாட்களிலேயே குழி தோண்டிப் புதைக்க முடிவுசெய்து விட்டது. ஆனால் தங்கள்பால் இரங்கிக் கூறுகிறோம். தங்கள் ஏற்பாடு தங்களை ஒழிக்குமே யல்லாது, இயக்கத்தை ஒருபோதும் ஒழிக்க இயலாது. இயக்கம் தங்களுக்காகவும், தங்களுடையதுமாகவும் இன்று இல்லை என்பதையும், இயக்கத்தின், இயக்கத்தவர்களின் ஆதரவிலேயே தாங்கள் இருந்து வந்திருக்கிறீர்கள் என்பதையும் நன்கு உணருங்கள். தங்களையும், தங்களைப்போன்று வரக் கூடியவர்களையும் ஏற்கவும் விலக்கவும், இயக்கத்திற்கும், இயக்கத்தின் மக்களுக்கும் உரிமையுண்டு. இதைச்சிந்தித்தால் இயக்கத்திற்குப் பாதுகாப்புத் தேடவேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லை என்பது புலனாகும்.

திராவிடர் கழகத்தின் தலைவரும், கர்த்தாவும் ஆகிய தாங்கள், இக்கழகத்தின் மதிப்பையும், பெருமையையும், சரியானபடி பொறுப்போடு உணர்ந்திருப்பீரேயாகில், எத்தகைய தகுதியுமற்ற சாதாரணமான பெண்ணையா இயக்கத்தின் பாதுகாப்பாளர்களிலும் முன்நின்று நடத்துபவர்களில் ஒருவராகவும் தேர்ந்தெடுப்பீர்கள்? தங்கள் சொந்தப் பொருள்களைக்காப்பாற்றவும், வாரசாக அந்த பெண்ணை ஏற்றுக்கொள்வதாகக்கூறுகிறீர்கள். அதற்குச்சில போலிக்காரணங்களையும் கூறுகிறீர்கள். தங்கள் சொந்தக் கௌரவத்திற்கும், குடும்ப கௌரவத்திற்கும் இந்தவாரசு எவ்வகையிலும் ஆக்கம்தருவது அல்லவே. கொள்கை, லட்சியமுறையில்தங்களை உறுதியானவர் என்று கூறிக்கொள்கிறீர்கள். சுயமரியாதைக்கொள்கைப்படி எழுபத்திரண்டு(72)வயது கிழவருக்கும், சுமார் இருபத்தைந்துவயது (25) குமரிக்கும் மணம் முடிப்பது, அதுவும் தாங்களேமுடித்துக்கொள்வது, கொள்கையின் உறுதிபோலும்! இத்தகையதங்கள்செய்கை எந்தநியாயத்திற்குப் பொருத்தமோ? இதை யாராலும் அறியக்கூடவில்லை. நாட்டிற்கே மணவிஷயத்தில் தக்கதும், தகாதவையும் அறிவுறுத்தி வந்த தாங்களா இந்த அடாத காரியத்தில் ஈடுபடுவது? கௌரவமானதும், நியாயமானதுமான வாரசுகள் தங்களுக்கு இல்லையா? சாவோடு சகலமும் முடியும் என்கிற தத்துவவிளக்கம் கூறிவந்த தங்களுக்குமா பொருளைப்பற்றிஇந்தப்பேதமைஏற்பட்டு பழிக்கஞ்சாது தங்கள் தியாகங்களையும் சிந்தியாது இந்த அடாத செய்கையைச் செய்ய முனைந்து விட்டீர்கள்?

தாங்கள் வாரசாகவும், மனைவியாகவும் ஏற்றுக்கொள்ளப்போகும் மணி என்னும் பெண் தங்கள் நம்பிக்கைக்குஉகந்தவர்கள்என்றும்,தங்கள் நலத்திலும், இயக்கத்திலும், பற்றும், கவலையும்கொண்டு நடந்து வருகிறவர்கள் என்றும் கூறுகிறீர்கள்.

1. தங்கள் நம்பிக்கைக்கு பாத்திபதையாக இருக்கலாம். அதைப் பற்றியாரும் கவலைகொள்ளத்தேவையில்லை.

2. தங்கள் நலத்திலும், இயக்க நலத்திலும் உண்மையான பற்றும். கவலையும் கொண்டவர்களாகத் தாங்கள் நினைப்பதும்,கூறுவதும்கொஞ்சமும் பொருத்தமற்றதாகும். தங்களுக்கும் தங்கள் கொள்கைக்கும், இயக்கத்திற்கும், தங்கள் அடாத செய்கையினால் ஏற்படும் பெரும்பழியையும், அவமானத்தையும்,பொருட்படுத்தாது தங்கள் சதிவேலைக்கு உடந்தையாக இருக்கும் இந்த அம்மையாரையா மக்களும், இயக்கமும் ஏற்றுக்கொள்ளும்? தங்களுடைய சரியில்லாத, தகுதியற்ற முடிவுகளுக்கும், ஏற்பாடுகளுக்கும், இந்தப் பெண்ணின் நெடுநாளைய திட்டமும், நடத்தையுமே காரணமென்பதை, பகுத்தறிவுலகம் நன்கு அறியும். தாங்கள் இப்போது செய்யப்போகும் காரியம் இவ்வுலகம் உள்ளளவும் மக்களால் வெறுத்து ஒதுக்கப்படக்கூடியதென்பதை அறிந்து தெளிவடையுங்கள். குறள்நெறியில் மக்களைநடாத்தபணியாற்றிவரும் ஓர் புனிதமான இயக்கத்திற்குப் பாதுகாவலாயும், முன்நின்று நடத்தவும், அமையும் ஒரு குழுவில் அங்கம் வகிக்க இந்தப் பெண் எந்தவகையில் தகுதியானவர்கள் என்பதைத் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமின்றிக்கூறஇயலுமா? இந்தப்பெண் தங்களிடம் வந்தது முதலே மக்கள் விரும்பவில்லை என்பதை உணருங்கள். இயக்கத்திலும் தங்கள்பாலும் பற்றும், கவலையும் கொண்டவர்களானால் இந்த நேரத்தில் தங்களைவிட்டுவெளியேறி இருப்பதல்லவா அந்த அம்மையின் கடமை.

இந்தச் சாதாரண மனுஷியை, வஞ்சகமே உருவாய் அமைந்த ஒரு பெண்ணை இயக்கமும், இயக்கமக்களும்என்றும்ஏற்கார். தங்களைக்கணவராக ஏற்றுக்கொள்ளத் தங்கள்பால் இம்மங்கை எதைக்கருதி? பணமன்றி, அவர்கள் தங்களிடம் அடையத்தக்கது யாது? இதுஒன்றே பொது மக்கள் சிந்தனைக்குப் போதும்.

இயக்கத்தைப்பற்றியும், இயக்கம் இன்றிருந்த நடைபெறவேண்டியதைப்பற்றியும், இயக்கப் பாதுகாப்பைப்பற்றியும் தங்களுக்குக் கிஞ்சிற்றும் கவலை வேண்டாம். அதை இயக்க அன்பர்கள் பார்த்துக்கொள்வார்கள். தாங்கள் நிரம்ப உழைத்துவிட்டீர்கள், நிம்மதியாகத்தங்கள் தீர்மானப்படியே மணி என்னும் இளநங்கையைச் சிறந்தமுறையில் திருமணம் செய்துகொண்டு எஞ்சியுள்ள காலத்தில் இல்லறம் இனிதே நடத்துங்கள்!

சட்டப்படி செல்லுபடி தங்களிஷ்டத்துக்கு விரோதமாகச் சில சொற்களல்ல, பல சொற்களை, தங்களிஷ்டப்படி வாரிசுப் பத்திரத்தில் பயன்படுத்திக்கொள்வதில் யாருக்கும் கவலையில்லை. தாங்களும் கவலைப்படாதீர்கள்.

தங்கள் நல்வாழ்வை விரும்பும்,

V. கிருட்டிணமூர்த்தி, N. வெங்கட்ராமன், B. இராமச்சந்திரன் K. சிவசாமி, M. A. நடராசன், N. பிள்ளாரி, A. பொன்னுசாமி, R. K. வேலாசாமி, V. பாபண்ண, K. பொன்னுசாமி, S. சின்னப்பன், C. K. சுப்பிரமணியம், C. S. வேலாசாமி, P. C. பொன்னு, N. ராஜப்பா

* * * *

மறைக்க முடியாத மாசு

[குறிப்பு:— சோகம் மிக்க இக்கட்டுரையை எழுதியவர், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இயக்க வளர்ச்சி ஒன்றுதான் தன்னுடைய குறிக்கோள் என்று கருதிப் பணியாற்றிவருபவரும், சேலம் திராவிடர் கழக உறுப்பினரும், மாகாண நிர்வாக உறுப்பினருமான தோழர் சேலம் ஏ. சித்தையன் அவர்கள். —ஆ-ர்.]

"அன்று தாயற்ற இரு குழந்தைகளை வைத்துக்கொண்டு அவதிப்படும் நான் வேறொரு கன்னியை மணம் முடித்துக் கொள்வது தவறு, அக்ரமம் என்றெல்லாம் கண்டித்து என் திருமணத்தை நடக்கவொட்டாது தடுத்தானே, இன்று இவனுடைய தலைவர், 72 வயதுக் கிழவர், ஒரு சிறு பெண்ணை மணம் முடித்துக் கொள்ள முடிவுசெய்திருக்கிறாரே, இப்போது என்ன சொல்கிறான் இந்த வீரன்"

சுமார் 10 மாதங்களுக்குமுன் எங்கள் ஊரில் ஒருவருடைய மனைவி இறந்து விட்டார்கள். அவர்களுக்கு சுமார் 12-வயதில் ஒருபெண்ணும் 10-வயதில் ஒருபையனும் இருக்கிறார்கள். இறந்துபோன மனைவி அவருக்கு இரண்டாந்தாரம். இப்போது அவருக்கு வயது 50, 51-இருக்கும். மனைவி இறந்த ஒருமாதத்திற்கெல்லாம் புது மனைவியைத் தேடும் முயற்சியிலீடுபட்டார் கிழவர், தனக்கிருந்த சிறிது பணபலத்துடன். ஒரு ஏழைவீட்டில் பெண்பேசி முடிவு செய்துவிட்டார். திருமண நாள் குறிக்கப்பட்டு விட்டது. இந்நிலையில் இதையறிந்த நான் ஊரிலிருந்த அவருக்கும் எனக்கும் தெரிந்த பெரியவர்களிடம் இந்த அக்ரமத்தை எடுத்துக்கூறி, ஒருகிழவர் ஒரு சிறு பெண்ணை மணந்து கொள்வதை என்னுடைய சக்தி முழுவதும் செலுத்தித்தடுத்தேதீருவேன்என்று கூறினேன். எதிர்ப்பை அறிந்த கிழவர் பெண் வீட்டாருக்குக் கொடுத்த பணத்தையும் விட்டு விட்டார். அத்துடன் தன் திருமண நினைவையும் விட்டு விட்டார்.

பெரியார் அவர்களுக்கும் மணியம்மையாருக்கும் திருமணம் நடக்கவிருக்கிறது என்ற செய்தி பரவியவுடன், மேற்படி கிழவர் விட்ட கூரம்புதான் நான் தலைப்பிலேஎழுதியிருப்பது. அதுமட்டுமல்ல, நேற்று அவருடைய வீட்டு வாயிற்படியில், சென்றவாரத்தில் அந்தக்கிழவர் மணந்து கொண்ட புது மனைவி—சுமார் 14-வயதுள்ள இள நங்கை, நின்றுகொண்டிருக்க, கிழவர் என்னைப்பார்த்துக்கேலிச்சிரிப்புச்சிரிக்க, நான் என் தலையைத்தொங்கவிட்டுக் கொண்டே செல்லவேண்டி நேரிட்டது.

சுயமரியாதை இயக்கத்தின் தொடர்பு ஏற்பட்டதிலிருந்து, இம்மாதிரியான பொருந்தாத் திருமணங்களைப் பலமேடைகளில் கண்டித்துப் பேசியதோடு மட்டுமல்ல, பல இடங்களிலே தடுத்துமிருக்கிறேன். ஒரு இளம் விதவைக்கும் ஒரு கிழவருக்கும், திருமணம்நடத்த எல்லா ஏற்பாடும் முடித்துவிட்டிருந்தார்கள். மணவறைக்குப் பெண்ணையும் அழைத்துவந்துவிட்டார்கள், அந்த நேரத்தில் இயக்க அன்பர்களுடன் போய்த் தடுத்துத் திருமணத்தை நிறுத்திவிட்டேன், சுமார்15-ஆண்டுகட்கு முன்பு—பின்பு ஒருவாரத்தில் வேறொரு வாலிபனுக்கும் அந்த விதவைக்கும் திருமணம் நடத்திவைத்தோம். இன்னும் அவர்கள் நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

எவ்வளவு பெரிய கூட்டமாயினும், எவ்வளவு ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தாலும், நியாயமற்ற செய்கை, நடக்கிறது என்று தெரிந்தவுடன் பின் விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல், அநியாயத்தை எதிர்த்துப் போராடுவது என்னுடைய இயற்கையாகப் போய்விட்டது. அதற்காகப் பலமுறை நான் பல கலகங்களில் ஈடுபடவேண்டியவனாகவும், வழக்குமன்றங்களில் நிற்கவேண்டியவனாகவும், தொல்லைகளுக்கு ஆளாகவேண்டியவனாகவும் ஆனதோடு, குடும்பத்திலேயும் என் மீது கசப்பு ஏற்படும் அளவுக்கு இயக்கப் பணிகளிலே கவனம் செலுத்தவேண்டியவனாகவே இருந்துவந்திருக்கிறேன். எந்தவிதத் தொல்லை ஏற்பட்டாலும், இந்த 22 ஆண்டுப் பொதுவாழ்வில், எதிரிகளைப் பார்த்து நான் நகைத்திருக்கிறேனே ஒழிய, தலைகுனிந்தது கிடையாது. ஆனால், யாருடைய பேச்சினால், ஊக்கமும் உற்சாகமும் பெற்றேனோ, யாருடைய பேச்சும் எழுத்தும் அழுகிப்போயிருக்கும் இந்தச் சமுதாயத்தை திருத்தும் அருமருந்து என்று கருதினேனோ, அவருடைய இன்றைய செயல், அந்தோ! தலையிறக்கம் கொடுத்து விட்டது.

ஆடவனுக்கு 'வயது நாற்பது. பெண்ணுக்கு வயது பதினைந்து. இருவருக்கும் திருமணம்! இரக்கமுள்ளவர்கள் இதை நீதியற்ற திருமணம் என்பார்கள்.

ஆடவனுக்கு வயது 50. பெண்ணுக்கு வயது 20. இருவருக்கும் திருமணம்! இது அக்கிரமம்.

ஆடவனுக்கு வயது 60. பெண்ணுக்கு வயது 20. இது அக்கிரமத்தின் சிகரம். கடின சித்தமுடையவர்கள் கூடக் கலங்குவார்கள் இதைக்கேட்டு.

ஆடவனுக்கு வயது 72. பெண்ணுக்கு வயது 26. 72 வயதில் கல்யாணமாம்! சராசரி வயது அதிக அளவில் உள்ள மேல் நாட்டில் அல்ல, தமிழ்நாட்டில் இந்த நிகழ்ச்சி!! திடுக்கிடச் செய்கிறதல்லவா?

வயது 72 தான். ஆனால் உடலிலே வளமிருக்கிறது என்கிறீர்களா? பாதாம் பருப்பும், பழரசமும் அருந்தி உடலைப்பேணி வளர்த்த மடாதிபதியல்ல, ஜமீன்தாரல்ல, ராஜ்யமில்லாத ராஜாவுமல்ல. பொது

நலத்திற்காக உழைப்பவர். நாற்பதாண்டுகளுக்கு மேலாக நாடுமுற்றும் சுற்றிச் சுற்றிக் களைப்படைந்தவர், பழுத்த தேகம், நரைத்த கேசம்.

அவர் சொல்லலாம், "என் உடற் பசியைத் தணித்துக்கொள்ள அல்ல இந்தத் திருமணம்" என்று. சம்பிரதாயத்திற்கு ஒருபெண் பலி? வெறும் சடங்குக்கு நீதியைக் கொல்வது?

"அந்தக் கன்னியே ஒப்புக்கொள்கிறாள் என்னைக் கலியாணம் செய்துகொள்ள" என்று கூறலாம் அவர். ஒப்புக்கொள்கிறவனை, சம்மதிக்கிறவனை, கொலை செய்தால், கொலை செய்தவனைச் சட்டம் சும்மா விடாது.

வியாதியாயிருந்த கணவன் பிழைத்துக் கொண்டால் தன்னையே கங்கா தேவிக்கு அர்ப்பணிப்பதாகப் பிரார்த்திக் கொண்டாள் மனைவி. கணவன் பிழைத்தான். மனைவி கங்காதேவியிடம் சென்றால் தற்கொலை முயற்சிக்காகத் தண்டனை கிடைக்கும் அவர்களுக்கு.

இந்த எழுபத்திரண்டு வயதுப் பெரியவர், சென்ற நாற்பதாண்டுகளுக்கு மேலாகப் பொருந்தாமணத்தைக் கண்டித்து வந்தவர். இன்று பொருந்தாமணத்தைப் பொருந்தும் என்று சொல்லிப் போராடும் நிலையில் இருக்கிறார்.

இந்த நிகழ்ச்சி தமிழ் நாட்டில்! சமுக சீர்திருத்தவாதிகள் எங்கே? இளைஞர்கள் எங்கே? நீதிவான்கள் எங்கே? சட்டப்படி இதைத் தடுக்க உரிமையில்லாதிருக்கலாம், ஆனால் நியாயப்படி?

ஒருவருக்கு நான் ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கவேண்டும். மூன்றுவருடமாகிவிட்டால் கடனைத் திருப்பிக் கேட்கக், கொடுத்தவருக்கு உரிமையில்லை-நானும் திருப்பிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. இது சட்டம். ஆனால், 50 வருடமானாலும் கடனைத் திருப்பிக்கொடுக்கத்தான் வேண்டும். இது நியாயம். சட்டம் வேறு. நியாயம் வேறு.

சட்டப்படி தவறல்ல என்பதற்காக ஒரு காரியம் நியாயமானதாகிவிடாது.

நண்பர்கள் பேசக் கூச்சப்படுகிறார்கள். எதிரிகள் நேரிலேயே நையாண்டி பேசுகிறார்கள். நான் என் ஆயுளிலே யாருடைய நையாண்டியையும் சகித்துக் கொண்டிருந்ததில்லை. ஆனால் இப்போது எதிர்த்துப் பேச வாயுமில்லை, மனமும் இல்லை.

* * *

தமிழ் நாட்டில் என் நிலையில்—பரிதாபப்படக்கூடிய மாதிரியில் எண்ணற்ற தோழர்கள் நடைப்பிணங்கள் மாதிரி அலைந்து கொண்டிருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியும். இயக்கத்தோடும், பெரியாரோடும் நெருங்கிய தொடர்பு கொண்டோர், அடுத்தாற்போல் தங்கள் நிலை என்ன, என்பதைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மணியம்மையார், பெரியாருக்குத் தொண்டு செய்வதே, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்வதே தன்னுடைய வாழ்க்கையின் லக்ஷ்யமாக கொண்டவர் போன்றுதான் தொடக்கத்தில் — பெரியாரோடு இருந்துவந்தார். ஆனால், பெரிய ஒரு கட்டுப்பாடான திட்டத்தோடு, இந்தப் பணியை மேற்கொண்டார் என்பதை அந்த நாளில் எங்களில் யாரும் சந்தேகித்ததில்லை—பெரியாருக்கும், மணியம்மையாருக்கும் ஏற்பட்டிருந்த உறவு—தந்தையும் மகளும் என்றுதான் எண்ணியிருந்தோமே ஒழிய, இன்று ஏற்பட்டிருப்பது போன்ற நிலை ஏற்படும் என்று எங்களில் யாரும் கற்பனை கூடச் செய்தது கிடையாது.

இயக்கத்தோடும், பெரியாரோடும் தொடர்பு கொண்ட இந்த 22 ஆண்டுகளில், இயக்கத்தில் பல நெருக்கடிகள் பல சமயங்களில் நேரிட்டதுண்டு, இயக்கத்தில் தீவிரமாக உழைத்துவந்த பலர் பல சமயங்களில் பெரியாரோடு மனவருத்தப்பட்டுக்கொண்டு வெளியேறியிருக்கின்றனர். அந்தப் பல சமயங்களிலும் நான் பெரியாரோடேயே இருந்திருக்கிறேன். அதனால் பல சமயங்களில் இயக்கத்தில் உடனிருந்து உழைத்து வந்த பல அருமையான தோழர்களின் வருத்தத்திற்கும், சில சமயங்களில் கோபத்திற்கும் நான் ஆளானதுண்டு. ஆனால் அதற்காகவெல்லாம் நான் எப்போதும் மனங் கலங்கியதில்லை.

சமுதாயத் தொண்டிலே ஈடுபட்ட சுயமரியாதை இயக்கம், மக்கள் மத்தியிலே மிகவும் வலியுறுத்தி மாறுதல் கண்டது திருமண முறைகளிலேதான். பிற்போக்காளர்கள் கூடச்செய்யத் துணியாத ஒரு காரியத்தை இயக்கங் கண்டவராலேயே துணிந்து செய்யப்படுகிறது என்றால் மனங் கலங்குவது மட்டுமா? மானக்கேடு.

* * *

சேலம் மாநாட்டுக்குப் பிறகு இயக்கத்தின் வளர்ச்சி வெகுவேகமாக எங்கும் பரவ ஆரம்பித்தது. நாட்டுப்புறங்களிலெல்லாம், பட்டிதொட்டிகளிலெல்லாம் நம்முடைய கொடிகள் பறக்கின்றன.

மாகாண அரசாங்கம் மட்டுமல்ல, மத்திய அரசாங்கம்கூட இயக்க வளர்ச்சியைக் கண்டு அச்சங்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் எந்த நடவடிக்கையையும் ஆரம்பிப்பதற்கு முன்னால் நம் கழகத்தை எண்ணிப் பார்த்துச் செயலாற்ற வேண்டிய நிலைக்கு நம்முடைய நிலை உயர்ந்திருக்கிறது.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைத்துவிட்டார் பெரியார்.

கோவை மாநாட்டில் அண்ணாதுரை அவர்கள் சி. ஆர். க்கும், பெரியாருக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் விளக்கத்தைக் கேட்டபோது, மாலையிலே விளக்குவதாகக் கோபத்தோடு கூறி மாலையிலே மழுப்பிவிட்டார். தன்னுடைய சொந்த விஷயம் என்று கூறி, அதோடு நின்றாரில்லை—இயக்கத்திலே தனக்கு நம்பிக்கையான ஆள் ஒருவரும் கிடைக்கவில்லை என்று கூறினார். இயக்கத்துக்காகத் தங்களுடைய சொந்த வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொண்ட பலரை எனக்கு நன்றாய்த் தெரியும். இயக்கத்துக்காகவே, வாழ்நாளையெல்லாம் அற்பணித்த வீரர்களையும் நான் அறிவேன். ஆனால் அவர்கள்பாலெல்லாம் பெரியாருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

ஆனால் நேற்றுவந்த ஒரு பெண்ணிடத்தில், முழுநம்பிக்கையும் வைத்து அவரைத்தனக்கு வாரிசாக நியமிக்கப் போவதாகப் பெரியார் தம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டுவிட்டார். யாருக்குயார், யாரை

வார்சாக நியமிப்பது—ஜனநாயகத்தைப் பற்றி நாடெங்கும் ஒவ்வொரு நாளும் பறை சாற்றும் பெரியார் இப்படிப்பட்ட காரியம் செய்யத் துணிந்தாரா? என்று மனம் பதறிக் கேட்டார் சேலம்ஜில்லாத் திராவிடர் கழகத் தலைவர் போளுக்குறிச்சி—தோழர் G. P. சோமசுந்தரம் அவர்கள்.

கண்ணீர் விட்டுக் கதறினார் ரோ. சு. அருணசலம்

தோழர் ஜெகதீசனும் மனம் பதறிப் போனார்.

கனகம்மையார் கோவெனக் கதறிவிட்டார்—மணி இந்தக் கொடுமைக்கு ஒப்புக்கொண்டாரா? என்று மனம் நொந்து கேட்டார்.

மனம் கலங்குவது, தலை குனிவது தவிர, திராவிட சமுதாயத்துக்கு விமோசனமே இல்லையா? இது இயக்கத் தோழர்கள் பலருடைய சோகம் நிரம்பிய கேள்வி.

ஒரு கட்சியின் தலைவரா கட்சிக்கு வாரிசு நியமனத்தைப் பற்றிக் கூறுவது? நாட்டில்வேறுகட்சிகளும் உள்ளன, மக்களும் உள்ளனர், காலமும் விஞ்ஞானக் காலம் என்பதை பெரியார் எப்படி மறந்தார் என்பதை என்னால் ஊகிக்கக்கூட முடியவில்லை.

"யானையிடத்தில் மாலை கொடுத்து அது யார் கழுத்தில் போடுகிறதோ அவர்களைக் கொண்டு வா முடி சூட்டிவிடலாம்" என்று வாழ்ந்த மக்கள் நாட்களிலேயே நாமும் இருப்பதாகப் பெரியார் கருதுகிறார் போலும்!

பெரியார் தன்னுடைய திட்டத்தின்படி ஒரு முடிவின் பேரில், இந்த "அருமையான" காரியத்தை மேற்கொள்ள முடிவு செய்துவிட்டார். அவருடைய காலம் மிகமிகச் சுருங்கியது. சரித்திரத்திலே பொறிக்கப்பட்டவேண்டிய மிக உன்னதமான நிகழ்ச்சியை, பெரியார் இத்திருமண வார்சு நிகழ்ச்சியால் ஒரு பெரிய களங்கமுடையதாக உண்டாக்கிவிட்டார்—இக்களங்கம் அவருடன் நிற்கட்டும். நம்மை,—இயக்கத்தவர்களை—திராவிட இளம் வீரர்களை தொடவேண்டாம்.

திராவிடர் கழகம்யாருடையசொந்தச் சொத்துமல்ல. பன்னெடுங் காலமாய்த் தாழ்த்தப்பட்டுமிதிக்கப்பட்டு வந்த ஒரு பெரும் சமுதாயத்தின் இதய ஒலி. அப்படிப்பட்ட ஒரு கழகத்தைத் தன் சொந்தச்சொத்தாகப் பாவிப்பதும் அனுபவிக்கப் பார்ப்பதும் மன்னிக்க முடியாத குற்றம்—மறைக்க முடியாத மாசு. மக்கள் பார்த்து பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள்—

இந்த நெருக்கடியான கட்டத்திலிருந்து மீண்டும் கழகம் செயலாற்றும் முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், இப்போது ஏற்பட்டுள்ள, சோகமும் துக்கமும் நிரம்பிய இந்தக் குழப்ப நிலைமையிலிருந்து தெளிவு பெற்றுத் தாட்சண்ய மனப்பான்மையை விட்டு விட்டு, செயலாற்றும் திறமை நாட்டுப்பற்றுள்ள அனைவருக்கும் ஏற்பட்டே தீரவேண்டும். அம் மன உறுதி நமக்கிருக்கிறது-என்பதைப், பெரியாருக்கு ஓய்வு கொடுத்து விட்டு-செயலில் காட்ட அனைவரும் முயற்சியிலீடுபடவேண்டும்.

இயக்க வளர்ச்சி, பெரியாருடைய உழைப்பும், அறிவும் மட்டுமல்ல—அவருடைய உழைப்பும் அறிவும் பெருந்துணையாக இருந்ததைப் பெருமையோடு ஒப்புக்கொள்ளுகிறேன்—ஆனால் இயக்கத்தை நம்மில் பலருடைய இரத்தத்தை சொரிந்து, கண்ணை, காலை, உடலை, உயிரைப் பலிகொடுத்து வளர்த்திருக்கிறோம்-நினைவிருக்கட்டும்.

சேலம், அ. சித்தநயன்.

* * *

பாலைவனத்தில் விடுகிறீரே!

சென்னை
25—6—49

மதிப்பிற்குரிய பெரியார் அவர்கட்கு; வணக்கம் பல!

தாங்கள் மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்துக்கொள்ளப்போவதாகஅறிந்து இரண்டு நாளாக ஊண் உறக்கமின்றி உன்மத்தராயிருக்கிறோம். இது பொதுவாகத் திராவிட கழகத்தைப் பாதித்தாலும் குறிப்பாக எங்களைப் பொறுத்தவரையில் எங்கள் சமூக சங்கங்களை உதறித் தள்ளி, நீங்களே இரட்சகர், திராவிட கழகமே புகலிடம் என்றிருந்த எங்களைப் பாலைவனத்தில்விடும்படியான நிலை ஏற்படுவதை நினைக்குந்தோறும் என் செய்வதென்று புரியவில்லை.

காங்கிரஸ் அரிசனர் ஓர்புறமும் செடியூல்ட் வகுப்பு பெடரேஷன் மற்றோர் புறமும் எங்களைக் குறை கூறுவதைப் பொருட்படுத்தாது, எங்கள்கடமையைத்திராவிடர்கழகத்தின் மூலம் உங்கள் தலைமையில் பணியாற்றவந்த எங்களை மீண்டும் பலர் ஏசும்படியான, பரிதவிக்கத் தக்க நிலையில் விடுவது நியாயமா?

எந்தக் கொள்கைக்காக உயிர் வாழ்ந்தோமோ அதற்கு இழுக்கு என்றால் எப்படித் தலையை வெளியில் காட்டுவது? எதிரிகளை எப்படிச் சந்திப்பது?

இதை நீங்கள் புனராலோசனை செய்து உடனே மனுவை வாபிஸ் வாங்கிக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

C. தங்கராஜ், (தலைவர், சென்னை மாவட்ட திராவிடர் கழகம்.)
சத்தியவாணி முத்து, எம். எஸ். முத்து, செயலாளர், சென்னை சுயமரியாதைச் சங்கம்.

* * *

நெஞ்சு துடித்தேன்.

வேலூர் 4—7—49

பெரியார்—மணியம்மை திருமண ஏற்பாடுகேட்டு நெஞ்சு துடித்தேன். இயக்கத்திற்கும்—இயக்கத் தோழர்களுக்கும் அழியாப்பழியைத்தேடித் தர, ஏற்பாடு செய்யப்படும், இந்த முயற்சியை வெறுக்கிறேன். வெறுப்பதன் அறிகுறியாகக் கழகப்பணிகளிலிருந்தும் விலகிநிற்பதோடு, முன்பே ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லா பொதுக் கூட்டங்களிலும், தற்பொழுது இருக்கும் சூழ்நிலையையொட்டி, கலந்துகொள்வதற்கில்லை என்பதை இதன் மூலம் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சி. பி. சிற்றரசு.

* * *

(5-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram,

REGD M. 4642.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 31—7—49 | இதழ் 5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 AUG 1949
MADRAS

கழகத் தோழர்கள் கருத்து

வேண்டாம் பெரியாரின் தலைமை

1922-ம் ஆண்டு முதல் காங்கிரசிலும், வைக்கம் சத்தியாக்கிரகம் முதற்கொண்டு பெரியாருடனும் கலந்து வேலைசெய்துவந்த நான், இதுசமயம் வரையில் ஒன்றும் வெளியிடாதிருந்தமைக்குக் காரணம், பொறுத்திருந்து பார்ப்போம் என்ற எண்ணமேயாகும். 16-7-49-ல் உடுமலைக் கேசுக்கு வந்துவிட்டுப் பெரியார் ஆனைமலையில் தங்கியிருப்பதை அறிந்து, 19-7-49-ல் நேரில் பார்த்துப் பேசிவிட்டு வந்ததிலிருந்து என் மனம் ரொம்பவும் புண்பட்டு விட்டது. இனிமேல் பெரியாரைப் பின்பற்றுவது சரியில்லை எனப்பட்டது. அதற்கு எங்களிருவர்க்கும் நடந்த பேச்சில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுவிட்டு மற்றவைகளை நிறுத்திக் கொள்கிறேன். சமயம் நேரிடும் பொழுது வெளியிடுகிறேன்.

"தங்கள் திருமணத்தால் இயக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறதே. அதற்காக இனிமேல் என்ன செய்கிறது?"

"அதற்கு ஒன்றும்செய்யவேண்டியதில்லை. கொஞ்ச நாள் போனால் உண்மை தெரிந்தால் எல்லாம் சரியாகிவிடும்."

"72-30-க்கும் உள்ள பொருந்தாத் திருமணம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"மனம் ஒத்த இம்மாதிரி இருவர்களுடைய திருமணம் கூடாது என்று எப்பொழுது எந்த இடத்தில் பேசியோ, சொல்லியோ இருக்கிறேன், என்று காட்ட முடியுமா உங்களாலோ அல்லது வேறு யாராலோ."

"தாங்கள் இம்மாதிரி 72-30-திருமணம் நடத்தப் படுவீர்கள் என்று முன்னமே அறிந்திருந்தால் காப்பாற்றி வைத்திருப்பேன். ஆனால் யாராவது வைத்திருந்து இனி வெளியிடுவார்கள்."

"வெளியிடட்டும். இன்னமும் அநேக சங்கதிகள் வெளிவர வேண்டியிருக்கின்றன. நம் மக்கள் ஒரே போக்கு. ஆடுகள் போல் முட்டாள் தனமாகப் போகிறார்கள் விஷமப் பிரசாரத்தை நம்பி."

"ஆம் அதனால்தானே தாங்களும் தூத்துக்குடி மாநாட்டிலும் என்னைப் பின்பற்ற முட்டாள்கள்தான் வேண்டும் என்று சொன்னீர்கள்."

"ஆமாம். அறிவாளிகள் இருவர்சேர்ந்தால் அபிப்பிராய பேதம் உண்டாகும். இனிமேல் என்னைப் பின்பற்ற முட்டாள்கள்தான் வேண்டும்."

இதிலிருந்து, மனம் புண்பட்டு, இனிப் பெரியாரைப் பின்பற்றுவது முட்டாள்தனம்தான் என நினைத்துக்கொண்டேன், உலகம் அறிவாளிகளைப் பின்பற்றி விரைந்து கொண்டிருக்கும் இக்காலத்தில், இரண்டு அறிவாளிகள் சேர்ந்தால் அபிப்பிராய பேதந்தானே என்று சொல்லுகிறார். ஆனால் அறிவின் அபிப்பிராய பேதத்தால் விஞ்ஞான வளர்ச்சி வானத்தை முட்டிப் பார்க்கிறது என்பதை அறிந்து, விளக்கியும் வந்தவர், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் செய்கிறார். அது அவரின் 'பிறவிக்குணம்.' இதுவும் ஓர் நன்மைக்கே. இனி நமது இயக்கம் சமுதாயத்துறையில் மாத்திரமல்லாமல் பொருளாதாரத்துறையிலும் வேலைசெய்ய ஒரு நல்ல தலைவரை ஒரு மாநாடு கூட்டித் தேர்ந்தெடுத்து வேலைசெய்யுமென நம்புகிறேன்.

பி. நடராசு
பொள்ளாச்சி.

[குறிப்பு :—

நண்பர் பி. நடராசு அவர்கள் பெரியாருடன் பல ஆண்டுகள் தொண்டு புரிந்து, அவர் கொள்கைவழி நின்று, அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இதுவரையில் விளங்கி வந்தவர்தான். அவர் முதுமைப்பருவம் அடைந்துள்ளவர். பெரியாரிடம் இதுவரையில் பற்றுடையவர்தான், என்றாலும் சிந்தனைத் தெளிவு அவரை இந்த முடிவிற்கு வரச்செய்துள்ளது.]

★

உறுதிக்கு ஊக்கமளிப்பார்கள்

பெரியாரின் திருமண ஏற்பாடு கண்டு கலங்கினேன். ஆனால் நான் என் கடமையைச் செய்ய என்றும் காத்திருக்கிறேன். நாடும் அப்படியே நடக்கும் என்றும் நம்புகிறேன்.

நாட்டின் பெருங்குடி மக்கள் உணர்ச்சி பெற்று நம் உறுதிக்கு ஊக்கமளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நான் முதலில் பெரியாரின் இந்த ஏற்பாட்டைக் கண்டிக்கும் அறிகுறியாக விலகி நிற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி அவரது தலைமையின் கீழ்க் கழகப்பணி புரிவதில்லை என்பதையும் இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன்.

காரைக்குடி—இராம. சுப்பையா.
தி. க. மாகாண நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்.

★

நம்பிக்கை கொள்வதாக இல்லை

பெரியாரின் போக்கு கண்டு மக்கள் ஒரே கொதிப்படைந்திருக்கிறார்கள். "விடுதலை" ஜாமீன் வகைக்கு வசூல் செய்த பணத்தை அனுப்புவதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம். மேலும் அவர் தன் போக்கை எப்படி மாற்றிக் கொண்டாலும், மக்கள் இனிமேல் அவர் தலைமையில் நம்பிக்கை கொள்வதாக இல்லை. ஆகவே தொடர்ந்து இயக்கத்தை நடத்துவதற்கு மேலால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரங்களை அறிய மக்கள் ஆவல் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை—எஸ். முத்து
தி. க. மாகாண நிர்வாககமிட்டி உறுப்பினர்.

★

முயற்சியை கண்டிக்கிறேன்.

வணக்கம். தலைவர் பெரியார் தோழியர் மணியம்மையைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வதன் மூலம், அவர் தமக்கும், இயக்கத்திற்கும் வாரசு ஆக்கிக் கொள்ள எண்ணும் முயற்சியைக் கண்டிக்கிறேன்.

ஆர். ராமமூர்த்தி,
ம. தி. க. உறுப்பினர்.

எதேச்சாதிகார ஆணவப் போக்கு

பெரியார் அவர்களின் தவறான போக்கு, என் உள்ளத்தில் பெருத்த அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. நான் சுயமரியாதை இயக்க ஆரம்பகாலமுதல் பெரியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருபவன். 'மகாத்மாக்களை' விட, 'அவதார புருஷர்களை' விட பெரியார் ஆயிரம் மடங்கு மேலானவர் என்று மேடைகள் தோறும் கூறிவருபவன். இதற்குக் காரணம் கொள்கைப் பற்று. உயிரைவிட, பொருளைவிட, சுகசௌகரியத்தைவிட கொள்கை முக்கியமானது என்றே இதுவரை கருதி வந்துள்ளேன். பெரியாரின் கொள்கைக்குப் புறம்பான, எதேச்சாதிகார ஆணவப்போக்கு என்னையும், மதுரையிலுள்ள இயக்கத் தோழர்களையும் பெரிதும் புண்படுத்தி விட்டது.

இதுவரை பெரியாரே இயக்கம், இயக்கமே பெரியார், பெரியாரின் நலனே இயக்கநலன் என்றே கருதி வந்துள்ளோம். இனி அவ்வாறிருக்க முடியாது. இயக்கம் வாழவேண்டுமானால் பெரியார் இயக்கத்தினின்றும் விலகிவிடவேண்டும். அவர் தாமாக விலகவில்லையானால் நாம் அவரை விலக்கவேண்டும். நம்மால் அவரை விலக்க முடியவில்லையானால் நாம் இயக்கத்தின்றும் விலகிக் கொள்ளலாம். விரைவில் மத்திய நிர்வாக சபையின் அவசரக் கூட்டத்தைச் சென்னையிலோ வேறிடத்திலோ கூட்ட முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை—எம். அய்யாசாமி
தலைவர், நகர திராவிடர்கழகம்.

★

வீரம் புன்மை நெறியில் வீழ்ந்தது

பெரியார் அவர்களின் பதிவுத் திருமணம், நம் இயக்கத்திற்கு அழிக்க முடியாத களங்கமாகிவிட்டது. தன்மானத் தோழர்களின் வேண்டுகோள் — கண்ணீர் யாவும் பயனற்றுவிட்டன. அவரது பொருந்தா விளக்கங்கள்—அறிக்கை யாவும், நம் வேதனையை மேலும் மேலும் அதிகப்படுத்துவனவாகவேயிருந்தன. உண்மை நெறியைக் காக்க ஒப்பற்ற எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாதுழைத்த அவரின் அஞ்சாத வீரம், இன்று புன்மை நெறியிற் புரண்டு வீழ்ந்தது! உலகப் புகழை ஏற்க இருந்த அவர், அதன் இகழுக்காளாகிவிட்டார்! இதை நினைக்க, உண்மையிலே அவர்பால் இரக்கமே உண்டாகிறது; கண்ணீர் பெருகுகிறது. என் செய்வது. அவரின் இச்செய்கை, அவரை மட்டும் பாதிப்பதாக இல்லை. அவரைப் பின்பற்றிய எல்லோரையுமே பாதிக்கிறது; மானத்தைப் போக்குவதாயிருக்கிறது. "நந்தவனத்திலோர் ஆண்டி......" என்று பாடுவார்களே, அதுபோல், இயக்கமாகிய தோண்டியை அவர் போட்டுடைக்க எண்ணி வீசி எறிந்துவிட்டார். அது தரையில் மோதித் தவிடுபொடியாகாமற் காக்கத், தன்மானத் தோழர்கள் விரைந்து முனைதல் வேண்டும்.

ச. சிவப்பிரகாசம், புதுவை.

★ கண்ணீர்த் துளிகள் ★

பெரியாரின் பொருந்தாத் திருமணம் கண்டு, இச்செய்கை சுயமரியாதை இயக்கக் கொள்கைக்குக் கேடு சூழ்வதாகவும், எதிர்காலக் கட்சி வாழ்வை நாசம் செய்வதாகவும் இருக்கும் காரணத்தால், கழகப் பணிகளிலிருந்து விலகி நிற்பதாகக் கூறிக் கண்ணீர்த் துளிகளைச் சிந்திக் 'கண்டனக் கணை'களை ஏவியுள்ள தோழர்கள் :—

மதுரை—ச. மாணிக்கம்

செம்போடை—தி. க. தோழர்கள்:— க. வில்லன், மு. சித்ரவேலு, சி. சுப்ரமணியன், து. கணேசன், எஸ். எம். இராசகோபாலன், ஆர். காளிமுத்து, சாம்பசிவன், எம். சந்திரசேகரன்.

கும்பகோணம்—கு. ரா. கிருட்டினமூர்த்தி

தேனி—கே. பி. பி. எம். நாராயணமணி

மதுரை—திராவிடத் தோழர்கள்:- ஏ. எஸ். ஏ. சாமி, பி. கதிரேசன், ச. தனசேகரன், தி. கிருட்டினன், க. பாண்டியன், வெ. கிருஷ்ணன், நாகரத்னம், மா. இராசசேகரன், மா முண்டி, த. க. வேலப்பாண்டியன், கு. முத்துச்சாமி, அ. அமிர்தலிங்கம், ராசிங்காரவேல், கு. நடராசன், எம். இராஜு, எஸ். பால்சாமி, டி. ஆறுமுகம், ரா. தனபாலன், கோ. நடராசன், அ பாண்டுரங்கன், கோ. இராமசாமி, மீ. மாணிக்கவேல், எஸ். சின்னதுரை, டி. வாசுதேவன், கு. கிருஷ்ணன், வே. பொன்னுத்துரை, சி. வெள்ளைச்சாமி, மா. மாரியப்பன், ஆர். இராசமன்னார், கி. மா. வள்ளிநாயகம், சி. பெரியசாமி, எஸ். வி. வி. வேலாயுதம், எஸ். கிருஷ்ணசாமி

தர்மபுரி—த. குட்டியப்பன், தி. க. தி. உறுப்பினர்

வேலூர்—கல்லூரி மாணவர்கள்:- வெ. க. தாமோதரன், ந. சுகுணசங்கரன், இலட்சுமி, சாந்தா, ந. லலிதா, சங்கரி, ந. சரோஜினிசங்கரி, ஜெயலட்சுமி, அ. ந. பங்கஜவல்லி, வி. குமாரசாமி, எம். நாகராஜன், அ. இ. பார்த்தசாரதி; கு. ஜெயராமன், ராஜு, டி. கோபால், வ. ரா. அருட்கையன், சுப்பிரமணியம், ஜீ. முனுசாமி

திருமங்கலம்—நெடுமாறன்

கும்பகோணம்—ஓ. எல். முகம்மது

புளியமரத்துக்கோட்டை—அ. கா. இராமசாமி

நாகைவெளிப்பாளையம்—எஸ். சிவப்பிரகாசம் தி. இ. கழகம்

கோயமுத்தூர்—ஏ. இராமசாமி

சிலோன், இங்கிரியா—பூ. சண்முகவேல், க. தமிழ்மணி, எம். கே. சாமி, சு. கிருஷ்ணன்

தூத்துக்குடி—தி. க. தோழர்கள்:— கே. பழனிசாமி, எஸ். ஏசுடையான், எஸ். சண்முகக்கனி, எஸ். சோணாசலம், வி. ஆறுமுகம், வி. சி. பச்சைக்கனி, எஸ். அந்தோனிசாமி, கே. மீனாட்சிசுந்தரம், கே. குருசாமி, எஸ். சின்னத்தம்பி, எம். அப்துல் காதர், பிரான்ஸிஸ், சு. பி. குட்டி, சி. தங்கராசன், ச. கணேசன், எஸ். ஆறுமுகம், கே. இராமசாமி, ஏ. பால்ராஜ், ஏ. எஸ். சி. எஸ். ஆனந்தராஜன், சுப்ரமணியன், பச்சையப்பன், சுப்ரமணி, தமிழரசன், திராவிடமணி, பரமசிவன்.

திருச்சிறுப்பள்ளி—பி. ஜே. லூயிஸ்

சென்னை—கொ. ரு. பாலகிருஷ்ணன் B. Sc.

மாயவரம்—ஆர். பழனிச்சாமி, தி. கழகம்.

ஒரத்தநாடு—ஏ. வடிவேலன், பாரதிதாசன் படிப்பகம்

இராசபாளையம்—ஆ. சொ. சேதுராமலிங்கம் நகர தி. க. முன்னாள் தலைவர்

மலேயா—எம். எஸ். அருணாசலம்

சிங்கப்பூர்-வீ. கு. ஜீவனந்தம், ஆசிரியர் 'இடிமுழக்கம்'

விருதுநகர்—தி. கழக தோழர்கள்:— எம். தங்கப்பன், வை. பழனியப்பன், மு. குருசாமி, வி. தீனதயாளன், வி. நடராசன், ஆர். கந்தசாமி, எஸ். எம். நடராசன், வே. இராஜேந்திரன், அ. சங்கரபாண்டியன், கே. தங்கசாமி, எஸ். ஏ. சாமி, கே. கே. பெரியசாமி, எம். நடராசன், என். தங்கமணி, ஏ. கருணாகரன், எஸ். மகாலிங்கம், எஸ். எம். அருணாசலம், க. பொன்னையா, கா. ஆறுமுகம், வி. எஸ். மாரியப்பா, ஆ. நடேசன், எம். இராமசாமி, எஸ். மாடசாமி, எம். எஸ். கே சாமி, இருளப்பன், வி. கே. பஞ்சாட்சரம், அ. சோலை, டி. பி. எஸ். சொக்கர்சாமி, சண்முகவேல், ப. குருசாமி, பெ. சங்கரலிங்கம், கே. எஸ். சுப்பய்யா, பி. நடராசன், பெ. தாளையப்பன், அ. செல்லையா, பு. இராசதுரை, இரத்தினம், எஸ். பி. மாரியப்பன், பெ. க. பதி, சிவபாக்கியம், எஸ். தங்கப்பன், கே. முத்துச்சாமி, கே. மாரியப்பன், பழனிசாமி, எஸ். மாரியப்பன், வி. கோபாலகிருட்டிணன், ரா. முருகய்யன், பி. இரத்னசாமி, வி. நடராசன், ப. சங்கரன், எஸ். எஸ். சுப்பய்யா, கு. நடராசன், குறிப்பு:— மேலே கையொப்பமிட்டிருப்பவர்கள் விருதை, செந்திநாயகபுரம்தெரு, தி.க. தோழர்கள்.

தூத்துக்குடி—நா. வெள்ளியபழம்

மதுரை—அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள்:— சை. முகம்மது காசிம், டி. சுந்தரம், ச. வெள்ளையங்கிரி, மு. முகம்மது இஸ்மாயில், ம. அப்துல் காதர், ஜெ. சின்னசாமி, சி. ஆசைமாணிக்கம், கி. முத்தையா, கி. பொன்னையா, வே. சௌந்தரராசன், ஆ. சக்ரபாணி, ஆழிக்கையன், மு. சி. முகுமிலன், மா. சு. மணி, மு. அரங்கசாமி, எம. நடராசன், அ. சுந்தரராசன், எஸ். கெர்ராம்,

மா. ஜகதீசன், கு. பாஸ்கரன், பெ. வெ. ந. சாமி, எஸ். இராமசுப்ரமணியன், எம். தனசேகரன் பொ. சுப்பையா, சி. கோவிந்தமணி, சர்தார், அ. ஹ. கான்

ஜான்சி—இராணுவத் தோழர்கள்:— உடுமலை கா. பழனிச்சாமி, பாண்டியன், முனிரத்தினம், இராமதாஸ், காத்தான், வில்வநாதன், வி.நாதன், ராஜுலு பாண்டுரங்கன், கிருஷ்ணன், திராவிடமணி, பாலகிருஷ்ணன், வெள்ளைச்சாமி, ஆர். சண்முகம்.

காஞ்சிபுரம்—அண்ணாதுரை படிப்பகத்தார்:—வி. ராஜமாணிக்கம், கச்சபாலன், கெ. தணிகாசலம், கு. புண்ணியகோட்டி, வி. வைத்தியநாதன், எ. மாணிக்கவேலு, வி. துரைசாமி, கு. கணபதி, ரா. அண்ணாமலை, ச. ராஜமாணிக்கம்.

தளவாய்புரம்—கழகத்தோழர்கள்:—கு. மு. ராமசாமி, மா. ப. ராமசாமி, அ. வன்னியப்பெருமாள், உ. மாயாண்டி, அ. பாலப்பன், ரு. க. அய்யாச்சாமி, க. ராமசாமி, க. பொன்னப்பன், எம். கனகசபாபதி, எம். எஸ். அனந்தப்பன், க. ச. சாமுவேல், ரா. அருஞ்சுனை, மு. அருஞ்சுனை, கு. கன்னியப்பன், க. பழனியப்பன், அ. வீரபத்திரன், இ.ரா.நா. ராமசாமி, ச. நாகரத்தினம், வீ. பு. லக்ஷ்மணன், எல். பி. சாமி.

கடலாடி - கழகத் தோழர்கள்:— கே. ஜி. சரவணன், எஸ். ராசகோபால், எஸ். நாராயணசாமி, ஏ. சிவானந்தம், எஸ். ஆர். ராவணன், ஏ. ஆறுமுகம், எஸ். ஜனார்த்தனன், எம். சுந்தரமூர்த்தி, மா. நடராசன், கே. ஏ. பஞ்சாட்சரம், எஸ். சுந்தரராசன் கே. ஏ. சுந்தரமூர்த்தி, கே. எஸ். கோவிந்தசாமி.

பொன்னேரி — திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக இரா. சுந்தரேசன், அரசூர். கோவிந்தராசன்.

அய்யன்பேட்டை (காஞ்சிபுரம்):— பி. டி. வெங்கடசுப்பன், ஆர். அர்த்தநாரி, பி. டி. மாணிக்கவேல், ஏ. எஸ். முத்துக்குமாரசாமி, டி. கே. சாமிவேலு, எஸ். எம். ஆறுமுகம், தெ. புண்ணியகோட்டி, வி. வீரபத்திரன், தி. க. ராகவன்.

திட்டகுடி - ரா. பிச்சகுட்டி, தலைவர், தி. இ. கழகம்

சென்னை - திருவல்லிக்கேணி தோழர் மன்றத்தார்:— ஜே. ராசாபாதர், பா. வேணுகோபால், து. நாகலிங்கம், எம். கிருஷ்ணன், எஸ். ஜெகதீசன், டி. ஜி. அரசு, பி. தனியன், எம். கோபால், பூங்காவனம்.

மதுரை - என். எஸ். ராசா, தலைவர், தெற்குவாசல் தி. இ. கழகம்.

தூத்துக்குடி — சமதர்ம திராவிட இளைஞர் வாசகசாலைத் தோழர்கள்:— எஸ். ஆர். பிச்சை, சி. காசி, ஆ. வேலாயுதம், வி. அய்யம்பெருமாள், எஸ். பி. பிச்சை, பா. சுடலைமணி, சு. சிதம்பரம், ச. தங்கவேலு, தி. சின்னத்துரை, பொன்னம்பலம், கு. தாயுமானவன், அ. ஜெயராமன், ரு. ருக்கம்மாள், சரஸ்வதி, தங்கராஜ், ஏ. கனி, கிருட்டினன்.

கஞ்சாபுரம் - பெரியார் வாலிபர் சங்கத் தோழர்கள்:— ரா. ரத்தினம், மு. ஆதிநாராயணன், கு. ரத்தினம், த. சோலையப்பன், ஏ. ஹைக்கோர்ட், பொ. பெரியசாமி, ரா. பெரியலிங்கம், ஆ. முத்துச்சாமி, பொ. சண்முகையா, சி. ராமசாமி, மு. ராமசாமி, த. மாரியப்பன், மா. முத்துவேல், சு. மாரியப்பன், மு. கிருஷ்ணன், பெ. காளியப்பன், மு. தவசிமுத்து, மா. சின்னமணி, அ. குமாரவேல், மீ. செல்லையா, வி. முத்தையா, மா. பிச்சை, பா. ராமச்சந்திரன், பா. அர்ச்சுனன், கு. குருசாமி, கி. பெருமாள், செ. பொன்னுச்சாமி, ச. மாரியப்பன், ச. ஆத்தியப்பன், பொ. கருப்பசாமி, ஆ. மாரியப்பன், அ. கைலாசம், ந. காசியப்பா, சு. கருப்பசாமி, மா. சுப்பையா, த. ரத்தினம், ச. ஸ்டாலின், ச. தங்கராசன், மா. அர்ச்சுனன்,

முத்துப்பேட்டை - கழகத் தோழர்கள்:— அரு. மு. கணபதி, ந. தருமலிங்கம், அ. கா. கந்தசாமி, வ. இராமநாதன், கி. இராமாநுசம், ப. நாகரத்தினம், இரா. தெட்சிணாமூர்த்தி, பி. காலசாமி, அ. கா. சாம்பசிவம், கூ. கருப்பய்யன், க. ராஜம், ரெ. ராமமூர்த்தி, வ. பன்னீர்செல்வம், பா. பெரியசாமி, ஆர். ராசமாணிக்கம், சிவலிங்கம், அரு. மு. சோமசுந்தரம், டி. என். சிவசங்கரன், பொ. செகநாதன், இரா. நடராசன், கி. சீனிவாசன்.

மடத்தூர் - கழகத் தோழர்கள்:— ஏ. தங்கஞானமணி, ஏ. திரவியம், வி. சிவன், திருமணி, பி. பராவேசம், பி. திருமால், பி. ராஜபாண்டியன், சி. மணிமுத்து, ஆறுமுகம், சிலுவைமுத்து, பார்வதிநாதன், நடராசன், சண்முகம்.

புதியம்புதூர்—பெ. துரைசாமி, செயலாளர், தி-க

பட்டணம்—என். செங்கோடு, செயலாளர், தி-க

நுங்கம்பாக்கம்—கழகத் தோழர்கள்:— தி. க. திருவேங்கடம், ஆ. சி. கிருட்டிணன், பா. சௌந்தரராசன், பா. செல்வராஜ், வ. எத்திராஜ், டி. சுப்பிரமணியம், அ. ராசலிங்கம், எம். பெருமாள், வ. சங்கரநாராயணன், ர. சுந்தரன், தி. ம. உலகநாதன், ச. பாலசுந்தரம், பா. முத்துக்குமரசாமி.

மேட்டுப்பாளையம்-சீர்திருத்த இளைஞர் மன்றத்தார்:— இ. அ. மஜீது, க. வெ. இராசகோபால், வி. எஸ். அருணாசலம், போ. இரங்கநாதன், ஹெச். எஸ். சுத்தார், மா. வேலாயுதம், அ. அ. ஷை, பொ. சு. மணியன், பி. நடராசன், மே. அ. கந்தசாமி, அ. கண்ணன், அ. அப்துல்வகாபு, ம. சுப்பையன், அ. மு. உசேன்.

பணகுடி—கழக அன்பர்களும், ஆதரவாளர்களும்:— கே. வி. நாயகம், வி. வன்னியன், எம். சடைஅரசன், ஞா. ஏசுஅரசன், எஸ். வேலாயுதம், மா. ராசப்பா, இ. சங்கரலிங்கம், ஏ. கோமதி, ஹெச். சையத்மூகா, ஹெச். சையத்முஸ்தபா, என். சொக்கலிங்கம், எஸ். ஏ. ஆறுமுகம்.

பழனி - திராவிடர் கழக அன்பர்களும் ஆதரவாளர்களும்:— ஆர். ராதா, கா. வெங்கடாசலம், பி. எஸ். ஷேக், கே. வேலுத்தாய், ஆர். தனபாக்கியம்,

(13-ம் பக்கம் பார்க்க)

OFFICE OF THE ... OF BOOKS ... 1 ... 943 MADRAS

சங்கடம் தீர மருந்து

★ ★ ★

"தற்சமயம் காங்கிரசுக்குப் பதிலி கிடையாது என்பது உண்மைதான். காங்கிரசிடமிருந்து அரசாங்கப் பொறுப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தகுதி வாய்ந்த கட்சி தேசத்தில் தற்போது கிடையாது என்பதும் உண்மைதான்.

தற்சமயம் இல்லாத காரணத்தால் எப்போதுமே இருக்க முடியாது என்று சொல்வதற்கில்லை.

தற்சமயம் காங்கிரசுக்குப் பதில் இல்லையென்றால் எப்போதுமே ஏற்படாது என்பதற்கில்லை.

எந்த நாளிலும் காங்கிரசுக்கு எதிர்ப்புக் கட்சியே இருக்கக் கூடாது என்றும் சொல்ல முடியாது.

ஜனநாயக ஆட்சியில் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு அவசியம் இருக்கவேண்டும். அரசாங்கத்தை நடத்தும் கட்சிக்கு எதிர்க்கட்சி ஒன்று அவசியம் ஏற்படவேண்டும். அப்போதுதான் சர்க்கார் காரியங்களும் சரிவர ஆராய்ச்சி செய்யப்படும். இரு கட்சியாரின் வாதப் பிரதி வாதங்களின் மூலம் குற்றங் குறைகள் வெளியாகிச் சீர்படும்.

எதிர்ப்பில்லாத அரசாங்கம் எவ்வளவு நல்ல அரசாங்கமாயிருந்தாலும், கொஞ்சநாளில் சீர்கெட்டுவிடும். அந்நிலையில் அரசாங்க மந்திரிகள் தான்தோன்றித்தனமாகக் காரியம் செய்வார்கள். பொதுமக்களின் ஆட்சேபங்களைப் பொருட்படுத்தாது யதேச்சாதிகாரிகளின் நிலைமைக்குச் சீக்கிரத்தில் வந்து விடுவார்கள்."

இந்த உபதேச மொழிகளைக் கூறுபவர், இன்று ஆளவந்துள்ள காங்கிரசுக்கு மாறுபட்டு விளங்கும், காங்கிரஸ்காரர்கள் அகராதிப்படி 'தூற்றுவதையே' தொழிலாகக் கொண்ட மாற்றுக் கட்சிக்காரர்கள் யாராகவாவது இருக்கக் கூடும் என்றே எண்ணத்தோன்றும். அவர்கள் தானே எதிர்க்கட்சியினராக ஆட்சிப்பீடத்தில் அமர ஆசைப்படுவார்கள், ஆகவே அவர்கள் கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை என்று கூறி அலட்சியமாக இருக்கத் தோன்றும்.

இந்த உபதேசமொழிகளை இன்று நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு வழங்கும் நாயகமாக முன்வந்திருப்பவர் வேறொருவருமில்லை, ஆச்சாரியாரின் அடிச்சுவட்டைப் பன்பற்றிக், காங்கிரஸ் நெறி தவிர, யான்போய் ஆளும் வேறு நெறி கண்டறியேன் என்று கூறும் நிலையில் என்றும் இருந்துவரும் 'கல்கி'யாரே யாவார்.

'கல்கி' தன் 17—7—49 இதழில் 'எதிர்ப்புக் கட்சி வேண்டியதே!' என்ற மகுடமிட்டு மேலே கண்ட கருத்துக்களைப் பொழிந்துள்ளது. 'வேண்டியதே!' என்பதன் அவசியத்தை இப்பொழுதுதான் உணர்ந்திருக்கிறது. உணரும் வாய்ப்பு இப்பொழுதுதான் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க மந்திரிகள், தான்தோன்றித் தனமாகக் காரியம் செய்கிறார்கள்; பொதுமக்களின் ஆட்சேபங்களைப் பொருட்படுத்தாத யதேச்சாதிகாரிகளின் நிலைமைக்கு வந்துவிட்டார்கள்; சர்க்கார் திட்டங்களும், சர்க்கார் காரியங்களும் சரிவர ஆராய்ச்சி செய்யப்படவில்லை; அரசாங்கத் திட்டங்களிலும் நிர்வாகத்திலும் உள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி அரசாங்கத்தைச் சீர்திருத்தும் நிலையில் யாரும் இல்லை என்பதைக் 'கல்கி' உணர்கிறது; ஆகவேதான் 'எதிர்ப்புக் கட்சி வேண்டியதே!' என்று கூறுகிறது. 'வேண்டியதே' என்பதிலுள்ள 'ஏ'காரம் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்த்தும் அறிகுறியாகப் போடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இத்தகைய உணர்வு 'கல்கி' போன்றார்க்கு இப்பொழுதாவது ஏற்பட்டதே என்பது குறித்து நாம் மகிழ்கிறோம்.

காங்கிரஸின் மாபெருந் தலைவரிலிருந்து சாதாரண [illegible] கள் வரையில், வெள்ளைக்காரன் ஆளுகின்ற காலத்திலும், தாங்கள் ஒரே கட்சிதான் நாட்டிலே நிலவவேண்டும்' என்றும், நாட்டிலே இரண்டே கட்சிதான் உண்டு, ஒன்று பிரிட்டிஷ் மற்றொன்று காங்கிரஸ் என்றும், ஆண்டால் நாங்கள் ஆளுவோம் இல்லையானால் பிரிட்டிஷ் ஆளட்டும், வேறோர் கட்சி ஆள நாங்கள் விடமாட்டோம் என்றும், எதிர்க்கட்சி தோன்றுவதையோ, எதிர்க்கட்சிக் கருத்துக்கள் நிலவுவதையோ, எதிர்க்கட்சியின் அணைப்பைப் பெறுவதையோ, விரும்பாதவர்களாகவேதான் இருந்துவந்தார்கள்.

ஆட்சிப்பீடம் ஏறிய பிறகு, காங்கிரஸ் தலைவர்கள் பலரும் கூறினார்கள், நாட்டை ஆளத் தகுதியும், திறமையும், உரிமையும் காங்கிரஸ் ஒன்றுக்குத்தான் உண்டு, என்றுவேறு கட்சி எதுவும் இருக்க முடியாது—இருக்கக் கூடாது—இருக்கவிடக் கூடாது—தோன்றவே கூடாது என்றெல்லாம் பேசி வந்தார்கள்—பேசியும் வருகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளிலெல்லாம் திராவிடர் கழகத்தவராகிய நாமும், இதர இடதுசாரிக் கட்சியினரும் சுட்டிக் காட்டி, காங்கிரஸின் போக்கு, பாஸிஸப் பாதையில் செல்லுகிறது, எதிர்க் கட்சியே இருக்கக்கூடாது என்று சொன்னால் அது ஜனநாயக ஆட்சி என்ற பெயர் பெறாது, ஆளுகின்ற கட்சியினர்க்கு எதிர்க் கட்சியினர் இருந்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டால்தான் ஆட்சியிலே குற்றங்குறைகள் நீங்க வழியேற்படும் என்று எடுத்துச் சொன்னோம். அந்த ஆரம்ப நிலையில் ஆளவந்தாரின் போக்குக்குக் காங்கிரஸ் ஏடுகள் பலவும் ஆதரவளித்து, எதிர்க் கட்சியினரை ஒழிக்கத் தங்களாலான கைங்கரியங்களையும் செய்துவந்தன.

திராவிடர் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, சோஷியலிஸ்ட் கட்சி ஆகிய

வற்றின்மீது சென்னை அரசாங்கம் தன் அடக்குமுறைகளை ஏவி அவற்றின் நடவடிக்கைகளையெல்லாம் அழித்தொழிக்க முற்பட்டுத் தீவிர செயலில் ஈடுபட்ட போதெல்லாம் 'கல்கி' போன்ற பல பத்திரிகைகள் அரசாங்கத்தின் கருத்துக்கு ஆதரவளித்து, எதிர்க் கட்சிகளை ஒழித்துக் கட்டுவதிலே மகிழ்ச்சி கொண்டிருந்தன. எண்ண—எழுத—எடுத்துக்கூற உரிமை ஆகியவை எங்கள் ஆட்சியிலே உண்டு என்று கூறினீர்களே, அவை எங்கே என்று கேட்ட போதெல்லாம், 'ஜனநாயகத்திற்குப் பாடுபடுகிற காங்கிரஸ் சர்க்காரால் நாக்கறுப்புச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. காங்கிரஸ் ஒன்று தவிர வேறோர் கட்சி இருக்க முடியாது — இருக்கக்கூடாது — இருக்கவிடக்கூடாது என்ற முறையிலேயே அரசாங்கம் காரியங்களை நடத்திச்சென்றுகொண்டிருந்ததால், இதுவரையில், 'கல்கி'யாரின் நோக்கப்படி 'அரசாங்க திட்டங்களிலும் நிர்வாகத்திலும் உள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் நேர்மையான முறையில் எடுத்துக்காட்ட' வசதியில்லாமற் போயிற்று. வசதியில்லாமற் போகவேதான் 'மந்திரிகள் தான் தோன்றித் தனமாகக் காரியம்' செய்ய ஆரம்பித்தார்கள்; 'பொது மக்களின் ஆட்சேபங்களைப் பொருட்படுத்தாத யதேச்சாதிகார நிலைக்கு'க் கொண்டுவரப்பட்டனர்.

நேர்மையான குற்றங்களையும், குறைபாடுகளையும் எடுத்துக்கூற முன்வரும்போது, அவற்றின் தன்மைகளைக் கவனியாது, அவற்றை எதிர்க் கட்சியினர் சொல்லுகின்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக அடக்குமுறைச் சட்டங்களை அவர்கள்மீது அரசாங்கம் அவிழ்த்துவிட முற்படும் போதெல்லாம் 'கல்கி' உண்மைக்குப் பரிந்து பேச முன்வந்திருந்தால் — இனிமேலாவது வருமேயானால் அது போற்றுவதற்குரியதாகக் கொள்ளப்படும். 'எதிர்ப்புக் கட்சி அவசியம் வேண்டும்' என்று 'கல்கி' சொல்லுவதிலே உண்மையும், நேர்மையும், ஒழுங்கும் இருக்குமேயானால் அரசாங்கத்தின் நாக்கறுப்பு பேனா முறிப்பு அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து நிற்க முன்வரட்டும்.

காங்கிரஸுக்கு எதிர்க் கட்சி "இருக்க முடியாது என்று சொல்வதற்கில்லை—எப்பொழுதுமே ஏற்படாது என்பதிலே — இருக்கக்கூடாது என்றும் சொல்லமுடியாது எதிர்ப்பு அவசியம் இருக்கவேண்டும்" என்று 'கல்கி'யார் கூறுவதை நாம் மனமாரப் பாராட்டுகிறோம் வரவேற்கிறோம். அந்த நிலை ஏற்பட 'கல்கி' போன்ற ஏடுகள் பாடுபட முன்வரட்டும்.

இதுவரையில் எதிர்க் கட்சித் தோன்றுவது பற்றி அலட்சியமாக இருந்தேன், இப்பொழுது அது தோன்றவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துவிட்டேன் என்பதைக் காட்டும் அறிகுறியாகத்தான் போலும், 'எதிர்ப்புக் கட்சி வேண்டியதே!' என்று கூறும்போது ஒரு ஆச்சரியக் குறியையும் அதோடு இணைத்திருக்கிறது. எதிர்ப்புக் கட்சி ஒன்று தேவை என்று காங்கிரஸ் ஏடே கூறும் நிலை வந்தது, நல்ல அரசியல் நிலை ஏற்படுவதற்கான அறிகுறி என்றே கொள்ளலாம், அதன் அடிப்படைத் தத்துவத்திற்கு ஆக்கமளிக்க அனைவரும் முற்பட்டால்.

காங்கிரஸுக்கு எதிர்ப்பு முன்னணி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைப், பம்பாயில், தோழர் சரத்சந்திரபோஸ் வெளியிட்டுள்ளார். எதிர்ப்பு முன்னணி ஒன்று அமைந்தால்தான் காங்கிரஸின் எதேச்சாதிகார ஆணவப் போக்கு ஒழிந்து, நாட்டில் நல்லநிலை ஏற்பட வழியேற்படும் என்று கருதுகிறார். காங்கிரஸை எதிர்த்து நிற்கும் இடதுசாரிக் கட்சிகள் பலவும் தம்முள் முழுவதும் கருத்து ஒன்றி நிற்கும் நிலையேற்படாவிட்டாலும், அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளை ஒட்டியாவது ஒன்றி நின்று செயலாற்ற முற்பட்டால் அரசாங்கத்தின் குற்றங்களை நீக்கச் சொல்லலாம்; குறைகளைக் களையச் சொல்லலாம்; தவறான போக்கைக் கண்டித்துத் திருத்தலாம். அந்த நிலை ஏற்பட்டால் உடனடியாகத் தீரக்கூடிய பலசங்கடங்கள் அரசியல்—பொருளாதார — சமுதாயக் கோளாறுகள் தீர வழியேற்படும். சங்கடந் தீர அதுதான் உடனடியாகக் கொள்ளக்கூடிய சிறந்த மருந்து.

ஐக்கிய முன்னணி அவசியம் என்று வலியுறுத்தும் இந்த நேரத்தில், 3—7—49 "விடுதலை"யில் பெரியாரால் வெளியிடப்பட்டிருக்கும் "சுயராஜ்யத்தின் அலங்கோலம்" என்ற தலைப்பின் கீழ் வரும் கருத்தையும் வலியுறுத்திக் காட்ட விரும்புகிறோம்.

இந்த நேரத்தில் பொது மக்களுக்கு ஒரு ஐக்கிய முன்னணி தான் தேவை.

உண்மையாகவே சொல்லுவோம், காங்கிரஸ் ஒழிந்து அதன் கல்லறை மீது புறப்படும் ஆட்சி ஒரு சமதர்மப் பொதுவுடைமைக் கட்சியாகத்தான் இருக்கமுடியும். அவர்கள் எந்தக் கட்சிப் பெயரைச் சொல்லிக்கொண்டாலும் இனிக் கட்சி ஆளமுடியாது. கொள்கைதான் ஆளமுடியும். ஆதலால் கட்சிக்குக் கட்சி போராட்டம் கிளம்பி ஐக்கிய முன்னணி ஏற்படாமல் போகும்படி எந்தக் கட்சியாரும், இனி நடந்துகொள்ளக் கூடாது என்பது நமது விருப்பம்" என்று பெரியார் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி வேண்டியதே! என்று 'கல்கி' கூறுவது களங்கமற்ற எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு தான் என்றால், ஐக்கிய முன்னணி ஏற்படவும், நேர்மையான, ஒழுங்கான, நியாயமான முறையில் அது பாடு படவும், நாம் பாடுபட முற்படுவது போலவே 'கல்கி' யாரும் பாடுபட முன்வருவாராக!

பறிமுதல்!

சி. என். எ. எழுதிய "இலட்சிய வரலாறு" என்ற புத்தகத்தைத் தடை செய்து, பறிமுதல் செய்யும்படி சர்க்கார் 'கருணை' செய்துள்ளது.

ஜாமீன் வழக்கு

"திராவிடநாடு" ஜாமீன் வழக்கு, 25—7—49-ல் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் தோழர்களுக்குக் காணிக்கை

பிறப்பிலே பேதம்! இந்த விபரீத உணர்ச்சி, மனித சமுதாயத்தை இந்த நாட்டில் சின்னா பின்னமாக்கிச் சீரழித்ததைப்போல், வேறு எந்நாட்டிலும் செய்ததில்லை.

பேத உணர்ச்சி, மறைக்கப்படாத—மறக்கப்படாத முறையில் மனித சமுதாயத்தைப் பிரிவுபடுத்தி வைத்தது. ஏற்பட்ட பிரிவுகளும் சமதன்மையுடைய சரிசமமாகப் பிரியவில்லை. உயர்வு என்றும் தாழ்வு என்றுமே பிரிந்தன.

உயர் வகுப்புகள் வாழ்க்கை வசதிகளை எளிதில் பெற்றன. தாழ்வு வகுப்புகள் அரிதில் முயன்றாலும் வாழ்க்கை வசதிகளைப் பெற முடியாதவைகளாகவே வைக்கப்பட்டன. உயர்ந்தவை உயர்ந்துகொண்டே இருந்தன; தாழ்ந்தன தாழ்ந்துகொண்டே இருந்தன. இந்த உயர்வு—தாழ்வு நீங்க அப்பொழுது மனமும் ஏற்படவில்லை; மார்க்கமும் கிடைக்கவில்லை. மாறாக இடையே இருந்த பிளவின் அளவு உயர்வகுப்பினரால் முடிந்தமட்டும் பெரிதாக்கப்பட்டது. இந்த முயற்சிக்குக் கடவுள் சாட்சிக்கழைக்கப்பட்டார்; புராண இதிகாசங்கள் தூதுவிடப்பட்டன; அரசியல் சட்டம் அணைப்பு கொடுத்தது; சமுதாயச் சட்டங்கள் சம்மதமளித்தன. இந்த நிலை பலகாலம் இந்த நாட்டில் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

நாட்டில் அன்னிய ஆட்சி கொலுவிருக்கத் தொடங்கியதும், வாழ்க்கை நிலைமாறி, மக்களின் வாழ்வு, கல்வியறிவு, உத்தியோகம், பதவி, அதிகாரம் இவற்றில் அமையும்படியான நிலை ஏற்பட்டது. கல்வியறிவு—உத்தியோகம்—பதவி— அதிகாரம் ஆகிய வாழ்க்கை ஆதாரங்கள், சமுதாயத்தில் உயர்ந்தோர்—தாழ்ந்தோர் ஆகிய இரு வகுப்பினருக்கும் முன்னிலையில் பொதுவாக வைக்கப்பட்டதும், அந்த ஆதாரங்களை எளிதில் பற்றிக்கொள்ள பரம்பரையாகப் பழக்கப்பட்ட உயர்வகுப்பினரால் முடிந்தது; உழைப்பிலேயே உழன்றுவந்த தாழ்ந்த வகுப்பினரால் முடியாது போயிற்று. குறிப்பாகக் கூறவேண்டுமானால், கல்வி — உத்தியோகம் — பதவி — அதிகாரம் ஆகியவைப் பார்ப்பனர்களால் பற்றிக்கொள்ள முடிந்தன; பார்ப்பனரல்லாதாரால் பற்றிக்கொள்ள முடியாமற் போயிற்று. முதலில் பற்றிக்கொள்ளும் வாய்ப்புப் பெற்ற பார்ப்பனர்கள், அத்தகைய வாழ்க்கை ஆதாரங்களைப் பார்ப்பனரல்லாதார் முயன்றாலும் பற்றிக்கொண்டுவிட முடியாதபடி காப்பாற்றிவரத் தொடங்கினார்கள். இது பல ஆண்டுகள் நடைபெற்றது.

ஓட்டப்பந்தயத்தில் நன்றாக ஓடிப்பழக்கப்பட்ட ஒருவனையும், கால்நொண்டியாக்கப்பட்ட ஒருவனையும், ஒன்றாக நிறுத்தி ஓடச்செய்தால் யார் வெற்றி பெறுவார்கள் என்பது சொல்லாமலே விளங்குமே. ஆனால் அவ்விருவருக்குள்ளேயே ஓட்டப்பந்தயம் நடத்தித் தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டால், கால் ஒடிந்த நொண்டிக்கு ஓடவேண்டிய தூரத்தில் சிறிது தூரம் தள்ளிக்கொடுத்துச் சலுகை காட்டிய பிறகு இருவரின் திறமையையும் பரிசோதிக்க விரும்புவார்கள். அது போல, கல்வி முதலிய துறைகளில் இடம்பெறும் விஷயத்தில், பல நூற்றாண்டுகளாக நொண்டியாக்கப்பட்ட பார்ப்பனரல்லாத சமூகத்தோடு, பழக்கப்பட்ட பார்ப்பன சமூகத்தை ஒருசேர நிறுத்தி, உங்கள் திறமையால் இடங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னால் அது எப்படி பொருத்தமுடையதாகும்? கால் நொண்டியானவனுக்குச் சலுகை காட்டுவது போல நொண்டியாக்கப்பட்ட பார்ப்பனரல்லாத சமுதாயத்திற்கும் சலுகைகள் காட்டப்பட்டால்தான் வாழ்க்கைப் பந்தயத்தில் ஓடி ஓரளவுக்காவது வெற்றிபெற வாய்ப்பு ஏற்படும் என்று, பார்ப்பனரல்லாத தலைவர்களிலே ஆதிகர்த்தர்களாக விளங்கினவர்கள் எண்ணினார்கள். வகுப்புவாரி பிரதிநிதித்வம் அளிப்பதே ஏற்ற மருந்து என்று கண்டனர்.

வீழ்த்தப்பட்ட பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களை, அதாவது திராவிடப் பெருங்குடி மக்களை, வாழ்விலுயர்த்த அரசாங்க அலுவல்களிலும், அதனைச் சார்ந்த துறைகளிலும் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை அளித்துத் தீரவேண்டும் என்ற முதற்படியான வேலையை இலட்சியமாகக் கொண்டு பார்ப்பனரல்லாத இயக்கம் தோன்றியது; கொள்கை-நோக்கத்தை எங்கும் பரப்பியது; பிறகு ஆட்சிப்பீடம் ஏறியது; வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையை அரசாங்க அலுவல்களில் புகுத்தியது; வெற்றியும் கண்டது.

நீதிக் கட்சியால் வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறை புகுத்தப்பட்ட போதெல்லாம் காங்கிரஸ்காரர்கள்—அவர்களில் பார்ப்பனரல்லாதார் உட்பட—நீதிக்கட்சியினரைத் தூற்றினார்கள்; வகுப்புவாதிகள் என்று கூறித் துவேஷப் பிரசாரத்தைக் கிளப்பினர்.

ஓமந்தூரார் ஆட்சிப்பீடம் ஏறிய பொழுது பார்ப்பனர்கள் குதூகலித்தார்கள், ஜஸ்டிஸ் கட்சியால் ஏற்படுத்தப்பட்ட வகுப்புவாரி முறையை அடியோடு அவர் ஒழித்து விடுவார் என்று எண்ணி. ஓமந்தூராரும் கூட அதே எண்ணத்தின்பேரில் பீடம் ஏறி இருக்கக்கூடும். ஆட்சிப்பீடம் ஏறி நின்று நாட்டின் நிலையையும், மக்களின் நிலையையும், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வசதிகளையும், புள்ளி விவரங்களோடு காண நேரிடும் போதுதான் நீதிக்கட்சியார் கூறிவந்த உண்மை தெரி

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

ஞாயிறு] 31—7—49 [காஞ்சி

நம்பிக்கை நட்சத்திரம்

வேதனை இருளுக்கிடையே ஓர் நம்பிக்கை நட்சத்திரம் மின்னுகிறது! கண்ணீர் ததும்பும் நிலையிலே, உள்ள நமது கண்ணியமிக்க தோழர்களுக்கெல்லாம் ஓர் ஒளி, தெரிகிறது—மலர்ச்சி இனியும் உண்டு, என்ற நம்பிக்கையூட்டும் ஒளி.

சென்ற பல தினங்களாகத் தேம்பித் தவித்துக் கொண்டிருக்கும் தோழர்களுக்கெல்லாம் புதியதோர் ஆறுதல்—அவர்களின் புண்பட்ட மனதுக்கு ஓர் மாமருந்து, இதோ, இதோ, அவருடைய அறிக்கை, தலைவரின் அறிக்கை, என்று ஆர்வத்துடன், கூறிக் குதூகலிக்கச் செய்யும் விதமான செய்தி, 'விடுதலை'யில் வெளிவந்துள்ளது.

28-ந் தேதி, இதழ்கள் யாவும், நமக்கெல்லாம், புயலில் சிக்கித் திசை தப்பிய கலத்துக்குத் தொலைவிலே தெரியும் கலங்கரை விளக்குப்போலிருந்தன.

'தினசரி', 'தினமணி', 'தினத்தந்தி' என்பன போன்றவைகளும், பெரியாரின் அறிக்கையைத் தாங்கி வந்து, நம்மைப் பூரிப்படையச் செய்தன.

கண்ணீரைக் காணிக்கையாகத் தந்து வருகிறோம்—அது பலனளிக்காமலிருக்க முடியாது, என்று, உள்ளூர எண்ணி வந்தவர்களின் உளமெலாம் உவகை ததும்பும் விதமாக, பெரியார், தமது திருமண ஏற்பாடு, கழகத் தோழர்களைக் கலங்கச் செய்துவிட்டது-அருவருப்பையும் மனக் கசப்பையும் வளர்த்துவிட்டது, என்று கூறி, உருக்கமானதோர் வேண்டுகோள் விடுத்திருந்த இதழ்களைக் கண்டோம்-இறும்பூதெய்தினோம்.

நமது கண்ணீர் மதிக்கப்படுகிறது - தலைவரின் மனம் மாறுகிறது - தலைவரையும், தணல்பட்ட குழவி போல் துடிதுடிக்கும் தோழர்களையும், மீண்டும், அந்தப் பழைய பாசம் - பழைய பிரேமை - ஒன்றுசேர்த்து வைக்கிறது - பிளவு, பேதம், பூசல் யாவும் ஒழிந்து, மீண்டும் நாம் குதூகலக் குடும்ப வாழ்வு நடாத்த முடியும், அதற்கான ஆரம்பமே, தலைவரின் அறிக்கை என்று நாம் உளமார நம்புகிறோம்.

பெரியாரின் இந்த நல்ல போக்கைப் பாராட்டி வரவேற்கிறோம். அவரை இந்நிலைக்கு வரச்செய்த நேர்மையாளர்களைப் பாராட்டுகிறோம்.

மனம் உருகியும், நமது மனதை உருக்கும் விதமாகவும், "பொறுத்தருள்க" என்று, பெரியார், 'விடுதலை'யில் தீட்டிய வாசகம், கண்ணீர்த் துளிகளைச் சிந்தித் தமது கண்ணியத்தை, கொள்கைப் பற்றை, தவறு எங்கு நேரிடினும் கண்டித்தாகவேண்டும் என்ற நேர்மையுள்ளத்தைக் காட்டிய, தோழர்களின் வெற்றி என்றே கூறுவோம் - ஆம் - மகத்தான மனமாறுதல் - நமது பாராட்டுதல் தமது கருத்தை, தீரமாகவும் வெளிப்படையாகவும் எடுத்துக்காட்டிய எண்ணற்ற கழகத் தோழர்களுக்கு!

ஒரு கட்டம் முடிகிறது - நமது கண்ணீர் வெற்றி பெறுவதன்மூலம்.

அடுத்த கட்டம் என்ன? தலைவரின் மனம், இளகியுள்ள இந்நிலையை நாம் காணும்போது, அடுத்த கட்டமும் விரைவிலேயே, என்று நம்பிக்கை கொள்கிறோம்.

திருமணச் சேதிதான் திராவிடர் கழகத்தைத் திகைக்கச் செய்துவிட்டது - கழகம் செயலற்றுக் கிடக்கிறது - பணிபுரிவோர் ஒதுங்கியுள்ளனர், விலகியுள்ளனர்.

திருமணம், எந்த அளவுக்குக் கழகத் தோழர்களின் மனதைப் புண்படுத்திவிட்டது, என்பதை உணரும் தலைவர், இனி, அடுத்துச் செய்யவேண்டியது என்ன? விவாக விடுதலை! ஆம்! அதற்கான சட்டப்படி உள்ள நடவடிக்கை!!

இதனை அவர் செய்துவிட்டால், நம்மையும் அவரையும், பிரித்து வைத்திருக்கும், பேதப்படுகுழி, தூர்ந்துவிடும், தானாக!

அவருடைய, இந்தச் செயல் மூலம், செயலற்றுக் கிடக்கும் கழகத்தை, செத்துவிடாதோ என்று பலர் எண்ணும் நிலையிலுள்ள கழகத்தை மீண்டும், மலரச் செய்ய முடியும்—அவரால் முடியும்!

தலைவரே எங்களைத் தவிக்கச் செய்தபோதும்—தேன்துளி போன்ற அறிக்கை மூலம், வேதனை குறைகிறது, பாசமும் நம்பிக்கையும் பூத்திடும் விழிகளுடன், உம்மைப் பார்க்கிறோம், வாரும்! மீண்டும் பணிபுரிவோம்! தடையாகவந்த, தளையாகவந்த, தகாததென வந்த, பொருந்தாத் திருமணம் எனும் தளையை நீக்கிவிட்டு, கறையைப் போக்கிவிட்டு, வாரும், உமது சேய்கள் அழைக்கிறோம், வாரும்! எமது நல்லெண்ணத்தைச் சந்தேகிக்க வேண்டாம்—எமது நேர்மையை மதிக்கத் தவற வேண்டாம்—வேண்டாம், நம் அனைவரையும் வேதனையில் ஆழ்த்திவிட்ட திருமணம், என்று கூறி, அழைக்கிறோம்.

மிகப் பெரும்பாலான கழகத் தோழர்கள், கண்ணீர் மூலம், தமது கண்ணியம் கலந்த கண்டனத்தைத் தெரிவித்ததன் பயனாக, தலைவரின் நம்பிக்கையூட்டும் அறிக்கையைப் பெற்றோம்—அதுபோன்றே, தோழர்கள், அடுத்த கட்டமாகிய, இப்போதும், கட்டுப்பாடாய், கண்ணியமாக, அமைதியாய், கொள்கைப்பற்றுடன், தமது கருத்தை வெளியிட்டால், நிச்சயம் இதிலேயும் வெற்றி கிடைக்கும். அதற்காவன செய்வோம் என்று உறுதி கொள்ளுங்கள் - அதோ தோன்றும், அந்த நம்பிக்கை நட்சத்திரத்தைக் கண்டு, களியுங்கள்! முழு மகிழ்ச்சி—புதிய நிலைமை—ஏற்பட ஆவன செய்வதற்கு, கண்ணீர்த் துளிகளைச் சிந்தியவர்களின், கூட்டமொன்றையும் விரைவிலே அமைக்க எண்ணியுள்ளோம். விவரம் விரைவில் தெரிவிக்கிறோம். வேதனை இருளுக்கிடையே மின்னும் அந்த நட்சத்திரத்தைக் கண்டு மகிழ்கிறோம் — புது ஒளி கிடைத்தே தீரும் என்றும் நம்புகிறோம்—அவரையும் நம்மையும் பிரித்துவைத்த அந்த அவசர ஏற்பாட்டின் விளைவு நீக்கப்பட்டு, அவர் நம்முடன் கலந்துறையும், நன்னாளை எதிர்பார்க்கிறோம்—நம்பிக்கையுடன்.

காங்கிரஸ் தோழர்களுக்குக் காணிக்கை

7-ம் பக்கத்தொடர்ச்சி

புலப்பட்டது. அவர் உள்ள உறுதி படைத்தவராகவும், உண்மைக்குப் பாடுபடுபவராகவும் விளங்கிய காரணத்தால் வகுப்புவாரி முறையே வகுப்பு ஏற்றத்தாழ்வுகளை நீக்கக்கூடிய சிறந்த மருந்தாகும் என்பதைக் கண்டார். கண்ட உண்மையைக் கடைபிடிக்கத் தொடங்கினார். வஞ்சக வைத்தியநாத அய்யரும், வைதீக வரதாச்சாரியும் கொக்கரித்தார்கள். ஓமந்தூரார் சட்டை செய்யவில்லை. மந்திரி சபையைக் கவிழ்க்கவும், ஓமந்தூராரை விரட்டவும் முற்பட்டனர். ஓமந்தூரார் விலகும்படியான நிலைமை ஏற்பட்டது. ஆரியம் தன் சுயநலத்தைப் பாதிக்கக்கூடிய நெருக்கடியான நிலைமைகள் ஏற்படும் போதெல்லாம் அலறித் துடித்து, ஆட்டிப்படைத்து வந்திருக்கிறது, என்பதற்கு இதை ஒரு எடுத்துக்காட்டாகக் காட்டுகிறோம்; இதற்கு முன்னும் பல காட்டியிருக்கிறோம்; இதற்கு முன்னும் பல, பலஆயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காட்ட முடியும்.

பிரகாசம்காருவும், வைத்தியநாத அய்யரும், வரதாச்சாரியும் ஓமந்தூரார் மந்திரி சபையின் மீது வகுப்புவாதக் குற்றஞ் சாட்டி மேலிடத்தாரிடம் காவடி தூக்கினார். புகார்களை விசாரிக்க சங்கர ராவ் தேவ் அனுப்பப்பட்டார். தோழர் தேவும் விசாரணை நடத்தினார். குறிப்புக்களை மேலிடத்தாருக்குச் சமர்ப்பிக்கவேண்டி, நடுவு நிலை நின்று விசாரணை புரிந்த தோழர் தேவ், இப்பொழுது அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார். வகுப்புவாரி முறையை நாம் வலியுறுத்தும் போதெல்லாம், நம்மை வகுப்புவாதிகள் என்றும், பார்ப்பனத் துவேஷிகள் என்றும் தூற்றித் திரியும் காங்கிரஸ் தோழர்களுக்குத் தோழர் சங்கரராவ் தேவ் வெளியிட்டுள்ள இரண்டொரு கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் காணிக்கையாகக் காட்ட விரும்புகிறோம்.

தோழர் சங்கரராவ்தேவ் கறுப்புச்சட்டைக்காரரல்ல, காங்கிரஸ்காரரே! அவர் வலியுறுத்தும் கருத்து, காங்கிரஸ்காரர்களுக்கு இனிக்கக் கூடும் என்று கருதித்தான் அவர் கருத்துக்களைக் காணிக்கையாக வைக்க விரும்புகிறோம். அவர் கூறுவதைக் கேளுங்கள்:—

> மந்திரிசபை மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகளில் ஒன்று, மந்திரிசபை முழுக்கமுழுக்க வகுப்புவாத மந்திரிசபையாக மாறிவிட்டது என்பதாகும். கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்ப்பைப்பற்றி, அரசாங்கம் கொண்டிருந்த ஒரு விதக் கொள்கையைப் பொறுத்தே இக்குற்றச்சாட்டு சாட்டப்படுகிறது. 1926-ம் ஆண்டிலிருந்து அரசாங்கம் நிறைவேற்றிவரும் எல்லாத் தீர்மானங்களையும், உத்தரவுகளையும் நான் பார்வையிட்டேன். இதுகுறித்து மத்திய அரசாங்கக் கல்வி மந்திரிக்கும் சென்னை மாகாண அரசாங்கக் கல்வி மந்திரிக்கும் இடையே நடைபெற்றக் கடிதங்கள் அனைத்தையுங்கூட நான் பார்வையிட்டேன்.
>
> * * *
>
> பொது வாழ்க்கையிலிருந்து வகுப்புவாத உணர்ச்சியைச் சல்லிவேர் ஆணிவேராகக் களைந்தெறியவேண்டியது ஒவ்வொரு காங்கிரஸ்காருடையவும் ஆன கடமையாகும். அதே சமயத்தில் நமது வரலாற்றையும், அரசியல் கொள்கைகளையும், குறிப்பாக பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங்களைச் சரி செய்து போவதே ஜனநாயக அரசியல் கொள்கையாகும் என்பதையும், நாம் மறந்துவிடக்கூடாது. தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாதவர்களும், நாடு முழுவதிலுமுள்ள பிற்போக்குச் சமூகத்தினரும் தங்கள் தாழ்ந்தநிலையைப் போக்கிக்கொள்ளவும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் முற்போக்குச் சமூகத்தினரோடு சரிசமமாக வரவும் பிரத்தியேக சலுகைகளை வேண்டுகிறார்கள். தேசிய நலத்திற்கு ஊறு செய்யாமல் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பதே இப்போதைய கேள்வி.
>
> * * *
>
> பார்ப்பனரல்லாதவர்களிடையே ஒரு பொதுவான எண்ணம் உலாவுகிறது, வாழ்க்கையோட்டத்தில் அவர்கள் மிகப் பின்னால் விடப்பட்டு விட்டார்கள் என்று. ஏனென்றால், அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கினராக இருப்பதால், இறந்த காலத்தில் ஏற்பட்ட திறமையின்மையை எல்லா வாய்ப்புகளாலும் போக்கிக்கொள்ள இயற்கையாகவே மிகவும் பேரவாவுடையவர்களாக இருக்கிறார்கள். நமது வரலாற்றைச் சிறிதளவாவது அறியும் தன்மை பெற்ற, ஒவ்வொரு இந்தியனும், அந்தச் சமூகத்தாரிடையேநிலவிவரும் இந்த உணர்ச்சியின் வேகத்தையும், அதற்குரிய நீதியையும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். இறந்த காலத்தில் நிகழ்ந்தவைகளைச் சரிகட்டவேண்டி, அரசாங்க அலுவல்களிலும், கல்வி நிலையங்களிலும் இடம்ஒதுக்கப்படவேண்டும்என்றுஅவர்கள்கேட்டு நிற்கும் ஆர்வம், ஒருவருக்கு பொறுமை யிழந்தவொரு காரியமாகவோ அல்லது அவசரப்பட்டவொரு காரியமாகவோ கூடத் தோன்றலாம். இவைகள், வெளிப்படையான போட்டித் தேர்வுகளுக்கு விடப்படுமேயானால், முன்னேற்றமடைந்ததும், கல்வியறிவு பெற்றதுமான சமூகங்களோடு அதாவது குறிப்பாக பார்ப்பனர்களோடு, அவர்கள் எவ்வளவு சிறுபான்மையினராகக் காணப்பட்டபோதிலும், அவர்களோடு நின்று மிகக் குறைந்த இடங்களைத்தான் பெறமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள்; அதுதான் உண்மையுங்கூட.
>
> * * *
>
> கதைவடைப்புக்கொள்கையின் காரணமாகச் சிறிய எண்ணிக்கையுள்ள பார்ப்பனச் சமூகத்தாரிடையே கோபம் மிகப் பொங்கி காணப்படுகிறது என்பதை நான் அறிவேன். இயற்கையாகவே அவர்கள் எதற்கெடுத்தாலும் குரலெழுப்பும் பண்புடையவர்களாதலால் வெகு தொலைவுக்கும் கேட்கும்படியாகப் பெரிய கூச்சலைக் கிளப்பியிருக்கிறார்கள்."

(12-ம் பக்கம் பார்க்க)

அடக்குமுறை அட்டவணை

அவசரச் சட்டங்கள்—அவற்றின் கீழே பல அவசரமான காரியங்கள், இவற்றைச் செய்து வருவதில் சென்னை அரசாங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கொடிய ஆட்சியையும் மீறிவிட்டது.

எதிர்க்கட்சியா—அதுவும் திராவிடர் கழகமா, அதன் நாக்கை அறு, கையை முறி, காலை ஒடி என்ற கட்டளைகளைக் "காருண்யமிகுந்த" காங்கிரஸ். அரசாங்கத்தின் "செங்கோல்", இதுகாலம், அன்றாடம் பிறப்பித்து வருவதிலே தவறுவதில்லை.

அரசாங்கக்கருத்துக்களுக்குமாறுபட்டு விளங்குபவற்றை—அவை நல்லதோ கெட்டதோ அதைப்பற்றிக் கூடக் கவலையில்லாமல், மாறுபட்டவைகள் என்ற காரணத்திற்காகவே, அவற்றை அழித்தொழிக்க பிரிட்டிஷ் யதேச்சாதிகார வல்லரசு ஏற்படுத்திவைத்துவிட்டுச் சென்ற அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் இன்றைய தேசிய ஆளவந்தார்கள் ஆவலோடு அணைத்துக்கொண்டுள்ளார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஏற்படுத்த மறந்த சட்டங்கள் பலவற்றையுங்கூட, "அகிம்சை" நிழலிலே நின்று ஆக்கிக்கொண்டுள்ளார்கள். பொதுஜன பாதுகாப்புத் திருத்தச் சட்ட மசோதா என்ற ஒரு சட்டத்தையும் இயற்றிவைத்துக்கொண்டு, பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைப்பவராகத் 'தாம்' சந்தேகப்படும் யாரையும் கைது செய்யலாம், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சிறையில் தள்ளிவைக்கலாம், எப்போது வெளியே விடப்படுவார்கள் என்பதையும் சொல்லவேண்டியதில்லை, இவைகளுக்கெல்லாம் காரணங்காட்டவேண்டிய அவசியமுமில்லை என்றமுறையில், பாரதமாதாவின் சிடகோடிகள் ஆட்சி இருந்து வருகிறது.

ஒரே கொள்கை—ஒரேகட்சி—ஒரே குரல்; இவற்றிற்கு மாறுபட்டது—வேறுபட்டது எதுவும் இருக்கக் கூடாது. இதுபாஸிஸம் கற்றுக் கொடுக்கும்பாடம். அந்தப் பாடத்தைப்படித்து, பரிக்ஷை எழுதி, பட்டமும் பெற்று, பாராளும்முறையில் வந்திருப்பவர்கள்தான் இன்றைய ஆளவந்தார்கள் என்பதை அவர்களின் செயல்முறைகள் எடுத்துக் காட்டுகின்றன.

திராவிடர் கழகம் நாட்டில் நடமாடுவதே காங்கிரஸ்காரர்களின்கண்ணையும், கருத்தையும் உறுத்திவருகிறது. அதுவும் ஆட்சிப்பீடம் ஏறியிருப்போரின் கண்ணை அதிகமாக உறுத்துகிறது. ஆகவேதான் திராவிடர் கழகத்தை எவ்வகையிலேனும் அதிகாரபலத்தைக்கொண்டு அடக்கி ஒடுக்கிவிட எண்ணமிட்டு, ஒரேகட்சி—அதுவும் காங்கிரஸ்தான் நிலவவேண்டும், என்றமுறையில் திட்டமிட்டு வேலைசெய்து வருகிறது காங்கிரஸ் அரசாங்கம். அப்படிப்பட்ட செயலிலே ஒன்றாக "இலட்சிய வரலாறு" என்ற கழகத்தைச்சார்ந்த நூலைப் பறிமுதல் செய்திருக்கிறது. அந்நூல் தோழர் சி. என். ஏ. அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்திய பத்திரிகை அவசரச் சட்டம் 19-வது பிரிவின் கீழ் அரசாங்கம் அதனைப் பறிமுதல் செய்திருக்கிறது. அவசரச் சட்டம் அந்த அளவுக்கு ஆட்சிப் பீடத்தை ஆட்டிப் படைக்கிறது.

திராவிடர் கழகத்தை அடக்கி ஒடுக்க 'காந்திய நெறி'யில் செல்லும் 'அகிம்ஸை' அரசாங்கம், சென்ற இரண்டரை ஆண்டுகளாக எடுத்துக் கொண்ட அடக்குமுறைச் செயல்களின் அட்டவணையைக் காணுங்கள் :—

"இராவண காவியம்"—தடை
"இன்பத் திராவிடம்"—தடை
"இலட்சிய வரலாறு"—தடை
"இரணியன் அல்லது இணையற்ற வீரன்" நாடகம்—தடை
"போர்வாள்" நாடகம்—தடை
"சர்வாதிகாரி" நாடகம்—தடை
"தூக்குமேடை" நாடகம்—தடை
"குயில்" வெளியீடு—தடை
"மகாத்மா தொண்டன்" நாடகம்—தடை
"இரத்தக் கண்ணீர்" நாடகம்—சில பகுதி—தடை
"ஆரிய மாயை" அச்சிட்ட அச்சகத்திற்கு ரூ 1500 ஜாமீன்
"திராவிட நாடு"க்கு ரூ 3000 ஜாமீன்
"விடுதலை"க்கு ரூ 10000 ஜாமீன்
"குடி அரசு"க்கு ரூ 3000 ஜாமீன்
கறுப்புச் சட்டைப் படை—தடை
கழகக் கூட்டங்கள்—சில ஊர்களில்—தடை
கழகத் தோழர்கள்—சிலருக்கு நன்னடக்கை ஜாமீன்
கழக வெளியீடுகள்—பள்ளி நூல் நிலையங்களிலே தடை
கழகம் பரப்பும் பகுத்தறிவுக் கருத்துக்கள்—பாடப் புத்தகங்களிலே வரத் தடை

இவ்வளவும் எதிர்க் கட்சி என்ற காரணத்திற்காகவே வீசப்பட்ட அடக்குமுறைகள். காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தில் ஏறியிருக்கும் கட்சி, அவ்வளவுதான். ஆட்சிப் பீடம் ஏறி, நாட்டின் பொது அதிகாரத்தைக் கைக்கொண்டிருக்கும் கட்சி, எதுவேண்டுமானாலும் செய்யலாம் அதைப்பற்றி அரசாங்கத்திற்குக் கவலையில்லை. அண்ணாமலைநகர் மாணவர் கலவர வழக்கில், காங்கிரஸ்—திராவிடர்கழக இருசாராரும் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தார்கள். குற்றத்திற்கு இருசாராரும் உட்படுத்தப்பட்டிருந்தார்கள். ஒரே கிரிமினல் சட்டப் பிரிவின்கீழ், இருசாரார் மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டது. காந்தியாரின் பேரால் 'நீதி' செலுத்தும் அரசாங்கம், காரணம் எதுவும் கூறாமல், காங்கிரஸ் மாணவர்கள்

என்ற காரணத்திற்காகவே அவர்கள்மீது தொடுத்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டது. காங்கிரஸ் கட்சியின் கூட்டங்கள் எங்கு எப்படி வேண்டுமானாலும் நடைபெறலாம், காங்கிரஸ் பிரசாரகர்கள் எங்கு, யாரை, எப்படி வேண்டுமானாலும் நாக்கில் நரம்பின்றித் தூற்றிப் பொய்ப் பிரசாரம் செய்யலாம், காங்கிரஸ்காரர்கள் கழகத் தோழர்களுக்கு எவ்வளவு இம்சையை வேண்டுமானாலும் கொடுக்கலாம், கழகக் கூட்டங்களைக் கலைக்கலாம், கழகப் பந்தல்களைக் கொளுத்தலாம், காங்கிரஸ் கட்சியின் கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் ஏற்றலாம், காங்கிரஸ்காரர்கள் கழகத் தலைவர்களை நாக்கினால் நவிலவும் கூசும் சொற்களால் அவதூறு கூறி, பழிச்சொல் சொல்லி, ஆபாஸமாக எழுதலாம், இவைகளுக்கெல்லாம் தடையேதும் இருக்காது, ஆனால் நேர்மைவழி நின்று, நீதியைக் கடைப்பிடித்து, பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பும் திராவிடர் கழகத்துக்கு, எவ்வளவு தொல்லைகள் கொடுக்க இதுவரையில் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்கள் இடங்கொடுக்குமோ, அவ்வளவையும் கொடுத்துத் தீருவது என்றே காந்திய சீடர்கள் முனைந்துவிட்டார்கள்.

இப்பொழுது பறிமுதல் செய்யப்பட்டிருக்கும் "இலட்சிய வரலாறு" திராவிடநாடு இதழில் எழுதப்பட்ட சில கட்டுரைகளின் தொகுப்பேயாகும். கட்டுரைகள் வெளிவந்து, பலஆயிரமக்கள் படித்துப்பயன்பெற்ற பிறகு, சில ஆண்டுகள் கழித்தே அவைகள் நூல்வடிவில் வெளிவந்தன. அப்படி வெளிவந்த நூலும் ஏறக்குறைய ஒரு ஆண்டுக்குமேலாக நாட்டில் நடமாடி வந்திருக்கிறது. இவ்வளவும் ஆனபிறகு, இப்பொழுதுதான் அரசாங்கத்திற்குப் பட்டிருக்கிறது, அது பறிமுதல் செய்யப்படவேண்டிய நூல் என்று!

திராவிடர் கழகத்தின் இலட்சியம் எப்படி வளர்ந்தது என்ற வரலாற்றுச் சிறப்பு பற்றியும், "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற இலட்சியம், எந்தெந்தவகையில் ஈடேறவேண்டிய அவசியமான பிரச்சினையாகும் என்பதுபற்றியும், இலக்கியச்சான்று, வரலாற்றுச்சான்று, நிலநூலறிவுச் சான்று, பொருளாதாரச் சான்று, அரசியல் சான்று ஆகியவைகளைப் பெரும்பேராசிரியர், அறிவு வல்லுநர்கள், ஆராய்ச்சிவல்லுநர்கள் ஆகியோரின் கூற்றுக்களினின்றும் எடுத்து விளக்கிக் காட்டவே எழுந்த நூல், "இலட்சிய வரலாறு" ஆகும். பொதுவாக நம்மீது காங்கிரஸ்காரர்களால் சாட்டப்படும் 'வகுப்பு துவேஷமோ,' 'மததுவேஷமோ,' 'நாஸ்திகவாதமோ' கூட அந்நூலில் இடம் பெறாதிருக்கையில், அந்நூலைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் முனைந்திருக்கிறது என்றால், எதிர்க்கட்சியை வேரோடு களைந்தெறிந்து விடவேண்டும் என்ற எண்ணமல்லாது வேறு என்னவாக இருக்கமுடியும்?

காங்கிரஸ்காரர்கள் இம்மாதிரியான கொல்லைப்புற வழியை நாடி, திராவிடர்கழகத்தை எதிர்த்து நிற்க முற்படுவானேன்? நேர்மையான—நீதியான — நேரிடையான வழியில், நட்பு முறையில், வாய் திறந்து வாதிட்டுப் பார்க்கலாமே! இந்த நாகரிக முறையைப் பின்பற்ற அவர்கள் பின்வாங்குவானேன்? அவர்களின் கொள்கை அவ்வளவு வலிவற்றதா? அரசாங்கத்தின் அடக்குமுறை ஆயுதத்தைக் கொண்டல்லாது, அறிவாயுதத்தைக்கொண்டு நம்முன் நிற்க அவர்கள் அஞ்சுவானேன்?

பகுத்தறிவுக் கருத்துக்கள் இந்த அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை; வைதிகக் கருத்துதான் பிடிக்கிறது என்றால், அந்தக் கருத்துக்களைப் பரப்ப முற்படுவதுதானே நாணயமான முறையாகும். ஆண்மையறிவுள்ளவர்களாக இருந்தால், பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரவவிட்டுவிட்டு, வைதிகப் பழமைக் கருத்துக்களைப் பரப்ப அவர்கள் முற்படுவதுதானே முறை. நாம் நடத்திக்காட்டும் சீர்திருத்த நாடகங்கள், வைதிகக் கருத்துடைய—மதத்திலே பற்றுகொண்ட அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லையானால், புராண நாடகங்களை நாட்டிலே நடத்திக் காண்பிப்பதுதானே. தாரை சந்திரனுக்கு நிர்வாணமாக எண்ணெய் தேய்த்துவிடும் தாராசசாங்கத்தை நடத்திக் காட்டட்டும்! குஷ்டரோகக் கணவனைத் தாசிவீட்டிற்குத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டுவிட்டு, மீண்டும் தூக்கிக்கொண்டு வந்த நளாயினிக்கதையைக் காட்டட்டும்! தாருகாவனத்து ரிஷிப்பத்தினிப் பெண்டிர்களை முறைதவறி நடத்திய முக்கண்ணன் வரலாற்றைக் காட்டட்டும்! மோகினி அவதாரங்கொண்ட மகாவிஷ்ணுமேல் மையல்கொண்டு கலவிக்கழைத்த கைலைவாசன் கதை, தன் மனைவியைச் சிவனடியார்க்குக் கூட்டிக் கொடுத்த இயற்பகை நாயனார் கதை, நிர்வாணமாக மங்கையை மடியில் ஏற்றிவைத்துக்கொண்டு தகாத செயலை செய்துகொண்டிருக்கும் உச்சிஷ்டப்பிள்ளையார் கதை, சிவபெருமான் போகத்தில் ஈடுபட்டிருக்கும்போது, தங்களைக் கவனிக்க மறந்ததற்காக ரிஷிகள் சாபங்கொடுத்து லிங்கமும்—ஆவுடையாரும் பூமியை நோக்கி வந்தகதை, ஜலந்திரன் போர்க்களஞ் சென்றிருந்தபோது, கள்ளத்தனமாக வீட்டின் உள்ளே நுழைந்து ஜலந்திரன் மனைவி பிருந்தையைக் கடல் நிறவண்ணன் கட்டி அணைத்த கதை, அகலிகையைக் கட்டித்தழுவி உடல் முழுவதும் சொல்லக் கூசும் புண்களைச் சாபத்தின் காரணமாகப் பெற்றுக்கொண்ட இந்திரன் கதை, ஆகியவை போன்ற 'கடவுள் தத்துவம்' நிறைந்த புராணக் கதைகளை நாட்டில் நடத்திக்காண்பிக்கட்டுமே! பகுத்தறிவுக் கருத்துகொண்ட சீர்திருத்த நாடகங்கள் கூடாது என்று பின்புற வழியைப் பின்பற்றித் தடைவிதிப்பதை விட்டு, மேற்கூறிய புராண நாடகங்களை நடத்தி வெற்றி பெறட்டுமே இன்றைய ஆளவந்தார்கள்.

வேண்டுமானால் இதற்கு முன்பிருந்த மந்திரிகளும், இப்பொழுதிருக்கும் மந்திரிகளும் முக்கிய வேடங்கள் தாங்கி, "சம்பூர்ண ராமாயணத்"தையே நடத்திக் காட்டலாமே. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஜனகர் வேடந் தாங்கலாம்; குமாரசாமிராஜா ராமர் வேடந் தாங்கலாம்; அவினாசிலிங்கனார் விசுவாமித்தரர் வேடத்தில் நடிக்கலாம்; பக்தவத்சலனாருக்கு அனுமான் வேடம் கொடுக்கலாம். மற்றுமுள்ள மந்திரிகள் அவரவர்களுக்குப் பொருத்தமான வேடங்களில் வரலாம். "சம்பூர்ண இராமாயணம்" ஆனபடியால் காங்கிரஸ் எம். எல் ஏக்களுங்கூட வேடங்கள் தரிக்கலாம். சர்தார் வேதரத்தினத்திற்கு விபீஷண வேடமும், வைத்தியநாத அய்

(அடுத்த பக்கத்தில்)

9-ம் பக்கத் தொடர்ச்சி.

தோழர் சங்கர்ராவ்தேவ் கூறுவதில்,

> சிறு எண்ணிக்கையுள்ள பார்ப்பனச் சமுகம்.
> இயற்கையாகவே குரலெழுப்பும் பண்பினர்.
> கோபங் கொண்டு விளங்குபவர்.
> வெகு தொலைவுக்குக் கேட்கும்படி கூச்சலைக் கிளப்புபவர்கள்.

என்ற சொற்றொடர்களைக் காணுங்கள், அந்தச் சமுகத்தை இதைவிட அழகாகச் சித்தரிக்க வேறு யாராலும்கூட இயலாது என்றுகூடக் கூறிவிடலாம். சிறியது—கோபங் கொள்வது —குரலெழுப்புவது — கூச்சல் போடுவது. இவைகள் அர்ச்சனைகள்! எண்ணிக்கையில் சிறியது-தன்னலத்தைப்பாதிக்கும்எந்தச்செயல்கண்டுங் கோபங் கொள்வது-அதுபற்றித் தன் ஆற்றல் முழுதுங் கொண்டு குரல் எழுப்புவது-கேட்க வேண்டாத இடத்திற்கெல்லாம்கூடக்கேட்கும்படிப் பெருங்கூச்சலிடுவது! சங்கரராவ்தேவ் குறிப்பிடும் அந்தச் "சிறு கூட்டம்" தான், இத்தகைய செயலையே பன்னெடுங்காலமாக வரலாற்றில் புரிந்துவந்திருக்கிறதென்று நாம் கூறினால் ஆத்திரப்படும் தோழர்கள், தோழர் தேவ் அவர்கள் கூற்றிலிருந்தாவது இனி உண்மை அறிந்து தெளிவடையட்டும்.

தோழர் வைத்தியநாத அய்யர் பெயரையே குறிப்பிட்டு, நசுக்கப்பட்டவர்கள் என்றென்றும் நசுக்கப்பட்டவர்களாகவே இருக்கவேண்டுமா? என்றுகுடந்தை வக்கீல் சங்கக் கூட்டத்தில், மந்திரி தோழர் மாதவ மேனன் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், வகுப்புவாரி முறையினால் ஏற்படும் பலன், எவ்வளவுதூரம் நசுக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கிறது என்பதை ஒருவாறு ஊகித்தறியலாம்.

எனவேதான், நாம் கொடுக்கும்போது வாங்கிக் கொள்ள மறுக்கும் காங்கிரஸ் தோழர்கள், தோழர் தேவ் கொடுக்கும் போதாவது வாங்கி யருந்திப் பயனடையட்டும் என்று கருதி அவரின் கருத்துக்களைக் காணிக்கையாகத் தந்திருக்கிறோம்.

✻

16-ம் பக்கத் தொடர்ச்சி

கண்டனம் தெரிவித்துள்ள கழகங்கள்:—கோவை மாவட்ட திராவிடர் கழகம், தி. க. கடலாடி, தி. கழகம் தளவாய்புரம், தி. க. காவேரிப்பாக்கம் (திண்டிவனம்), தி. க. சுக்காங்கல்பட்டி, தி. க. எட்டயாபுரம், தி. க. க. புதுப்பட்டி, அண்ணாத்துரை படிப்பகம். காஞ்சிபுரம், சீர்திருத்த இளைஞர் மன்றம் மேட்டுப்பாளையம், ஜஸ்டிஸ் தமிழர் சங்கம் அம்மாபேட்டை, தோழமைக் கழகம் பெத்துநாய்க்கன் பேட்டை, என். அர்ச்சுனன் நினைவுக் கழகம் தூத்துக்குடி, தி. வாலிபர் கழகம் போராவூரணி, அர்ச்சுனன் படிப்பகம் இடையாத்தி மங்கலம், பகுத்தறிவுக் கழகம் தேசுமுகப் பேட்டை.

பெரியாரின் போக்கைக் கண்டித்தும், அவர்மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்தும், இதுவரையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் அனுப்பிவைத்துள்ள கழகங்கள் :—

97

கண்டனத் தீர்மானங்கள் அனுப்பியுள்ள கழகச் சார்புடைய வேறு பல கழகங்கள்.

53

தங்கள் கண்டனத்தை எழுத்துமூலம் இதுவரையில் நமக்குத் தெரிவித்துள்ள மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்.

29

குறிப்பு:— பெரியாரின் போக்கைக் கண்டித்து ஆயிரக் கணக்கான கழகத் தோழர்கள் தம் கருத்தை நமக்கு அறிவித்து வருகிறார்கள். திராவிடர் கழகத்தின் உடலுறுப்புகளாக விளங்கும் கழகங்களும் தம் எண்ணத்தைத் தீர்மானத்தின் மூலம் அறிவித்து வருகின்றன. இந்தத் தீர்மானங்களே கழகத்தின் பொதுக்கருத்தை உணர்த்துவனவாகும். ஆகவே பொதுக்கருத்தை உணர அவைகளின் தொகை பெரிதும் வேண்டப்படுவதாகும். அவற்றின் அளவை மேலும் அறிந்துதான், கூடிக் கலந்துபேசவேண்டியிருக்கிறது. அதுதான் முறை.

(முன் பக்கத் தொடர்ச்சி)

யருக்கு சுக்ரீவன் வேடமும், மாரீசனுக்கு மாரீசன் வேடமும் கொடுத்து இப்படியே யாருக்கும் இல்லையென்று சொல்லாமல் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து நாடகத்தை நடத்திக்காண்பிக்கலாம். இப்படி நாடகப்பாத்திரங்களாகத் தோன்றியாவது இன்றைய மந்திரிகள் தங்கள் கருத்தைப் பரப்ப முயற்சி செய்யலாமே!

இன்றைய மந்திரி சபையினருக்குப் பிடித்தமில்லாதவைகளைத் தடை செய்யத்தான் தெரிந்திருக்கிறதே யொழிய, பிடித்தமானவைகளைப் பரப்ப ஏனோ வழி தெரியவில்லை!

அடக்குமுறை அட்டவணை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே தான் இருக்கிறது; இனியும் இருக்கும் என்று தெரிகிறது. தடைபடுத்த வேண்டியவைகளாக இன்னும் பல கழக நூல்கள் காங்கிரஸ் மந்திரிகளின் மேஜைகளில் காத்துக்கிடக்கின்றனவாம்! ஆகவேதான் அடக்குமுறை அட்டவணை இன்னும் வளர்ந்துகொண்டே போகும் என்று குறிப்பிடுகிறோம்.

தடைசெய்யப்பட்ட நூல்கள் உலகில் எந்தநாட்டிலும் நீண்டகாலத்திற்குத் தடைபட்டிருந்தது கிடையாது. நூல்களும், நாடகங்களும் இடைக்காலத்தில் தடைபட்டிருந்தாலும், அவைகளில் பொதிந்துகிடக்கும் கருத்துக்கள் வேறு வேறு உருவங்களில் வரத்தான் செய்யும்.

கண்ணீர்த் துளிகள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

எம். வேலு, எம். குப்புச்சாமி, ஏ. சக்கரை சாயபு, வி. தியாகராசன், கே. சையத்இப்ராகிம், டி. சுந்தரராசன், ஆ. காந்திமதிநாதன், என். கண்ணையா, எஸ். முகம்மது அலி, மா. தியாகராசன், எம். சாமியப்பன், போர்வீரன், எம். தண்டபாணி, எம். சுப்பிரமணியம், என். கணபதி, கே. வி. பழனிச்சாமி, கே. எம். நாகப்பன், வெள்ளையண்ணன், கே. சிங்கம், அய்யாவு, கன்னியப்பன், பி. பெரியசாமி, ஏ. செல்லையா, அழகர், ஏ. ரெங்கசாமி, கே. ரங்கநாதன், ப. வேலுச்சாமி, ஏ. தங்கமுத்து, பி. ஏ. சண்முகம், என். ஆறுமுகம், பிச்சமுத்து, அருணகிரி, கதிர்காமம், ச. மாப்பழனி, பெரியசாமி, மாயஅழகு, பெருமாள், ரா. ஆறுமுகம், பச்சையப்பன், புலிஅரசு, ம. மாரியப்பன், கா. முருகேசன், கா. கரைஅழகன், பி. முகம்மது இப்ராஹிம், கே. பொன்னையா, ச. காதர்சுல்தான், ஏ. அங்கமுத்து, டி. பழனியப்பன், ச. மாணிக்கம், தெ. உ. ராமசாமி.

ராசிபாளையம் - கழகத் தோழர்கள்:— ஆர். எஸ். முருகேசன், ஆர். எஸ். ராமசாமி, ஆர். ஆர். பெருமாள், ஆர். ஆர். சந்தணன், சி. கருப்பண்ணன், ஆர். எம். திராவிடமணி, ஆர். எல். மருதாசலம், ந. கந்தசாமி, சு. ஆறுமுகம், ஆர். ஏ. நடராசன், ஜி. நடராசன், ஏ. வெங்கடாசலம், பி. அங்கணன், ஆர். பி. அய்யாச்சாமி, ஆர். எம். கிருஷ்ணன், என். பழனி, பி. ஆர். சின்னகிருஷ்ணசாமி, க. கிருஷ்ணசாமி, ஆர். பி. ஆறுமுகம், ஆர். கே. பேச்சியண்ணன், ஆர். ஏ. அய்யாசாமி, ஆர். பழனியப்பன், ஆர். சுப்பையன், கே. அங்கணன், ஆர். ஏ. அருணாசலம், ர. க. கந்தசாமி, ஆர். ஏ. அங்கணன்.

அம்மாப்பேட்டை - ஜஸ்டிஸ் தமிழர் சங்கத்தார் :— எஸ். என். எல்லப்பன், ஈ. ஏ. ஆர். இருளப்பன், இரா. மாரியப்பன், சி. சுவாமிநாதன், மு. ஆறுமுகம், அ. அங்கப்பன், மு. கணபதி, ப. மன்னாதன், பி. குழந்தைசாமி, சி. பொன்னுச்சாமி, வை. பெருமாள், ஏ. அர்த்தனாரி, எம். பச்சியப்பன், பெருமாள், ம. ராமசாமி, தி. செங்கோடன், காதர்சாயபு, என். அண்ணாமலை, வி. பொன்னுசாமி, ஆர். கே. முருகேசன், ப. பெருமாள், பி. முத்தையா, ஆ. பச்சியப்பன், பெ. மாரியப்பன், எம். சித்தா, மு. முருகன், ஏ. கே. கந்தசாமி, எஸ். எஸ். பி. சின்னான், எஸ். கே. கந்தசாமி, எஸ். எம். வி. தங்கசுப்பிரமணியன், கே. அங்கப்பன், எம். வி. தங்கவேல்.

மதுரை — பி. சண்முகவேல், மு. மீனாட்சிசுந்தரம், ந. பாலகிருட்டினன்

பாளையங்கோட்டை - தாமஸ், அ. சண்முகவேலு

கோவை—பீளமேடுபுதூர் தோழர்கள்:— ஜி. ரங்கசாமி, பி. எம். சாமி, கே. கே. ராமன், ஆர். வி. பதி, ஆர். காளியப்பன், ஜி. கந்தசாமி, ஆர். சின்னு, பி. பி. முகம்மது, ஆர். ராமசாமி

உறையூர்—ஆர். ராமமூர்த்தி, ம. தி. க. உறுப்பினர்

இலங்கை—தி. க. அன்பர்களும் ஆதரவாளர்களும் :— யாழ்ப்பாணம்—தரா. இராசகோபாலன், சி. எஸ். துரை, ச. நடேசன், வே. சண்முகநாதன், பி. இராசசிங்கம், த. இராசகோபாலன், எம். இராமநாதன், எஸ். சுப்பிரமணியன், வி. கே. கந்தையா, வே. இராமேஸ்வரன், எம். கே. நடேசன், எம். பொன்ராசா, எஸ். அந்தோனி, எஸ். சின்னத்துரை, பி. சின்னத்துரை, த. சுந்தரம், த. ஐயாத்துரை, சுண்ணாகம்—என். எஸ். பவான், க. சுப்பிரமணியம், காங்கேயன்துறை—ந. நடராசன், உரும்பராய் — செ. கணேசலிங்கம், வி. வேலாயுதம், கொழும்பு - எஸ். பொன்துரை, ஆர். வேதநாயகம், எஸ். குணசிங்கம், உடுவில் - ம. சின்னப்பா, மன்னார் - த. தம்பித்துரை, மணிபல்லவம்—ஆர். ஆர். பூபாலசிங்கம், மா. னிப்பாய்—மாதம்பிரசா

முகவை - செ. முத்து, செயலாளர், திருவள்ளுவர் படிப்பகம்

சுவாமிமலை—கழகத் தோழர்கள்:- வீ. கோதண்டம், இரா. இராசகோபால், சு. அன்பாசிரியன்

பெரியகுளம்—ஏ. எம். சாமி, வடகரை

இலுப்பக்கோரை—சி. நாகராசன்

திருச்சி—டி. என். கோவிந்தராசன்

நெட்டவேலம்பட்டி — நெ-வெ-இராவணன், வெ-திராவிடசெல்வம், வே-பாண்டியன்

பெத்துநாய்க்கன்பேட்டை — (சென்னை) தோழமைக் கழகத்தார்:— எஸ். கணபதி, ஆ. சேஷாசலம், வி. மோகனரங்கன், து. இராமானுசன், பசு.பழனி, டி. ராசகோபால், கே. கண்ணையன், ரகம் ராதா சகோதரர்கள்; கே. தாமோதரன், ஆர். சுந்தரம், எஸ். ஆர். முதலியார், மு. நம்பியப்பன், ஏ. ஷாம் சந்தர்லாலா, ஆர். முத்துகிருஷ்ணன், கே. சி. மாதவன், பி. ஆர். கந்தசாமி, பி-வி-கோபால், ர-விவேகானந்தன், டி-எஸ்-மணி, பி-ஏ-ரத்தனம், எம்-எஸ்-ரங்கநாதன், எம்-நாராயணசாமி, சி-என்-பாலசுந்தரம், டி-ராமகிருஷ்ணன், டி-கோவிந்தராஜ், சி-எம்-கோபாலகிருஷ்ணன்

நெட்டப்பாக்கம்பேட்டை—என்-என்-பழனிச்சாமி

சக்காமல்லூர் — திராவிடர் கழக அனுதாபிகள்

திருவனந்தபுரம்—சி-பி-செல்லம்

திட்டகுடி—ஏ-எம்-கந்தசாமி

சென்னை—வி-வி-இளஞ்செழியன் B-Sc, தி-மா-கழகம்

தியாகராயநகர்—பா-சு-மணி, முன்னாள் தி-மா-க தலைவர் மன்னார்குடி

சேலம் செவ்வாய்ப்பேட்டை — ஏ-வரதராசன், என்-பட்டாபி, ஜி-பெத்தண்ணன், தி-மா-கழகம்

குடியேற்றம்—கூ-பெ-யோவான்

சிந்துபூந்துறை - சாது

திருமக்கோட்டை—என்-ஆர்-பொன்னுச்சாமி, தலைவர், தி-கழகம்

உத்தமபாளையம்—எஸ்-சையதுமுகம்மது, செயலாளர், தி-கழகம்

ஆரணி—அ-சி-ராதாகிருட்டிணன், தலைவர், ப-இ-படிப்பகம்

செங்குன்றம் — கழகத்தோழர்கள்:— ப. பலவன், வி.

என். சிவன், ஆர். கோவிந்தராசன், பி சுந்தரமூர்த்தி, வ. அ. கோவிந்தராசன், ரா. ஏழுமலை. என். பாலசுந்தரம், என். கே. ஜான்வெஸ்லி.

காஞ்சிபுரம்—த. சா. ஏழுமலை.

மதுரை—என். முத்தையா, தி. க. உறுப்பினன்.

திருப்பத்தூர் வ. ஆ.—சி. ஆர். ஏ. இளம்பிறை

வெளந்தை—எம். கிருஷ்ணன்

பவானி—என். பி. கிருஷ்ணசாமி

சென்னை நுங்கம்பாக்கம்—ச. பாலசுந்தரம்

பாலமேடு—பெ. மா. குருசாமி

சென்னை ராயபுரம்—கழகத் தோழர்கள்:—பி, கே. மாரியப்பன், கீ. அருணாசலம், மா.ரா. ராஜபாண்டியன் ர. துரைபாண்டியன், ஆ. வன்னியராஜன், என். தங்கவேல், எம். பி. சுவாமிநாதன். கு. தங்கவேல்.

புஞ்சைபுளியம்பட்டி—என். ஏ. ரஷீத்

புகளூர்—பு. ச. தண்டபாணி

தாத்தையங்கார்பேட்டை — தமிழர் நாடகசபா நடிக உறுப்பினர்கள்: — சு. கிருட்டினன், பெ. நாராயணன், தா. பி. லோகநாதன், கி. இராசரத்தினம். ப. கம்பராயன், இரா. ஆறுமுகம், வீ. பிரமன், வீ. சுப்பராயன், சு. கந்தசாமி, சு. பெரியக்காண்டி அ. வீரபத்திரன், ப. நடராசன், எஸ். விரப்பன், டி. ஆர். கே. வீரப்பா.

நஞ்சுண்டாபுரம்—கழகத்தோழர்கள்:— நா. மா. காளியண்ணன், ந.பா. கொண்டசாமி, துரைசாமி. ந.கி. பழனிச்சாமி, ந. பெ. தாமோதரசாமி, ஜி. அய்யாசாமி, ந. ம. அங்கமுத்து.

தொட்டியம்—ச. பொருட்செல்வி, ஆசிரியை

கள்ளிப்பட்டி—ப. கு இராமசாமி

சென்னை கழகத்தோழர்கள்:—க. மு. துரைசாமி, வல்லிபுரம் சண்முகம், கோ கணேசன், சை. தேவதாஸன், செ. தோமஸ், ர. தேவராஜன், க. மா. தண்டபாணி.

சிவகாசி—என். டி. சங்கர், திராவிட இளைஞர்கள்

பெங்களூர்—பெ. ம. அப்பாத்துரை

செங்குடந்தானி—என். சி. மாரிமுத்து, மல்லம்மாள்.

மதுரை—பி. காந்தி, மற்றும் திராவிட இளைஞர்கள்

பாளையங்கோட்டை—மு. அப்துல்ஜப்பார், திராவிட மாணவர் கழகம்

கொழும்பு—பி. ஆர். ராமையா, கே. பி. அங்கணன்

தஞ்சை—த. வா. கனகராசன்

சென்னை புரசை—என். டி. நடராசன், கழக அனுதாபி

கோவை—ஜி. கே. ராஜு தமிழர் பாசறை

அரண்மனைக்குரிச்சி—கழக அனுதாபிகள், ந. கோவிந்தராசன், சி. கோவிந்தசாமி, சி. முத்தண்ணா, அ. மருதமுத்து, கு. கணபதி, ந.அருமை, சி.கோவிந்தசாமி, எஸ். வேலுசாமி, என். சச்சிதானந்தம், திருநாவுக்கரசு.

பழையஆயக்குடி—வெ. சாந்த்

காரைக்கால் — கழகத்தோழர்கள்:-மு. ஆனந்தன், வி. கே. ராமலிங்கம், ஏ. ஆல்பர்ட், குஞ்சிதபாதம், கே. பி. கிருஷ்ணன், உ. காதாசன், துரைசாமி, போ. ம. சிவம், சண்முகம், எம். குழந்தை.

அய்யம்பேட்டை — கழகத்தோழர்கள்:— ஏ. ராஜன். க. ராமசாமி, கோ. சாமிநாதன், ர. சோமு, எஸ், நாராயணன், இராவெங்கடராசு, ச. ராமச்சந்திரன் பி. எச். என். நாதன், எம். மாரிமுற்று, என். சுப்பிரமணியம், க. கோவிந்தராசன், சி. அந்தோணிசாமி, பி. ரத்தினசாமி, என். எம்.எஸ். மொய்தீன், எ. தர்மலிங்கம், ஆர். எஸ். மணியன்.

திருச்சேறை—ப. இராசகோபாலன், தி.க. உறுப்பினன்

இலங்கைசுண்ணாகம்—எஸ். கணேசலிங்கன்

மேலூர்—மாணவத்தோழர்கள்:-இரா. ப. இராவணன், ஐ. சையத்அலி, இரா. நாராயணசாமி, ஆ. சுந்தரராசன், நா. கோ. முகம்மதுமைதீன் வி. கே.கிருஷ்ணன், தி. அழகர்ராஜுலு, முத்துமாணிக்கம், வீ. வெள்ளச்சாமி, அ. பழனிச்சாமி.

கடம்பத்தூர் — மறுமலர்ச்சிக் கழகத் தோழர்கள் :— கோ. த. கன்னியப்பன், அ.கி. மூர்த்தி, மு.வெற்றிவேல், கா. பழனி, கா.கு. நடராசன், கா. கோவிந்தயாசன், க. நடேசன், மலையப்பன்.

திருப்புவனம்—நா. இரா. பண்டரிநாதன், திருவள்ளுவர் வாசகசாலை.

திண்டுக்கல் — எம். எம். சின்னப்பா, துணைத்தலைவர், திராவிடர் கழகம்.

அகரம்—ஆர். குழந்தைவேலன்

புவனகிரி— கழகத்தோழர்கள்: — தி. வி. கோதண்டன், கோ. ராமநாதன், பி. கோவிந்தசாமி, ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி.

விழுப்புரம்—தி. கண்ணபிரான்

மதுரை—ப. சி. லிங்கையா

தர்மபுரி—கழக அன்பர்களும் ஆதரவாளர்களும்:— த. ராசலிங்கம், த. ப. ராஜாமணி, த. மு. பழனியப்பன், த. அ. பெரியசாமி, சூடாமணி, அப்துல் மஜீத்கான், த. அ. சுப்பிரமணியம், த. கோ. ஜயராமன், அலீம், ஏ. எம். நஞ்சப்பா, பி. ஏ, சாபசாயபு, பி. பி. மாதப்பா, என். கே. ராஜகமலம், தீ. சதாசிவன், மு. சின்னராசு, சி. பொன்ரங்கன், பி. சி. கந்தசாமி, டி. எம். சிங்காரம், த. அ. இராசகோபால், தக. ராஜி, டி. கே. கிருஷ்ணசாமி, எஸ். பி. கிருஷ்ணஸ், எஸ். அப்பாவு, ஒளிவழகன், சி. விவேகானந்தன், டி. சிவநேசன், அ. சண்முகம், ந. தீ. சிவலிங்கம், தா. செயராமன், சண்முகம், என். சுபுஷன், பா. சே. வரதராசன், டி. எம். மணி, டி. பி. எஸ். மணி, டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, டி. ஏ. பாப்ராம், கா. சி. கிருட்டினன், த. ந. கோபால், முனியப்பன், எம். அருணாசலம், டி. கே. நரசிம்மன், சி. கிருஷ்ணன், கே. வையாபுரி, தங்கவேல், டி. எம். சுப்பிரமணியன், டி. ஆர். தியாகராசன்.

கூனிச்சம்பட்டு—திருமுருகன்

களத்தூர்—கழகத் தோழர்கள்— மு. மாணிக்கவாசகம், சீ. வேல்ராஜ், க. தனுக்கோடிபால், மு. இரத்தினசபாபதி, செ. நீதிராஜன், த-சீனியப்பன், மு. பெத்தையா, ஆர். கருப்பசாமி, வி. டேவிட் தாமஸ், பி. முத்தையா, த. தங்கம், ப. சுடலைமுத்து. குலசேகரப்பெருமாள், கே. கு. முத்தையா, என். சண்முகக்கனி, கு. தங்கச்சாமி, பி. எஸ். லி. சுந்தரராஜ், பி. முத்து, எஸ். கன்னிச்சாமி

ஏழாயிரம் பண்ணை—திராவிடர்கழகத் தோழர்கள்:— கே. சுப்பிரமணயம், பி. பெரியசாமி, எம். மாரியப்பன், கே. தர்மராஜ், சி. கிரஹம்துரை, பி. நடராஜன், எஸ். கன்னியப்பன், குருசாமி உபாத்தியயர், சி. கனகராஜ், டி. அந்தோனி பி. ஏ., கே. கோவிந்தன், சீனியப்பன், துரைசாமி, சொக்கநாடன், கே. தங்கராசன், பி. பொன்னுத்துரை, டி. ராஜமணி, டி. சக்ரவர்த்தி, டி. பவுல், சி. நடராஜன், துரையப்பன், அண்ணாமலைச்சாமி, சி. ரஞ்சிட், கே. பி. ராமசுப்பு, பி. ராமசாமி, எஸ். ரத்தினசாமி, எஸ். பால்துரை, எம். கருப்பசாமி, கே. சங்கர், வி. தாமஸ், சி. ராஜரத்தினம், எஸ். பழனியப்பன் பி. ஏ., எம். மண்டலச்சாமி

விழுப்புரம்—கழகத் தோழர்கள்:—பு. மா. லோ. திருஞானசம்பந்தன், பு. மா. லோ. திருநாவுக்கரசு, தி. ராமச்சந்திரன், ஏ. பாக்ஷாசாயபு, வி. சுக்கூர், பி. ஏழுமலை, தே. வீரராகவன், தி. ரா. சுப்பிரமணியன்.

நிலக்கோட்டை—எம். எஸ். கண்ணபிரான்

சென்னை—பங்கிங்காம் கர்னடிக் மில்ஸ் குமாஸ்தாக்கள்:—டி. சிதம்பரநாதன், வி. ஜோதிநாயகம், ஏ. சி. எஸ். சுந்தரம், வி. வெங்கடேசலு, எஸ். ராஜமன்னார், வி. விஸ்வநாதன், வி. கோவிந்தசாமி, என். ஆர். சுந்தரபெருமாள், அசாப்பன், ஜி. சி. சின்னப்பன், ஏ. ஆர். ரங்கநாதன், எல். சச்சிதானந்தம், பி. ரங்கநாதன், எஸ். எம். குப்புச்சாமி, என். சுலுஸ்கான், எம். என். தனபாலன், து. இராமையா, ஆலால சுந்தரம், ஏ. ஏசுதாஸ், சண்முகம், இன்னும்பலர்

திருமயம்—சி. என். நாகலிங்கம்

தேவகோட்டை-செயின்ட் மேரி உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த தர்மாபாய்கோயில்பிள்ளை, பத்மாபாய் கோயில்பிள்ளை, டி. ஜாய் மேரி (மாணவி)

திருமங்கலம்-ஆர். இராசகோபாலன்

பெங்களூர்-சா. வீரய்யன், வே. சாந்தியப்பன், பெ. ரா. ஆறுமுகம், செ. கி. நாதன், வெ. இளவேந்தன். ஜி. ருத்திராபதி

நாச்சியார்கோயில்-எம். ஏ. இளஞ்சோழன், ஏ. ஜோசப்

இராயவரம் (திருச்சி)-மு. காந்திதாசன்

வி. சேகரன் தி. க. தூத்துக்குடி

விருதநகர்-கழக அன்பர்களும் ஆதரவாளர்களும்:— த. பெரியசாமி, த. சு. வேல்சாமி, ப. நடராஜன், ஏ. பி. நடேசன், கே. எஸ். மணி, டி. கனக பாண்டி, சு. மாரியப்பா, பெ. அருணாசலம், சுந்தரநாடார், ச. தங்கவேல், சு. ப. தனுஷ்கோடி, நா. வெள்ளைச்சாமி, ந. இராமச்சந்திரபாண்டியன், நா. தனுக்கோடி, டி. கே. அரசு, சு. பெருமாள், என். ஆர். சந்திரன், பெ. நாகரத்தினம், கு. மாரியப்பன், கே. சுப்பிரமணியன், கே. சண்முகம்.

பெரம்பூர்—இரெ-பழனிவேலு, தி-கழகம்

தூத்துக்குடி—கழகத்தோழர்கள்:— ஏ-செல்லத்துரை, என்-தங்கவேல், பே-வ-செ-ராவணராஜன், கே-மாணிக்கம், வி-அய்யம்பெருமாள், த-காசி, த-தேன்ராஜன், பி-தங்கையாநாகம்மாள், பி-சந்தோஷம், பா-தங்கராசன், செ-இச்சிமுத்து, ஏ-தங்கச்சாமி, ஏ-இரத்தினசாமி, இரா-கிருஷ்ணன், கா-ராஜாமணி, ச-மாணிக்கவேல், இரா-பச்சக்கனி, ராஜாமணி, என்-கே-தவமணி, சு-ஆறுமுகம், பி-சுப்பையா, த-மாடசாமி, நடராஜன், ஆர்-பாலகிருஷ்ணன், என்-செம்புலிங்கம், எம்-ஆர்-என்-பாண்டியன், சோ-பொன்னப்பன், டி-கிருஷ்ணன், என்-காசி, து-காசி, பி-எம்-சாமி, மு-தங்கசாமி, மு-ரெங்கசாமி, தா-பாலையா, எஸ்-பெரியசாமி, சி-ரத்தினசாமி, என்-நடராசன், எம்-வடிவேல், கே-திருப்பதி, பி-கனகராஜன், பி-கே-ஆனந்தபுஷ்பம், பி-சக்திவேல், அருணாசலம், பெத்தையா, சி-பெருமாள், டி-சண்முகம், ரா-சங்கரக்கிளி, என்-தாசன், சி-என்-பெருமாள்.

நாங்குனேரி—வ-நடராசன், தி-மா-கழகம்

தூத்துக்குடி — கழக அன்பர்கள்: – நா-புகழேந்தி, ரா-அப்பனுசாமி, சி-பொன்னுசாமி, சண்முகவேல், வெ-துரைசாமி.

வீரசோளம்—காட்டுவாமைய்தீன்

தூத்துக்குடி—செ-வெ-காசிநாதன்

வடக்கனந்தல்—கே-பி-நெடுமாறன்

செகுடந்தானி — என்-கி-மாரிமுத்து

மேட்டூர் அணை - கழக ஆதரவாளர்கள்:—ஆ-ரத்தினசாமி, பி-எம்-ஜோஸப், ம-ஜான்மெல்கியோர், சி-சூசை, எ-பால்ராஜ், எஸ்-எஸ்-குப்புசாமி, காளிமூத்து, ஆர்-பி-வீராசாமி, ஐயப்பன், கே-கிருஷ்ணன், கோவிந்தன், துரைசாமிநாயுடு, வை-முருகன்

திருச்சனம்பூண்டி—இரா-அப்பாவு, செயலாளர், தி-க-கழகம்

ஸ்ரீ வில்லிபுத்தூர்—கோ-பெருமாள், தலைவர் தி-க.

உறையூர்—என்-முருகேசன், செயலாளர் தி-கழகம்

தாமல்—ஆர்-கணபதி

மதுரை—தி-பஞ்சவர்ணம்

மேலக்காவேரி—என்-பி-ஏ-கபூர்

கூத்தப்பட்டர்தோப்பு — கழகத்தோழர்கள்: — ந-ப-சாமி, மூ-ச-மூர்த்தி, பு-சங்கரலிங்கம், பி-பா-சந்திரன்

தூத்துக்குடி—து-ரத்தினம், பி-எம்-சண்முகம், விளம்பர அதிகாரிகள் 18-வது திராவிடர் கழக மாகாண மாநாடு.

யாழ்பாணம்—மு-சுப்பிரமணியன், டி-ஆர்-நாராயணன்: எம்-சுவாமிநாதன், டி-ஆர்-கோபால், கோ-இராமசாமி, கு-தமிழ்வாணன்.

இரங்கூன்—இ-வெ-பெருமாள், மாணவன்

சென்னைபுரசை—பெ-ஜெகனுதன், செயலாளன் புரசைத் தி-இ-கழகம்

திருவாரூர் — கழகத்தோழர்கள்:—என்-சேதுபதி, மு-கமலத்தியாகராஜன், டாக்டா இரா-விசயராகவன், ஜி-வி-கல்யாணசுந்தம், வை-பாலன், வை-தியாகராசன், வி-சொக்கலிங்கம், ஜே-ஜெயசிலன், க-கர்

(அடுத்த பக்கத்தில் பார்க்க)

முன்பக்கத் தொடர்ச்சி

தன். ஜீ-டி-மூர்த்தி, கு-செங்கமலம், சி-அய்யாரு நவநீதம், வி-கல்யாணசுந்தரம் ஆ-மு-இரத்தினவேலு, ஜி-கோவிந்தராசன், வி-பக்கிரிசாமி, சொ-குழந்தைவேலு, என்-கிருஷ்ணன், கே-நாகப்பன், கே.ஆர்-முத்துக்குமரன், கு-தென்னன், ஜி-முருகேசதிராவிடன், ஆர்-கோவிந்தராசு, மதுராம்பாள் ஜி-ஜெகநாதன், வி-ஜி-பங்காருசாமி, அ-வாசுதேவன், தி-சௌந்தரராஜன், கே-ராமமூர்த்தி, பி-வடிவேல், பி-லக்ஷ்மணன், மு-கதிர்வேலன், என்-கோவிந்தராசு, ஆ-சௌ-ராஜன், முல்லையம்மாள், என்-சாவித்திரி அம்மாள், என்-பத்மாவதி அம்மாள் பி-வி-லிங்கம், மு-க-தயாளு, பி-பி-நாயினு, பி. ஆறுமுகம், டி-சண்முகம், வி-துரைராசன், சு-இராமநாதன், பட்டு, நாகரத்தினம், அஞ்சுகம், நாகரத்தினம், என்-ஜி-ராஜு.

(தொடரும்)

வெந்த புண்ணிலே வேல்

வெள்ளம் வரும் முன்னே அணை போட்டோம், அணை உடைந்துவிட்டது, 9—7—49 மாலை 3-30க்கு. ஆயிரமாயிரம் தோழர்கள் மனம் நொந்து, வருந்தும் இந்நாளில், 10—7—49ல் கூடிய நிர்வாக உறுப்பினர் குழுவின் முடிவு, தலைவர் வேதாசலனாரும் ஒப்புக்கொண்டதே. பெரியார் திருமணம் முடிந்ததை அறிந்த வேதாசலனார், தன்மானத்தை மறந்து வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறார், தமது வேண்டுகோள் அறிக்கை மூலம். விடுதலையில் இன்று ஆதரிக்கிறார், அன்று எதிர்த்தார். ஆனைமலைத் தோழர் நரசிம்மன் அன்றே தலைவரை ஆதரித்து நிர்வாகக் குழுவிலிருந்து விலகி நின்றார்; பாராட்டத் தக்கது. அன்று எதிர்க்காத சிலர், இன்று சாதாரண அறிவுள்ள தோழர்களும் அருவருக்கும் நிலையில் அறிக்கைகள் விடுவது மிகவும் வருந்தத் தக்கது. உடனே மாநாடு கூட்டிப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, நமது மத்திய திராவிட கழக நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் கோரியபடி, யானும் விரும்புகிறேன். மேலும் நமது ஆக்கவேலை தடைபடாது நடைபெற, 'மாலை மணி' என்ற தினசரித் தாள் ஆரம்பிக்க இருப்பதை மனமார ஆதரிக்கிறேன். பெரியார் தலைமையைப் பெரிதும் வெறுக்கின்றேன், ஆகவே பெரியார் தலைமையில் இனிப் பணியாற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு மீண்டும் புதிய தலைமையின் கீழ் இயக்கப்பணி தொடர்ந்து புரியச் சித்தமாக இருக்கின்றேன்.

கு. ரா. ராசா (சோழகர்)

தி. க. மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

குளித்தலை.

Edited Printed & Published by
C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

கோயமுத்தூரில்
தொழில்-கல்வி கண்காட்சி
கோபால் பாக்-அவனுசி ரோடு

இண்டஸ்டிரியல் லேபர் வெல்பர் அசோசியேஷன் ஆதரவின் கீழ், 1949ஆம் ஜுலைமீ 24 தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்கு சென்ற வருடம் நடைபெற்றது போலவே அவனுசி ரோடிலுள்ள கோபால் பாக் கட்டிடங்களில் ஒரு தொழில்-கல்வி கண்காட்சி தினந்தோறும் காலை 9-மணியிலிருந்து பகல் 12-மணிவரையிலும், மாலை 1-முதல் 5-வரையிலும் நடைபெறும். அவசியம் ஏற்பட்டால் கால அளவு நீடிக்கப்படும். பொதுவாக, தொழில், இஞ்சினீரிங், கல்வி இவைகளுக்கு வேண்டிய சாதனங்களைப் பற்றியும், கருவிகளைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லப்படும். வேடிக்கைக் கண்காட்சியைப் போலவோ அல்லது விளம்பரக் காட்சியைப் போலவோ இங்கு ஒரு பொருளும் இல்லை.

மாலை நேரங்களில் பிரபல அறிவாளிகளைக் கொண்டு, அரசியல் நீங்கலாக—தொழில், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் சொற்பொழிவுகளும், கல்வி, தொழில் சினிமாக் காட்சிகளும், மாலை 4-மணியிலிருந்து 6-மணிவரை நடைபெறும். மாலை நேரங்களில் மட்டுமே இயந்திர சாதனங்கள் நடத்திக் காட்டப்படும்.

பார்க்க வருபவர் சாமான்களையோ, இயந்திரங்களையோ தொடக்கூடாது. இங்குள்ள சட்ட திட்டங்களை யாராவது அனுசரிக்காவிட்டாலும், காட்சி நடக்குமிடத்தில் யாருக்காவது, ஏதாவது கஷ்டமோ, நஷ்டமோ விளைவித்தாலும் அவர்களே அவைகளுக்குப் பொறுப்பாளியாவார்கள். இந்த இடத்தில் யாருக்காவது, எந்தக் காரணத்தினாலோ, எந்த வழியினாலோ, எந்தவிதமான கெடுதியோ, நஷ்டமோ ஏற்பட்டால் அதற்கு இந்த அசோசியேஷனோ அல்லது நிர்வாகிகளோ ஜவாப்தாரியல்ல. யாராவது காட்சியைப் பற்றி தங்களுடைய அபிப்பிராயங்களைக் கொடுக்க விரும்பினால், ஆபீசில் கொடுக்கலாம்.

முன்னதாகவே பதிவு செய்துகொண்டு, காட்சிசாலை ஆபீசில் இலவசமாகக் கொடுக்கும் அனுமதிச் சீட்டைப் பெற்றிருப்பவரே அனுமதிக்கப்படுவர். முன்கூட்டியே அறிவித்து, அனுமதி கிடைத்தபின் கூட்டமாக வரும் உயர்பள்ளி மாணவர்களுக்கு, சாத்தியப்பட்டால், மெஷின்களைப் பற்றி விளக்கிச் சொல்லுவதற்கும் நடத்திக் காட்டுவதற்கும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்படும்.

அன்றன்றைய சொற்பொழிவு, சினிமா இவைகளைப் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புக்களை கேட்டுக்குப் பக்கம் உள்ள நோட்டீஸ் போர்டிலும், உள்ளூர் பத்திரிகைகளிலும் வெளியிடப்படும்.

கோயமுத்தூர்,
15—7—49.

ஜி. டி. நாயுடு,
தலைவர், I. L. W. A. Ltd.

REGD. M. 4642.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ " 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 7—8—49 | இதழ் 6

76s
3-4
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-SEP 1949
MADRAS

கழகத் தோழர்கள் கருத்து

இயக்க வளர்ச்சிக்குத் தியாகம் செய்யத் தயார்

திராவிடத் தந்தை பெரியார், எந்த இயக்கத் தலைவர்களும் போற்றப்படாத அளவுக்கு, அரசியலில் நம்மால் போற்றப்பட்டு வந்தார். அப்பேறுபட்ட பெரியார் தன் திருமணத்தின் பொருட்டு, போற்றிவந்த தோழர்களாலேயே எந்தத் தலைவர்களும் காணாத எதிர்ப்பையும் கண்டார். இவ்வித எதிர்ப்பைக் கண்ட பெரியார், இனியும் படைத்தலைவராக இருக்க எண்ணுவது, அணிவகுத்து வழி கோல முயற்சிப்பது, பெருமைக்குரிய காரியமல்ல, வெற்றிக்கு அறிகுறி உடையதுமல்ல, முடியக்கூடிய காரியமுமல்ல, ஏற்றுக் கொள்ளக்கூடியதுமல்ல. பெரியாரின் திருமணம் பொருந்தாத் திருமணமேயாகும்.

புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டியது அவசியமாகும். இப்பொழுது பெரியாரின் தலைமையை விரும்பாத நாம் அனைவரும் ஒன்று கூடி இயக்க அலுவல்களைச் செய்வதற்கு, உடனடியாக நிர்வாகக் கமிட்டியைத் தலைவர் கூட்டத்தவறினால், கமிட்டி உறுப்பினர்களே ஒன்றுகூடி ஆவனசெய்ய, அதற்கான முயற்சியெல்லாம் நானே ஏற்றுக்கொள்கிறேன். எதற்கும் தயாராக உள்ளேன்.

உடன் தனி மாநாடு கூட்டினால் சச்சரவு ஏற்படாதுவாகும் என்று கருதுகிறேன். அவ்விதம் ஏற்படாதவாறு செய்து பார்த்தும் பலன் கிடைக்காவிட்டால், பின் எவ்வித எதிர்ப்பையும் சமாளித்து இயக்கத்தை நாம் வளர்ப்போம். மேலும் உடனடியாக ஒரு செயற்கமிட்டியை நிறுவி ஆவன செய்வோம். நான் இயக்க வளர்ச்சிக்கான எவ்வித தியாகத்திற்கும் தயார்.

தூத்துக்குடி—கே. வி. கே. சாமி,
தி. க. மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

★

தனிப்பட்ட தலைவருக்காக இயக்கமல்ல

9—7—49-ல் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் செய்துகொண்ட பதிவுத் திருமணம், பெரியார் எக்கொள்கைக்காக உழைத்து வந்தாரோ அந்தக் கொள்கைக்கு நேர் முரண்பட்டதாகும். இதுவரை அவரைப் பின்பற்றிவந்த நான் பல முறை என் கருத்துக்கு மாறுபட்ட செயல்களை அவரிடம் கண்டும் அவரைப் பின்பற்றியே வந்தேன். காரணம் அவரிடம் நான்கண்ட மாறுபட்ட கருத்துக்கள் அரசியல் தந்திரமாக இருக்கலாம் என்று நம்பினேன்.

திருச்சியில் கமிட்டிக்கூட்டம் முடிந்து பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் 9—7—49-ல் பெரியார்—மணியம்மை பதிவுத் திருமணம் நடந்தேறிவிட்டது என்ற தந்தி வந்திருப்பதாகத் தந்தியை வாசித்துக் காட்டினார். இச்செய்தியைக் கேட்டதிலிருந்து பெரியார் அவர்களைத் தலைவராக ஏற்க மனம் இடந்தரவில்லை. நான்மட்டுமல்ல, இயக்க நலனே தங்கள் நலமெனக் கருதும் பகுத்தறிவு உள்ளவர் யாராயினும் பெரியாரை இனித் தலைவராக ஏற்கமனம் இசையார். தனிப்பட்ட தலைவருக்காக இயக்கமல்ல. இயக்கவளர்ச்சிக்குத்தான் தலைவர். இயக்க வளர்ச்சிக்குத் தீங்கு இழைக்கும் தலை

வரோ, தளபதியோ, தொண்டரோ யாராயிருந்தாலுஞ் சரி அவர்களை இயக்கத்திலிருந்து விலக்கியே ஆகவேண்டும். மாகாண திராவிடர்கழக நிர்வாகக் கமிட்டியைக் கூட்டித் தனி மாநாடு ஒன்றை நடத்திப் பெரியார் வகிக்கும் தலைமைப் பதவியை மாற்றி அமைக்கத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமாதலால், உடனடியாக நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி ஆவன செய்யுமாறு நிர்வாகத் தலைவர் தி. பொ. வேதாசலம் அவர்களையும், துணைத்தலைவர் கே. கே. நீலமேகம் அவர்களையும் பொதுக்காரியதரிசி சி. என். அண்ணாத்துரை அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை—என். எம். சுப்பிரமணியம்
தி. க. மத்திய நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்.

★

தலைவரைத் தேர்ந்தெடுக்கத் தனி மாநாடு

பெரியார் திருமணம் தொண்டர்களுக்குச் சிறுமையை உண்டாக்கிவிட்டது. அவரின் செயல் மாற்றத்தால் அவரிடம் நம்பிக்கை இல்லை. தனி மாநாடு கூட்டித் தலைவரைத் தேர்ந்தெடுத்து ஆவன செய்வதே சாலச் சிறந்தது. நீதிக்கும் நியாயத்திற்கும் என்றும் ஆதரவுண்டு.

விருத்தாசலம்—சி. முனுசாமி
தி. க. மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

★

தலைமையிலே நம்பிக்கையில்லை

"தலைமையிலே எனக்கு நம்பிக்கையில்லை!" என் வாழ்நாளில் என்றாவதொருநாள் நான் இப்படிச் சொல்ல நேரிடும் என்று எண்ணிப் பார்த்தது கிடையாது. ஆனால் தலைமையிலே இருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை, பாசம் இதுதான் காரணம். இன்று என்னையும் மீறி, என் மனச்சாட்சி பேசுகிறது! இல்லை, குமுறி அழுகிறது, உதடுகளைப் பிளந்துகொண்டு வார்த்தைகள் உருண்டோடுகின்றன.

"தலைமையிலே நம்பிக்கையில்லை!" ஆச்சரியமான, ஆனால் வேதனை தரும் கட்டம் இது என்பதை நான் உணருகின்றேன். இந்த வார்த்தைகளை முணுமுணுக்கும் போது தள்ளாத அந்தக் கிழவரின், "தந்தை" என்று மகிழ்ச்சி எக்களிப்போடு நான் அழைத்த பெரியாரின் பெரும் உருவம் என் மனக்கண் முன்னே வருகிறது. மனக் கண்ணிலே பட்ட அந்த உருவத்திற்கு இரண்டு சொட்டுக் கண்ணீரைக் காணிக்கையாக்கினேன். ஆம் நான் அவருக்குச் செலுத்தவேண்டிய, "கடமை" அது! அது நிறைவேறிற்று!

நம்பிக்கைத் துரோகிகள்! சுயநலமிகள்! கொலைகாரர்கள்! சென்னை தொட்டு கன்னியாகுமரி வரையிலும் உள்ள தோழர்கள், என்று அவர் எண்ணிவிட்டார்! எண்ணியதைப் பற்றி நான் கவலைப்படவில்லை! சொல்லிவிட்டார்! சொல்லியதைப் பற்றியும் கவலையில்லை, ஊர் சிரிக்க வைக்கிறார்!

நான் அறிந்திருக்கிறேன், கொண்ட காதலுக்காக நாட்டைத் துறந்த மன்னர்கள், நாட்டுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை உதறித் தள்ளிய வேந்தர்கள் இருந்திருக்கிறார்கள் என்று! காதல்!...அதன் மகத்துவம் அது என்ற அளவிலே நான் பூரித்ததுண்டு!

ஆனால் வாழ்வின் கடைக்கோடியில் நிற்கும் முதுபெருங் கிழவர், இலட்சியச் சின்னம், கேவலம் 30 வயதுக் கன்னிப் பெண்ணை—மணியம்மையை மணந்து கொண்டதன் மூலம், தமது தொண்டை, 30 வருடத் தொண்டால் நாடடைந்த மதிப்பை, அந்த மதிப்பால் நாடு பெற்ற ஏற்றத்தைக் காலால் எற்றி மிதிக்கிறார்! இந்த விபரீத சம்பவத்தை எங்குமே பார்த்ததில்லை!

"தவறு" என்றவர்கள் விஷமிகள்! "கூடாது இந்தத் திருமணம்" என்றவர்கள் நம்பிக்கைத் துரோகிகள்!

"கண்ணீரைக் காணிக்கையாக்கிக் கேட்கிறோம், இந்த முறை வேண்டாம், விபரீதம்" என்றவர்கள், கொலைகாரர்கள்!

ஆம், போதும், தலைமை தாழ்ந்துவிட்டது! தாழ்ந்துபோன தலைமையின் மூலம், இனித் தொண்டாற்ற இயலாது.

"எனக்குத் தலைமையிலே நம்பிக்கையில்லை" என்கிறேன். துளிகூட நம்பிக்கையில்லை!

நாகர்கோயில்—கே. மனோகரன்
கல்லூரி மாணவர்.

★

நல்ல மாறுதல் வேண்டும்

பெரியாரின் திருமணமும், இயக்க வாரிசும் பெருங் குழப்பத்தை உண்டாக்கியுள்ளன. அவரது அறிக்கைகளும், விளக்கங்களும் இருளை மேலும் கறுப்பாகவும், பயங்கரமாகவும் ஆக்குகின்றன! இந்நிலைக்கு நாணுகிறேன்.

நீண்டநாள் இயக்கத்தான் என்ற முறையில் சிந்திப்பினும், பெரியாரின் செயலை ஒப்ப என் பகுத்தறிவு மாறுகிறது. ஆயிரம் சொல்லினும் குற்றம் குற்றமே.

உழைப்பின் உரு, இலட்சியக் குன்று, பெரியார் இவ்வளவு பெரிய தவறிழைப்பாரென்று நான் கனவிலும் கருதவில்லை. கொள்கையைப் பெற்றவர் அவர். வளர்த்தவர் தொண்டர்கள். அதனை வதைக்கவும் வாழ வைக்கவும் இருவர்களுக்கும் உரிமையுண்டு.

செழித்துவளர்ந்த இலட்சியத்தை, பொருள்களைச், சிதைப்பதைத் தொண்டர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியாது; கூடாது. நமது இயக்கம் வெறும் பொழுதுபோக்கல்ல, 5 கோடி மக்களின் அரசியல், பொருளாதார, சமுதாய அடிமைத்தனங்களை, இழிவுகளைப் போக்குவதற்கு எழுந்தது, அது காக்கப்படவேண்டும்.

யாரையும் நம்பாதவர் தலைமையில் இனி யார் எதைச் செய்ய முடியும்? என்வே ஜனநாயக நீதியில் இயக்கத் தலைமையில், அமைப்பில், நடப்பில் நல்ல மாறுதல் வேண்டும். தயவு செய்து ஏற்பன செய்யுங்கள். உழைப்போம்.

ஜலகண்டபுரம்—ப. கண்ணன்
செயலாளன், ஓமலூர் தாலுக்கா திராவிடர் கழகம்.
அங்கத்தினன், சேலம் மாவட்ட தி. க. கமிட்டி.

❊

இனித் தலைவராக ஏற்கமுடியாது

பெரியாரவர்களின் போக்கை மாகாணத்தினரனை வரும் ஒரு முகமாகக் கண்டித்தும், வற்புறுத்திக் கேட்டும் தன்னிச்சைப்படியே நடந்து இயக்கத்திற்கும், தனக்கும், மறைக்கவும், பொறுக்கவும் முடியாத பெரிய பழியை உண்டாக்கிவிட்டார். நம் நாட்டில் பகுத்தறிவியக்கத்தைத் தோற்றுவித்தவரும், அதன் தலைவருமாகிய அவர், ஜனநாயகக் கோட்பாட்டை நன்றாக உணர்ந்து மக்களுக்கும் எடுத்துச்சொல்லிவந்த அவர் தனக்குப்பின் தலைவர் (வார்சு) இல்லையே என்கிறகவலையோ, நினைப்போ கொண்டிருக்கக் கூடாது. நமக்கு மட்டும் ஈடு இணையற்ற தலைவராக வாய்த்தவர் மட்டுமல்ல, உலகவரலாற்றிலேயே முக்கிய இடம்பெறத்தக்கவர் என்று பெருமைப்பட்டுக்கொண்டிருந்த நம்மை, தான் திருமணம் செய்துகொண்டதன் மூலம் நாம் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்படும்படி செய்துவிட்டார். ஆகவே இயக்கமும், கொள்கையும் பெரிதென நாம் மதிப்பதால் நாமே தலைவர் எனக் கொண்டிருந்தவரை, நாமே இனித் தலைவராக ஏற்கமுடியாது என்று சொல்ல நேர்ந்ததே என்கிற வருத்தத்தோடு அவர் தலைமையிலிருந்து பணி செய்வதினின்றும் விலகுகிறோம்.

ஆக இனி கூடியசிக்கிரம் தனி மாநாடு ஒன்று கூட்டித் திட்டங்கள் பல தீட்டி இயக்கம் சீக்கிரம் தன் இலட்சியங்களை அடைய ஆவன செய்யுமாறு மிகமிக வேண்டிக்கொள்ளுகிறேன்.

குறிஞ்சிப்பாடி—இரா. சாம்பசிவன்
தெ. ஆ. மாவட்ட தி. க. பொருளாளர்.

❊

கண்ணீர்த் துளிகள்

16-ம் பக்கத் தொடர்ச்சி

உளுந்தூர்ப்பேட்டை—து-இராமையா, தலைவர், தி. க.

ஆனைமலை—ஜே. சுந்தரராஜ் தோட்டத் தி-க.

இராமநாதபுரம்—திராவிடர்கழக அன்பர்களும் ஆதரவாளர்களும்:—சோ. சொக்கலிங்கம், இரா. கா. வீரமணி, உ. பஞ்சாட்சரம், தங்கவேலு, ர. மாணிக்கம், ஜி. கிருஷ்ணமூர்த்தி, பி. நாகலிங்கம், எஸ்-அப்துல்மஜீத், ஏ. சுப்பிரமணியப், சா. துரைராஜு, ஆர்-குருசாமி, எஸ்-எல்-சாமி, கே. சுப்பிரமணியம், வி-வேலுச்சாமி, வி-முத்துராமலிங்கம், செ. சக்திவேலன், ஆ. மாயாவதாரன், கோ. ரெத்தினம், பா. பூமிநாதன், எம்-எஸ்-ஏ-கரீம், எம். ஷேய்க் தாவூது, ஜே. அப்துல்சலாம், பி. அப்துல்முனாஜ், எம். ஆறுமுகம், எஸ்-எம்-சாமி, அப்துல் ரஹ்மான், வெ-மாரிமுத்து, கா. காசிநாதன், அ. குப்புசாமி, துரைபாண்டி, ம.சன்னாசி, த-மோகன், எஸ்-ஆர்-சாந்தி, டி-கமலமுத்து சி-அரிகிருஷ்ணன், ஆர்-கிருஷ்ணமூர்த்தி, ஏ-நந்துராம், எம்-மீர், சுப-ராமச்சந்திரன், எஸ்-செல்லம், பி-எஸ்-பி-சுப்பிரமணியன், ஆதிமூலம், ச-பாலசுப்பிரமணியன், ந-கணபதி, என்-கோபாலகிருஷ்ணன், கே-ராமமூர்த்தி, கே. நவசக்தி, எம்-பொன்னுசாமி, வி-நாகரத்தினம், இரா. நடராஜன் எஸ்-நாகநாதன், சுந்தரராஜ், சு-வெற்பன், எம்-சுந்தரராஜன், ஆர்-வீரபாகு, சோ-கருப்பையா, ஓ. ஜி. பாலன், ஜி-ஞ-ஜியார்ஜ், ஏ. சாண்டியாகோ, ஏ.ஷம்சுதீன், ஜே-சிட்னி, ஜி-சி-செல்லப்பா.

உப்புத்துறைப்பாளையம்-மறுமலர்ச்சி மன்றத் தோழர்களும் ஆதரவாளர்களும்:—சு-ஷண்முகனார், க-பெரியசாமி, சு-குப்புசாமி, ல-கோ-இராசன், சி-மாரிமுத்து, க-பழனியப்பன், க-ஆறுமுகம், ஆ-கிருஷ்ணசாமி, பா-இராமசாமி, கு-இராமசாமி, தி-கிட்டப்பன், வெ-நல்லமுத்து இராமசாமி தா-கா-மாரிமுத்து, க-முனியப்பன், வேலுச்சாமி மு-வெங்கிடுசாமி. டி-பெரியண்ணன், வி. காளியப்பன், எஸ்-மாரியப்பன், சு-முத்துச்சாமி, எம்-காசியப்பன், கே-சங்கரன், வி-மாரியப்பன், எம்-ஏ-சலாம், எஸ்-ஏ-டி- கரீம்.

வடக்கனந்தல்:—தி-க-உறுப்பினர்கள்:—வே- விநாயகத்தான், மாரியப்பன், இரா. பாகன், க. பெ-நெடுமாறன், வெ-மாணிக்கம், இராசு, நல்லான், இராசமாணிக்கம், பெ-ஆறுமுகம், ச-ஆறுமுகம், ஆண்டி, அருணகிரி, இராமசாமி, தியாகன், வே-தியாகன், தாவன், பச்சையப்பன், ஆய்யம்பெருமாள், தென்னவராயன், சின்னுசாமி, முஸ்தபா, அமீர், ரங்கசாமி, வெங்கட்டராமன், சுந்தரமூர்த்தி, தேவராசு, முத்துச்சாமி மற்றும் பல உறுப்பினர்கள்.

விழுப்புரம்—பி. எஸ். அப்துல்வகாப், தலைவர், தி. இ. கழகம்.

கோவை—நகர திராவிடர் கழகத்தோழர்கள்:—என்-பிள்ளாரி, ஏ. பொன்னுச்சாமி, சி. கே. சுப்பிரமணியம், கே-பொன்னுச்சாமி, சி. ஆர். மருதாசலம் என். ராமசாமி, எம்-வெங்கட்டராமன், முத்தையன், குமாரசாமு, வி. சத்தியமூர்த்தி, ஆர்-கன்னையன், ம-அ-நடராசன், வெ-கிருட்டினமூர்த்தி ம-அய்யாசாமி, சி-பாலசுந்தரம், ஏ-சுப்பிரமணியம், எஸ்-மருதாசலம், பி-நாராயணசாமி, சி-வி-கிருஷ்ணமூர்த்தி, பி-கே-பெருமாள், சவுராசி, என்-சொக்கலிங்கம், பி-ராமசாமி, சி-எஸ்-வேலாசாமி, எஸ்-சின்னப்பன், ப. இளவழகன், சு-கிருஷ்ணராஜ், இரா-இராமசந்திரன், கோ-ஜெயராமன், கே-கோபாலன், எஸ்-முத்துராஜு, எஸ்-டி-சிதம்பரம், சி-ஜே-கிருட்டினன், வி-வேலாசாமி, எஸ்-கிருஷ்ணன், இரா-வேலாசாமி, அ-கிருட்டினராசு சி-வி-ரங்கராஜன், தம்மண்ணன், மணி, ம-ராமச்

சந்திரன், நா-இராசகோபால், சுரா-சந்திரன், ஆர்-கே-வேலாசாமி, சின்னசாமி, பொ-குமார சாமி, கே. வி-வெங்கிடசாமி, எம்-வி-ராமசாமி அ-சந்தானம், பாப்பண்ணு, ந-வீரபத்திரன், எஸ் ராமமூர்த்தி, எம்-சுப்பிரமணியன், நஞ்சப்பன், சுந்தரராசன், எஸ்-பாலசந்திரன், ஆர்-பிள்ளாரி, பி-ராமசந்திரன், பி-பிள்ளாரி, கு-கிருஷ்ணசாமி, ஆர்-பழனிச்சாமி.

சின்னசேலம் — மாணவர் கழகத்தார்கள்—சொ-பொன்னம்பலம், இரா-சோமசுந்தரம், இரா. ஆனந்த கிருஷ்ணன், ஜி-முருகேசன், எஸ்-வி-அருணகிரி, கே-சி-ரங்கராஜு, பி-வேலாயுதம், இ-கைலாசம், எம். பச்சைமுத்து, சி-ஜெகநாதன், என்-இளங்கோவன், ஏ.இராமசாமி, எம். இராமநாதன், ஆர். சுப்புலக்ஷிமி, ஏ. பி ருக்மணி, என். விருகதாம்பாள், என். கதிர்வேல், பி. தங்கவேல், அ. சி. அய்யாசாமி, என். கண்ணையன், என். கண்ணையன், எஸ். தர்மலிங்கம், டி. வி. எஸ். ராமசாமி, கே. வெங்கடாசலம், என். அம்பாயிரம், ஆர்-தங்கவேல், ஜி. வெங்கடேசன், எஸ். நல்லதம்பி, என். சந்திரன், பி. அங்கமுத்து, வி. செல்லமுத்து, ஆர். நடராசன், பி. ராமானுஜம், பி. துரைசாமி, டி. எம். கிருட்டினமூர்த்தி, எம். தங்கவேல்

இலங்கை—திருகோணமலை தி. க. தோழர்கள்:— ஏ. எஸ். ஏசுதாசன், கே. ராசையா, என். ஏ. ஏ. கடவுள், வி. செல்வநாதன், கே. எம். அறிவாளன், பி. எஸ். செல்லையா, எஸ். விசுவநாதன், கே. ஐ. ரங்கசாமி, எம். கோவிந்தசாமி, டி. பிரமன், ஆர். கிருஸ்டியோன், பி. வேலு, ஓ. சிதம்பரம், எஸ். மாதவன்

விழுப்புரம்—ஜே. ஞானம்

சதுப்பேரி—கழகத் தோழர்கள்:— குப்புசாமி, எஸ். கோவிந்தசாமி, வி. கே. பெருமாள், டி. அண்ணமலை, அப்புகுட்டி, அப்பா, செங்கல்வாராயன், கே. பெருமாள், தண்டபாணி, பச்சியப்பன், குப்பன், பி. வெள்ளை, கே. வெள்ளை, பொன்னுச்சாமி, கண்ணன், கே. கந்தசாமி, சின்னசாமி, தொப்பளான், பெருமாள்சாமி, சுப்பராயன், கே. கோவிந்தராஜு, முனியன்.

தாரமங்கலம்—கழகத் தோழர்கள்:— டி. கே. பெரியசாமி, சு. நடேசன், ஏ. டி. வேலு, எம். சந்திரசேகரன், எம். அப்பாசாமி, நா. அ. மாணிக்கம், நா. க. ஆறுமுகம், அ. பெரியசாமி, கே. முருகேசன், எ. நமசிவாயன், ஆர். நாகராஜன், ஏ. தனராஜ், டி. ஐ. கந்தசாமி.

குள்ளம்பட்டி—பி. ராமலிங்கம், தலைவர், தி க.

(தொடரும்)

தோற்றம்

கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடகசபையின் நடிகத் தோழர் D. V. நாராயணசாமி துணைவியார் பாப்பம்மாளுக்கு, 2-7-49ல் ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலம், குழந்தைக்கு சந்திரமோகன் எனப் பெயர் சூட்டப்பட்டது.

கே. கே. நீலமேகம் அறிக்கை

✻

சென்னை மாகாண, திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் T. P. வேதாசலம் அவர்களுக்கு ஷ கழக உபதலைவன் K. K. நீலமேகம் எழுதிக்கொண்ட வேண்டுகோள்.

9—7—49 அன்று பெரியார் திருமணம் நடைபெற்றது குறித்து, கழகத்திலே ஏற்பட்டுவிட்ட மனக் கசப்பும் கொதிப்பும் தாங்கள் அறிந்ததே.

திருமணச் சேதி தெரியாத நிலையிலே 10—7—49 அன்று திருச்சி தென்னூரில் கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், வந்திருந்த 32 உறுப்பினர்களில் 31 பேர் திருமணம் கூடாது என்றும், இயக்க நலன் கருதித் திருமணத்தைக்கைவிட்டுவிட வேண்டுமென்றும், தீர்மானித்ததும் தாங்கள் அறிந்ததே.

நிர்வாகக் கமிட்டியின் இந்தத் தீர்மானம், வீணாக்கப் பட்டதுடன், பிறகு, ஏற்பட்ட நிலைமைகள், கட்சிக்குள் மேலும் குழப்பத்தையும் கசப்பையும் மூட்டிவிட்டிருக்கிறது.

30 நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் தலைவரின் போக்கை வெறுத்து, இனி அவருடைய தலைமை கூடாது என்று, தங்கள் கருத்தை வெளியிட்டுவிட்டனர்.

மேலும் பலர் இதே கருத்தை எனக்குக் கடித மூலம் தெரிவித்து வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே இயக்க நலன் கருதி, உடனடியாக மாகாண ஸ்பெஷல் மாநாடு கூட்டி தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கழகப் பணியை நடத்திச் செல்வதே முறை.

இதற்காவன செய்ய, தாங்கள் நிர்வாகக் கமிட்டியைக் கூட்டவேண்டுமென்றும், தாங்கள் கூட்டத் தவறினால், நானே கூட்டுவதாகவும் 22—7—49 விடுதலையில் நான் அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

ஆகவே, தாங்கள், ஒருவார காலத்துக்குள், நிர்வாகக் கமிட்டி கூட்டி, பெருவாரியான நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், கழக முக்கியஸ்தர்கள், பல கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் ஆகியோரின் நம்பிக்கையை இழந்துவிட்ட தலைவரின் கீழிருந்து இனி வேலை செய்ய முடியாதாகையால், ஸ்பெஷல் மாநாடு கூட்டித் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும், என்று தீர்மானம் நிறைவேற்றக் கோருகிறேன்.

44 பேர் கொண்ட நிர்வாகக் கமிட்டியில், இந்தக் கருத்தை ஆதரிப்பவர்கள் 30 பேர் இருப்பதால் ஜனநாயக முறைப்படி தீர்மானம் நிறைவேற்றப்படுவதே நியாயம்.

தாங்கள் நிர்வாகக் கமிட்டியை ஒருவார காலத்தில் கூட்டாவிட்டால் நான் ஏற்கெனவே அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறபடி, நானே நிர்வாகக் கமிட்டியைக் கூட்டவேண்டி நேரிடும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

கே. கே. நீலமேகம்

4—8—49.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS · -SEP 1949

இரு துருவங்கள்

16-ம் பக்கத் தொடர்ச்சி

மோட்சலோக வழியைக்காணும் காலட்சேபத்தை ரசித்தல்—இங்கு நம்மவர்களின் நிகழ்ச்சி நிரல் நாள் தோறும்! விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலே "சக்கரம்" இருக்கிறதே, அந்தக் கருவியைக் கண்டு பிடித்தவனின் பெயர் தெரியாவிட்டாலும் கூட அந்த அடிப்படையான "வட்டம்" என்கிற தத்துவத்தைக் கொண்டுதான் உலகமே இயங்குகிறது என்று கூறலாம். ஆனால் நம்மவர்கள் அதே ஆழியைப்பற்றிக் கூறும் போது ஆழிகொண்டபெருமானின் கதையைத்தானே கூறுவார்கள்? "ஓர் உறுதியான கெம்புகோலும், அது நின்று ஆட ஒரு ஆதாரமும் கிடைத்து விட்டால் நான் இந்த உலகத்தை ஆட்டிவிடுவேன்" என்று ஓர் விஞ்ஞானி கூறினதாகப் படிக்கிறோம். அந்த விஞ்ஞானி கூறியபடி நடக்க முடியாவிட்டாலும், அந்த அடிப்படையான தத்துவம் பொய்யல்ல!

ஆனால் "நம்மவர்கள்" கூறும் போது "இரணியாட்சன் எனும் அசுரன் உலகத்தையே பாயாகச்சுருட்டிக் கடலிலே ஒளித்தான்" என்று நடந்ததாகக் கூறுமளவிற்கு அந்த விஞ்ஞானியின் "கனவு" நடக்கக் கூடாததும் அல்ல! மேலும் அவன் இறந்த காலத்திலும் கூறவும் இல்லை!!

விஞ்ஞான வளர்ச்சியிலே மேலை நாட்டினரைப் பிடிக்க முடியாத அளவுக்கு அவர்கள் நம்மைவிட முன்னேறி விட்டார்கள். இந்த நிலையிலே நமது ஏட்டுச்சுவடிகளைக் களவாடித் தான் வளர்ச்சியடைந்தான் அந்த வஞ்சகன் என்று ஏன் நமது நெஞ்சு நெக்குருகவேண்டும்? அவன் ஏடுகளிலுள்ள எழுத்துக்களை அறிந்து படிக்கக்கூடிய "யந்திர மனிதனை" படைத்து விட்டான். நாம் ஆண்டுதோறும் நம் ஏடுகளுக்கு "தூப தீப நைவேத்தியம் சமர்ப்பயாமி" செய்கிறோம்! அவன் கொசுவின் இசையினாலேயே அதன் இனத்தை இழுத்து அழிக்கும் ஆற்றலைப் பெற்றுவிட்டான். நம்மவர் இன்றும் சமுதாயக் "கொசு" அவதாரக் கதைகளைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையாகவே விஞ்ஞானம், என்பது ஓர் விசித்திர வனிதை. அயல் நாடுகளிலே, அந்த விசித்திர வனிதை மக்களை அணைத்து இன்பம் பயக்கிறாள். அவளைத் தீய செயல்களுக்கு ஈடுபடுத்தும்போது அவள் துன்பம் இழைக்கிறாள். ஆனால் விஞ்ஞானம் விரித்த "மாயவலை"யில் விழாமல் அதை அடக்கி ஆள்பவன் அறிவுலகத்தை—ஏன்—ஓர் இன்ப புரியை நோக்கிச் செல்கிறான் என்பது தானே பொருள். தற்பொழுதுள்ள நிலையிலே விஞ்ஞானம் "விபரீத புரியை" நோக்கிச் செலுத்தப்படுகிறதே என்பதற்காக அதன் அரிய ஆற்றலை இழக்க முடியுமா? மலரிலே முள் இருக்கிறது என்பதற்காக அந்த மலரின் மணத்தை நுகராமல் தான் இருக்க முடியுமா?

அதோ மின் விசிறியினடியே நின்றுகொண்டு புதுமையைக் கண்டிக்கும் பழைமை விரும்பி வேறு யாருமல்ல! விஞ்ஞான ஆசிரியர் தான்! விஞ்ஞான போராசிரியர் கல்லூரியிலே!! விஞ்ஞானத்தால் வயிறு வளர்ப்பவர் அதற்கு எதிரான வியாசர் காலத்தைப் பற்றி விளக்குகிறார் விஞ்ஞான வகுப்பிலேயே! இறந்த மொழிக்கு ஏற்றங் கொடுத்து பொய்ப் புராணங்களுக்குச் சப்பைக் கட்டு கட்டுகிறார். புதுமையின் பலன்களை நுகர்ந்துகொண்டு புதுமையைப் பழிக்கும் விசித்திரக்காரர்கள் இந்த நாட்டிலே தான் ஏராளமாக இருக்கிறார்கள்! விஞ்ஞானம்—வைதிகம் இவை இரண்டும் இரு துருவங்கள்! இரு துருவங்களிலும் இரண்டு கால்களையும் நிறுத்தி வாழ்வை நடத்த விரும்புகின்றனர் இந்த விசித்திரமானவர்கள்.

ஆம்! ரயில், கப்பல், விமானம், ரேடியோ, டெலிவிஷன், மின் விசிறி—இவைகளெல்லாம் விளையாடும் பொம்மைகளாகத்தான் தெரியும் இங்குள்ள வைதிக பரம்பரையினருக்கு. இவைகளெல்லாம் வேடிக்கையாகத்தான் தெரியும் விஞ்ஞானத்தைப் பற்றி தெரிவிக்கப்படாத பாமரருக்கு. இவைகளெல்லாம் விளையாட்டு பொம்மைகளுமல்ல! வேடிக்கையுமல்ல!! உழைப்பின் விளைவுகள்!!! பல இரவுகள் கண்விழித்து, தன் உயிரையும் பணயம் வைத்து ஆக்கப்பட்ட பொருள்கள். நம் நாட்டிலேயுள்ள பழைமை விரும்பிகள் அந்த உழைப்பில் விளைந்த பொருள்களை மறைமுகமாக, இலைமறைகாயாக [illegible] அனுபவிக்கின்றனரேயன்றி வெளிப்படையாக [illegible] வெட்கப்படுகிறார்கள் [illegible] உண்மையாகவே விஞ்ஞானம் என்னும் அந்த விசித்திர வனிதை நம் நாட்டில் ஓர் அழகிய விதவையாகக் காட்சியளிக்கிறாள்!

எனவே அந்த "அழகிய விதவை"யை மணந்து புது உலகை உருவாக்கப் புறப்படுவோம், வாருங்கள்! அந்த பேதமற்ற, புகழ்வாய்ந்த, பெரும்பயன் விளைவிக்கும், இன்ப மூட்டும் புது உலகிலே இனி நம் வாழ்வைத் துவக்குவோமாக!

✻

7-ம் பக்கத்தொடர்ச்சி

இங்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஒரு நாடகம் எவ்வளவு நற்பயனை, அடிமைப்பட்டுக் கிடக்கும் நீக்ரோக்களுக்குத் தரக்கூடியது, என்பதையும், இப்படிப்பட்ட காரியத்துக்கன்றி, வேறு எதற்காகத் தான், அறிவும் ஆற்றலும் பயன் படுத்தப்படவேண்டும், என்பதையும்பற்றிச் சிந்திக்கக் கேட்டுக் கொள்கிறோம். பகல்பட்டினி இராப் பட்டினியை நாடகமேடையில் சித்தரித்துக் காட்டாமல், பரதன் பாதுகையைத் தூக்குவதையும், அதுபோது ராமர், ஆனந்தக்கண்ணீர் விடுவதையுமே காட்டிக் கொண்டிருப்பதைத்தானா கலை, கலை, என்று கருதவேண்டும்! அறிவுவளர, அநீதி ஒழிய, அக்ரமம் தொலைய, ஆதிக்கக்காரரின் அட்டகாசம் அழிந்துபட, இனவிடுதலைபெற, உரிமைக்கிளர்ச்சி வெற்றிபெற, இப்படிப்பட்ட காரியங்களுக்கல்லவா, கலை பயன்படுத்தப் படவேண்டும், என்று கேட்கிறோம்.

"அவர்களைச் சாகவிடோம்" என்ற அற்புதமான, பயன்தரும் நாடகமாடி, தக்கதோர் பணிபுரிகின்றனர். அங்கு கலை, அரங்கு, மக்களின் அறிவுக்கண்களைத் திறக்கவைக்க உதவுகிறது. இங்கு 'கலைகலைக்காகவே' என்று கூவிக்கொண்டிப்போர் நீட்டும் நாடகங்கள், என்ன பலனைத்தருகின்றன? மக்களை வாழவிடோம் என்றல்லவா இவர்கள் இங்கு நாடகமாடுகிறார்கள்! கலையைப் பயன்படுத்தவேண்டிய விதத்தை, அந்த நீக்ரோக்கள் நடத்தும் நாடக மூலமாகவாவது, 'கலைகலைக்கே' என்று கூறிக்கொண்டிருப்போர், கற்றுத் தெளிவார்களா!

✻

அவர்களைச் சாகவிடோம்!

"நால்வருக்கு விடுதலை!" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி. களிப்புப் பூத்தது — ஒரு கணம்—ஆனால் கவலை, களிப்பை விரட்டிவிட்டது— மேலால் என்ன சொல்ல இருக்கிறாரோ என்று குழுமி இருந்தோர், ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்.

மற்ற நால்வருக்குச் சிறை தண்டனை! என்று தீர்ப்பளித்தார். கோபமும் துக்கமும் பிடித்துக் குலுக்கியது, வழக்கு மன்றத்திலிருந்தோரை.

சிறையா! நம்மவர் நால்வருக்குச் சிறைத் தண்டனையா! நசுக்கப்பட்டு வரும் நம் 'இனத்தவரிலே நாலு பேருக்கு, சட்டம், சிறைத் தண்டனையா விதிக்கிறது. என்ன உலகமடா இது.—என்று எண்ணினர்— கண் கலங்கினர்.

எனினும், துக்கத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு, மற்றும் "ஒரு குற்றவாளி"யை நீதிபதி என்ன செய்கிறார் பார்ப்போம், என்று, துடி துடித்த நிலையில் நின்றனர், துயருருவான அம் மக்கள்.

மற்றோர் குற்றவாளிக்கு மரண தண்டனை! என்றார் நீதிபதி, மரண தண்டனை! அவர்கள், இதயத்தின் மீது சம்மட்டி வீழ்ந்தது. அவர்கள் நின்று கொண்டிருந்த இடமே, கிடுகிடுகிடுவெனச் சுழல்வது போலிருந்தது. மரண தண்டனை! அவன் சாக வேண்டுமாம்! சட்டம் சீறுகிறதே பாம்பு போல! அவன் இறந்துபட வேண்டுமாம்! இறுமாப்பாளர்களின் இம்சையை அனுபவித்து வரும் இனத்திலுதித்த அந்த இளைஞன், தூக்குமேடை ஏறவேண்டுமாமே! என்ன கொடுமை! எப்படிச் சகிப்பது இதனை! ஏனோ எமக்கு இந்த நிலை! நாகரிக உலகமே! நாங்கள் நாதியற்றவர்களாகவேதான் இருந்து மடிய வேண்டுமா! மரண தண்டனையா அந்த வாலிபனுக்கு!—என்று மன்றம் நின்றோர் எண்ணிக் கதறினர்.

தீர்ப்பு அவர்களைத் திகைத்திடச் செய்தது; இதயத்தைப் பிளந்தது; என் செய்வர், பாபம், அவர்களோ, கருப்பர், அதிலும் நீக்ரோக்கள்! தீர்ப்பளித்தவரோ, அமெரிக்கர், ஆதிக்க இனத்தவர், வெள்ளை நிறத்தவர்!

ஒன்பது வாலிபர்கள் குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டனர். வழக்கின், பெயர் ஸ்காட்ஸ்பரோ வழக்கு என்பதாகும். அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம், அவர்கள், இருமாதர்களைத் தாக்கினர் என்பதாகும்.

இந்த வழக்கிலே நால்வர், குற்றம் செய்ததாக ருஜு கிடைக்காததால் விடுதலை பெற்றனர் — நால்வர் குற்றத்தில் கலந்திருந்தனர் என்பதற்காகச் சிறை தண்டனை பெற்றனர், ஒரு வாலிபன், முக்கியமான குற்றவாளி என்பதற்காக, மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

தாக்குவது தவறு; தண்டனை தரத்தான் வேண்டும்—அதிலும் மாதரைத் தாக்குவது மடைமையும் கொடுமையும் கலந்ததோர் குற்றம்; நிச்சயம் தண்டனை தரத்தான் வேண்டும்—ஆனால் என்ன தண்டனை? —மரண தண்டனை! ஏன் மரண தண்டனை, இந்தக் குற்றத்துக்கு? காரணம், குற்றம் செய்தவர்கள், நீக்ரோக்கள்!!

தாக்கினானே தருக்கன் — அடித்தானே ஆணவக்காரன் — பெண்களைத் தாக்கினானே பேயன்—என்று அல்ல, வழக்கு விசாரித்தோர், எண்ணியது; நீக்ரோக்கள், வெள்ளை மாதரைத் தாக்கினரே! அடிமைகள் ஆதிக்க இனத்தவரைத் தாக்கினரே! உரிமையற்று உழைத்துப் பிழைத்து வரும் கருப்பு மனிதர்கள், ஊரானும் உயர் ஜாதியினராகிய வெள்ளையரைத் தாக்கினரே! கைகட்டி வாய் பொத்திச் சேவகம் செய்து, காட்டும் இடத்தில் காலந்தள்ளிவர வேண்டிய கருப்புக் கூட்டத்துக்கா இந்த ஆணவம்! ஆதிக்காரரை, எதிர்க்கும் துணிவு துளிர்க்கவிடலாமா? அந்தத் துளிரை உடனே கிள்ளி எறிந்துவிட வேண்டாமா? இல்லையானால், விஷ விருட்சமாகுமே! விதைகள் உதிருமே! மேலும் பல விஷச் செடிகள் முளைக்குமே! ஆதிக்கம் அழிந்துபடுமே! — என்று இவ்விதமாகத்தான் ஆதிக்கக்காரர்களான, அமெரிக்கர்கள் எண்ணினர், ஸ்காட்ஸ்பரோ வழக்கின் போது.

யாரோ, யாரையோ தாக்கிய, சிறு குற்றமாக அதனைக் கருதவில்லை! கருப்பர், வெள்ளையரைத் தாக்கிய, விபரீதச் செயலாகக் கருதிச் சீறினர்.

அதற்கு ஏற்றவண்ணமே சட்டமும் வேலை செய்தது. ஒன்பது நீக்ரோக்களில், ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

"பார்! அவன் தூக்கு மரத்தில் தொங்கப் போகிறான்! கருப்பன், பிணமாகத் தொங்கப் போகிறான்! அவன், எமது ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிந்தான், அறிவற்று. இதோ, தூக்குத் தண்டனை அவனுக்குத் தரப்படுகிறது! நீக்ரோக்களே! ஜாக்ரதை! எமது 'சக்தி'யை அறியாது, வீணாட்டத்தில் இறங்கிப் பாழாகாதீர்! அதோ ஒரு நீக்ரோ, தூக்குமரத்தில்தொங்கப்போகிறான்! வெள்ளையரை எதிர்த்தால், தாக்கினால், ஆதிக்கத்தை எதிர்த்தால் என்ன நேரிடும் என்பதை இதிலிருந்தாவது தெரிந்து கொள்ளுங்கள்! நத்திப் பிழைக்க வேண்டியவர்களே! நாடாளும் இனத்தவர் நாங்கள்! உங்களை மாளச் செய்ய முடியும்! துரைமார்களாகிய எமது கோபத்தைக் கிளறினால், தூக்கு மரத்தில் தொங்கச் செய்வோம், உங்களை"—என்று ஆதிக்க ஆணவமும், நிறவெறியும் கொண்ட வெள்ளையர், உறுமினர். நீக்ரோக்களோ, உரிமையற்று உழுத்தர் வாழ்வு வாழ்வதால், நாம், மிருகமென நடத்தப்படுகிறோம், மேனமினுக்கியாக வாழும் இந்த வெள்ளையரால் நமது கதி, கடைசிவரை இதுவேதானா! வெள்ளை

பல்லாத-பயன்படாத-பயன்தராத-வளமில்லாத இந்தியைக் கொண்டு வந்து புகுத்துவானேன்? அகில உலகத் தொடர்பு கொள்ளுவதற்கு ஒரு மொழி-அது ஆங்கிலம்; அனைத்திந்தியாவில் மட்டும் தொடர்புகொள்ள ஒரு மொழி-அது இந்தி; ஏன் இந்த இரட்டிப்பு வேலை? இதனால் பொது நேரம், உழைப்பு, பொருள், ஆற்றல் எல்லாம் வீணாகப் பாழ்படாதா? அகிலஉலக மொழியையே அனைத்திந்திய மொழியாகக் கொண்டு விடுவதால் என்ன கேடு வரும்? மாறாக நேரம், உழைப்பு, அறிவு, ஆற்றல் ஆகிய இவைகள் மிச்சப்படும் என்பது உறுதி. தனிப்பட்டவர்கள் தம் விருப்பம்போல் எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்வதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அரசாங்கத்தின் வாயிலாக அறிவுறுத்தப்படும் மொழிகளாகத் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தாய்மொழியாகிய தமிழும், அகில உலக மொழியாகிய ஆங்கிலமும் மட்டுமே இருந்தால் போதாதோ?

வடநாட்டோடு தொடர்பு கொள்ளவே இந்தி தேவைப்படுகிறது என்றால் சென்னை மாகாணத்திலுள்ள ஐந்து கோடி மக்களில் எத்தனைப் பேர் அப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள்? அப்படிப் பார்த்தாலும் சில ஆயிரம் பேர்தானே இருக்க முடியும். அந்தச் சில ஆயிரம் பேர்களுக்காக ஐந்து கோடி மக்கள் மீதும் வேண்டப்படாத இந்தி திணிக்கப்பட வேண்டுமா? இந்தி மொழிப் பயிற்சியில்லாமலே காரியங்கள் நடத்த இயலும் என்ற நிலை இருக்கும்போது, இந்தியை வலுக்கட்டாயமாகப் புகுத்துகிறார்களென்றால்—அதுவும் வடநாட்டுத் தலைவர்கள் வலுக்கட்டாயமாகப் புகுத்துகிறார்களென்றால் இதிலுள்ள சூட்சமத்தை அறிய வேண்டாமா? வேண்டாத நிலையில் ஒரு மொழி புகுத்தப்படுகிறது என்றால் அம்மொழி பேசுவோரின் ஆதிக்கம், புகுத்தப்படும் இடத்தில் வலுவடையச் செய்வதற்கேயாகும்என்பது விளங்கவில்லையா? இதைத்தானே உலகில் ஏற்பட்ட பல மொழி ஆதிக்கங்கள் நிலை நாட்டுகின்றன. ஏனோ இதை மாதவமேனன்கள் அறியாது போயினர்!

இந்திமொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஏனையோர் இந்தி மொழியைக் கற்றுத்தேர்ச்சிப் பெறுதல் இயலாது என்பதைக்காசி இந்து பல்கலைக் கழகப் பேராசிரியரான கே. ஆர். பிஷ்ரோத்தி எம்.ஏ. அவர்கள், அண்மையில் வெளியிட்டுள்ள கட்டுரையொன்றில், அழகாகக் காரணங்களோடு தெளிவாக்கியுள்ளார். அக்கட்டுரை 2-8-49 'இந்து' இதழில், 9-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அக்கட்டுரையில் அவர் கூறுவனவற்றை, ஆய்ந்தறிவார்க்கு உண்மை விளங்காமற் போகாது. அவற்றில் சில குறிப்புகளை மட்டும் தருகிறோம், காணுங்கள்.

"இந்தியாவில் பொதுமொழியாக இந்தியை ஆக்க வேண்டும் என்பதற்குக் கூறப்படும் காரணங்களில், அம்மொழி எளிதில் கற்றுக்கொள்ளக் கூடியது; பேசக் கூடியது என்பவையேயாகும்...... இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள், இந்தியைச் சரியாக உச்சரிக்கவோ அல்லது இந்தியை நாகரிலிபியில் எழுதவோ முடியாது என்பது அனுபவ போதனையிலிருந்து நன்கு புலப்படுகிறது.

* * *

இந்தி, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத இந்தியன் அதில் பாண்டித்தியம் அடைய முடியாதபடி அவ்வளவு கடினமான மொழியாகும் என்பது பெறப்படுகிறது.

* * *

அப்படியானால் இந்திமொழி வாதிகள் சொல்லும் உயர்வுகள் எல்லாம் வெறும் மாயாவாதங்கள், கட்டுக்கதைகள்தான். எளிதில் கற்கக் கூடிய மொழி என்பது வீண் புரட்டு.

* * *

இந்தியாவின்மீது பொது மொழியாகத் திணிக்கப்படும் இந்திமொழிக்கும், பாடப்புத்தக இந்திக்கும் வேறுபாடு நிறைய இருக்கிறது என்பது இதனாலும் புலனாகிறது.

* *

எனது பிள்ளைகளில் மூவர் மேற்கு வங்கம், கிழக்குப்பஞ்சாப், பம்பாய் ஆகிய மூன்று மாகாணங்களில் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவர்க்கும் இந்தி பேசத் தெரியும். ஆனால் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள முடியாது. என்னுடன் காசியில் வாழும் அவர்கள் சகோதர சகோதரிகள் பேசுவதையும் அவர்கள் புரிந்துகொள்ள இயலுவதில்லை.

* * *

வகுப்புக்கு வகுப்பு இந்தி மொழி மாறுபடுகிறது என்பதோடு, இடத்துக்கு இடமும் வேறுபடுகிறது என்பது தெளிவாகிறது. இந்தி மொழியில் அமைந்துள்ள தடுமாற்றங்கள் சாதாரண மனிதனால் புரிந்து கொள்ளவோ, பின்பற்றவோ இயலாத வகையில் உள்ளன.

* * *

இந்தி மொழியில் அமைந்துள்ள பல்வேறான கொச்சை வழக்குகளும், பேச்சுக்குமெழுத்துக்கும் இடையே உள்ள பிளவு இவையெல்லாம் இந்தியைத் தாய்மொழியாய்க் கொள்ளாதவர் நிலையைச் சங்கடமாக்குகின்றன. ஒரு மாகாணத்தவர் பிற மாகாணத்தவருடன் இந்தியில் கலந்து பேசவும் முடியாது போகிறது.

* * *

ஒரு இடத்து மக்களுக்கும், மற்றொரு இடத்து மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் மொழி— பல வகுப்பினரும் கலந்து, பழக ஏற்ற மொழி என்றெல்லாம் இந்திப் பிரசாரகர்கள் கூறி வருகிறபடி அது அவ்வளவு சுலபத்தில் ஆகக்கூடிய காரியமல்ல என்று தெரியவருகிறது.

* * *

இத்தகைய நிலைமைகளிலிருந்தும் இந்தி, இந்தியாவின் பொது மொழியாக ஆக்கப்பட்டு, இந்தி மொழியல்லாதவர்கள் மீது

(அடுத்த பக்கத்தில்)

"மாலை மணி"

10—8—49-ல் சென்னையில் இருந்து வெளிவர இருக்கும் "மாலை மணி" தினசரிப் பத்திரிகைக்கு விற்பனையாளராக விரும்புவோர், சென்னையிலுள்ள அதன் காரியாலய விலாசத்துக்கே கடிதம் எழுத வேண்டும் என்பதையும், பணம் அனுப்புபவர்கள் T. M. பார்த்தசாரதி, உரிமையாளர், "மாலை மணி" பதிப்பகம், மண்ணடி, சென்னை. என்ற விலாசத்துக்கே அனுப்ப வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, பெரியாரின் பொருந்தாத் திருமணம், தலைமை அமைப்பு ஆகிய கருத்துக்களை அறிவிக்கும் கட்சித் தோழர்கள் இனி "மாலை மணி" காரியாலயத்துக்கே அனுப்பும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

திராவிட நாடு

ஞாயிறு] 7—8—49 [காஞ்சி

சர்வாதிகார வித்து

ஒரே கட்சி - அதுவும் காங்கிரஸ், அனைத்திந்தியாவையும், என்றென்றும் ஒன்றாகப் பிணைத்துவைத்தே ஆளும்படியான நிலையை, உண்டாக்கும் விதத்தில் அரசியல் நிர்ணய சபையில் ஷரத்துக்கள் நிறைவேற்றப்படுகின்றன. புதிய அரசியல் நகல் திட்டப்படி அதிகாரங்களில் பெரும்பாலானவையும், முக்கியமானவையும் மத்திய அரசாங்கத்திடமும், குடியரசுத் தலைவரிடமும் குவிக்கப்பட்டுள்ளன. குடியரசுத் தலைவர் சர்வாதிகாரங் கொண்ட சர்வாதிகாரியாக மாறிவிடும் தன்மையில் அவர் தலைமீது அதிகாரத்தின்மேல் அதிகாரம் ஏற்றிவைக்கப் படுகிறது. அப்படிப்பட்ட அதிகாரங்களில் ஒன்றாக, அவசர கால நிலைமைப் பிரகடனம் செய்யும் முழு அதிகாரமும் குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தோராகவே விளங்குவதால், பெரும்பான்மை பலத்தைக்கொண்டு தமக்கும் தம் கட்சிக்கும் மட்டும் நலம்பயக்கக்கூடிய ஷரத்துக்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள வசதி ஏற்படுகிறது. அரசியல் நகலைத் தீட்டியவர் காங்கிரஸல்லாத டாக்டர் அம்பேத்கார் என்றாலும், காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டே திட்டங்களை வகுத்துக் காட்டவேண்டிய அவசியத்தில் இருந்து வருகிறார். ஷரத்துக்களுக்குத் திருத்தங் கொண்டுவந்து சீர்படுத்தப் போாசிரியர் கே. டி. ஷா போன்ற ஒரு சிலர் முயற்சித்தாலும் அது பெருங் காட்டிலிட்ட கூச்சல்போல் ஆகிவிடுகிறது.

ஒரு பகுதியோ அல்லது சில பகுதிகள் சேர்ந்த வட்டாரமோ தனித்து வாழ முடியும் என்று கருதி, பிரிந்திருக்க விரும்பினால் அவற்றின் எண்ணம் ஈடேறவொட்டாமல் தடுக்கும் முறையில் அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் குடியரசுத் தலைவராக வருபவர், தாம் விரும்பினால், இச்சைப்படி அவசரகாலப் பிரகடனத்தைப் பிரயோகித்து, எந்தச் சிறு உரிமைக் கிளர்ச்சியையுங் கூட அடக்கிவிடப் புதிதாக இயற்றப்பட்டிருக்கும் 275-வது ஷரத்து இடமளிக்கிறது.

"யுத்தத்தினாலோ வெளி ஆக்கிரமிப்பினாலோ அல்லது உள்நாட்டுக் கலவரத்தினாலோ இந்தியா முழுவதிற்குமோ, அல்லது அதன் எந்தப் பகுதிக்கோ பத்திரக் குறைவு ஏற்படும்படியான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் குடியரசுத் தலைவர் கருதினால் அவசர நிலைமைப் பிரகடனம் செய்யலாம்" என்று ஷரத்துக் கூறுகிறது. "உள்நாட்டுக் கலவரம்" என்பது கே. டி. ஷா அவர்கள் தெளிவுறுத்துவதுபோல், அதற்குச் சரியான வியாக்கியானம் கொடுக்க இயலாத தன்மையிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எங்காவது உரிமைக் கிளர்ச்சி தோன்றினாலும், அதனைக் கலவரம் ஏற்படும் போல் லேசாகத் தோன்றுகிறது என்று காரணங் காட்டி, அவசர நிலைமைப் பிரகடனம் செய்து அத்தகைய கிளர்ச்சியைக் கூட அடக்கிவிடக்கூடும். இன்படி பார்த்தால் ஆட்சிப்பீடத்திலிருக்கும் கட்சிக்குமாறுபட்ட கட்சி வளரவோ; வலுவடையவோ முடியாதபடி அடக்கி ஒடுக்கிவிட ஏதுஏற்படுகிறது. இக்காரணத்தைக் அடிப்படையாகக் கொண்டு தான், போாசிரியர் கே. டி. ஷா ஒருதலைஅரசாங்கத்தின் மோசமான அம்சங்கள் இந்தஷரத்தில்இருக்கின்றனவென்றும், இதை 1942ம் ஆண்டில் பிரிட்டிஷ்சர்க்கார் வெளியிட்ட அவசரச் சட்டங்களுடன் ஒப்பிடலாம் என்றும் கூறியுள்ளார்.

வர்க்கத்திற்கொரு வட்டாரம் ஏற்படாத முறையில் அதிகாரங்கள் மத்திய ஆட்சிப்பீடத்தில் குவிகின்றன, இல்லை குவிக்கப்படுகின்றன. குடியரசுத்தலைவரைச்சர்வாதிகாரியாக்கும் சர்வாதிகாரவித்து இந்தப் புதிய ஷரத்தால் விதைக்கப் பட்டுள்ளது. உரிமைக் கிளர்ச்சியே! உன்னை அழிக்கவே இத்தகைய விஷவித்துக்கள் விதைக்கப்படுகின்றன என்பதை உணர்!

✲

(முன் பக்கத் தொடர்ச்சி)

திணிக்கப்படுமேயானால் அதை 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

என்று அப்போாசிரியர் பிஷ்ரோத்தி அழுத்தந் திருத்தமாகக் கூறியுள்ளார்.

இவ்வளவு காரணங்களைக் காட்டி, இந்தி தேவையில்லை என்று சொல்லி, அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்த பிறகும் மந்திரி மாதவமேனன், எதிர்ப்புச் செய்வதைப் 'பைத்தியக்காரத்தனம்' என்று கூற முற்படுகிறாரென்றால், உள்ளபடியே பரீட்சிக்கப்பட வேண்டியவர்கள் யார் என்பதைப் பொதுமக்களே சிந்தித்துக் கொள்ளட்டும்.

கறுப்புக் கண்டு அவர் மிரட்சி கொண்டிருக்கிறார்; ஆகவே அவர் சொற்களிலே கலக்கம் காணப்படுகிறது; அதனால் இந்திஎதிர்ப்புப் பைத்தியக்காரத்தனம்என்கிறார். உண்மையில் கறுப்பு இருப்பதுகண்டு மிரட்சி கொள்வது பைத்தியக்காரத்தனமேயொழிய, கறுப்பு இருப்பது பைத்தியக்காரத்தனமல்ல. கறுப்பு என்ன செய்யும்! அது ஒரு அறிகுறி தானே.

✲

★ உடுமலை வழக்கு ★

உடுமலைப்பேட்டை வழக்கு வாபஸ் பெறப்பட்டது! பெரியார் மதியழகன், நாராயணன், தங்கவேலு ஆகிய நால்வரும் விடுதலை செய்யப் பட்டுவிட்டார்கள்!

வழக்கு விசாரிக்கப்படும் நிலையிலிருக்கும்போதே, 2—7—48-ல், சர்க்கார் தாங்கள் தொடுத்திருந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். அவர்கள் வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டதால், சப்மாஜிஸ்ட்ரேட் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நால்வரையும் விடுதலை செய்தார்.

உடுமலையில் 16—4—47-ல் பெரியார் கூட்டம் நடைபெற்றால்,அமைதியின்மை ஏற்படும் என்று கருதி 144 தடையுத்தரவு விதிப்பு,

தடையுத்தரவை மீறி அமைதியோடு பெரியார் கூட்டம்,

அமைதியோடு நடைபெற்ற கூட்டத்தினிடையே பெரியாரும் மற்றும் மதியழகன், நாராயணன், தங்கவேல் ஆகியோர் கைது,

மாலை கைது செய்யப்பட்டு நள்ளிரவுவரையில்காவலில் வைக்கப்படல்,

பிறகு நிபந்தனையின்றி சொந்தப் பொறுப்பில் விடுதலை,

ஒருமாதகாலம் என்று விதிக்கப்பட்டிருந்த 144 தடையுத்தரவு பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு நீக்கம்,

மூன்று மாதம் கழித்து இ. பி. கோ. 143-வது பிரிவின்கீழும் 188-வது பிரிவின்கீழும் குற்றஞ்சாட்டப்பட்டு 16—7—49-ல் வழக்கு எடுத்துக்கொள்ளப்படல்,

25—7—49-ல் சர்க்கார் தரப்புச் சாட்சிகள் விசாரணை,

2—7—49ல் வழக்கு வாபஸ்,

அன்றேகுற்றஞ்சாட்டப்பட்டோர் விடுதலை! இவை ஒருவிஷயத்தைப் பொறுத்தவரையில் நடத்திக்காட்டப்பட்ட அரசியல் 'நாடகங்கள்'! இந்த முறையில் இன்றைய ஆட்சி தன் 'செங்கோல்' ஓச்சி வருகிறது.

பெரியார்

மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட எதிர்க் கட்சிக்காரர்களையும், பொதுமக்களையும் எவ்வளவு துச்சமாகக் கருதி வருகிறது இன்றைய அரசாங்கம் என்பதற்கு இது வொன்றே போதுமான எடுத்துக் காட்டாகும். இதனால் பொது மக்கள் பணத்தினால் நடைபெறும் அரசாங்கத்திற்கு எவ்வளவு நேரக்கேடு, பொருள்கேடு? அதில் தொடர்பு படுத்தப்பட்டுப் பலதடவை உடுமலைக்கு இழுத்தடிக்கப்பட்டு அலக்கழிக்கப்பட்ட நால்வருக்கும் எவ்வளவு நேரக்கேடு, பொருள் கேடு? இத்தகைய பாழ்படும் நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாக்க முடியும் அரசாங்கத்தால், நீதிவழியும், நேர்மை வழியும் செல்ல அதுமுன்பேமுனைந்திருந்தால். 'ஒருபால் கோடாமை சான்றோர்க்கணி, என்ற முறையில்,தான் தூக்கிய துலாக்கோலைச்சமமாக — சரியாகப்பிடிக்க, எல்லாவிடத்திலும், எப்பொழுதும் முற்படுமேயானால், எவ்வளவோ குறைபாடுகளைத் தவிர்க்க வழியேற்பட்டுவிடும். எதிர்க்கட்சியினரை அலட்சியமாகக் கருதும் மனப்பான்மையே மேற்குறித்த வீணான 'நாடகங்கள்' நடைபெற வழியேற்பட்டது. இனியாயினும் அரசியல் நேர்மை நிலவட்டும்!

நாராயண சிங்



மதியழகன்



தங்கவேல்

அஞ்சா நெஞ்சனுக்கு நினைவுச் சின்னம்

அருஞ்சொல்வல்லான் — அடர்த்தெழு எதிர்ப்புகள் பலவற்றையும் மறித்து நின்ற வீரன்—சொற்போர்க்களம் பலவென்று நின்றதீரன்—சிங்க ஏறென முழங்கி நாடெல்லாம் சுற்றிச்சுழன்றுவந்த திண்ணியன்—சுயமரியாதை இயக்கத்தின் தூதுவன்—பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதிலே பற்றுமிகக்கொண்ட பண்பினன் — தொண்டர்களின் தோழன் — அண்டினோர்க்கு ஆதரவளிக்கும் ஆண்மையன் — அஞ்சா நெஞ்சன்—அழகர்சாமி!

ஆம்! அந்த மாவீரன்தான்! மண்ணுக்குள்ளே மறைந்துகிடக்கிறான்! அவனுக்குப்பதிலாக அவனை நினைவுப்படுத்தும் கல்ஒன்று அந்த இடத்தில் நிற்கிறது! நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது. நீர்வழியும கண்ணோடுதான் அவன் கல்லறையின் முன்னே நிற்கிறோம். வழியும் நீரைத்துடைத்தும் வற்றாஊற்றென அது பொங்கிக்கொண்டுதான் இருக்கிறது. வேதனையை மறக்க — மறைக்க முயன்றாலும் முடியவில்லை. அந்த அளவுக்கு நம் உள்ளத்தோடு அன்பால் பிணையுண்டிருந்த அந்த அஞ்சாநெஞ்சன் இன்று மண்ணோடு மண்ணாய்க் கலந்துவிட்டான்! என்செய்வோம்! தேம்பி அழுகிறோம்! என்றாலும் தேற்றிக்கொள்கிறோம், அந்தத் தோழன் விட்டுச்சென்ற சிறப்புகளை, அவன் கல்லறைமீது நிமிர்ந்து நிற்கும் நினைவுச்சின்னம், என்றென்றும் நமக்கும் நமது வருங்காலத்தவருக்கும் நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கையால். அவ்வீரன் அமைத்துத்தந்த வீரஞ்செறிந்த வெற்றிப் பாதையின் வழிகாட்டியாக, அந்நினைவுச்சின்னம் என்றும் இருக்கும்; என்றும் இருக்கட்டும்!

நாடெல்லாம் வெற்றி முழக்கமிட்டுவந்த அந்தச் சிங்கம் இறுதியாக ஆறடி மண்ணுக்குள்ளே அடங்கிவிட்டது. அப்படி அடங்கிய இடம் தஞ்சை இராசாகோரி மயானத்திடலாகும். வீரனின் பீடும் பெயரும் எழுதி நடுகல் நாட்டும் வழக்கம் பண்டைநாள் தொட்டு தமிழகத்தின் மறக்குடி மக்களிடத்தே வழங்கி வந்தவொரு சிறந்த பண்பாதலால், அதனை யொட்டித் தஞ்சை நகரக் கழகத்தோழர்கள் நடுகல்நாட்டு விழாவைச் சென்ற திங்கள் 10-ம் நாள் (10—7—49) ஞாயிறன்று காலை 8-மணிக்குச் சிறப்புற நடத்தியுள்ளார்கள். அவர்களின் முயற்சியைத் தமிழகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழகத்தில், போர்க்களத்தில் விழுப்புண் தாங்கி வீழ்ந்த வீரர்களுக்கும், வெற்றிச் சிறப்புடன் மறைந்த மறவர்களுக்கும் நடுகற்கள் நட்டுவந்தார்கள். அந்த நடுகல்லில் மறைந்த வீரனின் பெயரும், அவன்புகழ்ச் சிறப்புகளும் பொறிக்கப்படும். வருங்காலத்தவருக்கு ஊக்கமும் உணர்ச்சியும் கொடுக்க வேண்டியும், அவர்கள் மறக்குடி மக்களாகத் திகழவேண்டியுமே அந்நடுகற்கள் நாட்டப்பட்டன. அதுபோலவே வருங்கால்ச் சுயமரியாதைக் கொள்கை பூண்ட வீரர்கள் தாம் மேற்கொண்ட செயலில் அயராது அஞ்சாநெஞ்சத்துடன் முன்னேறிச் செல்ல ஊக்கமளிப்பதற்காகவே அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவுச்சின்னம் — நடுகல் தஞ்சை மாநகரிலே நாட்டப்பட்டிருக்கிறது.

பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி ஆம், அந்த அஞ்சாநெஞ்சன் அழகர்சாமியின் நினைவுச்சின்னத்தைத்திறந்து வைத்தவர், அவரோடு நீண்டநாள் பழகி அவரின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்த, அவரின் கெழுதகை நண்பர் தோழர் கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் ஆவார். தோழர் விசுவநாதன் அவர்கள் அழகர்சாமியின் அருங்குணங்களைத் தெளிவுபட விரித்துரைத்து, அங்கு குழுமியிருந்தோரனைவர் உள்ளத்தையுங் குழையச்செய்து, நினைவுச்சின்னத்தைத் திறந்து வைத்தார்.

விழாவிற்குத் தோழர் ஐ. கே. துரைராசன் அவர்கள் தலைமை தாங்கினர். தோழர்கள் எஸ். ஏ. ரகூப், டி. கே. சீனுவாசன் ஆகியோர் அழகர்சாமியின் அருந்தொண்டு பற்றி அரியசொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மறைந்த தளபதி அழகர்சாமி அவர்களின் மனைவி மக்களும் உறவினரும் மேற்படி விழாவில் கலந்துகொண்டனர்.

அன்று மாலை 6 மணிக்குத் தஞ்சை திலகர் திடலிலே ஒரு மாபெரும் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் தஞ்சை தோழர் பி. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதுபோது அழகர்சாமியின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் மக்களுக்குச் செய்த தொண்டுகளையும், நாட்டு முன்னேற்றத்திற்குப் பணியாற்றியதையும் குறித்துத் தோழர் ஆர். இராசகோபால், எஸ். ஏ. ரகூப் எஸ். எஸ். மணி, டி. கே. சீனிவாசன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டமுடிவில் அழகர்சாமி நிதிக் கமிட்டியின் நிதி இருப்பாளர் தோழர் எம்.என். கொண்டல் அவர்களால் அழகர்சாமி அவர்களின் மனைவியாரிடம் ரூ. 800-6-9 கொண்ட நிதி முடிப்பு அளிக்கப்பட்டது: இறுதியில் அழகர்சாமி நிதிக்கமிட்டியினர், எஸ். பெத்தண்ணன், எம். என். கொண்டல், எம். எம். நடராசன், ஐ. கே. துரைராசன், வி. எம். ஜி. கருணாநிதி, பி. சிவஞானம் ஆகியவர்களின் சார்பிலே அனைவர்க்கும் நன்றி கூற விழா இரவு 9-மணிக்கு முடிவுற்றது.

வசூல் செலவு விபரம்

நிதி டிக்கட் புத்தகம் மூலமாக மொத்த வசூல்	ரூ. 1314-3-3
செலவு	
அழகர்சாமி நினைவு சின்னத்திற்குக் கட்டிடச் செலவு	ரூ. 180-0-0
அழகிரி சவ அடக்கச் செலவு	ரூ. 217-12-9
விளம்பரம் பிரிண்டிங் பேப்பர் வகையறாச் செலவு	ரூ. 50-8-0
ஒலிபெருக்கி எலக்டிரிக்லைட் மேடை செலவு	ரூ. 23-0-0
தபால் செலவு	ரூ. 9-7-0
வெளியூர் போய் வர சில்லரைச் செலவு	ரூ. 5-0-0
புகைப்படச் செலவு	ரூ. 8-0-0
இதர வகையில் செலவு	ரூ. 20-0-9
மொத்த செலவு	ரூ. 513—12—6

செலவு போக மீதி ரூ. 800-6-9. இந்தத் தொகை, நிதியாக அளிக்கப்பட்டது.

✻

பாலகிருட்டினன் சகதாம்பாள் திருமணம்

15—7—49ம் நாள் வெள்ளிக்கிழமை காலை தோழர்கள் ஏ. எம். பாலகிருட்டிணன் — சகதாம்பாள் வாழ்க்கை ஒப்பந்த விழா காஞ்சியில் இனிது நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமையேற்க முன்பே இசைந்திருந்த தோழர் W. K. தேவராசன் அவர்கள் வந்துசேர சிறிது காலத் தாழ்வு ஏற்பட்டதால், அவர் வந்துசேரும் வரையில், தலைமை வகித்து விழாவினை நடத்திக் கொடுக்கும்படியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் கேட்டுக்கொண்டார். தோழர் இரா நெடுஞ்செழியன் அப்பணியினை ஏற்க இசைந்து முன்னுரையாகச் சில கூறி வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்திவைத்தார்கள். வாழ்க்கை ஒப்பந்தம் முடியும் நிலையில் தோழர் W. K. தேவராசன் அவர்கள் வந்து சேர்ந்துவிட்டதால், அவர் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.

தோழர் W. K. தேவராசன் அவர்கள் தன்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டதற்குக் காரணம், எப்படியாவது அண்ணாவைக் கொண்டுவந்து விடுவதற்கேயாகும் என்றும், அப்படியே கொண்டுவந்து சேர்த்துவிட்டேன் என்றும் சில கூறி அமர்ந்தார்.

பின்னர் தோழர் அ. க. தங்கவேலர் அவர்கள் திருமணம் பற்றிப் பேசும் போது அடிமைப்புத்தி அகற்றப்பட்டால்தான் நாடு பலவழிகளிலும் சீர்திருந்த வழி ஏற்படும் என்று விரிவாகக் கூறி மணமக்களை வாழ்த்தினர்.

அடுத்து தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசும்போது, நமது சமுதாயத்தில் மூடநம்பிக்கைகளும், குருட்டுப் பழக்க வழக்கங்களும் முற்றெந்த நாட்டுச் சமுதாயத்தைக் காட்டிலும் மிகவாக ஆட்டிப் படைத்து மக்களை அலக்கழித்து வருகின்றனவென்றும், மக்களின் நேரமும், நினைப்பும், உழைப்பும், அறிவும், ஆற்றலும் இந்நாட்டில் மதசம்பந்தமான சடங்குகளின் காரணமாக மிகவும் பாழ்படுத்தப் படுகின்றனவென்றும், அவைகளை நல்லவழிகளில் திருப்பி மக்களை இன்பவாழ்வு நடாத்தச் செய்யவே சென்ற இருபத்தைந்து ஆண்டு காலமாகச் சுயமரியாதை இயக்கம் பாடுபட்டு வருகிறது என்றும், காலத்திற்கேற்ற கருத்தினைக் கொண்டு அறிவுப் பாதையில் இறுமாந்து செல்ல இளைஞர்கள் முற்பட வேண்டும் என்றும் சிறு சொற்பெருக்காற்றினர்.

தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் மணமக்களை வாழ்த்தியும், பாராட்டியும் பேசும்போது, காஞ்சிபுரத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய திருமணங்கள் ஏராளமாக நடைபெற்றுள்ளன என்றும், சீர்திருத்தத் திருமணம் பற்றி விளக்கங் கூறித் தெளிவுறுத்த வேண்டிய அவசியத்தில் மக்கள் இல்லை என்றும், என்றாலும் மக்கள் சீர்திருத்தத் திருமணத்தைப் பெருவாரியாகக் கடைப்பிடியாததற்குக் காரணம் புதுமையாக இருக்கும் ஒன்று அவர்களுக்குப் பிடித்தமில்லாமல் இருப்பதேயாகும் என்றும், புதுமையாகப் புகுத்தும் ஒன்றை புதுமை என்ற ஓரே காரணத்திற்காக அவர்கள் வெறுக்கத் தலைப்படுகிறார்களென்றும், நாளடைவில் இம்முறை பழக்கத்தில் கொண்டு வரப்பட்டுச் சர்வ சாதாரணமாக ஆகிவிடும் என்றும், இம்முறையை மக்கள் ஏற்றுக் கொள்ளவொட்டாமல் தடையாய் இடை மடுத்து நிற்பவர்கள், ஊரிலே நாட்டாண்மைக்காரர்கள் எனக் கருதப்படுவோரும், உறவுமுறையிலே நாட்டாண்மைக்காரர்களாகக் கருதப்படுவோரும், பெரிய தனக்காரரும், புரோகிதரும், வைதிக முறையால் வரும்படி எதிர்பார்ப்போருமாவார்கள் என்றும், சீர்திருத்தத் திருமண முறையால் அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் மதிப்பிழந்து, மரியாதையிழந்து, வரும்படியிழந்து வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுவதால் அவர்களெல்லோரும் எதிர்க்கிறார்களென்றும், பார்ப்பனர்களும் கூட நாளடைவில் இம்மாதிரியான சீர்திருத்த முறையையே கையாளுவார்கள் என்பதில் ஐயமில்லை என்றும், அண்மையில் 'கல்கி' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியின் திருமகளார் திருமணம் தோழர் டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது என்று பத்திரிகைகளில் வந்த செய்தி இந்தக் கருத்துக்கு நம்பிக்கை யூட்டுவதாகும் என்றும், கட்சித் தலைவர்களுக்குள்ளே இன்று எப்படிப்பட்ட போராட்டங்களும், பிளவுகளும், மாறுபட்ட போக்குகளும் காணப்பட்டாலும் இயக்கக் கொள்கைகள் நாட்டில் நடமாடியே தீரும்; அவை ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் சென்று பதிந்துவிட்டன என்றும், ஆகவே சமூகத் தொண்டாற்ற இளைஞர்கள் என்றும் பின்வாங்கக்கூடாது என்றும் கூறிச் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் நன்றிகூறத் திருமண விழா இனிது முடிவு எய்தியது.

அண்ணாமலை பச்சையம்மாள் திருமணம்

—✻—

காஞ்சிபுரம் 'தமிழர் உணவு விடுதி' உரிமையாளரும், திராவிடர் கழக மத்திய நிர்வாக உறுப்பினருமான தோழர் சி. வி. எம். அண்ணாமலை தோழியர் பச்சையம்மாளைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்ளும் வாழ்க்கை ஒப்பந்த விழா 7—7—49-ம் நாள் காலை காஞ்சியில் சிறப்புற நடைபெற்றது.

விழாவிற்கு நகர கழகத் தோழர்களும், காங்கிரஸ் அன்பர்களும் உற்றார் உறவினரும் வருகை தந்திருந்தார்கள். திருமண விழா காலை 9-மணி துணிவிற்குத் துவக்கப்பட்டது. விழாவினைத் தலைமையேற்று நடத்தித் தரும்படியாகத் தோழர் மு. இரத்தினம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தலைவர் முன்னுரையாக சில மொழிந்த பின் மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றினார்கள்.

மணமக்களை வாழ்த்தியும், சீர்திருத்தத் திருமணம் பற்றி விளக்கம் செய்தும் தோழர்கள் விநாயகம், (சென்னை நகரசபை உறுப்பினர்) காஞ்சி கல்யாண சுந்தரம், ஏம். கன்னியப்பன் எம். எல். ஏ., சி. என். அண்ணாத்துரை, கோவிந்தராஜுலு, எம். எல். ஏ., இரா. நெடுஞ்செழியன், அர்சுனனார் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

✻

திரித்துக் கூறும் திறமை!

"விடுதலை" தினசரியின் முன்னாள் உதவியாசிரியர் தோழர் பூ. கணேசன் எழுதுவது:—

31—7—49-ந் தேதிய "விடுதலை"யில் "மறுப்புப் பற்றி பெரியார் விளக்கம்" என்ற தலைப்புடன் ஈ.வெ.ரா. என்று கையெழுத்திடப்பெற்று வெளிவந்திருக்கும் கட்டுரையில் நானும் எனது நண்பரும் 'விடுதலை'யினின்றும் ராஜிநாமா செய்து வெளியேறியதுபற்றி மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டு, அப்படி வெளியேறியதற்கான காரணம் மிகத்திறமையுடன் திரித்துக் கூறப்பட்டுள்ளது. சர்க்காரிடம் வாடகைக்கு விடப்பட்டு, பின்னர் அவர்களே வேலை முடிந்து ஒப்படைத்ததும், 'விடுதலை' பெரியார் கைக்கு வந்து சென்னையில் திராவிடர் தமிழ்த்தினசரியாகத் துவக்கப்பட்ட நாள் முதற்கொண்டு நான் "விடுதலை"யில் உதவியாசிரியராக (Asst Editor) இருந்து கைநெருக்கடியான காலங்களிலெல்லாம், கூறுதற்கும் கூசும், குறைந்த அளவு சம்பளத்தில், பணியாற்றி வந்திருப்பவன். ஏறத்தாழ அந்த மூன்றாண்டுக் காலத்தில் எவ்வகையிலும் பெரியார் மனம் தினைத்துணையும் நோகாமல் சம்பள உயர்வு, விடுமுறை வசதி, ஓய்வுநேரம் போன்ற வசதிகளைக்கூட வலியுறுத்தாமல் —ஊரிலிருந்தும் — உறவனரிடமிருந்தும் பணம் வரவழைத்துச் சென்னை நகரில் — சோதனைக் கஷ்டங்களிலெல்லாம்—வாழ்க்கை நடத்தி உழைத்து அலுப்புறாது இருந்தவன். கற்றகல்விக்கும் பெற்ற பட்டத்துக்கும் பாங்கான பதவிகள் பெறவும், கவலையற்ற வாழ்க்கை நடத்தவும் வாய்ப்புகள் பலவிருந்தும் அவற்றைத் துறந்து, "இனஇழிவு ஒழிப்பு—பகுத்தறிவு இலட்சிய ஈடேற்றத்துக்குப் பணியாற்றுகிறோம்; இதுவேநமக்குக் கிடைத்த நல்வாய்ப்பு" என்று கருதிச் சளைக்காது உழைத்து வந்தேன். எனது இந்த முரட்டுத்தனத்தால் உற்றார் உறவினர் என்போன்ற இளைஞர் — நண்பர் இன்னபிறரிடையே என்னைக்குறித்து எழுந்த அதிருப்திமனப்பான்மையையும், கிண்டல் கேலிமொழிகளையும் பொருட்படுத்தாது, திராவிடர் விடுதலைக்குஉழைப்பதாகக் கருதப்பட்ட 'விடுதலையில்' மார்பொடியப் பணியாற்றினேன். ஒரு லட்சியத்துக்காகப் பணியாற்றுகிறோம் என்ற மனத்திண்மை இருந்ததால், தொல்லை — இடையூறு — சுடுசொல் — கேலியுரை — சுகந்துறப்பு இன்னபிறவற்றால் நான் தளர்ச்சியுறவில்லை.

ஆனால் பெரியார் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்—நாட்டில் தான் வித்திட்டு வளர்த்த பகுத்தறிவுப் பயிரைத்தானே அழிக்க முற்படுகிறார்—கொண்ட லட்சியத்தை, பரப்பியமார்க்கத்தைத் துச்சமாய்க்கருதி வைதிகபுரியை நோக்கிப் பின்வாங்குகிறார் — தனது தொண்டர்களையும் தன்னை நம்பிப் பின்னின்ற லட்சாதி லட்சம் மக்களையும் காட்டிக்கொடுக்கத் துணிந்துவிட்டாரென்று அறிந்ததும் சஞ்சலமும் கொதிப்பும் கொண்டவனாகி, அன்றே எனது ஆட்சேபத்தைத் தபால்மூலம் வெளியிட்டேன். விடுதலையினின்றும் விலகிவிடப்போவதாகவும் தெரிவித்து மேலும் 10-நாள் பணியாற்றி, ஜூலை 1-ந்தேதியோடு நின்றுகொண்டேன்.

இப்படியிருக்க, அவர் எடுக்கவிருந்த நடவடிக்கைக்கு அஞ்சி நானும் நண்பரும் வெளியேறிவிட்டோமென்ற பொருள்படப் பெரியார் கூறுகிறார். 'விடுதலை'யில் வாரம்தோறும் வழக்கமாக வெளிடப்பெறும் கட்டுரைகளில் ஒன்றாக, பெரியார் லட்சிய வீரராகத் திகழ்ந்த காலத்தில் ஆற்றிய சொற்பொழிவொன்று வெளியிடப்பட்டது உண்மை. 'விடுதலை'ப் பத்திரிகையின் நோக்கம், கொள்கை, பொறுப்பு இன்னபிறவற்றுக்கு ஒரு சிறிதும் முரணில்லாத முறையிலேயே அக்கட்டுரை வெளியிடப் பெற்றது. அதனை வெளியிட்ட அந்த நேரத்தில் எத்துணையும் வேறுநோக்கு இன்றிச் சீர்திருத்தம் ஒன்றே மனதிற்கொண்டு வழக்கம்போல் அழகுபட வெளியிட நேர்ந்தது. பெரியாருக்கு இது கசக்க நேரிட்டால், பணிமனையில் வேலை செய்வோர் எப்படிப் பொறுப்பாவர். அன்றியும் அக்கட்டுரை வெளிவர முழுப் பொறுப்பும் என்னைச் சேர்ந்தது அல்லவென்றபோதிலும், இப்போது இவ்விதம் அறிக்கைவிடும் பெரியார் அப்போது அதுபற்றி ஒரு வார்த்தைகூட என்னைக் கேட்டவரல்லர். கேட்க முடியாத நிலைதானே!

எனவே, 'விடுதலை'யில் நான் பணியாற்றிய கடைசி நேரம் வரை பொறுப்புணர்ச்சியோடுதான் நடந்துகொண்டேனென்பதையும், மேலும் அங்கு என்னைப் பொறுத்தவரை, தன்மான உணர்ச்சியுடன் பணியாற்ற வாய்ப்பில்லையென்று உணர்ந்தவுடன் விலகிக் கொண்டேன் என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது பெரியாரின் பழம்பெருமைக்கு உகந்ததல்லவெனவும் குறிப்பிட ஆசைபடுகிறேன்.

பூ. கணேசன்

பெரியாரின் போக்கைக் கண்டித்தும், அவர்மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்தும், இதுவரையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் அனுப்பிவைத்துள்ள கழகங்கள்:—

113

கண்டனத் தீர்மானங்கள் அனுப்பியுள்ள கழகச் சார்புடையு வேறு பல கழகங்கள்.

60

தங்கள் கண்டனத்தை எழுத்துமூலம் இதுவரையில் நமக்குத் தெரிவித்துள்ள மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்.

31

குறிப்பு:—சேர்க்கப்பட்ட கழகங்களின் பெயர்கள் "மாலை மணி"யில் வெளியிடப்பெறும்.

கண்ணீர்த் துளிகள்

பெரியாரின் பொருந்தாத் திருமணம் கண்டு, இச்செய்கை சுயமரியாதை இயக்கக் கொள்கைக்குக் கேடு சூழ்வதாகவும், எதிர்காலக் கட்சி வாழ்வை நாசம் செய்வதாகவும் இருக்கும் காரணத்தால், கழகப் பணிகளிலிருந்து விலகி நிற்பதாகக் கூறிக் கண்ணீர்த் துளிகளைச் சிந்திக் 'கண்டனக் கணை'களை ஏவியுள்ள தோழர்கள் :—

கரூர்—எஸ்-வையாபுரி.

திருநெல்வேலி — கல்லூரிமாணவர், தி. க. இரத்தின சபாபதி

சென்னைமலை கொ-கெ-உயர்நிலைப்பள்ளி திராவிட மாணவர்கள்—மா-கிருட்டினன், சே-க-சுப்பிரமணியன், கா-வெங்கடேசன், செ-சா-சத்தியமூர்த்தி, சு. மலையப்பன், மு.மீனாட்சிசுந்தரம், இரா. நா-துரைசாமி, மு-சேதுராமலிங்கம், ச-முருகேசன், கா-சென்னியப்பன், இரா-பழனியப்பன், இரா-பாலசுப்பிரமணியன், ப-இராமசாமி, க-சு-இரங்கசாமி, மா-இரத்தினசாமி, எம்-நாச்சிமுத்து, ஏ. நடராஜன், கே-எஸ்-பழனிச்சாமி, ஈ-கு-இரத்தினசாமி, எஸ். சுப்பிரமணியன், ஈ-கு-ஆறுமுகம், உ-இராமசாமி, மு-பழனியப்பன், மு-முருகேசன், செ-ச-அப்துல்சத்தார், ரா-கர்ணகிங், வீ-பழனியப்பன், ப-ஜான்அய்யாசாமி, ஜே-துரைசாமி, ப-மு-இராமசாமி, தோ-மு-இராமசாமி, இரா-சிதம்பரம், க-மு-தியாகராஜன்

திருப்பத்தூர் (வ. ஆ.) திராவிட மாணவர்கழகம்:— சு-பாலன், கே-ஆர்-கோபிசந்திரன், டி-கிருஷ்ணன், என்-எம்-வேணுகோபால், என்-எஸ்-குமரேசன், ஏ-தனுராசு, என்-அருணன், பி-ஞானசாமி, -ஓ-ராமசாமி.

கோவை—மா-நாராயணசாமி

மடத்துவாசல்—கே-துரைராசன்,

அறுப்புக்கோட்டை — திராவிட கழக உறுப்பினர்கள் கி-சங்கரலிங்கம், வி-எம்-தர்மராஜன், கி-குழந்தைவேல், இ-கி-கிருஷ்ணன், கே-பாண்டியன், ஆர்-நடராசன், சங்கரசுப்பு, வே-குமாரசாமி, லெ-ராமச்சந்திரன், எஸ்-பி-ராமச்சந்திரன், சி-செல்லம் பி-தேரி, ஆர்-கருப்புச்சாமி, கே-எம்-வால்டி, உ-பர்லாரசன், கி-வரத்தால்பெரியவன், எஸ்-எஸ் சண்முகசுந்தரம், ஏ-கே-சுந்தரம், ச-மு-கருப்பையா, கி-பெ-இ-பாலைய்யா, பி-கந்தசாமி.

கூசாலிப்பட்டி — திராவிட கழகம்:—ஞா-சுப்பையா, கி-முனியசாமி, எஸ்-எஸ்-முத்து, ஞா-மாரியப்பன், பி-எஸ்-முத்து.

திருவண்ணாமலை — கோ-மாணிக்கம், (இந்தி எதிர்ப்புக் கமிட்டி தலைவர்)

தஞ்சாவூர்—க. கணேசன்

திருச்சி—எஸ். மகிமைராஜ்

மதுரை—கே. ஏ. கே. சிவகாமி நேசன், பி. பி. கே. முகம்மது இப்ரகிம், வ. குருசாமி

தேனி—ஆ. கருப்பையா

இலங்கை—அல்பிற்றிய தி. க. தோழர்கள்:—ஏ. வெ. அன்பானந்தம், செ. செல்வரத்னம், த, பொன்னுசாமி, நா. பத்மநாதன், மு. முத்துலிங்கம், ஏ. ஆர். பீற்றர், எஸ். எம். மாலே, ஆர். எஸ். வேலு, எம். சிதம்பரம், கே. சண்முகம், எஸ். மூக்காண்டி, ஏ. மோசை

மயிலாப்பூர்—க. பரமசிவன்

கொழும்பு—அண்ணாதாசன்

பெங்களூர் – பு. து. ஜனார்த்தனன்

புதுச்சேரி — எம. ஏ. சண்முகம்

சென்னை – எஸ். சண்முகம்

நாகபட்டினம் — இரா. அறிவழகன்

பம்பாய் — மா. கு. பாலுசாமி

தூத்துக்குடி – ஏ. இசக்கி

ஆற்காடு — ர. நடராசன்

பாம்பே — எஸ். எஸ். அன்பழகன்

நாகை வட்டாரம் திராவிட கழக உறுப்பினர்கள்:— லெ-குமாரமுத்து, லெ-மாணிக்கம், வி-ராஜமாணிக்கம், ச-சு-உருத்திராபதி, பி-ஆனந்தரெங்கன், வீ-சொ-அருணாசலம், பி-சித்திரவேலு, கே-வி-கோவிந்தராஜ், எம்-ராசு, து-பாலகுருசாமி ந-செ-கொழந்தைசாமி.

பேராவூரணி—திராவிட வாலிபர் கழகம்:-சி-மாணிக்கம், என்-பக்கிரிசாமி, வி-நடேசன், எஸ்-ஏ-மருதமுத்து, ஆ-இராமன், மு-நல்லமுத்து, வீ-சிங்காரவேல், மா-இராமசாமி, வே-முருகையன், க-அய்யாக்கண்ணு, எஸ்-சுப்பையன், லெ-அய்யாச்சாமி, அ-வீரப்பன், சி-சிதம்பரம், பீ-காதர் முகையதீன், சி-மாரிமுத்து, ஆர்-கருப்பையன், ஏ-சுப்பையா, சையதுபாட்சா, வெள்ளைச்சாமி, வி-பொன்னையன், எம்-சுப்பிரமணியன், கே-கணேசன், கு-முனியப்பன், ச-சவுரியார், ராசரெத்தினம், எஸ்-நைபினாமுகம்மது.

சீயாழி-தென்னம்பட்டிணம்:-பி-பி-சண்முகம்

பாமணி—மு-நையினாமுகம்மது, (திருத்துறைப்பூண்டி தாலுகா இந்தி எதிர்ப்புக்கமிட்டி உறுப்பினர்)

பண்ணுருட்டி — நா-இராசவேல், (வ-உ-சி-மாணவர் இல்லம்.)

கோவில்பட்டி— திராவிடமாணவர்கள்:- பொ-சன்னாசி, எம்-வில்லியம், கே-ரெங்கசாமி, எம்-ஞானதாஸ்,

ஏ-சுப்பையா, கருப்பையா, பி-சந்திவீரன், பி-மாரியப்பன், மற்றும் பதினொரு மாணவர்கள்.

கோதையூர்— பி-கணபதி
காட்டேரிகுப்பம்—அமரன்

நாகை கழக அனுதாபிகள்:— பெ-பேயாண்டி, ஆ-கதிர்வேல், பொ-பெருமாள், என்-தங்கவேல், கா-அம்மாசி, எஸ்-ஆறுமுகம், எஸ்-சுப்பையா.

நாகை வட்டாரம் திராவிடர் கழக உறுப்பினர்கள்:— லெ. குமாரமுத்து, எஸ். மாணிக்கம், வி, ராஜமாணிக்கம், ச. க. உருத்திராபதி, டி. ஆனந்தரெங்கன், வீ. சொ. அருணாசலம், டி. சித்திரவேலு, கே. வி. கோவிந்தராஜ், எம். ராசு, து. பாலகுருசாமி, ந. செ. கொழந்தைசாமி.

நாகை கழக அனுதாபிகள்:— பெ. பேயாண்டி, ஆ. கதிர்வேல், பொ. பெருமாள், எஸ். தங்கவேல், கா. அம்மாசி' எஸ். ஆறுமுகம், எஸ். சுப்பையா

போரவூரணி-திராவிட வாலிபர் கழகம்:— சி. மாணிக்கம், என். பக்கிரிசாமி, வி. நடேசன், எஸ். ஏ. மருதமுத்து, ஆ. இராமன், மு. நல்லமுத்து, வீ. சிங்காரவேல், மா. இராமசாமி, வே. முருகையன், க. அய்யாக்கண்ணு, எஸ். சுப்பையன், லெ. அய்யாச்சாமி, அ. வீரப்பன், சி. சிதம்பரம், பீ. காதர் முகையதீன், பி. மாரிமுத்து, ஆர் கருப்பையன், ஏ. சுப்பையா, சையது பாட்சா, வெள்ளைச்சாமி, வி. பொன்னையன், எம். சுப்பிரமணியன், கே. கணேசன், கு. பிளியப்பன், ச. சவுரியார், ராசரெத்தினம், எஸ். நெயினுமுகம்மது

பாமணி:— மு. 'நைனுமுகம்மது (திருத்துரைப்பூண்டி இந்தி எதிர்ப்புக் கமிட்டி உறுப்பினர்)

பண்ணுருட்டி:— நா. இராசவேல் (வ. உ. சி. மாணவர் இல்லம்)

கோவில்பட்டி-திராவிட மாணவர்கள்: —பொ. சன்னாசி, எம். வில்லியம், கே. ரெங்கசாமி, எம். ஞானதாஸ், ஏ. சுப்பையா, பி. சந்திவீரன், பி. மாரியப்பன், மற்றும் பதினொரு மாணவர்கள்

கோதையூர்:— பி. கணபதி
காட்டேரிகுப்பம்:— அமரன்

கூகாலிப்பட்டி திராவிடர் கழகம்:— ஞா. சுப்பையா, கி. முனியசாமி, எஸ். எஸ். முத்து, ஞா. மாரியப்பன், பி. எஸ். முத்து

திருவண்ணமலை:- கோ. மாணிக்கம் (இந்தி எதிர்ப்புக் கமிட்டித் தலைவர்)

சீயாழி-தென்னம்பட்டினம்:— டி. பி. சண்முகம்
மடத்திவாசல்:- கே. துரைராசன்

அருப்புக்கோட்டை திராவிடர் கழக உறுப்பினர்கள்,- கி. சங்காலிங்கம், வி. எம். தர்மராஜன், சி. குழந்தைவேல், இ. கி. கிருஷ்ணன், கே. பாண்டியன், ஆர். நடராஜன், சங்கரசுப்பு, வே. குமாரசாமி, எஸ். ராமசந்திரன், எஸ். டி. ராமச்சந்திரன், சி. செல்லம், பி. தேரி, ஆர். கருப்புச்சாமி, கே. எம். வால்டி, உ. பால்ராசன், கி. வரத்தால் பெரியவன், எஸ். எஸ். சண்முகசுந்தரம், ஏ. கே. சுந்தரம், ச. மு. கருப்பையா, கி. பெ. இ. பாலைப்பா, பி. கந்தசாமி

கரூர்—எஸ். வையாபுரி

திருநெல்வேலி—கல்லூரி மாணவர் தி. க. இரத்தினசாமி

கோவை—மா. நாராயணசாமி

சென்னிமலை—கொ. செ. உயர்நிலைப்பள்ளி திராவிட மாணவர்கள்:- மா. கிருட்டினன், சே. க. சுப்பிரமணியன், நா. வெங்கிடேசன், செ. கா. சத்தியமூர்த்தி, சு. மலையப்பன், மு. மீனாட்சிசுந்தரம், இரா. நா. துரைசாமி, மு. சேதுராமலிங்கம், ச. முருகேசன், நா. சென்னியப்பன், இரா. பழனியப்பன், இரா. பாலசுப்பிரமணியன், ப. இராசாமி, க. சு. இரங்கசாமி, மா. இரத்தினசாமி, எம். நாச்சிமுத்து, ஏ. நடராஜன், கே. எஸ். பழனிச்சாமி, ஈ. கு. இரத்தினசாமி, எஸ். சுப்பிரமணியன், ஈ. கு. ஆறுமுகம், உ. இராசாமி, மு. முருகேசன், செ. ச. அப்துல் சத்தார். ரா. கர்ண சிங், வீர. பழனியப்பன், ப. ஜான் அய்யாசாமி, ஜே. துரைசாமி, ப. மு. இராமசாமி, தோ. மு. இராமசாமி, இரா. சிதம்பரம், க. மு. தியாகராஜன்

திருப்பத்தூர் (வ. ஆ) திராவிட மாணவர் கழகம்:— சு. பாலன், கே. ஆர். கோபிசந்திரன், டி. கிருஷ்ணன், ௦ன். எம். வேணுகோபால், என். எஸ். குமரேசன், ஏ.தனுராசு, என்.கருணன், பி. ஞானசாமி, ஜி. ராமசாமி, டி. கே. அமானுல்லா, எம். சையத் முகம்மது, பி. எம். வேணுகோபாலன், பி. ரங்கநாதன், எம். எல். அப்புணு, வி. கோவிந்தராசு, பி. விநாயகம், பி. துரைராஜ், வி. சாமிநாதன், டி. கேசவன், கி. கோபாலகிருஷ்ணன், கே. லக்குவன் சிங், என். கே. சுப்பிரமணியன், தி. மு. கிருஷ்ணன், எஸ். ராமசாமி, பி. எல். சாமிநாதன், ஏ. பொன்னன், எம். சவேரிமுத்து, ஜி. மாதவன், தமிழன், கு.மு. கலாநிதி, அ. வடிவேலன், தி. ரா. கணேசன், டி. ஈ. வேணுகோபால், டி. டி. ராமமூர்த்தி, ஆர். எம். அழகராசன், வி. முத்து, டி. ஏ. சண்முகம், டி. தண்டபாணி, டி. எம். குழந்தை பி. எஸ். சீனிவாசன், க. வரதராஜன், ஆர். ராகந்திர பிரசாத், தி. ம. உமாபதி, டி. வி. ரங்கநாதன், ஏ. அப்துல்காதர், ஜி. கிருஷ்ணன், நா. ராமசாமி, என். ஜி. தணிகாசலம், ம. கா. சண்முகம், ச. மு. ராசசேகர், பி. என். ராமகிருஷ்ணன், என். ராமன், தி. ரா. கிருஷ்ணமூர்த்தி, டி. வி. சம்பத்குமார், வி. என். பத்மநாபன், டி. எஸ். மதுருதராவ், தி. கு. இராமகிருஷ்ணன், தி. அ. குப்புசாமி, எஸ். பி எஸ். மணி, எஸ். வெங்கடேசன், ரா. பாண்டுரங்கன், தி. கு. மதியரசன், சு. ஷண்முகசுந்தரம், வி. கனகசபாபதி, எம். தசரதராவ், அ. ஷண்முகம், எஸ். கிருஷ்ணசாமி, எஸ். வி. சங்காசன், ஆர். வி. கோபால், ஆர். ஜி. ராஜு, ஏ. துரைசாமி, டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, சி. மாணிக்கவாசகன், ஏ. ராஜு, ஆர். ருத்ரப்பன், முக்லிஸ் அலீ, மு. ஷண்முகம், கான் முகம்மது சாதுல்லா, கே. அப்துல் சாமத்,

கே. கன்னையன், பி. குப்புசாமி, எம். ராமகிருஷ்ணன், மா. தெய்வசிகாமணி, மு. லக்ஷ்மணன், கே. சுப்பராயன், கே. சுப்ரமணியன், எம். கிருஷ்ணன், எல். ஆர். கிருஷ்ணன், ஆ. க. மில்டன், கே. ராமகிருஷ்ணன், பி. வெங்கடேசன், எஸ். கந்தப்பன், பி. எஸ். ராமன், பி. கி. திருஞானசம்பந்தன், அ. முகம்மது, பி நஞ்சுண்டன், எம். சம்பத், எஸ். ஆதித்தன், எஸ். வி. அன்பழகன், எஸ். எச். ஹூசேன், சானுல்லா, எஸ். கே. எஸ். நாயுடு, என். சீனிவாசன், என். ஏ. சாமி, பி. ஆர். சாயாராமன், பி. பா. சுப்பன், ஆர். சீனிவாசன், ஏ. தேவராசன், ஜி. கண்ணன், பி. நரசுராம் டி. சி. ஆறுமுகம், ஆர். பாலராமன், அ. வெ. இராமசாமி, கே. ரத்தினசாமி, பி. ராஜரத்தினம், டி. எஸ். சீனிவாசன், கே. ஆர். பாலசுந்தரம், சுந்தராமையன், ஏ. ஜி. ரங்கனாதன், எஸ். ராமசாமி, ஸ்டான்லி, பி. கருணாகரன், டி. எஸ். ராமமூர்த்தி, ஆர். பாலசுந்தரம், எஸ். ஜகதீசன், கே. சுப்பராமன், பி. சுப்பிரமணி, டி. பி. சத்தியசீலன், கே. எஸ். ராமானுஜன், ஏ. கோவிந்தராஜன், வி. ஏ. அற்புதசாமி, எஸ். ஆர். சதானந்தம், எம். கே. சுப்பாராவ், அ. இராமசாமி, தமிழ்வாணன், ஆர். பாலசுந்தரம், எம். இலங்காதியன், டி. எம். நிஸார், எம். நடராசன், ரங்கசாமி, பி. சீனிவாசன், எம். அந்தோணிஜோஸ், எம். கொம்கான், இப்ராஇம்ஷா, வி. எஸ். சீனிவாசன், ஆர். பார்த்தசாரதி, டி.வி. சீனிவாசன், டி.கே. அண்ணாமலை, கே. எச். காந்தராஜு, ஏ. கணேசன், டி. ஆர். முத்துகிருஷ்ணன், ஏ. பி. ராஜன், எஸ். எம். நாசதம்பி, ஓ. பாஸ்கரன், சேஷகிரி, ராமகிருஷ்ணன், பி. வேலாயுதம், பி. சந்தானம், பி. லட்சுமிகாந்தன், பி. பாஸ்கரன், வி. ஆர். லட்சுமிநாராயண், என். ஜயகோபால், எம். ரங்கசாமி, எம். என். எஸ். மூர்த்தி, எம். சபேசன், எஸ். அண்ணாமலை, பி. வி. நாராயணசாமி, என். முருகன், பி. ஏ. அன்பன், கே. பி. வடிவேல், டி. கே. ஸ்ரீராமன், ந. பாஸ்கரன், தி. கோவிந்தராசன், குப்பன், ரா. கோபிக்கந்திரன்.

சுக்காங்கல்பட்டி—கழகத் தோழர்கள் :— ஏ. பால்சாமி, வி. ஏ. எம். செல்வசாமி, வி. க. ந. கணபதி, பொ. மாரியப்பன், ப. மாரிமுத்து, அ. ரா. துரைசாமி, வா. சௌந்தரராஜன், லி. குருசாமி, அ. கு. மாரிமுத்து, வி. ஏ. எம். கதிர்வேல்சாமி.

எட்டயாபுரம்—எஸ், கலிங்கன், செயலாளர், தி. க.

க. புதுப்பட்டி-கழகத் தோழர்கள் :— வி. காமராஜன், எஸ். மகம்மதுமீரு, எம். ரத்தினம், எஸ். ஆர். சாமி, பி. முத்துக்கிளி, கே. ஆறுமுகம், கே. எஸ். ராமசாமி, எஸ். டி. கே. ராஜகோபாலன், பி. என். வி. லோகன்துரை, கே. ராஜு, பி. வீரசிக்கு, ஆர். பொன்னையா, கே. ராஜேந்திரன், கே. எஸ். இப்ராஹிம், எம். கே. பக்கீர்முகம்மது, எம். ராமசாமி.

காவேரிப்பாக்கம்—(திண்டிவனம்) தி-க. தோழர்கள் :— முத்துசாமி, சுப்பிரமணியன், பூபாலன், தனபால், கங்காதரன், எத்திராசு, கோவிந்தராசலு, ரங்கநாதன், வரதன்.

கொழும்பு—எஸ். கே. இராஜரத்தினம், இ. தி. க. மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்

கோவில் பாளையம்—பி. எஸ். கந்தசாமி, தி. க. உறுப்பினர்

தூத்துக்குடி — மேலச் சண்முகபுரம் கழகத் தோழர்கள்:—அ, வேதநாயகம், ஏ. தவமணி, மா. மாசானிமுத்து, சு, தங்கசாமி, ஆ. அருணாசலம், வ. அருணாசலம், ச. திரவியம், மா. கந்தசாமி, இர. தனுக்கோடி, சு. கருப்பசாமி, வெட்டும்பெருமாள், எஸ். வி. ஜே. ஞானராஜ், எஸ். வெற்றிவேல், எம். சீனிவாசன், ப. காடி, க. தங்கையா, மா. தங்கசாமி, ஏ. நமவணி, கே. குருவையா, பி. செம்புலிங்கம், பி. பிரமையா, க. அருணாசலம், நா. ராமர், க. வேல்சாமி, அ. பால், ஆ. வேதநாயகம், மா. அப்பாத்துரை, மா. அருணாசலம், கே. இ. முத்து, சி. அருணாசலமணி, சா. ஆசிர்வாதம், எம். ஆத்திச்சாமி, வே. காசி, பி. சிதம்பரம், க. சண்முகம், ஏ. பழனிவேல், மு. பொன்னுசாமி, ஏ-மூக்கையா, சுந்தரலிங்கம், வே. சித்திரக்கனி, ச. பிரமசத்தி, அ. ரானஜயா, அ. சாமுவேல்

திண்டிவனம்—ஆ. தங்கவேலு, கன்வீனர், இ. எ. குழு.

திரு உத்தரகோசமங்கை—திருவள்ளுவர் கழகத்தார்கள்:—எம். திருமலை, எம். கோட்டைச்சாமி, ஏ. ராமசாமி, யு. நாகலிங்கம், எஸ். குருமாணிக்கம், செ. சிதம்பரம், பி. ரெத்தினம், என். பாண்டியன், கணேசன், கே. ராஜு, கே. மங்களலிங்கம்

திருத்தங்கல்—கே. எஸ். பி. கணேசன், தலைவர் தி—கழகம்

பெருவளநல்லூர்—கழகத்தோழர்கள்:—அ. மாணிக்கம், பெ. க. சுந்தரம், பெ. மு. கிருஷ்ணசாமி, வி. கணேசன், அ. நடேசன், த. மு. சு. மணி, மீ. நடேசன், க. சங்கரன், க. வெங்கிடுசாமி, கு. கிட்டான், ப. கிருஷ்ணசாமி

புதுவை-க. ப. செல்வராசு
திருமங்கலம்—ந. தனுக்கோடி
திருப்பத்தூர். (இ) இரா. சேதுராமன், செயலாளர், வைக்கம் வீரர் படிப்பகம்
லால்குடி-எல். ஜி. சாமி
குடவாசல்-தி. கிருட்டிணன், எஸ். பிச்சையன்
ஏழாயிரம்பண்ணை-மா. மண்டலசாமி
தூத்துக்குடி-பொ. அருணாசலம், வே. பெருமாள்

மதுரை-கழகத்தோழர்கள்:—ம. அ. தேவராசன், பெ. ந. இயேசுதாசன், பெ. பாண்டியன், அ. முனுசாமி, இரா. சி, முத்துக்கண்ணன், பெ. துரைராசன்

அண்ணாமலைநகர்-இரா. வரதராசன், தி. மா. கழகம்
கடலூர்—வ. ரத்தினசாமி, தி. க.

சென்னை—ஏ. அம்மையப்பன் பி. ஏ., சட்டக்கலூரி மாணவர்

திருச்சேறை—கழகத்தோர்கள்:-மு. சுந்தரம், ச. கோபால்சாமி, பி. ராசாங்கம், ஆர். சோமசுந்தரம்
விக்கிரம சிங்கபுரம்—ச. முத்தப்பன்
திருமங்கலம்—கே. பி. எஸ். தர்மன் பி. காம். ஏ. பி. பி. ஆர். தர்மராஜ்

நடுவிற்பட்டி—கழகத்தோழர்கள்:-வி. காளியப்பன், ச. இளங்கோவன், தபசிலிங்கம், கே. சண்முகவேலு, எம். ஆதியப்பன், மே. சண்முகவேலன், பேச்சியப்பன், ச. பொன்னு, அ. ராமச்சந்திரன், என். தேவன், கா. ராமச்சந்திரன், அளகப்பன், வே, சுப்பிரமணியம், மே. க. முத்து, அருணசலம், எம். முருகாண்டி

இலங்கை—உடப்புசெல்லாவா தோழர்கள்:- எஸ். கே. இளங்கோவன், ஏ. கண்ணுசாமி, அ. தமிழ்மணி, அ. ஆறுமுகம், பி. கே. கருப்பையா, எஸ். கதிரேசன், கே. எஸ். நாதன், சி. வேலாயுதம், க. சோமசுந்தரம், சி. மு. ராமசாமி, ஏ. சொக்கலிங்கம், அ. சுப்பையா

தூத்துக்குடி—கே. ராமசாமி, ஜவுளிவியாபாரம்

சிறுத்தொண்டை நல்லூர்—தி. க. உறுப்பினர்கள்:—ச. சங்கரபாண்டியன், ஆ. சங்கரப்பழம், ச. கிருட்டினன், ச. சிவசங்கு, ல. அரசவேந்தன், மா. அருணசலம், கோசலே, பா. தங்கராஜன், ஆ. கருப்பையா, சொ. தங்கத்துரை, ல. தங்கத்துரை, முத்தையா, வாள்வாங்கு, இசைமுத்து

பீளமேடு—தொழிற்பள்ளி மாணவத் தோழர்கள்:—ப. அழகேசன், பொ. இரா. பழனிசாமி, அ. ச. இளங்கோ, அ. ராசகோபல், அறிவழகன்

நிலக்கோட்டை—மு. வ. ரத்தினசபாதி, தி. க.

பனையப்பட்டி—திராவிட மாணவர்கள்:-மு. பாண்டியன், மு. செல்வராசு, கருப்பசாமி, கு. சின்னு,

வடக்குப்பட்டு (தஞ்சை)—க. குமாரசாமி

பெரியகுளம்—வி. குப்புசாமி

சென்னை—பெரியமெட்டுத் தோழர்கள்:—ஜீ. வீராகவன், எஸ். நாராயணசாமி, வி. கோவிந்தராமி, என். எஸ். மணி, ஏ. கனகராஜி, எம். துரைராஜி, எம்-சந்திரன், எம். ஏழுமலை, ஜி. முருகேசன், எஸ். சாமிநாதன்.

குறிஞ்சிப்பாடி—கு. த. பெ. பழனியப்பன்.

ஜேயங்கொண்டாம்—வை. இராசகோபால், செயலாளர் தி. க.

தென்காசி—கே. ஆர். சுப்பையா.

கொழும்பு—பஞ்சிகாவத்தை தி-க. உறுப்பினர்கள்:— இரா. அ. மணி, செசலிதானம்மாள், சு. ஆறுமுகதாஸ், பெ. லெ. இராமச்சந்திரன், பெ. முத்தையா, பெ. பெருமாள், ஏ. கே. பிச்சை, மு. சேது, வி. க. தோமஸ், பெ. பொன்னையா.

புக்குளம்—ஜி. கோபால்.

வலங்கைமான்—ரா. சுப்பையன்.

பம்பாய்—எஸ். எஸ். அன்பழகன்.

மதுரை—எம். கே. குமார், ஒய். எம். சி. சி.

கொழும்பு—எஸ். மாயன்.

திண்டுக்கல்—க. சு. முருகேஸ்பரன்.

தூத்துக்குடி—கழகத்தோழர்கள்:—ஆ. நாராயணன், த. தில்லைச்சிதம்பரம், பெ. ராமலிங்கம், பொ. தங்கையா, பி. தெய்வநாயகம், அ. ஆறுமுகம், எஸ். தர்மராசன், பி. வேல்சாமி எஸ். காசிமாரியப்பன், ர. காசிச்சாமி, த. கோ. மணி, அ. தேவசகாயம், பி. சிவசுப்பு, வே. அமிர்தலிங்கம், வ. ராஜபாண்டியன், பொ. துரைசாமி, எம். எஸ். ராமையா, பி. தங்கச்சாமி, மு. பழனிச்சாமி, அ. சூசைமரியாள், ச. செல்லத்துரை, த. சண்முகம், மு. கருப்பசாமி, க. தாண்டியன், எம். துரைசாமி, ச. கருப்பசாமி.

கொமரலிங்கம்—கழகத் தோழர்கள்,—கே. எஸ். நாச்சிமுத்து, டி. சந்தானம், வீ. வீரப்பன், வெ. ரு. மருதப்பன், கே. பி. மாரியப்பன், ப. மாரியப்பன், கே. ஆர். தங்கசாமி, அ. நாகப்பன் கே. பாலகுருசாமி, அ. கிருஷ்ணசாமி, சின்னு பிள்ளை, ஆ. காளியப்பன், பி. எஸ். மணி.

கொழுமம்:—எஸ். ஏ. கிருஷ்ணசாமி, முத்து, ஆ. மாரிமுத்து, ந. கோபாலன், கே. ஏ. ஆறுமுகம்.

ந. க. புதூர்—வே. நாச்சிமுத்து.

மதுரை—சுப்பிரமணியபுரம் பகுத்தறிவு வாசகசாலைத் தோழர்கள்:—பி-கே-எஸ்-சேதுராமன், வீ—நாகசுந்தரம், சோன. சுப்பிரமணியன், ஏ. சந்திரன், எஸ். திருஞானசம்பந்தம், ஜி. பழனிச்சாமி; டி. நடராஜன், கே. ஆறுமுகம், ஆர். கலாரத்தினம், எஸ்-வி-சையத் முகம்மது, பி-ராமன், எஸ்-சீனிவாசன், டி-டி-சாமி, எம்-ஜகநாதன், எஸ்-ஸ்ரீபதி.

(3-ம் பக்கம் பார்க்க)

"மாலை மணி"

(திராவிடர் தமிழ் தினசரி)

விலை:- அரை அணா

ஆசிரியர்

சி. என். அண்ணாத்துரை எம். ஏ.,

10-8-1949-ல் வெளிவருகிறது

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு:—

"மாலை மணி" பதிப்பகம்

2/45, முத்துமாரி செட்டித் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் :: மலாய்நாடு 12 காசு

OFFICE OF THE REGISTRAR OF ... -SEP 1949 ... MADRAS

மலர் 8 | 14—8—49 | இதழ் 7

ஆஸ்திரேலியா

[நாகைவெளி குஞ்சிதம்]

1606-ம் ஆண்டிற்கு முன்பு ஆஸ்திரேலியாவைப் பற்றியோ அப்பெயருடன் ஒரு கண்டம் பசிபிக் மகா சமுத்திரத்தில் இருக்கிறதென்றோ ஐரோப்பியர்களுக்குத் தெரியாது. இந்தக் கண்டத்தைக் கண்டு பிடித்த பிறகு 1642-ம் ஆண்டில் டச்சு கிழக்கு இந்தியா கம்பெனி அபெல் டாஸ்மான் என்றவரை அந்த புதிய பெரிய நிலப்பரப்பை ஆராய்ந்து வரும்படி அனுப்பியது. அதன் பிறகு டச்சுக்காரர்கள் அக்கண்டத்தைப் பற்றி அதிக சிரத்தை கொள்ளவில்லை.

ஏறக்குறைய 100 வருடங்கள் சென்ற பிறகு கேப்டன் ஜேம்ஸ் கூக் என்பவரை இங்கிலீஷ்காரர்கள் அனுப்பியது, அவர் நியூசிலண்டையும் ஆஸ்திரேலியாவின் கிழக்கு பாகத்தையும் கண்டுபிடித்தார். 1770-ம் ஆண்டில் கேப்டன் கூக் பிரிட்டனுக்காக ஆஸ்திரேலியாவில் கொடியை நாட்டினார். அதன் பிறகு பிரிட்டிஷார் தண்டனை அடைந்த குற்றவாளிகளாகிய வெள்ளையரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பி வந்தனர். அது பெரிய ஜெயிலாகவே பல ஆண்டுகள் விளங்கி வந்தது. எப்படி அந்தமான் தீவுகளுக்கு இந்திய குற்றவாளிகளை பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து அனுப்பினார்களோ அதேபோல் அதே பிரிட்டிஷார் பிரிட்டனின் குற்றவாளிகளை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவந்தனர்.

இக்கண்டத்தின் பரப்பளவு 2974581 சதுர மைல்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எழுபது இலட்சம் (ஏழு மில்லியன்) மக்கள் தொகை கொண்டதுமாக தற்போது விளங்குகிறது. 1901-ஆண்டில் ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடாக ஆஸ்திரேலியா மாறியது.

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இக்கண்டத்தில் சரித்திர ஆதிகாலத்தில் நீக்ராயிட் என்ற கருப்புநிற ஜாதியர் வசித்து வந்ததாகவும் சென்றநான்கு நூற்றுண்டுகளுக்கிடையில் காகேசியன் என்ற வெள்ளைநிற ஜாதியர்கள் அதிகமாகஇந்த இடத்தில் குடியேறி இருப்பதாகவும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவேகருநிற ஜாதியாரும் வெள்ளைநிறத்தவரும் கலந்துவசிக்கும் நாடுதான் ஆஸ்திரேலியா என்பது தெளிவாக நமக்கு விளங்குகிறதல்லவா?

தற்பொழுதும் அந்த பழைய கருப்பு நிற ஜாதியார் ஆஸ்திரேலியாவின் வடபாகத்தில் வசித்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவின் வடஎல்லை அரபூரா கடல். அக்கடலில் முதலைத் தீவுகள் என்ற தீவுகள் உள்ளன. அதற்கு கொஞ்சம் தெற்கில் ஆர்ன்ஹெம் நிலம் (Arnhem Land) என்ற நிலப்பரப்பில் மேலே கூறப்பட்டுள்ள ஆஸ்திரேலியாவின் ஆதிக்குடிகளாகிய கருப்பு மனிதர்கள் வசித்து வருகின்றனர். இன்னும் அவர்கள் நிர்வாணமாய்த்தான் திரிகின்றனர். ஆணும் பெண்ணும் தேக அமைப்பில்தான் வித்தியாசப்படுகின்றனரேயன்றி வேறு உடையில் அல்ல. இவர்கள் வெள்ளையர்களையும் அவர்கள் ஆட்சியையும் விரும்பவில்லை. விரும்புவதும் இல்லை. வெள்ளையர்களுக்கெதிராகவும் அவர்கள் ஆட்சிக்கெதிராகவும் பல தடவைகளில் சண்டையிட்டிருப்பதாக சரித்திரக்காரர்கள் கூறுகின்றனர். ஆணும் பெண்ணும் சமத்துவமாக வாழ்கின்றனர். ஆஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டநாள் தொடங்கி 1933-ம் ஆண்டுவரை யாரும் அந்த பழங்குடி மக்கள் வசிக்கும் இடத்திற்கு சென்றதில்லை. அவர்களை கவனித்தவர்கள் யாரும் இல்லை.

இக்கண்டத்திற்கு பிரிட்டனோ அமெரிக்காவோ அதிக சமீபத்தில் இல்லை. ஆனால் மலேயா இந்தோனேஷியத் தீவுகள், பிலிப்பைன், சைனா, இந்தியா, முதலிய நாடுகள் தான் சமீபத்திலிருக்கின்றன. ஆசிய நாடுகளைப் பலகத்துக்கொண்டால் அனைத்தான் ஆஸ்திரேலியா! இக்காரணத்தையொட்டியே இந்தியா

எப்படியாவது சாமன் வெல்த்திலிருக்கவேண்டும் என அதிக சிரத்தை காட்டியது ஆஸ்திரேலியா. அவ்வளவு சங்கடமான நிலையிலிருந்தும் ஆஸ்திரேலியா "வெள்ளை முறைக் கொள்கை" என்ற ஓர் திமிரான முறையைக் கைப்பிடித்து வெள்ளையனுக்குத்தான் குடியேறவும் அங்கேயே பரம்பரையாகத் தங்கவும் அனுமதியளிக்கவும் செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளையரே உள்ளே வா மற்ற நிறக்காரரா வெளியேபோ என்கிறது ஆஸ்திரேலியா. ஏன்? அந்த பழங்குடி மக்களை கவனியாது தன் இனத்தவரை கவனித்துக்கொண்டிருக்கும் தற்குறித்தனம் வெளிப்பட்டு விடுமெனறு? இவ்வளவு நாகரிகம் கல்வியெல்லாம் முற்போக்கடைந்திருக்கும் இக்காலத்தில கூட ஆஸ்திரேலியா உலகை ஏமாற்றப் பார்க்கிறதே, அதுதான் விந்தை!

(க. மு.)

வானவூர்தி

4-ம் பக்கத் தொடர்ச்சி

காற்றாடியை எவ்வாறு காற்று மோதி மேலே தூக்கித்தாங்கிக்கொண்டிருக்கிறதோ அதேமாதிரிதான் காற்று எரோப்ளேனில் சிறகுகள் அல்லது இறக்கைகளில் மோதி அதை மேலே தாங்கிக் கொண்டிருக்கிறது. மோதிக்கிளப்ப கொஞ்சம் காற்றுப் போதும், ஆனால் வானவூர்தியை மேலே கிளப்பித் தாங்க பலமான காற்று அடிக்க வேண்டும். அவ்வித பலமான புயற்காற்றை வானவூர்திக்கு முன்புறமுள்ள விசிறி உண்டாக்குகிறது. விசிறி ஒரு நிமிடத்திற்கு சுமார் 2000 முறை சுழலும். விசிறி சுழலும்போது சுழல்காற்று உண்டாவது மாத்திரமின்றி அது காற்றைக் குடைகிறது. அதாவது ஒரு ஸ்க்ரூ (Screw) ஆணியை ஒரு கட்டையினுள் செலுத்தும்போது எவ்வாறு கட்டையைக் குடைந்து செல்லுகிறதோ அதேபோல் விமானத்தின் விசிறி காற்றைக்குடைகிறது. ஸ்குரு ஆணியைச் சுற்றும்போது ஆணியின் கொண்டை முன்பக்கமாகக் கட்டைக்குச் சமீபமாகப் போகிற மாதிரி விமானத்தின் விசிறி காற்றைக் குடையும் போது விசிறியும் முழு எரோப்ளேனும் முன் பக்கமாக இழுக்கப்படுகின்றன.

வானவூர்தி தரையில் அதன் சக்கரங்களின்மேல் நிற்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது இறக்கைகள் முன்பக்கம் தாழ்ந்தும் சரியாக இருக்கும். இப்போது எஞ்சினைத் துவக்கிவிட்டால் விசிறிவேகமாகச் சுழலத் தொடங்கும். விசிறி காற்றைக் குடைவதால் விமானம் முன்பக்கமிழுக்கப்பட்டு அதன் சக்கரத்தின் உதவியால் தரையின் மேல் வெகு வேகமாக ஓடும். அப்போது விமானம் ஓடும் திசைக்கு எதிர்பக்கமாகக் காற்று ஓடி வானவூர்தியின் சிறகுகளினடிப்பக்கம் மோதும். போதுமான வேகம் வந்ததும் வெகுபலமாகக் காற்று சிறகுகளினடிப்பக்கம் மோதவும் வானவூர்தி தரையை விட்டெழும்பும். அப்போது வால் பக்கமிருக்கும் படுக்கை வசமான தகட்டை (Elevator) மேல்பக்கம் தூக்கினால் விமானம் சுலபமாக மேலேறும். திசையைத் திருப்ப உதவுவது வால்பக்கமுள்ள சுக்கான். அதை வலதுபுறம் திருப்பினால் விமானமும் வலது புறம் திரும்பும். அது படகுகளிலிருக்கும் சுக்கானைப் போன்றது. கீழே இறங்குவதற்கு வால்பக்கமுள்ள படுக்கை வசமான தகட்டைக் கீழ்பக்கம் சாய்க்கவேண்டும். வானவூர்தியில் விலாப்புறம் நீட்டிக்கொண்டிருக்கும் சிறகுகளினடிப் பக்கத்தில் காற்று மோதுவதால் விமானம் காற்றில் மிதக்கிறது. அதன் பக்கம் வைத்திருக்கும் விசிறி சுழலுவதால் விமானம் முன்பக்கம் ஓடுகிறது. சுருக்கமாக விமானத்தைத் தாங்குவது அதன் சிறகுகள். அவை ஓடச்செய்வது அதன் விசிறி என்று சொல்லலாம்.

ஆகாயக்கப்பல் (Airship) ஆகாய விமானம் (Aeroplane) இவ்விரண்டிற்கும் வித்தியாசமுண்டு. ஆகாயக் கப்பல் அல்லது ஜெப்லின் என்பது காற்றைவிட இலேசானது. அதில் நிறைய ஜலவாயு (Hydrogen) சேர்த்து வைத்திருக்கிறார்கள். அது தோற்றத்தில் பெரிய மீன் போல சிறகுகளில்லாமலிருக்கும். எஞ்ஜின் நின்று போனாலும் அது காற்றில் மிதந்துகொண்டிருக்கும். ஆனால் எரோப்ளேனின் எஞ்சின் நின்று விட்டால் விமானம் தரைவந்து சேர்ந்துவிடும். ஆகாயக்கப்பல் காற்றைவிட இலேசாக மிதக்கக் கூடியதாக இருப்பதால் அதை ஓட்டுவதற்கு விசிறியும் திசை திருப்ப சுக்கானும் மட்டும் உண்டு.

—※—

தியாகராயர் கல்லூரி

சர். பி. தியாகராயர் உயர்நிலைப் பள்ளி, தியாகராயர் கல்லூரியாக உயரப்போகிறது! கேட்கும்போதே மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது! அதை முப்பெருங் கலைவாணர்கள் முன்னின்று நடத்தி வைக்கப் போகிறார்கள்! செய்தி நம்மை இன்பக் கடலில் கொண்டு போய் ஆழ்த்துகிறது!

வீழ்ச்சியுற்ற மக்களின் எழுச்சிக்காகப் பாடுபட்டு, வீடுவாசல்களை மறந்து, தன்னலங்கருதாது உழைத்துத், திராவிடமெங்கும் புகழொளி பாப்பி மறைந்த வெள்ளுடை வேந்தன் சர். பி. தியாகராயரின், அழியாச் சிறப்பு உயர்நிலைப்பள்ளி வடிவில் வட சென்னையில் காட்சியளித்து வருவதை யாவரும் அறிவர். அப்பள்ளி நிதியைப் பெருக்கவும், அதனைக்கல்லூரி அளவிற்கு உயர்த்தவும் இசையரசு. எம். எம். தண்டபாணி அவர்கள் பெரிதும் முயற்சி எடுத்து, இசைவிருந்துகள் நடத்தி, அதன்மூலம் கிடைத்த பொருளை நிதியில் சேர்ப்பித்துள்ளார்கள். கல்லூரியை அடுத்த ஆண்டிலேயே துவக்கிவிட, தங்களாலான பொருளுதவியைச் செய்வதென இசை வேந்தன் எம். கே. தியாகராஜபாகவதரும், நகைச்சுவை நடிகர் என். எஸ். கிருஷ்ணனும் வாக்களித்துள்ளார்கள். கல்லூரியின் முதலாண்டு நிர்வாகியாக பாகவதரும், இரண்டாவது ஆண்டு நிர்வாகியாக நகைச்சுவை நடிகரும் இருக்க ஒப்புக்கொண்டது பெருமைக்குரியதாகும். கொடை உள்ளம் படைத்த கலைவாணர் மூவரையும் நாம் மனமாரப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம். இசைவிருந்து தந்து முயற்சிக்கு ஆதரவளித்த ஏனைய இசைவாணர்களுக்கும் நம் பாராட்டுதல்!

வானவூர்தி வரலாறு

பறவைகளைப்போல் ஆகாயத்தில் பறக்கவேண்டுமென்ற ஆசை வெகுகாலமாக மனிதனுக்கும் இருந்திருக்கிறது. பறப்பதற்கு வேண்டிய சாதனங்களைக் கண்டுபிடிக்க மனிதன் வெகுகாலமாகத் தன்னாலான முயற்சி எடுத்து வந்திருக்கிறான். பறவைகளின் சிறகுகளைப்போல் பெரிய சிறகுகளைச் செய்து கைகளில் கட்டிக்கொண்டு பறக்க முயற்சித்தவர்கள் பலர். வேறு சிலர் இவ்விதச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு உயரமான கோபுரங்களிலிருந்து குதித்துத் தொப்பென்று விழுந்து மாண்டார்கள். பதினெட்டாம் நூற்றூண்டுவரை மனிதன் பறப்பதற்குப் பழக எடுத்துக் கொண்ட முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீராய் முடிந்தன. 18-ம் நூற்றூண்டின் துவக்கத்திலிருந்த விஞ்ஞான அறிவாளிகள் மனிதனால் பறக்கவே முடியாதென்றும் பறவைகளைவிடப் பெரிய உருவத்தையும் கனத்தையுமுடைய எந்த பொருளும் பறக்க முடியாதென்றும் முடிவுக்கு வந்தார்கள்.

பதினெட்டாம் நூற்றூண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசத்தில் வசித்த மாண்ட்கால்பியே (Montgolfier) என்ற இரு சகோதரர்கள் சூடான காற்றையும் புகைப்பையும் பைகளில் அடைத்துவிட்டால், அப்பைகள் ஆகாயத்தின் மேலேறிப் பறக்கின்றன வென்று கண்டுபிடித்தார்கள். இவைகளுக்குப் புகைக்கூண்டுகள் (Balloons) என்று பெயர். அக்காலத்தில் புகைக் கூண்டுகள் ஆகாயத்தில் பறப்பதைப் பார்த்து எல்லோரும் பிரமிப்படைந்தார்கள். முதலில் சூடான காற்றை நிரப்பி புகைக் கூண்டுகளைப் பறக்க விட்டார்கள். பின்பு காற்றைவிட இலேசான அப்ஜனகம் என்ற ஜலவாயு (Hydrogen) வைக் கூண்டுகளில் நிரப்பிப் பறக்கவிட்டார்கள். வெறுங் கூண்டுகளைப் பறக்கவிட்டுப் பார்த்தபின்பு கூண்டுகளுக்கடியில் கூடைகளைக் கட்டித் தொங்கவிட்டு அதில் உயிர்ப் பிராணிகளை வைத்துப் பறக்கவிட்டார்கள். பின்னர் 1783-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ந் தேதி பிரான்ஸ் தேசத்து மன்னர் முதற்கொண்டு பெருந்திரளான கூட்டத்தின் முன்னிலையில், புகைக் கூண்டில் ஒரு சேவல், ஒரு வாத்து, ஒரு ஆடு, இம்மூன்றையும் வைத்துப் பறக்கவிட்டார்கள். பார்த்தவரெல்லாம் ஆச்சரியப்படும்படி புகைக் கூண்டு 1500 அடி உயரம் போய்ப் பின்கீழிறங்கியது. முதன் முதலாகப் பிரயாணஞ் செய்த ஆடு, வாத்து, சேவலும் சுகமே திரும்பின.

சூடான காற்றால் நிரப்பப்பட்ட கூண்டுகள் காற்றில் பறக்குமென்ற உண்மையை மாண்ட்கால்பியே சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள். புகைக்கூண்டுகள் உயரப்போகக் காரணமென்னவென்று அவர்களால் ஊகிக்க முடியவில்லை. தண்ணீரில் கார்க் அல்லது கெட்டித் துண்டைப் போட்டால் அது எவ்வாறு தண்ணீரின் மேல் மட்டத்தில் வந்து மிதக்கிறதோ, அதே மாதிரிதான் புகைக் கூண்டுகள் காற்றில் மிதக்கின்றன. கெட்டித் தண்ணீரைவிட லேசானதால் தண்ணீர் கெட்டியை மேலே தள்ளுகிறது. அதைப் போலவே காற்றைவிட இலேசான வஸ்துவைக் காற்று மேலே தள்ளுகிறது. பூமியைச் சுற்றிலும் காற்றினலான சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. காற்றைவிட இலேசான சூடான காற்று அல்லது ஜலவாயு (Hydrogen) வை ஒரு பையில் அடைத்து விட்டால் காற்று அதைத் தள்ளி மேலே போகச் செய்கிறது.

தற்காலத்தில் சிறு பையன்கள் விளையாடுவதற்காகச் சிறு ரப்பர் பலூன்களில் ஜலவாயுவை அடைத்துப் பெரிய பட்டணங்களில் விற்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆரம்பத்தில் புகைக்கூண்டில் மனிதரை ஏற்றிப் பறக்கவிட பிரான்ஸ் தேசத்து மன்னர் உத்தரவளிக்க மறுத்துவிட்டார். பிரஞ்சுவா பிலாத்தர் (Francois Pilatredes Roziers) என்ற துணிகரமுள்ள வாலிபர் முதல் முதல் ஆகாயத்தில் பறக்கும் வாய்ப்பைத் தானடைய வேண்டுமென்று அரசரை வற்புறுத்தி உத்தரவு பெற்றார். அன்றியும் 1783-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதி திரளான மக்கள் கண்ணிமை கொட்டாமல் ஆச்சரியத்தில் மூழ்கியிருக்க பிலாத்தர் புகைக் கூண்டிலேறி மேலே சென்று சிறிது நேரம் கழித்துச் சுகமே கீழே வந்து சேர்ந்தார். இவர்தான் ஆகாயத்தில் பிரயாணம் செய்த முதல் மனிதர். இதற்குப் பின் பல பேர் பல தேசங்களிலும் புகைக் கூண்டுகளிலேறிப் பறக்க ஆரம்பித்தார்கள். அந்தச் சமயத்தில இங்கிலாந்தில் வசித்து வந்த லூனர்டி (Lunardi) என்ற இத்தாலியர்தான் முதன் முதலாக இங்கிலாந்தில் புகைக் கூண்டிலேறிப் பறந்தவர். அவருக்குப்பின் 1785-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் தேதி பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த (Blanchard) பிளான்சார்ட் என்பவர் இங்கிலாந்திலிருந்து புகைக் கூண்டிலேறி 21 மைலுக் கப்பாலுள்ள பிரான்ஸ் தேசத்தை யடைந்தார். இவர்தான் முதன் முதலாக ஆகாய மார்க்கமாக இங்கிலாந்திற்கும் பிரான்சுக்கும் மத்தியிலுள்ள குறுகலான கடலைக் கடந்தவர்.

புகைக்கூண்டு காற்றில் மேலே சென்று மிதந்து காற்றடிக்கும் ப
—ண்டு

கம் போகுமே யொழிய நம்மிஷ்டம் போல் புகைக்கூண்டை எத்திசையிலும் போகவைக்க முடியாது. இதுதான் புகைக் கூண்டின் பெருங் குறை. வடபக்கம் போகவேண்டியிருக்கும்போது காற்று தென்புறமாக அடித்தால் புகைக்கூண்டு தென்பக்கந்தான் போகும்.

புகைக்கூண்டுகள் காற்றை விட இலேசானவை. இப்போது சாதாரணமாக 'விர்' என்ற சப்தத்துடன் பெரிய பட்டணங்களின்மேல் பறந்து செல்லும் ஏரோப்ளேன் எனப்படும் வானவூர்திகள் காற்றைவிடக் கனமானவை. இருபதாம் நூற்றாண்டில்தான் காற்றைவிடக் கனமான வானவூர்திகள் ஆகாயத்தில் பறக்கத் தொடங்கின. நாளடைவில் 1903-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த வில்பர் ரைட், ஆர்வில் ரைட் (Wilbur Wright and Orville Wright) என்ற இரு சகோதரர்கள் முதன் முதலாகக் காற்றைவிடக் கனமான ஆகாயவிமானம் செய்து பறக்கவிட்டார்கள். புகைக்கூண்டுகள் காற்றில் பறப்பது விசித்திரமான காரியமல்ல. ஆனால் காற்றைவிடக் கனமான வானவூர்தி ஆகாயத்தில் பறப்பது மிகவும் ஆச்சரியமான சம்பவம். ரைட் சகோதரர்கள் சைக்கிள் செம்மை பண்ணும் கடையை வைத்திருந்தார்கள். சிறு வயதிலிருந்தே இயந்திர வேலைகளைச் செய்வதில் உற்சாகமும் திறமையுமுடையவர்கள். அவ்விருவரும் மாத்தடியில் மறைந்திருந்து பறவைகள் பறக்கும் விதத்தைக் கூர்மையாகப் பலமுறை கவனித்திருக்கிறார்கள். இவர்கள் கைப்படச் செய்த வானவூர்தியில் மேற்சொன்ன தேதியில் பறந்தபோது விமானம் காற்றில் 59 விநாடி, (Seconds)களில் எண்ணூற்று ஐம்பத்திரண்டு அடி தூரந்தான் பறந்தது. பறந்த நேரமும் தூரமும் மிகக் குறைவாகவிருந்தபோதிலும் இதுதான் முதல்வெற்றி. ரைட் சகோதரர்களுக்கிருந்த ஆனந்தத்திற் களவில்லை. உலகத்தாரெல்லாம் ரைட் சகோதரர்களின் திறமையை மெச்சினார்கள்.

1908-ம் ஆண்டில் வில்பர் ரைட் பிரான்ஸ் தேசத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குப் பறக்கும் விதத்தைக் காட்டினார். தற்போது எல்லா நாடுகளிலும் வானவூர்தி (ஆகாய விமான) ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு விமானங்கள் அதிகமதிகமாக அபிவிருத்தியாகி வருகின்றன. லண்டன் நகரிலுள்ள 'டெய்லி மெயில்' (Daily Mail) பத்திரிகைக்காரர் வானவூர்தியின் மூலமாகப் பிரான்ஸ் தேசத்திலிருந்து இங்கிலாந்தை வந்தடைபவருக்கும் லண்டனிலிருந்துமாஞ்செஸ்டர் நகர் போயடைபவருக்கும் அமெரிக்காவிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடந்து 1800 மைலுக் கப்பாலுள்ள இங்கிலாந்தையடைபவருக்கும் ஆயிரக் கணக்கான பவுன் பரிசளித்ததால், பல தைரியசாலிகள் ஆகாயவிமானங்களில் பறக்க முன்வந்து ஆச்சரியத்துக்குரிய தீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். ரைட் சகோதரர்கள் வானவூர்தி கண்டுபிடித்து 37 ஆண்டுகள்தானே போதிலும் இச்சொற்ப காலத்திற்குள் பறத்தல் எவ்வளவு அபார அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்பது எல்லோருமறிந்த விஷயம். வடதுருவம் தென் துருவத்தின் மேலெல்லாம் மனிதர் விமானங்களினுதவியால் பறந்துவிட்டார்கள், பெண்கள்கூட, தனிமையாக வானவூர்தியிலேறிப் பூமியைச்சுற்றிப்பறந்துவிட்டார்கள். லண்டன் நகரிலிருந்து சுமார் 12000 மைலுக் கப்பாலுள்ள ஆஸ்திரேலியா கண்டத்திலிருக்கும் மெல்போர்ன் பட்டணம்வரை வானவூர்திப் பந்தய ஓட்டம் சில ஆண்டுகளுக்கு முன் நடந்தது எல்லோருக்கும் நினைவிருக்கலாம்.

ஆகாய விமானத்தின் அமைப்பைப் பற்றியும் அது எவ்வாறு காற்றில் மிதக்கிறதென்றும் சற்றுக் கவனிப்போம். வானவூர்தியின் விலாப் பக்கத்தில் இருபுறமும் பறவைகளின் இறக்கைகளைப்போல்படுக்கை வசமான தகடுகள் நீட்டிக்கொண்டிருப்பதை எல்லோரும் பார்த்திருக்கிறோம். அவைகளுக்குச் சிறகுகள் அல்லது இறக்கைகள் (Wings) எனப் பெயர். பக்கத்திற்கு ஒரு சிறகுள்ள விமானத்தின் பெயர் மோனோப்ளேன் (Monoplane) பக்கத்திற்கு இரண்டு சிறகுள்ளது பைப்பிளேன் (Biplane) எனப்படும். அதேமாதிரி மூன்றுள்ளவை ட்ரைபிளேன் (Triplane) ஏரோபிளேனில் முன்பக்கம் காந்த விசிறிபோல் சுழலக்கூடிய விசிறி ஒன்றுண்டு. இவ்விசிறியை வேகமாகச் சுற்ற அதிக விசையுள்ள மோட்டார் இயந்திரம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரம் பெட்ரோல் எண்ணெய் சக்தியால்தான் வேலை செய்கிறது. ஏரோப்பிளேனின் வால் பக்கம் மீன் வால் போலவிருக்கும். அதில் செங்குத்தான தகடு ஒன்றும் படுக்கை வசமான தகடு ஒன்றுமுண்டு. செங்குத்தான தகடுதான் திசை திருப்பும் சுக்கான் (Rudder) படுக்கை வசமான தகடு (Elevator) விமானத்தை மேலேற்ற அல்லது கீழே இறக்க உதவும். விமானத்தின் கீழ்ப்பக்கம் தரையில் ஓடுவதற்காக இரண்டு மோட்டார் சக்கரங்களிருக்கின்றன. தண்ணீரிலிறங்கக் கூடிய சீப்ளேன் (Seaplane) அடிபாகத்தில் சக்கரமில்லாமல் படகு போலிருக்கும்.

சிறு பையன்கள் சதுரக்காகிதத்தை நூலில் கட்டி காற்றாடி அல்லது பட்டம் என்று காற்று காலத்தில் பறக்கவிடுவதைப் பார்த்திருக்கிறோமல்லவா? பட்டம் அல்லது காற்றாடி எவ்வாறு காற்றினால் தாங்கப்படுகிறதோ அதே மாதிரிதான், ஏரோப்பிளேனும் தாங்கப்படுகிறது. பட்டத்தின் நூலை ஒரு பையன் பிடித்துக்கொள்வான். வேகமாகக் காற்றடிக்குமானால் பட்டத்தின்மேல் காற்றுமோதி அதை மேலே தூக்கும். காற்றடிக்காவிட்டால் அது கீழே விழுந்துவிடும். அப்படிக் காற்றடிக்காமலிருக்கும் சமயத்தில் நூலைப் பிடித்திருக்கும் பையன் வேகமாக ஓடுவான். அவன் ஓடும்போது ஓடும் திசைக்கு எதிர்ப்பக்கம் காற்று ஓடி பட்டத்தை மோதித் தூக்குகிறது. காற்று அசைந்து வேகமாக அடித்தால் பையன் அசையாமல் நிற்பான். பட்டம் மேலேபோகும். அப்படிக் காற்றடிக்காவிட்டால் பையன் அசைந்து ஓடுகிறான். அப்போதும் காற்று மோதிப்பட்டத்தைத் தூக்குகிறது. காற்று அசைந்துபட்டத்தை மோதுவதும்ஒன்றுதான். அசைந்து ஓடிவரும் கல் நம் தலையில் மோதும்போதும் அசையாமலிருக்கும் கல்லின் மேல் நம் தலை அசைந்துபோய் மோதும்போதும் ஏற்படும் பலன் ஒன்றுதானே. பட்டம் கொஞ்ச தூரம் மேலே காற்றோட்டமிருக்கிறபடியால் மிதந்து பறந்துகொண்டிருக்கும்.

(2-ம் பக்கம் பார்க்க)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ...949 MADRAS

கறுப்புக் கண்டு மிரட்சி

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தோன்றுமாம். அதுபோல மந்திரி மாதவ மேனனுக்குக் கண்டதெல்லாம் கறுப்பாகத் தோன்றுமோர் புதுநோய் சிலகாலமாகக் கண்டிருக்கிறதுபோல் தெரிகிறது. இல்லாதது, பொல்லாதது எல்லாம் கறுப்புச் சட்டைக்காரர்களின் செயலாகவே அவர் கண்ணுக்குப் படுகிறது. கறுப்புச் சட்டையின் தோற்றம் அந்த அளவுக்கு அவருடைய கண்களை மங்க வைத்து, மழுங்கச் செய்துவிட்டது போலும்!

கறுப்பு உடையைக்கண்டு மிருகங்களிலே சில வகைகள் மிரளுவது உண்டு. ஆனால் மக்களிலே சிலரும் கறுப்புக் கண்டு மிரளுகிறார்கள் என்று அறியும்போது வியப்பாகவே இருக்கிறது. மந்திரி மாதவமேனன் சற்று அதிகமாகவே மிரண்டிருக்கிறார்! மிரட்சி அவருக்குக் கண்டதெல்லாம் கறுப்பாகவே படும்படியான நிலைமையை உண்டாக்கிவிட்டது. செல்லுமிடங்களிலெல்லாம் காணப்படும் கறுப்புச் சட்டைக்காரர்களின் வளர்ச்சி, அவரை அந்த அளவு மிரட்சி கொள்ளும்படியாகச் செய்துவிட்டது போலும்! அதனால்தான், அவர் பேசும் ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் மனக்கண்முன் கறுப்புச் சட்டைக்காரர்களின்தோற்றமே வந்து நிற்கிறது. பார்க்கும்போதும், நினைக்கும்போதும், கனவு காணும்போதும்கூட அவருக்குக் கறுப்புச் சட்டைக்காரர்களின் கவனமே! அவர் கருத்திலே கலக்கம் ஏற்பட்டிருக்கிறது! பரிதாபத்திற்குரியது!

“காங்கிரஸ் மந்திரி சபை, பிராமண சமுகம் இவைகளின் சாதனைகளைக் கண்டு அசூயையின் பேரிலேயே அவர்கள் (கறுப்புச் சட்டைக்காரர்கள்) 'ஹிந்தி ஒழிக,' 'பிராமணர் ஒழிக' என்ற கோஷத்தைக் கிளப்புகிறார்கள்” என்று மந்திரி மாதவமேனன் பெத்துநாய்க்கன் பேட்டைப் பாரததேவி வாலிபர் சங்கத்தின் ஆண்டுவிழாக் கூட்டத்தில் 31—7—49-ல் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

'ஹிந்தி ஒழிக' என்று முழக்கமிடுவதற்குக் காரணம், 'காங்கிரஸ் மந்திரி சபையின் சாதனையைக் கண்டு 'அசூயை' என்று விசித்திரமான காரணங்கூறித் தன்மேதையை வெளிப்படுத்திக்கொள்ள விரும்புகிறார் மந்திரியார். கறுப்புச்சட்டைக்காரர்களின் வளர்ச்சியின்மீது ஏற்பட்ட பொறாமை, உண்மையை உணராதபடி அவர் கண்ணையும், கருத்தையும் மறைத்துவிட்டது. என் செய்வது! மயக்கத்தைப் போக்கவேண்டியது கருத்துள்ளோரின் கடமையல்லவா?

காங்கிரஸ், மந்திரி சபைப் பீடம் ஏறி 'சாதனைகளை'ச் சாதிப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, இந்தி நுழைவுக்கு எதிர்ப்பு நாட்டில் கிளம்பிவிட்டது என்பதை ஏனோ மந்திரியார் அறிய மறந்தார்? 1921, 22-க்குப் பிறகு காங்கிரஸின் மொழிக் கொள்கையாக இந்தி தென்னாட்டிலும் புகுத்தப்பட வேண்டும் என்று திட்டம் தீட்டிச் செயலில் கொண்டுவந்து முயற்சிக்கும்போதே மறைமலையடிகளார் இந்தியை எதிர்த்து எழுதியுள்ளார். 1931-ல் 'குடிஅரசு' இந்திமொழிநமக்கு எவ்வகையிலும் தேவையற்றது, அதன் நுழைவு தென்னாட்டில் கூடாது என்று கண்டித்து எழுதியுள்ளது. 1937-ல் காங்கிரஸ் ஆட்சி மன்றம் ஏறுவதற்கு முன்பு, காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டால் இந்தி கட்டாயமாக நுழைக்கப்பட்டுவிடும் என்பதை இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னமேயே தெரிந்து அதற்கு எதிர்ப்பு பல மேடைப் பேச்சுகளிலும் காட்டப்பட்டு வந்திருக்கிறது. ஆச்சாரியார் மந்திரி சபை அமைத்து 'சாதனைகள்' சாதிப்பதற்கு முன்பே 'கட்டாய இந்தியை' அமுலுக்குக் கொண்டுவந்தார். 'சாதனை கண்டு அசூயைப் படுவதற்கு முன்பே இந்தி எதிர்ப்புப் போராட்டம் தோன்றிவிட்டது. காவியுடையணிந்து, ஆச்சிரம வாழ்க்கையை மேற்கொண்டிருந்த கருவூர் அறிவுதயகக் கழக ஆசிரியர் ஈழத்து அடிகள்தான் முதல் முதல் இந்தி நுழைவை எதிர்த்து ஆச்சாரியாருக்குத் தந்தி கொடுத்தவர். கறுப்புச் சட்டைக்காரர்களின் பரம்பரை மட்டுமல்ல, காவியுடையணிந்த சாமியார்களான சண்முகானந்தா, அருணகிரிநாதர், நித்தியானந்தா போன்றவர்களும், உ. வே. சாமிநாத அய்யர் போன்றோரும், தமிழறிஞர்கள் பலரும் இந்தி நுழைவை எதிர்த்திருந்திருக்கிறார்கள் என்பதை இதுவரையிலும் அறியமாட்டாத மாதவமேனனுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

சென்ற ஆண்டு துவக்கப்பட்ட இந்தி எதிர்ப்பு நடவடிக்கையில் காங்கிரஸ்காரர்களும், கருப்புச் சட்டை அல்லாதவர்களும் பலர் கலந்துகொண்டிருக்கிறார்கள். முதன் முதலில் கூட்டப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தோழர்கள் மறைமலையடிகள், திரு. வி. க, நாரண துரைக்கண்ணன், ம. பொ. சிவஞானம், அருள்தங்கையா, வி. பி. எஸ். மணியர், வி. வி. இராமசாமி, சாமி அருணகிரிநாதர், போன்ற கருப்புச் சட்டைக்காரரல்லாதவர்களும் கலந்துகொண்டு எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள். ஆயிரம் ஆயிரம் மேடைகளில் இந்தி நம் நாட்டுக்குத் தேவையில்லை என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. நாம் எடுத்துச் சொன்ன காரண காரியங்களையும், விளக்கங்களையும் மறுத்துக் கூற எந்தக் காங்கிரஸ் தோழர்களும், மந்திரி மாதவ மேனன் உள்பட எவரும் முன்வந்து நின்றது கிடையாது. சவால்கள் விட்டும் கூட அவர்களால் முன் வந்து நின்று வாதிக்க ஆண்மையில்லை. நிலைமை இவ்வாறு இருந்தும் 'காங்கிரஸ் மந்திரி சபை சாதனையைக் கண்டு

ஹிந்தி ஒழிக' என்று கோஷம் கிளப்புகிறோம் என்று படித்தறியாத மண்டூகம் அல்ல, படித்தறிந்த மாதவ மேனனே கூறுகிறாரென்றால், அவர் கண்ணும், கருத்தும் எந்த அளவுக்கு மழுங்கிக் கறுப்புக் காமாலைக்காரராக ஆகிவிட்டார் என்பதை உணர்ந்து பாருங்கள்.

'இந்தி ஒழிக' என்று முழக்கமிடும்போது 'இந்தி நீங்குக' என்ற பொருள்படும்படியேதான் நாம் ஒலி எழுப்பி வந்துள்ளோம். 'ஒழிக' என்ற சொல்லுக்கு நீங்குக, அழிக என்றிவ்வாறு பொருள்கள் உண்டெனினும், 'நீங்குக' என்ற பொருளிலேயே நாம் அந்தச் சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம் என்று எத்தனை தடவை எடுத்துச் சொன்னாலும் செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே ஆகிறது.

மந்திரி மாதவ மேனனுக்குக் கண்ணும் கருத்துமட்டுமல்லாமல், காது கூட மந்தம் என்று தோன்றுகிறது. "பிராமண சமுகத்தின் சாதனைகளைக் கண்டு பிராமணர்கள் ஒழிக" என்று நாம் கோஷிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். நாம் கூட்டங்கள் தோறும் பன்னிப் பன்னிக் கூறிவருகிறோம், "நாங்கள் பார்ப்பனர்கள் ஒழியவேண்டுமென்று எண்ணுபவர்களல்லர்; பார்ப்பனீயமே ஒழியவேண்டுமென்று எண்ணுபவர்கள்" என்று. இந்தச் சொற்கள் மந்திரி மாதவமேனன் காதில் விழாமல் போனதற்கு மந்தம் காரணமா அல்லது அதிகார மமதை காரணமா அல்லது அவையெல்லாம் ஒரு காதிலே புகுந்து மறுகாதின்வழியே போயிற்று?

'பிராமணர்கள் ஒழிக' — நாம் கூறாதது, கூறத் துணியாதது, கூற விரும்பாதது, கூறத்தேவையில்லாதது. இதை நாம் கூறியதாக இல்லாததையும் பொல்லாததையும் சேர்த்துச் சொல்லுகிறார் மந்திரியார், கறுப்பைக் கண்டு மிரண்டதின் மருட்சியால் போலும்! கறுப்புச் சட்டைக்காரர்கள் 'பார்ப்பனீயம் ஒழிய' விரும்புபவர்களேயல்லாமல் 'பார்ப்பனர்கள் ஒழிய' வேண்டும் என விரும்புபவர்களல்லர் என்பதை, ஒரு சமயம் இல்லாவிட்டாலும், ஒருசமயம் தெளிவோடு சிந்திக்கக்கூடிய நேரமிருந்தால், அப்பொழுதாவது மந்திரியார் சிந்தித்துத் தெளிவு கொள்ளட்டும்.

நசுக்கப்பட்டவர்கள் என்றும் நசுக்கப்பட்டவர்களாகவே வாழ வேண்டுமா என்று பார்ப்பன சமுகத்தைப் பார்த்து இதே மாதவ மேனன் அன்று குடந்தை வக்கீல் சங்கக் கூட்டத்தில் கேட்டார். கேட்டது அவருக்கு நினைவு இருக்கிறதோ இல்லையோ, நமக்கு நன்றாக இருக்கிறது. அந்தக் கேள்வியைத் தான் கறுப்புச் சட்டைக்காரர்கள் இது வரையில் கேட்டுவந்தார்கள், இப்பொழுதும் கேட்டு வருகிறார்கள்.

"பிராமணர்கள் மீதுள்ள பொறாமையால் 'ஒழிக' என்று கூறுவதாக மேலும் கூறியுள்ளார் தோழர் மாதவ மேனன் அந்தப் பெத்துநாய்க்கன் பேட்டைக் கூட்டத்தில். 'பிராமணர்கள் ஒழிக' என்பதல்ல எங்கள் நோக்கம் என்பதை விளக்கியிருக்கிறோம், அதை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் ஒருக்கால் இருக்கக் கூடும் என்ற நம்பிக்கையால். பிராமணர்களின் சாதனைகளைக்கண்டு பொறாமையல்ல, ஏற்பட்டது, வெறுப்புத்தான். வெறுப்பு பிராமணர்கள் மீதல்ல, அவர்களின் சாதனைகள் மீது. திராவிடர்களை அரக்கர் என்றும், அசுரர் என்றும் கூறி அவர்களை நயவஞ்சகமாக அழிக்கத் திட்டமிட்ட சாதனையிலிருந்து, புத்தர் இயக்கத்தை ஒழிக்க முற்பட்ட சாதனையிலிருந்து, நாலாந்தா பல்கலைக் கழகத்தைக் கொளுத்திய சாதனையிலிருந்து, ஓமந்தூரார் மந்திரி சபையைக் கவிழ்க்க முயற்சித்த சாதனை வரையில் பல 'சாதனைகளையும்' கண்டு வெறுப்புக்கொண்டுள்ளோம் சாதனைகளிடத்து. இத்தகைய 'சாதனைகளை'விட்டு, ஒத்து வாழும் மனப்பான்மையோடு அவர்கள் வாழவேண்டுமென்பது தான் கறுப்புச் சட்டைக்காரர்களின் பெருவிருப்பமாகும்.

மொழி நூல்,இலக்கியம், உளநூல் நிலநூல், வரலாறு ஆகியவற்றினின்றும் சான்றுகள் எடுத்துக் காட்டி, இந்தி திராவிடத்திற்குக் தேவையற்றது—பயன் தராதது, மாறாக அடிமை கொள்வது என்று காரணங்களோடு விளக்கி வருவது மந்திரி மாதவ மேனன் கூற்றுப்படி 'பைத்தியக்காரத்தனமாம்'! எது பைத்தியக்காரத்தனம்? காரணங் காட்டி இந்தியை எதிர்ப்பதா? நாட்டிற்கு நாசம் ஏற்படுமே என்று கருதாது தந்திக் —— பியை அறுத்து, தண்டவாளத்தைப் பெயர்த்து, தபாலாபீஸைக் கொளுத்தி, கட்டிடங்களை இடித்து 'ஆகஸ்டுக் கலகம்' செய்தது பைத்தியக்காரத்தனமா?-உண்மையான மொழிப் போராட்டம் நடத்துவது பைத்தியக்காரத்தனமா? குடிசைத் தொழில்களையே வளர்ப்போம், அவரவர் தேவைகளை அவரவர்களே பூர்த்தி செய்துகொள்ளுவோம் என்று கூறிவிட்டு, யந்திர சாதனங்களை ஆதரிப்பதும், யந்திர சாதன உற்பத்திப் பொருள்களையே தங்கள் வாழ்க்கை வசதிகளுக்காக வைத்துக் கொள்ளுவதும் பைத்தியக்காரத்தனமா?-சொந்த அறிவைப் பயன்படுத்தி சொந்த நாட்டிற்கு நாசம் விளைவிக்கும், பயன்படாத வேற்று மொழிவேண்டாம் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமா? வேற்று மொழியானிடம் காவடி தூக்கிச் சென்று அவன் மொழியையும், அவன் இட்ட கட்டளையையும் தலைமேற் சுமந்து வருவது பைத்தியக்காரதனமா?-பகுத்தறிவுடன் சிந்திக்கவேண்டும் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமா? பஜனைபாடி அரசாங்கம் நடத்துவது பைத்தியக்காரத்தனமா? சிந்தித்துப் பாருங்கள்.

இந்தியைக் கற்காமல் இருந்து விட்டுப்பின்னால் வருந்தாதீர்கள் என்று உபதேசம் செய்கிறார் மந்திரியார். அதேமாதிரியான உபதேசத்தான் நாமும் கூறுகிறோம், இந்தியை நுழையவிட்டு விட்டு, பின்னால்வருந்தாதீர் என்று.

இந்திப் பயிற்சி இல்லாமலே பிரதமரும் இதர மந்திரிகளும் அகில இந்தியத் தொடர்பும், அகில உலகத்தொடர்பும் கொள்ளமுடிகிறது. இந்தி கற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக, அவர்களுக்குள்ள செல்வாக்கோ, தொடர்போ, வசதிகளோ, பட்டமோ, பதவியோ எதுவும் கிட்டாமல் போகவில்லை. அகில உலகத்தொடர்பு கொள்வதற்குச் சாதகமாக இருந்துவரும் ஆங்கிலந்தான் பிரதமருக்கும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கும் அனைத்திந்தியத்தொடர்புகொள்ளவும் சாதகமாக இருந்து வருகிறது. இந்த நிலையில், அனைத்திந்திய தொடர்பு கொள்வதற்கென்று நமக்குப் பழக்க

...ன் ஆதிக்க வெறிக்குப் பலியாகித்தான் தீரவேண்டுமோ? இதற்கோர் விமோசனம், விடுதலை, கிடையாதா; நம்மவர்களை நையப் புடைத்தாலும், கேள்வி கேட்பார் இல்லையே! நமது வீடுகளை வெறியர் கொளுத்தினால், வேடிக்கையல்லவா பார்க்கிறார்கள்! உழைக்கிறோம், உழைப்பை மதிப்பாரில்லை! சாதாரண மனித உரிமைகளையும் நமக்களிப்பது கூடாது என்று கொக்கரிக்கிறார்களே கொடியவர்கள்!

திறமை இருக்கிறது — எனினும் இகழப்படுகிறோம்! பலம் இருக்கிறது, உடலிலும் உள்ளத்திலும், எனினும் பரிகசிக்கப்படுகிறோம்! படித்துப் பண்பு பெற்றாலும், மதிப்பளிக்க முன்வருவதில்லை. செல்வம் தேடிப்பெற்றாலும், கருப்பனிடம் காசு சேர்ந்துவிட்டதாலேயே கருப்பன், வெள்ளையன் ஆகிவிட முடியுமா, என்று கேலி பேசுகின்றனர், வெறியர்கள்.

சீலர்கள் சிலர், இந்த நிறவெறி கூடாது என்று கூறினால், அவர்கள் மீதும் சீறிப்பாய்கின்றனர், செருக்குடன். இந்த நிலையில் நாங்கள், மாளத்தான் வேண்டுமா? வாழ வேண்டுமானால், அடிமையாக இரு! இல்லையேல் சாகத் தயாராய் இரு!! என்று கூறுகிறார்களே! — என்று கூறிக் கதறலாயினர் நீக்ரோ மக்கள்.

ஸ்காட்ஸ்பரோ வழக்கின் முடிவு, அவர்களுக்குப் பேரிடி போலிருந்தது. நீக்ரோ இனத்தின் நிலைமை எவ்வளவு மோசமானதாக, ஆபத்துச் சூழ்ந்ததாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள ஸ்காட்ஸ்பரோ வழக்கு உதவிற்று. நீக்ரோக்கள் பதைபதைத்துப் போயினர். வெள்ளைநிற மாதைக் கறுப்பு நிறத்தவன் அடித்தால் மரண தண்டனை! நிறவெறிச் சட்டமல்லவா இது!

இந்த நிலைமையை விளக்கவும், நல்லறிவாளர்களின் ஆதரவைத் திரட்டவும், அந்தக் கடுமையான தீர்ப்பை மாற்றவும், முனைந்து பணிபுரிந்ததன் பயனாக, தூக்குத் தண்டனை, பிறகு, ஆயுட்காலச் சிறைத் தண்டனையாக மாற்றப்பட்டது.

அவன், சாகவில்லை! வாழ்கிறான்! சிறையில்தான்!! எனினும் அவன் உயிரோடு இருக்கிறான். அவனைச் சாகவிடாமல் செய்துவிட்டோம்! அவனுக்கு நேரிட இருந்த மரணத்தைத்தடுத்துவிட்டோம் என்ற ஓர் விதமகிழ்ச்சி, வெற்றிக்களிப்பு உதித்தது அந்த நீக்ரோக்களுக்கு. அந்த வெற்றிக்களிப்பிலே இருந்து, வேதனை வயலிலே முளைத்த வெற்றிக்களிப்பிலே இருந்து எழுந்தது, ஓர் நாடகம் — அவர்களைச் சாகவிடோம்-என்ற நாடகம்! அமெரிக்க நாட்டவருக்கும், அகில உலகுக்கும், இன்றைய அமெரிக்காவிலே,நீக்ரோக்களின் நிலை என்ன, அவர்கள் வெள்ளையர்களால் எவ்விதமாகவெல்லாம், அவமதிக்கப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள், அந்தக்கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு நீக்ரோக்கள் உரிமைக்கிளர்ச்சியை எவ்விதம்நடத்திக்கொண்டு வருகிறார்கள்,என்பதை எடுத்துக்காட்டும், நல்லறிவுப் பிரசார நாடகம் தீட்டப்பட்டது.

"அவர்களைச் சாகவிடோம்" எனும் நாடகம், இப்போது அமெரிக்காவில் நியூயார்க் நகரக்கொட்டகையொன்றில், நடத்தப்படுகிறது,நடிகர்களெல்லாம் நீக்ரோக்களே!

இந்த நாடகம்,வெள்ளையர்களிலே வெறி அதிகம் ஏறாதவர்களின் மனதை உருக்கக்கூடியதல்லவா!மனிதாபிமானம், ஜீவகாருண்யம், நாகரிகம், எனும் பண்புகளைப்பற்றி அறிந்திருப்போரின் கண்களிலே, நீர் சொரியச் செய்யக்கூடிய நாடகமல்லவா, அது! வெள்ளை வெறியர்களுக்கு, தங்கள் கொடிய, கேவலமான மனப்பான்மை, இந்நாடக மூலம் வெட்டவெளிச்சமாக்கப்படுகிறதே என்ற, வெட்கமும, கோபமும் பொங்கிடலாயிற்று.

அந்த நாடகத்தைப் பார்த்தால், கல் மனமும் கரையும்.

அந்த நாடகத்தைப் பார்த்தால் தான், வெள்ளை நிறத்திலே உலவும் சில பல வெறியர்களின் போக்கு எவ்வளவு கேவலமானது என்பது விளங்குகிறது.

அந்த நாடகம், நாம் நாகரீகத்தின் நற்பண்பை பேச்சளவில் கொண்டவர்களே யொழிய செயலிலே நாம் காட்டுமிராண்டிகளாகவே இருக்கிறோம், என்பதைக் காட்டுகிறது, என்றெல்லாம், பார்ப்போரைக் கருதச் செய்யும் விதமாக அமைந்திருந்தது. அந்த நீக்ரோ நாடகம்.

'வெள்ளை வெறியர்களால் இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. எப்படியாவது இந்த நாடகத்தைத் தடுத்துவிட வேண்டும், என்று தீர்மானித்தனர். வெறியரின் வழி என்னவாக இருக்கமுடியும்! கொடுமைதானே அவர்களின் ஆயுதம்!! அதையே, கையாளலாயினர்.

நீக்ரோ நடிகர்கள் அந்த நாடகத்தில் நடித்துவிட்டு, வீடு திரும்பும் போது, அவர்களைத் தாக்கலாயினர்! "நாடகமா ஆடுகிறாய்நாடகம்! நீக்ரோ நாயே! வெள்ளையரைக் கண்டித்து நாடகம் ஆடுகிறாயா! எவ்வளவு துணிவு உனக்கு! அதிலும், எங்கள் நாகரீக நகராகிய நியூயார்க்கிலா, நாடகம் நடத்துகிறீர்கள்" என்று கூவி, நடிகர்களைத் தாக்கலாயினர். அந்தக் கொடுமைக்காளான, நடிகர்கள், இப்போது, நியூயார்க் மேயருக்கும், போலீசுக்கும் மனுச் செய்துகொண்டுள்ளனராம்.

"அவர்களைச் சாகவிடோம்" என்ற நாடகம், நடத்துவதன் மூலம், அந்த நடிகர்கள், தங்கள் இனவிடுதலைக்கு, தன்மானத்துக்கு, உரிமைக்கு, உயர்ந்ததோர் பணி புரிகிறார்கள். அவர்களின், முயற்சியை உலகெங்குமுள்ள, உரிமை உணர்ச்சியை மதிக்கும் உயர்பண்பினர், பாராட்டத்தான் செய்வர். உலகுக்கே நாகரீகத்தையும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் வழங்கவல்லோம் என்று வாய்ப்பறை அறையும் அமெரிக்கர்கள், நீக்ரோக்கள் விஷயமாகக் கொண்டுள்ள மனப்போக்கும், எடுத்துக்கொள்ளும் செயலும், காட்டுமிராண்டித் தனமாக இருக்கிறது.

"அவர்களைச் சாகவிடோம்" என்ற நாடகம், "அவர்கள் விடுதலை பெறுவர்" என்ற உண்மை நிகழ்ச்சிக்கு, முன்னுரையாகவே இருக்கிறது, என்று கூறுவோம்.

கொடுமை ஒழிப்புக்கு, இன விடுதலைக்கு, உரிமைக் கிளர்ச்சிக்கு, கலை, கருவியாக்கப்படுகிறது கண்டு, மகிழ்கிறோம். கலையை இத்தகு உயர்தரக் காரியத்துக்குப் பயன்படுத்தும் அளவுக்குத் திறமையும் எழுச்சியும் ஏற்பட்டு விட்டபிறகு, நீக்ரோக்களின் முழுவிடுதலை நிச்சயமாக, விரைவிலே, கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

'கலை' பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்படக்கூடாது, அது ...யின் மேன்மையைப் பாழாக்... றது, என்று கழறு...

(5-ம்

திராவிட நாடு
ஞாயிறு] 14—8—49 [காஞ்சி

விசாரணை அல்லது விடுதலை

இரண்டு ஆண்டுகள்! இந்தியா சுயராஜ்யம் பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில், விரட்டப்பட்ட வெள்ளையர் ஆட்சியைவிட காங்கிரஸ் சர்க்கார் தீவிரமான வகையில் முன்னேறியுள்ளது. ஆம்! முன்னேற்றம்—அதுவும் 'இவர்களா, இப்படிச் செய்வார்கள்?' என்று மக்கள் திகைப்படையும் வண்ணம், முன்னேற்றம்!

மக்கள் வாழ்வுமலர, சுயராஜ்ய மலரின் மணத்தை நுகர, நம்மசர்க்கார் வந்து தந்த நலன்கள் என்று எக்களிப்புக்கொண்டு இன்புற்றிருக்கும் வகையில் அல்ல இந்த முன்னேற்றம்! எந்தக்காரியங்களுக்காகத் தாங்கள் போராடுவதாக மக்கள் மன்றத்தில் கர்ஜித்தார்களோ அந்த இலட்சியங்களை உருவாக்கிக் காட்டுவதில் அல்ல இந்த முன்னேற்றம்!

இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில் 'ஏழை பங்காளர்' என்று சொல்லிக்கொண்ட காங்கிரஸ் ஆட்சியாளர் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஒரே ஒரு வழியில்தான். அந்த வழி—வெள்ளையர்கள் சென்றவழி. பகத்சிங்கின் பிணம், குமரனின் குருதி, இளங்காளைகளின் இரத்தம் சிந்தும்படி செய்யப்பட்ட வழி. அநியாயவழி என்று இன்று ஆட்சிபீடம் ஏறியவர்களால் ஆர்ப்பரிக்கப்பட்ட வழி. எந்த நாடும், மக்களும் விரும்பாத வழி—விரும்பமுடியாதவழி—ஆம்! அடக்கு முறை வழிதான்—அதில்தான் முன்னேறியுள்ளனர்—அதுவும் வெகு வேகமாக!

காங்கிரஸ் நாட்டின் செங்கோலேற்று இரண்டாண்டு முடியும் இந்[...] எங்கும் அதிருப்தி அனல் [...]ம் கிடைக்கும் என்று [...]ந்த மனக்கோட்டைகள் மண் கோட்டைகளாகி விட்டன! எதிர்பார்த்தது எதுவும் கிடைக்காத காரணத்தால் மக்களிடையிலே ஏமாற்றம் எதிரொலிக்கிறது.

ஏழ்மை மாறவில்லை. எங்கும் 'இல்லை, இல்லை' என்ற இல்லாமை கீதம்! 'வீணுக்குழைத்தோமடா' என்ற வீராசாமியின் வேதனைக் குரல், 'கூழுக்கலைகிறோமே' என்ற குப்பன் கூக்குரல் நாட்டின் நாலுபக்கங்களிலும் எழும்பியுள்ளது. எங்கு நோக்கினும் அங்கிருந்தெல்லாம் பசி, பட்டினி, என்ற வேதனை மொழிகளே ஒலிக்கின்றன! 'சுயராஜ்யம் வரும், தொல்லைகள் மறையும்' என்று இருந்த மக்கள் ஆசை காற்றுக்கோட்டை ஆகிவிட்டது. தொல்லைகள் மறையும் என்று நம்பியிருந்தவர்களுக்கு அவைகள் மறையாதது மட்டுமின்றி மேன்மேலும் உருவாவது கண்டு மனம் ஒடியும் நிலை உண்டாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் 'கிடைக்கும்' என எதிர்பார்த்தது ஏராளம்! அந்த வகையிலேயே காங்கிரஸ்காரர்களும் நாட்டில் வீரமுழக்கங்கள் செய்துள்ளனர். எனவே ஆட்சி ஏற்பட்டதும் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும் என்று மக்கள் கருதினார்கள். எதிர்பார்த்தனர்; ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்தது! எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாற்றம் ஏற்படும்போது ஆத்திரம் எழும்புவது இயற்கை. எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காதது மட்டுமின்றி, எதிர்பாராத இன்னல்கள் மென்மேலும் குவிக்கப்படுமேயானால் குமுறிக் கிடக்கும் உள்ளங்கள் எரிமலை ஆகிவிடும்! ஏழ்மை எரிமலை வெடிக்க ஆரம்பித்தால் அதன் ஆத்திரக் காட்சிகள் 'இன்னபடிதான் இருக்கும்' என்று கூறமுடியாது.

இதேநிலைதான் இன்று நாட்டில் இருப்பது. பாடுபட்டும் பலன் கிடைக்காத பாட்டாளி! இடுப்பொடியவேலை செய்து, உலர்ந்து சருகாகியும், ஒருவயிற்று உணவுக்கு வழியின்றி வாடும் தொழிலாளி! தொல்லை மேல் தொல்லைகள் பாய, துயரை அடக்க முடியாது குமுறிக் கொந்தளிக்கும் மக்கள் கூட்டம்!

மாளிகை — மண்குடிசை.

இரண்டுக்குமிடையிலே இருக்கும் தூரம்மாறவில்லை; மாறாதது மட்டுமல்ல குறையவும் இல்லை. அதற்குப் பதில் அதிகமாகிக்கொண்டே போகிறது! அதற்கான வசதிப் பாதைகளையும் முதலாளித்துவ கூடாரம் ஆகிவிட்டகாங்கிரஸ் ஆட்சி அமைத்துக் கொண்டே போகிறது! எனவே பொதுவாக ஏழ்மைக்கு உறைவிடமான நாட்டில் ஆளவந்தாருக்கு மக்களிடையிலே மதிப்புக் குறைந்து, எதிர்ப்பு முன்னணிகளின் பலம் பன்மடங்கு அதிகரித்து வருகிறது!

எதிர்க் கட்சிகள்—அதுவும் காங்கிரசைவிட கொள்கைத் தீவிரம் கொண்ட எதிர்க் கட்சிகள்—பக்கம் மக்கள் மனம் சாய்கிறது! இந்த மாற்றத்தைக் கண்ட ஆட்சியாளர் மக்களிடையிலே 'இந்நிலை ஏற்படக் காரணம் என்ன?' என்பதை சிந்திக்கவே எண்ணவில்லை. காரணத்தைக் கண்டு அதைப் போக்கி நல்வழி நாடவும் கருதவில்லை. அதற்குப் பதிலாக மக்கள் மனம் எங்கு சாய்கிறதோ அந்தக் கட்சிகளை அடக்குவதிலேயே நாட்டஞ் செலுத்தி—பாதுகாப்புச் சட்டம் போன்ற பாணங்களை 'அவசரச் சட்ட' உருவில் ஏவி வருகின்றனர்! இல்லாமை நிறைந்த நாட்டில் அதை எதிர்த்து, ஒழிக்கத் திட்டம் கொண்டுள்ள கட்சிகள் பக்கம்தான், வேதனைபட்ட மக்கள் மனம் தாவும். ஒருவன் மாடியிலும் பலர்தெருக்கோடியிலும் கிடந்தால் 'ஏன் நாம் மாடியில் ஏறக்கூடாது?' என்ற எண்ணம் எழும்பத்தான் செய்யும்! பொது உடைமையும் சம உரிமையும் நாம் பெறவேண்டும் என்ற ஆவல் கரைபுரண்டு வரத்தான் செய்யும்!

அதிலும் ஆளும் கட்சி பிற்போக்கில் விரைந்து கொண்டிருக்கும்போது, அக்கட்சியால் நன்மை கிடைக்கும் என நம்பி ஏமாந்த மக்கள், இதுகாறும் தாங்கள் சென்ற பாதையை விடுத்து எதால் பலன் கிடைக்கும் என எதிர்பார்க்கிறார்களோ அந்தக் கொள்கைகள்—கட்சிகள்—பக்கமே சேர்வர்.

இதைக் கண்டு, பலம் பறிபோகிறதே, என்ற வேதனை தாக்க ஆத்திரம் கொண்டு அதிகாரம் கையிலிருக்கிறது என்ற காரணத்தால் அடக்குமுறை ஆயுதங்களை, ஏவி, மக்கள் மனம் சாயும் எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்கி ஆட்படுத்த நினைப்பது கேலிக்கூத்தே ஆகும்!

வெள்ளத்தை 'மணல் மூட்டை'யால் தேக்கிவிட முடியாது! அவசரச் சட்டங்கள் மக்களின் மனஉறுதிக்கு முன்பு சிறு துரும்புகள்தான். இது இன்றைய ஆட்சியாளர் அறியாததல்ல! பாதுகாப்புச் சட்டங்கள் பலனளிக்காது அதனால் மக்கள் மனக் கசப்பே வளரும் என்ற பாடம் காங்கிரஸ் பீடத்துக்கு தெரியாதது என்று கூற முடியாது. இருந்தும் எது கூடாது என்று முழக்கமிட்டார்களோ அந்த வழியிலேயே ஆட்சியாளர் முன்னேறிக் கொண்டுள்ளனர்; அந்த வழி 'வீழ்ச்சி' என்ற பாதாளத்திற்கே இட்டுச் செல்லும் என்பது அறிந்தும்!

இந்த மனப்போக்கு காரணமாகவே நாட்டில் ஆயிரக் கணக்கான எதிர்க் கட்சித் தோழர்கள்—தலைவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர். குற்றம் சுமத்தப்படாமலும், விசாரணை செய்யப்படாமலும், நினைத்ததும் பிடித்துக் கொண்டு போய் சிறையில் தள்ளுவதே வழக்கமாக நடந்து வருகிறது! பல மாதங்கள்—ஏன்? வருடங்கள்—ஆகியும் கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்யாமலே வைத்திருக்கின்றனர். சுதந்திரமான நாட்டில் சுதந்திரமாக வாழக்கூட, சுதந்திரத்துக்காகப் போராடிய ஒரு கட்சியின் ஆட்சி, வகை செய்யவில்லையென்றால் அது மிக மிகப் பரிதாபமானதாகும்—வெட்கி வேதனைப்படக் கூடியதாகும்!

கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்டுத் தோழர்கள் பலர் ஆங்காங்கு உயர்நீதி மன்றங்களால் தினசரி விடுவிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, நீதி 'அவர்களை அடைத்து வைப்பது தவறு' என்று கூறுகிறது! எனவே அவர்களை விசாரணை செய்யாமலும், விடுவிக்காமலும் வைத்திருப்பது நீதிக்கு முரண்பாடானது என்று விளங்கி வருகிறது! அப்படியிருந்தும் 'சுயராஜ்ய, சர்க்காரின் போக்கு பாதுகாப்புச்சட்டத்தைப் பலப்படுத்தும் பாதையில்—பகையுணர்ச்சிப்பாதையில் தான் போய்க்கொண்டிருக்கிறது!

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவல் கைதிகளாக சிறையில், நம்மாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஆயிரக்கணக்கில் அடைத்துவைக்கப்பட்டிருக்கின்றனர், கம்யூனிஸ்டுகள் என்ற காரணத்தால்!

அப்படி அடைத்துவைக்கப்பட்டிருக்கும் காவல்கைதிகளுக்குச் சாதாரண சிறைவசதிகளும் மறுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

நாட்டை ஆளும் நாயகர்களாக விளங்கும் காங்கிரஸ்காரர்களும், சிறைவாழ்வை அனுபவித்தவர்கள்தான்! காவல் கைதிகளாக அவர்கள் இருக்க நேரிட்டபொழுது எத்தனையோ தடவைகள் சிறையில் சாதாரண வசதிகள் கூடச் செய்யப்படவில்லை என்பதற்காகக் கிளர்ச்சிகள் செய்து அவைகளை அடைந்தவர்கள்தான். அப்படியிருந்தும் எந்த வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பதற்காகப் போராடினார்களோ, அதேவசதிகளை "எதிர்க்கட்சி" என்ற காரணத்திற்காகக் காவல்கைதிகளாக இருப்பவர்களுக்கு மறுத்தார்கள் என்றால், அது நேர்மைக்கு முரண்பாடான காரியமாகும்! நிச்சயம் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்ச்சியுமாகும்!

உறவினர்களைப் பேட்டி காணும் உரிமை, கடிதம் எழுத அனுமதி, வைத்திய வசதி, குடும்பங்களுக்கு அலவன்சு, ஆகிய வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை யென்பதாக காவல் கைதிகள் குறை கூறுகின்றனர்.

மனைவியைக்காண அனுமதி மறுக்கப்பட்டது.

அபாயகரமான உடல்நிலையிலுள்ளவர்களுக்கு போதிய வைத்திய வசதி இல்லை.

கைதிகள் பிரித்துவைக்கப்பட்டு வேதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

என்பதாகவெல்லாம் பாதுகாப்புக்கைதிகளின் "குறைப்பட்டியல்" இருக்கிறது!

இந்தக் குறைகள் நிவர்த்திசெய்யப்படவேண்டுமெனக் கோரப்பட்டும் பலன் கிடைக்காமையால் பல இடங்களில் பட்டினி போராட்டம் நடத்தவும் காவல் கைதிகள் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. வசதிகள் கோரி வாதாடும் காவல் கைதிகள் மீது போலீசாரைக் கொண்டு பலாத்காரச் செயல்கள் தூண்டப்படுவதாக அகில இந்திய தொழிற்சங்கத்தலைவர் தோழர் வி. சக்கரை, ஆக 9-ந்தேதியன்று விடுத்துள்ள அறிக்கையொன்றில்குறிப்பிடுகிறார். அந்த அறிக்கையில் காவற்கைதிகள் அதிகாரிகளால் மிரட்டப்படுவதாகவும் குறிப்பிட்டு, "வேலூரில் 250 கைதிகளுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது, பலருக்குப் பலத்த காயம் என நம்பகமான தகவல்கள் கூறுகின்றன. காயமடைந்த கைதிகளுக்கு மருத்துவ வசதி கிடையாது ஆயுதப்போலீஸ் சிறையினுள் செய்யும் அட்டகாசத்தை, வெளியிலிருப்போர் யாரும் அறியமுடியாது" என்று கூறியுள்ளார்.

ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்கு கைதிகளை மாற்றிக்கொண்டுபோய் அடைக்கலாம் என்பதாகச் சமீபத்தில் இந்திய சர்க்கார் ஒரு அவசரச்சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர்.

இங்குள்ள கம்யூனிஸ்டுக் காவல் கைதிகளைப் பிரித்துவைக்கும் நடவடிக்கைதான் அதுஎன்றுகூறி ஜூலை 21, 22, தேதிகளில் வேலூர்சிறையில் காவல் கைதிகள், அதிகாரிகள் கட்டளைக்கு மறுத்துவன்மைகொண்ட மட்டும் போராடியதாகவும் அதன் காரணமாகவே மேற்படி கைதிகள் ஆயுதப் போலீசாரால் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால், அரசாங்கமோ இதுபற்றி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் பாதுகாப்புக் கைதிகள் சட்ட வரம்பைமீறிய பலாத்கார நிகழ்ச்சிகளில் ஈடுபட எத்தனித்ததாகவும், கைதிகள்வசம் துப்பாக்கிகள் இருந்ததாகவும், கையில் கிடைத்ததையெல்லாம்கொண்டு தாக்க முற்படுவதாகவும், கூறப்படுகிறது.

காவல் கைதிகளோ அதிகாரிகள் தொல்லை பொறுக்கமுடியவில்லை என்கின்றனர்.

சர்க்காரோ, பாதுகாப்புக் கைதிகள் பலாத்காரத்தில் ஈடுபடுவதாக அறிக்கை வெளியிடுகின்றனர்!

இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது.

எது உண்மை[...] களுக்கு வி[...] வேண்[...]

மட்டுமல்ல, பொறுப்புமாகும். இல்லையெனில் வளரும் மனக்கசப்பு, விரியவே ஏதுவாகும். "உண்மையாக என்ன நடந்தது?" என்பதைக் காணும் வகையில் பாரபட்சமற்ற, சர்க்கார் சார்பில்லாத நடுநிலைமையாளர்களைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்நிகழ்ச்சிகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு உண்மை அறிவிக்கப்பட வேண்டியது அவசியம்; நேர்மையான முறையும் அதுதான்!

ஏனெனில் சட்டவரம்பை மீறிய நிகழ்ச்சிகள் அதிகரிக்க வழியேற்படுமேயானால் நாடு 'பர்மா' ஆகிவிடும்! ஒழுக்கம் மறைந்து, எங்கும் கலவரமும், கண்மூடிப் போக்கும் தாண்டவமாடத் துவங்கிவிடும்! எனவே காவல் கைதிகள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்றால், வெளியிலுள்ள மக்கள் ஆத்திரம் கொள்ளவே செய்வார்கள். ஆத்திரம் அதிகரிக்குமேயானால் விளைவு, வேதனையாகவே மாறிவிடும். எனவே இந்தச் சிறை சம்பவங்கள் பற்றி பாரபட்சமற்ற விசாரணை செய்யப்பட வேண்டும்; அதிலும் நிலைமை மாறுமுன் அவசரமாகச் செய்யப்படவேண்டும்!

பலாத்காரம், தனி மனிதர்களின் சுதந்திரத்துக்கு விளைக்கும் தீங்கு. ஆயுதந் தாங்கியோ, அட்டகாச காரியங்களில் ஈடுபட்டோ நினைத்த கொள்கைகளைச் சாதிக்க முற்பட்டால்—அது நிச்சயம் வெற்றியளிக்காது. மக்களிடையிலே செல்வாக்கு காணவும் முடியாது. தடிகொண்டு தாக்கியோ, தகாத வழிகளில் பயமுறுத்தியோ தங்கள் கொள்கைகளில் வெற்றி காணலாம் என கம்யூனிஸ்டுகள் கருதுவார்களேயானால், அது கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்ல; வெறுத்து ஒதுக்கப்படவேண்டியதுமாகும். "புரட்சி" என்ற வார்த்தைக்கு இரத்தம் சிந்தி, எங்கும் பிணக்குவியல்கள் ஏற்படச் செய்ய வேண்டும் என்பதல்ல பொருள். பிற்போக்கு எண்ணங்கள் முறியடிக்கப்பட்டு முற்போக்குக் கொள்கைகள் [illegible] ஆக்கி வெற்றி விழா கொண்டாடும் அளவில் பழைமை [illegible] ஓட்டி புதுமையைக் காண் [illegible] 'புரட்சி' ஆகும்! கத்தி [illegible] தூக்கி, மண்வெட் [illegible] தாங்கி 'வாழப் [illegible] யொருவர்

தாக்கி, மனமாச்சரியம் காரணமாக, வெட்டி வீழ்த்திக்கொண்டு மடிவார்களேயானால், நாடு பிணக்காடு ஆக முடியுமே தவிர லட்சியம் நிறைவேறமுடியாது. லட்சியங்கள் மக்களின் நல்வாழ்வுக்காகத்தான்.

இலட்சியப் போர்வையில் பலாத்காரச் செயலில் ஈடுபடுவதால் எவரும் இலட்சியத்தைச் சாதித்துவிட முடியாது. ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள வெறி பயன்படுமே அன்றி வெற்றிக்குப் பாதையமைக்காது.

நாட்டைப் பிணக்காடு ஆக்குவதால் யாருக்கு இலாபம்? மாளிகையை உரிமையாக்க வேண்டுமென்பதற்காக அதைச் சூழ்ந்து, உடைத்து தகர்ப்பதால் என்ன பயன்? மாளிகை நாசமாகும். பலன் கிட்டாது. அதுபோலவே மக்கள் வாழ்வை மலர வைக்கும் நோக்கம் கொண்டவர்கள் மக்களிடையிலே பயத்தையும், பீதியும் 'என்ன நேருமோ எப்போது உயிருக்கு ஆபத்தோ?' என்ற கலவரத்தையும் சிருஷ்டிப்பதால் எதிர்பார்க்கும் எண்ணம் கைகூடவா செய்யும்? எனவே நாட்டை நல்பாதைக்கு இட்டுச் செல்லும் பெரும்பணியில் இறங்கியிருப்பவர்கள், நாச காரியங்களில் இறங்குகிறார்கள் என்றால் அது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டியது தான். தடுத்து நிறுத்தப்பட வேண்டியதுதான்!

ஆனால், "நாச காரியங்கள்" என்ற காரணங்காட்டி எதிர்க்கட்சிகளைத் 'தீர்த்துக் கட்டிவிட' எண்ணி சர்க்கார் முனைந்தால் அது மிகவும் கேடு விளைவிக்கும் செயலாகும். நாட்டை ஜனநாயகச் சோலையாக, ஆக்குவதற்குப் பதில் சர்வாதிகாரப் பாலையாக ஆக்க முனைவதே ஆகும்!

"கம்யூனிஸ்டுகள் வேட்டை" "பிடாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்ற அளவுக்குப் பிரச்சாரப் பீரங்கிகள் மூலம் அவர்களை ஒழித்துவிடலாம் என்று நினைத்தால் அது பகற் கனவு ஆகுமேயொழிய பயன் அளிக்காது.

கம்யூனிஸ்டுகளும் மனிதர்கள் தான். மக்கள் வாழ்வுக்கு உழைக்கும் இலட்சியவாதிகள்தான். அவர்கள் ஆசை நாட்டை பயங்கரப் பீதியின் மத்தியில் வைக்கவேண்டும் என்பதுதான் என்று கூறப்படுவதை நம்மால் ஏற்கமுடியவில்லை. காரணம்

அவர்களும் இலட்சியவாதிகள். அ[illegible]க்கள் இலட்சியம் இவ்வளவு 'சுருங்கியது' ஆக இருக்கும் என நம்மால் நம்ப முடியவில்லை! வைக்கோல் போரைக் கொளுத்திவிடுவதால் பொருள் நாசமாகி, மறுநாள் தங்கள் — உழைப்பாளிகள் — மாடுதானே திண்டாட வேண்டிவரும் என்பதை அவர்கள் அறியமுடியாதவர்களல்ல. ஒருவருக்கொருவர் பலாத்காரத்தைத் துணைகொண்டு வெட்டி வீழ்வதால் 'இலாபம்' முதலாளித்துவ வர்க்கத்துக்குத் தான் என்பது அவர்களுக்கு தெரியாத சங்கதியாக இருக்கமுடியாது.

எனவே எதற்கெடுத்தாலும் ஒரு பூச்சாண்டியைக்காட்டி எதிர்க்கட்சிகளை அடக்க சர்க்கார் முனையக்கூடாது. ஆட்சி கையிலிருப்பதால் பாதுகாப்புச் சட்டங்களை "அவசரமாகப்" பிறப்பித்து வாழமுடியும் என்பது நிலைத்து நிற்கமுடியாது. எதிர்க்கட்சிகளை நசுக்க இந்தபாதுகாப்புச்சட்டங்கள் என்றும் பயன்படாது. மக்கள் ஆதரவுதான் கேடயமாக இருக்கவேண்டும். சட்டங்கள் கோட்டைகளல்ல; பாதுகாப்புப் பெற்று வாழ!

இதை ஆட்சியாளர் சிந்திக்கவேண்டும். காவல்கைதிகளைக் கண்ணியமாக நடத்தவேண்டும். பாதுகாப்புச் சட்டமூலம் கைது செய்தவர்களை விசாரணை செய்து, சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அவர்களை விடுதலை செய்யவேண்டும். இதுதான் நீதி. இதுதான் முறை!

மறுப்பு

தங்கவயல் தமிழர் நாடக குழுவினால் கடந்த 8—8—49 அன்று வேலூர் முள்ளிபாளையம் நாடகத் தியேட்டரில் 'நீதி மன்றம்' என்ற நாடகம் சி. என். அண்ணாதுரை முன்னிலையில் நடைபெறும் என்பதாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்ததாக நம் கவனத்துக்கு வந்துள்ளது. நாடகம் நடைபெறும் என்பது பற்றியோ, நடத்துவது யார் என்பது குறித்தோ நமக்கு எதுவும் தெரியவாராது. இந்தவிதமான காரியங்களில் ஈடுபடும் நபர்கள் அநாவசியமாக மனச் சஞ்சலத்தை நமக்கும், மக்களுக்கும் உண்டுபண்ணுவது கண்டிக்கத்தக்கதாகும்.

செல்லாக் காசாகிறது!

அதிகார ஆசை, சுயநலச்சூது, கோஷ்டிப்பிளவுகள், பேராசைச்சண்டைகள், இன்று காங்கிரஸ்கட்சியின் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டன! மக்கள்நலனே தங்கள் லட்சியம் என மார்தட்டிப்பேசி, பொது வாழ்வில் சிறப்புப்பெற்ற காங்கிரஸ் கட்சியின் இன்றைய நிலை இமயம் முதல் குமரி வரை எல்லா மாகாணங்களிலும்கண்றாவியாக இருக்கிறது! நாட்டின் வாழ்க்கைக்குப் பிரச்னைகளில் கவனம் செலுத்தி மக்கள் மேம்பாட்டுக்கு வகை செய்யவேண்டிய ஆளவந்தார்களுக்குத் தங்கள் "சொந்த" விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பே பெரும் பிரச்னை—தலைவேதனையாக ஆகிவிட்டது!

காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் எல்லாமாகாணங்களிலும் ஊழல்களும், ஊதாரிக் காட்சிகளும் தலைவிரிகோலமாகத் தாண்டவம்புரிகின்றன. விவரிக்கமுடியாத அளவில் சுயநலமும் லாபநோக்குமே லட்சியங்களாகமாறிவிட்ட காரணத்தால், ஒவ்வொரு மாகாணக் காங்கிரசிலும் போட்டா போட்டியும், பொருமலும் புகைச்சலும், குடுமி பிடிச்சண்டையுமே கொந்தளித்துக்கிடக்கின்றன.

"சுயராஜ்யம் ஒன்று வருகுதாம். அங்கு சுகவாழ்வு மலருதாம்" என்று எண்ணி ஆசைக்கனவுகளுடன் இருந்த மக்கள் இன்று ஆளவந்தார்களின் கெடுபிடியும், அடக்கு முறை அட்டகாசம், வரிக்கொடுமையும்தாங்காது தத்தளிக்கின்றனர். காங்கிரஸ் கட்சியால் நல்வாழ்வு மலரும் என்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை கரைந்து, வெறுப்பாகமாறத் துவங்கிவிட்டது!

மக்களிடையிலே காங்கிரஸ் என்றாலே ஏற்படும் அருவருப்பு, அருவை ஆத்திரம் ஆகியவைகளை கல்கத்தாவிலும், பம்பாயிலும் நடைபெற்ற சட்டசபை உபதேர்தலில் காங்கிரஸ் மண்ணைக்கவ்விய காட்சி அப்பட்டமாகப்பிரதிபலித்துக் காட்டிவிட்டது.

மக்களின் மனநம்பிக்கைபறிபோய் அவர்கள் ஆத்திரம் அருவியென பெருக்கெடுத்துத் திருளுவதைக் கண்ட காங்கிரஸ் கட்சியினரிடை கலக்கம் உருவாகியுள்ளது. ஆட்சிப் பீடம் எங்கு அசைந்துபோய்விடுமோ என்ற அச்சம் ஆளவந்தார்களை ஆட்டத்துவங்கிவிட்டது!

எனவே காங்கிரஸ் ஆட்சியாளர் சரிந்த கோட்டையாகிக்கொண்டிருக்கும் தங்களது நிலைமையைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டிய அவசிய—அவசர நிலைமைக்குவந்துள்ளனர்.

ஆட்சிப்பீடம் அமர்ந்தது முதல் இன்றுவரை ஆட்சியாளர் மக்கள் வாழ்வுக்கான வகைகளைச்செய்வதை விட, தங்கள் சுயகட்சியின் சரியும் நிலைமையைச் சரிக்கட்டுவதிலேயே அதிக கவனம் செலுத்திவந்துள்ளனர்.

நிர்வாக ஊழல், திறமையின்மை காரணமாக மக்களிடையிலே தங்களுக்கு இருந்த செல்வாக்கு கரைகிறது, சினமும் சீற்றமுமே பரிசாக உருவாகிறது, என்பதைக்கண்டகாங்கிரஸ் தலைவர்கள் மக்கள் கவனத்தை வேறுதிசைகளில் திருப்பிவிடுவதிலேயே நாட்டம் கொண்டுவந்துள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் ஆபத்து!

காஷ்மீரப் போராட்டம்!

சமஸ்தானங்கள் ஐக்கியம்

ஐதராபாத் பிரச்னை

மேற்படி நாட்டத்தின் விளைவுகளே இவைகள். சிறுசம்பவத்தையும் செயலையும் பிரமாதப்படுத்தி "சர்க்காரின் சாதனை" என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரப் படுத்தியும் விளைவு — ஏமாற்றமாகவே ஆகிவருகிறது!

பாதுகாப்புச்சட்டப்பாணம், அடக்குமுறை அம்புகள் ஆகியவைகளால் எதிர்க்கட்சிகளின் "வாயை மூடும்" திருப்பணியில் ஈடுபட்டும் ஆளவந்தார் எண்ணம் வெற்றியளிக்கவில்லை. எதிர்பார்த்ததற்கு மேலாக மக்கள் மன்றத்தில் எதிர்ப்பும், ஆத்திரமுமே வளர்ந்து வருகிறது!

இந்த இக்கட்டான நிலைமையைச் சமாளிக்கும் ஆசையின் காரணமாகத்தங்களின் பரிசுத்தத்தன்மையை வெளிப்படுத்திக்கொள்வதாக "காட்சிகளைக்"காட்ட முனைந்துள்ளனர்.

சென்னை மந்திரிசபை விசாரணை, மேற்குவங்கத்தில் பொதுத் தேர்தல் முதலியவைகள் தங்கள் தவறுகளை மறைக்க காங்கிரசார் நடத்தும் நாடகத்தின் காட்சிகளாகும்!

இந்த நாடகத்தில் குறிப்பிடக் கூடியது மேற்கு வங்காளத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதென்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானத்தை யொட்டி செய்யப்பட்டிருக்கும் முடிவாகும். அடுத்த ஆறு மாதங்களில் புதிய—பொதுத்தேர்தலை மேற்குவங்கத்தில் நடத்துவதென்பதே மேற்படி முடிவு. மேற்கு வங்கத்தில் காங்கிரசாரிடையே ஏற்பட்டுள்ள கட்சிச்சண்டைகளை மறைக்கச் செய்யும் நாடகம்தான் இப்பொதுத் தேர்தல். மேல்வங்க மந்திரிசபையிலும் சட்டசபையிலும் சென்னையை விட மோசமான அளவில் கோஷ்டிச்சண்டையும், பூசலும் நர்த்தனமாடுகின்றன! மாகாணக் காங்கிரசிலும் மறைக்கமுடியாத அளவில் போட்டியும், போராட்டமும் உருவாகி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகின்றன!

இந்த மோசமான ஒற்றுமைக் குலைவு—தேர்தல் என்றதும் சீர்திருந்தும் என்பதே இத்தேர்தலின் உள் நோக்கமாகும். அது மட்டுமின்றி, தென்கல்கத்தாவில் நடைபெற்ற உப-தேர்தலில் காங்கிரஸ் மண்ணைக்கவ்வி, சரத்போஸ் வெற்றிபெற்றதானது இந்தியாவில் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் 'காங்கிரஸ் கரைகிறது' என்பதைக் கண் கூடாக்கிவிட்டது. எனவே பொதுத் தேர்தல் நடத்தித் தங்கள் "நேர்மை"யைக் காட்டுவதுபோல நடிக்க முடிவு செய்துள்ளது காங்கிரஸ்.

கிட்டத்தட்ட இன்னும் [illegible] ஆண்டுகள் இந்[illegible] [illegible]கும் பொதுத் [illegible] விருக்கிறது அ[illegible]

வாக்குரிமை என்ற அடிப்படையில். இந்நிலையில் தங்களுக்கு நாட்டிலுள்ள செல்வாக்குக் குறைவை மறைப்பதற்காகச் செய்யும் ஒரு செயல்தான் இந்தப் பொதுத்தேர்தல் என்பதை ஆட்சியாளரின் போக்கே எடுத்துக் காட்டுகிறது.

வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான அலுவல்கள் இன்னும் ஆறுமாதங்களுக்குள் முடிந்துவிடும். இந்நிலையில் பொதுத் தேர்தல் நடத்தத் திட்டமிட்டிருப்பதோ புது வாக்காளர் பட்டியல்படி அல்ல; 1935-ம் ஆண்டு பழைய பட்டியல்படி! 1935க்குப் பின் மேற்கு வங்கம் எத்தனையோ அரசியல் நிகழ்ச்சிகளைச் சந்தித்துள்ளது. பிரிவினையின் பலனாக லட்சத்துக்கு மேற்பட்டு மக்கள் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் மாற்றத்தையும் கவனித்துக் கணக்கெடுத்து இந்தப் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. இந்தக் காரியத்துக்கெனச் செலவழியும் நேரத்தில் புது வாக்காளர் பட்டியலைத் தயார் செய்து அதன்படி — வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்ற அடிப்படையில் — தேர்தலை நடத்துவதென்பது கஷ்டமான காரியமல்ல. ஆனால், காங்கிரஸ் காரியக் கமிட்டியோ அதைப்பற்றிக் கவனிக்காதது போலப் பழைய வாக்காளர் பட்டியல்படியே தேர்தலை நடத்த யோசனை — இல்லை! — உத்திரவு இட்டுள்ளது!

ஏன், இந்த அவசர நிலை? தேர்தல் நடைபெறும் இடைக்காலத்தில் தற்போதுள்ள மந்திரி சபைக்குப்பதில் புதுமந்திரிசபை ஒன்று இயங்கும் என்பதாகவும் காங்கிரஸ் மேலிடம் முடிவுசெய்துள்ளது. இந்த இடைக்கால மந்திரி சபையால் எதிர்பார்க்கப்படும் நன்மை என்ன ஏற்பட்டுவிட முடியும்? தற்போது மேல்வங்கம் உள்ள சீர்கெட்ட நிலை இன்னும் அதிகரிக்க, வேதனை விரிய வழி பிறக்குமே ஒழிய மக்களின் அவதி மறைய வகை ஏற்பட முடியாது!

[illegible]பொதுத் தேர்தலுக்கு இடையில் [illegible]ந்துப் போகும் இந்த இடைக் [illegible]பை, மக்கள் பிரச்னை [illegible] செய்யாது — [illegible] தா[illegible] மந்திரி

சபை 'இடைக்காலத்துக்குத்தானே' என்ற எண்ணம் அதிகார வட்டாரங்களில் எதிரொலிக்கவே செய்யும். இதன் விளைவு மென் மேலும் மேல்வங்கத்தில் நிர்வாகம் சீர்குலைந்து தொல்லைப்புயல் வீசச் செய்யுமே அன்றி மக்கள் சங்கடம் தீர்க்கப் போவதாக அமையப் போவதில்லை!

இவ்வளவு அவசரமாக காங்கிரஸ் காரியக் கமிட்டி மேற்கண்டவிதமாக முடிவுகளைச் செய்துள்ளது. இந்த முடிவுகளின் பலன்களைப் பற்றி நாம் சிந்திக்கு முன் இத்தகைய முடிவுகளைச் செய்து ஒரு மாகாண ஆட்சியை மாற்றி — புதிதாக ஒன்று ஏற்படும்படி உத்தரவிட காங்கிரஸ் காரியக் கமிட்டி யார்? அதற்கு இத்தகைய அருகதையுண்டா? என்பதை கருத்தில் வைத்துப் பார்த்தால் காங்கிரஸ், நாட்டை எந்த அளவுக்கு சர்வாதிகாரப் போக்கில் இழுத்துச் செல்கிறது என்பது விளங்கும்!

ஒரு அரசியல் கட்சி பெரும்பான்மையான பிரதிநிதித்துவம் பெற்று ஆட்சிப்பீடம் அமர்ந்துவிட்டதென்றால், அப்படி ஆட்சியில் அமர்ந்தவர்கள் எல்லா மக்களுக்காகவும் இருக்கிறார்கள் என்பதே பொருளாகும். இதுதான் அரசியல் விதியுங்கூட! ஒரு அரசியல் கட்சி இன்று ஆட்சியிலிருக்கும்; நாளை போய்விடும்!

ஆனால், நாடு அப்படிப்பட்டதல்ல; நாட்டை இயக்கும் ஒரு அரசாங்கமும் அப்படிப்பட்டதல்ல. இவைகள் என்றும் நிரந்தரமானவை. வரும் கட்சிகள் இவைகளை இயக்கிச் செல்லுமே ஒழிய, மாற்றிவிட முடியாது. மக்களின் பிரதிநிதித்வம் பெற்றவர்கள் ஆட்சிபீடம் ஏறுவார்கள். மறு தேர்தல் வந்து, மக்கள் எண்ணம் மாறி, தீர்ப்பு வேறுவிதமானால் இன்னொரு கட்சி அரசாங்கத்தை ஏற்று நடத்தும். இதுதான் ஜனநாயகம்.

பெரும்பான்மையான பிரதிநிதித்வம் பெற்று அரசாங்கத்தை ஏற்று நடத்த முற்பட்டுவிட்டால், அப்பொறுப்பை யேற்றவர்கள், நாட்டிலுள்ள எல்லா மக்களுக்காகவும் ஆட்சியை நடத்துகிறார்கள் என்றே அர்த்தம். எனவே ஆள்பவர்கள் தங்கள் கட்சிக்காரர்கள் என்பதற்காக அந்தக் கட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் தலையிடுவது தகாது — கூடாது. இது பரிக[illegible]மெண்டரி முறை.

இதைத் தவிர்த்து ஆளும் கட்சி எல்லா அரசாங்கக் காரியங்களையும் தலையில் போட்டுக்கொண்டு, செய்ய முற்படுகிறதென்றால், அந்த அரசியல் கட்சி நாட்டைத்தன் பிடிக்குள் கொண்டுவருகிறது; சர்வாதிகாரத்துக்கு வித்திடுகிறது; ஏதேச்சாதிகார ஆசைக் கிணற்றில் குதிக்கிறது என்றுதான் பொருள்.

இந்த விதி முறைப்படிப் பார்த்தால் பெரும்பான்மை வாக்குகளால் ஆட்சிப் பீடம் ஏறி அரசாங்கத்தை ஏற்று நடத்தும் காங்கிரஸ் கட்சி பாசிசப் போக்கில் விரைந்து செல்லும் வேகம் விளங்கும்!

நடை முறையில் வேலைகளைச் செய்துவரும் ஒருசட்ட சபையைக் கலைத்துப் புதுத் தேர்தல் நடத்தும்படியான சூழ்நிலை ஏற்பட்டு, அப்படிச் செய்யவேண்டுமென்றால் அதற்கான அதிகாரம் மாகாணத்தின் கவர்னருடையது.

மாகாண விவகாரத்தில் மத்திய சர்க்கார் மேற்சொன்ன விதமாக விரும்புகிறதென்றால் அப்படிச்செய்யுமாறு கவர்னர் ஜெனரல்தான் மாகாண கவர்னருக்கு யோசனை கூறலாம். யோசனை கூறலாமே தவிர, அப்படிச் செய்யுமாறு நிர்ப்பந்திக்க முடியாது! இதுதான் சட்டம். ஜனநாயக முறை.

காங்கிரஸ் ஆட்சியின் கேவலநிலை மேற்கு வங்கம் ஒன்றில் மட்டும்தான் என்றில்லை. எல்லா மாகாணங்களிலும் இதே நிலைதான்! அப்படியிருக்க அவசரமாக, நேர்மையில்லாத வகையில், புதுத் தேர்தல் என்கிற 'நாடகத்தை' நடித்துக் காட்ட காங்கிரஸ் மேலிடம் முனைந்துள்ளது. இவ்வளவு வேகமாக ஒரு மாகாண விவகாரத்தில் தலையிட்டு ஒரு 'நாடகம்' நடத்திக் காட்டும்படியான அளவுக்கு காங்கிரஸ் மேலிடம் ஈடுபடும்படி ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கூர்ந்து நோக்கினால் விளங்கும் உண்மை 'காங்கிரஸ் கட்சி மக்களிடையே செல்லாக்காசாகி வருகிறது' என்பதுதான்!

முகவரி மாற்றம்

இரா. நெடுஞ்செழியன்
C/o "மாலை மணி"
2/45, முத்துமாரி செட்டிதெரு
மண்ணடி சென்னை, 1.

நான் கண்ட அழகர்சாமி

தொடர்ச்சி—11

எஸ். வி. லிங்கம்

நமது இயக்கம் இருபத்தைந்து ஆண்டுப் பயிர்! இயக்கத்தின் முக்கிய வார இதழான "குடி அரசு" 1925ம் ஆண்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டிலேயேதான் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைத் தலைவராக விளங்கிய சர். பி. டி. தியாகராயர் காலமானார். 1927ம் ஆண்டில் "திராவிடனை" நடத்தும் பொறுப்பை, ஜஸ்டிஸ் கட்சி, பெரியார் அவர்களிடம் முதன் முறையாகக் கொடுத்தது. 1929ல் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளோடு, சிவப்புக் கொடியும், அதன் விளக்கமும் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 1938ல்தான் முதன் முதலாக ஒரு போராட்டத்தை நடத்தும் ஆற்றல் இயக்கத்துக்கு வந்தது, இந்தப் போராட்டத்திற்கு முதலில்வித்திட்டவர், கரூர் ஈழத்தடிகளாவார்.

1930ல் திருச்சியில் கூடிய தமிழர் மாபெரும் மாநாட்டில், தோழர்கள் தமிழவேள் த. வே. உமாமகேஸ்வரன், நாவலர் ச. சோமசுந்தரபாரதி போன்றோர் பலரும் பங்கெடுத்துக் கொள்ள அழகர்சாமி மிகவும் பாடுபட்டார். இவர்களையெல்லாம் சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆயினும் மொழிப் போராட்டத்தின் பேரால், படித்த பண்டிதர்களையும் அவர்களைக் கண்டால் பிடிக்காமலிருக்கிற சுயமரியாதைக்காரர்களையும் ஒன்று சேர்க்கும் ஓர் ஒப்பற்ற சந்தர்ப்பத்தை உண்டாக்கினார்.

தமிழர் மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறியது. ஆனால் அழகர்சாமி நினைத்தபடி நடக்காது இருந்தது அவருக்கு ஒரு பெருங் குறையாகப் பட்டது எனவே காஞ்சீபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி தூண்டினார். செயல்கள் மிக விரைந்துசெய்யப்பட்டன. மாநாடும் இனிது நிறைவேறியது. இந்த இந்தி எதிர்ப்பு மாநாடே அழகர்சாமி எதிர்பார்த்ததைச் செய்து முடித்தது. இக்காலத்தில்தான், இதற்கு முன்பு இருந்த ஜஸ்டிஸ் கட்சியின் போக்கு அடியோடு மாறும்படியான நிலைமை ஏற்பட்டது.

'இந்தி எதிர்ப்புப் போர்' என்று அறப்போராட்டத்தைத் துவக்கும்போது, ஜஸ்டிஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் என்போர்க்கே போராட்டம் எங்கே போய் முடியும் என்பது தெரியாதிருந்தது. தமிழ்நாட்டில் இந்தி நுழைவதை எதிர்த்து நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புக் கூட்டங்களுக்குப் பெருந்திரளான மக்கள் வர ஆரம்பித்தனர். மக்களின் ஆதரவு இந்தி எதிர்ப்புக்கொள்கைக்குப் பெருவாரியாக ஏற்பட்டது. போராட்டத்தில் இறங்கிச் சிறைபடவும், தண்டனை ஏற்கவும் உறுதி கொண்ட இளைஞர்கள் பலர் முன் வந்தார்கள். களத்தில் தொண்டர்கள் தயாராக நின்றார்கள். எதிர்த்தரப்பில் வந்து நிற்க சர்க்காரும் தயாராயிற்று. தொண்டர்கள் போராட்டத்தை முற்றவிடவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள். மறியல் துவக்கம் பற்றி முதலில் பெரியாருக்கு அவ்வளவாகப் பிடித்தமில்லாமலிருந்தது. இத்தகைய நிலைமை சிலநாட்கள் சென்னையில் இருந்தது. என்ற போதிலும் மொழிப்பற்றுக்கொண்டதொண்டர்களின் ஆர்வம் நிலைமையை நீடிக்கவிடாமல் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கும்படி செய்துவிட்டது. இந்தி எதிர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டவர்களைச் சர்க்கார் கைது செய்ய ஆரம்பித்தது.

இந்தி எதிர்ப்பு இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையிடப்பட்டார்கள். தலைவர்கள் சிறை சென்றதும், மறியல் களத்தில் தொண்டர்கள் திரளத் தொடங்கினார்கள். எல்லா ஊர்களிலும் பொதுக்கூட்டங்களும், மாநாடுகளும் நடத்தப்பட்டன. இந்த நிலையில்தான் "தமிழர் பெரும் படை"யைத் திருச்சியில் திரட்டினார் நண்பர் அழகர்சாமி.

படை திரண்டது. படையைக் கண்காணிக்கும் அமைச்சராக மணவை ரெ. திருமலைசாமி நியமிக்கப்பட்டார். படை போகும் ஊர்களுக்கு முன்னதாகச் சென்று, படைக்குத் தங்கும் இடமும், சாப்பாட்டு வசதிகளும் செய்துதரவேண்டிய பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. படையை ஒழுங்குபட நடத்திச் செல்லும் பொறுப்பையும், ஆங்காங்கே பொதுக்கூட்டங்களில் பேசும் பொறுப்பையும் அழகர்சாமி ஏற்றுக்கொண்டார். இதில் மூவலூர் இராமாமிர்தத்தம்மையாரும், சித்தக்காடு ராமையாவும் எடுத்துக் கொண்ட பங்கு விட்டுவிடுவதற்குரியதல்ல. படை வருகைக்கு இடவசதி—சாப்பாட்டு வசதி ஆகியவைகளைச் செய்ய நான் எடுத்துக் கொண்ட வேலைகள் மிக எளிதாகவே முடிந்தன. எல்லா ஊர்களிலும் நான் செல்லுவதற்கு முன்பே அவ்வூர்த் தோழர்கள் மிக்கப் பரிந்து ஆதரவு காட்டினார்கள். திருச்சியிலிருந்து 100-பெயர்களை அழைத்துக் கொண்டு, சற்றேறக்குறைய 60-ஊர்களில் தங்கி, சுமார் 180-ஊர்களுக்கு மேலாகப் பிரசாரம் செய்து கொண்டு, 250-மைல் தொ[illegible] படையை நடத்தி, செ[illegible] கொண்டுவந்து சேர்[illegible] அனைத்தும் அ[illegible] தாகும்.

வழக்கு நிதி நன்கொடை

"திராவிட நாடு" பத்திரிகைக்கு ஜாமீன் கட்டும்படி சர்க்கார் கேட்டது பத்திரிகைச் சுதந்தரத்தைப் பறிப்பதாகும் என்று கருதிப், பல தோழர்கள், வழக்காடுவதற்கு வேண்டிய பொருளுதவியும் செய்து வருகிறார்கள். நன்கொடை உதவியவர்களின் விபரம் கீழே குறிக்கப்படுகிறது:—

சென்னை

தோழமைக் கழகம்	5 4 0
ஏ. ஆர். சேஷாசலம்	2 0 0
எஸ். கஜபதி	1 0 0
கே. கண்ணன்	1 0 0
எம். நம்பியப்பன்	1 0 0
வி. கே. செல்வராசன்	1 0 0
தனபாலன்	1 0 0
சர்வகோபால்	1 0 0
பலராமன்	1 0 0
தட்சணாமூர்த்தி	1 0 0
எம். ஆர். கன்னியப்பன்	1 0 0
துளசிங்கம்	1 0 0
ரஹிம்ராதாசகோதரர்கள்	1 0 0
வி. மோகனரங்கன்	0 8 0
கோதண்டன்	0 8 0
டி. இராசகோபால்	0 8 0
எம். சுந்தரம்	0 8 0
கே. மாதவன்	0 8 0
கனகராஜ்	0 8 0
கே. வி. எஸ். மணி	0 8 0
டில்லிபாதர்	0 8 0
எம். எஸ். சிவராஜ்	0 8 0
ஆர். முத்துகிருஷ்ணன்	0 8 0
கே. தாமோதரன்	0 8 0
பி. எஸ். பழனி	0 4 0
முஸ்தபா	0 4 0
குஞ்சிநாயர்	0 4 0
டி. புண்ணியம்	0 4 0
ஆர். இராமகிருஷ்ணன்	0 4 0
ச. பாலசுந்தரம்	5 0 0
டி. சுப்பிரமணியம்	1 0 0
ராமதாஸ்வர்மா	1 0 0
சி. எஸ். இராமசாமி	0 8 0

பொள்ளாச்சி

[illegible] ரீட்.	1 0 0
[illegible] மநாட் [illegible] ம்	1 0 0

கொழும்பு வெளிசரை

கே. சுப்பராயன்	5 0 0
டி. முனுசாமி	5 0 0
பி. எஸ். துரைசாமி	5 0 0
என். மொட்டை	5 0 0
கு. க. பிச்சையா	5 0 0
பி. அளகிரிநாதன்	5 0 0
வி. சவுரிமுத்து	5 0 0
எஸ். ஏ. ரகீம்	2 0 0
கே. ரங்கசாமி	2 0 0
எம். முனுசாமி	2 0 0
வி. வேலாயுதம்	2 0 0
ஆர். பாண்டுரங்கன்	2 0 0
ஏ. கோபால்	2 0 0
சின்னகருப்பண்ணன்	1 0 0
என். கண்ணன்	1 0 0
கருப்பணன்	1 0 0

கீழக்கரை

ஏ. எம். அப்துல் காசீம்	1 0 0

முத்துகவுண்டன் புதூர்

வீ. இராமசாமி	5 0 0
கே. வெங்கோடன்	5 0 0
ஆர். பாலகிருஷ்ணன்	1 0 0
நாராயணசாமி	1 0 0
வி. கே. சண்முகம்	1 0 0
எம். எம். அருணாசலம்	1 0 0
சின்னியன்	0 4 0
நஞ்சப்பன் "	0 2 0
சுப்பண்ணன்	0 2 0

எஸ். எஸ். சென்னிமலை—

செங்கோடன்	0 2 0
பாலசுப்பிரமணியம் கோவை	0 4 0
சின்னசாமி "	0 4 0
ராஜகோபால் "	0 4 0
கிரிராஜ் "	0 4 0
மாணிக்கம் "	0 4 0
தங்கவேலு "	0 4 0
அரங்கசாமி "	0 8 0
கண்ணுசாமி "	0 8 0
சுந்தரம் "	0 4 0
நந்தகோபால் "	0 4 0

ஆலமரத்துப்பட்டி

எஸ். எம். கதிரேசன்	0 8 0
சி. ஏ. நடேசன் மைசூர்	1 0 0
ரத்தினஸ்டோர்ஸ் சென்னை	5 0 0
ஆறுமுகம் பொன்மலை	5 0 0
ஜே. சீனிவாசன் "	5 [illegible]
ஏ. சின்னையன் "	3 [illegible]
சி. ராமய்யன் "	1 0 0
எம். நம்பிக்கைராஜ் "	1 0 0
திருமங்கலம் தனுஷ்கோடி	1 0 0
எஸ்-வீராசாமிசத்திரப்பட்டி	0 4 0
பி. பாமசிவம் "	0 8 0
வி. நடராசன் நாங்குனேரி	1 0 0
வி. பி. பசுபதி சென்னை	2 0 0
அரங்கசாமி பொன்மலை	1 0 0
இராதாகிருட்டிணன் "	2 0 0
எஸ். ஏ. துரைராஜ் "	1 0 0
ஏ. என். துரைராஜ் "	1 0 0
நவநீதகிருட்டினன் "	1 0 0
ஓர் அனுதாபி "	1 0 0
பி. பெருமாள் "	1 0 0
தேவராஜ் "	0 8 0

பாண்டிச்சேரி

எஸ். வி. ஒ. சி. பெட்ரோல்பங்	3 0 0

காத்தையங்கார்பேட்டை

எம். எஸ். என். இராசன்	1 0 0

இரளம் பாறைகிராமம்

எஸ். ஏ. மார்கண்டன்	1 8 0

விருதுநகர்

எம். வ்பெரோசி	2 0 0

தஞ்சாவூர்

என். மீனாட்சிசுந்தரம்	2 0 0

புதுக்கோட்டை

அரு. பழ. சுப்பையா	5 0 0
	150-6-0
முன் கையிருப்பு	2523—2—8
ஆக மொத்தம்	2673—8—8

(முன் பக்கத் தொடர்ச்சி)

படை நடந்து சென்ற அந்த இரண்டு மாத காலப் பிரசாரத்தால் போராட்டம் எவ்வளவோ வளர்ந்தது; இதற்குப் பின்பு சகல தலைவர்களும் கூட்டங் கூட்டமாகச் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

சர்க்காருடன் எதிர்த்து, ஒரு போராட்டத்தை நம் கட்சி நடத்திப் பார்த்துவிடவேண்டுமென்ற அழகர்சாமியின் நீண்டநாள் ஆசை இந்த இந்திஎதிர்ப்புப் போராட்டத்தின்போது நிறைவேறியது,

அடுத்த பத்து ஆண்டுகளுக்குப் பின் அதேமாதிரியான போராட்டத்தில், அழகர்சாமி சிறை சென்றார்.

இரு துருவங்கள்

[ஒளியழகன்—குடந்தைக் கல்லூரி]

சிந்தனைபுரி நோக்கிப் புறப்படுவோம்! அதோ கலீலியோ! அவனைச் சுற்றிக் கற்கள் வீசப்படுகின்றன. ஏன்? உலகம் தட்டையல்ல, உருண்டை என்று கூறிய "பாவத்திற்காக"! உலகம் உருண்டை என்று கூறியதற்கு அவனுக்குத் தரப்பட்ட பரிசு உருண்டைக் கற்கள். நம்முடைய கவிகள் ஆரணங்குகளின் காதுகளில் ஊசலாடும் "தொங்கட்டான்களை"ப் பற்றி அகவற்பா பாடிய நேரத்திலே தான்—நம்முடைய ஞானக் கண்ணினர் உடலைப் பிரிந்த உயிர் ஊசலாடு வதை ஆராய்ச்சி செய்துகொண்டு தவம் இருக்கும் நேரத்திலேதான்—இத்தாலி நாட்டிலே கலீலியோ எனும் விஞ்ஞானக் கண்ணினன் ஊசலாடும் விளக்கிலிருந்து காலத்தைக் காட்டிடும் கடிகாரத்தின் அடிப்படையான உண்மையைக் கண்டுபிடித்தான்—இவைகள் அவனுடைய மனத்திரையிலே விழாமல் இருக்க முடியுமா? அவன்தான் சிந்திக்கத் தொடங்கியவனாயிற்றே!

அடுத்து, அதோ நிபுணன் நியூட்டன்! அவன் ஒரு சிறு பையன். ஆப்பிள் மரத்தடியின் கீழே சுழலும் சிந்தனையுடன் அமர்ந்திருக்கின்றான். ஓர் பழம் அம்மரத்திலிருந்து அவனருகிலே விழுந்தது. அவனுடைய சிந்தனையும் கலைந்தது. கண்டான் பெரும் உண்மையை! அந்தப்பழம் நிலப்பரப்பை நோக்கி வருவானேன், ஏன் ஆகாயத்தை நோக்கிச் செல்லக் கூடாது என்று எண்ணினான். எண்ணத்தின் விளைவினால் நிலத்தின் கவர்ச்சியைக் (Gravitationa lattraction) கண்டுபிடித்தான். இந்தக் காட்சி ஆங்கில நாட்டிலே!

ஓர் வழிப்போக்கன் ஆலமரத்தடியிலே தூங்குகின்றான். தன்மேல் ஓர் ஆலம் பழம் விழுந்ததினால் விழித்து எழுகின்றான். அந்தப் பழத்தைப் பற்றி அந்த பாமரன் என்ன எண்ணுகிறான்? ஆகா, என்னே கடவுளின் செயல்! இந்தச் சிறிய பழத்தைப் பெரிய பழமாகக் கடவுள் படைத்திருந்தால் என் கதி என்னவாகும் இந்த ஆலமரத்தடியில்தானே கடவுள் ஐந்து முனிவர்களுக்கு உபதேசம் செய்தார் என்று கடவுள் சிந்து பாடுகிற அளவோடு தனது எண்ணத்தை நிறுத்திக்கொள்கிறான். எண்ணின இரு வேறு கருத்துகளும் இருதுருவங்கள். முன்னது அறிவின் விளைவு. பின்னது மூடநம்பிக்கையில்விளைந்த விளைவு. இந்த இரண்டில் எதுசரி, எதுதவறு, என்ற ஆராய்ச்சிக்கே இடமில்லாமல் இரண்டையும் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கின்றனர்.

அடுத்த காட்சி. காலை நேரம். ஓர் இளைஞன் ஆற்றின். தெள்ளிய நீரை எடுத்துத் தனது வாயைக்கழுவுகின்றான். கொப்பளிக்கும் நீரைத் திவலைகளாகக் காணுவதில் அவனுக்கு ஆனந்தம் போலும்! ஆகவே அந்தத் திவலைகள் கதிரவனின் கதிர்களிலே பலவித வண்ணங்களை வாரி இறைக்கும் விநோதப் பண்பைக்கண்டு களிப்படைகின்றான். அதே நேரத்திலே அங்குள்ள "அருளானந்தர்" ஒருவர் தன் காலைநேர வழிபாட்டைச் செய்ய நீர்த்திவலைகளை தன் கைவிரல்களால் மேலே போகும்படி தெளிக்கத்தான் செய்கிறார். இருவரும் திவலைகளைக் காணுகின்றனர். ஆனால் கருத்து வெவ்வேறு. வெவ்வேறு மட்டுமல்ல. ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு. முன்னது நியூட்டன் பரம்பரையின் செய்கை. பின்னது வியாசர் பரம்பரையின் செய்கை. முன்னது விஞ்ஞானத்தில் விளைந்த விநோதம்! பின்னது "ஞானக்கண்ணினரின்" ஞானோபதேசத்தின் விளைவு!!

அடுத்த காட்சியிலே ஓர் "மைக்ரஸ்கோப்" நுண்நோக்கு ஆடி; அதனடியிலே ஓர் மலர். அந்த மலரின் நுண்ணிய பாகங்களை ஓர் விஞ்ஞான மாணவன் ஆராய்கிறான். உண்மை பல அறிகிறான். மலரினத்திற்கு மேலும் வளப்பமதர முயலுகிறான். அதே இனத்தின் மலரைக்காணும் ஓர் பூசுரன், எந்தப் "பகவானுக்கு" அதை அளிப்பது என்பது பற்றி ஆராயத் தொடங்குகிறான்.

அடுத்த காட்சியிலே புகை மண்டலம்தோன்றுகிறது. ஆராய்ச்சிச்சாலையிலே விஞ்ஞானப்பகுதி மாணவன் எழுப்பும் நீராவிப்புகையை நீராக மீண்டும் ஆக்குகிறான், இல்லையெனில் இருவேறு வாயுக்களாகப் பிரித்தெடுத்து காற்றோடு கலக்கச் செய்கிறான். ஆம்! அதோ யாககுண்டத்திலே புகைமண்டலத்தை எழுப்புகிறார்கள் வியாசர் பரம்பரையினர். அதனால் மழையுண்டா? ஏமாந்து ஏமாளிகளானோர்ஏராளமானவர்கள். ஆம்! பச்சைப்புல்லின் விஞ்ஞானப் பெயர் என்று நுண்நோக்கு ஆடியின் மூலமாக:ஆராய்ச்சிசெய்யும் கூட்டம் ஒருபக்கத்தில்! மற்றொரு பக்கத்திலே 'இன்னும் காஞ்சபுல்லில் "மகத்துவம்" இருக்கத்தான் செய்கிறது' என்றுகூச்சலிடும் கூட்டம்!

அடுத்த காட்சியிலே "டெலிபோன்" கினிங்........கினிங்....... என்று கேட்கிறது. 'ஹலோ,யாரது'

"நான்தான் ஸ்வாமி வீராசாமிப் பிள்ளை"

"பிள்ளைவாளா! இருங்கோ வந்துட்டேன்"

"என்ன ஸ்வாமி நேரமாயிட்டுது. திதி கொடுக்கிற காலமும் தவறிப் போயிடுத்து......"

"பிள்ளைவாள்கோவிச்சுக்காதேள்! மழை 'சோ'ன்னு பெய்யறது. வீட்டிலியோ கொடையைக் காணோம். பிள்ளைவாள்! மறந்துட்டேன். வர்ரத்துக்குப் பஸ்கூட கிடையாது, ஏதோ, ஸ்டைர்க்காம்"

"பின்னே என்ன பண்றது ஸ்வாமி"

"ஒரு யோசனை தோணித்து. பேசாம நான் மந்திரத்தை இந்த "டெலிபோனில்" சொல்லிபிடரேன். திதிக்கு வேண்டிய சாமானெல்லாம் இருக்கோலியோ?"

"இருக்கு ஸவாமிகள் இருக்கு!"

"அப்படின்னா மந்திரத்தைச் சொல்லி திதியை முடிச்சுபிடறேன். சாமானையெல்லாம் ஒரு கைவண்டியில் அனுப்பிச்சிடுங்கோ. நானென் பிள்ளையாண்டானை வரச்சொல்றேன் பிறகு."

"அப்பிடின்னா, சொல் [illegible] ய் திரத்தை" [illegible] ருள்

"சுக்லாம் [illegible] மாக,

இந்தக்காட்சி நம்நாட்டிலே நடக்கக்கூடியது. நடந்துகொண்டும்இருக்கிறது. 'கல்கி'யில்கூட இந்த காட்சி சித்தரித்து காட்டப்பட்டிருந்தது சிலதிங்களுக்கு முன்னர்.

மேலே கண்ட பரிதாபகரமான—ஏன்-வெட்கப்பட வேண்டிய காட்சியைக் காணும் இளைஞன் இன்னொரு காட்சியை தன் மனத்திரைக்குக் கொண்டு வரலாம்.

"ஹலோ! யாரது"

"நான்தான் சார், ஒளியழகன்"

"ஓ! நீயா, என்ன காரணம்?"

"உடல் நலம் சரியாக இல்லை"

"இங்கு வரத்தானே இயலாது"

"ஆமாம்"

"அப்படியானால் இன்றைய பாடத்தை 'டெலிபோனிலேயே' கூறிவிடுகிறேன்"

* * *

அடுத்து "ஸ்டெதஸ் கோப்"—நாடி பார்க்கும் கருவி நம் மனக்கண் முன் நிற்கிறது. "டப்...டப்" என்று அடிக்கும் இதயத் துடிப்புகள் அதன் மூலம் மருத்துவ நிபுணரால் அறியப்படுகிறது. ஒருவன் நோய் வாயில் கிடக்கிறான். அந்த நோயாளி பழனி மலையில் இருக்கும் பழனியாண்டியை வேண்டின போதிலும் பக்கத்துத் தெருவிலிருக்கும் பழனியாண்டி எனும் மருத்துவ நிபுணரை நாடத்தான் செய்கிறான். பழனிப் பஞ்சாமிர்தத்தில் நம்பிக்கை வைப்பவன் "பென்சிலின்" மருந்தில் நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறான். பூசாரியின் உடுக்கையிலே நம்பிக்கை வைப்பவன் மருத்துவரின் "ஸ்டெதஸ் கோப்"பிலே நம்பிக்கை வைக்காமல் இல்லை.

ஸ்டெதஸ் கோப் — உடுக்கை

மருத்துவர் — பூசாரி

"பென்சிலின்" — பஞ்சாமிர்தம், இவைகள் ஒன்றுக்கு ஒன்று இரு துருவங்கள்—என்றும் சந்திக்க முடியாத இரு துருவங்கள். பாமரனின் உள்ளம் உடுக்கை, பூசாரி, பஞ்சாமிர்தம்—இவைகளில் நம்பிக்கை ...லும்கூட காலத்தின் வேகம் ...கோப்"—பென்சிலின்-மருத்துவர் — இவைகளில் ஓரளவு நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறது.

டி. சு... ராமதாஸ்... சி. எஸ். இராம... பொள்ளாச... ...ரிட் ...ழநாட்

அடுத்த காட்சியிலே தன்னொளியைப் பரப்பிடும் வெண்மதி தன் முழு உருவத்துடன்! அது ஓர் கோள்! கிரகணம் கோள்களின் அசைவினால் ஏற்படுகிறது. இது விஞ்ஞானம் கூறும் உண்மை, சந்திரனைப் பாம்பு கௌவிக்கொள்வது, அதுதான் கிரகணம். ஆகவே அந்தப் பாம்பு சந்திரனை விடும்வரை மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ஆற்றங்கரையோரத்திலே நின்று கொண்டிருக்கவேண்டும். கோளங்களின் கோளாறுகளினால் வெண்மதி மறைக்கப் படுவதைப் பார்ப்பதற்காக ஒரு விஞ்ஞானி தன்னுடைய கையில் 'தொலைநோக்கு ஆடியை" வைத்திருக்கிறான். அதே நேரத்திலே ஓர் "மெய்ஞ்ஞானி" தன்னுடைய விரல்களை மூக்கிலே வைத்திருக்கின்றான். இந்தவேறுபாடான காட்சியையல்ல—முரண்பாடான காட்சிகள் இரண்டும் இந்த நாட்டில் படித்தவர்களிடத்திலேயே அமைந்திருக்கின்றன.

சக்கரம், ரயில், கப்பல், விமானம், ரேடியோ, டெலிவிஷன், சந்திரமண்டலபயணம்— இவைகள் தான் அவர்கள் வளர்ச்சியடைந்துள்ள பட்டியல், ஆழி கொண்ட பெருமானைக் காணல், வியாழனன்று கருடனை தரிசித்தல், மாலையிலே

(5-ம் பக்கம் பார்க்க)

காணமுடியாத சர்வாதிகாரம்!

திராவிடர் கழககொள்கைகளுக்கு மாறாக தனக்குத்தான் செய்வது தகாதது என மனப்பூர்வமாகத் தெரிந்திருந்தும், பலர் வேண்டுகோளுக்கு எதிராகவும், 10—7—49 மத்திய திராவிட கழக நிர்வாகக் கமிட்டிக கூட்டம் நடப்பது நன்றாகத் தெரிந்திருந்தும் பல அரிய தியாகங்கள் செய்த தொண்டர்கள் மனம் பதற திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் தான் வகிக்கும் திராவிடர் சமுதாய நிரந்தர தலைவர் பொறுப்பையும் மீறி, உலகத்திலேயே காணமுடியாத சர்வாதிகாரத்தைக் கொண்டு திராவிட நாட்டுப் ...களுக்கு இழிவேற்படும் வகையில் மணஞ்செய்துகொண்டதை யொட்டி பெரியாரின் தலைமையின் கீழ் தொண்டாற்ற விருப்பமில்லை யென்பதோடு, உடனே மத்திய நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்பில்—அ. பெ. தர்மலிங்கம்
தி. க. மத்திய நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்.

திருத்தம்

கடந்த (7—8—49) வார இதழில் 13-ம் 14-ம் பக்கங்களில் "கண்ணீர்த் துளிகள்" தலைப் பின்கீழ் சில ஊர்களும், கழகத் தோழர்கள் பெயர்களும் தவறுதலாக மீண்டும் அடுத்த பக்கத்தில் 'மறுமுறையும்' வந்துவிட்டது. அச்சுக் கோக்கும் தோழரின் தவறு காரணமாக ஏற்பட்ட பிழையைத் திருத்திப்படித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(ஆ. ர்.)

செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்டு
A. S. 36/49.

வெங்கடாசல நாயகர்--அப்பீல்வாதி.
மஹம்மதலிசாயபு — வகையறா
அப்பீல் பிரதிவாதிகள்.

நோட்டீஸ்

ஷை அப்பீல் 2-ம் அப்பீல் பிரதிவாதி கன்னிஸாக்கு,

அப்பீல்வாதி செங்கல்பட்டு சப் கோர்ட்டு os 69/47 ஜட்ஜ் மெண்டுக்குமேல் ஷை அப்பீல் தாக்கல் செய்து ஷை அப்பீல் வாய்தா 19—8—49-ல் போடப்பட்டிருக்கிறது. அன்று நீங்கள் கோர்ட்டில் ஆஜராகத்தவறினால், எக்ஸ்பார்ட்டி செய்யப்படுவீர்.

ஜீ. கிருஷ்ணமாச்சாரியார்,
அப்பீல்வாதி வக்கீல்.

...d & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M: 4642.

767 / 3-ம

...ந்தா விபரம் — ஆண்டு ரு 7, „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம் விலை இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 21—8—49 | இதழ் 8

மாஜி கடவுள்
1.



ஜூ[illegible]வஸ்

மாஜிக் கடவுள்கள்
16-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படிப்பட்ட ஆற்றலைக் காட்டிய ஜூவஸ், ஆண்டவனானான். அதற்குப் பிறகும், ஜூவஸ், அசுரர்களுடன் போர் புரியவும், தன் ஆதிக்கத்தை எதிர்த்த தேவர்களுடன் போர் புரியவும் நேரிட்டது. எல்லாவற்றிலும், ஜூவஸ் வெற்றி பெற்றான். எனவே, அவன் ஆதிக்கத்துக்கு அண்டம் அடங்கிற்று.

இத்தகு, கதைகளை, புண்ய கதைகளாகக் கொண்டு, நெடுங்காலம் வரையில், கிரேக்கமக்கள், ஜூவஸைப் பூஜித்து வந்தனர்.

கடவுள் எனத் தொழுகிறோமே, தாய் தந்தை, பாட்டன், பாட்டி, என்று குடும்பம் கற்பிக்கிறோமே, வம்சாவளிக்குக் கதை கூறுகிறோமே, சரியா, என்று, புராணீகனும் எண்ணவில்லை, மக்களும் எண்ணவில்லை. அவ்விதமான எண்ணமே, நாத்தீகமாகக் கருதப்பட்டது.

ஒலிம்பஸ் மலையையும் அதன் மீதமர்ந்து அண்டத்தைப் பரிபாலிக்கும் தேவனையும் குறித்து, சந்தேகப்படுபவன், சண்டாளனாகக் கருதப்பட்டான். காவியங்கள் புனைந்தனர், ஜூவசின் அருமை பெருமை பற்றி! பூசைகள் ஏராளம்! மலைமலையாகக் காணிக்கைகள்! மந்தை மந்தையாக மெய்யன்பர்கள்! கோயில்கள் பிரம்மாண்டமான அளவில்! இவ்விதமான கோலாகலத்துடன் கிரேக்க மக்களின், கருத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த, ஜூவசுக்கு, இன்று, என்ன மதிப்பு தருகின்றனர், கிரேக்க மக்கள்! கடவுள், என்ற நிலையே இல்லை. கடவுள், இப்படிப்பட்ட குணமும் செயலும், கொண்டவராக இருக்கமுடியாது. குடும்பக் கலகமும் கொடிய ஆயுதம் கொண்டு கொல்வதும், ராஜ்யத்தைப் பிடிப்பதும், ரணகளத்தில் உழல்வதுமாக, இருப்பது, ஆண்டவனுக்குரிய இலட்சணமல்ல, மக்களின் மதியில் மூடுபனி மிகுந்திருந்தபோது மூண்டெழுந்த அச்சமும் ஆவலுமே, இவ்விதமான கற்பனைகள் முளைக்க இடமளித்தது. இயற்கையின் கோலாகலத்துக்கு விளக்கம் கிடைக்காத போது, பிரபஞ்ச உற்[illegible]த்திக்கு காரணம்விளங்காதபோது [illegible]ர் பலவிதமான, கற்பனைகளைக் [illegible]ணமாகக் கொள்ளத் தொடங்கி[illegible] ஒலியும் ஒளியும் அவர்களுக்கு, பயத்தை மூட்டிற்று! புயலும் மழையும் அவர்களுக்குப் பீதியைத் தந்தன! உயரமான மலைகளும், விரிந்து பரந்து கிடந்த கடலும் அவர்களுக்கு ஆச்சரியமூட்டின. இந்த அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு, பல கடவுள்கள், விண்ணில் இருந்து தீர வேண்டும் என்ற எண்ணம் உதித்தது.—பயம்பிறந்தது—பக்தி உதித்தது—கடவுள்களைச் சாந்தப்படுத்த வேண்டும், சந்தோஷப்படுத்தவேண்டும், உதவி பெறவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது, பூஜாரிகளாயினர் தந்திரமிக்கோர், மக்களின் அச்சத்தையும் ஆவலையும் அடிப்படையாகக் கொண்டு, கற்பனைக் கதைகளைச் சோத்தனர், புலவர்கள்; பூஜாரிகள், இவைகளைப்புண்ய கதைகளாக்கினர்; கோயில்கள் கட்டப்பட்டன; கூட்டம் கூட்டமாகக் கடவுள்கள் அமைக்கப்பட்டனர்.

இந்த அஞ்ஞானம் தொலையவும் மெய்ஞானம் பிறக்கவும், பகுத்தறிவாளர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

இப்படி எல்லாம் இருக்க முடியுமா, என்ற எண்ணம் தோன்றிய போதே, பயத்தால் நடுநடுங்கிப் போனவர்கள், எவ்வளவு பேரோ! மெல்லியகுரலில், மெத்த வேண்டியவர்கள் என்று நம்பிக்கொண்டு, சிலரிடம் கூறி, அவர்களாலேயே, பித்தன் என்றும் பேய்ச்சித்தன் என்றும் பழிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர்களோ! காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள், எத்தனைபேர்களோ! துணிந்து, பலரறியத் தமது சந்தேகத்தைக் கூறி, எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி, அதனால், சித்ரவதைக்கு ஆளானவர்கள், எவ்வளவு பேரோ!

பலிபீடத்தில ஏராளமான இரத்தம் சிந்தப்பட்ட பிறகே, பகுத்தறிவாளரின், குரல், மக்கள் செவியில விழவும், பாமரரின் சிந்தனையில் தெளிவு பிறக்கவும் முடிந்தது. கடவுள்கள் என்ற நிலைபெற்ற கற்பனையுடன் அறிவு, மோதுதல் செய்ய வேண்டி நேரிட்டபோது, பாமரமக்கள், கற்பனையின் பக்கம் தானே திரண்டு நிற்பர்! பாமரரின், பகையினால், வீழ்ந்தவர் போக, மிச்சமிருந்த பகுத்தறிவாளர்கள், தாக்குமேடைக்கும் அஞ்சாது, உண்மையை உரைத்தனர்—உழைத்தனர்—வாதிட்டனர்—போரிட்டனர்—வென்றனர். ஜூவஸ், மாஜி கடவுளானார்! அறிவு வென்றது! அஞ்ஞானம் தொலைந்தது!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

திருத்தியமைப்பதென்பது மாகா[illegible] அரசாங்கத்தாரால் எங்கே முடி[illegible] போகிறது? ஏன்—எதற்காக அவ[illegible]தம் செய்யவேண்டும்? என்ற எ[illegible]ணம் மாகாண சர்க்காருக்கு ஏற்[illegible]டாமல் இருக்கமுடியுமா?

மாகாண சர்க்கார்களின் வருமா[illegible] வாய்க்கால்களை மத்திய சர்க்கா[illegible] தன் பக்கம் திருப்பிக் கொள்ளு[illegible]யானால், அந்தந்த மாகாண சர்க்கா[illegible]கள் தங்கள் விருப்பத்தை ஆற்றி[illegible] கொள்ளும் வகையெப்படி ஏற்ப[illegible] முடியும்? இன்றைய நிலையி[illegible] மாகாண சர்க்கார்களின் அதிகார[illegible]களைப் பறித்து, அவைகளைத் [illegible]கள் கைக்குள் அடக்கி வைத்து[illegible] கொள்ளும் போக்கிலேயே இன்றைய இந்திய அரசாங்கம் அப்போதைக்கப்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒவ்வொரு நடவடிக்கையும், அந்தந்த மாகாணங்களின் "சுதந்திர நிலை" மீது வீசப்படும் அம்புகளாகவே இருக்கின்றன! "நாட்டு நலன்" என்ற சொல்லை வீசி விட்டு, மாகாண சர்க்கார்களை "ஒன்றும் பேசமுடியாதபடி செய்து விட்டு" தங்கள் ஏதேச்சாதிகாரப் பார்வையில் "ஆடும் பொம்மைகளாக" மாகாணங்களை வைக்கவே மத்திய சர்க்கார் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்!

நம்மிடம் வளம் இருக்கிறது. இருந்தும் "இல்லாதவர்களாக"த் திண்டாடுகிறோம். வடநாடு வளர்ந்து கொண்டே போகிறது. பணச்சோலையின் மணம் அங்கு பரிமளித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கான ஆதரவு "எருவை"யும் அரசாங்கம் "அவர்களுக்கு" அளித்துக் கொண்டே இருக்கிறது, திரைமறைவில்!

நமதுநாடு, ஏற்றுமதிச் செல்வம் நிரம்பி, புதைபொருள் செல்வம் வழிய இருக்கிறது. இருந்தும், அவை 'அவர்களின்' பணச்சோலைக்கே பயன் அளிக்கும்படி திருப்பிவிடப் படுகின்றன! இதற்கு வடநாட்டுப் பணமூட்டைகளின் சார்பில் உள்ள மத்திய ஆட்சி வகைசெய்கிறது!

இந்நிலை மாறுவதென்று? வளமிருந்தும் வாழவகையில்லாத நிலை மாறுவதெப்போது?

சிந்திக்க வேண்டுகிறோம், 'பிரிவினை' என்றால் சினம் கொள்ளும் தோழர்களை!

இருந்தும்—இல்லாதவர்கள்!

"வளமார் எமது திராவிடநாடு!" என்று நாம் கூறும்பொழுது பலருக்கு, திராவிடத்தின் வளங்கள் பற்றிய தெளிவு ஏற்படுவதில்லை. 'ஏதோ இதுவும் ஒருபாட்டு' என்று மட்டுமே கருதுகின்றனர். அது மட்டுமின்றி திராவிடநாடு பிரிந்து நின்றால், வாழமுடியுமா, அதற்கு வகையிருக்கிறதா என்று கேள்வி ரூபத்தில், கிண்டலைக் கிளப்புகின்றனர்.

திராவிடம்—சென்னைமாகாணம்—தனித்தியங்கும் பெருமை கொண்டது என்பதை, ஒருமுறை இருமுறை அல்ல, பலதடவைகள் எடுத்துக் காட்டியுள்ளோம். 'வாழ வழியிருக்கிறது ஆனால் வகைதான் இல்லை. அந்தவகையைக் காணுவோம் வாரீர்!' என்பதே நமது திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சிய கீதத்தின் பொருள் என்பதையும் எத்தனையோ முறை எடுத்துக் கூறிவந்துள்ளோம்.

ஒரு நாட்டின் வாழ்வுக்கு நிலவளம், நீர்வளம் தேவை—அது இருக்கிறது நம்மிடம் பெருமிதமாக.

அந்நாட்டின் வளர்ச்சிக்கு தொழில்வளம் தேவை—அதுஇல்லை நம்மிடம். ஆனால் அதற்கான வகைகள் வசதிகள் கொழித்துக்கிடக்கின்றன பெருமைப்படத் தக்கவகையில்.

வளம் உண்டு, ஆனால் வகையில்லை!

ஏன், இந்த நிலை என்பதன் எதிரொலியே நமது பிரிவினை முழக்கமாகும்!

தொழில் வளம் பெறுவதற்கான மூலப் பொருள்கள், ஏராளமாக இருக்கின்றன. இரும்பு, பொன், நிலக்கரி எல்லாம், கிடைக்க வழியிருக்கிறது. இருந்தும் நம்மால் முன்னேற முடியவில்லை! தொழில் வளம் வளர வகையில்லை!

காரணம். வடநாடு 'பணத்தோட்டம்' ஆக ஆகிவந்தது—வருகிறது. தொழிற்சாலைகள் வளர்ந்து விட்டன. தொழில் துறையில் அதன் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது, அஞ்சும் விதமாக அதிகரிக்கும் வடநாட்டின் தொழில் ஆதிக்கத்துக்கு வேண்டிய சலுகைகளை இந்திய சர்க்கார் வேண்டிய அளவில் அளிக்கின்றனர்.

அளிப்பதற்கான வழிகளை மத்திய சர்க்கார் "அதிகாரங்கள்" என்ற உருவில் அதிகமாக்கிக் கொண்டே வருகின்றனர்.

வடநாடு பணபலம் படைத்து விட்டது. தொழில்வளம் பெற்று விட்டது. அரசியல் ஆதிக்கம் அடைந்துவிட்டது. ஆட்சியின் கைப்பிடி "அவர்கள்" கையில் இருக்கும் காரணத்தால் ஆதிக்கவளர்ச்சியை அதிகமாக்கிக் கொண்டே வருகின்றனர்.

"ஏக இந்தியா" என்ற சொல்லை ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு, மத்திய சர்க்கார், மாகாணவளங்களைத் தன் கண்காணிப்பில் வைக்கும் ஆசையைச் சாதித்து வருகிறது.

* * *

திராவிடம் —சென்னைமாகாணம் —இந்தியாவிலேயே சிறந்து விளங்கும் மூலப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகும். இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில்,

மைக்கா
மாங்கனீஸ்
வேர்க்கடலை
தேயிலை,
புகையிலை,
மிருகத் தோல்கள்,

பெரும்பாலும் சென்னை மாகாணத்தில் கிடைக்கும் பொருள்களே ஆகும். இவைகளில் நம் மாகாணத்தில் கிடைக்கும் மைக்காவும், மாங்கனீசும்' உலகிலேயே சிறந்தவையென்று கூறப்படுகிறது. வெளிநாடுகளுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முந்திரிப் பருப்புக்கு சமீபத்தில் அதிகக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் முந்திரிப் பருப்பின் அளவு வர, வர அதிகமாகிக்கொண்டே வருகிறது. எதிர்காலத்தில் இன்னும் பன்மடங்காகும் என்பதற்கான நல்ல சூழ்நிலையும் தென்படுகிறது.

இது மட்டுமல்ல, இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் வளர்வதற்கான, அதிகம் ஆவதற்கான வழிவகைகளும் தென்படுகின்றன.

பிரிட்டன் தனக்கேற்பட்டுள்ள டாலர் நெருக்கடியின் விளைவாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்துவரும் புகையிலையை நிறுத்திக்கொள்ளத்திட்டமிட்டிருக்கிறது. எனவே தனக்குத் தேவையான புகையிலைப் பொருள்களை, இனி பிரிட்டன், டொமினியன் நாடுகளிலிருந்தே வரவழைத்துக் கொள்ளும்படியாக ஏற்படும். அந்நிலை ஏற்பட்டுப் போவதால் தனது புகையிலை வியாபாரத்தை மிகவும் சிறந்த முறையில் நடத்த டொமினியன் நாடுகளில் ஒன்றான இந்தியாவுக்குச்சந்தர்ப்பம் ஏற்படும். இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகுமேயானால், புகையிலை உற்பத்தியில் சிறந்துநிற்கும் சென்னை மாகாணமே முன்னணியில் நின்று விளங்கும். சென்னையிலும், 'குண்டூர் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் புகையிலையின் தரம் உலகிலேயே மிகச் சிறந்ததெனக் கருதப்படுகிறது—வர்ஜீனியா புகையிலையை விடத் தரத்தில் உயர்ந்தது என்று மதிப்பிடப்படுகிறது! எனவே, இவ்வளவு வளம் நிரம்பியதாகத் திராவிடம் இருக்கிறது. உலகில் பெருமைப் படத்தக்க ஏற்றுமதிப் பொருள்களை உண்டாக்கும் இடமாக,

கிடைக்கமுடியாத மாங்கனீசும் மைக்காவும் கிடைக்கும் இடமாக இருக்கிறது! உலக நாடுகளின், முதல் வரிசையில் வரக்கூடிய, பெருமை பெறத்தக்கதாக இருக்கிறது!

* * *

நாட்டின் தொழில் வளம் ஓங்குவதற்கான மூலப் பொருள்கள் நம் மாகாணத்தில் நிறைந்து கிடக்கின்றன. வேண்டிய அளவு சுரங்கப் பொருள்கள் கிடைக்கும் இடங்களைக் கண்டுபிடிக்க இன்றைய ஆட்சியாளர் போதிய சிரத்தை எடுத்துக் கொள்ளாமலிருந்தும்கூட, பூமிக்கடியில் கிடைக்கும் செல்வங்கள் நம் மாகாணத்தில் ஏராளமாக இருக்கின்றன. என்பதற்கான தோற்றங்கள் தென்பட்டு வருகின்றன.

தொழில் வளம் பெருக வேண்டுமேயானால் அதற்கான மூலப் பொருள்கள் முக்கியம். ஒரு நாட்டின் செல்வம் அங்கு கிடைக்கும் இரும்பு, நிலக்கரி, முதலாய சுரங்கப் பொருள்களேயாகும். பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் இத்தாதுப் பொருள்களைக் கண்டு பிடித்து, அவைகளைத் தோண்டி எடுக்க வேண்டிய சிரத்தையும் பொறுப்பும் இருக்கவேண்டியது அந்த நாட்டு அரசாங்கத்தின் கடமையாகும். இந்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இத்துறையில் இதுவரை அவ்வளவு போதிய கவனம் செலுத்தப்படவே இல்லை—அதற்கான முக்கியத்துவமும் அவ்வளவாகக் காட்டப்படவில்லை!

இருந்தும், சில இடங்களில் பூமி ஆராய்ச்சியாளர் செய்த சோதனைகளிலிருந்து நம் மாகாணத்தில் நல்ல, சுரங்கப் பொருள்கள் கிடைக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. உலகிலேயே மிகச் சிறந்த, பல தொழில்களுக்குப் பயன்படக்கூடிய, பழுப்பு நிலக்கரி பெருமிதமான அளவில் தென்ஆற்காடுமாவட்டத்தில் கிடைக்கும் என்று சமீபத்தில் காணப்பட்டுள்ளது. இந்திய பூமி ஆராய்ச்சி டைரக்டரான டாக்டர் வெஸ்டு, தென்ஆற்காட்டில் கிடைக்கும் 'லிக்னைட்' (பழுப்பு நிலக்கரி) பொருள் பற்றி விடுத்துள்ள விபரமான அறிக்கையில் அங்கு கிடைக்கும் பொருளால் எவ்வளவு தூரம் பயனும் பலனும் பெறமுடியுமெனத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

எனவே, இதுபோன்ற புதை பொருள்களைக்கண்டுபிடிக்கும் வேலையில் இந்திய பூமி ஆராய்ச்சியாளர் உற்சாகத்துடன் இறங்குவார்களேயானால்—நம் மாகாணத்தின் 'சுரங்க வளம்' இன்னும் பெருக வழியேற்பட முடியும். அப்படி ஏற்படுவதற்கான வசதிகளை அளித்து பூமி ஆராய்ச்சி இலாகாவை உற்சாகமூட்ட வேண்டியது சர்க்காருடைய பொறுப்பாகும். அது மட்டுமின்றி நம் மாகாணத்தைப் பொறுத்தமட்டில் சென்னை—பூமி ஆராய்ச்சிக்கென இருக்கும், சோதனைச்சாலை (Laboratory)-யை வசதிகள் நிரம்பியதாகச் செய்யவேண்டியது மிகமிக முக்கியமாகும். தற்போதிருக்கும் சோதனைச்சாலை மிக மிகச் சிறியது. சாதாரண சோதனைகளை மட்டும் நடத்தக்கூடிய வசதிகள் உள்ளது. எனவே, நம் மாகாணத்தின் புதை பொருட் செல்வங்களைக் கண்டுபிடிப்பதற்கான, வசதிகளை பூமி ஆராய்ச்சியாளருக்குச் செய்து தரவேண்டிய பொறுப்பு மிகவும்முக்கியமானது—அவசியமானது. ஆனால், இந்த இலாகாவோ இந்திய சர்க்காருக்கு—மத்திய சர்க்காருக்கு — கட்டுப்பட்டதாகும்.

மாகாணத்தின் வளம், வளர்ச்சி செய்யப்பட வேண்டும் என்ற அக்கரையும் ஆர்வமும் அம்மாகாணச் சர்க்காருக்கே இருக்க முடியும். ஆனால் அங்ஙிலையில் மாகாணச் சர்க்கார்கள், இருக்கிறதா, இருக்கும்படி மத்திய சர்க்காரால், வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், கிடைக்கும் பதில் பரிதாபமாகவே இருக்கிறது!

ஆங்காங்கு கிடைக்கும், தாதுப் பொருள்களின் பயனை அந்தந்த மாகாணங்களே அடையவேண்டும், அப்படியிருந்தால்தான், தன் மாகாணத்தில் கிடைக்கும் தாதுப் பொருள்களைக் கொண்டு, தனக்கான பலன்களைப் பெறமுடியும், அந்த மாகாண சர்க்காரால். இதுதான் நாட்டு வளர்ச்சிக்குப் பயனாட்டுவதாக இருக்கும்.

ஆனால் நிலைமை அப்படியிருக்கிறதா?

இல்லை என்பது மட்டுமல்ல; இந்த விஷயங்களில் மத்திய சர்க்கார் தனது ஆதிக்கத்தை அதிகரித்தும் வருகிறது.

புது டெல்லியில் கடந்த ஜூலை 23-ந் தேதி மாகாணப் பிரதமர்கள், நிதிமந்திரிகள் ஆகியோரும் அரசியலமைப்பு நகல் கமிட்டியும் அடங்கிய மாநாடொன்று நடைபெற்றது. அது போது இந்தியாவின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அந்தப் பகுதியிலிருக்கும் தாதுப் பொருள் சுரங்கங்களை மத்திய சர்க்கார் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த முடிவு கூடாது—அடாது; இதனால் மாகாணங்கள் பெறக்கூடிய வருமானங்கள் பாதிக்கப்படும் என்பதாகக்கூறிச் சில மாகாணப் பிரதமர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து இந்த முடிவைஏற்கமுடியாது என்று மறுத்துள்ளனர். ஆனால் நாட்டின் நன்மைக்கு இந்த முடிவுதான் நல்லதென்றும் இப்படியிருந்தால்தான் மேற்படி சுரங்கப் பொருள் முன்னேற்றம் பற்றி ஒரே விதமான கட்டுப்பாடு ஏற்படுமென்றும் பதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரேவிதமானகட்டுப்பாடுஇருக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டதன் கருத்து, மாகாணங்கள் தனிப்பட்ட முறையில் வெளியாருடன் ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டும் என்பதாகும். இப்படித்தனித்தமுறையில்ஒப்பந்தங்கள் செய்யப்பட்டால் அது "நாட்டின் நலன்களுக்கு நாசம் விளைவிக்கும்" என்று கூறப்பட்டு இந்த முடிவை ஏற்கமறுத்தவர்களின் வாய் அடைக்கப் பட்டு எந்த மாகாணத்திலிருந்தாலும் அங்கு கிடைக்கும் சுரங்கப்பொருள்கள் மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டுக்கே உரியன என்பதாக முடிவுசெய்யப்பட்டுவிட்டது.

எனவே, மேற்படி சுரங்கங்கள் பற்றி அந்தந்த மாகாண சர்க்கார்களுக்கிருக்கவேண்டிய பொறுப்பையும் மத்திய அரசாங்கமே "நாட்டுக்கு நன்மை" என்ற கூற்றின் பேரில் பறித்துக்கொண்டுவிட்டது.

ஆகையால் மாகாண அரசாங்கங்கள், சிரத்தைகொள்ளவோ, ஊக்கம் பெறவோ வழி யேற்படுவதற்கில்லை.

இந்நிலையில் நம்மாகாணத்திலுள்ள சுரங்கப் பொருள் ஆராய்ச்சிச் சோதனைச் சாலையை நல்லதாகத்

(2-ம் பக்கம் பார்க்க)

பாலைவனம் சோலைவனமாக!

★ ★ ★

"பாலைவனம் சோலைவனம் ஆகிடவும் வேண்டும் — அங்கு பைங்கிளிகள் பாடிடவும் வேண்டும்!"

ஆகஸ்டு 15. சுதந்திர நாள் விழா. அன்று இசையரசு அவர்களின் இந்தப் பண், வானொலி மூலம் காற்றில் தவழ்ந்துவந்தபோது காதுக்குமட்டுமல்ல, கருத்துக்கும்சுவையூட்டுவதாக இருந்தது. பாலைவனம் சோலைவனம் ஆகிடவேண்டும்; அருமையான ஆசை. வறண்ட பாலையை வளங்கொழிக்கும் சோலையாக ஆக்கிட வேண்டும்! சாத்தியமற்ற செயல் அல்ல. அட்லாண்டிக் சமுத்திரம் தொடங்கி நைல் நதி பள்ளத்தாக்கு வரையில், வடஆப்பிரிக்காவில், 3000 மைல்கள் பரந்து கிடக்கும் சஹாரா பாலைவனத்தைப் பசுமை நிரம்பியதாக ஆக்க மேல்நாட்டு அறிஞர்கள் திட்டங்கள் தீட்டிக் காட்டும் பொழுது, பாலையைச் சோலை ஆக்குவது 'பகற்கனவு' ஆகிவிடமுடியாது!

பாலைவனம் சோலைவனம் ஆகி, அங்கு பறக்கும், பைங்கிளிகள் பாடிடவும் வேண்டும்—நல்ல இலட்சியம். நாடு பாலைவனம் ஆக இருக்கிறது. அது சோலைக்காடாக ஆக வேண்டும். அங்கு, தொல்லைகள் மறைந்து, மக்கள் குயில்களாகப்பாடி, ஆடவேண்டும். பாட்டின் கருத்து பாராட்டத்தக்கது. மணற் காட்டை, மனமயங்கும் தோட்டம் ஆக்கினால் அதைக் கண்டு மகிழாதார் இரார்—செயல் சீரியது என்பதால்.

பாலையைச் சோலையாக்குவதற்குப் பதில், சோலைவனம் பாலைவனம் ஆக ஆகிக்கொண்டிருந்தால்......?

சிந்திக்க வேண்டிய கேள்வி. செய்யமுடியாதகாரியத்தைச்செய்து முடித்தால், எவர் இதயமும்இன்பங்கொள்ளவே செய்யும். அதற்குப் பதில் இருப்பதையே கெடுத்து, சோலையின் அழகை ! சூறாவளி கொள்ளச் செய்து, இருக்கும் மரங்கள் வீழ, மணம் தரும் மலர்ச் செடிகள்மறைய,பொலிவிழந்ததாகப் பூவனம் ஆனால் — ஆக்கப்பட்டால், இருந்ததும் உருப்படியாகாமல் போயிற்றே என்ற ஏக்கமும் அதன் விளைவாக எரிச்சலும் ஆத்திரமும் எழும்பும்!

இருநூறு ஆண்டுகள், தங்களின் பிடியிலே சிக்குண்டு, சுகபோகச் சுரண்டலுக்கு ஆளாகிக் கிடந்த, இந்திய உபகண்டத்தை விட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன், இனியும் தங்கள் எண்ணம் நிறைவேறாது, அதற்கு உலகச் சூழ்நிலையில் வகையில்லை என்று கண்டதும் "சுரண்டியது போதும், சொல்லிக்கொள்ளாமல் வெளியேறுவோம்" என்று ஆங்கிலேயர்கள் வெளியேறினர். ஆங்கில ஆதிபத்தியம், நாட்டில் அடியெடுத்து வைத்த வகையும்,பின்ஆட்சிப்பீடம்அமர்ந்த கதையும் அவர்களின் ஆட்சி வரலாறு அறிவிக்கும்.

வியாபார ஆசையுடன் வந்த அவர்கள் விருப்பம், திசை மாறி, செங்கோலோச்சும் அளவில் சென்றது. செல்வதற்கான வகையில் அப்போது இந்தியாவின் நிலையும் இருந்தது. செங்கோல் செலுத்தும் ஆசை எழும்பவும், அதற்கான வசதிகளும் வழிகளும் இருக்கவும், அவர்கள் ஆதிபத்தியம் உருவாக வழியேற்படலாயிற்று.

இரண்டு நூற்றாண்டுகள்! இந்தியாவின் வரலாறும், வளர்ச்சியும் மாற்றியமைக்கப்பட்ட இரண்டு நூற்றாண்டுகள்! இந்த இருநூறு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளை மனத்திரையில் படம் பிடித்துப் பார்த்தால், சோலைவனமும், பாலைவனமும்! பாடலைக் கவனத்தில்வைத்து நோக்கினால் பலப்பல உண்மைகள் நமக்கு விளங்கும். ஆண்டது, அந்நிய ஆதிபத்தியம்தான், என்றாலும், அவர்களின் ஆட்சிக் காலத்திற்கு முன் நாடு எப்படியிருந்தது? சோலையாக இருந்ததா? அல்லது சோலை, பாலையாக மாறி வந்ததா என்பதை நாம் ஒரு சிறிது சிந்தனைக்குக் கொண்டு வரவேண்டும்—விளைவுகள் பல பாடங்களை நமக்குத் தரும் என்பதால்.

ஆங்கிலேய ஆட்சியின் பலனாக இந்தியா பல நன்மைகள் அடைந்திருக்கிறதென்பதை நெஞ்சில்கைவைத்துப் பார்த்தால் விளங்கும். அவர்கள் "நாட்டை அடிமை கொண்டோம்; இருக்கும் எல்லாவற்றையும் சுரண்டிக்கொண்டே போவோம்" என்ற அளவில் அவர்கள் இருக்கவில்லை.

வேலி அடைப்பு எதுவுமற்று மாடுகள் மேயவும் மந்தைகள்,தேங்கவும் ஆக இருந்த தரிசுமனையைக் கண்ட ஒருவன் அதில் கிடைக்கும் புல் மட்டும் போதும் என்று கருதாமல், நான்கு புறமும் மதில்கள் எழுப்பி, மனதைக் கவரும் வண்ணமாக ஒரு சினிமாக் கொட்டகையைக் கட்டினால் எப்படி இருக்குமோ, அப்படியே நாட்டை அவர்கள் ஆக்கினார்கள். இதனால், பலன் அவர்களுக்குக் கிடைத்தது; இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. நாட்டை நல்ல முறையில் ஆக்கியதன் விளைவாக அவர்களுக்கு "லாபம்" கிடைக்கத்தான் செய்தது. அதற்காகவே தான் அவர்கள் அந்த நல்ல காரியங்களையும் செய்திருக்கலாம். இதை நாம் மறுக்கவில்லை.

இருநூறு ஆண்டுகள் அவர்கள் ஆட்சியில் இந்தியா "ஏக இந்தியா" ஆக முடிந்தது! எத்தனையோ மைல்களுக்கப்பாலிருந்தாலும் அங்கிருந்தெல்லாம் செய்திகளைப் பெறும் வசதிகளைப் பெற்றோம். காற்றினும் கடிது சென்று தகவல் தரும் வசதிகள், மின்னெத்தனும் எதிர்சென்று பிரயாணம் செய்ய இரயில்வண்டிகள், பொருள்கள் பல இடங்களுக்கும் தட்டுத்தடங்கலின்றிக்கிடைக்கக்கூடியசவுகரியங்கள். எல்லாம் அவர்கள் ஆட்சியில் ஏற்பட்டவை என்பதை நாம் மறக்கக்கூடாது.

இந்த நேரத்தில், இருநூறு ஆண்டுகளுக்குமுன் நாமிருந்த நிலை

யையும் கொஞ்சம் கவனத்தில் வைக்கவேண்டும். கட்டை வண்டி ஏறி மாதம் காதமாக நாம் அப்போது போய்க்கொண்டிருந்தோம். புறாவின்கழுத்தில்கட்டிவிட்டு 'தபால்களை' அனுப்பிக்கொண்டிருந்த காலம் அது! போக்குவரத்துப் பாதைகள் புழுதிமயமாக, மரங்களடர்ந்ததாக இருந்தகாலம் அது! ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப்போகவேண்டுமேயானால் அதற்கானவசதிகள் இருக்காது; அதற்குப் பதில் சங்கடங்கள் நிறைந்து இருக்கும். நூறுமைலுக்கப்பால் வாழ்பவர் யார் என்றுகூட அறிந்திருக்க முடியாத நிலையில் இருந்தார்கள் அப்போது நம்முன்னோர். இன்று காலம் மாறிவந்துள்ளது. அதுமட்டுமல்ல, அதன் வேகத்தினூடே வளர்ச்சியும் ஏற்பட்டும்வந்துள்ளது. இதை நாம் மறக்கக்கூடாது! இந்த நேரத்தில் 'பாலைவனம் சோலைவனம்' பாடல்மீண்டும் ஒருமுறைநம்கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும். வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அன்று இருந்ததுபோல நாமில்லை! ஐரோப்பியநாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட அத்தனை விஞ்ஞானமுடிபுகளும் இங்கும் இடம்பெற்றிருக்கின்றன.

"மனைக்கட்டிலிருக்கும் புல் மட்டும்போதும். மரக்கிளைகளைமட்டும் வெட்டிக்கொள்வோம்" என்று அவர்கள் நினைக்கவில்லை. அதற்குப் பதில் அந்த இடத்தில் நல்லதொரு சினிமாக்கொட்டகையைக் கட்டினார்கள். இடத்தை 60 ஆண்டு, 70 ஆண்டு என்ற கணக்கில் ஒருவன் குத்தகை எடுத்துகொண்டால், அந்தஇடத்தை எப்படித் தன் இலாபத்துக்குப்பயன்படுத்துகிறானோ, அதுபோல, அவர்களுக்குச் சொந்தமில்லாத இந்நாட்டில, சினிமாகொட்டகை எப்படி ஒருவனின் வருமானத்துக்கு வகை செய்யுமோ, அதுபோல் பல வசதிகளைச் செய்தார்கள். இரயில், மோட்டார், போக்குவரத்துப்பாதை, வானொலி, தபால் ஏற்பாடு, பல்கலைக்கழகங்கள் கல்லூரிகள், இயந்திர வசதிகள்; விஞ்ஞானக்கருவிகள்,— ஆகியவைகளை நாட்டில் பெருக்கியதில் அவர்களுக்கு லாபநோக்கு இருந்தது, அதனால்தான், இவைகளை ஆர்வத்துடன் செய்தனர், என்பதை நாம் மறக்கவில்லை. குத்தகைக்கு எடுத்தவன் அந்த இடத்தில் சினிமாக்கொட்டகையைக்கட்டினான். அவன் எண்ணம் அதன் மூலம் இலாபம் பெறவேண்டும்என்பதுதான்!

ஆனால் இங்கு நாம்கவனிக்கவேண்டியது—குத்தகை முடிந்ததும் அவன் என்ன செய்தான்? இடத்தைக்குத்தகைக்கு வாங்கியபோது எப்படியிருந்ததோ, அப்படி ஆக்கிவிட்டு, கொட்டகையைத் தரைமட்டமாக்கிவிட்டுச் சென்றானா — இல்லை! என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டதோ, அவைகள் இருக்கவே செய்கின்றன. ஆங்கிலேய ஆதிபத்தியம், நாட்டின் வளர்ச்சியில் காட்டிய ஊக்கம், அவர்கள் சுரண்டலின் அடிப்படையில்தான் என்றாலும், அதனால் ஏற்பட்டபயன்கள் பட்டுப்போய்விடவில்லை. அவர்கள் விட்டுச் சென்றவைகள் இருக்கின்றன. ஒன்றுமில்லாதபாலைபோல் இருந்தது இருநூறுஆண்டுகளுக்குமுன். அவர்கள் வெளியேறியபோது பாலை சோலையானதுபோலத்தான் இருந்தது! ஒன்றும் இல்லாத வறண்டதாக இல்லை. அவர்கள் காலத்தில் ஊக்குவிக்கப்பட்ட தொழிற்சாலைகள், வளர்க்கப்பட்ட வியாபாரங்கள் வாழ்வு வழிகள் அத்தனையும் இருந்தன. எல்லாம் அழிந்துவிடவில்லை; ஆங்கில அன்னிய ஆதிபத்தியத்தின் ஆட்சியால் நாட்டின் வளங்கள் அத்தனையும், 'அப்படியே' போய்விடவில்லை. பாலைவனம் ஆகிவிடவில்லை. வெறும் மணற்காடாக மாறிவிடவில்லை. அவர்கள் விட்டுப்போன வசதிகள், நன்மைகள், நலம்பெறும் வழிகள் இருந்தன-இருக்கின்றன. இருந்தும், இன்று ஆட்சியாளர்நாட்டைப் பாலைவனத்திலிருந்து சோலைவனம் ஆக்கவேண்டும் என்பதாகவே வீரமுழக்கங்கள் செய்கின்றனர் — என்னவோ, எல்லாம் பறிபோய்விட்டதாகவும், அதுமுழுவதையும் மீண்டும் புதிதாக ஆக்கவேண்டிய பெரும் பொறுப்புத் தங்கள் தலையின்மீதே கிடப்பதாகவும் பொருள்படும்படி.

ஆங்கிலேயர் வெளியேறியதும் அவர்கள் இந்தியாவில் அமைத்த "ஆட்சி இயந்திரம்" அப்படியேமாறிவிடவில்லை! அவர்களின் கீழ், எந்தெந்த இலாகாக்கள், எப்படியெப்படி இருந்தனவோ அவைகள் எல்லாம் அப்படியேதான் இருக்கின்றன. அப்போது வேலை செய்த அதே அதிகாரிகள்தான்! அதே சர்க்கார் இடங்கள்தான்!

நாட்டின் நிர்வாகத்தை நடத்துவிக்கும் நல்லதொருதிறமைகொண்ட அதிகாரிகளை, சர்க்கார்சிப்பந்திகளை, நாட்டுக்கு அவர்கள் பயிற்றுவித்துத் தந்துபோயிருக்கிறார்கள். நிர்வாகத் துறையில் நீண்டநாள் அனுபவம் பெற்ற நல்லதொரு குழு, இருந்துதான் வருகிறது, ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னும். ஆங்கில ஆட்சி ஏற்படுமுன் இத்தகைய சிறந்த 'ஆட்சி இயந்திரம்' இருந்ததில்லை. ஆனால், அவர்கள் வெளியேறும்போது அது இருக்கிறது. இருந்தும் பாலைவனம், சோலைவனமாக ஆக்கப்படவேண்டும் என்றுதான் கூறப்படுகிறது, காங்கிரஸ் ஆட்சியாளரால்!

எனவே, அந்நிய ஆதிபத்தியத்தால் சோலையாக இருந்த நாடு பாலையாக ஆகிவிடவில்லை. மணம் பரப்பும் மலர்ப் பூங்காவாக விளங்கவில்லை என்று வேண்டுமானால் கூறலாம்!

பாலையைப் போலிருந்த காலம் மாறி, ஆங்கிலேயர் போனபொழுது சோலையைப்போல் ஆயிற்று —பல வழிகளில். இருந்தும் அச்சோலை, பைங்கிளிகள் பாடிடும் சோலையாக மாறவில்லை. மாறுமா, என்பதற்கான வழிகளும் தென்படவில்லை. ஆனால் சுயராஜ்யம் வந்த பின் கழிந்த இரண்டு ஆண்டுகள் தரும் பாடம் சோலை, பாலையாக ஆகிக்கொண்டிருக்கிறது என்பதுதான்! சுதந்திரம் வந்து, 'சுயராஜ்ய சூரர்கள்' ஆட்சி பீடம் ஏறி, இருபத்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. இருந்தும், நாட்டில் வேதனைக் குரல் எதிரொலிக்கிறதே தவிர, நன்மை எதுவும் ஏற்படவில்லை; நலிவுநீங்கும் வழியும் தோன்றவில்லை! நாள்தோறும் நாட்டின் நிலை சீர்குலைந்து கொண்டேபோகிறது, பலவழிகளிலும், பாலைவனம்போல. இந்தப் போக்கு மாறிடத்தான் வேண்டும். பாலைவனம் சோலைவனமாக ஆகி, அங்கு பறக்கும் பைங்கிளிகள் பாடிடத்தான்வேண்டும். ஆகுமா, இப்போதுள்ள நிலை நீடித்தால்?

ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிடநாடு" அதிகம் காப்பிகள் தேவைப்படுவோர், பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

ஜாரின் மதமும் மாஸ்கோ மணமும்

மாஸ்கோ செல்கிறார், சர். ராதா கிருஷ்ணன்

விசித்திரம், என்று உலகு கருதுகிறது இதனை.

விஞ்ஞான நாட்டுக்கு, வேதஞான பிரமுகர் தூது போகிறார்! ஏன்? விஞ்ஞானத்தின் பெருமையை அறிந்து வருவதற்கா? அல்லது வேதஞானத்தின்அருமையை அங்கு எடுத்துக் கூறுவதற்கா? பாடம் கற்கப் போகிறாரா? உபதேசம் செய்யப் போகிறாரா? என்ற பல, கேள்விகள், நிச்சயமாக எழத்தானே செய்யும், சர். ராதா கிருஷ்ணன், மாஸ்கோ போகிறார் என்றால்.

எப்பக்கம் திரும்பினாலும் கோபுர தரிசனம் கிடைக்கக் கூடிய நாட்டிலிருந்து கிளம்பி, எங்கு திரும்பினாலும் தொழிற்சாலைகளின் பிரம்மாண்டமான புகைக் கூண்டுகள் தெரியும் நாட்டுக்குப் போகிறார்!

வைதீக ஒலி சதா, கேட்டுக்கொண்டிருக்கும் நாட்டிலிருந்து கிளம்பி, எப்போதும், தொழிற்சாலைகளிலே இருந்து கிளம்பும் ஒலி கேட்டவண்ணமிருக்கும் நாட்டுக்குச் செல்கிறார்.

பல்லக்குச் சவாரியும், பாத காணிக்கை தருவதும், பஞ்சாமிர்த அபிஷேகமும், பல்லாண்டு பாடுவதும், இன்றும் நடைபெறும் நாட்டிலிருந்து கிளம்பி, பாட்டாளிகள் அரசு செலுத்தும் சோவியத் நாட்டுக்குப் போகிறார்.

தம்பிரான்கள் அங்கு இல்லை! தாளச்சத்தம் கேட்காது! திருவாதிரைத் திருநாளோ, தீர்த்தயாத்திரை மகிமையோ, அங்கு கிடையாது! 'தெண்டனிட்டேன் என்று சொல்லடி, என் தேவனை நான், நித்தம், தெண்டனிட்டேன் என்று சொல்லடி!' என்று பாடி ஆடும் காட்சி கிடையாது; தைப்பூசம் கிடையாது!

இவைகளும் இன்னோரன்ன பிறவும் உள்ள நாட்டிலிருந்து கிளம்பி, அங்கு செல்கிறார்—மத ஆதிக்கக்காரர்களை ஒழித்து, மூடபக்தியை முறியடித்து, பரலோக நினைப்பை ஒழித்து, பாட்டாளியின் தளையை நீக்கி, இல்லாமை, போதாமை, எனும் இடர்பாடுகளைக் களைந்தெறிந்து, சுகராஜ்யம் நடாத்தும், சோவியத்துக்கு, 'ராமராஜ்யம்' என்பதையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் நாட்டிலிருந்து வேத வேதாந்த சிரோமணி எனும் விருது பெற்ற, சர். ராதாகிருஷ்ணன் போகிறார்.

இந்த அதிசயத்தைக் கண்டு பலர், பலவிதமாக எண்ணிடத்தானே செய்வர்.

அவருக்கே, சந்தேகம், ஆச்சரியம் இருக்கத்தான் செய்யும்—நம்மை எதற்காக நேரு சர்க்கார், அங்கு அனுப்புகிறார்கள்!—என்று.

போகிறார்! போகுமுன் புதுடில்லியில், மாணவர் கூட்டமொன்றில் பேசியிருக்கிறார், — வேதாந்தி, பொது உடைமை நாட்டுக்கு, 'தூதுவராக'ப் போவது பற்றிச் சிலபலருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் பற்றி, ஒரு விளக்கம் தந்திருக்கிறார். போகிறநாட்டுப் பகையும் கூடாது- அனுப்புகிறநாட்டுக்கும் கோபம் ஏற்படக்கூடாது, என்ற போக்கிலே பேசியிருக்கிறார்.

சோவியத் நாட்டைப் பற்றி இங்குள்ள 'பஜனை மண்டலத்தினர்' கொண்டுள்ள எண்ணத்தையும் ஒரு தட்டு தட்டிவைக்கிறார்.

இங்குள்ள மதத்துக்கும் கொஞ்சம் வக்கீல்வேலை செய்து பார்க்கிறார்.

"நண்பர், நான் நாஸ்திக நாட்டுக்கு ஸ்தானீகராகப்போக இருப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால் ரஷ்யர்கள் தாங்கள் விஞ்ஞானரீதியில் உண்மையை அறியவும் கடைப்பிடிக்கவும் முயற்சிப்பதாகக் கூறுவதை நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள் மதத்தை அழித்துத் தரைமட்டமாக்கியது உண்மைதான். ஆனால் பட்டினியால் துடிதுடித்த மக்களுக்கு சோறிட முடியாத ஜாரின் மதத்தையே அவர்கள் நிர்மூலமாக்கினர். அத்தகைய கேடிய மதத்தை நாமும் வெறுக்கிறோம்."

என்று பேசியிருக்கிறார். சோவியத்தின் விஞ்ஞான அறிவுப் போக்குக்கு ஒருபாராட்டுரை; அங்கு மதத்தை அழித்ததற்கு ஒரு விளக்கம்; அதேபோது, இங்குள்ள மதத்தை சாதாரணமானதுஎன்றோ, ரஷியாவில் ஜார்காலத்தில்இருந்தது போன்ற மதம் என்றோ கருத முடியாது என்று கூறி, இந்து மதத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது, ஆகிய இவ்வளவும் செய்து பார்ப்பதுடன், கொடுமை செய்து வந்த மதத்தை ரஷியாவில் அழித்துவிட்டார்கள், நாங்களோ, மதத்தை அழிக்கமாட்டோம் அதிலே, மடைமைகள், கொடுமைகள் புகுந்து விட்டால், அவைகளை நீக்கி, மதத்தைப் புதுப்பிப்போம்; புரட்சிகரமானதாக்குவோம், என்று ஒரு, 'கித்தாப்புப் பேச்சு'ம் பேசிப் பார்க்கிறார்.

அவ்வளவுக்கு ஏற்றபேச்சு! ஆனால் கலைக்கு உதவுமா, காரியத்துக்குப் பயன்படுமா, என்பதுதான் கேள்வி.

ரஷியா நாட்டிலே, மதத்தை அழிக்கவேண்டிய அளவுக்கு, ஆத்திரம், கொதிப்பு, மூண்டுகிடந்தது, ஜாரின் காலத்து மதம், அவ்வளவு அருவருக்கத்தக்கதாக, மக்களுக்குத் துளியும் பயன்படாததாக இருந்தது, ஆகவேதான் அதை அழித்தனர் — அப்படிப்பட்ட அக்ரமமான மதத்தை யாருந்தான் அழிக்கத் துணிவார்கள்—நாமுந்தான் அத்தகைய மதத்தை வெறுக்கிறோம், என்று பேசும் ராதாகிருஷ்ணன், அந்தப்பேச்சின் மூலம், இந்நாட்டிலே உள்ள மதம் ஜார்காலத்து மதம் போன்றதல்ல, எனவே, இதை

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 21—8—49 [காஞ்சி

கழக நிலை

✲

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் கழகம் ஆடாது, அசையாது இருக்கிறது.

பெரியாரின் திருமணம் கட்சிப் பெருமையின் மீது வீசப்பட்ட ஈட்டி. இயக்கத்தின் மாண்பு அதன் தலைவரின் தகாச் செயலால் தரைமட்டமாகிவிடும். 'உரத்த குரல் எடுத்து ஊரெல்லாம் சுற்றினாலும்' தலைவர் போக்கால் ஏற்பட்ட கண்ணியக் குறைவை, காப்பாற்றி விட முடியாது. போற்றிப்பரப்பி வந்த இலட்சியங்களை மண்ணில் வீசும் அளவுக்குத் தலைவரின் சுயநலம் கொண்டுபோய்விட்டுவிட்டது. இனி அவரின் கீழிருந்து தொண்டாற்றுதலால் பயன் இல்லை, உழைத்து நாம் சிந்தும் வியர்வைத்துளிகள் அவரது "சொந்த" வயலுக்கு நாம் பாய்ச்சிய தண்ணீராகவே ஆகும் என்று கருதி அவரது தலைமை கூடாது; அது மாறும்வரை கழகப்பணிகளிலிருந்து விலகி நிற்கிறோம் என்பதாக எண்ணற்ற கழகங்களும், தோழர்களும், நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தி ஒதுங்கி நிற்கின்றனர்.

கட்சியின்நரம்பும், சதையும்ஆடாமல் போகவே அதன் வேலைகள் அத்தனையும் அப்படியே "ஸ்தம்பித்து" நிற்கின்றன.

"நானே தலைவனாய், எழுத்தாளனாய், பேச்சாளனாய்........" என்று தான் ஒருவரால் மட்டுமே இயக்கம் வளர்வதாகப் பெரியார் இதுவரை கூறிவந்தார். அவரது மதிப்பைக் காலிழந்தும், கண்ணிழந்தும், பொருளிழந்தும் தியாகத் தழும்புகளைப் பெற்ற தொண்டர்கள் பெற்றதில்லை. 'கட்சியின் வளர்ச்சி தன்னால் தான்' என்று சொல்லி வந்தாரே தவிர 'உண்மையாகவே, யாரால்?' என்பதை அவருடைய உள்ளம் உரைத்தது கிடையாது.

கழகத் தொண்டர்களைத் தலைவர் பாராட்டியதில்லையென்பது மட்டுமல்ல; அவரது மிரட்டலுக்கு ஆடும் படியும் வைத்து வந்தார். தொண்டு என்றால் என்ன? தனிப்பட்ட ஒரு தொண்டரின் சேவையால் கட்சிக்கு ஏற்படும் பயன் என்ன? இயக்க வளர்ச்சி தொண்டர்கள் சேவையின் கூட்டுப்பலன்தான்! என்ற கேள்விகளைக் கழகப் பணிபுரிந்தோர் இதுவரை எண்ணியது கிடையாது.

தலைவர் பெருமையைத் துதி பாடுவதில், கண்ணேக்கு இருந்த காரணத்தால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொண்டின் தரத்தைப் சிந்தித்துப் பார்த்தது கூட இல்லை.

ஆனால், இன்று அந்த உண்மை வெள்ளிடை மலையாகிவிட்டது! கழகத்தைச் சார்ந்த உழைப்புச் சக்தி எங்கு இருக்கிறது என்பது விளங்கி விட்டது. கழகம் வளரத் தொண்டர்களின் சேவையே அதி முக்கியமானது என்று தெளிவாகிவிட்டது. ஒரு கட்சியின் நரம்பு, இரத்தம், சதை எல்லாம் தொண்டர்கள்தான் என்பதை யாவரும் அறியும்படி ஏற்பட்டுவிட்டது.

இரண்டுமாத காலமாகக் கட்சிப் பணி "நின்று" இருப்பது கண்டு கட்சி வளர்ச்சியில் அல்லும் பகலும் உழைத்த தோழர்கள் மத்தியில் 'இப்படியா இருப்பது?' என்ற எண்ணமும், கழக வளர்ச்சியில் ஈடுபட்டிருப் போருக்கு 'இந்நிலை கூடாதே' என்ற ஏக்கமும், துடி துடிப்புக் கொண்ட தோழர்களுக்கு, 'இரண்டிலொன்று பார்த்தாக வேண்டும்' என்ற ஆசையும் பிறந்திருக்கிறது—பலர் நமக்கு எழுதியுள்ள கடிதங்கள் இதைக் கூறுகின்றன. இந்த ஆசையும், ஆர்வமும், வேகமும் உண்மையில் கழக வளர்ச்சியில் கருத்தைச் செலுத்தியவர்களுக்கு எழும்புவது இயற்கை. இந்த எண்ணம் உண்மையில் பாராட்டக் கூடியதே.

இரண்டுமாதங்களாகக்கழகப்பணிகள் நடைபெறவில்லை. இந்த "அசையாத நிலை' தொண்டர்கள் சேவையின் பெருமையை விளக்கியுள்ளது. தொண்டர்கள்தான் கட்சியின் மூலநாடி; அவர்கள் அசைந்தால்தான் இயக்கம் இயங்கும்என்பது தெரிந்துவிட்டது.

தன்னலமற்ற கொள்கை வீரர்களின் மா பெரும் சக்தி கழகப்பணிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதால் முன்போல எந்தக் காரியங்களும் நடைபெறவில்லை; கட்சித்தொண்டு, பிரச்சாரம் எதுவும் நடக்கவில்லை

இந்த அசையா நிலை, தலைவரைத் திடுக்கிடச் செய்திருக்கவேண்டும், அவர் சுயநலம் இல்லாதவராய் இருந்திருந்தால். 'புயல் என வீசிக்கொண்டிருந்த கழகப்பணிகள், இப்படியா அசைவற்று கிடப்பது?' என்று பதறியிருக்கவேண்டும், பதவியைப் பெரிதெனக் கருதாதவராக இருந்திருந்தால்.

மாபெரும் சக்தி, தன்னை விரும்பவில்லை, தன் தலைமையை உதறித் தள்ளுகிறது, தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்துவிட்டது, என்று உணர்ந்த பின் தலைவர் 'கழகத்தலைமை' என்கிற நாற்காலியிலிருந்து இறங்கியிருக்கவேண்டும் தானாகவே. அதுதான் முறை, சரியானதுங் கூட. அப்படிச் செய்திருந்தால் நாணயம் உள்ளவர்களின் பாராட்டுக் கூட கிடைத்திருக்கும்.

அப்படி நடந்ததா என்றால், தலைவர், தன் பீடமே பெரிது என்று கருதுகிறாரே ஒழிய, சுயமரியாதையைப் பற்றி நினைத்தவராகத் தென்படவில்லை!

கட்சியே தன்னை விரும்பவில்லையென்று, விளங்கியும் கூட அவர் "விளக்கம்" உரைப்பதில் இருக்கிறாரே தவிர, "தலைமைப் பெருமை"யில் ஆர்வத்தையும் ஆசையையும் பதித்திருக்கிறாரே தவிர, கட்சிவளர வேண்டும் அதன் செயல்கள் நடைபெறவேண்டும் என்று எண்ணவில்லை!

> "தலைவர் தானாகவே விலகியிருக்கவேண்டும்"
>
> "விளக்கங்களைப் பொருட்படுத்த வேண்டாம்; அவரை விலக்குவோம்!"
>
> "கழக இலட்சியங்களைவைத்து; பெரும் பான்மையான நாம் நம் பணியைச் செய்வதில் ஈடுபட வேண்டும்"

இவை, கழக வளர்ச்சியில் அக்கரை கொண்ட நம் தோழர்கள் நமக்கு எழுதிவரும் கடிதங்கள் தரும் கருத்துக்கள்.

ஒவ்வொருவர் எண்ணத்தையும், ஊர்ந்து கவனித்தே வருகிறோம். கழக வளர்ச்சி தடைப்படக்கூடாது;

விடி வெள்ளி எழும்பவேண்டும் என்ற தோழர்கள் ஆர்வம் நம் இதயத்திலும்எதிரொலிக்கிறது. தலைவர், கட்சி வளர்ச்சியைப் பெரிதெனக் கொண்டிருந்தால், கண்ணியமாக, விலகிக்கொண்டிருந்திருப்பார். ஆனால், அவரது "இலட்சியம்" இயக்கத்தைப்பற்றி, அதன்வளர்ச்சியைப் பற்றி இருப்பதாகத் தெரியவில்லை. 'ஏதோ, பார்ப்போம்!' என்ற விதண்டாவாத எண்ணமே அவரது போக்கில் தென்படுகிறது. எனவே, அவராக விலகுவார் என நாம் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆகவே மேற்கொண்டு கழக ஆக்கத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும். இதில் இன்னும் நாள் ஓட்டக் கூடாது. நல்லதொரு முடிவு கண்டு நம் நாட்டுப் பணி மீண்டும், முன்போல, முகிழ்க்க வேண்டும்.

இதற்கான முடிவுகள் இன்னும் ஒறிருவாரத்தில் செய்யப்பட்டாக வேண்டும்—அதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிடும் என்று நம்புகிறோம். கழக நிலை, இதுபோல் நீடிக்க இடம் ஏற்படாது. விரைவில் வெள்ளி முளைக்கும்! வேதனையும், விம்முதலும் நீங்கி, வெற்றிப் பாதையில் நடப்போம்.

●

ஜாரின் மதமும்

7-ம் பக்கத் தொடர்ச்சி

அழிக்கத் தேவையில்லை, என்று வாதாடுகிறார்.

ஜார் காலத்து மதம் கொடுமை நிரம்பியது, எனவேதான் அதனை ரஷியர்கள் அழித்தனர்—அழித்தது முறைதான், என்ற அளவாவது, ஒப்புக்கொள்கிறாரே, அது வரையிலே, ஒரு புரட்சிதான்—அவருடைய மனப் போக்கைப் பொறுத்த வரையில்.

இந்த அளவுக்கும் பேசவிரும்பாத, புனிதர்கள் உண்டு, இங்கும் சரி, மேனாட்டிலும் சரி.

மதத்தை அழித்தது மாபாதகம் என்று சபித்திடும் மாண்பினரும் உண்டு.

ராதாகிருஷ்ணன், மாஸ்கோ போகவேண்டியவர்—எனவே, ரஷியாவில் முன்பு மதத்தை அழித்தனர், அது மகாபாதகம், என்று பேசமுடியாதல்லவா! வேதாந்தம், வேறு எதைக் கற்றுத் தராவிட்டாலும், யூகத்தைக் கூடவா, கற்றுக் கொடுக்காது, எனவே, யூகமாகப் பேசினார்.

ஜாரின் காலத்து மதம்! அழிக்கப்படவேண்டிய நிலையிலும் தன்மையிலும் இருந்த மதம்!! அழிந்த மதம்!—சரி—இந்தப்பேச்சிலிருந்து ரஷியாவில் ஜார் காலத்து மதத்தை அழித்ததில் தவறு இல்லை என்பது மட்டுமல்ல, அவ்விதமான மதம், எங்குஇருப்பினும், எப்போது இருப்பினும், அழிப்பது, தவறல்ல, என்பதும்தான், பொருளாகக் கொள்ளப்படும்.

ஜாரின் காலத்து மதம் எப்படி இருந்தது! ஆத்திகராம் ராதாகிருஷ்ணனே, அந்த மதம், அழிக்கப்பட்டதில், தவறு இல்லை என்று கூறி இருக்கிறாரல்லவா! எனவே, அது எவ்விதம் இருந்தது என்பதைப் பார்ப்பது, அவசியமல்லவா?

ஜார் காலத்து மதம்! என்ன இருந்தது!

மன்னன் அரண்மனையில்—மடாதிபதி, மற்றோர் அரண்மனையில்.

மன்னனுக்கு மடாதிபதியின் அருள் தேவை—மடாதிபதிக்கு மன்னனின் பாதுகாப்பு தேவை. இருவருக்கும் மக்களுடைய பணமும் பக்தியும் தேவை.

மன்னன் மடாதிபதியை ஆண்டவனின் பிரதிநிதி, என்பான். மடாதிபதி, மன்னனை, ஆண்டவனின் ஆணையால் அரசனானேன் என்பான். இருவரிடமும், மக்கள், பயபக்தி விசுவாசம் காட்டியாகவேண்டும்—இல்லையேல், பாபாத்மாக்களாகிவிடுவர்.

மன்னன் பவனி வருவான், போக போக்கியத்தில் புரள்வான் மக்கள், கண்டு களிக்கவேண்டும்—களிப்பு வரவில்லை என்றாலும், நடித்தாக வேண்டும்.

மடாதிபதி பவனி வருவான், மக்கள், அந்தக் கோலாகலக் காட்சியையும் கண்டு களித்தாக வேண்டும்.

சிமான்கள், மாளிகைகளில் இருப்பர்—அவர்களுக்கு ஆசி கூறிக்கொண்டும், அரசவையிலே அவர்களுக்கு, தகுந்த இடம் கிடைப்பதற்கான, மந்திரம்ஜெபித்துக்கொண்டும், சாதுசன்யாசிகள்—மந்திரவாதிகள், மகிமை பெற்றோர், இருப்பர்.

மக்களின் பஞ்சம், நோய், இவைகளைப் போக்க, மந்திரவாதிகள் உண்டு—சாமியாடிகள் உண்டு. பஞ்சமும் நோயும் போகிறதோ இல்லையோ, பஞ்சத்திலும் நோயிலும் உழலும்போது கூட, இந்த மந்திரவாதிகளை அணுகியாகவேண்டும்—இல்லையானால், பாபிகள் ஆகிவிடுவோம், என்ற பயம் பாமரரிடம் இருந்தது.

வயலிலே, ஜெபநீர் தெளிப்பர்.

கர்ப்பவதிக்கு, மந்திரத்தண்ணீர் தருவர்.

ஆயுதங்களின் மீது அற்புத மூலிகை தடவுவர்.

திருமணத்தின்போது பிரத்தியேக ஆசி அருளுவர்.

முக்கியமான கடிதத்தை, அருள் தரும் கரத்தால், தொட்டுத் தருவர்—அதனால் காரியம் சித்தியாகும்.

அந்தச்சீமானுக்கு, எப்படி ஜாரின் நட்பு கிடைத்தது?—என்று ஒருவர் கேட்பார்.

"அது அந்த குருவின் கடாட்சம்" என்று பதில் வரும்.

குரு, பார்க்கக் கோரமாய், கூனனாய், குரூர மனத்தினனாய் இருப்பான்.

அவன் அருள் பெற்றவன்!, ஆசி, வாழ்வளிக்கும்—கோபம், அழிவைத் தரும், என்று பேசுவர், மாளிகை, குடிசை, எங்கும்.

வயல்கள் வறண்டுவிடும், மக்கள் வாழ்வு கருகும்—எனினும், பட்டாளம் பவனிவரும், பட்டத்தரசன் விழாவில் கலந்துகொள்வான், பக்கம் நின்று ஆசி கூறுவான் மதகுரு.

தேரும் திருவிழாவும் நடைபெறும், மதகுருமார்களின் ஏற்பாட்டின்படி.

விருந்தும் கேளிக்கையும் நடைபெறும், ஜாரின் விருப்பப்படி.

உச்சியில், இருந்தனர் இருவர்

ஜார்—ரஸ்புடீன் மன்னன், மதகுரு.

அடுத்தபடியில் இருந்தனர்,
சீமான்கள்—சாமியாடிகள்

அடுத்தபடியில் அழுந்திக் கிடந்தனர், மக்கள்—பகல்பட்டினி பஞ்சைபாரி—பாட்டாளி—இவர்கள்.

இவர்களின் மனமோ, மூடநம்பிக்கைச் சேறு படிந்த குட்டை!

அஞ்சி அஞ்சிச்சாவார், இவர் அஞ்சாத பொருள் இல்லை, அவனியிலே, என்ற நிலை.

எதற்கும், அருள் பெற்றவரை நாடும், வழக்கம்; அடிதொழும் வாடிக்கை; என்ன சாபம் வந்துவிடுமோ என்ற அச்சம், நரகப்படுகுழியில் வீழ்ந்துவிடுவோமோ, என்ற பயம்.

அந்த மக்களுக்கு, ஜடைவளர்த்தவனெல்லாம், தேவதூதன்—முணுமுணுப்பவனெல்லாம்வேதமோதி—உருட்டுக்கண்ணனெல்லாம், மந்திரவாதியாகத் தென்படுவர்.

ஜார்காலத்து மதம் இது! சீமானும் சாமியாடியும்சேர்ந்து மக்களின் மனதைச் சூறையாடிய கொடுமை, மதம், அங்கு.

மக்களின் மதியோ! விதவிதமான பூஜை! வேளைக்கொரு மந்திரம்! நாளுக்கோர், விரதம்! தீர்த்தமகிமை தலயாத்திரை,—இவைகளிலே விசேஷமான நம்பிக்கை.

இவ்விதமான மதந்தான் மக்களை மடமையிலும், கொடுமையிலும் ஆழ்த்திவைத்து, ஒரு சிலரை உல்லாசிகளாய், மமதையாளர்களாக்கிவைத்த, மதந்தான் அழிக்கப்பட்டது, ஜாரின் காலத்தில்,ரஷியாவில்.

அறிவுக்குத் தெளிவோ, வாழ்க்கைக்கு வளமோ, தரமுடியாத நிலையில், அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு, மக்களை ஆட்டுமந்தைகளாக்கி வைத்து, ஒநாய்களைக் குருமார்களாக்கி வைத்திருந்த மதம். அது ஒழிக்கப்பட்டது. ஒழிக்கப்பட்டதிலே, தவறில்லை, என்று, கூறுகிறார், ராதாகிருஷ்ணன்.

எந்த மதம், மக்களைக் காப்பாற்றவும் அவர்களின் கருத்தைத்தெளிவுபடுத்தவும், பயன்படவில்லையோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்தமதம்,வஞ்சகர்களைகுருமார்களாக்கி, ஏமாளிகளை அவர்களுக்கு இரையாகும்படிச் செய்து வைக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்த மதம் விவரிக்க முடியாத பயத்தை மக்கள் மனதிலே, சதா மூட்டிவைக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

எந்த மதத்திலே, ரஸ்புடீன்கள், கிளம்பி ஆதிக்கம் செலுத்த முடிகிறதோ, அந்த மதம், அழிக்கப்பட்டுத்தான் தீரும்.

மூடநம்பிக்கைகளை மூலதனமாகக் கொண்டு, நயவஞ்சகர்கள் மக்களின் வாழ்வை நாசமாக்கும் விபரீத வியாபாரம் செய்வதற்கு எந்த மதம் இடமளிக்கிறதோ, அது அழிக்கப்பட்டுத்தான் தீரும்—அழியத்தான் வேண்டும்.

அறிஞர்மன்றத்திலே, சர். ராதாகிருஷ்ணன், கூறிவிட்டார்.

என் சொன்னர் இதுபோல், என்பது கிடக்கட்டும்—அவர், சொன்ன முறைப்படி, ஆராயும்போது, இங்கு இன்றுள்ள மதத்தைப்பற்றி, என்ன கருத்து தோன்றும், இயற்கையாய்! அதுதான் முக்கியம்.

பாம்பு படமெடுத்தாடும்—பல்லில் விஷமிருக்கும்—கடித்தால், ஆள், சாவான்—என்று கூறியானபிறகு, அதோ, ஏதோ மூலையில் பளபளப்பாகத் தெரிகிறதே, அது என்ன? படம் எடுக்கிறதே, பாம்புதானே!—என்ற அறிவு வரத்தானே செய்யும்; அதேபோது, "ஐய்யோ! அம்மா! அது தீண்டியதால், தாங்கமுடியாத வலி உடலெங்கும்" என்று கதறியபடி ஒருவன் வந்தால், தீர்மானித்துவிட வேண்டியதுதானே, பாம்பு, விஷப்பல்லால் கடித்து விட்டது என்று.

பாம்பைக் கொல்வது பாபமல்ல!—என்பதுபோல, ஜாரின் காலத்து மதத்தை அழித்தது, தவறல்ல, என்று சர். ராதாகிருஷ்ணன் கூறிவிட்டார். சரி. இங்கு என்ன நிலைமை? யோசிக்கத்தானே வேண்டும்.

* * *

"தாயே, தயாபரி! எனக்கு ஒரு வரம் தரவேண்டும் — என் கலிதீர ஒரு குழந்தை, அருள வேண்டும்.

இந்தப்பாபிக்கு அந்த வரம் தருவாயானல், மாதாவே! என்னவிதமான காணிக்கை வேண்டுமானலும் செலுத்துகிறேன்."

வீட்டிலிருந்து, ஆலயம் வரை, தரையில் உருண்டுவருகிறேன், உன் நாமத்தைப் பஜித்துக்கொண்டு. உபவாசம் இருக்கிறேன், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்.

"தங்கத்தால் நாகம்செய்து சமர்ப்பிக்கிறேன்."

"ஒவ்வொருநாளும் பத்துபண்டாரங்களுக்குச் சோறு போடுகிறேன்."

"அவர்கள் உண்டதில், சிதறும் எச்சலை, பகவத் பிரசாதம் என்று எண்ணிப் பயபக்தியுடன் சாப்பிடுகிறேன்.

"எப்படிப்பட்ட கடுமையானவிரதமும் இருக்கிறேன், அம்மா! எனக்கோர் மகவு வேண்டும்!ஒருகுழந்தை தாரும் தருமசொரூபி! என்னைத் தாயாக்கு! குழந்தை,ஒன்று, அருள்! கோடி கோடி நமஸ்காரம் உனக்கு.',

* *

பிள்ளைபேறு வேண்டி, அம்பிகையை இவ்வாறெல்லாம், வேண்டிக்கொள்வதும், பின்னர், குழந்தை பிறந்தால், அதுபோலவே செய்வதும், உண்டல்லவா!

* * *

ஒரு அம்மையார், சகலரையும் மிஞ்சிவிட்டார்கள், இந்தவிஷயத்தில்.கங்காதேவியை வேண்டினாராம், ஒருகுழந்தை தரவேண்டும் என்று. துவக்கத்திலே, என்னென்ன கூறித் துதித்தாரோ, தெரியவில்லை—அலுத்துப்போய் கடைசியாக, "கங்காமாதாவே! ஒருகுழந்தை, தா!என் மனம் மகிழ, ஒருமகவு பிறந்திடச் செய்! நான், அதே மகவை, உனக்கே பலியாகத் தந்துவிடுகிறேன்! என் குழந்தை பிறந்ததும், அன்புடன், வாரிஎடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு, செல்வமே! கலிதீர்த்த கற்பகமே! கண்ணின்மணியே! என்று கொஞ்சுவேன் — மனங்குளிர! மாதாவே! உன்னையும் மறவேன்! நீதந்த செல்வத்தை, குழந்தையை, உனக்கேஅர்ப்பணித்துவிடுகிறேன்!" என்று வேண்டிக்கொண்டு,குழந்தை பிறந்ததும், அதுபோலவே. குழந்தையைக்கொண்டுபோய், கங்காமாதாவுக்குக் காணிக்கை தருவதாகக் கூறி, கங்கை ஆற்றில் எறிந்திடவும் அந்த மாது, துணிந்ததாக—செய்தியொன்று, பத்திரிகைகளில், ஓரிரு திங்களுக்குமுன்பு தான், வெளிவந்தது.

அத்தகைய, மூடபக்தி, இருந்திடும் நாட்களில்தான் நாம் வாழ்கிறோம்.

*

புதையலைக்காத்துக்கிடக்கும்பூதத்தைச்சாந்தப்படுத்தி, புதையலை அடைவதற்காக, நரபலி தருவது, என்ற காட்டுமிராண்டித்தனமான, மூடநம்பிக்கை, இன்றும் இருக்கிறது — சிற்சிலசமயத்தில் சட்டத்தின் கண்ணிலே, இத்தகைய சம்பவம் தென்பட்டுவிடுவதால், வழக்குகள் நடைபெறுகின்றன. மூடநம்பிக்கை முறியடிக்கப்படவில்லை, அடியோடு. பத்திரிகைகளில் அடிக்கடி, இவ்விதமான, கோரக்கொடுமைகள், நாட்டிலே நடைபெறும், செய்திகள், வெளிவரத்தான் செய்கின்றன.

* * *

அனுமத் உபவாசி ஒருவன்—ஏதோ ஓர்நாளில், அவன் உள்ளத்தில் அனுமார் புகுந்துகொள்வாராம்—அன்று அவன் ஆடுவானும், ராமநாமத்தைப் பாடுவானும், அருகே இருப்போரை அடிப்பானும், கடிப்பானும், அந்த 'அடியும், கடியும்' அருள் என்று நம்பி, பக்தர்கூட்டம் அவன்அடி தொழுவாராம்! வாழைப்பழத்தைச் சீப்பு, சீப்பாக, வாங்கி வைத்துக்கொண்டு, எதிரே நிற்பராம் பக்தர்கள்—"ராமதூதா! பழம் சாப்பிடு. இலங்காதகனா! பழம் சாப்பிடு" என்று பக்தி விசுவாசத்துடன், வேண்டுவாராம். அனுமத் உபாசி, பழத்தைப்பெற்று பாதியோ, சிறிதளவோ, தின்றுவிட்டு, மிச்சத்தைக் கீழே துப்புவானும்—அந்த எச்சல், "பகவத்பிரசாதம்" என்று நம்பப்பட்டு, பக்தர்கள் போட்டியிட்டுக்கொண்டு, அதை எடுத்துத் தின்பராம் — தீராதநோய் போகுமாம், குடும்பம் வளருமாம்!! இப்படிப்பட்ட 'இழிசெயல்' இன்றும், மூடநம்பிக்கையின் பயனாக நாட்டிலே, நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

* * *

நாகரிகச் சென்னைக்கு அருகே உள்ள, பெரியபாளையத்தில், மோட்டாரில் வந்து இறங்கும் சீமாட்டிகள், பட்டு பட்டாடையைக்களைந்துவிட்டு, வேப்பஇலையைத் தொடுத்து ஆடையாகக் கட்டிக்கொண்டு, கோயிலை வலம்வந்து, வரம்கோரும், மடைமை, நடைபெறுகிறதே!! மூடநம்பிக்கை சாகமறுக்கிறதே!!

* *

அவன் உருவம், அவலட்சணம்! உடலில் ஆயிரம்வித வியாதிகள்! எழுதப்படிக்கத் தெரியாது! (அக்டோபர் இரண்டுக்கு முன்பு) அவன் அருகே சென்றால், வாந்தி எடுக்க வேண்டும் — சாராயநாற்றம் அவ்விதம் அடிக்கும் — எனினும், அவனிடம் சென்று, ஆடவரும்பெண்டிரும் முதியவரும் குழந்தையுமாக நின்று, மயக்கம்போக, பேய்ஓட, வேப்பிலை அடிக்கச்சொல்லி, விபூதி தடவச்சொல்லி, வேண்டிக்கொண்டு நிற்பதைக்காண்கிறோமே. டாக்டரின் மனைவி, கலெக்டரின் தாயார், என்ஜினியரின் மகள், புரபசரின் அக்கா, இப்படி, இருப்பார்களே இந்த மூடநம்பிக்கைக்கு இரையாகிறவர்கள்.

✲

கீதாபோதனை, உபநிஷத்தின்உட்பொருள் உரைப்போன், சிவஞானபோதசாரத்தை உபன்யாசிப்போன், என்பவர்கள்போன்ற, சொல்லடுக்குக்காரர்கள்மட்டுமல்லவே, இந்நாளிலும், செல்வாக்குடன் இருப்பவர்கள், மாயாவாதி மந்திரவாதி, அனுமத் உபாசி, அஞ்சனம் தருவோன், பில்லி சூனியம்தெரிந்தோன் முடிக்கயிறு தருவோன், முதலிய மிக மிக மட்டரகங்களும்கூட அல்லவா, மக்களிடம் செல்வாக்குடன் இருந்திடக்காண்கிறோம். ஆதிக்கம் செலுத்துகிறார்களே, அறிவால் அல்ல, பாமரரின் அறிவீனத்தைக் கண்டறிந்துகொண்டதால்.

✲

சீமான் சோமசுந்தரம், திறமையான வியாபாரக்கோமான் — அவர் தன்காலத்திலே, தகப்பனார் தனக்கென வைத்துவிட்டுப்போன ஓட்டு வீட்டை, மாடியாக்கினார், இரட்டை வண்டி இருந்த இடத்தில் மோட்டாரை நிறுத்திக்காட்டினார்—இருந்ததும், அதோ அவர், அழைத்துச் செல்கிறார், பாருங்கள், ஒரு காவிகட்டியை, பக்தியுடன்! எதற்கு? புதிய கிடங்கிலே, அந்த ஆண்டி, முதன் முதலாகக் கால் வைத்தால், புண்யம் அதிர்ஷ்டம், என்பது, சோமசுந்தரத்தின் நம்பிக்கை! கிடங்கிலே, ஆண்டி கால் வைத்ததும், சோமசுந்தரம், ஆண்டியின் காலிலே,வீழ்ந்து வணங்குவார்! ஏன்? அவர் அருள்தான், தனக்குச் செல்வம் தந்ததாக நம்புகிறார்.

இப்படி, மாளிகைவாசிகளில், பலபேருக்கு, 'மகிமை' உள்ளவர்கள், துணையாக இன்றும், இருந்திடும், நிலைதானே, நம்நாட்டிலே இருக்கிறது.

✲

இன்றும், எருமலையானை, வேண்டிக்கொண்டு வீதியில் புரள்வோன், உடலைவாட்டிக்கொண்டு கடவுள் அருளைத் தேடுவோன், காட்டுமிராண்டிக்காரியம் செய்துவிட்டு, கடவுளின்மேல் பாரத்தைப் போடுவோன், என்போர்கள் இருக்கத்தான் காண்கிறோம்; இது அல்ல மதம், என்று கூறினாலோ, பாமரர் கோபிப்பர், இது அல்ல அறிவு என்றால், எதிர்ப்பர்! இந்நிலையில் நாடு இருந்திடக்காண்கிறோம். இல்லைஎன்றும் சர். ராதாகிருஷ்ணன் கூறமுடியாது; இவைகள் மதத்தின் மாண்புகள் என்றும் வாதிடத் துணியமாட்டார்!

✲

தக்கபருவமும், மனத்தெளிவும் ஏற்பட்டபிறகு, தாங்களாகவே, துணைவரைத்தேடிக்கொள்வதுதான் அறிவுடைமை, என்றபேச்சு, பட்டிமன்றங்களிலே! நல்லஇடம்! நல்ல சொத்து! ஒரேபெண்! கொஞ்சம் கருப்பு! சிறுவயதிலே, அம்மை வந்ததால், ஒருகண்ணில் பூபட்டுவிட்டதாம்! அதுதவிர, வேறு குறைகிடையாது. ரங்கோனிலிருந்து, வாடகை மட்டும் மாதம் மூவாயிரம்வருகிறது!—என்ற பேச்சு வீட்டிலே! விதவைகளின் கண்ணீரால்தான் இந்தநாடு, கேவலமான நிலைக்கு வந்தது—என்ற உருக்கமான பேச்சு மாநாடுகளில். என்ன செய்வது, அவள்எழுத்து போடி அம்மா, உள்ளேபோ. பொழுதுசாயும் நேரம் —தெருவில் நிற்காதே! கண்டதும் கடியதும்வீதியிலே, வந்துதொலைக்கும். போய்ப் பாகவதம்,படி—என்ற பேச்சு வீட்டிலே.

பல்வலியினாலேதான், தலைவலி! பல்லில் பூச்சி இருக்கிறது-பல்லை எடுத்துவிட்டால், புண்இராது — உடனே தலைவலியும் போய்விடும்-- என்ற பேச்சு டாக்டர் விடுதியில்.

அப்போதே சொன்னேன், கேட்கவில்லை--இன்று கிருத்திகை -- கிருத்திகையன்று, மாம்பழம் சாப்பிடக்கூடாது, தோஷம் என்று சொன்

னேன்—கேட்கவில்லை; சாப்பிட்டான்; அன்றிலிருந்து, வாயிலே, புண்ணாகி, பண்டைக் குடைச்சல் ஏற்பட்டு, மகன் துடியாய்த் துடிக்கிறான் — திருப்போரூர் முருகன் கோயிலுக்கு மூன்று கிருத்திகை சென்று, மாவிளக்கு போட்டால் தான், தோஷம்போகும் — என்ற பேச்சு வீட்டில்.

கடவுள் என்றால், என்ன? உருவமா! அல்ல! உணர்ச்சி!உள்ளொளி ஆதிகாரணம்! மூலகாரணம்! என்ற பேச்சு பெருமன்றத்தில்.

காத்தான்பூஜையும் காளிக்கு விழாவும், நாட்டில்—நாலுவிதமாக! தத்துவார்த்தம் கூறுவது, படித்தோர் மத்தியில். தாதன் தட்டும் தாளத்துக்கு ஏற்றபடி தாண்டவமாடுவது வீதியில்.

இந்நிலையில்தானே நாடு இன்றும், இருக்கிறது. இல்லை என்று மறுத்திடவோ இருந்தால்என்னஎன்று கேட்டிடவோ, ராதாகிருஷ்ணன் துணிய முடியாதே.

பாமரர்போக்கு, படித்தவர் நிலைமை, பக்தர்களின் நடவடிக்கை, ஆட்சியாளர்களின் மனப்போக்கு, முதலிய எதைப்பற்றித்தான், பெருமைப்படக்கூடியதாக இருக்கிறது.

அரண்மனைகளிலே கோலாகலக் காட்சிகளும், பொது மக்களிடம் வாழ்க்கைச்சிக்கலால் ஏற்படும் புலம்பலும் இருந்திடக்காண்கிறோம்.

ஆலைகளில், இலாபக் கணக்குகாட்டும் ஏடுகள் உள்ளன, பாட்டாளிகளின் உடலிலே, பசிக்கொடுமையை எதிர்த்து உரிமைப்போர் நடத்திய போது, அடக்குமுறை தந்த தழும்புகள் இருந்திடக்காண்கிறோம்.

வயலிலே புயல்! அதைஎதிர்த்து நிற்கமுடியாது நிலைகுலையும் கிராமீயப்பிரபுக்கள்!

பட்டிணங்களிலே, பவனி வரும் பணம் படைத்தோர்—பட்டிக்காடுகளிலே, பட்டினிப்பட்டாளம், எதற்கும் தயார் என்ற நிலையிலே இருக்கிறது.

தேர் திருவிழாவுக்குக் குறைவு இல்லை—தேவாலயபூஜைகளுக்கு ஓய்வில்லை — எண்ணப்பன் திருமலையானுக்கு உள்ள திருவாபரணத்தின் மதிப்பு, ஒருகோடிரூபாய் என்று கணக்கு தரப்படுகிறது.

பாரிஸ்பட்டிணம் சென்று பிரம்மஞான சங்கத்தலைமைப்பீடத்து அம்மையார், ருக்மணி அருண்டேல் அழகு நடனம் ஆடி, அதனைப் பல நாட்டுப்பிரமுகர்களும் கண்டு, அம்மையின் இடை நெளிவு, கண் சுழலும் காட்சி, கலைச்செறிவு ஆகியவற்றினை ரசித்திடுவதாகச் செய்தி வருகிறது.

வேலை இல்லை — சோறு இல்லை— வாழவோ வழியில்லை—எனவே தற்கொலை செய்துகொள்கிறேன், என்று எழுதப்பட்ட கடிதத்தை மடியில் வைத்துக்கொண்டு, மரக்கிளையிலே பிணமாக, ஏழை தொங்க, வழக்கத் தாக்குமாறான காட்சியைக்கண்டு,பட்சிகள் பதைக்க, ஊரார்காண நேரிடும் போது, ஏழ்மையின் கொடுமை,வாழ்வின் நிலையாமை ஆகியவைபற்றி, பேசிடும் நிலை இருந்திடக் காண்கிறோம்.

இலாபம் குறைகிறது — என்று கூறைப்படும் முதலாளி, ஒருபுறம்.

கூலிபோதவில்லை என்று குமுறும் பாட்டாளி, மற்றோர் புறம்.

சரக்கு விற்பனையாகவில்லை என்று ஏக்கமுறும் வியாபாரி ஓர்புறம்.

பண்டம் வாங்கப் பணமில்லை என்று பதைக்கும் பொது மக்கள் மற்றோர் புறம்.

இந்த நிலையிலே நாடு, இன்று இருக்கிறது.

ஆட்சியாளர்களைப்பார்த்தாலோ, பஞ்சமும், நோயும், வேலையில்லாக் கொடுமையும் அறியாமையும், மூட நம்பிக்கையும் குருட்டுப்போக்கும் கொண்ட நாட்டில் கோலோச்சுபவர்களாகத்தோன்றுமா? துளியும்தோன்றாது! பத்திரிகையைப் பாருங்கள்! ஸ்டாலின் நேருவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதும், ராஜாஜி ஆப்பிரிக்க விடுதலைப் போர்த்தலைவரை உபசரிப்பதும், அமெரிக்காவிலிருந்து நேருவுக்கு அழைப்பு வருவதும், பர்மியசர்க்கார் உதவி கேட்பதும், பலஸ்தீன் பிரச்னைக்கு பரிகாரம் கூறப்படுவதும், ஆசியமாநாடு நடப்பதும், போர்ப்பாண்டவரிடம் பேசுவதுமாக, இப்படி, கேட்டதும் பூரிப்பும் பெருமையும், அடையக்கூடியவிதமாக செய்திகள் வருகின்றன.

பட்டாளத்தைப் பாருங்கள் — அடிக்கடி படம் வருகிறதே, பவனி, அணிவகுப்பு என்று; எப்படித்தெரிகிறது? வளமும் வல்லமையும் கொண்ட ஒருநாட்டுக்கு சிறப்பளிக்கும், விதமாகத்தான், பட்டாளம் தெரிகிறது. அதற்காகும் செலவுக் கணக்கைக் கவனியுங்கள்—அடுத்த நாள் பெரும்போருக்கு ஆயுத்தம் செய்யும் நிலையில் உள்ள நாட்டுக்கு ஏற்படக்கூடிய செலவுபோலிருக்கும்

மதம்—மக்கள்நிலை--சீமான்களின் போக்கு—ஆட்சியாளர் தன்மை — குருமார்களின் கொட்டம் — முதலிய எதைக்கவனித்தாலும், ஜார் காலத்து நிலைமை, இங்கு, தென்படத்தானே செய்கிறது.

மக்களை மடமையில் ஆழ்த்தி வைக்கும் மதத்தைத்தானே, நாம் கொண்டிருக்கிறோம்.

மன்னர்களையும் ஆட்டிப்படைக்கும் சாமியாடிகளிடம்தானே, மதம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

எந்தவிதத்திலே, இன்று நம்நாட்டிலே உள்ள மதம், ஜார்காலத்து மதத்தைவிட, நல்லதாக இருக்கிறது என்று சர். இராதா கிருஷ்ணன் விளக்குவீரா! முடியாது!!

அழிக்கப்படவேண்டிய அளவுக்குக் கெட்டுக் கிடந்தது, கேடு செய்தது, ஜார்காலத்து மதம், என்று கூறினரே, இப்போது, இங்குள்ள மதத்தை என்ன செய்வது? இதன் இலட்சணம் என்ன? இந்த ஆராய்ச்சியும், இதற்கான பதிலும்தான், இந்த நாட்டை வாழவைக்க, வழி செய்யப்போகிறது! மாஸ்கோ, போகிறார் ராதாகிருஷ்ணன்-காசி, காஞ்சி, கயா, பிரயாக்,போன்ற புண்யக்ஷேத்திரங்கள் நிறைந்த நாட்டிலிருந்து. ஏதோ, அந்த நாட்டிலே, மதம்,நாசமாக்கப்படவேண்டிய அளவுக்குக் கெட்டுக்கிடந்ததாலேயே, மதம் நிர்மூலமாக்கப்பட்டதாகவும், இங்கே, மதம், மக்களை ஒழுக்கசீலர்களாய், மனத்திருப்தி கொண்டவர்களாய், மனிதர்களாய், வைத்திருப்பதுபோலவும், பசப்பவேண்டாம் என்று பணிவன்புடன் கூறுகிறோம். ஜாரின் காலத்துக்கும், இன்று இங்கு இருப்பதற்கும், அதிகவித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை, என்று கிருபாளனி, சின்னாட்களுக்குமுன் ஓர் கட்டுரையில் குறிப்பிட்டார். நிலைமை அதுதான்! ஜார்காலத்துமுடை நாற்றம் அடிக்கத்தான் செய்கிறது — மாஸ்கோ மணம் பரவித்தானே தீரும். ராதாகிருஷ்ணன் போன்றாரின், பசப்புரை, அதைத் தடுத்து விடவா முடியும்—முடியாது!

—✲—

மாஜி கடவுள்கள்

C. N. A.

தலைப்பைக் கண்டே, சீறிச் சபித்திடவேண்டும் என்ற எண்ணம் பிறக்கும், ஆத்தீகத்தின் பாதுகாவலர் தாமே, என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்கு.

"ஆதி அந்தமில்லாத கடவுளையா, 'மாஜி" என்று கூறுகிறாய்; மதியீனனே! மந்திரியா, ராஜதந்திரியா, மன்னனா சீமானா, மகேசனாயிற்றே! மன்னன் மாஜியாவதுண்டு, மந்திரி மாஜியாவதுண்டு, கடவுளை 'மாஜி' என்கிறாயே மமதையாளனே! இந்தப் பாபம் உன்னைச் சும்மாவிடுமா, என்று சுடுசொல் பல கூற எண்ணுவர், நாம் ஏதோ நாத்தீகம் பேசுகிறோம் என்ற எண்ணம் கொண்டு.

தலைப்பை மீண்டும், பார்க்கும்படி, கருத்துடன் கவனித்துப் பார்க்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

'மாஜி கடவுள்' அல்ல, தலைப்பு; மாஜி கடவுள்கள்!! என்பது தலைப்பு; புரிகிறதா உண்மை?

பல கடவுள்களை, பூஜித்துக் கொண்டிருந்த காலம் ஒன்றிருந்தது, எல்லா இடத்திலும்.

தந்தைச்சாமி, தாய்ச்சாமி, தாய்ச்சாமிக்கு ஒரு சக்களத்திச்சாமி, பிள்ளைச்சாமி, பெண்சாமி, என இவ்வண்ணம், பல தெய்வ வழிபாடு இருந்து வந்தது—அறிவுத்தெளிவு இல்லாதிருந்தபோது—உலகில் பல நாடுகளில்.

ஒருவனே தேவன்!-என்ற அடிப்படை உண்மையும், ஒழுக்கமுமே மதம் என்ற உன்னதக் கோட்பாடும், அறிவுத்துறையிலே, அரியாசனம் ஏறுவதற்கு முன்பு, பல தெய்வவழிபாடுதான், அங்கெல்லாம் இருந்து வந்தது.

பகலுக்கு ஒரு தெய்வம், இரவுக்கு இன்னொன்று! பஞ்சம் தரும் தேவதை ஒன்று, அதைப் போக்கும் தெய்வம் மற்றொன்று; படைகலக்கும் தெய்வமொன்று இடிமுழக்கும் தெய்வம் ஒன்று, என்ற விதமாக, எண்ணற்ற கடவுட் கூட்டத்தை, மக்கள் கும்பிட்டு வந்தனர்-பல்வேறு நாடுகளில்.

மனமாசு நீக்கக்கூடிய பகுத்தறிவுக் கதிர் தோன்றிய பிறகு, பல தெய்வ வழிபாடு என்பது, உண்மையான ஆத்தீகமாகாது-மதமாகாது-அருள் பெறும் வழியாகாது — மனமருள்கொண்ட மக்களை, சூதுமதி மிகுந்த பூஜாரிக் கூட்டம், பிடித்தாட்டவே, கட்டிவிடப்பட்ட, கற்பனை இது, என்ற எண்ணம் வெற்றி பெற்றது; அந்தவெற்றியின் காரணமாக, பல கடவுள்கள், மாஜிகளாயினர்!

அந்த மாஜி கடவுள்களையே, நாம், மதத்தின் மாசுபோக்கும் செயலைக்கூட, நாத்தீகமோ, என்று மருட்சியுடன்எண்ணும் மக்களுக்கு அறிமுகப்படுத்திவைக்க, தொடங்கியிருக்கிறோம்.

இந்த மாஜி கடவுள்கள், ஒரு காலத்தில், விண்ணை முட்டும் கோபுரங்கள் கொண்ட கோயில்களிலே கொலு வீற்றிருந்தனர் — பூஜாரிக் கூட்டம் புடை சூழ, பக்தர் குழாம் பாதம் தொழ, பாவலரும் நாவலரும் பக்திப் பாசுரங்கள் பலப்பல கூறிட, நாடாள்வோன் நவநிதியும் காணிக்கையாகத் தர, கோலோச்சி வந்ததுண்டு.

இந்த மாஜி கடவுள்களின், அருமை பெருமை, அருள்தரும் திறமை, ஆற்றல் ஆகியவை பற்றி பெரிய புராணங்களைத் தீட்டித் தந்தனர், அருட்கவிகள், என்று பாமரரால் புகழப்பட்ட கவிவாணர்கள்.

எனினும், இன்று அவை எலாம், மாஜி கடவுள்களே!!

கொட்டு முழக்கு கேட்கும் கோயிலிலே, அல்ல, இந்த மாஜி கடவுள்கள், இன்று இருப்பது — கண்காட்சிச் சாலைகளிலே!

பூஜாரிகள் மந்திர உச்சாடனம் செய்ய, பூமான்கள் காணிக்கை கொட்ட, பக்திமான்கள் பரவசப்பட, அல்ல, இந்த உருவங்கள், இன்று இருப்பது.

ஆராய்ச்சியாளர்கள்,படம் பிடிக்க, சரித்திரக்காரர்கள் சம்பவங்களைத் தொகுக்க; மாணவர்கள் காலத்தையும் கருத்தையும் ஒப்பிட்டுப்படிக்க உதவும் உருவங்களாகிவிட்டன.

எங்கெந்த நாடுகளிலே, ஏத்தி ஏத்தித் தொழப்பட்டு வந்தனவோ, அங்கெல்லாம் இன்று ஏக தெய்வக் கொள்கை அரசு செலுத்துவதால், இந்த மாஜி கடவுள்கள் ஒருகாலத்துக் கற்பனைகள், பழங்காலத்து நினைவுகள், பூஜாரியின் கருவிகள், என்றாகிவிட்டன. பகுத்தறிவாளர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும், பாமரர்களுக்கும் தெளிவு பிறக்கும் வண்ணம், நல்லறிவு அந்த நாடெல்லாம், பரப்பப்பட்டுவிட்டது. நானாவிதமான உருவங்களுடன், நாட்டு மக்களையும் நாடாள்வோரையும், மருட்டிக் கொண்டிருந்த உருவங்கள், இன்று மாஜி கடவுள்களாகிவிட்டன.

அந்த மாஜி கடவுள்களிலே, இந்த இதழில், காணப்படுவது, ஜூவஸ் -பெருந் தெய்வம் - மூலத்தெய்வம்!

இந்த மாஜி கடவுளின், சக்தியைப் பற்றிய கதைகளை, இன்று, அறிவுள்ளோர் அனைவரும், பூஜாரியும் புலவனும் சேர்த்துத் தயாரித்த சரடுகள் என்று, கூறுகின்றனர்—ஆனால், மாஜியாகா முன்பு, ஜூவசுக்கு இருந்துவந்த மதிப்பும் செல்வாக்கும், அளவிட முடியாது! புராணங்கள் பல்பல! பூஜைகள் பலவிதம்!

ஜூவஸ், கிரேக்கர்கள், பூஜித்து வந்த, பெருந்தேவன் — தேவர்க்கரசன்—தேஜோன்மயமானவன்!

ரோம்நாட்டவர், இதே கடவுளை, ஜூபிடர், என்ற பெயரால்பூஜித்தனர்.

ஜூவசின், "திருக்கல்யாண" குணத்தைக் கொண்டாடிப் பாமாலை

மனிதத் தன்மைக்கே முரண்பாடு

சூட்ட, அந்த நாட்டில் 'கம்பன்' இல்லாமல் இல்லை!.

* * *

கருத்தெலாம் அறியும்
கண்ணன்
பாரேலாம் பார்த்திருந்தான்!
பத்தரை மாற்றுத்தங்கம்,
பகவான் வீற்றிருந்த பீடம்.
என்னகாண் அவன்தன்ஆற்றல்
என்றுள இடியோன் அவனே.
தேவர்தம் உலகைத்தானே
தன் திருப்பாதம் தாங்கும்,
ஆசனமாகக் கோண்டான்
அருந்திறன் உடையோன்,
கண்டாய்.
அவனுரை கேட்ட அண்டம்
அதிர்ந்திடும் அச்சம்கோண்டே
அவன்சிரம் அசையக்கண்டு
தேவரும் பெறுவர் திட்டம்.
விதி எனும் கோலும் ஆடும்
வினை எலாம் ஓடும் அவன்முன்
ஆண்டவன் அவன்முன்
அண்டம்
அதிர்ந்திடும் அச்சம்கோண்டே!

* * *

இக்கருத்துப்பட, திருப்புகழ் பாடினவர், சாமான்யக் கவிராயர் அல்ல – Homer — உலக மகாகவிகளில் ஒருவர் என்று, எவரும் வியந்து, கூறும், ஹோமர்!

இந்தத்திருப்புகழ், இன்று, கவியின் கற்பனைத் திறத்துக்கும், கவிதையின் சிறப்புக்கும், எடுத்துக்காட்டாக இருக்கிறதேயன்றி, ஜூவசின்பால், பக்தி செலுத்தும்படி, மக்களைத் தூண்டும், சக்தி பெறவில்லை!

மனக்கண்முன், சித்தரித்துப் பாருங்கள்!

பிரம்மாண்டமான ஆலயம்! ஆஜானுபாகுவான உருவமாக, ஜூவஸ், தேவன் சிலைஉருவில், இருக்கிறார். மணிமாடங்கள்! மண்டபங்கள்! திருக்குளங்கள்! பூம்பொழில்கள்! மதில்கள்! பிரகாரங்கள்! மடைப்பள்ளிகள்! எல்லாம், செல்வத்தின் சிறப்பைவிளக்குவனபோல் உள்ளன. பட்டத்தரசன், அவன் மனதைத் தொட்டுவென்ற அழகி, படைத்தலைவன், பொருள் காப்போன், வணிகவேந்தன், கலைவாணன், எனும் பலரும், தொழுது நிற்கிறார்கள், ஜூவஸ் முன்பு.

எதிரே, நெரித்தபுருவமும், மேல் நோக்கிய கண்களுடனும், நின்று கொண்டிருக்கிறான், பூஜாரி. அவன் முன், காணிக்கைப் பொருள்கள் குவிந்திருக்கின்றன!

இங்கு இன்றும், கேட்கப்படும், சஹஸ்ரநாமம்—அர்ச்சனை— கிடையாதுபோலும், என்று எண்ண வேண்டாம்! ஜூவசின், திருவிளையாடல் புராணத்தைப்பார்த்தால்,யூகித்துக்கொள்ளலாம், அன்று, அந்தப் பூஜாரிகள், என்ன வென்ன கூறி, அர்ச்சித்திருப்பார்கள் என்பதை.

உற்றுக்கேளுங்கள், அவன் அர்ச்சிப்பதும் கேட்கும், அதுகேட்டு,பக்தர் குழாம், நெஞ்சு நெகிழ நிற்பதும் தெரியும், மனக்கண்ணுக்கு.

* * *

ஜெகமதைப் படைத்தாய்
போற்றி!
தேவனே! ஜூவஸ்! போற்றி!
அமரர்தம் முதல்வா போற்றி!
அவுணரை அழித்தாய்போற்றி!
தீரனே, போற்றி, போற்றி!
திருஅருள் தாராய், போற்றி!
இடிப்படை கோண்டாய்
போற்றி!
இகபர அரசே போறறி!
மழைதனைப் பொழிவாய்
போற்றி!
மாபுயல் விடுவோய் போற்றி!
மேக் சம்ஹாரா போற்றி!
மேதினி காப்போய் போற்றி.

* * *

அர்ச்சனை, இதுபோன்றுதான் இருந்திருக்கவேண்டும் —ஏனெனில் இப்படிப்பட்ட வல்லமைகள் கொண்டகடவுளாகவே,ஜூவஸ்,சித்தரிக்கப்பட்டு, அக்கால மக்களால், பக்தி விசுவாசத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டு, வந்தார். இது மட்டுமா அர்ச்சனை? விபரீதமான, கடவுட் தன்மைக்கு மட்டுமல்ல; சாமான்யமான மனிதத்தன்மைக்கே கூட முரண்பட்டதான, கேடுபயப்பதான, செயல்களையே, சிறப்புக்களாக்கிக்காட்டும், அர்ச்சனைகளும்உண்டு.

* * *

தந்தையை வென்றாய் போற்றி!
தங்கை மணாளா போற்றி!!

என்று பூஜாரி, அர்ச்சித்திருப்பார்! ஏனெனில்ஜூவசின், திருவிளையாடற் புராணத்திலே, அவர் தன் தந்தையுடன் போரிட்டு வென்றதும், தங்கையைத் தாரமாக்கிக் கொண்டதும் சிறப்பாக, விளக்கப்பட்டிருக்கிறது! எனவேதான்,இன்று முருகனை வழிபடுபவர்கள் துதிக்கவில்லையா, தந்தைக்குபதேசம் செய்தவா, போற்றி போற்றி, தத்தை மொழி குறமகளை மணந்தவா போற்றி, போற்றி,என்று அதுபோல, அன்று ஜூவசை, அந்நாட்டுப் பூஜாரிகள் அர்ச்சித்திருக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

அந்த அர்ச்சனைகள் எல்லாம் இன்று, ஆடிடும் சிறுரும் 'கேட்டு, ஆம்என்றுஏற்கமுடியாத, கேலியுரைகளாகிவிட்டன.

அந்த அர்ச்சனைகளில் வல்லவர்களான, பூஜாரிகள், யாரும் இன்று கிடையாது கிரீசில்!

அந்த ஆலயங்களே இன்று அங்கு, கிடையாது!!,

ஆலயங்களென்ன, அந்த ஆண்டவனே, இன்று அங்கு கிடையாது! ஜூவஸ் ஒரு மாஜி கடவுள்!!

வெள்ளைநிறப் புரவிகள் நான்கு, தேரில் பூட்டப்பட்டிருக்கும். செயல்திறம் கொண்ட உருவும் அமைந்தவராக இருப்பார்

வெண்ணிறத் தலையணி பூண்ட பூஜாரிகள், அவர் சேவைக்கு இருப்பர்.

வெண்ணிற மிருகங்களையே, அவருக்குப் பலி தருவார்கள். ஜூபிடர், என்ற பெயருடன், ரோம் நாட்டவர், இதே தேவனைப் பூஜித்து வந்தனர்! அங்கும், இன்று, ஜூபிடர் ஓர் மாஜி கடவுள்தான்!

தாயைத் தாரமாக்கிய தயாபரன்

பூமாலையோ பாமாலையோ சூட்டிடுவார், யாரும் இல்லை—கோயில் இல்லை—கோலாகல உற்சவம் இல்லை —ஜூபிடரும் ஜூவஸ் போலவே, மறைந்து போனார், மக்கள் மனதிலிருந்து, மார்க்கத் துறையிலிருந்து. மாஜிகளாயினர்,மக்களின் மதி துலங்கிய பிறகு!!

மான் மழுவேந்தி, புலித்தோலாடை பூண்டு, இமயத்தில் வீற்றிருக்கும், முக்கண்ணனைத் தொழுது மகிழும், "பேறு" பெற்ற புராணீக மதத்தவர், நம்மிடை அனேகர் உண்டு.

ஜூவசின், சிறப்பும், அது போலவே, போற்றப்பட்டு வந்தது, கிரேக்கர்களால்.

ஒலிம்பஸ், எனும் உயரமானதோர் மலைமீதுதான் ஜூவஸ் கொலுவீற்றிருந்ததாகக் கதை. கரத்திலே, வெற்றிதரும் படைக் கருவி! கெம்பீரமான தோற்றம்! நீண்டு சுருண்டு வளர்ந்த, கேசம்! ஆட்டுத் தோலாடை அணிவார் சிலசமயம்! சில வேளைகளில், பட்டாடை மேனியை அழகு செய்து, கீழேயும் புரளும்! சிவனருக்கருகே, ரிஷபம், நந்தி, இருக்குமாமே! ஜூவசின் அருகே எப்போதும், கழுகு இருக்குமாம்!!

கோலம் இதுபோல்—குணாதிசயத்தை விளக்கும் செயல்கள், பல உண்டு. அவைகளை நம்புவதுதான் ஆத்திகம், சந்தேகிப்பது, நாத்திகம், என்றுதான் பொதுவிதி இருந்தது; அந்நாளில், அங்கு!

இப்படி எல்லாமா நடந்திருக்கும்? என்று கேட்பவன், பாபி! இபபடி எல்லாம், செய்வதா, கடவுட் தன்மைக்கு அழகு? என்று கேட்பவன், நாத்திகன்! அவன சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவான்! அவனை இம்சிப்பது, "தேவப்பிரீதியான காரியம்."

ஆதி அந்தமற்ற தன்மைதானே, இன்றைய ஆத்திகம். அன்றைய ஆத்திகம், அவ்விதம் இல்லை. ஜூவஸ் தேவனுக்கு, தகப்பனார் தாயார் உண்டு, பாட்டன்பாட்டியும் உண்டு; அவர்களுக்குள், பகை, போர், மூண்டதுமுண்டு. கடவுள்களா, இப்படிச் செய்திருக்க முடியும், காட்டுமிராண்டி ஜாதியிலே நடைபெறும் செயல் போலிருக்கின்றதே என்று கூறத் தோன்றும். ஆனால் அந்தக் காலத்திலே, கூறியிருந்தால், கூறினவனின் நா அறுக்கப்பட்டிருக்கும்—அந்தநாள் ஆத்திகம், அந்தக் கதைகளை நம்பும்படி, வலியுறுத்திற்று.

கேளுங்கள், ஜூவஸ், தேவனின் பிறப்பு வளர்ப்பை! கடவுள், பிறக்கிறார், அது ஆத்திகம்!!

உலகம் தோன்று முன்பு எல்லாம் இருள்மயமாக இருந்தபோது, குழப்பம் எனும் தேவனும் இருளி எனும் தேவியும் மட்டும் இருந்தனர்-தெளிவான உருவுடன் அல்ல.

அப்படியானால், எப்படி அவர்கள் தெரிந்திருக்க முடியும்? என்ற கேள்வி, கிளம்பும், உடனே. கேட்பது, நாத்திகம்!!

குழப்பமெனும் தேவனும் இருளி எனும் தேவியும் இருந்தபோது, விண்ணோ மண்ணோ கடலோ, கிடையாது என்று கூறுகிறாயே, அது உண்மையானால், அவர்களைக் காண, யார் இருந்தனர், என்று கேட்கத் தோன்றும், ஆனால் கேட்கக்கூடாது, அந்நாளில். கேட்பது, நாத்திகம்!!

இப்படியும் ஒரு பைத்தியம் இருந்ததா, என்று கேட்பீர்கள். இதில் என்ன அதிசயம்? விமானம் பறக்கும் இந்த விஞ்ஞான காலத்திலேயும், நமது நாட்டிலே, ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷனைக் கண்டது யார், தலைகளை எண்ணிக் கணக்கெடுத்தது யார், ஆதிசேஷன்தான், அண்டத்தைத் தாங்கிக்கொண்டு, கீழே இருப்பதாகக் கூறுகிறாயே, அண்டத்திலே இருப்பவர்கள் அதை எப்படிப் பார்த்திடமுடியும், என்று கேட்டுப்பாருங்களேன், மதவாதிகளை ஆத்திகர்களை, –என்ன கோபம் வருகிறது பாருங்கள்—நாத்திகன் என்று எவ்வளவு ஆத்திரத்துடன் கூறுகிறார்கள், பாருங்கள்.

இன்று இங்கு நிலைமை இவ்விதம் இருக்கும்போது, அந்த நாட்களில், கிரேக்க நாட்டு ஆத்திகர்கள், அவ்விதம் இருந்ததிலே, ஆச்சரியமா கொள்கிறீர்கள். அதைப் பித்தம் என்று கூறினால், இன்னும்இங்குள்ள விசித்திர சித்தர்களின் போக்கை என்னவென்று சொல்வீர்கள்.

மனிதர்கள் கதை கிடக்கட்டும்—கடவுள்களின் கதையைக் கவனிப்போம்.

குழப்ப தேவனும் இருளித் தேவியும், நீண்டகாலத்துக்குப் பிறகு, சலிப்பேற்பட்டு, தங்கள் அலுவலுக்கு உதவியாக இரிபஸ் எனும், மகனை அழைத்தார்கள்.

மகன் செய்த, மகத்தான முதற் காரியம்: என்ன தெரியுமோ? தந்தையை ஆட்சிப்பீடத்திலிருந்து விரட்டுவதுதான்! விபரீதமாக இருக்கிறதே என்பீர்கள்—இதற்கே பதறுகிறீர்கள்—மேலும் உண்டு, விபரீதம். தந்தையை விரட்டிய 'எரிபஸ், தனிமையை விரும்பவில்லை! தாரம் தேவைப்பட்டது. என்னசெய்தான்? தாயையே தாரமாக்கிக்கொண்டான்!

மகனை மணாளனாகப் பெற்ற மாதாவும், அவன் மனம் கோணாமல் நடந்துகொண்டதுடன், ஈதர், எமிரா எனும் இரு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

இந்த இரு மக்களும், தம் பெற்றோரை விரட்டிவிட்டு, ஆட்சிப் பீடமேறினர். எராஸ் எனும் மகவு பிறந்தது. மூவருமாகச் சேர்ந்து, கடல், பூமி, இரண்டையும், படைத்தனர்.

பூமி, பசுமையற்று, ஜீவனற்று இருந்தது, ஆதியில். எராஸ், தன் அதிசய அம்பை எய்தான்! செடியும் கொடியும் முளைத்தன! பட்சி வகைகள், பறந்தன! மீன்கள், குளங்களில் உலவின. மிருகங்கள், கானகங்களிலே உலவின; எங்கும் மகிழ்ச்சி—மலர்ச்சி!

பூமி—ஒரு தேவி! இந்த அம்பு விட்டு அற்புதம் நிகழ்த்திய பிறகு, அந்த அணங்கு, துயிலெழுந்து, தன்னைச் சுற்றிலுமுள்ள சோபிதம் கண்டு, ரசித்து, காதலுள்ளம் கொண்டு, யூரானஸ் எனும் தேவனைச் சிருஷ்டித்தாள் — மணம் முடிந்தது இருவருக்கும்.

பூமாதேவிக்கு, கியா எனப்பெயர்—மணாளன் பெயர் யுரானஸ்! கியா பூமி; யுரானஸ், விண்ணுலகு! விண்ணுக்கும் மண்ணுக்கும் திருமணம்!!

இந்தத்தம்பதிகளுக்கு, பலசாலிகளான 12 மக்கள்பிறந்தனர்—இவர்

அறிவு ஒத்துழைக்க மறுக்கிறது, இங்கே!

களுடைய ஆற்றலைக்கண்டு, யூரானஸ், அஞ்சினன். இந்தப்பிள்ளைகள் வளர்ந்தால், தமது ஆற்றலால் தன்னை அழித்துவிடுவர், என்ற அச்சம்கொண்டு, பன்னிருவரையும் பிடித்து, பாதாளத்திலே கொண்டுபோய், இரும்புச் சங்கிலிகள் கொண்டு கட்டிவிட்டான்.

இந்தப் பன்னிருவரில், ஆறுபேர் ஆடவர், அறுவர் பெண்டிர். பாதாளச் சிறையிலிருந்து இந்தப் பிரமாண்டமான மக்கள், வெளிவர முடியாது, எனவே தனக்கு அழிவு கிடையாது, என்று அகமகிழ்ந்து யுரானஸ் இருந்தான்; மக்களைப் பெற்றமாதாவுக்கோ, தாங்கொணாத் துயரம்; கணவனுடன் வாதாடிப் பார்த்தாள்; பலன் இல்லை—எனவே அவளும், பாதாள லோகம் சென்றுவிட்டாள்; தன்மக்களைத் தூண்டினாள், தகப்பனைத் தாக்கச் சொல்லி.

பன்னிருவரில், கடைக்கோட்டி, குரோனஸ்—அவன் தான் ஆர்த்தெழுந்தான் அன்னை உரைகேட்டு —கோடரி தந்தாள் அன்னை— கொண்டு சென்றான், தந்தையைத் தோற்கடித்து, சிம்மாசனம் ஏறினான் —தந்தை, மகனைச் சபித்தான், நீயும் உன் மகனாலேயே, மாளக்கடவாய் என்று.

குரோனஸ், தன் உடன் பிறந்தாரைப் பாதாளச் சிறையிலிருந்து மீட்டான்—தன் தங்கை, ரியா என்பாளை மணம் புரிந்துகொண்டான். ஒலிம்பஸ் எனும் உயர்மலை மீது, வெற்றிகண்ட குரோனஸ், வீற்றிருந்தான்.

ஒரு நன்னாள், மகனொருவன் பிறந்த சேதி கேட்டான், குரோனஸ் உடனே தந்தையிட்ட சாபம் கவனத்திற்கு வந்தது—பதறினான்— தாரமான தங்கையிடம் சென்றான், தருக மகவை! என்று கேட்டான், அவளும் அகமகிழ்ச்சியுடன் தர, வாங்கினவன், அவள் கண்டு பதறும்படி, அதனைத் தன் வாயில் போட்டு, விழுங்கிவிட்டான்.

இப்படிப் பல குழந்தைகளை அவன் விழுங்கியபடி இருந்தான்— சாவைத் தடுத்துக்கொள்ள. மாதாவின் மனம் பற்றி எறிந்தது, ஒரு மகவையாவது, காப்பாற்றியே தீருவது என்று, தீர்மானித்தாள். ஜூவஸ் பிறந்தான். பிறந்ததும், குழந்தையைச் சில தேவகன்னியரிடம் கொடுத்து, இடா மலையில், எவருக்கும் தெரியாவண்ணம், வளர்த்துவர ஏற்பாடு செய்தாள். கொடு குழந்தையை! எனக் கொடியோன் கேட்டான். மன்றாடினாள் — அவன் பிடிவாதம் செய்தான்—எனவே, தந்திர மிக்க அவள், ஒரு பெருங்கல்லை, ஆடை போர்த்து, அவனிடம் தந்தாள். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டுதானே! அப்படியே, விழுங்கினான், தன்னைக் கொல்லப்பிறந்த குழந்தையை விழுங்கியதாகவே எண்ணி எக்களிப்பு கொண்டான். குழந்தையோ, தேவகுமாரிகள் சீராட்டிப் பாராட்டி வளர்க்க, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

இடாமலையில் ஒரு குகையில் இங்கனம் வளர்ந்து வந்த, ஜூவசுக்குப் பால்தரும் பணியினை ஏற்றுக் கொண்டிருந்ததாம், ஒரு ஆடு— அதற்குப் பெயர், அமால்தியா என்பதாகும்—ஆண்டவனுக்குப் பாலூட்டியதற்காக அந்த ஆட்டுக்குப் பரமபதம் பிறகு கிட்டிற்றும்.

கரி, நரி, பரி, கருங்குருவி, ஓணன், முதலியவற்றுக்கெல்லாம், பரமபதம் கிடைத்ததாக, நம்மிடம் புராணம் உண்டல்லவா? கிரேக்கப் புராணீகன் ஆட்டுக்கும் பரமபதம் அளித்தான், கதையில். இன்று, ஆடு அமரர் உலகு அடைந்த கதையைக் கூறினால், கிரேக்க நாட்டிலும், அறிவு முன்னேறியுள்ள எந்த நாட்டிலும் கைகொட்டித்தான் சிரிப்பார்கள். இங்கோ, ஓணன் முக்திபெற்ற கதையைக் கேலியாக, யாரேனும் பேசினால், ஓம்சாந்தி என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்யும் நல்லவருங் கூட, பாவி! நாத்திகா! என்று கோபிப்பார்! அறிவு இங்கு அந்த அளவுக்கு ஒத்துழையாமை செய்கிறது.

ஜூவசின் பாலப்பருவம் இப்படி, இருந்தது — தந்தை, அப்படி ஒரு குழந்தை இருப்பதாகவே, அறியாமலும், தாயின் பாசத்தைப் பெற முடியாமலும், தாதிமார் தயவால் வாழும் நிலை. ஓரளவுக்கு, நமது புராணங்களில், முருகன், வளர்ப்புக்குக் கார்த்திகைப் பெண்களைக் குறிப்பிடுவது போல!!

குழந்தை அழுது, அந்தச் சத்தம், தந்தையின் காதிலே விழுந்தால் என்ன செய்வது என்பதற்காக, தந்திரமான ஓர் ஏற்பாடும் இருந்ததாம். பூஜாரிகள் பலர், கூவுவதும் கொக்கரிப்பதும், கூத்தாடுவதும், ஆயுதங்களைக் கொண்டு பேரொலி கிளப்புவதுமாக இருப்பாராம். இந்த அமளிச் சத்தத்திலே அமிழ்ந்து போகுமாம், ஜூவசின் அழுகைச் சத்தம்!

குரோனஸ், குதூகலமாகவாழ்ந்து வருகையில், குழந்தை ஜூவஸ் வளர்ந்து வரும், செய்தி எட்டிற்று; அச்சமும் ஆத்திரமும் கொண்டான்; ஜூவசைக் கொல்லத் தீர்மானித்தான். ஆனால் தந்தை போர்க்கோலம் பூணு முன், தனயன் கிளம்பித் தாக்கினான். தகப்பன் தோற்கடிக்கப்பட்டான். வெற்றி பெற்ற ஜூவஸ், தந்தையின் அரியாசனத்தில் அமர்ந்து தாயின் மந்திராலோசனைப்படி ஆட்சி புரியலானான். குரோனஸ் விழுங்கிய குழந்தைகளை எல்லாம், மீண்டும் அவன் உள்ளிருந்து வெளியே, உயிருடன்கொண்டு வருவதற்காக, கடுவிஷமொன்றைத் தயாரித்து, குரோனசை பருகச் செய்தான் — உடனே, உள்ளே இருந்த, பாசிடன், ப்ளூட்டோ, ஹெஸ்ட்டியா, டெமீடர், ஹீரா, எனும் குழந்தைகள் யாவும், வெளியே வந்தன, உயிருடன். இவை மட்டுமா, குழந்தையென நம்பி விழுங்கிவிட்டானே, கல், அதுவுங் கூட வெளியே வந்து விட்டதாம். உடன் பிறந்தார்களை, தந்தையின் வயிறாகிய சவக்குழியிலிருந்து மீட்டான்.

(2-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.

5-OCT 1949 MADRAS

REGD M 4642

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 11—9—49 | இதழ் 11

★ மாஜிகடவுள்கள் ★
4.

★ ஓடின் ★

மாஜி கடவுள்கள்

[சி. என். ஏ.]

ஒற்றைக்கண் தேவன் ஓடின், ஓர் மூலதெய்வம். பன்னெடுங்காலம் பக்திமான்களின் பூஜையைப் பெற்றுக்கொண்டு பராக்ரமனாக விளங்கி வந்தவன்; பராக்ரமமிகுந்த ஓடின் பல தீரச்செயல்கள் புரிந்து, இகம், பரம் இரண்டிலும் ஏகசக்ராதிபத்யம் செலுத்திவந்தான். ஓடின் புகழ், பாசுரமாக்கப்பட்டு, செயல்கள், திருவிளையாடற் புராணமாக்கப்பட்டு, பாமரரும் புலவரும், அரசனும் ஆண்டியும், ஒரு சேரக் கொண்டாடக்கூடிய விதமான தேவனாகப் பல காலம் விளங்கியவன், இந்தஓடின்.

ஜெர்மனி, அதை அடுத்துள்ள நாடுகள், பிரிட்டன், ஆகிய பல நாடுகளிலே, ஓடின், தேவதேவனாகப் பூஜிக்கப்பட்டு வந்தான். சிவனுருக்குக் கைலாயமும் விஷ்ணுவுக்கு வைகுந்தமும், குறிப்பிடப்படுவது போல, இந்தத் தேவனுக்கு, பழங்கால, டியூடானிக்மக்கள், ஆஸ்கார்ட் எனும், இடத்தைக் குறிப்பிட்டிருந்தனர்.

வைகுந்தமாவது கைலாயமாவது, அதெல்லாம், மனப்பிராந்தி, மதவாதிகளிலே மட்டரகமானவர்களின் கற்பனை, பித்துப்பிள்ளை விளையாட்டு என்று, இன்று ஒருசிலரால் கூற முடிந்தபோதிலும்கூட, பாமரர்களில் பெரும்பாலோர், கைலாயம் என்பது உண்மையாகவே இருப்பதாகவும், அங்கு ஒரு புறத்தில சிவ—சக்தி நடனம் நடந்து கொண்டிருப்பது போல்வும், மற்றோர்புறத்திலே முருகனின் மயில், தன்கலாபத்தை விரித்தாடுவதை, இளைப்புனத்தழகி திருமதி வள்ளி அம்மையார் கண்டுகளிப்படைவது போலவும், ஆறுமுகங்களிலே, ஒரு முகத்தால் ஐயன் சிங்காரவேலன், இக்காட்சியைக்கண்டு ஆனந்திப்பது போலவும், தம்பிக்கு இந்தச் சுவைதான் தெரியுமே தவிர, 'அப்பம் அவல்பொரி' இவைகளின் ருசி என்ன 'தெரிகிறது என்று எண்ணியபடி, 'மூஷிகவாகனன்' ஓர் புறம் இருப்பது போல்வும், நம்பிக் கொண்டுதானே இருக்கிறார்கள். மறுத்துப்பாருங்கள், பாமரரின் கோபம் எப்படிக்கிளம்புகிறது என்பது தெரியும்! இப்பொய்யுரைகளையே கொண்ட புராணங்களை, கிருபானந்தர்கள் கீதக்குரலிலே எடுத்துரைக்கும்போது, மன்னார் சாமிகள், மகிழ்வதைப் பாருங்கள்! மதி குழம்பியிருந்தபோது, தெளிவற்றவர்கள், கட்டிவிட்ட இத்தகைய பொய், இயல், இசை, நாடகமாகி, இன்றளவு வரையிலே, மக்கள் மன்றத்திலே, உலவமுடிகிறது.

சிலர் அறிவர், இவைஎல்லாம் எத்தரின் கருவிகள் என்று. எனினும் எடுத்து இயம்பமாட்டார்கள், ஏமாளிகளின் கோபம் தம்மைத்தாக்குமே என்ற அச்சத்தால்.

அறிந்தோர் அச்சத்தால் அடங்கிக்கிடக்க, பாமரர், பழைய குட்டையிலேயே ஊறிக்கிடக்கும் நிலை காண்கிறோம் நம் நாட்டில்.

இந்நிலை, சரிதகாலத்துக்குமுன்பு, டியூடானியர்களிடையே இருந்தது. அப்போது அரசோச்சிய மூலதெய்வந்தான், ஓடின்! அறிவு கிளம்புமட்டும், ஈடு இணையற்றவனாக விளங்கி வந்தான், விண்ணுலகில்.

ஆஸ்கார்டில், அதிஅற்புதமான சக்திவாய்ந்த ஓடின், தேவிமார், தம்பிமார்கள், குமாரர்கள், குட்டிக்கடவுளர்கள் ஆகியோர் புடைசூழக் கொலுவீற்றிருந்து, அண்டர் நாயகனாக ஆட்சிசெய்து வந்தான். அவன் ஆணைப்படி நடக்கவேண்டும் அனைவரும் — மீறுபவர் படுபாதாளத்திலே தள்ளப்படுவர்! அவன் சொல்லை ஏற்கவேண்டும் சட்டமாக, மீறினோர் அழிக்கப்படுவர். அவன் விருப்பத்தின்படியே விண்ணும் மண்ணும் விளங்கவேண்டும். அவ்வளவு பலம், ஓடினுக்கு!

ஆஸ்கார்டிலே, ஓடின் ஓர் உயரமான, உன்னதமான ஆசனத்தில் அமர்ந்திருப்பான்! ஒற்றைக்கண்தான் இருந்தது, எனினும், எங்கு என்ன நடைபெறினும், அவனால் கண்டறிய முடியும்.

தங்கச்சிம்மாசனத்தின்மீது வீற்றிருக்கும் இந்தத் தனிப்பெருங் கடவுள், நீலநிறத் தலைப்பாகையும், மேகவர்ணப்பட்டாடையும் அணிந்து கொண்டு, கெம்பீரமாகக் காணப்படுவான். நல்லுயரம், அதற்கேற்ற காத்திரம்! கண்மட்டுந்தான், ஒன்று!!

டியூடானிக் ஆண்டவன் இவ்வண்ணம், அலங்கார ரூபனாக வீற்றிருக்கும்போது, அவன் தோளின் மீது, இருபுறத்திலும், இரண்டு அண்டங் காக்கைகள் உட்கார்ந்து கொண்டிருக்கும்! காலடியிலே, இரண்டு, ஓநாய்கள் படுத்துக் கிடக்கும்! கருடன் மகாவிஷ்ணுவுக்கும்; காளை சிவனுருக்கும், உண்டல்லவா!!

இந்த இரு அண்டங் காக்கைகள், அவ்வப்போது கிளம்பிப் போய், பல இடங்களிலும் நடைபெறுவனவற்றைக் கண்டறிந்து வந்து ஓடினுக்கு உரைக்குமாம்—அதனாலேயே, ஓடின் இருக்குமிடத்திலிருந்தே, எங்கும் நடைபெறும், சேதியை அறிந்துகொள்ளும் 'சக்தி' பெற முடிந்தது.

இரு அண்டங் காக்கைகளிலே ஒன்றின் பெயர், 'சிந்தனை'—மற்றொன்றின் பெயர், 'நினைவு'!

ஓநாய்களிலே ஒன்றின் பெயர், 'பேராசை'—மற்றொன்றின் பெயர், 'பெருந் திண்டி.'

இந்தப் பரிவாரங்களுடன் வீற்றிருந்த வண்ணம், அண்டத்தைப் பரிபாலித்து வந்தான், இந்த அதிசயத் தேவன்.

இன்று ஜெர்மனியில், பெர்லின் நகரிலோ, இங்கிலாந்தில் இலண்டன் நகரிலோ, சென்று, ஓடின் தேவனின் ஆலயம் எங்குளது, என்று கேட்டால் கைகொட்டிச் சிரிப்பர், ஓய்வுடையோர், பிறர், அதையும் செய்

ஆண்டவனும் அண்டங்காக்கையும்

யார்! ஓடின், ஓர் மாஜி கடவுள்! தெளிவு பிறந்ததும், இந்தத்தேவன் இறந்தான்! பகுத்தறிவு கிளம்பியதும், இந்தப் பகவான் மறைந்தார்! பாமரரும் இன்று நம்புவதில்லை, இப்படிப்பட்ட தேவனை!

எனினும் ஓர் காலத்திலே கவிவாணர் பாட, புவியாள்வோர் காணிக்கையைக் கொட்ட, பூஜாரிகள் அர்ச்சிக்க, பாமரர் பயபக்தியுடன் தொழுது நிற்க, சர்வசக்தி வாய்ந்தவராக, ஓடின், தேவாலயங்களிலே வீற்றிருந்தார்.

அண்டங் காக்கை இரண்
டுடையாய் போற்றி!
அமரர் நாயகனே, அதி
பலதேவா போற்றி!
நீலப்பாகை உடையாய்
போற்றி!
ஒற்றைக் கண்ணா! ஓடின்!
போற்றி!

என்று தோத்திரம் செய்துகொண்டுதான் வந்தனர்..

ஒற்றைக்கண்ணன்! முக்கண்ணன் தெரியும் நமது புராணீகர்களுக்கு டியூடானியப் புராணீகன், தான் சிருஷ்டித்த கற்பனைக் கடவுளுக்கு, ஒரு கண்தான் வைத்தான்—மற்றொன்றை இழக்கச் செய்தான்.

ஓடின், தேவனாகி, தேஜோன்மயனாக விளங்குவதற்காக 'தேவரசம்' பருக விரும்பினான். இந்தத் தேவரசத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தவர்கள், நிபந்தனை விதித்தனர், ஓடினுக்கு. என்ன நிபந்தனைக்கும் இசைவேன், எனக்கு மட்டும், தேவரசம் தருக, என்று கேட்டாராம் ஓடின்.

உறுதி, கலங்காத தன்மை, தியாக உள்ளம், இவை உண்டா என்று பரிசோதிக்க விரும்பிய, தேவரசம் தயாரிப்போர், "உன் கண்களிலே ஒன்றைப் பிடுங்கி இந்தக் கிணற்றிலே எறியச் சம்மதமா?" என்று கேட்க, ஓடின், உடனே தன் இரு கண்களிலொன்றை எடுத்து எறிந்து விட்டு, தேவரசம் பெற்றுப் பருகி, தேவனானான்!

கடவுள், ஆகிறான், கடவுள்! எப்படி இருக்கிறது, கடவுட்கொள்கை! நம்பக்கூடியதாக இல்லையே, என்பர்—ஆமாம், இன்று—! அன்று? வேதம், இது! தேவனின் திருவிளையாடல் இது! ஆத்தீகம், இதை நம்புவதுதான்!

ஆச்சரியமாக இருக்கிறதா? கடவுள், தேவரசம் பருகித்தானா கடவுட் தன்மை பெற்றார்! என்பது சேட்டு!

வேறுநாட்டு விவகாரம் இது, ஆகவே, வேகமாகக் கண்டிக்கக் கூடத்தோன்றும். இப்படிக்கூடவா, காட்டுமிராண்டித்தனமாக இருந்து வந்தனர், என்று கேலி பேசத் தோன்றும். இந்த நிலையில், டியூடன் மக்கள், இருந்தது, எப்போது? உலகப்பொது அறிவு ஏற்படாமுன்னம்! சிலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்துவந்த சிந்தனைக் குழப்பம்! இது, கேலிக்குரியதாகத் தோன்றுகிறது இப்போது. எனினும், இதே சிந்தனைக்குழப்பம், இன்றும் இங்கு இருக்கிறதே இதற்கு என்ன சொல்கிறீர்கள்! இதைப்போக்க, என்ன செய்கிறீர்கள்? செய்பவர்களுக்குத் தரும் சிறப்பு என்ன? நாத்திகன், என்ற வசை!!

தேவரசம் தேடினான் தேவன் என்பது வேடிக்கை என்று கூறத்தோன்றும், டியூடன் தேவன் கதையைப் படிக்கும்போது. ஆனால் இப்போதும், நம்நாட்டுமக்கள் படிக்கிறார்கள்—படிக்கப்பக்கம் நின்றுகேட்டுநெஞ்சம் நெக்குருக நிற்கிறார்களே: புராணங்களை! அவைகளிலே ஒன்று, கூர்மாவதாரமல்லவா! பகவான், ஆமையாகி, திருப்பாற்கடலிலே, மேரு மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக்கயிறு ஆகவும் கொண்டு கடைந்து, 'அமிர்தம்' பெற முயற்சித்தபோது, மேரு, கடலுக்குள்ளே மூழ்கிவிடாதிருக்க, பகவான், ஆமையாகி, மலையைத்தாங்கிக் கொண்ட கதைதானே, கூர்மாவதாரம், இதை, இன்றும் நம்புகிறானே, நமது உடன்பிறந்தவன்! மறுத்துப் பேசுபவன், மாபாவி என்று ஏசப்படுகிறானே! இதற்கென்ன சொல்கிறீர்கள்.

தேவரசம் பருகிட ஒற்றைக்கண்ணனான ஓடினை, ஓடின் தேவனாகக் கொண்டாடப்பட்டுவந்த நாட்டுமக்களெல்லாம், மறந்து பல ஆயிரம் ஆண்டுகளானபிறகு, மனித அறிவு இப்படிப்பட்ட கதைகளெல்லாம் கட்டி, இறைவனை அறிவதற்கு முயன்றதே, என்னவித்தை இது, என்று அவர்கள் எள்ளிநகையாடும் நாட்களில், ஓடின், மாஜிகடவுளான பிறகு, இங்கு, 'பஸ்மாசுரமோகினி' கதை, காலட்சேபமாய், நாடகமாய், சினிமாவாய், நாட்டிலேஉலவுகிறதே! இந்தக்கோணலைத்தடுக்க, யார் முன்வருகிறார்கள்! அமிர்தம் — ஆலகால விஷம்—மோகினி அவதாரம் — நீலகண்டன்—என்ற சொற்களும், அவைகளைச் சுற்றிக்கொண்டுள்ள கதைகளும், பாமரருக்கு மனப்பாடமாக இன்றும் இருக்கிறதே! படித்தோரும் இவை வெறும் கற்பனை என்று கூறப்பயப்படுகிறார்களே!! இதற்கென்ன செய்வது!

இந்நாளிலும் இங்குள்ள இந்நிலை, டியூடன்நாடுகளிலே, பன்னெடுங் காலத்துக்கு முன்பு இருந்துவந்தது அந்தப்பழைய காடி, பருகஉதவாது என்று சாக்கடையில் கொட்டிவிட்டு, அறிவு எனும் அருவிநீரை, அள்ளிக் குடித்து அந்நாட்டுமக்கள், தெளிவு பெற்றனர்! நாமோ இன்றும், பஞ்சகவ்யம் சாப்பிடும், பண்பிலேயே, இருக்கிறோம்!

நாகரிகமும் நல்லறிவும் இல்லாத நாட்களிலே, டியூடன் மக்களின் மனதிலே மருட்சியையும் பக்தியையும் மூட்டிவந்த ஓடின், பல தேவிமார்களை மணம் புரிந்துகொண்டு பல குமாரர்களைப் பெற்றெடுத்ததாகப் புராணம் இருந்தது.

ஓடினின் முதல் மனைவி, ஜோர்ட் என்பவர்—ஏறத்தாழ, நமது நாட்டுப் புராணிகர்கள், சித்தரித்துக் காட்டிய, பூமாதேவி! டியூடன் பூமாதேவியின் புத்திரன்தான் தோர் தேவன்—முருகன் போல, தந்தையைவிட இந்தத் தனயன், பராக்கிரமசாலி! (இவன் கதை பிறகு)

அழகன் பால்டர் என்பவன் மற்றோர் மகன்! இவனைப் பெற்றெடுத்த தேவியின் பெயர், பிரிக்பெருமாட்டி!! ஒன்பது தேவ குமாரிகளை மணம் புரிந்திருந்தார் ஓடின் ஹேய்மிடால் என்று மற்றோர் மகனும் உண்டு, இந்த மகேசனுக்கு. லாக்

கடவுளைத் தோற்கடித்த கடவுள்!

என்றோர் தம்பி, இருந்தான். மற்றும் பல தம்பிமார்கள்! பெரிய குடும்பம்!!

கடவுளுக்கு இப்படிக் குடும்பம், குழந்தை குட்டிகள், என்றெல்லாம் கூறுவது கேலிக்கூத்து — மதமாகாது—என்று, ஏதாவதோர் கல்லூரியில் பேசலாம்—மக்களிடம்சென்று பேசமுடியுமா! பார்வதி, கங்கா—தேவிமார்! முருகன், விநாயகன், பிள்ளைமார்! மைத்துனன், மகாவிஷ்ணு! நந்திநாரதர், இசை தர! ரிஷபம், வாகனமாக இருக்க!—இப்படி இருக்கும் 'சிவனாரின் குடும்பம்' பெரிய குடும்பமாயிற்றே! கேலிசெய்தால், சைவர் எவ்வளவு சீறுகின்றனர், இன்றும்!! அந்தச் சீற்றம் இருந்தது, அறிவுத் தெளிவு இல்லாத காலத்தில் டியுடன் மக்களுக்கு! அவர்கள், ஓடின் தேவனால் தான், உலகு, அலைகடலால் அழிந்து போகாமலிருக்கிறது, என்று நம்பித் தொழுதுவந்தனர். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டிருந்தனர். கோயில் கட்டினர் — கோலாகல, திருவிழா நடத்தினர்! பரமசிவனைப் பதிகம் பாடியும், முருகனைப்பிள்ளைத்தமிழ்பாடியும், விநாயகருக்குஅகவல் பாடியும், அருள்பெற நம்மவர்கள் விரும்புவது. போலவே டியுடன் மக்களும், கடவுளின் குடும்பத்தினரில், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வகையாகப் பூஜித்துப் பலன் வேண்டினர். அவர்கள்அன்று செய்து வந்ததை, எல்லாம் அறிவீனம் என்று கண்டறிந்து விட்டொழித்தனர், நமது பாமரரோ, அந்தப் பழயதையே உண்டு வருகின்றனர்—படித்தவர்களோ, அந்தப் 'பழயதுக்கு' ஊறுகாய் தேடித் தருகின்றனர்.

கடவுட் தன்மை என்பதை விளக்கவும், மக்கள் மனதிலே ஏற்படக்கூடிய, தீயஎண்ணங்களைத் தீய்த்து, அவர்களின் மனதைத் தூய்மையானதாக்கவும், கற்பனைக் கதைகள் பயன் படட்டுமே என்று வாதிடும் போக்கினரும் கூட உண்டு, இந்நாளில்! ஆனால், இதற்குக் கூடப் பயன் பட முடியாதபடியானவைகளும், பண்புக்கு ஊறு தேடுபவைகளும் உள்ள செயல்களையே, தேவனின் திருவிளையாடல் என்று தீட்டி வைத்துள்ளனர், புராணங்களில். இப்படிப்பட்ட, "திருவிளையாடல்களைக்" கொண்டே தேவனுக்கு, சிறப்புப் பெயர்களிட்டு, அர்ச்சித்தனர்!

இம்முறையில், ஓடினுக்கு, நாற்பத்தி ஒன்பது, பெயர்கள் உண்டு—அர்ச்சனைக்குரியனவாக!

பூலோகத்தைக் காணவும், வேறு பல உலகங்களைச் சுற்றிப்பார்க்கவும் ஓடின், வாயுவேக மனோவேகமாக ஓடக்கூடிய ஸ்லீட்னர் என்ற குதிரை மீதேறிச் செல்வாராம்.

ஓடினுடைய அற்புதச்சக்திகளைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து கதைபல தீட்டிய டியுடானிக்புராணிகர், அதே கடவுளுக்குக் கஷ்டம் வருவதும் பகைவர் அவருக்கு எதிராகக்கிளம்புவதும், சில சமயங்களிலே, ஓடின் கடவுள் தோற்று ஓடுவதும் போன்ற கதைகளையும் தீட்டினர். கடவுள், சர்வசக்திவாய்ந்தவராயிற்றே, எதையும், ஆக்கி அழிக்கும் ஆற்றல் உள்ளவரல்லவா, அவரைச் சாதாரணச் சிற்றரசன்போலச் சில சமயம் சித்தரித்துக் காட்டுகிறோமே, இதுசரியா; சிந்தனைத் திறமுள்ளவர்கள் இதனை ஒப்புவரா, என்பது பற்றி எல்லாம் புராணிகன் எண்ணுவதில்லை, கடவுள் சம்பந்தமான கதைபற்றித்தான், சந்தேகிக்கவோ, ஆராயவோ கூடாதே—பாபம் என்று மதகுரு கட்டளை பிறப்பித்திருக்கிறானே! மதிகுறைந்த மக்கள், ஏன், ஆராயப் போகிறார்கள் என்ற தைரியம் புராணீகனுக்கு. எனவே, முரண்பாடு மிகுந்த பல கதைகளைப் புனைந்தான், துணிவுடன். பக்தி காரணமாக சகலத்தையும் விழுங்கினர் மக்கள்.

இப்படிப்பட்ட, கடவுட் தன்மைக்கே முரணான கதையும் உண்டு, ஓடின். புராணத்திலே.

ஒருசமயத்தில், ஆஸ்கார்ட் கடவுளர்களுக்கும், வான் மண்டலத்துத் தேவதைகளுக்கும் பெரும் போர் மூண்டு, ஓடின் தோற்றுவிட நேரிட்டது. ஆமாம்! மூலக்கடவுள் முறியடிக்கப்பட்டார், பரிவாரத்துடன். அவருடைய, மகன், அசகாயச் சூரன், தார்தேவனின் சக்திவாய்ந்த சம்மட்டி உடைந்து விட்டது, ஓடினின் மனம், அதைவிட அதிகமான அளவு உடைந்துவிட்டது. கடவுளர் உலகு கலக்கமடைந்தது. ஆஸ்கார்ட்—அதாவது டியூடானிய மக்கள் எதை, வைகுந்தம் என்றும் கைலாயம் என்றும் பயபக்தியுடன் கூறிவந்தனரோ, அந்தக் கடவுளர் உலகம், முற்றுகையிடப்பட்டது.

மூலக்கடவுளை முறியடிக்கக்கிளம்பிய, வான்மண்டல வீரன் பெயர், நிஜார்ட். இவன் வீரத்தின் முன்பு தாக்குப்பிடிக்க முடியாமல், கடவுள்கள் மூலைக்கொருவராக ஓடலாயினர். வாயுவேக மனோவேகமாக ஓடக்கூடிய ஸ்லீப்னர் மீது ஏறிக்கொண்டு, ஓடின், ஆஸ்கார்டை விட்டு, ஓடினார். அவர் மகன் தார், ஆடுகள் பூட்டப்பட்ட அற்புதத் தேர் ஏறி, ஆஸ்கார்டை விட்டு வெளியேறினான்.

வெற்றி பெற்ற வான் மண்டலத்தார், ஓடின், அரசோச்சி அமர்ந்திருந்த பீடத்தில், உல் என்பவனை அமரச் செய்தனர். புதிய கடவுளானான், இந்த, உல்! கடவுள் எனும் அந்தஸ்த்தை இழந்து, ஓடின், தன் குடும்பத்துடன், ஒரு பாதுகாப்பான இடம் போய்ச் சேர்ந்தான். ஜுனகத் நவாப், ஓடிவிட்டார், என்று படிக்கும்போதே சிரிப்பு வருகிறதல்லவா நமக்கு, இவனும் ஒரு மன்னனா என்று—இங்கு, கடவுள் ஓடுகிறார், தோற்று—தலை தப்பினால் போதும் என்று!!

ஓடினுடைய தம்பி, லாக்தேவன் மட்டும், புதிய கடவுளின் பொன்னடி தொழுபவன்போலப் பாசாங்கு செய்துகொண்டு, ஆஸ்கார்டிலேயே வசித்து வந்தான்.

சர்வ வல்லமையுள்ள கடவுள் தோற்று ஓடி, தனி இடம் தேடியதோடு, வான் மண்டலத்தாரை வீழ்த்த, என்ன செய்வதென்று! யோசித்தவண்ணம் இருந்தான்.

ஹாப்டான், என்றோர் அசுரன் இருந்தான்—அவனுக்கோர் மகன்—அவனை, ஓடின், சிறு குழந்தையாக இருக்கும்போதே, களவாடிச் சென்று, வளர்த்துவரலானான்.

இந்த அசுரகுலத்தாருக்கும்வான் மண்டலத்தாருக்கும் தீராதபகை இருந்துவந்தது—எனவேதான், அசு

OCT 1949 MADRAS

மாயாவதியின் காதல்

ரக் குழந்தையை ஆஸ்கார்டுகடவுள், அக்கரையுடன் வளர்க்கலானார்—பிறகு பகை மூட்டிவிட. குழந்தை வளர்ந்தது—ஓடின், தன் மந்திர பலத்தைப் பிரயோகித்து, இந்தக் குழந்தையைஓர் மாவீரனாக்கினான்.

ஹாடிங் எனும் இந்தஅசுரவீரன், ஆஸ்கார்டு மீது பிறகு படை எடுத்துச் சென்றான் பழிவாங்கும் உணர்ச்சியுடன். தன் வேலை முடியும் வரையில் வேறு எக்காரியத்திலும் ஈடுபட மறுத்து, தலைமயிரை சடை சடையாக வளர்த்து, கத்தரித்துக்கொள்ள வில்லையாம் இந்த அசுரன்.

ஆஸ்கார்டு போகும் வழியிலேயே இந்த அசகாயச்சூரனுக்கு ஆபத்து வந்தது. லாக் தேவன், இவனைப் பிடித்து, ஒரு காட்டில் மரத்தில் கட்டி விட்டான். காவலாளிகளை அமர்த்தினான், அவன் தப்பிப் போகாதிருக்க.

ஹாடிங், ஒரு மந்திரப் பாட்டு பாடினான்—உடனே, அந்தக் காவலாளிகள், மாயத் தூக்கத்திலாழ்ந்தனர். ஒரு பெரிய ஓநாய், கோரப் பசியுடன் வந்தது அவனைக்கொல்ல. மற்றோர் மந்திரப் பாட்டுப் பாடினான், ஓநாய் செத்தது! இன்னொரு பாட்டு; அவன் மீது பூட்டப்பட்ட தளைகள் யாவும் பொடிப் பொடியாயின. இவ்வளவு வல்லமையுள்ள மந்திரப் பாடல்களையும், ஓடின்தான் ஹாடிங்குக்குக் கற்றுக்கொடுத்திருந்தான்!

வேடிக்கை பாருங்கள், இவ்வளவு மந்திர பலமும், ஓடினுக்குப் பயன் படவில்லை, தோற்றோடி விட்டான். அவனே பிறகு, மந்திர பலத்தை இன்னொருவனுக்கு அளிக்கிறான்!

ஹாடிங்கின் கஷ்டம் இவ்வளவோடு நிற்கவில்லை. ஓநாய் ஒழிந்தது. ஆனால் ஓர் ஒய்யாரி வந்தாள், அவன் முன்—காதல் செய்யலானாள்.

"பாவாய்! பழி தீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள என்னை நாடாதே—" என்கிறான் வீரன்,

"பாராய் என் அழகை! கூறாய் ஓர் காதல் மொழி" என்று கெஞ்சுகிறாள் அவள்.

அவள் ஓர் அரக்க குலஅணங்கு. பெயர், ஹார்ட் கிரேப். அரக்கி எனினும், விரும்பியபடி எல்லாம், வடிவமெடுக்கக் கூடியவள். விஸ்வரூபம் எடுக்கிறாள் ஓர் சமயம், விண்ணும் மண்ணும் நிரம்பிட நிற்கிறாள். —மறுவிநாடி அந்த மாயாவதி, அதிரூப சுந்தரியாகி, அன்பைப் பொழிகிறாள்.

அவளுடைய கொஞ்சுமொழியில் மயங்கவில்லை, மாவீரன் — போர்—போர் — என்று கொக்கரித்தான். அவளும் அவனை விடவில்லை—ஆண் உருவெடுத்து, ஆயுதம்தாங்கி அவனுடன் சென்றாள், போருக்கு.

இருவரும் பல ஆபத்துக்களைக் கடந்து, ஆஸ்கார்டுக்குப் பயணமாயினர். இடையில், மாயாவதிக்கு ஒரு பிசாசு கொடுத்த சாபத்தின் காரணமாக, 'பெருங்கை'யால் சாவு ஏற்பட்டது.

'பெருங்கை'—என்றால் என்ன! ஒரு கரம்! அண்டபிண்ட சராசரத்தையும் அடக்கி அழிக்கக் கூடியது! எப்போதேனும் தோன்றும் மறையும்!

யாருடைய கரம்? புராணிகன் கூறுவதில்லை! கடவுளுக்கும் இல்லாத சக்தி, எப்படி அந்தக் கரத்துக்குக் கிடைத்தது? விளக்கம் கிடையாது! விளக்கம் கேட்கக் கூடாதே! பாபமல்லவா!! எனவே, இதையும் நம்பினர் மக்கள்.

ஹாடிங், ஒரு ஓநாயை மீண்டும் எதிர்த்துப் போராட நேரிட்டது—அதைக் கொன்று, அதன் குடலைத் தின்றானும் — உடனே, எவராலும் அடக்கமுடியாத அளவு, பலம் ஏற்பட்டுவிட்டது.

இனி அவனுடைய எதிர்ப்பைச் சமாளிப்பது வீண் என்று கண்டு கொண்ட, வானமண்டலத்தார், சமாதானமாக விரும்பினர்.

ஓடினுடைய பீடத்திலிருந்த உல், தார் தேவனிடம் தூது சென்றான். சமரசம் ஏற்பட்டது. மீண்டும் ஓடின், கடவுளானான்!

இதுபோன்று, மற்றோர்முறையும் ஓடின், 'கடவுள் வேலை'யை விட்டுவிட்டு, ஓட நேரிட்டது.

ஹாதர் என்பவன், கிளம்பி, தன் பராக்கிரமத்தால் கடவுள்களைத் தோற்கடித்து, தேவலோகத்தைத் தனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்டான். ஓடின், தார், பால்டர்; எனும் பல கடவுள்களும் ஒன்றுகூடிப் போரிட்டும், பயனில்லை. மீண்டும் ஓடின், பதவி இழந்து, நாடோடியாக நேரிட்டது. பால்டரும் இறந்து விட்டான்.

சோகத்துடன், ஓடின், ஆரூடக்காரரிடம் சென்றான்—ஆண்டவன் போகிறான், ஆரூடம் கேட்க! ஆரூடக்காரர், உன் அவமானத்தைப் போக்கி, பழிக்குப் பழி வாங்க, உனக்கோர் பாலகன் பிறப்பான், அவ்விதமான பாலகனைப் பெற்றெடுக்கக்கூடிய பாக்யவதி, ரிண்டா என்பவளை, நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றனர்.

'நாம் கோகுலத்தில் பிறப்போம் கம்சனைக் கொல்ல' என்று அசரீரி கூறுவதுபோலத்தான், இதுவும்.

ரிண்டா எனும் மங்கை, ருதேனியர்களின் மன்னனின் மகள். அவளை அடைய விரும்பி, ஓடின், மானிட உருவெடுத்துச் சென்று மன்னனிடம் பணியாளாகி, அவன் மனம் மகிழத்தக்க பல செயல் புரிந்து, மன்னன் மகிழ்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து, "மன்னா! எனக்கு உன் மகள், ரிண்டா தேவியை மணமுடித்துத் தரவேண்டும்" என்று கேட்டான். மாவீரனை மருகனாகப் பெறுவதிலே, மன்னனுக்கு விருப்பந்தான்—எனினும் மகளின் சம்மதத்தைப் பெற்ற பிறகே, மணம், என்று கூறிவிட்டான். எனவே, ஓடின், ரிண்டாவின் காதலைப் பெற முயற்சித்தான்.

அவளோ, "இவன் வீரன் என்பது சரி—ஆனால் வயோதிகன்! நானோ இளமங்கை! எனக்கோ இவன் மணாளனாவது!" என்று சீறினாள். ஓடினோ அவளை அடைந்தாக வேண்டும்—காதலுக்காக அல்லவாயினும், அவளை மனைவியாகப் பெற்று, ஒருமகனை அவள் ஈன்றெடுத்துத் தந்தால்தான், இழந்த மானத்தை மீட்கமுடியும்—அதற்காக அவள் வேண்டும். அவளோ, வயோதிகனை மணாளனாகக் கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் செய்கிறாள். ஓடின், விதவிதமான காதல் விளையாட்டுகளெல்லாம் செய்து பார்க்கிறார்—ஒன்றும் பலிக்கவில்லை. அவளை முத்தமிடச் சென்றாராம்

ஓர் முறை, ஓங்கிக் கொடுத்தாளாம் ஓர் அறை, கன்னத்தில்!

எவ்வளவு இழிவு வருவதானாலும் சரி, பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும். பலமுறை முயன்றார் பகவான்! கடைசியில் அவளுக்குப் பிசாசு பிடிக்கும்படி செய்து, அதை ஓட்டும் மந்திரவாதியாக மாறி, அவள் மனதை மயக்கி, மணமுடித்துக்கொண்டார்.

போயி—எனும் குமாரனைப் பெற்றெடுத்தாள், ரிண்டா. இந்தக் குமாரன், தந்தையை விரட்டிய தருக்கரைத் தோற்கடித்து, ஓடினை மீண்டும் கடவுளாசனத்தில் இருக்கச் செய்தான்.

இப்படி இருக்கிறது ஓடின் புராணம்!

ஒன்றுக்கொன்று பொருத்தமோ, ஒன்றினுக்காவது பொருளோ, எதிலாவது, உண்மையான கடவுட் தன்மையோ, கடுகளவும் காண முடியாத கதைகள். எனினும் அவைகளை, டியூடன் மக்கள், பயபக்தியுடன் பாராயணம் செய்வதை, மதக் கடமையாகக் கருதினர். அவர்களுக்கு அந்தக் காலத்திலே கிடைத்த கம்பன்கள், காவியம் பாடினர்—ராஜாக்கள் கோயில் கட்டினர்—தம்பிரான்கள் தோன்றினர்—பக்திப் பிரவாகம், பல மண்டலங்களிலும் பெருக்கெடுத்தோடியது.

எவ்வளவு ஆபாசம், எத்தனை சதி, வஞ்சனை, நிரம்பியதாக உள்ளன இக்கதைகள் — இவைகளைக் கொண்டு, கடவுளுக்குப் பெருமை கற்பிக்க எண்ணுகிறீர்களே, பேதையரே! நீங்களா, உண்மை ஆத்திகர்கள்? இதுவா, மார்க்கம்? என்று, கேட்கும் துணிவும் தெளிவும் ஏற்பட நெடுங்காலம் பிடித்தது. ஆனால் தெளிவு ஏற்பட்டதும், கேட்டனர், அங்கு. கேட்டபோது, அவர்களுக்குக் கேடு செய்தனர் மூடர்கள். எனினும் அவர்கள் உண்மையை நிலைநாட்ட அஞ்சவில்லை. உயிர் பெரிதல்ல, உலகை உருக்குலையச் செய்யும் உத்தமர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்பதேபெரிதுஎன்றஎண்ணிப் பணி புரிந்தனர்—வெற்றி பெற்றனர்—ஓடன் ஓட்டமெடுத்தான், கோயிலிலிருந்து; மக்கள் மனதிலிருந்து!! மாஜி கடவுளானன்!

"அண்டங் காக்கையைக் கண்டேன்!" என்று புளுகு பேசிய பூஜாரிகள்— "ஓநாய்கள் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு வந்தது சொப்பனத்தில்" என்று பிதற்றிய பேதையர், தெளிவு பெறுவது, எளிதான காரியமல்ல, மத வெறியை எதிர்த்து நிற்பது, ஆபத்தான காரியம். எனினும், நல்லறிவாளர்கள், எதிர்த்து நின்றனர், வெற்றி கண்டனர்; விரட்டி அடித்தனர், கற்பனைகளை.

கடவுளுக்குக் குடும்பம்; அதிலே கலகம்!

கடவுளுக்கு எதிரிகள்—அதனால் அவர் தோற்று ஓடுவது!!

இவைகளை நம்பிய மக்களின் தொகை, ஏராளம், அன்று.

இன்று, அவைகளைக் கேட்டுத் துள்ளி விளையாடும் பிள்ளைகளும், எள்ளி நகையாடும்.—அங்கு!

இங்கோ, இன்றும், தக்கனைச் சிவனார் கொன்ற புராணத்தை நம்ப மறுப்பவன், பாபியாகக் கருதப்படுகிறான். கடவுள்களுக்குள் சண்டை—தேவலோகத்தில் கலகம் — ஒரு தேவனை மற்றோர் தேவன் தோற்கடிப்பது—என்பன போன்ற புராணக் கதைகளை, புண்ய கதைகளாகக் கொண்டு, புத்தியின் போக்கையே, பாமரர் பாழ்படுத்திக் கொள்கின்றனர்.

எவ்வளவோ கோலாகலமாக 'வாழ்வு' நடத்திய, ஓடின், மாஜி கடவுளானதை, நம் நாட்டுப் பாமரர் அறியார். அறிந்தவர்கள் உரைக்கவும் அஞ்சுகின்றனர்!

*

'தருமம் தானு, ஐயா!'

மோகனத்திலா, காம்போதியிலா இந்தப்பாட்டு என்று கேட்டுவிடாதீர்கள்—நாட்டிலே நசுக்கப்பட்டிருப்போரின் குரலொலி; ஓரளவுக்கு முகாரி கலந்திருக்கும், 'தர்பார்' எதிர்த்தரப்பிலிருந்து கிளம்பினால், முகாரி போய், அடாணுவாகிவிடும்.

எந்தச் சமுகமும் குலமும், மற்றச் சமுகத்தினால் பல்வேறு துறைகளிலே அழுத்திவைக்கப்பட்டால், துவக்கத்திலே துயரம் தாங்கமாட்டாமல், 'நம்கதி' இதுதான், என்று எண்ணி, தமது எண்ணத்தை வெளியே எடுத்துக் கூறவும் துணிவும் வாய்ப்புமின்றிக் கிடக்கும். ஆனால் கடைசி வரையிலல்ல! உள்ளத்துக்கு உரம் மெள்ள மெள்ள ஏறிக்கொண்டே வரும்—அவர்களையுமறியாமல்—ஆதிக்கக்காரர்களுக்கும் தெரியாமல். நேற்றுவரை நிமிர்ந்து நடக்கக்கூடத் தைரியமில்லாதிருந்தானே இன்று எங்கிருந்து பிறந்தது இந்தத் துணிவு என்று ஆதிக்கக்காரர்களே, அச்சத்துடன், பேசும் நிலைகூடப் பிறந்துவிடுவதுண்டு. அந்த நிலை வருகிறவரையில் ஆதிக்கக்காரர்கள், தங்களை யாரும் அசைக்கக்கூட முடியாது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள், ஆர்ப்பரிப்பு அவர்களின் கீதமாக இருக்கும், அட்டகாசம் அவர்களின் நடனமாக இருக்கும், மூமதை மேடை ஏறி, ஆடுவர், பாடுவர்; மக்கள் மன்றத்திலே, நசுக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி, அணிவகுத்துநின்று உரிமைக்குப் போரிடத் துணியும் வரையில்.

உரிமைப்போர், என்றாலே, ஏதோ ஒருநாட்டின் மீது மற்றோர் நாடு கொண்டுள்ள ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, நாடு உரிமை பெறுவதுதான், என்ற எண்ணத்தைச், சிலர் ஊட்டிவிட்டார்கள். எனவே பொதுமக்களில் பலருக்கு, உரிமைப் போர் என்பது, எவ்வளவு விரிவானது, எவ்வளவு வகை வகையானது என்பது சரியாகப் புரிவதில்லை — இந்த மனநிலையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, எவ்விதமான உரிமை உணர்ச்சியையும், அந்த உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிகளையும் ஒடுக்கிவிடவே முயலுவர் — தோல்விதான் இதிலே என்றபோதிலும், முயற்சிக்காமலிரார். ஆதிக்க ஆசை அவ்வளவு சுலபத்திலா போய்விடும்!

இங்குமட்டுமல்ல, பொதுவாக, எங்குமே உடலுழைப்பைத் தந்து ஊரைக்காப்பாற்றும் மக்களை, அழுத்திவைப்பதையே, திட்டமாகக் கொண்டு, தன்னலக்காரர்கள் பலகாலமாக, தங்கள் ஆதிக்கத்தைக்

காப்பாற்றிக்கொண்டு வந்துள்ளனர். தருமம்தானு ஐயா!—என்று தழதழத்த குரலிலே கூடக்கேட்பதற்கு, நசுக்கப்பட்டுக் கிடந்தவர்களுக்கு எண்ணம் பிறவாமலிருந்தபோது, ஆதிக்கக்காரக்கள், தமது போக்குப் பற்றி, யாருக்கும் சமாதானம் சொல்லவோ, விளக்கம் கூறவோ வேண்டிய அவசியமில்லாதவர்களாக இறுமாந்து கிடந்தனர். ஆடவர் பெண்களையும், உயர் ஜாதியினர் தாழ்ந்தவர் என்போரையும், வெள்ளையர், கருப்பரையும், முதலாளிகள் தொழிலாளரையும், இதுபோலவே நடத்திவந்தனர்; வருகின்றனர்.

* * *

குரலிலே நடுக்கத்தோடு, ஆனால் வேதனையைப் போக்கிக்கொள்ள, ஏதேனும் வழி கண்டாகவேண்டுமே என்பதற்காக, அழுத்தப்பட்டுக் கிடந்தோர், தருமம்தானு ஐயா! என்று கேட்டனர் — கொதித்து எழுந்த ஆதிக்கக்காரர், "என்னடா இது, என்றுமில்லாத வழக்கம்—எதுக்குனக்கிந்தப்பதட்டம்" என்று கொக்கரித்தனர். படிப்படியாக, முறைமாறத் தொடங்கிற்று. கெஞ்சி நின்றவர்கள், பிறகு, நியாயம் கேட்கலாயினர்,—கிடைக்கவில்லை—எனவே, அக்ரமப் போக்கைக் கண்டிக்கவே ஆரம்பித்தனர்—பிறகு கிளர்ச்சி,—என இவ்வாறு, முறை வளர்ந்தது. 'இதுகள் என்ன செய்துவிட முடியும்?' என்ற போக்கு ஆதிக்கக்காரரிடம் நிலைக்க முடியாது போகவே, அவர்கள், பலகாலப் பழக்கம்—பூர்வீக ஏற்பாடு—தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட திட்டம்—தலைகீழ் மாற்றம் தவறானது—அவசரப்பட்டு மாற்றி விடுவது ஆபத்து—மெள்ள மெள்ள மாற்றவேண்டும்—மாறும்போது மனமாச்சரியம் காட்டக்கூடாது—என்று இவ்வண்ணம், ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கி வரவேண்டி நேரிட்டது. சில இடங்களில், அவர்கள் இறங்கி வரவில்லை—கீழே உருட்டித் தள்ளப்பட்டனர், உள்ளத்தில் வேதனை மிகுந்த மக்களால். அதுதான் புரட்சி!

* * *

சில இடங்களிலே, சமயமறிந்து உரிமைக் கிளர்ச்சியைத் துவக்காது போன காரணத்தால், ஆதிக்கக்காரர்கள், தங்கள் அட்டகாசப் போக்கை, மாற்றிக் கொள்ளவோ, மட்டுப்படுத்தவோ கூடத் தேவையற்றுப் போய்விட்டது. "ஆமாம், இப்படித்தான் செய்வோம் - இதை, ஏன் என்று கேட்டால், இடி! எதிர்த்தால், அடி!!" என்று இறுமாப்புடன் பேசவும் செய்கின்றனர். அழுத்தப்பட்டுக் கிடப்பவர்கள், அறிவு ஆற்றலைக் காட்டிய போதிலும், கூண்டுக்கிளி பாடும்போது, கொவ்வை கொடுத்துக் கொஞ்சுவது போல, இந்த ஆதிக்கக்காரர்கள் நடந்து கொள்கின்றனரே தவிர, உரிமை தர மறுக்கின்றனர் – உள்ளன்பு காட்டுவதில்லை – நேர்மையைக்கடைப்பிடிப்பதில்லை. இந்தக் 'காட்டு மிராண்டி'ப் போக்கு, நவநாகரிக மிகுந்த அமெரிக்காவிலே இன்று தலைவிரித்தாடுகிறது. அங்கு நீக்ரோ மக்கள், இழிவாக நடத்தப்படுகின்றனர் – இம்சைக்கு ஆளாகின்றனர்—வெறிச் செயல் புரியும் வெள்ளையர்களை அங்கு வீரர்களென்று பாராட்டவும் மக்களில் பலர் முன்வருகின்றனர். நீக்ரோ தலைவர்கள், உலகெங்கும் உள்ள, நல்லறிவாளர்களின் ஆதரவை நாடிப் பெற்றும்கூட, இம்சை நடந்தபடியே இருக்கிறது. உலக இசைவாணர்களிலே ஒருவர் என்று புகழ் பெற்ற பால் ராப்சன், இசை விருந்தளிக்க இருந்த கூட்டமொன்றைத் தாக்கினர், தருக்கர்கள் என்ற செய்தி சென்றவாரம் வெளிவந்தது.

சம்பவம் நடந்த இடம், ஜனநாயகம் மலர்வதாகப் பேசப்படும், அமெரிக்காவில், நியுயார்க்குக்கு அருகிலுள்ள பூக்ஸ்கில் நகரம்! அது நடந்து ஒரு வாரத்திற்கெல்லாம், மீண்டும் ஒருமுறை, வீணர்களின் வெறிச் செயல் நடை பெற்றிருக்கிறது. பால்ராப்சனின் இசை விருந்து இவ்வாரம், கடந்த சம்பவம் நடந்த ஒரு மைல் தூரத்தில் மீண்டும் நடைபெற்றிருக்கிறது. இசைவாணரின் இன்னிசையைக் கேட்டுவிட்டுத் திரும்பிய பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மீது கல் வீசி, கலவரம் விளைத்துப் படுகாயப்படுத்தியுள்ளனர், கலகக்காரர்கள்.

இசை விருந்து கேட்டுத் திரும்பிய, கார்கள் கவிழ்க்கப்பட்டதாம்! மக்களை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ்கள் யாவும் பலமாகத் தாக்கப்பட்டனவாம்-பலருக்கு இதன்விளைவாகப்படுகாயம், என்று பட்டியல் வெளி வந்திருக்கிறது. இசை நிகழ்ச்சி நடைபெறும்போது, கூடி நின்று கூச்சல் போட்டு, நிகழ்ச்சியைக் கலைக்கவும் எத்தனித்து இருக்கின்றனர். முயற்சி, பலிக்காமற்போகவே, நிறவெறியர்கள் மூர்க்கத்தனத்துடன் இத்தகைய அட்டூழியங்களில் ஈடு பட்டிருக்கின்றனர்.

சரியான சமயத்திலே, உரிமைப் போர் நடத்தத்தவறியதன் விளைவே, இந்த வேதனை தரும் நிலைமை. அமெரிக்க பூபாகத்திலே ஐரோப்பிய நாடுகளிலிருந்து, விரட்டப்பட்டவர்கள், வீடுவாசல் அற்றவர்கள், நாடோடிகள், பிழைக்க வகையற்றவர்கள், பெற்றோரால் வெறுக்கப்பட்டவர்கள், என்பவர்களெல்லாம் கூடத்தான், சென்று குடியேறினர் — பூர்வீகக் குடிகளை அழித்தனர்—அடிமை வியாபாரம் செய்தனர்—நீக்ரோக்களை, ஆடுமாடு பிடிப்பது போலப் பிடித்து, கப்பல் கொட்டடிகளில் அடைத்து, அமெரிக்காவில், விற்றனர், கடற்கொள்ளைக்காரர்கள், மனிதருள் மிருகங்கள்! நெடுங்காலம்—பல தலைமுறை —தருமம் தானு ஐயா! — என்று கூடக் கேட்பதற்கு, முடியாது போய்விட்டது, நீக்ரோக்களால்—கட்டுப்பாடான முறையில். எனவேதான், அமெரிக்காவிலுள்ள ஆணவக்காரர்கள் சிலரால், இந்த நாகரிக நாட்களிலேயும், நீக்ரோக்களைக் கொடுமைப்படுத்த முடிகிறது.

* * *

பால்ராப்சன், இந்த அக்ரமத்தை இனியும் சகித்துக்கொள்ள முடியாது, என்று வீரமாகப் பேசியிருக்கிறார். அவருடைய வீரப்போக்கைப் பாராட்டுகிறோம். அமெரிக்காவில் எந்த இடத்திலும், இசைபாடி மக்களை மகிழ்விப்பேன்—அதனைத் தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது — எவரேனும், கலகம்செய்தால், அவர்களை அடக்குவது, போலீசின் கடமை—என்று குறிப்பிட்டுவிட்டு, "போலீசின் பாதுகாப்பு எப்போது கிடைக்கும்—கிடைக்கும்படி செய்வதற்கு என்னவழி?—என்றால், நம்மைநாமே பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்ற நிலை ஏற்படுவதுதான்" என்று தெரிவித்திருக்கிறார். உண்மை. தருமம்தானு ஐயா! என்ற குரலொலியைமதிக்க, அதிலே தோய்ந்திருக்கும் துயரை மதிக்க, துடிக்கும் தன மிக்க, ஆதிக்கக்காரர்கள் முன்வரமாட்டார்கள்! பால்ராப்சன்கள்தான் முன்வர வேண்டும்.

திராவிட நாடு

ஞாயிறு] 11—9—49 [காஞ்சி

மங்களபுரி மைனர்.

—0—

'இலட்சாதிபதி பவன்'! என்ற கட்டிடம், வாங்கப்பட்டிருக்கிறது, இலண்டனில், 'இந்திய சர்க்காரால்!' கட்டிடத்தைப் புதுப்பிக்கவும், அழகு படுத்தவும், முப்பதாயிரம் பவுன் செலவாகக் கூடும், என்று, செப்பனிடும் அலுவலகத்தார், கணக்கிட்டுக் கூறுகின்றனர். இந்த நிலையில், கட்டிடக் கிரயம் ஐம்பதாயிரம் பவுன் ஆகக்கூடும் என்று 'ஸ்டார்' எனும் பத்திரிகை எழுதுகிறது. இந்த 'மாளிகையிலே', இனி, இந்தியாவின் தூதுவர் காரியாலயம் இருக்குமாம்.

ஐம்பதாயிரம் பவுன் செலவில் அழகு மாளிகை வாங்குகிறார்கள், சீமையில். 'அந்தஸ்து' அந்த அளவுக்கு உயர்த்திக் காட்டப்படுகிறது. ஏன்? பதில் இல்லை!

கோடீஸ்வரர்கள் நாடான அமெரிக்கா, இந்தியாவிலே இப்படிப் பணத்தைத் தண்ணீர் போல வாரி இறைக்கக் காணோம். தரித்திர நாராயணர்கள் நிரம்பிய இந்தியா, துறவு மனப்பான்மை கொண்ட இந்தியா, ஆத்மீக பலத்தையே நம்பும் இந்தியா, அரை இலட்சம்பவுன் செலவுசெய்கிறது, கட்டிடம் வாங்க! தூதுவர் விடுதிக்கு!!

விரைவிலே, நமது இதழ்களிலே, அந்தக் கட்டிடத்தின், 'போட்டோ' வெளியிடப்படும்; கிருஷ்ண மேனன், தோட்டத்தில் உலாவுவது; விருந்தினர் தங்கும் கூடம்; விளையாட்டு மைதானம், இவைகளைப் பற்றிய விளக்கம், தரப்படும்; விமானமூலம், காந்தியாரின் சிலையோ சித்திரமோ அனுப்பப்படலாம், அந்த மாளிகைக்கு!

அந்தப்படத்தைப் பார்க்கும் போது பூரிப்பாகத்தான் இருக்கும். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் நம்மைப் பிடித்தாட்டிய ஏகாதிபத்தியத்தின் இருப்பிடமும் பிறப்பிடமுமான சீமையில், விடுதலை பெற்ற இந்தியா, தூதுவர் காரியாலயத்தை நிறுவிக்காட்டுகிறது, என்று புகழ் பேசப்படும்; படம், ரம்மியமானதாகத் தான் இருக்கும்; இந்தியாவின் அந்தஸ்த்து, உயர்ந்துவிட்டது, என்பதைக் காட்டும் படம்!

ஆம்! ஆனால் சென்றவாரம், எல்லா இதழ்களிலும், வேறோர் படம் வெளிவந்தது. தெளிவற்றவர்கள் அதனைக் கண்டு களித்திருக்கக் கூடும், ஆனால் நிலைமையை உணர்ந்தவர்களின் மனதிலே, வேதனைதான் ஏற்பட்டிருக்க முடியும்.

"யாரடா, மோட்டாரில்?
மங்களபுரி, மைனர்.
வந்துவிட்டாரா, மைனர்?
உள்ளே நுழைகிறார்.
போடா, போய் உபசாரம்
செய். இதோ வந்துவிடுகிறேன்.
எங்கே உட்காரச் சொல்ல!

முட்டாளே! மங்களபுரி மைனர் வந்திருக்கிறார் என்றால் சாமான்யமா அது. உள்ளே கூடத்தில், சோபாவில் உட்காரச் சொல். குளிர்ந்த பானம் வேண்டுமா, என்று கேள், மரியாதையுடன். மயில் விசிறி கொண்டுவீசு, வேண்டாம் என்று கூறினாலும், மனம் கோணாமல் நடந்துகொள். இதோ வந்துவிடுகிறேன்."

வட்டி வியாபாரம் வளர்ந்தான் பிள்ளையும், அவர் பணியாள் அமர்ந்தான் பிள்ளையும், பேசுகின்றனர் இதுபோல. மங்களபுரி மைனர், மோட்டாரை விட்டு இறங்கி, மாளிகைக்குள்ளே நுழைகிறார், கெம்பீரமாக. சில நிமிஷங்களுக்குப் பிறகு, வட்டி வியாபாரம், வளர்ந்தான் பிள்ளை வருகிறார்—புன்னகை புரிகிறார்—மங்களபுரியின் க்ஷேம இலாபங்களைக் கேட்கிறார் — மைனரின் குணத்தைப் புகழ்கிறார். மைனர், மகிழ்ச்சியுடன் இருக்கிறார். பிறகு, ஒரு காகிதம், மைனர் எதிரே நீட்டப்படுகிறது — மைனர், கையொப்பமிடுகிறார்— ஒரு 'செக்' அவரிடம் தரப்படுகிறது — மைனர் அதைப் பெற்றுக்கொள்கிறார்—உபசாரப் பேச்சு மீண்டும் நடக்கிறது—விடை பெற்றுக்கொண்டு போகிறார் மைனர்—அவர் எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரத்தை, அகமழ்ச்சியுடன் படித்துப் பார்த்துப் பூரிப்படைகிறார், வட்டி வியாபாரி!

அவருக்கு அகமகிழ்ச்சி—மங்களபுரி மைனருக்கு, அலட்சியம்; விளைவு தெரியாததால். ஆனால், மங்களபுரியின் வாழ்வுக்காகப் பாடுபட்டுழைக்கும் உண்மை ஊழியன், மைனர் அடமானப் பத்திரத்தில் கையொப்பமிடும் காட்சியைக் கண்டால், கலங்கித்தானே போயிருப்பான். மங்களபுரியை ஈடுகாட்டி, மைனர், கடன் வாங்குகிறார்—இந்த நிலைக்கு வந்திருக்கிறதே மங்களபுரி—இன்னும் போகப் போக, என்ன ஆகுமோ? கடனைத் திருப்பித் தரும் திறன் மைனருக்கு இருக்குமோ, இராதோ! கடன் வாங்கிய பணத்தைக் கதம்பப் பொடிக்குச் செலவிடுகிறாரோ, கருத்துள்ள விதமாகச் செலவிடுவாரோ, என்றெல்லாம் எண்ணி ஏங்குவான் அல்லவா? மைனரும் வட்டி வியாபாரியும், சந்தித்த காட்சி, படமாக்கப்பட்டால் அதைப் பார்க்கவும், வெட்கப்படுவான், துக்கப்படுவான், உண்மை ஊழியன்.

* * *

4—9—49 ல் பத்திரிகைகளில் வெளிவந்த படத்தைப் பாருங்கள். அம்மை விஜயலட்சுமி, கையொப்பமிடுகிறார், கடன் பத்திரத்தில். கடன் தொகை 340 இலட்சம் டாலர். மேலும் கடன் வாங்கப் போகிறார்களாம்—இதுமுதல் தவணையாகத் தரப்படும்கடன். உலக பாங்கியிலே, கடன் வாங்கப்படுகிறது! இந்தியா, ஈடுகாட்டப்பட்டு!! சாதாரண வழக்கத்தில் கூறுவதானால், இந்தியவை அடமானம் வைத்து, கடன் வாங்கப்படுகிறது. இந்தியா வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றது, இப்போது, கடனாளியாகிக் காட்சி தருகிறது.

அந்தக் கடன் பத்திரத்தில் விஜயலட்சுமி அம்மையார், கையொப்பமிடும் காட்சி, படமாகி வெளிவந்திருக்கிறது — அதைக் காணும்போது, உண்மையான நாட்டுப் பற்றும், எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் கொண்டவர்கள், துக்கப்படாமலிருக்க முடியாது! இந்தியா, அடமானப் பொருளாகிவிட்டது!! யார் விரும்புவர், இந்த நிலைமையை? ஏன், ஏற்படவேண்டும் இந்த நிலைமை?

பணம் இல்லை, 'பாரத தேசத்தில், பல புதிய தொழில்களை நடத்த, ஆறுகளிலே, தேக்கம் அமைக்க, புதிய வளம் பொங்கச் செய்ய! பணம் தேவை, பணம் இல்லை—பணம் இல்லையா?—பணம் இருக்கிறது, ஆனால் சர்க்காரால் பெற முடியவில்லை. கடன் வாங்குகிறது சர்க்கார், அமெரிக்க ஆதிக்கம் மிகுந்த உலக பாங்கினிடம்.

* * *

மங்களபுரி மைனர் கதைபோலிருக்கிறது, மனவேதனை ஏற்படத்தானே செய்யும் உண்மை ஊழியர்களுக்கு. உலகச் சூழ்நிலை அறியாதவர்கள், ஒரு தேசம் இன்னோர் தேசத்திடம் கடன் படும் பிரச்னை எவ்வளவு சிக்கலான பிரச்னைகளை உண்டாக்கும் என்பதை உணராதவர்கள், கடன் கொடுத்து இடம் பிடிக்கும் திட்டம் கொண்டதுதான் புதிய ஏகாதிபத்யம் என்ற சூட்சமம் தெரியாதவர்கள் வேண்டுமானால், படத்தைப் பார்த்து, விஜயட்சுமியார் வீற்றிருக்க, கட்டியம் கூறுபவர் போல, இரு ஆடவர், பக்கம் நிற்கிறார்கள் பாரீர்! அம்மையாரிடம் அவ்வளவு மதிப்பு, அமெரிக்க நாட்டிற்கு! என்று கூறிக் களிப்படைவர்.

அம்மையார் இந்தியாவை ஈடு காட்டிக் கடன் வாங்குகிற காட்சி அது—340 இலட்சம் டாலர் கடன் — பதினைந்து ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டும் — வட்டி, நூற்றுக்கு மூன்று.

'ரெயில்வேக்களை' புதுப்பிக்கவும், சரி செய்யவும், இந்தப் பணம் செலவிடப்படும் என்று கூறப்படுகிறது. இந்தப் பணத்திலே, 100 இலட்சம் டாலர், ஏற்கனவே அமெரிக்காவில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, ரயில்வே சாமான்களுக்காகத் தரப்பட்டுவிடும். கனடாவில் வாங்கப் போகும் சாமான்களுக்காக 170 இலட்சம் டாலர் தரப்பட்டுவிடும்.

கடன் கொடுத்திருப்பவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் பாருங்கள்.

பண்டித நேரு கூட அமெரிக்காவுக்குப் போகும்போது கனடாவுக்கும் போகிறாராம்! போகத்தானே வேண்டும்!!

* * *

ஐம்பது இலட்சம் பவுன் செலவில் சீமையில் வாங்கப்படும் இலட்சாதி பவனப் படத்தை ஒரு பக்கத்திலும், கடன் பத்திரத்தில் விஜயலட்சுமி அம்மையார் கையொப்பமிடும் படத்தை அதற்குப் பக்கத்திலும் ஒட்டவைத்து, ஆங்கிலப் பெருங்கவி, ஷேக்ஸ்பியர் கூறினாரே, அந்தப் படத்தையும் பார் — இந்தப் படத்தையும் பார்! என்ற வாக்கியத்தைத் தீட்டிக்காட்டுவது, பொருத்தமாக இருக்கும்—ஆனால் சகிக்கக்கூடியதாக இராது. ஷேக்ஸ்பியர் தானா கிடைத்தார், நம் காட்டுக்கவி கம்பனின் வாக்கியம் இருக்கப்படாதோ என்று, கோபிப்பரேல், தடையில்லை நமக்கு, படத்தின் கீழே, 'கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற அடிகளைப் பொறித்துப்பார்க்கட்டும். எதைஎழுதினாலும் சரி, காட்சி மனதுக்கு, சங்கடம் தரக்கூடியதாகவே இருக்கிறது.

* * *

கடன் வாங்குவது ஒரு பெரிய கெடுதி என்பதல்ல — பெரியதோர் பொறுப்பு. அதற்கு ஏற்ற வண்ணம், ஆட்சியாளர்கள், நடந்து கொள்ள வேண்டுமே, என்பதே நம் கவலை. பணம், தக்கபடி, பலன் தரும் விதமாகச் செலவிடப்படவேண்டும்—அப்போதுதான், இவ்வளவு பெருந்தொகையை வட்டியுடன் திருப்பித் தரமுடியும்—பதினைந்து ஆண்டுகளில். விழலுக்குப் பாய்ச்சிவிட்டால், விபரீதம் நேரிடுமே என்ற விசாரம்தான். சீமையிலே சிங்கார மாளிகை வாங்கும் போக்கிலே இருக்கிற ஆட்சியாளர்கள், இந்தப் பொறுப்பை உணர்ந்து காரியமாற்றுவார்களா, என்று அறியும் கடமை, ஒவ்வொருவருக்கும் உண்டு. ஏனெனில், இந்தியா, அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது! படத்தை மீண்டும் பாருங்கள் — அம்மைக்கு வலதுபுறம் நின்று, கூர்ந்து கவனித்துக்கொண்டிருப்பவர்தான், உலக பாங்க் தலைவர் பிளாக். அவருடைய கண்களிலே, ஏதோ ஓர் வித குறும்பு இருப்பதாகத் தெரிகிறது! ஏன்? கவலைதரும் காட்சி.

* * *

பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ளும் போக்கு, ஆட்சியாளர்களுக்கு, இதுவரை இல்லை என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன—எனவேதான் கவலை அதிகமாகிறது.

* * *

இந்தியசர்க்காரின் 1950-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி, ஏறத்தாழ, 45-கோடி ரூபாய் துண்டுவிழுமாம்! இம்முறையில் இருக்கிறது நிர்வாகம். இவ்வளவு துண்டுவிழுமென்று எதிர்பார்க்கவே இல்லை என்றும், சில இலட்சமாவது மிச்சமே பிடிக்கக்கூடுமென்று எதிர்பார்த்ததாகவும், கூறப்படுகிறது. செலவு அதிகம், சிக்கனம் செய்ய வேண்டும், என்று கூறுகிறாராம், நிதிமந்திரி மத்தாய், மற்ற மந்திரிகளோ, இதுகூடச் செய்யாமல், மக்களிடம் சென்று மறுபடியும் எப்படி 'ஓட்டு' வாங்குவது என்று கேட்கிறார்களாம். ஒவ்வொரு மந்திரிக்கும் ஒரு ஒய்யாரத்திட்டம் தேவைப்படுகிறது! செலவுக்குப் பணம்தரவேண்டும் என்று வாதாடுகிறார்கள். நிதிமந்திரி புருவத்தை நெரிக்கிறார், மற்றவர்களோ, நெற்றியைச் சுளிக்கிறார்கள்—செலவை மட்டுப்படுத்த முடியாது என்கிறார்கள்

* * *

வரவு செலவு சரிக்கட்ட முடியாத நிலை! கடன்வாங்கும் நிலை! இந்த இலட்சணத்தில், சீமையில், ஏன் சிங்காரமாளிகை வாங்குவது? கல்வி மந்திரி அஜாத் சும்மா இருப்பாரா! மத்தியகிழக்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கலாச்சாரத் தொடர்புக்கான அமைப்பு ஏற்பாடு செய்கிறேன், ஆண்டுக்கு ஒரு இலட்சம் தர வேண்டும், என்கிறார்! இப்படி ஒவ்வொரு மந்திரியும்!! பிரதம மந்திரியோ, அட்லாசும் கையுமாக இருக்கிறார், எந்த நாடு பாக்கியாக இருக்கிறது, தூதுவர் நியமிக்க, என்ற எண்ணத்துடன். காஷ்மீர்களமோ, கண்ணை மூடிக்கொண்டு, பணத்தைக் குடித்தபடி இருக்கிறது! உணவுக்கு, வெளிநாட்டுக்குக் கொட்டித் தரும் பணம் கொஞ்சமல்ல! அகதிகளின் ஆர்ப்பரிப்பை அடக்குவதற்கான செலவோ, அபாரம்! இப்படிச் செலவுமேல் செலவு!!

இந்த நிலையில் உள்ளவர்கள், இந்தியாவை அடமானம் வைத்துப்

பெருந்தொகை கடன்வாங்குகிறார்களே, என்பதை எண்ணும்போதுதான், உண்மையிலேயே பயம்கூட ஏற்படுகிறது!

* * *

அமெரிக்க 'டாலருக்கு' பிரிட்டிஷ் பீரங்கியைவிட, அதிகமான சக்தி இருக்கிறது என்பது, அகில உலக விவகாரம் அறிந்த அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. சர்ச்சிலின் கோபம், நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது, ஆனால் ட்ரூமனின் புன்சிரிப்பு......? அதிலே, என்னென்ன புதைந்திருக்கிறதோ, யார் கண்டார்கள்! யோசிக்க யோசிக்க, இந்தக் கடன்வாங்கும் போக்கு, கவலை தருவதாகவே இருக்கிறது. ஆட்சியாளர்களைப்பற்றியும், அவர்களின் போக்கு, திட்டம் பற்றியும், இதுவரையில், கவலைகொள்ளாமல் இருந்ததுகூட அதிகக் கேடுசெய்யக் கூடியதல்ல, இனியும் பொதுமக்கள் அவ்விதம் இருத்தல் கூடாது. இந்தியா, அடமானம்வைக்கப்பட்டிருக்கிறது. கடன் பத்திரத்தில், நேருவின் தங்கையின், கையொப்பமிருக்கிறது—காட்சி படமாக்கப்பட்டு, உலகுக்குத் தரப்பட்டிருக்கிறது! களிப்பூட்டும் காட்சி அல்ல! கவலை தரும் காட்சி. பொறுப்பைஉணர்த்த வேண்டிய படம்,—அது. இங்கிலையில், சீமையில் சிங்காரமாளிகையாம்! செச்சே! வேதனையும் வெட்கமும், சேர்ந்து தாக்குகிறது.

வயோதிகர் வாழ!

வயோதிகப் பருவம், வாழ்க்கையின் மாலை நேரம்! வசந்தகாலம் மாறி வயோதிகர்களானதும் மக்கள், வற்றிய ஆறுபோல ஆகிவிடுகின்றனர்—தள்ளாமை, முடியாமை ஆகியவைகளால். அந்த நேரத்தில் அவர்கள் விரும்புவது எல்லாம், மன நிம்மதியும், மனக்குறை இல்லாமையுந்தான். உலகில் 'வாழ்ந்துவிட்ட' அவர்களுக்கு அந்திய காலத்தில் குடும்பத்தாரின் நலம், பேரப்பிள்ளைகளின் கொஞ்சுமொழிகள், வேண்டியவர்களின் சந்திப்பு: தேவையானது கிடைப்பது ஆகியவைகளின் திருப்தியால், மனநிம்மதி ஏற்படுகிறது. 'நமது குடும்பத்தார் நன்றாக இருக்கின்றனர். நமக்கு வேண்டியது, கிடைக்கிறது' என் அகமகிழ்ச்சியுடன் அவர்கள் காலம் நகருகிறது!

இந்த நிலை எல்லோருக்கும் இருக்க முடியும் என்று கூறிவிட முடியாது—வளம் இல்லாதவர்கள், வாழமுடியாதவர்கள் என்ற பேதம் இருக்கும் உலகில். அதுமட்டுமல்ல, செல்வம் நிறைய இருந்தாலும், சுற்றமோ, கிளைகளோ இல்லாத காரணத்தாலும், இன்பம் கிடைக்காது ஏங்குபவர்களும் உண்டு!

இக்குறை தீர்ப்பது எப்படி, என்பது பற்றி உலகில் ஆங்காங்குள்ள அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். அத்தகைய ஆராய்ச்சித் துறையில் பெரும்பணி ஆற்றுவது பிரிட்டனிலுள்ள 'நப்பீல்ட் ஸ்தாபனம்' ஒன்று. முதியோர் பிரச்னைக்கு முடிவு காணும், இந்த ஸ்தாபனம், பிரிட்டிஷ் 'மோட்டார் மன்னன்' என்று அழைக்கப்படும் நப்பீல்டு பிரபுவால், ஆறு ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டதாகும். நாட்டு மக்களின் உடல் நலம், முன்னேற்றம் ஆகியவைகளை லட்சியமாகக் கொண்டு அமைக்கப்பட்டதுதான் இந்த ஸ்தாபனம்.

இந்தஸ்தாபனத்தார் வயோதிகர் வாழ, எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் குறிப்பிடக் கூடியன. சுற்றத்தார் இல்லாமல், சுகம்பேணப் பிள்ளைகள் இல்லாதவர்களாக, தனியாக "எப்படி வாழ்வோம்?" என்று ஏங்கும் வயோதிகர்களின் வாட்டத்தைத் தீர்ப்பதற்காக, லண்டனுக்கருகிலுள்ள ஐலிங்டன் என்ற இடத்தில் அநேக விடுதிகள் அடங்கியஒரு பெரிய கட்டிடமொன்றைக் கட்டியுள்ளனர். இந்தக்கட்டிடம், சமீபத்தில் மேரி அரசியாரால் திறந்து வைக்கப்பட்டது. காற்றோட்டமும், வசதியும் நிரம்பிய கட்டிடம். இந்த மாடிக் கட்டிடத்தின் கீழ்ப்பகுதியில் வயோதிகர்களுக்கான, குடியிருப்பு வசதிகள் உள்ளன. மேல் பாகம் பலப்பல 'பிளாட்'டுகளாகப் பிரிக்கப்பட்டு, அங்கு சாதாரண குடும்பங்கள் வசிக்க, பிரித்து விடப்பட்டிருக்கின்றன. மேல் பாகத்தில் வசிப்பவர்கள், குழந்தை குட்டிகளுடன், குதுகலமாக இருப்பதால், கீழே தனியாக வசிக்கும் வயோதிகர்களுக்கும், தாங்கள் ஒரு குடும்பத்தில் வசிப்பது போன்ற இன்பமும், மணமும் நிம்மதியும் ஏற்படுகிறது. ஓய்வு நேரத்தில்.மேல் பகுதியிலிருக்கும் குடும்பத்தாருடன் பேசவும், பிரியங்காட்டவும், முடிவதால் முதியோர்கள் மனச்சாந்தியுடன், மகிழ்வு கொண்டவர்களாக இருக்கின்றனர் தனிமை என்ற சஞ்சலம் இன்றி அவர்கள், தங்களுக்கு வேண்டியவர்களுடன்இருப்பதாகவே எண்ணி இன்பம் பெறுவதற்கான, சூழ் நிலையில்அந்த இடம் அமைந்து இருக்கிறது.

இந்தத் 'துயர் போக்கும் மாளிகை' க்கருகிலேயே ஒரு மலர்ப் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் ஓய்வு நேரத்தில், குழந்தைகளுடன், உல்லாசமாகச் சுற்றி வருவதற்காக. இந்த முதியோர்களுக்கு, அந்தக் கட்டிடத்தின் மேல் பகுதியில், ஒரு வேளை உணவு இலவசமாக அளிக்கின்றனர். வயோதிகப் பருவம், வாய்க்கு ருசி தேடும் அல்லவா! அதற்கும் அவரவர்கள் அறையில் விசேஷவசதிகள் உள்ளன.

உடல் நலக் குறைவு ஏற்பட்டு, யாராவது ஒருமுதியோருக்கு, காய்ச்சலோ, தலைவலியோ, திடீரெனவந்துவிட்டால், அவர், ஆயாசமுறவோ, 'யார் கவனிப்பார்கள்' என்று கவலைப்பட வேண்டியதில்லை. தன் அறையில் உள்ள ஒருபொத்தானை அழுத்த வேண்டியதுதான். இவர்களுக்காக அங்கு நியமிக்கப்பட்டிருக்கும் 'மேட்ரன்' நோயாளியின் அறையைத் தேடிக்கொண்டு வந்து விடுவார். கேட்க, கேட்க நாமும் வயோதிகர் ஆகிவிட்டால் என்ன என்று ஆசை எழும்புகிறதா? இந்த நிலை இங்கு அல்ல, பிரிட்டனில்! ஞாபகமிருக்கட்டும்!!

அறிவிப்பு

எனது மகன் திரு. கிருஷ்ணமூர்த்திக்கும், விருதுநகர் திரு. எஸ். எஸ். நடராஜன் அவர்கள் மகள் திருமதி. லலிதாவிற்கும், 14-9-49 தேதி காலை 9-30-மணிக்கு விருதுநகரில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன்
பட்டிவீரன்பட்டி.

வாடாத் திருமேனிகள்!

மதத்தை ரட்சித்து, அதன் மூலம் மனித குலத்தை ரட்சிக்கும் திருப்பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துவிடத் தீர்மானித்துள்ளனராம், முத்ராதிகாரிகள்.

முத்ராதிகாரிகள், என்பவர்கள், சங்கராச்சாரியாரிடம் சன்னத்துப் பெற்றுள்ளவர்கள். மதத்தைப் பரப்பி, மக்களின் மாண்பை உயர்த்துவது, இந்த மகானுபாவர்களின் அலுவல்.

சங்கராச்சாரியாரின் பவனி, அவருக்குப் பாதகாணிக்கை குவிவது, செல்வம் படைத்த மிராசுதாரர்களைச் சீடர்களாக்குவது போன்ற 'சத்காரியங்களிலே', மெத்தப்பழக்கமுள்ளவர்கள், இந்த வாடாத் திருமேனிகள்.

இவர்கள் அறியாத வேத புராண சாஸ்திர இதிகாசம் இல்லை.

இவர்கள் பேசாத தத்துவம் இராது. எல்லாம் தெரியும் இவர்களுக்கு, ஏழையின் துயரம் தவிர!

ஏழைக்குத் துயரம் வரத்தான் செய்யும் — பகவான் சோதனை— என்பதுதான், இவர்கள் அறிந்துள்ள பரிகாரம்.

இப்போது, மக்களுக்கு, வாழ்வு ஒரு சுமைபோலாகி விட்டது. நமது பக்தியிலே ஒரு குறையும் காண முடியாதே! நோன்பு, விரதம், பூஜை முதலிய எதிலும் நாம் தவறு ஏதும் செய்வதில்லையே! யார் என்னவிதமான அக்ரமம் செய்தாலும், ஆண்டவன் இருக்கிறார் அவனவனுக்குத் தக்கபடி தண்டனை தர, என்று தானே மனதார நம்பி வருகிறோம். இப்படி இருந்தும், ஏழை புழுப் போலத் துடிக்கிறான்—செல்வவான் புலி எனச் சீறுகிறான் — குருவோ, பொறுமையைப் போதிக்கிறார் — இவ்விதமான நிலைமை இருக்கிறதே! இப்படி, நம்மைப் பிறர் நசுக்கக் கண்டும், வாளா இருக்கும் போக்குத்தானா, அனாதரட்சகனுக்கு!

அவன் பெருமையை அனவரதமும் எடுத்துரைக்கும், மதத்தினால் நாம் கண்ட பலன்தான், என்ன? — என்ற எண்ணம் பரவி வருகிறதல்லவா!

பழையபடி பஜனையில், பாராயணத்தில், பாதபூஜைசெய்வதில்பல்லக்குச் சுமப்பதில், பாமரருக்கும், முழு மனம் செல்வதில்லை.

பழக்கத்தால், பயத்தால், ஏதோ சில பல, மதச் சடங்குகள் செய்து வருகின்றனர் — ஆனால் அந்தப் பழைய 'பிரேமை' இல்லை. பாமரரின் பக்தி மங்குவதனால், நஷ்டமடைபவர்கள் பலர் உண்டல்லவா?

கோயிற் பூனைகளுக்குக் கோபம்! மதத்தை மீண்டும் செல்வாக்கடையச் செய்யவேண்டும் என்ற ஆவலால் தூண்டப்பட்டு, பலர், பல்வேறு வகையான, பிரச்சார முறைகளைக் கையாள்கிறார்கள், பாமரரை, வலையில் விழச் செய்ய. முத்ராதிகாரிகள், தமக்கு முன்பு இருந்துவந்த செல்வாக்குடன், இன்றைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஓலமிடலாமா என்றுதான் தோன்றும்.

ஒரு காலம் இருந்ததல்லவா, சுயமரியாதைச் சூறாவளி கிளம்பாத காலம், அப்போது, எவ்வளவு செல்வாக்கு; இலட்சாதிகாரிகளும், பிட்சாதிகாரிகளும், போட்டி போட்டுக்கொண்டு வருவர், பக்திசெலுத்த! பணம் குவியும்! கட்டளையை எதிர்பார்த்து, கைகட்டி வாய் பொத்தி நிற்பர், மக்கள்! இன்றோ—'ஏனோ தானோ' என்ற போக்கில் பலர்.

எதற்காக ஏமாளியாகவே இன்னமும் இருக்கிறோம்!—என்ற ஏக்கம் கலந்த கேள்வி, சிலருடைய மனதில்.

எல்லாம் தெரியுமப்பா! — என்ற துணிச்சல் பேச்சு, சிலரிடம். காலம் மாறிவிட்டது — காரியம் மிகவும் மோசமாகி விடுமுன்பு, ஏதாவது செய்து, சரியும் செல்வாக்கைச் சரிப்படுத்த வேண்டும், என்று 'சத்புருஷர்கள்' யோசிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

கும்பகோணத்துக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ள கல்லூர் எனும் கிராமத்தில், சென்ற ஞாயிற்றுக் கிழமை, முத்ராதிகாரிகள் முகாமிட்டுப் பேசினராம்.

மதம் இல்லையேல், மனிதன் இழிநிலை அடைந்துவிடுவான் — எனவே மனித குலத்தின் வீழ்ச்சியைத் தடுக்க, இனி நாம், மதத்தின் மாண்பினை எடுத்துத் தக்கவிதத்திலே, பிரசாரம் செய்யவேண்டும், என்று, இந்த முத்ராதிகாரிகள் தீர்மானித்தனராம்.

தூய்மையான, சிலாக்கியமான கருத்துகள், மனதிலே தோன்ற வேண்டுமாம்—அந்தத் திருப்பணியிலே அவர்கள் ஈடுபடப் போகிறார்களாம்.

களஞ்சியத்தில் நெல்லைக் கொட்டிவிட்டுக்குடிசைக்குள் நுழைந்து, கூழ் பருகும்போது, குடியானவன், மனதிலே, தூய்மையான, சிலாக்கியமான எண்ணந்தானே உண்டாகும்!!

வயலை, உழ மறுத்து வாடவிட்டு, குடிசைக்குள் இருந்துகொண்டு, வேலைநிறுத்தம் செய்யும் குடியானவனிடம், அவன் உழைப்பைத் தலைமுறை தலைமுறையாக உண்டு ருசி கண்ட, பண்ணை முதலாளியின் மனதிலே, சிலாக்கியமான, தூய்மையான எண்ணம்தானே உண்டாகும்!

சேற்றிலே சந்தனம் காணக்கிளம்புகிறார்கள் இந்தச், சத்புருஷர்கள்!!

வாழ்க்கையிலே, ஏழை மக்கள் அடையும் ஆயிரம்இன்னலையும், ஒரு பாசுரத்தால், ஒரு சுலோகத்தால், மயக்கும்படி செய்து விடலாம், என்று மனப்பால் குடிக்கிறார்கள்.

ஏழையின் மனதிலேயும் சரி, அவனை அடக்கி ஆளும், மேட்டுக்குடியினரின் மனதிலேயும் சரி, தூய்மையான எண்ணம், தோன்றாது— நிச்சயமாக—ஏனெனில், ஒருவரை ஒருவர் சுரண்டி வாழும் நிலைமையில்,சமுக, பொருளாதார அமைப்பு

இருக்கும்போது, மனம், எரிமலையாக இருக்குமேயன்றி, 'சத்விஷயங்களைக் கொண்ட சொர்ணப் பேழையாக' இருக்கமுடியாது.

பால்வேண்டி அழுகிற பாலகனிடம், கோகிலகானம் சென்று பாடினலும், பலன் இராதே! பசியல்லவா தீரவேண்டும், குழந்தைக்கு!!

இது தெரியாதா, முத்ராதிகாரிகளுக்கு?—தெரியும்!—தெரிந்தும், ஏன், 'திருத்தொண்டில்' ஈடுபடப் போவதாகக் கூறுகிறார்கள்? 'ஒரு சான்ஸ்' பார்க்கலாம், என்ற ஆசை.

இந்தஆசை இப்போது, பலருக்கு ஏற்பட்டுவிட்டது. புராதன மதம்—பழைய பண்பாடு—மதமேம்பாடு—பகவத் பக்தி—எனும் சொற்களைக் கொண்டு, செப்பிடு வித்தை செய்யக் கிளம்பியுள்ளனர், பலர்; சாதுக்கள் கோபவேசத்துடன் கிளம்புகின்றனர்! தவசிகள், தவக் கோலத்தைக் கலைத்து விட்டு வருகின்றனர்!

'பாரத்வர்ஷத்தின்' பெருமை, பாழாகக் கூடாது! சுயராஜ்யத்திலே, நாஸ்திகம் பரவுகிறது! இது பெரிய ஆபத்து. நமது புராதன மதம், நாசமாகிவிடக் கூடாது பண்டைய கலாச்சாரம் பட்டுப்போனல், சகலமும் கெட்டுப் போகும், என்று, பிரலாபிக்கின்றனர்.

அடுத்த தேர்தலின்போது, இந்த 'ஓலத்தை'யே மூலதனமாகக் கொண்டு, அரசியல்சூதாட்டம் நடத்தவும் சிலர் திட்டமிட்டு வருகின்றனர்.

நமது மார்க்கம் காப்பற்றப்பட வேண்டும்—நமதுகலாச்சாரம் நிலைத்திருக்கவேண்டும்—என்ற முழக்கம், பலமாகிறது.

இதிலோர் பகுதிதான், இந்த முத்ராதிகாரிகளின், முகாமில் கிளம்பிய முணுமுணுப்பு.

பண்டித ஜவஹரும், இத்தகைய குறுகிய மனப்போக்கை, குருட்டுப் பிடிவாதத்தை, அர்த்தமற்ற கூச்சலை, நடைமுறைக்கு ஒவ்வாத ஆவலை, உலகை உதாசீனம் செய்யும் உலுத்தரின் போக்கைக் கண்டித்திருக்கிறார். எனினும், என்றே ஓர் நாள், இவர்களின் கூச்சல் அதிகமாகிக் காது குடையும்போது, ஜவஹர் போன்றார், இடித்துரைக்கின்றனரே யொழிய, மற்றக் காலங்களில், இவர்களின் மனதிலே பழைய சம்பிரதாயத்தை மீண்டும் நிலைநாட்டி விடக் கூடும் என்ற நம்பிக்கை ஏற்படும்படியான காரியங்களையே செய்கின்றனர்.

சுதந்திரத்தைப் பெறுவதற்கு, நட்சத்திரம் சரியாக இருக்கவேண்டும் என்று, ஆரூடம் பார்த்து, நள்ளிரவே அதற்கு ஏற்ற நேரம் என்று ஏற்பாடு செய்தனர், உலகமறிந்த ஜவஹரே, இந்த விசித்திர ஏற்பாட்டுக்கு இணங்கின போது, ஏன் பழையபாசி துளியும் போகாத முத்ராதிகாரிகளுக்கு, 'ஆசை' பிறக்காது—கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டால், மீண்டும் முன்னணி வரக்கூடும், என்ற 'ஆசை' ஏற்படத்தான் செய்யும்.

கனடா நாட்டு அரசியல் திட்டத்தையும், ஆஸ்திரேலியா நாட்டுத் திட்டத்தையும் ஒரு புறம் ஆராய்ந்தறிந்து, இந்நாட்டுக்கு அரசியல்திட்டம் தயாரித்துக் கொண்டே, மற்ரேர் புறத்தில், சுதந்திர விழாக் கொண்டாட்டத்துக்காக, விஷ்ணு, பிரம்மா, தில்லைச்சபேசன், போன்ற கடவுளரின் உருவம் பொறித்த தபால் பில்லைகளை வெளியிட்டால், என் முத்ராதிபர்களுக்கு, 'சபலம்' ஏற்படாது!

எனவேதான் அவர்கள், பிரச்சாரம் புரிய முடியும், என்றுநாப்பாறை அறைகின்றனர். நாடுஏற்காது அவர்களின் பேச்சை, எனினும், அவர்களின் ஆசை அழிய மறுக்கிறது.

பார்லிமெண்ட் கூடுகிறது என்ற பேச்சுடன் இணைந்து பஞ்சாங்கம் பார்க்கப்படுகிறது என்ற பேச்சும் இருக்கிற காரணத்தால், இந்தப் பழைய பசலிகளுக்கு இவ்வளவு துணிவு ஏற்பட்டுவிட்டது.

குடந்தை அருகே கூடிய இந்த மாநாட்டின், இலட்சணம் இருக்கிறதே, அதைஎண்ணிஞலும், அடக்க முடியாத சிரிப்பு வரும்— கூடிப் பேசினவர்கள் யாரார் தெரியுமோ!

விஸ்வநாத சாஸ்திரியார் தலைமை வகித்தார்.

மணி ஐயர், ஆண்டு அறிக்கை படித்தார்.

மகாலிங்க ஐயர். கோபாலதேசிகாச்சாரியார், வரதராஜ ஐயங்கார், ராமமூர்த்தி சாஸ்திரி ஆகியோர், 'உபன்யாசம்' செய்தனர்.

கோபால ஐயர், 'வந்தனேபசாரம்' கூறினர்!

கேட்டு ரசித்தவர்கள், குப்பணய்யங்கார், கோவிந்தாச்சாரியார், சீனுவாசாச்சாரி, சோமசுந்தரக் குருக்கள், கச்சாலீஸ்வர ஐயர், என்று இல்லை—காரணம், பெயர் வெளியிடப்பட வில்லை!

மகாநாட்டின் அழகு எப்படி இருந்திருக்கிறது, பார்த்தீர்களா!

இவர்களுக்குத்தான், இந்த 'பாழாய்ப்போனஜனங்கள்' மதத்தை மறந்து, நாசமாகிக் கொண்டு வருகிறார்களே, இதைக் கண்டும் எப்படிச் சும்மா இருப்பது, என்ற உள்ளத்துடிப்பு ஏற்பட்டு விட்டதாம்! என்ன அக்கரை! எவ்வளவு அனுதாபம்!!

ஐயர், சாஸ்திரி, ஆச்சாரியார் என்போராக இருந்தாலும் சரி, தேசிகர், ஓதுவார் என்பவர்களானலும் சரி, முதலியார், பிள்ளைவாள், என்பவரானலும்சரி, கட்டுக்கட்டாக விபூதி பூசிடும் சைவரானலும் சரி, பட்டைநாமம் தீட்டிக்கொள்ளும், வைஷ்ணவ சிகாமணிகளானலும் சரி, மதவாதிகள்யாராக இருப்பினும், பட்டினியுடன் போராடிக் கொண்டிருக்கும் மக்களிடம் சென்று, 'மாயா ஜாலம்' செய்து கூட இனித் தமது பழைய செல்வாக்கைப் பெற்றுவிட முடியாது.

பாடுபடுபவனைப் பட்டினிபோட்டு வாட்டுபவனை விட்டுவைக்கும், மதத்தை அவர்கள், மதிக்க மறுக்கிறார்கள். பக்திமான் வேஷமிடும் பணந்தேடிகளுக்கு இடமளிக்கும் மதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முன்வினை, தீவினை என்று பேசி, ஏழைக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு, எதைஎதையோ காரணமாக்கிக்காட்டிடும் கபடத்தை அவர்கள் இனி மதம்என்று ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! வாடாத் திருமேனிகள், வீண் வேலையில் ஈடுபடுகிறார்கள்! பலிக்காது!!

★

ஒரு விடி விளக்கு

ஆங்கெலினு

[அரங்கண்ணல்]

"ஏர் உழுகிறளாமே ஏர்! என்ன விவஸ்தை கெட்ட ஜென்மம்"

"வெட்கம், மானம், சூடு, சொரணை இருக்கா. அது பெண்ணல்லப்பா பேய்!"

"கொஞ்சங்கூட கூச்சம் நாச்சம் இல்லையே."

"எப்படியப்பா, இருக்க முடியும்? அவர்கள் குடும்பமே அப்படித்தானே! இல்லாவிட்டால் அவள் அப்பன் இவளை இப்படி விடுவானு!"

"இவள் போக்குக்கு ஒண்ணுமே சொல்றதில்லையாமே, அவள் அப்பன்?"

"அவன், எம்பா சொல்றன். இப்படித்தான் எல்லாப் பெண்ணும் ஆகணும்னு அவளோட அண்ணன் கூட சொல்றனும்!"

"சே, சே மானமே மலையேறுதப்பா. நம்ப கிராமத்துப் பேரே சப்பலேறுது. இப்படியே விட்டா ஒண்ணும் உருப்படாது!"

இப்படியெல்லாம் அவளைப் பற்றித் தூற்றினர் அந்த ஊர் மக்கள். பெண்ணல்ல பேய், இவளால் ஊருக்கே ஆபத்து வரப்போகிறது, கடவுளுக்கேற்காது, கட்டாயம் அனர்த்தம் விளையும், ஊரைக் குட்டிச் சுவராக்குகிறள், ஊதாரி, உருப்படாதது! ஒன்றுக்கும் உதவாதது! ஓடுகாலி! என்றெல்லாம் ஊரார் அவளுக்கு 'பட்டங்கள்' வழங்கினர்!

இத்தனைக்கும் அவள் யாரையும் எறிட்டுக்கூடப் பார்த்ததில்லை. 'ஏன்' என்றுகூடக் கேட்டதில்லை. அதற்கெல்லாம் அவளுக்கு நேரமே இருப்பதில்லை. காலையில் எழுந்து கலப்பையைப் பிடிப்பது, கவலை மறந்து பாடிக்கொண்டே கழனியை உழுவது, ஓய்வுநேரத்தில்தன்னெத்த சகாக்களுடன் கழனி, கலப்பை பற்றி பேசுவது என்றுதான் இருந்தாள். ஊரார் ஏச்சும், சுற்றியிருப்போர் பேச்சும் அவள் காதில் எட்டும். அவைகளைக் கவனிப்பது கூட இல்லை — வீண் வேலை என்று கருதி. இருந்தும், அவளைக் கண்டாலே ஆத்திரம் வந்தது, மனம்போன போக்கில் திட்டினர், மானமற்றவள் என்றனர், மரியாதை கெட்டவள்எனக் கூறினர், மனதில் பயத்தைஉண்டாக்க முனைந்தனர்— இவையெல்லாம் அவளை அசைக்க வில்லை. இவைகள், அவளை அஞ்சவோ, அயரவோ, செய்யவில்லை. அவள்தான் இலட்சியப் பறவையாயிற்றே!

ஆங்கெலினு, தனது மூன்ருவது குழந்தை ஸ்டாலினுவுடன்.

ஒருநாள் அவளுக்கும் அவள் சகாக்களுக்கும் ஒரே ஆனந்தம் விளைவித்த விதை பயன் தந்து, அறுவடை கண்டால், ஏழை நிதிக் குவியலைக் கண்டபோது ஏற்படும் இன்பம் எழும்பாமலா இருக்கும்! ஒரே எக்களிப்பு அவளுக்கு. தானியத்தை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தனர். திடீரென்று, வேகமாகக் காற்று வீசியது. மின்னலும், தூற்றலும் எழும்பவே, இடியோசையுடன் காற்று புயல் என எழும்பிற்று, அவளோ, தானியத்தை ஏற்றிக் கொண்டு, வண்டியின் மீது இருக்கிறள் — இந்நிலையில் கடுங் காற்று அவளை தள்ளிவிட்டது. நின்றுகொண்டிருந்த அவள், சமாளிக்க முடியாமல், சாய்ந்தாள். அது போதாதா அந்த ஊர் மக்களுக்கு. ஒன்றுமில்லாத வாய்க்கு அவல் கிடைத்தது போலாயிற்று!

'என்ன இருந்தாலும் கடவுள் விடுவாராப்பா?'

'அவருக்கே பொறுக்கவில்லை. திடீரென காற்றை உண்டாக்கி அவளைக் கீழே விழச்செய்தார்'

'இல்லாவிட்டால் அவள் ஏன்விழுகிறள். எல்லாம் கடவுளின் கோபம் தான்!'

இப்படி, பல கதைகள் கட்டிவிடப் பட்டன. எங்கும் இதேபேச்சுதான். இப்படிப் பேசித் திருப்திப் படுவதிலே, அவளுக்கு அல்லல் ஏற்பட்டது என்று அறிவதிலே, ஒரு ஆனந்தம் அவர்களுக்கு!

இத்தனைக்கும் அவள் யாருக்கும் எந்தவிதமான இடைஞ்சலும் செய்ததில்லை. எண்ணத்தில்கூட எழும்பியதில்லை, அவளுக்கு, இந்த நினைப்பு. இருந்தாலும் அவர்கள் தூற்றல் படலம் ஓய்ந்தபாடில்லை. ஒருநாள், ஒரு வேளை, ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது 'ஏதாவது' இவளைப் பற்றிப் பேசினல்தான், 'ஒரு வேலை' செய்துமுடித்தது போன்ற திருப்தி—அவ்வளவு தூரம் அவளை வெறுத்தனர், சபித்தனர், சண்டாளி என்றனர்! இத்தனை 'பாணங்கள்' தன்னை நோக்கி பறக்கும்படி, அவள் செய்த குற்றம்—கலப்பையைப் பிடித்து கழனியை உழுததுதான்! அதற்குத்தான் அத்தனை ஆவேசமும், ஆத்திரமும் எழும்பியது அவர்களிடம். அவளோ பெண்! பெண் ஆணைப்போல கலப்பையை யோட்டி கழனியைத் திருத்தி விளைச்சலிடுவதென்றல்! வீட்டு வேலையுண்டு தானுண்டு என்று இருக்கவேண்டியவள் வெளியிலே புருவெனத் திரிவதும், சாகுபடி

செய்வதும் என்றால்! அன்றைய ரஷ்யாவிலே அது ஆத்திரமூட்டக் கூடியது மட்டுமல்ல, அருவருக்கத் தக்கதாக, ஆபாசமானதாக, செய்யக் கூடாத காரியத்தைச் செய்வதாகக் கருதப்பட்டது.

* * *

1930! ரஷ்யப் புரட்சி நடந்து, புதுஉலகப் பாதையில் பதின்மூன்று ஆண்டுகள் நடந்து வந்துகொண்டிருந்தும்—ரஷ்ய பாமர மக்களின் மூட நம்பிக்கை இருள் மறைந்து போய்விடவில்லை. பழைமை மோகம் அவர்களைத் தன் பாச வலையில் விடாப்பிடியாக, வைத்திருந்தது. வழக்கம், இதுவரை இப்படித்தான் எங்களவர் செய்வர், இதுதான் பழக்கம் என்ற சம்பிரதாய ஆசை தளராமலிருந்தது. அப்போது, ஒரு பெண், கலப்பைப் பிடிக்கிறாள், அதுவும் இயந்திரக் கலப்பையை ஓட்டுகிறாள், என்றால், அறிவுமணம் அறியா அவர்களுக்கு ஆத்திரம் எழும்பியதில் ஆச்சரியமென்ன!

இன்று கூட, நம் நாட்டுப்புறங்களில், ஒரு இளம் பெண், செருப்புப் போட்டுக் கொண்டு போனால், "வயது வந்தவர்கள்" பேசுகிறார்களல்லவா, 'பாரய்யா கலிகாலத்தை. பக்குவமடைந்த பெண்— பதினெட்டு வயதாகிறது. 'பசு' போல வீட்டிலிருக்க வேண்டியதை விட்டுவிட்டு, கொஞ்சங்கூட கூச்சம், மரியாதை இல்லாமல், 'டாக், டாக்' என்று போவதை' என்று! அதே நிலைமைதான், அன்று, அங்கு.

இன்ன நாளில் தான் விதை, விதைக்க வேண்டும், இந்த நேரத்தில் தான் முதன் முதலில் வயலில் இறங்கவேண்டும். மழை பெய்யவில்லையா, கடவுள் கோபங் கொண்டுவிட்டார். காற்றுகொஞ்சும் கடுமையாக வீசுகிறதா, யாரோ கடவுளுக்கு கோபமூட்டி விட்டான்—என்றெல்லாம் நம்பிக் கிடந்தனர் ரஷ்ய மக்கள் பாரை உலுக்கிய பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்து பல ஆண்டுகள் சென்றிருந்தும்கூட! 1917 புரட்சியின் விளைவாக அரசியல் துறையில் முதலாளித்துவத்தை முறியடிக்க முடிந்ததே தவிர, முதலாளித்துவ 'முதலை'களையும் அவர்கள் வசம் சிக்கிக் கிடந்த, வளமை வாய்க்கால்களான, தொழில்கள், ஆலைகள், பாங்கிகள் ஆகியவைகளை யெல்லாம் வசப்படுத்தவும், நிலப்பிரபுத்துவத்தின் நீண்ட கோரவாயிலிருந்து ஏழை விவசாயிகளை மீட்கவும், எண்ணற்ற நாட்கள் பிடித்தன. இவை ஒவ்வொன்றையும் சாதிக்க, சோவியத் அரசாங்கம், மகத்தான காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பெரும்பாலும் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டநாடு ரஷ்யா. விவசாயமோ, குலாக்குகள்—பெரும் பண்ணைக்காரர்கள்—கையிலிருந்தது. ஏழை விவசாயமக்களோ, அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக, அவர்கள் தயவில் வாழ்பவர்களாக இருந்தனர். இந்நிலையில், குலாக்குகளின் கொடுமைப் பிடியிலிருந்து விடுவிக்கவும், அவர்களின் கோலாகல வாழ்வை வீழ்த்தவும், விடுதலைப் பாதையில் விவசாயிகளை நடாத்தவும், சோவியத் அரசாங்கம் முனைந்து 'கூட்டுப்பண்ணை' முறையை நடத்தினர். எங்கும் கூட்டுப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன. ஏற்படுத்தப்பட்டன, என்று இன்று ஒரே வார்த்தையில் நம்மால் கூறமுடிகிறது. ஆனால், அன்று அதற்கு எழுந்த எச்சும் பேச்சும், எதிர்ப்பும் ஏராளம். பெரும்பண்ணைக்காரர்களான குலாக்குகளிடமிருந்து மட்டுமல்ல, ஏழைக் குடியானவர்களிடமிருந்து கூட எதிர்ப்புகள் எழும்பின. குடியானவர்கள் வசமிருந்த சிறு, சிறு வயல்களையெல்லாம் பொதுவான பெரிய வயலாக ஆக்கி, அவைகளை இயந்திரக்கலப்பை, முதலிய நவீனகருவிகள் கொண்டு சாகுபடி செய்யவேண்டும் என்பதுதான் கூட்டுப்பண்ணையின் முக்கிய குறிக்கோளாகும்.

சிறுவயலாக இருந்தால் இயந்திர வசதிகள்கொண்டு சாகுபடி செய்ய இயலாது. எனவே, வரப்புகளை நீக்கி, பெரிய வயல்களாக ஆக்கவேண்டியிருந்தது. ஆனால் சிறுவயல்களோ, குடியானவர்களின் கையிலிருந்தது. 'அவர்களுடையது' என இருக்கும் அவைகளை பொதுவானதாக ஆக்குவதென்பது, அவ்வளவு சாமான்யமானதாக இல்லை. ஆட்சி கையிலிருந்தது என்றாலும், ஒரே உத்தரவுமூலம் நடவடிக்கை எடுக்க முடியுமென்றாலும், காயை அடித்துக் கனியாக்க விரும்பவில்லை சோவியத் சர்க்கார், இதனால் காய் கனியாக முடியாது, கன்னிப்போய் விடும்—கலவரம் ஏற்பட்டு இலட்சியம் 'கானல்நீர்' ஆகிவிடும் என்பதால்! எனவே படிப்படியாக மக்களின் மனப்பண்பை மாற்றும் மகத்தான பணியை மேற்கொள்ளவேண்டியதாயிற்று.

'இம்முறை நமக்கேன்' என்றனர் பலர். 'வீண் தொல்லை எதற்காக' என்றனர் ஒரு சாரார். 'ஆசைப்பட்டவர்கள் செய்துபார்க்கட்டும். சரிப்பட்டு வந்தால் நாமும் பின்னால் சேர்ந்து கொள்ளலாம்' என்றனர் சந்தேகப் புத்தியினர். 'கூட்டுப் பண்ணை முறை தேவையா, தேவையில்லையா?' என்ற விவாதத்தில் இறங்கினர் விதண்டாவாதிகள், குலாக்குகளோ, நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு, குதர்க்கத்தனங்களில் ஈடுபட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஆங்கெலினா—ஒருபெண், கூட்டுப் பண்ணையில் இறங்கி ஏர்பிடித்து உழுகிறாள் என்றால் அவள்மீது தூற்றலும், கோபமும், கொடுமைகளும் தூவப்பட்டதில் வியப்பென்ன!

* * *

டிராக்டர்— இயந்திரக்கலப்பை— கொண்டு கூட்டுப்பண்ணைகள் சாகுபடி செய்யப்பட்டன. டிராக்டர் முதல் முதல் உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டபொழுது, மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த மக்கள் கூட்டுப்பண்ணை முறையை எதிர்த்தது போலவே இதையும் வெறுத்தனர், 'வயலில் ஊறக்கப்பட்டால் வாராதது, வரும்!' என்று பயமுறுத்தினர், 'தொட்டால் பாபம்' என்றனர். ஆனால் இன்றோ, அவர்களின் இருதய கீதம் — அதுதான். நாட்டுப்புறத்தினருக்கு நல்வாழ்வு நல்கிய 'கற்பக விருட்சம்' டிராக்டர்தான். பஞ்சம், இல்லாமை, உணவுப்பொருள், இல்லையே என்ற ஏக்கம், ஆகியவைகளின் மத்தியில் உழன்று கிடந்த மக்கள்—அன்று டிராக்டரைவெறுத்தனர், பழமை மாறுகிறது என்ற காரணத்துக்காக. ஆனால், இன்றோ, அதுதான் அவர்களின் கவலையைப் போக்கி, ஏக்கத்தை விரட்டியடித்து, இன்ப பூமியில் இருப்பவர்களாக ஆக்கிவைத்திருக்கிறது. கூட்டுப் பண்ணைகள், வெற்றிபெற, ரஷ்யா

தானியக்களஞ்சியமாக ஆகச்செய்தது அதுதான். இந்த மகத்தான பணியில் எண்ணற்ற இளங்காளைகள், இறங்கி, எதிர்த்தவர்களை யெல்லாம், ஏற்கும்படிச் செய்யமுனைந்தனர். இதன் விளைவாக கூட்டுப் பண்ணைகள் ஆங்காங்கு அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்குள் மட்டும் மொத்தம் 60,000 டிராக்டர்கள் ரஷ்யா முழுமையுமே இருந்தன; இவ்வளவு டிராக்டர்களையும் வாலிப வீரர்கள் தான் ஓட்டினர். ஆண்கள்தான் அந்த வேலைக்கு லாயக்கானவர்கள், அவர்களால்தான் முடியும் என்று, கூட்டுப்பண்ணைகளைச் சேர்ந்தோரும் கம்யூனிஸ்டுத் தொண்டர்களுங்கூட கருதினர்! சோவியத் அதிகாரிகளிடையேகூட அந்த எண்ணம்தான் அப்போது இருந்தது.

கூட்டுப்பண்ணைக்கு எதிர்ப்பு, டிராக்டர் கூடாது என்று ஆட்சேபம், அதை ஆண்கள் மட்டுமே ஓட்டமுடியும் என்ற எண்ணம்.

அப்போதைய ரஷ்யாவின் நிலை அது!

'வீட்டில் கிடப்பதே பெண்களின் கடமை' என்று கருதப்பட்ட காலம். மலர்குலத்தைச் சேர்ந்தவர்கள் பெண்கள், மறச்செயல் அவர்களால் முடியாது, அதற்கு தகுதியற்றவர்கள் என்று சாதாரண மக்கள்மட்டுமின்றி, சமத்துவம் பேசுவோர் வரை எண்ணியிருந்தநேரம். எனவே தான், ஊர் மக்களிடமிருந்து, தூற்றலும், எதிர்ப்பும் ஏளனமும் எழும்பியது ஆங்கெலினா டிராக்டர்—இயந்திரக்கலப்பை—பிடித்து உழுகிறாள் என்றதும். பாமரர்கள் மட்டுமல்ல, பார், சீர் பெறபாடுபடும் கட்சித் தொண்டர்கள் கூட, ஆங்கெலினா டிராக்டர் ஓட்ட முனைந்து, தன் ஆசையைக் கூறியபோது சிரித்தனராம்!

* * *

ஆங்கெலினா – உக்ரேனில், ஸ்டாலின் மாகாணத்தைச் சேர்ந்த ஸ்டாரோ பைஷேவோ என்ற கிராமத்தில் பிறந்தவர். — வளர்ந்தவர் — வசித்து வருபவர். இவர் தந்தைபெயர் ஆங்கெலின் நிகிடா வாஸிலீவீச். தாய் பெயர் ஆங்கெலினா யெவீமியா பியோடா ரோவ்னா 1912-ல் அவர்களுக்கு ஆங்கெலினா, பிறந்தாள். அவளுக்கு அவர்கள் வைத்த பெயர் ஆங்கேலினா பிராஸ் கோவ்யா நிகிடிச்னா என்பது. தந்தையரைப்போலவே, இவளும் தன்னுடைய எட்டாவது வயதில் குலாக்கிடம் அடிமை வேலைக்கு அமரும்படியாயிற்று. தாய், தந்தை, சகோதரர்கள், எல்லோருமே அடிமைகளாய் உழைத்து, உருக்குலைந்ததால்தானோ, என்னவோ, கூட்டுப் பண்ணைமுறை வந்ததும் அவர்கள் குடும்பம் முழுதும் அதைஆதரித்து வரவேற்று, அதன் வெற்றிக்காகஅல்லும்பகலும்பாடுபட்டது. ஆங்கெலினாவின் மூத்த அண்ணனான ஐவான் டிராக்டர் டிரைவராக அமர்ந்தான். அண்ணன் டிராக்டர் ஓட்டுவதையும் டிராக்டர் பூமியைக் கிழித்துப் போகும் அழகையும் தினம் நின்று கவனிக்கும் அவளுக்குப் 'அண்ணனைப்போல்நாமும்ஓட்டினால் என்ன?' என்ற ஆசை, எழும்பி, அணுஅணுவாகத்துளைத்தது. 'அந்நாள் எந்நாள்?' என்ற ஆர்வத்துடன் அவள் இருந்துவந்தாள்.

இந்நிலையில் அந்த வட்டாரத்திலேயே முதல் டிராக்டர் டிரைவராக பணிபுரிந்த ஐவான், சர்க்காரால்கூட்டுப்பண்ணைப்பற்றிய மேல்விவரங்களை அறிந்துவருவதற்காக வெளியூருக்கு அனுப்பப்பட்டான். அவன் தினசரி ஓட்டும் டிராக்டரோ, தொடுவாரற்று கிடந்தது. எதற்கும் உதவாதுகிடக்கும் டிராக்டரைக் கண்ட, ஆங்கெலினாவின் ஆசைவரவர, அதிகமாயிற்று. தன் அண்ணனுக்குப் பதில் வேறுயாரையும் அதிகாரிகள் அனுப்பாமலிருப்பதைக்கண்ட, ஆங்கெலினாவின் ஆர்வம் அதிகரிக்கவே ஒருநாள் அதிகாரிகளைச் சந்தித்து, 'தன் ஆசையைச் சொன்னார்! அவர்களும் அரைமனதோடு ஆகட்டும். செய். ஆனால் ஜாக்கிரதை!, என்று எச்சரித்தனர்.

“தாங்கமுடியாத சந்தோஷம் வந்தது அவளுக்கு! ஓடினாள், டிராக்டர் மீது உட்கார்ந்தாள். முதல் முதலாக டிராக்டரை ஓட்ட ஆரம்பித்தாள்!

ரஷ்யாவிலேயே முதல் முதல் டிராக்டர் ஓட்டிய பெண். ஆங்கெலினாதான்! 60,000 பேர்களில் அவளொருத்திதான் பெண்!!

ஆகவேதான் ஆரம்பத்தில் குறிப்பட்டதுபோன்ற ஏளனமும் எதிர்ப்பும் ஏற்பட்டது அவளுக்கு. ஆனால், அவளோ பெறமுடியாத பொக்கிஷத்தைப்பெற்றதுபோல மகிழ்ந்துஇருந்தாள். தன்னுடைய டிராக்டரை— அதன்பெயர் (Fordson)—குழந்தையைத்தாய் பேணுவதுபோல் கவனித்துவந்தாள். எப்பொழும் அவளுக்குதன் டிராக்டரைப்பற்றியஞாபகம்தான்! நண்பர்களுக்கோ அவள் ஓட்டுவாளா அவளால் முடியுமா என்ற அவநம்பிக்கை. பாமரரோ அவளைப்பற்றி, தூஷணை கிளப்புவதிலேயே இருந்தனர். பாதிரிகளோ 'வெட்கங்கெட்ட அவள்மீது காரித்துப்புங்கள்!' என்று வயதானப் பெண்களை வேறு தூண்டிவிட்டனர் இத்தனையையும் அவள் பொருட்படுத்தவில்லை; டிராக்டரைப்பிடித்து உழுவது, தன்கடமையெனச் செய்தாள்!.

எத்தனைநாளைக்குத்தான் கேலியும்கிண்டலும் நீடிக்கமுடியும்? நாள் செல்ல செல்ல, கூட்டுப்பண்ணையின் மூலம் இலாபம் அதிகமாகக்கிடைக்கும் என்ற உண்மை வெளிப்பட்டதும் பலர் தாங்களாகவே, கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்து, டிராக்டர் டிரைவர்களாக ஆரம்பித்தனர். கூட்டுப்பண்ணையின் வளர்ச்சி அதிகமாகியதே தவிர, ஆங்கெலினாமீது ஏற்பட்ட அவநம்பிக்கை கொஞ்சங்கூட மறையவில்லை, அவள் சகாக்களுக்கு.

ஒவ்வொருநாளும், காலையில் எழுந்து, டிராக்டரைத் துடைக்க, அவள் செல்லும்போதெல்லாம், “என்ன இருந்தாலும் அவள் ஒரு பெண்தானே, அவளால் என்னமுடியும்?” என்றுகூறிவந்த ஆண் டிராக்டர் டிரைவர்கள். நாள் செல்ல செல்ல 'ஆங்கெலினா ஒரு அதிசயப் பெண் அதனால்தான் அவளால் முடிகிறது இருந்தாலும் பெண்களுக்கும் இந்த வேலைக்கும் பொருத்தமல்ல” என்று கூற ஆரம்பித்தனர்.

இதைக்கேட்ட ஆங்கெலினாவுக்கு, ஆத்திரம் ஒருபக்கமும், ஆவேசம் ஒருபக்கமும் எழும்பிற்று.

“ஏன் பெண்களால் முடியாது”

“ஏன் அவர்கள் தகுதியில்லை”

என்றகேள்விகள் அவள் இதயத்தை இடிக்க ஆரம்பித்தன. இதன் விளைவாக பலபெண்களைக்கொண்ட “ஒரு டிராக்டர் பிரிவையே” ஆரம்பிப்பதெனமுடிவு செய்தாள். அதன்படி,

தனது தோழியர்கள் சிலரை, ஒத்துக்கொள்ளச் செய்து அவர்களை இட்டுக்கொண்டு அதிகாரிகளிடம் சென்றாள். அதிகாரிகளோ, ஆங்கெலினாவின் எண்ணத்திற்கு மாறாக இருந்தார்கள்! "யாவரும் டிராக்டர் ஓட்டப்போவதாகக்" கூறப்பட்டதும் அவர்களுக்கு நகைப்புத்தான் மலர்ந்ததாம்! பெண்களின்மீது 'அவ்வளவு' நம்பிக்கை!

"இவர்களை நம்பி எப்படி டிராக்டர்கள் தரமுடியும்?" என்றுகேள்வி உருவில், கையை விரித்தனர். இதைக்கண்ட, ஆங்கெலினாவுக்கோ ஆத்திரம் குமுறியது. 'எங்குமே அவநம்பிக்கையும், எங்களால்ஆகாது என்ற எண்ணமும்தானா?" என்ற ஆவேசம், அலைமோதியது. "கொடுங்கள். என்னை நம்பிகொடுங்கள்!எல்லாவற்றிற்கும் நான் பொறுப்பு" என்று கூறி இயந்திரக்கலப்பைகளை, பலத்த பிடிவாதத்திற்குப் பிறகு, பெற்றாள். பெற்றுத்திரும்பியபோது எழுந்த ஆவேசம், அந்தப் பெண்களையெல்லாம் தன்போன்ற டிராக்டர் ஓட்டிகளாகத்தயார் செய்தபின்தான் அடங்கியது ஆங்கெலினாவுக்கு.

ஒருபக்கம் குலாக்குகள் கொடுமை மற்றொரு முனையில் கூட்டுப்பண்ணை எதிர்ப்பாளர் கூச்சல்—இன்னொரு திசையில் பாமரர் எதிர்ப்பு. இத்தனையும் தாண்டினாலோ, கட்சித் தொண்டர்களின் 'கிண்டல்!'

இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கும் கவலைப்படாமல், எடுத்த லட்சியத்தில் வெற்றிபெற வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்ததால் தான் இன்று ரஷ்யாவில் லட்சக்கணக்கான பெண்கள் டிராக்டர் ஓட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அன்று, ஆவேசத்தில் உருவாக்கப்பட்ட 'பெண்மணிகள் டிராக்டர் பிரிவு'தான் இன்று இத்தகைய நிலை ஏற்படுவதற்கு காரணமாகும். காடாகக் கிடந்ததை நாடாக்கி, காடுமுரடுகளைக் களைந்து, கண்கவரும் சோலையாகச் செய்து, தரிசாகக் கிடந்த நிலத்தை 'தங்கம்' விளையும் வயலாக்கிய ரஷ்ய வீரர்களின் அணிவகுப்பிலே, பெண்களுக்குப பெரும் பங்கு உண்டு, என்ற பெருமையைச் சம்பாதித்துத் தந்தவர் ஆங்கெலினா!

அவர் தயாரித்த பெண் டிரைவர்களின் புது வரிசை கிராமத்தில் நுழைந்ததுதான் தாமதம், ஆத்திரம் கொண்டகிராமப் பெண்மணிகள், புற்றீசல் போல வந்து சூழ்ந்து கொண்டனர். 'திரும்பிப் போ. எங்கள் நிலங்களில் பெண்கள் இறங்கவிடோம்' என்று எதிர்த்து, ஆர்ப்பாட்டம்செய்தனர். இதேபோல்தான் எங்கும் ஏற்பட்டது. இருந்தும், ஆங்கெலினா தளரவில்லை. எதிர்ப்புகள், அவள் வெற்றித் தோட்டத்துக்கு, எருக்களாயின.

'எப்படியும் இவளை ஒழித்துவிட வேண்டும்' என்ற திட்டமிட்ட குலாக்குகள், ஒரு நாள் ஆங்கெலினா வயல் நோக்கி சைகிளில் வந்துகொண்டிருந்த பொழுது, பின்னாலிருந்து வேகமாகக் குதிரை வண்டியை ஓட்டிவந்து மேல் ஏற்றி படுகாயம் உண்டாக்கினாராம். இது போல இலட்சியப் பாதையிலே நடந்த அவளுக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் ஏராளம்! மறைந்து நின்று சுட்டனர் பலர். எப்படியும் தொலைத்துவிடுவது என்றனர் பலர். இவ்வளவு எதிர்ப்புக்களையும் தாங்கி, முன்னேற்றப் பாதையில் முதலடி வைத்த ஆங்கெலினா, புது வழி தந்த பெண் மட்டுமல்ல, புகுந்த வழியில் யாவரும் எதிர்பார்க்க முடியாத வெற்றியைத் தந்த வீராங்கனை. ஒன்றுக்கு பத்து மடங்காக, முன்னைவிட தானியம் விளைவிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர். நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம்,மக்கள் தொல்லையைத் தீர்ப்பதே மகத்தான பணியென்று கருதி இரவும் பகலும் 'உழைத்து உணவுப் பொருள்களை வழங்கிய உத்தமி.

* * *

ஆங்கெலினா — புரட்சிப் பூங்காவிலே பூத்த புது மலர்! 'விழி தூக்கி தேன் மலர்கள் அழைக்க, வசந்தம் விளையாடும் சுவையணைப்புக் காதல்' வேளையைக் காணக்கூடிய பருவத்திலே, கழனியின்மீது காதலை வைத்தார். ஆனந்தம், இயந்திரக் கலப்பையின் அசைவிலே எழுந்தது; இன்பம் பயிரின் விளைச்சலிலே முகிழ்த்தது, அவருக்கு! பேசிடும் ஓவியமாக ஆடி, ஓடி அகமகிழ்ந்து இருக்கவேண்டிய வாழ்வின் வசந்த காலத்தில், ரஷ்ய சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் முன்னேற்ற உலகுக்கு ஒரு பாடம்!

ஆங்கெலினா — இன்று அடைய முடியாத இடத்தை அடைந்துவிட்டார், பெற முடியாத பெருமையைப் பெற்றுவிட்டார். ஏழைகளாயிருந்தோரின் வயற்றிலே பிறந்து, ஏழ்மையிலேயே வளர்ந்து, அந்த ஏழ்மையையே விரட்டியடித்தவீராங்கனை அவர்.

அன்று அவர் ஏழை, குலாக்கிடம் கூலிக்கு வேலை செய்தவரின் பெண்; கொஞ்சங்கூட மட்டுமரியாதை தெரியாதவள்!'

இன்று அவர் ரஷ்ய சட்டசபையின் உறுப்பினர். எட்ட முடியாத இடமான சுப்ரீம் சோவியத் பிரதிநிதிகளிலே ஒருவர்! மக்களின் பெருமதிப்பையும் அரசாங்கத்தின் விருதுகளையும் பெற்றவர்—ஆட்சிப் பொறுப்பில் பெரும் பங்கு ஏற்றுநிற்பவர். எனினும், இன்று கூட, அவர் ஒரு டிராக்டர் டிரைவர்தான்.

அன்று அவர் பெயரைக் கேட்டாலே நாராசம் ஊற்றியது போலிருந்தது. இன்றோ, அவர் பெயரால் ஸ்டாலினோவில் ஒரு தெருவே இருக்கிறது; ஒரு கப்பல் கூட அவர் பெயரைத் தாங்கி நிற்கிறது.

ஆங்கேலினா—இந்தப் பெயரைக் கேட்டாலே காதைப் பொத்திக் கொள்வர் அந்த வட்டாரத்தினர். இன்று அந்த பெயரைக் கேட்டாலே ருஷயப் பெண்களுக்கு விசைஒடிந்த தேகத்திலும் வீரம் எழும்பும்!

அவர் – ருஷ்ய மக்களின் வளர்ச்சியினூடே வளர்ந்தவர். உழைப்பால் தன்னை உயர்த்திக் கொண்டவரல்ல; நாட்டு நிலையை உயர்த்தி அதன் மூலம் பெருமை பெற்றவர் வெற்றிக்காக அவர் வேட்டை ஆடவில்லை. ஆனால் அது, அவர் அடிபணிந்தது, அருந்திறமையைக்கண்டு.

அன்று, 1930-ல் 60,000 டிராக்டர் டிரைவர்களில் அவர் ஒருவர் தான் பெண். இன்றோ, கூட்டுப் பண்ணைகளின் தலைவர்களாக மட்டும் 200,000 பெண்மணிகள் இருக்கிறார்கள்—டிராக்டர் டிரைவர்களாக ஒன்றரைக் கோடிக்கு மேற்பட்ட பெண்கள் பணி புரிகின்றனர்!

பழமை தாண்டவமாடியபோது இருட்டாகத் தோன்றினார், அவர், ரஷ்ய மக்களுக்கு. இன்று அவர், அவர்களின் விடிவிளக்கு! வாழ்வு வழியைக் காட்டிய கலங்கரை விளக்கம்!!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½, „ 3 8 0

MADRAS

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 18—9—49 | இதழ் 12

மக்களின் சம்மதம் வேண்டும்

"சபையின் பெரும்பான்மை பலத்தை ஆதாரமாகக் கொண்டு நிறைவேற்றப்படும் எந்த ஒரு தீர்மானமும் வடஇந்தியாவில் அல்லது தென்னிந்தியாவில் உள்ள கணிசமான அளவு தொகையையுடைய மக்களின் சம்மதத்தைப் பெருவிட்டால் அரசியலமைப்பை ஒழுங்காக நடைபெறச் செய்வது மிகவும் சிக்கலான பிரச்னையாகிவிடும் என்பதை அங்கத்தினர்கள் மனதிலிருத்திக்கொள்ளவேண்டும்."

இராஜேந்திரபிரசாத்
(13—9—49)

குறிப்பு:—இந்திப்பொதுமொழி விவாதத்தின் போதுதான் அரசியல் நிர்ணய சபைத் தலைவர் இவ்விதம் எச்சரிக்கை செய்தார்.

கூ-க்ளக்ஸ்-கிளான்

நிறவெறி இயக்கம்

பதின்மூன்று பேருக்குக் காயம்! இசைவிருந்திலே கலவரம். இன்னிசை கேட்க வந்திருந்தோரை, கத்தி, கல்பாறை கொண்டு 5000 பேர்கொண்ட கூட்டம் தாக்கிற்று. இசைவிருந்து நடைபெற இருந்த சோலைமுழுதும் அமளி, அட்டகாசம், அட்டூழியம்!

சம்பவம் சமீபத்தில் அமெரிக்காவில், நியுயார்க்குக் கருகில் நடைபெற்றிருக்கிறது. இசை விருந்துக்கு வந்தவர்கள் தாக்கியவர்களின் விரோதிகளல்ல; வீம்புக்காக நடத்தப்பட்டதுமல்ல இந்த இசை நிகழ்ச்சி. இருந்தும் அக்கூட்டத்தவர் அடித்து நொருக்கி, அல்லல் விளைவித்துள்ளனர். காரணம் பால் ராப்சன் என்ற நீக்ரோ பாடகர் பாட இருந்தார் என்பதுதான்! அமெரிக்காவோ, சம உரிமை பற்றி சங்கநாதம் செய்யும் நாடு! அங்கு நடைபெற்றிருக்கிறது, இந்த அட்டூழியம், நிறவெறி காரணமாக. பாடகர் நீக்ரோ—கறுப்பர். பாட்டைக் கேட்கக் குழுமியிருந்தோரோ நீக்ரோக்களல்ல, 'வெள்ளைத் தோலர்கள்'தான், இருந்தும் 'கறுப்பன்' பாட்டை இவர்கள் கேட்கக் கூடுவதா, என்ற ஆத்திரத்துடன், அந்தக் கூட்டம், தாக்கி, தகாதன செய்திருக்கிறது. இந்தத் தருக்கர் கூட்டம் கூ—க்ளக்ஸ்—கிளான் என்ற இயக்கத்தைச் சேர்ந்ததாம். இந்த கூ—க்ளக்ஸ்—கிளான் இயக்கத்தாரின் இலட்சியம் நீக்ரோக்களை நீங்கா அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான்! நீக்ரோக்களை எப்படி அடிமையாகவே வைத்திருப்பது, அவர்களை எந்த முறையில அடிமையாகவே நடத்துவது, மீறினால் எப்படிக்கட்டுப்படுத்துவது என்பவைகளே இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள்—வேலைமுறைகள்.

'இப்படியுமா ஒரு இயக்கம் இருக்கிறது?' என்று கேட்கத் தோன்றும் இங்குள்ளோரில் பலருக்கு இருக்கிறது! அமெரிக்காவில்! அங்கு நீக்ரோக்கள், நிறமே தம் காரணமாக அவதிப்பட்ட நிகழ்ச்சிகள், அடைந்த இன்னல்கள் நெஞ்சைப் பிளக்கும்! அடிமைகள் என்ற பெயரில் அவர்கள் அடைந்த துன்பங்கள் — ஒரு சோகத்தொடர்கதை.

* * *

நீக்ரோக்களின், தாய்பூமி, தென்னாப்பிரிக்கா. அங்கிருந்து, நீக்ரோக்கள், ஐரோப்பியர் போல, அமெரிக்காவுக்கு குடியேறினவர்கள், அல்ல, சுயலாபங்கருதி. ஆனால், குடியேற்றப்பட்டவர்கள்! அடிமைகளாகப் பிடித்துவந்து விற்கப்பட்டவர்கள்!! இந்த அடிமை வியாபாரத் திருத்தொண்டு ஆரம்பமானது 1567-ல் இதன் ஆதிகர்த்தா, சர் ஜான்ஹாக்கின்ஸ் என்ற ஆங்கிலேயர். எலிசபெத்ராணியார் காலத்தில் இந்த, 'சேவை' ஆரம்பமாயிற்று, தென்னாப்பிரிக்கா செல்வது, அங்குள்ள நீக்ரோக்களை, ஆடுமாடுகளைப் போலப் பிடிப்பது, அன்னியர்களிடம் அவர்களை விற்பது என்ற வியாபாரம். ஐரோப்பியர் நீண்ட நாள் இந்த வியாபாரத்தைச் செய்து வந்தனர்.

இதையொட்டி அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர், தங்கள் எடுபிடி வேலைகளுக்கு, கூப்பிட்ட குரல்கேட்பதற்குத், தோட்டங்களைப் பராமரிப்பதற்கு, சொன்ன வேலைகளைச் செய்வதற்கு, ஆட்கள் வேண்டும் என்பதற்காக நீக்ரோக்களை அடிமைகளாக வாங்கினர். இதன் விளைவாக, ஏராளமான நீக்ரோக்கள் அமெரிக்கவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனர். அமெரிக்காவில குடியேறி அங்கு வாழ்ந்த ஆதிவாசிகளை அடக்கி, கோலோச்சும் அளவுக்கு வளர்ந்த ஐரோப்பியர்களின் செல்வம், அவரவர்களிடமிருக்கும் நீக்ரோ அடிமைகளின் எண்ணிக்கையை வைத்தே அப்போது கணக்கிடப்பட்டதாம்!

தாங்கள் விலைக்கு வாங்கிய அடிமைகளை, ஆதிக்கக்காரர்களாகிய ஐரோப்பியர்கள், படுத்தியபாடு கொஞ்ச நஞ்சமல்ல. 'அடிமைகள்' என்ற சின்னத்துடன், கொண்டுவரப்பட்ட நீக்ரோக்கள்கூட்டம் வர, வர அதிகமாகி வரவே, அவர்களை ஆட் படுத்தியிருந்தவர்கட்குச் சிறிது, சிறிதாக அச்சம் பிறக்க ஆரம்பித்தது. கூட்டம் அதிகமாகி வருகிறதே, கொடுமைகள் விரிந்தால், எல்லோரும் கூடிக் கொண்டு ஏதாவது செய்து விடுவார்களோ?, என்ற கலக்கம் அவர்களிடை உருவாகவே, அச்சம் எழும்ப ஆரம்பித்தது. உரிமைப்போர் எங்கே நீக்ரோக்களிடையே உண்டாகி விடுமோ என்று பயந்த, அமெரிக்க ஆதிக்கக்காரர்கள், நாட்கள் நகர நகர, கிலிகொண்ட மனத்தினராய்க் கேடுகள் செய்வதில் ஈடுபட்டனர். அதன் காரணமாக 'தருமம் தாரு, ஐயா!' என்று கூடக் கேட்கச் சக்தியற்றிருந்த, உடலுழைப்புக் கூட்டமாகிய நீக்ரோக்களை மென்மேலும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வழிவகைகளைத் தேடினர். அச்சம் அதிகரிக்கவே, அறியாதவர்களாக, அனாதைகளாக இருந்த நீக்ரோக்கள் மீது ஆதிக்கக்காரர்களின் அட்டகாசங்கள் பெருகுக் கொள்ளலாயின.

பொழுது சாய்ந்ததும் யாரும் வெளியே போகக்கூடாது.

எவரும் நாய் வளர்க்கக் கூடாது—கம்பு, கத்தி வைத்திருக்கக் கூடாது.

என்றெல்லாம் கெடுபிடிகள் அதிகமாயின. யாராவது ஒரு நீக்ரோ

பெரிய குற்றம் செய்து விட்டால், அந்த ஆள் உயிரோடு புதைக்கப்படுவான்! தானே, தனக்கு, புதைகுழி வெட்டிக் கொண்டு, அதில் போய் அவன் படுத்துக் கொள்ள வேண்டுமாம்!!

கேட்கவே கூசுகிறது, இன்று நமக்கு. ஆனால், அன்று, அமெரிக்காவில் ஆதிக்கக்காரர்களிடையே இவை சர்வசாதாரணம். உள்ளத்திலே தென்பும், உணர்ச்சியிலே வீம்பும், இல்லாத காரணத்தால் நெடு நாள் வரை 'அவர்களின்' தர்பார் நடந்து கொண்டிருந்தது. காலம் மாற மாற, தருமம் தாரு, ஐயா என்று அடக்கப் பட்டோர் குரல் ஒலிக்க ஆரம்பிக்கவே, அமெரிக்காவில் பல இடங்களில் நீக்ரோ விடுதலைச் சங்கங்கள் எழும்ப ஆரம்பித்தன. இந்த இதய கீதம் எழும்பத் துவங்கியதும், ஆதிக்க ஆசைக்காரர்களின் ஆத்திரம் அதிகரிக்க ஆரம்பித்தது. நீக்ரோக்களின், நீங்காத்துயர் போக்க, ஆதிக்க புரியில் அமர்ந்திருந்தவர்களிலேயே பலர் கிளம்பினர், சேற்றிலே செந்தாமரை போல! அடிமைகளின் துயர் துடைப்பது, ஆதிக்கக்காரர்களின் கெடுபிடியிலிருந்து அவர்களை விடுவிப்பது, அவர்களையும் மனிதனாக வாழ விடுவது என்ற நன்னோக்குடன். இந்த நன்னோக்காளர்கள், அமெரிக்காவின் வடபகுதியில் அதிகம் இருந்தனர். நீக்ரோக்களின் விடுதலைச் சங்கங்கள் பல இவர்களால் ஆரம்பிக்கப்பட்டன. இன்னலுற்றோரை, இன்பங்காண அழைக்கும் தியாகத் தொண்டில் ஆதியில் ஈடுபட்டவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் வில்லியம் லாய்ட் காரிஸன், ராபர்ட் என்ற இருவர். இருவரில் முதலவர் அடிமை விலங்கை அறுத்தெறியும் இலட்சியத்துடன் 'லிபரேட்டர்' (Liberator) என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் துவக்கி, அதன் மூலம் பாடுபட்டார்.

நீக்ரோக்களின் உரிமைக்கிளர்ச்சி, கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வரவே, ஆதிக்கபுரி வாசிகளின் அச்சம் அதிகரிக்க ஆரம்பித்தது. எங்கே, அடாது நடந்து விடுமோ என்று பயந்தோர், தங்கள் அட்டகாச மாடியிலிருந்து கீழே இறங்கிவர ஆரம்பித்தனர். ஆனால், ஆதிக்க மோகமும், அதிகாரப் பித்தும் கொண்டவர்களோ, 'தருமம் தாரு ஐயா' என்று கெஞ்சியவர்கள்மீது பாயத் தொடங்கினர். நிறவெறி நீடிப்பதில் ஆசை கொண்டவர்களின் போக்கு, மாறுவதற்குப் பதில், திமிர்வாதப் போக்கு கொழுந்துவிட்டெரியத் துவங்கவே, கொடுமைப் பட்டுக் கிடந்தோரின் உரிமைக் கிளர்ச்சி புயலாக மாற ஆரம்பித்தது. இந்தப் புயல்தான் 1861-லிருந்து நான்கு ஆண்டுகள் அமெரிக்காவின் வடபகுதியினருக்கும் தென்பகுதியினருக்கும் நடைபெற்ற உள்நாட்டுப் போர். இந்த உள்நாட்டுப் போரின் மூலகாரணமே, ஒரு சாரார் நீக்ரோ விடுதலைக்காகப் பாடுபட முனைந்ததும், இன்னொருவர் அதை எதிர்த்து அடக்கி ஒடுக்க ஆரம்பித்ததும்தான்.

"நீக்ரோக்களும் மனிதர்கள்தான். நிறத்தின் பேதம் அவர்களது குற்றமில்லை. எனவே அவர்களை அடிமையாக வைத்திருக்க வேண்டுமென்பது ஏசுவுக்கு அடுக்காது" என்று. ஊமைகளாய்க் கிடந்த நீக்ரோக்களின் சார்பில் அவர்களின் நீண்ட நாள் துயர் போக்க நினைப்புக் கொண்டவர்கள், எடுத்து விளக்கி, அவர்கள் அடிமைவிலங்கை அகற்றவேண்டும் என்று பாடுபட்டனர். ஏழைகளின் உரிமைக்காகப் பாடுபடுவதை 'புனிதமானது' என்று அந்த நன்னோக்கினர் கருதி, எங்கும் நீக்ரோ விடுதலைச் சங்கங்களை நிறுவினர். ஆனால் தெற்குக் காலனிகளோ, இந்த விடுதலை முரசைக் கிழிப்பதில் முனைந்து நின்றன. அமெரிக்காவின் தெற்குக் காலனிப் பிரதேசங்களில் பருத்திதான் முக்கிய விளைச்சல் பொருள். எனவே பருத்தியைப் பயிரிட்டு, உற்பத்தி செய்ய, நிறைய ஆட்கள் — அடிமைகள் — வேண்டும். வெயிலில் காய்ந்து, இடுப்பொடிய உழைக்க ஆதிக்கபுரியினரான 'வெள்ளைத் தோலருக்கு' எங்ஙனம் இயலும்! எனவே, அவர்கள் நீக்ரோக்களை, அடிமைகளாகவே வைத்திருக்க ஆசைப்பட்டனர்.

அமெரிக்காவின் வட காலனிப் பிரதேசங்களிலிருந்த ஐரோப்பியர்கள், தொழிற்சாலைகளை நிறுவுவதில் முனைந்து நின்றதால், அவர்களுக்கு அத்துணை அடிமைகள் தேவையில்லை. ஆள் செய்யும் வேலையைச் செய்ய, இயந்திரமும் ஆலையும் இருக்கும்போது அவர்களுக்கு எதற்கு அடிமைகள்? ஆகவே, வடக்குக் காலனியில் அடிமைகளின் துயர்போக்கும் நல்லெண்ணம் முகிழ்த்ததும், எதிர்ப்பின்றி இணங்கினர். தென் காலனிக்காரர்களோ, நீக்ரோக்களின் தேவையை விரும்பியவர்களாக மட்டுமின்றி, அவர்கள் இருந்தால்தான் தங்கள் வேலைகள் குறைந்த செலவில் நடைபெற முடியும் என்று கருதினர், இதையொட்டி அவர்கள் நீக்ரோக்கள் விடுதலையைக் கடுமையாக எதிர்த்தனர், "நீக்ரோக்கள் நீங்கா அடிமைகளாக இருக்க வேண்டும். இதுதான் கடவுளின் ஏற்பாடு" என்று கதைத்தனர். அவர்கள் இதயத்தில், அடிமை மோகம் அப்படியே இருந்தது. "தர்பார்" தொடர்ந்து நடத்தப்படவேண்டும் என்று நினைத்தனர். 'தருமம் தாரு, ஐயா' என்று கேட்டவர்களை நோக்கி 'தருமம்தான்' என்று அடி, உதை, குத்து, வெட்டு ஆகியவைகள் மூலம் பதில் தந்தனர்.

இந்நிலையில் 1861ல் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கத் தலைவராக வெற்றிபெற்றார். என்றுமே இவர் ஏழை நீக்ரோக்களுக்காகப் பாடுபட்டவர். "தந்தை ஆபிரகாம்" என்று நீக்ரோக்களால் அழைக்கப்படும் அளவில் பாராட்டப்பெற்றவர். இத்தகைய விடுதலை வீரர், தலைவராக ஆனதும் தெற்குப் பிரதேசத்தாருக்குப் பிடிக்கவில்லை. இதன் விளைவாகத் தாங்கள் தனித்து வாழப் போவதாக அவர்கள் வெளியிட்டனர். இதன் விளைவாகவே உள்நாட்டுப் போர் துவங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே இந்த நான்கு ஆண்டுகள் நடைபெற்ற இப்போரின் மூலக்காரணமே நீக்ரோக்களின் விடுதலைக் கீதம்தான்! இந்த விடுதலை முரசை எழுப்பி வெற்றிகண்ட ஆபிரகாம் லிங்கன், தன் ஆசை வெற்றி கண்ட அதாவது போர்முடிந்த ஏழாவதுநாளில் 1865 ஏப்ரல் 14ந் தேதியன்று நாடகக் கொட்டகையில் நடிகன் உருவில் வந்த நயவஞ்சகன் ஜான்வில்க்ஸ்பூத் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். நிற பேதம் போக்கப்பாடுபட்ட வீரருக்கு வெறியர்கள் துப்பாக்கிக் குண்டைப் பரிசாகத் தந்தனர்!

* * *

நீக்ரோக்களின் அடிமை விலங்கு நீக்கப்படுவது கண்ட பேதம் விரும்பிகள் படபடத்தனர்! பதைத்தனர்! அவர்கள் ஆத்திரம் அளவு கடந்து சென்றது! எனவே உள்நாட்டுப்போர் முடிந்த பின் நீக்ரோக்களின் அடிமைத் தளையை அகற்ற நடவடிக்கைகள், அரசாங்கத்தால், எடுக்கப்பட, எடுக்கப்பட நிறவெறியர்களின் ஆவேசம் பல உருவில் வெளிக்கிளம்பலாயிற்று. இதன் விளைவாக ஆங்காங்கு பல இரகசிய இயக்கங்கள், நீக்ரோக்களுக்குத்தீங்கிழைப்பது, அடிமை முறையை ஏற்படுத்துவது, என்ற இலட்சியத்துடன். இப்படிக்கிளம்பிய இயக்கங்களில்ஒன்றுதான் கூ—க்ளக்ஸ்—க்ளான், வனவிருந்தின்போது அட்டகாசம் செய்ததாகக் கூறப்படும் கூட்டம்!

அடிமைஒழிப்பு,அமெரிக்கஅரசாங்கத்தால் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட 1865ம் ஆண்டிலேயே இந்த இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இதன் பெயர் வெள்ளையர் இளைஞர் சங்கம் என்பது. தென்பகுதி மாகாணங்களில் ஒன்றான டென்னெஸியில் புலாஸ்கி என்ற இடத்தில் இந்தச்சங்கம் துவக்கப்பட்டது. நிறவெறிநீடிக்கப்படவேண்டும் என்று நிறுவப்பட்ட இந்த இரகசிய இயக்கம் நாளாவட்டத்தில், எங்கெங்கு நிறவெறியர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் பரவ ஆரம்பித்தது, 'நீக்ரோக்களை அடிமைகளாக வைத்திருப்பதே எங்கள் இலட்சியம், என்ற குறிக்கோளுடன்!

இந்த இயக்கத்தின் இலட்சியம் எவ்வளவு, விபரீதமானதாக, வேடிக்கையானதாகத் தோற்றுகிறதோ, அதேபோலத்தான் இவர்கள் அமைப்புகளும், வேலைகளும் எல்லாம் ஓரே கற்பனை மயம்!

அடிமை ஒழிப்பை எதிர்த்த தென்நாடுகள் முழுமையும் இந்த இயக்கத்தின் தலைவனுக்குக் கட்டுப்பட்டு அவன் பராமரிப்பிலிருந்தது. உண்மையாகவல்ல அவர்களின் கற்பனைப்படி!! அப்படிக்கட்டுப்பட்டிருப்பதாகக் கூறிக்கொண்ட அந்தப்பிரதேசத்துக்கு ஒரு பெயர் கொடுத்தனர், காணமுடியாத சாம்ராஜ்யம் என்று. இன்று இங்கு கூறப்படவில்லையா 'ஆர். எஸ், எஸ்' காரர்களால் 'அகண்ட இந்து சாம்ராஜ்யம்' என்பதாக, அதுபோல!

காணமுடியாத சாம்ராஜ்யத்தை நிர்வகிப்பவர் சாமான்யராக இருக்கலாமா! எனவே தங்கள் தலைவருக்கும் ஒரு பெயர்கொடுத்தனர், இந்த இயக்கத்தினர். பெயர் மகாமாயாவி! தலைவர் பெயர் மகாமாயாவி. இயக்கம் இருக்குமிடமோ தென்னாடு முழுமையும் என்ற நினைப்பு. அதன் விளைவாக அது முழுமையும் அவருக்கு கட்டுப்பட்டிருப்பதாகக் கற்பனை. அப்படிக் கட்டுப்பட்டிருக்கும் பிரதேசத்துக்கு காணமுடியாத சாம்ராஜ்யம்! அதை நிர்வகிப்பவர் மகாமாயாவி!!

வேடிக்கையாக இருக்கிறதல்லவா! அப்படித்தான் அவர்கள் அமைத்துக்கொண்டனர், தாங்கள் தான் நாட்டின் நாயகர்கள், நாடு தங்களுக்குக் கட்டுப்பட்டது என்ற கற்பனையுடன்.

'நீக்ரோக்களை அடிமைப்படுத்த வேண்டும்' என்ற லட்சியம் கொண்ட இந்த இயக்கத்தின் எண்ணங்களை மேலும் அறிய மிக்க விந்தையாயிருக்கும். எல்லாம் ஓரே கற்பனை மயம் தான். ஆசைக் கனவுகள் தான்!

இந்த அதிசய இரகசிய இயக்கத்தின் 'மகாமாயாவி'யாக இருந்தவர் ஜெனரல் பி பாரஸ்டு என்பவர். மனோராஜ்யத்துக்கு மகுடாதிபதி மட்டும் இருந்தால் போதுமா? அதை நிர்வகிக்க, ஆட்கள் இருக்க வேண்டாமா!! அதற்குக் கட்டுப்பட்டு பல சிறு ராஜ்யங்கள் இருக்க வேண்டாமா!

அதற்காகத் தென் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு காலனிகளும், ஒவ்வொரு இராச்சியங்கள் என்று கூறிக்கொண்டனர். அந்த இராச்சியத்தில் பல மாகாணங்கள் இருப்பதாகக் கூறினர். அவைகளைப் பராமரித்து நிர்வகிக்கவும் ஆட்களை, இவர்கள் 'கற்பனை' நியமித்தது. அவர்களுக்கு இவர்கள் கொடுத்த பெயர்கள் எல்லாம் நம்ப முடியாத, கற்பனைப் பெயர்கள் தான்!

மகா மாயாவி காணமுடியாத சாம்ராஜ்யம், என்பது போலவே இராச்சியங்களையும், மாகாணங்களையும், அவைகளின் பிரிவுகளையும் நிர்வகிப்பவர்களுக்கு, பறக்கும் பாம்பு, ஒற்றைக்கண் ராக்ஷசன், மலைதாவும் மல்லர்கள் என்பன போன்ற பெயர்கள் தந்தனர். ஒவ்வொரு பெயருக்கு முன்னரும் 'மகா' என்று சேர்த்துக் கொள்ள வேண்டும். இவர்கள் யாவரும் மாந்திரீகம் அறிந்தவர்கள், கடவுளின் தொடர்பு கொண்டவர்கள் என்பதாக இந்த இயக்கத்தவரால் கூறப்பட்டது. இதில் உறுப்பினராகச்சேர்ந்தவர்களுக்கும் அப்படியே கூறப்பட்டது. சாதிக்க முடியாததை யெல்லாம், சாதிப்பார்கள் என்பதாகச் செய்திகளைப் பரப்பினர்! அது போலவே அர்த்தராத்திரியில் கொள்ளையடிப்பது, ஆகாதவர்களை திடீரெனத் தாக்கி அழிப்பது ஆகிய வேலைகளில் ஈடுபட்டு மக்கள் மனதை மயக்கவும், மருட்டவும் முனைந்தனர். இவர்கள் பெயர்களைப் போலவே தான் இவர்கள் உடைகளும் இருக்கும்! ஒரு நீண்ட முழுக்கை அங்கி. அது முழங்கால்வரை நீண்டிருக்கும். அதோடு, கோணங்கிகள் அணிகிறார்களே, அதுபோலஒரு முக்கோணவடிவமான குல்லாய். அது கழுத்துவரை இருக்கும். கண்கள் மட்டும் தெரிய அந்தக் குல்லாயில் இரு துவாரங்கள் இருக்கும். இது தான் இந்த இயக்கத்தவரின் உடை! இந்த உடையைக் கண்டாலே, பார்த்தோர், பயப்படும் வண்ணம் பயங்கரமுள்ளதாக இருக்கும். அந்த ஆசையோடுதான், இத்தகைய உடையை அவர்கள் அணிந்து கொள்கின்றனராம்! நிறவெறியை அடிப்படையாகக் கொண்டு பழையமுறை மீண்டும் அமுல் நடத்தவேண்டும் என்ற பேராசையுடன், இரகசிய முறையில் பணியாற்றும் இத்தப் பயங்கர இயக்கத்தை, அடக்க பன்முறை,—அமெரிக்க அரசாங்கம் முனைந்தும், முடியவில்லை.

1871-ல் அமெரிக்க அரசாங்கத்தார், கூ—க்ளக்ஸ்—சட்டம் என்பதன் மூலம் இதுபோன்ற பயங்கர இயக்கங்களை ஒழிக்கச்சட்டம்நிறைவேற்றிக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஏராளமான இரகசிய அதிகாரிகளை நியமித்து, இக்கூட்டத்தினரைப் பிடிக்க முயற்சிகள் செய்தனர். இந்த நடவடிக்கைகளால், இந்த இயக்கத்தவரின் அடாபிடிச் செயல்கள் சில ஆண்டுகள் மங்கியிருந்தனவே அன்றி மறைந்து போய்விடவில்லை! மீண்டும் இவர்கள் 'பேய்' ஆட்டம் 1915-ல் ஆரம்பமாயிற்று.

நீக்ரோக்கள்மீது கொண்ட நிறவேற்றுமை காரணமாக, ஆரம்பிக்கப்!

(15-ம் பக்கம் பார்க்க)

பிள்ளை பிறப்பதற்கு முன்

16-ம் பக்கத் தொடர்ச்சி

படாத நிலையில், எழுத்தைப்பற்றியும், எண்ணைப்பற்றியும் சண்டை போடுகின்றனர் — பிள்ளை பிறப்பதற்கு முன் பெயர் சூட்டுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள எந்த மொழி பொது மொழி யாக்கப்பட்டாலும், சில அடிப்படைக் காரியங்களுக்கு ஆங்கிலமே பொது மொழியாகஇருக்கும் என்பதைமட்டும் மறுத்துக் கூற எவரும் முன் வரவில்லை. மாறாக எல்லாருமே அந்தக் கருத்தை ஒப்புக்கொள்கின்றனர். ஒப்புக் கொண்டே ஆகவேண்டுமென்ற அளவுக்கு ஆங்கிலம் இங்கு வேரூன்றிவிட்டது. அதனை இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் அசைக்க முடியாது. உலகப்பொதுத் தேவையின் ஆணிவேராக ஆங்கிலம் அமைந்து விட்டது.

இங்குமட்டுமன்றி, இவ்வுலகம் முழுவதுமே ஆங்கிலம் பொது மொழியாக இருந்து வருகிறது. அதனையே நாமும் பொதுமொழியாக கொள்ளலாமே என்று கூறினாலோ, 'அந்நிய மொழியைநாம், அணைத்துக் கொள்வதா' என்று ஆர்ப்பரிக்கின்றனர் ஆளவந்தார்களில் சிலர்—எல்லோருமல்ல. ஆங்கிலேயன் போன பிறகுஅவனுடைய மொழி நமக்கேன் என்றுகேட்பதற்குள், ஆங்கிலத்தின் உதவி சில அடிப்படைத் தேவைகளுக்கு அவசியமாகிறதே! அதனை அடியோடு ஒழித்துவிடக்கூடாதே! என்ற தெளிவு உண்டாகித் திகைப்படையச் செய்கிறது! தெளிவிலே திகைப்பு. எந்த ஒரு பொருளைப்பற்றும் தெளிவு ஏற்படும்போது, அதையொட்டி உடனே திகைப்பும் ஏற்படுகிறது — இங்குமட்டும்தான்! வேறு எந்த நாட்டிலும் இந்த நிலை ஏற்படுவதில்லை. அங்கெல்லாம் தெளிவு ஏற்பட்டபின்னர் திகைப்பை உண்டாக்கும் சூழ்நிலைகிளம்புவதில்லை. இங்கே தெளிவுக்கும் திகைப்புக்கும் வேறுபாடு காண முடியாதபடி சூழ் நிலை அமைக்கப்பட்டுவிட்டது. பன்னெடுங்காலமாக மதத்துறையில் அமைக்கப்பட்டஇந்தச் சூழ் நிலை, வேறு எந்தத் துறையில் நுழைந்தாலும் நிழல் போலக் கூடவே தொடருகிறது. விக்கிரக வணக்கம் கூடாது என்ற தெளிவு ஏற்பட்ட ஒருவனுக்குத் திரும்பிப் பார்க்கும் இடமெங்கும் கோபுரங்கள் தென்படுகின்றன. உடனே அந்தத் தெளிவு திகைப்பாக மாறுகிறது. இதே நிலைதான் அரசியல் துறையிலும் பலருக்கு உண்டாகி அவர்களின் தெளிவுக்குத் திகைப்பைத் தருகிறது.

ஆங்கிலமேஇந்நாட்டுக்கும் பொது மொழியாக இருப்பதற்கு ஏற்றது என்ற தெளிவு பிறக்கும்போது, உடனே, நாம் இந்தியர்கள்—நமக்கு இந்திய மொழிகளில் ஒன்று தானே பொதுமொழியாக இருக்கவேண்டும் என்ற திகைப்பு உண்டாகி, முன்னர் ஏற்பட்ட தெளிவைச் சிதைத்து விடுகிறது.

உலகியல் வாழ்க்கைக்கு இன்றியமையாத எந்தத் தொழிலைச் செய்வதாய் இருந்தாலும், அத்தொழில் நுட்பங்களை நன்கறிந்து செய்வதற்கு உதவியாகப் பயன்படும் பல்லாயிரக் கணக்கான தொழிலறிவு நூல்கள் ஆங்கில மொழியில்தான் உள்ளன. பலவகையான கைத்தொழில்களைச் செய்யும்போது, அவற்றிற்குத் தேவைப்படும் பல்வேறு பொருள்களையும் பல்வேறு நாடுகளிலிருந்து வருவித்தற்கும், செய்யப்பட்ட பொருள்களை வேறு பல நாடுகளுக்கு அனுப்பி ஊதியம் பெறுவதற்கும் ஆங்கிலம் ஒன்றுதான்உதவி செய்ய முடியுமே யன்றி, இந்நாட்டின் எந்த மொழியும் அந்தக் காரியத்தைச் செய்துவிடாது. இதனை இந்தி மொழிக்காகப் பரிந்து பேசும் அன்பர்கள் பரபரப்பின்றிஎண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தி, இந்நாட்டின் பெரும்பகுதியினரால் பேசப்படும் ஒரு மொழி என்ற ஆதாரமற்ற காரணத்தைக் காட்டி, மக்களை ஏமாற்றி, அதனையே பொதுமொழியாக்கும் அழிவு வேலையை மேற்கொள்ளக் கூடாதென்பதே நமது கருத்தும் வேண்டுகோளுமாகும்.

ஒப்புக்கு; இந்தி ஒன்றுதான் இந்நாட்டின் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி என்று வைத்துக் கொண்டாலும், அதனை எப்படிப் பொதுமொழியாக ஆக்கிவிட முடியும்?

கங்கை இருக்க, காவிரி இருக்க அந்த நீரைப் பருகாமல், கடல்நீர் உலகின் பெரும்பகுதியைக் கவர்ந்திருப்பதால் அந்த நீரையே எல்லோரும் பருகுதல் வேண்டுமென்று கூறுவது எவ்வளவு வடிகட்டிய முட்டாள்தனமோ, அதுபோலவே தான், இலக்கண வரம்பும் இலக்கியச் செறிவும் உள்ள மொழியைக் கற்று, அதனையே பொது மொழியாகக் கொள்ளாமல், இலக்கண—இலக்கிய வளம் எதுவுமற்ற இந்தியைப் பொதுமொழியாகக் கொள்ள வேண்டுமென்பதும்.

தமிழ் மொழியிலிருந்து பிரிந்து தனித்தனி மொழிகளாக விளங்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போலவே, இந்தி மொழியிலிருந்தும்பிரிந்துதனித்தனி மொழிகளாக விளங்கும் பலமொழிகள் வடநாட்டில் வழங்கப்படுகின்றன. இந்தி மொழியிலிருந்து பிரிந்து போன மொழிகளின் பெயர்களைக் கீழே தருகிறோம்:—

மேல்நாட்டு இந்தி
கீழ்நாட்டு இந்தி
பிகாரி

இந்த மூன்று பிரிவுகளுக்கும் பல்வேறு கிளைகள் உண்டு. அவை வருமாறு:—

பங்காரு
பிரஜ்பாஷா
கனோஜ்
பந்தேலி
உருது
அவதி
பகேலி
சத்தீஸ்கரி
மைதிலி
போஜ்புரி
மகதி

மேலே குறிப்பிட்டுள்ள பதினொரு கிளை மொழிகளும் இந்தி மொழியிலிருந்து பிரிந்து போனவையென்றபோதிலும், ஒரு மொழியைப் பேசுவோர் இன்னொரு மொழியைப் புரிந்துகொள்ள முடியாது. அதாவது தெலுங்கு பேசும் ஒருவன் மலையாள மொழியைப் புரிந்து கொள்ள முடியாதது போல!

இந்த ஆதாரமற்ற கணக்கைக் காட்டித்தான், இந்தி, இந்நாட்டின் பெரும்பான்மை மக்களால் பேசப்படுகின்றதென்றும், எனவே எல்லோ

(12-ம் பக்கம் பார்க்க)

மூன்று 'டின் பிஸ்கட்!'

அரங்கண்ணல்

"மூன்று டின் பிஸ்கட்!"

"மூன்று மாதம் கடுங்காவல்!"

இரண்டே வரிகள். இந்த இரண்டு வரிகளுக்கிடையே, மறைந்திருக்கும் நிகழ்ச்சி இருக்கிறதே, அது ஒரு சோகச் சித்திரம், நெஞ்சைப் பிளக்கும் நீளாக் கதை, நாட்டில் அன்றாடம், ஆங்காங்கு நடைபெறும் ஏழ்மை நிகழ்ச்சிகளின் எழுதா ஓவியம்!

காலை மலர்ந்ததும், கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியேறுகிறான் மூட்டை சுமக்கும் முருகேசன். கதிரவன் மறைவதற்குள், கையும் களவுமாய் பிடிபட்ட 'திருடனாக' இழுத்துச் செல்லப் படுகிறான். ஒரு பகல் நகர்வதற்குள் அவன் வாழ்க்கைப் பாதையில் 'பேரிடி' விழுகிறது! 'இடி'யை வேண்டுமென்றே, வரவழைத்துக்கொண்டவனல்ல, இருந்தும் 'சபல ஆசை' அவனை அந்தக் காரியம் செய்யத் தூண்டியது.

அவனுக்கோ, வேலை, 'ஹார்பரில்' அன்றாடம் மூட்டைச்சுமப்பது. அப்படிப்பட்டவன், ஹார்பரில் இறங்கிய 'கிளாஸ்கோ' பிஸ்கட் டின்களில் மூன்றை திருடிவிட்டதென்றால்!

போலீசார், அவனை, கைது செய்தனர். கோர்ட்டில் விசாரணை நடந்தது.

"நீ, திருடினதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாய். திருடியது உண்மையா?"

"உண்மைதானுங்க........"

"ஏன் திருடினாய்"

"என், ஒரே குழைந்தைக்காகங்க"

"குழந்தைக்காக 'பிஸ்கட்' டின்னை ஏன் திருடினாய்?"

"குழந்தைக்கு இரண்டு வயசுங்க. இருந்தும் 'சூப்பி' விட்டது போல, இருக்குதுங்க. பார்க்க கனாவியாக இருக்குது! பக்கத்து வீட்டு அண்ணன், 'கிளாஸ்கோ' பிஸ்கட் கொடுத்தால் தேவலாம்னு..........."

"அதற்காக?"

"எங்கிட்ட, ஏதுங்க, காசு, அதெல்லாம் வாங்க. என்னமோ பாத்தேன். குழந்தை நினைப்பு வந்தது. சபலந் தட்டுச்சு, இவ்வளவு டின், இருக்கிறப்போ, மூணு டின் குறைஞ்சா என்னன்னு எடுத்தேனுங்க"

"போதும். நீ, திருடியதாக ஒப்புக் கொள்கிறாய். ஆகவே உனக்கு மூன்றுமாதம் கடுங்காவல்!"

மூன்று டின், பிஸ்கட்டுகளைத் திருடியதற்காக, மூட்டைச் சுமக்கும் முருகேசனுக்கு மாஜிஸ்டிரேட் மூன்றுமாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். சம்பவம், விக்டர் ஹியூகோவின், 'ஏழை படும் பாடு' நாவலில் இருப்பதல்ல! சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. மண்ணடியைச் சேர்ந்த முருகேசன், துறைமுகத்தில் மூட்டைத் தூக்கி, அடுக்கும் தொழிலாளி. அவனுக்கு இரண்டு வயதில் ஒரு குழந்தை. அதன் மீது அவனுக்கு அபார பிரியம்! பிரியம் இருந்துவிட்டால்போதுமா!! போஷணைக் குறைவால், அது பிரேத உருவுக்கு வந்துகொண்டிருந்தது. குழந்தைக்கு 'கிளாஸ்கோ பிஸ்கத்து கொடுத்தால் தேவலாம், என்று, பார்த்தவர் கூறுகிறார்கள். அவனோ ஏழை! அன்றன்றாடம், உழைத்து, அரைவயறு கழுபவன்! அவன் எப்படி, கிளாஸ்கோ பிஸ்கத்து வாங்கிக் கொடுக்க முடியும்? ஆகவே ஒருநாள் துறைமுகத்தில் ஏராளமான கிளாஸ்கோ பிஸ்கத் டின்கள் இறங்கியிருப்பதைக் கண்டான். குழந்தையின் நினைப்பு அவன் உள்ளத்திலே சபல நினைவுகளை தட்டிவிட்டது. மூன்று டின்களை எடுத்தான். அதன் விளைவாகவே கைது செய்யப்பட்டு கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். 'என் குழந்தைக்காக எடுத்தேன். நான் ஏழை' என்று கூறினால், போனால் போகிறது, ஏதோ இல்லாதவன் ஏழ்மையின் காரணமாக—அதுவும் குழந்தைக்காகத் திருடினான் என்று விட்டுவிடுவதற்கு சட்டம் என்ன 'தர்ம தாதா'வா!

எனவே அந்த ஏழைக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையை "நீதி" பரிசாகத் தந்தது! குழந்தை மீதுகொண்ட ஆசை காரணமாக அவன் திருடனானான்!!

இப்படி வாழ்க்கைப் பாதையில், வறுமைப் பேரிடியின் ஓயாத் தாக்குதல் பொறுக்காது, வாடி, வதங்கி, வக்கற்றவராய், 'திருடர்கள்' ஆகும் கூட்டம் 'ஏழை உலகிலே' நித்திய நிகழ்ச்சிகள்!

முதுகெலும்பொடிய மூட்டை சுமக்கிறான், உடம்பின் இரத்தத்தை வியர்வையாக்கி, உழைக்கிறான் தனது குடும்பத்தைக்காப்பாற்ற. இருந்தும் அவனால் சரிவர காப்பாற்ற முடியவில்லை, கால் வயறு கஞ்சிக்கூட இல்லாமல், பலநாள் பட்டினி கிடக்க நேரிடுகிறது.

பட்டினியால் பத்தினி பாதவிக்க, 'அம்மா'விடம் பால் இல்லாமையால் அருமைக் குழந்தை அலற, குழந்தையின் அழுகுரலைக் காணச் சகியாத, ஏழைத் தொழிலாளியின் உள்ளம் முதலில் துடிக்கும். 'எல்லாம் நம்ப வந்த விதி' 'இவ்வளவுதான் நம்ப அதிர்ஷ்டம்' என்ற சமாதான வார்த்தைகளால் கணவனும், மனைவியும் சிறிது தேற்றிக்கொள்வர். இது முதலில் நடப்பது. பின், மீண்டும் பட்டினிப் படலம் தொடர ஆரம்பிக்குமேயானால், 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்பது போல, மனிதன் மிருகமாகி விடுவான்! ஏதோ எப்படியோ ஒரு வேளை சோறு கிடைத்தால் போதும் என்ற நிலைமைக்கு வந்துவிடுவான். இப்படியும் 'திருடர்' பட்டியலிலே இடம் பெறும் ஏழைகள் உண்டு!

'அதோ, அவன் மோட்டாரிலே பறக்கிறான்'

'இவள், நல்ல பட்டுப் புடவை உடுத்திச் செல்கிறாள்'

'இந்தக் குழந்தை பளபளக்கும் சொக்காய் அணிந்திருக்கிறது'

இந்தக் காட்சிகளை, காணும்பொழுது, சுற்றிலுமுள்ள சூழ்நிலைகளை

யும், மனிதரில் ஒரு சிலர், மந்தகாச முகத்தினராய், கவலை மறந்தவராய், திரிந்து உலவிடக் காணும் ஏழையின் உள்ளம், ஏன் நம்மால் இப்படியிருக்க முடியவில்லை. உழைக்கிறோம், பட்டுச் சட்டை இல்லாவிட்டாலும் பருத்திச் சட்டை கூட நம்மால் வாங்க முடியவில்லையே, ஏன் இது? மோட்டாரிலே போகாவிட்டாலும் டிராமில் போகக்கூட வழியில்லையே, ஏன் இது' குழந்தைக்கு 'கிளாஸ்கோ' பிஸ்கத் வாங்கிக் கொடுக்காவிட்டாலும் சாதாரண ஒரு அணா பிஸ்கத் கூட வாங்கித் தர முடியவில்லையே, ஏன் இது, என்று யோசிக்க ஆரம்பித்தானேயானால், ஏழையின் கோழைத்தனம், பறக்காமல் என்னசெய்யும்! வேதனை விரிந்தால் கோழை, வீரனாகிவிடுவான்! என்னமோ, பார்ப்போம்' என்ற ஆவேசம் அவனுள்ளத்தில் உருக்கொண்டுவிடும். இத்தகைய கோணல் வழியில், பாட்டாளி உலகின் பட்டினிப் பட்டாளங்கள், செல்ல நேரிடுவதன் காரணம், மாடியில் ஒருவன் மகிழ்ந்து வாழவும் தெருக் கோடியில் ஒருவன் திண்டாடி நிற்கவுமான நிலையும், பந்தியில் ஒருவனும் முச்சந்தியில் ஒருவனுமான நிலையும் சமுதாயத்தில் நீடிப்பதுதான்!

பாலைவனத்தில், நீர் வேண்டும் என்று கேட்டால், கேட்டவனுக்குப் புத்தி கொஞ்சம் மந்தம் என்று கூறிவிடலாம். நாடும் பாலைவனமாக இருந்தால், பட்டினி கிடக்கத்தானே வேண்டும், வேறு என்ன செய்வது, என்று பதில் சொல்லிக் கொள்ளலாம்! ஆனால் நாடு பாலைவனமாக இல்லையே, நாற்புறமும் வயல்கள், நஞ்சையும் புஞ்சையும் ஏராளம்! எங்கும் நெற்களஞ்சியங்கள்! பல இடங்களில் மாடமாளிகைகள்! மாடி வீடுகள்! மதோன்மத்தர்கள்!

இப்படியிருக்கும்பொழுது ஒரு சாரார் மட்டும், போக போக்கியங்களில் உழலவும், இன்னொரு சாரார், அவலக் குரல் எழுப்பிக்கொண்டு அனாதையாய் மடியவுமான நிலை இருந்தால், ஏழைகள் குமுறும் எரிமலையாக ஆகாமல் என்ன செய்வார்கள்?

* * *

மேலே நாம் சித்தரித்த தகவல், ஏழ்மை உலகின் கண்ணீர்த் துளிகளிலே ஒன்று! இதோ, கீழே சில தகவல்களையும் பாருங்கள்! இவை மதோன்மத்தர்கள் வாழ்வின் பன்னீர்த் துளிகள்!

ஆத்தூர் (சேலம்)......ஒரு வாரம் யக்ஞங்கள் செய்து கும்பாபிஷேகமும், ஸ்ரீபிரசன்ன வெங்கடாரமண ஸ்வாமிபிரதிஷ்டையும் நடைபெற்றது. மாலையில் திருக்கல்யாணம், வசந்தோற்சவம், லட்சார்ச்சனை முதலியவை நடைபெற்றன.

காளஹஸ்தி, (திருப்பதி) ஸ்ரீகாளத்தீஸ்வரன் கோயில் அர்ச்சகர்களுக்குள், யார் பூஜை செய்வதற்கு பரம்பரைப் பாத்தியதை உடையவர்கள் என்பது பற்றி கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பு,

காரைக்குடி, போசல மெய்யப்ப அய்யனார் கோவிலில் பூஜாரிகளுக்கு வரவிருந்த காணிக்கையை சிலர் பலாத்காரமாக பயமுறுத்தி தடை செய்யும் நோக்குடன் கலவரம் விளைவித்த எதிரிகளுக்குத் தண்டனை.

இத்தனை பன்னீர்த் துளிகளும் தினமணி 12—9—49 (சென்னை) இதழில் ஒரே நாளில் தெளிக்கப்பட்டிருக்கின்றன — மக்களுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

ஆத்தூர் பிரசன்னவெங்கடரமண ஸ்வாமிக்கு ஒரு வாரம் யக்ஞம். திருக்கல்யாணம், வசந்தோற்சவம், லட்சார்ச்சனை.

காளஹஸ்தி அர்ச்சகர்களுக்குள் குடுமிச் சண்டை.

காரைக்குடி அய்யனார் பூஜாரித் தகராறு.

இந்தக் காட்சிகளையும் கண்டுவிட்டீர்கள்! இவை ஒரேநாளில் தினமணி இதழில் வெளியிடப்பட்டிருப்பவை. இந்த அளவுக்கு முதலில் நாம் சித்தரித்த 'முருகேசன்' காட்சியை மக்களுக்கு தினமணி யாரால் காட்டப்படவில்லை. பன்னீர்த் துளி தெளிப்பதுதான் வேலையே தவிர, கண்ணீர்த் துளிகளைக் காட்டுவதால் பயன் என்ன என்ற கருத்துப் போலும்!

ஏழையின் கூக்குரல் ஓரிடத்திலே எழும்புகிறது, அதே வேளையில் இன்னொரு இடத்திலே, ராக ஆலாபனம் நடக்கிறது! நாட்டின் இன்றைய நிலை இது! குழந்தைக்கு பிஸ்கத் வாங்க முடியாத 'முருகேசன் 'திருடனாகி' சிறைக்கு அனுப்பப்படுகிறான். இன்னொரு இடத்தில் 'யார் கோயில் பூஜைக்குரியவர்' என்ற வழக்கு நடக்கிறது. ஓரிடத்திலே பாட்டாளி மக்களின் பாதவிப்பு கண்ணீர்த் துளிகளைச் சிந்துகிறது! இன்னேரிடத்திலே 'எல்லாம் வல்ல' எம்பெருமானுக்கு பன்னீர்த் துளித் தெளிக்கப்படுகிறது!

* * *

கும்பி கழுவ வழியின்றி, கூலிக்கு வேலை செய்யும் குப்பன் கூக்குரல எழுப்புகின்றவேளையில், கோலாகலமுடன் கும்பாபிஷேகம், திருக்கல்யாண' உற்சவமும் நடத்தப்படுகிறது எல்லாம் வல்ல ஈசனுக்கு!

150 பவுன் எடையில் தங்கப் பாவாடையாம் சங்கரநயினார் கோயில் ஸ்ரீகோமதி அம்மனுக்கு! 'திருப்பதியார்' படத்தை நன்றாகத் தீட்டுபவருக்கு பரிசு கொடுக்கப்படுமாம்! இந்தச் செய்திகளும் 'தினமணி'யார் அதே நாளில் தருவதுதான்! 'ரோம் தீப்பற்றி எரியும் பொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்த கதை போல்தான் இருக்கிறது!

நாடு, பசி பட்டினி, விலைவாசி உயர்வு என்பவைகளால் திண்டாடி புயலில் அகப்பட்ட கப்பல்போல நிற்கிறது. உல்லாச புரியினரோ, ஊருக்கு ஊர் கும்பாபிஷேகமும், குடமுழுக்கு, விழாவும்' செய்வதில் இருக்கிறார்கள். இங்கு மட்டுந்தான் இந்நிலை என்பதல்ல! இந்திய முழுமையும், மாளிகை வாசிகளின் போக்கு, இப்படித்தான் இருக்கிறது. ஏழைகளின் கூக்குரல்கள் அவர்கள் காதில் எதிரொலித்ததாகவே காணோம்! குஜராத்திலுள்ள சோமநாதபுரம் கோயிலைப் புதுப்பிக்க 34 லட்சம் ரூபாய்கள் செலவிடப் படுகிறதாம்! கஜினி மாமூது கொள்ளையிட்ட அந்த சோமநாதபுரம் ஆலயந்தான்! தன்னைப் புரட்டி, தன்னிடமிருந்ததையெல்லாம், கஜினி திரட்டிக்கொண்டு போனபின்னரும், தன் சக்தியையோ பராக்கிரமத்தையோ காட்டாமல் 'கடவுளாக' (கல்லாக) இருந்தாரே

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 18—9—49 [காஞ்சி

இடம் கொடுத்தால்!

—o—

வெறியர்கள்
வீம்பர்கள்
ஆணவம் பிடித்தோர்
அவசரக் குடுக்கைகள்
ஆதிக்க ஆசையினர்
புத்தியற்றவர்கள்
இடங் கொடுத்தால்,
மடத்தையே பிடுங்குபவர்கள்.

இத்தகைய 'அர்ச்சனை'கள் நடைபெற்றிருக்கின்றன! சொற்கள், சொல்லம்புகளாக இருக்கின்றனவே' சொல்லியது யார், சொல்லப்பட்டது யாருக்கு என்று கேட்கத்தோன்றும்! வேறுயாருக்குமல்ல, வடநாட்டினருக்குத்தான்!!

"எப்போது பார்த்தாலும் இதுகளுக்கு இதே வேலைதான்! தெரிந்ததுதானே, திராவிட கழகத்தாரின் பொழுதுபோக்கே இதுதானே, அதுகள் 'புத்தி' போகுமா," என்று ஒரே வார்த்தையில் கூறிவிடுவார்கள் தேசிய நண்பர்கள், 'அர்ச்சனை' இதுவரை நடைபெறாதது போல, அவ்வளவு வேகமாக இருப்பதால்! அர்ச்சித்தது நாமல்ல! நாம் தான் விதண்டாவாதிகள், வேற்றுமை மனத்தோர், வகுப்புத் துவேஷிகள், வம்புக்காரர்கள் ஆயிற்றே, காங்கிரஸ் தோழர்கள் 'அகராதிப்படி'!!

வடநாட்டினரின் போக்குப் பற்றி இவ்வளவு தெளிவாக எடுத்துக் கூறப்பட்ட இடம், திராவிட கழக மேடையல்ல, தெருத்திண்ணையுமல்ல, இந்தியாவின் அரசியல் நிர்ணயிக்கப்படுகிறதே, அங்கு, அரசியல் நிர்ணய சபையில்!

கேட்க, ஆச்சரியமாகக் கூட இருக்கும். அரசியல் நிர்ணய சபையிலா, அதுவும் இதுபோலவா சேச்சே, இருக்காது! இருந்தாலும் அப்படிப் பேசியவர்கள் யாராவது ஒரிரு விதண்டாவாதிகளாயிருக்கும்; என்று சமாதானஞ் சொல்வோர், சொல்லக்கூடும்!

இத்தகைய வார்த்தைகளால், வடநாட்டாரை வர்ணித்தது, நாமோ, நமது பத்திரிகைகளோ அல்ல. வேற்றுமை மனத்துடன் வெறுத்துப் பேசும் 'யாராவது' ஒரு உறுப்பினருமோ அல்ல! சொன்னவர்கள் தமிழ் நாடு அ. நி. சபை காங்கிரஸ் உறுப்பினர்களும், அவர்களின் 'கனல் கக்கியான' தேசியத் 'தினசரி' யாரும்தான்!

*　　*　　*

"இன்னும் பதினைந்து ஆண்டுக் காலத்துக்கு இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக ஆங்கிலமே இருக்கும்."

என்று அரசியல் நிர்ணய சபை முடிவு செய்துள்ளது. இம்முடிவு ஏற்படுவதற்கிடையில், மூன்று நாட்கள் சபையில் 'புயல்' வீசியிருக்கிறது. இந்தி அறியாப் பிரதேசத்தின் பிரதிநிதிகள் பேச்சுக்கள்' அத்தனையும் அப்படி இருந்திருக்கின்றன. இதுவரை, எவரும், பேசாத சொற்கள் எல்லாம், வடநாட்டினர் மீது வீசப்பட்டிருக்கின்றன.

'இந்தி வெறியர்'கள் என்று "தினசரி" எழுதுகிறது. 'இடம் கொடுத்தால் மடத்தையே பிடுங்குவார்கள்' என்று டாக்டர் சுப்பராயனே பேசுகிறார்! விந்தையல்ல, அந்த அளவில் ஆவேசமும், அடாது நடப்பதைக் கண்டிக்கும் வீரமும் சபையில் நர்த்தனமாடி யிருக்கிறது.

"இந்தி பொதுமொழி ஆகவேண்டுமென வோட்டெடுக்கப்பட்டால், சென்னை மாகாண மக்கள் அதற்கே வாக்களிப்பார்கள்" என்று இந்தி மொழி ஆதரவுக் கும்பலின் தலைவர் தாண்டன் பேசுகையில், தென்னிந்திய உறுப்பினர்கள் "இல்லை! இல்லை!!" என்று முழக்கமிட்டனராம்!

இந்தி பொதுமொழியாகவோ, அரசாங்க மொழியாகவோ வர அருகதையற்றது என்று நாம் கூறி, அதைத் திணிப்பது, ஒரு மொழி ஏகாதிபத்தியத்தை உண்டாக்குவதாகும் என்று கூறிவருகிறோம். இதே கருத்தை. அ. நி. சபை உறுப்பினர் துர்காபாய் எடுத்துச் சொல்லித் தென்னாட்டினர், மொழி ஆதிபத்தியத்தை, ஏற்கமாட்டார்கள் என்று எச்சரித்துள்ளார்.

இதுமட்டுமல்ல, நாம் இந்தியை எதிர்ப்பதற்கு என்னென்ன காரணங்கள் கூறினோமோ, அதேகாரணங்களை—இன்னும் கொஞ்சம் தீவிரமாகக்கூட—எடுத்துப் பேசியுள்ளனர். அன்று சொன்னது நாம்! இன்று கூறுவதோ அவர்கள்!! இந்த வித்தியாசமே தவிர, கூற்றில் எந்தவித வித்தியாசமும் இல்லை!

இப்போது செய்யப்பட்டிருக்கும் முடிவு அரசியல் அமுலுக்கு வந்தபின் பதினைந்து ஆண்டுகள்வரை ஆங்கிலமே அரசாங்கத்தின் அலுவல் மொழியாக இருக்கும். அதற்குள் இந்தி, அரசாங்க மொழியாக வரும் அளவு அருகதையுள்ளதாக ஆக்கப்பட்டு, சர்க்கார் மொழியாகச்செய்யப்படும் என்பதுதான்.

அதாவது இந்த முடிவுப்படி இந்திதான் சர்க்கார் மொழி என்ற கொள்கை மாற்றப்படவில்லை. இந்திதான் சர்க்கார்மொழியாக இருக்கப் போகிறது. ஆனால் உடனடியாக அல்ல, இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்கப்புறம்!

இந்த முடிவை எதிர்த்திருக்கின்றனர் வடநாட்டு அரசியலமைப்பு சபை' உறுப்பினர்கள், ஒருமித்து! ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து! இப்படி எதிர்த்து நின்றோர், யாவரும் இந்திபேசப்படும் இடங்களான ஐக்கிய மாகாணம், கீழ்பஞ்சாப், ராஜஸ்தான், பீகார், மத்திய மாகாணம் ஆகியவைகளைச் சேர்ந்தவர்கள் இவர்களுக்குள்ள ஆத்திரமெல்லாம், இந்தி உடனடியாகஅரசாங்கமொழி ஆக்கப்படவில்லை என்பதுதான். அவ்வளவு, அவசரமும்ஆசையும் துள்ளி விளையாடுகிறது அவர்களுக்கு! அது மட்டுமல்ல, உலக முழுமையும் பரவியுள்ள 1, 2, 3, 4,.........போன்ற எண்களைக் கூட எடுத்துவிட்டு, இந்தி எண்களே வைக்கப்படவேண்டும் என்று வாதாடி, வம்பு செய்துள்ளனர், நேரு போன்றவர்கள் 'அதுசாத்தியமல்ல' என்று தெரிவித்திருந்தும்.

இந்த வம்புகளை, வங்கம், குஜரத், மகாராஷ்டிரம், கர்னடகம், ஆந்திரா, கேரளம், தமிழ்நாடு, ஆகியவைகளின் பிரதிநிதிகள் ஒரு மூச்சாக நின்று, எதிர்த்துள்ளனர்.

இரண்டு கோஷ்டிகள் — எனவே தான் சபையில் புயல் வீசியிருக்கிறது! அந்தப் புயலின் விளைவாகவே, நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருப்பது போன்ற சொற்கள் வடநாட்டாரை நோக்கி வீசப்பட்டிருக்கின்றன. புயலின் விளைவாக எழும்பிவீசப்பட்டுள்ள சொற்களில் பொருள் இல்லாமல் இல்லை! அத்தனையும் நாம் கூறிவருவதுதான். அது, இன்றுதான், "இவர்கள்" வாயிலிருந்து வந்திருக்கிறது.

"நாடு முழுமையும்' உங்கள் ஆதிக்கத்திலிருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்ள விரும்புகிறீர்களா?"

"நீங்கள் சொல்வதே சட்டமென்று இந்தியா முழுவதிலும் ஏற்பட வேண்டுமென்று நினைக்கிறீர்களா?"

என்று டி. ஏ. ராமலிங்கனார் கனல் கக்கக் கேட்டுள்ளார்! இந்தி மொழியே இந்நாட்டு அரசாங்க மொழி என்று இந்திய சர்க்கார் முடிவுகட்டி யுள்ளனர். இருந்தும் வடநாட்டு, உறுப்பினர்கள் இப்போதே அரசாங்க மொழியாக ஆக்கப்படவில்லை என்பதற்காக இவ்வளவு தூரம், ஆத்திரம் கொண்டு துடித்திருக்கின்றனர். அவர்கள் ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் கண்ட பின்னரே "நம்மவர்" உடம்பிலும் உணர்ச்சிஏற்பட்டிருக்கிறது!

இந்தி, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அரசாங்க மொழி ஆகமுடியாது அவ்வளவு அருகதையுடையதல்ல என்பது இப்போது எல்லோரும் உணர்ந்து கொண்ட விஷயம். அத்தகைய ஆற்றலும், வளமும், அதற்கில்லையென்ற போதிலும், வடநாட்டுத் தலைவர்கள் இந்தியையே அரசாங்க மொழியாக்குவது என முடிவு செய்துள்ளனர். அம்முடிவு உடனடியாகச் செய்யப்படவில்லையே, என்பதற்காக வடநாட்டு உறுப்பினர்கள் வரிந்து, கட்டிக்கொண்டு "ஒரு கை" பார்த்திருக்கின்றனர். இந்த மாறுத மனப்போக்கு, மமதைப் புத்தியைக் கண்ட "தினசரி" யார் இப்போது, வடநாட்டினருக்கு 'வெறியர்கள்' 'வீம்பர்கள்' என்று பட்டம் சூட்டி அழைக்கிறார். வெறியும், வீம்பு மட்டுமல்ல, ஏகேச்சாதிகார ஆசையும் அவர்கள் நரம்பில் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. இதுவரை, "தேசியம்" என்பதன்பேரால், 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மக்கள்' என்ற கூச்சலில் இந்த உண்மை, நமது தேசிய நண்பர்களின் கண்களில் பட்டிருக்க முடியாது. உண்மையில், வடநாட்டினர், மொழித் துறை மட்டிலுமல்ல. எல்லாத் துறைகளிலும் தங்கள் ஆதிக்கம் வளரவேண்டும் என்ற ஆசையுடையவைகளாகத்தானிருக்கின்றனர். ஆகவேதான், திராவிட கழகம் பிரிவினை முரசைக் கொட்டுகிறதே தவிர, வேறில்லை! 'நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், அது நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்!' என்ற இதய கீதம், எதிரொலித்து உரிமைகொண்டு வாழும் நாளே, நமக்கு இன்பநாள்! அந்நாள் காணும்வரை, இந்த மொழிப் பிரச்னைமட்டுமல்ல, இன்னும் எத்தனையோ, பிரச்னைகளில் தகாறும், சஞ்சலமும் உருவாகிக்கொண்டுதானிருக்கும். சங்கடமும், சஞ்சலமும் ஏற்படும பொழுது மட்டும் 'வெறியர்கள்' 'ஆதிக்க ஆசைக்காரர்கள்' என்று காரசாரமாகப்பாய்வது, பின்னர் படுத்துவிடுவது, என்பதால் பலனேற்பட முடியாது. ஒவ்வொரு முயற்சியும் விழலுக்கிறைத்த நீராகவே ஆகும்!

'இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகிறார்களே!' என்பது ஓலமாக இருக்கக் கூடாது. வீரமுழக்கமாக இருக்கவேண்டும். வீணர்களின் வீம்பு வீழ்த்தப்பட்டு, 'நமக்கென ஒரு நாடு' என்று வாழவேண்டும்! அத்தகைய நிலை ஏற்படும் வரை, மாச்சரியமற்ற இன்பம் எட்டாது! கிடைக்காது!!

*

2 கோடி

புதிய அரசியல் திட்டம் தயாரிக்கக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபைக்காக இதுவரை செய்யப்பட்டுள்ள செலவு 2 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. இந்தச் சபையின் உறுப்பினர்களுக்குத் தரப்படும் 'பேட்டா', போக்கு வரத்துச்செலவு இவ்வளவு பெருந் தொகையாக வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்த மகானுபாவர்களோ, அரசியல் நிர்ணய சபையை, 'தூங்குமிடமாக' வும் பயன் படுத்திக் கொள்கிறார்கள். பணம் பாழாகிற போக்கைப் பாருங்கள்!!

*

இதற்கென்ன சொல்வார்கள்?

சோவியத் ரஷ்யா, பெரும் போருக்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து கொண்டிருப்பதாகவும், உலக முழுவதும் தன் ஆதிக்கத்தின் கீழ் வரவேண்டும் என்ற வெறிகொண்டு அலைவதாகவும்; இங்கு பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்தப் பயங்கரத்திலிருந்து உலகம் தப்பிப் பிழைக்க வேண்டுமென்று, உருக்கமாகப் பேசப்படுகிறது. ஆனால் உண்மை என்ன? சோவியத் ரஷ்யா, போர் வெறிகொண்டதாகவா இருக்கிறது?

இப்போது, இந்தியாவின் தூதுவராக, மாஸ்கோ போயிருக்கும், சர் ராதாகிருஷ்ணன், சோவியத்தின் நிலைமையை நேரில் கண்டறிந்து தமது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சோவியத் ரஷ்யா பெரும் போருக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டில்லை.

சோவியத் மக்களும், சமாதான வாழ்க்கையையே விரும்பி வருகிறார்கள்.

போரினால் ஏற்பட்ட சீரழிவுகளைப் போக்கி, நாட்டு வளத்தைப் பெருக்கும் காரியத்திலேயே, சோவியத் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது.

இவ்வண்ணம் கூறுகிறார், சர். ராதாகிருஷ்ணன்.

பொறுப்பான பதவியிலுள்ளவர், இப்படிக் கருத்து தெரிவித்த பிறகு, வீண் வதந்திகளைக் கிளப்பி, சோவியத் ரஷியா மீது பழி சுமத்தி, பாமரரின் மனதைப் பாழாக்கும் போக்கினர், என்ன செய்யப் போகிறார்கள்? என்ன சொல்லப் போகிறார்கள்?

பிறந்த நாள் கொண்டாட்டம்

'உடல் வளம்,' பற்றிய பத்திரிகை நடத்தி இலட்சாதிகாரியமான ஒரு அமெரிக்க முதலாளி தனது 81ம் ஆண்டு பிறந்த நாள் கொண்டாட்டத்தை உத்தேசித்து நியூயார்க் நகரில் விமானப் பயணம் செய்கையில், 3000 அடி உயரத்திலிருந்து, பாரசூட் மூலம் கீழே குதித்தாராம். வயது 81! உற்சாகம் வாலிபப் பருவத்தினருக்கு உள்ளது போல!!

அவர்கள் சாதனை!

அண்டார்டிக் சாகசம்! விஞ்ஞானிகள் குழுவொன்று அண்டார்டிக் பிரதேசத்துக்கு நடத்திய துணிகரமான ஆராய்ச்சிப் பிரயாணத்தை, வர்ணிக்கும், ஒரு சினிமா படம்! இந்தத் துணிகரப் பிரயாணத்தில் ஈடுபட்டவர்கள் ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள். இந்த அறிஞர்களின் அரும்பெரும் சாதனைகள், தொகுக்கப்பட்டு, திரைப்படமாக எடுக்கப்பட்டிருக்கிறது, ஆஸ்திரேலிய சர்க்காரின் செய்தி (information) இலாகாவால்!

ஆஸ்திரேலியாவுக்கு மேற்கே 2400 மைல் தொலைவில் ஹேர்ட் என்ற தீவு ஒன்றிருக்கிறது. இத்தீவில், ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையத்தை நிறுவவேண்டுமென்ற, அரிய முயற்சியின் விளைவுதான், இந்தத் துணிகரப் பிரயாணம். அத்தீவில், வான நிலைப்பற்றி, சிறந்த ஆராய்ச்சிகளை, இருந்து செய்யவேண்டும் என்ற ஆஸ்திரேலிய விஞ்ஞானிகளின் ஆசையை நிறைவேற்றி வைப்பதில் ஆஸ்திரேலிய சர்க்காரும் அதிசிரத்தை காட்டியுள்ளனர்—வேண்டிய வசதிகளைச் செய்து தந்துள்ளனர். அதுமட்டுமின்றி, விஞ்ஞானிகள், ஆசையைநிறைவேற்றிக்கொள்ள முற்படுகையில், அவர்கள் கடக்க வேண்டியிருந்த கஷ்ட நஷ்டங்களையும், அவைகளைச் சமாளித்து அவர்கள் செல்ல, சர்க்கார் மேற்கொண்டுள்ள அரிய முயற்சிகளையும் அத்தாட்சி பூர்வமாக மக்களுக்குக் காட்டுவதே இந்தப் படம்.

ஹேர்ட், பனிபடர்ந்த ஒரு தீவு. அது இருக்கும் துருவப்பிரதேச (Polar)க் கடல்களைக் கடப்பதென்பது சாத்தியமான காரியமல்ல. சாதிக்கமுடியாத காரியத்தில், வெற்றிகண்டு, புதுமையானதொரு கப்பல், அண்டார்டிக் பிரதேசத்தை ஊடுருவிச் சென்ற நிகழ்ச்சிகளே, இந்தப் படத்தில் காட்டப்படுகின்றன. இந்தக்கப்பலின் விகாரமான தோற்றமும், ஆழ்கடலின் அலைகள் கொந்தளிப்பும் அப்படியே 'தத்ரூபமாகப் படமெடுக்கப்பட்டிருக்கின்றன, ஆஸ்திரேலிய சர்க்காரின் செய்தியிலாகா சினிமாப்படப் பிரிவினரால்!

காட்சியைக் காணும் பொழுது, நமக்குக் கண் கலங்குமாம்! அவ்வளவு கஷ்ட நஷ்டங்கள்!!

இருந்தும் கடமையே பெரிதெனக்கொண்ட காளைகளான ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் பதினான்கு பேரும், கடைசிவரை உள்ளந்தளராது, கப்பலிலேயே இருந்து ஹேர்ட் தீவை அடைந்துள்ளனர். இந்த அரிய முயற்சியில் ஈடுபட்ட அத்துணை விஞ்ஞானிகளும் இளைஞர்கள். கேட்கவும், படத்தில் 'அவர்களை'ப் பார்க்கவும், நம் இதயப், பூரிப்படைகிறது, அவர்களின் அற்புதச் செயல்களால்! குமுறும் காற்று, கொந்தளிக்கும் கடல், திடீரெனத் தோன்றும் பனிக்கட்டிப் பாறைகள். இத்தனையும் அவர்கள் நெஞ்சைக் கலக்கமுறச் செய்யவில்லை. கடைசிவரை உறுதியும், ஆர்வமும் கொண்டவர்களாயிருந்து, கப்பலை நடத்திச் சென்று அந்தத் தீவைப் போய் அடைந்துள்ளனர். அவர்கள் தங்கள் 'இலட்சிய பூமியை' அடையுமுன் பட்ட கஷ்டநஷ்டங்கள் பார்ப்போரைப் பீதியடையச் செய்யும்!

இன்னல்கள் மலையென எதிர்நோக்கி வந்தாலும், எடுத்த இலட்சியத்தில் வெற்றி கண்ட அந்த வீரர்களின் 'செயலைப் படமாக எடுத்து, அப்படியே அனுப்பியிருக்கிறது, ஆஸ்திரேலிய அரசாங்கம் வெளிநாடுகளுக்குப் பெருமிதத்துடன்! செப்டம்பர் 16ந் தேதி முதல் இந்தச், 'செய்திப் படம்' இந்தியா முழுமையும் காட்டப் படுமாம்! ஆஸ்திரேலிய செய்தி இலாகா அரும்பெரும் காரியம் ஒன்றை செய்திப் படமாகத் தயாரித்து, அனுப்புகின்றனர் அந்நிய நாடுகளுக்கு, 'எங்கள் திறத்தைப் பாருங்கள்!' என்று!

ஆனால் 'நம்ம சர்க்காரோ! 'இதோ பாருங்கள் இதுதான் அசோகர் தூண்,! 'இந்த நடராஜர் சிலை சிதம்பரத்திலிருப்பது, இதன் சிற்பத்திறன் யாருக்குவரும்?,' 'இந்த நடனமாதின் சிலை, 'பல்லவரின்' சின்னம்!' என்ற பிரசாரத்துடன் மதுரைக் கோயிலையும், காஞ்சிக்கோபுரத்தையும் இடிந்தமண்டபங்களையும், கோட்டைகொத்தளங்களையும், படமாகஎடுத்து வெளிநாடுகளுக்கு செய்திப் படமாக அனுப்புகிறது, இந்தியாவின் புராதனப் பெருமையைக் காட்டுகிறோம் என்ற பூரிப்புடன்!

ஆஸ்திரேலிய அரசாங்கம் அறிவு உதயத்தைக் காட்டுகிறது. இந்திய சர்க்காரோ 'பழம் பெருமைப் பேசி, நாட்களை பயனற்றதாக்குகிறது!

●

இரங்கூன் திராவிடர் கழகத்தினர் கண்டனம்

இரங்கூன் 7—8—49.

இரங்கூன் வாழ் திராவிடர் கழகத் தோழர்கள், டல்ஹௌஸி தெரு 218, நெ. இல்லத்தில் ஒன்றுகூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை, மத்திய திராவிடர்கழக, தலைவர் தி. பொ. வேதாசலம் அவர்களுக்குத் தந்திமூலம் தெரிவித்துள்ளனர்.

(1) பெரியாரின் திருமணத்தை எங்கள் பலங்கொண்ட மட்டும் எதிர்க்கிறோம்.

(2) பெரியாரின்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை.

(3) மத்திய திராவிடர் கழகக் கமிட்டிக் கூட்டத்தில் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
இரங்கூன்வாழ்
திராவிடர் கழகத்தினர்.

தார் தேவன் திருவிளையாடல்!!

'மாஜி கடவுள்கள்' என்ற வரிசையில் அடுத்த கிழமை இதழில் தார் தேவன் திருவிளையாடல் வெளிவருகிறது.

மூன்று 'டின் பிஸ்கட்'
7-ம் பக்கத்தொடர்ச்சி

சோமநாதர், அவர் ஆலயத்தைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்விக்கப்போகிறார்களாம், குஜராத் மேட்டுக் குடியினர்! இந்த 34-லட்சம் திரட்டும் பணியில் அரசியலை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறாரே கே. எம். முன்ஷி அவருக்குப் பெருந்தொண்டு உண்டாம்! அதுமட்டுமல்ல, ஐக்கிய மாகாண அரசாங்கத்துக்கும் இதில் பெரும் பங்குஉண்டாம்! சர்க்கரைவிலை, ஏறி, நாம் திண்டாடுகிறோமல்லவா, இத்திண்டாட்டத்துக்கு மூலகாரணங்களில் ஒன்று, இந்த சோமநாதர்கோயில் புனருத்தாரண நிதியும் தானும்!

ஐக்கிய மாகாணம் கரும்பு அதிகமாகப் பயிரிடப்படும் பிரதேசம். எனவே அங்குள்ள கரும்பு ஆலை 'முதலை'கள், சர்க்கரை மூட்டையில் கிடைக்கும் அமிதலாபத்தை, "அப்படியே" ஈசுவரனுக்கு காணிக்கை செலுத்துகிறார்களாம் — இரகசிய ஏற்பாட்டுடன்!

எப்படியிருக்கிறது வேடிக்கை, மக்கள் அலற மகேசுவரனுக்கு பூஜை நடத்துகிறார்கள், தர்மபூபதிகள். அதற்குப் பக்கமேளம் கொட்டி நிற்கிறது, அரசாங்கம்.

நாட்டிலோ உணவு நெருக்கடி, உடைப்பஞ்சம், வீடு நெருக்கடி எல்லாவற்றிற்கும் சிகரமாக பண நெருக்கடி. இந்த கேடுபாடான நேரத்தில் கும்பாபிஷேகமும், கோலாகலத் திருவிழாவும் செய்யப்படுகிறது இலட்சக்கணக்கான ரூபாய்களில்! அதுவும் ஏழைத்துடிக்க, அவன் வியர்வையிலிருந்து கொட்டிச்சேர்க்கும் பணத்தைக் கொண்டு!

இவ்வளவுதான் செய்கிறார்களே, அந்த எம்பெருமானுக்கு, இரக்கம் வந்து, 'இந்தநாடு பக்தர்கள் செறிந்தது. நமது பக்தர்களுக்குத்தான் நம்மிடம் எவ்வளவு பிரேமை. இனி அவர்களைச் சோதிக்க கூடாது!' என்று ரிடபவாகன ரூபராய்வந்தோ, அல்லது கருணை புரிந்தோ, ஏற்பட்டுள்ள திண்டாட்டங்களை நீக்குகிறாரா என்றால், கும்பாபிஷேகமும் லட்சார்ச்சனையும் நடைபெற நடைபெற, குறைகளும் கூப்பாடும் அதிகமாகிறதே அன்றி கொஞ்சம்கூட மங்குவதாகக் காணோம்!

அப்படி ஆராதனையாலும், அடிசல் படைப்பாலும் ஆபத்து நீங்குகிறது, உணவுநெருக்கடி தீருகிறது என்றால், 'தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பான்' என்று எல்லோரும் 'உணவு அபிவிருத்தித் திட்டத்தை' கைவிட்டுவிட்டு 'கோயில் அபிவிருத்தி திட்டத்தை' மேற்கொண்டு விடலாமே! அபிஷேகமும் ஆராதனையும் தினசரி நடைபெற்றும் 'அப்பன் உமையொருபாகனே! அல்லது கண்ணன், கார்முகில் வண்ணனே!' கடைக்கண் பரிபாலிப்பதாகக்கூடக் காணோமே!

அப்படி ஏற்பட்டால், முருகேசன் என் திருடப் போகிறான் மூன்று மாதம் கடுங்காவல் ஏன் அவனுக்கு கிடைக்கப் போகிறது?

நாட்டில் செல்வமிருக்கிறது; ஆனால் அது மக்களின் துயர் போக்குவதற்காகச் செலவிடப்படவில்லை. 'அநீதி' வழிகளில், அச்செல்வம், வீணர்களால், பழமை, பக்தி என்பவை பெயரால் வீணாக்கப்படுகின்றன. கோயில்களில் குவிந்துகிடக்கும், 'கோடிக்கணக் கானவை' போதாது என்று இன்னும் கொட்டி கொடுக்கப் படுகின்றது!

ஓரிடத்திலே கடவுள் பெயரால் லட்சக்கணக்கான ரூபாய் நாசம்செய்யப்படுகிறது! இன்னோரிடத்தில் மூட்டை சுமக்கும் தொழிலாளி, கையில் காசின்றி, மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெறுகிறான்! விசித்திரமானநிலைமை! வேதனையூட்டக்கூடிய காட்சி!!

●

சென்னையில் மலாய் நீதி!

"மலேயாவில், பத்திரிகை ஏஜண்டுகள், பத்திரிகைகளில் வரும் விஷயங்களைப் படித்துச் சரியாதப்பா என்று தெரிந்து கொள்ளாமல் விற்பனை செய்த குற்றத்துக்காக, மலேயாவில் தண்டனை பெற்றுள்ளனர். இது உலக நீதி முறைகளுக்கே எதிரானது என்றும் இப்பகுதிகளில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இப்போது சென்னையிலும் மலாயா நீதிகொண்டு வரப்பட்டிருக்கிறது. உதாரணமாக, சில நூல்களைப் பறிமுதல் செய்யும் சென்னை அரசாங்கம், அந்நூல்களை அச்சிட்ட அச்சகச் சொந்தக்காரர்களிடம் 'ஜாமீன்' கேட்டிருப்பதைக் குறிப்பிடலாம். அச்சகத்தார்கள், தங்கள் அச்சு நிலையத்துக்கு வரும் ஒவ்வொரு நூலையும், அரசாங்கத்துக்கு எதிரானதா, சமுகப் புரட்சியை ஏற்படுத்தக் கூடியதா என்று படித்துக்கொண்டிருப்பது முடியாத காரியம். அப்படிப் படித்தாலும், அரசாங்கக் கருத்தின்படி, எது தப்பு, எது சரி என்று தெரிந்து கொள்ளவும் முடியாது. இப்படியெல்லாம் தெரிந்துகொள்வதற்கு அவர்கள் சட்டம் படிக்கவில்லை. சென்னை அரசாங்கத்தின் கருத்துப்படி பார்த்தால், அச்சகத்தார்கள் விக்கிரமாதித்தன் கதை, அல்லி அரசாணி மாலை, பிள்ளையார் துதி, சரஸ்வதி தோத்திரம் முதலிய கவைக்குதவாத நூல்களைத்தான் அச்சடித்துக் கொண்டிருக்க வேண்டும் போலும்!"

—(பிரசண்ட விகடன்)

✲

ஸ்விட்ஸர்லாந்து

'நோயாளிகளின் சுவர்க்க பூமி என்று அழைக்கப்படும் ஸ்விட்சர்லாந்தின் மொத்த மக்கள் தொகை 40 லட்சம்தான்! மனங்கவரும் மலைகள், கண்கவரும் தேவதாரு மரங்கள் அடர்ந்த 'சோலை நாடு' ஸ்விட்சர்லாந்து. சின்னஞ் சிறிது; ஆனாலும் சிங்காரமானது. மத்திய ஐரோப்பாவில் இருக்கும் இந்தச் சிறு குடியரசு நாட்டின் எல்லைகள், வடக்கில் ஜெர்மனி மேற்கில் பிரான்ஸ், தெற்கில் இத்தாலி, கிழக்கில் ஜெர்மனி ஆகியவைகளாகும்.

இங்கு வாழும் மக்களும் ஒரே மொழி பேசுபவர்களல்ல. மொத்த மக்கள் தொகையில் 72 சதவிகிதம் பேர் ஜெர்மன் மொழியும், 20 சதவிகிதம் பேர் பிரஞ்சும், 5 சதவிகிதம் பேர் இத்தாலியும் 1 சதவிகிதம் பேர் மோமன்ஷே மொழியும் பிற அந்நியமொழிகளும் பேசுபவர்கள்.

ஸ்விட்சர்லாந்தின் கால் பாகம் காடு கரடுமுரடான பூமி அடங்கியது. ஆகையால் போதுமான விளைச்சல் நிலம் இல்லை. ஆகவே முன்பெல்லாம் பலர் அந்நிய நாடுகள் நோக்கி கூலிகளாகப் போவது வழக்கமாம்! ஆனால் காலம் மாறிவிடவே சாகுபடித்

தொழிலும், ஏனைய தொழில்களும் வளம் பெற்று வருகின்றன.

மொத்த மக்கள் தொகையில் 25 சதவிகிதம் பேர் பயிர்த் தொழில் செய்கின்றனர். 45 சதவிகிதம் பேர் கைத்தொழில்முதலானவைகளிலும், 10 சதவிகிதம் பேர் வியாபாரத் துறையிலும், 75 சதவிகிதம் பேர் வீட்டு வேலைகளிலும் 5 சத விகிதம் பேர் ஓட்டல் தொழிலும், 5 சத விகிதம் பேர் போக்கு வரத்து தந்தி தபால் துறைகளிலும் மீதி 2.5 சத விகித மக்கள் அரசாங்க உத்தியோகம் போன்றவைகளிலும் இருக்கிறார்கள்.

இங்கு மொத்தம் 8,554 ஆலைகள் இருக்கின்றன. யாவும் நாட்டின் பற்பல இடங்களில் சிதறி இருக்கின்றன. இங்குள்ள முக்கிய இயந்திரத் தொழில் கடிகாரம் செய்வதுதான்! காகிதம், நகைகள், பட்டுகளுக்கும் ஸ்விஸ் நாடு பெயர்வாய்ந்தது. இங்கு மொத்தம் 7 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இதன் பரப்பு 15,945 சதுர மைல்கள்.

* * *

ஆட்டுப் பந்தயம்!

ஆஸ்திரேலியாவில், குதிரைப் பந்தயம் போலவே, ஆட்டுப்பந்தயம்ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வெள்ளாடுகள் ஓடுமாம்—இந்தப் பந்தயத்தில், 150 கெஜ தூரம். பரிசுத் தொகை பத்தாயிரம் பார்த்திங்.

★

பிள்ளை பிறப்பதற்கு முன்
5-ம் பக்கத் தொடர்ச்சி

ரும் அதனையே பொதுமொழியாக கொள்ள வேண்டுமென்றும் கூறிப் பாமர மக்களை ஏமாற்றுகின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவே இந்தஇந்திமொழிப் பிரசாரத்தை நாடெங்கும் செய்தும், அதனைப் பொது மொழியாக ஆக்கும் ஆதாரங்கள் அரசியல் மன்றத்தில் பெறமுடியவில்லை என்றால், அது எந்த அளவுக்கு மக்களால் வெறுக்கப்படுகிறதென்பதை ஆளவந்தார்கள் உணராமல் இருப்பதை விட வேறு ஆச்சரியம் ஏதாவது இருக்க முடியுமா?

இந்த இந்தி மொழிக்கு ஆதரவு தேடும் அன்பர்களைப் பார்க்கும் போது நமக்கு அவர்கள்பால் இரக்கமே உண்டாகிறது. இந்தியை இந்நாட்டின் பொதுமொழியாக ஆக்கி விடுவதற்கு அவர்கள் படும்பாடு இருக்கிறதே! அடடா!! எவ்வளவு தொல்லைப் படுகிறார்கள் பாருங்கள்.

இந்தியே இப்படி வாராயோ!
இந்தியாவின் பொது மொழி
ஆகாயோ!
உனக்கென்ன குறை?
எழுத்தில்லையா?
இதோ கொண்டுவந்தேன்!
தேவநாகரியே தேடி வா!
ரோமன் லிபியே ஓடி வா!
எண் இல்லையா?
அதையும் கொணர்ந்தேன்!
அரபி எண்ணே அருகே வா!
இந்தி எண்ணே இங்கே வா!

என்று அல்லற்பட்டு அகவல் பாடுவதைப் பார்க்கும் போது உள்ளபடியே நமக்குக் கூடப் பரிதாபமாகத்தான் இருக்கிறது!

உடம்பு—உருக்கி வார்த்த இரும்புக் கம்பி! உட்காரச் சொன்னாலோ முடியாது; அவ்வளவு பலம்! கண்—ஒரு பக்கம் சாய்ந்தால்தான் பார்வை தெரியும்! காதோ கேட்காது! நடையோ அசல் தவளை!!

பேச்சோ, கேட்க வேண்டாம்—உதடு அசையவே ஒரு மணி நேரம் பிடிக்கும்! அப்படிப்பட்ட அழகன்! அவனைக் குளிப்பாட்டி, கோலாகலமான ஆடைகள் அணிவித்துப் பார்த்தால் அசல் சோளக் கொல்லைப் பொம்மையைப் போலத் தோன்றுகிறது. போட்ட 'வேஷம்' பொருந்தவேயில்லை! 'பொருந்தாவிட்டால் என்ன, எல்லாம் கொஞ்ச நாள் போனால் சரியாகிவிடும், இவன் எனக்கு மிகவும் வேண்டியவன், ஆகையால் அவனைத்தான் ஆசனத்தில் அமர்த்தவேண்டும். ஒத்துக் கொள்ளுங்கள்!! என்று உரத்த குரலில் பேசுகிறான், ஒரு 'மதி'மந்திரி. அவனுடைய ஆசை, அசடாயிருந்தாலும் அவனை அரசபீடத்தில் அமர்த்தவேண்டும் என்பது. அவன் பேச்சு முடிவதற்குள்ளாகவே, எற்கனவே தயாராகவைக்கப்பட்டிருந்த, அவனது பரிவாரங்கள் 'ஜெயவீர, வீரமார்த்தாண்ட.........' என்று பராக்குப்பாட ஆரம்பிக்கின்றனர்!

'அரசே! வாருங்கள்'என்று, அரசவையைக் கண்டிராத அந்த அசடை அழைக்கிறான், அவனை அரச பீடத்தில் அமரச்செய்யவேண்டும், என்று ஆசைகொண்டுள்ள மதிமந்திரி! 'அரசரோ' விழிக்கிறார்! சிம்மாசனம் இருக்கும் இடம் நோக்கி எடுத்து அடி கூட வைக்கமுடியவில்லை—உடம்பில் அவ்வளவு தெம்பு!

"நடக்க முடியவில்லையா? பரவாயில்லை. நானே தூக்கிக்கொண்டு போய் வைக்கிறேன்" என்று அசடை சிம்மாசனத்தில் கொண்டுபோய், உட்காரவைக்கிறான்.

புலி இருக்கவேண்டிய இடத்தில் பூனை—பூனை கூட அல்ல, எலி உட்கார வைக்கப்படுகிறது. ஒன்றும்புரியவில்லை அசடுக்கு, இது எதையும் இதுவரைகண்டவனில்லையென்பதால் மிரள்கிறான்! விழிக்கிறான்!!

நிகழ்ச்சி, நாடகக் காட்சியாக இல்லாமல் நாட்டில் நடப்பது என்றால், நல்லோருக்கு மட்டுமல்ல, நலன் விழையும் எல்லோருக்கும் வேதனையூட்டுவதாகத்தான் இருக்கும்—விரும்ப முடியாதது, விளைவு, பலன் தராது என்பதால். நாலுபேருக்குத் தெரிந்தவனாக, நல்லகுணங்கள் நிரம்பியவனாக குடும்பத்து மூத்தப் பிள்ளையிருக்க, மூன்றாவது பிள்ளையிடம், அதுவும் அசடு, ஒன்றுக்கும் உபயோகமற்றது என்று அறிந்திருந்தும், பெட்டிச் சாவியைக் கொடுத்தால், ஊரார் அத்தகப்பனுடைய செயலைக் கண்டு நகைப்பர், 'அடுக்காது இது' என்று கூறுவர்.

அசடை அரச பீடத்தில் அமர்த்துவதும், "மண்டு"வுக்கு மகுடம் சூட்டி வைப்பதும், விரும்பமுடியாத செயல், விளைவு விபரீதமானது என்பதால். ஆனால் இன்று நாட்டின் ஆளவந்தார்களின் கட்சியாரோ 'குருடனை ராஜ பார்வை' பார்க்கச் சொல்கிறார்கள்! குந்தக் கூடத் தெரியாதவனை, கோலோச்சும் பீடத்தில் அமர்த்த ஆசைப்படுகிறார்கள்! இந்தியை அரசாங்கமொழியாக்க ஆசைப்படுகிறார்கள்!

இந்தி, இன்னும் பதினைந்து ஆண்டுகள்வரை கூடாது, இருந்தால் பயன் விளையாது, அதுவரை ஆங்கிலம்தான் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருப்பது, காங்கிரஸ் கூடாரத்திலுள்ள பலருக்குப் பிடிக்கவில்லை. பதைப்பு, பக்க மேளம் கொட்ட, ஆசை, தாளம் போட, அலறுகின்றனர், ஆவேசத்துடன் பேசுகின்றனர்!

அணுகுண்டும் அமெரிக்காவும்

காதர்

அணுகுண்டு இன்று பாமரமக்களிலிருந்து படையாள்வோர் வரை பேசும் ஒருபொருள், உலகப்பிரச்னைகளிலே ஒன்று. எல்லா நாடுகளும் இது குறித்துத்தீவிர, ஆராய்ச்சியில் இறங்கியுள்ளன. 'எப்படியும் இதை அறிந்துவிடவேண்டும்' என்ற ஆர்வமுடன் இருக்கின்றனர். இரண்டாவது உலகப் பெரும்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்த அணுகுண்டு பற்றி, அதைமுதன் முதவில் செய்து காட்டிய அமெரிக்கா, காட்டும் சிரத்தை அபாரம். தனது ஆதிக்கம் குறையாமல் காக்கும் ஆயுதமே அணுகுண்டு என்று கூட அமெரிக்கா கருதிவருகிறது! ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா தீவு மீது அணுகுண்டு வீசப்பட்ட போது விளைந்த விளைவுகள்குறித்து மக்களிடையே பரப்பப்பட்டுள்ள செய்திகள், அணுகுண்டு பற்றி அதிகபயத்தை எழுப்பியுள்ளன.

இதன் விளைவாக அந்தந்த நாடுகளும் அணுகுண்டு பற்றி அறிந்து கொள்வதில் முனைந்து கிடக்கின்றன. அணுகுண்டை முதவில் தயாரித்துக் காட்டிய அமெரிக்காவோ, இந்தத் தயாரிப்பு இரகசியத்தை, தன்மட்டிலும் வைத்துக் கொள்ள விரும்புகிறது — ஆதிக்க வளர்ச்சிக்கு இதுவும் ஆயுதமாக இருக்கும் என்று கருதி அப்படி இந்த இரகசியத்தைக் காக்க, அமெரிக்க அரசாங்கம் காட்டும் சிரத்தை மிக, மிக அதிகமானது. அதுபற்றி ரிச்சர்ட்ஹிர்ச் என்பார் சமீபத்தில் ஒரு கட்டுரை மூலம் விவரித்துக் கூறியுள்ளார். இவர் கடந்த போரின் போது அமெரிக்க இராணுவப்படையின் ஒற்றர் இலாகாவில் 'லெப்டினன்ட் கர்னல்' பதவிவகித்தவர்.

அணுகுண்டு இரகசியம் காக்கப்படுவதை அறிந்துகொள்ளும் ஆசையுடன் இவர் வாஷிங்டனிலுள்ள 'அணுசக்திக் குழு' தலைமைக்காரியாலயத்துக்கும், அணுகுண்டு செய்யப்படும் இடத்திற்கும் சென்று, யாவையும் நேரில் கண்டார். அணுகுண்டு தயார் செய்யப்படும் இடம் டென்னஸி மாகாணத்தில் ஓக்ரிட்ஜ் மாவட்டத்தில் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களுக்கும் அவர் சென்று பெரிய அதிகாரிகள் முதல் சாதாரண ஆள்வரை அனைவரையும் சந்தித்து, அவரவர்கட்குத் தெரிந்த விபரங்களையெல்லாம் சேகரித்துள்ளார். அவர் மேற்படி இரகசியம் 'காக்கப்படுவதற்காக,' அமெரிக்க அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்துத் தனது கட்டுரையில் தெளிவாகக் கூறியுள்ளார்.

அணு குண்டு பற்றிய ஆராய்ச்சியுண்மை (Formala) ஒரு சிறு காகிதத்துண்டில் எழுதிவைக்கப்பட்டிருக்கவில்லை—அது முடியாதும்கூட. ஆனால், அணுகுண்டு பற்றிய ஆராய்ச்சி இலட்சக் கணக்கான தஸ்தாவேஜுகளில் உள்ளன. ஒரு சில தாள்களில் எழுதிவைக்கப்பட்டிருந்தால் அதைக் காப்பதில் அமெரிக்காவுக்கு அதிக கஷ்டமும், பொறுப்பும் தேவையில்லை. அதற்குப்பதில் இலட்சக்கணக்கான தஸ்தாவேஜுகள் இருப்பதால்தான் அமெரிக்கா அந்த இரகசியத்தைப் பரமரகசியமாகவேவைத்துக்கொள்ள இவ்வளவு கஷ்டப்படுகிறது. இந்த இரகசியப் பாதுகாப்புக்காகமட்டும், அமெரிக்க அரசாங்கம் லட்சக்கணக்கான டாலர்களைச் செலவிடுகிறதாம்!

அணுசக்தி பற்றிய அவ்வளவு தஸ்தாவேஜுகளையும் அடுக்கி, ஒழுங்காக வைத்தால் ஒருமைலுக்கு மேல் நீண்டுகொண்டே போகுமாம்! 'அணுசக்தி இரகசியம்' என்று ஒரு சில எழுத்துக்களில் குறிப்பிடப்படும் இதற்கு, இவ்வளவு தஸ்தாவேஜுகள் இருக்கின்றன!

அணுகுண்டு இரகசியம், அதைச் செய்பவர்களால் ஒருவேளை வெளிப்பட்டாலும் வெளிப்பட்டு விடலாமல்லவா! ஆகவே அதற்காகவும் பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அணுகுண்டுகளைச் செய்வதில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களைச் சுற்றி, அவர்கள் போகுமிடமெல்லாம் கண்காணித்து, எங்காவது பேச்சு வாக்கில் ஏதாவது உளறிவிடுகிறார்களோ, என்று அறிவதற்காக "ஊர்ந்துசெல்வோர்" (Thecreeps) என்றழைக்கப்படும் ஒரு இரகசியப் போலீஸ் படை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அணுகுண்டு உற்பத்தி சம்பந்தமான பிரமாண்டமான வேலைக்கு ஆட்கள் பொறுக்கப்படும் முறையே அலாதியானது. யாராவது வேலைக்கு விண்ணப்பம் போட்டால், அந்த ஆளுடைய தனிப்பட்ட வாழ்க்கைமுறை, தன்மைபற்றி முதலில் ஆராய்ந்து, தெரிந்து கொள்ளப்படும்.

அந்த ஆள் யார், எப்படிப்பட்டவர், குடும்ப நிலை என்ன, நண்பர்கள் யார், அவர்கள் எந்த நாடு, எந்த நோக்கம் உள்ளவர்கள், அந்த நபர் நாட்டுப் பற்றுள்ளவரா, காட்டிக் கொடுக்கும் தன்மை இல்லாதவரா என்பன பற்றிய விபரங்கள் பரிசீலனை செய்யப்படும். அது மட்டுமல்ல, ஏதாவதுஉண்டாகி, அவசியம் ஏற்பட்டால், ஆள் அடையாளம் மாறிவிடாமல் இருக்க வேண்டும் பாருங்கள்! அதற்காக, வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களின் கைரேகைகளும் கட்டாயமாகப்பதிவு செய்யப்பட்டன—இப்போதும் செய்யப்பட்டு வருகிறது. இப்படிப் பதிவு செய்யப்பட்ட 'கைநாட்டு' பதிவுப் பாரங்களின் தொகை மட்டும் 300,000!!

வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்போர் ஒவ்வொருவருக்கும், இரகசியம் அறிய விரும்பும் எதிரிகள், எத்தகையவர்களாக இருப்பார்கள், எப்படிப்பேசுவார்கள், என்பன போன்ற உளவுகள் பற்றியும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது எதிரிகளின் உளவாளிகளிடம் இவர்கள் ஏமாந்து விடக்கூடாது என்பதற்காக!

அணுகுண்டு தயாரிக்கும் வேலையில் ஈடு பட்டிருப்போரின் வீடுகள், அவர் தம் நண்பர்கள் இல்லங்கள் அடிக்கடி சர்க்காரால் சோதனையிடப்படுகின்றன. வேலை செய்பவர்களுக்கு மட்டுந்தான், இவ்வளவு கெடுபிடிகள் என்றில்லை! அணுசக்திபற்றி அறிந்த விஞ்ஞானிகளுக்கும் இதே கதிதான்!

அணுகுண்டு செய்யப்படும் இடமான ஓக்ரிட்ஜ் உற்பத்தி நிலையத்தைப் பாதுகாக்கத் தரை, தண்ணீர், ஆகாயம் ஆகியமூன்று படைகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன! நீராவிப்படகுகள், ஆகாய விமானங்கள், நவீன துப்பறியும் இயந்திரங்கள் ஆகியவை மிகப் பெருத்த அளவில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

வேலை செய்பவர்கள், அவர்கள் வேலை என்னவோ, அதை மட்டுமே செய்ய வேண்டும். அதைவிட அதிகமாகத் தெரிந்து கொள்ள முயலக் கூடாது. அப்படி முயற்சித்தால் குற்றம். ஒரு இடத்தில் இருக்கும் டைப்பிஸ்ட் இன்னொரு இடம் நோக்கிப் போகக் கூடாது. அப்படி யாராவது போனால், அதைச் சுலபமாகக் கண்டு பிடிப்பதற்காக, ஒவ்வொரு பகுதியினருக்கும் ஒவ்வொரு வர்ணத்தால் உடைகள் அளிக்கப்பட்டுள்ளன ஆகவே,வெள்ளையுடை அணிந்துள்ள ஒருவர் நீல நிற உடை அணிவோர் பகுதிக்கு வந்தால் மிகவும் சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம் அல்லவா! அதற்குத் தான் இந்த ஏற்பாடு.

மேலும், அலுவலகத்தில் வேலை செய்வோர் பேசுகின்ற பேச்சிலிருந்து ஒன்றும் வெளியாருக்குத் தெரியாமல் இருப்பதற்காக ஒவ்வொரு விஞ்ஞான வார்த்தைக்கும் மாற்று வார்த்தை (Code) உபயோகப்படுத்துகிறார்கள். உதாரணமாக 'வெடிகுண்டு' என்ற வார்த்தையை 'Bomb' என்று கூறுவதற்குப் பதில் 'Boat', (படகு) என்றுகூறுகிறார்கள். இதுபோல் அன்றாடம் உபயோகப்படுத்தும் ஆயிரக்கணக்கான சொற்களுக்கும் மாற்றுச் சொற்கள் கண்டு பிடித்து, ஒரு புது அகராதியே உண்டாக்கியிருக்கிறார்கள்! அங்கு பணி புரிவோரில் முக்கியமானவர்கள் பெயர்கள்கூட மாற்றப்பட்டிருக்கின்றனவாம்!!

ஓக்ரிட்ஜ் உற்பத்தி நிலையத்திலிருந்து ஏதாவது ஒரு முக்கியமான தஸ்தாவேஜு வாஷிங்டனுக்கு எடுத்துச்செல்லப்படவேண்டுமானால் உயர் பதவியில் இருப்பவர்களே நேராக அவற்றை எடுத்துச் செல்லுகிறார்கள். வழியில் ஏதாவது விஷமம் நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்பதற்காகவே இந்தஏற்பாடு. அணுசக்தி சம்பந்தமான ஒரு விஷயம் காலஞ்சென்ற அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்டுக்கு அனுப்பப்பட்டது. அதை, அப்பொழுது, அமெரிக்க போர்மந்திரியாக இருந்த ஹென்றிஸ்டிம்சன் என்பவரே, நேரே தன்வசம் எடுத்துச் சென்றார்!

ஒருமுறை, உற்பத்தி நிலையத்தின் விஞ்ஞானப் பரிசோதனைப்பகுதியில் வேலை செய்பவர்களுக்கு ஒரு விதமான உடல்நோய் கண்டது.

உற்பத்தி நிலையத்தின் அதிகாரிகளுக்கு இந்தவிஷயம் தெரிவிக்கப்படுவதற்குமுன்னரே இவ்விசித்திர சரீர நோயால் தாக்கப்பட்டவர்களில் சிலர் தனிப்பட்ட டாக்டர்களிடம் சிகிச்சை பெறச்சென்றனர். நோயின் தாரதம்மியத்தை நிர்ணயிக்க, நோயால் தாக்குண்டவர்கள் தாங்கள் எந்த விஞ்ஞானப் பொருளைப் பரிசோதித்தனர் என்பதை டாக்டர்களுக்கு தெரிவிக்கவேண்டி நேரிட்டது. இதைப்பற்றி அறிந்த உடனே, உயர்தர அதிகாரிகள் போலீசாருக்குச் சேதி தெரிவித்தனர். உடனே, போலீசார், ஒவ்வொரு டாக்டரையும்தனியாகசந்தித்து, அவர்அறிந்துகொண்டஅந்தப்பரிசோதனைப்பொருளின் பெயரை வேறு ஒருவருக்கும் தெரிவிக்கக் கூடாது என்று எச்சரித்தனர். "யாருக்கும் சொல்லமாட்டேன்" என்று சத்தியம் செய்து கொடுக்கும்படி ஒவ்வொருவரும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மற்றைய நாட்டு உளவாளிகள், அந்தப் பொருளின் பெயரைக் கொண்டு, தத்தமது நாட்டு விஞ்ஞானிகளின் துணையால், ஒருவாறு நிலைமையை—ஓரளவேனும்—ஊகித்துக்கொள்ள முடியும் அல்லவா? அதற்காகத்தான், இந்தக் கடுமையான எச்சரிக்கை!

உள்ளே வேலை செய்பவர்களில், விஞ்ஞானப்பரிசோதனை அறைகளில் வேலைசெய்பவர்களுடையகைக்கடிகாரங்கள் அங்குள்ள காந்தப் பொருள்களால், மெதுவாக ஓடும்படிசெய்யப்பட்டதைக் கண்ட, அதிகாரிகள், காந்தத்தால் இடையூறு செய்யப்படமுடியாத கைக் கடியாரங்களுக்கு, [Non—Magnetic Watches] ஒரு ஸ்விஸ் கடியார வியர்பாரியிடம் ஆர்டர் கொடுத்தனர். கடிகாரங்களை 'சப்ளை' செய்துவிட்டு. அந்த வியாபாரி, அணுக்குண்டில் காந்தப் பொருள்கள் கலக்கப்படுகின்றனவென்றும் அவற்றின் பெயர்கள் தமக்குத் தெரியுமென்றும், 'தமுக்க'டிக்க ஆரம்பித்துவிட்டார். உடனே, விசேஷ போலீஸார், அவரிடம் சென்று, அவரிடம் வாங்கிய வாட்சுகள் அணுகுண்டு உற்பத்தி நிலையத்திற்கு அல்லவே அல்ல என்று பலதந்திர வழிகளை உபயோகித்து நிரூபித்தனர்! அந்த வியாபாரியின் வாயை அடக்குவதற்குள், போலீசாருக்குப் போதும் போதுமென்றாகி விட்டதாம்

ஹிரோஷிமா, நாகஸாகி ஆகிய ஜப்பானிய நகரங்களில் வீசப்படுவதற்கு முன்னர்,- அணுகுண்டை பரிசோதிக்க வேண்டியிருந்தது. அதற்கர்க, ஒரு சிறு நகரமே—அல்மகார்டோ என்ற பெயருடையது—காலி செய்யப்பட்டதாம். அப்பொழுது அணுகுண்டு உற்பத்தியே பரமரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால், அல்மகார்டோவைக்காலி செய்வதில் ஏகப்பட்ட சிரமம் ஏற்பட்டதாம், அங்கு வசித்தவர்களுடைய வீடுகள் விலைக்கு வாங்கப்பட்டன, அவர்கள் வெளி நகரங்களுக்கு சென்று "புதுக்குடித்தனம்" ஆரம்பிக்க, அவர்களுக்கு—ஒவ்வொருவருக்கும்— போதுமான பணம் கொடுக்கப்பட்டது.வியாபாரிகள்,பத்திரிகைகள், இன்னும் இது போன்ற எத்தனையோ துறைப் பிரமுகர்கள் பொதுவாக வெளியேற்றப்பட்டனர். ஒவ்வொருவரிடமும், இரகசியப்போலீசார், அதேபாடத்தைத் திருப்பிப் படித்தனர்—அதாவது, "இராணுவ உபயோகத்துக்கு அல்மகார்டோ தேவை!" என்று!

1945 ஆம் வருஷம் ஜுலை 16ஆம் தேதி விடியற்காலையில் அணுகுண்டு அல்மகார்டோ மீது வீசப்பட்டது—அணுகுண்டின் முதல் பரிசோதனை—அல்மகார்டோவுக்கு கிழக்கே 450 மைல் தூரத்திலுள்ள அமாரில்லோவிலும், தெற்கே 150 மைல் தூரத்தில் உள்ள எல்பாசோவிலும், தென் மேற்கே 200 மைல் தூரத்தில்

உள்ள ஸில்வர்ஸிடியிலும், வடமேற்கே 235மைல் தூரத்தில் உள்ள கேலப்பிலும், அந்தவெடியின் விசித்திர எதிரொலி இருந்ததாம்!

வெடிக்குப் பின்னர், சுற்றுப்புறத்தில் உள்ள மக்களிடையே, வெடிமருந்துக்கிடங்கு வெடித்துவிட்டது என்ற கதை பரப்பப்பட்டது. பத்திரிகைகளுக்கும், அதிகார பூர்வமாக அதே சேதி தரப்பட்டது.

இருந்த போதிலும், 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம் தேதியன்று ஹிரோஷிமாமீது அணுகுண்டு வீசப்பட்டபோது, உலகத்தவர் அனைவருமே, அமெரிக்காவிடம் மிகப்பயங்கரமான ஆயுதம்ஒன்றிருப்பதைஉணர்ந்துகொண்டனர். அதன் இரகசியங்களை அறிந்துகொள்ள, வல்லரசுகளிடையே இப்பொழுது நடைபெறும் போட்டி கொஞ்ச நஞ்சமல்ல. இரகசியத்தை அறியவேண்டுமென்ற ஆவல் மற்ற நாடுகளிடையே வளர வளர, அமெரிக்காவுக்கு அதைக் காவல் காக்க வேண்டியதன் அத்தியாவசியமும் வளருகிறது.

அணுகுண்டு உற்பத்தி, ஓக்ரிட்ஜ நிலையத்தில் நடந்த பொழுதிலும், அது சம்பந்தமான வெகு முக்கியமான தாஸ்தாவேஜுகள்; வாஷிங்டனிலுள்ள அணு சக்தி குழுவின் தலைமைக் காரியாலயத்தில்தான் இருக்கின்றன; எனவே, அதுவும் உற்பத்தி நிலையத்தைப்போலப்பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கிறது.

வாஷிங்டனில், அரசியல் சதுக்கத்தில் உள்ள, அணுசக்தி குழுவின் தலைமைக் காரியாலயம்தான் உலகத்திலேயே மிக ஜாக்கிரதையாகக் காக்கப்படும் கட்டிடம் என்று சொல்லலாம். இந்தக் குழுவின் தலைவர், டேவிட் ஈ லிலியன்தால் என்பார். இந்தக் கட்டிடத்தை, உள்ளும் வெளியுமாக, குறிபார்த்துச்சுடுதல், போன்ற சகல வித்தைகளிலும் கைதேர்ந்த சுமார் 100 விசேஷ போலீசார் காவல் புரிகின்றனர். இந்தக் கட்டிடம் இரவிலும் பிரகாசமாகத் தெரியும்படி, இதனுள் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. வெளியில் காவல் புரிபவர்கள் அனைவரும் 'அசதி'யாக இருந்து யாராவது இரவில் உள்ளே நுழைய முயற்சித்தால், அது உள் காவலாளிகளுக்கும் நன்றாகத் தெரியும்பொருட்டு, மின்சாரக் கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

அதையும்மீறி உள்ளே பிரவேசிப்பவர்களை அறிந்து கொள்வதற்காக மின்சார மணிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவையும் தவிர, "மின்சாரத் துப்பறியும் கண்கள்" ஒவ்வொரு சுவரிலும் ஜன்னலிலும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாடுகள் போதாவென்று சதா போலீசார், (இரவுகளில்) கட்டிடத்தை ரோந்து வந்த வண்ணமிருப்பர். கட்டிடத்துக்குள் நுழைவதற்கு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் போட்டோக்கள் பொறித்த அனுமதிச் சீட்டு வைத்திருக்க வேண்டும். (அதன் தலைவர் டேவிட்டுக்கும் இதே நிபந்தனைகள்) இதற்கும் உற்பத்தி நிலையத்திற்கும் நேரடி டெலிபோன், தந்தித்தொடர்புகள்உண்டு.

இந்தக்கட்டிடத்தின்மேலே,(கட்டிடத்திற்கு சரி நேராக) எந்த ஆகாய விமானம் பறப்பதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. உற்பத்தி நிலையத்தின்மீதும் எந்த விமானமும் பறக்கக்கூடாது. அப்படி வழி தவறிப் பறப்பவைகளை எச்சரிக்க, விமானத் தொடர்பு கருவிகள், உற்பத்தி நிலையத்திலும், வாஷிங்டன் காரியாலயத்திலும் பொருத்தப்பட்டுள்ளன.

உற்பத்தி நிலையத்தையும், காரியாலயத்தையும் பாதுகாக்க நியமிக்கப்பட்டுள்ள விசேட போலீசாரின் தொகை 3200-க்கு மேலிருக்கும். இது போதாது என்று, இரண்டு இடங்களின் அருகிலும் வசிக்குமாறு (அவசர தேவைக்கு உதவ) தன்னுடைய மிகச் சிறந்த அதிகாரிகளை ஏவியிருக்கிறது, அமெரிக்காவின் மிகப் பிரசித்தி பெற்ற துப்பறியும் ஸ்தாபனமான எப். பி. ஐ. [F. B. I. Federal Bearue of Investigation]

இவ்வளவு பந்தோபஸ்து இருந்தும், சில பல மாதங்களுக்கு முன்னர், ரஷ்யாவுக்கு அணுசக்தி விவரத்தைப் பற்றி ஒரு சேதி அனுப்பியதற்காக, டாக்டர் ஆலன் நன்மே என்பார் பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்!!

இவ்வளவு தீவிர சிரத்தையுடன் அணு இரகசியத்தைக் காக்க அமெரிக்கா முயல்கிறது. காரணம், அணுகுண்டு, தங்கள் வசமே இருக்கவேண்டும், அப்போதுதான் ரஷ்ய வல்லரசு மட்டுமின்றி எல்லா வல்லரசுகளுமே தம்மிடம் பயப்படும் என்பதே. இதன் நோக்கம் ஆதிபத்திய வளர்ச்சிக்கானதே. அணுசக்தி கொண்டு அகில உலகையும் ஆட்டி வைக்க அமெரிக்கா முயல்கிறது. அதற்கான, இரகசியத்தையும் பாதுகாக்கிறது, கண்ணை இமைகள் காப்பதுபோல. இது வெற்றி தருமா, நீடிக்க முடியுமா, என்பதற்கு எதிர்காலம்தான் பதிலளிக்க வேண்டும்!

✲

நிறவெறி இயக்கம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டு இருந்துவரும் இந்த இயக்கத்தில் 'மாஜி' ராணுவத்தினர் மட்டுமின்றி, பல மாஜி அதிகாரிகள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூட இருக்கின்றனராம். லேனியர் பல்கலைக் கழகச்சரித்திரப் பேராசிரியரான கர்னல் ஜோஸப் சிம்மன்ஸ் 1915-ல் இந்த இயக்கத்தின் மாந்திரீகச் சக்கரவர்த்தியாக ஆனாராம். முன்னேற்றம், முகிழ்த்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவில், இங்கு வகுப்பு வெறி காரணமாக ஆர். எஸ். எஸ். இயக்கம் இருந்தது—இருப்பதுபோல நிறவெறியின் அடிப்படையில் 'ஒரு பயங்கர இயக்கம் இருப்பது ஆச்சரியமூட்டக்கூடியது மட்டுமல்ல, வருந்தக் கூடியதாகவும் தான் இருக்கிறது. மக்களின் மூடநம்பிக்கையைப் பீடமாக வைத்துக் கொண்டு மந்திரம், தந்திரம், மாயாஜாலம் ஆகியவைகளின் 'பெயரால்' மக்களை மயக்கி, அட்டூழியங்களில் ஈடுபடும் இந்த வெறியர்கள் கூட்டம், ஒழிக்கப்படும் நாளே உலகின் நன்னாளாகும்.கூ-க்ளக்ஸ்-கிளான் போன்ற கொடுமைச் சங்கங்கள் கொட்டம் ஒடுங்கிப்பேதமும்,பிளவும் மங்கி, மக்கள் யாவரும் சரிநிகர் சமானமாக வாழும் அந்நன்னாள் முகிழ்க்கப்பழமைப் பாசமும், மூடநம்பிக்கையும், பேதமூட்டும் வெறியும் நீங்கவேண்டும். அறிவுக் கதிரவன் முகிழ்க்க வேண்டும். அறியாமை என்ற திரை கிழிக்கப்பட்டு, மூடநம்பிக்கை என்ற ஓவியம் அழிக்கப்பட வேண்டும்!!

✲

பிள்ளை பிறப்பதற்கு முன் பெயர் சூட்டுகிறார்கள்!

சுவிட்சர்லந்து நாடு, தனக்கென ஒருபொதுமொழியில்லாது, எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகவும் திறமையாகவும் நடத்தி வருகிறதென்றும், அதுபோலவே இந்தியாவும் ஒரு பொது மொழியின் உதவியின்றி இயங்க முடியுமென்றும் விஞ்ஞான நிபுணர் சர். சி. வி, இராமன் அண்மையில், குறிப்பிட்டு, இந்தியர்கள் சுவிட்சர்லாந்தைப் பார்த்துப் பல பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் நடப்புக்கு ஒரு பொதுமொழி தேவை என்பதை சர். சி. வி. இராமன் உணராமல் இவ்விதம் கூறுகிறார் என்று யாராவது துணிந்து, அவருடைய கருத்தை மறுக்க முடியுமா? மறுத்தாலும் அதை மன்பதை ஒப்புக் கொள்ளுமா? அறிவுக்கு மதிப்புக் கொடுக்க அஞ்சுபவர்களன்றி, மற்றெவரும் உண்மைக்கு உயர்விடம் கொடுக்காமலிரார்.

சுவிட்சர்லந்து, ஒரு பொது மொழி இல்லாத காரணத்தால் கிணற்றுத் தவளைபோல், உலகத் தொடர்பற்று இருக்கிறதா? மற்ற நாடுகளுக்கும் உலகத்துக்கும் எவ்வளவு தொடர்பு உண்டோ, அவ்வளவு தொடர்பு அதற்கும் உண்டு. வெளியுலகத் தொடர்புக்கு எந்த மொழி பயன்படும்—பயன்படுகிறது என்பதை அறிந்து அந்த மொழியைச் சுவிட்சர்லந்து நாடும் பயன்படுத்தி வளமாக வாழ்கிறது. சுவிட்சர்லந்துநாடு தனக்கென ஒரு பொது மொழியை வைத்துக்கொள்ளாததால், மற்ற நாடுகளுக்கு உள்ள மதிப்பு அதற்கில்லை, அல்லது அதற்குக் கொடுக்கவேண்டிய மதிப்பை, ஒரு பொதுமொழி இல்லாதகாரணத்தால்தான் கொடுப்பதில்லை என்று கூறத்தான் முடியுமா?

தேவையும் அவசியமும் ஏற்படும் போதுதான் எதுவும் ஒரு நாட்டுக்கு இன்றியமையாததாகின்றது. அப்படித் தேவைப்படும் ஒன்றை எப்பாடு பட்டேனும் உண்டாக்கி, அதனால் பெறப்படும் நற்பயனை நாட்டுக்கு உரியதாக்க வேண்டும். ஒரு நாட்டு மக்களின் நல்வாழ்வில் அக்கரையுள்ளவர்கள் அதனைத் தான் செய்வர் — செய்யவேண்டும். அங்ஙனமன்றி, அவசியமற்ற ஒன்றை—தேவையற்ற ஒன்றைச் செய்ய முற்படுவது வீம்பேயன்றி விவேகமாகாது. வீம்புக்காகச் செய்யப்படும் எந்தக் காரியமும் வீணை, காலக்கழிவையும் பொருட் செலவையும் உண்டாக்குவது மட்டுமன்றி, அப்படிப்பட்ட அவசியமற்ற காரியங்களைச் செய்பவர்களின் அறியாமையையும் வெளிப்படுத்துவதாகும்.

இப்போது, இந்தியாவுக்கு ஒரு போது மொழியைப் புதிதாக உண்டாக்கித் தீரவேண்டுமென்று வீண் பிடிவாதம் செய்பவர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான். இவர்கள் விவேகத்தை விட வீம்பையே பெரிதெனமதிக்கும் 'பெரிய மனிதர்' களாகக் காட்சி யளிக்கின்றனர்.

இந்தி மொழி இந்நாட்டின் பொது மொழியாக ஆவதற்கு எந்த வகையிலும் ஏற்றதல்ல என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. பல்கலைக்கழகப்போசிரியர்கள் பலரும், மொழி நூல் வல்லுனரும் ஆராய்ச்சியாளரும் இந்தி மொழியின் இரங்கத் தக்க நிலையை எடுத்துக் காட்டி, அது ஒரு நாட்டின் பொது மொழியாவதற்கு ஏற்புடையதல்ல என்பதனை விளக்கியுள்ளார்கள். என்ற போதிலும், "அதிகாரம் நம் கையில் இருக்கும் போது நமக்கு அறிவுரை கூறும் அருகதை யாருக்கு உண்டு?" என்ற போக்கில் ஆட்சியாளர்கள் நடந்து கொள்கின்றனர்—அறியாமைக்கு அஞ்சலி செய்கின்றனர்.

ஆங்கிலேயனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய நாளிலிருந்து இன்று வரை அரசியல் மன்றத்தில், அதிகாரத் தொனியுடன் இந்தி மொழி பற்றிப் பேசாத நாளே கிடையாதென்றுகூறலாம். எனினும் இது பற்றிய ஒரு முடிவையும் அவர்களால் செய்ய முடியவில்லை.

இந்தி மொழியா அல்லது வேறு மொழியா இந்நாட்டின்பொதுமொழி என்ற முடிவே இன்னும் செய்யப்

(5-ம் பக்கம் பார்க்க)

"புது வாழ்வு"

(அரசியல் வார இதழ்)

ஆசிரியர்:- ஈ. வெ. கி. சம்பத்.

தனி இதழ் 0—2—0

ஆண்டு சந்தா 6—0—0

விபரங்கட்கு:— நிர்வாகி,

"புது வாழ்வு"

34 வன்னியர் தெரு, கிருஷ்ணபுரம்,

சென்னை-24.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M. 4642.

திராவிடநாடு

சந்தா விபரம்
1 ஆண்டு ரு 7,
½ „ 3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 25—9—49 | இதழ் 13

மாஜி கடவுள்கள்

5.



தார்தேவன்

காளைகள் இரண்டை விழுங்கிய கடவுள்

மாஜி கடவுள்கள்

16-ம் பக்கத் தொடர்ச்சி

மாம், ஆமாமாம், என்று ஆமோதிக்கிறார்களல்லவா, அதுபோல.

தார்தேவனின் திருக்கோயிலில், திருவிழாச் சமயத்திலே, கூடியுள்ள பக்தர்கள் முன்னிலையில் பூஜாரி,

நாய்முக அசுரன் கண்டான்
நமதரும் தார்தேவனை!
நாலில் ஒன்று குறையக் காளை
நல்ல கறி சமைத்து வைத்
தான்
பாரெல்லாம் அறிய அப்போ
பகவானும் என்ன செய்தார்!
பாவிமகன் செய்யும் சூது
படுசூரண மாகவேதான்,
காளை இரண்டைக் கன
வேகத்தில்
மென்று தின்று ஏப்பம்
விட்டார்!

என்று பாடித்தானே இருப்பான்—பக்தர்கள், பரவசமடைந்துதானே இருப்பர்!

இவைகள், தேவனின் திருவிளையாடல்களாக, தெளிவில்லாத மக்களால் அந்நாளில் கொண்டாடப்பட்டன—இப்போதல்ல. இப்போதும், மலை மலையாக இருந்த சோற்றைத் தின்று வைகை ஆறு முழுவதையுமே குடித்துத் தீர்த்த குண்டோதரன் கதையைப் புண்யம் பெறக் கேட்டு ஆனந்திக்கும் போக்கு, நம் நாட்டிலே இருக்கிறது—வேறெங்கும் இல்லை!!

தார் தேவனின் இந்தத் திருவிளையாடலால் திடுக்கிட்டுப் போன, ஹைமர், மறுநாள், வழக்கப்படி, மீன் பிடிக்கச் சென்றான்—தார் தேவனும், உடன் கிளம்பினான்.

"பயலே! என்னோடு வராதே! ஆபத்துகள் எனக்குப் பூச்செண்டுகள்! உன்னால் ஆகாது, என்போல, விளையாட, போ, போ!" என்றான், அசுரன்.

"ஆபத்துகள் எனக்கு உதிர் சருகு போல!" என்கிறான் தார்.

"நான் ஆழ்கடலின் நடுவே சென்று மீன் பிடிப்பவன்! அலை, மலையென எழும்பும்! அறியாச் சிறுவனே! அங்கு வந்தால் அச்சம் உன்னைத் தாக்கும். வீட்டிலேயே இரு" என்கிறான் அசுரன்.

"கடலின் மறுகரை சென்று, கிளிஞ்சல் எடுக்கவும் நான் தயார், நீ கிளம்பு" என்கிறான் தார்தேவன்.

இருவரும் கிளம்பினர் படகில். படகு, செல்கிறது, செல்கிறது, பயங்கரமான வேகத்தில்; தார் தேவன், திகில் கொள்ளவில்லை. கடைசியில் மீன் பிடிக்கலாயினர். அசுரன் பிரமாண்டமான மீன்களைப் பிடித்துக் காட்டினான், தன் ஆற்றலை விளக்க! தார், சும்மா இருப்பாரா! தன் ஆற்றலை விளக்க, அவரும் மீன் பிடிக்கலானார். தூண்டிலை வீசினார்—மீன் ஒன்று சிக்கிற்று—அது மிக மிகப் பெரிதாக இருக்கவேண்டும் என்று இருவரும் யூகித்தனர், ஏனெனில், அவர்களுடைய படகே, கிடுகிடுவென ஆடத் தொடங்கிற்று, தூண்டிலில் சிக்கிய மீன், தப்பித்துக் கொள்ள முயன்று, போரிட்ட காரணத்தால். தார் தேவன் தன் முழு வலிவையும் கொண்டு தூண்டிலைத் தூக்குகிறார்—முடியவில்லை. அகோரச் சத்தம் கேட்கிறது—படகு கவிழ்ந்து விடும் போலிருக்கிறது. நாய்முகாசூரனுக்கு நடுக்கம் பிறந்து விட்டது. கடைசியில் தார்தேவன், தூண்டிலைத் தூக்கினார்—மீனல்ல—பெரும்பாம்பு-சாதாரணப்பாம்பல்ல, கடவுள்களை எல்லாம் கலங்கச்செய்து கொண்டு, கடலுக்கு அடித்தளத்திலே படுத்துக்கொண்டு, கடல்முழுவதும் பரந்துகிடக்கும் அளவுள்ள மிட்கார்டு எனும் பாம்பு!

அண்டத்தை எல்லாம் தாங்கும் ஆதிசேஷன் கதை இல்லையா, நம்நாட்டில்—அதுபோல, ஆழ்கடலைக் கலக்கும், மிட்கார்டு கதை ட்யூடானியருக்கு,

மிட்கார்டு, போராடுகிறது—தார் தேவன், அதை அழித்தே தீருவதென்று ஆற்றலுடன்போராடுகிறார், பலரையும் மிரட்டிப் பிழைத்துவந்த நாய்முகாசூரன் நடுக்கத்துடன் இதைக்கண்டு, என்னவிபரீதம் நேரிடுமோ என்று எண்ணி, தூண்டிலை அறுத்துவிட, பாம்பு, அண்டம் அதிர்ந்ததோ என்று கூறத்தக்கவிதமான சத்தத்துடன், கடலடி வீழ்ந்தது. கடுங்கோபம் பிறந்தது தார் தேவனுக்கு! சம்மட்டியால் ஒருஅடி கொடுத்தார்—அசுரன், ஆழ்கடலிலே வீழ்ந்தான். அங்கே, மிட்கார்டு, விஷத்தைக் கக்குகிறது! எனவே, மேலே கிளம்பினான் கிலியுடன்—படகிலே வந்தமர்ந்தான்—தார்தேவனும், போகட்டும் என்று விட்டுவிட்டார். இருவரும் வீடு திரும்பினர்.

வீட்டிலே, தார் தேவனின் பலத்தைப் பரீட்சிக்க, வேறு பல சோதனைகளை நடத்தினான் நாய்முகாசூரன்—தாருக்கே வெற்றி. கடைசியாக, எந்தப்பாண்டத்துக்காக வந்தாரோ, அதையே காட்டி, "நீபலசாலி என்பது உண்மையானால், அந்தப் பாண்டத்தைத் தூக்கிக்கொண்டு, நடந்துகாட்டு பார்க்கலாம்" என்றான் அசுரன். தார் தேவன் இதுதான் சமயமென்று, பாண்டத்தைத் தூக்கிக்கொண்டு, நடக்கலானான்—அசுரன் பின் தொடர்ந்தான், ஆனால் பிடிக்க முடியவில்லை. தாரும் டையரும், பாண்டத்தை எடுத்துக்கொண்டு பல லோகங்களையும் கடந்து, சமுத்திர தேவனிடம் வந்து சேர்ந்தனர். பாயசம் அந்தப் பாண்டத்தில் காய்ச்சப்பட்டு, கடவுள்கள் பருகிக் களித்தனர்.

பாயசம் காய்ச்சும் பாண்டம் தேடி, தார் தேவன் நடத்திய திருவிளையாடலைப் போல, பலப்பல உண்டு. அவ்வளவும், அறிவுக்குத் துளியும் பொருந்தாதன—எனினும் அவைகளை நம்புபவனே ஆத்திகன்—மறுப்பவன் நாத்திகன், என்றனர் அந்த நாள் மதவாதிகள்.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிட நாடு" அதிகம் காப்பிகள் தேவைப்படுவோர், பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

"கீதாவிகாரம்"

என் இலட்சியம் என்றுதான் ஈடேறுமோ தெரியவில்லை.

பகவத் கடாட்சம், எப்போது எனக்குக் கிடைத்து, என் மனதிலே நெடுநாளாக உள்ள ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள வழி கிடைக்குமோ, அறியேன்.

மனதிலே ஏற்பட்டுவிட்ட அந்த எண்ணம் ஈடேறுமுன்னம், எனக்கு நிம்மதி ஏது! பசி, தூக்கம், கூடக் கிடையாது, சரியாக. அதே சிந்தனை—சதா அதே சிந்தனை!

புண்ய பூமியாம் இப்பாரத் வர்ஷத்திலே, இந்தக் காரியம், சாத்யமா, இல்லை!!

ஜீவன் முக்தர்கள் நடமாடிய தேசமல்லவா! இங்கு, என் மனதிலே மூண்டெழும் ஆவலைப் பூர்த்தி செய்து வைக்கும் புண்யமூர்த்திகளுக்குக் குறைவிருக்க முடியுமா! கரும்புத் தோட்டத்திலே உலவுபவனுக்குச் சர்க்கரைக்கு என்ன பஞ்சம்! மல்லிகைத் தோட்டத்திலே உலவுபவனுக்கு, மணத்துக்கு என்ன பஞ்சம்!

எதற்கும் 'வேளை' வரவேண்டும்! பகவான், அனுக்கிரகிப்பார்! சோதிக்கிறார், இந்தப் பக்தனை! அதுதானே அவருடைய லீலா விநோதமே!! எப்படிச் சித்தியாகாமல் போகும் என் மனதிலேதோன்றிய, அபிலாஷை!பகவான், எப்படி அனுக்கிரகிக்காமல் இருக்கமுடியும்? அவர்தானே, அந்த எண்ணம் என் மனதில் எழுவதற்கே, காரணம்! ஆகவே, அவர்தானே, அதைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டும்!

* * *

இவ்வாறெல்லாம், எண்ணுகிறார்—எண்ணுவதாகக் கூறுகிறார்—கேட்போரிடம். என்ன, அந்த இலட்சியம், என்பதைக் கூட, துவக்கத்திலே கூறத் தயங்குகிறார். கூறிப் பயன், என்று குரலைத் தாழ்த்திப் பேசுகிறார்; கூறினால், அந்த எண்ணத்தின் சிலாக்யத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று கூறிச் சோகிக்கிறார்; பிறகு, கூறுகிறார், ஆர்வத்துடன்; அடிக்கடி ஆண்டவனைத் துணைக்கழைத்த வண்ணம்.

* *

"வேத வேதாந்தத்தின் விசேஷங்களைப் பாமர மக்களும், உணர்ந்து, பகவத் கடாட்சத்தைப் பெறவேண்டும் என்பது, என், நெடுநாளைய, அவா. பாமர மக்கள், தங்கம் இருக்கும் இடம் தெரியாமல், தகரத்தைத் தேடிக்கொண்டு அலைகிறார்கள். பொங்கி வழியும் மங்களத்தில் ஸ்நானம் செய்து, ஜென்ம சாபல்யம் பெறுமல், கேவலம் போக போகாதிகள் எனும் சேற்றிலே மூழ்கிப் பாழாகிறார்கள். ஏன்? அவர்களுக்கு வேதவழி, காட்டப்படவில்லை! உபநிஷத்தின் உட்பொருள், காட்டப்படவில்லை! தங்கம் இருக்கும்பேழையை, தூர்ந்துபோன பாழும் கிணற்றுக்கு அடியிலே போட்டு, புதைத்து வைத்துவிட்டோம். என், அபிலாஷை, இந்தக் கேவலமான நிலையிலிருக்கும் பாமர மக்களை விழிப்படையச் செய்யவேண்டும், என்பதுதான். அவர்களுக்கு வேத வழியைக் காட்டவேண்டும் என்ற பேராவல்! இரவு பகல் இதேசிந்தனை! ஏக்கம்! துக்கம்! எம்பெருமான், என்றுதான் வழிகாட்டப் போகிறாரோ, தெரியவில்லை"—என்று பீடிகை போடுகிறார்.

* * *

வாழ்வின் வழியிலே, பல படுகுழிகளும் சருக்கல்களும் இருக்கக்கண்டு போராடிக் கொண்டுள்ள பாமர மக்கள், வேதவழியை, அறிவது எப்படிச் சாத்யமாகும்! ஏது அவர்களுக்கு அதற்கான நேரம், திறமை! —என்றஎண்ணுகிறார்கள், 'பீடிகை' போட்டுப் பேசுபவர், தமது அபிலாஷையைக்கூறக் கேட்டோர். அவர்கள் அவ்விதம் எண்ணிடத்தான் செய்வர், என்பதை, யூகித்தறியும் "பீடிகையார்" மேலும், பேசுகிறார்

* * *

"பாமரனுக்கு, வேதவழி எப்படி விளங்கும்? உபநிஷத்தின் உன்னதத் தன்மையை அவர்களால் எப்படி உணர முடியும்? என்றுதானே யோசிக்கிறீர். நியாயமான கேள்வி! யுக்தமான கேள்வி! மாதுளங்கனி......அல்லது பலாக்கனி......இதை, ஒரு குழந்தையிடம் கொடுத்தால், என்ன செய்யும்? மதுரமான பழங்கள்! தேகாரோக்கியம் தரும் பழங்கள்! ஆனால், மாதுளைக்கு மேலே, தோல்மூடி! பலாவுக்கு மேலே, முள்மூடி!! குழந்தை என்ன செய்யும்? எப்படித் தோலை உரித்து, பலாச்சுளையை எடுத்துத் தின்ன முடியும்? முயன்றால், முள் குத்துகிறது, குழந்தை, வீறிட்டு அழுகிறது! என்ன செய்கிறாள், அன்னை! அன்போடு ஓடிவருகிறாள், அழுகிற குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு, முத்தமிடுகிறாள்—பலாவின் முள்மூடியைப் பக்குவமாகப் போக்கி, உள்ளே உள்ள, சுளையை, எடுத்துக் குழந்தைக்கு ஊட்டுகிறாள்! உடனே, குழந்தை குதூகலமடைகிறது, அல்லவா! அதுபோலவே, பாமரருக்கு, வேத வேதாந்த உபநிஷத்துக்களின் சாரத்தைப் பிழிந்தெடுத்துப் பருகத் தரவேண்டும். அவர்களுக்குப் புரியும்படி, இனிக்கும்படி, வேத வேதாந்த இரகசியங்களை, மகிமைகளை, வடித்தெடுத்து ஒன்றாகக் கூட்டித் தரவேண்டும். சத்கதா காலட்சேபங்கள், பஜனைகள், புராண இதிகாசப் பிரசங்கங்கள் மூலம் இதைச் சாதிக்க முடியும்—வேத வழியை மக்களுக்கு விளங்கவைக்க முடியும்" என்கிறார் 'பீடிகையார்'—புரிகிறது, கேட்பவருக்கு. மேலால் பேசுகிறார், பீடிகையார், இம்முறை, சற்றுத் தைரியத்துடன்-"இதற்காக, ஒரு பெரிய மண்டபம், மகாஜனங்கள் உட்கார; ஒருமேடை, உபன்

யாசகர் உட்கார; ஒருபூஜாக்கிரஹம், பகவானுக்கு; ஒரு ஐந்தாறு அறைகள், வெளியூரிலிருந்து வரும் உபன்யாசகர்கள், தங்கியிருக்க; மடப்பள்ளிக்கு, ஒரு பெரிய தாழ்வாரம், அல்லது கூடம்; சாமான்கள் சேகரம் செய்துவைக்க ஒரு பெரிய அறை, வேதாந்த சிரோமணிகள் விச்சாந்தியாக இருக்க, ஒரு தனிக் கூடம், குளிப்பதற்கு நல்ல இடம், பெரிய கேணி, ஒரு நல்ல பூந்தோட்டம், அதைச் சுற்றிலும் மதிற்சுவர், மல ஜல பாதைகளைக் கழித்துக் கொள்ளத் தனியான இடம், இப்படி, ஒரு 'கிரஹம்' அமைக்கவேண்டும். அந்தக் கிரஹத்திலே சதா, சத்விஷய போதனை நடத்தி, பாமர மக்களுக்கு வேத வழியைக் காட்டி, அவர்கள் உய்யும் மார்க்கத்தைக் காட்டவேண்டும் என்பதுதான் என் விருப்பம்—அந்த விருப்பம், இப்போது வைராக்கியமாகி விட்டது—இந்தக் காரியத்தைச் செய்து முடிக்காமல் சாகவும் எனக்கு விருப்பமில்லை—சதா இதே சிந்தனை! இதே ஏக்கம்!!" என்று கூறிப் பெருமூச்சு விடுகிறார், பீடிகையார்! இதைக் கேட்டிருந்தவர் சில நாட்களில், பீடிகையாரின் பின்னேடுபவராகின்றனர்—இந்தச் சத்காரியத்தின் அவசியத்தை, ஊராருக்கு உரைத்திடத் தொடங்குகிறார்கள்.

* * *

நல்ல காரியம்! சிலாக்யமான யோசனை!

போகிற கதிக்கு 'நல்லதுதான்! பணம்தான், ஏராளமாக வேண்டும்!

பணத்தோடு பிறக்கவில்லை, போகிறபோதும் எடுத்துக்கொண்டு போகப் போவதில்லை. ஏதோ இருக்கும்போது, இப்படிச் சில நல்ல காரியம் செய்து, 'புண்யம் சம்பாதித்தால், அந்தப் புண்யந்தான், செத்த பிறகு நமக்குச் சொத்து—சித்ரா புத்ரன் இதைத்தானே மதிப்பான்.

ஆமாம்! அவர் சொல்கிறபடி ஒரு 'இடம்' கட்டத்தான் வேண்டும்.

நமது ஊருக்கே, பெருமைதான்.

அவரவர்கள் சக்தியானுசாரம் கொடுத்தால், 'கிரஹம்' கட்டுவது சுலபந்தானே.

பல துளி பெருவெள்ளம்!

முயற்சியுடையார், இகழ்ச்சி அடையார்.

நல்ல காரியத்தை, உடனே செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

சரி, புறப்படுங்கள், சென்று கேட்போம், செல்வந்தர்களை. ஏன், எல்லோரையுமே கேட்கலாம்! இப்படிப் பட்ட காரியத்துக்கு, யார், இல்லை, என்று சொல்வார்கள்!

* * *

இவ்வண்ணம் ஊரில் பேச்சுப்பரவுகிறது! 'உண்டி' குலுக்கப்படுகிறது! பணம் குவிகிறது! மாளிகை எழும்புகிறது!! விழாக்கொண்டாடுகிறார்கள்!

இந்தக் 'கிரஹம்' அமைக்கும் அபிலாஷையை வெளியிட்டு, ஊராரிடம் பணம் திரட்டியவர், அதன் மேற்பார்வையாளராகிறார் — அதற்காகவும் அவர் பாராட்டப்படுகிறார் —பிறகு......!

* * *

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு, கல்கல் எனச் சத்தம் கேட்கத்தான் செய்கிறது, வேத வழி காட்டக் கட்டப்பட்ட கட்டடத்தில். ஆனால், தாளச் சத்தமல்ல! தோட்டத்தில் மலர்கள் நிரம்பத்தான், உள்ளன, ஆனால் அவை தேவாலயம் செல்வதில்லை — தேவிமார், உளர், சூட்டிக்கொள்ள! சமயல் நடக்கிறது, ஆனால் சாதுக்கள், சாப்பிடுவதில்லை! குளிக்கிறார்கள், தனி இடத்தில், குருமார்களல்ல! சத்காரியத்துக்குப்பதில்,' குடும்ப விவகாரச்சச்சரவு நடைபெறுகிறது. மாளிகையின் கதவு திறந்திருப்பதற்குப் பதில், தாளிடப்பட்டிருக்கிறது உட்புறம்—தட்டினால் திறக்கப்படும் —தகுந்தவர் தட்டினால் மட்டும்!! 'பக்திவிலாசம்' குடும்பக் கூடமாகிறது! மகாஜனங்களின் தர்மகைங்கரியத்தால் கட்டப்பட்ட இடம், கொஞ்சகாலத்தில், அதை முன்னின்று கட்டிமுடித்தவரின், சொந்தச் சொத்தாகி விடுகிறது! அழகான அரசமரம் கிளம்பும், அதன் அருமை நிழலிலே, அனைவரும் தங்கி இளைப்பாறலாம் என்று எண்ணினர்—கிளம்பியதோ, வேலமரம்—முள்குத்துகிறது. வேதவழி காட்டுவதற்காக என்று கட்டப்பட்ட இடம் கடைசியில், பாமரமக்களின் குருட்டறிவைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவனின், வாழ்க்கை வழியாகி விடுகிறது! சொத்து ஆகிவிடுகிறது, தானப்பொருள்! சொந்தக்காரனுகிவிடுகிறான், 'சக்தியானுசாரம்' தர்மம்செய்யுங்கள், என்று கேட்டவன்! ஏதேதோ, சத்காரியங்கள் நடைபெறுமென்று கூறினான், பிறகு, எதையும் செய்ய மறுக்கிறான்! எல்லோருக்கும் சொந்தம் என்று துவக்கத்தில் பேச்சு, பிறகோ, என்னுடையது என்று கோர்ட்டிலே, பேச்சு! இப்படி, மதத்தின்பெயர் கூறி அமைக்கப்பட்ட மடங்கள், ஆஸ்ரமங்கள், சத்திரம் சாவடிகள், கொஞ்சக்காலத்துக்குப் பிறகு, எத்தர்களின் சொத்தாகி விடுகின்றன. அதற்குத் தகுந்தபடியே, முன்னேற்பாட்டினைச் செய்துகொண்டே, "தர்மம் திரட்ட" முன்வருகிறார்கள், எத்தர்கள்.

* * *

காகிநாடா, எனும் ஆந்திரநகரில் ஒரு அணிமாடம், அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அழகான பெயரும் சூட்டப்பட்டிருக்கிறது — கீதாவிகாரம் என்பது பெயர்! கண்ணன் காட்டிய வழியை மக்களுக்குக் காட்டக் கட்டப்பட்ட, மணிமாடம்! பாமர மக்களுக்கு, பகவத்கடாட்சம் கிடைப்பதற்காக, சத்விஷய உபன்யாசம் நடைபெறவேண்டும் என்றும், அதற்காகவே, ஒருபெரிய மாளிகை கட்டப்படவேண்டும் என்றும், இந்தப் புண்ய காரியத்துக்கு அவரவர்கள், தத்தமது சக்தியானுசாரம், 'தர்மம்' செய்யவேண்டும் என்றும் கூறிப் பணம் திரட்டி, கீதாவிகாரம் கட்டி முடித்தார், வாழ வழி கற்ற ஒரு பழமையார்! அவருடைய பெயர் உபநிஷத் சுவாமிகள்!! பொதுமக்கள், புனிதமான காரியத்துக்காக 'கீதாவிகாரம்' அமைக்கப்படுகிறது, ஒரு தனி மனிதரின் உடைமையாக இராது, ஊர் உடைமையாக இருக்கும் என்ற எண்ணத்துடன், பணம் தந்தனர். 'கீதா விகாரம்,' என்று மதமகிமையுள்ள பெயரும் சூட்டப்பட்டதால், மக்கள், மனதார நம்பினர். ஆனால் 'கீதா விகாரம்,' என் சொந்தக் கிரஹம், அதிலே, வேறு யாருக்கும் எந்த விதமான பாத்யதையும்

கிடையாது! அதை, ஊராரின் உபயோகத்துக்குத் தருவதும் தராததும், என் இஷ்டத்தைப் பொறுத்தது; என் உடைமை! என் உரிமை!! —என்று வாதாடலானார், உபநிஷத் சுவாமிகள்! திடுக்கிட்டுப் போய்த் தானே இருப்பர், ஏதோ திருத்தொண்டு செய்கிறார், என்று எண்ணிக் கொண்டு பணம் தந்த பக்தகோடிகள்.

அவர்களிலே அற்ப்போர் மனப்போக்குடைய ஒருவர், அந்த விஷயத்தைப் பேச்சளவிலே, விடக்கூடாது, என்று எண்ணி வழக்குத் தொடுத்துவிட்டார், சுவாமிகள் மீது!

உபநிஷத் ஸ்வாமிகள் 'உடைமை'க்கு உரிமை தேட, வழக்கு மன்றம் வந்து நின்றார்.

"கீதாவிகாரம், கட்ட, உமக்குப் பணம் ஏது?"

"பணம், பல அன்பர்கள், தந்தனர்"

"அன்பர்கள் தந்த பணத்தால் கட்டப்பட்ட இடம், அன்பர்களுக்கும் சொந்தந்தானே,"

"லோகாசாரப்படிக்கு அப்படிக் கூறலாம், ஆனால், சொத்து உரிமை முறைப்படி, கீதாவிகாரம் எனக்கே சொந்தமானது"

"ஊரார் பணத்தால் கட்டப்பட்டது தானே"

"ஆமாம்—நான் கட்டினது"

"கட்டினவர், கொத்தர்கள்—பணம் தந்தவர், அன்பர்கள்! கட்டிடம், உமது உடைமை!! இதுதானே, சுவாமிகளே! இப்போதுள்ள நிலைமை?"

"பணம், அன்பர்கள் தந்தனர், என் சொந்த உபயோகத்துக்கு, எனக்காகத் தந்தனர்—என் இஷ்டப்படி செலவு செய்து கொள்ளத் தந்தனர்—நான் அந்தப் பணத்தைக் கொண்டு, கீதாவிகாரம் கட்டினேன்—ஆகவே, அது எனக்குத்தான் சொந்தம்"

வாதப் பிரதிவாதத்துக்குப்பிறகு, ராஜமகேந்திரபுரம் ஜில்லா ஜட்ஜ், ஸ்வாமிகளிடம் ஏராளமான பணத்தை அன்பர்கள் தந்தனர் என்றாலும், அந்தப் பணம், பொது நலக் காரியத்துக்குப் பயன்படவேண்டும், பயன்படும் என்ற எண்ணத்தோடு தரப்பட்டதே தவிர, ஸ்வாமியின் தனி உரிமையுள்ள உடைமைக்காகத் தரப்படவில்லை, ஆகவே, கீதாவிகாரத்தின், வரவு செலவு விவரத்தையும், அதற்கான, டிரஸ்டு பத்திர விளக்கத்தையும், உபநிஷத் ஸ்வாமி, உடனே, வழக்குத் தொடுத்தவரிடம் தந்தாக வேண்டும்என்று, தீர்ப்பளித்தார்.

'கீதாவிகாரம்' இனித்தன் சொந்தச் சொத்தாகிவிடும் என்று எண்ணிய உபநிஷத் ஸ்வாமியின், எண்ணத்தில் மண் விழச் செய்து, தீர்ப்பளித்தார், ராஜமகேந்திரபுரம் ஜில்லா ஜட்ஜு, சென்ற கிழமை.

தருமம் செய்கிறோம்—புண்ய காரியம் செய்கிறோம் — என்று மயங்கி, மதப் போர்வையாளரிடம் வீழ்ந்துவிடும், மக்கள், இதுபோன்ற வழக்குகளைக் கண்டாவது, விளக்கம் பெறவேண்டாமா! ஒரே ஒரு 'கீதாவிகாரம்' பற்றித்தானே தீர்ப்புக் கிடைத்திருக்கிறது! வழக்கு மன்றத்துக்கு வராத 'பஞ்சவடிகள்', 'சித்ர கூடங்கள்', 'புண்யமடங்கள்', 'தர்ம சாலாக்கள்', எவ்வளவோ உள்ளன! அங்கெல்லாம், அரசோச்சும், வீணர்களை விரட்டவும், இனியும், அவ்விதமான "அரக்கு மாளிகைகள்" அமையாமலிருக்கவும்,வேண்டுமே! அறிவுத் தெளிவு பெற்றால் தானே எத்தரின் ஏற்பாடுகளை முறியடிக்க முடியும்!

●

கோபுரம் ஏறிய கோமான்கள்!

12-ம் பக்கத்தொடர்ச்சி

புயலில் சிக்கிய கப்பலின் நிலையில் இன்று நாட்டுமக்கள் இருக்கின்றனர்! காங்கிரஸ் ஆட்சி, மக்கள் எதிர்பார்த்த 'கற்பகச் சோலையாக' இல்லாமல், கடும் விலங்குகள் நடமாடும் காடுபோல, அதிருப்தியும், அச்சமும், தாண்டவமாடும்படி செய்திருக்கிறது. ' காங்கிரஸ் என்றாலே, இன்று மக்களுக்குக் கசப்பாக இருக்கிறது! இன்று கோபுரம் ஏறிய கோமான்கள், காங்கிரஸ்காரர்கள், அன்று 'கூட்டத்தில் கூடி நின்று கூவியது' ஏராளம்; அந்தக் கூற்றுகளை அவர்கள்நாட்டத்தில் கொள்ளவில்லை! நாளில் மறந்து விட்டனர்—மறந்துகொண்டே இருக்கின்றனர்!!

இந்நிலையில், மக்கள் மனநிலையோ, காங்கிரஸ்கட்சியை வெறுக்கத் துவங்கிவிட்டது. கட்சியும் கனையும் நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது! காங்கிரஸ், சுகம்தரும் என்று நம்பிக்கிடந்த மக்களின் மனப்பண்பு, அது 'சுகவாழ்வினரின்போக மாளிகை, ஆகிவிட்டதைக் கண்டதும், மாறி, மாற்றுக்கட்சிகள் பக்கம் சென்றுகொண்டிருக்கிறது.

நாட்டு மக்களில் இளைஞர்கள் நிலையோ கேட்கவேண்டாம்! இளைஞர்களும், மாணவரும், காங்கிரசின் பிற்போக்குத்தனம்கண்டு, சீறிடும் புலிகளாக ஆகிக்கொண்டு வருகின்றனர்.

மக்கள் ஆதரவு கரைகிறது, இளைஞர்கள் சீற்றமோ அதிகமாகிறது, இந்நிலையில், இனியொருமுறை ஆட்சிப்பீடம் ஏறவோ, சட்டசபையில் இடம்பிடிக்கவோ, முடியுமா இயலுமா என்ற எண்ணம், இன்று கோபுரம் ஏறிநிற்கும் கோமான்களிடையே உருவாகிவரவே, அச்சமும், கலக்கமும் பிறக்கிறது அவர்களுக்கு!

எனவே, இன்று பாடத்தைத் திருப்பிப்படிக்கின்றனர்.வாக்குரிமை இருந்தால் தானே, அவர்கள் 'வோட்டு'ப் போட்டு, வேறு கட்சிக்காரரை, முற்போக்கு எண்ணங்கொண்டவர்களை, சட்டசபைக்கு அனுப்ப முடியும். அது இல்லாமல் செய்துவிட்டால், அவர்களுக்கு வோட்டுரிமை இல்லாமல் செய்துவிட்டால்,அவர்களுக்குப்பிடித்தவர்களை எப்படி தேர்ந்தெடுக்க முடியப் போகிறது? என்றும், நம் சுகவாழ்வு எப்படி நீடிக்கும் என்றும் எண்ணத் தொடங்கியுள்ளனர்.

இந்த நினைப்புப் பெரும் ஆபத்து' அவர்களுக்கும் நாட்டுக்கும். உலகம், ஜனநாயகப் பூங்காவாக ஆகிக்கொண்டிருக்கிற வேளையில், இதுபோன்ற பாசிசப் போக்குப் பயங்கர உருவெடுக்குமேயானால், 'தூள்! தூள்!! எல்லாம் தூள்!!!' என்ற நிலை ஏற்பட வழி பிறந்துவிடும்.

இதையுணரவேண்டும், இருப்பது இருபதாம் நூற்றாண்டில்என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும், கோபுரம் ஏறிய கோமான்கள்!

*

மாவசு உண்டாக்கிய அமாவாசை!

மாளய அமாவாசையன்று, மக்கள் கடலில் குளித்துப் 'புண்ணியம்' பெறுவதை முன்னிட்டுச் சென்னைக் கார்ப்பரேஷன் 22—9—49-ல் சில ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறது. அதாவது, சென்னையை அடுத்துள்ள கடற்பரப்பில் ஆட்களை விழுங்கும் சுறுமீன் இருப்பதால், அமாவாசை தினத்தன்று கடலிற் குளிப்பவர்களில் யாரையேனும் அந்தச் சுறுமீன் விழுங்க நேரிட்டால், அவர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளைக் கார்ப்பரேஷன் செய்து கொடுத்திருக்கிறதாம்.

கடலிற் குளிப்பதும், அங்குள்ள சுறுமீனால் விழுங்கப்படுவதும், அப்படி விழுங்கப்பட்டவர்களை மீட்பதும், அதற்காகக் கார்ப்பரேஷன் பொதுப் பணத்தைச் செலவு செய்வதும் தேவையா அவசியமா என்று நாம் கேட்டால், நாம் நாத்திகர் என்று கட்டாயம் நிந்திக்கப்படுவோமாகையால், அதைப்பற்றி நாம் இப்பொழுது ஒன்றும் கூற விரும்பவில்லை—என்ற போதிலும் விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழப் போபவனைப் போன்று, சென்னைக் கார்ப்பரேஷன், கடலில் ஆளை விழுங்கும் சுறுமீன் உலவுகிறது என்பதை நன்கறிந்தும், அந்த இடத்தில் சென்று குளித்தால் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தும், மக்கள் அங்கு சென்று குளிப்பதற்கு அனுமதிச் சீட்டு வழங்குகிறதென்றால், அது, விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுவது போன்ற செயல் அல்லாது வேறெவ்விதமாக இருக்க முடியும்? என்பதை மட்டும் இங்கு எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

இவ்வளவு பெரிய ஆபத்தையும் துச்சமாக மதித்துக் கொண்டாடப்படும் அமாவாசையைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வது அவசியமாதலால், அது பற்றிய சுருக்கமான ஒரு விளக்கம் இங்கு தரப்படுகிறது—புராணங்களில் உள்ளபடி.

அச்சோதை! ஒருபெண். இவள், மரீசிமக்களாகிய பிதுர்க்களுக்குப் புதல்வி. யாது காரணத்தாலோ, இவள் ஒருநதி வடிவமாக மாற்றப்பட்டுவிட்டாள். அந்த நதிக்கு அச்சோதம் என்று பெயர். சோதை என்ற பெயரோடு ஒருநதி இந்த அச்சோதை நதியிலிருந்து உற்பத்தியாகிறது. காஷ்மீருக்குப் பக்கத்தில் இந்த நதி இருப்பதாகக் கூறப்படுகிறது (In Kashmir near marttanda) அச்சோதம் என்னும் இந்த நதி, அச்சோதை என்பவளின் பிதுர்க்களால் உண்டாக்கப்பட்டதாம்.

நதிவடிவில் இருந்த அச்சோதை, அச்சோத நதிக்கரையில் இருந்து கொண்டு ஆயிரம் ஆண்டுகள் தவஞ்செய்தாளாம். தன்னுடைய பிதுர்க்களை நேரில் காணவேண்டுமென்பதற்காகவே அச்சோதை தவங்கிடந்தாளாம். அவளுடைய தவத்துக்கு மகிழ்ந்த பிதுர்க்கள் அனைவரும் வந்து அவளுக்குக்காட்சியளித்தனர். வந்த பிதுர்க்களில் ஒருவன் பெயர் மாவசு என்பது. மாவசுவைக்கண்ட அந்த தவப்பெண்ணும் அச்சோதை அவன்மீது காதல்கொண்டு, அவனைத்தன் நாயகனாகும்படி வேண்டிக் கொண்டாள். அதனை அறிந்த மாவசு அவளை நோக்கி, "நீ ஒருவிபசாரி! உனக்குச் சுவர்க்கத்தில் இடம் கிடையாது. பூமியில்போய் விழக்கடவாய்" என்று சாபமிட்டான். மாவசுவின் சாபத்தால் சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்ட அச்சோதை பூமியில் வந்து விழாமல, அந்தரத்தில் நின்றுகொண்டு மீண்டும் தவஞ்செய்தாள். இந்தத்தவத்தை மெச்சியபிதுர்க்கள் அவள்முன்தோன்றி, "நீ தேவர்களின் கர்மத்தைப் புசித்துக்கொண்டிருந்து, 28—வது துவாபாயுகத்தில், ஒருமீன் வயற்றில் பிறந்து, சத்தியவதி என்ற பெயரோடு பராச முனிவரைக் கூடி, வியாசமுனிவரைப் பெற்றெடுத்த பின்னர், சந்தனு ராசனின் மனைவியாகி, இரண்டு புதல்வர்களைப் பெற்று, அதற்குப்பின்னர், அச்சோதை என்னும் புண்ணிய நதியாக இருப்பாய்" என்று அருள்பாலித்துச் சென்றனர் அந்தப் பிதுர்க்கள்.

மாவசு என்பவனைக்கண்டு அச்சோதை காதல் கொண்ட நாளைத்தான் அமாவாசை என்று அழைக்க வேண்டுமென்றும், அந்நாளில் பிதுர்க்களை நினைந்து, கடலிலோ, நதியிலோ குளித்துக் கர்மாதிகள் செய்தால் புண்ணியம் உண்டாகும் என்றும் மாவசு அருள்பாலித்தான், என்ற இவ்வளவே அமாவாசையைப் பற்றிய வரலாறாகும்.

மாவசு என்பான் உண்டாக்கிய அமாவாசை! இங்கு மக்களால் கொண்டாடப்படுகிறது! இதற்குக் காரணம் என்ன? மாவசுவின் கட்டளையைத் தவிர வேறுகாரணம் எதுவும் கூறப்படவில்லை. இந்தக் கட்டளையை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்த மாவசு யார்? ஒரு கடவுளா? இல்லை! பிதுர்க்களில் ஒருவன்! யார் இந்தப்பிதுர்?

அச்சோதையின் தந்தைதான் இந்தப் பிதுர்—மாவசு!

அச்சோதையின் தந்தையான மாவசு இறந்து விட்டார்—பிதுர்க்களில் ஒருவராகி விட்டார்! தன்னுடைய பிதுர்க்களைக் காணத் தவங்கிடக்கிறாள் அச்சோதை! அச்சோதை தனக்குரிய பெண் வடிவத்துடன் தவங்கிடக்கவில்லை. ஒரு நதியாக மாறித் தவங்கிடக்கிறாள். தவத்துக்கிரங்கிய அவளது பிதுர்க்கள் அங்கே வருகின்றனர். வந்தவர்களில் ஒரு அழகனைக்கண்டு நதி காதலிக்கிறது. காதலிக்கப்பட்டவன் அந்த நதி வடிவில் இருந்த அச்சோதையின் தந்தை! காதலித்தவளும் மனித வடிவில் இல்லை! காதலிக்கப்பட்டவனும் மனித வடிவில் இல்லை! அவள் நதி வடிவம்! அவன் பிதுர் வடிவம்! இருவருக்குமிடையே காதல் நடைபெறுகிறது. பிதுர் வடி

(அடுத்த பக்கம் பார்க்க)

வேண்டாம் இந்த விபரீதம்

பார்த்துவிட்டாலோ படபடப்பர் பாம்பைக் கண்டதுபோல்! அருகில் வந்துவிட்டாலோ, தத்திக் குதிப்பர் தவளைகள் போல்! முன்பின் தெரியாது தெருவிற்குள் நுழைந்து விட்டாலோ, ஊரார் கூடுவர், உதைப்பர்! இவ்வளவு துணிச்சல், எழுந்துவிட்டதா பறப்பசங்களா?' என்பர்!

'சுப்பு! என்ன அம்மாசி வேட்டியைத் தொட்டுப்புட்டியா? போ, போய் ஸ்நானம் பண்ணீண்டு, வாடா!' என்ற உத்தரவு பிறக்கும், தப்பித் தவறி அம்மாசியின் உடையைத் தொட்டு விட்டால்!

மனிதரிடையே இந்தப் பேதம், நிறம் வாழ்க்கை நிலையைக் கொண்டு. இந்தச் சகிக்க முடியாத காட்சி, நாட்டுப்புறங்களில் இன்றும் நடைபெறுவது.

கலப்பை பிடிப்பது, கழனி உழுவது 'கத்தரி பயிரிடுவது' கூப்பிட்ட குரல் கேட்பது, 'எஜமான்' சுகத்துக்கு எல்லாவகையிலும் பாடுபடுபடுவது—அவர்கள். இருந்தும் பட்டம், தீண்டப்படாதவர்கள்!

'சாதிபேதமெனும் தீது' என்ற இசை உதடுகளிலும், உள்ளத்தில் வைதிக நினைவுகளும் கொண்டிருப்போர் வாட்டப்படும் காலம் இது

'மனிதனை மனிதனை எய்ச்சுப் பொழச்சுது அந்தக் காலம்' என்றாகி வருகிறது!

எந்தச் சனாதனம், பாட்டாளிப் படைவரிசையை, இழிந்தவர்கள் தீண்டப்படாதவர்கள், பறையர்கள் என்று 'பட்டம்' சூட்டி அழைத்ததோ, அது இன்று அவர்களுடன் சேர்ந்திருந்து மகிழும் நிலை மலர்ந்து வருகிறது.

வைதிகம் 'பழைய' வழியில் இன்னும் நடந்தால் 'விட்ட குறை தொட்ட குறை' என்று கூறிவிடலாம்!

சனாதனம், 'அதுதான் சரி' என்று கூறினால் 'திமிர்வாதம் விடவில்லை போலும். சம்மட்டி விழுந்தால் 'தகரம்' சரியாகிவிடுகிறது' என்று தள்ளிவிடலாம்!

'பழைமை விரும்பிகள் 'பறையருக்குத் தனி இடம் இருக்கத்தான் வேண்டும்!' என்றால் காலநிலையைப் பாரப்பா, கருத்தை உணரப்பா என்று தெளிவுக்கு ஆக விளக்கம் தந்துவிடலாம்!

ஆனால், தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபடுவதாகக் கூறுபவர்களே தீண்டாமையை வளர்த்தால்........! 'கண்ணகி விலாஸ்' காபி ஓட்டல் என்று பெயர், உள்ளேயோ 'விபசார விடுதி' என்ற கதையாக ஆகிவிடும்!

சென்னை அரசாங்கம் செப் 18-ந் தேதியன்று ஆதித் திராவிடர்கள் கல்வி வளர்ச்சி பற்றி ஒரு அறிக்கை விட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் பழங்குடி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு என்னென்ன செய்யப்படத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பன குறிக்கப்பட்டுள்ளன. அறிவுப் பாதையை அறியா, பழங்குடி மக்களைக் கல்வி நீரோடைக்கு இட்டுச் செல்லத் தீட்டப்படும் திட்டங்கள் நம் பாராட்டுக்குரியன.

ஆனால் அந்த அறிக்கையில் காணப்படும் ஒரு அம்சம் இருக்கிறதே, அது நம்மைத் திடுக்கிடச் செய்கிறது, உடைந்து கொண்டிருக்கும் 'வைதீக மாளிகை'க்கு முட்டுக் கொடுக்கப்படுகிறதோ என்று!

"ஹரிஜன மாணவர்களுக்காகத் தனிப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படும்" என்ற வரிகள்தான் நம்மைத் திகைக்கவும், திண்டாடவும் செய்கிறது!

'தீண்டாமைப் பேயை ஓட்டி விட்டோம்' என 'ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே' என்று குதூகலப்படுகின்றனர் ஆளவந்தாரும், காங்கிரஸ் தலைவர்களும். அப்படியிருக்கும் போது, ஆதித் திராவிட மக்களுக்கென ஏன் தனி இடம், அதுவும் கல்வியின் மணத்தை நுகர!

விளங்கவில்லை நமக்கு, விசித்திரமாக இருப்பதால், வேதனை யூட்டக் கூடியதாக இருப்பதால், விளைவு கேடு பயக்கும் என்பதால்.

தனியாக அவர்களுக்கெனப் பள்ளிக்கூடங்கள் நிர்மாணிக்கும் புது ஆசை ஏன் மூகிழ்க்க வேண்டும்? அக்கிரகாரம், பறைச்சேரி, என்ற பாகுபாடுகள்தானே, நாட்டைச் சூறையாடி; அழுகிழந்த மாளிகையாக ஆக்கிவைத்திருக்கிறது!

இன்னமும் ஏன் தனிஇடம்? அதுவும் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று கர்ஜிக்கும் 'கனம்'களாலா இந்த ஏற்பாடு? செச்சே! காந்தியார் இருந்தால் நிச்சயம் கண்ணீர் விடுவார்! கதறுவார்!!

வேண்டாம் இந்த விபரீத ஏற்பாடு, வேதனை விரியும், பழைமைப் பாதையில் செல்லாதீர், என எச்சரிக்கிறோம், முடிவைத்திருத்திக் கொள்ளுமாறு, கூறுகிறோம், புயலைக்கிளப்புதல் தீதுபயக்கும் என்பதால், ஆளவந்தாருக்கு! ✱

(முன்பக்கத் தொடர்ச்சி)

வில் இருக்கும் மாவசுக்குத் தெரிகிறது, தன்னைக் காதலித்தவள் தான் பெற்ற பெண் என்று! ஆனால், பிதுர்க்களில் தன் தந்தையும் இருப்பாரே என்ற எண்ணம் பிறக்கவில்லை அந்த அச்சோதா தேவிக்கு! அவ்வளவு பசிபோலும் அந்த அம்மையாருக்கு! எனவேதான் பிதுர்க்களைக் கண்டு வணங்குவதற்குப் பதில் வசியம்செய்திருக்கிறார் அந்த அம்மையார்!

அந்த அம்மையார் நடாத்திய காதல் நாடக நாளைத்தான் நாம் அமாவாசையாக் கொண்டாட வேண்டுமாம். எப்படியிருக்கிறது புராணிகர்கள் நமக்கு இடும் கட்டளை! மாவசு யார்? அச்சோதை யார்? அச்சோதை, மாவசுவைக் காதலித்த நாளை நாம் ஏன் கொண்டாட வேண்டும்? இந்தக் கொண்டாட்டம் நம்முடைய பிதுர்க்களுக்கு (இருந்தால்) எப்படி மகிழ்ச்சியை உண்டாக்கும்? அதனால் நமக்கு எப்படிப் புண்ணியம் ஏற்படும்? என்பனவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

அமாவாசை! மாவசு உண்டாக்கிய அமாவாசை! அதை நாம் ஏன் கொண்டாட வேண்டும்? எண்ணிப் பார்க்கவேண்டுகிறோம்.

அமாவாசை தினத்தன்று கடலிற் குளிப்பவர்களைச் சுறுமீன் விழுங்கினால், அப்படிப்பட்டவர்களை மீட்கும் பணியில் இறங்கும் கார்ப்பரேஷன் அதிகாரிகள் உட்பட, அமாவசை கொண்டாடும் அனைவருமே சிறிது அமைதியை வரவழைத்து வைத்துக்கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறோம்.

✱

திராவிட நாடு

ஞாயிறு] 25—9—49 [காஞ்சி

வெள்ளி முளைத்தது!

மூன்று மாதங்களாக, இருட்குகை ஆகிக்கிடந்த இளைஞர் இதயங்களில் புது ஒளி எழும்பிவிட்டது!

கழகத்தைக் கப்பியிருந்த காரிருள் விலகிவிட்டது, விடிவெள்ளி முளைத்துவிட்டது!

வேதனையும், விம்முதலும் தாக்க சஞ்சல மனத்தினராய், சாகா மனிதராய், தலைவரின் தகாச் செயல்—பொருந்தாத் திருமணம் — கண்டு துடித்துக் கிடந்த தூங்காப் புலிகள், துயர் தாங்கும் சிங்கங்கள், வாலிப வீரர்கள், நடமாடும் நட்சத்திரங்களாகி விட்டனர்!

மூன்று மாதங்கள்!—கழகப் பணிகள் மூச்சுப் பேச்சற்று நின்று போகச் செய்த மூன்று மாதங்களைச் சிருஷ்டித்த கட்சியின் நரம்புகள் புதுவிசைகொண்டு, பூரிப்புடன் துடிக்கத் துவங்கிவிட்டன!

வெட்டிப்பேச்சைத் தட்டி நடக்கும் தீரம், வீண் வம்பை 'விலகி நில்' என்று விரட்டும் வீரம், 'சுலோகம்' காட்டி சுகவாழ்வு நடாத்தும் சுயநலமிகளை 'சுருட்டு உன் சூதை! தூர நில்!!' என்று ஓட்டும் பண்புபடைத்த தூண்டா விளக்குகள், ஒளி வீசத் துவங்கிவிட்டன! களங்கம் பரவிக்கிடந்த கட்சி வானில், 'நல்லுரிமை நம் மூச்சு, 'நச்சுப் போக்கு போச்சு!' என்று வீரகீதம் எழுப்பும் விடிசங்கு முழங்கிவிட்டது!

17—9—49 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்துவிட்டது!

திராவிட கழகம், முன்னேற்றம், நாடித் திராவிட முன்னேற்ற கழகம் ஆக ஆகிவிட்டது.

செப்டம்பர் 17, திராவிட இயக்க வரலாற்று எட்டிலே ஒரு பொன்னாள்! புதுமணம் பூரிக்கும் நாள்! 'முன்னேற்றம்' முகிழ்த்தநாள்! நாட்டின் சட்டிமுனைகள், இளைஞர் உள்ளம் பூத்துக்குலுங்கிய புதுநாள்! கருமேகம் கிழித்து, வெள்ளி முளைத்தநாள்! வெற்றிப்படையின் வீரச் சங்கொலி எழும்பியநாள்! பதவி, பட்டம் நினையாப் பண்பினர், இன்பபூமியே எங்கள் இலட்சியம் எனும்தீரர்கள், சுயமரியாதைச்சிங்கங்கள், பெருமூச்சு நீங்கி, அகத்திலே மகிழ்ச்சிகொண்ட நாள்! முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழி கொண்டு, முன்னேற்றக்கழகம் கண்ட நன்நாள்!

'திராவிடத்தின் நல்வாழ்வே எங்கள் இலட்சியம்' என்று இதயகீதம் பரப்பி, திராவிடகழகக் கொள்கைகளைப் பட்டி தொட்டி நாடு நகர் எங்கும் பரவச்செய்த கட்சியின் உயிர் நாடிகள், கமிட்டி உறுப்பினர்கள் கூடினர்! தலைவரின் பிடிவாதப் போக்குத் தளராதது கண்டு, வேதனையுற்று விம்மிய உள்ளங்கள் அன்று கூடின! போற்றிப் பரப்பிவந்த பொன்னான கொள்கையை—பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டு — பொசுக்கிக் காட்டிய, தலைவரின் தவறிய செயலைக்கண்டு புண்ணான இதயங்கள் கூடின! வெட்கப்பட்டு; வேதனை தாக்க, உழைப்பு வீணாகிவிடுமோ என்ற கலக்கம் கண்களில் தாக்க, சோகம் முகத்திலே படர, செய்கை அறியாது, மூன்றுமாதங்கள், தலைவர் போக்கைக் கண்டித்து 'தலைமை பிடிக்கவில்லை. தகாச்செயல் புரிந்த அவர் தலைமையில் நின்று பணி புரிவது படுபாதாளக்குழியில் வீழ்த்திக்கொள்வதாக முடியுமே!" என்று கலங்கி, ஒதுங்கி, விலகி நின்ற 'வேதனைக்கண்ணீர்கள்' கூடின!

முடிவு, திராவிட முன்னேற்றக் கழகம்!!

*   *   *

ஈரோட்டுத் தந்தை. இலட்சியப் பிதா, என்று பெருமையுடன் வாழ்த்தொலி முழக்கி, பூரிப்புக்கொண்டு கிடந்த, கட்சித்தோழர்களை, கடைசியிலே, ஜூலை 9 அன்று வந்த புயல், கலங்கும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. சமுதாயச்சிற்பி என்று தாங்கள் புகழ்ந்துபோற்றிய தலைவர் பொருந்தாமணம் புரிந்துகொண்டார் என்று கேள்வியுற்றதும் இடியோசைகேட்ட இதயத்தினர் ஆயினர்!

தலைவர் தகாச்செயல் புரிந்துவிட்டார், தவறிய பாதையில் சென்றுவிட்டார், இனி அவர் தலைமை பயன் விளைவிக்காது, இலட்சியப்பாதைக்கு இழுக்கு வந்துவிட்டது என்று வருந்தி "கண்ணீர்த் துளிகளைச்" சிந்தி, கண்டனத்தைக்காட்டினர், கழகத்தின் பெரும்பாலான நிர்வாக உறுப்பினர்கள், கிளைக்கழகங்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் எல்லாம்.

கட்சியின் நரம்பும், சதையும் ஆடாது அசையாது போய்விட்டது, புயலின்காரணமாக! தலைமையை விரும்பாதவர் பலர், என்றறிந்தும், நேர்மைப்பாதையை நினைத்தும் பார்க்கவில்லை தலைவர்—பெரியார்.

கட்சியே தன்னை விரும்பவில்லை' தன் தலைமையை வெறுக்கிறது என்று அறிந்தும், விதண்டாவாதம், வீண் விளக்கம், பெருமைப்பிடி வாதம், பெரியாரைவிட்டுப் பிரியவில்லை; பிடித்தபடியே இருக்கிறது — தொடர்கிறது.

ஜனநாயகம்—நேர்மை, நீதி என்ற நற்பண்புகள் தலைவரிடம் இருந்திருந்தால், கட்சியே தன் தலைமையை வெறுக்கிறது என்று அறிந்ததும், விலகியிருப்பார், தலைமை நாற்காலியிலிருந்து இறங்கியிருப்பார். 'என்மீது நம்பிக்கையில்லையென்றால், எனக்கென்னவேலை' என்று போயிருப்பார்!

அந்த ஒழுங்கான நிகழ்ச்சி, ஏற்படவில்லை, தனக்காகவே கட்சி, தானே கட்சி, என்ற சுயநலமும், விதண்டாவாதமும், வீண்பெருமையும் தலைவரிடம் விடாப்பிடியாக இருக்கிற காரணத்தால்!

எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்திருக்கிறது, கண்ணியம், இலட்சிய வெற்றியின் மீதுள்ள ஆர்வம் காரணமாக

*   •   •

நாம் பலர்; அவர்கள் சிலர்! இருந்தும், நாம், அவர் தலைமையை நீக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட விரும்பவில்லை.

தலைவர் செயலைக் கண்டித்து, விலகி நிற்கும் நிர்வாகக் கமிட்டி உறுப்பி

னர்கள் பலர்; இருந்தும் நாம் அவரைத் தலைமையினின்றும் இறக்க வேண்டும் என்ற பணியில் ஈடுபடவில்லை.

பொருந்தாத் திருமணம் கண்டு விலகி நிற்கும் எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர்கள், பேச்சாளர்கள் பலர்; இருந்தும், நாம் அவரை 'நாற்காலியைவிட்டு' இறக்கும் தொண்டில் ஈடுபடவில்லை.

தலைவர் மீது நம்பிக்கையில்லையென்று கண்டனக் கணைகள் விடுத்த கிளைக்கழகங்கள் பல, மிகப்பல. இருந்தும் நாம் அவரை அந்த இடத்தை விட்டு நீக்கியே தீருவோம் என்று வீரம் பேச விரும்பவில்லை!

சேர்த்துக் கொடுத்த இலட்சக்கணக்கான பணம், பெயர், எல்லாவற்றையும் அவருக்கேவிட்டிருக்கிறோம். அதுவும் மெஜாரிடியினராக நாம் இருந்தும் விட்டிருக்கிறோம்!

எங்கும் காணமுடியாத காட்சி! அவ்வளவு கண்ணியத்தை நாம் காட்டியிருக்கிறோம், நம் உழைப்பில் நம்பிக்கை, நாம்தான் கட்சி, நாமே கட்சியை வளர்த்தோம், நம்மால் எதுவும் முடியும், என்ற காரணத்தால்.

தலைவருக்கு 'பதவி' பெரியதாக இருக்கிறது—அப்படிக் கருதுகிறார், லாபம் இருப்பதால், சேர்த்த பணம் கைவிட்டுப் போகாமலிருக்க வேண்டும் என்ற காரணத்தால். அவைகளைக் காப்பாற்றிக்கொள்ள, அவர், வீண் வம்பு செய்வார், விதண்டாவாதம் கிளப்புவார், 'கழகம் என்னுடையது. நிர்வாகக் கமிட்டியை அப்போதே கலைத்துவிட்டேன். உங்களை யார் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் என்று சொன்னது?' என்றெல்லாம் விளக்கங்கள் விடுவார்; வீண்சண்டைக் கிழுப்பார்! மோதுதலைச் சிருஷ்டிப்பார்! மோதிக்கொண்டேயிருப்பார்!

அவரால் அது இயலும்; அதுதான் அவரது வேலையாகவும் இருக்கும்! கழகத் தலைமையைவிட்டு அவரை நீக்குவது என்ற ஆர்வ முயற்சியில் நாம் ஈடுபட்டால்! ஆனல், நாம் அப்படியல்ல. நம் பணி பெரிது. ஏழ்மைச் சமுதாயத்தை இன்ப பூமியாக்கும் இலட்சியப் பாதையிலே நடந்துகொண்டிருப்பவர்கள் நாம். அவர், வாழ்ந்துவிட்டவர். நாம் வாழப் போகிறவர்கள். அவருக்கு, இலட்சிய ஈடேற்றம் பற்றி எண்ணமிருக்க முடியாது—நம்மை எதிர்ப்பதையே, ஒழிப்பதையே இலட்சியமாகவும் கொள்ள முடியும். அதனால் அவருக்கு நஷ்டமில்லை! ஆனால், நாம் அப்படியல்ல. நம்முடைய பணியும் அத்தகையது அல்ல. நமது பாதை பெரிது. இலட்சியம் பெரிது. கொள்கைகள் பெரிது.

கட்சியின் கொள்கைகள், அவை பரவவேண்டிய அவசியம்தான் நமக்குப் பெரிது; அவருடைய 'தலைமை ஒழிப்பு' அல்ல! வாழ்விழந்து வகை கெட்டுக் கிடக்கும், ஒரு மாபெரும் சமுதாயத்தின் முன்னணிப் படையினர் நாம்! நாட்டு விடுதலையின் நல்லதம்பிகள் நாம்! உரிமைப் படையின் உணர்ச்சி வீரர்கள் நாம்! நடமாட வேண்டிய எதிர்கால விருட்சங்கள் நாம்! நல்லதொரு புத்துலகப் பூங்காவைச் சிருஷ்டிக்கவேண்டியவர்கள் நாம்! கட்சியின் நரம்பு, நாடி, சதையாகயிருக்கும் இளைஞர்களாகிய நம்முடைய பணி பெரிது! பெரிது!! மிகப் பெரிது!!!

நல்லெண்ணம், நற்பண்பு, கண்ணியம், கட்சிக் கொள்கைகள் வளர்க்கப்பட வேண்டும் என்ற கடமை நம்மிடம் இருக்கிறது—நம்முடைய சேவையை நாடு எதிர் பார்த்து நிற்கிறது.

பழமை, பாசீசம் இரண்டும் கோர உருவில் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கத் துவங்கிவிட்டன, வைதிக வாடை வீசத் துவங்கிவிட்டது, வடநாட்டு ஆதிபத்திய வலை வீச்சு நாள்தோறும் விரிய ஆரம்பித்துவிட்டது. இந்திக்கு மகுடம் சூட்டப்பட்டுவிட்டது, மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நம் கழகப்பணி மீது, ஆளவந்தார் "பார்வை" விழுந்து கொண்டே இருக்கிறது, இயக்கத் தோழர்களின் எழுத்துரிமை பேச்சுரிமை மீது ஆளவந்தார் "பாணங்கள்" வீசியபடியே இருக்கின்றனர்! வடநாட்டு ஆதிபத்தியமும், வைதிக 'முதலை'யும், முதலாளித்துவ முகாம்களும் கோர வாய்களைத் திறந்து கொண்டேயிருக்கின்றன!

இந்நிலையில் கட்சிப் பூசல் காரணமாக, பெரியாரை எதிர்க்கும் பணியை 'பெரிதாக' நினைத்து, மோத ஆரம்பித்தால், திராவிட கழகத்தவராகிய நாம் இதுவரை, என்னென்ன பாடுபட்டோமோ, அந்த முயற்சிகளை விழலுக்கிறைத்த நீராக்கினவராவோம்! நம் வெற்றிகள் பாலைவனத்துப் பசும்புற் காட்சிகளாகிவிடும்! 'முதலை'களின் கோரப்பற்கள் நம்மை, நம்பணியைக் கிழித்துச் சின்னபின்னமாக்க வழி வகை தந்தவராவோம்! விட்டிற் பூச்சியை விரட்டுவதற்காக விளக்கை அணைத்து விட்டு, கிணற்றில் விழுந்தவர்களாவோம்!

என்வேதான் 'தலைமைஒழிப்பை'த் தள்ளிவிட்டு, எப்பொழுதும்போல, நமது கொள்கைகளைப பரப்ப, முனைந்திருக்கிறோம். மோதுதலைத் தவிர்க்க 'முன்னேற்ற'ம் விரைந்து நடக்கத் துவங்கியிருக்கிறோம்!

•   •   •

தலைமை நாற்காலியிலிருந்து பெரியாரை, இறங்க வைக்கும் செயல் புரிவது பெரிதல்ல! அது நம்மால் முடியும், எந்தவகையிலும், நாம் பலர், நம்மிடம் நியாயம் இருக்கிறது என்ற காரணத்தால்!

ஆனல், இந்த'ஒருதிருப்தி' நமக்கு ஏற்படுவதற்காக, எஃகு இதயத்தினர்' இளம் சீயங்களாகிய நாம் அவருடன் மோதிக்கொண்டு வீணாக்கவேண்டிய காலம் இருக்கிறதே, அது ஒரு கட்டியக்காரனல்ல; நமக்காகக் காத்துக் கொண்டிருக்க! அந்த மோதிக்கொண்டிருக்கும் காலத்தில் நாட்டு நிலை, நம் கட்சி நிலை பற்றிய கவலைகள், ஆளவந்தாராலும், நாம்எந்தப் பிற்போக்குச் சக்திகளை முறியடிக்க முனைந்து நிற்கிறோமோ, அவைகளாலும், அதிகமாகி விடும்! வளர்ந்துவிடும்!!

அவைகளைச் சமாளிக்க வேண்டியவர்களும் நாம் ஆகத்தான் இருப்போம். 'அவருக்கு' அவைகள் பெரிதல்ல; ஏதோ இருக்கு மட்டும் 'சக்கரம்' உருண்டுவிட்டால் போதும் அவருக்கு! நமக்கு அப்படியல்ல, வாழ்க்கைப் பாதையைப் பூஞ்சோலையாக ஆக்கிக்கொண்டிருப்பவர்களல்ல நாம், சேர்த்து வைத்த பணத்தை வைத்துக்கொண்டு சிங்காரச் சிரிப்புடன் காலத்தையும் — கட்சியையும் நகர்த்த!

பொதுவாழ்வு மிகவும் புனிதமா

னது—அந்தப் புனிதப் பாதையில்; கொள்கை ஆசை காரணமாகக் குதித்துவிட்ட ஆயிரக்கணக்கான இளம் வீரர்கள், செயலாற்றும் சிங்கங்கள், குடும்பக் கவலை கொள்ளாத உறுதிகொண்டோர், கூட்டம், நாம்.

எனவே, எடுத்த இலட்சியத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறது. புது உலகப் பூங்காவை நோக்கிப் போக வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இந்நிலையில் மாளிகையை எழுப்பவேண்டிய கவலையும் கடமையும் இருக்கும்போது மண் குடிசையின் 'ஓட்டைக் கூரையை'—பெரியாரின் தலைமையை—ப் போய்ப் பிரித்துப் பார்ப்பதால் நம் இலட்சியம் வளர முடியாது!

நமக்குப் பெரிது இலட்சியம்!
நாம் அவருக்கு 'அலட்சியம்'!!

என்பதுதான், இனி, முன்னேற்றம் கொண்டுவிட்ட நமது வீரமுரசாக இருக்கவேண்டும். வெற்றிப் பாதையாகவும் இருக்கவேண்டும்.

பெரியாரல்ல பெரிது; கட்சிதான், நமது கொள்கைகள்தான்.

வாழ்வு அளிக்கும் நிதி களங்கமற்ற நல்ல பெயர்—கண்ணியம்—தானே ஒழிய வேறல்ல. அவை இல்லாவிடில் மனிதன் வர்ணம் பூசிய களிமண்தான்!

எனவே கண்ணியப் பொறுப்புடன், நாம் கடமையாற்ற வேண்டும், என்று ஓய்ந்து கிடந்த பணிமுரசை ஒலிக்கத் துவங்கிவிட்டோம். முன்னேற்றப் பாதையில் நடக்கத் துவங்கி விட்டோம்!

* * *

பழமை, பாசிஸ ஒழிப்பு, ஜாதிபேதமற்ற சமுதாயம், சமதர்மம் நிலவும் அரசாங்கம் இவைதான், எப்போதும் போல, இனியும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள்கள். திராவிடத்தின் பிரிவினைக்குப் பாடுபடும், நன்னோக்கங்கொண்ட திராவிடத்தின் மக்கள் யாவருக்கும், ஜாதிபேதச் சங்கடம் ஒழித்த யாவருக்கும், என்றும்போல இங்கு இடமுண்டு. முன்னேற்றக்கழகம், முன்னேற்றம் முகிழ்க்கும் எல்லாவழிகளிலும் முனைந்து நின்று பணியாற்றும். அரசியல், அறிவியல், பொருளியல் ஆகியஎல்லாத் துறைகளிலும் முனைந்து நின்று பணி புரியும். தொழிலாளர் தொல்லைகள், மக்களின் பிரச்னைகள், மதிவிளக்கம்பெற வேண்டிய வழிகள் எல்லாவற்றிலும் முன்னேற்றக்கழகம் பங்கு ஏற்கும்—பணி புரியும்.

முன்னேற்றப் பாதையில், வெற்றி நாடி விரைந்து செல்லும் நம்மை நோக்கி, கேலியும் கிண்டலும் செய்வர், இடம் கிடைத்த இடத்து பிரசங்கமாக; இல்லாதபோது கையில் பேனாவும், பத்திரிகையுமிருப்பதால் எழுத்து மூலமாக! நம்மால் 'ஒதுக்கப்பட்டவர்கள்.' இவை பெரிதல்ல நமக்கு,.எறும்புக்காக வேட்டையாடுவதும், வேலை நிறைய இருக்கும் போது வீண்வாதம் செய்வதும் வீண் வேலை! கிண்டலுக்கும் கேலிக்கும் நம்முடைய பதில் அலட்சியமாக இருக்கட்டும்; இலட்சியம் 'வளர்க்கப்பட வேண்டியது முக்கியம், அந்தப் பொறுப்பை ஏற்று நிற்பவர் நாம் என்பதால்! வெத்து வேட்டுகள், வெங்காய வெடிகள் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது, நாம் பாசிசம், பழமை என்கிற பீரங்கிகளை எதிர்நோக்கி, நடந்துகொண்டிருக்கிறோம் என்பதால்!

உருட்டிவிடப்பட்ட பொம்மை கொஞ்சக்காலம்ஆடத்தான்செய்யும், ஒதுக்கிவைக்கப்பட்ட 'ஒன்றுக்கும் உதவாதது' முனகிக்கொண்டுதான் இருக்கும், இது அல்லப் பெரிது, இவைகள் புறக்கணிக்கப்பட வேண்டியவை, நமது கண்ணியத்தால்.

ஆகவே விடுதலை வேட்கை கொண்ட நாம், மக்களின் நல்வாழ்வு விடுதலைக்காகப் பணி புரிதலையே கடமையெனக் கொள்வோம்! கோபம், கொதிப்பு, சோகக் கண்ணீர் சொரிந்த பலர் கூடினோம்! முடிவாக முகிழ்த்திருக்கிறது முன்னேற்றக் கழகம்!!

* * *

எதிர்ப்புகளை நம் தோட்டத்தின் எருக்களாக ஆக்கிவிட்டு இன்பப் பாதையை வகுக்கும் நற்பாதையிலே நடப்போம்.

ஒருவரே, எல்லாக்காரியங்களையும் தலைமேல் போட்டுக்கொண்டு செய்யும்தன்மை, தானே முக்கியம் என்ற சுயநலப்போக்கு, முன்னேற்றக் கழகத்தில் இடம்பெறவில்லை. நல்லமுடிவு., நாட்டுவளர்ச்சிக்கும், ஜனநாயகத்துக்கும் எடுத்துக்காட்டான முடிவு!

அமைப்புவேலைக்குழு, பிரச்சாரக் குழு, நிதிக்குழு, கட்சிச் சட்டதிட்ட நிர்ணயக்குழு, என்ற பிரிவுகளும், இவைகளுக்குப் பொறுப்பான பொதுச் செயலாளரும் இருக்க வேண்டும்என்றதற்காலிக அமைப்புப் போற்றக்கூடியது — நம்கட்சி, வரலாற்றில் புதுஅம்சம் பொருந்தியது.

முன்போலன்றி, இப்போது பொறுப்பு 'பொதுவாக' ஆகியிருக்கிறது. பொதுச்செயலாளரிலிருந்து சாதாரண உறுப்பினர்வரையில் கட்சியை அசைக்கும் உறுப்புகளாகி விட்டனர்! எனவே, எல்லோரும் சேர்ந்த "கட்சி," என்றநிலை உதயமாகி இருக்கிறது. இந்த உதயக் காட்சி, கட்சியின் இருட்டுப்பாதையிலே ஏற்பட்டது. எனவே, இதை ஏற்று நிர்வகிக்கும் பொறுப்பும், கடமையும் ஒவ்வொருவர் வாழ்விலும் பின்னிப் பிணைந்துகிடக்கிறது.

கட்சிப் பாதையில் முன்னேற்றம் கண்ட நாம் இலட்சியப் பாதையிலே முன்னேறிச் செல்ல இவைகளைக் கடைப்பிடித்துக் காரியமாக்க வேண்டியது அவசியம். ஒவ்வொருவருக்கும், முன்பு இருந்தது போலல்ல, இப்போது பொறுப்பும், கண்ணியமும், கட்சியைக் காக்கும் கண்ணிமைகள் என அமைந்து விட்டன!

அலட்சியம்,ஆகட்டும்பார்ப்போம், அவர் இருக்கிறார் கவனித்துக் கொள்ள, என்ற பேச்சுகள் இனி நம்மிடை எழும்பாது - எழும்புதல் இடையூறு பயக்கும் என்பது கூட. நம்மிடம் சக்தி இருக்கிறது; அதைத் தான் நாம் நம்புகிறோம்.

நம் சக்திதான் கட்சி; பிறவல்ல என்றாகிவிட்டோம்! 'பணம்தான் இருக்கிறதே, எடுபிடிகள் இல்லாமலா போய்விடுவார்கள்' என்ற நிலை கொண்டவர்களல்ல நாம். அத்தனை பேரும் அன்னக்காவடிகள்; ஆயினும் சொன்னசொல்லைக்காரியமாகக் காட்டும் தீரர்கள்! நம்மிடை பணக்காரர்கள் இல்லை, பவனி வரும் சிங்காரபுருடர்கள் இல்லை, 'என்னப்பா நடக்கிறதா, ஏதாவது' என்று குசலம் விசாரிக்கும் கோமான்கள் இல்லை.

(அடுத்த பக்கத்தில்)

நேர்புரம் ஏறிய கோமான்கள்!

[அரங்கண்ணல்]

"கூட்டத்தைக் கண்ட நாளில்
கூவிப் பேசிவிட்டு
நாளையே மறப்பேனடி—
கிளியே
நாட்டத்தில் கொள்ளமாட்
டேன்."

என்று பாடிக்கொண்டே வந்தான் கடைசி வீட்டு கந்தசாமி,

'என்ன கந்தா, ஏது கனஜோராப், பாடறே. விசேஷம் ஏதாவது......'

'குஷிக்கு என்னப்பா,குறைச்சல்? என்று சிரித்தான் அவன்.

'சந்தோஷம் இருக்க வேண்டியது தான். அதற்காக இப்படிப் பாரதி யார் பாட்டை ஏன் கொலைசெய்றே?' என்றேன், நான் கொஞ்சம் கிண்டலோடு.

'ஓகோ, நீ பாரதி பக்தனுக்கும், நான் பாடினா அப்படித்தான் இருக்கும். நான் என்ன மவ்லங்கரா?' என்றான் அவன், கோபத்தை வரவழைத்துக் கொண்டு.

'இதென்னப்பா, இப்படித் தாவுறே! மவ்லங்கருக்கும்—பாரதி பாட்டுக்கும் என்னப்பா சம்பந்தம்?"

'சம்பந்தம் இல்லாட்டி, பாட, நான் என்ன பரதேசியா?"

'இந்தா, கந்தா மவ்லங்கர் என்றால் யார் தெரியுமோல்லியோ?'

'தெரியும்பா! மத்தியசட்டசபைத் தலைவர்.'

'அவருக்கும், நீ பாடினயே அதற்கும் என்னப்பா பொருத்தம்?'

'எல்லாம் இருக்குது' என்று கூறிக்கொண்டே 'நீ தினம் பத்திரிகை படிப்பதுண்டா?' என்ற கேள்வியை கிளப்பினான். அவன் கேள்விகளில் எப்பொழுதுமே அர்த்தமிருக்கும், எனவே 'படிப்பதுண்டு! என்றேன்.

'சமீபத்தில், பம்பாயில் ஒரு பேட்டியின்போது அவர் கூறியிருக்கிறாரே, தெரியுமா?'

'என்ன, பாரதி நீ பாடியதுபோல் பாடினார் என்றா?' என்றேன் சிறிது சந்தேகத்துடன் நான்.

'சரிதான்! நீ பத்திரிகை படிச்சு வாழ்ந்தே!' என்று வாழ்த்திவிட்டு விஷயத்தைச் சொன்னான், பின்னர் தான் ஏன் அவன், என்னைக் கண்டதும், அப்படிப் பாடினான் என்பது புரிந்தது, எனக்கு!

சென்ற சில தினங்களுக்கு முன் ஜி. வி. மவ்லங்கர் பம்பாயில் ஒரு நிருபருக்களித்த பேட்டியின்போது "வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிப்பதும், அந்த அடிப்படையில் தேர்தல் நடத்துவதும் கூடாது" என்று கூறியுள்ளார். அதை எனக்குச் சொல்வதற்குத்தான், கந்தசாமி,

கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடீ—
சகியே
நாளில் மறப்பாரடீ!

என்ற பாரதியார் பாட்டை மாற்றி, என்னிடம் விஷயத்தைச் சொல்ல, இப்படிப் பாடிக்கொண்டு வந்திருக்கிறான் என்று புரிந்தது.

• • •

கூட்டத்தைக் கண்டதும் கூவிப் பேசுவர், வீட்டுக்குச் சென்றதும் நடத்தை மாறும்! உரத்த குரல் எடுத்து பொதுவுடைமையின் அவசியம், ஏழையின் அல்லல்பற்றி முழக்குவர், எண்ணமோ 'இன்று குப்பன் வருவானே! அவன் கூலியை எப்படிக் குறைப்பது?' என்பதில் ஆழ்ந்திருக்கும்!'பழமைமாறவேண்டும், மூடநம்பிக்கை முறியடிக்கப் படவேண்டும்' என்று கர்ச்சிப்பர், கருத்தோ 'நாளை சரஸ்வதி பூஜையாயிற்றே. வேண்டியது வீட்டிலிருக்கோ, இல்லையோ!' என்பதில் இலயித்திருக்கும்.

இப்படிப்பட்ட வாய்ச்சொல்வீரர்கள், வஞ்சனைச்சொல்லர்களைப்பற்றி வர்ணிக்கவே, கடைசிவீட்டுக் கந்தசாமி மேற்கூறிய விதமாகப் பாடிக் கொண்டுவந்திருக்கிறான்! அவன் பாடியதில் அர்த்தமில்லாமல் இல்லை, கூட்டத்தைக்காணும் பொழுது, நெஞ்சிலுரமும் நேர்மைத்திறனுமின்றி. வஞ்சனைச் சொற்களைக்கூறிவிட்டு "சிந்தையிற் கள் விரும்பிச்சிவ, சிவவென்பதுபோல், வந்தேமாதரம்" என்று முழக்கிய 'கண்ணியர்' இன்று நாடாள்பவராக, நாட்டு நாயகராக இருப்பதால்!

* *

மவ்லங்கர்—சாதாரண ஆள் அல்ல,

(முன் பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சில் வஞ்சமும் உதட்டில் கொஞ்சுதலும் கொண்டவர்கள் இல்லை! அதோ, கண்ணுக்கெட்டாத தூரத்தில், மங்கலாகத் தெரிகிறது, அதை அடைய 'முன்னேற்றப்' என்ற விளக்கை கையிலேந்தி நிற்கிறோம். நம் உழைப்பு அந்தச் சுடர் விளக்கின் திரியாகட்டும்! நம் சாதனைகள் அச் சுடரொளிக்கு ஊற்றும் எண்ணெயாகட்டும்!!

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம், வளர்க அதன் கொள்கைகள் என்று வீரமுழக்கம் செய்து, வெற்றிப் பாதை நோக்கி விரைந்து செல்வோம்! வெற்றி நமதே!!

பரந்த இந்திய உபகண்டத்துமத்திய சட்டசபையின் தலைவர்—முதல்வர். அவரைப் பேட்டி கண்டிருப்பவர் நிருபர். நிருபர் நினைத்திருப்பார், பேட்டி காணுமுன், சட்டசபையின் முதல்வரைக்காணச் செல்கிறோம், சட்டசபை விவகாரங்கள்பற்றிய தகவல்கள் ஏதையாவது தருவார், சுவையானது ஏதாவது கிடைக்கும், அதை நாட்டுக்குச் சொல்லலாம் நாம், என்பதாக! அவர், அப்படி நினைத்திருந்தால், எதிர்பார்த்து இருந்தால், அது இயற்கையுங்கூட. ஆனால், நிருபர் நினைத்தது கிடைக்கவில்லை. எதிர்பாராதது வந்தது, சபாநாயகரிடமிருந்து!

சட்டசபையின் 'நாயகர்'-பொறுப்பாளர்—கூறுகிறார் வயது வந்தோருக்கு வாக்குரிமை கூடாது என்று!!

பேட்டி கண்டவரோ, நிருபர். பேசியவரோ சபாநாயகர். பேட்டியில் எதிர்பார்த்ததோ ஏதாவது விஷயங்கள்! ஆனால் கிடைத்ததோ விஷயமல்ல, விஷப்பேச்சு!!

சில தினங்களுக்குமுன் அரசியல் நிர்ணயசபையில் இதேபோலத்தான், பிரஜேஸ்வரபிரசாத் என்பாரும் கூறினார், அவர் சொன்ன பொழுது சபையில் சிரிப்பு எழுந்தது என்று ஒருதகவல் பெற்றோம் நாம். அதைக்கேட்டபோது நமக்கு ஆத்திரம் வரவில்லை, அனுதாபம் உதித்தது, "பாவம்! ஒன்றும் தெரியாதவர் போலிருக்கிறது. கைதூக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டவர்போலும் காங்கிரஸ் முத்திரையில். ஏதோ, தப்பித்தவறி பேசவிட்டதன்விளைவுதான் இது" என்று இது ஒரு ரகம் என்றும் கருதினோம்!

ஆனால் இப்போது அதே கருத்தைக்கூறுகிறார்—வயது வந்தோருக்கு வாக்குரிமைகூடாது, அந்த அடிப்படையில் தேர்தல்நடத்துவது இந்தியாவுக்கு ஒத்துவாராது என்று; இவர்—மத்திய சட்டசபையின் தலைவர். மக்கள் வோட்டுப்பெற்று அவர்கள் பிரதிநிதிகளாய் வந்திருக்கும் சட்டசபை உறுப்பினர்களை நேர்வழியில் இட்டுச்செல்லும் பொறுப்புக் கொண்டவர் சொல்கிறார்! நாட்டின் ஆட்சியை நடாத்தும் மண்டபத்தின் அதிபதி, உயர்ந்த இடத்திலிருப்பவர், உத்தம நிலையில் இருக்கவேண்டியவர் கூறுகிறார்!

இந்தக் கூற்றை நாம் அலட்சியப்படுத்திவிடுவதற்கில்லை—சொல்பவர், பொறுப்புள்ளவர், பொறுப்பு வகிப்பர் என்பதால். கூறியவரும் காங்கிரஸ், கனவான், ஆட்சியிலிருப்பவர்களும் காங்கிரஸ் 'கனம்'கள், எனவே ஏதாவது 'பேச்சுக்கும் செயலுக்கும்' தொடர்பிருந்தாலும் இருக்கலாம் என்பதால்.

மவலங்கர் மறந்திருக்கமாட்டார், தான் இன்று எது கூடாது என்று கூறுகிறாரோ, அந்த 'வாக்குரிமை'யால்தான், சட்டசபைஉறுப்பினராகி உயர்ந்த பீடமாகிய சபாநாயகர் பதவியையும் அடைய முடிந்தது என்பதை. இருந்தும், இப்போது சொல்கிறார், வயதுவந்தவருக்கு வாக்குரிமை கூடாது, இந்த முறை ஒத்து வாராது என்று!

எனவேதான், நமக்கு, ஏற்பட்ட ஐயம் இன்னும் அதிகமாகிறது, ஆட்சி காங்கிரசாருடையதாக இருப்பதாலும், அவர்களிலே பொறுப்புள்ள ஒருவர் இப்படிக் கூறுகிறார் என்பதாலும்.

எட்டமுடியாதகோபுரம்! சந்தர்ப்பம் அதன்படிக் கட்டுகளை ஒருவனுக்குக் காட்டுகிறது. அதன் வழியே ஏறி, உச்சிக்குப்போய்ப் பார்க்கிறான் உள்ளங் குளிருகிறது, அங்கு வீசும் காற்று, இருக்கும்நிம்மதி, இடவசதி, இன்பம் எல்லாவற்றையுங் கண்டு. உடனே, அவன் இதயத்தில் ஆசை மலர்கிறது 'இங்கேயே எப்போதும் இருந்து விட்டால்.........' என்று! சபலம் தட்டியதுமே, முடிவுக்கு வந்துவிடுகிறான், அல்லும் பகலும் அனவரதமும் அங்கேயே இருப்பது, ஆசை தீர எல்லாவற்றையும் அனுபவித்து மகிழ்வது என்று!

அடுத்த நிமிடமே, படிக்கட்டுகள் வழியாக வேறுயாராவதுஏறி உச்சிக்குவந்து விட்டால் என்ன செய்வது? இறங்கவேண்டி வந்துவிடுமே என்ற அச்சம் உதிக்கிறது. ஆசை ஒரு பக்கம், அச்சம் ஒரு திசையில்! இரண்டுக்குமிடையே அகப்பட்ட அவனுக்குத் திடீரென மூளையில் ஒரு யோசனை உதிக்கிறது. தான் ஏறிவர எந்தப் படிக்கட்டுகள், உதவியாகயிருந்தனவோ, அவைகளை இடித்து விடச் சொல்வது என்று எண்ணமிடுகிறான்.

முடியுமா, இத்தனை படிக்கட்டுகளையும் இடிப்பதுசாத்தியமா என்ற எண்ணங்கள் அவனுக்கு எழும்பினால்தானே! ஏதோ முடிவுக்கு வந்துவிடுகிறான். இருக்குமிடம் கோபுரம் என்பதால் குரல் நெடுந்தூரம் ஒலிக்குமெனக் கூவுகிறான், 'இதற்கு ஏன் படிக்கட்டுகள்? வேண்டாம்; தேவையில்லை. இருப்பதால் பயனில்லை இடித்து விடுங்கள்' என்று!

இத்தகைய ஆளாகத்தான் காட்சி தருகிறார் 'கனம்'மவலங்கர்— கோபுரம் ஏறிய கோமான்! மத்திய சட்டசபையின் சபாநாயகர்!!

* * *

சுயநலம், ஒரு கொடிய பாம்பு! அதன் நஞ்சு, உள்ளத்தில் படிந்து விட்டால் பொது வாழ்வு கொண்ட மனிதன் சுகவாழ்வை எப்படி அடைவது என்றே சுயநலத் திட்டங்கள் தீட்ட ஆரம்பித்து விடுகிறான். திடீரென எப்படியோ, அந்தச்சுகவாழ்வு, அவனுக்குகிடைக்கிறது. கிடைத்த சுகம் நிரந்தரமானதல்ல, நீர்க்குமிழி போன்றது என்பது தெரிகிறது அவனுக்கு. அச்சம் உருவாகிறது, எவ்வளவு இன்பம் அனுபவிக்கிறோம், எத்தனை போக போக்கியங்கள், இவ்வளவையும்இழப்பதா? இன்னொருவன் படிக்கட்டுகள் ஏறிக் கோபுரம் வந்து சேர்வதா? அவன்வந்தால் நம்பாடு 'அரோகரா' தானே, என்ற அவல நினைவுகள், அவனை ஆட்கொண்டதும், நிலையற்ற சுகத்தை நீட்டிக்கொள்வது எப்படியென்றே யோசிக்க முற்பட்டு விடுகிறான்.

'சுயநலமே ஜீவ சுபாவம்' என்று ஆகியதும் அவன் மூளை கோணல் ஆகிவிடுகிறது, பேராசைப் பித்தனாகி விடுகிறான். ஆசையும், இருப்பதை இழக்காமலிருக்கவேண்டும் என்ற பேரார்வமும் பிடித்துக் குலுக்க ஆரம்பித்தால் 'கோணல் புத்தி'யின் கொனஷ்டைகள், கிடைத்த இடங்களிலெல்லாம் தாவ ஆரம்பித்து விடுகின்றன—ஆசை முற்றுப் பெறாது, விளைவு பலன்தரமுடியாது என்று அறிந்திருந்தாலும். இந்தக் கோணல் புத்திகளின் நிலை பரிதாபமானதுதான்! ஆனால், பரிதாபம் போக்க, படுமோசமான செயல்களில் ஈடுபடுவதும், பிறருக்குக் கேடுவிளைவிக்கும் செய்கைகளைச் சிருஷ்டிப்பதும், பரிகாரம் ஆகிவிடாது.

(5-ம் பக்கம் பார்க்க)

மாஜி கடவுள்கள்

சுதர்சனம்-என்பது அவருடைய சக்ராயுதத்தின் பெயர்—பாஞ்ச சன்யம் என்பது அவருடைய, சங்கின் பெயர், என்று நம்நாட்டுப் புராணிகர்கள், விஷ்ணுவுக்காகக் கட்டிய கதைகளிலே கூறினர். டியூடன் புராணிகன், இதுபோலவே, கடவுள்களுக்குப் பெயர் சூட்டியதுடன், வாகனங்களுக்கும் பெயரிட்டான். மக்கள் கடவுளின் திருநாமத்தைப் 'பஜித்தது' போலவே வாகனங்களையும் கருவிகளையும், பஜித்து வந்தனர்.

ஆக்கவும் அழிக்கவும், ரட்சிக்கவும் தண்டிக்கவும், ஆற்றல்கொண்ட ஒரு முழுமுதற் கடவுள் போதும், என்ற அளவில், ஆத்திகம் அமையவில்லை. பலப் பல கடவுள்களைத் தேடவும் நாடவும், ஒவ்வோர் கடவுளைப் பற்றி ஒவ்வோர் விதமாகப் புகழ் பாடவுமாக இருந்தனர். பல கடவுள்களைப் பற்றிய எண்ணம் இருந்ததால், ஒன்றுக்கொன்று தொடர்பு என்ன என்பது பற்றியும் யாராரின் ஆற்றல் எதெதிலே சிறந்திருந்தது என்பதற்கும் பல கற்பனைகளைக் கட்டவேண்டி நேரிட்டது. இதனால், புராணப் புளுகுகள் மலை என வளர்ந்தன — அவ்வளவையும் நம்புவதுதான் ஆத்திகர் கடமை என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருந்து வந்தது, அந்நாளில், டியூடன் மக்களுக்கு.

கடவுள் என்றால், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றைக் கடந்தவர், எட்டி எட்டிப் பார்ப்பவருக்கும் எட்டாப் பொருளாக இருப்பவர், கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர், என்ற தத்துவார்த்தப் பேச்சுகள் கிளம்பு முன்னம், கடவுள் ஒன்றல்ல, பல! ஒருரு அல்ல, பல்வேறு உருவங்கள்! பல கடவுள்களுமாகக் கூடி உலகைப் பரிபாலித்தனர் என்றல்ல, தங்களுக்குள் பகைத்துக்கொண்டும், போரிட்டுக்கொண்டும் வாழ்ந்து வந்தனர் என்றெல்லாம் கதைகள் இருந்துவந்தன. அவ்வளவும் அறிவுக்கு ஒவ்வாதவையே, எனினும் நம்பினவன் நற்கதி பெறுவான், நம்பாதவன் தலையில் இடிவிழும், நாசமாவான் என்றுதான், மதகுருமார்கள், மிரட்டி வைத்தனர். எந்தச் சமயத்தில் எந்தக் கடவுளுக்குக் கோபம் வருமோ, என்ற அச்சம் பிடித்தாட்டியபடி இருந்தது பேதை மக்களை. எல்லாக் கடவுள்களையும், மகிழ்வித்தால்தான், தங்களுக்குக் கேடேதும் ஏற்படாது என்ற எண்ணம் உண்டாகவே, மக்கள் தங்கள் நேரத்தில் மிகப்பெரும் பகுதியை, கடவுட் கூட்டத்தினை மகிழ்விக்கும் காரியத்துக்கே செலவிட்டு வந்தனர். ஒவ்வோர் கடவுளுக்கு ஒவ்வோர் சமயம், திருவிழாவாக, பூஜைக்குரிய சமயமாகக் குறிக்கப்பட்டு, அந்த முறை தவறாமல், மக்கள், 'பக்தி' செலுத்தி வந்தனர்.

ஓடின் தான்ஒப்பற்ற முழுமுதற் கடவுளாயிற்றே — அண்டபிண்ட சராசரத்துக்கும் ஆதிகாரணமான ஐயனாயிற்றே, அவன் அருள் கிடைத்தால் போதுமே, அவன் ஆணைப்படிதானே, அணுவும் அசையும், ஆழ்கடலும் அடங்கி நிற்கும், அவனைப் பஜித்தால் போதுமே, என்று டியுடன் மக்கள் எண்ணவில்லை. ஓடின் ஒப்பற்ற கடவுள்தான்— அவர் அருள்தேவைதான்—அவருக்கான பூஜைகள் புரியவேண்டியதுதான்-ஆனால்......! - என்று கூறிப் பெருமூச்செறிந்தனர். அவர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும், புராணிகர்கள், வேறோர் கடவுளையும் சிருஷ்டித்துக் காட்டினர்.

தேவ குமாரன் தார் வந்து நின்றான்—பூஜையைப் பெற—பக்தர்களின் காணிக்கையைப் பெற - மூட நம்பிக்கையின் விளைவைக் காண!

தார் தேவன், ஓடின் தேவனின் குமாரன்; பல திருக்குமாரர்கள் ஓடினுக்கு, எனினும் தார் தேவனே, முதல்வன், முக்கியமானவன், தந்தையை மிஞ்சக்கூடிய வல்லமை பெற்றவன், தரணியோரின் பக்தியையும் பாசத்தையும் அதிக அளவில் பெற்று, ஆதிக்கம் செலுத்தினவன்.

டியுடன் புராணிகர் சிருஷ்டித்த இந்தத் தார் தேவன், இடியாதிபதி-சம்மட்டிச் சூரன்—சர்வ வல்லமையுள்ளவன்!

ஆதிக்கம் செலுத்துவதற்கான ஆற்றல் கொண்டவன், என்பதை எடுத்துக்காட்டும், உடலமைப்பு! எதிர்ப்போரை நொருக்கிவிடத் தக்க வலிமை வாய்ந்த கருவியான, சம்மட்டி, கரத்தில்! இந்தச் சம்மட்டியின் பெயர், முஜோல்னர் என்பதாகும்.

முருகனின் வேலாயுதம், சிவனாரின் சூலாயுதம், விஷ்ணுவின் சக்ராயுதம் போலவே, தார் தேவனுக்கு ஒரு சம்மட்டியாயுதம்—அதற்கு ஒரு திருநாமம்! வேலும் சூலமும், சக்கரமும் சங்கும், பூஜைக்குரியனவாகக் கருதப்படுவது போலவே, ஆதி நாட்களில் டியூடன் மக்கள், முஜோல்னரைப் பூஜைக்குரிய புனிதப் பொருளாகக் கருதினர்.

இந்த ஆற்றல்மிக்க கடவுளுக்கு, இரண்டு ஆடுகள் பூட்டப்பட்ட ரதம்! அதிலேறித்தான், அண்டமெங்கும் சென்று வருவார், இந்த அதிசூரர்.

என்னதான் தத்துவார்த்தம் கூறினாலும்!

தகப்பனும் ஓடினுக்கு, வாயுவேக மனோவேகமாகச் செல்லக் கூடிய குதிரை இருந்தது என்று புராணிகன் புகழ்ந்தபோது, அற்புதமான குதிரை! தேவாம்சம் பெற்ற புரவி! என்று பக்தர்கள் கொண்டாடினர்; அதே பக்தியுடனேயே, தார் தேவனின் ஆடுகளையும் கொண்டாடினர்! கருடன், மயில் இரண்டையும் இங்கு 'பாமரர்' ஒரேவிதமான பக்தியுடன் தானே கொண்டாடுகின்றனர்!

கொண்டாடினர்!-அங்கு: கொண்டாடுகின்றனர்!! —இங்கு. இறந்தகாலம், அங்கெல்லாம். நிகழ்காலம், இந்நாட்டிலே!!

பசுவும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்குமாம், 'தர்மயுகத்தில்'; அப்போதும், தப்பித்தவறி, புலி சற்று, பகை உணர்ச்சியைக் காட்டினால் போதும், வைகுந்தநாதனின் 'சுதர்சனம்' பறந்து வந்து, புலியின் சிரத்தை அறுத்தெறிந்து, விடுமாம், என்று இன்றும் பாமரர் கதை பேசுகிறார்களல்லவா, அது போலவே, முன்னாட்களில், மூடமதியினராக, ட்யூடன் மக்கள் இருந்து வந்த போது, உலகிலே, எங்கேனும், ஏதேனும், அக்ரமம் நேரிட்டால், உடனே, தார்தேவனின் 'சம்மட்டி ஆயுதம்' கிளம்பும், அக்ரமத்தை நொருக்க, என்று கதை பேசிக்காலந் தள்ளி வந்தனர்.

தார்தேவனின் இந்தச் சம்மட்டியின், சக்தியை விளக்கப் பலப் பல கதைகளைக் கட்டினர் புராணிகர்கள் —பல பாசுரங்களை இயற்றினர் புலவர்கள்—பக்தர்கள் பாடிப் பரவசமடைந்தனர்—பூஜாரிகள் கொழுத்தனர். இன்று, ட்யூடன் இனத்தின் வாழையடி வாழையாக உள்ள, மக்களிடம் சென்று தார்தேவனின் திருவிளையாடலைக் குறித்துக் கேட்டால், கைகொட்டிச் சிரிப்பர், நமது நாட்டவர்போல, திருவிளையாடற் புராணத்தை எடுத்துக் கொடுத்து, பூரிப்படையார்.

சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், ஆழ்கடல், பூமி, எனும் எல்லாவற்றையும் படைத்துள்ள சக்தியே, கடவுள், எனவே, வேறுயாருக்கும், வேறு எந்தப் பொருளுக்கும், இல்லாத வலிமையும் மகிமையும், உள்ளவரே, கடவுள், என்று இன்றுபேசப்படுகிறது இது தெளிவு பெற்ற ஆத்திகம் என்றும் கூறப்படுகிறது. முன்பு, இந்தத் 'தெளிவும்' கிடையாது. கடவுளுக்கும், மற்றவர்களுக்கு நேரிடுவது போலவே, கஷ்டம், ஆபத்து, பகை, பாசம், சஞ்சலம், ஏற்படும்! சில சமயம், தோல்வியும் துயரமும் உண்டாகும்! சில வேளைகளில் கடவுள் விரட்டப்படுவார், விண்ணுலகை விட்டே!! பிறகு, மீண்டும் போரிட்டு, 'ராஜ்யத்தை' மீட்டுக் கொள்வார்! இப்படி எல்லாம் புராணங்கள்.

கடவுளைப்பற்றி இவ்விதம் கதைகளைக் கட்டுகிறோமே, இவைகளைப் படிக்கும்போது, ஒரு காட்டரசனுக்கும் கடவுளுக்கும், என்ன பேதம் என்று மக்கள் எண்ணக்கூடுமே, கடவுட் தன்மைக்கே இழுக்கை அல்லவா இந்தக்கதைகள் உண்டாக்குகின்றன என்று மக்கள் எண்ணக்கூடுமே என்பது பற்றிப் புராணிகர்கள் கவலைப்படவே இல்லை! அவர்களுக்கு இருந்த துணிவெல்லாம், கடவுட் சம்பந்தமான கதைகளை, யாராவது ஆராயத் தொடங்கினால், சந்தேகித்தால், கேலிபேசினால், கண்டித்தால், பாமர மக்களைக் கிளப்பிவிட்டு, நாத்திகன் எனப் பழிசுமத்தி அழித்து விடலாம் என்பதுதான். அவ்விதம் அழிக்கவும் முடிந்தது அவர்களால்! பலபேர்களை!! சித்ரவதைக்கும் கொலைக்கும் தப்பிப் பிழைத்த ஒரு சிலரால்தான், நெடுங்காலத்துக்குப் பிறகு, உலகு, உண்மை ஒளியைக் காண முடிந்தது.

தார்தேவனுக்கு அந்நாட்களிலே இருந்துவந்த செல்வாக்கு, ராஜ்யாதிகாரிகளையே நடுநடுங்கச் செய்யக் கூடியது; ஆற்றலை விளக்கிட அவ்வளவு 'அற்புதக்கதைகளை'க் கட்டி வைத்தனர். பாமரர் படித்தும், படிப்போர் பக்கநின்று கேட்டும் பக்திமான்களாயினர். அவர்களின் மனக்கண்முன், விண்ணும், அதிலே கொலுவீற்றிருக்கும் தாரும், அவன் ரதத்தில் பூட்டப்பட்ட ஆடுகளும், கரத்தில் இருந்த சம்மட்டியாயுதமும், தெரிந்தவண்ணம் இருந்தன. தார்தேவனை, அவர்கள், ஓடினை விடப் பலசாலி, என்று எண்ணினர் அருளை நாடினர்—பூஜைகள் பலப் பல செய்து.

“ஓ! பக்திமான்களே! ஓடின் தேவன் பெற்றெடுத்த, ஒப்பிலா மணியாம், தார்தேவனின், வீரதீரச் செயலைக் கூறுவேன் கேளீர்!” என்று புராணிகன் கூறுவான், ட்யூடன் மக்கள், அந்தப் புராணிகன், தார்தேவன்கூடவே பழகி, இவ்வளவையும் நேரில் கண்டறிந்து கூறுகிறான் என்று எண்ணுபவர் போல, வாய் பிளந்தபடி, அவன் கூறும் அபத்தக் கதைகளைக் கேட்பர்.

சிங்கமுகா சூரன்—மகிஷா சூரன் —என்று பகைவர்களும், அவர்களைச் 'சம்ஹரிக்க' பகவான் கிளம்பியதுமான கதைகளை, இன்றும், நம் நாட்டுப் பாமரமக்கள் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் கேட்டு ரசிக்கின்றனர்! பாமரர் மட்டுமா? பாராளுமன்ற நிபுணர்களும் கூட அல்லவா, இத்தகு பச்சைப் புளுகுகளைப் பரப்புவதற்குக் கிளம்புகின்றனர், வெட்கத்தை விரட்டிவிட்டு. பாமரன், சொல்வதை அப்படியே நம்புகிறான் — அதாவது, மகிஷாசூரன் என்றால், எருமைக் கடாமுகம்கொண்ட சூரன், என்று உள்ளபடி நம்புகிறான் — பாராளுமன்றத்தை அலங்கரிக்கும் பேர்வழியோ, இதற்கு ஒரு தத்துவார்த்தம் கூறுவான்—எருமைக்கடா முகம் என்றால், எருமை முகம் என்றே பொருள் அல்ல—வலிமையும் கொடுமையும் விளங்கிடும்விதமான முகம் என்பது தத்துவார்த்தம் என்று கூறுவார். இவ்வளவே வித்தியாசம்! என்னதான் தத்துவார்த்தம் கூறினாலும், அறிவுக்குப் பொருந்தாததும், எத்தகைய மாண்பையும் வளர்க்கமுடியாததும், கடவுட் கொள்கைக்கே ஊறுதேடுவதுமான கதைகளைப் பாமரரிடம்பரவவிடுவது தீமையைத் தருமே, தெளிவை உண்டாக்காதே, என்பதுபற்றி, இந்தக், கற்றும் மற்றவர்போலவே உள்ளவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை. இவ்விதமான கதைகளின்மீது கட்டப்பட்டுள்ள, கோகுலாஷ்டமி, ராமநவமி, சிவராத்திரி, தீபாவளி, கார்த்திகை, அவிட்டம், போன்ற பண்டிகைகளைக் கொண்டாடி, பாமரரை மேலும்பாழ் குழியில் தள்ளும் பணிபுரிகின்றனர்.

பணக்காரக் கடவுள், எனவே மரியாதை கிடைத்தது

தார்தேவனின் திருவிளையாடல்களை அடிப்படையாகக்கொண்டு, திருவிழாக்களும், பண்டிகைகளும் நடத்திக்கொண்டு வந்த ட்யூடன் மக்களிடையே அறிவுத்தெளிவு ஏற்பட்டு, அவர்கள் உண்மை ஒளியைக்கண்டு, உலகிலே உயர்ந்த நிலைஅடைந்தனர். இதற்கான வழிகளிலே, அந்நாட்டு அறிவாளிகள் பணிபுரிந்தனர்.

கடவுளுக்குப் பெண்டு பிள்ளை இருப்பதாகவும், போரும் பகையும் காதலும் கேளிக்கையும் உண்டு என்பதாகவும், எண்ணுவது மடைமை என்று இடித்துரைத்தனர் — வெறிகொண்டவர்களின் தாக்குதலுக்கு அஞ்சி அவர்கள், உண்மை கூறுவதை நிறுத்திக்கொள்ளவில்லை. இன்னல்பல ஏற்பட்டன! இழித்தும் பழித்தும் பேசப்பட்டனர்! சொல்லொணாக்கொடுமைகளுக்காளாயினர், எனினும், பாமரரின் மனப்பிராந்தியை ஓட்டாமல் விடுவதில்லை என்று சூள் உரைத்துச் சொந்த வாழ்வைமறந்து பணிபுரிந்தனர், வெற்றி கண்டனர் — தார்தேவன், மாஜிகடவுளானான்.

ஒரு அரசனை விரட்டுவது என்பதே, எவ்வளவோ, ஆபத்தான காரியம். மன்னன் என்றால் அவனிடம் படை உண்டு; கோட்டை கொத்தளம் உண்டு; கொலைகாரர் பலர் உண்டு; அவன்பக்கம் நின்று பணிபுரிவதைப் புண்ய காரியமாகக் கருதும் பாமரர் கூட்டம் உண்டு, பணம் உண்டு! இவ்வளவையும் எதிர்த்து, மன்னனை விரட்டி மக்களாட்சியை அமைப்பது, புரட்சி என்பர்!

இதற்கே, எவ்வளவோ பேர், களத்திலே பிணமாக நேரிட்டிருக்கிறது! கொட்டிய இரத்தம் கொஞ்சமல்ல! சித்திரவதைகள், எவ்வளவோ! சிறையிலே வாடினவர்கள், நாடு கடத்தப்பட்டவர்கள், ஏராளம்!

ஒரு மன்னனைவிரட்ட இவ்வளவு கஷ்டம் என்றால், மக்களால், தலைமுறை தலைமுறையாகக் “கடவுள்” ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டு, தொழப்பட்டு, வந்த ஓடின், தார், எனும் தேவர்களை மாஜிகளாக்குவதற்காகச் செய்யப்பட்ட புரட்சிகள், எவ்வளவு பயங்கரமான ஆபத்துக்களை உண்டாக்கியிருக்கும், அறிவு பரப்பும் படையினருக்கு என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான்; பகுத்தறிவு வாதிகளின் ஆற்றலும் தன்னலமதிப்பும், தெளிவாகத் தெரியும்.

ஒருமன்னனை, கொடுங்கோலனை வீழ்த்துவது புரட்சி என்று பூரிப்புடன் பெருமையுடன் கூறப்படுகிறது — உண்மையுந்தான் அது — கடவுள்களை மாஜிகளாக்கிய சம்பவங்கள், இவைகளைவிட எவ்வளவு பெரும் புரட்சிகள் என்று எண்ணிப் பார்க்கும்போதுதான், பகுத்தறிவுப் படையினரின், மாண்பு விளங்கும். மக்களாட்சியைஅமைக்க, மாவீரர் நடத்திய புரட்சிகளை விட, பலவகையிலும், வீரமிக்கவை, அறிவாட்சிஅமைக்கப் பகுத்தறிவுவாதிகள் மேற்கொண்ட புரட்சிகள். அந்தப் புரட்சிகளின் பலனாகத்தான், தார்தேவன், மாஜி கடவுளானான்!

தார், கடவுளாக இருந்தபோது, எத்தனை விதமான கதைகள்! நம் நாட்டுப் புராணிகன், தோற்றான், என்று கூடக் கூறலாம், அவ்வளவு அற்புதக் கதைகள்!

கடவுட் கூட்டத்துக்கு எப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டு வந்த, ஜோட்டேன் கூட்டம் ஒன்று இருந்ததாம்—தேவர்களுக்குத் தொலை தர அசுரக் கூட்டம் இருந்ததாக, நம் நாட்டுப் புராணிகர்கள் கூறுகிறார்களல்லவா, அது போல. இந்த ஜோட்டேன்களுடன், அடிக்கடி போர் மூண்டுவிடும்! தார்தேவனின் சம்மட்டி ஆயுதத்தின் மகிமையினால்தான், இந்தஜோட்டேன்கள் அழிக்கப்பட்டனர். தார் தேவனின் பெருமைக்கு முக்கியமான காரணம், இதுவேயாகும். கடவுள்களையே கலங்கச் செய்துகொண்டிருந்த ஜோட்டேன்களை அடக்கிய கடவுள், தார்தேவன்!

நம் நாட்டுக் கந்தபுராணம் இல்லையா, முருகனின் வேலாயுதத்தின் மகிமையை விளக்க. அதுபோல, தார்தேவனின் சம்மட்டி ஆயுதத்தின் மகிமையை விளக்க, ஜோட்டேன் சம்ஹாரப் புராணம் கிளம்பிற்று.

சமுத்திரதேவன், ஒருமுறை, ஓடின் மாளிகைக்குச் சென்றான், விருந்துண்ண. ஓடினும் தாரும், குடும்பம் பூராவும், சமுத்திர தேவனுக்கு உபசாரம் செய்து மகிழ்வித்தனர்.

சமுத்திர தேவனிடம் இவ்வளவு கனிவு காட்டியதற்குக் காரணம், அந்தத் தேவன், பெரும்பணக்காரன் என்பதுதான். ஆழ்கடலுக்கு அடியில் அவனுக்கோர் அணிமாளிகையாம், அங்கு, தங்கத்தை நெருப்பிலிட்டுச் சமயல் செய்வார்களாம்! ஈஜிர் என்ற திருநாமமுடைய இந்தச் சமுத்திரதேவனுக்கு, ரான் என்ற தேவியும், ஒன்பது குமாரிகளும் உண்டு! கடலிலே செல்வோர், தங்கக் குவியலைக் காணிக்கையாகச் செலுத்தினால்தான், தப்பமுடியும்! இதனால், சமுத்திர தேவனிடம் ஏராளமான தங்கம் குவிந்து கிடந்ததாம். கடவுளர் உலகிலேகூட, பணக்காரருக்கு ஒரு தனி மரியாதை!! எனவே, சமுத்திர தேவனுக்கு ஓடின் விமரிசையான விருந்தளித்தான். தேவரசம் தரப்பட்டது! தேவகானம் அளிக்கப்பட்டது, தேவர் தேவனும் ஓடினால், கடலுலகக் கடவுளுக்கு. மைசூர் மகாராஜாவுக்குத் திருவிதாங்கூர் மகாராஜா விருந்தளித்தால், கேரள நாட்டுத் தேமொழிக் கன்னியரின் கானமும் நடனமும் நடக்குமல்லவா, அதுபோல! பிறகு, திருவிதாங்கூர் மன்னரை, மைசூரார், தமது ராஜ்யத்துக்கு வருமாறு அழைப்பாரல்லவா! அதுபோலவே, சமுத்திரதேவன், தன் ராஜ்யத்துக்கு ஒருமுறை வந்து போகும்படி, ஓடினைக் கேட்டுக்கொண்டார்.

ஓடின், குடும்ப சகிதம் சமுத்திர லோகம் சென்றார், விருந்தாளியாக! கேட்கவேண்டுமா, கேளிக்கையை! தங்கத்தை விறகாக்கும் தேவனாயிற்றே, ஈஜிர்! விருந்தும் வைபவமும் பிரமாதமாக இருந்தது. எனினும் ஒரு குறை தெரிந்தது! ஓடின் தந்ததுபோல, இனிமையான ரசபானம், தரவேண்டும் என்று ஈஜிர் விரும்பினான்—ஆனால், வந்திருக்கும் கடவுளருக்கெல்லாம், போதுமான அளவு, 'ரசபானம்' காய்ச்சுவதற்

பாண்டம் தேடிய பகவான்

கேற்ற, பெரிய கோப்பரை இல்லையாம்!

என்னய்யா பைத்யக்காரத்தனம்! தேவன் என்கிறீர், மகிமை மிகுந்தவன் என்கிறீர்! ஆழ்கடல் முழுவதும் அவன் ஆணைக்கு அடங்கும் என்று கூறுகிறீர்—அடுப்பு நெருப்பிலே, தங்கத்தைத் தூவுகிறான் என்று அளக்கிறீர், அப்படிப்பட்டவன் அரண்மனையில், பாயசம் காய்ச்சப் பாண்டம் இல்லை என்று கூறுகிறீரே! இதென்ன விந்தை!!—என்று கேட்கத் தோன்றும், கிருத்திகை அமாவாசைகளுக்குக்கூட! ஏனெனில், விஷயம், நம் நாட்டுக் கடவுளைப் பற்றியதல்ல, எனவே தைரியமாகக் கேட்கத் தோன்றும்—கடவுளுக்குப் பாண்டம் கிடைக்கவில்லையா! என்று கேலி பேசத் தோன்றும். ஆனால், ட்யூடன் மக்கள் அந்தக் காலத்தில், இவ்விதம் கேட்கவில்லை — கேட்பது பாபம் என்று எண்ணினர் — அவ்வளவு பைத்தியக்காரர்களாகவா இருந்தனர் அந்த மக்கள்? என்று கேட்கத் தோன்றும் — ஆமாம்! அவ்வளவு அறிவீனர்களாகத்தான் இருந்தனர்—அந்த அறிவீனத்தையே ஆத்திகம் என்று கொண்டனர். அவர்கள் அந்நாளில் இருந்த நிலையில் இன்று இல்லை — அவர்கள் அந்நாளில் இருந்தநிலையை கேட்டுக்,கேலிபேசும் கண்ணியர்கள், இந்நாளிலும் நம் நாட்டிலே, பாமரரில் பெரும்பாலோர், இதுபோன்ற அறிவுக்கொவ்வாத கதைகளைப் புண்ய ஏடுகளாகப் போற்றுகிறார்களே, இதற்கென்ன செய்கிறார்கள்?

ஆடு ஏறும் ஆண்டவன்! சம்மட்டி ஏந்தும் சர்வேசன்! பாண்டம்தேடிய பகவான்! என்றெல்லாம், தார்ஓடின் போன்ற ட்யூடன் கடவுள்களைப்பற்றிய கதைகள் கூறப்படும்போது, கேலியும் கண்டனமும் தானாக,இயற்கையாகத்தோன்றி, இப்படியெல்லாமா, மூடநம்பிக்கை இருந்தது என்றுகூறிடத்தோன்றுகிறதேதவிர, தோடுடைய செவியன், விடை ஏறி, ஓர் தூவெண் மதிசூடி, காடுடைய சுடலைப்பொடி பூசி, என் உள்ளம் கவர்கள்வன் — என்று, இன்றும், பாசுரம் படிக்கும்போது இப்படியும் கடவுளைச்சித்தரிப்பதா என்று கேட்டால் சீற்றம்தானே பிறக்கிறது! சரியா? சிந்தித்துப்பாருங்கள்!!

பாயசம் காய்ச்சப் பாண்டமின்றிக்கவலைப்பட்ட சமுத்திர தேவனைப்பார்த்து, விருந்துக்கு வந்திருந்த தார்தேவன், நான் கொண்டு வருகிறேன், பெரியதோர் பாண்டம் என்று கூறினான்.

தார்தேவன் இவ்வண்ணம் கூறியதற்குக்காரணம், ஒன்பது உலகிலும் உள்ள பாண்டங்களை எல்லாம்விடப் பெரியதோர் பாண்டம், இருக்குமிடம் தனக்குத்தெரியுமென்று, டையர் என்ற ஒருகடவுள் தந்த தகவல்தான். சரி, என்றான் சமுத்திர ராஜன்—உடனே தார்தேவன், டையர்தேவனுடன், பாண்டம் கொண்டுவரக்கிளம்பினான்.

அண்டசராசரத்துக்கு அப்பாலுள்ள ஓர்இடத்தில் நாய்முகம் கொண்ட ஓர் அசுரன் — அவன், இந்த டையர்தேவனுக்கு, ஸ்வீகாரத் தகப்பனும்! அவனிடமே அவ்வளவு பெரியபாண்டம்இருந்ததாம்! அதைக் கொண்டுவரக் கிளம்பினான் தார்.

தாரோ, தேவன் — தேடுவதோ பாண்டம்!!

டான் கிஸ்டர், டான் கிரிஸ்னர் எனும் இரண்டு ஆடுகளையும், ரதத்தில் பூட்டினான், தார் — ரதம் வாயு வேகம் மனோவேகமாகச் சென்றது—வழியில், ஓர்வாண்டல் என்றோர் நண்பன்வீடு—அங்கு சென்று இளைப்பாறினர். பிறகு, கால்நடையாகவே கிளம்பி, நாய்முக அசுரன் இருக்குமிடம் சென்றனர் — இந்த அசுரன் பெயர், ஹைமர்.

அசுரனுடைய அரண்மனையை அடைந்ததும், அங்கு, பல தலை கொண்ட பயங்கர ராட்சசக்கிழவி, இவர்களை வரவேற்றாள் ஏனெனில் அவள், டையர் தேவனின் பாட்டி! அவள், அசுரஜாதி! எனினும் அவள் பேரன், கடவுள் ஜாதி!! கதை, வெறும் கேலிக் கூத்தாக இருக்கிறதே என்று சொல்வீர்கள்! கடவுள் கதை! திருவிளையாடற் புராணம்! சந்தேகித்தால் பாபம்!! என்று கூறுவர், மதவாதிகள்.

பாட்டி அசுரஜாதி, அகோரரூபம்—ஆனால் அவள் மகள், அதிரூப சுந்தரி! இவளுடைய உதவி, டையருக்கும், டையர் தயவால் தார்தேவனுக்கும் கிடைத்தது.

மாலையில், வீடுவந்தான் நாய்முகசூரன்—பெரிய பெரிய மீன்களுடன்! தார்தேவனையும் டையரையும் கண்டதும் கடுங்கோபம் கொண்டான். அவனுடைய கோபப்பார்வை பட்ட மாத்திரத்தில், அங்கிருந்த பல பொருள்கள் பொடிப் பொடியாகி விட்டன. அவனைச் சாந்தப்படுத்தி, டையரும் அவன் நண்பனும் விருந்தாளிகளாக வந்திருப்பதை அதிரூப சுந்தரி வினயமாக எடுத்துக் கூறினாள்.

பிறகு, சாப்பிட உட்கார்ந்தனர். மூன்று காளைகளைச் சுட்டு, விருந்துக்குக் கறியாக வைத்தான் அசுரன். இரண்டுகாளைகளை, தார்தேவன் வேகமாகத்தின்றுதீர்த்துவிட்டான்—இந்தத் திருவிளையாடலைக் கண்டு அசுரனே திடுக்கிட்டுப் போனான் — அதேபோது கோபமும் பிறந்தது. ஏனெனில், யார், தனக்குச் சமமாகச் சாப்பிடவில்லையோ அவர்களைக் கொன்று விடுவது, அவன் சபதம். மிகச் சாதாரண உருவுடன் உள்ள தார், எப்படியும் தன் அளவு சாப்பிட முடியாது, ஆகையால் அவனைக் கொன்றுவிட முடியும், என்று எண்ணித்தான், அசுரன், மூன்று எருதுகளைப் பொசுக்கி வைத்தான் விருந்துக்கு — தார்தேவனோ, இரண்டு எருதுகளை விழுங்கிவிட்டார்—ஆகவே கொல்வதற்கில்லை! இந்தத் துயரம் தாக்கிற்று அசுரனை.

அந்தநாள் பக்தர்கள் முன் பூஜாரி பாடியிருப்பானல்லவா, இது பற்றி! இப்போது காளிகோயில் பூஜாரி பாடுகிறானே, பல்லுக்கு பல் காதம், பல்லிடுக்கு முக்காதம், என்று, உடனே பக்தர்கள், ஆமா

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram,

REGD M 4642

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1949

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 6-11-49 | இதழ் 19

என்ன பிரயோசனம்?

"அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. அதைத் தொடர்ந்து பொருளாதார சுதந்தரமும் கிடைக்கவேண்டும். மனிதனின் கஷ்டங்களையும் அவதிகளையும் குறைப்பது நம்மால் முடிந்த காரியமே. இதை நோக்கமாகக் கொள்ளாவிடில் அரசியலினால் என்னதான் பிரயோசனம்? நமது திறமையான வாதங்களினால்தான் என்ன பிரயோசனம்?"

பண்டித நேரு
சான்பிரான்ஸிஸ்கோ.
31—10—49

சீறிடுபவர், சிந்தனைக்கு!

இருப்பதையெல்லாம், எங்கேயோ இருப்பவனுக்குக் கொடுத்துவிட்டு 'இல்லை', 'என் செய்வேன்' என்று யாராவதுகூறினால், அவனை ஏமாந்தவன் என்று கூறுவார்கள்!

'அவன் யார் தெரியுமா, எனது அருமைச் சகோதரன் — அவன் பிறப்பும், இனமும் வேறுதான்— இருந்தாலும் அவன் என் சகோதரன். எவ்வளவு நல்லவன் தெரியுமா? எது கேட்டாலும், கொடுத்துவிடுவான். இதோ பாருங்கள் அவன் சகோதர வாஞ்சையை. எங்கே, தம்பி எடு மணிபர்சை! என்று, ஆசைப் போக்கில் மதிமயங்கிப் போன ஆளிடம் பேரம்பேசி அவனை ஏமாற்றி வாழ்பவனை எத்தன் என்று அழைப்பார்கள்!

பிடுங்கிய பணத்திற்குப் பதிலாக நன்றிகூடக்காட்டாது, தன்வாழ்வை உயர்த்திக்கொள்ள, மணிபர்சையும் கொடுத்துவிட்டுஅவனிடம்,'அண்ணா! கொடு அரையணா' என்று பிச்சை கேட்கும் பாணியில் கேட்பவனை ஏமாளி, எதுக்கும் இலாயக்கில்லாதவன் என்று கூறலாம்!

சுயநலக்காரன், எத்தன், ஏமாற்றி வாழ்வை அமைத்துக்கொள்பவன்- ஏமாளி, வாழத் தெரியாதவன், இருப்பதையும் இழந்து தவிப்பவன் நினைவுகள், இந்தியசர்க்காரின் புதுச்சட்டம் ஒன்று அமுலுக்குவந்திருப்பதையறியும் எல்லோர் உள்ளத்திலும் ஓடிவரவே செய்யும்.

சுரங்கம் — சுரங்கப்பொருள்கள் சம்பந்தமாகக்கடந்த ஆண்டு இந்திய சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம், கடந்த மாதம் 25-ந்தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இந்தச்சட்டம் எல்லாமாகாணங்களையும் கட்டுப்படுத்துவதாகும். இந்தச் சட்டப்படி, சிலசாதாரண "சுரங்கப் பொருள்" தவிர, ஏனையவையெல்லாம் மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டதாகவே இருக்கும், சுரங்கப் பொருள் சம்பந்தமாகச் சலுகைகள், ஏதாவது பெறவேண்டுமென்றால், அது சுரங்கப் பொருள் கிடைக்கும் மாகாணத்துக்குக் கிடைக்காது, மத்தியசர்க்காருக்கே 'அந்த' அதிகாரம், உண்டு. அதிகாரம் என்றால் சாதாரணமானதல்ல, எது வேண்டுமானாலும், எது செய்வதானாலும், அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளலாம். இச்சட்டத்தின் கீழ் இந்திய சர்க்காரின் கைக்கு இன்றியமையாத சுரங்கப்பொருள்களெல்லாம் போகின்றன. நிலக்கரி, இரும்புத் தாதுப் பொருள் முதலியவை, இவைகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியனவாகும்.

சுரங்கப் பொருள் சம்பந்தமாக, ஏதாவது "உத்தரவு" பெறவோ, 'அனுமதி' பெறவோ, வேண்டுமானால் மத்திய சர்க்காருக்கே விண்ணப்பிக்க வேண்டும். சென்னை மாகாணத்திலிருக்கும் ஒருவர், தென்ஆற்காட்டிலிருக்கும் ஒரு சுரங்கத்தைக் குத்தகைக்கு எடுத்து நடத்தவோ, அல்லது 'லைசென்ஸ்' பெறவோ வேண்டுமானால், அவர் மத்திய சர்க்காரிடமே விண்ணப்பிக்க வேண்டும். மத்திய சர்க்காரின் நிபந்தனைகளை, சட்ட திட்டங்களை அவர் ஏற்றுக்கொண்டால்தான், அவருக்கு லைசென்சோ வேறு அனுமதிகளோ கொடுக்கப்படும்.

எந்த நிபந்தனைகளின்மீது, இந்தியசர்க்கார், சுரங்கங்களைக்குத்தகை விடலாம், அனுமதி தரலாம் என்று வரையறுக்கிறதோ அவைகளைப் பூர்த்திசெய்தால் மட்டுமே, அனுமதி இச்சட்டத்தின் மூலம் அளிக்கப்படும்.

சென்னைமாகாணம் வளம் நிறைந்தது—சுரங்கப்பொருள்கள், மிகுந்தது என்று நாம், அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம்.

சிங்கரேணி, தென் ஆற்காடு மாவட்டம், சேலம் மாவட்டம், திருநெல்வேலிமாவட்டம், மதுரைமாவட்டம் ராயலசீமா, கோதாவரி பள்ளத்தாக்கு முதலிய இடங்களில் நிலக்கரியும், மைசூர். பெல்லாரி முதலிய இடங்களில தங்கமும், நெல்லூர் மாவட்டத்தில் செம்பும், பத்ராவதி, கெம்பங்குடி (மைசூர்) காஞ்சமலை, கோடுமலை, தாலமலை, கொல்லிமலை, போன்ற சேலம்மாவட்டத்தைச் சேர்ந்த இடங்களில் இரும்பும், பல இடங்களில் மாங்கனீஸ், மைகா, மாக்னசைட், மோனசைட், தோரியம் முதலிய முக்கிய இன்றியமையாத தாதுப் பொருள்களும் சென்னை மாகாணத்தில் இருக்கின்றன, அணுசக்திக்குத் தேவையான தோரியம் இங்குதான்! ரேடியம் இங்குதான்! சுரங்கப் பொருள்கள் இவ்வளவு மிகுந்ததாகச் சென்னை மாகாணம் இருக்கிறது—வளம் வழிந்து ஓடுகிறது, இங்கு! ஆனால், இத்தனையும், மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டதேயொழிய மாகாண சர்க்காருடையதல்ல.

ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் செயற்கையாக வைரம் செய்யமுடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். வைரம் இருக்கிறதே, அதை விடக் குறைந்தவிலையில், சாதாரணமாகயாரும் உபயோகிக்கக்கூடிய முறையில் இந்த வைரம் கிடைக்கச் செய்யலாம். சிவப்புவேண்டுமா, பச்சை தேவையா, பழுப்பு நிறம் கேட்கிறீர்களா, மஞ்சளாக இருக்கவேண்டுமா, எந்த நிறத்தில், எப்படி வேண்டுமானாலும் தயாரிக்க முடியுமாம்.

வைரம்போல ஒளி உண்டு, வருடக்கணக்கில் அந்த ஒளி நீடித்து நிற்கும், அடிக்கடி 'பாலிஷ்' செய்ய வேண்டிய அவசியம் கிடையாது, இத்தகைய செயற்கை வைரம்— அசல் வைரம் போலவே இருக்குமாம்.

ஆனால், விலை, வைரத்தை விடக் குறைந்ததாக இருக்குமென்றும், ஆசைப்பட்டு அது வாங்கப் பணம் இல்லையே என்று ஏங்கும் சாதாரண குடும்பப் பெண்கள்கூட, வாங்கி அணிந்துகொள்ளக்கூடிய விலையில் கிடைக்குமாம்.

இத்தகைய செயற்கை வைரம், தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள் ரூடைல் (Rutile) என்பதாகும். இது மலபார் கடற்கரையிலும், திருவாங்கூரிலும் அபரிமிதமாகக் கிடைக்கும் மானசைட் பொருள்களிலிருந்து கிடைப்பதாகும்.

செயற்கை வைரம் செய்வதற்...

(4-ம் பக்கம் பார்க்க)

ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி!

★ ★ ★

ஆயுதத் தளவாடங்களுக்கு அதிகத் தொகை ஏன்?

சமாதானம் தழைக்க அது அல்ல வழி!

'பட்ஜட்'டில் பாதிக்குமேல் தளவாடச் செலவா?

சக்தியையும் நேரத்தையும் வீணாக்குகிறீர்களே!

இதை, வேறு வழியில் சிறிதளவு செலவிட்டால், அமைதியும் மகிழ்ச்சியும் முகிழ்க்காதா!

பவனி வரும் பண்டித நேரு அவர்கள், தனக்குக் கொலம்பியா பல்கலைக் கழகம் பட்டமளித்துக் கௌரவித்த போது, ஆற்றிய சொற்பொழிவில், சிந்திய சொற்கள் இவை. இந்த அறிவுரைகளைக் காணும்பொழுது, உண்மையிலேயே நம்உள்ளம் மகிழ்கிறது. பல நாடுகள், 'பட்ஜட்' போடும் பொழுது ராணுவச் செலவை அடிப்படையாக வைத்தே, திட்டம் வகுக்கின்றன, அது தீது, கொடுமைபயக்கும், கூடாதுஎன்கிறார். யாரும்மறுக்க முடியாத ஒன்று இது, பல நாடுகள் இப்படிச் செய்கின்றன என்கிறார் பண்டிதர். இவ்வழி சென்றால் இன்பம் விளையாது, இன்னல்தான் ஏற்படும் என்றும் அறிவுறுத்துகிறார். இதற்கெனச் செலவிடும் மகத்தான தொகையில் சிறிதளவு வேறுவழிகளில் செலவிட்டால் கூடப் போதுமே, அந்தந்த வழிகளால் ஏற்படும் பயன் நமக்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் பரிசாகத் தருமே, என்றும் ஆயாசத்துடன் கூறியுள்ளார். அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய, மறுக்க முடியாதஉண்மை இது 'போர்!போர்'! என்ற எண்ணத்துடன், பாதுகாப்பு என்ற திரையில் தனது நாட்டின் பலத்தை, செல்வாக்கை, செழிப்பை ராணுவத்தால், தான் பெற்றிருக்கும் விமானப்படையால், போர்க் கப்பல்களின் எண்ணிக்கையால் எந்த நாடும், மதிப்பிட எண்ணுவது தவறு. இத்தகைய உயர்ந்த எண்ணமும், ஆசையும், எதிர்பார்க்கும் இன்பத்தை, நன்மையை, பலனை, மக்களுக்கு அளிக்காது. இந்தப் பாதைக்கெனச் செலவிடும் தொகையில், சிறிதளவாவது, வேறு வழிகளில் செலவிட்டால், போர் முழக்கத்துக்கென விரயமாகும் தொகையில், கொஞ்சம் 'பொருள்' மக்களுக்குச் செலவிட்டால், மக்களிடையே இன்பத்தைக் காணலாம்! அவர்கள் மதிப்பையும் பெறலாம்! அவர்கள் மகிழ்ச்சியைக் கண்டு நாமும் மகிழலாம்!

பண்டிதரின் இந்த அறிவுரை பாராட்டக்கூடியது. அதுவும், அவர் அமெரிக்காவில் — போர் முகாம் — ஒன்றில் பவனிவரும் பொழுது, இத்தகைய அறிவுரையைத் தருகிறார் என்று எண்ணும் பொழுது, அவருடைய துணிச்சல் கண்டு, யாருக்கும் பாராட்டத்தான் தோன்றும்.

அமெரிக்காவோ 'போர்' ஒன்று வருகிறது, என்ற எண்ணத்துடனேயே, எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. இன்றோ, நாளையோ என்று எண்ணும்படியாக அவ்வளவு, அதி சிரத்தையுடன், மும்முரத்துடன், முனைந்துகிடக்கிறது. ஆண்டுதோறும் அதற்கென, எண்ணிப்பார்க்கவும் இயலாத அளவில், அவ்வளவுதொகையைச் செலவிட்டு வருகிறது. வரும் ஆண்டுக்கு மட்டும் தனது ராணுவப்படையின் உதவிக்கென 15,158,863,498 டாலர்கள் ஒதுக்கும் ஒரு மசோதாவை, சமீபத்தில் நிறைவேற்றியுள்ளது, 1516-கோடி டாலர்கள், அதாவது 7200 கோடிரூபாய்களை, வரும் ஆண்டு இராணுவச்செலவுக்கென ஒதுக்குகிறது! இவ்வளவு ஏராளமான தொகையை, மக்கள் வாழ்வை வேதனை மயமாக்கும் போருக்கென, ஆயுதத் தளவாடங்களுக்கென விரயமாக்குவதைக்காண எவருக்கும் இதயம் துடிக்கும்! இத்தகைய, அழிவுப்பாதையில் விரைந்தோடும் அமெரிக்காவில், பவனி வரும்பொழுது, போர்கூடாது, அது புதுவாழ்வு தந்துவிடாது, அதற்குச் செலவிடும் பணத்தை வேறு வழிகளில் செலவிட்டால், இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்று, துணிந்து கூறியுள்ளார் நேரு. விருந்தாளியாக வந்திருக்கிறோமே, இச்சொல் அமெரிக்காவுக்குக் கசப்பு மருந்தாகக் காணாதா, என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல், துணிச்சலுடன் வெளியிட்டுள்ளார். அவரது அறிவுரையைக் காணும்பொழுது, ஒரு பரந்த உபகண்டத்தை நிர்வகிக்கும் பிரதமர்—பண்டிதநேரு அவர்களின் சமாதான வழியை நோக்கும் பொழுது, யாருக்கும் மகிழ்ச்சிதான் ஏற்படும். நேருவின் துணிச்சல், அவரது அறிவுரை, காண நமக்கும் மகிழ்ச்சிதான் ஏற்படுகிறது, உள்ளத்திலிருந்து பாராட்டுக் குவியத்தான் செய்கிறது. ஆனால், அதே வேளையில், இந்தியக் கல்வி மந்திரி அபுல்கலாம் ஆசாத் நினைவு வந்து, நம்மை அலைக்கழிக்கவும் செய்கிறது.

சமீபத்தில் டெல்லியில் ஒரு கல்விக் கழகத்தைத் திறந்து வைத்த பொழுது, 'ஆசை அதிகமுண்டு; ஆனால், செய்யத்தான் முடியவில்லை!!' என்று முகாரி பாடியுள்ளார், நாட்டில் கல்வி மலர எத்தனையோ, திட்டங்களைத் தீட்டிவைத்துள்ளோம், ஆனால் அத்தனையும் நிறைவேற்றக் கையிலே, பணமில்லை, என் செய்வது என்று வழக்கமான பாட்டைப் பாடியுள்ளார்.

பண்டிதநேரு தனது அமெரிக்கப் பவனியின்போது, உலகுக்கு அறிவுறுத்திய, அருஞ்சொல்லும், அதே நேரத்தில் இங்கு ஆசாத் வைக்கும் 'ஒப்பாரி'யும், ஒரே நேரத்தில், எண்ணத்தில் படரும்பொழுது "ஊருக்கடி உபதேசம்! உனக்கல்லடி தோழி!" என்று சொன்ன, உன்மத்தனின் கதை நமக்கு நினைவுக்கு வருகிறது. ஊருக்கெல்லாம் உபதேசம் பொழிவானாம் ஒருத்தன். எப்படியெப்படி நடந்துகொண்டால், ஊர் முன்னேறமுடியும், எல்லோரும் மகிழமுடியும் என்றெல்லாம். அவன் உபதேச மொழியைக்கேட்ட

அவன் மனைவி, அதன்படியே நடக்க எண்ணி, வருபவர்களுக்கு விருந்து, வந்தவர்க்கெல்லாம் வரிசை என்று வடிக்க ஆரம்பித்தாளாம். அதுகண்டகணவன், "ஏனடி இந்தக் கோலம்! நான் சம்பாதிப்பது, அதை வீணர்களுக்கு விரயமாக்குவதா?" என்று ஆத்திரத்துடன் கேட்க, நீங்கள்தானே உபதேசித்தீர்கள், ஊராருக்கு, இல்லையென்னாது செய்க, அதுதான் அறம் என்று பதில் சொல்ல, அதுஊராருக்கடி, உனக்கல்ல!' என்று விளக்கம் தந்தானமே, அந்த எண்ணத்தில் தூய்மை இல்லாதான். உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவன் நினைப்புத்தான் வருகிறது நமக்கு, பண்டிதரின் பவனியில் சிந்திய அறிவுரையையும், ஆசாத் வைக்கும் ஒப்பாரியையும் காணும் பொழுது!

ஆயுத தளவாடங்களுக்கென்று, பொருளைச் செலவிடல் வீண்; அதுவும் வரும் வருமானத்தில் பெருந்தொகையை அதற்கெனச் செலவிடல் அழிவுவேலை என்று பண்டிதர் கூறியுளளார். அதற்கெனச் செலவிடப்படும் தொகையை வேறுஎதற்காவது செலவிட்டால், இன்பம் முகிழ்க்குமே, எண்ணங்கள் தூய்மையடைந்து சமாதானம் கொழிக்குமே என்றும் சஞ்சலத்துடன், நல்லுரை கூறியுள்ளார், இந்த நல்லுரையைக் கண்ட அதேநேரத்தில், ஆசாத்தின் 'முகாரி' இங்குள்ள நிலைமையைப் பற்றி எண்ணத்தூண்டுகிறது.

நேருவின் நிலை, ஊருக்கடி உபதேசம், உனக்கல்லடி' என்று கூறிய ஆளை நமக்கு நினைவுக்குக்கொண்டு வருகிறது.

இராணுவச் செலவுக்கென அதிகமான பணம் செலவிடுவது ஆகாதது ஆகாது, நன்மை தராது என்று கூறுகிறார். ஆனால், அவரது சர்க்கார், இந்தியசர்க்கார் ஆண்டுக்கு எத்தனை கோடிரூபாய்களை 'பாதுகாப்பு' என்ற பெயரால் செலவிடுகிறது என்ற நினைவு அந்நேரத்தில் நேருவுக்குவரவில்லைப்போலும்!

ஆண்டுக்கு வருமானத்தில் பாதிக்குமேல் இந்தியசர்க்கார் இராணுவம் படை ஆகியவைகளுக்கெனச் செலவழிக்கிறது. 157 கோடி ரூபாய்களை தனது பட்ஜட்டில் ஒதுக்குகிறது! இந்தியாவின் ஏழ்மைநிலையில் வரவில் பாதித்தொகையை, இராணுவத்துக்கெனச்செலவிட்டுத் தவிக்கிறது.

வேறுபல மக்கள் நன்மைக்கான திட்டங்களை நிறைவேற்றாமல், அமுல் நடத்தாமல், இன்பம் தராமல்.

இருந்தும் நேரு, அமெரிக்காவில் அறிவுரை கூறியுள்ளார், இராணுவத்துக்கெனச் செலவிடும் அவ்வளவு தொகையில் சிறிதளவாவது, வேறு வழிகளில் செலவிட்டால் எவ்வளவுமகிழ்ச்சியும் இன்பமும் பரிசாகக் கிடைக்கும் தெரியுமா, என்று. அந்த அறிவுரையை, நேரு இந்தியா விஷயத்தில் கடைப்பிடித்திருந்தால், ஆசாத் ஏன், அல்லல் பாடம் படிக்கப்போகிறார்!

கல்விவளர்ச்சி, நேரு கூறுவது போல மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்று—மக்களை மக்களாக ஆக்குவது, கருந்தனம் போன்றது. இந்த நல்ல காரியதுக்குப் பணம் இல்லையே, என் செய்வது என்று ஏங்குகிறார், ஆசாத். இருந்தால், என்னென்னமோ செய்யத் திட்டம்வைத்திருக்கிறேன், என்கிறார்; இல்லாததால், எதுவும் இயலவில்லை—இருந்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று போதிக்கிறார்!

இந்திய சர்க்காரோ, இராணுவத்துக்காக வருமானத்தில் பாதிக்கு மேல் செலவிடுகிறது, விரயமாக்குகிறது!

பிரதமர் நேருவோ, இராணுவ ஆயுததளவாடங்களுக்கென அபரிமிதமாகச் செலவிடுவது, அடாது கூடாது என்று அறிவுரை கூறுகிறார், அங்கு, அமெரிக்காவில், அதற்குச் செலவிடும் தொகையை வேறு 'எதற்காவது' செலவிட்டால், பலனும் பயனும் அதிகமாகுமே என்று ஆயாசத்துடன் கூறுகிறார்!

வேறு எதற்கும் செலவிட வேண்டாம், கல்வி வளர்ச்சி, மக்கள் முன்னேற்றம், ஆகியவைகளுக்குச் செலவிடக்கூடாதா என்று கேட்கத் தோன்றுகிறது நமக்கு!

நேருவின் போதனை, ஊருக்கடி உபதேசம் என்று இருக்கக்கூடாது—இதுவரை 'இவ்வளவு' தொகையை ராணுவம் என்ற படாடோபத்துக்காகச் செலவிட்டதை இனியும் நீடிக்கக்கூடாது. நேரு வார்த்தையில் கூறவேண்டுமானால், இது பயன் தராது, இதனால் சமாதானமும் அமைதியும் ஏற்பட முடியாது.

எனவே, ஏராளமான அளவில், இங்கும் விரயமாகும் தொகையைக் குறைக்க, அமெரிக்காவிலிருந்து, திரும்பியதும் நேரு முயல்வாரா? நேர்மைப் பாதையில் நடப்பாரா? நல்லது நாடுவாரா? அவர் 'அமைதி'க்குள் அடங்கிவிட்டால், அவரது நண்பர்களாவது, இதை நினைவூட்டுவார்களா, நிலைமையை விளக்குவார்களா, என்று கேட்க விரும்புகிறோம்—தொல்லை படும் சமுதாயத்தின் சார்பில்.

அங்கு, ஒன்று பேசிவிட்டு அதற்கு நேர்முரணாக இங்கு நடப்பது, நேர்மைக்கு, காந்தியார் கூறிவந்த 'சத்தியத்துக்கு' நேர்முரணானது. பார்ப்போம், எந்தப் பாதையில் நேரு செல்வார், அவரது கட்சியினர் பின்பற்றுவர் என்பதை!

2-ம் பக்கத் தொடர்ச்சி

தேவையான சுரங்கப்பொருள்கூட, இருக்கிறது, இங்கு! இதன் மூலம், எவ்வளவோ வருமானத்தை மாகாணம் பெறமுடியும்! ஆனால், வாய்க்கால் இங்கேயொழிய, நீர்தான் அங்குப்பாய்ச்சப்படுகிறதே!

மத்திய சர்க்காரின் சுரங்கப் பொருள்—சுரங்கங்கள் சட்டப்படி, செயற்கை வைரம் செய்வதற்குத் தேவையான ரூடைல் பொருளும், அவர்கள் கைக்கேபோகிறது! அவர்கள்கட்டுப்பாட்டுக்குக் கீழேயே இருக்கிறது!

இவ்வளவு வளம்நிரம்பியதாக, சுரங்கப்பொருள்களை உடையதாகச்சென்னை மாகாணம் திராவிடம்—இருக்கிறது.

இருந்தும் 'ஏமாளி'யாக இருக்கிறோம், காசை 'அங்கு' கொடுத்துவிட்டு 'பிச்சை'க் கேட்கிறோம்! சுரங்கங்களையும், சுரங்கப் பொருள்களையும் மத்திய சர்க்கார் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்கிறது. இதனால், ஏற்படும் லாபம், வரும் பணம், எல்லாம் அவர்களுக்குச் சொந்தமாகிறது!

திராவிடம் பிரிந்தால், இவை நம்முடையதாக, எத்தகைய வளமுள்ளவர்களாக நாம் வாழமுடியும்! என்ன இல்லை இங்கு! எல்லாம் இருக்கிறதே, வர்ணிக்கமுடியாத அளவில்!

ஏன், நாம் தனித்து நின்று, வளமாக, வாழ்வுடையவர்களாக ஆகக்கூடாது. நினைத்துப் பார்க்கவேண்டுகிறோம், 'திராவிட நாடு' என்ற பேச்சைக் கேட்டாலுமே சீறிடும் காமராஜர்களை!

*

* துன்பக்கேணி *

"காத்தானுக்கு கல்யாணம் செய்ய..."

"பெண்ணு, யாருடா?"

"மாலூர் மருதை, மவங்க!"

"நல்ல பெண்ணு, நடுவாளாடா?"

"பண்ணைக்கேத்ததுங்க. பயந்து ஒடுங்கி நடக்குங்க!"

மகன் காத்தானுக்கு கல்யாணம் செய்ய விருமபுவான் கூத்தன், விருப்பத்தை 'ஆண்டை'யிடம் தெரிவிப்பான்! மிராசுதாரர் கேட்பார், வரப்போற 'நடவாள்' நன்றாக நடுவாளா, சண்டித்தனம் செய்யாமல் சாணி எடுப்பாளா, 'ஆச்சி' கூப்பிட்டதும் அடங்கி ஒடுங்கி நிற்பாளா, என்று!

'அய்யா'விடமிருந்து, மகன் கல்யாணத்துக்குப் பணம் வாங்க வேண்டியவனான கூத்தன், 'அய்யா'வுக்குத் திருப்தி ஏற்படும்படி தகவல்கள் தருவான். மிராசுதாரருக்குச் சரியெனப்பட்டால், காத்தானிடம் 'நோட்டு' எழுதி வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பார்!

பணம் பெற்றுக் கொண்டபின் தம்பதிகளான காத்தானும் காத்தாயியும் ஆண்டையின் அடிமைகளாகி விடுவர்! சாகும் வரை! அய்யாவுக்கே உழைத்துக் கொட்டுவர்! இடையில், எந்தவித விமோசனமும் ஏற்படாது, 'அய்யா'தான் பணம் கொடுத்திருக்கிறாரே! மிராசுதாரர் கொடுத்த 50 அல்லது 60 ரூபாய்கள் 'அவர்கள்' வாழ்வை, அவரது பண்ணைக்குப் பணயம் வைத்துவிடும்! காத்தானும் காத்தாயியும், இளமை, அதுதாண்டி நடுவயது, அது கடந்த வயோதிகப் பருவம் ஆகிய வாழ்க்கையின் சகல நாட்களிலும், ஆண்டை அழைத்த குரலுக்கு வந்து, உழைத்துக் கொண்டேயிருப்பர்—ஒருநாள் கூடத் தவறமாட்டார்கள்! ஓய்வும், நிம்மதியும் அவர்களுக்கும் கிடைப்பதுண்டு கடைசியில—அதாவது உயிர் உடலைவிட்டுப் போனபின்பு! இருவருக்கும் பிறந்த மகன் 'அஞ்சான்' வாழ்க்கை 6 வயதில் அய்யா வீட்டுக்கு மாடு மேய்ப்பதில் ஆரம்பமாகும், 10 வயதில் 'போடி—ஆள்' ஆக வேலை செய்வான், பின் கல்யாணம்—'கடன்' – அடிமைச் சீட்டு, உழைப்பு, சாவு!

* * *

இந்த நிகழ்ச்சிச் சித்திரம், துரதிர்ஷ்ட இந்நாட்டின் ஒரு படப்பிடிப்பு! வர்ணனையல்ல, வாழப்பிறந்து வாழ்க்கையென்பது பண்ணையின் வயல்தான் என்று கருதி, உழைத்து, சாவும், உழைப்பாளிகள்-விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை ஓவியம்! பண்ணையில் பாடுபடுவான், பண்ணையாளாகயிருப்பான், கூப்பிட்ட குரல் கேட்டு, இட்ட வேலைகள் எல்லாம் செய்து, என்ன வேண்டுமானாலும் கொண்டுவந்து தந்து, 'ஏண்டா' என்று அழைக்கு முன் 'ஏன், சாமி!' என்று ஓடிவந்து, ஆண்டையின் மீது பக்தியும், தான்வாழாவிட்டாலும் அவர் வாழ்ந்தால் போதும் என்ற விசுவாசமும் கொண்டு நிற்கும், இலட்சக்கணக்கான, விவசாய உழைப்பாளிகளின் வேதனைச் சித்திரம், நாம் மேலே தீட்டியிருப்பது!

நாட்டின் உயிர்நாடிகள், சூதுவாதறியா பாமரக் கூட்டம், படிப்பு வாசனை கூட அறியாது 'பண்ணையாள்' என்று கூறிக்கொள்வதிலேயே பெருமையும், பூரிப்பும் கொண்டு, புழுக்களாய்—மண்கூடுகளாய்—மண்ணோடு மண்ணாகும் வேதனைக் காட்சி இது! நெஞ்சு வெடிக்கும் நித்திய நிகழ்ச்சி!

இந்நாட்டைத் தவிர வேறு எங்கும் "காணமுடியாத கோர வாழ்வு" இது! 'இந்த வாழ்வுத் திருத்தப்படவேண்டும், விவசாயிகளான அவர்களும் 'மனிதர்'களாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சர்க்கார் யோசனையின் பேரில் விவசாய அபிவிருத்தி குறித்து ஆலோசனைகள் கூறுமாறு நியமிக்கப்பட்டிருந்த ஜே. சி. குமரப்பா கமிட்டி, இப்போது விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக ஆட்சியாளருக்குத் தெரிவித்துள்ளது ஒரு யோசனை தன்னுடைய பல சிபார்சுகளில் ஒன்றாக. விவசாய முன்னேற்றம் குறித்து அக்கமிட்டி சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள், நம்மைப் பொறுத்தவரையில், நாட்டுக்கு நல்லது செய்ய முடியாது என்றே நாம் நம்பினாலும், விவசாயத் தொழிலாளர் நிலைபற்றி அது குறிப்பிட்டுள்ள யோசனை நம் பாராட்டுக்குரியதாகிறது.

> விவசாய அடிமைத்தனம் சட்ட விரோதமாக்கப்படவேண்டும்.
>
> அவர்களுக்கென, வாழும் மனைக்கட்டுகள் கிடைக்கச் செய்யவேண்டும்.

இந்த இரண்டு அம்சங்களும் அவர்கள் யோசனைகளில், சிந்தியிருப்பவையாகும். உடனடிப் பிரச்னை என்ற அளவில் இவை வரவேற்கப்படவேண்டியது மட்டுமல்ல, ஆளவந்தார், இவைகள் பற்றிக் கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டிய விஷயமுமாகும்.

விவசாயம் இந்நாட்டின் ஜீவநாடி. அந்த விவசாயத் தொழிலில் கழனி இறங்கி காலைமுதல் மாலைவரையில், பிறந்ததுமுதல் சாகும்வரை உழைக்கும் விவசாயித்தொழிலாளர்கள்—ஆதித்திராவிடப் பெருங்குடிமக்களேயாவர்!

ஊருக்கு உழைக்கும் கூட்டம் இது! கள்ளங் கபடற்றது, கல்வி வாசனை அறியாதது, 'பண்ணை'யே வாழ்க்கை, 'ஆண்டை'யே கடவுள் என்று எண்ணியுழைக்கும் ஏழைப் பட்டாளம் இவர்கள்! மாசுபடியாத உள்ளங்களையுடைய இந்த மனித மாணிக்கங்களுக்கு — இந்துமதம் தந்திருக்கும் பரிசுகள் — தீண்டப்படாதார், பஞ்சமர்கள் என்பன! பயிர்த்தொழிலைச் செய்வதும், அதற்காகப் பாடுபடுவதும் இவர்கள் தான்!

இருந்தும், இன்றுவரை இவர்கள் வாழ்வு சோபிதமாகவில்லை! துளி கூட முன்னேறச் செய்யப்படவில்லை!

மகன் மாடு மேய்ப்பான்!

மனைவியும் ஆளும் உழைத்துக் கொண்டேயிருப்பார்கள்!

பெற்றோர்—இருந்தால்—அவர்

களுடைய வேலையும் அது தான்!

இப்படி, உருளுகிறது, அவர்கள் உலகம்! இத்துணை உழைப்புக்கும் அவர்களுக்கு கிடைப்பதோ பட்டினி, பசி, ஏழ்மை!

ஆண்டையிடம் 'நோட்டு' எழுதிக் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கிவிட்டால், பின் வாழ்நாள் முழுதும் அவன் பண்ணையின் அடிமையாகி விடுகிறான். இந்த அடிமை விலங்கிலிருந்து, அவனால் என்றும் மீள முடியாது—சாப்பாட்டுக்கேத் திண்டாடும் அவன், எப்படி, 50-அல்லது 60-ரூபாய்க் கடனைத் திருப்பித்தர முடியும்!

“காசு” கொடுத்து தன் வாழ்க்கையைப் பணயமாக்கிக் கொண்ட மிராசுதாரருக்கு உழைக்கும் இவர்களுக்கென சொந்தச் சொத்து எதுவுமே கிடையாது! குருவிகூட கூடுகட்டிக்கொண்டிருக்கும் “மரம்” தன்னுடையது என நினைத்துச் சுற்றிக்கொண்டுவரும்! ஆனால், இவர்களுக்கோ, குந்தவும் இடம் இடையாது! ஆண்டையின்—மனைக் கட்டில்—குடியிருந்து வருவார்கள். என்றாவது, ஆண்டைக்கு கோபம் வந்து 'வெளியேறுங்கள்' என்று விரட்டினால் 'இவர்கள் கதி நிற்கதி தான்! வானமே கூரை, தரையே வீடு என்ற வெட்டவெளியில்தான் கிடக்கவேண்டும்! இந்நாட்டின், பரம்பரைக் குடிகள், இவர்கள்! இவர்களின்நிலை, அரசியல், அறிவியல், பொருளியல் எல்லாவற்றிலும் பரிதாபப்படக்கூடியது! கண்ணீர் சிந்தக் கூடியது!!

குடும்பம் முழுமையுமே, கஷ்டப்பட்டு உழைத்தும் இவர்களுக்கென, வாழ்வதற்கூட, ஒரு 'சிறுமனை' கிடையாது — இந்தப் பரந்த உபகண்டத்தில்! “பாரத்மாதா” தாண்டவம் புரியும் நாட்டில்! இருக்க இடமில்லாதது மட்டுமல்ல, இவர்கள் தினசரி வாழ்க்கையை நடத்துவது இருக்கிறதே அது மிகவும் விசித்திரமானது—வேதனையூட்டக்கூடியது! தினசரி உழைத்தால்தான், இவர்கள் வயறு நிரம்பமுடியும்! மனைவியும் தானுமாக ஒரு குடும்பம், அன்றன்றாடம் உழைக்கும். மாலையில், ஆண்டை கூலிபோடுவார், அன்றன்றைய கூலியாக வரும் நெல்லை, அப்போதைக் கப்போது, குத்தி, அரிசியாக்கி—கஞ்சிகாய்ச்சுவார்கள்!

இப்படி வாழ்வையே உழைப்புமயமாக்கிக் கொண்டிருக்கும் இவர்கள் பண்ணைக்கு மூட்டைகள் கணக்கில் நெல்லைச் சேர்த்துக் குவிக்கும் இவர்கள் வாழ்வு இத்தகைய கோரமானது! நினைத்தாலே நெஞ்சு வெடிக்கும் தன்மையையுடையது!

குந்த இடம், குடிக்க் கஞ்சி, இவைகளுக்குத் திண்டாடி கோவணாண்டிகளாய், பிறந்த மேனியராய்த் திரிந்துவரும் இவர்களுடைய குழந்தை குட்டிகள் நிலையோ, கேட்க நெஞ்சு நெகிழும்!

கல்வி மணம் அங்கு வீசாது! பள்ளிகள் என்பதையே, அவர்கள் பார்த்திருக்கமாட்டார்கள்! ஆண்டையின் ஆடு மாடு, அடி, உதை இவைகள்தான் அந்தச் சிறு குழந்தைகளுக்குத் தெரியும்! சின்னஞ்சிறு வயது, துள்ளி விளையாடும் பள்ளிப் பருவம், அப்போதே அவர்களுடைய பரம்பரை அடிமைத் தனம் அவர்களைத் தன் கோரவாய்க்குள் ஆழ்த்திக்கொண்டு விடும்!

* * *

நாட்டின் நரம்புகளாக, யாவரும் வாழ வழி வகுத்து வரும், ஒரு தொழிலாளர் கூட்டத்தின் அவலக் காட்சிகள் இவை. மக்களாகப் பிறந்த, இவர்கள் மாடுகளையும்விட கேவலமாக, வாழும் நிகழ்ச்சித் தொகுப்புகள் இவை! கேட்டால், இதயம் துடிக்கும், பார்த்தால் மனம் பதறும் அவ்வளவு கோரமான நச்சுக்கேணியில் அமுக்கப்பட்டுக் கிடக்கிறார்கள்.

நாட்டுக்கோ சுயராஜ்யம் வந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இன்றுவரை 'இவர்கள் துன்ப வாழ்வில், ஒரு துளி நன்மைகூடச் செய்யப்படவில்லை. ஆளவந்தார்களால்!

பழமையால், சனாதனத்தால், வைதீகத்தால், மதத்தால், பிரபுத்துவத்தால், மிராசுக் கொடுமையால் எல்லாவகையிலும் “இழிந்தவர்”களாய் நிற்கும் இவர்களின் வளைந்த முதுகை நிமிர்த்த, ஒடிந்த வாழ்க்கையைச் சரிப்படுத்த, 'ஒருதுரும்பு' அளவுகூட முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை! இந்நாட்டின் பரம்பரைச் சமுதாயம், பொன் விளைத்துக் கொடுத்துவிட்டு புசிக்கவும் வழியின்றி திண்டாடும் பாட்டாளி வர்க்கம், துன்பக் கேணியில், துயரம் தொல்லை என்ற பாம்புகள் பிடுங்க, வறுமையென்ற பாசி பிடித்து இழுக்க, வாடி வதங்கிக் கொண்டு கிடக்கிறது.

இதற்கு ஒரு வழி செய்யவேண்டியது, சர்க்காருடைய முதன்மையானதும், முக்கியமானதுமான பொறுப்பாகும். வேதனையில் உழலும், இவர்கள் வாழ்க்கையை, ஒரே சமயத்தில் இன்பம்நிரம்பியதாகவோ, ஏழ்மையில்லாததாகவோ, இன்றுள்ள சமுதாய அமைப்பில்—அதுவும் தற்போதுள்ள “ஆளவந்தார்”களால் ஆக்கிவிட முடியாது, என்பதை நாம் அறிவோம்! இருந்தாலும், இவர்களை பரம்பரை அடிமையாக ஆக்கும் முறையையும், இவர்கள் இருக்க ஒரு சிறு 'மனை'க்கட்டாவது, இந்தப் பரந்த உலகில் அவர்களுக்கெனச் சொந்தமாக இருக்கும்படியான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்—துன்பக் கேணியில் வீழ்த்தப்பட்டு, தொல்லைகளால் தாக்கப்பட்டு, கண்ணீர் சிந்தி கதறி நிற்கும் ஒரு ஏழ்மைச் சமுதாயத்தின்சார்பில்!

செய்வார்களா! எதிர்பார்க்கலாமா!

சந்தாதாரர்களுக்கு

“திராவிட நாடு” சந்தாதார்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

பொறுப்புணர்ச்சி!

தேவைக்கு மிஞ்சியதைச் சேர்த்துவைத்து, அது, தனக்கும் பிறர்க்கும் பயன்படாதபடி செய்வதில் 'தேர்ச்சி' பெற்றவர்களிடம் தேசிய உணர்ச்சியோ, பொறுப்புணர்ச்சியோ இருக்க முடியாது என்று அண்மையில் சென்னைக்கு வந்த இந்திய சர்க்காரின் உணவு மந்திரி தோழர் ஜெயராம் தாஸ் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். இப்போது ஏற்பட்டுள்ள சர்க்கரை நெருக்கடியைப் பற்றிப் பேசும் பொழுதுதான் இவ்விதம் குறிப்பிட்டார். இதற்கு மேற்கோளாக லண்டனில் நடந்த ஒரு நிகழ்ச்சியையும் எடுத்துக்காட்டினார்.

அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த ஒரு இந்திய அதிகாரி, தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த சர்க்கரைக் கூப்பன்களில்தான் பயன்படுத்தியது போக மிஞ்சியிருந்த கூப்பன்களைத் தன்னுடைய மோட்டாரை ஓட்டியவருக்குப் பரிசாகக் கொடுத்தார் என்றும், அதை நன்றியறிதலுடன் பெற்றுக்கொண்ட டிரைவர், அந்தக் கூப்பன்களை ரேஷன் அதிகாரிகளிடம் கொடுத்துவிடப் போவதாகவும், அதற்குக் காரணம், தன்னுடைய தேவைக்குப் போதிய சர்க்கரைக் கூப்பன் தன்னிடம் இருப்பதால், இந்திய அதிகாரி கொடுத்த கூப்பன்களைத்தான் பயன்படுத்துவது முறையல்லவென்று கூறியதாகவும் தோழர் ஜெயராம் தாஸ் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி, “நம் நாட்டு மக்களுக்கு இவ்வளவு உயர்ந்த நீதியான சமூக உணர்ச்சி வருமா” என்று கேட்டிருக்கிறார்.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு சென்ற அந்த அதிகாரி யார்? எந்த இலாக்காவைச் சேர்ந்தவர்? எதற்காக அங்கு சென்றார்? என்ற விபரங்களை இந்த நிகழ்ச்சியை வெளியிட்ட உணவு மந்திரியார் வெளியிடவில்லை என்ற போதிலும், அந்த அதிகாரி இங்கிலாந்துக்குச் செல்லக் கூடிய அளவுக்கு ஒரு பெரிய பொறுப்பு வாய்ந்த இலாகாவைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு அதிகாரி, தனக்குக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பன்களில் மிஞ்சியுள்ள கூப்பன்களைத் தன்னுடைய மோட்டாரை ஓட்டிய டிரைவருக்குப் பரிசாகக் கொடுத்தார் என்றால், அவரிடம் சிறிதளவாவது பொறுப்புணர்ச்சி இருந்திருக்க முடியுமா என்பதை இந்நிகழ்ச்சியை வெளியிட்ட உணவு மந்திரி சிந்தித்துப் பார்க்கவில்லை என்றே தெரிகிறது. கூப்பன்களைக் கொடுத்தவர் ஒரு அதிகாரி. அவற்றைப் பெற்றுக் கொண்டவரோ ஒரு சாதாரண மோட்டார் டிரைவர். ஒரு இந்திய அதிகாரியிடம் இல்லாத பொறுப்புணர்ச்சி, இங்கிலாந்திலுள்ள ஒரு மோட்டார் டிரைவரிடம் இருக்கிறதென்பதைத்தானே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. அந்த அதிகாரியிடம் சிறிதளவாவது பொறுப்புணர்ச்சி இருந்திருக்குமானால், அவர் தம்மிடமிருந்த கூப்பன்களை மோட்டார் டிரைவரிடம் கொடுக்காமல், ரேஷன் அதிகாரிகளிடமே கொண்டுபோய்க் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் அவரிடம் பொறுப்புணர்ச்சி இருக்கிறதென்று பொருள்கொள்ள முடியும்.

தேசிய உணர்ச்சி, பொறுப்புணர்ச்சி என்றெல்லாம் பேசும் தோழர் ஜெயராம் தாஸ் அவர்கள், அந்தஉணர்ச்சிகள் நாட்டுமக்களுக்கு வருமா? என்று அங்கலாய்ப்பதற்கு முன், அத்தகைய உணர்ச்சிகள், நாட்டை ஆளும் அதிகாரிகளுக்காவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இங்கிலாந்திலுள்ள ஒரு சாதாரண மோட்டார் டிரைவர், இந்தியாவிலுள்ள ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரிக்குப் பொறுப்புணர்ச்சி பற்றிய விளக்கமும் பாடமும் கற்றுக்கொடுக்கிறான் என்றால், இங்குள்ள அதிகாரிகளின் பொறுப்புணர்ச்சி எந்த அளவில் இருக்கிறதென்பது தெளிவாகிறது. மக்களிடம் பொறுப்புணர்ச்சி இருக்கிறதா என்பதை அறிய முயலுமுன் மந்திரிகளிடமாவது அது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

சந்தர்ப்பத்திற்குஏற்றமாதிரிஎதாவது ஒரு நிகழ்ச்சி அகப்பட்டுவிட்டால், அதை எடுத்துக் காட்டி, “இதோ பாருங்கள், இங்கிலாந்திலுள்ள ஒரு மோட்டார் டிரைவர், தனக்குக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பனைத்தான் பயன் படுத்தாமல், அதனை ரேஷன் அதிகாரிகளிடம் கொடுத்துத் தன்னுடைய தேசிய உணர்ச்சியையும், பொறுப்புணர்ச்சியையும் காட்டிக்கொண்டகன்” என்று கூறிவிட்டால் மட்டும் போதுமா? குறிப்பிட்ட நிகழ்ச்சியில் அடங்கியுள்ள கருத்து விளக்கம் என்ன என்பதையன்றோ கவனிக்க வேண்டும்.

இந்திய அதிகாரியால் பரிசாகக் கொடுக்கப்பட்ட சர்க்கரைக் கூப்பன்களைப்பெற்றுக்கொண்ட மோட்டார் டிரைவர் அந்த அதிகாரியைநோக்கி,

“எனக்குத் தரும் சர்க்கரைக் கூப்பன் எனக்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே, நான் இதைப் பயன்படுத்தப் போவதில்லை. ரேஷன் அதிகாரிகளிடமே கொடுத்துவிடப் போகிறேன். தேவைக்கு அதிகமாக நான் சர்க்கரையை உபயோகித்தால், நான் என்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொண்டவனாவேன்.”

என்று அந்த அதிகாரிக்குக் கூறியிருக்கிறான்; இல்லை! பொறுப்புணர்ச்சி என்றால் என்ன என்று பாடம் கற்றுக்கொடுத்திருக்கிறான்.

ஆனால், அந்த நிகழ்ச்சி இங்குள்ள 'நமது' உணவு மந்திரியாரால் பெருமைக்குரிய விஷயமாக-மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகிறது. வெட்கப்படவேண்டிய — வேதனையூட்டக் கூடியநிகழ்ச்சி இங்குவிமர்சனப்படுத்தப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள ஒருசாதாரண மோட்டார் டிரைவருக்கு இருக்கும் தேசிய உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் இங்குள்ள மந்திரிகளுக்கும் மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் ஏற்பட்டாலே எவ்வளவோ நன்மைகளை நாட்டுக்குச்

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 6—11—49 [காஞ்சி

இலட்சியகீதம் ஒரு விளக்கம்

"திராவிடஸ்தான், மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால், அதனை நான் ஏற்கிறேன். ஆனால், பாகிஸ்தானைப் போலத் தனியாட்சி தன்னிச்சைகொண்டதாக ஆவதை நான் விரும்புவதற்கில்லை" என்று, காங்கிரஸ் தலைவர் பட்டாபி, வெளியிட்டுள்ளார், பச்சையப்பன் கல்லூரியில் மாணவத் தோழர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் பொழுது!

மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால் தனக்கும் சம்மதம் தான் என்கிறார். ஆனால் தன்னிச்சை நாடாக, சுதந்திர நாடாக ஆவதைத் தான் ஏற்பதற்கில்லை என்கிறார்.

இன்று எங்கும் மொழிவாரி மாகாணப் பிரிவினை பற்றி உரத்துப் பேசப்படுகிறது. காங்கிரஸ் தலைவர்களும், மொழிவாரி மாகாணப் பிரிவினை அவசியமே, என்ற முடிவுக்கு வந்து, எப்போது பிரிப்பது, எப்படிப் பிரிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்போர் ஏதோ, ஒரு பெரிய 'விடுதலை'யை விரும்புவது போலப், பேசுகின்றனர், எழுதுகின்றனர், முழக்கமிடுகின்றனர்!

அதற்குச் சிறிதும் குறையாத அளவில் காங்கிரஸ் மேலிடமும் 'ஏதோ' ஒரு மகத்தான, மாபெரும் 'சலுகை'யை மக்களுக்கு, அளிப்பதாகக் காட்டிக்கொள்கிறது. மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பதில் 'பிரிவினை' என்ற வார்த்தை இருக்கிறதே ஒழிய, இதனால், ஏற்படும் நலன் யாருக்கு, என்பது கூர்ந்து நோக்கின், விளங்குவதாகும்.

இன்று இந்தியா முழுமையையும் டெல்லியிலிருக்கும் மத்திய சர்க்கார் ஆண்டு வருகிறது.

மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டவையாக மாகாணங்கள் இருக்கின்றன. மாகாணங்கள், ஆங்கில ஆதிபத்யத்தின் அமைப்புகள்! வெள்ளையர் எடுத்தடி வைத்த காலத்தில் "இந்தியா" ஒரேதேசம் இல்லையென்பதும், அதில் சென்னைமாகாணம் பம்பாய்மாகாணம், ஐக்கியமாகாணம் என்பதுபோல மாகாணங்கள் இல்லையென்பதும், யாவரும் அறிந்த விஷயம். ஆங்கில ஆதிபத்திடம் வளர்ந்து ஆட்சிச்சூத்திரம் அவர்கள் கைக்கு வந்தபின், நிர்வாக நலனை அனுசரித்து, மாகாணங்கள் உண்டாக்கப்பட்டன.

வெள்ளையன், வெளியேறிப்போய் விட்டான், தான் வந்தபொழுது, சிதைந்து சிக்கல்கள் நிறைந்து,குட்டிராஜாக்களும், குறுநிலமன்னர்களும் நிறைந்துகிடந்த ஒரு பரந்த நிலப்பரப்பை, ஒரே 'தேசம்' ஆகஅமைத்துக்கொடுத்துவிட்டு.

சுயராஜ்யம் வேண்டும், அந்நியர் விரட்டப்படவேண்டும் என்ற உரிமைக்கிளர்ச்சியைஎழுப்பி 'இந்தியன்' என்ற வார்த்தையைக்கொண்டு,யாவரையும் ஒன்றுசேர்த்துபோராடியது காங்கிரஸ் கட்சி. உரிமைவேட்கையின் காரணமாக எழுந்து வளர்ந்த காங்கிரஸ்கட்சியின் தலைவர்கள், முன்னோடும் பிள்ளைகள், வடநாட்டவர்களாகயிருந்தனர். அவர்களுடன், அந்நிய ஆதிபத்தியதை விரட்டும் வேகத்துடன், ஆசையுடன் யாவரும் ஒன்று திரண்டனர். பலம் காங்கிரசுக்கு வளர்ந்தது. அதோடு அதன் வடஇந்தியத் தலைவர்களின்செல்வாக்கும் வளர்க்கப்பட்டது — அவர்கள் சொன்னதைக்கேட்கும் 'கிளி'களாகயிருந்தவர்களால்! எனவே, அந்நியர் வெளியேறியதும், ஆட்சிப்பீடமும், வடநாட்டார் கைக்குப்போயிற்று.

ஆட்சிப்பீடம்ஏறி,பூரண இந்தியாவுக்கும் தலைவர்களாக வீற்றிருக்கின்றனர் வடநாட்டுமக்களைச் சேர்ந்தோர். எல்லாத்துறையிலும், அவர்கள் வாழ்வு, வளமுடையாதாகஇருக்கிறது. தென்னாட்டைச் சேர்ந்தோருக்கும், பதவிகளில்சில'துண்டு'களும், ஆசைகளும் காட்டி, 'எல்லோரும் ஒரே நாட்டவராக' வாழ்வதாகக் காட்டிவருகின்றனர்.

இன்று, இந்தியாவை ஆளும் மத்தியசர்க்கார், மாகாணங்களைப் பிரிப்பதில், மொழிவாரியாக அமைப்பதில் நாட்டம் கொண்டிருக்கிறது. பெயர், 'பிரிவினை' என்று இருக்கிறதேஒழிய, பிரிக்கப்படும் மொழிவாரி, மாகாணங்கள் மத்தியசர்க்காருடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கும். இன்னும் கூறவேண்டுமானால், இப்போதுள்ள நிர்வாகத் தொல்லை, மாகாணங்கள் பிரிக்கப்பட்டுவிட்டால், மத்தியசர்க்காருக்குப் பெரிய அளவில் குறைந்துவிடும். பெரிய மாகாணங்களைக் கண்காணிப்பதில் இருக்கும் கஷ்டம், மத்திய சர்க்காருக்குக் குறைந்துவிடும்.

ஒரு ஜில்லா முழுமைக்கும் ஒரே கலெக்டர் இருந்து ஆளுவதற்குப் பதில், அந்த ஜில்லாவை பல தாலுக்காக்களாகப் பிரித்து, அந்தந்தத் தாலுகாவையும் ஒரு தாசில்தார் பொறுப்பில் விட்டு, தாசில்தார்கள் வேலையைச் சரிவரச் செய்கிறார்களா, என்று கலெக்டர் மேற்பார்வையில் வைத்தால், கலெக்டருக்கு முன்னிருந்த நிர்வாகக் கஷ்டம், முன்பைவிடக் குறைந்து விடுகிறதல்லவா! அதுபோலத்தான் இந்த மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பதும். இதனால், மத்திய சர்க்காருக்கு நன்மைதானே ஒழிய, சங்கடம் எதுவும் கிடையாது. சென்னை போன்ற பெரிய மாகாணத்தை, தன் பார்வையில் வைத்துக்கொண்டு, பொறுப்பு அதிகமாக இருக்கவே, அதை மூன்று அல்லது நான்கு மாகாணங்களாகப் பிரித்து, அவைகளைத் தனித்தனியான நிர்வாகத்தில் விட்டால், சங்கடம் குறையுமல்லவா! பெரிய இடத்தை, கைக்குள் வைத்திருப்பதிலேற்படும் சங்கடம், சிறிய சிறிய இடங்களை நிர்வகிப்பதில் ஏற்படாதல்லவா!

இந்த 'தந்திரமான ஏற்பாடுதான்' மொழிவாரி மாகாணப் பிரிவினை என்று பேசப்படுவதும், மத்திய சர்க்காரே இதில்' முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதும்! இப்படி மொழிவாரியாகப் பிரிக்கப்படுவதால், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், கூறிவரும் இலட்சியங்கள் ஈடேறிவிட முடியாது. முன்பு "தமிழ் நாடு தமிழருக்கே" என்று நாம் முரசொலித்தோமே, அந்த முழக்கத்திற்கும், இப்போது கூறப்படும் தமிழ் நாடு பிரிவினைக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள, வித்தியாசம் உண்டு.

* * *

"திராவிட நாடு" கோரும் நம்முடைய இருதயகீதமே வடநாட்டு ஆதிபத்தியத்திலிருந்துவிலகி, சுரண்டுதலுக்காளாகி நிற்கும் ஒரு சமுதாயம் தனக்கென ஒரு தனியாட்சி அமைத்து வாழவேண்டும் என்பதுதான். இதற்கான காரணங்களை, எண்ணமுடியாத அளவில் நாம் இதுவரை கூறிவந்துள்ளோம்.

பக்கத்திலே உள்ள பர்மா, தெற்கே கிடக்கும் சிறுதீவு இலங்கை போன்றவையெல்லாம் தனியரசு நிறுவி, தாங்களாகவே ஆட்சி நடத்தும்பொழுது எல்லாத் துறைகளிலும் வசதியும் வளமும் நிரம்பிய பழந் தமிழ்ச் சமுதாயம், தனக்கென ஒரு நாடமைத்து, தன் வாழ்க்கையை ஏன் நடத்த இயலாது என்ற உரிமை ஒலியே நம் பிரிவினை முழக்கமாகும்!

தனியாட்சியின் தன்மையையும், அது எப்படியிருக்கும் என்பதையும் நாம் எடுத்துச் சொல்லியே வருகிறோம். திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டுமென நாம் கேட்கிறோமென்றால், அதன் பொருள் வடவருடன் வம்புக்கு போகிறோமென்றோ, வெறியைக் கிளப்பி அதன்மீது வாழ நினைக்கிறோமென்றோ அர்த்தமல்ல. வடநாட்டுக்கு இங்கு வசூலாகும் பணத்தை வரியாகக் கட்டிவிட்டு வாடியுழலும் கடன்காரன்போலக் கைகட்டிக் கொண்டு நிற்கும் நிலைமையைப் போக்கி, இங்கு வழியும் இயற்கை வளங்களைக் கொண்டு மக்கள் உழைப்பையும் விஞ்ஞானத்தையும் மூலதனமாகக் கொண்டு வாழ்வது என்பதே பொருள். திராவிடத்தின் அரசிலே, அவர்கள் வாழ்விலே, பொருளியல் வளத்திலே, யாருடைய தலையீடும் மேற்பார்வையும் கூடாதென்பதே நம் இலட்சியத்தின் 'இருதய' கீதம்! இன்றோ, எதற்கெடுத்தாலும் நாம், மத்திய சர்க்காரை நோக்கிப் பிச்சை கேட்கும் பரிதாப நிலையில் கிடக்கிறோம். இந்நிலை நீங்கி, நாம் வாழ வேண்டுமென்பதே நம் ஆசை.

பகை கிளப்பவோ, வெறுத்து வாழவோ அல்ல நம்முடைய கோரிக்கை. தற்போது வடவருக்கும் நமக்கும் 'நீடிக்கும் போலி நேசம், வற்புறுத்தல்மேல் வாழும் நிலை நீங்கட்டும். நாமும், அவர்களும் 'நண்பர்களாக' வாழ்வோம் என்பதே நம்முடைய விருப்பமும், வேண்டுதலுமாகும். இதைப் பன்முறை கூறிவிட்டோம்—இன்றும் கூறுகிறோம்.

திராவிட நாடு தனித்தியங்கும் என்றால், இந்திய பூபாகத்துடன் 'வெட்டொன்று துண்டிரண்டாக' ஆகி, அப்படியே அரபிக்கடலுக்கும் வங்காளகுடாக்கடலுக்குமிடையே ஒரு அகலக்கால்வாய்வெட்டி, பிரிந்து போய்நிற்பதல்ல. நமக்கென ஒருநாடு அமைத்துக்கொள்ள வேண்டுமென்பது தான். வெளி நாட்டாரின் ஆபத்து இந்திய பூபாகத்துக்கு ஏற்பட்டால், தனித்துப் பிரிந்த திராவிடம், தனியாக நின்றுவிடாது. ஆபத்து ஏற்பட்டு, தாக்குதல் விளைந்தால் அருகில் 'இந்துஸ்தான்' இருக்கிறதே, அதற்குத்தானே ஆபத்து என்று 'திராவிடம்' சும்மா இருக்காது, ஒன்றுநின்று, கைகோர்த்து வெளிப்பகையை ஓட்டும். நாட்டைப் பிரித்துக்கொண்டால், தொடர்பு எல்லாவற்றையும் துண்டித்துக் கொண்டுபோய்விடாது என்பதையும் விளக்கிவருகிறோம். நேசம் நிலைக்கவும், வளரவும், அதற்கான ஒப்பந்தம் செய்துகொள்வோம், பிரிந்து நின்று, வாழ்வோம் என்று கூறுகிறோம். நட்பு நிலவட்டும், நாசநினைப்பு ஒழியட்டும், இரண்டுகுடும்பங்களாக வாழ்வோம், ஒரே குடும்பமாக இருந்துகொண்டு, இரண்டு 'வேறு' இனங்கள் உறுமிக்கொண்டும் வேதனையிலீடுபட்டுக் கொண்டும் போகவேண்டாம், இதற்குஒரு முடிவு ஏற்படட்டும் என்று கூறிவருகிறோம்

* * *

தனிநாடு வேண்டுமென நாம் கருதுவதில், கோருவதில், அரசியல், அறிவியல், பொருளியல், துறைகளில் பிற்போக்கில் கிடந்து உழல்கிறோம் என்பதுமட்டுமல்ல, பழம்பெருமையும், இருக்கிறது. எப்போதும் நாம, இன்று இருப்பதுபோல ஒருபரந்த உபகண்டத்துடன் இணைந்து, அல்லலில் அகப்பட்டு வாடியவர்களல்ல.

முன்பு, ஒருதனிநாடாகவே இருந்தோம்—வாழ்ந்தோம்! வெள்ளையர் இட்ட தீ நம்மீதுபரவுமுன், இங்கு எந்தவடநாட்டு ஆதிபத்திய அரசும் நம்மை அடிமைப்படுத்தியதில்லை! குப்தர்கள் ஆட்சியில் தானாகட்டும், மௌரிய சாம்ராஜ்யத்தில்தானாகட்டும், மொகலாய அரசில் தானாகட்டும், இவை எவையும் திராவிடத்தின் தன்னாட்சியைத் தகர்த்ததில்லை; கேடு சூழ்ந்ததில்லை. அதற்குப் பதில் இமயமீது நமது சேரன் 'விற்கொடி' நாட்டினான், சோழ மன்னன் பர்மாவில் பவனிவந்தான், கரிகாலன், சிங்கப்பூர்வரை சென்றான், என்றெல்லாம் நமது இலக்கியங்கள் நம் புகழைக் கூறுகின்றன. இத்தகைய வீரமும் தீரமும் விளையாண்ட இடம் நமது நாடு! இடிந்து போன கோட்டை கொத்தளங்கள் இதோ, நம் கண்முன்னர், மடிந்து போன மன்னாதிமன்னர்களின் வீரதீரத்தைப் பாடம் சொல்லிக்கொடுக்கின்றன! தரணியாண்ட தண்டமிழ் மகனே, ஏன் இன்று இக்கதிக்கு ஆளானாய், என்று நம் பண்டைப் பெருமை, நம்மைப் பரிகசிக்கிறது! இதயத்தைக் குலுக்கி விடுகிறது!

அதுமட்டுமல்ல, இழி நிலையில் கிடக்கும் நம் கண்முன்னே, இன்று உலக நாடுகள் ஓடிவருகின்றன. அவைகளைக் காணும் பொழுது, நம் ஆவல் பன்மடங்காகிறது. ஸ்பெயின் போர்ச்சுகல்! அயர்லாந்து — அதற்குள்ளும் ஒரு தனியரசு! ஸ்வீடன், நார்வே! சிறு நாடு இத்தாலி! துருக்கி — பழைய உதுமானிய சாம்ராஜ்யத்தின் துண்டு. இன்று அது தனிநாடு!

இவைகளைக் காணும் பொழுது, வாழ்விழந்துகிடக்கும் நமக்கு ஆசை ஏன் தோன்றாது; வாழ வசதியிருந்தும் அதை மாற்றானுக்கு அளித்து விட்டு மண்டியிட்டுப் பிச்சைக்கேட்கும் நிலைநீடித்தால் இதயம் ஏன் குமுறாது!

* * *

திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும், என்ற உரிமை முழக்கம் தனக்குப்பிடிக்காது என்கிறார் பட்டாபி! தனிமாகாணம் என்று கூறிக்கொண்டு, வடவர்பிடியில் அடங்கிக்

(அடுத்த பக்கம் பார்க்க)

கிடப்பதைத்தான் விரும்புவாராம் அவர்!

சர்க்கரை வேண்டுமா என்றுகேட்டாலும், ஒருவன், சர்க்கரைக்குத் திண்டாடித் தெருவில் நிற்பவனை! 'ஆமாம், எங்கே' என்றாலும் கேட்டவன் 'இந்தா, இக்காகிதத்தில் எழுத்தாக இருக்கிறது 'எடுத்துக்கொள்' என்று கூறினாலும் எத்தன்! அதைப்போல இருக்கிறது, பிரிவினை என்பது உண்டு, ஆனால் 'பிரிந்து வாழ்வது' கிடையாது என்ற கூற்று! அவருக்குப் பிடிக்காததுதான் தனிநாடாக நாம் ஆகவேண்டுமென்பது — இப்போது. ஆனால், உரிமைக் கிளர்ச்சி ஒரு உதட்டுச் சொல் அல்லவே! அதிலும் நம் உரிமை முரசு, நம் இதயத்திலிருந்து எழும்பும் இலட்சிய கீதம்! இது, சீறியெழும் புயல்! இதைத் தடுக்க நினைக்கலாம்— ஆனால், முடியாது! ✻

பொறுப்புணர்ச்சி

7-ம் பக்கத் தொடர்ச்சி

செய்ய முடியும். நாட்டு மக்களுக்குத் தேசிய உணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் ஏற்படுமா என்று ஏங்கித் தவிக்கும் தோழர் தௌலத்ராம் போன்றார், தங்களுடைய தேவைக்கும் அளவுக்கும் அதிகமாகப் பெறும் ஊதியத்தைக் குறைத்து நாட்டு மக்களுக்கு வழிகாட்டுவார்களானால், அதனால் எவ்வளவோ நன்மைகள் நாட்டுக்கு ஏற்பட வழியுண்டாகும்.

ஒரு சில மந்திரிகளுடையவும், தூதுவர்களுடையவும் உயர்வும் கவுரவமும் குறையாதிருக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு, அவர்களின் தேவைக்கும் அளவுக்கும் மிஞ்சிய சம்பளம் கொடுத்துப் பெருமைப்படுத்தும் போக்கு, இப்போதில்லாவிட்டாலும் நாளடைவில் நாட்டுக்கு இழிவையும் சிறுமையையுமே உண்டாக்கும். கோடிக்கணக்கான மக்கள் குடிக்கக் கஞ்சிக்கும் உடுக்கத் துணிக்கும் வழியின்றி, நடைப்பிணங்களாக ஊசலாடிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில், ஒரு சிலர் மட்டும் உல்லாச வாழ்வு நடத்திக்கொண்டு, அதேபோது ஏழைபங்காளராகவும் நடித்துக்கொண்டு எவ்வளவு காலம் வாழமுடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஏழை மக்கள் எப்போதுமே தங்கள் குறைகளைக் கூறிக்கொள்ளும் அளவோடு இருந்துவிட மாட்டார்கள். குறைகள் தீர்க்கப்படாவிட்டால், குறைகளை முறையிடும் நிலை மாறிக் கொந்தளிப்பு ஏற்படும். இந்த நிலை நடக்கேன் ஏற்படப் போகிறதென்று எவரும் எண்ணி இறுமாந்து இருந்துவிட முடியாது. நாட்டை ஆளும் 'நல்லவர்கள்' இதை நன்கெண்ணிப் பார்க்கவேண்டும். பொறுப்புணர்ச்சி பற்றிப் பொதுமக்களுக்கு உபதேசம் செய்கிறோம்; நாம் எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்கிறோம் என்பதனை நாடாள வந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நமது நாட்டிலுள்ள லட்சக்கணக்கான மக்கள் நடக்கவும் சக்தியற்று நலிந்து கிடக்கிறார்கள்; நாம் இங்கே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறுமோட்டார்கள் வைத்துக்கொண்டு, உல்லாசவாழ்க்கையின் உச்சியில் உலவுகிறோமே, இது முறையா? நெறியா? என்று வெளிநாடுகளில் போய்த்தங்கியிருக்கும் நம்நாட்டுத் தூதுவர்களை எண்ணிப் பார்க்கும்படி இங்குள்ள ஆட்சித் தலைமைப்பீடம் செய்ய வேண்டும்.

இங்குள்ள மந்திரிகளும், பிற அதிகாரிகளும் பெறும் சம்பளமும் பிறவசதிகளும் உண்மையாகவே அவர்களுடைய தேவைக்குத் தகுந்த அளவில்தான் இருக்கிறதா அல்லது அதிகமாக இருக்கிறதா என்பதனையும் 'ஏழை பங்காளர்களான' ஆளவந்தார்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நாம் ஆயிரம் இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்குகிறோம். நாம் இவ்வளவு சம்பளம் வாங்குவதற்கு வசதிசெய்து தந்த கோடிக்கணக்கான மக்கள் நம் எதிரிலேயே நடைப்பிணங்களாகத் திரிகின்றனரே! ஏன் இந்த நிலை ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? இதற்கு யார் பொறுப்பு? என்ற இன்னபிற அடிப்படை உண்மைகளை எண்ணிப்பார்த்து, அவற்றிற்கேற்ப முறைகளை மாற்றி அமைத்துக் கொள்வதுதான் தேசியஉணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியுமாகுமே யன்றிப், பொறுப்புணர்ச்சியுடன் நாங்கள் நடந்துகொள்கிறோம்; ஆனால் பொதுமக்களிடம்தான் அந்த உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை என்று பேச்சழகுக்காகப் பேசிவிட்டால், போதாது —பொறுப்புணர்ச்சிக்குரிய அறிகுறியையும் அங்கு காணமுடியாது. எனவேதான், பொதுமக்களுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்படவேண்டுமென்று விரும்பும் தலைவர்கள், முதலில் தங்களிடம் அந்தப் பொறுப்புணர்ச்சியை உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறோம். ✻

கண்ணியம் காப்பீர்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்— தமிழ் நாட்டின் அறிவுக்கேணி. அங்கு, 24—9—49 அன்று, பட்டம் பெற்று, தாய் தந்தையரை மகிழ்வித்துத் தன் வாழ்க்கைப் பாதையைக் காணவந்த, மாணவர்களில் ஒரு சிலர், துவேஷம், அதன் விளைவாக விஷ எண்ணங்கள் கொண்டு, அமளி நடத்தியிருக்கின்றனர்; அட்டகாசம் செய்துள்ளனர்! கேட்கவும் மனம் கூசும் 'மோசமான' செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்!

இப்போது, பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றிவரும் அறிஞர் மணவாள ராமானுஜம் அவர்கள், ஒரு சிந்தனைச் சிற்பி, 'தன் வாழ்வு மாணவர் நலனுக்கே' எனும் குறிக்கோளும் நற்பண்பும் கொண்டு கடமையாற்றும் செம்மல்.

அவர் மீது சொந்தத் துவேஷ நினைவுகளின் விளைவாக எழும்பிய சொல்லம்புகளைப் பாய்ச்சியும், தொல்லைகளை விளைவித்தும் 'காட்டுமிராண்டித் தனமான' நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கலாட்டா செய்திருக்கின்றனர்.

'வெளியில்' உலவும் 'சிலரின்' தூண்டுகோலின் விளைவாகவும் துணைவேந்தர் 'சிபார்சு'களுக்கு ஆட்படவில்லை என்ற சொந்தக் காரணங்களினால் ஏற்பட்ட 'துவேஷம்' காரணமாகவும் கிளப்பிவிட்ட 'தீ'யே இத்தீய செயல் என அறிகிறோம். மாணவர் உலகை, தங்கள் சுயநலங்களுக்குப் பயன்படுத்த நினைத்த, கெடுமதியாளரின் போக்கு, கண்டிக்கத்தக்கதுமட்டுமல்ல — மக்களால் வெறுத்து, ஒதுக்கப்பட வேண்டியதும் கூட. மாணவர்கள், தங்கள் கடமையுணர்ந்து, கண்ணியம் கைக்கொண்டு, அறிவுபெறுதலே முக்கியமாகும்—அதுதான், அவர்கள் கடமை!

✻ அவர் சிந்தனை! ✻

"கிடைக்கிறதா, சர்க்கரை" என்று கேட்டார்.

'ஓ! கள்ளமார்க்கெட்டில்!!' என்று பதில் தந்தனர் சுற்றி நின்றவர்கள்.

கேட்டவர் முகத்தில் ஆச்சரியம் படர்ந்தது. 'அப்படியா?' என்று கேட்டார், அருகிலிருந்த அமைச்சரை.

அமைச்சரும் "ஆமாம்!" போட்டார்.

"கள்ள மார்க்கெட் காரர்களை ஏன் பிடித்துத் தண்டிக்கவில்லை?"

அமைச்சர் வாய்திறந்து பதில் கூறவில்லை. தலையை ஆட்டினார், அதன் மூலம் பதில் தெரிவித்தார்.

'ஏன் தண்டிக்கவில்லை' என்று அதிருப்தியுடன் கேட்டவர், அதற்குமேல் 'ஏன்' போடவில்லை; அமைச்சரின் 'மௌனம்' தந்த விமர்சனம் அவருக்கு இரகசியத்தை விளக்கியது போலும்! உடனே, சுற்றி நின்றவர் பக்கம் திரும்பினார். 'கள்ள வியாபாரத்தைப் பொதுமக்கள் பகிஷ்கரிக்கவேண்டும்' என்று புத்திமதி சொன்னார். அத்துடன் தீர்ந்துவிடவில்லை, அவர் ஆத்திரம் 'சர்க்கரை இல்லாவிட்டால் என்ன வந்துவிடுமாம்! மக்கள் பிராணன் ஒன்றும் போய்விடாது' என்று சிறிக்கொண்டே சொன்னார்! சொன்னவர், சாதாரணமானவரல்ல, 'கள்ள மார்க்கெட்டில் தான் விற்கப்படுகிறது' என்று ஆமாம் போட்டாரே, அமைச்சர் அவரைவிடப் 'பெரியவர்' அதிகாரம் படைத்தவர்!

* • •

சம்பவம் நடந்த 2ந் தேதியன்று சென்னை — மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடந்திருக்கிறது! பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன. இந்திய சப்ளை மந்திரி டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜிக்கும், சென்னை கைத்தொழில் மந்திரி பெருமாள்சாமி ரெட்டியாருக்குமிடையே நடந்த நிகழ்ச்சிதான் மேலே, நாம் தீட்டியிருப்பது! இந்திய சப்ளை மந்திரி, விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த மாகாண அமைச்சரைக் கேட்டிருக்கிறார் "மாகாணத்தில் சர்க்கரை நிலை எப்படியிருக்கிறது?" என்று. பத்திரிகை நிருபர்கள் பதில் தந்திருக்கின்றனர், 'கள்ளமார்க்கெட்டில் சரசமாகக் கிடைக்கிறது' என்று! செய்திகேட்ட, இந்திய அமைச்சர், துயரத்துடன் கேட்டிருக்கிறார் மாகாண அமைச்சரை "ஏன்?" என்பதாக! இவரோ, வாய்மூடி மௌனியாகித் தலையை மட்டும் அசைத்தாராம்! 'கேள்வி கள்ள மார்க்கெட்காரரைப் பிடித்துத் தண்டிக்காதது, ஏன், என்பது. கேட்டவர் அமைச்சர். அதற்கு, பதில் 'தலையை ஆட்டி'த் தெரிவித்தவரும் ஒரு அமைச்சர்! ஒரு அமைச்சர் 'ஏன்' என்று கேட்க, இன்னொருவர், இதற்கு முன் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், பதில்கூறி வந்தவர், இந்த 'ஏன்?' பிறந்ததும், வாய்மூடி மௌனியாகியிருக்கிறார்! 'தலையை' மட்டும் ஆட்டியிருக்கிறார்!! 'என்ன நான் கேட்கிறேன், தலையாட்டுகிறீரே' என்று தலைமைப் பீடத்தில் இருக்கும் மந்திரி கேட்கவில்லை! அதற்குப்பதில் சுற்றிநின்றோரைப் பார்த்து, பொதுமக்கள் சர்க்கரை வாங்காமல், கட்டுப்பாட்டுடனிருந்து 'கள்ளமார்க்கெட் காரர்களுக்குப்' புத்திபுகட்ட வேண்டும் என்று போதிக்கத் துவங்கியுள்ளார், சர்க்கரை இல்லாவிட்டால் பொதுமக்களுக்குப் பிராணனா போய்விடும்' என்ற விளக்கத்துடன்!

மாகாண அமைச்சர் 'வாய்மூடி மௌனியானது, ஏன், என்று புரிந்துகொண்டதால்தான் டாக்டர் முகர்ஜி 'பேச்சை வேறுதிசைக்கு ஒடித்து மக்களுக்கு இதோபதேசம் செய்ய ஆரம்பித்துள்ளார் போலும்!

'ஏன்?' கேள்வி பிறந்ததும், கள்ள மார்க்கெட்காரர்களைத் தண்டிக்க நடவடிக்கையெடுக்காத காரணத்தை மாகாண அமைச்சர் விளக்கமுற்படவில்லை வேதனைதான் காரணமோ அல்லது "அவர்கள்" வேண்டியவர்களாக இருப்பதுதான் காரணமோ, நமக்கு விளங்கவில்லை!

ஆனால், அவர் மௌனத்தைக்கண்டதும், கேள்வி கேட்டவரும் மக்களுக்கு 'இதோபதேசம்' செய்துள்ளாரே, அதை அறியும்போதுதான், நம் உள்ளத்தில் ஐயம் ஏற்படுகிறது. கள்ளமார்க்கெட் காரர்களைத் தண்டிக்காதது ஏன், என்று காரசாரமாகக் கேட்டதும் மாகாண அமைச்சர் தலையை ஆட்டினாரே அப்போது அவர்முகத்தில் "சிந்தனை"க்குறியிருந்ததாம்! 'தினமணி' யார் கூறுகிறார்!! இந்தச் சிந்தனைக்குறி, உள்ளத்தில் குமுறும் வேதனையை வெளிப்படுத்த முடியாததன் விளைவாகத்தான் எழும்பியிருக்க வேண்டும். இந்தச் சிந்தனைக் குறிதான் இந்திய மந்திரியாரையும் 'கள்ளமார்க்கெட்காரர்களை என் தண்டிக்கவில்லை; என்று கேள்விகேட்டது, தப்பிதம், என்று உணர்த்தி, விஷயத்தை மக்கள் தலையில் சுமத்தச் செய்திருக்கவேண்டும்!

அமைச்சர் முகத்திலே நிலவிய 'சிந்தனைக்குறி' பற்றி, நாம் சிந்திக்க விரும்பவில்லை—விளக்கம்தர விரும்பவில்லை. ஏனெனில் "வெளியாகும் விஷயம்" நம்தியாகிகளுக்கு நம் மீது சீற்றத்தை உண்டாக்கினாலும் உண்டாக்கலாம் என்பதால்!

• • •

சர்க்கரை இல்லாவிட்டால் பிராணனா போய்விடும் என்று கேட்டிருக்கிறார் டாக்டர் முகர்ஜி! சர்க்கரை இல்லாவிட்டால் மக்கள் உயிர், உடனே போய்விடாதுதான் ஆனால் அதுபோல 'சம்பளம் நீங்கள் வாங்கிக்கொள்ளாவிட்டால் உங்கள் உயிரா போய்விடும், சம்பாதித்ததே சாகும்வரை போதுமே' என்று கேட்க விரும்பவில்லை நாம்!

ஆனால், ஒன்று சொல்ல விரும்புகிறோம், மத்திய பீடத்திலிருக்கும் 'கனம்' மந்திரியாருக்கு! சர்க்கரை இல்லாவிட்டால் 'பிராணன்' போய்விடும் என்று, காரசாரமாக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கும் அவர், வந்தவுடன் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது அந்த இடத்தில்! அமைச்சர் வந்திறங்கியதும், அவர் ஆயாசந் தீர்க்க விரும்பி, 'காப்பி' கொண்டு

வந்து கொடுத்திருக்கிறார்கள் அவருக்கு! காப்பியைக் கண்ட முகர்ஜி ஆவலோடு கேட்டிருக்கிறார் 'இது உண்மையான சென்னைக்காப்பியாக இருக்குமா?' என்று! அதாவது சர்க்கரை போட்ட காப்பிதானு, என்று!

வந்த மந்திரியார்,' சர்க்கரை போடாத அக்காப்பியைச் சாப்பிட்டால், அவரது பிராணனு போய் விடும் என்று அவரது பாணியிலேயே நாம் கேட்க விரும்பவில்லை! ஏனெனில், அவர் பெரியவர், மந்திரி—நாம்தான் சாதாரண 'ஜனங்களா'யிற்றே!

* * *

மக்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றனர், தங்கள் வாழ்க்கையில் இன்றியமையாத தேவையாகிவிட்ட, காப்பி, டீ போன்றவைகளுக்குச் சர்க்கரை இல்லாத காரணத்தால். திண்டாடித் தெரு வீதியில் நின்று கிடக்கின்றனர்! இதுபற்றி, மக்களை ஆளும் பொறுப்பிலிருக்கும் மந்திரியாரிடம், "சர்க்கரை இருக்கிறது—கொள்ளை, கொள்ளையாக! இருந்தும், அது கிடைக்க முடியவில்லை மக்களுக்கு. காரணம், கள்ளமார்க்கெட் வியாபாரிகளின் அட்டகாசம்தான்' என்று அறிவித்துள்ளனர், அறிக்கைகள் மூலமாகவோ, கோரிக்கைகள் மூலமாகவோ அல்ல, 'நேரில்—நிருபர்கள். தகவல் கேட்டதும், ஏன் அவர்களைப் பிடித்துத் தண்டிக்கக் கூடாது என்று இந்திய மந்திரியார், அதிருப்தியும் ஆவேசமும் எழும்பக் கேட்டிருக்கிறார். அதற்குப் பதில் கூறவேண்டிய மாகாண அமைச்சர் 'சிந்தனைக் குறியுடன் தலையை ஆட்டி'னாராம்! கள்ளமார்க்கெட்காரர்கள், கொள்ளை லாபம் அடிக்கின்றனர், மக்கள் அவர்களின் லாபவேட்டையால் திண்டாடித் தெருவில் நிற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டும் மாகாண அமைச்சர் முகத்தில் 'சிந்தனைக் குறி' எழும்பி பதில் சொல்ல முடியாமல் திகைக்க வைத்திருக்கிறது! ஏழை மக்கள் வாழ்வுக்காகவே எங்கள் சுயராஜ்யம் வருகிறது என்ற முழக்கமிட்டு 'கனம்' ஆகியிருக்கும் மந்திரியார், கேள்விக்குப் பதிலளிக்கத் திகைத்தாராம்!

வேடிக்கையாக இருக்கிறது, மக்கள் வேதனைப்படுவதன் காரணம் தெரிந்தும், அது போக்காதது ஏன், என்று விளக்காத "சூழ்நிலை"யில் மந்திரிமார்கள் இருப்பது! எப்படி யேற்பட்டது இந்தச் சூழ்நிலை!! திண்டாடுபவர்கள் பொது மக்கள்—கொள்ளை லாபம் அடிப்பவர்கள் வியாபாரிகள்.

மக்களைச் சுரண்டும் மதோன்மத்தர்களை ஏன் தண்டிக்கவில்லை யென்று கேட்டால் மந்திரியார் 'சிந்தனைத் திரை'யைப் போட்டுக் கொள்கிறார்!

மக்கள் குறையைப் போக்கும், வகையில், கள்ளமார்க்கெட்காரர்களைப் பிடித்துத் தண்டித்து ஆவன செய்ய முடியாதது 'ஏன்' என்று விளக்கமுடியாதவராக விழிக்கிறார்!

விழிப்பின் காரணத்தை, இந்திய மந்திரியார் புரிந்துகொண்டு விட்டவர்போல, விஷயத்தையறிய விரும்பாது 'மக்கள், கள்ளமார்க்கெட் கடைகளில் சர்க்கரை வாங்காமலிருந்து, அவர்களுக்குப் புத்தி புகட்டவேண்டும். அப்படி சர்க்கரை வாங்காமலிருந்தால் ஒன்றும் பிராணன் போய்விடாது!" என்று உபதேசகாண்டம் படிக்கிறார்!

மக்கள் படும் அவதிபற்றிப் பேசுவதில் மாகாண மந்திரியாருக்கும் அக்கரை இருந்திருக்கிறது—அதை விசாரித்து அறிவதில் மத்திய சர்க்கார் மந்திரியாருக்கும் ஆவலிருந்திருக்கிறது!

ஆனல் "விஷயம்" புரிந்ததும் இருவரும், வேறு பாதைக்கு நழுவ ஆரம்பித்திருக்கின்றனர். ஒருவர் 'சிந்தனை'யுடன் திண்டாடியிருக்கிறார். இன்னொருவர் 'உபதேச காண்டம்' படிக்க ஓடியிருக்கிறார்!

'கள்ளமார்க்'கெட் வியாபாரிகள்' பற்றிய பிரச்னை வந்ததும், ஏன் இந்த நிலை ஏற்பட்டது! இரண்டு மந்திரிமார்களுக்கும்! கேட்கத்தான் தோன்றும், யாருக்கும்!

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

டீனின் மதவாதக்கொடுமையும் எங்களைக்கொத்தித் தின்கின்றன! பிரபுத்துத்துவம் பிச்சுத்தின்கிறது—குலாக்குகள் "குடும்பக் குலையை" அறுத்து வீழ்த்துகின்றனர்! எப்படி நாங்கள் வாழ்வோம், என்று சுகவாழ்வு எங்களுக்கும் கிடைக்கும் என்று ஏங்கி, மனிதப் புழுக்களாய், தவியாய்த் தவித்து, வாடி வதங்கிய ரஷ்யப் பாட்டாளிப் படை, தொழிலாளி வர்க்கம், பொது மக்கள் தங்கள் இலட்சியபுரியைக் காணுமுன் தாண்ட நேர்ந்த "சூதுக்கோட்டைகள்" இவை!

நவம்பர் 7-ஐக் காணுமுன், அவர்கள், சுயநலமிகளின் ஆட்டக் காயாக ஆக்கப்பட்டதும், சூதர்களால் தொல்லைக்காளானதும், ஏராளம்! பொங்கி எழும்பிய உணர்ச்சி வெள்ளத்தை, உடைத்துவிட முனைந்த 'ஆதிக்க வர்க்கம்' கேபான்களின் உருவில், கிரென்ஸ்கி தோற்றத்தில் தோன்றத்தான் செய்தது! பாமர மக்கள், அந்தக் கெடுதலைப் பண்பினரின் ஆசை வார்த்தைகளில் மயங்கி-தீயை நாடிய விட்டில்களாகவும் ஆயினர்!

'ஆனல், முடிவு, நவம்பர் 7! சூதர்களின் கொட்டம் அடக்கப்பட்டு, உண்மைச்சுதந்திரம் தோன்றிய நாள்! மதவாதிகளின் வஞ்சமும், உழைப்பாளிகளின் உணர்ச்சியால் தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ள முயன்ற சந்தர்ப்பவாதிகளின் தந்திரமும், சுகராஜ்யம் வந்துவிட்டது என்று சொல்லிக்கொண்டு தங்களை "ஆட்சிப் பீடத்தில்" அமர்த்திய தொழிலாளி வர்க்கத்தை சூழ்ச்சியால் ஆள நினைத்து ஆட்டிப் படைத்த அதிகாரவர்க்கமும், தூள், தூளாக்கப்பட்ட தினம் நவம்பர் 7! ரஷ்யாவுக்கு நல்வாழ்வு தந்த நாள், உண்மைச் சுதந்திரம் வழங்கிய தினம்!

புது வாழ்வு காணப் போராடிய, ஏழை உள்ளங்களை, பாமரர்களை "சூது" தூரத்தாமல் விடவில்லை! சூழ்ச்சி விரட்டத்தான் செய்தது, மத சந்நியாசி வடிவில், 'வாழ்வு' நல்கும் 'தலைவர்கள்' உருவில்! அத்தனையையும் தாண்டி, முகிழ்த்ததுதான் பொதுவுடைமைச் சமுதாயம்—ரஷ்யக் குடியரசு!

34 ஆண்டுகள், முனைந்து நின்று, வெற்றிமுரசு கொட்டி, நவம்பர் 7ஐக் காண்பதற்குள் ரஷ்ய பாட்டாளி மக்கள் அடைந்த அல்லல்கள் சிந்திய இரத்தம், கொஞ்ச நஞ்சமல்ல! உன்மத்தர்களின் சூழ்ச்சி, உரிமைப் போரை ஒடுக்க நினைத்த தோரின் தந்திரம், பாட்டாளிகளின் தலைவர் என்ற போர்வையில், 'படாடோபி'களாக மாறிய சமய சந்நிவிகள் ஆகிய அத்தனை இருள் மேகங்களையும் கிழித்துக்கொண்டு எழும்பிய நிலா—நவம்பர் 7!



நவம்பர் 7

[அரங்கண்ணல்]

நவம்பர் 7!

வெற்றிநாள், வீரத்திருநாள், விடுதலை விழா துவக்கப்பட்ட நாள்! உலர்ந்த சருகாகிக் கிடந்த உழைப்பாளிகள் உன்னத வாழ்வு பெற்ற ஒப்பற்ற திருநாள்! இரத்தம் சுரண்ட உழைத்தும் 'இல்லை' என்று ஏங்கி நின்ற ஏழைகள். இன்பம் கண்ட விழா நாள்! பழைமை நீங்கி, வஞ்சகம் ஒழிந்து, சமதர்மம் தழைத்த நாள்! பொதுவுடைமை பூத்தநாள்!

1917 நவம்பர் 7!

புது யுகத்தின் பொன் ஏடு, பூரித்துக் குலுங்கும் புது வாழ்வின் அடிப் பீடம்! 'புனித' தினம்!

'மதோன்மத்தர்களின்' சுக வாழ்வுக்குத் தங்கள் உழைப்பை நாசமாக்கிக் கொண்டோர் நல்பாதை கண்ட நன்னாள்!

முதலாளித்துவம் என்ற மூர்க்க முதலையின் பற்கள் பிடுங்கப்பட்டு, புரட்சி யென்கிற காட்டாற்றில் உருட்டிவிடப்பட்ட உன்னத தேதி நவம்பர் 7!

ரஷ்ய மக்களின் இதய கீதம்! நல்வாழ்வு நாதம் கிளப்பிய நல் வீணை! இருப்பவன்—இல்லாதவன், ஏமாளி—எத்தன் என்ற பேதம் ஒழித்துப் பெருமை கொண்ட 'தியாக' தினம்! பாட்டாளிப் படை வரிசை, ஏங்கிக் கிடந்த, இன்பம் முகிழ்த்த முதல் தேதி!

நவம்பர் 7—ஓரே நாளில் அரும்பி மலர்ந்த மலரல்ல! எத்தனையோ ஆண்டுகள், உழைப்பின் வியர்வை தந்த விருந்து! விருந்துகாண, இலட்சிய புரியை எட்டிப்பிடிக்க, தொழிலாளி வர்க்கம் ஆளான தொல்லைகள்—ஒரு சோகத் தொடர் கதை!

1

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக்காலம்! போர் மேகம், ரஷ்யாவைக் கப்பிக்கொண்டது—ஜாரின் ஆதிபத்திய ஆசையின் விளைவாக. ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் போர் மூண்ட, இந்நேரம்தான், அங்கு தொழிலாளர்களின் உரிமைப் போர், அரும்பி, விரிந்து கொண்டிருந்தது, சிறிய நாடான ஜப்பானுடன், பெரிய நாடான ரஷ்யா போர் புரிந்தும் வெற்றிகாண முடியவில்லை — மதுக் கோப்பையின் விளிம்பிலும், மங்கையரின் காலடிச் சத்தத்திலும் 'மகிழ்வை'க் கண்டு ரசித்துக்கொண்டிருந்த ஜாரால் எப்படி முடியும், அது! எனவே, சரியில்லாத ராணுவம், குறைவான பயிற்சி, ஆகிய காரணங்களால் ரஷ்யா வெற்றிகாண முடியவில்லை!

ஜாரின் அட்டகாசம் ஒரு புறமும், ரஸ்புடீனின் மதவாதத் திமிர் மறுபுறமும், பண்ணைக்காரர்களின் படாடோபம் இன்னொரு திசையிலும், பண முதலைகளின் 'நாச நர்த்தனம்' இன்னொரு பக்கத்திலும் நடைபெற, நடுவில் கிடந்து நலிந்து, மெலிந்து, உயிருள்ள கூடுகளாய் உலவிய ரஷ்யப்பொதுமக்கள், ஜாரின் போரை விரும்பவில்லை — வெறுத்தார்கள், வீண் என்றார்கள், குமுறினார்கள்! ஏற்கெனவே, ஜாரின் பிடியில் சிக்கி, அலமந்து, கிடந்த மக்களுக்கு, உழைப்பாளர்களுக்கு, போரில் ஏற்பட்ட தோல்வி, அரசாங்கத்தின் மீதிருந்த நம்பிக்கையைப் பறக்கடித்தது!

முன்பே தாங்கமுடியாத வேதனை கொடுங்கோலர்கள் கையில் சிக்கி' கோலாகல வாழ்வினரால் வாட்டப் பட்டு வறுமையில் கிடந்து, வாடி வதங்கிய மக்களுக்குப் போரால் ஏற்பட்ட நெருக்கடியும், வாழ்க்கை வேதனையும், ஆத்திரத்தைக் கிளறியது! நாம் வேதனைப்படுகிறோம், மன்னன் வீணை வாசிக்கிறான், பசி, பசி என்று பதறுகிறோம், அவன் பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறான் என்ற ஆத்திரம் அவர்கள் நரம்புகளைத் துடிக்கவைத்தது! வேல் பாய்ந்த புலி ஆகிக்கிடந்தனர் மக்கள்! இரண்டிலொன்று தீர்த்துவிடுகிறோம், இனிமேல் பொறுக்க மாட்டோம், ஏழைகளாய் கோழைகளாய் நின்றலறமாட்டோம் என்ற வீராவேசம் அவர்கள் இரத்தத்தைக் கொதிக்க வைத்தது!

மன்னன் மாளிகை நோக்கிச் செல்வோம்; குறைகளைச் சொல்வோம்; அதுவரை ஆலைகளுக்குத் திரும்பாதீர்கள்! வேலை நிறுத்தம் செய்யுங்கள், என்ற வீர முழக்கத்துடன் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் ஆலைத் தொழிலாளிகள் அத்தனை பேரும் குமுறிக் கொந்தளித்துக் கிளம்பினர்!

அருவிக்கு அணைக்கட்டுப் போல, அவர்கள் உணர்ச்சியை அடக்கிப் பிடிக்க ஒரு ஆள், அதுவும் சாதாரணமான ஆளல்ல—மதகுரு, உருவெடுத்தான், தொழிலாளர்களின் தலைவன் என்று சொல்லிக்கொண்டு! அவர்கள் நலன் நாடுவதே தன் இலட்சியம் என்று சொல்லிக் கொண்டு, ரஷ்யபாக்டரி தொழிலாளரின் அசெம்பிளி என்ற கட்சியின் திரைமறைவில்!

பசி பொறுக்காத பட்டினிக் குரல் எழும்பியிருந்ததேதவிர, அப்போது, பகுத்தறிவு ரஷ்யாவில் தலைநீட்டாத நேரம் மதகுரு என்றாலே பக்தியும், பாசமும் பாவிக் கிடந்த வேளை. எனவே, கேபான் என்ற மதகுருவின் சுயரூபம் அவர்களுக்கு விளங்கவில்லை! கேபான் — தங்கள் துயர் தீர்க்க வந்தவர், மதகுரு, எனவே மக்கள் கவலை போக்க விரும்புவர் என்றே நம்பினர்!

பாட்டாளி மக்கள் குமுறிக் கொந்தளித்து எழும்பினர்! உணர்ச்சியும் ஆவேசமும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் விளையாடிக் கொண்

டிருந்தது! இந்த ஆவேசத்தையும்—பேருணர்ச்சியையும் கேபான் 'சதி' என்ற படுகுழியில் தள்ளினான்! பழி வாங்கினான்!!

"இரண்டிலொன்று பார்த்துவிடுவோம், வாழ்ந்தால் நாம், வீழ்ந்தால் ஜார்!" என்று தொழிலாளர்கள் முழக்கினர்.

"ஜார் நமது மன்னர், நல்லகுணம் படைத்தவர்......" என்று ஆரம்பித்தான் அவன்.

"இல்லை! இல்லை!! இனி அவர் இங்கு தேவையில்லை" என்றனர் தொழிலாளர்கள்!

"பதறுகிறீர்கள். உங்கள் நலன்களில் எனக்கில்லையா பொறுப்பு. வாருங்கள் யாவரும், மன்னனிடம் நேராகச் சென்று முறையிடுவோம்! குறைகளைக் கூறுவோம்! நம் ஏழ்மை நிலையை, பட்டினிக் கோலத்தைக் கண்டால் அவர் பதறுவார், பசி போக்க வழி செய்வார்!" என்று பேசினான்! அவன் பேச்சுகளில் தொழிலாளர் வாழ்வுக்கு உழைக்கும் உத்தமர் இவர்தான் என்ற 'நடிப்பு' இருந்தது! நடிப்பை உண்மையென்று நம்பிய மக்கள் அவன் வலையில்வீழ்ந்தனர்! கேபான்தான் நல்லது செய்பவன், நமது கலங்களை விளக்கம் என்று நினைத்தனர்!

முடிவாக 1905 ஜனவரி 9-ந்தேதியன்று கேபான் கட்டளைப்படி யாவரும் ஒன்று கூடினர். சம்மட்டியும் அரிவாளும் தாங்க வேண்டிய கையில் மாதாகோவிலின் கொடிகள்! மனிதரைக் கேவலமாக மதிக்கும் மதோன்மத்தன் — ஜாரின் படம் இன்னொரு கையில்! இந்த 'தலைகீழான' நிலையில் பாட்டாளிப் படை பவனி சென்றது ஜாரின் மாரிகால மாளிகை நோக்கி! 'ஒழிப்போம்! அழிப்போம்!' என்று முழக்கியவர்கள் தங்கள் கையிலேயே ஜாரின் படத்தை ஏந்தும்படி செய்தான். மதக் கொடிகளை மகிழ்ந்து தூக்கும்படி செய்தான்—கேபான், மதகுரு தனது மாயவார்த்தைகளால், தொழிலாளர் தலைவன் என்று கூறிக்கொண்டு!

மாரிகால மாளிகைநோக்கிப் பட்டினிப் பட்டாளம், ஏழைகளின் ஊர்வலம், அமைதியாக வந்தது, மன்னனிடம் "மக்கள் குறை தீர் இறைவா! மறந்து விட்டீரே, மன்னாதி மன்னா! கொடுமை எங்களைக் குத்திச் சாய்க்கிறதே — இப்படிச் செய்யலாமா நீங்கள். நாங்கள் உங்கள் பிரஜைகளல்லவா!" என்றுகுறை தெரிவிக்கும் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்க! வீரப் பரணி பாடிச் செல்ல வேண்டியவர்கள், சோகபிம்பங்களாய் சென்றனர்—கேபான் தலைமையில்! விடுதலை முரசு ஆர்த்துச் செல்ல வேண்டியவர்கள் ஆதரவற்ற அனாதைகள் போல அழைத்துச் செல்லப்பட்டனர்—கேபான்—மதகுருவால்! வீரமுழக்கங்கள் செய்துகொண்டு அணிவகுத்துச் செல்லவேண்டிய அவர்கள் "ஸ்துதி" பாடிக்கொண்டு சென்றனர்!

அந்த ஊர்வலத்தில் 14,000 எலும்பு உருவங்கள் இருந்தன—மனைவி, குழந்தை, தள்ளாடி வரும்

பெற்றோர் அத்தனை வறுமைப் பிம்பங்களுடனும் தொழிலாளி வர்க்கம் ஜாரின் மாரிகால மாளிகையை நெருங்கியது — நம்மைக் கண்ணால் கண்டால், மன்னன் அருள்பாலிப்பான் என்று மதகுரு கூறுகிறாரே, என்ற ஆசையுடன்! நிராயுதபாணிகளாய், சாந்தம் தழுவ, துதி பாடிக்கொண்டு, வீரர்கள் கோழைகளாய், விலாவெலும்பு முறிக்கும் ஆவேசங்கொண்டவர்கள் வீணர்களாய், சோக பிம்பங்களாய், ஒரு கையில் மதக்கொடியும், இன்னொரு கையில் தன் படமும் ஏந்தி வரும், அவர்களைக் கண்டான் ஜார்! எலும்புக் கூடுகளாய், எண்ணெய் காணாத தலையினராய், ஒட்டி உலர்ந்த வயிற்றுடன் வரும் பட்டினிப் பட்டாளத்தைக் கண்ட அவன் நெஞ்சம் துடிக்கவில்லை, அதற்குப் பதில் முகத்திலே புன்சிரிப்பு ஏற்பட்டது! கேபான் திறமையே திறமை என்று கூறிக்கொண்டான், எவ்வளவு எளிதாகப் புலிகளைப் பூனைகளாக்கி விட்டார், எரிமலையை அணைத்துவிட்டார், என்று தனது கையாளான 'கேபானின்'—மதகுருவின்—வெற்றி கண்டு மகிழ்ந்தான்! மன்னன் குறை தீர்ப்பான் — என்று அமைதியுடன் வந்து கொண்டிருந்த பட்டினிப் பட்டாளத்தின்மீதுஜாரின் போலீஸ் படை பாய்ந்தது! சுட்டது! சுட்டது!! சுட்டுக்கொண்டேயிருந்தது!!!

குறை தீர்த்துக்கொள்ள வந்தோரின் குருதி பீடர்ஸ்பர்க்கின் வீதிகளிலே வழிந்தோடியது! குழந்தைகளை ஏந்திச் சென்றதாய், சடேரென அவள்மீது பாயும் குண்டு, மாமெனச் சாயும் அவள், 'அம்மா!' 'அம்மா!' என்றலறும் குழந்தை, அதன்மீது ஓடிவரும் போலீஸ் படை, வீல் என்ற சப்தம், விழுந்து கிடந்தவரின் கையொரு பக்கம், காலொரு பக்கம் 'பூட்ஸ்' அணிந்த போலீஸ் கால்கள் எத்தித் தள்ளும் காட்சி, கோரதாண்டவமாடியது! வயோதிகர்கள், அமளிக்கு இரையாயினர்! பெண்கள் ஓடமுடியாது, துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டனர்! தொழிலாளர்கள் மரம் என வீழ்ந்து கிடந்தனர்!

எங்கும் பிணக்காடு! பிரேத ராஜ்யம்!!

கேபான் — என்ற மதகுருவின் வஞ்சகம்வெற்றி பெற்றஇச்சம்பவம் இரத்தஞாயிறுஎன்றுகுறிப்பிடப்பட்டது. அந்தஅளவுக்கு அன்று,குருதி ஓடிற்றும்! பாமர பாட்டாளி மக்களின் தலைவனாகநடித்து, அவர்களை பலிகொடுத்தான் ஜாருக்கு!

1905 ஜனவரி9 ஞாயிறு—ரஷ்யப் புரட்சியின் அஸ்திவார நாள். உதட்டில் பாட்டாளிகளுக்குப் பரிவும், உள்ளத்தில் வஞ்சமும் கொண்டு 'தலைவன்' ஆகித் தகாத பாதையில் தொழிலாளரை அழைத்துச்சென்று ஜாரின் கொடுமைப் படுகுழியில் அவர்களை வீழ்த்திய ஒரு 'சண்டாளனின்' கபடத்திரை கிழிக்கப்பட்ட நாள்! மதப்போர்வையில் மக்கள் நலன் நாடுபவனாக, போலிவேடம் போட்டுத் திரிந்தவனின் கபடநாடகம் வெளிப்பட்டது, அன்றுதான்! உரிமைவேட்கையைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, ஜாரின் பாராட்டையும், பிரபுத்துவத்தின் ஆதரவையும் பெற்ற ஒரு 'ஆளின்' சூழ்ச்சி அம்பலமாகியதினம் 1905 ஜனவரி 9!!

2

ஜார்வீழ்ந்தான்! அட்டகாசப் பாரம்பரையின் வாழ்வு அஸ்தமித்தது! 1917-பிப்ரவரி 27-ந்தேதி—'இரத்த ஞாயறு' நடைபெற்றுக் கிட்டத்தட்ட பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின்—தொழிலாளி வர்க்கம் வெற்றி கண்டது! பரம்பரை ஆட்சியும், படாடோபிகளின் உல்லாசமும் மண்ணோடு மண்ணாயின! முதலாவது உலகப் பெரும்போர் தந்த பரிசு, பிப்ரவரி புரட்சி! மக்கள் விரும்பாமலிருந்தும், ரஷ்ய ஆதிக்க புரியினர் ஜாரின் பிரபுத்துவம், ரஷ்யாவைப் போர்க்குகைக்குள் தள்ளியது! 1914-ஜூலை 19-ந்தேதி ஜெர்மனி ரஷ்யாமீது தொடுத்தபோர், நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்நிலையில், போரிடி தாங்காது வறுமையில் வாடும் ரஷ்ய மக்கள் உள்ளமோ, "என்று இந்தப்போர் ஒழியும்! சுகம் பெறுவோம்!" என்று துடிக்க ஆரம்பித்தது. போரில் வெற்றிக்குப்பதில் 'பின்வாங்கும்' வீரச்செயலே, ஜாரின் ஆட்சியில் நடைபெற்றது. தோல்வி மேல் தோல்வி; போரோ நடக்கிறது, இன்னலோ அதிகமாகிறது என்ற நிலைகண்ட பாட்டாளிகள், பட்டாளத்து வீரர்கள் குமுறினர், கொந்தளித்து எழுந்தனர் விளைவு, புயல் வீசிற்று, ஜாரின் சாம்ராஜ்யத்தை சரியச்செய்தது! ஜார் வீழ்ந்தான், புரட்சி வெற்றிபெற்றது — ஆனால் பாட்டாளி மக்களின் ஆசை தீரவில்லை, இன்பம் எழும்பவில்லை, இருளே தொடர ஆரம்பித்தது! ஜாரின் கொடுங்கோன்மை தாளாது துடித்த மக்களின் ஆவேச வெறி, வெற்றிதந்தது. ஆனால், அனுபவம், அவர்களுக்கில்லாததால், அந்த வெற்றியை, மீண்டும் பசுத்தோல் போர்த்த 'புலிகளே' சாதகமாக்கிக்கொண்டனர்! ஜார் ஆட்சி கவிழ்ந்ததும், 'இன்பம்' வந்துவிட்டது, இலட்சியம் ஈடேறிவிட்டது என்று புதுப் போதையில் ஆழ்ந்தனர் புரட்சி செய்து வெற்றிகண்டவர்கள்! போதையைப் பயன்படுத்திக்கொண்டு போகவாழ்வை அனுபவிக்க 'பூர்ஷாக்கள்' திட்டமிட்டனர், மிதவாத இலட்சியங்கள் கொண்ட மென்ஷிவிக் கட்சியினர் போன்றவர்களின் ஆதரவை அணைப்பாகக்கொண்டு தற்காலீக அரசாங்கம் ஒன்றை அமைத்தனர்! தொழிலாளர்களின் விடுதலைக் கீதத்தை எழுப்பிய, லெனினை தலைவராகக்கொண்ட போல்ஷிவிக் கட்சியின் தலைவர்கள், வெளிநாடுகளில், ஜாரின் கொடுமைக் காலத்தில் விரட்டப்பட்டிருந்தபடியால், புரட்சி வெற்றி பெற்றதும் தங்கள் ஆசையை 'சந்தர்ப்பவாதிகள்' நிறைவேற்றிக் கொண்டனர்! புரட்சி முடிந்து விட்டது என்ற போதையில் ஆழ்ந்து கிடந்த மக்கள் வாழ்வு வந்துவிட்டது என்று நம்பினர். ஆனால் ஜாரை வீழ்த்தச் சிந்திய குருதியின்மீது இன்னொரு 'பிரபுத்துவ' கோட்டை எழும்ப ஆரம்பித்தது! ஜார்மன்னன், பார்லிமெண்டில் (டூமா என்றுபெயர்) தலைவனாகஇருந்த நோட்ஜ்யான்கோ என்பவனே, அரசாங்க டூமாவின் கமிட்டிக்குத்தலைவனானான்! ஜாருடன் கூடிக் குதூகலித்துக்கிடந்த லவாங் இளவரசன் இந்தச் சர்க்காரின் முதல்வனானான்! கிரேன்ஸ்கி என்ற சோஷியலிஸ்டு புரட்சிக்காரனும் இந்தச் சர்க்காரில் சேர்ந்தான்—கிரென்ஸ்கி சர்க்கார், புரட்சிமுடிந்த ரஷ்யாவை ஆள ஆரம்பித்தது!

சுதந்திர வாழ்வு வந்துவிட்டது, சுயராஜ்யம் அமைந்துவிட்டது, என்று கருதிக்கிடந்தனர்—ரஷ்ய மக்கள். ஆனால், அவர்களின் இரத்தத்தின் மீது 'புதுப் புழு' உருவாகி நெளிய ஆரம்பித்தது! ஜார் ஒழிந்ததும், போர் நின்றுவிடும், அமைதி நிலவும், இன்பம் ஏற்படும் என்று எதிர்பார்த்தார்கள் — ஆனால் அது நடக்கவில்லை. ஆட்சிப்பீடம் ஏறிய அரசாங்கம், புரட்சியில் பூத்த புது மலரானாலும், பழைய வாடையையே கொண்டிருந்தது! தொடர்ந்து பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவைகளின் தோழனாக ஜெர்மானியப் போரை நடத்த ஆரம்பித்தது!

மக்கள் எந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ள விரும்பி, தங்கள் இரத்தத்தைச் சிந்தி, ஜாரை வீழ்த்தினார்களோ, அந்தக் குறைகள் மறையவில்லை — வளர ஆரம்பித்தது. வேதனை வாழ்வு மக்களிடையே தலைவிரித்தாடியது—தாங்காது துடித்த அவர்கள் 'புரட்சி முடிந்துவிடவில்லை, பொன்னைத் தேடி; பொல்லாதவர்கள் கையில் கொடுத்துவிட்டோம்' என்று கருதினர். இந்நிலையில் வெளிநாட்டுக்கு ஜாரால் விரட்டப்பட்டிருந்த லெனின், ஸ்டாலின் முதலானோர் நாட்டுக்குத் திரும்பினர்!

உண்மை நிலைகளை எடுத்துக்கூறி மக்களை, விழிப்படையச் செய்தனர். ஆத்திரம், மீண்டும் மலர்ந்தது. ஜார் வீழ்ச்சியடைந்து, தற்காலீக சர்க்கார் ஏற்பட்ட பின்னரும், வேலை நிறுத்தங்கள், வேதனை முழக்கங்கள் எழும்ப ஆரம்பித்தன. இந்த வேதனைக் கீதம் கேட்ட, தற்காலீக சர்க்கார் புயல் எனச் சீறியது, 'புல்லர்களே! எங்களையா எதிர்க்க எண்ணிவிட்டீர்கள், இயலுமா' என்று கொதித்தனர். ஆவேசம் அவர்களை அடக்குமுறைப் பாதையில் விரட்டியது.

புரட்சிவீரர் லெனின்மீது 'ராஜத்துரோக' குற்றம்! கைது செய்ய வாரண்ட்!! போல்ஷிவிக் கட்சி முன்னணி வீரர்கள் கைது! அச்சகம் நாசமாக்கப் பட்டது! பிராவ்தா பத்திரிகைமீது பாணம்! போல்ஷிவிக் செய்தித்தாள் விற்றவன் படுகொலை!

குருதிகொட்டி, ஜாரின் மமதையை வீழ்த்தி,வெற்றிகண்டோம்,வீணரை வீழ்த்தினோம் என்று எக்களிப்புக் கொண்டிருந்த பாட்டாளிமக்களுக்கு "வந்த சுதந்திர ராஜ்யம்" வழங்கிய பரிசுகள் இவை! தற்காலிக அரசாங்கத்தில் அமர்ந்திருந்த பிரபுத்துவப் பிரதிநிதிகள் குச்சுக்கோவும், மில்ருகோவும் இவைகளை வழங்கினார்கள்! இலட்சியங்களை நிர்மாணிப்போம், ஏழைகளுக்காகப் பாடுபடுவோம் என்று கூறிவந்த "சோஷியலிஸ்டு" கட்சிப் பிரதிநிதிகளாக அரசாங்கப் பீடத்தில் அமர்ந்திருந்த கேரன்ஸ்கியும், சேரிடேல்லியும், சேர்னோவும் அடக்குமுறைப் படலத்துக்கு ஒத்துழைத்தனர்!

3

வேதனைமுடியவில்லை, வறுமை எங்களை சுட்டுப்பொசுக்குகிறது; துயரக் கண்ணீர் வடிக்கின்றனர் மனைவி மக்கள், ஜாரின் ஆட்சித்திமிரும், ரஸ்பு

(12-ம் பக்கம் பார்க்க)

✲ "விஜயம்"—ஒரு விஷயம் ✲

பண்டித நேரு, அமெரிக்காவில், அலங்காரமாகப் பவனி வந்துகொண்டிருக்கிறார். தேசியத் தினசரிகளில், அவரது "விஜயம்" பற்றி வரும் விமர்சனங்களும், அமெரிக்க அரசாங்கம் அவருக்கு அளிக்கும் வரவேற்பு, அதிகாரிகள் அவர்பற்றி வர்ணிக்கும் அழகு, அவரிடம் மக்கள் காட்டும் பரவசம், ஆகியவைகள் பற்றி விவரிக்கின்றன — படங்கள் மூலம் தெரிவிக்கின்றன.

'மக்களின் பரவசம்', 'மகிழ்ந்தனர் நேருவைக் கண்டு' எங்கும் பிரமாத வரவேற்பு என்றெல்லாம் புகழ்கின்றன; போற்றுகின்றன.

இந்தப் புகழ் அந்தாதியில் பொதிந்திருக்கும் பொருள் என்னவென்பது, நாம் மட்டுமல்ல, நல்முடிவு காணும் யாவரும் புரிந்துகொண்டே இருக்கிறார்கள். நேரு இந்தியாவை முதலாளித்துவக்கூடாரத்துக்கு இழுத்துச் சென்று பிணைக்கிறார் என்று ரஷயப் பத்திரிகை கூறியுள்ளது. அமெரிக்காவில், நேருவுக்கு அளிக்கப்படும் வரவேற்புகள் பற்றி, 'அமெரிக்காவே ஒன்று திரண்டு போற்றுகிறது' என்பதாக இங்குள்ளவர்களால் வர்ணிக்கப்படுகிறது. அவரை வரவேற்று, பணமுதலைகளால் நடத்தப்படும், அத்துணை பத்திரிகைகளும் பரணி பாடியுள்ளன! புகழ்க்கீதம் இசைத்துக் கொண்டுள்ளன! போற்றித் துதிக்கின்றன! அவரது வரவால், அமெரிக்க முதலாளித்துவம் பெரிதும் மகிழும் அறிகுறியே தென்படுகிறது. அதற்கேற்றவகையிலேயே பிரதமர் நேருவும், "இந்தியாவுக்கு வாருங்கள்! முதலாளிகளாக ஆகுங்கள்! தொழிற்சாலைகளை நிறுவுங்கள்!" என்று வரவேற்புக் கூறியுள்ளார்.

வருக, வருக என்று வருந்தியழைத்துள்ளார். அவரது "விஜயம்", இந்திய முதலாளித்துவத்துக்கும், அமெரிக்க முதலாளித்துவத்துக்கும் இடையே ஒரு கூட்டு முன்னணியை, புதுக் காதலை, எழுப்புவதாகுமென, முன்னேக்குக் கொண்டோர் கருதுகின்றனர் — கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரரை, பல்லாண்டுகள் சிறையில் கழித்த ஒருவரை, இன்னெரு நாட்டு மக்கள், மனிதாபிமானத்தால், மனிதர்களில் ஒரு மாணிக்கம் என்று கருதி வரவேற்பதும், வாழ்த்துக் கூறுவதும் இயற்கையானதே — அது கண்டு, பாராட்டுப் பெறுபவரின் படைவரிசைக்கு மட்டுமின்றி, 'எல்லோருக்குமே மகிழ்ச்சியும், 'என்ன, நன்னேக்கு அவர்களுக்கு', என்ற எண்ணமும் எழும்பத்தான் செய்யும்!

ஆனல், பண்டிதநேருவின் "விஜயம்" அமெரிக்க மக்களால், எந்த நிலையில் கருதப்படுகிறது என்பது குறித்து, வரும் தகவல் ஒன்று, அவருக்கு அமெரிக்காவில் அளிக்கப்படும் வைபவ விழாக்கள், மக்கள் இதயத்திலிருந்து எழுந்த, குதூகலத்தின் விளைவுகள் அல்ல என்பதாகக் கூறுகின்றது.

அமெரிக்கநாடுமட்டுமல்ல — எங்கும் "மக்கள்"என்ருல், அவர்களிலே பெரியமனிதர்களாய், விளம்பரப்படுதாக்களாய் இருப்பவர்கள்மட்டுமே கருதப்படுகிறார்கள். அப்படி வாழ்பவர்கள், வாழப்பிறந்தவர்களாகஇருக்கும் ரகத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள்பாராட்டையும், புகழ்ச்சியையும் பெறுவது, அவ்வளவு கஷ்டமானதல்ல. அவர்கள் போற்றுதல் கீதம், உதட்டிலிருந்து உதிப்பது, உலர்ந்தது, உண்மையில்லாதது!

இவர்கள் சிலர்; ஆனல், மக்களோ பலர், அவர்களிடமிருந்து, ஒரு தலைவர் குறித்து எழும்பும் இதயபூர்வமான வாழ்த்தும், புகழ்மாலையுமே, பொன்னுகப் போற்றற்குரியன. அவை, அவர்கள் நெஞ்சிலிருந்து எழும்புபவை, நினைக்கும் நேரத்தில் மலர்பவையல்ல — நீடித்து நிலைப்பவை.

நேருவுக்குக்கிடைத்த வரவேற்பில் படாடோபம், பரவசம், பலப்பல வைபவங்கள், இருந்திருக்கலாம். ஆனல் மக்களின் 'இதயபூரிப்பு' இருந்ததா—யாருக்கும் கேட்கத் தோன்றும் கேள்வி இது! எனெனில் அவர் விஜயம்குறித்து, முதலாளி வர்க்கத்தின் தூதுவராய், நல்ல பிள்ளையாய், சென்றிருக்கிறார் என்று முன்னேக்கு உள்ளவர்களால் கருதப்படுகிறது. எனவே, அமெரிக்கமக்கள் நிலை எப்படியிருக்கிறது, நேருவைப்பற்றி அவர்கள் கருதுவதென்ன என்பது பற்றி, நேருவை அறிமுகப்படுத்திவைத்து நியுயார்க்கில் பேசிய எலியனர் ரூஸ் வெல்ட்டின் வார்த்தைகள் விளக்குகின்றன. எலியனர் — முன்னள் அமெரிக்கத்தலைவர் ரூஸ்வெல்டின் மனைவியார். அவர் நேருவை அறிமுகப்படுத்தி வைக்கையில் கூறுகிறார்.

"நேருவுக்கு இன்னும் அதிகமான அளவில் பொது வரவேற்புகள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அமெரிக்க மக்களின் இதயங்களிலிருந்து வரவேற்புக்கிடைக்கிறது அவருக்கு, என்று கூறும்படியாக, அதிகமான அளவில் பொது வரவேற்பு கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்"

வரவேற்புக் கூட்டத்தில் வாய்விட்டுப்பேசியுள்ளார் அவர், இந்த விதமாக! மக்கள் இதயங்களிலிருந்து —என்ருல், பொருள் என்ன, என்று எண்ணத்தோன்றும். நேருவுக்கு, அமெரிக்காவில் கிடைப்பது ஆலையாசர்களின் அணைப்புத்தான், அவர்கள்தான் போற்றுதல் கீதம்பாடுகின்றனர், புகழ்ந்து துதிக்கின்றனர்— லாபநோக்கோடு! சுயநலத்தோடு! என்பதும், மக்களின் இதயத்திலிருந்து, எங்கிருந்து கிடைக்கவேண்டுமோ அங்கிருந்து வாழ்த்தும் மகிழ்ச்சியும் குவியவில்லையென்பதும், எலியனரின், சொற்களிலிருந்து விளங்குகின்றன. திரையை விலக்கும் இத்தகவல் — நேருவின் 'விஜயம்' பற்றி விளக்கும் ஒரு 'விஷயம்!' ✲

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram,

REGD M 4642

சந்தா விபரம் — 1 ஆண்டு ரூ 7, ½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம் விலை இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 13—11—49 | இதழ் 20

ஒன்றுமே இல்லை!

"நாடு சுதந்திரமடைந்துவிட்டது. இதனுல் தனிப்பட்ட மக்களுக்கு என்ன பலன் கிடைத்தது? தனிப்பட்ட வாழ்க்கை சிறந்ததா? ஆந்திரர்கள், குஜராத்திகள், மார்வாடிகள், தமிழர்கள், இதரர் யாராயிருந்தாலும் அவரவர்கள் கலை, பாஷை, கலாசாரம் முதலியவற்றை அபிவிருத்தி செய்துகொள்ள மார்க்கம், சுதந்திரம் உண்டா? இவை இல்லையென்ருல் சுதந்திரம் அடைந்துதான் பயனென்ன? ஒன்றுமே இல்லை."

ஆர். கே. சண்முகம்

6—11—49

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில், இரகசிய இலாகாவின் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு புகைபிடித்துக் கொண்டிருந்த சிட்னி ரீலிக்கு லெனின் மறைவு பற்றிய செய்தி எட்டியதும், துள்ளி எழுந்தான்! அவன் மூளை சுறு சுறுப்பாக வேலை செய்தது—ரஷ்ய சர்க்காரை எதிர்த்து நிற்கும் சமுதாயப் புரட்சிக் கட்சித் தலைவன் சாவின் கோவை ஆட்டக்காயாக வைத்துக்கொண்டு தனது 'திருவிளையாடல்களை'த் துவக்க, ரீலி, திட்டமிட்டான்! சாவின் கோவ், இந்த நேரம் பிரான்சில் வசித்து வந்தான்.

சாவின் கோவுக்குத் தகவல்தந்து விட்டு, ரீலி, ஐரோப்பா முழுமையும் சென்று, அவனுக்கு ஆதரவு திரட்டினான்; இத்தாலியில முஸோலினி, சாவின் கோவை—எதிர்கால ரஷ்ய சர்வாதிகாரி யென்று, ரீலியால் அழைக்கப்பட்ட சாவின் கோவை—பெருமிதத்துடன் வரவேற்று,ரஷ்யாவுக்குள் நுழைய 'பாஸ் போர்ட்' வாங்கித் தந்தான்!

பொதுவுடைமைச் சர்க்காரைக் கவிழ்க்கும் திட்டம் பற்றி ரீலியுடன் அளவளாவிவிட்டு,ரஷ்யாசென்றதும் தகவல தருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றான் சாவின் கோவ்! சாவின் கோவ் சென்றிருப்பான், சகாக்களைத் திரட்டியிருப்பான் என்று பாரிசிலிருந்தபடி பகற்கனவுகள் கண்டுகொண்டிருந்த ரீலிக்கு 1924 ஆகஸ்டு 29ந் தேதி வெளிவந்த தினத்தாள் பின்கண்ட செய்தியைத் தந்தது:

"முன்னாள் கலகக்காரன் சாவின் கோவ் ரஷ்ய எல்லையைத் திருட்டுத்தனமாகத் தாண்ட முயற்சித்தபோது சோவியத் அதிகாரிகளால் பிடிபட்டான்"

சாவின்கோவ், விசாரணையில் அவன் சர்ச்சிலைச் சந்தித்தது முதல் முஸோலினியுடன் விருந்துண்டது வரை, ரீலியின் செய்கைகள் உள்படவிபரமாக வெளிவந்தது. செய்தியறிந்த ரீலி திடுக்கிட்டான். பரபரப்புடன் லண்டன் சென்று சிலநாள் தங்கிவிட்டு, அமெரிக்காவுக்குச் சென்று, ரஷ்யாவுக்கு எதிரான வேலைகளுக்கு ஆதரவைத் திரட்டினான். நியுயார்க்கிலிருந்தபடியே,பெர்லின், லண்டன், பாரீஸ், ரோம், மஞ்சூரியா, ஜப்பான் ஆகிய இடங்களிலிருந்த தனது கிளைக்கழகங்களுக்குத் தகவல்களும் திட்டங்களும் தந்துவிட்டு, 1925 ஆகஸ்டு 6ல் ஐரோப்பா கிளம்பி, பாரீஸ் சேர்ந்தான்.

லெனின் இறந்தபின், ட்ராஸ்கி தலைமையில் சோவியத் எதிர்ப்பு உருவாகி வந்தமையால் அதனுடன் தொடர்பு கொண்டு, போல்ஷிவிச சர்க்காரைக் கவிழ்க்கத் துடிதுடித்த ரீலி, பின்லாந்து சென்று, 'பின்னிஷ் பாஸ்போர்ட்' ஒன்றுவாங்கிக் கொண்டு 1925, செப்டம்பர் மாதம் 5-ம்தேதி ரீலி ரஷ்யாவுக்குப் புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்னால் அவசரமாகத் தன் மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"தற்சமயம் முற்றிலும் புதியதும், சக்தி வாய்நததுமான விஷயம் கிடைத்திருக்கிறது. ஆகவே மூன்று நாட்களுக்கு நான் ரஷ்யாவிற்கு செல்லவேண்டியதாகிறது. இன்றிரவு பீட்ரோகிராட் செல்கிறேன். அங்கிருந்துமாஸ்கோசென்றுவிட்டுச் செவ்வாயன்று திருமபுவேன்."

இந்தச'சாராம்சத்தை கொண்ட கடிதத்தை பாரிசிலிருந்த தன் மனைவிக்கு அனுப்பிவிட்டு ரீலி ரஷ்யா சென்று விட்டான்

இது தான் ரீலியிடமிருந்து அவன் மனைவிக்குக்கிடைத்த கடைசியான கடிதம்

செவ்வாய் போனது. ரீலியின் மனைவி ஆவலோடு அவன் கடிதத்தை எதிர்பார்த்த வண்ணமிருந்தாள்.

ஒரு வாரமாகியது......பலவாரங்களாகின.

ரஷ்ய எல்லையைத் தாண்டிய ரீலி லெனின்கிராட், மாஸ்கோ இரு நகரங்களுக்கும் சென்று ஸ்டாலின் எதிர்ப்புக் கோஷ்டியினரைச் 'சந்தித்துப் பேசிவிட்டு 28—29-ம் தேதி திரும்பியிருக்கிறான். வரும் வழியில் ரஷ்ய எல்லையில் செஞ்சேனை வீரர்கள் ரீலியைக் கண்டு பிடித்து விட்டனர். ரீலியும் அவன் ஆட்களும் தப்பித்து ஓட முயற்சி செய்கையில செஞ்சேனை வீரர்கள் சுட்டனர். ரீலி அந்த இடத்திலேயே இறந்து விட்டான்......"

1917 நவம்பர் 7, ரஷ்யப் புரட்சிக்குப் பின், முதலாளித்துவ 'முகாம்' களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தச் சதி வீழ்ந்தது. சதிகாரனாக இருந்த ரீலியின் 'கதி' பரிதாபகரமாக முடிந்தது!

தியர்க போதனை

4-ம் பக்கத்தொடர்ச்சி

கிளம்பி, உதட்டையும் தாண்டி வெளிவந்திருக்கும் என்பதல்ல, நாம் இப்போது கவனிக்க வேண்டியது!

சுரண்டுபவர்கள் சுரண்டிக் கொண்டே இருக்கிறார்கள்!

சர்க்கரை, கடைகளில் வெளிப்படையாகக் கிடைக்கவில்லை!

ஆனல் கள்ளமார்க்கெட்டில், சகஜமாகக் கிடைக்கிறது!

இது இப்போதுள்ள நிலைமை, சர்க்கரை கிடைக்கவில்லையென்று மக்கள் திண்டாடுகிறார்கள், தேடி அலைகிறார்கள் கடைகளில். இதற்குக் காரணம் சர்க்கரையே இல்லாமற் போய்விட்டது என்றல்ல அர்த்தம்! சர்க்கரை இருக்கிறது—ஏராளமாக, ஆனல் அது கடைகளில் அல்ல! கள்ளமார்க்கெட்டில்!!

சுரண்டிக்கொண்டே, வாழ்வை நடத்தும் சுகபோகிகள், கள்ளமார்க்கெட்காரர்கள் சுகபோகிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பக்கம், தன் கருத்தைமட்டுமல்ல,கண்ணைக்கூடத் திருப்பிப்பார்க்கவில்லை 'கனம்' ஆளவந்தார்கள்! 'தியாகம்' செய்யுங்கள் என்று திருவாய் மலர்ந்து உபதேசிக்கத்துணியவில்லை. ஆனல், அதற்குப்பதில் வாடிவதங்கும் வறுமைக் கூட்டத்துக்கு, பொதுமக்களுக்கு போதனை புரிகிறார்கள், "தியாகம்" செய்யுங்கள்! இல்லாவிட்டால் என்ன செத்தாவிடுவீர்கள் என்று!

ஏன் இது, பணமுதலைகளை, பகற்கொள்ளைக்காரர்களை வாய்திறந்தும் ஒரு கேள்வியோ, 'பணத்தியாக'ப் போதனையோ புரியாமல, பொதுமக்களிடம் வந்து போதிக்கவும் உபதேசிக்கவும் வந்து உலவுகிறார்களே, ஆளவந்தார்கள், ஏன் இந்த முரண்பாடு என்றுதான் கேட்கத்தோன்றும். கள்ளமார்க்கெட் காரர்கள் பற்றி வாய்க்கூடத்திறக்க வக்கற்றவர்கள், வறுமை உலகில் வந்து கொட்டியளக்கிறார்களே என்று எண்ணத்தான் தோன்றும். இதற்கு என்ன பதிலைக்காண முடியும்!

★ தியாக போதனை ★

—✲—

"தியாகம் செய்யுங்கள் தியாகம்!'

இது என்ன, "கீரை வாங்குங்கள் கீரை" என்று கூவுவதுபோல இருக்கிறதே,என்றுநினைக்கிறீர்களா! செச்சே, அப்படியெல்லாம் எண்ணதீர்கள், இதுசமயம் தவறினல் மறுசமயம் வாய்க்காது, ஏதோ கொஞ்சம் நீங்களும் தேடிவைத்துக்கொள்ளுங்கள்! தியாகிகள் உலகிலே, பின் உங்களுக்கு இடம் கிடைக்காமல் போனலும் போய்விடும், நேரம் அறிந்து போதிக்கிறார், 'கொஞ்சம் செய்யுங்கள் என்று!'

எப்பொழுது பார்த்தாலும், அறுகாலமும், அறுசுவையுடன் உணவருந்திவிட்டு, ஆடிப்பாடி, மாளிகைகளிலேயே எப்பொழுது பார்த்தாலும் உல்லாசமாகத்திரிந்து கொண்டிருக்கும் பொதுமக்களே, உங்களுக்குத்தான் சொல்கிறார்—செய்யுங்கள 'தியாகம்!' என்று!

கவலை கொஞ்சங்கூட இன்றி, கஷ்டப்படாது, மதோன்மத்தர்களாய், என்ன செய்வது என்று புரியாமல், இவ்வளவு ஏராளமாக நம்மிடம் குவிந்துபோய்க் கிடக்கிறதே உணவும் பணமும் வாழ்வும், என்று ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு நிற்கிறீர்களலலவா! உங்களுக்குத்தான் சொல்கிறார்—அவர், செய்யுங்கள், அதுவும், இடைவிடாது, விட்டுக்கொடுக்காது, "தியாகம்" செய்யுங்கள் என்பதாக!

நீங்கள், செய்யும் தியாகம் சாதாரணமாக, இலேசானதாக இருக்கக் கூடாது. நான் சொல்லவில்லை, அவர் சொல்கிறார்! போட்டிவேகம் 'அவனைவிட நான்தான் அதிகம் செய்துவிட்டேன்' என்ற பூரிப்பு ஏற்படவேண்டும். அவ்வளவு, ஆர்வத்துடன், தியாகம் செய்யுமாறு கூறுகிறார். ஈடுபடுங்கள், ஏதாவது "தியாகம்" செய்ய ஆரம்பியுங்கள்!

• • •

"இதென்னப்பா, திருக்கூத்து? அரைவயிறு கஞ்சிக்கே நான் ஆலாப் பறக்கிறேன். யார் உல்லாசமாக உலவுகிறார்கள்! ஒருநாள் உணவுக்குச் சம்பாதிக்கவே, ஊர்முழுதும் அலைகின்றனர்; நானு, மதோன்மத்தனுக மகிழ்ந்து கிடக்கிறேன்? என்னப்பா, உனக்கு ஏதாவது, மூளைக் கோளாறோ! அல்லது, யாரோ, செய்யச் சொல்கிறார், என்கிறாயே, அவர் என்ன ஒன்றுமேபுரியாத 'புது, ஆசாமியோ, நம்நாட்டுக்கு! என்றுதானே, ஆத்திரத்துடன் கேட்க எண்ணுகிறீர்கள்!

கேட்காதீர்கள், அது தேசத்துரோகமான காரியம்! அப்படிக் கேட்டாலும், "அவர்" பதிலசொல்ல மாட்டார். அவர் அவ்வளவு பெரியவர், அவருக்கிருக்கும் எத்தனையோ வேலைபளுவில் இதற்கெங்கே பதில் கூறமுடியப்போகிறது! இல்லை, கேட்கத்தான் கேட்போம், என்று விதண்டாவாதம் செய்தால் ஒரு வேளை அவருக்கு 'வேகம்' வந்தாலும் வரலாம்! விளைவு, விபரீதமானதாக ஆனலும், ஆகலாம்! அவ்வளவு பெரியவர், இந்தியாவுக்கே ஒரு இரும்பு மனிதர், இந்த உபகண்டத்தின் துணைப்பிரதமர்!

ஆமாம்! பட்டேலைத்தான் குறிப்பிடுகிறேன், அவர்தான் கூறியிருக்கிறார் உங்களுக்கு—நாட்டுமக்களுக்கு—தியாகம் செய்யுங்கள் தியாகம் என்று!

அதுவும், தியாகம், என்றாவது ஒருநாள் செய்துவிட்டு. பின் நீங்கள் இருந்துவிடக்கூடாதாம்! ஒழுங்காக விட்டுக்கொடுக்காமல், எல்லாவகைகளிலும், தியாகம் செய்யவேண்டுமாம், அதுவும் போட்டி வேகத்துடன், ஒவ்வொருவரும் அந்த நற்காரியத்தில் ஈடுபடவேண்டுமாம்!

* * *

அண்மையில், அவரது பிறந்தநாள் விழா டெல்லியில் கொண்டாடப்பட்ட பொழுது, பேசுகையில் அவர் கூறியுள்ளார் தியாகம் செய்வதில் போட்டி வேகமும், போறுப்பும் இருக்கவேண்டும். அப்படித் தியாகம் செய்வதுதான் நாட்டுக்கு நலன் விளைவிக்கும் என்பதாக!

தியாகம் செய்பததானே வேண்டும், நாடும் மக்களும் திண்டாடித் தவிக்கையில், அவர்களுக்குஒரு நல்வாழ்வு தேடித்தர, அது அவசியமல்லவா, என்று கேட்கத்தோன்றலாம்! இதில்என்ன தவறோ, தப்புஎண்ணமோ, இருக்கிறது என்றும் கேட்கலாம்!

உண்மைதான், தியாகம், செய்ய வேண்டியதுதான். அதுவும் ஒட்டப்பரும், உயரப்பரும், ஒருங்கே உலவும் ஒரு நாட்டைச் சீர்படுத்த "தியாகம்" செய்யப்படாமல் முடியாதுதான்.

மாடமாளிகையில் வசிப்போர், உழைக்கும் விவசாயியைச் சுரண்டி உயிர் பிழைப்போர், கள்ளமார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிப்போர், அத்தனை பேரும், ஓரளவு தங்கள் சுகபோகங்களை, சுயநலத்தை 'தியாகம்' செய்யத்தான் வேண்டும்! அப்போதுதான், ஏழ்மையும் வறுமையும் தாண்டவமாடும் மக்கள் ஏதாவது பெற்று மகிழ்வு பெற முடியும்!

ஆனல், பட்டேல் செய்திருக்கும் "தியாக போதனை" 'உயரப்பர்'களுக்கல்ல! வாழமுடியாது, பசியும், பட்டினியும், பணநெருக்கடியும் தாக்கக் குடும்பத்தை நடத்த வழியின்றிக் கொந்தளித்துத் தவிக்கிறோமே, ஏழை மக்களாகிய நமக்குச் சொல்கிறார், தியாகம் செய்யுங்கள் என்று! ஏதோ, இங்கிருக்கும் மக்கள் யாவரும், உண்டு களித்து, பட்டு மெத்தையில் படாடோபமாகப் படுத்துப் புரண்டுகொண்டுகிடக்கிறோம், என்ற நினைப்புடன்! நாம் தியாகம் செய்யவேண்டுமாம்! அதுவும் போட்டி வேகத்துடன், அவரைவிட நான்தான் அதிகமாகச் செய்தேன் என்ற ஆசையுடன் செய்யவேண்டுமாம்! அதுதான், நாட்டுக்கு நல்லது செய்யுமாம்!

• • •

பதறித்துடிக்கும் பரிதாப பிம்பங்களாகிய நமக்கு, தியாக உபதேசம் செய்திருக்கிறாரே, பட்டேல் அது எப்படிப்பட்டது தெரியுமா! காங்கிரஸ் தோழர்களின் ஆகஸ்டுத் தியாகம் போன்றது கூட அல்ல உலகவாழ்வு முன்னேற என் உயிரைக் கொடுப்பேன் என்று செய்கிறார்களே, அது

போன்றதல்ல, சுகபோகங்களைத் துறந்து நாட்டுப்பணிக்கு, பொதுச் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்கிறார்களே அதுகூட அல்ல! பட்டேல் தரும் "தியாக விளக்கம்" இருக்கிறதே, அது புதிதானது, யாரும் இதுவரை ஈடுபடாதது, நாட்டில் வாழும் 'ஒட்டப்பர்' எல்லாம் 'ஒன்றுமில்லாதப்பர்' ஆகக்கூடியது, அத்தகைய "முக்கியத்துவம்" பொருந்தியது!

சர்க்கரை கிடைக்காமல் நாடுமுழுமையும் திண்டாடி, தெருவில் நின்றுகொண்டு, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒரு பொருள் கிடைக்கவில்லையே, 'கொள்ளை பணம், கொடுத்து எங்களால் வாங்க முடியவில்லையே என்று பதறி நிற்கிறார்களல்லவா, மக்கள்! அது பற்றிப் பேசும் போது தான் இந்தியத் துணைப் பிரதமர், காங்கிரஸ் கனவானான அவர் மேற்கூறிய விதமாகத் "தியாக போதனை" செய்துள்ளார்!

"நமக்குச் சர்க்கரை தேவையென்றால் அது கிடைக்கவில்லையென்பதற்காக நாம் செத்துவிடப் போவதில்லை. அதுபற்றி ஆத்திரம் வரலாம் ஆனாலும் நாம் வாழ முடியும், ஆகவே நாம் கொஞ்சக் காலத்துக்கு சமாளித்துத்தான் ஆகவேண்டும். அதைவிட்டுவிட்டு, கிடைக்கவில்லையென்பதற்காக, முணு முணுத்து முனகுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை!" என்று விளக்கமாகப் பேசியிருக்கிறார். இதைத்தெரிவிக்குமுன் தான் அவர் மக்களிடையே 'தியாகம்' ஏற்படவேண்டியதன் அவசியம் பற்றிக் கூறியிருப்பது. இப்போது புரிகிறதல்லவா! பட்டேல் கூறும் 'தியாகம்' எது என்பது! சர்க்கரை இல்லாவிட்டால் நாம் என்ன செத்துப்போகவா போகிறோம், அப்படியில்லையே; ஆகவேஏன் அதிருப்தி படுகிறீர்கள்? சர்க்கார் குறை தீர்க்கவில்லை என்று ஏன் குறை தெரிவிக்கிறீர்கள்! அதுகூடாது இதிலெல்லாம் "தியாகம்" காட்டவேண்டாமோ, என்று அருஞ்சொல் உபதேசிக்கிறார் அவர்!

உண்மைதான், அவர் கூறுவது போல, சர்க்கரை கிடைக்கவில்லை என்பதற்காக நாம் உடனே செத்துவிடப்போவதில்லை! உயிரோடு உலவ முடியும்! சர்க்கரை ஒன்றுமட்டுமல்ல, துணி போதுமானதாகக் கிடைக்கவில்லை யென்றால், எல்லோரும் விழுந்து இறந்துபோய்விடமாட்டார்கள்! இன்னும், அரிசி, போன்ற முக்கிய உணவுப்பொருள் தவிர ஏனைய மிளகாய், பருப்பு, உப்பு, முதலானவை கிடைக்கவில்லை யென்றாலுங்கூட மக்கள், உடனடியாகச் செத்து விழுந்துவிடமாட்டார்கள்!

முழு உடம்பைத் துணி போர்த்தி மறைத்தவர்கள் "கோவணாண்டி"களாக உலவினாலும் உயிரோடுவாழத்தான் செய்வர்! குழம்பு, சாம்பாருடன் சாப்பிட்டவர்கள் வெறும்சோற்றைமட்டுமே தின்றாலும் செத்துவிடமாட்டார்கள்! உயிர் இருக்கத்தான் செய்யும்!

ஆனால், நமக்கு, பட்டேலின் 'பதவுரை' கேட்டதும் நகைப்பு ஏற்படவில்லை, நாடாளவந்த மகானுபவர்கள், மனதில் சிறிதுகூடச் சங்கடமில்லாமல், 'இது இல்லாவிடில் இறந்தா போய்விடுவீர்கள், அது கிடைக்காவிட்டால் உயிராபோய் விடும்!' என்று கேட்கிறார்களே வாய்விட்டு, மனந்திறந்து, என்பதற்காக வேதனையே உருவாகிறது!

யாரும், எந்த அரசாங்கமும், அன்னிய ஆதிபத்தியக் காலத்திலும் கேட்காத கேள்வியை, கேட்கவும் விரும்பாத ஒரு கேள்வியை, வெகு அனாயாசமாகக் கேட்கின்றனர், மக்கள் பெயர் சொல்லி மன்றம் ஏறிய 'மகா' புண்ணிய மூர்த்திகள்!

பட்டேல் மட்டும்தான் என்றல்ல, அவரது படைவரிசைகள்கூட இதே 'பாணி'யிலேயே இப்போது பேசிவரத் துவங்கியுள்ளனர். அண்மையில் தூத்துக்குடியில் பேசுகையில் பேசிய மாகாணப் பொதுப்பணி அமைச்சர் பக்தவத்சலம் "மக்கள், சர்க்காரைக் குறைகூறக் கூடாது" என்றும், தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்கும் வேலையிலீடுபட்டுஉழைக்கும் தோழர் காமராஜ் பலஇடங்களில், "சர்க்காரே எல்லாவற்றையும் எப்படிச் செய்து தர முடியும்?" என்றதோரணையிலும் பேசி வருகின்றனர். தேனும் பாலும் எங்கள் ஆட்சியில் பெருக்கெடுத்தோடும் என்று கர்ஜனை புரிந்த கனம்கள், இன்று 'கோபுரம்' ஏறிய கோமான்கள் ஆகிவிட்டபின், கூறுகின்றனர், சர்க்காரை எதற்கெடுத்தாலும் எதிர்பார்க்கலாமா! குறை கூறலாமா! "இது" கிடைக்காவிட்டால் என்ன, அது "அகப்படாவிட்டால் அப்படியே உயிராபோய் விடும்!" என்றெல்லாம்.

அரசாங்கம் என்றால், அது மக்களின் நன்மைக்காக, அவர்கள் சுகம் பெறும் பொருட்டு நடத்தப்படுவது தான். ஆனால், இந்த நினைப்புக்கூட, "இவர்களுக்கு" மறைந்துவிட்டதாகவே தெரிகிறது. அது மட்டுமல்ல, மக்கள் நல்வாழ்வு கொண்டு, இன்பம் கொழித்து வாழ வேண்டும் என்ற எண்ணமோ, நாடு வளம்கிரம்பிவழிகிறது என்றுபூரிக்க வேண்டிய ஆசையோ கூட இவர்களுக்கு எழும்பவில்லை! சாப்பிடாவிட்டாலும், எப்படியும் உயிர் வாழ்வார்கள், அவர்கள் உயிர் உடலை மட்டும் நீங்காது இருக்கவேண்டுமானால் எவ்வளவு குறைத்துப் போட்டால் போதும் என்று புள்ளி விபரம் சேகரித்து அதன்படியே வாழவைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் போலும்!

மக்கள் வாழ்வுக்கு வசதி செய்து தர முடியவில்லையே யென்று வருந்தி, ஏங்கி, துடிக்கவேண்டிய மகானுபாவர்கள், காரில் பவனி வந்து கொண்டு, உபதேசம் புரிகிறார்கள், 'அது இல்லாவிட்டால் என்ன?' 'இது கிடைக்காவிடில் செத்தா போய்விடுவீர்கள்' என்ற மாதிரியில்! விசித்திரமானது, அதுவும் எந்த நாட்டிலும் நடக்க முடியாதது!

தேசியம், காங்கிரஸ், சுயராஜ்யம் பெற்றுத் தந்தோம் என்ற போலித் திரைகள் மூலம், மறைந்துகொண்டு, உள்ளத்தைப பொசுக்கும் இந்த வார்த்தைகளை நாம் கூறினால் யார் கேட்க முடியும் என்ற துணிச்சல் தவிர வேறென்ன இருக்க முடியும், இவர்களுக்கு!

* * *

மக்கள் தியாக சிந்தனையுள்ளவர்களாக இருக்கவேண்டுமாம், தியாகம் என்ற சொல்லுக்குப் புது வியாக்கியானம் தரப் புறப்பட்டிருக்கிறார்கள், 'புண்யவான்கள்!' எவ்வளவு நெஞ்சழுத்தமும், மக்களை மரமண்டைகள் என்று நினைக்கும் மனப்பான்மையும் இருந்திருந்தால், இந்த வார்த்தைகள், இதயத்திலிருந்து

(9–ம் பக்கம் பார்க்க)

★ திருப்தி அவருக்கு! ★

மாகாண நிதி நிலைமை திருப்திகரமாயிருக்கிறது, தேவைக்கான வருமானம் அதிகரித்திருக்கிறது என்று அறிவிக்கிறார் நம் நிதி மந்திரி கோபாலர்.

மதுவிலக்குக் காரணமாக ரூ 13 கோடி நஷ்டம் ஏற்பட்டிருந்தும், வருமானம் ரூ 5 கோடி அதிகமாக இருப்பதாகக்கடந்தவாரம், வானொலியில் பேசுகையில் தகவல் தந்துள்ளார் அவர்.

ஆலோசகர் ஆட்சியின் கடைசி ஆண்டில், அதாவது 1945–46ம் ஆண்டு வருமானத்தையும் இந்த ஆண்டு கிடைத்த வருமானத்தையும் ஒப்பிட்டுக் கூறுகிறார், இப்போதைய வருமானம் அதிகம் என்று.

கடந்த ஆண்டு மதுவிலக்கு காரணமாகச் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டத் தொகை ரூ 13 கோடியென்றும், அவ்வளவு 'துண்டு' விழுந்தும் கூட அது சமாளிக்கப்பட்டு அதற்கு மேலும் ரூ 5 கோடி அதிகம் வந்திருப்பதாக அறிவிக்கிறார் அவர்,

1945—46 மொத்த வருமானம் ரூ 47,99,00,000

1948—49 „ ரூ 53,25,00,000

மதுவிலக்கு நடவடிக்கை சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டும் ஆலோசகர் ஆட்சிக் காலத்தைவிட வருமானம் ரூ 5,26,000 அதிகமாகியிருக்கிறது. அதாவது 13 கோடி 5 கோடி ஆக 18 கோடி ரூபாய், அதிக வருமானம் வந்திருக்கிறது என்பதற்கும் அவர் தரும் விளக்கம் இது.

விற்பனை வரிவசூல் ரூ 7,00,00,000

வியாபார வரிகள் மூலம் ரூ 1,00,00,000

மோட்டார் விற்பனை வரி ரூ 2,00,00,000

வருமான வரியில் மத்திய சர்க்கார் தரும் பங்கு ரூ 8,42,00,000

மேலே குறிப்பிட்டிருப்பதுபோல வரி முன்னைவிட அதிகமாக வசூலிக்கப்பட்டு, மதுவிலக்குச் சம்பந்தமாக ஏற்பட்ட நஷ்டம் சரி செய்யப்பட்டிருக்கிறது.

கோபாலர் கூறுவது போல் மாகாண நிதி நிலை திருப்திகரமாக ஆகியிருக்கிறது. இத்திருப்தியேற்படுவதற்குக் காரணமாக இருந்திருப்பது, அவர் கூறுவது போலவே, விற்பனை வரி, இந்த விற்பனை வரி, ஆலோசகர் ஆட்சிக் காலத்திலும், இப்போதும் எப்படியிருக்கிறது என்பதை, அவர் தரும் பட்டியல் நமக்கு அறிவிக்கிறது. ஆலோசகர் ஆட்சி (Adviser's Regim)க் காலத்தில் விற்பனை வரி வசூல் செய்யப்பட்டதையும், தற்போது "நம்ம" சர்க்கார் வசூல் செய்வதையும் பாருங்கள்.

	1945—46	1948—49
பொது விற்பனை வரி	ரூ 6	ரூ 13
ஏனைய துறைகளில்	...	ரூ 1
மோட்டார் விற்பனைவரி	1	ரூ 2

(கோடிக் கணக்கில்)

அட்வைசர் ஆட்சிக் காலத்தில், அதாவது அந்நியர் நம்மை ஆண்டபொழுது, வசூலிக்கப்பட்ட விற்பனை வரித் தொகை ரூ 6 கோடி. இப்போது "நம்ம" சர்க்கார் வந்த பிறகு அதன் மூலம் வசூலிக்கப்படும் தொகை ரூ 13 கோடி. பிற வர்த்தக வரிகள் மூலமும் முன்னைவிட, இப்போது ரூ 2 கோடி அதிகமாக வசூல் செய்யப்படுகிறது "நம்ம" சர்க்காரால். ஆகவே, இந்த அதிக வரி மூலம் கிடைக்கும் தொகையான ரூ 9 கோடியோடு, மத்திய சர்க்காரிடமிருந்து வருமான வரி (Income – Tax) பங்காகக் கிடைக்கும் சுமார் $8\frac{1}{2}$ கோடியையும் சேர்த்து மொத்தம் $17\frac{1}{2}$ கோடி ரூபாய் சர்க்காருக்கு வருமானம், வருகிறது. இதன் மூலம் மதுவிலக்கால் ஏற்பட்ட நஷ்டம் 13 கோடி ரூபாய் சரிக்கட்டப்பட்டு மேலும் 5 கோடி ரூபாய் மிச்சப்படுகிறது என்று அறிவிக்கிறார்.

அது மட்டுமல்ல, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்பொழுது ரூ 4 கோடி வருமானம் தரக்கூடிய புது வரிகளைத் தான் விதிக்க யோசித்திருந்ததாகவும், ஆனால் அந்தவரிகளை 'எதிர்ப்பு' காரணமாக கைவிட நேர்ந்தும்கூட, தேவைப்படும் எனத் தான் எதிர்பார்த்த 4 கோடி ரூபாயையும் விற்பனை வரியே தந்துவிடும் என்றும், அதற்கான சூசனைகள் தென்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இந்த நான்கு கோடியைச் சரிக்கட்டக் கோபாலர் விதிக்க வேண்டுமென நினைத்திருந்த வரிகளில் இன்றியமையாதது பத்திரிகை விளம்பர வரியாகும். இந்த வரியும், இன்னும் சிலவும், எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டும் கூட அதையும் விற்பனை வரியே சமாளித்து விடும் என்று நம்ப இடமிருக்கிறது என்று கூறியுள்ளார்.

ஆகவே, விற்பனைவரி அட்வைசர் ஆட்சிக்காலத்தைவிட இப்போது 9-கோடி ரூபாய் அதிகமாகியிருக்கிறது. இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது. கவலை தீர்க்கும் 'கற்பக விருட்சமாக' ஆட்சியாளருக்கு, விற்பனைவரி இருந்து வருகிறது.

* * *

விளையவிருந்த ஆபத்துக்கள் விற்பனைவரி மூலம், தடுக்கப்பட்டுவிட்டன என்று மார்தட்டிக் கொள்கிறார், மதிப்புக்குரிய கனம் மந்திரியார். அட்வைசர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் செய்யாத ஒன்றை, பெருத்த நஷ்டம் தரக்கூடிய ஒன்றை, மதுவிலக்கை நாங்கள் அமுல் நடத்திவிட்டோம், அப்படியிருந்தும் வருமா

னம் குறையாமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்.

மந்திரியாருக்கு, உண்மையில் இது மகிழ்ச்சி கொடுக்கக் கூடிய விஷயம்தான். மதுவிலக்கால் பறிபோகும் வருமான நஷ்டத்தை எப்படி ஈடுசெய்வது என்று கனவு கண்டு கிடந்தவர்களுக்கு, விற்பனை வரிமூலம் அதைச் சரிக்கட்ட முடிந்தது காண அகமகிழ்ச்சிதான் ஏற்படும்.

ஆனால் விற்பனைவரி, செலுத்தும் மக்களுக்கல்லவோ தெரியும் அவர்கள் படும் கஷ்ட நஷ்டங்கள். அந்நிய ஆதிபத்தியக் காலத்தைவிட இப்போது, அது முன்னைவிட இரண்டு மடங்குக்குமேல் அதிகமாகியிருக்கிறது. மாகாண சர்க்காருக்கு அதிகவருமானத்தைத் தேடித்தந்திருக்கிறது.

ஆனால், அவ்வளவு அதிகவரியையும் செலுத்தியவர்கள் மக்கள், வேறுயாருமல்ல. பிரமாதமான காரியத்தைச் சாதித்து விட்டது போலவும், இனியும் விற்பனை வரி மூலம் நிறையத் தொகைக்கிடைக்குமென்றும் பெருமை கொள்கிறாரே, அமைச்சர், அவருக்கு இது தெரியாததல்ல, விற்பனைவரி எங்கிருந்து வருகிறது, செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறவர்கள் யார் என்பதெல்லாம். இருந்தும் விற்பனை வரி மூலம் 'இவ்வளவு' தொகை வந்திருக்கிறது என்று பூரிப்படைகிறார்.

மாகாணத்துக்கென வருமானம் தரக்கூடியதாக இருக்கும் ஒரே ஒரு நல்ல 'இனம்' இந்தவிற்பனை வரிதான். ஆகவேதான், சர்க்கார், பட்ஜட்டில் பற்றுக்குறை ஏற்படுகிறது என்று தெரிந்ததும் விற்பனைவரியை அதிகமாக்கிக் கொள்ளுகிறது — நஷ்டத்தைச் சரிக்கட்ட வேறு வழி காண முடியாமல்.

புது வரிகள் போட்டு, 4-கோடி ரூபாய் வருமானம் தேடவேண்டுமெனத்தான் திட்டம் தீட்டியிருந்ததாகவும், ஆனால் அவைகளில் முக்கியமான சில எதிர்ப்புக் காரணமாக கைவிடும்படி நேர்ந்துவிட்டதாகவும் அறிவிக்கிறார். அதோடு, அந்தப்புது வரிகளில் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தையும் விற்பனைவரியே சரிகட்டிவிடுமாம். அதிக வருமானம் வருமென்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறதாம்!

புதுவரி விதிப்புச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தவைகளில் ஒன்று பத்திரிகைமீது விளம்பரவிதி விதிப்பது என்பதாகும். இந்த வரியை எப்படியும் விதிக்கத்தான் செய்வோம் என்று, பத்திரிகை ஆதிபத்தியம் எவ்வளவோ பயமுறுத்தியும் கோபாலரும் அவரது கூட்டுச் சகாக்களும் விடாப்பிடியாக இருந்தனர். விளம்பரங்கள்மூலம் ஏராள பணம் வருமானம் அடையும் பத்திரிகைகள்மீது வரி விதிப்பதுஎன்பதுதான் இந்தப்பத்திரிகைவிளம்பரவரியின் கருத்தாகும். ஆனால் விடமாட்டோம், விட்டுவிடமுடியாது என்றெல்லாம் வீரமுழக்கங்கள் செய்த மாகாண மந்திரி சபையின் "மூக்கறுப்புவிழாவை" முனைந்து நின்று, சென்னை பத்திரிகாதிபத்தியம் செய்திருக்கிறது.

இந்தவாரம், சென்னை சர்க்கார், தாங்கள் உத்தேசித்திருந்த விளம்பரவரி மசோதாவைக் கைவிட்டுவிட்டதென அறிவித்துவிட்டது.

வீரமுழக்கங்கள் வெற்றுக் கூச்சல்களாகிவிட்டன! சென்னை பத்திரிகாதிபத்யம், மத்திய சர்க்காரை வலியுறுத்தி அவர்களை வசப்படுத்தி, அவர்கள் மூலம் மாகாண சர்க்கார், தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வழியாயிருக்கும் என்று கண்ட ஒரு ஏற்பாட்டைக் கைவிடும்படி செய்திருக்கிறது.

எண்ணம் ஈடேறவில்லை, அதற்கு இடைஞ்சலாக மத்திய சர்க்கார் இருக்கிறதுஎன்று அறியும் கோபாலரோ, குறையும் வருமானத்தை விற்பனை வரி ஈடு கட்டிவிடுமென்று கூறுகிறார்!

விற்பனைவரி வியாபாரிகளிடமிருந்துதான் வசூல் செய்யப்படுகிறதென்றாலும், இதன் மூலம் பாதிக்கப்படுபவர்கள் அவர்களல்ல, பொருள்களை வாங்கும்பொதுமக்கள் தான். பொதுமக்கள் தரும் வரிதான், அட்வைசர் ஆட்சிக் காலத்தை விட அதிக வருமானம் வருகிறது என்று அகமகிழ்கிறாரே அமைச்சர், அது!

தங்களுக்கு வருமானம் தரத்தக்க வழியாக விற்பனை வரி இருக்கிறது என்ற காரணத்திற்காக அதை மென்மேலும் அதிகப்படுத்திக்கொண்டே போவதால், அது அதிகமாகிக் கொண்டு வருகிறது என்று அறிவிப்பதும்தானா அழகு! 'நம்ம' சர்க்கார் வந்தது, நமக்கு முன்பிருந்த வரிப்பளுவில் கொஞ்சம் குறைத்தது என்று பொதுமக்கள் தங்கள் கஷ்டத்திலிருந்து கொஞ்சம் விடுதலையடையும்படி செய்யவேண்டியதுதானேமுறை!

அப்படியென்ன, வருமான நஷ்டத்தைச் சரிக்கட்ட வக்கு இல்லாமலா போய்விட்டது! வருமான வரியாக ரூ. 8 கோடி மத்திய சர்க்காரிடமிருந்து, மாகாணத்துக்குப் 'பங்கு' கிடைத்தது, என்று கூறுகிறாரே கனம் கோபாலர், அந்தஎட்டுக்கோடியும், மாகாணம் செலுத்திய மொத்தத் தொகையில் எத்தனை சத விகிதம்? நூற்றுக்கு பதினேழுதானே! 17% பங்கே, எட்டுக்கோடி ரூபாய் நமக்குத் தந்திருக்கிறது. அதுவும் விற்பனை வரி மூலம் எவ்வளவு அதிக வருமானம் வந்ததோ அதற்குச் சமமாகக் கிடைத்திருக்கிறதென்றால், நாம் கொடுக்கும் அவ்வளவு வருமான வரியும் இங்கேயே தங்கினால் எவ்வளவு வருமானம் நமக்கு ஏற்பட முடியும்! கோடிக் கணக்கில் பணம் கிடைக்குமே!

அது முழுமையும் அப்படியே, மத்திய சர்க்காரின் கஜானாவில் கொட்டிவிட்டு, 'ஒருவரி' இருக்கிறது தங்கள் கைவசம் என்பதற்காக அதன் மூலம் சுரண்டுவதுதானா முறை!

நிதி நிலைமை சரியாக இருக்கிறது என்று திருப்தியடைகிறார். திருப்தி அவருக்கு, ஆனால் நமக்கு?

அவர் செலவு!

பண்டித நேரு அமெரிக்கச் சுற்றுப் பயணம் முடித்துத்திரும்பிவிட்டார். அவருக்கு, அமெரிக்காவில் ஏற்பட்ட சுற்றுப் பயணச் செலவு என்ன தெரியுமோ? 130 டாலர்கள். அதாவது ரூ 617—8—0! ஒரு மாதத்துக்கோ, ஒரு நாளைக்கோ அல்ல இந்தச் செலவு! ஒரே ஒரு மணி நேரத்திற்கு ரூ 617—8—0! பண்டித நேருவுக்குத் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அளித்த வரவேற்பு, விருந்து ஆகியவைகளின் செலவு நீக்கி ஆகியிருக்கும் செலவாம் இது! இவ்வளவு தொகையை, அமெரிக்கா, செலவழித்திருக்கிறது "ஏழை" நாட்டின் பிரதமருக்கு என்றால், அதில் அர்த்தமில்லாமலா இருக்கும்!

✯ அடிமை அடிப்பீடம் ✯

"ஒரு நாட்டை அடிமை கொள்ளச் சுலபமான வழி, அந்நாட்டு மக்களின் பாஷையை ஒழித்துவிட்டு வேறு பாஷையை அவர்கள்மீது திணிப்பதே."

சென்னையில் நடைபெற்ற தமிழக எல்லை மாநாட்டில் இவ்வண்ணம் கூறியுள்ளார் கோவைச் சீமான் ஆர். கே. சண்முகம். நம்முடைய குரல், அவருடைய இதயத்திலிருந்து எழுந்து வந்திருக்கிறது. அவர், சுயமரியாதைக்காரரோ, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரோ அல்ல. காங்கிரஸ் முகாமில் கைகுலுக்குபவர், எட்ட முடியாத இடமான இந்திய மந்திரி சபையிலேயேபொறுப்புள்ளமந்திரிப் பதவி வகித்தவர். இன்றும், அவருடைய தொடர்பு அரசாங்கத்துக்கும், அரசாங்கத்தின் தொடர்பு அவருக்கும் நிறைய உண்டு—எல்லா வழிகளிலும். அவர் கூறியிருக்கிறார், நாம் இதுவரை கூறிவருவதை. ஒரு நாட்டை, அடிமைகொள்ள வேண்டுமானால், அந்நாட்டு மக்களின் மொழியை ஒன்றுக்கும் இலாயக்கற்றதாக்கிவிட்டால், அந்நாடு அடிமைப்பட வேண்டியதுதான், என்று எடுத்துக் கூறுகிறார், தமிழகப் பிரிவினை குறித்துப்பேசவந்தபொழுது.

அடிமை கொள்ளும் வழி!

மொழியை அழிப்பதுதான்!

தங்கள் மொழியை திணிப்பதே!

என்று, விளக்கமாகக் கூறுகிறார், மத்திய சர்க்கார், 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் இருக்கும் என்றும், அதற்குப் பிறகு இந்தி அரசியல் மொழியாகி விடும் என்றும் செய்திருக்கும் தீர்மானத்தை எடுத்துக் காட்டி, இந்த இடைக் காலத்திற்குள் ஆங்கிலத்துக்கிருக்கும் செல்வாக்குப்படிப்படியாக அகற்றப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக இந்தி மொழி திணிக்கப்பட்டுவிடும், அதன் பிறகு நாம் வாய்மூடி மௌனியாகி, எதற்கும் லாயக்கற்றவர்களாக வேண்டியதுதான் என்று விளக்கமாகச் சொல்கிறார், முன்னாள் இந்திய மந்திரி சண்முகம்!

அப்படி, நாட்டின் மொழியை அடிமைபடுத்தி அதன்மூலம் நம் நாட்டையும் அடிமைப்படுத்தவே வடநாட்டு ஆதிபத்தியம், முயல்கிறது. ஆகவே, அதை எதிர்ப்போம் என்று நாம் கூறிவருகிறோம். சண்முகம் காட்டுகிறார், மொழியை அடிமைப்படுத்திவிட்டு அதன் மூலம் நாட்டையும் மீளா அடிமையில் ஆக்க வேண்டும் என்ற இலட்சியத்தின் பேரிலேயே, மத்யசர்க்கார் முயல்கிறது—மொழிவாரி மாகாணப் பிரிவினையை ஒத்திப்போட்டுப்பார்க்கிறது என்று வெளிப்படையாகக் கூறுகிறார்.

நாமும் இதைத்தான் கூறிவருகிறோம், நமது இலட்சிய கீதத்தின் அடிப்படை கூட இதுதான் என்று சொல்லுகிறோம். ஆனால் இப்போது, அதே வார்த்தைகளைச் சொல்பவர், ஆர். கே. சண்முகம், மத்திய சர்க்காரில் மந்திரியாயிருந்தவர். நாம், எந்த வடநாட்டுத் தலைவர்களுடனும் பழகியதில்லை, தொடர்புகொண்டதில்லை. ஆனால், அவரோ, நேற்று வரை நெருங்கி உறவாடியவர், இன்றும் இடையறா நட்புரிமையுடன் பழகுபவர், எனவே அவர்சொல்வதில் அனுபவ உண்மை இருக்க முடியும்—இருக்கவேண்டும்—என்ற எண்ணத்தின் மீதே, அவரது கூற்றை நாம் இவ்வளவு தூரம் வலிமையுள்ளதாகக்கருதுகிறோம்.

* * *

'இந்திமொழி வேண்டாம்' என்று நாம் கூறுவதன் நோக்கமே, அது எங்கோ பேசப்படும்மொழி, அதைத் தீண்டினாலே தீட்டு ஒட்டிக்கொள்ளும், தொட்டாலே விரல் வெந்துவிடும் என்ற எண்ணத்தால் அல்ல! அதுவும், உலக மொழிகளைப்போல ஒன்றாகத்தான் நம் கண்களுக்குப் படுகிறது! மக்களில் ஒருபிரிவினர் பேசும்மொழி என்ற அளவில் அதற்கு நாம் மதிப்பளிக்கவோ போற்றவோ தயங்கவில்லை! அந்த மொழியை, வயதுவந்த நம் நாட்டு மக்கள் கற்றுத் தெரிந்துகொள்வது பற்றியும் நமக்கு ஆத்திரமோ, ஆயாசமோ கிடையாது.

உலகில் பிறந்த மனிதன் சாகும் வரை உலகிலுள்ள எல்லா விதமான துறைகளையும் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்! அறிவு வேட்கை கொண்டோர் 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்று இருக்கவேண்டும் என்று எண்ணத்திலும் எண்ணுபவரல்ல நாம்! சென்றெட்டுத்'திசை'யெங்கும் சுற்றி, செல்வமதாம் அறிவை கொணர்ந்தீங்கு சேர்ப்பீர் என்பதுதான் நமது போதனை—நமது வருங்காலச் சந்ததிகளுக்கு.

பிரெஞ்சைக் கற்கட்டும், லத்தீனை அறியட்டும், ரஷ்யமொழிகளைப் பயிலட்டும், ஜெர்மனியைப் பெறட்டும், ஜப்பானிய மொழியை சீனப் பேச்சை, பர்மிய பாஷையை அறிந்து நமது உடன்பிறந்தார்கள் துள்ளித் திரிந்து வாழ்வதில் நமக்கு மகிழ்ச்சி ஏற்படாமலா இருக்கும்! இருப்பதை மட்டும் வைத்துக் கொண்டு, அதன் பெருமை பேசிக் கொண்டு கிட என்று சொல்ல நாம் 'கற்'காலப் பிறவிகளல்லவே! புது உலகம் காணும் புதுவேக உணர்ச்சி முனைப்புகளாயிற்றே!!

பல்கலையும் பல்மொழியும் பயின்றுணர்ந்து, நம்மைச் சார்ந்தோர், பறவைகளாகப் பறந்து திரிவதைக் காணப் பதறும் உள்ளம் கொண்டவர்களல்லவே நாம்! ஆனால் நாம் சொல்வது, அறிவு பெருகட்டும், ஆனால் அதைப்போதை ஆட்படுத்தாமல் இருக்கட்டும் என்பதுதான். கல்லூரியில் வணிகத்துறைக் கல்வி (B. Com) கற்பவர்கள் பிரெஞ்சு கற்கிறார்கள், சில இடங்களில் இந்தி கற்கிறார்கள், அது கூடாது என்றோ, வேண்டாமென்றோ, நாம் தடுக்கவோ மறியல் செய்யவோ இல்லையே!

ஆனால், இந்தியை வேண்டாமென்கிறோம் — இளம்வயதில், அதன்வார்த்தைகளை உச்சரிக்கவும் தெரியாத சின்னஞ்சிறார்களை அவதிக்குள்ளாக்கவேண்டாம், அவர்கள் வருங்கால நட்சத்திரங்கள், இப்

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 13—11—49 [காஞ்சி

இலட்சிய கீதம்

விளக்கம் 2.

அண்மையில் சென்னையில் தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழக எல்லை மாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்,

> "தமிழ் நாட்டின் எல்லையைச் சுருக்கிக் கொண்டே போவது மூளையைச் சுருக்குவதேயாகும். தமிழ்நாட்டைப் பெரிதாகவைத்திருப்பது நாட்டிற்கும், உலகிற்கும் நல்லது"

என்று குறிப்பிட்டுப். பேசியுள்ளார். மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டுமென்ற அடிப்படையில் கூட்டப்பெற்ற தமிழக எல்லை மாநாட்டில், தமிழ்நாட்டின் எல்லையைச் சுருக்காமல், பெரிதாகவும் விரிவாகவும் வைத்துக்கொள்வதுதான் நாட்டிற்கும், உலகுக்கும் நல்லது என்று பேசியது மாநாட்டு நோக்கத்தின் அடிப்படைக்கே முரணானது என்று சிலர் நினைக்கக் கூடும் என்பதற்காகவே, அதுபற்றிய சில குறிப்புக்களை இங்கு எழுத விரும்புகிறோம்.

தமிழ்நாடு என்று இப்போது அழைக்கப்படும் சுருங்கிய இடமல்ல பழைய தமிழ்நாடு. தமிழ்மொழியின் குழந்தைகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் பிறப்பதற்குமுன், தமிழ்நாடு விரிந்தும் பரந்தும் இருந்தது. தமிழ்மொழி ஒன்றுதான் அன்றைய தமிழகத்தின் தனிமொழியாக இருந்தது. மொழியின் பெயரையே நாட்டின் பெயராகவைத்து வழங்கிய பெருமை தமிழர்களுக்கே உரியதாகும்.

அன்று, விரிந்தும் பரந்தும் இருந்த தமிழகம், இன்று மிக மிகச் சுருங்கிய அளவுக்கு வந்து விட்டது —வரும்படி செய்யப்பட்டு விட்டது. அன்று தமிழ்நாட்டுக்கு இருந்த எல்லைவேறு; இன்று இருப்பது வேறு. அன்றிருந்த எல்லையை இன்று காணமுடியாது—பெறமுடியாது என்றபோதிலும், அதன் எல்லையை, அது, இருக்கவேண்டிய அளவைவிடச் சுருக்குவது கூடாது என்பதனையே திரு. வி. க. அவர்களின் சொற்பொழிவு எடுத்துக்காட்டுகிறது.

நாட்டிற்கும் உலகுக்கும் நலம் பயக்கக் கூடிய முறையில் தமிழகத்தின் எல்லை அமையவேண்டுமென்று திரு. வி. க. அவர்கள் கூறுவதன் உட்பொருள் என்ன என்பதை உணரவேண்டும். ஒருநாட்டுக்கு ஒரு எல்லையை ஏற்படுத்துவதற்கு முன், அந்த நாடு இன்று இருக்கும் நிலைமையை நன்கெண்ணிப்பார்த்து அதற்கேற்ப அந்த நாட்டின் எல்லையை அமைக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டுக்கு நலம் பயக்கக்கூடிய காரியங்களைத் தங்கு தடையின்றிச் செய்ய முடியும். அங்ஙனமன்றிப், பெயரளவில் மட்டும் ஏதோ ஒரு எல்லையை வகுப்பதும், நாட்டைப் பிரிப்பதும் உண்மையிலேயே நாட்டுக்கு நன்மை தருவதாகாது.

இந்தியா, வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்தரமடைந்து விட்டதென்று கூறிப் பெருமைப் படுவதற்கன்றி, வேறு என்னவிதமான நன்மையை நாம் இந்தச் சுதந்தரத்தால் அடைந்துவிட்டோம்? அன்று 'அவர்கள்' ஆண்டார்கள்—இன்று 'இவர்கள்' ஆளுகிறார்கள் என்றநிலைமையிலேயேதான் நாம் இன்னும் இருக்கிறோம். நம்மை எவர்களும் ஆளாமல், நம்மை நாமே ஆளும் நிலைமைக்குத்தான் சுதந்தரம், விடுதலை என்று பொருளேயன்றி, ஒருவர் ஆளவும், மற்றவர் ஆளப்படவுமான நிலைமைக்குச் சுதந்தரம் என்ற பெயர் ஒருபோதும் பொருந்தாது. ஆளுபவர்கள் மாறுவதால் ஒரு நாடு சுதந்தரமடைந்து விட்டதாகக்கருதிவிடக் கூடாது. நம்மை அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த அந்நிய அரசாங்கம் நம்மைவிட்டு அகன்று விட்டதென்ற மகிழ்ச்சியில் நாம் நம்முடைய உரிமைகளை மறந்துவிடக்கூடாது.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆளத் தொடங்கியதற்கு முன்னர், இப்பரந்த உபகண்டம் எப்படி இருந்ததோ அந்த நிலைமையை மீண்டும் அடைவதுதான் சுதந்தரமாகும். அங்ஙனமின்றி, ஆங்கிலேயர் ஆண்ட முறையைப் பின்பற்றி, ஆட்சிபுரிய நினைப்பது, "அவனுக்குப்பதில் நான் ஆளுகிறேன், அவனுக்கு அடங்கி இருந்தது போல் எனக்கும் அடங்கி இருங்கள்" என்று கூறுவதைச், சுதந்தரம் என்றால் என்ன என்பதன் பொருளை உணர்ந்த யார்தான் ஒப்புக்கொள்ளமுடியும்?

ஆங்கிலேயன் இங்கு அடியெடுத்து வைப்பதற்கு முன், இவ்வுபகண்டம், ஒரு தனிப்பட்ட ஆட்சியின் கீழ் இருந்ததில்லை என்பதை வரலாறுகள் கூறுகின்றன.

மொழி, கலை, கலாச்சாரம் ஆகிய நற்பண்புகளின் அடிப்படையில் இவ்வுபகண்டம் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து, தனித்தனி சுயேச்சை நாடுகளாக—வளமாக—வசதிகளோடுதான் இருந்தன. அந்த நிலை ஆங்கிலேயனால் மாற்றப்பட்டு, அனைவரும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு, அவனுடைய சுகபோக வாழ்வுக்குச் சுரண்டும் முறையில் ஆட்சிமுறையை அமைத்துக் கொண்டான். அதனால் நன்மை அடைந்தவன் ஆங்கிலேயனேயன்றி நாமல்ல என்ற காரணத்தால்தான் அவனுடைய ஆட்சியை நாம் விரும்பாமல், 'விடுதலைப் போர்' நடத்தினோம். அதில் வெற்றியும் பெற்றுவிட்டோம்.

இப்போது, "அவன் போய்விட்டான்; நான் வந்துவிட்டேன்; அவனுக்குக் கொடுத்த உன்னுடைய உழைப்பின் பயனை எல்லாம் என்னிடம் கொடுத்து விடு" என்று கூறுவதை யார்தான் ஒப்புக்கொள்வார்கள்?

எனவேதான் ஆங்கிலேயன் காலத்தில் உண்டாகாத பிரிவினைக்கிளர்ச்சி இன்று பெரும் அளவில் உண்டாகியிருக்கிறது. அதிலும் பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்போக்கான நிலையை அடைந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றும், தாம் தாம் பிரிந்து வாழ்ந்தாலன்றிப் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியாதென்பதை நன்குணர்ந்துள்ளன.

மொழிவழி நாடு பிரிக்கப்படவேண்டுமென்றும், இனவழி நாடு அமையவேண்டுமென்றும், பொருளாதார முறையில் பிரிந்துவாழவேண்டுமென்றும், அவரவர்களும் தாங்கள் அடைந்துள்ள தொல்லைகளுக்கேற்பப் பிரிவினையின் அவசியத்தை வற்புறுத்துகின்றனர். எப்படியோ ஒன்று, நாடு பிரிந்தால் அதுவே போதும் என்ற அளவுக்கு ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை வெளிப்படையாகவே கூறி ஒரு முடிவு காணவேண்டுமென்ற நிலைமைக்கு வந்துள்ளனர்.

அந்நியனால் அடிமைப்படுத்தப்பட்டுக்கிடந்த மக்களை மீட்டவர்கள், மீண்டும் அவர்களை அடிமைப்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொருவரும் சுதந்தரமாக வாழவேண்டுமென்று விரும்புகின்றனர்—அதற்கான வழிவகைகளைச் செய்து தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றனர்.

இனவழி நாடு பிரியவேண்டுமென்று கிளர்ச்சி செய்த முஸ்லிம் தோழர்கள் தங்களுடைய பிரசாரத்தை இடைவிடாது செய்ததன் பயனாக, அவர்கள் எதிர்பார்த்த கால அளவுக்கு முன்னரே தங்கள் கோரிக்கையில் வெற்றி பெற்றுவிட்டனர்—இப்போது தனி இராச்சியம் அமைத்துக்கொண்டு சுகமாக வாழ்கின்றனர்.

மொழிவழி நாடு பிரிக்கப்படவேண்டுமென்று கிளர்ச்சி செய்பவர்கள், தங்கள் பிரசாரத்தை யாதுகாரணத்தாலோ இடையிடையே தளரவிட்டு வந்ததால், மொத்தத்தில் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதென்று கூறிக்கொண்டபோதிலும், உடனடியாக அவர்களுடைய அடிப்படைக் கொள்கையில் சுதந்தரம் அடைய முடியாமல் போய்விட்டது.

அந்நியனை விரட்ட ஆர்வத்தோடு ஒத்துழைக்கும்படி நாட்டு மக்களை அழைத்தவர்கள், மொழிவழிமாகாணங்கள் பிரிக்கப்படும் என்ற உறுதிமொழியைக் கூறியே அழைத்தனர். ஆனால், அந்நியனை விரட்டி ஆண்டு இரண்டாகியும், அவர்கள் தங்கள் வாக்குறுதியை இன்னும்நிறைவேற்ற முன்வரவில்லையே என்ற எண்ணமும், அது குறித்த சந்தேகமும், நாளுக்குநாள் வளரவேதான், இப்போது மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட்டாக வேண்டுமென்று வற்புறுத்தவும், அது குறித்து மாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றவும் முனைந்துள்ளனர். புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே மொழிவழிமாகாணப் பிரிவினையின் வேலைகள்முடிவடைந்துவிட வேண்டுமென்று சென்னையில் நடைபெற்ற தமிழக எல்லைமாநாட்டில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர்.

மொழிவழி மாகாணங்கள் பிரியவேண்டுமென்று கூறுபவர்களுக்கும் 'திராவிடநாடு திராவிடர்க்கே ஆகவேண்டுமென்று கூறும் நமக்கும் இடையே பெருத்த அளவில் வேறுபாடு இல்லையென்றபோதிலும், நமக்கும் அவர்களுக்குமிடையே சிற்சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

நாம், திராவிடநாடு திராவிடர்க்கே என்று கூறுவது, பொருளாதார முன்னேற்றத்தை முதல் திட்டமாகவும், சமுதாய முன்னேற்றத்தை அதற்கடுத்த திட்டமாகவும் கொண்டு, காலாச்சார முறையில்—அன்று ஒன்றாக வாழ்ந்த அனைவரும் மீண்டும் ஒன்றுகூடி வாழவேண்டுமென்பதேயாகும். இடையில் வந்து நம்மோடு வாழும் மக்களும், நம்முடைய மொழி, கலை, நாகரிகம் ஆகியவற்றை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதன்படி தங்கள் வாழ்க்கையை நடத்தச் சம்மதிப்பார்களானால், அவர்களும் நம்மோடு வாழத் தடையொன்றும் இல்லை என்பதும் திராவிட நாடு திராவிடர்க்கே என்னும் அமைப்பில் அடங்கியுள்ளது.

நம்முடைய பண்டைய நாகரிகம் அழிக்கப்படாமலும், கலை கொலை செய்யப்படாமலும், மொழி பின்னப்படுத்தப்படாமலும், பொருளாதாரம் நசுக்கப்படாமலும் இருப்பதற்காகவே திராவிடநாடு திராவிடர்க்கே ஆகவேண்டுமென்று கூறுகின்றோம்.

திராவிடநாடு தனியரசாக அமையவேண்டுமென்று நாம் கூறுவதற்கும், மொழி வழி மாகாணங்கள் பிரியவேண்டுமென்று கூறுவதற்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் முக்கியமானது வடநாட்டுத் தொடர்பு பற்றியதாகும். அதாவது, மொழி வழி மாகாணங்கள் பிரியவேண்டுமென்று கூறுபவர்கள், அந்தந்த மாகாணங்களை அந்தந்த மாகாணத்தவர்களே நிர்வகித்துச் சகல காரியங்களையும் நடத்துவது என்ற போதிலும், குறிப்பிட்ட சில தொடர்புகள் மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் இருக்கவேண்டுமென்ற அடிப்படையின்மீதே மொழி வழி மாகாணங்கள் அமையவேண்டும் என்பதற்கு இணங்குகிறார்கள்.

ஆனால், திராவிடநாடு தனியாகப் பிரியவேண்டுமென்று கூறும் நாம் இந்தக் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டவர்களாக இருக்கிறோம். நிர்வாகத் துறையில் மத்திய சர்க்கார் நம்மை ஆட்டிப் படைப்பதையோ, நாம் அவர்களுக்கு அடங்கி நடப்பதையோ திராவிடத் தனி அரசு ஒருபோதும் விரும்பாது—ஏற்றுக் கொள்ளாது. நட்பு முறையில் நமக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்க முடியுமேயன்றி, அதிகார முறையில், அவர்கள் கட்டளையை நாம் ஏற்றுக் கொள்வதோ, நம்முடைய கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொள்வதோ கூடாது. நமக்கும் அவர்களுக்கும் வியாபாரத் தொடர்பு, போக்குவரத்துத் தொடர்பு ஆகிய சில முக்கிய தொடர்புகள் போதிய—தக்க நிபந்தனையின் பேரில் இருக்கலாமேயன்றி, நாமோ அவர்களோ ஒரு பொருளை வலுக்கட்டாயமாக—அதிகார பூர்வமாக வாங்கவோ, விற்கவோ கூடிய நிபந்தனையின்மீது தொடர்பு இருக்கக்கூடாதென்பதே நமது நோக்கமாகும். நமக்குத் தேவையானதொன்று அவர்களிடமிருந்தாலும், அவர்களுக்குத் தேவையானதொன்று நம்மிடமிருந்தாலும், இரு சாரார்களுடையதேவைபோக எஞ்சியிருப்பதை நாம் அவர்களுக்கும், அவர்கள் நமக்கும் கொடுப்பதை மனிதாபிமான நட்பு முறையில், நியாயமான ஊதியத்துடன் பரிமாறிக் கொள்வதில் நாமும் அவர்களும் கலந்துறவாடலாம் என்பதும் நமது கொள்கையாகும்.

மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பதற்கு மத்திய சர்க்கார் இப்போது இணங்கியிருக்கிறதென்றால், அது, மாகாணங்களுக்குச் சுதந்தரம் வழங்குவதென்று பொருளல்ல. மத்திய சர்க்காரிடம் குவிந்துகிடக்கும் நிர்வாகப் பொறுப்புகள் சிலவற்றை மாகாணங்களுக்குப் பகிர்ந்து கொடுத்து மாகாணங்களிடம் வேலை

வாங்குவதென்பதேயாகும். மத்திய சர்க்காரின் நிர்வாக வசதிக்காக மாகாணங்கள் பிரிக்கப்படுகின்றனவேயன்றி, மாகாணங்களுக்குப் பூரண சுதந்தரம் கொடுப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படவில்லை. மொழிவழி பிரிக்கப்படும் மாகாணங்களின்வருவாயில் ஒருபகுதி கட்டாயம் மத்தியசர்க்காருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்படுகின்றன. ஒருமாகாணத்தின் வருவாய் அந்த மாகாண நிர்வாகத்துக்கே போதவில்லை என்றபோதிலும், மத்திய சர்க்காருக்குக்கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

ஆனால், நம்முடைய திட்டத்தின்படி, திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்படும் ஆட்சியில், மத்திய சர்க்கார் தலையிடமுடியாது. எதுவேண்டுமானாலும், நம்மைக்கேட்டு, நாமாகக் கொடுத்தாலன்றித், தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எதனையும் பெற்றுவிட முடியாது. உதாரணமாக, நம்மிடம் நம்முடைய தேவைபோக மிச்சமாகப் பணம் இருந்து, மத்திய சர்க்காரின் தேவைக்கே பணம்போதாமல் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அப்போது நம்மிடம் எஞ்சியுள்ள பணத்தை அந்தச் சர்க்காருக்கு, இப்போது அமெரிக்கா கடன் கொடுப்பது போல் கடனாகக் கொடுத்து வாங்கும் முறையைத்தான் நாமும் கைக்கொள்வோம். நமக்குப் பணம் தேவையாய் இருந்தாலும் இதே முறையில்தான் அவர்களிடம் வாங்குவோம்.

மொழிவழி மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்று கூறுபவர்கள் இத்தகைய ஏற்பாடுகளுக்கு மாறுபட்டவர்களாய் இருப்பதால்தான், நமக்கும் அவர்களுக்கும் சிற்சில வேறுபாடுகள்—ஒத்துப்போக முடியாத முறையில் உள்ளன என்று கூறுகிறோம். நாம்கூறும் இத்தகைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழக எல்லை மாநாட்டில் பேசிய திரு. வி. க. அவர்கள், தமிழ் நாட்டின் எல்லையைச் சுருக்கிக்கோள்வது மூளையைச் சுருக்கிக் கோள்வதாகும்" என்று கூறியுள்ளார்.

இன்றுள்ள நிலையில், தமிழகம் இப்போதுள்ள அளவோடு சுருங்கியிருந்தால், அதனால், நாட்டுக்கும், உலகுக்கும் நன்மை ஏற்படாதென்றும் அவர் தம்முடைய உரையில் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அதாவது, தமிழகம் பண்டைய நிலையைப் பெற்று விரிவாகவும் பெரிதாகவும் அமைய வேண்டுமென்பதே திரு. வி. க. அவர்களின் உரையில் அடங்கியிருக்கும் உண்மையாகும்.

ஒரு குலம், ஒரு கலை, ஒரு நாகரிகம் ஆகிய பண்புகளோடு வாழ்ந்த ஒரு இன மக்கள், ஆந்திரர் என்றும், கன்னடர் என்றும், கேரளர் என்றும் பிரிந்து பிளவுபட்டு வாழ்வது அரசியல்-சமுதாய—பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிகோலுவதாகாது என்பதை அவர் நன்குணர்ந்ததால்தான், தமிழகத்தின் எல்லையைச் சுருக்காமல் விரிவுடையதாகச் செய்யவேண்டுமென்றும், அங்ஙனம் செய்யத்தவறினால். தமழ்மக்கள் தங்கள் நாட்டின் எல்லையைச் சுருக்குவதன் வாயிலாகத் தங்கள் அறிவையே சுருக்கிக் கொண்டவர்களாகின்றார்கள் என்று சூட்சமமாகப் பேசியுள்ளார்,

இக்கருத்து' அவருக்கில்லையென்றால், தமிழக எல்லை மாநாட்டில் 'சுருக்கம்', 'விரிவ' பற்றிப் பேசியிருக்கமாட்டார். தமிழக எல்லை 'எது' என்று எல்லை மாநாட்டினரால் குறிப்பிட்டதையே அவரும் ஆதரித்துப் பேசிவிட்டுச் சென்றிருப்பார். அங்ஙனமன்றி, இப்போது தமிழகத்தின் எல்லையென்று குறிப்பிட்டிருப்பது, உண்மையாகவே தமிழகத்தின் எல்லையாகாது, அதனை இன்னும் விரிபடுத்தவேண்டுமென்ற பொருளில் ஏன் பேசவேண்டும்?

மேலும், திரு. வி. க. அவர்கள்,

> இதுவரை நிலைமை எப்படி இருப்பினும், இனி ஒன்றுபட வேண்டும். எல்லோரும் தமிழர்கள், ஒரே இனம், ஒரே குலத்தவர் என்றஉணர்ச்சிஏற்படவேண்டும்"

என்று பேசியுள்ளார். இதன் பொருள் என்ன? இதுவரைநிலைமை எப்படியிருந்த போதிலும், இனி மேலாவது நாட்டின் நன்மையை உத்தேசித்து எல்லோரும் ஒன்று கூடுங்கள் என்று அழைக்கிறார். எல்லோரும் தமிழர்கள், ஒரே இனம், ஒரே குலம் என்று கூறுகிறார். தமிழ்மக்களைப் பார்த்து, „நீங்கள் எல்லாரும் தமிழ் மக்கள்தான்" என்று எந்தப் பைத்யகாரனும் கூறமாட்டான். ஒரு காலத்தில், தமிழ் மக்களாக இருந்த நீங்கள் இப்போது பிரிந்து பிளவு பட்டு வேறு வேறு பெயர் வைத்துக் கொண்டு, ஆந்திரர் என்றும், கேரளர் என்றும் கன்னடர் என்றும் பிரிந்திருந்த போதிலும், நீங்கள் எல்லோரும் தமிழ் மக்களின் வழி வந்தவர்கள்தான், எனவே, ஒன்றுபடுஙகள்! இன உணர்ச்சியோடு வாழுங்கள்! தமிழக எல்லையைச் சுருக்கி உங்கள் அறிவைச் சுருக்கிக் கொள்ளாதீர்கள்! அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றமடைய வேண்டுமானால் பண்டைய பண்பை மறவாமல், ஒன்றுபடுங்கள்! யாருக்கும் அடிமையாக வாழும் மனப்பான்மையை விட்டொழியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்.

ஒரு காலத்தில் ஒரு மொழியையே பேசும் மக்களாக இருந்தவர்கள், இன்று பலமொழிகளைப பேசுவோராகமாறிவிட்டதால்தான், திரு வி. க. அவர்கள் பேசும்போது, மொழியைப் பற்றிக் குறிப்பிடாமல், இனம், குலம், நாகரிகம் ஆகியவற்றைக் குறிப்பிட்டே, ஒன்று சேரும்படி அழைக்கிறார். தெலுங்கு பேசுவோரும், மலையாளம் பேசுவோரும், கன்னடம் பேசுவோரும், மொழி வழக்கில் வேறுபட்டாலும், இனத்தில், குலத்தில், நாகரிகத்தில், கலாச்சாரத்தில் வேறுபட்டவர்களல்ல என்பதால்தான், "நீங்கள் எல்லோரும் தமிழர்கள்" என்று கூறியுள்ளார்.

திரு. வி. க. அவர்கள் கூறும் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டது தான் திராவிடநாடு திராவிடர்க்கே ஆகவேண்டும் என்பதும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு அரசியல்—வடநாட்டுத் தொடர்பற்ற முறையில் அமையவேண்டுமென்பதே நம்முடைய விருப்பமாகும். அப்பொழுது தான் நாம் அரசியலிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், அடிமைபட்டு, இழிவுபடுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு அவதியுறாமல் முன்னேற முடியும் என்று கூறுகிறோம்.

திராவிடநாடு திராவிடருக்கே என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், மத்தியசர்க்கார், மாகாணசர்க்கார் என்ற நிலைமாறித், திராவிட சர்க்கார், டில்லிசர்க்கார் அல்லது வடநாட்டுச் சர்க்கார் என்ற நிலை ஏற்படும். அந்த நிலை ஏற்படும் போது கூட நமக்கும் வடநாட்டுக்கும் உள்ள நட்புரிமை ஒருசிறிதும் பாதிக்கப்படாது. எந்தக்காரணத்தைக்கொண்டும் நாம் அவர்களுக்கு எதிரிகளாகவோ, அவர்கள் நமக்கு எதிரிகளாகவோ இருக்க முடியாது. இவ்வுபகண்டத்துக்கு ஏதாயினும் ஆபத்து வெளிநாடுகளிலிருந்து வருமாயின், அப்போது நாமும் அவர்களும் ஒன்றுசேர்ந்து வெளியாரை விரட்டியடிப்பதில் கூட்டு முன்னணி அமைத்துக் கொள்வோம்—வெற்றி பெறுவோம்.

ஆனால், ஒருவரை ஒருவர் அடக்கி ஆளவேண்டும், ஒருவர் உழைப்பால் இன்னொருவர் வாழ வேண்டும், ஒரு மொழியை இன்னொரு மொழியால் நசுக்கவேண்டும், ஒருவர் நாகரிகத்தை இன்னொருவர் மேற்கொள்ள வேண்டும், என்ற இன்னபிற அழிவு வேலைகளில் ஈடுபட்டு நம்மை நாமே பகைத்துக் கொள்ளாமல், அவரவர்களின் உரிமைகளை அவரவர்களுக்குக் கொடுத்து நட்பு முறையில் சகோதரர்களாக வாழவேண்டுமென்பதே திராவிட நாடு திராவிடர்க்கு ஆக வேண்டுமென்பதன் இலட்சிய கீதமாகும்.

✲

அடிமை அடிப்பீடம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

போதே, தாங்க முடியாதனவற்றையெல்லாம் திணித்து அவர்கள் மூளையை ஒன்றுக்கும் உதவாக்கரையாக்கவேண்டாம் என்று சொல்கிறோம். உலகியல் அறிவு பெற ஆங்கிலமும், தன்மொழிதனை அறிந்த தன்மையும் பெற்றுவிட்டபின், குழந்தைகள், பெரியவர்களானபின் அவர்கள் எம்மொழி வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளட்டுமே!

* * *

இந்தி இங்குதிணிக்கப்படுவதன் நோக்கம், இந்தியாவில் பலரால் பேசப்படும் மொழியாக இருக்கிறது என்று கூறப்படும் காரணத்துக்காக அல்லவே அல்ல. அதுதான் காரணமென்றால், ஆரம்ப வகுப்புகளை விட்டுவிட்டு கல்லூரி வகுப்புகளில் கூட அதைக்கற்றுத்தர ஏற்பாடு செய்யலாம்!

ஆனால் இந்தி இங்கு நுழைக்கப்படுவதன் அந்தரங்க ஆசையே, வாழ்ந்துவீழ்ந்த பழந்தமிழ்மரபை நீங்கா அடிமையாக நெடுந்துயிலில ஆழ்த்திவிடவேண்டுமென்பதுதான். ஆர். கே. சண்முகம் அவர்கள் கூறுவதுபோல "நாட்டை அடிமைகொள்ளும சுலபவழியாக இந்திமொழியைத் திணிக்க முயல்வது" தான் அவர்களுடைய அடங்கா முயற்சியாக இருக்கிறது.

ஒருநாட்டைப் பலம் கொண்டு வெல்வது பெரிதல்ல. அந்தவெற்றி நீர்க்குமிழி! வெற்றியடைந்தவன் நீண்டநாள் மகுடாதிபதியாகவே மகிழ்ந்து இருந்துவிடமுடியாது. தோல்விகொண்டவன், மீண்டும் வெற்றிபெற்றுவிடுவான். இது சகஜம்! ஆனால், ஒருநாட்டை, அங்கு வாழும் மக்களை போர் நடத்தாமலும் வெற்றி பெறமுடியும். இந்த வெற்றிக்கு இரத்தம் சிந்தவேண்டிய அவசியமில்லை. புத்தியில் விவேகம் உதட்டில் புன்சிரிபபு, அன்பு தவழும் வார்த்தைகள், ஆசைசொற்கள் இவை போதும்.

அந்த நாட்டின் கலாச்சார வாழ்வைச் சூறையாடி, அதன்மொழியையும் இரண்டாந்தரமானதாக்கிவிட்டால் இயற்கையிலேயே அந்நாட்டுக்குடையவன் அடிமையாகி விடுவான். இந்த அடிமைத்தளை—இலேசில் அறுக்க முடியாதது. உள்ளத்திலும்; உடலிலும், உணர்விலும் உறவின்றி, ஊறிப்போய்விடும். கட்டுப்பட்ட மக்கள், மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டது போல் ஆகிவிடுவார்கள் அவ்வளவுதான், மீண்டும் அழிந்த அந்த கலாச்சாரமும் மொழியும் தலைதூக்கி புதுவாழ்வு காண்பதென்பது, ஒருபோதும் ஏற்படமுடியாது. இப்படிப்பட்ட, வாள் ஏந்தாது, வாய்ச் சொல் மட்டும் ஏந்தி எடுக்கப்பட்ட படையெடுப்புக்கு ஆளாகியதன் காரணமாகத்தான் அழகு தமிழகம், அழிந்தது! காளான்கள் முளைத்தன!

இன்று, அந்தகால இருளுக்குள் போய்க்கொண்டிருந்த தமிழகத்தில், மறுமலர்ச்சி வீசத் துவங்கியுள்ளது. அதன் விளைவாக புத்துணர்வும், புதுமகிழ்ச்சியும், அரும்பி, மலர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், இன்னுமொருமுறை இந்நாட்டை மொழி ஆதிபத்தியத்துக்கு, உள்ளாக்குவதா! மொழி அழிந்தால், நர்வழி மட்டுமல்ல வாழ்வே நாசமாகிவிடாதா! ஆசைகாட்டி, நுழைக்கப்படும் இந்தி ஒரு 'ஆட்கொல்லி!' ஒரு பழந்தமிழ்ச் சமுதாயத்தை, பண்பாட்டை எரிக்க வரும் தீ!

●

உணவு.

நடைமுறை ஆண்டுக்கு இந்தியா முழுமைக்கும் தேவையென்று மதிப்பிடப்பட்ட உணவுப் பொருள் 42,40,000 டன்கள். இதில் கிட்டத்தட்ட அக்டோபர் வரை 37,00,000 டன் கொள்முதல் ஆகியிருக்கிறதாம்!

அது, அங்கு!

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கென 1950—51க்கு ரூ 10 கோடி செலவிட ஐக்கிய மாகாண சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இப்போது மூன்றுகோடி ரூபாய்தான் செலவிடப் பட்டு வருகிறதாம்!

இம்மாதமுதல் டொாய் என்ற வட்டாரத்திலிருக்கும் 8 லட்சம் ஏக்கர் நிலங்களைப் பண்படுத்த 365 டிராக்டர்கள், அங்கு வேலை செய்யத் துவங்குமாம்!

—⊛—

தெரியுமா?

சென்ற ஆண்டில் சர்க்கார் உபயோகத்துக்கென 2.91 கோடி ரூபாய் மதிப்புள்ள தபால் தலைகளை இந்திய சர்க்கார் உபயோகப்படுத்திக்கொண்டுள்ளது. இதில், காலணாமுதல் எட்டணாவரையிலுள்ள தபால் தலைகளின் மதிப்பு 2.10 கோடி ரூபாய். மிச்சமுள்ளவை 1 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் மதிப்புடையவை!

—0—

கம்ப நண்பர்களுக்கு!

கம்பர் மாநாடு, இந்த ஆண்டும் நடைபெறப் போகிறதாம் — நவ. 10-ந் தேதி முதல் மூன்று நாட்களுக்கு. முன்னாள் இந்திய மந்திரி முதல், இப்போதைய மாகாணப் பிரதமர் உள்பட, ரசிகமணிகள் யாவரும் கூடிநின்று நடத்துவிக்கப் போகிறார்களாம்.

கம்பரைக், காயும் வம்பிலிருந்து, கரையேற்ற வேண்டும் என்ற வீம்பு உணர்ச்சி காரணமாக, நடத்துவித்துக் காட்டப்படும் ஒரு நிகழ்ச்சி இது. குறள் போற்ற, திருவள்ளுவர் நாள் நடத்த, சிலப்பதிகாரச் செல்வர் தினம் கொண்டாட, புறநானூறு பற்றிப் பேச, முன்வராத அழைத்தாலும் முகத்தைத் திருப்பிக்கொள்ளும் நபர்கள், சேர்ந்து—சேர்க்கப்பட்டு என்றாலும் பொருந்தும்—நடத்துவதுதான் இந்தக் கம்பர் விழா!

கம்பர் கவிஞன் என்று கூறிக்கொள்வதிலே நமக்குக் கஷ்டமில்லை. கம்பராமாயணத்தை ஒரு "கதை" என்று சொல்லட்டும்; ஒப்புக்கொள்ள நமக்கும் அருவருப்பில்லை. கம்பரின் காவியத்திலே, கம்பரசத்திலே, ரசிகமணிகள் காணும் சுவையை அறியும் தன்மையோ உணரும் உள்ளமோ இல்லாதவர்களல்ல நாம். குற்றாலக் குறவஞ்சியில், கலிங்கத்துப் பரணியில், அகநானூற்றில், மணிமேகலையில் காவிய ரசனையையும், கற்பனைத் திறனையும் கண்டு மகிழும் நம் தமிழ் உள்ளம், கம்பரின் கவிதையிலே இருக்கும் சுவையை அறிய மட்டும் சுருங்கிவிடாது; இன்னும் கூறவேண்டுமானால் "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற வரிகளைக் காணும் பொழுது, ரசிகமணிகளை விட, ஒருபடி அதிகமாகவே நம்மால் ரசிக்க முடிகிறது. நமக்கும், கம்பருக்கும் உள்ள கருத்து வேற்றுமை யெல்லாம், அவர் காவியச் சுவை பற்றியதல்ல.

கம்பர் — கம்பநாட்டாழ்வார் ஆனது. 'கதை'யாகக் கருதப்பட வேண்டிய இராமாயணம் "தெய்வமாக் காதை"யாகச் சிருஷ்டிக்கப்பட்டது. கதாபாத்திரங்கள் "தெய்வங்களாக" கருதும்படி செய்யப்பட்டது. நாட்டுப்புறத் திண்ணை முதல், நகரத்தில் மிளிரும் மாளிகைகள் வரை கம்பராமாயண காலட்சேபமும், பட்டாபிஷேகத் திருவிழாவும் நடத்தப்படுவது. இவை போன்றவைகளால் இன்னும் இந்நாட்டு மக்கள் சரித்திரம் வைத்துப் பின்னப்பட்ட ஒரு கதையைத் தங்கள் தெய்வத் திருவிளையாடல் புராணமென்று கருதிக்கொண்டு கிடப்பது—கருத்து வளராமல், ஒரு நாட்டிற்குள் குடிபுகுந்த வேறு இனத்தின் வரலாறு பூசி மெழுகப்பட்டு மக்கள் மனத்துக்குத் தெரியாமல் திரையிடப்படுவது, அதற்குக் காரணகர்த்தாக்களாக 'கம்பர்— கவிஞன்' என்று கூறிக்கொண்டு நமது பண்டிதமணிகள், 'கம்'பந்தாங்கிகளாக இருப்பது, ஆகியவைகளை நம்மைக் கம்பர் யார், என்று திரைகிழித்துக் காட்டவேண்டிய அவசியத்தை உண்டாக்கியதாகும். கம்பர் கவிதை நூல், ஒரு கதை. கடவுளின் கதையென்று புனைந்துரைக்கப்பட்ட, ஒரு நாடும் அதன் இனமும் வீழ்ச்சியடைந்த வரலாறு மறைக்கப்பட்ட, ஒருநூல் கம்பராமாயணம். அதற்குக்கட்டியக் காரனாகயிருந்தவர் கம்பர், என்று உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதன் விளைவாகவே 'கம்பராமாயணத்தைத் தீயிலிடுவோம்!' என்ற கிளர்ச்சியும் எழுப்பப்பட்டது.

கம்பரை, ஆழ்வாராக்கி, தெய்வப் பட்டியலில் இடந்தேடித்தர முனைந்து முயலும் 'தர்ம' கர்த்தாக்களே, கம்பரின் கடவுள்பக்தி சொட்டுவதா கம்பராமாயணம் பாரீர், என்று காட்டுமுகத்தான், பிழிந்து தரப்பட்டதுதான் "கம்பரசம்!"

ஆனால், இன்று கம்பராமாயணத்தின் தன்மை பற்றி மக்களிடையே சுயமரியாதைக்காரர்கள் ஆற்றிய தொண்டின் விளைவாக நன்கு விளங்கிவிட்டது. 'பக்தி'யும் சிரத்தையும் குன்றி, சாதாரண கவிதை நூல் என்ற அளவில், மாணவர்களும், இளைஞர்களும் கருதிப்படித்து வரத்தலைப்பட்டுள்ளனர். நாம், எந்த எண்ணம் ஈடேறவேண்டுமென்று எண்ணிக் கம்பரைக் காய்ந்தோமோ, அந்த எண்ணத்துக்கு வெற்றி கிடைத்துக்கொண்டு வருகிறது. ஆகையால், 5-ந் தேதிய 'விடுதலை" இதழில் பெரியார் அவர்களால் எழுதப்பட்டிருக்கும் தலையங்கத்தில் எடுத்துக்காட்டப் படுவது போல்,

"இன்று அவைகளை நம்பிப் பிழைக்கின்ற, மேன்மைஅடைகின்ற, உயர்வாழ்வு வாழ்கின்ற மக்கள் யாவரும் இச்சமயம் ஒன்று சேர்ந்து எதிர்ப்பிரச்சாரம் செய்கிறார்கள்."

எப்படியாவது, கம்பராமாயணத்தின் கடவுள்தன்மையைக் காப்பாற்றவும், அதன் மூலம் ராமன் ராமபிரானாகவும்! சீதை சீதாதேவியாகவும் இவர்கள் தேவ அவதாரங்களாகவும் கருதப்படும் நம்பிக்கை மறக்கடிக்கப்படாமலிருக்கவேண்டும் என்ற ஆசையும், பழமைக்கு மரியாதையும், வைதிகத்துக்கு மதிப்பும் தேடித்தர விரும்பும் கூட்டத்தார், முன்னணியில் நின்று கம்பருக்கு விழா எடுக்க முனைந்து வருகின்றனர், போலீஸ் பாதுகாப்பு, பொதுமக்களைப் பரிசோதித்து உள்ளேவர அனுமதிக்கும் முறை ஆகியவைகளைக்கைக் கொண்டு.

கம்பர் மாநாடு, நடத்தும் கண்ணியர்களின் அந்தரங்க ஆசையும், ஆர்வமும் கம்பரின் கவிதைபால் ஏற்பட்டதல்ல. அவர் காதையின்பால், அதில்வரும் 'தெய்வ சிருஷ்டி'கள் பால் ஏற்பட்டதுதான் என்பதை நாம் அறிவோம்.

முன்னேறிக் கொண்டிருக்கும் உலகத்தில், செல்வாக்கும் வசதியும் பிரச்சார பலமும் இருக்கிறது என்கிற காரணத்திற்காக எத்தனை நாட்களுக்குத்தான் சரித்திர நிகழ்ச்சியை மூடித் திரையிட்டு வைக்க முயற்சிப்பது நீடிக்கமுடியும்! முடியாது, உலகம் விழித்துக்கொண்டிருக்கிறது, என்பதைக் கம்ப நண்பர்கள் அறிவார்களாக.

சதியும் கதியும்

சிட்னிரீலி

[வாணன்]

ரஷ்யாவுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே வளர்ந்துவரும் மனமாச்சரியம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பொதுவுடமை, ரஷ்யாவில் மலர்ந்த நாள்முதல் ஆரம்பமானதுதான் இந்தக் குரோதமும், துவேஷமும், வெறுப்பும். 1917 நவம்பர் 7ஐக் கண்ட முதலாளித்துவ நாடுகள் கலங்கின. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, போன்ற வல்லரசு நாடுகளின் முதலாளிவர்க்கம் புரட்சியில் வெற்றி கண்ட பாட்டாளிவர்க்கத்தின் பலத்தையும், திறனையும் கண்டு திடுக்குற்றது, தங்கள் வாழ்வே பறிபோவது போல் பதறியது, எப்படி 'இவர்கள்' புது அரசாங்கத்தைப் போக்கடிப்பது, கம்யூனிஸ்டுகளின் குடியரசைக் கவிழ்ப்பது, என்ற முயற்சிகளில் ஈடுபட்டது. 1917 நவம்பர் 7 பார்முழுதுமேயுள்ள பேட்டுக் குடியினரைக் குலுக்கிவிட்டது. அதன் விளைவாக, ரஷ்ய சமதர்மக் குடியரசுக்கெதிராக முதலாளித்வ நாடுகள் "முகாம்" அமைத்துக்கொண்டு, ஈடுபட்ட செயல்கள் பல உண்டு. அவைகளில் முதன்மையும், குறிப்பிடக்கூடியதுமான சம்பவம் இது. நவம்பர் 7-க்குப் பின் பல ஆண்டுகள் ரஷ்யக் குடியரசைக் கவிழ்க்க முயன்றும், முடிவு விபரீதமாக ஆகியது. அந்த விபரீத முடிவுக்கு ஆளாகிய நபர் சிட்னி—ரீலி. இங்கிலாந்தின் கையாள்!

* * *

1918ம் ஆண்டுத் துவக்கம். ஆண்டாண்டு காலமாக, அட்டகாசம் புரிந்துவந்த ஆட்சியை முறியடித்து வெற்றி கண்ட பாட்டாளி வர்க்கத் தலைவர்கள், பெற்றெடுத்த உரிமைக் குழந்தையைப் பேணி வளர்ப்பதில்; எண்ணற்ற இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தார்கள். அதிகாரம் பறிக்கப்பட்ட அட்டகாசபுரியினரின் சதி, வாலறுந்த நரி போலான மதக்குருமார்களின் தந்திரம், ஜார் மன்னனைச் சேர்ந்தோரின் சூழ்ச்சி, எதிர்க் கட்சிகளின் தொல்லைகள் அத்தனையையும் அவர்கள் சமாளிக்கவேண்டியிருந்தார்கள்.

இந்த நிலையில் பீட்ரோகிராடில் "மாஸினோ" என்ற பெயர் பூண்ட ஒருவன் தோன்றினான். கடுத்தாடியுடைய மாஸினோ பார்ப்பதற்கு அழகுடனும், கவர்ச்சிகரமான முக வெட்டுடனும் விளங்கினான். தன்னைப் பற்றி விசாரித்தவர்களுக்குத் தான் ஒரு துருக்கிநாட்டு வியாபாரி என்று கூறிக்கொண்டான். அவன் நடவடிக்கைகள் அத்தனையும் விசித்திரமயம்! மாலை நேரங்களில் மாஸினோ தெருக்கோடியிலுள்ள ஹோட்டலுக்கு விஜயம் செய்வான். அந்த ஹோட்டலில்தான் சோவியத் அரசாங்கத்தின் எதிரிகள் கூடுவது வழக்கம். அங்கே மாஸினோ அநேகரை இரகசியமாகச் சந்தித்துப் பேசியபடியிருந்தான். அவனுக்குப் பலமொழிகளில் பாண்டித்தியம் இருந்தது. அந்த சமயத்தில் பீட்ரோகிராடுக்கு ஜெர்மன் படையெடுப்பு வருமோ என்று பயந்து ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவிற்கு மாற்றப்பட்டது. தலைமை அரசாங்கம் மாற்றப்பட்டதும் அதைப் பின்தொடர்ந்து மாஸினோவும் மாஸ்கோவிற்குச் சென்றான். அங்கே சென்றவுடன் அவன் நடை உடை, பாவனைகளே மாறிவிட்டது. லெனின்கிராடில் வியாபாரியாகத் தோற்றமளித்த மாஸினோ மாஸ்கோவில் ஒரு தொழிலாளியாகத் தோற்றமளித்தான்.

ரஷ்ய அரசாங்கத்தின் தலைமைக் காரியாலயம், இருக்கும் கிரம்லின் நகருக்குள் நுழைந்தான். நகரெல்லையில் காவல் காத்துவந்த ரஷ்ய போர் வீரன் மாஸினோவைத் தடுத்தான். "உள்ளே நுழைய உத்தரவுச் சீட்டு?" என்றான். மாஸினோ கொஞ்சமும் தயங்கவில்லை. தன் பையிலிருந்து ஒரு 'உத்தரவுச் சீட்டை'க் கொடுத்தான். கம்யூனிஸ்ட் படை வீரன் 'நுழைவுச் சீட்டை' பரிசோதித்துவிட்டு சிரித்த முகத்துடன் "போகலாம், காம்ரேட்ரேலின்ஸ்கி!" என்றான். மாஸினோவும் சிரித்துக்கொண்டே கிரம்ளினுக்குள் சென்றான். அவன் காவலாளியிடம் காண்பித்த 'நுழைவுச் சீட்டு', அவனை லெனின் கிராட் 'செக்கா' (செக்கா—ரஷ்ய ஒற்றர் படை)வைச் சேர்ந்த ஒற்றன் என அறிவித்தது! அந்தச் சீட்டில் 'செக்கா'வின் தலைமைப்பீட முத்திரை இருந்தது. ஆனால் மாஸ்கோவின் மற்றொரு மூலையிலுள்ள நாட்டிய மன்றத்திலோ மாஸினோவின் பெயர் 'கான்ஸ்டான்டின்' என்று கூப்பிடப்பட்டது! ஆம், அந்தப் பெயரில் அவன் உலவினான்!

நாட்டியமன்றத் தலைவி 'டாக்மாரா' என்பவளுக்கு பழக்கமான நண்பன் என்ற முறையிலே அந்த இடத்திற்கு அவன் விஜயம் செய்தான். அவனைப் பிரிட்டிஷ் இரகசிய ஸ்தாபனத்தின் ஏஜண்ட் என்ற அளவில் தான் அங்கு சிலருக்குத் தெரியும்.

ஆனால் இந்த 'மாஸினோ', 'ராம் பேட் ரிலின்ஸ்கி', 'கான்ஸ்டான்டின் பிரபு' என்று பெயர் கொண்ட மனித உருவம் உண்மையில் யார் என்பது பிரிட்டிஷ் தூதுவர் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் தெரியும்! மாஸினோவின் உண்மைப் பெயர் "சிட்னி ரீலி!" பிரிட்டிஷ் ஒற்றர் படைக் கூட்டத்தில் ரீலியை மிஞ்சிய ஒற்றர்கள் கிடையாது!

• • •

ஜார் மன்னன் காலத்தில் அயர்லாந்து தேசத்துக் கடற்படை தளபதி ஒருவனுக்கும் ரஷ்யப் பெண்மணி ஒருத்திக்கும் பிறந்த சிட்னி ரீலி பிரிட்டிஷ் ஒற்றர் படை வரிசையில் வந்தது விசித்திரம்தான். மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம். 1916-ம் ஆண்டு. சிட்னி ரீலி ஜெர்மனிக்குள் நுழைந்தான். ஜெர்மன் கடற்படைத் தளபதிகளில் ஒருவன்போல் வேஷம் போட்டுக்கொண்டு கடற்படைத் தலைமைக் காரியாலயத்திற்குள் நுழைந்தான்.

அதன் பலன் ஜெர்மன் கடற்படையின் இரகசிய பேச்சு வார்த்தைகள் அடங்கிய ரிக்கார்டை (German Naval Intelligence Code) நேச நாடுகளுக்கு ரீலி கொண்டுவந்தான். சென்ற மகாயுத்தத்தில் ஒற்றர்கள் செய்த உதவிகளிலெல்லாம் பெரியது ரீலி செய்த இந்த உதவிதான்.

1918-ம் ஆண்டு ஆரம்பத்தில் 'பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இரகசிய இலாகாவின் டைரக்டர்' என்ற பதவித்து ரீலி ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டான். அவன் வேலையெல்லாம் சோவியத் நாட்டில் அப்பொழுதிருந்த எதிர்ப்புச் சக்திகளை ஒன்று சேர்க்கும் வேலையில் பிரிட்டிஷ் அமெரிக்க ஸ்தானிகர்களுக்கு உதவ வேண்டியதுதான்.

1918-ல் ரஷ்யாவில்புது அரசாங்கத்துக்கு எதிராக இருந்த கட்சி 'சமுதாயப் புரட்சிக்கட்சி' என்பதுதான். ஜாரை ஒழிப்பதில் ஒத்துழைத்து ஈடுபட்ட இவர்கள் ஜார் முறியடிக்கப்பட்டுப்புது ஆட்சிமலர்ந்ததும், புது ஆட்சியை ஒழிப்பதிலும், லெனின் போன்றோரைச் சுட்டுத் தள்ளுவதிலும் இவர்கள் நோக்கம் பயங்கரமாகப்பாதைமாறியது. இதற்குத் தலைமை தாங்கி நடத்தியவன் போரிஸ் சாவின் கோவ். இந்தச் சூழ்நிலையை முதலாளித்துவ நாடுகள் பயன்படுத்திக்கொள்ள முயன்றன. இதன் விளைவாக ரீலி, இவனுடன் தொடர்பு கொண்டு, இவர்கள் பயங்கர இயக்கம் உருவெடுக்க ஒத்துழைத்தான்.

ரீலியின் ஆட்கள், ரஷ்ய ராணுவ காரியாலயங்களிலும் இருந்தனர். ஆகவே ரஷ்ய அரசாங்கம் செய்யும் ஒவ்வொருகாரியமும் அவ்வப்போது ரீலிக்குத் தெரிந்தவண்ணமிருந்தது. இந்தப்பிரம்மாண்டமானவேலைகளைச் செய்ய ரீலிக்கு வேண்டிய பணம் மாஸ்கோ நாட்டியராணி டாக்மாரவினிடம்ஒப்படைக்கப்பட்டிருந்தது.

* * *

1918-ம் ஆண்டு ஜூன் 2-ம்தேதி பீட்ரோகிராட் தொழிலாளர் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த சோவியத் அரசாங்கத்தின் விளம்பர மந்திரி வலோடார்ஸ்கி சமுதாயப் புரட்சிக் கட்சிக்காரன் ஒருவனால் கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து மாஸ்கோவிலிருந்த ஜெர்மன் தூதுவர் மீர்பாக் ஜூலை ஆறும்தேதி கொல்லப்பட்டார். ஜெர்மன் தூதுவரைக் கொன்றால் ஒருசமயம் ஜெர்மனி ரஷ்யாமேல் படையெடுக்கும். அதன் மூலம் போல்ஷிவிசம் ஒழியும்என்று சமுதாயக் கட்சிக்காரர்களுக்கு ஒரு எண்ணம்.

ஜெர்மன் தூதுவரைக் கொன்ற அதேநேரத்தில் மாஸ்கோவின் மற்றொரு மூலையில் 'மாஸ்கோ ஆபரா ஹவுஸில்' அகில ரஷ்யசோவியத் காங்கிரஸ் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ரஷ்யாவின் பல பாகங்களிலிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டிருந்தார்கள். காங்கிரசின் நடவடிக்கையைக் கவனிக்கவெளிநாட்டுத் தூதுவர்களும் ஆபரா ஹவுசின் மற்றொரு பாகத்தில் அமர்ந்து கொண்டிருந்தனர். சோவியத் பிரதிநிதிகள் 'வருங்கால' ரஷ்யாவைப் பற்றிக் கவலையுடன் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

ஜெர்மன் தூதுவர் மீர்பாக்கைக் கொன்ற மறுவினாடி முதலே தன் வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ரீலியால் முடிவு செய்யப்பட்டது. அவன் திட்டப்படி மீர்பாக்கைக்கொன்ற பிறகு சமுதாயப்புரட்சிக் கட்சியின் தொண்டர்கள் ஆபராகஹவுசைப் படையெடுத்து அங்கேயுள்ள சோவியத் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் கைது செய்துவிடவேண்டும். பிறகு ரஷ்ய அரசாங்கமே நம்கையில்தான்! என்று திட்டமிட்டிருந்தான் ரீலி. ஆனால் சூழ்ச்சி பலிக்கவில்லை! கலகக்காரர்களை அடக்கிவிடக்கூடிய அளவுக்கு ஆபராஹவுஸின் வெளியில் செஞ்சேனை வட்டமிட்டுக்கொண்டு சுட்டுக்கொண்டிருந்தது.

சிலமணி நேரத்தில் குண்டுசப்தம் நின்றது. ஆபாராஹவுஸின் மேடையில் தோன்றிய ரஷ்ய அரசாங்கப் பிரதிநிதி ஒருவர் பின்வருமாறுகூறி விட்டு இறங்கினார்.

"சோவியத் அரசாங்கத்தைஒழிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கலகம் ஒன்றை ஆரம்பத்திலேயே நசுக்கிவிட்டனர் செஞ்சேனை வீரர்கள். சமுதாயப் புரட்சிக் கட்சியை சேர்ந்த பலர் ஆயுதங்களுடன் கைதியாக்கப்பட்டுள்ளனர்."

பின் ஒருநாள் பொதுவுடைமைச்சமுதாயம் கண்ட மாவீரர் லெனின் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசிவிட்டு வெளியேறுகையில் "பேன்யா கப்லான்" என்றபெண்மணி இருமுறை அவரைச்சுட்டாள். நல்லவேளையாக கழுத்திலேற்பட்ட காயங்களுடன் அவர் தப்பினார்!

இத்தனை 'சதி' செயல்களுக்கும் காரணகர்த்தா ரீலிதான். ரீலி, சமுதாயப் புரட்சிக் கட்சியினரைக் கொண்டு சாதிக்க நினைத்த தந்திரச் சூழ்ச்சிகள் யாவும், வெற்றிதாவில்லை. ரீலி, சமதர்மக் குடியரசை முளையிலேயே கிள்ளிவிட எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காக, பணத்தைச் சரமாரியாகச் செலவிட்டான். அதற்கான வகையில் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளும், அவனுக்கு உதவிக்கொண்டேயிருந்தன.

கிரெம்லின் நகர்ப்பாதுகாப்புப் படைத் தலைவன் கர்னல் பேர்சின் என்பானைக்கூட 'பணம்' காட்டித் தன் வலையில் வீழ்த்தினான், ரீலி! அதுமட்டுமல்ல, அடிக்கடி ரஷ்யாவிலிருக்கும் முதலாளித்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கூட்டித் தனது வீரதீரப் பிரதாபங்களைச் சொல்லி, ஆலோசனை புரிந்துகொண்டே, தனது சூழ்சசிகளில் ஈடுபட்டான்.

லெனினைக் கொல்ல முயன்றபின், ரீலியின் கையாளான கர்னல் பெர்ஸின் சதிச்செயல்கள் யாவையும் வெளிப்படுத்தி விடவே 'செக்கா' மும்முரமாக முயன்று சதிக்காரர்களையும், துரோகிகளையும் கைது செய்தது. ரீலியும் தேடப்பட்டான். ஆனால், அவனோ ஒரு சமயம் கிரீஸ் நாட்டு வியாபாரி! சில காலம் ஜார் காலத்திய ஆபீசர்! சில சமயம் சோவியத் ஊழியன்; கம்யூனிஸ்ட் தொழிலாளி! இப்படி உருமாறி, உருமாறி, உலவிக்கொண்டிருந்துவிட்டு, ஜெர்மன் சர்க்காரின் முத்திரையுடன் பொய் 'பாஸ்போர்ட்' தயாரித்துக்கொண்டு நார்வே சென்று, இங்கிலாந்து சென்றான்!

1924 ஜனவரி 21ல் மாவீரர் லெனின் மறைந்தார். வெற்றிவீரன், சாவுகண்டு, ரஷ்ய மக்கள் தத்தளித்துத் தவிக்கையில், முதலாளித்துவ நாடுகள் போல்ஷிவிக் கட்சி புதைந்துவிடும் என்று குதூகலித்தனர்.

(2-ம் பக்கம் பார்க்க)

'எருமை'யும் பெருமையும்

குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக் கொள்ளும் எருமைகள் போல ஆகக் கூடாது என்று உபதேசம் புரிந்துள்ளார் இந்திய கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியார்!

அமிர்தமாக இருக்கவேண்டியதை விஷமாக ஆக்கிக் கொள்வதா என்று வேதனையுடன் கேட்டு விட்டு, 'எருமை'கள் உதாரணத்தைக் கூறி, மதம் காரணமாக வேற்றுமை நினைவுகளும் துவேஷப் பூசல்களும், இரத்த வேட்டையும் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

பல மதங்கள் உலவினாலும், எல்லாம் கூறுவது ஓரே பொருள்தானென்றும், எனவே, மக்கள் மதப் போட்டிகளுக்காளாகித் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்வது, வருந்தத் தக்கது, விரும்பத் தக்கதல்ல என்று விளக்கமாக "எருமை"யின் கதையை எடுத்துச் சொல்லிப் புத்தி கூறியுள்ளார்!

மதம் — என்ற வார்த்தையின் அடிப்பீடமே மாச்சரியமும், மனக்குரோதமும் தானே என்று கேட்கத் தோன்றும், சிந்தனையில தெளிவுள்ளவர்களால. மதம் விளைவித்த இன்னல்களும், இரத்தக்களரிகளும், எண்ணற்றவை ஆயிற்றே, 'மதம் மக்களின் அபினி' ஆயிற்றே, அவர்கள் வாழ்வு வேதனை மயமாகுவதன் முதல காரணமே மக்கள் பகுத்தறிவை 'பக்தி' என்ற வார்த்தை மூலம் கொள்ளை கொள்ளும் மதம் தானே, என்றெல்லாம் கேட்கத் தோன்றும், மூடநம்பிக்கை முறியடித்து, பேதா பேதம் இல்லாது மனித இனம் முழுமையும் மனித இனமாகவே வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களுக்கு.

நல்லெண்ணத்தை நாத்திறந்து நாட்டுக்குச் சொல்ல முன்வந்தால் தான், சங்கராச்சாரி முதல் 'சக்கரவர்த்தி'யார் வரையுள்ளவர்களின் சஞ்சலமும் சங்கடமும் தாக்கி நாஸ்திகப் பட்டம் சூட்டப்படுகிறதே!

இப்போது, கவர்னர் ஜெனரலின்; கருத்துக்கண்டு நாம் குறிப்பிட விரும்புவது அவருடைய சமரச சன்மார்க்கத் தன்மை பற்றியோ, விரிந்த மனப்பான்மை—பரந்த சிந்தையைப் பற்றியோ அல்ல! மதம்,' என்பது இருக்கு மட்டும், மக்கள் அவைகளுக்கு ஆட்பட்டிருக்கும் வரையிலும் மாச்சரியமும், மனிதரை மனிதர் வெறுக்கும் தீமையும் தாண்டவமாடிய வண்ணம் தான் இருக்கும்.

கவர்னர் ஜெனரல், இந்த அடிப்படைபற்றி அறியாதவரல்ல, வேற்றுமையும் விஷவித்தும் எங்கு இருக்கிறது என்று தெரியாதவரல்ல, 'மதம்' என்றுஒன்று இல்லாவிட்டால் என்ன ஏற்படடுவிடும் என்று சிந்தித்துப் பார்க்க நேரமோ, அவகாசமோ, வசதியோ இல்லாதவரல்ல! எனினும், சனாதனம், வைதிகம், அதன் காரணமாகச் சோபிக்கும் 'சொகுசு' வாழ்வு, மதம் வேண்டுமா வேண்டாமா என்பதைவிட, அது ஏற்பட்டது எதற்காக, ஆனால் எந்நிலையில் இருக்கிறது இன்று, என்று விளக்க முற்பட்டு விமர்சனம் தந்துள்ளார் அமிர்தத்தை நஞ்சாக்குவதா, குட்டையைக் குழப்பும் எருமையாவதா! என்ற; குட்டிக்கதைகள் மூலம்.

"மதம்" என்ற போர்வையின்கீழ், பற்பல நம்பிக்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் இடையே கிடக்கும், மக்களுக்கு அவர் உபதேசித்துள்ளார், அன்பையும் ஐக்கியத்தையும் நிலைநாட்ட வேண்டிய மதத்தைக் குரோதத்துக்கும், துவேஷத்துக்கும், இரத்தம் சொட்டுவதற்கும் ஆளாக்கிக் கொள்ளுகிறீர்களே, செய்யலாமா, என்று!

எல்லா மதமும் நம்புவது ஒரு 'மகா சக்தி'யைத்தான், எனவே, பல்வேறு மதங்களுக்கும் இடையே உள்ள லட்சியத்தை மக்கள் உணர வேண்டும்; பொறுமையும் துவேஷமும், நம்முடையதுதான் சிறந்தது என்ற பெருமையும் கொண்டு, மதத்தை யுத்தகோஷமாக ஆக்கக் கூடாது; உள்ளம் பரஸ்பர அன்புள்ளதாக இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

பல மதங்கள் இருக்கின்றன, அவை கூறும் எல்லாம் ஓரே முடிவைத்தான் குறிக்கின்றன. ஆகவே, ஏன், தற்பெருமையும் தகாத செயல்களும், மக்களாகிய, நம்மிடையே ஏற்பட வேண்டும் என்று கேட்டுவிட்டு, போதனை புரிந்துள்ளார், பரந்த மனப்பான்மையுடன் எல்லா மதத்தினரும் வாழ வேண்டும் என்பதற்க

விசால நோக்கும், எம்மதமும் சம்மதமே என்ற பெருந்தன்மையும், என் மதம்தான் பெரியது சிறந்தது என்ற வீண்பெருமை இல்லாமையும் ஏற்படவேண்டும், அதுதான் நாட்டில் அமைதியும் அன்பும் நிலவ வழியென்று கூறுகிறார் — பன்னிப் பன்னி வலியுறுத்திச் சொல்கிறார்! பல மதங்களும்—இருக்கவேண்டும்; ஆனால் அவைகளுக்கிடையே துவேஷமும் குரோதமும் தலைவிரித்தாடக் கூடாது, என்று கூறுகிறார் மேன்மை தங்கிய, 'அவர்.'

ஆனால், அவர் வலியுறுத்தும் பரந்த மனப்பான்மையும் விரிந்த சிந்தையும், அவரது கூடாரத்துக்குள்ளேயே இருக்கிறதா என்று பார்த்தால், கிடைக்கும் விடை, வேடிக்கையானதாக மட்டுமல்ல, விஷம் போன்றதாகக்கூட இருக்கிறது!

இந்தஆண்டு, இந்தியசர்க்கார், புது தபால் தலைகள் வெளியிட்டுள்ளனர். அவை மக்கள் மத்தியிலும் உலவி வரத் துவங்கியிருக்கின்றன. அதை ஒரு முறை, பாருங்கள், இந்திய சர்க்காரின் பரந்த மனப்பான்மை விரிந்த சிந்தை, எமதமும் சம்மதம் என்ற தன்மை வெளியாகும் வேடிக்கையை!

கவர்னர் ஜனரல், மதம் பற்றித் தற்பெருமை அடித்துக் கொள்ளக் கூடாது, எல்லா மதக் கோட்பாடுகளும் ஓரே முடிவைத்தான் தருவன, என்று போதிக்கிறார். ஆனால் அவருடைய அரசாங்கமோ, பல்வேறுமதங்கள், கோட்பாடுகள், சிலை வணக்கங்கள் கொண்ட் ஒரு நாட்டு மக்கள் உபயோகப்படுத்தப்படக் கூடிய தபால் ஸ்டாம்புகளில், இந்து மதக் கடவுள்களின் உருவங்களைப் பொறித்திருக்கிறது! அதுவும் எந்தெந்த ஸ்டாம்புகள் மக்களால் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறதோ, அவைகளிலேயே அந்த

(அடுத்த பக்கம் பார்க்க)

மகிழ்ச்சி—நன்றி!

தோழர்களே!

மகிழ்ச்சிக்குரிய செய்தி. "திராவிடநாடு" இதழுக்குச் சர்க்கார் ஜாமீன் தொகை மூவாயிரம் ரூபாய் கட்டும்படி கேட்டிருந்ததைக் குறித்துத் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு நமக்குச் சாதகமாகக் கிடைத்துவிட்டது.

"திராவிடநாடு" இதழிலே சர்க்கார் குறித்துக்காட்டிய கட்டுரைகள், வகுப்புத் துவேஷத்தை மூட்டுவன அல்ல என்று தீர்ப்பளித்து, சர்க்கார் உத்தரவை, சென்னை உயர்நீதிமன்றம், ரத்துசெய்து விட்டது.

இந்தத் தீர்ப்பு, நமது தோழர்களுக்கெல்லாம், மகிழ்ச்சியும் எழுச்சியும் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனையொட்டி, சர்க்காரிடம் கட்டப்பட்டிருக்கும் மூவாயிரம் ரூபாயும், விரைவில், திருப்பித்தரப்படும் என்று அறிகிறேன்.

சர்க்காரின் அறைகூவலை எற்று, **ஜாமீன் தொகைக்காக** நன்கொடையை ஆர்வத்துடன் அளித்த தோழர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி தொகை என் கைக்கு வந்ததும், தோழர்களுக்குத் திருப்பி அனுப்ப இருக்கிறேன் என்பதையும்தெரிவித்துக்கொள்கிறேன். **ஜாமீன் தொகைக்காக** நன்கொடை அனுப்பியுள்ள நண்பர்கள், எந்த முகவரிக்கு, பணம் அனுப்பப்படல்வேண்டும் என்பதைத் "திராவிடநாடு" அலுவலகத்துக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

நெருக்கடியின்போது நன்கொடை உதவிய நண்பர்கள் பணம் திருப்பி அனுப்பப்படுவதைத் தவறாகக் கருதாமல், நெருக்கடிகள் எப்போது ஏற்பட்டாலும், இதுபோன்ற ஆதரவுகாட்டும் அன்பினை எனக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறன்.

தீர்ப்பின் முழு விவரம் கிடைத்தபிறகு, "திராவிடநாடு" இதழில் வெளியிட எண்ணியுள்ளேன்.

திராவிடநாடு
காஞ்சிபுரம்
9—11—49

வணக்கம்
அன்பன்,
அண்ணாதுரை.

முன்பக்கத் தொடர்ச்சி

மூர்த்திகளின் உருவங்கள்!
மூக்காலணா தலைகளில் திருமூர்த்தி!
இரண்டணா தலைகளில் நடராஜா!!

பொறிக்கப்பட்டிருக்கின்றன, ஓரணாதலைகளில் போதிசத்துவர் உருவமும பொறிக்கப்பட்டிருக்கிறது.

மதச்சார்பற்ற சர்க்கார் என்று கூறித் திரியும், காங்கிரஸ் தலைவர்களின் சர்க்கார் செய்திருக்கும் காரியம் இது! இச்சர்க்காரின் தலைவரான கவர்னர் ஜெனரல், மதப் பெருமை கூடாதென்றும், குரோதமும் துவேஷமும் ஏற்பட வழி செய்யப்படக் கூடாதென்றும் போதிக்கிறார், உபதேசிக்கிறார்!

ஆனால், அவருடைய சர்க்காரோ தபால ஸ்டாம்புகள் மூலம் 'தங்கள் கடவுள்'களைப்பரப்புமுனைகின்றனர்!

வாழ்வது, பலதரப்பட்ட, பல மதக்கோட்பாடுகள் கொண்டமக்கள். அவர்களை, ஆளும் பொறுப்பையேற்று இருக்கும் சர்க்கார், எல்லோருடைய கையிலும், உலவக்கூடிய, இன்றியமையாத ஒன்றின்மீது இந்து மதக் கடவுள்களின் 'திரு' உருவங்களைப்பொறித்துவைத்துமகிழ்கிறது!

இந்த எண்ணம், வளர்ந்தால், எப்படிப் பரந்த மனப்பான்மையும் ஐக்கிய உணர்ச்சியும் ஏற்பட முடியும்! மத, மனமாச்சரிய குரோத உணர்ச்சிகள் மங்கி மக்களிடையே நல்லெண்ணமும் சந்தேகமற்ற தன்மையும் ஏற்பட முடியும்!

பரந்த—ஒரு பெரிய—உபகண்டத்தை ஆளும் ஒரு சர்க்காருக்கு, தினசரித் தேவையான, போக்குவரத்து ஸ்டாம்புகளில் ஒரு சின்னம் பொறிக்க, கடவுள்களைத் தவிர வேறு எதுவுமே, ஏற்பட முடியாதா! ஏற்படவில்லையா!

ஏன், இந்த நச்சு ஆசையும், நல்லது விளைவிக்காத மனப்பான்மையும் ஏற்பட வேண்டும்!

கவர்னர் ஜெனரல் வலியுறுத்துகிறார், போதிக்கிறார், அமிர்தத்தை விஷமாக்காதீர்கள், குட்டையைக் குழப்பும் 'எருமை' ஆகக்கூடாது என்று! ஆனால், அவரைத் தலைவராகக் கொண்ட அரசாங்கமோ, தங்கள் 'கடவுள்களின்' பெருமையைப் பரப்ப வழி காண்கின்றனர்—அதுவும் முரணான வழியில்! ✲

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95. Tirukkachinambi Street, Kancheepuram.

REGD M 4642

திராவிடநாடு

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம்
மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 20—11—49 | இதழ் 21

மீறிக்கொண்டே இருக்கிறோம்

"நமக்கு சவுகரியமாயிருக்கும்போது மட்டிலும்தான் நாம் காந்திஜீயின் பெயரைப் பயன்படுத்திக் கொள்வதா? மகாத்மாவின் பெயரைப் பயன்படுத்திக்கொண்டே, அவரது உபதேசங்களைத் தினந்தோறும் நாம் மீறி வருகிறோமே; இதற்கு எவ்வாறு ஜவாப் சொல்லப் போகிறோம்?"

சர்தார் பட்டேல்
(14—11—49)

எதிர்காலம்-இடர்மிகுந்தபாதை
(14-ம் பக்கத் தொடர்ச்சி)

"மாகாணங்கள், தங்களுக்கென வருமானம் வரக்கூடிய போதுமான வழிகளை யுடையதாக இருக்க வேண்டும்!

மத்திய சர்க்காரின், 'கையேந்திகளாக', அவர்களை எதிர்பார்த்து நிற்பவர்களாக இருக்கக்கூடாது!

இப்படி யிருப்பதால் நாம், மக்களுக்குச் செய்யவேண்டுமென ஆர்வத்துடன் செய்ய முற்படும் திட்டங்கள்—மத்திய சர்க்கார் திடீரெனக் கையை விரிப்பதால்—நிர்மூலமாக்கப்படுகின்றன!"

இந்தச் சொற்களை, வீசியவர், பிரிவினை கோரும் நம்முடைய கூட்டத்தைச் சேர்ந்தவரோ, சாதாரண காங்கிரஸ் தொண்டரோ, மேடையில் பேசிவிட்டுச் செல்லும் 'ஏனோ, தானோ'வோ, அல்ல! இம்மாகாணத்து மந்திரி! அதுவும்நிதிமந்திரி!! அண்மையில் வானொலியில் பேசிய போது மேற்கண்டவாறு கூறியுள்ளார், வெளிப்படையாக, மனந்திறந்து!

மத்திய சர்க்காரிடம் அடிக்கடி பிச்சை கேட்கவும், மூக்குடைபடுவதுமான நிலையிலிருப்பதால்தான், அவர், இவ்வண்ணம் மனமுடைந்து கூறியுள்ளார் போலும்! அவர், இக்கூற்றை வெளியிட்டதுகூட, மாகாண சர்க்காருக்குப் பணவுதவியோ கடனோ கிடையாது' என, மத்திய சர்க்கார் கைவிரித்த 'சங்கதி' பற்றி, முகாரி பாடுகையில்தான்!

அது மட்டுமல்ல, அவர் குறிப்பிடுகிறார், "நான் அடிக்கடி சொல்வது போல, மத்திய சர்க்கார் கைவிரிப்பதால் ஏற்படும் சிக்கலைத் தவிர்க்க" மாகாணங்களுக்கு, வருமானம் தரக்கூடிய வரி இனங்கள் இருக்க வேண்டும், என்கிறார். இந்தத் தடவை மட்டுமல்ல, பன்முறையாகத்தான் சொல்லி வருகிறேன் என்கிறார்!

நாம் பிரிவினை வேண்டும், நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டும், என்கிறோம். அதற்கு மூல காரணமாக, மத்திய சர்க்கார் நம்மை எல்லா வகைகளிலும் சுரண்டிச்செல்வதைச் சுட்டிக் காட்டுகிறோம்!

நாம் கூறுவதையே மந்திரியார் கூறுகிறார், மனமுடைந்து, பல தடவை மத்திய சர்க்காரால் மூக்கறுக்கப்பட்ட காரணத்தால்!

மத்திய சர்க்காருக்கும் மாகாணசர்க்காருக்கும் ஏற்பட்டுவரும் புகைச்சல், எதில் ஆரம்பமாகிறது என்பதை, நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி, தேசியத் தோழர்களுக்கும், எடுத்துக் காட்டுவதாகும், மந்திரியார் மனங்கசிந்து கூறும் வார்த்தைகள்.

வருமானம் கொள்ளை கொள்ளப்படுகிறது எல்லா வழிகளிலும்.

—இது நாம் சொல்வது.

வருமான இனங்கள் நமக்கு இருக்க வேண்டும்.

—இது மந்திரியார் சொல்வது.

இரண்டு கூற்றுகளிலிருந்தும் தொனிக்கும் பொருள், தன் தேவைக்கான வருவாயும், பணநிலையும் உடையதாக, மாகாணம் இருக்க வேண்டும் என்பதுதான். அதற்கு வழி, மத்திய சர்க்காரின் தொடர்பை அறுத்துக் கொண்டால் தவிர வேறு வழியில்லை! ஆனால், இப்போதுள்ள நிலைமையில், மத்திய சர்க்கார் மாகாணங்களின் அதிகாரங்களைக் கைக்கொண்டு வரும் வேகத்தைப் பார்த்தால், புது அரசியலமைப்பைக் கவனித்தால், அங்கிலை ஏற்படவழிதென்படவில்லை! பாதை பயங்கரமாக இருக்கிறது!! எதிர்காலம் இருட்குகையாகக் காட்சியளிக்கிறது!

✲

பாலைவனக் 'குயில்'கள்!
16-ம் பக்கத் தொடர்ச்சி

என்பதையே முழக்கமாகக் கொண்டு துவக்கப்பட்ட பல மாதர் சங்கங்களும் உண்டாம், சீனவில்!

பெண்ணடிமை இந்நாட்டில் எவ்வளவு கோரமாகஇருக்கிறதோ, அவ்வளவும் அங்கு உண்டு. அவைகளில் ஒன்றுதான் நாம், மேலே எடுத்துக் காட்டிய சம்பவம்!

* • •

இளமை மாறுதவள், இன்பம் நுகராதவள், வாழ்வுப் பயணத்தை அப்போதுதான் துவங்க ஆரம்பித்தவள் என்றாலும் கணவன் இறந்து விட்டான், சாவு அவனைப் பலி கொண்டுவிட்டது என்றால், அந்தச் "சிறுசி"ன் வாழ்க்கை முடிந்து விட்டது, அவள் இனிவாழ முடியாதவள், துர்ப்பாக்கியவதி, வந்த வழிக்கு நல்வழிகாண்பதே அவள் செய்யவேண்டியது என்று அப்பெண் விதவை படாதபாடுபடுத்தப் படுகிறாளல்லவா, நம் நாட்டில். இதைப்போலவே சீனாவிலும், கட்டியகணவன் இறந்துவிட்டான்என்றால்மட்டுமல்ல, இவளை இவனுக்கு மணமுடிப்போம் என்று நிச்சயார்த்தம் செய்து, இந்தப்பையனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இந்த நாளில் திருமணம் என்று முடிவு செய்யப்பட்டு, இருவருக்கும் வாழ்வுவிழா நடத்தப்படும் நாள் வருவதற்குள் ஏதோ காரணத்தால், குறிப்பிடப்பட்ட அந்த மணமகன், திடீரென இறந்து விடுகிறான், இயற்கை அவனைக் கொள்ளைகொண்டு விடுகிறது என்றால், கல்யாணம் ஆகவில்லையென்றாலும், கணவன் மனைவியாக ஆக்கப்பட வில்லையென்றாலும், அந்தப்பெண் விதவை ஆகிவிட்டாள் என்றுதான்எல்லோராலும் கருதப்படுவாள்! 'இன்னானுக்குஇவள்'என்று, மணமகன் வீட்டார் நிச்சயித்துப் பெண்பேசி, பரிசம் கொடுத்து விட்டுப் போய்விட்டார்கள் என்றால், அந்தப் பெண், அவர்கள் வீட்டுக்கு அடிமையாகி விட்டாள் என்றுதான் எண்ணப்படுவாள்!

மகன் இறந்து விட்டானே, இனியென்ன வேறுயாருக்காவது அவள் மணம் செய்விக்கப்பட்டு, மகிழ்ச்சியுடன் வாழட்டுமே என்று எவரும் கருதமாட்டார்கள். மகன், செத்து விட்டான், அவனுக்கு ஆகவேண்டிய கிரியைகளெல்லாம் அவனுக்குச் செய்தாகிவிட்டது, மாண்டவன் இனி மீளமாட்டான், ஆகவே அந்த மங்கையை, இன்னொருபையனுக்கு மணம் முடித்துக் கொடுக்கட்டுமே என்று, விட்டுவிட மாட்டார்கள்!

இன்னவனுக்கு இவளைக்கட்டி வைப்பது என்று நிச்சயார்த்தம் ஆகிவிட்டால், அவனும் அவளும் புருடன் மனைவி ஆகிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம் என்பார்கள்! இதன் காரணமாகவே, மரப்பலகைத் திருமணம் நடைபெறும்.

மகன் தான் இறந்துபோய்விட்டானே, இனித் திரும்பியா வரப்போகிறான், ஏன் இந்தப்பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்க வேண்டும் என்று எண்ணமாட்டார்கள்—தம் மகனுக்கு,என்று மணநாள் குறித்திருந்தார்களோ, அன்று அத்திரு

(12-ம் பக்கம் பார்க்க)

கம்பராமாயணம் என்றால்.........!

"கம்பன் எடுத்துக்கொண்ட கதையைப் பற்றிக் கவலையில்லை. அதை எப்படி அவன் உருவாக்கியிருக்கிறான்? எந்த ஒளியை வீசும்படி செய்திருக்கிறான்? என்பனவற்றை எண்ணிப் பார்த்தால், அவன் கடவுள் தன்மையை அடைந்துவிடுகிறான்"

என்ற விளக்கத்தை உள்ளடக்கிய தலைமைச் சொற்பொழிவுடனும், தமிழறியாத ஒரு அமைச்சரின் ஆரம்ப விழா வைபவத்துடனும், மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் கம்பராமாயணத்தைப் பதிப்பிக்கவேண்டுமென்ற தீர்மானத்துடனும் இவ்வாண்டுக் கம்பர் மாநாடு நடைபெற்றிருக்கிறது.

கம்பன் ஒரு கவி எனவே, தன்னுடைய கவித்திறமையைக் காட்டுவதற்கு வழி எது என்று எண்ணிய தன்விளைவே, வால்மீகிஇராமாயணம் கம்ப ராமாயணமாக மாறியதாகும். கவி புனைவதில் திறமை பெற்றிருந்த கம்பன், தன்னுடைய கவிதா திறமையைக் காட்ட வேறுவழி எதுவும் கிடைக்காமல், வேறொருவர், வேறொரு மொழியில் பாடி வைத்திருந்த ஒரு கவிதையை எடுத்து வைத்துக்கொண்டு, அதன் வாயிலாகத் தன்னுடைய கவிதா திறத்தைக் காட்ட முனைந்ததே முதற் பெருந் தவறாகும்.

சங்க காலக் கவிஞர்களிலிருந்து இன்றைய கவிஞர்கள் வரை—கவிஞர்கள்என்றுமதிக்கப்படக்கூடியஎவரும் இரவல் கவிதையை ஆதாரமாக வைத்துத் தம்முடைய கவிதாதிறத்தைக் காட்டியதே இல்லை. அதிலும் கம்பர் போன்ற சிறந்த கவிஞர்கள், இன்னொரு மொழியிலுள்ள கவிதையை இரவல் வாங்கி அதன்மூலம் தங்கள் கவிதா திறத்தைக் காட்டுவது, தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் மாற்றமுடியாத மாசை உண்டாக்குவதாகும். தமிழ் நாட்டிலிருந்த சிறந்த கவிஞர்கள், எல்லாரும் தங்களுடைய கவிதா திறத்தையும் கற்பனா ஆற்றலையும் தங்கள் நாட்டு வரலாறுகள் மீது வைத்தே காட்டியிருக்கிறார்கள். திருவள்ளுவர் போன்ற உலகம் போற்றும் கவிஞர்கள் எதனையும் இரவல் வாங்காமல், தங்கள் சொந்த அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டே உலகம் முழுவதற்கும் பயன்படக்கூடிய சிறந்த அறிவு நூல்களைக் கவிதை வடிவில் ஆக்கித் தந்துள்ளார்கள்.

ஆனால், கம்பனுடைய கவிதை நூல், அவர் வாழ்ந்த நாட்டின் வரலாறுமன்று; அவருடைய சொந்தக் கற்பனையுமன்று; மொழிபெயர்ப்புமன்று.

கம்பரால் ஆக்கப்பெற்ற இராமாயணம், வால்மீகி இராமயணத்தின் மொழிபெயர்ப்பாய்இருக்க, அதனை, மொழிபெயர்ப்பு நூல் அல்ல என்று எப்படிச் சொல்லலாம் என்பதாகச் சிலர் கேட்கக் கூடும். கம்பராமாயணம் உண்மையான மொழிபெயர்ப்பு நூல்அல்ல என்பதைக் கம்ப நண்பர்களே ஒப்புக் கொள்ளும் போது, நாம் அதனை எப்படி ஒரு மொழிபெயர்ப்பு நூல் என்று ஒப்புக்கொள்ள முடியும்?

"மக்களின் மனோநிலையைநன்கு தெரிந்துகொண்டு, அந்தக் காலத்திற்கேற்பக் கம்பர் கவி புனைந்துள்ளார்"

என்று, கம்பர் நாட்டுத் தலைவர் தோழர் மீனாட்சி சுந்தரனார் அவர்களே குறிப்பிட்டுப் பேசியுள்ளார், எனவே, கம்பர், தான் வாழ்ந்த காலத்திலிருந்த மக்கள் எந்தவிதமான மனோ நிலையுடன் இருந்தார்களோ, அந்த மனோநிலைக்கு ஏற்பக் கவி புனைந்தாரேயன்றி, வால்மீகி இராமயணத்தை அதில் உள்ளபடி மொழிபெயர்க்கவில்லை என்பது நன்கு தெளிவாகும்படி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கம்பராமாயணம் ஒரு மொழிபெயர்ப்பு நூல் அல்ல என்பதை மேலும் வலியுறுத்தும் முறையில் தோழர் மீனாட்சி சுந்தரனார் அவர்கள்,

"சீதையைக் கற்புக் கனிகலமாகவே எடுத்துக் காட்டுகிறார் கம்பர்"

என்று கூறுவதன் வாயிலாகக் கம்பராமாயணம் ஒரு மொழிபெயர்ப்பு நூலல்ல என்பதை நிலைநாட்டியுள்ளார். அதாவது, வால்மீகியால் கற்புக்கனிகலமாக்கப்படாத சீதையைக் கம்பர் கற்புக்கனிகலமாக்கியுள்ளார் என்றுபேசியுள்ளார். வால்மீகி சீதையைக் கற்புக்கனிகலமாக்கவில்லை என்பதும், கம்பராலேயே சீதை கற்புக்கனிகல மாக்கப்பட்டாள் என்பதும் இதனால் நன்கு தெளிவாகின்றது. தமிழ் நாட்டு மக்களின் மனோநிலை, கம்பர் காலத்தில், கற்பை அணிகலமாகக் கொண்டிருந்ததாலேயே, அந்நிலைக்கேற்ப வடநாட்டுச் சீதையைப் பற்றித் தமிழ் மக்கள் கம்பராமாயணத்தில் படிக்கும்போது சீதையைக் கற்புக் கனிகலமாகப் பாடாவிட்டால், தமிழ் மக்கள் அவனைப்பற்றி இழிவாக எண்ணுவது மட்டுமன்றி, இப்படிப்பட்ட ஒரு கதையை ஏன் கம்பர் தமிழில் பாடினார் என்று தன்னையும் இழிவாகப் பேசுவார்களே என்று அஞ்சியதாலேயே, கம்பர் சீதையைக் கற்புக் கனிகலமாக வைத்துப் பாடியுள்ளார் என்ற உண்மையைத் தோழர் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் நன்கு விளக்கிப் பேசியுள்ளார்.

வால்மீகி சீதையைக் கற்புக் கனிகலமாகப் பாடியிருந்தால், கம்பர், சீதையைக் கற்புக்கனிகலமாகவே எடுத்துக் காட்டுகிறார் என்று கூற வேண்டியதே இல்லை. வால்மீகி செய்யாத ஒன்றை, அதாவது, வால்மீகியால் கற்புக் கனிகலமாக்கப்படாத சீதையைக், கம்பர், தன் நாட்டுப் பண்புக் கேற்பக் கற்புக் கனிகலமாக்கி இருக்கிறார் என்பதுதான் அந்த வாசகத்தில் உள்ள பொருளாகும். வறிதே கற்புக்கனி

கலமாக என்று கூறாமல், ஒன்றன் பொருளை நன்கு வலியுறுத்தும் முறையில் பயன்படுத்தப்படும் 'ஏ' காரத்தை முன்னிலைப்படுத்திக், கற்புக் கணிகலமாகவே என்று அழுத்தந் திருத்தமாக விளக்கியுள்ளார்.

சீதை இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டவள் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு சிலர் அவள்மீது தவறான குற்றத்தைச் சுமத்திவிட்டால், சீதையைக் கடவுளாக்க எண்ணிய கம்பரின் நோக்கம் சிதைந்துவிடுமோ என்ற அச்சமும் அவருக்குண்டாகி, எப்படியாவது சீதையைக் கற்புக்கணிகலமாகக் காட்டித் தீரவேண்டிய அவசியத்தில் அவர் சீதைக்குக் கற்புத் தன்மை கற்பித்திருக்கலாம். எப்படியோ—எதற்காகவோ கம்பர் சீதையைக் கற்புக் கணிகலமாக்கி விட்டார். அந்த வகையில் நாமும் கம்பரைப் பாராட்டுகிறோம். கற்பின் உயர்வைப் பேணி நடக்கும் தமிழ் மக்கள் உள்ளங்களில் கற்பிழந்த மங்கையரின் வரலாறுகள் இடம் பெறாமல் இருக்கக்கூடிய முறையில் சீதையைக் கற்புடையவளாக்கிக் காட்டிய கம்பரின் கவிதா திறத்தை நாம் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்? ஒருவேளை வால்மீகிக்கு இந்நிகழ்ச்சி சீற்றத்தை உண்டாக்கலாம். நம்மால் கற்புக் கணிகலமாக்கப்படாத ஒரு பெண்ணை, நம்முடைய உடன்பாட்டைப் பெறாமல் கம்பர் எப்படி அவளைக் கற்புக் கணிகலமாக்கியிருக்கலாம் என்று சினக்கக்கூடும். நம்முடைய நூலை மொழி பெயர்த்த கம்பர், நம்மால் எழுதப்படாததைப் புகுத்தியும், எழுதப்பட்டதை மாற்றியும் ஏன் பாடவேண்டும் என்றும் கடியலாம்.

ஆனால், நம்முடைய பண்பாடு அப்படிப்பட்டதல்ல. எதை யார் எழுதினாலும், அது மக்களுக்குப் பயன்பட்டு நல்ல ஒழுக்கத்தையும் அறிவையும் உண்டாக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்பதேயாகும்.

இனி, கம்பர் இவ்வாறு பாடியதற்காக வால்மீகி ஒருவேளை சினங்கொள்ளக்கூடும் என்று நாம் கூறிய போதிலும், உண்மையிலேயே அவருக்கும் அந்த உரிமை ஏற்படக் காரணம் இல்லையென்றே தெரிகிறது. எப்படியென்றால், வால்மீகியால் பாடப்பட்ட இராமாயணம் கூட உண்மையான வரலாற்றின்பாற் பட்டதல்ல என்பது புலனாகின்றது. கம்பர் மாநாட்டுத் தலைவர்,

> “வால்மீகி தனது இராமாயணத்தில், கம்பர் காலத்துக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சமூக ஆசார பழக்க வழக்கங்களைப் பற்றி வருணித்திருக்கிறார்”

என்று குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அதாவது, வால்மீகி தம்முடைய காலத்துப் பழக்க வழக்கங்களையும் சமூக ஆசாரங்களையும் அடிப்படையாக வைத்துத் தான் இராமாயணத்தைப் பாடியிருக்கிறார் என்பதுதான் இதன் விளக்கமாகும். அதுவுமன்றி, வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகள் எல்லாம் வால்மீகி காலத்திலோ அல்லது அவருக்கு முற்பட்டகாலத்திலோ நடைபெற்ற நிகழ்ச்சிகள் அல்ல என்பதும்; இராமாயணத்திலுள்ள நிகழ்ச்சிகள் எல்லாம், வால்மீகியால் இராமாயணம் எழுதப்பட்ட பின்னரே நடைபெற்றன என்பதும் இராமாயணம் பற்றிக் கூறப்படும் சில விளக்கங்களாகும்.

எனவேதான், மொத்தத்தில் இராமாயணம் மக்களுக்குத் தேவையும் பயனுமற்ற ஒரு நூல் என்று நாம் கூறுகிறோம். வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணம், அதில் குறிப்பிடப் பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடப்பதற்கு முன்னரே, இப்படியிப்படி நடக்கும் என்ற யூகத்தின் பேரில் கற்பனையாக எழுதப்பட்டதால், அதனை உண்மையென்று ஒப்புக்கொள்ள முடியாதென்றும், கம்பரால் எழுதப்பட்ட இராமாயணம், வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணத்துக்குமுற்றிலும் மாறுபட்ட கற்பனையாக இருப்பதால் அதனையும் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். வால்மீகி இராமாயணமாவது, அதனைப்படிப்பவர்களுக்கு, ஒரு அரசன் இன்னொரு அரசனோடு போர் தொடுத்து வெற்றி கொண்டான் என்ற அளவோடு முடிகிறது. வால்மீகிஇராமாயணத்தில் இராமன் கடவுளாக்கப்படவில்லை—சீதை கற்புக்கணிகலமாக்கப்படவில்லை. ஆனால் கம்பராமாயணத்தில், இராமன் கடவுளாக்கப்பட்டும்—சீதை கற்புக்கணிகலமாக்கப்பட்டும்——திராவிட மன்னனான இராவணன் இரக்கமிலா அரக்கனாக்கப்பட்டும், அதேசமயத்தில் அவனுடைய தம்பி விபீடணன் ஆழ்வாராக்கப்பட்டும், அனுமான் ஆண்டவனாக்கப்பட்டும்—வாலி கொடியவனாகக்கருதிக் கொல்லப்பட்டும் — இந்நிகழ்ச்சிகளை எழுதிய கம்பரும் ஆழ்வாராக்கப் பட்டதாகவுமன்றோ கம்பராமாயணம் காட்சியளிக்கிறது. எனவேதான், வால்மீகி இராமாயணத்தைக் கண்டால் ஏற்படாத சீற்றம், கம்பராமாயணத்தைக் கண்டால் கருத்துத் தெளிவுள்ள எவருக்கும் ஏற்படுகிறது—அப்படிப்பட்ட பொய்ம்மையும்—புளுகும் — கொடுமையும் நிறைந்துள்ள ஒரு நூலை அழிக்க வேண்டுமென்றும் தோன்றுகிறது.

எனவேதான், கம்பர்மாநாட்டுத் தலைவர் கூறியது போல், கம்பன் எடுத்துக்கொண்ட கதையைப் பற்றி நாமும் கவலைப்படாமல், கம்பர் அதனை உருவாக்கிய முறையையும், அதில் வீசப்படும் ஒளியின் தன்மையையும் நாம் நன்கெண்ணிப்பார்த்து, அவை தம்மக்களின் அறிவையும் பண்பையும் பாழ்படுத்தும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன என்று கருதிக் கண்டிக்கிறோம்.

சாதாரண ஒரு அரசன் கதையைக் கம்பர் தன்னுடைய கவிதா திறத்தால் வழிபாட்டிற்குரிய “பக்தி நூல்” ஆக்கியதைக் கண்டிக்கிறோம். நம்முடைய நாட்டை நல்லமுறையில் ஆண்டு நமக்கு நன்மைகள் பல செய்த நம்முடைய அரசர்களான சேர—சோழ — பாண்டியர்களையே நாம் கடவுளராக்கி வழிபடாமல் இருக்கும் மக்கட் பண்பாட்டிற்கு ஊறுதேடும் முறையில் அயோத்தியை ஆண்ட ஒரு அரசனை ஆண்டவனாக்கி, அவனுடைய வரலாற்றைக் கூறும் நூலைப் பக்திநூலாக்கி, நம்மை எல்லாம் இராம வழிபாட்டுக் குரியவர்களாக்கும் கம்பராமாயணத்தைக், கருத்தில் சிறிதளவாவது தெளிவும், மனிதாபிமான உணர்ச்சியுமுள்ள யார்தான் ஒப்புக் கொள்ள முடியும்?

கம்பன், நம்மவன், கவிஞன் என்பதற்காக அவன் எது செய்தாலும், அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா—பாராட்டவேண்டுமா என்பதனைக் கம்ப நண்பர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

'நம்ம' கம்பன் நமக்குச் செய்த நன்மைதான் கம்பராமாயணத்தில் நன்கு தெரிகிறதே! அயோத்திமன்னன் ஆண்டவனாக்கப்பட்டான்! இலங்கை மன்னன் இரக்கமிலா அரக்கனாக்கப்பட்டான்! சங்ககாலப்புலவர்கள், நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று கடவுளையே கண்டித்தார்கள்! கம்பனோ ஆரிய மன்னன் திராவிட மன்னனை இழிவுபடுத்தித் தோற்கடித்தான், எனவே ஆரியமன்னனாம்இராமனை அன்புடன் அடிபணிந்து வணங்குங்கள் என்று ஆணையிட்டான்! எனவே கம்பனை வாழ்த்தி, கம்பராமாயணத்தைப் போற்றி வாழுங்கள் என்று இன்றும் நமக்கு அறிவுரை புகட்டச் சிலர் தமிழ் நாட்டில் இருக்கின்றனர் என்றால் இதைவிட ஆச்சரியம் வேறென்ன இருக்கமுடியும்!

கம்பன் கடவுள் தன்மையை அடைந்துவிட்டான் என்பதாகக் கம்ப நண்பர்கள் கூறிக் களிப்புக் கடலில் மூழ்குகின்றனர். தமிழ் மொழியை வளர்த்து, தமிழர் நாகரிகத்தைப் பேணி நாட்டின் உயர்வுக்கு நலம்பல செய்த சங்க காலப் புலவர்களுக்குக் கடவுள் தன்மை அளிக்காத நாம்—அயோத்தி இராமன் கதையைப் பாடிய கம்பனுக்குக் கடவுள் தன்மை கற்பிக்க வேண்டுமாம்! அறிவுப் புதையலை அள்ளி அள்ளி வீசிய திருவள்ளுவருக்கே கடவுள் தன்மை கற்பியாமல், அவரை அறிவின் திலகமாகவே வைத்துப் போற்றும் நாம்—அரசனை ஆண்டவனாக்கிய கம்பனுக்குக் கடவுள் தன்மை கற்பிக்க வேண்டுமாம்! எப்படி இருக்கிறது கம்ப நண்பர்களின் போக்கு?

“கம்பன் இராம காதையை எப்படி உருப்படுத்தி யிருக்கிறான்?” என்று கேட்கிறார் கம்பர் மாநாட்டுத் தலைவர். கம்பன், அயோத்தி அரசன் இலங்கை அரசனைப் போரில் வென்றதாகக் கூறப்படும் சாதாரண ஒரு கதையைப் 'பக்தி நூலா'க்கும் பாழான காரியத்தைச் செய்வதன் வாயிலாகத் தமிழ் மக்களின் தன்மதிப்போடு கூடிய சிறந்த பண்பாட்டிற்கே நீங்காத மாசை உண்டாக்கியிருக்கிறான் என்று கூறுகிறோம். மேலும் அவர் கேட்கிறார், “கம்பன் தான் எடுத்துக்கொண்ட கதையில் எந்த ஒளியை வீசும்படி செய்திருக்கிறான்” என்று. கம்பன், மனிதனை மகேசுவரனாக்கும் மதியீனத்தைச் செய்வதன் வாயிலாகத் தன்னுடைய அறியாமையைத் தவிர வேறு எந்த விதமான 'ஒளி'யையும் நமக்குக் காட்டவில்லை என்று நாம் கூறுகிறோம். இனிக், கம்பராமாயணத்தில் ஏதாவது 'ஒளி' வீசுகிறதென்றால், அது, திராவிட மன்னனாகிய இராவணன் சீதையிடம் நடந்துகொண்ட பெருந்தன்மையாகிய 'ஒளி'யைத் தவிர வேறு எதனையும் நாம் காண முடியாது. சீதையைத் தூக்கிக் கொண்டு போன இராவணன், சீதையின் உடலைத் தீண்டாமல், அவளை, அவள் இருந்த பர்ணசாலையுடன் சேர்த்தே தூக்கிக்கொண்டுபோனான் என்று சொல்லப்படுவதை நோக்கும்போது அவனுடைய பெருந்தன்மையை என்னென்பது. இராமனும் இலக்குவனும் சூர்ப்பனகையை மானபங்கப் படுத்திய மிருகத் தன்மையையும், இராவணன் சீதையிடம் காட்டிய மனிதத் தன்மையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், போதும்.

நாம் கூறும் இவ்வுண்மையைக் கம்பர் மாநாட்டுத் தலைவர் தோழர் மீனாட்சிசுந்தரம் அவர்களும் ஒப்புக் கொள்கிறார்.

> “கம்பரின் இராவணன் ஒரு தீமையையும் செய்யவில்லை. சீதையைக் கொண்டு சென்ற போதிலும், அவன் சீதையை ஒன்றும் செய்யவில்லை”

என்று கூறுகிறார். என்றாலும் அவர் ஒரு முக்கியமான உண்மையை மறைத்திருக்கிறார். அதாவது, இராவணன் தீமை எதுவும் செய்யவில்லை என்றும் கூறவேண்டும்; அதே சமயத்தில், இராவணன் தீமையே செய்தான் என்ற போதிலும், கம்பர் அவனால் செய்யப்பட்ட தீமையை எடுத்துக்காட்டாமல் 'பெருந்தன்மை'யாக நடந்துகொண்டார் என்பதையும் கூறவேண்டும் என்ற முறையில் பேசியிருக்கிறார். அதாவது,

> “கம்பரின் இராவணன் சீதையை ஒன்றும் செய்யவில்லை”

என்று கூறுகிறார். இதன் பொருள் என்ன? கம்பரின் இராவணன் தீமை செய்யவில்லை; வால்மீகியின் இராவணன்தான் தீமை செய்தான் என்பதன்றி இதற்கு வேறென்ன பொருள் இருக்கமுடியும்? வால்மீகியால் தீயவனாகக் காட்டப்பட்ட இராவணன், கம்பரால் நல்லவனாகக் காட்டப்பட்டதற்குக் காரணம் என்ன? உண்மையாகவே கம்பருக்கு அந்த நல்லெண்ணம் இருந்துதான் அவ்விதம் செய்தாரா? கம்பரால் கையாளப்பட்ட முறை எதனை அடிப்படையாகக் கொண்டதென்பதை அறிய முடியாத இன்றைய புலவர் பெருமக்களின் திகைப்பைக் கண்டு உண்மையிலேயே நாம் இரக்கப் படுகிறோம்.

சீதைக்கு உயர்வும் கடவுள் தன்மையும் காட்டுவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்ட கம்பர், சீதையை இராவணன் தொட்டான் என்று கூறினால், அது அவளுடைய கற்புத் தன்மைக்கு இழுக்கை உண்டாக்கி, அவளைக் கடவுள் தன்மையுடையவளாக்க முடியாது போகுமே என்று கருதியதாலேயே, இராவணன் சீதையை அவளிருந்த பர்ணசாலையுடன் தூக்கிக்கொண்டு போனான் என்று கம்பர் புனைந்துரை கூறிப்புகுத்தியுள்ளார்என்பதனை உணராததாலோ அல்லது உணர்ந்தும் உள்ளதை உள்ளபடி உரைக்க வேண்டுமென்ற மனஉறுதி இல்லாததாலோதான் இன்றைய புலவர்கள் 'இரண்டுங்கெட்டான்களாக' உள்ளனர்.

நாம், சீதையைப்பற்றி வால்மீகி கூறுவதையோ, கம்பர் கூறுவதையோ ஒப்புக்கொள்வதில்லை. ஏனென்றால், இரண்டுபேரும் உண்மையை உரைக்கமுடியாத நிலையில் நின்றே இராமாயணம் பாடியுள்ளனர். வால்மீகி, இராமாயண நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முன் இராமாயணம் பாடியவர். கம்பர், வால்மீகி இராமயணத்தை மாற்றியும் திரித்தும் பாடியவர். எனவேதான் இராமாயணம் என்றநூலே நமக்கு வேண்டாம் என்று கூறுகிறோம்—இராமாயணம் இல்லாமலேயே மக்கள் வாழ முடியுமென்றும் கூறுகிறோம். கம்பர் ஒரு கவிஞன் என்பதற்காக வேண்டுமானால், அவரைப் போற்றுவோம்; ஆனால், ஒரு கவிஞன்—தமிழன் தன்

நாட்டுவரலாறுகள்—மக்கள் அறிந்து பயன்படக்கூடிய வகையில் எத்தனையோ இருக்க, அவற்றையெல்லாம் தன்னுடைய கவிதா திறத்தால் உருவாக்காமல், ஏன் ஒரு வடநாட்டு மன்னனின் கதையை இரவல் வாங்கித் தன்னுடைய கவிதா திறத்தைக் காட்டவேண்டும் என்பதற்காக அவரைக் கண்டிடபோம்; அதிலும் ஒரு அரசனை ஆண்டவனுக்கிக் காட்டுமளவுக்கு அவருடைய கவிதா திறம் பயன்படுத்தப்பட்டதே என்பதற்காக அவரை வெறுப்போம்; தன் இனத்தைச் சேர்ந்த ஒரு மன்னன் (இராவணன்) ஒரு தீமையும் செய்யவில்லை என்பதை அறிந்திருந்தும், அவனை இரக்கமிலா அரக்கனுக்கியதற்காக அவரைக் கடிவோம் என்ற இன்னபிற காரணங்களைக் காட்டியே நாம் கம்பராமாயணத்தைக் குறை கூறுகிறோம் என்பதைக், கம்பராமாயணமென்றால் உடனே கன்னத்தில் போட்டுக்கொள்ளும் கருத்தில்தெளிவற்றவர்கள் உணரவேண்டும்.

கம்பர்மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் மீனாட்சிசுந்தரம் அவர்கள், இராவணன் தீமை ஏதும் செய்யவில்லை என்பதை வலியுறுத்திப் பேசியபொழுது, அவனால் செய்யப்பட்ட ஒரு குற்றத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். என்ன அந்தக் குற்றம்?

> "சாம்ராச்சியவெறியினால் மற்ற மக்கள் எல்லோரையும் அடிமைப்படுத்தி அசுர அரசு நிறுவவேண்டும் என்ற ஓரே குற்றத்தைத் தான் அவன் செய்தான்"

இது, இராவணனால் செய்யப்பட்டது ஓரே ஒரு குற்றம்தான் என்பதற்கு மாநாட்டுத் தலைவர் தரும் விளக்கமாகும். இந்த ஒரு குற்றத்தைத் தவிர வேறு எந்தவிதமான குற்றத்தையும் இராவணன் செய்யவில்லை. இந்தக் குற்றத்தைச் செய்ததற்காகவா இராவணனை அரக்கனாக்கி, இராமனைக் கடவுளாக்க வேண்டுமென்று நாம் கேட்கிறோம். சாம்ராச்சியவெறிதான் இன்றும் இருக்கிறதே! பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன், ஒரு அரசன் இன்னொரு அரசனைத் தோற்கடித்துத்தானே ஆட்சி புரிய வேண்டுமென்ற ஆசை இருந்ததில் வியப்பென்ன இருக்க முடியும்? அன்று, இலங்கை மன்னன் அயோத்தியை ஆட்சிபுரிய விரும்பியது குற்றமென்றால், சாம்ராச்சிய வெறி என்றால், இன்று, டில்லி சென்னையையும் பிறமாகாணங்களையும் அடக்கி ஆள விரும்புகிறதே! இது எந்த 'வெறி'யின்பாற்பட்டதென்று நாம் கேட்பதில் தவறென்ன என்றுகேட்கிறோம்.

இதற்கு முன்பெல்லாம், இராமனுக்குக் கடவுள் தன்மை கற்பிப்பதற்காக, கம்பராமாயணத்துக்கு உயர்வு தேட முனைந்தவர்கள் எல்லோரும் என்னென்னவோ குற்றங்களைச் சுமத்தி இராவணனை இழிவுபடுத்திக்காட்டினார்கள். ஆனால், இப்போது இராவணனால் செய்யப்பட்ட குற்றம் 'சாம்ராச்சியவெறி' ஒன்றுதான் என்ற அளவுக்கு வந்துவிட்டார்கள். இதுவரையில் கம்ப நண்பர்கள் மீது நமக்கிருந்த வெறுப்பு ஓரளவு குறைந்துவிட்டதென்றுகூடச்சொல்லலாம். அந்த அளவுக்கு அவர்கள் இறங்கி வந்துள்ளார்கள்.

> "குற்றங்குறைகள், இடைச்செருகல்கள் முதலியவையற்ற பிரமாணிகமான கம்பராமாயணப் பதிப்பு ஒன்று வெளியிட வேண்டும்."

என்று கம்பர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். எனவே, இப்போதுள்ள கம்பராமாயணத்தைக் கம்ப நண்பர்களே ஒப்புக்கொள்ளவில்லை என்பது இத்தீர்மானத்தால் நன்கு தெளிவாக்கப்பட்டு விட்டது. ஆனால், கம்ப நண்பர்களுக்கும் நமக்குமுள்ள கருத்து வேறுபாடு, கம்பராமாயணம் என ஒன்று இப்போதிருப்பதுபோல் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் முறையில் இருக்க வேண்டுமா? தேவையா என்பதில்தான் இருக்கிறது. முன்பெல்லாம் கம்பராமாயணத்தைக் குறை கூறுவதா, அடுக்குமா இந்த அக்கிரமம் என்று நம்மை நையாண்டி செய்தவர்களே, இன்று, கம்பராமாயணம் மக்களின் நம்பிக்கைக் குரியதாக இல்லை என்கிறார்கள் என்றால், இன்னும் சில காலத்துக்கு நம்முடைய பிரசாரத்தைத் தளரவிடாமல் செய்து வருவோமானால், இனிப் புதிதாகப் பதிப்பிக்கும் கம்பராமாயணத்திலும் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவற்றிற்கும் சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பதை விடக், கம்பராமாயணம் என்பதாக ஒன்று நாட்டில் இருக்கவேண்டிய அவசியமும் தேவையும் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள். கம்பராமாயணம் இல்லாமற் போவதால், கம்பருடைய கவிதா திறம் கெட்டுவிடாது என்று எண்ணவும் செய்வார்கள். கம்பராமாயணம், வேண்டுமானால், அதன் கவிநயத்தை நுகர்ந்து இன்புறும் முறையில், 'கம்பராமாயணக் கவிநயம்' என்ற பெயரோடு அதிலுள்ள ஆபாசங்களும், அறிவுக் கொவ்வாத பகுதிகளும் நீக்கப்பட்டு இருந்தால் அதுவே போதும் என்ற அளவுக்கும் வந்துவிடுவார்கள். அதுவரை நம்முடைய பணியைத் தொடர்ந்து நடத்தத்தான் வேண்டும். நம்முடைய பிரசாரங்கள் எல்லாம் முதலில் வெறுக்கப்பட்டும் நையாண்டி செய்யப்பட்டுமே வந்து கடைசியில் தான் வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நாடு நன்கறியுமாதலால், கம்பராமாயணத்தைப் பொறுத்த வரையிலும் நாம் வெற்றியே காண்போம் என்ற உறுதியும் நம்பிக்கையும் நமக்கிருக்கிறது.

❋

சிங்கமும் வெள்ளாடும்!

மாகாண சர்க்கார், யூனியன் சர்க்கார் கட்டளைகளை நிறைவேற்றத்தவறினால், அதன் நிர்வாகத்தை யூனியன் பிரசிடெண்ட் ஏற்று நடத்தலாம் என்ற புது ஷரத்துபற்றி டெல்லி. அ. நி. சபையில் நவம்பர் 15ந்-தேதி விவாதம் நடைபெற்றபொழுது பார்க்கவா (கிழ்பஞ்சாப் காங்கிரஸ் பிரமுகர்) கூறினார்.

"இந்த ஷரத்து நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் பிரதமர் ஒரு மொகலாய சக்கரவர்த்தியாக மட்டுமல்ல, ஒரு சிங்கம் என ஆவார். அந்தச் சிங்கத்தின்முன் நடுநடுங்கக்கூடிய, வெள்ளாடுசெம்மறியாடுகளைப்போலவே மாகாண சர்க்கார்கள் இருக்கும்!"

வந்துவிட்டார்! வரப்போகிறது!!

11-ம் பக்கத்தொடர்ச்சி

என்று வேஷம்போடும் முதலாளிகளின் மோகன வலையில் வீழ்ந்துவிட்ட காரணத்தால், அவர்களால் பதுக்கி வைக்கப் பட்டிருக்கும், கொள்ளை லாபப் பணத்தை வெளிக்கொணர, சிரத்தை கொள்ளவில்லை! முயன்று பார்க்கவில்லை!!

சண்முகம், கமலாவிடம் கெஞ்சியது போலக் கெஞ்சிப்பார்த்தனர், என்னசெய்வோம் தெரியுமா என்று கூச்சலிட்டுப் பார்த்தனர், மிரட்டியும் பார்த்தனர், வருமான வரியில் சலுகை தருகிறோம், முதலாளிமார்களே! பதுக்கி வைத்திருக்கும் பணத்தையெடுத்துவந்து தொழிற்சாலைகளை நிறுவுங்கள், புது ஸ்தாபனங்களை ஏற்படுத்துங்கள், மக்கள் பணநெருக்கடியைத் தீருங்கள், என்றெல்லாம் முகத்தைப் பிடித்து, கன்னத்தைத் தொட்டு, 'கண்ணல்ல' என்று கொஞ்சி, கெஞ்சிக் கேட்டும் பார்த்தனர்! கெஞ்சுதலுக்கும் மிஞ்சுதலுக்கும் அஞ்சிவிடுவாளா—தாசி. அதுபோலவே ஆயிற்று 'கனம்'களின் நிலை! அதன் காரணமாகவே 'செட்டியார் வீட்டை'த் திரும்பி பார்க்கவேண்டிய நிலையும், 'பணம் போடுங்கள்' என்று பல்லிளிக்க வேண்டிய கட்டமும் ஏற்பட்டிருக்கிறது, இந்தக் கட்டம்தான், பண்டித நேருவின் அமெரிக்க விஜயத்தின் காரணங்களில் ஒன்றாகும்.

* * *

பண்டிதநேரு அவர்கள், அமெரிக்காவிலிருந்து திரும்பிவிட்டார், அவரது விருப்பப்படியே இனி, இங்கு, அமெரிக்க மூலதனம் வரலாம் என்பதற்கான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் மூலதனத்தை ஆசையோடு, இந்தியசர்க்கார் வரவேற்பதன் காரணம் இந்தியாவில் புதுத் தொழிற்சாலைகள் ஏற்படவும், அதன் விளைவாக, பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதற்காகவுமே என்று கூறப்படுகிறது, ஒரு நாட்டின், பொருளாதார நிலை, அபிவிருத்தி, அந்நாட்டிலுள்ள பெருத்த தொழிற்சாலைகளைக் கொண்டே மதிப்பிடப்படும், என்ற கருத்தோட்டம் சாரமாக. இந்தக் கருத்தின் விளைவாக, இந்தியாவைப் பொறுத்தவரையில், எப்படிச் சாதாரண விவசாய மக்கள் முதல் ஆலைத் தொழிலாளி வரை, மத்தியதரவர்க்கம் உள்பட எல்லாப் பொது மக்களின் வாழ்வும் சிறந்துவிடப் போகிறதோ, தெரியவில்லை!

இன்றைய இந்தியாவின் நிலையோ, உழைக்கும் கூட்டம் அதிகமாகவும் அதை உறுஞ்சும் கூட்டம் கொஞ்சமாகவும் இருப்பதாகவே இருக்கிறது. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உழைக்கிறார்கள், அவர்கள் உழைப்பைப் பத்துப் பேராகயிருப்பவர்கள் அனுபவிக்கிறார்கள்! தொண்ணூறு பேர் உழைப்பிலே கிடைக்கும் மொத்த வருவாய் ரூ 100 என்றால் அதில் ரூ 10 மட்டுமே, அந்தத் தொண்ணூறு பேருடைய உழைப்புக்கும் கிடைக்கிறது; உழைக்காத 10 பேருக்கு, அவர்கள் உழைப்பிலே கிடைக்கும் 90 ரூபாய் போகிறது! இது இன்று இங்கு நீடிக்கும் நிலை, நூற்றுக்குப் பத்து போராக இருக்கும் முதலாளிவர்க்கமே நாட்டின் தொழிற்சாலைகளையும், அவைகளை நிர்வகிக்கும் ஆலையரசர்களாகவும் இருக்கின்றனர். இந்தத் தனி முதலாளித்துவ முறை நீடிக்கும் வரையிலும் "அவர்கள் சிலர்; நாம் பலர்" ஆக இருக்கும் வரையிலும், நாட்டில் வாழும் மக்கள் வாழ்வுஎப்படிச்சிறக்க முடியும், எந்த வகையில் வாழ்க்கைத்தரம் உயர முடியும்!

ஆகவே பெரிய தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என்பதற்காக, அமெரிக்க மூலதனத்துக்கு, பண்டிதநேரு அவர்கள் இந்திய சர்க்கார் சார்பில் அழைப்பு அனுப்பிவிட்டு வந்திருப்பது, எதிர்பார்க்கும் பலனைத் தரமுடியாது என்பதோடு, இந்திய மக்களின் எதிர்கால வாழ்வை, இன்றுள்ள நிலைமையைவிட இன்னும் மோசமான அளவில், சீர்குலைக்கச் செய்யுமே யொழிய செம்மைப்பட வழிபிறக்கப் போவதில்லை!

அந்நிய மூலதனம், இங்கு வரப்போவதால், பணஉதவி அனுப்பும் அந்த நாட்டுக்கு, உதவியைப் பெறும் இங்குள்ள முதலாளிகளும், சர்க்காரும் என்றும்நன்றியுடையவர்களாகவும், அவர்களுடன் பெற்ற நட்பை நிலைநாட்டிக்கொள்ள வேண்டிய அவசியத்திலுமே இருக்க நேரிடும். அதனால், உலகில் வளர்ந்து வரும் முதலாளித்துவ (அமெரிக்க) கூடாரம்-பொதுவுடைமை (ரஷ்ய) கூடாரம் ஆகியவைகளில், முதலாளித்துவ கூடாரம் பக்கமே, இந்தியா, ஒதுங்கி நிற்க நேரிடும். இன்று, இரண்டு கூடாரத்திலும் இருக்கும் நிலையையும், தினசரி வளர்ந்து வரும் தகராறுகளையும் காணும்பொழுது, இன்னொரு போர் ஏற்படாமல் நிற்காது என்றே தோன்றுகிறது. அந்நிலை யேற்பட்டால், புதுச் சுதந்திரம் பெற்று அல்லலுற்றுக் கிடக்கும் இந்நாட்டு வாழ்வு புயலில் சிக்கிய படகாகவே ஆக நேரிடும்!

* * *

தாசி, பணத்தைப் பெட்டியில் பதுக்கி வைத்திருக்கிறாள் என்பது தெரியாதவனல்ல, சண்முகம்; இருந்தாலும்பார்க்கிறேன் ஒருகை என்று துணிந்து, அவள் பணப்பெட்டியைத் தட்டிப் பார்க்கும் துணிவு ஏற்படவில்லை அவனுக்கு, அவள் நேசம், எங்கு கெட்டு விடுகிறதோ, 'வராதே, என் வீட்டுக்கு' என்று சொல்லிவிடுகிறாளோ என்ற பயம், பீதி காரணமாக! செட்டியார் வீட்டுக்குச் செல்கிறான், 'நோட்டு' எழுதிக்கொடுத்து, தன் சொத்தை, பணயம் வைத்துவிட்டு பணத்துடன் திரும்புகிறான்! அந்தப் பணமும், அவன் மனைவி மக்கள் நல்வாழ்வுக்குப் பயன் படுகிறதோ என்று பார்த்தால், அதுவும் தாசிகைக்கே போகிறது—இந்திய சர்க்கார், இங்குள்ளபணத்தைப் பதுக்கி வைத்திருக்கும் 'பண முதலை'களைக் கெஞ்சிவிட்டு, அமெரிக்க முதலாளித்துவத்துடன் கைகுலுக்கி, மூலதனம் பெற்று வந்தும், அது 'அவர்கள்' வாழ்வுக்கே பயன்படப் போவது போல!

வந்துவிட்டார் நேரு, அமெரிக்க மூலதனத்துக்கு அன்பழைப்பு தந்துவிட்டு! விரைவில், இங்கு, அவர் கோரிய மூலதனமும் வரப்போகிறது! ஆனால், விளைவு, மக்களுக்குப் பயன்தருமா, என்று நினைத்தால், சண்முகம்கதையே ஓடிவருகிறது!

—❋—

திராவிட நாடு
ஞாயிறு] 20—11—49 [காஞ்சி

ஆலுக்கு விழுது!

—0—

கோவை
திருச்சி
விருதுநகர்
மதுரை
தூத்துக்குடி
வேலூர்
குறிஞ்சிப்பாடி
திண்டுக்கல்
வடக்கனந்தல்
திருச்செங்கோடு
திருவனந்தபுரம்
ஓமலூர்
சேலம்
கோவில்பட்டி
மாயவரம்
லால்குடி
இராமனாதபுரம் (முகவை)
உடுமலைப்பேட்டை
பட்டுக்கோட்டை
கல்லிடைக்குறிச்சி
திருவறம்பூர்
பல்லடம்
சங்கரன்கோவில்
திருச்சேறை
விருத்தாசலம்
மன்னார்குடி
சிதம்பரம்
ஆற்காடு
காஞ்சிபுரம்
திருவாரூர்
திருவண்ணாமலை
கடலூர் (ஓ. டி.)
சுண்டக்காமுத்தூர்
திருத்துறைப்பூண்டி
கூடலூர் (மதுரை)
தேனி
நாகபட்டினம்
மைலாப்பூர் (சென்னை)
தியாகதுருக்கம்
செகுடந்தானி
நாகர்கோவில்
ஆரணி
குன்னூர்
திண்டிவனம்
வத்தலக்குண்டு
அய்யன்பாளையம்
புதுப்பட்டினம் (கூடலூர்)
ஐவநல்லூர் (நாகை)
தர்மபுரி
பொன்னிரை
மம்சாபுரம்
ஜலகண்டபுரம்
தஞ்சை
விருகம்பாக்கம்
புதுவயல்
தர்மபுரி
திருவொற்றியூர்
புதுக்கோட்டை
புதுப்பட்டணம்
காட்டுப்புத்தூர்
அறந்தாங்கி
குமாரமங்கலம் (சேலம்)
பொள்ளாச்சி
ஆனைமலை
திருவள்ளூர்
மதுரை
புரசைபாக்கம் (சென்னை)
போன்னிரை
திருப்பூர் (நான்கு இடங்கள்)
சென்னிமலை
போராவூரணி
முத்துப்பேட்டை
ஈரோடு
வடுகப்பட்டி
குடியேற்றம்
சோமரசம்பேட்டை
திருப்பத்தூர்
வேலூர் (வ. ஆ)
காங்கயம்
கடம்பத்தூர்
திருத்தங்கல்
பவானி
நெகமம்
வேட்டக்காரன்புதூர்
பெருந்துறை.

ஒரே ஒரு மாதம்—சரியாக முப்பது நாட்கள்! கடந்த 16-11-49 வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரர்களின், இலட்சியவிளக்கம், முழக்கப்பட்ட இடங்களின் பட்டியல் இது! அக்டோபர் 16ந் தேதியன்றுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நாட்டின் நாலு பக்கங்களிலும், பிரச்சாரம் துவக்கப்பட்டது! 50க்கு மேற்பட்ட கழகப் பிரச்சாரகர்கள் யாவரும், ஆங்காங்கு சென்று கழகக் கொள்கை, இலட்சியம் ஆகியவைகள் பற்றி மக்களுக்கு விளக்குவது—சிலமாதங்களாக நிலவி வந்த மூடுபனியைவிலக்கி—இயக்கப் பிரச்சாரத்தைத் துவக்குவதுஎன்று ஆரம்பிக்கப்பட்டது! அன்று முதல் இம்மாதம் 17ந் தேதி வரை, நமது கழகப்பிரசாரத்தோழர்கள்,சென்று, பணிபுரிந்து வந்திருக்கும் இடங்கள்தான் இத்தனையும்! இந்தப் பட்டியல் தவிர, இன்னும் பல இடங்களில், ஆங்காங்குள்ள உள்ளூர்த் தோழர்களாலேயே அறிவுப் பிரச்சாரம் நடைபெற்றிருக்கிறது! இதுவரை, நாட்டின் நாலு பக்கங்களிலும், நாடு நகர், பட்டிதொட்டிகளிலெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன! தலைமை நிலையத்திலிருந்து கிடைக்கும் தகவலிலிருந்து **300**க்கு மேற்பட்ட திராவிட முன்னேற்றக் கழகங்கள், பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது! தினசரி, இன்னும், எங்கெங்கு கழகங்கள் இல்லையோ, அங்கெல்லாம் புதுக்கழகங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன! திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஊர்களிலெல்லாம், ஒவ்வொரு இடத்திலும், துவக்கவிழாக்கள், அந்த ஊர் கழகத் தோழர்களைக் கொண்டே நடத்துவிக்கப்பட்டிருக்கின்றன!

ஆகவே, இந்த ஒருமாத காலத்தில், எந்தெந்தக் கொள்கைகள், இந்நாட்டுக்குப் பயன் விளைவிக்கும் என்று கருதி அவைகளை மக்களிடை பரப்புவதில், ஈடுபட்டு வந்தோமோ, அந்த அறிவுப்பணி, முன்பைவிடப் பன்மடங்கு அதிகஅளவில், பூரிக்கும்

வகையில், முன்னேறிய வகையில் நடைபெற்றிருக்கிறது! நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது!

ஆங்காங்கு நடைபெற்ற பொதுக் கூட்டங்களிலெல்லாம், ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து, நம் அறிவுப்பிரசாரத்தைக் கேட்டு மகிழ்ந்துள்ளனர்! சில குறிப்பிட்ட நகரங்களில் ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு 'மாநாடாக'வே, நடைபெற்ற சிறப்பிலும், கூடியிருந்த மக்கள் தொகையிலும் காட்சியளித்திருக்கிறது! திருச்சி மாநாடு அளவு என்று கூறத்தக்க வகையில், ஈரோடு, கோவை, குடியேற்றம், வேலூர்,பொள்ளாச்சி போன்றஇடங்களிலெல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருக்கின்றனர்! அவ்வளவு விமரிசையாகக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன!

காலையில் ஒரு ஊர், நண்பகலில் இன்னொரு இடம், மாலையில் வேறு இடம், நள்ளிரவில் பிறிதொரு நகரம் என்ற வேகத்தில் இத்தனை இடங்களிலும் நமது அறிவுப் பிரச்சாரம் நடைபெற்றிருக்கிறது, நமது இதய கீதம் முழங்கியிருக்கிறது, முன்பைவிடச் சிறப்பான முறையில், சீரிய வகையில், என்பதை இன்று கவனப்படுத்திப் பார்க்கையில் நம் உள்ளம் பூரிக்கிறது! நமதுதொண்டு வெகு வேகமாக நடைபெறுகிறது, மக்கள் மகத்தான ஆதரவும் அன்பும் காட்டுகிறார்கள், கழக முன்னணி வீரர்கள், செயற்கஞ்சாச் சிங்கங்கள், ஓய்வு ஒழிச்சலின்றிச் சேவைபுரிகின்றனர், என்பதை எண்ணும்பொழுது இதயமெல்லாம் குதூகலிக்கிறது, கூத்தாடுகிறது மகிழ்ச்சிப் பெருக்கால்!

* • *

திராவிட கழகத்தில் பிளவு, இனி எது உருப்படுவது, எங்கே அவர்களுக்கு ஆதரவு கிடைக்கப் போகிறது, ஒழிந்தார்கள் நாஸ்திகக் கும்பல், என்றெல்லாம் "நமக்குள்" ஏற்பட்ட, கருத்துவேற்றுமையைக் கண்ட பழைமையும், வைதிகமும் பாடி மகிழ்ந்தது! வளர்ந்துவந்த எதிர்க்கட்சியொன்று முறிந்து வீழ்ந்துவிட்டது என்று மகிழ்ச்சியடைந்தனர் காங்கிரஸ் தோழர்கள்!

ஒழிந்தது, திராவிடர் இயக்கம்! எங்கே, இனி உலவப்போகிறார்கள்! இடம் ஏதப்பா, அவர்களுக்கு! நம்மிடம்தான் வரவேண்டும்! என்ற சபலம் கொண்டும் இருந்திருக்கிறார்கள், சில அரசியல் நண்பர்கள். அந்தஆசை, சோஷியலிஸ்டுத் தோழர்களுக்கு மிகுதியும் இருந்திருக்கிறது என்பது, கடந்த வாரம், சி. என். ஏ. குடியேற்றத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த பொழுது, அந்த ஊர்ச் சமதர்மத் தோழர்கள் சார்பில் படித்தளிக்கப்பட்ட வரவேற்புரையில் குறிப்பிட்டிருந்த 'ஆசையுரை'களிலிருந்து நன்கு விளங்கியது.

அவ்வளவு தூரம், 'தப்புக்கணக்கு' போட்டிருந்திருக்கின்றனர், நமது அரசியல் நண்பர்களும்; எதிர்க்கட்சித் தோழர்களும்.

நமக்கெனக் கொள்கையுடையவர்கள் நாம். அவை, அரசியல், பொருளியல், அறிவியல், சமுதாயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மாற்றம் காண்பது — மக்களின் மடைமை போக்கி, அவர்களிடை இன்பம் முகிழ்க்கச் செய்வது. ஆகவே நாம் 'கொள்கைப்பஞ்சம்' உடையவர்களல்ல, 'இலட்சிய வறுமை'க்கு ஆளானவர்களல்ல, அந்தக் கட்சியில் கொஞ்சம், இந்தக் கட்சியில் ஏதாவது, என்று தேடிப்பார்க்கவும், தாவி நோக்கவுமான ஆசைகளுக்கு அடிமைப்பட!

நமது இயக்கம் ஜீவநதி! ஆகவேதான், தலைவர் போக்குக் கண்டு மனமுடைந்து ஒதுங்கிய நாம், நண்பர்களின் தப்புக் கணக்குக்கு இரையாகி விடவில்லை.

திராவிடர் இயக்கம், தலைவருக்கும், நமக்கும் ஏற்பட்ட 'தகராறு' காரணமாக அடியோடு அழிந்துவிடும், என்று, இந்நாட்டு வைதிகமும், பழைமையும், பாசிசமும், இன்னபிற அரசியல் கட்சிகளும், கணக்குப் போட்டன! பாடிமகிழ்ந்தன, பரிகாசம்பேசின! பாவம் அவர்கள் எப்படி அறிய முடியும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆலமரத்துக்கு விழுது; திராவிட இயக்கத்தின் பிரிவு என்பதை!

குடியாத்தம் தோழருக்கு, சொல்லிய மேற்படி பதிலையே, மீண்டும், கனவுகாணும் நண்பர்களுக்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம், திராவிட முன்னேற்றக்கழகம், நாட்டின் முன்னேற்றத்துக்கான வகையில் பாடுபட்டுப் பணியாற்றிவந்த திராவிடரியக்கம் என்ற ஆலமரத்தின் விழுதுதான்; வாழையின் கன்றல்ல!

இதேபோலக் கடமை என்றவாளையும் கண்ணியம் என்ற கேடயத்தையும் தாங்கி நேர்மைப்பாதையில், மக்கள் வாழ்வு என்ற இன்பபுரி நோக்கி நடப்போம்! வாரீர்!

வருந்துகிறோம்

நமது இயக்கத்தில் உறுதியான பற்றுக்கொண்டு உழைத்து வந்தவரும், தோழர் ப. கண்ணன் அவர்களின் தமையனருமான ஜலகண்டாபுரம் தோழர் அ. ப. அர்த்தனாரி அவர்கள் தமது 50-வது வயதில் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அவரது பிரிவால் வருந்தும் நமது அன்பிற்குரிய ப. கண்ணன் அவர்களுக்கும் மற்றும் அவரது உறவினர்களுக்கும் நமது ஆறுதல் உரித்தாகுக.

நன்றி அறிவிப்பு

சென்ற 16—10-49ம் நாள் பாம்பனில் எனக்கும் பாத்துமுத்து அம்மாளுக்கும், நடந்த வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு, அனுப்பிய வாழ்த்துகளுக்கும், பரிசுகளுக்கும், நேரில் வந்திருந்த தோழர்களுக்கும் தனித்தனியாக எனது நன்றியைத் தெரிவிக்க இயலாமல் போனதுபற்றி மன்னிப்பதுடன் இதன் மூலமாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். எம். முகம்மதுகாசிம்,
"திராவிடநாடு" ஏஜண்டு,
தனுஷ்கோடி.

வந்துவிட்டார்! வரப்போகிறது!!

"கமலா, என் கண்ணல்ல, கொஞ்சம் திரும்பேன்!"

"அட, இது என்னுங்க இழவு! ஒரு தடவை சொன்னு கேக்க மாட்டீங்க!"

"இல்லே, கமலா! வீட்டிலே, வந்து......"

"உங்களுக்கிருக்கும் ஓராயிரம் கஷ்டம். அதுக்கு நான் என்ன பண்றது?"

"என்ன கமலா! பட்டதும் படாமலும் பதில் சொல்றியே......"

"பின்னே! எங்கிட்டே ஏதுங்க பணம்!"

"எவ்வளவு தந்திருக்கேன், நான்! முந்தாநாள் கூட, முப்பது ரூபாய் அனுப்பலே"

"ஆமாம்! அது, அப்படியே இருக்குமாக்கும்!"

"தம்பிக்கு, நாளைக்கு சம்பளம் கட்டணும் கமலா! குழந்தைக்குக் கூட 'கிளாஸ்கோ' இல்லே, அவ வேறே அழறு சேலை இல்லேண்ணு, ஒரு நூறு ரூபாய் தாயேன்!"

"அதுக்கு நான் என்ன செய்யணுமாம்! நாக்கை பிடுங்கிக்கிட்டு சாக வேண்டியதுதான் நான்?"

"அப்ப, ஒண்ணுமில்லேண்ணு சொல்றியா?"

"..............."

"சரி! செட்டியார் வீட்டுக்குப் போயிட்டு, சாயங்காலம் வர்றேன்"

"வர்றப்ப, மறந்துடாமே வாங்கிட்டு வர்றீங்களா......"

"என்னுது?"

"நேத்து சொல்லலே, 'பவுடர்' ஆயிடுத்துண்ணு!"

* * *

தாசி கமலாவைச் சண்முகம் கெஞ்சிக்கேட்டான், நூறு ரூபாய் கொடு என்று! அவளோ, அரைக்காசு கூட இல்லையென்று கூறியதோடு 'பவுடருக்கும் 'ஆர்டர்' செய்தாள்........வீட்டிலோ புயல்! அரிசி இல்லையென்று மனைவியின் அழுகுரல், 'அப்பா' பிஸ்கட் என்று கேட்கும் குழந்தை ஒரு பக்கம், சம்பளம் கட்டணும் பணம் கொடு என்று தேம்பி நிற்கிறான் தம்பி, தாயாரோ இன்றோ, நாளையோ என்று படுக்கையில் கிடக்கிறாள். சங்கடப்படும் சண்முகம், தாசி கமலாவிடம் சென்றான், எவ்வளவு வேண்டியவள், என்னவெல்லாம் செய்துகொண்டு வருகிறோம், இப்போது ஒரு நூறு தந்து உதவ மாட்டாளா, என்ற ஆசையுடன்! போய்க் கேட்டான், கெஞ்சினான், மிரட்டினான், கண்ணல்ல என்றான், காலைப்பிடித்தான், அத்தனைக்கும் அவள் மசியவில்லை, கையை விரித்ததோடு, 'பவுடருக்கு' ஆர்டர் கொடுத்தாள்!

* * *

"என்ன, சண்முகம், என்ன சமாச்சாரம்!"

"சும்மாதாங்க வந்தேன்"

"ஏதாச்சும், விசேஷம் உண்டா!"

"இல்லீங்க! சுற்றிப்பார்த்துவிட்டு போகலாம்னு வந்தேங்க......"

"நிலம் புலமெல்லாம் எப்படியிருக்கு, குழந்தைகுட்டி சவுகரியம் தானே!"

"அதுக்கென்னங்க, குறைச்சல்!"

"பழைய மாடிவீட்டிலே தானே குடியிருக்கீங்க!"

"ஆமாங்க!"

"அம்மா சவுகரியமா, வயசு கூட ரொம்ப ஆயிருக்குமே"

"ஆயிட்டுதுங்க, ஒரு மாசமா காய்ச்சல் வேறே......"

"பாவம்! நல்லா வாழ்ந்தவங்க..."

"யார், பார்க்கிறா..."

"எல்லாரும், பார்த்துக்கிட்டுத் தான் இருக்காங்க..."

"ஏன், என்னமோ போல இழுக்கிறே"

"ஒண்ணுமில்லீங்க, ஒரு விஷயமா வந்தேங்க..."

"ஏன் கூச்சப்படறே, சும்மா சொல்லு!"

"ஒரு இருநூறு ரூபாய்..."

"ஆகா, அதுக்கென்ன, நீ என்ன நேத்து இன்னைக்குத்தெரிஞ்சவனு!"

* * *

போன காரியம் முடிந்தது! வட்டிக்கடைச் செட்டியார், வீடும் நிலபுலமும் இருக்கிறது என்றும், பணம் போய்விடாது என்ற நம்பிக்கையின் பேரிலும் கடன் தருகிறார்—'வேண்டும்போது கேளப்பா!' என்ற ஆதரவுச் சொல்லுடன்! பணத்தை வாங்கிக்கொண்டு கிளம்பிய சண்முகத்தின் நினைப்போ, முதலில், வீட்டுக்குப் போகவேண்டும், அம்மாவுக்கு வேண்டியது வாங்க வேண்டும், குழந்தைக்குக் கொஞ்சம் 'பிஸ்கட்' வாங்கவேண்டும், வீட்டுக்கு 'ஒரு வண்டி' நெல் வாங்கிப் போடவேண்டும் என்று எழும்புகிறது! எண்ணப்படியே எல்லாம் நடந்தால் தானே, அதுவும் அவன் தாசியின் வசப்பட்ட சபல உள்ளங் கொண்டவன்! சந்தோஷத்துடன் திரும்பிக்கொண்டிருக்கும் சண்முகத்தை, வழியிலேயே தாசி கமலா சந்திக்கிறாள்!

* * *

நேரு வந்துவிட்டார்!

அமெரிக்காவின் விருந்தையும், ஆங்கிலேயரின் ஆர்த்தியையும் பெற்றுக்கொண்டு வந்துவிட்டார்!

அகில உலகிலும் அவர் பெயருக்கு மதிப்பு உயர்ந்துவிட்டது!

மனிதருள் மாணிக்கம் அவர்!

மயங்கச் செய்துவிட்டார் தம் பேச்சின்மூலம் அமெரிக்கரை!

என்றெல்லாம், குதூகலத்துடன், தகவல்கள் தருகின்றன தினசரிப் பத்திரிகைகள். அவரது விஜயம், அமெரிக்காவில் நடந்த வைபவம், திரும்புகையில் அவர் கண்களில் தேம்பிய கண்ணீர், திகைத்து நின்ற சகோதரி விஜயலட்சுமியின் ஏக்கம், இந்திராவின் குதூகலம், இன்னபிற நிகழ்ச்சிகள், தினசரி, எடுத்துச் சொல்லப்படுகின்றன, ரேடியோ மூலமும், பத்திரிகைகள் மூலமும். அமெரிக்கா சென்று, ஆர்ப்பாட்டத்துடன் விருதுகள் பெற்றுத் திரும்பியிருக்கும் பண்டிதநேருவின் புகழ் பாடப்படும்பொழுது, நமக்கும்கூட மகிழ்ச்சிதான். ஏழ்மைநாடு, சுரண்டு தற்கே இலாயக்குள்ளது, தங்களின் லாபவேட்டைக்காடு என்று கருதிக் கிடந்த ஆதிக்கவெறியர்கள், அவருக்குச் செய்திருக்கும் ராஜோபசாரங்களைக் காணும் பொழுது. ஆனால், நேரு ஏன் சென்றார், வரும்போது என்ன கொண்டுவருகிறார் என்பதை நாட்டு நலனையும், மக்கள் வாழ்வையும் மனதில் வைத்து எண்ணிப்பார்க்கையில், இல்லத்தில் ஏற்பட்ட சங்கடம் போக்கத்தனக்கு வேண்டிய தாசியிடம்போய்ப் பணங் கேட்டுக் கெஞ்சியும், அவள் முகத்திலடிக்க, ஆத்திரப்படாது வட்டிக்கடைச் செட்டியாரிடம் போய்ப் பணம் வாங்கிக்கொண்டு திரும்பும் தாசிலோலன் சண்முகம் கதையே நினைவுக்கு வருகிறது.

* * *

இந்தியா தன்மதிப்பும் பெருமையும் உடையநாடு, யாரையும் பிச்சை கேட்காது!

ஆதரவு பெற வரவில்லை, அன்பைப் பெற வந்தேன்!

கையேந்தும் எண்ணமில்லை, கண்ணார உங்கள் நாட்டைக் காண வந்தேன்!

என்று அமெரிக்க விஜயத்தின் ஆரம்பத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவந்த நேரு, தான் அமெரிக்கா வந்ததன் நோக்கம் 'சும்மா' சுற்றிப்பார்த்துவிட்டுப் போகத்தான் என்று பேச்சுகளின்போது வெளியிட்ட இந்தியப்பிரதமர்,

இந்தியா இப்பொழுதுதான் சுதந்திரம் அடைந்தநாடு!

எனவே பலகாரியங்களைச் சாதிக்க வேண்டும்!

அதற்கெல்லாம் பணஉதவி வேண்டும்!

பெருந் தொழிற்காலைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும்!

அமெரிக்கர் முன்வரலாம், வரவேற்கிறோம்!

அந்நிய மூலதனத்துக்குத் தடை விதிக்க மாட்டோம்!

என்று பல விடங்களில், அமெரிக்க மூலதனம் வரலாம், ஆனால் சூதுமதி கூடாது, துயர்தீர்க்கும் பரோபகார சிந்தைவேண்டும், அப்படிவரும் மூலதனத்தை அரசாங்கம் வரவேற்கும், வசதிகள் செய்துதரும் என்பதாக அழைப்பு அனுப்பிவிட்டு வந்திருக்கிறார்.

அமெரிக்க முதலாளித்துவம், இந்தியாவில் தொழில் ஆலைகளில் பணம் போடவும், புது ஆலைகளை நிர்மாணிக்கவும், முன்வரலாம், முனைந்து பொருள் உதவலாம், அரசாங்கம் எந்தத் தடையும் விதிக்காது என்று தெளிவுபடுத்திவிட்டுத் திரும்பியுள்ளார். நேரு அவர்களின் இந்த அழைப்புக்காரணமாக, அமெரிக்க முதலாளித்துவத்தின் உள்ளத்தில், 'இந்தியாவில் பணம் போடலாமா, இடையூறு எதுவும் ஏற்படாதா, திடீரெனச் சர்க்கார் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் என்ன செய்வது' என்றெல்லாம் இருந்த பயத்தையும், கவலையையும் போக்கிவிட்டு, பணம் போடலாம், பயப்படாதீர்கள் என்று 'அபயம்' தந்துவிட்டு வந்திருக்கிறார், சும்மா தான் வந்தேன் என்று ஆரம்பத்தில் பதில் சொல்லி, அம்மா படுக்கையில் கிடக்கிறார்கள் என்று ஆரம்பித்து, 'ஒரு இருநூறு' தேவை யென்று பல்லிளித்த சண்முகத்தைப் போல!

* * *

நேரு விஜயத்தின் விளைவாக, இனி அமெரிக்காவின் மூலதனம் இந்தியாவுக்கு நிச்சயம் வரத்தான் போகிறது. பண்டிதநேரு எந்த எண்ணத்தை உள்ளடக்கிக் கொண்டு சென்றாரோ, அந்த ஆசையில், அவருக்கு வெற்றி ஏற்பட்டு விட்டது. நாடு, சுயராஜ்யம் அடைந்த நாள் முதல், இந்தியாவில் எடுத்ததற்கெல்லாம், நெருக்கடியும், தொட்டதெற்கெல்லாம் 'இல்லை' பாட்டும் 'என் செய்வோம், பணமில்லை' என்ற பரிதாபக்குரலுமே எழும்பி வருகிறது.

நாட்டின் வளம் பெருகவேண்டும், நல்ல தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும், விவசாயம் வளர வேண்டும், வேதனை நீக்கப்படவேண்டும், நாடு செழிக்கவேண்டும், நல்வாழ்வு முகிழ்க்கவேண்டும், ஆனால் இவையெல்லாம் ஏற்படப் பணம் வேண்டும் என்ற பல்லவியே சுயராஜ்யம் அடைந்த நாள்முதல், இங்கு எழும்பி வருகிறது.

வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் பணமில்லாமலா ஆண்டான், அவன் போனதும் இங்கிருந்த பணமெல்லாம் எங்குபோய்விட்டது, மாயமாய் மறைந்துவிட்டதா, 'சுதந்திர பூமி'யில் இருப்பது, கூடாது என்று பறந்துவிட்டதா, என்று கவனித்தால் அவ்வளவு பணமும், நாட்டில் தான்இருக்கிறதேயொழியச்,செலாவணியில் அல்ல. பணம் நாட்டில் உள்ளது என்றால், மக்களிடம் என்பதல்ல, போர்க்காலத்தில் பொருள்களின் விலைகளை ஒன்றுக்குப் பத்து மடங்காக்கி விற்றுப் பணம் சம்பாதித்த, கள்ளமார்க்கெட்காரர்கள், பணத்தொந்திகள் கையில், பணம் போய் முடங்கிவிட்டது. அப்படி, கள்ளமார்க்கெட்காரக்கள் கையில் முடங்கிக் கிடப்பது கிட்டத்தட்ட, 400 கோடி ரூபாயாம். இந்த 400 கோடியையும் வெளியில் காட்டினால், ஏது உனக்கு இந்த லாபம், எடு அதற்கான வருமான வரியை, என்று எங்கே அரசாங்கம் கேட்டுவிடப் போகிறதோ, 'பணத்தொந்தி' கரைக்கப்பட்டுவிடுமோ என்ற கவலையின் காரணமாக, இந்தியப் பணமுதலைகள்—முதலாளித்துவம்—அந்த 400 கோடியையும், வெளியில் எடுக்காமலும், மறைவான முறையில் சுயநலலாப காரியங்களுக்குப்பயன்படுத்திக்கொண்டும் சர்க்காரை, ஏமாற்றி வருகிறது.

ஆட்சிப்பீடம் ஏறிய ஆளவந்தார்களும், தாசிலோலன் சண்முகத்தைப்போல், நிமிஷத்துக்கொரு நடிப்பு, நேரத்துக்கொரு பேச்சு,

(7-ம் பக்கம் பார்க்க)

பாலைவனக் 'குயில்'கள்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

மணத்தை நடத்துவிப்பார்கள், மகனுக்குப் பதில் மரப்பலகையை வைத்து!

அருமையாக வளர்த்து, எடுத்து வாழ்வுப் பாதையில் எடுத்தடி வைக்கமுயன்ற மகனைச் சாவு கொள்ளை கொண்டுவிட்டதே என்ற சஞ்சலம் உள்ளத்தை விட்டு நீங்கியிருக்காது, துயரம் போயிருக்காது; இருந்தாலும், கருமாதி நடத்துவிக்கவேண்டிய நேரத்தில் கல்யாணம் செய்விப்பார்கள், கவலையோடு, கவனத்தோடு, சற்றும் பழைய சம்பிரதாயச் சடங்குகள் நழுவாமல், தவறாமல்!

இங்கு, நம் மூதாதையர் இறந்து போய் எத்தனை ஆண்டுகளிருந்தாலும், அவர்கள் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்பதற்காக, நம்மனோர் திதி, திவசம் தரவேண்டும், அப்போதுதான் எப்பொழுதோ இறந்துபோய்விட்ட அவர்களுடைய 'ஆவி'க்கு சாப்பாடும், சங்கடமில்லாத வசதிகளும் கிடைக்கும் என்று கூறி அவைகளை அனுப்பிவைப்பதில் நம்மவருக்கு ஞாபகமூட்டி, அவைகளை நடத்துவிப்பதில், இங்குள்ள புரோகிதர்களுக்கு, சிரத்தையிருக்கிறதல்லவா, இதுபோலச் சீனாவிலுள்ள மதகுருமார்களுக்கும், இறந்துபோன இளைஞர்களின் ஆவியைத் திருப்திபடுத்த வேண்டுமென்பதில் அதிசிரத்தை உண்டு!

இறந்துபோன அவனுடைய ஆவி, கல்யாணம் செய்துகொள்ள இருந்தேன், அது முடிவதற்குள் வந்துவிட்டேனே, என்றலறித் தன் ஆசை நிறைவேறாமல் போயிற்றே என்று ஆழ்ந்த வருத்தத்தில் கிடக்காமல் செய்யவேண்டும், அவனுக்கென நிர்ணயிக்கப்பட்ட பெண்ணை ஆவிரூபத்தில் நிற்கும் அவனுக்கு அர்ப்பணித்துவிட வேண்டும், அதற்கான சடங்கு செய்யப்பட்டு, கல்யாண விழா நடத்தப்படவேண்டும் என்பதில் மதகுருமார்களுக்குக் கவலையுண்டு! அதன் காரணமாகவே, இறந்தவனுடைய மாதாபிதாக்கள் 'ஆவி' ரூபத்தில்நிற்கும்தங்கள்மகன், 'ஆசைநாயகி' இல்லாமல் அல்லல் படுவானே என்பதற்காக, அவனை, அவனுக்குத் திருமணம் செய்விக்கும் 'திரு'க்காரியத்தைச் செய்து முடிப்பார்கள்!

மகன் மறைந்த துக்கம் மறைந்திருக்காது; என்றாலும், இழவு வீட்டில 'இன்ப நிகழ்ச்சி'யை நடத்துவிப்பார்கள்! அதுதான், மரப்பலகை—மலர்கொடித் திருமணம்!!

மகன் உயிரோடு இருந்திருந்தால், என்னென்ன விமரிசைகள் செய்யப்பட்டிருக்குமோ, எப்படியெப்படி, ஆடையாபரணங்கள் அணிவிக்கப்படுமோ, அத்தனையையும் செய்வார்கள். பல்லக்கில் மணமகளை ஏற்றி, பல தெருக்களிலும் ஊர்வலம் வந்து, வாணவேடிக்கைகள் எல்லாம் செய்து, பெண்ணைக் கொண்டு வருவார்கள்! மணவறையிலிறக்குவார்கள் — மாப்பிள்ளைக்குப் பதில் மரப்பலகை இருக்கும், அதைத் தாங்கிக்கொண்டு ஒரு பெண்மணி நிற்க, சம்பிரதாயச் சடங்குகள் யாவும் நடக்க, சாங்கோபாங்கமாக "சுப முகூர்த்தம்" நடைபெறும்! வாழ்த்த வேண்டியவர்கள் வாழ்த்தவும், பரிசு வழங்குவோர் வழங்கவும், விருந்து நடக்கவும், வேடிக்கைகள் நடைபெறவுமான— இத்யாதி காரியங்களுடன்!

மகனுடைய ஆவியைத் திருப்தி செய்விக்க, நடத்துவிக்கப்பட்ட சுப முகூர்த்தம் முடிந்ததும், மூன்றாவது நாள், அவள் 'விதவை' கணவனையிழந்தவள், என்று அறிமுகப்படுத்திவைக்கப்படும் கருமாதியையும் செய்விப்பர், அதற்கான சம்பிரதாயங்களுடன்!

அதுமுதல், வாழ்வின் இன்பம் எதுவென்பதையே உணராத அவள் வாழ்வு, கருகவேண்டியதுதான்! அவள், மணமில்லா மலராக்கப்படுவாள்! தேன் அருந்தாத தேனீயாக்கப்படுவாள்! விதவையென்ற பட்டந்தாங்கி, சாவுவரும் வரை அவள் வெந்து, மனம் புழுங்கிக் கிடக்கவேண்டியதுதான்!

• • •

மூடநம்பிக்கை, பழைமை, வைதீகம் என்ற முதலையின் வாய்க்குள் வாடாத மல்லிகை, சூடாத ரோஜா கசக்கி எறியப்பட்டு விடும்! ஒரு இளமை உள்ளம், சம்பிரதாயமென்னும் கற்பாறையில் மோதப்பட்டுச் சுக்கு நூறாக்கப்படும்! வாழப்பிறந்த அவளுடைய வாழ்க்கை, சோலையாக இருக்கவேண்டிய வாழ்க்கை, பாலையாக ஆக்கப்படும்!

அந்தப் பாலையில், இளமையின் ஆசை என்ற புயற்காற்று எழுந்து எழுந்து அடிக்கும்! இன்பம் பெற வேண்டும் என்ற ஓயாத சூறாவளி சுழன்று சுழன்று வீசும்! மனம், மணற்காற்றிலகப்பட்ட 'மலர்' போலச் சுருண்டு, சுருண்டுத் தத்தளிக்கும்! வேதனைப்படும்!! கடைசி வரை, இந்தப் போராட்டங்களிலேயே, தன் வாழ்வை நாசமாக்கிக் கொள்ள வேண்டியதுதான், அவள்!

இளங் 'குயில்'கள், இன்பமாகப் பாடித் திரிய வேண்டிய பருவத்தில், பழைமை, வைதீகம் ஆகியவைகளால், சம்பிரதாயம் என்ற தடி கொண்டு, விதவை வாழ்வு என்ற பாலைவனத்துக்கு விரட்டியடிக்கப் படுகின்றன!

பெண்ணாகப் பிறந்து, பழைமைப் பலிபீடத்தில் சாய்க்கப்பட்டு, விதவைக்கோலம் தரப்பட்டு, தன் இதய ஆசைகளை அடக்கி அடக்கி, அழிந்து, கருகும், இளம் விதவைகள்—பாலைக் குயில்கள்—வாழ்வில் பரிமளம் ஏற்பட வேண்டும்! சூடாத ரோஜாக்கள் சூடப்பட வேண்டும், வாழ்க்கைச் சோலையில் மகிழ்ந்து திரியவேண்டிய இளங் குயில்களை, விதவை வாழ்வு என்கிற பாலைவனத்தில் ஆசைப்புயலுக்கும், அடங்காத சூறாவளிக்கு மிடையே தத்தளிக்கும் குயில்களாக விரட்டிவிடும் சம்பிரதாயக் கொடுமை ஒழிக்கப்படவேண்டும்—சீனாவில் மட்டும் என்றல்ல, எங்கெங்கு பெண்கள் குலம் பாலைவனக் குயில்களாக யிருக்கின்றனவோ, அங்கெல்லாம்! அந்நாளே இன்ப நாள்! பழைமைப் பலிப்பீடம் தூள் தூளாக்கப்படும் நாள்!

✲

ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிட நாடு" அதிகம் காப்பிகள் தேவைப்படுவோர், பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

எதிர்காலம்—இடர்மிகுந்தபாதை

மாகாண சர்க்கார்களைத் தன் சுட்டுவிரல் கொண்டு ஆட்டிவைக்கும் திட்டத்துடன் மத்திய அரசாங்கம், வெள்ளையன் வெளியேறிய நாள் முதல் முனைந்துகிடக்கிறது.

'பலமான மத்திய சர்க்காரே, நாட்டுக்குப்பலன் தருவது' என்று வட இந்தியத் தலைவர்கள் முழக்கவும், 'ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும்' என மாகாணத்தலைவர்கள் ஒத்து ஊதவுமான காட்சிகள் நாட்டில் நானாவிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தியா ஓரேதேசம், இங்கு வாழும்யாவரும் 'இந்தியர்' என்ற ஆசைவார்த்தைகளில், மயங்கி நிற்கிறது தென்னாடு, வட இந்தியத்தலைவர்களின் ஆதிக்கம் வளர்கிறது, டேல்லி சிருங்காரபூமியாகச் சிருஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற செய்திகள் பற்றிச்சிந்தித்தும் பார்க்காமல்!

இங்கிலையில் இந்தியாவுக்கென்ஒரு அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு விட்டது. தயாரித்தவர்கள், வக்கீல்கள், மக்களின் பிரதிநிதிகளல்ல! மத்திய சர்க்காரின் கருணையையும், கடாட்சத்தையும் பெற்று மகிழ வேண்டும் என்ற ஆசைகொண்டவர்கள். அத்தகையவர்கள், முன்னேடும் பிள்ளைகளாகயிருந்து வகுத்துத் தந்திருக்கும் அரசியலமைப்பு, மத்திய ஆட்சிக்கு எங்கெந்த வகையில் பலமும் பணமும் சேரமுடியுமோ அந்தவகையிலேயே இருக்கிறது. புது அரசியலமைப்பில், இதுவரை மாகாணங்களுக்கென இருந்து வருகிற அதிகாரங்கள் பல, பறிக்கப்பட்டிருக்கின்றன. மாகாண சர்க்காரே வசூலித்து வருமானம் அடைந்து வந்த வரிகள், மத்தியசர்க்காருக்குப் போகின்றன.

எந்த ஒரு மாகாணமும், எதிர்காலத்தில், தான் வாழவேண்டும் என்ற ஆசைகொண்டு, பிரிந்து செல்ல முடியாத வகையில், புது இந்திய அரசியலமைப்பு வகுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியதாக, அவர்கள் சுட்டுவிரல் ஆட்டினால் சோர்ந்து நடுங்கக்கூடியதாக மாகாணங்கள் அடங்கிநிற்கும் படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

எந்தவிதமான பிரிவினையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது, பலமான டெல்லி அரசாங்கத்தின் பார்வையிலேயே இமயம் முதல் குமரி வரை எல்லாம் அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற தங்கள் ஆசையை வடநாட்டுத்தலைவர்கள் நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றனர்.

* * *

தென்னாடு தனியாகப் பிரியவேண்டும், திராவிட நாடு தன்னாட்சிப் பெறவேண்டும், என்ற நம்முடைய இருதய கீதத்துக்கு "வெடி" புது அரசியலமைப்பில் தேக்கிவைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, எதிர்காலத்தில், ஏதாவது, ஒரு இனம், அடிமைப்பட்டு அழிந்தது போதும், இனி அடங்கிக் கிடக்க முடியாது என்று கொதித்தெழுந்து கிளர்ச்சி செய்ய முனைந்தால், அதை அப்படியே நசுக்கிவிடும் வகையில் படைபலத்தையும் மத்திய சர்க்கார் தினசரி அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆண்டுக்கு 157 கோடி ரூபாய், அதாவது வரும் வருமானத்தில் பாதித் தொகையை ராணுவப் படை அபிவிருத்திக்கெனச் செலவிட்டு வருகிறது — எதிரிகள் ஆபத்து என்ற பெயரால் தனது படை பலத்தை மத்திய சர்க்கார் பலமாக்கிக் கொண்டு வருகிறது. ராணுவம், மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டிலிருப்பதென்பதும் மாகாணங்களுக்கும் அதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லையென்பதும் குறிப்பிடக்கூடியதாகும். எனவே, புது அரசியலமைப்புப்படி, இந்தியாவில் ஆட்சி துவங்கி விட்டதும், வடநாட்டுக்குத் தென்னாடு, மீளா அடிமையாக இருக்கவேண்டியதுதான். முரண்டவோ, பயமுறுத்தவோ, பிரிந்து போய்விடுவேன் என்று சொல்லவோ, மாகாணத்தால் முடியாது.

புது அரசிய லமைப்புப்படி அப்படிச் செய்தால் சட்டவிரோதம். அதையும் மீறி கிளர்த்தெழுந்தால், படை பாயும்! உரிமை வேட்கை, உடைத்தெறியப்படும், படை பலத்தால்!

* * *

திராவிட நாடு தனியாக வேண்டும், நமக்கென ஒரு நாடு, நம்மைப் பரிபாலிக்க ஒரு சர்க்கார், நம் வாழ்வு சிறக்க ஒரு வழி வேண்டும் என்று நாம் கூறி வருகிறோம். பிரிவினை பெறவேண்டும் என்ற முரசொலி நம்மிடை எழும்ப ஆரம்பித்ததின் மூலகாரணம்,

வடக்கு உயர்ந்து விட்டது
தெற்குத் தாழ்ந்துவிட்டது.

வடக்கு உயர, தெற்குச் சுரண்டப்படுகிறது.

என்பவைதான். வடநாடு அரசியலில் பெருந்தலைவர்களையும் அதன் மூலம் ஆதிக்கத்தையும், பொருளாதாரத் துறையில் ஆலைகள், இயந்திரசாலைகள் மிகுந்தும், அதன் மூலம் சுகம் ததும்பிக் கிடக்கும் இடமாகி, மணமலர்ச் சோலையாக இருக்கிறது. வடநாட்டில் உற்பத்தியாகும் துணிமணிகள், இரும்பு, இயந்திரச் சாமான்கள் எல்லாம் விற்கப்பட வேண்டிய மார்க்கெட்டாகத் தென்னாடு இருந்துவருகிறது. தென்னாட்டில் போதிய ஆலைகள் இல்லை, இயற்கை வளம் இருந்தும் அது பயன் படுத்தப்படக்கூடிய வழிகள் இல்லை. பருத்தி விளைகிறது, ஆனால் அதற்கான நெசவாலை இல்லை. இரும்பு கிடைக்கிறது, 'டாடா' இங்கில்லை, அங்குதான்! தேயிலை கிடைக்கிறது ஆனால் அதன் வளர்ச்சிக்கான வழி இங்கில்லை, மத்திய சர்க்காரிடம்தான்! இதுபோல, எல்லாத் துறைகளிலும் தென்னாடு பிற்போக்கில் இருக்கிறது.

வடநாடு, வளரும் ஆலை நாடாக ஆகிக்கொண்டிருக்கிறது. தென்னாடு அதன் உற்பத்திப் பொருள்கள் விற்கப்படுவதற்கான 'சந்தைக் கடை' (Market) யாக ஆகிக்கொண்டிருக்கிறது. வெள்ளையர் ஆதிபத்தியம் இங்கிருந்தபோது, காங்கிரசார், கூறிய வார்த்தைகளில் கூறவேண்டுமேயானால்,

> வடநாடு "இங்கிலாந்து" ஆகிக்கொண்டிருக்கிறது. தென்னாடு "இந்தியா" ஆகிக்கொண்டிருக்கிறது.

சாதாரண வெற்றுச் சொல் அல்ல இது! எல்லாத்துறையிலும், கட்சி மாச்சரியத்தையும் கருத்துவேற்றுமையையும் ஒருபுறமொதுக்கிச் சிந்தித்தால் தெரியும், தென்னாடு, எவ்வளவு பிற்போக்குப் பாதைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது என்பது.

ஏழைகள் வாழ்வுக்காகவே பாடுபடுகிறோம் என்று பறைசாற்றி மக்களிடையே மதிப்புபெற்ற காங்கிரஸ் கட்சியோ இன்று பிரபுக்களின் சோலையாக, பணமுதலைகளின் நீச்சுக் குட்டையாக ஆகிவிட்டது. பெரும்பண முதலைகள், ஆலையரசர்கள், தொழிற்சாலை அதிபர்கள் ஆகியோர், தென்னாட்டைவிட வடநாட்டில்தான் இருக்கின்றனர்.

ஆலையரசர்கள் தென்னாட்டைவிட, வடநாட்டில்தான் அதிகம். ஆலைகளின் வளர்ச்சிக்கு வழிவகை செய்துதரக்கூடிய பாங்கிகளும், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளும் அங்குதான் அதிகம். ஆகவே ஆலையரசர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக, புதிய ஆலைகளை நிறுவியும், விரிவுபடுத்தியும், வேண்டுவன செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆலைகள் அதிகப்படுவதால், அவைகளில் உற்பத்தியாகும் பொருள்களும் முன்னைவிட, இப்போது அதிகமாகும். ஆகவே, அவைகள் விற்கப்படவேண்டிய 'மார்க்கெட்' ஆக, இப்போது போலவே, தென்னாடு இருந்தால் தான்விற்பனை நடைபெறவும், பணம் தங்கட்குக் கிடைக்கவும் முடியும். எனவே, வடநாட்டு ஆலையரசர்கள் தென்னாட்டை'மார்க்கெட்' ஆக்குவதில் முனைந்து நிற்கின்றனர். அவர்கள் வசமே, மத்திய சர்க்கார் ஆட்சிச் சூத்திரமும் இருப்பதால், இதற்கான வழிகளையும் வசதிகளையும், தேடிக்கொண்டே போகிறார்கள்; புது அரசியலமைப்பு மூலம் மத்திய சர்க்காரின் அதிகாரங்களை அதிகரித்தும், மாகாண சர்க்காரின் அதிகாரங்களைக் கொஞ்சங்கொஞ்சமாகக் கைப்பற்றியும்!

* * *

எதிர்காலத் திராவிடத்தை, இருள் மயமாக ஆக்குவதற்கான திட்டங்களைத் தீட்டி, அவைகளை, சட்டமாக உருவாக்கி வருகிறது—வடநாட்டு முதலாளித்துவம், தன்னுடைய சகாக்கள் நிரம்பிய மத்திய சர்க்காரைக் கொண்டு! அதற்கான வகைகளில், மாகாணங்கள், வசம் எந்தெந்த வசதிகள் இருந்தால், அவை முரண்டவோ, எதிர்த்துப் பேசவோ, முடியுமோ அவைகளையெல்லாம், தங்கள் வசம் கைக்கொண்டு வருகின்றன.

ஒரு நாடு நல்ல நிலையில் வாழவேண்டுமேயானால், அந்த நாட்டை ஆளும் சர்க்காருடைய பொருளாதார நிலை நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். நாலாறு காசு கிடைக்கும்படியான வருமானங்களை உடையதாக இருக்கவேண்டும். தன் மக்களின் தேவைக்கானவைகளைத் தானே செய்துதரக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். அப்படியில்லாது, செலவுக்குப் பணம் வேண்டும்போதெல்லாம், இன்னொரு இடத்திடம் கேட்டு வாங்கித்தந்து கொண்டிருந்தால், அந்நாட்டிலுள்ள மக்களுக்குத் தங்களை ஆளும் சர்க்காரிடம் நம்பிக்கையோ, நல்லது செய்பவர்கள் இவர்கள்தான் என்ற மனப்பண்போ, ஏற்பட முடியாது, வளரவும் வழியேற்படாது. யார் பணம் தரும் பொறுப்பிலிருக்கிறார்களோ, அவர்களையே அவர்கள் மதிக்கவும், அவர்களுக்கே பயந்து வாழவுமான நிலைமை ஏற்படும்.

> ஒருவனை அடிமைப் படுத்த விரும்பினால், அவனுடைய 'பண வருவாயை' வசப்படுத்திக்கொள். பின், அவன் உன்னுடைய அடிமைதான்!

என்று சொல்லுவதுண்டு. இதைத்தான், இன்று மத்திய சர்க்கார் முனைந்து செய்து வருகிறது. மாகாண சர்க்கார்களைத் தன்னிடம் பிச்சைகேட்டு நிற்கும் 'பிம்பங்களாக' படிப்படியாக ஆக்கி வருகிறது.

இராணுவப் படையும் மத்திய சர்க்கார் கைவசமே இருக்கிற காரணத்தால், வேதனையில் உழலும், ஒரு மாகாண மக்கள் வெகுண்டெழுந்து கிளம்பினால், படைபலம் கொண்டு, துப்பாக்கி முனையில் அடக்க வசதியும், அதே வேளையில், அவ்வளவு துணிச்சலுடன் மாகாண சர்க்காரோ அல்லது சர்க்காரை நடத்தும் கட்சியினரோ மனந்துணிந்து எழும்ப முடியாத வகையில், எதற்கெடுத்தாலும் தங்களிடம் மண்டியிட்டுக் கிடக்கும்படி, முதுகெலும்பை ஒடித்துப் போடவும், ஆன வசதிகளை, மத்திய சர்க்கார், அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

பெருவாரியான வருமானத்தை நல்கக்கூடிய வருமான வரியும், தீர்வை வரியும், இவை போன்றவையும் மத்திய சர்க்கார் வசம் இருக்கின்றன. மாகாண சர்க்கார் வசம் இருப்பதெல்லாம் நிலவரியும், விற்பனை வரியும்தான்! முன் குறிப்பிட்ட வரிகள் மூலம், வரி உயரவும், அதிக வருமானம் கிடைக்கவும் வழியுண்டு. அவைகளைச் செலுத்துபவர்கள் பணக்காரர்களும், பெரும் வியாபாரிகளும்தான். ஆனால், மாகாணங்களிடம் இருக்கும் நிலவரி, விற்பனை வரி ஆகியவைகள், அதிகமாக வளரக்கூடியவை அல்ல, வருமானத்தை அதிகரிக்கக் கூடியவை அல்ல. ஏனெனில் இவைகளைச் செலுத்துபவர்கள் ஏழை மக்கள்!

எனவே, எதிர்காலத்தில் மாகாணங்களுக்கு, வருமானம் குறையக்கூடுமே யொழிய வளர வழியுமில்லை! வக்குமில்லை!! இப்பொழுது, இம்மாகாணத்தை ஆள்பவர்களும், மத்தியசர்க்காரில் வீற்றிருப்பவர்களும், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ்காரர்கள்தான் என்றாலும், இன்றுள்ள நிலைமையில் மேலிடத்துக்கும் இவர்களுக்கும் பூசலும் புகைச்சலும் இருந்துகொண்டே இருக்கிறது.

பணம் வேண்டும் என இவர்கள் கேட்கவும், இல்லையென்று அவர்கள் கூறவும், என் செய்வேன், இப்படியா கூறுவது என்று இவர்கள் முனகவும், கோபிக்காதே, பார் நம் படைகளை, காஷ்மீர யுத்தத்தை என்று காட்டவும் ஆனநிலை இன்று நிலவுகிறது!

(2-ம் பக்கம் பார்க்க)

[பழமைப்பலிபீடம்]

பாலைவனக் 'குயில்'கள்!

[அரங்கண்ணல்]

கல்யாணம் நடைபெறும்!
சுற்றம் குழுமிநின்று வாழ்த்தும்!
பரிசுகளைச் சொரிவர்!
மேளதாளம் முழங்கும்!
விருந்து,கேளிக்கை யாவும்உண்டு!
மணமக்களும் இருப்பர்!
அவர்தம் பெற்றோரும் நிற்பர்!

ஆனால்,

களிப்பு இருக்காது!
சோகபிம்பங்களாக நிற்பர்!
குமுறும் வேதனை நிலவும்!
பரிவும், பக்சாதாபமும், உலவும்!
'மோகனம்' இருக்காது; 'முகாரி' தான் எழும்பும்!
உள்ளங்கள் உடைந்து கிடக்கும்!
'உரத்து அழ முடியாமல் தத்தளிப்பாள் பெண்!
எல்லோர் கண்களிலும் கண்ணீர் வடியும்!
கல்யாணவீடு, கருமாதி வீடாகக் காட்சி தரும்!

காரணம்

மணவறையில், 'மாப்பிள்ளை' இருக்கிறார் மனித உருவில் அல்ல, அசல் 'மரப்பலகையாக' என்பதால்!

மரப்பலகை மாப்பிள்ளைக்கும், மலர்க்கொடிக்கும் 'திரு'மணம் நடைபெறுவதால்!

வாழ வேண்டிய, வனிதையின் வாழ்வு, வாடப்போகிறதே என்பதால்!

வாடாத ரோஜா, ஆடாத கொடியில் அகப்பட்டுக்கொண்டதே என்பதால்!

எனினும்

எல்லாக் காரியங்களும் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும், வரிசைகள் வழங்குவர், மேளம் முழங்குவர், 'மரப்பலகை மணமகனை' ஏந்திக் கொண்டு ஒருவர் நிற்க, மங்கள காரியத்தை 'மதகுரு' நடத்துவிக்க யாவும் நடைபெறும். குமுறி நிற்போர் கொந்தளித்து அழுவோர், சோக பிம்பமான மணமக்களின் பெற்றோர் யாவரும் சம்பிரதாயச் சடங்குகளை நடத்திகொண்டேயிருப்பர்!

சூடாத பூப் போன்ற மங்கை நல்லாளுக்கு ஆடாத மரக்கட்டையா புருடனென்று யாரும் கேட்கமாட்டார்கள்!

பெற்றெடுத்த பைங்கொடியைப் பேசாத 'பொருள்' தனுக்கோ, வளர்த்துத் தருவது என்றெவரும் பேசமாட்டார்!

கொஞ்சுகின்ற இக்கிளிக்கு கோடரிக் கட்டைதானா, குணாளன் என்று யாரும் கூறமாட்டார்!

குடும்பத்தின் நல்விளக்கை, 'குமரி'ச்செல்வத்தை, மாற்றுக்குறையாத் தங்கத்தை 'மரக்கட்டை'க்கா மணமுடிப்பது என்றெவரும் சொல்ல மாட்டார்!

எழும்பாத அழுகுரல்களுக்கிடையே, அருவியெனச் சொரியும் கண்ணீர்த் துளிகளினூடே, சோக பிம்பங்கள் சூழ்ந்து நிற்க, மதகுருவின் மங்களச் சொல்லும் பன்னீர்த் துளியும் சிதற, மணவினை நடைபெறும், மரக்கட்டைக்கும், 'மலர்க்கொடிக்கும்!'

* * *

மனம் பதைக்கும் இந்தத் திருமணம், கற்பனையின் சிருஷ்டியல்ல, மலர்க்கொடி போன்ற ஒரு இளங்குமரிக்கும், மயிர் நரைத்துப்போன ஒரு 'தாத்தா'வுக்கும் நடைபெறும் பொருந்தா மணத்தைச் சிருஷ்டித்துக் காட்டுவதல்ல, பிடிக்காத ஒருவனை பெற்றோர் தம் பிடிவாதத்தால் தம் மகளுக்கு மணம் செய்விக்கும் 'மனந்தாங்கா' நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் வர்ணனையல்ல, மரக்கட்டை—மலர்கொடி மணக்காட்சி!

நினைத்தாலே நெஞ்சுருகக் கூடிய இந்நிகழ்ச்சி உண்மையாகவே நடப்பது—இன்றும் நடந்து கொண்டிருப்பது. மரக்கட்டை மணமகனுக்கும் மலர்க்கொடி மணமகளுக்கும் நடைபெறும் இத்திருமண விழாவிலே, கண்ணீர் நிறைந்து கிடக்கும், மணமகளைப் பெற்றோர் பெருமூச்செறிவர், 'மரக்கட்டை'யை மணமகனாக வைத்து மணவிழாவை நடத்தும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் அதைவிடப் பன்மடங்கு மனத்துயர் எழும்பும், மரக்கட்டையைக்காணும் போது மனம்பதறுவர், துடிப்பர், 'மனித உருவில்' இருக்க வேண்டிய மகனுக்குப்பதில் 'மரப்பலகை' இருப்பதைக் காணத் துடிதுடித்துப் போவர்! கல்யாணத்தை நடத்துவிக்க வந்த, சுற்றத்தினரும், சோகபிம்பங்களாய், சொல்லொணாத் துயருடையராய்த் தானிருப்பர்!!

இவ்வளவு வேதனையும், விம்மலும், துயரமும், சோகமும், வருத்தமும், கண்ணீரும் அங்கு இருந்தாலும், 'அது' நடைபெறத்தான் செய்யும்! எவருக்கும் ஏன் இந்தக் 'கண்றாவிக் கல்யாணம்' என்று கேட்கத் தோன்றாது, தோன்றினாலும் கேட்கமாட்டார்கள், அது பரம்பரை வழக்கம், பாட்டன் பூட்டன் காலத்திலிருந்து வருவது, அதை மீறுவது ஆபத்தைத் தேடிக்கொள்வது என்ற பயம், நம்பிக்கை காரணமாக!

* * *

கண்றாவிக் கல்யாணம் நடைபெற்று, முதல் நாள் போய், இரண்டாம் நாள் கழிந்து மூன்றாம் நாளும் சென்றுவிடும். நாலாம் நாள் வந்ததும், மரக்கட்டை—மலர் முகவதி திருமண நிகழ்ச்சியைவிட மனங்கூசும், சடங்கு ஒன்று நடைபெறும். மூன்று தினங்களுக்குமுன் மேளதாளம் முழங்கிய வீட்டில் ஒப்பாரி எழும்பும்! உள்ளத்தில் வேதனையிருந்தாலும் மறைத்து,

மணநாளன்று வாழ்த்துக்களை உச்சரித்த அனைவரும் கதறுவர்! ஊர் முழுதும் கூடும், உறவினர் அனைவரும் வருவர்! அழுவர், தேம்புவர், 'ஐயகோ' என்பர்!

மூன்று நாட்களுக்கு முன்னர் புத்தாடை அணிவித்து, புது மலர் மாலை சூட்டி, புது மணப்பெண் என்று கூறிப் பல்லக்கில் வைத்து, பவனி வரச்செய்து, படாடோபமுடன், திருமணம் செய்துவைக்கப்பட்ட மணமகள் மறுபடியும், எல்லோர் மத்தியிலும் கொண்டுவரப்படுவாள்! அன்று மங்கல வாழ்த்துக்கள் கூறப்பட்ட அதே இடத்தில் அதே கூட்டத்தில் ஒப்பாரி எழும்பும், அழுகுரல் ஒலிக்கும்!

அவள் கூந்தல் அவிழ்த்துவிடப்படும், அதிலே செருகப்பட்ட மலர் பிடுங்கி எறியப்படும், பட்டாடை அணிந்த அவளுக்கு வெள்ளையுடை அணிவிப்பர், அழகுக்கு அழகூட்டிக் கொண்டிருந்த அணிபணிகள் யாவும் கழற்றப்படும்! மூன்று நாட்களுக்கு முன் சுமங்கலி ஆக்கப்பட்ட அப்பொற்கொடி இன்று அமங்கலியாக்கப்படுவாள்! இனி, அவள் மணமற்ற மலர், சமுதாயத்துக்கு "விதவை" என்று அழுகுரல், அலறல், 'ஐயோ, பாவம்!' என்ற பரிதாபம் ஆகியவைகளுக்கிடையே அறிமுகம் செய்துவைக்கப்படுவாள்! புருடனை இழந்தவள், கணவனை இழந்த காரிகை என்ற ஒப்பாரியினூடே ஊராருக்குத் தெரிவிக்கப்படுவாள்!

மூன்று தினங்களுக்கு முன் கல்யாணம் நடைபெற்ற அதே வீட்டில் கருமாதி நடைபெறும்! மரப்பலகையுடன் மணமுடித்து வைக்கப்பட்ட அந்த மங்கை நல்லாளின் வாழ்வு கசக்கி எறியப்படும், அவள் நரம்பு இல்லாத வீணையாக்கப் படுவாள், பாடாத தேனீ, உலவாத தென்றல், பசியில்லா நல்வயிறு என்று விளம்பரப்படுத்தப்பட்டு, விதவை ஆக்கப்படுவாள்!

* * *

அறிவு மணங் கமழும், இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட, இப்படியுமா நடைபெறுகிறது, என்று வியக்கத்தான் தோன்றும் இந் நிகழ்ச்சி! மரப்பலகையுடன் மணமுடித்து வைப்பது, பின் மூன்று நாட்களுக்குள் அவளை விதவை ஆக்கி, மூலையில் உட்கார வைப்பது என்ற காட்சி, எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கத்தான் செய்யும்!

இந்தக் கோரக் காட்சியின், நிலக்களம், இந்தியாவைவிடப்பெரியதும், மக்கள் தொகை அதிகமாக உடையதும், ஆசியாவின் ஒரு கண் என்று போற்றப்படுவதும், தற்போது செங்கொடி ஆட்சியின் கீழ் வந்திருப்பதுமான சீனுதான்! மகளிரை, மண்குலம் என்ற நினைப்பும், அடங்கியொடுங்கிக் கிடக்க வேண்டியவர்கள் தான் அவர்கள், ஆண்களைப்போல சமவுரிமையும் சமவாழ்வும் பெற்றுச் சுதந்தரக் கிளிகளாய்த் திரிவதற்கு இலாயக்கற்றவர்கள்; அப்படி, செய்வது 'பாபம்,' அடுக்காது, கட்டிய கணவன், கொண்ட மாமி, ஆகியோருக்குப்பயபக்தியுடன்'சிச்ருஷை'கள் செய்வதே, பெண்ணாய்ப் பிறந்ததன் கடன், என்ற எண்ணங்கள் இங்குதான் என்றல்ல, அங்கும் உண்டு,— அதிகமான அளவில்!

தாத்தாவுக்கு, தளிர்போன்ற சிறுமியை மணமுடித்து வைப்பதும், தள்ளாத கிழவன் திடீரென்று இறந்தால், அத்தளிர்மேனியாள் 'மஞ்சள், குங்குமம்' இழந்து, முக்காடிட்டுக் கொண்டு, மூலையிலேயே கிடக்கவேண்டும் என்றும்,இங்குள்ள வைதீகம் கூறுவதுபோல அங்கும் உண்டு! கட்டிய புருடன் இறந்துவிட்டால், அவன் மனைவி—இளமை பூரித்துக் கிடந்தாலும், இன்பம் அனுபவிக்க வேண்டிய வயதுடையாள் என்றாலும், அவள் விதவையாக்கப்படவேண்டும், அவள் வாழ்வு இன்பம் அறுக்கப்பட வேண்டும், "அபாய அறிகுறி" என்று சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்தப் படவேண்டும், நாலு பேர் முன்னிலையில் வரக்கூடாது, நல்ல சகுனமல்ல புறப்படும்போது அவள் வருவது, என்று இங்குள்ள சனாதனம் சீறுகிறதே, இது, சீனாவிலும் உண்டு!

பழமையின் கோர நர்த்தனம், இந்தியாவைப் போலவே சீனாவிலும், இன்றும் நடைபெறுகிறது! மூடநம்பிக்கையும், முரட்டுப் போக்கும், மூதாதையர் சொல்லி வைத்துச் சென்றது என்ற முரண்பட்ட வாதமும், இதை மீறினால் ஆபத்து, அதை மீறினால் அடுக்காது என்ற சஞ்சலமும், பயமும்,இன்னும் ஆட்சி புரிகிறது, அங்கு! அந்த மூடநம்பிக்கையின் காட்சி ஒன்றுதான், நாம் மேலே சித்தரித்திருப்பது! பெண்கள், அங்கு கூண்டுக் கிளிகள்தான்! பேசக்கூடாத, பெண்சிலைகள்தான்!

கல்யாணம் நடந்து, மணமகள், கணவன் வீட்டுக்கு வந்துவிட்டால், மாமிதான் பெரியவர், அவர் சொல் கேட்டுக் கீழ்ப்படிந்துநடப்பதுதான் 'தர்மம்,' நியதி, ஒழுங்கு என்று இங்கு கூறப்படுவதுபோலச், சீனாவிலும், மருமகளை ஆட்டிப் படைப்பது மாமியார்தான்!

இங்கு, எத்தனை யெத்தனை குடும்பங்களில் மாமி — மருமகள் மயிர்பிடிச் சண்டைகள் நடைபெறுகின்றன, இதைப்போல, அங்கும் நடைபெறும். மாமியால் ஏற்பட்ட தொல்லைகள் காரணமாக எத்தனை யெத்தனையோ குலவிளக்குகள், பெண்மணிகள் ஆற்றில் விழுந்தோ, கிணற்றில் குதித்தோ, அர்த்தராத்திரியில் தூக்குமாட்டிக்கொண்டோ, தற்கொலை செய்துகொள்கிறார்களல்லவா, இங்கு! இந்த வேதனை நிகழ்ச்சிகள் சீனாவிலும் நடந்து வருகின்றன!

கொழுநனைப்பேணி, கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன் என்று இருக்கவேண்டும் என்று இங்கு போதிக்கப்பட்டுப் பெண்கள் பிறந்ததே, ஆண்களுக்கு உழைத்துப் போடத்தான் என்று பெண்ணடிமை பேசப்படுவதுபோல அங்கும் பேசப்படுவதுண்டு! மாமியார் தொல்லை, வீட்டுக்கஷ்டம் ஆகியவைகள் தாங்காது, தூண்டில் புழுப்போல் துடித்துத் தவிக்கும்,பெண்களைப் பார்த்து,பல வயதுவந்த பெண்கள், "ஏ, அப்பா! கல்யாணமா, வேண்டாம் அந்த விபரீதம்!!" என்று, மணவினையை வெறுத்து, "கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னால் கழுத்தில் சுருக்குமாட்டிக் கொள்வோம்"

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

24
REGD 4642 M
MADRAS

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம்
மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 27-11-49 | இதழ் 22

இன்றைய வேதவாக்கியம்!

"நெறிமுறை நியாயங்களுக்கு இக்காலத்தில் மதிப்பைக் காணோம். யோக்கியனுக்கு இன்றைய சமுதாயத்தில் இடமில்லை. அவன்தான் இன்று மிகவும் அவதிப்படுகிறான். 'எது வேண்டுமானாலும் செய்; ஆனால், அகப்பட்டுக் கொள்ளாதே' என்பதுதான் இன்றைய வேத வாக்கியமாக இருக்கின்றது. நல்லது கெட்டது என்பது இக்காலத்தில் இல்லை."

ஆச்சாரிய கிருபளானி
(18—11—49)

வீண் விழாக்கள்

4-ம் பக்கத்தொடர்ச்சி

துக்கு அனுப்பப்படுவான். பெண்ணாக இருந்துவிட்டால், அவளைப் பள்ளிக்கூடத்துக்குப்போகவிடமாட்டார்கள். அவள் வாழ்க்கை, இந்தப் பருவத்தில், வேறு திசைக்குத் திருப்பிவிடப் படும். வீட்டு வேலைகளைக் கற்றுக்கொள்வது, சமையல் செய்யச் சொல்லித்தருவது போன்ற குடும்ப காரியங்களில ஈடுபடச் செய்து, தன் பெண் வாழப்போகும் இடத்தில் 'நல்ல பெயர்' எடுக்க வேண்டுமே யென்ற 'பெருமித' நோக்கத்துடன், தாயார்வளர்ப்பாள்! பிள்ளை பள்ளிக்கூடத்துக்குச் செல்வான், பெண் அடுப்பங்கரையில் கிடக்கும்! ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற பேதாபேதம், சயாமில் இன்னும் நர்த்தனமாடுகிறது!

வளரும் குழந்தையின் வயது பத்து அல்லது பதின்மூன்று வரும் போது தான், முதலில் குறிப்பிட்ட, முன் குடுமி வெட்டுவிழா நடைபெறும்! இந்த விழாநாள், சயாமில், மிகப் பெரிய சடங்கு என்று கருதப்படுவதாகும்! இங்கு எப்படி 'வாழ்வு விழா' என்று திருமண நாள் கருதப்படுகிறதோ, அது போலத் தான் இந்தக் குடுமி வெட்டுவிழாவும் அங்கு கருதப்படும்! அதையொட்டியே, அவ்வளவு ஆடம்பரமும், அர்த்தமற்ற சடங்குகளும், நடத்தப்படும்! எல்லா விழாக்களுக்கும் நாள் பார்த்துக் கொடுப்பது போலவே, இதற்கும் ஜோசியர் வந்து நாள் பார்த்துத் தருவார். அவர் குறிப்பிட்டுத் தந்த நாளில், புதுப்பிக்கப்பட்ட இல்லத்தில், ஒரு பீடம் ஒன்று நிர்மாணிப்பார்கள், இங்கு 'மணவறை' வைக்கப்படுகிறதல்லவா, திருமணத்துக்கு அதைப் போல!

அந்தப் பீடத்தைச் சுற்றி, 'தீர்த்தம்' போன்ற சடங்குக்கு வேண்டிய சாமான்கள் நிரப்பப்படும்! அதற்கருகில் ஒரு சிறு கம்பம் நிறுத்தப்பட்டு, அதில், குடும்பத் தெய்வங்களுக்கான 'நைவேத்தியங்கள்' வைக்கப்பட்டிருக்கும்! இவ்விதமாக முதல் நாள் துவங்கும் சடங்குகள் இரண்டு நாட்கள் நடைபெறும்! இரண்டு நாட்களிலும 'பௌத்த பிக்ஷு'க்கள் குவிந்து கிடப்பர், புத்த மதக் கொள்கைகளைப் பாராயணம் செய்விப்பர், சடங்கு நடத்த வேண்டிய வழிகளைக் காண்பித்துக் கொண்டிருப்பர்!

மூன்ருவது நாள் காலையில், பொழுது புலருமுன், எல்லா பிக்ஷுகளும் வருவர், விழா நடக்கும், வீட்டிற்கு, வந்ததும் உணவருந்துவர், பின் குடுமி வெட்டுவிழாவுக்கான ஏற்பாடுகளில் முனைவர்!

முன் குடுமி தவிர்த்து, நன்கு சவரம் செய்யப்பட்ட, பையன் புத்தாடை அணிவிக்கப்பட்டுப் பொன்னாபரணங்கள் புனையப்பட்டுக்கொண்டு வந்து நிறுத்தப்படுவான்! விழா நடைபெறும் இடத்தில், நிசப்தம் நிலவும்! வாய்திறந்து பேசினாலோ, ஏதாவது குரல் கேட்டாலோ, 'கெட்ட தேவதை'கள் காதில்பட்டு, எங்கே இந்த விழா நடைபெறும் இடத்தை அறிந்துகொண்டு வந்து விடுமோ என்பதற்காகவே அந்த இடம் நிசப்தமாகயிருக்குமாம்!

பொழுது புலருமுன், பையனுடைய முன் குடுமியை அவிழ்த்து, மூன்று 'திரி'களாக ஆக்குவர். ஒவ்வொரு 'திரி'யையும் ஒவ்வொருவராகப் பிடித்துக்கொண்டு மூன்று, நரைத்துத் திரைத்துப்போன கிழவர்கள், சூரியன் உதிக்கின்றநோத்தில், திடீரென அமைதி நிலவிய அந்த இடத்தில் மேளதாளங்கள் முழங்க, பாராயணங்கள் எழும்ப, முன்குடுமியைக் கத்தரித்து விடுவார்கள்!

பின் ஒவ்வொரு உறவினரும், பையன் உட்காரவைக்கப்பட்டிருக்கும் பீடம் நனையும்வரை 'தீர்த்தத்தை'த் தலையில் தெளித்தவண்ணம் இருப்பர். பின், அவனுக்கு அழகிய உடைகளை அணிவித்து, பிக்ஷுக்களுக்கு உபசாரம் செய்யும் வேலைகளில் ஈடுபடச் செய்வர்!

நூற்றுக்கணக்கான புத்தபிக்ஷுக்களும், ஆயிரக்கணக்கான ஏழைகளும் இந்த விழாத் துவக்கப்பட்டு முடியும் மூன்று நாட்களிலும் ஏராளமான 'தட்சணை'களாலும் தானங்களாலும் போற்றப் படுவார்கள்!

இந்தவிழா ஆண்களுக்குமட்டும் தான் என்பதல்ல; பெண்களுக்கும் உண்டு! ஆணுக்கு எப்படிச்செய்யப் பட்டதோ, அதே போலவே, இம்மியும் மாறுபடாமல் பெண்களுக்கும் செய்விப்பார்கள்! இந்தக்குடுமிவெட்டும் விழா நிறைவேற்றப்பட்ட கொஞ்சகாலத்துக்கெல்லாம், பெண்களுக்குத் திருமணம் செய்யப்பட்டு விடுமாம்!

* * *

ஏன், இந்தவிழா, எதற்காக சாதாரணக் குடுமியைக் குறைப்பதற்காக ஏராளமான பொருட்செலவில் நடத்தப்படவேண்டும், என்றெல்லாம் கேட்கத் தோன்றும்! குடுமிவெட்டும் விழா மட்டுமல்ல, அந்தப் பையன் வளர்ந்து, அவனுக்குத் திருமணம் செய்யப்பட்டு, அவன்வாழ்வு முடியும்வரை, ஏன்—முடிந்தபின் கூட — இதுபோன்ற பொருத்தமற்ற சடங்குகள், சம்பிரதாயம் என்ற பெயரால் நடத்துவிக்கப்படுகின்றன! முன்குடுமிவைக்க ஒரு சடங்கு, பின் அதைவெட்ட ஒரு பெரிய கொண்டாட்டம், இது என்ன வேடிக்கையாகயிருக்கிறதே, இதற்கா இவ்வளவு செலவிடவேண்டும், என்று நினைக்கலாம், தோழர்கள்! இங்குமட்டுமென்ன வாழுகிறதாம், குழந்தைக்கு 'முதல்' மொட்டையடிக்க, கோயில்களைத் தேடிக் கொண்டு செல்லும் திருவாளர்கள் இல்லாமலா இருக்கிறார்கள்! மொட்டையடித்து, காதுகுத்தும் கல்யாணவைபவங்கள் இங்குமட்டும் இல்லாமலா இருக்கின்றன! பிறந்தது முதல், சாவுவரை, மாண்டுபோய் ஆண்டாண்டுகாலம் ஆனபின்னரும் கூட "வீண்விழா"க்கள் எத்தனையெத்தனை நடைபெறுகின்றன!

இந்த வீண் விழாக்களுக்கு, விளக்கமோ, ஏன் இது கொண்டாடப்படவேண்டும். இவ்வளவு செலவுடன் என்பதற்கான பதிலோ இதுவரையாராலும் கூறப்பட்டதில்லை— இது எங்கள் பழக்கம், எங்கள் மதச் சம்பிரதாயம், பாரம்பரைச் சடங்கு என்ற போலிக்காரணங்கள் தவிர! இருந்தாலும், இன்றும், இந்த நூற்றாண்டிலும் இவை நடைபெற்றுக் கொண்டேயுள்ளன. என்றுதான் ஒழியுமோ, இந்த வீண்விழாக்கள்!!

[பழைமைப் பலிபீடம்]

வீண் விழாக்கள்!

[அரங்கண்ணல்]

பழைமையின் மீதுள்ள பாசம், அதன் விளைவாக நிலவும் மூடநம்பிக்கை, முன்னோர்கள் செய்துவந்தார்கள், எனவே அப்படித்தான் நாங்களும் செய்வோம் என்ற முரட்டுப் பிடிவாதம், குருட்டுப் போக்கு, இங்குமட்டிலும் என்றல்ல, ஆங்காங்குள்ள பல நாடுகளிலும், இருக்கவே செய்கிறது, இந்த இருபதாம் நூற்றாண்டிலும், அறிவு மலரும் நேரத்திலும்.

பிறப்பு முதல் இறப்புவரை, எல்லா நிகழ்ச்சிகளிலும், மனிதனின் ஒவ்வொரு வாழ்க்கைத் துளியிலும், இந்தபழைமை, பழக்கவழக்கம், சம்பிரதாயம், சாஸ்திரம், சட்டம் என்ற பல சொற்களுடன் சதிராடிய வண்ணமே இருந்துவருகிறது! விஞ்ஞானம் வளரா நாட்டில் என்று மட்டுமல்ல, விஞ்ஞானம் வேகமாகப் பரவும் நாடுகளில கூட! வேதகால முறைகளை அனுசரிப்பதுதான் வாழ்வு, சனாதனச் சடங்குகளை நடத்துவதுதான் சம்பிரதாயம் என்ற எண்ணம்நிலவுகிறது, மூடநம்பிக்கையின் விளைவாக, ஆண்டாண்டு காலமாக நடைபெற்றுவரும் சம்பிரதாயச் சடங்குகள் வீண் விழாக்கள் அனந்தம். இந்த விழாக்களை நடத்துவதுதான் மதம் — அதை ஒழுங்கு தவருது கடைப் பிடிக்க வேண்டும் மதச்சடங்குகளை மீறுவது மாபெரும் ஆபத்து, நரகத்தில் வேதனைப்பட நேரிடும், கடவுள் கோபங் கொள்வார், என்றபயம் மதவாதிகளால், வேதமோதிகளால், வஞ்சகத்தையும் அறியாமையையுமேத் தங்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகளாய்க் கொண்டோர்களால் போதிக்கப்பட்டு, மக்கள், இன்னும், இருளுக்கு இரையாகிவருகிறார்கள்.

பரம்பரை வழக்கம், சம்பிரதாயச் சடங்கு, தாத்தா சொன்னது இப்படித்தான், அவர் மூதாதையர் செய்ததும் இதுபோலத்தான், மதகுரு சொல்கிருர், மீறினல் மாபாவம், என்ற குருட்டு நம்பிக்கைக் காரணமாக, வீணாகும் காலமும் பொருளும், அறிவும் ஏராளம்.

அறிவோதயம் ஏற்பட்டு, மூடநம்பிக்கை முறியடிக்கப்பட்டு சம்பிரதாயம் ஒரு விலங்கு, விதி என்பது வீணர் கட்டு, மோட்சம் என்பது புரோகிதப் பித்தலாட்டம், என்று, இன்று மக்கள் உணர்ந்து வருகின்றனர். எனினும். இன்னும், மூடநம்பிக்கையும், சம்பிரதாயம் என்ற சாக்கடையும் தூர்க்கப்படவில்லை!

* * *

மூன்று நாட்கள் விழா நடைபெறும், மதக்குருக்கள்குழுமிக்கிடப்பர், மந்திரங்களும் பிரார்த்தனைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விருந்தினர் வருவர், பரிசுகள் கொண்டுவருவர், மேளதாளங்கள் முழங்கும், அந்த விழா கொண்டாடப்படுவதற்காக புதுச் சாந்திட்டு, வெள்ளையடித்து, பிரமாதமான அலங்காரங்களுடன் வீடு விளங்கும். விழா நடைபெறும் மூன்று நாட்களிலும், நூற்றுக்கணக்கான மதகுருமார்களுக்கு 'போஜனம்' நடைபெறும், ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு, அன்னதானமும், பிச்சையிடுவதுமான 'சத்' காரியங்கள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்! பாண்டு வாத்தியங்கள் ஒருபுறம் முழங்க, இசைவாணர்கள் இன்னொருபுறம் இன்னிசை பொழிய. கேளிக்கைகள் அத்தனையும் நடைபெறும்! வாணவேடிக்கைகள், வர்ண விசித்திரங்கள் விதவிதமான வேடிக்கை விளையாட்டுகள், எல்லாம் நடந்த வண்ணமாகயிருக்கும் ஒவ்வொரு நாள் இரவிலும்! எல்லா, வேடிக்கைக் காட்சிகளையும் ஆயிரக் கணக்கான மக்கள், கூட்டங்கூட்டமாக நின்றுகொண்டுகளிப்பர்! ஒரேகோலாகலமாகயிருக்கும்!

இத்துணை, இன்பநிகழ்ச்சிகள், கேளிக்கைகள் ஆகியவைகளும் இங்கு கல்யாண காரியங்களின் போது நடைபெறுவதுதானே, அது கூடாது, அது வீண்விழா என்று கூறத்தான், இவ்வளவு "பீடிகை" போடப்படுகிறதோ, என்று கருதலாம், தோழர்கள்! இவ்வளவு சிருஞ்சிறப்புடன், பெரியோர் பாராட்ட, மதகுருமார்கள் கூட்டங் கூட்டமாக வந்து வேதமோதி பாராயணம் படித்து பரிசுகளுடன் திரும்ப, வெற்றிலை பாக்கு அளித்து விருந்தினர்களை உபசரிக்க நடைபெறும் இந்த விழா நிகழ்ச்சிகள் அத்தனையும், நடைபெறுவது, எதற்குத் தெரியுமா!

"முன் குடுமியை வெட்டுவதற்கு!" ஆம், அதற்குத்தான், இவ்வளவு சிறப்புடன், ஊரார் பூரித்துப் போக, உறவினர் எல்லாம் வந்து குழுமி நின்று வாழ்த்த, நண்பர்கள் யாவரும பரிசுகள் கொணர்ந்து வழங்க, விருந்து வேடிக்கைகள், விழா எல்லாம் நடைபெறும்! முன் குடுமி வெட்டும், 'உன்னத' காரியத்தைச் செய்வதற்காக கோலாகலமுடன் விழா நடைபெறும், இடம், சயாம்— பர்மாவுக்குக் கிழக்கில் சீனாவுக்குத் தெற்கில், மங்த்தாய் என்று அதாவது சுயேச்சைராஜ்யம் என்பதாகப் புகழ்ச் சொல்லுடன் அழைக்கப்படுகிறதே, அதுதான்!

* * *

ஆசியாவின் அரிசிக்களஞ்சியம் என்று பெருமிதமாக இந்தியா எப்படி அழைக்கப்படுகிறதோ, அது போல, 'அரிசிப்பெருமை' உடைய நாடுதான் சையாம்! புத்தரின் கொள்கைகள்தான் அங்கு பூஜிக்கப் படுகின்றன! புத்தமதம் தான் அங்குள்ளோரின்மதம்! எனினும், இந்தியாவில் வேதகாலந்தொட்டு, பிராம்மணீயமதம் ஏற்பட்ட நாள்முதல் இன்றுவரை, என்னென்ன பழக்கவழக்கங்கள் சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம், நிலவி வருகின்றனவோ, இவைகள் போல் புத்தமதமயமான சயாமிலும், நடைபெற்று வருகின்றன! சயாம் மக்களின் வாழ்

வில், இங்குள்ளதைப் போன்ற பல சம்பிரதாயச் சடங்குகள் பிரதிபலிக்கின்றன, இன்றும்கூட!

சயாம் மக்கள் — மங்கோலிய மலைஜாதியைச் சார்ந்தவர்கள், இந்தோ — சீன தீபகற்பம் நோக்கி, ஆதியில் வந்தபோது, அங்கு குடியேறியவர்களின் பரம்பரைதான் இன்றைய சயாம் சமுதாயம்.

அவர்கள் வாழ்க்கையில் கலை மணங்கமழும், நாட்டியம் உண்டு, நாடகம் உண்டு, இசைக்கருவிகள் உண்டு, வீரம்உண்டு, வெற்றிநினைவு உண்டு, அதைப்போல மூடநம்பிக்கையும், முரட்டுப் போக்கும்உண்டு! நாம், இங்கு பேசுவதுண்டல்லவா, வீராதிவீரன் இருந்தாலும் விதி அவனை வீழ்த்திவிட்டது! சூராதி சூரன் ஆனாலும் அவனை 'சூன்யக்காரன்' காலை ஒடித்துப் போட்டுவிட்டான் தன்'காளிவசியம்' மூலம்! பேய் வரும் 'பிசாசு' அடிக்கும், மந்திரத்தால் அவைகளைத் தடுக்கலாம் என்பதாகவெல்லாம், இது போன்ற கட்டுக்கதைகளும் கவலையைத் தூண்டி வளர்க்கும் மூடநம்பிக்கையும் அங்கும் ஆட்சிபுரிகின்றன! பிறப்புமுதல் சாவுவரை, இங்கு நம்மிடையே மதமும், அவைகாட்டும் சடங்குகளும் தொடர்வதைப் போலவே, தொட்டதற்கெல்லாம் பழமைப் பற்றும், மூதாதையர் செய்து வந்த வழக்கம் என்ற ஆசையும் அவர்களை ஆட்டிவைக்கின்றன! அந்த மூடநம்பிக்கைகளில் ஒன்றுதான், நாம் மேலே குறிப்பிட்ட

"முன் குடுமி வெட்டுவிழா!"

* * *

குழந்தை பிறக்கப்போகிறது என்றால், இங்குள்ள நம்மனோர் இல்லங்களில், டாக்டரை அழைப்பதற்குப் பதில் ஜோசியருக்கு ஆளனுப்பி, அழைத்து வரச்சொல்லி, கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, கவலையுடன் உட்கார்ந்திருக்கிறார்களல்லவா! குழந்தை பிறக்கும் நேரத்தையும் வேளையையும் குறித்து அதன் மூலம் அக்குழந்தையின் எதிர்காலத்தையும் அதைப் பெற்றோர்களின் வாழ்வு எப்படி மாறும், கெடுதல் ஏற்படுமா, நல்லது நடக்குமா, அவிட்டத்தில் பிறந்ததா, அமாவாசை தினமா பிறந்த நாள்,ராகுகாலமா, நல்லவேளையா என்றெல்லாம் பார்த்துக்கொண்டு! அதேபோல, அங்கும் குழந்தை பிறக்கும் நேரத்தில் டாக்டருக்குப் பதில் ஜோசியர்தான் இருப்பார்!

குழந்தை பிறந்த நாடி, நட்சத்திரத்தைக்கொண்டு அவன் அறிஞனவான், அக்குழந்தையின் பெற்றோர் பெருமித செல்வம் பெறுவர்; அல்லது குழந்தை பிறந்தவேளை நல்லதல்ல,நலன் விளைவிக்காது, சனிதிசை இருக்கிறது ஆகவே சஞ்சலமுண்டாக்கிக்கொண்டேயிருக்கும் குடும்பத்துக்கு, என்றெல்லாம் 'வருமுன்' உரைக்கிறார்களல்லவா இங்கு, அதேபோல சையாமிலும் பிறந்த குழந்தையின் எதிர்காலம் பற்றிக் கூறுவதற்காக ஜோசியர்கள் தயாராக அழைக்கப்பட்டிருப்பார்கள்! குழந்தைபிறந்ததும் அழுததா, குப்புறக் கிடந்ததா, வாயை அண்ணாந்து பார்த்ததா, கை கால்களை உதைத்துக்கொண்டதா, பேசாது கிடந்ததா என்பதை 'அதி'சிரத்தையுடன் பாட்டிமார்கள் கவனித்து, ஓடோடியும் வந்து உரைப்பார்களாம் ஜோசியரிடம்! அதைவைத்து ஜோசியர்கள் அந்தக் குழந்தை எத்தனை வயதுவரை இருக்கும், எப்படி எப்படி வாழும் என்பவைகள் பற்றி, குழந்தையைப் பெற்றோரிடம் கூறுவர், இங்கு இல்லையா ஒவ்வொருவருக்கும் "ஜாதகங்கள்" அதைப்போல கணித்து!

நாழிகை பார்த்தல், நல்ல நாள் கணித்தல், என்ன நக்ஷத்திரம் இன்று, வளர்பிறையா தேய்பிறைக் காலமா' பாருங்கள் பஞ்சாங்கத்தை என்று கூறுகிறார்களல்லவா, நம்மனோர், பஞ்சாங்கத்திலேயே இவர்கள் வாழ்வு சித்தரிக்கப்பட்டிருப்பதாக எண்ணிக்கொண்டு இதே, நிலைதான் அங்கும்! எதற்கெடுத்தாலும், ஜோசியர் வரவேண்டும், சொல்லவேண்டும் பின்னரே ஒரு காரியம் செய்யவேண்டும்!

பிள்ளைக்குப் பெயரிட, மொட்டையடிக்க, முதல் முறையாகச் சாதம் ஊட்ட, காதுகுத்த, பள்ளிக்கு அனுப்ப இதற்கெல்லாம் நல்லநாள் பார்த்து, நாலுபேரை அழைத்து, புரோகிதர்களுக்குபணிந்துஅவர்கள் ஜப தபங்கள் செய்து ஆசிர்வதிக்க, ஒவ்வொரு சடங்குகளும் செய்யப்படுகின்றன, பாருங்கள், நம் நாட்டில், அதேபோல சயாம் மக்களும் ஒவ்வொரு காரியங்களுக்கும் ஜோசியரை அழைத்து புரோகிதரைக் கூப்பிட்டு "நல்ல நாள்" பார்க்கச் சொல்லி, அதன் பின்னர்தான் எதுவும் செய்வார்கள்.

குழந்தைக்குப் பெயரிடவேண்டுமென்றால், மதகுருமாரும் ஜோசியரும் அழைக்கப்படுவார்கள். 'ஐயா, குழந்தைக்குப் பெயரிடுங்கள்'என்று பெற்றோர் சொல்வர். அவர் ஜாதகத்தைப்புரட்டி, நட்சத்திரங்களைப் பார்த்து, எந்த வருஷத்தில் குழந்தை பிறந்தது, என்ன மாதம், எந்ததேதி, எந்த நிமிஷம் என்றெல்லாம் கவனித்துப்பார்த்து அதற்குப் பின்னர் அவையாவும்பொருந்தி வருவதாகப் பார்த்து, பெயரிடுவார், இங்கு ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தால் இராமகிருஷ்ணன் என்றும், பூச நட்சத்திரத்தில் பிறந்தால் இராமனுநதன் என்றும் பெயர் வைப்பது போல!

குழந்தை பிறந்து, ஒரு மாதம் ஆகிவிட்டால், முதல் முறையாக நாவிதரை அழைத்து அதன் தலையை மொட்டையடிப்பார்கள். இதுவும் சாதாரணமாக, சந்தடி எதுவுமின்றி நடைபெறுது. சாஸ்திரோக்தமாக, சகல சம்பிரதாயங்களுடனுமே நடத்தப் பெறும்!

பின், அக்குழந்தைக்கு நான்கு வயது வரும்வரை, தலையில் மயிர் இல்லாமலே வளர்த்து வருவார்கள். வயது நான்கு வந்துவிட்டால், முன் போல, அக்குழந்தையின் தலை முழுமையும் 'மழுங்க' மொட்டையடிக்க மாட்டார்கள். அதற்குப் பதில் அக்குழந்தையின் உச்சியில் கொஞ்சம் தலைமயிரை விட்டுவைப்பார்கள்! அதை, குழந்தையின் தாயார், அருமையாக அழகுபடுத்தி, அந்த "முன் குடுமி"யை முடிந்து போட்டு, அதற்குள் 'கொண்டை ஊசி'யைச் செருகி, வளர்ப்பார்! பெற்றோர் தாலாட்டும், உறவினர் பாராட்டும் பெற்று செல்லமாக வளரும் அந்தக் குழந்தைக்கு, குறிப்பிட்ட வயது வந்ததும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைப்பார்கள், விசேஷ விழாக்களுடன்! குழந்தை ஆணாக இருந்தால் மட்டுமே பள்ளிக்கூடத்

(2-ம் பக்கம் பார்க்க)

'கனம்'கள் சிந்தும் 'கண்ணீர்'!

இங்கு சர்க்கரை விலை, வெளிநாடுகளை விட மிக அதிகமாகத்தானே இருக்கிறது?

ஆமாம்!

ஏன், விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது?

முடியாதே. மத்திய சர்க்கார் பொறுப்பல்லவா, அது!

மத்திய சர்க்காரிடம் தூது சென்று வலியுறுத்தக் கூடாதா?

தினசரி இதுபோன்ற தூதுகள் நடத்திக் கொண்டுதானே இருக்கிறோம்!

* * *

ஓய்வுபெற்ற சர்க்கார் காரியதரிசிகளுக்கு அலவன்சு தருகிறீர்களா?

ஆமாம்! அவர்கள் முன்புபெற்ற சம்பளத்தில் 10 சத விகிதம் அதாவது ரூ 150 (Dearness Allowance) தருகிறோம்!

ஏன், இப்படித் தர வேண்டும். அவர்கள்தான் அதிகச் சம்பளம் பெற்றவர்களாயிற்றே!

இந்திய சர்க்கார் அப்படிக் கட்டளையிட்டது. போன வருடமே, உத்தரவிட்டது. பொறுங்கள், 1949 ஜனவரியில் செய்கிறோம், என்றோம். ஓராண்டு காலம் தப்பித்ததில் எவ்வளவு தொகை மீதப்பட்டிருக்கிறது. அது நமக்கு மிச்சம்தானே!

* * *

சினிமாத் தொழில் துறை பற்றிய உயர் படிப்புக்காக, வெளிநாட்டுக்கு யாராவது அனுப்பப்பட்டதுண்டா?

உண்டு. அவர் பெயர் சீனுவாசன், பி. எஸ். ஸி. பட்டம் பெற்றவர்.

இவரை வெளிநாட்டுக்கு அனுப்பலாமெனத் தேர்ந்தெடுத்தது மாகாண சர்க்காரா, மத்திய சர்க்காரா?

மாகாண சர்க்கார் ஒருகமிட்டியை நியமித்தது. அக்கமிட்டிமுதல்வகுப்பில் தேறிய நான்கு மாணவர்கள் பெயர்களைச் சிபார்சு செய்தது. இதில் ஒருவர் பெயரை, முறைப்படி மாகாண சர்க்கார் சிபார்சு செய்தது. ஆனால், இந்த மாணவரை மத்திய சர்க்கார் ஏற்கவில்லை; மறுத்து விட்டது.

* * *

வயலுக்கு உரமாகக்கூடிய கடலைப் பிண்ணாக்கு, கிடைப்பது கஷ்டமாயிருப்பதோடு, அதன் விலையும் தாறுமாறாக இருக்கிறதே!

உண்மைதான்!

நமக்கே போதாமல் இருக்கும்போது வெளி நாடுகளுக்கு இந்திய சர்க்கார் ஏற்றுமதி செய்து வருகிறதே, அதை நிறுத்தும்படி கோரக் கூடாதா?

வேண்டிக்கொண்டிருக்கிறோம்.

என்ன பதில் கிடைத்தது?

'இல்லை, முடியாது' என்று பதில் தந்துவிட்டது!

☆

தினசரி தூது போய்க்கொண்டுதானே, இருக்கிறோம்!

விரும்பாத ஒன்றை,அதாவது அலவன்சு தருமாறு கட்டளையிட்டது!

நாங்கள் சிபார்சுசெய்த பெயரை மறுத்துவிட்டது!

நமக்குநலன்தரக்கூடிய ஒன்றைச் செய்யுமாறு கோரினோம். மறுத்து விட்டது!

இந்திய சர்க்கார்மீது, இத்தகைய குற்றங்கள் சாட்டப்படும் இடம் சென்னை சட்டசபை. கேள்விகள், உறுப்பினர்களால்,கேட்கப்பட்டவை அதற்கு ஆளவந்தார்களாக இருக்கும், காங்கிரஸ் 'கனம்'கள், அமைச்சர்கள், அளித்தபதில்கள்தான் நாம் மேலே குறித்திருப்பவை.

தற்போதைய காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தின்போது, வெவ்வேறுஉறுப்பினர்களால், வெவ்வேறு தினங்களில், வெவ்வேறு அமைச்சர்களைக் கேட்டபோது, அவர்கள் திருவாய் திறந்து மலர்ந்தருளிய பதில்கள்தாம் இவை.

வேடிக்கையாகக் கூட இருக்கும், இத்தகைய குற்றச் சாட்டுகளையே, நாம் சாட்டும்போது சீறிடும் சிங்கங்கள், இப்போது, இவைகளைக் கூறியிருப்பது.

வேதனை, மூடிவைப்பதால், முடிவு பெற்றுவிடக் கூடிய பொருளில்லையே, எனவேதான் வெடித்திருக்கிறது, அவர்கள் பதில்கள் மூலமாக! குமுறும் வேதனையும், கொந்தளிக்கும் கண்ணீரையும், மறைத்து, மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருப்பதாகக் காட்ட, எத்தனை தடவை முயன்றாலும், எப்போதுமே அப்படியிருந்துவிட முடியுமா, என்ன!

சலிப்பும் சங்கடமும் வந்தபோது, தானும் தன்மாமியும் சஞ்சலமின்றிச் சிறிதுகூட மனத்தாங்கலின்றி வாழ்வதாகப்,பிறரிடம்பேசும்போது காட்டிக் கொள்ளும் மருமகளையும் மீறி, என்றாவது ஒருநாள் அவள் வேதனை வெளிக் கிளம்பித்தானே தீரும்!

அதுபோலவே, நமது அமைச்சர்கள், உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் தரும்போது, தாங்கள் மண்டியிடவும் அதை மத்திய சர்க்கார் மறுக்கவுமான நிலை இருப்பதை, வேதனையுடன் வெளியிட்டிருக்கின்றனர்!

அவர்கள் பதிலில் எவ்வளவு பரிதாபம் தொனிக்கிறது பாருங்கள்!

சர்க்கரை விலை இந்தியாவில், ஜாவா முதலிய இடங்களிலிருந்து இறக்கு

மதியாகும் சர்க்கரை விலையை விடப் பன்மடங்கு அதிகமாகயிருக்கிறதே, இதை ஏன் கவனித்து, மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி, விலையைக் குறைக்குமாறுச் செய்யக்கூடாது என்று ஒரு உறுப்பினர் கேட்கிறார்.

பதில்தரும் அமைச்சரோ, ஆமாம், இதுஎன்ன புதிதா! தினசரிதான் போய்க்கொண்டேயிருக்கிறோமே, என்று கூறுகிறார்.

உறுப்பினர் கேட்ட கேள்வி. கிடைக்கும் பதிலோ, ஆகட்டும், அப்படியே செய்கிறோம் என்பதல்ல; உள்ளக்குமுறல்!

பணமில்லை, பணமில்லை யென்று கஷ்டப்படுகிறீர்களே, இந்நிலையில ஏன், அனாவசியமாக அதிகச் சம்பளம் வாங்கிவந்த அதிகாரிகளுக்குஇன்னும் ‘அலவன்சு’’ தரவேண்டும், அது அவசியமா,’ என்று உறுப்பினர்கேட்கிறார்.

அவசியமோ, அவசியமில்லையோ, மத்தியசர்க்கார் அப்படிச் செய்யுமாறு கட்டளையிட்டது. இப்போதுள்ள நிதிநிலையில் அப்படிச்செய்வதற்கு இயலாதே என்று எங்களுக்குத்தெரிந்தாலும், இந்திய சர்க்கார் அல்லவா கட்டளை இட்டிருக்கிறது, அதை எப்படி மறுப்பது? எனவே தான் கொடுத்துவருகிறோம், என்று விளக்கம் தருகிறார் அமைச்சர்!

கடலைப் பிண்ணாக்கு வயலுக்கான நல்ல உரம். ஆனால் விலையோ தாறுமாறாக இருக்கிறது, ஆகவே மக்களுக்குக் கிடைக்கவில்லை, அவதிப்படுகிறார்கள். இந்நிலையில், மத்திய சர்க்காரோ, வெளி நாடுகளுக்கு, கடலைப் பிண்ணாக்கை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறார்கள். இதை நிறுத்தி, மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் அத்தனையும் இங்கு நமக்குக் கிடைக்கும்படிச் செய்யக் கூடாதா, என்று கேட்கிறார் ஒரு உறுப்பினர், மாகாண சர்க்காரை, ஆளவந்தார்களை!

ஆளவந்த அமைச்சரோ, நீங்கள் சொல்வது சரிதான், அது நல்லதுதான், நன்மை அதனால் விளையும், அதை எண்ணியே நாங்கள் மத்திய சர்க்காரைக் கோரினோம். வெளி நாடுகள் ஏற்றுமதியைக் குறையுங்கள் என்று வேண்டினோம்.

ஆனால், கோரிக்கையை நிராகரித்து விட்டதே, எங்கள் போசனையை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள வில்லையே, என் செய்வோம்! என்று ஏக்கமுடன், பதில் கூறுகிறார்!

வெளிநாட்டிற்கு உயர் படிப்புப் பெற்றுவரச்சர்க்கார் செலவில அனுப்பப்பட்டது யார் என்று மக்கள் நலனை மனதில்வைத்து, ஏழையாய்க் கிடப்பவன் இன்பம் அடைகிறானு என்பதை அறிவோம் என்ற எண்ணத்துடன் கேள்வி கேட்கிறார் ஒரு உறுப்பினர்!

பதிலோ, மாணவரொருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினோம், அம்மாணவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், (Backward Community) ஆனால் அவர் அனுப்பப்படவில்லை, அவருக்குப் பதில் ஒரு “சீனுவாசனை”த் தேர்ந்தெடுத்து மத்திய சர்க்கார் தங்கள் இஷ்டப்படி அனுப்பியுள்ளனர் என்று கூறப்பட்டிருக்கிறது, மந்திரியாரால்!

* * *

சர்க்கரை விலை, விஷம்போல் ஏறுகிறது. சென்னை மாகாணத்துக்குத் தேவையான சர்க்கரையோ, ஐக்கிய மாகாணம் போன்ற வெளி மாகாணங்களிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படுகிறது! அப்படி இறக்குமதி செய்யப்படும் சர்க்கரையின் விலை வெளிநாடுகளிலிருந்து ஜாவா போன்ற இடங்களிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் விலையை விடப்பன்மடங்கு அதிகமாக இருக்கிறது! ஆகவே, எப்படியும், தனது தேவைக்கு, நமது மாகாணம் வெளியிடத்தையே எதிர்பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எனவே, எங்கிருந்து வந்தால், என்ன, வேண்டியது சர்க்கரை! எங்கு வாங்கினாலும், நாம், கொடுத்து வாங்கப் போகிறவர்கள், ஆகவே, எங்கு விலைகுறைவாகக் கிடைக்கிறதோ அங்கிருந்து வாங்கினால், நம்முடைய பணமும் மிச்சப்படும், நமது மக்களும் அவதியின்றி, குறைந்த விலையில் சர்க்கரை பெறமுடியும். ஆனால், இப்போதுள்ள நிலையோ, இந்திய சர்க்காரே “நம்ம” கதியை நிர்ணயிப்பதாக இருப்பதால், நாம், வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதிசெய்ய முடியாதவர்களாக இருப்பதோடு, இந்தியாவுக்குள்ளிருக்கும் ஐக்கிய மாகாணத்தின்சர்க்கரையையே அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய அவசியத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறோம், கட்டுப்பாட்டில் பிணைக்கப்பட்டிருக்கிறோம். இந்தக்கட்டாயமான நிலையை இப்போது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். இங்கு, இந்தியாவில் உற்பத்தியாகும் பொருளுக்கே, இந்தியா எமது புண்யபூமி, என்று கூறிக்கொண்டிருக்கின்ற ‘காரணத்தால், முக்கியத்துவமும் முதலிடமும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதைமனதில் வைத்துத்தானே, என்னவோ, வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் விலையைப்போல இந்திய சர்க்கரையின் விலையையும்குறைவாக நிர்ணயித்துச் சர்க்கார் நடவடிக்கை எடுக்கக்கூடாதா, இந்திய சர்க்காரிடம் எடுத்துச்சொல்லி குறைக்கும்படி கோரக்கூடாதா என்று உறுப்பினர் கேட்டிருக்கிறார், உள்ளம் நொந்து, அமைச்சரைப்பார்த்து!

* * *

மாகாண நிதி நிலையோ, நீரற்ற ஆறாக, இலையற்ற சோலையாக இருக்கிறதென்று, மந்திரிகளால் கூறப்படுகிறது. சேவை செய்யும் சிப்பந்திகளுக்கு, பியூன்களுக்கு, ஆசிரியர்களுக்கு, அல்லலே வாழ்க்கை என்று அனுபவிப்பவர்களுக்கு, சம்பளத்தை உயர்த்தவோ, பஞ்சப்படியை அதிகரிக்கவோ, ‘பணமில்லை’ என் செய்வோம் என்று முகாரி பாடுகிறார்கள்! எத்தனை பேரை வேலையிலிருந்து நீக்கலாம், அப்படி வெளியே போகச் சொல்வதால் எவ்வளவு பணம் மிச்சப்படும் என்று கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்துக்கொண்டு காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்! வேதனையே வாழ்க்கை என்று, வீட்டிலே ஏற்படும் கொந்தளிப்பு, நாட்டிலே தான் உலவ வழியில்லாதிருக்கும் வேதனை நிலை ஆகியவைகளை எண்ணி, சோகக் கண்ணீரைச் சிந்தியவண்ணம் உலவிக்கொண்டிருக்கின்றனர், உழைக்க உடலிருந்தும், உழைக்க இடமோ, வேலையோ இல்லாமையால், பலர் கூட்டங் கூட்டமாக, பணம் செலவழித்து, படித்து, பட்டங்கள் பெற்றிருந்தும்! இந்தக் கேடுபாடான நிலையில், வேதனை

(11-ம் பக்கம் பார்க்க)

மங்கம்மாள் தங்கம்மாளான கதை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

தீருவோம் என்று கர்ஜித்தனர். ‘மங்கம்மாளை’க் கண்டுபிடித்துக் கடுந்தண்டனை தருவோம் என்று சூள் உரைத்தனர். ஏழையை வஞ்சித்து, கள்ள மார்க்கட்டில் கொள்ளை இலாபம் அடிப்பவர்கள்; சமூகத் துரோகிகள், பாபாத்மாக்கள், அவர்களைத் தூக்கிலே மாட்டவேண்டும் என்றார் நேரு, மங்கம்மாளைக் கண்டுபிடிக்க சர்க்காரிலே, முயற்சி எடுக்கப்பட்டது. தனி இலாகா அமைக்கப்பட்டது. மங்கம்மாளோ, மாயாவியானாள்—கள்ள மார்க்கட்டும் கொள்ளை இலாபமும் ஒழியவில்லை.

இந்தியாவின் பெருக்கே, இழிவைத் தேடிவிட்டார்கள் இந்தக் கள்ள மார்க்கட்காரர்கள்.

இவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவேண்டும்.

இவர்களை உலவ விடுவதே, ஊருக்கு அவமானம் என்றெல்லாம் பேசினர் தலைவர்கள்.

மங்கம்மாளுக்கு ஊரில் கெட்ட பெயர்—கள்ள மார்க்கட் என்றாலே மக்கள் காரியுமிழ்வர் — அவ்வளவு வெறுப்பு.

அப்படிப்பட்ட கள்ள மார்க்கட்டில் அடித்த கொள்ளைப்பணத்தைக் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்து, மக்களுக்கு மகத்தான துரோகம் செய்த மாபாவிகளைத் தண்டிக்கப் போகிறோம் என்று பேசிவந்த, நேருவும் படேலும், சில நாட்களாக, கெஞ்சுகிறார்கள், கள்ள மார்க்கட்டிலே அடித்த கொள்ளைப்பணத்துக்குக் கணக்கு வழக்குக் கூடக் காட்டவேண்டாம், அந்தப் பணத்துக்காக, ஏதோ ஓரளவுக்காவது, சர்க்காருக்கு வரிகட்டினால் போதும்,— அந்தப் பணத்தை, புதிய தொழிலுக்குப் போட்டால் போதும், பணம் எப்படிச் சம்பாதிக்கப்பட்டது, ஏன் இவ்வளவு நாட்களாக மறைத்து வைத்திருந்தீர்கள் என்று கூடக் கேட்கமாட்டோம், பணத்தை வெளியே உலவ விட்டால் போதும் என்று, பகிரங்கமாகப் பேசுகிறார்கள், அறிக்கைகள் வெளியிடுகிறார்கள்! எவ்வளவு வெட்கமும் வேதனையும் தரத்தக்க சம்பவம் இது? மங்கம்மாள், தங்கம்மாள் ஆக்கப்பட்டு விட்டாள்!

யாரார், ஏழையின் வாழ்வைக் கொத்தும் கழுகுகள், சமூகத்தை அரிக்கும் விஷக் கிருமிகள் என்று இந்தத் தலைவர்களால் கண்டிக்கப்பட்டனரோ, அதே கள்ள மார்க்கட்காரர்களிடம் இப்போது கொஞ்சிப் பேசி, விசாரணை கிடையாது, இழிவாகக் கருதவும் மாட்டோம், எப்படிக் கிடைத்தது இந்தக் கொள்ளை இலாபம் என்றும் கேட்கமாட்டோம், கொஞ்சம் வரி கொடுத்தால் போதும் என்று கெஞ்சுகிறார்கள் தலைவர்கள்! மங்கம்மாளின் மண்டைக் கர்வம் எவ்வளவு அதிகமாகிவிடும் இந்தக் கொஞ்சு மொழி கேட்டு.

‘தூக்கில் ஏற்றுவேன்’ என்று முழக்கமிட்ட நேரு பண்டிதரின் வாயாலேயே, கணக்குக்காட்டவேண்டாம், கண்டனம் இல்லை, வரி செலுத்தினால் போதும் என்று கூறக் கேட்ட, மங்கம்மாள், மக்களை மண்ணெனத் தானே மதிப்பாள்!

கள்ள மார்க்கட் பணம், பாபம் நிறைந்தது, ஏழையின் இரத்தம், ஏமாளியின்வியர்வை, அது நாட்டை நாசமாக்கும் என்று பேசியவர்கள், இன்று, பணம் எப்படிக் கிடைத்திருந்தாலும் சரி, கள்ளமார்க்கட் பணமானாலும் சரி, நாங்கள் குற்றம் சாட்டமாட்டோம், கொஞ்சம் சர்க்காருக்கு வரியாகக் கொடுங்கள், என்று கேட்பதா! அரசியல் ஒழுக்கம் இந்த அளவுக்கு மட்டமாவதை, மக்கள் சகித்துக்கொள்ளத்தான் வேண்டுமா?

திருவிழாவிலே திருடர்களைக்கண்டு பிடிப்பதற்காகப், புதிய போலீஸ் ஸ்டேஷன் அமைத்துவிட்டு, திருடர் யாரையும்பிடிக்காமல், திருவிழா முடிந்த பிறகு, “திருட்டுச் சரக்குகளில், போலீஸ் செலவுக்காகவாவது, சக்தியானுசாரம் இந்த உண்டியில் சகலரும், பணம்போடக் கோருகிறோம், திருவிழாவிலே திருடியவர்களாக இருந்த போதிலும், இந்தத் திருப்பணியையாவது செய்தால், ஆயிரங்கோடி நமஸ்காரம் அவர்களுக்கு” என்று அறிக்கை ஒட்டி வைப்பதா! நேரு பண்டிதரும் சர்தார் படேலுமா, இப்படிக் கள்ள மார்க்கட்காரர்களிடம் சரணாகதி அடைவது? அவர்களா, மங்கம்மாளைத் தங்கம்மாளாக்குவது! படேல் கூறுகிறாரே, அவரைச் சர்தார்என்று புகழும் பலகோடி மக்களை, மன்னார்சாமிகள் என்று எண்ணிக்கொண்டு புதியதொழிற்சாலைகளுக்குப் பணம் தேவை—மூலதனம் தேவை—முதலாளிகளே! மூலதனம் போடுங்கள்! தயங்கவேண்டாம்! பணம் போடும்போது, சர்க்கார் பாய்ந்து வந்து, இவ்வளவு பெருந்தொகை ஏது உன்னிடம், கணக்குக் காட்டாமல் எப்படி ஒளித்துவைத்திருந்தாய் என்று மிரட்டாது, சொந்தப்பெயரில் பணம் போட்டால் கேள்வி பிறக்கும் என்று அஞ்சுவதானால், வேறு பெயரால் போடுங்கள். கண்டனம் பிறவாது—தண்டனை கிடையாது—என்று கெஞ்சுகிறார், சென்ற கிழமை! ராஜாதி ராஜர்களை மடக்கிய தீரராம், சர்தார்! அவர் மங்கம்மாளைத் தங்கம்மாளாக்குகிறார்—தயவு செய்யுங்கம்மா என்று கெஞ்சுகிறார்.

கள்ளமார்க்கட் பணம், என்ற பெயரைக் கூட இப்போது மாற்றி, மறைந்திருக்கும் பணம், இரகசிய சம்பாதனை, என்று பேசுகிறார்கள் இந்தத்தலைவர்கள்—இனிப்போலீஸ் ஸ்டேஷன்களில, திருடர்களுக்கு, நடுநிசி உழைப்பாளி என்று பெயர் அளிக்கப்படுமோ தும்! மங்கம்மாள் தங்கம்மாள் ஆக்கப்படுகிறாள்! மாபாவி முன் மாபெரும் தலைவர்கள் மண்டியிடுகிறார்கள்! மக்களின் மனதை, மானத்தைத் துச்சமென மதிக்கிறார்கள்!! இதுதான் ராம ராஜ்யம்!!

* * *

தூக்கிலே போடுவேன்—என்று பண்டிதநேரு முழக்கமிட்டுக்கொண்டிருந்தபோதே, தன் பாதகச் செயல்களைப் புரிந்தபடி இருந்து வந்த, மங்கம்மாள், இன்று தங்கம்மாள் ஆக்கப்பட்டதனால், எவ்வளவு துணிவுடன் தன் தீயசெயலைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருவாள், என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான், மனம்பதறுகிறது. ஏன் இந்தப் புதிய போக்கு? சமூகத் துரோகிகளிடம் ஏன் பணியவேண்டும்? அவர்களைக் கண்டுபிடித்து அடக்குவது, அவர்களின் அட்டூழியத்தை அழிப்பது முடியாத காரியமா? ஆற்றலற்றவர்களா, இந்தத் தலைவர்கள்! துப்பாக்கியுடன் இருந்த துரைமார்களின் துரைத்தனத்தை எதிர்த்துப்

(10-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 27—11—49 [காஞ்சி

திருப்பார்வைக்கு!

—⊛—

'சுயராஜ்யம் ஒன்று வருகுதாம்; அங்கு சுவர்க்க போகம் கிடைக்குமாம்' என்று எதிர்பார்த்த பொதுமக்களின் ஆசை, கனவாகிவிட்டது!

'1947 ஆகஸ்டு 15-ல் பிரிட்டிஷார் நம்மிடம் நாட்டை ஒப்புவிக்க முடிவுசெய்தார்களென்றால், அது நம்முடைய கட்டாயத்தின் பேரில் அல்ல, உலகப் போரின் விளைவாகத் தங்கள் நாட்டிலும், வெளியிலும் ஏற்பட்ட நிலைமைகளை உத்தேசித்தே, வெளியேற முடிவு செய்தனர்!'

'இரண்டு வருடங்களாக, நம்முடைய நாட்டின் பொருளாதார நிலை சீர்குலைந்து விட்டது—சீர்குலைந்துகொண்டேயிருக்கிறது!'

'இவ்வளவுதான் வருமானம் வரும், இதைக் கொண்டுதான் நாம் வாழவேண்டும் என்று இருக்கிற மத்திய தர வகுப்பு மக்களின் நிலை, பரிதாபமாகிவிட்டது, செலவைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்!'

'இலட்சிய வாதிகளாக, இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று கூறிவிட்டால் மட்டும் போதாது; காரியவாதிகளாகவும் இருக்கவேண்டும்!'

'கொஞ்ச நாட்களுக்கு முன்புவரை மேடைப் பிரசங்கிகளாகவும், கிளர்ச்சிக்காரர்களாகவும் இருந்தவர்கள், உருவான நிர்வாகிகளாகவும் அரசியல் திறமைசாலிகளாகவும் ஆகிவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது!'

'எல்லா விஷயங்களிலும் தலையிட்டுக்கொண்டு, ஒவ்வொரு ஊராகச் சுற்றிக்கொண்டிருப்பதைவிட, (மந்திரிமார்கள்) 'சும்மா' இருந்தாலே போதும்; அப்படியிருந்தாலே நாட்டை நோக்கியுள்ள பல தீமைகளைத் தீர்க்க உதவியதாகவும் ஆகுவார்கள்!'

'பொருளாதார விளைவுகள் பற்றிச் சிந்திக்காமலே, இம்மாகாண சர்க்கார் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்!'

'மதுவிலக்கை, அவசரப்பட்டு' ஏன் ஓரேயடியாக அமுல் நடத்த வேண்டும். படிப்படியாக, கொஞ்சங் கொஞ்சமாக, ஏன், அமுலுக்கு கொண்டுவரக்கூடாது?'

'மதுவிலக்கால் ஏற்பட்டநஷ்டம் ரூ 17 கோடி, மதுவிலக்கை அமுல் நடத்த அதிகாரிகளுக்கு ரூ 3 கோடி, ஆகமொத்தம் ரூ 20 கோடியும், விற்பனைவரிமூலம் தானே சரிக்கட்டப்படுகின்றன. விற்பனைவரி ரூபாய்க்கு அரைத்தம்படியிலிருந்து காலணாவாக உயர்ந்துவிட்டதே! இதனால், பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள்தானே!'

'குதிரைப்பந்தயத்தைஒழித்துவிடப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், காலநிலையை அனுசரித்து ஓராண்டுக்கு ஒத்திப்போட்டு விட்டார்களாம்! குதிரைப் பந்தயத்தை எடுத்தால் ரூ. 50-லட்சம் கிடைக்காது என்றதும் கொள்கைகூட ஓடிவிட்டது, முன் செய்த முடிவும் மாற்றப்பட்டது!'

* *

ஆரம்பித்து விட்டீர்களா, உங்கள் பிரசங்கத்தை, எப்பொழுது பார்த்தாலும் ஏனய்யா உங்களுக்கு இந்தப்புத்தி, எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தோம் சுயராஜ்யம், அதைக்கூட நினைக்காமல் எங்கே இருக்கிறது ஓட்டை என்று தேடிப் பார்ப்பதும், நாடியறிந்துகொண்டது போல நாளெல்லாம் பேசுவதும்! சேச்சே, என்னதான் இருந்தாலும், இப்படியெல்லாம் பேசக்கூடாதய்யா! எடுத்ததற்கெல்லாம், தூற்றுவதா, கையாலாகாதவர்கள், எல்லாவற்றையும் கெடுத்து விட்டார்கள், முன்னொன்று சொல்லிபின்னொன்று செய்பவர்கள், முரண்பாடு நிரம்பியர்கள், முதிர்ந்த 'ஞானம்' இல்லாதவர்கள், சுற்றிவரவே இலாயக்குள்ளவர்கள், என்று! கேட்கத் தோன்றலாம், தேசியத் 'திரு' நண்பர்களுக்கு, நாம் மேலே தந்திருப்பதைக் கண்டதும். புயலெனச் சீறவும், புலியெனப் பாயவும், கேலி செய்யவும், கெட்டதுகள் இதுகள், எப்பொழுதும் இந்த 'வேலை'தானே, வேறென்ன தெரியும் என்று தூற்றவும் தோன்றலாம்! திராவிட இயக்கத்து ஆட்களுக்கே இந்தத் திருப்பணி தானய்யா, 'அரசாங்கம் என்றால் என்னவோ இவர்கள் வீட்டு அடுப்பங்கரை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதையெடுத்தாலும், இந்தச் சர்க்கார் நல்லது செய்யவில்லை, நலன் நாடும் வழி தெரியவில்லை, என்று பேசித் திரிவதும், ஏசி வாழ்வதுமே இவர்கள் பிரச்சாரமாகிவிட்டது! எவ்வளவு 'இக்கட்டு' எங்களுக்கு, இதைச் சிறிதாவது சிந்திக்கக் கூடாதா, இவர்கள், துவேஷக் கூட்டம் தானே, தூற்றத்தானே கற்றுக்கொண்டிருக்கிறார்கள், போற்றுவதுதான் அவர்கள் அகராதியிலேயே கிடையாதே என்று சினங்கொள்ளவும், சீறிப் பேசவும் துவங்கலாம், காங்கிரஸ் தோழர்கள்.

மேலே நாம் தந்திருக்கும், அத்தனை அழகான 'சர்டிபிகேட்' அளித்திருப்பவர் சாதாரணமானவரல்ல; நாம்தான் குறைகள் கண்டு பிடிப்பதே தொழிலாகக் கொண்டவர்களாயிற்றே, அவர்கள் கருத்துப்படி; அப்படி, குறைகள் கண்டு பிடித்துக் கூறியவருமல்ல, காங்கிரஸ் பக்திகொண்டவர், காந்தியாரைப் போற்றுவதில் பொன்னான எழுத்துக்களால் அர்ச்சிப்பதில் ஆவல் கொண்டவர், தேசிய சர்க்காரின் திருத்தொண்டுகளை ஒன்றுக்குப் பத்து மடங்காக ஊருக்குச் சொல்லும் 'பிரச்சாரப் பீரங்கி' யொன்றை நடத்துபவர், மாகாணத்தில் உள்ள பெரியதெனக் கருதப்படும் தேசிய தினசரியின் ஆசிரியர், இந்திய ரிசர்வ் பாங்கியின் பொறுப்பான டைரக்டர் பதவி வகிப்பவர், பொருளாதாரத்தை எடுத்துச் சொல்வதில் இவரது திறமை யாருக்கு வரும் என்று போற்றப்படுவர், தந்திருக்கிறார், நாம் மேலே குறிப்பிட்டவைகளை! காடு மேடு சுற்றி, கஷ்டப்பட்டுவருகிறோமேஒவ்வொருநாளும்ஒவ்வொரூராக, அவ்வளவு கஷ்டமோ, சஞ்சலமோ அனுபவிக்காமலே, தனது எண்ணத்தை எழுத்துக்களால் பலரிடையே பரப்பக் கூடிய, இடத்திலே இருப்பவர், மவுண்ட்ரோடு 'மன்னர்' சுதேசமித்திரன் ஆசிரியர் தோழர் சி. ஆர். சீனுவாசன் கூறியிருக்கிறார்,

சுயராஜ்யத்தால் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை.

இரண்டு வருடங்களில் பொருளாதார நிலை மோசமாகிவிட்டது.

மேடைப் பிரசங்கிகளாக இருந்த காங்கிரஸ்காரர்களால் எப்படி முடியும் ஆட்சி நடத்த.

ஊர் சுற்றத்தான் இலாயக்குள்ளவர்கள்! உணர்ந்து ஆட்சி நடத்தத் தெரியாதவர்கள்.

மதுவிலக்குக்கு ஏன் இவ்வளவு அவசரமும், ஆசையும்!

முன்னொன்று மொழிவதும் பின்னொன்று செய்வதுமான பிரசங்க பூஷணங்கள்!

என்று, இன்றைய ஆளவந்தார்களின், அலங்கோல நிலைமைகளை, நாம் கூறுவதற்குமேலாகவே, கடந்த வாரம் லயோலா கல்லூரி மணவர்களிடையே பேசுகையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். அவரா? என்றுகூட, ஆச்சரியமும் வியப்பும் தோன்றலாம்! ஆமாம்! அவரேதான் சி. ஆர். சீனுவாசனேதான், மதுவிலக்கைக் கண்டித்திருக்கிறார், படிப்படியாகக் கொண்டுவந்தால் என்ன என்று கேட்கிறார்.

ஆளவந்தார்கள் அவசரப் புத்தியுள்ளவர்கள், எதையெதையோ பேசுவார்கள், ஆனால் எதையும் செய்ய இலாயக்கில்லாதவர்கள், தெரியாதவர்கள் என்று சொல்லியிருக்கிறார்! வெள்ளையன் வெளியேறியது கூட காங்கிரஸ்காரர் நிர்ப்பந்தத்தால் அல்ல என்று வியாக்யானம் தந்திருக்கிறார்!

★

அவர் என்னென்ன குற்றங்களை ஆளவந்தார் மீது சுமத்தியிருக்கிறாரோ, அவைகளைத்தான் நாமும் இவர்கள் பற்றிப் பேசுகையில் எழுதுகையில் குறிப்பிடுகிறோம்! விற்பனைவரியை உயர்த்தலாமா, அதுமக்களைப் பாதிப்பதாயிற்றே, என்று அவர்கேட்பது போலவேதான் நாமும் கேட்கிறோம்! இரண்டுஆண்டுகளில்நாட்டின் பொருளாதார நிலை நாசமாக்கப்பட்டுவிட்டது, நல்லது நடக்கவில்லை, நலன் எதுவும் ஏற்படவில்லை என்று அவர் வீசுகிறாரே குற்றங்கள், அவைகளையேதான் நாமும் காட்டுகிறோம், இந்த ஆளவந்தார் மீது! சுற்றித் திரிபவர்கள் என்கிறார், எல்லாவற்றிலும் தலையிட்டுக் கொள்பவர் என்கிறார், இன்னதை இப்படிச் செய்யவேண்டும் என்று தெரியாதவர்கள்என்கிறார், மேடைப் பிரசங்கிகளாகயிருந்தவர்கள் தானே! எப்படி இதெல்லாம் முடியும் என்று கேலி பேசுகிறார், அவர்! இவைகளையேதான், இன்னும் சொல்லவேண்டுமானால், இவ்வளவு வெளிப்படையாக, இல்லாமல் வெகு 'நாசூக்காக' ஆளவந்தாரின் குறைபாடுகளை எடுத்துக் காட்டி வருகிறோம்.

அவர், ஒரு தேசியத் தினசரி ஆசிரியர், காரில் பறப்பவர் காங்கிரஸ் தலைவர்களுக்கு வேண்டியவர் என்பதும், நாம் நாட்டிலே திரிந்து பறந்து வருபவர்கள் என்பதும் தவிர வேறு எதுவும் இல்லை வித்தியாசம்! எனினும், அவர் காட்டிய இந்தக் குற்றச்சாட்டுகளைக் காணும், ஆளவந்தாருக்கு ஆத்திரம் எழும்பாது, ஆவேசம் பிறக்காது, தேசியத் தோழர்களுக்கும் சினமோ சீற்றமோ கிளம்பாது!

அவர் கூறியது, அரசியல் ஆலோசனைகள், என்றுகூடப் புதுவிளக்கம் தரப் புறப்படுவர், 'அவர் என்ன சாமான்யரா, இவரைப் போன்றவரா, அவருக்கு எவ்வளவு தேசபக்தி தெரியுமோ, சர்க்கார் ஒழுங்காக நடக்கவேண்டும். நல்ல பெயர் எடுக்கவேண்டும், என்ற நல்லாசையுடன் அவர் உபதேசமல்லவோ, கூறியிருக்கிறார், என்று புது வியாக்கியானம்கூடப்புறப்படும்! அவர்கூறியிருக்கிறாரே, அதே கருத்துக்களை இந்த ஆளவந்தாரைப்பற்றி கூறும்நமக்கோ தேசத்துரோகிப் பட்டம், இதுகள் எப்போதுமே இப்படித்தான் என்ற கேலி, விஷயம் தெரியாதவர்கள் என்ற விதண்டாவாதம், வீணர்கள் என்ற அபவாதம், வெத்து வேட்டுக்காரர்கள் என்று கிண்டல், இவைதான் தேசியத் தோழர்களால், நமக்குத்தரப்படும் பரிசுகள்!

இந்தச் சர்க்கார் எங்கே குற்றம் செய்கிறது, தவறிய பாதையில் எப்போது நடக்கிறது, என்று தேடிப் பார்த்து அதை வைத்துப் பிரச்சாரம் செய்து, அடுத்த தேர்தல் வந்ததும் பார்க்கிறேன் ஒரு கை, என்று கருதும் பண்பு கொண்டவர்களல்ல நாம்! ஆளவந்தார் ஆட்சியில் குறைகள் தென்படுகின்றனவா எடுத்துச் சொல்லுவோம். அல்லல் அனுபவிக்கிறார்கள் மக்கள்என்பதை எடுத்துக் கூறுவோம், என்னென்னவோ, கூறினீர்களே, எங்கள் ராஜ்யம் வந்ததும் இன்பம்மழையாகப்பொழியும், ஏழைகள் ராஜ்யமாகயிருக்கும் என்றெல்லாம்பேசினீர்களே, இன்று ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள், ஏழைகளையே மறந்துவிட்டீர்களே என்று பாதை தவறியபோது இடித்துச் சொல்லி, பயன்படும் காரியத்தைச் செய்தால் பாராட்டி, மக்கள் குறைகளைச் சொல்லும் மகத்தான பணியைச் செய்துவருகிறோம்!

ஆளவந்தாரின் அலட்சியத்தை, தவறிய போக்கை, முரண்பட்ட நடத்தையை எடுத்துச் சொல்லும் நமக்கு இவர்கள் தருவது, 144! துரோகி என்ற பட்டம்!!

சி. ஆர். சீனுவாசன்தான் என்பதல்ல, காங்கிரஸ் ஆட்சியே நீடிக்க வேண்டும், இடதுசாரிக் கட்சிகள் வளரக்கூடாது, சமதர்ம எண்ணங்கள் மலரக்கூடாது, என்று ஆசை கொண்ட வலதுசாரிக் குழுவினராக இருக்கும், பழமைப் பாதையின்மீது பக்திகொண்டவர்கள் அத்தனை பேருமே, இன்றைய ஆளவந்தார்களைக் குறைகூறுவதுண்டு. சுயராஜ்யம் வந்தபின், காங்கிரஸ் சர்க்கார் நிர்வாகம் ஏற்றபின் நாடு சீர்குலைந்துவிட்டது என்று, இடதுசாரி கட்சிகளான, புதுவாழ்வு முகிழ்க்க வேண்டும் என்று ஆசைக்கொண்ட நாம், சமதர்மக் கட்சியினர், கம்யூனிஸ்டுகள், போஸ்கட்சியினர் ஆகியவர்களெல்லாம் குறை கூறுவது போலவே, பிற்போக்குப் பீடம் அசையவும் விரும்பாதவர்கள், அரசியல் திடீர் பிரவேசிகள், சுயநலமும் சொந்த வாழ்வுமே குறிக்கோளாகக் கொண்டவர்களான டாடா, பஜாஜ், பிர்லா போன்ற பெரிய பண முதலைகள் எல்லாம் கூட இந்தச் சர்க்காரின் கேவலநிலை பற்றிக் கிண்டல் புரியவும், தவறிவிட்டார்கள் என்று எடுத்துச் சொல்லவுமான காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்!

ஆட்சியை நடத்துவதில் திறமை

யற்றவர்கள் என்று இடது சாரிக் கட்சியினர் எவராவது சொன்னால் 'தடியடி,' '144,' பேசாதே, எழுதாதே, நடிக்காதே, இத்யாதி நடவடிக்கைகள்! நாம் சொல்லுவதையே "அவர்கள்" இன்னும் ஆணித்திறமாகக் கூறினாலும் முகத்திலே ஒரு புன்சிரிப்பு, கொஞ்சம் வெட்கம்! இதுதான் இன்று காங்கிரஸ் ஆளவந்தார்களிடையே, மாகாணத்திலும் சரி, மத்திய சர்க்காரிலும்சரி, நிலவும் நிலைமை! இடதுசாரிக் கட்சிகள் சொன்னால் அவை ஏற்கக்கூடாதவை என்ற வீம்பும், இவர்களுக்கென்ன தெரியும் என்ற கேலியும், இப்படித்தான் பேசுவார்கள் என்ற அலட்சியமும்! அதே வேளையில் "பெரியமனிதர்கள்" சொன்னால், ஆத்திரம்வருவதில்லை, அப்படிச் சொல்லாதீர்கள் ஏதோ கபடுசூது இல்லாமல் கஷ்டப்படாமலா இருக்கிறோம் என்ற சமாதானப்பேச்சு!

காங்கிரஸ் ஆளவந்தாருக்கு, இடதுசாரிகள், முற்போக்கு எண்ணங்கொண்டவர்கள் என்றாலே, தீயில்தூக்கியெறியப்பட்ட பாம்பின் நிலையும், தீண்டத் தகாததைத் தீண்டிவிட்டது போன்ற பயமும் ஏற்படுகிறது. கண்ணிலே கோளாறும், கருத்திலே தெளிவின்மையும் இருந்தால்தான் பார்ப்பதெல்லாம் மஞ்சளாகவும், படுவதெல்லாம், பயமுறுத்தலாகவும் தோன்றும் என்பார்கள்.

அதுதானோ, என்னவோ, இவர்களுக்கு ஆட்சிப் பீடம் ஏறிய நாள் முதல் இன்னொரு கட்சி என்றாலே "எதிரி"க் கட்சி யென்ற எண்ணமும் எது சொன்னாலும் அதை ஏற்கக் கூடாது என்றபிடிவாதமும், முரண்பட்ட போக்கும் இருந்துவருகிறது! எனவே, நல்லது சொன்னாலும், அது பொல்லாததாகவே படுகிறது!

அவர்களைப் புகழ்ந்து மகிழ்ந்தவர், மதிப்பு வரும் என்று எண்ணுபவர், நேற்று மட்டுமல்ல இன்றும் கூட இன்னும் அவர்கள் பாதையைச் சரியெனக் கருதுபவரான 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஆட்சியாளரைக் கண்டிக்கிறார். நாம் கூறும் குற்றச்சாட்டுகளால், குறைபாடுகளால்!

மாற்றுக் கட்சி, நல்லது சொன்னால் மருட்சியும் பேசினால் பீதியும் அடையும், ஆளவந்தாருக்கு அர்ப்பணிக்கிறோம் அவரது வார்த்தைகளை! இன்றைய ஆளவந்தாரை, அவர்களது அரவணைப்பிலே இருக்கும், பிர்லாக்கள்கூடச் சமயம் வாய்த்தால் கண்டிக்கவும், கிண்டல் புரியவும் ஈடுபடுகிறார்கள். ஆனால், அதே வேளையில் இடதுசாரிக் கட்சிகள், அவைகளையே எடுத்துக் கூறினால், இந்நிலை நல்லதா என்று கேட்டால், சீற்றம் பிறக்கிறது, சிங்கம் போலப் பாய்கின்றனர்!

மங்கம்மாள் தங்கமானாள்

7-ம் பக்கத் தொடர்ச்சி

போராடியவர்கள், தமது ஆற்றலை இழந்தேவிட்டார்களா? ஏழையை வாழவைக்கவே, ஆட்சிப் பொறுப்பேற்றோம் என்று தேனொழுகப் பேசிய தேசியத் தலைவர்கள், இன்று கடைப்பிடிக்கும் கொள்கைதான் என்ன? கள்ளமார்க்கட்டில்கொள்ளை இலாபம் அடித்தவர்களிடம், கனிவு காட்டும் காரணம் என்ன? இந்தத் தலைவர்கள், சமூகத் துரோகிகளைக் கண்டுபிடித்துக் கடுந்தண்டனை தருவார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த பொதுமக்களின் நெஞ்சு எப்படிக் குமுறும், இந்தப் புதிய போக்கினைக் காணும்போது? ஆற்றல் மிக்கவர்கள் நம் தலைவர்கள், இந்த ஆள் விழுங்கிகளை அழித்துவிடுவார்கள், என்று எண்ணி,மக்கள், கள்ளமார்க்கட்காரர்களை எவ்வளவு ஏசினர், தைரியமாக இன்று அந்தக் கள்ள மார்க்கட்காரர்கள், கேலியால், தாக்குகின்றனரே, பொதுமக்களை!

* * *

உற்பத்தி பெருகவேண்டும், அதற்காவன செய்ய முன்வரவேண்டும் முதலாளிகள், தொழில் அதிபர்கள், அவர்களோ, இன்று தொழிலிலே அக்கரையற்றுக் கிடக்கின்றனர் — ஆகவே அவர்களுக்கு உற்சாகமூட்ட, தலைவர்கள் இப்போது முயற்சிக்கிறார்கள் என்று வாதாடுகிறார்கள், சிலர். உற்பத்தி பெருகத்தான் வேண்டும்—ஆனால் எந்த முறையில்? கள்ள மார்க்கட்காரர்கள் கொழுக்கும் விதமாகவா? உற்பத்தி பெருகினால் ஊர் வாழும் என்பது தானே நோக்கம்? அந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால், ஊரை அழிக்கும் கள்ள மார்க்கட் முறையல்லவா ஒழியவேண்டும்? கள்ள மார்க்கட்டில் கொள்ளை இலாபம் அடிக்கும் கயவர்கள் முன்பு கட்டியம் கூறிடும் நிலையில் நாட்டை ஆளும் தலைவர்கள் இருந்தால், எது உற்பத்தியாகும்? — பண்டமா? — அல்ல, அல்ல!—பொது நன்மையா? எப்படி வளரும்!—ஊழல் உற்பத்தியாகும்! பஞ்சம் உற்பத்தியாகும்! பாதகம் வளரும்! பாபிக்குத்தான் பாராக்குக் கூற முன்வந்துவிட்டார்களே!! இனி அவன் பயப்படவா போகிறான்? வெட்கப்படவா போகிறான்?

* * *

ஹைதராபாத் நிஜாமையும் ஜுனாகத் நவாபையும், கோலாப்பூர் மன்னரையும், ராம்பூர் அரசரையும், உருட்டு விழியால மிரட்டியவர் என்று புகழப்படும் சர்தார் படேல், தொழில் அதிபர்களைக் கூட்டி வைத்துத் துதி பாடுகிறாரே! அவர்களைத் தயவு செய்யச்சொல்கிறாரே! உங்கள் பாதையிலே சிரமம் ஏற்படாதபடி நான் பார்த்துக்கொள்கிறேன்! உங்கள் வரிப்பளுவைக் குறைக்கிறேன்-என்று உறுதி அளிக்கிறார். அந்த முதலாளிகளிடம் கொஞ்சுமொழி மட்டுமல்லவே, அஞ்சி அஞ்சிப் பேசுகிறார். உங்களிடம் நான் "பணிவாக"த் தெரிவித்துக் கொள்கிறேன், என்று பேசுகிறார். காரணம் என்ன? பரிவா? பாசமா? பயமா? இருக்கலாமா? பாட்டாளியைக் கண்டிக்கும்போது, வெடிகுண்டாகிறார்! கம்யூனிஸ்டுகளைக் கண்டிக்கும்போது அணுகுண்டு ஆகிவிடுகிறார், இந்தச் சர்தார். ஆனால் முதலாளிகளைச் சந்திக்கும்போது, முரளி வாசிக்கிறாரே! ஏன் இந்தப் பணிவு?

* * *

படேலின் பணிவு மட்டுமா! நேரு பண்டிதர், ஒரே அடியாக, "இசம்களை"யே கண்டிக்கிறார் சோஷியலிசம் (சமதர்மம்) கம்யூனிசம் (பொது உடைமை) போன்றவைகளைக் கேலி செய்கிறார்! எவ்வளவு, ஆணவம் ஏற்படும் இவருடைய போக்கைக் கண்டதும், முதலாளிகளுக்கு. தலைகாய்ந்ததுகள் — கன்

(12-ம் பக்கம் பார்க்க)

கனல்கள் சிந்தும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விளையாடும் நோக்கில், விம்முதலும் அழுகுரலும் எதிரொலிக்கின்ற வேளையில், ஆயிரக் கணக்கில் சம்பளம் பெற்ற சர்க்கார் முன்னாள் காரியதரிசிகளுக்கு இப்போது ஏன் அலவன்சு தரவேண்டும், அவசியமா, என்று கேட்டிருக்கிறார், இன்னொரு நாள், இன்னொரு உறுப்பினர்! இக்கேள்வியும், இடத்துக்குப் பொருந்தாதது என்றோ, கேட்கக் கூடாதது என்றோ கருத முடியாது!

* * *

உணவுற்பத்தி அதிகமாக்கப்பட வேண்டும், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதால் ஏராளமான பணம் — இருநூறு கோடிக்கு மேல் வீணாகிறது, எனவே நாட்டில் உற்பத்தி பெருகவேண்டும் என்று எல்லோரும், இன்று முழக்கமிட்டு வருகின்றனர். உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்றால், நிலம் செழிமையுள்ளதாக, உரம் உள்ளதாக இருக்கவேண்டும். இன்று பெரும்பாலான இடங்களில், கடலைப் பிண்ணாக்கு நிலத்துக்கு உரமாகவும் மாடுகளுக்குத் தீனியாகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. உழுது களைத்துவரும் மாடுகளுக்கும், விளைந்து சத்தற்றுப் போன வயலுக்கும் பயன்படும் கடலைப் பிண்ணாக்கோ, முன்போல இன்று கிடைப்பதில்லை—அதன் விளைவாக விவசாய மக்கள் அல்லல் படுகின்றனர். சர்க்காரின் விவசாய இலாகாவாலோ, அவர்களுக்குத் தேவையான கடலைப்பிண்ணாக்குகளைத் தர முடியவில்லை. அப்படி முடிந்தாலும், அது, வாய் வீச்சும், பண வீச்சும் படைத்த 'பெரிய' பண்ணைகளுக்கே, சரியாகப் போய்விடுகிறது!

ஆகவே, இக்குறை நீடிக்கலாமா, நீடிப்பது நல்லதல்லவே என்ற நோக்கத்துடன் உறுப்பினர் கேட்டிருக்கிறார், இந்திய சர்க்கார் கடலைப் பிண்ணாக்கை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனரோ, அதைத் தற்போது நிறுத்தி, பிண்ணாக்குத் தேவையெனத் திண்டாடுபவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யக் கூடாதா, இதை இந்திய சர்க்காருக்கு எடுத்து, இடித்துரைக்கக் கூடாதா என்று!

சமுதாயம் சாய்ந்த தராசாக இருக்கிறது, வாழும் மக்களிடையே சம நீதி நிலவவில்லை! சிலர், சிங்கார புரியிலும் பலர் மண்ணிலுமான நிலை நீடிக்கிறது! சந்தர்ப்பத்தால் உயர்ந்த சிலர், அறிவுத் துறையில் வாழ்க்கைத் துறையில், வெகு வேகமாக முன்னேறி விட்டனர்! பிற்பட்டவர்களாக ஆன—ஆக்கப்பட்ட—மக்களுடைய, வகுப்பினருடைய வாழ்விலோ இன்னும் வளம் ஏற்பட முடியவில்லை.

> ## கழக நிதிக்கு நாடகங்கள்
>
> டிசம்பர் 24, 25, தேதிகளில் தூத்துக்குடியில் திராவிட முன்னேற்ற கழக நிதிக்காக "சந்திர மோகன்" "நீதி தேவன் மயக்கம்" என்ற நாடகங்கள் நடைபெறும்.
>
> 26-ந்தேதி விருதுநகரில் "சந்திரமோகன்" கழக நிதிக்காக நடத்தப்படும்.
>
> "சந்திரமோகன்" நாடகத்தில் நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, நடிப்பார்.
>
> சி. என். ஏ. உள்பட இயக்கத் தோழர்களும் நடிப்பார்கள்.

வக்கீல்களும், டாக்டர்களும், பட்டதாரிகளும், அரசியல் வாதிகளும், வாழத் தெரிந்தவர்களும் முன்னேறிவிட்ட "சிலர்" கூட்டத்தில் ஏராளமாக இருக்கின்றனர்! காத்தான், முத்தன்,முருகன், முனியன் ஆகியவர்களைக்கொண்ட தாழ்த்தப்பட்ட சமுதாயமோ, தாமரையிலைத் தண்ணீராக, வளம் அற்ற பாலையாகக் கிடக்கிறது. இங்கும் வளமும் வாழ்வும் ஏற்படவேண்டுமென்றால், மண்ணிலே கிடப்பவர்களின் மனதிலே கல்வி மணம் வீசவேண்டும்.

கல்வி நீரோடை பாய்ச்சப்பட வேண்டும் வளமற்ற பாலைக்கு இக்கருத்தின்மீதே வகுப்பு நீதி வழங்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை, இங்கு, இருந்து வருகிறது. வெளிநாட்டுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டாரே மாணவர்,அவர், இந்தமுறையை அனுசரித்துத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டாரா என்று கேட்டிருக்கிறார் ஒரு உறுப்பினர், ஆவலுடன், ஆளவந்தார்களைப்பார்த்து, வாழ்ந்து இன்று வீழ்ந்துகிடக்கும் ஒருமாபெரும்சமுதாயத்துக்கான நீதி வழங்கப்படுகிறதா என்று அறியும் ஆசையுடன்!

* * *

நாட்டுமக்களின் நலனில் அக்கரை கொண்டவர்களின் இதயத்திலிருந்து எழும்பிவந்தவைகள் தான் இந்தக்கேள்விகள். இவைகளைச்சட்டசபையிலேயே, மந்திரிகளை நோக்கிக் கேட்டிருக்கிறார்கள், பாலையில்கூட சிலவேளைகளில் மழை தூறுமாமே, அதுபோல! இந்தக் கேள்விகளைக் கண்ட ஆளவந்தார்களோ, பதில் சொல்லியிருக்கின்றனர். அந்தப்பதிலில், வழக்கம்போல இருக்கும், வறண்டநிலையோ, கிண்டல்பேச்சோ இல்லை! சலிப்பு, சஞ்சலம், வேதனை ஆகியவைகளைக்கொண்ட கண்ணீர்த் துளிகள் இருந்திருக்கின்றன, கேள்விகளுக்கு அவர்கள் அளித்துள்ள பதில்கள்,

தினம் தினம்தான் இதுபோலத் தூது செல்கிறோமே, நாங்கள்!

அலவன்சு தருமாறு இந்தியசர்க்காரால் பலவந்தப்படுத்தப்பட்டோம்!

ஏற்றுமதியை நிறுத்துமாறு கோரினோம்; மத்திய சர்க்கார் ஒப்பவில்லை!

ரேவினியு போர்டு மெம்பர் ஒருவர், கல்வியிலாகா டைரக்டர், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர் ஆகியோரடங்கிய ஒரு கமிட்டியை நியமித்தோம், வெளிநாட்டிற்கு அனுப்ப மாணவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு! அவர்கள் சமர்ப்பித்த நான்கு மாணவர்களின் பெயரில் இரண்டாவது இருந்த பிற்பட்ட வகுப்பு மாணவர் பெயரையே சிபார்சு செய்தோம். ஆனால் அவரை நிராகரித்துவிட்டு, அவருக்குப் பின் இருந்த 'சீனுவாசனையே' இந்திய சர்க்கார் அனுப்பியுள்ளது!

கேட்டோம் மறுத்துவிட்டனர், கூறினேம் நிராகரித்தனர், சிபார்சு செய்தோம் அதற்கு மதிப்பில்லை என்பதாக ஒரே வேதனை நிறைந்ததாக இருக்கிறது.

அவர்கள் பதில்களைக் காணும் பொழுது, உண்மையில், வேதனையும் அதைவிடப்பன்மடங்கு வெட்கமுமே நம்மைத் தாக்குகிறது.

* * *

நான்கு கோடி மக்களை ஆளுகின்ற ஒரு சர்க்கார், நிலவளமும் நீர்வளமும் செறிந்து விளங்கும் ஒரு நாட்டை நிர்வகிக்கும் அரசாங்கம், மூன்று பக்கமும் கடல்—உள் பிரதேசமெல்லாம் நெற்களஞ்சியங்கள் என்று போற்றப்படுகிற ஒரு திருநாட்டின் ஆட்சி, தனது வருமான வாய்க்கால்களை மத்திய சர்க்கார் என்ற கழனிக்குத் திறந்துவிடும் ஒரு சர்க்கார், விடுத்த வேண்டுகோள்களை, கோரிக்கைகளை, யோசனைகளை, சிபார்சுகளை இந்திய சர்க்கார் நிராகரித்துள்ளனர்.

இந்த நிலையை நினைக்கும்போது, நெஞ்சம் துடிக்கவேண்டாமா! வெளிநாட்டுப் படிப்புக்கு அனுப்பிவைக்க மாகாணசர்க்கார், ஒரு மாணவனைத் தேர்ந்தெடுத்தால், அவனை அனுப்ப அனுமதிக்காது "ஏதோ" காரணத்தால், "சிலரை"ச் சேர்ந்தவர்களில் ஒருமாணவனை அனுப்பிவைக்கிறது, இந்திய சர்க்கார்!

ஒரு பெரிய மாகாண சர்க்காரின் மக்கள் நலன் குறித்த யோசனைகளை மத்திய சர்க்கார் மதிக்கவில்லை! கௌரவிக்கவில்லை! உதாசினம் செய்கிறது! தன் இஷ்டப்படி, தனக்கு எது நன்மையோ அதைச் செய்கிறது! மாகாண நலனில் அக்கறை கொண்டோர் செய்யும் ஏற்பாடுகளை "சிலர்" தனக்கு வேண்டியவர்களாக இருப்பதால், அவர்களை அணைத்து மகிழ்விப்பதில் ஆர்வம் காட்டுகிறது! இது சரியா, நேர்மையா, நீதிப்பாதையை, நன்னேக்கு நாடும் தன்மையா,—சிந்திக்கவேண்டுகிறேம், மத்தியசர்க்கார் சுரண்டல்பீடம், அதனுல் மாகாண மக்களுக்கு நலன் ஏற்படமுடியாது என்று கூறினுல் நம்மிடம் சீறிப்பாயும் நண்பர்களை!

கேள்விகளுக்கு தரப்பட்ட பதில்கள், வெறும் பதில்களல்ல; சட்டசபையிலே, நமது "கனம்"கள் சிந்திய "கண்ணீர்"தான் அவை! ஆனுல், இவை, இன்று, வெளிப்படையாகத் தெரியமாட்டா, இப்போதுதான் உள்ளம் உருகும் படலம் ஆரம்பமாகியிருக்கிறது, போகப்போக வளரத்தான் செய்யும் இந்தக் கண்ணீர் சிந்தும் காண்டம்!.

—❋—

மங்கம்மாள் தங்கமானுள்
10-ம் பக்கத் தொடர்ச்சி

னம் குழி விழுந்ததுகள்—அன்னக்காவடிகள்தான், சோஷியலிசம், கம்யூனிசம் என்று, 'இசம்களை'ப் பற்றிப் பேசுவர், ஆசிய ஜோதியின் பேச்சைக் கேட்டீர்களா, அமெரிக்காவின் செல்லப் பிள்ளையின் அறிவுரையைக் கேட்டீர்களா?—"இசம்கள்" .பேசாதீர், என்று இடித்துரைக்கிருர். — என்றல்லவா இறுமாப்புடன் முதலாளித்வம் பேசும். முதலாளித்வத்தை யாருடைய ஆற்றல் முறியடித்துத் தீரும் என்று பொதுமக்கள் நம்பிக் கொண்டிருந்தனரோ, அதே ஆற்றலா இன்று, முதலாளித்வத்துக்கு ஆலவட்டம் வீசப் பயன்படுவது? "இசம்கள்"!—எவ்வளவு கேலிக்குரிய சொற்களாகிவிட்டன, புது உலகத் திட்டங்கள்!! இந்த "இசம்கள்", பாரைக் குலுக்கிய மாபெரும் சக்திகள் என்பதை மறந்தார் பண்டிதர். கேலி பேசுகிருர்! முதலாளிகளின் காது குளிரப் பேசுகிருர்! தங்களுக்குக் கிடைத்த புதிய வக்கீல் என்று, பண்டிதரை முதலாளிகள் கருதுவதிலே என்ன தவறு? இலட்சியவாதிகள், புதியதோர் உலகு காண, இந்த "இசம்களை" நம்பிக்கொண்டுள்ளனர். மணிமுடி, ஜெபமாலை, இரும்புப் பெட்டி, எனும் ஆதிக்கக் கருவிகளை நொருக்கி, மக்களின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுத்திய "இசம்கள்" இன்று, கேலிக்குரியனவாகி விட்டன. டாட்டாவும் பிர்லாவும் டால்மியாவும் அழகப்பாவும் "இசம்களை"க் கண்டிக்க முடியாது என்று அஞ்சிக் கொண்டிருக்கும் வேளையில், பண்டிதர் துணிவுடன் கண்டிக்கிருர் "இசம்களை"!

* * *

"பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர்கள் ஆகின்ருர்கள். ஏழைகள் ஏழைகளாகவே இருக்கிருர்கள், அல்லது இன்னும் அதிக ஏழையாகிருர்கள். இவ்வாறு ஒரு பக்கத்தில் செல்வமும் இன்னெரு பக்கத்தில் வறுமையும் ஒரு சமயத்தில் வளர்ந்து வருகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பூசல் நிகழ்வதை நாம் வழக்கமாகக் காண்கிருேம். மனிதர்கள் எவ்வளவுதூரம் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு போகிருர்கள் என்பதை நினைக்கும்போது நமக்கு ஆச்சரியம் உண்டாகிறது. ஆனுல் அந்தப்பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. அந்த எல்லை கடந்துவிட்டால் புரட்சி தான்."

* * *

1—7—32-ல் பண்டிதநேரு, தம் அருமைப் புதல்விக்குத் தீட்டிய கடிதத்தில் உள்ளவை, மேலே உள்ள அறிவுரைகள். அவர் அப்போது விடுதலைப்போர் வீரராக, ஏகாதிபத்யத்தின் கொடுமையை எதிர்க்கும் தீரராக இருந்தார். சிறையிலே இருந்தபடி தன்செல்வக் குமரிக்குக் கடிதம் தீட்டினுர் — தீப்பொறி காணலாம், அந்தக் கருத்துக்களில். அந்தக்கடிதங்களின் தொகுப்பு நூலாக வெளிவந்தபோது, இலட்சிய உலகம் ஆர்வத்தால் துள்ளிக் குதித்தது, இளைஞர் உலகு எழுச்சியால் உந்தப்பட்டது. இந்த நேருவிடம் நாட்டை ஆளும் பொறுப்புத்தரப்பட்டால்,...........என்று எண்ணி இன்பக்கனவுகள் கண்டனர் எண்ணற்ற இளைஞர்கள். இன்று அதே பண்டிதர், ஆட்சிப்பீடத்தில் இருக்கிருர். அவருக்காக உயிரையே அர்ப்பணம் செய்யத்தயாராக இருக்கும் வாலிபப்படையும் இருக்கிறது! எனினும், அவர் பேசுகிருர், "இசம்கள்" கூடாது என்று — அவர் கனிவுடன் பேசுகிருர், கள்ளமார்க்கட்காரர்களே, கணக்குக்கூடக் காட்ட வேண்டாம், வரி கட்டினுல்போதும்—வழக்கு இராது, என்று—அவர், மங்கம்மாளைப் பிடித்திழுத்து வந்து தண்டிப்பார், மக்களை வாழவைப்பார் என்று எண்ணினர். அவரோ, மங்கம்மாளைத் தங்கம்மாளாக்குகிருர்!

☆

மங்கம்மாள், தங்கம்மாளான கதை!

மங்கம்மாள், தங்கம்மாள் ஆகிவிட்ட கதை இது. பெயர் மாறிவிட்டதற்கு ஒரு கதையா? என்று கேட்கத் தோன்றும். பெயர் மட்டுமல்ல, மாறியது—அத்துடன் நிலையும் மாறிவிட்டிருக்கிறது—சூட்சமமும் சுவையும் அதிலேதான் இருக்கிறது.

மகா பாபி! குடிகேடி! குலத்துரோகி! மானங் கெடுத்தவள்!—இவ்விதமாக வெல்லாம் இழித்தும் பழித்தும், பேசப்பட்டு வந்த மங்கம்மாள், தங்கம்மாளாக்கப்பட்டுவிட்டாள், என்ருல், சாமான்யமான விஷயமா! மங்கம்மாள், மாதா மனம் நோக, நடந்துகொண்டவள்—மாபாதகம் புரிந்தவள்—மனையை விட்டு வெளியேறியவள்.

அவளைக் கண்டுபிடிக்க, எடுத்துக் கொண்ட முயற்சி எல்லாம் வீணுயிற்று.

எங்கெங்கு தேடினுலும், கள்ளி, சிக்குவதில்லை — சிக்கிவிட்டாளெனில் பிடித்து இழுத்துவந்து, சாவடியிலே நிறுத்தி, அவளுடைய குற்றத்தை விசாரித்துக் கடுந்தண்டனை தரவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போதே, சாகசக்காரி, நழுவிவிடுவாள்—மறைந்துவிடுவாள்! அவளைக் கண்டுபிடித்து இழுத்து வர, எட்டு திக்கும், 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்ற போக்குடைய வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர். துப்பறிபவர்கள் வேலை செய்தனர்—துரோகியைக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள், தூக்கிலே தொங்கவிடுகிறேன், என்று ஊரின் காவலன், முழக்கமிட்டான்.

மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினர், மங்கம்மாளை! அவளோ, தலைமறைவாகவே இருந்தாள்!! அதோ அந்தச் சோலையிலே யாரோ உலவுவது தெரிகிறதா? மங்கம்மாள் தானே! இருக்கும், இருக்கும்! ஓடு, ஓடு, விடாதே, பிடி!—என்று சிலர் கூறுவர், சிலர் ஓடுவர் பிடிக்க—ஒய்யாரி தப்பித்துக் கொள்வாள்.

சத்தம் செய்யாதே! கேட்கிறதா, வளையல் ஒலி! மங்கம்மாளின் வளையல் ஒலிதான்! பேசாமல் வா,—பூந்தோட்டம் போய்ப் பார்க்கலாம், பிடிபடுவாள் பாதகி—என்று கூறிக் கிளம்புவர் வளையல் ஒலி நின்றுவிடும், வழுக்கி விழுந்த வனிதை கிடைக்கமாட்டாள்.

அவளைத் தேடாத இடமில்லை! பிடிக்க, படாத பாடு பட்டாகிவிட்டது. அவளோ, அங்கே உலவினுள், இங்கே பேசினுள், அந்த இடத்தில் பாடினுள், இன்னேரிடத்தில் ஆடினுள், என்று அடிக்கடி 'தகவல்கள்' கிடைத்திடுமே தவிர, சிக்கமாட்டாள்.

ஊரின் காவலனின் கோபம் வளர்ந்தது. ஊராரின் கோபமும் வளர்ந்தது. மங்கம்மாள், செய்த குற்றம், அந்த ஊருக்கே இழிவைத் தரக்கூடியது.

மக்களின் மனம் கொதித்தது. மன்றங்களிலே, மங்கம்மாளின் நடவடிக்கை பலமாகக் கண்டிக்கப்பட்டது. அந்த மாபாவியால், மண்டலத்துக்கே கேடு சூழ்கிறதே, என்று பலரும் சோகித்தனர். அவளோ, தலைமறைவாகவே இருந்தாள்!

ஓராண்டாயிற்று, ஈராண்டுகளாயின, மங்கம்மாள் பிடிபடவில்லை!!

பிறகுதான், ஒரு விசித்திரமான, ஆனுல் வேதனை தரக்கூடிய சம்பவம் நேரிட்டது.

ஊரின் காவலன், குடிகேடி என்றும், துரோகி என்றும், மகாபாதகி என்றும், எந்த மங்கம்மாளைக் கண்டித்துப் பேசி, அவளை இழுத்து வாருங்கள் தூக்கிலே தொங்கவிடுகிறேன், என்று கர்ஜனை புரிந்தாரோ, அவர்—அதே மங்கம்மாளை, தங்கம்மாள் என்று அழைக்க ஆரம்பித்தார்.

தவறு செய்தாலும், தங்கம்மா, பரவாயில்லை, நீ தலைமறைவாக இருந்தது போதும், இன்னும் எங்களைத் தவிக்கச் செய்யாதே, ஊருக்கு வந்துவிடு, உன்னைப் பிரிந்திருக்க மனம் இடம் தரவில்லை,—என்று கனிவுடன், மனுக்கள் தயாரித்து, மடம், சாவடி, சத்திரம், இங்கெல்லாம், தொங்கவிடச் சொன்னுர். மக்கள், திகைத்தனர்!

"தங்கம்மாள், தன் ஊர் திரும்பி வந்து சேர்ந்தால் போதும்—எங்கே ஒளிந்துகொண்டிருந்தாள் — என்ன செய்துகொண்டிருந்தாள் — என்று கூட விசாரணை நடத்தமாட்டேன், வீடு திரும்பி வந்தால் போதும்—கண்டிப்பார்களோ, கேலியாகப் பேசுவார்களோ, என்று அஞ்சிக் கொண்டிருக்கத் தேவையில்லை—மங்கம்மாள் என்பது பழைய பெயர்—அதை மறந்து விடுகிறேன்—அவளுடைய முன்னுள் போக்கையும் மன்னித்து விடுகிறேன்—மங்கம்மாள் இனித் தங்கம்மாள்! தயவு செய்து, ஊர் திரும்பி வரவேண்டும்"—என்று ஊரின் காவலன் உருக்கமான வேண்டுகோள் தயாரித்து, ஊரெல்லாம் சென்று இதனைப் பாடும்படி, ஏவலாளர்களை அனுப்பினுன்.

மக்கள், இந்தப் புதிய போக்குக் கண்டு மருண்டனர்! மாபாவி மங்கம்மாளை, ஏன் தங்கம்மாள் என்று இப்போது கனிவுடன் ஊரின் காவலன் அழைக்கிருர்!

காதகியாயிற்றே அவள்—மக்கள் மனம் பதறப் பதற நடந்துகொண்டாளே, அவளைத் தங்கம், என்கிருரே, தழதழத்த குரலில்—ஏன்? என்று மக்கள், எண்ணி எண்ணித் திகைத்தனர்.

அவள் நிரபராதி என்று ஏதாவது ஆதாரம் கிடைத்ததா? இல்லை! குற்றவாளியே, அவள்! எனினும், அவளைக் கூண்டிலே தள்ளுவேன், கழுமரம் ஏற்றுவேன் என்று கொக்கரித்தவர், திடீரென்று, அவளை, தங்கமே! வா! என்று அழைக்கிருர்!

அவளோ, ஊரை ஏய்த்துத் திரிந்தவள்—தலைமறைவாக இருப்பவள்!

மங்கம்மா—என்ற பெயரைக்கேட்டாலே, சகலரும், வெறுப்பர்—கண்டிப்பர் — அவளை — தங்கம்மாள் ஆக்கிவிட்டார், ஊரின் தலைவர்! ஊராரின் உள்ளத்திலே, பெரும் வேதனை! "விவரமறியாத மக்களே! கொக்கரித்தீர்களே முன்பு! கூவினீர்களே, அந்தக் குடி கேடியைக் கொண்டுவாருங்கள், குடலை அறுக்கிறோம் என்று! நாசக்காரி என்றீர்கள்! மோசக்காரி என்றீர்கள்! நாயே, பேயே, என்றெல்லாம் ஏசினீர்கள்! சூரப்புலிகளை ஏவினீர்கள் என்னைப் பிடிக்க! என்னைத் தொங்கவிடத் தூக்குமரம் தயாரித்தீர்கள்! கடைசியில், என்ன நடைபெற்றது? வெற்றி யாருக்குக் கிடைத்தது? என்னைக் கண்டுபிடிக்கும் திறமையோ, உங்களுக்கு இல்லை! என் சாகசத்திற்கு உங்கள் சக்தி எம்மாத்திரம்! துடித்தீர்கள்—பதைத்தீர்கள்! இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? மகா பாவி மங்கம்மாள்!—தீப்பொறிபறக்கக் கூவினீர்களே, அப்படி! இப்போது நான் மங்கம்மாள் என்றல்ல, மன்னார் சாமிகளே! தங்கம்மாள் என்று உங்கள் தலைவரால் அழைக்கப்படுகிறேன்!! வெட்கமும் வேதனையும் உங்களுக்கு! வெற்றியும் மகிழ்ச்சியும் எனக்கு!! நான், தங்கம்மாள் ஆகியிருக்கிறேன். ஊர்த்தலைவர், தயவுசெய்து வாடி அம்மா, தங்கமே!—என்று அழைக்கிறார், என்னை! வந்தால், விசாரணை கிடையாது. நாக்கை, யாரும் வளைக்கக்கூடாது! வந்தால் போதும், என்கிறார். இப்போது என்ன சொல்கிறீர்கள்? வாய்ப்பறை அறைந்தீர்களே முன்பு! வெற்றி யாருக்கு! மங்கம்மாள், தங்கம்மாளாகிவிட்டாள்!"—என்று எங்கிருந்தோ, எக்களிப்புடன் அவள் பேசுகிறாள். ஊரார், வெட்கித்தலை குனிகிறார்கள்! நிலை உயர்ந்து விட்டது—குடி கெடுத்தவளுக்கு!! இப்போதும், அவள், 'வருவதும் வாராததும் என் இஷ்டம்' என்று கூறுகிறாள்.

ஊர்க்காவலன், முன்பு, பிடித்து இழுத்து வாருங்கள் 'கள்ளியை', என்று கூவுவார்.

இப்போது "எங்களைத் தவிக்கச் செய்தது போதும், தங்கம்மா, தயவு செய்து, வீட்டுக்கு வா!" என்று கெஞ்சுகிறார்.

அவளோ, ஊரைக்கெடுத்தவள்!

எனினும், அவள் நிலைமாறி விட்டது—பெயரும் மாறிவிட்டது!

மங்கம்மாள், தங்கம்மாளாகி விட்டாள்!

* * *

இது எந்த ஊரில் நடைபெற்றது! இப்படியும் ஒரு மாற்றம் ஏற்படலாமா? மக்கள் எப்படிச் சகித்துக் கொண்டனர்?-என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேட்கத் தோன்றும். பதறுதீர்கள், நண்பர்களே! நம்ம ஊர்ச்சேதிதான் நான் கூறினது. கோபமா? சரி! கேளுங்கள், சேதியை மேலும்.

* * *

பண்டங்களின் விலை விஷம்போல ஏறுவதும், பண்டங்கள் கிடைக்காமல் மக்கள் திண்டாடுவதும், சர்க்கார் குறுக்கிட்டு விலையை நிர்ணயம் செய்வதும், ஆனால் அந்த விலைக்குப் பண்டம் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுவதும், அதிக விலை கொடுத்தால், 'கள்ள மார்க்கட்டில்' பண்டம் கிடைப்பதும், பண்டம் பெறவேண்டிய நிர்ப்பந்தத்திற்காக, மக்கள் அதிக விலை கொடுப்பதும், அதனால் கள்ளமார்க்கட் மூலம் சிலர்கொள்ளை இலாபம்அடிப்பதும், மக்கள் அவதிப்படுவதும், சிலரிடம் ஏராளமான பணம், கணக்கு வழக்கின்றிக் குவிவதும்,—கடந்த நாலைந்து ஆண்டுகளாக நாட்டிலே நடைபெற்றுவருவதை அறிவீர்கள். முன்பு வங்காளத்திலே பல இலட்சம் மக்கள் பிணமாயினர் இந்தக் கள்ள மார்க்கட்காரர்களின் கொடுமைக்கு ஆளானதால்! இப்போது கோடிக்கணக்கான மக்கள் தேய்ந்து, தேம்பித் திகைத்துக்கொண்டிருக்கின்றனர் இந்தக் கள்ள மார்க்கட்காரர்களால். பலநூறு கோடி ரூபாய்கள் இருக்குமாம், கள்ள மார்க்கட்காரர்கள், அடித்த கொள்ளை! ஏழையின் வயிறு எரிய எரிய, வாழ்வு பாழாகப் பாழாக, இவர்கள், பண மூட்டைகளைச் சேகரித்துக் கொண்டுள்ளனர்.

இவர்களின் சூது, சூதறியா மக்களின் வாழ்வையே சூறையாடிற்று! மக்களின் அவதி அதிகரித்தது. அப்போது, கள்ளமார்க்கட்—திருட்டு வியாபாரம் — கொள்ளை இலாபம்—ஆகியவைகளுக்கு, மக்களிட்டபெயர், 'மங்கம்மாள்' என்பது! நூலின் விலை, கடையில், எவ்வளவு? மங்கம்மாவில் எவ்வளவு விலை? நாலு மூட்டை அரிசிவேண்டும், மங்கம்மாவிலே கிடைக்குமா, பாரப்பா? புது மாடி வீடு கட்டுகிறானப்பா சோணாசலம்! மங்கம்மா தயவு! — என்று இவ்விதம் பேசுவர், மக்கள்.

* * *

'மங்கம்மாள்' என்றால் கள்ளமார்க்கட் சரக்கு, கள்ளமார்க்கட்டில் கிடைக்கும் கொள்ளை இலாபம்—என்று பொருள்!

* * *

இப்படிப்பட்ட 'மங்கம்மாள்' அதாவது, கள்ளமார்க்கட் பணம், ஊரைக் கெடுத்து, ஏழையை வதைத்து, அடித்த கொள்ளை. இதனால் அவதிக்கு ஆளானவர்கள் பல கோடி மக்கள். 'மங்கம்மாளை' மாபாவி, குடிகேடி, என்று கண்டித்தனர் மக்கள்—நேரு, பட்டேல் போன்ற தலைவர்கள், பலமாகக் கண்டித்தனர்—கள்ள மார்க்கட் முறையை ஒழித்தே

(7-ம் பக்கம் பார்க்க)

15-ம் பக்கத்தொடர்ச்சி

அட்லாண்டிக்பிரதேசங்களல்லாத பிறபலநாடுகளையும் தங்கள் வரிசையிலே நிற்கவைக்க வலைவீசுகின்றன முதலாளித்துவ நாடுகள்! அந்தந்த நாட்டின் தலைவர்களை எல்லாம் ஒவ்வொருவராக அழைத்து விருந்தும் வேடிக்கையும் காட்டி வானளாவப் புகழ்ந்துபேசி தங்கள் பக்கம் இழுக்கிறார்கள்! அவர்களும் வலையில் வீழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அண்மையில் அமெரிக்கப் பேச்சொன்றில் பண்டிதநேரு அவர்கள் கூறியதுபோல் உலகிலே ஒன்று முதலாளித்துவம் வெற்றிபெறவேண்டும் அல்லது பொதுவுடைமை வெற்றி பெறவேண்டும்! அதாவது, இரண்டில் ஏதாவது ஒன்று அழியத்தான் போகிறது! அழிவது எது என்பதை உலகப் போக்கை உணரும் நாம் அறிய முடியாதவர்களல்ல!

அட்லாண்டிக் முகாம்

"இளந் தமிழன்"

இன்றையஉலகம் புரட்சிப் பாதையில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்களின் உரிமைப் போர் முழக்கங்கள் முழங்கியவண்ணம் இருக்கின்றன. இதைக் கண்டு ஆதிக்க வெறியர்கள் அச்சம் கொள்வதில் ஆச்சரியம் இல்லை.

கடந்த இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பின் ஒவ்வொரு நாடும் முன்னேற்றப் பாதையில் நடக்கவும், அடிமையாக இருந்த மக்கள் சுதந்திரப் பேருணர்ச்சி பெற்று பெரும் போராட்டங்கள் பல நடத்தி நல்வாழ்வை தேடுவதையும் காண்கிறோம். இதைக்கண்டு கலக்கம்அடைகிறார்கள் காட்டுராஜ தர்பார் பூபதிகள்!

உறங்கிக்கொண்டிருந்த பிரஞ்சு மக்கள் உரிமைப் புரட்சி செய்த நாள் முதல், இரஷ்ய இலட்சியப் போராட்டங்கள் நடந்தது முதல், சீனப் பாட்டாளிகளின் பெரும் போராட்டங்கள் வரை, முதலாளித்துவ நாடுகள் முன்னேறும் மக்களரசு நாடுகளின் மீது நல்லெண்ணத்தோடு பார்வையைச் செலுத்தியதில்லை. ஆனால் இன்று இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பிறநாடுகளைச் சுரண்டி வாழும் நாடுகள் விழிப்படைந்த நாடுகளின் மீது வீண் பழியும் குரோதமும் கொள்வதையே தன் கொள்கையாக வைத்திருக்கிறது.

உலக சமாதானத்திற்கும், உலக மக்களின் நல் வாழ்விற்கும் வழி காட்டவென்று உதயமாகிய ஐக்ய நாடுகளின் சபை உலக வல்லரசுகளின் பெரும் வாய்ப்போர் வம்புச் சபையாகத் திகழுகிறது! பொதுவுடைமை விரும்பும், ரஷ்யா முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா பிரிட்டன், இவைகளின் வம்புப் பேச்சைவிட வேறுஅதிகமான விவாதத்தைக் காண்பதற்கில்லை அங்கே.

இந்த நிலையில் அமெரிக்கா அட்லாண்டிக் நாடுகளைக் கொண்ட ஒரு கூட்டு அணி கூட்டுவதும், இரஷ்யா பொருளாதார சமத்துவம் உள்ள பொதுவுடைமை ஆட்சிகளையுடைய நாடுகளைச் சேர்த்து "காமின்பார்ம்" கூட்டு அணியை கூட்டுவதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிடுகின்றன! ஆனால் இரஷ்யாவின் காமின்பாரம் எவ்வளவோ போராட்டப் புயல்களுக்குப் பின் பிறந்த உரிமை ஆட்சியுடைய நாடுகளை ஒன்று சேர்த்து' நாம் மட்டும் நல்வாழ்வு நடத்தினால் போதாது எந்த நாட்டிலும் எதேச்சாதிகாரம் கூடாது, பணமுள்ளோன் பாமரர்களை தன் பணத்தால் அடிமையாக்கி அவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழும் உல்லாச வாழ்வினர்கள் இருக்கக் கூடாது, முதலாளித்துவத்தை முறியடித்து, பணக்கார வர்க்கத்தைப் பாழாக்கி, பாட்டாளி வர்க்கத்தின் நாடாக்கிய நம் நாட்டில் இனிமேல் மீண்டும் அந்தப் பயங்கர நிலை ஏற்படாதபடி பாதுகாக்கவே இந்தக் கூட்டு அணி என்று கூறுகிறது! ஆனால் அட்லாண்டிக் கூட்டு அணியின் விளக்கமோ விசித்திரமாயிருக்கிறது!

அட்லாண்டிக்பகுதியிலுள்ள எந்த நாட்டையும் வேறொரு நாட்டின் தாக்குதலுக்குட்படாமல் பாதுகாக்கவும் அட்லாண்டிக் பிரதேசங்களில் கம்யூனிசம் பரவாமல் தடுக்கவுமே இந்தக் கூட்டு அணி என்று கூறுகிறது! அது மட்டுமல்ல அந்தந்த நாடுகள் உலகிலேயே எங்கும் கம்யூனிசம் இல்லாமல் செய்துவிட முடியும் என்றும் கனவு காண்கிறது மேலும் அட்லாண்டிக் நாடுகள் அதிகபலத்துடன் கூடி ஓர் கூட்டாக வாழும் ஒப்பந்தமே இந்தக் கூட்டு அணியின் அடிப்படைக் கொள்கை என்றும் கூறுகிறது! அட்லாண்டிக், காமின்பார்ம், இவை இரண்டும் முதலாளித்துவம் பொதுவுடைமை என்ற இருகொள்கையின் உருவம் என்பதை எளிதில் அறியும்படி இருக்கிறது, சிந்தித்துப்பார்த்தால்! 'காமின்பார்ம்' கூட்டுமுறையின் பொதுவுடைமைக் கொள்கை இன்று உலகம் பூராவும் பரவி வருகிறது! காமின்பாரத்தின் தலைமை நாடாகிய ரஷ்யாவிற்கு எந்தநாட்டையும் ஆக்கிரமிக்கும் ஆசைஇல்லை என்பதை ரஷ்யர்மட்டுமல்ல முதலாளித்துவ நாட்டின் பொறுப்புள்ள பிரபு வேவல் அண்மையில் கூறியிருக்கிறார். ஆனால் நன்மை நாட்டம் காரணமாக கண்டிப்பானகட்டுப்பாடு இருக்கலாம். அதைத் தவறென்று கூறமுடியாது. ஏனென்றால், டாலர் பாணங்களால் எந்தக் கட்டுப்பாட்டையும் தகர்த்தெறியும் வித்தையில் கைதேர்ந்த வர்க்கத்தினர் சூழ்ந்துள்ளபடியால் கட்டுப்பாடு அவசியமில்லை என்று எப்படிக்கூறுவது!

அட்லாண்டிக் நாடுகளின்உண்மை எண்ணம் என்னவென்றுபார்த்தால், அட்லாண்டிக் சாசனத்தில் சேர்ந்துள்ள நாடுகள் தொழில் துறையில் பின்தங்கியுள்ள வசதியில்லாமல் வதியும் நாடுகளிலேயும், முதலாளித்துவப்பிடியிலும், இந்நாட்டினரால் ஆளப்பட்டு அடிமைகளாய் மக்கள் அல்லல்படும் நாடுகளிலும் தங்கள் நாட்டின் சரக்கை விற்கும் "மார்க்கெட்" பிடிக்கும் வேட்டைதான்! முதலாளித்துவ நாடுகளுக்கு உள்நாட்டு வருவாயைவிட வெளிநாட்டு வர்த்தகத்தின்மூலம்வரும் வருவாய் மிக அதிகம். ஆனால், இன்று ஒவ்வொரு நாடும் விழிப்படைந்து தொழில் துறையிலும், மற்றதேவையான பண்டங்களை தாங்களே உற்பத்தி செய்துகொள்ளும் வழி வகைகளைசெய்யமுனைந்துள்ளது. இதைக் கண்ட முதலாளித்துநாடுகள் தங்கள் சுரண்டல் பாதிக்கப்படுமே என்று பதறுகிறார்கள். ஏனென்றால் தங்கள் சரக்குகள் வெளிநாடுகளில் விலையாகாவிட்டால் தங்கள் நாட்டின் தொழில் வியாபாரத் துறைகளிலே மந்தநிலை தாண்டவமாடும் ஆலைமுதலாளிகள் அல்லல்படுவர்! ஆகவே அவர்களைத் திருப்திசெய்ய வேண்டிய பொறுப்பும், அதே வேளையில் பொதுவுடமையை ஒரேயடியாக ஒழித்துக்கட்டிவிட்டால், அதாவது பொதுவுடைமை நாடுகளை ஆக்ரமிப்பு செய்துகொண்டால் என்றுமே சுரண்டிவாழும் சுகவாழ்வு மாறாது! என்ற நினைப்பும் அதற்கான முன்னேற்பாடாக சிருஷ்டிக்கப்படுவதும் தான் அட்லாண்டிக்கூட்டு முன்னணி!

(14-ம் பக்கம் பார்க்க)

✲ படிப்பகம் ✲

தாழ்த்தப்பட்டோரின்
கண்ணீர்த்துளிகள்
ஆசிரியர்:- க. மாணிக்கவாசகன்.

வாழப்பிறந்த மக்கள் வறுமையின் பிம்பங்களாய், "விண்ணே கூரையதாய்—புல்வெளியே படுக்கையதாய்" வாடியுழலும் வேதனைகளைக் கண்டு உள்ளம் சிதறிய கண்ணீர்த் துளிகளின் தொகுப்பு இந்நூல், சிந்தனையைக்கிளறும், புதுவேகக் கவிதைகளின் கூட்டுச்சமைப்பு! பழமைக் குத்தரும் சவுக்கடிகள், நிறைந்த, புரட்சி எழுத்துக்கள்!

விலை ரூ. 0—6—0

பெறும் இடம்:—
வறுமைப்பதிப்பகம்,
சென்னை 10.

* * *

திருக்கோயிலும் திருத்தமும்

"அன்னதான சத்திரங்களாகவும் மடமையை வளர்க்கும் மன்றங்களாகவும் இருக்கும் கோயில்கள் அறநிலையங்களாக கலைபயில் கழகமாக, அறிவூட்டும் கருவூலங்களாக மாறவேண்டும் என்ற நோக்கங்கொண்ட தோழர்கள் ரா.பி. சேது, மு. வரதராஜன், ம. பொ. சிவஞானம், மா. இராசமாணிக்கம், அ. கி. பரந்தாமனார், ரா. நடேசர், பண்டித வி. நடேசன், ஆகியோரின்கருத்தோவியங்கள் அடங்கியுள்ளன, இந்நூலில்.

விலை ரூ. 0—6—0.

பெறும் இடம்:—
இளைஞர் நல்லறமன்றம்,
107, கந்தசாமி கோயில் தெரு,
சென்னை 12.

* * *

திராவிடம் பிரிந்தால் வாழுமா?
ஆசிரியர்:-
அ. கு. பாலசுந்தரன், B.A., L.T.,

திராவிடநாடு பிரிந்தால் வாழமுடியுமா, எப்படிப்பிரிப்பது, அது இயலுமா, என்ற கேள்விகளுக்கு ஆசிரியர் நன்கு பதில்தந்துள்ளார். பொருளாதாரம், உடனடிப் பிரச்சனைகள், "திராவிடநாடு" என்பதன் விளக்கம் ஆகியவைகள், தெளிவாகத் தரப்பட்டுள்ளன. பிரிவினைபற்றி அறிய விரும்புபவர்கள் படித்துணரவேண்டிய சிறந்த நூல் இது.

விலை ரூ. 0—8—0.

பெறும் இடம்:—
தனலட்சுமி பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

* * *

ஏழையின் அரசியல்
ஆசிரியர்:- எஸ். சதாசிவம்.

அரசியல், சமுதாய வாழ்வின் கூட்டுமுயற்சி, ஆனல், இன்று உயரப்பரின் உல்லாசமேடையாக இருக்கிறது. சமுதாயம் ஏழை பணக்காரன் என்று இரண்டு பிரிவுகளாக நிற்கிறது. ஏழை, உழைப்பவன்! பணக்காரன், கொழுப்பவன்! இந்தப் பேத உணர்ச்சி, கூட்டு முயற்சியான அரசியலில், நிலவுகிறது. அரசியல், பணக்காரர்களின் பாதுகையாக இருப்பது மாறவேண்டும். அப்போதே எல்லா மக்களுடைய வாழ்வும் நல்ல பாதையில் திரும்பும். அப்படிப்பட்ட நாள், ஏழையின் அரசியல் முகிழ்த்தநாளாகும்! இந்நூலில் ஏழையின் அரசியல் என்றால்என்ன, எப்படி அது கிடைக்கும் என்பவையெல்லாம் விளக்கப்பட்டுள்ளன. பாராட்டுக்குரிய முயற்சி.

பெறும் இடம்:- விலை அணா. 8
இன்பவாழ்வுப் பதிப்பகம்
ஆர். எஸ். புரம் P. o. கோவை

வரப்பெற்றோம்
1. தமிழர் திருமண முறைகள் (வைணவம்)
2. தமிழர் திருமண முறைகள் (சைவம்)
3. தமிழர் கருமாதி முறைகள் (வைணவம்)
4. தமிழர் கருமாதி முறைகள் (சைவம்)

ஆசிரியர்:-
அ. கு. பாலசுந்தரன் B. A. L. T.

தனித்தனி விலை அணா. 8
பெறும் இடம்:-
தனலட்சுமி பதிப்பகம்
திருவல்லிக்கேணி, சென்னை

* * *

கோரத் தாண்டவம்
ஆசிரியர்:- V. நாகராஜன்

சமுதாய ஊழல்களைப்படம் பிடித்துக் காட்டும் சிறு கதைகளின் தொகுப்பு இந்நூல். சிறுகதைகள் சுவைதருவனவாயுள்ளன.

விலை ரூ. 0—8—0

பெறும் இடம்:-
ஒளவை நிலையம்
காரை P. o.
திருவானைக்காவல் வழி (திருச்சி Dt.)

* * *

சந்திரலோகம்
ஆசிரியர்:- "ஜீராத்"

சிறுவர்களுக்கான சிறுகதை நூல்.

விலை ரூ. 0—2—0.

பெறும் இடம்:-
அன்னபூரணி நிலையம்
17, கோவில் தெரு, திண்டுக்கல்.

* * *

குமரித்தீவு
ஆசிரியர்:- நாரா. நாச்சியப்பன்.

சிறுவர்களுக்கான சிறுகதை நூல். படிக்கும்சிறுவர்களுக்குக்கதையோடு கருத்தும் தருவது, இவைபோன்ற சிறுநூல்கள் வரவேற்புக் குரியன— கடவுளும் கற்பனை மிகுதியும் இல்லாத காரணத்தால்!

விலை ரூ. 0—5—0.

பெறும் இடம்:-
கலைப்பிரசுரம்,
ராம்நகர், தேவகோட்டை.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

REGD 4642 M

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 4-12-49 | இதழ் 23

கல்வி வள்ளல்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
FEB 1950
MADRAS

காஞ்சிபுரத்தில் கல்லூரி ஏற்படுத்துவதற்காக ரூபா 50,000—0—0 நன்கொடை கொடுத்துதவிய தோழர் சி. சுந்தரசாமி அவர்கள்.

குடி விலக்கா?-கொள்கை விலக்கா?

16-ம் பக்கத் தொடர்ச்சி

களா, இவர்கள்! இருந்தும் ஏன் இந்த உத்திரவு போட்டிருக்கிறார்கள்! என்ன நேர்ந்துவிட்டது, எக்காளமும் முழக்கமுமிட்ட இக்கனவான்களுக்கு!

கேட்கத்தான் தோன்றும் ஏன் என்ற கேள்வி எழும்பத்தான் செய்யும்.

* * *

"மதுவிலக்கு சாத்தியமா?"

"இது பிற்போக்கான கேள்வி!"

"அமுல் நடத்த இயலுமா, உங்களால்!"

"ஏன் முடியாது, மகாத்மா காட்டிய வழியல்லவா, அது!"

"படிப்படியாகக் கொண்டுவந்தால் என்ன?"

"பயனற்ற பேச்சு! இது கூடச் செய்யாவிட்டால், மக்களுக்கு நாங்கள் கூறியதெல்லாம் வீணென்றுதானே ஆகும்?"

இப்படியெல்லாம் சட்டசபைகளிலே, மதுவிலக்குக் கூடாது என்றவர்கள், இவர்களால் நடத்தமுடியாது என்று சொன்னவர்கள், வசதி எங்கே இருக்கிறது, வக்குண்டா இவர்களுக்கு என்றெல்லாம் கிண்டலையும் கேலியும் வீசியவர்கள் பலருண்டு, கீழ்சபையிலும் மேல்சபையிலும். அவர்களிலேபலர் கிண்டலாகக்கேட்டாலும் சரி, மனமார மக்கள் நன்மையைவைத்துக் கேட்டாலும் சரி, கேள்விகள் எப்படியிருந்தாலும் சிறிப்பாய்ந்தனர், கனல்கக்கிகளாகயிருந்தனர், மக்கள் நலனை மதியாதவர்கள் என்று அழைத்தனர் நமது மந்திரிமார்கள். அவ்வளவு ஆர்வத்துடன், மதுவிலக்கை அமுல் நடத்தப் போவதாக, ஏது நேர்ந்தாலும் இம்மி கூட அசைந்து கொடுக்கப் போவதில்லையென்று, '17-கோடி நஷ்டமாகிறது. பரவாயில்லை, பார்த்துக்கொள்கிறோம்' என்பதாக வீரமுழக்கமும், வேகப்பேச்சும், வீசிவந்தனர், காங்கிரஸ் மந்திரிகள், கனம் உறுப்பினர்கள், தேசிய நண்பர்கள்.

மதுவிலக்கு மக்களுக்குத் தேவையான ஒன்று, அவசியமானது, நலன் விளைவிக்கக் கூடியது என்று நாம் கூறினோம். இதனால் ஏற்படும் நஷ்டத்தை, எப்படியாவது ஈடுகட்டிக் கொள்வோம், ஏழையின் வாழ்வை மட்டுமின்றி மனிதனின் அறிவையே குட்டிச்சுவராக்கும் இக்கொடுமை அழியட்டும், ஒழியட்டும் என்று ஆனந்தமுடன் வரவேற்றோம், மக்களும், மதுவிலக்கால் ஏற்பட்ட, வரிப்பளுவையும் மனங்கூசாது, வாய்திறவாது செலுத்தினர் — செலுத்தி வருகின்றனர்.

காந்தியடிகள் காட்டிய பாதையில் நடப்பதே தங்கள் லட்சியம் என்று கர்ஜித்த கனவான்கள், மந்திரிமார்கள் "மதுவிலக்கு நீக்குவிழா"வுக்கு ஒத்திகை நடத்துவோமா, என்று யோசிக்கிறார்கள், ரூ 500 கொடுத்தால் போதும் ஒருமாதத்துக்கு நான்கு பாட்டில்கள் என்று பிரகடனப் படுத்துகிறார்கள்!

* * *

மதுவிலக்குபற்றி அதிசிரத்தையும், ஆர்வமும் கொண்டவர்கள் தான், நமது மாகாண மந்திரிகளும் காங்கிரஸ் தலைவர்களும். நாம்அதை மறுக்கவில்லை, கள் குடிப்பதையே கடமையாகக் கொள்ளுங்கள், பிராந்தியே மனச்சாந்திக்குமருந்து, என்று கூறுபவர்கள் என்று கூறமுடியாது, இவர்களை! ஆனால் அவ்வளவு ஆசையும், ஆர்வமும், மக்களுக்கு சுகம் தேடித் தரவேண்டும் என்று ஆசை கொந்தளிக்க, ஆர்வம் நரம்புகளிலெல்லாம் துடிக்க இருந்த இவர்களுக்கு இப்போது மட்டும் என்ன ஏற்பட்டு விட்டது! கேட்க வேண்டிய கேள்வி. கேள்விக்குக் கிடைக்கும் விடையிருக்கிறதே, அதில்தான் இருக்கிறது சூட்சமம்.

* * *

அண்மையில் சென்னை சர்க்கார் கடந்த ஆண்டு தாங்கள் நிறைவேற்றிய மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டு வந்து இரு சபைகளிலும் நிறைவேற்றி சட்டமாக்கி யிருக்கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்றதும், ஏதோ குறைபாடு இருந்தது போலும், குற்றஞ் செய்தவன் தப்பித்துப் போக சந்து பொந்து இருந்துவிட்டது போலும் அதை அடைத்துத் தடுக்கவே, திருத்த மசோதா கொண்டு வந்து நிறைவேற்றி யிருக்கிறார்கள் என்று நினைக்கத் தோன்றும், சாதாரணமாக யாருக்கும் சில்லறை விஷயத்திலே சிந்தனையைச் செலுத்துபவர்களா, நமது ஆளவந்தார்கள். ஆகவே, இதுபோன்ற எக்காரியத்தையும் அவர்கள் செய்யவில்லை.

மதுவிலக்கு கொண்டுவந்த சர்க்கார் மது குடிக்கத் திருத்தம் கொண்டுவந்து சட்டமாக்கியிருக்கிறது.

நவம்பர் 26-ந்தேதியன்று, நடைபெற்றதாகும் இந்நிகழ்ச்சி. காங்கிரஸ் சர்க்கார், காந்தியாரின் சீடர்களா, இப்படிச் செய்துள்ளார்கள் என்று கேட்கத்தோன்றும். 'ஆமாம்' என்று கடந்த ஆண்டு அவர்களை எக்காரியத்துக்காகப் பாராட்டினோமோ அதே வாய் கூறவேண்டி நேரிட்டதே என்ற சோகமும், வேதனையும் நம்மை இடிக்கிறது.

என் செய்வது, இவர்கள் போக்கைக் கண்டுதான், எதையும் நிர்ணயம் செய்ய முடியவில்லையே! முன்னொன்று பின்னொன்றாய் மொழிவதும், முரண்பட்டுப் பேசுவதும் தான் நித்திய நிகழ்ச்சிகளாக யிருக்கிறதே!

கொண்டு வரப்பட்ட திருத்த மசோதா, என்ன தெரியுமா, குடிப்பதற்கு அனுமதி தருவது. ராணுவத்தில் இருக்கும் எல்லாவித அதிகாரிகளும், இனிக் குடிக்கலாம் எனக் கூறுவதாகும்.

ராணுவத்தில் இருக்கும் எல்லாவித அதிகாரிகளும் சிப்பந்திகளும் இனி மது வருந்தலாம், அவர்களுக்கு மதுவிலக்குச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது, இனி அவர்கள் தாராளமாக மது வருந்தலாம்.

என்பதே, இப்போது இவர்கள் சட்டபூர்வமாக நிறைவேற்றி யிருக்கும் திருத்த மசோதாவாகும்.

மது வருந்துவது மாபாவம்!

பஞ்சமா பாதகங்களில் ஒன்று, அது!

குடிப்பது—குடி கெடுக்கும்!

மது பானம்—விஷ பானம்!

என்றெல்லாம், எக்காளமிட்டு வரும் காங்கிரஸ் சர்க்காரின் 'கண்யம்'

(5-ம் பக்கம் பார்க்க)

★ கடவுள் விஷயம்! ★

கடவுள் இருக்கிறார்!

கடவுளுக்குத் தெரியும்!

கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும்!

கடவுளுக்குப் பொதுவாக நட!

கடவுள் சாட்சியாகச் சொல்கிறேன்!

கடவுள் கொடுத்தது இவ்வளவு தான்!

கடவுள் கைவிடமாட்டார்!

கடவுளின் மீது பாரத்தைப் போடு!

* *

கடவுளைக் கண்டவர் இவர்—பெரிய ஞானி—மூடடா வாயை!

கடவுளா பொறுப்பாளி, நீ செய்கிற தவறுக்கெல்லாம்?

கடவுளா கொடுத்தார்—கொள்ளை அடித்துவிட்டு, கடவுளையா சாட்சிக்கு இழுக்கிறே!

கடவுளையே நம்பிக்கொண்டு, கிடடா—காரியம் நடந்துவிடும்—மூடா, உன் கடமையைச் சரியாகச் செய்யாமே, கடவுளைக் கூப்பிடறயா, எதற்கு எடுத்தாலும்!

கடவுள் காப்பாற்றுவார் போடா—ஏன் என் எதிரே பல்லைக் காட்டிக்கிட்டு நிற்கவேணும்—போ, போ—கடவுளைக் கேளு தரச் சொல்லி—தருவார்—போ.

* * *

கடவுள் எப்படித்தான் இந்த அக்ரமத்தைப் பொறுத்துக் கொண்டாரோ தெரியவில்லை.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று துளியாவது பயந்தா நடக்கிறான் அந்தப் பாவி.

கடவுள் கூடத்தான் பயப்படுகிறார் இப்படிப்பட்டவர்களிடம்.

கடவுள் என்ன செய்துவிட்டார் அவனை—கண்ணைக் குருடாக்கி விட்டாரா—கைகாலை ஒடித்துவிட்டாரா—கொழுத்துத்தான் கிடக்கிறான்.

கடவுள் கொடுத்தார்னுதான் 'ஜம்பம்' பேசுகிறான், அந்தக் கள்ளன்.

கடவுள், அவன் பக்கமா இருப்பது—அடுக்குமா?

சடவுள் கண் பார்த்தா, நமக்கா இந்தக் கஷ்டம் வரும்?

* * *

கடவுளே! உனக்குக் கண்ணில்லையா?

சடவுள் இருந்தா இப்படியா செய்வார்?

கடவுள், கடவுள் என்று நாம் தான் கதறுகிறோம்—காரியவாதி கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறந்துதான் வேலைசெய்கிறான்—கடைசியிலே அவன் பக்கம்தான் கடவுள் இருக்கிறார்.

* * *

கடவுளே! நான் என்ன பாபம் செய்தேன், இந்தப் பாடு படுத்துகிறயே!

கடவுளே! ஏனோ இப்படி என்னைச் சோதிக்கிறே?

கடவுளே! இனி என்னாலே சகித்துக் கொள்ள முடியாது!

* * *

கடவுள் தண்டிக்காமல் விடமாட்டார்—அரசன் அன்று கொன்றால் கடவுள் நின்று கொல்லும்.

கடவுள் 'பேர்' சொல்லி ஊரை ஏய்க்கிறானப்பா, அந்த எத்தன்.

கடவுள் காப்பாத்துவார்னு கிடந்தான் அந்த ஏமாளி, கடைசி வரையிலே.

* * *

கடவுள், என்ன செய்யச் சொல்வார் என்பது எனக்கும் தெரியும்—நீ ஒரு உபதேசமும் செய்ய வேண்டாம், உன் வேலையைக் கவனி.

கடவுள் கேட்டாரா உன்னை, ஊர்த் தாலியை அறுத்து உற்சவம் செய்யடான்னு?

கடவுள்தான் தின்கிறாரா! பொங்கலையும் புளியோதரையையும்?

* * *

கடவுள் எங்கும் நிறைந்தவர்—எல்லாம் அறிந்தவர்.

கடவுள் கோயிலைக் கேட்கவில்லை, கும்பாபிஷேகம் கேட்கவில்லை, உன் மனசைத்தாண்டா கோயிலாகத் தரவேணும் அன்புதான் அவருக்குப் பிரியமான அபிஷேகம்.

கடவுள் காரியம் இது, முணுமுணுக்காமல், உன் சக்தியானுசாரம் கைங்கரியம் செய்.

கடவுளுக்காக நீ வக்கீல் வேலை செய்யவேண்டாம், எனக்கும் தெரியும், கடவுள்.

கடவுளே! கடவுளே! நல்ல கடவுளடா இது! நயவஞ்சகனை வாழவிட்டு வேடிக்கை பார்க்கிற கடவுள்!

கடவுள் 'மனசி'லே என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாரோ, யார் கண்டாங்க?

கடவுளைக் காணவா முடியும்! கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்!

* * *

கடவுள்—என்ற சொல்லைக் கலந்து பேசுவதிலே, இப்படிப் பல வகை உண்டு. பேசுவோரின் சுபாவம், அவர் பேசும்போது அவருக்கு உள்ள நிலைமை, அவருடன் உரையாடுபவரின் தன்மை, ஆகியவைகளுக்கு ஏற்றபடி, இந்த 'வகை' இருக்கும். எல்லோரும் ஒரே மனப்பான்மை கொண்டவர்களல்ல—எனவே அனைவரும் ஒரே வகை

யாகப் பேசவேண்டுமென்பதில்லை—பேச்சுப் பலவகையாகத்தான் இருக்கும். இதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், ஒரே 'ஆசாமி' கடவுள் சம்பந்தமாகப் பேசும்போது ஒரு வேளை ஒரு வகையாகவும், மற்றோர் வேளை மற்றோர் வகையாகவும் பேசுவார்—ஆச்சரியம் அதிலேதான் அதிகமிருக்கிறது. வேளைக்கோர் வகையாக இந்தப்பேச்சு மாறுவதை, பேசுபவரே கூடச் சரியாக உணருவதில்லை—சுட்டிக் காட்டும்போது கூட, அவர் சிரிப்பார் அல்லது சீறுவார்—விளக்கம் தரமாட்டார்.

* * *

கடவுள் என்ற சொல்லைக் கலந்து பேசாதவர்கள் மிகக் குறைவு; கடவுள் என்ற சொல்லை எப்போதும் ஒரேவிதமான மனப்பான்மையுடன் பேசுபவரோ, அதைவிடக் குறைவு! சிலர் சில வேளைகளில் பேசும்போது பார்த்தால், அவர்களை நாயன்மார் வரிசையிலே வைக்கலாம் போல் தோன்றும்; சிலர் பேசும்போதே அவர்கள் நாத்திகர்களோ என்று கேட்பவர்களை ஐயுறச் செய்யும்! விந்தை இதுகூட அல்ல. நாயன்மார் வரிசையிலே வைக்கலாம் என்று தோன்றக்கூடிய விதமாக ஒரு சமயத்தில் பேசியவரின் மற்றோர் வேளைப் பேச்சு, அவரையே, நாத்திகக் கூட்டத்திலே சேர்க்கவேண்டும் போல் காணப்படும்.

* * *

கடை முதலாளி கவலையுடன் உட்கார்ந்திருக்கிறார் — அவர் எதிரே, பார்வதிசமேதரின் படம், மலர்மாலையுடன் காட்சியளிக்கிறது—நீறுதான் நெற்றியில் — சந்தனமும் உண்டு. கவலையுடன் இருப்பவரிடம், பக்குவமாக நடந்துகொண்டு பழக்கப்பட்ட 'எடுபிடி', குத்துவிளக்கைத் தூண்டிக்கொண்டே பேசுகிறான்.

எ:— சந்திரசேகர செட்டியார் சரக்கு பூராவும் விலையாகி விட்டதாம்........

மு:— பூராவுமா?

எ:— ஆமாம்—யார் கிடைப்பானுங்களோ, தலையிலே மூட்டை கட்டலாம்னுதான் செட்டியார் காத்துக் கொண்டிருந்தாரே! கிடைச்சான் ஒரு ஏமாளி — பூராசரக்கையும் தள்ளி விட்டார் அவனிடம்.

மு:— எவ்வளவு கிடைச்சுதாம்?

எ:— ஆறுக்குக் குறையாதாம்.

* * *

கடை முதலாளி ஒரு நீண்ட பெருமூச்சுடன், "அம்பிகே!......" என்று ஒருமுறை கூறிவிட்டு, "ஆறு இருக்கும்னு சொன்னாங்க?" என்று மீண்டும் கேட்கிறார். எடுபிடி, "ஆமாங்க! ஆறுக்கு மேலேயே இருக்குமாம்" என்று பதிலளிக்கிறார்—மீண்டும் ஒரு பெருமூச்சு, மறுபடியும் "அம்பிகே!" என்று அழைக்கிறார், கடை முதலாளி.

* * *

இப்படிப்பட்ட நிகழ்ச்சி அன்றாடம் நடைபெறுகிறது—சர்வ சாதாரணமான நிகழ்ச்சி என்று கருதுகிறோம், ஆகையினாலேதான், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிச் சிந்திக்காமலேயே இருக்கிறோம்.

* * *

சந்திரசேகருக்கு ஆறாயிரம் ரூபாய் இலாபம் கிடைத்தது—முடங்கிக் கிடந்த சரக்கு விற்பனையாகிவிட்டது. இந்தச் 'சேதி'யைக் கேள்விப்படும், கடை முதலாளியின் கிடங்கிலே சரக்கு அடைபட்டுக் கிடக்கிறது — ஏட்டிலே இலாபம் குறிக்கப்படவில்லை — இந்நிலையில், வேறொருவர், வியாபாரத்திலே வெற்றி பெற்றார் என்று கேள்விப்பட்டதும், பெருமூச்சுடன், அம்பிகா! அம்பிகே! என்று அழைக்கிறார்! அவ்விதம் அவர் அழைக்கும் போது, அவர் மனப்பான்மை என்ன? பக்திப் பரவசத்திலே, அவ்விதம் கூவி அழைத்தாரா? பாராட்டுதலுக்காக அழைத்தாரா? துணை செய் என்று கூப்பிட்டாரா? அவன் அடித்துவிட்டானே கொள்ளை, எனக்குக் கிடைக்கவில்லையே, நான் உன்னைப் பூஜை செய்தவண்ணம் இருப்பவனாயிற்றே, என்ன செய்தாய் எனக்காக, அதோ பார் சந்திரசேகரன் இலாபம் சம்பாதித்துவிட்டான், உன் சக்தியை என் பக்திக்காக மெச்சி என் பக்கம் திருப்புவாய், எனக்கும் இலாபம் கிடைக்கும் என்றுதானே நம்பி உனக்கு நெய்விளக்கு ஏற்றினேன், இருந்தும், என்னைக் கவனிக்காமலிருக்கிறாயே,—என்று அம்பிகையிடம் குறைபடுகிறாரா, மிரட்டுகிறாரா? அம்பிகையை அவர் அந்தச் சமயம் அழைத்தபோது, எந்தவிதமான மனப்பான்மையுடன் இருப்பதாக எண்ணுகிறீர்கள்? எண்ணிப் பாருங்கள்—எண்ண, எண்ண வேடிக்கை வளரும். அவரையே கேட்டுப் பாருங்கள்—அவர் சாதுவாக இருந்தால்—அதைவிட வேடிக்கையாக இருக்கும்.

* * *

கடை முதலாளியின் பெயரைக் கந்தப்பன் என்று கொள்வோம்—அவர் துணைவியாருக்கு, சின்னம்மா என்று பெயரிடுவோம். இருவரும் சந்திக்கின்றனர். அவரைச் சந்திக்கு முன்பே, சந்திரசேகரர் 'சேதி' அம்மைக்குத் தெரிந்துவிட்டிருக்கிறது. சமயமறிந்து கேட்கிறார்கள், "அவர் கடையிலே சரக்கு பூராவும் விற்று விட்டாராமே" என்று. "ஆமாம்" என்று சுருக்கமாக, சோகத்துடன் கூறுகிறார் கந்தப்பர். "கடவுள் அவருக்கு நல்ல வழி காட்டினார்"—என்று சின்னம்மா கூறுகிறார்கள், எப்போதும் போல. கந்தப்பரை நாம் பார்த்திருக்கிறோம் முதலிலேயே, கவனமிருக்கிறதல்லவா? நீறு பூசியவர்!! எனவே, சைவர், பக்தர்! எனினும் சீறுகிறார், சின்னம்மாவின் பேச்சைக் கேட்டதும்; "கடவுளு காட்டினாரா, கடவுளு! பய, ஆள் விழுங்கி......வாடிக்கைக்காரன்களை வலை போட்டு பிடித்து, அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு பேசி, கொள்ளை அடித்துக்கிட்டான். கடவுளு கொடுக்கிறாரா, கடவுளு! இவனுக்கா! மாதத்திலே மூன்றுசடவை கூட நிஜம் பேசமாட்டானே, அவனுக்குப் போய், கடவுள் உதவி செய்யறாரா? தாகு தர்மலிங்கம் இல்லே, நம்ம கடைக்கு வருவானே முன்னே எல்லாம், அவனுக்கும் நமக்கும் கொஞ்சம் தகராறு, அதனாலே அந்தப் பய, நம்ம கடை வாடிக்கையைச் சந்திரசேகரன் கடைக்குத் திருப்பிவிடுகிறான்—அதனாலே ஒரு 'சான்சு' அடிச்சுது...... கடவுளு, போய்க் கூட்டிக்கிட்டு வந்து சொன்னாரா, "போடா,

(13-ம் பக்கம் பார்க்க)

குடிவிலக்கா? கொள்கைவிலக்கா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

நிறைந்த செயல்தான் இது. மதுவிலக்கு வேண்டும் என்பதற்கு இது போன்ற காரணங்களையே காட்டினர், மதுவை—அரக்கன் என்றே அழைத்தனர், கொடும்பாவி கட்டி இழுத்தனர், கொலை பாதகச் செயல் என்று கூறினர்—இப்போதும் கூறி வருகின்றனர்.

மது, மக்கள் வாழ்வைச் சூறையாடும் சூறாவளி, வேதனைகளை வீசும் புயல், இன்பச் சோலையை பாலையாக்கும் மண்மாரி, என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை, கிடையாது ஆளையே மாற்றிவிடும், மனதையே குழப்பிவிடும், ஆளைத் தள்ளாடச் செய்யும், ஆட்டம் போடுவர் அதை உட்கொண்டு விட்டால்! ஆகவே, அது, பெருந்தீது பயப்பது, நாட்டை நாசமாக்குவது என்ற காரணங் கூறி, மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தனர். நாமும் மகிழ்ந்தோம், நாடும் போற்றியது. இப்போதோ, ஒரு வருடம் ஓடி மறைவதற்குள், பாடம் திருப்பிப் படிக்கப்படுகிறது. ராணுவத்தில் இருப்போர், மது குடிக்கலாம், 'மாபாவம்' என்று கூறப்பட்டதைச் செய்யலாம், விஷம் என்று உரைக்கப்பட்டதைக் குடிக்கலாம், என்று விருத்தம் பாட ஆரம்பித்துள்ளனர்.

மதுவிலக்கு — காங்கிரசின் கொள்கை, காந்தியாருடைய ஆசை என்று கூறப்பட்டது. அதே கூற்றின்மீது மதுவிலக்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் இப்போதோ திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள், ராணுவத்தில் உள்ளவர்கள் மட்டும் குடிக்கலாம், அதற்கேற்றவாறு சட்டத்தில் 'சந்து பொந்து' உண்டுபண்ணியிருக்கிறார்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மந்திரி கோடி ரெட்டி 'கூடாது' என்று கூற, என். எம். ஆர். சுப்பராமன் போன்றோர் குறைபட்டுக் கொள்ள.

மேல் சபையில், இம்மசோதா விவாதத்துக்கு வந்தபோது யாரார் அரசியலாரின் மதுவிலக்குக் கொள்கையைக் கண்டித்து வந்தனரோ, மதுவிலக்கு கொண்டு வருவது நல்லதல்ல என்று கூறினரோ, அவர்கள் கூட ஆளவந்தாரின் மது குடிக்கலாம் எனக் கொண்டு வரும் திருத்த மசோதாவைக் கண்டித்துள்ளனர்.

"சாதாரண மக்களுக்கு மட்டும் மது தீமை பயப்பது என்றால் ராணுவஸ்தர்களுக்கு மட்டும் தீமை பயக்காதா? ஆக்கிரமிப்பைத் தவிர்க்க அவர்கள் மதுவருந்த வேண்டும் என்று கூறினால், எப்படி ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட மது அவசியமோ அதுபோல உற்பத்தியைப் பெருக்க உழைக்கும் தொழிலாளர்களுக்கு மட்டும் என்ன நிலையாம்! போர்முனைக்கு மது தேவையென்றால் அதுபோலவே உழைப்பு முனைக்கும் அது அவசியம்தான்" என்று வி. கே. ஜான் பேசியுள்ளார்.

தீமை உண்டாக்கும் சட்டம்
பொருந்தாத் தத்துவம்
பெருந்தன்மையில்லாதது
அரசியல் அந்தஸ்தைப் பறக்க
விடுவது

என்ற வார்த்தைகளால், வர்ணித்துள்ளார், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. லட்சுமணசாமி (முதலியார்)

இத்தனைக் கண்டனக் கணைகள் எழும்பியிருந்தும், மசோதா, வழக்கம்போலவே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மானத்தை வானத்துக்கு விரட்டும் வகையதான இந்த மசோதாவை என் கொண்டுவந்தார்கள் என்று நாம் அறியும் போதுதான், அதன் சூட்சமம், நமக்குத் தெரிய வருகிறது. இந்த மசோதாவை, இவர்கள் விரும்பிகொண்டு வரவில்லையாம், மேலிடத்தார் இட்ட உத்தரவையொட்டியே சட்டமாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம். மதுவிலக்கு மந்திரியார் என். சஞ்சீவி ரெட்டி சட்டசபையில் கூறியிருக்கிறார்,

"ராணுவப் படையினருக்கு அனுமதி வழங்கி, சலுகை தருமாறு மத்தியசர்க்கார் கட்டளையிட்டது. அதன்பேரிலேயே இந்த மசோதாவைக் கொண்டுவர நேரிட்டது."

இந்திய சர்க்கார், இந்த மசோதாவைக் கொண்டுவந்து, ராணுவப் படைகளுக்கு குடிப்பதற்கு அனுமதி கொடுங்கள் என்று கட்டளையிட்டதன் பேரிலேயே இக்காரியத்தைச் செய்யவேண்டியேற்பட்டது என்று பதில்தருகிறார், மாகாண சர்க்கார் சார்பில், மந்திரியார். அதுமட்டுமல்ல, மசோதாவை மேல்சபையில் பிரேரபித்துப் பேசுகையில்,

"ராணுவத்திலுள்ளவர்களும் மது அருந்தாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதுநான் எனது அபிப்பிராயம். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் அப்படிச் செய்வது காரிய சாத்தியமாக இல்லையே!"

என்று, கலக்கத்துடன் பதில் கூறியுள்ளார்.

மத்திய சர்க்கார், மதுவிலக்கு விஷயத்தில் பயமுறுத்தியும், கூடாது என்று கூறியும் அடிக்கடி தலையிடுவதாகக் குறைபட்டுக் கூறியுள்ளனர் உறுப்பினர்கள்.

மத்திய சர்க்கார் தலையீட்டின் பேரிலேயே மாகாண சர்க்கார், ராணுவ அதிகாரிகள் மதுவருந்தலாம் என்று சட்டம் பிறப்பிக்க வேண்டி வந்ததென, மந்திரியார் கூறுகிறார். இது விஷயமாக அடிக்கடி, மத்திய சர்க்காரிடமிருந்து தாக்கீது வந்ததாகவும் கூறுகிறார். அதன் விளைவாகவே, இப்படிப்பட்ட சட்டம் பிறப்பிக்க வேண்டிய, சூழ்நிலை ஏற்பட்டதென்று, விளக்கம் தருகிறார்.

* * *

பட்டேல் பாராட்டு, பிரசாத் புகழுரை, கவர்னர் ஜனரல் களிப்பு ஆகியவைகளினூடே கடந்த ஆண்டு, மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. கழிந்திருப்பது, ஒரே ஒரு ஆண்டு. அதற்குள் எந்தக் கனவான்கள் எதைப் பாராட்டினரோ, எது வேண்டியது, இந்நாட்டிற்குத் தேவையானது என்று கர்ஜித்தனரோ, காந்தியாருக்குகந்தது, கட்டாயம் அமுல் நடத்த வேண்டியது என்று கூறினரோ, அதை, 'வாபஸ் பெறுக', என தாக்கீது அனுப்புகிறார்களாம்! தகவல் தருகிறார்கள், நமது மாகாண மந்திரிகள், வேதனைக் குரலுடன், விளக்கம் கூற முற்படுகிறார்கள் வெட்கம் ஒரு புறம் இடிக்க, கலக்கம் இன்னொரு புறம் குழப்ப.

மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்

(அடுத்த பக்கம் பார்க்க)

வேதனைபுரிப் பயணம்

[அரங்கண்ணல்]

"ஏமாற்றிவிட்டான்! எத்தனை தடவை கெஞ்சினேன் தெரியுமா, காலில் விழுந்தேன், கருணைகாட்டுங்கள், தர்ம தாதாவல்லவா தாங்கள், தயை புரியுங்கள் என்றெல்லாம் கேட்டேன், கைவிட்டால் கதி வேறில்லை பிரபு என்று அழுதேன்! அவ்வளவுக்கும், அவன் அசையவில்லை, 'நான் என்ன செய்வேன்' என்றுமுகாரி பாடினான், 'போமய்யா, போம்! ஊரில் போய் ஏதாவது வழியுண்டா என்று பாரும்! என்னிடம் எங்கேயிருக்கிறது பணமும் நெல்லும் உமக்குத் தெரியாதா என்ன' என்று என்னையே கேட்கிறான், என்ன செய்வேன்என்று பஞ்சப்பாட்டு பாடுகிறான்!"

என்றார் சிங்கப்பட்டி மிட்டாதார் ஜெகவீரர் அவருக்குஉடம்பெல்லாம் துடித்தது, எத்தனை தடவை எதைக் கேட்டாலும் கொடுத்து வருகிறோம், 'கந்தப்பா, சுரண்டல்பட்டி ஜெமீனுக்கு எடுத்து வைத்தாயா, நல்ல சம்பா அரிசியா, அப்படியானால் நாலு வண்டியையும் அவருக்கே அனுப்பிவிடு, வேண்டும்போது கேட்டால் தருவார்! அவரது அன்பும் கருணையும் ஆகா யாருக்கு வரும்!' என்றெல்லாம் பேசிவந்தவராச்சே, அவரா இப்படிப் பேசுகிறார் என்று ஆச்சரியம் பிறந்தது மிட்டாதார் பேச்சைக் கேட்ட கணக்கப்பிள்ளை காத்தப்பனுக்கு.

"என்ன கேட்டீங்க, என்ன சொன்னாருங்க!"

கேட்டேன், குடும்பத்திலே கொஞ்சம் கஷ்டமாயிருக்குது, குழந்தைகள் எல்லாம் வேதனைப்படுது, ஆறு வண்டி நெல் வேணும், அனுப்புங்க என்று கேட்டேன், கெஞ்சினேன். என்ன சொன்னான் தெரியுமோ, என்னப்பா உனக்கா தெரியாது, இருந்த நெல்லிலே பாதியை பக்கத்தூர் பலராமன்—அவன்தான் நம்ப அடியாள்—வாங்கிக்கொண்டு விட்டான், மிச்சத்திலே எனக்கு எவ்வளவு செலவுகள், எப்படி மிஞ்சும், இதெல்லாம் உனக்கா தெரியாது என்று பாடம் ஒப்புவிக்கிறான்.

'அப்படீங்களா!'

"நீ என்னப்பா, என் மனசு எவ்வளவு குமுறுது தெரியுமோ, நான் என்ன அவனுக்குக் குறைஞ்சவனா, ஏதோ இருந்து வருகிறோமே ஒற்றுமையா, கஷ்டம் நேர்ந்தா கவனிக்காமலா போய்விடுவான், என்றுதான் நினைத்தேன். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகும்னு யாருக்கப்பா தெரியும்!"

மிட்டாதார் கோபமும் சோகமும் கலந்த குரலிலே பேசினார். ஜெமீனும் மிட்டாவும் அன்யோன்ய நண்பர்களாயிற்றே, அவர் இட்டது இவருக்கு கட்டளை. அப்படியிருக்கையில் இவர் இப்படிப் பேசுகிறாரே, விளைவு என்ன ஆகுமோ ஜெமீனுக்கும் மிட்டாவுக்கும் தகராறு வந்துவிடுமோ, பிரிந்து விடுவார்களோ என்று கவலையுடன் நினைத்தான் கணக்கன் காத்தப்பன்.

கொஞ்சநேரம் சென்றது. மிட்டாதார் கோபம் தணிந்தது, "ஏம்பா, காத்தப்பா! நம்ம குடி ஜனங்கள்..."

"ரொம்ப, கஷ்டப்படுறாங்க எஜமான்"

"அதைக் கேக்கலெடா, கழுதே! இருக்குமா, ஏதாவது!"

"என்னங்க"

"அரிசி, நெல் அகப்படுமாடா, கடன் கொடுப்பாங்களாடா?"

"என்னங்க எஜமான் விளையாடுறீங்க. அது அது அவதிப்படுது, வயிற்றுக்கும் வாய்க்கும் போதாமே, அப்படியிருக்கும்போது......"

"ஏய்! உன்னை யோசனையா கேட்டேன் போடா! போய் நம்ம தலையாரியை வரச் சொல்லு...ஊம்!"

தலையாரி வந்தான். மிட்டாதார், உத்தரவு போட்டார். 'போ, ஊருக்குள். ஒவ்வொரு குத்தகைக்காரனையும் பார்! ஐயா சொன்னாருன்னு சொல்லு, ஒவ்வொருத்தரும் வருடா வருடம் எவ்வளவு நெல் தந்து வருகிறாங்க என்று கணக்கப்பிள்ளையை வைத்துக்கொண்டு தெரிந்துகொள். அதன்படி, எல்லாரும் இப்பவே 'அட்வான்சாக' நெல் அளக்கணும்னு சொல்லு, கேட்டுப் பார், எப்படியும் வசூலித்துவிடு!"

*

இந்தமிட்டாதார் நிலையையும், கதையையும்காணும்தோழர்களுக்கு இதென்ன காட்டுராஜா தர்பாராகயிருக்கிறதே, என்று கேட்கத்தோன்றும். விளைந்தபின் தரவேண்டிய குத்தகை நெல்லை, அட்வான்ஸ் கேட்கும் ஆளுமா இருக்கிறான், அவ்வளவு அட்டகாசமுமா நடைபெறுகிறது இந்தச் சுயராஜ்யத்தில் என்று எண்ணலாம். ஆமாம், அத்தனையும் உண்மை, ஆனால் மிட்டாதார் என்ற இடத்தில்கொஞ்சம்மாகாண சர்க்கார் என்று வைத்துப்பாருங்கள். கதை புரியும், விஷயம் விளங்கும்.

புறப்படத்திட்டம்போட்டிருக்கிறார்களாம் தியாக மூர்த்திகள், இந்நாட்டு குடியானவ மக்களிடம்போய் 'அட்வான்ஸ்' வரிவசூலிப்பது என்று ஓராண்டு நிலவரியைக் கட்டாயமாகக்கடன் என்ற பெயரில் சர்க்காருக்குதந்துவிட வேண்டும் என்று சட்டம் தீட்டத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

மத்திய சர்க்காரிடம், கெஞ்சிக் கூத்தாடி, நீர்ப்பாசனத் திட்டம் ஏற்படுத்த முடியவில்லை, உணவுற்பத்திக்கு வழியில்லை, கையில் பணமில்லாததால் கவலை எங்களை மாய்க்கிறது, கருணை செய்யுங்கள் ஆறுகோடி ரூபாய் அளியுங்கள் என்று மாகாண சர்க்கார் கேட்க 'இல்லை, இங்கு தலைகாட்டாதே!' என்று மத்திய சர்க்கார் மூஞ்சியிலடித்து, அனுப்பிவிட்டதல்லவா, அதன் விளைவாக இப்போது திட்டம் போட்டிருக்கிறார்களாம், சினங்கொண்டு, பின் அது தணிந்து, தலையாரியைக் கூப்பிட்டு வசூலிக்கச் சொன்ன முரட்டு மிட்டாதாரன் போல!

* * *

ஐயோ, என்ன அட்டகாசம் இது! அடுக்குமா இப்படி அவதிப்படுத்துகிறார்களே!

சுரண்ட வந்தவர்கள்தானே, எப்படித் தெரியும் நம்ம கஷ்ட நஷ்டம்!

ஜனவரி, பிப்ரவரி தவிர்த்துவேறு எல்லாவரிகளையும் போட்டுவிட்டார்களே!

இப்படியெல்லாம், வெள்ளையன் பிடியில் நாடு சிக்கிக்கிடந்தக் காலத்தில், ஆளவந்த நண்பர்கள், கூறினர் கூச்சலிட்டனர், கண்டித்தனர்; வரிகொடா இயக்கம் நடத்தினர்.

மனிதன், என்ன மாடா, அடுக்க அடுக்க பளு தாங்கவில்லையே என்று கூறாமல், பேசாமல் கிடக்க! முடியாது! இதை நீடிக்கவிட முடியாது! வரிமேல் வரிபோட்டு நம்மைச்சுரண்டிச்செல்லும் இவர்கள் ஆட்சியை ஒழிப்போம், அழிப்போம், விரட்டுவோம் என்றெல்லாம் வீரம் பேசினர்.

சுயராஜ்யம் மட்டும் கிடைக்கட்டும், பாருங்களேன், எப்படி எங்கள் ஆட்சி நடக்கப்போகிறது என்பதை. பாலும் தேனும் ஓடாதா, பஞ்சை இருப்பானா, பட்டினிக்கூச்சல் எழும்புமா, என்றெல்லாம் கேட்டனர்.

வரிச்சுமையைப் போக்கி, வளம் நிறைந்த நாடாக்குவதே சுயராஜ்யத்தின் தத்துவம், சுதந்திரம் என்பதன் பொருள் என்று கூவினர், கர்ச்சித்தனர்.

ஆனால்,ஆட்சிப்பீடம் ஏறிஇரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.

இருந்த வரியில் எதுவும் குறையவில்லை; பன்மடங்கு அதிகமாகியிருக்கிறது!

இருந்த தொல்லைகள் எதுவும் குறையவில்லை; பன்மடங்கு விரிவாக இருக்கிறது!

இந்நிலையில், இப்போது,விவசாயிகளிடம் சென்று ஒருவருடவரியைக் கொடுத்துவிடப்பா, அட்வான்சாக வைத்துக்கொள்ளுகிறோம், எங்கள் கஷ்டத்தைக் கொஞ்சம் சமாளித்துக்கொள்கிறோம் என்று கேட்கப் போகிறார்களாம், மாகாண சர்க்கார்.

* * *

அன்னியனிடமல்லவா அடிமைப்பட்டுக்கிடந்தோம், அவனுக்கேது நம்முடைய நலனில் அக்கரை, இருப்பதையெல்லாம் சுரண்டிக்கொண்டு போவதுதானே அவனுடைய திட்டம், அதன்படியே எல்லாவற்றையும் கொள்ளைகொண்டு போய்விட்டான், இங்கு என்ன இருக்கிறது, என்று நினைக்கலாம், காங்கிரஸ் கனவான்களில் சிலர்கூட இப்படித்தான் பேசுகிறார்கள். இது, முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயற்சித்தானுமே யாரோ ஒருதிருடன், அதைவிட மோசமும், மக்களை முட்டாள் கூட்டம் என்று எண்ணும்போக்கும் கொண்டதாகும்.

வெள்ளையன் வெளியேறிய போது நாட்டை ஒன்றும் பாலையாக்கிவிட்டுப் போய்விடவில்லை. சுயராஜ்யம் தந்துவிட்டு, காங்கிரஸ் கனவான்களை ஆட்சிப் பீடம் ஏற்றிவைத்துவிட்டு அவன் வெளியேறியபோது, மாகாண சர்க்காருடைய சேமிப்பு நிதி (Reserve Fund) யாகயிருந்தது ரூ 55 கோடி. இதில் இப்போது, என்ன இருக்கிறது தெரியுமா, 22 கோடிதான்; சமாளிக்க முடியா நிலையேற்பட்டு தொல்லைகள், தலைக்கு மீறிப் போய்விட்டன என்று கூறப்படுமேயானால், அப்போது தங்கள் நிலையைச் சமாளிப்பதற்காக என்று ஒவ்வொரு ஆண்டும் சேமிக்கப்பட்டு வைத்துவருவது தான் இந்த நிதி. இது வெள்ளையன் வெளியேறியபோது 55 கோடியாக இருந்தது. ஆனால்தேசியத் திருவாளர்கள் ஆட்சிப் பீடம் ஏறியபின் 22 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது. இரண்டு ஆண்டுகளில் 33 கோடி ரூபாய்கள், அந்நிதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களால் செலவழிக்கப்பட்டிருக்கிறது!

மக்களிடையே மகிழ்ச்சி மலரவில்லை, கஷ்டம் கழுத்தை நெரிக்கிறது, இந்நிலையில் என்ன செய்வது, வரியை உயர்த்தலாமா, பளுவை அதிகரிக்கலாமா, அது கூடாதே, என்ற நல்லெண்ணத்தின் பேரிலேயே, நம்மை ஆளவந்தவர்கள் அந்நிதியிலிருந்து எடுத்துச் செலவழித்திருப்பார்கள் என்ற நினைக்கத் தோன்றலாம்.

அப்படியாவது நடந்திருக்கிறதா, வரி எதுவும் உயர்த்தப்படாமல் இருந்திருக்கிறதா என்று பார்த்தால் கிடைக்கும் விடை, வேடிக்கையாகவும், வேதனையூட்டக் கூடியதாகவும் இருக்கும்.

வெள்ளையன் வெளியேறியபோது இருந்ததைவிட இப்போது,மாகாண சர்க்காரின் கஜானாவுக்கு ஐந்து கோடி ரூபாய் அதிகமாகவரி வருகிறது.

அப்போது இருந்த விற்பனைவரி ரூபாய்க்கு அரைத் தம்பிடி. ஆனால் இப்போதோ, ரூபாய்க்கு மூன்று தம்பிடி! இதன் மூலம் அதிகமாக, மாகாண சர்க்கார் பொக்கிஷத்துக்குச் சேரும் தொகையோ கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய்.

வந்த வருமானம் குறையவில்லை, இருந்த வரியும் குறையவில்லை,

(10-ம் பக்கம் பார்க்க)

முன்பக்கத் தொடர்ச்சி

பிடிது, ஆகவே மண்டியிட்டுநாங்கள், மதுவிலக்கில் சலுகைதர வேண்டி நேரிட்டது என்று கூறுகிறார்கள்.

விசித்திரமான வெட்கம் பறிபோகக் கூடிய நிலை மட்டுமல்ல ஆட்சி புரிவது என்கிற அரசியல் அரிச்சுவடிக்கே, களங்கம் விளைவிக்கக் கூடியது, இவர்களுடைய செயல்.

ஒரு வருடத்துக்கு முன் ஒரு சட்டம் கொண்டுவருவது, மறுவருடமே அதை மாற்ற முற்படுவது ஒருவர் குடிக்கலாம் இன்னொருவர் குடிக்கக் கூடாது என்று கூறுவது என்று சட்டங்கள், சமயத்துக்குத் தக்கபடி, ஆளவந்தார்களால், கண்ணிய முள்ளவர்கள் என்று கருதப் பட்டவர்களால் மாறிக்கொண்டிருக்குமேயானால், அந்த ஆட்சியை என்னென்று சொல்வது! அதனால் விளையும், விபரீதங்களைத்தான் எப்படி வர்ணிப்பது!

கடந்த ஆண்டு மதுவிலக்கு விழா, காண வாருங்கள் என்று அழைத்த நமது மந்திரிமார்கள் இந்த ஆண்டு மதுநீக்கு விழாப் பற்றி அறிவிக்கின்றனர். அச்சமோ, கூச்சமோ இன்றிக் கூறுகின்றனர்.

என் இந்த வேதனை நிலை எப்படி ஏற்பட்டது. சிந்திக்கவேண்டிய ஒன்று!

திராவிட நாடு
ஞாயிறு] 4—12—49 [காஞ்சி

முகாரியால் முடியாது!

மாகாணங்கள் மாறி நிற்கின்றன!
தலைகால் புரியாமல் நடக்கின்றன!
தனி நாடாகி விட்டதாகவே நினைக்கின்றன!

ஒத்துழைப்பில்லை! ஒருமித்த கருத்தில்லை!!

இவ்வண்ணம்சோகக்குரல்எழுப்பியிருக்கிறார்; சோர்வுள்ளத்துடன் பேசியிருக்கிறார், இந்தியா எமது தேசம் என்ற நினைப்பை மறந்துவிட்டனர், சொந்த மாகாணங்களையேத் தங்கள் நாடு என்று நினைக்கத் தொடங்கிவிட்டனர், தங்கள் மாகாணம் சொந்த ராஜ்யம் என்று எண்ணங் கொண்டுவிட்டனர், ஒத்துழைப்பதில்லை, முன்போல சொன்னதைக் கேட்பதில்லை, சொந்தமாக ஏதேதோ செய்கின்றனர் என்று ஓலமிட்டுள்ளார்! அண்மையில் வேதனையுடன், இத்தகைய உண்மை நிகழ்ச்சிகளை வெளியிட்டிருப்பவர், சாதாரணமான ஆளல்ல, சமய சஞ்சீவியல்ல, இந்தியாவின் பிரதமர், இந்தியா ஒரே நாடு என்ற போர்வையைப் பிரிக்கவும் விரும்பாதபெரிய மனிதர் பேசியிருக்கிறார், வேதனைக் குமுறல்களைக் கொட்டியிருக்கிறார், அண்மையில் ரூர்கி தாம்ஸன் இன்சினீரிங் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலே பேசியபோது!

பண்டிதரின் பேச்சிலே கலக்கமும், இப்படியிருந்தால் என்ன ஆவது என்ற ஏக்கமும், இப்படியா நடப்பது என்ற சோகமும் கலந்திருக்கிறது!

ஐக்கியமே தேசத்தின் ஆத்மா!
தனி மாகாணம் கேட்பது துரோகம்!

பிரிந்துபோக நினைப்பவன் துரோகி!

நாட்டைச் சீர்குலைக்கும் நாசகாரியம் அது!

இன்னொருவர், ஜோரத் மாணவர் மாநாட்டிலே பேசுகையில் இப்படி வெளியிட்டுள்ளார், 'முன்னிருந்த ஒற்றுமையில்லை, தனித் தனியாகப் பிரிந்து போவதில் முனைந்துவிட்டனர், அப்படிச் செய்யலாமா, அது மகத்தான துரோகமல்லவா, என்று கொஞ்சம் முகாரியும் மோகனமும் கலந்து பேசியுள்ளார். இவரும் சாமான்யரல்ல, இந்திய காங்கிரசின் தலைவராக இருந்தவர், நாட்டின் பெரிய தலைவர்களிலே ஒருவர், காந்தியாரின் அத்யந்த சீடர்—ஆச்சார்ய கிருபளானிதான் இவ்வண்ணம் பேசியிருக்கிறார். இனவாரியாகவோ இன்னபிற வேற்றுமைகளைக் காட்டியோப் பிரிந்துபோக நினைப்பது துரோகம், நாட்டைச் சீர்குலைக்கும்நாசகாரியம், நல்லது எண்ணாத செயல், என்று தூற்றல் பாடமும், சோகக் கதையும் சேர்த்து ஒப்பித்திருக்கிறார்.

X X X

ஒற்றுமையே உயர்ந்த வழி!
பிரிவினை எண்ணம் கூடாது!
கேடு விளைவிக்கும் கேட்டது செய்யும்!
மத்திய சர்க்காருக்கு மதிப்பு கொடுங்கள்!

இது ஒருவர் உபதேசம். அஸ்ஸாமிலே பவனிவரும், இந்திய கவர்னர் ஜனரல், அஸ்ஸாம் மாகாண மக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள் இது. பிரிவினை எண்ணம் கொள்ளாதீர்கள், பேசாதீர்கள் அதுபோலெல்லாம், எண்ணத்தால் எண்ணலுந்தீது, என்பதாக இதோபதேசமும், மத்திய சர்க்காருக்கு அடங்கியொடுங்கி நடப்பதே மகத்தான தேசத்தொண்டுஎன்ற மாண்பு விளக்கமும் தந்திருக்கிறார் அவர். எல்லையில் இருக்கும் நீங்கள் ஏதாவது தாறுமாறாக நடந்தால் ஆபத்து முதலில் உங்களுக்குத்தான், அன்னிய ஆக்கிரமிப்புக்கு அடிபணிய நேரிடும், ஆகவே இந்திய சர்க்காரிடம் என்றும் போல இருப்பதுதான் நல்லது என்று அவர்களுக்கு உபதேசத்துடன் சிறிது மிரட்டலையும் கலந்துதந்துள்ளார்.

தனி நாடாகி விட்டதாகத் தங்களைக் கருதிக்கொண்டு விட்டன, கவனிப்பதில்லை மத்தியசர்க்காரை, இஷ்டம்போல நடந்து வருகின்றன என்று இந்தியாவின் பிரதமர் ஒருபுறம் பேச, தனியாகப் பிரிந்து போவது துரோகம், நாட்டைச் சீர்குலைக்கும் நாசகாரியம்; நல்லதைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது என்று ஆச்சாரிய கிருபளானி இன்னொரிடத்தில் முழக்கமிட, எல்லை மக்களே தொல்லையை வரவழைத்துக் கொள்ளாதீர்கள், பிரிந்து சென்று வாழ்வோம், மத்தியசர்க்காரை மதியோம் என்று நடவாதீர்கள் அது நல்லது செய்யாது உங்களை இன்னொருவரின்கீழ் அடிமையாகச் செய்துவிடும் என்று இந்திய கவர்னர் ஜனரல் இதோபதேசம் செய்ய,

இன்று, நாட்டின் நாலுபக்கங்களிலும், மந்திரிகளாயிருப்போரும் சரி, மக்கள் தலைவர்களாயிருப்போரும் சரி, மாதவமேனனிலிருந்து இந்தியப் பிரதமர் வரை எல்லோரும், இன்று, சென்றவிடங்களிலெல்லாம், இவ்வண்ணமே 'முழக்கி வருகின்றனர். முழக்கங்கள் இடத்துக்கேற்றவாறு, வேளைக்கேற்றபடி, பேசுபவரையொட்டி இருந்து வருகிறது.

ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு முறையில் பேசினாலும், பேசும் எல்லோரும் ஓரே ஒரு விஷயம் பற்றித்தான், பேசுகின்றனர். விஷயம் ஒன்றாக யிருக்கிறது, வேளைக்கும் இடத்துக்கும் ஏற்றபடி அதை எடுத்துச் சொல்லப்படுகிறது என்றாலும், எல்லோர் இதயத்திலும் எழும்பும் முகாரியாகவே இருக்கிறது அது.

பிரிந்துபோக நினைக்கிறீர்களே, இது அடுக்குமா!

என்று, ஓலமிடுவது போலவே இருக்கிறது ஒவ்வொருவர் பேச்சும், வார்த்தைகளும்.

மத்திய சர்க்கார் பிடிப்பு கூடாது, தனித்து சுதந்திரமாக இருக்க வேண்டும், தனக்காகத்தான் வாழ வேண்டும், தன் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற பிரிவினைப் பிரியம், இங்குமட்டும் என்றல்ல, ஆங்காங்கும், எழும்பி வளர்ந்து வருகிறது. அஸ்ஸாமியரிடையிலே ஆசை! வங்க மக்களிடையே துடிதுடிப்பு!எழும்பிவிட்டது, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.

ஆங்காங்குள்ள அந்தந்த மாகாணங்களை நிர்வகிப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான் என்றாலும், கோட்டைக்குள்ளேயே குத்து

வெட்டு என்பார்களே, அதைப் போன்ற நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி விட்டன.

மத்திய சர்க்காருக்கு ஏனிவ்வளவு பேராசை என்ற கேள்வியும், எவ்வளவு கட்டுகிறோம் வரி அதில் இதுதானா பங்கு எங்களுக்கு என்ற அதிருப்தியும், அனாவசியமாகத் தலையிடுகிறார்கள் எங்கள் வேலையில் என்ற கோபமும், மாகாணங்களிடையே வெகு வேகமாகப் பரவி வருகிறது.

இந்த நிலையை அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறுகிறார்,

மாகாண நிதி மந்திரிகள் புகார் செய்கின்றனர்.

புது அரசியல் மூலம் எல்லாம் போகிறதாம்!

இப்படிச் சொல்வது விஷமத்தனம். என் செய்வது, சொல்லித் திரிகிறார்களே!

மத்திய — மாகாண சர்க்கார்களிடை போட்டி இல்லை!

புது அரசியலமைப்பு அமுலுக்கு வந்ததும், மாகாணங்கள் எதற்கும் லாயக்கற்றவையாகிவிடுகின்றன, வருவாய் இல்லாது கஷ்டப்படும்படி நேரிடும் என்று மாகாண நிதி மந்திரிகளிலே ஒருவர் வெளிப்படையாகப் பேசியதாகவும், இது விஷமத்தனம் என்றும், சரியில்லாதது என்றும் சீறிப் பாய்ந்து பேசியிருக்கிறார், அவர், அரசியல் நிர்ணய சபையில். அவரது கூற்று, ஆங்காங்குள்ள மந்திரிமார்களிடையே அவ்வளவு அதிருப்தி, மத்திய சர்க்கார் மீது துவேஷமும் பரவி வருகிறது என்பதைக் காட்டுகிறது.

ஏன் இந்நிலை என்பதற்கும், மாகாண சர்க்கார்களின் அதிகாரங்களை மத்திய சர்க்கார் தன் வசப்படுத்திக்கொள்வதாகஅவர்கள் சொல்லித் திரிகின்றனர் என்று குற்றம் சாட்டுகிறார்.

மாகாணங்களிடை மத்திய சர்க்கார் எல்லா அதிகாரங்களையும் கைப்பற்றிக்கொண்டுவிட்டது என்ற அதிருப்தியும் அசூயையும் பரவி வருகிறது.

மத்தியசர்க்கார் மாகாணங்களிடமிருந்து வசூலிக்கிறார்களல்லவா, வருமான வரி, அதில் போதுமான பங்கு தரவில்லையென்பது பல மாகாணங்களுடைய குறைபாடுகளில் ஒன்றாகும். இது, வெகு வேகமான அளவில், வளர்ந்திருக்கிறது.

அவ்வளவு தூரம் மாகாணங்களிடை புகைச்சலும் பொருமலும் எழும்ப ஆரம்பித்திருக்கிறது! இந்த அதிருப்தி, மூடிவைக்கப்படலாம் கட்சிப்பற்று காரணமாக. ஆனால் இது என்றும் அடங்கிவிடாது. என்றாவது ஒரு நாள் வெடித்தே தீரும், இன்றில்லாவிட்டாலும், எதிர்காலத்தில். இதை யாரும் மறுக்கமுடியாது, தலைவர்களின் முகாரி இந்த நிலையைத் தவிர்த்து விடாது—போக்கி விடாது.

✲

தேயிலைத் தோட்டத்திலே!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

உழைத்து உருக்குலையும் ஒரு சமுதாயத்தைப் புறக்கணிக்க நினைப்பதோ, வடிகட்டி விரட்ட முயல்வதோ, இடையூறுகளுக்குள்ளாக்குவதோ, சரியல்ல — நேர்மையுமல்ல, நீதியுமாகாது.

நவம்பர் முதல் தேதி முதல், இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் முறையே வந்து செல்பவர்கள் 'பாஸ் போர்ட்' வைத்திருக்க வேண்டும் என்ற சட்டம் அமுலுக்கு வருகிறது. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்ல, இம்முறை, இலங்கையில் மட்டும் என்றல்ல எல்லா நாட்டிலும் தான் கையாளப்படுகிறது. ஆனால், ஏராளமான பேர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை நல்காமலிருந்தால், எவராது இலங்கையிலிருந்து இங்கு வந்து தனது உறவினர்களைக் கண்டு பின்னர் திரும்பும்போது, உள்ளே விட முடியாது என இலங்கை சர்க்கார் மறுக்கலாம்.

இலங்கையில் வாழும் ஒருவர், இந்தியாவிலிருக்கும் தன் பெற்றோருக்கு 'பணம்' அனுப்ப வேண்டுமென்றால், அதற்குள்ள தடைகள், அதிகமாயிருக்கின்றன.

இங்குள்ள பல குடும்பங்கள், கடல் கடந்து சென்றிருப்போரின் பணத்தை எதிர்பார்த்தே காலம் தள்ள வேண்டியவர்களாக யிருக்கின்றனர். ஒரு மாதம் சரிவர பணம் கைக்கு வரவில்லையென்றால் அவர்கள் வாழ்வில் புயல்தான், கண்களில் நீர்தான்!

இந்த நிலைமைகள் மாறவேண்டும், இல்லாவிடில் அமைதியான குளத்தைக் குழப்பி விட்டுவிட்டு, அதில் கிடந்து தத்தளிப்பவன் கதையே ஆகிவிடும்.

இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென ஜனவரியில் இலங்கை செல்லும் இந்தியப் பிரதமர் நேருவைக் கோரி, சென்னை சட்டசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வெளிநாட்டில் வேதனைப்படும் தன்னாட்டு மகனின் கஷ்டம் கண்டு, கண்ணீரைப் பார்த்து அதைப் போக்கவேண்டும் என்ற அளவுக்கு மத்திய சர்க்காரைத் தூண்டும், உணர்வு, மாகாண சர்க்காருக்கு இப்போதாவது ஏற்பட்டதுகுறித்து பாராட்டுகிறோம்.

நேரு விஜயத்தால் நிலைமை சரிப்படுமா, நேருவுக்கு அவ்வளவு பொறுப்பு ஏற்படுமா? பொறுத்திருந்து பார்ப்போம் கன்னித் தமிழ் நாடிருந்தும், கண்ணீரைப் போக்க வழியற்று, கடல் கடந்து சென்று, கதி கலங்கி நிற்கும் அவர்கள் வேதனையைத் தீர்க்கவாவது, ஏதாவது செய்கிறார்களா, இந்த ஆளவந்தார் என்பதை!

இதழ் முகப்பிலே, வெளியிட்டிருப்பது காஞ்சியில் கல்லூரியொன்றை நிறுவவேண்டும் என்ற ஆர்வத்துடன் தனக்கென இருந்த சொத்தான ரூபாய் 50 000-த்தையும் சுயநலம் கருதாது அள்ளி வழங்கியிருக்கும் தோழர் சி. கந்தசாமி அவர்களுடைய உருவமாகும். வெள்ளிரதத்துக்கும், வீண் விழாக்களுக்கும், அக்கார வடிசலுக்கும், அர்த்தராத்திரி பூஜைக்கும், ஆறு கால நைவேத்யத்திற்கும் அள்ளி வழங்கும் மகான்கள் இருக்கும் நாட்டிலே, எதிர்காலம் சீர்பெற வேண்டுமென்ற சீரியநினைப்புடன் தாராளமாக முன்வந்து, நன்கொடை அளித்திருக்கும், பெருந்தகையை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

வேதனைபுரிப்பயணம்

7-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்குப் பதில் முன்பைவிட அதிகமாகி யிருக்கிறது—கோடிக் கணக்கில்! இருந்தும், இவர்களுக்கு நிர்வாகச் செலவுக்குப் பணம் போதவில்லை, நீர்ப்பாசன அபிவிருத்திக்கு கையில் காசில்லை, கடன் கொடு என்று மத்திய சர்க்காரைப் பிச்சை கேட்கும், நிலை ஏற்பட்டிருக்கிறது.

* * *

மாகாண சர்க்கார் கடன் கேட்க, இல்லையென்று மிரட்டிவிட்ட மத்திய சர்க்கார் இருக்கிறதே, சுயராஜ்யத் தலைவர்கள் பட்டேல் நேரு வீற்றிருக்கும் இடம், அங்குள்ள நிலைமை என்ன தெரியுமா!

அங்கும் கடன், வாங்கும் நிலைதான்! வேடிக்கை மட்டுமல்ல, விசித்திரமாகக்கூட இருக்கிறது, காங்கிரஸ் ராஜ்யத்தின் காட்சி!

சுதந்திரம் வந்தபின் இதுவரை இந்திய சர்க்கார், சர்வதேச நாணயச் செலாவணி பாங்கிலிருந்தும், சர்வதேச பாங்கிட மிருந்தும் கடன்கள் வாங்கியிருக்கிறது.

சர்வதேச பாங்கிடம் கடன் வாங்கியிருக்கும் விபரம் இது:-

1949-ஆகஸ்டு 18-ல் 340-லட்சம் டாலர்

1949-செப் 29-ல் 100-லட்சம் டாலர்

வரவேண்டிய நிலையில் 220 லட்சம் டாலர்

டாலர் மதிப்பை பிரிட்டனின் நாணயமாற்று விகிதப்படி யொட்டி, இந்தியாவும் குறைத்துக் கொண்டதால் முன்பு ரூ 3—5—4 கொண்டது ஒரு டாலர் என்றிருந்தது போக இப்போது ரூ 4—12—0 கொண்டது ஒரு டாலர் என்று உயர்ந்திருக்கிறதே! இதன்படி கணக்குப் பார்த்தால், இந்தியா சர்வதேசபாங்கியிடம், கிட்டத் தட்ட 32-கோடி ரூபாய்கள் கடன்வாங்கியிருக்கிறது.

இது தவிர்த்துச் சர்வதேச நாணயச் செலாவணி பாங்கில் (International monetary Bank) இருந்தும் சுமார் 40-கோடிரூபாய்க்கு மேல் கடன்வாங்கியிருக்கிறது.

இவ்வளவுதூரம் கடன்வாங்கியும், நிலைமை சரிப்பட்டிருக்கிறதா, தொல்லை நீங்கிவிட்டதா என்றால், பலன் எதுவும் ஏற்படவில்லை. மார்ஷல் திட்டப்படி கடன் கிடைக்குமா, அமெரிக்க மகேசுவரர்கள் மனந்திறந்து பணம் கொண்டுவந்து தருவார்களா, என்ற ஏக்க நிலையே நீடிக்கிறது!

இத்தனை வேதனை, ஏற்பட்டிருக்கிறதல்லவா, இதுயாவும் பிரிட்டனின் கீழ் இந்தியா இருநூறு ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்ததன் விளைவுதான், என்று கூறத்தோன்றலாம். அதையும், ஆராய்ந்தால், கிடைக்கும்பதில் இன்னும் வேதனையூட்டக்கூடியதாகஇருக்கும்.

வெள்ளையன் வெளியேறிய பொழுது,தான் இந்தியாவுக்குத் தரவேண்டியது என்று சொல்லிவிட்டுப் போன ஸ்டர்லிங் கடன் 1,750 கோடி ரூபாயாகும்.

போர்க்காலத்தில், நாம் எல்லாம் உதவினோமல்லவா, போர் வெற்றிபெற வேண்டும் என்ற ஆசை காரணமாகப் பிரிட்டனுக்கு. அந்தத் தொகைக்குத்தான் ஸ்டர்லிங் கடன் என்று பெயர். அப்படி நாம் உதவிய அந்தக் கடன் மொத்தம் 1,750 கோடி. இதைத்தான் தருவதாக, பிரிட்டன் நமக்கு, இந்திய சர்க்காருக்கு ஒப்பந்தம் மூலம் உறுதிமொழி செய்து தந்துவிட்டு வெளியேறினர்.

இந்தத் தொகையிலும் இதுவரை ரூ 820 கோடி கரைந்திருக்கிறது. பிரிந்துபோன பாகிஸ்தானின் பங்கு ரூ 187 கோடி போக மீதித்தொகை இந்தியாவின் பற்றுக் கணக்கிலேயே குறிக்கப்பட்டிருக்கிறது.

இதுமட்டுமல்ல, சுயராஜயம் தந்துவிட்டு பிரிட்டிஷார் வெளியேறிய போது ரிசர்வ் பாங்கில் ரூ 310 கோடி வைத்துவிட்டுப் போனார்கள். அது இப்போது 100 கோடியாக ஆகியிருக்கிறது. இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில் ஆளவந்தார் வசம், 210 கோடி ரூபாய்கள் பற்று ஆகியிருக்கின்றன.

சுயராஜ்யம் வந்ததும் சுகவாழ்வு மலரப் போகிறது, வீண் செலவுகள் யாவும் ஒழிக்கப்பட்டு, இன்பம் முகிழ்க்கப் போகிறது என்று மார்தட்டி,வீரம் பேசினார்களே, காங்கிரஸ்தலைவர்கள் அவர்கள் ஆட்சியின் காட்சிகள் இவை!

* * *

மாகாண சர்க்காரும், முன்னிருந்த நிலையைவிட மோசமானதாக மாகாண நிதி நிலையை ஆக்கியுள்ளார்கள். அதைப் போலவே மத்திய சர்க்காரும் செய்துள்ளார்கள். இரண்டு இடத்திலும், வெள்ளையர் காலத்தைவிட, வரவு அதிகமாகியிருக்கிறது, இருந்தும் கடன் கேட்கிறார்கள். மாகாண சர்க்கார், மத்திய சர்க்காரை நோக்க, மத்திய சர்க்கார், அமெரிக்காவைப் பார்க்க விசித்திரமான வேதனைநிலை,இரண்டு ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது! இரண்டு ஆண்டு சுயராஜ்யம், மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியை மலரவைக்கப் போவதாகக் கூறப்பட்ட காங்கிரஸ் ராஜ்யம், மக்கள்மீது வரிச்சுமையைச்சுமத்தியது மட்டுமின்றி, இருந்த சொத்தையும் கரைப்பதோடுமட்டுமில்லாது, இன்னொரு இடத்திலும் கடன்மேல்கடன் வாங்கிக்கொண்டிருக்கும், “பணமில்லை, பணமில்லை” என்ற பாட்டையே பாடிக்கொண்டிருக்கிறது!

* * *

நீர்ப்பாசனத் திட்டம், உணவு உற்பத்திப் பெருக்கம் ஆகியவைகளுக்குப் பணமில்லை என்று இருப்பதை எடுத்து ஏப்பம் விட்டும் போதாது திண்டாடும் மாகாணசர்க்கார், மத்தியசர்க்காரை ரூ. 6 கோடி கடன் கேட்டிருக்கின்றனர்.

ஒரு வருடத்துக்கு 320 கோடி ரூபாய் வருமானம் வந்தும், மாகாணங்களிலிருந்து ஏராளமான வரிப் பணத்தைச் சுரண்டிச் சென்றும், வெளியிலிருந்து கடன் வாங்கியும் கூட, போதாது தவித்துத் தத்தளிக்கும் மத்திய அரசாங்கமோ ‘இல்லை’ என்று கைவிரித்து விட்டது.

ஜெமீனுக்கு என்னவெல்லாம் தருகிறோம், எதையும் அங்கு தானே அனுப்பிவைக்கிறோம் அவரது மதிப்பைப் பெற, என்று நினைத்து, வீட்டிலே அல்லல் ஏற்பட்டதன் விளைவாக, ஆறு வண்டி நெல் வேண்டுமென மிட்டாதார் கேட்க, இல்லையென்று ஜமீன் கூறியதும், சீற்றமும் சினமும் உருவெடுத்ததே மிட்டாதாருக்கு, அதுபோல மாகாண சர்க்காரும் சீறினர்! கோபாலர் கொக்கரித்தார், வருமானங்களையெல்லாம் கொட்டித் தருகிறோம், இருந்தும் வக்கற்றவர்களாக்குகிறது, மத்திய சர்க்கார் எங்களையென்று சீறினர், சில பல விடங்களில் பேசினர்!

கோபம் முடிந்ததும், மிட்டாதார், இட்டாரே கட்டளை தலையாரிக்கு; அதைப்போலத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள், விவசாயியிடம் போய்க் கடன் கேட்பது, கட்டாயப் படுத்தி வசூலிப்பது என்று!

ரூ. 10-க்குமேல் நிலவரிசேலுத்துபவர்களுக்கு ஒரு ஆண்டு கிஸ்திப் பணம் எவ்வளவோ, அதைச் சர்க்காருக்கு இப்போதே கட்டிவிடவேண்டும்!

அப்படி வசூலிக்கப்பட்ட பணத்தை ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சர்க்கார் தரும்.

அதற்கிடையில் எந்த விதத்திலும், எப்படிக் கேட்டாலும் தரமுடியாது, கடன் ஏதாவது ஏற்பட்டு, கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டு, சொத்துக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால்மட்டிலுமே, தரப்படலாம்.

இதுதான் சர்க்காருடைய கடன் வாங்கும் திட்டம்.

* * *

பத்து ரூபாய்க்கு மேல் வரி செலுத்துபவர்களெல்லாம் ஒரு வருட வரியைக் கட்டாயக் கடனாகக் கட்டிவிட வேண்டுமாம்! பத்து ரூபாய், ஆளவந்தார்களின் பார்வையில் அலட்சியமானதாகப் படலாம், ஆனால் அரைப்பட்டினி அப்பர்களுக்கு, கிராம மக்களுக்கு, அந்தப் பத்து ரூபாய், எவ்வளவு வேதனை போக்கக்கூடிய மோகினி தெரியுமா!

மாளிகை வாசி மகிழ்ந்து வாழ்கிறான், பெரும் பண்ணைக்காரன் பூரித்துக் கிடக்கிறான், அவர்கள் பக்கம் திரும்பவும் நினையாத ஆளவந்தார் அரைப் பட்டினிகளை நோக்கி அன்னக் காவடி கட்டுகின்றனர்.

அனைவரும் ஒரு வருட வரியை ‘அட்வான்ஸ்’ தாக்கடவீர், என்று ஆக்ஞை பிறப்பிக்கத் திட்டமிடுகின்றனர்!

நிலம் வைத்து யாவருமே, இங்கு சுகபோகிகளாக இல்லை, நிலச் சொந்தக்காரர்களாக யிருக்கும் மத்தியதர வர்க்க மக்கள் நிலையிருக்கிறதே, அது, ஆட்சியாளர் எண்ணுவது போலச் சுகக் கோட்டங்களாகவும், தொல்லையில்லா மலர்சோலையாகவும் இல்லை!

விவசாயி, வயலில் இறங்கிய நாள் முதல் அறுவடை காணும் தினம்வரை, வாடியுழலும், நாட்களை நினைத்தால், நெஞ்சில் வைத்துப் பார்த்தால் வேதனை விளங்கும். போருக்குப் பின் நெல் விலை உயர்ந்திருக்கிறது, உண்மைதான் இது, ஆனால் அதே அளவில், அவனுக்குத் தேவையான காளைமாடுகள் விலை ஒன்றுக்கு நான்கு மடங்காகியிருக்கிறதே, மண்வெட்டி ஏர்க்கலப்பை ஏரு இன்னபிற பொருள்களின் விலையும், உழைப்பாளிக்குத் தரவேண்டிய கூலியின் மடங்கும் அதிகரித்திருக்கிறதே! இத்துணையையும் சமாளித்துப் பின், மிச்சப்படும் நெல்லைக்கொண்டுதானே, அவன் வாழ்க்கை நகர்த்தப்படவேண்டியிருக்கிறது. மனைவிக்குச் சேலை மகளுக்குச் செலவு, மகன் படிப்புக்குப் பணம், வெளியூர் செல்லச் செலவு, நிலவரி, வீட்டிற்கு வேண்டிய உப்பு, புளி, மிளகாய் முதலிய பொருள்கள் எல்லாவற்றையும் வாங்குவதற்கான சூழ்நிலையில் அவன் இருக்கிறான்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், என்ற மூதுரையின் இலக்கணமல்லவே இப்போதிருக்கும் விவசாயியின்,நிலை! எத்தனை இடங்களிலே தினசரி உள்ளக் குமுறல்கள், வேதனை விருத்தங்கள் எழும்புகின்றன!

இது அறிந்தும் ஆளவந்தார், மத்தியதரவர்க்கமாகயிருந்த, மனிதனாகப் பிறந்தும் சஞ்சலமே வாழ்க்கை என்று தவித்து நிற்கும் குடியானவர்களிடம் சென்று கடன் வாங்கப் போகிறார்களாம்!

போய்க்கேட்டால், போக்கத்தவர்கள், போயும் போயும் எங்களைத் தானா தேடிவரவேண்டும், எங்களிடம் இருப்பதைத் தருகிறோம், வேண்டுமானால் அதை எடுத்துக் செல்லுங்கள் என்று கூறி உடைந்து கிடக்கும் ஏர்கலப்பை, இளைத்து இன்றோ நாளையோ என நிற்கும் காளைமாடு, இவைகளைத்தானே அவர்கள் காட்டமுடியும்! இது, ஏனோ, தென்படவில்லை இவர்களுக்கு—ஏழையின் ராஜ்யம் என்று பெயர் சொல்லி பதவிப்பீடம் அமர்ந்து விட்ட மகானுபாவர்களுக்கு!

விவசாயி ஏதோ வரி செலுத்துகிறான், என்றால் கொண்டா பணம், கிடைத்தவரையில் ஆதாயம் என்ற எண்ணமா, பிறப்பது—அதுவும் இவர்களுக்கு!

இங்கு வாழும் எல்லாக்குடியானவர்களும் என்ன, பெரிய பெரிய மிராசுதாரர்களா! பண்ணைகளா! வயலையேகாணாது, நகர்ப்புறங்களில் பொழுது போக்கும் சீமான்களா, செல்வர்களா! இல்லையே, எல்லாரும் வறுமையின் பிம்பங்கள்தானே, வழியும்வக்குமற்றுத்திகைத்து,ஏன்பிறந்தேன் என்று ஓலமிட்டு நிற்பவர்கள் தானே!

இதையெல்லாம் முன்பு பேசித்திரிந்த, வெள்ளையனை விரட்ட, முழக்கமிட்டபோது கர்ஜனை எழுப்பிய கனவான்கள், இப்போது, ஏமாந்தவன்மீது ஒட்டகச்சவாரி செய்யப் புறப்படுகிறார்கள்!

* * *

இராணுவச் செலவு என்ற பெயராலும், கவுரவம் காப்பாற்றப்பட வேண்டும் என்று காரணங்கூறியும், கோடிக்கணக்கான ரூபாய்களைகுளத்தில் கொட்டுவதுபோல், செலவழிக்கின்றனர் இந்திய சர்க்கார். 320-கோடி ரூபாய் வருமானத்தில் 157 கோடி ரூபாயை ராணுவச் செலவுக்கென இந்திய சர்க்கார் செலவழிக்கிறது!

ஆறுகோடி ரூபாய்களுக்காக விவசாயிகளைப்போய் வேதனைபடுத்த புறப்படுகிறார்களே, நமது மாகாண சர்க்கார். போலீசுக்கு என வெள்ளையன்ஆண்டகாலத்தைவிடஇப்போது எவ்வளவு அதிகமாகச் செலவிடுகிறார்கள் தெரியுமா! ஒரு லட்சம் பத்து லட்சங்கூட அல்ல, நான்கு கோடி ரூபாய்கள் முன்பைவிட அதிகமாக போலீஸ் நிர்வாகத்துக்கென இப்போது செலவழிக்கிறார்கள்!

இந்நிலையில் தங்கள் தர்பார் நீடிக்கவும், தட்டிப் பேசினால் சிறையில் தள்ளவும், தற்காப்புக்கென்று

(அடுத்த பக்கத்தில்)

தேயிலைத் தோட்டத்திலே!

"தேயிலைத் தோட்டத்திலே" என்ற பாட்டு, சில பல ஆண்டுகளுக்கு முன்பு, நாட்டிலே எழும்பியதே, அது இன்னும் எல்லோருடைய மனதைவிட்டு மறைந்திருக்க முடியாது. தேயிலைத்தோட்டத்திலே, கங்காணியின் கொடுமை, வேலையின் கடுமை ஆகியவைகளின் வேதனை தாங்காது, வெதும்பி, விம்மி, தேம்பி, திகைக்கும், தொழிலாளரின் சோக நிலையைச் சித்தரித்த இதய கீதம் அது.

பொன் விளையும் நாடிருந்தும், புசிக்க வழியில்லாது, ஏழைகளாய் கூலிகளாய் கடல் கடந்து இலங்கையிலே அவதிப்படும் தமிழர்களின் தொல்லைகளைப் படம் பிடித்துக்காட்டும் பாடல் அது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதிக பணத்தை பாதுகாப்பு என்ற பெயரால் செலவிட்டு விட்டு, பசி பசி எனத் துடிக்கும் பஞ்சைகளை பாமரிகளை பட்டினிப் பட்டாளங்களை நோக்கிப் படையெடுக்கத் திட்டம் தீட்டுகின்றனர், பணம் வசூலிக்க வழி தேடுகின்றனர்!

வெளிச்சத்தில் நின்று வெள்ளையுடையுடன் கேலிச் சிரிப்புச் சிரித்து, கொவ்வை இதழ் எங்கே, கோமளவல்லி யார், எந்தக் 'கோட்டை'யை வாங்கலாம் என்று பூரித்து நிற்கும் பண முதலைகளுக்குப் பராக்குக் கூறிவிட்டு, வேதனைக் குகைகளில் திக்கித்திண்டாடும் கூட்டத்தை நோக்கி 'அன்னக் காவடி' என்ற போர்வையில், அதட்டிப் பணம் கேட்கப் புறப்படுகிறார்கள்!

ஆளவந்தார்கள் புறப்படுகிறார்கள், ஆட்சியிருக்கிறது நம்மிடம், யார் தட்டிக் கேட்க முடியும் என்ற நினைப்புடன்! அவர்களுக்கு கவனமூட்ட விரும்புகிறோம், ஆளவந்தார் நினைக்கும் பொருட்குகையல்ல அது, புண்பட்ட உள்ளத்தின் வேதனைபுரி என்பதை!

வேதனைபுரி நோக்கி விரைவது என்றும் வெற்றியளிக்காது, கவனமிருக்கட்டும்!

சாப்பாடு இல்லாது தவிக்கும் தாய் தந்தை, ஒட்டிய வயறுடன் நிற்கும் மனைவி, அப்பா என்று அலறும் குழந்தைகள் ஆகியோரின் அழுத கண்ணீரை, துன்ப அலைகளைத் தாங்க முடியாது, தவித்து, எங்கேயாவது ஓடுவோம் எதையாவது செய்வோம் இடிந்த நிலை சீர்பட்டால் போதும் என்று துடித்து தொல்லை நீங்காதா என்று இங்கிருந்து வெளியேறியவர்களின் துயரக்காட்சிதான் தேயிலைத்தோட்டத்திலே, பாடல்.

அத்தனை வேதனைகளையும் தாங்கிக் கொண்டு, இலங்கைத் தீவிலே குடியேறிய, இந்தியாவிலிருந்து சென்றோர் தொகை சுமார் 8 லட்சம் ஆகும்.

இவர்களுக்கு, அங்கு வாழும் பிரஜா உரிமையைத்தர, அண்மையில் இந்தியாவைப் போலவே, சுதந்திர மடைந்த இலங்கை சர்க்கார் 'அக்கினி பரிட்சை' வைத்துள்ளார்கள். அவைகளைக் காணும்பொழுது, இலங்கை சர்க்காரின், நடவடிக்கைகளா இவை என்ற வியப்பும் அதையொட்டிய வேதனையுமே உருவாகிறது, நமக்கு.

பிரஜா உரிமை, தனி மனிதனின் சுதந்திரம். தன்னிடம் வந்து, தனக்காகவே தன் உழைப்பைத் தந்து விட்ட, ஒரு மனிதனுக்குரிய உரிமையை அளிக்க, இலங்கை சர்க்கார் விதித்திருக்கும் நிபந்தனைகள் நெருப்பைத் தாண்டுவது போன்று இருக்கிறது.

இலங்கையின் பிரஜா உரிமையைப் பெறவேண்டுமேயானால், பத்து ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்திருக்க வேண்டும், திருமணம் ஆகியவர்களாக யிருந்தால் குடும்பத்துடன் ஏழு ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட தகுதியுடையவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளக் கூடுவதற்கான வழியும் வகைகளும் உள்ளவர்களாக யிருக்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, மனைவி மக்களுடன் இலங்கையிலேயே இருந்துவருகிறோம், என்பதற்கான அத்தாட்சிகளைக் காட்டவேண்டும். அப்படியில்லாது யாராவது ஒருவருடைய சிறுகுழந்தை. வெளிநாட்டிலிருப்பதாகத் தெரியுமேயானால்கூட, பிரஜா உரிமை மறுக்கப்படலாம்.

இலங்கை இந்தியர் பிரஜா உரிமைச் சட்டத்தில் இருக்கும் இன்னொரு ஷரத்து, இலங்கையின் சட்டதிட்டங்களை ஏற்றவர் மட்டுமே இலங்கையின் குடிமகன் ஆகமுடியும் என்பது. இதன்படி பார்த்தால் இந்தியாவிலிருந்து சென்ற ஒருவர் யாராவது, அங்குள்ள தன்னுடைய சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொண்டிருந்தால், அவர் பிரஜா உரிமை பெறமுடியாது. இலங்கையின் சட்டப்படி சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொள்வது, புறம்பானதாகும்.

இதுமட்டுமின்றி, தான் இலங்கையிலேயே எப்போதும் நிரந்தரமாக வாசம் செய்யப்போவதாக உறுதிமொழி செய்துதரவும் வேண்டும்.

இருக்கும் 8-லட்சம் பேர்களில், இந்த நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய நிலையில், ஒருசில நூறு பேராவது தேறுவார்களா என்பது சந்தேகந்தான். இதுவரை 300-அல்லது 400-பேர்தான், இந்தநிபந்தனைகளை நிறைவேற்றி பிரஜாஉரிமை பெற்றிருக்கிறார்களாம்.

இலங்கை சிறுதீவு, இதற்கு இத்தனை ஆணவமா, நாம்யார் தெரியுமா, முப்பது கோடிமக்களின் ஒப்பற்ற சமுதாய மல்லவா, என்றெல்லாம் இங்குள்ள சிலர் தோள்தட்டுவதுபோல, வீரம் பேச விரும்பவில்லை நாம், அது விவேகமாகாது என்பதால்.

சிறுதீவு, சிறிய நாடு என்பதால் அதனுடைய சுதந்திர நிலையையோ, ஆட்சித்திட்டங்களையோ, எவரும் அலட்சியமாகப் பேசுவதோ, ஆகட்டும் பார்க்கிறேன் என்று பயமுறுத்துவதோ, விஷயம் அறியாததன் விளைவு என்றுதான் கருதப்படும்.

இலங்கை சர்க்கார், தனது நாட்டு நலனையொட்டி, நடவடிக்கைகள் எடுக்குமேயானால் அது எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில், தனது நாட்டில் குடியேறி, தனது செல்வத்தைப் பன்மடங்காக்கி,

(9-ம் பக்கம் பார்க்க)

கடவுள் விஷயம்!

4-ம் பக்கத்தொடர்ச்சி

போய் சந்திரசேகரன் கடை சரக்கை வாங்கு — அவன் அநியாய விலை வைத்துத்தான் விற்பான், இருந்தாலும் அவனிடமே வாங்குன்னு சொல்வாரா--அதுதானு கடவுளுக்கு வேலை......"—என்று மடமடவெனப் பேசுகிறார். அந்தச்சமயத்திலே, அவர் யாராக இருக்கிறார்? பக்தராகவா? நாத்திகராவா?—சிந்தித்துப் பாருங்கள்—வேடிக்கை வளரும். சின்னம்மாள், கணவரின் சீற்றம் அடங்கிய பிறகு, பேச்சைத் துவக்கி, "தாகு தர்மலிங்கத்தோடு ஏன் தகராறு செய்துகிட்டீங்க? அவன் விஷமக்காரனுச்சே! நமக்கு ஏன் அவனோடே விரோதம்? நஷ்டமும் கஷ்டமும் நமக்குத்தானே?" என்று கூறுகிறார். கந்தப்பர் இதற்கிடையிலே ஏழெட்டு முறை, முருகா! முருகா! என்று அழைத்து விட்டார், ஆறேழு முறை அம்பிகையை அழைத்து விட்டார், கூடத்து மாடத்தில் உள்ள பிள்ளையாரைக் கும்பிட்டுக் கொண்டார். கந்தப்பரின் 'ஆத்திகம்' அப்பு அழுக்கின்றி நடந்து கொண்டே இருக்கிறது. எனினும் தாகு தர்மலிங்கத்தைக் குறித்துப் பேச நேரிட்ட உடனே அவர்மனம் புதுவிதமாகிவிடுகிறது. "தகராறு ஏன் வந்ததுன்னு கேட்கறே? தாகு, மற்ற கடைக்காரர் கொடுக்கிறதை விட நான், அவனுக்குத் தாராளமாகத்தான் தருவது வழக்கம்—பிள்ளைகுட்டிக்காரன் பிழைச்சிப் போகட்டும்னு, அப்படி இருந்தும், அவன் தைரியம், பேராசை, போன வெள்ளிக்கிழமை, 'நூறு ரூபாய்' கொடுன்னு கேட்டான். ஏம்பாஎன்று கேட்டேன். அவரு, கோயில் கட்டறாராம் அவர் தெருக்கோடியிலே—அதுக்கு, 'தர்மம்' கொடுக்கவேணுமாம், நானு. தர்மலிங்கம்! காலம் இருக்கிறதைக் கவனிக்காமே, இப்படி நூறுகொடு, ஐம்பதுகொடுன்னு கேட்டா, என்னப்பா செய்யறது. கோயிலுக்கும் குளத்துக்கும் கொட்டிக் கொடுக்கிறபடியாகவா இங்கே இலாபம் குவியுது — அப்படின்னு, சமாதானமாகத்தான் சொன்னேன். உடனே 'கடவுள் காரியமாக நான் கேட்கிறேன், என் வீட்டுக்கலியாணம், சீமந்தத்துக்கு அல்ல—கொடுத்தா, அதுக்கான பலன், உங்களுக்குத்தான், கொடுக்காவிட்டாலும் சரி, உங்க இஷ்டம்—கடவுள் காரியத்துக்கு, பத்துப்பேரும் உபகாரம் செய்வாங்க—நீங்க, முடியாதுன்னு சொல்கிறிங்க—சரி—நான் என்ன சொல்ல இருக்குது—ஏதோ என்னாலே, உங்களுக்கு எவ்வளவோ கிடைச்சிருக்கும்; கடவுள் காரியத்துக்கு அந்தக்காசு உபயோகப்படக் கூடாது போலிருக்கு—உங்க இஷ்டம் அப்படி இப்படின்னு, என்னமோ இவன்தான் கடவுளைக் கண்டு விட்டவன் போலவும், நாமெல்லாம் கடவுள் பக்தியே இல்லாதவங்க போலவும், என்னமோ கடவுள் இவனைக் கூப்பிட்டுக் கோயிலைக் கட்டச் சொன்னது போலவும், அளந்தான் அரைமணி நேரம்—அதுதான் தகராறுக்குக் காரணம்"—என்று விளக்குகிறார். சின்னம்மா, "என்னங்க, போனு போகுதுன்னு, ஒரு பத்தோ இருபதோ தொலைத்து விடுவதுதானே. அவனும், கடவுள் காரியமாகத்தானே கேட்டான்" என்று கூற, சீறிய கந்தப்பர், "கடவுள் காரியமா! கடவுள் நேரிலேயே வந்தார், அவன்கிட்டே? ரூபாய்க்குக் கால்தராது கேட்பாண்டி அவன். கடவுள் பேரைச் சொல்லிக்கிட்டு 'காசு' திரட்டக் கிளம்பிவிட்டான் அவன். எனக்கா தெரியாது இவன் நடத்தை. கோயில் இருக்கிற திக்குக் கூட இவனுக்குப் பிடிக்காது. காலையிலே தூங்கி எழுந்திருந்ததிலே இருந்து ராத்திரி படுக்கிறவரையிலே, பொய்பேசிப்பேசி பொழுதை ஓட்டுகிறான் — இவனுக்குக் கடவுள் பக்தி வந்துவிட்டதோ! கடவுள் காரியம்னு சொன்னா, கண்ணை மூடிக் கொண்டு அள்ளிக் கொடுப்பாங்க என்கிற தைரியம்" என்று பேசுகிறார். சின்னம்மாவுக்கு, என்ன சொல்வதென்றே தெரியவில்லை கடவுள் காரியத்துக்காக என்று முன்பு ஒருமுறை காட்டுப்பட்டி மிட்டாதாரர் வந்தபோது, கந்தப்பர், ஆயிரத்தொரு ரூபாய் கொடுத்திருக்கிறார். "நம்ம சக்திக்கு மீறின தொகை" என்று சின்னம்மா தடுத்துக்கூடக் கேட்கவில்லை, காட்டுப்பட்டியார் நேரே நம்ம வீடுதேடி வந்துவிட்ட பிறகு, ஆயிரம் கொடுக்காவிட்டா நல்லதா என்று வாதாடினார். காட்டுப்பட்டியாரிடம் காணிக்கை கொடுப்பதுபோலப் பணத்தைக் கொடுத்துவிட்டு, "கடவுள் காரியத்துக்கு உபயோகப் படாத படிக்கு வேறே எதுக்குத் தானுங்க பணம் இருக்குது" என்று பேசினார். இந்தக் காட்சிகள் சின்னம்மாவின் மனக்கண்முன் தோன்றின. தாகு தர்மலிங்கத்தின் 'கடவுள் காரியம்' கந்தப்பருக்குக் கடும் கோபம் கிளப்பிவிட்டது கேட்டு, சின்னம்மாளுக்குச் சிந்தனை குழம்பலாயிற்று, நமக்கு மட்டும் என்ன! சிந்தித்துப் பாருங்கள்—கந்தப்பர், யார்? அவருடைய மனப்போக்கு எத்தகையது? அவரை எந்த 'வகையிலே' சேர்க்கலாம், என்று எண்ணிப்பாருங்கள். வேடிக்கை வளரும். சின்னம்மா, சயனித்துக் கொண்டார்—சிவன் கோயில் தர்மகர்த்தா சீருடையாப் பிள்ளை, எதிர் வீட்டுக்காரர்—அவரிடம் பேசிக்கொண்டிருக்கச் சென்றார் கந்தப்பர். அரை மணி நேரம், 'சத்விஷயம்' பேசிக் கொண்டிருந்தனர். வீட்டுக்குப் பிறகு திரும்பினார் — பாலைப்பருகினார் —சின்னம்மாளைப் பார்த்தார், "பால்காரன், ஏன் இப்படி அக்ரமக்காரனாகிவிட்டான்—கடவுளுக்குப் பொதுவாக நடக்கச்சொல்லு" என்று கூறிவிட்டு, முருகனை மூன்று முறை அழைத்தார், அம்பிகையையும் அழைத்தார், படுத்தார், உறங்க. அந்த 'அழைப்பு' விடுத்த சமயம் அவருடைய மனநிலை என்ன? எதற்கு அழைத்தார்? என்பனபற்றி எண்ணிப்பாருங்கள் — விந்தையாக இருக்கும்.

* * *

கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும் — என்று சர்வசாதாரணமாகப் பேசுவர், பெரும்பாலோர், அவர்களுக்குள்ள ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையை இந்த வாசகம் காட்டுவதாகக், கருதப் படுகிறது.

> இட்டமுடன் என்தலையில்...
> இன்னபடி என்றெழுதி விட்ட
> சிவனும் செத்துவிட்டானோ?
> முட்ட முட்டப் பஞ்சமே
> யானாலும் பாரம் அவனுக்கு.

என்று கூறிடும் கவிதை வடிவிலே உள்ள கருத்தும் இதுபோன்றதே. ஆழ்ந்த ஆத்திகத்தின், அசைக்க முடியாத கடவுள் நம்பிக்கையின் அடையாளமாக இக்கருத்துக்களைக் கூறுகிறார்கள். இத்தகைய கருத்துள்ள 'பேச்சு' யாரால் எந்தவிதமான நிலைமைகளின்போது கூறப்படு

கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால் தான், இந்த வாசகங்களின் முழுஉண்மை துலங்கும். ஆராயுமுன்பு, கடவுள்விட்டவழிப்படிநடக்கட்டும் என்றபேச்சு எப்படி, சர்வ சாதாரணமாக நாட்டிலே கேட்கப்படுகிறதோ, அதுபோலவே, கடவுள் காப்பாற்றுவாருன்னு, நம்பிக்கொண்டே இருந்தானப்பா அந்த ஏமாளி—கடைசிவரையிலே!

என்ற பேச்சும் நாட்டிலே கேட்கப்படுகிறது. ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையை முதல்வாசகம் காட்டுகிறது என்றால், அந்த நம்பிக்கையைக் கேலி செய்து கண்டிப்பதாக இருக்கிறது இரண்டாவது வாசகம். — இந்த இருவகைக்கருத்துகளை வெளியிட்ட இருவரில், ஒருவர் ஆத்திகர், மற்றவர் நாத்திகர் என்றும் அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது — அவர்களின் நினைப்பு நடவடிக்கை ஆகியவற்றைக் கவனித்தால்.

* * *

நெருப்புப் போலக் காய்கிறது—மூடிய கண்களைத் திறக்க வில்லை—சொட்டுப்பால்கூட உள்ளே இறங்கவில்லை — பார்க்கிறவர்களெல்லாம், ஐயோபாவம்! என்று கூறிப் பரிதாபப்படுகிறார்கள், கண்ணீரைத் துடைத்தபடி தாயார் குழந்தையின் பக்கம் உட்கார்ந்திருக்கிறார்கள், பாண்டுரங்கனிடம், நண்பர்கள் வருகிறார்கள், குழந்தையின் நிலைமையைப்பற்றி விசாரிக்க.

* * *

"டாக்டர் தாமோதரத்திடம் காட்டினாயோ?"

"ஆறுநாள் அவர்தான் மருந்து கொடுத்தார்............"

"ஊசி போட்டாரோ"

"மூனு போட்டாரே!"

* • •

"கட்டுமாத்திரை கந்தப்பண்டிதரிடம் காட்டினா, ஒரேவேளையிலேகாச்சல் போயிடுமேப்பா! பாண்டு! அவரைக்கூப்பிட்டுக்காட்டிப்பாரேன்"

"அவர் நாலுவேளை மருந்து கொடுத்தாருங்களே—பிறகு அவரேதான் சொன்னார், இங்கிலீஷ்மருந்து கொடுத்துப்பாரு பாண்டுன்னு"

* * *

இப்படி நண்பர்கள்கேட்கிறார்கள். பாண்டுரங்கன், தான் எடுத்துக்கொண்ட முயற்சியை எல்லாம் கூறுகிறான்; கடைசியாகத்தான் அவன் சொல்கிறான், மனக்கஷ்டத்துடன், கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும்—என்று. பெரியடாக்டர் ஒருவர் பெங்களூருக்கு வந்திருக்கிறாராம் சீமையிலிருந்து — அவர், 'பிராணவாயு'வையே நோயாளிகளுக்குத்தருவாராம், எப்படிப்பட்ட வியாதியானாலும் குணமாகிவிடுமாம், ஆனால், பணம் அதிகம் கேட்கிறாராம், 500க்குக்குறைவாக வாங்குகிற வழக்கமே கிடையாதாம்—என்ற ஒருதகவலைத் தருகிறார் ஒருநண்பர். பாண்டுரங்கனுடைய சக்திக்குமீறிய காரியம், அந்த வைத்தியம் — அவனே கடனாளி—500 ரூபாய் கேட்கும் சீமை டாக்டரை நாடமுடியாத நிலை — எனவே ஒருநீண்ட பெருமூச்சுடன் அந்தத் தகவலைக் கேட்டுக்கொண்டான் — பிறகுதான், கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும் என்றான். குழந்தை இறந்துவிட்டது — பெங்களூர் பெரியடாக்டரைப்பற்றிய தகவலைத்தந்த நண்பர், வேறோர் நண்பரிடம் கூறுகிறார், "கடவுள் காப்பாற்றுவார் என்றே நம்பிக்கொண்டிருந்தான் அந்த ஏமாளி, கடைசிவரையிலே!" என்று—கேலியும் கண்டனமும் கலந்த குரலில். பாண்டுரங்கன் கடவுளின் மீது பாரத்தைப் போட்டது, அந்த நண்பருக்கு,ஆத்திகமாக, ஆழ்ந்தநம்பிக்கையின் விளைவாக, பாராட்டுதலுக் குரியதாகத் தோன்றவில்லை— ஏமாளித்தனத்தின் விளைவு என்றே அவர், அவன் பேச்சைக் கருதுகிறார்; கடவுளின் மீது பாரத்தைப்போடுவது என்பது ஆத்திகமானால், அதைக் கேலியாகப் பேசுவது நாத்திகம்தானே! ஆனால் அந்தக்கேலி பேசியவர், சோமவார விரதக்காரர், சொக்கநாதரிடம் பக்தி கொண்டவர், பழுத்தசைவர்!!

* * *

கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும் என்ற ஆத்திக உரையாற்றிய பாண்டுரங்கன், அந்தப்பேச்சை முதலிலே கூறிக்கொண்டிருந்தவனல்ல, குழந்தைக்கு ஜுரம், என்றஉடனே மருந்து தரச்சொன்னான் மனைவியிடம்—பிறகு குழந்தை வைத்தியம் குப்பிப்பாட்டியை அழைத்துவந்து காட்டினான்—பிறகு கட்டுமாத்திரை கந்தப்பண்டிதரை அழைத்துவந்தான்—பிறகு மிஷன் ஆஸ்பத்திரிக்குக் குழந்தையை எடுத்துச் சென்றான்—பிறகு டாக்டர் சோமு, L. M. P. யை அழைத்தான்,அடுத்தபடி டாக்டர் சுந்தரம் M. B. B. S., வந்தார், பிறகு டாக்டர் தாமோதரம் வந்துபார்த்தார் — இதற்கிடையே, மிளகு மந்திரிக்கும் மாரிசாமி, கோழி சுற்றிவிடும் கோலப்பிள்ளை, விபூதி தூவும் மாயாண்டி, இப்படிப் பல மந்திரவாதிகளின் துணையையும் நாடினான் —விளக்கு வைத்தான் கோயிலுக்கு —குல தேவதையை வேண்டிக் கொண்டான் — மஞ்சள் துணியால், குழந்தையின் கையிலே காப்புக் கட்டினான்—இவ்வளவெல்லாம் செய்தான் பிறகு, அலுத்துப்போய், பலன் காணாமல் பதைத்துப்போய், இனி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கும் போதுதான், பாண்டுரங்கன், கடவுள் விட்ட வழிப்படி நடக்கட்டும், என்றான்! துவக்கத்திலே அல்ல—முயற்சி செய்து பார்க்காத முன்பு அல்ல—வீட்டு வைத்தியம், டாக்டர், மந்திரம், பூஜை, இவ்வளவுக்கும் பிறகு, வழக்கமான பல வழிகளையும் பார்த்தான பிறகு, சொன்னான், கடவுள்விட்ட வழிப்படி நடக்கட்டும், என்று! அப்படி அவன் சொன்னது ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையின் விளைவு என்று கூறப்படுமானால், குழந்தைக்குக் காய்ச்சல் ஏற்பட்டதும், அவன், பல்வேறுமுயற்சிகளை எடுத்துக்கொண்டானே, அப்போது அவன், யாராக இருந்தான்—ஆத்திகனாகவா? நாத்திகனாகவா? சிந்தித்துப் பாருங்கள் — சிக்கலாக மட்டுமல்ல, சுவை தருவதாகவும் இருக்கும்.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிட நாடு" அதிகம் காப்பிகள் தேவைப்படுவோர், பிரதி வாரமும் புதன்கிழமைக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.

குடிவிலக்கா?-கொள்கைவிலக்கா?

கடந்த ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாளன்று நாடு மகிழ்ந்தது, நல்லது செய்தோம் என்று நாடு நகர் பட்டி தொட்டி எங்கும் பவனி வந்தனர் நமது மந்திரிமார்கள்.

நாமும் மகிழ்ந்தோம், நல்லது செய்கிறார்கள், நம்மை ஆளவந்தார்கள் என்ற குதூகலத்தால், மனப் பூரிப்பல்.

இன்று மகாத்மா பிறந்த தினம், மங்களகரமான காரியத்தைச் செய்து விட்டோம், அவருக்கு எது பிரீதியானதோ, அதை நிறைவேற்றி விட்டோம் என்று அகமும் முகமும் மலர்ந்து பேசினர் காங்கிரஸ் தலைவர்கள்.

உள்ளதுதானே, என்று உளமுவந்து கூறினோம், உருப்படியான காரியம் என்று போற்றினோம், புகழ்ந்தோம். சாதிக்காததைச் சாதித்துவிட்டோம், பஞ்சமா பாதகங்களில் ஒன்றை ஒழித்துவிட்டோம், மதுவரக்கன் ஒழிந்தான், மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி மலரும் என்று எக்காளமிட்டனர் காங்கிரஸ் நண்பர்கள்.

பல கோடி நஷ்டம் ஏற்படும் மதுவிலக்கால். பரவாயில்லை, பகுத்தறிவை மாய்த்து, மனிதனை மிருகமாக்கும் குடிபோதையை யன்றோ ஒழிக்கிறோம், ஆகவே இதன் மூலம் ஏற்படும் நஷ்டத்தைச் சமாளிப்போம், பயந்து பாதை மாறிவிடமாட்டோம்என்று மார் தட்டிப்பேசினர் நமது ஆளவந்தார்கள்.

ஒரே கல் ஆனல் இரண்டு மாங்காய் என்று வானொலியில் வர்ணித்தார் கனம் பக்தவத்சலம்.

நாட்டின் நலிவு நீங்கும், நல்லவனையும் பொல்லாதவனுக்கும் கேடு ஒழியும், மதுப்போதை மாயும், மனிதன் மனிதனாவான், குடிக்க வியயமாகும் பணத்தைக் குடும்பத்துக்குச் செலவிடுவான், குழந்தை குட்டிகள் கஞ்சியின்றி கஷ்டமனுபவித்த காலம் மாறும், மனைவியின் தாலிக் கயிறு மிஞ்சும், மாளிகை வாசிகளாயிருந்தாலும் மதுபோதையிலாழ்ந்து கடன்பட்டு ஒடிந்துவிழும் குடும்பங்கள் மீளும், இத்தீய வழியில் பறிபோன பணமெல்லாம் மீதப்படும், நாட்டின் நன்மைக்குப் பயன்படும் நல்ல காலம் ஏற்படும் என்ற ஆசை எழுந்தது நமக்கு.

அப்படித்தான் அவரும் சொன்னார், கர்ஜனை செய்தார். அது கானமாக இருந்தது நமக்கு-நாட்டு மக்களுக்கு. மதுவிலக்கால் மக்களிடம் பணம் மிஞ்சப் போகிறது. அந்தப் பணத்தைச் சேமித்து வையுங்கள், அதற்கான நல்லவழி சேமிப்புப் பத்திரங்கள் வாங்குவது தான் என்று சர்க்கார் பிரச்சாரம் செய்யவும் போகிறது. ஆகவே மதுவிலக்கால் மக்கள் கையில் பணம் மிஞ்சும், அதே நேரத்தில் பாதுகாப்புப் பத்திரங்களில் பணம் போட்டு சேமித்து வையுங்கள் என்று தூண்டினால் பண நெருக்கடியைத் தடுக்கவும் ஏழைகள் நன்மை பெறவுமான இரண்டு லட்சியங்கள் நிறைவேறும்" என்றார் பக்தவத்சலம், சர்க்கார் சார்பில், வானொலியில் அன்று பேசுகையில்!

மக்கள் கையில் இந் நடவடிக்கை மூலம் ஏதோ கொஞ்ச நஞ்சமாவது பணம் மிஞ்சினால், அதுவே போதும். அந்த நிலைமை ஏற்படுவதற்காக, சுலபமாக வருமானம் வரக்கூடிய இந்த வழியை சர்க்கார் தியாகம் செய்வது மிக மிகப் பொருத்தமானது என்று பேசினார்.

மதுவிலக்குத் திட்டம் மகத்தானது, அது வெற்றி பெற மனிதாபிமான முள்ளவர் அனைவரும் பாடுபட வாரீர் என்று மனதார நாமும் கூவினோம், மக்களுக்குத் தெரிவித்தோம், மகிழ்ச்சியுடன் அழைத்தோம்.

"மதுவிலக்குத் திட்டத்தை மேற்கொண்டு நடத்த முடிவு செய்தது அறிய மகிழ்கிறேன். மதுவிலக்கு நமது கொள்கை. ஆகவே இதைக் கைகழுவும் எண்ணமே எழும்ப முடியாது......மதுவிலக்கு வெற்றி பெற வாழ்த்துகிறேன்" என்று இந்தியத் துணைப் பிரதமர் சர்தார் பட்டேல் வாழ்த்து தந்தார், சஞ்சலமின்றி அமுல் நடத்துங்கள், நமது கொள்கையல்லவா அது, என்று பாராட்டு அனுப்பினர்.

அப்போது காங்கிரஸ் தலைவராகயிருந்த அரசியல் நிர்ணய சபைத் தலைவர் ராஜேந்திர பிரசாத் பாராட்டிப் போற்றினர். "இந் நடவடிக்கை மூலம் சர்க்காருக்கு சந்தேகமின்றி வருமான நஷ்டம் ஏற்படத்தான் செய்யும். ஆனல் மக்களுக்கு இந்நடவடிக்கை மூலம் ஏற்படப் போகும் மகத்தான நன்மையைக் கவனிக்கும்போது இதனால் ஏற்படும் நஷ்டம் பெரிதல்ல. ஆகவே மனிதாபிமானம் நிறைந்த மாபெரும் காரியத்தில் வெற்றி பெறுவீர்களாக!" என்று மனமுவந்து வரவேற்றார், பலபடப் புகழ்ந்தார், பாராட்டினர்.

இந்தியாவுக்கே நாம் வழிகாட்டுகிறோம் என்று இந்தியாவின் கவர்னர் ஜனரல் சி. ஆர். பெருமிதமடைந்தார், பூரித்தார்.

காந்தியடிகளின் கனவு நனவாகிவிட்டது, காங்கிரஸ் கூறியதைச் செய்யாமல் விட்டு விடுமா என்ன, எதுவரினும் என்ன, அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதி வாக்கை வீணாகவா ஆக்கிவிடுவோம், என்று வீரமுழக்கமிட்டனர், வெற்றிச் சிரிப்பு எழுந்தது, நமது காங்கிரஸ் நண்பர்களுக்கு.

மக்கள் மன்றத்திலும் அன்று மகிழ்ச்சி மலர்ந்துகிடந்தது. குடிசையிலேத் தவித்த காத்தாயி முதல், மாளிகை மாடியிலே தேம்பி நின்ற கோமளா வரை அன்று குதூகலித்தனர், இனிக் கவலையில்லை, கணவன் தொல்லையில்லை, கஞ்சிக்குக் காசு மிஞ்சும், அட்டிகையும் ஒட்டியாண

மும் அடகுக்குப் போகாது என்ற திருப்தியால், பூரிப்பால்.

மது ஒழிந்தது, மக்கள் வாழ்வில் இன்பம் மலரும், மகத்தான சாதனை இது, என்று நாமும் மகிழ்ந்தோம், பாராட்டினோம், வெற்றி பெற சர்க்காருடன் ஒத்துழைப்போம் என்று கூறினோம், கூவினோம்.

* * *

சரியாக ஓராண்டு முடிந்து அக்டோபர் சென்று நவம்பர் நடந்து கொண்டிருக்கிறது. வானொலிப் பேச்சும், தலைவர்கள் பாராட்டும், அன்று எழும்பிய சங்கொலியும் தப்பட்டை முழக்கமும், கோலாகல வைபவங்களும், இன்னும் மறைந்து விடவில்லை, மங்கிவிடவில்லை. பக்த வத்சலத்தின் 'பாணி' காதில் இன்னும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. பவனி வந்து பேசிய மந்திரிமார்களின் பிரசங்கங்கள், எண்ணத்தை விட்டு, இன்னும் அகன்று விடவில்லை. மதுவிலக்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்டு ஓரே ஒரு ஆண்டுதான், பன்னிரண்டே மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. அதற்குள்,

மதுவிலக்கு கரையும் விழா!
கனவான்கள் கருணை காட்டுக!
அள்ளிப் பருகலாம்! ஆனந்தம்
பெறலாம்!!
வாய்த்த சமயம் நழுவ விடாதீர்!

என்ற, வாக்கியங்களைச் சொல்லாமல் சொல்லி வந்து பாருங்கள் என்று அழைக்கின்றனர், மதுவிலக்கு கரையும் விழாக் கொண்டாட முனைகின்றனர், கடந்த ஆண்டு கொண்டு வந்த மதுவிலக்குச் சட்டத்திற்கு இந்த ஆண்டு திருத்தங்கள் கொண்டு வருகின்றனர், நீர் நிறைந்த குடத்தில் பொத்தல்களை உண்டாக்குவது போல, சட்டத்தின் சந்து பொந்துகளைத் திறந்து விடுகின்றனர் ஆளவந்தார்கள்.

"ரூ 500 பணம் கட்டினால் மாதம் நான்கு புட்டிகள் வாங்கிக் கொள்ளலாம்."

என்று விளம்பரப் பலகைத் தொங்கவிடுவதுபோல, புது உத்திரவு பிறப்பித்துள்ளனர். மாஜிகுடிகாரர்கள் இருந்து, அவர்களால் மதுவிலக்கை அனுசரிக்க முடியவில்லை, மது இல்லாவிட்டால் வாழ முடியாது, நோய் நொடிக்கு ஆளாக வேண்டியதுதான் என்ற நிலை ஏற்பட்டால், டாக்டர்கள் அளிக்கும் சர்ட்டிபிகேட்டின்மீது ரூ. 50 பணம் கட்டிவிட்டு மது வாங்கிக் கொள்ளலாம் குடித்து மகிழலாம் என்பதாக, மதுவிலக்குச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. இப்போது, டாக்டரிடம் அனுமதி பெறவேண்டும் என்பதற்குப்பதில் ரூ. 500 கட்டினால்போதும் என்பதாக மாற்றியுள்ளனர், கனவான்களுக்கு கடை திறந்து வைக்கப்படும் என்று கூறுவதுபோல, அனுமதி உண்டு ஆகவே வாருங்கள் என்று சொல்வதுபோல, சட்டத்தின் தாழ்ப்பாளைத் திறந்து விடுகின்றனர்!

ரூ. 500 கட்டிவிட்டால் போதுமாம், அனுமதி கொடுக்கப்படுமாம், டாக்டர் சர்டிபிகேட் கூடத் தேவையில்லாம்! 'மந்திரீ! மாத மும்மாரி பெய்கிறதா' என்று ராஜா கேட்க, மழைபெய்கிறதா இல்லையா என்பது கூடத்தெரியாதவரா நமதுமகாராஜா என்று எண்ணுதவனைப் மதி மந்திரி, "பெய்கிறது மகாராஜா' என்று கூறுவானே நாடகமேடையில் அது போன்ற இடத்தில் நடந்ததல்ல, நகைச்சுவைக்கானது, நன்றாகசிரிப்பு வருகிறது நல்ல 'காமிக்' என்றுகூறி விட்டுப்போய்விடுவதற்கு! நாடாள வந்த நாயகர்கள், நாடு என்றால் என்ன, எப்படியிருக்கிறார்கள் மக்கள், நேற்று என்ன சட்டம் போட்டோம், இன்று என்ன உத்திரவு பிறப்பிக்கிறோம் என்றுகூட அறியாதவர்கள்போல உத்திரவு பிறப்பிக்கின்றனர், 'உத்திரவாதம்தேவையில்லை! ஒரு ஐநூறு போடு! உண்டு உனக்கு அனுமதி' என்று பிரகடனப்படுத்துகின்றனர்.

ஓராண்டுதான் முடிந்திருக்கிறது, உத்தமர் மகானின் சத்தியபோதனைப்படி நடக்கிறோம் என்றுசண்டப்பிரசண்டர்களாகப் பவனிவந்து, கர்ஜனை முழங்கிய கனவான்கள், மேலிடத்தின் பாராட்டுதலுடன்,பட்டேல் வாழ்த்த, பிரசாதம்கிழ, மதுவிலக்கு நடவடிக்கை அமுலுக்கு கொண்டு வந்து. அதற்குள், "கள்ளுக்கடைத் திறப்புவிழா" செய்யலாமா என்று கனஜோராகச் சிந்திக்கத்துவங்கிவிட்டதுபோல், காரியங்களில் ஈடுபடுகிறார்கள் உத்திரவிடுகிறார்கள்.

"புது பிசினஸ், ஒரு ஐநூறு தாங்கோ ஓரேமாதம்........"

"என்னப்பா, அப்படி"

"ஆமாங்க, ஓரேமாதத்தில்தர்துடரேனுங்க"

"பணம் தருவது சரி. பிசினஸ் என்னவாம்!"

"நாலு பாட்டிலுங்க!"

"சரிதான், புத்தி தடுமாறுதோ, போடா போக்கத்தவனே!"

"ஏன், அகப்பட்டுகுவேன்னு பயமுங்களா! அதெல்லாம் முடியாதுங்க"

"மதுவிலக்கு அமுல் நடக்குது தெரியுமில்லே!"

"தெரியுமுங்க, அதனாலேதான் கேட்டேன். ரூ. 500. கொடுத்து, மாதத்துக்கு நான்கு பாட்டில் வாங்கிக்கலாமுங்க. டாக்டர் சர்டிபிகேட் கூட வாணுமுங்க. சர்க்கார் உத்திரவு போட்டிருக்குதுங்க."

இதுபோன்ற பேச்சுகள் இனி நாட்டில் எழும்பாமலா இருக்கும்! பிராந்தி கொண்டுவருவது, கள்ளச் சாராயம் காய்ச்சுவது கள்ளமார்க்கெட்டில் விற்பது, கொள்ளைலாபம் சம்பாதிப்பது என்று எண்ணற்ற 'கனவான்'கள் முனைந்திருப்பதாக, அன்றன்றாடம் வரும் செய்திகள் கூறுகின்றனவே! ஆட்சியாளர்கூட, மதுவிலக்கு இருந்தாலும், மக்களிலே சிலர் மறைந்து நின்று குடிக்கவும், கள்ளத்தனமாக வாங்கவும் ஈடுபட்டிருக்கின்றனர் இதையெல்லாம் தடுக்கவேண்டும் என்று தினசரி முழக்கமிட்டு வருகிறார்களே நமது மந்திரிமார்கள்! இந்த நிலையில் "500 போடு! குடித்துக்கொள்" என்று அனுமதியளிப்பது கேடுவிளைவிக்குமே, கெடுமதி எண்ணம் என்று தூற்றப்படுமே, மதுவிலக்கு கூடாது என்போரின் கிண்டல் அதிகரிக்குமே, என்பதெல்லாம் தெரியாதவர்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.

412 1-50
OFFICE OF ... BOOKS MADRAS FEB 1950

REGD 4642 M

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7.
½ " 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 11-12-49 | இதழ் 24

எல்லாம் எட்டில்தான்!

தேர்தல் நெருங்கிவிட்டதல்லவா! ஆட்சிப்பீடம் ஏறிய ஆளவந்தார்கள் என்னென்ன 'நன்மைகளை'ச் செய்துள்ளார்கள், இதுவரை, என்று "விளக்கி" அ. இ. காங்கிரஸ் ஒரு வெளியீடு பிரசுரித்திருக்கிறதாம்! காங்கிரஸ் ஆட்சியில், மக்கள் நன்மைகளை எதிர்பார்த்தனர். ஆனால் கிடைத்தது? கிடைப்பது? எல்லாம் எட்டில்தான்! என்பதை விளக்க, 'பிளிட்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள படம்தான் இது.

மஞ்சள் ஏகாதிபத்யம்!

ஏழை எப்படி வாழமுடியும்? அவனுடைய நன்மைக்கா, வரிப் பணம் செலவிடப்படுகிறது? கொட்டித் தருகிறான் வரிப்பணம், கேட்ட போதெல்லாம், கேட்கிற அளவுக்கு. பகல்பட்டினி—இராப்பட்டினி—அன்றாடம் காய்ச்சி—அரை வயிற்றுக்கு ஆலாய்ப் பறப்பவன்—என்று இவ்விதமாக இழிநிலையில் ஏழை இருக்கிறான்.

அவன் தருகிற வரிப்பணமோ, சர்க்கார் செலவுக்கே, முக்கால் பாகத்துக்கு மேல சரியாகப் போய் விடுகிறது.

நெல்லுக்கு நீர் பாய்ச்சுகிறான்—புல்லுக்குத்தான் பயன் படுகிறது! கம்பளி கிடைக்குமென்று, ஆடுகளை வளர்க்கிறான் — ஓநாய்கள் கொழுக்கின்றன, ஆடுகளைக்கொன்றுதின்று! மரம் பழுக்கிறது — வௌவாலுக்கு விருந்து — தோட்டக்காரன், பழம் இருந்த இடத்தைப் பார்த்துப் பார்த்து ஏங்குகிறான்.

ஏழையும் அப்படித்தான், சர்க்காருக்கு நாம் வரிமேல் வரிகொடுத்த வண்ணம் இருக்கிறோம், அந்தப் பணத்தைக் கொண்டு, நமக்குத் தேவையான நன்மைகளைச் செய்து தரும் என்று நம்புகிறான்—சர்க்காரோ, முக்கால் பாகம், சர்க்காரின் நிர்வாகத்துக்காக உள்ள, அதிகாரிகளுக்குச் சம்பளமாகக் கொடுத்துவிட்டு, மிச்சம் மீதியை வைத்துக்கொண்டு, பொதுமக்களின் நன்மையைச் செய்வதாகக் கூறுகிறது. வரிப்பணத்திலே பெரும் பகுதி, கர்னல், கவர்னர், கலக்டர், மானேஜர், என்று இப்படி உள்ள பண விழுங்கிகளுக்கே சரியாகிவிடுகிறது—ஏழையை வாழவைக்கப் பணம் ஏது இந்தச் சர்க்காரிடம்! ஏழை வாழவேண்டுமானால், அவன் தருகிற வரிப்பணம், இப்படிப் பாழாகிற திட்டம் ஒழிய வேண்டும்.

கொள்ளைச் சம்பளத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்.

எவ்வளவு அதிகாரிகள்! எதெதற்கு அதிகாரிகள்! கும்பல் கும்பலாகக் கூடிக்கொண்டு, ஏழையின் பணத்தைத் தின்று ஏப்பமிடுகிறார்கள்; இவ்வளவு 'அதிகாரிகள்' ஏன்? அதிகார வர்க்கத்தின், தொகை குறையவேண்டும்—சம்பளச் செலவு, மிகவும் குறைக்கப்பட வேண்டும்.

'நம்ம சர்க்கார்' ஏற்பட்டால் 'சம்பளச் செலவு' இவ்வளவு இருக்க விடுவோமா! இவ்வளவு அதிகாரக் கும்பல் கொட்டமடிக்கப் பார்த்துக் கொண்டிருப்போமா?

நிலத்துக்கு ஒரு அதிகாரி! அதற்கு நீர்ப்பாய்ச்சனத்துக்காக ஒரு அதிகாரி! ஆறுகுளத்துக்கு ஒரு அதிகாரி! அவைகளிலே ஓடும் மீனுக்கு ஒரு அதிகாரி. காட்டுக்கு ஒரு அதிகாரி, என்று இப்படி கண்டதற்கெல்லாம், அதிகாரிகளை நியமித்து, சம்பளத்தைக் கொள்ளை கொள்ளையாகக் கொடுத்து, ஏழையைப் பாழாக்குகிறது இந்தச் சர்க்கார். வெள்ளைக்காரச்சர்க்கார் என்று இதற்குப் பெயராம்! கொள்ளைக்கார சர்க்கார் என்ற பெயரல்லவா, பொருத்தமானது!

* * *

ஏழை மகிழ்ந்தான்! வாழ்வளிக்கும் திட்டம் அறிந்துரைக்கிறார் இந்தத் தலைவர், இவர் வாழ்க!—என்று வாழ்த்தினான். ஊரெங்கும் இதே பேச்சு—உத்யோக மண்டலம், பணத்தைத் தின்று விடுகிறது—அளவுக்கு அதிகமான, செலவு செய்யப்படுகிறது அதிகாரிகளுக்கு—தொகையும் அதிகம், தரப்படும் பணமும் அதிகம் —, வேலைக்காக 'ஆள்' நியமிக்கப்படுவதில்லை — 'ஆளுக்காக' வேலைகளைப் புதிது புதிதாக உண்டாக்குகிறார்கள்— இந்த வீண் செலவினால்தான், ஏழைக்கு, வரிப்பளுவு ஏறுகிறது, வாழ்வு வளைகிறது—என்று, முதலில் பேசினர்—பிறகு ஏசினர் இந்த முறையை மாற்றி அமைக்கும் நோக்கமும் திறமும் கொண்டவர்களை, ஆட்சியில் இருக்கச் செய்யவேண்டும் என்று பொதுமக்கள் தீர்மானித்தனர் — காங்கிரசாட்சியும் ஏற்பட்டது.

* * *

மேடைகளில் கிளம்பிய முழக்கம் போலவே, ஏடுகளிலும்! உள்நாட்டிலே உள்ளவர்க்கு அறிவிக்கும்விதமாக மட்டுமல்ல, வெளி உலகுக்குத் தெரிவிக்கும் முறையிலே, தலையங்கங்கள் தீட்டப்பட்டன. ஏழை இந்தியாவில், அதிகார வர்க்கம் கொழுக்கிறது என்று தீட்டுவார் ஓர் ஆசிரியர். யானையைக் கட்டித் தீனிபோட யாரால் முடியும்—என்று நகைச்சுவையைக் கலந்து எழுதுவார் இன்னோர் ஆசிரியர். டில்லி தேவதைகள்! அதிகார பூதங்கள்!— என்று இடிமொழிகளைத் தீட்டுவார் வேறோர் ஆசிரியர். நாள்தோறும் கிளம்பும் இந்தப் பிரச்சாரக் குண்டு! நாடு, அதிரும்!! வெளி உலகும் இதுகேட்டு, இப்படியுமா அக்ரமம் நடக்கிறது என்று வியப்புறும்!

* * *

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பெரும் பிழைகளிலே, மிக முக்கியமானது, அதிகாரவர்க்கத்தை வேண்டுமென்றே வளரச் செய்தது — கொழுக்கவைத்தது! — என்ற பலமான குற்றச்சாட்டு எங்கும் பரவிற்று! சொந்த ஆட்சி அமைந்தால், இந்த 'அக்ரமம்' இராது—அதிகார வர்க்கத்தின் கொட்டம் அடக்கப்படும்—செலவு மட்டுப்படுத்தப்படும் —உடல் நலத்துக்கும் ஊர் நலனுக்கும், அறிவு பெருக்கவும் சீரமைப்புக்கும் பணம் கிடைக்கும், என்று மக்கள் நம்பினர்—அந்த நம்பிக்கை எனும் படிமூலம், ஆட்சிப்பீடம் ஏறினர், காங்கிரஸ் கட்சியினர்; அவர்களின் காரியம் முடிந்தது; அவர்கள் எதிர்பார்த்தது நடந்தேறியது

ஆனால், பொதுமக்களின் நிலைஎன்ன? பொதுமக்கள், எதிர்பார்த்தது கிடைத்ததா? வெள்ளைக்கார ஆட்சியின்போது இருந்த, 'வீண்செலவு' குறைக்கப்பட்டதா? அதிகாரவர்க்கத்தின்தொகை குறைக்கப்பட்டதா? ஏழை, ஆயாசம்தீர்ந்து, நிம்மதிபெற முடிந்ததா?

* * *

வெள்ளைக்கார ஆட்சியைக் கொள்ளைக்கார ஆட்சி என்று பொதுமக்கள், கருதியதற்குக் காரணம், — ஒன்று இந்த அதிகாரவர்க்கச்செலவு, மற்றொன்று பட்டாளச் செலவு. காங்கிரஸ் 'பிரசங்கி' கனல் மூட்டும் விதமாகப் பேசுவதற்காக,வரிப்பணத்திலே, முக்கால்வாசி, உத்யோகஸ்தர்களுக்குச் செலவாகி விடுகிறது, என்று பேசினர் — செலவு அதிகம் தான்—ஆனால், முக்கால்வாசியல்ல! ஒரு ஏழை நாடு, தாங்கமுடியாத அளவு, செலவாயிற்று; இந்தக் குற்றம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இழைத்தது—இந்தியாவின் பொருளாதார நிலைக்கான புள்ளிவிவரத்தையும் எடுத்துக்காட்டி, அதிகாரவர்க்கத்துக்காகச் செலவிடப்பட்ட தொகையின் புள்ளிவிவரத்தையும்எடுத்துக் காட்டியபோது, வெளிஉலக, கலலறிவாளர்கள், உண்மையிலேயே, உளம் நொந்தனர், பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டிக்கவும் செய்தனர்.

* * *

சீமான் வீட்டிலே, குழந்தைக்குப் பெயரிடும் விழாவுக்கு, திருவாவடுதுறை ராஜாத்தினத்தின், நாயனக் கச்சேரியை, வைக்க முடியும் — அவருக்குச் சிரமம் இல்லை. ஏழைவீட்டிலே, முடியுமா ராஜாத்தினத்தின் நாயன 'பிளேட்' கிடைத்து, அதைப்போட்டாலே,பிரமாதம் — அதுவே சிரமம்! அது போலத்தான், தொழில் ஓங்கி, செல்வம் கொழித்துள்ள நாடுகளிலே, நிர்வாகத்துக்காகச் செலவிடப்படும் தொகை, அதிகமாகத்தான் இருக்கும் — இருப்பினும், நாடு, தாங்கிக்கொள்ளும். இந்தியாவின் ஏழ்மை, உலகறிந்த உண்மை! எனவே, அங்கு மற்றநாட்டுச் செலவுபோல, நிர்வாகத்துக்குச் செல்விடுவது, அக்ரமம் — ஏழையைக் கெடுக்கும் காரியம். எனவேதான், வெள்ளை ஏகாதிபத்தியம் கண்டிக்கப்பட்டது— மஞ்சள் ஏகாதிபத்யம் மலர்ந்தது! இந்தப் புதிய ஆட்சியிலே, பழையநோய் நீக்கப்பட்டதா? இல்லை! இல்லை! நோய் நீக்கப்படாததுமட்டுமல்ல — வளருகிறது—வளருவதுமட்டுமல்ல, பழைய ஏகாதிபத்யம் கேலி செய்யும் அளவுக்கு வளர்ந்துகொண்டு வருகிறது.

* * *

சர்க்காரின் நிர்வாகச் செலவுதான், இந்தியப் பொருளாதாரத்தின் 'மேன்னியைப்' பிடித்து அழுத்துகிறது.

அதிகாரம், (அன்னியரிடமிருந்து) இந்தியரிடம் தரப்பட்ட பிறகு, அதிகாரவர்க்கம் அதிகமாக வளர்ந்துவிட்டது.

இப்போதுள்ள அதிகாரிகளின் தொகையில் மூன்றிலோர் பகுதியைத் தாராளமாகக் குறைக்கலாம்.

இந்தியாவின் வாழ்க்கைத்தரமோ, மிகவும், குறைவான அளவுள்ளது.

இதைக் கவனிக்கும்போது, அதிகாரவர்க்கத்துக்காகச் செலவிடப்படும் தொகை, மிக மிக அதிகம் என்பது புலப்படும்.

இந்தியாவின் பட்டாளச்செலவை ஐரோப்பிய நாடுகளிலே, செலவிடப்படும் அளவுக்காவது, குறைத்தால் நல்லது.

* * *

புதிய ஆட்சியைப்பற்றிய கண்டனம் இது.

அதிகாரவர்க்கத்தின் செலவைக் குறைப்பதாக வாக்களித்தவர்கள், அதிகாரவர்க்கத்தின் தொகையை அதிகப்படுத்திவிட்டார்கள்!

பட்டாளச் செலவைக் குறைத்து, பணம் பாழாவதைத்தடுத்து, பொதுமக்களுக்குப் பலன் தரும் திட்டம் வகுப்பதாகக்கூறிப் பட்டம் கட்டிக்கொண்டவர்கள், பட்டாளச்செலவை அதிகமாக்கிவிட்டனர் — பயப்படும் அளவுக்கு!!

ஏழை என்ன செய்ய முடியும்? அவன் எதிர்பார்த்தது என்ன, கிடைத்தது என்ன? உன் வாழ்வு வளையும்படியான பெரும் பாரத்தைச் சுமக்கிறாய், உழைப்பாளியே! உத்தமனே! ஊராள்வோன் அன்னியன், உன் நன்மையைக் கவனிக்க மாட்டான்—அவன் ஆட்சி ஒழிந்தால், உன் கஷ்டம் தீரும், என்று பேசிப் பதவிக்கு வந்தவர்கள், சுமையை இறக்காததுமட்டுமல்ல, மேலும் பளுவை ஏற்றுகிறார்கள்! அதிகாரவர்க்கத்தின் அளவு அதிகரித்துவிட்டது! செலவு அதிகமாகிவிட்டது! பட்டாளச்செலவும் பல மடங்கு அதிகமாக்கப்பட்டுவிட்டது!

நாடு தாங்காது! ஏழை வாழ முடியாது!

வீண்செலவு வளருகிறது! வாழ்வு வளைகிறது! ஏழை, அழுகிறான்.

ஏகாதிபத்யம் இறுமாந்திருக்கிறது!—என்று முன்பு குற்றம் சாட்டிய குணாளர்கள் ஆட்சியிலே, அதே குற்றத்தைத் துணிவுடன், அதிக அளவிலே செய்யப்படுகிறது. கேலியும் கண்டனமும், எச்சரிக்கையும் கிளம்பி விட்டது, ஆளவந்தார்களின் போக்குப்பற்றி. எங்கிருந்து? அதுதான், வேடிக்கை—வேதனைக்கிடையே உள்ள வேடிக்கை! எந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின், செலவு முறையை, அதிகார வர்க்கத்தைக் கொழுக்கச்செய்யும் அக்ரமத்தைக் கண்டித்தார்களோ, இந்த ஆளவந்தார்கள், அதே ஏகாதிபத்திய நாட்டிலே இருந்து வெளிவரும், "எகானமிஸ்ட்" எனும் நுண்ணறிவு படைத்த ஏடு, கண்டிக்கிறது, மஞ்சள் ஏகாதிபத்யத்தை! மதுவிலக்குப் பிரசாரகர், அதிகக் குடியால், வாந்தி எடுக்கும்போது, மாஜி குடிகாரர் புத்தி கூறுவதைப் போன்ற வேடிக்கை இது! எகானமிஸ்ட் எனும் ஆங்கில ஏடு—பொறுப்பற்ற பத்திரிகை அல்ல. விடுகதையும் போட்டிப் பரிசும், விளம்பரக்குவியலும் கொண்ட ஏடல்ல. ஆட்சிமன்றங்கள் பலவற்றிலே உள்ள நிபுணர்கள் போற்றிப் படிக்கும், ஏடு. பொருளாதார நிலைமைகளைக் கண்டறியும் இதழ்; அந்த ஏடு, கண்டிக்கிறது, தேவையற்ற, தாங்க முடியாத, செலவு செய்கிறது இந்திய சர்க்கார்—இது கூடாது—நல்லதல்ல, என்று எச்சரிக்கிறது! இந்தப் பூணாரம்பூண்டு கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கின்றனர், புதிய ஆட்சியினர்! எவ்வளவு கேவலமான நிலைமை!! வெள்ளையர் நாட்டு ஏடு பார்த்துக்கண்டிக்கும் அளவுக்குக் கண்மூடித்தனமான போக்கிலேயா செல்வது! "எகானமிஸ்ட்" இதழின் கண்டனக் குறிப்புகளைத்தான், நாம் இக்கட்டுரையில், பொறுக்கெழுத்திலே பொறித்துக்

காட்டியிருக்கிறோம். "வெள்ளையனே! உன் ஆட்சிக்காலத்திலே, பணம், வீணாக அதிகார வர்க்கத்துக்கும் பட்டாளத்துக்கும் பாழாக்கப்பட்டு, ஏழைக்குப் பயன்படாமல் இருந்ததே, பார், அந்த நிலையை மாற்றி விட்டோம், நிர்வாகச் செலவைக் குறைத்து விட்டோம், பட்டாளத்துச்செலவைக்குறைத்து விட்டோம், ஏழையை வாழவைக்க, பெரும் தொகையைச் செலவிடுகிறோம், இஃதன்றோ நல்லாட்சி" என்று பெருமிதத்துடன் நாம் கேட்க வேண்டியது போய், "எகானமிஸ்ட்" இடித்துக் கேட்கிறது, "இப்படியா கண்மூடித்தனமாகப் பணத்தை வீணாக்குவது—ஆட்சியிலே அமர்ந்ததும், அதிகாரிகளின் தொகையை மனம்போன போக்கிலே வளரச்செய்து விட்டீர்களே! ஐரோப்பிய நாடுகளிலே ஏற்படுவதை விட அதிகச் செலவு செய்கிறீர்களே பட்டாளத்துக்கு!!" என்று கேட்கிறது!

மதுவிலக்குப் பிரசாரம் புரியவந்த மகானுபாவரே! இப்படியா, 'மண் அள்ளும்' நிலை வருகிறபடி குடிப்பது—என்று மாஜிகுடிகாரர் கூறிடக் கேட்டால், மதுவிலக்குப் பிரசாரகர் எவ்வளவு வெட்கப்படவேண்டும்! வேதனைப்பட வேண்டும்! அதைவிட அதிகமான வெட்கமும் வேதனையும் பிறக்கும்விதமாக எகானமிஸ்ட் எனும் இதழ் டில்லியும் எதிர்காலமும் என்ற தலைப்பிட்டுத்தீட்டியிருக்கிறது. கண்டனத்தோடு விடவில்லை, பயமூட்டியுமிருக்கிறது எகானமிஸ்ட். இவ்விதமாக உமது போக்கு இருந்தால், அமெரிக்க உதவிகிடைப்பது சிரமந்தான்!—என்றும் மிரட்டுகிறது.

ஏழையின் கண்ணீருக்கே பயப்படாத ஆளவந்தாகள், இந்த ஏசலுரைக்கா பயப்படப் போகிறார்கள்! ஆனால், நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டவர்களனைவரும், எகனமிஸ்ட், கண்டிக்கும் அளவுக்குக் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளும் கட்சியிடம், நாடு சிக்கிக் கிடக்கிறதே என்பதை எண்ணும்போது, உண்மையில் பயப்படத்தான் செய்வார்கள்! எலி பிடிக்கப் பூனையை வளர்க்க, அது, குழந்தைக்காகவைத்திருந்த பாலைக் குடித்துவிட்டுத் தூங்கும் கதை போலாகிவிட்டது, ஆளும் கட்சியின், போக்கு.

✲

மூடுவிழா நடக்கிறது!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை சர்க்கார் கோரியவைகளைச் செய்து தராமலா போகப் போகிறது என்றே எவரும் கருதினர்.

தேக்கும், சந்தனமும் சென்னை மாகாணத்தின் சிறப்புப் பொருள்கள். எனவே, மாகாண சர்க்கார் தன் மாகாண நலனை மனதில்வைத்து விடுத்த வேண்டுகோளை, மத்திய சர்க்கார் கவனிக்காமலா விட்டுவிடும்! அதுவும் மாகாணத்துக்குரிய கல்லூரியைத் தன் வசப்படுத்திக்கொண்ட மத்திய சர்க்காரா, புறக்கணித்து விடும்! என்றுதான், எல்லோரும் கருதினர்.

ஆனால், எதிர்பார்த்தது எதுவும் நடக்கவில்லை! நம்பிக்கைகள் நாசமாயின! அதுமட்டுமல்ல, இருந்ததற்கும் 'மூடுவிழா' நடத்தப்பட்டு விட்டது—மேன்மை தங்கிய டெல்லி சர்க்காரால்!

கல்லூரியில் ஒரு பகுதியாக இருந்த அதிகாரிகள் பயிற்சிப் பகுதியை, மூடிவிடுவதென்று மத்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டார்கள். மாகாணத்துக்கு, எவ்வளவு முக்கியமானது இக்கல்லூரி, இதை விரிவு படுத்தவேண்டியதை விட்டு, இருக்கும் வகுப்புகளையும் எடுக்கலாமா, என்பது டெல்லியார் உள்ளத்தில் படவில்லை!

எப்படித் தென்படமுடியும்! எங்கோ இருக்கும், அவர்களுக்கு, இம் மாகாணத்தின் அருமை பெருமை எப்படித் தெரியும்! கல்லூரியின், முக்கிய பகுதியொன்றை மும்மரமாக "மூடுவிழா" நடத்திவிட்டார்கள்!

கல்லூரியை, மாகாணசர்க்காரிடமிருந்து, மத்திய சர்க்கார் எடுத்து நிர்வகிக்கும் படியான, அளவு அவசியம் என்ன ஏற்பட்டது என்பதும், இவர்கள் ஏன் அதை அவர்களிடம் ஒப்புவிக்கவேண்டும் என்பதும், யாருக்கும் விளக்கப்படவில்லை, கடந்தஆண்டு! அவ்வளவு தேசிய சேவையைச் செய்தார்கள், மாகாண சர்க்கார். ஆனால் இப்போதோ, மத்திய சர்க்கார் மாகாணத்தின் முகத்திலறைந்தது போல், மாகாண சர்க்காரின் வேண்டுகோள்படி கல்லூரியை விரிவுபடுத்தவில்லை! இருந்த வகுப்பையும் எடுத்து விட்டது!

அதிலும் தேக்கும் அழியாக்குன்றம், அடங்கியது நமது மாகாணம். அவைகளைக் காப்பாற்றி, வளர்க்க வேண்டியது நமது கடன். அதை, மத்தியசர்க்காரிடம் ஒப்புவித்திருக்கிறது மாகாண அரசாங்கம்!

மத்திய அரசாங்கத்துக்கோ, ஒரு மாகாணத்திலிருக்கும் காடுகளைக் காப்பாற்றவேண்டுவதற்கான காரியங்களைச் செய்யும் அவசியம் தென்படவில்லை!

பின்லாந்தில் கிடைக்குமா இந்தியாவுக்கு வேண்டிய மரங்கள் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. அண்மையில் பின்லாந்திலிருந்து, ஒரு தூதுக்குழு வந்திருக்கிறது, தங்கள் நாட்டில், மரங்கள் வேண்டிய அளவில் கிடைப்பதாகவும், வேண்டுமானால் தருவதாகவும் கூறிக்கொண்டு!

மத்திய சர்க்காரின் நிலை அப்படியிருக்கிறது! எங்கே என்னயிருக்கிறது, அவைகளை எப்படி வளமாக்கலாம் என்பதுகூட அறியாமல், புரியாமல்!

இந்நிலையில், மாகாணத்துக்கு எவ்வளவோ வழிகளில் நன்மைபயக்கக்கூடிய காட்டிலாகாக் கல்லூரியைமத்தியசர்க்கார் வசம் ஒப்புவித்துவிட்டு 'உட்கார்ந்திருக்கிறது, மாகாண சர்க்கார். மத்தியசர்க்காரோ, மதோன்மத்த நிலையில் இருக்கிறது. கல்லூரியின் வகுப்புகளுக்கு "மூடுவிழா" நடத்துகிறது!

இதை மாகாணசர்க்கார், எண்ணிப்பார்க்க வேண்டாமா! தனது கோரிக்கைகளை நிறைவேற்றாதது மட்டுமின்றி, இருப்பதையும் கெடுப்பது கூடாது என்றாவது எடுத்துக் கூறவேண்டாமா!

அல்லது, வேண்டாம், உங்கள் நிர்வாகத்திலிருந்து விட்டுவிடுங்கள். நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்றாவது துணிந்து கேட்கவேண்டாமா!

என்ன செய்யப்போகிறது, மாகாண அரசாங்கம்! மூடுவிழாவுக்கு மத்தளம் தட்டப்போகிறதா அல்லது மார்க்கம் ஏதாவது காணப்போகிறதா, மாகாணநலனைக் கருதி!

அனைத்தும் அர்ச்சனை மயம்!

நாட்டுக்கு நன்மையொழியத் தீமை ஏதும் செய்யோம் என்று 'நல்வாக்கு'க் கூறி நாடாள வந்த காங்கிரஸ் கட்சியினரின் இன்றைய நிலை, காங்கிரஸ் கட்சியில் இருக்கும் கனவான்களாலேயே வெறுக்கப்படக்கூடிய அளவுக்கு வந்துவிட்டது. காங்கிரஸ் ஆட்சியினால் கொண்டுவரப்படும் எந்தத் திட்டமும், அதே கட்சியில் இருப்பவர்களாலேயே கண்டிக்கப்படுவதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். எந்த ஒரு திட்டமும் முழு ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதில்லை. அதிகாரத்தால் அடித்துப் பேசியே இன்றைய ஆளவந்தார்கள் தங்கள் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி விடுகின்றனர். அதாவது ஜனநாயகத்தைச் சாக்கடையில் தள்ளிவிட்டுச் சர்வாதிகாரமுறையில் ஆட்சியை நடத்திச்செல்கின்றனர். என்றாலும், பத்திரிகைகளிலும் மேடைகளிலும் 'ஜன நாயகம்' இடம் பெற்று விடுகிறது! இதற்குக் காரணம், சர்வாதிகார ஆட்சி புரிந்த ஆங்கிலேயனை விரட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த 'ஜனநாயகம்' என்றசொல்லைத் திடீரென்று மாற்றிவிடக் கூடாது என்ற முறையிலேயே இன்றைய ஜனநாயகம் இருப்பதால், அந்தச் சொல், அடிக்கடி பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பழக்க வாசனையால் இடம்பெற்றுவிடுகிறது. ஆனால் செயல் முறையில் வரும்போது ஜனநாயகம் என்ற சொல்லுக்குப் பொருளும் பயனும் இல்லாமல் போய்விடுகிறது. இதற்கு மேற்கோளாக எத்தனையோ நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டமுடியும். என்றாலும், இன்றைய ஆளவந்தார்கள், ஜனநாயக முறைக்கு மாறாக இந்தி மொழியை இந்நாட்டில் பரப்புவதற்கு எந்த அளவுக்குத் தங்கள் சர்வாதிகாரத்தைக் கையாளுகிறார்கள் என்பதை மட்டும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

இந்தி, இந்நாட்டுக்குப் பொது மொழியாகும்தகுதியற்றதென்பதை, இந்தியை இந்நாடு முழுவதும் பரப்ப முன்வந்த காலத்திலிருந்தே கூறிவந்திருக்கிறோம். இந்தியை இந்நாட்டுச் சிறார்களுக்குக் கட்டாய பாடமாக 1937—ல், இரட்டை ஆட்சிக் காலத்தில் முனைந்தபோது, அதனை எதிர்த்து ஆயிரத்து மேற்பட்டவர்கள் சிறை சென்றும், இரு இளைஞர்கள் உயிர் துறந்தும் அத்திட்டத்தை முறியடித்து வெற்றி கண்டோம். இந்தி படிக்கவிருப்பமில்லாதவர்கள் மீது அதனைக் கட்டாய பாடமாகப் புகுத்தக் கூடாதென்று அப்போது முடிவு செய்யப்பட்டது. பிறகு இரட்டை ஆட்சிநீங்கி ஒற்றை ஆட்சி ஏற்பட்டது. அதாவது ஆங்கிலேயரும் காங்கிரஸ்காரரும் சேர்ந்து ஆட்சி புரிந்த நிலை மாறிக், காங்கிரஸ்காரரே தனி ஆட்சி புரியும் நிலை ஏற்பட்டது. உடனே கொஞ்ச நஞ்சம் இருந்த ஜனநாயகமும் விடைபெற்றுக்கொண்டு போய் விட்டது. யார் ஜனநாயகம் பேசிமக்களைத் தங்கள் பக்கம் திருப்பி ஆட்சிப்பீடம் ஏறினார்களோ, அவர்களே "அது என் நமக்கு" என்று கூறிச் சர்வாதிகாரத்தையே தங்களின் ஆட்சிக்குத் துணையாக்கிக் கொண்டனர். மீண்டும் கட்டாய இந்தி கொண்டு வரப்பட்டது. பலருக்குச் சிறைவாசமும் தடியடியும் பரிசாகக் கிடைத்தது. அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சூழ்ச்சியே இந்த இந்தி எதிர்ப்பு இயக்கம் என்று இழித்தும் பழித்தும் பேசப்பட்டது.

இந்தி நமக்கு வேண்டாம்—அதனால் நாம் அடையும் நன்மை ஏதும் இல்லை என்பதற்கு நாம் கூறிய காரணங்கள் எல்லாம் துச்சமாகக்கருதப்பட்டன. ஆளவந்தார்களால் மட்டும் இவ்வாறு இழிவாகப்பேசப்படவில்லை. ஆளவந்தார்களை அணைத்து, அவர்கள் செய்யும் தவறுகளை எல்லாம் தந்திரமாக மறைத்து வருவதே தங்கள் கடமை என்ற முறையில் பணியாற்றி வரும் ஏடுகள் பலவுமே நம்மையும், நம்முடைய பணியையும் இழிவாக எழுதி வந்தன — ஏட்டில் இடம் பெறும் அளவுக்கு ஏசலுரைகளைக் கக்கின! இன்னும் இந்தப் 'பெரும் பணியை'ப் பல ஏடுகள் விடாமல் செய்துதான் வருகின்றன. என்ற போதிலும், சில ஏடுகள், ஆளவந்தாரின் போக்குகளை உணரத் தொடங்கிவிட்டன. ஜனநாயகம் தவிடுபொடியாவதை அறிகின்றன. இருக்க இடம் கேட்டவர்கள், மடத்தையே பிடுங்கும் மாபாதகச்செயல் புரிகின்றனர் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டன.

நம்முடைய இந்தி எதிர்ப்பை ஏளனம் செய்த ஏடுகள் சில, இப்போது, நம்மைவிட ஒருபடி மேலே போய் இந்தி எதிர்ப்புப் பணியைச் செய்யத் தொடங்கிவிட்டன.

புதிய அரசியல் திட்டம் நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்ற முடிவின்பேரில், இப்போது, சில சொற்களை, எல்லா மொழிகளுக்கும் பொதுவாக வைக்கவேண்டுமென்றும், அதற்கு இந்திமொழியிலுள்ள சொற்களையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடே இந்த இந்தி எதிர்ப்புக்குக் காரணமாகும். அதாவது, புதிய அரசியலமைப்பில் வரும் சில சொற்களுக்கு இந்திமொழிச் சொற்களையே மற்ற மொழிகளுக்கும் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்துள்ளனர். இந்த முடிவையே, அன்று, நம்முடைய இந்தி எதிர்ப்பை ஏளனம் செய்த ஏடுகளில் ஒன்றான "தினசரி" இன்று தன்னுடைய முழுப்பலமும் கொண்டு எதிர்க்கிறது. இப்போதாவது 'தினசரி'க்கு இந்தி நுழைப்பின் உட்காரணம் என்ன என்பது விளங்கி அதனை எதிர்க்கும் துணிவு பிறந்தது கண்டு களிப்படைகிறோம். "கொன்றன்ன இன்னா செய்யினும் அவர் செய்த ஒன்று நன்றுள்ளக்

கெடும்" என்ற பொய்யா மொழிக் கேற்பத், 'தினசரி' நம்முடைய இந்தி எதிர்ப்பைப் பலவாறெல்லாம் கேவலப்படுத்தி எழுதிவந்த போதிலும், இப்போது இந்தி நுழைப்பின் சூட்சமத்தை உணர்ந்து, அதனை எதிர்க்க முற்பட்டதானது, நம்மீது அது சாட்டிய தவறான குற்றச் சாட்டுகளை எல்லாம் மறந்துவிடும்படி செய்துவிட்டது.

இந்தி தமிழ்மக்களுக்கு வேண்டப்படாத ஒரு மொழி என்றும், இந்தி நுழைவால் தமிழ் மொழி கெட்டுவிடுமென்றும் நம்மால் எடுத்துக் காட்டப்பட்ட காரணங்களுக்கு நாம் பயன்படுத்திய சொற்களை விடக், கடுமையான சொற்களால் 'தினசரி' இந்தி நுழைப்பவர்களைக் கண்டிக்கிறது:

"எல்லாப் பாஷைகளிலும் அரசியல் வார்த்தைகள் ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமென்பதற்காகப் புரியாத புதுப்பதங்களையெல்லாம் புகுத்தி வைப்பதென்றால், அப்படிப்பட்ட மொழிப் பெயர்ப்பும் வேண்டாம், மண்ணாங்கட்டியும் வேண்டாம் என்று சும்மா இருந்துவிடுவதுதான் நல்லது"

என்று இந்த எதிர்ப்பை ஏளனம் செய்த 'தினசரியே' எழுதுகிறதென்றால், இந்தி எந்த அளவுக்குத் தமிழ் மக்களையும், தமிழ்மொழியையும் பாழ்படுத்துகிறதென்பது தெளிவாகத்தெரிகிறது. மண்ணாங்கட்டி என்ற இந்த இந்தி எதிர்ப்புச்சொல, நம்முடைய இந்தி எதிர்ப்பில நமது கவனத்துக்குக்கூடவாராத சொல்என்பதை நண்பர்கள் உணரவேண்டும். இலக்கியமற்ற மொழி, இலக்கணவரம்பற்றமொழி, வளமற்ற மொழி, லம்பாடிமொழி என்றெல்லாம் இந்தியைப்பற்றி கூறியிருப்போம். ஆனால், மண்ணாங்கட்டி என்ற சொல்லை நாம் பயன்படுத்தியதே கிடையாது. அப்படிப்பட்ட ஒருசொல்லை இப்போது "தினசரி" பயன்படுத்திஇந்தி எதிர்ப்புப்பணியைச் செய்கிறதென்றால், இந்தி நுழைவால் தமிழ் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது— தமிழ் மக்கள் எந்த அளவுக்கு அலட்சியப் படுத்தப்படுகின்றனர் என்பது விளங்குகிறது.

நகத்தால் கிள்ளி எறியவேண்டிய ஒன்றைக் கோடரிகொண்டுவெட்டவேண்டிய அளவுக்கு வளரவிட்டுக், கோடரி எங்கே கிடைக்கும்? நமக்கு உதவாத — தேவைப்படாத அந்த நச்சுமரத்தை எப்படியாவதுவெட்டியாகவேண்டும் என்று இப்போது "தினசரி" முனைந்திருக்கிறது; மிக்கவும் மகிழ்ச்சி. முளையிலேயேகிள்ளி எறியவேண்டிய இந்தி என்னும் நச்சுப்பூண்டை மரமாக வளரும்படி விட்டு விட்டு இப்போது அதனை வெட்டுவதற்குக் கோடரிதேடுகிறதே என்று 'தினசரி'மீது நாம் கோபமோ பொறுமையோ கொள்ளவில்லை — அதனைவெட்டிஎறிவதற்குரியகோடரி நம்மிடம் இருக்கிறதென்ற காரணத்தால். கோடரிமட்டுமல்ல! இந்தி என்ற நச்சுமரத்தின் ஒவ்வொரு உறுப்புக்களையும், அதற்குரியகருவிகளைக்கொண்டு வெட்டியெறிவதற்கு வேண்டிய நல்ல கூர்மையான கருவிகளும் அவற்றிற்குரிய பலம் பொருந்திய ஆட்களும் நம்மிடம் உண்டு. ஆனால் ஒன்றுமட்டும் 'தினசரி'க்குக் கூற விரும்புகிறோம். அதாவது, நாம் அந்த நச்சுமரத்தை வெட்டும்போது, குறுக்கேவந்து நின்றுகொண்டு "இந்த மரத்திலுள்ள இன்னகிளையை வெட்டாதீர்கள்— அதோ அந்தக் கிளையை வெட்டுங்கள்—இந்தக்கிளையில் பாதியை மட்டும் வெட்டுங்கள்—இதனால் நன்மையுண்டு—அதனால் தீமையுண்டு— இன்னொன்றால் கொஞ்சம் நன்மையும் கொஞ்சம் தீமையும் உண்டு" என்பதாக யோசனை கூறவேண்டாம்— தடுக்கவேண்டாம் — தடுப்பவர்களுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தி என்ற இந்த நச்சுமரத்தை நாம் வெட்டியெறியவேண்டுமென்று முற்பட்ட காலத்தில், நம்மோடு ஒத்துழைக்காவிட்டாலும், நம்முடைய முயற்சிக்கு எதிர்ப்புணர்ச்சி காட்டாமல் இருந்திருந்தாலாவது, நம்முடைய இந்தி எதிர்ப்பைத் தவறாக எண்ணியவர்கள் பட்டியலின் தொகை குறைந்திருக்கும். என்றாலும் நம்முடைய இந்தி எதிர்ப்புப் போர் இன்னும் முடிவடையாத நிலையில்இருப்பதால், இப்போதாவது இந்தப் பட்டியலின் தொகை குறைகிறதே என்ற மகிழ்ச்சி நமக்கு ஏற்படுகிறது.

மத்திய சர்க்கார், இந்திமொழியைப்பற்றி மேலும்மேலும் கொண்டுவந்து நம்மீது சுமத்த இருக்கும் சுமைகளைக்காண நேரிடும் போது, இங்குள்ள இந்தி ஆதரவாளர்களின் பட்டியல் மேலும் மேலும் குறையும் என்ற நம்பிக்கையும் நமக்கிருக்கிறது.

புது அரசியலமைப்புச் சட்டங்களை நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கும் போது, இந்திமொழி ஒன்றுக்கே முதன்மையான இடமளித்து, அந்த மொழியிலுள்ள சொற்களையே அதிக அளவில் புகுத்தும் முயற்சிக்கே இவ்வளவு எதிர்ப்பென்றால், புதிய அரசியல் அமைப்பின் பேரால் நாடு ஆளப்படும் நிலைமை ஏற்படும் போது, இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் உத்தியோகம், மற்றவர்களுக்குக் கிடையாது என்று கூறும் சட்டம் வராதென்று யார் எதிர்பார்க்க முடியும்? அந்த நிலை ஏற்படும் போது இந்தி ஆதரவாளர்களின் தொகைமேலும் சிறிது குறையும். இப்போது மத்தியசர்க்காரின் அரசியலமைப்புச சட்ட விதிகளில் இந்தி அதிக இடம் பெற்றிருக்கிறதென்றால், இன்னும் சிறிது காலம் போனால், மாகாண சர்க்கார்களின் அரசியலமைப்பு விதிகளும் இந்தியில்தான் இருக்கவேண்டுமென்று சட்டம் வராதென்று யார்தான் எதிர்பார்க்காமல் இருக்கமுடியும்? அந்த நிலை ஏற்படும்போது, மேலும் இந்தி ஆதரவாளர்களின் தொகை சிறிது குறையும். இவ்விதம் படிப்படியாக இந்தியின் ஆக்ரமிப்பு இங்கு அதிகப்பட அதிகப்பட, அதன் தொல்லை தாங்கமுடியாத நிலை ஏற்பட்டே தீரும். அப்போது, இந்தி இந்நாட்டின் பொது மொழியாவதை ஆதரித்து இப்போது தலையங்கங்கள் தீட்டி, இந்தி எதிர்ப்பாளராகிய நம்மைத் திட்டும் பல பத்திரிகைகள், "இதற்காகத் தானா இந்தியை இந்நாட்டின் பொதுமொழியாக்கினீர்கள்? இதை இந்தி எதிர்ப்பாளர்கள் அன்றே நமக்குக் கூறினார்கள். நாங்கள் தேசியத் திரை மறைவில் இருக்கவேண்டியவர்களாகையால், உங்களுடைய சூழ்ச்சி இந்த அளவுக்கு வேலை செய்யுமென்று எதிர்பார்க்கவேயில்லை. இப்போதும் நாம் தேசியத் திரை மறைவில்தான் இருக்கிறோம்- இருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம், என்றாலும் இந்த அக்ரமத்தை நாங்கள் பொறுத்துக்

கொள்ள மாட்டோம்—தேசியப் போர்வையால் மூடிவைக்கவும் மாட்டோம்" என்று பல பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டத்தான் போகின்றன.

நாம் எப்போதாவது எதிர்பார்த்தோமா, 'தினசரி' இப்படி ஒரு தலையங்கம் எழுதி இந்தி எதிர்ப்புச் செய்யுமென்று! ஆனால், இப்போது நம்முடைய பணியில், கொஞ்சம் பங்கெடுத்துக்கொண்டு 'தினசரி' பணியாற்றத் தொடங்கிவிட்டது. எப்படிப்பட்ட பணி?

"யாருக்கும் சுலபத்தில் புரியாத இத்தகைய புதுப் புகுத்தல்களுக்குத் தமிழர் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஒரே மாதிரி அரசியல் பதப்பிரயோகம் என்ற பெயரால் அனாவசியப் புகுத்தல்களுக்கு முயற்சி செய்யப்படுமானால், தமிழர் அதைக் கட்டாயம் எதிர்த்தே தீருவார்கள்"

என்று எழுதுகிறது. இந்தி என்ற நச்சுமரத்தின் கிளைகளில் ஒன்று தீங்கு பயக்கும் என்பதை உணர்ந்தபோதே 'தினசரி'க்கு இவ்வளவு எதிர்ப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டதென்றால், அந்த மரம் முழுவதுமே தீமை விளைவிக்கக்கூடியதுதான் என்பதை நம்மைப்போல் உணரும் நிலை ஏற்பட்டால், இன்னும் எந்த அளவுக்கு அதனுடைய எதிர்ப்புணர்ச்சி எழும்பி வேலை செய்யும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நாம் பலகாலமாகவே சொல்லியும் எழுதியும் வருகிறோம், தமிழ்தனித்தியங்கக்கூடிய மொழி — அதற்கு வேறுமொழிகளின் துணையும், ஒட்டு வேலையும் வேண்டாம் என்பதாக. அப்போதெல்லாம் நம்மைக் கிண்டலும் கேலியும் செய்தவர்கள், இன்று தமிழ்மொழியின் அருமைபெருமைகளை அழகாக எழுத முற்பட்டுவிட்டார்கள். இதுவும் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்திதான். தமிழ் மொழியின் தூய்மையையும் அதன் தனித்தியங்கும் இயல்பையும் இப்போதாவது உணர்ந்தார்களே என்பதில் நமக்கு மகிழ்ச்சியே. இந்த மகிழ்ச்சி நிலையுள்ளதாக இருக்கக்கூடிய முறையில் இனிமேலாவது அவர்கள் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறோம்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் சில இந்திச் சொற்களை எல்லாமொழிகளுக்கும் பொதுவாக வைத்து வழங்கவேண்டுமென்று தீர்மானித்திருப்பதைக் கண்டித்துத் தலையங்கம் எழுதிய 'தினசரி' பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிறது: —

"தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்திப் பண்டிதர்களின் வார்த்தைகளைஏற்றுக்கொள்ளவே முடியாது. வளர்ச்சி பெறாத போதிய சொற்களில்லாப் பஞ்சத்திலிருக்கும் பாஷைகள் வேண்டுமானால். அப்பதங்களை உபயோகித்துக் கொள்வதில தமிழருக்கு ஆட்சேபனை இல்லை.

தமிழில் சொற்களுக்குப் பஞ்சமில்லை. அரசியலை அப்படியே தமிழாக்கித் தமிழருக்குத் தங்குதடையின்றிப் புரியவைக்கத் தமிழில் ஏராளமான சொற்கள் உண்டு. அச்சொற்கள் எல்லாம் பழக்கத்திலும் இருந்து வருகின்றன. அரசியல் தமிழ்மொழி பெயர்ப்பை இவ்வகையில் செய்யத்தான் தமிழர் ஒப்புக்கொள்ள முடியுமேயன்றி, இந்திப் பண்டிதர்களின் ஆசை நிறைவேறட்டும் என்பதற்காகத் தமிழுக்குள் வீண் குளறுபடி செய்யத் தமிழர் சம்மதிக்க முடியாது"

நாம் இந்தியை ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கு எந்தெந்தக் காரணங்களைக் கூறினோமோ, அவற்றில் சிலவே 'தினசரி' மேலே எடுத்துக் காட்டியுள்ள காரணங்கள்.

தமிழ் வளமுள்ள மொழி. தமிழில் சொற்களுக்குப் பஞ்சமில்லை.

தமிழ் தனித்தியங்கக் கூடியது.

எதனையும் தமிழில் ஆக்கிக் கொள்ள முடியும்.

தமிழில் ஏராளமான சொற்கள் பயன்படுத்தப்படாமலும், பயன்படுத்தும் வகை தெரியாமலும் மங்கிக்கிடக்கின்றன.

வேறுமொழி பழக்கத்தில்வந்து விட்டால், தமிழ் மேலும் வளமும் வளர்ச்சியும் குன்றிவிடும்.

சமஸ்கிருதத்தாலும் ஆங்கிலத்தாலும் தமிழ் தன் இனிமையை இழந்து வளங்குன்றிவிட்டது.

இந்த நிலையில் மேலும் புதுப் புது மொழிகளைக்கொண்டு வந்து தமிழின் புனிதத் தன்மைக்கு இழுக்குத்தேட வேண்டாம்.

என்ற இன்னபிறகாரணங்களைக் காட்டியே இந்தி எதிர்ப்பைச் செய்துவருகிறோம். இதற்காக நாம் தேசத் துரோகிகள், அரசியலைக் கவிழ்ப்பவர்கள் என்ற பழிக்கும் ஆளாகி இருக்கிறோம். காரணம், நம்முடைய நோக்கம் என்ன என்பதை அறியாததுதான். ஆனால் இப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக, நம்முடைய முயற்சி புனிதமானது என்பதற்கான அறிகுறிகள் தோன்றி வருகின்றன.

தமிழில் பிறமொழிச்சொற்களைச் சேர்ப்பதால் அதன் வளமும்வளர்ச்சியும் குன்றுமென்று நாம் சொன்னபோதெல்லாம், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்த்தால்தான் அது வளர்ச்சியடையுமென்று சொன்னவர்களே, இப்போது,'தமிழில்ஏராளமான சொற்கள் உண்டு. அரசியலை அப்படியே தமிழாக்கிக்காட்டமுடியும்" என்று கூறுகிறார்கள். இந்த நிலை இந்திமொழியின், அளவுக்கு மிஞ்சிய அடக்குமுறையால் ஏற்பட்டதாகும். புதிய அரசியலைத்தமிழில்மொழிபெயர்க்கும்போது, குறிப்பிட்ட சிலசொற்களுக்கு இந்திச் சொற்களையே வைத்து வழங்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளார்கள். எவை அந்தச் சொற்கள்? எப்படிப்பட்ட சொற்கள்? என்று கேட்கிறீர்களா? அவற்றுள் சில:—

பூராஜஸ்வா

பிமா

சம்விநான சபா

சககாரிசம்ஸ்நாயன

ராஜ்யபாலா

உச்சநியாயாலயா

இவை, புதிய அரசியலில் சேர்க்கப்பட்டுள்ள புதிய இந்திச் சொற்கள் பலவற்றுள் சில.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சொற்களில் ஒன்றாவது உங்களுக்குப் புரிகிறதா? புரிகிறது ஒருபுறமிருக்கட்டும், ஒரு சொல்லையாவது நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 11—12—49 [காஞ்சி

'பணவாபஸ்'

உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, அமெரிக்க அரசாங்கத்தால் 34955 டாலர்களை (ரூ 1,66,000) இந்தியசர்க்காருக்கு அனுப்பிவைக்குமாறு! இந்திய சர்க்காரின் விவசாய, வியாபாரத்திட்டங்களை, காரியமாற்றுவதற்கு உதவும் வகையில் இத்தொகையை அமெரிக்க சர்க்கார் அளிக்க முன்வந்துள்ளனராம்!

அனுப்பப்படும் பணத்துடன்கூட, இந்திய சர்க்காரின் புதுத்திட்டங்களை நடத்திச்செல்வதில்கூட இருந்து ஆலோசனை முதலியவைகளைக் கூறுவதற்கும் ஒரு ஆளை அனுப்பிவைக்குமாம்!

* * *

மூலதனம் போடத்தயாராகயிருக்கிறோம், இந்தியாவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதுபற்றி எங்களுக்குத் தயக்கமில்லை, ஆனால் இந்தியசர்க்கார் போதுமான உறுதிமொழியளிக்குமா என்பதில்தான் கொஞ்சம் எங்களுக்குச் சந்தேகம் எழும்புகிறது. இருந்தாலும், நாங்கள் இந்தியாவில் மூலதனம் போடத்தயார்தான்!

இவ்வண்ணம், அமெரிக்க முதலாளிகள் எண்ணங்கொண்டிருப்பதாக அமெரிக்காவின் ஏற்றுமதி ஸ்தாபனமான டேவியா லாரன்ஸ் கம்பெனி எனும் பெரிய கம்பெனியின் மானேஜர் ஜுவெல் நியுயார்க்கில் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்!

* * *

இந்தியா அன்னிய ஆதிபத்தியத்தை வெளியேற்றிய நாடாயிற்றே, நமக்கு அங்கு இடம் கிடைக்குமா, நாம்போய் புதுஆலைகளை உண்டாக்க அனுமதிக்குமா என்றெல்லாம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த அமெரிக்க முதலாளித்துவத்துக்கு நேருவின் விஜயம், மிக்கமகிழ்ச்சியைத் தந்திருக்கிறது!

அனாதைகளாய் நிற்கிறோம் ஆபத்தில் உதவ வருவீர், என்று இந்தியப் பிரதமரும் அவர்களுக்குப்பாக்குக் கூறி 'வருக, வருக' என வரவேற்புரை அளித்துவிட்டு வந்துள்ளார். அதுமுதல், அமெரிக்க முதலாளிமார்கள், இந்தியாவில் தங்கள் மூலதனத்தைக் கொண்டுவந்து போடுவதற்கான துடி துடிப்புடன், ஆயத்தங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டனர்!

அமெரிக்க முதலாளிமார்களின் மூலதனம்மட்டுமின்றி, கடன் என்ற பெயராலும், உதவி என்று கூறியும், இந்தியாவுக்குப் பணம் தருவதில் அமெரிக்கா அதிக சிரத்தைக்காட்டத்துவங்கியிருக்கிறது. சீன சிவப்பாகி, சியாங்கேய்ஷேக் தப்பஇடமின்றித், தவிக்கும் காட்சிகள் நெருங்க, நெருங்க அமெரிக்கா இந்தியாவுடன் அதிக நட்பையும், நேசத்தையும் உண்டாக்கிக்கொள்வதில், முன்பைவிட, சிரத்தை காட்டத்துவங்கியிருக்கிறது.

* * *

அமெரிக்கா, ஆபத்பாந்தவன், கஷ்டம் தீர்க்கும் காவலன், கவலைபோக்கும் மருத்துவன் என்றே, இன்றைய ஆளவந்தாரும், அவரைச் சேர்ந்தோரும் கருதுகின்றனர் — மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றனர். வெளிநாடுகளுக்கு உதவிஎன்ற பெயரால் அமெரிக்கா ஆங்காங்குள்ள நாடுகளுக்குப் பணம்தர முன்வரும் இரகசியமென்ன வென்பதை நாம் அடிக்கடி எடுத்துக் கூறிவருகிறோம். பணபலத்தால், ஆசைவார்த்தையால், ஒவ்வொரு நாட்டையும் தனது கூடாரத்தில் இழுத்துப் போட்டுக்கொண்டு, அவைகளைத் தன் உற்பத்திப்பொருள் விற்கும்'சந்தை'யாக்கத் திட்டமிட்டு, அதன்படிசெயல்களைச் செய்து வருகிறது அமெரிக்கா!

ஆனால், இங்கிருப்பவர்களோ, அமெரிக்காவின் தயாளகுணம்பற்றியும், ஆபத்தில் உதவும் அருஞ்செயல்பற்றியும் துதிபாடுகின்றனர்!

இந்தியா சுதந்திரமடைவதில் எவ்வளவு சிரத்தை அமெரிக்க காட்டியது என்பது நாட்டிலுள்ளோருக்குத் தெரியும்! இன்று அமெரிக்காவின் அதிதியாகச் சென்று திரும்பியிருக்கும் பண்டித நேரு அமெரிக்காவின் மீது எத்தனை தடவை 'கனல் கக்கி'யாக இருந்தார் என்பதும், நம் நினைவைவிட்டு இன்னும் ஓடிவிடவில்லை!

இந்திய சுதந்திரத்திற்கு, எள்ளளவும் தலையசைப்போ, உபசாரச் சொல்லோ, தராத அமெரிக்கா இன்று ஆப்த நண்பன் உருவில் காட்சியளிக்கிறது!

அன்று 'அனல் கக்கி'களாக இருந்த ஆளவந்தாரும், அமெரிக்காவின் தர்மசிந்தை தயாளகுணம், எளியோர்க்குதவும் இரக்கம் இவைகள் பற்றி விரிவுரை கூறுகின்றனர், விளக்கம் தருவதில் ஈடுபடுகின்றனர்!

சுயநலமும், சுகவாழ்வைப் பெருக்கும் சூதுமதி ஆகியவைகளின் விளைவுகளே அமெரிக்காவின் இன்றைய அன்பு நடிப்பும், அருமை நண்பன் காட்சியும் என்று நம்மனோர் கூறினால், 'இவர்களின் வேலையே இதுதான்' என்று, அலட்சியத்தையும் காட்டிவிடுகின்றனர் — பதிலாக.

சுதந்திரம் பெற்ற எந்த நாடும் குழந்தை நிலையில்தானிருக்கும், அதுவளர எவ்வளவோ வழிவகைகள் வேண்டியிருக்கத்தான் செய்யும். ஆனால் குழந்தைக்குப் பால் வேண்டும் என்பதற்காக, குழந்தையையே இன்னொருவரிடம் அடகு வைப்பது, அழகாகுமா! அதுபோலத்தான், இன்றுள்ள நிலையும். அமெரிக்காவை ஆப்த நண்பன் என்று கருதுகிறார்கள், காங்கிரஸ் ஆட்சியாளர். அதன் காரணமாக கடன்கொடுங்கள், கட்டிக்கொள்ளுங்கள் ஆலைகளை என்று அனுமதியும் உபசரிப்பும் நடத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் எண்ணுவது போலப்பரோபகார சிந்தையுடனும், உதவ வேண்டும் என்ற உயர்குணத்துடனும் அமெரிக்கா நடந்துகொள்கிறதா!

இல்லையென்பது மட்டுமல்ல, "உதவி" என்ற பெயரால் பிறநாடுகளுக்கு அது வழங்கி வருகிறதல்லவா, பணம், அதன் "உண்மை"யைப் பாருங்கள்!

டிசம்பர் 8-ந் தேதியிட்டு வாஷிங்டனிலிருந்து அமெரிக்க சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறது, தன்னிடம் மார்ஷல் திட்டப்படி உதவி பெற்று வரும் பிரிட்டன் முதலாய மேற்கத்தி நாடுகளுக்கு! அந்த

உத்தரவு! 'மார்ஷல் திட்டப்படி அளிக்கப்பட்ட உதவியின் மதிப்பில் 3 கோடி டாலரை திருப்பித் தருக' என்பதுதான்! உதவி வழங்கும் உத்தமப் போக்கைப் பாருங்கள், கடன் கொடுத்த தொகையில் 3 கோடியை 'வாபஸ் செய்' என்று அதிகாரத்துடன் கட்டளையிட்டிருக்கிறது!

இந்நடவடிக்கை ஏன் தெரியுமா! மார்ஷல் உதவி பெற்ற நாடுகள், தாங்கள் அனுப்பும் சரக்குகளில் 7 சத விகித பாகத்தை அமெரிக்கக் கப்பல்களில் ஒப்பந்தப்படி அனுப்பிவைக்க வேண்டுமாம். அப்படி, அனுப்பிவைக்க அந்நாடுகள் தவறிவிட்டன என்பதற்காகவே அமெரிக்கா இந்நடவடிக்கை, "சொற்படி கேட்காத உங்களுக்கு இதுதான் அபராதம்" என்று கூறுவதுபோல, எடுத்திருக்கிறது. 'பண வாபஸ்' கோரியிருக்கிறது.

அமெரிக்கக் கப்பல்களில், அந்நாடுகள் சரக்கை ஏற்றவில்லை. அதனால், தனக்கு வரக்கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது என்று கண்டதும் ஆத்திரத்துடன் 'அபராதம்' விதிக்கிறது, 'பண வாபஸ்' கோருகிறது! அமெரிக்கா, அன்பு உள்ளத்துடன் சுயலாபம் கருதாமல் வெளிநாடுகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லித் திரிகிறார்களே, அவர்கள் பார்வைக்கு இந்நிகழ்ச்சியைக் கொண்டு வருகிறோம்.

தனது லாபம் குறைகிறது என்றும், மிரட்டுகிறது அமெரிக்கா!

வருமானம் குறைந்ததும் 'பண வாபஸ்' கோரி அமெரிக்கா மிரட்டுகிறது பிரிட்டன் முதலிய நாடுகளை! அதேநேரத்தில் இங்கு இப்போது பணம் உதவும் திருப்பணியைத் துவங்குகிறது! இரண்டையும், தேசியத் தோழர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்!

11-ம் பக்கத்தொடர்ச்சி

மூலதனம் தவிர இலாபமாகப் பெற்றிருப்பது ரூபாய் 12-லட்சம் ஆகும்!

போட்டமுதல் எவ்வளவு, அது வளர்ந்திருப்பது எவ்வளவு என்ற பட்டியலைப் பார்த்ததும், 'பணாதிபத்தியத் தோட்டம்' எவ்வளவு விரைவில் பலனளிக்கிறது என்பது, தெரிகிறதல்லவா!

விமானங்களின் தேயமானம்; வேறு செலவினங்கள் ஆகியவைகளுக்கெனச் செலவிடப்படுவதாக, கம்பெனி, கூறுவது என்ன தெரியுமா! மூன்றுஆண்டுக்கு 66-இலட்ச ரூபாய்கள்!! மொத்தமிருப்பதோ, 21-விமானங்கள். இவைகள் விலை எப்படிப்பார்த்தாலும் 62-இலட்ச ரூபாய்க்குமேல் போகாது. 62-இலட்சரூபாய் கொண்ட விமானங்களுக்கு, மூன்று ஆண்டு, தேய்மானம், 'ரிப்பேர்' முதலியவற்றிற்கான தொகைமட்டும் 66-லட்சம்!

இவ்வளவு கொள்ளைலாபமும், கணக்கும் காட்டும், டாடா நிர்வாகிகள், புதிதாக ஒரு விமானசர்வீஸ் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டது என்று அறிந்ததும், கொதித்து எழுந்துள்ளனர்! நஷ்டம் வந்துவிட்டது என்று அலறியுள்ளனர்! சர்க்கார்மீது பாய்ந்துள்ளனர்! அதுவும், சர்க்கார், இவர்களுடைய 'தாசன்' போல, இருந்து வந்திருக்கிறதே யொழிய, என்றும் இவர்களை 'ஏனென்று' கேட்டோ, முடியாது என்று மீறியோ எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.

டாடாவை மீறுவதென்றால், அதுவும் காங்கிரஸ் ராஜ்யாதிபதிகளுக்கு சாமான்யகாரியமா, என்ன! விவாதத்தின்போது போக்குவரத்து மந்திரியார், பல செய்திகளைக் கூறுகிறார். இதுபோன்று எத்தனை நிகழ்ச்சிகள் தெரியுமா, என்றும் கூறுகிறார். டாடா கம்பெனியின் தலையீட்டால் பாரத் ஏர்வேஸ் என்கிற கம்பெனிக்குத் தரவிருந்த, அனுமதிகூட நிறுத்தப்பட்டதாம், இத்துணைக்கும் பாரத் விமானப் போக்குவரத்து கம்பெனியார் குறைந்த கட்டணத் தொகையில் ஒரு பாதையை தாங்கள் நடத்துவதாக முன்வந்து கூறியிருந்தும்!

இதேபோல, 'மழைகாலம் இப்போது இரவு சர்வீசை நிறுத்திவைப்பது நல்லது' என்று டாடா யோசனை சொன்னதின்பேரில், மழைகாலம் தீரும்வரை, இரவுபோக்குவரத்தை நிறுத்திவைக்குமாறும் இந்திய சர்க்கார் உத்தரவிட்டதாம் முன்பு!

அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் அளவு செல்வாக்குக் கொண்டிருந்தும், பணாதிபத்தியத்தின் ஆசை விடவில்லை—தன் லாபத்தைப் பாதிக்கும் வகையில் இன்னொரு கம்பெனி, உண்டாவது பிடிக்கவில்லை! வெறுப்பும், துவேஷமும், அதன் விளைவாக ஆட்சியாளர்மீது, மறைந்து நின்று போர் நடத்தும் பொல்லாச் செயலில் ஈடுபடவும் ஆளாகியிருக்கிறது!

பணாதிபத்தியத்துக்குப் பரிந்து பேசுவதும், கூடிக் குலாவுவதுமே தேசிய சேவையெனக் கருதுவதுமான, ஆளவந்தாருக்கு, டாடாவின் பாடம் நல்ல படிப்பினை! மறக்கமுடியாத சவுக்கடி!!

தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில், பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடியவைகளை, விட்டுவைப்பதன் விளைவு எத்தகையது என்பதை விளக்கிவிட்ட ஒரு நிகழ்ச்சி இது!

இதை, இன்றைய ஆளவந்தார், உணர்ந்தால் நல்லது! விமானப் போக்கு வரத்து-விஞ்ஞானம் தந்த ஒன்று! நாம்தான் வேதாந்திகளாயிற்றே, என்று விலக்கிவாழமுடியாத இன்றியமையாத தேவை! இதை, இன்னும் தனிப்பட்ட பணமுதலைகள் வசம் விட்டு வைப்பதும், அவைகள் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயந்து வாழ்வதும், பரிதாபப்படக்கூடிய காரியமாகும்!

ஆண்டுக்கு சுமார் 50 லட்சம் ரூபாய்களைத் தனிப்பட்ட விமான கம்பெனிகளுக்காக, விமானபோக்குவரத்து வளரவேண்டும் என்று காரணம்கூறி சர்க்கார்பெட்ரோல்வரியில் 'வட்டம்' போட்டு-குறைவு செய்து-தந்தும், அவைகளின் ஆசை அடங்கியபாடில்லை! இன்னும், அதிக சலுகைகளும், சர்க்காரை பயமுறுத்தி காரியங்களைச் சாதிக்கவும் முயல்கின்றன! மிரட்டுகின்றன! "போர்" நடத்துகின்றன!!

டாடா தரும் பாடம், பணாதிபத்தியத்தின் ஆசைக்கொரு அளவில்லை என்பதற்கான விளக்கம்! நாட்டையும், மக்கள் நலனையும் என்றுமே அது கருதாது; தன் சுகவாழ்வையே பெரிதென மதிக்கும் என்பதை விளக்கும் அரிச்சுவடி!

தேவை

கொழும்ப நகரில் "திராவிட நாடு" விற்பனை செய்வதற்குப் போதிய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை. விபரங்கட்கு மானேஜர், "திராவிட நாடு" காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

மானேஜர்

டாடா தரும் பாடம்!

[அரங்கண்ணல்]

கொள்ளை லாபம்! அதை அதிகரிக்கும் கள்ள வழிகள்!!

'பண மூட்டை'களின் வாழ்க்கை இலட்சியமே, இதுதான்! தங்கள் வாழ்வில் எப்போதும் வசந்தம் வீசிக்கொண்டிருக்கவேண்டும், இது தங்கு தடையின்றி நடைபெற, மக்களின் நலனையோ, தான் பிறந்து வாழும் நாட்டின் முன்னேற்றத்தையோ பலிகொடுக்க எப்போதுமே பணாதிபத்தியம் தயங்குவதில்லை. எனவேதான், பணாதிபத்தியத்தை, பண முதலை என்ற பெயராலும் அழைப்பதுண்டு.

அடிக்கும் காற்று, சிறிது சீறிடும் புயலாகுமேயானால், நாணலைப்போல வளையும், ஆனால் அடுத்த நிமிடமே நிமிர்ந்து நிற்கும்!

ஆளவந்தார், சிறிது சீறும் புத்தியினராக இருப்பாரேயானால் பணிந்த பாவை போல, பணாதிபத்தியம் நடிக்கும் — சிறிதுகாலம் ஆகிவிட்டால் நவரசனை தரும் நாரீமணியாக நாட்டியம் புரியும்!

அதன் வஞ்சக வலையில், ஆட்சிப்பீடம், அகப்பட்டு 'மோகினியே, உன் முத்தமே என் வாழ்வை நித்தமும் வளர்க்கும்' என்று சல்லாப உரைகளும், சரச வார்த்தைகளும் வீசத் துவங்கிவிட்டால், பணாதிபத்தியம், 'பஸ்மாசுர மோகினி'யாகி விடும்! பின்னர், ஆட்டிவைத்தால் யாரொருவர் ஆடாதாரே என்ற நிலைதான் அரசாங்கத்துக்கு ஏற்படும்— அதன் விளைவு மக்கள் வாழ்வு புயலில் அகப்பட்ட புல் போல ஆவதுதான்! மாற்றாந்தாய் வசப்பட்ட மக்கள் ஆவதுதான்!

பணாதிபத்தியம்-ஒரு பச்சோந்தி! தேன் தடவப்பட்ட நஞ்சு! மோகன மெருகிடப்பட்ட பசும் நாகம்! பசுத்தோல் போர்த்திய புலி! சிரித்து மடக்கிச் சித்திரவதை செய்யும் சிலந்தி!!

மகுடங்கள் சரிந்தாலும், பணாதிபத்தியத்துக்குச் சிறிதுகூட பயமோ, பதட்டமோ, இருக்காது. அதன் எண்ணமெல்லாம், வந்த ஆளை வீச, எந்த வலை நல்லது என்பதிலேயே இலயித்திருக்கும். அதன் குறியெல்லாம், தன் வாழ்வு, மீது இருக்குமேயொழிய நாட்டின் நிலையென்ன, நல்லது செய்பவர்களாக நாம் இருக்கக்கூடாதா, கஷ்டப்படும் ஆட்சிக்கு கைகொடுப்பது நல்லதுதானே என்று இருக்காது! அந்த எண்ணமே எழும்பாது!! அதனால்தான் பணாதிபத்தியத்தின் போக்கை முதலாளித்துவ மூர்க்கத்தனம் என்று அழைப்பர்!

குடிசைகள் வீழ்ந்து, குடிபடைகள் அலறி, சாவும் வேதனையும், சஞ்சலமும் பட்டினியும், எங்கும் நிலவுகிறதென்றாலும், முதலாளித்துவம், மோகனவல்லிகளுடன் கொஞ்சிக் குலாவி கும்மாளமடிக்குமே தவிர கொஞ்சங்கூட ஆடாது! அசையாது!!

ஆளவந்தாருக்கு ஏற்பட்ட அல்லல், அதன் வாயிலாக மக்கள் வாழ்வில் நெளியும் வேதனை, இது எதுவும் பணாதிபத்தியத்தின் இருதயத்தை எட்டவும் எட்டாது! எனக்கும் இரும்புப் பெட்டிக்குந்தான் சம்பந்தமேயொழிய, இதயத்துக்கும் எனக்கும் என்ன இருக்கிறது! என்று அலட்சியத்தையே பதிலாகத் தரும்!

காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறியது முதல், பணாதிபத்தியத்தையே தன் பக்கபலம் என நம்பிக்கொண்டும், அதன் ஆலோசனைகளை வெண்சாமர வீச்சு என்று கருதிக்கொண்டும் இருக்கிறது என்று, நம்போன்றோர், குற்றம் சுமத்திவருகிறோம். இந்தப் போக்கு நல்லதல்ல, நன்மை விளைக்காது, பணமூட்டைகளின் பாதையில் நடப்பது, பலன் தராது, என்றும் ஆபத்தையும் அல்லலையுமே உண்டாக்கும் என்பதாக எடுத்துக் கூறி வருகிறோம். இவையாவும் ஆளவந்தாருக்கு, செவிடன் காதில் ஊதிய சங்கொலி போலவே ஆயிற்று!

ஏதோ இவர்கள் வாழ்வே, பண மூட்டைகள் கைவசம் இருப்பதாகவே எண்ணிக்கொண்டு, அவர்கள் இட்டதே சட்டம், அவர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடப்பதே, நமது கடன் என்று கருதிக்கொண்டே நடந்து வருகின்றனர். அவ்வளவு அன்பும், ஆசையும், ஆதரவும் ஆளவந்தார் காட்டினாலும், பணாதிபத்தியம் நடுங்கவைக்கும் நாரீமணி போல மிரட்டிக்கொண்டுதான் இருந்துவருகிறது! அதுமட்டுமல்ல, எங்கெங்கு தனது ஆதிபத்தியம் இருக்கிறதோ, எங்கெங்கு தனது வருமானம் வளரும் வகைகள் இருக்கிறதோ, அதன் பக்கம் இன்னொருவர் அண்டாமலும், நெருங்கி வந்தால் அதட்டியும், அடாபிடி செய்தும் வருகிறது, தான் நடத்தும் தொழில் தனது ஏதேச்சாதிகாரத்துக்குத்தான் என்ற எண்ணத்தின் காரணமாக, ஒரு தொழில் தனக்குச் சொந்தமாக இருந்தால், அத்தொழிலில் வேறு ஒருவரும் ஈடுபட்டு அத்தொழிலை வளர்க்க முன்வராமல் தடுத்து வருகிறது — தனது பண பலத்தால், ஆட்சியாளரை மிரட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையால்!

இந்த உண்மை, அண்மையில் இந்தியசட்டசபையில் நடைபெற்ற விவாதத்தின் விளைவாக, வெளிப்படையாகத் தெரியும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது!

* * *

"ஒரே ஒரு கம்பெனி ஏதேச்சாதிகாரம் செலுத்த நான் ஒருபோதும் விரும்பவேமாட்டேன்!

ஒருகம்பெனி, சர்க்கார் நிபந்தனைகளின்படி நடக்க ஒப்புக்கொண்டது என்பதற்காக ஒரு சில கம்பெனிகள் கூட்டாகச் சேர்ந்து, அந்தக் கம்பெனியைப் பழிவாங்க முயலுகின்றன."

இந்த, கூற்றுகள், முறையே இந்தியப் பிரதமர் நேரு, போக்குவரத்து மந்திரி ரபீ அஹ்மத்கித்வாய் ஆகியோர் இந்திய சட்டசபையில் வெளியிட்டதாகும்.

தற்போது, நடைபெற்று வரும் இரவு விமானத்தபால் போக்குவரத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கோரி நவம்பர் 30-ந் தேதியன்று, இந்திய சட்டசபையில்

ரோகிணிகுமார்சவுத்ரி என்பவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

அவரது தீர்மானத்தை ஏற்பதற்கில்லையென்றும், இரவு விமானத் தபால் போக்குவரத்தால் எந்தவிதமான நஷ்டமும் ஏற்படவில்லையென்றும், முன்னைவிட சுமுகமாகவேவருவதாகவும் விளக்கப்பட்டு, அத்தீர்மானம் ஏற்கப்படவில்லை. இதையொட்டிப் பேசியபோதுதான், பிரதமரும், போக்குவரத்து மந்திரியாரும், மேலே குறிப்பிட்ட குறிப்புகளை வீசியுள்ளனர். போக்குவரத்து மந்திரியார், குறிப்பை மட்டுமல்ல தந்திருப்பது, ஒரு பெரிய விளக்கத்தையே தந்திருக்கிறார்—பணாதிபத்தியம் எந்த அளவுக்குச் சர்க்காரை மிரட்டுகிறது என்பது விளங்கும்படியாக!

இந்தியசர்க்கார் கடந்த பிப்ரவரி முதல் விமானமூலம் தபால்போக்குவரத்தை அனுப்புவதென முடிவு செய்து, அதன்படி நடத்திவருகின்றனர். இந்தக் காரியத்தை ஏற்று நடத்துமாறு, இந்தியாவில் விமானப் போக்குவரத்துகளை நடத்திவரும் பல கம்பெனிகளுக்குத் தெரிவித்திருந்தும், அவை எதுவும் சர்க்காருடைய கோரிக்கைக்கு இணங்கவில்லை—இந்த ஏற்பாடு மூலம் தங்களுக்கு வருவாய் கிட்டாது, தொல்லைகள் ஏற்படும் என்ற காரணங்களைக் காட்டின. இந்தியாவின் பணாதிபத்தியத்தூண்களில் ஒருவரான டாடாவால் நிர்வகிக்கப்பட்டுவரும், (Air Services of India) என்ற கம்பெனி, வசதிகள் நிரம்பியது, இரவு சர்வீசை நிர்வகிக்கக்கூடியது என்ற எண்ணத்தின் பேரில், சர்க்கார் முதலில் அவர்களுக்கே, அழைப்பு விடுத்தனர், இயலுமா என்று கேட்டனர். ஆனால், அவர்களோ, அதிக தொகையும், நிபந்தனைகளும் கேட்ட காரணத்தால் குறைந்த தொகையும், சர்க்கார் நிபந்தனைகளுக்குட்பட்டும் வந்த இந்தியன் ஓவர்சீஸ் (Indian Overseas) விமானக் கம்பெனிக்கு கல்கத்தா — பம்பாய், டெல்லி— சென்னை ஆகிய இடங்களுக்கு இரவு விமான சர்வீஸ் நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

பொதுமக்கள் நலனை உத்தேசித்தும், தபால் முதலிய போக்குவரத்துகள் விரைவாகச் செல்ல வேண்டுமென்று கருதியும் இரவு விமானப்போக்குவரத்தைத் துவங்க சர்க்கார் நினைத்தது.

இதைச் செய்ய, வசதிகள் நிரம்பிய டாடா கம்பெனியாரை அழைத்தது. அவர்களோ வருமானநஷ்டம் ஏற்படும என்று கூறி, மறுத்துவிட்டதோடு, அப்படி ஆரம்பிப்பதாகயிருந்தால் இரவில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லுவது போன்ற அனுமதியும் தரப்பட வேண்டுமென்ற நிபந்தனைகளை விதித்தது.

எனவே, இந்தியசர்க்கார் வேறொரு கம்பெனியார் தாங்கள் ஏற்று நடத்துவதாக முன்வந்த காரணத்தால் அவர்களுக்கு அனுமதியளித்தனர். அதுமுதல், டாடா கம்பெனியாரின் ஆத்திரமும், சீற்றமும் இந்திய சர்க்கார் மீது புயல் என எழும்பியது. கடந்த பத்து மாதங்களாக, இந்தியப் போக்குவரத்து மந்திரி சபையின் மீது, "போர்" நடத்தியவண்ணமாகவே இருந்து வந்துள்ளனர்—சர்க்காரின் ஏற்பாட்டால் ஏமாற்றமடைந்த கம்பெனிகளை உடன் சேர்த்துக் கொண்டு!

இரவு விமான சர்வீசால் எங்கட்கு இலாபம் இல்லை!

தபால் போக்குவரத்தால், முன் கிடைத்த வருமானம் போய்விட்டது!

சர்க்கார் ஒத்துழைப்பில்லை, தொழில் நசித்துவிடும்!

என்பன போன்ற பயமுறுத்தல்கள் மூலம், சர்க்காரைக் கண்டித்தும், போக்குவரத்து மந்திரி சபையின் மீது சீறிப் பாய்ந்தும், மூட்டை மூட்டையாகக் குற்றங்களை வீசும் திருப்பணியில் இறங்கியது! அதை ஆதரிப்போரும், இரவு விமான தபால் சர்வீஸ் கூடாது, என்று கூக்குரலிட ஆரம்பித்தனர்!

* * *

டாடா விமான சர்வீசாரின் கூற்று உண்மையா, அவர்கள் கூறுவது போல, இரவு விமான தபால் போக்குவரத்துகளைத் துவங்கியதால் ஏதாவது நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா ஏனைய கம்பெனிகளுக்கு, எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்தாலோ, கிடைக்கும் விடை வேடிக்கையாக இருக்கிறது! முன்னைவிட வருமானம் அதிகமாகி இருக்கிறதே ஒழிய, குறையவில்லை!

டாடா கம்பெனி, ஒரு மைலுக்கு ரூ 5—8—0, தனது விமானத்துக்குச் செலவழிக்கிறது என்று கூறுகிறது, தனது குற்றச்சாட்டில். ஆனால், மைலுக்கு ரூ 3—8—0 வீதம் வருமானம் பெற்றும் டெக்கான் ஏர்வேஸ் போன்ற கம்பெனிகளுக்கு இலாபம் வந்திருக்கிறதே ஒழிய நஷ்டம் ஏற்படவில்லை!

* * *

தான் கேட்டதைக் கொடுத்துத் தன்னிடமே இரவு விமானத் தபால் போக்குவரத்தையும் விடவில்லை என்ற ஆத்திரத்தின் பேரில், சர்க்கார் மீது, தீப்பொறி பறக்கத் தினசரி கண்டனக் கணைகள் விடுவதில் ஈடுபட்டிருக்கும் டாடாவின் கம்பெனி வளர்ந்த கதையைப் பாருங்கள்!

1932ல், இந்தக் கம்பெனி, டாடா நிர்வாகிகளால் தனிப்பட்ட முறையில் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ரூ 20,000 மதிப்புள்ள மூன்று விமானங்களும், அவைகளை நிர்வகித்து ஓட்டுவதற்கென ஒருலட்ச ரூபாயும்தான் இக் கம்பெனியின் மூலதனம். அப்போதே, தபால் போக்குவரத்துக்கென பவுண்டு ஒன்றுக்கு ரூ 5 வீதம் சர்க்கார் செலுத்தி வந்திருக்கின்றனர்.

1944ல், இக்கம்பெனியாருடைய கணக்கு சர்க்கார் பார்வைக்கு வந்தது, மேற்படி கம்பெனியை, அவர்கள் ஒரு லிமிடெட் ஸ்தாபனமாக ஆக்கவிரும்பியதன் காரணமாக! அதுபோது கம்பெனியின் மூலதனம் ரூ 10 லட்சம் என்று காட்டப் பட்டிருந்தது.

1944-45-ல் அவர்களுக்கு மொத்தம் 12-லட்ச ரூபாய் லாபமாக வந்தது.

பிறகு 1946-ல் இக் கம்பெனி (Air India Limited) எனக் கூட்டு ஸ்தாபனமாக ஆயிற்று. அதுபோது இதன் ஐவேஜு ரூ. 13-லட்சம் என்று கூறப்பட்டதோடு வளர்ச்சி மதிப்பு (Good-Will) ரூ 20-லட்சம் என்றும் மதிப்புப்போட்டு மாற்றப்பட்டது. இதெல்லாம் சேர்ந்ததுதான் இக்கம்பெனியின் மூலதனம்!!

(9-ம் பக்கம் பார்க்க)

அனைத்தும் அர்ச்சனை மயம்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

"இந்தி அரசியல் வார்த்தைகள் ஜாபிதாவில் அடங்கியுள்ள எல்லாமே விசித்திரமானவை என்பதுமாத்திரமல்ல, யாருமேகேட்டு மறியாதவை"

என்று "தினசரியே" எழுதுகிறது.

பூராஜஸ்வா! இதற்கு என்ன பொருள்? தெரியாது. இந்திப்பண்டிதர் கூறுகிறார் இதற்குப் பொருள் 'கிஸ்தி' என்று. அதாவது நிலத்தீர்வை என்ற தமிழ்ச் சொல்லைக் கொலை செய்து விட்டு இனிமேல் பூராஜஸ்வா என்றுதான் சொல்ல வேண்டுமாம்! பிமா என்றால் ஆங்கிலத்தில் இன்ஷூரன்ஸ் என்று பொருள். இந்த ஆங்கிலச் சொல்லுக்கு என்ன தமிழ் என்பது உண்மையில் பலருக்குத் தெரியாது. அந்த அளவுக்குத் தமிழ், ஆங்கிலத்தால் கொலை செய்யப்பட்டுவிட்டது. இன்ஷூர் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொறுப்புக் கட்டுதல் என்று பொருள். அதாவது ஒருவருடைய பொருளை இன்னொருவர் பொறுப்பேற்றுப் பாதுகாத்துக் கொடுப்பது என்று பொருள். சம்விதான சபா! இதன் பொருள் அரசியல் நிர்ணய சபை. இதற்குத் தமிழில் அரசியல் அமைப்பு மன்றம் என்று பெயர். சககாரி சமஸ்தாயன! இதற்குப் பொருள் என்ன தெரியுமா? கூட்டுறவுச் சங்கம் தான் புதிய அரசியலில் 'சககாரி சமஸ்தாயன' ஆகிவிட்டது. ராஜ்யபாலா! என்ன இது? இதுதான் இப்போதிருக்கும் கவர்னர் என்ற சொல்லுக்கு இந்திப் பண்டிதர்கள் இட்டிருக்கும் புதிய பெயர். கவர்னர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கே தமிழ்ச் சொல் என்ன என்பது தமிழ் மக்கள் பலருக்கு இன்னமும் தெரியாது. கவர்னர் என்றால் ஆட்சித் தலைவன், ஆளுபவன் என்று தமிழில் பெயர்கள் உண்டு. ஆனால் இனிமேல் கவர்னரை அதாவது ஆட்சித் தலைவனை ராஜ்யபாலா என்றுதான் அழைக்கவேண்டுமாம். உச்சநியாயாலயா! நாக்கை அறுத்துப் பல்லை உடைக்கும் இந்தச் சொல்லுக்கு என்ன பொருள் தெரியுமா? ஹைகோர்ட்! ஹைகோர்ட் என்றால்தான் பலருக்குப் புரியுமேயன்றி உயர் அறமன்றம் அல்லது உயர் நீதி மன்றம் என்று கூறினால் பலருக்கும் புரியாதபடி தமிழ் கொலை செய்யப்பட்டிருக்கும் போது, இனிமேல் உயர் நீதி மன்றம் என்று அழைப்பதை விட்டு, அதனை உச்சநியாயாலயா என்றழைக்கவேண்டுமாம்! கோயில்களில் கூறப்படும் அர்ச்சனைச்சுலோகங்கள்போல் இருக்கின்றனவே இந்தச்சொற்கள் என்று யோசிக்கிறீர்களா? ஆம்! அப்படித்தான் ஒலிக்கின்றன!

"தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ
யோக: கர்மஸு கௌசலம்"

என்று பகவத்கீதையில் வரும்சுலோகம்போலவேதான் இந்தச்சொற்களையும் உச்சரிக்கவேண்டியிருக்கிறது. இனிமேல் உயர்நீதி மன்றம் என்று கூறுவதைவிட்டு, உச்சநியாயாலயா என்றழைக்கும்போது. அந்தச்சொல்லுக்கு முன்னால் ஓம் என்பதைச் சேர்த்து ஓம் உச்ச நியாயாலயா என்று உச்சரித்துக் கொண்டே போய்க்கடைசியில்நமஹா என்பதையும்சேர்த்து, "ஓம் உச்சநியாயாலயா நமஹா!" என்று கூறினால்கூட அதை யாரும் தவறென்று சொல்லமாட்டார்கள். ஏனென்றால், இனிமேல் நடக்கவிருக்கும் அரசியலே இராமராஜ்யமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே, இராமராஜ்யத்தில் அனைத்துமே அர்ச்சனைமயமாக இருக்கலாமல்லவா?

எப்படி இருக்கிறது இந்தி நுழைவால் நாம் அடைந்த பலன்! இந்தியை எதிர்க்கிறோம்? தேசிய பாஷையைக் கண்டிருக்கிறோம்! என்று கனைபூட்டிய கனவான்களால் இப்போதாவது உணர முடிகிறதா இந்தி எதற்காக இங்கு நுழைக்கப் படுகிறதென்ற சூட்சமத்தை!

இப்பொழுதே இந்தி நம்மையும் நம்முடைய மொழியையும் இந்த அளவுக்கு ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிட்டதென்றால், இனி, என்னவோ புதிய அரசியல், வரப்போகிறதென்று கூறுகிறார்களே, அப்பொழுது நாமும், நம்முடைய மொழியும் பிறநலன்களும் என்ன நிலையை அடையும் என்பதனை, இந்தி எதிர்ப்பை எளனம் செய்தவர்கள், குறிப்பாகக் காங்கிரசில் இருக்கும் தமிழ் நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

*

வெளிவந்துவிட்டது!

திராவிடர் டைரி—1950

500 பக்கங்கள்—விலை அணா 12

ஒருபிரதி வேண்டுவோர் சாதாரணதபாலில் அனுப்ப ரூ. 0–14–0-ம்
பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—2—0-ம் அனுப்பவேண்டும்.
விற்பனையாளர்க்குக் கழிவு 20%
முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்படமாட்டாது.

இந்த நாட்குறிப்பில்

சி. என். ஏ. யின் மொழிகள் நாளுக்கு ஒன்று வீதம் 365
தி. மு. கழகப் பொதுச் செயலாளர் புகைப்படம்
தி. மு. கழகக்கொடி—இரு நிறத்தில்
தி. மு. கழகத் தோற்றமும், வளர்ச்சியும்—முழு விவரங்கள்
தி. மு. கழக அமைப்பு முறை
தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக்குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்
கழகப் பேச்சாளர் பெயரும், முகவரியும்
தி. மு. கழகக் கிளைகள் 350-ன் விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்—மாவட்டவாரியாக
தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்
பிறவும் அடங்கியுள்ளன.

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு, சென்னை 1.

நந்தவனத்திலோர் ஆண்டி!

நந்த வனத்திலோர் ஆண்டி—
அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை
வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி
-அதை
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு
டைத்தாண்டி!

என்று பாடப் படுவதுண்டு, கேலியாக—நந்தவனத்து ஆண்டியொருவன், நாலாறு மாதங்கள் குயவனை வேண்டி, கொண்டு வந்தானாம் ஒரு தோண்டி. பின் அதைக் கொண்டு, நீரிழுப்போம், செடிகளுக்கு விடுவோம் என்று எண்ணாமல் தோண்டி கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்து, கூத்தாடி, போட்டுடைத்தானாம்!

முயன்று, முனைந்து ஒரு பொருளைப் பெற்று, அதனால் பெறும்பயன் கருதாது, ஆவேசத்துக்கும் ஆர்வத்துக்கும் ஆளாகி, அதை வீணாக்குபவர்களைக் குறித்து, இப்பாடல் பாடப்படுவதுண்டு!

* * *

கஷ்டப்பட்டு மரத்தில் ஏறி, மாங்கனியைப்பறித்து, கல்லும் முள்ளும் காலில் தைத்தாலும், கனி கிடைக்கப் போகிறது என்ற ஆசைமிகுதியால், களித்து நிற்கும் நண்பர்களை மறந்து, மனதார மலத்தில் வீசியெறிந்தால், அந்த வேதனைவிளையாட்டை எவருமே வெறுப்பர்; மதிகெட்டவனே, மரமண்டையா உனக்கு, வாயில் நீர்ஊற, பழம்விழப் போகிறது, என்று பார்த்துக் கொண்டே நிற்கிறோம், மலத்தை நோக்கி மாங்கனியை வீசிவிட்டு 'மன்னிப்பீர்!' என்று சொல்கிறாய், என்ன மனத்தைரியமடா உனக்கு' என்றே அதட்டிக் கேட்பர்!

* * *

காடு மேடுகளைந்து, கழனியாக்கப் போகிறேன் பாரீர்என்று கூறிக்கல்லையும் முள்ளையும் நீக்கிக் கடைசியில் காட்டெருக்கையும் கவைக்குதவாச் செடிகளையும் பயிராக்கிவிட்டு, பலனில்லை பார்மின், இதற்கென்னசெய்வேன் கூறுமின் என்று கெஞ்சுதலோடு கூறுபவனைக்கண்டால், பயிர் விளையும் பசி நீங்கும் நெல்கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, எரிச்சல்தான் உண்டாகும். ஏனப்பா, இதுதானா: உன்னை நம்பியதன் பலன் என்றுதான் கேட்பரேயொழிய, 'நீதான் என்ன செய்வாய் வருந்தாதே, வா பணம் தருகிறேன்' என்று எவரும் பாசங் கொள்ளமாட்டார்!

• • •

திரு விளக்கேற்றிடப் போகிறேன் திண்ணைகளில்லாம் தெருஜனங்களே எண்ணெய் தருவீர் என்று கேட்டு வாங்கிச் சென்று திரு விளக்கு ஏற்றாது, தெருக்கோடிக் குளத்தில் கொட்டிவிட்டு, தெருவாரே என் செய்வது செய்பிழை பொறுப்பீர், இன்னும் கொஞ்சம் எண்ணெய் தருவீர், என்று கூறிச் சென்றால், 'வீணனே எதற்கடா உனக்கு வேறு வேலையில்லையா,கொடுத்ததுபோதும் கோடி நமஸ்காரம் போய்வா தம்பி' என்று தான் சொல்வார்கள்!

* * *

நீரிழுக்கும் தோண்டியை உடைத்த ஆண்டியும், மாமேறி மாங்கனி பறித்து மலத்தில் வீசியவனும், காடு திருத்திக் காட்டெருக்குப் பயிரிட்டவனும், எண்ணெய் பெற்று திருவிளக்கேற்றாது திண்ணைகளை இருள்மயமாக்கினவனும் வேதனையுடன் பேரம்பண்ணும் விசித்திரங்கள் என்றுதான்கருதப்படுவர். தோண்டி மட்டும் கிடைக்கட்டும் தோட்டத்துச்செடிகளைப் பாருங்களேன்!

மாங்கனியைப் பறித்ததும், நண்பர்களே, உங்களுக்குத்தான்! காடு கழனியாகட்டும், கவலையெல்லாம் தீர்ந்துவிடும்!

எண்ணெய் பெற்றவன் திண்ணைகளையா மறந்துவிடுவான்!

என்றெல்லாம், ஆசையும், எண்ணமும்எழுப்பப்பட்டிருந்து, சொல்லியபடி செய்யாமல் அதனையும் வீணாக்கினால், எதிர்பார்த்தவர்களுக்குவேதனையும் ஆத்திரமும் எழும்பாது போகாது! வீணன், வேதனை தருபவன், எத்தன் என்றே எல்லாரும் தூற்றுவர்!

ஏமாற்றப்பட்ட உள்ளங்கள் 'எரிமலை'யாகத்தான் செய்யும்!

என்ன செய்வேன் நான், பொறுமையின் பூஷணமல்லவா நாங்கள் என்றுகூறி, தவறுசெய்துவிட்டேன்? தகாது பேசுகிறீர்களா? ஏது காரியம் மிஞ்சிவிட்டது என்று மிரட்டி, ஏதோ சொன்னேன் அப்படியே எல்லாம் நடந்துவிடவேண்டுமோ என்று அதட்டி, 'எரிமலை' போலநிற்கும் உள்ளங்களிடம் போய்ப் பேசினால் என்ன ஏற்படும்!

மண்குடம் எங்கே உடைந்திருக்கிறது, மாங்கனி மலத்தில் விழாது தடுக்க நான் என்ன மந்திரவாதியா, காடு கழனியாவதென்றால் சாமான்ய வேலையா, குளத்தில் கொட்டியது ஏன்தெரியுமோ? எல்லாம் நன்மைக்குத்தான், 'இன்னும் கொஞ்சம் எண்ணெய் கொடுங்கள் என்று, 'எரிமலை' போல ஆத்திரத்துடன் நிற்பவர்களிடம் வீணனும், வேதனை தருபவனும், விசித்திரப் புத்தியுடையவனும், எத்தனும் சென்று கேட்பார்களேயானால் அவர்களின் நெஞ்சுரம் உண்மையில் வியக்கக்கூடியதுதான்! சொன்னபடி நாம் நடக்கவில்லையே, எப்படி அவரவர் முகத்தில் விழிப்பது, என்ற எண்ணம் எழும்புவதற்குப்பதில் 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறிப்போய் நிற்பதென்றால் உண்மையில் அவர்கள் உள்ளம் வியக்கக்கூடியதுதான்!

சுயராஜ்யம் மட்டும் வரட்டும்!
ஆட்சியில் மட்டும் நாங்கள் அமரட்டும்!
எவ்வளவோ செய்யப் போகிறோம்!
வரியெல்லாம் சரியாக விடுவோமா!

என்று முழக்கமிட்ட காங்கிரஸ் பிரமுகர்களுக்கு, கனம் தங்கிய மந்திரிகளுக்கு இத்தகைய நெஞ்சுரம் ஏற்பட்டிருக்கிறது!

ஆட்சிப் பீடம் மட்டும் கிடைக்கட்டும், உரிமைகள் யாவும் அனுபவிக்கலாம், நன்மைகள் எல்லாம் மலரும், பட்டினி பசியெல்லாம் பறக்கச் செய்வோம், வரியெல்லாம் குறைத்து வாழ்வை வளமாக்கி விடமாட்டோமா என்று இன்றைய ஆளவந்தார்கள் அன்று, எண்ணற்ற மக்கள் முன் தினசரி முழக்கங்கள் எழுப்பினர், குடம் கிடைக்கட்டும், மாங்கனி எட்டட்டும், கழனியாக்குகிறேன், எண்ணெயைக் கொண்டு திண்ணைகளை ஜோதி மயமாக்குகிறேன் என்று கூறி ஆசை காட்டியவர்களைப் போல!

காங்கிரஸ், வெள்ளையரை விரட்ட வேண்டும், அவர்களை விரட்டி விட்டால் வேதனை நீங்கும், வாழ்விலே மலர்ச்சி ஏற்படும் என்று கூறியது. மக்களும், உண்மையென நம்பினர், இன்பம் கிடைக்கும் என எதிர்பார்த்தனர்! ஆனால் யாவும் இன்று வீணாகிவிட்டது, வளைந்த வாழ்வு நிமிர்க்கப்படவில்லை, முழக்கங்கள் வக்கணைப் பேச்சுகளாகிவிட்டன, வரிப்பணம் கரியாகத்தான் செய்கிறது! அன்று கர்ஜனை எழுப்பியவர்கள், ஆள்பவர்களாக ஆட்சிப் பீடம் ஏறிய பின், உறுதிமொழிகள் அத்தனையும் ஆசைகாட்டி மோசம் செய்தவர்களின் செய்கைகளைப் போலவே ஆயிற்று!

சுயராஜ்யம் வரட்டும் என்று கூறினர், அடக்குமுறைகள் யாவையும் அழித்துவிடுவோம், எல்லோரும் உரிமைகளுடன் வாழலாம் என்று கூறினர். ஆனால் கிடைத்த குடத்தைப் போட்டு உடைப்பது போல ஆயிற்று! ஆட்சியில் மட்டும் நாங்கள் அமரட்டும் என்று சொல்லினர், அமர்ந்தபின் மாங்கனியைப் பறித்ததும் மலத்தில் வீசியது போல ஆகிவிட்டது நிலைமை! காடுமட்டும் கழனி ஆகியது. ஆனால் எதிர்பார்த்தது ஏற்படவில்லை, காட்டெருக்கும், காட்டுச்செடிகளும் தான் வளர்க்கப்பட்டிருக்கின்றன!

வரியெல்லாம் கரியாகிறது, போலீசுக்கும் ஜெயிலுக்கும் பணத்தை விரயமாக்குகின்றனர், பிரிட்டிஷார். இது நல்லதா, இப்படியிருக்கலாமா, எங்கள் ஆட்சி மட்டும் வரட்டும் என்று கூறினர், வரியைக் குறைப்போம் என்று முழக்கமிட்டனர். ஆனால் நிலையோ, வீடுகளில் கேட்டுப் பெற்ற எண்ணெயைக் கொண்டு போய்க் குளத்தில் கொட்டுவது போலவே ஆயிற்று!

இருந்தும், சொன்னது போல நாம் நடக்கவில்லை, முந்திய நிலையை விட இப்போது எல்லா வகைகளிலும் இன்னலே அதிகமாகியிருக்கிறது நமதாட்சியில் என்பது தெரிந்தும் மக்கள் முன்னிலையில் சென்று,

மந்திரவாதிகளா நாங்கள்! சொன்னபடி நடக்கத்தான் முடியவில்லை! போலீசுக்கும், ஜெயிலுக்கும் அதிகம் செலவுதான் ஆகிறது!

கேட்டால் நீங்கள் வரி கொடுத்துத்தான் ஆகவேண்டும்! என்று மந்திரிமார்கள், மனந்திறந்து பேசுகிறார்கள், துணிச்சலோடு கூறுகிறார்கள், வரிகளை அதிகமாகத்தான் ஆக்குவோம், ஏனென்று கேட்காமல் நீங்கள் கொடுக்கத்தான் வேண்டும் என்பதாக. கள்ளிக்கோட்டையில் பவனிவரும் கனம் கோபாலர் கூறியிருக்கிறார்:-

"பாதுகாப்புச் செலவுக்காகக் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய்கள் செலவிடுகிறோம். 1940—41ல் சிறைச்சாலைகளுக்கென 40 லட்ச ரூபாய்கள்தான் செலவழித்தனர். ஆனால் இப்போதோ ஜெயிலில் கூட்டம் அதிகரித்துவிட்டது. அதன் காரணமாக நாங்கள் 110 லட்சம் ரூபாய்கள் செலவிடுகிறோம்"

என்று, வெளிப்படையாக அறிவித்துள்ளார். தற்போது பாதுகாப்புக்கென நான்கு கோடி ரூபாய்கள் செலவிடுகிறோம் என்று கூறியுள்ளாரல்லவா, இவர்கள் ஆட்சிப் பீடம் ஏறுமுன், வெள்ளையர் காலத்தில் செலவழிக்கப்பட்ட தொகை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அப்போது பாதுகாப்புக்கென, போலீஸ் முதலிய நிர்வாகத்துக்கென 160 லட்சம் ரூபாய்கள்தான் செலவழித்தனராம்! தகவல் தருகிறார் அமைச்சர், அதைவிட இப்போது பாதுகாப்புச் செலவுக்கென அதிகம் செலவழிக்கிறோம் நாங்கள் என்று வேதனைப்படாமல் கூறுகிறார்!

அன்னியர் ஆட்சிக்காலத்தில் போலீசாரைச் 'சனியன்கள்' என்றே அழைத்தனர், 'நாட்டுப் பாதுகாப்புக்கா செலவிடுகின்றனர் இவர்கள்? இல்லை! இல்லை!! இவர்களைப் பாதுகாத்துக்கொள்ளத்தான் செலவிடுகின்றனர். பாதுகாப்பு மக்களுக்கல்ல, இவர்கள் ஆட்சி அசையாமலிருப்பதற்குத்தான்!' என்று முழக்கமிட்டனர். போலீஸ் என்றாலே, பொறுக்கமுடியாத விரோதமும் குரோதமும் காட்டினர். அதற்கெனச் செலவழிக்கப்படும் பணம் அத்தனையும் வீண் என்று முழக்கமிட்டனர். ஆனால், இன்றோ, மந்திரியார் மனங்கூசாமல் தெரிவிக்கிறார், வெள்ளையர் ஆட்சியைவிட எங்களாட்சியில் போலீஸ் நிர்வாகத்துக்கு நாட்டுப் பாதுகாப்புக்கு, வெள்ளையர் காலத்தைவிட அதிகம் செலவழிக்கிறோம் என்று, வெட்கப்படாமல் வேதனையில்லாமல்!

"பொறுமையில்லை மக்களுக்கு. எல்லாவற்றையும் உடனே செய்து தருவதற்கேன்ன என்று விரும்புகிறார்கள்"

இதுவும் அவருடைய வாயிலிருந்து, சிந்திய முத்துக்களில் ஒன்று! மக்கள் பொறுமையாயில்லையாம், மந்திரியார் கூறுகிறார், மாங்கனிபறித்ததும் உங்களுக்குத் தருகிறேன், நீங்கள் தின்று மகிழலாம் என்று கூறி, மரமேறி அதை மலக்குழிநோக்கி வீசிவிட்டு, பின்னர் மனங்கலங்காது ஏனப்பா மனம் பதறுகிறீர்கள் என்று கேட்டதைப் போல!

மக்கள் பொறுமையைப் பூணாரமாகக்கொள்ளவேண்டுமாம்! இரண்டு ஆண்டு ஆட்சிக்காலத்தில், கூறிய உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு, கும்மாளத்துடன் பவனிவரும் மந்திரியார் கூறுகிறார், பொறுமனமே பொறு என்று! கூறியதுமட்டுமல்ல ஆத்திரத்துடன் கேட்கிறார்,

"மந்திரிகளிடம் என்ன மந்திரக்கோலா இருக்கிறது, நினைத்ததையெல்லாம் செய்துமுடிக்க என்று!"

எப்படியிருக்கிறது வேடிக்கை, என்னென்னவோ செய்யப்போகிறோம் என்று கூறினீர்களே மகானுபாவர்களே, கொஞ்சம் மனதாலும் எங்களை நினைத்துப்பார்க்கக் கூடாதா, மந்திரிமார்களே, என்று கேட்டால், சினத்துடன் சீறிப்பாய்கிறார், நாங்கள் என்ன மந்திரக்கோலா வைத்திருக்கிறோம் என்று!

ஆட்சிப்பீடம் ஏறியதும், ஏதோ இவர்களிடம் மந்திரக்கோல் இருப்பதுபோலவும், மக்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் உடனடியாகச் செய்து தந்துவிட்டுப்போவது போலவும்தான் இவர்கள் முழக்கமிட்டனர்! ஆனால்மக்களுக்குத் தெரியும், இவர்களிடம் மந்திரக்கோல் இல்லை, என்பது. எனவேதான், பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். அதுவும் ஒரு மாதம் இரண்டு மாதமல்ல! இரண்டு ஆண்டுகள் பொறுமையுடன்தானிருந்தனர். அதுதெரிந்தும், மந்திரியார் கூறுகிறார், போலீசுக்கும் ஜெயிலுக்கும் அதிகப்பணம் செலவழிக்கிறோம் என்று கூறிய வாயாலேயே கூறுகிறார், நன்மைகள்யாவும் செய்யவேண்டுமெனக் கோருகிறீர்களே, எங்களிடம் என்ன மந்திரக்கோலா இருக்கிறது என்று!

அதுமட்டுமல்ல, வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் இவர்கள் விடுத்தகண்டனக்கணைகளில் ஒன்று, வரியைக் கரியாக்குகின்றனர், வசூலித்த எண்ணெயைக் குளத்தில் கொட்டுகின்றனர், என்பதாகும். எவ்வளவு வரிகள்! எவ்வளவு தொல்லைகள்! இதையெல்லாம் ஏழை எப்படிச்சுமப்பான் என்று துட்டிக்கதைகளுடனும், கோபவார்த்தைகளுடனும் கேட்டனர். மக்கள் மன்றத்திலே கர்ஜித்தனர். அப்படி, அன்று முழக்கமிட்ட கனவான் கூறுகிறார் கேளுங்கள்.

"இதுசெய்யவேண்டும், அதைச் செய்து தாருங்கள் என்று கேட்பதற்குமட்டும் குறைவில்லை. ஆனால் சர்க்கார் ஏதோ சில வரிகளைப் போடுவோம் என்றால் முன்வந்தாலோ, கூக்சல்போடுகின்றனர்!"

கூச்சல் போடுகிறார்களாம், கூறுகிறார் மக்களுக்காகத் தொண்டு புரிகிறோம் என்று சொல்லி, மந்திரிப்பீடம் ஏறியவர்!

"குறளிவித்தையால் குவிக்கக் கூடியதா பணம். கொடுத்தால் தானே எங்களுக்கு. கொஞ்சம் அதிக வரி கொடுங்கள் என்றால் மட்டும் கோபம் வருகிறது. வசதிகளைமட்டும்எதிர் பார்க்கிறீர்களே!"

என்றும் கேட்டுள்ளார், கோபாலர். வேடிக்கையாகஇல்லை, வேதனையாக இருக்கிறது, நாடாளவந்தவரின் பேச்சு! நாம் தலைப்பில் குறிப்பிட்டோமே, சிலநபர்கள். அவர்கள்போக்கையும் மிஞ்சுவதாகஇருக்கிறது!

கேட்டுக் கொண்டே இருப்பாராம் மதி மந்திரியார், நாம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டுமாம்! குளத்தில், எண்ணெயைக் கொட்டிக் கொண்டே, கொடுத்துக்கொண்டேயிரப்பா, எண்ணெயை என்று கூறுகிறார் நிதியமைச்சர்! மாங்கனியை மலத்தில் வீசி விட்டு, கோபம் வருகிறதே பொத்துக் கொண்டு, கொஞ்சம் பொறுமையாக இரேன் என்று கோருகிறார்.

அதிகவரி போடப்போட மக்கள் ஏனென்று கூட கேட்காமல், எதற்கு என்றும் எண்ணாமல், கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டுமாம்! இருந்தால், குறைகளைப் போக்க முயற்சிப்பாராம்! கூறுகிறார், கோபாலர், கோபத்துடன், ஏதோ இப்போது மக்கள் வரிகொடா இயக்கம் நடத்திக் கொண்டிருப்பது போலக் கருதிக்கொண்டு!

அதிக வரி கொடுக்க மக்கள் அஞ்சக் கூடாதாம்! எங்கே பணம் என்றதும், இதோ இருக்கிறது என்று, ஏழை எடுத்துவைத்துக் கொண்டு 'பாராக்கு'க் கூறவேண்டுமாம்! சொல்லுகிறார், காங்கிரஸ் கனவான், கொஞ்சங்கூட கூச்சமோ, நாச்சமோ இல்லாமல்!

நாம்தானே கூறினோம், நாங்கள் ஆட்சிப்பீடம் ஏறினால், இப்படியா இருக்கவிடுவோம்! வரிப்பளுவைக் குறைப்பதுதானே, எங்களது முதல வேலை! என்று, சிறிதுகூட சிந்திக்காது, மக்களை நோக்கி, கேட்கிறார் மகானுபாவர்—இல்லை கோபத்தால் மிரட்டுகிறார்—அதிகவரி கேட்டால், 'ஏதுபணம்' என்று அழுகிறீர்களே! அப்படி இருக்கும்பொழுது எப்படி அரசாங்கம் மட்டும் நன்மைகளைச் செய்து தர முடியும் என்று கவலையுடன் கண்ணீர் சிந்தும் ஏழைகளைப் பார்த்து!

வரி கேட்டுக்கொண்டே இருப்பாராம், பொதுமக்கள் சிறிதுகூட 'ஏன்' என்றோ, எதற்கு என்றோ, வாய்கூடத் திறக்காது, எப்படியாவது கட்டிக்கொண்டே இருக்க வேண்டுமாம்! இருப்பதையும் கொடுத்துவிட்டு, என்ன செய்வேன் என்று வேதனை முகாரி எழுப்பிக் கொண்டு, ஓலைக்குடிசையில், ஓலமிட்டுத் துடித்து நிற்கிறார்களே, மக்கள் அவர்களை நோக்கி அதட்டுகிறார், 'அன்பு'கொண்டு ஆளப்போவதாகக் கூறி ஆட்சிப் பீடம் ஏறிய மந்திரியார்!

இவர்களை என்னவென்று சொல்வது! இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெஞ்சுரத்தைத்தான் எதற்கு உவமானம் கூறுவது!

*

சந்தாதார்களுக்கு!

பன்முறை தெரிவித்தும், பலர் இன்னும், முகவரி மாற்றம் குறித்தோ, பத்திரிகை வாராமை பற்றியோ, கடிதம் எழுதும்போது சந்தாஎண் குறிப்பிடாமலே, கடிதம் எழுதுகிறார்கள். இதனால் எல்லா வகைகளிலும் சங்கடம் ஏற்படுகிறது. எனவே, இனி, சந்தாஎண் குறிப்பிடப்படாத கடிதங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா, என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

முடிவிழா நடக்கிறது!

மாகாண சர்க்காரின் விவகாரங்களில் மத்திய சர்க்கார் அளவுக்கு மீறித் தலையிடுவதாக நாம் அடிக்கடி குற்றம் சாட்டி வருகிறோம். இந்திய சர்க்கார், தங்கள் ஏதேச்சாதிகாரத்தை, அப்படித் தலையிடுவதன் மூலம் அதிகரித்துக் கொண்டே வருகிறது, இதன் முடிவு, மாகாணங்களின் நலன்கள் யாவும் பாழாவதுதான் என்றும் எடுத்துக் குறிப்பிட்டு வருகிறோம்.

இவைகளைக் காணும் தேசியத் தோழர்கள், நாம் கூறுவது சரியா, தவறு,உண்மையிருக்கின்றதா என்று கூட எண்ணிப்பார்ப்பதில்லை. "இவர்களுடைய வேலையே, இது தானே!" என்று, அலட்சியத்தை அணைத்துக் கொண்டுபேசி விடுகின்றனர். இந்தியா ஏக தேசம் என்ற எண்ணத்தில், இவைகளைப் பற்றிச் சிந்திப்பது, சிலலறையிலே கவனம் செலுத்துவது என்றே கருதி விடுகின்றனர். பல துளி பெரு வெள்ளம் என்று கூறப்படுவதுண்டு, பல அணுக்கள் சேர்ந்தால் ரூபாயாகிவிடும் என்று சொல்வார்கள், அது நமது "நண்பர்கள்" உள்ளத்தில் மட்டும் படுவதில்லை. அவ்வளவு பரந்தமனப்பான்மையும், விரிந்த சிந்தையும் விளையாடுகிறது அவர்கள் இதயங்களில்! ஆனல் இதனுல் விளையும் பலனே, மாகாணத்துக்கு நன்மை பயப்பதாக, மாகாண நலன்களை வளர்ப்பதாக, மக்கள் வாழ்வுக்கு பயனூட்டுவதாக, இருக்கிறதா என்று எண்ணினுல், மத்திய சர்க்காரின் நட்வடிக்கைகள் அப்படியிருப்பதில்லை. மாகாண நலன்களைப் பறிப்பதாகவே இருக்கிறது!

மத்திய சர்க்காரின் தாக்கீது பிறந்து விட்டால், மாகாண சர்க்காரும், 'இதோ, எடுத்துக் கொள்ளுங்கள்' என்று, அவர்கள் எதைக் கேட்கிருர்களோ அதை அவர்கள் வசம் ஒப்புவித்து, சரண் அடைவதே தங்கள் தேசீயச் திருச்சேவை என்று எண்ணி வருகிருர்கள்.

"ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று சொல்வது போல, சென்னை மாகாணத்துக்கென ஒரே ஒரு காட்டிலாகா கல்லூரி (Forest College)கோவையிலிருக்கிறது. காடுகளைக்காப்பாற்றுவதுஎப்படி, அவைகளைப் பயன் படுத்துவது எங்ஙனம், தேக்குமரம் இருக்கிறதே, எவ்வாறு அவைகளை வளர்ப்பது. அவைகளைக் கொண்டு மக்களுக்கானதேவைகளைச் செய்து கொள்வது, எந்த மண்ணில் எந்த மரம் வளரும்என்பதுபோன்ற பற்பல அறிவாராய்ச்சிகளைக் கற்க உதவுவதாகும் அக்கல்லூரி. மாகாணத்தின் செல்வத்தை வளமாக்கக் கூடியதான காடுகளை, மரமடர்ந்த பிரதேசங்களை, மனதில் வைத்து அவைகளைச் சரிவர நிர்வாகம்செய்ய அதிகாரிகளை உண்டு பண்ணவேண்டும் என்ற ஆர்வத்தின் பேரில், அன்னியர் ஆட்சிக் காலத்தில், கோவையில் 1912 ல் மேற்படி கல்லூரி நிறுவப்பட்டது.

அதற்கு முன்னரே 1906லேயே இந்தியாவில் டேராடூனில் இது சம்பந்தமான ஆராய்ச்சிகளைக் காணுவதற்கென ஒரு கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருந்தும், இம்மாகாண நலனை உத்தேசித்துக், கோவையில் இந்தக் கல்லூரியை நிறுவினர் — பிரிட்டிஷ் ஆட்சியாளர். அப்படி அவர்கள் இங்கும் ஒருகல்லூரி இருக்கவேண்டுமெனக் கருதியதற்குக் காரணம், டேராடூன் கல்லூரியால், இம்மாகாணத்தின் தேவைகளைக் கவனிக்க முடியவில்லை, நன்மைகளைச் செய்ய இயலவில்லை என்று அறிந்ததினுல் தான்.

கோவையில் கல்லூரி ஏற்பட்ட நாள் முதல், இம்மாகாணத்துக் காடுகளை நிர்வகித்து அவைகளைப் பரிபாலனம் செய்யக்கூடிய அதிகாரிகளை மட்டுமின்றி, அருகிலிருக்கும் சமஸ்தானங்கள், வேறு மாகாணங்கள் ஆகியவைகளுக்குத் தேவையான அதிகாரிகளும் இங்கு பயிற்றுவிக்கப்பட்டு வந்தனர்.

1945ல் காங்கிரசார் பதவியேற்கு முன், ஆலோசகர் ஆட்சி இருந்த காலத்தில் இந்தக் கல்லூரியைச் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, இன்னும் நல்லமுறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக வாக்களித்திருந்தனர். இந்தக் கல்லூரியில் படித்துத்தேறியவர்களுக்கு "பட்டம்" வழங்கவும் ஏற்பாடு செய்வதாகக் கூறியிருந்தனர். ஆனுல், அது முற்றுப்பெறவில்லை.

மாகாணத்துக்கென இருக்கும் ஒரே ஒரு கல்லூரி, அதுவும் வெள்ளையராட்சிக் காலத்தில் இம்மாகாணத்துக்கு இன்றியமையாதது என்று கருதப்பட்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கல்லூரி, கடந்த ஆண்டு, 1948 ஜூலை மாதம் மத்திய சர்க்காரால், மாகாண அரசாங்கத்தின் நிர்வாகத்திடமிருந்து மாற்றிக்கொள்ளப்பட்டது, எடுத்துக்கொள்ளப்பட்டது!

நமக்கென இருக்கும் ஒன்றை எங்கேயோ இருக்கும் இவர்களால் நல்லமுறையில் நிர்வகிக்க முடியுமா, நன்மைதான் நமக்குக் கிடைக்குமா என்பது பற்றிச் சிறிதளவும் சிந்தித்துப் பார்க்காமல் மாகாண சர்க்கார், டெல்லி வசம் ஒப்புவித்தனர்.

ஒப்புவித்தபோது, மாகாண சர்க்கார் சில வேண்டுகோள்களையும் தெரிவித்துக் கொண்டது, கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்துவிட்டு அதில் ஒரே ஒரு சிறு கீற்றைத் தருவீர்களாஎன்று 'தண்டம்' சமர்ப்பிக்கும் கதையைப் போல!

கல்லூரியில் ஆராய்ச்சிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும். சந்தனமரம், தேக்கு ஆகியவைகளுக்கு நோய் எப்படி ஏற்படுகிறது, அதைத் தவிர்ப்பது எப்படி என்பது குறித்து அங்கு ஆராய்ச்சிகள் நடத்தப்படவேண்டும்

என்பது போன்றவைகள் தான் அந்த வேண்டுகோள்கள்.

மத்திய சர்க்கார், மாகாணத்தின் காட்டிலாக்கா கல்லூரியைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததும்,

(4-ம் பக்கம் பார்க்க)

Edited · Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.

9-FEB 1950 MADRAS

REGD 4642 M

சந்தா விபரம் — 1 ஆண்டு ரூ 7, ½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம் விலை இரண்டணு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 18-12-49 | இதழ் 25

சர்வாதிகார உதயம்!



இந்தியாவின் எதிர்காலம், அரசியல் நிர்ணய சபையில், முடிவு செய்யப்பட்டு விட்டது. நயவஞ்சக நாஜிசம், பசப்பும் பாஸிசம் ஆகியவைகளின் அச்சுத்தான், இந்தப் புது அரசியலமைப்பு என்பதைச் சித்தரித்து 'பிளிட்ஸ்' வெளியிட்டுள்ள படம் இது!

ஸ்பில்ஸ்பரி

சிக்கல் தீர்த்த சிங்கம்

[அரங்கண்ணல்]

ஒரு சிக்கலான வழக்கு. குற்றவாளிக் கூண்டிலே, ஒரு டாக்டர் நிறுத்தப்பட்டிருக்கிறார்—தன்மனைவியைத் தானே கொன்று துண்டித்து தன் அறையில் புதைத்துவிட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார் என்பது சர்க்கார் தரப்பு வாதம்!

'என் மனைவி என்னைக் கவனிக்கவில்லை, எவனையோ இழுத்துக்கொண்டு எப்போதோ ஓடிவிட்டாள். போலீசார் கண்டுபிடித்த, பிரேத உறுப்பு அவளுடையதல்ல, ஆகவே குற்றச்சாட்டு ஒரு கட்டுக் கதை' இது டாக்டர் தரப்பு வாதம்.

கொலை செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரம், சாட்சிகள் எங்கே? எதிரி தரப்பு வக்கீல், இடித்துக் கேட்கிறார், எங்கே சாட்சி, ஏதாவது உண்டா ஆதாரம் என்பதாக. வழக்குத் தோல்வியுற்றுப் போய்விடுமோ என்று பயம் தட்டுகிறது போலீசாருக்கு — உண்மை, அவர்கள் பக்கமிருந்தும், சரியான சாட்சி இல்லாததால் சஞ்சலப்படுகின்றனர், தவிக்கின்றனர், கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்த குற்றவாளி விடுதலை பெற்றுவிடுவான் போலிருக்கிறதே, வியர்வை வீணாகிவிடுமோ, என்ற ஆயாசம் அவர்கள் உள்ளத்தைத் துளைக்கிறது. வேதனைப் படுகின்றனர், வீணாகிப்போய் விடும் போலிருக்கிறதே வழக்கு என்ற மனவேதனையால்.

* * *

இன்னொரு வழக்கு. இதிலும் ஒரு கணவன் தான் குற்றவாளிக் கூண்டிலே நின்றான். இவன் மீது சாட்டப்பட்டதும் கொலைக் குற்றம் தான். மூன்று ஆண்டுகளில், மூன்று தாரங்களைப் பறிகொடுத்தவன் அவன்! முதல்மனைவியுடன் வாழ்ந்து ஓராண்டு முடிவதற்குள் அவள் இறந்தாள். அடுத்து இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்தும், அவளுடனும் நீண்டநாள் அவன் வாழவில்லை. திருமணம் முடிந்த அடுத்த ஆண்டே அவளும் காலஞ் சென்றாள். பசித்தவன் புசித்துக் கொண்டிருக்கும்போது, பாதியில், தட்டிப்பிடுங்குவதுபோல, பழத்தைப் பறிக் கையில் பழம் கைநழுவி பக்கத்து ஆற்றில் விழுவதுபோல, அவனுக்கு வாய்க்கும் மனைவிமார்கள் இறப்பது குறித்துச்சுற்றியிருப்பவர்கள் எல்லாம் துயரமடைந்தனர். இரு தாரமிழந்தும், இன்னொருதடவையும் மணம் புரிந்துகொண்டான்—பழையமனைவி மறைந்த துக்கமும் துயரமும் தாங்கவில்லை; எனினும், இவளை மணம்செய்து கொள்கிறேன் என்று கூறிக்கொண்டு. மூன்றாவது மனைவியும் வாழ்ந்தாள்—சில மாதங்கள். பின், முன்பு வீசியபுயலே வீசியது! அவளும், மரணவாயில் வீழ்ந்து விட்டாள். குளிக்கச் சென்ற அவள் தண்ணீர்த் தொட்டியில் தவறி வீழ்ந்து, மூழ்கி, இறந்தாள். மனைவியிழந்த அவனும், வருந்தினான். அவன் வருத்தம், எல்லோரையும் துயரத்திலாழ்த்தியது. ஏனிப்படி, 'இவனைக் கல்யாணம் செய்துகொள்ளுபவர்கள், இறந்து மடிகின்றனர் என்று கேட்டனர் சிலர். என்னமோ, பாவம் பரிதாபம் என்று சோகச் சொற்களைப் பதிலாகத் தந்தனர்சிலர்.

பெண்ணைப் பெற்றோர்களோ, இரண்டு தாரமிழந்தவனாயிருந்தும், இவனுக்குப் பெண்ணைக் கொடுத்தது, முன்பின் யோசியாது செய்த நமது மூடத்தனம், என் செய்வது! யாரை நோவது! அவள் விதி அவ்வளவுதான்! அவன்தான் என்ன செய்வான்? குளிக்கப்போன இடத்தில், தவறிவீழ்ந்து, தடுமாறிஇறந்து போனது அவனுடைய குற்றமா! இவ்வளவுதான் கொடுத்து வைத்தது, என்று, தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டனர்.

மூன்று மனைவிகள்—மூவரும், இறந்தனர்—எப்படி? ஏன்? என்ற சந்தேகம் மட்டும் சிலருக்கு ஏற்படலாயிற்று! முன்பு பெண்களைக் கொடுத்தவர்களுக்கும், மூன்றாவது தாரமும், இறந்த செய்திகேட்டதும் ஏன்? எப்படி? என்று அறிய ஆவலுண்டாயிற்று!

கேட்டார்கள், எப்படி இறந்தாளாம் என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்களை! குளிக்கப்போனாள்—தவறி வீழ்ந்தாள், தண்ணீர்த் தொட்டியில்—வாழ்வு முடிந்தது—இந்தப் பதிலைக் கேட்ட, ஒரு 'மாஜி'மாமனாருடைய உள்ளத்தில் சந்தேகம் எழும்பியது! நமது மகள் இறந்த போதும் இப்படித்தானே கூறப்பட்டது, என்று நினைத்துப் பார்த்தார். அவர்மகள் இறந்தபோதும், இக்காரணம்தான்காட்டப்பட்டது. உண்மையும் கூட அதுதான், அவனுடைய மனைவிமார் எல்லாம், குளிக்கப் போன போதுதான் இறந்தனர்—தவறிவீழ்ந்துஇறந்தனர்!

சந்தேகம் சமர்புரியவே, ஒரு 'மாஜி' மாமனார், 'மாஜி' மாப்பிள்ளை மீது வழக்குத் தொடர்ந்தார்—தன் மகள் இறந்தமைக்கும் அவனுக்கும் 'ஏதோ' காரணம் இருக்கவேண்டுமென்று! அதன் விளைவாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான்.

* * *

தலையில்லாத முண்டம்! கால் கைகள் துண்டிக்கப்பட்டு — கோரமாகக் காட்சியளித்த பிரேத உருவம் ஒன்று ஒருநாள் குப்பைமேட்டில் கிடந்தது இன்னாரெனத் தெரிய முடியாதபடி! போலீஸ் விசாரணையில், வண்ணானுடைய குறி ஒரு கிழிந்த உடையின் மூலையிலிருக்க அடையாளம் கண்டு, அது ஒரு பெண்ணின் பிரேதம் என்று வெளியாயிற்று. பெண் என்று தெரிந்ததேயொழிய, அவள் யார், எங்கிருப்பவள், ஏன் கொல்லப்பட்டாள், கொன்றவர் யார், கொலைக்குக் காரணம் என்ன, என்பதுபற்றிய விபரம் எதுவுமே கிடைக்கவில்லை! போலீசார், குற்றவாளியைக் கண்டுபிடிக்க முயன்றனர், ஆனால் முடியவில்லை!

முடிவில் — ஒரு கசாப்புக்கடைக்காரன்என்றுதெரியவருகிறது.

இந்த விசித்திர வழக்குகள் — பிரிட்டனில் நடந்தவையாகும். கொலை நடந்திருக்கும்— குற்றவாளியும் பிடிபட்டிருப்பான் — வழக்கும் நடைபெறும், ஆனால் தீர்ப்பு, குற்றவாளியை விடுதலை செய் என்பதாகவேயிருக்கும்! இது, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அங்கு நிலவியநிலைமை! பெயர் பெற்ற துப்பறியும் புலிகளான'ஸ்காட்லாந்துயார்ட்' என்ற போலீஸ்படையினர் இருந்தும், அவர்களால், குற்றம் செய்தவன் இன்னார் என்று, கண்டுபிடிக்க முடியுமேயொழிய—வழக்கு மன்றம் கொண்டுவந்து, அவன் எப்படிச் செய்தான் எப்படி நடைபெற்றது அந்தக்கொலை, என்பது குறித்து அவர்களால் அறிய முடிவதில்லை. அதன் காரணமாகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டாலும், தீர்ப்பு கொலைகாரர்களுக்குச்சாதகமாகவே கூறப்படும்! சாட்சிகளும், ஆதாரங்களும்இல்லாதகாரணத்தால் "உண்மை" மறைக்கப்படவேண்டிய நிலை, பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் தவிர்க்கமுடியாததாயிருந்தது! "இவன்தான் செய்தான்" என்று கண்டுபிடிப்பதைவிட, எப்படி நடைபெற்றது' என்று அறிந்துரைத்து வழக்கு நடத்துவதிலே, அவ்வளவு வேதனையும், வியர்வை சிந்தவேண்டிய நிலையும், நீடித்தது! இப்படி நீதிமன்றங்களையும் போலீஸ் புலிகளையும், திகைத்துத் திடுக்கிடச் செய்த, தடுமாறவைத்த வழக்குகளில் சில தான்—நாம் மேலே தந்திருப்பது.

மனைவியைக் கொன்றவன் என்று குற்றஞ்சாட்டினர். கூண்டில் நிற்பவனோ, இல்லை என்று மறுக்கிறான்—மனைவி, மாற்றானோடு ஓடிவிட்டாள் என்று கூறுகிறான்.

மறுக்கவோ, இப்படித்தான் நடந்தது என்று சாட்சியம் காட்டவோ, முடியாது போலீசார் தத்தளிக்கின்றனர்—தவிக்கின்றனர்.

மூன்று மனைவிமார்கள்—வாழ்க்கையில் முழு இன்பம் பெறுமுன்பே அவர்களை இழக்க நேரிடுகிறது. ஊரார் கணவன் மீது பரிதாபப் படுகின்றனர்.

மனைவிகள் மறைவுக்கும், அவர்களை மணந்த மணாளனுக்கும் ஏதோ தொடர்பு இருந்தாக வேண்டுமென்று போலீசாரும், பெண்களைப் பெற்றோரும் கருதுகின்றனர். குற்றம் சாட்டுகின்றனர், கூண்டில் நிறுத்துகின்றனர். ஆனால், எப்படி, ஏன், என்பது விளங்கவில்லை.

அவள் இறந்தது உண்மை, உடல் தலைவேறு கால் வேறாகத் துண்டிக்கப்பட்டதும்உண்மை, அவைகளைச் செய்தவன் ஒரு கசாப்புக் கடைக்காரன் என்பதும் உண்மையென்று தோன்றுகிறது. கொண்டுவந்து, கோர்ட்டார் முன் நிறுத்தப்படுகிறான், குற்றம் அவன்மீது சுமத்தப்படுகிறது, ஆனால் எப்படி அவன் செய்தான், யார் அதைக் கண்டவர்கள்,இவைகளைமெய்ப்பிக்கும் சாட்சியங்கள் கிடையாது.

சங்கடமான நிலைமையல்லவா இது, இப்படிப்பட்ட வழக்குகளைக் கண்டுபிடிக்க வேண்டும்! குற்றம் ருஜுவாகவில்லையென்று வழக்குகள் தோல்வியடைந்து கொண்டே போனால் குற்றவாளிகளின் கும்மாளத் தோட்டமாகவல்லவா, ஆகிவிடும் நாடு! ஆகவே, இது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பெரும் தலைவலியாக இருந்தது இந்த வேதனை நீக்கி, விஞ்ஞானக் கண்கொண்டு, இதுபோன்ற இக்கட்டுகளை நீக்கி, உண்மை காண முடியும் என்று உரைத்தவர் —மெய்ப்பித்து சிக்கலைத் தவிர்த்த சிங்கம் சர் பேர்னார்ட் ஸ்பில்ஸ்பரி என்ற விஞ்ஞானியாவார்.

சங்கடமும் சஞ்சலமும் நிறைந்த இதுபோன்ற வழக்குகளை, போலீஸ் துப்பு மூலம் மட்டுமின்றி, தன்னுடைய வைத்தியத் திறமையைக் கொண்டு, விஞ்ஞான வழியில், குற்றவாளிகளைக் காண முடியும் என்று, பிரிட்டனுக்கு உணர்த்தி, உண்மை விளக்கம் தந்த உத்தமர் இவர். ஸ்பில்ஸ்பரியின்,பெயர்,பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் எங்கும் நிறைந்த ஒன்றாகும்.

1910ல் இலண்டன்மாநகரில் தான், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட டாக்டரின் வழக்கு நடைபெற்றது.

போலீசாரிடமோ, நேரடியான சாட்சியங்கள் கிடையாது, தோண்டியெடுத்த பிணத்திலிருந்து அவர்களுக்கு அறியமுடிந்ததெல்லாம் ஆறு அங்குல நீள அகலமுள்ள, ஒருசிறியஉடம்பின்மேல்தோல்தான் அதைக் கொண்டுதான், அவர்கள். குற்றத்தை நிரூபித்தாகவேண்டும். குற்றம் சாட்டப்பட்ட டாக்டரோ, இறந்தவள் என் மனைவியல்ல, யாரோ எனக்குத் தெரியாது, என் மனைவிதான் முன்பே ஓடிப்போய் விட்டாளே என்று கூறுகிறார். எனவே, இறந்தவர் இவருடைய மனைவிதான் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆறு அங்குலம், சிறு தோலை மட்டும் வைத்துக்கொண்டு இதைச் சாதிப்பது என்பது சாத்யமா!

இந்த நெருக்கடியான நேரத்தில் தான் ஸ்பில்ஸ்பரியின் திறமை போலீசாருக்கும், பொது மன்றத்துக்கும் புரியவந்தது. அவர், போலீஸ் இலாகாவின் அழைப்பின் பேரில், அந்த உண்மையைக்கண்டு பிடித்து வெளியிட்டார்.

இதற்கு அவருக்கு ஒத்தாசையாகயிருந்தது, ஒரு பூதக்கண்ணாடியும் அவருடைய விஞ்ஞான அறிவும்தான்!

இறந்த மாதின், சிதைந்த உடலிலிருந்து கிடைத்த அந்தச் சிறு தோல் துண்டை அவர், சோதனை செய்தார். அதில், சிறு ஆபரேஷன் செய்யப்பட்டதால் ஏற்பட்ட வடு அவருக்குத் தென்பட்டது. அதன் மீது, விசாரணை நடத்தியதில் குற்றம் சுமத்தப்பட்ட டாக்டருடைய மனைவியாருக்குச்சில ஆண்டுகள்முன்னர் சிறு ஆபரேஷன் நடைபெற்ற விபரம் தெரியவந்தது.

ஆபரேஷன் நடைபெற்ற விபரம் தெரியவந்து விட்டால் மட்டும் போதாதே, அதைக்கொண்டு அந்த டாக்டர்மீது குற்றம் சுமத்தினால், "வேறுயாரோ ஒருவருடையதாகயிருக்கலாம்! இதைக்கொண்டு எப்படிக்குற்றம் சுமத்தமுடியும்! அது பெண்ணுடைய தோலதான் என்று எப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள், ஆணுடைய தோலாக இருக்கக் கூடாதா?,' என்ற கேள்வி பிறக்கலாமல்லவா! ஆகவே, ஸ்பில்ஸ்பரி, தனது விஞ்ஞான அறிவின்மூலம், கிடைத்த சிறுதோல் ஒரு பெண்ணுடையதுதான் என்பதை, அத்தோலைப் பரிசிலனைசெய்து, அறிந்து கொண்டு, அதன்பின் அத்தோல் உடலின் எந்தப் பாகத்தைத்தைச் சேர்ந்தது என்பதையும்கண்டார்.

சோதனையின் விளைவாகத், தோல், ஒரு பெண்மணியின் வயிற்றுப் பாகத்தில் இருக்கும் தோலை ஒத்தது என்றும், ஆகவே இது ஒருபெண்மணியின் வயிற்றுத் தோல் என்றும் ஆகவே, கொலையுண்ட பெண்மணிக்கு வயற்றில் ஆபரேஷன்நடத்தப்பட்டிருப்பதால், கொலையுண்ட பிரேதம் அவளுடையதுதான் என்றும், கண்ணுக்கெதிரே, நீதிமன்றத்துக்கு மெய்ப்பித்துக் காட்டினார்!

* * *

குளிக்கச்சென்றாள், வழுக்கி விழுந்து, மூழ்கியிறந்தாள் என்று தன்னுடைய ஒவ்வொரு மனைவி இறந்தபொழுதும், காரணம் கூறி, சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தானல்லவா, மூன்று மனைவிகளையும் பறிகொடுத்த ஒருவன்! 'அவன்தான் என்ன செய்வான், அவன் மனைவி தவறிவிழுந்துவிட்டாள். அவன் அதிர்ஷ்டம் அவ்வளவுதான், என்றல்லவா ஊரார் சொன்னார்கள். ஆனால் ஸ்பில்ஸ்பரி முன்னால் இந்த வழக்கு சோதனைக்கு வந்தபோது, 'அவர்கள் தற்செயலாகச்சாகவில்லை வேண்டுமென்றே சாகடிக்கப்பட்டார்கள். அதைச்செய்தவன் அவர்கள் கணவன்தான்" என்பதையும், வெகு சாமர்த்தியமாக வெளியாக்கினார், தனது விஞ்ஞான அறிவுமூலம்!

நீதிமன்றத்தின்முன், ஒரு தண்ணீர்த்தொட்டி கொண்டுவந்துவைக்கப்பட்டது. ஸ்பில்ஸ்பரி தனது நர்சுகளில் ஒருத்தியை, நீர் நிரம்பிய தொட்டிக்குள் இறங்கச் செய்தார். இறங்கிய நர்ஸ், எப்படி இவ்வளவு சிறிய தொட்டிக்குள், இறக்கமுடியும்? இதுஎன்ன ஓடும்நீரா, அல்லது பாந்தகடலா, இல்லையே, எனவே குளிக்கச்சென்ற பெண்கள் கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார்.

கொலை செய்யப்பட்டாளென்றால் சிறுகாயமிருக்கவேண்டாமோ, விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டாளென்றால் வைத்தியப் பரிசோதனையில் அது விளங்கியிருக்காதோ, அவள் நீரில் மூழ்கியிறந்தாள் என்றுதானே டாக்டர்கள் கூறியுள்ளனர் என்று ஜூரர்கள் கேட்டனர்.

உங்களுடைய கேள்வி நியாயமானதுங்கூட, அவள் நீரில் மூழ்கித்தான் இறந்தாள்' என்றுஸ்பில்ஸ்பரி சொல்லிவிட்டு, நர்சை நீர்த்தொட்டியில் குளிக்கச் சொன்னார். திடீரென்று, அவள் காலிரண்டையும் தூக்கி அவளைத் தலைகீழாய் பிடித்தார்! நீதிமன்றத்துக்குக் காட்டினார், 'பாருங்கள், இவள் இப்போது எவ்வளவு கஷ்டப்படுகிறாள். தண்ணீருக்குள் தத்தளிக்கும் இவளால் எப்படி மூச்சு விடமுடியும்! இப்படித்தான் அவர்கள் வாழ்வும் முடிக்கப்பட்டது' என்று காட்டினார்; நீதிமன்றம் திகைத்தது, ஸ்பில்ஸ்பரியின் திறமையைக்கண்டு. கடைசியில் உண்மை வெளியாயிற்று. தான் மணந்த ஒவ்வொரு பெண்ணுடைய சொத்தும் தன்னுடையதாக வேண்டும் என்ற ஆசைகாரணமாகவே, அவன், அவர்களையெல்லாம் கொலை செய்தான் என்பது!

* * *

மூன்றாவது வழக்கிலும், தலை, கால், கைகள்யாவும் துண்டிக்கப்பட்ட பெண்மணியின் அறையில் இரத்தக்கறைகள் படிந்திருந்தன. இதைக்கண்ட போலீசார், கொலை அங்குதான் நடந்திருக்க வேண்டுமென்றும், ஆனால் கொலையாளி யார் என்றுதெரியவில்லைஎன்றும்ஸ்பில்ஸ்பரியிடம் தெரிவித்தனர். வெட்டுப்பட்ட முண்டத்தைப் பரிசோதித்துக்கொண்டிருந்த, ஸ்பில்ஸ்பரியோ "இந்த அம்மாளுக்கு கசாப்புக் கடைக்காரர்கள் சிநேகிதம் உண்டு போலும்" என்றார். போலீஸ் அதிகாரி சிரித்துக்கொண்டு சென்றுவிட்டார், அவர் கூறியது விளையாட்டாகப்பட்டது அவருக்கு. ஆனால், ஸ்பில்ஸ்பரி சந்தேகப்பட்டதுபோல் கொலையுண்டவருக்கு மிகவும் அறிமுகமான ஒரு கசாப்புக்கடைக்காரரைக்கண்டுபிடித்து அவரைச்சோதிக்கையில் அவரது அறையில் அப்பெண்மணியின் அறையில் கிடந்த இரத்தத் துளிகள்போலவே இரத்தம் சிதறிக்கிடந்தது. பின், விசாரணையின்போது, அவன்தான்கொலைகாரன் என்று தெரியவந்தது.

கொலையுண்டவரின், கால் கைகள் துண்டிக்கப்பட்ட பாகம், அவ்வளவு கச்சிதமாக நறுக்கப்பட்டிருப்பதைக் கண்டதும்தான் ஸ்பில்ஸ்பரிக்கு, கசாப்புக்கடைக்காரன்நினைவுவந்தது. பின் இரண்டு இடத்திலும் கிடைத்த இரத்தத்தைப் பரிசோதித்ததில், இரண்டும் ஒன்றாகயிருக்கவும், மேலும்,இறந்தவளுக்கு அவன்கடன் கொடுக்கவேண்டியிருந்தவிபரம்தெரியவரவும், விஷயம் விளங்கியது, ஒரு பெண் மணியின் உதவியுடன், இக்கொலையைச்செய்தான் என்பது!

• • •

ஒரு சிறுதோல்!

ஒரு நீர்த்தொட்டி!

இரத்தக்கரை!

இவைகளால், கொலைகாரர்கள், கண்டுபிடிக்கப்பட்டனர். அதற்கு ஸ்பில்ஸ்பரியின் விஞ்ஞான அறிவு பயன்பட்டது. வழக்குகளில் விஞ்ஞானம் எவ்வளவுதூரம் உதவிபுரியும் என்று வெளிப்பட்டது.

ஸ்பில்ஸ்பரி—பிரிட்டிஷ்போலீஸ் இலாக்காவில் விஞ்ஞானமுறையைத் தந்த 'தந்தை' என்று போற்றப்பட்டார். அவர், இவ்வளவுதூரம், இது போன்ற வழக்குகளில் சிரத்தையும், ஆர்வமும் காட்டியதற்கு காரணம் "கொலை" — ஒரு கொடுஞ் செயல். அதில் ஈடுபடும் எவரையும் விட்டுவிடக்கூடாது" என்ற வீராவேசமான எண்ணம்தான். அவரது சேவையின் பலனாக எவ்வளவோ சிக்கலான வழக்குகள், சீக்கிரம்முடிவுற்றிருக்கின்றன! தவறு செய்தும், சட்டத்தில் இடமில்லையென்று தப்பித்திரிந்த சதிகாரர்கள் தண்டனை பெற்றிருக்கின்றனர்!

டாக்டர் பட்டம்பெற்று, மருத்துவராகயிருந்து, மாதாமாதம் எவ்வளவோ பணவருவாய் வந்துகொண்டிருந்தும், அவர்விஞ்ஞானம்,வழக்குகளிலும் பயன்படும், என்று மெய்ப்பிப்பதற்காக அவைகளைத் தத்தம் செய்தவர்! வாழ்க்கையைக் கரடுமுரடான பாதையில் திருப்பிக்கொண்டவர்! 'கொலை' என்ற சொல் எங்குமே நிலவக்கூடாது, என்று எண்ணங்கொண்டு உழைத்த உத்தமர்! அவரால் பலகொலைக்காரர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பதுமட்டுமல்ல, குற்றம் செய்யாதவர்களாயிருந்தும் கூண்டில் ஏற்றி நிறுத்தப்பட்டகாரணத்தால் கண்கலங்கிய பலநிரபராதிகளையும் விடுவித்தவர்!

(16-ம் பக்கம் பார்க்க)

கண்ணீரால் தீராது கவலை!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஆட்சியாளர் ஆளவந்தார்களான பின், சுகம்வரும், தொல்லை மறையும், வரிகுறையும் என்று மக்கள் எதிர்பார்த்தனர், வரி குறையவில்லை, ஆனால் வளர்கிறது!

அதே நோத்தில் சர்க்காருடைய செலவையும் சிந்தித்தால் அதுவும் வளர்ந்திருக்கிறது! வரவிலும் அதிகம்—செலவிலும் அதிகம்—ஆனால் ஒரு நன்மையும் நமக்குக் கிடைப்பதில்லை! இது ஏன் என்று எண்ணமாட்டார்களா மக்கள்! அப்படி எண்ணியதன் விளைவுதான் இன்று எங்கு சென்றாலும் இதை ஏன் செய்யவில்லை, அதை ஏன் செய்துதரக்கூடாது, என்று மக்கள் மன்றம் மகஜர் மூலம் கேட்கிறது!

	வருமானம்
1938—39	16,13
1947—48	50,71
1948—49	57,04
1949—50	55,75

(வருமானம் இலட்சக் கணக்கில்)

மாகாண சர்க்காரின் வரவு எவ்வளவு உயர்ந்திருக்கிறது, இருந்தும் நன்மையெதுவும் ஏற்படவில்லை, நலமான காரியம் ஒன்றும் இவர்களால் நடைபெறவில்லை என்பதை எண்ணும்போது, ஆளவந்தார்கள் மீது அன்பா, வரும்? ஆத்திரம் தானே எழும்பும்!

* •

மக்களின் வாழ்க்கையிலே, சுதந்திரம்வந்தால், மணம்வீசும், மகிழ்ச்சி பொங்கும்—என்று கூறப்பட்டது! எனவே, அப்படி நடைபெறுமாமே என்று எதிர் பார்த்தார்கள்! ஆனால், வாழ்க்கைவளமாகவில்லை, பாலையாக ஆகிறது என்றால் அவர்கள் ஆத்திரப்படாமலோ, ஆபாசத்துடன் பேசாமலோ இருக்க மரக்கட்டையா, மனிதர்கள்தானே!

வாழ்க்கைத்தரம் வரவர மோசமாகிக்கொண்டிருக்கிறது. வாழ்வதற்குத் தேவையான பொருள்களோ கிடைக்க முடிவதில்லை. கிடைத்தாலும், அவைகளின் விலைகளோ,விஷம்போல இருக்கின்றன—நினைத்தாலே நெஞ்சு வேகும் நிலை பிறக்கிறது!

மக்களின்வாழ்க்கைத்தரச்செலவு, எப்படி வளர்ந்திருக்கிறது என்று பாருங்கள்.

1939	100
1847	277
1948	315
1949	330

ஒன்றுக்கு மூன்று மடங்கு ஆகியிருக்கிறது. வாழ்வதற்கான செலவு வளர்ந்திருக்கிறது—விஷ விருட்சம் போல. வளர்ந்துகொண்டேயிருக்கிறது!

இதையா, எதிர்பார்த்தான் ஏழை விவசாயியும் உழைக்கும் தொழிலாளியும், இவர்கள் ராஜ்யத்தில்! எனவேதான், அதிருப்தியும் அருவையும் தாண்டவமாடுகிறது—மந்திரிகளைக் கண்டதுமே மனங்குமுறுகிறார்கள்! மக்கள் என்ன மந்திரிமார்களா—இல்லையே, சாதாரண மக்கள்தானே!

* * •

கோபாலர்மீது, அவரது ஓலத்தைக் காணும்பொழுது, உண்மையில் அனுதாபமே நமக்கு ஏற்படுகிறது! அடிக்கடி நாம், இவர்கள் ஆட்சிப்பீடம் ஏறியபின் நிதிநிலைமை மோசமாகியிருப்பதையும் — அது விழலுக்கிறைத்த நீராக வீணாக்கப்படுவதையும் சுட்டிக்காட்டிக்கொண்டு வருகிறோம். நாட்டின் நாடியான, நிதி, நல்லவழிகளில் செலவாவதற்குப் பதில், ஆடம்பரம், அதிக ராணுவம், போலீஸ்பாதுகாப்பு ஆகியவைகளின் போரால் செலவழிந்து சீரழிவதைப் பாரீர், இதைத்தடுத்து ஒரு வழிசெய்யக்கூடாதா கேளீர், என்றுகூறி! மக்கள் வாழ்க்கைக்கான செலவு வளர்ந்துகொண்டே போகிறது — எங்கும் அழுகைமயம், அல்லல் மழை!

இதைக் கவனித்து, அதைப் போக்கும் வழிகளைக்கண்டு, மக்கள் வாழ்விலே மலர்ச்சியைக் காண வேண்டும்!

மந்திரிநாற்காலி சாஸ்வதமானதல்ல—நாளைக்கு, இன்று அங்கிருப்பவர்களும் மக்கள் சமுத்திரத்தில் ஒருசிறுதுளியாக ஆகவேண்டியவர்கள்தான்—இதை நினைத்துப்பார்க்க வேண்டும், மமதை, மந்திரி என்ற பெருமை, மதோன்மத்த நிலை ஆகியவைகளை மறந்து! நாட்டுமக்களிடமிருந்து வரிகள் வாங்குகிறோம்—அதுவும் அதிகமான அளவில் வாங்குகிறோம், அதற்கான நன்மைகளைச் செய்வோம் என்று திட்டங்களைத் தீட்டி, அவை காகிதத்திட்டங்களாக இல்லாமல் காரியமாற்றும் வகையில் தீட்டி, நல்லன செய்யவேண்டும்!

அப்போதுதான், கண்ணீர் சிந்தும் நிலைவாராது—அதுவரை மக்கள் மன்றத்திலே அழுகுரலும் வேதனை ஆத்திரமும் நீடிக்கத்தான் செய்யும்!

மக்கள், மந்திரிமார்களை நோக்கி தங்கள் குறைகளைத்தெரிவிப்பதைக் கண்டு, கண்ணீர் சிந்திப் பயனில்லை. கவலை, கண்ணீரால் தீராது! மக்களுக்கு நன்மைகளைச் செய்துதரும் வகையில் தங்களை, ஆட்சிமுறையை மாற்றியமைத்துக் கொண்டால்தான் தீரும்!

*

தி. மு. கழக நிதிக்கு
நாடகங்கள்.

தூத்துக்குடியில்
24—12—49-ல்
சந்திர மோகன்

25—12—49-ல்
நீதிதேவன் மயக்கம்

விருதுநகரில்
26—12—49-ல் & 27—12—49ல்
சந்திர மோகன்

கே. ஆர். இராமசாமி
அண்ணாதுரை
அவரது குழுவினர் நடிக்கின்றனர்.

கும்பமேளா

30,000 டன் உணவுப் பொருள்களைச் சேமித்து இருப்பில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

இந்த ஏற்பாட்டுக்கெனப் பதினைந்து லட்சம் ரூபாய்களை ஒதுக்கிவைத்து, கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மக்களின், நலன்களை உத்தேசித்தே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவாம் — ஐக்கிய மாகாண சர்க்காரின் செய்தியொன்று கூறுகிறது.

உணவுப் பொருளைச் சேமித்து வைப்பதற்கென்று 15 லட்சம் ரூபாய்களை ஒதுக்கிவைத்தது மட்டுமின்றி, எட்டு லட்சம் ரூபாய்களை செலவிடுமாறும் உத்தரவிட்டிருக்கிறது. இந்த எட்டு இலட்சம், எதற்குத் தெரியுமா, சுகாதார ஏற்பாடுகளுக்கென்று!

தேவலாமே, நிதிநிலை சரியாயில்லை, உணவுப் பொருள் போதவில்லை என்று எப்போதும் ஓலம் எழுப்பிக் கொண்டிருக்கும், இந்தியாவில், இப்படி மக்கள் நலன்களைக் கருதி நன்மைகளைச் செய்யும் ஒரு மாகாணங்கூட இருக்கிறதா! என்று ஆச்சரியமும் ஐயமும் எழும்பும், அந்த மட்டும் எப்படி இது முடிந்தது என்று தோன்றும்! மக்கள் நிலையுணர்ந்த மந்திரிமார்கள் போலும், எனவேதான், அதிக உணவுப் பொருள் இருக்கின்ற காரணத்தால், சேமித்து வைத்தும் அதற்கெனப் பணம் ஒதுக்கியும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது போலும் என்ற எண்ணம் எழும்பலாம்!

அதிகமாக உணவுப் பொருள் மிஞ்சிவிட்டது என்பதற்காக அல்ல, இந்தச் சேமிப்பு! நிதிநிலைமை சுமுகமாகஇருக்கிறது, எனவே செலவழிப்போம் எட்டுலட்சத்தைச் சுகாதாரத்துக்கு என்பதல்லக் காரணம், ஐக்கிய மாகாணத்துச் சர்க்காரின் இந்த நடவடிக்கைகள்.

கும்பமேளா—உற்சவம் பிப்ரவரி மாதம் 15ந் தேதியிலிருந்து மே 3-ந்தே முடிய நடைபெறப் போகிறதாம்! அதற்குத்தான் இந்த ஏற்பாடுகள்!!

30,000 டன் உணவுப் பொருள் 15 லட்சம் மக்களின் பசியைப் போக்கக்கூடியதாகும். இவ்வளவு உணவுப் பொருளைச் சேர்த்து வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்கள், இதற்கென 15 லட்சம் ரூபாய் பணத்தை ஒதுக்கிவைத்து, புதுத் தானிய விற்பனைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டு, சர்க்காராலேயே நடத்தப் பெறுமாம்!

அரித்துவாரத்துக்கு, 50க்கு மேற்பட்ட விசேஷ ரயில்கள் விடப்படுமாம்! அதோடு கங்கையின் கரைகள் எல்லாம், கும்பமேளா நடைபெறும் இடத்திற்கு போகும் பாதைகள், ரோடுகள் எல்லாம் சீர்திருத்திச் செப்பனிடப்படுமாம்! இந்தத் திருப்பணியைக் கவனிக்கும் பொறுப்பை மராமத்திலாகா மேற்கொள்ளுமாறு, சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

கும்ப மேளாவுக்கு வரும் யாத்ரீகர்கள், தங்க இடவசதி வேண்டுமல்லவா! அதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? அவைகளையும் கவனிக்குமாறு, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது! ஒரு உற்சவத்துக்கு—ஒரு சர்க்கார் — இவ்வளவு சிரத்தையும் பொறுப்பும் காட்டி ஏற்பாடுகளைச் செய்கிறது, மக்களின் பணத்தைக்கொண்டு, அவர்கள் இல்லையே, கிடைக்குமா என்று ஏங்கித் தவிக்கும் உணவுப் பொருள்களைக் கொண்டு!

கும்பமேளா — என்பது, இங்கு குடந்தையில நடைபெறுகிறதல்லவா மகாமகம்! அதைப் போன்ற ஒரு வீண்விழாவாகும். அதற்குத்தான, இத்தனை ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன— ஒரு அரசாங்கத்தின் மேற்பார்வையில்—செலவில்!

கும்பமேளாவுக்கு — இவ்வளவ நேரத்தையும் நிதியையும் உணவுப் பொருளையும் கொட்டுவதில் ஆர்வத்தையும் ஆவலையும் காட்டுகிறது ஒரு அரசாங்கம், அது ஆச்சரியமில்லை தான், இந்த 'இராம ராஜ்யத்தில்!'

* * *

கும்பமேளா —கொண்டாடுவதற்கு ஆட்சியாளர் இவ்வளவு சிரத்தை காட்டுகிறார்கள்! பூலோகத்தில் மக்கள் கஷ்டப்படுகிறார்களே, 'புண்யத்தைச் சப்பாதித்துக் கொண்டு, சுவர்க்கலோகத்திலாவது சுகம் பெறட்டும் என்ற கருணையால் போலும்!

இந்தக்கும்பமேளா—ஒரு குருட்டு நம்பிக்கையும், மனதிலும் எண்ண முடியாத வீண் செலவை விழுங்கும் தன்மையும் கொண்ட ஒரு வீண் விழாவாகும்.

காஷாயம் அணிந்தோர், சந்நியாசிகள், உலகத்தை வெறுத்தோர், ஆகியோரைப் பூஜித்தால், பலன் கிடைக்கும், புண்யம் ஏற்படும் என்ற மூட நம்பிக்கையின் விளைவுகளில் ஒன்று— இந்த வீண் விழா! கும்பமேளா— கண்டுவந்தவர்களைக் கேட்டால் கிடைக்கும் விபரங்கள் வேடிக்கையாகமட்டுமல்ல, விசித்திரம் வேதனை ஆகியவைகள் கலந்ததாயிருக்கிறது!

லட்டு, மிட்டாய், உணவு எல்லாவற்றையும் 'புண்யம்' சம்பாதிக்கும் கோடீஸ்வரர்கள் குவித்துவைத்து, மேளாநடக்கும் நாட்களில் தானம் செய்வார்களாம்—சந்நியாசிகளுக்கு! இந்த மேளா நாட்களில், கொலை செய்து காஷாயம் உடுத்தவன், குடும்பம்வெறுத்துத் தாடிவளர்த்து சந்நியாசியானவன், வாழ தெரியாது சாமியாரானவன் என்ற பலரகச் சாமியார்கள் எல்லாம் வந்து குவிந்து கிடப்பார்களாம். அவர்களில் அரை நிர்வாணச் சாமிகள், முழு நிர்வாணச் சாமிகள், உடையுடுக்காதவர்கள் உணர்ச்சியைச் சாகடிக்க 'ஆண்குறிகளை' இரும்பு வளையங்களால் கட்டிய 'மகாமுனிவர்கள்' எல்லாம்கூடியிருப்பார்களாம் —பல்லாயிரக் கணக்கில். இவர்களைப் பூஜித்து, தானம் வழங்கி, போற்றிச் செல்வதுதான் இந்த விழாவின் 'மகிமை'யாம்! இந்த விழா—பன்னிரண்டு ஆண்டுகளுக்கு

ஒரு முறை நடைபெறுவதுண்டு, வட இந்தியாவில் கங்கை ஓடும் இடங்களில். அதில் முக்கியமானதெனக் கருதப்படுவது ஹரித்துவாரத்தில் நடைபெறும் இந்த மேளா விழா.

இந்த விழாவுக்கு ஏராளமான 'பக்தர்'கள் வந்துகூடி, சந்நியாசிகளையும் சாதுக்களையும் தரிசித்து, காணிக்கை செலுத்திவிட்டு, கங்கையில் "ஸ்நானம்" செய்து விட்டுத் திரும்புவார்களாம். இப்படிச் செய்தால், புண்யமும் போக போக்கியமும் ஏற்படும் என்ற மூடநம்பிக்கையால், பொதுமக்களில், பணக்காரர்களுடைய பணம் ஆயிரக்கணக்கிலும், சிற்றரசர்கள் சமஸ்தானாதிபதிகளின் செல்வம் இலட்சக்கணக்கிலும், ஏழைமக்களின் வியர்வைசிந்தி உழைத்துச் சேமித்த பணம்காசுக் கணக்கிலும், இவ்விழாவின் போது—சந்நியாசிகளுக்கும் 'சகலமும்' துறந்த முனிபுங்கவர்களுக்கும் சமர்ப்பிக்கப்படுவதுண்டாம்.

வேடிக்கையல்ல, மேளாவுக்குச் சென்றுவந்த முன்னாள் சாமியார், இந்நாள் 'அடிகளார் ஒருவர்' தருகின்ற தகவல்கள் இவை! இவ்வளவு கோலாகலமும், அரித்துவாரம், பிரயாகை போன்ற இடங்களில் நடைபெறுகின்றன – கும்பமேளாவின்போது. இந்த விழாவின் விளைவாகச் சீரழியும் செல்வமும், வளரும் வியாதியும், ஏற்படும் தொல்லையும் இவ்வளவு என்று சொல்ல முடியாதாம்!

* * *

சாமியாரைத் தரிசித்து, கங்கையில் மூழ்கினால், புண்யம் கிடைக்கும், பாவம் தொலையும், புத்திர சந்தானம் ஏற்படும், போக போக்கியங்கள் கிடைக்கும் என்ற மூடநம்பிக்கையின் விளைவாக நடைபெறும் இந்த விழாவைச் சிறப்புற நடத்தி வைக்கும் சேவையிலிறங்கி யிருக்கிறது–ஐக்கிய மாகாண அரசாங்கம்.

பக்தகோடிகள் பாவத்தைத் தொலைக்க இவ்வளவு வழியையும் வசதியையும் செய்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்கிறார்களே, இவர்கள், பிறப்பித்திருக்கும் இன்னொரு உத்தரவைக் கேட்டால் வேடிக்கையாகஇருக்கும்!

'பதினாறும் பெற்றுச் சுகவாழ்வு வாழவேண்டும்! என்று, புண்யம் சம்பாதித்து இறைவனடி சேர எகும் யாத்ரீகர்கள், ஊருக்குள் நுழையும் போது, ஒவ்வொருவரும் ஊசிபோட்டுக்கொள்ள வேண்டுமாம்—காலரா ஏற்பட்டு, அது பரவாமல் இருக்க வேண்டுமென்பதற்காக. இதற்கும் இதுபோன்ற இன்ன பிற நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காகவுந் தான், ஐ. மா. சர்க்கார் எட்டு லட்ச ரூபாய்களை ஒதுக்கியுள்ளனர்!

கடவுள் காப்பாற்றுவார், என்ற நம்பிக்கையின் பேரில் அவர் அருள் பெற்று 'புண்யம்' தேடப்போகும், பக்தகோடிகளுக்கு அதை நம்பி வசதிகள் செய்து தரும் அரசாங்கம், 'ஊசி' போட்டுக்கொள்ளுங்கள், இல்லாவிடில் உயிரைக் கொல்லும் வியாதிபரவிவிடும்' என்று உத்தரவிடுகிறது, ஊர்ப்பணத்தை அதற்காக ஒதுக்குகிறது!

இவ்வளவு சிரத்தையுடன் மத நம்பிக்கையையும், அதன் பேரில் ஏற்பட்ட கும்பமேளாவையும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகிறதே — சென்ற அர்த்தமேளா நடைபெற்றபொழுது அங்கு என்ன நடைபெற்றிருக்கிறது தெரியுமா!

கங்கையைப் பூஜிக்க வந்தவர்களை, 'அக்கினி பகவான்' பூஜித்திருக்கிறார்—மாபெரும் தீ விபத்து ஏற்பட்டு அங்கு போடப்பட்டிருந்த சிற்றுப்பந்தல்கள்யாவும்,கருகிச்சாம்பல் ஆயிற்று. வந்த 'பக்த சிகாமணிகள்' தீயில் சிக்கி, திகைத்து ஓடவழி தெரியாது திண்டாடி அவதிக்குள்ளாகினர்! ஆண்டவனுக்குத் திருப்தி செய்யச் சென்ற அடியவர்களாலோ, அல்லது அவர்கள் பூஜித்துக் காணிக்கைச் செலுத்திய அடியார்களாலோ—அத் தீயை அணைக்க முடியவில்லையாம்! பாவம், பாபாத்மாக்களைப் பரலோகத்துக்கு அனுப்ப மட்டும் 'சக்தி'யிருக்கிறதே யொழிய, சுட்டெரிக்கும் நெருப்பையும், சூழ்ந்துவரும் வியாதியையும் தடுக்க 'அருள்' இல்லைப் போலும்! அதற்கு மட்டும் 'அதிகாரிகள்' தயவுவேண்டியிருந்திருக்கிறது!

* * *

காலத்தையும், மக்கள் மதியையும், அவர்கள் பணத்தையும் வீணாக்கும் இந்த மூழுக்கு விழா, மூடநம்பிக்கையின் விளைவாகக் கொண்டாடப்படுகிறது. இதனால் ஏற்படும் சேதமும், செலவும், சிக்கலும், திண்டாட்டமும் தெரிந்திருந்தும் சர்க்கார் இவைகளுக்கு ஆதரவு தருகிறது! லட்சக்கணக்கில் பணத்தையும், டன் கணக்கில் உணவுப் பொருளையும், உருக்குலைக்கிறது — பரிதவிக்கும் மக்களுக்குப் பயன்படாமல் 'பக்தி மார்க்கம்' என்றெண்ணிப் பாழாக்குகிறது!

12-ம் பக்கத்தொடர்ச்சி

எண்ணம் தோன்றியதன் விளைவாகவோ என்னவோ இக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் இந்தியப் பிரதமரை நோக்கி, சட்டசபையில்!

அதற்குப் பண்டிதர் தந்த பதில் என்ன தெரியுமா, "சுற்றுப் பிரயாணம் செய்தால் என்ன? இன்னும் அதிக இடங்களில்சுற்றுப்பிரயாணம் செய்யுமாறு உத்தரவிடப் போகிறேன்" என்பது! எப்படியிருக்கிறது, பவனி அவசியமா என்று கேட்கிறார், உறுப்பினர்—பதிலோ அதிக ஊர் சுற்றுமாறு ஆக்ஞை பிறப்பிக்கப் போகிறேன் என்பது!

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அதிக தொடர்பும் நேசமும் ஏற்பட அப்படி, ஒவ்வொரு இடத்துக்கும் "விஜயம்" செய்வது அவசியமாம்— கூறுகிறார், இப்போது தான் அமெரிக்கா சென்று அமோக ஆதரவும் நேசமும் பெற்றுவந்ததாகக் கூறப்படும் நேரு!

சகோதரியார் என்பதால் சலுகையா — என்ற நோக்கத்தில் கூடக் கேள்வி கேட்கப்பட்டிருக்கலாம். அதற்கு ஒரு உபகண்டத்துப் பிரதமர் இப்படியா பதிலளிப்பது— அதுவும், இதுவரை செலவழிந்தது பிரமாதமல்ல, இன்னும் செலவழியும் வகையில் சுற்றுப்பிரயாணம் செய்யுமாறு சொல்லப்போகிறேன், நீ யார் கேட்க என்ற தோரணையில!

மக்கள் வாழ்வை வளமாக்கும் கல்வித்துறைக்குச் செலவிடும்பணம் குறைக்கப்படுகிறது பண நெருக்கடி என்ற காரணத்தின் மீது அதே வேளையில், அவசியமில்லாத ஆடம்பர ஆர்ப்பரிப்புக்காக ஓரிடத்தில் பணம் அனுமதிக்கப்படுகிறது!

இந்த வேடிக்கையை என்னென்று வர்ணிப்பது!

ஆளவந்தாரின் 'சொந்தக்காரர்கள்' சுகபோகம் அனுபவிக்கும் 'சுகராஜ்யம்' என்றா? அல்லது சுயராஜ்யம்' என்றா!

திராவிட நாடு

ஞாயிறு 18—12—49 [காஞ்சி

விந்தையல்ல வேதனை

நேரு சர்க்கார் ஒழிக!
காந்திக் குல்லாய்கள் தீக்கிரை!
தலைவர்கள் படங்கள், தகனம்!
கோடும்பாவி கட்டி இழுத்தனர்!
சுற்றிவந்து மாரடித்தனர்!

* * *

போலீஸ் படைகள் பாதுகாப்பு!
சட்ட மந்திரி வீட்டில் பந்தோபஸ்து!
கண்ணீர் வாயுப் பிரயோகம்!
தடியடி நடத்தவும் நேர்ந்தது!

* * *

பெண்மணிகளும் ஆரவாரித்தனர்!
சாவு வீடுபோல் மாரடித்து அழுதனர்!
சில கடைகளில் கூட 'ஹர்த்தால்'!

* * *

எங்கேயாவது தொழிலாளர் வேலை நிறுத்தமோ, கூலி போதவில்லை, கும்பி கழுவ வழியில்லை என்று அவர்கள் குமுறி எழுந்ததன் விளைவோ! அல்லது ஆட்சியாளரின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து எக்கட்சியினரோ, நடத்திய, சட்டமறுப்பு அமளியோ! நாங்கள் உழைக்கிறோம்—யாரோ உண்டு கொழுக்கிறான், இதைச்சகிக்க முடியாது, சமநீதி வேண்டும் என்று பாட்டாளி உலகம் நடத்திய போராட்டமோ! புகையும் எரிமலை போல் பொதுமக்கள்தான் இந்தச் சர்க்கார் எவ்வளவு வரி வாங்கியும் எங்களுக்கு நன்மை செய்யவில்லை, வாழ்வைச் சிதைத்துச் சித்திரவதையாக்குகிறது, என்றுவெகுண்டெழுந்ததன் விளைவோ! என்று கேட்கத்தோன்றலாம்-இல்லை! 'சாமான்யமான—மாயலோக பந்தம்' கொண்ட காரியங்களல்லவா அவை! அவைகளுக்காக நடைபெற்றது அல்ல, இந்த அமளி, அட்டகாசம், அல்லோலம் அத்தனையும்!

மதத்தைக் காப்பாற்ற!
இந்து மதத்தைக் காப்பாற்ற!

நடைபெற்ற 'புரட்சி'தான், போர்க்கோலம் தான் நாம் மேலே சித்தரித்திருப்பது! கொடும்பாவி கட்டியிழுத்தனராம், குழந்தைகளோடு பெண்மணிகள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனராம், காந்தி குல்லாய்களும், காங்கிரஸ் தலைவர் படமும் கொளுத்தப்பட்டனவாம்! அந்த நெருப்பைச் சுற்றிவந்து, அழைத்து வரப்பட்ட பெண்கள், மாரடித்து அழுதனராம், செத்த வீடெனக் கதறினராம்!

இது ஒரு புறத்தில் நடக்க, இன்னொரு பக்கத்தில், சத்யாக்கிரகம் நடைபெற்றதாம் — சனாதனிகளால், வைதிக புரியினரால்,

மதத்தின் பக்கம் நெருங்காதே!
இந்து மதத்தைத் திருத்தாதே!

என்ற முழக்கங்களுடன்! சம்பவம், இந்த வாரம் டெல்லிமா நகரில், இந்தியச் சட்ட சபைக்கு முன் நடந்திருக்கிறது! 500 பேருக்கு மேல் அழைத்துவரப்பட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாம், உறுப்பினர்களைச் சட்ட சபைக்குள் போகவிடாமல் தடுத்தனராம்! போலீஸ் இல்லையென்றால் அன்று நிலைமை மோசமாகி இருக்குமாம்! அவ்வளவு ஆத்திரத்துடன், ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது, சனாதனச் சூரர்களால், இந்து மதவாதிகளால், இந்து சட்டத் தொகுப்பு மசோதா கூடாது என்று கோரி!

இந்திய சட்ட சபையில், இந்து மதச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்து, ஒரு மசோதா நிறைவேற்றப் படும் தருவாயிலிருக்கிறது. அம் மசோதா, முதல் முறை படிக்கப்பட்டு, சபையாரால் ஏற்கப்பட்டு இப்போது இரண்டாம் முறை படிக்கப் பட்டுச் சட்டமாகும் தருவாயில் இருக்கிறது.

இந்த மசோதாவை எதிர்த்துத்தான், ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள் 'நேரு சர்க்கார் ஒழிக!' என்ற முழக்கத்துடன்! பெண்மணிகளை அழைத்து வந்து மாரடிக்கச் சொல்லியிருக்கிறார்கள், மகா மோசமான செயல்களில் இறங்கியிருக்கிறார்கள்—சனாதனிகள், வைதிக வம்பர்கள்!

இந்து மதச் சட்டத் தொகுப்பு மசோதா, இவர்கள் செய்கிறார்களே, அந்த அளவுக்கு எந்தவிதமான பெரிய புரட்சிகரமான காரியமல்ல. இந்த மசோதா சட்டமாவதால், இந்து மதம் என்கிற விஷ விருட்சம், ஒன்றும் விழுந்துவிடப் போவதில்லை—இருந்தும் "இவர்கள்" இவ்வளவு அமர்க்களப்படுத்தி இருக்கிறார்கள்.

மேற்படி மசோதா சட்டசபையில் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்காரால் பிரேரேபிக்கப்பட்டநாள் முதல், டெல்லியிலே நடைபெற்ற ஆர்ப்பாட்டதினம் வரை, அம்மசோதா மீது சீறிவிழாத வைதிகர்கள் இல்லை-கண்டிக்காத மத பக்தர்கள் கிடையாது. சங்கராச்சாரியின் கண்டனமும், சனாதனிகளின் கோபம், 'சாஸ்திரம் போச்சே, போச்சே!' என்று ஓலமிடும் வக்கிரபுத்தியினரின் உரத்த கூச்சல் அத்தனையும் எழும்பிக்கொண்டுதான் இருக்கிறது! அவர்கள், இதுவரை, ஈடுபட்டு நடத்தியிருக்கும் ஆர்ப்பரிப்பு, அட்டகாசம், ஓமம் வளர்த்து கூடிநின்று 'மாநாடு' கூட்டி நிறைவேற்றிய தீர்மானம் ஆகியவைகளைச் சிந்தித்தால், எவருக்கும், இந்துமதத்திற்கே ஆபத்து வந்துவிட்டது போலும், அதுதான் இப்படி இவர்கள் அலறித் துடிக்கின்றனர் என்று நினைக்கத் தோன்றும்—அந்த அளவுக்கு இத்திருத்த மசோதாவை எதிர்க்கின்றனர், சங்கராச்சாரி முதல் சாதாரண சாம்பிராணிக் குருக்கள்வரை இம்மசோதா மீது, பாய்ந்திருக்கின்றனர்.

அதுமட்டுமல்ல, சட்ட சபையில் கூடக் காங்கிரஸ் உறுப்பினர்களிடமிருந்து இம் மசோதாவுக்குக் கிளம்பியிருக்கும் எதிர்ப்பும், எக்காளமும் கொஞ்ச நஞ்சமல்ல! இதுவரை, கொட்டாவி விடுவதற்கன்றி, ஒருபோதும் வாய் திறந்தும் அறியாத 'நிபுணர்கள்' கூடப் பேசியிருக்கின்றனர்—இப்படிச் செய்யலாமா,

சர்க்கார் மத விவகாரங்களில் தலையிடலாமா என்று! சாதாரண 'சாமான்யர்கள்' என்று மட்டுமல்ல, இந்திய உபகண்டத்தை ஆட்டிவைக்கும் ஸ்தாபனமாகிய காங்கிரசின் தலைவராகிய டாக்டர் பட்டாபி—நாடறிந்த நல்லவர்-என்று போற்றப்படுபவர் கூட இம்மசோதாவை இப்போது நிறைவேற்றுதல் கூடாது என்று கூறியுள்ளார்! இந்தியாவின் புது அரசியலைத் தயாரித்த அ. நி. சபையின் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத்—உத்தமர், உலகறிந்தவர் எனப்படுபவரான அவரும் – இம் மசோதாவை மக்கள் சம்மதத்துக்கு விடவேண்டுமென்று கூறியிருக்கிறார்!

அதுமட்டுமல்ல, "இம் மசோதா நிறைவேறவில்லையென்றால் நானும் எனது சர்க்காரும் ராஜிநாமா செய்வோம். இதுஉறுதி!" என்றுஇந்தியப் பிரதமர், காங்கிரஸ் ஜோதி, பண்டித ஜவஹர் கூட எச்சரிக்கை, செய்யுமளவுக்கு வளர்ந்திருக்கிறது—இம் மசோதாவுக்கு, சனாதனிகளும், வைதிகர்களும், அவர் சொல் கேட்டு ஆடும் சட்டசபை உறுப்பினர்களும் எழுப்பும் ஆரவாரமும் கூச்சலும்!

இவரை விட்டால்வேறு யாருண்டு தலைமை தாங்க, என்று போற்றப்படும் நேருவே எச்சரிக்கை செய்ய வேண்டிய அளவுக்கு, ஒரு மசோதா இருக்கிறதென்றால், அது ஏதோ ஒரு பெருத்தமாற்றம் செய்யக் கூடியதாகத்தானே இருக்கவேண்டும், இல்லாவிட்டால் இப்படியெல்லாம் ஏற்படுமா என்றஎண்ணம் எவருக்கும் எழும்பத்தான் செய்யும்!

பலதார மணம் கூடாது.
ஏகதார மணமே செல்லுபடியாகும்.
திருமண ரத்துரிமை உண்டு.
பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு.

இதுதான், இவ்வளவு எதிர்ப்புக்கும் அமளிக்கும் உள்ளாகியிருக்கிறதே இந்த மசோதா, அதிலுள்ள முக்கிய அம்சங்கள்! இதற்குத்தான் இவ்வளவு அட்டகாசமும், ஆர்ப்பாட்டமும் நடைபெறுகிறது! மதத்தின் தலையில் கைவைத்து விட்டார்கள், மத விவகாரங்களில் தலையிட்டு விட்டார்கள், எல்லாம் போய்விட்டது, மதம் மாய்க்கப்படுகிறது என்று உயர்ந்த தலைவர் முதல் உட்கார்ந்த இடம் பெயராத ஊர்க்கோடி சாஸ்திரிகள் வரை எதிர்க்கிறார்கள்!

இந்த மசோதாவில் கொண்டு வரப்பட்டிருக்கும் அம்சங்கள் மறுக்கவோ, ஏற்க முடியாதென்றோ, இன்னல் விளைவிக்குமென்றோ கூற முடியாது! அத்தனையும் அவசியமானதுதான் — வளர்ந்துகொண்டு வரும் உலகுக்கு! இருந்தும் எதிர்க்கிறார்கள் — எத்தனையோ முறை இந்தச் சீர்திருத்தங்கள் இந்து மதத்தின் பெருமைக்குத்தான், இடிந்துகொண்டிருக்கும் இந்துமதம் என்ற மண்டபத்தை நிமிர்த்த உதவும் தூண்கள் தான், என்றெல்லாம் மசோதாவைக் கொண்டு வந்தவர்கள் பன்முறை எடுத்துச் சொல்லியும்!

இருந்தும் எதிர்க்கிறார்கள்—யார்? பொதுமக்களல்ல ! — சிலர்! யார், அந்தச் சிலர்? ஏன், அவர்கள் எதிர்க்கவேண்டும்! இந்தக் கேள்விகளில் கிடைக்கும் விடையிருக்கிறதே, அதில்தான் சூட்சமம் இருக்கிறது.

* * *

பழைமை, வைதிகம் இரண்டும் இங்குள்ள பலரின் வாழ்க்கையை வளமாக்கும் வயல்களாகி விட்டன. இவைகளின் தாய், பாதுகாக்கும் கோட்டையாக யிருப்பது மதம்—இந்து மதம். எனவே இந்து மதம் தங்களுடைய பரம்பரைச் சொந்தச் சொத்து — சுரண்டல் வலை என்று எண்ணிக்கொண்டு இங்குள்ள சனாதனமும் வைதிகமும் மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றுள்ள இந்தியச் சட்டமோ, மக்களின் பாதையை வகுத்துக் காட்டும் சட்டமோ, இந்து மதக் காவலர்களான மனு, யாக்ஞவல்யர் ஆகியோர் அன்று செய்து வைத்துவிட்டுப் போனதாகும். அவர்கள் அக்காலத்தில், தங்களுக்குத் தெரிந்ததைச் சட்டதிட்டம் எனச் செய்துவைத்தார்கள்—பின் ஆங்கிலேயர் வந்ததும், அவைகளில் சிற்சில மாறுதல்களை மட்டும்செய்து, அந்தப் பழைய நூல்களில் கூறப்பட்ட விதிகளை, இந்நாட்டு மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டம் என்று வைக்கப்பட்டது—இன்னும் இருக்கிறது – இன்றைய அரசாங்கம் இருக்கும் வரை அதே சட்டங்கள் நீடிக்கத்தான் போகின்றன!

மனுஸ்மிருதியும் புராதன இந்து மதச் சட்ட திட்டங்களும் "சிலர்" வாழ்வு எப்போதும் மலர்ந்து மணம் வீசும் வகையிலேயே சிருஷ்டிக்கப்பட்டதாகும். இந்து மதம்—என் பதை மீறிச் செல்ல முடியாதவகையில், போடப்பட்ட வேலிகள்தான் இந்தச் சட்டதிட்டங்கள். ஆகவே, நாட்டுக்குநல்லது, அவசியம்தேவைப்படுவது என்று எண்ணி மதத்தைப் பாதிக்கவும் நினையாத அளவில் அந்தச் சட்டதிட்டங்களில், சில மாறுதல்களைச் செய்ய எண்ணியதும், சீறிடும் புலிகளாக ஆகியிருக்கின்றனர் – பழைமையின் காவலர்களும், வைதிகபுரி வாழ்வினரும் தங்கள் சுகபோகம் பறிக்கப்படுமோ வென்ற பயத்தால்!

அவர்களுக்கு அச்சம் ஊட்டும் வகையுள்ளதா இந்த மசோதா, அடாது செய்வதா, வாழ்வைச் சூறையாடுவதா என்றால், 'இம்மி' கூட இந்த மசோதாவால் அவர்கள் சுகபோகச் சுரண்டலுக்கு இடைஞ்சல் எதுவும் ஏற்படாது – ஏற்பட முடியாது ! இருந்தும், எதிர்க்கிறார்கள், பழைய சம்பிரதாயமும், சாஸ்திர விதிகளும் சீர்குலைக்கப்பட்டு விடுமாம்! அன்று கட்டிவைத்த சூதுபுரிக் கோட்டை—இந்து மதம்—அதில் எவருமே நுழையக் கூடாதாம் – எதிர்க்கின்றனர், எக்காளமிடுகின்றனர். அதுவும் 'இந்த' சர்க்காரைப் பார்த்து!

இந்தச் சர்க்கார் புரட்சியுள்ளம், சீர்திருத்தவேகம், மதக் கேடுகள் மாய்க்கப்பட்டு மனிதவாழ்வு சிறப்பிக்கப்படவேண்டும் என்ற ஆசை கொண்டு, முன்னேற்ற நோக்கங் கொண்டு, மாறுதல்களைச் சமுதாயத்திலே சிருஷ்டிக்கும் நோக்கம் கொண்டதல்ல. பழையசம்பிரதாயம், பண்பாடு, குறையாது நடக்கவேண்டும், அதுதான் கலாச்சாரம் என்ற கருத்துக்கொண்டது. அத்தகைய பிற்போக்கு வாதிகளும், மத பக்தர்களும், நிறைந்த இந்த ஆட்சியைப் போய், இவர்கள் மிரட்டுகிறார்கள்! ஆட்சியாளர் யாவரும், இவர்களுடைய சுண்டுவிரலுக்காடும் நிலையிலிருந்தும்—இந்து மதத்தைஎவ்வகையிலும் தொடக்கூடச் செய்யாத ஒரு-சில திருத்தங்களைச் செய்வதற்காக

இத்துணை ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர் — பழைமை மாறக்கூடாது, புதுமை எதுவும் மலரக்கூடாது என்ற ஆவேசத்தால்!

மனு, மாந்தாதா செய்து வைத்துப்போன சாஸ்திர விதிகளில் சாமான்யாளான இவர்கள் தலையிடுவதா—நன்மை பயக்கக் கூடியதாகத்தான் இருக்கட்டும்—இவர்கள் ஸ்மிருதிகளிலும் உபநிஷத்களிலும் கூறப்பட்ட முறைகளை மாற்ற முயற்சிக்கலாமோ! கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்துவரவில்லை, 'ஏறுமாறாகயிருக்கிறது என்றால் 'ரத்து' செய்துகொண்டுவிடலாமாம்! சட்டம் செய்யப் புறப்பட்டுவிட்டா, இவாள்—என்ன தெரியும், இதுகளுக்கு—லௌகீக விஷயங்களில் புரண்டுகொண்டிருக்கும் பாபாத்மாக்களல்லவா 'இதுகள்' என்று கூறிக்கொண்டு இம்மசோதாவை எதிர்த்து பழைமைச் சனாதனமும், வைதிக வம்பும் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறது!

அந்த அளவுக்குமதபக்தி—வெறி—தலைவிரித்தாடுகிறது, பழைமையில் மாறுதல்ஏற்படக்கூடாது என்ற துட்ட மனோபாவம் நர்த்தனம் புரிகிறது!

X X X

மதவெறி மக்களை மாய்க்கும், புதுவழிகாணமுடியாது தடுத்துப் பொல்லாங்குகளை உண்டாக்கும், புதுமைக்கு அணைகட்டி வரவிடாது தடுக்கும், நம்மைக் காட்டுமிராண்டிக் காலத்துக்கு கொண்டு செல்லும்! வாழ்வை வளமாக்காது, நாசத்தையும் கேட்டையும் நாட்டுக்கு நல்கும்! மதம்—ஒரு மாபெரும் நச்சுக் கோப்பை. அதில் விழுந்த ஈக்களாக மக்கள் இருக்கக் கூடாது. மதநஞ்சு அருந்தி மயங்கி, சுருண்டு, எல்லாம் இதில்தான் அடக்கம் என்று கூறிக்கொண்டு 'மாயப்பிரபஞ்சம் இது பொல்லாது, உலகம் மாயை, சகலமும் அநித்தியம்,' என்று கூறிக்கொண்டு, காஷாயமும் கமண்டலமும் ஏந்தச் செய்யும்! நாட்டை அரித்து, அலைத்துக் குலைக்கும் என்று பகுத்தறிவாளர்களாகிய நாம், சுயமரியாதை இயக்கம் சொல்லி வருகிறது. பழைமையும், வைதிகமும் ஒழிய வேண்டும் பகுத்தறிவு எங்கும் முகிழ்க்கவேண்டும் என்று பன்னெடுங் காலமாகப் பணியாற்றி வருகிறது.

வைதிக வாடை—மிகக்கொடியது! மூடநம்பிக்கை, முன்னேற்றத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டை, மதம் நம் வாழ்வைச் சிதைத்துச் சித்திரவதை செய்யும் மரணக் குழி என்று சொல்லி, இவைகள் மக்கள் மனதிலிருந்து மாற்றப்பட்டால்தான் இன்பம் எங்கும் ஏற்படும், சாதிசமயப் பூசல்கள் என்ற சாக்கடை தூர்க்கப்படும், சமரச சன்மார்க்கம் தழைத்தோங்கும் என்று எடுத்துக் காட்டி, பணியாற்றி வருகிறது. இந்த அரும் பணியைச்செய்யப்புறப்பட்டமைக்கு, செய்துவருவதற்கு,நமக்கு இந்நாட்டு, வைதிகமும் பழைமையும் தந்த பட்டம் 'நாஸ்திகர்கள்'—நல்லது நினைக்காதவர்கள், நாட்டுத் துரோகிகள் என்பது!

நமது நாட்டுப் பணிக்கு, ஏச்சும் பேச்சும் வம்பும் வழக்கும் கிளம்பிய போதெல்லாம் சனாதனம் நம்மிடம் சண்டைக்கு வருகிறது—வரத்தான் செய்யும்! என்று எடுத்துக் காட்டிவிட்டு, எப்போதும் பழைமையும் வைதிகமும் இதுபோன்ற பணிகளைக் கண்டதும், படபடக்கத்தான் செய்யும், துடிக்கத்தான் தொடங்கும்—அவர்கள் சூது வாழ்வு புதுமையால் ஒழிக்கப்படப்போவதால்! என்று, விளக்கி வந்துள்ளோம். அதுபோதெல்லாம், நம்மைத் தூற்றவும், நாட்டுத்துரோகிகள் என்று அழைக்கவுமே, அறிஞர்கள் என்று அழைக்கப்பட்டோரும், அரசியல் தலைவர்களும் முற்பட்டனர்! பட்டங்கள் வழங்கினர்!! கண்டதுமே நடுங்க வேண்டிய பூச்சாண்டிகள் போல நம்மை நாடு கருதும்படி செய்தனர்!

பழைமையும், மதவெறியும் நாட்டைப் பீடிக்கும் சனியன்கள், இன்ப வாழ்வு என்கிற பகலவனை மறைக்கும் கார்மேகங்கள் என்று நாம் கூறியபோது, இங்குள்ளோர், 'இல்லை—அது வாழ்வை வளமாக்கும் மழை என்றனர்! நாமோ மழையல்ல—மண்மாரி என்று கூறினோம்! இவை சீறிடும் சிறுத்தைகள்—சிறு மாறுதல் செய்யப் புறப்பட்டாலும் சீறிப் புறப்படும், சீற்றத்தைச் சிந்தும் என்று சொன்னோம்—சொல்லி வருகிறோம்.!!

இந்த உண்மை விளக்கத்துக்கு ஊராரும் நாட்டாரும் நமக்கு நல்கிய பரிசுகள்—கொடுமை மூட்டைகள் தான். கடுகடுப்பு, 'காணடா இந்த வீர சிங்கங்களை' என்றகேலி, திருத்தப் புறப்பட்டு விட்டார்களாமே, பழைய வழக்கங்களை' என்ற கிண்டல், பாவிகள் ரௌரவாதி நரகம் தான் இதுகளுக்கு என்ற பட்டமளிப்பு, மதத் துரோகிகள், மனித மிருகங்கள் என்ற வசைபுராணம்!

ஒரு சிறு திருத்தத்தை, இந்துச் சட்டத்தில், செய்வதற்காக டெல்லி சட்டசபையிலே புயல் வீசியிருக்கிறது, கேலி, கிண்டல், கண்டனம், ஆகிய அம்புகள் வீசப்பட்டிருக்கின்றன. வெளியிலே 'நேரு சர்க்கார் ஒழிக!" என்று ஆர்ப்பாட்டம் இட்டிருக்கிறார்களே, அதன் எதிரொலி, சட்டசபைக்குள்ளும் ஒலித்திருக்கிறது.

மசோதா மீது பேசிய பெரும்பாலான காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் தலைவர்கள், இந்த மசோதாவை இப்போது கொண்டு வந்திருக்கக் கூடாது, இதை ஒத்திப் போடவேண்டும், என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது இப்போது என்று கண்டனங்களையே குவித்திருக்கின்றனர். காங்கிரஸ் தலைவர் உள்பட, பெரிய தலைவர் என்று கூறப்படும் பிரசாத் வரை, எதிர்த்திருக்கின்றனர் 'ஏன் இது' என்று கேட்டிருக்கின்றனர்!

தங்கள் தலைவர், நாட்டின் பிரதமர் சக்தியும் புத்தியும் நிறைந்தவர் என்று போற்றப்பட்டவரான பண் பண்டித நேரு, இம்மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் எனது சர்க்கார் ராஜினமா செய்யும் என்று எச்சரித்திருந்தும், எதிர்த்திருக்கின்றனர்—வெடித்துக் கிளம்பிய எரிமலை போன்று கனல்கக்கியிருக்கின்றனர்!

வெளியேவைதிகத்தின் மிரட்டல்!
உள்ளே உறுப்பினர்களின் அதட்டல்!

பழைய இந்து சட்டத்தில் சிறு திருத்தங்களை, அதுவும் தேவையானது என்றுகருதப்படுகிற திருத்தங்களைச் செய்வதற்கு இத்துணை சீற்றமும், சிங்கநாதமும் கிளம்பியிருக்கிறது 'இவரை விட்டால் ஏது கதி, என்று போற்றப்பட்ட நேரு, இந்த மசோதாவைத் 'தன் ஆட்சிப் பிரச்னை என்று அறிவிக்கும் அளவுக்கு, இந்தத் திருத்தங்களுக்கு, எதிர்ப்பு

முன்பக்கத் தொடர்ச்சி

வளர்ந்திருக்கிறது—மத வெறியால், பழைமைப பக்தியால், வைதீகம் காக்கப்படவேண்டும் என்ற கருத்தால்.

இந்துமத சட்டத் தொகுப்பு மசோதாமீது நடை பெற்று வரும் விவாதம் போல, இதுவரை, இந்திய சட்டசபையின் சரித்திரத்திலேயே நிகழ்ந்ததில்லை.

சனாதனம் சங்கநாதம் செய்கிறது, வைதீகம் உறுமுகிறது — அவைகளின் வக்கீல்களாக நடிக்கின்றனர் காங்கிரஸ் 'கனம்'கள்.

சம்பிரதாய முறையில் சிறு மாறுதலைச் செய்ய முற்படுவதற்கு இவ்வளவு எதிர்ப்பு, எக்காளம், உறுமல், சீற்றம்!

ஏன் இது, எதற்காக இது, எப்படி ஏற்பட்டது இது — சிந்திக்க, சிந்திக்க நம்மை வேதனையும் விம்மலும் துளைக்கிறது. மனித சமுதாயம், தினசரி வளர்ந்துகொண்டிருக்கிறது, வாழ்க்கைப் பிரச்னைகள் வினாடிக்கொருதரம் மாறிக்கொண்டிருக்கின்றன—

இந்த நேரத்தில்-புதுக்குடியரசு ஏற்படப்போகிறது எனக் காங்கிரஸ் தலைவர்கள் பூரித்துக்கிடக்கும் வேளையில்—மக்கள் நலன்கருதி, பெண்களுக்கு நீதிவழங்கும் நினைப்புடன் செய்யப்படும் ஒரு திருத்த மசோதாவுக்கு இவ்வளவு கண்டனமும் எதிர்ப்பும் கிளம்பியிருக்கிறது!

மதவெறி, பழைமைப்பித்து அந்த அளவுக்கு ஆட்டுகிறது! சனாதனம், சிரிக்கிறது!, சங்கராச்சாரிகள் சல்லடம் கட்டுகின்றனர்!

விந்தையல்ல வேதனை, நெஞ்சு வெடிக்கும் காட்சி—இது. சனாதனமும் வைதீகமும், சாதாரண மக்களை மட்டுமின்றி ஆட்சியையே எப்படி ஆட்டிவைக்க முடியும் என்பதற்கான சாட்சி!

* 'கல்கி'யார் கவனத்துக்கு! *

"மதவெறிஎன்னும்ராக்ஷசனும்குருட்டு நம்பிக்கைப் பிசாசும் தேசத்திலிருந்து அடியோடு துரத்தப்படவேண்டும்.

மூட நம்பிக்கையையும் மதப் பற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டு எந்த விஷயத்தையும் பரிசீலனை செய்யக் கூடாது; கண் முன்னால் காணும் அனுபவத்தைக்கொண்டு பகுத்தறிவை உபயோகித்தே எந்த விஷயத்திலும் ஒரு முடிவுக்கு வரவேண்டும்—இதுதான் பகுத்தறிவாளர்களின் கொள்கை. இந்தக் கொள்கையை அனுஷ்டிக்கும் பட்சத்தில் ஜாதி சமய வேற்றுமைகள் தானாகவே ஒழிந்துவிடவேண்டும் என்பது நிச்சயம். மூட நம்பிக்கையாகிற இருளில் சூழப்பட்டுக் கிடக்கும் விஷயத்தைப் பகுத்தறிவாகிற தீபத்தைக் கொண்டு கண்டு கொள்ள முடியும் அல்லவா?"

திக்கெட்டும் சென்று தினசரி முழக்கமிடுகிறார்களே நமது கழகத் தோழர்கள், அவர்கள் சொற்பொழிவிலே சிந்திய முத்து அல்ல, இது!

கண்ணன் காட்டும் வழியைக் கடைப்பிடிப்பவர், குடந்தை மகாமகத்துக்குக் கூடிய கூட்டத்தைக் காட்டி சுயமரியாதைக்காரர்களுக்குப் புத்தி கூறியவர், உங்கள் பணியின் பலனைப்பாரீர் என்று கிண்டல் செய்தவர், கீழ்ப்பாக்கம் 'சஞ்சிகை'யார், "கல்கி" எழுதியிருக்கிறார். அவரா? என்று ஆச்சரியமும் ஐயமும் ஏற்படலாம்! ஆமாம், சாட்சாத் அவரேதான் தமது டிசம்பர் 11-ந் தேதிய இதழில் 'என்ன சேதி?'யின் கீழ் எழுதியிருக்கிறார்.

மூடநம்பிக்கையும், மதப் பற்றுதலும் ஒழியவேண்டும் பகுத்தறிவுக் கண்கொண்டு எதையும் பார்க்க வேண்டும்—இதைக் கடைப்பிடித்தால் சாதிச் சச்சரவு ஒழிந்து சமரசம் ஏற்படும் என்று தெளிவாக எழுதியுள்ளார்—மதபக்தியை "வெறி" என்று குறிப்பிட்டு விளக்கியுள்ளார்!!

மகிழ்ச்சி நமக்கு! மாபாவிகள், நாஸ்தீகர்கள், நல்லது நினையாதவர்கள், நடக்கமுடியாததை நடத்த விரும்புபவர்கள், எட்டாப்பழத்துக்கு கொட்டாவி விடுகிறவர்கள் என்று ஏச்சும் பேச்சும் எழும்பிய இடத்திலிருந்து இந்த 'எழுத்துக்கள்' பிறந்துள்ளன என்பதால்!

பகுத்தறிவாளர்களின் பாதையை பாம்புக்குழி என்றும், பார்க்கவும் கூசும் பாதகர் கூட்டம் என்றும், எண்ணி இறுமாந்து கேலியும் கிண்டலும் கிளம்பிய இடத்திலிருந்து இன்று இந்த எண்ணம் பிறப்பட்டிருக்கிறது — அதுவும் அழுத்தந் திருத்தமாக, அடியோடு துரத்தப் பட வேண்டும் என்பதாக!

இரட்டை மகிழ்ச்சி, நமக்கு, இப்போது பகுத்தறிவுப் பணியின் பண்பு அறிந்து, நற்பாதையெனப் பட்டதும், சூழ்நிலை பற்றிச் சிந்திக்காது சொல்ல முன்வந்தது பற்றி!

மூடநம்பிக்கையையும் மதவெறியும் ஒழிக்கபபட வேண்டும்—அடியோடு" அழிக்கப்படவேண்டும், அப்போதுதான் சாதிபேதமற்ற சமுதாயம் ஏற்படமுடியும், என்று கல்கியார் கூறுகிறார்! பகுத்தறிவுப் பணியின் சிறப்பை — அலங்காரமாக— ஒப்பிக் கூறுகிறார்!!

நாம் இதுவரை எதைச் சொல்லி வந்தோமோ, நாட்டுக்கு நன்மை பயக்கும் வழிகள் என்று இன்றும் கூறிவருகிறோமோ அதை இன்று 'கல்கி'யார் கூறுகிறார் — அவ்வழிதான் நல்லது பயக்கும் நாட்டுக்கு என்கிறார் பகுத்தறிவை, மூடநம்பிக்கை இருளைப் போக்குப் தீபம் என்று குறிப்பிடுகிறார்! அவரது பார்வையைச் சிறிது டெல்லிக்குத் திருப்பிவிட விரும்புகிறோம்—மக்களின் நன்மை நாடும் மசோதா வென்று கூறப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு மசோதாவுக்கு சனாதனமும் வைதீகமும் எவ்வளவு ஆர்ப்பரிக்கிறது! குருட்டு நம்பிக்கையும் பழமைப் பக்தியும் எவ்வளவு கூத்தாடுகிறது! மதவெறி எந்த அளவுக்கு மார்தட்டுகிறது, என்பதைக் காணுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

என்னநடக்கிறது அங்கு! புதுமைக்கு பழைமை சவால் விடுகிறது,—மதத்தின் பக்கம் 'இவர்கள்' நெருங்குவதா, என்று வெறியாட்டம் நடத்துகிறது.

உலகம் முன்னேற, வாழ்வு வளமாக, ஏழையும் மோழையும் இன்பம்பெற வழியமைக்காது மூடப்பட்டிருக்கும் கதவுகள்தான்—மூடநம்பிக்கையும் மதவெறியும்!

மதவெறி—பாகிஸ்தான் எல்லை

(அடுத்த பக்கத்தில்)

★ சுய-ராஜ்யம்! ★

கல்விக்கெனச் செலவழிக்கும் பணத்தைச் சர்க்கார் குறைத்திருக்கிறது என்று மத்திய சர்க்கார் கல்வி மந்திரி அபுல்கலாம்ஆசாத் அறிவித்துள்ளார். முன்பு, ஆறுகோடிரூபாய் செலவழிக்கப்பட்டதென்றும் இனி மேற்பட நாலரைக்கோடிதான், செலவழிக்கப்படுமென்றும், அவர் அறிவித்திருக்கிறார்.

கல்வி — மக்களின் கருந்தனமாகும். ஆனால், இந்தியாவிலோ நூற்றுக்குப் பத்துப்பேர் கூட கல்விகற்க முடியவில்லை—கல்லாமை இங்கு நீடிக்கிறது வளர்ந்துகொண்டு வருகிறது. பிற்போக்கும், பேதமையும், அறியாமையும் — கல்லாமை பெற்றெடுக்கும் குழந்தைகள். ஒரு நாட்டின் மதிப்பும், கௌரவமும் அங்கு வாழும் மக்களுடைய கல்வி நிலை வாழ்க்கைத்தரம் ஆகியவைகளை வைத்துத்தான் மதிக்கப்பெறும். இந்த இருதுறைகளிலும்—எண்ணவும் முடியாத இருட்டில், இந்தியா நிற்கிறது.

சுயராஜ்யம் வந்து, இப்போது இந்தியா குடியரசுஎனப் பிரகடனப்படுத்தப்படும் வேளை நெருங்கிக்கொண்டிருக்கிறதேயொழிய, முன்பு நிலவிய வேதனை நிலையில் ஒரு சிறு மாற்றம்கூட ஏற்படவில்லை. இந்த நிலையில் இந்திய சர்க்கார் கல்விக்கெனச் செலவழிக்கப்படும் தொகையைக் குறைக்க முடிவுசெய்திருக்கிறார்கள். இந்த முடிவுக்குச் சர்க்காருக்கேற்பட்டிருக்கும்பணமில்லாக் குறைதான் காரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டான நிலையில் இந்தியசர்க்கார் இருக்கிறது, பண நெருக்கடி பல வழிகளிலும் அதை நெரிக்கிறது, தொல்லை — சுழற்காற்று ஆகியவைகளில் சிக்கியபடகுபோல் தவிக்கிறது என்று கூறப்படுகிறது. உண்மையுங்கூட, இந்திய சர்க்கார் இன்று கேடுபாடான நிலையில்தான் இருக்கிறார்கள்.

இந்தப் பண நெருக்கடியிலிருந்து மீள, சிலவகைகளில் செலவாகும் பணம் மீட்கப்படத்தான் வேண்டும்—பிடித்தம் செய்யாவிட்டால், பணம் மிஞ்சவோ, பட்ஜட்டைச் சரிகட்டவோ இயலாது தான் போய்விடும்.

உறுப்பினர் ஒருவர் கேட்கிறார், ஒரு கேள்வி. நாட்டின் நிலை, இப்படியிருக்கிறதே, நல்லது செய்வதற்குப் பணமில்லையென்று தவிக்கிறீர்களே, அதே நேரத்தில் அனாவசியமாகப் பணம், எங்கோ, எதற்கோ செலவழிகிறதே என்பதை எண்ணி.

கேட்டது கேள்வி, அதற்குக் கிடைத்ததோ பதிலல்ல, பதட்டம்!

அமெரிக்காவில் அரசியல் தூதராகயிருக்கும் விஜயலட்சுமி அம்மையார்—பண்டிதரின் சகோதரி—அங்கு நாடு முழுமையும் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கிறார்—அமெரிக்காவின் கீழ் பிரதேசங்களில் பவனி வந்துகொண்டிருக்கிறார். ஏன், இப்போது அவர் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும், என்பதுதான் உறுப்பினர் கேட்ட கேள்வி. உறுப்பினர் மனதில், சுற்றுப் பிரயாணத்துக்காகச்செலவழிவது இந்தியாவின் பணம்தானே, இது ஏன் என்ற

(7-ம் பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

யில், இந்திய எல்லையில் ஆடிய கோர நர்த்தனத்தை 'கல்கி'யார் தனது எழுத்திலே காட்டியுள்ளார்.

மதவெறியால்நடைபெற்றது இது மட்டுமல்ல. ஆண்டாண்டு காலமாக அது பலிகொண்டிருக்கும் பட்டியல்—பயங்கரமானது. நினைக்கவும் மீளாத் துயரைத் தருவது, நெஞ்சு வெடிக்கச் செய்வது!

மக்களை மடமையினின்றும் மீட்பேன், மனித சமுதாயத்தைப் பயம் என்ற சுடுகாட்டிலிருந்து வாழ்வு மாளிகைக்கு அழைப்பேன். மனித உலகே எனது கடவுள், அதற்குச் சேவை செய்வதே என் மதம்—சேவைக்கான தொண்டுகளைக் கண்டு சொல்வதே என் வேதநூல் என்று முழக்கமிட்ட சாக்ரடீசுக்கு—மதவெறி, ஒரு கோப்பை நஞ்சைத் தந்தது பரிசாக!

"இருப்பதும் நாட்டிற்கு இறப்பதும் நாட்டிற்கு!" என்று கர்ஜனை எழுப்பிய மாக்ஸ்வினிக்கு மதவெறி இருட்டறையைப் பரிசாகத் தந்தது—பட்டினிபோட்டுச் சித்திரவதை செய்தது.

மதம் மண்ணாய்ப் போகட்டும்,மக்கள் மடமையினின்றும் நீங்கிநல்வாழ்வு பெறட்டும்என்றுகூறியஜான் ஹஸ் உயிரோடு பொசுக்கப்பட்டதும் — மத வெறியால்தான்! மதவெறியெனும் பலி பீடத்தில், கொடுமை வாளால் சித்திரவதை செய்யப்பட்ட மனித மாணிக்கங்கள் ஏராளம். இத்தாலிய சீர்திருத்த வீரன்ஸவோனரோலா, மதத்தை மதியேன், என்மனமே மதம் என்று கூறிய அரிஸ்டாடின், புருனே, உலக உத்தமர் காந்தியார் ஆகியோரை எல்லாம் தனது கொடுமை ஆட்டத்திற்குஆட்படுத்தியது இந்த மதவெறிதான் — பழைமைப் பாசம்தான். மூடநம்பிக்கையும், மதம் பக்தியும் மக்களை மட்டுமல்ல, அறிவுக்கதிர்களை, புதுமைகண்ட வீரர்களை — கலீலியோக்களை, டார்வின்களை இது வரை படுத்திவந்த பாடு, படுத்திவரும் கொடுமை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது —மக்கள் வாழ்வில் புதுமை காண முயன்ற சீர்திருத்த வீரர்களின் செங்குருதியெல்லாம் "மதம்" என்ற மேடையில் இதுவரை எவ்வளவோ சிந்தப்பட்டிருக்கிறது! அவ்வளவு தூரம் கொடுமை நர்த்தனமாடியிருக்கிறது! இருந்தும், இன்னும் தனது இரத்த வேட்கை தீராது, மதவெறியும், மூடநம்பிக்கையும் கொண்டாட்டமடிக்கிறது! புதுமை எதையாவது கண்டால் சீறிக்கிளம்பி,சிம்மநாதம்செய்கிறது!

இந்த மதவெறியும், மூடநம்பிக்கையுந்தான், இவைகளை ஒழிக்கப் போராடி, வாழ்வுப்பாதை நாசமானாலும் மக்கள் வாழ்வு மலர்ந்தால் போதும் என்ற இலட்சியத்துடன் 'உயிர் மா அல்ல; சேவை எங்கள் கடமை!' என்று தொண்டாற்றிவரும் நம்மை, நாஸ்திகர், நல்லது எண்ணாதவர்கள், நரகத்துக்குப் போகப் போகிறவர்கள் என்று சபித்தும், மிரட்டியும் வருகிறது!

இவ்வளவு கொடுமையும் ஆவேசமும் நிரம்பிய மதவெறியும், மூடநம்பிக்கையும் ஒழிய வேண்டும் என்று, 'கல்கியார்' கூறுகிறார்—எழுதுகிறார். இப்போதாவது இந்த உண்மை அவர் உள்ளத்தில் மலர்ந்தமைக்கு மகிழ்கிறோம்—இந்த எண்ணம் நீடிக்கட்டும், என்ற எண்ணத்துடன்!

✲

★ சமூகமும் சட்டமும் ★

பராஞ்சிபே

சமூகப் பழக்க வழக்கங்களைக் குறித்து ஆராயும் பொழுது, இரு கொள்கைகளை நாம் மனத்தில் இருத்திக் கொள்ளுதல் அவசியம். இவை தனிச் சுதந்திரமும், பொது நன்மையுமாகும். நமது அபிப்பிராயமும் செயல் முறையும் இந்த இரண்டுக்கும் இயன்ற மட்டில் பொருந்திப் போகவேண்டும். பொது நன்மையென்றுபோலிக்காரணங்களைக்கூறித் தனி மனிதரின் சுதந்திரத்தைப்பறிமுதல் செய்யக் கூடாது. ஒரு குறிப்பிட்ட சட்டமோ, வழக்கமோ அது தனி நபரின் சுயேச்சையைப்பாதித்த போதிலும், அது கட்டாயம் அவசியமே என்று வாதிப்பதாயிருந்தால், அதற்குரிய காரணம் போதியஅளவு தெளிவுபடுத்தப்பட வேண்டும். இவ்விஷயத்தில் ஏற்கெனவே கொண்டுள்ள அபிப்பிராயம் தனிமனிதரின் சுயேச்சைக்குச்சாதகமாகவே இருக்க வேண்டும். பொது நன்மைக்காக இதைக் குறைக்கும் பொழுது இதற்குரிய காரண காரியங்களைருசுப்பிக்க வேண்டியது பொதுநல வாதிகளின் கடமையாகும்.

தனிச் சுயேச்சையைப் பங்கப்படுத்தாமலிருக்க வேண்டுமென வற்புறுத்துவது ஏனெனில், வயது வந்த ஒருவர், அவர் சாதாரண அறிவுடனிருந்தபோதிலும், தனக்கு எது நல்லது என்பதைப் பற்றிப் பிறரைவிடக் கூடுதலாகவே அறிந்திருப்பார்; மேலும் பிறரால் வற்புறுத்தப்பட்டு ஒரு காரியத்தைச் செய்வதைவிட, அவர் தாமாகவே ஒரு காரியத்தைச் செய்து அதனால் தீமை ஏற்படினும் அவர் அதைச் சகித்துக் கொள்ளத் தயாராகவே இருப்பார். தனி நபர்களுக்குச் சுதந்திரமளிக்கப்பட்டிருக்கும் இடங்களிலெல்லாம் சமூகம் அதிதுரிதமாக முன்னேறியிருப்பதைக் காணலாம். சுதந்திரம் தாண்டவமாடுமிடத்தில் தான் புதிய நலன் பயக்கத்தக்க கொள்கைகள் தோன்ற முடியும். அது அனுபவ பூர்வமான உண்மையாகும். சகல அபிப்பிராயங்களும், நடவடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் எவ்வித மாற்றமுமின்றி ஒரே படியாக இருக்கும் ஒரு நாட்டில் ஜனங்கள் முற்போக்கடையாமல் பிற்போக்குறுவதைச் சரித்திரம் அடிக்கடி நமக்குப் போதிக்கின்றது. இம்முறையில் ஏற்படும் ஸ்தாபனங்கள் சுற்றுச் சார்புகளுக்குத் தகுந்தபடியிருந்தால் சில காலம் சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட்டிருப்பதாக வெளிப்பார்வைக்குத் தோன்றலாம்; ஆனால் அச்சமூகத்தில் அழிவுநோய் கால் கொண்டு வருகிறது என்பது மட்டும் உண்மை.

இந்தியாவில், இத்தகைய விஷயங்களை, இந்துக்களும், முஸ்லீம்களும் பழைய சாஸ்திர ஆதாரங்களைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். பழைய சாஸ்திரங்களின் உட்கருத்தென்ன வென்பதைப்பற்றியே பெரும்பாலும் விவாதிக்கப்படுகின்றது. சாஸ்திரங்களிலுள்ள வார்த்தைகள் ஒரு பகுத்தறிவு வாதிக்கு அவ்வளவு முக்கியமாகத் தோன்றுதெனினும், குறிப்பிட்ட ஸ்தாபனம் தோன்றிய காலத்தின் நிலைமையைச் சரிவர உணர அவன் இயன்ற மட்டும் முயற்சிப்பான். உண்மையாக அது நன்மை பயந்ததா என்றும், காலத்தின் மாற்றத்துக்குத் தக்கவாறு, அதிலும் மாற்றம் ஏற்படுத்துவது அவசியமா என்றும் அவன் ஆராய்ச்சி செய்வான். இந்தப் பழைய சாஸ்திரங்களும் ஆதாரங்களும் எக்காலமும் இருந்து வருகின்றன என்பதை ஒப்புக்கொள்ளாத ஒருவர், ஒருகாலத்தில் இவை புதிதாகவே தோன்றின என்பதையும், ஒருவேளை அவை தோன்றிய காலத்தில் அவற்றிற்கு வைதிகர்களின் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என்பதையும் உணர்வார் என்பது நிச்சயம். ஆகவே, அவசியமுள்ள, ஆலோசனையுடன் செய்யப்படும் மாற்றங்களை உண்டுபண்ண ஆட்சேபனை எதுவும் ஏற்படத் தேவையில்லை. இத்திருத்தங்களும் நாளடைவில் பழையனவாகிப் பெருமைபெற்றுவிடுமல்லவா? அன்றியும், பிரமாணங்களாகக் காட்டப்படும் சாஸ்திரங்களும் கூட மிக ஏராளமாக இருப்பதும், அவை ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதும் கண்கூடு. இதனிமித்தம், எந்தப் புதிய திருத்தத்துக்கும் இவற்றிலிருந்தே தக்க ஆதாரத்தை யாரும் எடுத்துக்காட்ட முடியும். எனினும், பகுத்தறிவு வாதி தனது கோட்பாடுகளுக்கு ஆதாரங்களைத் தேடக்கூடாது. இவற்றை ஒருகால் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். நமது நாட்டில் அனேகமாக சகல ஸ்தாபனங்களும் மதத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சீர்திருத்த வாதியின் வேலை மிகமிகக் கஷ்டமானதாக இருக்கின்றது. எதிர்காலத்தில் இக்கஷ்டம் இன்னும் அதிகரிக்கும் விதத்தில் அவன் எச்செய்கையையும் செய்து விடக்கூடாது. நமது நாட்டையும்—ஏன் உலகம் முழுவதையும் பொறுத்த தர்க்க சாஸ்திரம், சரித்திரம், அனுபவம் இவற்றின் உதவியையே அவன் ஆதாரமாகக்கொள்ள வேண்டும்.

பொதுஜன அபிப்பிராயத்தைமாற்றிச் சீர்திருத்தஞ் செய்யவேண்டுமேயல்லாது, சட்டத்தின் மூலம் சீர்திருத்தத்தை வற்புறுத்தக் கூடாதென ஓர் சாரார் கருதுகின்றனர். எது சரியென முடிவு செய்யும் விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயத்தைத் தாண்டி எந்தச் சட்டமும் வெகு தூரத்தில் செல்லக்கூடாது என்பது உண்மையே. பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கொள்கைகளுக்குச்சட்டம் பலனற்றதாகப் போய்விடக்கூடும். ஜனங்களிடையே சட்டத்தை மீறும் வழக்கம் இதுகாரணமாகசர்வசாதாரணமாகி விடலாம். அமெரிக்காவில் பூரண மதுவிலக்குச் சட்டத்தையும், இந்தியாவில் சாரதா சட்டத்தையும், இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆனால்பெரும்பாலும் காலப்போக்குக்கு மிகவும் பிற்பட்டவைகளாகவே சட்டங்களிருக்கின்றன. இவை சென்றகாலக் கொள்கைகளையே பிரதிபிம்பிக்கின்றன. காலத்திற்கேற்ற மாறுதல்-செய்வதற்குஅமைக்கப்பட்டிருக்கும் இயந்திரம் எவ்விடத்தும் பூரண நிலையிலில்லை. இருக்கிற சட்டங்கள், எப்போதும் அவற்றினால் சாதகமடை

யும் ஒரு தனிக் குழுவினரை உண்டு பண்ணுகின்றன: திருத்தஞ் செய்வதை இவர்கள் எதிர்ப்பது இயல்பு. திருத்தஞ் செய்ய ஒழுங்கான ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கும் இடங்களிலும், தீமைகள் மிக மோசமான நிலைமையை அடைந்த பிறகே, இது வேலைசெய்ய ஆரம்பிக்கின்றது. மேலும், ஒரு சர்வாதிகாரியின் இஷ்டப்படி சட்டமியற்றப்படாத ஒரு நாட்டில், இந்தத் திருத்தங்கள் பலனளிக்க நீண்டகாலம் பிடிக்கின்றது. இக்காரணத்தினாலேயே, சட்ட புத்தகங்களில் பொதுஜனங்களுக்குப் பயன்படாத, ஆனால் வக்கீல்களுக்கு மட்டும் உபயோகப்படும் சட்டங்கள் ஏராளமாக இருப்பதைக் காண்கின்றோம்.

ஜனநாயக அல்லது தேசிய ஆட்சி நிலவும் தேசங்களைவிடச் சமூகஸ்தாபனங்கள், பழக்கவழக்கங்கள் சம்பந்தமான சட்டங்கள் விஷயத்தில் இந்தியா மிகவும் பழைமை விரும்பியாகவே இருந்து வருகின்றது. நமது நாடு, சுமார் இருநூறு ஆண்டுகளாக அயல்நாட்டாரால் ஆளப்பட்டு வந்தது. தமது நிலைமையைப் பலப்படுத்தும் நோக்குடன் பிரிட்டிஷ் அரசாங்கம் மத விஷயத்தில் கண்டிப்பான நடு நிலைமை வகித்து வந்தது.

இங்கு எவ் விஷயமும் சிறிதளவேனும் மத வாசனை பெற்றிருப்பதால், எந்தச் சீர்திருத்தத்தையும் செய்ய முயலும்பொழுது, மதத்தில் தலையிடுவதாக ஒரு சாரார் ஆட்சேபிக்கமுடியும்.

எனவே, சர்க்கார் இவ் விஷயத்தில் கோழையாக இருப்பதில் ஆச்சரியமில்லை. பிரிட்டிஷ அரசாட்சியின் ஆரம்ப காலத்தில் பழைய ஸ்மிருதிகள் போன்ற சாஸ்திரங்களின் தத்துவார்த்தங்களை யெடுத்துச் சொல்ல, ஜட்ஜுகள் தங்களுடன் பண்டைக்காலப் பண்டிதர்களை வைத்திருந்தனர். இப் பண்டிதர்கள் பிரதி பலன் பெற்று ஒரு சார்பாக அபிப்பிராயங் கூறத் தயங்கினார்களில்லை யென்றுஞ் சொல்லப்படுகிறது. இந்த ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களும் அக்கால நிலைமைக்குக் கூடப் பொருத்தமுடையனவாக இருக்கவில்லை. எனவே, காலத்திற்கு முரணான பல சட்டங்களுடன் இந்தியா பிணைக்கப்பட நேர்ந்தது. அந்நிய ஆட்சியின் அவசியத்தையெடுத்துக்காட்ட அரசாங்கத்தார் இத்தகைய தீமைகளை ஓரளவு பாதுகாத்து வந்ததாகவும் சர்க்காரைக் கண்டித்தோர் குறை கூறினர். எவ்வாறாயினும், சட்டத்தின் மூலம் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்றத்திற்குக்கூட சர்க்கார் சாதகமளிக்கவில்லையென்று சொல்லலாம்.

உடன் கட்டையேறும் வழக்கத்தைத் தடுத்து, சம்மதவயது மசோதாவை நிறைவேற்றியது ஆகியவிஷயங்களில் மதக்கொள்கைகளையெதிர்த்து அவர்கள் சட்டமியற்றியுள்ளார்கள் என்பதை ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் இம்மாதிரி விஷயங்கள் மிகமிகச் சில தான். சில காலமாகத்தான் — சட்டசபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் பெரும்பாலான இடம் பெற்றபிறகே, சமூக சீர்திருத்தத் துறையில் சிறிது முயற்சியெடுக்கப்படுவதைக் காண்கிறோம். எனினும், அதிகாரிகள் படிப்படியான அபிவிருத்திக்குச் சாதகமாக இருப்பதை விட்டு, எதிர்பார்ப்பதற்கு விரோதமாகப்பழையஎச்சரிக்கையான முறையையே கைக்கொள்கிறார்கள்.

சட்டம் எப்பொழுதும் பழைமை விரும்பியாகவேயிருக்கின்றது என்பதாக முன்னர் சொன்னோம். ஆனால் கல்வி வாசனையில்லாத, பாமர மக்களது பொதுஅபிப்பிராயத்தைவிடச் சிறிது முற்போக்கானதாகவே சட்டம் இருக்க வேண்டும். சர்க்கார் உண்மையாகவே தைரியமுடையதாயிருந்தால் சமூகச் சீர்திருத்தத்துக்கு அதிக உதவி செய்யலாம். சில விஷயங்களைச் செய்யும்படி, அல்லது செய்யக்கூடாதென வரையறுக்கும் சட்டங்களையும், இஷ்டப்படி நடந்துகொள்ள உரிமையளிக்கும் சட்டங்களையும், இங்கு வேறு பிரித்துக்கூற வேண்டும். முதல்வகைக்கு உதாரணமாகச் சாரதா சட்டத்தைக்கூறலாம். இரண்டாவது பிரிவுக்கு உதாரணமாக விதவைகள் மணச்சட்டத்தைக் குறிப்பிடலாம்; முன்னேற்றத்திற்கான, சுதந்திரமளிக்கும் சகல சட்டங்களையும் பிரச்சாரம்செய்யவேண்டியது ஒரு பகுத்தறிவுவாதியின் கடமையாகும். மற்றச் சட்டங்களைப் பற்றி ஆராயும் பொழுது அவன் சகல சந்தர்ப்பங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும். தனது சொந்த அபிப்பிராயம் முன்னேற்றத்துக்குச் சாதகமாகவேயிருக்கின்றது என்பதை அவன் எப்பொழுதும் தெளிவு படுத்தவேண்டும். திடீரெனச் சட்டமியற்றுவதை ஆமோதிக்க அவன் தயங்கிய போதிலும், அவனது நடவடிக்கைகள் சட்டத்திற்குப்பொருத்தமுடையனவாகவே இருக்க வேண்டும். எதிர் காலத்தில் சமூக விஷயங்களில் சட்டஞ் செய்ய உத்தேசித்தால் அவை முதலில் அவரவர் இஷ்டப்படிநடக்க உரிமை அளிப்பனவாக இருக்க வேண்டும். இதுவே நலமென எனக்குத் தோன்றுகிறது. திடீரெனச் சட்டமியற்றுவதை ஆமோதிக்கத் தயங்கும் மனப்பான்மையை மன்னிப்பதெல்லாம், மத சம்பந்தமான விஷயங்கள் என்ற காரணத்தால் சீர்திருத்தத்தைச் செயலில் காட்டுவதில் ஏற்படும் கஷ்டங்களை உத்தேசித்தே யாகும். ஆனால் ஒழுக்கத்தையோ, அல்லது பொதுஜன நன்மையையோ பொறுத்த விஷயங்களில் மிகத் தைரியமான போக்கையே கைக்கொள்ள வேண்டும். மதத்தில் அளவு மீறிய பற்றுள்ளவர்களை எக்காலத்தும் சிறிதளவு விட்டுக்கொடுத்து சமாதானப்படுத்துவது என்பது முடியாத காரியம். ஆனால், லௌகிக விஷயங்களின் போலித்தனமான மத ஆட்சேபணைகளைஏன் பொருட்படுத்த வேண்டுமென்று விளங்கவில்லை. உதாரணமாக திருமணம், ஆகியவற்றைக்கட்டாயமாகப் பதிவு செய்யும்படி வற்புறுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிடலாம். இவை ஒருசமூகச் சீர்திருத்த விஷயமட்டுமின்றி முன்னேற்றம் காட்டும் விஷயமுமாகும்.

✲

சந்தாதாரர்களுக்கு!

பன்முறை தெரிவித்தும், பலர் இன்னும், முகவரி மாற்றம் குறித்தோ, பத்திரிகை வாராமை பற்றியோ, கடிதம் எழுதும்போது சந்தாஎண் குறிப்பிடாமலே, கடிதம் எழுதுகிறார்கள். இதனால் எல்லா வகைகளிலும் சங்கடம் ஏற்படுகிறது. எனவே, இனி, சந்தாஎண் குறிப்பிடப்படாத கடிதங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

கண்ணீரால் தீராது, கவலை!

ஊரெங்கும் சுற்றி வருகிறோம், ஓரிடத்திலாவது நன்றியில்லை!

வரவேற்புத் தருகிறார்கள்; அது வாழ்த்தாக இல்லை! வருத்தமூட்டையாக இருக்கிறது!!

பஞ்சம், பராமரிப்பீர் என்று எங்கும் கோரிக்கைகள்தான், கூக்குரல்கள் தான்!

எங்கள் துரதிர்ஷ்டம்; எங்கு போனாலும் இப்படித்தானா!

மக்களின் கோரிக்கைகள், துயரக் கதைகள் காதைத் துளைக்கின்றன!

பிச்சைக் கேட்கிறோம் என்று பேசுகிறார்கள், மக்களெல்லாம் ஏசுகிறார்கள்!

நகரம், கிராமம், எங்கு சென்றாலும் மக்களிடம் இதே பேச்சா?

என் செய்வோம் நாங்கள், எங்களையா இப்படித் தூற்றுவது?

எவ்வளவு செய்தோம்; இதற்கு இதுதானா கிடைக்கும் பரிசு!

* * *

துயரமும், துக்கமும் எதிரொலிக்கும் வேதனைக் கீதம்—அல்ல, அல்ல ஒப்பாரி—இது. உள்ளத்தை நெகிழ வைக்கும் உருக்கமான சொற்கள், கல் நெஞ்சையும் கரைய வைக்கும் 'காட்ட மாட்டீரா, கருணை' என்ற ஓலம்!

சோகத்துடன் பேசியிருக்கிறார், இதுபோல. சொல்ல முடியாத வேதனையும், வீழ்ச்சி நினைவும் அவரது வார்த்தைகளில் விளையாடியிருக்கிறது!

தொண்டையைத் துயரம் அடைக்க, வார்த்தைகள் வாயிலிருந்து கிளம்ப வம்பு செய்ய, சொற்பொழிவாற்றியிருக்கிறார்!

கண்ணீர் — சிதறவில்லை, ஒருவேளை பெண்மணிகள் முன்னிலையில் நாம் பேசுகிறோம் என்ற எண்ணத்தாலோ, என்னவோ — கண்களில் நீர் ததும்பி நிற்கக் கதறியிருக்கிறார்!

கல்மனம் படைத்த காட்டுராஜா ஒருவன், கண்டபடி மனம்போன போக்கில் மக்களை மறந்து, மமதை கொண்டு திரிந்துவிட்டு; 'ஊர் முழுதும் சாடுகிறது, ஒன்றுக்கும் உதவாதவன் என்று தூற்றுகிறது' என்று அறிந்ததும், 'கல்லையும் முள்ளையும் களைந்தேனே! அங்கு கன்னலும் செந்நெலும் விளையவில்லையென்றால் அது என் குற்றமா! எனிப்படிப் பாய்கின்றீர், என்ன செய்துவிட்டேன்! காட்டெருக்கு வளர்ந்தால் என்ன என்றுதானே விட்டேன்! முன்னொரு நாள் தெருவோரத்தில் செத்துக்கிடந்த தேளைக் கண்டுபிடித்துச் சொன்னேனே, அதைக்கூடவா மறந்து விட்டீர்கள்! காளி கோயிலில் —அன்றொரு நாள், நீர் கண்மூடி நின்றபோது, காணடா காளியை என்று காட்டினேனே — எங்கே காளியின் கருணை உனக்குக் கிட்டாமல் போய்விடுகிறதோ என்ற துயரத்தால்! கற்பூரம் வாங்கிவாடா, அதுவே உனக்குப் புண்யம் என்று கூறி, போகும் ஜென்மமாவது புனிதமாக உதவினேனே! இவ்வளவு உதவிய என்னையா குறை கூறுகிறீர்! ஏனோ, இது? அடுக்குமா, நான் அயலானா! அறுவடையையப்படியே கொடுங்கள் என்று கூறியதற்கா, எனக்கு கொடுங்கோலன் பட்டம்! குடிகேடன், நாசகாலி, நாடறியாதவன், நல்லது செய்யாதவன் என்ற வசைமொழி! கோபச் சொற்கள்!!"

என்று சிம்மாதனம் விட்டிறங்கி, சிம்ம நடை மறந்து, அன்ன நடைபோட்டு, நேற்று அதட்டி மிரட்டிய வாயால், 'குடிசைபுரிக் கோமான்'களிடம் சென்று, குய்யோமுறையோ என முறையிட்டால், அங்குவாழும் உழைப்பின் உருவங்களுக்கு உள்ளம் உருகுமல்லவா! "இப்படி வந்து கதறுகிறானே, ஐயோ பாவம்!" என்ற எண்ணத்தால்! ஏழை இதயங்களின் இயற்கையே அது தானே, அந்தஇரக்கநிலை, இப்போது, பெண்கள் முன்னிலையில் சென்று கண்ணீரைப் பேச்சாகச் சிந்தியிருக்கும் கனவான், சீறிடும் சீமான், சிம்ம நடைபோடும் கோமான், நிதி மந்திரி கோபாலரை நினைக்கும் போது, நமக்கு ஏற்படுகிறது!

மலத்தில் கை வைத்துவிட்டு, 'அம்மா இங்கே வாரும், அழகான மணம் இதைப் பாரும்' என்று வயது வந்தும்—வக்கிரபுத்தி காரணமாக—வறண்ட மூளையுடைய ஒரு பையன் கூறினால் ஐயோ, அது என்ன செய்யும், அறியாத சிறுசு நம்ம காலக் கோளாறு என்று வேதனைப்படுவாளல்லவா, குழந்தையைப் பெற்ற தாயார்! அந்தக் கஷ்டநிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. மதிமந்திரி யெனத் தோள் தட்டி நடந்த நிதி மந்திரியார் கலக்கப்பட்டு கண்ணீர் வடிப்பதைக் காணும் பொழுது!

* * *

ஆந்திராவிலே ராஜமகேந்திரபுரத்துக்கு அருகிலுள்ள கதியம் என்ற இடத்திலே தான் கண்ணீர் கலந்த பேச்சுக்களைக் கொட்டியிருக்கிறார்! அவ்வூர் மாதர் நலவுரிமை இலாகாவின் சார்பில் அங்கு சென்ற—இல்லை! விஜயம் செய்த—கனம் மந்திரியாருக்கு ஒரு வரவேற்பு வழங்கப்பட்டதாம். அதற்குப் பதிலளிக்கையில் தான், பெண்மணிகள் அடங்கிய அந்தக் கூட்டத்தில் கோபாலர் 'கோ'வெனக் கதறியிருக்கிறார் — சோகமும், துக்கமும் கலந்த வார்த்தைகள் மூலம்!

ஆந்திரா—தாய் மொழி பேசப்படும் இடம்—எனவே ஆங்கிலம் மறந்து, அழகு தெலுங்கிலேதான் பேசினாராம்! தாய்மொழியில் அவர் வைத்த 'ஒப்பாரி', நம் காதில்பட வாய்ப்பு இல்லையென்றாலும், அதை அப்படியே ஆங்கிலத்தில் தந்திருக்கிறது 'மெயில்' பத்திரிகை, "மந்திரியின் ஒப்பாரி" என்று கொட்டை எழுத்துக்களில் மகுடமிட்டு! அந்த ஒப்பாரியிலிருந்து, எடுக்கப்பட்ட கண்ணீர்த் துளிகளில் சிலதான், நாம் ஆரம்பத்தில் தந்திருக்கிறோமே, அவை. அதைப் படிக்கும்போது

கோபாலரின் மீது அனுதாபம் பிறக்கிறது — மனித உணர்ச்சி காரணமாக; பாவம், நல்ல பிள்ளை காலக் கோளாறால் கைதவறி வைத்துவிட்டு கஷ்டப்படுகிறது என்று கூறுவாளே அம்மா அதைப் போல!

கதியத்திலே கனம் மந்திரியார் கண்கலங்கி யிருக்கிறார், வேதனைப் பட்டிருக்கிறார், விம்மியிருக்கிறார், எங்கு போனாலும் 'இது வேண்டும் அதைச் செய்து கொடு' என்றே மக்கள் கேட்கிறார்கள்! மந்திரிகள் என்றாலே, மக்கள் கோரிக்கைகளையும் குறைபாடுகளையுமே கொண்டு வந்து குவிக்கிறார்கள்.

பிச்சை எடுக்கும் பெம்மான்களா, அல்லது ஆளவந்த மேதைகளா என்று பத்திரிகைக் காரர்களும், மக்களும் கண்டனம் செய்கிறார்கள்.

இதற்குத் தானா மந்திரி பதவி பெற்றோம், ஒரு நல்வார்த்தை கூட எங்களுக்கு, எல்லாவிடத்திலும் இல்லாவிட்டாலும் எங்கேயாவது ஓரிடத்தில் கிடைக்கக்கூடாதா, எங்கு போனாலும் ஒரே கண்டனமும், கோரிக்கைகளுக்குமாகத்தானா இருக்கவேண்டும், என நிதிமந்திரியார், — அண்மையில் — அழுதிருக்கிறார்! ஆட்சிப்பீடம் ஏறிய முதல் ஒரு அன்புச் சொல்கூடக் கிடைக்கவில்லையாம்!!

வரவேற்பு அளிக்கிறார்கள், அவைகளில் ஒரு வார்த்தைகூட எங்களைப் பாராட்டியிருப்பதில்லை. அது பெரிய "லிஸ்டு" போல இருக்கிறது — மக்களுடைய குறைகளும் கோரிக்கைகளும் அடங்கிய பட்டியலாக இருக்கிறது, என்று பரிதாபமாகக் கூறுகிறார்.

அண்மையில், சில தினங்களுக்கு முன் தனது மந்திரிபதவி காலம் ஐந்து ஆண்டுகள் நீடித்தமைக்காக விழா கொண்டாடியவர்—நிதிமந்திரி. அவர், தான், கதியத்திலே கலங்கியிருக்கிறார்.

* * *

நிதிமந்திரியாரின் நிலை உண்மையில் வருத்தப்படவேண்டியதுதான் —அவரது சகாக்களுக்கும், அவருக்கும் எங்குசென்றாலும், இன்று பொதுமக்களிடையில் உற்சாகமோ, உணர்ச்சி வேகமோ, எழும்பவில்லையென்பது உண்மை. "காந்தி" யின் பெயர் சொல்லிக்கொண்டு கிராமங்களிலும் சுயராஜ்யம் என்று கூறிக்கொண்டு நகரங்களிலும், தொண்டர்களாய்ச் சுற்றிவந்த போது, கிடைத்த மாலை மரியாதை 'வாழ்க' என்ற முழக்கம், ஏராளமான கூட்டம் இப்போது இருப்பதில்லைதான். மந்திரி வருகிறாராம் என்று யாரிடமாவது சொன்னால் 'அவர்களுக்கென்னவேலை! ஊர் சுற்றவேண்டியதுதானே! ஒய்யாரமாகச் சம்பளம்வாங்கி உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள். நம்மைச் சொல்லு, நாய்போல் உழைத்தாலும் நாளைக்கு இருவேளை பட்டினி' என்றுதான் பதில்கிடைக்கிறதேயொழிய, முன்பு காட்டப்பட்ட உற்சாகம் இல்லை—இப்போது அந்த அளவுக்கு மக்கள் மன்றத்திலே ஆளவந்தார்மீதும், காங்கிரஸ் மீதும் இன்று அதிருப்தியும் ஆத்திரமும் நிறைந்து இருக்கிறது.

"சுயராஜ்யம் கோண்டுவரவில்லையா?"

"மதுவிலக்கை அமுல்நடத்தவில்லையா?',

"இதெல்லாம் மக்களுக்காக நாங்கள் சாதித்தது தானே"

இருந்தும், இவைகளையெல்லாம் மறந்து, எங்களைத் தூற்றுகிறீர்களே, துவேஷிக்கிறீர்களே என்று துயரகீதம் பாடியிருக்கிறார், அவர். அவர் சொல்லும் இத்தகவலை யாரும் மறுப்பதற்கில்லை, சுயராஜ்யம் கொண்டு வந்தது, மதுவிலக்கு அமுலுக்கு கொண்டுவந்தது ஆகிய செயல்கள் காங்கிரஸ்காரர்கள் இந்நாட்டுக்குச் செய்த சேவைதான். யாரும் மறுக்க மாட்டார்கள், ஆனால் விஷயம் இத்துடன் நின்றுவிடாதே, வந்தது சுயராஜ்யம், பின்னர்? என்று, ஒருகேள்வியும் எழும்பத்தானே செய்யும், அக்கேள்விக்குச் சரியான பதில் கிடைக்கவில்லையென்றால், எதிர்பார்த்து ஏமாந்தவர்களான மக்கள், ஆத்திரம் கரைபுரளாமல் போகுமா!

"இந்தியாவைப் போல உலகிலேயே எந்த நாட்டிலும் இவ்வளவு அதிகமான வரிகள் கிடையாது"

சென்ற சிலதிங்களுக்குமுன் காசியிலே, முழக்கமிட்ட, இந்தியாவின் துணைப்பிரதமர், இரும்பு மனிதர் சர்தார் பட்டேல், இதுபோலக் கூறியுள்ளார். உண்மையில் இதுபோல, இன்று மக்கள் அரசாங்கத்துக்கு வரி செலுத்துகிறார்கள், வாடுகிறார்கள். அதிகமாக வரிசெலுத்திய அவர்கள் அரசாங்கத்திடமிருந்து, அதுவும் சுயராஜ்யமல்லவா என்று எண்ணிக்கொண்டு, அதிக நன்மைகளை எதிர்பார்க்கிறார்கள், அவைகளைச் செய்யவோ வக்கில்லை, வழியில்லை வரிபோதவில்லையென்று பதில் கிடைத்தால்?

(5-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்பில்ஸ்பரி ஊருக்கு உழைத்த உத்தமர். சிக்கலைத் தீர்த்த சிங்கம் விஞ்ஞானக் கண்ணால், வேண்டிய அளவு சாதிக்கலாம் என்பதை உணர்த்தியவர்.

விஞ்ஞானநூல் ஒரு கையிலும் விநாயகர் ஸ்தோத்திரம் இன்னொரு கையிலும் வைத்துக்கொண்டு, வீணாகப்பொழுதைப் போக்கித் திரிகின்றார்களே இங்குள்ளபலர், வேதமோதியாகவும் விஞ்ஞானியாகவும் ஏககாலத்தில் விளங்கவேண்டும், என்ற எண்ணத்துடன் வேடதாரிகளாய்! இதுபோலல்லாது, சமுதாயத்துக்கு நாசம் விளைவிக்கும் ஒருநாசச் செயலை அழிப்பதற்காகத் தனது நல்லறிவைப்பயன் படுத்தினார் — வாழ்வில் வளமில்லையென்றாலும்தன் ஆசையில் பலன் கண்டார்—வெற்றி பெற்றார், மக்கள் மனதில் நிறைந்தார்!

●

பிறப்பு

15—11—49 செவ்வாயன்று நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் துணைவியார் தோழியர் கல்யாணிக்கு கோவையில் ஆண் குழந்தை பிறந்தது என்றும் தாயும் சேயும் நலம் என்றும் அறிய மகிழ்கிறோம்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram,

REGD 4642 M

சந்தா விபரம்
1 ஆண்டு ரூ 7.
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

மலாய்நாடு 12 காசு
இலங்கை 15 சதம்

மலர் 8 | 25—12—49 | இதழ் 26

[பேரறிஞர் பராஞ்சிபே]

பகுத்தறிவு—ஒரு பகலவன்

"போடுவோமா, இரண்டு ஆட்டம்!"

"முன்னூத்தி நாலா! மூணு சீட்டா!"

"எதாவேண்டுமானாலும் சரி, ஏதோ இரண்டு ஆட்டம்!"

"சரி போடுவோம்!"

"போடுவோம்னு சொல்லிகிட்டே நிக்கிறியே, உட்காரப்பா!"

"நீ எழுந்திருச்சி இடங்கொடுத்தால்ல நான் உட்காரலாம்!"

"ஏன்? இப்படி எதிர்த்தாப்பலே உட்காரேன், இங்கேதான் உட்காரணுமாக்கும்!"

"ஆமாங்க! கோவிச்சுக்காதிங்க— மேற்குப் பார்த்து உட்கார்ந்தா எனக்கு ஆட்டம் வர்ரதில்லேங்க— கிழக்குத்தான் எனக்கு ராசி!"

• • •

"அடாடா! என்ன ஆட்டம், என்ன ஆட்டம்"

"கொன்னுப் பூட்டாங்களே, சிங்கம்னு, சிங்கங்கள் தான்!"

"திக்கு முக்காடிப் போயிட்டானுவ, அப்பா! நம்ப இந்தியன்னுலே அவுங்களுக்குகெல்லாம் ரொம்ப இளக்காரமாயிருந்தது!"

"அதுதான் வட்டியும் முதலுமா வாங்கிக்கிட்டானுக, என்ன ஆட்டம்! 'பேட்' எடுத்தது தான் தெரியும், மட மடன்னு '50' ரன்கள்!"

"அதுமட்டுமல்லப்பா, அவுங்க வந்து 'பேட்' தூக்கி கொஞ்சநேரங் கூட ஆகல்லே......"

"நம்ம ஆள் 3 பேரை 'அவுட்' பண்ணிட்டானே!"

"நம்ம இந்திய ஆட்டக்காரர்கள் ஜெயிச்சதுக்கு எது காரணம் தெரியுமோல்லியோ?"

"அவுங்களோடே ஆட்டம், திறமை!"

"ரொம்பத் தெரிஞ்சவன் தான் நீ......அது இல்லேப்பா, காரணம்!"

"அப்புறம் என்ன, வெளிநாட்டு ஆட்டக்காரர்களுடைய இளிச்சவாய்த்தனம்னு சொல்றயா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, இன்னைக்கு காலையிலே ஆட்டம் ஆரம்பமாகும் முன் நம்ம ஊர் குருக்கள், சாமியார்கள்......"

"ஆசீர்வாதம் செய்தார்களாக்கும் போப்பா!"

"நான் சொன்னா, உனக்கு அப்படித்தானிருக்கும்"

"ஆட்டம் ஆரம்பிக்குமுன் இன்னைக்கி காலையிலே தேங்காயுடைத்து ஜபம் செய்தார்களாம்பா!"

• • •

'சுயராஜ்யம் வரப்போவுது தெரியுமா!"

"யாருக்கு? நம்ப நாட்டுக்குத்தானே!"

"ஆமாம்!"

"இது தெரியாதவங்க கூடவா இருப்பாங்க?"

"இல்லே, எப்ப தெரியுமா நம்ம சுயராஜ்யம் ஆரம்பமாவுதுன்னு!"

"நாளைக்கு......"

"அதுதான் இல்லே! இன்னைக்கு அர்த்த ராத்திரிலேயிருந்து..."

"நடு ராத்திரியிலேயா? அதென்னப்பா—அப்படி!"

"அப்பத்தான் நல்ல வேளையாம்! நட்சத்திரம், நாழியெல்லாம் ஒத்து வருதாம், ஆகவே......"

"சர்க்காரே ஏற்பாடு செஞ்சிருக்காங்களா!"

"பின்னே, யாரு செய்வாங்களாம், சர்க்காருதான்!"

* * *

சீட்டாடும்போது, அநேகமாக, எங்கும் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற உரையாடல் நடைபெறாமலிருப்பது அபூர்வம். எனக்குத் தெரிந்த நண்பர், சீட்டாட்டத்திலேயே தன் வாழ்க்கையைப் பணயம் வைத்திருப்பவர், எப்போது, எங்கே ஆட உட்கார்ந்தாலும் இது போலத்தான் வம்பும், வழக்கும் செய்வார்! ஆனால், ஆடிவிட்டுத் திரும்பும்போது அவரைப் பார்த்தால் பரிதாபமாகயிருக்கும்! சோர்ந்த நடை, வருத்தமான பேச்சு — இத்துடன் இரண்டு நாட்களுக்கு வெளியே தலைகாட்டமாட்டார்! இடம் பார்த்து உட்கார்ந்தாரல்லவா, அவர், அவருக்கு ரூபாய்க் கணக்கில் நஷ்டமாயிருக்கும்; பணம் வந்திருக்காது!

அதே போலத்தான்—சில ஆண்டுகளுக்கு முன்னர் காசியில் வெளிநாட்டாருக்கும்—இந்தியருக்கும் கிரிக்கெட் ஆட்டப் பந்தயம் நடைபெற்றது. அதில், இந்தியக் குழுவினர், வெற்றி பெற்றனர் அமோகமாக. அதற்கு, அவர்கள் ஆட்டத் திறமைதான் காரணம் என்று சொல்லப்படவில்லை. காலையில் அவர்கள் ஆட்டம் ஆடுமுன், காசி குருக்கள்மார், அர்ச்சனையும் மந்திரோச்சாடனமும் செய்தனராம்; ஆகவே அவர்கள் வெற்றி பெற்றனராம்! அப்படிக் கூறப்பட்டது — அந்த வெற்றி ஆடியவர்கள் திறமையாலல்ல, அர்ச்சனையின் மகிமையால் என்பதாக. ஆனால், கடந்த ஆண்டில் பார்த்தோம், அடிக்கடி கவனித்து வருகிறோம், வெளிநாட்டுக் குழுவும் — இந்தியக் குழுவும் இங்கு விளையாடுவதை. அவைகளில் வெளி நாட்டுக் குழுவினர்தான் அநேகமாக வெற்றிபெறுகின்றனர்—விருது பெறுகின்றனர்! எங்கு போய் ஒளிந்துகொண்டதோ, இங்குள்ள வேத வேதாந்திகள், மந்திரத்தால், மாங்காய் விழச் செய்பவர்கள், அர்ச்சனையால் அண்ட சராசரங்களையும்

ஆட்டிப்படைப்பவர்களான இவர்களுடைய திறமையெல்லாம்! தெரியவில்லை!!

இந்தியாவைப்போல நீண்ட நாள் ஆங்கிலேய ஆதிபத்தியத்தின் பிடியில், அடிமைப்பட்டுக் கிடந்த நாடு பர்மா. அதற்கும், 1947ம் ஆண்டில், பிரிட்டிஷாரால் சுதந்திரம் அளிக்கப்பட்டது. எந்தவேளையில் சுயராஜ்யம் எனப் பிரகடனப்படுத்துவது, சுயராஜ்ய சர்க்காராகப் பதவியேறுவது, என்பதற்கு நள்ளிரவைக் குறித்தார்கள்—ஊர் உறங்கும் நேரத்தை, கள்ளன் கன்னமிடச் செல்லும் வேளையை! அந்த நேரத்தை அவர்கள் குறித்ததற்குக் காரணம், பகலில் நேரமும் வேளையும் சரியாக இல்லையென்று கூறப்பட்டது! ஆனால், சோதிடர்களைத் துணைக் கொண்டு, கோள்களின் நிலையறிந்து கொண்டாடப்பட்ட சுதந்திர விழா மலர்ந்து ஓரிரு ஆண்டுகள் கூட ஆகவில்லை! பர்மா வாழும் வகையென்ன, அங்கு நிலவும் நிலையென்ன? 'பர்மாவின் பரிதாபம்' என்றுதானே, கொட்டை யெழுத்துக்களில் செய்தியைக் காண்கிறோம்—நல்ல நாள் பார்த்து நாழி நட்சத்திரம் குறித்துத்தான் ஆரம்பித்தனர் சுயராஜ்ய சர்க்காரை. ஆனால், அதன் தலைவராகயிருந்தவர் — அவுங்சான் — வாழ்வு ஓராண்டுக்குள் குண்டுகளால் கொள்ளையிடப்பட்டது! இன்றோ, நாளையோ என்று ஒரு பக்கம் கரீன்கள் தாக்க, இன்னொரு புறம் கம்யூனிஸ்டுகள் கலவரம் செய்ய, எப்போது வீழ்ச்சியோ என்று வேதனைக்கும் சோதனைக்கும் உள்ளாகி நிற்கிறது! இங்கு இந்தியாவில் மட்டுந்தானென்ன! அர்த்தராத்திரியில்—வேதபாராயணங்களுடன், ஸ்லோகங்கள் சொல்லப்பட்ட பிறகுதான் சுயராஜ்யம் கொண்டு வரப்பட்டது—என்ன? சுகம் மலர்ந்தா விட்டது—தொல்லையும் அவலமும், துயரக் கீதமுந்தானே நிலவுகிறது!

* * *

சித்தரித்த இவை, மக்கள் மன்றத்திலே, அறிஞரிடையிலே, அரசாங்கத்தை யாள்பவரிடையே, பகுத்தறிவு பயன் படாக்காரணத்தால் நிலவும், மூடநம்பிக்கையைக் காட்டுவதாகும். மூடநம்பிக்கை, இங்கு மட்டும் என்றல்ல, உலகின் பலபாகங்களிலும் பல உருவங்களில், பல மாதிரிகளில் காட்சியளிக்கிறது — அதன் கோரவாய் எத்தனை யெத்தனையோ மகுடாதி மன்னர்களையும், புகழ்பெற்ற நாடுகளையும், விருது பெற்ற வீரர்களையும் தன் காலடியில் தாசனாக ஆக்கிக்கொண்டிருக்கிறது!

கேட்டதை அப்படியே நம்பு, சிந்திக்காதே, பெரியவர்கள் கூறியதில் பிழைகாணாதே என்ற கட்டளைகள் 'விதி' என்ற மோகன மெருகுடன், நரகம் மோட்சம் என்ற பயமுறுத்தலுடன், மதப் போர்வையின்மீது சுமத்தப்பட்ட காரணத்தால், இன்றும் மனிதசமுதாயம் அறியாமை— சிந்தித்துப் பார்ப்பது கூடாது— 'பாவம்' என்ற பயம் ஆகியவைகளில் அகப்பட்டு விழிக்கிறது! விஞ்ஞானத்தை வேரறுக்கவும், பழைமைக்கு வரவேற்பு நல்கவும் மதம் என்ற கல்லுக்கு விருத்த வெண்பா பாடவும், தூண்டுவதும், சுயபுத்தியைச் சூறையாடுவதும்—இந்த மூட நம்பிக்கைதான். மூடநம்பிக்கை ஒரு நச்சுமரம் — அதைத் தகர்க்கும் கோடரி, பகுத்தறிவு!

பகுத்தறிவு மக்கள் மன்றத்திலே ஏற்பட்டு விட்டால், வாழ்விலே மணம் எழும்பும்— இருட்டை வீழ்த்தி எழும்பிடும் நிலவைப் போல! ஆனால், இன்று, விஞ்ஞானம் உலகை ஆக்கும் 'கடவுள்' என்று கருதப்படுகிற இந்நாட்களிலே என்ன நடைபெறுகிறது, விஞ்ஞானம் ஒருகையில், வேதப்புத்தகம் இன்னொருகையில்! இந்த வேதனை நிலை இங்கு—துரதிர்ஷ்ட இந்தியாவில்தான் என்றில்லை! எல்லா நாடுகளிலும் இதேகாட்சிதான்—

மூடநம்பிக்கை முறியடிக்கப்பட வேண்டும் என்று நடைபெற்று வரும் போராட்டம், அறிவுகயப்பணி—ஒரு சோகத் தொடர் கதை! இந்தப் பணியில் இறங்கிய எண்ணற்றோர் வாழ்வை நாசமாக்கிக்கொண்டிருக்கின்றனர், கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளாகி இருக்கின்றனர்!

எவ்வளவோ வீரர்களின் இரத்தத்தால் கழுவப்பட்டு ஒளிவீசச் செய்யப்படுவதுதான் பகுத்தறிவு.

* * *

மனிதன் பிறக்கிறான்—வாழ்வதற்கு! ஆனால், வாழ்கிறானா? பதில் பரிதாபமானது.

வாழ்க்கை வாழ்வதற்கே! என்று கூறுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால் வாழ்கிறார்களா — இல்லை! சுதந்தரம் நமது பிறப்புரிமை; அடைவோம் சுதந்தரம் என்று ஆர்ப்பரிக்கின்றனர்—அடைகின்றனர். ஆனால், வாழ்வில் சுதந்தரம் உண்டா? இருக்கிறதா? கிடையாது!

பரிதாபம், இல்லை, கிடையாது! ஆகியவைகள் தான், கேட்கப்படும் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்களாகயிருக்கும். வாழ்க்கையின் ஒவ்வொரு துளி நேரத்திலும் மனிதன் போராடுகிறான்—அவன் வாழ்வு போராட்டத்திலேயே பிறக்கிறது, —வளர்கிறது; போராடிப்போராடியே இறக்கிறான்! ஆரம்பமும் முடிவும் சோகத்துடனேயே ஆரம்பித்து துயரத்திலேயே முடிகிறது! வாழப் பிறந்தான் -பிறக்கிறான் — ஆனால் வாழ்வதில்லை, வாழமுடிவதில்லை!

அவனைப் பிடித்துப் பீடிக்கும் மதம், மூடநம்பிக்கை, பழைமை என்கிற கயிறுகள் அவன் வாழ்வைக் கொள்ளைகொண்டு விடுகின்றன. அவைகளுடன் ஒன்றி, ஆட்பட்டு, தணிந்து, பணிந்து, வாழ்வதே வாழ்வு என்று தன் வாழ்க்கையின் இலட்சியத்தை வரையறுத்து முடித்துக் கொள்கிறான்!

ஓடும்நதியை, மனிதனின் கண்களில் மதமும் மூடநம்பிக்கையும் காட்டுவதில்லை. பயனும் பலனுமில்லாத பாசிபடிந்த குட்டையைத்தான் காட்டுகின்றன — குளி, இதுதான் உன்னுடைய இடம் என்று சுட்டிக் காட்டி!

மனிதனும் தன்னுடையது இதுதான் என்றெண்ணிக்கொண்டு அதற்குள் கிடந்து, அங்கு ஒருபுறம் பாசி பிடித்திழுக்க, இன்னொருபக்கம் நீர்ப்பாம்பு கடிக்க, சேறு காலை நகர்த்தவும் விடாமல் தடுக்க, இவைகளைப் பொறுத்துக் கொள்வதுதான் வாழ்க்கை, என்று எண்ணி, அவைகளுடன் போராடி—அல்லது தாண்டி—கரையேறுவதற்குப் பதில், அதிலேயே மூழ்கி, மனிதப் பிறவியை மாய்த்துக்கொள்கிறான்—வாழாமல், வாழ்க்கையை அனுபவிக்காமல்! வேதனையான நிலை இது. இப்போதும்

நீடிக்கிறது—நிலைக்கவைக்க முயற்சி செய்யப்படுகிறது!

* * *

இந்த வேதனை நிலையையும், விஞ்ஞானமும்உரிமைவேட்கையும்மனித இதயங்களில் விளையாடும் இந்நேரத்தில்கூட இது நீடிப்பதுபற்றியும் சென்னையில் 18—12—49 அன்று நடைபெற்ற இந்திய பகுத்தறிவாளர்கள் மாநாட்டில் தலைமை தாங்கிய டாக்டர் பராஞ்சிபே அவர்களால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. டாக்டர் பராஞ்சிபே — பல்துறை கண்ட அறிஞர். ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக, தன்னுடைய காலத்தை, பகுத்தறிவு வளர்ச்சிக்கெனச் செலவழித்து வருபவர். அவருடைய சொற்பொழிவில் அருமையான எண்ணங்கள், இந்நாட்டுக்குத் தேவையான இலட்சிய கீதங்கள் முழக்கமிடுகின்றன. அவருடைய பேச்சு, சுயமரியாதைக்காரர்களுக்கு பழம்சோறு— பலஆண்டுகளாக இத்தேபணியில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால், இதே கருத்துக்களைப் பரப்புவதில் பாடுபட்டு வருவதால்!

டாக்டர் பராஞ்சிபே நல்ல அறிஞர் என்பதுமட்டுமல்ல, பொறுப்புள்ள பதவிகளையும் வகித்தவர். 1876ம் ஆண்டிலே பிறந்த, அவர் பூனா கல்லூரியிலே படித்தபின் கேம்பிரிட்ஜ், பாரிஸ், ஜெர்மனி முதலிய வெளிநாடுகளுக்குச் சென்றுபடித்து பட்டங்கள் பெற்றவர். தான் ஆரம்பத்தில் படித்த கல்லூரியிலேயே கணிதப் பேராசிரியராகவும் பிரின்சிபாலாகவும், பணியாற்றியவர். இந்தியப்பெண்மணிகள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், பம்பாய் சர்க்காரில் மந்திரியாகவும், இந்திய கவுன்சில்உறுப்பினராகவும்,இருந்து பணியாற்றிய இவருடைய முழுப்பெயர் சர். ரகுநாத், புருஷோத்தம பராஞ்சிபே ஆகும். இவர், ஆட்சி வியவகாரங்களில் தேறியவர். லக்னோ பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராகவும், இந்திய வரி விசாரணைக் கமிட்டியில் உறுப்பினராகவும், இன்னும் இதுபோன்ற பலதுறைகளில் மக்கள் மன்றத்துக்கானநன்மைக்காரியங்களில்ஈடுபட்டுப் பாடுபட்டவர். ஆஸ்திரேலியாவில் இந்திய சர்க்காரின் அரசியல்தூதராக இருந்து அண்மையில் சிறிது மாதங்கள் முன்புவரை பணியாற்றியவர்.

இத்தகைய சிறந்த நல்லறிஞர், இன்றைய ஆளவந்தார்களுடன் தொடர்பும் நேசமும்கொண்டுவிளங்குபவர், அளித்துள்ள கருத்துரைகள் இங்குள்ள 'பெரியமனிதர்களில்' சிலருடைய கவனத்தைக், கவரத்தான் செய்யும். எனவே, அவருடைய சொற்பொழிவில் சிதறியுள்ள சிந்தனை முத்துக்கள் —குறிப்பிடப்படவேண்டியன. வளரும் உலகுக்கு வசந்தவிழாவில் ஏற்படும் குதூகலத்தையும் இன்பத்தையும் வழங்கக் கூடியன.

* * *

உலகின் எல்லாப் பாகங்களிலும் நிலவும் எதேச்சாதிகாரப் போக்கு, பகுத்தறிவுக்கு எதிர் முரணானது. பகுத்தறிவு படுத்தால் எதேச்சாதிகாரமே உருவாகும்.

* * *

எதேச்சாதிகாரம், சர்வாதிகாரம் ஆகிய இந்த ஆபத்துக்கள் வேறு எந்த நாட்டையும்விட இங்கு அதிகமான அளவில் வளர்ந்து கோண்டு வருகின்றன — நம்மை நடுங்கவைக்கும் வகையில்! காரணம், கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவைகளுக்குப் பதில் நாம் அவைகளைக் கூறிய "நபர்களுக்கே" அதிக முக்யத்துவம் கோடுத்து வருகிறோம்.

* * *

டாக்டர் பராஞ்சிபே கூறுகிறார், எதேச்சாதிகாரம் எங்கு உருவாகிறது, சர்வாதிகாரத்தின் வித்து எப்படி வளர்கிறது, விஷ மரமாகிறது என்பதை!

உள்ளத்தில் உதிப்பது சரியெனப் பட்டால் உரைக்க வேண்டும்— அது மனிதனின் சுதந்திரம். அப்படி உரைக்க யார் நீ, நான் சொல்வதுதான் திட்டம், இட்டதுதான் சட்டம்—இது சர்வாதிகாரம்,எதேச்சாதிகாரம்.

மதம், எதேச்சாதிகாரத்தால் வளர்ந்தது. அங்கு சர்வாதிகாரம் தழைக்கக் காரணமாக யிருந்தது, "நான் சொன்னதை நம்பு! இல்லையென்றால் நரகம்தான்!!" என்று மக்களை நம்பச் செய்து, நம்பாதவர்களைப் பயம் பலாத்காரம் ஆகியவைகளால்கொடுமைப் படுத்திச் செய்யப்பட்ட அட்டூழியங்கள்.

மகான்களுக்கும், மத சிரேஷ்டர்களுக்கும், முனிபுங்கபவர்களுக்கும், மக்கள் தலை வணங்கினர்; பக்தி செலுத்தினர், அதுவே முக்தி மார்க்கம் என்று கூறப்பட்டதால்! விளைவு —அவர்கள் 'இட்டதே கட்டளை, சொன்னதே வேதவாக்கியம்' என்று ஆயிற்று. குருஜி சொன்னால், பக்தன் எதிர்த்துப் பேசக்கூடாது, கைகட்டி வாய் பொத்தி நின்று அவர் கூறுவதைக் கேட்கவேண்டும் என்பது சம்பிரதாயமாயிற்று!! அதுவே மத மார்க்கம், மனிதரைப் புனிதராக்கும் புண்ய வழி, என்று போதிக்கப்பட்டது. அதன் விளைவாக "மதம் என்றாலே—மறுத்துப் பேசக்கூடாது! குறையிருந்தாலும் கூறக்கூடாது—அப்படி எதிர்த்து உரைப்பவன், நாஸ்திகன், நம்பிக்கையில்லாதவன்!" என்ற எதேச்சாதிகார நிலையும், சர்வாதிகாரமும் சிருஷ்டிக்கப்பட்டது! தாங்கள் சொல்வதே சரி, இட்டதே சட்டம், எதிர்த்துப் பேசுவதோ, குறை கண்டு கூறுவதோ தேசத்துரோகம், தேசபக்தியற்றவர்கள் என்று தூற்றுகிறார்களல்லவா, அரசியலில் அவர்கள் நடந்துகொள்ளும் போக்கைக் கண்டித்தோ, இடித்துரைத்தோ, எதிர்க் கட்சிக்காரர்கள் கூறினால்! இதுவும், மதத்துறையில் எப்படி அறிவுக் கண் அடைக்கப்படவேண்டும் என்று மதவாதிகளால் கூறப்படுகிறதோ, அதுபோல் அரசியல் துறையில் கூறப்படுவதாகும்! மதத்துறையில், சந்தேகம் கேட்டால் ரௌரவாதி நரகம்கிடைக்கும்,இவன் நாஸ்திகன் என்று இலகுவாகப் பட்டம் சூட்டப்படுவான், அதே போல அரசியலிலும், ஆளவந்தாரைக் குறை கூறுவது தேசத்துரோகம், என்று பட்டம் தரப்படுகிறது! இரண்டு இடத்திலும் அறிவுக்குத் திரையிடப்படுகிறது— இதன் விளைவாக எதேச்சாதிகாரம் உருவாகிறது!

இந்த உண்மையைத்தான் தோழர் பராஞ்சிபே கூறியுள்ளார், இன்று இந்தியாவில் நிலவும் அரசியல் நிலைமைகளை யொட்டி. உண்மையுங்கூட, எப்படி மதத்துறையில் சங்கராச்சாரி, ராமானுஜாச்சாரியார், சிருங்கேரி மடத்தார், ஜீயர் ஆகியோர்

(13-ம் பக்கம் பார்க்க)

திகைத்தார்! திணறினர்!

14-ம் பக்கத்தொடர்ச்சி

டாடித் திகைத்தனர்! ஆங்கிலத்திலேயே கேள்விகளைக் கேட்குமாறு உதவிச் சபாநாயகர் பணித்தார்!

கவர்னர் ஜெனரல் சி. ஆருக்கும் மகிழ்ச்சி மலர்ந்தது – வரவேற்பு தெலுங்கில் இல்லாமல்–புரியும்படியான ஆங்கிலத்தில் இருந்ததால்!

ஹிந்தி கற்றுக் கொள்ளுதல் என்பதுபற்றி, மந்திரியார் இந்தியில் பேசவில்லை—தமிழில் கூட பேசவில்லை, பேசுவதற்கு இயலாது என்ற காரணத்தால்! ஆங்கிலத்தில் தான் பேசுகிறார்!!

ஆங்கிலம்–இவர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கும் மொழியாக இருக்கிறது. ஆனால், ஆங்கிலத்தை விரும்பிப் பேசும் இவர்களோ–இந்திப் பிரியர்கள், இந்திதான் இந்நாட்டின் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று கூறுபவர்கள், முனைந்து, முயற்சி செய்பவர்கள்!

உதவி சபாநாயகரும், உணவு மந்திரியாரும் ஏதோ, எப்போதோ என்று டில்லி சென்றவர்களோ, சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம் என்று போனவர்களோ அல்ல! எத்தனையோ ஆண்டுகளாகத் தொடர்பும், கடந்த சில ஆண்டுகளாக அங்கேயே அநேகமாகத் தங்கியிருக்க வேண்டிய அவசியத்திலும் இருப்பவர்கள்—இன்னும் இருந்து கொண்டிருப்பவர்கள். தினசரி, வேலையாள் முதல் விருந்தினர்வரை பலவித வடநாட்டார்களைச் சந்திப்பவர்கள், உரையாடுபவர்கள், இந்தி பேசுபவர்களைத் தங்கள் தலைவர்களாகப் பெற்றவர்கள், இருந்தும் இந்தி புரியவில்லை—ஆங்கிலத்தின் மூலம்தான் அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியநிலை இருக்கிறது!

கவர்னர் ஜெனரல் சி. ஆர். பிறந்த இடமோ, வளர்ந்த பூமியோ, வெளி நாடல்ல; ஆந்திரத்துக்கு அருகிலிருக்கும் தமிழ் நாடுதான்.

ஒரு காலத்தில் சென்னைப் பிரதமராக இருந்தபொழுது, ஆந்திராவுடன் பழகவேண்டிய நிலையும், அவர்களுடன் அடிக்கடி—ஏன், தினசரி— சந்திக்கவேண்டிய கட்டமும் ஏற்பட்டிருந்தது. அதுமட்டுமல்ல, ஆந்திராவுக்கும் தமிழகத்துக்கும் இருக்கும் தொடர்பு, வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இருப்பது போன்றதல்ல—நெருங்கியது—நெடு நாட்களாக இருப்பது, நீடித்துக் கொண்டே இருப்பது! இருந்தும், முன்பு தெரிந்த தெலுங்கு மொழியைச் சில ஆண்டுகள் வடநாடுபோய் இருக்க நேரிட்ட காரணத்தால் மறந்துவிட்டேன் என்கிறார்—மதிப்புக் குரிய இந்திய கவர்னர் ஜெனரல்.

இதே போலத்தான், ஆட்சிப் பீடம் ஏறிப் பல ஆண்டுகள் ஆகிய பின்னரும், தமிழில் பேசமுடியாது, ஆங்கிலத்தில, எப்படிஇந்திக் கற்றுக் கொள்ளுவது என்பது பற்றிப் பேசுகிறார் — நமது மாகாணக் கல்வி மந்திரி!

இவர்கள் யாவரும் இந்தியைத் தேசிய மொழியாக்கப்பாடுபடும் திருவாளர்கள் — அவசியம் எனக் கூறுபவர்கள்—அதற்காக, நம்மீது தடியடி நடத்தவும் சிறையில் தள்ளவும் தயங்காதவர்கள்! இருந்தும்— இந்தி பக்தர்களாகிய இவர்களுக்கு ஆங்கிலம் தேவைப்படுகிறது — டில்லியில்! விசாகையில்! சென்னையில்!

ஆங்கிலம் அந்த அளவுக்கு இந்தியாவில வளர்ந்திருக்கிறது — மற்ற நாடுகளைப்போல! பெரும்பாலான படித்தவர்கள் அதையறியும் வாய்ப்பும்— வசதியும் — கிடைத்தவர்களாக இருக்கிறார்கள் ஆங்கிலத்தில், எழுதவும், பேசவும், உலகிலேயே சிறந்த பாண்டித்ய முடையவர்கள் என்று கருதப்படும் அளவில்பேரும் புகழும் பெற்றவர்கள் இங்கு பலருண்டு! ஆங்கிலம்உலகமொழி—இதுவெல்லாம் நாம் இதுவரை இந்தி மொழி ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கூறிவந்ததும், கூறி வருவதும் ஆகும்.

ஆனால் வடநாட்டினருக்கு, உண்மை கண்களில் புலப்படவில்லை, தங்கள் மொழி பிரதான நிலைபெற வேண்டும், ஆட்சி மொழியாகவேண்டும் என்ற ஆவேசமும், வெறியும் பிடிக்கும் காரணத்தால்!

இந்தியா ஒரு பரந்த உபகண்டம், பல இனங்களை, பலமொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு: எனவே, அங்கெல்லாம், ஒருபுது மொழியைப் புகுத்தி, அதை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதில் அல்லலும் தொல்லையும் ஏராளம்— இடைஞ்சல்கள் மலை மலையாக இருக்கின்றன என்ற உண்மைமை உரைத்தால், நமக்குக் கிடைப்பது, தேசத்துரோகிகள் என்ற பட்டம்!

தாய்மொழி தவிர, பிற மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டுமானால், அதற்கென எடுத்துக்கொள்ள வேண்டிய சிரத்தையும், அனுபவிக்க வேண்டிய கஷ்டமும் ஏராளம், அதிகம். அதுவும், ஒரு புது மொழியைப் புரிந்து, அவைகளில் பழகவேண்டுமென்று முயற்சித்தால் அது சாமான்யமானதோ, சங்கடமின்றிக் கற்றுக்கொள்ளக் கூடியதோ அல்ல!

இந்த உண்மை—நாம் இதுவரை கூறுவது —எனினும், இது, இப்போது, சட்ட சபையில், கவர்னர் ஜெனரல் வெளியிட்ட தகவலில்— மலபார மாதவ மேனன் பேச்சில் விளங்குகிறது, தெளிவாகத் தெரிகிறது.

X X X

நாட்டை ஆளும் பொறுப்பும், சிறப்பும் பெற்றிருக்கும் நாயகர்கள், —இந்தி இந்நாட்டின் பொதுமொழியாக்கப்படவேண்டும் என்று கருதுபவர்களுடைய நிலை இது! அதிலும், இவர்கள் யாவரும் இன்று நேற்றல்ல; எத்தனையோ ஆண்டுகளாக இந்திதான் தேசிய மொழியாக வேண்டும் என்று கூறி வருபவர்கள், அப்படிக் கூறுவதுதான் தேசபக்தியின்சிறந்த பண்பு என்று எண்ணுபவர்கள், இவர்கள் திகைத்திருக்கிறார்கள் ஓரிடத்தில்! இன்னோரிடத்தில் 'இதற்குப்' பதில் 'அது' இருந்தது எவ்வளவு நல்லதாயிற்று தெரியுமா என்று கேட்டிருக்கிறார் ஒருவர், இன்னொருவர் இந்தி மொழி கற்றுக்கொள்வதுபற்றி ஆங்கிலத்தில் பேசுவதாக அறிவிக்கிறார்! அதிலும், முன்பு தெரிந்திருந்த கொஞ்சநஞ்சம் தெலுங்கும் தான் வடநாடு சென்று சிலகாலம் தங்கியிருந்த காரணத்தால் மறந்து போய்விட்டதாம்; கூறுகிறார், கூச்சமோ, மறைவோ, வெட்கமோ இல்லாமல் — இந்நாட்டுக் கவர்னர் ஜெனரலாகயிருப்பவர்! அருகிலிருந்து அன்யோன்யமாகப் பழகிக் கற்றுக்கொண்ட கொஞ்ச நஞ்சம் தெலுங்கும் மறந்து போய் விட்டதாம், சொல்லுகிறார் அவர். ஆனால், அதே நேரத்தில் எங்கேயோ இருக்

கும் வடநாட்டு மொழியை இங்குள்ளோர் கற்றுக்கொள்ள வேண்டுமாம், சர்க்கார் மொழியென ஏற்றுக்கொள்வது அவசியமாம்!

நாட்டின் ஆட்சியைத் தலைமை தாங்கி நடத்தும்பொறுப்பிலிருக்கும் பூமான்கள், ஆங்கிலம் இல்லையென்றால், அல்லாடவேண்டிய, நிலையிருக்கிறது! திகைத்திருக்கிறார்கள் சபாநாயகரும் மத்தியசர்க்கார் மந்திரியாரும், இந்தியில் கேள்விகேட்கப்பட்டதால் புரியாமல், தெரியாமல்!

விசாகையில் பேசிய கவர்னர்ஜெனரலும் தெலுங்குக்குப் பதில் ஆங்கிலத்தில் வரவேற்பு இருந்ததைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது போலல்லாது, தெலுங்கில் அளிக்கப்பட்டிருந்தால் திணறித்தான் போயிருப்பார்! அதே 'கதி'தான் 'கனம்' மாதவமேனனுக்கும் ஏற்பட்டிருக்கும், அவர் இந்தியிலேயே பேசவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருந்தால்!

இருந்தும், ஆங்கிலம், எந்த அளவுக்கு இந்நாட்டில் பொதுமொழியாக நிலைத்திருக்கிறது என்பது அறிந்திருந்தும், உரத்த குரலில் ஊருக்குபதேசிகளாக—இந்திதான் அவசியம், அதுதான் பொதுமொழியாகவேண்டும்—என்று தினசரி முழக்கமிடுபவர்களாக உலவி வருகின்றனர்!

X X X

பல மொழிகள் ஒரு நாட்டில் உலவுகிறதென்றால், அங்குவாழும்எல்லா மக்களுடைய தாய்மொழியையும் ஒருவர் அறிந்துகொள்வதென்பது இயலாது—அது, ஆகிற காரியமுமல்ல. ஆனால், அப்படி எல்லா மொழிகளையும் கற்றுத்தானாகவேண்டும் என்று கூறப்பட்டால் அனந்தசயனமும் தௌலத்ராவும் இந்தி அறிந்தவர்களாக ஆகியிருக்கவேண்டும், சி. ஆர். தெலுங்கு கற்றவராக இருந்திருக்கவேண்டும், கல்வி மந்திரியார் மாதவமேனன் தமிழ் கற்றவராக ஆகியிருக்கவேண்டும்!

இது சாத்யமா என்றால், இல்லைத்தான்! ஆனால், அதே வேளையில், நடைமுறையில் இருக்கும் ஒரு பொது மொழியை, எல்லார்க்கும் புரிந்ததாக, எல்லாத் துறைகளிலும் சிறந்ததாக இருக்கிற உலக மொழியை, ஆங்கிலத்தை, நீக்கிவிடவேண்டுமாம்! அதற்குப் பதில் இந்தி கொண்டுவரப்படவேண்டுமாம்—அதுதான் தேசசேவையாம், தேசபக்தியாம்! கூறுகிறார்கள். அதே நேரத்தில் மக்களுக்குப் புரிய, எந்த மொழி கூடாது என்று கூறுகிறார்களோ, அதே ஆங்கிலத்தையே தனது கருத்தைத் தெரியவைக்கும் மொழியாக கைக்கொள்ளுகிறார்கள்! இவர்களை என்னவென்று சொல்வது, எத்தர்கள் என்றா, எதையும் தெரியாதவர்கள் என்றா!

அறிவிப்பு.

1—1—50-லும், 8-1-50-லும், வெளிவரவேண்டிய, "திராவிட நாடு"

தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய ஊர்களில் நடைபெற விருக்கும் நாடகங்களையும், திருச்சியில நடைபெற விருக்கும் மாவட்டத் தி. மு. கழக மாநாட்டையும் முன்னிட்டு நிறுத்திவைக்கப் படுகிறது.

அடுத்த இதழ்

பொங்கல் மலராக, வாசகர்களுக்கு 14—1—50-ல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படும்.

அடுத்த இதழ்

"திராவிட நாடு" அலுவலகத் தோழர்களுக்குப் பொங்கல் விடுமுறை விடவேண்டியிருப்பதால், 22—1—50-ல் வெளிவர வேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, 29-1-50-ல் வழக்கம்போல்வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆள்பவரை — ஆளும் கட்சியின் தலைவர்களே தூற்றுகின்றனர், வாய்ப்பந்தல் போட்டோமே யொழிய எதையும் காரியமாக்கிக் காட்டவில்லை யென்று கூறுகின்றனர். அதோடு "ஓரிடத்தில் ஒன்று கூறுகிறோம் இன்னொரிடத்தில் அதையே மறுத்து இன்னொன்று பேசுகிறோம்" என்றும் சொல்கிறார், காங்கிரஸ் தலைவர். முன்னொன்று வைத்துப்பின்னொன்று பேசுகிறோம் என்று வெட்கமோ, வேதனையோ இல்லாமல் கூறுகிறார்!

காங்கிரஸ் ஆட்சிக்கு, அதன் தலைவர்களே இத்தகைய நற்சாட்சிகளை அளிக்கின்றனர்! கண்டிக்கின்றனர், கபோதிகளாகி விட்டோம், போகும் பாதை மோசமெனத் தெரிந்தும் அதிலேயே நடந்து கொண்டிருக்கிறோம், என்று கூறுகிறார்!

'மாஜி' தலைவருடைய கூற்றும், இப்போதைய தலைவருடைய கண்டனமும் மக்கள் மன்றத்திலே நிலவும் அதிருப்தியின் எதிரொலிகள்!

இந்த எதிரொலிகளைச் சமர்ப்பிக்கிறோம், நமது தேசிய நண்பர்களின் சிந்தனைக்கு.

டில்லி—அழகுவனம்!

டில்லி—அழகு ராணிகளின் உத்தியானவனமாகவும், வியாபாரிகளின் வேட்டைக் காடாகவும் ஆகிக் கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. வெளிநாட்டு வியாபாரிகள், விருந்தினர்கள், விளம்பரப் படுதாக்கள் எல்லாம் சமீப காலங்களில் மிக மிக அதிகமாக உலவ ஆரம்பித்திருக்கின்றனராம்.

இதன் காரணமாக அங்குள்ள போலீஸ்காரர்களுக்கு வேலை அதிகமாகி வேளைக்கு வேளை எங்கெங்கு, யாரார் எப்படி எப்படி, இருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கவேண்டிய கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறதாம்!

எதிரொலிகள்!

தேர்தலில்பொதுமக்களுக்குத்தந்த உறுதி மொழிகளை மறந்துவிட்டோம்! காற்றில் பறக்க விட்டுவிட்டோம்!!

சொன்னோம்—பல காரியங்களைச் செய்யப் போவதாக. ஆனால் அவைகளை நாம்நிறைவேற்றவில்லை! ஒதுக்கிவைத்துவிட்டோம்!!

தொழிற்சாலைகளைத் தேசிய மயமாக்கப் போவதாகக் கூறினோம்—செய்தோமா? இல்லை, அந்த எண்ணமே, நம்மிடமிருந்து மறைந்துவிட்டது!

முதலாளிகள் நம்முடன் ஒத்துழைக்க மறுக்கின்றனர்—நம் தலையிலடிக்கின்றனர்! தவிக்கச் செய்கின்றனர்!!

தேசிய மயமாக்குவோம், எல்லாவற்றையும் நாமே எடுத்து நடத்துவோமென்றால் அதற்குப் பணம் இல்லை! பணம் கிடைக்க வழியில்லை!!

வரிக் குறைவு செய்தால் அது முதலாளிகளுக்கே சலுகையாகிவிடுகிறது—சகல நன்மைகளும் கிடைக்கிறது! ஜமீன்தாரிகளை ஒழிக்கத் தயங்குகிறோம், முடியுமா என்று கேட்கிறோம், அவசரம் ஏன் என்று சொல்கிறோம்!

தேர்தலின் போது கூறிய பல செயல்களைச் சாதிக்க நாம் தயங்குகிறோம்! பின்வாங்குகிறோம்!!

பெரிய அணைக்கட்டுகளைக் கட்ட முடியவில்லை, குடிசைத் தொழில்களை முன்னேறச் செய்ய வழியில்லை என்று திகைக்கிறோம்! திண்டாடுகிறோம்!!

முன்னொன்று பின்னொன்றுப் கூறுகிறோம், நமது வார்த்தைகளில் உறுதியில்லை, இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பேசுகிறோம், ஸ்திரமில்லை! சரியான நிலையில்லை!!

X X X

"சிக்கலான அரசியல் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டால் எந்த நாட்டிலும், எந்தச் சர்க்காரும் ராஜினமா செய்வதுண்டு!

அதுபோல, இவர்களும், சர்க்கரை நெருக்கடி போன்றவைகளின் போது விலகியிருந்தால் நான் வரவேற்றிருப்பேன்—மகிழ்ந்திருப்பேன்!

குழந்தைகள் திண்டாடுகின்றன சர்க்கரை கிடைக்காதால் — ஓலமிடுகின்றனர்!

ஆனால் சொன்ன விலையைக் கொடுத்து வாங்க முடிந்தவர்களுக்கு மட்டும் 'டன்' கணக்கில சர்க்கரை கிடைக்கிறது! இதுபோன்ற நெருக்கடிகளின் போது சர்க்கார் "போய்" விடுவதால் எந்தவித வருத்தமும் இருக்காது, ஏற்படாது!"

X X X

சர்க்கார் மீது கண்டனக் கணைகளை வீசியிருக்கிறார், ஒருவர்!

இன்னொருவர், இந்தச் சர்க்கார் சர்க்கரைப் பிரச்னையின் போது ராஜினாவா செய்திருந்தால் யாரும் வருத்தப்பட்டிருக்க மாட்டார்களென்கிறார்!

இத்தகைய வார்த்தைகளை வீசினவர்கள் எதிர்க்கட்சிக் காரர்களல்ல! 'சமான்ய' தேசியத் தொண்டர்களோ, கூட அல்ல!

முன்னவர் காங்கரஸ் தலைவர்—இன்னொருவர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர்! காங்கிரஸ் கட்சியின் தலைவரும், தலைவராக இருந்தவரும் "தங்கள்" சர்க்காருக்குத் தந்திருக்கும் 'சர்ட்டிபிகேட்' இது! சொன்னோம்—எல்லாவற்றையும்; இன்று காற்றில் பறக்கவிட்டு விட்டோம், பண முதலைகள் ராஜ்யமாகிவிட்டது என்கிறார் இப்போதைய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையா. இந்த சர்க்கார், சர்க்கரைப் பிரச்னையின்போது, சமாளிக்க முடியாத காரணத்தால் ராஜினமா செய்திருந்தால் யாரும் வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள் என்று கூறுகிறார்—முன்பு காங்கிரஸ் தலைவராகயிருந்தவரான ஆச்சாரியகிருபளானி!

விந்தையல்ல, உண்மை! இவர்களிருவரும், ஒருவர்பின் ஒருவராக இத்தகைய 'பட்டமளிப்பை' நடத்தியிருக்கின்றனர்—அதுவும், பொதுக் கூட்டத்திலோ, நண்பர்கள் கூடிப் பேசியபோதோ, விளையாட்டிற்கோ, கேலிக்கோ பேசப்பட்டதல்ல! காரசாரமான வாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இந்திய சட்டசபையில் இத்தகைய 'பட்டமளிப்பு விழாவை' நடத்தியிருக்கின்றனர்!

X X X

மேலேகூறும், குற்றச்சாட்டுகளை நாமோ அல்லது வேறு எதிர்க்கட்சியினரோ, கூறினால் அதற்குப் பரிசுகளாகத் தடியடி, துப்பாக்கிக் குண்டுகள், சிறைஆகியவைகள்தான் வழங்கப்படுகின்றன!

எனவே, இந்தக் கூற்றுக்களை காங்கிரஸ் நண்பர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம், காணுங்கள், வேறுயாராவது இவைகளையே கூறினால் சீற்றமும் சினமும் உருவாகிறதே, இப்போது அதே குற்றச்சாட்டுகள் எங்கிருந்து வந்திருக்கின்றன என்று பாருங்கள் — சிறிது சிந்தியுங்கள் என்ற வேண்டுகோள்களுடன்.

நாட்டை ஆள்வது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களின் அரசாங்கம். அந்த அரசாங்கத்தை ஏற்றுநடத்தும் கட்சியே, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களைக் கண்டிக்கிறது — கிண்டல் செய்கிறது! காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர், இந்த அரசாங்கம் போவது குறித்து எவருக்கும் வருத்தம் ஏற்பட்டிருக்காது என்று கூறுகிறார்! எவருக்கும் ஏற்பட்டிருக்காதாம் வருத்தம்—கூறுகிறார் கிருபளானி. இன்றும், அவர் ஒரு காங்கிரஸ் பிரமுகர், காந்தியார்வழிகளையே பின்பற்றி வருவதாகக் கூறிக்கொள்பவர். அவர் கூறுகிறார், இதுபோல, இந்த ஆட்சி போனால் எவருக்கும் வருத்தமோ ஆயாசமோ ஏற்படாது என்று!

கிருபளானிகூட முன்னாள் காங்கிரஸ் தலைவர்—ஆனால் இப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும் பட்டாபியே கண்டிக்கிறார், சொன்னதைக் காற்றில்பறக்க விட்டு விட்டோம் என்று வெளியிடுகிறார்—

(6-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் மலர்

பொங்கல் திருநாளை முன்னிட்டு,
"திராவிட நாடு"
56 பக்கங்களுடன்
எட்டணு விலையில் வெளி யிடப்படும்.

ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான காப்பிகளுக்கு 3—1—50-க்குள் தெரிவித்துவிடவும். பொங்கல் மலர், வாசகர்களுக்குப் பொங்கலன்றே கிடைக்கக்கூடியதாக 13—1—50-ல் இங்கிருந்து அனுப்பப்படும்.

மானேஜர்.

திராவிட நாடு

ஞாயிறு] 25—12—49 [காஞ்சி

திருச்சியும் மகிழ்ச்சியும்

"அலறினேன், துடித்தேன், உயிர் போய்விடுமோ என்று தவித்தேன்—என் அங்கமெல்லாம் நடுங்கியது—இதற்கா இவ்வளவு பாடுபட்டோம்? அரும்பு மலர்வதற்குள் கருகுவதா, பிறந்து வளரும் பெறற்கரிய செல்வம் என் குழந்தை, இப்படி இறப்பதா, வேண்டுமென்று வீசப்பட்ட அம்புக்கு இரையாவதா, ஐயோ என்று அலறினேன்!

நான் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை இப்படித் தவழ்ந்து விளையாடும் என் தங்கத்தின் மீது, அம்பு வீசப்படும் என்று! இருந்தாலும் எய்து விட்டனர்; எய்தவர்களைப் பற்றி நினைப்பதைவிட, என் குழந்தையைப் பார்ப்பதே நல்லதென்று பார்த்தேன்! இப்படியா, இதனுடைய வாழ்வு முடியவேண்டும் என்ற வேதனை நெஞ்சைசுக்குநூறுக்கியது! சிரித்து விளையாடிய சிறுசு, தன்குறு நடையால், கொவ்வைச்சிரிப்பால் எங்களை—சூழ இருந்தோரை—மகிழ்வித்த மகவு! இப்படித்திடீரெனவீசப்பட்ட அம்பால், சாவதா! நினைக்கக் கூட முடியவில்லை; என்னுடைய இதயம் குமுறியது! கொந்தளித்தது!! இதற்காகவாடா செல்வமே, உன்னை நான் இவ்வளவு சீரும் சிறப்புமாய் வளர்த்தேன் என்று வாய்விட்டுக் கதறினேன், ஓலமிட்டேன்!

அடிபட்டுவிட்டது—சரியான அடி—அதுவும் வயிற்றில்! எங்கே இனி பிழைக்கப் போகிறது, அவ்வளவுதான் என்றனர் பக்கத்து வீட்டுக்காரர்கள்—அவர்கள் அனுதாபம் காட்டுவது போல நெடுநாளைய அசூயை வெளியிட்டனர். இறந்துவிடுமாம்! நான் பெற்ற குழந்தை!! இதை என்னெதிரிலேயே, அது அம்பு அடிபட்டதால் துடித்துக் கொண்டிருந்தபோது சொல்லினர்! துணிச்சல் ஏற்பட்டிருந்தது, அவர்களுக்கு, குழந்தை செத்துவிடும், பின் இவள் பித்தம் பிடித்தவளாகிவிடுவாள் என்ற பேத நினைப்பால்!

ஆனால், அடிபட்ட என் குழந்தை சாகவில்லை! பிழைத்துவிட்டதுமல்லாமல் அதோ புன்சிரிப்போடு, பூரித்து, 'அம்மா, அம்மா,' என்று என்னை அழைக்கிறது! அம்பு பட்டதும் உண்மை, அடிப்பட்டதும் உண்மைதான், காயமும்பலமானதுதான், குருதியும் கொட்டிற்று—இதைக் கண்ட என் எதிர்வீட்டுக்காரி முடிவும்தான் கட்டினாள், இறந்துவிடும் என் குழந்தை என்று! ஏனோ, அவளுக்கு என் குழந்தையின் அழகு மீது அவ்வளவு ஆத்திரம் என்று நான் துடிதுடித்தேன்!

இன்றோ, அதோ, என் அருமை மகன் ஓடி ஆடுகிறான், உட்காரமாட்டேனென்கிறான். அவன் உடலிலே அம்பு பட்டதால் ஏற்பட்ட காயமும் மாறிவிட்டது—வளர்ந்து கொண்டிருக்கிறான், முன்பைவிட இப்போது எவ்வளவு அழகாக வளர்ந்து விட்டான்! என்ன பேச்சு! எவ்வளவு எக்காளம்!"

• • •

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் இதயங்களிலே கூத்தாடும் எக்களிப்பு, பெருமகிழ்ச்சி, பேரார்வம் இது, இன்று! பெற்றெடுத்து வளர்த்த குழந்தையின் வாழ்வு, அம்புவீச்சால் அடிபட்டதைக் கண்டதும், எங்கே, இறந்து போய்விடுமோ என்று ஏங்கி, ஈனக்குரலில், என்ன செய்வேன் இனி, இதற்கோ பாடுபட்டேன் இத்துணை நாள் என்று கதறித் துடித்த தாயைப்போல, அழுதனர், ஐயோவென்று அலறினர், கண்ணீர்த்துளிகளைச் சிந்தினர், கதறினர், கிட்டத்தட்ட ஐந்து மாதங்கட்கு முன்பு!

இருள் படிந்து கிடந்த, நாட்டு வாழ்விலே, புதுமை ஒளி பரப்பும், 'விடுதலை வீரன்', 'புரட்சி இபக்கம்' என்று பல பெயர்களால் அழைக்கப்பட்ட, குழந்தை பிறந்து, அருமையாகவளர்க்கப்பட்டு, வந்தது திராவிட சமுதாயத் தாயால்—மகிழ்வுடன், முகமலர்ச்சியுடன், பெறும் பேறு பெற்றோம் என்ற பூரிப்புடன்! தத்தித் தவழ்ந்து, தளிர்க்கை நீட்டி, சிங்காரமாகச் சிரித்து, எழும்பிய சேயின் வயிற்றிலே, எதிர்பாராத நிலையில் வந்து தைத்துப் பாய்ந்தது ஒரு அம்பு—அதைக் கண்ட தாய் கதறினாள், கண்ணீர் வடித்தாள், தேம்பினாள், திகைத்தாள்!

திராவிடர் கழக, வளர்ச்சி நேரத்திலே 'ஏற்பட்ட' பேரிடி போன்ற நிலையைக் கண்ட திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ளமும் உணர்ச்சியும் ஐந்து மாதங்கட்கு முன்பு — தாமரையிலைத் தண்ணீராகத் தவித்தது, பாடுபட்டு வளர்த்த குழந்தை எங்கே பறிபோய்விடுமோ என்ற பயத்தால்—படபடப்பால்!

அந்த நிலை இன்று மாறிவிட்டது. பொங்கும் பூரிப்பால், எழும்பும் இதய மகிழ்வால், குதூகலித்து நிற்கின்றனர், தங்கள் உழைப்பால், புது மகிழ்வும் புது உணர்வும் பூத்துக் குலுங்கும் பொன்னாட்கள் மலர்ந்து,—மணம் வீசுவது கண்டு! நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கேஉரிமை யென்பதறிந்தோம் என்ற உரிமை முழக்கமும், மகேஸ்வரன் என்ற பெயர் கூறி ஆண்ட மாயினரின் அறிவைச்

ஜனவரி 1-ல் திருச்சி மாவட்ட மாநாடு

சூன்யமாக்கும் குள்ளநரிகளின் குறுகிய செயல்களை வெட்டி வீழ்த்துவோம் என்ற வீரமுழக்கமும், உழைப்பவன் ஊர்க்கோடியில் கிடக்கிறான், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இல்லாது, அவனைப் பாரீர், அவன் குறை தீர்க்கும் நாளைக் காண விரைந்தோடி வாரீர்! என்று சமரச சங்கநாதமும் செய்து கழக வீரர்கள் திக்கெட்டும் 'திக்விஜயம்' செய்து, நாடு பூரிக்க, கேட்பதா இவர்கள் பேச்சை என்று காதுமூடிய கனவான்களும் களித்து வர, இன்று திராவிட முன்னேற்றக் கழகம்—அறிவுப் பணியை முன்பைவிட அதிகமான அளவில் செய்து வருகிறது! எதிரிகள், கிண்டல் புரிந்தோர், எங்கே இதுகள் வாழப் போகிறது என்று வாழ்த்தியவர்கள் திகைக்க—வெகு வேகமான அளவில்!

* * *

வெற்றியும், பூரிப்பும் நமது இதயங்களிலே கூத்தாடுகின்றன! நமது பணிக்கு நல் வரவேற்பும், பாராட்டும், வாழ்த்தும் பல திசைகளிலிருந்து வந்து குவிந்துகொண்டிருக்கும், மகிழ்ச்சி நாட்களிலே, புத்தாண்டின் முதல்நாள் திருச்சிமாநகரிலே, மாவட்ட மாநாடு கூடுகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலாவதுமாநாடு கூடுகிறது!

கழகம் முகிழ்த்த நான்கு மாதங்களுக்கெல்லாம்—கூடுகிறது—முதல் முறையாக! நாற்பதுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களை நாடு நகர் பட்டி தொட்டி எங்கும் நிறுவிவிட்டு, மாநாடு கூடுகிறது மாவட்டத்தின் தலைநகரிலே!

மாநாட்டைக் கூட்டுவிப்பதில் முனைந்து நின்று பணியாற்றும் தோழர்கள், வரவேற்புக் கழக நண்பர்கள், அத்துணை பேரும் உழைப்பின் உருவங்கள், இலட்சியமே எங்கள் வாழ்வு என்று எண்ணும் இதயங் கொண்ட வீரர்கள், எங்கள் பணி இந்நாடு எங்கும் எங்கள் கொள்கைகளை விதைப்பதே, என்ற எக்காளங் கொண்ட இளைஞர்கள்! எனவே, திருச்சி மாவட்ட மாநாடு சீரிய முறையில், வெற்றி விழாவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை! மாநாடு என்றால் ஏதோ, நாலுபேர் வந்தனர், 'நல்ல பேச்சுக் கச்சேரி' நடைபெற்றது என்று கூறிக்கொள்ளும் நிலை கொண்டதல்ல திருச்சியிலே கூடும் மாநாடு! மாவட்டக்கழகத்தொண்டர்களின் முகாம்! உழைப்பின் உருவங்களின் கூட்டம்!

நினைத்தபோது கூட்டுவோம், ஏதாவது ஒன்று நடைபெறவேண்டுமே, எனவே நடத்துவோமே ஒரு மாநாடு என்ற எளிய எண்ணத்திலே நடைபெறுவதல்ல இம்மாநாடு. இம்மாநாடு நடைபெறுவதற்கும், முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டதற்கும் இடையிலே உள்ள நான்கு மாதங்களில், மாவட்டத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருக்கும் கிளைக் கழகங்களின் 'பட்டியலை'ப் பாருங்கள்.

திருச்சி
மலைக்கோட்டை
பெரியகடைவீதி
காலனி
மார்சர்பேட்டைரோடு
சோமரசம்பேட்டை
சோபனபுரம்
துறையூர்
கரூர்
புதூர்உத்தமனூர்
மணமேடு
ஸ்ரீரங்கம்—திருவானைகா
தாத்தையங்கார்பேட்டை
செயங்கொண்டம்
லால்குடி
ஜ. ஆலமரத்துப்பட்டி
சோமாபுரி
தேவதானம்
புதுப்பட்டி
மணக்கால்
திருவரம்பூர்
ஆழூர்
அம்பில்
சந்நாசிநல்லூர்
துலையாநத்தம்
கல்லணை
மேலக்கந்தர்வகோட்டை
புதுக்கோட்டை
அரண்மனைசிறுவயல்
குளித்தலை
உறையூர்
ஆலங்குடி
தவுட்டுப்பாளையம்
மணப்பாறை
மேட்டுப்பாளையம்
பன்னான்கோம்பு
புகலூர்

இன்றுவரை, திருச்சி மாவட்டத்திலே முகிழ்த்திருக்கும் முன்னேற்றக் கழகங்களின் தொகை இது! நல்ல அமைப்பு முறையில் இத்தனை இடங்களிலும் உதயமாகிப் பணியாற்றி வருகின்றன! இந்த நேரத்தில், கிட்டத்தட்ட நாற்பது கிளைக் கழகங்கள் ஏற்பட்டபின், முறைப்படி, இம்மாநாடு கூட்டப்படுகிறது! மாநாட்டிற்குத் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து — பாண்டிய மண்டல வீரர் தலைமை தாங்குகிறார். கோவில்பட்டியின் நகர சபைத் தலைவராக இருந்து, நற்பணிகளைச் செய்து வருபவரும், சீரிய நோக்கமும் செயல் புரியும் வன்மையுங் கொண்ட, தோழர் அவர். அவரைத் தலைவராகவும், மாநாட்டை ஆரம்பித்து வைப்பவராகப் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமியையும் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்—மகிழ்ச்சி நமக்கு! தோழர் பழனிச்சாமி — கொங்கு நாட்டுத் தொண்டர் தலைவர், விவசாயத் திறனும், குடியானவர்களின் வாழ்வு நலனைக் குறிக்கோளாகவும் கொண்டவர்.

இன்னும், முன்னேற்றக் கழக வரலாற்றில் முதலிடம் பெறும் இம்மாநாட்டில், எல்லாக் கழக வீரர்களும், பேச்சாள நண்பர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று அறிகிறோம். திருச்சி, முன்னேற்றக் கழகம் முன்னோடும் பிள்ளைகளின் முரசொலி எழும்பும் இடமாக, 1—1—1950 அன்று விளங்கப் போகிறது! வீரர்கள் யாவரும்கூடப் போகிறார்கள், வெற்றிப் பணி குறித்துத் திட்டம் தீட்டப் போகிறார்கள் திருச்சி மாவட்டத்துக்கு! வீரர் படையின் அணிவகுப்பும்,

அன்று இரவு "சந்திரமோகன்" நாடகம்

வெற்றி முழக்கமிடும் தொண்டர் கூட்டமும், 'வெட்டி வா, என்றால் கட்டி வந்தேன்' என்று விரைந்தோடிப் பணிபுரியும் தோழர்களின் படைவரிசையும் அன்று அங்கு கூடப் போகிறது! முரசமும், சங்கும் சேர்ந்து முழங்கப் போகிறது!

* * *

முன்னேற்றக் கழகம் முகிழ்த்த பின், முதல் முதலாகத் திருச்சியிலே நடைபெறப் போகும் இம் மாவட்ட மாநாடு எல்லா வகைகளிலும் ஒரு வெற்றி விழாப் போலப் இருக்குமென்றே நம்புகிறோம். திருச்சி — ஏனைய மாவட்டங்களுக்கும் வழிகாட்டியாக இருக்குமென்று நம்புகிறோம். நம் இதயத்தில் அந்த ஆசை எழும்புகிறது—அதை நமது வீரர்கள் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கையும் ஒளிவிடுகிறது!

✲

பழைமையையும் பாசிசத்தையும் எதிரிகளாகக்கொண்டு, அவைகளை வீழ்த்தி வெற்றி பெற அணி வகுத்து நிற்கும் நமது பணி—இலேசானதல்ல. எனவே, கூடிக் கலைவதும், தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுச் செல்வதும் நமது இலட்சியமாக இனி நமது எண்ணத்தில் இடம்பெறாது.

சொற்கள், வாயிலிருந்தல்ல, இதயத்திலிருந்தே வெடிப்பவையாக இருக்கவேண்டும். வேதனை நிரம்பிய சமுதாய வாழ்வை, பாலை வனமாகக் கிடக்கும் நாட்டை, அறிவும் செல்வமும் கரைபுரண்டு ஓடுமாறு செய்ய நாம் மேற்கொண்டிருக்கும் தொண்டு — பட்டத்தையோ பாராட்டையோ பரிசையோ நமக்கு வழங்குவதல்ல! இவை நமக்கு எட்டிக்காய்கள் — எட்ட முடியாதவை என்ற எண்ணத்தாலோ 'ஏன்?' இந்தப் பழம், புளிக்கும் என்ற சூது நினைவாலோ அல்ல—நினைத்தால் "பல" இல்லாவிட்டாலும் 'சில'வாவது பெறும்படியான வகையுமுண்டு, வழியுமுண்டு-மக்கள் ஆதரவும்உண்டு! அவைநமக்குக் கசக்கும் காய்கள், நமது பணி, கனியைக் காணுவதற்கு, காயையும் பிஞ்சையும் கண்டு மகிழ்ந்து பறித்துப் பின் பரிதாபப்படும் தகைமையதல்ல!

'கோழைகள் விலகி நிற்கட்டும், வீரர்கள் எத்தனை பேர்!' என்று கேட்கும் வீரப் பரணிபாடி, வெளிக் கிளம்பி விட்டவர்கள்தான் நாம். இந்த வேதனையும் சோதனையும் நிலவும் சமுதாயத்தை, சாக்கடை நாற்றம் போக்கி, சந்தன மணம் கமழும் இடமாக, இன்ப வீடாக, இந் நாட்டை சீராக அமைக்கும் செயல் புரியப் புறப்பட்டு விட்டவர்கள் நாம்!

"ஏறு, ஏறு, வேகமாக முன்னேறு; சருக்குப் பாதைதான், செங்குத்தான குன்றுதான், கல் இடிக்கலாம், முள் குத்தலாம், மோசம் விளையலாம்; இருந்தாலும், முயற்சியை இழக்காதே, இகழ்ச்சிக்குள்ளாதே, ஏறிச் செல்!" என்பதையே நமது இதயகீதமாக ஆக்கிக் கொண்டுள்ளோம்!

எத்தனை எத்தனையோ ஆண்டுகள், ஆயிரக் கணக்கான வருடங்கள், சீர்கெட்டுச் சிதைந்த ஒரு வாழ்வை நிமிர்த்தும் பணி நம்முடையது — கூனலை நிமிர்ப்பதுபோல, குருதி குடிக்கும் சிங்கத்தை எதிர்ப்பதைப் போல!

எனவே, நம்முடைய இந்தப் பணி, 'ஏனோ, தானோ' வென்று நினைக்கக்கூடியதோ, நீண்ட பெருமூச்சுடன் விட்டுவிடுவதோ, கைதட்டுதல்களைப் பெற்று 'கனம்'களாக ஆகிவிடுவதோ அல்ல!

நமது இதயம்—நகரங்களில் மட்டுமல்ல, பட்டிதொட்டிகளிலும், குமுறும் விவசாயி அழுகுரல் எழுப்பும் பாட்டாளி ஆகியோரிடை மட்டுமல்ல, வாழமுடியாது தவிக்கும் மத்தியதர வர்க்கம் — எல்லோரிடையும் பதிந்து கிடக்கிறது! நமது பணி, அங்கெல்லாம் வேகமாக, இன்னும் வேகமாக, வர வர வேகமாகப் பரவ வேண்டும்! அதுதான் இன்று நம்முடைய இலட்சிய வரலாற்றின் அரிச்சுவடி—முதல் வேலை

✲

மாவட்ட மாநாட்டைக் கூட்டுகிறார்கள், திருச்சி மாவட்ட நண்பர்கள்—இயக்கத்தின் இருதயங்கள்! திருச்சி — மகிழ்ச்சி தருகிறது நமக்கு, உள்ளத்தில் குதூகலம் உண்டாக்குகிறது! அவர்கள், பணி பாராட்டக்கூடியது-குறுகிய காலத்தில் இத்துணைக் கிளைக் கழகங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர்! இயக்கக் கொள்கைகள், புயல் வேகத்தில், மக்கள் மனதிலே மலரப் பணியாற்றியுள்ளனர்—இந்தப் பணி, இன்னும் பன்மடங்காக வேண்டும், எங்கு பார்த்தாலும், கிளைக் கழகங்கள் எழும்ப வேண்டும், நமது எண்ணங்கள் பரவவேண்டும், மக்கள் மனதிலே மலர்ச்சி எழும்பவேண்டும்—இதற்கான திட்டங்களை மாவட்ட மாநாடு வகுத்துத் தரும் என்று நம்புகிறோம்! வளர்க அவர்கள் தொண்டு, வாழ்க அவர்கள் என்று வாழ்த்துகிறோம், நமது இதயத்திலிருந்து எழும்பும் மகிழ்ச்சி கொண்டு.

சென்னை

தி. மு. க.

மாவட்ட மாநாடு

★

15—1—50-ல்

சென்னையில்

நடைபெறும்!

வருந்துகிறோம்

—0—

முல்லைக்கொம்பை நமது நண்பர், இயக்கத்தோழர் M. P. வடிவேல் அவர்களின் சகோதரியாரும் தொகரப்பள்ளி D. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தம்பி தோழர் இராமமூர்த்தியின் துணைவியாருமான தோழியர் சரோஜினி திடீரென்று தமது 22-வது வயதில் காலமானர் என்பதையறிய மிகவும் வருந்துகிறோம். அருமைச் சகோதரியை இழந்து ஆற்றமுடியாத் துயரத்துக்கு ஆளாகியிருக்கும் தோழர் M. P. வடிவேல் அவர்களுக்கும் அவரது தம்பி சத்தி அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க இந்தோனேஷியா!

★ ★ ★

சிறை! அடக்குமுறை! இவைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது இந்தோனேஷியாவில், எத்தனையோ ஆண்டுகளாக அவர்கள் உள்ளத்திலே கொழுந்துவிட்டெரிந்த விடுதலைத் தீ, முற்றுப் பெற்று வருகிறது—எலி, புலியை ஆட்டிவைத்ததுபோல டச்சு ஆதிபத்தியத்தின் கீழ் அகப்பட்டு விழித்து, அல்லலுற்ற இந்தோனேஷிய மக்கள் வாழ்விலே சுதந்திரம் மலருகிறது—வெளிநாட்டுப் பிடிப்பு விலகுகிறது! வரும் 27ந் தேதி முதல் இந்தோனேஷிய ஐக்கியக் குடியரசு உதயமாகிறது—டச்சு ஆதிபத்தியத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள் வாழ்விலே "புதுமை" மலர்கிறது! வாழ்விலோர் திருநாள் உதயமாகிறது!

அன்றைய தினம் டச்சு ராணி ஜூலியானு, இந்தோனேஷ்யாவுக்கு தனது அதிகாரத்தை மாற்றிவிடப் போகிறார். இந்தோனேஷியா—சுதந்திர நாடாக—ஆகிவிடும்!

கடந்த உலகப்போரின் விளைவாக டச்சு ஆதிபத்தியத்தின் கீழிருந்த இந்தோனேஷியா, ஜப்பான்கைக்கு மாறியது! ஜப்பானியர், ஜவா—முதலிய தீவுகளைக் கைப்பற்றினர்—பின் ஜப்பான் சரணடைந்தது. டச்சு சர்க்கார் வெற்றி விழாக்கொண்டாடிற்று. மீண்டும் தன் ஆதிபத்தியத்தை இந்தோனேஷியா மீது செலுத்த ஆரம்பித்தது! எற்கெனவே, பல்லாண்டுகளாக இந்தோனேஷிய மக்கள் மனதில், எங்கேயோ இருக்கும் டச்சுக்காரருக்கு இங்கென்ன வேலை! ஏன் அவர்கள் நம் எஜமானர்களாயிருக்க வேண்டும், என்ற கேள்வி எழும்பி, விடுதலை! விடுதலை!! என்ற வீரச்சொல, ஒவ்வொருவருடைய இதயத்திலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது-பார்டை நேஷனல் இந்தோனேஷியா என்ற கட்சியின் கீழ் நின்று சுதந்திரமுழக்கம் செய்தனர்! அன்று முதல், தொடர்ந்து அவர்களுக்கும டச்சு ஆதிபத்தியத்துக்குமிடையே போர், நடைபெற்றது!

பல மக்கள் களத்திலே பிணமாயினர்—பெற்றே தீருவோம் சுதந்தரம் என்ற வீர முழக்கங்களை எழுப்பி எதிரொலித்துக்கொண்டே! எனினும் எத்தனை நாட்களுக்குத் தான் 'எரிமலை'யை மூடிவைக்க முடியும்! எனவேதான் டச்சு ஆதிபத்தியம், இன்று தன் பேராசையை ஒழித்து, வாபஸாகிறது, தன் ஆதிக்க ஆசையை விட்டு விட்டு!

இந்தோனேஷிய ஐக்கியக் குடியரசின் தலைவராக—டாக்டர் சுகர்னே தேர்ந்தெடுக்கப்பட்டு டிசம்பர் 18ந் தேதியன்று பதவியேற்றுவிட்டார்!

சிறை! அடி! உதை! அடக்குமுறை! ஆகிய தியாக தழும்புகளைப் பெற்று உரிமை வேட்கைகொண்டு, போராடிய ஒரு வீரர் அவர்!

ஜாவா—விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டநாடு. செல்வமும் செழிப்பும், கொழித்துக் கிடந்தாலும், ஏழ்மை மக்கள் வாழ்விலே தெரிந்தது! செல்வமிருந்தும் ஏழையராய், வறியராய், இல்லாதவராய், இருந்தனர் அவர்கள்! இது 'என்ன' என்று நினைத்தான், சிந்தித்தான், இக்குறை தீர்க்க முடியுமா, என்று எண்ணினுன், இதுவே என் இலட்சியம் என்று கூவினுன்—அதன் முடிவாக அவன் வாழ்வு பொதுப்பணிப் பாதையில் திரும்பியது! அவருடைய சேவையால், அயர்ந்து உறங்கிய இந்தோனேஷிய மக்கள் இதயங்களிலே 'விடுதலை' 'எமர்டிகா!' என்ற வீரமுழக்கம் எழும்பியது! மக்கள் மனதிலே சுதந்தரக் கனலை மூட்டி விட்ட குற்றத்திற்காகப் பன்முறை சிறையில் தள்ளப்பட்டார் — நாடு கடத்தப்பட்டார்!

சுகர்னே-புதுக்குடியரசின் பிரதமராகப் பதவியேற்றிருக்கும் டாக்டர் ஹட்டா, முதலியோர் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்கள். சுகர்னேவின் முழுப்பெயர் டாக்டர் அப்துல் ரஹ்மான் சுகர்னே.

48-வது வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் அவர் இளமையிலிருந்தே தன் நாட்டின் முன்னேற்றத்தில், தன்மக்களின் வாழ்வுச் சிறப்பில் நாட்டங்கொண்டவர். கல்விக் கூடத்திலே படித்துக்கொண்டிருக்கையிலேயே சுகர்னேவின் மனமெனும் உலைக்கூடத்திலே வீரம், எழுச்சி, சேவை எனும் இலட்சியக் கருவிகள் கூர் செய்யப்பட்டன. தீவிரமாகப் பேசுவார், அதிகாரிகளின் அரட்டல் மிரட்டலுக்கு அஞ்சமாட்டார், அதே வேளையில் படிப்பிலும் சிரத்தை கொள்வார். புதிதாக மலர்ந்த குடியரசின் பீடத்தை அலங்கரிக்கும் பொறுப்பு அவருக்கு கிட்டியிருக்கிறது. கல்லூரியிலிருந்து கிளம்பியதும், சர்க்காரின் அதிகாரியாகப் போயிருக்கலாம் — இருந்தாலும் அப்பக்கம் அவருடைய எண்ணம் திரும்பவில்லை; மக்களின் கோரநிலைதான் அவருடைய கவனத்தைக்கவர்ந்தது!

"யானையைப் பூனை அடக்குவதா! 50-மடங்குக்குமேல் பெரியதான ஜாவாவை, என் பிறந்த நாட்டை, சிறு நாடு, டச்சு ஆள்வதா! அக்கிரமம், அடுக்காது" என்று, அன்று அவர் முழக்கமிட்டது வீண்போகவில்லை! வெற்றிகிட்டிவிட்டது! நாடு விடுதலை பெற்றுவிட்டது, புதுக் குடியரசு மலரப்போகிறது!

அன்னிய ஆதிபத்தியப் பிடிப்பிலிருந்து விடுபட்டு, வெற்றி விழா கொண்டாடப் போகும் 'இந்தோனேஷியா வாழ்க, வளர்க மக்கள் சுதந்தரம், உயர்க அவர்கள் வாழ்வு!' என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

✲

சனாதனச் சமர்த்து!

—✲—

இந்துமதச் சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்த்து டெல்லி சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதல்லவா, சனாதனிகளாலும், பழமைப் பித்தர்களாலும். அது குறித்துப் பம்பாயிலிருந்து வரும் வார இதழ் ஒன்றில் ரசமான தகவல் ஒன்று வந்திருக்கிறது.

நாம், அடிக்கடி கூறுவதுண்டு பழமைக்கும் பணப்பெட்டிக்கும் இருக்கும் தொடர்பு எப்போதுமே அதிகம், இரண்டும் கணவன் மனைவி போல் என்றெல்லாம்! பழமை ஒழிந்து புதுமை மலர்ந்தால், மக்கள் வாழ்வில் மலர்ச்சியல்லவா ஏற்பட்டு விடும்! பின், மாடமாளிகைகளும்—மண்குடிசைகளும் சமமாகவேண்டும் என்ற சங்கநாதமல்லவா எழும்ப ஆரம்பித்துவிடும்! ஆகவே, எப்போதும் பணதிபத்தியம் பழமையின் காதலனாகத்தான் இருக்கும்—தன் சுகபோகத்தில் மண்விழுந்துவிடாமல் தற்காத்துக் கொள்வதற்காக! அதை யொட்டியே, அது எப்போதும் சனாதனம், சாஸ்திரம், மதம், சம்பிரதாயம் ஆகியவைகளில் சிரத்தையும் சிந்தனையையும் காட்டுவது வழக்கம்—

இந்துமதத்தில் "சிறு" திருத்தம் செய்யச் சீறியெழுந்து உறுமிய சனாதனச் சங்கராச்சாரிகளுக்கும், சர்மாகளுக்கும், சாஸ்திரிகளுக்கும், டெல்லியில் சில பணமூட்டைகள் பக்கபலமாக இருந்தனவாம். 500-பேருக்குமேல் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று நமது தேசியத்தினசரிகள் பிரசுரித்திருந்தன அல்லவா "கோட்டை" எழுத்துக்களில்! தெருவில் நின்றவன், அம்மா பிச்சை என்று பாடிச் சென்றவன், பைத்தியம் பிடித்தவன் எல்லோரையும் கூலிக்கமர்த்திக்கொண்டுவந்து முன்நிறுத்தி, அட்டகாசம் செய்யும்படி தூண்டினராம்!

ஒரு பெண்மணி, சட்ட சபையின் தலை வாயிலில் நின்று கூத்தாடினளாம், அரை நிர்வாணத்துடன்! அவள் ஒரு பைத்தியமாம்—அவள் ஆடுவது கண்டு குழுமி நின்ற கூட்டத்தினர் கும்மாளமடித்தனராம்!

எப்படியிருக்கிறது பழமை காக்கப்படவேண்டும் என்பதற்குச் செய்யப்படும் செயல்கள்! 'சேச்சே! நினைக்கவும் வெட்கமாயிருக்கிறது என்கிறீர்களா,' சொல்லாதீர்கள், இதுதான் 'ராம ராஜ்யம்!'

———

'வன'வாசம்

—❀—

இந்தோனேஷியாவின் இந்திய அரசியல் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் சுப்பராயன்—குமாரமங்கலப் சீமான்—சட்டசபையிலே தனக்குக் கூறப்பட்ட நல்லுரைக்குப் பதில் கூறுகையில்,

"இந்த மாகாணத்தில் என்ன நடந்தது என்பதை நான் அறிவேன். இந்த மாகாணத்தின் எதிர்காலப் பொதுவாழ்வில் எனக்கு இடமில்லை என்பதையும் அறிவேன். எனவே அயல்நாடு சென்றுவது அங்கிருந்து நாட்டுக்கு உழைக்க இயலாதா என்று நம்பியே இப்பதவியேற்றேன்"

என்று கூறியுள்ளார்! அரசியல் வாழ்விலிருந்து 'வனவாசம்' செல்லப் போகிறேன் எனறு வருத்தத்துடன் வெளியிட்டுள்ளார் — டாக்டர் சுப்பராயன். இந்த மாகாணத்தில் என்ன நடந்தது என்பதை, அறிவேன் என்று கூறுகிறார்!

ஆட்சியாளரின் போக்குப் பிடித்தமில்லை போலும் என்று கூறவோ, அவரே, மந்திரியாக இருந்து மனம் போன போக்கில் நடந்தவர்! காங்கிரஸ் கட்சிமீதுவெறுப்புத்தோன்றிவிட்டது போலும் என்று எண்ணவோ, இன்றும் அவர் காங்கிரஸ்காரர்தான்—இருந்தும் 'இனி இங்கு எனக்கு இடமில்லை! என்று கூறுகிறார்!

வேதனையுடன் வெளியிடுகிறார்! அவர் ஒரு பெரிய குதிரைப் பந்தய வீரர்—கிரிக்கெட் நிபுணர் என்று கூறுவார்கள் — அதன் காரணமாக 'ஓரிடத்திலும்' அவர் கால் நிலைத்து நிற்காது என்று கூறுவார்கள்—அதுகூடப் பொய்யாகிவிட்டது, அவர் நீண்ட காலம் காங்கிரசிலேயே இருந்து வருவதால்!

ஆகவே 'வனவாசம்' போகவேண்டிய அளவு தொல்லையும் சூழ்நிலையும் எப்படித்தான் ஏற்பட்டதோ! நமக்கென்ன தெரிகிறது, பாவம், இவருக்கா இந்த நிலை என்று பரிதாபந்தான் ஏற்படுகிறது! ✲

ஐயோ பாவம்!

———

"ஒரு விக்கிரகம் எப்படி இருக்கிறதோ ஆடாமல் அசையாமல், அது போன்ற நிலைதான் கவர்னர் ஜெனரலாக இருக்கும் எனக்கும்" என்று முன்பு ஒருமுறை கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியார் கூறினார். ஒரு கோயிலிலுள்ள விக்கிரகத்தால் ஒன்றும் செய்ய முடியா விட்டாலும், அதனால்தான் எல்லாக் காரியங்களும் உலகில் நடைபெறுகின்றன என்று பக்தகோடிகள் பாமர மக்களுக்குக் கூறுகின்றனர்.

இந்திய சர்க்காரில் இப்போது வேலை பார்க்கும் கவர்னர்களின் பரிதாபகரமான நிலையையும் கோயில்களிலுள்ள விக்கிரகங்களின் நிலையோடு ஒப்பிடக்கூடிய முறையிலேயேதான் சர்க்கார்தேச பக்தசர்க்கார் நடத்துகிறார்கள். இந்த உண்மையை, ஐக்கிய மாகாண கவர்னர் சர் ஹோமி மோடி அவர்கள் தம்முடைய அனுபவத்தால் விளக்குகிறார்.

"நான் பதவி ஏற்றபின் என் உத்தரவின் பேரில் பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் படுவதைக் கண்டேன். ஆனால் அவற்றைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது......தனி நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் செய்திகள் அனுப்பும் 'சித்திரவதை'க்கும் நான் உள்ளாகவேண்டியிருக்கறது"

என்று 17—12—49-ல் லட்சுமணபுரியில் பேசியிருக்கிறார். உண்மையிலேயே நம் நாட்டுக் கவர்னர்களின் பரிதாப நிலையை நினைக்கும் போது 'ஐயோ பாவம்' என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள் தங்கள் பாக்கியை 5—1—50-க்குள் அனுப்பாவிட்டால், பொங்கல் மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாதென்பதையும், சந்தா ரத்து செய்யப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். நிர்வாகி.

பகுத்தறிவு ஒரு பகலவன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

'தேவதூதர்'கள் எனப் போற்றப்படுகிறார்களோ, அவர்கள் வாக்கு 'தேவ வாக்கு' என்று கூறப்படுகிறதோ, அதேபோலவே, இந்தியாவில் அரசியல் தலைவர்களுக்கு அரசியலில் இடமளிக்கப்பட்டிருக்கிறது — மதிப்பும் 'பக்தி'யும் காட்டப்பட்டு வருகிறது!

மதிப்பு வேறு; பக்தி வேறு; ஆனால், இந்நாட்டில் மதிப்பைவிட 'பக்தி' மனோபாவம் பரப்பப்பட்டு விட்டது. அரசியல் தலைவர்களை அடுத்த 'கடவுள்' என்று பூஜிக்கப்படும் மனோபாவம், வளர்ந்துவிட்டது. இதன் விளைவு, பூஜைக்குரியவராகப்போற்றப்படுகிற தலைவர், தவறாக நடக்க நேர்ந்த கொண்டால்கூட 'அதுதான் சரி' என்று கூறப்படும் அளவுக்குப்பக்தி மனோபாவம் படமெடுத்தாடுகிறது!

பக்தி-பகுத்தறிவைக் கொல்லும், பகுத்தறிவுவளராவிடில்,எதேச்சாதிகாரம் வெகு வேகமாக மக்களைத்தன் இரும்புப் பிடியில் சிக்கவைக்கும்.

இதை டாக்டர் பாஞ்சிபே நன்கு தெளிவு படுத்தியுள்ளார், அதே போல, தேச'பக்தி'யென்பது 'வெறி'யாக மாறிவிட்டதென்றும், இனியுலகம் இனியாவது இந்த வெறிவலையில் சிக்காமல், விருப்பு வெறுப்பு அற்ற சம நிலை நின்று நல்லதொரு சமுதாயத்தை, நாட்டு நிலையை அமைக்கவேண்டும் என்றும் அழைத்துள்ளார்.

* * *

உணவுப் பிரச்னை பற்றி அவர் குறிப்பிடுகையில், மனித சமுதாயம் வளர்ந்துகொண்டிருக்கிறது, மக்கள் வளர்ச்சி, ஆண்டுக்கு இலட்சக்கணக்கில் போய்க்கொண்டிருக்கிறது. இதைச் சரிப்படுத்த பகுத்தறிவுதான் பயன்படவேண்டும். 'பர்வமாச்சே'! கர்ப்பத்தை தடை செய்யலாமா? என்ற பழங்கதை பேசிப் பயனில்லை, சிந்தனைக்கு வேலை தந்து அவசியமா இது, என்று அறிவு கொண்டு ஆராய்ந்து ஆவன செய்யப்படுதல் வேண்டும்" என்று கூறியுள்ளார். கர்ப்பத்தடை—சுயமரியாதை இயக்கம் அன்று முதல் சொல்லி வருவதாகும்.

பெரிய திட்டங்கள் போட்டு விடுவதாலோ, அல்லது அவைகளை நிறைவேற்றி வைத்துவிடுவதாலோ மட்டும்; உணவுப் பிரச்னையைத்தவிர்த்துவிடமுடியாது. மக்கள் தொகை வளர்ந்துகொண்டிருக்கிறது—அந்த அளவு உணவுற்பத்தியை வளரச்செய்வது சாத்தியமானதல்ல, அதைத்தவிர்த்து, ஏதாவது ஒருவழி காணவேண்டுமென்றால், அதற்குள்ள ஒரேவழி கர்ப்பத் தடைதான். பகுத்தறிவுவாதிகள் என்று பலபடக் கூறிக்கொள்பவர்களுக்குக்கூட, கர்ப்பத்தடை, என்பது கலக்கத்தைக் கொடுப்பதாகவேயிருக்கிறது. கலக்கநிலை, சிந்திக்காததால் ஏற்படும் குற்றம். இதையும் பகுத்து அறிந்து, யோசித்து ஆவனசெய்யவேண்டும். அது, ஆட்சியாளர் நல்கும் உதவி, ஏற்பாடு ஆகியவைகளைத்தான் பொறுத்திருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார். அது உண்மையுங்கூட! அதேவேளையில், அதற்கான பிரச்சாரம், மக்கள் மனதிலே பாயவேண்டும்; அதன் அவசியத்தை மக்கள் உணருமாறு செய்யவேண்டும்!

* * *

பாமரமக்கள்—பசுக்கள். பரம்பரையாகச் செய்துவந்த வழக்கம், என்பதுதான் அவர்கள், தங்கள் செயல்கள்பற்றி, நமக்கு அளிக்கும் விளக்கம். ஆனால், படித்தவர்கள், உலகை உணர்ந்தவர்கள், விஞ்ஞானம் என்றால் என்ன, வேதகாலம் என்பது எது, என்பது பற்றிய விளக்கங்கள் உரைப்பதில் வல்லுநர்களாகி இருப்போரிடை உலவும் மூடநம்பிக்கை—வளரும் பகுத்தறிவுக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாகும்.

படித்தவர்கள், உலக விஷயத்தை உய்த்துணர்ந்தவர்கள் ஆகியோர்களிடையும் பழமையும் மூடநம்பிக்கையும் தாண்டவமாடுகிறது!

ஜோசியம், மந்திரத்தால் எதையும் சாதிக்கலாம், அதிர்ஷ்டம்அடிக்கும். இதுபோன்ற எண்ணங்கள் அவர்களிடையும் உலவுகின்றன.

பகுத்தறிவு வளரவேண்டும்—அது மக்கள் வாழ்வுக்கு இன்பம் அளிக்கும், அறிவுச் செல்வங்களாக மக்களை ஆக்கும். ஆனால், அன்றாடம் உலக விஷயங்களைத் திரட்டித் தரும் தினத்தாள்களிலிருந்து, வார இதழ், கிழமை இதழ்வரை, எல்லாம் என்ன செய்கின்றன!

பத்திரிகையைப் பிரித்தால், இங்கே இன்று காலட்சேபம், அங்கே புராணக் கதை படிக்கப்படுகிறது, அதிசயமான சம்பவம், அம்மனைக் கும்பிட்ட ஊமை பேசுகிறான், இது போன்ற சங்கதிகள்தான்,—பெரும்பான அளவுக்கு இடம் பெறுவதைக் காண்கிறோம்.

"பல பத்திரிகைகள் ஏராளமான இடத்தை ஜோசியத்தால் நிரப்பி, லாபம் அடைந்து வருகின்றன" என்கிறார் பாஞ்சிபே. சென்னைப் பத்திரிகைகளின் திருத்தொண்டு ஒவ்வொரு வாரமும் இதுவாகத்தான் இருக்கிறது! ஜோசியத்துக்கென்றே, பத்திரிகை வாங்கிப் படிப்பவர்களும் இருக்கிறார்கள்! இன்னும் அவைகளில் வரும் விளம்பரங்களைப் பார்த்தாலோ, 'மும்மூர்த்திகவசம்', 'பரீட்சையில் தேறவேண்டுமா, காதலில் வெற்றி வேண்டுமா' இதை வாங்கி அணிந்து கொள்ளுங்கள் — இது போன்ற விளம்பரங்கள்,—

மக்களிடை அறிவு மணத்தை நிரப்ப வேண்டிய பத்திரிகைகளுடையதொண்டு இப்படி இருக்கிறது!

உண்மையில், பகுத்தறிவுப்பணி—ஓரளவு வெற்றி பெற்று வருகிறதென்றாலும், இன்னும் அது வெற்றி பெற, தாண்டிச் செல்லவேண்டிய மேடு பள்ளங்கள் பல உண்டு!

சகுனம் பார்த்தல், சாஸ்திரம் பார்த்தல், ஜோதிடம் கேட்டல், கிரிக்கெட் விழா அர்ச்சனையால் தான் ஜெயித்தது, என்று கூறல், சீட்டாட்டம் இந்த இடத்தில் உட்கார்ந்தால்தான் அதிர்ஷ்டம் வரும் என்ற பேச்சு இவை யாவும் மூடநம்பிக்கையின் – பாப்புக் குட்டிகள்!

யாவும் மறைந்து, மக்கள் மன்றத்திலே நிறைந்து கிடக்கும் பழமையையும் மூடநம்பிக்கையையும் முறியடிக்க வேண்டிய பணி – தொண்டு எவ்வளவோ ஆற்றப்பட வேண்டும்.

மக்கள் மனதிலே பகுத்தறிவு இடம் பெற்றுவிட்டால் பழமை என்கிற இருள் விலகும் – மூடநம்பிக்கை இருள் என்றும் நீடித்துக் கொண்டே இருக்கமுடியாது.

பகுத்தறிவு ஒரு பகலவன்! அது எழும்பினால் பழமை ஒழிந்து, புது வாழ்வு மலரும்.

✲

திகைத்தார்! திணறினர்!!

ஒரு கேள்வி எழும்பியது மந்திரியாரை நோக்கி!—மந்திரியார் திகைத்தார், திணறினர்! என்ன பதில் சொல்லுவதென்றுதெரியாமல்அல்ல, கேள்வியே இன்னதென்று புரியாததால்! சட்டசபைத் தலைவரை நோக்கினர், சபாநாயகரிடத்திலும் சஞ்சலமும்வேதனையும் தாண்டவமாடியது-அவருக்கும் கேள்வி புரியவில்லை—திகைத்தார், விழித்தார்!

வேடிக்கையல்ல, கடந்த வாரம் இந்திய சட்டசபையிலே நடைபெற்றிருக்கிறது, இதுபோன்ற, ரசமான நிகழ்ச்சி!

உணவு மந்திரி ஜயராம்தாஸ் தௌலத்ராம்தான் கேள்வி புரியாமல் திகைத்துத் திண்டாடியவர்! சபாநாயகர் வராத காரணத்தால் தலைமை தாங்கிய அனந்த சயனம் அய்யங்கார் — உதவிசபாநாயகர்—தான் உறுப்பினர், என்ன கேட்கிறார் என்று தெரியாமல் விழித்தவர்! கேள்வி கேட்டவரும் சர்மான்யரல்ல—இந்தி சாகித்திய சம்மேளனத் தலைவர்—சேத் கோவிந்ததாஸ்! ஆங்கிலத்தை அண்ணாந்து பார்ப்பதும் தேசிய பக்திக்கு, குறைவு என்று நினைத்ததால்தானே என்னவோ, அவர் தான் கேட்டகேள்வியை இந்தியிலேயே கேட்டாராம்—அதுவும் காடுமுரடான இந்தியில்! எனவே, மந்திரியாரும், உதவி சபாநாயகரும் விழித்திருக்கிறார்கள்! திகைத்திருக்கிறார்கள்!!

X X X

விசாகப்பட்டினத்திலே ஒரு விழா வரவேற்பு, இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வந்திருக்கிறார் என்பதால். மகிழ்ச்சியுடன் விசாகை நகரசபை அவருக்கு இந்த வரவேற்பை அளித்திருக்கிறது. நகரமக்களின்குதூகலம் பூரிப்பு இவைகளைவிட, அந்த வரவேற்பைக் கண்டதும், கவர்னர் ஜனரலுக்கு மகிழ்ச்சி மலர்ந்திருக்கிறது! அந்தமகிழ்ச்சியில் பேசுகையில் கூறியுள்ளார், "முன்யோசனையுடன் நீங்கள்எனக்குஆங்கிலத்தில்வரவேற்புப் படித்து வழங்கியுள்ளீர்கள். எனவே நானும் ஆங்கிலத்திலேயே பேசுகிறேன்" என்று! முன்யோசனையுடன், விசாகை மக்கள் நடந்துகொண்டனர்—நாம் கூறவில்லை—கவர்னர்ஜனரல் கூறுகிறார்! தெலுங்கு மொழி தெரியாது, தெரிந்த கொஞ்சநஞ்சமும் தெற்கேயிருந்து போய் நீண்ட காலமாகிவிட்டதால் மறந்து போய்விட்டதாம்! ஆகவே, மகிழ்கிறேன், நல்லவேளையாகத் தெலுங்கில் வரவேற்பு கொடுத்து என்னை திகைத்துத் திண்டாடச் செய்யாமல், ஆங்கிலத்திலேயே, புரியும்படியாக, எனக்கு நீங்கள் கொடுத்திருக்கும் வரவேற்பு இருப்பதால் என்று!

X X X

இந்தியிலே கேட்கப்பட்ட கேள்வியைப் புரிந்து கொள்ள முடியாமல், இந்திய சர்க்காரின் மந்திரியும், இந்தியச் சட்ட சபையின் உதவிச் சபாநாயகரும் திண்டாடியிருக்கிறார்கள்! திணறிப் போயிருக்கிறார்கள்!!

கடைசியில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்கப்பட்டபின்னர்தான், உணவு மந்திரியாருக்கும், உதவி சபாநாயகருக்கும், விஷயம் விளங்கியதாம். இந்தியில் கேட்கப் பட்டது, அவர்களுக்குப் புரியவில்லை — காரணம், அவர்களுக்கு இந்தி தெரியாது!

கவர்னர் ஜெனரலுக்கு வரவேற்பு அளித்துள்ளார்கள். வரவேற்பிதழ் தெலுங்கு மொழியில் இல்லாமல், தான் புரிந்துகொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் இருப்பதற்கு மகிழ்ந்துள்ளார், அதோடு அப்படிச் செய்தது தன் மீது ஆந்திர நண்பர்கள் காட்டும் அன்பு ஆர்வம் என்றும் விளக்கமுரைக்கிறார். ஆங்கிலத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு, அவருக்கு, அவ்வளவு மகிழ்வையூட்டியிருக்கிறது! காரணம் — தெலுங்கு அவருக்குப் புரியாது, படிக்கத் தெரியாது!!

X X X

"இந்தி கற்றுக் கொள்ளுதல் என்பது பற்றி ஆங்கிலத்தில் பேசுவார்" இப்படி ஒரு விளம்பரத்தைக் கண்டால், காண்பவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும், சிரிப்பும் நகைச்சுவையும் கலந்துவரும்! தமிழ் மொழி வளர்ச்சி குறித்து இந்தியில் பேசுவார்—என்று தமிழையே அறியாத ஒரு வடநாட்டுக்காரர் பேசப்போகிறார் என்றால், எல்லோரும் சிரிக்கத்தான் செய்வார்கள். ஆனால், உண்மையில், ஒரு செய்தியை அனைத்திந்திய வானொலி நிலையம் வெளியிட்டிருக்கிறது. அதைக் காணும்பொழுது, நமக்கு சிரிப்பு மட்டுமல்ல, வேதனையும் வருகிறது!

இம்மாதம் 19ந் தேதியிலிருந்து சென்னை, திருச்சி, விஜயவாடா நிலையங்களிலிருந்து இந்தி பாடங்கள் ஒலிபரப்பப்படப் போகிறதாம்!

தமிழ் மூலம், திருச்சி சென்னை ஆகிய நிலையங்கள் ஒலி பரப்புமாம்! 20 நிமிடங்கள் இதற்கெனச் செலவழிக்கப்படுமாம் – மூன்று மாத காலத்தில் முதல் பாட வரிசை முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதாம். இந்தத் திட்டத்தை 19-ந் தேதியன்று சென்னை கல்வியமைச்சர் மாதவமேனன் ஆரம்பித்து வைக்குமுகத்தான் "ஹிந்தி கற்றுக் கொள்ளுதல் என்பதுபற்றி ஆங்கிலத்தில் பேசுவார்" என்று அறிவித்துள்ளது வானொலி நிலையம்! ஹிந்தி கற்றுக்கொள்ளுவது பற்றி ஆங்கிலத்தில் பேசுவார்!

* * *

சட்டசபையிலே, இந்தியில் கேள்வி கேட்கப்பட்டதால் உதவி சபாநாயகரும், மந்திரியாரும் திண்

(5-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

கற்கண்டு

ஆசிரியர் :— கவிஞர் பாரதிதாசன்.

கற்கண்டு, பொறுமை கடலினும் பெரிது ஆகிய இரு நகைச்சுவைச் சித்திரங்கள் அடங்கிய நூல்.

குமரியை, கிழவன் மனைவியாக்கிக் கொள்ளத் திட்டம் போடுகிறான். குமரியின் தந்தை ஏழ்மையால் இதற்கு இசைகிறான். இடையிலே பிரவேசித்த சிறுத்தொண்டன் கதை பாடும் தருமன், குமரியைத் தட்டிக்கொண்டு போகிறான். தருமன்—கற்கண்டு வாழ்வு மலர்கிறது!

—இது "கற்கண்டு"

பிறர் பிறந்தது தனக்கு உழைக்கத்தான், என்று எண்ணும் ஒரு பெரிய பண்ணைக்காரர், ஏழையின் கூக்குரல்கள், தன்னை எட்டும் போதெல்லாம் 'பொறுமை'யுபதேசம் புரிகிறார். திடீரென அவரது மகன், வீட்டை வெறுத்து வெளியேறி விடுகிறான். அப்போது அவரது 'பொறுமை' உபதேசத்தின் பலன் கைமேல் கிட்டுகிறது.

புரட்சிக் கவிஞரின் சிந்தனைச் சோலையிலே பூத்த, சிறந்த மலர்கள் இவை. அங்கங்கே உரித்தான கேலி, கிண்டல், ஆகியவைகளுடன் சமுதாய வேதனை சித்தரிக்கப்பட்டுள்ளது.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், 95, பெருமாள் கோயில் தெரு, புதுச்சேரி.

விலை ரூ 1—0—0

* * *

சதிகாரச் சாமியார்

ஆசிரியர் :— செங்குட்டுவன்

சாதிச் சனியன், சமுதாயக் கொடுமை, வைதிகக் கேடு ஆகியவைகளைச் சித்தரிக்கும் சிறு கதை நூல்.

சாமியார் ஒருவனின் சதிச்செயல்களால் ஒரு பேதைப் பெண்ணின் வாழ்வு தூக்குமேடைக்குக்கொண்டு செலலும் நிலைமை ஏற்படுகிறது. முடிவில் சதி வெளிப்படுகிறது. உணர்ச்சி வேகத்துடன், இந்நூலை எழுதியுள்ளார் தோழர் செங்குட்டுவன்.

பெறும் இடம் :— செங்குட்டுவன், 22, சுண்ணும்புக்காரத் தெரு, சின்ன காஞ்சிபுரம்.

விலை அணு 12

செந்தமிழ்ப் பதிப்பக வெளியீடுகள்

மதம் அவசியமா?

இக்கேள்விக்குப் பலதரப்பட்டவர்கள் வழங்கியுள்ள முடிவுகளின் கூட்டுத் தொகுப்புநூல் இது. பெரியார் ஈ. வே. ரா, சி. என். இராமச்சந்திரனர், அறிஞர் அப்பாதுரை, இர. நெடுஞ்செழியன், க. அன்பழகன், நாரண. துரைக்கண்ணன், ம. ப. பெரியசாமித்தூரன், டி. கே. சீனுவாசன், பு. நாராயணன், கே. ஜி. இராதாமணாளன், நாரா. நாச்சியப்பன் ஆகியோரது கருத்தோவியங்கள் உள்ளன. இந்நூல் ஒரு சிந்தனைக் குகை.

விலை அணு 12.

* * *

கடவுள் பாட்டு

ஆசிரியர் :— இமயவரம்பன்.

புராணப் புலவர்கள், 'கடவுளுக்கு காவியம் அமைத்த 'கம்பர்கள்', 'சேக்கிழார்கள்' ஆகியோர் கையில் இந்து மதக் கடவுள்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல; வேடிக்கையும் வேதனையும் நிறைந்ததாகும்.

இந்த நூலில் கடவுள்களின்மீது 'நிந்தாஸ்துதி'யாக வைத்துப்பாடப்பட்ட பாடல்களைத் தெரிந்தெடுத்து, சுவை ததும்பப் பத்து கட்டுரைகள் தரப்பட்டிருக்கின்றன. படிப்போருக்கு ஒரு விருந்து!

விலை அணு 8

X X X

கடைசி முத்தம்

ஆசிரியர் :— இளமைப் பித்தன்.

சிந்தை களிக்கச் செய்யும் சிறு கதைகள் எட்டு அடங்கியுள்ளன. 'வாத்தியாரம்மா' நினைவில் நர்த்தனம் புரிகிறாள். 'பேசும் பிணம்கள்' நினைவுப்பாதையில் நம்மைத் திருப்பி, 'நீதி' உண்டா என்று கேட்கின்றன, எளிய நடையில்!

விலை அணு 8.

* * *

கண்ணீர்க் கோட்டை

ஆசிரியர்:— தில்லை வில்லாளன்.

பெண்கள் ராஜ்யம் அமைந்து, ஆண்களுக்கு இன்று பெண்களுக்கு வழங்கப்படும் 'நீதி'கள் அளிக்கப்பட்டால் எப்படியிருக்கும்? என்ற கற்பனையின் கோட்டை—கண்ணீர்க் கோட்டை. பழைமையைச் சாடும் புதுமுறை! படிப்போர்க்குக் களிப்பூட்டும்.

விலை அணு 6.

* * *

கிளிக்கூண்டு

ஆசிரியர் :— தில்லை வில்லாளன்

கா...த...ல்—இம்மூன்று எழுத்துக்கள் வாழ்க்கையின் மோகனச் சோலை என்று கருதப்படுகிறது; கூறப்படுகிறது. தோழர் வில்லாளன் போர்க்களம், கொடிப்பாதை, பாலைவனம்—மலர் வனம், கானல் நீர்—காட்டாறு—ஜீவநதி, என்று காதலின் நிலைகளுக்குப் பெயர் சூட்டி, இழந்த காதல, அழிந்த காதல், எழும் காதல் ஆகியவைகளைப்பற்றி வெளுத்து வாங்கியிருக்கிறார், இந்நூலில். சிந்தனையோட்டமும்,மாணவர் சூழ்நிலைச் சித்தரிப்பும்,எழுத்து வேகமும் பாராட்டற்குரியன.

பெறும் இடம்:— செந்தமிழ்ப் பதிப்பகம், கீழ ராசவீதி, புதுக்கோட்டை. விலை அணு 10.

14-1-50 பொங்கலன்று திரையிலிடப்படும்!

வேகமுடன் வளர்கிறது!

மாடர்ன் தியேட்டர்ஸின்

பொன்முடி

இனிய தமிழ்நாட்டின் இயல்புடன் கூடிய

களங்கமற்ற காதல் சித்திரம்

கதை | டைரக்ஷன்

பாரதிதாசன் | எல்லிஸ் R. டங்கன்

Edited, Printed & Published by C. N. Annadurai M. A, at "Dravidanadu" Press, ...ukkachinambi Street, Kancheepuram.